பாவார்த்த தீபிகை என்ற

ஸ்ரீ ஞானேச்வரீ

(ஸ்ரீமத் பகவத் கீதை)

தேவோ ம்ஹணே ருக்மணி ஹா ஏகசீ யோகீ
தேகிலா நயனீ ஹேசீ ஞான ஸஞ்ஜீவனீ

नमामि सद्गुरूं शान्तं सच्चिदानन्द विग्रहम् ।
पूर्ण ब्रहम परानन्दं ईशं आलन्दी वल्लभम् ॥

நமாமி ஸத்குரும் சாந்தம் ஸச்சிதானந்த விக்ரஹம்
பூர்ணப்ரம்ம பரானந்தம் ஈசம் ஆலந்தீ வல்லபம்

ஸ்ரீமத் பகவத் கீதை

இந்நூல் மஹாராஷ்டிர பாஷையில்
ஸ்ரீ ஞானதேவர் இயற்றிய
வ்யாக்யானமாகிய

பாவார்த்த தீபகை என்ற

ஸ்ரீ ஞானேச்வரீ

இதற்கு

தி. ப. கோதண்டராமையர்

செய்த தமிழ் மொழிபெயர்ப்பு

ஸ்ரீ ராம நாம வங்கியின்
பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு:
ராம மந்திரம், 2/3, வினாயகம் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.
தொலைபேசி : 044 24893736
web:www.namalayam.org mail: ramamanthiram@gmail.com

தலைப்பு	:	ஸ்ரீ ஞானேஸ்வரி(பகவத் கீதை)
ஆசிரியர்	:	ஸ்ரீ ஏகநாதர்
தமிழில்	:	தி.பி. தோதண்டாமையயர்
பக்கங்கள்	:	40 பக்கம்
அளவு	:	21.5cm x 14cm
பதிப்பு	:	1987,2001,2008,2001, 2018
விலை	:	320/-

பகவன் நாம விஷயமான நூல்கள்

225. Sri Bhagavannaamamrutha Rasodayam 120/-
226. நாள் தோறும் நாம சிந்தனை 200/-
279. நாம வலிமை 10/-
163. நாம சாதனை 25/-
270. நாம மேன்மை 20/-
091. நாமச் சிறப்பு 30/-
272. நாமப் பெருமை 20/-
300. நாம ரஸவாதம் 20/-
090. நாமவைபவம் 30/-
271. நாம தத்துவம் 20/-
131. நாமவிசேஷம் 25/-
150. நாமப்ரபாவம் 25/-
074. நாம ஸாம்ராஜ்யம் 25/-
144. நாம வந்தனம் - போதேந்திராள் 10/-
092. நாம சக்தி 25/-
400. நாம ஸ்மரணம் 50/-
403. நாம யோகம் 100/-
169. ஸ்ரீ ராம நாமம் 20/-
094. ஆயிரம் நாமக் குறிப்புகள் 40/-
175. ஸ்ரீ ராமநாம எழுத்து ஜப யோகம் 100/-
380. ஸ்ரீ ஸமர்த்தரின் அமுத வாணி 20/-
198. நாமதேவரின் அமுதவாணி 25/-
199. ரவிதாஸரின் அமுத வாணி 20/-
202. ராம நாம அஷ்டோத்திரம் 15/-
184. கபீரின் சொல்லமுதம் 70/-
230. ஸ்ரீ கபீர்தாஸரின் அமுதவாணி 60/-
253. கன்னட தாஸர்கள்- நாம வைபவம் 30/-
218. ஆழ்வார்கள் - நாம வைபவம் 50/-
178. வேதம் முழங்கும் நாமதர்மம் 15/-
281. ராம நாமம் சொல்லுங்கள்.... 15/-
105. பக்தி ஸந்தேஹ த்வாந்தபாஸ்கரம் 30/-
214. தெய்வகானம் 50/-
110. திருமாலை 15/-
370. காந்தியும் ராம நாமமும் 30/-
135. ஹரி பாட் 25/-
063. ஐயாவாளின் நாம அனுபவங்கள் 30/-
048. கலியுக தர்ம சாஸ்திரம் 50/-
295. புனித தாமம் நாமம் 15/-
399. இப்பொழுதே நாமம் சொல் 20/-
160. ஸ்ரீபகவன் நாம மகிமை
073. பக்த ஸாம்ராஜ்யம் 25/-
221. ஹரியைப் பாடிபற 35/-
339. பாண்டவகீதா 15/-
044. ஸ்ரீ த்யாகராஜரின் ராம(நாம) ரஸம் 40/-
450. நாம ஸங்கமம் 15/-

ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்

'RAMA MANTHIRAM', No. 2/3, Vinayagam Street, West Mambalam, Chennai - 600 033.
Ph :- 044 24893735, 24893736 Website : www.namalayam.org e-mail:- ramamanthiram@gmail.com
Branches :- 0435 2473730, 9894200365, 9443138755, 9443138655, 0431 4345041, 9952834538, 9865127475, 7418388116, 9840800501, 9942802104

அரியதும், பழையதுமான,க்ரந்தங்களையும்,
நாம சித்தாந்த விஷயங்களையும் வெளியிடும் பணியில்
நாம ப்ரசாரத்தின் ஓர் அங்கமாகவே ப்ரசுரப்பிரிவு செயல் படுகிறது.
இந்த நூல்கள் காய்தல் உவத்தல் இன்றி ப்ரமிக்க வைக்கும்.
எங்கள் நாம ஸேகரம் பெருக பெருக இவைகள் வெளிவந்தன.
இதை நாம மஹாத்மியமாக பார்ப்பதே உவப்பானது.

மூல பாராயண நூல்கள் தமிழில்

004. ராமாயணம் Bold 2பாகம் 750/-
007. பாகவதம் Bold 2பாகம் 600/-
பாகவதம் Hard bound 2பாகம் 800/-
008. ராமாயணம் மூலம் 2பாகம் 550/-
012. பாகவதம் மூலம் 2பாகம் 350/-
026. பாகவதம் மூலம் Diary 130/-
177. ஸ்ரீமந் நாராயணீயம் Bold print 60/-
182. ஸ்ரீ சுந்தர காண்டம் Bold print 85/-
183. ஸ்ரீ சுந்தர காண்டம் மூலம் தமிழில் 50/-
269. தேவி பாகவதம் Bold 2பாகம் 1000/-
390. நாலாயிர திவ்ய ப்ரபந்தம் 400/-

ப்ரதானமான வசன (உரை) நூல்கள்

002. மஹாபாரதம் 10 பாகம் 2200/-
005. பாகவதம் வசனம் 7 பாகம் 850/-
010. ராமாயணம்வசனம் 400/-
064. ஸ்ரீ சுந்தர காண்டம் 25/-
439. ஆனந்த ராமாயணம் 250/-
444. தத்வ ஸாகர ராமாயணம் 9 பாகம் 1000/-

மூலமும் - உரையும்

009. ஸ்ரீ துளஸீ ராமாயணம் 2பாகம் 450/-
011. ஞானேஸ்வரி(பகவத் கீதை) 320/-
031. பாகவத ஸ்துதி மணிகள் 130/-
222. சுந்தர காண்டம் 150/-
407. ஸ்ரீ ஏகநாதி பாகவதம் 3பாகம் 900/-

நாம சித்தாந்தம் மூலமும் - உரையும்

023. ஸ்ரீ பகவன் நாம ரஸோதயம் 270/-
105. பக்தி ஸந்தேஹ த்வாந்தபாஸ்கரம் 30/-
240. ஸகஸ்ர நாமம்-சங்கரபாஷ்யம் 200/-
241. நாம ரஸாயனம் 150/-
242. ஹரிஹராத்வைத பூஷணம் 200/-
252. பகவன் நாம கௌமுதி 120/-

ப்ரதி பத அர்த்தங்கள்

001. ராமாயணம் 11 பாகம் 2800/-
003. பாகவதம் 7பாகம் 1700/-
013. நாராயணீயம் 225/-
029. கீதகோவிந்தம் 100/-
250. ராதா ரஸ ஸுதா நிதி (சைதன்ய) 150/-
378. ஸ்ரீமத் பாகவத மாஹாத்ம்யம் 100/-

நான்கு பகவத் சரித்திரங்கள்

'சக்ர'- 'நந்தலா'வின் பெருமைமிகு படைப்புகள்

க்ருஷ்ண சரிதம்

016. நந்த நந்தன் (ப்ருந்தாவன) 250/-
018. பார்த்தஸாரதி (ஹஸ்தினாபுர) 180/-
020. த்வாரிகாதீசன் (த்வாரகா) 100/-
021. பகவான் வாசுதேவன் (மதுரா) 120/-

ராம சரிதம்

006. ராமாயண ரசம் . 4 பாகம் 600/-
229. சிவ சரிதம் 130/-

ஆஞ்சனேயர் சரிதம்

027. ஸ்ரீ ராம தூதனின் சுயசரித்தம் 120/-

க்ருஷ்ண விஷயம் (பாகவத விஷயமான நூல்கள்)

015. கர்க ஸம்ஹிதை 300/-
022. திருப்பாவை உபன்யாஸம் 100/-
025. பாகவத கதாம்ருதம் 130/-
032. ராதே!ப்ருந்தாவனராதே!! 60/-
047. உன்மாதினி யசோதா 35/-
050. வ்ரஜ ரஸம் 30/-
051. ப்ரேம சாம்ராஜ்யம் 30/-
053 ஒரு கோபியின் இதயம் 30/-
054. வ்ரஜத்தின் ஒரு நாள் 30/-
057. கன்னையா சிரித்தான் 30/-
077. சியாம சுந்தரனின் சுபாவம் 25/-
081. ஞான அருவி 25/-
089. தினசரிபாகவதம் 25/-
159. ஸ்ரீமத் பாகவத ரஹஸ்யம்

180. ஸ்ரீ ப்ரேம ரஸிகா 20/-
190. ஸ்ரீ சூர்தாஸ் பாகவத முத்துகள் 30/-
215. உறவினர்கள் பார்வையில் பாலக்ருஷ்ணன் 100/-
268. ஸ்ரீ பாகவத பாரிஜாதம் 150/-
227. ஸ்ரீ ஸ்ரீகோபால சம்பூ 300/-
280. லீலாம்ருதம் 20/-
282. நம்முடையவன் நந்தலாலா 20/-
292. ஸ்ரீ கோலோக தாமம் 30/-
293. ஸ்ரீ ராதா மாதவம் 50/-
381. கண்ணனின் லீலா விநோதம் 50/-
398. தாமோதர லீலை 20/-
401. உத்தவரின் வ்ரஜ விஜயம் 20/-

சைதன்ய சம்ப்ரதாய நூல்கள்

017. உஜ்ஜ்வல நீலமணி 150/-
171. ஸ்ரீ வ்ருந்தாவன மஹிமாம்ருதம் 100/-
172. ஸ்ரீ கோவிந்த லீலாம்ருதம் 80/-
173. விதக்த மாதவம் 60/-
174. லலித மாதவம் 60/-
176. ஸ்ரீ ஹரி பக்தி விலாஸம் 50/-
185. பக்திரஸாம்ருத சிந்து 225/-
209. கிருஷ்ணனின் வ்ரஜ பரிவாரம் 60/-
210. காவியமலர் 35/-
211. அன்புப் பேழை 50/-
212. இனிக்கும் ராதையின் நினைவுகள் 35/-

213. அதிசய நிலா 50/-
238. சது: ச்லோகி 70/-
239. மஹாப்ரபு- ராமானந்தர்- உரையாடல் 60/-
248. ப்ருஹத் பாகவதம் 150/-
249. ராஸ பஞ்சாத்யாயீ 70/-
251. மாதுர்ய காதம்பினி 60/-
258. சக்ய சுதா கர: 30/-
264. ஸ்ரீ நவத்வீப மாகாத்மியம் 70/-
267. மன: சிக்ஷா 30/-
453. ஸ்ரீ லகு பாகவதாம்ருதம் 100/-

ஸ்ரீ ராம விஷயம்

019. ராமாயணரஹஸ்யம் 150/-
034. பிரபு வருகிறார் 60/-
085. ராம மாதுரீ 25/-

128. தினசரிராமாயணம் 15/-
217. தத்வ சாகர ராமாயணம்-சுருக்கம் 15/-
287. வால்மீகி ராமாயணப் பாட்டு 40/-
283. ராமன் கூறிய நவதா பக்தி 20/-

திவ்ய சரித்திரங்கள்

தென்நாட்டு சாதுக்கள்

111. ஸ்ரீ போதேந்திராள் 25/-
112. ஸ்ரீ ஐயாவாள் 20/-
113. ஸ்ரீ ஸத்குரு 20/-
114. Sri Bodendral English 20/-
115. Sri Sridhara Ayyaval English 15/-
116. Sri Sadguru Swamigal English 15/-
118. Sri Bodendral Malayalam 15/-
119. Sri Sridhara Ayyaval Malayalam 15/-
120. Sri Sadguru Swamigal Malayalam 15/-
121. Sri Bodendral Hindi 15/-
122. Sri Sridhara Ayyaval Hindi 15/-
123. Sri Sadguru Swamigal Hindi 15/-
124. Sri Bodendral Telugu 15/-
125. Sri Sridhara Ayyaval Telugu 15/-
126. Sri Sadguru SwamigalTelugu 15/-
440. Sri Bodendral kannada 15/-
441. Sri Sridhara Ayyaval kannada 15/-
442.Sri Sadguru Swamigal kannada 15/-
106. ப்ரும்மேந்திராள் 20/-
247. புரந்தர தாஸர் 25/-
117. Sri Sadasiva Brahamendra English 15/-
85. யாக்ஞவல்கியர் 25/-
138. ஸமர்த்த ராமதாசர் 15/-
109. ராமதாஸர் 20/-
098. சேஷாத்ரி ஸ்வாமிகள் 15/-
071. த்யாகராஜர் 30/-
066. பக்த ரத்தினங்கள் 25/-
368. ஸ்ரீ இராமாநுஜ பிரபாவம் 40/-
234. சங்கண்ணாவின் சரிதாம்ருதம் 15/-
368. ஸ்ரீ இராமாநுஜ பிரபாவம் 40/-
457. அன்னமய்யா வாழ்க்கை வரலாறு 25/-

பண்டரி/பாண்டுரங்க சந்த்கள்

030. ஸ்ரீ ஞானேஸ்வர் 100/-
043. ஏகநாதர் 50/-
024. பக்த துகாராம் 140/-
189. ஸ்ரீ பானு தாஸர் 25/-
192. ஸ்ரீ சோகா மேளா 15/-
193. ஸ்ரீ போசலபாவா 20/-
194. ஸ்ரீ கோராகும்பார் 20/-
196. ஸ்ரீ ஸேனா நாவி 15/-
197. ஸ்ரீ தாமாஜி பண்டிதர் 15/-
244. சாந்த சக்குபாய் 20/-
246. நரஹரி ஸோனார் 15/-
245. பக்த ஜனாபாய் 20/-

வடதேச பக்தர்கள்

188. ஸ்ரீ கபீர்தாஸ் 30/-
187. ஸ்ரீ ஜய தேவர் 30/-
086. துளஸி தாஸர் 30/-
191. ஸ்ரீ சூர்தாஸர் 25/-
195. ஸ்ரீ நரசிம்ம மேதா 20/-
072. பக்தை மீரா 25/-

சைதன்ய வழி சாதுக்கள்

014. கிருஷ்ண சைதன்யர் 300/-
170. ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம் 300/-
055. ஆறு கோஸ்வாமிகள் 40/-
220. நாமாசார்யர் ஸ்ரீ ஹரிதாஸ்டாகுர் 80/-
299. ஸ்ரீமதி ராதாராணி 60/-

புராணப் பாத்திரங்கள்

278. ஸ்ரீ ப்ரகாசானந்தர் பக்தரானார் 15/-
277. மஹா பதிவ்ரதை விஷ்ணுப்ரியா 25/-
284. தர்மாத்மா விதுரர் 50/-
302. ஸ்ரீ யமுனா தேவி 20/-
377. ஸ்ரீ தத்த புராணம் 100/-
301. வித்வான் தசக்ரீவன் 40/-
376. பரீக்ஷித் மஹாராஜா 25/-
290. பரமாசாரியர் பலராமர் 40/-
435. துரோணாச்சாரியர் 20/-
288. பரதாழ்வார் 50/-
369. பீஷ்ம பிரதிக்ஞை 45/-

பக்தி ஸுத்ரம்

137. நாரத பக்தி ஸுத்ரம் 20/-
223. ஸ்ரீ நாரதரின் பக்தி நெறி 100/-
243. சாண்டில்ய பக்தி ஸுத்ரம் 30/-

பூஜை

040. ஜய கல்யாண ஸூக்தி லஹரீ 45/-
079. பூஜா கல்பம் 25/-
379. துளஸீ பூஜா 50/-
235. ஸ்ரீ துளசி லீலாம்ருதம் 35/-

மற்றவை

052. பக்தி 30/-
069. தியாகராஜர் அனுபவங்கள் 35/-
095. போதேந்த்ர அமுதம் 20/-
130. மன அமைதி வேண்டுமா? 15/-
259. கோமாதா எங்கள் குலமாதா 25/-
436. உத்தம(ன்) விஷயம் 70/-
437. விஷ்ணு சஹஸ்ர நாம மகிமை, ஸகல காரிய... 20/-
451.வினோத வினாயகர்களும்.... 80/-

பாக்கெட் வெளியீடுகள்

குறைந்த செலவில் நிறைந்த – சிறந்த பரிசு நூல்கள்தங்கள் பிறந்தநாள், திருமணநாள், பண்டிகை நாட்களிலும் மொத்தமாக வாங்கி பரிசளிக்க உகந்தவை. இதன் மூலம் நாம ப்ரசாரத்திற்கு நீங்கள் உதவியவர்கள் ஆவீர்கள்..

வண்ணப் புத்தகங்ள்

204. நாம கோஷம் க்ஷேம கோஷம் 15/-
205. நிரந்தரம் நல்லன தரும் நாமம் 15/-
206.சித்திரமும் நாம பழக்கம் 15/-
207. உலகெலாம் நாமம் உணர்வீர் 15/-
208. காண்பீர்.கற்பீர். ராம பிரானை 30/-
236. இறைநாமம்இருக்க இனி ஏது பயம்? 15/-

நாம விஷயம்

141. நாமாயணம் 20/-
147. நாம உயர்வு 10/-
148. ராம தாபின்யு- கலிசந்தரண 10/-
153. ஸ்ரீ ராம நாம மஹிமை 10/-
158. அனுமன் நாற்பது 10/-
165. நாம பாகவதம் 10/-
166. நாம ராமாயணம் 10/-
200. மஹாத்மாக்களின் மஹாத்மா 10/-
201. நாம ஸேது 10/-
275. நாம பலம் 15/-
276. நாமே நாமம் சொல்லவேண்டும் 15/-
294. நாம மூலிகை 15/-
296. நாமயுகம் 15/-
371. இடை விடா நாமம் 15/-
397. நாம நினைவு நாமம் சொல் கலியைவெல் 15/-
409. ஸ்ரீஹரி ஸ்துதி 15/-
410. நாம சிந்தாமணி 10/-
429. நாம பிரசாரம் 10/-
430. நாம மஹாதனம் நாம சேவை 10/-
432. நாம பிரயோஜனம் 10/-
433. நாமக் குறள்(ரல்) 10/-

பாசுர விஷயம்

139. திருவரங்கன் திருவந்தாதி 10/-
140. பரமார்த்த ஸ்துதி 10/-
261. அப்போதைக்கு இப்போதே... 10/-
232. நெய்க்குடத்தை 10/-
265. திருப்பாணாழ்வார் வரலாறு 10/-
266. ஆழ்வார்கள் -சிறுகுறிப்பு 10/-
382. ப்ரார்த்தனா பதிகங்கள் 15/-
383. தினசரி பாராயணத் திரட்டு 15/-
434. பாசுரப்படி பாகவதம் 10/-

முருகன் விஷயம்

320. அருணகிரிநாதரும் கந்தரந்தாதியும் 15/-
325. குருகுகன் அருள் 10/-
332. இராதா - ஸ்கந்தன் 10/-

"க்ருஷ்ண" விஷயம்

132. சிஷாஷ்டகம் 10/-
134. கீத கோவிந்தம் 10/-
179. ச்யாம பாகவதம் 10/-
289. சாட்சி கோபாலன் 10/-
291. பூதனையின் மோக்ஷம் 15/-
355. அக்ரூர ஆகமனம் 10/-
361. ஸ்ரீ கிருஷ்ண ஸ்துதி 10/-
364. ஸ்ரீ க்ருஷ்ண நாமாம்ருதம் 15/-
372. மாயை பகவானின் விளக்கம் 15/-
388. ஸ்ரீ குருவாதபுரீச பஞ்சரத்னம் 15/-

"ராம" விஷயம்

167. ராம நாமாவளி 10/-
168. பாசுரப்படி ராமாயணம் 10/-
231. ஸப்தரிஷி ராமாயணம் 5/-
233. பூஜா ராமாயணம் 10/-
273. ஞானராமாயணக் கப்பல் 5/-
274. ஸ்ரீமத் ராமாயண ஸத்சங்கம் 15/-
285. பிரேமை பக்தை சபரி மாதா 15/-
351. ஸ்ரீ ராகவ ஸ்துதி 10/-
357. ஸ்ரீ காயத்ரி ராமாயணம் 20/-
373. ராமர் கேள்விகள் 15/-
391. ஸ்ரீ ராமாவதாரம் 10/-
396. ஸ்ரீ ஷட்ஸ்லோகி ராமாயணம் 10/-

மஹாபெரியவாள் விஷயம்

164. சந்திசேகாரஷ்டகம் 10/-
340. ஸ்ரீ மஹாபெரியவாளின் அபிலாஷை 15/-
341. ஸ்ரீ மஹாபெரியவாளின் அமுத மொழிகள் 15/-
343. பேதம் தோன்றாது 15/-
346. ஜனக ஜனனி 10/-
347. பாபமும் புண்ணியமும் 15/-
348. ஸ்ரீ மஹாபெரியவாளின் பெருமை 10/-
350. பூர்ணாவதாரம் 10/-
353. மஹாபெரியவாளுக்கான ஸேவை 15/-
367. ஸ்ரீ சந்திரஸேகர யதீந்த்ர அஷ்டகம் 10/-
392. தச ஸ்லோகி ஸ்துதி, ஆசார்ய பதாவலம்பன ஸ்துதி 10/-

ஐயாவாளின் பாக்கெட் நூல்கள்

303. ஆர்திஹர ஸ்தோத்ரம் 10/-
304. அச்யுதாஷ்டகம் 15/-
305. ஆனந்தவல்லி ஸ்துதி 10/-
306. டோளா நவரத்னமாலிகா 15/-
307. தோஷபரிஹாராஷ்டகம் 15/-
308. ஜம்புநாதாஷ்டகம் 10/-
309. கங்காஷ்டகம் 15/-
310. க்ருஷ்ணத்வாதஶமஞ்சரீ 15/-
311. ஸ்ரீ ஸுப்ரமண்ய பஞ்ச ரத்னம் 10/-
312. தஞ்சாபுரீஶ ஸ்துதி 10/-
319. குளீரேஶாஷ்டகம் 15/-

"சிவன்" விஷயம்

330. பொற்பாதக் கமலம் ! 10/-
349. பூஜா தத்துவம் 10/-
352. சிவாச்சிரி மஹிமை 15/-
365. சிவராத்ரி பூஜை 15/-
386. ஸோமாவார விரத மஹிமை 15/-
389. சிவபுரணம் 10/-

குரு விஷயம்

298. அவதூதரின் 24 குருக்கள் 15/-
323. ஸ்ரீசைதன்ய சந்தோஷம் 15/-
326. குறை தீர்க்கும் குரு தீட்சை 10/-
327. குருதத்துவமும் குருவருளும்.. 10/-
336. வ்யாஸ பௌர்ணமி 10/-
385. ஆதி சங்கரரின் வாழ்வும், வேதாந்தாந்தமும் 20/-

2-ம் பதிப்பின் மதிப்புரை

ஸ்ரீமத் பகவத்கீதை உலகில் ப்ரஸித்தமான சாஸ்த்ரமாகும். அதை அர்ஜுனனுக்கு ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவே உபதேசித்தார், வியாஸ பகவான் எழுதிவைத்தார். அதற்கு ஸ்ரீசங்கரர் முதலிய பல சான்றோர்கள் வியாக்யானம் செய்திருக்கின்றனர். மஹாராஷ்ட்ரத்தில் அவதரித்த ஸ்ரீ ஞானேச்வரர் அதை மராட்டி மொழியில் விளக்கினார். அதற்குத்தான் 'ஸ்ரீ ஞானேச்வரீ' என்று பெயர்.

"மஹா விஷ்ணுசா அவதார மாஜா ஞானேச்வர"

என்ற ஸ்ரீ ஞானேச்வரர் பாண்டுரங்கனின் அவதாரமேயாவார். எனவே கீதைக்கு இந்த உரை பாண்டுரங்கனே செய்தது. இதற்கு ஈடு இல்லை.

தமிழ்நாட்டில் பாண்டுரங்கனின் அனன்யப் ப்ரேம பக்தரான ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமிகள் இந்த ஞானேச்வரீயை தமிழாக்கம் செய்து முதன் முதல் வெளியிட்டார். திருவல்லிக்கேணியில் உள்ள பாண்டுரங்கன் கோயில் அவரால் நிர்மாணிக்கப்பட்டது. பாகவத ஸம்ப்ரதாயத்தில் மிக சிறந்த மஹாத்மா இவர்.

காஞ்சி ஸ்ரீமஹாபெரியவாள் நியமனத்தால் அதே ஞானேச்வரீ மீண்டும் வெளியிடப்பட்டது. பல பக்தர்கள் மீண்டும் விரும்புவதால் தமிழ்நாட்டில் ஞானேச்வரீக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. பாகவத ஸேவையில் பரம்பரையாகவே ஈடுபட்டுவரும் ஸ்ரீ ஆர். ராதாக்ருஷ்ண பாகவதர் மீண்டும் ஞானேச்வரீயை (தமிழாக்கத்தை) வெளியிட்டு வர இருப்பது அறிந்து மிக ஸந்தோஷப்படுகிறோம். ஸத்குருவான ஸ்ரீ ஞானேச்வரர், ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமிகளும், ஸ்ரீ பாண்டுரங்கனும் எல்லா பக்தர்களுக்கும் ஞானோதயம் ஏற்பட அருள் செய்வார்களாக.

- ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி

ஸ்ரீ கோதண்டராமய்யர் சரித்திரம்

आसीत्पूर्व चेन्नपुर्य विरक्को ब्राह्मणोत्तमः
नाम्ना कोदण्डरामार्यो विष्टलध्यानतत्परः

முன்பு சென்னையில் பாண்டுரங்க த்யானமே லக்ஷ்யமாகக் கொண்டவரும், விரத்தி உடையவருமான கோதண்டராமய்யர் என்னும் ஒரு ப்ராம்மணோத்தமர் இருந்தார்.

कोदण्डरामचरितं यः पठेच्छ्रद्धया नरः।
स प्राप्नुयात्परां भक्तिं विरक्तिं विषयेष्वपि।।

எவனொருவன் ஸ்ரீகோதண்டராம சரிதத்தை ச்ரத்தையுடன் படிப்பானோ அவன் சிறந்த பக்தியையும் விரக்தியையும் அடைவான்.

ஸ்ரீஸ்ரீஅண்ணா

ஸ்ரீ க்ருஷ்ணாரண்யம் எனும் திருவல்லிக்கேணியில் வேங்கடாசலச் செட்டித் தெருவில் மஹாத்மா ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமிகளால் நிறுவப்பட்டது ஸ்ரீ ரகுமாயீ ஸமேத ஸ்ரீ பாண்டுரங்க தேவஸ்தானமாகும். ஸ்ரீ அரணாப்ரபுவின் ஸமகாலத்தவரான இம்மகான், 1861-ம் ஆண்டு துன்மதி வருடம் ஐப்பசி திங்கள் திருவாதிரை நக்ஷத்திரத்தில் நன்னிலம் தாலுக்கா கூடூர் நாராயணபுரத்தில் அவதரித்தார்.

கிறிஸ்துவக் கல்லூரியில் வாசித்து வகுப்பில் முதல்வராகத் தேறி டாக்டர் மில்லர் அவர்களிடம் தங்கப் பதக்கமும் பெற்றவர். பின்னர் சட்டக் கல்லூரியில் சட்டமும் படித்து வக்கீல் பட்டமும் பெற்றார். ஆனால் ஹிந்து உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்றார். பின்னர் சென்னை உயர்நீதி மன்றத்தில் மேனேஜராகவும் உத்யோகம் செய்தார். ஸ்வாமி விவேகானந்தரின் உபன்யாஸத்தினை நேரடியாகக் கேட்டபின்னர், அவருடன் உரையாடி அநேக தத்வவிசாரங்களின் தெளிவினை பெற்றுய்ந்தார். கலியுக உத்தாரணத்துக்கு ஹரி நாமமே சிறந்த வழி என மெய்யுணர்வு பெற்று நாமகீர்த்தனம் செய்து வரலானார்.

பின்னர் ப்ரதி வருடம் ஆஷாட ஏகாதசி, கார்தீக ஏகாதசீ யாத்ரைகளும் செய்து வரலானார். ஓர் சமயம் இந்த யாத்ரைக்கு லீவு கிடைக்கவில்லை ஆதலால் உத்யோகத்தினைத் துறந்து அனவரதம் ஈஸ்வர கைங்கர்ய

ரூபமான வாழ்வினை மேற்கொண்டார். இவரது குருநாதர் ஸ்ரீமஹீபதி மஹராஜ் அவர்கள் கோஷ்டியுடன் சென்னைக்கு விஜயம் செய்ய, பரம பக்தி சிரத்தையுடன் ராஜஉபசாரம் செய்து பரம ப்ரேமையுடன் குருநாதருடன் ராமேஸ்வரம் வரை யாத்ரையும் ஆங்காங்கு அபங்க கீர்த்தனமும் செய்து நாமகோஷம் செய்து வந்தார். இப்பேர்பட்ட ஓர் சிஷ்யனை அடைய யான் பெற்ற பேறு என்னவோ என குரு மெச்சும் சிஷ்யனாக மற்றோர் ஏகநாதராக விளங்கலானார் நம் ஸத்குரு.

இம்மகான் ஓர் சிறந்த ஸ்ரீவித்யா உபாஸகரும் ஆவார். பண்டாமஹராஜ் பரம்காரயில் நாமோபதேசமும் பெற்று நாமகீர்த்தன வித்தகராகவும் நாமகீர்த்தன விதரண சீலராகவும் திகழ்ந்தார். இந்நூண்றாண்டின் துவக்கத்தில் ஸ்ரீவிட்டலனின் ஆலயமதனை நிறுவினார். இது ஓர் ப்ரேம ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகமாக விளங்கிற்று. இவ்வாலயத்தில் ப்ரதி குருவாரம், சுக்ர வாரம், சனிவாரம், ஏகாதசிகளில் ஸம்ப்ரதாய பஜனையும், ப்ரதி ஸ்ரீராமநவமி 15 நாள் உத்ஸவமாக சீதாகல்யாண பவ்வனிம்பு ஸேவைகளும், ஸ்ரீக்ருஷ்ண ஜன்மாஷ்டமி தோறும் 10 நாள் பஜனோத்ஸவமாக ஸ்ரீருக்மிணீ கல்யாணமும் தனுர்மாதம் காலை-மாலை பஜனைகளும், 22-ம் நாள் ராதாமாதவ விவாஹமும், ஸம்ப்ரதாய பஜனை க்ரமத்தில் நடைபெற்று வருகின்றன.

இம்மகான் இயற்றிய ப்ராசீன ஸம்ப்ரதாய பஜனை பத்ததி எனும் தெலுங்கு நூல் முதன்முதலில் வெளியான பஜனை நூலாகும். இதில் 5 பாகங்கள் உள்ளன. முதல் பாகத்தில் தோடய மங்கள குரு கீர்த்தனங்களும், 2-ம் பாகத்தில் ஸ்ரீகீத கோவிந்த மஹாகாவ்யம் முதல் தேவதாத்யானம் வகையிலும், 3-ம் பாகத்தில் குருப்ரதக்ஷிணம் முதல் ஸ்ரீசீதா விவாம் வரையிலும், 4-ம் பாகத்தில் பவ்வனிம்பு ஸேவையும், 5-ம் பாகத்தில் சுமார் 1000 அபங்க ரத்னங்களையும் தொகுத்து வழங்கினார். இவரது பவ்வனிம்பு ஸேவாபாதமானது ஓர் பவ்வனிம்பு கீர்த்தனைக்கும் மற்றொரு கீர்த்தனைக்கும் ஆதாரமாக விளங்கும் கத்யபாகத்தினையும் கொண்ட ஓர் அபூர்வத் தொகுப்பு ஆகும்.

இவரது பன்மொழிப்புலமையினைக் கண்ட மஹீபதி மஹராஜ் அவரது ஹ்ருதயாலிங்கிதமான ஸ்ரீ ஞானேஸ்வரியினை மராட்டி மூலமாவுடன் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட ஆக்ஞையிட, ஸாக்ஷாத் ஏகநாதரைப்போல் இவ்வாக்ஞைதனை சிரமேற்கொண்டு உடன் பெறும் பாடுபட்டு 1200 பக்கங்களுடன் கூடிய ஸ்ரீஞானேவ்ரியை முதன்முதலில் தமிழில் அச்சிட்டருளினார் இவ்வன்னல்.

இவ்வாலயத்திற்காக 5 வீடுகளையும் கூட வாங்கி கைங்கர்யபரர்களுக்கு இருக்க உதவினார். ஸ்ரீருக்மிணீ ஸமேத விட்டலனுக்கு பத்ராசல ராமதாஸரைப்போல் விதவிதமான உயர்ந்த ஆபரணங்களை செய்து அணிவித்து மகிழ்ந்தவர் இம்மகான். நாமகீர்த்தனம், பாகவத ஸேவை, பகவத் ஸேவை, நாமஜபம், அயராத உஞ்சவ்ருத்தி ஸேவை என தன் வாழ்கையுடன் இரண்டறக் கலந்த ஸ்ரீவிட்டலனுக்காக அனவரதம் உழைத்து அநேக சிஷ்யரத்னங்களை இவ்வுலகிற்கு ஈந்து 1934-ம் ஆண்டு ஆனி அமாவாசையன்று ஸ்ரீவிட்டலனின் ஸமசரண சோபையில் இரண்டறகலந்தது இந்த ஞானஜோதி.

ஸ்ரீஹரிராமா, ஸ்ரீமுத்துஸாமி மாமி, எம்.எஸ். சுப்ரமணிய ஐயர், ஸ்ரீ சுப்புமாமா, தாச்சுமாமா, வேம்புமாமா, நாட் அண்ணாஜீராவ், நாராயண சாஸ்த்ரி, சிந்தாமணி ஐயங்கார், சங்கு ஸுப்ரமண்யம், புதுக்கோட்டை பெரியவாள் முதல் இன்றளவும் அநேக மஹனீயர்களை ஆகர்ஷித்து அருள் வழங்கும் கேந்திரமாக விளங்குகிறது இவ்வாலயம். பரனூர் மஹாத்மா ஸ்ரீஸ்ரீக்ருஷ்ண ப்ரேமி அவர்களும் இருமுறை ஸப்தாஹ அனுக்ரஹ பாஷணம் செய்தருளியுள்ளார். ஸ்ரீஸ்ரீ ஹரிதாஸ், ஸ்ரீ நாமாஜி வரை அநேகர் பஜனானந்தத்தில் நம்மை முக்காட்டி அபங்க கீர்த்தன கான கேந்திரமாக விளங்குவது இந்த தேவஸ்தானம்.

தெலுங்கு ராமைய்யா முதல் ஸமீபத்தில் பகவத் சரணத்தினை அடைந்த ஸ்ரீமான் ஸந்தானம் ஐயர்வரை அநேக சிஷ்யரத்னங்கள் ஸ்ரீவிட்டலனின் ஸ்ரீசரணத்தில் தம்மை ஐக்கியப்படுத்தி கொண்டுள்ளனர். இவ்வனைவர்க்கும் அன்றி இனி வருங்கால ஸந்ததியினர்க்கும் ப்ராசீன ஸம்ப்ரதாய பஜனை மட்டுமன்றி அபங்க மழைப்பொழியும் பஜனை கேந்திரமாகவும் விளங்குவது ஸர்வநிச்சயம். இப்பெறும் பாக்கியத்தினை நமக்கீந்தருளிய பரமபாகவத சிரேஷ்டரான ஸத்குரு கோதண்ட ராம ஸ்வாமிகளின் பொற்பாதங்களை யாண்டும் நினைவுகூர்ந்து வந்திப்போமாக!

ஸ்ரீகுருசரண ஸேவை!
கோமதீ

ஞானதேவர் சரித்திரம்

கோதாவரி நதிக்கரையில் ப்ரதிஷ்டானம் அல்லது பைடண் என்று பெயர் படைத்த ஓர் நகரம் இருக்கிறது. அதினின்று எட்டு மைல் தூரத்தில் கோதாவரியின் வடகரையில் ஆபோக்ராமம் என்றோர் க்ராமம் இருக்கிறது. ஸுமார் 600 வருஷத்துக்கு முன்னால் அந்த க்ராமத்தில் கோவிந்த த்ரியம்பகர் என்று ஓர் மஹாராஷ்டிர தேசஸ்து ப்ராஹ்மணன் இருந்தார். அவர் பெண்சாதியின் பெயர் நீராபாயீ. இவர்கள் இருவருக்கும் விட்டலபந்த் என்று பெயர் பெற்ற ஓர் புத்ரன் உண்டானான். இந்த விட்டல பந்த் என்றவர் ராமேச்வர தீர்த்தயாத்ரை செய்யப் புறப்பட்டு வழியில் புனாவுக்குப் பதினைந்து மைல் ஸமீபத்தில் உள்ள அளகாபுரி என்ற ஆளந்தீ என்னும் ஊர் வந்து சேர்ந்தார். அவ்வூரில் ஸித்தோபந்த் என்ற ப்ராஹ்மணன் அவருக்குத் தன் பெண்ணாகிய ருக்மிணீபாயீயை பகவதாஞ்ஞையை முன்னிட்டுக் கல்யாணம் செய்து கொடுத்தார். இவர்கள் இருவருக்கும் குமாரனாக இந்த க்ரந்தகர்த்தாவான ஞானேச்வரர் என்ற ஞானதேவர் புத்ரனாகப் பிறந்தார்.

ஆனால் இவர் பிறப்பதற்கு முன்பே விட்டல பந்த் என்றவர் தன் பெண்சாதி ருக்மிணீபாயீயை ஆளந்தியில் வைத்துவிட்டு, காசிக்குத் தீர்த்தயாத்ரையாகப் புறப்பட்டுப் போய், அங்கே இருந்த ஓர் ஸந்யாஸியை சரணமாக அடைந்து, தன்னுடன் ஸம்பந்தப் பட்டவர்கள் ஒருவரும் இல்லையென்று அவருக்குச் சொல்லி, அவரிடம் ஸந்யாசாச்ரமத்தை ஸ்வீகரித்துக் கொண்டார். இந்த ஸமாசாரம் ஆளந்தியில் இருந்த ருக்மிணீபாயீ தெரிந்துகொண்டு, இந்த துக்கம், தனக்குத் தன் பூர்வகர்மத்தால் ஏற்பட்டதென்று நினைத்து, இனியாவது தனக்கு நன்மை உண்டாக வேண்டும் என்று கருதி, தன்னூர்ப்பக்கத்தில் ஓடும் இந்த்ராயணீ என்னும் புண்ய நதியில் தினந்தோறும் ஸ்நாநம் செய்து, அதின் கரையில் இருந்த ஓர் அரசமரத்தை ப்ரதக்ஷிணம் பண்ணிக்கொண்டு வந்தாள்.

காசியில் விட்டல பந்த் என்றவருக்கு ஸந்யாஸாச்ரமம் கொடுத்த ஸந்யாஸி ராமேச்வரத்தை உத்தேசித்துத் தீர்த்தயாத்ரை செய்யப் புறப்பட்டு, ஆளந்தி என்னும் ஊர் வந்து இந்த்ராயணியில் ஸ்நாநம் செய்துவிட்டு, அவ்வரசமரத்தடியில் உட்கார்ந்திருந்தார். அவருக்கு ருக்மிணீபாயீ நமஸ்காரம் செய்யவே, "நீ புத்ரவதியாவாய்" என்று அவர் ஆசீர்வதித்தார். அதைக்கேட்டு, அந்த அம்மாள் சிரித்தாள். அதற்குக் காரணம் என்னவென்று அந்த ஸந்யாஸி கேட்கவே ருக்மிணி அம்மாள் பின்வருமாறு சொன்னாள். "ஐயா, எனது கணவன் காசியில் ஓர் பெரியவரிடம் ஸந்யாஸம் வாங்கிக்கொண்டு, அங்கேயே வஸிக்கிறார், அப்படியிருக்க நான் புத்ரவதி எவ்விதமாவேன்? பெரியவர்களாகிய தங்கள் வாக்குக்கூட தவறிப்போவதாய் ஏற்பட்டதே, என்று நினைத்துச் சிரித்தேன்".

இதைக்கேட்டு அப்படிச் செய்தது தன் சிஷ்யனாகவே ஒருவேளை இருப்பானோ என்று அவர் சங்கித்து, அந்த அம்மாள் தகப்பனாகிய ஸித்தோ பந்த் என்பவரிடத்தில் அவள் கணவன் அங்க அடையாளங்களை விசாரித்து அவன் தன் சிஷ்யனே என்று நிச்சயித்து, அந்தப் பெண்ணுக்குக் குழந்தைகள் பிறக்காமலிருக்க அவள் கணவனுக்கு ஸந்யாஸம் கொடுத்ததால் தனக்குப் பாபம் ஏற்பட்டதே என்று சிந்தைகொண்டு, ஸித்தோ பந்தையும் ருக்மிணி அம்மாளையும் அழைத்துக்கொண்டு, காசிக்குத் திரும்பி வந்து விட்டல பந்தைக் கண்டு பின்வருமாறு சொன்னார்.

''நீ என்னை வஞ்சித்து ஸந்யாஸம் வாங்கிக்கொண்டாய்; அப்பிழையை நான் மன்னித்தேன்; இனியாவது என் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு இவளுடன் கூடியிருந்து நீ வாழவேண்டும்; இது சாஸ்த்ரத்துக்கு விரோதமானதென்று நீ யோசிக்க வேண்டாம்; குருவாகிய என்னுடைய உத்தரவை அநுஷ்டித்துத் தீரவேண்டும்; இவள் வயிற்றில் மும்மூர்த்திகளும் அவதரித்து உலகத்துக்கு ஸன்மார்க்கத்தைக் காட்டிக்கொடுத்து, அவர்களைக் கரையேற்றப் போகிறார்கள்; நான் சொன்னபடி நடந்தால் உனக்கு நன்மை உண்டாகுமே தவிர, உனக்கு யாதோர் தீமையும் ஏற்படாது'' என்று விட்டல பந்த் என்பவருக்கு அவர் புத்தி சொல்லவே, விட்டலபந்த் என்பவரும் தன் மனையாளுடன் ஆளந்திக்கு வந்து சேர்ந்தார்.

அங்குள்ள ப்ராஹ்மணர்கள் இவர்கள் அக்ரஹாரத்தில் குடியிருக்க ஒத்துகொள்ளாமையால், இவ்விருவரும் காட்டில் ஓர் குடிசை போட்டுக்கொண்டு, பகவானுடைய பஜனையைச் செய்துகொண்டு, அதில் இருந்து வந்தார்கள். பின்பு சிவன்-விஷ்ணு-ப்ரஹ்மதேவன் இவர்கள் மூவரும் ருக்மிணி அம்மாள் வயிற்றில் புத்ரர்களாய் அவதரித்தார்கள். அவர்களுக்கு முறையே நிவ்ருத்திதேவர் என்றும் ஞானதேவர் என்றும் ஸோபாநதேவர் என்றும் பெயர்களிடப்பட்டன. கடைசியாக ஆதிமாயாதேவியானவள் ருக்மிணி அம்மாள் வயிற்றில் பெண்ணாய்ப் பிறந்து முக்தாபாயீ என்று பெயரிடப்பட்டாள்.

இவர்களுக்குள் மூத்தவராகிய நிவ்ருத்திதேவருக்கு ஆறு வயதாயிருக்கும்போதே இவர்கள் அனைவரும் ஓர் சிவராத்ரியில் ஓர் மலையில் உள்ள சிவாலயம் சென்று சிவ தர்சனம் செய்யப் போயிருந்தபோது, ஓர் பெருங்காற்றும் மழையும் ஏற்பட்டது. ஜனங்கள் கூட்டமாய் ஓர் மறைவில் ஒதுங்கிக்கொள்ள ஓடினபோது இந்தக் குழந்தைகள் தாய்-தகப்பனை விட்டுப் பிரிந்துபோய் அழுதுகொண்டு நின்றனர். அப்போது கைநீநாதர் என்ற ஓர் மஹாயோகீ அவர்களை அணுகி மூத்தவராகிய நிவ்ருத்திதேவருக்கு யோகாப்யாஸத்தையும் பரஹ்மஞானத்தையும் உபதேசித்தருளி அவரைத் தனக்கு இளையவர்களான மற்றவர்களுக்கு உபதேசம் செய்யும்படி சொல்லிவிட்டு மறைந்துபோனார்.

நிவ்ருத்திநாதர் ஞானதேவருக்கு உபதேசம் செய்தார். ஞானதேவர் தன் தம்பியாகிய ஸோபான தேவருக்கும் தங்கையாகிய முக்தாபாயிக்கும் உபதேசம் செய்துவைத்தார். இவ்விஷயம் தாய் தகப்பன்மாருக்குத் தெரியாமலே இருந்துவிட்டது. பின்பு நிவ்ருத்தி தேவருக்கு எட்டு வயதானதைப் பார்த்து விட்டலபந்த் என்பவர் தன் பெண்சாதியையும் குழந்தைகளையும் தன்னுடன் கூட்டிக்கொண்டு ஆளந்தியில் இருந்த ப்ராஹ்மணர்களைக் கண்டு, பிள்ளைகளுக்கு உபநயநம் செய்துவைக்கும்படி கேட்டுக்கொண்டார்.

அதற்கு ப்ராஹ்மணர்கள் விட்டலபந்த் என்பவரைப் பார்த்து, "நீ ஸந்யாஸியானபின் உன் மனைவியுடன் சேர்ந்து இல்லறத்துக்கு வந்தாயே, அதற்கு சாஸ்த்ரங்கள் இடங்கொடுக்கவில்லை; அப்புறம் உனக்குப் பிறந்தவர்கள் ப்ராஹ்மணர்கள் ஆகார்கள்; அவர்களுக்கு உபநயநம் செய்துவைக்க சாஸ்த்ரம் ஒப்பாது" என்று சொன்னார்கள். அப்போது விட்டலபந்த் தான் நல்ல கதி அடைய வழியுண்டா, என்று கேட்டார். "நீ பகவானை ஸ்மரித்துக்கொண்டு ப்ரயாகை க்ஷேத்ரத்தில் கங்கையில் விழுந்து ப்ராணனை விட்டால், உனக்கு நற்கதி கிடைக்கும்" என்று ப்ராஹ்மணர்கள் சொல்ல, அதைக் கேட்ட விட்டலபந்த் தன் பெண்சாதி முகத்தையும் குழந்தைகள் முகத்தையும் திரும்பி நோக்காமல் ஒரே ஓட்டமாய், ப்ரயாகைக்கு ஓடி ஹரி நாம ஸ்மரணையுடன் கங்கையில் குதித்து உயிரை விட்டார்.

ருக்மிணி அம்மாளும் தன் குழந்தைகளைத் திரும்பிப் பாராமல் கணவனைப் பின்தொடர்ந்தே ஓடி, கணவன் விழுந்த கங்கையில் விழுந்து ப்ராணனை விட்டாள். பின்பு தனித்து நின்றுபோன குழந்தைகள் நால்வரும் ஆளந்தியிலிருந்த ப்ராஹ்மணர்களைப் பார்த்து தங்களுக்கு கதி என்னவென்று கேட்க, அவர்கள் சிறுவர்கள் விஷயத்தில் பரிதாபம் அடைந்து ப்ரதிஷ்டானத்திலிருந்த வித்வான்களுக்கு இவர்கள் வரலாற்றை ஓர் கடிதத்தில் தாங்களே எழுதி இவர்களுக்கு உபநயம் செய்துவைக்க சாஸ்த்ரம் உடன்படும் விஷயத்தில் என்ன ப்ராயச்சித்தங்கள் செய்துவைத்து இவர்களை ப்ராஹ்மண ஜாதியில் சேர்த்துக் கொள்ளக்கூடும் என்று விசாரித்து அக்கடிதத்துடன் அச்சிறுவர்களை ப்ரதிஷ்டானத்துக்கு அனுப்பித்து வைத்தார்கள்.

அக்கடிதத்துடன் அவர்கள் ப்ரதிஷ்டானம் வந்து சேர்ந்து அங்கே வித்வான்கள் சேர்ந்திருந்த ஸபையில் அக்கடிதத்தை வித்வான்களிடம் கொடுத்தார்கள். அந்த வித்வான்களும் அக்கடிதத்தை வாசித்து, சாஸ்த்ரங்களை நன்காராய்ந்து பார்த்து, அச்சிறுவர்களை நோக்கி, "உங்களை ப்ராஹ்மண ஜாதியிற் சேர்த்துக்கொள்ளவும், உங்களுக்கு உபநயனம் செய்து வைக்கவும் சாஸ்திரங்கள் ஓர் விதமாயும் ஒப்புக்கொள்ளவில்லை" என்றார்கள்.

பின்பு அச்சிறுவர்களுக்குள் மூத்தவராகிய நிவ்ருத்திதேவர், "நாங்கள் ப்ராஹ்மண ஜாதியில் சேராமலே, எங்களுக்கு உபநயநம் ஆகாமலே, நாங்கள் நற்கதியை யடைய என்ன உபாயம் உண்டோ, அதைச் சொல்லித் தரவேண்டும்" என்று, அங்கிருந்த ப்ராஹ்மணர்களை ப்ரார்த்தித்தார். அதற்கு ப்ராஹ்மணர்கள் "ஸர்வ ஜீவராசிகளையும் ஈச்வரனாய்ப் பாவித்து அவற்றை எல்லாம் நமஸ்கரித்துக்கொண்டே சென்றால், நற்கதி கிடைக்க ஓர் தடையும் இராது" என்றும், "இப்படிச் செய்ய ஓர் உத்தமமான ஜாதியில் பிறந்திருக்க வேண்டியது அவசியம் இல்லை" என்றும், ப்ராஹ்மணர்கள் சொன்னார்கள்.

அப்போது ஞானதேவர் "அண்ணா, இதுபோதும் நமக்கு, நாம் இப்படியே செய்து நற்கதியடைந்து விடலாமே" என்று நிவ்ருத்திநாதரைப் பார்த்துச் சொன்னார். இவருடைய இளமையையும் வாக்கின் பெருமையையும் பார்த்து அங்கிருந்த ப்ராஹ்மணர்களில் ஒருவர் வியப்படைந்து, "உன் பெயர் என்ன?" என்று வினவ, ஞானதேவரும் தன் பெயர் "ஞானதேவன்" என்றார். அதைக்கேட்ட ப்ராஹ்மணன், "இவனுக்கு இவ்வளவு பெருமைபடைத்த பெயரை எவர்களிட்டார்கள்?" என்று ஆச்சர்யப்பட்டார்.

மற்றோர் ப்ராஹ்மணன் இதைக் கேட்டு "பெயரில் என்ன இருக்கிறது? இதோ போகிறதே எங்கள் வீட்டு எருமைக்கடா, அதற்கும் ஞானதேவன் என்று பெயரிடக்கூடும்; அப்படிப் பெயரிட்டு வைத்தால் அதினிடத்தில் ஞானம் ஏற்படுமா?" என்றார். அதற்கு ஞானதேவர், "நீர் ஏன் ஸந்தேஹப்பட வேண்டும்? என்னிடத்தில் இருக்கும் ஞாநரூபியாகிய ஆத்மாவே அதினிடத்திலும் நிறைந்திருக்கிறது. இவ்விஷயத்தில் எனக்கும் அந்த எருமைக்கடாவுக்கும் பேதமில்லை" என்று சொன்னார்.

அப்போது அந்த ப்ராஹ்மணன் "நீ சிறுவனாயிருந்தும் வேதாந்தம் பேசுகிறாயே, என்ன? உனக்கும் அந்த எருமைக்கடாவுக்கும் பேதம் இல்லை என்றாயே; உன்னைப்போல் அது பேசுமா?" என்றார். அதற்கு "ப்ராஹ்மணர்கள் உத்தரவு செய்தால், அது பேசத் தடையிராது" என்று ஞானதேவர் சொன்னார். அதைக்கேட்டு அந்த ப்ராஹ்மணன் "அதைப் பேசும்படி செய்துவை" என்று சொல்ல, ஞானதேவர் அந்த எருமைக்கடாவை அழைத்து அதின் தலையில் கையை வைத்து "ருக்வேதத்தைச் சொல்" என்று உத்தரவு செய்ய, ப்ராஹ்மணர்கள் அனைவரும் கேட்க, அது அவ்வேதத்தை ஸாங்கோபாங்கமாய் ஸ்வரத்தவறுதல் இன்றி சொல்லிற்று. பின்பு அதை மற்ற மூன்று வேதங்களையும் தவறுதல் இன்றி சொல்லும்படி ஞானதேவர் செய்து வைத்தார்.

அன்றியும் இச்சிறுவர்கள் ப்ரதிஷ்டானத்தில் ஓர் ப்ராஹ்மணன் வீட்டில் இறங்கியிருந்தார்கள். அதற்காக அந்த ப்ராஹ்மணனை அந்த

ஊர்க்காரர்கள் ஜாதியைவிட்டு விலக்கி வைத்திருந்தார்கள். அந்த ப்ராஹ்மணன் வீட்டில் ஓர் நாள் பித்ருதினம் ஏற்பட்டு, அதை நடத்திவைக்க ப்ராஹ்மணர்கள் வராமையால், அந்த வீட்டுக்காரன் மிகவும் துக்கப்பட்டுக் கொண்டிருக்க, அவனுடைய துக்கத்தைத் தீர்த்துவைக்க ஞானதேவர் அவனுடைய இறந்துபோன பித்ருக்களை பித்ருலோகத்திலிருந்து வந்து சாப்பிட்டு போகும்படி செய்துவைத்தார்.

இப்படி ஞானதேவர் செய்துவைத்த ஆச்சர்யமான சரித்ரங்களைப் பார்த்து அவர்கள் நால்வரும் ஈச்வரனுடைய அம்சாவதாரங்களே என்று அவ்வூர் ப்ராஹ்மணர்கள் நிச்சயித்து, அவர்கள் இந்நால்வரும் ஈஸ்வராம்ச பூதர்களென்றும், அவர்களுக்கு ப்ராயச்சித்தங்கள் அவச்யம் இல்லையென்றும், அவர்களை ஜாதியில் சேர்த்துக்கொண்டு ஸஹபங்க்தி போஜநாதிகள் செய்யும், ப்ராஹ்மணர்களுக்கு நன்மையே ஏற்படும் என்றும், சுத்திபத்ரம் எழுதிக்கொடுத்து அவர்களைத் திரும்பவும் ஆளந்தீ நகரத்துக் கனுப்பினார்கள்.

அப்படி அவர்கள் திரும்பி ஆளந்திக்கு வரும்போது ப்ரதிஷ்டானத்து ப்ராஹ்மணர்கள் சிலர், இவர்களுடைய ஸங்கத்தில் இருந்து, அதனால் நன்மை அடைவதற்காக இவர்களுடன் கூடவே புறப்பட்டார்கள். அவர்களுக்கு வழியில் ஸத்காலக்ஷேபம் ஏற்படுவதற்காக ஞாநதேவர் தன் குருவாகிய நிவ்ருத்தி நாதருடைய ஆஞ்ஞையை முன்னிட்டு பகவத்கீதையின் ஆழ்ந்த அர்த்தத்தை எடுத்துச் சொல்லத் தொடங்கியதால் பகவத்கீதா பாவார்த்ததீபிகை அல்லது ஞானேச்வரீ என்ற இந்த க்ரந்தம் ஏற்பட்டது. இது ஞானதேவருடைய 15-வது வயதில் முடிவுபெற்றது.

பின்பு இவ்வுலகில் ஞானதேவர் கொஞ்ச நாட்கள் இருந்து மற்றும் சில ஆச்சர்யகரமான சரித்ரங்களை நடத்திவைத்து மஹாராஷ்டிர தேசத்தில் அநேகர்களை பகவத் பக்தியை யநுஷ்டிக்கச்செய்து, அவர்களுக்கு த்ருடமான ஞானமும் வைராக்கியமும் ஏற்படும்படி செய்துவைத்து, தன்னுடைய 22-வது வயதில் ஆளந்தீ க்ஷேத்ரத்தில் ஜீவந்தராகவே ஸமாதியில் உட்கார்ந்து விட்டார். இவருடைய பூர்ணசரித்ரத்தை மஹீபதி என்னும் மஹாராஷ்டிர கவியின் பக்த விஜய க்ரந்தத்தை (இந்த க்ரந்தம் தமிழிலும் தெலுங்கிலும் செய்யப்பட்டு அச்சிடப்பட்டிருக்கிறது.) வாசித்தறிந்து கொள்ளவேண்டும்.

ஞாநதேவர் சாலிவாஹநசகாப்தம் 1197-ம் வருஷத்தில் (க்ரிஸ்து நூற்றாண்டு 1274-ம் வருஷத்தில்) பிறந்து சாலிவாஹந சகாப்தம் 1218-ம் வருஷத்தில் (க்ரிஸ்து பிறந்து 1295-ம் வருஷத்தில்) ஸமாதியடைந்தார். ஞானேச்வரீ சாலிவாஹந சாகப்தம் 1212-ம் வருஷத்தில் (க்ரிஸ்து பிறந்த 1289-ம் வருஷம்) முடிவுபெற்றது.

பொருளடக்கம்

எண்	பொருள்	பக்கம்
1	அத்தியாயம் I	1
2	அத்தியாயம் II	32
3	அத்தியாயம் III	76
4	அத்தியாயம் IV	110
5	அத்தியாயம் V	140
6	அத்தியாயம் VI	163
7	அத்தியாயம் VII	219
8	அத்தியாயம் VIII	245
9	அத்தியாயம் IX	278
10	அத்தியாயம் X	346
11	அத்தியாயம் XI	388
12	அத்தியாயம் XII	470
13	அத்தியாயம் XIII	495
14	அத்தியாயம் XIV	599
15	அத்தியாயம் XV	640
16	அத்தியாயம் XVI	703
17	அத்தியாயம் XVII	752
18	அத்தியாயம் XVIII	796

ॐ नमोजी आद्या। वेदप्रतिपाद्या।
जय जय स्वसंवेद्या। आतमरूपा।। (१)

ஓம் நமோஜீ ஆத்யா । வேதப்ரதிபாத்யா
ஜய ஜய ஸ்வஸம்வேத்யா । ஆத்மரூபா ॥ (1)

देवा तूंचि गणेशु। सकलार्थमतिप्रकाशु।
म्हणे निवृत्तिदासु। अवधारिजो जी ।। (२)

தேவா தும்சீ கணேஷி । ஸகளார்த்தமதி ப்ரகாஷு
ம்ஹணே நிவ்ருத்திதாஸு । அவதாரிஜோ ஜி ॥ (2)

ஸ்ரீ கணேசாயநம:

ஸ்ரீ ஞாநேச்வரீ

அத்யாயம் 1

ஸ்ரீ கணேசஸ்துதி

ஓம்! அனைத்துக்கும் ஆதியானவரே! வேதத்தினால் கூறத்தக்க மஹிமை படைத்தவரே! உமக்கு நமஸ்காரம். ஐயா உம்மை நீரே அறியவேண்டும். ஆத்மரூபனே! நீர் வாழ்க வாழ்க. தேவனே! நீர் ஸகல தேவகணங்களுக்கும் ஈசன், ஸகல விஷயத்திலும் புத்திக்குப் பிரகாசத்தைச் செய்து வைப்பவர், நிவிருத்திதாஸனாகிய நான் சொல்வதற்குக் காது கொடுக்க வேண்டும். சப்தப்ரஹ்மம் அனைத்தும் உம்முடைய அழகிய உருவம், அவ்வுருவத்தில் அக்ஷரங்களால் அமைந்த உம்முடைய சரீரம் ஓர் தோஷமுமற்று விளங்குகின்றது. ஸ்மிருதிகள் அவ்வுருவின் அங்கமான அவயவங்களாய் அமைந்திருக்கின்றன. அவற்றின் அர்த்தத்தின் பெருமையே அந்த அவயவங்களில் அமைந்துள்ள லாவண்யமாகும். பதினென் புராணங்களுமே ரத்னங்களமைத்த நகைகளாய் அமைந்து, அவற்றின் பதத்தொடர்ச்சி தங்கக்கட்டடமாய், அப்பதத் தொடர்ச்சியால் அறிவிக்கப்பட்ட அர்த்த விசேஷங்கள் அக்கட்டடத்தில் பதிக்கப்பட்டுள்ள ரத்னங்கள் ஆகும்.

அவற்றிலுள்ள சிறப்புப் பொருந்திய பதக்கோர்வையே நேர்த்தியாய் வர்ணங்கொடுக்கப்பட்ட வஸ்திரங்களாய், அப்பதக் கோர்வையில் அமைந்த அலங்காரச் சிறப்புகள் அவ்வஸ்திரங்களின் காந்தியின் ப்ரவாஹமாகும். காவ்ய நாடகங்கள் என்னவாய் அமைந்திருக்கின்றனவோ என்று வியப்புடன் பார்த்து நிச்சயிக்கப்போகவே, அவை அம்மூர்த்தியின் இடையில் கட்டிய சலங்கைகளாயும், அவற்றின் பொருள் அச்சலங்கைகளின் சப்தமாயும் தோற்றுகின்றன. அவற்றின் ஸாஹித்யத்தால் தெரிவிக்கப்பட்ட விஷயங்களின் விதம்விதமான சாதுர்யம் அனைத்தும், தகுந்த ஸ்தாநங்களில் இட்டு வைத்த உத்தம ரத்னங்கள் ஆகும். இப்படி அமைந்த ஓர் உருவத்தில், வியாஸர் முதலானவர்களுடைய புத்தி விசேஷமே இடைப்பட்டையாய், அதின் கௌசல்யமானது அப்பட்டையினின்று தொங்கும் நிர்மலமான குஞ்சமாய் ப்ரகாசித்து விளங்குகிறது, கவனித்துப்பாரும்.

ஆறுவித சாஸ்திரங்களும், புஜங்களாய் அமைந்து, அவற்றின் தனித்தனிக் கொள்கைகள் அப்புஜங்களால் தரிக்கப்பட்ட ஆயுதங்கள் ஆகின்றன. தர்க்கமே பரசு ஆயிற்று, கர்மா கர்மங்களை வகுத்து வைக்கும் சாஸ்திரம் அங்குசம் ஆயிற்று, வேதாந்தமானது மிக்க ரஸத்துடன் கூடிய மோதகமாய் விளங்குகிறது. ஒரு கையில் உள்ள தந்தமானது, இயற்கையாகவே முறிந்துபோனதென்று வார்த்திகாரரால் ஸித்தாந்தம் செய்து வைக்கப்பட்ட, பௌத்த மதத்தைக் குறிப்பிடுகிறது. பின்பு வேதாந்தத்திற்கு அநுகூலமான தர்க்கசாஸ்திரம் வரங்கொடுப்பதான பத்ம ஹஸ்தமாய், தர்மத்தை நிலை நிறுத்துவதான தர்மசாஸ்திரம் அபய ஹஸ்தமாய், அமைந்திருக்கின்றன.

மஹா ஸுகத்தினால் உண்டான பரமாநந்தத்தால் நிறைந்து, முற்றும் நிர்மலமாய் இருக்கும் வேதாந்த ஞானமே ஸரளமாய் நீண்ட துதிக்கை ஆயிற்று. பின்பு உத்தமமான தத்வ விசாரமே பற்களாக அமைந்தன. ஸர்வ ஜீவர்கள் விஷயத்திலும் உமக்கிருக்கும் ஸமத்வமே வெள்ளை வர்ணமாய், உத்தமமான ஞானதிருஷ்டியே உம்முடைய சிறுகண்கள் ஆயிற்று. இரண்டு மீமாம்ஸா சாஸ்திரங்களும் காதுகளாய் அமைந்தன என்று எனக்குத் தோன்றுகிறது. ஞானம் என்பதே மதஜலமாய், முனிகள் அதைப் பருகவந்த தேனீக்கள் ஆனார்கள். தத்வார்த்தங்கள் காந்திபொருந்திய பவழங்களாயின. த்வைதாத்வைதம் என்ற இருமதங்களுமே யானைத்தலையில் ஒன்றுக்கொன்று நிகராய்க் கூடியிருக்கும் கன்னங்களாய் அமைந்தன. அவற்றின் மேல் பாகத்தில் தசோபநிஷத்துக்களும் வாஸனை பொருந்திய புஷ்பங்களாய் அமைந்து, அவ்வுபநிஷத்துக்களின் உதாரணமான தத்வஞானமே அப்புஷ்பங்களினின்று பெருகும் தேனாயிற்று.

அகாரம் இரண்டு பாதங்களாயும், உகாரம் விசாலமான வயிறாயும், மகாரம் பெரிய மண்டலாகாரமான தலையாயும், விளங்குகின்றன. இம்மூன்றும் எங்கே ஒன்றுபட்டனவோ, அங்கே வேதங்கள் முழுமையும் அடங்கிப் போயின. அனைத்துக்கும் முதல் வித்தாகிய அந்த ப்ரணவமே, இப்படி கணேசரூபமாக நிற்க அதை குருகிருபையால் நான் கண்டு நமஸ்கரித்தேன்.

ஸ்ரீ ஸரஸ்வதீ ஸ்துதி

புதிது புதிதான வாக்விலாஸங்களை உண்டுபண்ணிக் கொடுப்பவளும், சாதுர்யமான அர்த்தங்களோடு கூடிய கலைகளில் ப்ரீதி உள்ளவளும், விச்வத்தை எல்லாம் மயக்கி

வைக்கும் திறமையுள்ளவளுமான ஸ்ரீ சாரதாதேவியை நான் நமஸ்கரித்தேன்.

ஸ்ரீ ஸத்குரு வணக்கம்

எவருடைய உதவியைக் கொண்டு இந்த ஸம்ஸார வெள்ளத்தைத் தாண்டி விட்டேனோ, அந்த ஸத்குரு என்னுடைய ஹ்ருதயத்தில் குடி கொண்டிருக்கிறார். ஆகையால் தான் தத்வநிர்ணயம் செய்வதில் மிகுந்த ஆசை எனக்கு உண்டாயிருக்கிறது. கண்ணுக்கு ஓர் மையிட்ட மாத்திரத்தில், பார்வைக்குப் புதிய சக்திகள் உண்டாய், பின்பு பார்த்தவிடமெல்லாம் பூமியில் புதைந்து கிடக்கும் பெருநிதிகள் கண்ணுக்குப் புலப்படுவது போலும், சிந்தாமணியானது கைக்குக் கிட்டின மாத்திரத்தில் மனோரதங்கள் தவறாமல் ஸித்திபெறுவது போலும், உம்மை அடையப் பெற்று நான் பூர்ணகாமனானேன், ஹே நிவிருத்திநாதா. ஆகையால் நன்றாய்த் தெரிந்தவன் குருவை பஜித்து. க்ருதக்ருத்யனாவான், வேருக்கு ஜலம் வார்த்ததினாலேயே கிளைகளும் துளிர்களும் ஸந்தோஷிப்பதாலும், ஸமுத்திரத்தில், ஸ்நாநம் செய்வதால் மூன்று லோகத்திலு முள்ள தீர்த்தங்கள் அனைத்திலும் ஸ்நானம்செய்த பலன் கிடைத்துவிடுவதாலும், அமிருத ஸேவநத்தால் எல்லாரஸமும் ஸேவிக்கப்பட்டதாவதாலும், திரும்பத் திரும்ப அந்த ஸ்ரீ குருவையே நான் நமஸ்கரிக்கிறேன்; ஏனென்றால் அவர் ஒருவரே ஸகல மனோரதங்களையும் பூர்த்தி செய்து தருகிறார்.

மஹாபாரத வைபவம்

ஸகல கதைகளுக்கும் தாய்வீடென்றும், விவேகங்களையே பழமாகப் பழுத்துத்தரும் மரங்கள் எராளமாய் வளர்ந்து எப்போதும் புதுமையாய்த் தோற்றும் உத்யானமென்றும், சொல்லத்தக்க இக்கதையின் பெருமையை சொல்வேன் கேளுங்கள், இக்கதை, ஸகல ஸுகங்களுக்கும் ஆதிகாரணமான தத்வார்த்தங்கள் நிறைந்த மஹாநிதியோ என்றும், நவரஸங்களாகிய அமிருதம் நிறைந்துள்ள ஸமுத்ரமோ என்றும், சொல்லத்தகும். இக்கதையே ஸர்வ வித்யைகளுக்கும் வேராய், எல்லா சாஸ்திரங்களுக்கும் வாஸஸ்தானமான பிரத்யக்ஷ பரப்ரஹ்ம வஸ்துவாகும். இது ஸகல தர்மங்களுக்கும் தாய்வீடே; ஸஜ்ஜனர்களுடைய உயிர் நிலையே; சாரதாதேவியின் அழகுகள் என்னும் ரத்னங்கள் நிறைத்து வைத்திருக்கும் பாண்டாரமே, எனவும் தகும். சாரதா தேவியே

வியாஸருடைய மஹிமை தங்கிய புத்தியில் பிரவேசித்து, இந்த பாரதத்திலுள்ள அநேக கதைகளாக உருவெடுத்து மூவுலகத்தாரும் ஸேவிக்கும்படி பிரத்யக்ஷமானாள் எனவும் தகும்.

ஆகையால் இது காவ்யங்களுக்குள் அரசு, க்ரந்தங்களனைத்துக்கும் உள்ள பெருமைக்கெல்லாம் ஆதாரபூமி. இதின் ஸம்பந்தத்தால் ரஸங்களுக்கு ரஸவத்தாயிருத்தல் என்னும் கீர்த்தி ஏற்பட்டது. அப்படியே இதற்கு மற்றுமோர் பெருமையுண்டு, கேளுங்கள். இந்தக் கதையின் சம்பந்தத்தை அடைந்துதான், அழகான சப்தங்களுக்கு ஸச்சாஸ்திரத்தைப் பிரதிபாதிக்கும் சாமர்த்தியம் உண்டாயிற்று. அன்றியும் இதன் சம்பந்தத்தால் உத்தமமான ஆத்மஞானத்திற்கு மார்த்தவமும் மனோரஞ்ஜக சக்தியும் அதிகரித்தது.

இந்தக் கதையில் வாக்சாதுர்யம் புத்தி லாகவத்துடன் கலந்து, தத்வஞானம் ருசியுள்ளதாயிற்று. ஸுகத்தின் ஸௌபாக்யம் விருத்தி யடைந்தது. இந்தக் காவ்யத்தில் தான் மாதுர்யம் என்பதற்கு மதுரதையும், சிங்காரத்திற்கு அழகும். தகைமையுற்ற விஷயங்களுக்குப் பெருமையும், ஏற்பட்டு, அவை சிறந்து விளங்கின. இதில் தான் கலைகளுக்கு ஸாமர்த்தியமும், புண்யத்துக்கு உத்தமமான ப்ரதாபமும். உண்டாயிற்று.

ஆகையால்தான் இந்தக் கதையைக் கேட்ட ஜனமேஜயனுடைய பாபம் அநாயாஸமாய் தொலைந்தது. மேலும் கொஞ்சநேரம் கவனித்துப் பார்த்தால், இக்கதையில் சிங்காரம் முதலிய ரஸங்களுக்கு அதிகரித்த சோபையும், குணங்களுக்கு விசேஷித்த குண ஸம்பத்தியும், காணப்படும். ஸூர்யப் பிரகாசத்தால் வியாபிக்கப்பட்டு எப்படி முவ்வுலகும் பிரகாசம் அடைந்து விளங்குமோ, அப்படியே வியாஸருடைய புத்தி ஸாமர்த்தியத்தால் வர்ணிக்கப்பட்டு, விச்வம் அனைத்தும் பிரகாசத்துடன் விளங்குகிறது. எப்படி நல்ல வளப்பம் பொருந்திய பூமியில் விதைக்கப்பட்ட விதையானது தன் ஜாத்யனுகுணமாக விசேஷ விருத்தியடைந்து பயிராகுமோ, அப்படியே இந்த பாரதத்தில் வர்ணிக்கப்பட்ட விஷயங்களனைத்தும் மிக்கப் பெருமைபெற்றன.

எப்படி ஒருவன் நகரத்தில் கொஞ்சகாலம் வஸிக்கத் தலைப்பட்டால்,நகரத்தார் போலவே சீர்திருத்தமுள்ளவனாய் விடுவானோ, அப்படியே வ்யாஸருடைய புத்தி ஸாமர்த்தியத்தால் இக்கதையில் வர்ணிக்கப்பட்ட விஷயங்களனைத்தும் விசேஷ காந்தியை அடைந்தன. யௌவனத்தின் ப்ரதமதசையில் ஓர் பெண்ணின் சரீரத்தில்

லாவண்யத்தின் அங்குரங்கள் மேன்மேலும் விரைந்து வெளிப்படுவது போலும், ஓர் உத்யானத்தில் வஸந்தருது பிரவேசித்ததும், முன்பு இருந்ததைக் காட்டிலும் விசேஷித்த அளவாக வனசோபைகள், திறந்து வைக்கப்பட்ட ஓர் நிதியில் ரத்னங்கள்போல், வெளிப்பட்டுத் தோற்றுவது போலும், கட்டியாய் இருக்கும் தங்கம் விசேஷித்த அழகில்லாததாய் பார்வைக்குத் தோன்றி, பின்பு அத்தங்கமே நகைகளானபின் விசேஷ சோபை அடைந்து ஒப்பற்று விளங்குவது போலும், வ்யாஸர் சொற்களால் அலங்கரிக்கப்பட்ட விஷயங்களனைத்தும் வேண்டுமென்ற படியெல்லாம் சிறப்படைந்தன. இதை அறிந்து இதிஹாஸங்கள் தாமாய் இக்கதையில் வந்துசேர்ந்தன. ஜகத்தில் பூர்ண ப்ரதிஷ்டை அடைய விரும்பி, தங்கள் தங்கள் ஆக்ருதியைச் சுருக்கிக்கொண்டு புராணங்கள் அனைத்தும் ஆக்யானங்கள் என்னும் உருவுகொண்டு பாரதத்தை வந்தடைந்தன.

ஆகையால் மஹாபாரதத்தில் இல்லாத ஒன்று மூவுலகத்திலும் இல்லை. இந்தக் காரணத்தைக் கொண்டு மூவுலகமும் வ்யாஸர் வாய்ப்பட்ட எச்சிலென்று சொல்லத்தகும். (வ்யாஸோச்சிஷ்டம் ஜகத்த்ரயம், என்று வட மொழியில் சொல்வர்கள்) ஜகத்தில் இப்படி உத்தம ரஸம் பொருந்தின கதையும் பரமார்த்தத்துக்கு உத்பத்தி ஸ்தானமுமான இப்பாரதத்தை வைஸம்பாயனமுனி ஜனமேஜயனுக்குச் சொன்னார். இதை அத்விதீயம் என்றும், உத்தமம் என்றும், நிகரில்லாதபடி பவித்ரமானதென்றும், ஸகல மங்களங்களுக்கும் வாஸஸ்தானமென்றும், உறுதியாய் பாவிக்க வேண்டும்.

பகவத்கீதையின் பெருமை

இப்போது சொல்ல நேர்ந்தது யாதென்றால், பாரதம் என்னும் தாமரைப்பூவின் மகரந்தம் எனத் தகுந்ததும், ஸ்ரீரங்கன் அர்ஜுனனை முன்வைத்து ஸம்வாதரூபமாய் வெளிப்படுத்தியதுமான கீதாப்ரஸங்கமே. சப்தப்ரஹ்மம் என்னும் ஸமுத்திரமானது வ்யாஸருடைய புத்தியினால் கடையப்பட்டு, இந்த கீதை என்னும் வெண்ணெய் ஏராளமாய் திரட்டி எடுக்கப்பட்டு, ஞநாக்னியின்மேல் வைத்து காய்ச்சப்பட்டு, விவேகத்தால் பதமாக்கப்பெற்று, எல்லாரும் கொண்டாடத்தக்கபடி ஸுவாஸனை பெற்றது. இந்த கீதையை விரக்தர்கள் பரிசீலனம் செய்ய விரும்புவார்கள், ஸாதுக்கள் எப்போதும் அனுபவித்துக் கொண்டாடுவார்கள். அத்வைதஸித்தி பெற்று அக்கரை ஏறினவர்கள் இதிலேயே

முழுகிக் கிடந்து ரமித்துக் கொண்டிருப்பார்கள். இப்படி மஹிமை பெற்றதாயும், பக்தியுடன் கேட்டு உட்கொள்ளத் தக்கதாயும், த்ரிஜகத்தாரும் நமஸ்கரிக்கத் தக்கதாயும் இருக்கும்.

இந்த கீதை பீஷ்மபர்வதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இது பகவத்கீதை என்று பெயரிடப்பட்டு, பிரம்மா ஈசன் முதலானவர்களால் கொண்டாடப்பட்டு, ஸநகாதிகளால் மிக்க பிரியத்துடன் ஸேவிக்கப்படும். எப்படி சரத்காலத்தின் சந்திரகலையில் அடங்கியுள்ள அதி மிருதுவாயிருக்கும் அமிர்தத்துளிகளை சகோரபக்ஷியின் குஞ்சுகள் ப்ரேமையால் நனைத்து மிருதுவாயிருக்கும் மனதுடன் உட்கொள்ளுமோ, அப்படியே ப்ரேமையால் சித்தத்தை மிகவும் மிருதுவாய்ச் செய்துகொண்டு இந்தக் கதையை ச்ரோதாக்கள் கேட்கவேண்டும்.

இதை சப்தத்தின் உதவியில்லாமலே எடுத்துக் கூறவேண்டும். இந்திரியங்களுக்குத் தெரியாமலே இதன் ஸுகத்தை அனுபவிக்க வேண்டும். சொல்வதற்கு முன்னமேயே இதன் அர்த்தத்தைத் தழுவி நிற்கவேண்டும். தாமரைப்பூவிலுள்ள மகரந்தத்தை அதின் இதழ்கள் அறியாத வண்ணமே எப்படித் தேனீக்கள் எடுத்துக்கொண்டு போகுமோ, அப்படியே இந்தக் கிரந்தத்தை ச்ரோதாக்கள் ஸேவிக்க வேண்டும். தான் இருக்கும் இடம் விட்டுப் பெயராமல் இருந்து, ஆகாசத்தில் உதிக்கும் சந்திரனைத் தழுவிக்கொள்ள அல்லி ஒன்றுக்கே தெரியும், அப்படியே சமதமாதி குணங்களால் நிறைந்து விகாரமற்று நிலைபெற்ற அந்தக்கரணம் உள்ளவன்தான் இதின் உட்பொருளை அறிவான்.

அ்வையடக்கம்

அர்ஜுநனுக்கு ஸமானமான ச்ரவணாதிசாரம் படைத்த ஸாதுக்களே, என்னிடத்தில் கிருபை செய்து நீங்கள் இந்தக் கதையை கவனித்துக் கேட்கவேண்டும். ப்ரபுக்களாகிய தங்களுடைய ஹ்ருதயம் மிகவும் பெருமை உள்ளதாகையால், சலுகை பாராட்டி தங்களுடைய பாதாரவிந்தத்தில் இந்த விண்ணப்பம் செய்தேன். குழந்தையின் வார்த்தை எத்தனைக் கெத்தனை தத்துப்பித்தாய் இருக்குமோ, அத்தனைக்கத்தனை அதின் தாய்தகப்பன்களுக்கு ஸந்தோஷம் அதிகரிக்கும். அப்படி நீங்கள் என்னை அங்கிகரித்தீர்கள். ஸஜ்ஜனர்களால் நான் அவர்களைச் சேர்ந்தவனென்று சொல்லப்பட்டேன். அப்படியான உடனேயே என்னுடைய குறைவனைத்தும் ஸஹிக்கப்பட்டுப் போயிற்று. இனி அவர்களைப் ப்ரார்த்திக்க வேண்டுவது ஏன்?

இந்நூல் செய்ய ஸஹாயமாயேற்பட்ட துணை

ஆனால் என்னுடைய அபராதம் மற்றுமொன்றுண்டு. எதுவென்றால் நான் கீதார்த்தத்தைத் தெரிந்து கொண்டதாக பாவித்து, அதைக்கவனித்துக் கேளுங்களென்று நான் விண்ணப்பம் செய்ததே. இதைத் தெரிந்து கொள்வது அஸாத்யம் என்று யோசிக்காமல், இதைச் சொல்வேன் என்று ஓர்துணிவு எனக்கு உண்டாயிற்றே! மினு மினுப்பூச்சிக்கு ஸூர்ய வெளிச்சத்தில் ப்ரகாசம் உண்டோ? அல்லது ஊர்க்குருவி ஸமுத்ரத்தைத் தன் மூக்கால் அளந்து விடுமோ? ஒன்றுமறியாத நான் இந்த விஷயத்தில் ப்ரவிர்த்தித்தது இப்படியே ஆகும்.

கவனித்துக் கேளுங்கள், ஆகாசத்தைக் கட்டி வைக்கிறதென்றால் அதைக்காட்டிலும் பெரிதான வேறொன்றிருக்கவேண்டு மல்லவா. ஆகையால் கீதார்த்தத்தைச் சொல்வேன் என்று ஆரம்பித்தது அஸாத்யமானதே. அப்படிப்பட்ட கீதார்த்தத்தின் பெருமையை பரமசிவனே மேலும் மேலும் விஸ்தரித்துச் சொல்லி நிற்கையில், பவானிதேவியானவள் இது இவ்வளவு பெரிதா என்று ஆச்சர்ய்பட்டு வினவினாள். அப்பொது பரமசிவன். "தேவீ உன்னுடைய ஸ்வரூபம் நிமிஷத்துக்கு நிமிஷம் புதிதான அழகுகள் அதில் காணப்படுவதால், அது முழுதும் கண்டறியக் கூடாத தென்றே எண்ணவேண்டும்" என்று சொன்னார். இந்த வேதங்கள் எவனுடைய தூக்கத்தின் குரட்டையாகுமோ, அந்த ஸ்ரீ ஸர்வேச்வரன்தானே அர்ஜுனன் கண்முன் நின்று ஆக்ஷேபணைகளுக்கு ஸமாதானங்கள் சொல்லி, ஸந்தேஹித்துக் கேட்ட கேள்விகளுக்கு தெளிவான உத்தரம் கொடுத்து, இப்படியெல்லாம் ப்ரயாஸ பூர்வமாக இந்த கீதையை ஏற்படுத்தி வைத்தார்.

இப்படி ஆழம் காண முடியாத கீதார்த்தம் என்னும் ஓர் விஷயத்தை வர்ணிக்க வேண்டும் என்று தலைப்பட்ட வேதங்கள் பைத்தியங்கொண்டு உளறி நிற்குமேயானால், மந்தமதி யுள்ளவனான நான் எவ்வளவு மாத்ரம். அளவற்ற இதை எப்படி கட்டி அணைப்பது. எல்லாவற்றிற்கும் உயர்ந்ததான தேஜஸ்ஸை மற்றெந்த தேஜஸ்ஸைக்கொண்டு காட்டிக் கொடுக்கலாம். ஓர் கொசு ஆகாசத்தைத் தன் முஷ்டியில் அடக்கிப் பிடிப்பது என்பது என்னமாய் முடியும். ஆனால் இந்த அஸாத்யத்தை ஸாதித்து வைக்க ஓர் துணை எனக்கு உண்டு. அதின் பலத்தைக்கொண்டு தான், நான் தைர்யமாய் சொல்கிறேன். என்று இதை ஆரம்பித்தேன்.

அது யாதென்றால் ஸ்ரீ குருவின் அணுகூல்யமே. அன்றியும் நான் மூர்க்கனும் அவிவேகியுமே யானாலும், ஸாதுக்கள் க்ருபை என்னும் தீபம் பிராசித்துக்கொண்டு எனக்கு ஸஹாயமாய் ஏற்பட்டிருக்கிறது. இரும்பு தங்கமாய் விடுதல் என்பது ஸ்பர்ச வேதியின் ஸாமர்த்தியத்தால் ஏற்படுகிறது. அம்ருதம் கிடைத்து விட்டால் செத்தவனுக்கும் உயிர் உண்டாகிறது.

ப்ரஸந்நமாய் ஸரஸ்வதி எதிர் நின்றால், ஊமைக்கும் வாக்ஸாமர்த்யம் உண்டாகிறது. இவ்விஷயத்தில் ஸாமர்த்யம் அநுகூலமாய் ஏற்பட்ட வஸ்துவைச் சேர்ந்தது. இதில் ஆச்சர்யம் என்ன. எதற்குக் காமதேனுவானது தாயாகுமோ, அதற்குக் கிடைக்காததென்று யாதேனும் உண்டா? இப்படிப்பட்ட ஸஹாயம் ஏற்பட்டதால் இந்த க்ரந்தத்தை செய்ய ப்ரவர்த்தித்தேன். ஆகவே குறைவானதை நிறப்பி வைத்துக்கொண்டு, அதிகமானதை ஒதுக்கிப் போட்டு, இந்த க்ரந்தத்தை அங்கீகரிக்க வேண்டும், என்று உங்களை ப்ராத்தித்து நிற்கிறேன்.

ஆகவே இப்போது நீங்கள் என்னிடத்தில் லக்ஷ்யத்தை செலுத்த வேண்டும்; ஏனென்றால் கயிற்றைப் பிடித்து ஆட்டி வைக்கிற படியெல்லாம் ஆடும் பொம்மை போலும், நீங்கள் எதைச் சொல்லிவைப்பீர்களோ நான் அதைச் சொல்கிறவனாய் இருக்கிறேன். இப்படி உங்களால் அனுக்ரஹிக்கப் பட்டவனாயும், உங்கள் ஆஞ்ஞையை வகித்தவனாயும், உங்களைச் சேர்ந்தவனாயும் இருக்கும் என்னை உங்களிஷ்டப்படி அலங்கரித்து வைத்துக்கொள்ளுங்கள்.

ஸத்குருவின் ஆஞ்ஞை

அப்போது ஸ்ரீ குரு "இவ்வளவு பீடிகை போதும்; இனி விரைந்து பகவத் கீதார்த்தத்தை சொல்வதில் புத்தியைச் செலுத்து", என்று சொன்னார். ஸ்ரீகுருநாதனுடைய ஆஞ்ஞையை முன்னிட்டு, அந்தக் கீதார்த்தத்தை மிக்க உத்ஸாஹத்துடன் சொல்வேன், கவனமாய்க் கேளுங்கள்.

धृतराष्ट्र उवाच ।
धर्मक्षेत्रे कुरुक्षेत्रे समवेता युयुत्सवः ।
मामकाः पाण्डवाश्चैव किमकुर्वत सञ्जय ॥ १ ॥

த்ருதராஷ்ட்ர உவாச - திருதராஷ்டிரர் கேள்வி

தர்ம க்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸமவேதா யுயுத்ஸவ: ।
மாமகா: பாண்டவாஶ்சைவ கிமகுர்வத ஸஞ்ஜய ॥ 1

கதாரம்பம்

புத்ர ஸ்நேஹத்தால் அறிவுகேட்டை அடைந்திருந்த த்ருதராஷ்ட்ரன், "ஹே ஸஞ்சயா, குருக்ஷேத்திரத்தின் வர்த்தமானம் என்ன? தர்மாலயம் என்று சொல்லப்பட்ட அவ்விடத்திற்குப் பாண்டவர்களும் என்னைச் சேர்ந்தவர்களும் யுத்தம் செய்ய நிச்சயித்துச் சென்றார்களே; அங்கு இப்போது நடக்கும் வ்ருத்தாந்தத்தை நீ எனக்குத் தாமஸமின்றிச் சொல்லவேண்டும், என்று விசாரித்தான்.

सञ्जय उवाच ।

दृष्ट्वा तु पाण्डवानीकं व्यूढं दुर्योधनस्तदा ।
आचार्यमुपसंगम्य राजा वचनमब्रवीत् ॥ २ ॥

ஸஞ்சய உவாச - ஸஞ்சயன் பதில்

த்ருஷ்ட்வா து பாண்டவானீகம் வ்யூடம் துர்யோதனஸ் ததா।
ஆசார்ய ப ஸங்கம்ய ராஜா வசன மப்ரவீத் ॥ 2

पश्यैतां पाण्डुपुत्राणामाचार्य महतीं चमूम् ।
व्यूढां द्रुपदपुत्रेण तव शिष्येण धीमता ॥ ३॥

பஸ்யைதாம் பாண்டு புத்ராணாம் ஆசார்ய மஹதீம் சமூம்।
வ்யூடாம் த்ருபத புத்ரேண தவ ஶிஷ்யேண தீமதா ॥ 3

துரியோதனன் பாண்டவ ஸேனையை வர்ணித்தல்

அதைக்கேட்டு ஸஞ்சயன் பின் வருமாறு சொன்னான். மகாப்ரளயத்தில் காலனுடைய வாய் விரிந்தது போலும், காளகூடம் பொங்கி வழிந்தது போலும், வடவைத்தீ மண்டி எரிந்து, ப்ரளயமாருதத்தின் ஸஹாயத்தைப் பெற்று, ஸமுத்ரத்தை வற்ற அடித்து, ஆகாசத்தை அளாவத் தலைப்பட்டது போலும், ஒருவராலும் அடக்க முடியாதபடி பாண்டவ ஸைந்யம் முழுதும் ஏககாலத்தில் பொங்கி எழுந்தது. அச்சேனை அநேக அணிகளாய் வகுக்கப்பட்டு, யுத்த ஸந்நத்தமாயும் பயங்கரமாயும் நிற்பதை துர்யோதனன் பார்த்து, எப்படி யானைக்கூட்டத்தைப் பார்த்த ஸிம்ஹம் அதை ஒரு பொருட்டாய் எண்ணாதோ, அப்படியே அது எவ்வளவு மாத்ரம் என்று அதை அவமதித்து, த்ரோணாசார்யரைப் பார்த்துச் சொன்னான்.

இதோ பார்த்தீரா, எப்படி பாண்டவர்களுடைய சேனையானது பொங்கி நிற்கிறது. நடைபெற்ற மலைக்கோட்டைகள் போல், சுற்றிலும் அநேக அணிகளாய், புத்திசாலியான த்ருபதகுமாரனால், வகுக்கப்பட்டு நிற்கிறது. அவன் உம்மிடத்தில் படித்து வித்யைகளுக்கு வாஸஸ்தானமாய், இந்த ஸைந்யத்தைக், கடல்போல் விரிவடைந்து தோன்றும்படி, வகுத்து வைத்திருக்கிறான். பாரீர்! பாரீர்!

अत्र शूरा महेष्वासा भीमार्जुनसमा युधि ।
युयुधानो विराटश्च द्रुपदश्च महारथः ॥ ४ ॥

அத்ர ஶூரா மஹேஷ்வாஸா பீமார்ஜுநஸமா யுதி ।
யுயுதாநோ விராடஶ்ச த்ருபதஶ்ச மஹாரத: ॥ 4

இதுவுமது

அஸாதாரணமானவர்களாய் சஸ்தராஸ்தர ப்ரயோகங்களில் மிக்கப் பயிற்சியுள்ளவர்களாய், க்ஷத்ரியதர்மத்தில் அதிஸாமர்த்யமுள்ளவர்களாய், பலத்தாலும் பௌருஷத்தாலும் பீமார்ஜுனர்களுக்கு ஸமானமானவர்களான மற்றும் பல வீரர்கள் அச்சேனையில் நிற்கிறார்கள். அவர்களை யார் யார் என்று சொல்வேன், கேளீர். இதோ உத்தம போர்வீரனான யுயுதானனும், மஹாரதர் களுக்குள் சிறந்தவனான விராடனும் இருக்கிறார்கள். வீரனான த்ருபதன் இதோ நிற்கிறான்.

धृष्टकेतुश्चेकितानः काशिराजश्च वीर्यवान् ।
पुरुजित्कुन्तिभोजश्च शैव्यश्च नरपुंगवः ॥ ५ ॥

த்ருஷ்ட கேதுஶ்ச சேகிதான: காஶிராஜஶ்ச வீர்யவான் ।
புருஜித் குந்தி போஜஶ்ச ஶைப்யஶ்ச நரபுங்கவ: ॥ 5

युधामन्युश्च विक्रान्त उत्तमौजाश्च वीर्यवान् ।
सौभद्रो द्रौपदेयाश्च सर्व एव महारथाः॥ ६ ॥

தாமன்யுஶ்ச விக்ராந்த உத்தமௌஜாஶ்ச வீர்யவான் ।
ஸௌபத்ரோ த்ரௌபதேயாஶ்ச ஸர்வ ஏவ மஹாரதா: ॥ 6

இதுவுமது

சேகிதானன், திருஷ்டகேது, பராக்ரமசாலியான காசிராஜன், ராஜராஜனான உத்தமௌஜன், சைப்யன், குந்திபோஜன், யுதாமன்யு, புருஜித் முதலிய அரசர்கள் அனைவரையும் பாரும். இவன் ஸுபத்ரையின் ஹிருதயத்திற்கு ஆனந்தத்தைச் செய்து வைப்பவனான அபிமன்யு. இவனைப் புதிய ஓர் அர்ஜுனன் எனத்தகும். இன்னும் திரௌபதி குமாரர்களும், அவர்களோடு கணக்கிட முடியாத மஹாரதர்களான வீரர்களும் கூடி நிற்கிறார்கள்.

अस्माकं तु विशिष्टा ये तान्निबोध द्विजोत्तम ।
नायका मम सैन्यस्य संज्ञार्थं तान्ब्रवीमि ते ॥७ ॥

அஸ்மாகம் து விஶிஷ்டா யே தாந்நிபோத த்விஜோத்தம ।
நாயகா மம ஸைந்யஸ்ய ஸங்ஞார்தம் தான்ப்ரவீமி தே ॥ 7

भवान्भीष्मश्च कर्णश्च कृपश्च समितिञ्जयः ।
अश्वत्थामा विकर्णश्च सौमदत्तिस्तथैव च ॥ ८॥

பவான் பீஷ்மஶ்ச கர்ணஶ்ச க்ருபஶ்ச ஸமிதிஞ்ஜய: ।
அஶ்வத்தாமா விகர்ணஶ்ச ஸௌம தத்திஶ் தத்தவ ச ॥ 8

துர்யோதனன் தன் சேனையை வர்ணித்தல்

இனி நம்முடைய ஸேனையில், நாயகர்களாயும், ப்ரஸித்தி யடைந்த வீரர்களாயும், வெவ்வேறு ஸேனைகளின் தலைவர்களாயும், இருப்பவர்களைப் ப்ரஸங்காநுஸாரமாக எடுத்துச் சொல்வேன், கேளீர். உம்மை முதலாக வைத்து, அங்கொருவர் இங்கொருவராக, முக்கியமானவர்களை மாத்திரம் எடுத்துச் சொல்வேன். சத்ருக்களை கொளுத்தும்படியான தேஜஸோடு கூடிய ஸூர்யன் என்று சொல்லத்தக்க இந்த கங்காபுத்ரரான பீஷ்மாச்சார்யரும், பகைவர்களாகிய யானைகளுக்கு ஸிம்ஹமாய் விளங்கும் கர்ணன் என்னும் வீரனும், தன்னுடைய ஓர் ஸங்கல்பத்தினால் விச்வமனைத்தையும் ஸம்ஹரித்து வைக்கத்தக்க வல்லமையுடைய இந்த க்ருபாசார்யரும், வீரனான விகர்ணனும், யமனுக்கு ஸதா பயமுண்டாக்கி வைக்கும் அச்வத்தாமனும், வெற்றி பொருந்தியவனான ஸௌமதத்தியும், நம்முடைய ஸேனையில் அங்கங்கே நிற்கிறார்கள், பாரீர்.

अन्ये च बहवः शूर मदर्थे त्यक्तजीविताः ।
नानाशस्त्रप्रहरणाः सर्वे युद्धविशारदाः ॥ ९ ॥

அன்யே ச பஹவ: ஶூரா மதர்தே த்யக்த ஜீவிதா: ।
நாநா ஶஸ்த்ர ப்ரஹரணா: ஸர்வே யுத்த விஶாரதா: ॥ 9

இதுவுமது

இப்படியே ப்ரஹ்மதேவனும் அளவிட முடியாத பலத்தோடு கூடிய மற்றும் அநேகர்கள் இருக்கிறார்கள். இவர்களனைவரும் சஸ்த்ர வித்யையில் கரை கண்டவர்கள். அஸ்த்ரமந்த்ரங்களே இவர்களாக அவதாரம் செய்தனவென்று சொல்ல வேண்டும். அஸ்த்ரஜ்ஞாதங்கள் இவர்களால் தான் உலகத்தில் ப்ரஸித்தி பெற்றன. இவர்களுடன் ஸரியாக எதிர்த்துப் போர் செய்ய வல்லவர்கள் உலகில் கிடையார். இவர்களுடைய தேஹத்தில் பூர்ண ப்ராதபம் குடிகொண்டிருக்கிறது. இப்படியிருந்தும், இவர்களனைவரும் தங்கள் பிராணனை கையில் ஏந்திக்கொண்டு, என் ப்ரயோஜனத்தையே உத்தேசித்தவர்களாய், என்னையனுஸரித்து நிற்கிறார்கள்.

பதிவ்ரதை கணவனையே தன்னுயிராய் நினைத்திருப்பது போல், இந்த வீரர்கள் தங்களுடைய பிராணனாய் என்னை யெண்ணியிருக்கிறார்கள். என்னுடைய கார்யத்தின் பெருமைக்குமுன், இவர்கள் தங்களுடைய உயிரை அல்பமாய் மதித்து, ஸ்வாமியான என் விஷயத்தில் எல்லையற்றபடி பரிசுத்தமான பக்தியுள்ளவர்களாய் இருக்கிறார்கள். யுத்தகௌசல்யம் நன்கறிந்தவர்களான இவர்களாலேயே கீர்த்தியும் போர்செய்யும் வித்யையும் உலகில் வாழ்வடைந்திருக்கின்றன. இவ்வளவு வளர்த்திச்சொல்வதேன். க்ஷத்ரிய தர்மமென்பது இவர்களிடத்திலிருந்தே உண்டாயிற்று.

अपर्याप्तं तदस्माकं बलं भीष्माभिरक्षितम् ।
पर्याप्तं त्विदमेतेषां बलं भीमाभिरक्षितम् ॥ १० ॥

அபர்யாப்தம் ததஸ்மாகம் பலம் பீஷ்மாபிரக்ஷிதம் ।
பர்யாப்தம் த்வித மேதேஷாம் பலம் பீமாபிரக்ஷிதம் ॥ 10

துர்யோதனன் இரு ஸைந்யங்களையும் ஒப்பிடல்

அத்துடன்கூட க்ஷத்ரியர்களுக்குள் சிறந்தவரும், உலகத்தில் உத்தமரும், ஜகத்தில் ப்ரஸித்திபெற்ற போர்வீரருமான, இந்த

பீஷ்மர் ஸேனாதிபதியாய் ஏற்பட்டிருக்கிறார். இப்போது இப்படிப்பட்டவருடைய பலத்தினுதவியைப் பெற்று, இந்த நம் ஸேனை கோட்டைபோல் அசைக்க முடியாததாயிருக்கிறது. இதன் முன் முவ்வுலகமும் அல்பமாய்த் தோன்றுகிறது. கரையற்ற ஸமுத்திரம்போன்ற இச்சேனையில், ஒருவனாவது பயந்தவனில்லை. அத்தோடு வடவாக்னியைப் போன்ற இவருடைய ஸகாயமும், காய்ச்சின பாலுக்கு உரைபோல் கிடைத்திருக்கிறது.

(காய்ந்து குறுகி தடித்திருக்கும் பால், உரையின் ஸம்பந்தத்தால், கட்டியாகிய தயிராய் உரைவதுபோல், இவர் ஸஹாயத்தால், போர்வீரர்களனைவரும் ஒன்றுபட்டு நிற்கிறார்கள்)

பிரளயாக்நியும் பிரளயமாருதமும் ஒன்றுபட்டதுபோல், இந்தஸேனைக்கு இந்த கங்காபுத்ரர் ஸேநாபதியாய் நிற்கிறார். இப்படிப்பட்ட நம் ஸைந்யத்தின் பெருமைக்குமுன், அந்த பாண்டவ ஸைந்யம் நிஸ்ஸந்தேஹமாய் அல்ப மென்றே தோற்றுகிறது, அத்துடன் கூட கேவலம் தடித்தனத்தினாலேயே சிறந்து, புத்திஹீநனாயிருக்கும் பீம ஸேனன் அதற்கு நாயகனாய் நிற்கிறான். இப்படிச் சொல்லி துர்யோதனன் ஓய்ந்தான்.

अयनेषु च सर्वेषु यथाभागमवस्थिताः ।
भीष्ममेवाभिरक्षन्तु भवन्तः सर्व एव हि ॥ ११ ॥

அயனேஷு ச ஸர்வேஷு யதாபாக மவஸ்திதாः ।
பீஷ்மமேவாபி ரக்ஷந்து பவந்தः ஸர்வ ஏவ ஹி ॥ 11

துர்யோதனன் தன் ஸேனையை ஆஜ்ஞாபித்தல்

மறுபடியும் எல்லா ஸேனைத்தலைவர்களையும் அவன் பார்த்து, "நீங்கள் உங்கள் உங்கள் சேனைகளை யுத்தத்திற்கு ஸந்நத்தமாய்ச் செய்து வைத்துக் கொண்டு, யுத்தகளத்தில் உங்களுங்களுக்கு வகுத்துக்கொடுக்கப்பட்ட விடத்தில் அமர்ந்துநின்று, பீஷ்மருக்குக் கீழ்படிந்திருக்க வேண்டும், இவர் ஒருவரையே நீங்கள் காப்பாற்றிக்கொண்டு, என்னைப் போலவே இவரை மதிக்க வேண்டும்; இப்படிச் செய்தால் தான், இத்தனை ஸேனையும் உண்மையாய் என்னைச் சேர்ந்ததாகும்", என்று சொன்னான்.

तस्य सञ्जनयन्हर्षं कुरुवृद्धः पितामहः ।
सिंहनादं विनद्योच्चैः शङ्खं दध्मौ प्रतापवान् ॥ १२ ॥

தஸ்யஸஞ்ஜனயன்ஹர்ஷம்குருவ்ருத்தःபிதாமஹः ।
ஸிம்ஹநாதம் வினத்யோச்சைः ஶங்கம் தத்மௌ ப்ரதாபவான் ॥ 12

கௌரவ ஸேனையின் ஆரவாரம்

இப்படி துரியோதன ராஜன் சொன்னதும், ஸேனாபதியாகிய பீஷ்மாச்சார்யர் ஸந்தோஷித்து ஸிம்ஹநாதம் செய்தார். அது இரண்டு ஸைந்யங்களின் நடுவிலும் அத்புதமாய் சப்தித்து, அதின் ப்ரதித்வனி ஓயாமல் திரும்பவும் திரும்பவும் உண்டாய்க்கொண்டிருந்தது. அந்த பிரதித்வனியோடு கூட, வீரவிருத்தியால் பொங்கி உத்தமமான தன் சங்கத்தை வாசித்தார். அவ்விரண்டு சப்தமும் ஒன்றோடொன்று கலந்து, ஆகாசம் இடிந்து விழுந்தாற்போல மூவுலகும் செவுடுபட்டது. ஆகாசம் கிடுகிடு வென்று சப்திக்க ஸமுத்திரம் பொங்கி கரைபுரள, சராசரம் அனைத்தும் பயமுற்று மனங்கலங்கி நடுங்கிப் போயிற்று. அந்தப் பெருத்த சப்தத்தின் கர்ஜனையால் மலையிலுள்ள குஹைகளனைத்தும் தும்தும் என்று சப்தித்தன.

ततः शङ्खाश्च भेर्यश्च पणवानकगोमुखाः ।
सहसैवाभ्यहन्यन्त स शब्दस्तुमुलोऽभवत् ॥ १३ ॥

ததः ஶங்காஶ்ச பேர்யஶ்ச பணவானக கோமுகாः ।
ஸஹஸைவாப்ய ஹன்யந்த ஸ ஶப்தஸ்து லோகுபவத் ॥ 13

இதுவுமது

அப்போது அந்தக் கௌரவஸேனையில் போர் வாத்தியங்கள் முழங்கத் தலைப்பட்டன. கணக்கற்ற வாத்தியங்கள் ஏககாலத்தில் வாசிக்கப்பட்டதால், பயங்கரமாயும் காது பிளந்து போகும்படியாயும், பெருத்த சப்தமுண்டாய், அதிக பலம் படைத்தவர்களுக்குக்கூட மஹாப்ரளயம் நேர்ந்ததாகத் தோற்றிற்று. பேரி, நிசாணி, மத்தளம், சங்கம், தாளம், எக்காளம், இவைகளின் சப்தத்தோடு உத்தம போர்வீரர்களுடைய கோலாஹலமும் ஒன்றுபட்டது. மிக்க ஆவேசத்துடன் அவர்கள் தோற்தட்டி யுத்தத்திற்கு அழைத்தார்கள். அப்போது மதங்கொண்ட உத்தமஜாதி யானைகள் அடங்காமல் போர் செய்ய விரைந்தன.

அச்சமயத்தில் பயந்தவர்கள் பட்ட பாட்டை வர்ணிக்க வேண்டுவதில்லை. அரைகுறையாய் சௌர்யமுள்ளவர்கள் காற்றில் குப்பைபோல் பறந்து போனார்கள். இதைப் பார்த்து, யமன் பயந்து தன் சரீரத்தை வெளிக்காட்டாமல் ஒளிந்துக்கொண்டான். சிலர் நின்றபடியே இறந்தார்கள். அதிதைர்ய முள்ளவர்களுக்குக்கூட மேல்வாய் கீழ்வாய் இரண்டும் கிட்டிப்போயின. பிருதுபூண்ட பெருத்த போர் வீரர்கள் நடுக்க முற்றார்கள். இப்படி அத்யாச்சர்யகரமான வாத்தியகோஷத்தைக் கேட்டு ப்ரஹ்மதேவன் தடுமாறிப்போனான். தேவர்கள் இன்று பிரளயகாலமே நேரிட்ட தென்று சொல்லிக் கொண்டார்கள்.

ततः श्वेतैर्हयैर्युक्ते महति स्यन्दने स्थितौ ।
माधवः पाण्डवश्चैव दिव्यौ शङ्खौ प्रदध्मतुः ॥ १४ ॥

ததः ஶ்வேதைர் ஹயைர்யுக்தே மஹதி ஸ்யந்தனே ஸ்திதௌ।
மாதவ: பாண்டவஶ்சைவ திவ்யௌ ஶங்கௌ ப்ரதத் மது: ॥14

पाञ्चजन्यं हृषीकेशो देवदत्तं धनञ्जयः ।
पौण्ड्रं दध्मौ महाशङ्खं भीमकर्मा वृकोदरः ॥ १५ ॥

பாஞ்ச ஜன்யம் ஹ்ருஷீகேஶோ தேவதத்தம் தனஞ்ஜய: ।
பௌண்ட்ரம் தத்மௌ மஹாஶங்கம் பீமகர்மா வ்ருகோதர:॥15

अनन्तविजयं राजा कुन्तीपुत्रो युधिष्ठिरः ।
नकुलः सहदेवश्च सुघोषमणिपुष्पकौ ॥ १६ ॥

அனந்த விஜயம் ராஜா குந்தீபுத்ரோ யுதிஷ்டிர: ।
நகுல: ஸஹதேவஶ்ச ஸுகோஷ மணிபுஷ்பகௌ ॥16

பாண்டவ ஸைந்யத்தின் வர்த்தமானம்

அந்த ஸமயத்தில் பாண்டவர்கள் ஸேனையில் என்ன நடந்தது சொல்வேன்; கேளும் அரசனே. விஜயத்தின் நிஜஸாரமோ என்றும், மஹாதேஜஸின் பண்டகசாலையோ என்றும் சொல்லத்தக்கனவாயும், வேகத்தினால் கருடனுக்கு ஸமானமாய் மதிக்கத் தக்கனவாயு மிருக்கும் நான்கு குதிரைகள் பூட்டப்பட்டதாய், இறகுகள் படைத்த மேருபோல் ஓரிரதம் என் கண் முன் விளங்குகிறது. அதன் தேஜஸால் திக்குகள்

முழுமையும் வியாபிக்கப்படுகின்றன. அதில் குதிரைகளை நடத்தி வைக்கிறவராக வைகுண்ட நாயகர் தாமே அமைந்திருக்கிறார். அப்படிப்பட்ட ரதத்தின் பெருமையை வர்ணிக்க முடியுமா. த்வஜஸ்தம்பத்தின் மேலிருக்கும் வாநரனோ ஸாக்ஷாத் சங்கரபகவான். அந்த ரதத்தில் சாரங்கதரர் ஸாரதிவேஷம் பூண்டு, அர்ஜுனன் முன்னால் வீற்றிருக்கக் காணப்படுகிறார். இந்த ஆச்சர்யத்தைப் பாரீர். பார்த்தனுக்கு ஸாரத்தியம் செய்வதான ஓர் தொழிலில் அமையும்படியாய், பக்தன் விஷயத்தில் அந்தப் பிரபுவுக்குண்டான அத்புதமான ப்ரேமையைப் பாரீர். வருகிற ஆபத்தைத் தாம் முன்நின்று தாங்கிக்கொள்ளக் கருதி, தாஸனாகிய அர்ஜுனனைத் தம் பின்பக்கம் வைத்துக்கொண்டார்.

அவர் பாஞ்சஜந்யத்தை அநாயாஸமாய் வாசிக்க, ஓர் பெரிய சப்தம் உண்டாய், கம்பீரமாய் கர்ஜித்துக் கொண்டு நிலைபெற்றது. எப்படி ஸூர்யன் உதித்தவுடன் நக்ஷத்ரங்களை மறைந்து போகச் செய்வானோ, அப்படியே இந்த சப்தம், இதற்குமுன் கௌரவர்கள் ஸேனையில் நான்கு பக்கத்திலும் பரவி கர்ஜித்துக் கொண்டிருந்த போர் வாத்யங்களின் நாதத்தை, எங்கும் இல்லாதபடி நாசம் செய்து வைத்தது. அப்படியே மிகுந்த கர்ஜையுள்ள பிறிதோர் நாதம் உண்டாகும்படி, தேவதத்தம் என்னும் சங்கத்தை அர்ஜுனன் வாசித்தான். அவ்விதம் அத்யாச்சர்யகரமான அவ்விரண்டு சப்தமும் ஒன்றுபடவே, ப்ரஹ்மகடாகமானது நூறு துணுக்காய்த் தெறித்துப்போகப் பார்த்தது. அப்போது மஹாகாலன் கோபத்தால் பொங்கி வழிந்ததுபோல், பீமஸேனன் ஆவேசம் கொண்டு பௌண்ட்ரம் என்னும் மஹாசங்கத்தை வாசித்தான். அது மஹாப்ரளய மேகம் கம்பீரமாக இடி இடித்ததுபோல் ஆயிற்று. அன்றியும் யுதிஷ்டிரன் அநந்த விஜயம் என்னும் சங்கத்தையும், நகுலன் ஸுகோஷமென்பதையும், ஸஹதேவன் மணிபுஷ்பக மென்பதையும், வாசித்து நின்றார்கள். இந்த சப்தத்தால் யமன், செய்வதின்னதென்று அறியாதவனாய், கைகால் அசைவற்று நின்றான்.

काश्यश्च परमेष्वासः शिखण्डी च महारथः ।
धृष्टद्युम्नो विराटश्च सात्यकिश्चापराजितः ॥ १७ ॥

காஶ்யஶ்ச பரமேஷ்வாஸ: ஶிகண்டீ ச மஹாரத: ।
த்ருஷ்டத்யும்நோ விராடஶ்ச ஸாத்யகிஶ்சா பராஜித: ॥17

द्रुपदो द्रौपदेयाश्च सर्वशः पृथिवीपते ।
सौभद्रश्च महाबाहुः शङ्खान्दध्मुः पृथक्पृथक् ॥ १८ ॥

த்ருபதோ த்ரௌபதேய யாஶ்ச ஸர்வஶ: ப்ருதிவீபதே।
ஸௌபத்ரஶ்ச மஹாபாஹு:ஶங்கான்தத்:ப்ருதக்ப்ருதக்॥ 18

स घोषो धार्तराष्ट्राणां हृदयानि व्यदारयत् ।
नभश्च पृथिवीं चैव तुमुलोऽभ्यनुनादयन् ॥ १९ ॥

ஸ கோஷோ தார்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயானிவ்யதாரயத்।
நிபஶ்ச ப்ருதிவீம் சைவ துலோ வ்யனுநாதயன் ॥ 19

இதுவுமது

அந்தப் பாண்டவ ஸைந்யத்தில், த்ருபதன், த்ரௌபதேயர்கள் (த்ரௌபதியின் ஐந்து புத்ரர்கள்), மஹாபாஹுவான காசிராஜன், அர்ஜுனபுத்திரன், இதரர்களால் ஜயிக்கமுடியாத ஸாத்யகி, அரசர்களுக்குத் தலைவனாகிய த்ருஷ்டத்யும்னன், சிகண்டி, இவர்களோடு கூட ஸேனைத்தலைவர்களாய் சௌர்யத்தால் சிறந்த விராடன் முதலிய உத்தம அரசர்கள், ஆகிய எல்லாரும் தங்கள் தங்கள் சங்கங்களை வாசித்தார்கள். அப்போது ஏற்பட்ட பெரும் சப்தம் போய்த் தாக்கினதால், ஆதிசேஷனும் ஆதிகூர்மனும் திடுக்கிட்டுத் திகைத்துப்போய், பூபாரத்தைக் கீழே எறிந்துவிடப் பார்க்கவே, மூவுலகங்களும் ஆட்டங்கொண்டு, குலுங்கி, மேருவும் மந்தரமும் பக்கத்துக்குப் பக்கம் ஆட்டங் கொள்ள ஸமுத்ரஜலம் கைலாஸம் வரைக்கும் பொங்கி எழும்ப, பூமி குப்புறப் புறண்டுபோகப் பார்த்தது.

ஆகாசம் துணுக்குத்துணுக்காகத் தெறித்துப் போகுமோ என்று தோற்றிற்று. நக்ஷத்ரங்கள் புலபுல வென்று உதிர்ந்தன. "ஸ்ருஷ்டி போகவே போய்விட்டது. தேவர்களுக்கு நிற்க இடமில்லாமற் போயிற்று", என்று ஸத்யலோகத்தில் பெரிய கூக்குரல் ஏற்பட்டது. பகலிலேயே ஸூர்யன் மறைந்துபோனான். ப்ரளயகாலம் நேர்ந்ததுபோல், மூவுலகெங்கும் பூதங்கள் ஹா ஹா என்று கதறத் தலைப்பட்டன. இதைப் பார்த்த, ஆதிநாராயணன் ஆச்சர்யம் அடைந்து, "என்ன? உலக முடிவே ஏற்பட்டதா", என்றார் பின்பு அந்த ஆச்சர்யகரமான முழக்கம் ஓய்ந்தது. ஆகையால் தான் விச்வம் பிழைத்து நின்றது. இல்லாவிட்டால் அப்போதே

யுகாந்தம் நேர்ந்திருக்கும். அந்த சப்தம் ஓய்ந்து போனாலும், பிரதித்வநி ஓயாமல் சப்தித்துக் கொண்டு, கௌரவர்களின் ஸேனையை மிகவும் த்வம்ஸம் செய்து வைத்தது. யானைக்கூட்டத்தில் நுழைந்த ஸிம்ஹமமானது எப்படி யானைகளை அநாயஸமாகப் பிளந்து தள்ளிவிடுமோ. அப்படியே இந்த சப்தத்தால் கௌவர்களுடைய ஹ்ருதயம் வெடித்துப் போகலாயிற்று. இந்த சப்தத்தைக் கேட்டவுடனேயே, ஒருவர்மேல் ஒருவர் சாய்ந்து ஒருவரை ஒருவர், "ஜாக்ரதையாய் நில்", என்று சொன்னார்கள்.

अथ व्यवस्थितान्दृष्ट्वा धार्तराष्ट्रान् कपिध्वजः ।
प्रवृत्ते शस्त्रसम्पाते धनुरुद्यम्य पाण्डवः ॥ २० ॥
हृषीकेशं तदा वाक्यमिदमाह महीपते ।

அத வ்யவஸ்தித்தான் த்ருஷ்ட்வா தார்தராஷ்ட்ரான் கபித்வஜ: ।
ப்ரவ்ருத்தே ஶஸ்த்ரஸம்பாதே தனுருத்யம்ய பாண்டவ:॥ 20

ஹ்ருஷீகேஶம் ததா வாக்யமிதமாஹ மஹீபதே ।

அர்ஜுனன் வர்த்தமானம்

அந்தக் கௌரவஸேனையின் அணிகள், பலமும் பெருமையும் நிறைந்துள்ள மஹாரதர்களான வீரர்களால், முன்போலமர்ந்து நிற்கும்படியாய் நியமிக்கப்பட்டு, யுத்த ஸந்நத்தமாய்க் கிளம்பி, மிக்க ஆவேசத்துடன் பொங்கி நின்றன. அவற்றைக் கண்டு பயத்தால், மூவுலகும் கலக்க முற்றது. பின்பு வில்லாளிகள், ப்ரளயகாலத்தில் மேகங்கள் ஒன்றுகூடி அடக்கமுடியாதபடி மழை பொழிந்தாற் போலும், இடைவிடாது அம்புமாரி பொழிந்தார்கள். அதைப் பார்த்த அர்ஜுனன், ஸந்தோஷம் அடைந்து, கையில் வில்லை ஏந்திக் கொண்டு, அங்கே ஆவேசத்துடன் யுத்தஸந்நத்தமாய் நிற்குமிருஸேனைகளையும் உற்றுப்பார்த்தான்.

अर्जुन उवाच ।
सेनयोरुभयोर्मध्ये रथं स्थापय मेऽच्युत ॥ २१ ॥

அர்ஜுன உவாச-(அர்ஜுனன்சொன்னான்):-

ஸேநயோருபயோர் மத்யே ரதம் ஸ்தாபய மேऽச்யுத ॥ 21

यावदेतान्निरिक्षेऽहं योद्धुकामानवस्थितान् ।
कैर्मया सह योद्धव्यमस्मिन् रणसमुद्यमे ॥ २२॥

யாவதேதாந் நிரீக்ஷேஹம் யோத்துகாமா நவஸ்திதான் ।
கைர்மயா ஸஹ யோத்தவ்ய மஸ்மின் ரண ஸமுத்யமே ॥ 22

योत्स्यमानानवेक्षेऽहं य एतेऽत्र समागताः ।
धार्तराष्ट्रस्य दुर्बुद्धेर्युद्धे प्रियचिकीर्षवः ॥ २३॥

யோத்ஸ்யமாநா நவேக்ஷேகுஹம் ய ஏதேத்ர ஸமாகதா: ।
தார்தராஷ்ட்ரஸ்ய துர்புத்தேர் யுத்தே ப்ரிய சிகீர்ஷவ: ॥ 23

ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்து அர்ஜுனன் பேசியது

பின்பு, அவன் பகவானைப் பார்த்து இவ்வாறு சொன்னான். இப்போது நம் ரதத்தை விரைவாய் நடத்தி, இவ்விரு ஸேநைகளுக்கும் நடுவில் நிறுத்தி வைப்பீரேயானால், இந்தக் கௌரவ ஸைந்யத்தில் வீரர்களனைவரையும் கவனித்துப்பார்க்கலாம். இங்கே எல்லாரும் வந்திருக்கிறார்கள். ஆனால் எவர்களோடு இந்த யுத்தத்தில் நான் போர் புரியவேண்டுமென்று தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா. இந்தக் கௌரவர்கள் மிக்கப் பேராசை கொண்டவர்களாயும், துஷ்ட ஸ்வபர்வமுள்ளவர்களாயு மிருந்துகொண்டு, யுத்தத்திற்கு வேண்டிய யோக்யதை யில்லாமல், யுத்தம் செய்து ஜயிக்கமாத்ரம், ஆசைப்படுகிறார்களே தவிர, பெயராமல் நின்று யுத்தம் செய்கிறவர்கள் அல்ல.

सञ्जय उवाच
एवमुक्तो हृषीकेशो गुडाकेशेन भारत ।
सेनयोरुभयोर्मध्ये स्थापयित्वा रथोत्तमम् ॥ २४॥

ஸஞ்சய உவாச - (ஸஞ்சயன் சொன்னார்):-

ஏவக்தோஹ்றுஷீகேஶோகுடாகேஶேனபாரத ।
ஸேனயோ ருபயோர்மத்யே ஸ்தாபயித்வா ரதோத்தமம் ॥ 24

भीष्मद्रोणप्रमुखतः सर्वेषां च महीक्षिताम् ।
उवाच पार्थ पश्यैतान्समवेतान्कुरुनिति ॥ २५ ॥

பீஷ்ம த்ரோண ப்ரமுகத: ஸர்வேஷாம் ச மஹீக்ஷிதாம் ।
உவாச பார்த பஶ்யை தான் ஸமவேதான் குரூநிதி ॥ 25

तत्रापश्यत्स्थितान्पार्थः पितॄनथ पितामहान् ।
आचार्यान्मातुलान्भ्रातॄन्पुत्रान्पौत्रान्सखींस्तथा ॥ २६ ॥

தத்ரா பஶ்யத் ஸ்திதான் பார்த: பித்ரூநத பிதாமஹான் ।
ஆசார்யான்மாதுலான்ப்ராத்ரூன்புத்ரான்பௌத்ரான்ஸகீன்ஸ்ததா॥26

श्वशुरान्सुहृदश्चैव सेनयोरुभयोरपि ।
तान्समीक्ष्य स कौन्तेयः सर्वान्बन्धूनवस्थितान् ॥२६॥

ஶ்வஶுரான் ஸுஹ்ருதஶ்சைவ ஸேனயோருபயோ ரபி ।
தான் ஸமீக்ஷ்ய ஸ கௌந்தேய: ஸர்வான் பந்தூன் அவஸ்திதான் ॥27

அர்ஜுன விஷாதத்தின் தொடக்கம்

இதை இராஜாவுக்கு ஸஞ்சயன் தெரிவித்து, மேலும் சொன்னான், கேளும், அர்ஜுனன் இப்படிச் சொல்லவே, ஸ்ரீ கிருஷ்ணன் ரதத்தை நடத்தி இரண்டு ஸேனைகளுக்கும் நடுவில் நிறுத்திவைத்தார். எங்கே பீஷ்மரும் துரோணரும் மற்றும் அநேக அரசர்களும் எதிர்த்து நின்றார்களோ, அங்கே ரதத்தை நிலைபெறச் செய்து கொண்டு, அந்த ஸேனை முழுவதையும் அர்ஜுனன் கவனித்துப் பார்த்துக்கொண்டு நின்றான். பின்பு பகவானைப் பார்த்து, "பாரும்! பாரும்! இவர்களனைவரும் என் வம்சத்துப் பெரியவர்களல்லவா", என்றான். அப்போது கிருஷ்ணனுடைய மனதில் சிறிது நேரம் ஓர் ஆச்சர்யம் தோற்றி, "இது என்னமோ தெரியவில்லை, இப்படி ஓர் எண்ணத்தை ஏன் இவன் கொண்டான்? இதிலேதோ ஆச்சர்யம் இருக்கிறது" என்று அவர் தமக்குள் சொல்லிக்கொண்டார்.

இப்படி முன் வருவதின் குறியைக்கண்டு, ஹ்ருதயஸ்தரான, அவர் லகுவில் அர்ஜுனன் மனதைத் தெரிந்துகொண்டபோதிலும், அவ்வேளையில் ஒன்றும் பேசாமல் நின்றார். அப்போது கேவலம் பித்ருக்கள், பிதாமஹர்கள், குருக்கள், சுற்றத்தார், அம்மான்மார், ஸுஹ்ருஜ்ஜனங்கள், மாமன்மார், ஸ்நேஹிதர்கள், இனத்தார், புத்ரர்கள், பௌத்ரர்கள், தன்னிடமுபசார மடைந்தவர்கள், தன்னால் ஆபத்தில் காக்கப்பட்டவர்கள், ஆகிய அனைவரும் உள்பட, தன் வம்சம்

முழுமையுமே இரண்டுசேனைகளிலும் யுத்த ஸந்நத்தமாய் நிற்பதை, அர்ஜுனன் பார்த்து மனஸில் நடுக்கமுற்றான்.

कृपया परयाविष्टो विषीदन्निदमब्रवीत् ।

க்ருபயா பரயா குகுவிஷ்டோ விஷீதந்நித மப்ரவீத் ।

அர்ஜுனன் புத்தி மாறாட்டம்

பின்பு தானாகவே அவன் மனஸில் க்ருபை உண்டாக, இதை அவமானமாய் நினைத்து, வீர லக்ஷ்மி அவனைவிட்டு விலகிப்போனாள். நல்ல குலத்தில் பிறந்து குணலாவண்யங்கள் உள்ளவளாய் மானியாய் இருப்பவள், தகுதியற்றவளான வேறொருத்தியின் சேர்க்கையை ஸஹியாள். ஓர் காமுகன் ஆபிஜாத்யமில்லாத ஒருத்தியிடத்தில் மிக்கப்ரேமை பாராட்டி, அவளைச் சுற்றிக்கொண்டே கிடந்த, தன்மனையாளை மறந்ததுபோலும், ஒருவன், தன் தபஸ்ஸின் பலத்தால், ருத்திஸித்திகளை அடைந்து, தன் முதல் லக்ஷ்யத்தை மறந்து, சிற்றின்பபோகத்தால் புத்தி மயங்கிப் போனபின், வைராக்யஸித்தி என்பது அவனை முற்றிலும் விட்டு விலகிப் போனாற்போலும் அர்ஜுனனை சௌர்யம் விட்டுவிலகிற்று.

மனஸில் அவன் காருண்யத்திற்கு இடம் கொடுத்தபோதே, அவனிடத்தில் ஏற்கனவே இருந்த பௌருஷம் எங்கேயோ போய்விட்டது. மந்த்ரோபாஸகன் உபாஸநாக்ரமத்தில் தவறிப்போனால், அவனுக்கு புத்தி மாறாட்ட மேற்படுவதுபோலும், தனுர்த்தரனான அர்ஜுனன் பெருத்த அறிவுகேட்டுக்கு வசப்பட்டுப் போனான். ஆகவே இருந்த தைர்யம் போய், அவன் உள்ளம் சந்திரகிரணத்தால் ஸ்பர்சிக்கப்பட்ட சந்திரகாந்தக் கல்லைப் போலும், கரைந்து போயிற்று, இவ்விதமாய்ப் பார்த்தன் அதிஸ்நேஹத்தால் அறிவு கேடுற்று, துக்கத்துடன் ஸ்ரீ அச்யுதனைப் பார்த்துப் பேச ஆரம்பித்தான்.

अर्जुन उवाच ।

दृष्ट्वेमं स्वजनं कृष्ण युयुत्सुं समुपस्थितम् ॥ २८ ॥

सीदन्ति मम गात्राणि मुखं च परिशुष्यति ।

அர்ஜுனஉவாச-(அர்ஜுனன்சொன்னான்):-

த்ருஷ்ட்வேமம் ஸ்வஜனம் க்ருஷ்ண யுயுத்ஸும் ஸமுபஸ்திதம்।
ஸீதந்தி மம காத்ராணி முகம் ச பரிஸுஷ்யதி ॥ 28

वेपथुश्च शरीरे मे रोमहर्षश्च जायते ॥ २९ ॥

வேபதுஶ்ச ஶரீரே மே ரோமஹர்ஷஶ்ச ஜாயதே ॥ 29

गाण्डीवं स्रंसते हस्तात्त्वक्चैव परिदह्यते ।
न च शक्नोम्यवस्थातुं भ्रमतीव च मे मनः ॥ ३० ॥

காண்டீவம் ஸ்ரம்ஸதே ஹஸ்தாத் த்வக்சைவ பரிதஹ்யதே
ந ச ஶக்நோம்யவஸ்தாதும் ப்ரமதீவ ச மே மன: ॥ 30

ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்து அர்ஜுனன் சொன்னது

ஹே தேவா! கவனித்துக் கேட்பீராக, இந்த ஸமுதாயத்தில் என் வம்சஸ்தர்கள் அனைவரும், யுத்தம் செய்தே தீர்வதென்று ஆவேசங்கொண்டு நிற்கின்றார்கள். ஆயினும் இப்போர் நான் செய்யத் தகுந்ததன்று. இந்தயுத்தத்தின் வார்த்தையை எடுக்கும் போதே, என்னவோ தெரியவில்லை, என் ஞாபகம் எனக்கில்லாமல் போகிறது. மனதும் புத்தியும் தங்கள் ஸ்தானத்தினின்று தவறிப்போகின்றன. பாரீர்! தேஹம் நடுங்குகிறது. வாய் உலர்ந்து போகிறது. அவயவங்களெல்லாம் சட்டுவிட்டுப்போய் தேஹத்தில் மிகுந்த எரிச்சலெடுத்திருக்கின்றது. காண்டீவத்தைப் பிடித்த கையின் பிடிப்பு தளர்ந்து போய், அது கையினின்று நழுவிப்போகிறது. அப்படி அல்ல; எனக்குத் தெரியாமலே அது கையைவிட்டுக் கீழே விழுந்து கிடக்கிறது. இப்படி ஓர் மயக்கம் உண்டாய், என்னை அமுக்கிக் கொண்டது. ஹே கிருஷ்ணா இனி நாம் இங்கிருப்பது தகாது. என்னுடைய மனஸு மிக்க வ்யாகூலம் அடைந்திருக்கிறது. இத்தனை பெயரையும் கொல்கிறது. என்னும் சப்தமாத்ரத்தால், என் வாய் உளறிப் போகிறது.

அர்ஜுனனுடைய மனச்சோர்வுக்குக் காரணம்

இயற்கையாகவே வைரத்தைக் காட்டிலும் கடினமாயும், ஒன்றுக்கும் அடங்காததாயும், அதிபயங்கரமாயும், இருக்கும் அர்ஜுனனுடைய ஹ்ருதயம், இந்த ஸ்நேஹபரவத்தால் தளர்ந்து போயிற்று. இது ஆச்சர்யமே! எவன் யுத்தத்தில் பரமசிவனை ஜயித்து, நிவாதகவசர்களை இருந்த இடம் தெரியாவண்ணம் துடைத்துவைத்தானோ, அந்த அர்ஜுனன் ஒரு க்ஷணநேரத்தில் மோஹத்தில் அழுந்திப் போனான்.

கொஞ்சமேனும் ஈரமில்லாமல் காய்ந்துபோன கட்டை எதுவானாலும், அதை அனாயாஸமாய்த் துளைத்துவிடும் தேன் வண்டு, மிருதுவான குவிந்த தாமரைப்பூவுக்குள் சிக்கிப்போனால், அதில் ப்ராணனை விட்டாலும் விடுமேதவிர, அப்பூவின் இதழைத் துளைத்துக்கொண்டு வெளிப்பட்டுப்போக அறியாது. ஆகையால் ஸ்நேஹமென்பது, மிருதுவாயிருப்பதினாலேயே, கடினமாகிறது என்றறியுங்கள். இந்த மோஹமென்ற ஆதிபுருஷனுடைய மாயா சக்தியை, பிரஹ்மதேவன்கூட அளவிடமுடியாது. ஆகையால் தான் அர்ஜுனன் மதிமயக்கம் கொண்டான். பின்பு அர்ஜுனன் ஸ்வஜனர்கள் அனைவரையும் பார்த்து, யுத்தத்தில் தனக்கு முன்னிருந்த அபிநிவேசத்தை மறந்தான். அச்சமயத்தில் அவனுடைய சித்தத்தில் என்னமாய்க் கருணை உண்டாயிற்றோ தெரியவில்லை; ஆயினும் அக்கருணையின் பெருக்கால் அவன் பின்வருமாறு சொன்னான்.

निमित्तानि च पश्यामि विपरीतानि केशव ।
न च श्रेयोऽनुपश्यामि हत्वा स्वजनमाहवे ॥ ३१ ॥

நிமித்தானி ச பஶ்யாமி விபரீதானி கேஶவ ।
ந ச ஶ்ரேயோঽநுபஶ்யாமி ஹத்வா ஸ்வஜன மாஹவே ॥ 31

மேலும் அர்ஜுனன் சொன்னது

இந்தக் கௌரவர்களை வதை செய்வது நியாயமேயானால், யுதிஷ்டிரர் முதலானவர்களைக்கூட ஏன் வதிக்கக்கூடாது? இவர்களனைவரும் என் வம்சத்தார்கள் தானே. ஆகையால் இந்த யுத்தத்தை என் மனஸு கொஞ்சம் கூட ஒப்புக்கொள்ளவில்லை. இந்த மஹாபாபத்தைச் செய்து நான் அடையும் லாபம் என்? தேவா, எவ்விதமாய் யோசித்துப் பார்த்தாலும், இங்கே போர் செய்வதால் கெடுதலே விளைவதாயிருக்கிறது. அப்படிச் செய்யாமல், இதைத் தவிர்த்துக் கொண்டால், ஏதோ ஒருலாபமே ஸித்திக்கும் என்று தோன்றுகிறது.

न काङ्क्षे विजयं कृष्ण न च राज्यं सुखानि च ।
किं नो राज्येन गोविन्द किं भोगैर्जीवितेन वा ॥ ३२ ॥

ந காங்க்ஷே விஜயம் க்ருஷ்ண ந ச ராஜ்யம் ஸுகானி ச ।
கிம் நோ ராஜ்யேன கோவிந்த கிம் போகைர் ஜீவிதேன வா ॥32

येषामर्थे काङ्क्षितं नो राज्यं भोगाः सुखानि च ।
त इमेऽवस्थिता युद्धे प्राणांस्त्यक्त्वा धनानि च ॥३३॥

யேஷாமர்தே காங்க்ஷிதம் நோ ராஜ்யம் போகாः ஸுகானி ச ।
நி இமேऽவஸ்திதா யுத்தே ப்ராணான் த்யக்த்வா தனானி ச ॥ 33

இதுவுமது

இப்போரில் எனக்கு, ஜயம் உண்டாய், ராஜ்யமே கிடைப்பதாயிருந்தாலும், அதனால் எனக்கு ஓர் லாபம் இருப்பதாகத் தோற்றவில்லை. இவர்களனைவரையும் கொன்றதினால் எந்த போகத்தைப் புசிக்கக்கூடுமோ, அந்த போகம் எல்லாம் பற்றியெறியக் கடவது. அந்த ஸுகம் இல்லாமற்போவதால் நேர்கிறதான துன்பம் எதானாலும், ஸஹித்துக்கொள்வேன். அன்றியும் இக்கௌரவர்களுடைய நன்மைக்காக, உயிரையே கொடுத்து விட ஸித்தமாயிருக்கிறேன். இவர்களைக் கொன்று விட்டு, நாம் ராஜ்ய ஸுகத்தை அனுபவிப்பதென்னும் ஓர் எண்ணத்தை, என் மனஸு ஸ்வப்நத்தில் கூடப் பாராட்டாது. எவர்களுக்கு நன்மை செய்து வைப்பதற்காக நாம் உலகில் வாழவேண்டுமோ, அப்படிப்பட்ட பெரியவர்களுக்கு அஹிதத்தைச் செய்வதென்பதை, மனஸால் எண்ணுவோமானால், நாம் பிறந்தது அனர்த்தகர மாகுமல்லவா.

ஓர் வம்சம் குழந்தை பிறக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறதே அந்த ஆசைக்குப்பலம், அக்குழந்தை கேவலம் தன்னுடைய வம்சத்தையே நாசம்செய்து வைப்பதேயோ. இவர்கள் விஷயத்தில், நம்முடைய மனதை வைரம்போல் கடினமாய்ச் செய்து கொள்வோமென்று, மனஸினால் நினைக்க முடியவில்லையே. அவர்களுக்கு அஹிதத்தை எண்ணாமல், ஸாத்யமானவரைக்கும் ஹிதத்தையே செய்துவைப்பது நம்முடைய கடமையல்லவா. நாம் எதெதைத் தேடிவைப்போமோ, அதனைத்தையுங்கொண்டு இவர்கள் ஸுகித்து வாழவேண்டுமல்லவா, நம்முயிரையே, இவர்களுக்கு நன்மையைத் தேடிவைப்பதற்காகச் செலவிடவேண்டுமே. நாம் தூரதேசங்களில் உள்ள எல்லா அரசர்களோடும் யுத்தம் செய்து, பொருளை ஸம்பாதித்து, நம்முடைய குலத்தார் எவர்களோ, அவர்களைச் சுகிக்கச் செய்யவேண்டுமல்லவா.

ஆனால் கர்மகதி எப்படி விபரீதமாயிற்றுப் பாரீர். ஸ்திரீகளையும் புத்ரர்களையும் தனங்களையும் கைவிட்டு,

சஸ்த்ரத்தின் நுணியில் தங்கள் ப்ராணனை ஏந்திக்கொண்டு, போர்செய்வதில் பரபரப்புள்ளவர்களாய், இங்கே கூடியிருக்கும் அனைவரும், என்னுடைய வம்சஸ்தர்களாய் இருக்கிறார்களே. இப்படிப்பட்டவர்களை நான் எப்படிக்கொல்வேன். இவர்களை எதிர்த்து எப்படி சஸ்த்ரத்தைத் தரிப்பேன். என்னுடைய ஹ்ருதயத்தையே எப்படி பிளந்து தள்ளுவேன்.

आचार्याः पितरः पुत्रास्तथैव च पितामहाः ।
मातुलाः श्वशुराः पौत्राः श्यालाः सम्बन्धिनस्तथा॥

ஆசார்யா: பிதர: புத்ராஸ் ததைவ ச பிதாமஹா: ।
மாதுலா: ஶ்வஶுரா: பௌத்ரா: ஶ்யாலா: ஸம்பந்தினஸ்ததா ॥ 34

இதுவுமது

இவர்கள் எவரெவர்களென்று அறியீர்போலும். ஆனால் சொல்கிறேன் கேளும். இதோ பிஷ்மத்ரோணர்கள் நிற்கிறார்களே. இவர்கள் எங்களுக்குச் செய்துள்ள பல உபகாரங்கள் ஸாமான்யமானவை அல்ல. மைத்துனர்கள், மாமன்மார்கள், அம்மான்மார்கள், புத்ரர்கள்,. உறவினர்கள், கேவலம் இஷ்டர்கள், அண்ணன் தம்பிமார்கள், ஆகிய ஸகலரும் அல்லவா, இங்கே எதிர்த்து நிற்கிறார்கள். கவனித்துக் கேளீர். மிக்க நெருங்கிய சுற்றத்தாராகிய இவர்களனைவரையும் கொல்வது என்னும் வார்த்தையை வாயால் சொல்வதே பாபமாகும்.

एतान्न हन्तुमिच्छामि घ्नतोऽपि मधुसूदन ।
अपि त्रैलोक्यराज्यस्य हेतोः किं नु महीकृत॥ ३५॥

ஏதான் ந ஹந்துமிச்சாமி க்னதோ(அ)பி மதுஸூதன ।
அபி த்ரைலோக்ய ராஜ்யஸ்ய ஹேதோ: கிம் நு மஹீ க்ருதே ॥35

இதுவுமது

இனி இவர்கள் எனக்கு யாது செய்தாலும் செய்யட்டும். என்னை இப்போதே கொன்றாலும் ஸரியே. எப்படியாயினும், நானோ இவர்களுடைய வதையென்பதை மனஸினால் கூட எண்ணேன். த்ரைலோக்யத்தின் ராஜ்யம் நிரபாயமாய்க் கிடைப்பதாயிருந்தாலும், இந்தத் தகாத கார்யத்தை நான் செய்யேன். இங்கே இன்று இப்படிச் செய்வேனே யானால்,

பின்பு யார் என்னை ப்ரியத்துடன் கொண்டாடுவார்கள். உம்முடைய முகம் எனக்குத் திரும்பவும் பார்க்க கிடையாமற் போகுமல்லவா, கிருஷ்ணா நீரே சொல்லும்.

निहत्य धार्तराष्ट्रान्नः का प्रीतिः स्याज्जनार्दन ।
पापमेवाश्रयेदस्मान्हत्वैतानाततायिनः ॥ ३६ ॥

நிஹத்ய தார்தராஷ்ட்ரான் நः கா ப்ரீதிः ஸ்யாஜ் ஜநார்தன ।
பாபமேவாஸ்ரயே தஸ்மாந் ஹத்வை தான் ஆததாயினः ॥ 36

இதுவுமது

என் வம்சஸ்தர்களைக் கொல்வேனாகில், நான் பாபங்களுக்கு வாஸஸ்தானமாய்ப் போய், இப்போது என்கைக்குக் கிட்டினவராயிருக்கும் நீர், என்னை விட்டு, தூரவிலகிப் போவீர். தன் வம்சத்தைத் தானே நாசம் செய்வதால் ஸம்பவிக்கும் பாதகங்கள் அனைத்தும், என் தேஹத்தில் குடிகொண்டபின், உம்மைத் திரும்பவும் பார்க்கும்படியாய், என்னிடத்தில் எந்த ஸுக்ருதத்தின் பலம் மிகுந்து நிற்கும். ஓர் சிங்காரத் தோட்டத்தில் பெருந்தீ பற்றிக்கொண்டதென்று பார்த்த மாத்திரத்தில், ஓர் க்ஷணம்கூட தாமஸிக்காமல் அதை விட்டு குயில்கள் பறந்துபோய் விடுவது போலும், ஓர் தடாகம் சேற்றால் குழம்பி இருக்கிறதென்று தெரிந்து கொண்ட மாத்திரத்தில் சகோரம் அதை அவமதித்து தூர விலகிப்போவதுபோலும், ஹேதேவா, இந்த பாபத்தால், என்னுடைய புண்யம் முற்றிலும் அற்றுப்போனபின், என்னை விட்டு நீர் விலகிப்போவீர்.

तस्मान्नार्हा वयं हन्तुं धार्तराष्ट्रान्स्वबान्धवान् ।
स्वजनं हि कथं हत्वा सुखिनः स्याम माधव ॥ ३७ ॥

தஸ்மாந்நார்ஹா வயம் ஹந்தும் தார்தராஷ்ட்ரான் ஸ்வபாந்தவா
ஸ்வஜனம் ஹி கதம் ஹத்வா ஸுகினः ஸ்யாம மாதவ ॥37

இதுவுமது

ஆகையால் இந்த கார்யத்தை நான் செய்யேன். இந்தப்போரில் சஸ்த்ரத்தைக் கையால் தொடேன். இது பலவிதமாயும் செய்யத்தகாததாகவே தோன்றுகிறது. இதைச் செய்தால், உம்முடைய பிரிவு நேரிடும், பின்பு எங்களுக்கு

கதி என்ன? கிருஷ்ணா, உம்முடைய பிரிவால் உண்டாகும் துக்கத்தால், எங்கள் ஹ்ருதயம் வெடித்துப்போகும். ஆகையால் கௌரவர்களை வதம் செய்வதும், பின்பு நாங்கள் போகங்களைப் புசிப்பதும், என்ற இந்த வார்த்தையை தூரக் கட்டிவையும், இது நடக்கப்போவதேயில்லை.

यद्यप्येते न पश्यन्ति लोभोपहतचेतसः ।
कुलक्षयकृतं दोषं मित्रद्रोहे च पातकम् ॥ ३८॥
कथं न ज्ञेयमस्माभिः पापादस्मान्निवर्तितुम् ।
कुलक्षयकृतं दोषं प्रपश्यद्भिर्जनार्दन ॥ ३९॥

யத்யப்யேதே ந பஶ்யந்தி லோபோ பஹத சேதஸ: ।
குலக்ஷய க்ருதம் தோஷம் மித்ரத்ரோஹே ச பாதகம் ॥ 38

தம் ந க்ஞேய மஸ்மாபி: பாபாதஸ்மான் நிவர்திதும் ।
குலக்ஷய க்ருதம் தோஷம் ப்ரபஶ்யத்பிர் ஜநார்தன ॥ 39

இதுவுமது

இக்கௌரவர்கள், கர்வத்தாலும் மதத்தாலும் கர்த்தவ்யத்தை அறியாமல், இந்த யுத்தத்திற்கு ஸந்நத்தர்களாய் வந்திருக்கிறார்களேயானாலும், நம்முடைய ஹிதத்தை நாம் தெரிந்து கொண்டு நடக்கவேண்டியது நமக்கு எப்படி விட்டுப்போகும். நம் குலத்தாரை நாமே கொல்வது மகாபாபம் என்று தெரிந்துகூட, அதைச்செய்யத் துணிவது, கால கூடம் என்று தெரிந்த பின்னும், அதை விழுங்குவதாகாதோ. ஐயா, கவனிக்கவேண்டும். வழியோடு போகும்போது அகஸ்மாத்தாய் ஓர் ஸிம்ஹம் எதிர்ப்பட்டதானால். அதினின்று தப்பித்துக்கொண்டு போக வேண்டாமோ. கையில் இருக்கும் தீபத்தை எறிந்து விட்டு, இருட்டடைந்த பாழுங்கிணற்றில் விழுவதில் என்ன லாபம் இருக்கிறது.

நீர்தான் சொல்லும் தேவா. தன்முன்பு காட்டுத்தீ எரிந்து கொண்டு வருவதைப் பார்த்த ஒருவன், அதை ஒருபக்கமாக, ஒதுக்கி வைத்துப்போகாவிட்டால், அது ஒரு க்ஷணத்தில் அவனைச் சூழ்ந்து கொண்டு எரித்துவிடுமல்லவா. அது போலும் பயங்கரமான ஓர் பாபம் உருவெடுத்து வந்து, நம்மைச் சூழ்ந்துக் கொள்ளப்பார்க்கிறதென்று தெரிந்துகொண்டுகூட, எப்படி அதைச் செய்யத்துணியலாம். இவ்விதமெல்லாம்

அர்ஜுனன் அச்சமயத்தில் பேசி, மேலும் சொன்னான். தேவா, கவனித்துக் கேளும், இந்தப் பாபம் எவ்வளவு பெருத்த தென்று உமக்கு விளங்கச் சொல்வேன்.

कुलक्षय प्रणश्यन्ति कुलधर्माः सनातनाः ।
धर्मे नष्टे कुलं कृत्स्नमधर्मोऽभिभवत्युत ॥ ४०॥

குலக்ஷயே ப்ரணஶ்யந்தி குலதர்மாः ஸநாதனாः ।
தர்மே நஷ்டே குலம் க்ருத்ஸ்ந மதர்மோऽபிபவத்யுத ॥ 40

இதுவுமது

கட்டையோடு கட்டை உராய்ந்து நெருப்புப் புறப்பட்டு மண்டி எரிந்தால், உராய்ந்து கொண்ட இரண்டு கட்டைகள் மட்டுமன்றியே, ஸமீபத்திலிருக்கும் மற்றக் கட்டைகளும் கூட எரிந்து போவதுபோலும், ஒரு வம்சத்திலுள்ள சிலர், ஒருவரோடொருவர் போர் செய்து மடிந்தால், அந்தக்கோரமான மஹாபாபத்தின் மூலமாய், வம்சம் முழுவதுமே நாசமடைகிறது. ஆகையால் இந்த பாபத்தால், அந்த வம்சத்தின் தர்மம் அநுஷ்டிக்கப்படாமற் போய், அதில் அதர்மம் தலை எடுக்கிறது.

अधर्माभिभवात्कृष्ण प्रदुष्यन्ति कुलस्त्रियः ।
स्त्रीषु दुष्टासु वार्ष्णेय जायते वर्णसङ्करः ॥ ४१॥

அதர்மாபிபவாத் க்ருஷ்ண ப்ரதுஷ்யந்தி குலஸ்த்ரியः ।
ஸ்த்ரீஷு துஷ்டாஸு வார்ஷ்ணேய ஜாயதே வர்ணஸங்கரः ॥41

இதுவுமது

இப்படி ஆனபின் ஸாரஸாரவிசாரணையும் விதிநிஷேதங்களும் அநுஷ்டிக்கப்படாமல் நின்று போகின்றன. பின்பு ஏற்கனவே ஸித்தமாயிருந்த தீபத்தை அணைத்துவிட்டு, இருட்டில் அலைந்து, ஸமமாய் இருக்குமிடத்திலேயே தடுமாறி விழுதல் போலும், முடியும். குலக்ஷயம் ஏற்பட்டபின், அந்தக்குலத்தின் பண்டைய தர்மங்கள் அநுஷ்டிக்கப் படாமற்போய், பாபாநுஷ்டானமே ஏற்படும். எப்போது யமநியமங்களின் அனுஷ்டானம் தவறிப்போய், இந்திரியங்கள் ஓர் கட்டுமின்றி ஸஞ்சரிக்கத் தலைப்படுமோ, அப்போதே குலஸ்த்ரீகளுக்கு வ்யபிசாரம் நேரிடுகிறது. உத்தம ஜாதியார்

அதமஜாதியாரோடு கூடி, வர்ணங்கள் கலந்துபோய், ஜாதி தர்மங்கள் வேரோடு பிடுங்கப்பட்டுப்போகின்றன. எப்படி நாற்சந்தியில் வைக்கப்பட்ட பலியை, ஓர் வயவஸ்தையுமின்றி எந்த ஜந்துவும் எடுத்துக்கொண்டு போகுமோ, அப்படியே ஸ்வதர்மாசரணம் தவறிப்போன குலமானது கண்டகண்ட அதர்மங்களுக்கு இரையாகும்.

सङ्करो नरकायैव कुलघ्नानां कुलस्य च ।
पतन्ति पितरो ह्येषां लुप्तपिण्डोदकक्रियाः ।। ४२ ।।

ஸங்கரோ நரகாயைவ குலக்நாநாம் குலஸ்ய ச ।
பதந்தி பிதரோ ஹ்யேஷாம் லுப்த பிண்டோதக க்ரியாஃ ॥ 42

இதுவுமது

பின்பு அக்குலம் முழுவதும், அதை நாசம் செய்து வைத்தவர்களும், நரகம் போய்ச்சேரவேண்டியதாய் ஆகிறது. இவ்விதமாய் அந்த வம்சத்தின் ஸந்ததி அனைத்தும் கேட்டை அடைத்தபின், ஸ்வர்கத்தில் இருக்கும் அவ்வம்சத்தின் முன்னோர்கள் அதோகதியை அடைகிறார்கள். நித்ய நைமித்திக கர்மங்களின் அநுஷ்டானம் நின்றுபோய், பித்ரு தர்ப்பணங்கள் நடைபெறாமற்போகவே, பித்ருக்கள் ஸ்வர்க்கத்தில் வஸிப்பதற்கு வழியில்லாமற்போய், தங்கள் வம்சத்தார்களைப் போலவே, தாங்களும் நரகம் வந்துசேர்கிறார்கள். கால்விரல் நுணியில் பாம்புகடித்த விஷம் ஒரு நொடிப்பொழுதில் தலைவரைக்கும் ஏறிப்போவது போலும், ஸத்யலோகம் வரையில் ஏறியிருந்த முன்னோர்கள் உள்பட, வம்சம் முழுவதும் ஹானி அடைகிறது.

दोषैरेतैः कुलघ्नानां वर्णसङ्करकारकैः ।
उत्साद्यन्ते जातिधर्माः कुलधर्माश्च शाश्वताः ।। ४३ ।।
उत्सन्नकुलधर्माणां मनुष्याणां जनार्दन ।
नरके नियतं वासो भवतीत्यनुशुश्रुम ।।ईरनरकेऽनियतं
अहो बत महत्पापं कर्तुं व्यवसिता वयम् ।
यद्राज्यसुखलोभेन हन्तुं स्वजनमुद्यताः ।। ४५ ।।

தோஷைரேதைः குலக்நாநாம் வர்ணஸங்கர காரகைः ।
உத்ஸாத் யந்தே ஜாதிதர்மாः குலதர்மாஶ்ச ஶாஶ்வதாः ॥43

உத்ஸந்ந குலதர்மாணாம் மனுஷ்யாணாம் ஜநார்தன ।
நரகே நியதம் வாஸோ பவதீத்யநுஶுஶ்ரும ॥ 44

அஹோ பத மஹத்பாபம் கர்தும் வ்யவஸிதா வயம் ।
யத்ராஜ்ய ஸுக லோபேன ஹந்தும் ஸ்வஜன முத்யதா: ॥ 45

இதுவுமது

தேவா, கவனித்துக் கேளும். இதில் வேறொரு மஹாபாதகமும் ஸம்பவிக்கிறது; என்ன வென்றால், இப்படிக் கேடடைந்த வம்சத்தின் சேர்க்கை தோஷத்தினால், இவ்வுலகிலேயே, நல்லொழுக்கம் தவறிப்போகிறது. எப்படி ஒரு வீட்டில் தெய்வீகமாக அக்நி பற்றிக்கொண்டால், அது விருத்தி அடைந்து மற்றவீடுகளையும் கொளுத்திவிடுமோ, அப்படியே அந்தக் கேடடைந்த குலத்தின் பக்கத்தில் எவர்கள் வாழ்கிறார்களோ, அவர்களும் இந்தச்சேர்க்கை நிமித்தமாகப் பாதிக்கப்படுகிறார்கள். இவ்விதமாய்ப் பலவிதமான தோஷங்கள் ஏற்பட்டு, ஸகலகுலங்களும் நரகத்தில் விழுந்து, கல்பமுடிவிற்கூட அதினின்று வெளிப்படுவது இல்லை. ஆகவே, குலக்ஷயத்தினால், இவ்வளவு அநர்த்தம் நேரிடுகிறது. இன்னமும் கூட, உமக்கு இப்போர் விஷயத்தில் வெறுப்புத் தோற்ற வில்லையே! கலனித்துப்பாரும். மனஸை வைரத்தைப் போல் கடினம் செய்துகொண்டு, எந்த சரீர ஸுகத்திற்காக ராஜ்ய லாபத்தை நாம் விரும்புவோமோ, அந்த சரீரம் க்ஷணத்தில் அழியத்தக்கதானது என்று தெரிந்துகொண்டாவது, மனஸு இந்த பாபத்தினின்றும் திரும்பவேண்டாமா. என்னுடைய பெரியவர்களாகிய இவர்களனைவரையும் கொல்வேன் என்று நிமிர்ந்து பார்த்தேனே, இதனால் அல்ப ஸ்வல்பமான பாபமா நான் தேடிக்கொண்டேன்.

यदि मामप्रतीकारमशस्त्रं शस्त्रपाणय: ।
धार्तराष्ट्रा रणे हन्युस्तन्मे क्षेमतरं भवेत् ॥४६॥

யதி மாமப்ரதீகாரமஶஸ்த்ரம்ஶஸ்த்ரபாணய: ।
தார்தராஷ்ட்ரா ரணே ஹன்யுஸ்தன்மே க்ஷேமதரம் பவேத் ॥46

இதுவுமது

இனி இதற்குமேல் உயிர் பிழைத்திருப்பதைக் காட்டிலும், சஸ்த்ரத்தை எறிந்துவிட்டு, இவர்களுடைய பாணங்கள்

மேல்விழுவதை ஸஹித்துக் கொண்டிருப்பதே மிக்க நன்று. அதினால் எது உண்டானாலும், மரணமே நேரிட்டாலும், ஸரியே. எது நேரிடினும் இப்பாதகம் செய்ய நான் துணியேன். இப்படி அனைவரும் தன்வம்சஸ்தராய் இருப்பதை அர்ஜுனன்கண்டு, ராஜ்யம் என்பது கேவலம் நரகபோகமே என்று சொல்லி முடித்தான்.

सञ्जयउवाच

एवमुक्त्वार्जुनः सङ्ख्ये रथोपस्थ उपाविशत् ।
विसृज्य सशरं चापं शोकसंविग्नमानसः ।। ४७ ।।

ஸஞ்ஜய உவாச - ஸஞ்ஜயன் சொன்னார்

ஏவ முக்த்வார்ஜுன: ஸங்க்யே ரதோபஸ்த உபாவிஶத் ।
விஸ்ருஜ்ய ஸஶரம் சாபம் ஶோக ஸம்விக்ன மானஸ: ॥ 47

அர்ஜுனன் யுத்தத்தினின்றொழிதல்

இப்படி அந்த ஸமயத்தில் யுத்தகளத்தில் அர்ஜுனன் சொன்ன தனைத்தையும், ஸஞ்ஜயன் த்ருதராஷ்டிரனுக்குச் சொல்லி, மேலும் கவனித்துக் கேளும் என்றான். பின்பு அவன் மிக்க வெறுப்படைந்தவனாய், அடக்கமுடியாத துக்கத்தோடு ரதத்தினின்று கீழே குதித்து, தன் உயர்ந்த பதவியை இழந்து யாவராலும் அவமதிக்கப்பட்டிருக்கும் ஓர் இராஜகுமாரனைப் போலும், ராஹுவினால் விழுங்கப்பட்டு நிஸ்தேஜனாயிருக்கும் ஸூர்யனைப்போலும், தபஸ்ஸின் நடுவில் மஹாஸித்திகளைப் பெற்று, அதின் ஸம்பிரமத்தால் புத்தி மயக்கமடைந்து, காமவிகாரத்துக்கு வசப்பட்டுப் போய், பெருமை எல்லாம் இழந்து நிற்கும தபஸ்வியைப்போலும், அந்த தனுர்தன் மிகுந்த துக்கத்தால் அவயவங்கள் கட்டுக்குலைந்தவனாய், வில்லையும் பாணத்தையும் எறிந்துவிட்டு, அடக்கமுடியாதபடி கண்ணீர் சொரிந்து கொண்டு நின்றான். இப்படி அவனுடைய வ்ருத்தாந்தம் ஆயிற்று, கேளும் அரசனே! என்று ஸஞ்ஜயன் சொன்னான். அச்சமயத்தில் அந்த வைகுண்டநாதன், இவ்வளவு துக்கப்பட்டுக் கொண்டிருந்த பார்த்தனுக்கு, எவ்விதம் பரமார்த்த தத்வத்தை நிரூபணம் செய்து வைத்தாரோ, அந்த விஸ்தாரமான கதையை மேலே சொல்வேன், மிக்க ஆதரவுடன் கேளுங்கள்.

முதல் அத்யாயம் முற்றிற்று

அத்யாயம் 2

सञ्जय उवाच ।

तं तथा कृपयाविष्टमश्रुपूर्णाकुलेक्षणम् ।

विषीदन्तमिदं वाक्यमुवाच मधुसूदनः ॥ १॥

ஸஞ்சய உவாச - ஸஞ்ஜயன் சொன்னார்

தம் ததா க்ருபயாஷ்ட விஷ்ட மஶ்ரு பூர்ணா குலேக்ஷணம் ।
விஷீதந்த மிதம் வாக்ய வாச மதுஸூதன: ॥1

அர்ஜுனன் சோகம்

பின்பு அரசனைப்பார்த்து ஸஞ்சயன் பின்வருமாறு சொன்னான். கேளும் அந்தப் பார்த்தன் அங்கே துக்கத்தால் மனக்கலக்கமுற்று, அழுது கொண்டு நின்று, அங்கிருந்த தன்னுடைய வம்சத்தார் அனைவரையும கண்டு மிகுந்த பரிவுற்றதால், அவனுடைய மனது இயற்கையாக அதிதைர்ய முள்ளதேயானாலும், ஜலத்தால் சூழப்பட்டு கரைந்துபோகும் உப்பைப்போலும், காற்றால் கலைக்கப்பட்ட மேகங்களைப் போலும், சிதிலமாய்ப் போயிற்று. அப்படித் தன்னவர்களென்ற ஸ்நேஹ பாவத்தில் அவன் முழுகிப்போய், சேற்றில் சிக்கிப்போன ராஜஹம்ஸம்போல் மிகவும் முகசோபை இழந்து நின்றான். இப்படி அர்ஜுனன் பெருத்த மோஹத்தால் மனந்தளர்ந்து போயிருக்க, ஸ்ரீ சாரங்கநாதன் அவனைப்பார்த்து இவ்வாறு சொன்னான்.

श्रीभगवानुवाच ।

कुतस्त्वा कश्मलमिदं विषमे समुपस्थितम् ।

अनार्यजुष्टमस्वर्ग्यमकीर्तिकरमर्जुन ॥ २॥

ஸ்ரீ பகவானுவாச - ஸ்ரீ பகவான் கூறுகிறார்

குதஸ்த்வா கஶ்மல மிதம் விஷமே ஸமுபஸ்திதம் ।
அநார்ய ஜுஷ்ட மஸ்வர்க்ய மகீர்திகர மர்ஜுன ॥2

ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்குப் புத்தி சொல்லல்

அர்ஜுனா, முன்னம் முன்னம் இதை யோசித்துப்பார். இந்த இடத்தில் இதுனக்குத் தகுந்ததா, நீ யார்? நீ இப்போது செய்து

கொண்டிருப்பது என்ன? உனக்கு என்ன நேர்ந்தது? என்ன குறைவு உனக்கு ஏற்பட்டது? எது, நீ செய்யத் தொடங்கி, முடிவு பெறாமல் நின்று போயிற்று? என்னத்துக்காக மனவருத்தம் கொண்டாய்? நீயோ அனுசிதமான விஷயங்களுக்கு மனஸில் இடம் கொடுப்பவன் அல்லவே; தைர்யத்தை ஒருக்காலும் விடுகிறவனல்லவே. உன் பெயரைக் கேட்ட மாத்திரத்தில், அபகீர்த்தி என்பது திக்கு விதிக்காய் ஓட்டம் பிடிக்குமே. பௌருஷம் என்பதற்கு, நீ வாஸஸ்தானமல்லவா. நீ க்ஷத்ரியர்களுக்குள் சிறந்தவனல்லவா, உன்னுடைய சௌர்யம் மூவுலகிலும் நிலைபெற்றுள்ளதன்றோ. நீயோ ஹரனோடு போர்செய்து ஜயித்தவன்; நிவாதகவசர்கள் இருந்த இடத்தை துடைத்து வைத்தவன், உன்னுடைய புகழை தேவ லோகத்தில் கந்தர்வர்கள் பாடும்படியாய்ச் செய்து வைத்தாய். உன்னுடைய பெருமைக்குமுன்னால், மூவுலகத்தார்களும் அல்பர்களென்று தோற்றும்படியாய், பௌருஷத்தால் நீ சிறந்து விளங்குகிறாய்.

அப்படிப்பட்ட நீ, ஏன் இங்கே வீர்யமென்பதையே கைவிட்டு, தலைகுனிந்து அழுதுகொண்டு நிற்கிறாய்? யோசித்துப் பார். அர்ஜுனனாகிய நீ, ஏன் மனதிளகிப்போய், இப்படி யதைர்யம் கொண்டவனானாய்? ஸூர்யன் இருட்டால் விழுங்கப்பட்டு போனானென்பது எப்போதாவது நேர்ந்த துண்டோ. மேகங்களைக் கண்டு பயந்து, காற்றுப் பின்வாங்கி ஓடிப்போனதுண்டோ. அமிர்த்துக்கு மரணம் உண்டோ. விறகு கட்டைகள் நெருப்பை விழுங்கிவிட்ட தென்பதுண்டோ. உப்பு ஜலத்தை கரைத்துவிடுமோ. காளகூடம் என்னும் விஷம், மற்றேதேனும் ஒன்றால் மரணமடைவதுண்டோ. ஓர் தவளை ஓர் பெரிய பாம்பை விழுங்கிவிட்டதென்பதுண்டோ. ஸிம்ஹத்தோடு நரி மல்லயுத்தம் செய்ததென்பதுண்டோ. ஆச்சர்யப்படத்தக்க இவ்வியஷங்களனைத்தும் நேர்ந்திருக்கக்கூடும் என்று எண்ணும்படியாகவே, நீ இன்று இங்கு செய்து வைத்தாய். ஆகையால் இனியாவது, அர்ஜுனா, இந்த மானக்கேடான விஷயத்திற்கு மனதில் இடங்கொடாது, ஜாக்ரதையாயிரு. சீக்கிரத்தில் மனஸை தைர்யப்படுத்திக்கொண்டு விழித்துக்கொள். இந்த அறிவின்மையை ஒழித்துவிட்டு, வில்லைக் கையில் எடு. யுத்தம் செய்ய வேண்டிய ஸமயத்தில், நீ இப்படி காருண்யத்தைப் பாராட்டி நிற்பது, உனக்குத் தகாது. நீ தெரிந்தவனாயிருந்தும், இக்காலத்தில், யுக்தாயுக்தம் நீ ஏன் விசாரிப்பதில்லை, நீயே சொல்; யுத்தம் செய்ய வேண்டிய வேளையில் மனஸு இளகுவது ஸரியா? ஏற்கனவே

இவ்வுலகில் உனக்கு ஏற்பட்டுள்ள கீர்தியை, இது நாசம் செய்துவிடுவதுமன்றி, பாரலௌகிகமான ஸுகத்தினின்றும் உன்னை வீழ்த்திவிடும்.

क्लैब्यं मा स्म गमः पार्थ नैतत्त्वय्युपपद्यते।
क्षुद्रं हृदयदौर्बल्यं त्यक्त्वोत्तिष्ठ परन्तप ॥ ३॥

க்லைப்யம் மா ஸ்மகமः பார்த நைதத்த்வய் யுப பத்யதே।
க்ஷுத்ரம் ஹ்ருதய தௌர் பல்யம் த்யக்த்வோத்திஷ்ட பரந்தப॥ 3

இதுவுமது

ஆகையால் நீ இப்படி துக்கியாது பூர்ணமான தைர்யத்தை மனதில் நிலைபெறச் செய்துகொள். இப்படி அழுது கொண்டு நிற்காதே. உனக்கு இது தகுதியன்று. இதனால் நீ தேடி வைத்துக்கொண்ட நன்மைகள் பலவும் நாசம் அடையும். இப்போதாவது உன் ஹிதத்தை நீ விசாரித்துப்பார். யுத்தம் செய்யவேண்டிய இச்சமயத்தில், க்ருபை பாராட்டுவதாலாவது என்? இவர்கள் இப்போதுதானா உன்னுடைய சுற்றத்தார்களானார்கள்? முதலிலேயே இவர்கள் சுற்றத்தார்களென்பதை, அறியாதிருந்தாயோ என்ன? இந்த யுத்தம், நீ ஜன்மித்தது முதல் இதுவரையில் உங்களுக்குள் ஒருக்காலும் ஏற்படாதிருந்து, இப்போதுதானா புதிதாய் நேர்ந்தது? இப்போது மாத்ரம் பாந்தவ்யத்தை மிக்கக் கொண்டாடுவதற்குக் காரணம் ஏன்?

இப்படி யுத்தம் செய்தவற்கு நிமித்தங்கள், உங்களுக்கு இதற்கு முன் அடிக்கடி நேர்ந்து கொண்டே இருந்தனவே! அப்படியிருக்க இப்போதுமாத்ரம், முன்னில்லாததொன்று என்ன ஏற்பட்டது? கௌரவர்கள் விஷயத்தில், ஏன் இந்தப் பரிவு புதிதாய் உனக்கு உண்டாயிருக்கிறது. இதற்குக் காரணம் எனக்குத் தெரியாமற்போனாலும், நீ இப்போது செய்துகொண்டிருப்பது, ஒப்புக்கொள்ளதகாத தென்பது மாத்ரம் நிச்சயம். அறிவு கேட்டுக்கு இடம் கொடுத்தப்பின் இப்படித்தான் நேரிடும். ஏற்கனவே ஸம்பாதித்துக் கொண்டிருக்கும் பெருமை நாசம் அடையும். அன்றியும் இம்மையுடன் மறுமை ஸுகமும் தவிர்ந்து போகும். இப்படி யுத்தகளத்தில் ஹ்ருதயம் தளர்ந்து போவது நன்மைக்குக் காரணம் ஆகாது. க்ஷத்ரியர்களுக்கு இது கெடுதியை உண்டாக்கி வைக்கும். இப்படியெல்லாம் அநேகவிதமாய், க்ருபாளுவான கிருஷ்ணன் புத்தி சொன்னதைக்கேட்டு, பாண்டுபுத்ரன் சொன்னான்.

अर्जुन उवाच ।

कथं भीष्ममहं सङ्ख्ये द्रोणं च मधुसूदन ।

इषुभिः प्रतियोत्स्यामि पूजार्हावरिसूदन ॥ ४ ॥

அர்ஜுன உவாச - அர்ஜுனன் சொன்னார்

கதம் பீஷ்ம மஹம் ஸங்க்யே த்ரோணம் ச மதுஸூதன ।
இஷுபி: ப்ரதி யோத்ஸ்யாமி பூஜார்ஹா வரிஸூதன ॥4

அர்ஜுனனுடைய ப்ரதிவசனம்

ஹே தேவா! கவனித்துக் கேளும். இவ்வளவு தூரம் பேசுவதற்கு அவசியமே இல்லை. முதன்முதல்நீரே சற்று யோஜித்துப் பார்க்கவேண்டும். இரு ஓர் யுத்தமல்ல, மஹத்தான பாபமே, நம்மெதிர்வந்து, நிற்கிறது. இதில் ப்ரவர்த்திப்பதில் தோஷமே தோற்றுகிறது. நிஸ்ஸந்தேகமாய் கும்பிடவேண்டிய தெய்வத்தை, நாசம் செய்துவைப்பதென்பதே, நமக்கு ஏற்பட்டதாகிறது. பாரீர், மாதா பிதாக்களை அர்ச்சிக்கவேண்டும்; ஸர்வஸ்வத்தையும் செலவிட்டு அவர்களுக்கு ஸந்தோஷத்தை உண்டாக்கவேண்டும். அப்படிச் செய்வதை விட்டு, நம் கையாலேயே அவர்களை வதிப்பது எப்படி, ஹே தேவா. ஸாதுக்கள் ஸமூஹத்தை நமஸ்கரிக்க வேண்டும், கையிற் கிடைத்ததைக் கொண்டு அவர்களை பூஜிக்கவேண்டும். இப்படிச் செய்வதைத் தவிர்த்துக்கொண்டு, அவர்களை நிந்திக்கலாமா, அப்படியே என்னுடைய வம்சத்தின் பெரியோர்களாகிய இவர்களை, நான் ஒருக்காலும் தவறாது பூஜிக்கவேண்டும்.

அதிலும் பீஷ்மத்ரோணர்களுக்கு, நான் திருப்பிச் செலுத்தவேண்டிய கடன் விசேஷித்து இருக்கிறது. எவர்கள் விஷயத்தில், வெறுப்புப் பாராட்டுதல் என்பது எனக்கு ஸ்வப்னத்தில் கூட ஸாத்யமில்லையோ, அவர்களைப் பிரத்யக்ஷமாய்க் கொல்வதற்கு, நான் எவ்விதம் ஒப்புக்கொள்வேன். அதைக்காட்டிலும், நம்முடைய வாழ்வு குலைந்து போகலாமே. இவர்கள் என்னிடத்தில் அதிப்ரேமையுடன் எனக்கு வித்யைகளை அப்யஸித்து வைத்ததற்கு, அவ்வித்யைகளின் பலத்தைக் கொண்டே, இவர்களை வதிப்பதே பரிணாமமோ. த்ரோணர் என்னை சிஷ்யனாய் கிரஹித்து தநூர்வேதம்அனைத்தையும் எனக்கு தானம் செய்தார், அந்த உபகாரத்திற்கு ப்ரத்யுபகாரம்,

அவரைக் கொல்லுவதுதானோ? எவருடைய க்ருபையால் வரங்களை அடைந்தேனோ, அவர்பேரிலேயே பகைபாராட்ட, நான் பஸ்மாஸுரனா என்ன?

गुरुनहत्वा हि महानुभावान्श्रेयो भोक्तुं भैक्ष्यमपीह लोके ।
हत्वार्थकामांस्तु गुरुनिहैव भुञ्जीय भोगान् रुधिरप्रदिग्धान् ॥ ५ ॥

குருநஹத்வா ஹி மஹானுபாவான் ஶ்ரேயோ
போக்தும் பக்ஷ்ய-ஹ லோகே ।
ஹத்வாகுர்த காமாம்ஸ்து குருநிஹைவ புஞ்ஜீய
போகான் ருதிர ப்ரதிக்தான் ॥ 5

அர்ஜுனன் மேலும் சொன்னது

தேவா, ஸமுத்ரம் கம்பீரம் என்று சொல்லக் கேட்டதுண்டு, ஆயினும் உள்நுழைந்து பார்க்குங்கால் அதில் கலக்கம் தோற்றும். ஆனல் த்ரோணர் விஷயத்திலோ, புரம்பே மாத்திரமல்லாது, மனதில்கூட கலக்கம் சிறிதும் தோன்றாது. இந்த எல்லையற்ற ஆகாசத்தைக்கூட அளந்துவிடக் கூடும். ஆனால் இவருடைய ஹ்ருதயம் ஆழம் காணமுடியாததாயும், மிகுந்த விஸ்தார முள்ள தாயுமிருக்கிறது. மேலும் அம்ருதம் தெகட்டிப்போனாலும் போகும். வெகுகாலமானால் வஜ்ராயுதமும் உளுத்துதிர்ந்து போனாலும் போகும். இவருடைய மனஸை, எவ்வளவு கலக்கினாலும், அது வேறுபாடடையாது. அத்யுத்தமமான ப்ரேமை, தாயினிடத்தில் காணலாமென்று சொல்வது உண்மையே. ஆனால் அந்தப்ரேமை த்ரோணராய் உருவுகொண்டிருக்கிறது, என்று சொல்ல வேண்டும். அவரை, காருண்யத்துக் குத்பத்தி ஸ்தானமென்றும், ஸகல ஸத் குணங்களுக்கும் இருப்பிடமென்றும், வித்யை நிறைந்திருக்கும கரையற்ற கடலென்றும், சொல்லவேண்டும். அவர் இப்படியெல்லாம் பெருமை பெற்றவராயிருந்தும், எங்கள் பேரில் மிக்க ப்ரிதியுள்ளவர். இப்படிப்பட்டவரைக் கொல்லத் துணிவதெப்படி? அவரையு மவருடன் சேர்ந்தவர்களையும் கொன்று, ஸுகமாய் ராஜ்யத்தைப் புசிப்பதற்கு, என் மனம் ஒப்பவில்லை.

இது ஸத்யம். இவர்களைக்கொன்று ஸுகங்களை அனுபவிக்கிற தென்னும் பேச்சை, என்னத்துக்கு எடுக்க வேண்டும். அச்சுகத்தைக் காட்டிலும், பிச்சை எடுப்பது நன்று.

இல்லாவிட்டால் நாட்டை விட்டு ஓடிப்போய், மலைக்குகைகளில் வஸித்திருக்கலாம். என்ன ஆனாலும் ஸரியே; இனி இவர்களுக்குத் தீங்கு செய்யக் கருதி சஸ்த்ரம் ஏந்தத் தகாது. தேவா, இவர்களுடைய மர்ம ஸ்தானங்களில், கூர்மையாய்த் தீட்டியிருக்கும் பாணங்களை நாட்டி, அவர்களுடைய ரக்தத்தைப் பெருகச் செய்தால், உண்டாகும் ஸுகங்கள் எவையோ, அவற்றாலெனக் காவதென். அவ்வாறு ரக்தம் பூசிக்கிடக்கும் ஸுகத்தை புசிப்பதெப்படி. இவ்வாறு அர்ஜுனன் சொல்லி நிற்க, இத்தனையும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ஸரியாகப் படவில்லை. இதை யறிந்து, பார்த்தன் பயமடைந்து, "தேவரீர், இந்த வார்த்தையை ஏன் மனஸில் ஏற்றுக் கொள்ளவில்லை", என்று வினவி, மேலும் சொன்னான்.

न चैतद्विद्मः कतरन्नो गरीयो यद्वा जयेम यदि वा नोजयेयुः ।
यानेवहत्वा न जिजीविषामःतेऽवस्थिताः प्रमुखे धार्तराष्ट्राः ॥

ந சைதத்வித்மः கதரன்நோ கரீயோ யத்வா
ஜயேம யதிவாநோஜயேயுः।
யாநேவ ஹத்வா ந ஜிஜீவிஷாமஸ்தேகுவஸ்திதாः
ப்ரமுகே தார்தராஷ்ட்ராः ॥ 6

இதுவுமது

என் மனஸில் இயற்கையாகவே என்ன தோற்றினதோ, அதை விவரமாய்ச் சொன்னேன். ஆனால் இதைக் காட்டிலும், நன்றாயிருப்பது எதுவோ, அதை நீர்தான் அறிவீர். ஆனாலெவர்களோடு வைரம் செய்வதென்னும் வார்தையைக் கேட்ட மாத்திரத்திலேயே ப்ராணன் போய்விடுமோ, அவர்கள் யுத்தம் செய்ய வேண்டிய நிமித்தமாய் எதிர்த்து நிற்கிறார்கள். இப்படி ஏற்பட்டபின்; அவர்களை வதைசெய்ய வேண்டுமோ, அல்லது அவர்களுக்கு முகம் கொடாமல் திரும்பிப் போகவேண்டுமோ, அது எனக்குத் தெரியவில்லை.

कार्पण्यदोषोपहतस्वभावःपृच्छामि त्वां धर्मसम्मूढचेताः ।
यच्छ्रेयः स्यान्निश्चितं ब्रूहि तन्मशिष्यस्तेऽहं शाधि मां त्वां प्रपन्नम् ॥

கார்பண்ய தோஷோ பஹதஸ்வ பாவः
ப்ருச்சாமி த்வாம் தர்ம ஸம்ட சேதா :।
யச் ச்ரேயः ஸ்யாந்நஶ்சிதம் ப்ரூஹி தன்மே
ஶிஷ்யஸ்தேகுஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரபன்னம் ॥ 7

அர்ஜுனன் கிருஷ்ணனிடத்தில் சரண்புகல்

எனக்குஹிதமானது எதுவோ, அது இப்போது என் புத்திக்குத் தோற்றவில்லை, ஏனென்றால் இந்த புத்தி மயக்கத்தால், என் சித்தம் தடுமாற்றம் கொண்டிருக்கின்றது. இருட்டால் பார்வை மாறாட்டம் கொண்டபின், ஸமீபத்தில் இருக்கும் வஸ்துவே தெரியாமற் போகும். அஹோ தேவா, எனக்கு அப்படியே நேரிட்டு, அறிவு மயங்கிப்போயிருக்கிறது. இப்போது என்னுடைய நன்மை எதுவென்று, எனக்குத் தெரியவில்லை. அப்படியான பிறகு, நீரே எனக்கு நன்மை எதுவோ அதை அறிந்து, சொல்லிக் கொடுக்கவேண்டும். ஏனென்றால் நீரே என் நன்மையைக் கோரிய தோழன், எனக்கு ஸர்வஸ்வமும் நீரே. எனக்கு குரு, உடன்பிறந்தவன், இஷ்டதெய்வம், ஆபத்திற் காப்பவன், எல்லாம் நீரே. சிஷ்யனை குரு கைவிடான். நதியை ஸமுத்ரம் தன்னிடம் வந்து சேரக்கூடா தென்று தடுக்காது. குழந்தையை தாய் கைவிட்டால், அது எவ்வாறு பிழைக்கும். கிருஷ்ணா கேளீர், அப்படியே எல்லாவிதத்தாலும் எனக்கு நீர் ஒருவரே கதியாயிருக்கிறீர். நான் முன் சொன்னதெல்லாம் உமக்கு யுக்தமாய்த் தோன்றாவிட்டால், நான் அநுஷ்டிக்கத் தகுந்ததாயும், தர்மத்துக்கு விரோதமில்லாததாயும், எது இருக்குமோ, அதை இப்போது விரைவாய்ச் சொல்லித்தரவேண்டும்.

नहिप्रपश्यामिममापनुद्याद्
यच्छोकमुच्छोषणमिन्द्रियाणाम् ।
अवाप्य भूमावसपत्नमृद्धंराज्यं
सुराणामपि चाधिपत्यम् ॥ ८॥

सञ्जय उवाच ।

एवमुक्त्वा हृषीकेशं गुडाकेशः परन्तपः ।
न योत्स्य इति गोविन्दमुक्त्वा तूष्णीं बभूव ह ॥ ९॥

நஹி ப்ரபஶ்யாமி மமா பநுத்யாத், யச்
சோகமுச்சோஷணமிந்த்ரியாணாம்।
அவாப்ய பூமா வஸ பத்ந ம்ருத்தம், ராஜ்யம்
ஸுராணாமபி சாதி பத்யம் ॥ 8

ஸஞ்ஜய உவாச - ஸஞ்ஜயன் சொன்னார்

ஏவ முக்த்வா ஹ்ருஷீகேஶம் குடாகேஶ: பரந்தப: ।
ந யோத்ஸ்ய இதி கோவிந்த முக்த்வா தூஷ்ணீம் பபூவ ஹ ॥9

திரும்பவும் அர்ஜுனனுக்குண்டான புத்திமயக்கம்

இங்கே என் குலத்தாரனைவரையும் பார்த்தபின், என் மனஸில் உண்டாயிருக்கும் துக்கம், உம்முடைய வார்த்தகைளைத்தவிர வேறேதாலும் நீங்காது. பூமண்டலம் முழுவதும் என் ஸ்வாதீனமாகலாம். மஹேந்திரபதவிகூட, எனக்கு கிடைக்கலாம். அப்படியானாற்கூட மனஸுக்குண்டான குழப்பம் தீராது. வறுபட்டுப்போன விதையை, உத்தம பூமியில் விதைத்து, எவ்வளவு ஜலம் பாய்ச்சினாலும், ஒருக்காலும் முளைக்காது மற்றும் ஆயஸு முடிந்து போனபின், எவ்வித ஔஷதமும் உதவாது, அச்சமயத்தில் பரமாம்ருத மொன்றே பயன்படும் அப்படியே கலங்கிப்போன என் புத்தியை, ஸம்பூர்ண ராஜ்யபோகங்கூட சந்தோஷிக்கச் செய்துவைக்காது. அவ்விதம் செய்துவைக்கத்தக்கது. உம்முடைய காருண்யமொன்றே, ஹே க்ருபாநிதே அந்த அர்ஜுநனுடைய புத்திமயக்கம், இப்படி ஒரு க்ஷண நேரம்விலகி, திரும்பவும் மூடிக்கொண்டது. புத்திமயக்கம் மூடிக்கொண்டதென்று சொல்வது தகாது மிகவும் கொடிய மஹாமோஹம் என்னும் ஓர் கிருஷ்ணஸர்ப்பம், அவனை விழுங்கிவிட்டதென்றே சொல்ல வேண்டியதாயிருக்கிறது. மிக்க மனத்தளர்ச்சி உண்டாயிருக்கும் ஸமயம் பார்த்து, மர்மஸ்தானமான ஹ்ருதயகமலத்தில், அப்பாம்பு கடித்துவிட்டதால், மூர்ச்சையடங்காமல் திரும்பத்திரும்ப வந்து கொண்டிருந்தது.

அர்ஜுணன் புத்தி மயக்கத்தால் செய்த தீர்மானம்

மேலும் ஸஞ்சயன் சொன்னான், அரசனே அந்தப் பார்த்தன் மறுபடியும் கலக்கமடைந்து, ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்து, நீர் என்ன சொன்ன போதிலும் நானிங்கே போர் செய்வதில்லை, இது நிச்சயம், என்று முடிவாய்ச் சொல்லிவிட்டு பேசாமல் நின்றான்.

அர்ஜுனனுக்கு கிருஷ்ணன் செய்த துக்க சமனம்

இதைப் பார்த்து, கடைக்கண்பார்வையினாலேயே விஷத்தைப்போக்கத்தக்க வல்லமையுள்ள அந்த ஸ்ரீஹரி

என்னும் காருட வித்தையாடி, ஓட்டமாய் ஓடிவந்தான் போலும். அப்படித் தன் ஸமீபத்திலேயே வ்யாகூலத்தை அடைந்து கிடக்கும் அர்ஜுனனை ஸ்ரீகிருஷ்ணன் க்ருபையுடன் நோக்கி, அநாயாஸமாய் ரக்ஷிக்கப் போகிறான். இதை மனஸில் வைத்துக்கொண்டுதான், பார்த்தன். மோஹம் என்னும் பாம்பினால், விழுங்கப்பட்டானென்று நான் வர்ணித்தேன். ஸூர்யன் மேகக்கூட்டத்தால் மறைக்கப்பட்டது போல், அர்ஜுனன் மதிமயக்கத்தால் கபளீகரிக்கப்பட்டு, வேனிற்காலத்தில் காட்டுத்தீ பற்றிக்கொண்ட ஓர் பெருமலைபோல் துக்கத்தால் தளர்ச்சி அடைந்து நின்றான். இதைப் பார்த்து ஸ்வாபாவிகமாய் கருப்பானதும், க்ருபை என்னும் ஜலத்தை வஹித்ததுமான, ஸ்ரீகோபாலன் என்னும் மஹாமேகம் வந்து சேர்ந்தது. அவன் கையில் இருந்த ஸுதர்சனத்தின் காந்தியே மின்னலாய்ப் பிரகாசித்தது. கம்பீரமான பேச்சுக்களே இடிகளாய் முழங்கின. இனி அந்த உதாரமான மேகம் வர்ஷித்து, அதினால் அர்ஜுனன் என்னும் மலையானது வெப்பம் தீர்ந்து, குளிர்ச்சிபெற்றபின், தத்வஞானததின் குருத்துக்கள் எவ்விதம் வெளிப்படுமோ, அந்தக் கதையைச் சொல்லப் போகிறேன் கேளுங்கள்.

तमुवाच हृषीकेशः प्रहसन्निव भारत ।
सेनयोरुभयोर्मध्ये विषीदन्तमिदं वचः ॥ १० ॥

தமுவாச ஹ்ருஷீகேஶ: ப்ரஹஸந்நிவ பாரத ।
ஸேநயோருபயோர்மத்யே விஷீதந்தமிதம் வச: ॥10

கீதோபதேசத் தொடக்கம்

அவனைப் பார்த்து, ஸ்ரீ கிருஷ்ணன் ஆச்சர்யமடைந்து, "ஹா, ஹா, இந்த அர்ஜுனன் என்ன வேலை செய்ய ஆரம்பித்தான்! இவனுக்கு புத்தி கொஞ்சம்கூட இல்லையே, இவ்வறிவின்மையைப்போக்க, நாம் என்ன செய்யத்தக்கது; நாம் எது செய்தால், இவனுக்கு திரும்பவும் தைர்யம் உண்டாகும்", என்று தனக்குள் தானே சொல்லிக் கொண்டு, ஓர் பிசாசை நிவர்த்தி செய்துவைப்பதற்கு, ஓர் மந்திரவாதி பல உபாயங்களை ஆலோசிப்பது போலும், சற்று ஆலோசித்து நின்றார்.

அன்றியும் ஓர்வ்யாதியை நிவ்ருத்தி செய்துவைத்து, வ்யாதிஸ்தனை பிழைக்கச்செய்வது, மிகக் கடினமானதென்று சங்கித்த ஓர் வைத்யன், முடிவாகக்கொடுக்கவேண்டிய

அம்ருதம்போன்ற திவ்ய ஔஷதத்தை, முதலிலேயே ப்ரயோகம் செய்வதுபோலும், ஸ்ரீ அநந்தன், இந்த இரண்டு சேனைகள் விஷயத்திலும் அர்ஜுனனுக்கு ஏற்பட்டிருந்த மதிமயக்கம் தீரும்படி, உத்தமமான ஞானத்தை விவரித்துச் சொல்லவேண்டும், என்னும் எண்ணத்தை மனதிற்கொண்டு, தாயினுடைய கோபங்கொண்ட வார்த்தைக்குள் ப்ரியம் மறைந்து கிடப்பது போல், வெளிப்படையாய் கோபங்கொண்டு, மனஸில் ப்ரேமையுடன் பேசத்தொடங்கினார். மற்றும் ஔஷதத்தின் கசப்புக்குள் அம்ருதத்தின் நிறைவு மறைந்து கிடந்து, பின்பு ஔஷதத்தின் குணத்தால் வெளிப்பட்டுத் தோற்றுவது போலும், வெளிப்படையாய் ப்ரியமில்லாதவைபோல் தோற்றி, ஆழ்ந்து பார்க்குங்கால் ப்ரேமைரஸம் நிறைந்திருக்கும் வார்த்தைகளைக் கொண்டு, ஹ்ருஷீகேசன் அர்ஜுனனைப் பார்த்துச் சொன்னார்.

श्रीभगवानुवाच ।

अशोच्यानन्वशोचस्त्वं प्रज्ञावादांश्च भाषसे ।

गतासूनगतासूंश्च नानुशोचन्ति पण्डिताः ॥ ११ ॥

ஸ்ரீ பகவானுவாச - ஸ்ரீக்ருஷ்ண பகவான் சொன்னார்

அஶோச்யா நந்வ ஶோசஸ் த்வம் ப்ரக்ஞாவாதாம்ஶ்ச பாஷஸே।
கதாஸூ நகதாஸூம்ஶ்ச நாநுஶோசந்தி பண்டிதா: ॥11

ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஸம்பாஷணம்

முன்பின் ஸம்பந்தமில்லாதபடி, நீ இப்போது துக்கித்து நிற்பது, எனக்கு ஆச்சர்யமாயிருக்கிறது. நீ தெரிந்தவனென்று சொல்லிக் கொள்கிறாயே தவிர, அறிவின்மையை விடமாட்டேன் என்று பொத்திக்கொள்கிறாய். மேலும் உனக்கு அறிவைப் போதிப்போமென்றால், எனக்கு நீ போதிக்கத் தலைப்படுகிறாய். பிறவிக்குருடனுக்குப் பைத்தியம் பிடித்தபின், அவன்தாறுமாறாய் ஓடியலைவதுபோலும், உன்னுடைய அறிவுடைமை இருக்கிறது. உன்ஸ்வரூபத்தையே நீ அறியாதவனாயிருக்க, இக்கௌரவர்களின் அறிவின்மையை நினைத்து துக்கிக்கிறாய். இதைப் பார்க்கும்போது, எனக்கு ஆச்சர்யமாயிருக்கிறது.

ஆனால் இந்த விஷயம் ஒன்று மாத்திரம் சொல். இந்த மூவுலகமும் உன்னிடத்திலிருந்தே உண்டாயிற்றா? இந்த

விச்வத்தின் நிர்மாணம் அநாதியென்று சொல்கிறார்களே, அது பொய்யா? "ஈச்வரன் என்று ஒருவன் இருக்கிறான், அவனிடத்திலிருந்து பூதங்களனைத்தும் உண்டாயின", என்று உலகில் சொல்லிக்கொள்கிறார்களே, அது உண்மையில்லாத பேச்சா? இவையனைத்தும் எப்படியாவது இருந்து போகட்டும். "நீயேதான் ஜன்மம்ருத்யுக்களை உண்டுபண்ணி வைத்தாயா? நாசம் அடைவதெல்லாம் உன்னால்தான் நசிக்கிறதா"? என்ற இவ்விஷயம் ஒன்றே நாம் இப்போது ஆலோசிக்க வேண்டியது. நீ மதிமயக்கத்தால் அஹங்காரம் படைத்து, இவர்களை வதஞ்செய்ய ஒத்துக் கொள்ள மாட்டேன் என்கிறாய். நீ வதம் செய்யாவிட்டால், இவர்கள் சாச்வதமாய் இருக்கிறவர்களா? நீ ஒருவனே கொல்கிறவன், உலகிலுள்ள மற்றவர்களெல்லாம் மரிக்கவேண்டியவர்கள், என்றிப்படிப்பட்ட மதிமயக்கம் உனக்கு எக்காலமும் உண்டாகாதபடி நீ ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

உலகில் நாம் பார்க்கும் இவையெல்லாம், அனாதியாய் ஏற்பட்டு, தங்கள் ஸ்வபாவானுகுணமாய், வெளிப்பட்டு மறைந்து கொண்டிருக்கின்றன. உண்மை இப்படியிருக்க, கேவலம் அறிவின்மையால், நீ கவலைப்படவேண்டாத விஷயத்திற் கவலைப்படுகிறாய். அன்றியும நீயே தெரிந்தவனாக எண்ணிக்கொண்டு, நீதி இன்னதென்று எனக்கு எடுத்துரைக்கிறாய். ஒன்று உண்டாவதும் மறைந்து போவதும், புத்தி ம்யக்கத்தின் கார்யமே என்று அறிந்து, விவேகிகள் இவ்விரு விஷயத்தைப் பற்றியும் துக்கிப்பதில்லை.

न त्वेवाहं जातु नासं न त्वं नेमे जनाधिपाः ।
न चैव न भविष्यामः सर्वे वयमतः परम् ॥१२॥

ந த்வேவாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே ஜநாதிபாः ।
ந சைவ ந பவிஷ்யாமः ஸர்வே வயமதः பரம் ॥ 12

பூதங்களின் ஆத்மத்வேந நித்யத்வம்

நானும், நீயும், இந்த அரசர்களும், மற்றும் உலகிலுள்ள அனைவரும், இப்போதுதான் இருக்கிறார்களென்பதும், இனி இல்லாமல் போவார்களென்பதும், புத்திமயக்கத்தின் கார்யமே. இம்மயக்கம் ஒழிந்தபின், இவ்விரண்டும் உண்மையில்லாத தோற்றமே என்றறியப்படும். ஒன்று உண்டாவதும், பின்பு மறைந்து போவதும், மாயையின் கார்யம். அந்த மாயையைத் தவிர்த்துக்கொண்டபின், இருப்பதாக அறியப்படுவது யாதோ,

அது ஒருக்காலும் அழிவில்லாததே. காற்றினால் ஜலம் அசைவு பெற்று, அலையுருவாகத் தோற்றும்போது, புதிதாய் எது எங்கே உண்டாயிற்று? அந்தக்காற்று அடிப்பது ஓய்ந்து, ஜலம் மேடு பள்ளமில்லாமல் ஸமமாகும்போது, எதுநாச மடைந்தது?

देहिनोऽस्मिन्यथा देहे कौमारं यौवनं जरा ।
तथा देहान्तरप्राप्तिर्धीरस्तत्र न मुह्यति ॥ १३ ॥

தேஹினோகுஸ்மின் யதா தேஹே கௌமாரம் யௌவனம் ஜரா।
ததா தேஹாந்தர ப்ராப்திர் தீரஸ்தத்ர ந முஹ்யதி ॥ 13

ஜன்ம மரணங்களின் ஸ்வரூபம்

கேள், சரீரமோ ஒன்றேயானாலும், அதில் வயஸின் வித்யாஸத்தால் வேறுவேறு பேதங்கள் உண்டாகின்றன, என்பதை ப்ரத்யக்ஷமாய்ப் பார்க்கலாம். இதில் முன்னால் கௌமாரம் என்னும தசை உண்டாய், பின்பு அது மாறி, தாருண்யம் முதலிய அவஸ்தைகள் ஏற்படுகின்றன. ஆனால் அப்படி அவஸ்தைகள் மாறும்போதெல்லாம், தேஹம் நாசமடைவதில்லை. அப்படியே, எப்போதுமழிவற்ற ஆத்மஸ்வரூபத்தில், வேறுவேறு சரீரங்கள் உண்டாய் மறைந்து போகின்றன, என்ற இதை யறிந்தவனுக்கு, அஞ்ஞானத்தால் ஏற்படும் துக்கம் உண்டாகாது.

मात्रास्पर्शास्तु कौन्तेय शीतोष्णसुखदुःखदाः ।
आगमापायिनोऽनित्यास्तांस्तितिक्षस्व भारत ॥ १४ ॥

மாத்ரா ஸ்பர்ஶாஸ்து கௌந்தேய ஶீதோஷ்ண ஸுக துः கதா: ।
ஆகமாபாயிநோ நித்யாஸ்தாம் ஸ்திதிக்ஷஸ்வ பாரத ॥ 14

விஷயங்களின் அநித்யத்வம்

இவ்விஷயத்தில் ஞானமில்லாமைக்குக்காரணம் இதுவே. எப்போது ஒருவனுடைய சித்தம் இந்திரியத்துக்கு வசப்பட்டு, விஷயஸுக ஆசையால் வ்யாபிக்கப்பட்டதாகுமோ, அப்போதே அவனுக்கு அறிவுகேடு உண்டாகிறது. இந்திரியங்கள் விஷயங்களை ஸேவிப்பதால் ஸுகதுக்கங்கள் உண்டாய், அதில்மனஸு முழுகிப்போகிறது. விஷயங்களோ ஒரே மாதிரியாய் இராமையால், ஒருவேளை துக்கமும் ஒருவேளை ஓர் விதமான ஸுகமும், அவற்றினின்று

உண்டாகின்றன. சப்தமானது நிந்தையென்றும், ஸ்துதியென்றும், இருவகைப்பட்டு, காதின் வழியாய் நுழைந்து, வெறுப்பு விருப்புக்களை உண்டாக்கி வைக்கிறது. ஸ்பர்சம் என்பது, காடின்யம் மார்த்தவம் என்று இருவகைப்பட்டு, தேஹத்தின் மூலமாய் மனதில் ஏறி, துக்க ஸந்தோஷங்களுக்குக் காரணம் ஆகின்றது.

ரூபமென்பது, பயங்கரம் ஸுந்தரம் என்று இருவகைப்பட்டு, கண்மூலமாய் துக்கத்தையும் ஸுகத்தையும் செய்துவைக்கிறது. வாஸனை யென்பது, ஸுகந்தம் துர்கந்தம் என்று இருவகைப்பட்டு, மூக்குத்வாரமாய் ஸுகத்தையும் துக்கத்தையும் செய்துவைக்கிறது. சுவை பலவகைப்பட்டு, ஸுகத்தையும் துக்கத்தையும் செய்து வைக்கிறது. ஆகையாற்றான், விஷயத்தின் சேர்க்கையால் ஸ்வரூபஸ்திதி தவறிப்போகிறது. இந்திரியங்களுக்கு வசப்பட்டு, சீதோஷ்ணம் முதலிய த்வந்த்வங்களை அடைந்து, நாம் ஸுகதுக்கங்களை அநுபவித்து, விஷயங்களின் போகத்தைத் தவிர உலகில் மற்றெதுவும், மனதுக் கினியதில்லை யென்று நிச்சயித்து விடுகிறோம். இந்த்ரியங்கள் இப்படியே செய்துவைக்கின்றன வென்றறி. இப்படி மனஸைக் கவர்ந்துகொள்ளும் விஷயம், கானனீர்போலும், ஸவப்நத்தில் கிடைத்த ஸம்பத்துப்போலும், அநித்யமான தென்றறிந்து, அதற்கு நீ இடம் கொடாதிருக்க வேண்டும்.

यं हि न व्यथयन्त्येते पुरुषं पुरुषर्षभ ।
समदुःखसुखं धीरं सोऽमृतत्वाय कल्पते ॥ १५ ॥

யம் ஹி ந வ்யதயந்த்யேதே புருஷம் புருஷர்ஷப।
ஸம துः கஸுகம் தீரம் ஸோ ம்ருதத்வாய கல்பதே ॥15

விஷயங்களை உபேக்ஷிப்பதின் லாபம்

எவனிந்த விஷயங்களில் சிக்கிப் போவதில்லையோ, அவன் ஸுகதுக்கங்களால் பாதிக்கப்படாதவனாய், கர்ப்பவாஸத்தின் ஸம்பந்த மற்றவனாகிறான். பின்பு அவன் எந்த ஸ்திதியிலிருந்தாலும், உருவுகொண்ட பரப்ரஹ்மமே ஆவான்.

नासतो विद्यते भावो नाभावो विद्यते सतः ।
उभयोरपि दृष्टोऽन्तस्त्वनयोस्तत्त्वदर्शिभिः ॥ १६ ॥

நாஸதோ வித்யதே பாவோ நாபாவோ வித்யதே ஸதः ।
உபயோரபி த்ருஷ்டோந்தஸ் த்வனயோஸ் தத்த்வ தர்ஶிபிः॥16

விவேகிகளுடைய பரமார்த்த தத்வ ஸங்க்ரஹணம்

ஞானிகள் தெரிந்துகொண்டிருக்கும் மற்றுமோர் விஷயம் நான் சொல்லப்போகிறேன், கவனித்துக்கேள். இந்த உபாதிகளுக்குள் மறைந்து கிடந்து, எங்கும் வியாபித்திருக்கும் யாதொரு சைதந்யமுண்டோ, அதையே தத்வஞானிகள் எப்போதும் கைப்பற்றி நிற்கிறார்கள். நீரோடு பால் ஒன்றுபட்டுக் கலந்து கிடக்க. அப்பாலை மாத்திரம் ராஜஹம்ஸம் பிரித்து உட்கொள்வது போலும், புத்திமான்கள, இதர உலோகங்கள் கலந்து மாற்றுக் குறைந்திருக்கும் பொன்னை, நெருப்பில் புடம்போட்டு, சுத்தமான தங்கத்தைப் பிரித்தெடுத்துக் கொள்வதுபோலும், புத்தி சாதுர்யத்தைக் கொண்டு தயிரைக் கடைந்து, வெண்ணெய்ப் பிரித்தெடுத்துக் கொள்வது போலும் பதரும் தான்யமும் ஒன்றுபட்டுக்கிடக்க, அவற்றை காற்றில் தூற்றி, லேசாகிய பதரை பறந்துபோகச்செய்து, கனமாகிய தான்யத்தைப் பிரித்தெடுத்துக் கொள்வது போலும், தத்வவிசாரம் செய்து, உண்மையில்லாத ப்ரபஞ்சத்தை விலக்கி, ஆத்மவஸ்து ஒன்றையே ஞானிகள் கைப்பற்றி நிற்பதால், அநித்யவஸ்து விஷயத்தில், அது உளது என்னும் புத்தி, அவர்களுக்கு உண்டாவதேயில்லை. இப்படி பிரபஞ்ச பரமார்த்தங்கள் இரண்டையும், ஞானிகள் பகுத்தறிந்து நிற்கிறார்கள்.

अविनाशि तु तद्विद्धि येन सर्वमिदं ततम् ।
विनाशमव्ययस्यास्य न कश्चित्कर्तुमर्हति ॥१७॥

அவிநாஶி து தத்வித்தி யேன ஸர்வமிதம் ததம் ।
விநாஶமவ்யயஸ்யாஸ்ய ந கஶ்சித் கர்து மர்ஹதி ॥ 17

ஆத்மா நாசம் அற்றது

ஸாராஸாரங்களைப் பகுத்துப் பார்க்குங்கால், எது உண்மையான இருப்பற்றதாய், புத்திமயக்கத்தால் தோன்றும் தோற்றமாக மாத்ரம் ஏற்படுமோ, அது அஸாரமென்றும், எது இயற்கையாகவே நித்யமாய் இருக்குமோ, அது ஸாரமென்றும் அறியவேண்டும். எதை ஆதாரமாகக் கொண்டு இம்மூவுலகும் விரிந்து தோற்றுகிறதோ, அதற்குப் பெயர், வர்ணம், உருவம்,

குறி, இவற்றில் யாதொன்றுமில்லை. எந்த ஆத்ம ஸ்வரூபமானது ஸர்வகதமாயும், பிறப்பிறப் பற்றதாயும், இருக்குமோ, அதை எவ்வளவு பிரயத்நம் செய்தும் கொல்லமுடியாது.

अन्तवन्त इमे देहा नित्यस्योक्ताः शरीरिणः ।
अनाशिनोऽप्रमेयस्य तस्माद्युध्यस्व भारत ॥ १८ ॥

அந்தவந்த இமே தேஹா நித்யஸ் யோக்தா: ஶரீரிண: ।
அநாஶிநோ ப்ரமேயஸ்ய தஸ்மாத்யுத்யஸ்வ பாரத ॥ 18

சரீரம் நச்வரம்

மேலும் இந்த சரீரங்களனைத்தும் இயற்கையாகவே நசித்துப் போகின்றவையாகையால், பாண்டு புத்ரா, நீ யுத்தம் செய்வதற் கோராக்ஷேபணையுமில்லை.

य एनं वेत्ति हन्तारं यश्चैनं मन्यते हतम्
उभौ तौ न विजानीतो नायं हन्ति न हन्यते ॥ १९ ॥

ய ஏனம் வேத்தி ஹந்தாரம் யஶ்சைனம் மன்யதே ஹதம் ।
உபௌ தௌ ந விஜாநீதோ நாயம் ஹந்தி நஹன்யதே॥19

கொலை செய்கிறேனென்றெண்ணுவது அஞ்ஞானம்

தேஹாபிமானத்தை விடாதவனாய், சரீரத்தையே லக்ஷ்யமாய் வைத்துக்கொண்டு, நான் கொலை செய்கிறவன், இவர்கள் கொலை செய்யப்படுகிறவர்களென்று சொல்கிறாய், ஆனால் அர்ஜுனா இவ்விஷயத்தின் உண்மையை நீ அறியவில்லை, உண்மையை விசாரித்துப் பார்ப்பாயானால், நீயும் கொல்கிறவனல்ல, அவர்களும் கொல்லப்படுகிறவர்களல்ல, என்றேற்படும்.

न जायते म्रियते वा कदाचिन्
नायं भूत्वा भविता वा न भूयः ।
अजो नित्यः शाश्वतोऽयं पुराणो
न हन्यते हन्यमाने शरीरे ॥ २० ॥

ந ஜாயதே ம்ரியதே வா கதாசிந் நார்யம்
பூத்வா பவிதா வா ந பூய: ।
அஜோ நித்ய: ஸாஸ்வதோ ऽயம் புராணோ ந
ஹன்யதே ஹன்யமானே ஸரீரே ॥

वेदाविनाशिनं नित्यं य एनमजमव्ययम् ।
कथं स पुरुष: पार्थ कं घातयति हन्ति कम् ॥२१॥

வேதாவிநாஸினம் நித்யம் ய ஏன மஜ மவ்யயம் ।
கதம் ஸ புருஷ: பார்த கம் காதயதி ஹந்தி கம் ॥ 21

சரீரநாசம் ஆத்மாவை ஸம்பந்திப்பதில்லை:

ஸ்வப்நத்தில் பார்க்கப்பட்டது, அந்த ஸ்வப்நத்தில் மாத்ரமே உண்மையாய்த் தோற்றி, விழித்துக்கொண்டபின் முற்றிலுமில்லாமற் போவது போல், அஞ்ஞானா வஸ்தையில் காணப்பட்ட இவையனைத்தும், ஞானாவஸ்தையில்லாமற் போகின்றன. இதையறியாமல், புத்திமாறாட்டம் கொண்டிருக்கிறாய். ஓர் சஸ்திரத்தால் ஒருவன் நிழலை வெட்டினால், அவ்வெட்டு அவன் தேஹத்தில் தைக்குமா. ஓர் நீர்நிறைந்த குடம் உருண்டு போனால், அதில் ப்ரதிபிம்பித்திருந்த ஸூர்யபிம்பம் இல்லாமல் போகுமே தவிர, ஸூர்யனே நாசமடைவானா. அன்றியும் ஓர் வீட்டில் ஆகாசம் அதன் உருவாய் அமைந்திருக்க, அவ்வீடு இடிந்து விழுந்ததும், ஆகாசத்திற்கு ஓர் கேடும் நேராது, ஆகாசமாகவே இருக்குமல்லவா. அப்படியே சரீரம் நாசமடைவதால், ஆத்மஸ்வரூபம் எவ்விதமாயும் நாசமடைவதில்லை.

वासांसि जीर्णानि यथा विहाय नवानि गृह्णाति नरोऽपराणि ।
तथा शरीराणि विहाय जीर्णानिअन्यानि संयाति नवानि देही

வாஸாம்ஸி ஜீர்ணானி யதாவிஹாய நவானி
க்ருஹ்ணாதி நரோ ऽபராணி ।
ததா ஸரீராணி விஹாய ஜீர்ணான் யன்யானி
ஸம்யாதி நவாநி தேஹி ॥

ஜன்ம மரணங்களின் உண்மை

கிழிந்துபோன வஸ்திரங்களை களைந்துவிட்டு, புதுவஸ்திரங்களை உடுத்திக்கொள்வது போலும், வேறு வேறு தேஹங்களை, சைதன்யநாதன் தரித்துக்கொள்கிறான்.

नैनं छिन्दन्ति शस्त्राणि नैनं दहति पावकः ।
न चैनं क्लेदयन्त्यापो न शोषयति मारुतः ॥ २३ ॥
अच्छेद्योऽयमदाह्योऽयमक्लेद्योऽशोष्य एव च ।
नित्यः सर्वगतः स्थाणुरचलोऽयं सनातनः ॥ २४ ॥

நைநம் சிந்தந்தி ஸஸ்த்ராணி நைநம் தஹதி பாவக: ।
ந சைனம் க்லேதயந்த்யாபோ ந ஸோஷயதி மாருத: ॥23

அச்சேத்யோய மதாஹ்யோ ஸ்ய மக்லேத்யோ ஸோஷ்ய ஏவ ச ।
நித்ய: ஸர்வகத: ஸ்தாணுரசலோயம் ஸநாதன: ॥24

ஆத்மா அவிகாரி

இவன் அநாதி, நித்யஸித்தன், உபாதியற்றவன், விசுத்தன். ஆகையால் இவனை சஸ்தரம் முதலியவற்றால் சேதிக்கமுடியாது. இவன் ப்ரளயகாலத்து வெள்ளத்திலும் முழுகிப்போகான். இவனை அக்னி சுடாது. காற்று உலர்த்தாது. இவன் நித்யன், அசைவில்லாதவன். ஒருநாளும் அழிவில்லாதவன். இவன் எல்லா இடத்திலும் எப்போதும் ப்ரகாசிக்கிறவனாய், பரிப்பூர்ணனாய் இருக்கிறான்.

अव्यक्तोऽयमचिन्त्योऽयमविकार्योऽयमुच्यते ।
तस्मादेवं विदित्वैनं नानुशोचितुमर्हसि ॥ २५ ॥

அவ்யக்தோ ஸ்ய மசிந்த்யோ ஸ்யமவிகார்யோ ஸ்ய முச்யதே ।
தஸ்மாதேவம் விதித்வைனம் நாநு ஸோசிது மர்ஹஸி ॥25

ஆத்மஸ்வரூபஞானத்தால் துக்கம் நசிக்கும்

இவனைத் தர்க்கத்தின் கண்ணைக்கொண்டு பார்க்க முடியாது. ஹே கிரீடி, யோகிகள் த்யாகத்தால் இவனைக்காண ஆசைப்பட்டுக்கொண்டேயிருக்கிறார்களே தவிர இவனைக் கண்டதில்லை. இவனை ஒருக்காலும் மனஸு எட்டுவதில்லை. இவனை ஒரு ஸாதனத்தாலும் ஸாதிக்க முடியாது. இந்த புருஷோத்தமன் எல்லையற்றவன், முக்குணங்களின் சம்பந்தமற்றவன், அநாதி, மாறுபாடில்லாதவன். இவன் வ்யக்தி அற்றவனாயும், ஸர்வரூபனாயும் இருக்கிறான். அர்ஜுநா இவன்

இப்படிப்பட்டவனென் றறிந்து, இவனை ஸகலாத்மகனாய்ப் பார்ப்பாயானால், உன்னுடைய துக்கம் முழுமையும் தானாகவே இல்லாமற் போய்விடும்.

अथ चैनं नित्यजातं नित्यं वा मन्यसे मृतम् ।
तथापि त्वं महाबाहो नैवं शोचितुमर्हसि ॥ २६॥

அத சைனம் நத்யஜாதம் நத்யம் வா மன்யஸே ம்ருதம் ।
ததாபி த்வம் மஹாபாஹோ நைவம் ஶோசிது மர்ஹஸி ॥26

ஜன்ம ஸ்திதி லயங்கள் மாறிமாறி வருவதால், அநிவாரயங்கள்

கீழே சொன்னப்படி இருக்கும் இந்த ஆத்மாவின் ஸ்வரூபத்தை அறியாமல், அவனை முடிவுள்ளவனாகவே நீ நினைப்பாயானால், அப்போதுகூட, ஹே பாண்டுகுமாரா, நீ துக்கிக்க இடமில்லை; ஏனென்றால், எப்படி கங்காஜலத்தின் ப்ரவாஹம் ஒரு நாளும் நின்று போவதில்லையோ, அப்படியே உத்பத்தி ஸ்திதிலயம் என்பவை, ஒன்றின்பின்னொன்று, தொடர்ச்சியாய் ஏற்பட்டுக் கொண்டு, ஒருக்காலும் ஓய்ந்து போவதில்லை. அந்த கங்காஜலம் உத்பத்திஸ்தானத்தில் பெருகிக் கொண்டிருப்பதும், ஸமுத்ரத்தில் விழுந்து லயமடைந்து கொண்டிருப்பதும், நடுவில் ப்ரவஹித்துக் கொண்டிருப்பதும், ஒரு நாளும் முடிவு பெறுவதில்லை. அப்படியே பூதங்கள் விஷயத்திலும், இந்த மூன்றும், ஒன்றுபோல மற்றொன்றும், எப்போதும் கடந்துக் கொண்டிருப்பவையாய், எக்காலும் முடிவு பெறுவதில்லை. அகையால் இவற்றில், எதைக் குறித்தும், நீ இங்கே அழுதுக்கொண்டிருக்கக் கார்யமில்லை. இந்த ஏற்பாடு வஸ்துக்களின் இயற்கையாக தொன்று தொட்டு ஏற்பட்டு, நடந்து வருகிறது. இதுவும் உன் மனஸுக்கு ஸரியானதென்று தோன்றாவிடில், உலகம் பிறப்பிறப்புக்கு வசப்பட்டிருப்பதை விலக்கி வைக்க முடியாதென்று தெரிந்து கொண்டு, நீ துக்கியாமலிரு.

जातस्य हि ध्रुवो मृत्युर्ध्रुवं जन्म मृतस्य च ।
तस्मादपरिहार्येऽर्थे न त्वं शोचितुमर्हसि ॥ २७॥

ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யுர் த்ருவம் ஜன்ம ம்ருதஸ்ய ச ।
தஸ்மா தபரிஹார்யேऽர்தே ந த்வம் ஶோசிது மர்ஹஸி॥ 27

இதுவுமது

பிறந்ததெல்லாம இறக்கிறது. இறந்தது எல்லாம் மறுபடியும் உண்டாய்த் தொற்றுகிறது, இந்த ஏற்பாடு, கடியாரத்தையும் உதயாஸ்தமனங்களையும் போல, ஒரு நாளும் ஓயாது, மாறிமாறி சுழன்றுகொண்டே, தடுத்துவைக்க முடியாவண்ணம் நடந்தேறி வருகிறது. மஹாப் பரளயகாலத்தில், உலகிற் காணப்பட்ட இவை அனைத்தும் ஸம்ஹரிக்கப்படுகின்றன. ஆகையால் உத்பத்திலயங்கள் விலக்கிவைக்க முடியாதவை. நீ இதை அறிந்தும், அறியாதவனைப்போல் ஏன் துக்கிக்கிறாய், பார்த்தா? இதில் கவனிக்கத் தக்கதாய், மற்றும் ஓர் விஷயம் உண்டு. அவ்விதமாய் விசாரித்துப் பார்த்தாலும், நீ துக்கிப்பதற்குக் காரணம் ஏற்படுவதில்லை.

अव्यक्तादीनि भूतानि व्यक्तमध्यानि भारत ।
अव्यक्तनिधनान्येव तत्र का परिदेवना ॥ २८ ॥

அவ்யக்தா தீனி பூதானி வ்யக்த மத்யானி பாரத ।
அவ்யக்த நிதநான்யேவ தத்ர கா பரிதேவனா ॥ 28

ரூபங்களின் அநித்யத்வம்

உண்டான அனைத்தும், உண்டானதற்கு முந்தி உருவில்லாததாயிருந்து, உண்டாகும்போது உருவடைந்து, பின்பு அழிந்து போகும்போது, நிஸ்ஸந்தேஹமாய் தன்னுடைய முந்திய அவ்யக்தஸ்திதியையே அடைகின்றது. அப்படி உண்டாதல், அழிதல், என்ற இவற்றின் நடுவில்மாத்ரம், காணப்படும் உருவம், தூக்கத்தில் தோன்றும் ஸ்வப்நம்போல், நாம் மாயைக்கு வசப்பட்டிருப்பதால், உண்மையாய் உள்ள ஆத்மஸ்வரூபத்தில் காணப்படும் தோற்றமே தவிர, உண்மையாயுள்ள தன்று. அன்றியும் இவ்வுருவம், நீரில் காற்றின் ஸம்பந்தத்தால் ஏற்படுமலை போலும், தங்கத்தில் வேலைக்காரன் புத்தி சாதுர்யத்தாலேற்பட்ட நகை போலும், வஸ்து மாறுபாடில்லாமல், ஆத்மஸ்வரூபத்தி லேற்பட்ட தோற்றமே யாகும். இப்படி உண்மையான இருப்பற்றதாய், தோற்ற மாத்ரமாகவே காணப்பட்டதான உருவம், மறைந்து போகும் விஷயத்தில், நீ துக்கிப்பதற்கு ந்யாயமில்லை.

आश्चर्यवत्पश्यति कश्चिदेनम् आश्चर्यवद्वदति तथैव चान्यः ।
आश्चर्यवच्चैनमन्यः शृणोति श्रुत्वाप्येनं वेद न चैव कश्चित् ॥२९

ஆஶ்சர்யவத்பஶ்யதிகஶ்சிதேனம், ஆஶ்சர்யவத்வததிததைவசான்யः।
ஆஶ்சர்யவச்சைனமன்யஶ்ருணோதிஶ்ருத்வாப்யேனம்வேதநசைவகஶ்சித்॥29

ஆத்மஞானத்தின் பெருமை

ஒரு நாளும் திகட்டாததான சைதந்யஸ்வரூபம் ஒன்றின் மேலேயே, கண்வைத்து, ஆநந்தப்பட்டுக்கொண்டிரு. இதைப் பார்க்கக் கிடைக்கவேண்டு மென்றாசையுண்டான மாத்ரத்திலேயே, விஷயங்கள் தாமாகவே மனஸை விட்டு விலகிப் போகின்றன. இதற்காக மனிதர்கள் ஸகல விஷயங்களையும் துறந்து, வனவாஸம் செய்கிறார்கள்; முனீச்வரர்கள் ப்ரஹ்மசர்யம முதலிய கடினமான நோன்புகளையும், உக்ரமான தபஸுகளையும் அநுஷ்டிக்கிறார்கள். ஒருவன் சலனமற்ற மனதுடன், இதன் ஸ்வரூபத்தை உற்றுப்பார்க்கும்போதே, ஸம்ஸாரம் அனைத்தையும் மறந்து போகிறான்.

ஒருவன் இதின் குணங்களையெடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, மனஸு ஒய்வடைந்து, இதின் கரைகாணாமல் இதிலேயே முழுகிப்போகிறான். ஒருவன் இதின் வர்ணனையைக்கேட்டு, மனஸின் பரபரப்பு நீங்கி, மெய்மறந்து போகிறான். ஒருவன் இதை அநுபவம் செய்யத்தலைப்பட்டு, இதுவேஆய் நின்றுவிடுகிறான். ஸகல நதிகளின் ப்ரவாஹம் முழுவதும் ஸமுத்ரத்தில் விழுந்து, அங்கே அடங்கி நிற்க இடமில்லாமல், அது திரும்பிப் போயிற்றென்பது இல்லாதது போலும், யோகீச்வரர்களின் புத்தி இதில் விழுந்து ஒன்றுபட்டு லயப்பட்டுப்போன பின்பு, இதின் ஸ்வரூபம் முழுவதும் விசாரித்தாய்விட்டதென்று, இதினின்று அது திரும்பி வந்தது மாத்ரம் இல்லை.

देही नित्यमवध्योऽयं देहे सर्वस्य भारत ।
तस्मात्सर्वाणि भूतानि न त्वं शोचितुमर्हसि ॥ ३० ॥

தேஹீ நித்ய மவத்யோ ऽயம் தேஹே ஸர்வஸ்ய பாரத ।
தஸ்மாத் ஸர்வாணி பூதானி ந த்வம் ஶோசிதுமர்ஹஸி॥30

தேஹங்கள் உண்டாவதும் மறைவதும் ஆத்மஸ்வரூபத்தின் இயற்கை

எல்லா தேஹங்களிலும் உள்ளும் புறமும் வியாபித்து, எவ்விதமாயும் வதிக்கப்பட முடியாததாய், உலகெல்லாம்

தன்னுருவமாய், அமைந்துள்ள சைதந்யம் ஒன்றையே, உன்னுடைய லக்ஷ்யத்தில் வை. காணப்பட்டவை அனைத்தும், வெளிப்பட்டுத் தோன்றுவதும், பின்பு மறைந்து போவதும், இந்த ஆத்மஸ்வரூபத்தின் இயற்கையின் கார்யம். இப்படியிருக்க, எதற்காக நீ இங்கே துக்கிக்க வேண்டியது? இவ்வியஷம் உனக்கு, ஒருவரும் எடுத்துச் சொல்லாமலேயே, தெரிந்திருக்க வேண்டுமே; நீ இதை அறியாமல் இருப்பதேனோ தெரியவில்லை. எவ்விதமாய்ப் பார்த்தாலும், நீ இப்படி துக்கித்துக் கொண்டிருப்பது நிந்த்யமென்பதற்கு ஸந்தேஹமேயில்லை.

स्वधर्ममपि चावेक्ष्य न विकम्पितुमर्हसि ।
धर्म्याद्धि युद्धाच्छ्रेयोऽन्यत्क्षत्रियस्य न विद्यते ॥ ३१ ॥

ஸ்வதர்மமபி சாவேக்ஷ்ய ந விகம்பிது மர்ஹஸி।
தர்ம்யாத்தி யுத்தாச் ச்ரேயோ ஸ்ன்யத் க்ஷத்ரியஸ்ய ந வித்யதே॥ 31

ஸ்வதர்மானுஷ்டானத்தின் ஆவச்ய கதை

இன்னும் கூட விசாரித்துத் தெளியாமல், கவலையுற்றவனாய் உனக்குத் தரணோபாயமான ஸ்வதர்மத்தை, ஏன் அநுஷ்டியாதிருக்கிறாய்? இந்தக் கொளரவர்களுக்கு என்ன கேடு நேரிடுவதாயிருந்தாலும், உனக்கே என்ன கெடுதி நேரிடுவதாயிருந்தாலும், இப்போதே இந்த உலகம் முடிந்துபோவதாயிருந்தாலும், ஸ்வதர்மம் என்று யாதொன்றுண்டோ, அதை ஒருக்காலும் கைவிடக்கூடாது. அப்படியிருக்கும் ஸ்வதர்மத்தை அனுஷ்டியாமல் விட்டு, இவர்கள் பேரில் தயை பாராட்டி நிற்பதால், நீ ஸம்ஸாரத்தைத் தாண்டிவிட முடியுமா, என்று யோஜித்துப்பார். பிறர்கள் துன்பத்தைக் கண்டு மனதிளகுவது பெரும்பாலும் நல்லதேயானாலும், போர் செய்ய ஏற்பட்டிருக்கும் இந்த ஸமயத்தில், உனக்கு இது தகாது.

பசுவின் பாலே ஆகட்டும், ஓர்வித வியாதியினால் வருந்துகிறவனுக்கு, அது அபத்யமென்று வைத்திய சாஸ்திரத்தால் ஏற்பட்டுப்போனால், அப்பாலை சாப்பிடுவது விஷம் உண்டதே ஆகும். அப்படியே ஒருவனுக்கு விதித்த தர்மத்தை, மற்றொருவன் அநுஷ்டித்தால், அவனுக்கு கேடு ஸம்பவிக்கும், என்று தெரிந்து கொண்டு, நீ உன் தர்மத்தை அநுஷ்டிப்பதில் விழிப்புள்ளவனாய் இருக்க வேண்டும். இப்படி கலங்கிப்போய், துக்கித்துகொண்டிருப்பது எவ்விதமாயும் பயன்படாது.

உன்னுடைய ஸ்வதர்மத்தை நீ லக்ஷ்யத்தில் வைத்துக்கொண்டு, அதை தவராதநுஷ்டிப்பதால், உனக்கு ஒருக்காலும் கெடுதி நேராது. ஸரியான வழியே நடந்து போகிறவனுக்கு, அபாயம் ஒருக்காலும் நேரிடாதது போலும், தீபத்தினுதவியை கொண்டு ஸஞ்சரிப்பவனுக்கு, தடுக்கிவிழுதல் நேராதது போலும், ஸ்வதர்மத்தை அநுஸரித்து நடக்குமொருவனுக்கு ஓர் கெடுதலும் நேராமல், எல்லாமனோரதங்களும் ஸித்தி பெறும். ஆகையால் க்ஷத்ரியனான உனக்கு. போர் செய்வதைக் காட்டிலும் செய்யத் தகுந்தது வேறொன்றுமில்லை, என்றறி. வஞ்சனை ஒன்றும் செய்யாமல், வெட்டுக்கு வெட்டும், குத்துக்குக் குத்துமாய்ப் போர் செய்வதொன்றே, நீ செய்யவேண்டியது. இது உனக்கு நன்றாய்த் தெரிந்தவிஷயமா யிருப்பதினால், நான் விஸ்தரித்துச் சொல்லவேண்டுவதில்லை.

यदृच्छया चोपपन्नं स्वर्गद्वारमपावृतम् ।
सुखिनः क्षत्रियाः पार्थ लभन्ते युद्धमीदृशम् ॥३२॥

யத்ருச்சயா சோபபன்னம் ஸ்வர்கத் வார மபாவ்ருதம் ।
ஸுகின: க்ஷத்ரியா: பார்த லபந்தே யுத்த மீத்ருஶம் ॥ 32

இங்கே யுத்தம் செய்வதால் உண்டாகும் லாபம்

அர்ஜுனா இப்போது ஏற்பட்டிருக்கும் யுத்தம், உன்னுடைய பாக்யமேயாகும். இது எல்லா தர்மங்களும் நிறைந்துள்ள ஓர் சுரங்கம் திறந்து வைக்கப்பட்டது போலும் இருக்கிறது. இதை யுத்தமென்று சொல்லலாமா? உன்னுடைய சௌர்யத்தின் பெருமையைக் கேள்விப்பட்டு, ஸ்வர்க்கமே யுத்தமென்னும் உருவெடுத்து எதிர் வந்து நிற்கிறது, என்று சொல்ல வேண்டும், அல்லது, உன்னுடைய உத்தம குணங்களை நன்றாயறிந்து, அதனால் உன்னிடத்தில் மிக்க ப்ரேமை பாராட்டி, கீர்த்தி யென்பவளே உனக்கு மாலையிட வந்து நிற்கிறாள், எனவும் தகும். உத்தம புண்யங்களைச் செய்திருக்கும் க்ஷத்ரியர்களுக்கே, இப்படிப்பட்ட யுத்தத்தில் போர் செய்ய லபிக்கும். வழியோடு போகிற போது, சிந்தாமணி காலில் இடறி, கைக்கபப்பட்டது போலும், கொட்டுவாய் விடுவதற்காக வாயைத் திறக்க, அகஸ்மாத்தாய் வாய் நிறைய அம்ருதம் வந்து விழுந்தது போலும், இந்த யுத்த முனக்கு கிடைத்திருக்கிறது.

अथ चेत्त्वमिमं धर्म्यं संग्रामं न करिष्यसि ।
ततः स्वधर्मं कीर्तिं च हित्वा पापमवाप्स्यसि ॥३३॥

அத சேத் த்வமிமம் தர்ம்யம் ஸங்க்ராமம் ந கரிஷ்யஸி।
தத: ஸ்வதர்மம் கீர்திம் ச ஹித்வா பாப மவாப் ஸ்யஸி ॥33

இங்கே யுத்தம் செய்யா தொழிந்தால் ஏற்படும் ஹாநி

இனியிப்படிப்பட்ட யுத்தத்தை கைக்கொள்ளாமல் விட்டு, உண்மையில்லாத ஓர் விஷயத்தை மனஸில் நினைத்துக்கொண்டு, அதற்காக துக்கித்துக் கொண்டிருப்பாயேயானால், நீயே உன்னை நாசம் செய்து கொண்டவனாய், உன் பெரியவர்கள் தேடிவைத்த தனைத்தையும் நீ போக்கிக்கொள்வாய்; உனக்கு ஏற்கனவே ஏற்ப்பட்டிருக்கும் கீர்த்தி நாசமடைந்து, உன்னை உலகத்தார் பழிப்பார்கள், பின்பு தோஷங்களனைத்தும் உன்னைத் தேடி வந்தடையும். புருஷனையிழந்த ஸ்திரீயானவள், எங்கும் அவமதிக்கப்படுவது போலுமே, ஸ்வதர்மானுஷ்டமானமிழந்த நீ யாவராலும் அவமதிக்கப்படுவாய், அன்றியும், யுத்தகளத்தில் விழுந்துகிடக்கும் பிணத்தைக் கழுகுகள் சின்னாபின்னமாய் கிழிப்பதுபோலும், மஹா பாபங்கள் உன்னைச் சூழ்ந்துகொண்டு உன்னால் ஸகிக்க முடியாதபடி உனக்கு துக்கங்களை உண்டாக்கி வைக்கும்.

अकीर्तिं चापि भूतानि कथयिष्यन्ति तेऽव्ययाम् ।
सम्भावितस्य चाकीर्तिर्मरणादतिरिच्यते ॥३४॥

அகீர்த்திஞ்சாபி பூதானி கதயிஷ்யந்தி தேऽவ்யயாம்।
ஸம்பாவிதஸ்ய சாகீர்திர் மரணாததிரிச்யதே ॥ 34

இதுவுமது

ஸ்வதர்மத்தை நீ தவறிப்போகவிட்டால், பாபங்கள் அனைத்தும் உன்னைப் பற்றிக்கொள்ளும். அத்துடன் உனக்கு ஏற்படு மபகீர்த்தி கல்பமுள்ள வரைக்கும் உன்னை விட்டகலாது அபகீர்த்தி ஏற்படாதவரைக்கும் தான், அறிவுள்ளவன் இவ்வுலகில் வாழ ஆசைப்படுவான். அன்றியும், இந்தவிடத்தை விட்டு நீ வெளிப்பட்டுப் போவதென்பது எப்படி ஸாத்யமாகும். உன் மனத்தில் கௌரவர்கள்

விஷயத்தில் பகையில்லாமல், அவர்கள் மேல் தயை பிறந்து, அவர்களைக் கொல்வதற்கு மனம் ஒப்பாதவனாய், யுத்தகளத்தினின்று நீ வெளிப்படப் பார்க்கிறது, உண்மையே யானாலும், இதை இந்தக் கௌரவர்கள் அறியார்களே. இவர்கள் உன்னைப் போக வொட்டாமற் சூழ்ந்துகொண்டு தங்கள் பாணங்களுக்குன்னை யிரையாக்கி விடப்பார்ப்பார்கள். அச்சமயத்தில் அவர்களோடு யுத்தம் செய்யாமல், அவர்கள் பேரில் க்ருபைபாராட்டி, நீ தப்பித்துப்போவது எப்படி முடியும். இப்படிப்பட்ட ப்ராண ஸங்கடத்தினின்றும், நீ யொருவேளை தப்பித்துக்கொண்டு வெளிப்பட்டாற்கூட, அப்புறம் உன் பிழைப்பு உனக்கே வெறுத்துப்போய், மரித்துப் போவதே நலமென்றுனக்குத் தோற்றிப்போகும்.

भयाद्रणादुपरतं मंस्यन्ते त्वां महारथाः ।
येषां च त्वं बहुमतो भूत्वा यास्यसि लाघवम् ॥ ३५ ॥

பயாத் ரணாது பரதம் மம்ஸ்யந்தே த்வாம் மஹாரதாः ।
யேஷாம் ச த்வம் பஹுமதோ பூத்வா யாஸ்யஸி லாகவம் ॥ 35

இதுவுமது

மற்றொன்றும் நீ கவனியா மலிருக்கிறாய். நீ யுத்தம் செய்யவேண்டுமென்று பரபரந்து, இங்கு வந்துசேர்ந்தபின், கௌரவர்கள் விஷயத்தில் தயைபிறந்து, அதன் கார்யமாக நீ திரும்பிப் போகும் பக்ஷத்தில், உன்னுட்கருத்தை, இந்த துர்ஜனர்களான உன் சத்ருக்கள் அறிந்து, உன்னைக் கொண்டாடுவார்களா?

अवाच्यवादांश्च बहून्वदिष्यन्ति तवाहिताः ।
निन्दन्तस्तव सामर्थ्यं ततो दुःखतरं नु किम् ॥ ३६ ॥

அவாச்ய வாதாம்ஶ்ச பஹூன்வதிஷ்யந்தி தவாஹிதாः ।
நிந்தந்தஸ்தவ ஸாமர்த்யம் ததோ துக்கதரம் நு கிம் ॥ 36

இதுவுமது

அர்ஜுனன் நமக்குப் பயந்து ஓடியே போய்விட்டான் என்று, இவர்கள் உன்னைச் சொல்லப் போகிறார்கள். உன் விஷயத்தில், இப்படி ஓர் வார்த்தை உலகில் நிலைபெறுவது

நன்றா? உலகத்தார் அநேக விதமாய்க் கஷ்டப்பட்டு, உயிரைக்கொடுத்துக் கூட, உலகில் தங்களுயை கீர்த்தி விருத்தியடைய வேண்டுமென்று முயல்கிறார்கள். அப்படி யாவரும் ஆசைப்படுவதாகிய உத்தமமான கீர்த்தி, பூர்ணமாயும், நிகரற்றதாயும், ஆகாசம் போல் எங்கும் வ்யாபித்து கரைகாணக் கூடாததாயும், ஓர் ப்ரயாஸமுமின்றி உனக்கேற்பட்டு, நீ குணாதிக்யத்தால் முவ்வுலகிலும் சிறந்து விளங்குகிறாய்.

திகந்தங்களிளிலுள்ள அரசர்கள் உன்னுடைய ஸ்துதி பாடர்களாயமைந்து, உன்னுடைய பெருமையை வர்ணிக்கிறார்கள். இதைக் கண்டு யமன் கூடத் திடுக்கிட்டுப் போகிறான். இப்படி வ்யாபகமாய், கங்காஜலம்போல் பரிசுத்தமாய், எவர்களும் கேட்டு ஆச்சர்யப்படத்தக்கதாய், இருக்கும் உன்னுடைய பௌருஷத்தின் பெருமையைக் கேட்டு, இக்கௌரவ வீரர்களெல்லாரும் இனித்தாங்கள் பிழைத்துப்போவோம் என்பதில், நிறாசை பாராட்டி நிற்கிறார்கள். ஸிம்ஹத்தின் கர்ஜனையைக் கேட்ட மதயானைக்கள்போலும், இந்திரன் வஜ்ராயுதத்தைக் கண்ட மலைகள் போலும், கருடனைக் கண்ட பாம்புகள்போலும், உன்னைக் கண்டு இக்கௌரவர்கள் நடுங்கி, ஏக்கமுற்றிருக்கிறார்கள்.

நீ இப்போது போர்செய்யாது பின்வாங்கி ஓடினால், இத்தனை பெருமையையுமிழந்து, இக்கௌரவர்களாலேயே இகழப்படுவாய். அன்றியும் இவர்களுன்னைத் தப்பித்துப் போக விடாமல், தகைந்து கொண்டு, அவமானப்படுத்தி, உன்காது கேட்கவே உன்னைக் கண்டபடி யெல்லாம் பழிப்பார்கள். பின்பு உன்னுடைய ஹ்ருதயம் வெடித்துப் போகும்படி ஆய்விடுமென்று தெரிந்துக்கொள். இப்போது கொழுப்படைந்து, நான் போர்செய்யேன் என்று சொல்கிறாயே, இது ந்யாயமா? நீ இந்த யுத்தத்தில் ஜயித்தால், பூமி முழுவதையும் ஆளும் ஸுகம் பெறுவாய்.

हतो वा प्राप्स्यसि स्वर्गं जित्वा वा भोक्ष्यसे महीम् ।
तस्मादुत्तिष्ठ कौन्तेय युद्धाय कृतनिश्चयः ॥३७॥

ஹதோ வா ப்ராப்ஸ்யஸி ஸ்வர்கம் ஜித்வா வா போக்ஷ்யஸே மஹீம்।
தஸ்மாதுத்திஷ்ட கௌந்தேய யுத்தாய க்ருத நிஶ்சயः ॥ 37

யுத்தம் செய்ய வேண்டுவதின் ஆவச்ய கதை

அப்படி நேராமல், இந்த யுத்தத்தில் உன் ப்ராணன் போகுமேயானால், நீ யோர் தடையுமின்றி ஸவர்க்கம் போய்ச்சேர்வாய். ஆகையால் யாதொரு ஆலோசனையும் செய்யாமல், வில்லையும் பாணத்தையும் எடுத்துக்கொண்டு, விரைந்து போர் செய், அர்ஜுனா.

सुखदुःखे समे कृत्वा लाभालाभौ जयाजयौ ।
ततो युद्धाय युज्यस्व नैवं पापमवाप्स्यसि ॥ ३८॥

ஸுக துः கே ஸமே க்ருத்வா லாபாலாபௌ ஜயா ஜயௌ।
ததோ யுத்தாய யுஜ்யஸ்வ நைவம் பாபமவாப்ஸ்யஸி ॥38

ஸ்வதர்மத்தை அநுஷ்டிக்க வேண்டிய முறை

ஸ்வதர்மத்தை அநுஷ்டிப்பதால், ஏற்கனவே உன்னிடத்திலிருக்கும் பாபம் தொலைந்துபோவதாயிருக்க, அதினால் புதிதாய், பாபம் வந்தடையும் என்று நீ எண்ணுவது மதிமயக்கமே. தெப்பத்தில் ஏறினதால் முழுகிப்போவ துண்டா? ராஜமார்க்கத்தைப் பற்றி நடக்கையில் தடுக்கி விழுவதுண்டா? ஆயினும் ஒருவேளை எப்படி நடந்து போகவேண்டுமென்பது தெரியாமல், நடந்து போனால், தடுக்கிவிழவும் நேரும். அம்ருதத்தை சாப்பிட்டு இறந்துபோவதென்றால், அத்துடன் விஷத்தைக் கலந்து சாப்பிட்டிருக்க வேண்டும். அப்படியே ஸ்வதர்மாநுஷ்டானத்தால், பாபம் உண்டாக வேண்டுமானால், அதின் பலத்தி லாசைவைத்ததை அநுஷ்டித் திருக்க வேண்டும். ஆகையால் பலாபிஸந்தி யில்லாமல் யுத்தம் செய்வது, க்ஷத்ரியனுடைய ஸ்வதர்மம என்று நினைத்து, நீ போர் செய்வாயேயானால், உனக்கு எவ்விதமாயும் பாபம் நேரிடாது. ஸுக மடைந்தால் மகிழக்கூடாது. துக்கம் நேர்ந்தால் அழக்கூடாது, மேலும் லாபநஷ்டங்களை மனஸிலேயே ஏற்றிக் கொள்ளாதொழிய வேண்டும். இதில் ஜயிப்போமோ, அல்லது ப்ராணனையே இழந்து விடுவோமோ, என்கிற ஆலோசனையைச் செய்யாமல், தனக்குசிதமான ஸ்வதர்மத்தை அநுஷ்டித்து நிற்கும்போது, எது நமக்கு ஸம்பவிக்குமோ, அதை மனக்கலக்கமின்றி ஸஹித்திருக்க வேண்டும். மனஸை இந்நிலையில் நிறுத்திக் கொள்வாயானால், ஒருவிதமாயும் பாபம் நேரிடாது. இனி மனதில் ஓர் சங்கையுமின்றி, நீ போர் செய்.

एषा तेऽभिहिता साङ्ख्ये बुद्धिर्योगे त्विमां शृणु ।
बुद्ध्या युक्तो यया पार्थ कर्मबन्धं प्रहास्यसि ॥३९॥

ஏஷா தேঽபிஹிதா ஸாங்க்யே புத்திர் யோகே த்விமாம் ஶ்ருணு।
புத்த்யா யுக்தோ யயா பார்த கர்மபந்தம் ப்ரஹாஸ்யஸி ॥39

நிஷ்காமபுத்தியோகம்

இது வரைக்கும் ஸாங்க்யர்களுடைய கோட்பாட்டை சுருக்கமாகச் சொன்னேன். இனி புத்தியோகமென்பதை நீ தெளிவாய் அறியும்படிச் சொல்வேன் கவனித்துக் கேட்பாயாக. இந்த புத்தி யோகம், ஒருவன் மனதில் நிலைபெறுமேயானால், வஜ்ரகவசம் தரித்திருக்கும் ஒருவன்மேல் எத்தனை சஸ்த்ரங்கள் தாக்கினாலும், ஓர் காயமும் அவனுக்குப் படாமல், அவன் யுத்தத்தில் ஜயம் பெற்று நிற்பது போலும், இப்புத்தியோகத்தில் நிலைபெற்றவன், எத்தனை கர்மங்களைச் செய்தாலும், அக்கர்மங்களால் எவ்விதமாயும் பாதிக்கப்படான்.

नेहाभिक्रमनाशोऽस्ति प्रत्यवायो न विद्यते ।
स्वल्पमप्यस्य धर्मस्य त्रायते महतो भयात् ॥४०॥

நேஹாபிக்ரமநாஶோঽஸ்தி ப்ரத்யவாயோ ந வித்யதே।
ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத் ॥ 40

இப்புத்தியோகத்தோடு கர்மங்களை அநுஷ்டிப்பதின் லாபம்

அவனுக்கு இம்மையும் கெட்டுப்போகாமல், மோக்ஷமும் ஸித்தமாய் அவன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்குமாகையால், அவன் கர்மங்களின் ஆரம்பமும் முடிவும் தோஷமற்றவையாகின்றன. இப்படி கர்மத்தைத் துணையாய்ப் பற்றிக்கொண்டே நடந்து, அதின் பலத்தின்மேல் கண் வையாதொழிவது பிசாசின் பாதை விலகிப்போவதுபோலும். ஜந்மமரணம் என்னும் உபாதி, அவனுக்கு ஓர் பாதையையும் செய்யாது. இப்புத்தியோகம் பாபபுண்யங்கள் நுழையாதபடி, அதிஸூக்ஷ்மமாயும் அசைக்க முடியாததாயும் இருப்பதால், குணத்ரயங்கள் பற்றிக்கொள்வதற்குச் கொஞ்சமேனு மிடம்கொடாது. ஒருவனுடைய புண்யவசத்தால் அவனுடைய உள்ளத்தில் கொஞ்சமாயாவது இந்த புத்திபிரகாசிக்கத் தொடங்கினால், ஸம்ஸாரபயம் அனைத்தும் அவனுக்கு கில்லாமற்போகும்.

व्यवसायात्मिका बुद्धिरेकेह कुरुनन्दन ।
बहुशाखा ह्यनन्ताश्च बुद्धयोऽव्यवसायिनाम् ॥ ४१॥

வ்யவஸாயாத்மிகா புத்திரேகேஹ குருநந்தன ।
பஹுஶாகா ஹ்யநந்தாஶ்சபுத்தயோ வ்யவஸாயிநாம்॥41

இப்புத்தியோகத்தின் பெருமை

ஓர் தீபத்தின் ஜ்யோதி, உருவத்தாற் சிறிதே ஆயினும், அதினால் ஏற்படும் வெளிச்சம் மிகுந்த விஸ்தாரமுள்ளதாயிருக்குமல்லவா. அப்படியே இந்த உத்தமமான புத்தியைச் சிறியதென்றெண்ணத்தகாது. தத்வவிசாரம் நன்றாய்ச் செய்தவர்கள், இது கிடைக்க வேண்டுமென்று மிக்க ஆசைப்படுவார்கள். ஆனால் இந்த உத்தமமான புத்தியோகம் சராசரத்தில் கிடைப்பது மிகவுமரிது. ஸ்பர்சவேதி மற்ற கற்களைப் போலேராளமாய்ச் சிதறிக் கிடக்குமா? மிக்க பாக்யம் படைத்திருந்தால்லலது, அம்ருதத்தினோர் திவலை கிடைக்குமா? கங்கையின் ப்ரவாஹத்தோடு மிதந்து கொண்டு போனால், அது தவறாமல் ஸமுத்ரத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்த்து வைப்பது போலும், ஒருக்காலும் தவறாது முடிவில் பரப்ரஹ்மத்தில் சேர்த்து வைக்கும், இந்த உத்தமமான புத்தியோகம் அதிதுர்லபமானது. இப்படி ஈச்வர ஸ்வரூபத்தைத்தவிர வேறொன்றுக்கும் கொண்டுபோய் விடாததான புத்தி விசேஷம், இப்படி ஒரேவகைப்பட்டதா யிருக்கும், அர்ஜுனா. பலவகைப்பட்டவையான மற்ற புத்திவிசேஷங்கள் துர்புத்திகளோயாகும். இவற்றைப் பற்றிக் கொண்டு நடப்பதில், அவிவேகிகளுக்கு உத்ஸாஹம் மிகுந்திருக்கும்; ஆகையால் அவர்கள், ஸ்வர்க்கமோ, ஸம்ஸாரமோ, நரகமோ, இவற்றிலொன்றை அடைவார்களே தவிர, ஆத்மாநந்தம் என்பது அவர்களுக்குக் கொருநாளும் பார்க்கக்கூட கிடைக்காது.

यामिमां पुष्पितां वाचं प्रवदन्त्यविपश्चितः ।
वेदवादरताः पार्थ नान्यदस्तीति वादिनः ॥ ४२॥

யாமிமாம் புஷ்பிதாம் வாசம் ப்ரவதந்த்ய விபஶ்சித: ।
வேத வாதரதா: பார்த நான்யதஸ்தீதி வாதின: ॥ 42

கர்மபலங்களில் ஆசை வைத்தவர்களது மதம்

கர்மபலத்தில் ஆசைவைத்தவர்கள், வேதங்களையே ப்ரமாணமாக எடுத்துக்காட்டி, கேவலம் கர்மத்தையே ஜீவர்கள் அநுஷ்டிக்க வேண்டியதென்று, ஸித்தாந்தம் செய்வார்கள். ஸம்ஸாரததில் பிறந்தவன், யோகம் முதலிய கர்மங்களைச் செய்து, ம்னோஹரமான ஸ்வர்க்க ஸுகத்தை அநுபவிக்க வேண்டுமென்றும், இவ்வுலகில் பிறந்தவர்களுக்கு ஸுகமென்று சொல்லத்தக்கது, இதைத்தவிர வேறொன்றுமில்லை என்றும், இப்படியே இந்த் துர்புத்திகள் வாதிப்பார்கள், அர்ஜுனா.

कामात्मानः स्वर्गपरा जन्मकर्मफलप्रदाम् ।
क्रियाविशेषबहुलां भोगैश्वर्यगतिं प्रति ॥ ४३॥

காமாத்மான: ஸ்வர்க பரா ஜன்ம கர்ம பல ப்ரதாம் ।
க்ரியா விஶேஷ: பஹுளாம் போகைஶ்வர்ய கதிம் ப்ரதி ॥ 43

இவர்களுக்கு கர்மாநுஷ்டானத்தில் ஏற்படும் ச்ரத்தை

இவர்கள் காமனைக்கு வசப்பட்டுப்போய்க் கேவலம் சிற்றின்பத்தையே இச்சித்தவர்களாய், கர்மங்களை அநுஷ்டித்து நிற்பார்கள். அநேக வகைப்பட்ட க்ரியைகள் நிறைந்துள்ள யஜ்ஞாதிகளை, அவற்றின் விதிகளை நன்றாய்த் தெரிந்துகொண்டு, அவ்விதிகளிலொன்றும் தவறிப்போகாமல், அநுஷ்டித்து நிற்பார்கள்.

भोगैश्वर्यप्रसक्तानां तयापहृतचेतसाम् ।
व्यवसायात्मिका बुद्धिः समाधौ न विधीयते ॥ ४४

போகைஶ்வர்ய ப்ரஸக்தானாம் தயாऽபஹ்ருத சேதஸாம்
வ்யவஸாயாத்மிகா புத்தி: ஸமாதௌ ந விதீயதே ॥ 44

இவர்களுடைய புத்தியின் கெடுதல்

யஜ்ஞபலம் முழுதும் எவனிடைந்து புசிக்கவுரியவனோ, அந்த ஸர்வேச்வரனுக்கு அதை அர்ப்பணம செய்யாது அந்த யஜ்ஞ புண்யத்தைக் கொண்டு தாங்கள் ஸ்வர்க்க ஸுகத்தைப் புசிக்க விரும்பி, ஸர்வேச்வர ப்ராப்தியை இழக்கிறார்கள். இது தான் அவர்களுடைய பெருத்த பிழை. கர்பூரத்தை நிரம்பச்

சேர்த்துவைத்து, அதை யோர் ஸத்விஷயத்திலும் விநியோகம் செய்யாமல், அதைத் தீவைத்துக் கொளுத்தினாற் போலும், உத்தமமான அன்னத்தை சமைத்து, அதில் காளகூட விஷத்தைக் கலந்து வைத்தாற்போலும், அத்ருஷ்டவசத்தால் அம்ருதகும்பம் கிடைத்தப்பின், அதைக் காலால் தட்டி உருட்டினாற்போலும், மிக்கப்ரயாஸையால் ஓர் தர்மத்தை முடிவுபெறச்செய்து, அதின் பலத்தில் ஆசைவைப்பதினால், அதை நாசம் செய்து விடுகிறார்கள். மிக்க ஆயாஸப்பட்டு, ஓர் புண்யத்தை ஸம்பாதித்தபின், அதை ஈச்வரார்ப்பணம் செய்யாமல், ஸம்ஸார ஸுகத்துக்கு ஏன் ஆசைப்படவேண்டும்? ஆனால், அப்படியர்ப்பித்து, மோக்ஷத்தை அடைய பாக்யமில்லாத அறிவு கேடர்கள் என் செய்வார்கள்? ஓர் பெண்பிள்ளை உத்தமமான அன்னத்தைச் சமைத்துவைத்து, அதைத் தான் புசித்து ஸுகமடையாமல், விலைக்கு விற்று, பசித்திருந்தது போலும், அவிவேகிகளான இவர்கள் சிற்றின்பாநுபவத்துக் காசைப்பட்டு, உத்ததமான புண்யத்தை நஷ்டம் செய்து கொள்கிறார்கள். இப்படி வேதத்திற் சொல்லிய யாகாதி கர்மங்களை மிக்கக் கொண்டாடுகிறவர்களது மனஸில், பெரும்பாலும் துர்புத்தியே நிலபெற்றிருக்கிறது.

त्रैगुण्यविषया वेदा निस्त्रैगुण्यो भवार्जुन ।
निर्द्वन्द्वो नित्यसत्त्वस्थो निर्योगक्षेम आत्मवान् ॥ ४५ ॥

த்ரைகுண்ய விஷயா வேதா நிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுந।
நிர்த்வந்த்வோ நித்யஸத்த்வஸ்தோ நிர்யோக க்ஷேம ஆத்மவான்॥ 45

வேத ப்ரதிபாத்ய த்ரைகுண்யாத்மக பலத்தை உபக்ஷிப்பது அவச்யம்

வேதங்கள் முக்குணங்கள் ஸம்பந்தப்பட்ட விஷயங்களையே சொல்கின்றனவென்று ஸந்தேஹமறத் தெரிந்துகொள். அது எப்படி யெனில், உபநிஷத்துக்கள் ஸாத்விககுண ஸம்பந்தப்பட்டவையாயும், கேவலம ஸ்வர்க்கபோகத்துக்கு ஸாதனமான கர்மாதிகளை நிரூபிக்கும் மற்றபாகங்கள் ரஜதமோகுணங்கள் ஸம்பந்தப்பட்டவையாயும் இருக்கின்றன. ஆகையா லிவை யனைத்தும் துக்கத்துக்கே காரணமானவை. இவற்றின்மேல் உன் மனது செல்லாதிருக்கவேண்டும். நீ குணத்ரயங்களுக்கு முகம் காடடாதவனாய், நான், எனது, என்னும் பாவங்களை ஒருக்காலும் பாராட்டாமல், எப்போதும் ஆத்மஸுகம் ஒன்றையே லக்ஷ்யத்தில் வைத்திருக்க வேண்டும்.

यावानर्थ उदपाने सर्वतः सम्प्लुतोदके ।
तावान्सर्वेषु वेदेषु ब्राह्मणस्य विजानतः ॥ ४६ ॥

யாவாநர்த உதபாநே ஸர்வத: ஸம்ப்லு தோதகே ।
தாவான் ஸர்வேஷு வேதேஷுப்ராம்ஹணஸ்யவிஜாநத:॥ 46

வேதப்ரதிபாத்யமான பலவிஷயங்களுக்குள்ளும் ஒருவன் தனக்கு வேண்டியதையே கைப்பற்ற வேண்டும்

வேதத்தில் அநேக விஷயங்கள் பலவிதப்படுத்தி சொல்லப்படுகின்றன. ஆயினும் அவனவனுக்கு எந்தெந்த விஷயம் உபயோகப்படுமோ, அதைத்தான் அவன் க்ரஹித்துக்கொள்ளவேண்டும். ஸூர்யன் உதயமானவுடன் எல்லாவூருக்கும போகும் வழிகள் அனைத்தும் விசதமாய்த் தோற்றினாலும், ஒருவன் அத்தனை வழிகளையும் நடந்து தீர்கிறானா. பூமியெல்லாம் ஜலம் தங்கி நின்றாலும், ஒருவன் தன் கார்யத்துக்கு வேண்டிய ஜலத்தை மாத்ரமே க்ரஹித்துக் கொள்வது போலும், ஞாநியானவன், வேதார்த்தங் கனைத்தையும் விசாரித்துப்பார்த்து, தான் கோரியதான அழிவற்ற ஆத்ம ஸ்வரூபத்தையே கைகொள்வான்.

कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन ।
मा कर्मफलहेतुर्भूर्मा ते सङ्गोऽस्त्वकर्मणि ॥ ४७ ॥

கர்மண்யேவாதிகாரஸ்தே மா பலேஷு கதாசன ।
மா கர்மபல் ஹேதுர்பூர்மா தே ஸங்கோ ஸ்த்வ கர்மணி ॥ 47

உனக்கு விஹிதமான ஸ்வதர்மமே நீ செய்ய வேண்டியது

மேலும் சொல்வேன் கேள், இவ்விதமாய்ப் பார்க்குங்கால், நீ அநுஷ்டிப்பதற்கு உசிதமானது, உனக்கு வகுத்துவைக்கப்பட்ட ஸ்வதர்மமொன்றே, ஒவ்வொருவனும் அவனுக்கு விஹிதமான ஸ்வதர்மத்தை அநுஷ்டியாது விடக்கூடாதென்ற முடிவுக்கு வந்துசேர்ந்தேன். ஆனாலோ அந்தகர்மத்தின் பலத்தில் அவன் ஆசைவைக்கக் கூடாது. அன்றியும் செய்யத்தகாதவையான நிஷித்தகாம்ய கர்மங்களின் ஸம்பந்தத்தை அவன் முற்றிலும் ஒழித்துக்கொள்ள வேண்டியது. ஆகையால் நீ, உனக்கு உசிதமான கர்மத்தையே, பலாபிஸந்தியின்றி செய்து தீரவேண்டும்.

योगस्थः कुरु कर्माणि सङ्गं त्यक्त्वा धनञ्जय ।
सिद्ध्यसिद्ध्योः समो भूत्वा समत्वं योग उच्यते॥ ४८॥

யோகஸ்தः குருகர்மாணி ஸங்கம் த்யக்த்வா தனஞ்ஜய ।
ஸித்தய ஸித்தயோ: ஸமோ பூத்வா ஸமத்வம் யோக உச்யதே॥ 48

இந்த யோகத்தின் ஸ்வரூபம்

நீ கர்மா நுஷ்டானத்தைக் கைப்பற்றினவனாயும், பலத்தின் ஆசையை மனதில் வைக்காதவனாயும், செய்யும் கர்மத்தில் முழுமனதையும் செலுத்தி, ஸ்வதர்மங்களைச் செய்துகொண்டிரு. ஆனால் தைவாநுகூல்யத்தால் ஆரம்பித்த கர்மம் முடிவுபெற்றால். அதினால் மகிழ்ச்சி அடைய வேண்டாம், அப்படியாகாமல், யாதேனுமோர் காரணத்தால், அது முடிவுபெறாமல் நின்றுபோய்விட்டால், அதினால் ஆயாஸ மடைந்து மனக்கலக்க முறுதலும் வேண்டாம். ஆரம்பித்தது முடிவுபெற்றதானால், நல்லதே ஆயிற்று, அல்லது நடுவில் அபூர்ணமாய் நின்று விட்டதானால், அதுவும் நன்றே ஆயிற்றென்று எண்ணியிருக்க வேண்டும். எவ்வளவு கர்மம் உன்னிடத்தினின்று வெளிப்பட்டதோ, அவ்வளவையும ஸர்வேச்வரனுக்கு ஸமர்ப்பித்துவிடு. இப்படிச் செய்து வருவாயானால், ஸம்பூர்ணமானது மஸம்பூர்ணமாய் நின்று போனதும், தாமாகவே ஸம்பூர்ணத்தையைப் பெறும். நிறைவேறியதும் நிறைவேறாததுமான இவ்விருவகை கர்மங்கள் விஷயத்திலும், மனஸின் ஸாம்யஸ்திதியே ஸரியான யோகநிலையென்று பெரியோர்கள் கொண்டாடுவார்கள்.

दूरेण ह्यवरं कर्म बुद्धियोगाद्धनञ्जय ।
बुद्धौ शरणमन्विच्छ कृपणाः फलहेतवः ॥ ४९ ॥
बुद्धियुक्तो जहातीह उभे सुकृतदुष्कृते ।
तस्माद्योगाय युज्यस्व योगः कर्मसु कौशलम् ॥ ५० ॥

தூரேண ஹ்யவரம் கர்ம புத்தியோகாத் தனஞ்ஜய ।
புத்தௌ ஶரணமன்விச்ச க்ருபணா: பலஹேதவ: ॥ 49

புத்தியுக்தோ ஜஹாதீஹ உபே ஸுக்ருத துஷ்க்ருதே ।
தஸ்மாத் யோகாய யுஜ்யஸ்வ யோக: கர்மஸு கௌஶலம் ॥ 50

இந்த யோகத்தில் புத்தியின் ஸமநிலையே ஸாரமானது

மனஸும் புத்தியும் ஒன்றுபட்டு நிற்கும் சித்தத்தின் இந்த ஸமநிலையொன்றே, இந்த யோகத்தின் ஸாரமான அம்சம் என்றறி. இப்படி ஸித்யஸித்திகளில் ஸமதை பாராட்டுதல் என்ற புத்தியோகத்தின் பெருமையை விசாரிக்குங்கால், கர்மத்தைச் சோர்வில்லாமற் செய்தல் என்ற இந்தயோகத்தின் கேவல கர்மாம்சம், எவ்வளவோ தாழ்ந்ததே யாயினும், கர்மத்தை அநுஷ்டித்தாற்றான் இந்த புத்தியோகம் மனதிலேற்படும்; எனென்றால், கர்மாசரணத்தின் உத்தர தசையிற்றான். இந்தயோகத்தின் ஸாராம்சமான ஸமபுத்தி ஏற்படவேண்டியதாயிருக்கிறது. இந்த புத்தியோகத்தில், பெயராத படி நிலைபெற்று, நீ மனஸில் பலத்தில் ஆசை பாராட்டாதொழிய வேண்டும். இவ்வகைப்பட்ட யோகத்தில், நிலை பெற்றவர்களே புண்யபாபங்களின்று விடுபட்டவர்களாய், ஸம்ஸாரத்தின் அக்கரை சேர்கிறார்கள்.

कर्मजं बुद्धियुक्ता हि फलं त्यक्त्वा मनीषिणः ।
जन्मबन्धविनिर्मुक्ताः पदं गच्छन्त्यनामयम् ॥ ५१ ॥

கர்மஜம் புத்தியுக்தா ஹி பலம் த்யக்த்வா மனீஷிணः ।
ஜன்மபந்த விநிர்முக்தாः பதம் கச்சந்த்யநாமயம் ॥ 51

இப்புத்தியோகத்தாலடையும் லாபம்

இந்த புத்தியோகத்தில் நிலை கொண்டார்கள், கர்மத்தை விடாதநுஷ்டித்து வந்து, பலத்தில் ஆசை வையாதொழிவதால், பிறப்பிறப் பற்று, ஸதா ஆநந்தபரிதர்களாய், அழிவற்ற ஓர் பதவியை அடைகிறார்கள்.

यदा ते मोहकलिलं बुद्धिर्व्यतितरिष्यति ।
तदा गन्तासि निर्वेदं श्रोतव्यस्य श्रुतस्य च ॥ ५२ ॥

யதா தே மோஹகலிலம் புத்திர் வ்யதி தரிஷ்யதி ।
ததா கந்தாஸி நிர்வேதம் ஶ்ரோதவ்யஸ்ய ஶ்ருதஸ்ய ச ॥ 52

மோஹ மொழிந்து வைராக்யம் நிலை கொண்டாற்றான், இப்புத்தியோக மேற்படும்

நீ இந்த மோஹத்தை யொழித்துக் கொண்டு, வைராக்கியத்தைப் பாராட்டி நிற்பாயேயானால் உனக்கும்

இப்புத்தியோகம் ஏற்பட்டு, நிர்மலமும் அதிகம்பீரமுமான ஆத்மஞானம் உண்டாய், உன் மனஸு தானாகவே ஆசையற்றதாகும். அப்படி ஆனபின், தெரியாதிருக்கு மோர் விஷயத்தை இனித் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதும், முன்தெரிந்துகொண்டதை திரும்பவும் சிந்தனை செய்யவேண்டுமென்பதும், தாமாகவே ஒழிந்துபோகும்.

श्रुतिविप्रतिपन्ना ते यदा स्थास्यति निश्चला ।
समाधावचला बुद्धिस्तदा योगमवाप्स्यसि ॥५३॥

ஸ்ருதி விப்ரதி பந்நா தே யதா ஸ்தாஸ்யதி நிஶ்சலா ।
ஸமாதா வசலா புத்திஸ்ததா யோக மவாப்ஸ்யஸி ॥ 53

அநந்தரம் ஆத்மயோக ஸித்தி

பின்பு இந்திரியங்களோடு கூடி அலைந்து திரியுமுன் மனது ஆத்மஸ்வரூபானுபவத்தில் நிலைபெற்று, புத்தி சலனமற்றுப்போய், கேவல ஸமாதி ஸுகம் ஏற்பட்டு, நீ ஆத்ம யோக நிலையின் முடிவை அடைந்தவனாவாய்.

अर्जुन उवाच ।
स्थितप्रज्ञस्य का भाषा समाधिस्थस्य केशव ।
स्थितधीः किं प्रभाषेत किमासीत व्रजेत किम् ॥५४॥

அர்ஜுன உவாச - அர்ஜுனன் கேட்கிறான்

ஸ்திதப்ரக்ஞஸ்ய கா பாஷா ஸமாதிஸ்தஸ்ய கேஶவ ।
ஸ்திததீ: கிம் ப்ரபாஷேத கிமாஸீத வ்ரஜேத கிம் ॥ 54

ஸ்திதப்ரஞ்ஞன் விஷயமாய் அர்ஜுனனுடைய ப்ரச்னம்

அப்போது அர்ஜுனன், ஹே தேவா, இவ்விஷயத்தில் கேட்டுத் தெரிந்துக்கொள்ள வேண்டுமென்று எனக்குத் தோற்றும் அனைத்தையும் நான் தெரிவிக்கப் போகிறேன். க்ருபாநிதியாகிய நீர், அத்தனைக்கும் உத்தரம் தந்தருள வேண்டும் என்றும் சொன்னான். அதைக் கேட்டு அச்யுதன் "ஹே கிரீடி உனக்கு யுக்தமாகத் தோற்றுமனைத்தையும் ஸந்தோஷமாகக் கேட்டுக்கொள்", என்றார். பின்பு அர்ஜுனன், ஸ்திதப்ரஞனை எவ்விதம் வர்ணிக்க வேண்டும்? ஸ்திரபுத்தி

யென்று சொல்லப்படுபவனை எந்தக் குறிகளைக் கொண்டறிந்து கொள்ள வேண்டும்? அகண்டமாய் ஸமாதி ஸுகானுபம் செய்து கொண்டிருக்கும் அவன் நிலை எப்படிப்பட்டது? அவனுடைய நடத்தை யெவ்வகைப்பட்டிருக்கும்? இவை யனைத்தையும் எனக்குத் தெரிவிக்கவேண்டும். ஹே லக்ஷ்மீபதே", என்று வினவினான். அப்போது பரப்ரஹ்மத்தின் அவதாரமும், யசஸ், ஸ்ரீ, ஔதார்யம், ஞானம், வைராக்கியம், ஐச்வர்யம், என்னும் ஆறு குணங்களுக்கும் வாஸஸ்தானமுமான ஸ்ரீமந்நாராயணன், பின் வருமாறு சொல்லலானார்.

श्रीभगवानुवाच ।

प्रजहाति यदा कामान्सर्वान्पार्थ मनोगतान् ।

आत्मन्येवात्मना तुष्टः स्थितप्रज्ञस्तदोच्यते ॥ ५५ ॥

ஸ்ரீ பகவானுவாச

ப்ரஜஹாதி யதா காமான் ஸர்வான் பார்த மனோகதான் ।
ஆத்மன்யேவாத்மநா துஷ்டः ஸ்திதப்ரக்ஞஸ்ததோச்யதே॥ 55

பகவான் ஸ்திதப்ரஞனுடைய லக்ஷணங்களை எடுத்துரைத்தல்

அர்ஜுனா கவனித்துக்கேள், எந்த காமமானது, மனஸில் அடக்கமுடியாதபடி யேற்பட்டு, ஆத்மநிஷ்டமான ஆநந்தத்தை நாம் அநுபவியாதபடி தடை செய்துவைத்து, ஸதா பூர்ணத்திருப்தி அடைந்திருக்குமவர்களைக்கூட விஷயத்தில் விழுந்து புரளும்படியாய்ச் செய்யுமோ, அந்தக் காமம் என்பது முற்றிலும் அற்றுப் போனவனாய், எவன் ஆத்மஸ்வரூபாநந்தானுபவத்தில் நிலை பெற்ற சித்தமுள்ளவனாயிருப்பானோ அவன்தான் ஸ்திதப்ரஞ்ஞனென்றறி.

दुःखेष्वनुद्विग्नमनाः सुखेषु विगतस्पृहः ।

वीतरागभयक्रोधः स्थितधीर्मुनिरुच्यते ॥ ५६ ॥

துக்கேஷ்வனுத்விக்நமநாःஸுகேஷுவிகதஸ்ப்ருஹः ।
வீதராக பயக்ரோதःஸ்திததீர் முனிருச்யதே ॥ 56

இதுவுமது

விதம் விதமான துக்கங்கள் நேரிட்டபோதும், கஷ்டப்படாதவனாயும், ஸுகத்துக் காசைப்படாதவனாயும், காமக்ரோதங்கள் முற்றிலும் அற்றவனாயும், பயம் இன்னதென்றொருக்காலு மறியாதவனாயும், தனக்குள் தானே அளவற்றபடி பரிபூர்ணனாயும், எவனிருப்பானோ, அவனே ஸம்ஸாரமற்றுப்போய், பேதமற்றிருக்கும் ஸ்திரபுத்தி யாவான்.

यः सर्वत्रानभिस्नेहस्तत्तत्प्राप्य शुभाशुभम् ।
नाभिनन्दति न द्वेष्टि तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ५७ ॥

யः ஸர்வத்ரா நபிஸ்நேஹஸ் தத்தத் ப்ராப்ய ஶுபா ஶுபம் ।
நாபி நந்ததி ந த்வேஷ்டி தஸ்ய ப்ரக்ஞா ப்ரதிஷ்டிதா ॥ 57

இதுவுமது

சந்திரன் தன் ப்ரகாசத்தைக் கொடுக்கிற விஷயத்தில், இவன் அதமன், இவன் உத்தமன், என்று வ்யத்யாஸ பாராட்டத் தெரியாதவனாயிருப்பது போலும், எல்லார் விஷயத்திலும் எப்போதும் ஸமத்வம் பாராட்டினவனாயும், எல்லாப்ராணிகள் விஷயத்திலும் தயையோடு கூடினவனாயும், எக்காலும் சித்தத்தின் மாறுபாடுண்டாகாதவனாயும், நல்லதொன்று நேரிட்டதென்று ஸந்தோஷித்தலும் தீதொன்று நேரிட்டதென்று வ்யாகூலப்படுதலும் இல்லாதவனாயும், ஆத்மஞானம் நிறைந்தவனாயும், எவன் இருப்பானோ அவனை ப்ரஞ்ஞாயுக்தனென்று தெரிந்துகொள், அர்ஜுனா.

यदा संहरते चायं कूर्मोऽङ्गानीव सर्वशः ।
इन्द्रियाणीन्द्रियार्थेभ्यस्तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ५८

யதா ஸம்ஹரதே சாயம் கூர்மோகுங்காநீவ ஸர்வஶ: ।
இந்த்ரியாணீந்த்ரியார்தேப்யஸ் தஸ்ய ப்ரக்ஞா ப்ரதிஷ்டிதா ॥ 58

ஸ்திதப்ரஞ்ஞனுக்கு இந்த்ரியங்கள் வசப்பட்டிருக்கும்

ஆமையானது இஷ்டாநுஸாரமாய்த் தன்னவயவங்களை வெளிப்பரப்பி தனக்குள் அடக்கிக்கொள்வது போலும், இந்த்ரியங்களையெவன் தன் வசப்படுத்திக் கொண்டிருப்பானோ, அவனை ஸ்திதப்ரஞ்ஞன் என்று தெரிந்துகொள்.

विषया विनिवर्तन्ते निराहारस्य देहिनः ।
रसवर्जं रसोऽप्यस्य परं दृष्ट्वा निवर्तते ॥ ५९ ॥

விஷயா விநிவர்தந்தே நிரா ஹாரஸ்ய தேஹின: ।
ரஸவர்ஜம் ரஸோ ஃப்யஸ்ய பரம் த்ருஷ்ட்வா நிவர்ததே ॥ 59

ஸம்பூர்ணவிஷய நிவ்ருத்தி, ப்ரஹ்மபாவ மடைந்தாற்றான் ஸாத்யம்

அர்ஜுனா, ஆச்சர்யப்படத்தக்கதான மற்றுமோர் விஷயம் சொல்வேன் கேள். எந்த ஸாதகர்கள், நியமமாய் விஷயங்களை ஒதுக்கிவைத்து, காது முதலான இந்திரியங்களை கட்டில் வைத்து, நாக்கை மாத்ரம் கட்டிவைக்காமல் விடுவார்களோ, அவர்கள் முன்பைக்காட்டிலும் ஆயிரமடங்கதிகமாய், விஷயங்களால் ஆக்ரமிக்கப்படுகிறார்கள். ஓர் மரத்தின் மேல் கிளைகளைக் கழித்துக்கொண்டு வந்து, வேரில் ஜலம் வார்த்துக்கொண்டே வந்தால், அது ஜலத்தின் பலத்தைக் கொண்டு முன்பைக்காட்டிலும் அதிகமாய் பக்கத்தில் துளிர்ப்பதுபோலும், நாக்கு மூலமாய் ஆகாரம் உள்ளே செல்லவே, மனஸில் விஷயத்தின் பற்று முன்பை காட்டிலும் அதிக த்ருடமாய் ஏற்படுகிறது. மற்ற இந்த்ரியங்களை விஷயானுபவம் செய்யாமல் கட்டி வைக்கலாம் ஆனால் நாக்கை அப்படியே ஹடாத்காரமாய் கட்டிவைக்க வராது, ஏனென்றால் இதை அடியோடு கட்டி விட்டால் ப்ராணனே போய்விடும். ஆயினும் எப்போதும் ஒருவன் தான் பரப்ஹ்மமே என்றனுபவபூர்வமாக அறிவானோ, அப்போது அவனுக்கு தேஹத்தின் உணர்ச்சியே அற்றுப்போவதால், அவனுயை நாக்கு மட்டுமேயல்லாமல், ஸகல இந்திரியங்களும், தமக்குத் தாமே அடங்கிப்போகும்.

यततो ह्यपि कौन्तेय पुरुषस्य विपश्चितः ।
इन्द्रियाणि प्रमाथीनि हरन्ति प्रसभं मनः ॥ ६० ॥

யததோ ஹ்யபி கௌந்தேய புருஷஸ்ய விபஶ்சித: ।
இந்த்ரியாணி ப்ரமாதீனி ஹரந்தி ப்ரஸபம் மன: ॥ 60

இந்திரியங்களின் அடங்காமை

அப்படி ப்ரஹ்மானுபவம் ஏற்படாதவரைக்கும்; எப்போதும் ஸாதநாநுஷ்டாநம் செய்து கொண்டே இருக்கிறவர்களுக்குக்

கூட, இவ்விந்திரியங்கள் கட்டுப்படுவதில்லை. அவர்கள், இவற்றைக் கட்டி வைப்பதற்காக, யமநியமங்களென்னும பூட்டைப்பூட்டி, மனஸைத் தங்கள் முஷ்டிக்குள்ளடக்கி வைத்துக்கொண்டிருந்தாற் கூட, அவர்களுடைய மனஸை இவ்விந்திரியங்கள் அல்லகல்லோலப்படுத்தி, ஓர் மாந்திரீகனால் கட்டிவைக்கப்பட்ட தேவதை, அவனை ஏதேனுமோர் விதமாய், ஏமாற்றி விடுவது போலும், அவர்களை ஏமாற்றிவிடும். அது எப்படியென்றால், இந்த ஸாதநாநுஷ்டாநத்தின் பலமாய் விஷயங்கள் இருத்தி ஸித்தி, யென்னும் வேஷங்கள் பூண்டு, அவர்களை அணுகும் போது, இவ்விந்திரியங்கள் அவற்றில் பற்றுப்பாராட்டி, அவர்களை விஷயபோகத்தில் ஒரே அழுத்தலாயழுத்தி விடுகின்றன. இப்படியானதும் மனஸு கட்டில் நில்லாமல் தெறிபட்டு, ஓட்டம் பிடிக்கிறது. அச்சமயத்தில் மனஸை கட்டிவைக்கும் கயிறுபோல் இருந்த யமநியமங்களி னப்யாஸம், இருந்தபடியே இருந்து, காணாமல் போகிறது. இவ்வாறு இந்த்ரியங்கள் கட்டுக்கடங்காத வையாயிருக்கின்றன.

तानि सर्वाणि संयम्य युक्त आसीत मत्परः
वशे हि यस्येन्द्रियाणि तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ६१ ॥

தானி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீத மத்பரः ।
வஶே ஹி யஸ்யேந்த்ரியாணி தஸ்ய ப்ரக்ஞா ப்ரதிஷ்டிதா ॥ 61

விஷயத்தில் பற்றை முற்றிலுமொழித்துக் கொண்டாலல்லது, ஸ்தித ப்ரஜ்ஞனாகான்

ஆகையால் இவ்விந்த்ரியங்களின் கொட்டத்தை அடக்கிவைத்துக்கொண்டு, எவன் விஷயங்களனைத்திலு மாசையற்ற வனாயிருப்பானோ, அவனே ஆத்மஜ்ஞானயோகத்தில் நிலைபெற்று நிற்கத் தகுந்தவனாய், என்னை யெக்காலும் சிந்தித்துக்கொண்டிருப்பான். அப்படியாகாது, வெளிப்படையாய் மாத்ரம் விஷயத்தை துறந்தவனாய், அவன் மனஸில் விஷயாஸக்தி கொஞ்சமாவது மிகுந்து நிற்குமாகில், அவனுக்கு ஸம்ஸாரம் ஸம்பூர்ணமாய் இருந்துகொண்டுதான் இருக்கும். விஷத்தைக் கொஞ்சமே உட்கொண்டாலும், அது உள்ளே சென்றபின், வ்ருத்தியடைந்து, தவறாது ப்ராணஹாநியைச் செய்து வைப்பது போலும், மனஸில் விஷயாஸக்தி கொஞ்சம் மிகுந்து நின்றால், அது ஞானத்தை முற்றிலும் நாசம் செய்துவிடும்.

क्रोधाद्भवति सम्मोहः सम्मोहात्स्मृतिविभ्रमः ।
स्मृतिभ्रंशाद् बुद्धिनाशो बुद्धिनाशात्प्रणश्यति ॥ ६३ ॥

க்ரோதாத் பவதி ஸம்மோஹ: ஸம்மோஹாத் ஸ்ம்ருதி விப்ரம: ।
ஸ்ம்ருதி ப்ரம்ஶாத் புத்தி நாஶோ புத்தி நாஶாத் ப்ரணஶ்யதி ॥ 62

மனஸிலேற்படும் விஷய ஸ்மரணையாலுண்டாகும் அநர்த்தம்

மனஸில் விஷயத்தின் ஸ்மரணை ஏற்பட்டால் போதும்; பிறகு விஷயங்களை முற்றிலும் துறந்தவர்களுக்குக்கூட, ஸ்மரணை என்னும் அந்த அல்ப ஸம்பந்தத்தினால், விஷயத்தில் ஆசையேற்படும். இப்படி காமம் உண்டான இடத்தில், அதற்கு முந்தியே க்ரோதம் வந்து சேர்ந்திருக்கும். க்ரோதத்துக்குள் அறிவுகேடு பூர்ணமாயடைப்பட்டு கிடக்கிற தென்றறி. அந்த அறிவுகேடு வெளிப்பட்டபின், சண்டமாருதத்தில் வைக்கப்பட்ட தீபஜ்யோதி உடனேயே அணைந்து போவதுபோலும், கர்த்தவ்யா கர்த்தவ்யத்தின் உணர்ச்சி நாசம் அடையும். பின்பு, அஸ்தமன காலத்தில், இருட்டு ஸூர்ய வெளிச்சத்தை விழுங்கிவிட்டபின், ஏற்படும் அந்தகாரம் போன்ற அஞ்ஞானதசை ஏற்பட்டு, எங்கும் வ்யாபித்தக் கொள்ளவே, ஓர் பிறவிக்குருடன், தனக்குப்பெரிய ஆபத்து ஏற்பட்டதாக பாவித்து, தானதினின்றும் தப்பித்துக் கொண்டோடிப் போக யத்தனித்து, அங்குமிங்கும் தட்டித்தடுமாறி வருந்திப்போவதுபோல், புத்தியானது தடுமாற்றங்கொண்டு துன்பப்படும், அர்ஜுனா. இப்படி கர்த்தவ்யாகர்த்தவ்யத்தினுணர்ச்சி கெட்டுப்போகவே புத்திக்குப் கஷ்டம் நேர்ந்து, ஞானம் அனைத்தும் வேர்ப்பிடுங்கலாய்ப் பிடுங்கப்பட்டுப்போகும். பின்பு, ஆத்மசைதந்யம் விலகிப்போனபின், சரீரத்துக்கு எந்த ஸதிதி ஏற்படுமோ, அந்த ஸ்திதி புத்திநாசமடைந்த புருஷனுக்கு ஏற்படுகிறது. சுக்கக்காய்ந்த விரகுகட்டைகளில் ஓர் சிறு நெருப்புப்பொறி விழுந்தால், அது பற்றிக்கொண்டபின், அதே மண்டி யெரிந்து, முவ்வுலகத்தையும் கொளுத்தி வைக்கப்போதுமான தாய்விடுகிறது போலும், விஷயத்தின் ஓர் ஸ்மரணை மனதில் அகஸ்மாத்தாய் ஏற்பட்டால், இவ்வளவு பெருத்த கேடு அதின் பின்னேயே தேடிக்கொண்டு வந்து சேர்கிறது.

रागद्वेषविमुक्तैस्तु विषयानिन्द्रियैश्चरन् ।
आत्मवश्यैर्विधेयात्मा प्रसादमधिगच्छति ॥ ६४ ॥

ராக த்வேஷ வியுக்தைஸ்து விஷயா நிந்த்ரியைஸ்ச சரன் ।
ஆத்ம வஸ்யைர் விதே யாத்மா ப்ரஸாத மதிகச்சதி ॥ 64

ராகத்வேஷ மற்றவனுக்கு விஷயஸேவனம் பாதை செய்யாது

ஆகையால் விஷயங்கள் அனைத்தையும் மனஸிற் பற்றிக்கொள்ளாதபடி துரத்திவைக்கவேண்டும்; பின்பு இயற்கையாகவே ராகத்வேஷங்கள் நாசமடையும். இப்படி ராகத்வேஷம் நாசமடைந்தபின், கேவலமான இந்த்ரியங்களைக் கொண்டு விஷயங்களைப் புசிப்பதால் பாதையெற்படுவதில்லை. ஆகாசத்தில் இருக்கும் ஸூர்யன், தன் கிரணங்கள் என்னும் கைகளால் உலகில் இருக்கும் அனைத்தையும் ஸ்பர்சித்தாலும், அப்படி ஸ்பர்சிக்கப்பட்ட வஸ்துக்களின் குணதோஷங்கள் ஸூர்யனிடத்தில் ஒட்டாமற் போவதுபோலும், காமக்ரோதங்கள் அற்றுப்போன ஒருவன், இந்த்ரிய விஷயங்களில் பற்றற்றவனாய், அவற்றில் ஸஞ்சரிப்பதால் ஒருவிதமான பாதையையும் அடையாமல், ஆத்மாநுபவத்திலேயே முழுகினவனா யிருப்பான். விஷயத்தில் கூட தன் ஆத்மஸ்வரூபத்தைத்தவிர வேறொன்று மிருப்பதாகத் தோற்றாமற் போனபின், எது எதை எப்படி பாதிக்கும்? ஜலம் ஜலத்தில் முழுகிப்போகுமேயானால், நெருப்பு நெருப்பைச் சுடுமேயானால், எங்கும் தன் ஸ்வரூபமே நிறைந்திருப்பதாகப் பார்க்கும ஒருவன், விஷய ஸம்பந்தத்தால் பாதிக்கப்படுவான். இப்படி தானே யாவுமாய் அமைந்து நிற்குமொருவனுடைய ப்ரஞ்ஞையானது நிலைபெற்றதென்பதில், ஸந்தேஹமில்லை.

प्रसादे सर्वदुःखानां हानिरस्योपजायते ।
प्रसन्नचेतसो ह्याशु बुद्धिः पर्यवतिष्ठते ॥ ६५ ॥

ப்ரஸாதே ஸர்வதுக்கானாம் ஹானிரஸ்யோப ஜாயதே ।
ப்ரஸன்ன சேதஸோ ஹ்யாஶு புத்திः பர்ய வதிஷ்டதே ॥ 65

மனக்கலக்கமற்றவன் ஸ்திதப்ரஞ்ஞனாவான்

எந்த மனது எப்போதும் தெளிந்ததாயிருக்குமோ, அதில் ஸம்ஸார துக்கம் எதுவும் நுழைவதற்கு வழியே இராது. எவனுடைய வயிற்றினின்று, அம்ருத அருவி பெருகிக்கொண்டே இருக்குமோ, அவனுக்கு பசிதாஹத்தின் துன்பம் இல்லாமற் போவது போலும், மனஸு தெளிவடைந்தபின், துக்கமென்பது எங்கே எவ்விதமாய் இருக்கிறதென் றுணரப்படும்? அப்படிப்பட்டவனுடைய புத்தியானது, காற்றடிக்காத இடத்தில்

தீபம். அசைவற்றெரிவதுபோலும், பரமாத்மஸ்வரூபத்தில் நிலைபெற்றிருக்கும்.

नास्ति बुद्धिरयुक्तस्य न चायुक्तस्य भावना ।
न चाभावयतः शान्तिरशान्तस्य कुतः सुखम् ॥६६॥

நாஸ்தி புத்திரயுக்தஸ்ய ந சாயுக்தஸ்ய பாவனா ।
ந சா பாவயதः ஶாந்திர ரஶாந்த்ஸ்ய குதः ஸுகம் ॥ 66

இந்த புத்தியோக மில்லாதவனுக்கு ஸுகம் கிடைக்காது

இந்த யோகத்தைப் பற்றிய விசாரமே எவன் செய்வதில்லையோ, அவன் விஷயங்கள் என்னும் கயிற்றால் கட்டுண்டு கிடப்பான், என்றறி. அப்படிப்பட்டவனுக்கு, ஸ்திரபுத்தி என்பது ஒருக்காலுமுண்டாகாது. அன்றியும ஸ்திரபுத்தியை அடையவேண்டுமென்னும் ஆசைகூட, அவனுக்குண்டாகாது. சலனமற்ற புத்தியை அடையவேண்டும் என்னும் ஆசையே மனஸில் உண்டாகாதபோது, அவன் சாந்தியை அடைவதென்பது எப்படி நேரும்? பாபங்கள் நிறைந்திருக்கிறவனுக்கு மோக்ஷம கிடைக்காதது போலும், சாந்தியின் அல்பாம்சம் கூட இல்லாதவனிடத்தில் ஸுகம் தடுமாறிப் போய்க் கூட வந்து சேராது. அக்நியால் வறுப்பட்டுபோன விதை முளைப்பது ஸாத்யமேயானால், அசாந்தனுக்கு ஸுகப்ராப்தி உண்டாகும். மனது நிலை பெறாது அலைவதே, துக்கானுபவத்துக்கு வேண்டிய ஸர்வோபகரணமுமாகும். ஆகையால் நீ இந்த்ரியங்களைக் கட்டில் வைக்க வேண்டும்.

इन्द्रियाणां हि चरतां यन्मनोऽनुविधीयते ।
तदस्य हरति प्रज्ञां वायुर्नावमिवाम्भसि ॥ ६७॥

இந்த்ரியாணாம் ஹி சரதாம் யன்மனோ நு விதீயதே ।
ததஸ்ய ஹரதி ப்ரக்ஞாம் வாயுர்நாவமிவாம் பஸி ॥ 67

இந்த்ரியங்களுக்கு வசப்பட்டிருப்பவனுக்கு ஸம்ஸார நிவ்ருத்தி உண்டாகாது

ஸமுத்ரத்தை எல்லாம் தாண்டிவந்த ஓர் கப்பல் கரையோரம் நீரில் தங்கியிருக்கும்போது, கெட்ட காற்று அதி மேல் தாக்கினால், எப்படி அது நடு ஸமுத்திரத்துக்கு அடித்துக்கொண்டு

போகப்பட்டு, ஆபத்திற்குட்பட்டுப் போகுமோ, அப்படியே இந்த்ரியங்க ளாட்டிவைத்தபடியெல்லாமாடு மொருவன் விஷயம் என்னும் ஸமுத்திரத்தை தாண்டி வந்துவிட்டானேயானாலும், உண்மையாய்த் தாண்டினவனாகான். ஆகையால் ஆத்ம ஸ்வரூபத்தை நெருங்கிவிட்ட புருஷனும், வேடிக்கை பார்க்க எண்ணியே இந்திரியங்களுக்கு கொஞ்சம் இடம் கொடுத்தானேயானால், ஸகல ஸம்சார துக்கத்துக்கும் ஆளாய்ப்போவான்.

तस्माद्यस्य महाबाहो निगृहीतानि सर्वशः ।
इन्द्रियाणीन्द्रियार्थेभ्यस्तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ६८ ॥

தஸ்மாத்யஸ்ய மஹாபாஹோ நிக்ருஹீதானி ஸர்வஶ: ।
இந்த்ரியாணி இந்த்ரியார்தேப்யஸ் தஸ்ய ப்ரக்ஞா ப்ரதிஷ்டிதா: ॥ 68

இந்த்ரியங்களை வசப்படுத்திக்கொண்டவன் ப்ரஜ்ஞை நிலை பெற்றதாகும்

ஆகவே இந்திரியங்கள் தாமாகவே ஒருவன் வசப்பட்டுப் போகுமாகில், அவனுக்கு மேலு மாகவேண்டுவது என்ன இருக்கிறது? ஆமையானது தன் அவயவங்களை தன்னிஷ்டப்பிரகாரம் வெளிப்பரப்பி உள்வாங்கிக் கொள்வது போலும், எவனுக்கு இந்திரியங்கள் ஸர்வ விதமாயும ஸ்வாதீனமாய் விடுகின்றனவோ, அவனுடைய ப்ரஜ்ஞை நிலை பெற்றது என்றறி. இப்படிப்பட்ட பூர்ணதையின் ரஹஸ்யமான லக்ஷணம் மற்றுமொன்றுண்டு, சொல்வேன் கேள்.

या निशा सर्वभूतानां तस्यां जागर्ति संयमी ।
यस्यां जाग्रति भूतानि सा निशा पश्यतो मुनेः ॥ ६९ ॥

யா நிஶா ஸர்வபூதானாம் தஸ்யாம் ஜாகர்தி ஸம்யமீ ।
யஸ்யாம் ஜாக்ரதி பூதானி ஸா நிஶா பஶ்யதோ முனே: ॥ 69

ஸ்திதப்பரஜ்ஞனுடைய மற்றுமோர் லக்ஷணம், லோகவிருத்தத்வம்

ஜீவர்களனைவரும் எவ்விஷயத்தில் தூங்கிப்போய் இருக்கின்றார்களோ அவ்வியஷத்தில் விழித்தவனாயும், அன்றியும் ஜீவர்கள் எதில் விழித்தவர்களாயிருப்பர்களோ அதில் தூங்கிப் போனவனாயும் எவனிருப்பானோ, அவனே

ஒருநாளும் மாறாதபடி நிலைபெற்றதான புத்தியுள்ள முனிவர்களரசனென்றறி.

आपूर्यमाणमचलप्रतिष्ठं समुद्रमापः प्रविशन्ति यद्वत् ।
तद्वत्कामा यं प्रविशन्ति सर्वेस शान्तिमाप्नोति न कामकामी

ஆபூர்யமாணமசலப்ரதிஷ்டம்ஸமுத்ரமாபஃப்ரவிஶந்தியத்வத்।
தத்வத்காமாயம்ப்ரவிஶந்திஸர்வேஸஶாந்திமாப்நோதிநகாமகாமீ॥70

ஸ்திதப்ரஜ்ஞன் இருத்திஸித்திகளை மதியான்

மற்றொரு லக்ஷணத்தைக் கொண்டும், ஸ்திதப்ரஜ்ஞனை அறிந்துகொள்ளலாம், அதைச் சொல்வேன் கவனி, மழைக்காலத்தில் நதிகளின் ப்ரவாஹம் முழுவதும் தன்னிடம் வந்துவிழுவதால் வ்ருத்தியடைந்து கரைபுரளுவதும், வேனிற்காலத்தில் நதிகள் காய்ந்துபோய் புது ஜலம் தன்னிடம் வந்து விழாததினால் குன்றிப்போவதும், ஏற்படாது, அகண்டிதமாய் வேறுபாடடை யாதிருக்கும் ஸமுத்ரம் போலும், இருத்திஸித்திகள் தாமாகவே வந்தடைந்தால் மனது ஆனந்த்ததால் பொங்கிவழிவதும், அவை கிடைக்காததினால் அதைர்ய மடைந்து மனம் கலங்குவதும், அவனற்றவனாயிருப்பான். ஸூர்யனுடைய வீட்டில் விளக்கேற்றி வைத்தாற்றான் வெளிச்சம், இல்லாவிட்டால் இருட்டு, என்பது உண்டா? அப்படியே இருத்தி ஸித்திகள் வந்து சேர்ந்ததையும் விலகிப் போனதையும் சட்டைபண்ணாது, தனக்குத்தானே பரிபூர்ணனா யிருக்கிறவன் எவனோ, அவனே மஹா ஸுகத்தில் நிலைபெற்றிருக்கும் ஸ்திதப்ரஜ்ஞனாவான். எவன் தன்னுடய வீட்டின் அழகுக்கு முன்னால், இந்திரனுடைய மாளிகையை துச்சமென்றெண்ணுவானோ, அவன் காட்டில் வேடர்கள் வஸிக்கும் குடிசைகளைக்கண்டு, கொஞ்சமேனும் மதிப்பானா? அம்ருத்திற்கே ஓர் பழுது எடுத்துக் கூறுகிறவன், அல்பமான கஞ்சியை ஸேவியாதது போலும், ஆத்மஸுகானுபவத்தில் நிலைபெற்றிருந்து கொண்டு, ஸ்வர்க்க ஸுகத்தையே அல்பமாய் நினைத்திருக்குமவன், இருத்தி ஸித்திகளைத் தலையெடுத்துப்பாரா னென்று சொல்லவேண்டுமா?

विहाय कामान्यः सर्वान्पुमांश्चरति निःस्पृहः ।
निर्ममो निरहङ्कारः स शान्तिमधिगच्छति

விஹாய காமான்யஃ ஸர்வான் புமாம்ஶ்சரதி நிஃ ஸ்ப்ருஹஃ ।
நிர்மமோ நிரஹங்காரஃ ஸ ஶாந்திமதிகச்சதி ॥ 71

ஸ்திதப்ரஜ்ஞனுக்கு உலகமே தன்னாத்ம ஸ்வரூபமாய்த் தோற்றல்

இப்படி ஆத்மஞானமடைந்து, பரமானந்தானுபவத்தால் புஷ்டி,அடைந்திருப்பவன்தான்,ஸ்திரப்பரஜ்ஞனாவனென்று ஸந்தேஹமறத் தெரிந்துகொள். அவன் அஹங்காரம் துலைத்து, உலகமெல்லாம தானே ஆய், அவ்வுலகத்துக்குள் யதேச்ச விஹாரம் செய்து கொண்டிருப்பான்.

एषा ब्राह्मी स्थितिः पार्थ नैनां प्राप्य विमुह्यति ।
स्थित्वास्यामन्तकालेऽपि ब्रह्मनिर्वाणमृच्छति ॥ ७२ ॥

ஏஷா ப்ராஹ்மீ ஸ்திதிஃ பார்த நைநாம் ப்ராப்ய விமுஹ்யதி ।
ஸ்தித்வாஸ்யாமந்தகாலேஸ்பி ப்ரம்ஹ நிர்வாண மருச்சதி ॥72

இப்படி, ப்ரஹ்மானுபவத்தில் நிலைபெற்றவர்களுக்கு சரீர முடிவில் தேஹவைகல்யத்தால் பாதை உண்டாகாது

நிஷ்காம ஸித்தி அடைந்தவர்கள், இந்த ப்ரஹ்மஸ்திதியை ஸதா அனுபவித்துக்கொண்டிருந்தே, அனாயாஸமாய் பரப்ரஹ்மத்தோடு ஒன்றுபட்டுப் போகிறார்கள். இவர்கள் இப்படி ப்ரஹ்ம ஸ்வரூபத்தில் கலந்துபோகும்போது, சரீரமுடிவில் அநிவார்யமாய் நேரும் தேஹகைவல்யம் அவர்கள் மனஸை கலவரப்படச் செய்யாதொழிவதால், அவர்கள் ப்ரஹ்மஸ்வரூபத்தி லைக்கயப்பட்டுப் போவதற்கு யாதோர் தடையு மேற்படுவதில்லை. இப்படி ப்ரஹ்மஸ்திதியின் பெருமையை, ஸ்ரீ கிருஷ்ணன் வர்ணித்தார், என்று ஸஞ்சயன் திருராஷ்டிரனுக்குச் சொன்னான்.

மேல்வரும் அத்யாயத்தி னவதாரிகை

இப்படிப்பட்ட க்ருஷ்ணவாக்யத்தைக் கேட்டு அர்ஜுனன், "இத்தனை ந்யாயமும் என்னுடைய கக்ஷிக்கே அநுகூலமாயிற்று; ஏனென்றால் பகவான் இங்கே கர்மங்களனைத்தையும் நிராகரித்துவைத்ததால், நான் இனி யுத்தம் செய்ய வேண்டியதில்லை", என்று தனக்குள் சொல்லி கொண்டான். இப்படி கிருஷ்ணன் வார்த்தையைக் கேட்டு, உள்ளம் மகிழ்ந்து, மிக்கச் சாதுர்யமாய் அர்ஜுனன் வினவப் போகிறான். அதற்கு மேல் ஸர்வஜ்ஞர்களனைவருக்கும் நாதனான ஸ்ரீ அநந்தன் எடுத்துச் சொல்வது மிக்கச் சாதுர்யமாயும், ஸகல தர்மங்களுக்கும் உத்பத்தி ஸ்தானமாயும், விவேகங்கள் நிறைந்துள்ள கரையற்ற கடலாயும், இருக்கும், கேளுங்கள்.

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று

அத்யாயம் 3

अर्जुन उवाच ।
ज्यायसी चेत्कर्मणस्ते मता बुद्धिर्जनार्दन ।
तत्किं कर्मणि घोरे मां नियोजयसि केशव ॥ १ ॥

அர்ஜுன உவாச - அர்ஜுனன் சொன்னான்

ஜ்யாயஸீ சேத் கர்மணஸ்தே மதா புத்திர் ஜனார்தந ।
தத்கிம் கர்மணி கோரே மாம் நியோஜயஸி கேஶவ ॥ 1

அர்ஜுனனுடைய ப்ரச்நம்

பின்பு ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்து அர்ஜுனன் பின் வருமாறு சொன்னான். தேவா, நீர் சொன்னதை நான் நன்றாய் கவனித்துக் கேட்டேன். அதை விசாரித்துப் பார்க்குங்கால், கர்மம் கர்த்தா என்ற இவ்விரண்டும் உலகில் அற்றுப்போய், அனைத்தும் பரப்ரஹ்மமே ஆய்விடுகிறது. இது உம்முடைய மதமானபின், நீர் என்னை யுத்தம் செய்யச்சொல்வதற்கு, என்ன ந்யாயமிருக்கிறது? இப்படிப்பட்ட மஹா கோரமான யுத்தத்தில், நீர் மூட்டிவைக்க உமக்கு வெட்கம்தான் தோற்றவில்லையே. நன்றாய் கவனித்துப் பார்க்கவேண்டும், நீரோ ஸர்வ கர்மங்களையும், முற்றிலும் நிராகரிக்கிறீர்; பின்பு என்னைக் கொண்டு பரஹிம்ஸாரூபமான இந்த கர்மத்தை ஏன் செய்து வைக்கப் பார்க்கிறீர்?

व्यामिश्रेणेव वाक्येन बुद्धिं मोहयसीव मे ।
तदेकं वद निश्चित्य येन श्रेयोऽहमाप्नुयाम् ॥ २ ॥

வ்யாமிஶ்ரேண வாக்யேன புத்திம் மோஹயஸீவ மே ।
ததேகம் வத நிஶ்சித்ய யேன ஶ்ரேயோ ஹ மாப்நுயாம் ॥ 2

இதுவுமது

ஹே தேவா, நீரே இப்படிப் பேசத் தொடங்கினால், நாங்கள் செய்வது என்ன? விவேகத்தின் விஷயமாய் இவ்வளவு கேட்டது போது மென்று சொல்லவேண்யது தான். நீரே பாரும், உபதேசமென்பதே இப்படியிருந்தால், நீர்என் புத்தியை கெடுத்துவைக்க வேண்டுமென்று நினைத்தால், எப்படி

வார்த்தை சொல்வீரோ தெரியவில்லை. நான் தத்வஞானம் அடைய வேண்டுமென்று ஆசைப்பட்டது போதும், போதும், என்றே தோற்றுகிறது. வைத்யன் வியாதிஸ்தனுக்குப் பத்தியத்தைச் சொல்லிவிட்டுப் போய், தானே விஷத்தைக் கொடுத்தால், அந்த வியாதிஸ்தன் பிழைப்பது எவ்வண்ணம். குருடனைக்கெட்ட வழியில் இட்டுக் கொண்டுபோய், பின்பு அவனை கைவிட்டாற் போலும், இயற்கையாகவே சாபல்யமுள்ள குரங்குக்குக் கள்ளை ஊட்டிவைத்தாற் போலும், உம்முடைய உபதேசம் எனக்கு மிக்க நன்றாய் ஏற்பட்டது.

நான் முதலிலேயே ஒன்றுமறியாதவன். அது போதாதென்று, இம்மோஹமும் வந்து மூடிக்கொண்டது. ஆகையால் நான் செய்ய வேண்டியது யாதென்று நீர் சொல்லவேண்டும், என்று சரணாகதிசெய்த எனக்கு புதிது புதிதாய் பலவிதப்பட்ட புத்திகளை உரைத்து, நான் திகைத்துப் போகும்படி செய்வது ந்யாயமா? தேஹம், மனஸு, ஆத்மா, அனைத்தையும் உமக்கு ஒப்பித்துவிட்டு, நீர் சொல்கிறபடியே நடக்கிறதென்று. நிச்சயித்து நான் நிற்க, அப்படிப்பட்ட என்னை இப்படி அதிக மனக்குழப்ப மடையும்படி நீர்செய்து வைத்ததால், உம்முடைய உபதேசம் போதும், போதும், என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. ஆனால் இப்படி யெல்லாம் தாறுமாறான உபதேசத்தால், எனக்கு நன்மையையே செய்கிறீர். இனிப் பெரியவர்களைக் கேட்டு, ஞாநத்தை யடையவேண்டு மென்னுமாசையை முற்று மொழித்துக்கொண்டேன்.

ஞானவானாக வேண்டும் என்ற ஆசை தீர்ந்துபோனது ஓர் லாபமேயானாலும், எனக்கியற்கையாகவே இருந்த கொஞ்சநெஞ்ச ஞானம் கூட சிதறிப் போயிற்றே! இப்படிச்செய்து வைத்த உம்முடைய லீலையின் உத்தேசம் இன்னதென்று எனக்குத் தெரியவில்லை. உபதேசம் செய்வது என்னும் பெயரை வைத்து, என் மனஸு உண்மையாய் எப்படி இருக்கிறதென்று நீர் தெரிந்துகொள்ளப் பார்த்தீரோ? அல்லது என்னை ஏமாற்றிவிடவே கருதினீரோ? அல்லது நீர் எனக்கு தத்வஞாநத்தையே மறைபாடாகச் சொன்னீரோ? இவற்றில் எது உண்மையென்று என்னால் நிச்சயிக்க முடியவில்லை. ஆகையால், ஹே தேவா, உம்முடைய கருத்தை வெளிப்படையாய்ச் சொல்லிவைக்காமல், ஊகித்தறிந்து கொள்ளும்படியாய்ப் பேசுவது வேண்டாம்.

பாமரர்கள் கூட ஸந்தேஹமறத் தெரிந்துகொள்ளும் வண்ணம், ஞானத்தை விடுவித்துச் சொல்லவேண்டும். நான்

கொஞ்சம்கூட அறிவில்லாதவன்; அப்படிப்பட்ட எனக்கு நன்றாய்ப் போதமாகும்படியாயும், ஒரே முடிவுள்ளதாயும், நீர் உபதேசம் செய்ய வேண்டும். ஓர்வைத்யன் கொடுக்கும் மருந்து நோயைப் போக்குவதாய் இருந்து, மேன்மேலும் ஸேவிக்க வேண்டுமென்று ஆசை உண்டாக்கும்படி மதுரமாயிருந்தால் எப்படியோ, அப்படியே உம்முடைய உபதேசம் ஸகல புருஷார்த்தங்களையும் ஸம்பாதித்துக் கொடுத்து, தத்வஞானத்தை உண்டாக்கி வைக்கத் தக்கதாயும், நான் ஸந்தேஹமறத் தெரிந்துகொண்டு அனுஷ்டிப்பதற்கு ஸாத்யமானதாயும், இருக்க வேண்டும்.

தேவா, நீரே எனக்கு குருவாகக் கிடைத்த பின், என் மனதில் இருக்கும் ஆசையை யெல்லாம், நான் ஏன் தீர்த்துக் கொள்ளக்கூடாது? நீர் எனக்குத் தாயானபின், நான் ஏன் தாக்ஷண்யம் பாராட்டவேண்டும்; தெய்வானுகூல்யத்தால் காமதேனுவே ஒருவனுக்குக் கறந்துகொள்ளக் கிடைத்தப்பின், அவன் ஆசையை மட்டுப்பட்டதாக ஏன் செய்து கொள்ளவேண்டும்? சிந்தாமணி கைக்குக் கிட்டியபின், நம்மனதில் தோன்றியபடி யெல்லாம் ஆசைப்படுவதில் என்ன கஷ்டமிருக்கிறது? அம்ருதஸிந்து வரைக்கும் ஓடிவந்து அதின்கரையில் நிலைபெற்றப்பின், தாஹம் அத்தனையையும் தீர்த்துக் கொள்ளாமல் வருந்துவதானால், அதற்கு முன் ஓடிவந்து ச்ரமப் பட்டதற்கு ப்ரயோஜனம் என்? அப்படியே இதற்கு முன் பல ஜன்மங்களில் உம்மை உபாஸித்ததின் புண்யத்தினால், நீர் இன்று எனக்கு வசப்பட்டு நிற்கக் கிடைத்தபின், நான் ஏன் என்னிஷ்டாநுஸாரமாய்க் கேட்டுப் பெற்றுக்கொள்ளக் கூடாது?

ஹே ஸர்வேச்வரா, இப்படியெல்லாம் ஆசைப்படும் என் மனஸுக்கு, நல்லகாலம் ஏற்பட்டிருக்கிறதல்லவா? பாரும், இன்று நான் பாராட்டின ஆசையெல்லாம் ஸபலமாய், என்னுடைய புண்யங்கள் எல்லாம் பலோன்முகமாய் நிற்கின்றன. என்னுடைய மனோரதங்களனைத்தும் வெற்றிபெற்றன. ஏனென்றால் பரம மங்களத்துக்கு இருப்பிட மென்றும், ஸகலதேவர்களுக்கும் உத்தம தேவனென்றும், சொல்லத்தக்க நீர், இன்று எனக்கு ஸ்வாதீனமாய் விட்டீர். தாயினிடத்தில் குழந்தை ஸ்தந்யபானம் செய்வதற்குத் தகாதகாலம் இல்லாதது போலும், ஹே க்ருபாநிதே, ஹே தேவா, காலாகால விசாரம் செய்யாமல், என்மனம் போன படியெல்லாம் உம்மை ப்ரார்த்திக்கின்றேன். ஆகையால் எனக்கு பரலோகத்தில் நன்மையைச் செய்துவைப்பதாயும்,

இங்கே அனுஷ்டிப்பதற்கு உசிதமாயும் எது இருக்குமோ அதை இன்னதென்று நிச்சயித்துச் சொல்லவேண்டும் அத்துடன்கூட நீர் சொல்வது பலவிதப்பட்டதா யிராமல், ஒரே வகைப்பட்டதாயிருக்க வேண்டும்.

श्रीभगवानुवाच ।
लोकेऽस्मिन् द्विविधा निष्ठा पुरा प्रोक्ता मयानघ ।
ज्ञानयोगेन साङ्ख्यानां कर्मयोगेन योगिनाम् ॥ ३ ॥

ஸ்ரீ பகவானுவாச - ஸ்ரீ பகவான் கூறுகிறார்

லோகேஸ்மின் த்விவிதா நிஷ்டா புரா ப்ரோக்தா மயாநக ।
க்ஞான யோகேன ஸாங்க்யானாம் கர்மயோகேன யோகினாம் ॥ 3

பகவானுடைய உத்தரம்

இதைக்கேட்டு, ஸ்ரீ அச்சுதன் ஆச்சர்யமடைந்து, பின்வருமாறு சொன்னான். அர்ஜுனா, நான்கீழே செய்த உபதேசத்தின் உண்மையான அபிப்பிராயத்தைச் சொல்வேன், கேள். கர்மம் செய்வதில், நீ எந்த புத்தியோகமுள்ளவனா யிருக்க வேண்டுமோ, அதை எடுத்துச்சொல்ல ஆரம்பித்த எனக்கு, ப்ரஸங்காநு ஸாரமாய், ஸாங்க்ய மதக்கோட்பாட்டை எடுத்துச்சொல்லும்படி நேர்ந்தது. அதையறியாது நீ வீணாய் வருத்தமடைந்தாய். இனி அதை விடுவித்துச் சொல்வேன், கேள். ஞானயோகம் புத்தியோகம் என்ற இவ்விரண்டும், நானே ஏற்படுத்தி வைத்தவை. இந்த உலகில் இவ்விரண்டு நிஷ்டைகளும் என்னிடத்தினின்றே வெளிப்பட்டு, அநாதிகாலமாய் வழங்கிவருகின்றன. ஒன்று ஞானயோகமென்று சொல்லப்பட்டு, ஸாங்க்ய மதநிஷ்டர்களால் அநுஷ்டிக்கப்படுகிறது. இதை அநுஷ்டிக்கிறவர்களுக்கு ப்ரஹ்மஞாநமுண்டாய், அதின் உத்தரக்ஷணத்திலேயே அவர்கள் ப்ரஹ்மமாய்விடுகிறார்கள். மற்றொன்று புத்தியோக மெனப்படுகிறது. இதில் இறங்கினவர்கள், இதில் கொஞ்சம் கொஞ்சமாய் தேர்ச்சி அடைந்து, காலக்ரமேண ப்ரஹ்ம பாவத்தை அடைகிறார்கள்.

இரண்டு வழிகள் ஒரே ஊருக்குக் கொண்டுபோய் விட்டாற் போலும், சமைத்து ஸித்தமாயிருக்கு மன்னத்தைச் சாப்பிடுவதாலும், தான் அன்னத்தை சமைத்துக் கொண்டு சாப்பிடுவதாலும், பசி தீர்தல் என்னுமொரே லாபத்தை

யடைவது போலும், இவ்விரண்டு யோகங்களும், ஒரே பலத்தைக் கொடுத்துத் தீர்கின்றன. கிழக்கு நோக்கியும், மேற்கு நோக்கியும், ஓடு மருவிகளனைத்தும், வேறு வேறாகத் தோற்றினர்லும், ஸமுத்ரத்திற் போய் விழுந்தபின் னொன்றுபட்டுப் போவது போலும்,இவ்விரண்டு மதங்களும் ஒரே பலத்தை அடைய வழியைக் காட்டிக் கொடுக்கின்றன.

ஆனால் அவனவன் யெந்தெந்த மதத்தை அவலம்பித்துச் செல்ல வேண்டுமோ, அது அவனவன் யோக்யதையைப் பொருத்தது. உயர்ந்த மரத்தின் நுணியில் உள்ள ஓர் பழத்தை ஓர் பக்ஷியானது ஒரே தடவையாய் பறந்துபோய்ப் பற்றிக்கொள்கிறது, ஆனால் ஓர்மனுஷ்யன் அப்படிப் பறந்துபோய் அப்பழத்தைப் பற்றிக்கொள்வது எவ்வாறு முடியும்? அவன் மெல்ல மெல்ல ஒரு கிளையினின்று மற்றோர் கிளைமேல் ஏறி, கொஞ்ச நேரம் சென்று, முடிவில் அப்பழத்தைத் தவறாது அடைகிறான். அப்படியே பக்ஷியைப்போல் ஸாங்க்ய மதஸ்தர்கள் ஞானயோகத்தை அவலம்பித்து, கால விளம்பமின்றி மோக்ஷத்தை அடைகிறார்கள். புத்தி யோகத்தி லிறங்கினவர்களோ, கர்மத்தின் உதவியைக் கொண்டு, தமக்கு விதிக்கப்பட்ட கர்மங்களை அநுஷ்டித்து காலக்ரமேண ப்ரஹ்ம பாவம் என்னும் பூர்ணதையை அடைகிறார்கள்.

न कर्मणामनारम्भान्नैष्कर्म्यं पुरुषोऽश्नुते ।
न च संन्यसनादेव सिद्धिं समधिगच्छति ॥ ४ ॥

ந கர்மணா மநாரம்பாந் நைஷ்கர்ம்யம் புருஷோ(அ)ஶ்நுதே ।
ந ச ஸந்ந்யஸநா தேவ ஸித்திம் ஸமதி கச்சதி ॥4

விஹித கர்ம த்யாகத்தால், நைஷ்கர்ம்யம் ஸித்தியாது

ஒருவன் தனக்கு விதிக்கப்பட்டுள்ள கர்மத்தைச் செய்யாது விடுவதினாலேயே, நைஷ்கர்ம்ய ஸித்தியை அடைந்த வனைப்போல், கர்மங்களினின்று விடுபட்டவனாவதில்லை. விஹிதமாய் நேர்ந்திருக்கும் கர்மங்களைச் செய்யா தொழிந்ததினாலேயே, நைஷ்கர்ம்யம் உண்டாய் விடுகிறதென்பது, அறியாத்தனத்தால் ஏற்பட்ட வீண்வார்த்தை. நதியைத் தாண்டி அக்கரைசெல்ல வேண்டும் என்று ஓர் முடை ஏற்பட்டபின், தெப்பத்தில் உட்கார்கிறதில்லை என்றால் எப்படி முடியும். பசியைத்

தீர்த்துக்கொள்ள ஆசைப்பட்ட ஒருவன், அன்னத்தைத் தான் சமைத்துக் கொண்டாவது சாப்பிட வேண்டும், அல்லது பிறரால் சமைக்கப்பட்டு ஸித்தமாயிருக்கும் அன்னத்தையாவது சாப்பிட வேண்டும். இவ்விரண்டில் ஒன்றையும் செய்யாதிருந்தால், பசி தீர்வது எப்படி. ஆசை விட்டுப் போகாதவரையில், கர்மம் ஏற்பட்டுக் கொண்டேதானிருக்கும். ஆசைகள் எல்லாம் தீர்ந்து பூர்ணமான திருப்தி ஏற்பட்டபின், தானாகவே கர்மம் ஓய்வடையும், ஆகையால் அர்ஜுனா, எவனுக்கு நைஷ்கர்ம்ய ஸித்தியில் ஆசை யிருக்கிறதோ, அவன் தனக்கு விஹிதமான கர்மத்தை ஒருக்காலும் செய்யா தொழியக் கூடாது.

அன்றியும் ஒருவன் தன்னிஷ்டப் பிரகாரம், கர்மத்தைச் செய்யத் தலைப்பட்டாற்றான் கர்மம் ஏற்படுகிறது என்றும், அவன் கர்மங்களைச் செய்யாதொழிந்தால் கர்மம் ஏற்படாமல் போகிறதென்றும், இப்படியா கர்மத்தின் இயற்கை இருக்கிறது? இப்படி மனதுக்குத் தோன்றியபடி யெல்லாம் பேசுவதில் ஓர் பயனுமில்லை. அனுபவத்தைப் பார்க்குங்கால், ஓர் கர்மத்தைச் செய்வதில்லை என்று, அதைத் தவிர்த்துக் கொண்ட மாத்திரத்தினாலேயே, கர்மம் விலகிப்போவதில்லை என்பது, நிச்சயமாய் ஏற்படுகிறது.

न हि कश्चित्क्षणमपि जातु तिष्ठत्यकर्मकृत् ।
कार्यते ह्यवशः कर्म सर्वः प्रकृतिजैर्गुणैः ॥ ५ ॥

ந ஹி கஶ்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்ய கர்ம க்ருத் ।
கார்யதே ஹி அவஶ: கர்ம: ஸர்வ: ப்ரக்ருதிஜைர் குணை: ॥ 5

கர்மங்கள் புருஷஸங்கல்பாதீநமாயிராமல், ப்ரக்ருதி குணங்களால் ஏற்படுகின்றன

கர்மத்துக்கு ஆதார பூமியாகிய ப்ரகிருதியின் ஸம்பந்தம் விட்டுப்போகாத வரைக்கும், அந்த ப்ரக்ருதியின் குணங்களுக்கு வசப்பட்டு தேஹத்தின் வ்யாபாரம் முழுவதும், புருஷனுடைய யத்நத்தை அபேக்ஷிக்காமலே, நடந்தேறி வருகின்றது; ஆகையால், தானே கர்மங்களைச் செய்துவைப்பது, தானே அவற்றை ஒழித்துவிடுவது,என்ற இவ்வார்த்தை கேவல அஞ்ஞானத்தின் கார்யமே யாகும். விஹித கர்மமனைத்தையும் செய்யாதொழிந்ததால், இந்திரியங்களின் இயற்கை நசித்துப் போகிறதா என்ன? காதால் கேட்பது நின்றுபோய்விடுகிறதா? கண் பார்க்காமல் போகிறதா? இந்த மூக்குத்வாரமானது

அடைப்பட்டுப் போய் வாஸனை முகரப்படாமல் போகிறதா? ப்ராணாபானங்களின் ஓட்டம் நின்று போகிறதா? மனது வேறுவேறு விஷயங்களை நினைக்காமல், நிர்விகல்பமாய் நின்று போகிறதா? பசி தாஹங்களின் தொந்தரவு அற்றுப் போகிறதா? தூங்கி ஸ்வப்னம் காணுதலும், பின்பு விழித்துக்கொள்ளலும், நின்று போகிறதா? கால் நடக்க மறந்துபோகிறதா? இவை எல்லாவற்றையும் விட்டுவிடு; பிறப்பு இறப்பு நின்றுபோகிறதா?

இவை நின்றுபோகாத பக்ஷத்தில், எது விடுபட்டுப் போயிற்று? ஆகையால் கர்மத்யாகம் ப்ரக்ருதி ஸம்பந்தமுள்ளவர்களுக்கு ஸித்தியாகாது. இப்படி கர்மங்கள், புருஷனுடைய ஸங்கல்பாதீனமாயிராமல், ப்ரகிருதி குணங்களின் மாறுபாடுகளால் உண்டாய்க் கொண்டிருப்பதால், ஒருவன் அவற்றைத் தான் செய்ததாகவும் விட்டொழித்ததாகவும் எண்ணுவது வீணே. ரதத்தில் ஏறிக்கொண்டவன், அசைவற்று, இருந்த இடத்திலேயே இருக்கவேண்டும் என்று, எவ்வளவுதான் உறுதியாய் தீர்மானித்துக்கொண்டே போதிலும், அவன் ரதத்தின் வசப்பட்டு, ரதம் போகு மிடமெல்லாம் அலைந்து திரிவது போலும், தாமாகவே அசைவற்றவையான சற்குகள் காற்றின் வசப்பட்டு ஆகாசம் எங்கும் சுற்றித் திரிவதுபோலும், ப்ரக்ருதியின் ஸம்பந்தத்தால், கர்மேந்திரியங்களின் விகாரங்களுக்கு வசப்பட்டு, நைஷ்கர்ம்ய ஸித்தியை அடைந்தவன் கூட அல்லவா இடை விடாது கர்மங்களைச் செய்கிறான். ஆகையால் ப்ரக்ருதியின் ஸம்பந்தமுள்ளளவும், கர்மத்தை ஸ்வரூபத்தோடு விடுதல் ஸாத்யமன்று. இப்படி யிருந்தும், நான் கர்மத்தை விட்டொழிப்பேன் என்று சொல்கிறவனுக்கு, அது கூடிவராமல், அவன் ஆக்ரஹப்பட்ட தொன்றே மிகுந்து நிற்கும்.

कर्मेन्द्रियाणि संयम्य य आस्ते मनसा स्मरन् ।
इन्द्रियार्थान्विमूढात्मा मिथ्याचारः स उच्यते ॥ ६ ॥

கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய ஆஸ்தே மனஸா ஸ்மரன்।
இந்த்ரியார்தான் வீமூடாத்மா மித்யாசார: ஸ உச்யதே ॥ 6

விஹிதகர்ம த்யாகத்தா லாசையற்றுப் போவதில்லை

எவன் தனக்கு விஹிதமான கர்மத்தைக் கைவிட்டு நைஷ்கர்ம்ய ஸித்தியை அடையப் பார்கிறானோ, அவன் கர்மேந்திரியங்களை யாதொரு வேலையும் செய்யாமல் கட்டி

வைத்த போதிலும், அவன் மனஸில், இதைச் செய்யவேண்டும், அதைச் செய்யவேண்டும், என்னும் எண்ணமாவது மிகுந்து நின்று, அவனுக்கு நைஷ்கர்ம்யம் ஸித்தியாமற்போகிறது, மேலுக்கு மாத்ரம் நைஷ்கர்ம்ய ஸித்தி அடைந்தவன் போலவன் நடித்து, இரண்டு விதமாயும் நஷ்டமடைந்து தரித்ரனாகிறான் இப்படி விஹிதகர்மத்யாகம் செய்வதால், அவன் விஷயா ஸக்தனாகவே இருந்து தீர்கிறான்; இதில் ஸந்தேஹமே இல்லை. இந்த ஸந்தர்ப்பானுஸாரமாய், உண்மையாய் ஆசையற்றிருப்பதின் குறி எதுவோ, அது மேலே சொல்லப் போகிறேன், கவனித்துக் கேள்.

यस्त्विन्द्रियाणि मनसा नियम्यारभतेऽर्जुन ।
कर्मेन्द्रियैः कर्मयोगमसक्तः स विशिष्यते ॥ ७॥

யஸ்த்விந்த்ரியாணி மனஸா நியம்யாரபதேऽர்ஜுன ।
கர் மேந்த்ரியை: கர்ம யோக மஸக்த: ஸ விஶிஷ்யதே ॥ 7

ஆசையற்றமையின் உண்மையான லக்ஷணம்

எவன் வெளிப்பார்வைக்கு உலகத்தாரைப் போலவே லௌகிக வ்யபாரங்களைச் செய்துகொண்டு, பரமாத்மானுபவத்தில் நிலைபெற்று அதில் முழுகிக் கிடப்பானோ, அவன் இந்திரியங்களை ஓர்கட்டிலும் வைக்காமலும், விஷயங்களைக் கண்டு பயப்படாமலும், தனக்கு விஹிதகர்மங்கள், எவை யெவை செய்ய நேரிடுமோ, அவையனைத்தையு மநுஷ்டித்தே தீர்வான். அவன் கர்மேந்திரியங்களைக் கட்டில் வைத்தவனாகாமல், அவற்றின் விகாரங்களுக்கு மாத்ரம் வசப்பட்டுப்போகான். அவன் ஆசை யொன்றைப்பாராட்டா தொழிவதால், அறிவுகேடு என்னும் அழுக்கு அவன்மேலொட்டிக்கொள்ளது.

ஜலத்திலிருந்தும் ஜலத்தோடு ஸம்மந்தப்படாதிருக்கும் தாமரை இலைபோல், அவன் விஷயங்களில் பற்றற்றிருப்பான். ஸம்ஸாரத்தில் முழுகிக் கிடக்கும் மற்றவர்களைப்போல் காணப்படுவானே யானாலும், ஜலத்தில் ப்ரதிபிம்பித்துத் தோற்றும் சூரியனைப்போல், அவன் பற்றற்றவனா யிருப்பான். மேலெழுந்த பார்வைக்கு அவன் மற்றவர்களைப் போலவே தோற்றிநின்றாலும், ஊஹித்துப் பார்க்கப்போனால், அவன் மனது எதில் நிலைகொண்டிருக்குமோ, அதைக் கண்டுபிடிக்க முடியாது. இப்படிப்பட்ட குறிகளுள்ளவனாய் எவன் காணப்படுவானோ, அவனே ஆசாபாசத்தினின்று விடுபட்டவ

னென்றும், அவனே உலகில் விசேஷமாய்க் கொண்டாடத்தக்க யோகி என்று அறி.

ஆகையால் நீயும் அப்படிப்பட்ட யோகி ஆகவேண்டுமென்று நான் சொல்கிறேன். உன் மனஸை மாத்ரம் ஆசையற்று நிற்கச்செய்து கொண்டபின், உன் கர்மேந்த்ரியங்கள் விஹிதகர்மங்கள் அனைத்தையும் தவறாமல் செய்து தீரட்டும்.

नियतं कुरु कर्म त्वं कर्म ज्यायो ह्यकर्मणः ।
शरीरयात्रापि च ते न प्रसिद्ध्येदकर्मणः ॥ ८ ॥

நியதம் குரு கர்ம த்வம் கர்ம ஜ்யாயோ ஹ்யகர்மண: ।
ஶரயாத்ராபி ச தே ந ப்ரஸித்தயேத கர்மண: ॥ 8

ஸ்வதர்மாநுஷ்டானத்தால் கர்மநிவ்ருத்தியும் மோக்ஷ பிராப்தியும் கிடைக்கும்

இப்படி கர்மத்தை முற்றவும் துறந்தவனாதல் கூடாமையாயிருக்க, விதித்த கர்மத்தைச் செய்யாதொழிந்து, விலக்கிய கர்மத்தைச் செய்கிறவனாதலில், பயன் என்ன? ஆகையால், நித்யமாயாவது அல்லது ஓர் நிமித்தத்தைப் பற்றியாவது, உனக்கு விஹிதமான கர்மங்களை பலாபிஸந்தி அற்றவனாய் ஆசரித்து நில். இதில், உனக்குத் தெரியாததான ஓர் ரஹஸ்யமும் இருக்கிறது, நீ கவனிக்க வேண்டும். இப்படி விஹிதகர்மத்தை விடாது செய்துவருதலே, கர்மபந்தத்தினின்று விடுதலை செய்து வைக்கிறது. அன்றியும் ஒருவன் தன் அதிகாரத்துக்குத் தக்கபடி ஸ்வதர்மத்தை அநுஷ்டித்துக் கொண்டுவருவதாலேயே, தவறாமல் மோக்ஷம் அடைகிறான்.

यज्ञार्थात्कर्मणोऽन्यत्र लोकोऽयं कर्मबन्धनः ।
तदर्थं कर्म कौन्तेय मुक्तसङ्गः समाचर ॥ ३रु १ ॥

யக்ஞார்தாத் கர்மணோஸ்ந்யத்ர லோகோஸ்யம் கர்மபந்தன: ।
ததர்தம் கர்ம கௌந்தேய க்தஸங்க: ஸமாசர ॥ 9

ஸ்வதர்மாநுஷ்டாநத்தில் செய்யும் கர்மம் பந்தனகாரணமன்று

ஒவ்வொருவனும் தனக்கு விதிக்கப்பட்டுள்ள கர்மத்தை அநுஷ்டிப்பதே, அவன் ஒரு நாளும் தவறாது செய்து

தீரவேண்டிய யஞ்ஞமா யிருப்பதால், அதற்காக அவன் செய்யும் கர்மம் பந்தகாரண மாவதில்லை. ஒருவன் ஸ்வதர்மத்தை எப்போது அநுஷ்டியா தொழிகிறானோ, அப்போதே அவனுக்கு துஷ்கர்மம் ஏற்பட்டு, அவன் ஸம்ஸார பந்தத்துக்கு வசப்பட்டுப்போகிறான். ஸ்வதர்மத்தை விடாது அநுஷ்டித்து நிற்கிறவனுக்கோ, அதுவே அகண்டமான யஞ்ஞம் (பகவதாராதநம்) ஆய், அவன் ஸமீபத்திற்கூட கர்மபந்தம் வராதபடி தடுத்துவைக்கிறது.

இந்த உலகு கர்மத்தாற் கட்டுண்டு, பராதீநமாய் மயங்கிக்கிடப்பது, இவ்வகையான நித்ய யஞ்ஞனத்தை செய்யத்தவறிப்போனதின் பலனா யிருக்கிறது. ப்ரஹ்மதேவன், ஸிருஷ்டியின் துவக்கத்தில், ஜீவர்களுக்கு ஏற்படுத்திவைத்த ஓர் ஏற்பாடு இந்த ஸந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்ல வேண்டியதாய் நேர்கிறதால், அதைச் சொல்வேன் கேள்.

सहयज्ञाः प्रजाः सृष्ट्वा पुरोवाच प्रजापतिः ।
अनेन प्रसविष्यध्वमेष वोऽस्त्विष्टकामधुक् ॥ १० ॥

ஸஹ யக்ஞா: ப்ரஜா: ஸ்ருஷ்ட்வா புரோவாசப்ரஜாபதி:।
அனேன ப்ரஸவிஷ்யத்வ மேஷ வோகுஸ்த் வஷ்டகாமதுக்॥10

ப்ரஹ்மதேவன் ஸ்ருஷ்டியின் முதலில் செய்துவைத்த ஏற்பாடு

அக்காலத்தில் அவன் நித்ய யாகங்களாகிய ஸ்வதர்மங்களோடு கூடவே, எல்லாப் பூதங்களையும் ஸ்ருஷ்டித்தான். ஆனால் அந்த யாகங்கள் ஸூக்ஷ்ம ரூபமுள்ளவைகளா யிருந்ததினால், அவைகளை இப்பூதங்கள் கண்டு கொள்ளவில்லை. அப்போது இந்த ப்ரஜைகள், "தேவா, எங்களுக்கு இங்கே ஆதரவு என்ன", என்று ப்ரஹ்மதேவனைப் பார்த்து வினவ, அவன் பின் வருமாறு சொன்னான். உங்களுடைய ஜாதிவிசேஷங்களுக்குத் தக்கபடி இதோ தோன்றும் ஸ்வதர்மங்களை, நீங்கள் அனுஷ்டிப்பதற்காக ஏற்படுத்தி வைத்திருக்கிறேன். இவைகளை அனுஷ்டிப்பீர்களேயானால், இவைகளே உங்களுடைய அபீஷ்டம் முழுவதையும் செய்து கொடுக்கும். நீங்கள் வேறு வ்ரதங்கள், நியமங்கள், ஒன்றையு மநுஷ்டிக்க வேண்டியதில்லை, சரீரத்தைப் பீடிக்க வேண்டியதில்லை, தீர்த்தயாத்திரைகள் செய்யவேண்டும் என்று தூரதேசங்கள் போய் அலைய வேண்டியதில்லை; யோகங்கள் முதலிய

ஸாதநங்கள், காமனைகளோடு கூடிய ஆராதனங்கள், மந்தியந்திர விதானங்கள், இவை எவற்றையும் நீங்கள் அநுஷ்டியாதொழிய வேண்டும். ஸர்வேச்வரனைத்தவிர, மற்ற தேவதைகளை நீங்கள் ஒருக்காலும் பஜிக்கக்கூடாது.

ஓர் ச்ரமமுன்றி ஓர்பதிவ்ரதை தன் கணவனை ஓம்புவதுபோலும், ஆசையென்பதை பாராட்டாதவர்களாய், ஸ்வதர்மம் என்னும் யஞ்ஞத்தை அநுஷ்டித்து, ஸர்வதேவரனை பஜித்து வாருங்கள். இதைத் தவிர வேறொன்றையும் நீங்கள் ஸேவிக்கக்கூடாது. ஹே ப்ரஜைகளே, நீங்கள் ஸ்வதர்மத்தை பஜித்து நின்றால், அதுவே உங்களுக்குக் காமதேனுவாய் ஏற்பட்டு, உங்களை ஒருக்காலும் கைவிடாது.

देवान्भावयतानेन ते देवा भावयन्तु वः ।
परस्परं भावयन्तः श्रेयः परमवाप्स्यथ ॥ ११ ॥

தேவான் பாவயதாநேன தே தேவா பாவயந்து வः ।
பரஸ்பரம் பாவயந்தः ஸ்ரேயः பரமவாப்ஸ்யத ॥ 11

ப்ரஹ்மதேவன் ப்ரஜைகளுக்கு மேலும் செய்த உபதேசம்

இப்படி நீங்கள் ஸ்வதர்மத்தை யநுஷ்டித்து வந்தால், தேவதைகளனைவரும் இதையே தங்கள் பூஜையாய்கொண்டு, ஸந்தோஷமடைந்தவர்களாய், நீங்கள் கோரிய அர்த்தங்களைச் செய்து கொடுத்து, உங்களுடைய யோகக்ஷேமத்தை நடத்திவைப்பார்கள், என்பதில் ஸந்தேஹமேயில்லை. இப்படி நீங்களும் தேவதைகளும் பரஸ்பரப்ரீதி பாராட்டி நின்றபின், நீங்கள் செய்யத் தொடங்கினதனைத்தும் ஸித்திபெறுவது மன்றியே, நீங்கள் மனஸினால் ஆசைப்பட்டது கூட, உங்களுடைய ப்ரவ்ருத்தியின்றியே நிறைவேறிபோகும். நீங்கள் சொன்னதெல்லாம் பலிப்பதோடுகூட, மஹாருத்தியானது உங்கள் ஆஞ்ஞைக்கு வசப்பட்டதாய், ருதுக்களினரசனான வசந்தருதுவின் வாயிலில் வனச்சிறப்பானது, தன்அழகுகளாகிய பலபாரங்களோடு, காத்துக்கொண்டு நிற்பதுபோலும், உங்கள் உத்தரவை ப்ரார்த்தித்துக்கொண்டு நிற்கும்.

इष्टान्भोगान्हि वो देवा दास्यन्ते यज्ञभाविताः ।
तैर्दत्तानप्रदायैभ्यो यो भुङ्क्ते स्तेन एव सः ॥ १२ ॥

இஷ்டான் போகான் ஹி வோ தேவா தாஸ்யந்தே யக்ஞபாவிதாः।
தைர்தத்தான் ப்ரதாயைப்யோ யோ புங்க்தே ஸ்தேன ஏவ ஸः॥ 12

இதுவுமது

அப்படி ஸர்வஸுகங்களையும் கூட்டிக்கொண்டு, பாக்யம் என்பதே உருவுகொண்டதாய், உங்களைத் தேடிக்கொண்டுவந்து சேரும். ப்ரஜைகளே, இவ்விதமாய் நீங்கள் ஸ்வதர்மாநுஷ்டாநம் ஒன்றின்பேரிலேயே ஆசை வைத்தவர்களாய் நடப்பீர்களானால், ஸமஸ்த போகங்களையும் நிரம்பப் பெற்றவர்களாய், கஷ்டமென்பது முற்றிலு மற்றவர்க ளாவீர்கள்.

பின்பு, இப்படிப்பட்ட ஸ்வதர்மானுஷ்டானத்தால் ஸந்தோஷமடைந்த தேவதைகளால் கொடுக்கப்பட்ட ஸகல ஸம்பத்தையும் கொண்டு, திரும்பவும் ஸ்வதர்மா நுஷ்டானங்களான ஸர்வேச்வரபஜனம், அக்நிஹோத்ரம், தேவதார்ச்சனம், தகுந்தகாலங்களில் ப்ராஹ்மண ஸந்தர்ப்பணை, குரு பூஜை, அதிதியாராதனம், ஸாதுஸத்காரம், இவற்றில் யாதொன்றும் செய்யாமல், ஸம்பந்நர்களென்று கர்வமடைந்து, இந்த்ரியங்களுக்கு வசப்பட்டுப் போய், எவர்கள் சிற்றின்ப போகத்துக்கே ஆசைப்பட்டவர்களாய் விடுவார்களோ, அவர்களுக்கு பெருத்த அபாயம் நேரிட்டு, அவர்களுக்குக் கிடைத்திருக்கும் ஸம்பத்து முழுமையும் நஷ்டமாய்ப் போவதுமன்றி, அது இருக்கும்போதும், அதைப் புசிக்க அவர்களுக்குக் கிடைக்காமற் போகும்.

ஆயுஸு முடிந்து போனவன் தேஹத்தில் சைதந்யம் வாஸம் செய்யாதது போலும், அத்ருஷ்டஹீநனுடைய வீட்டில் லக்ஷ்மீ தங்கியிராமல் விலகிப்போவது போலும், ஸ்வதர்மாநுஷ்டானம் இல்லாமற்போன உடனேயே, ஸர்வஸுகத்திற்கு நிற்க இடமில்லாமற் போய்விடுகிறது. தீபம் அணைந்து போனதும், அதின் ப்ரகாசம் நஷ்டமாய்ப் போவது போலும், ஸ்வதர்மாநுஷ்டான மற்றுப்போன இடத்தில், ஸ்வாதந்திரியமென்பதே இல்லாமற்போகும். ஹே ப்ரஜைகாள்! மேலும் சொல்வேன் கேளுங்கள். இப்படியெல்லா மானபிறகு, ஸ்வதர்மஹீநன், யமதண்டனைக் காளாவான். அவனைத் திருடனென்று சொல்லி, அவனிடத்தில் ஏதாவது புண்யம மிகுந்து நின்றால், அதையும எமன் பிடுங்கிக்கொள்வான்.

பின்பு உலகத்திலுள்ள ஸகல பாபங்களும், இரவில் பிசாசுகள் சுடுகாட்டைத் தேடிக்கொண்டு வந்துசேர்வது

போலும், அவன் எங்கே எங்கே யென்று தேடிவந்து, அவனைச் சூழ்ந்துகொண்டு, அவற்றின் பலங்களாகிய தாபதைந்யங்கள் ஸஹிதமாய், அவனிடத்திற் குடிகொள்ளும், ஸ்வதர்மாநுஷ்டானத்தைத் துறந்தவனுடைய கதி இப்படியெல்லா மாகும்,

ஹேப்ரஜைகளே பின்பு ஓர்கல்பம் முழுவதும் அழுதாலும், இந்த துர்கதி விலகிப்போகாது. ஆகையால் ஸ்வதர்மாநுஷ்டாநத்தை நீங்கள் ஒருக்காலும் தவற விடாமலும், இந்த்ரியங்களை தப்பு விஷயங்களில் ப்ரவர்திக்கும்படி விடாமலும், இருக்கவேண்டும். நீரில் வாழும் ப்ராணிகள் நீரைவிட்டு வெளிப்பட்டவுடனே மரணமடைவதுபோலும், ஸகலப்ராணிகளும் தங்கள் தங்கள் ஸ்வதர்மத்தை கைவிட்டால், ஹாநியை அடைவார்களென்றறிந்து, நீங்களனைவரும் அவரவர்களுக்கு ஏற்பட்டுள்ள ஸ்வதர்மத்தின் ஊக்கம் உள்ளவர்களாய் இருக்கவேண்டும். இவ்வாறு நான்முகன் ப்ரஜைகளுக்கு திரும்பியும், திரும்பியும் புத்தி சொல்லிவைத்தான்.

यज्ञशिष्टाशिनः सन्तो मुच्यन्ते सर्वकिल्बिषैः ।
भुञ्जते ते त्वघं पापा ये पचन्त्यात्मकारणात् ॥ १३ ॥

யக்ஞ ஶிஷ்டா ஶனः ஸந்தோ ச்யந்தே ஸர்வ கில்பிஷைः ।
புஞ்ஜதே தே த்வகம் பாபா யே பசந்த்யாத்ம காரணாத் ॥ 13

ஸ்வதர்மாநுஷ்டானம் அவச்யமென்று பகவதுபதேசம்

ஆகையால் விஹிதகர்மங்களைப் பலோத்தேச மில்லாமற் செய்து, அவற்றை அநுஷ்டிப்பதில் கையில் இருக்கும் பொருளைச் செலவிட்டு, ஸத்குரு, கோத்ரத்தார், அக்நி, இவர்களின் பூஜையை நடத்திவைத்து, தகுந்தகாலங்களில் ப்ராஹ்மணர்களை ஆதரித்து, பர்வகாலம் முதலிய நிமித்தங்கள் ஏற்படும்போது பித்ருக்களை உத்தேசித்து யாகங்கள் செய்து, இப்படி ஸ்வதர்மாநுஸாரமாக ஏற்படும் யஞ்ஞரூபமான கர்மமனைத்தையும், யஞ்ஞேச்வரனுக்கு ஸமர்ப்பணம் செய்து, மிகுந்து நிற்கும் ஹ்ருதசேஷத்தை தன் குடும்பத்தார் அனைவரோடும் சேர்ந்து ஆநந்தமாய்ப் புசிக்குமவன், அம்ருதத்தைப் புசித்தவன் தீராத நோயினின்று விடுதலையடைவது போலும், கல்மஷங்களினின்று விடுபடுகிறான்.

ஸதா தத்வவிசாரம் செய்துகொண்டிருப்பவன் ஒருக்காலம் அறிவுமயக்கத்துக்கு ஆளாகாததுபோலும், யஜ்ஞசேஷத்தைப் புசிப்பவன் தோஷங்களுக்கு ஆளாவதில்லை. ஆகையால் ஸ்வதர்மாநுஷ்டானம் செய்து எது ஸம்பாதிக்கப்படுமோ அதை ஸ்வதர்மாநுஷ்டானத்திலேயே செலவிட்டு, மிகுந்து நிற்பதை ஸுகமாய்ப் புசிக்கவேண்டும். இப்படி நடப்பதை விட்டு, வேறுவிதமாக ஜீவர்கள் நடக்கக்கூடாதென்ற, இந்த ஏற்பாடு தொன்றுதொட்டு அநுஷ்டிக்கப்பட்டு வருகிறதென்று, ஸ்ரீஹரி அர்ஜுனனுக்குச் சொன்னார்.

எவன் தேஹத்தையே ஆத்மாவென்று நினைத்து, விஷயங்களனைத்தும் தான் புசிப்பதற்கே ஏற்பட்டவை என்று பேசி, விஷய போகத்தைக்காட்டிலும் நன்றானது. வேறொன்றிருப்பதாக எண்ணாமல், இவையனைத்தும் ஸர்வேச்வரன் ஆராதனமாகிய யஜ்ஞத்தை நடத்திவைக்க ஏற்பட்ட த்ரவ்யங்கள் என்றறியாது, அகங்காரத்தால் மதிமயக்கங்கொண்டு, இவற்றைப் புசிக்கத்தலைபட்டு, தன் நாக்குக்கு நேர்த்தியாய்த் தோன்றியபடியெல்லாம் சமையலைச் செய்விக்கிறானோ, அந்த பாபி பாபத்தையே பாகம் செய்துவைத்துக்கொண்டு புசிக்கிறான். இந்த ஸம்பத் முழுவதையும் ஹோமத்ரவ்யமாக நினைத்து, அதைக்கொண்டு ஸ்வதர்மாநுஷ்டாந மென்னும் யஜ்ஞத்தை நடத்திவைத்து, அப்புண்யத்தை ஆதிபுருஷனுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும். இதை அறியாமல், அறிவுகேடர்கள் தங்கள் ஸுகத்தையே உத்தேசித்து, அநேக விதமாய் அன்னங்களை பக்குவம் செய்துகொள்கிறார்கள். எதைக்கொண்டு யஜ்ஞங்கள் ஸித்திபெற்று, ஸர்வேச்வானுக்கு ஸந்தோஷம் ஏற்படுமோ, அது ஸாமாந்யமான அந்நம் என்று சொல்லத் தகாது; அது இவ்விச்வம் முழுதும் ஜீவிப்பதற்குக் காரணமான பரப்ரஹ்மமே என்றறி.

अन्नाद्भवन्ति भूतानि पर्जन्यादन्नसम्भवः ।
यज्ञाद्भवति पर्जन्यो यज्ञः कर्मसमुद्भवः ॥ १४ ॥

அன்னாத் பவந்தி பூதானி பர்ஜன்யாத் அன்ன ஸம்பவ: ।
யக்ஞாத் பவதி பர்ஜன்யோ யக்ஞ: கர்ம ஸமுத்பவ: ॥ 14

அந்நம் ப்ரஹ்மமாவதெப்படி

அந்நத்தைக்கொண்டு பூதங்கள் அனைத்தும் வளர்கின்றன. மழை இந்த அந்நத்தை பூமி எங்கும் விளையச்செய்கிறது. அந்த

மழை யஞ்ஞத்தால் உண்டாகிறது. யஞ்ஞம் கர்மங்களால் ஏற்படுகிறது.

कर्म ब्रह्मोद्भवं विद्धि ब्रह्माक्षरसमुद्भवम् ।
तस्मात्सर्वगतं ब्रह्म नित्यं यज्ञे प्रतिष्ठितम् ॥ १५ ॥

கர்ம ப்ரம்ஹோத்பவம் வித்தி ப்ரம்ஹாக்ஷர ஸ த்பவம் ।
தஸ்மாத் ஸர்வகதம் ப்ரம்ஹ நித்யம் யக்ஞே ப்ரதிஷ்டிதம் ॥ 15

இதுவுமது

கர்மத்துக்கு உத்பத்திஸ்தானம் சப்தப்ரஹ்மம் என்று சொல்லப்பட்ட வேதம். அந்த வேதம் அக்ஷரம் என்று சொல்லப்பட்ட பரப்ரஹ்மத்தினின்று உண்டாயிற்று

ஆகையால் சராசரமான விச்வம் அனைத்தும் ப்ரஹ்மத்தால் வ்யாபிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ப்ரஹ்மமே வேதமாய் அமைந்து, அது கர்மமே உருவமாகக்கொண்ட யஞ்ஞத்தில் எப்போதும் நிலைகொண்டிருக்கிறது.

एवं प्रवर्तितं चक्रं नानुवर्तयतीह यः ।
अघायुरिन्द्रियारामो मोघं पार्थ स जीवति ॥ १६ ॥

ஏவம் ப்ரவர்திதம் சக்ரம் நாநுவர்தயதீஹ யः ।
அகாயுரிந்த்ரியாராமோ மோகம் பார்த ஸ ஜீவதி ॥ 16

ஸ்வதர்மாநுஷ்டானத்தைக் கைவிடுகிறவன் அதமன்

இப்படி இந்த யஞ்ஞவிஷயமாய்த் தொன்று தொட்டு ஏற்பட்டு நடந்துவரும் பரம்பரையை, சுருக்கமாய் உனக்கு நான் சொல்லி வைத்தேன். ஆகையால் இந்த ஸ்வதர்மாநுஷ்டானம் என்னும் யாகம் அடிமுதற்கொண்டு நுணிவரைக்கும், ஒவ்வொருவனும் விடாது செய்துதீர வேண்டியதாயிருக்க, அதை எவன் தவறிப்போக விடுவானோ, அவன் இவ்வுலகத்தார் நடுவில் வெறிபிடித்தவனாவான். அவன் இந்த்ரியங்களுக்கு அடிமைப்பட்டுப்போய், பாபங்களனைத்தும் குவிந்து கிடக்கும் குப்பைமேடாய், நல்லது கெட்டதனைத்தையும் தாங்கும் பூமிக்கே தாங்கமுடியாத சுமையாய் இருப்பான். அவன் இவ்வுலகில் பிறந்ததும் வாழ்வதும், அகாலத்தில் ஆகாசத்தில் ஏற்பட்ட மேகக்கூட்டம்போல், ஓர் விதமாயும் பயன்படாது.

எவன் ஸ்வதர்மாநுஷ்டானம் செய்வதில்லையோ, அவன் இவ்வுலகில் வாழ்வது ஆட்டின் கழுத்து முலை போல் நிரர்த்தகமாகும். ஆகையால் பாண்டவா, இந்த ஸ்வதர்மத்தை எவனும், அநுஷ்டியாது விடக்கூடாது. இதையே தனக்குள்ள ஸர்வசக்தியோடும் கொண்டாடி நிற்கவேண்டும்; நன்றாய்ப்பார்; மனுஷ்யதேஹம் என்னவோ கிடைத்தது, எதுசெய்யவேண்டும் என்னும் ஞாநமும், உண்டாயிற்று. பின்பு நமக்கு ஏற்பட்ட ஸ்வதர்மத்தை அநுஷ்டியாது, இந்த ஜந்மம் ஏன் வீணாய்ப்போக வேண்டும். இரும்பைத் தங்கமாகச் செய்து தரும் ஸ்பர்சவேதிபோல், கர்மபத்தனான ஜீவனை முக்தனாய்ச் செய்துவைப்பதற்கு ஸாதநமான ஸ்வதர்மாநுஷ்டான ரூப கர்மயோகத்துக்கு தக்கதான மனுஷ்யதேஹம் கிடைத்தபின், கர்மத்தைச் செய்வது கஷ்டம் என்று சொல்லி, ஸ்வதர்மா நுஷ்டானம் செய்யாமல் விலகுமவன் கொஞ்சமேனும் ஞானமில்லாதவனே ஆவான்.

यस्त्वात्मरतिरेव स्यादात्मतृप्तश्च मानवः ।
आत्मन्येव च सन्तुष्टस्तस्य कार्यं न विद्यते ॥ १७ ॥

யஸ்த்வாத்மரதிரேவ ஸ்யாதாத்மத்ருப்தஶ்ச மாநவ: ।
ஆத்மன்யேவ ச ஸந்துஷ்டஸ் தஸ்ய கார்யம் ந வித்யதே ॥ 17

கர்மத்தின் ஸ்வரூபத்யாகம் ஆத்மாநுபவத்தில் நிலைபெற்றவர்களுக்குத்தான் ஸித்திக்கும்:

தேஹதர்மங்கள் இருந்துகொண்டிருக்கும்போதே, எவன் ஆத்மஸ்வரூபாநுபவத்திலேயே ஆஸக்தி உள்ளவனாய், இடைவிடாது அதில் ஆழ்ந்து கிடப்பானோ, அவன் கர்மபத்தனாகான், ஏனென்றால் அவன் ஆத்மஞானத்தால் ஸந்துஷ்டனாய் க்ருதக்ருத்யனானபின், கர்மங்கள் தாமாகவே அவனைவிட்டு விலகிப்போய்விடும்.

नैव तस्य कृतेनार्थो नाकृतेनेह कश्चन ।
न चास्य सर्वभूतेषु कश्चिदर्थव्यपाश्रयः ॥ १८ ॥

நைவ தஸ்ய க்ருதேநார்தோ நாக்ருதே நேஹ கஶ்சந ।
ந சாஸ்ய ஸர்வ பூதேஷு கஶ்சிதர்த வ்யபாஶ்ரய: ॥ 18

மற்றவர்களுக்குக் கர்மாநுஷ்டாந மிருந்தே தீரும்

அடைய ஆசைப்பட்டது கிடைத்துப்போய் திருப்தி உண்டானபின், ஸாதனுநுஷ்டானம் தானாகவே ஓய்ந்து போவதுபோல, ஆத்மஞானம் அடைந்து ஸந்துஷ்டர்னானவனிடத்தில் கர்மங்கள் அற்றுப்போகின்றன. எதுவரைக்கும அந்தஞானம் ஸித்திக்கவில்லையோ, அதுவரைக்கும் ஸாதநாநுஷ்டானம் செய்தே தீரவேண்டியதாயிருக்கிறது.

तस्मादसक्तः सततं कार्यं कर्म समाचर ।
असक्तो ह्याचरन्कर्म परमाप्नोति पूरुषः ॥ १९ ॥

தஸ்மாதஸக்தः ஸததம் கார்யம் கர்ம ஸமா சர ।
அஸக்தோ ஹ்யாசரன் கர்ம பரமாப்னோதி பூருஷः ॥ 19

ஆகையால் பலாபிஸந்தியில்லாமல் ஸ்வதர்மாநுஷ்டானம் செய்வது அவச்யம் :

ஆகையால் நீ, ஆசைமுற்றிலுமற்றவனாய், உனக்கு உசிதமான ஸ்வதர்மத்தை, ஒருக்காலும் தவறாது, நடத்திக்கொண்டுவா. ஸ்வதர்மத்தை, பலத்தில் ஆசையில்லாமல், அநுஷ்டித்து வருகிறவர்கள், கேவலாத்மஸ்வரூபப்ராப்தி என்னும் பதவியைத் தவறா தடைகிறார்கள்.

कर्मणैव हि संसिद्धिमास्थिता जनकादयः ।
लोकसंग्रहमेवापि सम्पश्यन्कर्तुमर्हसि ॥ २० ॥

கர்மணைவ ஹி ஸம்ஸித்தி மாஸ்திதா ஜனகாதயः ।
லோகஸங்க்ரஹ மேவாபி ஸம் பச்யன் கர்து மர்ஹஸி ॥ 20

ஜநகாதிகள் ஸ்வதர்மாநுஷ்டாநம் செய்தே மோக்ஷ மடைந்தார்கள் :

நன்றாய்ப் பார்; ஜநகாதிகள், விஹித கர்மங்களிலொன்றையும் விடாமலநுஷ்டித்து வந்தே மோக்ஷஸுகத்தை அடைந்தவர்களானார்கள். ஆகையால் நீயும் விஹித கர்மாநுஷ்டானத்திலாஸ்தை உள்ளவனாயிருக்க வேண்டும். ஒருவன், ஸ்வதர்மாநுஷ்டானம் செய்வதால், இதரர்களையும் அவ்வழியில் நடக்கச் செய்துவைக்கிறான்.

இதினால் வேறோர் லாபமுமுண்டு. ஒருவன், தனக்கு விஹிதமான கர்மாநுஷ்டானம் செய்து, அதைப் பார்த்து உலகத்தாரும் அவ்வழியில் நடக்கும்படிச் செய்வதால், அவனுடன் கூட அவனை அநுஸரித்த உலகத்தாரும் ஸம்ஸார பந்தத்தினின்று விடுபடுகிறார்கள். ஆகையால் க்ருதக்ருத்யர்களாய், ஆசை முற்றிலுமற்றுப் போனவர்கள் கூட, உலகத்தார் நன்மையை உத்தேசித்து, கர்மாநுஷ்டானம் செய்தே தீரவேண்டும். குருடனுக்குமுன், வழிகாட்டிக்கொண்டு போகிறவன், நல்ல பார்வையுள்ளவனாய் இருப்பதால், விரைந்து செல்லக் கூடியவனே யானாலும், ஆக்குருடன் எப்படி அடிமேலடிவைத்துச் செல்ல வேண்டுமோ, அப்படியே மெல்ல மெல்ல நடக்கவேண்டியது அவச்யமாய் இருப்பது போலும், ஞானியானவன்கூட கர்மங்களை அநுஷ்டித்து நின்று, அஞ்ஞனுக்கு தர்மம் இன்னதென்று காட்டிக்கொடுக்க வேண்டும். ஞானியானவன் இப்படி கர்மாநுஷ்டானம் செய்யாத பக்ஷத்தில், அஞ்ஞானிக்குத் தான் எந்த வழியில் நடக்கவேண்டுமென்று, எப்படித் தெரியவரும்?

यद्यदाचरति श्रेष्ठस्तत्तदेवेतरो जनः ।
स यत्प्रमाणं कुरुते लोकस्तदनुवर्तते ॥ २१ ॥

யத்யதா சரதி ஶ்ரேஷ்டஸ் தத் ததேவே தரோ ஜனः ।
ஸ யத் ப்ரமாணம் குருதே லோகஸ்ததநு வர்ததே ॥ 21

பெரியவர்களாசரணத்தைப் பார்த்து உலகநடை ஏற்படுகிறது

இவ்வுலகில் பெரியவர்கள் எதை அநுஷ்டிக்கிறார்களோ, அதற்கு தர்மம் என்று பெயரிட்டு, அதையே ஸாமாந்ய ஜனங்களும், அநுஷ்டிக்கிறார்கள். இப்படி உலகவழக்கமொன்றிருப்பதால், கர்மத்தைக் கைவிடாது, மற்றவர்களைக்காட்டிலும் விசேஷமாய் அதைக் கொண்டாடி ஆசரிப்பது சான்றோர்களுக்கு அவச்யமாகிறது.

न मे पार्थास्ति कर्तव्यं त्रिषु लोकेषु किञ्चन ।
नानवाप्तमवाप्तव्यं वर्त एव च कर्मणि ॥ २२ ॥

ந மே பார்தாஸ்தி கர்தவ்யம் த்ரிஷு லோகேஷு கிஞ்சன ।
நாந வாப்த மவாப்தவ்யம் வர்த ஏவ ச கர்மணி ॥ 22

அவ்வுத்தேசத்தால் பகவானும் ஸவகர்மாநுஷ்டானம செய்கிறான்

இவ்விஷயத்தில் மற்றவர்களைப்பற்றிப் பேசவேண்டியது என்ன? என்னையே பார்த்துக்கொள். எந்த ஸங்கடத்தினின்று தப்பித்துக்கொள்வதற்காக, அல்லது கிடைத்திராததான எது எனக்குக் கிடைக்கவேண்டு மென்றாசைப்பட்டு, இப்படி நான் கர்மாசரணம் செய்துவருகிறேனென்று நீ கேட்பாயாகில், சொல்கிறேன் கேள். ஸர்வவிதத்தாலும் பூர்ணன் என்று சொல்வதற்கு, என்னைத்தவிர வேறொருவரும் கிடையாதபடி, என். ஸ்வரூபத்தில் பூர்ணத்வம் அமைந்திருக்கிற தென்று, உனக்கு நன்றாய்த்தெரிந்த விஷயமே. வெகுகாலத்துக்குமுன் இறந்து போனவனான குருபுத்ரனை உயிருடன் திருப்பிக் கொண்டுவந்து கொடுத்த என் பெருமையை நியே பார்த்திருக்கிறாய். அப்படிப் பட்டவனாயிருந்தும், நான் கேவலம் கர்மத்தையே அநுஷ்டித்து வருகிறேன்.

यदि ह्यहं न वर्तेयं जातु कर्मण्यतन्द्रितः ।
मम वर्त्मानुवर्तन्ते मनुष्याः पार्थ सर्वशः ॥ २३ ॥

யதி ஹ்யஹம் ந வர்தேயம் ஜாது கர்மண்ய தந்த்ரித: ।
மம வர்த்மானு வர்தந்தே மனுஷ்யா: பார்த ஸர்வஶ: ॥ 23

இதுவுமது

ஆசையுள்ளவர்கள் எப்படி ஸதா கர்மாசரணம் செய்வார்களோ, அப்படியே அல்லவா நானும் கர்மம் செய்து வருகிறேன்? ஸகலப்ராணிகளும் எனக்கு வசப்பட்டு, நான் செய்கிறபடி செய்கிறார்களாகையால், அவர்கள் வழி தப்பிப்போகாமல் நடக்கவேண்டும் என்ற உத்தேசத்தைக் கொண்டே, நான் இப்படிச் செய்து வருகிறேன்.

उत्सीदेयुरिमे लोका न कुर्यां कर्म चेदहम् ।
सङ्करस्य च कर्ता स्यामुपहन्यामिमाः प्रजाः ॥ २४ ॥

உத்ஸீதே யுரிமே லோகா ந குர்யாம் கர்ம சேதஹம் ।
ஸங்கரஸ்ய ச கர்தாஸ்யா முபஹன்யாமிமா: ப்ரஜா: ॥ 24

பகவானுக்கும் ஞானிகளுக்கும் கர்மானுஷ்டானத்தின் அத்யாவச்ய கதை

நான் உத்தம ஞானி யென்று, ஆத்மஸ்வரூபானு பவத்திலேயே நின்றவனாய், கர்மானுஷ்டானம் செய்யாதிருந்து விட்டால், இந்த ப்ரஜைகள் எல்லாம் நற்கதி அடைவது எப்படி? இவ்வுலகில் இருப்பவர்கள், என்னைப்பார்த்து, தாங்கள் நடக்க வேண்டிய வழியைத் தெரிந்து கொண்டு நடக்கவேண்டியவர்களா யிருக்கிறார்க ளாகையால், நான் கர்மத்தை நடத்திக் காட்டாவிட்டால், உலகம் முழுவதும் துர்கதியை அடையும். ஆகையால் உலகில் விசேஷித்த பெருமையை அடைந்த ஞானிகள், இதரர்களைக் காட்டிலும் மிகுந்த ஊக்கத்துடன், கர்மத்தை விடாதநுஷ்டிக்க வேண்டியிருக்கிறது.

सक्ताः कर्मण्यविद्वांसो यथा कुर्वन्ति भारत ।
कुर्याद्विद्वांस्तथासक्तश्चिकीर्षुर्लोकसंग्रहम् ॥ २५ ॥

ஸக்தா: கர்மண்ய வித்வாம்ஸோ யதா குர்வந்தி பாரத ।
குர்யாத் வித்வாம்ஸ் ததா ஸக்தஷ் சிகீர்ஷுர் லோக ஸங்க்ரஹம் ॥ 25

இதுவுமது

கர்மபலத்தில் ஆசைவைத்தவன் கர்மங்களில் எப்படி முழுகிக்கிடப்பானோ, அப்படியே ஆசையற்றவனும், உலகத்தார் விஹிதகர்மா நுஷ்டானத்தைச் செய்து கடைத்தேற வேண்டுமென்ற இந்த ஏற்பாடு, ஒருக்காலும் தவறிப்போகாமல் உலகில் நடந்தேறிவரவேண்டு மென்பதைக் கருதி, ஸதாகர்மா நுஷ்டானத்தில் நிலைகொள்ள வேண்டும். வழியோடு நடந்துபோய் உலகத்தை அவ்வழியில் நடக்கச் செய்யவேண்டு மாகையால், ஞானியானவன் உலக ஸாமாந்யத்துக்கு ஏற்பட்ட வழியைவிட்டு, வேறு வழியாய் நடந்து, அடையவேண்டிய பதவியை யடைய முடியுமே யானாலும், உலகத்தார் தன்னைப் பார்த்து, அவர்கள் நன்மை அடைவதற்கு அவச்ய மனுஷ்டிக்கவேண்டிய கர்மானுஷ்டானத்தை விட்டுவிடுவார்களே என்று பயந்து, உலகத்துக் கேற்பட்ட நெறியைக் கடந்து நடக்கக்கூடாது.

न बुद्धिभेदं जनयेदज्ञानां कर्मसङ्गिनाम् ।
जोषयेत्सर्वकर्माणि विद्वान्युक्तः समाचरन् ॥ २६ ॥

ந புத்திபேதம் ஜனயேத க்ஞானாம் கர்ம ஸங்கினாம் ।
ஜோஷயேத் ஸர்வ கர்மாணி வித்வான் யுக்த: ஸமாசரன் ॥ 26

இதுவுமது

ஓர் குழந்தை தாய் முலைப்பாலை சாப்பிட்டு ஜரித்துக்கொள்வதற்கே சக்தியற்று கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க,அதற்குக்கடித்துத் தின்னவேண்டியவையான கடினமான உண்டிகளை உண்ணக்கொடுக்கத் தகாததுபோலும், கர்மமே ஸரியாக அநுஷ்டிக்கத் தெரியாதவர்கள் முன், வேடிக்கையாய்க்கூட கர்மத்தை முற்றிலும் துறந்த மார்க்கங்களை அநுஷ்டித்துக் காட்டக்கூடாது. அவர்கள்முன், அவர்களுக்கேற்பட்ட ஸ்வதர்மங்களையே அநுஷ்டித்துக் காட்டவேண்டும்; அவற்றையே கொண்டாடவேண்டும்; இப்படியெல்லாம் செய்து, அவர்களை அவற்றிலேயே மூட்டி வைக்க வேண்டும். ஒருவன் ராஜாவென்றும் ராணி யென்றும் வேஷங்கள் தரித்து, இதரர்கள் அவ்வேஷங்களை உண்மையான ராஜாவென்றும் ராணியென்றும் எண்ணும்படியாய் நடிக்கும்போது, அவன் மனதில் தான் ராஜாவாகிவிட்டதாயும் ராணியாகிவிட்டதாயும் தோன்றாதது போலுமே, ஞானியானவன் உலகத்தாரை வழிப்படுத்தக் கருதி, கர்மத்தை யநுஷ்டித்ததால், அவனுக்குக் கர்மபந்தம் ஏற்படுவதில்லை.

प्रकृते: क्रियमाणानि गुणै: कर्माणि सर्वश: ।
अहङ्कारविमूढात्मा कर्ताहमिति मन्यते ॥ २७ ॥

ப்ரக்ருதே: க்ரிய மாணானி குணை: கர்மாணி ஸர்வஶ: ।
அஹங்கார விமூடாத்மா கர்தாஹமிதி மன்யதே ॥ 27

கர்மம் ப்ரக்ருதியின் குணமாறுபாட்டால் ஏற்படுகிறதென்றறியாமல், அதைத் தான் செய்ததாக பாவிப்பதால், துக்கானுபவம் நேர்கிறது

மூட்டை தூக்கிக் கொண்டு போகிற ஒருவனுடைய மூட்டையை, நம் தலைமேல் வாங்கிக்கொண்டால், நம் கழுத்து இறுத்தப்பட்டுப்போவது போலும், ப்ரக்ருதி தர்மமாகிய குணமாறுபட்டால் ஏற்படும் சுபாசுபகர்மங்களை, அறிவில்லாதவன் தான் செய்ததாக பாவித்து, துக்கமடைகிறான். இப்படி தேஹத்தில் அஹம்புத்தி செய்து,

எங்கும் வியாபித்ததான ஆத்மஸ்வரூபத்தை, எண்சாணளவுள்ள தேஹமாக எண்ணின மூடன் எவனோ, அவனுக்கு இந்த ரஹஸ்யத்தை வெளியிடக் கூடாது. இன்னும் இந்த விஷயத்தை விஸ்தரிக்காமல், இங்கே சொல்ல வேண்டியதாய் ஏற்பட்ட உன்னுடைய ஹிதத்தைச் சொல்கிறேன் கேள்.

तत्त्ववित्तु महाबाहो गुणकर्मविभागयोः ।
गुणा गुणेषु वर्तन्त इति मत्वा न सज्जते ॥ २८॥

தத்த்வ வித்து மஹாபாஹோ குணகர்ம விபாகயோ: ।
குணா குணேஷு வர்தந்த இதி மத்வா ந ஸஜ்ஜதே ॥ 28

ஞானிகளுக்கு ஏன் கர்ம பந்த மேற்படுவதில்லை

கர்மங்களனைத்தும் விளையும் பூமியாகிய ப்ரக்ருதியே தாங்கள், என்ற எண்ணம் தத்வஞானிகளிடத்தில் முற்றிலும இல்லாமையால், அவர்கள் தேஹாபிமானத்தை விட்டொழித்து, ப்ரக்ருதி குணங்களால் ஏற்படும் கர்மங்களின் பற்று அற்றவர்களாய், இந்த தேஹத்தில் கேவலம் ஸாக்ஷியாக இருந்துகொண்டிருப்பார்கள், அவர்கள் சரீரத்திலிருந்தும், பூமியில் ஸகல ப்ராணிகளும் செய்யும் தொழில்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஸூர்யனைப் போல், அந்த சரீரத்தில் ஏற்படும் கர்மங்களால் பாதிக்கப்படார்கள்.

प्रकृतेर्गुणसम्मूढाः सज्जन्ते गुणकर्मसु ।
तानकृत्स्नविदो मन्दान्कृत्स्नविन्न विचालयेत् ॥ २९॥

ப்ரக்ருதேர் குண ஸம்மூடா: ஸஜ்ஜந்தே குணகர்மஸு ।
தானக்ருத்ஸநவிதோ மந்தான் க்ருத்ஸ்நவிந்ந விசாலயேத் ॥ 29

கர்ம பந்தத்துக்குக் காரணம்

குணங்களின் மாறுபாட்டை தன்னிடத்தில் ஏற்றிக்கொண்டு, ப்ரகிருதிக்கு வசப்பட்டவனாய், குண மாறுபாட்டுக்கு வசப்பட்டு வர்த்திக்கும் இந்திரியங்களால் செய்துவைக்கப்பட்ட கர்மங்களை, தன் தலைமேல் ஏறிட்டுக் கொண்டு, எவன் இருக்கிறானோ, அவனிடத்தில் இக்கர்மங்கள் ஒட்டிக்கொள்கின்றன.

मयि सर्वाणि कर्माणि संन्यस्याध्यात्मचेतसा ।
निराशीर्निर्ममो भूत्वा युध्यस्व विगतज्वरः ॥ ३० ॥

மயி ஸர்வாணி கர்மாணி ஸந்ந்யஸ்யாத் யாத்ம சேதஸா: ।
நிராஶீர் நிர்மமோ பூத்வா யுத்யஸ்வ விகதஜ்வர: ॥ 30

ஆகவே பலாபிஸந்தியின்றி ஸ்வதர்மானுஷ்டானம் செய்ய வேண்டுமென்பதே முடிவான வார்த்தை

ஆகவே விஹிதமான கர்மங்களனைத்தையும் ஆசரித்து, அவற்றை ஆத்மஸ்வரூபனான எனக்கர்ப்பணம் செய்துவிட்டு, உன்னுடைய மனஸின் வ்யாபாரத்தை எல்லாம் என்னிடத்தில் நிலைப்பெறச் செய்துகொள். மேலுமிந்த கர்மத்தை நான் செய்தேன் என்றும், இந்த பலத்தை அடைய விரும்பி இந்த கர்மத்தை ஆசரிப்பேன் என்றும், ஒருக்காலும், எண்ணாதொழியவேண்டும்.

நீ சரீராபிமானமற்றவனாய், ஆசைகளை எல்லாம் ஒழித்தவனாய், அந்தந்த காலத்துக்குத் தகுந்தபடி தாமாக வந்தடையும் போகங்களை புசித்துச் செல். இனியாதோர் ஸந்தேகமும் அற்றவனாய், கோதண்டத்தைக் கையில் ஏந்தி, இந்த ரதத்தில் ஏறி, வீரருத்தியை ஆலிங்கனம் செய்துகொண்டு, உலகில் கீர்த்தியை நிலைபெறச் செய்து, ஸ்வதர்மத்தை யாவரும் வெகுமதித்து அநுஷ்டிக்கும்படி செய்து வைத்து, இக்கௌரவர்களை வதைத்து, பூமாதேவியின் பாரத்தை தீர்த்துவை. இனி பார்த்தா, உனக்கு ஓர் ஸந்தேஹமும் வேண்டாம்; இந்த யுத்தத்தை நடத்தி வைப்பதில் தீர்மானமாய் மனஸைச் செலுத்து. இதைத்தவிர வேறோர் பேச்சைப் பேசாதொழி.

ये मे मतमिदं नित्यमनुतिष्ठन्ति मानवाः ।
श्रद्धावन्तोऽनसूयन्तो मुच्यन्ते तेऽपि कर्मभिः ॥ ३१ ॥

யே மே மதமிதம் நித்யமநு திஷ்டந்தி மானவா: ।
ஶ்ரத்தாவந்தோ ந ஸூயந்தோ முச்யந்தே தேஃபி கர்மபி: ॥ 31

இம்மதத்தை அநுஷ்டிக்கிறவர்களே கர்மத்தினின்று விடுபடுவார்கள்

ஒருவிதமான ஆக்ஷேபணைக்கும் இடங்கொடாத இந்த என் கொள்கையை, மிக்க ஆதரவுடன் அங்கீகரித்து, எவர்கள்

அநுஷ்டித்து நிற்பார்களோ, ஹே தநுர்தரா, அவர்கள் எத்தனை தர்மங்களைச் செய்த போதிலும், செய்யதாதவர்களாவார்கள்.

ये त्वेतदभ्यसूयन्तो नानुतिष्ठन्ति मे मतम् ।
सर्वज्ञानविमूढांस्तान्विद्धि नष्टानचेतसः ॥ ३२॥

யே த்வேத தப்ய ஸூயந்தோ நாநுதிஷ்டந்தி மே மதம் ।
ஸர்வ க்ஞான விமூடாம்ஸ்தான் வித்தி நஷ்டா நசேதஸ: ॥ 32

இம்மதத்தை ஒப்புக்கொள்ளதாதவர்களின் துர்கதி

ஆகையால் இந்த என் மதத்தை ஸந்தேஹமின்றி அநுஷ்டித்தே தீர வேண்டியது. அப்படிச் செய்யாமல், ப்ரக்ருதி வசப்பட்டு இந்திரியங்களுக்கு இடம் கொடுத்தவனாய், எவன் இப்படிப்பட்ட என் கொள்கைக்கு உடன்படாமல், அதை விலக்கிவைத்து நடக்கிறானோ, அல்லது வல்வாயானாயிருக்கும் ஓர் தைர்யத்தால், இது ஸாமான்யர்களின் மதமென்று பேசி தூஷித்து பரிஹஸிப்பானோ, அல்லது இது கேவலம் அர்த்தவாதமே தவிர உண்மையைச் சொல்வதல்ல வென்று பேசி நிற்பானோ, அவனை, மோஹம் என்னும் கள்ளை உட்கொண்டு மதிமயக்கம் கொண்டிருக்கிறவனென்றும், விஷயம் என்னும் விஷம் தலைமட்டும் கொண்டு பேய்த்துகிறவன் என்றும், அஞ்ஞானம் என்னும் சேற்றில் முழுகிப்போனவை னென்றும், சொல்ல ஓர் தடையும் இல்லை. ஓர் பிணத்தின் கையில் உத்தம ரத்னத்தை வைத்தால், அதின் பெருமையை அது அறியாதது போலும், ஸூர்யன் உதித்தபின், அதை ஓர் பிறவிக் குருடனுக்குத் தெரிவித்தால், அவ்வார்த்தையை அவன் உண்மையென்று நம்பாததுபோலும், சந்திரன் உதயமானது காக்கைக்கு பயனற்றதாவது போலும், அறிவற்றவனுக்கு உத்தம ஞானம் ஒருவிதமாயும் ருசிக்காது. ஆகையால் இந்த பராமார்த்த விசாரம் செய்வதில் ருசியில்லாதவர்களோடு, ஸம்பாஷனையே செய்யக்கூடாது. அவர்களிடத்தில் இப்படிப்பட்ட உத்தமமான விஷயத்தை வ்யவஹரித்தால், அதை வெகுமதிக்காமல் நிந்தையும் செய்வார்கள். விட்டில் பூச்சி தீபத்தின் ப்ரகாசத்தை ஸஹிக்காது, அதை அணைத்துவிடப் போய், தவறாமல் மரணமடைவது போலும், இவர்கள் விஷயஸுகாநுபவத்தில் இறங்கி, ஸத்சாஸ்திரத்தின் பெருமையை நாசம் செய்யப் புகுந்து, தவறாமல் ஆத்மஹத்தி செய்து கொள்கிறார்கள்.

सदृशं चेष्टते स्वस्याः प्रकृतेर्ज्ञानवानपि ।
प्रकृतिं यान्ति भूतानि निग्रहः किं करिष्यति ॥ ३३ ॥

ஸத்ருஶம் சேஷ்டதே ஸ்வஸ்யாஃ ப்ரக்ருதேர் க்ஞானவானபி।
ப்ரக்ருதிம் யாந்தி பூதானி நிக்ரஹஃ கிம் கரிஷ்யதி ॥ 33

இந்திரியங்களுக்கிடம் கொடுத்தல் எப்போதும்ஹாநிகரம்

ஆகையால் ஞானமுள்ளவன் வேடிக்கை பார்க்க வேண்டுமென்று கூட, இந்திரியங்களுக்கு செல்லம் கொடுக்க மாட்டான். நன்றாய்ப்பார். ஸர்ப்பத்தோடு விளையாடக்கூடுமா? வயாகரத்தோடு பழகலாமா? ஹாலாஹலததைச் சாப்பிட்டு, அதை ஜரித்துக்கொள்ள முடியுமா? விளையாட்டில் தீயைப்பற்றவைத்தால், அது மேன் மேலும் மண்டி, அணைக்கமுடியாததாய்ப் போகாதா? அப்படியே இந்திரியத்திற்கு இடம் கொடுத்தால், அது தடுக்க முடியாத அநர்த்தத்தில் முடியும்.

நம்மை மோசம் செய்து விலகிப்போகும் சரீரத்தைப் போஷிப்பது வ்யர்த்தம்

அன்றியும் இந்த சரீரம் பராதீனமாயிருக்க, அதின் ஸுகத்திற்காக, நாம் அநேக போகங்களை ஏன் தேடிவைக்க வேண்டும். நாம் காலை முதற்கொண்டு மாலை வரைக்கும் அநேக விதமாய்க் கஷ்டப்பட்டு, எல்லா ஸம்பத்துக்களையும் ஸம்பாதித்து, அவற்றைக்கொண்டு நம்முடைய ஸ்வதர்மத்தைக் கூட அநுஷ்டியாமல், இத்தேஹத்தைப் போஷித்துக் காப்பாற்றுவது என்னத்துக்காக?

இது, தான் ஐந்து வஸ்துக்களின் கூட்டமென்று சொல்லிக்கொண்டு, ஐந்து விதமாய்ப் பிரிந்து பொய்விட்டபிறகு, நாம் கஷ்டப்பட்டதின் ப்ரயோஜனத்தை, எங்கே போய், எதைக் கண்டு, கேட்டு வாங்கிக்கொள்ளமுடியுமா? இப்படி மற்றெதையும் லக்ஷ்யத்தில் வைக்காமல் தேஹத்தையே போஷித்தலால், நிச்சயமாய் நஷ்டப்பட்டே போவோம். ஆகையால் இந்த தேஹத்தை போஷிப்பதில், நாம் மனஸைச் செலுத்தக்கூடாது.

इन्द्रियस्येन्द्रियस्यार्थे रागद्वेषौ व्यवस्थितौ ।
तयोर्न वशमागच्छेत्तौ ह्यस्य परिपन्थिनौ ॥ ३४ ॥

இந்த்ரியஸ்யேந்த்ரியஸ்யார்தே ராகத்வேஷௌ வ்யவஸ்திதௌ।
தயோர் ந வஶமாகச் சேத்தௌ ஹ்யஸ்ய பரிபந்திநௌ ॥ 34

இந்திரிய விஷயங்களில் காமக்ரோதங்கள் மறைந்து கிடந்து அநர்த்தத்தை விளைவிக்கும்

இந்திரியங்களின் இஷ்டப்ரகாரம் விஷயங்களை அவற்றிற்கு ஊட்டிவைத்தால், மனஸுக்கு ஸந்தோஷம் ஏற்படுகிறது உண்மையே. ஆனால் எப்படி கூடவே இருந்து கொண்டு, மோசம் செய்வதற்கு ஸமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற திருடனுடைய சேர்கையானது, ஸதா ஜனஸஞ்சாரம் உள்ள பட்டணத்தில் நாம் இருக்கும் வரைக்கும ஸுககரமாயிருந்து, ஜனநடமாட்டம் இல்லாத காடு போய்ச் சேர்ந்தவுடன், அநர்த்தத்தை உண்டாக்கிவைக்குமோ, அப்படியே இவ்விந்திரியங்களால் ஏற்படும ஸுகம் முடிவில் அநர்த்தத்தைச் செய்துவைக்கும். உண்ணும்போது விஷம் மதுரமாயிருந்தாலும், முடிவில் அது ப்ராணனை வாங்காது விடுமா?

தூண்டிமுள் மாம்ஸத்தில் மறைந்து கிடந்திருப்பதை அறியாத மீன், அம்மாம்ஸத்தை விழுங்கவே, உள்ளே இருக்கும் முள் அதின் ப்ராணனை வாங்கிவிடுவது போலும், இந்திரியங்களுக்குள் காமம் மறைந்து கிடந்து, விஷயங்களை ஸேவித்து ஸுகமடைய வேண்டும் என்ற துராசையை உண்டாக்கி வைக்கிறது; அப்படிப்பட்ட துராசைக்கு வசப்பட்டு, விஷயத்தை ஸேவிக்கத் தொடங்கினவுடனே, அத்துராசை க்ரோதம் என்னும் நெருப்பை அவன் சுற்றிலும் மூட்டிவைத்து, ஓர் மானைச் சுற்றிலும் நெருப்பை மூட்டி வைத்து, அதைக் கொல்லவேண்டிய இடத்திற்கு வேடன் அதை இழுத்துக் கொண்டுபோய் வைப்பது போலும், அவனை ஆபத்தில் கொண்டு வந்து வைக்கிறது. ஆகையால் இக்காமக்ரோதங்கள் இரண்டும் விஷயத்தில் மறைந்து கிடந்து, உன்னைக் கொல்ல ஸமயம் பார்த்துக் கொண்டிருக்கும் சத்ருக்கள் என்றறிந்து, இவ்விஷய ஸங்கத்தைச் செய்யாதிருப்பது மன்றியே, அதை மனஸினால் கூட நினையாமல், ஸ்வதர்மாநுஷ்டானம் என்னும் ஜீவனாதாரத்தை, மிக்க விழிப்புள்ளவனாய்ப் பாதுகாத்துவர வேண்டும்.

श्रेयान्स्वधर्मो विगुणः परधर्मात्स्वनुष्ठितात् ।
स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः ॥ ३५ ॥

ஶ்ரேயான் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத் ।
ஸ்வதர்மே நிதனம் ஶ்ரேய: பரதர்மோ பயாவஹ: ॥ 35

பரதர்மம் எவ்வளவுதான் நன்றாய்த் தோற்றினாலும் ஸ்வதர்மத்தையே செய்ய வேண்டும்

நாம் அநுஷ்டிக்க வேண்டிய ஸ்வதர்மம் எத்தனைதான் கடினமாயிருந்தாலும், அதை அநுஷ்டித்துத் தீருவதே ந்யாயம் என்றறி; பிறர்கள் அநுஷ்டிக்க வேண்டிய தர்மம், எத்தனைதான் நன்றாய்த் தோற்றினாலும், தர்மாசரணம் செய்ய வேண்டினவன், தன் தர்மத்தையே அநுஷ்டித்துத் தீரவேண்டும் ஓர் ப்ராஹ்மணன், எவ்வளவுதான் தாரித்ரியத்தால் பீடிக்கப்பட்டிருந்தாலும், தாழ்ந்த குலத்தாரால் பக்வம் செய்துவைக்கப்பட்டிருக்கும் உத்தம அன்னங்களைக் கண்டு, அவற்றைப் புசிக்கத் துணியலாமா? இதை ஆலோசித்துப் பார், இதரர்களுடைய அழகான மாடி வீடுகளைப் பார்த்து, ஓர் ஏழை தன்குச்சு வீட்டை இடித்து விடலாமா? தன்னுடைய மனைவி குரூபியாய் இருந்தாலும், அவளை விலக்கிவைத்து, பரஸ்திரியுடன் வாழலாமா?

எவ்வளவு ஸங்கடங்கள் நேரிட்டாலும், ஆசரிப்பதில் எவ்வளவு கஷ்டம் நேரிடுவதாயிருந்தாலும், ஸ்வதர்மாசரணமொன்றே பரலோகத்தில் ஸுகத்தைக்கொடுக்கும்; சர்க்கரையும் பாலும் திரித்தவையே யானாலும், வயிற்றில் பூச்சிகள் உண்டாய் அவற்றால் வருந்துகிறவன், அந்த நோயை வ்ருத்தி செய்துவைக்கும் அப்பாலையும் சர்க்கரையையும் என்னமாய் உண்ணலாம்? அவன் அவை ஸுகம் கொடுக்குமென்றெண்ணி, அவற்றை உண்ண ஆசைப்பட்டதோன்றே மிகுந்து நிற்குமே, தவிர, அவற்றைச் சாப்பிட்டதால் அவன் ஸுகம் அநுபவியாமல் துக்கத்தையே அநுபவிப்பான். ஆகையால் பிறனுக்கு விதிக்கப்பட்டதாயும், தனக்கு விதிக்கப்படாததாயும் இருக்கும் ஓர் தர்மம், தனக்கு எவ்வளவோ ஸுகமாய்த் தோற்றினாலும், தான் அதை அநுஷ்டிக்கக்கூடாது, என்று நிச்சயித்துக்கொள். ஆகவே, ஸ்வதர்மத்தை அநுஷ்டிப்பதால் உயிரே போவதாயிருந்தாலும், அதின் அநுஷ்டானமே இம்மையிலும் மறுமையிலும் நன்மையைச் செய்து வைக்கும். இப்படி ஸமஸ்த தேவதைகளுக்கும் சிரோ பூஷணமாய் விளங்கும் ஸ்ரீ சாரங்கபாணியானவர் சொல்லி நிற்கும் போது, அர்ஜுனன் பின் வருமாறு சொன்னான். தேவா, ஓர் விண்ணப்பமிருக்கிறது, நீர் சொன்னது முழுவதையும் நான்

கவனித்துக் கேட்டேன். ஆயினும் ஓர் ஸந்தேகம் ஏற்பட்டு, அந்த விஷயமாய் ஓர் ப்ரச்னம் செய்யப்போகிறேன்; கேளீர்.

अर्जुन उवाच ।

अथ केन प्रयुक्तोऽयं पापं चरति पूरुषः ।

अनिच्छन्नपि वार्ष्णेय बलादिव नियोजितः ॥ ३६ ॥

அர்ஜுன உவாச - அர்ஜுனன் சொன்னான்

அத கேன ப்ரயுக்தோ ऽயம் பாபம் சரதி பூருஷ: ।
அநிச்சன்னபி வார்ஷ்ணேய பலாதிவ நியோஜித: ॥ 36

அர்ஜுனனுடைய ப்ரச்னம்

ஹே தேவா, ஞானிகள்கூட தாங்கள் இருக்கவேண்டிய நிலையினின்று தவறி, தங்களுக்குத் தகாதபடி நடக்கிறார்களே; இது எப்படி நேர்கிறது? ஸர்வஜ்ஞர்களாய் நன்மையை அடைய உபாயங்களை அறிந்தவர்கள் கூட, என்ன காரணத்தால் தாங்கள் அநுஷ்டிக்க வேண்டிய தர்மங்களை விட்டு, பரதர்மங்களை அவலம்பிக்கிறார்கள்? பதர் தான்யம் இவ்விரண்டையும் பகுத்தறியத் தெரியாத குருடர்களைப் போலவே, கண்ணுள்ளவர்களும் ஏன் ஒவ்வொரு வேளை தவறிப் போகிறார்கள். ஏற்கனவே தங்களுக்கு ஏற்பட்டிருந்த ஸங்கத்தை ஒழித்து கொண்டவர்களே, திரும்பவும் ஸங்கத்தில் விழுந்து முழுகிப் போகிறார்கள்.

ஜநஸங்கம் கூடாதென்று வனவாஸம் செய்யப்போனவர்கள், திரும்பிவந்து பட்டணங்களிலேயே நிலைகொண்டு வஸிக்கிறார்கள். யாதேனுமோர் பாபத்தில் சிக்கிக்கொள்ளக் கூடாதென்று, அதினின்று தப்பித்துக் கொள்வதற்காக ஸர்வஸ்வத்தையும் கைவிட்டோடிப் போனவர்கள், அதே பாபத்தில் பலாத்காரமாய்த் தள்ளப்படுகிறார்கள். எவ்விஷயத்தைக் கண்டு நம் அந்த ராத்மா மிக்க பயந்து தப்பித்து ஓடிப்போகப்பார்கிறதோ, அவ்விஷயமே நம்மை எங்கே எங்கே என்று தேடிவந்து, நம் அந்தராத்மாவைப் பற்றிக் கொண்டு நிலைபெறுகிறது. இப்படி பலாத்காரம் செய்து வைப்பது ஏதோ ஒன்றிருக்கிறதாய்த் தோற்றுகிறது. அது இன்னதென்று, ஸ்ருஷீகேசனாகிய இந்திரியங்களை ஆட்டி வைக்கிறவனாகிய நீர் எனக்குச் சொல்லவேண்டும்.

श्रीभगवानुवाच ।
काम एष क्रोध एष रजोगुणसमुद्भवः ।
महाशनो महापाप्मा विद्ध्येनमिह वैरिणम् ॥ ३७॥

ஸ்ரீ பகவானுவாச - ஸ்ரீ பகவான் கூறினார்

காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோ குண ஸமுத்பவ: ।
மஹாஶனோ மஹாபாப்மா வித்தயேனமிஹ வைரிணம் ॥ 37

ஸ்ரீ கிருஷ்ணனுடைய ப்ரத்யுத்தரம்

இப்படி அர்ஜுனன் சொன்னதைக் கேட்டு, ஹ்ருதயகமலத்தில் வாஸம் செய்கிறவனும், விஷயத்தில் விருப்பற்றவர்களான யோகிகளால் விருப்பப்பட்ட வனுமான, புருஷோத்தமன் அர்ஜுனனைப் பார்த்து பின்வருமாறு சொன்னார். அர்ஜுனா, உன் ப்ரச்நத்துக்கு உத்தரம் சொல்கிறேன் கேள். க்ருபை கொஞ்சமேனும் இல்லாதவர்களாய், யமனென்றே சொல்லத் தக்கவர்களான, இக்காமக்ரோதர்கள் இப்படிச் செய்துவைக்கிறார்கள்.

இவர்களை, ஞானம் என்னும் நிதி மேல் படுத்துக் கிடக்கும். மஹாஸர்ப்பங்கள் என்றும், விஷயம் என்னும் பள்ளத்தாக்கில் ஸஞ்சரித்துக் கொண்டிருக்கும் புலிகள் என்றும், பஜனை மார்க்கத்திற் செல்கிறவர்களை கொல்லக் காத்துக் கொண்டிருக்கும் புலையர்கள் என்றும், தேஹம் என்னும் கோட்டையின் அடிப்படையில் வைத்துக் கட்டப்பட்டிருக்கும் பெரும் பாறைகள் என்றும், இந்த்ரிய க்ராமத்தில் ஏற்படுத்தி வைக்கப்பட்ட சிறைச்சாலைகள் என்றும், சொல்லத்தகும். பெரிய மோசக்காரர்களென்று இவர்களை உலகத்தார் தூறுவார்கள். இவர்கள் ரஜோகுணத்தினின்று உண்டானவர்கள். தன் ஆஸுரீ ஸம்பத்தனைத்தையும் மாயை இவர்களுக்கு பித்ரார்ஜிதமாய்க் கொடுத்து வைத்திருக்கிறாள். இவர்கள் ரஜஸ்ஸுக்கு பிறந்தவர்களேயானாலும், தமஸென்பவன், இவர்களின்மேல் மிக்க நேசம் பாராட்டி, ப்ரமாதம் மோஹம் என்னும் தன் பதவிகளை இவர்களுக்குக் கொடுத்துவிட்டான். இவர்கள் ப்ராணிகளுக்கு வைரிகளாயேற்பட்டு, அவர்களை துர்கதி யடையும்படிச் செய்து வைக்கிறார்களென்று, இவர்களுகு யமலோகத்தில் மிகுந்த பெருமை ஏற்பட்டிருக்கிறது.

இவர்களுக்குப் பசி எடுத்தால், இந்த விச்வம் முழுவதும் ஒருவாய் நிறையும்படியான ஆகாரமாகாது. இவர்களுடைய வேலைகளனைத்தும் குறைவில்லாதபடி நிறைவேறச் செய்வதற்காக, ஆசையென்பவன் வேலைக்காரனாயமைந்திருக்கிறான். இவர்கள் விரிந்திருக்கும் தங்கள் கையை மூடினால், அந்த முஷ்டிக்குள் மூவுலகங்களும் அகப்பட்டு, அம்முஷ்டியை நிறைக்க முடியாதவையாகும். ப்ராந்தி என்பவள் இவர்களுக்கு அருமைத் தங்கச்சி. இவள் சமைத்து சாப்பிடுகிற விளையாட்டு விளையாடுவதிலேயே, மூவ்வுலகையும் சாப்பிட்டு விடுவாள். இவளுடைய வேலைக்காரச்சி என்னும் ஓர் பதவி அடைந்து, த்ருஷ்ணையென்பவள் உலகில் வாழ்வு பெற்றாள்.

இதெல்லாம் ஓர் பக்கம் நிற்கட்டும். மோஹன் என்பவன் இவர்களை மிக்கக்கொண்டாடுவான். தனக்குத் தோன்றியபடியெல்லாம் உலகை ஆட்டிவைக்கும் அகங்காரன், இவர்களுடன் கொடுக்கல் வாங்கல் செய்வான். ஸத்யத்தின் தோலை உரித்து, அதற்குள் அஸத்யம் என்னும் புல்லைத் திணித்து, ஓர் உருவாகத்தோற்றச் செய்து வைக்கும் தம்பனுடைய அதிகாரத்தை, இந்த உலகில் இவர்கள் நாட்டிவைத்தார்கள். இவர்கள் பதிவ்ரதையான சாந்தியென்பவளுடைய ஆடையை உரிந்து கொண்டு, அவளைத் துரத்திவிட்டு, மாயை என்னும் புலைச்சியைச் சிங்காரித்து வைத்து, அவளைக்கொண்டு ஸாதுக்கூட்டங்களைக் கெடுத்து வைப்பார்கள்.

இவர்கள், விவேகம் என்பவனுக்கு நிற்க இடமில்லாமற் செய்து, வைரக்யம் என்பவனுயிரோ டிருக்கும்போதே, அவன் தோலை உரித்து, உபசமம் என்பவள் மானத்தை யழித்து விடுவார்கள். இவர்கள் ஸந்தோஷவனத்தை வெட்டி நாசம் செய்து, தைர்யம் என்னும் கோட்டையை இடித்து, ஆநந்தத்தின் இளம்செடிகளை வேறோடு பிடுங்கி எறிந்து, ஞானத்தின் முளைகளை நாசம் செய்து, ஸுகம் என்பதின் எழுத்துக்கள் கூட உலகில் இல்லாதபடி அழித்துத் துடைத்துவிட்டு, ஹ்ருதயத்தில் தாபத்ரயம் என்னும் அக்நியை மூட்டி வைக்கிறார்கள். இவர்கள் ஒருவன் சரீரத்தைப் பற்றிக்கொண்ட மாத்ரத்தில், உயிர் நிலையில் புகுந்து கொண்டு, பிறகு அவர்களை துலைத்துவிட வேண்டுமென்று ப்ரஹ்மாதிகள் தேடிப்பார்த்தாலும், அவர்கள் கூட இவர்கள் இருக்குமிடந் தெரிந்துகொள்ளாதபடி பதுங்கிக் கிடப்பார்கள்.

இவர்கள் ஆத்மஸ்வரூபத்தின் பக்கத்தில் நிலைகொண்டு, ஞானத்துக்கு ஸமானமான பெருமை பெற்றிருப்பதால், இவர்கள் அங்கிருந்து புறப்பட்டு, அநர்த்தங்கள் செய்ய ஆரம்பிக்கும்போது, ஒருவரும் இவர்களை அடக்கிவைக்க முடியாமற்போகிறது. இவர்கள் ஜலமில்லாமல் ப்ராணிகளை முழுக்காட்டி, நெருப்பில்லாமல் கொளுத்தி வைத்து, அப்பிராணிகளுக்கு முன்னதாகத் தெரிவிக்காமலே மேல் விழுந்து அவர்களை அமுக்கிக் கொள்கிறார்கள். இவர்கள் ஞானிகளை ஆயுதங்கள் எடுக்காமலே அபஜயப்படுத்தி, கயிறில்லாமலே கட்டிப்போட்டு, முன்னதாகவே பந்தயம் போட்டுக்கொண்டு அவர்களை நாசம் செய்து விடுகிறார்கள். இவர்கள் ப்ராணிகளைச் சேறில்லாமலேயே அழுத்திவைத்து, வலையில்லாமலேயே சிக்கச் செய்து, உள்ளே செறிந்து கிடந்து, எவர்களும் இவர்களுக்கு நிகரில்லை என்று சொல்லும்படியா யிருக்கிறார்கள்.

धूमेनाव्रियते वह्निर्यथादर्शो मलेन च ।
यथोल्बेनावृतो गर्भस्तथा तेनेदमावृतम् ॥ ३८ ॥

தூமே நாவ்ரியதே வன்ஹிர் யதாऽऽ தர்ஶோ மலேன ச।
யதோல்பேநாவ்ருதோ கர்பஸ்ததா தேநேத மாவ்ருதம் ॥ 38

இதுவுமது

எப்படி பாம்பு சந்தன விருக்ஷத்தின் வேரைத் தேடிக் கண்டுபிடித்துக்கொண்டு, அதைச் சுற்றிக்கொண்டு கிடக்குமோ, எப்படி கர்ப்பத்திலிருக்கும் கருவை கருப்பைச் சுற்றிக் கொண்டிருக்குமோ, எப்படி ஸூர்யனை அதின் ப்ரகாசம் சூழ்ந்து கொண்டிருக்குமோ, எப்படி நெருப்பை புகை சூழ்ந்துக்கொண்டிருக்குமோ, எப்படி கண்ணாடியின்மேல் அழுக்கு ஸதா படிந்திருக்குமோ, எப்படி விதையை உமி மூடிக்கொண்டேயிருக்குமோ, அப்படியே ஞானம் என்பதை இக்காமக்ரோதர்களிருவரும் எப்போதும் மறைத்துக்கொண்டே இருக்கிறார்கள்.

आवृतं ज्ञानमेतेन ज्ञानिनो नित्यवैरिणा ।
कामरूपेण कौन्तेय दुष्पूरेणानलेन च ॥ ३९ ॥

ஆவ்ருதம் க்ஞானமேதேன க்ஞானினோ நித்யவைரிணா।
காமரூபேண கௌந்தேய துஷ்பூரேணா னலேன ச ॥ 39

ஞானத்தை மறைத்துக் கொண்டிருக்கும், இக்காமக்ரோதர்களை வெல்வதரிது

ஞானம் என்பது சுத்தமேயானாலும். அதையிவர்கள் மறைத்துக் கொண்டிருப்பதால், அந்த ஞானம் எவ்வளவோ தூரத்தில் விலக்கிக்கிடந்து, ஒருவரும் கிட்டமுடியாததாய் இருந்து விடுகிறது. முதல் முதலில் இவர்களை ஜயித்து, இவர்களுடைய பாதையைத் தீர்த்துக் கொண்டாற்றான், ஞானத்தைக் கைப்பற்ற ஸாத்யமாகும். ஆனால் இவர்களை ஜயிப்பதற்காக, நம்மேல் எவ்வளவு பலத்தை ஏற்றிக்கொள்வோமோ, அவ்வளவு பலமும், நெருப்பை அணைக்கவேண்டும் என்று அதன்மேல் காய்ந்த கட்டைகளை போட்டாற்போலும், இவர்களுக்கே பலம் செய்து வைக்கிறது.

इन्द्रियाणि मनो बुद्धिरस्याधिष्ठानमुच्यते ।
एतैर्विमोहयत्येष ज्ञानमावृत्य देहिनम् ॥ ४०॥

இந்த்ரியாணி மநோ புத்திர் புத்திரஸ்யாதிஷ்டானமுச்யதே ।
ஏதைர் விமோஹ யத்யேஷ க்ஞான மாவ்ருத்ய தேஹினம்॥ 40

காமக்ரோதர்களை வெல்வதற்கு உபாயம்

அப்படியே எந்தெந்த உபாயம் செய்தபோதிலும், அது அத்தனையும் இவர்களையே பலப்படுத்தி வைப்பதால், உலகில் ஹடயோகிகள் அனைவரையும் இவர்கள் ஜயித்து விடுகின்றார்கள். இப்படிப்பட்ட பெருத்த ஸங்கடத்தில் கூட, இவர்களை ஜயிக்க ஓர் உத்தம உபாயம் இருக்கிறது. அதை அநுஷ்டிப்பதற்கு நீ ஸித்தமாயிருக்கும் பக்ஷத்தில், நான் சொல்கிறேன் கேள்.

तस्मात्त्वमिन्द्रियाण्यादौ नियम्य भरतर्षभ ।
पाप्मानं प्रजहि ह्येनं ज्ञानविज्ञाननाशनम् ॥ ४१॥

தஸ்மாத் த்வமிந்த்ரியாண்யாதௌ நியம்ய பரதர்ஷப ।
பாப்மானம் ப்ரஜஹி ஹ்யேனம் க்ஞான விக்ஞான நாஸனம்॥ 41

முதலில் இந்திரியங்களைக் கட்டவேண்டும்

இவர்களின் முதல் கோட்டை இந்திரியங்கள். இவ்விந்திரியங்களை ப்ரவர்த்திக்கும்படி இவர்கள் தூண்டின

மாத்ரத்தில், கர்மங்கள் ஏற்படுகின்றன. ஆகையால் இவ்விந்திரியங்களின் கொழுப்பை முற்றிலும் அடக்கி, இவைகளை வசப்படுத்திவை.

इन्द्रियाणि पराण्याहुरिन्द्रियेभ्यः परं मनः ।
मनसस्तु परा बुद्धिर्यो बुद्धेः परतस्तु सः ॥ ४२॥

இந்த்ரியாணி பராண்யாஹுரிந்த்ரியேப்ய: பரம் மன: ।
மனஸஸ்து பரா புத்திர்யோ புத்தே: பரதஸ்து ஸ: ॥ 42

பின்பு மனஸு க்ட்டுப்பட்டுப்போய், புத்திதெளிந்து, காமக்ரோதர்கள் ஆதாரமற்றுப்போவார்கள்

பின்பு மனஸு இஷ்டப்ரகாரம் ஓடுவது நின்றுபோய், புத்தியும் தன் கட்டினின்று விடுபட்டுப்போய், இந்த பாபிகளுக்குத் தங்க இடமில்லாமல் போய் விடும்.

एवं बुद्धेः परं बुद्ध्वा संस्तभ्यात्मानमात्मना ।
जहि शत्रुं महाबाहो कामरुपं दुरासदम् ॥ ४३॥

ஏவம் புத்தே: பரம் புத்த்வா ஸம் ஸ்தப்யாத்மான மாத்மநா ।
ஜஹி ஶத்ரும் மஹாபாஹோ காமரூபம் துராஸதம் ॥ 43

காமக்ரோதர்கள் நாசமடைந்தபின் ப்ரஹ்மத்தோடு ஐக்யமாதல் ஸித்திக்கும்

இவர்கள் உள்ளத்தினின்று எப்போது தெறிபட்டார்களோ, அப்போதே இவர்கள் இறந்துபோனார்கள், என்றெண்ணுவதற்கு ஸந்தேஹமே இல்லை. ஸூர்ய கிரணங்கள் அடங்கிப்போனவுடனே, அவற்றின் கார்யமான கானநீர்த்தோற்றம் இல்லாமற்போவதுபோலும், ராகத்வேஷங்கள் இறந்துபோனபின் ப்ரஹ்மத்தில் ஐக்யப்பட்டு நிற்றல் என்னும் ஸ்வராஜ்யம் கைக்குக் கிடைத்து, நம்மதாகிய ஸுகத்தை நாம் புஜிக்கப் பெறுவோம். ஜீவெச்வர ஐக்யத்தைச் செய்துவைக்கும், குருசிஷ்ய ஸம்வாத ரூபமான இந்த விஷயம், ஒருக்காலும் உன் மனஸினின்று விலகாதபடி நிலை பெற்றிருக்கவேண்டும்.

மேல்வரும் அத்யாய விஷயத்தில் ச்ரோதாக்களை ப்ரார்த்தித்தல் :

இப்படி ஸகலஸித்தர்களுக்கும் அரசனும் லக்ஷ்மீதேவியின் கணவனுமான தேவாதிதேவன் சொல்லி, திரும்பவும் அந்த அனந்தன் புராதனமான வார்த்தை ஒன்றைச் சொல்ல, அதின் மேல் அர்ஜுனன் ஓர் பிரச்னம் செய்யப்போகிறான். அந்த ஸம்வாதத்தின் பெருமையாலும், அதினின்று புறப்படும் அத்புதமான ரஸப்ரவாஹத்தாலும்; அக்கதையைக் கேட்கக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு உத்தமமான ச்ரவணஸுகம் ஏராளமாய்ப் புசிக்கக் கிடைக்கும். ஆகையால் உங்கள் புத்தியையும் கவனத்தையும் நன்றாய் ஏகாக்ரப்படுத்திக்கொண்டு, ஸ்ரீ ஹரிக்கும், பார்த்தனுக்கும் ஏற்பட்டதான அந்த ஸம்வாதத்தின் ஸுகத்தை நீங்கள் புசிக்க வேண்டும், என்று நிவ்ருத்தி தாஸனான நான் ப்ராத்திக்கலானேன்.

மூன்றாவது அத்யாயம் முற்றிற்று

அத்யாயம் 4

மேல்வரும் கதையின் ரஸபூர்த்தி :

இன்று ச்ரவணேந்திரியத்துக்கு விடிவுகாலம் பிறந்தது. ஆகையால் கீதை என்னும இந்நிதி அதற்குப் புலப்பட்டு, பின்பு உண்மையான வஸ்துவின் ஞானம் பிறந்து, இந்த விச்வமே ஸ்வப்நத்துக்கு ஸரியாய் மதிக்கப்பட்ட தாய்விட்டது. முதலிலேயே இது விவேகத்தைப்பற்றிய ப்ரஸங்கம். அத்துடன்கூட இதை எடுத்துச் சொல்கிறவனோ ஜகத்பூஜ்யனான ஸ்ரீ கிருஷ்ணன். கேட்கிறவனோ உத்தம பக்தனான அர்ஜுனன். பஞ்சம ஸ்வரத்தின் ஆலாபமும், நல்ல வாஸனையும், இனித்த சுவையும், ஒன்று சேர்ந்தாற்போலவும், இந்தக் கதை அதிவினோதமாய் ஏற்பட்டிருக்கிறது. அம்ருதத்தால் கங்கை அமைந்து நமக்குக் கிடைத்தாற்போலும், உத்தமமான ஓர் பாக்யம் நமக்கு நேர்ந்திருக்கிறது.

ச்ரோதாக்களின் தபஸனைத்தும் பலோந்முகம் ஆனதோ என்று சொல்லும்படியாய் இருக்கிறது. கீதை என்று பெயரடைந்த இந்த ஸம்வாதத்தில் அடங்கியிருக்கும் எல்லாவிதமான ஸுகங்களையும் அனுபவிப்பதற்காக, ஸகல இந்திரியங்களும் காதில் வந்து வஸிக்கவேண்டியதாய் ஏற்பட்டிருகிக்றது. இவ்வாறு மேல் சொல்லப்பபோகிற கதையின் ரஸ விசேஷத்தை நான் கொஞ்சம் வர்ணிக்கவே, ச்ரோதாக்கள் இந்த ஸ்வளம்பத்தை ஸஹியாதவர்களாய், "ஏன் ஐயா சொல்லவேண்டிய விஷயத்தை விட்டு, இதரவிஷயங்களை விஸ்தரிக்கிறீர்? ஸ்ரீ கிருஷ்ணார்ஜுனர்கள் நடுவில் நடந்த ஸம்வாதத்தசை சொல்வீர்," என்று என்னை நோக்கிச் சொன்னார்கள். ஆகவே மேல் கதையைச் சொல்லத் தொடங்குவேன் கேளுங்கள்.

ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஸம்பாஷணத்தைக் கேட்கத் தகைமை பெற்ற அர்ஜுனனுடைய பாக்ய விசேஷம் :

பின்பு ஸஞ்சயன் திருதராஷ்டரனைப் பார்த்துக் சொன்னான். அர்ஜுனனுடைய பாக்யத்தை என்னவென்று சொல்வேன்! எந்த விஷயத்தை அந்த ஸ்ரீமந் நாராயணன், தன்னுடைய தகப்பனாகிய வஸுதேவனுக்கும், தன்னுடைய தாயாகிய தேவகிக்கும், தன்னுடைய அண்ணனாகிய பலதேவனுக்கும், சொல்லாமல் ஒளித்து ரஹஸ்யமாக வைத்திருந்தாரோ, அதை அர்ஜுனனுக்குச் சொல்லி நின்றார்.

தன் மார்பிலேயே வாஸம் செய்துகொண்டு, தன்னை விட்டுப்பிரியாது, இருக்கும் லக்ஷ்மீதேவி விஷயத்திற்கூட இவ்வளவு ப்ரேமையை ஸ்ரீ கிருஷ்ணன் பாராட்டினதில்லை. ஸநகாதிகளின் மனோரதங்களை, இவர் பூர்த்தி பண்ணிவைத்தது உண்மையே ஆயினும், அவர்களுக்குக்கூட இவ்வளவு பெருமை ஏற்படவில்லை.

இந்த ஜகதீச்வரனுடைய ப்ரேமை அர்ஜுனன் விஷயத்தில் நிகரற்றபடி ஏற்பட்டிருந்தது. இப்படி நேர்வதற்கு, எவ்வளவு ஸர்வோத்தமமான புண்யத்தை அர்ஜுனன் செய்துவைத்திருந்தானோ! இது எப்படி இருக்கிறது, பாரீர்! உருவற்றவர் ஓர் உருவெடுத்து வந்தார். அவ்வளவு மட்டும் சொன்னால்போதுமா? இவர்களிருவரும் ஒரே புருஷனே ஆகவேண்டுமென்று எனக்குத் தோற்றுகிறது. இல்லாவிட்டால் இவர் இப்படி அர்ஜுனன் விஷயத்தில் ஸர்வ விதமாயும் பாரதந்த்ரியப்பட்டு நிற்பாரா? இவர் யோகிகளுக்குக் கிடைப்பதில்லை. வேதங்கள் இவரை அறியவில்லை. த்யானம் தன் கண்களால் இவரைக் கண்டதில்லை. இப்படிப்பட்டவராய் அனாதியாய் அசைவற்றிருக்கும் இந்த ஆத்மஸ்வரூபீ, அர்ஜுனன் விஷயத்தில் எவ்வளவு கிருபை கூர்ந்தவராயிருக்கிறார்! மூவுலகுக்கும் மூலகாரணமாயும், உண்மையாய் உருவற்றவராயுமிருக்கும் இவர், இந்த அர்ஜுனன் விஷயத்தில் எவ்வளவு ப்ரேமைபாராட்டி ஸுலபராய் இருக்கிறார்!

श्रीभगवानुवाच ।
इमं विवस्वते योगं प्रोक्तवानहमव्ययम् ।
विवस्वान्मनवे प्राह मनुरिक्ष्वाकवेऽब्रवीत् ।।१।।

ஸ்ரீபகவானுவாச -

இமம் விவஸ்வதே யோகம் ப்ரோக்தவானஹ மவ்யயம்।
விவஸ்வான் மனவே ப்ராஹ மனு ரிக்ஷ்வாகவேஸ் ப்ரவீத் ॥ 1

இப்புத்தியோகத்தின் வரலாறு :

பின்பு அர்ஜுனனைப் பார்த்து பகவான் பின் வருமாறு சொன்னார். இந்த புத்தியோகத்தை நான் வெகு காலத்துக்கு முன் விவஸ்வானுக்குச் சொல்லி வைத்தேன். அந்த விவஸ்வான் இது முழுவதையும் மநுவுக்கு நன்றாய்

உரைத்தான். மநு இதைத் தான் அனுஷ்டித்துவந்து, பின்பு இக்ஷ்வாகுவுக்கு உபதேசித்து வைத்தான். இப்படி இந்த குருசிஷ்ய பரம்பரை பூர்வ காலத்தில் ஆரம்பித்து மிக்க விஸ்தாரமடைந்தது.

एवं परम्पराप्राप्तमिमं राजर्षयो विदुः ।
स कालेनेह महता योगो नष्टः परन्तप ।।२।।

ஏவம் பரம்பரா ப்ராப்தமிமம் ராஜர்ஷயோ விது: ।
ஸ காலேநேஹ மஹதா யோகோ நஷ்ட: பரந்தப ।। 2

பின்பு இது உலகில் அநுஷ்டிக்கப்படாதுபோனதின் காரணம் :

பின்பு மற்றுமநேக ராஜருஷிகள் இந்த யோகத்தை அறிந்துகொண்டு அனுஷ்டித்து வந்தார்கள். ஆனால் அவர்களுக்குப்பின் அனுஷ்டிப்பவர்கள் இல்லாமல், இந்த யோகம் மறைந்து போய்விட்டது. பிராணிகள் ஆசை மேலிட்டவர்களாய், தேஹாபிமானத்தை மிக்கப் பாராட்டி, ஆத்மஸ்வரூபத்தை அறியாதவர்களாய்ப் போனார்கள். அவர்கள், தங்களாஸ்திக்ய புத்தியை தப்புவழியிற் செலுத்தி, தேஹம் முதலான உபாதிகளின் மேல் மிக்க ப்ரேமை பாராட்டி, விஷயஸுகத்தைத்தவிர வேறொன்றிருப்பதாக அறியாமற் போனார்கள். அனைவரும் நக்நமாயிருக்கும் ஓர் ஊரில், உத்தமமான வஸ்த்திரத்தை எவர்கள் வேண்டுவார்கள்? ஜாத்யந்தனுக்கு ஸூர்யனரல் என்ன பயன்? செவிடர்கள் ஸபையில் ஸங்கீதத்துக்கு என்ன மதிப்புண்டு? திருடர்களுக்கு சந்திரன் மேல் ப்ரீதி உண்டாகுமா? சந்திரோதயத்துக்கு முன்னேயே தூங்கிப்போகும் காக்கைகள், சந்திரிகையினுடைய ஸுகத்தை எப்படியறியும்? அப்படியே வைராக்யம் என்னும் ஊரின் எல்லையை தூர நின்றுகூட பார்க்காதவர்களும், விவேகத்தின் பேச்சையே கேட்டறியாதவர்களும், ஈச்வரனான என் ஸ்வரூபத்தை எப்படி கண்டறிவார்கள்? எந்தக் காரணத்தைக் கொண்டு அறிவின்மை விருத்தியடைந்ததோ தெரியாது. ஆனால் அறிவின்மை மாத்ரம் விஸ்தாரம் அடைந்து, வெகு காலங்கள் வீணாய்போய், இந்த யோகம் இவ்வுலகில் வழங்காது மறைந்துபோய்விட்டது.

स एवायं मया तेऽद्य योगः प्रोक्तः पुरातनः ।
भक्तोऽसि मे सखा चेति रहस्यं ह्येतदुत्तमम् ।।३।।

ஸ ஏவாயம் மயா தேऽத்ய யோக: ப்ரோக்த: புராதன: ।
பக்தோऽஸி மே ஸகா சேதி ரஹஸ்யம் ஹ்யேததுத்தமம் ॥ 3

இதைத் திரும்பவும் வெளிப்படுத்தினதற்குக் காரணம் :

அந்த யோகத்தையே நான் இப்போது உனக்குச் சொன்னேன். இதில் கொஞ்சமேனும் ஸந்தேஹப்பட வேண்டுவதில்லை. இது என்னுடைய ஹிருதயத்தில் ஒளித்துவைத்திருந்த ரஹஸ்யமே ஆனாலும், நீ எனக்குமிக்க வேண்டியவனாகையால், உனக்கிதை வெளியிட்டேன். ப்ரேமையனைத்தையும் திரட்டி யுருக்கிவார்த்த ஓர் பொம்மையாயும், பக்திக்கும தோழமைக்கும உயிர்நிலையாயும், கூடி உறவாடுவதற்குத் தகைமை படைத்தவனாயும், நீ எனக்கு ஏற்பட்டதால், இது யுத்தம் செய்யவேண்டிய காலமாயிருந்தும், மேல்விழும் அம்புகளைக்கூட பொருத்துக்கொண்டு அவற்றால் மனக்கலவர முண்டாகாமல் கொஞ்சகாலம் ஸாவதானமாய் இருந்து, முதன் முதலிலேயே உனக்கு இந்த யோக முறையை உபதேசித்து, உன்னுடைய அஞ்ஞானத்தைப் போக்க வேண்டியது அவச்ய மாயிற்று.

अर्जुन उवाच ।
अपरं भवतो जन्म परं जन्म विवस्वत: ।
कथमेतद्विजानीयां त्वमादौ प्रोक्तवानिति ।। ४ ।।

அர்ஜுன உவாச -

அபரம் பவதோ ஜன்ம பரம் ஜன்ம விவஸ்வத: ।
கத மேதத் த்விஜானீயாம் த்வமாதௌ ப்ரோக்தவானிதி ॥ 4

இவ்விஷயத்தில் அர்ஜுனனுடைய ப்ரச்னம் :

அப்போது அர்ஜுனன் பின்வருமாறு சொன்னான். தாயானவள் தன் குழந்தை விஷயத்தில் பிரேமை பாராட்டுவதில் ஆச்சர்யம என்ன இருக்கிறது, ஸ்ரீ கிருஷ்ணா? நீ ஸம்ஸார வழியில் நடந்து ச்ரமப்பட்டுப் போனவர்களுக்கு நிழலாய், அவர்கள் ச்ரமத்தைத் தீர்த்து வைக்கிறீர், (நிவாஸவ்ருக்ஷஸ் ஸாதூநாமா பந்நாநாம் பராகதி:, என்றபடி) கதியற்ற ஜீவர்களுக்கு தாயாய் இருக்கறீர். உம்முடைய கிருபையே எங்களைப் பெற்றுவைத்த தென்பதில் ஸந்தேகமில்லை.

இப்படிப் பெற்றுவைத்த பல குழந்தைகளிலொன்று நொண்டியாய் ஏற்படுகிறது. பின்பு அக்குழந்தை பிறந்தது முதற்கொண்டு, அதின் ஆயஸு முடிந்துபோகும் வரைக்கும், அதற்காகவேண்டிய ஸகல கார்யங்களையும் நடத்திவைக்க வேண்டிய கஷ்டத்தை, பெற்றவளே தாங்கித் தீரவேண்டியிருக்கிறது. இப்படி உம்முன்பாக உம்முடைய கருணையின் பெருமையை எடுத்துச் சொல்ல, எனக்கு லஜ்ஜை தோற்றுகிறது. ஆகையால் இப்படி எல்லாம் உம்மை புகழ்வதை நிறுத்திவிட்டு, நான் உம்மைப் பார்த்து ஓர் ப்ரச்னம் செய்கிறேன். அதற்குக் காது கொடுத்து, நான் பேசுவதில் ஏதேனும் தப்பித மேற்பட்டபோதிலும், கோபியாதிருக்க வேண்டும். ஹே அநந்தா, நீர் சற்று முந்தி "நான் இந்த யோகத்தை விவஸ்வானுக்குச் சொல்லி வைத்தேன்", என்று ஓர் வார்த்தை சொன்னீரே. அது என் மனஸுக்குக் கொஞ்சம்கூட ஸமீசீனமாய்த் (முன்பின் பொருந்தினதாய்) தோற்றவில்லை. விவஸ்வான் என்றால் யார்? அவன் எவனுக்குப் பிறந்தவன்? அவனுடைய சரித்திரம் என்ன? இவை எல்லாம் நம்முடைய பெரியவர்களுக்கே தெரியாதவை ஆயிற்றே. அப்படியிருக்க, நீர் அந்த விவஸ்வானுக்கு உபதேசித்தீர் என்பதை நாங்கள் விச்வஸிப்பது எப்படி?

நான்கேள்விப்பட்டவரைக்கும் விவஸ்வான் எத்தனையோ காலத்துக்குமுன் இருந்தவன். நீரோ இக்காலத்தில் உண்டானவர். ஆகையாற்றான் இவ்விஷயத்தை என் மனஸு ஒப்புக் கொள்ளவில்லை. அப்படி இருப்பதோடு கூட உம்முடைய சரித்திரமோ, நாங்கள் தெளிவாக அறியமுடியாதபடி மிக்க ஆச்சர்யகரமானது; ஆகையால் உம்மை கேட்டறிந்து கொள்ளாமேலேயே, இது அனைத்தும் அஸங்கதம் (பொருத்தமில்லாதது) என்று, சொல்வதற்கும் என் மனஸு துணியவில்லை. ஆகவே நீர் சொன்னது ஸரிதான் என்று, என் மனஸு ஒத்துக் கொள்ளும் வண்ணம், நீர் ஸூர்யனுக்கு உபதேசித்தது எவ்விதம் என்று, விளங்கச் சொல்லிவைக்க வேண்டும்.

श्रीभगवानुवाच ।
बहूनि मे व्यतीतानि जन्मानि तव चार्जुन ।
तान्यहं वेद सर्वाणि न त्वं वेत्थ परन्तप ।।५।।

ஸ்ரீபகவானுவாச -

பஹூனி மே வ்யதீதானி ஜன்மானி தவ சார்ஜுன ।
தான்யஹம் வேத ஸர்வாணி ந த்வம் வேத்த பரந்தப ॥ 5

ஜீவேச்வரர்கள் நித்யமாருக்கிறவர்கள், ஆனால் ஜீவன் தான் முன்னிருந்ததை அறியான் :

அதற்கு ஸ்ரீ கிருஷ்ணன் பின்வருமாறு சொன்னார். ஹே அர்ஜுனா, அந்த விவஸ்வான் எப்போது இருந்தானோ, அப்போது நாமிருவரும் இருக்கவில்லை என்று, நீ எண்ணக்கூடாது. எனக்கும் உனக்கும் எத்தனையோ ஜந்மங்கள் ஏற்பட்டுக் கழிந்தன. ஆனால் உன்னுடைய பூர்வஜந்மங்களை நீ யறியாய். நான் எந்தெந்த காலங்களில் எந்தெந்த அவதாரங்கள் செய்தேனோ, அவை யனைத்தும், என் ஞாபகத்தில் இருக்கின்றன.

अजोऽपि सन्नव्ययात्मा भूतानामीश्वरोऽपि सन् ।
प्रकृतिं स्वामधिष्ठाय सम्भवाम्यात्ममायया ।।६।।

அஜோ(அ)பி ஸந்நவ்யயாத்மா பூதானாமீச்வரோ(அ)பி ஸன் ।
ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்மமாயயா ।। 6

பிறப்பிறப்பற்ற ஈச்வரனுக்கு ஜந்மம், ப்ரக்ருதிஸம்பந்தத்தால் ஏற்படுகிறது:

நான் பிறப்பற்றவனேயானாலும், நான் ப்ரக்ருதி ஸம்பந்தத்தைக் கொண்டு பிறந்தவனாகிறேன். என்னுடைய அவ்யக்தத்வம் கெட்டுப்போகாமலே, நான் உண்டாவதாகவும் இறப்பதாகவும், ஓர் தோற்றம் காணப்படும். நான் ஒரு உருவெடுத்து உண்டாவதும், இருப்பதும், நிராகாரனாகிய என்னிடத்தில் மாயையின் கார்யமாய்த் தோற்றும் தோற்றமே தவிர, உண்மையானவை அல்ல. என்னுடைய ஸ்வாதந்த்ரியத்துக்கு, ஒருவிதமாயும் ஹாநி ஏற்படாமலே, நான் கர்மத்துக்கு வசப்பட்டவனாய் காணப்படுவேன். அதுகூட, இதரர்களின் அஞ்ஞானத்தால் ஏற்படுமே யன்றி, ஞானியாயிருக்கிறவனுக்கு நானப்படிக் காணப்படமாட்டேன். ஒன்று இரண்டாகத் தோற்றுகிறது, கண்ணாடியின் சேர்க்கையினாலல்லவா? அது இல்லாமற்போய், வஸ்து ஒன்றே இருக்கும்போது, இரண்டு என்ற தோற்றம் எப்படி ஏற்படும்? அப்படியே நிராகாரனாகிய நான், எப்போது ஓர் கார்யத்தை ஸாதிக்கவேண்டி ப்ரக்ருதி ஸம்பந்தத்தை ஏற்றிகொள்வேனோ, அப்போது ஒருருக்கொண்டவனாய் நடித்துக் காட்டுவேன்.

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ।।७।।

யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி பாரத ।
அப்யுத் தாந மதர்மஸ்ய ததா ऽऽத்மானம் ஸ்ருஜாம்யஹம் ॥ 7

பகவதவதாரத்திற்கு கோர் காரணம் தர்ம ஸம்ஸ்தாபனம்:

தர்மம் அழிந்துபோகாமல், அதை நான் யுகங்கள் தோறும், ரக்ஷித்துவைக்கவேண்டுமென்று, ஓர் பழமையான ஏற்பாடு ஏற்பட்டிருப்பதால், எப்போதெல்லாம் அதர்மமானது தர்மத்தைக் கீழே அழுத்திவிட்டு, தான் தலையெடுக்கிறதோ, அப்போதெல்லாம் நான், என்னுடைய அஜத்வத்தை தூர கட்டிவைத்து விட்டு, என்னுடைய அவ்யக்ததையை மறந்து போகும்படியாய் ஏற்படுகிறது.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय सम्भवामि युगे युगे ।।८।।

பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய ச துஷ்க்ருதாம் ।
தர்ம ஸம்ஸ்தாபநார்தாய ஸம்பவாமி யுகே யுகே ॥ 8

ஸாதுஸம்ரக்ஷணம் மற்றோர் காரணம் :

அவ்வேளையில் என்னைச் சேர்ந்தவர்களைக் காப்பாற்றுவதற்காக, நான் ஓர் உருவெடுத்து அவதாரம் செய்து, அஞ்ஞானமென்னும் இருட்டை விழுங்கிவிட்டு, அதர்மத்தின் கோட்டைகளை அழித்து, தோஷங்களின் பெயர்களே உலகில் வழங்காதபடி அவற்றை நாசம் செய்துவைத்து, ஸஜ்ஜனர்களின் கொடியை நாட்டி எங்கும் பறக்கச்செய்து, அவர்களைக்கொண்டு உலகத்தை ஸுகிக்கச் செய்து, தைத்யர்களின் வம்சங்களை நாசம்செய்து, சாதுக்களை உலகத்தார் கொண்டாடும்படி செய்து, தர்மத்துக்கும் நீதிக்கும் மணம் செய்து வைத்தவற்றை உலகில் வாழச்செய்து அவிவேகத்தால் உலகத்தில் ஏற்பட்டிருக்கும் அழுக்கைத் துடைத்து, விவேகம் என்னும் தீபத்தை ஏற்றி வைக்கிறேன். பின்பு யோகிகளுக்கு நித்யமாய் ஆனந்தானுபவம் ஏற்பட்டு, ஆத்மாநந்தானுபவம் உலகெல்லாம் நிறைந்து, தர்மமே வாழ்வுபெற்று, பக்தர்களிடத்தில் ஸாத்வீக குணம் வருத்தியடைந்து, பாபங்களின் பெருமை முற்றிலும் குலைந்துபோய், புண்யத்திற்கு துர்தசை விலகி நல்லபோது விடியும். என்னுடைய மூர்த்தி உலகத்தார் காணுமாறு

வெளிப்படும்போது, இவை எல்லாம் உலகில் ஏற்படும். இப்படிப்பட்ட கார்யங்களைச் செய்து வைப்பதற்காக, யுகங்கள் தோறும் இவ்வுலகில் அவதரிக்கிறேன், என்று ஞானிகள் அறிவார்கள்.

जन्म कर्म च मे दिव्यमेवं यो वेत्ति तत्त्वतः ।
त्यक्त्वा देहं पुनर्जन्म नैति मामेति सोऽर्जुन ।।९।।

தர்ம கர்ம ச மே திவ்யமேவம் யோ வேத்தி தத் த்வத: ।
த்யக்த்வா தேஹம் புனர்ஜன்ம நைதி மாமேதி ஸோர்ஜுன ॥ 9

பகவதவதார ரஹஸ்யத்தை உண்மையாய் அறிவதின் பலன் ப்ரஹ்மைக்யபாவம் :

என்னுடைய அஜத்வத்துக்கு ஓர்கேடுமின்றியே நான் பிறக்கிறதும், - என் கர்த்ருத்வத்துக்கு ஓர் கர்மமும் செய்யாதிருக்கும் ஸ்வபாவத்துக்கு ஓர்கேடுமின்றியே, நான் கர்மங்கள் செய்கிறதும், இப்படி விகாரங்களற்ற என்இருப்பை, எவன் அறிகிறானோ, அவன் ஸர்வவிதத்தாலும் முக்தனாகிறான். அவன், நடந்து போவதாக இதரர்களுக்குத் தோற்றினபோதிலும், நடப்பதில்லை. அவன் தேஹத்தில் இருக்கும்போதே, தேஹத்தின் ஸம்பந்த மற்றவனாயிருந்து, தேஹத்தை விட்டபிறகு, என்னுடைய ஸ்வரூபத்தில் ஐக்யப்பட்டுப்போவான்.

वीतरागभयक्रोधा मन्मया मामुपाश्रिताः ।
बहवो ज्ञानतपसा पूता मद्भावमागताः ।।१०।।

வீதராக பயக்ரோதா மன்மயா மாமுபாஸ்ரிதா: ।
பஹவோ க்ஞானதபஸா பூதா மத்பாவ மாகதா: ॥ 10

ப்ரஹ்மைக்ய பாவமடைவதற்குமுன், அவனிடத்தில் காணப்படும் பெருமைகள் :

அவன், தேஹத்தோடு இருக்கும் போதே, ஆசையற்றவனாய், க்ரோதம் இருக்குமிடத்தைத் திரும்பிப் பார்க்காதவனாய், முன்நடந்துபோன விஷயத்தைப் பற்றியும், மேலே வரப்போவதைப் பற்றியும், ஒருவிதமான சிந்தனையும் செய்யாதவனாய், எப்போதும் என் ஸ்வரூபானுபவத்தால் நிறைந்தவனாய், எப்போதும் என்னுடைய ஸேவையைக்

கொண்டே ஜீவிக்கிறவனாய், ஆத்மஞ்ஞான ப்ராப்தியால் ஸந்தோஷமடைந்து ஆசையற்றவனாய் தபஸின் தேஜஸால் நிறைந்தவனாய், ஞானத்துக்கெல்லாம் ஒரே வாஸஸ்தானமாய், தீர்த்தங்களுக்கு பவித்ரதை உண்டாக்கிவைக்கும் தீர்த்தம் என்னும்படி, பரம சுத்தனாய், இருப்பான். பின்பு அவன் நானாய், நான் அவனாய், எனக்கும அவனுக்கும் நடுவில் ஓர் தடுப்புமில்லாமல், ஒன்றுபட்டுப்போகிறோம். பித்தளைக்குள்ள களிம்பும் வாஸனையும் போய் விட்டபின், ஸ்வர்ணம் என்று வேறொன்றிருக்கிறதென் றெண்ணி, அதைத் தேடிப்போகவேண்டிய அவச்யம் இல்லாமல் போவது போலும், யமநியமங்களின் அனுஷ்டானத்தால் சுத்தமாகச் செய்யப்பட்டு, த்போஞாநங்களால் காந்தியடைந்து, அவனே நான் ஆய்விடுகிறான். என்பதில் ஒருவிதமான ஸந்தேஹமும் வேண்டாம்.

ये यथा मां प्रपद्यन्ते तांस्तथैव भजाम्यहम् ।
मम वर्त्मानुवर्तन्ते मनुष्याः पार्थ सर्वशः ।।११।।

யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம் ஸ்ததைவ பஜாம்யஹம் ।
மம வர்த்மாநுவர்தந்தே மனுஷ்யாः பார்த ஸர்வஶः ॥ 11

அஞ்ஞாநிகள்ப்ரஹ்மஸ்வரூபத்தில் கல்பித்துக்கொள்ளும் நாநாத்வம் :

இவ்விதமின்றி, மனிதர்கள் எந்தெந்த விதமாய் என்னை பாவித்து என்னை பஜித்து நிற்கிறார்களோ, அவர்களை நான்அப்படியே அடைந்து பஜித்து நிற்கிறேன். மனிதர்கள் அனைவரும் ஸ்வாபாவிகமாகவே என்னையே பஜித்து நிற்கிறார்கள். ஆனால் அவர்கள், ஞானமின்மையால்அறிவு கெட்டவர்களாய், ஒரே விதமான என் ஸ்வரூபத்தை அநேக விதப்பட்டதாய் நினைக்கிறார்கள். இப்படி பேதரஹிதமான வஸ்துவில், பேதத்தை கல்பித்து, தத்வ விசாரம் செய்து காணமுடியாதவனாயும் பெயரற்றவனாயும் இருக்கும் எனக்கு, தேவன் என்றும், தேவீ என்றும், பற்பல விதமாய்ப் பெயரிட்டு, எங்கும் நிறைந்து, எக்காலும் ஒரே விதப்பட்டிருக்கும் என் ஸ்வரூபத்தில், மதிமயக்கத்தால் பல பாகங்களைக் கல்பித்து, அவற்றில் ஒன்று உத்தமமென்றும், ஒன்று அதமமென்றும், பாவிக்கிறார்கள்.

काङ्क्षन्तः कर्मणां सिद्धिं यजन्त इह देवताः ।
क्षिप्रं हि मानुषे लोके सिद्धिर्भवति कर्मजा ।।१२।।

காங்க்ஷந்த: கர்மணாம் ஸித்திம் யஜந்த இஹ தேவதா: ।
க்ஷிப்ரம் ஹி மானுஷே லோகே ஸித்திர் பவதி கர்மஜா ॥ 12

பலநானாத்வம் உபாஸனா நானாத்வத்தால் ஏற்படுகிறது :

பின்பு மனஸில் அநேகவிதப்பட்ட ஆசைகள் பூண்டு, அவற்றிற்குத்தக்கப்படி, வேறு வேறு உபசாரங்களைக்கொண்டு, அந்தந்த பலத்தைக் கொடுக்கத்தக்க சக்தி உள்ளவையாய் அவர்கள் மதித்த வேறு வேறு தேவதைகளைக் கொண்டாடுகிறார்கள். இப்படிச் செய்து, தாங்களெதெதை விரும்பினார்களோ, அததை அவர்கள் அடைகிறார்கள். ஆனால் அது அவரவர்கள் அநுஷ்டித்த கர்மத்தின் பலனே தவிற வேறல்ல. ஆகையால் இந்த மர்த்யலோகத்தில், கொடுக்கல் வாங்கல் அனைத்தையும் செய்து வைப்பது, கர்மமே தவிற வேறொன்றுமில்லை, என்பதில் யாதொரு ஸந்தேஹமுமில்லை. பூமியில் எதை விதைக்கிறோமோ, அதைத் தவிர்த்து வெறொன்றும் முளைக்காதது போலும், கண்ணாடியில் எந்த முகம் பார்க்கிறதோ, அதே திருப்பப் பார்க்கப்படுகிறது போலும், ஓர் பாறையின் அடியில் நின்று, எந்த சப்தத்தை யுச்சரிக்கிறோமோ, அதுவே பிரதித்வனியாகக் கேட்கப்படுகிறது போலும், இப்படிப்பட்ட பலவித பஜனைகளுக்கும் நான் ஸாக்ஷியாக நிற்கிறேனே தவிர, திரும்பி பலனைக் கொடுக்குமதுவோ அவரவர்கள் மனோபாவமே ஆகும்.

चातुर्वर्ण्यं मया सृष्टं गुणकर्मविभागशः ।
तस्य कर्तारमपि मां विद्ध्यकर्तारमव्ययम् ॥१३॥

சாதுர்வர்ணயம் மயா ஸ்ருஷ்டம் குண கர்மவிபாகஶ: ।
தஸ்ய கர்தாரமபி மாம் வித்தய கர்தாரமவ்யயம் ॥ 13

ப்ரக்ருதி குணதாரதம்யத்தால் கர்மவித்யாஸங்கள் உண்டாய், வர்ணவித்யாஸம் ஏற்படுகிறது :

உலகிலுள்ள பிராணிகளனைவரும் ஒரே சைதந்ய ஸ்வரூபத்தால் வியாபிக்கப்பட்டவர்களாயிருந்தும், அவரவர்களுடைய ப்ரக்ருதியில் த்ரிகுணங்களின் தாரதம்யம் வேறுபட்டு, அக்காரணத்தால் அவரவர்கள் கர்மங்களும் வேறுபாடடைந்திருந்தமையால், அவரவர்கள் குணகர்ம

வித்யாஸாநுஸாரமாக, நான்கு வர்ணங்கள் (ஜாதிகள்) என்னால் ஏற்படுத்தி வைக்கப்பட்டன. ஆகையால், பார்த்தா, இந்த வர்ணபேத ஏற்பாட்டுக்கு நான் காரணமல்ல.

न मां कर्माणि लिम्पन्ति न मे कर्मफले स्पृहा ।
इति मां योऽभिजानाति कर्मभिर्न स बध्यते ।।१४।।

ந மாம் கர்மாணி லிம்பந்தி ந மே கர்மபலே ஸ்ப்ருஹா।
இதி மாம் யோऽபிஜாநாதி கர்மபிர் ந ஸ பத்யதே ॥ 14

இப்படி வர்ணவித்யாஸத்துக்கு, ஈச்வரன் காரணமல்ல வென்றறிவதின் பலன் முக்தி :

இப்படி ஏற்பட்ட வர்ணவித்யாஸத்தைச் செய்துவைத்தவன் நானே யானாலும், அதற்கு மூலகாரணம் நானல்ல வென்று, எவனறிகிறானோ, அவன் முக்தனாகிறான்.

एवं ज्ञात्वा कृतं कर्म पूर्वैरपि मुमुक्षुभिः ।
कुरु कर्मैव तस्मात्त्वं पूर्वैः पूर्वतरं कृतम् ।।१५।।

ஏவம் க்ஞாத்வா க்ருதம் கர்ம பூர்வைரபி முமுக்ஷுபி:।
குரு கர்மைவ தஸ்மாத் த்வம் பூர்வை: பூர்வதரம் க்ருதம் ॥ 15

முன்னோர்கள் இதையறிந்து, விஹித கர்மானுஷ்டானம் செய்து, மோக்ஷமடைந்தார்கள் :

பூர்வகாலத்திலிருந்த முமுக்ஷுக்கள், என்னை இப்படிப்பட்டவனென்று அறிந்து, விஹித கர்மங்களனைத்தையும் செய்து வந்தார்கள், அர்ஜுனா. வறுபட்டுப்போன விதை எப்படி முளைக்காமல் போகிறதோ, இந்த கர்மயோகத்தின் விதி தவறாமல் அனுஷ்டிக்கப்பட்ட கர்மம், கர்மபந்தத்தை உண்டாக்கி வைக்காமல், அதுவே மோக்ஷஹேதுவாகிறது.

किं कर्म किमकर्मेति कवयोऽप्यत्र मोहिताः ।
तत्ते कर्म प्रवक्ष्यामि यज्ज्ञात्वा मोक्ष्यसेऽशुभात् ।।१६।।

கிம் கர்ம கிம கர்மேதி கவயோऽப்யத்ர மோஹிதா:।
தத்தே கர்ம ப்ரவக்ஷ்யாமி யஜ்க்ஞாத்வா மோக்ஷ்யஸேऽஸுபாத் ॥ 16

கர்மா கர்மங்களின் விபாகம் செய்வதில் ஞாநிகள் கூட தவறிப் போகிறார்கள் :

இந்த ஸந்தர்ப்பத்தில், நீ தெரிந்துகொள்ளவேண்டியது, ஒன்று இருக்கிறது, அர்ஜுனா; அது யாதெனில் இது கர்மமென்றும், இது அகர்மமென்றும், பகுத்தறிவது ஞானிகளுக்கு கூட ஸாத்யமாவதில்லை. கர்மம் என்றால் என்ன? அகர்மம் என்றால் என்ன? என்று விசாரித்துப் பார்க்கும்போது மிக்கத் தெரிந்தவர்கள்கூட, ஸம்சயப்பட்டுப் போகிறார்கள். கெட்ட நாணயங்கள், ஸரியான நாணயங்கள் போல் தோற்றி, பரீக்ஷகர்களைக்கூட, ஒவ்வொருவேளை ஏமாற்றி விடுவதுபோலும், ப்ரஹ்மஸ்ருஷ்டிக்கு நிகராய் மற்றோர் ஸ்ருஷ்டி செய்துவைக்க வல்லவர்கள்கூட, நைஷ்கர்ம்யம் அடைய விரும்பி, அது இன்னதென்று அறியாமல், பந்தத்தை உண்டாக்கி வைக்கும் கர்மத்திலேயே விழுந்து, சிக்கிப் போகிறார்கள், இப்படியிருக்க அறிவற்றவர்களுடைய கதி இன்னதென்று சொல்ல அவச்யமில்லை. ஆழ்ந்த பார்வையுள்ளவர்கள் கூட இதில் தவறிப்போவதால், இதை யுனக்கு விளங்க, நான் சொல்லப் போகிறேன், கவனித்துக் கேள்.

कर्मणो ह्यपि बोद्धव्यं बोद्धव्यं च विकर्मणः ।
अकर्मणश्च बोद्धव्यं गहना कर्मणो गतिः ।।१७।।

கர்மணோ ஹ்யபி போத்தவ்யம் போத்தவ்யம் ச விகர்மண: ।
அகர்ணமஶ்ச போத்தவ்யம் கஹனா கர்மணோ கதி: ॥ 17

கர்மத்தின் ஸ்வரூபஞாநத்தின் ஆவச்ய கதை (அவச்யமாயிருக்கும் தன்மை) :

ஆகவே கர்மம் என்றால், எதினால் நித்யமான இந்த ஆத்மஸ்வரூபத்தில், அநித்யமான விச்வம் என்னும் தோற்றம் ஏற்படுகிறதோ, அதுவேயாகும். அப்படிப்பட்ட இந்த கர்மத்தின் ஸ்வரூபத்தை நன்றாய் அறிய வேண்டியிருக்கிறது. பின்பு வர்ணாச்ரமோசிதமாய், பிராணிகளுக்கு வேறு வேறாய் வகுத்து வைக்கப்பட்டிருக்கும் கர்மங்கள் எவையென்றும், எப்படி அவை அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்றும், அவற்றின் பலன் யாதென்றும், தெரிந்து கொள்ள வேண்டியது அவச்யம். அதற்குமேல் நிஷித்தம் என்ற கர்மம் எதுவோ, அதையும் யதாவத்தாய் அறிந்து கொள்ள வேண்டும். இவை தெரிந்துபோனதாலேயே, ஒருவன் கர்ம பந்தத்தில் சிக்கிப் போகாமல் தப்பித்துக் கொள்ளலாம் இது தெரியாமற்

போனதால், கர்மம் உலகத்தாரை எல்லாம் தன் வசப்படுத்திக் கொண்டிருக்கிறது. இப்படி கர்மத்தின் ஸாமர்த்யம் மிக்கப் பெரிது. ஆனால் இந்த விஷயத்தை இவ்வளவோடு நிறுத்திவிட்டு, கர்மத்தினின்று விடுபட்டவனுடைய குறிகள் இன்னவையென்று சொல்வேன் கேள்.

कर्मण्यकर्म यः पश्येदकर्मणि च कर्म यः ।
स बुद्धिमान्मनुष्येषु स युक्तः कृत्स्नकर्मकृत् ॥१८॥

கர்மண்ய கர்ம யः பஶ்யேத கர்மணி ச கர்ம யः ।
ஸ புத்திமான் மனுஷ்யேஷு ஸ யுக்தः க்ருத்ஸ்ன கர்மக்ருத் ॥ 18

கர்மங்கள் செய்தும், கர்த்ருத்வாபிமானம், (கர்மங்களைத் தான் செய்து வைத்ததாக எண்ணம்) பாராட்டாதிருப்பான் :

அவன் ஸகல கர்மங்களையும் செய்துகொண்டே இருந்து, தான்அவற்றை செய்யாததாகப் பாவித்து, அவற்றின் பலனில் ஆசை அற்றவனாய், - தன் ஆத்மஸ்வரூபம்தவிர வேறொன்றிருக்கிறது என்று எண்ணாதவனாய், - ஆகவே, தனக்குச் செய்யத்தக்கதாய் ஒன்றுமில்லை என்றெண்ணினவனாய் இவ்விதம் உத்தமரீதியாக நைஷ்கர்ம்யம் பாராட்டி நிற்பதால் அவன் எல்லாக் கர்மங்களையும் அனுஷ்டித்துக் கொண்டிருப்பவனாய் காணப்பட்ட போதிலும், உண்மையான ஞானியாயிருப்பான்.

ஜலத்தின் கரையில் நின்று கொண்டு, ஜலத்தில் ப்ரதிபிம்பித்துத் தோற்றும் தன்னுருவைப் பார்க்குமொருவன், தான் ஜலத்தில் ஸம்பந்தப்படாதிருப்பதை ஸந்தேஹமற உணர்ந்திருப்பது போலும், - அல்லது ஒரு படகில் ஏறி ஒருவன் ஓர்நதியில் வேகமாய்ப் போய்க்கொண்டிருக்கும்போது, கரையிலிருக்கும் மரங்கள் அவனுக்கு ஓடுவதுபோல் தோன்றி, திரும்பவும் கவனித்துப்பார்க்க அவைகள் ஓடவே இல்லையென்று அவனுக்குத் தெரியவருவதுபோலும், - அன்றியும், ஸூர்யன் கிழக்கு திக்கில் உதித்து மேற்குதிக்குச்சென்று அஸ்தமிப்பதுபோல் தோற்றினாலும், உண்மையாய் அவன் சலன மற்றிருப்பது போலும், தர்ன்கர்மங்களைச் செய்து நிற்பதென்பது உண்மையில்லாத தோற்றமே என்றறிந்து, கர்மமற்றவனாய், ஜலத்திற்குள் பிரதிபிம்பித்துத் தோற்றும் ஸூர்யன் ஜலத்தில் முழுகியிராதது போலும், அவன் கர்மங்களில் அழுந்திக் கிடக்கும் ஓர்

மனுஷ்யனாகத் தோற்றின போதிலும், மனுஷ்யனாகான். அவன் பார்க்காமலே விச்வமனைத்தையும் பார்த்தவனாய், ஒன்றும் செய்யாமலே உலகவ்பாபாரம் முழுதும் செய்துவைத்தவனாய், ஒன்றையும் புசியாமலே போக்யவர்க்க மனைத்தையும் புசித்தவனாய், ஒரே இடத்தில் அசைவின்றிருந்தே, எங்கும் சென்றவனாய், (இப்படித் தனித்தனியாய் சொல்வானேன்?) விச்வமே ஆய்ப்போனவனாய், இருப்பான்.

यस्य सर्वे समारम्भाः कामसङ्कल्पवर्जिताः ।
ज्ञानाग्निदग्धकर्माणं तमाहुः पण्डितं बुधाः ।।१९।।

யஸ்ய ஸர்வே ஸமாரம்பாः காம ஸங்கல்ப வர்ஜிதாः ।
க்ஞாநாக்நி தக்த கர்மாணம் தமாஹுः பண்டிதம் புதாः ॥ 19

ஸங்கல்பமின்றி கர்மங்களைச்செய்து, அவற்றை ஞாநத்தால், எரித்துவிட்டவனா யிருப்பான் :

அவன் கர்மங்கள் விஷயத்தில் அலுப்புப்பாராட்டதவனாய், அத்துடன் கர்மபலத்தில் ஆசையற்றவனாய் இந்த கர்மத்தை நான் செய்வேனென்றும், செய்ய ஆரம்பித்த இதை முடிவுபெறச் செய்வேன் என்றும், மனஸில் ஸங்கல்பம் அற்றவனாய், கர்மங்களை ஞானாக்நியில் ஹோமம் செய்து முற்றிலும் எரித்து விட்டவனாய், மனுஷ்ய உருவு பூண்ட பரப்ரஹ்மமாயிருப்பான்.

त्यक्त्वा कर्मफलासङ्गं नित्यतृप्तो निराश्रयः ।
कर्मण्यभिप्रवृत्तोऽपि नैव किञ्चित्करोति सः ।।२०।।

த்யக்த்வா கர்மபலா ஸங்கம் நித்யத்ருப்தோ நிராஶ்ரயः ।
கர்மண்யபி ப்ரவ்ருத்தோ(அ)பி நைவ கிஞ்சித் கரோதி ஸः ॥ 20

சரீராபிமானமற்று, அவன் ஆனந்தானுபவம் செய்து கொண்டு அதினின்று அலுப்படையான் :

அவன் சரீரத்தில் பற்றற்றவனாய், கர்மங்களால் பலன் அடைய வேண்டும் என்ற ஆசையற்றவனாய், எப்போதும் ஆனந்தயுக்தனாய், ஸந்தோஷத்தின் நடுவீட்டில் உட்கார்ந்துகொண்டு, ஆத்மபோதம் என்றும் விருந்தை புசித்துக் கொண்டு, புசித்தது போதும் என்று நினைக்காதவனாய், அதிலேயே நிலைகொண்டிருப்பான்.

निराशीर्यतचित्तात्मा त्यक्तसर्वपरिग्रहः ।
शारीरं केवलं कर्म कुर्वन्नाप्नोति किल्बिषम् ।। २१ ।।
यदृच्छालाभसन्तुष्टो द्वन्द्वातीतो विमत्सरः ।
समः सिद्धावसिद्धौ च कृत्वापि न निबध्यते ।। २२ ।।

நிராஶீர் யதசித்தாத்மா த்யக்த ஸர்வ பரிக்ரஹ: ।
ஶாரீரம் கேவலம் கர்ம குர்வந்நாப்நோதி கில்பிஷம் ॥ 21

யத்ருச்சா லாப ஸந்துஷ்டோ த்வந்த்வாதீதோ விமத்ஸர: ।
ஸம: ஸித்தாவஸித்தௌ ச க்ருத்வாபி ந நிபத்யதே ॥ 22

ஆத்மாநந்தானுபவத்தில் மக்னனாய், ராகத்வேஷங்களுக்கும் அஹங்காரமமகாரங்களுமற்றவனாய், விச்வமனைத்தும் தானே என்று பாவித்து, குணகர்மாதீதனாய் இருப்பான் :

அவன், ஆத்ம ஸ்வரூபத்தைத் தர்சித்து, அதற்கு ஆசையையும் அஹங்காரத்தையும் திருஷ்டி சுற்றிப் போட்டுவிட்டு, ஆத்மஸ்வரூபாநந்தானுபவ ஸுகத்தில் மக்னனாய், எந்தெந்த காலத்தில் எதெது தானாய் வந்து சேருமோ, அததைப்புசித்து ஸந்தோஷப்பட்டவனாய், தன்னவர் புறத்தவர் என்னும் வித்யாஸம் அற்றிருப்பான். அவன் கண்ணால் பார்ப்பது, காதால் கேட்பது, காலால் நடப்பது, வாயாற் சொல்வது, அவனுடைய மற்ற இந்திரிய சேஷ்டைகளனைத்தும் சுருக்கிச் சொல்ல, விச்வமெல்லாம் - தர்னேயாய் நின்று, தன்னைத்தவிர வேறொன்றும் இவ்விச்வத்தில் இல்லாததாகப் பாவித்து நிற்பான். இப்படி ஆனபின், அவனை பாதிக்கத் தக்கதாய் எந்த கர்மம் எப்படிப்பட்டதாயிருக்கும்? மத்ஸரம் என்பது உத்பத்தி ஆவதற்கு வேண்டியதாகிய மற்றொன்று என்பதே, அவனுக்கு அற்றுப்போயிருக்க, அவன் நிர்மத்ஸரனாயிருப்பான் என்று சொல்லவும் வேண்டுமா? ஆகையால் ஸர்வவிதமாயும், அவன் ஸம்ஸாரபந்தத்தினின்று விடுபட்டவனாய் இருப்பான். அவன், கர்மங்கள் செய்து கொண்டிருந்தும், கர்மமற்றவனாய், குணங்களோடு கூடியிருந்தும் குணங்களைத் தாண்டி நிற்கும பரப்ரஹ்மமே என்று நிஸ்ஸந்தேஹமாய்ச் சொல்லத்தக்க வனாயிருப்பான்.

गतसङ्गस्य मुक्तस्य ज्ञानावस्थितचेतसः ।
यज्ञायाचरतः कर्म समग्रं प्रविलीयते ।। २३ ।।

கதஸங்கஸ்ய முக்தஸ்ய க்ஞானாவஸ்தித சேதஸ: ।
யக்ஞாயாசரத: கர்ம ஸமக்ரம் ப்ரவிலீயதே ॥ 23

அவன் செய்யும் கர்மங்களனைத்தும் ஆத்ம ஸ்வரூபத்தில் முற்றிலும் லயம் அடையும் :

அவன் தேஹத்தோடு கூடி யிருந்தாலும், கேவல சைதந்யஸ்வரூபமே என்றெண்ணும் படியாயிருப்பான். அவனை பரப்ரஹ்மத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவன் எவ்விதமாயும் தாழ்ந்தவனாய்த் தோன்றமாட்டான். இப்படியாய்ப் போனபிறகும், ஓர் வினோதமாய், அவன் யஞ்ஞாதி கர்மங்களை ஆசரிப்பதுமுண்டு; ஆனால் அவை செய்யப்படும் போதே, முற்றிலும் லயமடைந்துபோகும். காலமற்ற காலத்தில் ஆகாசத்தில் தோன்றிய மேகமானது மழை பெய்யாமல் உடனேயே இருந்த இடம் தெரியாமல் மறைந்து போவதுபோலும், எல்லா விதிகளையும் அனுஸரித்து, ஸகல ஸாமக்ரியைகளையும் கொண்டு, தான் செய்துமுடிக்கும் விஹிதகர்மங்களை, ஆத்மஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறல்ல வென்றுஅவன் எண்ணியிருப்பதால், அவை அனைத்தும் ஆத்ம ஸ்வரூபத்தில் லயம் அடைந்துபோகின்றன.

ब्रह्मार्पणं ब्रह्म हविर्ब्रह्माग्नौ ब्रह्मणा हुतम् ।
ब्रह्मैव तेन गन्तव्यं ब्रह्मकर्मसमाधिना ।। २४ ।।

ப்ரம்ஹார்பணம்ப்ரம்ஹஹவிர்ப்ரம்ஹாக்நௌப்ரம்ஹணாஹுதம்।
ப்ரம்ஹைவ தேன கந்தவ்யம் ப்ரம்ஹ கர்ம ஸமாதிநா ॥ 24

அவன் யஞ்ஞ ஸம்பந்தமான அனைத்தையும் பரஹ்மமாய் பாவித்தல் என்னும் யோகாக்நிஹோத்ரம் ஸதா செய்துகொண்டிருப்பான் :

ஸதா ஆத்ம ஸ்வரூபத்தில் த்ருஷ்டியுள்ளவனான அவன், ஏதேனுமோர் யஞ்ஞம் செய்தால், இது யஞ்ஞம் என்ற கர்மம், இதைச் செய்கிறவன் நான், இதினால் ஆராதிக்கப்படும் தெய்வம் இது, என்ற புத்திமாறுபாடில்லாதவனாய், அந்த யஞ்ஞத்தில் ஏற்படும் ஹவிஸ், மந்திரங்கள், முதலிய அனைத்தும், ஆத்மஸ்வரூபமே என்று பாவித்திருப்பான். இப்படி கர்மமும் ப்ரஹ்மமும் ஒன்றே என்ற புத்தி ஏற்பட்டபின், கர்மமே நிஷ்கர்மம் ஆய்விடுகிறது. இவ்வாறு அவனுக்கு அவிவேகம் என்னும் பால்யதசை கழிந்துபோய்,

அவன் விரக்தி என்பவளை மணம் புரிந்து, ப்ரஹ்மத்தையும் தானுள்பட விச்வமனைத்தையும ஒன்றாகவே பாவிக்கும் யோகம் என்னும் அக்நிஹோத்ரத்தை, இடைவிடாது அனுஷ்டித்துக் கொண்டிருப்பான்.

दैवमेवापरे यज्ञं योगिनः पर्युपासते ।
ब्रह्माग्नावपरे यज्ञं यज्ञेनैवोपजुह्वति ।।२५।।

தைவமேவாபரே யக்ஞம் யோகினः பர்யுபாஸதே ।
ப்ரம்ஹாக்நாவபரே யக்ஞம் யக்ஞே நைவோப ஜுஹ்வதி ॥ 25

இந்த யோகாக்நிஹோத்ரிகளில், சிலர் தைவாக்நி ஹோத்ரிகள், சிலர் ப்ரஹ்மாக்நிஹோத்ரிகள் :

இப்படி யோகாக்நிஹோத்ரத்தை ராத்ரி பகல் ஓயாது நடத்திவருகிறவர்களில் சிலர், ஆத்ம ப்ராப்திக் காசைப்பட்டு, குருவாக்யம் என்னும நெருப்பில், அவித்யையோடு மனஸையும் சேர்த்து, ஹோமம்செய்து வருவார்கள். இந்த யோகாக்நிஹோத்ரிகள் செய்யும் யஞ்ஞத்துக்கு தைவயஞ்ஞமென்று பெயர். அவர்கள் தங்களுடைய தேஹ ஸம்ரக்ஷணம், தைவயோகத்தால் நடந்துகொண்டிருக்கின்ற தென்று பாவித்து, அந்த விஷயத்தில் ஒருவித ப்ரயத்நமும் செய்யாதவர்களாய், ஏதோ புண்யவசத்தால், இப்படி மஹாயோகிகளாய் இருப்பார்கள். இனி வேறு சிலர், ப்ரஹ்மாக்நிஹோத்ரிகள் என்று பெயரடைந்து, யஞ்ஞங்களைக்கொண்டு யஞ்ஞபுருஷனாகிய ஸர்வேச்வரனை ஆராதித்து நிற்பார்கள். அவர்களைப்பற்றி மேலே சொல்லப்போகிறேன், கவனித்துக் கேள்.

श्रोत्रादीनीन्द्रियाण्यन्ये संयमाग्निषु जुह्वति ।
शब्दादीन्विषयानन्य इन्द्रियाग्निषु जुह्वति ।।२६।।

ஸ்ரோத்ராதீன் இந்த்ரியாண்யன்யே ஸம்யமாக்நிஷு ஜுஹ்வதி।
ஸப்தாதீன் விஷயாநன்ய இந்த்ரியாக்னிஷு ஜுஹ்வதி ॥ 26

ப்ரஹ்மாக்நி ஹோத்ரிகளில் சிலர், ஸம்யமாக்நிஹோத்ரிகள், சிலரிந்திரியாக்நி ஹோத்ரிகள் :

இவர்களுக்குள் சிலர் ஸம்யமாக்நிஹோத்ரிகள் என்று பெயர் பெற்று, இந்த்ரியங்களை, விஷயங்களினின்று திருப்பி

அந்தர்முகப்படுத்திவைத்தல் என்னும் அக்நியை மூட்டிவைத்துக்கொண்டு, முவ்வகைப்பட்ட யுக்திகளையே, (வஜ்ராஸந முத்ரை, ஜாலந்தர முத்ரை, ஒட்டியாண முத்ரை என்று மூன்று) அல்லது பரிமிதமான; ஆஹார விஹார சேஷ்டைகள், நித்ரை, போதம் அல்லது காயிக வாசிக மானஸிக யுக்திகள் மூன்று மந்த்ரங்களாகக் கொண்டு, இந்த்ரியங்கள் என்னும் சுத்தத்ரவ்யங்களை ஆஹுதியாக இடுகிறார்கள். சிலர் வைராக்யம் என்னும ஸூர்யன் உதிக்கப்பெற்று, ஸம்யமம் என்னும் யாகசாலையில், இந்த்ரியங்கள் என்னும் அக்நிகளை மூட்டிவைத்து, அவற்றில் விரக்தி என்னும் ஜ்வாலையை எழச்செய்து, விகாரங்கள் என்னும் கட்டைகளை மாட்டி, அவ்வக்நிகளை ப்ரஜ்வலிக்கச் செய்து, ஐந்து இந்த்ரியங்களாகிய ஐந்து அக்நிகுண்டங்களிலும் ஆசையென்னும் புகை இல்லாமற் செய்து, குருவாக்ய மென்னும் விதியை ஸரியாய் அநுஷ்டித்து, விஷயங்களை மட்டற்றபடி இந்த்ரியங்கள் என்னும அக்நிகுண்டங்களில் ஹோமம் செய்து நிற்பார்கள்.

सर्वाणीन्द्रियकर्माणि प्राणकर्माणि चापरे ।
आत्मसंयमयोगाग्नौ जुह्वति ज्ञानदीपिते ।। २७ ।।

ஸர்வாணீந்த்ரிய கர்மாணி ப்ராணகர்மாணி சாபரே ।
ஆத்ம ஸம்யம யோகாக்நௌ ஜுஹ்வதி க்ஞானதீபிதே ॥ 27

ஆத்மஸம்யம்யோகாக்நி ஹோத்ரிகள் :

சிலர் இவ்வகைத்த யஞ்ஞங்கள் செய்து, தங்கள் தோஷங்களைப் போக்கிக் கொள்கிறார்கள். மற்றும் சிலர் மனஸு என்பதை அரணி என்னும் கீழ்கட்டையாயும், விவேகம் என்பதை மந்தா என்னும் மேற்கட்டையாயும், தைர்யத்தை மேலிருந்து தழுத்தும் பாரமாகவும் செய்துகொண்டு, சாந்தி என்னும் கயிற்றினால் சுற்றி, குருவாக்யாநுஸந்தானம் என்னும் மந்த்ரத்தை உச்சரித்துக்கொண்டு, ஸகல மநோவ்ருத்திகளையும் ஒன்றுபடுத்தி வைத்து, பலமாய்க் கடையவே, ஆக வேண்டிய கார்யம் ஸித்தி பெறுகிறது;

அதாவது, ஞாநாக்நி யென்பது வெளிப்படுகிறது. இது வெளிப்படும்முன், புத்திமயக்கத்தை உண்டாக்கத்தக்க இருத்தி ஸித்தியென்னும்புகை ஏற்பட்டு, அது கழிந்துபோனபின், ஞானாக்நி ஓர் சிறு பொறியாக வெளிப்படும். யமநியமங்களின் அப்யாஸங்களால் ராகத்வேஷங்கள் என்னும் ஈர மற்றுப்போய்,

தகுதியாகச் செய்து வைக்கப்பட்டிருக்கும் மனஸை, அப்படி சிறு பொறியாக வெளிப்பட்ட ஞானத்தை வ்ருத்தி செய்து வைக்கும், விறகாக மாட்டி வைத்து, அதை மண்டி எரியச் செய்து, பெரிய ஜ்வாலையை உண்டாக்கி வைத்து, அநேக வாஸனைகள் என்னும் இந்தனங்களின்மேல் மோஹம் என்னும நெய்யைப்பூசி, அவற்றை அந்நெருப்பில் இட்டு, அதை மேலும் வலுக்கச்செய்து, இப்படிமிக்கப் பெருத்தெரியும் ஞாநாக்கிநியில், ஸோஹம், (ப்ரஹ்மமே நான்) என்னும் மந்த்ரத்தை உச்சரித்துக் கொண்டு, இந்த்ரியங்களால் ஏற்படும் ஸர்வகர்மங்களையும் ஆஹுதியாகச் செய்து, பின்பு ப்ராணகர்மங்கள் என்னும் ஸ்ருவத்தைக் கூடச் சேர்த்து, அந்த அக்நியில் பூர்ணாஹுதி செய்த பிறகு, ஸமரஸப்பட்டிருத்தல் என்னும் அவப்ருதஸ்நாநம் (யஞ்ஞம் நடக்கும் தினங்களெல்லாம் ஸ்நாநம் செய்யாமல் இருந்து, யஞ்ஞம் முடிந்த பின் செய்யும் ஸ்நாநம்) ஆய்விடுகிறது.

பின்பு இந்த ஆத்மஸம்யம யோகம் (ஜீவாத்மா ப்ராணன், அந்தரிந்த்ரியங்கள், அவற்றின் கர்மங்கள், பஹிரிந்த்ரியங்கள், அவற்றின் கர்மங்கள், விஷயங்கள் முதலிய விச்வமனைத்தையும் ஆத்ம ஸ்வரூபத்தோ டொன்று படுத்தி வைத்தல் இது தான் கீழே ஞானாக்நி யென்று சொல்லப்பட்டது) என்னும் அக்நியில், செய்ய வேண்டிய ஹோமங்கள் அனைத்தும் முடிந்தபின், மிகுந்து நிற்பதான ஆத்மஞானத்தால் உண்டாகும் ஸுகத்தையே யஞ்ஞ புரோடாசமாகப் (யஞ்ஞத்தில் ஹோமம் செய்யப்படும் அந்நம்) பாவித்து உட்கொள்வார்கள். இவ்வகைப்பட்ட யஞ்ஞத்தைச் சிலர் அநுஷ்டித்து, முவ்விலகிலும் பற்றற்றவர்களாய், முக்தர்களா கிறார்கள். இப்படி யஞ்ஞங்கள் பலவகைப்பட்டவையே ஆனாலும், அவற்றால் அடையப்படும் பலன் ஒன்றே.

द्रव्ययज्ञास्तपोयज्ञा योगयज्ञास्तथापरे ।
स्वाध्यायज्ञानयज्ञाश्च यतयः संशितव्रताः ।।२८।।

த்ரவ்ய யக்ஞாஸ் தபோயக்ஞா யோக யக்ஞாஸ் ததாபரே ।
ஸ்வாத் யாய க்ஞான யக்ஞாஶ்ச யதய: ஸம்ஶித வ்ரதா: ॥ 28

ப்ரஹ்மப்ராப்திக்கு, ஸாதநமான வேறுசில யஞ்ஞங்களின் பலப்ரகாரங்கள் :

சிலர் த்ரவ்யங்களைக் கொண்டும், சிலர் தபஸ்ஸை ஸாமக்ரியையாகக் கொண்டும், யஞ்ஞங்கள் செய்வார்கள்.

சிலர் கீழே சொல்லப்பட்டதாகிய விச்வப்ரஹ்மைக்ய யோகாநுஷ்டானத்தையே செய்து, யஜ்ஞங்களை செய்தவர்களாவார்கள். சிலர் சப்தரூபியான ஈச்வரனை சப்தத்தால் ஆராதித்து, வாக்யஜ்ஞம் செய்தவர்களாவார்கள். சிலர் ஞானத்தால், ஜ்ஞேயமான (அறியப்பட வேண்டியதான) பரப்ரஹ்மத்தை அடைவார்கள். இவர்கள் செய்வது ஞானயஜ்ஞமாகும். அர்ஜுநா, இவை அனைத்தும் அநுஷ்டிப்பதற்கு மிக்கக் கடினமானவை. இந்த்ரியங்கள் எவர்களுக்கு வசப்பட்டிருக்குமோ, அவர்கள் மாத்ரமே, இந்த யஜ்ஞங்களில் இழிந்து, இவற்றைச் செய்து முடிக்கத்தக்க யோக்யதை உள்ளவர்கள். எவர்கள் யோகஸம்பத் மிக்க உடையவர்களோ, அவர்களே இவற்றைச் செய்துவைக்க வல்லவர்கள்; ஏனென்றால் இவற்றில் ஜீவஸ்வரூபத்தை ஆத்மஸ்வரூபத்தில் ஐக்யம் செய்து வைக்கவேண்டிய தாயிருக்கிறது.

अपाने जुहूति प्राणं प्राणेऽपानं तथापरे ।
प्राणापानगती रुद्ध्वा प्राणायामपरायणाः ।। २९ ।।

அபாநே ஜுஹ்வதி ப்ராணம் ப்ராணேऽபாநம் ததாऽபரே ।
ப்ராணாபான கதீ ருத்த்வா ப்ராணாயாம பராயணா: ॥ 29

மற்றோர்விதமான யஜ்ஞம் ராஜயோகம் :

சிலர் அப்யாஸ பலத்தால் அபாநவாயு வென்னும் அக்நியில், ப்ராணவாயுவை ஹோமத்ரவ்யமாய்ச் செய்து, ஹோமம் செய்கிறார்கள். சிலர் ப்ராணவாயுவில் ஹோமம் செய்கிறார்கள். சிலர் ப்ராணாயாமம் செய்யத் தெரிந்தவர்களாய், இவ்விரண்டையும் கட்டிவைக்கிறார்கள்.

अपरे नियताहाराः प्राणान्प्राणेषु जुहूति ।
सर्वेऽप्येते यज्ञविदो यज्ञक्षपितकल्मषाः ।। ३० ।।

அபரே நியதாஹாரா: ப்ராணான் ப்ராணேஷு ஜுஹ்வதி ।
ஸர்வேऽப்யேதே யக்ஞவிதோ யக்ஞக்ஷபித கல்மஷா: ॥ 30

ஹடயோகம் :

சிலர் ஹடயோகத்தை அவலம்பித்து, ஸர்வவிதமான விஷயபோகத்தையும் ஓர் நியமத்துக்குட்படுத்தி, ப்ராணன்களை ப்ராணவாயுவில் ஹோமம் பண்ணுகிறார்கள்.

மோக்ஷத்திற்காசைப்பட்டவர்களனைவரும், இப்படியே யஞ்ஞங்கள் செய்து, தங்கள் மனஸில் பற்றியிருக்கும் அழுக்கைப் போக்கிக் கொள்கிறார்கள். இப்படி அஞ்ஞானக்கூட்டம் அனைத்தும் நாசமாய்ப் போனபின், அழிவற்றதாயும், தானாகவேஅமைந்துள்ளதாயும், இருக்கும் ஆத்மஸ்வரூபம் ஒன்றே மிகுந்து நின்று, அக்நி யென்றும், அதில் ஹோமம் பண்ணுகிறவனென்றும், தோற்றும் ஓர் த்வைதபாவம் நாசமடைந்து போகிறது.

यज्ञशिष्टामृतभुजो यान्ति ब्रह्म सनातनम् ।

யக்ஞ ஶிஷ்டா ம்ருதபுஜோ யாந்தி ப்ரம்ஹ ஸநாதனம்।

இப்படி யஞ்ஞம் செய்கிறவர்களடையும் பலன் :

எப்போது இப்படி யஞ்ஞம் செய்கிறவர்களுடைய மனோரதம் பூர்ணமாய்ப்போகிறதோ, அப்போது யஞ்ஞவிதானத்துக் காவச்யகமில்லாமற்போய், அந்த யஞ்ஞானுஷ்டானமும் ஓய்ந்துபோகிறது, பின்பு மனஸினாற் செய்யும் விசாரம் எதை எட்டிப்பிடிக்காதோ, ஆசை என்பது எதைப் பற்றாதோ, த்வைததோஷம் எதின்மேற்படியாதோ, அந்த அநாதிஸித்த பரிசுத்த யஞ்ஞசேஷமான கேவலஞானரூப ப்ரஹ்மத்தை, அந்த யாஞ்ஞிகர்கள், ப்ரஹ்மமே தாங்கள் என்னும் அநுஸந்தானத்தையே மந்த்ரமாகக் கொண்டு, புசித்து நிற்கிறார்கள். இப்படிப்பட்ட சேஷாம்ருதத்தைப் பசிதீரப்புசித்து, சாகாதவர்கள் ஆய்விடுவதால், அவர்கள் அநாயாஸமாய் ப்ரஹ்மமாய்ப் போகிறார்கள்.

नायं लोकोऽस्त्ययज्ञस्य कुतोऽन्यः कुरुसत्तम ।।३१।।

நாயம் லோகோ ऽஸ்த்ய யக்ஞஸ்ய குதோ ऽன்யः ऽருஸத்தம॥ 31

இப்படி யஞ்ஞம் செய்யாதவர்களுடைய துர்கதி :-

இப்படி யஞ்ஞம் செய்யாத மற்றவர்களுக்கு, விரக்தி என்பவள் மாலை இடுவதேயில்லை. பின்பு பிறந்தது முதற்கொண்டு சாகிறவரைக்கும், பரப்ரஹ்மத்தில் ஒன்றுபட்டு நிற்கை என்னும் யாகம்செய்ய கிடைக்காது போவதால், ஸம்யமாக்நியின் ஸேவை அவர்களுக்கு இல்லாமற் போகிறது. இப்படிப்பட்டவர்களுக்கு இவ்வுலக வாழ்வே கிடைக்காது போகிறபோது, பாரலௌகிகமான (மறுமையிற் கிடைக்கக்கூடிய) வாழ்வைப்பற்றிப் பேசுவானேன், அர்ஜுனா?

एवं बहुविधा यज्ञा वितता ब्रह्मणो मुखे ।
कर्मजान्विद्धि तान्सर्वानेवं ज्ञात्वा विमोक्ष्यसे ।।३२।।

ஏவம் பஹுவிதா யக்ஞா விததா ப்ரஹ்மணோ முகே ।
கர்மஜான் வித்தி தான் ஸர்வான் ஏவம் க்ஞாத்வா விமோக்ஷ்யஸே ॥ 32

ஆகவே கர்மானுஷ்டானத்தாற்றான் கர்மபந்தத்தை நிவர்த்திதுக்கொள்ள வேண்டும் :

இப்படி உனக்கு நான் சொன்ன பலவித யாகங்களனைத்தும், வேதத்தில் வெகு விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த விஸ்தாரத்தை எல்லாம், இங்கு சொல்வதற்கு அவச்யமில்லை. ஆனால் இப்படி மஹிமை பெற்றதான் யாகமனைத்தும், கர்மத்தால் ஏற்படுகிறதென்றும், இப்படிப்பட்ட கர்மானுஷ்டானத்தாலேயே கர்மபந்தம் விலகிப்போகிறதென்றும், நீ தெரிந்து கொள்ள வேண்டியது மாத்ரம் அவச்யம்.

श्रेयान्द्रव्यमयाद्यज्ञाज्ज्ञानयज्ञः परन्तप ।
सर्वं कर्माखिलं पार्थ ज्ञाने परिसमाप्यते ।।३३।।

ஸ்ரேயான் த்ரவ்ய மயாத் யக்ஞான் க்ஞான யக்ஞ: பரந்தப ।
ஸர்வம் கர்மாகிலம் பார்த க்ஞானே பரிஸமாப்யதே ॥ 33

ஞான யஜ்ஞம் த்ரவ்ய யஜ்ஞத்தைக் காட்டிலும் சிறந்தது:

அர்ஜுனா த்ரவ்யஜ்ஞங்கள் வேதத்தையே ஆதாரமாய் உடைத்தாயிருந்தாலும், அவற்றில் க்ரியாகலாபங்கள் மிக்கவிஸ்தாரப்பட்டிருந்தாலும், இவ்வளவு விரிவடைந்த அவைகள் ஸ்வர்க்க ஸுகத்தை மட்டுமே கொடுத்தொழி கின்றன. ஆகையால் இந்த த்ரவ்ய யஜ்ஞங்கள், யஜ்ஞங்களே ஆயினும், ஞானயஜ்ஞத்துக்கு ஸமானமாய்ப் பெருமைப்படா. நக்ஷத்ரங்கள் எவ்வளவுதான் ப்ராசித்தபோதிலும், அது ஸூர்யப்ரகாசத்துக்கு ஸமானமாகுமா?

ஞாநத்தின் பெருமை :

இப்படிப்பட்ட ஞாநத்தின் பெருமையைச் சொல்வேன், கேள். பரமாத்ம ஸுகம் என்னும் நிதி புதைந்து கிடக்குமிடம்

தெரிந்துகொண்டு, அதைத் தோண்டி எடுத்துக்கொள்ள ஆசைப்பட்ட யோகிகள், தங்கள் ஞானக்கண்ணில் இந்த ஞானம் என்னும் மையை எப்போதும் தவறாது இட்டுக்கொள்வார்கள். ஸதா ஓடிக்கொண்டிருக்கும் கர்மத்தின் ஓட்டம், இந்த ஞானத்தைப் போய்ச் சேர்ந்தபின், நின்றுபோகிறது. இந்த ஞானம் நைஷ்கர்ம்ய போதம் நிறைந்துகிடக்கும் ஓர் கனியாகும். ஸாதனாநுஷ்டானங்க ளெல்லாம் இந்த ஞானத்தை அடைந்து, தங்கள் பசியைத் தீர்த்துக்கொள்கின்றன. ப்ரவ்ருத்தியென்பது எவ்வளவுதான் கஷ்டப்பட்டு வேலை செய்தாலும், அதைக்கொண்டு இந்த ஞானத்தை அடைய முடியாது. இந்த ஞானத்தை தர்க்கத்தின் ஊஹம் பார்க்கப் பெறாது. இந்த ஞானம் உண்டான மாத்ரத்தில், இந்த்ரியங்களுக்கு விஷயஸங்கம் விடுபட்டுப்போய், மனஸின் மனனசக்தி நாசமடைகிறது. இந்த ஞானத்தை வர்ணிக்க, பேச்சுக்கள் சக்தியற்று நின்றுவிடுகின்றன. ஜீவர்கள் முக்திபெறுவதற்கு அறிந்துகொள்ள வேண்டியதான பரப்ரஹ்மம், இந்த ஞானத்தின் நடுவிற் கிடைத்துப் போகிறது. இந்த ஞானத்தை அடைந்த பிறகு, வைராக்யம் என்பதின் ஸஹாயம் அநாவச்யமாய்ப் போய் விவேகம் வேண்டும் வேண்டும் என்னு மாசை ஓய்ந்து, ஆத்மஸ்வரூபம் கண்ணாற் பார்க்கப்படாமலே அநுபவஸித்தமாகிறது.

तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया ।
उपदेक्ष्यन्ति ते ज्ञानं ज्ञानिनस्तत्त्वदर्शिनः ।। ३४ ।।

தத் வித்தி ப்ரணிபாதேன பரிப்ரஶ்னேன ஸேவயா ।
உபதேக்ஷ்யந்தி தே க்ஞானம் க்ஞானிநஸ் தத்த்வதர்ஶின: ।। 34

இந்த ஞானத்தை அடைய, உபாயம் :

இப்படி ஸர்வோத்தமமாயிருக்கும் ஞானம், உனக்குக் கிடைக்க வேண்டுமென்று ஆசை இருந்தால், ப்ரஹ்மஞானிகளிடம் போய், அவர்களுக்கு உன்னுடைய ஸர்வஸ்வதையும் ஸமர்ப்பணம் செய்து, அவர்களிடத்தில் ப்ரேமைப் பாராட்டி, அவர்களை; அநுஸரித்து நில், அவர்கள் ஞானம் வாஸம் செய்யும் வீடு ஆவார்கள்; அவ்வீட்டுக்கு ஸேவை யென்பதே வாயிற்படி ஆகும். அதைக் கட்டிக்காத்திருந்து, உன் வசப்படுத்திக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்துகொள்ள வேண்டுமானால் தேஹம், மனஸு, உயிர் ஆகிய இவை மூன்றையும், அவர்களுக்கு அர்ப்பணம்

செய்து, அவர்கள் பாதத்தைப் பற்றிக்கிடந்து, கர்வம் என்பதின் லேசங்கூட இல்லாமல், அவர்களுக்கு ஸர்வவிதமாயும் ஊழியம் செய்யவேண்டும். பின்பு நீ ஆசைப்பட்டுக் கேட்டுக்கொண்ட அனைத்தையும், அவர்களே உபதேசிப்பார்கள். இவ்விதமாய் ஞானமடைந்தபின், உன் அந்தக்கரணம் ஸங்கல்பம் என்னும் ஊர் வழிகூடச் செல்லாது.

यज्ज्ञात्वा न पुनर्मोहमेवं यास्यसि पाण्डव ।
येन भूतान्यशेषाणि द्रक्ष्यस्यात्मन्यथो मयि ।। ३५ ।।

யஞ்ஞாத்வா ந புனர் மோஹ மேவம் யாஸ்யஸி பாண்டவ ।
யேன பூதான்யஶேஷேண த்ரக்ஷ்யஸ்யாத் மன்யதோ மயி ।। 35

ஸத்குரு உபதேசத்தால் உண்டாகும் நன்மை :

அவர்கள் உபதேசம் என்னும் வெளிச்சம் ஏற்பட்டபிறகு, உன்னுடைய சித்தம் ப்ரஹ்மத்துக்கு ஸமானமாய்ப்போய், ஸம்சயமும் பாபமும் அற்றதாய்விடும். பிறகு உன்னுடன் கூட இப்பூதங்கள் அனைத்தும், என் ஸ்வரூபத்தில் அடங்கிநிற்கிறவர்களாய், நீ எப்போதும் பார்ப்பாய். ஶ்ரீ குருக்ருபை உனக்கு லப்தமானால், இவ்விதமான ஞானவெளிச்ச முண்டாய், மோஹம் என்னும் இருட்டு நிச்சேஷமாய் நாசமடையும்.

अपि चेदसि पापेभ्यः सर्वेभ्यः पापकृत्तमः ।
सर्वं ज्ञानप्लवेनैव वृजिनं सन्तरिष्यसि ।। ३६ ।।

அபி சேதஸி பாபேப்ய: ஸர்வேப்ய: பாப க்ருத்தம: ।
ஸர்வம் க்ஞான ப்லவேநைவ வ்ருஜினம் ஸந்தரிஷ்யஸி ।। 36

ப்ரஹ்ம ஞானத்தின் பெருமை :

உன்னிடத்தில், கல்மஷங்கள் எல்லாம் ஓர் கனியிற்போல அடைந்து கிடந்தாலும், மயக்கம் எல்லாம் ஓர் கடல்போல் நிறைந்திருந்தாலும், வ்யாமோஹம் எல்லாம் ஓர் மலைபோல் குவிந்திருந்தாலும், உனக்கு ஞானமுண்டான மாத்ரத்தில், அந்த ஞானத்தின் ப்ரபாவத்துக்குமுன், இத்தனையும் அல்பமாய், முற்றிலும் நாசமடைந்து போகும். இந்த ஞானத்தின் மஹிமை எவ்வளவென்றால், சொல்வேன் கேள், ஆகாரமற்ற பரப்ஹ்மத்தின் சாயையாக, இவ்வளவு

விஸ்தாரப்பட்டுத் தோன்றும் விச்வம் முழுவதும், இந்த ஞானப்ரகாசம் ஏற்பட்ட உடனே நசித்துபோகிறது. இவ்வளவு சக்தியுள்ள இந்த ஞானத்தின் முன்னால், உன்னுடைய மனஸில் பற்றியிருக்கும் அஞ்ஞானம் என்னும் அழுக்கு, எவ்வளவு மாத்ரம்? இந்த ஜீவனைப் பற்றியிருக்கும் அஞ்ஞானத்தை, இவ்வளவு பெருமை பெற்ற ஞானத்துடன் சேர்த்துச் சொல்வதே, இந்த ஞானத்துக்கு ஓர் பெருத்த அவமானமாகும். இவ்வளவு ஸாமர்த்யமுள்ள மற்றோர் வஸ்து இவ்வுலகில் காணக்கிடைக்காது.

यथैधांसि समिद्धोऽग्निर्भस्मसात्कुरुतेऽर्जुन ।
ज्ञानाग्निः सर्वकर्माणि भस्मसात्कुरुते तथा ।। ३७ ।।

யதை தாம்ஸி ஸமித்தோ(அ)க்நிர் பஸ்மஸாத் (அ)குருதே(அ)ர்ஜுன।
க்ஞாநாக்னி: ஸர்வ கர்மாணி பஸ்மஸாத் குருதே ததா ।। 37

இதுவுமது :

ப்ரளயகாலத்தில் முவ்வுலகும் நெருப்பு பற்றி யெரியும்போது, அதினால் உண்டான புகை ஆகாசம் எங்கும் நெருக்கமாய்க் கவிந்து நிற்க, அதை இருந்த இடம் தெரியாமல் சிதறவைக்கும ப்ரளயமாருதத்துக்குமுன், ஓர் சிறுமேகம் எவ்வளவு மாத்ரம் ஆகும்? ப்ரளயமாருதத்தின் ஸஹாயத்தை அடைந்து, ஸமுத்ரத்தின் ஜலத்தையே கொளுத்திவிடுவதான ப்ரளயாக்நியின்மேல், வைக்கோலையும் கட்டைகளையும் போட்டால், அது அணைந்து போகுமா? அப்படியே இந்த ஞானத்துக்கு முன்னால் எவ்வளவு பெருத்த அஞ்ஞானமும், எந்த பாபகர்மமும், நிலைபெறாமல் நசித்துப்போகும்.

न हि ज्ञानेन सदृशं पवित्रमिह विद्यते ।
तत्स्वयं योगसंसिद्धः कालेनात्मनि विन्दति ।। ३८ ।।

ந ஹி க்ஞானேன ஸத்ருஶம் பவித்ர மிஹ வித்யதே।
தத்ஸ்வயம் யோக ஸம்ஸித்த: காலேநாத்மனி விந்ததி ।। 38

இதுவுமது :

ஞானத்தால் அஞ்ஞானமும் பாபகர்மங்களும் நாசமடையாமற் போகுமோ என்று, ஓர் சங்கை நம்மனஸில் ஏற்பட்டதே, அதுவே நமக்கு அவமதிப்பைச் செய்து வைக்குமல்லவா? ஆகையால் இனி

இவ்விஷயத்தை விஸ்தரிக்காது, மேற்சொல்ல வேண்டிய விஷயத்தைச் சொல்வேன்.

ஞானத்தைப் போல் பாபத்தைப் போக்கி பரிசுத்தம் செய்துவைக்கும் திறமை உள்ளது, உலகில் வேறொன்றும் இல்லை. உலகில் இரண்டாவது ஆத்மா கிடைக்காதது போலும், ஞானத்துக்கு ஸரியான வேறோர் வஸ்து உலகெங்கும் கிடைக்காது. ஸூர்யனுடைய ப்ரதிபிம்பம் ஸூர்யனைப் போலவே தேஜஸ்ஸுள்ள தாகுமேயானால், ஆகாசம் அத்தனையும் கட்டி அணைக்க முடியுமேயானால், பூமியின் நிறையை நிர்ணயிப்பதற்குத் தகுந்ததான ஓர் படிக்கல் கிடைக்குமேயானால், ஞானத்துக்கு ஸமமான சக்தியுள்ள மற்றோர் வஸ்து கிடைக்கப்பெறலாம். ஆகையால் எத்தனை விதமாய் ஆலோசித்துப் பார்த்தாலும், ஒரு தடவை முடிவு செய்தது போதாதென்று, மேன்மேலும் விசாரித்து தீர்மானித்தாலும், ஞாநத்தின் பவித்ரதை ஞானத்துக்கே இருக்கிறதாய்ச் சொல்ல வேண்டியிருக்கிறது.

அம்ருதத்தின் ருசியை வர்ணிக்கத் தொடங்கினால், அது அம்ருதத்தின் ருசிபோலவே இருக்கிறதென்று சொல்லவேண்டியதாய் இருப்பது போலும், ஞானத்துக்கு ஞானத்தையே உவமித்துக் காட்ட வேண்டுடியதா யிருக்கிறது. இதற்குமேல் இந்த விஷயத்தில் சொல்வதெல்லாம், வீணாய்ப் போதுபோக்குவதே யாகும் என்று ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லவே, "ஆம் நீ சொல்வது உண்மையே," என்று அர்ஜுநன் அநுமோதித்து, அந்த ஞனத்தை எவ்விதம் ஸாதித்துக்கொள்ளலாம் என்று அவன் கேட்பதற்குமுன்பே, அவன் மனஸின் உட்கருத்தை பகவான் அறிந்து, ஹே கீரீடி, அந்த ஞானத்தை அடைய உபாயம் எதுவென்று சொல்வேன், கவனித்துக் கேள் என்றார்.

श्रद्धावाँल्लभते ज्ञानं तत्परः संयतेन्द्रियः ।
ज्ञानं लब्ध्वा परां शान्तिमचिरेणाधिगच्छति ।। ३९ ।।

ச்ரத்தாவான் லபதே க்ஞானம் தத்பர: ஸம்யதேந்த்ரிய: ।
க்ஞானம் லப்த்வா பராம் ஶாந்தி மசிரேணாதி கச்சதி ।। 39

ஞாநம் அடைய அதிகாரமுள்ளவன் எவன் :

ஆத்மஸுகாநுபவத்தின் மாதுர்யத்திற் காசைப்பட்டு, எவன் ஸகல விஷயங்களையும், வெறுத்து, இந்த்ரியங்களைக்

கொண்டாடாமல், தன்னாசையை தன் மனஸுக்கே தெரிவிக்காமல், பூர்வ கர்மாநுஸாரமாய்த் தன் ப்ரக்ருதியில் அமைந்துள்ள வாஸனைகளை சட்டை செய்யாமல், இந்த ஞானத்தை அடையவேண்டு மென்னும் பெருத்த ஆசையை இடைவிடாது பாராட்டி நிற்பதால், ஸுகப்பட்டுக் கொண்டிருப்பானோ, அவனைப் பூர்ணமான சாந்தி நிறைந்துள்ளதான ப்ரஹ்ம ஞானம், தானே தேடிக்கொண்டு தவறாது வந்தடையும்.

ஞானப்ராப்திக்கு உத்தரதசை :

அந்த ஞானம் ஹ்ருதயத்தில் நிலைபெற்றதும், சாந்தியின் முளை தலையெடுத்து, பின்பு ஆத்மஞாநம் மிக்க விஸ்தாரத்தை அடையும். பின்பு அவன் எந்தப் பக்கம் பார்த்தபோதிலும், சாந்தியே நிற்பதாகப் பார்த்து, தான் பிறன் என்ற உணர்ச்சி அற்றிருப்பான். இவ்விதம் இந்த ஞானம் என்னும் விதை, மேன்மேலும் எப்படி எல்லாம் விஸ்தாரம் அடையுமோ, அதைச் சொல்லிக் கரைகாண முடியாது. ஆகையால் இதை இத்துடன் நிறுத்திவிடவேண்டியதே.

अज्ञश्चाश्रद्दधानश्च संशयात्मा विनश्यति ।
नायं लोकोऽस्ति न परो न सुखं संशयात्मनः ॥ ४० ॥

அக்ஞஶ்சா ஶ்ரத்த தானஶ்ச ஸம்ஶயாத்மா விநஶ்யதி ।
நாயம் லோகோ ஸ்தி ந பரோ ந ஸுகம் ஸம்ஶயாத்மன: ॥ 40

இந்த ஞானமுமில்லாமல், இதை அடைய வேண்டுமென்றாசையும் இல்லாத ஒருவன் ஸம்சயத்தில் முழுகிப்போய் நாசமடைவான் :

மேலும், கேள், எந்த ப்ராணி இந்த ஞானத்தை அடைய ஆசை இல்லாதவனாய் இருப்பானோ, அவன் பிழைப்பை என்ன என்று சொல்லலாம். அவன் பிழைத்திருப்பதைக் காட்டிலும், இறந்து போவது நலம். ஜநங்கள் இல்லாத வீடுபோன்றும், உயிரில்லாத தேஹம் போன்றும், ஞானம் என்பது இல்லாத ஒருவனுடைய வாழ்வு, கேவலம் ஸம்மோஹம் (பூர்ணமான அறிவுகேடு) நிறைந்ததாயிருக்கும். ஞானம் கொஞ்சமேனும் இல்லாமற் போனாலும் போகட்டும்; அதை அடைய வேண்டுமென்ற ஆசை ஒன்று இருந்தால், அவன் பிழைத்துப் போவதற்கு வழி உண்டு. ஞானம் என்பதும்

இல்லாமல், அதின் விஷயமான ஆசையும் கூட இல்லாமற் போனால், அவன் ஸம்சயம் என்னும் நெருப்பில் விழுந்தவனாவான். எவனை அஞ்ஞானம் என்னும் இருட்டு மூடிக்கொள்ளுமோ, அவனிடத்தில் ஸம்சயம் என்பது வ்ருத்தி அடைந்து, விச்வாஸம் என்பதை நெருங்க முடியாமற் செய்து வைக்கும். அந்த ஸம்சயத்துக்கு மனஸில் இடம் போதாமல், அது புத்தி இருக்கும் இடம் தேடிப்போய், அங்கும் வ்யாபித்துக்கொள்ளும. பின்பு, மூவுலகிலும் எதைப் பார்த்தாலும், ஸம்சயமே தலையெடுத்து நிற்கும்.

योगसंन्यस्तकर्माणं ज्ञानसञ्छिन्नसंशयम् ।

आत्मवन्तं न कर्माणि निबध्नन्ति धनञ्जय ।। ४१ ।।

யோக ஸந் ந்யஸ்த கர்மாணம் க்ஞான ஸஞ்சின்ன ஸம்ஶயம்।
ஆத்மவந்தம் ந கர்மாணி நிபக்நந்தி தனஞ்ஜய ॥ 41

இப்படி வலுத்துப்போன ஸம்சயத்தை நிவர்த்தி செய்து கொள்ளு முபாயம் :

இந்த ஸம்சயம் இவ்வளவு வ்ருத்தி அடைந்து விட்டபின்னும், இதைப் போக்கிக் கொள்வதற்கு, ஓர் உபாயம் உண்டு. ஞானம் என்னும் உத்தமமான கத்தி கைக்குக் கிடைத்ததேயானால், அந்த கூர்மையான சஸ்த்ரத்தைக் கொண்டு, இந்த ஸம்சயத்தை வேரோடு வெட்டித் தள்ளி, மனஸின் துக்கத்தை. முற்றிலும் தீர்த்துக்கொள்ளலாம்.

तस्मादज्ञानसम्भूतं हृत्स्थं ज्ञानासिनात्मनः ।

छित्त्वैनं संशयं योगमातिष्ठोत्तिष्ठ भारत ।। ४२ ।।

தஸ்மாதக்ஞான ஸம்பூதம் ஹ்ருத்ஸ்தம் க்ஞானாஸிநாத்ம்ந: ।
சித்த்வைனம் ஸம்ஶயம் யோக மாதிஷ்டோத்திஷ்ட பாரத ॥ 42

அர்ஜுனனுக்கு முடிவான உபதேசம் :

ஆகையால், ஹே பார்த்தா, ஹ்ருதயத்தைப் பற்றியிருக்கும் ஸம்சயத்தை முற்றிலும் ஒழித்துக்கொண்டு, யுத்தம் செய்ய ஸித்தனாய், எழுந்து நில்.

மேல் வரும் கதையின் பெருமையை வர்ணித்து, ச்ரோதாக்களின் கவனத்தைப் ப்ரார்த்தித்தல் :

"இப்படி ஸர்வஜ்ஞர்கள் அனைவருக்கும் பூஜ்யனும், ஞானம் என்னும் ப்ரகாசத்தைக் கொடுக்கும் தீபம் போன்றவனுமான, ஸ்ரீ கிருஷ்ணன் க்ருபை கூர்ந்து சொன்னார், ராஜா கேளும்," என்று ஸஞ்ஜயன் சொன்னான். இப்படி ஸ்ரீ கிருஷ்ணன் சொன்னதனைத்தையும், முன் பின் யோஜனை செய்து பார்த்து, ஸந்தர்ப்பானுஸாரமாய், அர்ஜுனன் இனி ஓர் ப்ரச்நம் செய்வான். அந்த ப்ரச்நத்தின் ஸம்பந்தமாய் ஏற்படும் ஸம்வாதம் மேலே விவரிக்கப்படும்.

இதில் உத்தம பாவங்கள் நிறைந்து, சாந்தரஸம் மிக்கப் பெருமை பெற்று விளங்கும். இந்தக் கதையின் சிறப்புக்கு, ச்ருங்கார வீர கருணாத்புத ஹாஸ்ய பயாநக பிபத்ஸ ரௌத்ரங்க ளென்னும் எட்டு ரஸங்களையும் கொண்டு, த்ருஷ்டி சுற்றிப் போடவேண்டும், என்று தோற்றும். ஸஜ்ஜநர்களின் புத்தி, தான் இளைப்பாறுவதற்குத் தகுந்த இடத்தை உலகெல்லாம் தேடி, இந்தக் கதையை வந்தடைந்து, இங்கே இளைப்பாறும். இந்தக் கதையில் சாந்தரஸம், புது அழகுகள் படைத்து, மனஸைக் கவர்ந்துக்கொள்ளும். இப்படிப்பட்ட கதையாக உருவு கொண்ட என்னுடைய கேவல மராட்டிச் சொற்கள், ஸமுத்ரத்தைக் காட்டிலும் ஆழ்ந்தவையாயும், உத்தம அர்த்தங்கள் நிறைந்த வையாயும், இருக்கும்.

ஆகவே இக்கதையை நீங்கள் கவனித்துக் கேட்க வேண்டும். ஸூர்யனுடைய பிம்பம் உள்ளங்கை அளவே ஆனாலும், அதின் ப்ரகாசத்தின் வ்யாப்தி மூவுலகையும் விஞ்சின தாயிருப்பதுபோலும், என்னுடைய சொற்களின் அர்த்தவ்யாப்தி யிருக்கிறதென்று, நீங்கள் அநுபவத்தால் தெரிந்து கொள்வீர்கள். கல்பதருவானது யாசகன் ஆசைப்பட்டபடி யெல்லாம், பலம் கொடுப்பதுபோலும், என் சொற்கள் உங்களுஹத்தை யனுஸரித்துப் பொருள் தருமாகையால், கவனித்துக் கேளுங்கள். ஸர்வஜ்ஞர்களாகிய நீங்கள் தாமாகவே குணாகுணங்களைத் தெரிந்து கொள்ளத் தக்கவர்களாய் இருக்க, இவ்வளவு நான் சொன்னது தகாததே. ஆயினும் தாங்கள் செவி கொடுத்துக் கேட்கவேண்டும் என்று, நான் ப்ரார்த்திப்பதில், ஓர் பிசகுமில்லை, இந்தக் கதையில் சாந்தி என்பவள், உத்தம ஸாஹித்யம் என்னும் ஆடை உடுத்திக்கொண்டு, அழகும், குலீனதையும், (நல்ல குலத்திற்

பிறப்பு) பாதிவ்ரத்யமும், ஓர் பெண்ணிடம் சேர்ந்திருந்தாற் போலும், பெருமை பெற்று விளங்குவாள்.

சர்க்கரை இயற்கையாகவே கொண்டாடி புசிக்கத்தக்கது. அத்துடன், அது வ்யாதியைத் தீர்க்கும் மருந்தாகவும் ஏற்பட்டு விட்டால், அதைத் திரும்பவும், திரும்பவும் ஏன் புசிக்கக்கூடாது? இயற்கையாகவே ம்ருதுவாயும் ஸுவாசையாஸனையுள்ளதாயும் இருக்கும் மலய மாருதம், நம்முடைய பாக்யவுசத்தால் அம்ருதத்தின் ருசியும், உத்தம ஸங்கீதத்தின் ஸுகமும் அதிலமைந்திருக்க கிடைத்துவிட்டால், அது ஸ்பர்சத்தால் தேஹம் முழுவதும் ஸந்தோஷிக்கச் செய்து, ஸுவாஸனையால் மூக்குக்கு ஆநந்தம் கொடுத்து, ருசியால் நாக்கைக் கூத்தாடச் செய்து, ஸ்வரஸம்பத்தால் காதை அப்பப்பா என்று சொல்லச் செய்துவைக்காதா?

அப்படியே இந்தக் கதையைக் கேட்பது என்ற ஒன்றினாலேயே, காதின் பசி தீர்வதுடன், ஓர் ப்ரயாஸமும் இன்றியே, ஸம்ஸார துக்கமும் ஸமூலமாய்ப் பிடுங்கப்பட்டுப் போவதாய் ஏற்பட்டிருக்கிறது. மந்த்ர ப்ரயோகத்தினாலேயே, நம்முடைய சத்ரு இறந்து போவதனால், பின்பு சக்திகேடயங்களைப் பிடித்துக்கொண்டு, போர் செய்ய வேண்டியதெதற்காக? பாலையும் சர்க்கரையையும் உட்கொண்டே, நோய் தீர்ந்து போவதாயிருந்தால், வேப்பெண்ணையை சாப்பிட வேண்டிய அவச்யம் என்ன? அப்படியே மனஸை அடித்துத் தொந்தரவு பண்ணாமலும், இந்த்ரியங்களுக்குத் துக்கம் கொடுக்காமலுமே, இந்தக் கதாச்சரவண மாத்ரத்தினாலேயே நீங்கள் மோக்ஷமடைந்து விடுகிறதாயிருக்கிறது. ஆகையால் உங்களுக்கு அவகாசமிருக்கும் பக்ஷத்தில், இந்த கீதையின் அர்த்தத்தை நன்றாய்க் கேட்க வேண்டுமென்று, நிவ்ருத்திதாஸனான நான் தெரிவித்துக் கொண்டேன்.

நான்காவது அத்யாயம் முற்றிற்று

அத்யாயம் 5

अर्जुन उवाच ।
संन्यासं कर्मणां कृष्ण पुनर्योगं च शंससि ।
यच्छ्रेय एतयोरेकं तन्मे ब्रूहि सुनिश्चितम् ।।१।।

அர்ஜுன உவாச -

ஸந்ந்யாஸம் கர்மணாம் க்ருஷ்ண புனர்யோகம் ச ஶம்ஸஸி।
யச்ச்ரேய ஏதயோரேகம் தன்மே ப்ரூஹி ஸுநிஶ்சிதம் ॥ 1

அர்ஜுனனுடைய ப்ரார்த்தனை :

பின்பு அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்து பின்வருமாறு சொன்னான். பாரும் ஐயா, என்ன நீர் இப்படியெல்லாம் பேசுகிறீர்! ஒன்றே சொல்லி முடித்தீரானால், நான் அதை மனஸில் விசாரித்துப்பார்க்கலாம். கீழே ஸகல கர்மங்களையும் முற்றவும் விட்டொழித்தலே வேண்டுமென்று, பலவிதமாய் எடுத்துரைத்தீர். அதற்குமேல் மறுபடியும் கர்ம யோகத்தை மிக்கவும் கொண்டாடினீர். இப்படி இருவிதமாய் நீர் பேசினால், அறியாதவர்களாகிய எங்களுக்கு, இன்னது அனுஷ்டிக்கத் தகுந்ததென்று விள்ளுவதில்லை. கவனித்துக் கேளும். அறியவேண்டிய வஸ்து ஒன்றாய் இருக்கும்போது, நீர் ஒரே உபாயத்தை எடுத்துக் கூறவேண்டும். இதை உமக்குப் பிறர்கள் சொல்லவேண்டுமா? இதற்காகவே, முன்பே ஒரு தடவை, உம்மைப் பார்த்து பரமாத்ம தத்வத்தை மறைபாடாய்ச் சொல்ல வேண்டாம் என்றும், அதை எளிதிலறியும்படி விடுவித்துச் சொல்லவேண்டு மென்றும் நான் விண்ணப்பம் செய்தேன்.

ஆனால் நடந்து போனது போகட்டும். இப்போது நீர் சொன்ன இவ்விரண்டு மார்க்கங்களில் எது, உத்தமம் என்று, தெளிவாய் எடுத்துச் சொல்லவேண்டும். அப்படி நீர் எடுத்துரைக்கும் ஓர் அநுஷ்டானம், கடைவரைக்கும் (பலப்ராப்தி வரைக்கும் ஸாதநாந்தரா நுஷ்டானத்தின் ஆவச்யகமில்லாமல்) கூட இருந்து, தவறாது பலத்தைக் கொடுப்பதாயும், அநுஷ்டிக்க எளிதாயும், இருக்க வேண்டும். பல்லக்குமேல் படுத்துக்கொண்டே, நித்திரைக்கு பங்கம் நேரிடாமல், வெகுதூரம் போய், ஊர் சேர்ந்து விடுவது போல், ஸுககரமாயும் அது இருக்கவேண்டும். இப்படி அர்ஜுனன்

சொன்னதைக் கேட்டு பகவான் மனமகிழ்ச்சி அடைந்து, "அப்படியே சொல்வேன் கேள்," என்றார்.

ஸஞ்ஜயன் அர்ஜுனனுடைய பாக்ய விசேஷத்தைக் கொண்டாடுதல்.

பாரும் ராஜனே,காமதேநுவே என்று சொல்லத்தக்க ஒருத்தியை, எவன் பாக்யவசத்தால் தாயாக அடைந்தானோ, அவன் சந்த்ரனைக் கொண்டு விளையாடவேண்டு மென்றால், அது அவனுக்குக் கிடைக்காது போகுமா? அப்படியே ஔதார்யத்துக்கு வாஸஸ்தாநம் எனத்தக்க ஸ்ரீக்ருஷ்ணன், அந்த அர்ஜுநனே ஸகல ஸுகங்களும் தேடிவந்து குடியேறும்,வீடு ஆவதில் தடை என்ன?ஸகல லோகநாயகனாகிய ஸ்ரீலக்ஷ்மீகாந்தனே தன்னவனான பிறகு, தனக்கு வேண்டியபடி எல்லாம் கேட்டு வாங்கிக்கொள்ள, ஏன் கூடாது? ஆகையாற்றான் அர்ஜுனன் இவ்வளவு நிபந்தனைகள் ஏற்படுத்தி வைத்துக் கேட்கவும், பகவானும் புன்னகை புரிந்து, அதற்கு ஒத்துக்கொள்ளவும், நேர்ந்தது. இதற்குமேல் ஸ்ரீகிருஷ்ணன் சொன்னதை நான் சொல்வேன், கேளுங்கள்.

श्रीभगवानुवाच ।
संन्यासः कर्मयोगश्च निःश्रेयसकरावुभौ ।
तयोस्तु कर्मसंन्यासात्कर्मयोगो विशिष्यते ।।२।।

ஸ்ரீபகவானுவாச -

ஸந்ந்யாஸ: கர்ம யோகஶ்ச நி: ஶ்ரேயஸகராவுபௌ ।
தயோஸ்து கர்மஸந்ந்யாஸாத் கர்ம யோகோ விஶிஷ்யதே ॥ 2

பகவான் கர்மயோகத்தைக் கொண்டாடுதல்:

பின்பு பகவான் குந்தீபுத்திரனைப் பார்த்து, பின்வருமாறு உத்தரம் கொடுத்தார். கர்மஸந்யாசத்தையும் கர்மயோகத்தையும் விசாரித்துப் பார்க்குங்கால், இரண்டும் மோக்ஷத்தை தவறாமல் கொடுக்கின்றவையாகவே ஏற்பட்டாலும், ஆழமான ஜலத்தைத் தாண்ட வேண்டுமானால், நீந்தத்தெரிந்த ஆண்பிள்ளைகளுக்கும், நீந்தத் தெரியாத ஸ்திரீகளுக்கும் சிறுவர்களுக்கும், படகானது ஸுலபமான உபாயமாவது போலும், தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் அனைவரும்

அநுஷ்டிக்க ஸுலபமான உபாயம் கர்மயோகமே என்பதில், ஸந்தேஹமில்லை. ஸாராம்ச விசாரம் செய்து பார்த்தால், இந்த ஸுலபமான கர்மயோகமே அநுஷ்டிக்கத்தக்கது. இதை அநுஷ்டித்தால், ஸந்யாஸத்தால் அடையக் கூடிய பலனை அநாயாஸமாய் அடைந்து விடலாம். இது எப்படி என்று நீ அறிவதற்காக, உண்மையான ஸந்யாஸத்தின் லக்ஷணத்தை உனக்குச் சொல்வேன். பின்பு கர்மஸந்யாஸமும் கர்மயோகமும் ஒன்றே என்று, நீ தானாகவே தெரிந்துகொள்வாய்.

ज्ञेयः स नित्यसंन्यासी यो न द्वेष्टि न काङ्क्षति ।
निर्द्वन्द्वो हि महाबाहो सुखं बन्धात्प्रमुच्यते ।।३।।

க்ஞேய: ஸ நித்ய ஸந்ந்யாஸீ யோ ந த்வேஷ்டி ந காங்க்ஷதி।
நிர்த்வந்த்வோ ஹி மஹாபாஹோ ஸுகம் பந்தாத் ப்ரமுச்யதே ॥ 3

ஸந்யாஸத்தின் லக்ஷணம், ராகத்வேஷாஹம்காரங்கள் முதலிய கல்பனைகளற்றிருக்கை :

நடந்துபோனதைத் திரும்பவும் நினைக்காதவனாயும், கிடைக்காத வஸ்து விஷயத்தில் ஆசை பாராட்டாதவனாயும், மேருபர்வதம்போல் அசைவற்றவனாயும், நான், என்னது, என்பதின் உணர்வற்றவனாயும், எவனிருப்பானோ, அவனே ஸந்யாஸம், இடைவிடாது பூண்டிருப்பவன் ஆவான். எவன் மன திவ்வித மாய்விட்டதோ, அவனே விஷய ஸங்கத்தினின்றும் விடுபட்டவனாய், அனாயாஸமாயும், அகண்டிதமாயும், ஸுகத்தை அநுபவித்துக் கொண்டிருப்பான். அவன் ஸ்வபாவம் பற்றற்றதாய்ப் போய்விட்டதால், அவனுக்குப் பரிக்ரஹம் (தன்னைச் சேர்ந்தது, அல்லது தன்னை சம்பந்தித்தது, என்று எந்த வஸ்துவின் விஷயத்திலாவது, மனஸினால் பாராட்டல்). என்பது தானாகவே ஒழிந்து போகிறது.

அதற்கு மேல், வீடு முதலியவற்றை விட்டு வெளிப்படவேண்டியது அவச்யமில்லை. அக்நியானது முற்றிலும் ஆறிப்போய், மிகுந்து நிற்கும் சாம்பலின் மேல், எளிதிற் பற்றிக் கொள்ளத்தக்க பஞ்சை பரப்பிவைத்தால், அது நெருப்புப் பற்றிக் கொண்டு எரியுமா? அப்படியே மனதில் ஸங்கல்பம் அற்றுப்போனபின், அவன் உபாதிகள் நடுவில் இருந்தும், கர்மபந்தத்தில் சிக்கிப்போகான். ஆகையால் கல்பனையென்பது முற்றிலும் ஒழிந்து போனாற்றான்,

உண்மையான ஸந்யாஸம் ஏற்படுகிறது. இந்தக் காரணத்தைக் கொண்டு, ஸந்யாஸமும் கர்மயோகமும் ஸமநிலை (கர்மயோகத்தின் ஸாரமான அம்சம் கர்த்ருத்வாபிமானமும் பலா பிஸந்தியு மாகிய கல்பனைகள் அற்றிருக்கையே. ஆகையால் ஸந்யாசமும் கர்மயோகமும் ஒன்றுபட்டுப் போகின்றன. இங்கே ஸாதனானுஷ்டானத்தில் ஐக்யம் சொல்லப்பட்டது). யடைந்தவை என்று சொல்ல வேண்டும்.

साङ्ख्ययोगौ पृथग्बालाः प्रवदन्ति न पण्डिताः ।
एकमप्यास्थितः सम्यगुभयोर्विन्दते फलम् ।। ४ ।।

ஸாங்க்யயோகௌ ப்ருதக் பாலாः ப்ரவதந்தி ந பண்டிதாः ।
ஏகம்ப்யாஸ்திதः ஸம்யக் உபயோர் விந்ததே பலம் ॥ 4

ஞானமில்லாதவர்களே, ஸாங்க்ய யோகத்தையும், கர்மயோகத்தையும் வேறுபட்டவை யென்பார்கள் :

எவர்கள் முற்றிலும் ஞானமற்றவர்களோ, அவர்களே, ஸாங்க்யம் கர்மயோகம் என்னும் இந்த இரண்டு ஏற்பாடுகளின் உண்மையான லக்ஷணத்தை அறியாதவர்களாய்,இவ்விரண்டும் வேறு பட்டவை என்று சொல்வார்கள். ஒரே தீபத்தின் ப்ரகாசம் ஓர்பலகணி வழியாய் வெளிப்படும்போது, ஓர் கண்வழியாய் வெளிப்படும் வெளிச்சத்தைக் காட்டிலும் மற்றோர் கண் வழியாய் வெளிப்படும் வெளிச்சம் வேறென்று ஞாநிக ளெண்ணுவார்களா? ஆகையால் அநுபவ பூர்வமாக ஒன்றே ஆகும் பரப்ரஹ்ம தத்வத்தை நன்கறிந்தவர்கள், இவ்விரண்டு மார்க்கமும் ஒன்றேயென்று மதிப்பார்கள்.

यत्साङ्ख्यैः प्राप्यते स्थानं तद्योगैरपि गम्यते ।
एकं साङ्ख्यं च योगं च यः पश्यति स पश्यति ।। ५ ।।

யத்ஸாங்க்யை: ப்ராப்யதே ஸ்தானம் தத்யோகைரபி கம்யதே ।
ஏகம் ஸாங்க்யம் ச யோகம் ச யः பஶ்யதி ஸ பஶ்யதி ॥ 5

இவ்விரு மார்க்கங்களும் ஒன்றே என்றறிந்தவன்தான் ஞாநி:

ஸாங்க்ய மார்க்கா நுஷ்டத்தினால் அடையத்தக்கதான பலன் எதுவோ, அதுவே கர்மயோகா நுஷ்டானத்தாலும் அடையப்படும் (இங்கே பலனில் ஐக்யம் சொல்லப்படுகிறது).

ஆகையால் இவ்விரண்டும் ஒன்று, என்று சொல்வதற்கு, வேறு ந்யாயம் வேண்டுவதில்லை. ஆகாசம் என்பதும், அவகாசம் என்பதும், வேறில்லாதது போலும், கர்மயோகமும் ஸந்யாஸமும் வேறல்ல என்று, இந்த உலகில் எவன் அறிந்தானோ, அவனுக்குத்தான், அஞ்ஞான இரவு நீங்கி, ஞான ஸூர்யன் உதித்திருக்கிறான் என்று சொல்லவேண்டும்; அவன்தான் ஆத்மஸ்வரூபத்தை அறிந்தவனாவான்.

संन्यासस्तु महाबाहो दुःखमाप्तुमयोगतः ।
योगयुक्तो मुनिर्ब्रह्म नचिरेणाधिगच्छति ।। ६ ।।

ஸந் ந்யாஸஸ்து மஹாபாஹோ துக்க மாப்து மயோகத: ।
யோக யுக்தோ முனிர் ப்ரம்ஹ நசிரேணாதி கச்சதி ।। 6

கர்மயோத்தால் ஸுலபமாய் மோக்ஷமடைய முடியும்;

ஸந்யாஸவழியில் இறங்கினவர்களுக்கு உண்மையான ஸந்யாஸ நிலையே ஸித்தியாமற்போகும்.: (கீழே ஸாதநாநுஷ்டானத்தின் ஸாராம்சத்தின் ஐக்யத்தையும பலனில் ஐக்யத்தையும், சொல்லி, இவ்விரு மார்க்கத்தின் ஐக்யத்தை ஸித்தாந்தம் செய்து, மறுபடியும் இவ்விரண்டையும் வேறுபடுத்திப் பேசுவது, இவ்விரண்டின் ஸாதநாநுஷ்டானத்தின் பஹிரங்கத்தில் ஏற்பட்டிருக்கும் வித்யாஸத்தைக் கொண்டு ஏற்படுகிறது). எவன் கர்மயோகம் என்னும் வழியைப் பிடித்துக்கொண்டே மோக்ஷமார்க்கம் என்னும் பர்வதத்தின் மேலேறிப் போவானோ, அவன் மகாஸுகம் என்னும் சிகரத்தின் மேல் எல்லாருக்கும் முன்பு அடிவைத்து நிற்பான். இப்படிப்பட்ட கர்மயோகத்தை விட்டு, ஸந்யாஸம் என்பதை அவலம்பித்து, அப்பர்வதத்தின் மேல் ஏறிப்போகும் மற்றவர்கள், யாதோர் ப்ரயோஜநமு மின்றி, ஹடம் பாராட்டி, கஷ்டத்தை அடைவார்களே தவிர, ஸந்யாஸத்தின் உண்மையான நிலையையே அவர்களடையாமற்போவார்கள்.

योगयुक्तो विशुद्धात्मा विजितात्मा जितेन्द्रियः ।
सर्वभूतात्मभूतात्मा कुर्वन्नपि न लिप्यते ।। ७ ।।

யோக யுக்தோ விஸுத்தாத்மா விஜிதாத்மா ஜிதேந்த்ரிய: ।
ஸர்வ பூதாத்ம பூதாத்மா குர்வன்னபி ந லிப்யதே ।। 7

கர்மயோகத்தால் ப்ரஹ்மைக்யபாவ மடையும் வழி.:

ஒருவன் தன் மனஸை அறிவுமயக்கத்தினின்று விடுவித்துக்கொண்டு, குருவாக்யாநுஸந்தானத்தால், அதை மல மறச் செய்து, ஆத்மஸ்வரூபத்தில் நிலைபெற நாட்டி வைத்தானேயானால், ஓர் உப்புக்கட்டியானது, ஸமுத்ரத்தில் விழுந்து கரைந்து போவதன் முன்னம்,சிறிதாகவே தோன்றி, கரைந்து போன பின்பு, ஸமுத்ரம் எவ்வளவு பரப்புள்ளதோ, அவ்வளவு பரப்புள்ள தாய்விடுவது போலும், கல்பனைகளினின்று விடுவிக்கப் பட்டு ப்ரஹ்மத்தில் நிலைபெறச் செய்யப்பட்ட அந்த மனஸு, முன்னிருந்த தன் சிறுமையை இழந்து, ஆத்மஸ்வரூபமாய்ப் போய், மூவுலகையும் வ்யாபித்துக் கொள்ளும். அதற்குப் பின்பு, கர்த்தா வென்றும், கர்மம் என்றும், அந்த கர்மத்தைச் செய்தல் என்றும், சொல்லப்பட்ட த்ரிபுடியானது இயற்கையாகவே அவனுக்கு அற்றுப்போய், அவன் எல்லாக் கர்மங்களையும் செய்தும், செய்யாதவனாவான்.

नैव किञ्चित्करोमीति युक्तो मन्येत तत्त्ववित् ।
पश्यञ्शृण्वन्स्पृशञ्जिघ्रन्नश्नन्गच्छन्स्वपञ्श्वसन् ॥ ८ ॥
प्रलपन्विसृजन्गृह्णन्नुन्मिषन्निमिषन्नपि ।
इन्द्रियाणीन्द्रियार्थेषु वर्तन्त इति धारयन् ॥ ९ ॥

நைவ கிஞ்சித் கரோமீதி யுக்தோ மன்யேத தத்த்வவித் ।
பச்யன் ச்ருண்வன் ஸ்ப்ருசன் ஜிக்ரன் நச்நன் கச்சன் ஸ்வபன் ச்வஸன் ॥ 8

ப்ரலபன் விஸ்ருஜன் க்ருஹ்ணன் நுன்மிஷின் நிமிஷின்னபி ।
இந்த்ரியாணீந்த்ரியார்தேஷு வர்தந்த இதி தாரயன் ॥ 9

கர்மயோகிக்குத் தத்வஞான முண்டாய், கர்த்ருத்வாபிமான மற்றுப்போகும்.:

எப்போது ஒருவனுக்குத் தன் தேஹத்தை, தான் என்று, பாவிக்கும் புத்தி அற்றுப் போய் விட்டதோ, அவனுக்கு கர்த்ருத்வபுத்தி எப்படி மிகுந்து நிற்கும்? இப்படிப்பட்ட கர்மயோகிக்கு தேஹ மிருக்கும்போதே, அவனிடத்தில் நிராகாரப்ரஹ்மத்தின் லக்ஷணம் ஸம்பூர்ணமாய்க் காணப்படும். வெளிப்பார்வைக்கோ. மற்றவர்களைப்போலவே. அவனும் சரீரத்தில் இருக்கும் ஒருவனாயும்,

எல்லாத்தொழில்களையும் செய்துகொண்டிருப் பவனாயும், காணப்படுவான். அவன் கண்ணாற் பார்ப்பான், காதாற் கேட்பான், ஸ்பர்சத்தை உணர்வான், மூக்கால் மோருவான், ஸமயோசிதமாய்ப் பேசுவான், ஆஹாரத்தை உண்பான், மலமூத்ராதிகளை விஸர்ஜநம் செய்வான், ஸுகமாய்த் தூங்குவான், மனஸுக்குத் தோன்றியபடி ஸஞ்சரிப்பான், இப்படி ஒன்றொன்றாய்ச் சொல்வதை விட்டு சுருக்கிச் சொல்லப்போனால், சுவாஸோச்சுவாஸம், கண்ணிமைகளை மூடித்திறத்தல், முதலிய தொழில்கள் அனைத்தும், அவனிடத்தில் காணப்பட்டாலும், அவனிடத்தில் கர்த்ருத்வபுத்தி இன்மையால், அவன் அவையனைத்தையும் செய்யாதவன் ஆவான். ஒருவன் அறிவுமயக்கம் என்னும் படுக்கையிற் றூங்கும்போது, தான் கர்மம் செய்கிறதாக ஸ்வப்நம் காணுவான்; கர்மயோகாநுஷ்டானத்தால் தத்வஞானம் என்னும் விழிப்பு ஏற்பட்டபின், அந்த ஸ்வப்ந மில்லாமற்போய், அவன் எதையும் செய்ததாகப் பாவியாதிருப்பான்.

ब्रह्मण्याधाय कर्माणि सङ्गं त्यक्त्वा करोति यः ।
लिप्यते न स पापेन पद्मपत्रमिवाम्भसा ॥१०॥

ப்ரம்ஹண்யா தாய கர்மாணி ஸங்கம் த்யக்த்வா கரோதி யः ।
லிப்யதே ந ஸ பாபேன பத்ம பத்ர மிவாம் பஸா: ॥ 10

ப்ரஹ்மஸாந்நித்யத்தின் உதவியைக் கொண்டு, இந்த்ரியங்கள் கர்மங்களைச் செய்துவைக்கின்றன, என்றறிந்தவன் கர்மபந்தத்துக் குட்படான்:

அதிஷ்டானமாகிய ப்ரஹ்மத்தின் ஸாந்நித்யத்தைப் பெற்று, எல்லா இந்திரியங்களும் தந்தம் விஷயத்தில் வியாபரித்துக் கொண்டிருக்கின்றன, ஒரு வீட்டில் தீபத்தின் ப்ரகாசத்தைக் கொண்டு, அதில் இருக்கும் ஜநங்கள் வேலைகளைச் செய்துகொண்டிருக்க, அவ்வேலைகளை எப்படி தீபம் செய்த தாகாதோ, அப்படியே கர்மயோகி தன் தேஹத்தில நடந்தேறும் ஸகல வ்யாபாரங்களையும், இந்திரியங்களாற் செய்யப்பட்டனவாய்ப் பாவித்து நிற்பான் ஆகையால் அவன் எல்லாக் கர்மங்களையும் செய்தும், ஜலத்தில் இருக்கும் தாமரை இலை ஜலத்தோடு ஸம்பந்த மற்றிப்பதுபோல், கர்மபந்தத்திற் சிக்கிப் போகாதிருப்பான்.

कायेन मनसा बुद्ध्या केवलैरिन्द्रियैरपि ।
योगिनः कर्म कुर्वन्ति सङ्गं त्यक्त्वात्मशुद्धये ।।११।।

காயேன மனஸா புத்த்யா கேவலை ரிந்த்ரியைரபி ।
யோகின: கர்ம குர்வந்தி ஸங்கம் த்யக்த்வாऽऽத்ம ஶுத்தயே ।। 11

கர்மயோகிகள் அஹம்காரமற்று ஸகல கர்மங்களையும் செய்து, கர்மபந்தத்திற் சிக்கிப் போவதில்லை.:

எந்த தொழிலில் புத்தியும் மனஸும் கொஞ்சம் கூட ஸம்பந்தியாமல் இருக்குமோ அந்தத் தொழில் சாரீரம் எனப்படும். இவ்விஷயத்தை எளிதில் அறியும்படிச் சொல்வேன், கேள். சிறுகுழந்தைகளிடத்தில் ஏற்படும் சேஷ்டைகள் போலும், கர்மயோகி கேவலம் சாரீரகமான தொழில்களைச் செய்வான். பின்பு ஐம்பூதங்களால் அமைந்த சரீரம் தூங்கிப் போகும்போது, மனஸானது ஸ்வப்னத்தில் தனித்து வேலை செய்கிறது. அர்ஜுநா, வாஸனையின் வ்யாப்தி எவ்வளவு ஆச்சர்யகரமாயிருக்கிறது பார்! தேஹேந்த்ரியங்களறியாவண்ணம், அது ஜீவனுக்கு ஸுகதுக்கானுபவத்தைச் செய்து வைக்கிறது. இப்படி தேஹேந்த்ரியங்களுக்குத் தெரியாமல் யாதொரு வ்யாபாரம் ஏற்படுமோ, அது கேவலம் மானஸிகமாகும். கர்மயோகி இதையும் செய்கிறான். அவன் அகங்காரத்தின் ஸம்பந்தத்தை ஒழித்து விட்டிருப்பதால், இப்படிப்பட்ட மானஸிக கர்மத்தாலும் பந்தம் அடைவதில்லை.

பைத்யம் பிடித்துப்போனால் எப்படியோ, அல்லது பிசாசுக்கு வசப்பட்டுப்போனால் எப்படியோ, அப்படியே கர்மயோகியின் இந்த்ரியங்கள் முன்பின் ஸம்பந்தமில்லாமல் நடிப்பது உண்டு. அவன் ரூபங்களைப் பார்ப்பான், பேசினதைக் கேட்பான், வாயாற் பேசுவான் இத்தனையும் ஞானத்தின் ஸம்பந்த மின்றி நடக்கும். இப்படி ஓர் பயளையும் உத்தேசிக்காமல் என்னென்ன தொழில்கள் ஏற்படுமோ, அவை கேவல இந்த்ரியங்களினால் ஏற்பட்டவையாகும். பின்பு, நடக்கும் அனைத்தையும் தெரிந்துகொள்வது என்பது, புத்தியின் கர்மமாகும். அப்புத்தியை முன்னிட்டு, மனஸையும் செலுத்தி, கர்மங்களைச் செய்த போதிலும், அவன் கர்மபந்தத்திற் சிக்கிப் போகாதிருப்பான்; ஏனென்றால் புத்திமுதற்கொண்டு தேஹம் வரைக்குமுள்ள எதிலும், நான் என்னும் பாவத்தை அவன்

பாராட்டாதிருத்தலால், அவன் கர்மங்களை செய்தும், அவன்மேல் அவை ஒட்டாமல், அவன் சுத்தமாகவே நிற்பான். இப்படி, கர்த்ருத்வாபிமான மின்றிச் செய்யப்படும் கர்மமே, நிஷ்கர்மம் ஆகிறது, என்று குருமுகத்தினின்று தெரிந்துகொள்ள வேண்டிய, இந்த ரஹஸ்யத்தை, அவன் அறிந்திருக்கிறான்.

கீழே வர்ணிக்கப்பட்ட விஷயத்தின் பெருமையைக் கொண்டாடல் :

இப்போது சாந்த ரஸமானது, தான் வைக்கப்பட்டிருந்த பாத்ரத்தில் அடங்காமல், பொங்கி வழிகிறது; ஏனென்றால் சொல்லுக்கு எட்டாம லதைத்தாண்டி நிற்கும் பரப்ரஹ்மஸ்வரூபம், சொல்லால் வர்ணிக்கப்பட்டதாயிற்று. இந்த்ரியங்களே கதியென்று கிடக்கும் பாமரர்களின் நிலையைக் கடந்து, இந்த்ரியங்களுக்கு அதீதமானவை உண்டென்றும், அவற்றை அறிந்தாற்றான் உஜ்ஜீவிக்கலாம் என்றும் நினைத்து அவற்றை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்த்தி எவர்களுக்கு உண்டாயிருக்குமோ, அவர்களே இவ்விஷயங்த்தைக் கேட்டறிய அதிகாரிகள் ஆவார்கள்.

இவ்விளம்பத்தை கூட ஸஹியாத ச்ரோதாக்களின் ஆர்த்தி :

"இப்படி எல்லாம், வேண்டாத விஷயங்களைச் சொல்வதை நிறுத்தும்; கதையினுடைய தொடர்ச்சியை குலைக்க வேண்டாம்; இப்படி விஸ்தரித்துப் பேச ஆரம்பித்தால், ச்லோகார்த்தங்களின் சம்பந்தம் அறுந்து போகும்; எந்த விஷயம் மன்ஸால் அறிவதற்கே அஸாத்யமானதோ, எதை புத்தி எவ்வளவு தேடித்தேடிப்பார்த்தாலும் கண்டுணராதோ, அந்த விஷயத்தை, ஏதோ ஓர் பாக்யவசத்தால் நீர் வார்த்தையால் நிரூபிக்கும்படி சக்தி பெற்றீர்; சப்தத்தைக் கடந்து நிற்கும் ஒன்று, சொற்களால் வர்ணிக்கக் கிடைத்தபின், இதர விஷயங்களைச் சொல்லி நிற்பதில் பயன் என்ன? மேல் கதையை "நிறுத்தி வைக்காமல் சொல்வீர்," என்று இப்படி ச்ரோதாக்கள் தங்கள் ஆவலைத் தெரிக்கவும், அதைக் கேட்டு நிவ்ருத்தி தாஸனாகிய நான் மேற்கதையைச் சொல்லத் தொடங்குவேன். இதற்கு முன் நடந்த ஸ்ரீக்ருஷ்ணார்ஜுன ஸம்வாதத்தின் பொருளை மனதில் நிறுத்தி வைத்துக் கொண்டு, மேல் நடந்ததைக் கேளுங்கள். பின்பு ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனைப் பார்த்து, "இனிக் கர்மயோகத்தை அநுஷடித்து, அதில் ஸித்தி பெற்றவர்களுடைய லக்ஷணங்களை நன்றாய் சொல்லப்போகிறேன், கேள்" என்றார்.

युक्तः कर्मफलं त्यक्त्वा शान्तिमाप्नोति नैष्ठिकीम् ।
अयुक्तः कामकारेण फले सक्तो निबध्यते ।।१२।।

யுக்த: கர்ம பலம் த்யக்த்வா ஶாந்தி மாப்னோதி நைஷ்டிகீம் ।
அயுக்த: காமகாரேண பலே ஸக்தோ நிபத்யதே ॥ 12

கர்மயோகத்தில் ஸித்தி யடைந்தவன், ஆத்மஞாநியாயும், விரக்தனாயும், சாந்தி நிறைந்தவனாயும், இருப்பான் :

இப்படி கர்மயோகத்தில் ஸித்திபெற்றவன் ஆத்மஞானம் படைத்தவனாய், கர்மபலன்களில் வெறுப்புப் பாராட்டி நிற்பான். அவன் இருக்கும் வீடு தேடிவந்து, சாந்தி என்பவள் அவனுக்கு மாலையிடுவாள். அப்படி யாகாதவர்கள், ஆசையாற் சுருக்கிடப்பட்டு, மோகம் என்னும் முளையோடு சேர்த்து, கர்மம் என்னும் கயிற்றால் கட்டப்பட்டவர்களாவார்கள்.

सर्वकर्माणि मनसा संन्यस्यास्ते सुखं वशी ।
नवद्वारे पुरे देही नैव कुर्वन्न कारयन् ।।१३।।

ஸர்வ கர்மாணி மனஸா ஸந்ந்யஸ்யாஸ்தே ஸுகம் வஶீ।
நவத்வாரே புரே தேஹீ நைவ குர்வன் ந காரயன் ॥ 13

அவன் அநுபவத்துக்கு எங்கும் ஸுகமும் ப்ரஹ்மஞாநமும் நிறைந்திருப்பதாகத் தோன்றி, அவன் தேஹத்திலிருக்கும்போதே, தேஹத்தி லில்லாதவனாவான்.

அவன், பலனிலாசைப்பட்டவர்களைப்போலவே, எல்லாக் கர்மங்களையும் செய்து, பின்பு அவற்றை செய்யாதவனாகத் தன்னைப் பாவித்து, அவற்றை யுபேக்ஷித்து நிற்பான். அவன் எங்கெங்கு நோக்கினாலும், அங்கங்கு ஸுகம் நிறைந்து கிடப்பதாய்ப் பார்த்து, ப்ரஹ்மஞானம் அங்கே நின்று கொண்டிருப்பதாய்ப் பேசுவான். அவன் ஒன்பது த்வாரங்களோடு கூடிய தேஹத்தில் இருந்தும், அதில் இல்லாதவனாவான். அவன் பலத்யாகம் செய்து விட்டதால், கர்மங்கள் செய்தும் செய்யாதவனாவான்.

न कर्तृत्वं न कर्माणि लोकस्य सृजति प्रभुः ।
न कर्मफलसंयोगं स्वभावस्तु प्रवर्तते ।।१४।।

ந கர்த்ருத்வம் ந கர்மாணி லோகஸ்ய ஸ்ருஜதி ப்ரபுः ।
ந கர்மபல ஸம்யோகம் ஸ்வபாவஸ்து ப்ரவர்ததே ॥ 14

இதற்கு உதாஹரணமாய் ஸர்வேச்வரனை எடுத்துக்காட்டல் :

இது எப்படி என்று ஸர்வேச்வரனைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். தத்வ த்ருஷ்டியைக் கொண்டு பார்த்தால், ஸர்வேச்வரன் ஒன்றும் செய்யாதவன் ஆகிறான். ஆனால் வ்யவஹாரத்ருஷ்டியைக் கொண்டு பார்க்கும்போது, அவனே மூவுலகையும் படைத்தவனாகிறான். அவனைக் கர்த்தாவென்று சொல்லப்போவோமானால், அவன் உதாஸீனனாயிருப்பதால், அவனிடத்தில் ஓர் கர்மமும் ஒட்டிக்கொள்வதில்லை. யோக நித்திரைக்கு பங்கம் ஏற்படாமலே, அவனுடைய அகர்த்ருத்வத்துக்கு ஓர் குறைவு மில்லாமலே, மஹா பூதங்களின் ஸமுதாயத்தை ஸ்ருஷ்டித்து வைக்கிறான். ஜகத்தில் இருக்கும் ஸகல ப்ராணிகளின் உயிருக்குள் புகுந்திருந்தும், அவன் எவரைச் சேர்ந்தவனாயும் ஆகிறதில்லை, ஜகமே உண்டானாலும், அழிந்து போனாலும், அந்தச் செய்தியை, அவன் அறியாதவனாய் இருக்கிறான்.

नादत्ते कस्यचित्पापं न चैव सुकृतं विभुः ।
अज्ञानेनावृतं ज्ञानं तेन मुह्यन्ति जन्तवः ।।१५।।

நாதத்தே கஸ்ய சித்பாபம் ந சைவ ஸுக்ருதம் விபுः ।
அக்ஞானே நாவ்ருதம் க்ஞானம் தேன முஹ்யந்தி ஜந்தவः ॥ 15

ஸர்வேச்வரன் அஸக்தன், கர்மரஹிதன், உருவற்றவன் :

அந்த ப்ரபு பாபங்களனைத்தும் தன்னைச் சூழ்ந்துகிடந்த போதிலும், அவற்றைக் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை, அவ்விஷயத்தில் ஸாக்ஷியாகக்கூட நிற்பதில்லை, யென்றால், இதர விதப்பட்ட ஸம்பந்தம் அவனுக்கு எப்படி ஏற்படும். அவன் ஓர் தேஹத்தைப் பரிக்ரஹித்துக்கொண்டு, ஓர் சரீரியாய், சில லீலைகளைச் செய்த போதிலும், அந்தப்ரபுவினுடைய நிராகாரத்வத்துக்கு ஓர் ஹாநியும் ஏற்படுகிறதில்லை. அவன் ஸ்ருஷ்டிக்கிறான் என்றும், ரக்ஷிக்கிறான் என்றும், அழிக்கிறான்

என்றும், உலகில் சொல்லிக்கொள்வது, அஞ்ஞானத்தின் பேச்சு என்றறி, அர்ஜுனா.

ज्ञानेन तु तदज्ञानं येषां नाशितमात्मनः ।
तेषामादित्यवज्ज्ञानं प्रकाशयति तत्परम् ।।१६।।

க்ஞானேன து ததக்ஞானம் யேஷாம் நாஶிதமாத்மன: ।
தேஷா மாதித்ய வஜ்க்ஞானம் ப்ரகாஶயதி தத்பரம் ॥ 16

எவனுக்கு ஸர்வேச்வரன் ஸ்வரூப விஷயத்தில் இப்படிப்பட்ட அஞ்ஞானம் தீர்ந்ததோ, அவனுக்கு, தான்மட்டுமே யன்றி உலகத்தாரனைவரும், முக்தர்களாய்த் தோன்றுகிறார்கள் :

அந்த அஞ்ஞானமானது அடியோடு நாசமானபின், அறிவு மயக்கம் என்னும் அழுக்கு முற்றிலும் தீர்ந்துபோய், ஈச்வரனான என கர்த்ருத்வம் நன்றாய் ப்ரகாசிக்கும். இப்படி ஈச்வரன் அகர்த்தா என்று, ஒருவன் அறிந்த உடனேயே அவனே ஈச்வரனாகிறான், அவனே ஈச்வரன், என்ற நிலை புதிதாய் ஏற்படாமல், அவனுக்கு ஏற்கனவே ஸஹஜமாய் அமைந்திருந்ததே; ஆனால் இதற்கு முன்னால் அவன் இதை அறியாதிருந்தான். இப்படிப்பட்ட விவேகம் சித்தத்தில் ஏற்பட்டபின், அவனுக்கு மூவுலகும் ஒன்றுபட்டுப்போய், பேதம் எங்கும் காணக்கிடைக்காமற் போகும். ஆகவே அவன் முக்தனாய்ப் போய் விட்டதால், கிழக்குதிக்கில் ஸூர்யன் உதித்த உடனே அத்திக்கு தேஜோமயமாய் விடுவது போலவே, இதர திக்குகளும் ப்ரகாசிதமாய்த் தோற்றுவது போலும், உலகத்தாரனைவரும் அவனுக்கு முக்தர்களாய்த் தோற்றுவார்கள்.

तद्बुद्धयस्तदात्मानस्तन्निष्ठास्तत्परायणाः ।
गच्छन्त्यपुनरावृत्तिं ज्ञाननिर्धूतकल्मषाः ।।१७।।

தத் புத்த்யஸ் ததாத்மானஸ் தந்நிஷ்டாஸ் தத் பராயணா: ।
கச்சந்த்ய புனராவ்ருத்திம் க்ஞான நிர்தூத கல்மஷா: ॥ 17

ஆத்மஞானத்தில் நிலைபெற்றவனுக்கு பேதபுத்தி அற்றுப் போகும் :

ஆத்மஞானத்தில் புத்தி நிலைபெற்றதாய், தன்னை ப்ரஹ்மமாகவே பாவித்து, இராப்பகல் அந்த அநுஸந்தானத்தை

விட்டுப் பெயராது, தன்னுடைய ப்ரஹ்மநிலை தவறிப்போகாதபடி காப்பாற்றிக் கொண்டிருக்கிறான், என்று சொல்லும்படியாய், எவனுக்கு இப்படிப்பட்ட வ்யாபக ஞானம் ஏற்பட்டிருக்குமோ, அவனுடைய ஸமத்ருஷ்டியை விசேஷமாய் வர்ணித்துச் சொல்லவும் வேண்டுமா? தன்னை ஸச்சிதாநந்த ப்ரஹ்மரூபமாய்ப் பார்க்கும் ஒருவன், விச்வம அனைத்தையும் அப்படியே பார்ப்பான், என்று சொல்வதில் ஆச்சர்யப்படத் தக்கது என்ன இருக்கிறது? பாக்யத்துக்கு தாரித்ரியத்தை, வேடிக்கையாகக்கூட, அநுபவிக்கக் கிடைக்காதது போலும், விவேகத்துக்குப் புத்திமயக்கம் என்பது எப்படி இருக்கிற தென்று தெரிந்துகொள்ள கிடைக்காததுபோலும், ஸூர்யனுக்கு அந்தகாரத்தைப் பார்க்கக் கிடைக்காதது போலும், அம்ருதத்துக்கு மரணத்தின் ஸமாசாரம் கேட்கக் கிடைக்காதது போலும், சந்திரனுக்கு வெப்பம் என்பது எப்படி இருக்குமென்று அறிந்துகொள்ளக் கிடைக்காதது போலும், பூதங்களில் பேதமிருப்பதாய்ப் பார்க்க ஆத்மஞானிக்குக் கிடைக்காமற்போகும்.

विद्याविनयसम्पन्ने ब्राह्मणे गवि हस्तिनि ।
शुनि चैव श्वपाके च पण्डिताः समदर्शिनः ।।१८।।

வித்யா வினய ஸம்பந்நே ப்ராம்ஹணே கவி ஹஸ்தினி।
ஶுனி சைவ ஶ்வபாகே ச பண்டிதாः ஸமதர்ஶினः ॥ 18

இதுவுமது :

பின்பு இது கொசு, இது யானை, இவன் நாய் மாம்ஸம் தின்னும் புலையன், இவன் ப்ராஹ்மணன், அதோ நிற்கிறவன் புறத்தவன், இவன் என் மகன், இது பசு, இது நாய், இவன் பூஜ்யன், இவன் அவமதிக்கத்தக்கவன், என்றிப்படிப் பட்ட வித்யாஸங்கள், அவனுக்கு எப்படித் தோற்றும்? விழித்துக் கொண்டிருப்பவனுக்கு ஸ்வப்நம் எப்படி நேரும்? எந்த அகங்காரத்தைக் கொண்டு, இந்த வித்யாஸங்களை அறிய வேண்டுமோ, அது முன்னமேயே முற்றிலும் நாசம் அடைந்து போய்விட்டதால், வித்யாஸபுத்தி எப்படி உண்டாகும்?

इहैव तैर्जितः सर्गो येषां साम्ये स्थितं मनः ।
निर्दोषं हि समं ब्रह्म तस्माद् ब्रह्मणि ते स्थिताः ।।१९।।

இஹைவ தைர்ஜித: ஸர்கோ யேஷாம் ஸாம்யே ஸ்திதம் மன: ।
நிர்தோஷம் ஹி ஸமம் ப்ரம்ஹ தஸ்மாத் ப்ரம்ஹணி தே ஸ்திதா: ॥ 19

ஸமத்ருஷ்டி யடைந்தவன் லக்ஷணம் :

ஆகையால், எவ்விஷயத்திலும், எக்காலும், எவனுக்கு ஸமபுத்தி ஏற்பட்டிருக்குமோ, அவனே அத்விதீய ப்ரஹ்மமாவான், ஸமத்ருஷ்டியின் பூர்ணலக்ஷணம் இன்ன தென்று சொல்வேன், கேள். ஸமத்ருஷ்டியுள்ளவன் விஷயங்களின் ஸம்பந்தத்தை அறுத்துக் கொள்ளாமலே, இந்திரியங்களைத் தண்டிக்காமலே, ஆசையற்றவனாய், விஷயங்களைப் புசித்துக்கொண்டு, உலகத்தோடு ஸம்பந்தத்தைப் பாராட்டி யுலகவ்யாபாரங்களை யனுஷ்டித்துக்கொண்டு, உலகத்தாருடைய அஞ்ஞானத்தை விட்டொழித் திருப்பான். ஜனங்கள் நடுவிலேயே ஸஞ்சரித்துக் கொண்டிருக்கும், ஓர்பிசாசை ஜனங்கள், எப்படிக் கண்டு பிடித்துக் கொள்வார்களோ, அப்படியே அவன் ஸம்ஸாரத்தின் உருவாகிய சரீரத்திலிருந்தும், (அவனிருக்கும் உண்மையான நிலை ஸம்ஸாரத்தினின்று வெகு தூரம் விலகியிருக்கும்) அவனை ஸம்ஸாரம் அறிந்து கொள்ளாது. வாயுவின் வேகத்தினால் ஜலத்தில் ஜலமே புரள, அதை அலையென்று பேசி, ஜலத்தைக் காட்டிலும் வேறுபட்டடதாக ஜனங்கள் பாவிப்பது போலும், எல்லா விஷயத்திலும் மனஸு ஸமதையை அடைந்து, ப்ரஹ்மமாய், ப்ரஹ்மத்திலேயே, புரண்டுகொண்டிருக்கும் ஒருவனை, பிறர் நாமரூபமுள்ள ஓர்மனிதனாகப் பாவித்த போதிலும், அவன் ப்ரஹ்மத்தினின்று வேறாகான். மேலும் ஸமத்ருஷ்டி அடைந்தவனுடைய மற்றும் சில குறிகளைச் சுருக்கிச் சொல்வேன், கேள்.

न प्रहृष्येत्प्रियं प्राप्य नोद्विजेत्प्राप्य चाप्रियम् ।
स्थिरबुद्धिरसम्मूढो ब्रह्मविद् ब्रह्मणि स्थितः ।। २० ।।

ந ப்ரஹ்ருஷ்யேத் ப்ரியம் ப்ராப்ய நோத்விஜேத் ப்ராப்ய சா ப்ரியம் ।
ஸ்திர புத்தி ரஸம்மூடோ ப்ரம்ஹவித் ப்ரம்ஹணி ஸ்தித: ॥ 20

இதுவுமது :

கானநீர் ப்ரவாஹமாயோடி, பெருத்த மலையை உருட்டிக் கொண்டுபோயிற் றென்பது, அஸம்பாவ்யமாயிருப்பது போலும், சுபாசுபங்களின் ஸம்பந்தத்தால், அவன் மனஸு ஒரு விதமான விகாரமும் அடையாது. இப்படிப்பட்ட ஸமத்ருஷ்டி உள்ளவனே ப்ரஹ்ம மாவான்.

बाह्यस्पर्शेष्वसक्तात्मा विन्दत्यात्मनि यत्सुखम् ।
स ब्रह्मयोगयुक्तात्मा सुखमक्षयमश्नुते ।। २१ ।।

பாஹ்ய ஸ்பர்ஶேஷ்வ ஸக்தாத்மா விந்தத்யாத்மனி யத் ஸுகம்।
ஸ ப்ரம்ஹ யோக யுக்தாத்மா ஸுகமக்ஷய மஶ்நுதே ।। 21

இதுவுமது :

எவன் தன் ஆத்மஸ்வரூபத்தை விட்டு, ஒருக்காலும் இந்த்ரியங்களின் ஊருக்குப் போய்ச்சேர் வதில்லையோ, அவன் விஷங்களை ஸேவிப்பதில்லை, என்பதில் ஆச்சர்யம் என்ன? இயற்கையாகவே அபாரமான ஆத்மஸுகாநுபவத்தால் ஸுகித்துக் கிடக்கும் அந்தரங்கமுடைய ஒருவன், ஆத்மஸ்வரூபத்தைவிட்டு, வெளியில் அடியெடுத்து வைக்கமாட்டான். குளிர்ச்சியாயிருக்கும் அல்லி இதழ்களின்மேல் உட்கார்ந்துகொண்டு, உத்தமமான சந்திரகிரணத்தை ஸாப்பிட்டுக் கொண்டிருக்கும் சகோரபக்ஷி, மணல் திட்டிற்கு வந்துட்கார்ந்து கொண்டு மணலைமென்று தின்பதற்காக, வெளிப்பட்டு வருமா? அப்படியே உத்தமமான ஆத்மஸுகத்தை தன் ஸ்வருபத்திலேயே நின்று அநுபவிக்க, எவனுக்குக் கிடைத்துவிட்டதோ, அவனுக்கு விஷயபோகம் தானாகவே விட்டுப்போகிறதென்று சொல்லிக் காட்ட வேண்டுமா? நன்றாய் விசாரித்துப் பார்ப்போமாகில், ஆத்ம ஸுகா நுபவமே இல்லாமற் போனாற்கூட, விஷயஸுகம் என்பதை, ஓர் ஸுகம் என்றெண்ணி, எவன் ஏமாந்துபோவான்?

ये हि संस्पर्शजा भोगा दुःखयोनय एव ते ।
आद्यन्तवन्तः कौन्तेय न तेषु रमते बुधः ।। २२ ।।

யே ஹி ஸம் ஸ்பர்ஶஜா போகா துக்கயோனய ஏவ தே।
ஆத்யந்த வந்த: கௌந்தேய ந தேஷு ரமதே புத: ।। 22

ஞானியானவன், விஷயஸுகத்தை துக்ககாரண மென்றறிந்து, அதின் வழிகூடப்போகான் :

எவன் ஆத்ம்ஸ்வரூபத்தை அறிய வில்லையோ, அவனே இந்த இந்த்ரிய விஷயங்களைப் புசித்து, பரம ஏழைகள் உமி தவிடு இவற்றைத் தின்று ஸந்தோஷிப்பதுபோல், ஸந்தோஷிப்பான். தாஹம் எடுத்த மான் பரபரப்புக் கொண்டு, உண்மையாய் ஜலமிருக்கும் மிடம் போகாமல்,

பாலைவனத்தில் கானல் ஜலத்தின் ப்ரவாஹத்தைப் பார்த்து, அதை உத்தேசித்தோடி தாஹத்தை தீர்த்துக்கொள்ளப் பெறாமல், ஓடி வந்ததால் முன் இல்லாதததான ஓர்ச்ரமத்தை தேடிக்கொள்வது போலும், தன் ஸ்வரூபத்தை அறியாமையால், ஆத்மாநந்தத்தை ஒரு நாளும் அநுபவியாதவன், விஷயங்களை ஸுகமுள்ளவை என்று நினைத்து, அதிக துக்கத்துக்காளாவான்.

மற்றப்படியாய் விஷயத்தில் ஸுகம் இருக்கிறதென்று சொல்வது, அஸங்கதமாய் இருக்கிறது. விஷயத்தில், உண்மையாக ஸுகம் இருக்குமே யானால், மின்னல் ப்ரகாசத்தைக் கொண்டு ஜகத்தில் எல்லா வ்யாபாரங்களையும் நடத்திக் கொள்ளலாம். காற்று, மழை, வெய்யில், இவைகளின் தொந்தர வில்லாதபடி, மேகத்தின் நிழலில் வஸித்து வாழமுடியுமேயானால், மூன்றடுக்கு மெத்தை வீடுகள் கட்டிக்கொள்ள என்னஆவச்யகம் இருக்கிறது?

வஸநாபி என்னும் விஷக்கிழங்குக்கு, மதுரம் என்று பெயர் வைத்தது போலும், செவ்வாய் கிழமையை மங்களவார்ம் என்று சொல்வது போலும், ஜலஸம்பந்தம் கொஞ்சமேனுமில்லாத கானவில் தோன்றும் தோற்றத்தை, ம்ருகஜலம் என்பது போலும், விஷய போகத்தால் ஓர்வித ஸுகம் கிடைப்பதாக எண்ணி, விஷய ஸுகம் என்று பேசுவது, ஞானமற்ற பேச்சே தவிர, வேறொன்றுமில்லை. இவையெல்லாம் நிற்க, பாம்பு படத்தின் கீழ் இருக்கும் நிழல் எலிக்கு எவ்வளவு சீதளமாயிருக்குமோ, தூண்டி முள்ளின்மேல் உருட்டிவைக்கப்பட்டிருக்கும் மாம்ஸம், மீனுக்கு எவ்வளவு நன்மையாயிருக்குமோ, விஷயபோகம் ப்ராணிகளுக்கு அவ்வளவு ஸுகமாய் இருக்கும். பாண்டுரோகத்தால் தேஹம பெருத்தால், ஸந்தோஷிப்பதற்கிடமில்லாமல், மரணம் நெருங்கிவிட்டது என்று துக்கிக்க காரணமாவது போலும், இந்தவிஷயஸுகம் அடிமுதல் நுணிவரைக்கும துக்கமே என்று விரக்தர்களான விவேகிகள் மதித்து, அதை விலக்கியே வைப்பார்கள், ஆனால் முற்றிலும் ஞானமற்றவர்கள் என் செய்வார்கள்?

இதை ஸேவிக்காமல் அவர்களுக்கு அரை நிமிஷங்கூடபோது போவதில்லை. ஐயோ! இந்த ஏழைகள் இதின் உள் மர்மத்தை அறியாமல், நாற்றம் நாறும் சீழில் பிறந்து அதிலேயே உழன்று கிடக்கும் புழுக்களுக்கு, அந்த சீழின்மேல் வெறுப்பு தோற்றாதது போலும், மனஸில் ஓர் வெறுப்பும் தோற்றாதவர்களாய், இதிலேயே கிடந்து உழல்கிறார்கள், இப்படி துக்காநுபவத்துக்கென்றே பிறந்த அவர்களுக்கு, இத்துக்கமே உயிர் நிலையாயிருக்கிறது, சேற்றை விட்டு வெளிப்படமுடியாத

தவளைகள்போலவும், நீரைவிட்டு வெளிப்படமுடியாத மீன்களைப்போலவும், விஷயஸுகத்தை விட்டு வெளிப்பட முடியாதவர்களாய் இவர்கள் இருக்கிறார்கள்.

மேலும் ஜீவர்கள் எல்லோருமே, விஷய போகத்தில் வெறுப்புண்டானவர்களாய் விஷயங்களை ஸேவிக்கா தொழிவார்களேயானால், துக்கத்தை அநுபவிக்க வேண்டிய பிறப்புக்கள் என்றவை அனைத்தும், அவற்றில் ஜந்மிக்கிறவர்கள் இல்லாமல் நிர்ர்த்தகமாய்ப் போய்விடுமே. கர்ப்பவாஸம், ஜந்மம், மரணம், முதலிய துக்கங்களை ஒருக்காலும் ஓய்வில்லாதபடி அநுபவித்துக் கொண்டே நடக்க வேண்டியதானாலும், முடிவில்லாததுமான இந்த ஸம்ஸாரம் என்னும் வழி, நடப்பவர்களில்லாமல், பாழாய்ப்போய் விடுமே. விஷயத்தில் முழுகிக் கிடக்கிறவர்கள் விஷயஸேவநத்தை விட்டொழிந்தால், மஹாதோஷங்கள் எங்கே வளிக்கப் பெறும்?

மேலும், ஸம்ஸார மென்னும் வார்த்தையே பொய்யாய்ப் போகாதா? உண்மையாய் இல்லாததான அஞ்ஞாநக் கூட்டம் முழுவதும், உலகில் இருக்கிற தென்று காண்பித்து வைப்பதற்கு, துக்கரூபமான விஷயபோகத்தை ஸுகம் என்றெண்ணு மிவர்கள், அவச்யம் இருந்து தீரவேண்டி யிருக்கிறது. ஆகவே விசாரித்துப் பார்க்கும்போது, விஷயம் என்பது இவ்வளவு கெட்டதாயிருப்பதால், ஹே அர்ஜுனா, நீ மறதியாய்க் கூட, அதின் வழி செல்லக்கூடாது. ஆகையால் விரக்தர்கள், ஸுகம் போல் தோற்றி, உண்மையில் துக்கமாய் இருக்கும், விஷயபோகத்தைக் கண்டு, அதை விஷமாக நினைத்து வெறுத்திருப்பார்கள்.

शक्नोतीहैव यः सोढुं प्राक्शरीरविमोक्षणात् ।
कामक्रोधोद्भवं वेगं स युक्तः स सुखी नरः ॥ २३ ॥

ஶக்நோதீஹைவ யः ஸோடும் ப்ராக் ஶரீர விமோக்ஷணாத் ।
காம க்ரோதோத்பவம் வேகம் ஸ யுக்தः ஸ ஸுகீ நரः ॥ 23

ஞானிகளுக்கு விஷயபோக மற்றுப்போவதற்குக் காரணம்:

ஞானிகள் தேஹத்திலிருக்கும் போதே, தேஹதர்மங்கள் இவ்விஷயபோகம் என்பதே அவர்களுக்கு ஏற்படாது; ஏனென்றால் அவர்கள் ஆத்மஸுகாநுபவத்தில் முழுகிக்கிடந்து, அதற்கு வெளிப்பட்டிருக்கும் விஷயங்களின் வர்த்தமானங்களை, முற்றிலும் அறியாதிருப்பார்கள், அவர்கள்

ஆத்மஸுகாநுபவம் பண்ணுவது, ஓர்பக்ஷி ஓர்பழத்தை சாப்பிடுவது போல் இராமல், அவ்வனுபவத்தின் முறை முற்றிலும் வேறுபட்டதாயிருக்கும்; ஏனென்றால் அவ்வனுபவத்தில் தாங்கள் அனுபவிக்கிறவர்கள் என்னும் அறிவே யற்றுப் போயிருக்கும். ஆத்மாநுபவம் என்னும் ஓர் அவஸ்தை ஏற்பட்ட மாத்ரத்தில், அகங்காரம் என்னும் திரைவிலகிப்போய், ஆத்ம ஸ்வரூபாநுபவ ஸுகத்தை கெட்டியாய் அணைத்துக்கொண்டு, ஜலத்துடன் ஜலம் சேர்ந்து ஒன்றுப்பட்டுப்போவது போலும், காற்று ஆகாசத்தோடு கலந்து மறைந்து போகும்போது, இரண்டு என்னும் வார்த்தை அற்றுப் போவது போலும், அந்த ஆத்ம ஸ்வரூபானுபவம் என்னும் ஸுரதத்தில், அநுபவிக்கிறவன் அநுபவகிக்கப்படும் பொருள், என்னும் த்வைத மற்றுப்போய், ஸுகம் ஒன்றே ஏற்பட்டு நிற்கும். இப்படி த்வைதம் என்பதின் பேச்சே அற்றுப்போனபின், ஒன்றே மிகுந்து நிற்கிறது என்று சொல்வதற்கும், முடிவதில்லை; ஏனென்றால், ஒன்றுபட்ட அந்த நிலையைப் பார்த்து அறிகிற வேறொருவன் இல்லாமற்போகிறான்.

योऽन्तःसुखोऽन्तरारामस्तथान्तर्ज्योतिरेव यः ।
स योगी ब्रह्मनिर्वाणं ब्रह्मभूतोऽधिगच्छति ।।२४।।
लभन्ते ब्रह्मनिर्वाणमृषयः क्षीणकल्मषाः ।
छिन्नद्वैधा यतात्मानः सर्वभूतहिते रताः ।।२५।।

யோऽந்த: ஸுகோऽந்தரா ராமஸ் ததாऽந்தர் ஜ்யோதி ரேவ ய: ।
ஸ யோகீ ப்ரம்ஹ நிர்வாணம் ப்ரம்ஹ பூதோऽதி கச்சதி ।। 24

லபந்தே ப்ரம்ஹ நிர்வாண ம்ருஷய: க்ஷீண கல்மஷா:।
சிந்நத் வைதா யதாத்மான: ஸர்வபூத ஹிதே ரதா: ।। 25

ப்ரஹ்மஞாநியின் பெருமையைக் கொண்டாடுதல் :

ஆகையால், இவ்விஷயத்தில் இவ்வளவு சொன்னதுபோதும். சொல்ல வேண்டியதான விஷயம், சொல்லுக்கடங்காமல் இருக்கும்போது, வளர்த்தி வளர்த்திப் பேசுவதினால் பயன் என்ன? இதின் மர்மத்தை ஆத்மானுபவம் பண்ணினவர்களே அறிவார்கள். இப்படிப்பட்ட ஸுகாநுபவத்தால் மயக்கங்கொண்டு, தங்கள் ஸ்வரூபத்திலேயே அடங்கிக் கிடக்கிறவர்கள் எவர்களோ, அவர்கள், முழுவதும் ஸாமரஸ்யம் என்னும் ரஸத்தைக் கொண்டு, ஊத்தி வார்த்து வைக்கப்பட்ட

உருவங்கள் ஆவார்கள். அவர்களை ஆநந்தத்தின் ஆகாரம் என்றும், ஸுகம் என்னும் கிழங்கினின்று வெளிப்பட்ட முளை என்றும், மஹாஞானத்தின் விஹாரஸ்தானம் என்றும், விவேகம் குடியேறிய ஊர் என்றும், பரப்ரஹ்மத்தின் உண்மையான நிலை என்றும், ப்ரஹ்மவித்யையின் அலங்கரிக்கப்பட்ட அவயவங்கள் என்றும்,ஸத்வகுணத்தின் ஸாரமான ஸாத்விகமே யென்றும், ஆத்மஸ்வரூபத்தின் அவயவங்கள் என்றும், சொல்ல வேண்டியதாய் இருக்கும்.

கதையில் தடை ஏற்பட்டதை அறிந்து, கதையின்தொடர்ச்சியை திரும்பப் பற்றல் :

இச்சமயத்தில் என்னுடைய குருநாதன் தன் மனதுக்குள் பின்வருமாறு நினைத்தார். இப்படி நீ விஸ்தாரமாய் வர்ணிப்பதை நிறுத்து. இதினால் பயன் என்? உனக்கு ஸாதுக்களை வர்ணிக்கக் கிடைத்தால், உத்ஸாஹம் பெருகி, கதையைச் சொல்ல மறந்து போய், அந்த வர்ணனையைச் செய்வதற்கு வெவ்வேறான அழகிய வார்த்தைகளைத் தேடி நிற்கிறாய். ஆனால் இந்த உத்ஸாஹத்தை தணித்துக்கொண்டு, க்ரந்தார்த்தம் என்னும் ஞான தீபத்தை ப்ரகாசிக்கச் செய்து, ஸாதுக்கள் ஹ்ருதயம் என்னும் கோவிலில் மங்களோதயத்தைச் செய்துவை. இப்படிப்பட்ட குருவின் உள்ளபிப்ராயம் வெளிப்பட்டு, நிவ்ருத்திதாஸனான எனக்குத் தெரிய வந்ததால், இதை நிறுத்திவிட்டு, மேலே கிருஷ்ணன் சொன்னதையே சொல்வேன் கேளுங்கள்.

ஆத்மாநுபவம் பண்ணுகிறவனுக்கு மேலே உண்டாகும் நன்மைகளை கிருஷ்ணன் வர்ணித்தல் :

அப்படி ஆத்மஸுகாநுபவம் செய்பவன் கரை அற்றதான ஸுகமென்னும மடுவில் முழுகி, முதல் முழுக்கிலேயே அதின் அடியிற் போய்ச்சேர்ந்து, அங்கு நிலைபெற்று, அந்த ஸுகமாகவே ஆய்விடுகிறான், அவன், ஆத்மப்ரகாசம் என்னும் சுத்தமான வெளிச்சத்தைக் கொண்டு, தனக்குள்ளேயே விச்வமனைத்தையும் பார்ப்பான். அவன் தேஹத்திலிருந்தாலும், அவனை பரப்ரஹ்மமென்று சொல்ல ஆக்ஷேபணையே இராது. உண்மையாகவே அனைத்துக்கும் உயர்ந்ததாய், அழிவற்றதாய், அளவற்றதாய், இருக்கும் ப்ரஹ்மஸுகம் என்னுழுருக்கு அவன் அதிகாரியாய், ஆசையற்றிருப்பான். இந்த ப்ரஹ்மஸுகம் மஹர்ஷிகளுக்கென்று பிரித்தெடுத்து வைக்கப் பட்டதாய், ஸந்தேஹமற்றவர்களுக் கென்று இடைவிடாது விளைந்து கொண்டிருக்கும்.

कामक्रोधवियुक्तानां यतीनां यतचेतसाम् ।
अभितो ब्रह्मनिर्वाणं वर्तते विदितात्मनाम् ।।२६।।

காம க்ரோத வியுக்தாநாம் யதீநாம் யதசேதஸாம் ।
அபிதோ ப்ரம்ஹநிர்வாணம் வர்ததே விதிதாத்மநாம் ।। 26

ஒருவன் ஆத்மாநுபவத்தில் ஒருக்கால் அழுந்திப்போனபிறகு, திரும்பவும் ப்ரபஞ்சத்துக்கு வருவதில்லை :

எவர்கள் தங்களுடைய மனஸை விஷயத்தினின்று திரும்பி, அதைத் தங்கள் வசப்படுத்திக்கொண்டு, ஆத்மஸ்வரூபாநுபவத்தில் லயித்துப்போனவர்களாய், ப்ரபஞ்ச விஷயத்தில் தூங்கிப் போனவர்களாய் விடுவார்களோ, அவர்கள் அத்தூக்கத்தை கலைத்துக் கொண்டு, விழித்துக்கொள்வதே இல்லை. அவர்களே ஆத்மஞாநிகள் கோரித்தேடும் பரப்ரஹ்மம் என்னும் மோக்ஷபதம் ஆவார்கள். தேஹத்தோடு இருக்கும்போதே, இப்படிப்பட்ட பரஹ்மஸ்திதிக்கு எப்படி வந்து சேர்ந்தார்களென்று நீ கேட்பாயே ஆனால், சுருக்கமாய்ச் சொல்வேன் கேள்.

स्पर्शान्कृत्वा बहिर्बाह्यांश्चक्षुश्चैवान्तरे भ्रुवोः ।
प्राणापानौ समौ कृत्वा नासाभ्यन्तरचारिणौ ।।२७।।

ஸ்பர்சாந்க்ருத்வா பஹிர்பாஹ்யாம்ஸ்சக்ஷுஸ்சைவாந்தரே ப்ருவோ: ।
ப்ராணாபாநௌ ஸமௌ க்ருத்வா நாஸாப்யந்தர சாரிணௌ ।। 27

ராஜயோகாப்யாஸத்தின் சுருக்கமான வர்ணனை :

வைராக்யத்தின் பலத்தைக் கொண்டு, இந்த்ரிய விஷயங்களைச் சித்தத்தில் நுழையாதபடி வெளியில் துர்த்திவைத்து, மனஸை சரீரத்தை விட்டு வெளிப்படாதபடி அடக்கிக்கொண்டு, இடை, பிங்களை, ஸுஷும்நை, என்னும் நாடிகள் கூடுமிடமான இரண்டு புருவத்தின் மத்யஸ்தானத்தை நோக்குபடி பார்வையைத் திருப்பிவைத்து, ப்ராணாபான வாயுக்கள் இரண்டையும் ஒன்றுபடுத்தி, மனஸையும் அவற்றுடன் சேர்த்துவைத்து, அம்மூன்றையும் இடைபிங்களை என்னும் நாடிகளில் ப்ரவேசிக்க விடாமல், ஸுஷும்நா நாடிவழியாய்ச் சிதாகாசத்தை நோக்கி, மேலெழுந்து போகும்படி செய்ய வேண்டும்.

यतेन्द्रियमनोबुद्धिर्मुनिर्मोक्षपरायणः ।
विगतेच्छाभयक्रोधो यः सदा मुक्त एव सः ।। २८ ।।

யதேந்த்ரிய மனோ புத்திர் முனிர் மோக்ஷ பராயணः ।
விகதேச்சா பய க்ரோதோ யः ஸதா முக்த ஏவ ஸः ।। 28

இதுவுமது :

பின்பு எப்படி கங்கை, தான் ஸமுத்ரத்தை நோக்கிப்போகும் வழியில், தன்னை வந்தடையும் சுத்த அசுத்த ஜலங்ளனைத்தையும் கூட்டிக்கொண்டு, அவற்றுடன் ஸமுத்ரத்தில் கலந்து போய் விடுமோ, அப்படியே மனஸு கெட்டவை நல்லவையான வாஸனைக ளனைத்தையும் தன்னுடன் கூட்டிக்கொண்டு போய், சிதாகாசத்தில் கலந்து லயம் அடைந்து போகும்படி வாயுவினாற் செய்யப்படும். பின்பு அவ்வாஸனைகள் தமக்குத்தாமே ஓய்ந்து போய், ஓர் தடாகம் வற்றிப்போன உடன், • அதில் ப்ரதிபலித்து தோன்றிக்கொண்டிருந்த வ்ருக்ஷம் முதலியவற்றின் ப்ரதிபிம்பங்கள் இல்லாமல் போவது போலும், மனஸு லயம் அடைந்ததும், அதில் ப்ரதிபிம்பித்துத் தோற்றிக்கொண்டு, அதில் எழுதிய சித்ரமபோல் இருந்த ஸம்ஸாரமே இல்லாமற் போகிறது; அதாவது மனஸு என்னும் ஆதாரம் நஷ்டமாய்ப் போனவுடனே, அஹம்காரம் முதலியவையும் நஷ்டமாய் போய், ஆத்மாநுபவம் செய்கிறவன், சரீரத்தில் இருக்கும்போதே, ப்ரஹ்மமாய் விடுகிறான்.

भोक्तारं यज्ञतपसां सर्वलोकमहेश्वरम् ।
सुहृदं सर्वभूतानां ज्ञात्वा मां शान्तिमृच्छति ।। २९ ।।

போக்தாரம் யக்ஞதபஸாம் ஸர்வலோக மஹேச்வரம் ।
ஸுஹ்ருதம் ஸர்வபூதானாம் க்ஞாத்வா மாம் ஶாந்திம் ருச்சதி ।। 29

யோக முறையைச் சுருக்கிச் சொன்னதின் முடிவு : கீழே, தேஹத்தி லிருக்கும்போதே, ப்ரஹ்மபாவம் அடைகிறானென்று, எவன் விஷயத்திற் சொன்னேனோ, அவன் இம்மார்க்கமாய்ப் புறப்பட்டு, யமநியமங்கள் என்னும் கடலைக் கடந்து, அக்கரையாகிய பரப்ரஹ்மத்தை அடைகிறான், அவன் தன்மேலொட்டிய மலங்களைத் துடைத்தொழித்து, ப்ரபஞ்சம் இவ்வளவு தான் என்று எல்லை ஏற்படுத்திவைத்து, பின்பு உண்மையான சாந்தியின் உருவமாய் நிலைபெறுகிறான்.

அதின் மேல் அர்ஜுனன் முகக்குறிகளைக் கண்டு, ஸ்ரீக்ருஷ்ணனுடைய ப்ரச்நம் :

இப்படி யோகாப்யாஸத்தின் தாத்பர்யத்தை, ஹ்ருஷீகேசன் சொன்ன உடனேயே, அர்ஜுநன் அந்த விஷயத்தை நன்றாய் அறிந்தவனாதலால், மிக்கக் களிப்புற்றான், கிருஷ்ணன் அர்ஜுநனுடைய மனோபாவத்தை அறிந்து கொண்டு, அவனைப் பார்த்து, "நான் சொன்னதைக் கேட்டு, உன் மனம் மகிழ்ச்சியடைந்ததாகத் தோற்றுகிறதே என்ன?" என்று கேட்டார்.

அர்ஜுநனுடைய விஞ்ஞாபனை :

அப்போது அர்ஜுனன், "தேவா, பிறர்களுடைய மனஸைத் தெரிந்துகொள்கிறவர்களுக்குள் நீர் சிறந்தவர். என்னுடைய மனஸை நீர் நன்றாயறிந்து, நான் விவரித்துக்கேட்க வேண்டியதா யிருந்ததை, நான் கேட்பதற்கு முன்னமேயே, சொல்லிவைத்தீர். ஆனால் அப்படி நீர் சொல்லிவைத்ததையே, இன்னும் விவரித்துச் சொல்ல வேண்டுமென்று, நான் இப்போது கேட்டுக் கொள்கிறேன். நீர் இப்போது சொல்லிக் காட்டிய யோகமுறையானது, ஜலத்தில் நீந்திப் போவதை விட்டு, காலால் நடந்து போகக் கிடைத்தால், எப்படி ஸுலபமாயிருக்குமோ, அப்படியே என்னைப்போன்ற மந்தாதிகாரிகளுக்கு, இது ஸாங்க்யமார்க்த்தைக் காட்டிலும் அநுஷ்டிக்க எளிதாயிருப்பதினால், பலன் அடைய கொஞ்ச காலவிளம்பம் ஆனாலு மாகட்டும், என்று தோற்றுகிறது. ஆகையால், தேவா இந்த யோக முறையை, நீர் திரும்பவும், முதற்றொடங்கி கடைவரைக்கும், விவரமாய்ச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அதினால் நீர் சொல்லத்தலைப்பட்ட விஷயம் விஸ்தரித்துப் போனலும் போகட்டும், ஓர் பாதகமுமில்லை", என்று சொன்னான்.

ஸ்ரீ கிருஷ்ணன் ப்ரத்யுத்தரம் :

அப்போது ஸ்ரீ க்ருஷ்ணன், "அப்படியே சொல்கிறேன், இம்மார்க்கம் உனக்கு நன்றாய் இருக்கின்ற தென்று தோற்றினால், அதை விளக்கமாய்ச் சொல்வதில் எனக்கென்ன கஷ்டம்? நீ கேட்டறிந்துகொண்டு அநுஷ்டிக்க வேண்டு மென்று ஆசைப்பட்டால், நான் சொல்லக்குறை என்ன?" என்று சொன்னார்.

ஸ்ரீக்ருஷ்ணன் அர்ஜுனன் விஷயத்தில் பாராட்டின ப்ரேமையின் பெருமை :

முன்னமேயே தாய், அத்துடன் கூட, அவளுக்கு எந்தக் குழந்தைமேல் மிக்க ப்ரியமோ, அந்தக் குழந்தை வந்து எதிர்

நின்று கேட்கிறது. பின்பு அவள் ப்ரேமைக்கு ஓர் அளவு ஏற்படுமா? அப்போது க்ருஷ்ணனிடத்தில் அர்ஜுனனைக் குறித்து ஏற்பட்ட ஓர் ப்ரியத்தை, காருண்ய ரஸத்தின் வ்ருஷ்டியோ என்றும், உலகில் அதுவரையில் இல்லாத புதிதான ஸ்நேஹ பாவத்தின் ஸ்ருஷ்டியோ என்றும், சொல்லும்படியா யிருந்தது. இது நிற்கட்டும், பகவான் அச்சமயத்தில் அர்ஜுனனை கடைக்கண்ணால் பார்த்தாரே, அப்பார்வையின் ப்ரேமையை என்னால் வர்ணிக்க முடியவில்லை. அந்தப் பார்வை அம்ருதத்தால் நிர்மிக்கப் பட்டதோ என்ன! அல்லது அது ப்ரேமையென்னும் மதுவைச் சாப்பிட்டு, அவனை விட்டு வெளிப்படமுடியாது, அதிமோஹங்கொண்டு அவன்மேலேயே மயங்கிக் கிடந்த தேனீயோ என்ன! என்று சொல்லும்படியா யிருந்தது.

இப்படி எல்லாம் விஸ்தரித்துச் சொல்லிக்கொண்டிருந்தால், சொல்ல வேண்டிய கதையின் வழியை விட்டு, கிளைவழியில் மிக்கதூரம் போய்விடுவதாகுமே தவிர, அந்த ஸ்நேஹபாவத்தை உள்ளபடி வர்ணித்தது என்பது ஸித்தி பெறாது. ஆகையால் இன்னும் வளர்த்திச் சொல்வதில் பயனில்லை. தன் பெருமையைத் தானே அறியாதவனான ஈச்வரனுடைய பெருமையை எவன் மனதினால் அறிந்து, சொல்லிற்குள் அடக்கிவைக்க, முடியும்? நான் கீழே இவ்வளவு வளர்த்திச் சொன்னதின் மொத்த அபிப்ராயம் இதுவே:- ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுநன்மேல் மிக்கப்ரேமை பாராட்டி, அதன் வசப்பட்டுப் போய், புத்தி மயக்கங் கொண்டவராய்ப் போனார்.

மேல்வரும் அத்யாய விஷயத்தின் அவதாரிகை :

ஆகையால் "கேள் அப்பா," என்று ஆவேத்துடன் நெட்டி, மேல் விஷயத்தை ஸ்ரீக்ருஷ்ணன் சொல்லத்தொடங்கினார். அர்ஜுனா எப்படிக்கெல்லாம் விஸ்தரித்து சொன்னால், இந்த விஷயம் உனக்குத் தெளிவாகுமோ, அப்படி எல்லாம் விந்யாஸப் படுத்தி, இது ஓர் விளையாட்டென்றுனக்குத் தோன்றும்படி, இவ்விஷயத்தை உபதேசிப்பேன். யோகம் என்பது எதற்குப் பெயர் என்றும், அதினால் அடையக்கூடிய பயன் என்ன என்றும், அதிலிறங்க அதிகாரம் பெற்றவர்கள் எவர்கள் என்றும், இப்படி எல்லாம் யோகத்தைப் பற்றி என்னென்ன விஷயங்கள், யோக சாஸ்திரங்களில் சொல்லப் பட்டிருக்கின்றனவோ, அவற்றை எல்லாம் நான் சொல்வேன், கவனித்துக்கேள், என்று எச்சரிக்கை செய்து, மேலே அவ்விஷயத்தை தொடர்ச்சியாகச் சொல்லப் போகிறார். அக்தையை மேலத்யாயத்தில் தெளிவாய் நிவ்ருத்திநாதன் தாஸனான நான் சொல்வேன் கேளுங்கள்.

ஐந்தாவது அத்யாயம் முற்றிற்று

அத்யாயம் 6.

ஸ்ரீ குருவந்தனம் :

இந்த அத்யாய விஷயத்தை ஸ்ரீக்ருஷ்ண முகமாய்க் கேட்கப் பெற்ற ஸஞ்ஜயனுடைய ஸந்தோஷம்: ஸ்ரீக்ருஷ்ணன் அர்ஜுனனோடு கலந்து செய்த யோகவிஷயமான ஸம்வாதத்தை சொல்வேன், கேளும் என்று, ஸஞ்ஜயன் த்ருதராஷ்டிரராஜனைப் பார்த்துச் சொன்னான். ஸ்ரீக்ருஷ்ணன் அர்ஜுனனுக்கென்று ப்ரஹ்மரஸத்தைக் கொண்டு விருந்தூட்டி வைத்தான். அந்தச் சமயத்தில் விருந்தாடிகளாக நாமும் வந்து சேர்ந்தோம். நம்முடைய பாக்யமே பாக்யம். தாஹமெடுத் தொருவன் ஜலத்தைக் குடிக்கப்போக, அந்த ஜலமே வாயிற் பட்டமாத்ரத்தில், அம்ருதமாய் விட்டாற்போலும் அல்லவா, இப்போது நமக்கு நேர்ந்திருக்கிறது; ஏனென்றால் மனஸால் க்ரஹிக்கமுடியாததான ப்ரஹ்மஞானம், நம் உள்ளங்கைப்பிடியிற் சிக்கிப் போய்விட்டது. அப்போது த்ருதராஷ்டிரன், இது உன்னை நான் கேட்ட விஷயம் அல்லவே என்றான்.

இதைக்கொண்டு, ஸஞ்ஜயன், அரசனுடைய மனஸு தன் குமாரனுடைய ஸமாசாரம் தெரிந்து கொள்வதிலேயே ஈடுபட்டிருகிறதென்று தெரிந்துகொண்டு, மனஸில் வியப்படைந்து, இக்கிழவன், "அஞ்ஞானத்தால் கேடுற்றவனாய் அல்லவா, இருக்கிறான். இல்லாவிட்டால், இப்போது நடக்கும் ஸம்வாதத்தால், எவ்வளவோ லாபத்தை அடையக் கூடுமே. ஆனால் அப்படி லாபத்தை அடைவது, இவனுக்கு எப்படிக் கிடைக்கும்? பிறவிக் குருடனுக்கு போது எப்படி விடியும்?" என்றெண்ணி, இவன் கோபிப்பானே என்று பயந்து, அதை வெளிப்படையாய்ச் சொல்லவில்லை, ஆனால், அந்த கிருஷ்ணார்ஜுன ஸம்வாதத்தை தான் கேட்கும்படியாய்ச் செய்துகொடுத்த தன் பாக்யத்தை, தான் கொண்டாடிக்கொண்டு, அந்த ஸஞ்ஜயன் மிக்க ஸந்தோஷமடைந்தான். அப்படி ஆனந்தத்தால் நிறைந்தவனாய் மனோவிகாஸத்தை அடைந்து, மிக்க ப்ரீதியுடன் அந்த விஷயத்தை ஸஞ்ஜயன் சொல்லப் போகிறான்.

இந்த அத்யாய விஷயத்தின் பெருமை:

இது கீதையின் ஸ்வரூபத்தில் ஆறாவது அத்யாயமாய் அமைந்திருக்கிறது. பாற்கடலைக் கடைந்தபின், அம்ருதம்

வெளிப்பட்டது போலும், இந்த ஆறாவது அத்யாயத்தில், கீதார்த்தத்தின் ஸாரமும், விவேகக்கடலின் அக்கரையும், யோகத்தின் ஸம்பத்துக்கள் நிறம்பிக்கிடக்கும் பாண்டாரமும், என்று சொல்லத்தக்க ஆத்மஸ்வரூபம், யாவரும் தடையின்றி நுழையும்படி, திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அத்யாயத்தில் மூலம் அஞ்ஞானம் ஓய்வடைந்து நித்ரை செய்கிறது. இந்த அத்யாயத்தில் விவரிக்கப்பட்ட விஷயத்தில், வேதம் தன் வாயை மூடிக்கொள்கிறது. இதில் தான் கீதார்த்தம் என்னும் கொடியின் ஸ்வரூபம் முளையெடுக்கிறது.

இந்த அத்யாயத்தின் ஸாஹித்யத்தின் பெருமை :

இப்படிப் பட்ட அர்த்த பூர்த்தியை உடைய, இந்த ஆறாவது அத்யாயத்தின், ஸாஹித்யத்தின் அழகுகளை வர்ணிக்கப் போகிறேன், அதைக் காதுகொடுத்துக் கேட்கவேண்டும். என்னுடைய பதங்கள் மஹாராஷ்ராமென்னும் ப்ராக்ருத பாஷையைச் சேர்ந்ததுவே ஆனாலும், அம்ருதத்தோடு பந்தயம்போட்டு வெற்றி பெறும். இப்படி ரஸபூர்த்தியுள்ள பதங்களைத் தொடுத்து வைப்பேன். அவற்றின் மார்த்தவத்துக்குமுன், ஸப்த ஸ்வரங்களின் ரஞ்சகத்வம் அல்பமாய்த் தோற்றும். அவை பலாத்காரமாய் எப்படி மனஸை ஆகர்ஷித்து, அதை மயங்கிக் கிடக்கச் செய்யுமோ, அப்படிச் செய்துவைக்க உத்தமமான பரிமளங்கள் கூட சக்தியற்றிருக்கும்.

அவற்றில் அமைந்திருக்கும் ரஸபூர்த்தியை அநுபவிக்க, காதுக்கு நாக்கு உண்டாய், அது வெளிப்பட்டு நீளும், அப்பதங்களில் ஒவ்வொரு இந்திரியமும் அநுபவிக்கத் தக்கதான வெவ்வேறு ஸுகங்கள் அனைத்தும் நிறைந்திருப்பதால், இந்த்ரியங்களனைத்தும், நான் முன்னே, நான் முன்னே, யென்று சண்டைபோடும். இந்த ஸாஹித்யம் சப்தரூபமகையால் இயற்கையாக காதுக்கே விஷயமேயானாலும், நாக்கானது இதில் ரஸமிருக்கிறதே, ஆகையால் இது என் விஷயமாயிற்று என்கிறது. மூக்கு தன் விஷயமான பரிமளம் அதில் இருக்கிறதென்று சொல்கிறது. இந்த ஸாஹித்யத்தில் ரூப அழகு இருக்கிறதென்று, அவ்வழகை அநுபவித்து திருப்தியடைய வந்த கண், இது ரூப அழகுகள் எல்லாம் அடைந்து கிடக்கும் கனி என்று சொல்கிறது. பதங்களெல்லாம் ஒன்று சேர்ந்து ஓர் வாக்யம் வெளிப்பட்ட மாத்ரத்தில், அவ்வாக்யத்தின் அர்த்த அழகை அனுபவிக்க, மனஸு வெளிப்பட்டுவந்து, தன் கைகளால் சப்தத்தை ஆலிங்கனம் செய்துகொள்ளப் போகிறது.

. இப்படி, இந்திரியங்கள், தங்கள் தங்கள், ஆசையை தீர்த்துக்கொள்ள, இந்த ஸாஹித்யத்தை கிட்டி வரவே, ஒரே ஸூர்யன் ஜகமனைத்தையும் விழிக்கச் செய்து, அவர்களுக்கு ஆனந்தானுபவத்தை உண்டுபண்ணி வைப்பதுபோலும், அவ்விந்திரியங்களனைத்துக்கும், இது ஸுகம் கொடுத்து ஸமாதானப்படுத்தி வைக்கிறது. இந்த ஸாஹித்யம், ஆச்சர்யப்படத்தக்க இப்படி ஓர் வியாபகத்வத்தைப் பெற்று, இதின் அர்த்தத்தை அறிந்தவர்களுக்கு, அவர்கள் வேண்டிய ஸுகங்கள் அனைத்தையும் கொடுக்கும், சிந்தாமணி ஆகிறது. இவ்விஷயத்தில் இவ்வளவு சொன்னது போதும்.

இவ்வத்யாய விஷயத்தை எவ்விதம் புத்தியில் ஏற்றிக் கொண்டு, அதின் ப்ரயோஜநத்தை அடையவேண்டும் :

இப்படிப்பட்ட ஸாஹித்யம் என்னும் உத்தமமான தட்டில், கைவல்ய ஸுகம் என்னும் பக்வான்னத்தை வைத்து, நிஷ்காமர்களான ஸாதுக்களுக்கு பரிமாறினேன். அதற்கு மேல் எவர்கள் ஆத்ம ஜ்யோதி என்னும் குத்து விளக்கை ஏற்றிவைத்துக்கொண்டு, இந்த அன்னத்தை, இந்திரியங்களுக்குத் தெரியாமல் உண்பார்களோ, அவர்களே இந்த அன்னத்தின் ப்ரயோஜனத்தை அடைவார்கள், இவ்விஷயத்தைக் காதால் கேட்டறியாமல், மனஸே நேராக நின்று வாங்கி அறிய வேண்டியதாயிருக்கிறது. வார்த்தை என்னும மேற்றோலை உரித்து எறிந்துவிட்டு, உள்ளேயிருக்கும் ப்ரஹ்மஸ்வரூபம் என்னும் பழத்தை எடுத்துவைத்துக் கொண்டு, ஸுகத்தின் நடுவில் நின்று, ஸுகரூபியாய்ப் போய், ஸுகத்தை அனுபவிக்கவேண்டும். இவ்வளவு நுட்பமாய் மனது ஆனற்றான், இவ்வத்யாயத்தின் விஷயத்தை அறியப்பெறலாம். இப்படி மனது ஆஹாவிட்டால், இத்தனை விஷயமும் ஊமையன் செவிடனுக்குச் சொன்ன கதையாகும். இவ்விஷயத்தில் இவ்வளவு சொன்னது போதும்.

இங்கே ஏற்பட்டிருக்கும் ச்ரோதாக்களை கௌரவித்தல் :

இங்கே வந்திருக்கும் ச்ரோதாக்களை எச்சரிக்கை செய்து வைக்க வேண்டிய அவச்யமே இல்லாமற் போய்விட்டது, ஏனென்றால் இந்த விஷயத்தைக் கேட்க அதிகாரிகள், விஷயேச்சை யற்றுப்போய், ப்ரஹ்மப்ராப்திக்கு ஆசை கொண்டிருப்பவர்களே. எவர்கள் ஆத்மஸ்வரூப ஞானத்தில் ஆசை வைத்து, அதின் திருஷ்டிதோஷம் கழிந்துபோவதற்காக

ஐஹிகாமுஷ்மிக (இம்மை மறுமை) ஸுகங்களை சுற்றிப்போட்டு விட்டார்களோ, அவர்களைத்தவிர மற்றவர்கள் இந்த விஷயத்தின் ருசியை அறியார்கள். இக்கிரந்தம் ஞானிகளுக்கு விச்ராந்தி ஸ்தானமாயேற்பட்டு, அஞ்ஞானிகளுக்கு பரஸ்தலமாய் (வேற்றூராய்) இருக்கும். இவ்விஷயத்தில் இன்னும் அதிகம் சொல்வதற்கிடமில்லை. ஆனால் இந்த ஸமயத்தில் இவ்வளவு சொன்னேனே, அதை ஸாதுக்களாகிய நீங்கள் க்ஷமிக்கவேண்டும்.

யோக முறைகளை வர்ணிப்பது அஸாத்யமே யாயினும் குரு க்ருபையால் ஸாத்யமாயிற்று :

மேலே ஸ்ரீரங்கன் நிரூபித்த யோக முறையைச் சொல்லத் தொடங்குவேன். இவ்விஷயம் புத்தியாலேயே க்ரஹிக்கக் கடினமானது. ஆகவே அதைச் சொல்லி லடக்கிச் சொல்வது அஸாத்யம். ஆயினும் நிவ்ருத்திநாதன் என்ற என் ஸத்குரு க்ருபையால், அப்படிச் செய்துவைப்பது ஸாத்யமாகும். குரு க்ருபையினால் உத்தமஞானம் நமக்கு ஏற்பட்டபின், கண்ணால் பார்க்க முடியாத ஓர்வஸ்து கண்ணால்பார்க்காமலே, அறிந்துகொள்ளக் கிடைக்கும். இரும்பை பதினைந்து மாற்றுள்ள தங்கமாக்குவ தென்பது ரஸாயந வித்யையில் கரைகண்டவர்களுக்குக்கூட அஸாத்யமாயிருந்தாலும், ஸ்பர்சவேதி கையிற் கிடைத்துப்போனால் எளிதில் முடியும்.

அப்படியே ஸத்குரு க்ருபை கிடைத்தபின், எதைச் செய்ய ஆரம்பித்தாலும், அது முடிவு பெறுவதில் தடையில்லை. ஆகையால் சொல்லால் சொல்ல முடியாததை, சொல்லாற் சொல்லிக் காட்டுவேன். நிராகார வஸ்துவை ஆகாரம் உள்ளதாய்க் காட்டி வைப்பேன். அதீந்த்ரியமானதை, இந்த்ரியங்களால் உணரக்கூடியதாய்ச் செய்து தருவேன். கேளுங்கள், பகம் [(யசஸ்), ச்ரீ (செல்வம்), ஔதார்யம், ஞானம், வைராக்யம், ஐச்வர்யம் (ஸர்வப்ராணிகளையும் ஆளுகை), இவ்வாறு குணங்களும், "பகம்" எனப்படும்] என்று தொகுத்துச் சொல்லப்பட்ட அறுகுணங்களுக்கு வாஸஸ்தான மாயிருப்பதால், பகவான் என்று பெயர்பெற்று, விஷயங்களில் பற்றற்றவர்களோடு, ஒருக்காலும் விலகாமல், கூடியிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணன், கவனமாய்க் கேட்கவேண்டும் என்று அர்ஜுனனை எச்சரிக்கை செய்து, மேல் விஷயத்தைச் சொல்லத் தொடங்கினார்.

श्रीभगवानुवाच ।

अनाश्रितः कर्मफलं कार्यं कर्म करोति यः ।

स संन्यासी च योगी च न निरग्निर्न चाक्रियः ।।१।।

ஸ்ரீபகவானுவாச

அனாஶ்ரித: கர்ம பலம் கார்யம் கர்ம கரோதி ய: ।

ஸ ஸந்ந்யாஸீ ச யோகீ ச ந நிரக்நிர் ந சாக்ரிய: ॥ 1

விதிவத்தான கர்மயோகமும் ஸந்யாஸமும் ஸ்வரூபத்தில் ஒன்றே :.

இவ்வுலகில் யோகி என்றும், ஸந்யாஸிஎன்றும், சொல்லப்பட்ட இருவரும், வேறு வேறானவர்கள் என்று நீ எண்ணக் கூடாது, அவர்களுடைய உண்மையான நிலையை விசாரிக்குங்கால், இருவரும் ஒருவரே ஆவார்கள்; பெயர் மாத்ரம் வித்யாஸமாய் இருக்கிறதே தவிர, இவ்விருவர்களுடைய ஸ்வரூபத்தைத்கொண்டு பார்ப்போமாகில், யோகியே ஸந்யாஸி ஆகிறான். வேறு வேறு பெயரைக் கொண்டு, ஒருவனையே அழைத்தால் எப்படியோ, இரண்டு வழியாய் ஒரே ஊருக்குப்போய்ச் சேர்ந்தால் எப்படியோ, அப்படியே இவ்விஷயம் இருக்கிறது; இல்லாவிட்டால் ஒரே ஜலத்தை இரண்டு பாத்ரங்களில் நிறைத்து வைத்தது போல், இவ்விருவர்களுக்கும் நடுவில் உள்ள வித்யாஸம் இருக்கிறது, என்று சொல்லவேண்டும்.

எவன் கர்மங்களைச் செய்து, பலனில் ஆசை வைக்கிறதில்லையோ, அவன் தான் கர்மயோகி என்று, உலகில் யாவரும் எண்ணுவார்கள். எப்படி பூமி, வ்ருக்ஷங்களை எல்லாம் தன்னிடத்தில் முளைக்கச்செய்து, அவற்றைத்தான் முளைக்கச் செய்ததாயாவது, அவற்றின் பலன் தனக்கு வேண்டுமென்றாவது, நினைப்பதில்லையோ, அப்படியே ப்ரக்ருதியை ஆதாரமாய்க்கொண்டு, தான் பிறந்த ஜாத்யநுகுணமாய், எந்தெந்த ஸமயத்தில் எதெது, செய்யும்படியாய் நேருமோ, அந்தந்த ஸ்வதர்மத்தை விடாது அநுஷ்டித்து, கர்மத்தைச் செய்து, தேஹத்தில் அஹம் புத்தி பண்ணாதவனாயும், அந்தக் கர்மபலத்தில் ஆசையில்லாதவனாயும், எவன் இருப்பானோ, அவனே ஸந்யாஸி என்றும், அவனே கர்மயோகி என்றும், அறிந்துகொள், அர்ஜுனா.

விஹிதகர்மம் பந்தகம் (ஸம்ஸாரபந்தத்தை உண்டாக்கி வைப்பது) என்றெண்ணி, அதை ஸ்வரூபத்தோடு விட்டொழிப்பதால் ஏற்படும் துர்கதி : அப்படிச் செய்யாமல், தான் செய்ய வேண்டிய கர்மத்தை, பந்தத்தை உண்டாக்குவது என்றெண்ணி, எவன் செய்யா தொழிவானோ, அவன் அந்தக் கையோடேயே வேறு கர்மங்களைச் செய்து வைக்கிறான். ஒருவன் ஓர் அழுக்கை துடைத்துக் கொள்ளும் போதே, மற்றொர் அழுக்கை பூசிக்கொள்வது போல், ஸ்வகர்மத்தை அநுஷ்டியாது ஒழியும் ஒருவன், அதே காலத்திலேயே வேறு கர்மத்தால் கட்டுப்படுவதால், அவன் வியர்த்தமான ஆக்ரஹத்திற்கு ஆளானவனாய், துக்கத்தை அடைகிறான். இப்படியே ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் க்ரஹஸ்தாச்ரம தர்மத்தை, சுமக்கமுடியாத சுமையாய் நினைத்து, அதை விட்டொழிக்கவேண்டு மென்று அதைக்காட்டிலும் அநுஷ்டிக்கக் கடினமான ஸந்யாஸாச்ரம தர்மத்தை, சில அறிவுகேடர்கள் தலைமேல் எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஆகையால் ஞானியானவன், அக்நிஹோத்ரம் முதலிய ஸ்வதர்மங்களை அநுஷ்டித்துக்கொண்டே வந்து, கர்ம சாஸ்த்ரத்தின் விதியை மீறி நடக்காதிருக்க வேண்டும். இப்படிச் செய்வதால், தனக்குள்ளே தான் ஆத்மாநுபவம் செய்வதற்கு, ஓர் தடையும் ஏற்படுவதில்லை.

यं संन्यासमिति प्राहुर्योगं तं विद्धि पाण्डव ।
न ह्यसंन्यस्तसङ्कल्पो योगी भवति कश्चन ।।२।।

யம் ஸந்ந்யாஸ மிதி ப்ராஹுர்ர் யோகம் தம்வித்தி பாண்டவ।
ந ஹ்ய ஸந்ந்யேஸ்த ஸங்கல்போ யோகீ பவதி கஸ்சன ॥ 2

ஸங்கல்ப மற்றிருக்கையே ஸந்யாஸம் கர்மயோகம் இவ்விரண்டுக்கும் ஸாரம் :

ஸந்யாஸி என்பவனே கர்மயோகி யாவானென்று, பல சாஸ்திரங்கள் ஏகவாக்யதை (ஒன்று படுத்திவைத்தல்) செய்து, கொடிநாட்டி இருக்கின்றன; ஏனென்றால் ஸந்யாஸத்துக்கும் கர்மயோகத்துக்கும் உண்மையான ஸாரம் ஸங்கல்பமற்றிருக்கையே.

आरुरुक्षोर्मुनेर्योगं कर्म कारणमुच्यते ।
योगारूढस्य तस्यैव शमः कारणमुच्यते ।।३।।

ஆருருக்ஷோர் முனேர் யோகம் கர்ம காரண முச்யதே ।
யோகா ரூடஸ்ய தஸ்யைவ ஶம: காரண முச்யதே ॥ 3

ராஜயோகத்தின் அஷ்டாங்கங்களின் சுருக்கமான வர்ணனை :

யோகம் என்னும் மலையின் சிகரத்தில் போய் நிற்க வேண்டு மென்று ஆசைப்பட்ட ஒருவன், கர்மானுஷ்டானம் என்னும் படிக்கட்டின் உதவியை கைவிடக்கூடாது. இவன் முதலில் யமநியமங்கள் என்னும் அடிவாரத்திற்குப் போய்ச் சேர்ந்து, ஆஸநம் என்னும் ஒற்றையடிப்பாதையைப் பிடித்துக்கொண்டு, ப்ராணாயாமம் என்னும் ஊன்று கோலின் உதவியினால், ஏறிப்போக வேண்டும். பிறகு பிரத்யாஹாரம் என்னும் செங்குத்துப் பாறைகள் குறுக்கிடும். அப்பாறைகளில் புத்தியினுடைய கால்கள் கூட, பிடிப்புப் பெறாமல், வழுக்கிக்போகும். அவ்விடம் போய்ச்சேர்ந்த மாத்ரத்தில், ஹடயோகிகன் கூட, "தலைகீழாக உருண்டு விழுந்து போவோமே", யென்று பயந்து, தாங்கள் கடடிய பந்தயத்தை, இழந்து போகக்கூடத் துணிந்து, ஓடிப்போவார்கள். ஆயினும், திரும்பவும் திரும்பவும் அப்யாஸம் செய்தால், அந்த அப்யாஸத்தின் பலத்தால், பிடிப்பில்லாத இந்த ப்ரத்யாஹாரத்தில், சிலசில இடங்களில் வைராக்யத்தின் நகங்களுக்குப் பிடிப்பு ஏற்படும். இப்படி ப்ரத்யாஹாரம் என்பதை ஸாதித்துக் கொண்டு, பின்பு பிராணாயாமத்தின் உதவியால், த்யானம் என்னும் படிகளில் ஏறி, தாரணை என்னும் இடம் சேரவேண்டும்.

பின்பு, இப்படி வழி நடப்பது முடிவுபெற்று, மேலும் வேலை செய்ய வேண்டு மென்னும் ஆசை ஒய்வடைந்து, ஸாத்யமும் ஸாதனமும், ஒன்று பட்டுப்போய், ஒன்றை ஒன்று ஆலிங்கனம் செய்து கொள்ளும். இந்நிலை அடைந்தபின், இன்னமும் நடக்க வேண்டும் என்னும் சிந்தனையும், இதற்குமுன் நடந்து வந்ததின் ஸ்மரணையும், அற்றுப்போய், ஸமாதி என்னும் ஸமபூமியிலவன் நிலை பெறுகிறான். இப்படி யோகஸித்தி பெற்று, எல்லையற்ற பெருமை படைத்தவன் எவனோ, அவனுடைய அஸாதாரண லக்ஷணங்களைச் சொல்வேன் கேள்.

यदा हि नेन्द्रियार्थेषु न कर्मस्वनुषज्जते ।
सर्वसङ्कल्पसंन्यासी योगारूढस्तदोच्यते ॥ ४ ॥

யதா ஹி நேந்த்ரியார் தேஷு ந கர்மஸ்வநுஷஜ்ஜதே ।
ஸர்வஸங்கல்ப ஸந்ந்யாஸீ யோகா ரூடஸ்ததோ ச்யதே ॥ 4

யோகாரூடனுடைய லக்ஷணங்கள்:

யோகாரூடனானவன், தன்னிந்த்ரியங்களின் வீட்டில், விஷயங்களின் வரத்துப் போக்கை முற்றிலும் போக்கி, ஆத்மஞானம் என்னும் நடுவீட்டில் படுத்து தூங்குகிறவனாய், எவ்வளவு தான் ஸுகதுக்கங்கள் மேல் விழுந்து தாக்கி, அணைத்துகொள்ள வந்து நின்றபோதிலும், விழிப்படையாதவனாய், இந்திரியங்களை கர்மங்களில் ப்ரவர்த்திக்க விட்டவனாயிருந்தும், அந்த ஆத்மாநுபவம் என்னும் நித்ரை கலையாதவனாய், அந்தக்கரணத்தில் அக்கர்மபலத்தில் ஆசைபாராட்டதாதவனாய், இருப்பான். இதைக்கேட்டு அர்ஜுநன், "ஹே அநந்தா, இதைக்கேட்க, எனக்கு மிகவும் ஆச்சர்யம் தோற்றுகிறது. இப்படிப்பட்ட யோக்யதை எனக்குக் கிடைக்க வேண்டும் என்று, ஆசை எனக்குண்டாயிருப்பதால், இந்த யோகஸித்தியை எனக்கு யார் செய்து கொடுப்பார்கள்? சொல்ல வேண்டும்," என்று வினவினான்.

उद्धरेदात्मनात्मानं नात्मानमवसादयेत् ।
आत्मैव ह्यात्मनो बन्धुरात्मैव रिपुरात्मनः ॥५॥

உத்தரே தாத்மநாத்மானம் நாத்மான மவஸாதயேத் ।
ஆத்மைவ ஹ்யாத்மநோ பந்துராத்மைவ ரிபுராத்மனः ॥ 5

ஒருவன் ஆத்மநாசடைகிறதும், ஆத்மோஜ்ஜீவனம் பெறுகிறதும், அவன் செய்து கொள்கிற கார்யமே :

அப்போது ஸ்ரீ கிருஷ்ணன் புன்னகைகொண்டு பின்வருமாறு சொன்னார். நீ இப்படி கேட்கிறாயே, என்ன? இது உனக்கே புதுமையாய்த்தோற்ற வில்லையா? இந்த அத்வைத ஸித்தியை, எவன் எவனுக்குச் செய்து கொடுக்க முடியும்? வலுத்ததான அஞ்ஞானத்துக்கு வசப்பட்டு, ஸம்பூர்ணமான அறிவு மயக்கம் என்னும் படுக்கையில் படுத்துத் தூங்கிக்கிடக்கும் ஓர் ஸமயத்தில், ஜந்மமரணரூபமான இந்த ஸம்ஸாரம் என்னும் துஸ்ஸ்வப்நத்தை, இந்த ஜீவன் கண்டு துக்காநுபவம் அடைகிறான். பின்பு அகஸ்மாத்தாய் ப்ரஹ்மஞாநம் என்னும்

விழித்த அவஸ்தையை அவன் அடைவானேயானால், இத்தனை துஸ்ஸ்வப்னமும் இல்லாமற்போய், தன்னறிவு தனக்கு வந்து, தான் எப்போதும் நாசமற்று நிலைபெற்றிருக்கும் ப்ரஹ்ம ஸ்பவரூப மென்று தெரிந்து கொள்கிறான். ஆகையால் ஒருவன், எப்போது உண்மையாய் இல்லாத தேஹத்தின்மேல் அபிமானம் பாராட்டி நிற்கிறானோ, அப்போது தன்னைத்தானே நாசம்செய்து கொள்கிறான். அர்ஜுநா, இப்படி விசாரித்துத் தெரிந்துகொண்டு, தேஹத்தில் அஹம்புத்தியை ஒழித்துக்கொண்டால், ஏற்கனவே ஸித்தமாயிருக்கும் ஆத்மஸ்வரூபமே தான் என்றறிந்து கொண்டு, தன்னுடைய நன்மையைத் தானே தேடிக்கொள்ள முடியும்.

बन्धुरात्मात्मनस्तस्य येनात्मैवात्मना जितः ।
अनात्मनस्तु शत्रुत्वे वर्तेतात्मैव शत्रुवत् ॥ ६ ॥

பந்துராத்மா ऽऽத்மனஸ்தஸ்ய யேநாத்மைவாத்மநா ஜிதः ।
அநாத்மனஸ்து ஶத்ருத்வே வர்தே தாத்மைவ ஶத்ருவத் ॥ 6

ஆத்மஞானமில்லாதவன் தனக்குத்தானே சத்ருவாகிறான் :

உத்தம லாபத்தை ஸம்பாதித்துக் கொள்வதற்கு ஸாதனமான இந்த சரீரத்தைப் பார்த்து, அதுவே தானென்று எண்ணுகிறவன், பட்டுப் பூச்சியைப்போல், தனக்குத்தான் சத்ருவாகிறான். மிக்கப் பெருத்த தனம் தன்வழியில் குறுக்கிட்டு, தன்னதாகப் போக காத்துக்கிடக்கும் ஓர் வேளையில், ஓர் பாக்யஹீநன், குருடனைப்போல், கண்ணினுதவியில்லாமல் நடக்கத் தெரிந்து கொள்ளக்கருதி, கண்ணை மூடிக்கொண்டு, கோலால் அங்கும் இங்கும் தட்டிக் கொண்டு, வழியில் கிடக்கும் தனத்தைக் கவனிக்காமல், அதைத் தாண்டிப்போய் விட்டதுபோலும், லாபம் பெறக்கூடிய ஓர் ஸமயத்தில், கண்மூடிகளாய் அந்த லாபத்தை ஜநங்கள் இழந்து போகிறார்கள். இது எவ்வளவு ஆச்சர்யமாயிருக்கிறது!

ஒருவன் புத்தி மயக்கம் கொண்டு, தன்னுடைய ஸ்வரூபத்தை தன்னிடத்தினின்று எவர்களோ திருடிக்கொண்டு போய் விட்டார்க ளென்று சொல்லிக் கொண்டு அவனுக்கு எவ்வளவு போதித்தபோதிலும், தன் ஸ்வரூபம் திருட்டுப்போய்விட்ட தென்றே பாவித்து நிற்பதுபோலும், எப்போதும் ஸ்வதஸ்ஸித்தமான ஆத்மஸ்வரூபம், அழிவில்லாம லிருக்கும்போது, தாங்கள் இறந்துபோவதாக பாவித்து, சிலர்

தங்கள் அஞ்ஞானத்தை த்ருடமாய்ப் பற்றிக்கொண்டு நிற்கிறார்களே! இதற்கு நாம் என்ன செய்யலாம்! ஒருவன் தன்மேல் கத்தி வெட்டு விழுந்ததாக ஒரு ஸ்வப்நம் கண்டால், அதினால் அவன் இறந்து போவதுண்டா? அதுபோல் ஒருவன், தான் இறந்துபோகிறதாக, அஞ்ஞானத்தைப் பாராட்டி நிற்கிறதால், அவன் இறந்து போவதில்லை.

வேடர்கள் கிளியைப் பிடிப்பதற்காக, ஓர் இராட்டினத்தை ஓர் மரத்தில் கட்டிவைக்க, அதின்மேல் கிளி வந்து உட்காரவே, அந்தக் கிளியின் பாரத்தினால், அந்த இராட்டினத்தின் மேல்பாகம் கீழே உருண்டு வருகிறது. அப்படி உருளுதலைக் கிளி, தன்மேல் ஏற்றிக்கொண்டு, பறந்துபோய் தப்பித்துக்கொள்ளாமல், கால்பற்றை விட்டால், கீழே விழுந்துபோக நேரும் என்று பயந்து, இராட்டினத்தை கெட்டியாய்ப் பற்றிக்கொண்டு, கழுத்தை வளைத்து, வளைத்து, மார்பால் உராய்ந்து கொண்டு, மூக்கால் மேல்பாகத்தைப் பற்றி, காலைப் பெயர்த்து மேல் பாகத்தில் வைக்கவே, அதுவும் உருண்டு கீழே வந்துவிடுகிறது. இப்படி ஓய்வில்லாமல் கஷ்டத்தை அடைந்து, அக்கிளி தான் இராட்டினத்தோடு கட்டுப்பட்டுப் போனதாய் எண்ணி தன்னை இரண்டாய் வெட்டினபோதிலும், அந்த இராட்டினத்தை விடாமல், விடுபட்டிருக்கும தன் காலைக்கொண்டே வலுவாய்ப் பற்றிக்கிடந்து, வேடன் கைப்பட்டு, ஆபத்தை அடைகிறது. அதை இப்படி யார் கட்டி வைத்தார்கள்? ஆகையால் இல்லாததான ஒன்றை, எவன் மனஸில் கல்பித்துக்கொண்டு, அதையே பெருக்க வைத்துக்கொண்டு போகிறானோ, அவன், தனக்குத் தானே, சத்ருவாகிறான்.

जितात्मनः प्रशान्तस्य परमात्मा समाहितः ।
शीतोष्णसुखदुःखेषु तथा मानापमानयोः ।।७।।

ஜிதாத்மன: ப்ரஶாந்தஸ்ய பரமாத்மா ஸமாஹித: ।
ஶீதோஷ்ண ஸுகது: கேஷு ததா மானாப மானயோ: ॥ 7

எவன் ஆத்ம ஸ்வரூபத்தில் புத்தியை நிறுத்தி இருப்பானோ அவன் அடையும் நன்மைகள் :

அப்படி ஸத்யமாய் இராத தேஹத்தை மனஸில் ஏற்றிக்கொள்ளாமல், தன் புத்தியை ஆத்ம ஸ்வரூபத்தில் நிலைபெறச் செய்து கொண்டவனாய், மனஸைத்தன் வசப்பத்திக் கொண்டவனாய், ஸகல ஆசைகளையும்

விட்டொழித்தவனாய், எவன் இருப்பானோ, அவனை விட்டு பரமாத்மா தூரத்தில் நிற்க மாட்டான். உடன் கலந்திருக்கும் தாழ்ந்த உலோஹங்களின் ஸம்பந்தம் ஒழிந்து போகவே, மாற்றுக் கட்டையான பொன்னே பதினைந்து மாற்றுள்ள தங்கமாய் விடுவதுபோல், ஜீவாத்மாவின் ஸங்கல்பம் என்னும் தோஷம் விலகிப்போன மாத்திரத்தில், அதுவே ப்ரஹ்மமாய் விடுகிறது. ஓர் குடத்திற்குள்ளிருக்கும் அவகாசமானது, அக்குடம் உடைந்துபோன பின் மஹா ஆகாசத்தோடு ஒன்றுபட்டுப் போவதற்கு, வேறிடம்போய்ச் சேரவேண்டிய அவசிமில்லாமல், குடம் உடைந்த உத்ததரக்ஷணத்திலேயே, மஹா ஆகாசத்துடன் ஒன்றுப்பட்டுப் போவது போலும், உண்மையாய் இல்லாத தேஹத்தில் அஹம்புத்தி எப்போது முற்றவும் நாசமடைந்து போகிறதோ, அப்போதே அதுவரைக்கும் ஜீவாத்மா வென்று பாவிக்கப் பட்டிருந்த அது, யதார்த்தமாய் எப்போதும் பரமாத்மாவாகவே இருந்ததாய் அறியப்பட்டுப் போகிறது.

பின்பு சீதோஷ்ணம் முதலிய துவந்த்வங்களால் ஏற்படும் ஸுகதுக்கங்கள், நிந்தாஸ்துதிகள், முதலிய மாறுபாடுகள் அனைத்தையும், அவன் அறியாமற் போகிறான். ஸூர்யன் எங்கு சென்றாலும், அங்கிருப்பவை அனைத்தும், அவன் தேஜஸால் ப்ரகாசிதமாய், அந்த ஸூர்யனுக்குத் தோற்றுவது போலும், ஆத்மஞானிக்கு (ப்ரஹ்மத்தொடொன்று பட்டிருக்கிறவனுக்கு) எதிரிடும் உலகம் அனைத்தும், அவனுடைய ஞாநத்தின் ப்ரபாவத்தால், ஆத்மஸ்வரூபமாகவே, அவனுக்குத் தோற்றும். மேகத்தினின்று விழும் ஜலதாரை, ஸமுத்ரத்தின் மேல் விழுந்து ஸமுத்ரத்தை துளைக்காது போவது போலும், யோகீச்வரனுக்கு, சுபாசுபங்கள் தன் ஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறுபட்டுத் தோற்றாததால், அவனை அவை பாதிப்பதில்லை.

ज्ञानविज्ञानतृप्तात्मा कूटस्थो विजितेन्द्रियः ।
युक्त इत्युच्यते योगी समलोष्टाश्मकाञ्चनः ॥८॥

க்ஞான விக்ஞான த்ருப்தாத்மா கூடஸ்தோ விஜிதேந்த்ரிய: ।
யுக்த இத்யுச்யதே யோகீ ஸமலோஷ்டாஸ்ம காஞ்சன: ॥ 8

இதுவுமது :

வெவ்வேறு விதப்பட்ட ப்ரபாஞ்சிக ஞானமாகிய விஞ்ஞானம், விசாரித்துப்பார்க்குமளவில், அவனுக்குப் பயனற்றதாகிறது. உண்மையான ஆத்ம ஞானமோ

லப்தமானபின், அதுவே ஆத்ம ஸ்வரூபமாகப் போய்விடுகிறது. ஆகவே தான் வ்யாபகனா, அல்லது ஓர் இடத்தில் அடங்கியிருப்பவனா, என்று, இப்படி எல்லாம் ஊஹாபோஹங்களைக் கொண்டு, விசாரம் செய்வதற்கு வேண்டிய மற்றொருவன் இல்லாமற் போவதால், அவ்விசாரம் தனக்குத்தானே ஓய்ந்து போகிறது. இப்படி ஒருவன், இந்த்ரியம் ஒன்றை ஜயித்து விடுவதினாலேயே, சரீரியாயிருக்கும் போதே, பரப்ரஹ்மமே என்று மதிக்கத்தக்க தகைமையை அடைகிறான்.

அப்படி ஜிதேந்த்ரியனானவனே யோகஸித்தன் என்று சொல்லத்தகுந்தவன். அவனுக்கு ஒருக்காலும், சின்னதென்றும் பெரிதென்றும், பகுத்தறிதல் உண்டாகாது. அவன்மேரு பர்வதத்தைப்போல் பெருத்து, முழுமையும் தங்கத்தால் அமைந்ததாயிருக்கும் ஓர் குவியலையும், ஓர் சிறு மண்கட்டியையும், ஒரேவிதமாய் மதிப்பான். பூமி அனைத்தும் அல்பம், என்று மதிக்கத்தக்க விலை பெற்றதான, ஓர் உத்தம இரத்தினத்தையும், ஓர் பருக்கைக் கல்லையும், ஒன்றாகவே அவன் மதித்து, எவ்விஷயத்திலும் முற்றிலு மாசையற்றிருப்பான்.

सुहृन्मित्रार्युदासीनमध्यस्थद्वेष्यबन्धुषु ।
साधुष्वपि च पापेषु समबुद्धिर्विशिष्यते ।।९।।

ஸுஹ்ருன் மித்ரார்யுதாஸீன மத்யஸ்த்வேஷ்ய பந்துஷு ।
யாதுஷ்வபி ச பாபேஷு ஸமபுத்திர் விஶிஷ்யதே ॥ 9

யோகஸித்தன் எல்லாப் பூதங்கள் விஷயத்திலும் ஸம்புத்தியுள்ளவனாய் உலகில் பெருமைபெற்று வாழ்வான் :

அப்படி ஆனபின், ஸுஹ்ருத் என்றும், சத்ரு என்றும், உதாஸீனன் என்றும், மித்ரனென்றும், இப்படி யெல்லாம் விதம்விதமான பாவங்களை, அவன் எப்படி கல்பித்துக்கொள்வான்? தானே விச்வமென்று தோன்றிப்போன ஒருவனுக்கு, பந்து என்று ஒருவனும், த்வேஷி என்றொருவனும், எப்படி இருக்கமுடியும்? ஸ்பர்ச்வேதி ஸம்பந்தத்தால், பலவிதமான மாற்றுள்ள தங்கங்கள் ஏற்படாதது போலும், அவனுடைய பார்வைக்கு, அதமோத்தமம் என்பது, தோன்றாமற் போகும். அந்த ஸ்பர்சக்கல் எல்லா இரும்பையும், உத்தமமான தங்கமாகவே செய்து வைப்பது போல், அவனுடைய புத்தியானது, சராசர முழுதையும், ஒரே

விதப்பட்டடிருப்பதாய் அறிகிறது. நகைகள் பல வடிவு உள்ளவையாய்த் தோற்றியபோதிலும், அவை அனைத்தும் ஒரே தங்கத்தால் ஏற்பட்டதாகக் காணப்படுவதுபோலும், விச்வமெல்லாம் ரூபத்தால் பலவகைப்பட்டவை யாயிருந்தும், அவையனைத்தும் ப்ரஹ்ம மயமாகவே தோன்றும். இப்படி உத்தமமான திருஷ்டி, அவனுக்கு ஏற்பட்டிருப்பதால், வெளிப்படையான ரூபபேதத்தால், அவன் ஏமாந்து போவதில்லை. பல வஸ்திரங்களையும் பார்த்து, எல்லாம் நூல் என்ற பாவம் ஏற்பட்ட ஒருவனுக்கு, அவற்றிற்குள் பேதபுத்தி அற்றுப்போவது போல், அவன் விச்வம் முழுவதிலும் ப்ரஹ்மத்தைத்தவிர வேறோன்றையும் பார்க்காமல், பேதபாவம், முற்றிலும் அற்றுப்போனவன் ஆகிறான்.

அப்படிப்பட்ட அனுபவபூர்வகமான புத்தி எவனுக்கு ஏற்பட்டிருக்குமோ, அவன் ஸமபுத்தியுள்ளவனென்று சொல்லப்பட்டு, உலகிலுள்ள மற்றவர்களைப் போல் இரான். அவனுடைய பெயரே உத்தம தீர்த்தமாகும்; அவனை தர்சித்துக்கொண்டவன, உலகில்பெருமை அடைவான்; அவனுடைய ஸங்கத்தால், பெருத்த அஞ்ஞானிகூட ப்ரஹ்மபாவத்தை அடைவான்; அவனுடைய பேச்சுக்களைக்கொண்டு, உலகத்தில் தர்மம் வாழ்வு பெறும்; அவனுடைய கடாக்ஷப் பார்வை மஹா ஸித்திகளை உண்டாக்கித்தரும்; ஸ்வர்க்க ஸுகங்கள் அவனுடைய விளையாட்டு ஸாமான்களாகும்; அகஸ்மாத்தாய் அவனை ஸ்மரித்தால், ஸ்மரித்தவனுக்குத் தன்னுடைய யோக்யதையைச் செய்து கொடுப்பான். இவை யனைத்தும் இருக்கட்டும், அவனைக் கொண்டாடுவதில், நமக்கு லாபமே இருக்கிறது

योगी युञ्जीत सततमात्मानं रहसि स्थितः ।
एकाकी यतचित्तात्मा निराशीरपरिग्रहः ।।१०।।

யோகீ யுஞ்ஜீத ஸததமாத்மானம் ரஹஸி ஸ்திதः ।
ஏகாகீ யத சித்தாத்மா நிராஶீர் பரிக்ரஹः ॥ 10

இதுவும் யோகஸித்தன் பெருமையை வர்ணித்தல் :

அவனுக்கு அத்வைத ப்ரஹ்மஞானம் என்னும் ஸூர்யன் ப்ரகாசித்துக் கொண்டிருந்து, ஒருக்காலும் அஸ்தமன மடைகிறதில்லை. பின்புதன் ஸ்வரூபத்திலேயே அடங்கிக்கிடப்பவனாக, அவன் ஆய்விடுவான். இவ்வித ஞானம் உடையவனாய் எவன் ஆய்விட்டானோ, அவன்

மூவுலகிலும் தன்னைத்தவிர வெறோன்றும் இல்லாததாய் தெளிந்து, அந்தத்தெளிவின் கார்யமாகவே, தனித்தவனாயும், ஒன்றையும் பற்றாதவனாயும் இருப்பான். இப்படி எல்லாம் அந்த ஸித்தனுடைய அஸாதாரண லக்ஷணங்களைச் சொல்லி, ஸ்ரீ கிருஷ்ணன் அவனை தன்னைக்காட்டிலும் சிறந்தவனாய்க் கொண்டாடி, மேலும் அவனைப் பின்வருமாறு புகழ்ந்தார்.

அவன் எல்லா ஞாநிகளுக்கும் பெரியவன்; அவன் தத்வ ஞானிகள் பார்வைக்கு தீபம் போன்றவன், அந்த ப்ரபுவின் ஸங்கல்பத்தால், விச்வம் ஸ்ருஷ்டிக்கப்படுகிறது. ப்ரணவம் என்னும் ஊரில் நெய்து வைக்கப்பட்ட வேதம் என்னும் வஸ்திரத்தை, அவன் கீர்த்தி என்னும் தேஹத்திற் கடடினால், அது ஒரு சுற்றுக்குக்கூட காணாமற் போகிறது; அவனுடைய தேஹத்தின் காந்தியின் ஓர் அம்சத்தைக்கொண்டு, ஸூர்யச்சந்திரர்கள் தங்கள் வ்யாபாரத்தை நடத்தி வருகிறார்கள்; ஆகையால் அவனாற்றான், ஜகம் எல்லாம் ப்ரகாசத்தை அடைகிறது;

இதைக்கவனித்துப்பார், அவனுடைய நாமம் ஒன்றின் பெருமைக்கு முன்னால், இந்த ஆகாசமே. அல்பமாய்த் தோற்றுகிறது. அப்படியிருக்க, அவனுடைய ஓரோர் குணத்தின் பெருமையை, நீ எப்படி அறியப்போகிறாய்? ஆகையால் இந்த வர்ணனை போதும், அவனுடைய லக்ஷ்ணங்களை ஸரியாய்ச் சொல்ல நானே அறியேன். என்னவோ, சொல்லவேண்டுமே என்று, ஏதோ அங்குமிங்குமாய், ஓரோர் லக்ஷணத்தை எடுத்துச்சொன்னேன்.

ஆரூடயோகியின் பெருமையை அரை குறையாய்ச் செல்லி நிறுத்தி விட்டதில், பகவானுடைய உட்கருத்து :

அவர்களுடைய ப்ரஹ்ம நிலையை, மறைவின்றி திறந்துவைத்துக் காட்டிவிட்டால், அது த்வைதபாவத்தை முற்றிலும் நாசம் செய்துவிட்டு, தனக்கதிப்ரியகரமான அர்ஜுனனுடைய ப்ரேமையை யில்லாமற் செய்துவிடுமே என்று நினைத்து, அப்படி காட்டிவைக்கக்கூடாது, என்று கருதி, ஒரு நுட்பமான திரையை நடுவில் போட்டுவைத்து, கிருஷ்ணன் யோகஸித்தனுடைய பெருமையை அஸம்பூர்ணமாய்ச் சொல்லிமுடித்து, அர்ஜுனனுடைய மனஸை த்வைதாநுபவத்திலேயே இருக்கும்படி வைத்தார்.

அர்ஜுன்ன் மனஸில் உள்ள ப்ரேமைபாவத்தின்மேல், ப்ரஹ்மமே நான் என்று நினைத்துக் கொண்டே போது

போக்கிக்கொண்டு, மோக்ஷத்துக்கு வீங்கிக் கிடக்கிறவர்களின் த்ருஷ்டி தாக்கி, அதற்கு கேடு நேர்ந்து, இவ்வர்ஜுநன் ஒருவேளை அஹம்புத்தியை இழந்து, தானும் ப்ரஹ்மமும் ஒரே வஸ்துவே என்று எண்ணத் தலைபட்டானேயானால், பின்பு நான் ஒண்டியாய்ப் போய் என் செய்வது? கண்ணால் பார்த்து ஸுகப்படுவதற்கும், வாய்தினவுதீர பேசுவதற்கும், மனஸு பொங்கி இறுகக்கூட்டிக்கொள்வதற்கும், ஒருவரும் கிடைக்காது போய்விடுமே;

அர்ஜுனன் என்னுடன் ஒன்று பட்டுப்போனால், எனக்கு மிகவும் நன்றாய்த் தோன்றி, எனக்குள் அடக்கிக்கொள்ள முடியாதிருக்கும் ஓர் விஷயத்தை, எவனுடன் நான் கலந்து பேசக்கூடும்? இப்படி ஓர் ஸங்கடம் ஏற்படுமே யென்று, க்ருஷ்ணன் நினைத்து, ஸாதுக்களை வர்ணிக்கிறது என்னும் வ்யாஜத்தால், அவர் அர்ஜுநனை மனஸால் இறுக ஆலிங்கனம் செய்யத் தலைப்பட்டார், இவ்வார்த்தை உங்களுக்குக் கந்நடமாயிருந்தால், (தெளிவாய்த் தெரியாததாயிருந்தால், ஞான தேவருடைய ச்ரோத்தாக்கள் மஹாராஷ்டிரரர்களாயிருந்ததால், கந்நடம் அவர்களறியாத பாஷை ஆயிற்று) இதை வ்யக்தமாய்ச் சொல்கிறேன் கேளுங்கள். ச்ரீக்ருஷ்ணனுடைய ப்ரேமையை எல்லாம் சேர்த்து உருக்கிவார்த்த பொம்மை எனத்தக்கவனாய், அர்ஜுனன் இருந்தான். இது இருக்கட்டும்.

ஸ்ரீக்ருஷ்ணனுக்கு அர்ஜுநன் விஷயத்தில் ஏற்பட்டிருந்த ப்ரேமாதிக்யம்:

வெகுகாலம் பிள்ளை பிறவாதிருந்து, ஆயஸு முடிந்த போகும் காலத்தில், ஒருத்திக்கு ஓர் பிள்ளை பிறந்ததே ஆனால். பின்பு அந்தப் பிள்ளை விஷயமான மோஹத்தில் சிக்கிப்போய், அது ஆட்டி வைத்தபடி யெல்லாம், அவள் ஆடுவது போல், ஸ்ரீக்ருஷ்ணன் கதி யாய்விட்டது. இப்படி ஸ்ரீக்ருஷ்ணன் கதி யிருந்ததை, நான் கண்ணாற் பார்க்காமற் போனால், இப்படிச் சொல்லியிருக்க மாட்டேன். இந்த ஆச்சர்யத்தைப் பாருங்கள்! இந்த உபதேசம் எங்கே! இந்த யுத்தம் எங்கே! ஆனால் க்ருஷ்ணனுக்கு அர்ஜுநன் விஷயத்தில் இருக்கும் ப்ரேமாதிக்யம் அல்லவா, இப்படி அவனை ஆட்டி வைக்கிறது. இது கேவலம் ப்ரீதி ஆனால், வெட்கத்தை உண்டாக்கியிருக்கும்; பைத்யம் என்றால், மதி மயக்கத்தை உண்டாக்கியிருக்கும். இப்படி யாதொன்றும் ஏற்படாமையால், க்ருஷ்ணனுடைய மனதின் நிலை. இன்னதென்று சொல்ல முடிய இல்லை.

இப்படிப்பட்ட பகவத் ப்ரேமைக்கு பாத்ரமாயிருந்த அர்ஜுநனுடைய பெருமை:

ஆகையால் அர்ஜுனன், ஸ்ரீக்ருஷ்ணனுடைய ஸக்ய பாவத்துக்கு வீடென்றும், ஸுகங்களால் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீக்ருஷ்ணன் மனஸு, தன்னழகைத் தான் பார்த்துக்கொள்ள, ஏற்பட்டிருந்த கண்ணாடி என்றும், சொல்லத்தக்கவனாய் இருந்தான். இப்படி புண்யத்தாலும் பவித்ரதையாலும் யாவரையும் கடந்து, பூவுலகில் பக்தி என்னும் விதை செழித்து வளர்ந்த உத்தம நிலமாக, அர்ஜுனன் இருந்தமையால், ஸ்ரீக்ருஷ்ணனுடைய க்ருபைக்கு அவன் பாத்ரனானான். ஆத்மநிவேதநம் என்னும் கடைசியான பக்திநிலைக்கு, அடுத்த கீழ்ப்படியான ஸக்யபக்தியாகிய பூமியின், அதிஷ்டான தேவதை என்று சொல்லும்படியாயும், பக்கத்திலேயே இருக்கும் யஜமானனைப் புகழாமல், வேலைக்காரனைப் புகழ வேண்டும்படியாயும், அர்ஜுனனிருந்தான். எவள் தன் கணவன் விஷயத்தில் மிக்கப்ரேமைபாராட்டி, அவனால் கொண்டாடப்பெற்ற பதிவ்ரதையாய் இருப்பாளோ, அவளைப் புருஷனைக்காட்டிலும் விசேஷமாய்க்கொண்டாட ஆக்ஷேபணை என்ன? ஆகையால் முவ்வுலகிலுமுள்ள பாக்யம் அனைத்துக்கும் வாஸஸ்தானமான அர்ஜுநனையே, விசேஷமாய்க் கொண்டாடுவதுதான், என் மனஸுக்குப் பிடித்திருக்கிறது. இவனிடத்தில் ஏற்பட்ட ப்ரேமைக்கு வசப்பட்டல்லவா, அமூர்த்தமான பரப்ரஹ்மம், மூர்த்தியை ஸ்வீகரிக்கவும், ஸம்பூர்ணமான ஓர் வஸ்து ஆசைப்படவும், நேர்ந்தது.

ச்ரொதாக்கள் ஞானதேவர் வாக்சாதுர்யத்தைக் கொண்டாடுதல்:

அப்போது ச்ரோதாக்கள், "ஞானதேவருடைய பாக்யத்தை என்ன என்று கொண்டாடுவோம்! இவருடைய வாக்சாதுர்யம் மிக்க ஸாமர்த்யமுள்ளதாய், உத்தம ஸங்கீதத்தை தோல்வி அடையச் செய்கிறதே! கேவல மராட்டிச் சொற்களைக் கொண்டு ஓர் ஸாஹித்யத்தை ஏற்படுத்தி, அதில் பற்பல ரஸங்கள் என்னும் வர்ணங்கள் ப்ரகாசிக்கும்படி செய்வது, மிக்க ஆச்சர்யமல்லவா இவருடைய ஞானம் என்னும் சந்த்ரிகையின் பளபளப்பையும், இச்சந்த்ரிகை பட்டமாத்ரத்தில், கீதையின் ச்லோகங்கள் என்னும் அல்லிப்பூக்கள், நன்றாய் விகஸித்து, அவற்றின் பாவார்த்தம் வெளிப்பட்டு, மனஸுக்கு ஏற்படும் குளிர்ச்சியையும்,

என்னவென்று வர்ணிக்கலாகும்! இவருடைய சொற்களினால் உண்டாகும் ஸுகம், ஆசையற்றுப் போனவர்களுக்குக் கூட, ஆசையை உண்டாக்கி வைக்கிறதே! நம்முடைய மனோரதம் முற்றும் பூர்த்தி அடைகிறது!" என்று சொல்லி, அவர்களுக்குண்டான ஆனந்தத்தால், பக்கத்துக்குப் பக்கம் அசைந்தாடத் தலைப்பட்டார்கள்.

ஞானதேவர் அவர்களை எச்சரிகை செய்து, மறுபடியும் அர்ஜுநனுடைய பாக்யத்தைக் கொண்டாடல்:

மேற் கதையைச் சொல்வேன், கவனித்துக் கேளுங்கள். பாண்டவகுலத்தில் கிருஷ்ணன் என்னும் ஸூர்யன் புறப்பட்டு, மிக்க புதுமையான ஓர் பகல் ஏற்பட்டது. அவரை தேவகி எட்டுமாதம் சுமந்து பெற்று, யசோதை மிக்க ப்ரயாஸத்துடன் வளர்த்து, முடிவில் அவர் பாண்டவர்களுக்குப் பயன்பட்டார். ஆகையால் வெகுதினங்கள் கட்டிக்காத்து, ஸமயம் பார்த்துக் கேட்டறிந்து கொள்ள வேண்டும், என்ற நிர்ப்பந்தம், இந்த பாக்யசாலியான அர்ஜுநனுக்கு ஏற்படவே இல்லை. இது நிற்கட்டும், மேற்கதையை விளம்பம் இன்றி சொல்வீர், என்று ச்ரோதாக்கள் சொல்லவே, அப்படியே சொல்வேன் கேளுங்கள்.

மேல் கதை, அர்ஜுனனுடைய ப்ரச்னம் :

பின்பு அர்ஜுநன் ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் சீலுகை பாராட்டிக்கொண்டு, பின் வருமாறு கேட்டான். ஹே தேவா, ஸாதுக்களின் இவ்வகைப்பட்ட லக்ஷணங்கள் என்னிடத்தில் கொஞ்சமேனும் இல்லை. இந்த லக்ஷணங்களின், உண்மையான ஸாரம் என்னிடத்தில் ஏற்படுவதற்கு, எனக்கு கொஞ்சமேனும் யோக்யதை இல்லாமற்போனாலும், நீர் இஷ்டப்பட்டால், எனக்கு இந்தப் பெருமை கிடைத்துப்போகும். நீர் கொஞ்சம் மனஸு வைத்தால், நான் ப்ரஹ்மமே ஆய்விடலாம். நீர் உபதேசிப்பது, அப்யஸிப்பதற்கு எவ்வளவு கடினமாயிருந்தாலும், அப்யஸிக்க ஸித்தமாயிருக்கிறேன். நீர் இவ்வளவு கொண்டாடி வர்ணித்தீரே, இப்படிப்பட்ட ஸித்தர்கள் இன்னார் என்று நான் பார்க்காதவனாயிருந்தாலும், அப்படிப்பட்டவர்களை மனஸால் கொண்டாடிக் கொண்டு அப்பதவி அடைந்தவர்களின் பெருமைக் களவில்லையே யென்று, மிக்க

வியப்படைந்து, அதை நானும் அடையவேண்டுமென்று, மட்டற்ற ஆசை பாராட்டி நிற்கிறேன். இம்மனோதரம் எனக்கு ஸித்திபெறும்படி, என்மேல் பிரவுவாகிய நீர் தயவு வைத்துச் செய்து கொடுப்பீரோ?

ஸ்ரீ கிருஷ்ணன் ப்ரத்யுத்தரம் :

இப்படி அர்ஜுனன் சொன்னதைக் கேட்டு, ஸ்ரீ கிருஷ்ணன் புன்னகைப் புரிந்து, "ஆம், அப்படியே செய்து தருகிறேன்," என்றார்.

திரும்பவும் அர்ஜுனனுடைய பாக்யத்தின் வர்ணனை

பாருங்கள், பகவத் ப்ரஸாதம் என்ற தொன்று ஏற்படாத வரைக்கும், ஸுகத்தை எங்கே தேடிப் பார்த்தாலும், அது கிடைக்காது. அந்த ப்ரஸாதம் ஏற்பட்டப்பின், ஸுகக்குறைவை எங்கும் காணமுடியாது. அப்படியே ஸர்வேச்வரனுடைய உத்தம ஸேவகனாக ஒருவனாய் விட்டால், அவன் அநாயாஸமாய் ப்ரஹ்மம் ஆய்விடுவான். ஆனால், அர்ஜுனனிடத்தில் பாக்யங்கள் அனைத்தும் நிறைந்து, அவன் அவற்றைத் தாங்கி நிமிர்ந்து நிற்கமுடியாமல், எவ்வளவு வணக்கமடைந் திருக்கிறான், பாருங்கள். இந்திரன் முதலானவர்கள் கூட, ஆயிர ஜந்மங்கள் எடுத்து, ஜந்மங்கள் தோறும் உபாயானுஷ்டானம் செய்து வந்தாலும், எவனுடைய தர்சனம் கிடைக்காதோ, அந்த பகவான் அர்ஜுனனுக்கு எவ்வளவு வசப்பட்டு நிற்கிறான். இந்த அர்ஜுனன் வாயைத் திறந்து ஒருவார்த்தை சொல்லாமலிக்கும்போதே, பகவான் அவன் மனதின் எண்ணத்தைத் தெரிந்துகொண்டு, அதைச் செய்துவைக்க வேண்டுமென்று, மிக்க முன் ஜாக்ரதையாய் நிற்கிறார்.

அர்ஜுனனுக்கு யோகாப்யாஸத்தை உபதேசிக்கும் முன்பு, கிருஷ்ணன் செய்த ஆலோசனை :

பின்பு நடந்த சரித்ரத்தைச் சொல்வேன் கேளுங்கள். தான் ப்ரஹ்மமாக வேண்டுமென்று அர்ஜுனன் சொன்னது முழுவதையும், பகவான் கவனித்துக்கேட்டு, இப்படி ஓர் ஆலோசனை செய்தார். பரஹ்மத்வத்தை அடைய வேண்டுமென்ற ஆசை, இவனுக்கு உண்டாயிருப்பதோடு கூட, இவனுடைய அந்தராத்மாவில் உத்தமமான வைராக்யமும் உண்டாயிருக்கிறது. ஓர் செடி வளர்ந்து பழம் எடுக்க வேண்டிய

முதிர்ச்சி அடைவதின் முன்னமேயே, வஸந்த காலத்தின் சேர்க்கையால் பூக்கத் தலைப்பட்டாற் போலும், இந்த அர்ஜுனன் யௌவன பர்வத்தவனாயிருந்தும், வைராக்கியத்தின் நிறைவால், அவனிடத்தில் பரஹ்மமே தானென்ற பாவம் குறைவில்லாமல் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் அவன் பரஹ்மமாய் போவதென்னும் பழம், பழுக்க மிக்கக் காலம் பிடிக்காது; அவன் எதை அனிஷ்டிக்கத் தொடங்கினாலும், அது தொடக்கதிலேயே அவனுக்குப் பலித்துப் போகும்; அவனுக்கு ஓர் அனுஷ்டானத்தை உபதேசித்தால், அது வீண்படாது; இப்படி ஸ்ரீ கிருஷ்ணன் தீர்மானம் செய்து கொண்டு, அவர் அர்ஜுனனுக்கு உபதேசித்த யோகாப்யாஸம் என்னும் உத்தம மோக்ஷ மார்க்கத்தை சொல்வேன், கேளுங்கள்.

யோகாப்யாஸத்தின் பெருமை :

இந்த மார்க்கத்தில் ப்ரவ்ருத்தி யென்னும் மரத்தடியில், நிவ்ருத்தி மரத்தின் பழங்கள் அஸங்க்யேயமாய் உதிர்ந்து கிடக்கப் பார்க்கலாம். இந்த மார்க்கம் இவ்வளவு உத்தமமானதால், பரமசிவன் இதை விட்டுப் போக இஷ்டமில்லாதவனாய், ஆண்டி வேஷம் பூண்டு, ஸதா இதிலேயே யாத்ரை செய்து கொண்டு, இன்னமும் திரிந்து கொண்டிருக்கிறான். இந்த மார்க்கத்தில் யோகிகள் இறங்கி, முதலில் வழிகெட்டு திண்டாடி, பிறகு அநுபவம் என்னும் அடிவைப்பின் உதவியால், முன் சென்றவர்கள் நடந்துபோன பாதையைக் கண்டு பிடித்துக் கொண்டு, ஆத்மபோதம் என்னும் வெளிச்சத்தின் ஸஹாயத்தால், இதர அஜ்ஞான மார்க்கங்களை விட்டொழித்து, நேரான வழியில் விரைந்து சென்றார்கள்.

பின்பு மஹரிஷிகளும், இதே மார்க்கமாய் நடந்து போனார்கள். அனைவரும் இவ்விதமாகவே முதலில் ஸாதகர்களாய் இருந்து, பின்பு ஸித்தர்களாய், ஆத்மஜ்ஞானம் என்ற உத்தம பதவியில் ஏறி நின்றார்கள். இந்த மார்க்கம் கண்ணுக்கு புலப்பட்ட மாத்திரத்தில், பசி தாகம் மறந்து போகும். இவ்வழி நடக்கிறவர்களுக்கு, இராப்பகலின் ஞானமே அற்றுப் போகும். இதில் நடக்கிறவர்கள், அடிவைத்த இடமெல்லாம், மோக்ஷத்தின் சுரங்கம் திறந்து கிடக்கும். வழி கெட்டுப்போனாலும் கூட, ஸ்வர்க ஸுகம் லப்தமாகும். இம்மார்க்கத்தி லிறங்கினவர்கள் கிழக்கு நோக்கிய வழியாய் புறப்பட்டு, மேற்கிருக்கும் வீடு வந்து சேருவார்கள். இங்கே நடப்பதென்பது, அசையாமல் இருப்பதாகும்.

இந்த மார்க்கத்தால் எந்த ஊர் போய்ச்சேரவேண்டுமோ, அந்த ஊராகவே தான் ஆய்விட வேண்டும். இது சொல்ல வேண்டிய அவச்யம் இல்லை. இதை நீயே அனுபவத்தால் அறிந்து கொள்வாய். அப்போது அர்ஜுனன், "தேவா அப்படி ஆய்ப்போவது எனக்கு எப்போது கிடைக்கும். இப்படிபபட்ட ஆசை யென்னும் கடலில் முழுகிப் போய்க்கொண்டிருக்கும் என்னை, நீர் எப்போது கைகொடுத்து தூக்கிவிடப்போகிறீர்", என்று சொன்னான். அப்போது ஸ்ரீ கிருஷ்ணன், "ஏன், இப்படி கட்டறுத்துக்கொண்டு பதறுகிறாய்? நானே, எல்லா விஷயங்களையும் தொடர்ச்சியாய்ச் சொல்லிக் கொண்டு வருகிறேனே; அதற்குள் பொறுமை யில்லாமல், மேல்விழுந்து கேட்கிறாயே," என்று சொல்லி, மேலே யோகாப்பியாஸ முறைகளை விவரித்துரைக்கத் தொடங்கினார்.

शुचौ देशे प्रतिष्ठाप्य स्थिरमासनमात्मनः ।
नात्युच्छ्रितं नातिनीचं चैलाजिनकुशोत्तरम् ।।११।।

ஸுசௌ தேஶே ப்ரதிஷ்டாப்ய ஸ்திரமாஸன மாத்மன: ।
நாத்யுச்சித்ரம் நாதிநீசம் சைலாஜின குஶோத்தரம் ॥ 11

யோகாப்யாஸம் செய்வதற்குத் தகுந்த ஸ்தான நிர்ணயம் :

நான் இப்போது இந்தயோகாப்யாஸத்தைப் படிப்பாடியாய் விவரித்துச் சொல்லப்போகிறேன். அது முழுமையும் உனக்கு அப்யாஸ காலத்திற் பயன் படும். நான் பின் வர்ணிக்குமாறு நேர்மை பெற்ற ஓர் ஸ்தானத்தை முதன்முதல் தேடிக்கொள்ளவேண்டும். அங்கே ஏற்படும் மனஸின் ஓய்வில் ஆசை உண்டாய், அங்கே உட்கார்ந்த பிறகு, எழுந்துபோக மனம் வரக்கூடாது. அந்த ஸ்தானத்தைக் கண்ணாற் பார்த்த மாத்திரத்தில், மனஸில் ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் வைராக்யம் இரண்டு மடங்காக வலுக்க வேண்டும். அன்றியும் அது ஸாதுக்கள் முன் வஸித்திருந்த இடமாகவும், உள்ளம் ஸந்தோஷிப்பதற்கு அநுகூலமானதாகவும், மனஸில் தைர்யத்தை வருத்தி செய்து கொடுக்கத தக்கதாகவும் இருக்க வேண்டும். அவ்விடம் யோகாப்யாஸத்தில் மேன்மேலும் உத்ஸாஹத்தைச் செய்து கொடுப்பதாக இருந்து, அநுபவஸித்தி யென்பது தானாகவே அணுகி ஸாதகனுக்கு மாலையிடச் செய்து கொடுக்கத் தக்கதா யிருக்க வேண்டும்.

இப்படி எல்லாம் ரம்யமாயிருப்பதின் பெருமை, அந்த இடத்தில் எப்போதும் அகலாதிருக்க வேண்டும். வழிகெட்டுப் போய் ஓர்பாஷாண்டி அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தால், அவனுக்குக்கூட தபஸ்ஸு செய்ய வேண்டும் என்னும் ஆசை மனஸில் வேரூன்றிக்கொண் டேற்படவேண்டும். ஒருவன் தன் வழியோடு போகும்போது, அந்த இடம் அகஸ்மாத்தாய் குறுக்கிட்டால், பின்பு அவன் எவ்வளவு ஸம்ஸார ஆசைகளில் முழுகிக்கிடக்கிறவனா யிருந்தாலும், அந்த இடத்தை விட்டுப் போக அவனுக்குத் தோற்றக்கூடாது. இவ்விதமாய், தங்கியிருக்க மனமில்லாதவனைக் கூட தங்கவைத்துக் கொள்கிறதாயும், ஸதா அலைந்து கொண்டிருக்கிறவனை உட்கார்த்தி வைப்பதாயும், தூங்கிப்போகும் விரக்தியைத் தட்டி எழுப்பிவைப்பதாயும், அந்த இடம் இருக்க வேண்டும்.

ச்ருங்கார விலாஸங்களில் ஈடுபட்ட மனஸுள்ள ஓரரசன், அந்த இடத்துக்கு வந்துசேர்ந்தால், தன் ராஜ்யத்தைக் கூடத் துறந்து, கவலையற்றவனாய் அங்கேயே வஸிக்க வேண்டுமென்று, அவனுக்கு ஆசை உண்டாக வேண்டும். அந்த இடம் இவ்வளவு நலம் பொருந்தியதாயும் நிர்மலமாயுமிருப்பதோடு கூட, விச்வத்துக்கு ஆதாரமான ப்ரஹ்மத்தைத் தானாய் வெளிப்பட்டு கண்ணுக்குமுன் நிற்கச்செய்யும் பெருமை உள்ளதாயுமிருக்க வேண்டும். அன்றியும் அந்த இடம் ஸாதுக்கள் வஸித்துக்கொண்டிருப்பதாயும் – லௌகிக ஜநங்களின் ஸஞ்சாரமற்றதாயும் – வேர்முதல் நுணிவரைக்கும் அம்ருதம்போல் தித்தித்துக்கொண்டு எப்போதும் பழங்கள் பழுத்துத் தொங்குகின்றவை யாயிருக்கும் மரங்கள் அடர்த்தியாய் வளர்ந்திருப்பதாயும், மழை இல்லாத காலத்திற்கூட அதிஸ்வச்சமான ஜலம் நிறைந்திருந்து, இறங்கி ஏறுவதற்கு ஸுலபமாய் இருக்கும்,

அருவிகள் அடிக்கடி காணப்படுவதாயும் – ஸுகோஷ்ணமான வெய்யில் உள்ளதாயும், – சீதளமானதும் அதிம்ருதுவானது மாயிருக்கும் காற்று வீசிக் கொண்டிருப்பதாயும், – சந்தடி முற்றிலு மற்றுப்போய் காட்டு ம்ருகங்களின் ஸஞ்சாரம்மற்றதாயும், கிளிகளும் தேன் வண்டுகளும்கூட ஸஞ்சரிக்காததாயும், இருக்க வேண்டும். நீரில் ஸஞ்சரிக்கின்ற ஹம்ஸஸசக்ரவாகங்களிற் சிலவும், எப்போதாவது குயில்களும் இருந்தால், பாதகம் இல்லை. நிரந்தரமாய்த் தங்கியிராமல் வந்து போய்க்கொண்டிருக்கும் மயில்கள் இருந்தாலும் இருக்கலாம். ஆனால் இதுமாத்ரம் அவச்யம். ஆஸநம் போட்டுக்கொள்வதற்குத் தகுந்ததாய்,

நன்றாய் மறைந்து கிடக்கும் குஹையோ, ஆச்ரமமோ, சிவாலயமோ, இவற்றில் மனஸுக்கு ருசித்த தெதுவோ, அது ஒன்று இருக்க வேண்டும். முக்ய அபிப்ராய மென்னவென்றால் உட்காரும் இடம் ஏகாந்தமானதாய் இருக்கவேண்டும்.

ஆஸநவிதி :

மனஸு ஸ்திரமாகத்தக்க இடம்பார்த்து, அங்கே பின் சொல்லப்படும் விதமாய் ஆஸநம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். கீழே, நுணிமுறியாத இளர்ந்தர்ப்பங்களை ம்ருதுவாயும ஸமமாயும் நெருக்கமாயும் இருக்கும்படி நன்றாய்ப் பரப்பி, அதற்குமேல் மான்தோலையும், அதின் மேல் சுத்தமாயத் தோய்த்த வஸ்த்ரத்தையும் மடித்துப்போட்டுக் கொள்ளவேண்டும். ஒருவேளை ஆஸநம் அதிகமாய் உயர்ந்து போனால், தேஹம் அசையப்பெறும், அதிகமாய்த் தாழ்ந்து போனால், பூமியின் தோஷம் தேஹத்திற்றாக்கும். ஆகையால் இவ்விரண்டையும் தவிர்த்துக் கொண்டு, அஸநத்தை திட்டமாய் அமைத்துக் கொள்ளவேண்டும்.

तत्रैकाग्रं मनः कृत्वा यतचित्तेन्द्रियक्रियः ।
उपविश्यासने युञ्ज्याद्योगमात्मविशुद्धये ।।१२।।

தத்ரை காக்ரம் மன: க்ருத்வா யதசித்தேந்த்ரிய க்ரிய: ।
உபவிஶ் யாஸனே யுஞ்ஜ்யாத் யோக மாத்ம விஶுத்தயே ॥ 12

குருஸ்மரணை செய்துகொண்டு ஆஸநத்திலிருத்தல் :

பின்பு அந்த இடத்தில் அந்தக்கரணத்தை ஏகாக்ரமாய்ச் செய்து கொண்டு, ஸத்குருவின் ஸ்மரணை செய்ய வேண்டும். அப்படி ஆதரவுடன் குருஸ்மரணை செய்வதால், உள்ளும் புறமும் ஸாத்விகம் வ்யாபித்து, தான் என்னும் அகம்பாவத்தின் காடிந்யம் முற்றிலும் கரைந்துபோய், விஷயவாஸனை மறந்துபோய், இந்திரியங்களின் ஸம்ப்ரமம் ஒய்வடைந்து, ஹ்ருதயத்துக்குள் மனஸு ஒடுங்கிப்போகும். இப்படி இவை யெல்லாம் ஏற்படும் வரைக்கும், குருஸ்மரணை செய்து நின்று, அந்தஸ்மரணையுடன் ஆஸநத்தின் மேல் உட்காரவேண்டும்.

பின்பு அவயவங்களே அவயவங்களின் முத்ரையைக் கலையாதபடிக் காப்பாற்றித்தந்து, வாயுவினாலேயே வாயுகட்டப்பட்டுப்போய், யோகஸித்தியி னநுபவம் தானாகவே வெளிப்படத் தொடங்கும். பின்பு

இந்த்ரியப்ரவ்ருத்திகள் ஒடுங்கிப்போய், ஸமாதி என்பது அக்கரையிலிருந்து இக்கரை வந்து சேரும். இப்படி ஆஸநத்தில் உட்கார்ந்த உடனேயே, மேல் ஏற்படவேண்டிய யோகாங்கங்கள் தமக்குத்தாமே ஏற்பட்டு அப்யஸிக்கப்படும். இப்படி ஏற்படுவது முத்ரையின் மகிமை. இனி முத்ரையின், (முத்ரை என்பதும் ஆஸநம் என்பதும் வேறானவை, யோகாப்யாஸ காலத்தில் மடியையும் அதற்குக் கீழ் அங்கங்களை அமைத்து வைக்கும் அமைப்புக்கு ஆஸநம் என்று பெயர். கைகளையும் அவற்றிற்கு மேலங்கங்களையும் அமைத்து வைக்கும் அமைப்புக்கு முத்ரை என்றும் பெயர். ஆனால் இவ்விடம் முத்ரை என்பது இருவகை அமைப்புகளையும் குறிக்கின்றது) விவரத்தைச் சொல்லப்போகிறேன், கவனித்துக்கேள்.

மூலபந்தம் :

துடை, ஜங்கை (முழங்காலுக்குக் கீழுள்ள ஆடுசதை) இவ்விரண்டையும் இறுகச் சேர்த்து, வலது கால்மேல் இடது காலை வளைத்து வைத்து, வலது குதிகாலின் மேற் பாகத்தை, குதத்துக்கும் (மலவாயில்) விருஷ்ணத்துக்கும் (பீஜம்) நடுவில் தோன்றும் ரேகையில், முன் ஒன்றை விரற்கடையும் பின் ஒன்றரை விரற்கடையும் தள்ளி, நடுவில் இருக்கும் ஒருவிரற்கடை ப்ரதேசத்தில் தேஹத்தை வைத்து, அதின் மேல் இறுக அழுந்தும்படி ஒரு பக்கமும் சாயாமல் நிறுத்தி, முதுகெலும்பின்கீழ்க் கொனையைத் தூக்கினது தெரியாதபடிச் சற்றுத்தூக்கி, இரண்டு கணைக்கால்களையும் இவ்வகை இருத்தி வைக்கவேண்டும். பின்பு சரீரம் முழுவதும் குதிகாலின் மேல் தானாகவே நிலைத்துப்போகும், அர்ஜுநா. இது தான் மூலபந்தத்தின் லக்ஷணம். இதற்கே வஜ்ராஸநம் என்று கௌணமான பெயரும் உண்டு. இப்படி மூலாதாரத்தில் முத்ரை ஏற்படவும், கீழ்ச்செல்லும் வழி அடைப்பட்டுபோய், அபாநவாயு வயிற்றின் உட்ப்ரதேசத்தை இழுத்துக்குறுகிக் கொண்டு மேற் செல்லப் பார்க்கும்.

समं कायशिरोग्रीवं धारयन्नचलं स्थिरः ।
सम्प्रेक्ष्य नासिकाग्रं स्वं दिशश्चानवलोकयन् ।।१३।।

ஸமம் காய ஶிரோக்ரீவம் தாரயன் நசலம் ஸ்திர: ।
ஸம்ப்ரேக்ஷ்ய நாஸிகாக்ரம் ஸ்வம் திஶஶ்சாநவ லோகயன் ॥ 13

ஜாலந்தரபந்தம் :

பின்பு கைத்தலங்கள் இரண்டும் தொன்னை உருவாய்க் குவிந்து, இடதுகாலின் மேல் தங்கி நிலைபெறும். புஜமூலங்கள் இரண்டும் உயர்ந்து போகும். நடுவில் தேஹம் நிமிர்ந்து நின்று, தலை புதைந்து போய், கண்ணிமைகள் குவியத்தலைப்படும், மேலிமை ஆடாமல் நின்று போய், கீழிமை கீழ்நோக்கி விரிவடைந்து, கண் பாதி திறந்திருக்கும் ஓர் ஸ்திதி ஏற்படும். ஆகையால் பார்வையானது உள்ளேயே அடங்கிப் போகும். ஒரு வேளை வெளிப்பட்டதே யானாலும், மூக்குநுணிவரைக்கும் போய் அதைத் தாண்டிப் போக முடியாததாய், அங்கேயே நின்று விடும். பின்பு திக்குகளெல்லாம் சுற்றி பார்க்கவேண்டும் என்றும், ரூப வைசித்ரியங்களைப் பார்க்க வேண்டும் என்றும், ஏற்படும் ஆசைகள் தமக்குதாமே இல்லாமற் போகும். பின்பு தொண்டையின் குழாய் அடைப்பட்டுப்போய், மோவாய்க் கட்டை தொண்டைக் குழியில் அழுந்திப்போய் மார்பில் உராய்ந்து கொண்டு, நடுவில் உள்ள கண்டமணி மறைந்து போகும். இப்படி நாபிக்கு மேற்பட்ட தேஹத்தில் ஏற்படும் முத்ரைக்கு ஜாலந்தர பந்தம் என்று பெயர்.

ஓட்டியான பந்தம் :

பின்பு உந்தியானது மேற் புடைத்து, வயிறு ஒடுங்கிப்போய், ஹ்ருதயகோசம் உள்ளுக்குள்ளேயே சிதரிப்போகப் பார்க்கும். ஸ்வாதிஷ்டானத்தின் (ஆண்குறி இருக்குமிடம்) மேல்எல்லையிலிருந்து நாபிஸ்தாநத்தின் கீழ்பக்கம் வரைக்கும், இப்படி ஏற்படும் முத்ரைக்கு ஓட்டியாணபந்தம் என்று பெயர். இப்படி சரீரத்தின் வெளிப்புறத்தில் யோகாப்யாஸத்தின் துவக்கம் ஏற்படும்.

प्रशान्तात्मा विगतभीर्ब्रह्मचारिव्रते स्थितः ।
मनः संयम्य मच्चित्तो युक्त आसीत मत्परः ।।१४।।

ப்ரஶாந்தாத்மா விகதபீர் ப்ரம்ஹசாரிவ்ரதே ஸ்தித: ।
மன: ஸம்யம்ய மச்சித்தோ யுக்த ஆஸீத மத்பர: ॥ 14

பின்பு மனஸு ஒடுங்கும் :

பின்பு உள்பக்கத்தில், மநஸுக்கு தன்னிஷ்டப்படி யெல்லாம் ஓடியாடுவதற்கு இடமில்லாமற் போகும். கற்பனை

என்பது இல்லாமற்போய், ப்ரவ்ருத்தி யென்பது ஓய்ந்து, மனஸு தானாகவே சாந்தி அடைந்து நிலைபெறும். பசிக்கு என்ன நேரிடுமோ! நித்திரை எங்கே ஓடிப்போய் விடுமோ! இவற்றின் ஸ்மரணையே அற்றுப்போய், இவையிருக்கு மிடமே தெரியாமற் போகும்.

அபாநவாயு கீழ் நோக்கிச் செல்லாமல் தடைபடுவதும், அதின்கார்யமும் :

கீழ் நோக்கிப் போய்க்கொண்டிருந்த அபானவாயு மூலபந்தத்தால் தடைப்பட்டு, பின்திரும்பி மேல்நோக்கிப் போகவும் தடைப்பட்டு, கோபங்கொண்டு உப்பத்தலைப்பட்டு, அடைப்பட்டு போன இடத்தில் உருமிக்கொண்டு, வெளிப்பட வழி இல்லாமல் மணிபூரத்தை (நாபிச்சக்ரம்) இடித்துமோதி சண்டைபோடும்.அப்படித் தடைப்பட்ட அந்த பெருங்காற்று, தன் வீடாகிய வயிறெல்லாம் வ்யாபித்து, பால்யம் முதல் சேர்ந்திருந்த மலங்களை எல்லாம் வெளிப்படுத்திவைத்து, பின்பும் உள்ளே அடங்காமல் நீர்ப்பைகளில் ப்ரவேசித்து, கபபித்தங்களின் ஆதாரநிலையை நாசஞ்செய்யும். ஸப்ததாதுக்களின் ஸமுத்ரத்தை தலைகீழாகக் கவிழ்த்து, கொழுப்பு என்னும மலையைத் தவிடுபொடி செய்து, எலும்புக்குள் இருக்கும் தைலத்தை உறிஞ்சிவிடும். நாடிகளை ஸ்தாநபேதம் அடையச்செய்து, அவயவங்களை எல்லாம் கட்டுக் குலையச்செய்து, ஸாதகனை நடுக்கமுறச் செய்யும். ஆனால் இதினால் அவன் பயந்து போகக்கூடாது. அது வ்யாதிகளை உண்டாக்கி வைத்து, உடனேயே அவற்றை நசிக்கச் செய்யும். கபம் முதலிய த்ரவபதார்த்தங்களையும், மாம்ஸம் முதலிய கெட்டியான பதார்த்தங்களையும், ஒன்றுபடக் கலந்துவைக்கும்.

குண்டலிநீ சக்தி விழித்துக்கொண்டு செய்யும் வேலை:

அச்சமயத்தில் மற்றோரிடத்தில் நடக்கும் செய்தியைக் கேள். மூலாதார்ரத்தில் வெப்பம் உண்டாய், குண்டலிநீ சக்தி விழித்துக் கொள்வாள். ஓர் பாம்புக்குட்டி தன்மே லெல்லாம் குங்குமத்தைப் பூசிக்கொண்டு வட்டம் இட்டுக்கொண்டு தூங்கி இருப்பதுபோல், குண்டலிநீ என்பவள் சிறு உருவம் படைத்தவளாய், மூன்றறை வட்டம் இட்டுக்கொண்டு அதோமுகமாய்ப் படுத்து இருக்கக் காணப்படுவாள். அவள் மின்னற் கொடியாற் செய்யப்பட்ட கங்கணமோ என்றும்,

நெருப்பு ஜ்வாலையைக் கொண்டு நிர்மிக்கப்பட்ட கும்பியோ என்றும், உத்தமமான பதினைந்து மாற்று தங்கத்தால் அமைந்து மெருகு ஏற்றப்பெற்ற வளையிலோ என்றும், சொல்லுபம்டியா யிருப்பாள். நாபி கமலத்தின் இரண்டு இதழ்களும் கெட்டியாய்ச்சேர்ந்து குவிந்திருக்க, அவற்றின் உள்பக்கத்தில் உறங்கிக்கிடக்கும் குண்டலிநீசக்தி, அந்த மூலபந்தத்தினால் ஏற்படும் வெப்பத்தால், படுக்கையைவிட்டு எழுந்துக் கொள்வாள்.

அப்போது நக்ஷத்ரங்கள் உதிர்ந்தாற்போலும், ஸூர்யன் தன் ஸ்தானத்தைவிட்டுத் தவறி விழுந்தாற்போலும், தேஜஸின் விதைகள் முளை யெடுத்தாற்போலும், தோற்றும்படி செய்து, தன் வட்டங்களைப் பிரித்துக்கொண்டு, எழுந்து சோம்பல் முறித்துக் கொண்டு, நிற்பதாக நாபிகமலத்தில் குண்டலிநீ காணப்படுவாள். வெகுதினங்களாய் ஆஹாரமில்லாமல் ஏற்பட்ட பசியினாலும், ஸுகம் கலைப்பட்டுப்போன நிமித்தத்தாலும், மிக்க ஆவேசத்துடன் வாயைத்திறந்து கொண்டு நிமிர்ந்து நிற்பாள். அங்கிருந்துகொண்டு ஹ்ருதயாகாசத்தின் கீழ்ப்பக்கத்தில் நிறைந்திருக்கும் வாயு அனைத்தையும் விழுங்கிவிட்டு, அவள் முகத்திலிருந்து வெளிப்படும் ஜ்வாலையைக்கொண்டு, மேலும் கீழும் உள்ள மாம்ஸ மனைத்தையும் பற்றித்தின்ன தலைப்படுவாள். எங்கெங்கு மாம்ஸப்பற் றிருக்குமோ அங்கெல்லாம் கடித்து, அம்மாம்ஸத்தை முழுவதும் தின்று விட்டு, கடைசியாக ஹ்ருதயத்தினின்று கூட ஒன்றிரண்டு கவளம் பிடுங்கித் தின்பாள்.

பின்பு உள்ளங்காலிலும் உள்ளங்கையிலும் மாம்ஸப் பற்றில்லாமல் துடைத்துவைத்து, பின்பு அவற்றிற்கும் மேல் இருக்கும் அங்கங்களைச் சோதித்துத் துடைத்து, ஒவ்வொரு அவயவத்தின் மூட்டிலும் உள்ள ஸத்தையையும் துடைத்துத் தின்றுவிடுவாள். தான் இருக்கப்பட்ட இடத்தைவிட்டுப் பெயராமலே, நகத்திலும் தோலிலும் எலும்புகளால் அமைந்த கூட்டிலும் இருக்கும் ஸத்தையை வெளிபடுத்தி, முற்றவும் துடைத்துத் தின்று, எலும்புகளின் குழாயிலும் தலைக்குள்ளுமிருக்கும் ஸத்தையையும் உறிஞ்சிவிட்டு, மயிர்களின் வேரை தீந்துபோகச் செய்வாள்.

பின்பு ஸப்ததாதுக்களால் அமைந்த ஸமுத்ரத்தில் வாயை வைத்து, தன்தொண்டையின்தாஹத்தை சாந்தி செய்துகொண்டு, தேஹமெங்கும் வெப்பத்தை உண்டாக்கி, அதை உலர்த்திவிட்டு, மூக்கின் த்வாரத்தினின்று

பண்ணிரண்டு அங்குலம் வெளிப்பட்டுச் செல்லும் வாயுவை கெட்டியாய்ப் பற்றி உள்ளே இழுத்துவைப்பாள். அப்போது கீழ் இருக்கப்பட்ட வாயு மேல்நோக்கிச் சென்று, மேல் இருக்கும் வாயு கீழ்நோக்கிச் சென்று, ஒன்றோடொன்று கலந்து போவதை மணிபூரச் சக்ரம் தடுத்து வைக்கிறது. இல்லாவிட்டால், இரண்டு வாயுவும் கலந்து போய் விடும். இச்சமயத்தில் அச்சக்ரத்தில் இருக்கும் குண்டலிநீ சக்தி கோபங்கொண்டு, "உங்களுக்கு இங்கு என்னவேலை இருக்கிறது? பின் திரும்பிச் செல்லுங்கள்" என்று சொல்லி அவைகளிரண்டும் கலந்துபோகாமல், அவற்றைப் பின்வாங்கச் செய்து, சரீரத்தில் ப்ருதிவி ஸம்பந்தமான ஓர் தாதுவு மில்லாதபடி தின்று விட்டு, அப்படியே அப்பு ஸம்பந்தமான அனைத்தையும் குடித்துத் துடைத்து வைப்பாள்.

இப்படி இரண்டு பூதங்களையும் உண்டு விட்டபின் பூர்ணத்ருப்தி அடைந்து, மனம் மகிழ்ந்து குண்டலிநீ ஸுஷும்நையின் ஸமீபத்தில்வந்து நின்றுகொண்டு, அப்படி த்ருப்தி அடைந்த ஆநந்தத்தால் வாயினின்று விஷத்தைக் கக்க, அவ்விஷமே அம்ருதமாய் மாறி, சரீரத்தில் ப்ராணனைப் பிழைத்து நிற்கச்செய்யும். அந்த விஷம் என்ற அக்நி, உள்ளே இருந்து வெளிப்பட்டு, அம்ருதமாக மாறி, சரீரத்தை உள்ளும் புறமும் குளிரச் செய்து, ஸர்வாங்கமும் முன்னிழந்துவிட்ட ஸாமர்த்யத்தைத் திரும்பவும் அடையச் செய்யும்.

குண்டலிநீ ஸுஷும்நையின் மார்க்கமாய், மேல் நோக்கிச் சென்று சந்த்ராம்ருதத்தைப் பருகல் :

இதற்கு, மேல் நாடிகளின் த்வாரங்கள் அடைபட்டுப் போய், ஒன்பது விதப்பட்டிருந்த வாயு ஒன்று பட்டுப்போய், தேஹதர்மங்கள் நடைபெறாமற்போகும். இடையும் பிங்களையும் ஒன்று பட்டுப்போய், மூன்று முடிச்சுகளும் அவிழ்ந்து போய், அறுசக்கரங்களின் எல்லைகள் அழிக்கப்பட்டுப் போகும். பின்பு சந்திரன் என்றும் ஸூர்யன் என்றும் பெயரைடைந்து மூக்கில் இருந்த இரண்டு வாயுக்களும் எங்கே போய்ச் சேர்ந்தனவோ! அவற்றை விளக்கேற்றிக் கொண்டு தேடிப்பார்த்தாலும், அவை அகப்படாமற் போகும். புத்தியின் ப்ரகாசம் அற்றுப்போய், மூக்கில் இருக்கும் பரிமளம் என்பது குண்டலிநீயோடு சேர்ந்து ஸுஷும்நைக்குள் ஒடுங்கிப் போகும். அச்சமயத்தில் மேற்பக்கத்தில் இருக்கும் சந்திராம்ருதக் குட்டை மெல்ல ஒரு பக்கம் சாய்ந்து, குண்டலிநீ சக்தியின் முகத்தில் ஊற்றப்பட்டுப் போகும்.

சந்திராம்ருதத்தை குண்டலிநீ பருகினதின் கார்யம் :

அந்த ரஸம் அவள் தேஹத்தில் நிறைந்து, அவள்மூலமாய், தேஹமெங்கும் வ்யாபித்துக் கொள்ளும், பின்பு ப்ராணவாயு கடைசியாகக் காணப்பட்ட இடத்தில் மறைந்து போகும். நன்றாய்க் காய்ச்சின மூசினின்று மெழுகு வெளிப்பட்டு, பின்பு அதில் ஊற்றப்பட்டதான உலோஹரஸம் அந்த மூசின் உள்வடிவை அநுஸரித்துப் பாய்ந்து, அவ்வுருவாக கட்டிப்போனாற்போலும், ஸாதகனுடைய சரீரம் கேவலம் காந்தி என்பதால் வார்க்கப்பட்டு, உருவாகக் கட்டிப்போய், தோலென்னும் உறையாற் போர்த்து வைக்கப்பட்டதாகத் தோற்றும். ஸூர்யன் மேகம் என்னும் முட்டாக்கைப் போட்டுக்கொண்டிருந்து, பின்பு அந்த முட்டாக்கைக் கழற்றி எறிந்துவிட்டு காந்தியுடன் வெளிப்பட்டாற்போலும், அத்தேஹம் தோற்றும்.

அப்படியே முழுதும் காய்ந்து போனதான தோல் என்னும் மேல் உறை உமிபோல் கழன்று போய், ஸ்வயம் குங்குமப்பூவோ என்றும், ரத்நங்களே விதையாய் முளையெடுத்தனவோ என்றும் சொல்லும்படியாய், அவனுடைய அவயவங்களின் காந்தி இருக்கும். இல்லாவிட்டால் ஸந்த்யா கால ஆகாசத்தின் செகப்பு வர்ணத்தைக் கொண்டு செய்யப்பட்ட ஓர் உருவமோ என்றும், அல்லது ஆத்மசைதந்யத்தின் தேஜஸ்ஸைக் கொண்டு அமைக்கப்பட்டு மெருகு கொடுக்கப்பட்ட ஓர் உருவமோ என்று மெண்ணும்படி, அவன் தேஹம் இருக்கும்,

மற்றும் அவன் சரீரம், குங்குமத்தின் குவியலோ என்றும், - ரஸாயாந ஸித்தர்களுடைய ரஸத்தால் வார்க்கப்பட்ட உருவமோ என்றும், - சாந்தி என்பதே அவயவங்களோடு அமைந்திருக்கிறதோ என்றும், - ஆநந்தத்தால் அமைந்த சித்ரத்தின் மேற்பூச்சோ என்றும், - மகா ஸுகமே உருவெடுத்திருக்கிறதோ என்றும், - ஸந்தோஷ வ்ருக்ஷத்தின் இளங்கண்ணோ என்றும், - சனகசம்பகத்தின் சோபையோ என்றும், - அம்ருதத்தால் வார்க்கப்பட்ட பொம்மையோ என்றும், - அநேக அழகுகள் வளர்ந்திருக்கும் ஓர் தோட்டமோ என்றும், - சரத்காலத்தின் ஆஞ்ஞையினால் ஏற்பட்டு ப்ரகாசத்தால் விகஸித்திருக்கும் சந்திரபிம்பமோ என்றும், - தேஜஸ்ஸே ஓர் உருவம் எடுத்துக்கொண்டு வந்து ஆஸநத்தின்மேல் உடகார்ந்திருக்கிறதோ என்றும், - சொல்லும்படியாயும் இருக்கும்.

எப்போது குண்டலிநீ சந்திராம்ருதத்தைப் பானம் செய்வாளோ, அப்போது தேஹம் இப்படி ஆய்விடும். பின்பு இந்த சரீரத்தைப் பார்த்து யமன் பயந்துபோவான். வார்த்திக்யம் அத்தேஹத்தை விட்டு வெளிப்பட்டுப்போய், தாருண்யாவஸ்தை யென்னும் ஆடையின் முடிச்சு விடுபட்டுப்போய், வெகுகாலத்துக்கு முன்னேயே மறைந்துபோன பால்யம் திரும்பவும் வந்து நிற்கும். அவன் வயது இவ்வளவு அல்பமாய்த் தோற்றினாலும், அவன் பாலனைக் காட்டிலும் எவ்வளவோ பலாட்யனாயும், தைர்யத்தினால் உபமானம் அற்றவனாயும், இருப்பான்.

பொன்னால் ஏற்பட்ட வ்ருக்ஷத்தின் துளிர்களிலிருந்து ரத்னங்களே அரும்புகளாக ஏற்பட்டாற் போலவும், எப்போதும் புதுப்புது அழகுகளோடு கூடியவாய் அவனுக்கு நகங்கள் உண்டாய் காணப்படும் அப்படியே அவனுக்கு பற்களும் புதியவாய் உண்டாயிருக்கும், ஆனால் அவை மிகவும் சிறுத்து, மேல்வரிசையும் கீழ்வரிசையும் வைரப்பொடிகளால் ஏற்பட்டவைபோற் றோன்றும், ஸர்வாங்கங்களிலும் அதிநுட்பமாய் மயிர் வரிசைகள், மாணிக்கத்தின் மிக்கச்சிறுத்த பொடிகள் என்று சொல்லும்படியாய், புதியவாய் உண்டாயிருக்கும்.

உள்ளங்கையும் உள்ளங்காலும் செந்தாமரைகள் என்று சொல்லும்படியாயும், கண்களின் பளபளப்பு வர்ணிக்க முடியாததாயும், இருக்கும். முதிர்ந்து வளப்பமாய் வளர்ந்துள்ள பெருமையாமல், முத்தானது முத்துச்சிப்பிக்குள் அடங்காது, சிப்பிகளின் ஸந்தி கூடமுடியாமற் போனதுபோலும், அவனுடைய கண் இரப்பைகள் குவிய முடியாதபடி, அவனுடைய கண்கள் விசாலமாயும், ஒளி மிகுந்தவையாயும், மிக்கவ்யாப்தி உள்ளவையாயும், தங்கள் குழிக்குள் நில்லாது வெளிப்பட்டுப்போக, ஸித்தமாயிருப்பவைபோலும், காணப்படும்.

அவை முன்னமேயே இருந்தவையே யானாலும், இச்சமயத்தில் ஆகாயத்தை யெல்லாம் அளாவிக் கொண்டிருக்கும். தேஹம் பொன்மயமாய்த், தோன்றினாலும், ப்ருதிவி, அப்பு, இவற்றின் அம்சங்கள் அற்றுப்போனதால், அத்தேஹம் காற்றின் லாகவத்தை அடைந்திருக்கும். அவன் ஸமுத்திரத்துக்கு அப்புறம் இருக்கும் வஸ்துக்களைப் பார்த்தறிவான். ஸ்வர்க்கலோகத்தில் நடக்கும், இரஹஸ்ய ஆலோசனைகளைக் கேட்டறிவான். எறும்பின் மனஸில் எண்ணங்களைத் தெரிந்துக்கொள்வான். வாயுவென்னும் குதிரைமேல் ஏறி ஸவாரி செய்வான். காலில் ஒரு துளி ஜலங்கூட ஒட்டாமல், ஜலத்தின்மேல் நடந்து போவான்.

இப்படி பலவகை ஸித்திகள் அவனுக்கு உண்டாயிருக்கக் காணலாம்.

குண்டலிநீ ஹ்ருதயம் வந்து சேர்ந்ததும், அநாஹதத்வனி உண்டாதல் :

பின்பு இந்த குண்டலிநீ சக்தி, ப்ராண வாயுவின் கையைப் பிடித்துக்கொண்டு, ஹ்ருதயாகாசத்தின் மேல்காலை வைத்தேறி, ஸுஷும்னை யென்னும் படிக்கட்டின் வழியாய் ஹ்ருதயம் வந்து சேருகிறாள். ஜீவாத்மாவின் சோபை யென்றும், விச்வத்தின் வித்தினின்று வெளிப்பட்ட முளையின் சாயை யென்றும், நிராகார பரப்ரஹ்மத்தின் ஆகாரம் என்றும், பரமாத்மாவாகிய சிவஸ்வரூபத்தின் ஸம்புடம் என்றும், ப்ரணவத்தின் ஜந்மபூமியென்றும், சொல்லத்தக்க அந்த குண்டலிநீ யென்பவள் ஹ்ருதயத்துக்குள் வந்து நின்ற பின், அநாஹதத்வநி சப்திக்கத் தலைப்படுகிறது. அந்தக் குண்டலிநீ கையைப் பற்றிக்கொண்டு, அவள் பக்கத்திலேயே இருந்து கொண்டிருந்த புத்தியின் காதில், இந்த த்வனி கொஞ்சம் படுகிறது. அந்த அநாஹத கோஷத்துக்குள், ப்ரணவத்தின் ஆகாரத்தைக் கொண்டு, ஏற்பட்ட அழகிய பலவிதப்பட்ட சப்தங்களால் அமைந்த சித்ரங்கள் பார்க்கப்படும்.

இது கல்பனையால் கல்பித்துக்கொண்டு அறிய வேண்டியதாயிருக்கிறது. அப்படி கல்பித் தறிந்துகொள்ளத் தக்கவர்கள் கிடைக்காமையால், அங்கே சப்திக்கும் சப்தங்கள், இன்னவை யென்று வர்ணிக்க முடியாமலிருக்கின்றன. இதை உனக்குச் சொல்ல மறந்து போனேன், அர்ஜுனா இன்னும் வாயு நாசமடையாததால், ஹ்ருதயாகாசத்தில் சப்தமுண்டாவது ஸாத்யமாகிறது. அந்த அநாஹதம் என்னும் மேகம், தன்னுடைய குமுறலால் ஹ்ருதயாகாசத்தை தும்தும் என்று எங்கும் சப்திக்கச் செய்யவே, ப்ரஹ்மரந்த்ரத்தின் திட்டிவாயில் தானாகத் திறந்து போகிறது.

குண்டலிநீ ப்ரஹ்மரந்திரத்திலிருக்கும் மஹாகாசத்தில் ப்ரவேசித்தல் :

தாமரையின் நடுவில் அவகாசம் இருப்பது போல், ஹ்ருதயத்தில் மஹாகாசம் என்று வேறோர் ஆகாசம் இருக்கிறது. அதின் நடுவில் ஆதாரமில்லாமல் ஜீவசைதந்யம் இருந்து கொண்டிருக்கிறது. ஹ்ருதய மென்னும் வீட்டில் இருக்கும் அந்த ஜீவனுக்கு, குண்டலிநீ என்னும் பரமேச்வரி தேஜஸ்தத்வத்தைக் கொண்டு சாப்பாடு செய்து வைக்கிறாள்.

அத்துடன் கூட புத்தி தத்வத்தையும் வ்யஞ்சன (அந்நத்துக்கு ருசி உண்டாக்கி வைக்கும் கரி முதலியவை) மாயிடுகிறாள். பின்பு த்வைதஞானமே இல்லாமற்போகிறது. அப்போது குண்டிலிநீ யானவள் தனக்கு முன்னிருந்த காந்தியை இழந்து போய், கேவலம் ப்ராணணாகப் பரிணமித்து, வாயுவினால் ஏற்பட்ட ஓர் பொம்மை, முற்றிலும் தங்கஸரிகையா லமைந்த ஓர் வஸ்த்ரத்தை முன் உடுத்திக்கொண்டிருந்து, பின்பு அவ்வஸ்திரம் களையப்பட்டுப்போனால் எப்படியோ, வாயுவின் வேகம் தாக்கி ஓர் தீபம் அணைந்து போனால் எப்படியோ, ஓர் மின்னல் பளிச்சென்று தோன்றி மறைந்து போனால் எப்படியோ, அப்படியே ஓர் நுட்பமான தங்ககம்பி போலும், ப்ரகாசத்தின் ஓர் சிறு அருவிபோலும், ஹ்ருதய கமலம் வரைக்கும் அவள் வந்து சேர்ந்தமாத்திரத்தில் ஜரித்துப் போய், உருவற்ற கேவல சக்தியாய்விடுகிறாள். அப்போது அவள் சக்தியென்று வ்யவஹரிக்கப்பட்ட போதிலும், அவள் கேவலம் ப்ரணனே ஆவாள்.

ஸமாதி :

இந்த ஸ்திதியில் த்வநி, கலை, ஜ்யோதி, இவைமுற்றிலும் அற்றுப்போய், மனஸை அடக்கி வைத்ததால், வாயுவைக் கட்டுதல், த்யானத்தை மாறாதபடி நிறுத்தல், என்ற இவையும் அற்றுப்போய், கல்பனைகளை செய்வதென்பதும், ஒழிப்பதென்பதும் அற்றுப்போகிறது. மஹாபூதங்கள் முற்றிலும் நசித்துப் போகின்றன. சரீரமே சரீரத்தைச் சாப்பிட்டு விடுகிறது, என்ற ஆதிநாதனுடைய ஸம்ப்ரதாயத்தின் இந்த ஸித்தாந்தத்தை, ச்ரீமகாவிஷ்ணு அவதாரமான ஸ்ரீக்ருஷ்ணன் ஓர் குறிப்பாய் காண்பித்துவைத்தார் இந்த யோகமுறைகளைத் தெரிந்துகொண்டு அநுஷ்டிக்கத் தக்கவர்கள் இருக்கிறார்கள் என்னும் உத்தேசத்தால், அப்படி அவர் சுருக்கமாய்ச் சொல்லிவைத்ததின் மூட்டையை அவிழ்த்து, உள்ளே இருக்கும் யோகமுறைகள் என்றும் வஸ்த்ரங்களின் மடிப்புக்களை விரித்துக் காட்டிவைத்தேன்.

युञ्जन्नेवं सदात्मानं योगी नियतमानसः ।
शान्तिं निर्वाणपरमां मत्संस्थामधिगच्छति ।।१५।।

யுஞ்ஜன்னேவம் ஸதாऽऽத்மானம் யோகீ நியதமானஸ: ।
ஶாந்திம் நிர்வாணபரமாம் மத்ஸம்ஸ்தாமதி கச்சதி: ।। 15

கேசரீஸித்தி :

சக்தியின் ப்ரகாசம் மறைந்து போகவே, தேஹத்தின் ரூபமும் இல்லாமற் போய், உலகத்தாரால் அவள் காணப்படாது போவான். மற்றப்படியாய் முன் போலவே அவன் தேஹம் அவயவங்களோடு கூடியதாகவே இருக்கும். ஆனால் அது வாயுவால் ஏற்பட்டதாய், வாழை மரத்தின் மேற்பட்டைகளை எல்லாம் உரித்துப் போட்டால், அதின் கர்ப்பம் எப்படி இருக்குமோ அப்படியும், ஆகாசத்துக்கு அவயவங்கள் உண்டானாற் போலும், அவன் தேஹம் ஆய்விடும். தேஹம் இப்படி ஆனபிறகு, அது கேசரம் (ஆகாசத்தில் ஸஞ்சரிப்பது) என்று பெயரடையும். இந்த பதவியை அடைந்த ஸாதகனுடைய தேஹம், உலகத்தாருக்கு ஆச்சரயகரமாயிருக்கும். இந்த ஸ்தியில் அவன் புறப்பட்டுப்போன வழியிற் காணப்படும் அடிவைப்புகள்தோறும், அணிமாதி ஸித்திகள் கைகூப்பிக்கொண்டு விநயமாய் நிற்கும். ஆனால் அவனுக்கு அந்த ஸித்திகளால் ஆகவேண்டிய காரியம் ஒன்றுமில்லை.

இப்படி அவனுக்கு, அவன் தேஹத்தில் முன் இருந்த ப்ருதிவ்ய்யதேஜஸ் என்னும் மூன்று பூதங்களும் அத்தேஹத்திலேயே ஜீர்ணமாய்ப் போய்விடுகின்றன. ப்ருதிவி அப்பிலும், அப்பு தேஜஸ்ஸிலும், தேஜஸ் ஹ்ருதயத்திற் குள்ளிருக்கும் வாயுவிலும், கரைந்து போகின்றது. பின்பு வாயு ஒன்றே. தேஹத்தின் உருவை அனுசரித்து மிகுந்து நிற்கும். அதுவும் கொஞ்சகாலம் சென்றவுடன் ப்ரஹ்மரந்த்ரத்தில் உள்ள சிவஸ்வரூபத்தோடு கலந்துபோகிறது. அக்காலத்தில் (ப்ருதிவி அப்பு தேஜஸ் என்ற மூன்றும் லயமாய்ப் போன காலத்தில்) குண்டலிநீ யென்னும் பெயர் இல்லாமற் போய், கேவலம் வாயு வென்ற ஓர் பெயரே மிகுந்து நிற்கிறது. ஆயினும் அது சிவனோடு சேர்ந்து போகாதவரைக்கும், அதற்கு சக்தித்வம் என்னும் குணம் இருக்கின்றது. பின்பு அது ஜாலந்தர பந்த்தைத்தாண்டி கண்டஸ்தானத்தை மிதித்துக்கொண்டு, ப்ரஹ்மரந்த்ரத்திலுள்ள ஆகாசத்திற் ப்வேசித்து, ஓம்காரத்தின் முதுகின்மேல் கால்வைத்து பச்யந்தீ என்னும் படியைப் பின்தள்ளிவிடுகிறது.

மஹாகாச ப்ரவேசம் :

அதற்குமேல் அது தன்மாத்ரைகள் முதற்கொண்டு அர்த்தமாத்ரை வரைக்கும் உள்ள அனைத்தையும் தாண்டிப்போய், ஓர் நதி ஸமுத்ரத்தில் போய் விழுந்து விடுவது போலும், ப்ரஹ்மாந்த்ரத்திலுள்ள ஆகாசத்தில் விழுந்து

போகிறது. பின்பு ப்ரஹ்மரந்த்ரத்திலேயே நிலைபெற்று, ப்ரஹ்மமே நான் என்னும் பாவத்தையே கைகளாய் நீட்டி, பரமாத்மா வென்னும் லிங்கத்தைக் கட்டிக்கொள்கிறது.

ப்ரஹ்மப்ராப்தி :

பின்பு மகா பூதங்களால் ஏற்பட்ட திரவிலகிப்போய், அதுவும் (ஜீவனும்) பரமாத்மாவும் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு, ஆகாசத்தோடுங்கூட தானும் பரமாத்மாவில் ஒன்றுப்பட்டுப் போகிறது. மேகத்தால் ஸமுத்ரத்தினின்று பிரிந்து வைக்கப்பட்ட ஜலமானது, மழை ரூபமாய்க் கீழே விழுந்து, நதியுருவெடுத்து, மறுபடியும ஸமுத்ரத்திலேயே கலந்துபோய் விடுவது போலும், தேஹம் என்னும் ஓர் உருவை நிமித்தமாய்க் கொண்டு, ப்ரஹ்மஸ்வரூபம் ப்ரஹ்மஸ்வரூபத்தில் கலந்துபோய் விடுகிறது.

இப்படி ஆனபின், இவை இரண்டாகவே இருக்கின்றனவோ என்றும், அல்லது முதன் முதற்கொண்டே ஒன்றாய் இருந்தனவா என்றும், இந்த தத்வவிசாரம் அற்றுப்போகிறது. ஆகாசத்தோடு ஆகாசம் கலந்து போதல் போலும் இருக்கும் ஜீவபரமாத்மாக்களின் ஐக்யத்தை எவன் அநுபவிக்க பெற்றானோ, அவன் பரமாத்மாவாகவே போய், அப்படியே நின்று விடுகிறான். ஸம்வாதம் என்னும் ப்ரதேசத்தில் ஸஞ்சாரம் செய்பவையான வார்த்தைகள், அவ்வநுபவத்தை வர்ணிக்க முடியாமற் போகின்றன.

இந்த விஷயத்தை நான் வர்ணிப்பேன், என்று கர்வம் பாராட்டிவந்த வைகரீ யென்னும் வாக்கு, அதின் கிட்டக்கூட அண்ட முடியாமல், தூர நின்று விடுகிறது. புருவத்துக்கு உட்பட்டிருக்கும் ப்ரதேசத்தில் ப்ரணவத்தின் கொனையாகிய மகாரமே நுழைய முடியாமற்போய், ஒண்டியாகிய ப்ராண வாயுவே ப்ரஹ்மரந்த்ர ஆகாசத்தில் நுழைய திண்டாடிப்போய், நுழைந்த பிறகு அங்கேயே ஜீர்ணமாய்ப் போகிறது. அங்கே சப்தத்தின் ஆயுள் மாண்டுபோய், ஆகாசமும் லயமடைந்து போகிறது. ஆகாசங்கூட நிலை பெறாவண்ணம் ஆழமாயிருக்கும் ப்ரஹ்மஸ்வரூபத்தை, இந்தவாக்கு எப்படி வர்ணிக்க முடியும். ஆகையால் அக்ஷரத்துக்குள் அடைத்து வைக்கவும், காதால் கேட்டறியவும், இது முற்றிலும் அஸாத்ய மாயிருக்கிற தென்பதில், ஸந்தேஹம் கொஞ்சங்கூட இல்லை. எவனாவது பாக்யம் படைத்தவனாய், இந்தப்ரஹ்மஸ்வரூபத்தை அநுபவிக்கப் பெற்றால், அவன் அதுவாகவே ஆய்விடுகிறான்.

ப்ரஹ்மஸ்வரூபவர்ணனம் :

பின்பு அதை அறிவது என்பது, அஸம்பாவ்யம் ஆய்விடுகிறது. ஆகையால் இந்த விஷயத்தில் எவ்வளவு பேசினாற்றான் ப்ரயோஜநப்படப் போகிறது. இப்படி முடிவுசெய்து கொண்டு, சப்தங்களை அனைத்தும் திரும்பி விடுகின்றன. இங்கு நுழைந்தமாத்ரத்தில் ஸங்கல்பத்தின் ஆயஸ்ஸு முடிந்துபோகிறது. விசாரம் என்பதின் காற்றுக்கூட இதில் ப்ரவேசிப்பதில்லை. நிர்மனஸ்கத்வத்தின் லாவண்ய மென்றும், ஸமாதியின் தாருண்யம் என்றும், சொல்லத்தக்கதாயும், அநாதியாயும், பெருமை இவ்வளவென்று மதிப்பிடமுடியாத பரதத்வமாயும், விச்வத்தின் ஆதிமூலமாயும், யோகவ்ருக்ஷத்தின் பழமாயும் ஆநந்தத்தின் உயிர் நிலையாயும், ஆகாரம் முடிந்துபோகும் இடமாயும், மோக்ஷத்தின் ஏகாந்த ஸ்தானமாயும், ஆதி அந்தம் இரண்டும் அற்றுப்போகும் நிலையாயும், மஹாபூதங்கள் அடங்கியிருக்கும் வித்தாயும், மஹா தேஜஸ்ஸுக்களையும் ப்ரகாசிப்பிக்கும் தேஜஸ்ஸாயும், இப்படி எல்லாம் என் நிஜஸ்வரூப மிருக்கிறது பார்த்தா.

என்னுடைய பக்தர்கள் எப்போது நாஸ்திகர்களால் பீடிக்கப்படுகிறார்களோ, அப்போது இந்த என் ஸ்வரூபத்தின் அம்சமே நான்கு புஜங்களோடு நீ பார்க்கும் இந்த ரூபமாய் வெளிப்படுகிறது. ஸித்தி அடையும் வரைக்கும் ச்ரத்தையைக் கைவிடாது முயற்சி செய்கிறவர்கள் அநிர்வசநீயமானதும் மஹா ஸுகமானதுமாகிய இந்த ஸ்வரூபமாகவே ஆய்விடுகிறார்கள். நான் கீழே விவரித்துச் சொன்ன இந்த அஷ்டாங்க யோகத்தை எவர்கள் அநுஷ்டிப்பார்களோ, அவர்கள் எல்லா உபாதிகளினின்று விடுபட்டவர்களாய், என்னைப்போல் பரிசுத்தமானவர்களாய் விடுகிறார்கள். பின்பு பரப்ரஹ்மரஸமே ஓர் மூசில் வார்க்கப்பட்டு, மனுஷ்ய உருவாய் கட்டிப் போனதாக அவர்கள் காணப்படுவார்கள். இந்தப் பதவி எவனுக்குக் கிடைத்துப்போனதோ, அவனுக்கு இந்த விச்வமே இல்லாமற் போகும்.

அர்ஜுனனுடைய ப்ரச்நம் :

இப்படி பகவான் சொன்ன உடனே, அர்ஜுனன் வினவினான் : "இது உண்மையே.நீர் இப்போது விரிவித்தீரே, அந்த யோகாப்யாஸம் தப்பாமல் ப்ரஹ்மப்ராப்தியைச் செய்து கொடுக்கும் வல்லமை உள்ளதே. ஆகையால் இந்த யோகத்தை எவன் கடைவரைக்கும் கைவிடாது அநுஷ்டிப்பானோ, அவன்

தவறாது ப்ரஹ்மபாவத்தை அடைவான், என்பது எனக்குத் தெளிவாய்த் தெரியவந்தது. இந்த யோகத்தின் விஷயமான வார்த்தைகளைக் கேட்கும்போதே, எனக்கு ப்ரஹ்மஞானம் ஏற்படுகிறது பின்பு அதை அநுஷ்டித்து நிற்கிறவனுக்கு, எப்படி ப்ரஹ்மாநுபவமும் ப்ரஹ்மத்தோடு ஐக்யப்பட்டுப் போதலும் கிடைக்காது போய்விடும்? ஆகையால் இந்த யோகாநுஷ்டானத்தால், இப்படிப் பட்ட பலன் ப்ராப்தமாகாமற் போமோ, என்று எனக்கு யாதொரு ஸந்தேஹமுமில்லை.

ஆனால் நான் இப்போது சொல்லப்போகிறதை கொஞ்சம் கவனித்துக்கேட்க வேண்டும், ஸ்ரீ கிருஷ்ணா. நீர் வர்ணித்த யோகாநுஷ்டானத்தின் முறைகள் எனக்கு ஸந்தேஹமறத்தெரிந்து போய்விட்டனவே யாயினும், என்னுடைய ஸாமர்த்யததின் குறைவால் என்னால் அநுஷ்டிக்க ஸாத்யமானவையல்ல. எனக்கு ஸ்வாபாவிகமாய் இருக்கும் சக்தியை கொண்டு, அந்த அப்யாஸம் ஸரிவர அநுஷ்டிக்கக் கூடிய தாயிருக்கும் பக்ஷத்தில், அது கஷ்டமாய் இருக்கிறதென்று அதைத் கைவிடாமல் ஸந்தோஷமாய் அநுஷ்டிப்பேன். ஆனால் நீர் சொல்லுகிறபடி யெல்லாம், அந்த அப்யாஸம் எனக்கு ஏற்படுவது அஸாத்யமாய் இருந்துவிட்டால், என்னுடைய யோக்யதைக்கு தக்கபடி நான் என்ன செய்யக்கூடுமோ, அதையே நான் கேட்டறிந்து கொள்ளவேண்டும் என்னும் உத்தேசத்தைக் கொண்டு, நான் உம்மை ஓர் ப்ரச்நம் செய்யப் போகிறேன்; அதை நீர் கவனித்து கேட்க வேண்டும். நீர் சொன்ன அப்யாஸமுறைகளை நான் கவனித்துக்கேட்டேன்; ஆனால் அவற்றை இஷ்டப்பட்டவர்களெல்லாரும் அநுஷ்டித்து ஸித்தி அடையக்கூடுமா? அல்லது ஓர் விதமான யோக்யதை இல்லாது போனால், அப்யாஸம் பலிக்காது, என்று ஓர் நிபந்தனை உண்டா?"

ஸ்ரீ கிருஷ்ணன் உத்தரம் :

இப்படிக் கேட்டதின்மேல் ஸ்ரீ கிருஷ்ணன் பின்வருமாறு சொன்னார். என்ன, இப்படி கேட்கிறாய், அர்ஜுநா? இதுவோ, யோகாஸாதனங்களின் அப்யாஸம்; இப்படி இல்லாமல் வேறு ஸாமான்யமான ஸாதனங்களின் அப்யாஸங்கள் கூட அல்லவா, அதிகாரம் இல்லாமல் ஸித்தி பெறக்கூடாவையாய் இருக்கின்றன. அன்றியும் யோக்யதை என்று எதைச்சொல்ல வேண்டுமோ, அது பலஸித்தியினால் நிர்ணயிக்க வேண்டிய தாயிருக்கிறதே தவிர, முன்பே தெரிந்து சொல்லக்

கூடியதாயில்லை. யோக்யதை உள்ளவன் ஆரம்பித்தானேயானால், அவன் ஸித்தி பெறுவான், என்றுஇவ்வளவே சொல்லக் கூடியதாயிருக்கிறது.

யோக்யதை என்பது ஓர் கடையிலிருந்து வாங்கிக்கொண்டு வரத்தக்கதாயாவது, ஓர்சுரங்கத்தினின்று வெட்டிக் கொண்டுவரக் கூடியதாயாவது, எங்கும் ஸித்தமாயில்லை. கொஞ்சம் விரக்தி உள்ளவனாயும், தேஹதர்மங்களை ஓர் கட்டில் எப்போதும் வைக்கக் கூடியவனாயும், ஒருவன் இருந்து விட்டால், இந்த விஷயத்தில் போதுமான அதிகார முள்ளவனாகமாட்டானா, என்ன? இந்த யுக்தியைக் கொண்டு பார்க்கும்போது, உனக்குப் போதுமான யோக்யதை இருக்கிறதென்றே, நான் எண்ணுகிறேன். இப்படி அர்ஜுநனுக்கு இவ்விஷயத்தில் ஏற்பட்ட ஸந்தேகத்தை, ஸ்ரீ கிருஷ்ணன் போக்கிவைத்து, ஓர்நியமத்துக்கு கட்டுப்படாது நடக்கும் மனுஷ்யனுக்கு, இந்த யோகாப்யாஸத்தில் அதிகாரம் இல்லை என்று மாத்ரம், ஓர் வ்யவஸ்தை உண்டென்று சொல்லி முடித்தார்.

नात्यश्नतस्तु योगोऽस्ति न चैकान्तमनश्नतः ।
न चातिस्वप्नशीलस्य जाग्रतो नैव चार्जुन ।।१६।।

நாத்யஶ்நதஸ்து யோகோ ஸ்தி ந சைகாந்த மனஶ்னத: ।
ந சாதி ஸ்வப்ன ஶீலஸ்ய ஜாக்ரதோ நைவ சார்ஜுன ॥ 16

யோகாப்யாஸத்துக் கதிகாரம் :

எவன் ரஸநேந்த்ரியத்துக்கும் தூக்கத்துக்கும் விற்கப்பட்டுப்போன அடிமையாய் இருப்பானோ, அவன் இந்த யோக விஷயத்தில் அதிகாரியாக எடுக்கப்பட வில்லை. அப்படியில்லாமல் ஒருவன் துராக்ரஹத்தினுடைய ஆவேசத்தால், பசிதாகங்களைக் கட்டிவைத்து, தேஹத்தைப் பீடித்து, ந்யாயமாய் சாப்பிட வேண்டிய ஆஹாரத்தைக் குறைத்து விடுவானேயானால், அவனும் இவ்விஷயத்தி லதிகரியாக மாட்டான். அன்றியும் தூங்குகிறதே இல்லை யென்று, பிடிவாதம் பிடித்துக்கொண்டு, ஒருவனிருப்பானே யானால், அவனுக்கு சரீரமே ஸ்வாதீநப்படாமற் போகுமே; அவனுக்கு யோகம் எப்படி ஸித்திக்கும். ஆகையால் விஷயத்தை அளவுமிஞ்சி ஸேவிக்கவேண்டும் என்னும புத்தியும் கூடாது, அடியோடு விஷய ஸேவனத்தைத் தடுத்துவிடவேண்டும் என்னும் புத்தியும் கூடாது.

युक्ताहारविहारस्य युक्तचेष्टस्य कर्मसु ।
युक्तस्वप्नावबोधस्य योगो भवति दुःखहा ।।१७।।

யுக்தாஹார விஹாரஸ்ய யுக்த சேஷ்டஸ்ய கர்மஸு ।
யுக்த ஸ்வப்நாவ போதஸ்ய யோகோ பவதி துக்கஹா ।। 17

பரிமிதமான விஷயபோகம் அவச்யம் :

ஆகாரம் ஸேவிக்கத் தான் வேண்டும்; ஆனால் எவ்வளவு அவச்யமோ, அவ்வளவை மிஞ்சாமல் ஸேவிக்க வேண்டும். அப்படியே கர்மங்களை, எவ்வளவு நியாயமோ, அவ்வளவை மீறாமல் அநுஷ்டிக்க வேண்டும். அளவிட்டுப் பேசவேண்டும்; மிதமாய் நடந்து திரியவேண்டும். தகுந்த ஸமயம் பார்த்து, தூக்கத்தையும் கௌரவப் படுத்தவேண்டும், விழித்திப்பதும் மிதமாய் இருக்க வேண்டும். இப்படிச் செய்தால், தாதுக்கள் ஸமதை அடைந்து, ஸுகம் ஏற்படும். இப்படி ஸயுக்திகமாய், இந்த்ரியங்களுக்குத் தங்கள் தங்கள் விஷயானுபவத்தைச் செய்துவைப்பதால், ஸந்தோஷத்தின் பெருக்கை மனஸே உண்டாக்கி வைக்கும்.

यदा विनियतं चित्तमात्मन्येवावतिष्ठते ।
निःस्पृहः सर्वकामेभ्यो युक्त इत्युच्यते तदा ।।१८।।

யதா விநியதம் சித்தமாத்மன்யேவா வதிஷ்டதே ।
நி: ஸ்ப்ருஹ: ஸர்வ காமேப்யோ யுக்த இத்யுச்யதே ததா ।। 18

இதுவுமது :

தேஹத்தின் வெளிப்புறத்தில், இந்த்ரியங்கள் இப்படி ஓர் நியமத்துக் குட்பட்டவையாய் ஏற்படும்போது, உள்ளுக்குள்ளேயே ஸுகப்பெருக்கேற்பட்டு, ஓர் யத்நமு மின்றியே தனக்குத்தானே யோகஸித்தி ஏற்படும். பாக்யத்தின் பெருக்கு ஒருவனுக்கு ஏற்பட்ட பின், அவன் ஏதோ ஓர் முயற்சி செய்தான் என்னும் ஓர் வ்யாஜத்தைக் கொண்டு, ஸம்பத்துக்கள் அனைத்தும் அவனைத் தேடிவந்தடைவது போல், எவன் தன்னிந்த்ரியங்களைத் தக்கபடி நியமத்துக் குட்படுத்திவைத்துக் கொண்டு வருகிறானோ, அவன் யோகாப்யாஸம் செய்யத் தொடங்கின மாத்ரத்திலேயே, ஆத்மப்ராப்தியின் அநுபவம் அவனுக்குக் கிடைத்துவிடும். ஆகையால் எந்த பாக்யசாலிக்கு, தக்கபடி அளவிட்டு

விஷயங்களைப் புசித்தல் என்னும் இந்த யுக்தி லப்தமாய் விட்டதோ, அவன் மோக்ஷம் என்னும் ராஜ்யத்தில், பட்டம் சூடப்பெற்றவனாய் விளங்குவான்.

यथा दीपो निवातस्थो नेङ्गते सोपमा स्मृता ।
योगिनो यतचित्तस्य युञ्जतो योगमात्मनः ।।१९।।

யதா தீபோ நிவாதஸ்தோ நேங்கதே ஸோபமா ஸ்ம்ருதா ।
யோகிநோ யத சித்தஸ்ய யுஞ்ஜதோ யோகமாத்மனः ॥ 19

யோகாப்யாஸத்தில் ஸ்தைர்யம் வேண்டும் :

இந்த்ரிய நியமம் என்பதும் யோகாப்யாஸம் என்பதும் ஒன்று சேர்ந்ததான ப்ராயகையில், க்ஷேத்ர ஸந்யாஸியாய் (க்ஷேத்ர ஸந்யாஸி என்பவன் ஓர் புண்ய க்ஷேத்ரத்தில் வஸித்துக் கொண்டு, அதை விட்டு வேறே இடத்தில் வஸிக்கிறதில்லை என்னும் நியமம் பூண்டவன்) வாஸம் செய்ய வேண்டும், என்று எவன் மனஸு உறுதி பாராட்டி நிற்குமோ, அவனை யோக யுக்தனென்று சொல்ல வேண்டும். அவனுடைய மனஸானது காற்றில்லாத இடத்தில் எரியும் தீபத்தை ஒத்திருக்கும், என்று நீ அறி. உன் மனஸில் இருப்பதைத் தெரிந்து கொண்டு, நான் இப்போது ஓர் வார்த்தை சொல்லப்போகிறேன், கவனித்துக்கேள்.

நீ யோகஸித்தியை அடைய வேண்டுமென்று ஆசைமாத்ரம் பாராட்டி நிற்கிறாய், யோகாப்யாஸம் செய்வதற்கோ பின் வாங்குகிறாய். அதை அப்யாஸம செய்வது கடினமென்று நினைத்து பயப்படுகிறாயா, என்ன? இப்படி நீ பயப்படவேண்டாம். துர்ஜநர்களான இவ்விந்த்ரியங்கள், உனக்குப் பூச்சாண்டி காட்டுகின்றனவேதவிர, வாஸ்தவத்தில் யோகாப்யாஸத்தைக் கண்டு பயப்பட வேண்டியதற்குக் காரணம் ஒன்றுமில்லை.

கவனித்துப்பார், அப்பா, ஆயஸ்ஸை கெட்டியாகச் செய்து, தேஹத்தை விட்டுப் புறப்பட்டுப் போவதற்கு ஸித்தமாய் இருக்கும ப்ராணனைத் திருப்பி வைக்கும ஸாமர்த்ய முள்ள ஔஷதத்தைக் கண்டு, நாக்கு வேண்டாம், வேண்டாம், என்று சொல்வதில்லையா? அப்படியே நன்மை செய்து வைக்கும் திறமை உள்ளவை எல்லாம், இந்த்ரியங்களுக்குத் துக்க கரங்களாய்த் தோற்றிக் கொண்டுதான் இருக்கும். நியாயமாய்ப் பார்த்தால், யோகாப்யாஸத்தைப் போல் ஸுலபமான ஸாதநம் வேறொன்றும் இல்லை.

यत्रोपरमते चित्तं निरुद्धं योगसेवया ।
यत्र चैवात्मनात्मानं पश्यन्नात्मनि तुष्यति ।।२०।।
सुखमात्यन्तिकं यत्तद् बुद्धिग्राह्यमतीन्द्रियम् ।
वेत्ति यत्र न चैवायं स्थितश्चलति तत्त्वतः ।।२१।।

யத்ரோ பரமதே சித்தம் நிருத்தம் யோக ஸேவயா ।
யத்ர சைவாத்மநா ऽऽத்மனம் பஶ்யந்நாத்மனி துஷ்யதி ॥ 20

ஸுக மாத்யந்திகம் யத்தத் புத்தி க்ராஹ்ய மதீந்த்ரியம் ।
வேத்தி யத்ர ந சைவாயம் ஸ்திதஶ்சலதி தத்த்வத: ॥ 21

யோகாப்யாஸத்தினாலிந்த்ரியங்கள் வசப்பட்டுப் போய், மனஸு ஆத்மாவை நோக்கும் :

நான் கீழே உத்தம ப்ரகாரமாய் விவரித்துச் சொன்ன ஆஸநத்தின் வலுமையால், இந்த இந்த்ரியங்கள் வசப்பட்டுப் போனாலும் ஸரியே, அல்லது இனி சொல்லப்போகிற இதர யோகமுறைகளால் இந்த்ரியங்கள் வசப்பட்டுப்போனாலும் ஸரியே, எப்படியாயினும் இந்திரியங்கள் கட்டுக்குள் வந்தபின், சித்தம் ஆத்ம ஸ்வரூபத்தை தர்சிப்பதற்கு ஸித்தமாகிறது. அது முன்போல் வெளிப்பட்டுச் செல்லாமல், திரும்பிக்கொண்டு ஆத்மஸ்வரூபத்தை நோக்கத்தலைப்பட்டபோதே, தானே உண்மையான தத்வம் என்று அது அறிகிறது. அப்படி அது அறிந்துகொண்ட மாத்ரத்தில், ஸாதகன் ஸுக மென்னும் ஸாம்ராஜ்ய பதவியான ஸிம்மாஸனத்தில் உட்கார்ந்து, விச்வத்தோடு ஸமரஸப்பட்டுக் கலந்து போகிறான். எதற்கப்புறம் அறிய வேண்டியது ஒன்றுமில்லையோ, எதை இந்த்ரியங்கள் ஒருபோதும் அறியாவோ, அதுவாகவே அவன் ஆய்ப்போய், அப்படியே நிலைபெற்றுப்போகிறான்.

यं लब्ध्वा चापरं लाभं मन्यते नाधिकं ततः ।
यस्मिन्स्थितो न दुःखेन गुरुणापि विचाल्यते ।।२२।।

யம் லப்த்வா சாபரம் லாபம் மன்யதே நாதிகம் தத: ।
யஸ்மின் ஸ்திதோ ந துக்கேன குருணாऽபி விசால்யதே ॥ 22

ஆத்மாநுபவத்தின் லக்ஷணம் :

பின்பு மேருவைக் காட்டிலும் பெரியவையான துக்கங்கள் ஏற்பட்டாலும், அவற்றின் பாரத்தாற் சிறிதேனும் அவன்

பாதிக்கப்படான். அவன் தேஹத்தைக் கத்தியெடுத்து வெட்டினாலும், பெரும் நெருப்பில் உருட்டி விட்டாலும், ப்ரஹ்மாநந்தத்தில் அழுந்தித் தூங்கிக் கிடக்கும அவன் சித்தமானது விழித்துக் கொள்ளாது. இப்படி அவன் ஆத்மாவை ரூபத்தில் முழுகிப்போய், தேஹாதீதமான ஓர் ஸ்திதியில் இருப்பதினால், அவன் ப்ரஹ்மாநந்தமாகவே ஆய்ப்போய், இதர விஷயங்களை அறியாமற்போகிறான்.

तं विद्याद् दुःखसंयोगवियोगं योगसंज्ञितम् ।
स निश्चयेन योक्तव्यो योगोऽनिर्विण्णचेतसा ।।२३।।

தம் வித்யாத் துக்க ஸம்யோக வியோகம் யோகஸம்க்ஞ்தம் ।
ஸ நிஶ்சயேன யோக்தவ்யோ யோகோ ऽऽநிர்விண்ணசேதஸா ॥ 23

ஆத்மஸ்வரூப ப்ராப்தி ஸாதனம் :

ஸம்ஸாரம் என்னும் விலங்கில் சிக்கிக்கிடக்கும் மநஸு, எந்த ஸுகத்துக் காசைப்பட்டு, விஷயஸுகத்திற் காசைப்படுவது முற்றிலும் மறந்துபோயிற்றோ, எதை யோகாப்யாஸத்திற்கு சோபை என்றும், கேவல சந்தோஷத்தினரசாட்சி யென்றும் சொல்லவேண்டுமோ, எதை அடைவதற்கு ஞானம் என்பது ஆவச்யமாயிருக்கிறதோ, அந்த ஆத்ம ஸ்வரூபத்தை, யோகாப்யாஸத்தால் ஸாவயவமாய்க் (கைகால் முதலிய உறுப்புக்களுடன்; அதாவது, தெளிவாய் ஸந்தேஹமற) காணப்பெறலாம். இவ்விதம் அதைக் கண்டவன், அதுவாகவே ஆய்விடுவான்.

सङ्कल्पप्रभवान्कामांस्त्यक्त्वा सर्वानशेषतः ।
मनसैवेन्द्रियग्रामं विनियम्य समन्ततः ।।२४।।

ஸங்கல்ப பிரபவான் காமான் ஸ்த்யக்த்வா ஸர்வா நஶேஷத: ।
மனஸை வேந்த்ரிய க்ராமம் வினியம்ய ஸமந்தத: ॥ 24

யோகாப்யாஸம் கைகூடும் வழி:

ஸங்கல்பத்தின் புத்ரர்களான காமக்கோராதாதிகள் இறந்து போய், அந்த ஸங்கல்பத்துக்குப் புத்ரசோகம் ஏற்பட்டால், இந்த யோகா நுஷ்டாநம் ஸுலபமாகிறது. விஷயங்களினதிகாரம் முடிந்துபோய்விட்ட தென்றும், இந்த்ரியங்கள் நியமத்துக்கு வசப்பட்டுப்போயின வென்றும், ஸங்கல்பத்துக்குத்

தெரியவந்தமாத்ரத்தில், அதின் ஹ்ருதயம் வெடித்துப்போய், அதற்கு ப்ராணன் போய்விடும். இவ்விதம் வைராக்யம் ஏற்பட்டு, மனஸில் ஸங்கல்பத்தின் வரத்துப்போக்கு அற்றுப் போனால், புத்தி தைர்யம் என்னும் மாளிகையில் நிலைபெற்ற வாழ்வடையும்.

शनैः शनैरुपरमेद् बुद्ध्या धृतिगृहीतया ।
आत्मसंस्थं मनः कृत्वा न किञ्चिदपि चिन्तयेत् ।। २५ ।।
यतो यतो निश्चरति मनश्चञ्चलमस्थिरम् ।
ततस्ततो नियम्यैतदात्मन्येव वशं नयेत् ।। २६ ।।

ஶனைः ஶனைருபரமேத் புத்த்யா த்ருதி க்ருஹீதயா ।
ஆத்ம ஸம்ஸ்தம் மனः க்ருத்வா ந கிஞ்சிதபி சிந்தயேத் ॥ 25

யதோ யதோ நிஶ்சரதி மனஶ்சஞ்சல மஸ்திரம் ।
ததஸ்ததோ நியம்யை ததாத்மன்யேவ வஶம் நயேத் ॥ 26

இதுவுமது :

புத்தி தைர்யத்தில் நிலை கொண்ட பிறகு மநஸை ஆத்மானுவத்தின் வழிக்குக் கொஞ்சம் கொஞ்சமாய் திருப்பிக் கொண்டுவந்து, ஆத்மஸ்வரூபம் என்னும் வீட்டில் நிலைபெறச்செய்யவேண்டும். இப்படி ஒருவிதமாய் ப்ரஹ்மஸ்வரூபப்ராப்தி ஸித்திக்கும். இப்படி ஸித்தி கைகூடாவிடில், இதைக் காட்டிலும் ஸுலபமான ஓர் வழியைச் சொல்வேன், கேள். ஓர்வித ஒழுக்கத்தை மனஸில் தீர்மானித்துக் கொண்டு, அதினின்றும் வழுவுவதில்லை யென்று ஓர் நியமத்தை உறுதியாய்ச் செய்துகொள்ள வேண்டும். இதினால் மனஸு ஸ்தைர்யத்தை அடைந்துவிட்டால், ஆகவேண்டிய கார்யம் ஆய்ப்போயிற்று. இப்படியும் செய்வது முடியாமல், மனஸு அறுத்துக் கொண்டு போகுமே யாகில், அப்படிப் போன மனஸை, முன் ஏற்படுத்தி வைத்துக்கொண்ட நியமமே திருப்பி இழுத்துக்கொண்டு வரும். இந்த ப்ரகாரமாய் மனஸு நிலைநிறுத்தப் பெறும்.

प्रशान्तमनसं ह्येनं योगिनं सुखमुत्तमम् ।
उपैति शान्तरजसं ब्रह्मभूतमकल्मषम् ।। २७ ।।

ப்ரஶாந்தமனஸம் ஹ்யேனம் யோகினம் ஸுக முத்தமம் ।
உபைதி ஶாந்தரஜஸம் ப்ரம்ஹ பூத மகல்மஷம் ॥ 27

இதுவுமது :

இப்படிப் பலமுறை செய்தபின், கொஞ்ச காலத்தில் மனஸு ஸ்தைர்யம அடைந்து, ஆத்மஸ்வரூபத்தில் வந்து நிற்கும். அப்படி ஆத்மஸ்வரூபத்தின் தர்சந மானபின், அதில் மனஸு ஒட்டிப்போகும். முன்னிருந்த த்வைதம் அத்வைதத்தில் முழுகிப்போய், முவ்வுலகும் ஒரே வஸ்துவாய்த் தோற்றும், ஆகாசத்தில் அதைக் காட்டிலும் வேறாக மேகம் தோற்றி மறைந்து போய் விட்டபின், ஆகாசம் ஒன்றே பாக்கி நிற்பது போல், மனஸு லயத்தை அடைந்த பின், எல்லாம் ஆத்மஸ்வரூபமாகவே ஆய்விடும். இப்படி ஸுலபமான விதமாய், ப்ரஹ்ம ப்ராப்தி ஏற்பட்டு விடுகிறது.

युञ्जन्नेवं सदात्मानं योगी विगतकल्मषः ।
सुखेन ब्रह्मसंस्पर्शमत्यन्तं सुखमश्नुते ॥ २८ ॥

யுஞ்ஜன்னேவம் ஸதா ऽऽத்மானம் யோகீ விகத கல்மஷ: ।
ஸுகேன ப்ரம்ஹ ஸம்ஸ்பர்ஶ மத்யந்தம் ஸுகமஶ்நுதே ॥ 28

இவ்விதம் ப்ரஹ்மாநுபவம் செய்வதின்முடிவு :

எவன் ஸங்கல்பங்களை ஒழித்துக்கொண்டு, இந்த ஸுலபமான யோகஸ்திதியில் அடிக்கடி நின்று, ஆத்மா நுபவம் செய்வானோ, அவன் எளிதாய் பரப்ரஹ்மத்துக்குள் ப்ரவேசித்து. ஜலத்தில் விழுந்த உப்பைப் போல், அத்துடனே ஒன்று பட்டுப்போய், அதினின்றும் வெளிப்படமாட்டான். அப்படி அத்துடன் கலந்து போன பின், ஸாமரஸ்ய மென்னும் மாளிகையில் வீற்றிருந்து, ஜகமனைத்துக்கும் மஹாஸுகத்தின் தீபாவளி (மஹாராஷ்டிரர்களுக்குள் தீபாவளி தினம் பெருத்த பண்டிகையாகக் கொண்டாடப் பட்டு அனைவரும் அன்று மிகவும் களித்திருப்பார்கள். ப்ரஹ்மைக்யம் அடைந்தவனுக்கு உலகம் முழுவதும், மஹாஸுகம் பொருந்தியதாகத் தோன்றும் என்பது பொருள்) ஏற்பட்டிருப்பதாக அறிவான்.

மேற்சுலோகத்தின் அவதாரிகை :-

தன் முதுகின்மேல் தான் அடிவைத்து நடந்து போவது போல், அநுஷ்டிக்க முடியாததாய், இந்த யோகாப்யாஸம்

உனக்குத் தோற்றினால், மற்றுமோர் சுலபமான முறை சொல்வேன் கேள்.

सर्वभूतस्थमात्मानं सर्वभूतानि चात्मनि ।
ईक्षते योगयुक्तात्मा सर्वत्र समदर्शनः ।। २९ ।।
यो मां पश्यति सर्वत्र सर्वं च मयि पश्यति ।
तस्याहं न प्रणश्यामि स च मे न प्रणश्यति ।। ३० ।।

ஸர்வ பூதஸ்தமாத்மானம் ஸர்வ பூதானி சாத்மனி ।
ஈக்ஷதே யோக யுக்தாத்மா ஸர்வத்ர ஸமதர்ஶன: ।। 29

யோ மாம் பஶ்யதி ஸர்வத்ர ஸர்வம் ச மயி பஶ்யதி ।
தஸ்யாஹம் ந ப்ரணஶ்யாமி ஸ ச மேன ப்ரணஶ்யதி ।। 30

ப்ரஹ்மப்ராப்திக்கு மற்று மோர் உபாயம் :

நான் எல்லா தேஹங்களிலும் இருக்கிறேன் என்னும் விஷயம் ஸர்வஸம்மதமானது. அப்படியே என்னிடத்தில் எல்லாம் அடங்கி இருக்கிறது என்னும் விஷயத்தையும், ஒருவரும் ஆக்ஷேபிப்பதில்லை. இப்படி என் ஸ்வரூபமும் பூதங்களும், எங்கும் நிறைந்து, பரஸ்பரம் சிக்கிக்கிடக்கின்றன. இதைப் புத்தியில் ஸதா பாராட்டி நிற்பது ஒன்றே ஸித்திபெறுவதற்கு வேண்டியதான ஸாதநம்.

இதை மற்றோர் விதமாய்ச் சொல்லப் புகுந்தால், ஒரு விதப்பட்ட பாவத்துடன், எல்லாப் பதங்களிடத்திலும் வேறுபாடில்லாமல், நானே நிறைந்திருப்பதாகப் பாவித்து, என்னை பஜித்திருத்தல் வேண்டும். பூதங்கள் வேறுவேறாய் இருப்பதைக் கொண்டு, அவற்றில் நிறைந்திருக்கப்பட்ட நானும், வேறுபட்டிராமல், ஒரே விதப்பட்டு எங்கும் நிறைந்திருக்கும் என்னுடைய வ்யாப்தியை அறிந்தவன், நானே ஆகிறேன் என்று சொல்வது அநாவச்யம். எப்படி தீபமும் அதின் ப்ரகாசமும் ஒன்றே ஆனவையோ, அப்படியே அவன் என்னிடத்திலுமாய், நான் அவனிடத்திலுமாய், ஒன்றுப்பட்டுப்போய் இருக்கிறோம். ஜலத்தை ஆதாரமாய்க் கொண்டு, ரஸம் இருக்கிறது போலும், ஆகாசத்தினிடத்தில் அவகாசம் இருக்கிறது போலும், என்னுடைய ரூபத்தால் அவன் ரூபவானாய்க் காணப்படுகிறான்.

सर्वभूतस्थितं यो मां भजत्येकत्वमास्थितः ।
सर्वथा वर्तमानोऽपि स योगी मयि वर्तते ।। ३१ ।।

ஸர்வ பூதஸ்திதம் யோ மாம் பஜத்யேகத்வ மாஸ்தித: ।
ஸர்வதா வர்தமானோ ஸி பி ஸ யோகீ மயி வர்ததே ।। 31

பரமாத்மஸ்வரூபத்தின் ஸர்வவ்யாப்தியை அநுபவபூர்வமாக அறிந்தவன் ப்ரஹ்மமே ஆகிறான் :

துணி எல்லாம் நூலாயிருத்தல் போலும், நகைகள் பலவாயிருந்தாலும் அவற்றில் உள்ள தங்கம் ஒன்றே போலும், பூதங்கள் தோறும மாறுபடாமல்அவற்றுடன் ஐக்யப்பட்டு, அவற்றில் நான் நிறைந்திருப்பதைத் தெரிந்து கொண்டு, ஓர் வ்ருக்ஷத்தில் இருக்கும் இலைகள் அனைத்தும்அந்த வ்ருக்ஷமே போலும், விச்வத்தில் உள்ள பலபூதங்களும் நானே யென்று தெரிந்துக் கொண்டு, எவன் த்வைதம் என்னும் இரவைப்போக்கி விட்டு, அத்வைதமாகிய பகலை அடைந்திருப்பானோ, அவன் பஞ்சபூதத்தால் ஏற்பட்ட தேஹத்தோடுகூடி இருந்தாலும், எதினாலும் பந்திக்கப்பட்டவனாகாமல், அநுபவத்தால் எனக்கு ஸமானமானவனா யிருப்பான். என்னுடைய வ்யாபகத்வம் முழுதும் அவனுக்கு அநுபூதமாய்விட்ட படியால், அவனே ஸர்வவ்யாபகன் ஆய்விட்டான், என்று சொல்லிக் காட்டுவது அநாவச்யம். அவன் சரீரத்தில் இருந்தாலும், சரீராதீனனாய் அவன் இல்லாமையால், அவனுடைய ஸ்திதி வார்த்தையால் வர்ணிக்க முடியாது.

आत्मौपम्येन सर्वत्र समं पश्यति योऽर्जुन ।
सुखं वा यदि वा दुःखं स योगी परमो मतः ।। ३२ ।।

ஆத்மௌபம்யேன ஸர்வத்ர ஸமம் பஶ்யதி யோ ர்ஜுன ।
ஸுகம் வா யதி வா துக்கம் ஸயோகீ பரமோ மத: ।। 32

ஸமபாவம் பொருந்தி நிற்பதே ஒருவனடையவேண்டிய உத்தம நிலை :

ஆகையால் இந்த விஷ்யத்தை மிக்க விவரிப்பது அவசியமில்லை. இதை வேறுவிதமாய்ச் சொல்லப் புகுந்தால், எவன் சராரம் அனைத்தையும் தன்னைப்போலவே எப்போதும் பார்ப்பானோ, எவன் ஸுகதுக்கங்களையும்

சுபாசுப கர்மங்களையும் வேறுவேறு விதப்பட்ட வையாய் உணரானோ, ஸமவிஷயமான வைகளும், மற்றும் உலகில் உள்ள வெவ்வேறான விஷயங்கள் அனைத்தும், எவனுக்குத் தன் அவயவங்களாகவே தோற்றிப்போகுமோ, - சுருக்கிச் சொல்ல, எவனுக்கு முவ்வுலகில் காணப்படும் அனைத்தும் தானே என்று அநுபவத்துக்கு வருவது, ஸ்வாபாவிகமாயிருக்குமோ, அவனுக்கு ஓர் தேஹம் இருந்தாலும், அவனைப் பார்த்து, இவனும் ஸுகதுக்கங்களை அநுபவிக்கிறவனென்று, உகலத்தார் தங்களுக்குள் பேசிக்கொண்ட போதிலும், எனக்குஅவன் ப்ரஹ்ம மாகவே தோன்றுகிறான். நீயே விச்வ மாய்விட வேண்டும்; இப்படி விச்வத்தோடு ஸமரஸபாவத்தை நீ பாராட்டி நிற்கவேண்டும், ஹே அர்ஜுநா. இதற்காகத்தான், இந்த ஜகத்தில் ஒருவன் அடைய வேண்டிய லாபம் ஸமநிலையைக் காட்டிலும் வெறோன்றுமில்லையென்று நான் அடிக்கடி உனக்கு சொல்லி வருகிறது.

अर्जुन उवाच ।
योऽयं योगस्त्वया प्रोक्तः साम्येन मधुसूदन ।
एतस्याहं न पश्यामि चञ्चलत्वात्स्थितिं स्थिराम् ।। ३३ ।।
चञ्चलं हि मनः कृष्ण प्रमाथि बलवद् दृढम् ।
तस्याहं निग्रहं मन्ये वायोरिव सुदुष्करम् ।। ६रू ३४ ।।

அர்ஜுன உவாச

யோ ஃயம் யோகஸ்த்வயா ப்ரோக்த: ஸாம்யேன மதுஸூதன।
ஏதஸ்யாஹம் ந பஶ்யாமி சஞ்சலத்வாத்ஸ்திதிம் ஸ்திராம் ॥ 33

சஞ்சலம் ஹி மன: க்ருஷ்ண ப்ரமாதி பலவத் த்ருடம்।
தஸ்யாஹம் நிக்ரஹம் மன்யே வாயோரிவ ஸுதுஷ்கரம் ॥ 34

அர்ஜுனன் ப்ரச்நம் :

அப்போது அர்ஜுனன் பின்வருமாறு சொன்னான். ஹே தேவா, நீர் இப்போது சொன்னது என்னவோ, அது என்னைப் போன்றவர்கள் மேல் உமக்குள்ள கருணையின் கார்யமே. ஆனால் மனஸின் இயற்கையால், நாங்கள் அதை அநுஷ்டிப்பதற்கு யோக்யதையற்றிருக்கிறோம். இந்த மனஸு எப்படிப் பட்டது, எவ்வளவு ஸாமர்த்ய முள்ளது, என்று

பார்க்கப்போனால், அது கைக்குகப்படுவதில்லை; ஏனென்றால், இது சுற்றி அலைவதற்கு முவ்வுலகும் போதாத தாயிருக்கிறது. இதின் ஸ்வபாவம் இப்படி இருக்க, இதை ஸமதை பாராட்டி நிற்கச் செய்வது, எப்படி ஸாத்யம் ஆகும்? குரங்கு ஸமாதி அடைந்து நிற்குமா? பெருங்காற்று நில்லென்றால் நிற்குமா? இந்த மனஸு புத்தியை வெகுவிதமாய்க் கஷ்டப்படுத்தி, அதின் நிச்சயங்களை எல்லாம் மாற்றி வைத்து, தைர்யம் என்பது, "நில், நில்," என்று சொல்லும்போதே, அதின் கையைத் தட்டிவிட்டு, கையில் அகப்படாதபடி வேகமாய் ஓடிப்போகிறது. இது விவேகத்துடன் கூடிய புத்தியைத் தடுமாறிப் போகச்செய்து, த்ருப்தி அடைந்து ஆசைகள் அற்றுப்போன ஸந்தோஷத்துக்கு, ஆசைகளை உண்டாக்கி வைக்கிறது. தீர்க்கையாய் உட்கார்வோம் என்றால், பத்துத் திக்கிலும் அலைந்து திரியச் செய்கிறது; அடக்கிவைக்கப் பார்த்தாற் பொங்கிவழிகிறது; நிக்ரஹித்தலே இதற்கு அநுகூலமாகிறது. இப்படிப்பட்ட தன் ஸ்வபாவத்தை இம்மனஸு விட்டுவிடுமா? ஆகையால் மனஸு நிச்சலமாய் நின்று, அதற்குப்பின் நாம் ஸமதை பாராட்டி நிற்பது என்பது, கொஞ்சம் கூட ஸம்பாவிதம் அன்று.

श्रीभगवानुवाच ।
असंशयं महाबाहो मनो दुर्निग्रहं चलम् ।
अभ्यासेन तु कौन्तेय वैराग्येण च गृह्यते ।३५ ।।

ஸ்ரீபகவானுவாச

அஸம்ஶயம் மஹாபாஹோ மனோ துர்நிக்ரஹம் சலம் ।
அப்யாஸேன து கௌந்தேய வைராக்யேண ச க்ருஹ்யதே ॥ 35

ஸ்ரீகிருஷ்ணனுடைய உத்தரம் :

அப்போது ஸ்ரீ கிருஷ்ணன் பின்வருமாறு உத்தரம் கொடுத்தார். அர்ஜுநா, நீ சொல்கிறபடி மனஸின் ஸ்வபாவம் சாபல்யம் என்பது உண்மையே ஆயினும், வைராக்யத்தின் உதவியைக் கொண்டு அதைப் பலமுறை ஸமத்ருஷ்டியப்யாஸ மென்னும் வழியில் நாட்டிவைத்தால், கொஞ்ச காலம் ஆனபின் இப்படிப்பட்ட ஸமத்ருஷ்டியினின்று பெயராது, அது அவ்வழியில் நிலை கொண்டுபோகும். இப்படி அது நிலைபெறுவதற்குக் காரணம் மென்னென்றால், அது தனக்கு ருசியுள்ள ஒன்றைப் பார்த்தால், அதில் சொக்கிப்போய்

அதையே நாடிக்கிடக்கும் ஓர் நல்லஸ்வபாவம், அதற்கு இருக்கிறது; ஆகையால் இந்த ஆத்மௌபம்ய த்ருஷ்டி என்பதின் ஸுகபானுபவத்தை, அதற்கு ஓர் வேடிக்கை போல் பலகாலும் காட்டிக்கொண்டு போக வேண்டும்.

असंयतात्मना योगो दुष्प्राप इति मे मतिः ।
वश्यात्मना तु यतता शक्योऽवाप्तुमुपायतः ।।३६।।

அஸம் யதாத்மநா யோகோ துஷ்ப்ராப இதி மே மதி: ।
வஶ்யாத்மநா து யததா ஶக்யோऽவாப்து முபாயத: ॥ 36

கொஞ்சம் வைராக்யமும் யம-நியங்களின் அப்யாஸமும் யோகஸித்திக்கு அவச்யமானவையே :

மனஸு கட்டுப்படுவதில்லை என்பது நானும் ஒத்துக்கொண்ட விஷயமே. எவன் யமநியம ப்ராணயாமம் முதலியவற்றின் அப்யாஸம் செய்வதில்லையோ, அவன் வைராக்கியத்தின் நினைப்புக் கூட இல்லாதவனாய், கேவல விஷயமென்னும வெள்ளத்தில் முழுகிக் கிடக்கவேண்டியது தான், இப்படியாய்ப்போன மனஸோடு கூடினவனுக்கு, யோகத்தின் பற்றே ஏற்படாமற் போகுமே; பின்பு அவன் மனஸு மாறாதபடி நிலைகொள்வது எப்படி ஸாத்யமாகும், ஆகையால்மனஸு வசப்படுவதற்குத் தகுந்த உபாய மெதுவோ, அதை அப்யஸிக்கத் தொடங்கு? பின்பு மனஸு என்னமாய்க் கட்டுப்படாமற் போகிறது, பார்கிறேன்.

அப்படிக் கட்டுப் படாதுபோகும் பக்ஷத்தில், யோகசாஸ்த்ர மனைத்தும் பொய்யென் றல்லவா சொல்ல வேண்டும். அப்படி அவை பொய்யா? அப்யாஸம் செய்வது என்னவோ, உன்னால் முடியாதென்று சொல்லி ஒழிவதானால் ஒழிந்துபோ. தேஹத்தில் அப்யாஸயோகத்தின் பலம் ஏற்பட்டபின், மனஸின் சாபல்யம் என்பது எவ்வளவு மாத்ரம்? அதற்கு மஹத்தத்வம் ஆரம்பமாயுள்ள விச்வமனைத்து மல்லவா ஸ்வாதீனப்பட்டுப் போகிறது.

அப்போது அர்ஜுனன் சொன்னான், "ஸரியே, தேவரீர் சொல்வது எப்போதாவது தவறிப்போவ துண்டா? அப்யாஸ யோகத்தின் பலத்தை எதிர்த்து நிற்க, மன்ஸின் சாபல்யத்திற்கு சக்தி போதாது என்பது உண்மையே, ஆனால் பிறந்தது முதல் இதுவரைக்கும் யோகம் என்னும் வார்தையையே கேட்டறியாத எனக்கு, அப்யாஸயோகம் என்பது இன்னதென்றும், அதின் சக்தி இவ்வள வென்றும் என்னமாய்த் தெரியும்?

ஆகையாற்றான் மனஸு கட்டுப்படாது என்று நான் சொன்னது. இந்த ஜந்மம் எடுத்தது முதல் இன்று தான், யோகம் இன்னதென்று, உம்முடைய க்ருபையால் நான் அறிந்து கொண்டேன்."

अर्जुन उवाच ।

अयतिः श्रद्धयोपेतो योगाच्चलितमानसः ।
अप्राप्य योगसंसिद्धिं कां गतिं कृष्ण गच्छति ।। ३७ ।।
कच्चिन्नोभयविभ्रष्टश्छिन्नाभ्रमिव नश्यति ।
अप्रतिष्ठो महाबाहो विमूढो ब्रह्मणः पथि ।। ३८ ।।
एतन्मे संशयं कृष्ण छेत्तुमर्हस्यशेषतः ।
त्वदन्यः संशयस्यास्य छेत्ता न ह्युपपद्यते ।। ३९ ।।

அர்ஜுன உவாச -

அயதிः ஶ்ரத்தயோ பேதோ யோகாச்சலிதமானஸः ।
அப்ராப்ய யோக ஸம ஸித்திம் காம் கதிம் க்ருஷ்ண கச்சதி ॥ 37

கச்சின்னோபய விப்ரஷ்டஶ் சின்னா ப்ரமிவ நஶ்யதி ।
அப்ரதிஷ்டோ மஹாபாஹோ விமூடோ ப்ரஹ்மண: பதி ॥ 38

ஏதன்மே ஸம்ஶயம் க்ருஷ்ண சேத்துமர்ஹஸ்ய ஶேஷித: ।
த்வதன்ய: ஸம்ஶயஸ்யாஸ்ய சேத்தா ந ஹ்யுபபத்யதே ॥ 39

யோகப்ரஷ்டன் விஷயமாய், அர்ஜுனனுடைய ப்ரச்நம் :

ஆனால், ஹே ப்ரவுவே, எனக்கு இந்த விஷயத்தில் ஸஹஜமாகவே மற்றுமோர் ஸந்தேஹம் உண்டாகிறது. இதை தீர்த்துவைக்கும் ஸாமர்த்ய முள்ளவர்களாக உம்மைத்தவிர வெறெவரையும் நானறியேன். ஆகையால் நீர்தான் அதைத்தீர்த்து தரவேண்டும். ஒருவன் மோக்ஷத்தை அடைய வேண்டும் என்னும் ஆசையுள்ளவனாய், அதற்கு வேண்டிய உபாயா நுஷ்டானத்திற்கு றகுந்த ஊக்கமில்லாமல், ச்ரத்தையை மாத்ரம் பாராட்டி நின்றான். இந்திரியக்ராமத்தை விட்டுப் புறப்பட்டு, எதிரிற் றோற்றி நிற்கும் மோக்ஷம் என்னும் நகரத்துக்குப்போய்ச் சேரவேண்டு மென்று பக்திமார்க்கத்தைப்

பிடித்துக்கொண்டு நடக்கத்தலைப்பட்டான். அப்போது ஆத்மஸித்தியை அடையப் பெறாமலும், திரும்பிப்போக முடியாமலும் நடுவழியில் இருக்கும் காலத்திலேயே, ஆயஸ்ஸு என்னும் ஸூர்யன் அஸ்தமித்துப் போனான், அப்போதவனுக்கு, ஆகாசத்திலகஸ்மாத்தாய் ஓர் மேகம் ஸ்வல்பமாயும் ஸந்நமாயும் உண்டாய், அது நிலைத்து நில்லாமலும் மழைபெய்யாமலும், வ்யர்த்தமாய் நசித்துப்போவது. போலும், அடைய வேண்டிய மோக்ஷமும் தூர நின்று போய், ப்ராப்யம் அல்லாததான விஷயஸுகமும் ச்ரத்தையின் கார்யமாய் கைவிடப்பட்டதாய், இப்படி இருவிதமாயும் நஷ்ட மேற்பட்டு, அவன் ச்ரத்தை யென்பதோடு உறவாடினதால் முழுகிப் போகிறானே, அவனுடைய கதி என்ன?

श्रीभगवानुवाच ।
पार्थ नैवेह नामुत्र विनाशस्तस्य विद्यते ।
न हि कल्याणकृत्कश्चिद् दुर्गतिं तात गच्छति ।। ४० ।।

ஸ்ரீபகவானுவாச -

பார்த நைவேஹ நாமுத்ர விநாஶஸ்தஸ்ய வித்யதே ।
ந ஹி கல்யாண க்ருத் கஶ்சித் துர்கதிம் தாத கச்சதி ।। 40

ஸ்ரீ கிருஷ்ணன் உத்தரம் :

அப்போது ஸ்ரீ கிருஷ்ணன் பின் வருமாறு சொன்னார். அப்பா பார்த்தா, ஒருவனுக்கு மோக்ஷ ஸுகத்தில் ஆசை உண்டானபின், அவன் மோக்ஷத்தைத் தப்பவேறுகதியை அடைவதுண்டா? ஆனால் அவன் விஷயத்தில் நடு வழியிற் றங்கி இளைப்பாறிக் கொண்டு போகவேண்டிய தென்னும் விளம்பம் ஒன்று மாத்ரம் நேரிடுகிறது. அப்படி வழித்தங்கிப் போகும்போதும், தேவர்களுக்குக் கூட அநுபவிக்க கிடைக்காத ஸுகாநுபவம் அவனுக் கேற்படுகிறது. அவன் அப்யாஸம் என்னும் அடிவைப்புக்களைக் கொண்டு வேகமாய் நடந்து போயிருப்பானேயானால், வாழ்நாள் என்னும் ஸூர்யன் அஸ்தமனம் அடைவதற்கு முன்னேயே, "நானே ப்ரஹ்மம்," என்னும் அநுபவரூபமான மோக்ஷநகரம் போய்ச் சேர்ந்திருப்பான். அவ்வளவு வேகம் இல்லாது போனதால், நடுவழியிற் றங்கி விஷயஸுகங்களை அநுபவித்துப் போக வேண்டியதாய் ஏற்படுகிறது. ஆனால் அதற்குப் பின் அவன்

மோக்ஷானுபவம் தவக்கமின்றி அனுபவிப்பதற்காக, அம்மோக்ஷம் முன்பே ஸித்தம் செய்து வைப்பட்டிருக்கிறது.

प्राप्य पुण्यकृतां लोकानुषित्वा शाश्वतीः समाः ।
शुचीनां श्रीमतां गेहे योगभ्रष्टोऽभिजायते ।। ४१ ।।

ப்ராப்ய புண்ய க்ருதாம் லோகாநுஷித்வா ஸாஸ்வதீ: ஸமா: ।
ஸுசீனாம் ஸ்ரீமதாம் கேஹே யோக ப்ரஷ்டோ(அ)பிஜாயதே ॥ 41

இதுவுமது :

இது எவ்வளவு ஆர்ச்சயகரமாயிருக்கிறது, பார். மோக்ஷத்துக் காசைப்பட்ட இவன், இந்த்ரனுக்குக் கூட அரிதாயிருக்கும் லோகங்களை அநாயாஸமாயடைந்து, பயன் படாமற் போகாதவையும் இவ்வுலகிற் கிடைக்காதவையுமான, அந்த லோகங்களின் ஸுகங்களைப் புசிக்கப் பெற்று, மனஸு அவற்றில் வெறுப்புற்று, "ஹே, தெய்வமே, மோக்ஷ ஸுகத்தைக்கோரிப் புறப்பட்ட எனக்கு, இப்படி ஓர்தடை குறுக்கிட வேண்டுமா?" என்று அந்த பாரலௌகிக ஸுகங்களைப் புசிக்கும் போது மனது தவித்துப் போய், இவ்வுலகிற் பிறக்கிறான்.

அப்படி அவன் பிறக்கும் குலம், ஸகல தர்மங்களுக்கும் தாய்வீடாயும், பலவகை ஸம்பத்துக்களின் நிறைவு பெற்று, அவை செலவழியச் செலவழிய, அதிகமாய் வ்ருத்தி அடையும்படியாய்ப் புண்யத்தின் நிறைவுள்ளதாயு மிருக்கும். அதில் பிறந்தவர்க ளெல்லாரும் நீதி மார்க்கத்தினின்று வழுவாதவர்களாய், ஸத்யத்தையே பேசுகிறவர்களாய், ஒன்று செய்யத் தக்கது தகாததுஎன்று நிர்ணயம் செய்ய சாஸ்திரத்தையே ப்ரமாணமாய்க் கொண்டவர் களாயிருப்பார்கள். அந்தி குலத்தின் ஆராத்ய தெய்வம் வேதமாகவும், வ்யவஸாயம் ஸ்வதர்மாநுஷ்டானமாகவும், ஹிதோபதேசம் செய்யும் மந்த்ரி ஸாராஸார விசாரமாகவும் இருக்கும். அந்தக் குலத்தில் பிறந்தவர்களின் சிந்தை எல்லாம், பதிவ்ருதை தன் கணவனையே நாடி நிற்பதுபோல், ஈச்வரனையே நாடி நிற்கும்.

அக்குலத்தாருடைய யோக க்ஷேமத்தைக் குறைவில்லாமல் நடத்தி வரும் தேவதை ஆதிலக்ஷ்மி ஆவாள். இப்படி எல்லாம், எந்தக்குலத்தில், அதின் புண்யப் பெருக்கால, ஸர்வ ஸுகங்களினுடைய வ்யவஸாயம் மேன்மேலும் அதிகாதிகமாக

நடத்தப்பட்டு வருமோ, அந்தக் குலத்தில் யோகப்ரஷ்டனான அவன், அநாயாஸமாய்ப் பிறப்படைகிறான்.

अथवा योगिनामेव कुले भवति धीमताम् ।
एतद्धि दुर्लभतरं लोके जन्म यदीदृशम् ।। ४२ ।।
तत्र तं बुद्धिसंयोगं लभते पौर्वदेहिकम् ।
यतते च ततो भूयः संसिद्धौ कुरुनन्दन ।। ४३ ।।

அதவா யோகிநாமேவ குலே பவதி தீமதாம் ।
ஏதத்ஹி துர்லபதரம் லோகே ஜன்ம யதீத்ருஶம் ॥ 42

தத்ர தம் புத்தி ஸம்யோகம் லபதே பௌர்வ தேஹிகம் ।
யததே ச ததோ பூய: ஸம்ஸித்தௌ குருநந்தன ॥ 43

இதுவுமது :

இல்லாவிட்டால், ஞானாக் நிஹோத்ரிகளென்றும், ப்ரப்ரஹ்ம ஸ்வரூப ஞானத்தில் தேர்ச்சியடைந்தவர்களென்றும், ப்ரஹ்மாநந்தநாட்டின் முதற்குடிகளென்றும், ஆத்ம ஸ்வரூபஸித்தாந்தம் என்னும் ஸிம்ஹாஸநத்தில் வீற்றிருந்து முவ்வுகிலு மரசு செலுத்துகிறவர்களென்றும், ஸந்தோஷவநத்திற் கூவிக் கொண்டிருக்கும் குயில்களென்றும், எப்போதும் பழங்கள் பழுத்துதிர்ந்து கொண்டிருக்கும விவேகவ்ருக்ஷத்தின் அடியில் உட்கார்ந்திருப்பவர்களென்றும், சொல்லத்தக்கவர் களானயோகிகளின் குலத்திலிவன் ஜந்ம மடைவான். ஸூர்யனுக்கு முன்னால் ப்ரகாசம் உண்டாவதுபோல், இவனுடைய உருவு கொஞ்சமாய் வெளிப்படும்போதே, இவனுடைய ஞானத்தின் ப்ரகாசம் வெளிப்பட்டு, இவனுக்கு ஸரியான பர்வம் ஏற்படும்வரைக்கும காத்திராது, இவன் வயஸு அல்பமாய் இருக்குமபோதே ஸர்வஜ்ஞதை என்பவள் இவனுக்கு மாலையிடுவாள். அப்படி ஸித்த ப்ரஜ்ஞை இவனை அடைந்தபின், இவன் மனஸு என்னும் பசு ஸகலவித்தையைகள் என்னும் பாலைக் கறக்கும். ஸகல சாஸ்த்ரங்களும் தாமாகவே இவனுடைய முகத்தினின்று வெளிப்படும். இப்படி உத்தமமான ஓர் ஜந்மத்தை அடையவேண்டு மென்னுமாசையால், தேவர்கள் ஸ்வர்க்கலோகத்தில் ஜபங்களையும் யாகங்களையும் அநுஷ்டித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஜந்மத்துக்கு இடமாயிருக்கும் பூமியின் பெருமையை

வர்ணிப்பதற்காக, தேவர்கள் ஸ்துதி பாடகர்களாகிறார்கள். இவன் எடுக்கும் ஜந்மம் இவ்வளவு பெருமை படைத்த தாயிருக்கும்.

पूर्वाभ्यासेन तेनैव ह्रियते ह्यवशोऽपि सः ।
जिज्ञासुरपि योगस्य शब्दब्रह्मातिवर्तते ।। ४४ ।।

பூர்வாப்யாஸேன தேனைவ ஹ்ரியதே ஹ்யவஶோ(அ)பி ஸ: ।
ஜிக்ஞாஸுரபி யோகஸ்ய ஶப்த ப்ரம்ஹாதி வர்ததே ॥ 44

இதுவுமது :

மேலும் ப்ரஹ்மப்ராப்தி இன்றி, இதற்குமுன் எந்த ஜந்மம் முடிந்துபோய் விட்டதோ, அந்த ஜந்மத்தில் இருந்த ப்ரஹ்மப்ராப்தி விஷயமான உத்தம ஆசையானது, திரும்பவும் இவனுக்குண்டாகிறது. பாக்யம் படைத்தவனாயும், பிறக்கும் காலத்தில் காலை முன்னிட்டுக்கொண்டு பிறந்தவனாயும், அத்துடன் கூட புதையலைக் கண்ணுக்கு புலப்படச்செய்யும் மையிட்டுக் கொண்ட வனாயும், ஒருவன் ஆனபின், அவன் கண்ணுக்கு பூமியிற் புதைந்து கிடக்கும் தனம் தெரியவருவதுபோலும், அது துர்லபமானதும், குருமூலமாயல்லாமல் அடையக் கிடைக்காததுமான ப்ரஹ்மஸ்வரூபத்தை, இவனுடைய புத்தியானது யோகாப்யாஸம் செய்யாமலே அடைந்து விடுகிறது.

தேஹசக்திகளனைத்தையும் தங்களிஷ்டப்படி இழுத்துக்கொண்டு போகும் இந்த்ரியங்கள், மனஸில் ஒடுங்கிப்போய், மனஸு ப்ராணவாயுவுக்கு வசப்பட்டுப் போய், அவ்வாயு சிதாகாசத்திற் கலந்துபோகிறது. இது எப்படி நேரிடுகிறதோ தெரியவில்லை; ஆனால் யோகாப்யாஸங்கள் தமக்குத்தாமே இவனிடம் ஏற்பட்டு, இவனுடைய மனஸைத் தேடிக் கொண்டு ஸமாதி, தானே வந்தடைகிறது.

இவன், யோகபீடத்தின் அதிதேவதையான பைரவனோ என்றும், யோகஸாதநங்களின் நிறைவும் வைராக்யத்தின் ஸித்தியும் கலந்து ஓர் உருவெடுத்து இவனாய்அமைந்தனவோ என்றும், சொல்லத்தக்கவனாய் இருப்பான். ஸம்ஸாரத்தை அளவிடும் அளவுகலமோ என்றும், பரிமளமே உருவெடுத்து சந்தனக்கட்டையாய் ஆனது போல், அஷ்டாங்கயோகத்தின் த்ரவ்யங்கள் எல்லாம் தங்கியிருக்கும் தீவோ என்றும், செ.ால்லத்தக்கவனாய் இவன் இருப்பான். இவன்

ஸந்தோஷத்தினாலேயே செய்யப்பட்டவனோ என்றும், யோகஸித்திகளே நிறைந்திருக்கும் ஓர்பாண்டாரத்தினின்று வெளிப்படுத்தி வைக்கப்பட்ட ஓர் ஸித்தியோ என்றும், சொல்லத் தக்கவனாய், ஸாதநதசை முழுதும் தாண்டிப்போய் நிற்கும் ஸித்தனாய் இவன் இருப்பான்.

प्रयत्नाद्यतमानस्तु योगी संशुद्धकिल्बिषः ।
अनेकजन्मसंसिद्धस्ततो याति परां गतिम् ।। ४५ ।।

ப்ரயத்நாத் யதமானஸ் து யோகீ ஸம்ஶுத்தி கில்பிஷ: ।
அனேக ஜன்ம ஸம்ஸித்தஸ் ததோ யாதி பராம் கதிம் ॥ 45

இதுவுமது :

இவன் இதற்குமுன் கோடிக்கணக்கான வர்ஷங்களாய் யோகவழியில் நடந்து, ஆயிரக்கணக்கான ஜந்மங்களால் தடைப்பட்டு, கடைசியில் ஆத்மஸித்தியின் கரை வந்து சேர்ந்தான், என்னும் காரணத்தினால், ஸாதநஜாதங்கள் அனைத்தும் தாமாகவே இவனைத் தேடிவந்தடைந்தன. பின்பு இவனுக்கென்று ஸித்தமாய் வைக்கப்பட்டிருந்த விவேகத்தின் ராஜபதவியில் இவன் ஏறிநின்றான். பின்பு இவன் விசாரம்செய்யும் வேகத்தால், விவேகமென்பதே பின் தங்கிப் போய், அவிசாரணீயமான ப்ரஹ்மம் யாதொன்றோ, அதுவாகவே இவன் ஆய்விடுகிறான்.

பின்பு மனது என்னும்மேகம் கரைந்துபோகிறது; வாயுவின் வாயுத்தன்மை இல்லாமற் போகிறது; ஆகாசமும் தனக்குள் தானே லீநமாய்ப் போகிறது; ப்ரணவத்தின் முடியான மகாரமே முழுகிப்போகிறது. பின்பு அநிர்வாச்சியமான ஸுகம் இவனுக்கு ஏற்பட்டு, இவன் ஸ்திதியை வர்ணிக்கப்பேச்சு சக்தி அற்றுப் போகிறது. எல்லாகதிகளுக்கும் கதியான ப்ரஹ்மத்தில் நிலை பெற்று, இவன் மூர்த்தமான ப்ரஹ்மம் மூர்த்தீகரித்ததாகிறான்.

இவன் தன்னுடைய முன் ஜந்மங்கள் பலவற்றிலும், ஆத்மஸ்வரூபத்தின்மேல், ஜலத்தின்மேற் பாசிபோல், ஏற்பட்டுக் கொண்டிருந்த உபாதிகளை விலக்கி விலக்கி வைத்துக்கொண்டு வந்தபடியால், இவன் ப்ரஹ்மத்தோடு ஐக்யமாதல் என்னும் விவாஹத்தின் லக்நத்தை நிர்ணயிப்பதற்காக ஜலத்தில் மிதக்கவிட்டிருந்த கிண்ணம், (மஹாராஷ்டிரர்கள், கல்யாணங்களில் மாங்கல்ய தாரணம்

செய்ய வேண்டிய காலத்தை நிர்ணயிப்பதற்காக ஜலத்தின் அடியில் சிறுத்துவாரமுள்ள ஓர் கிண்ணத்தை மிதக்க விட்டு, அதில் ஜலம் நிரம்பி, அது முழுகிப் போகும் காலத்தில், யுக்தமான வேளை ஏற்பட்டதென்று மாங்கல்ய தாரணம் செய்வது வழக்கம்) அவன் பிறந்த காலத்திலேயே முழுகிப்போயிற்று. ஆகையால் ப்ரஹ்மைக்யபாவம் என்னும் கல்யாணமவனுக்குப் பிறந்த உடனேயே ஏற்பட்டு, அவன் ப்ரஹ்மத்தோ டொன்றுபட்டுப் போகிறான். ஆகவே விச்வம் எதினின்று உண்டாய், பின்பு எதில் லயமடைந்து விடுகிறதோ, அந்த ப்ரஹ்மமாகவே அவன், தேஹத்தோடு கூடியிருக்கும்போதே, ஆய்விடுகிறான்.

तपस्विभ्योऽधिको योगी ज्ञानिभ्योऽपि मतोऽधिकः ।
कर्मिभ्यश्चाधिको योगी तस्माद्योगी भवार्जुन ।। ४६ ।।

தபஸ் விப்யோऽதிகோ யோகீ க்ஞானிப்யோऽபி மதோऽ திகः ।
கர்மிப்ய ஶ்சாதிகோ யோகீ தஸ்மாத்யோகீ பவார்ஜுனா ॥ 46

யோகஸித்தன் பெருமை :

எதை அடையவேண்டு மென்னுமாசையால், தைர்யம் என்னும் கைகளின்மேல் நம்பிக்கைவைத்து ஷட்கர்மங்கள் என்னும் வெள்ளத்தில் விழுந்து கர்மநிஷ்டன் நீந்திக்கொண்டிருக்கிறானோ, எந்த ஒரு வஸ்துவுக்காக, ஞானியானவன் ஞானம் என்னும் வஜ்ரகவசத்தைப் பூண்டு ப்ரபஞ்சத்தோடு மனஸு என்னும் யுத்தகளத்திற் போர் செய்துகொண்டிருக்கிறானோ, எதொன்றி லாசைவைத்து, தபஸ்வியானவன் பிடிப்பற்றதும், வழுக்கிவிடுவதும், ஏறிப்போவதற்கு அஸாத்யமுமான, தபஸ் என்னும் செங்குத்துப் பாறையைத் தழுவிக்கொண்டு கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறானோ, எது பஜிப்பவர்களால் பஜிக்கப்பட்ட வஸ்துவோ, எது யாகம் செய்பவர்களால் ஆராதிக்கப்பட்ட வஸ்துவோ,

இப்படியெல்லாம் எல்லோராலும் எப்போதும் கொண்டாடப் பட்டது எதுவோ, ஸாதகர்களுடைய ஸாதாநா நுஷ்டானத்துக்குப் பலனானது எதுவோ, அந்த அனாதியான பரப்ரஹ்மமாகவே யோகஸித்தன் ஆய்விடுவதால், அவன், கர்ம நிஷ்டாக்களால் நமஸ்கரிக்கத்தக்கவன், ஞானிகளால் அறியத்தக்கவன், தபஸ்விகளுக்கு முதல்வனான தபோனாதன், ஆகிறான். ஜீவாத்மா பரமாத்மா இரண்டும்

ஒன்றுப்பட்டுப்போவதான ஓர் ப்ரயாகைக்கு அவன் மனஸுவந்து சேர்ந்து விடுவதால், அவன் சரீரத்தோடு கூடியிருக்கும்போதே, அவனுக்கு இவ்வளவு மஹிமை ஏற்படுகிறது. ஆகையாற்றான் உன்மனஸு யோகத்தில் நிலைபெற வேண்டும் என்று, நான் ஸதா சொல்லிவருகிறேன்.

योगिनामपि सर्वेषां मद्गतेनान्तरात्मना ।
श्रद्धावान्भजते यो मां स मे युक्ततमो मतः ।। ४७ ।।

யோகிநாமபி ஸர்வேஷாம் மத்கதே ரந்தராத்மனா ।
ஶ்ரத்தாவான் பஜதே யோ மாம் ஸ மே யுக்த தமோ மத: ।। 47

இதுவுமது :

யோகி என்று எவன் சொல்லத் தக்கவனோ, அவன் தேவர்களுக்கும் தேவன்; அவன் ஸுகம் நிறைந்த என்னுடைய அந்தராத்மா ஆகிறான். அவனிடத்தில், பஜிக்கிறவன், பஜநம். பஜநீயன் என்ற பஜனையின் த்ரிபுடியாய், அவனுடைய அநுபவத்தில் ஸதா நானே நிற்கிறேன். பின்பு அவனுக்கும் எனக்கும் நடுவில் உள்ள பரஸ்பரப்ரேமையானது இப்படிப்பட்டதென்று சொல்லும்படியானது அல்ல. இப்படி இருவரும் ஒன்றுப்பட்டுப் போன எங்கள் ப்ரேமைக்கு ஓர் உபமானம் கொடுக்க வேண்டுமேயானால், நான் தேஹம் என்றும், அவன் ஆத்மா என்றும், சொல்ல வேண்டியது தான். பக்தர்கள் என்னும் சகோரங்களுக்குக் சந்திரனென்றும், கல்யாணகுணங்கள் நிறைந்துள்ள ஸமுத்ர மென்றும், முவ்வுலகையும் ஓர் கொடைக்கீழ் ஆளும் மஹா ராஜனென்றும், சொல்லத்தக்க ஶ்ரீ கிருஷ்ணன் இப்படிச் சொன்னார், என்று ஸஞ்சயன் த்ருதராஷ்ரனுக்கு உரைத்தான்.

மேல்வரும் அத்யாய விஷயத்தின் ப்ரஸ்தாவனை :

அப்போது பார்த்தனுக்கு, இந்த யோகவிஷயமாய்க் கேட்கவேண்டுமென்று முதலிலிருந்த ஆசை இரட்டித்துப் போனதை பகவான் அறிந்து, ஸந்தோஷமடைந்து, "நான் சொன்னதை யெல்லாம் ப்ரத்யக்ஷயமாய்ப் பார்க்கத்தக்கக் கண்ணாடியாய் அர்ஜுநன் நிற்கிறான்," என்று நினைத்து, அதினால் மனஸில் ஆநந்தம் அதிகமாகப் பெருகி, அவர் சொல்லப்போகிற விஷயம் இனி சொல்லப்படும். அதில் சாந்தரஸம் வெளிப்பட்டு நிற்கும்; ஞாநஸித்தாந்தங்கள் என்னும் உத்தம பீஜங்கள் கட்டி வைத்திருக்கும் கோட்டை

திறந்துவைக்கப்பட்டாகும். ஸாத்விகம் என்னும் மழைபெய்து, மனஸின் தாபம் என்னும் குப்பை வெள்ளத்தில் அடித்துக் கொண்டுபோனபின், ச்ரோதாக்கள் மனஸில் கேட்க வேண்டும் என்னும் ஆவல் ஆகிய வெக்கை விசேஷித்து உண்டாய், அவர்களுடைய கவனம் உத்தமரீதியாய் ஏகாக்ரப்பட்டிருப்பதைப் பார்த்து, ஸ்ரீநிவ்ருத்தினாதனுக்கு இப்போதே ஞானவிதைகளை விதைக்க வேண்டும் என்று ஆசை உண்டாயிற்று.

பின்பு என்னை விதைக்கும் பெட்டியாய்ச் செய்துகொண்டு, என் தலைமேற் கையை வைத்து, ஸத்குருநாதன் ஞானபீஜங்களைச் சிதரச்செய்கிறான். ஆகையால், இந்த என்முகத்தினின்று எதெது புறப்படுகிறதோ, அது அனைத்தும் ஸாதுக்கள் ஹ்ருதயத்தில் நன்றாய் ஊன்றிக் கொள்கிறது. இதை இத்துடன் நிறுத்திவிட்டு, மேலே ஸ்ரீரங்கன் சொன்னதைச் சொல்வேன். ஆனால் அதை மனஸென்னும் காதினால் கேட்கவேண்டும். அதின் சொற்களின் ஸ்வரூபத்தை (அர்த்தத்தை) புத்தியின் கண்ணைக்கொண்டு பார்க்க வேண்டும். அதின் அர்த்தங்களின் ஊஹாபோஹங்களை சித்தத்தைக் கொண்டு செய்து கொள்ள வேண்டும். கவனம் என்னும் கையைக் கொண்டு ஹ்ருதயத்துக்குள் இதை நிரப்பிக்கொண்டால், ஸாதுக்கள் மனஸு ஸந்தோஷத்தை அடையும். இது ஜீவாத்மாவை பரமாத்மாவாய்ச் செய்து தந்து ஸுகப்பெருக்கின் விஸ்தாரத்தைச் செய்துவைத்து, ஆத்மஹிதத்தை விளைவித்துத்தரும். இப்போது அர்ஜுநனோடு ஸ்ரீமுகுந்தன் வெகுசாதுர்யமாய் பேசப்போகிறதை நான் ஓவிகளாய்ச் (ஓவி என்பது மஹராஷ்டிர பாஷையில் ஓர் வகை விருத்தம்) செய்து சொல்வேன்.

ஆறாவது அத்யாயம் முற்றிற்று

அத்யாயம் 7

श्रीभगवानुवाच ।
मय्यासक्तमनाः पार्थ योगं युञ्जन्मदाश्रयः ।
असंशयं समग्रं मां यथा ज्ञास्यसि तच्छृणु ।। १ ।।
ज्ञानं तेऽहं सविज्ञानमिदं वक्ष्याम्यशेषतः ।
यज्ज्ञात्वा नेह भूयोऽन्यज्ज्ञातव्यमवशिष्यते ।। २ ।।

ஸ்ரீபகவானுவாச -

மய்யா ஸக்தமனாः பார்த யோகம் யுஞ்ஜன் மதாஸ்ரயः ।
அஸம் ஶயம் ஸமக்ரம் மாம் யதா க்ஞாஸ்யஸி தச்ச்ருணு ॥ 1

க்ஞானம் தேகுஹம் ஸவிக்ஞானமிதம் வக்ஷ்யாம்ய ஶேஷதः ।
யத் க்ஞாத்வா நேஹ பூயோகுந்யத் க்ஞாதவ்ய மவஶிஷ்யதே ॥ 2

இனிச்சொல்லப் போவதாகிய ஞானத்தின் பெருமை :

கேளுங்கள், ச்ரோதாக்களே பின்பு அந்த ஸ்ரீ அநந்தன் பார்த்தனைப் பார்த்து இப்படிச் சொன்னான். நீ இப்போது யோகாப்யாஸத்தின் முறைகளைத் தெரிந்து கொண்டாய்: உன் உள்ளங்கையில் இருக்கும் ஓரிரத்தினத்தின் குணதோஷங்களை நீ பூர்ணமாய் அறிந்து கொள்வது எப்படி ஸாத்யமோ, அப்படியே என்னை நீ பூர்ணமாய் அறிந்துகொள்ளக் கூடும்படி, ஞானம் இன்ன தென்பதையும் விஞ்ஞானம் இன்னதென்பதையும் நான் சொல்வேன், கேள். "இந்த ஸந்தர்ப்பத்தில் விஞ்ஞானத்தால் ஆகவேண்டுவதென்?" என்று நீ எண்ணலாம். ஆனால் முதன் முதல் அதைத் தேடிக்கொள்வதே அவச்யமாயிருக்கிறது. கரை வந்து சேர்ந்து, நங்கூரம்போட்டு நிறுத்தி வைக்கப்பட்ட ஓர் படகு அசைவற்று நின்று விடுதல் போலும், எதை அடைந்த பின் வ்யவஹார ஞானத்தின் கண் மூடிப்போய், விசாரம் என்பது தன் காலைப்பின் வாங்கிக் கொள்கிறதோ, எதின் வரம்புக்குள் தர்க்கம் ப்ரவேசிக்க இச்சிப்ப தில்லையோ, அதுவே ஞானமாகும்.

மற்ற விதப்பட்ட ப்ரபஞ்ச விஷயமான அறிவு. விஞ்ஞானமென்றும், அப்பிரபஞ்சத்தை ஸத்தியமென்று

மதித்தல் அஜ்ஞான மென்றும் அறி. அஜ்ஞானம் முழுவதும் நசித்துப் போய், விஜ்ஞானம் முற்றிலும் பொசுங்கிப் போய், உண்மையான தத்வத்தொடொன்று பட்டுநிற்கை ஞானமாகும். அதை அடைந்த பின் பேசுகிறவன் பேச்சு நின்றுபோய், கேட்கிறவன் துக்கம் தீர்ந்துபோய், சிறிது பெரிது என்று பகுத்தறிதல் முற்றிலும் அற்றுப்போகும். இப்படிப்பட்ட அதிரஹஸ்யமான விஷயத்தைச் சொல்லால் விளங்கச் செய்வேன். இவ்விஷயத்தைக் கொஞ்சம் கேட்ட மாத்திரத்தினாலேயே, மனஸின் ஆசைகளனைத்தும் பூர்த்தி யடையும்.

मनुष्याणां सहस्रेषु कश्चिद्यतति सिद्धये ।
यततामपि सिद्धानां कश्चिन्मां वेत्ति तत्त्वतः ।।३।।

மனுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கஶ்சித்யததி ஸித்தயே।
யததாமபி ஸித்தானாம் கஶ்சின்மாம் வேத்தி தத்த்வத: ॥ 3.

இதுவுமது :

ஆயிரக்கணக்கான மநுஷ்யர்களுக்குள் ஏதோ ஒருவனுக்கு இந்த விஷயத்தில் அவா உண்டாகிறது. அப்படி ஊக்கத்துடன் இந்த விஷயத்திற் புகுந்த அநேகர்களுக்குள், மிக்க அருமையாய் ஏதோ ஒருவனுக்கு இது லப்தமாகிறது. ஜநங்களால் எங்கும் நிறைந்திருக்கும் முவ்வுலகத்திலும், அங்கொருவன் இங்கொருவனை யுத்தம் செய்ய ஸாமர்த்ய முள்ளவனென்று ஆராய்ந்தெடுத்து, லக்ஷக்கணக்கானவர்களால் ஓர் ஸேனை ஏற்பட்ட பின்பு, யுத்த மென்பது நேரிட்டு கத்தி முதலிய சஸ்தரங்கள் தாக்கி மாம்ஸம் சேதிக்கப்படும் காலத்தில், எதிரிகளை வென்று விஜயஸ்ரீ என்னும் பதவியின் மேல் ஏறி உட்கார்கிற யோக்யதை பெறுகிறவன், அந்த லக்ஷக்கணக் கானவர்களுக்குள்ளே ஒருவனே கிடைப்பது போலும், இந்த ஞானத்தைப் பெறவேண்டும் என்னும் ஆசையாகிய பெருவெள்ளத்தில் கோடிக் கணக்காய் மனுஷ்யர்கள் குதித்த போதிலும், மனோரதபூர்த்தி என்னும் அக்கரை சேர்ந்து வெளிப்படுகிறவன் மிகவும் அருமையாய் இருப்பான். ஆகையால் இந்த ஞானம் ஸாமான்யமானதல்ல, மிக்க உயர்ந்ததே ஆகும். ஆயினும் அதைச் சொல்வற்கு, முன்னம் சொல்ல ஏற்பட்டதான விஜ்ஞானத்தை விவரிப்பேன் கேள்.

भूमिरापोऽनलो वायुः खं मनो बुद्धिरेव च ।
अहंकार इतीयं मे भिन्ना प्रकृतिरष्टधा ।।४।।

பூமிராபோ நலோ வாயு: கம் மனோ புத்திரேவ ச ।
அஹங்கார இதீயம் மே பின்னா ப்ரக்ருதி ரஷ்டதா ॥ 4

பகவானுடைய எண் விதமான ப்ரக்ருதி :

மஹத்தத்வத்தை ஆதியாய் உடைய ஜகத் ஸர்வமும், ஒருவனுடைய சரீரச் சாயை போலிருக்கும், என்னுடைய மாயாசக்தியின் கார்யமாய்த் தோற்றி நிற்கிறது. இந்த மாயையே ப்ரக்ருதி யென்று சொல்லப்பட்டதாய், எட்டு வகைப்பட்டிருக்கிறது. இதினின்றுமே மூவ்வுலகங்களும் உண்டாயின. இது எப்படி எட்டுவிதப் பட்ட தென்று சொல்வேன், கேள். ஜலம் அக்நி ஆகாசம் பூமி வாயு என்றும், மனஸு புத்தி அஹம்காரம் என்றும், இது எண் வகைத்தாகும்.

अपरेयमितस्त्वन्यां प्रकृतिं विद्धि मे पराम् ।
जीवभूतां महाबाहो ययेदं धार्यते जगत् ॥ ५ ॥

அபரேய மிதஸ்த்வன்யாம் ப்ரக்ருதிம் வித்திமே பராம் ।
ஜீவபூதாம் மஹாபாஹோ யயேதம் தார்யதே ஜகத் ॥ 5

ஜீவபூதப்ரக்ருதி என்ற பகவானுடைய மற்று மோர் ப்ரக்ருதி :

முன் சொன்ன எண்வகை ப்ரக்ருதிகளும், தங்கள் பரஸ்பர விரோதத்தைப் பாராட்டாமல், ஸமரஸப்பட்டு, ஒன்று கூடி நிற்கும் நிலை யாதோ, அந்த என்னுடைய ப்ரக்ருதிக்குப் பரமப்ரக்ருதி என்றும், ஜீவன் என்றும் பெயர். இது, தன் ஸாந்நித்யத்தால், ஜடமான தேஹத்தை உயிருள்ளதாகச் செய்து, ஸகல தேஹதர்மங்களையும் நடத்திவைத்து, அந்தக்கரணத்துக்கு ஞானசக்தியைக் கொடுத்து, மனஸு சோக மோஹங்களைப் பாராட்டி நிற்கவும், புத்தி தேஹத்தில் நடக்கும் ஸர்வத்தையும் அறிந்து கொள்ளவும், அகங்காரத்தைக் கொண்டு உலகம் எல்லாம அகம் புத்தி பாராட்டி வர்த்திக்கவும், செய்துவைக்கிறது.

एतद्योनीनि भूतानि सर्वाणीत्युपधारय ।
अहं कृत्स्नस्य जगतः प्रभवः प्रलयस्तथा ॥ ६ ॥

ஏதத்யோனீனி பூதானி ஸர்வாணீத்யுப தாரய ।
அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரலயஸ்ததா ॥ 6

பகவானே ஜகத்தனைத்துக்கும் ஆதியும், நிலையும், முடிவும் ஆகிறான் :

அந்த பரமப்ரக்ருதியானது, ஸ்தூலமான ப்ரக்ருதியின் எட்டுவகைகளோடு மிக்கப்ரேமையுடன் கலந்து, எப்போது நிற்கிறதோ, அப்போது பூதஸ்ருஷ்டி யென்னும் தங்கசாலையில், பலவித ப்ராணிகளென்னும் பலவகை நாணயங்கள் செய்யப்பட்டு வெளிப்படுகின்றன. இத்தங்கசாலையில் முக்யமான முத்ரைகள் நான்கு ஏற்பட்டு, ப்ராணிகளனைத்தும், ஒன்றைப் போல் ஒன்று பாஞ்சபௌதிகமான தேஹங்கள் படைத்தவையே யானாலும், வெவ்வேறு உருவுள்ளவையாய் உண்டாகின்றன. இப்படிப்பட்ட ரூபபேதங்களின் ஸங்க்யை எண்பத்தினான்கு லக்ஷமாகும். இவற்றின் அவாந்தர பேதங்கள் எண்ணிறந்தவை.

இவ்விதம் உண்டான பலவிதப்பட்ட ஜீவராசிகள் என்னும் நாணயங்களால், அவ்யக்தத்தின் உட்பிரதேசம் முழுவதும் நிறைந்து போகிறது. இப்படி ஏற்படும், பாஞ்சபௌதிகமான தேஹத்தோடு கூடிய ப்ராணிகளின் ஸங்க்யை, என்னுடைய ப்ரக்ருதிக்கே தான் தெரியும். இவ்வாறு பலவித முத்ரைகள் போடப்பட்ட நாணங்களைப் பேர்ன்ற ப்ராணிகளை, ப்ரக்ருதியானது எங்கும் பரவச் செய்து, பின்பு அந்நாணயங்களை உருக்கி அழிப்பது போல், அப்பிராணிகளின் உருவை அழித்து விடுகிறது.

இப்படி உண்டாக்கி அழித்தல் என்ற இரண்டின் நடுவில், அப்பிராணிகளை கர்மாகர்ம ரூபமான வ்யவஹாரத்தை நடத்தும்படி, அதுவே செய்து வைக்கிறது. நீ இவ்வியஷத்தைத் தெளிவாய் அறியும்படி, யாதோரலங்காரமு மின்றி, வெளிப்படையாய் இதைச் சொல்கிறேன், கேள். இவ்வளவு விஸ்தாரமாய் நாமரூபங்களை ஏற்படுத்திவைக்கும் ப்ரக்ருதி என்னிடத்திலேயே ஏற்பட்ட என்னுடைய ப்ரதி பிம்பமேயாகும். ஆகையால் இந்த ஜகத்திற்கு உத்பத்தியும் ஸ்திதியும், லயமும், நானே ஆகிறேன்.

मत्तः परतरं नान्यत्किञ्चिदस्ति धनञ्जय ।
मयि सर्वमिदं प्रोतं सूत्रे मणिगणा इव ।। ७ ।।

மத்த: பரதரம் நான்யத் கிஞ்சி தஸ்தி தனஞ்ஜய ।
மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ ॥ 7

பகவான் ஜகத்தின் உள்ளும் புற்முமாய் நின்று, அதைத் தாங்கி நிற்கிறான் :

மத்யானவேளையிற்காணப்படும் ம்ருகஜலத்தின் காரணத்தை சோதித்துப்பார்க்கப்போனால், அது ஸூர்யகிரணங்களோடு நில்லாமல், ஸூர்யனிடத் திலேயே போய்ச் சேர்வது போலும், ஹே கிரீடி, இந்த ஸ்ருஷ்டி ப்ரக்ருதியினால் ஏற்பட்டதே யானாலும், அப்பிரகிருதியையும் தாண்டி நிற்கும் அதின் மூல காரணம் நான் ஒருவனே ஆகிறேன். இப்படி ஜகத் உண்டாவதும், உண்டாய்த் தோன்றி நிற்பதும், பின்பு அழிந்து மறைவதும், ஆகிய அனைத்தும் என் ஸ்வரூபத்திலேயே நடந்தேறி வருகின்றன. ஓர் கயிறு, அதில் கோத்திருக்கும் மணிகளைத் தாங்கிக் கொண்டு இருப்பது போல், நான் விச்வத்தைத் தாங்கிக்கொண்டு இருக்கிறேன். அதிலும் அம்மணிகள் தங்கத்தாற் செய்யப்பட்டு, அந்நூலும் தங்கத்தால் ஏற்பட்டிருந்தாற்போலும், நான் இந்த ஜகத்தின் உள்ளும் புறமும் நிரம்பி இருந்து, அதைத்தாங்கி நிற்கிறேன்.

रसोऽहमप्सु कौन्तेय प्रभास्मि शशिसूर्ययोः ।
प्रणवः सर्ववेदेषु शब्दः खे पौरुषं नृषु ।।८।।
पुण्यो गन्धः पृथिव्यां च तेजश्चास्मि विभावसौ ।
जीवनं सर्वभूतेषु तपश्चास्मि तपस्विषु ।।९।।

ரஸோऽஹமப்ஸு கௌந்தேய ப்ரபாஸ்மி ஸஶிஸூர்யயோ:।
ப்ரணவ: ஸர்வவேதேஷு ஶப்த: கே பௌருஷம் ந்ருஷு॥8

புண்யோ கந்த: ப்ருதிவ்யாம் ச தேஜஶ்சாஸ்மி விபாவஸௌ।
ஜீவனம் ஸர்வபூதேஷு தபஶ்சாஸ்மி தபஸ்விஷு॥9

முன் சொன்ன பகவத்வ்யாப்தியை விளங்கச் சொல்லல் :

ஆகையால் ஜலத்தில் சுவையாகவும் காற்றில் ஸ்பர்சமாகவும், ஸூர்ய சந்திரர்களிடத்தில் ப்ரகாசமாகவும், பூமியில் இயற்கையால் சுத்தமான வாஸனையாகவும், ஆகாசத்தில் சப்தமாகவும், வேதத்தில் ப்ரணவமாகவும், மனுஷ்யர்களிடத்தில் மனுஷ்யத்வமாயும், அகம்பாவத்தின் பலமாகிய பௌருஷமாகவும், நானே இருக்கிறேன், என்ற இந்தரஹஸ்யத்தை நான் உனக்குச் சொல்லி வைத்தேன். தேஜஸ்ஸின் மேல் போர்த்து வைக்கப்பட்ட போர்வை போல் இருக்கும், அக்நி என்னும் பெயரைக் கழற்றி வைத்த பிறகு,

காணப்படும் உண்மையான தேஜஸ் நானே. அன்றியும் முவ்வுலகிலும் அநேகவிதமான பிறப்புகளை அடைந்திருக்கும் ப்ராணிகளில் சில காற்றைப் புசித்தும், சில புல்லைத் தின்றும், சில அந்நத்தைச் சாப்பிட்டும், சில ஜலத்தை உட்கொண்டும், இப்படிஜீவராசிகள் அனைத்தும், தங்கள் தங்களுக்குத் தகுந்தபடி, எந்தெந்த ஆஹாரங்களைப் புசித்து ஜீவித்திருக்குமோ, அந்த ஆகாரங்கள் அனைத்திலும், ஓர் வித்யாஸமு மில்லாமல் நானே அமர்ந்திருக்கிறேன்.

बीजं मां सर्वभूतानां विद्धि पार्थ सनातनम् ।
बुद्धिर्बुद्धिमतामस्मि तेजस्तेजस्विनामहम् ।।१०।।
बलं बलवतां चाहं कामरागविवर्जितम् ।
धर्माविरुद्धो भूतेषु कामोऽस्मि भरतर्षभ ।।११।।

பீஜம் மாம் ஸர்வ பூதானாம் வித்தி பார்த ஸநாதனம் ।
புத்திர் புத்தி மதாமஸ்மி தேஜஸ் தேஜஸ் விநாமஹம் ॥ 10

பலம் பலவதாம் சாஹம் காமராக விவர்ஜிதம் ।
தர்மாவிருத்தோ பூதேஷு காமோஸ்மி பரதர்ஷப ॥ 11

இதுவுமது :

ஸ்ருஷ்டி ஆரம்பத்தில் ஆகாசம் என்னும் முளையை வெளிப்படுத்தி, முடிவில் ப்ரணவத்தின் அங்கங்களாகிய அகார உகார மகாரம் என்ற மூவக்ஷரங்களையும் கூட விழுங்கி விட்டு, இந்த விச்வம் நிலைகொண்டிருக்கும் காலத்தில், விச்வத்தின் உருவாய் நின்று, பின்பு மஹாப்ரளயகாலத்தில் எவ்விதமா யிருக்கிறதென்று சொல்லமுடியாததாய், எல்லா பூதங்களுமாகத் தானே ஏற்படும ஆதிஅற்றதான விச்வபீஜம், என்று சொல்லப்படும் வஸ்து நானே. அந்த வஸ்துவை உன் உள்ளங்கையில் இட்டு மூடிக் கொடுத்திருக்கிறேன். பின்பு அதைத் திறந்து வைத்துக்கொண்டு ஆத்மாநாத்ம விசாரத்தின் ஊருக்குக் கொண்டு வருவாயானால், அது மிக்க உபயோகமுள்ள தென்று தெரிந்து கொள்வாய். ஆனால் இதை இங்கே விவரித்துச் சொல்வதற்கில்லை. இந்த ஸந்தர்ப்பத்தில் சொல்ல வேண்டியதைச் சுருக்கமாகச் சொல்வேன்.

தபஸ்விகளிடத்தில் இருக்கும் தபஸ்ஸும்,
பலவான்களிடத்திற் காணப்படும் பலமும்,

புத்திமான்களிடத்தில், இருக்கும் புத்தியும், நானே என்பதில் ஸந்தேஹமில்லை. சிலர் காமங்களைப் புசிப்பதால், இந்த லோகத்தில் தர்மாசரணம் வ்ருத்தியடைகிறது. இந்த காமபோகமானது ஸ்வபாவமாய் மநோவிரகாரத்தின் பலத்தினால், இந்த்ரியங்களின் இச்சானு ஸாரமாய் ஏற்பட்டதே ஆனாலும், தர்மத்துக்கு விரோதமாயிராது. அது நிஷித்த மார்க்கமாய்ச் செல்வதை ஒழித்து, விதிக்கப்பட்ட வழியைப் பிடித்துக்கொண்டு, நியமம் என்னும் தீவிட்டியின் வெளிச் சத்தின் உதவியுடன் நடந்து போகும். காமம் இப்படிப்பட்ட கட்டுக் குட்பட்டு புசிக்கப்படுவதால், அவர்களிடத்தில் தர்மங்களின் நிறைவு ஏற்பட்டு, மோக்ஷதீர்த்தத்துக்குப்போக வேண்டியவர்கள் என்று பிரித்தெடுத்துவைக்கப்பட்டவர்களாய், அவர்கள் இருந்து கொண்டு, ஸம்ஸார ஸுகங்களை யநுபவிக்கிறார்கள். அவர்கள் வேதங்களால் ஆதரிக்கப்பட்ட முறைகள் என்னும் மண்டபத்தின்மேல், தர்மங்களைப் பூர்த்தி செய்துகொடுக்கும் திறமையுள்ள கர்மம் என்னும் கொடியை, கர்மபலன் என்னும் பழங்கள் பழுத்துத் தொங்கும் அதின் நுணிகள் மோக்ஷத்தை அளாவும்படி, அதை வளர்த்து ஏற்றிப் படர வைக்கிறார்கள்.

இப்படி ஓர் கட்டுக்குட்பட்டதாய், பூதஸ்ருஷ்டியின் விஸ்தாரத்துக்குக் காரணமாயிருக்கும், காமம் எதுவோ, அதுவும் நானே. இப்படித் தனித்தனியாய் எடுத்துச் சொன்னால், இந்த விஷயம் எப்போது முடிவு பெறும்? ஸ்ருஷ்டியில்வேறு வேறு நாம ரூபங்களோடு அமைந்திருக்கும் வஸ்துக்கள் அனைத்தும் என்னிடத்திலிருந்தே உண்டானவை என்று யோகிகளனைவருக்கும் தலைவரான ஸ்ரீ கிருஷ்ணன் சுருக்கிச் சொல்லி முடித்தார்.

ये चैव सात्त्विका भावा राजसास्तामसाश्च ये ।
मत्त एवेति तान्विद्धि न त्वहं तेषु ते मयि ।।१२।।

யே சைவ ஸாத்த்விகா பாவா ராஜஸாஸ் தாமஸாஶ்ச யே !
மத்த ஏவேதி தான்வித்தி ந த்வஹம் தேஷு தே மயி ॥ 12

ஸாத்விகராஜஸ தாமஸ மென்ற முவ்வகை குண விகாரங்களும் என்னிடம் உண்டானவையாயினும் அவற்றில் நான் இல்லை :

ஸாத்விக ராஜஸ தாமஸ பாவங்களனைத்தும், என்னுடைய ஸ்வரூபத்தின்று றுண்டானவையே, ஆயினும்,

ஒருவன் தான் ஸ்வப்நத்திற் கண்ட மடுவில், விழித்துக்கொண்டபின், எப்படி முழுகிப் போகானோ, அப்படியே அந்த பாவங்களில் நான் இல்லை. ஓர்வ்ருக்ஷத்தின் ஸாரமாகிய ரஸமே விதையாய்க் கட்டிப்போய், அவ்விதையினின்று முளை உண்டாய், அம்முளையினின்று கட்டை வளர்ந்ததே யானாலும், அந்தக்கட்டைக்குள் விதை இல்லாதது போலும், விகாரங்கள் என்னிடத்தில்உண்டானவையே யானாலும், அவ்விகாரங்களில் நான் இல்லை. ஆகாசத்தினின்று மேகம் உண்டாகிறது; அதில் ஆகாசம் இல்லை. மேகத்தினின்று மழை உண்டாகிறது. மழையில் மேகம் இல்லை. மழைஜலம் ஒன்றோடொன்றுராய்ந்து பள பள வென்று மின்னல் உண்டாகிறது; ஆனால் அம்மின்னலில்; ஜலம் இல்லை. அக்நியினின்று புகை உண்டாகிறது; அந்தப் புகையில் அக்நி யில்லை. அப்படியே என்னிடத்தில் விகாரங்கள் ஏற்பட்டாலும், விகாரங்களில் நான் இல்லை.

त्रिभिर्गुणमयैर्भावैरेभिः सर्वमिदं जगत् ।
मोहितं नाभिजानाति मामेभ्यः परमव्ययम् ।।१३।।

த்ரிபிர் குணமயைர் பாவைரேபி: ஸர்வமிதம் ஜகத் ।
மோஹிதம் நாபிஜானாதி மாமேப்ய: பரமவ்யயம் ।। 13

பூதங்களுக்கு அறிவுமயக்கம் உண்டாகும் வழி :

ஜலத்திலுண்டான பாசி ஜலத்தை மறைத்து வைப்பது போலும், ஆகாசத்தினின்று உண்டான மேகங்கள் ஆகாசத்தை மறைத்து வைப்பது போலும், ஸ்வப்நம் பொய்யே யாயினும், நித்ரையின் பலத்தால் உண்மையாகத் தோற்றி, அதின் வசப்பட்டவன் தன்னுடைய நிஜஸ்வரூபத்தை அறியாதபடி, அதை மறைத்து வைப்பது போலும், இவை எல்லாம் போகட்டும், கண்ணினின்றே வளர்ந்த மாம்ஸம் கண்ணின் பார்வையை நாசம் செய்து விடுவது போலும், என்னிடத்திற் றோற்றிநிற்கும் முக்குணங்களா லமைந்த என்னுடைய சாயையே, எனக்கே குறுக்காய் ஏற்பட்டு, ஓர் திரை போல் நின்று, என்னை எனக்கே மறைத்து வைக்கிறது. ஆகையால் நானேயாகிய பூதராசிகள் என்னை அறிவதில்லை.

ஜலத்தின் அம்சமான முத்துக்கள், ஜலத்தில் கரைந்து போகாதது போலும், பூதங்கள் என்னம்சமே யானாலும், நானாவதில்லை. மண்ணினின்றுண்டான மட்பாத்ரத்தை

கையோடேயே மண்ணோடு கலந்தால், அது மண்ணுடன் கலந்து போகிறதேயானாலும், அது நெருப்பாற் சுடப்பட்டுப் போனபின், மண்ணுடன் கலந்து போகாதது போலும், என்னுடைய அம்சங்களான ஜீவராசிகளனைத்தும், என்னுடைய மாயையின் கூட்டுறவால், ஜீவதசையை அடைந்து போனதால், என்னோடு கலக்காமல், நான் எனதென்னும பாவங்களைப் பாராட்டும் மயக்கத்தில் முழுகி, விஷயஸேவனத்தால் அறிவுகேடடைந்து, என் ஸ்வரூபமாகவே தாங்களிருப்பதைத் தெரிந்து கொள்ளாமல், என்னைக் காட்டிலும் வேறு பட்டவர்களாகிறார்கள்.

दैवी ह्येषा गुणमयी मम माया दुरत्यया ।
मामेव ये प्रपद्यन्ते मायामेतां तरन्ति ते ।।१४।।

தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா।
மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே ॥ 14

ஆகையால் ஸம்ஸார மதிதுஸ்தரமானது :

மஹத்தத்வத்தை ஆதியாயும், அகங்கார மமகாரங்களைப் படைத்த ஜீவராசிகளை முடிவாயும், உடைத்தாகிய என்னுடைய மாயையைத் தாண்டி வந்து, என்னை யடைந்து, என்ஸ்வரூபத்தில் ஒன்று பட்டுப்போவதென்பது, எப்படி பூதங்களுக்கு ஸாத்யமாகும்? ப்ரஹ்மம் என்னும் மலையின் சரிவுகள் வெடித்து கீழ்விழுந்தபின், செங்குத்தாய் நிற்கும் பாறைகளின் அடிவாரத்தினின்று, ஸங்கல்பம் என்னும சிற்றருவி உத்பத்தியாய், அதின் கூடவே அந்நதியில் பஞ்சபூதங்கள் புடபுட என்று மந்தமாய் சப்தித்துக்கொண்டு, அதி நுட்பமாய் வெளிப்பட்டன.

பின்பு ஸ்ருஷ்டியின் விஸ்தாரம் என்னும் வெள்ளத்தாலும், காலகதியின் வேகத்தாலும், அந்நதி மேலும், மேலும் பெருகி, ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி யென்னும் இரண்டு உந்நதமான கரைகளையும் மீறிக்கொண்டு வழியத்தலைப்படுகிறது. த்ரிகுணங்கள் என்னும் மேகங்கள் மழைபெய்ய, மோஹம் என்னும் பெருவெள்ளம் புரண்டு வந்து, யமநியமங்கள் என்னும் பெரிய நகரங்களைப் பெயர்த்துருட்டிக் கொண்டு போகிறது. இந்நதி த்வேஷம் என்னும் வெகு சுழல்களோடும், மத்ஸரம் என்னும் முடக்குகளோடும், ஓடிக்கொண்டு, நடுவில் நடுவில் ப்ரமாதம் என்னும் பெருமீன்கள் துள்ளி விளையாடக் காணப்படுகின்றன.

இதில் ப்ரபஞ்சநடவடிக்கை என்னும் கோணல்கள் ஏற்பட்டு, கர்மாகர்மங்கள் என்னும் நாணற்கள் வளர்ந்து நின்று, ஸுகதுக்கங்கள் என்னும் கசடுகள் அலையலையாய் மிதந்து வந்து அவற்றில் சிக்கிக்கொள்கின்றன. ஆண்பெண் கல்வி என்னும் தீவின் மேல் காமம் என்னும அலை மோதுவதால், எண்ணிறந்த ஜீவராசிகள் என்னும் நுரைக்கட்டிகள் இந்நதியில் உண்டாய்க் காணப்படுகின்றன. அகங்கார மழையின் பாட்டங்கள், தனவித்யா பலங்களின் மதத்தால் பொங்கி வழிதல், விஷயபோகத்தில் அழுத்தப்படல், ஆகிய இவைகளின் கோலாஹலம் அங்கங்கே காணப்படுகிறது. உதயாஸ்தமன மென்னும் அலைகள் தாக்கி, ஜந்ம மரணம் என்னும் பாறைகள் இடிந்துவிழுந்து, பாஞ்ச பௌதிகமான தேஹங்கள் என்னும் குமிழிகள் தோன்றி மறைகின்றன. ஸம்மோஹம் விப்ரமம் என்னும மீன்கள் தைர்யத்தின் மாம்ஸத்தைக் கடித்து விழுங்குகின்றன. அஜ்ஞானம் என்னும் பெரும் சுழல்கள் அதில் ஏற்பட்டிருக்கின்றன. ப்ராந்தி யென்னும் குழம்பிய ஜலத்தில் இறங்கி, ஆசை யென்னும் நுண்மணலிற் புதைந்து போய், ரஜோ குணத்தின் வேகத்திலகப்பட்டு, சிலர் ஸ்வர்கப்ராப்தி விஷயமான கூச்சல் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஓரிடத்தில் மிக்க வேகமாக தமஸின் ப்ரவாஹம் ஓடுகிறது. மற்றோரிடத்தில் ஸத்வத்தால் ஏற்பட்ட ஓட்டமில்லாத மடுக்கள் காணப்படுகின்றன. இன்னும் வளர்ப்ப தேன்? இம்மாயாநதி தாண்டிப் போவதற்கு மிகவும் கடினமானது. பாராய், புநராவ்ருத்தி என்பதின் ப்ரவாஹம் ஸத்தியலோகத்தின் பெரிய கோட்டைகளைப் பெயர்த்து உருட்டிக் கொண்டு வருகிறது. அதின் வேகம் தாக்கி ப்ரஹ்மாண்டத்தின் பெரும பாறைகள் எல்லாம், கிடுகிடு வென்று குலுங்குகின்றன. அந்த ஜலத்தின் வேகம் தாக்கி, இதுவரைக்கும் ஒன்றும் நிலை பெற்று நின்றதில்லை. இப்படிப்பட்ட பயங்கரமான மாயாப்ரவாஹத்தை எவன் தாண்டிப் போக முடியும்?

ஜீவனுடைய ப்ரயத்நம் அநர்த்தத்தில் முடிகிறது :

இவ்விஷயத்தில் ஓர் ஆச்சர்யமல்லவா இருக்கிறது. தாண்டிப் போவதற்காக மனிதர்கள் எந்தெந்த உபாயங்களை அநுஷ்டிக்கிறார்களோ அவையே அபாயங்களாய் முடிகின்றன. அது எப்படி என்று சொல்வேன் கேள். ஒருவன் தன் ஸ்வபுத்தி என்னும் கைகளைக் கொண்டு இந்நதியை நீந்தித்

தாண்டிப்போகிறேன் என்று புறப்பட்டான். அவன் கதி என்ன ஆயிற்றோ. எவரும் அறியார், மற்றோருவன் சாஸ்த்ரஞானம் என்னும் மடுவில் விழுந்து, கர்வத்தால் விழுங்கப்பட்டுப் போனான். ஒருவன் மூன்று வேதங்கள் என்னும் சுரைக் கடுக்கைகளைக் துணையாகக்கொண்டு, இடுப்பில் அஹம்பாவம் என்னும் பெரும்பாறையைக் கட்டிக்கொண்டு, இதில் இறங்கி மாண்டு போனான்.

ஒருவன் யௌவனம் என்னும் பலத்தைக் கொண்டு மன்மதனுடைய கச்சத்தைப்பற்றிக் கொண்டு, தாண்டிப் போகலாம் என்று நினைத்து, இதில் இறங்கி, விஷயங்கள் என்னும் முதலைகளால் மென்று தின்னப்பட்டான். ஒருவன் மூப்படைந்தேன், ஆகையால் மிக்க அறிவுள்ளவனானேன், என்றெண்ணி, இதில் இறங்கி, புத்திதடுமாட்டம் என்னும் வலையில் அகப்பட்டு, ஒரு பக்கமும் போகமுடியாமற் சிக்கிப்போய், சோகம் என்னும் கற்பாறையில் மோதப்பட்டு, க்ரோதம் என்னும் சுழல்களினால் நீருக்குள் அழுத்தப்பட்டு, பின்பு, தலை வெளிப்பட்ட போதெல்லாம், ஆபத்துக்கள் என்னும் கழுகுகளால் கொத்தப்பட்டு, துக்கம் என்னும சேற்றால் பூசப்பெற்று, கடைசியில் மரணம் என்னும் மெல்லிய மணலில் புதைந்து போனான்.

இவ்விதம் ஆசையென்பதைத் துணையாய்க் கொண்டு, அவன் ஓர் விதமாய் பயன் படாமற் போனான். ஒருவன் யஞ்ஞகர்மங்கள் என்னும் பெட்டிகளை இடுப்பிற் கட்டிக்கொண்டு இறங்கி, ஸ்வர்க்கஸுகம் என்னும் ஓர் குஹையிற் புகுந்து, சிக்கிப்போனான், ஒருவன் மோக்ஷத்தை அடைய ஆசைப்பட்டு, கர்மயோகம் என்னும் கைகளின் மேல்மிக்க நம்பிக்கை வைத்து இறங்கி, விதிநிஷேதங்களாகிய சுழல்களிற் சிக்கித் திகைத்துப்போனான்.

இந்நதியில் வைராக்யம் என்னும் படகு ஓடாமல் இருப்பதாலும், விசாரம் என்னும் கயிற்றின் பற்று கிடைக்காமற் போவதாலும், இதைத்தாண்டிப் போவதென்பது மிகவும் அரிது. இந்த ஜீவன் தன்ஸாமார்த்யத்தைக் கொண்டு இந்நதியைத் தாண்டிப் போவதென்பது, அபத்யமான ஆஹாரங்களையே ஸேவிக்க வேண்டும் என்று நியமம் பூண்டவன், வ்யாதியை வென்றுவிடுதல் போலும், துர்ஜனர்களின் மோசக்கருத்துக்களை ஸாது அறிந்துகொள்வது போலும், விஷயஸுகத்தில் ஆசைப்பட்டவன் தன்னை ஸித்திகள் தாமே வந்தடையும் போது, "நீங்கள் வேண்டாம், திரும்பிப்போங்கள்," என்று சொல்வது போலும், திருடர்கள் ஸபையில் வந்து

உட்கார்வது போலும், மீன்கள் தூண்டி முள்ளை தொண்டையிற் சிக்காதபடி விழுங்கிவிடுவது போலும், பயந்தவன் பிசாசினின்றும தப்பித்துக்கொண்டு போவது போலும், வலையிற் சிக்கிப்போன மான்குட்டி அதை அறுத்துக் கொண்டு போவதுபோலும், ஓர் சிற்றெரும்பு மேருபர்வதத்தின் ஓர் பக்கத்தில் இருந்துகொண்டு, தன்காலைத் தூக்கி அம்மலையின் அப்புறம் வைத்து, அதைத்தாண்டிப் போவதுபோலும் இருக்கிறது. இவை யெல்லாம் ஸாதயமானால், ஜீவன் மாயையைத் தாண்டி அக்கரை போய்ச் சேர்வான். ஹே அர்ஜுநா காமியான புருஷன் ஒருவன் தான் ஆசைவைத்த ஸ்திரீயைத் தன் வசப்படுத்த முடியாதது போலும், ஜீவன் மாயாநதியைத் தாண்ட முடியாது.

ஸம்சாரத்தைத் தாண்டுவதற்கு உபாயம் :

ஆனால் எவன் ஸர்வவிதமாயும் என்னை பஜித்து நிற்பானோ, அவன் இதை அநாயஸமாகவே தாண்டி விடுவான். இக்கரையில் இருக்கும் போதே, அவனுக்கு இம்மாயை என்னும் நதி வற்றிப்போகிறது. அவன் ஸத்குருவை மாலுமியாக அடைந்து, அநுபவத்தின் கச்சையை இறுகக்கட்டிக் கொண்டு, ஆத்மஞானம் என்னும் தெப்பத்தில் உட்கார்ந்து கொண்டு, அஹம்பாவம் என்னும் சுமைமை இறக்கிவிட்டு, விகல்பம் என்னும் சுழற்காற்றைத் தப்பித்துக் கொண்டு, ஐக்யபத்தி யென்னும் இறங்கு துரையில் இறங்கி, ஞானம் என்னும் சுரைக்குடுக்கையை ஒத்தாசையாய்ப் பற்றிக் கொண்டு, சாந்தி என்னும் கைகளைக் கொண்டு ப்ரஹ்மாத்மைக்யாநு ஸந்தானம் என்னும் பலத்தின் ஹாயம் அடைந்து, நீந்திப் போய், ஓர் அபாயமுமின்றி மோக்ஷம் என்னும் அக்கரையில் ஏறி நிற்பான். இப்படி ஸயுக்திகமாய் மாயாநதியைத் தாண்ட முடியும். ஆனால் இப்படிச் செய்யக் கூடிய பக்தர்கள் கிடைப்பது மிகவும் அருமை.

न मां दुष्कृतिनो मूढाः प्रपद्यन्ते नराधमाः ।
माययापहृतज्ञाना आसुरं भावमाश्रिताः ।।१५ ।।
चतुर्विधा भजन्ते मां जनाः सुकृतिनोऽर्जुन ।
आर्तो जिज्ञासुरर्थार्थी ज्ञानी च भरतर्षभ ।।१६ ।।

ந மாம் துஷ்க்ருதினோ மூடாः ப்ரபத்யந்தே நராதமாः ।
மாயயாபஹ்ருத க்ஞானா ஆஸுரம் பாவமாஶ்ரிதாः ॥ 15

சதுர்விதா பஜந்தே மாம் ஜனா: ஸுக்ருதி நோஸ்ர்ஜுன ।
ஆர்தோ ஜிக்ஞாஸு ரர்தார்தீ க்ஞானீ ச பரதர்ஷப ॥ 16

இவ்வுலகில் சிலரே என்னை பஜித்து நன்மை பெறுகிறார்கள், அவர்கள் ஆர்த்தர்களென்றும், ஜிஞ்ஞாஸுக்களென்றும் அர்த்தார்த்திகளென்றும் ஞாநிகளென்றும் நால்வகைப் பட்டவர்கள் : இப்படி என்னை பஜியாமல், அநேகர்கள் அகங்காரம் என்னும் பிசாசு பிடித்தவர்களாய், ஆத்மஞாநத்தை அடையாமற் போகிறார்கள். அப்பிசாசு பிடித்தபின், அவர்கள், நியமம் என்னும் ஆடையை உடுத்திக்கொள்ள வேண்டுமென்பதின் ஞாபகமே அவர்களுக்கு இல்லாமற்போய், முன்வரப்போகிறதான அதோகதி விஷயத்தில் அவர்களுக்கு வெட்கம் தோற்றாமற் போய், வேதம் எதைச் செய்யக் கூடாதென்று நிஷேதிக்கிறதோ, அதையே செய்கிறார்கள்.

இந்த சரீரம் என்னும் ஊருக்கு வந்து எந்த லாபத்தை ஸம்பாதித்துக்கொள்ள வேண்டுமோ, அதை முற்றிலும் கைவிட்டு, இந்த்ரிய ப்ரதேசத்தின் ராஜவீதியில், காமக்ரோதம் முதலிய விகாரங்களுடன் உறவு பாராட்டிக் கொண்டு அகம்கார மமகார விஷயமான வார்த்தைகளையே பேசிக்கொண்டு, துக்கசோகங்களால் எவ்வளவு காயம் பட்டாலும், அதின் ஞாபகமே அற்றவர்களாய், சுருக்கிச் சொல்லப் போனால், கேவலம் மாயையால் விழுங்கப்பட்டவர்களாய், இருக்கிறார்கள். ஆகையால் நான் அவர்களுக்குக் கிடைக்காமற் போகிறேன் சிலர் மாத்ரம், நான்கு விதமாய், என்னை பஜித்து, தங்கள் நன்மையை வ்ருத்திசெய்து கொள்கிறார்கள். அவர்கள் ஆர்த்தர்களென்றும், துக்கத்தால் வருந்துகிறவர்கள் ஜிஞ்ஞாஸுக்கள் (ஞானமடைய விரும்புபவர்கள்) என்றும், அர்த்தார்த்திகள் (மேன்மேலும் செல்வப் பெருக்கை அடைய விரும்புபவர்கள்) என்றும், ஞாநிகளென்றும், (ஞானத்தைப் பெற்று ஆசை அற்றுப் போனவர்கள்) சொல்லப்படுவார்கள்.

तेषां ज्ञानी नित्ययुक्त एकभक्तिर्विशिष्यते ।
प्रियो हि ज्ञानिनोऽत्यर्थमहं स च मम प्रियः ॥१७॥

தேஷாம் க்ஞானி நித்யயுக்த ஏகபக்திர் விஶிஷ்யதே ।
ப்ரியோ ஹி க்ஞானிநோஸ்த்யர்தமஹம் ஸ ச மம ப்ரிய: ॥ 17

அவர்களுக்குள் ஞானியான பக்தனுடைய பெருமை :

அவர்களுக்குள், ஆர்த்தன் என்பவன் தன் துன்பத்தைத் தீர்த்துக் கொள்வதற்காகவும், ஜிஞ்ஞாஸு என்பவன் ஞானத்தை அடைய விரும்பியும், மூன்றாவதான அர்த்தார்த்தி ஸம்பத்தின் வ்ருத்தியைக் கோரியும், இப்படி மூவகைப்பட்டு என்னை பஜிக்கிறார்கள். ஆனால் நான்காவதவனான ஞாநி யென்பவன், அவனுக்கு இனி ஆகவேண்டியது ஒன்று மில்லாமல், என்மேல் அவனுக்கிருக்கும் கேவலப்ரேமையின் கார்யமாக, என்னை பஜிக்கிறான். ஆகையால் ஞானி என்ற ஒருவனே, என்னுடைய உண்மையான பக்தன்.

அவன் தன்னுடைய ஞானத்தின் ப்ரகாசத்தினால் பேதம் என்னும் இருட்டை நாசம்செய்து, என்னுடன் ஒன்றுப்பட்டுபோய், அதன் பின்னும் அவனுடைய பக்தியானது ஒருக்காலும் மாறாததாய் நிலைபெற்று நிற்கிறது. ஜலத்துக்குள்ளிருக்கும் ஸ்படிகம் ஜலமாகவே காணப்படுவது போல், ஞாநியும் இதரர்களுடைய கண்ணுக்கு ப்ரஹ்மம்போல் காணப்பட்ட போதிலும், அவனுடைய உண்மையான ஸ்திதி அநிர்வசநீயமாயிருக்கிறது. காற்று ஆகாசத்தில் கரைந்து போன பின், அது தன்னுடைய காற்றுத்தன்மையை இழந்து விடாமலே, ஆகாசத்துடன் ஒன்று பட்டிருப்பது போலும், ஞாநியானவன் ப்ரஹ்மத்துடன் கலந்த பின், பக்தன் என்னும ஸ்வரூபத்தை இழந்துபோவதில்லை. அசைத்துப் பார்க்கும்போது காற்று ஆகாசத்தைக்காட்டிலும் வேறாகத் தோன்றி, இயற்கையான ஸ்திதியில்அது ஆகாசமாகவே இருப்பதுபோலும், சரீரத்தின் சேர்க்கையாலும், கர்மங்களினாலும், அவன் பக்தனாய்க் காணப்பட்டாலும், அவன் தன்னுடைய உள்ளநுபவத்தால் நானாகவே இருக்கிறான்.

அவனுக்கு ஞானப்ரகாச மேற்பட்டிருப்பதினால், அவன் எப்படி என்னை அவனுடைய ஆத்மாவாகவே அறிகிறானோ, அப்படியே நானும், என்னுடைய ஆநந்தப்பெருக்கால், அவனை என்னுடைய அந்தராத்மா வென்று சொல்கிறேன். ஜீவஸ்வரூபத்தைத் தாண்டி நிற்கும் ஆத்மஸ்வரூபத்தை அடைந்தவனா யவனிருந்தும், வ்யவஹாரங்களை நடத்தி வைப்பதால், தேஹத்தால் என்னைக்காட்டிலும் வேறுபட்டவனாய்த் தோற்றுவான்; ஆயினும் உண்மையில்; அவன் எப்படி வேறுபட்டவனாவான்?

उदाराः सर्व एवैते ज्ञानी त्वात्मैव मे मतम् ।
आस्थितः स हि युक्तात्मा मामेवानुत्तमां गतिम् ।।१८।।

உதாராஃ ஸர்வ ஏவைதே க்ஞானீ த்வாத்மைவ மே மாதம்।
ஆஸ்திதஃ ஸஹி யுக்தாத்மா மாமேவாநுத்தமாம் கதிம்॥ 18

இதுவுமது :

ஆகையால் அவரவர் ஆசைப்பட்டதைப் பெற்றுக்கொள்வதற்காக, கண்டகண்டபக்தர்கள் என்னைத் தழுவிக் கொள்கிறார்கள். ஆனால் கேவல ப்ரியத்தின் கார்யமாய் என்னைத் தழுவிநிற்கும் பக்தன் ஞானி ஒருவனே. பாருங்கள் ச்ரோதாக்களே! பாலை விரும்பி உலகத்தார் பசுவை, அணைகயிறுகொண்டு அணைந்து அதைக் கறந்துகொள்கிறார்கள். ஆனால் அது அணைகயிறு இல்லாமலே அல்லவா, தன்னுடைய கன்றுக்குப் பாலைக் கொடுக்கிறது; ஏனென்றால் அந்த கன்று தேஹம் மனஸு ப்ராணன் என்னும் த்ரிகரணங்களாலும், அந்தப் பசுவைத்தவிர வேறொன்றையும் தனக்குத்துணையாக அறியாமல் இருப்பதுடன், அந்தப் பசுவைப் பார்த்த மாத்ரத்தில், இது என்னுடைய தாயென்று ப்ரேமை உடன் நெருங்குகிறதல்லவா. அந்தக் கன்று இம்மாதிரியாக வேறு கதி அற்றதாய் இருக்கிறதாகையால், தாயும், அந்தக் கன்றைத் தவிர, தனக்கு வேறு கதி இல்லையென்றிருக்கிறது. ஆகையால் லக்ஷ்மீபதியான க்ருஷ்ணன் சொன்ன துண்மையே. இது நிற்கட்டும், மேலே ஸ்ரீ க்ருஷ்ணன் சொன்னதைக் கேளுங்கள்.

உனக்கு நான் ஞாநி என்று சொன்னேனே, அவன் தான் எனக்கு மிகவும் வேண்டிய பக்தன். ஸமுத்திரத்தில்வந்து விழுந்த நதி திரும்பிப்போகாமல் நின்று விடுவது போலும், அந்த ஞானி என்னிடம் வந்து சேர்ந்த பிறகு, முன் நடந்தஸமாசாரம் அனைத்தையும் திரும்பிப் பார்க்கக்கூட மறந்து போகிறான். அவனுடைய அந்தக் கரணமாகிய குஹையினின்று புறப்பட்டு என்னிடம் வந்த மாத்ரத்தில், என்னுடன் ஒன்று பட்டுப்போகும் அவனுடைய அநுபவம் என்னும் கங்கையின் பெருமையை, எவ்வளவு தான் வர்ணித்தாலும், அநாவச்யமாய் விஸ்தரித்துச் சொன்னதாகுமா? இதையே வேறோர்வகையாய்ச் சொல்லப்புகுந்தால் ஞானியென்று சொல்லத்தக்கவன், என்னுடைய கேவல சைதந்யமே ஆகிறான். இதுவும் அவன்

விஷயத்திற் பொருந்துவதில்லை; ஆயினும், சொல்லாற் சொல்லக்கூடாத விஷயத்தைச் சொல்வேன் என்று தொடங்கின பின், அதை ஸரியாய்ச் சொல்லி முடிப்பதெப்படியமையும்.

बहूनां जन्मनामन्ते ज्ञानवान्मां प्रपद्यते ।
वासुदेवः सर्वमिति स महात्मा सुदुर्लभः ।।१९।।

பஹூனாம் ஜன்மனாமந்தே க்ஞானவான் மாம் ப்ரபத்யதே ।
வாஸுதேவ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப: ।। 19

ஞானி என்னும் பக்தன் மிகவும் அருமையானவன் :

எவன் விஷயம் என்னும் பெருத்த சாடியிற்கிடந்து, காமக்ரோதங்கள் என்னும் ஸங்கடங்களிற் சிக்கிப்போய், இவற்றினின்றும் எப்படியோ தப்பித்துக் கொண்டு, ஸத்வாஸனை யென்னும் மலையின்மேலேறி, ஸாதுக்களுடன் சேர்ந்து, ஸத்கர்மாநுஷ்டானம் என்னும் வழியைப் பிடித்துக்கொண்டு, நிஷித்த கர்மாசரணம் என்னும் தப்பு வழிகளிற் புகாமல், நூற்றுக்கணக்கான ஜந்மங்கள் தோறும், பலனில் ஆசை பாரட்டுதல் என்னும் பாதரக்ஷையைப் போட்டுக் கொள்ளாமல், நிஷ்காமனை யென்னும் வெறும் காலோடு நடப்பதை, அப்யாஸம் செய்துவருவானோ, அவன் எந்த கர்மம் செய்தாலும், அதின் பலன் என்ன வென்று விசாரித்துப் பார்ப்பானா? அப்படியே சரீரத்தோடு சேர்ந்திருத்தல் என்னு மிரவெல்லாம், அவன் ஒண்டியாய் (சுற்றத்தார் விஷயமான பற்றற்றவனாய்) வழிநடந்து வந்து கொண்டிருக்க, முடிவில் அவனுக்கு காமக்ஷயம் என்னும் கிழக்கு வெளுத்தல் உண்டாய், பின்பு குருக்ருபை என்னும் அருணோதயம் ஏற்பட்டு, ஞானம் என்னும் இளம் வெய்யிலின் ப்ரகாசத்தால், எங்கு பார்த்தாலும் ஒரே விதமாய் நிறைந்து கிடக்கும் ஆத்மஸ்வரூபம் என்னும் நிதி, அவன் கண்ணுக்கு மறைவின்றி தோன்றி நிற்கும்.

அப்போது எந்தப் பக்கம் அவன் பார்த்தாலும், அங்கெல்லாம் நானே இருக்கிறதாக அவன் பார்ப்பான். அவன் எதுவும் செய்யாது ஸ்வஸ்தமாயிருந்த போதிலும். நானே அவன் அநுபவத்திற் றோன்றி நிற்பேன். ஓர் மடுவில் முழுகிப்போன, ஓர் குடத்துக்கு உள்ளும் புறமும் ஜலமே நிறைந்திருப்பது போலும், அவன் எனக்குள் முழுகிக்கிடந்து, அவனுக்கு எவ்விடத்திலும் என்னைத் தவிர வேறொன்றும்

தென்படாது. அப்படியே அவன் எனக்குள்ளிருந்து, அவன் உள்ளும் புறமும் நான் நிறைந்திருப்பேன். இது வார்த்தையைக் கொண்டு சொல்லத்தக்கதாய் இல்லை.

ஆகையால் இவ்விஷயத்தை இன்னும் விவரிக்க வேண்டாம். அவன் எங்கு பார்த்தாலும், ஞானத்தின் பண்டக சாலையே அவன் கண்ணுக்குத் தென்பட்டு, அந்த ஞானத்தைக்கொண்டு விச்வத்தைத் தன்னதாகச் செய்து கொள்வான். த்ருச்யஜாத மனைத்தும் ஸ்ரீவாஸுதேவனே என்னும் அநுபவரஸம் தோய்ந்து கட்டிப்போனது போல், அவனுடைய மனஸின் நிலை ஆய்விடுவதால், அவனே பக்தர்களுக்குள்ளே அரசன், அவனே ஞாநி. இப்படி எவனுடைய அநுபவம் என்னும் பாண்டாரத்தில், சராசரம் அனைத்தும் அடங்கிப்போகுமோ, அந்த மஹாத்மா கிடைப்பது மிக்கவும் அரிது, அர்ஜுநா. அவ்வகைப்படாமல் ஆசை யென்னும் இருட்டிற் கிடந்து, (பார்வை கெட்டுப்போய்) த்ருஷ்டி மாலின்யத்தை அடைந்து, விஷய போகத்தை அடைய விரும்பி, என்னைப் பஜிப்பவர்களான பக்தர்கள், ஏராளமாய்க் கிடைப்பார்கள்.

कामैस्तैस्तैर्हृतज्ञानाः प्रपद्यन्तेऽन्यदेवताः ।
तं तं नियममास्थाय प्रकृत्या नियताः स्वया ।। २० ।।

காமைஸ் தைஸ்தை: ஹ்ருத க்ஞானா: ப்ரபத்யந்தே ऽந்யதேவதா: ।
தம் தம் நியம மாஸ்தாய ப்ரக்ருத்யா நியதா: ஸ்வயா ।। 20

காமத்தொடு பஜிக்கு மவர்கள் பஜனையின் ப்ரகாரம் :

மேலும் அவர்கள் பலனில் ஆசைவைத்ததால், அவர்கள் ஹ்ருதயத்தில் காமம் என்பது நுழைந்து, அதின் வேகத்தால் ஞானம் என்னும் தீப மணைந்து போகிறது. இப்படி உள்ளும் புறமும் இருட்டு மூடிக்கொண்டபின், ஸமீபத்திலேயே இருக்கும் என்னைப் பார்க் காதவர்களாய், தங்களுக்குள்ள ச்ரத்தை முழுவதையும் கொண்டு அந்ய தெய்வங்களை ஆராதிக்கத் தலைப்படுகிறார்கள். முன்பே ப்ரக்ருதிக்கு வசப்பட்டவர்கள்; அத்துடன் கூட ஆசையினால் தீநர்களானார்கள்; பின்பு பலனில் ஆசையை மனஸிற் பாராட்டியவர்களாய், அவர்கள் செய்யும் பஜனை எவ்வளவு வேடிக்கையாயிருக்கிறது, பார். அவர்கள் அநுஷ்டிக்கும் நியமம் என்ன! உபசார ஸாமக்ரியைகளின் நிறைவு என்ன! அவர்கள் அவற்றைக் கொண்டு அத்தெய்வங்களை த்ருப்தி செய்து

வைக்கும் வகைகளின் நிபந்தனைகளென்ன! இவை அனைத்தும் மிக்க ஆச்சர்யமாயிருக்கும்

यो यो यां यां तनुं भक्तः श्रद्धयार्चितुमिच्छति ।
तस्य तस्याचलां श्रद्धां तामेव विदधाम्यहम् ।। २१ ।।

யோ யோ யாம் யாம் தநும் பக்த ஶ்ரத்தயார்சிதுமிச்சதி।
தஸ்ய தஸ்யாசலாம் ஶ்ரத்தாம் தாமேவ வித தாம்யஹம் ॥ 21

இதுவுமது :

நன்றாய்ப் பாராய். எவன் எத்தெய்வத்தை ஆராதிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறானோ, அவனுடைய அந்த ஆசையை, அனைவருடைய ஆசையையும் பூர்ணம் செய்து வைக்கும் நானே, பூர்ணம் செய்து வைக்கிறேன். அவர்கள் ஆராதிக்கத்தலைப்பட்ட தேவனோ தேவியோ, நானே ஆனாலும், அது அவர்களுக்குத் தெரியவராமல், அத்தெய்வங்களை வேறு வேறாக நினைக்கிறார்கள்.

स तया श्रद्धया युक्तस्तस्याराधनमीहते ।
लभते च ततः कामान्मयैवविहितान्हि तान् ।। २२ ।।

ஸ தயா ஶ்ரத்தயா யுக்தஸ் தஸ்யாராதன மீஹதே।
லபதே ச தத: காமான் மயைவ விஹிதான் ஹிதான் ॥ 22

அவ்வாராதானத்துக்குப் பலன் கொடுக்கிறவன் நானே :

பின்பு அந்த ச்ரத்தையுடன் கூடினவர்களாய், எதெதை அநுஷ்டிக்க வேண்டுமோ, அததை தங்கள் மனோரதம் பூர்ணமாகும் வரைக்கும் அநுஷ்டித்து வருகிறார்கள். இப்படி அவரவர்கள் ஆசைப்பட்டதை அவரவர்கள் அடைகிறார்கள். ஆனால் அந்த பலன்கள், அனைத்தும், என்னாலேயே கொடுக்கப்படுகின்றன.

अन्तवत्तु फलं तेषां तद्भवत्यल्पमेधसाम् ।
देवान्देवयजो यान्ति मद्भक्ता यान्ति मामपि ।। २३ ।।

அந்த வத்து பலம் தேஷாம் தத்பவத்யல்ப மேதஸாம்।
தேவான் தேவ யஜோ யாந்தி மத்பக்தா யாந்தி மாமபி ॥ 23

அந்யதேவதா பஜனையின் பலன் அநித்யம், ஈச்வர பஜனையின் பலன் நித்யமான ஈச்வரனோடு ஐக்யப்படல் :

ஆனால் அந்த அந்ய தேவதாபக்தர்கள் என்னை அறிந்து கொள்வதில்லை. அவர்கள், தாங்கள் கல்பித்துக்கொண்டதை விட்டு, வெளிப்படுவதில்லை என்னும் காரணத்தைக்கொண்டு, மனஸினால் கல்பிக்கப்பட்டதாயும், உண்மையான ஸத்தை இல்லாததாயும், முடிவு பெற்றதாயும், இருக்கும் ஓர் பலனையே அடைகிறார்கள். இதை வளர்த்திச் சொல்வதென்? இப்படிப்பட்ட அந்யதேவர் பஜனை ஸம்ஸாரத்துக்கே ஸாதனம் ஆகிறது. அன்றியும் அப்பக்தர்களுடைய புலபோகமும், ஸ்வப்நத்தைப் போல்ஓர்நிமிஷம் தோன்றி, மறு நிமிஷத்தில் மறைந்துபோகிறது. இதை ஓர் பக்கம் கட்டிவைப்போம். எந்த தேவதைகளை பிரியத்துடன் எவர்கள் ஆராதிக்கிறார்களோ, அவர்கள் அந்த தேவதைகளின் பதவியை அடைகிறார்கள். அப்படி அந்யதேவதைகளை பஜிக்காமல், எவர்கள் என்னை பஜித்து, என்னை அநுஸரித்து நிற்பதில், தங்களுடைய தேஹம், மனஸு, ப்ராணன், இவ்வனைத்தையும் செலவிடு வார்களோ, அவர்கள் இந்த தேஹத்தை விட்டபின், என்னுடன் ஒன்றுபட்டுப் போகிறார்கள்.

अव्यक्तं व्यक्तिमापन्नं मन्यन्ते मामबुद्धयः ।
परं भावमजानन्तो ममाव्ययमनुत्तमम् ।।२४।।

அவ்யக்தம் வ்யக்திமா பன்னம் மன்யந்தே மாம புத்தயः ।
பரம் பாவ மஜாநந்தோ மமாவ்யய மநு த்தமம் ॥ 24

ஜீவஸாமந்யர்கள் என்னுடைய ஸ்வரூபத்தில் முழுகிக் கிடந்தும், என்னை அநுபவியாது, வேறுபலன்களை வேண்டி அநர்த்தப்படுகிறார்கள் :

ஆனால் ப்ராணிஸாமன்யர்கள்அப்படிச்செய்வதில்லை. உள்ளங்கையில் அடங்கிய ஜலத்தில் நீந்துவது போலும், க்ஷுத்ரதெய்வங்களை ஆராதித்து, ஓர்ப்ரயோஜநமுமின்றி, தங்கள் நன்மையைத் தாங்களே போக்கிக்கொள்கிறார்கள். இவர்கள் அம்ருதக்கடலில் முழுகிக்கிடந்தும், தங்கள் வாயை இறுகமூடிக்கொண்டு, மனஸினால் உப்புக்குட்டையை த்யானித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அம்ருதத்தைப் புசித்து, அம்ருதமாகவே ஆய்விட்டு, அம்ருதத்தின் நடுவில்

கிடந்திருப்பதைக் கைவிட்டு, அம்ருதத்துக்குள்ளிருந்தும், என்னத்துக்காக மரித்துப்போக வேண்டுமோ?

அப்படி பலனில் ஆசை என்னும் கூட்டில் அடைபட்டுக்கிடப்பதை ஒழித்துக்கொண்டு, ப்ரஹ்மானுபவம் என்னும் இரக்கையைக் கொண்டு ஞானாகாசத்தின் அரசனாய் ஏன் வாழக் கூடாதோ? அந்த ஞான ஆகாசத்தில் உத்தமமான பெருமை அடைந்து, மேன்மேலும் பெருகிக்கொண்டிருக்கும் ஸுகானுபவத்துடன், தன்னிஷ்டப்ரகாரம் பறந்து கொண்டிருக்கலாமே! அளவில்லாததான என் ஸ்வரூபத்திற்கு என்னத்துக்காக அளவு ஏற்படுத்தி வைக்க வேண்டுமோ? அவ்யக்தனான என்னை என்னத்துக்காக வ்யக்தனாய்ப் பாவிக்க வேண்டுமோ? நான் எப்போதும் ஸித்தமாயிருக்கும்போது, என்னத்துக்காக, ஸாதநா நுஷ்டானம் செய்து கஷ்டப்பட்டு, கடைசியாக மரித்துப் போக வேண்டும்? ஆனால் விசாரித்துப்பார்க்கும் போது, ஹே அர்ஜுனா, இத்தனை வார்த்தையும் ஜீவர்களுக்குப் பெரும்பாலும் ருசிப்பதில்லை.

नाहं प्रकाशः सर्वस्य योगमायासमावृतः ।
मूढोऽयं नाभिजानाति लोको मामजमव्ययम् ।।२५।।

நாஹம் ப்ரகாஶ: ஸர்வஸ்ய யோக மாயா ஸமாவ்ருத: ।
மூடோ ஸ்யம் நாபிஜாநாதி லோகோ மாமஜமவ்யயம் ॥ 25

ஜீவர்கள் என்னை அறியாததற்குக் காரணம் :

என்னுடைய யோகமாயை என்னும் திரை குறுக்கிட்டிருப்பதால், அவர்கள் பார்வை யற்றுப்போனவர்களாய், தேஜோரூபியா யிருக்கும் என்னை அவர்கள் பார்ப்பதில்லை. ரஸமில்லாமல் ஓர் ஜலமும் இல்லாதது போல், ஸ்வபாவத்தில் நான் இல்லை என்னும்படியாய், ஓர் வஸ்துவும் இல்லை. காற்று எவர்கள்மேல் படாமல் இருக்கிறது? எந்த இடத்தில் ஆகாசம் இல்லை? இதெல்லாம் நிற்கட்டும்; விச்வம் முழுவதிலும் வேறு வஸ்து இல்லை என்னும் படியாயல்லவோ, எங்கும் நான் நிறைந்திருக்கிறேன்.

वेदाहं समतीतानि वर्तमानानि चार्जुन ।
भविष्याणि च भूतानि मां तु वेद न कश्चन ।।२६।।

வேதாஹம் ஸமதீதானி வர்தமானானி சார்ஜுன ।
பவிஷ்யாணி ச பூதானி மாம் து வேத ந கஶ்சன ॥ 26

இப்படி நான் ஸர்வ வ்யாபகனாயிருக்க, ஜீவர்கள் என்னை அறிவதில்லை :

இந்த விச்வத்தில் முன்னிருந்து இறந்து போன பூதங்கள் அனைத்தும், நானாகவே இருந்தன; அன்றியும் இப்போது இருக்கும் அனைத்தும் நானே, இனி உண்டாகப் போகின்றவையும் என்னைத்தவிர வேறானவை அல்ல. ஆனால் இருந்து போனது, உண்டாகப்போகிறது, என்று சொல்வது உண்மை இல்லாத வெறும் வார்த்தையே; ஏனென்றால் ஒன்றும் உண்டாவது மில்லை, அழிந்து போவது மில்லை. பாம்பாகத்தோன்றியது பழுதை என்று ஏற்பட்டபின், ப்ராந்தியினால் முன் தோன்றிய பாம்பானது, விரியனாய் இருந்ததா? நல்லபாம்பாயிருந்ததா? என்றிப்படி விசாரித்துக்கொண்டு காலத்தைப்போக்குவதில் பயன் என்ன? அப்படியே ப்ராணி ஜாதங்கள் முழுமையும் மித்யாபூதங்களான பின், அவை விஷயத்தில், உண்டானவை அழிந்து போனவை, யென்று வ்யவஹரிப்பதிற் பயன் இல்லை. இப்படி நான் எப்போதும் ஸர்வத்தையும் வ்யாபித்திருந்தும், ப்ராணிகள் மாத்ரம் ஸம்ஸாரத்தில் விழுந்திருப்பதற்குக் காரணம் வேறு. அதைக்கொஞ்சம் வார்த்தைகளால் விளங்கச் செய்வேன், கேள்.

इच्छाद्वेषसमुत्थेन द्वन्द्वमोहेन भारत ।
सर्वभूतानि सम्मोहं सर्गे यान्ति परन्तप ॥२७॥

இச்சாத்வேஷ: ஸத்தேன த்வந்த்வ மோஹேன பாரத ।
ஸர்வபூதானி ஸ ம்மோஹம் ஸர்கே யாந்தி பரந்தப ॥ 27

இதுவுமது :

எப்போது அஹம்காரத்துக்கும் சரீரத்துக்கும நடுவில் நேசம் ஏற்பட்டதோ, அப்போது இச்சை என்னும பெண்பிறந்து, பின்பு தாருண்ய பாவத்தை அடைந்து, அவள் த்வேஷத்தோடு மணம்புரிகிறாள். பின்பு அவர்களிருவருக்கும், புத்ரனாக த்வந்த்வமோஹம் என்பவன் பிறந்து, பாட்டனாகிய அகங்காரத்தினால் வளர்க்கப்பட்டு, அவன் தைர்யம் என்பதோடு விரோதம் பாராட்டிக்கொண்டு, ஆசை என்னும் ரஸத்தை உண்டு தொந்தி தள்ளிப் பெருத்துப் போய், நியமத்தின் கைக்கு அகப்படாமற் போகிறான்.

அஸந்துஷ்டி என்னும் கள்ளை உட்கொண்டு, புத்தி மயங்கி, வெறி பிடித்தவனாய், விஷயம் என்னும் நடு வீட்டில் ஸதா வஸித்துக் கொண்டிருக்கிறான். அவன் பாவசுத்தி என்னும் மார்க்கத்தில், விகல்பம் என்னும் முட்களைப்பரப்பி வைத்து, பின்பு நிஷேதிக்கப்பட்ட கர்மங்கள் என்னும் கிளைவழிகளை ஸித்தம் செய்து வைக்கிறான். இந்தக் கிளைவழியில் பூதராசிகள் சென்று, வழிக்கெட்டுப்போய், ஸம்ஸாரம் என்னும் காட்டிற்புகுந்து திகைத்துப் போய், மஹாதுக்கங்கள் என்னும் பாரத்தைத் தாங்கியவர்களாய் நசுக்கப்படுகிறார்கள்.

येषां त्वन्तगतं पापं जनानां पुण्यकर्मणाम् ।
ते द्वन्द्वमोहनिर्मुक्ता भजन्ते मां दृढव्रताः ।। २८ ।।

யேஷாம் த்வந்த்வ கதம் பாபம் ஜனானாம் புண்ய கர்மணாம்।
தே த்வந்த்வ மோஹ நிர்முக்தா பஜந்தே மாம் த்ருட வ்ரதா: ॥ 28

ஸம்ஸாரத்தைவிட்டு என்னை யடையும் வழி :

இப்படி ஜீவர்களை வீண்படுத்திவைக்கும் விகல்பம் என்னும் கூர்மை பொருந்திய முட்களைக் கண்டு, மதிப்ரமம் என்னும் வலையிற் சிக்கிப்போகாமல், நேராக ஏகநிஷ்டை என்னும் அடியை வைத்து, அம்முட்களை காலின் கீழ் தேய்த்து விட்டு, மகாபாதகம் என்னும் காட்டை ஒதுக்கி வைத்துப்போகிறவர்கள் எவர்களோ, அவர்கள் புண்யம் என்னும் மார்க்கதைப் பற்றி, விரைவாய் நடந்து, என் ஸமீபம் வந்து சேர்ந்து, த்வந்த்வமோஹம் என்னும் வழிக்கொலைகாரன் கைக்கு அகப்படாமல், தப்பித்துக் கொள்கிறார்கள்.

जरामरणमोक्षाय मामाश्रित्य यतन्ति ये ।
ते ब्रह्म तद्विदुः कृत्स्नमध्यात्मं कर्म चाखिलम् ।। २९ ।।

ஜரா மரண மோக்ஷாய மாமாச்ரித்ய யதந்தி யே।
தே ப்ரஹ்ம தத்விது: க்ருத்ஸ்ந மத்யாத்மம் கர்ம சாகிலம் ॥ 29

ஜந்மமரண மற்றுப்போகக் கருதி, பகவானை உபாயமாகப் பற்றி முயற்சி செய்கிறவர்கள், கொஞ்சகாலத்தில் பரப்ரஹ்மமாய் விடுகிறார்கள் :

ஜந்மத்தின் வார்த்தையே அற்றுப்போவதற்கு வேண்டிய ப்ரயத்நத்தைச் செய்ய வேண்டுமென்று ஆசை எவர்க்கு

உண்டாயிற்றோ, அவர்கள் அவ்விஷயமாய்ச் செய்யும் முயற்சியாலேயே கொஞ்சகாலத்தில், பூர்ணமான பரப்பரஹ்ம மென்னும் ஒழுக்கத்தை அடைந்து அப்பழம் முற்றிலும் பக்வமானபின், ப்ரஹ்மாநந்தம் என்னும் ரஸம் அதினின்றும் பெருகத்தலைப்பட்டு, அவர்களுக்கு ஜகத்தி லனைவரும் க்ருதக்ருத்யர் களாய்விட்டதாய் தோற்றிப்போவார்கள். பின்பு அவர்களுக்கு அத்யாத்ம விஷயமான புதுமை மாறிபோய், கர்மத்தின் வேலை முடிந்துபோய், மனது சாந்தி அடைந்துவிடுகிறது. இப்படிப்பட்ட அத்யாத்ம லாபம் ஒருவன் அடைய வேண்டுமானால், அவன் தான் செய்யும் முயற்சியில், என்னையே கைமுதலாகப் பற்றிநிற்கவேண்டும். அவனுக்கு ஸமபாவத்தின் பெருக்கும், ஐக்யபாவத்தின் பெருத்த வ்யவஸாயமும் மேன்மேலும் வ்ருத்தியடைந்து, பேதத்ருஷ்டி யென்னும் ஏழைச்சேரி பார்க்கக் கிடைக்காமற் போகும்.

साधिभूताधिदैवं मां साधियज्ञं च ये विदुः ।
प्रयाणकालेऽपि च मां ते विदुर्युक्तचेतसः ।। ३० ।।

ஸாதி பூதாதி தைவம் மாம் ஸாதி யக்ஞம் ச யே விது: ।
ப்ரயாணகாலேऽபி ச மாம் தே விதுர் யுக்த சேதஸ: ।। 30

அந்தக்கரண யுக்தயோகியின் லக்ஷணம் :

எவர்கள் அதிபூதத்தோடு கூடிய என்னை அநுபவம் என்னும் கையில் ஏந்திக்கொண்டு, என்னுடைய அதிதைவபாவத்தை ஸ்பர்சித்து, தங்கள் ஞானத்தின் பலத்தால் அதியஞ்ஞமாயிருக்கும் என்னைக் கண்ணாற் காண்பார்களோ, அவர்கள் தேஹத்தை விட்டுப் பிரிந்து போகுங்காலத்தில், துக்க மடைவதில்லை. பெரும்பாலும் ஆயஸ்ஸு என்னும கயிறு தெறித்துப்போகும் காலத்தில், பஞ்சபூதங்கள் மிக்க கலங்கிப் போய் தடபடல் படுவதை, சாகாமற் பார்த்துக் கொண்டிருக்கிறவர்கள் கூட யுகாந்தம் நேர்ந்ததாய் எண்ணும்படி இருக்கும் (இது எப்படி நேரிடுகிறதோ தெரியவில்லை.) என்னை இவ்விதமறிந்து, என்னோடு ஒட்டிக்கொள்கிறவர்கள், தேஹத்தை விட்டு வெளிப்படும் தடபடலிற்கூட, என்னை நழுவவிடுவதில்லை. இப்படிப்பட்ட ஸாமர்த்ய முள்ளவர்கள் எவர்களோ, அவர்களே அந்தக்கரண யுக்தயோகிகளாவார்கள்.

மேல்வரும் அத்யாயத்தின் முதலில் அர்ஜுனன் செய்யப்போகும் ப்ரச்நத்துக் கவதாரிகை :

அப்போது (ஸ்ரீ க்ருஷ்ணன் 29வது, 30வது ச்லோக விஷயங்களைச் சொன்ன போது) ஸ்ரீ கிருஷ்ணனுடைய

வசனமாகிய குப்பியினின்று வெளிப்படும் அர்த்தம் என்னும் ரஸத்தை ஏந்திக்கொள்ளும்படி, அர்ஜுநனுடைய கவனம் என்னும் கை கொண்டு வரப்படாமல், அது பின் தங்கி நின்று, ப்ரஹ்மஸ்வரூப ப்ரதிபாதகமான ஸ்ரீக்ருஷ்ணனுடைய வாக்யங்கள் (ப்ரஹ்மஸ்வரூபத்தைத் தெரிவிப்பவையான) என்னும் பழங்கள் அநேகவிதமான ரஸங்கள் நிறைவுபெற்றிருப்பதையும், அர்த்தங்கள் என்னும் உத்தம வாஸனையை பரவச் செய்துகொண்டிருப்பதையுங் கண்டு, அவற்றையே (29வது ச்லோகத்துக்கு முற்பட்ட ச்லோக விஷயமானவை) மேன்மேலும் விசாரித்துக் கொண்டிருந்தது. அச்சமயத்தில், அவ்யாஜகருணை யென்னும் மந்தமாருதம் வீசி, ஸ்ரீகிருஷ்ணன் என்னும் வ்ருக்ஷத்தினின்று, அவர் கடைசியில் சொன்ன வாக்யங்கள் (29, 30வது ச்லோகங்கள்) என்னும் பழங்கள், அர்ஜுநனுடைய காதென்னும மடியில் உதிர்ந்து விழுந்தன.

அவைகளைப் பார்க்கும்போது, அவைகள் ஸித்தாந்த ஞானத்தாற் செய்யப்பட்டு, ப்ரஹ்மரஸம் என்னும் ஸமுத்திரத்தில். ஊரவைக்கப்பட்டு, பரமாநந்தம் என்னும் சர்க்கரையால் மேலெல்லாம் பூசிவைக்கப்பட்டிருக் கின்றனவோ, என்று எண்ணத்தக்கவையாயிருந்தன. அப்படி மாசற்று அழகாய்த்தோன்றும்அவைகளை, அர்ஜுனன் பார்த்து, அவைகளிலடங்கியிருக்கும் ஞானத்தில் ஆசைப்பட்டு, அந்த ஞானத்தை அடைவதற்கு யத்தனிக்காமலேயே, அந்த ஞாநத்தை அடைந்த பின் அநுபவிக்கக்கூடிய ஸுகம் எவ்வளவோ அருமையாயிருக்குமே என்று வியப்புற்று, அவ்வியப்பையே கவளம் கவளமாய் உருட்டித்தின்று கொண்டே, கொஞ்சம் நேரம் நின்று, ஸ்வர்க்கவாஸிகளின் ஸுகத்தை துச்சமாக நினைத்து,. அவர்களுக்குக் கெக்கலி காண்பிக்க ஸித்தனாய், மிக்க ஆநந்தப்பூரிப்படைந்தான்.

இப்படி மேலழகைப் பார்த்து ஆநந்தமடைந்தபின், அப்பழங்களின் உள்ரஸத்தை சுவைத்து ஸுகிக்க வேண்டும் என்று, அவனுக்கு அடக்கமுடியாத ஆசை உண்டாயிற்று. பின்பு காலதாமஸமின்றி, அவ்வாக்யங்கள் என்னும் பழங்களை அநுமானம் என்னும் கையாலெடுத்து, அநுபவம் என்னும் வாயில் அவன் ஒரே தடவையாய்ப் போட்டுக் கொள்ளஆரம்பித்தான். அப்போத விசாரம் என்னும்நாக்கைக் கொண்டு அவற்றின் சுவையைஅறிய முடியாமலும், ஹேதுவிசாரம் என்னும பற்களைக்கொண்டு அவற்றைக்கடிக்க முடியாமலும், அர்ஜுனன் அவற்றின்ரஸத்தைக்

கொஞ்சமேனும் புரியாதவனாய், மிக்க ஆச்சர்யப்பட்டு, தனக்குத்தானே பின்வருமாறு சொல்லிக் கொண்டான். "ஜலத்திற் றோன்றும் நக்ஷத்ரங்களின் ப்ரதிபிம்பத்தைப் பார்த்து, அவை முத்துக்கள் என்றெண்ணி ஏமாந்து போனது போல், இவ்வக்ஷரங்களின் வெளி யழகைப்பார்த்து நான் ஏமாந்துபோனேன். இவை அக்ஷரங்கள் சேர்ந்து ஏற்பட்ட பதங்களாயிராமல், ஆகாசத்தைக்கொண்டு ஏற்படுத்தி வைக்கப்பட்ட எவையோ ஆகும். இவற்றில் என்புத்தி முழுகிப்போய், ஆழம் காணவில்லை; பின்பு இவற்றின் அர்த்தத்தைத் தெரிந்துகொள்ள எப்படி முடியும்? இவ்விதம் அவ்வீரன்ஆலோசித்துப் பார்த்து, திரும்பவும் ஸ்ரீக்ருஷ்ணனைப் பார்த்துப் பின்வருமாறு வினவத் தொடங்கினான்.

அர்ஜுனனுடைய ப்ரச்நம் :

ஐயா ஸ்ரீ கிருஷ்ணா இதைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும். இப்போது சொன்ன ஓர் விஷயத்தில், நீர் ப்ரயோகித்த ஏழுபதங்கள், முற்றிலும் புதுமையாயிருக்கின்றன. ச்ரோதாவின் அவதானத்தின் சேர்க்கை யில்லாமலே, அவன் காதில் சப்தங்கள் விழுகின்றன என்ற ஒன்றின் உதவியைக் கொண்டே, ஞானத்தைப் பற்றிய பல விஷயங்களை விவரித்துச் சொல்வதால், அவனுக்கு அவற்றை விளங்கச் செய்வது முடியுமா? அத்துடனேயும், உம்முடைய முகத்தினின்று வெளிப்படும் அக்ஷரங்களினது சேர்க்கையால் ஏற்படும் வாக்யங்களைப் பார்த்து, ஆச்சர்ய மென்னும் தேவதையே ஆச்சர்ய மடைந்து திகைத்துப் போகிறாள். காதென்னும் பலகணி வழியாய், சப்தார்த்தங்க ளென்னும் கிரணங்கள், உள்ளே நுழைய முடியாமல் வெளி நின்று விடுகின்றன. ஆகையால் அந்தப் பதங்களின் அர்த்தத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்னுமாசை மிக்க வலுத்து, நீர் அப்பதங்களின் அர்த்தத்தை விவரித்துச் சொல்வதற்கு வேண்டியதான காலவிளம்பத்தைக் கூட ஸஹியாததாயிருக்கிறது. ஆகையால் ஹே தேவா; அவற்றின் அர்த்தங்களைத் தாமஸமின்றி விவரமாய் நிரூபித்துக் காட்டல் வேண்டும்.

இப்பிரச்நத்தின் நேர்மை :

இப்படி முன்நடந்த ஸம்வாதத்தைத் திரும்பவும் விசாரம் செய்து நன்றாய்அறிந்து கொண்டபின், மேல் நடக்க வேண்டிய ஸம்வாதத்தைக் கேட்கக் கருதி, இவ்விரு ஸம்வாதத்தின் நடுவில் தன்னுடைய விவிதிஷையை (கேட்டறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை) அர்ஜுனன் திணித்து வைத்தான்,

பாருங்கள்! எவ்வளவு ஸாமர்த்யமாய் அர்ஜுநன் ப்ரச்நம் செய்தான்! ஸ்ரீகுருநாதனைக் கேட்டொரு விஷயம் அறிந்து கொள்ள வேண்டுமானால், எவ்வளவு ஜாக்ரதையாய்க் கேட்க வேண்டும், என்பதை ஸவ்யஸாச்சி (இடது கையாற் காண்டிவத்தின் நாணை இழுத்து, பாணப்ரயோகம் செய்யும் ஸாமர்த்ய முள்ளவன்; அர்ஜுநன்) ஒருவனே அறிவான்.

மேல்வரும் அத்யாய விஷயத்தி னவதாரிகை :

இனி அர்ஜுநன் ஸ்ரீ கிருஷ்ணனிடத்திற் செய்த ப்ரச்நத்தையும், அதற்கு ஸர்வஜ்ஞனான ஸ்ரீ கிருஷ்ணன் கொடுத்த உத்தரத்தையும் ஸஞ்சயன் மிக்க ப்ரேமையுடன் வர்ணிக்கப் போகிறான். அதையே யாவருமறியும்படி, நான் மஹாராஷ்டிர பாஷையாற் சொல்வேன்.

ஞானதேவர் தன் வர்ணனையின் பெருமையை யெடுத்துக்காட்டி ச்ரோதாக்களை ப்ரோத்ஸாஹப்படுத்தல் :

(மாம்ஸத்தால் ஏற்பட்ட காதில் சப்தம் விழுவதற்கு முன்னமே, உள்ளறிவு என்னும் கண் வாக்யார்த்தத்தைத் தெரிந்து கொள்ளுமாறு) காதுக்கு முன்பாகவே கண்பயன் படும்படி, நான் சொல்லப் போகும் விஷயத்துக்கு, உங்கள் கவனத்தைக் கொடுக்க வேண்டும். புத்தி யென்னும் நாக்கு என் வார்த்தைகளின் ரஸத்தை ஸேவிப்பதற்கு முன்பே, அவ்வார்த்தைகளின் அழகுகளுக்கு இந்த்ரியங்கள் வசப்பட்டுப் போக வேண்டும். பாருங்கள், மாலதி மொக்குகள் மூக்குக்கு ஸுகம் கொடுப்பதற்காகவே ஏற்பட்டனவே யாயினும், அவை தங்கள் வடிவழகை முன் காட்டி, கண்ணுக்கானந்தம் கொடுப்பதில்லையா? அப்படியே ப்ராக்ருதமான மஹாராஷ்டிர பாஷையின் அழகுகளால், இந்த்ரியங்கள் தங்கள் தங்கள் ஸுகங்கள் நிறைந்த ஓர் இராஜ்யத்தில் முடிசூட்டப் பெற்றவையாய் ஆநந்தப்பட்டுக் கொண்டிருந்தால், புத்தியானது ஞானத்தின் ஊரில் நன்றாய் பிரவேசிப்பதற்கு, ஓர் இடையூரும் ஏற்படாது. எவ்விஷயத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று வெளிப்பட்ட சொற்கள், அதைத் தெரிவிக்க முடியாமல் மரித்துப் போகுமோ, அவ்விஷயத்தை இவ்வளவு அழகிய சொற்களால் விவரிக்கப் போகிறேன், கேளுங்கள்.

ஏழாவது அத்யாயம் முற்றிற்று

அத்யாயம் 8

अर्जुन उवाच ।
किं तद् ब्रह्म किमध्यात्मं किं कर्म पुरुषोत्तम ।
अधिभूतं च किं प्रोक्तमधिदैवं किमुच्यते ।।१।।

அர்ஜுன உவாச -

கிம் தத் ப்ரஹ்ம கிமத்யாத்மம் கிம் கர்ம புருஷோத்தம।
அதிபூதம் ச கிம் ப்ரோக்த மதி தைவம் கிமுச்யதே ॥ 1

அர்ஜுனனுடைய ஏழு ப்ரச்நங்கள் :

பின்பு அர்ஜுனன் பின் வருமாறு சொன்னான். "ஐயா நீர் சிலவிஷயங்களை நிரூபித்துத்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டேனே, அது உம்முடைய மனஸுக்கேறிற்றா? நீர் முன்சொன்ன ப்ரஹ்மம் எது? எப்படிப் பட்டதற்குக் கர்மம் என்று பெயர்? அத்யாத்மம் என்று எதைச் சொல்லவேண்டும்? அதிபூதம் என்பது எப்படி இருக்கும்? இந்த ஜகத்தில் அதிதைவதம் என்பது எது? இவை எல்லாம் எனக்குத் தெளிவாய்த் தெரிவரும்படி, நீர் சொல்லிவைக்க வேண்டும்.

अधियज्ञः कथं कोऽत्र देहेऽस्मिन्मधुसूदन ।
प्रयाणकाले च कथं ज्ञेयोऽसि नियतात्मभिः ।।२।।

அதியக்ஞ: கதம் கோ(அ)த்ர தேஹே(அ)ஸ்மின் மதுஸூதன।
ப்ரயாணகாலே ச கதம் க்ஞேயோ(அ)ஸி நியதாத்மபி: ॥ 2

இதுவுமது. :

"அதியஞ்ஞம் என்றால் என்ன? அது இந்த தேஹத்தில் எது, வாயிருக்கிறதென்று, எவ்வளவு தான் ஊஹித்துப் பார்த்த போதிலும், அது த்ருஷ்டிகோசாம் ஆவதில்லை. ஹே சாரங்கபாணி, எவர்கள் தங்கள் சித்தத்தைத் தங்கள் வசம் செய்துகொண்டார்களோ, அவர்கள் தங்களுடைய முடிவுகாலத்தில், உம்மை எவ்விதம் அறிவார்கள்? இவையும் எனக்கு நன்றாய் விளங்கும்படி செய்துகொடுக்க வேண்டும்.

அர்ஜுனனுடைய பாக்யத்தின் பெருமை:

ஒருவனுக்கு ஓர் பாக்யவசத்தால், முழுவதும் சிந்தாமணியாலேயே நிர்மிக்கப்பட்டிருக்கும், ஓர் மாளிகையிற் படுத்துத் தூங்கக் கிடைத்தால், அவனது தூக்கத்தில, ஸ்வப்நவசப்பட்டுப் பிதற்றுவதுகூட வீண் போகாது போலும், அர்ஜுனன் சொல்லவேண்டுமென்று கேட்ட வார்த்தை முடிவுபெற்றதோ இல்லையோ, உடனேயே பகவான், "ஹே அர்ஜுநா நீ கேட்டதையெல்லாம் சொல்வேன், கவனித்துக்கேள்," என்றார். அர்ஜுநன் காமதேநுவின் கன்றாகி, அதுவும் போதாமல், கல்பதருவின் நிழலில் நிலை பெற்றிருந்தான். ஆகையால் அவன் ஆசைப்பட்ட தெல்லாம் நிறைவேறுவதில், ஆச்சர்யம் என்ன? ஸ்ரீக்ருஷ்ணன் கோபங்கொண்டு எவனைக் கொன்றாரோ, அவன் ஸ்ரீக்ருஷ்ண ஸாக்ஷாத்காரத்தை அடைந்து முக்தன் ஆனால், ஸ்ரீக்ருஷ்ணன் க்ருபையுடன் எவனுக்கு ஞானோபதேசம் செய்யப்புகுந்தாரோ, அவனுக்கு ஏன் அந்த ஸாக்ஷாத்காரம் ஏற்படாமற்போகும்? அப்படி அவன் ஸ்ரீக்ருஷ்ணனாகவே ஆய்ப்போன பின், அவனுடைய அந்தக்கரணமும் ஸ்ரீக்ருஷ்ணனாய்ப்போய், அவன் ஸங்கல்பத்தின் முன் ஸித்திகளனைவரும் வேலைக்காரர்களாய், எப்போதும் கைகட்டிக் காத்து நிற்பார்கள் அல்லவா?

இப்படிப்பட்ட ஸ்ரீக்ருஷ்ணனுடைய ப்ரேமையானது அர்ஜுநன் விஷயத்தில் எப்போதும் இருந்துகொண்டிருப்பதால், அவனுடைய ஆசைகள் எப்போதும் நிறைவேறிக்கொண்டே இருக்கின்றன. ஆகையால் அர்ஜுநன் இந்த விஷயத்தைத் தெரிந்துக்கொள்ளவேண்டுமென்று, விசாரிக்கப்போகிறான் என்பதை முன்னதாகவே பகவான் அறிந்துகொண்டு, அதற்கு உத்தரத்தை ஸித்தம் செய்துவைத்துக்கொண்டு, பசித்தவன் முன்னால் ஏற்கனவே சமைத்து ஸித்தமாய் இருக்கும் அன்னத்தை ஓர் தட்டிலிட்டுவைப்பதுபோல், காலவிளம்ப மின்றி சொல்லத் தொடங்கினார். ஸ்தந்யபானம் செய்து தாயை விட்டு விலகிப்போன குழந்தைக்குப் பசியெடுத்திருப்பதை, அந்த குழந்தை தெரிவிக்காமலே, தானே அறிந்துகொண்டு, தாய் மறுபடியும் அதற்கு ஸ்தந்யபானம் செய்துவைக்கிறாள் அல்லவா? அப்படியே க்ருபையோடு கூடிய ஸத்குருவானவன், இப்படிச்செய்வதில் ஆச்சர்யம் என்ன இருக்கிறது? இவ்விஷயத்தை இன்னும் விஸ்தரிக்காமல், பகவான் சொன்னதைச் சொல்வேன், கேளுங்கள்.

श्रीभगवानुवाच ।
अक्षरं ब्रह्म परमं स्वभावोऽध्यात्ममुच्यते ।
भूतभावोद्भवकरो विसर्गः कर्मसंज्ञितः ।।३।।

ஸ்ரீபகவானுவாச -

அக்ஷரம் ப்ரம்ஹ பரமம் ஸ்வபாவோஅத்யாத்ம முச்யதே ।
பூதபாவோத் பவகரோ விஸர்கः கர்மஸம்க்ஞிதः ।। 3

(1)-ம் ப்ரச்ந விஷயமான ப்ரஹ்மத்தின் லக்ஷணம்:

யாதொன்று, இந்த சின்ன பொத்தல் பாத்ரத்தில் (எண்சாண் சரீரத்தில்) நிரம்பித் ததும்பிக் கொண்டிருந்தும், ஒழுகிப்போயாவது, சிதரிப்போயாவது, கொஞ்சங்கூட குறைந்து போகாமலும், அதிநுட்பமாய் இருப்பதால் கேவல சூந்யமே என்று சொல்லப்புகுந்தால், அதுவும் பொருந்தாமலும், ஆகாசம் என்னும் அதிநுட்பமான வஸ்த்ரத்தால் வடிகட்டி எடுக்கப்பட்டதென்று சொல்லத்தக்கதாய் அதிநுட்பமா யிருந்தாலும், ப்ரபாஞ்சிக ஞானமாகிய விஞ்ஞானம் என்னும் சல்லடையிலிட்டு எத்தனை சலித்தாலும், கொஞ்சங் கூட வெளிப்பட்டுக் காணாமலும், இருக்குமோ, அதுவே பரப்ரஹ்ம மாகும்.

(3)ம் ப்ரச்ந விஷயமான அத்யாத்மம் :

ஆகாரங்கள் உண்டாவதால் உண்டாகாமலும், அவை மறைந்து போவதால் மரித்துப் போகாமலும், இருக்கும் ப்ரஹ்மத்தின் இயற்கை ஸ்திதியான நித்யதைக்கு, அத்யாத்ம மென்று பெயர்.

(2)-ம் ப்ரச்ந விஷயமான கர்மம் :

அதி நிர்மலமாயிருக்கும் ஆகாசத்தில், இன்னவிதமாய் உண்டாயின வென்று சொல்ல முடியாதபடி, ஓரோர் வேளையில் அநேக வர்ணங்களோடு கூடிய மேகக்கூட்டங்கள் உண்டாய்த் தோன்றுவது போலும், நிராகாரமாய் அதிசுத்தமாய் இருக்கும் ப்ரஹ்ம ஸ்வரூபத்தில், மஹத் முதலான பூதபேதங்களைக் கொண்டு ப்ரஹ்மாண்டம் என்னும் கட்டம் ஏற்படத் தலைப்படுகிறது. நன்றாய்ப் பார், நிர்விகல்பமான ப்ரஹ்ம மென்னும் வரட்டு பூமியில், ஆதி ஸங்கல்பம் (பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி என்னும் ச்ருதி

வாக்யத்தின்படி ஸ்ருஷ்டி செய்ய வேண்டுமென்ற, ப்ரஹ்மத்தின் ஸங்கல்பம்) என்பது எப்போது முளையெடுத்ததோ, அப்போதே ப்ரஹ்மாண்டத்தில் பார்க்கப்படுமவையான ஆகாரங்கள், அவ்வண்டம் தாங்காத வண்ணம், உண்டாய், எங்கும் நிறைந்து போகின்றன.

அவற்றில் ஒவ்வொன்றின் கர்ப்பத்தைச் சோதித்துப் பார்க்குங்கால், அது ஜீவர்களின் அநேகவித ஜாதி பேதங்களுக்குக் காரணமான விதைகளால் நிறைந்திருப்பதாகக் காணப்படுகிறது. நடுவில் உண்டாயிறந்து போகும் ப்ராணிகள் எண்ணிறந்தவை. அந்த ப்ரஹ்மாண்டத்தின் அம்சாங்களி லொவ்வொன்றும் அந்த ஆதி ஸங்கல்பத்தின் கார்யமாய், எண்ணிறந்த் ஆகாரங்களை உண்டுபண்ணி வைக்கின்றது. இவ்விதம் ஸ்ருஷ்டி அதிகாதிகமாய் வ்ருத்தி அடையவே, முதலில் மற்றொன்றின் சேர்க்கை யற்றுத் தனித்திருந்த ப்ரஹ்மமே, பலவகைப்பட்ட ஆகாரங்கள் நிறைந்த ஓர் வெள்ளமாக ஓடத்தலைப்படுகிறது. இப்படி ஸமதையும் விஷமதையும் எப்படி ஏற்பட்டதோ, தெரியவில்லை.

ஓர் விதமான காரணமும் இன்றியே, சராசரரூபமான இந்த ஜகத்து உண்டாய், அதில் அநேக வ்யக்திகளை உண்டாக்கி வைக்கும் ஜாதி விசேஷங்கள் லக்ஷக்ணக்காய்க் காணப்படுகின்றன. அன்றியும் தனித்தனியாய்க் காணப்படும் ஜீவவ்யக்திகள், எல்லையில்லாமல் விஸ்தாரமாய்ப் பரவி, கணக்கிற்றிருக்கின்றன, இத்தனையையும் உண்டாக்கிவைத்தது எது என்று பார்க்கப்போனால் அது ஒரு விதமாயும் தோற்றி நிற்காத அவ்யக்தமென்று தெரியவருகிறது. ஆகையால் முதன் முதலில் கர்த்தா காணப்படாமலும், முடிவில் காரணம் தோற்றாமலும், நடுவில் மாத்ரம் தோன்றிநிற்குங் கார்யரூபமான ஜகத்து, தனக்கு தானாகவே வளர்ந்து வருகிறது. இப்படிச் செய்து வைக்கிற னொருவனில்லாமல், அவ்யக்தத்தில் தமக்குத்தாமே ஆகாரங்கள் தோற்றிக் கொண்டிருக்கும் வ்யாபாரம் எதுவோ, அது கர்ம மெனப்படும்.

अधिभूतं क्षरो भावः पुरुषश्चाधिदैवतम् ।
अधियज्ञोऽहमेवात्र देहे देहभृतां वर ।। ४ ।।

அதிபூதம் க்ஷரோ பாவ: புருஷஶ்ச ஆதிதைவதம் ।
அதியக்ஞோ ஹமேவாத்ர தேஹே தேஹ ப்ருதாம் வர ॥ 4

(4)வது ப்ரச்ந விஷயமான அதிபூதம்:

இனி அதிபூதம் என்பது எதுவோ, அதைச் சுருக்கமாய்ச் சொல்வேன். மேகம் போற் றோன்றி மறைந்து கொண்டு, இருப்பனவை போற்றோற்றினாலும், உண்மையை விசாரித்துப் பார்க்குங்கால், ஒருக்காலும் இராதவையாகவே ஏற்படும் ப்ராணிகள் என்னும் நாம ரூபங்கள், பஞ்சீக்ருதமான ஐந்து பூதங்களின் சேர்க்கையாற்றோன்றத் தலைப்பட்டு, அப்பூதங்களின் சேர்க்கையுள்ள அளவும் தோன்றிக் கொண்டிருந்து, அவற்றின் பிரிவேற்படும் போது மறைந்து போகின்றன; இப்படித் தோன்றி, நின்று, மறைந்து போகும் நாமரூபங்கள் அதிபூதமாகும்.

5ம் ப்ரச்ந விஷயமான அதிதைவதம்:

ப்ரக்ருதி தேடிவைத்ததை புசிக்கிறவனாயும், புத்தியைக்கூடத் தன்ஞானத்துக்கு விஷயமாக்கிக்கொள்ளும் த்ரஷ்டா எனப்பட்டவனாயும், இந்த்ரிய தேசத்தின் அரசனாயும், தேஹ மஸ்தமித்துப் போகுங் காலத்தில், ஸங்கல்பமென்னும் பக்ஷி வந்தடையும் வ்ருக்ஷமாயும், உண்மையிற் பரமாத்மாவே ஆயினும், அஹங்காரம் என்னும் நித்திரைக்கு வசப்பட்டு, ப்ரபஞ்சம் என்னும் ஸ்வப்நத்தின் வ்யாபாரங்களை நடத்திவைத்து, அதினால் ஸுகதுக்கங்களை அநுபவிக்கிறான் என்னுமோர் காரணத்தைக் கொண்டு, இவ்வுலகத்தாரால் ந்யாயமாகவே, பரமாத்மாவல்லவென்றும், ஜீவாத்மா வென்றும், வ்யவஹரிக்கப்பட்டவனாயும், இவ்வைம்பூதங்களால் ஏற்பட்ட சரீரம் என்னும் கோயிலின் தெய்வமென்று சொல்லத் தக்கவனாயும், இருக்கும் புருஷனே அதிதைவதம் ஆவான்.

(6)ம் ப்ரச்ந விஷயமான அதியஜ்ஞம்:

இந்த சரீரத்திலேயே இருந்துகொண்டு, சரீரம் என்னும் உபாதியை நிவ்ருத்தித்துத்தருகிறவனான நானே அதியஜ்ஞ மாகிறேன், அர்ஜுந.

உபாதியின் சேர்க்கையால் ஏற்படும் அநர்த்தம்:

அதிபூதம், அதிதைவதம், என்னப்பட்ட மற்றவைகளும் முற்றிலும் நானேயாயினும், பதினைந்து மாற்றுத்தங்கமானது, தாழ்ந்த உலோகத்தின் ஸஹவாஸத்தை அடையும்போது, அதின் தங்கத்தன்மைக்கு ஓர் ஹாநியு மேற்படாமலுமே, அது

அத்தாழ்ந்த உலோகத்தோடு ஒன்றுபட்டுப் போகாமலுமே, இருந்தாலும், அது அத்தாழ்ந்த உலோகத்தின் ஸாமீப்யத்தை அடைந்திருப்பதால், அதின் மாற்றும் மதிப்பும் குறைந்துபோவதுபோல், அதிபூதாதிதைவதங்கள் அவித்யையின் தலைப்பால் மூடப்பட்டிருப்பதால், என்னைக் காட்டிலும் வேறாய்த் தோற்றி நிற்கின்றன. அப்படி வேறாகத் தோற்றுவிக்கும் அவித்யை யென்னும் திரை கிழிந்து விலகிப்போய், பேதபாவத்தின் முடி வேற்பட்டபின், அவை என்னைக் காட்டிலும் வேறாகத் தோற்றித் தனித்து நிற்பதை விட்டு, என்னுடன் ஒன்றுபட்டுப்போகின்றன. இதை வேறுவிதமாய்ப் பரிசோதித்துப் பார்.

மயிரை ஓர் சுருளாய்ச் சுருட்டி, அதின்மேல் ஓர் ஸ்படிகக்கல்லை வைத்தால், அக்கல் வெடிப்பு வெடிப்பாய் தெறித்திருப்பதாகத் தோன்றும். அம்மயிரை விலக்கிவைத்த உடன், அக்கல்லே வெடிப்பற்று அகண்டமாய்த் தோற்றும். இப்போது அவ்வெடிப்புகள் எங்கே போயின? எவனாவது அவ்வெடிப்புகள் தெரியாவண்ணம், ஓர் பசையைப் பூசி அவற்றை அடைத்துவைத்தானா? அப்படி ஒன்றும் நேராமல், முதன்முதலேயே அக்கல் அகண்டமாயிருந்து, இப்போதும் அகண்டமாயிருக்கிற தென்ப தல்லவா உண்மை? மயிரின் சேர்க்கையால் வெடிப்புகள் என்னும் ஓர் தோற்றம் தோன்றி, மயிர் விலகினமாத்ரத்தில், அத்தோற்றம் மறைந்து, யதாவத்தான அகண்டநிலையே புலப்படுகிறது. அப்படியே ப்ருதக்பாவத்தைத் தோற்றுவிக்கும் சரீரத்தில் அஹம்புத்தி என்னும் உபாதி கழிந்தவுடனே, எப்போதும் ஏற்பட்டிருந்த ஐக்யம் அநுபூதமாகிறது.

இவ்வுபாதி அதியஞ்ஞத்தால் நிவ்ருத்திக்கப்படும் ப்ரகாரம்:

எதின் ஸ்வரூபத்தை அடைந்தமாத்ரத்தில், இவ்வுபாதி நிவ்ருத்திக்கப்பட்டுப் போகிறதோ, அந்த அதியஞ்ஞமான பொருள் நானே. இதற்கு முன் யஞ்ஞங்களனைத்தும் கர்மஜம், என்று எந்தக் கருத்தை மனதில் வைத்துக்கொண்டு சொன்னேனோ, அதை ஸகல ஜீவர்களுக்கும் விச்ராந்தி உண்டுபண்ணித்தருவதும், நைஷ்கர்ம்யஸித்தி ஸுகத்தின் நிதி என்று சொல்லத்தக்கதுமான, இந்த அதியஞ்ஞத்தின் விஷயத்தில், விவரித்துக்காட்டுவேன், கவனித்துக்கேள். முதன் முதலில் வைராக்யம் எனனும் விறகு கட்டையை நிறைய மூட்டி, இந்த்ரியங்கள் என்னும் அக்நியை ப்ரதீப்தமாய்ச்

(நன்றாய் எரிவதாய்) செய்துகொண்டு, இந்த்ரிய விஷயங்களை ஹோம த்ரவ்யங்களாய்ப் பண்ணிக்கொண்டு, அவ்வக்நியி லாஹுதி செய்யவேண்டும். பின்பு வஜ்ராஸநத்தை யஞ்ஞபூமியாயும், இறுக அமைக்கப்பட்ட மூல பந்தத்தை வேதிகையாயும், அதன்மேற் சரீரத்தை மண்டபமாயும், அமைத்துக்கொண்டு, அம்மண்டபத்தின் கீழ் இந்த்ரிய நிக்ரஹம் என்னும் அக்நிகுண்டத்தில், இந்த்ரியங்கள் என்னும் த்ரவ்யங்களை, யோகமந்தரத்தின் ஜபத்துடன், ஹோமம் செய்யவேண்டும், பின்பு மனஸு ப்ராணன் இவைகளின் நிக்ரஹத்தையே ஹோமத்ரவ்யமாய்ச் செய்துகொண்டு, புகையில்லாத ஞாநம் என்னும் அக்நியில் ஹோமம் செய்யவேண்டும். இவ்வண்ணம் இவை அனைத்தையும் ஞாநாக்கியில் ஹோமம் செய்துவிட்டபின், அந்த ஞானமும், ஞேயமான ப்ரஹ்மத்தில் மறைந்து போகும். பின்பு ப்ரஹ்ம ஸ்வரூபம் ஒன்றே மிகுந்து நிற்கும். அதே அதியஞ்ஞ மெனப்படும்.

கீழ் நடந்த ஸம்வாதத்தால் அர்ஜுநனுக் குண்டான ப்ரஹ்ம பாவம்:

இப்படி ஸர்வஞ்ஞனான ஸ்ரீக்ருஷ்ணன் சொல்லி முடித்த உடனே, அதிப்ராஞ்ஞனான அர்ஜுநன், ஸ்ரீக்ருஷ்ணன் சொல்லிக்காட்டிய வழியைப் பிடித்துக்கொண்டுபோய், ப்ரஹ்மபாவத்தை அடைந்து நின்றான். இதை அறிந்து ஸ்ரீக்ருஷ்ணன், "அர்ஜுநர் நன்றாய்க் கேட்டுவருகிறாய்," என்றார். இவ்வார்த்தையைக் கேட்டு, அர்ஜுநன் முழுமையும் ஸுகத்தாலேயே செய்யப்பட்டவனானான். பாலகன் உண்டு த்ருப்தி அடைந்ததைப் பார்த்து, த்ருப்தி அடைதலும், சிஷ்யன் க்ருதார்த்த ஞானதைப் பார்த்து, தன்னை க்ருதார்த்தனாய்ப் பாவித்தலும், தாயும் குருவுமே அநுபவித்தறிந்த விஷயம். ஆகையால் அர்ஜுநனுக்கு முன்பாகவே ஸ்ரீக்ருஷ்ணனுக்கு ஸாத்விகபாவங்கள் எட்டும், (அவை, (1) ஸ்தம்பம் (மெய் விறைத்தல்), (2) ஸ்வேதம் (வியர்த்தல்), (3) ரோமாஞ்சம் (மயிர் கூச்செறிதல்) (4) ஸ்வாபங்கம் (வாக்கு உதறுதல் (5) வேபது (சரீரம் நடுக்குறுதல் (6) வைவர்ண்யம் (நிறம் மாறுதல்) (7) அச்ரு (கண்ணீர் சொரிதல்) (8) ப்ரளயம் (மூர்ச்சித்தல்) அடக்கமுடியாதபடி உண்டாய் வ்யாபித்துக்கொண்டன. பின்பு பகவான் அவற்றை அடக்கிக்கொண்டு, புத்தியை ஸாவதானம் செய்துகொண்டு, நன்றாய் பக்வத்தை அடைந்த ஸுகம் என்னும் பழத்தின் பரிமளம் போலும், குளிர்ந்துபோன அம்ருதத்தின் சிற்றலைகள்போலும், அதிம்ருதுவாயும்

அதிரஸவத்தாயும் இருக்கும் வார்த்தைகளைக் கொண்டு பேசத்தொடங்கி, "ச்ரோதாக்களுக்குள் மேன்மை பெற்ற ஹே தனஞ்ஜயா, இப்படி மாயை எல்லாம் எரிந்து போனபின், அதை எரித்த ஞானம் என்னும் அக்நியும் எரிந்து போகிறது," என்றுரைத்து, மேற்சொல்லவேண்டியதைச் சொல்லப்புகுந்தார்

अन्तकाले च मामेव स्मरन्मुक्त्वा कलेवरम् ।
यः प्रयाति स मद्भावं याति नास्त्यत्र संशयः ।।५।।

அந்தகாலே ச மாமேவ ஸ்மரன் முக்த்வா களேபரம்।
யः ப்ரயாதி ஸ மத் பாவம் யாதி நாஸ்த்யத்ர ஸம்ஶயः ॥ 5

(7)ம் ப்ரச்ந விஷயமான ஞானியின் அந்த்யஸ்திதி:

இப்போது சொல்லி முடித்த, அதியஞ்ஞம் என்னும் என் ஸ்வரூபத்தை அறிந்துகொண்டவன், அந்த்யகாலத்திலும் அந்த ஞானத்தை விடாமற் பற்றி நின்று, தேஹத்தைத் தன் மேல் உள்ள ஓர் போர்வையாய்ப் பாவித்து, ஓர் வீடு ஆகாசத்தை நிர்ப்பிக் கொண்டு ஆகாசத்தினாலேயே சூழப்பட்டிருப்பது போலும், தன் ஸ்வரூபமாகிய ப்ரஹ்மத்தில் இருந்துகொண்டு, ப்ரஹ்மத்தால் சூழப்பட்டிருப்பான். அவன் இப்படிப்பட்ட அநுபவம் என்னும் நடுவீட்டிலுள்ள நிச்சயமென்னும் அரையில் அடைபட்டுக் கிடப்பதால், அந்த ப்ரஹ்மஸ்வரூபாநுபவத்துக்கு வெளிபட்டிருக்கும் தேஹாதி ப்ரபஞ்சத்தின் ஸ்மரணை கூட இல்லாதவனாயிருப்பான்.

இப்படி உள்ளும் புறமும் ப்ரஹ்மஸ்வரூபத்தின் நிறைவடைந்தவனாய், நானாகவே அவன் இருக்கும் ஓர் ஸ்திதியில், அவன் அது பவத்துக்கு வெளிப்பட்டதுமாய், ஐந்து பூதங்களால் அமைந்ததுமாய், இருக்கும் தேஹம் என்னும் கவசம், அவனுக்குத் தெரியாமலேயே கழன்று விழுந்து விடுகிறது. அவன் சரீரம் உயிர்த்திருக்கும்போதே, அவனுக்கு சரீரம் கழன்று விழுந்து போகிறதின் ஸங்கடத்தை அவன் எவ்விதம் உணர்வான்? ஆகையால் அச்சமயத்தில், அவன் அநுபவம் என்பதின் வயிற்றுக்குள்ளிருக்கும் ஜலம் கலங்குவது கூட இல்லை. அவன், ஐக்யம் என்னும் ரஸமே வார்க்கப்பட்டு கட்டிப்போன ஓர் உருவோ என்னும்படியாயும், நித்யதை என்பதின் கர்ப்பத்தில் அடைபட்டவனாயும், ஸமரஸம் என்னும் ஸமுத்ரத்தில் அழுக்கற கழுவப்பட்டவனாயும், இருப்பதால், அவன் ப்ரபஞ்சஞான மென்னும் அழுக்கின் பற்றற்றிருப்பான்.

இதைக் கவனித்துப் பார். ஆழ மென்பது கண்டு பிடிக்கமுடியாத ஓர் நீரில், ஓர் குடம் முழுகிப்போய், அப்படி உள்ளும் புறமும் நீராற் சூழப்பட்டிருக்கும் ஓர் ஸ்திதியில், ஏதோ தைவகதியால் அக்குடம் விண்டுபோனால், அதி னுள்ளிருக்கும் நீரில் ஏதேனும் கலக்கம் உண்டாகுமா? இதை மற்றுமோர் உதாஹரணத்தால் விளங்கச் செய்வேன், கேள். ஓர் பாம்பு தன் மேற்றோலை கழற்றி விடும்போது, அல்லது ஒருவன், வெப்பம் ஸஹியாமல், தன் மேல்வஸ்திரத்தை எடுத் தெறியும்போது, அப்பாம்புக்காவது அவனுக்காவது தேஹத்தில் ஸங்கடம் ஏற்படுகிறதா? அப்படியே, ஏற்கனவே ஓட்டுதல் அற்றுப்போன தேஹமாகிய அவன் மேற்போர்வை கழன்று விழுந்து விடுகிறதால், அவன் உள்ளும் புறமும் நிறைந்திருக்கும் ஆத்மஸ்வரூபம் கலைந்து போவதில்லை ஆகையால் அவன் துக்கத்தால் வருந்தித் தடுமாறிப்போவ தென்பது, எப்படி நேரும்? ஆகவே, இப்படி என் விஷயமான அநுபவஞானம் அவனுக்கு அந்த்யகாலத்தில் ஏற்பட்டு நிலைபெற்றுப்போய், அவன் தன் தேஹத்தைவிட்டுப் பிரியும் காலத்திலேயே, நானாய்விடுகிறான்.

यं यं वापि स्मरन्भावं त्यजत्यन्ते कलेवरम् ।
तं तमेवैति कौन्तेय सदा तद्भावभावितः ।।६।।

யம் யம் வாபி ஸ்மரன்பாவம் த்யஜத்யந்தே களேவரம் ।
தம் தமேவைதி கௌந்தேய ஸதா தத் பாவ பாவிதः ।। 6

அவன் ஸதா ப்ரஹ்மத்தை பாவித்திருந்ததால், மரணகாலத்தில் ப்ரஹ்மஸ்ரூபமே அவனுக்கு எதிரிற் றோற்றி, அதில் அவன் லயப்பட்டுப்போகிறான்:

இவ்வளவு ந்யாயங்கள் விசாரிக்கவேண்டுவதில்லை. ஒருவன் மார்பின்மேல் மரணம் உட்கார்ந்து அமுக்கும் வேளையில், அவனுடைய மனஸு எதை நினைக்கிறதோ, அதுவாகவே அவன் ஆகவேண்டியிருக்கிற தென்று ஸாதாரணமாக ஓர் ந்யாய மிருக்கிற தல்லவா? ஒருவன் எதையோ கண்டு பயந்து காற்றின் வேகத்தைக்கொண்டு ஓடும்போது, வழியில் குறுக்கிட்டிருக்கும் ஓர் கிணற்றைப் பார்த்து, அந்த கிணற்றைக்காட்டிலும் தனக்கு வேறு கதி யில்லை யென்றும், அதில் விழுந்தே தீரவேண்டும் என்றும், எண்ணினவனைப் போல் அந்த ஓட்டத்தின் வேகத்தைத் தடுக்கமுடியாமல், அக்கிணற்றில் எப்படி விழுந்து விடுகிறானோ, அப்படியே

ம்ருத்யுவைக் கண்டு தேஹத்தினின்று ஓடத்தலைப்பட்ட ஒருவனுக்கு, அந்த ஸமயத்தில் எது அவன் உயிர் முன் வந்து தோற்றி நிற்குமோ, அதுவாகவே ஆய்விடுவதினின்று, அவன் என்ன செய்தாலும், தப்பித்துக்கொள்ளமுடியாமற் போகிறது.

அன்றியும் ஒருவன் விழித்திருக்கும்போது எதின் விஷயமான எண்ணம் மனஸில் நடைபெற்றுக்கொண்டிருந்ததோ, தூக்கத்தில் கண் மூடிப்போன உடன், அவனுக்கு அதேவிஷயமான ஸ்வப்நம் ஏற்படுகிற தல்லவா? அவ்விதமே, இவ்வுலகில் வாழ்ந்த காலம் எல்லாம், எந்த விஷயம் மிக்க ஸுககரமாய்த் தோற்றி, ஒருவன் மனஸில் குடிகொண்டு போகிறதோ, அதுவே மரணகாலத்திலும் தடுக்கமுடியாதபடி அவன் புத்திமுன் உருவெடுத்து நின்று, மனோவ்ருத்தியை அவ்விதம் செய்து வைத்து, அவன் அதையே கதியாக அடையும்படி செய்கிறது. ஆகையால் ஞானியானவன் அநவரதம் ப்ரஹ்மஸ்வரூபத்தை த்யானித்து வந்தான் என்னும் காரணத்தால், அவன் மரணகாலத்தில் ப்ரஹ்மஸ்வரூபமே அவன் முன் தோன்றி, அதில் அவன் ஐக்யப்பட்டுப்போகிறான்.

तस्मात्सर्वेषु कालेषु मामनुस्मर युध्य च ।
मय्यर्पितमनोबुद्धिर्मामेवैष्यस्यसंशयः ।।७।।

தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு மாமனுஸ்மர யுத்ய ச।
மய்யர்பித மனோ புத்திர் மாமேவைஷ்யஸ்ய ஸம்ஶயம் ॥ 7

ஆகையால் இடைவிடாத பகவத் விஷயமாய் மனோவ்ருத்திகள் ஏற்படவேண்டும்:

ஆகையால் எப்போதும் என்னையே நீ ஸ்மரித்திருக்க வேண்டும். கண்ணால் எதைப்பார்ப்பாயோ, காதால் எதைக் கேட்பாயோ, மனஸால் எதை நினைப்பாயோ, வாயால் எதைச் சொல்வாயோ, சுருக்கிச் சொல்ல, உள்ளும் புறமுமாய் செய்யும் வ்யாபாரங்களுக்கு விஷயம் எவையெவையோ. அவை அனைத்தையும் நானாகவே நீ செய்து கொள்வாயே யானால், எல்லாக்காலங்களிலும், உன் ப்ரயத்நத்தை எதிர்பாராமலே, உன் மனோவ்ருத்திக்கு விஷயமாய் நானே நின்று விடுவேன்.

இப்படி ஆய்விட்டபின், உன்னுடைய தேஹம் கழிந்து போவதால், நீ இறந்து போகாது, ப்ரஹ்ம மாய்விடுகிறாய். ஆகவே யுத்தம் செய்வதற்கு, நீ ஏன் அஞ்சவேண்டும்? நீ

உன்னுடைய மனஸையும் புத்தியையும், என்னுடைய ஸ்வரூபத்தின் விசாரணத்யாநாதி களுக்கென்றே அர்ப்பணம் செய்துவிட்டால், என்னையே நீ அடைவாய், என்று நான் ஆணையிட்டுச் சொல்கிறேன். இது எப்படி யாகும் என்று, உன் மனஸில் ஸந்தேஹம் இருந்துகொண்டிருக்குமேயானால், முன்னம் முன்னம் கொஞ்சம் நான் சொன்னபடி அப்யஸித்துப் பார். பின்பு நான் சொன்னது உண்மை யாகாதுபோனால், "என்ன கிருஷ்ணா என்னை ஏமாற்றிவிட்டாயே," என்று நீ கோபித்துக்கொள்ள, ஓர் தடையும் இராது.

अभ्यासयोगयुक्तेन चेतसा नान्यगामिना ।
परमं पुरुषं दिव्यं याति पार्थानुचिन्तयन् ।।८।।

அப்யாஸ யோக யுக்தேன சேதஸா நான்ய காமினா ।
பரமம் புருஷம் திவ்யம் யாதி பார்தானு சிந்தயன் ।। 8

ஆத்மஸ்வரூப சிந்தனை செய்யும் அப்யாஸத்தின் பலன்:

இப்படி அப்யாஸம் செய்வதில், உன்னுடைய மனஸை நன்றாய்ப் பழக்கிவைப்பாயேயானால், நொண்டி ஆனவன் அப்யாஸத்தின் பலத்தைக்கொண்டு உயர்ந்த மலையின் சிகரத்தின்மேல் ஏறி நிற்பது போலும், ஸாதிப்பதற்கு எவ்வளவு கடின்மான விஷயமும் கைக்குக் கிட்டிப்போகும். அப்படியே உத்தமமான அப்யாஸத்தைத் துணையாகக்கொண்டு, மனஸைப் பரமபுருஷன் இருக்கும் ஊருக்குப்போகும் வழியில், எப்போதும் நடந்துகொண்டிருக்கச் செய்தபின், தேஹம் இருந்தால் என்? போனால் என்? அநேகவிதமான கதிகளை அடையும்படியாய்ச் செய்துவைக்கும் மனஸு, ஆத்மஸ்வரூபத்துக்கு மாலை இட்டுவிட்ட பின்பு, தேஹம் இருக்கிறதா, போய்விட்டதா, என்று எவன் கவனிப்பான்? நதியின் ப்ரவாஹமானது, ஹோ வென்றிரைந்துகொண்டு ஸமுத்ரத்தில் விழுந்து கலந்துபோனபின், தனக்குப்பின்னால் என்ன நடந்துகொண்டிருக்கிற தென்று பார்ப்பதற்கு, அது திரும்பி வருவதுண்டா? எப்படி அது திரும்பிவராமல், ஸமுத்ரமாகவே நிலைபெற்றுப்போகிறதோ, அப்படியே சித்தமானது சைதந்ய மாய்ப் (ஆத்மஸ்வரூபம்) போனபின், பரமாநந்தஸ்வரூபமான அந்த இடத்தைவிட்டு, திரும்பித்திரும்பி வரத்துப்போக்கு ரூபமான ஸம்ஸாரம் என்னும் ஊருக்கு வராது.

कविं पुराणमनुशासितारंअणोरणीयंसमनुस्मरेद्यः ।
सर्वस्य धातारमचिन्त्यरूपंआदित्यवर्णं तमसः परस्तात् ।।९।।
प्रयाणकाले मनसाऽचलेनभक्त्या युक्तो योगबलेन चैव ।
भ्रुवोर्मध्ये प्राणमावेश्य सम्यक् स तं परं पुरुषमुपैति दिव्यम् ।।१०।।

கவிம்புராணம்அநுசாஸிதாரம்அணோரணீயாம்ஸமநுஸ்மரேத்யः।
ஸர்வஸ்யதாதாரமசிந்த்யரூபம்ஆதித்யவர்ணம்தமஸஃபரஸ்தாத்॥9

ப்ரயாணகாலே மனஸாசலேனபக்த்யாயுக்தோயோகபலேனசைவ।
ப்ருவோர்மத்யேப்ராணமாவேச்யஸம்யக்ஸதம்பரம்புருஷமுபைதிதிவ்யம்॥

அந்தக்கரணயுக்தயோகி ப்ரஹ்மபாவம் அடைவதின் ப்ரகாரம்:

எது ஆகாரம் அற்றதாயும், பிறப்பற்றதாயும், எல்லா பூதங்களாயும் ஏற்பட்டு, எல்லாபூதங்களையும் பார்த்துக்கொண்டிருப்பதாயும் இருக்கிறதோ, எது ஆகாசத்துக்கு முன்பாகவே இருப்புப் பெற்றதாய், பரமாணுவைக் காட்டிலும் சின்னதாய் இருக்கிறதோ, எது தன் ஸாந்நித்யத்தைக்கொண்டு விச்வம் அனைத்தையும் அததின் வ்யாபாரத்தை நடத்திக்கொண்டிருக்கச் செய்கிறதோ, எது இந்த த்ருச்யஜாதங்க ளனைத்தையும் உண்டாக்கிவைத்து, அவை பிழைத்திருப்பதற்கு ஆதாரமா யிருக்கிறதோ, எது தன்னை நெருங்கப் பார்த்த தர்க்கத்திற்கு பயத்தை உண்டாக்கிவைத்து, முற்றிலும் அசிந்த்யமாய் இருக்கிறதோ, தோலால் ஏற்பட்ட கண்ணுக்கு எதின் ஸ்வரூபம், கறையானுக்கு நெருப்புத்தணற் போலவும் இருட்டுக்குத் தேஜஸ்ஸுபோலவும், முற்றிலும் நுழைய முடியாததாய், பகலிலேயே மையிருட்டாயிருக்கிறதோ,

எது ஞானியின் த்ருஷ்டிக்கு நிர்மலமான ஸூர்யகிரணங்களின் கூட்டத்தைப் போல் ஸதா ப்ரகாசித்துக் கொண்டு அஸ்தமனத்தின் பேச்சே அற்றதா யிருக்கிறதோ, அந்தப் பரிபூர்ணமான ப்ரஹ்மத்தை தேஹத்தைவிட்டு புறப்படுங் காலத்தில், எவன் நிலைபெற்ற சித்தத்தோடு அறிந்து ஸ்மரித்துக்கொண்டு, தேஹத்தின் வெளிப்புறத்தில் பத்மாஸநத்தை அமைத்து, வடக்கு நோக்கி உட்கார்ந்து கொண்டு, அந்தராத்மாவில் யோகாப்யாஸத்தால் ஏற்படும் ஸுகத்தை அநுபவித்துக்கொண்டு, தேஹத்தின் உட்புறத்தில் ஏகாக்ரப்பட்ட மநோரதத்துடன், ஸ்வரூபப்ராப்தியில் உள்ள

ப்ரேமையினால், தன் ஸ்வரூபத்தில் தான் கலந்து போவதற்கு மிக்கப் பரபரப்படைந்து, முன்பே தன்னிடத்தில் ஏற்பட்டிருக்கும் யோகாப்யாஸத்தைக்கொண்டு, ஸுஷும்நா நாடியின் வழியாய் அக்நிமண்டலத்தினின்று ப்ரஹ்மரந்த்ரத்தை உத்தேசித்துப் புறப்பட்டு, வெளிப்படையாய் மாத்ரம் அசேதநமான தேஹத்தோடும் சேதனமாகிய ஜீவாத்மாவோடும் கூடியிருப்பவனாய்த் தோற்றிக்கொண்டு, ப்ராணவாயுவை சிதாகாசத்தில் நுழைந்து அதில் ஸஞ்சரிக்கச்செய்து,

மனஸின் ஸ்தைர்யத்தின் பலத்தைக்கொண்டு அந்நிலையில் திடமாய் நின்று, பக்தியின் பாவனையால் நிறைந்தவனாய், யோகபலத்தால் தன் வசப்பட்டிருக்கும் மனஸோடு கூடியவனாய், ஆத்மஸ்வரூபத்தில் லயித்துப்போவதற்கு ஸித்தமானவனாய், ஜடாஜடங்களான உபாதிகளனைத்தையும் கரைந்துபோகச் செய்துகொண்டு, புருவத்தின் நடுவில் ஸஞ்சரித்து நின்று, மணியின் ஓசை மணியிலேயே லயித்துப்போவது போலும், ஓர் குடத்தில் இட்டு மூடிவைக்கப்பட்ட தீபம், கொஞ்ச நேரம் எரிந்துகொண்டிருந்து, பின்பு எப்போது அணைந்துபோகிறதென்று தெரிந்துகொள்ளமுடியாதபடி, அணைந்துபோவதுபோலும், கொஞ்சம் கொஞ்சமாய் தேஹத்தைக் கழற்றிவைத்து அதிலும், கொஞ்சம் கொஞ்சமாய் தேஹத்தைக் கழற்றிவைத்து அதினின்றும் பிரிந்து போகிறானோ, அவன் கேவலம் பரப்ரஹ்மமே ஆய், பரமபுருஷன் என்று சொல்லப்பட்டு, என்னுடைய உண்மையான வீடாய் அமைந்து, அப்படியே நிலைபெறுகிறான்.

यदक्षरं वेदविदो वदन्ति विशन्ति यद्यतयो वीतरागाः ।
यदिच्छन्तो ब्रह्मचर्यं चरन्ति तत्ते पदं संग्रहेण प्रवक्ष्ये ।।११।।

யதக்ஷரம் வேதவிதோ வதந்தி விஶந்தி யத்யதயோ வீதராகாः।
யதிச்சந்தோ ப்ரம்ஹசர்யம் சரந்தி தத்தே பதம் ஸங்க்ரஹேண ப்ரவக்ஷ்யே॥ 11

அந்த ப்ரஹ்மபாவத்தின் வர்ணனை:

ஓர் பெருங்காற்றின் முன் கலக்கப்பட்டுச் சிதரிப்போகும் மேகங்கள்போல், எது ஞானத்துக்கு விஷயமாய், அறியப்பட்டுப்போகிற தென்னும் காரணத்தால், ஞானத்தால் சாப்பிடப்பட்டுப்போகிறதோ, அது க்ஷரம் (நசித்துப் போகத்

தக்கது) என்று சொல்லப்படும். அவ்வகைப்பட்டதாய் இராமல், பெருங்காற்றாற்கூட கலக்கமுடியாததா யிருக்கும் கேவல ஆகாசம் போல், எது ஞானத்துக்கு விஷயமாகாமல், அதினா லுட்கொள்ளப்படாததாய் நின்றுவிடுகிறதோ, அது ஸகல ஞானத்திற்கும் முடிவான ஞானம் அடைந்துகிடக்கும் கனி என்று சொல்லத்தக்கவர்களாய், வேதத்தை நன்கறிந்தவர்களான உத்தம ஞானிகளால், அக்ஷரம் (ஒருக்காலும் நாசமடையாதது) என்று சொல்லப்பட்ட, ப்ரக்ருதிக்கு அப்புறம் நிற்கும் பரமாத்மஸ்வரூப மாகும். விஷயங்கள் என்னும் விஷத்தைக் காலால் உதைத்துத் தள்ளி, பூமியிற் சிதரிப்போகச்செய்து, ஸகல இந்த்ரியங்களையும் தண்டித்துக் கட்டில்வைத்து, உத்தமரீதியாய் வைராக்யத்தைப் பாராட்டிக்கொண்டிருப்பவர்கள், தங்கள் தேஹம் என்னும் மரத்தின் நிழலில் உட்கார்ந்தகொண்டு, இந்த அக்ஷரம் வரப்போகிறதா என்று, இதின் வழியைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

ஆசையென்பது முற்றிலும் அற்றுப்போனவர்கள் கூட, இவ்வக்ஷரத்தை அடைவதற்கு இவ்விதம் ஆசைப்படுவார்கள். இவ்வக்ஷரத்தை அடைய விரும்பி, ஸாதுக்கள் ப்ரஹ்மசர்யத்தின் ச்ரமத்தை ஓர் பொருட்டாய் எண்ணாமல், மிக்க நிஷ்டுரமாய் இந்த்ரியங்களின் கொட்டத்தை அடக்கி, அவற்றைப் பல்லைக்காட்டிக் கெஞ்ச அடிப்பார்கள். இப்படி ஆழமற்றதாயும், துர்லபமுமாயும் இருக்கும், இவ்வக்ஷரத்தின் மஹிமையை வர்ணிக்க வேண்டுமென்று, வேதங்கள் இதின் கரையின் ஓரத்தில் இறங்கின மாத்ரத்தில், நிலைகொள்ளாமல் முழுகிமுழுகித் தண்ணீர் குடித்துக் கொண்டு திண்டாடிப்போகின்றன. இவ்வளவு பெருமைபெற்ற பதமாகவே, கீழ்ச்சொன்ன விதமாய் லயமடைந்த புருஷன் ஆய்விடுகிறான். ஆனால் இந்த விஷயத்தை மறுபடியும் ஒரு தடவை சொல்லவேண்டும் என்று எனக்குத் தோன்றியபடியால், நான் அப்படியே சொல்லப்போகிறேன், என்று ஸ்ரீக்ருஷ்ணன் சொல்ல, அர்ஜுநன், "ஐயா, இதைத்தான் நான் கேட்டுக்கொள்வதற்கு இருந்தேன்; அதற்குள்ளேயே நீரே சொல்கிறேன் என்று, க்ருபை கூர்ந்து உரைத்தீர்; ஆகையால் நீர் இதை, நான் மிகவும் எளிதில் அறியக்கூடிய விதமாய்ச் சொல்லவேண்டும்," என்று சொன்னான்.

அப்போது த்ரிபுவனத்திலும் இருக்கும் அஞ்ஞாநம் என்னும் இருட்டைப் போக்குகிற தீபமான ஸ்ரீக்ருஷ்ணன், "உன் மனது எனக்குத் தெரியாதுபோகுமா? இதைச் சுருக்கமாய்ச் சொல்லப்போகிறேன்; ஆகையால் எப்போதெல்லாம் உன்

மனஸு வெளிப்பட்டு சிதரத்தலைப்படுமோ, அப்போதெல்லாம் அது உன் ஹ்ருதயம் என்னும் மடுவில் முழுகிக்கிடக்கும்படியாய், நீ செய்து கொள்ளவேண்டும்," என்று எச்சரிக்கை செய்துவைத்தார்.

सर्वद्वाराणि संयम्य मनो हृदि निरुध्य च ।
मूर्ध्न्याधायात्मनः प्राणमास्थितो योगधारणाम् ।।१२।।

ஸர்வத்வாராணி ஸம்யம்ய மனோ ஹ்ருதி நிருத்ய ச।
மூர்த்ந்யாதாயாத்மனः ப்ராணமாஸ்திதோ யோகதாரணாம் ॥ 12

அக்ஷர ப்ரஹ்மப்ராப்த்திக்கு வேண்டிய ஸாதநாநுஷ்டானம்:

அக்ஷரம் என்று சொல்லப்பட்டதான இந்தப் பதம், ப்ராப்தமாவதற்கு முன், பின் சொல்லியவாறு ஸாதநா நுஷ்டானம் செய்வது அவச்யமா யிருக்கிறது. அகண்டமாய் அப்யஸிக்கப்பட்ட ஸம்யமத்தினால், (இந்த்ரிய நிக்ரஹத்தினால்) இந்த்ரியத்வாரங்க ளனைத்தும் தாளிடப்படவேண்டும். பின்பு கைகால் ஒடிந்துபோனவன், வீட்டை விட்டு வெளிப்படாது கிடப்பதுபோலும், விஷயசிந்தனை இன்றி, மனது தனித்து ஹ்ருதயத்திலேயே அடைபட்டுப்போய், அங்கேயே நிலைபெறும், பின்பு ப்ராணவாயுவையே ப்ரணவமாய்ச் செய்துகொண்டு, அதை அப்யாஸம் என்னும் வழியாய் நடத்திக்கொண்டே, ப்ரஹ்மரந்த்ரம் வரைக்கும் இட்டுக்கொண்டு வரவேண்டும். பின்பு அந்த ப்ரணவத்தின் மூன்று அக்ஷரங்களும், அர்த்தமாத்ரையில் ஒடுங்கிப்போய் லயம் அடையும் வரைக்கும், அந்தப்ராணவாயு ப்ரஹ்மரந்த்ரத்தி லுள்ள ஆகாசத்தோடு கலந்து போயிற்றோ, போகவில்லையோ, என்று சொல்லும்படியாய், அங்கேயே யோகதாரணையின் பலத்தால் நிலைபெறச் செய்யவேண்டும். பின்பு ப்ரணவத்தின் மூன்றக்ஷரங்களும் அர்த்தமாத்ரையில் ஒடிங்கிப்போன வுடன், ப்ராணவாயுவும் ப்ஹ்மரந்த்ர ஆகாசத்தில் லயித்துப்போகிறது

ओमित्येकाक्षरं ब्रह्म व्याहरन्मामनुस्मरन् ।
यः प्रयाति त्यजन्देहं स याति परमां गतिम् ।।१३।।

ஓமித்யேகாக்ஷரம் ப்ரம்ஹ வ்யாஹரன் மாமநுஸ்மரன்।
யः ப்ரயாதி த்யஜன்தேஹம் ஸ யாதி பரமாம் கதிம் ॥ 13

இதுவுமது:

இப்படி ஓம்காரத்தின் உச்சாரம் முடிந்து போகவே, ப்ராணவாயுவும் அந்த ஆகாசத்தில் லயம் அடைந்துபோய், பின்பு ப்ரணவத்தைத் தாண்டியிருக்கும் ப்ரஹ்மாநந்தமென்னும் ஸம்பூர்ணமான தனம் எதுவோ, அதுதான் மிகுந்து நிற்கும். ஆகையால் ப்ரணவம் என்றே ஓர் பெயர் அடைந்த ஏகாக்ஷரப்ரஹ்ம ரூபமான என்னுடைய உத்தம ஸ்வரூபத்தை ஸ்மரித்துக்கொண்டே, தேஹத்தை எவன் விட்டொழிகிறானோ, அவன் நிஸ்ஸம்சயமாய் என்னையே அடைகிறான். இப்படி என்னை அடைவதென்பதைத் தாண்டி, அடையவேண்டியதாய் வேறொன்றுமில்லை. மரணஸமயத்தில் இப்படிப்பட்ட ஸ்மரணை எப்படி ஏற்படும், என்று உன் மனஸில் ஓர் ஸந்தேஹம் ஏற்படலாம். இந்த்ரியங்கள் ஸங்கடப்பட்டுப்போய் உயிரோடிருப்பதின் ஸுகம் அடியோடு நஷ்டமாய்ப்போய், உள்ளும் புறமும் சாவின் குறிகள் ஏற்பட்டபின், எவன் எழுந்திருந்து, உட்கார்ந்து, இந்த்ரியங்களை நிக்ரஹம் செய்து, எப்படிப்பட்ட அந்தக்கரணத்தைக்கொண்டு, ப்ரணவத்தை ஸ்மரிக்கமுடியும், என்று இப்படி ஓர் ஸந்தே ஹத்திற்கு நீ ஒரு நாளும் மனஸில் இடங்கொடுக்கக்கூடாது; ஏனென்றால் அவனால் இடைவிடாது ஸேவிக்கப்பட்டு வந்த நான், அவனுடைய மரணகாலத்தில், அவனுக்கு ஸேவகனாய் ஏற்பட்டு அவனுக்கு ஆகவேண்டிய தனைத்தையும் செய்துவைக்கிறேன்.

अनन्यचेताः सततं यो मां स्मरति नित्यशः ।
तस्याहं सुलभः पार्थ नित्ययुक्तस्य योगिनः ।।१४।।
मामुपेत्य पुनर्जन्म दुःखालयमशाश्वतम् ।
नाप्नुवन्ति महात्मानः संसिद्धिं परमां गताः ।।१५।।

அனன்ய சேதாः ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யஶः ।
தஸ்யாஹம் ஸுலபः பார்த நித்யயுக்தஸ்ய யோகினः ।। 14

மாமுபேத்ய புனர்ஜன்ம துக்காலய மஶாஶ்வதம் ।
நாப்னுவந்தி மஹாத்மானः ஸம்ஸித்திம் பரமாம் கதாः ।। 15

பக்தனுக்கு மரணகாலத்தில் பகவான் ஸேவகனா யமர்வது:

எவர்கள் விஷயபோகங்களுக்கு எள்ளும் தண்ணீரும் இறைத்து விட்டு, ப்ரவ்ருத்திக்கு விலங்கிட்டு, என்னை

ஹ்ருதயத்தில் நிலைபெறச்செய்துகொண்டு, என்னைக் கொண்டாடுவதென்னும் ஸுகத்தையே புசித்துக்கொண்டு, அந்த ஸுகானுபவம் செய்வதற்கே போதுபோதாமல், பசிதாகங்களுக்கு பேட்டி கொடுக்க ஸமயம் கிடைக்காமல், (பசிதாஹங்கள் இக்கதியை அடையும்போது, கண் முதலிய ஏழைகளின் பாட்டைச்சொல்லவேண்டுமா) இப்படி என்னோடு எப்போதும் கூடிப் பிரியாமல் நின்று, மனஸால் என்னோடு திடமாய் ஒட்டிக்கொண்டு, ஸர்வவிதமாயும் நானாகவே ஆய்விட்டு, என்னை இடைவிடாது உபாஸிப்பார்களோ, அவர்களுக்கு தேஹாவஸாநம் எப்போது ஏற்படுமோ, அப்போது அவர்கள் என்னை நினைத்து, பின்பு நான் அவர்களைப் போயடைவது என்று ஏற்பட்டதேயானால், அப்படிப்பட்ட உபாஸ்தியைத் தான் என்னைத்துக்குச் செய்யவேண்டுமோ? பார், பக்தி என்பது கொஞ்சங்கூட இல்லாத ஓர் அல்ப மநுஷ்யன் கஷ்டத்தில் சிக்கிப்போய், தன்னாற் றப்பித்துக்கொள்ள முடியாதபடி துக்கத்தை அடைந்து, "ஹே தேவா, என்னைக் காப்பாற்ற, வா, வா," என்று கூச்சல் போட்டபின், நான் போகாதிருக்க முடியவில்லையே.

பக்தர்களுடைய கதியும் அப்படியே ஆகும் பக்ஷத்தில், அவர்கள் பக்தி செய்யவேண்டும். என்னும் ஆசை என்னத்துக்காகப் பாராட்டவேண்டும்? ஆகையால் இப்படிப்பட்ட ஸந்தேஹத்தின் லேசாம்சம் கூட, ஒருவரும் எடுத்துச் சொல்லக்கூடாதென்று, நான் பக்தர்கள் விஷயத்தில் ஜாக்ரதையா யிருக்கிறேன். அவர்களை நான் நினைக்கவேண்டிய காலத்தில், அவர்கள் என்னை நினைத்து, பிறகு அவர்களை நான் போய் அடைவேனாகில், அவர்கள் நான் மறந்துபோன விஷயத்தை ஞாபகம்செய்து கொடுத்து உபகரித்தார்களே, என்னும் எண்ணமே எனக்குத் தாங்கமுடியாத சுமை யாய்விடுமே என்றும், அவர்கள் முன் பக்தி செய்ததால் என்மேல் ஏற்பட்டிருக்கும் கடனைத் தீர்த்துக்கொள்ளவேண்டுமே என்றும் கருதி, நான் என் பக்தர்களுடைய மரணகாலம் ஏற்படும் போது, அவர்களுக்குப் பரிசர்யை செய்துகொண்டு நிற்கிறேன்.

அப்படிப் பரிசர்யை செய்யும் ப்ரகாரம்:

தேஹம் சிதிலமாய்ப் போவதினால் ஏற்படும் துக்கத்தின் காற்றுக்கூட, அதிஸுகுமாரமான அவர்கள்மேல் படக்கூடாது என்று, ஆத்மஞானம் என்னும் கூட்டுக்குள் அவர்களை வைத்து, மேலும் என்னுடைய ஸ்மரணம் என்னும்

ஸுககரமாயும் குளிர்ச்சி பொருந்தினதாயும் இருக்கும் நிழலை, அவர்கள்மேல் படச்செய்து, அவர்கள் மனது என்னாலேயே எக்காலும் நிறைந்திருக்கும்படி, அவர்களுக்கு பக்தியைச் செய்துகொடுக்கிறேன். தேஹம் முடிந்துபோகும் காலத்தில், இதரர்களுக்கு ஏற்படும் ஸங்கடம், என்னுடைய பக்தர்களுக்கு ஏற்படாதபடி, இவ்விதம் செய்துவைத்து, என்னைச்சேர்ந்த அவர்களை என்னிடத்துக்கு ஸுகமாய் அழைத்துக்கொண்டு போகிறேன், வெளிப்புறத்தில் இருக்கும் சரீரம் என்னும் உறையை உரித்து விட்டு, அகங்காரம் என்னும் புழுதியைத் துடைத்துவிட்டு, சுத்த வாஸனையை மாத்ரம் நிறுத்திக்கொண்டு, என்னோடு அவர்களை ஐக்யப்படுத்திக் கொள்கிறேன். அன்றியும், பக்தனுக்கு தேஹத்தின் விஷயத்தில் தான் என்ற அபிமான மில்லாமையால், அதை விலக்கிவைப்பதில, யாதேனும் ஓர் பிரிவு ஏற்பட்டதாக அவனுக்குத் தோற்றுவதில்லை.

பக்தனுடைய ப்ரஹ்மப்ராப்தியை மற்றோர் விதமாய் ஸமர்த்தித்தல்:

இன்னும் யோசித்துப் பார்த்தால், நானவர்களிடத்திற்குப் போவதும், பின்பு அவர்களை என்னிடத்திற் கழைத்துக்கொண்டு வருவதும், என்றிப்படிக்கூட நேரிடுவதில்லை; ஏனென்றால் தங்கள் பக்தியின் பலத்தினால், அவர்கள் ஏற்கனவே என்னுடன் ஐக்யப்பட்டுப்போய் இருக்கிறார்கள். இதை மற்றோர் விதமாய்ச் சொல்லப் போனால், ஜலத்திற்குள் தோற்றும் சந்த்ரிகையானது வாஸ்தவமான சந்த்ரிகையின் ப்ரதிபிம்பமா யிருந்து, உண்மையான சந்த்ரிகையானது சந்த்ரனிடத்திலேயே தங்கி யிருப்பது போலும், அவர்கள் தேஹத்தில் இருப்பதாய்த் தோற்றும்போது, தேஹத்தில் காணப்படுகிறது அவர்களுடைய ப்ரதிபிம்பமாய், அவர்களுடைய உண்மையான ஸ்வரூபம் எப்போதும் என்னிடத்திலேயே நிலை பெற்றிருக்கிறது, என்று சொல்லவேண்டும். ஆகவே உண்மை எவ்விதமா யிருந்தாலும், இப்படி எப்போதும் என்னுடன் ஒட்டிக்கிடக்குமவர்களுக்கு, நான் எப்போதும் ஸுலபனாய் இருப்பதால், அவர்கள் தேஹத்தின் முடிவில் நானாகவே ஆய்விடுவதில் ஸந்தேஹமே இல்லை.

பின்பு புனராவ்ருத்தி யற்றுப்போகிறது:

துக்கங்களையே பழங்களாய்ப் பலித்துக் கொடுக்கும் வ்ருக்ஷங்களின் சோலை என்றும், தாபத்ரயம் என்னும்

தணல்கள் நிறைந்திருக்கும் சட்டி என்றும், ம்ருத்யு என்னும் காக்கைக்குப் போட்ட பலி யென்றும், தைந்யத்தை கறந்து கொடுக்கும் பசு வென்றும், மஹா பயங்களை அதிகரிக்கச் செய்துகொள்வதற்கும், ஸகல துக்கங்களையும் ஏராளமாய் உண்டாக்கிக் கொள்வதற்கும், வேண்டிய மூலதனம் என்றும், துர்மதிக்கு வேர் என்றும், குகர்மத்தின் பலனென்றும், வ்யாமோஹத்தின் கேவல ஸ்வரூபமென்றும், ஸம்ஸாரம் உட்காரும் ஆஸநம் என்றும், வளர்தல் தேய்ந்துபோதல் முதலிய விகாரங்களே செடிகளாய் வளர்ந்திருக்கும் தோட்டம் என்றும், ஸகலரோகங்களுமே உணவாக நிரப்பி வைத்திருக்கும் உண்கலம் என்றும், யமன் எச்சில் செய்து எறிந்துவிட்ட கிச்சடி என்றும், ஆசையே எடுத்துக் கொண்ட உருவமென்றும்,

ஜந்மமரணம் ஸ்வபாவமாய் நடமாடிக் கொண்டிருக்கும் ரஸ்தா வென்றும், ப்ராந்தியின் நிறைவென்றும், விகல்பத்தால் உருக்கி வார்க்கப்பட்ட ஓர் உருவென்றும், தேள்கள் நிறைந்த ஓர் களஞ்சிய மென்றும், புலிகளுக்கு ஸொந்தமான ஊரென்றும், விலைமாதர்கள் மித்ரன் என்றும், விஷயங்களின் குணங்களை எல்லாம் நன்றாய்த் தெரிந்துகொள்வதற்கென்று ஏற்பட்டு, ஒருநாளும் தவராது நன்கு பூசித்து வரப்பட்ட யந்திரம் என்றும், யக்ஷிணீ பிசாசின் ப்ரேமை என்றும், குளிர்ந்திருக்கும் விஷத்தின் தாரை யென்றும், கூடியிருந்தே மோசம் செய்யும் திருடனுடைய விச்வாஸமே மூர்த்தீகரித்த ஓர் மூர்த்தி என்றும், குஷ்டரோகமுள்ள ஓர் பெண்ணி னாலிங்கனம் என்றும், க்ருஷ்ணஸர்ப்பத்தின் தேஹமார்த்தவம் என்றும், வலை வீசி மான்களைப் பிடிக்கும் வேடனுடைய பாட்டு என்றும், சத்ரு செய்து வைத்த விருந்து என்றும், துர்ஜநர்கள் செய்யும் ப்ரேமைபூர்வகமான உபசார மென்றும், (இப்படித் தனித்தனியாய் சொல்லி முடியாது) ஸர்வ அநர்த்தங்களும் நிறைந்திருக்கும் ஸமுத்ரம் என்றும், ஸ்வப்நாவஸ்தையிற் பார்க்கப்பட்ட ஸ்வப்நமென்றும், ம்ருக ஜலத்தினால் ஏற்பட்ட வநமென்றும், புகையாலும் புழுதியாலும் வ்யாபிக்கப்பட்ட ஆகாசம் என்றும், சொல்லத் தகுந்ததான இந்த சரீரத்தை, என்னுடைய கரையற்ற ஸ்வரூபமாய்ப் போய் நிலை பெற்றவர்கள், திரும்பவும் அடைவதில்லை.

आब्रह्मभुवनाल्लोकाः पुनरावर्तिनोऽर्जुन ।
मामुपेत्य तु कौन्तेय पुनर्जन्म न विद्यते ।।१६।।

ஆப்ரம்ஹ புவனான் லோகா: புனராவர்தினோऽர்ஜுன ।
மாமுபேத்ய து கௌந்தேய புனர்ஜன்ம ந வித்யதே ॥ 16

ப்ரஹ்மலோகத்தை அடைந்துங்கூட திரும்பவும் ஸம்ஸாரத்துக்கு வரத்தான் வேண்டும்:

அப்படி யிருக்கும் அக்ஷரப்ரஹ்ம பதவியை அடையாமல், ஒருவன் நான்முக ப்ரஹ்மாவின் பதம் என்னும் பெருமையை அடைந்தாலுங்கூட, புநராவ்ருத்தி என்னும் சுழலினின்று தப்பித்துக்கொள்ளமாட்டான். ஆனால் இறந்துபோனவனுக்கு வயிற்றுவலி விட்டுப்போவது போலும், விழித்துக் கொண்டபிறகு, ஸ்வப்நத்தில் காணப்பட்டதான மஹா வெள்ளத்தில் முழுகிப்போவது இல்லாமற்போவது போலும், என்னை அடைந்தவர்களை ஸம்ஸாரம் என்பது கையாற்கூட தீண்டுவது என்பது நேரிடாது.

सहस्रयुगपर्यन्तमहर्यद् ब्रह्मणो विदुः ।
रात्रिं युगसहस्रान्तां तेऽहोरात्रविदो जनाः ॥१७॥

ஸஹஸ்ர யுக பர்யந்த மஹர்யத் ப்ரம்ஹணோ விது: ।
ராத்ரிம் யுக ஸஹஸ்ராந்தாம் தேऽஹோராத்ரவிதோ ஜனா: ॥ 17

ப்ரஹ்மலோகத்தின் பெருமை:

அந்த ப்ரஹ்மலோகம் ஜகங்கள் அனைத்தாலும் அமைந்த ஓர் தேஹத்துக்கு சிரஸாயும், தீர்க்க காலம் வாழ்வு பெற்றவைகளுக்குள் முதன்மை பெற்றதாயும், லோகாசலத்தின் சிகரமாயும், இருக்கிறது. அந்த லோகத்தின் ஓர் பகலுக்குள் பதினான்கு இந்திரர்கள் உண்டாய், முடிந்துபோவதால், ஓர் இந்திரன் அந்த லோகத்தின் ஓர் ஜாமநேரங்கூட வாழ்ந்திருக்கப் பெறுவதில்லை. எப்போது ஆயிரம் சதுர்யுகங்கள் முடிவுபெறுமோ, அப்போது அந்த லோகத்தின் ஓர் பகல் முடிவு பெறுகிறது. அப்படியே ஆயிரம் சதுர்யுகமானால், அதினுடைய ஓர் இராத்திரி முடிவுபெறுகிறது. அந்த லோகத்தின் இப்படிப்பட்ட அஹோராத்ரியின் எட்டு ஜாமமும், சாகாமல் இருந்து, அதின் வைபவத்தைப் பார்க்கத்தக்க பாக்யம் படைத்தவர்கள், ஸ்வர்க்க லோகவாஸிகளால் சிரஞ்ஜீவிக ளென்றும், அஹோராத்ர மறிந்தவர்க ளென்றும், கொண்டாடப்படுகிறார்கள். அந்த ஸ்வர்க்க லோகத்தில் முக்ய புருஷனான இந்திரனே,

ப்ரஹ்மாவின் பகலில் பதினான்கில் ஓர் பாகம் அளவு தான் ஜீவித்திருக்கிறான் என்றால், மற்ற தேவர்களின் பெருமை எவ்வளவாகும்.

अव्यक्ताद् व्यक्तयः सर्वाः प्रभवन्त्यहरागमे ।
रात्र्यागमे प्रलीयन्ते तत्रैवाव्यक्तसंज्ञके ।।१८।।
भूतग्रामः स एवायं भूत्वा भूत्वा प्रलीयते ।
रात्र्यागमेऽवशः पार्थ प्रभवत्यहरागमे ।।१९।।

அவ்யக்தாத் வ்யக்தய: ஸர்வா: ப்ரபவந்த் யஹராகமே ।
ராத்ரயாகமே ப்ரளீயந்தே தத்ரைவாவ்யக்த ஸம்க்ஞகே ॥ 18

பூதக்ராம: ஸ ஏவாயம் பூத்வா பூத்வா ப்ரளீயதே ।
ராத்ரயாகமேऽவஶ: பார்த ப்ரபவத் யஹராகமே ॥ 19

எந்த ப்ரஹ்மலோகத்தின் பகல் தோறும் பூதராசிகள் உண்டாய், ராத்ரிதோறும் அவை மறைந்துபோகின்றனவோ, அந்த ப்ரஹ்மலோகம் புனராவ்ருத்தி சுழலில் அகப்பட்டதே:

அந்த ப்ரஹ்மலோகத்தில் பகல் ஏற்பட்ட வுடனே, அவ்யக்தத்தினின்று வ்யக்தமான விச்வத்தின் பூதராசிகள் கணக்கற்றபடி, எங்கு பார்த்தாலும், உண்டாகின்றன. அந்தப்பகலின் நான்கு சாமமும் ஆய்ப்போனபிறகு, இந்த ஆகாரங்களால் நிறைந்த விச்வம் என்னும் ஸமுத்ரம் வற்றிப்போகிறது. அதற்குமேல், முன்போல் பகல் ஏற்படும்போது, அந்த ஸமுத்ரம் நிறைவடைகிறது. சரத்காலத்தின் ஆரம்பத்தில் மேகங்கள் எல்லாம் ஆகாசத்தில் கரைந்துபோய், க்ரீஷ்மருதுவின் முடிவில், அவைகள் ஆகாசத்தில் உண்டாய்த் தோற்றுவது போலும், ப்ரஹ்மதேவன் பகலின் ஆரம்பத்தில் இந்த பூதஸ்ருஷ்டியின் கூட்டம் ஏற்பட்டு, அதற்கு நிமித்தமான ஆயிரம் சதுர்யுகம் முடியும் வரைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. பின்பு ராத்ரிகாலம் ஏற்படும்போது முன் ஏற்பட்ட விச்வம் அவ்யக்தத்தில் லயம் அடைகிறது.

அந்த ஆயிரம் சதுர்யுகம் முடிந்தபின், விச்வம் முன்போல் ஸ்ருஷ்டிக்கப்படுகிறது. இதைச் சொல்வதில் என் உத்தேசம் என்னவென்றால், சொல்வேன் கேள், எந்த ப்ரஹ்மலோகமானது, தன்னுடைய ஓர் தினத்துக்குள் இந்த

விச்வம் உண்டாய் மறைந்து போகும்படியாய், தீர்க்கமான வாழ்வு பெற்று பெருமை அடைந்து, ஸ்ருஷ்டியின் விதைகளெல்லாம் அடைத்து வைக்கப்படும் ஓர் களஞ்ஜியம் என்று சொல்லும்படியாயிருக்கிறதோ, அந்த ப்ரஹ்மலோகமே புனராவ்ருத்தி என்னும் அளவுகலம் நிரம்புவதற்கு, முடிவிற் போடப்பட்ட பிடியாகிறது. முன் சொன்ன விஷயத்தை வேறுவிதமாய்ச் சொல்கிறேன். ஹே அர்ஜுநா, இந்த மூன்றுலகமும், அந்த ப்ரஹ்மலோகத்தின் ஓர் பகலில், ஒரே தடவையா யுண்டாய், விஸ்தாரம் அடைந்து, அதின் இராக்காலத்தில், இப்படி உண்டான பூதங்கள் அனைத்தும், வ்ருக்ஷம் விதையில் அடங்கிப்போவது போலும், மேகங்கள் ஆகாசத்தில் லயித்துப்போவது போலும், பேதங்கள் அற்றுப்போய், ஸமபாவம் அடைந்து, அவைகள் எந்த அவ்யக்தத்தினின்று உண்டாயினவோ, அதில் லயம் அடைந்துவிடுகின்றன.

परस्तस्मात्तु भावोऽन्योऽव्यक्तोऽव्यक्तात्सनातनः ।
यः स सर्वेषु भूतेषु नश्यत्सु न विनश्यति ।। २० ।।

பரஸ்தஸ்மாத்து பாவோஅன்யோ அவ்யக்தோ அவ்யக்தாத்ஸநாதநः।
யः ஸ ஸர்வேஷு பூதேஷு நச்யத்ஸு ந விநச்யதி ।। 20

பூதங்களின் உத்பத்திநாசத்தால், ஆத்மஸ்வரூபம் வேறுபாடடையாமல், எப்போதும் ஒரே விதமாயிருக்கிறது.

பால் தயிரானபின், எப்படி பாலின் உருவமும் பெயரும் இல்லாமற் போகிறதோ, அப்படியே பூதங்கள் அவ்யக்கத்தில் லயம் அடைநதபின், ஸமவிஷமபாவங்கள் முற்றிலும் அற்றுப்போய், பூதங்கள் என்னும் வார்த்தையே அற்றுப்போகிறது. அப்படி உருவங்கள் நாசம் அடைந்தபின், இந்த ஜகத்தின் ஸ்வரூபம் நஷ்டமாய்ப்போகிறது. ஆனால் இந்த ஜகத் தெதிலிருந்து உண்டாயிற்றோ, அது முன் இருந்தது போலவே, இருந்துகொண்டிருக்கிறது. அப்போது அது அவ்யக்தம் எனப்படும், அதுவே மறுபடியும் ஸாகாரமாகும் போது, வ்யக்தம் என்று சொல்லப்படும். ஆனால், இவை யொன்றை யொன்று பிரித்துக்காட்டுகின்றனவையா யிருந்தாலும், உண்மையைப் பார்க்கப்போனால், இவை இரண்டும் இல்லாதவைகளே. தங்கநகை, உருக்கினபின் தங்கக்கட்டி என்று சொல்லப்பட்டதாய் இருந்து, திரும்பவும்

அதுவே நகையாகும்போது, கட்டியாகிய அந்த உருவம் இல்லாமற். போகிறது. நகை, கட்டி, எனப்பட்ட இந்த இரண்டும், ஸாக்ஷிபூதமாய் இருக்கும் தங்கத்தின் விஷயத்தில் ஏற்பட்ட வேறு வேறு பெயர்களே போலும், வ்யக்தம் அவ்யக்தம் என்ற இவ்விரண்டும், ஆத்மஸ்வரூபவஸ்துவிற்கு ஏற்பட்ட வேறுவேறு பெயர்களே ஆகும்.

இந்த ஆத்மஸ்வரூபமோ வ்யக்தமுமல்ல, அவ்யக்தமுமல்ல, நித்யமுமல்ல; நாசத்தோடுகூடியது மல்ல; இது, இவ்விருவிதமான பாவங்களையும் தாண்டி, அநாதிஸித்தமாயிருக்கிறது. இது விச்வமான பின்னும் முன்போலவே இருந்துகொண்டு, விச்வம் நாசமடைந்தபின்னும், ஓர் பலகையில் எழுதிய ஓர் வஸ்துவின் பெயரை அழித்து விட்டால், அவ்வஸ்துவுக்கு நாசம் ஏற்படாதது போலும், நாசம் அடையாமல் இருக்கிறது. நன்றாய்க் கவனித்துப் பார், அலைகள் உண்டாய் மறைந்துபோவதால், அவற்றின் ஸ்வரூபமான ஜலம் உண்டாய் மறைந்து போகாதது போலும், நகைகள் உருக்கப்பட்டு நாசம் அடையும்போதும், அவற்றின் ஸ்வரூபமாகிய தங்கம் நாசமடையாதது போலும், பூதங்கள் நாசமடைந்து போனாலும், அவற்றின் நடுவில் உள்ள ஜீவஸ்வரூபமும் இறந்து போனாலும், ஆத்ம ஸ்வரூபம் நாசம் அற்றதாயும் சாவற்றதாயும் இருந்துகொண்டிருக்கிறது.

अव्यक्तोऽक्षर इत्युक्तस्तमाहुः परमां गतिम् ।
यं प्राप्य न निवर्तन्ते तद्धाम परमं मम ।।२१।।
पुरुषः स परः पार्थ भक्त्या लभ्यस्त्वनन्यया ।
यस्यान्तःस्थानि भूतानि येन सर्वमिदं ततम् ।।२२।।

அவ்யக்தோ(அ)க்ஷர இத்யுக்தஸ் தமாஹுஃ பரமாம் கதிம் ।
யம் ப்ராப்ய ந நிவர்தந்தே தத்தாம பரமம் மம ॥ 21

புருஷஃ ஸ பரஃ பார்த பக்த்யா லப்யஸ்த் வனன் யயா ।
யஸ்யாந்தஃ ஸ்தானி பூதானி யேன ஸர்வமிதம் ததம் ॥ 22

ஆத்மஸ்வரூபத்தின் பெருமை:

அந்த ஆத்மஸ்வரூபத்தை அவ்யக்த மென்று வ்யவஹரிக்கப் போனோமானால், இந்தப் பெயர், மனஸுக்கும் புத்திக்கும் எட்டாததான அதற்கு, ஓர் ஸ்துதியாக எனக்குத்

தோற்றவில்லை. அதற்கு ஆகாரம் உண்டாவதால், அதின் நிராகாரத்தன்மைக்கு ஹாநி ஏற்படுவதில்லை, அந்த ஆகாரம் மறைந்துபோவதாலும், அதின் நித்யதைக்கு ஓர் கேடும் உண்டாவதில்லை. ஆகையால் அதை அக்ஷரம் என்று சொல்லவேண்டும். அப்படிச் சொன்னால், அதின் ஸ்வரூபத்தின் போதம் உண்டாகிறது: அதைத் தாண்டி வேறொன் றிருப்பதாய்த் தெரியவராமல் இருப்பதால், அதுவே பரமகதி என்றும் சொல்லப்படும். அது இந்த தேஹங்கள் என்னும் நகரங்களில் படுத்துத் தூங்குகிற தாய் இருந்துகொண்டு, அது ஓர் வ்யாபாரத்தையும் செய்யாமலும் செய்துவைக்காமலும் இருந்தும், ஸ்வாபாவிகமாகவே சரீரத்தின் ஸகலவ்யாபாரங்களிலும் ஒன்றுகூட நின்றுபோகாமல், நடந்தேறி வருகிறது. இந்த்ரியங்கள் என்ற ராஜமார்க்கத்தில் நடக்கவேண்டிய கார்யங்களனைத்தும் நடந்து கொண்டு இருக்கின்றன.

விஷயம் என்னும் கடைத்தெருவு திறந்துவைக்கப்பட்டு, மனஸு என்னும் நாற்சந்தியில், வ்யாபாரங்கள் நடக்கத்தொடக்கமான்பின், ஸுகதுக்கம் என்னும். ராஜாம்சம் அந்தக்கரணத்துக்குப் போய்ச்சேர்கிறது. ராஜாவானவன் அந்தப்புரத்தில் ஸுகமாய்ப் படுத்துத்தூங்கின போதிலும், தேசத்தில் உள்ள ஜனங்கள் எல்லாரும், தங்கள் தங்கள் லாபத்தை உத்தேசித்து, தாங்கள் தாங்கள் செய்யவேண்டிய வேலையை நடத்திக்கொண்டிருப்பது போலும், புத்தி ஸகலத்தையும் அறிந்துகொண்டும், மனது தான் செய்யவேண்டிய கொடுக்கல் வாங்கல்களைச் செய்துகொண்டும், இந்த்ரியங்கள் தங்கள் வேலையை நடத்திக்கொண்டும், ப்ராணவாயு ஓடிக்கொண்டும், ஸூர்யன் ஆட்டிவைக்காமலே ஜநங்கள் தங்கள் தங்கள் வேலையை நடத்திக்கொண்டிருப்பதுபோலும், இப்படி தேஹதர்மங்களனைத்தும், அந்த அக்ஷரம் செய்துவைக்காமலே, அதின் ஸாந்நித்யத்தால், நன்றாய் நடந்தேறி வருகின்றன.

அர்ஜுநா, அந்த ஆத்மஸ்வரூபம் சரீரத்திற் றூங்கிப்போனதுபோல் இருக்கிறது, என்னும் காரணத்தைக்கொண்டு, அது புருஷன் என்று சொல்லப்படுகிறது. ப்ரக்ருதி என்னும் பதிவ்ரதையை மனைவியாகக் கொண்டு, அது ஏகபத்நீ வ்ரதம் பூண்டிருப்பதாலும், புருஷன் என்று சொல்லப்படுகிறது. வேதம் எவ்வளவோ விரிவுள்ளதாயிருந்தாலும், அந்த ஆத்மஸ்வரூபத்தின் வாயிலைக்கூட எட்டிப் பார்த்ததில்லை.

அந்த ஆத்மஸ்வரூபம் ஆகாசத்தைக் காட்டிலும் விரிவுள்ளதாயிருந்து, ஆகாசம் முழுவதையும் சூழ்ந்து கொண்டிருக்கிறது. அந்த ஆத்மஸ்வரூபம் இப்படி எல்லாம் இருப்பதை அறிந்து, யோசீச்வரர்கள் அதை பராத்பரம் என்று சொல்வார்கள். இப்படிப்பட்ட அவ்வஸ்து, தன்னையே கதியாய் நினைத்து, தன்னை ஸதா பஜித்துக்கொண் டிருக்குமவர்கள் வீடு தேடிக்கொண்டு வந்து சேர்கிறது. எவர்களதை மனோவாக்காயமாகிய த்ரிகரணத்தாலும் ஒரே பிடியாய் பஜித்து நிற்பார்களோ, அவர்களுக்கு அது உத்தம பலன்களை விளைவித்துக் கொடுக்கும், ஸொந்தமான பூமியாகும்.

இம்மூவுலகும் அந்த புருஷோத்தமனே என்று, எவர்கள் உண்மையாய் ஸதா பாவித்திருப்பார்களோ, அவர்களுடைய ஆச்ரமமாய், அவ்வஸ்து இருந்துகொண்டிருக்கும். அது கர்வமற்றவனுடைய ஸம்பத்தாயும், குணாதீதனானவனுடைய ஞானமாயும், ஆசையை ஒழித்துக் கொண்டவர்கள் ஸுகபோகம் பண்ணிக்கொள்கிற ஸ்தானமாயும், இருக்கிறது. அது ஆத்மஞானத்தால் ஸந்தோஷமடைந்தவர்களுடைய சாப்பாடாயும், ஈச்வரசரணாகதி பண்ணிப்போட்டு சிந்தையற்று இருப்பவர்களுக்கு, தாயின் கர்ப்பமாயும், பக்தி என்னும் நேர் வழி முடிவு பெறும் ஊராயும் இருக்கிறது. இப்படி ஒன்றொன்றாய்ச் சொல்லிக்கொண்டுபோய், க்ரந்தத்தை வளர்த்திவைப்பதில், பயன் என்? எவர்கள் அந்த ஸ்தானத்துக்குப் போய்ச்சேர்கிறார்களோ, அவர்கள் அந்த ஸ்தானமாகவே ஆய்விடுகிறார்கள். சீதளமான காற்று வெந்நீர்மேல் வீசினதால் அவ்வெந்நீரே சீதளமாய்ப் போவது போலும், ஸூர்யனுக்கு முன்பட்ட இருட்டே வெளிச்ச மாய்ப் போவதுபோலும், ஸம்ஸாரமானது அதின் ஊருக்குப் போய்ச் சேர்ந்த மாத்ரத்தில், அந்த ஸம்ஸாரமும் அதைச் சேர்ந்த அனைத்தும் மோக்ஷத்தின் அம்சங்களாகவே ஆய்விடுகின்றன.

அக்நியின் நடுவில் விழுந்த கட்டை, அக்நியாகவே போய், பின்பு என்ன செய்தாலும், அதற்கு முன்னிருந்த கட்டைத்தன்மை திரும்பி வராதது போலும், கரும்பு சர்க்கரை ஆன பிறகு, எவ்வளவு கலா கௌசல்யத்தாலும் அதைத் திரும்பவும் கரும்பாய்ச் செய்யமுடியாதது போலும், இரும்பு ஸ்பர்சவேதியின் ஸம்பந்தத்தால் தங்கமானபிறகு, அதைத் திரும்பவும் இரும்பாய்ச் செய்துவைக்கும் திறமையுள்ள வஸ்து ஒன்றும் கிடைக்காததுபோலும், பாலாய் இருந்து நெய்யாய்ப் போன வஸ்து திரும்பவும் பாலாகாதது போலும்,

அந்தப்பதத்தை அடைந்தபின், புநராவ்ருத்தி யென்பது அற்றுப்போகிறது. அது என்னுடைய உண்மையான வீடு. இப்படி அவ்வக்ஷரத்தின் உள் ரஹஸ்யத்தை உனக்குக் காட்டிக் கொடுத்தேன்.

यत्र काले त्वनावृत्तिमावृत्तिं चैव योगिनः ।
प्रयाता यान्ति तं कालं वक्ष्यामि भरतर्षभ ।। २३ ।।

யத்ர காலே த்வநா வ்ருத்தி மா வ்ருத்திம் சைவ யோகின: ।
ப்ரயாதா யாந்தி தம் காலம் வக்ஷ்யாமி பரதர்ஷப ।। 23

யோகி ப்ரஹ்மத்தை அடைவதற்கு, தேஹத்தை விடவேண்டிய காலத்தின் நிர்ணயம்:

(இங்கே சொல்லப்பட்ட கால நிர்ணயம் 12, 13-வது ச்லோகங்களில் சொல்லப்பட்ட ஓம்கார உபாஸகர்களான யோகிகளுக்கே ஏற்பட்டது. 15-வது ச்லோகத்திலும், 27-வது ச்லோகத்திலும் சொல்லப்பட்ட ஞாந யோகிகள் எக்காலத்தில் தேஹத்தை விட்டாலும், அவர்கள் ப்ரஹ்மத்தையே அடைவதால், அவர்கள் தேஹத்தை விடுவதற்கு ஓர் கால நிர்ணயமும் இல்லை.) அப்படியே யோகியானவன் தேகத்தை விட்டு அந்தப் பதத்தை அடைகிற விஷயத்தில், மற்றுமோர் விஷயம் தெரிந்துகொள்ளவேண்டியதாயிருக்கிறது. ஓர் யோகியானவன் ஸரியான காலம் தப்பி தேஹத்தை விட்டால், பரப்ரஹ்ம பதவியை அடையாமல், திரும்பவும் தேஹத்துக்கு வந்துசேரும் படியாய் நேரிடுகிறது.

அப்படியில்லாமல் ஸரியான காலத்தில் எந்த யோகி தேஹத்தை விடுகிறானோ, அவன் அப்படி தேஹத்தை விட்ட வுடனேயே ப்ரஹ்மத்தை அடைந்துவிடுகிறான். ஸாயுஜ்யம் பெறுவதும், மறுபடியும் பிறந்து ஸம்ஸாரத்துக்கு வருவதும் தேஹத்தை விட்டு புறப்படும் காலத்தைப் பொருத்ததாகையால், அந்தக் காலநிர்ணயத்தை இந்த ஸந்தர்ப்பத்தில் உனக்குச் சொல்லிக்கொடுக்கிறேன், கேள். மரணகாலத்தின் ஸம்ப்ரமம் நேரிட்டதும், ஐந்து பூதங்களும் தங்கள் தங்கள் வழியைப் பார்த்துக் கொண்டு புறப்படுகின்றன.

இப்படி மரணகாலம் மேலும் மேலும் நெருங்கும்போது, புத்தி யென்பது மயக்கம் அடையாமலும், ஞாபகம் தவறிப்போகாமலும், மனஸு இறந்துபோகாமல் பூர்ண சக்தி யுள்ளதாயும், இருக்கவேண்டும். இப்படி

ஞானாம்சங்களனைத்தும் மரணகாலத்தில் பளபள வென்று காந்தி உள்ளவையாய் இருந்து, இதற்கு முன்னால் யோகஸமாதியில் அநுபவிக்கப்பட்டுள்ள ப்ரஹ்மபாவமானது, நன்றாய் அந்தராத்மாவில் வஹிக்கப்பட்டதாய், ஞானேந்த்ரியங்கள் அனைத்தும் ஜாக்ரதையாய் ஏகாக்ரப்பட்டு, மரணகாலம் வரைக்கும் இந்த ஸ்திதி மாறாமல் இருக்கவேண்டும். ஜாடராக்நியானது பலஹீனப்படாமல் பூர்ணதேஜஸ்ஸுள்ளதா யிருந்தாற்றான், இந்நிலை ஏற்படும். கவனித்துப் பார், காற்றின் வேகத்தினாலாவது, ஜலத்தின் ஸம்பந்தத்தினாலாவது, விளக்கானது அணைந்துபோனால், பக்கத்திலிருக்கிறதே கண்ணுக்குத் தெரியாமற் போவதுபோலும், தேஹாந்தத்தின் சுழற் காற்றாலாவது, தேஹம் உள்ளும் புறமும் ச்லேஷ்மத்தால் ஆக்ரமிக்கப்பட்டுப் போனதாலாவது, ஜாடராக்நியானது அணைந்து போய்விடுமேயாகில், அப்போது பிராண்னுக்கு சக்தி இல்லாமற் போகிறதால், புத்தியிருந்தும் அது என்ன செய்யமுடியும்? ஆகையால் ஜாடராக்நி அணைந்து போனபின்பு, ஞானேந்த்ரியங்களின் பலம் முறிபட்டுப்போய், தேஹம் என்பது, தேஹமாயிராமல் பச்சை மண்ணாய் விடுகிறது. அச்சமயத்தில் யோகியானவன், இருட்டில் தட்டிக் தடவிக்கொண்டு, அவனுக்கு மிகுந்திருக்கும் அல்பமான ஆயஸ்ஸு வீணாய்ப் போகிறது.

ஆனால் அவனுக்கு, அக்காலத்தில் முன் அநுபூதமான ப்ரஹ்மஸ்வரூபத்தில் கலந்துபோக முடியும். அப்படியிருக்க, அந்த யோகியின் தேஹத்தில், ஞானவ்ருத்திகளெல்லாம் ச்லேஷ்மத்தால் ஏற்பட்ட சேற்றில் சிக்கிக்கொண்டு நஷ்டமாய்ப் போய், முன் பின் விஷயங்களின் ஸ்மரணையானது அவனுக்கு இல்லாமற் போகிறதே; ஓர் இடத்தில் பத்திரப்படுத்தி வைத்த ஓர் வஸ்துவைத் தேடிக் கண்டுபிடித்துக் கொள்வதின் முன்னமேயே, கையில் இருந்த தீபம் அணைந்துபோய் விட்டால் எப்படியோ, அப்படியே முன்பு அவன் செய்துவந்த ப்ரஹ்மபாவத்தின் அப்யாஸமானது, அவன் மரணமடைவதின் முன்னமேயே நஷ்டமாய்ப் போகிறது. ஆகவே முடிவாக நீ யறிந்து கொள்ளவேண்டியது இவ்வளவே, ஞானவ்ருத்திகள் ஸரியான நிலையில் நிற்பதற்கு ஜாடராக்நியின் பலம் மூலகாரணமானதால், மரண காலத்தில் அதின் பலம் ஸம்பூர்ணமாயிருக்கவேண்டும்.

अग्निर्ज्योतिरहः शुक्लः षण्मासा उत्तरायणम् ।
तत्र प्रयाता गच्छन्ति ब्रह्म ब्रह्मविदो जनाः ।।२४।।

அக்நிர் ஜ்யோதிரஹ: ஸுக்ல: ஷண்மாஸா உத்தராயணம்।
தத்ர ப்ரயாதா கச்சந்தி ப்ரம்ஹ ப்ரம்ஹவிதோ ஜனா: ॥ 24

இதுவுமது :

தேஹத்துக்குள்ளே ஜாடராக்நியின் ப்ரகாசமும், வெளிப்புறத்தில் சுக்லபக்ஷமும், பகல் காலமும், உத்தராயணத்தின் ஆறுமாஸத்தில் ஒன்றும், இப்படிப்பட்டவை எல்லாம் ஒன்று சேர்ந்திருக்கும் காலத்தில், எவன் ப்ரஹ்மத்தின் த்யானத்துடன் தேஹத்தை விடுகிறானோ, அவன் பரப்ரஹ்மத்தில் கலந்துபோகிறான். கவனித்துக்கேள் அர்ஜுநா, எந்தக் கால விசேஷத்துக்கு இவ்வளவு பலம் ஏற்பட்டிருக்குமோ, அக்காலத்தில் இந்த தேஹத்தை விட்டு யோகியானவன் புறப்பட்டாற்றான், நேராகத் தன் ஸொந்த ஊராகிய ப்ரஹ்மம் போய்ச் சேரலாம். ஆகையால் இந்த விஷயத்தில் ஜாடராக்நி முதற்படி, அதின் ப்ரகாசம் இரண்டாவது படி, பகல் மூன்றாவது படி, சுக்லபக்ஷம் நான்காவது படி; அவற்றிற்கு மேல் உத்தராயணத்தின் ஆறு மாஹத்தில் ஒன்று கடைசியான படி. இப்படி எல்லாப் படிகளிலும் காலை வைத் தேறி, யோகியானவன் ஸாயுஜ்ய மென்னும் வீட்டில் துழைகிறான். இந்த உத்தமமான காலத்தின் சேர்க்கைக்கு அர்ச்சிராதிமார்க்கம் (ஒளி பெற்ற வழி) என்று பெயர். இதற்குமேல் ஸரியில்லாத காலம் எது, என்பதைச் சொல்வேன், கேள்.

धूमो रात्रिस्तथा कृष्ण: षण्मासा दक्षिणायनम् ।
तत्र चान्द्रमसं ज्योतिर्योगी प्राप्य निवर्तते ।। २५ ।।

தூமோ ராத்ரிஸ் ததா க்ருஷ்ண: ஷண்மாஸா தக்ஷிணாயனம்।
தத்ர சாந்த்ரமஸம் ஜ்யோதிர் யோகீ ப்ராப்ய நிவர்ததே ॥ 25

ப்ரஹ்மப்ராப்திக்கு ஸரியில்லாத காலவிசேஷம்:

ப்ரயாண காலத்தில், வாதச்லேஷ்மத்தின் பெருக்கால் அந்தக்கரணத்தில் இருட்டு கவிந்து கொண்டிருக்கும். இந்த்ரியங்க ளனைத்தும். கட்டைபோல் ஆய், ஞாபகம் என்பது மயக்கத்தில் முழுகிப்போய், மனஸு பைத்யம் பிடித்துப் போனதாய், ப்ராணன் திகைத்துப் போகும். அக்நியின் தேஜஸ் இல்லாமற் போய், எங்கு பார்த்தாலும் புகை சூழ்ந்துகொண்டு போகும். அப்போது ஞாநசக்தியானது சரீர தர்மத்தால்

ஆக்ரமிக்கப்பட்டு ப்ரகாசமற்றுப் போகிறது. சந்திரனை மறைத்துக்கொண்டு, நெருக்கமாயும் ஜலத்தால் நிறைந்தனவாயும் இருக்கும் மேகங்கள் ஆகாசத்திற் கூடிக்கொண்டால், எப்படி இருண்டதான இருட்டும் நல்ல ப்ரகாசமும் இல்லாமல், இரண்டும் கலந்ததான ஓர் ஸ்திதியானது ஏற்படுமோ, அப்படி செத்ததும் இல்லாததாய் ஞானமுள்ளது மில்லாததாய், ஜீவிதம் கலங்கி ப்ரமித்துப் போனதான ஓர் நிலையேற்பட்டு மரணத்தின் காலம் நெருங்கி நிற்கும்.

இப்படி மனஸு, புத்தி, இந்தரியங்கள், இவற்றையெல்லாம், புகை நெருக்கமாய்ச் சூழ்ந்துகொண்டு போகவே, ஜந்மம் முழுக்க அப்யாஸம் செய்து அடைந்ததான. லாபம், முற்றிலும் நஷ்டமாய்ப் போகும். நன்றாய்ப் பார், அப்பா. எந்த வேளையில், கையிற் கிடைத்திருந்த லாபமே நஷ்டமாய்ப் போகிறதோ, அந்த வேளையில் நஷ்டமாய்ப் போன அந்த லாபத்தைக்கொண்டே அடையவேண்டியதான மற்றும் ஓர் பெரிய லாபம், என்னமாய் லபிக்கும்? ஆகையால் அவனுக்கு ப்ரயாண காலத்தில், இப்படிப்பட்ட துர்க்கதி ஏற்பட்டு நிற்கும். இப்படி உள்புறத்தில் ஏற்பட்டு, வெளியில் க்ருஷ்ணபக்ஷமும் ராத்ரியும் தக்ஷிணாயனத்தி னாறுமாஸத்தில் ஒன்றும் நேர்ந்து, இப்படி புநராவ்ருத்திக்குக் காரணமான அனைத்தும் ஒன்றுபட்டு இருக்கும் காலத்தில், எவனுக்கு தேஹத்தை விட்டுப் புறப்பட வேண்டியதாய் ஏற்படுகிறதோ, அவனுக்கு ஸ்வரூபப்ராப்தி அடைகிறது என்பதின் கதையே கேட்கக் கிடைக்காமற்போகிறது.

இவ்விதம் தேஹத்தை விட்டுப் போனவன், முன்பு யோகியாயிருந்தான் என்னும் ஓர்காரணத்தைக்கொண்டு, சந்திரலோகம் வரைக்கும் போய், மறுபடியும் அங்கிருந்து புறப்பட்டு, ஸம்ஸாரம் வந்து சேர்கிறான். ஸரிஇல்லாத காலம் என்று நான் முன் சொன்னேனே, அது இது தான் என்றும், இந்த தூம்ரமார்க்கம் (புகையடைந்த வழி) கடைசியில் திரும்பவும் ஸம்ஸாரம் என்னும் ஊருக்குக் கொண்டுவந்துவிடுகிற தென்றும் அறி. மற்றதாகிய அர்ச்சிராதி (ஒளிபெற்றதான வழி) மார்க்கம் வஸதியாயும், ஸுலபமாயும், எல்லாவிதமாயும் ஸுககரமாயும் இருப்பதுடன், ஸாதகனை மோக்ஷம் வரைக்குங் கொண்டுபோய்ச் சேர்த்துவைப்பதாயும் இருக்கிறது.

शुक्लकृष्णे गती ह्येते जगतः शाश्वते मते ।
एकया यात्यनावृत्तिमन्ययावर्तते पुनः ।। २६ ।।

ஸுகல க்ருஷ்ணே கதீ ஹ்யேதே ஜகத: ஸாஶ்வதே மதே।
ஏகயா யாத்யநா வ்ருத்தி மன்யயா ऽऽவர்ததே புன: ॥ 26

யோகிக்கு அர்ச்சிராதி மார்க்கம் கிடைக்கிறதோ, அல்லது தூம்ர மார்க்கம் கிடைக்கிறதோ, அது நிச்சயம் இல்லை: இப்படி அநாதியாய் ஏற்பட்டிருக்கும் இவ்விரண்டு வழிகளில், ஒன்று நேராய் மோக்ஷத்துக்குக் கொண்டுபோவதும், மற்றொன்று சுற்றிக்கொண்டு திரும்பவும் ஸம்ஸாரத்துக்குக் கொண்வந்து விடுவதுமாய், இருக்கும் ஓர் விஷயம், நீ நன்றாய் அறியும் வண்ணம் சொல்லப்பட்டதாயிற்று. மார்க்கம் இது வென்றும், அமார்க்கம் இது வென்றும், உண்மை இது வென்றும், பொய் இது வென்றும், இப்படி ஹிதா ஹிதங்களைத் தெரிந்துகொள்வது, தன் நன்மையை விரும்பின ஒருவனுக்கு அவச்யமாகிறது. இதை நன்றாய்க் கவனித்துப் பார்க்க வேண்டும். மிகவும் ஆழ்ந்து அகண்டிருக்கும் நீரை, ஆபத்தில்லாமல் தாண்டிப்போவதற்குத் தகுந்ததான, ஓர் படகு ஸித்தமாய் இருப்பதைப் பார்த்தபின், அந்நீரைத் தான் நீந்திப் போகவேண்டும் என்று, அதிற் குதிப்பவன் உண்டா? ஸுகமாய் இருக்கும் ராஜமார்க்கத்தை விட்டு, காட்டுக்குக் கொண்டுபோய்விடும் கிளைவழி யென்றறிந்தும், அதிற் செல்கிறவன் உண்டா? எவன் இது விஷம் என்றும், இது அம்ருதம் என்றும், தெரிந்துகொண்டானோ, அவன் அம்ருதத்தைக் கைவிடாது பற்றுதல் போலும், நேரான வழி இன்னதென்று தெரிந்துகொண்ட ஒருவன், தப்பு வழியில் இறங்கமாட்டான்.

ஆகையால் ஓர் கார்யத்தில் ப்ரவர்த்திக்கும் முன்பே, நல்லது இது, கெட்டது இது, என்று ஒருவன் தெரிந்து கொள்ளவேண்டும். அப்படித் தெரிந்துகொண்டபின், தகாததான விஷயத்தில் இறங்கமாட்டன் அல்லவா? அப்படித் தெரிந்துகொள்ளாத பக்ஷத்தில், தேஹத்தின் முடிவில் பெருத்த ஸங்கடம் ஏற்பட்டு, பரபரப்புண்டாய், ஸரியானவழி தெரியாமற்போய், ஜந்மம் முழுக்கக் கஷ்டப்பட்டுச் செய்த அப்யாஸம் முழுவதும் வீண்பட்டு, அர்ச்சிராதி மார்க்கத்தில் ப்ரவேசிக்கத் தவறினவனாய், தூம்ர மார்க்கத்தில் ப்ரவேசித்து ஸம்ஸாரத்திலேயே சிக்குண்டு, அலைந்து கொண்டிருந்தே தீரவேண்டும். இப்படிப்பட்ட ஓர் பெரிய ஸங்கடம் இருப்பதை, முன்னாலேயே நீ தெரிந்துகொண்டு, ஸம்ஸாரத்தை ஒரே தடவையாக ஒழித்துக்கொள்ளும் உபாயத்தை நீ அறிந்துகொள்வதற்காக, யோகிகள் போகும் இரண்டு வழியும் உனக்குத் தெளிவாகும்படி, நான் சொல்லி வைத்தேன்.

ஒருவழியால் அவன் ப்ரஹ்மஸாயுஜ்யம் அடைகிறான், மற்றோர் வழியால் ஸம்ஸாரத்துக்குத் திரும்பி வருகிறான். ஆனால் அவன் எந்த வழியாய்ப் போகிறானோ, அது அவனுடைய அத்ருஷ்டத்தைப் பொருத்த தென்பது நிச்சயம்

नैते सृती पार्थ जानन्योगी मुह्यति कश्चन ।
तस्मात्सर्वेषु कालेषु योगयुक्तो भवार्जुन ।। २७ ।।

நைதே ஸ்ருதீ பார்த ஜானன்யோகீ முஹ்யதி கஶ்சன ।
தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு யோக யுக்தோ பவார்ஜுன ॥ 27

ஆகையால் ஸர்வகாலமும் ப்ரஹ்ம பாவானுஸந்தானம் செய்து கொண்டிருக்கும் ஞானயோகியாக இருந்துவிட்டால், ஸம்ஸார மற்றுப் போகிறது: தேஹத்தை விட்டு புறப்படும் வேளையில், தான் முன்னமே எண்ணி, ஏற்பாடு செய்துகொண்டபடியே நடக்கும், என்பது நிச்சயம் இல்லை. அகஸ்மாத்தாய் நேரிடுவது எப்படி இருக்குமோ? ஆகையால் தேஹத்தை விட்டதும, தவறாமல் ப்ரஹ்மத்தை அடைவ தெப்படி யென்று தெரிந்துகொள்ளவேண்டும். பழுதையைப் பாம்பென்று நினைத்து, பின்பு அது பழுதை என்று தெரிந்துகொண்ட உத்தரக்ஷணத்திலேயே, பாம்பென்ற ப்ராந்தி நஷ்டமாய்ப் போவதுபோலும், தேஹம் இருந்தாலும் ஸரி, இல்லாது போனாலும் ஸரி, தான் ப்ரஹ்மமே என்று அறிந்திருக்கும் ஒருவன், ப்ரஹ்மத்தைவிட வேறாய் எப்படி இருப்பான்? "நான் இப்போது அலைகளோடு கூடியிருக்கிறேன்," என்றும் "இப்போது அலைகளற்றுப் போனவனாயிருக்கிறேன்," என்றும் ஜலம் எப்போதாவது உணர்வ துண்டா? இரண்டு ஸ்திதியிலும் ஜலம் ஒரே மாதிரியாகவே இருந்து விடுகிறது. அலைகள் உண்டாவதால் தான் பிறந்ததாகவும், அலைகள் ஓய்ந்து போவதால் தான் செத்துப் போனதாகவும், அது நினைப்பதில்லை.

அப்படியே, அந்த ஞானி தேஹத்தோ டிருக்கும்போதே, தானும் தன் தேஹமும், ப்ரஹ்ம மென்றே பாவித்திருக்கிறான். இப்படி ஆனபிறகு, தன் சரீரத்துக்கு முன்னிடப்பட்டிருந்த பெயரைக் கூட அவன் மறந்து போய், அது அவனிடத்தில் மிகுந்து நில்லாமற் போய் விடுவதால், அவன் எப்போது எவ்விதமாய் இறந்து போகிறான், என்று சொல்லமுடிகிற தில்லை. இப்படி அவன் புறப்பட்டுப் போவது என்பதே ஸித்தியாமற் போனபின், எந்த மார்க்கமாய் அவன் புறப்பட்டுப் போகிறான் என்று விசாரிப்பது ஏன்? தேசகாலம் முதலியவை

யெல்லாம் தான்னே யாய்ப் போன பின், எவன், எங்கிருந்து, எவ்விடத்துக்கு, எப்படிப் போக முடியும்? மேலும் பாரப்பா, ஓர் குடம் எப்போது உடைந்து போகிறதோ, அப்போது அதற்குட்பட்ட ஆகாசம் நேராகப் புறப்பட்டுப்போனாற்றான், பெரிய ஆகாசத்தை அடைந்து அத்துடன் கலந்து போகிறது, இல்லாவிட்டால் அது வழிதப்பிப்போய், அப்படிக் கலக்காமற் போகிறதென்பது ஏற்படுவ துண்டா? அக்குடம் உண்டானதற்கு முன்னும், அது இருந்த காலத்திலும், அது சிதிலமாய்ப் போன பின்னும், எப்போதும் ஒரே ஆகாசம் தான் இருந்தது. அதை இரண்டாகக் காட்டிக் கொண்டிருந்த குடம் ஒன்றே, நாசம் அடைந்தது. ,

இப்படி ஓர் ஞானத்தின் ஒத்தாசையை அடைந்து, ப்ரஹ்மமே தானேன்று புத்தி பாராட்டி இருக்கும் அந்த ஞானயோகிக்கு, மார்க்கம் அமார்க்கம் என்னும் ஸங்கடம் ஏற்படுவதில்லை. இக்காரணத்தைக் கொண்டு. நீ ஞாநயோகி ஆகவேண்டும். இவ்வொன்றினாலேயே நீ எப்போதும் ஸமபாவத்தை (விச்வமும் தானும் ப்ரஹ்மமே என்னும் ஞான நிலையை) அடைந்து நிற்பாய். இப்படி ஆய்விட்ட ஒருவன் எங்கிருந்தாலும், எக்காலத்திலும், தேஹத்தோடு கூடி இருந்தாலும், தேஹம் இல்லாதவனாய் இருந்தாலும், ஓர் விதமான பந்தமு மற்றவனாய், நித்யமான் ப்ரஹ்மத்தின் பாவத்தை அடைந்திருப்பான். அவன் மேல்வரும் ப்ரஹ்ம கல்பத்தின் ஆரம்பத்தில், ஜந்மம் எடுக்கமாட்டான்; அக்கல்பத்தின் முடிவில் மரணத்தில் முழுகிப் போகான்; நடுவில் ஸ்வர்க்கம், நரகம், ஸம்ஸாரம், இவற்றிலெதிலு மழுந்திப் போகான். இந்த ஞானத்தோடு ஸதா கூடினவனாய், எவன் இருப்பானோ, அவனுக்குத்தான் இந்த ஞானயோகம் ஸரியான பலனைக் கொடுக்கும். அவன்றான், எவ்வளவு உத்தமமான விஷயபோகங்களையும், காலால் உதைத்துத் தள்ளி விட்டு, தன்னுடைய நிஜஸ்வரூபமான ப்ரஹ்ம பாவத்தை அடைவான், இந்த்ரன் முதலான தேவர்களால் கொண்டாடப்பட்ட ஸ்வர்க்க லோகத்தில், அரசாக்ஷி பெற்று, புசிக்கக் கூடிய ஸம்பத்தனைத்தையும், அவன் துச்சம் என்றெண்ணி, காலால் உருட்டித் தள்ளி விடுவான்.

वेदेषु यज्ञेषु तपःसु चैव दानेषु यत्पुण्यफलं प्रदिष्टम् ।
अत्येति तत्सर्वमिदं विदित्वा योगी परं स्थानमुपैति चाद्यम् ।।२८।।

வேதேஷு யக்ஞேஷு தபஸ்ஸு சைவ தானேஷு யத்புண்யபலம் ப்ரதிஷ்டம்।
அத்யேதி தத்ஸர்வமிதம் விதித்வா யோகீபரம் ஸ்தானமுபைதி சாத்யம்॥ 28

அந்த ஞானயோகி அடையும் ப்ரஹ்மபதவிக்கு எவ்வளவு உயர்ந்த கர்மபலனும் ஈடாகாது:

வேதங்களை ஸம்பூர்ணமாய் அத்யயனம் செய்து, யஜ்ஞங்கள் என்னும் பயிர்நிலங்களை நன்றாய்ப் பயிர்செய்து, அவற்றை நன்றாய் விளையச் செய்து கொண்டு, தபஸ் தானங்கள் முழுவதையும் விதிகோணாம லநுஷ்டித்து, இப்படி கர்மங்களால், ஸம்பாதித்துக்கொள்ளக்கூடிய புண்யங்களனைத்தும் ஒன்று சேர்ந்து, அளவுக்கடங்காதபடி ஸுகரூபமான பலன்களை உண்டாக்கித் தந்தாலும், அப்பலன்கள் முழுமையும் அந்த நிர்மலமான ப்ரஹ்மப்ராப்திக்கு ஸரியாகாது. எந்த ஸுகமானது ஜநங்களின். த்ருஷ்டிக்கு. நித்யமான ப்ரஹ்மப்ராப்தியின் ஸுகத்திற்குக் கொஞ்சங்கூட குறைந்ததல்ல வென்றும், வேதாத்யயனம், யஜ்ஞம், முதலிய உத்தம ஸாதநங்களை அநுஷ்டித்தே ஸம்பாதித்துக் கொள்ளக்கூடிய தென்றும், புசிக்கப்புசிக்கத் தெகுட்டாது, புசிப்பதினால் குறைந்துபோகாது, புசிப்பவன் ஆசையைத் தீர்த்து வைக்கத் தக்கதென்றும், ப்ரஹ்மாநந்த மென்னும் மஹாஸுகத்தோடு கூடப்பிறந்ததாகவே சொல்லத் தக்கதென்றும், மஹாபாக்யம் படைத்தவர்களுக்கே, புசிக்கக் கிடைக்கக் கூடியதென்றும். நூறு அச்வமேதங்கள் செய்து முடித்த இந்திரனுக்குக்கூடப் புசிக்கக் கிடைக்காத தென்றும் தோன்றுமோ, அந்த உத்தம ஸுகத்தைக்கூட, அந்த ஞானயோகி தன்னுடைய அலௌகிகமான தருஷ்டியைக் கொண்டு, துச்சமாய் நோக்கி, அதை ஓர் படியாய்ச் செய்துகொண்டு, அதன்மேற் கால் வைத்து, ப்ரஹ்ம பதவியில் ஏறிக்கொள்கிறான்.

மேல்வரும் அத்யாயத்தின் அவதாரிகை:

சராசரத்தின் பாக்யமென்றும், ப்ரஹ்மா ஈசன் முதலானவர்களாற் பூசிக்கத்தக்கவனென்றும், யோகிகள் தங்கள் ஸுகபோகத்துக்குத் தேடிவைத்துக் கொண்ட மூலதனமென்றும், ஸகலகலைகளுக்கும் கலையா யிருப்பவனென்றும், பரமாநந்தமே உருவாய்க் கட்டிப்போன ஓர் மூர்த்தி என்றும், விச்வத்தின் உயிர்க் குள்ளிருக்கும் உயிர் என்றும், யாதவகுலத்தின் குலதீபமென்றும், சொல்லத்தக்க அந்த ஸ்ரீக்ருஷ்ணன் அர்ஜுநனைப் பார்த்து, இவ்வாறு சொன்னாரென்று, குருக்ஷேத்ரத்தின் வ்ருத்தாந்தத்தை த்ருதராஷ்ட்ரராஜனுக்கு ஸஞ்சயன் உரைத்து, அவ்விஷயத்தையே மேலும் சொல்லப்புகுவான். அதை மேல்வரும் அத்யாயத்திற் சொல்வேன் கேளுங்கள்.

எட்டாம் அத்யாயம் முற்றிற்று.

அத்யாயம் 9

ஞானதேவர் ஸாதுக்களின் கவனத்தை ப்ராத்தித்து, அது ப்ரேமையின் கார்யமென்று ஸமர்த்தித்தல் :

நீங்கள் உங்களுடைய கவனம் என்ற ஒன்றை மாத்ரம் எனக்குக் கொடுப்பீர்களானால், பின்பு ஸர்வ ஸுகத்தையு மடைவீர்கள், என்று நான் ப்ரதிக்ஞை செய்கிறேன். ஆனால் ஸர்வஜ்ஞர்களாகிய நீங்கள் சேர்ந்திருக்கும் இந்த ஸபையில், நான் சொன்ன இவ்வார்த்தை, உங்களைக் காட்டிலும் நான் ஞாநத்தாற் சிறந்தவன், என்று நினைத்துச் சொன்னதல்ல. நீங்கள் நான் சொல்வதைக் கவனித்துக் கேட்க வேண்டும், என்று சொன்ன இந்த வார்த்தை. நான் தங்களிடத்திற் சலுகையாற் செய்துகொண்ட விஞ்ஞாபனமே என்றறியுங்கள். உங்களைப் போன்ற ஸர்வசெல்வமும் நிறைந்த பிறந்தவீடு கிடைத்துப் போனபின், செல்வம் என்பதே செல்லம் கொண்டாடத் தலைப்பட்டால், அது நிறைவேறவும், மனோரதம் என்பதே மனோரதத்தால், அம்மனோரதம் பூர்த்தியடையவும், தடை இருக்குமா?

உங்கள் க்ருபையின் ஈரத்தினால், மிக்கச் சிங்காரமாய் வளர்ந்திருக்கும், உங்களுடைய மனக்குளிர்ச்சி யென்னும் தோட்டத்தின் நிழலைப் பார்த்து, ச்ரமம் அடைந்த நான் அதில் விழுந்து புரளுகிறேன். ப்ரபுக்களே, நீங்கள் ஸுகம் என்னும் அம்ருதத்தால் நிறைந்திருக்கும் தடாகமா யிருப்பதைப் பார்த்து, என்னுடைய இஷ்டப்ரகாம், அந்தத் தடாகத்தில் விழுந்து, அமிழ்ந்து, நீந்தி, துள்ளிவிளையாடி, உள்ளும் புறமும் குளிர்ச்சி அடையவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். இங்குகூட நான் சலுகைபாராட்டப் பயந்தேனாகில், மற்ற எந்த இடத்திற்றான், அப்படிச் செய்து ஆநந்திப்பேன்?

இது ஸரியல்லவென்று, உங்களுக்குத் தோற்றினால், மற்றோர்விதமாய் என் ப்ரார்த்தனை பொருத்த முள்ளதாகிறது. குழந்தையின் மழலைச் சொற்களைக் கேட்டும், தத்தித்தத்தி நடக்கும் நடைகளைப் பார்த்தும், ஆனந்தப்பட்டு மனமகிழ்ச்சி யடையும் தாயைப் போல், உங்களுக்கும் என்னைப் பார்த்து ஏதோ ஓர் காரணமாய் மனமகிழ்ச்சி உண்டாக வேண்டும், என்று ஓர் பெருத்த ஆசை உங்கள் குழந்தையாகிய எனக்கு உண்டானதால் உங்களிடத்திற் சலுகை கொண்டாடுகிறேன், என்று பாவித்துக் கொள்ளுங்கள். இவ்விரண்டில் ஒன்றும் காரண மாகாமற்போனால், தங்களைப் போன்ற

சர்வஜ்ஞர்கள், என்னுடைய வார்த்தைகளினின்று தெரிந்துகொள்ள வேண்டியது என்ன இருக்கிற தென்று நினைத்து, தங்கள் கவனத்தை நான் ப்ரார்த்திக்க வேண்டும்?

ஸரஸ்வதியின் புத்ரனுக்கும் பாடங்கள் ஏற்படுத்திவைத்து, வித்யை சொல்லிக்கொடுக்க வேண்டிய அவச்ய முண்டா? நன்றாய்க் கவனித்துப் பார்க்க வேண்டும். மின்மினிப்பூச்சி எவ்வளவுதான் பெருந்துப்போனாலும், ஸூர்யனுக்கு முன்ப்ரகாசிக்குமா? அம்ருதத்தால் அமைந்த தட்டில் பரிமாறத்தக்க ஒருணவை, எப்படி ஸித்தஞ் செய்யமுடியும்? சந்திரனுக்கு வெப்பந் தீர விசிறியெடுத்து வீசுதலும், நாதத்துக்கு ஆநந்தம் உண்டாகும்படி பாடுதலும், நகைகளுக்கு நகைகள் செய்து. பூட்டுதலும், பரிமள மென்பது முகந்து ஆநந்தப்பட்டத்தக்க ஓர் பூச்செண்டும், ஸமுத்ரம் முழுக்கத்தக்கதான ஓர் நீரும், ஆகாசத்தை முழுவதையும் போர்த்து வைக்கத்தக்க ஓர் போர்வையும், ஸாதித்து வைப்பது, எப்படி அஸாத்யமாயிருக்குமோ அப்படியே நீங்கள் கேட்டு த்ருப்திப்பட்டு, இது நல்ல வ்யாக்யாநமாய் இருக்கிறதே என்று சொல்லி, உங்கள் மனஸு மகிழ்ச்சி அடையும்படி செய்யத்தக்க வாக்சாதுர்யம் கிடைப்பது எவர்களுக்கும் அஸாத்யமே யாகும்.

இப்படி இருந்தாலும், உலகை யெல்லாம், ப்ரகாசம் அடையச் செய்யும் ஸூர்யனுக்கு, ஓர் வத்தியை ஏற்றிக் கையிற் பிடித்துக்கொண்டு, தீபோபசாரம் செய்வதில்லையா? உள்ளங்கை நீரைக் கொண்டு வருணபகவானுக்கு அர்க்யம் ஸமர்பிப்பது இல்லையா? ப்ரபுக்களே, நீங்கள் பரமசிவத்தின் மூர்த்திகள், நானோ தங்களை அர்ச்சிக்கும் ஏழை; ஆகவே, என்னுடைய சொற்களாகிய மிக்க அல்பமான த்ரவ்யத்தைக் கொண்டு, தூபோபசாரம் செய்கிறேன். அதை நீங்கள் அங்கீகரிக்காமல் போவீர்களா? குழந்தை தகப்பனுடைய போஜந பாத்ரத்தின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, அப்பாத்ரத்திற் பரிமாறி யிருக்கும் அந்நத்திற் கொஞ்சம், கையில் எடுத்துக் கொண்டு, தகப்பனுக்கே ஊட்டப் புகுந்த போது, அவன் ஸந்தோஷம் அடைந்து, வாயை திறந்து காட்டுவதில்லையா?

அப்படியே நான் உங்களுக்குமுன் சிறுபிள்ளைத்தனத்தால், பிதற்றத் தொடங்கினால், நீங்கள் ஸந்தோஷமே அடைவீர்கள். இப்படி ஏற்படுவது ப்ரேமையின் கார்யம். மேலும் ஸாதுக்களாகிய நீங்கள் என்னை உங்களைச்சேர்ந்தவ னென்றெண்ணி, ப்ரேமை பாராட்டி, அந்த ப்ரேமைக்கு மிவும் வசப்பட்டுப்போய் இருப்பதால், நான் செய்யும் ஹடம்

எல்லாம் உங்களுக்கு ஆநந்த கரமாய்த் தோற்றி, நான் உங்களுக்கு உபகாரம் செய்ததாகவே நீங்கள், பாவிப்பீர்கள், குழந்தை தாயின் ஸ்தநத்திற் றலையை வைத்து முட்டுவதினால், பால் ஜாஸ்தியாகவே உத்பத்தியாகும். எவர்கள் மேல் ப்ரேமை ஏற்பட்டிருக்குமோ, அவர்கள் கோபித்துக்கொண்டால், அவர்கள் மேல் இன்னும் ஜாஸ்தி ப்ரேமை உண்டாகிறது. ஆகையாற் றூங்கிக்கிடக்கும் (மாந்த்யம் அடைந்திருக்கும்) உங்கள் க்ருபையானது சிறுவனாகிய என்னுடைய தடுமாற்றம் கொண்ட மழலைச் சொற்களைக் கேட்டு, விழித்துக் கொள்ளும், (வ்ருத்தி யடையும்) என்று தெரிந்து கொண்டு தான் நான், பேசத் தொடங்குகிறேன்.

ஸாதுக்கள் கவனித்தால், தனக்கு கீதார்த்தத்தைச் சொல்லும் திறமை உண்டாகு மென்று, ஞானதேவர் ஸாதுக்களை பிராத்தித்தல் :

அன்றியும் சந்திரனை எவரேனும தொழுமரத்தி லிட்டு, அதினின்றும் சந்த்ரிகையை கறந்துகொள்கிறார்களா? காற்றுக்குச் செருப்புப் போட்டுவிடுத்தும், ஆகாசத்துக்குப் போர்வை போர்த்துவதும், நீரை த்ரவிக்கச் செய்வதும், வெண்ணெயைக் கடைவதும், எங்கேயாவது உண்டா? யாதொரு வ்யாக்யானத்தையும் அபேக்ஷிக்காததாய் இருக்கும், இந்த கீதார்த்தத்தைக் கண்டு வ்யாக்யானம் லஜ்ஜைப்பட்டுத் திரும்பி விடுகிறது. இத்தனையும், நிற்கட்டும். எந்த கீதார்த்த மென்னும் படுக்கையின் ஸமீபம் வந்து வேதமானது வாய்திறவாது படுத்துத் தூங்கிப்போகிறதோ அந்த கீதார்த்தத்தை, வாக்நைபுண்யம் மிக்கக் குறைவாயமைந் திருக்கும் மஹாராஷ்டிர பாஷையால், தெரியப்படுத்துவது எவன் திறத்ததாகும்? ஆயினும் இப்படிப்பட்ட விஷயத்தை, உங்களைப் போன்றவர்கள் முன் எடுத்து உபந்யஸித்து, உங்களை மெச்சிப்பிக்க வேண்டுமென்று துடுக்குத்தனமாய்த் தைர்யங் கொண்டிருக்கிறேன்.

ஆகையால் சந்திரனைக்காட்டிலும் குளிர்ச்சியை உண்டாக்குகிறதாயும், அம்ருதத்தைக் காட்டிலும் பிழைப்பிக்கிற சக்தி மிகுந்துள்ளதாயும், இருக்கும் உங்கள் கவனத்தை, என் உபந்யாஸத்திற் செலுத்தி, என் மனோரதத்தைப் பூர்த்தி செய்துவைக்க வேண்டுமென்று, நான் ப்ரார்த்திக்கின்றேன். உங்களுடைய க்ருபாத்ருஷ்டி என்னும் மழை பொழிந்தால், என்னுடைய புத்தி ஸகலார்த்தஸித்தி என்னும் பழத்தை பழுத்துத்தரும். அப்படிச் செய்யாமல்,

நீங்கள் உதாஸீநமாயிருந்துவிட்டால், முளை யெடுத்த என்னுடைய ஞானம், முளையிலேயே உலர்ந்து போகும். கேளுங்கள்,

ச்ரோதாக்களின் கவனமென்பது, சொல்கிறவனுடைய ஸாமர்த்யத்துக்கு உணவாய் ஏற்பட்டு, அறிய வேண்டிய விஷயங்களை வர்ணிக்கிறவனுடைய வார்தைகளுக்கு அர்த்தபுஷ்டி யென்னும் தொந்தி பெருக்கும் படியாய்ச் செய்து வைக்கும். அப்போது அர்த்தங்கள் தாங்கள் வெளிப்படுவதற்குத் தகுந்த வார்த்தைகளின் வழியைப் பார்த்துக் கொண்டு நிற்கும். அபிப்ராயங்களின்மேல் அபிப்ராயங்கள் தாமாகவே ஸ்புரிக்கத் தலைப்படும். ரஸோத் பத்தி என்னும் புஷ்ப வ்ருஷ்டி புத்தியின் மேல் வர்ஷித்துக் கொண்டிருக்கும் ஸம்வாதம் என்னும் அநுகூலமான காற்று அடிக்கத் தொடங்கினால், ஹ்ருதயம் என்னும் ஆகாசத்தில், ஸர்வ சாஸ்திரங்களிலும் அடங்கிய ஞானங்கள் என்னும் மேகங்கள் வந்து கூடி, வர்ஷிக்கத் தலைப்படும் ச்ரோதாக்கள் அநாதரவு பாராட்டினால், மழையாகப் பெய்வதற்கு ஸித்தமாய் இருந்த ஞாநமென்னும் ரஸம், ஆவியாய்ப்போய் மறைந்துபோகும்.

பெரியோர்களே சந்ரகாந்தம் தானே ஜலமாய் உருகிப்போவதே யானாலும், அந்த சந்த்ரகாந்தக் கல்லுக்கு, சந்திரனுடைய உதவி இல்லாமற்போனால், ஜலமாய் உருகி மனிதர்களுக்கு உபயோகப்படும் ஸாமர்த்யம், ஸித்தியாது போவதுபோலும், சொல்லுகிறவனுக்குக் கேட்பவர்களுடைய கவனம் என்னும் ஒத்தாசை இல்லாவிட்டால், சொல்லும் திறமை இல்லாமற்போகிறது. ஆயினும் "என்னைச் சமைத்து, இனித்த சுவை உள்ளதாகச் செய்துகொண்டு புசியுங்கள்," என்று அரிசி ப்ரார்த்தித்துக் கொள்ள வேண்டியது அநாவச்யமே. கயிற்றால் ஆட்டி வைக்கப்படும் பொம்மையானது, "என்னை ஆட்டிவைத்து, நீர் லாபத்தை அடைந்து கொள்ளும்" என்று அதின் கயிறுகளை கையிற் பிடித்திருப்பவனை, ப்ரார்த்திக்க வேண்டுமா, என்ன? அந்த ஸூத்ரதாரன், பொம்மையின் லாபத்தை உத்தேசித்தா, அப்பொம்மையை ஆட்டி வைக்கிறான்? அல்லவே. அவனுடைய ஸாமர்த்யத்தை இதரர்கள் பார்த்து, அவனைக் கொண்டாடுவதை உத்தேசித்தல்லவா, அவன் அப்பொம்மையை ஆட்டி வைக்கிறான். அப்படி இருக்க, பொம்மையாகிய என்னை நன்றாய் ஆட்டிவையுங் களென்று, நான் கஷ்டப்பட்டு உங்களை ப்ரார்த்திப்பதென்? இப்படிச்

சொன்னவுடன், ஸ்ரீகுரு, "இவ்வளவு தூரம் நீ பேசும்படியாய் என்ன நேரிட்டது? நீ சொன்னதெல்லாம் எங்களுக்கு நன்றாய்த் தெரிந்த விஷயமே; இனியாவது ஓர் தடையுமில்லாமல், ஸ்ரீக்ருஷ்ணபகவான் நிரூபணம் செய்த தெதுவோ அதைச் சொல்வாய்," என்றுரைத்தார். இதைக் கேட்டு, என் மனது ஸந்தோஷ மடைந்துவிட்டதால், என் குருநாதன் ஆஞ்ஞையை அநுஸரித்து, மேற்கதையைச் சொல்வேன், கேளுங்கள்.

श्रीभगवानुवाच ।
इदं तु ते गुह्यतमं प्रवक्ष्याम्यनसूयवे ।
ज्ञानं विज्ञानसहितं यज्ज्ञात्वा मोक्ष्यसेऽशुभात् ।।१।।

ஸ்ரீபகவானுவாச -

இதம் து தே குஹ்யதமம் ப்ரவக்ஷ்யாம் யநஸூயவே।
க்ஞாநம்விக்ஞாநஸஹிதம்யக்ஞாத்வாமோக்ஷ்யஸே஽ஶுபாத்॥1

ஸ்ரீக்ருஷ்ணன் தான் மேற் சொல்லப்போகிற விஷயத்தினருமையை எடுத்துக் கூறல் :

பின்பு, ஸ்ரீக்ருஷ்ணன் பின்வருமாறு சொல்லத் தொடங்கினார். அர்ஜுநா, என்னுடைய அந்தக்கரணத்திற் புதைந்து கிடக்கும் அதிரஹஸ்ய மென்றும், எல்லாஞாநத்துக்கும் விதை யென்றும், சொல்லத்தக்கதான ஒன்றை நான் உனக்கு இப்போது தெரிவிக்கப்போகிறேன். இப்படி என் உயிரின் ஹ்ருதயஸ்தானத்தைப் பிளந்து, அதற்குள் கிடக்கும் ரஹஸ்யத்தை வெளிப்படுத்தி, உனக்கு நான் ஏன் சொல்லவேண்டும், என்றிப்படி ஓர் ஸந்தேஹம் உன் மனஸில் உண்டாகுமேயாகில், அப்படிச் சொல்வதற்குக் காரணத்தைச் சொல்வேன், கேள்.

விவிதிஷை (தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை) என்பதே மூர்த்தீகரித்த ஓர் உருவாய், நீ இருக்கிறாய். உனக்குத் தெரிவித்துவைத்த ஓர் விஷயத்தை, நீ அலக்ஷ்யம் செய்து மறந்துபோகிறவனுமல்ல. ஆகையால் ஒருவருக்கும் தெரியாமல் நான் மறைந்திருப்பதற்கு ஹாநி நேரிட்டாலும் நேரிடுக, அன்றியும் சொல்லக் கூடாததான ஒன்று சொல்லும்படியாய் நேரிட்டாலும் நேரிடுக. எப்படியாவது என்னுடைய உயிருக்குள் மறைந்துகிடப்பது, உன்னுடைய உயிருக்குள்

நுழையவேண்டும் என்று, அடக்கமுடியாத ஆசை எனக்கு உண்டாயிருக்கிறது. அப்பா, தாயின் ஸ்தனத்தில் தித்திப்பாயிருக்கும் பால் மறைந்துதான் கிடக்கிறது. ஆனால் அது ஸ்தநத்துக்கு ருசியாயிருக்கிறதென்று, அதை அந்த ஸ்தனம் மறைத்து வைத்துக்கொள்வில்லை. அநந்ய பாவத்தோடு தன்னை ஆச்ரயிருத்திருக்கும் குழந்தை, அதை உட்கொள்வதாயிருந்தால், அதை முழுக்கவும செலவழித்து விட, தாய் ஸித்தமாய் இருக்கிறாள்.

விரைக்கோட்டையை விரித்து, அதில் கட்டிவைத்திருந்த விரையை, முன்னதாகவே உழுது ஸித்தமாயிருக்கும் நிலத்தில் விரைத்தால், அதை வாரி யிறைத்து வீண்படுத்திய தாகுமா? ஆகையால் ப்ரேமை பாராட்டினவனாயும், பரிசுத்தமான சித்தமுள்ளவனாயும், ஒரு நாளும் இகழாதவனாயும், வேறுகதியற்றவனாயும், எவன் தன்னை வந்தடைவானோ, அவனுக்கு அதிரஹஸ்யமான விஷயங்யகளையும், ஓர் வித்மான சங்கையும் இன்றி, தெரிவிக்க வேண்டும். ஆனால் இப்போது, இக்குணங்களோடு கூடினவனாக, உன்னைத்தவிர எனக்கு வேறொருவனும் கிடைக்கவில்லை. ஆகவே, எவ்வளவோ ரஹஸ்யமா யிருப்பதையும், உனக்குத் தெரிவிக்காமல் ஒளித்துவைத்துக்கொள்ள, என்னால் முடியவில்லை.

ஸ்ரீக்ருஷ்ணன் சொல்லப் போவதான ஞான விஞ்ஞானங்களைப் பகுத்தறிந்துகொள்வதின் பயன் :

இதைத் திரும்பவும் திரும்பவும் ரஹஸ்யம் என்று நான். சொல்லிக்கொண்டிருந்தால், உனக்குக் கஷ்டமாய்த் தோன்றும். ஆகையால் காலதாமதமின்றி, பரமார்த்த ஞானத்தையும், அத்துடனே ப்ராபஞ்சிக ஞாநத்தையும், விவரமாய் எடுத்துச் சொல்வேன் கேள்.

நல்ல நாணயங்களும் கெட்ட நாணயங்களும், ஒன்றாய்க் கலந்துகிடந்தால், பரிக்ஷகன் நல்லதையும் கெட்டதையும் எப்படி பிரித்தெடுத்துவைப்பானோ, அப்படியே உண்மையான ப்ரஹ்மத்தின் விஷயமான ஞானத்தையும், அஸத்யமான ப்ரபஞ்சத்தின் ஞானத்தையும், பகுத்துவைத்துக்காட்டுவேன். ஹம்ஸமானது கலந்திருக்கும் பாலையும் நீரையும், எப்படி தன் மூக்கினாற் பிரித்து வைக்குமோ, அப்படியே உனக்கு ஞாநத்தையும் விஞ்ஞானத்தையும பிரித்துக் காட்டி வைப்பேன். பின்பு காற்றின் வேகத்தில் தூற்றப்பட்டபின், எப்படிப் பதர்களெல்லாம் பறந்து போய், தான்யமெல்லாம் ஒரே இடத்தில் குவிந்து அப்படியே அவை இரண்டும்

பகுத்தறியப்பட்டபின், ஸம்ஸாரத்தை ஸம்ஸாரத்தோடு கூட்டி அனுப்பித்து விட்டு, மோக்ஷமாகிய ஸிம்ஹாஸநந்தில் வீற்றிருக்கப் பெறலாம்.

राजविद्या राजगुह्यं पवित्रमिदमुत्तमम् ।
प्रत्यक्षावगमं धर्म्यं सुसुखं कर्तुमव्ययम् ।।२।।

ராஜ வித்யா ராஜ குஹ்யம் பவித்ர மித முத்தமம் ।
ப்ரத்யக்ஷாவகமம் தர்ம்யம் ஸுஸுகம் கர்து மவ்யயம் ।। 2

ப்ரஹ்ம ஞானத்தின் லக்ஷணம் :

இந்த ப்ரஹ்ம ஞானத்தின் லக்ஷணங்களை வர்ணிப்பேன், கேள். இந்த ஞானம், உத்தம ஞானங்கள் சேர்ந்திருக்கும் ஊரில், ஆசார்யத்வம் என்னும் உந்நதமான பதவியை அடைந்து, ரஹஸ்யங்க ளனைத்துக்குள்ளும் ஸ்வாமி என்றும், பவித்ரமான எல்லா வஸ்துக்களுக்கும் ராஜா என்றும், தர்ம மனைத்துக்கும் வாஸஸ்தான மென்றும், கொண்டாடப்படும். இது லப்தமான மாத்ரத்தில், ஜந்மாந்த்ரங்கள் விட்டு விலகிப்போகும். இது, ஹ்ருதயத்தில் எக்காலும் தானாகவே ஸித்தமா யிருந்துகொண்டிருப்பதேயாயினும், வெளிப்பட்டு ப்ரத்யக்ஷமாய்த் தோன்றி நிற்பதற்கு, குரூபதேசம் என்னும் ஸ்வல்பமான நிமித்தத்தை அபேக்ஷிக்கும். இதை அடைய வேண்டி, வழி நடந்து போகும்போது, ஒவ்வொரு அடிவைப்பும் மேன்மேலும் ஆநந்தத்தை உண்டாக்கிக் கொடுப்பதாய் இருக்கும்.

இது தன்னிடத்தில் வந்து சேர்ந்தவனை இறுகக் கட்டிக் கொண்டு, தன்னைக் காட்டிலும் வேறாய் நில்லாதபடி, தன்னுடன் அவனை ஐக்யப்படுத்திக் கொள்ளும். அன்றியும் அவன் இதை அடைந்து, இத்துடன் ஐக்யப்பட்டுப்போவதின் முன்னம், இதின் ஓரத்தில் வந்து நின்ற மாத்ரத்திலேயே, அவன் சித்தம் ஸுகத்தால் நிறைந்து போகும். இப்படியே, ஸுலபமாயும் அநாயாஸமாய் அடையத் தக்கதாயும் இருப்பதோடு கூட, இதுவே கடைசியாக அடையவேண்டிய பரப்ரஹ்மமாயும் இருக்கிறது. நாம் கொண்டாடத் தக்கதான வேறோர் லக்ஷணமும் இதற்கு உண்டு.

இது கைக்கு ப்ராப்தமான பிறகு, நாம் என்ன செய்தாலும், நம்மை விட்டு இது விலகிப் போவதில்லை. எவ்வளவு புசிக்கப்பட்ட போதிலும், இது குறைந்து போவதுமில்லை, தெகுட்டிப் போவதுமில்லை. இவ்வளவு உத்தமமான வஸ்து

ஒன்றிருக்கும்போது, உலகத்தார் ஏன் இதைக் கைப்பற்றாமல் நிற்கிறார்கள், என்று தார்க்கிகனாகிய நீ, இவ்விஷயத்தில் ஓர் சங்கையை, ஒரு வேளை பாராட்டலாம். நூற்றுக் கொரு ரூபாய் லாபம் கிடைப்பதாயிருந்தால், மண்டி யெரியும். நெருப்பிற்கூடக் குதிப்பதற்குத் துணிந்திருக்கும் உலகத்தார், அநாயாஸமாய்க் கிடைக்கக் கூடியதான இந்த பெருத்த லாபத்தை, ஏன் ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள்? பரிசுத்தமாயும், மனதுக்கு ஸந்தோஷகரமாயும், எளிதான உபாயத்தால், எளிதாய் அடையக் கூடியதாயும், மிக்கஸுகத்தை விளைவித்தக் கொடுப்பதாயும், பரம தர்மத்தோடு கூடியதாயும், இத்தனையோடும் தன் ஸ்வரூபத்திலேயே அமைந்துள்ளதாயும், இப்படி எல்லாவிதமாயும் லாபகரமாயிருக்கும் ஒன்று, ஜநங்களுக்குக் கிடைக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன, என்று ஓர் சங்கை ஏற்படுவது ந்யாயமாயிருந்த போதிலும், நீ அதைப் பாராட்டி நிற்க வேண்டாம்.

अश्रद्दधानाः पुरुषा धर्मस्यास्य परन्तप ।
अप्राप्य मां निवर्तन्ते मृत्युसंसारवर्त्मनि ।।३।।

அஶ்ரத்ததானாः புருஷா தர்மஸ்யாஸ்ய பரந்தப ।
அப்ராப்ய மாம் நிவர்தந்தே ம்ருத்யு ஸம்ஸாரவர்த்மனி ।। 3

உலகத்தார் ப்ரஹ்மத்தை தேடிக் கொள்ளாததற்குக் காரணம் :

பரிசுத்தமாயும், தித்திப்பாயும் இருக்கும், பால் ஸமீபித்து தோற்கனம் அளவே விலகியிருந்த போதிலும், மாட்டுண்ணியானது அதைச் சாப்பிடாமல், அதின் பக்கத்தில் இருக்கும் ரத்தத்தையே சாப்பிடுகிறது. மற்றும் தாமரையின் கிழங்கும் தவக்களையும் ஒரே இடத்தில் இருந்தும், அக்கிழங்கினின்றே உண்டாகும் தாமரைப்பூவின் பரிமளத்தையும் தேனையும், அந்தக் தவக்களை அநுபவிக்காமல், சேற்றிலேயே கிடந்து உழன்று கொண்டிருக்கிறது. ஆனால் வெகுதூரத்தில் இருக்கும் காட்டிலிருந்து வந்த தேனீ, அந்த பரிமளத்தையும் தேனையும் அநுபவித்துச் செல்கிறது.

மற்றும் பார். அத்ருஷ்டஹீநனுடைய வீட்டிலேயே ஸ்வர்ண நாணயங்களால் நிறைந்த தவலைகள் கணக்கற்றுப் புதைந்து கிடந்தாலும், அவன் தாரித்ரியத்தை அனுபவித்துக் கொண்டு,

அங்கேயே பட்டினியாய்க் கிடப்பதில்லையா? அப்படியே ஹ்ருதயத்திலேயே இருக்கும் ராமனாய், (தானும் ஆநந்தமாய் இருந்து கொண்டு, தன்னை ஆஸ்ரயித்தவர்களையும் ஆநந்திக்கச் செய்கிறவனாய்) ஸகல ஸுகங்களுக்கும் களஞ்சியமாய், நான் இருக்கும்போதே, புத்திமயக்கம் கொண்ட உலகத்தார், என்னை அறிந்து ஆனந்தப்படாமல், விஷயத்தையே தேடிக்கொண்டு திண்டாடுகிறார்கள். ம்ருகஜலம் ஆறுபோல் ஓடுகிறதென்று பார்த்து, வாய் நிறைய இருந்த அம்ருதத்தை விழுங்காமல் உமிழ்ந்து விட்டு, அந்த ம்ருகஜலத்தைத் தேடிக் கொண்டு போவார்களைப் போலும், கழுத்தில் கட்டிக் கொண்டிருக்கும் ஸ்பர்சவேதியை அறுத்தெறிந்து விட்டு, வெள்ளியென்று தோற்றும் முத்துச்சிப்பியை பொறுக்கிக் கொள்ளப்போவார்களைப் போலும், இவ்ர்கள் அஹங்கார மமகாரங்களின் தடபடலிற் சிக்கிப்போய், என்னை வந்தடையாமல், ஜந்ம மரணம் என்னும் இரண்டு கரைகள் நடுவில் ஓடும் ஸம்ஸார நதியில், முழுகி முழுகி, துக்கம் என்னும் ஜலத்தை வாய்வாயாய் குடிக்கிறார்கள். ஆனால் ஒருவேளை கண்முன் தோற்றி, ஒருவேளை மறைந்து போகும் ஸூர்யன்போல் இராமல், எப்போதும் ப்ர்காசமாய்த் தோன்றிக்கொண்டே, நான் இருக்கிறேன்.

मया ततमिदं सर्वं जगदव्यक्तमूर्तिना ।
मत्स्थानि सर्वभूतानि न चाहं तेष्ववस्थितः ।। ४ ।।

மயா ததமிதம் ஸர்வம் ஜகதவ்யக்த மூர்தினா ।
மத்ஸ்தானி ஸர்வபூதானி ந சாஹம் தேஷ்வவஸ் தித: ॥ 4

பகவத்ஸ்வரூபம், அதினிடத்தில் தோற்றங்களாய்த் தோன்றி நிற்கும் பூதங்களின் நடுவில் இல்லை :

பால் உரைந்துபோனால், அதுவே தயிராய்விடுவது போலும், பீஜமே வ்ருக்ஷமாவது போலும், தங்கமே நகையாவது போலும், அவ்யக்தஸ்திதியை விட்டு, என்னுடைய ஸ்வரூபம் வ்யக்தமாய் விஸ்தார மடையும் போது, ஜகத் தென்று சொல்லப்படும். என்னுடைய ஸ்வரூபம் இறுகிப்போன ஸ்திதியில் அவ்யக்தமென்று சொல்லப்பட்டு, அதே இளகிப் பரவி உலகமாய், விஸ்தாரத்தை அடையும்போது, உருவில்லாத என் ஸ்வரூபம் உருவோடு கூடியதான முவ்வுலகாய் நிற்கிறது. மஹத்து முதலாய் தேஹம் முடிவாக, ஏற்பட்ட இந்த பூதங்கள் அனைத்தும், என்னுடைய ஸ்வரூபத்தில், ஜலத்தில் நுரை போல், உருவுகொண்டு தோற்றுகின்றன.

ஆனால் அந்த நுரைக்குட் பார்க்குங்கால், எப்படி ஜல மில்லையோ, அன்றியும் ஒருவன் ஸ்வப்நத்தில் பார்த்த பேதங்கள் அனைத்தும், அவன் விழித்துக் கொண்டபின், அவன் ஸ்வரூபத்தில் எப்படி காணப்படவில்லையோ, அப்படியே என்னிடத்தில் இருந்து உண்டான பூதங்கள் நடுவில் நான் இல்லை. இந்த விஷயத்தின் உபபத்தி முன்பேயே (அத்யாயம் 7 சுலோகம் 12-ல்) உனக்குக் சொல்லப்பட்டிருகிறது. ஆகையால் இதை இங்கே விவரிக்க வேண்டாம்; இது இவ்வளவோடு நிற்கட்டும். ஆனாலும், இப்படிப்பட்ட என் உண்மையான ஸ்வரூபத்தில், உனது த்ருஷ்டி ப்ரவேசித்து நிலைபெற்றிருக்க வேண்டும் என்பதே, நான் இங்கு சொல்ல வந்தது.

न च मत्स्थानि भूतानि पश्य मे योगमैश्वरम् ।
भूतभृन्न च भूतस्थो ममात्मा भूतभावनः ।।५।।

न च मत्स्थानि भूतानि पश्य मे योगमैश्वरम् ।
भूत भृन्न च भूतस्थो ममात्मा भूतभावनः ॥ 5

பகவானுடைய ஐச்வர்யயோகத்தின் ப்ரகாரம் :

ப்ரக்ருதியைத் தாண்டி நிற்பதான என் ஸ்வரூபத்தை உன்னுடைய கல்பனையின் கலப்பில்லாமல், யதாவத்தாய், நீ பார்ப்பாயே ஆனால், என் ஸ்வரூபத்தில் பார்க்கப்பட்ட பூதங்கள் அனைத்தும் உண்மை இல்லாதனவாய் ஏற்படும். அப்படி இல்லாமல், ஸங்கல்பம் என்னும ஸந்த்யாகாலம் (பார்வைக் குறைவு) ஏற்பட்டு, புத்தியின் கண்களுக்கு த்ருஷ்டி மாலின்யம் உண்டாகும்போது, அகண்டிதமாய் இருக்கும் என் ஸ்வரூபமே, பலவகைப்பட்ட பூதங்களாய்த் தோற்றுகிறது. மதிமயக்கம் நீங்கிப்போன உடனேயே, மாலையிற் றோன்றின ஸர்ப்பபுத்தி, இல்லாமற்போவதுபோலும், ஸங்கல்பம் என்னும் ஸந்த்யாகாலம் நீங்கிப் போனவுடனே, என்னுடைய அகண்டிதமான ஸ்வரூபமே காணப்படுகிறது.

குடம் என்றும், கலயம் என்றும், சட்டி என்றும், பலவகைப்பட்ட மட்கலங்கள் பூமியினின்று தாமாகவே புறப்படாமல், குயவனுடைய புத்திபேதத்தால் உண்டாய்வெளிப்படுவதுபோலும், அலைகள் ஸமுத்ரஜலத்திற்குள் இருக்கும், ஓர் கனியினின்று உண்டாகாமல், அவைகள் காற்றின் வேகத்தால் உண்டாவதுபோலும், பலவகைப்பட்ட ஆடைகள் பஞ்சின்

மத்யத்தில் உள்ள ஓர் பெட்டியினின்று வெளிப்படுவதென்பது இல்லாமல், அவை, உடுத்திக்கொள்ள வேண்டினவன் புத்திபேதத்தால், உண்டாவது போலும், தங்கம் பலவிதப்பட்ட நகைகளாய்,செய்யபட்டால், எல்லா நகைகளும் தங்கம் என்னும் ஒரே வஸ்துவாகவே இருந்து, பலவகைப்பட்ட நகைகள் என்னும் புத்தி பேதம் மாத்ரம், தங்கத்தைக் காட்டிலும் வேறுபட்டவனான அணிந்துகொள்கிறவனுடைய அந்தக்கரணத்தாற் கல்பிக்கப்படுகிறதே போலும், ப்ரதித்வனி என்பதும், கண்ணாடியிற் பார்க்கும் ப்ரதிபிம்பமும், நாம் செய்த சப்தத்துக்கும், நாம் கண்ணாடியில் பார்த்ததற்கும் முன்னால், ஸித்தமாய் இருந்தவை ஆகாமல், நாம் பேசினதின் அல்லது நாம் பார்த்ததின் கார்யமே ஆவது போலும், என்னுடைய நிர்மலமான ஸ்வரூபத்தில், எவன் பூதங்கள் என்னும் பேதபுத்தியை ஆரோபணம் செய்து கொள்கிறானோ, அவனுக்கே, அவனுடைய ஸங்கல்பத்தில், பூதங்கள் என்னும் தோற்றங்கள் ஏற்படுகின்றன.

இப்படி கல்பனையை உண்டுபண்ணிவைக்கும், என்னுடைய மாயையானது விலகிப் போயிற்றோ இல்லையோ, அதற்கு முன்பே பல பூதங்களென்னும் தோற்றம் இல்லாமற்போய், என்னுடைய பேதமற்ற சுத்தமான ஸ்வரூபமே தோற்றி நிற்கும். (இது நிற்கட்டும்) நம்முடைய தேஹத்தில் உண்டான கிருகிருப்பால், சுற்றிலு மிருக்கும் வஸ்துக்கள் கிருகிருவென்று சுழலுவதாக தோற்றுவது போலும், ஜீவர்களுடைய கல்பநா பேதத்தால், பேதமற்றதாயும் அகண்டிதமாயு மிருக்கும் என் ஸ்வரூபத்தில், அநேக பூதங்கள் இருப்பதாக அவர்கள் அறிகிறார்கள். அப்படிப்பட்ட கல்பனை இல்லாது போனபின்பு, நான் பூதங்களி லிருப்பதாயாவது, பூதங்கள் என்னிடத்தில் இருப்பதாயாவது, ஓர் தோற்றம் ஸ்வப்நத்திற்கூட காணக்கிடைக்காமற்போகும், ஆகவே நான் பூதங்களைத் தாங்கி இருப்பவனென்றும் பூதங்களாற் சூழப்பட்டு நான் இருக்கிறேன் என்றும், ஜநங்கள் பேசும் வார்த்தைக ளனைத்தும், ஸங்கல்பம் என்னும் ஸந்திபாத ஜ்வரத்தால் ஏற்பட்ட மூர்ச்சைகளில் உண்டாகும் பேத்தலே யாகும்.

ஆகையால், ஹே ப்ரியோத்தமா, நான் இவ்விதமாய் பொய்யான விச்வத்தாற் சூழப்பட்டவனாயும், அதற்கு ஆத்மாவானாவனாயும், இந்தப் பொய்யான பூதங்களால் எப்போதும் பாவிக்கத் தக்கவனாயிருக்கிறேன். ஸூர்ய கிரணத்தின் கார்யமாய், நிஜமாய் இல்லாததான ம்ருகஜலம், இருக்கிறதாகத் தோற்றுவது போலும், என்னிடத்தில் பூதங்கள்

உண்டாயிருப்பதாயும், அவற்றின் நடுவில் நான் இருப்பதாயும், பாவிக்கிறார்கள். இந்த என் ஐச்வர்ய யோகத்தை நன்கறிந்தாயா? அதை அறிந்தாயானால், என் ஸ்வரூபத்தில் பூதபேதத்தின் ஸம்பந்தம் என்னை விட்டு வேறானவை யல்லவென்றும், பூதங்களை விட்டொழித்து, நான் வேறா யில்லையென்றும், நீ தெரிந்து கொள்.

यथाकाशस्थितो नित्यं वायुः सर्वत्रगो महान् ।
तथा सर्वाणि भूतानि मत्स्थानीत्युपधारय ।।६।।

யதா காஶஸ்திதோ நித்யம் வாயுः ஸர்வத்ரகோ மஹான் ।
ததா ஸர்வாணி பூதானி மத்ஸ்தானீத்யுப தாரய ॥ 6

உண்மையான ஞானஸ்திதியில், பூதங்கள் என்னும் வ்யவஹார மற்றுப்போய், ஆத்மஸ்வரூபம் ஒன்றே அநுபூதமாகும் : மேலும் ஆகாசம் எவ்வளவு பெரிதோ, அவ்வளவு பெரிதாகவே காற்றும் இருந்துகொண்டு, அவ்வாகாசத்தை நிரப்பிக் கொண்டிருக்கிறது. அசைக்கப்பட்டதே யானால், அப்போது மாத்ரம், அந்த வாயு ஆகாசத்தைக் காட்டிலும் வேறாகக் காணப்படுகிறதே தவிர, மற்றப்படி ஆகாசத்தோடு ஒன்றுபட்டே போயிற்று, என்று சொல்லத்த தக்கதாய் இருக்கிறது. அப்படியே பூதங்கள் அனைத்தும், கல்பனையால் மாத்ரம் வேறு வேறாகத் தோன்றி, அக்கல்பனை கொஞ்சங்கூட இல்லாமற் போகு மாகில், நான் ஒருவனே தோற்றி நிற்பேன். பூதங்களின் இருப்பும் இல்லாமையும், கல்பனையின் அதீனப்பட்டிருக்கிறது. அப்படி கல்பனையை உண்டாக்கி வைப்பதற்கு, மூலகாரணமாயிருக்கும் அஞ்ஞானம் இல்லாமற் போகுமாகில், பூதங்கள் இருக்கின்றன என்றும், இல்லை என்றும், பேசுவதே அற்றுப் போகும். என்னுடைய இந்த ஐச்வர்ய யோகம், மேலும் எப்படிப்பட்ட பெருமையோடு கூடிய தென்று கவனித்துப்பார்.

இப்படிப்பட்ட அநுபவ ஞானரூப ஸமுத்ரத்தில், உன்னை ஓரலையாகப் பாவித்துக் கொண்டாயே யானால், பின்பு எப்போது பார்த்தாலும் சராசரம் முழுவதிலும், நீயே நிறைந்திருப்பதாக உனக்குத் தெரியவரும். இப்போது இந்த ஞானத்தின் பூர்ணப்ரகாசம் என்னும் விழிப்பு, உனக்கு நன்றாய் ஏற்பட்டு, த்வைதத்தின் தோற்றம் என்னும் உன்னுடைய ஸ்வப்நாவஸ்தை, உனக்கு முற்றிலும் கலைந்து போய் விட்டதா, இல்லையா? அது கலைந்து போய்விட்ட பின்னும், அகஸ்மாத்தாய் உன் புத்தியிற் கல்பனை என்ற

நித்ரை ஏற்பட்டால், பேதஞானம் என்னும் ஸ்வப்நம் உண்டாய், அபேத ஞானம் என்பது நஷ்டமாய்ப் போகும். ஆகையால் இந்த நித்ரை உன்னிடத்திற்கு வந்து சேரும் வழியே அடைப்பட்டுப்போய், எப்போதும் நிலைபெற்ற அபேதஞாநம் என்னும் விழிப்பு, உன்னிடத்தில் ஏற்பட்டிருக்கும்படியாய், நீ ஜாக்ருதையாய் இருக்க வேண்டும். இவ்விழிப்பை ஒருக்காலும் தவறாது நிலைபெறச் செய்து கொடுக்கும் ரஹஸ்யம், ஒன்றுண்டு, அதை உனக்குச் சொல்லித் தருவேன். புத்தி ஒருபோதும் மாறாது நிலை பெற்று நிற்கும்படி தைர்யமே மூர்த்தீகரித்தவனோ, என்று சொல்லத்தக்க ஹே தநுர்த்தரா, நீ நன்றாய்க் கவனித்துக் கேட்கவேண்டும். மாயையே, இந்த ஜகத்திற் காணப்படும் பூதங்கள் அனைத்தையும், உண்டாக்கி வைத்து, ஸம்ஹரித்து விடுகிறது.

सर्वभूतानि कौन्तेय प्रकृतिं यान्ति मामिकाम् ।
कल्पक्षये पुनस्तानि कल्पादौ विसृजाम्यहम् ।।७।।

ஸர்வ பூதானி கௌந்தேய ப்ரக்ருதிம் யாந்தி மாமிகாம் ।
கல்பக்ஷயே புனஸ்தானி கல்பாதௌ விஸ்ருஜாம்யஹம் ॥ 7

ஸ்ருஷ்டியின் ஸ்வரூபம் :

அந்த மாயை யென்ற ப்ரக்ருதியோ, இரண்டு விதப்பட்ட தென்றும், ஒரு விதமானது எட்டு வகைப்பட்ட தென்றும், மற்றோர் விதமானது ஜீவரூபப்ரக்ருதி என்றும், உனக்கு முன்னமேயே (அத்யாயம் 7, ச்லோகம் 4-5ல்) நான் சொல்லிக் கொடுத்திருக்கிறேன். இந்த ப்ரக்ருதி விஷயமான அனைத்தும் உனக்கு முன்னாலேயே சொல்லப்பட்டுபோனதால், அதை மறுபடியும் விஸ்தரித்துச் சொல்லவேண்டிய அவச்யமில்லை. மஹாகல்பத்தின் முடிவில் எல்லா பூதங்களும், அவ்யக்தம் என்று சொல்லப்பட்ட என் ப்ரக்ருதியில், லயம் அடைந்துபோகின்றன. க்ரீஷ்மகாலத்து அத்யுக்ரமான வெய்யில் ஏற்படும்போது, புற்கள் அனைத்தும், அவற்றின் விதைகளுள்பட, அவற்றிற் குத்பத்தி ஸ்தானமாகிய பூமியிலேயே மடிந்து போவதுபோலும், வர்ஷாகாலத்து மழைபொழிதல் ஓய்ந்துபோய்,

சரத்ருதுவின் முளையானது வெளியில் தலைநீட்டத் தொடங்கின மாத்ரத்தில், ஆகாசத்தி லதற்குமுன் உண்டாயிருந்த மேகக்கூட்டம் அனைத்தும், அந்த ஆகாசத்திலேயே மறைந்து போவதுபோலும், ஆகாச

மென்னுமிடைவெளியிற் காற்றானது ஸ்வஸ்தமாய் மறைந்துபோவதுபோலும், அலைகள் என்னும் உருவங்கள், எந்த ஜலத்தில் உண்டாயினவோ, அதிலேயே மடிந்து போவதுபோலும், மனஸிற் கல்பிதங்களான ஸ்வப்நங்கள் விழித்துக்கொண்டபின், மனஸிலேயே லயம் அடைந்துபோவதுபோலும், மஹாகல்பத்தின் முடிவில், ப்ரக்ருதியினின்று உண்டான பூதங்கள் அனைத்தும், ப்ரக்ருதியில் லயத்தை அடைகின்றன. இனி மஹாகல்பத்தின் ஆரம்பத்தில், நான் அந்த பூதங்களனைத்தையும் ஸ்ருஷ்டிக்கிறேன், என்று சாஸ்திரத்தின் யாதொரு பேச்சு உண்டோ, அதின் உண்மையை விவரித்துச் சொல்வேன், கேள்.

प्रकृतिं स्वामवष्टभ्य विसृजामि पुनः पुनः ।
भूतग्राममिमं कृत्स्नमवशं प्रकृतेर्वशात् ॥८॥

ப்ரக்ருதிம் ஸ்வாமவஷ்டப்ய விஸ்ருஜாமி புன: புன: ।
பூத க்ராமமிமம் க்ருத்ஸன மவஶம் ப்ரக்ருதேர்வஶாத் ॥ 8

பகவான் ப்ரக்ருதியை ஆச்ரயித்து, ஸ்ருஷ்டிசெய்வதின் யாதாத்ம்யம் :

என்னுடைய இந்த ப்ரக்ருதியை எப்போது நான் ஆச்ரயித்து நிற்கிறேனோ, அப்போது நூற்களின் சேர்க்கையாகிய ஓர் வஸ்த்ரம், கொஞ்சங் கொஞ்சமாய் நெய்யப்பட்டு, எப்படி முடிவு பெறுகிறதோ, அப்படியே பஞ்சபூதங்களா லமைந்த உருவங்களாக, ப்ரக்ருதியே பரிணமிக்கிறது. எப்படி பிரையின் ஸம்பந்தத்தால், பாலே உறைந்து தயிராகிறதோ, எப்படி ஜலத்தின் ஸாந்நித்யத்தால் விதையே பெருத்த மரமாய் விடுகிறதோ, அப்படியே என் ஸாந்நித்யத்தால் ப்ரக்ருதியே ஸ்ருஷ்டியாய் விடுகிறது. அப்பா இந்த நகரத்தை அரசன் கட்டினா னென்று, ஜநங்கள் சொல்லும் வார்த்தை நிஜமாகவே இருந்தாலும், அதின் உண்மையை விசாரிக்கப்போனால், அவ்வரசன் தன் தேஹத்தையும் அவயவங்களையுங்கொண்டு கஷ்டப்பட்டு, ஏதேனும் வேலைசெய்த தாகுமா? நான் ப்ரக்ருதியை ஆச்ரயிப்பதின் உண்மை, எப்படி இருக்கிறதென்று விசாரித்தால், அது ஸ்வப்நாவஸ்தையி லிருந்தவன் விழித்திருக்கும் அவஸ்தைக்கு வருவதுபோல் ஆகும். ஒருவன் ஸ்வப்நநாவஸ்தையினின்று ஜாக்ருதவஸ்தைக்கு வருவதில், அவன் காலுக்கு நடந்த ச்ரமம் ஏதாவது ஏற்படுகிறதா? அல்லது ஸ்வப்நாவஸ்தையிலிருந்தது என்பது, ஸொந்த ஊரைவிட்டு வேறூருக்குப் போயிருந்த தாகுமா?

நான் கீழே சொன்ன அனைத்துக்கும், கருத்தென்னவென்றால், இந்த பூதஸ்ருஷ்டி யென்னும் வேலையில் எவ்வளவு கொஞ்சமான அம்சமும், நான் செய்வதில்லை என்பதே. அரசனுடைய ஸாந்நித்யத்தை அடைந்த குடிகள், எப்படி தாங்கள் தாங்கள் செய்யவேண்டிய வேலைகளைச் செய்துவைக்கிறார்களோ, அப்படியே இந்த ப்ரக்ருதிக்கு என் ஸம்பந்தம் ஒன்று கிடைத்து விட்டதே யானால், பின்பு ஸ்ருஷ்டி ஏற்படுவதற்கு ஆகவேண்டிய அனைத்தும், அப்பிரக்ருதி ஒன்றே செய்துவைக்கிறது. நன்றாய்க் கவனித்துப் பார். பூர்ணசந்திரனைக் கண்ட மாத்ரத்தில், ஸமுத்ரம் கரைபுரண்டு வழியும்படியாய் பொங்குகிறது. அதில் சந்திரன் ஏதாவது ச்ரமப்படுவது உண்டா, அர்ஜுநா? சலநமற்றதான இரும்பு, காந்தத்தின் ஸாமீப்யத்தை அடைந்தமாத்ரத்தில், தானாய் ஓடிவந்து காந்தத்தைக் கட்டிக்கொள்ளவே, ஸமீபத்தில் இருந்ததினால், காந்தம் என்ன விதமாய்க் கஷ்டப்பட்ட தென்று சொல்லலாம்? இவ்விஷயத்தை வளர்த்தி வளர்த்திச் சொல்வதிற் பயன் என்?

என்னுடைய ப்ரக்ருதியை நான் அங்கீகரிக்க வேண்டியதுதான் என் வேலை. பின்பு அதுவே ஒன்றின்மேல் ஒன்றாக பூத ராசிகளைப் பெற்றுவைக்கிறது. விதைகள் முளைத்து, கொடியாய்ப் பரவி, தழைத்து, பூத்து, பலித்தல், முதலிய எல்லாம், பூமியின் ஸாமர்த்யத்தால் ஏற்படுவது போலவும், இந்த பூதங்கள் எல்லாம் உண்டாய் வளர்வது அனைத்தும், ப்ரக்ருதி அதீநமாயிருக்கிறது. பால்யம் முதலிய பர்வங்களுண்டாவதற்குக் காரணம் தேஹத்தின் சேர்க்கையே போலும், ஆகாசத்தில் மேகங்கள் உண்டாவதற்குக் காரணம் வர்ஷாகாலமே போலும், ஸ்வப்நத்துக்குக் காரணம் நித்ரையே போலும், ஸமுத்ரம்போல் விரிந்துகிடக்கும் இந்த ப்ராணிஜாதங்களின் ஸமூஹம் அனைத்துக்கும, மூலகாரணம் ப்ரக்ருதியே ஆகிறது. ஸ்தாவரம் ஆகட்டும், ஜங்கமமாகட்டும், ஸ்தூலமாகட்டும், ஸூக்ஷ்மமாகட்டும், எவ்விதப்பட்ட ப்ராணிகளானாலும் ஸரியே, அவை அனைத்துக்கும் ப்ரக்ருதியே மூல காரண மாகிறது. ஆகையால் பூதங்களை உண்டாக்குவதும், உண்டாக்கிவைத்தபின் பரிபாலநம் செய்வதும், ஆகிய இவை எல்லாம நான் செய்ய வேண்டியதாய் ஏற்படுவதில்லை. ஜலத்தில் சந்த்ரிகை கொடிபோல் பரவியிருப்பதாகக் காணப்படுகிறதே, அப்படிப் பட்ட விஸ்தாரம் சந்திரனால் செய்துவைக்கப்பட்டதல்ல. அப்படியே கர்மங்களைத்தும் என்னால் ஏற்பட்டன என்று சொல்லப்பட்டாலும், உண்மையை விசாரிக்குங்கால்,

அவைகள் என்னோடு ஸம்பந்தப்படாமல், என்னைவிட்டு தூரமாய் விலகி நிற்கின்றன.

न च मां तानि कर्माणि निबध्नन्ति धनञ्जय ।
उदासीनवदासीनमसक्तं तेषु कर्मसु ।।९।।

न च माम् तानि कर्माणि निबध्नन्ति धनञ्जय ।
उदासीन वदासीन मसक्तम् तेषु कर्मसु ।। 9

கர்மங்கள் ஆத்மாவினிடத்தில் எவ்விதப் பற்றும் இல்லாதவையாயும், அதை அணுகின மாத்திரத்தில் ஸ்வரூபநாசம் அடைகின்றனவாயும் இருப்பதால், ஆத்மாவுக்கு அவை பந்தத்தை உண்டாக்குவதில்லை :

ஸமுத்ரஜலம் பொங்கிவரும்போது, உப்பால் ஏற்பட்டதான ஓர் அணையானது, அதை எப்படித் தடுத்துவைக்க முடியாதோ, அப்படியே ஸகலகர்மங்களுக்கும் முடிவாய் (லயம் அல்லது நாச மடையும் ஸ்தானமாய். ஆகையினால் தான் கர்மங்கள் ஞாநாக்நி தக்தங்கள் என்று சொல்லப் படுகின்றன. (அத்.4, ச்லோ, 19.)) இருக்கப்பட்ட என்னை, கர்மங்கள் பந்திக்க முடியாது. புகையாலும் புழுதியாலும் ஏற்பட்ட ஓர் திரையானது, ஹோ என்று இரைந்துகொண்டு மிக்கவேகத்துடன் அடிக்கும் காற்றை நிறுத்திவைக்குமா? ஸூர்யபிம்பத்தின் நடுவில் இருட்டு நுழையுமா? மழையினுடைய தாரையானது, கெட்டியான பாறையால் ஏற்பட்ட ஓர் மலையைத் துளைத்துக்கொண்டு, அதின் கர்ப்பத்திற்குள் ப்ரவேசிக்காததுபோலும், ப்ரக்ருதியின் வ்யாபாரத்தால் ஏற்படும் கர்மம் என்மேல் ஒட்டாது. ப்ரக்ருதியின் கார்யமாகிய ப்ராணிகளின் தேஹத்தில், இருக்கிறவன் நான் ஒருவனே ஆனாலும், நான் உதாஸீனனாய், இருந்துகொண்டு, கர்மத்தைச் செய்வது மில்லை, செய்துவைப்பது மில்லை. ஓர் வீட்டுக்குள், ஏற்றி வைக்கப்பட்ட தீபமானது, ஒருவனையும் ஓர் வேலையில் மூட்டி வைக்காமலும், ஓர் வேலையைச் செய்யக்கூடாதென்று தடுக்காமலும், எவன் எந்த வேலையைச் செய்து கொண்டிருக்கிறான், என்பதை அறிந்து கொள்ளாமலும், கேவலம் ஸாக்ஷிபூதமாயிருந்து கொண்டு, அவ்வீட்டில் நடக்கும் ஸகல வ்யாபாரங்களுக்கும் நிமித்தமாத்ரமாய் இருப்பது போலும், பூதங்கள் செய்யும் கர்மங்களில் எவ்விதப்பட்ட பற்றுமில்லாதவனாய், பூதங்கள் நடுவில் இருந்து கொண்டிருக்கிறேன். அநேக விதமான உதாஹரணங்களைக்

கொண்டு, திருப்பி திருப்பிச் சொல்வதென்? இத்தனையாலும் நீ அறிந்து கொள்ள வேண்டியது எதுவோ, அதை நான் மேலே சொல்லப் போகிறேன் கேள்.

मयाध्यक्षेण प्रकृतिः सूयते सचराचरम् ।
हेतुनानेन कौन्तेय जगद्विपरिवर्तते ।।१०।।

மயாऽத்யக்ஷேண ப்ரக்ருதிः ஸூயதே ஸசராசரம் ।
ஹேது நாऽனேன கௌந்தேய ஜகத்விபரிவர்ததே ।। 10

ஆத்மஸ்வரூபத்தின் ஸாந்நித்யத்தை மாத்ரம் நிமித்தமாகக் கொண்டு, ஜகத்தின் வ்யாபாரம் நடந்தேறி வருகிறதென்றறிவதே ஆத்மஞானம் :

உலகத்தில் நடக்கும் ஸகல வ்யாபாரத்துக்கும், எப்படி ஸூர்யன் நிமித்த மாத்ரமாயிருக்கிறானோ அப்படியே ஜகத்துண்டாவதற்கு நான் நிமித்தமாத்ர மாயிருக்கிறேன். நான் இந்த ப்ரக்ருதியை, அங்கீகரித்திருக்கும் போது, அதினின்று இந்த சராசரம் உத்பத்தியாவதால், நான் ஜகத் துண்டாவதற்கு ஹேது என்று சொல்வது ந்யாயமாயிருக்கிறது. இப்போது இந்த நிச்சயமான ஞானத்தின் வெளிச்சத்தைக் கொண்டு, என்னுடைய ஐச்வர்யயோகத்தை நீ விசாரித்துப் பார்ப்பாயாகில், என்னிடத்தில் பூதங்கள் இருந்த போதிலும், அவற்றில் நான் இல்லை யென்று, இன்னும் பரிஷ்காரமாய்ச் சொல்லப் புகுந்தால், பூதங்களும் என்னிடத்தில் இல்லை, நானும் பூதங்களிடத்தில் இல்லை என்று, தெளிவாய் ஏற்படும். இந்த ரஹஸ்யத்தைமாத்ரம் எப்போதும் நீ ஒருபோதாவது மறக்காதவனாய் இருக்க வேண்டும்.

இப்படி என்னிடத்தில் இருக்கப்பட்ட ரஹஸ்யம் முழுவதையும், நீ நன்றாய்த் தெரிந்து கொள்ளும்படி, நான் உனக்குக் காட்டிக்கொடுத்துவிட்டேன். இனி இந்த்ரியங்கள் உள்ளே நுழையாதபடி, தாட்பாள் போட்டுக் கொண்டு, இந்த ரஹஸ்யத்தை உள்ளேயே வைத்துக்கொண்டு, இதை நீ சுவைத்துண்ணவேண்டும். உமிமையை, எத்தனை காலம் ஊதிக்கொண்டிருந்த போதிலும், ஓர் மணி அரிசி கூட அகப்படாததுபோல், இந்த ரஹஸ்யம் ஒருவனுக்கு கிடைக்காத வரையிலும், அவன் எவ்வளவோ ப்ராபஞ்சிக ஞானத்தைத் தேடிக் கொண்டாலும், என்னுடைய உண்மையான ஸ்வரூபத்தை, அவன் அறியான்.

இது கைக்குக் கிடையாதவரைக்கும், ஒருவன் தன் தர்க்க கௌசல்யத்தால், என்னை நன்றாய் அறிந்துவிட்டதாக எண்ணிக் கொண்டிருக்கலாமே தவிர, மருகஜலத்தால் எப்படி பூமி நனைந்து போகாதோ, அப்படியே அந்த அறிவு உண்மையான அறிவாய் இல்லாமல், ஓர் - விதமாயும் பயன்படாமற் போகும். ஜலத்தில் மீன்பிடிக்கும் வலையை விசிறினால், அவ்வலைக்குள் சந்த்ரிகை சிக்கிக் கொண்டதுபோற் றோற்றி, அவ்வலையை வெளியில் இழுத்துப் பார்த்த உடன், சந்த்ரிகை அவ்வலைக்குள் எங்குங் காணப்படாது போவதுபோலும், இந்த ரஹஸ்யத்தை யறியாத ஒருவன், என்னை அறிந்துவிட்டதாக வெகு சாதுர்யமாகப் பேசி, தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளலாமே தவிர, உண்மையாய் என் விஷயமான ஞானம் அவனிடத்தில் ஏற்பட்டிருக்கிறதா வென்று, பரிக்ஷித்துப் பார்க்கப்போனால், அது அவனிடத்தில் இல்லாததாகவே ஏற்படும்.

अवजानन्ति मां मूढा मानुषीं तनुमाश्रितम् ।
परं भावमजानन्तो मम भूतमहेश्वरम् ।।११।।

அவஜானந்தி மாம் மூடா மானுஷீம் தனுமாச்ரிதம் ।
பரம் பாவமஜானந்தோ மம பூதேமஹேஶ்வரம் ॥ 11

பகவத் ஸ்வரூபத்தின் யாதாத்ம்ய ஞான மில்லாதவன், பகவத் ஸ்வரூப விஷயத்தில் விபரீத பாவங்களைப் பாராட்டி நிற்கிறான் :

மிக்க பேசுவதிற் பயனில்லை. ஒருவன் ஸம்ஸாரத்தைக் கண்டு பயந்து, என்னை யடைந்து ஸுகப்பட வேண்டும் என்று நிஜமாய் ஆசைப்படுவானே யாகில், என் ஸ்வரூபவிஷயமான, இந்த ரஹஸ்யமான உண்மை, தன் மனஸை விட்டு ஒருக்காலும் விலகிப்போகாதபடி அவன் ஜாக்ருதை செய்து கொள்ள வேண்டும். இந்த உண்மையை அறியாதவன், மஞ்சட் காமாலை யென்னும் நோயாற் கண் பார்வை கெட்டுப்போன ஒருவன், சந்திரனை மஞ்சள் வர்ண முள்ளவனாய்ப் பாவித்தக்கொள்வது போலும், என்னுடைய பரிசுத்தமான ஸ்வரூபத்தில் தோஷங்களை ஆரோபணம் செய்து கொள்கிறான். ஜ்வரத்தினால் வாய் மிக்கக் கசந்து போய் இருக்கும் ஒருவன், உத்தமமான பாலை மிக்கக் கசக்கும் விஷமாகப் பாவித்துக் கொள்வது போலும், என் விஷயத்தில் உண்மையான ஞானமில்லாத அறிவுகேடன், அமானுஷனான என்னை மனுஷ்யனாக பாவிக்கிறான். ஆகையால் நான்

சொல்லித் தந்த இந்த விஷயத்தை நீ மறந்து போகாமல், எப்போதும் சிந்தனை செய்து கொண்டு இருக்க வேண்டும் என்று, நான் திரும்ப திரும்பச் சொல்கிறேன்.

உண்மையான ஞான மில்லாமையால், ஏற்படுமநர்த்தம் :

அதை மறந்து போய் விட்டால், உன் த்ருஷ்டி மேலெழுந்த பார்வையாய்ப் போய் நீ வீண்படுவாய், என் ஸ்வரூபத்தில் அழுந்தி, அதை உள்ளபடி அறியாமல், அது வெளிப்பயையாய்த் தோன்றி நிற்கிறபடியாகவே இருப்பதாக அதைப் பாவித்துக்கொண்டால், அப்படி அதைத் தெரிந்துகொள்ளல், தெரிந்துகொள்ளாததே ஆகும். ஸ்வப்நத்தில் அம்ருதத்தைப் புசித்தால், மரணராஹித்யம் ஸித்தியாதது போலும், என் ஸ்வரூபம் வெளிப்படையாய்த் தோன்றுமாறே இருக்கிற தென்று அறிதல், என் ஸ்வரூபத்தின் யாதாத்ம்ய ஞானம் செய்து தரும் மோக்ஷத்தைச் செய்து கொடுக்காது. யாதாத்ம்ய ஞானமே ஞான மென்று தீர்மானம் செய்து கொள்ளாத பக்ஷத்தில், மூடர்கள் கூட என்னைப் பார்க்கத்தான் பார்க்கிறார்கள். ஆனால் அவர்கள் பார்வை, யென்னுடைய மேற்றொற்றத்திலேயே நின்று போய், என்னுடைய ஸ்வரூபஞானத்துக்குத் தடையாய் ஏற்படுகிறது.

நக்ஷத்ரங்கள், பூமியில் இருக்கும் ஜலத்தில் ப்ரதிபலித்து, முத்துக்கள் போற் காணப்படவே, அந்த வெளித் தோற்றத்திற்குக் கீழ் நுழைந்து பார்த்து, யதார்த்த ஞானத்தை அடையாத ஹம்ஸமானது, அத்தோற்றத்தை உண்மையான முத்துக்கள் என்றெண்ணி, அவற்றை உண்ண விரும்பி, விரைந்து கீழ் நோக்கி வருகிற வேகத்தால், பூமியிலடிபட்டு ப்ராணனை இழக்கிறதல்லவா? ம்ருகஜலத்தை கங்கையின் ப்ரவாஹம் என்று நினைத்து, வேகமாய் ஓடி வந்த மான், என்ன லாபம் அடைகிறது? கருவேலமரத்தை கல்ப விருக்ஷம் என்றெண்ணி, அதின்சாயையிற் போய் நிற்பதால், என்ன லாப மடையமுடியும்? ஸர்ப்பத்தை நீலமணிகள் கோத்த இரண்டு பேட்டை ஹாரம் என்றெண்ணி, அதின்மேல் கைவைத்தால், அல்லது பருக்கைக் கற்களை ரத்தினங்ளென்றெண்ணி, அவற்றை விலைகொடுத்து வாங்கினால், அல்லது நெருப்புத் தணற்களை, பூமியினின்று வெளிப்பட்டுக் கிடக்கும் நிதி யென்றெண்ணி, துணியிற் கட்டிக்கொண்டால், ஹாநியே ப்ராப்தமாகும்.

ஓர் ஸிம்ஹம் கிணற்றிற் றோற்றும் தன் ப்ரதிபிம்பத்தை வேறோர் ஸிம்ஹ மென்று நினைத்து, அதைக் கொல்ல எண்ணிக் கிணற்றிற் குதித்தால், அது தன்னுயிரை இழந்துவிடும். அப்படியே ப்ரபஞ்சத்தை நான் என்றெண்ணி, அதிலேயே முழுகிப்போகிறவன், ஜலத்திற் றோன்றும் சந்திரனுடைய ப்ரதிபிம்பத்தை சந்திர னென்றெண்ணி, அதைப் பற்றிக்கொள்ளப் போனவன்போல், வீண்படுவான், வஸ்து இல்லாததை, வஸ்து வென்றெண்ணினவன், கஞ்சியை சாப்பிட்டுவிட்டு அம்ருதம் சாப்பிட்டதின் பலனை அடைய விரும்பினவனாவான், அப்படியே வெளித்தோற்றமே, வஸ்துவின் யதார்த்த ஸ்வரூப மென்று நிச்சயம் செய்து கொண்டவன், அவிநாசியான என்னுடைய நிஜஸ்வரூபத்தை எப்படி அறிவான்? ஒருவன் மேற்கு ஸமுத்ரக்கரைக்குப் போக உத்தேசித்து, கிழக்கு ஸமுத்ரத்துக்குப் போகும் வழியைப் பிடித்துக் கொண்டு நடந்தால் அவன் கார்யஸித்தி அடைவானா, உமியைக் குத்தி அரிசியை அடைய முடியுமா?

அப்படியே பலவிதமான பேதங்களை அடைந்து, விரிந்துகிடக்கும் இந்த ஜகத்தை, அறிந்ததினால், மற்றொன்றின் கலப்பற்று, பேதமற்றவனாய் இருக்கும் நான் அறியப்பட்டவனாய்விடுவேனோ? நுரையைச் சாப்பிட்டால், ஜலத்தைச் சாப்பிட்ட தாகுமா? ஆகையால் என் ஸ்வரூப ஞானத்தை தேடிக்கொள்ளாதவர்கள், மாயையால் மோஹிதமான புத்தியைப் பாராட்டி நிற்கிறவர்களாய், இந்த ஜகமே நான் என்றெண்ணி, இந்த ஜகத்தின் தர்மங்களான ஜந்ம கர்மங்களை என்னைச் சேர்ந்தவையாகவே பேசுவார்கள்.

ஞானமற்றவர்கள் ஆத்மஸ்வரூபத்தில் பாவித்துக்கொள்ளும் விபரீதங்கள் :

இப்படிச் செய்யத் தொடங்கி, நாமமில்லாத எனக்கு நாமத்தை ஏறிட்டு, கர்ம மற்றவனாகிய எனக்கு கர்மங்கள் உண்டென்று பேசி, தேஹமில்லாத என்னிடத்தில் தேஹதர்மங்களை ஆரோபித்து, உருவமற்றவனாகிய என்னிடத்தில் உருவத்தைக் கல்பித்து, ஒருபாதியு மற்ற எனக்கு உபசாரங்களைச் செய்து, விதிவிலக்கற்ற என்னிடத்தில் வ்யவஹாரங்களையும் ஆசாரங்களையும் ஏறிட்டு, ஜாதியின் ஸம்பந்தமில்லாத என்னிடத்தில் ஜாதி ஸம்பந்தத்தைப் பாராட்டி, நிர்குணனான எனக்கு குணங்களைக் கல்பித்து, கால்கை அற்ற எனக்கு கால்கைகளை ஏற்படுத்தி, அளவுகடந்த என்னை அளவுக்குட்படுத்தி, எங்கும் வ்யாபித்திருக்கும் எனக்கு ஓர் இருப்பிடம் ஏற்படுத்தி, தூங்கிப்போனவன், தன்

ஸ்வப்நத்திற் றான்படுத்துத்தூங்கும், படுக்கையையே வநமாகப் பாவித்துக் கொள்வதுபோலும்,

காதில்லாத எனக்குக் காதையும், கண்ணில்லாத எனக்குக் கண்ணையும், கோத்ரமில்லாத எனக்கு கோத்ரத்தையும், ரூபமில்லாத எனக்கு ரூபத்தையும், அவ்யக்தனான எனக்கு இந்த்ரிய கோசரத்வத்தையும், ஆசையில்லாத எனக்கு ஆசைகளையும் கல்பித்து, எப்போதும் இயற்கையாகவே ஸந்துஷ்டனாயிருக்கும் என்னை, ஓர் உபசாரத்தால் ஸந்தோஷமடைகிறவனாய்ப் பாவித்து, போர்த்து வைக்க முடியாது, எங்கும் வ்யாப்தமான என் ஸ்வரூபத்தை, ஓரளவுள்ளதாகப் பாவித்து, அதற்கு ஓர் வஸ்திரத்தைச் சாத்தி, அலங்காரங்களால் அலங்கரிக்க முடியாத என் ஸ்வரூபத்திற்கு அலங்காரங்களைப் பூட்டி, ஸகலத்துக்கும் காரணமான என்னை, ஓர் காரணத்தால் உண்டானவனாய்ப் பாவித்து, ஸ்வயமாகவே எக்காலத்திலும் உள்ளவனாகிய என்னை, மூர்த்தியாகச் செய்துவைத்து, எங்கும் எப்போதும் ஸ்வயம்புவான என்னை, ஓரிடத்தில், ஓர் கால விசேஷத்தில், ப்ரதிஷ்டை செய்து, எங்கும் வ்யாபித்து ஓர் இடத்திலும் இல்லை என்று சொல்ல முடியா திருக்கும் என்னை, ஆவாஹநம் செய்து, விஸர்ஜநம் செய்து, எக்காலத்திலும் தானாகவே இருந்துகொண்டு,

ஒரே விதப்பட்டிருக்கும் என்னை, பாலகனாகவும், தாருண்ய பருவமடைந்தவனாயும், வ்ருத்தனாயும் பாவித்து, இப்படி எனக்கு அவஸ்தா பேதங்களை ஏற்படுத்திவைத்து, அத்வைதமா யிருக்கும் என்னை வேறுபடுத்தியும், கர்த்ருத்வம் என்பதே முற்றிலும் அற்றுப்போய் இருக்கும் என்னை, வேலைகள் செய்கிறவனாயும், ஒன்றையும் புசிப்பது என்பதே அற்றுப்போன என்னை புசிக்கிறவனாயும், பேசி, குலத்தின் ஸம்பந்தம் முற்றிலும் அற்ற என்னை, ஓர் குலத்திற் பிறந்தவனாய் வர்ணித்து, நித்யமாய் இருக்கும் எனக்கு மரணத்தை ஏற்படுத்தி, நான் இறந்துபோனே னென்று துக்கித்து, ஸர்வத்துக்கும் அந்தர்யாமிருக்கும் எனக்கு சத்ருக்களையும் ஸ்நேகிதர்களையும் ஏற்படுத்தி வைத்து,

என் ஸ்வரூபத்தில் நிறைந்திருக்கும் ஆனந்தத்தில் முழுகிக்கிடக்கும் என்னை, அநேக விஷயங்களில் ஆசைப்பட்டவனாய்ப் பாவித்து, எங்கும் ஸரியாகவே வ்யாபித்திருக்கும் என்னை, ஒரு தேசத்தில் இருப்பவனாக வ்யவஹரித்து, உலக மனைத்துக்கும் ஆத்மாவாய் இருக்கும்

என்னை, ஒருவனிடத்தில் ப்ரிய முள்ளவனாய் அவனைக் காப்பாற்றுகிறவனாயும், மற்றொருவனைக் கொல்கிறவனாயும், பாவிப்பது மல்லாமல், அப்படியே உலகத்தார் என்னைப் பேசும்படியாகவும் செய்து வைக்கிறார்கள்.

இதை மேலும் மேலும் வளர்த்துவதில் பயன் என்ன? இப்படி எல்லாம் ப்ருக்ருதி ஸம்பந்தத்தால் மனிதர்களிடத்தில் காணப்படும் தர்மங்க ளனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து, அவையனைத்துக்கும் க்ருஷ்ணன் என்று பெயர் வைத்து, என்னை உள்ளபடி யறியாமல், என் விஷயத்தில் விபரீத ஞானத்தைப் பாராட்டி நிற்கிறார்கள். ஓர் உருவத்தைப் பார்த்து, அதைத் தெய்வம் என்று நினைத்து பஜிக்கிறார்கள்; பின்பு இயற்கையாகவே அந்த ஆதாரம் நாசம் அடைகிறபோது, அதை தெய்வமில்லை யென்று தள்ளி விடுகிறார்கள். என்னை மனுஷ்யனாக நினைத்ததினால், இப்படி எல்லாம் அவர்களுக்கு ஏற்பட்ட விபரீத ஞானமே, என் ஸ்வரூபத்தின் யாதாத்ம்ய ஞானம் ப்ரகாசியாத படி குறுக்கிட்டு, அந்த விபரீத ஞானமே இருட்டாய் நிற்கிறது.

मोघाशा मोघकर्माणो मोघज्ञाना विचेतसः ।
राक्षसीमासुरीं चैव प्रकृतिं मोहिनीं श्रिताः ।।१२।।

மோகாஶா மோக கர்மாணோ மோக க்ஞானா விசேதஸ: ।
ராக்ஷஸீமாஸுரீம் சைவ் ப்ரக்ருதிம் மோஹினீம் ஶ்ரிதா: ।। 12

ஆத்மஸ்வரூபத்தின் உண்மையான ஞான மற்றவர்களின் பிறப்பும் வாழ்வும் வீணாய்ப் போகிறது :

ஆகையால் வர்ஷாகால மல்லாத காலத்தில், ஆகாசத்தில் உண்டான மேகம் மழை பெய்யாது கரைந்து போவது போலும், தூரத்திலிருந்து பார்க்கும் போது அலைகளோடு கூடிய ப்ரவாஹமாய்த் தோற்றும் ம்ருகஜலம், கிட்டப் போன மாத்ரத்தில் இல்லாது போவது போலும், இப்படிப்பட்ட விபரீத ஞானத்தைப் படைத்தவர்கள், இவ்வுலகில் பிறந்து ஓர்பயனும் படுவதில்லை. மண்ணாற் செய்து வைக்கப்பட்ட குதிரை வீரர்கள் போலும், மாந்த்ரீகன் தன்னுடைய யக்ஷிணீ வித்யையின் பலத்தால் உண்டாக்கி வைத்த நகைகள் போலும், ஆகாசத்திற் றோற்றும் கந்தர்வ நகரத்தின் கோட்டை கொத்தளங்கள் போலும், கொடிக்கள்ளியானது, எவ்வளவு உயரமாய்த்தான் வளர்ந்தாலும், ஓர் பழமும் பழுத்துக்

கொடுக்காமல், போலாய் இருப்பதால் ஓர் கட்டட வேலைக்கும் பயன் படாது போவது போலும், ஆட்டின் கழுத்திற் றொங்கும் முலைபோலும், ஸாபரீமந்த்ரத்தால் உண்டாகி செடியில் பழுத்த பழமானது பறித் துண்பதற்கும், பிறருக்குக் கொடுப்பதற்கும், ப்ரயோஜநப்படாதது, போலும், இந்த அறிவுகேடர்களுடைய வாழ்வும், அவர்கள் செய்து வைக்கும் கர்மங்களும், ஓர் விதமாயும் பயன்படுவதில்லை.

பின்பு ஏதாவது சாஸ்த்ரங்கள் அவர்கள் அப்யஸித்தால், அது குரங்கு பிடுங்கின தேங்காயும், குருடன் கையில் சிக்கின முத்தும் போல், நிஷ்ப்ரயோஜநம் ஆகும். வளர்த்திச் சொல்வதென்? அவர்கள் அப்யஸித்த சாஸ்த்ரம், ஓர் சிறு பெண் கையில் கொடுக்கப்பட்ட ஓர் போர்க்கலமும், அசுத்த ஆசாரத்தோடு கூடினவனுக்கு உபதேசித்த பீஜங்களோடு கூடின மந்த்ரமும், ஆகும். இப்படி எவன் என்னுடைய உண்மையான ஞாந மில்லாதவனோ, அவன் ஸம்பாதித்துக் கொண்ட ஞாநமும் அவனனுஷ்டித்த ஸத்கர்மங்களும், வீணாய்ப்போகின்றன, அர்ஜுநா. இந்த ஞான மின்மை யென்னும் தமோகுண ரூபியான ராக்ஷஸீ, ஸத்புத்தி என்பவளை விழுங்கி விட்டு, அவள் இருந்த இடத்தைத் துடைத்து வைப்பாள். அப்படிப்பட்ட ப்ரக்ருதியினால் ஆக்ரமிக்கப்பட்டவர்கள், சிந்தை யென்னும் குகைக்குள் அடைப்பட்டுப்போய், அங்கே யிருக்கும் தாமஸீ யென்னும் ராக்ஷஸியின் வாயில் விழுகிறார்கள். அந்த ராக்ஷஸியின் வாயில், ஆசையென்னும் உமிழ்நீர் ஸதா ஊரிக்கொண்டு, அதின் நடுவில் ஹிம்ஸை என்னும் நாக்கு புரண்டுகொண்டு, அஸந்தோஷம் என்னும் மாம்ஸத்தின் கவளங்கள், எப்போதும் கடித்து மெல்லப்பட்டுக் கொண்டிருக்கும்.

இந்த ராக்ஷஸீ காதுவரைக்கும்ஓடி விரிந்திருக்கும், அநர்த்தம் என்னும் தன்னுதடுகளை உருஞ்சிக்கொண்டு, எப்போதும் மதம்பிடித்தவளாய், கேவலம் மறதி என்னும் பர்வதத்தின் குஹைக்குள் படுத்துக்கிடந்து, த்வேஷம் என்னும் தவடைகளில் ஞானத்தை எல்லாம கரகரவென்று அரைத்துத் தள்ளிக்கொண்டு, தோல்எலும்பு இவற்றால் ஏற்பட்ட மேற்போர்வையையே, (தேஹத்தையே) நோக்கி நிற்கும் ஓர் ஸ்தூல புத்தியையே, மூடர்களுக் குண்டாக்கிக் கொடுத்துக்கொண்டு இருப்பாள். இப்படிப்பட்ட ஆஸுரீ ப்ரக்ருதியின் வாயில் விழுந்து பூதபலியாய்ப் போனவர்கள், வ்யாமோஹம் என்னும் அக்நிகுண்டத்தில் விழுந்து மடிந்து போகிறார்கள். இப்படி தமஸ் என்னும் படுகுழியில் முழுகிப்போனவர்கள், விசாரம் என்னும் கைகளின்

ஹ்ருதயத்தை அடையாதவர்களாய், எங்கு போய் முடிந்து போனார்கள், என்னும் ஸமாசாரமே தெரியாமற்போகிறது. இப்படி மூடர்களுடைய ப்ரயோஜநமற்ற கதையை இவ்வளவு சொன்னது போதும். இன்னும் விவரிப்பதினால் ஓர் ப்ரயோஜநமு மின்றி, நாக்கை ச்ரமப்படுத்தி வைத்ததே ஆகும். இப்படி பகவான் சொல்லவே, அர்ஜுனனும், "ஆம் ஐயா, ஆம் ஐயா," என்றான். ஆகையால் இப்படி ச்ரமப்பட்டுப்போன வாக்கானது, எந்த ஆநந்தாநுபவத்தால் ச்ரமபரிஹாரம் அடையுமோ, அப்படிப் பட்ட ஸாதுக்களின் வர்ணனையைச் செய்வேன் கேள், என்று ஸ்ரீ க்ருஷ்ணன் மேல்விஷயத்தைச் சொல்ல புகுந்தார்.

महात्मानस्तु मां पार्थ दैवीं प्रकृतिमाश्रिताः ।
भजन्त्यनन्यमनसो ज्ञात्वा भूतादिमव्ययम् ।।१३।।

மஹாத்மாநஸ்து மாம் பார்த தைவீம் ப்ரக்ருதிமாஶ்ரிதாः ।
பஜந்த்யநந்ய மநஸோ க்ஞாத்வா பூதாதி மவ்யயம் ॥ 13

ஸாதுக்களின் பெருமை :

அப்படிப்பட்ட ஸாதுக்களுடைய பரிசுத்தமான மனஸில் நான் க்ஷேத்ரஸந்யாஸியாய்ப் (க்ஷேத்ர ஸந்யாஸி என்பவன் ஓர் புண்ய க்ஷேத்ரத்தை அடைந்து அதை விட்டுப் போகாமல், மரணம் வரைக்கும் அதிலேயே வாஸம் செய்து தீருகிறதென்னும் வ்ரதம் பூண்டவன்) போய், அதைவிட்டு விலகாமல், அதிற் குடிகொண்டிருப்பேன். அவர்கள் படுத்துத் தூங்கினால் வைராக்யம் என்பது அவர்களுடைய காலை அமுக்கிக்கொண்டு, அவர்களை உபாஸித்துக்கொண்டிருக்கும். பரப்ரஹ்மத்தை அடையவேண்டும் என்னும் அவர்களுடைய ஆசையாகிய ஸத்பாவத்தில், தர்மம் எப்போதும் ராஜ்யம் செய்துகொண்டிருப்பதோடு, அவர்களுடைய மனஸு விவேகத்தையே மிகவும் கொண்டாடிக்கொண்டு, அதையே போஷித்துக் கொண்டிருக்கும். அவர்கள் ஞானம் என்னும் கங்கையில் ஸ்நாநம் செய்துவிட்டு, பூர்ணப்ரஹ்மபாவம் என்னும் உணவைப் புசித்து, த்ருப்தி அடைந்தவர்களாய், சாந்தி என்ற கொடியின் புதுத்துளிர்களாகக் காணப்படுவார்கள். எல்லா பூதங்களும் முடிவிற் போயடையும் பரப்ரஹ்மத்திலிருந்து தோன்றின செவ்விய முளைகளென்றும், தைர்யம் என்னும் மண்டபத்தின் ஸ்தம்பங்கள் என்றும், ஆநந்தம் என்னும் ஸமுத்ரத்தில் முழுகிப்போய்க் கிடக்குங்குடங்கள் என்றும், சொல்லத்தக்கவர் களாயிருப்பார்கள்.

அவர்களுக்குக் கிடைத்திருக்கும் பக்தியின் பெருக்கால் த்ருப்தர்களாய், தங்களைக் கிட்டிநிற்கும் கைவல்யத்தைப் (கேவல ப்ரஹ்மமாய்ப் போயிருக்கும் ஓர் நிலையை) பார்த்து, "உன்னை வேண்டினவர்கள் நாங்கள் அல்ல, நீ திரும்பிப்போ," என்று அவர்கள் சொல்வார்கள். அவர்கள் இயற்கையாய் நடத்திவரும் வ்யவஹாரங்களி னுதவியால், நீதியானது இவ்வுலகில் வாழ்வு பெற்றிருக்கும். அவர்கள் அவயவங்கள் அனைத்தும் சாந்தி என்னும் தங்கத்தால் செய்யப்பட்ட நகைகளால் அலங்கரிக்கப்பட்டு, அழகுபொருந்தி இருக்கும். அவர்களுடைய சித்தமானது, ஸர்வ்வயாபியாகிய என்னுடைய ஸ்வரூபம் அடைப்பட்டுக் கிடக்கும் பையாகும். இப்படிப்பட்ட மஹானுபாவர்களான அவர்களை, தைவீப்ரக்ருதி என்பது பாக்யம்படைத்து அடைந்து நிற்கும். அவர்கள் என்னுடைய நிஜஸ்வரூபத்தை பூர்ணமாயறிந்து, என்னை பஜித்துநின்று, தங்கள் மனோவ்ருத்தியினால் த்வைதபாவத்தை ஸ்பர்சியாது நிற்கும் மஹிமையுள்ளவர்களா யிருப்பார்கள். இப்படி நான்காகவே யாய்ப்போய், என் ஸேவையைச் செய்வார்கள். இந்த ஆச்சர்யம் இன்னும் விவரித்துச் சொல்லத்தக்கதாய் இருக்கிறதாகையால், இதையே மேலும் சொல்வேன், கேள்.

सततं कीर्तयन्तो मां यतन्तश्च दृढव्रताः ।
नमस्यन्तश्च मां भक्त्या नित्ययुक्ता उपासते ।।१४।।

ஸததம் கீர்தயந்தோ மாம் யதந்தஶ்ச த்ருடவ்ரதா: ।
நமஸ்யந்தஶ்ச மாம் பக்த்யா நித்ய யுக்தா உபாஸதே ॥ 14

கீர்த்தனபக்தி செய்யும் ஸாதுக்கள் :

இவர்களிற் சிலர் ஹரி கீர்த்தநம் செய்வதில் அத்யுத்ஸாஹத்துடன் நடநம் செய்து, ப்ரயாச்சித்தங்களுக்கு ஓர் வேலையும் இல்லாமல் அடித்து, பாபங்களின் பெயர்கூட, உலகில் மிகுந்திருக்காவண்ணம். அவைகள் இருந்த இடத்தைச் சுத்தமாய்த் துடைத்துவைப்பார்கள்; சமதமங்களுக்கு (சமம் என்பது மனதைக் கட்டுப் படுத்தி வைத்தல். தமம் என்பது இந்த்ரியங்களைக் கட்டுப்படுத்தி வைத்தல்) யாதோ ரதிகாரமும் இல்லாமற் செய்து, அவற்றை அவமானப்படுத்தி வைத்து, தீர்த்தங்களைத் தங்கள் தங்கள் ஸ்தாநங்களைவிட்டு எழுந்துபோகச்செய்து, யமலோகத்தின் வ்யாபாரமனைத்தும் ஓய்ந்துபோகச் செய்து வைப்பார்கள். சமம், தான் எதைக் காட்டில் வைக்க வேண்டுமென்றும், தமம், எதைத்தான்

அடக்குகிற தென்றும், பாபங்களனைத்தும் இல்லாமற் போய் விட்டமையால், தீர்த்தங்கள் எதைத்தாங்கள் சாப்பிடுகிறதென்றும், துக்கப்பட்டுக் கொண்டிருக்கும்.

இப்படி இவர்கள் என்னுடைய நாமத்தை உரக்கக் கூவி, விச்வத்தின் துக்கமனைத்தையும் முற்றிலும் நாசம் செய்து, உலகத்தாரனைவரும் தங்களுக்குள் ளடக்கிக்கொள்ள முடியாதபடி மஹாநந்த மடைந்து, தும் தும் என்று குதித்திடச் செய்வார்கள். ஸூர்யன் உதிக்காமலே வெளிச்சம் உண்டாகும்படியாயும், அம்ருதம் இல்லாமலே இறந்தவர்கள் உயிர்க்கும்படியாயும் செய்து, யோகாப்யாஸம் இல்லாமலே, கேவல ஆத்மஸ்வரூபத்தை, கண்ணுக்குக் காட்டி வைப்பார்கள். ஆனால் அரசன் என்றும், பிச்சைக்காரன் என்றும் பெரிய தென்றும், சிறியதென்றும், தாரதம்யம் பாராட்டத் தெரியாதவர்களாய்ப் போய், ஜகத்தனைத்தும் வந்து சேர்ந்து ஆநந்தம் அடையக் கூடிய ஸ்தானமாய் இவர்கள் இருப்பார்கள். இந்த ஜகத்தில் ஏதோ ஒருவன் வைகுண்டம் போய்ச் சேர்வதுண்டு. இவர்களோ, இப்பூலோகத்தையே நாமஸங்கீர்த்தனத்தின் மஹிமையால் வைகுண்டமாகச் செய்து, எங்கும் பரிசுத்தமாகச் செய்து வைப்பார்கள்.

தேஜஸ்ஸால், இவர்கள் ஸூர்யன் எனத்தகுவார்கள்; ஆனால் ஸூர்யன் அஸ்தமித்துப் போகிறானே, அந்த தோஷம், இவர்களிடம் இராது. சந்திரனைப்போல் உலகத்தை, குளிர்ச்சி அடையவு மாநந்தபடவும் செய்துவைப்பதோடு, வளர்தல் தேய்தல் என்னும் தோஷமற்று, இவர்கள் ஸதா பூர்ணமாயிருப்பார்கள். மழை பெய்து வெறுத்துப்போகும் மேகத்தை, ஔதார்யத்தில் இவர்களுக்கு உபமானமாய்ச் சொல்லத் தகாது. இவர்களை தயையோடு கூடிய ஸிம்ஹங்கள் என்று சொல்ல யாதொரு தடையுமில்லை.

எந்த ஒரு பகவந்நாமத்தை ஒரு தரம் ஸரியாய் வாக்கால் உச்சரிப்பதற்கு, ஆயிர ஜந்மங்களில் ஏன்னுடைய ஆராதனம் செய்திருக்க வேண்டுமோ, அப்படிப்பட்ட பகவந்நாமம் இவர்கள் நாக்கில் ஸதா நர்த்தனம் செய்து கொண்டிருக்கும். ஒவ்வொருவேளை, வைகுண்டத்திற் காணப்படாமலும், ஸூர்ய மண்டலத்தில் இல்லாதவனாயும், யோகிகள் ஹ்ருதயத்தினின்று விலகிப் போனவனாயும், நான் இருப்பேன். அப்போது என்னைக் கண்டு கொள்ள வேண்டுமென்றால், உத்தமப்ரகாரமாய் ஸதா நாமத்தை உத்கோஷித்துக் கொண்டிருக்கும் இவர்களிடத்திற்கு வந்து சேர வேண்டும்.

இவர்கள் என்னுடைய குணங்களில் ஸதா ஈடுபட்டு, மிக்க த்ருப்தி அடந்தவர்களாய், தேசகாலத்தை மறந்து போய், கீர்த்தந ஹுகத்தால் என்னுடைய ஆத்ம ஸ்வரூபத்யாநத்திலேயே முழுகிப் போய், க்ருஷ்ண விஷ்ணு ஹரி கோவிந்த நாமங்களைக் கொண்டு அமைக்கப்பெற்று, என்னுடைய ஆத்மஸ்வரூபத்தின் உத்தமவிசார ரூபமாயிருக்கும் ப்ரபந்தங்களை, ஓய் வொழி வில்லாமற் பாடிக்கொண்டே, சராசரம் முழுவதிலும் ஸஞ்சரித்துக் கொண்டிருப்பார்கள். இப்படி எல்லாம், இவர்களை எவ்வளவு கொண்டாடினாலும், இவர்களுடைய பெருமை சொல்லித்தீராது.

ஆத்மஸம்யம யோகத்தால் பக்தி செய்கிறவர்கள் :

மற்றும் சிலர், எப்போதும் மிக்க ஜாக்ருதையாய் முயன்று கொண்டே இருந்து, மனதையும் ப்ராண வாயுக்களையும், தங்களுக்கு அநுகூலமாய்ச் செய்துகொண்டு, வெளிப்புறத்தில் யமநியமங்கள் என்னும் அரண்களை ஏற்படுத்திக் கொண்டு, உட்புறத்தில் வஜ்ராஸநம் என்னும் கோட்டையை கட்டிக்கொண்டு, அதன்மேல் ப்ராணாயாமம் என்ற ஸதா வேலைசெய்து கொண்டிருக்கும் சதக்நீயந்திரத்தை ஏற்றி வைத்துக் கொண்டு, குண்டலிநீ சக்தியின் வெளிச்சத்தின் உதவியால், மனஸையும் ப்ராண வாயுவையும், ப்ரஹ்மாந்திரத்தின் கீழ்பிரதேசம் வரைக்கும் ஏற்றி, அங்கிருக்கும் அம்ருதத்தின் பதினேழாவது கலை நிறைந்திருக்கும் தடாகத்தை, தங்கள் வசப்படுத்திக்கொண்டு, அந்த அம்ருதத்தைப் புசித்து ப்ரத்யாஹாரத்தின் பலத்தைவ்ருத்தி செய்து கொண்டு, காமக்ரோதங்களாகிய விகாரங்களின் பேச்சே வழங்காதப்படி, அவைகளை நாசம் செய்து, இந்த்ரியங்களைக் கட்டி ஹ்ருதயத்திற்குள் அடைத்து வைப்பார்கள்.

பின்பு தாரணை என்னும் பராக்ரமசாலியான குதிரை வீரன், தேஹத்தின் உள்ளே யிருக்கும், மஹாபூதங்களை ஒன்று பட்டுப் போகும்படிச் செய்தபின், மனது புத்தி அஹங்காரம் சித்தம் என்னும் ஸங்கல்பத்தின் நால்வகைப்பட்டதான ஸைந்யம் முற்றிலும் அழிந்துபோகிறது. பின்பு ஜயம் பெற்றோம், ஜயம் பெற்றோம், என்று த்யானம் என்னும் பேரிகையை அடித்துக்கொண்டு, ப்ரஹ்ம மயஸ்திதி எனப்பட்டு, விரிந்து ப்ரகாசித்துக் கொண்டிருக்கும், ஒற்றைக்குடைக்கீழ் இவர்கள் வாழ்வு பெற்று, ஸமாதியின் ஸம்பத் தாகிய அகண்ட ப்ரஹ்மாநுபவ ராஜ்யஸுகத்தில் பட்டாபிஷிக்தர்களாய்,

ப்ரஹ்ம ஸாயுஜ்யம் பெற்றும், என்னை இடைவிடாது பூஜித்துக் கொண்டிருப்பார்கள்.

நமநபக்தியாற் சிறந்தவர்கள் :

மற்றும் சிலர் என்னை பஜிக்கும் ப்ரகாரத்தை வர்ணிப்பேன், கேள். எப்படி ஓர் வஸ்த்ரத்தின் இரண்டு தலைப்புகள் நடுவில், நெடுக்காவும் குறுக்காகவும், ஓடியிருக்கும் நூற்களைத் தவிர வேறொன்றும் இல்லையோ, அப்படியே நான்முகன் முதற்கொண்டு ஓர்சின்ன பூச்சி வரைக்கும் உள்ள இந்த சராசர ரூபமான விச்வத்தில், என்னைத்தவிர வேறொன்றும் இல்லாததாகப் பாவித்து, பெரிது சிறிதென்றும், உயிருள்ளது உயிரற்றது என்றும், வித்யாஸம் பாராட்டாமல், ஓர் வஸ்துவைப் பார்த்த மாத்ரத்தில்அது நானே யென்று நினைத்து நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து, இவர்கள் ஸேவிப்பார்கள். தங்களுடைய பெருமை தங்களுக்குத் தோற்றாமல், எதிரிற்றோன்றும் வஸ்துவின் யோக்தையயும் அயோக்யதையையும் விசாரியாது, அவ்வஸ்து எதுவாயிருந்தாலும் ஸரியே, திடீரென்று விழுந்து ஸேவிப்பதே இவர்கள் மனதுக்கு இனித்திருக்கும். எப்படி மேலே இருந்து புறப்பட்ட நீர், எல்லாவிடத்துக்கும் தாழ்ந்ததான ஓர் இடம் தேடி, அங்கே சேர்ந்த பிறகுதான் நிலை கொள்ளுமோ அப்படியே கண்ணுக்கு முற்பட்ட பூதம் எதுவாய் இருந்தாலும், அதின் காலின் கீழ் விழுந்து தீருவதே, இவர்கள் இயற்கையாயிருக்கும்.

எப்படிக் கிளைகள் அனைத்திலும் பழங்கள் நிறையப் பழுத்திருக்கும் ஓர் மரம், இயற்கையாகவே தன் கிளைகள் பூமியில் புரளும்படியாய் வளைந்து போகுமோ, அப்படியே சராசரம் அனைத்தும் ப்ரஹ்மம் என்ற பாவத்தை, உத்தம ப்ரகாரமாய்ப் பராட்டி நிற்கும் இவர்கள், ஜீவன் என்று பெயரடைந்த ஒன்றைக் கண்டாற்போதும், அதின் காலில் விழுவார்கள். கர்வராஹித்யமே உருவெடுத்து வந்ததோ, என்று சொல்லும்படியாய், ஸர்வகாலமும் இவர்கள் இருப்பார்கள். இவர்களுக்கு விநயமே ஸம்பத்தாய்ப் போய், ஜய ஜய என்னும் மந்த்ரத்தால் எனக்கு இவர்கள் ஸதா த்ருப்தி செய்து வைப்பார்கள். இப்படி நமஸ்கரித்து, நமஸ்கரித்து, மானாவமான மற்றுப்போனவர்களாய், இவர்கள் காலக்ரமேண, நானே ஆய்விடுகிறார்கள். இப்படி எனக்கு மிவர்களுக்கும் நடுவில் இடைவெளி இல்லாத வண்ணம். என்னுடன் இவர்கள் ஒட்டிக் கொண்டவர்களாய்ப் போனபின்னும், என்னையே உபாஸித்து நிற்பார்கள்.

ஞானயஜ்ஞரூபபக்தி வர்ணனையின் அவதாரிகை :

அப்படிப் பட்ட உத்தமவிதமான பக்தியை உனக்கு தெரிவித்தானபின், எவர்கள் ஞானயஜ்ஞும் செய்து கொண்டு, என்னை பஜித்து நிற்கிறார்களோ, அந்த பக்தர்களைக் கொஞ்சம் வர்ணிக்கப்போகிறேன், கேள். ஆனால் இவர்கள் செய்யும் பஜனையின் நைபுண்யம் உனக்கு முன்பே தெரிந்திருக்கிறதே, அர்ஜுநா; ஏனென்றால் இந்த விஷயத்தை விஸ்தாரமாய்க் கீழே, (4வது அத்யாயத்தில் 33வது ச்லோகம் முதல் அந்த அத்யாயம் முடிவு வரைக்கும்) நானுனக்குச்சொல்லி இருக்கிறேன். அப்போது அர்ஜுனன், "இது உண்மையே, ஐயா, ஆனால் நீர் சொல்வதெல்லாம், பகவத் ப்ரஸாதத்தின் பலனாக இருப்பதோடு கூட, அம்ருதம் போன்று மிக்க விரும்பத் தக்கதாய் இருப்பதால், கேட்டது போதும், இனி வேண்டாம், என்று எவர்கள் சொல்வார்கள்?" என்று சொன்னான்.

ஸ்ரீ அநந்தன், இவ்வார்தையைக் கேட்டு, இந்த விஷயத்தில் அர்ஜுநனுக்கு கேற்பட்டிருக்கும் தீவ்ரமான ஆசையை அறிந்துகொண்டு, மனமகிழ்ச்சிஅடைந்து, பக்கத்துக்குப் பக்கம் அசைந்தாடி, "நல்ல கார்யம் செய்தாய், அர்ஜுநா; ந்யாயமாய்ப் பார்த்தால், இந்த விஷயத்தைத் திரும்பவும் வ்யவஹரிக்க ப்ரஸக்தி கொஞ்சங் கூட இல்லை; ஆனால் உன்னாசையின் தீவ்ரதை, என்னைச் சொல்லும்படியாய்ச் செய்து வைக்கிறது," என்று அவர் சொன்னார். அப்போது, அர்ஜுனன் பின்வருமாறு சொன்னான். ஐயா நீர் இப்படிச் சொல்வதென்? சகோரத்துக்கு ஸந்தோஷத்தைக் கொடுப்பதைத் தவிர, சந்திரனுக்குவேறு உத்தேச மொன்று மில்லையோ? ஜகத்தனைதையும் குளிரச்செய்வது, அந்த சந்திரனுக்கு ஸ்வபாவம் அல்லவோ?

ஆனால் இந்த சகோரம் தன்னுடைய ஆசையைப் பூர்ணம் பண்ணிக் கொள்வதற்காக, சந்த்ரனுக்கு தன்னுடைய வாயைத் திறந்து காட்டுகிறது போலும், நானும் உம்மைச்சொல்ல வேண்டுமென்று கேட்கிறேன். இந்த அல்பவிஷயத்தை நீர் நிமித்தமாகச் செய்து கொண்டு, என்னைப்போற் பிராத்திக்காமலிருக்கும் உலகத்தாருக்கெல்லாம் ஞானத்தை உபகரிக்கிறீர். தேவா, இப்படி நீர் கருணைக் கடலாய் இருக்கிறீர். மேகம் தன்னுடைய ஔதார்யத்தின் பெருமையால், தன்னை வேண்டாதவர்களான உலகத்தாரின் தாபத்தைத் தீர்க்க விரும்பி, அபரிமிதமாய் மழை பொழிகிறது. சாதகத்தின்

தாஹத்தை தீர்ப்பதே, அதின் உத்தேசமாய் இருந்ததே ஆனால், இவ்வளவு மழை பொழிய வேண்டிய அவச்யமில்லை. ஓர் ஆசமனம் செய்து கொள்வதற்கு வேண்டிய நீர் கொஞ்சமேயானாலும், அதற்காக கங்கையிடமே வந்து, வேண்டிய நீரை எடுத்துக் கொள்ள வேண்டியதாயிருப்பது போலும், எங்களுடைய ஆசை கொஞ்சமாயினும், பெரிதாயினும், தேவனாகிய உம்மையே அடைந்து தீர்த்துக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

அப்போது பகவான் பின் வருமாறு சொல்லத் தொடங்கினார்: எனக்குண்டாயிருக்கும் ஸந்தோஷத்தின் நிறைவு, உன் ஸ்துதியை வாங்கி உட்கொள்வதிற் கிடங்கொடாது இருக்கிறது. ஆனால், இதுவரையில் எவ்வளவு கவனமாய், நீ நான் சொன்னதைக் கேட்டு வந்தாயோ, அப்படியே நான் மேலே சொல்லப் போவதற்கும் கவனத்தைக் கொடுத்து, நீ உதவி செய்தாற் போதும்.

ज्ञानयज्ञेन चाप्यन्ये यजन्तो मामुपासते ।
एकत्वेन पृथक्त्वेन बहुधा विश्वतोमुखम् ।।१५।।

க்ஞான யக்ஞேன சாப்யன்யே யஜந்தோ மாமுபாஸதே ।
ஏகத்வேன ப்ருதக்த்வேன பஹுதா விஶ்வதோ முகம் ॥ 15

ஏகத்வ பாவனையுடன் செய்யும் ஞானயஞ்ஞத்தின் ப்ரகாரம் :

இவர்களிற் சிலர் செய்யும் ஞாநயஞ்ஞத்தின் ப்ரகாரத்தைச் சொல்வேன் கேள். இவர்கள் செய்யும் யஞ்ஞத்தில், ப்ரஹ்மத்தின் ஆதி ஸங்கல்பமே யூபஸ்தம்பமாய், பஞ்ச மஹாபூதங்கள் மண்டபமாய், பேதம் என்பதே பசுவாய், அந்த பஞ்சமஹா பூதங்களின் குணங்களாகிய சப்தாதிகள் ஐந்தும், பஞ்சேந்திரியங்களும், பஞ்சப்ராணன்களுமாகிய இவையே யக்ஞ ஸாமக்ரியைகளாய், அஞ்ஞாநம் ஹோமம் பண்ணப்படும் நெய்யாகும். மனஸும் புத்தியுமே அக்நிகுண்டமாய், அவற்றிற்குள் வர்த்திதுக் கொண்டிருக்கும் ப்ரஹ்ம ஸ்வரூபஞானமே ஜ்வலித்துக்கொண் டெரியும் நெருப்பாகும். ஸாம்யத்ருஷ்டி என்பது, அந்தக் குண்டங்கள் உடைந்து போகாமல் உறுதியாய் நிற்கும்படி, காப்பாற்றிக் கொண்டிருக்கும் மேடையாகும். விவேகத்தோடு கூடிய புத்தியின் ஸாமர்த்யமே, மந்த்ரமாகவும், ப்ரஹ்மவித்யையின் பெருமையே ஸ்ருக்காகவும், (ஸ்ருக் என்பது நெய்ஹோமம்

செய்வதற்கு வேண்டிய பெரிய கரண்டி, ஸ்ருவம் என்பது அந்த ஹோமத்திற்கு வேண்டிய சின்ன முட்டை) சந்தி என்பதே ஸ்ருவமாகவும், அமைந்து, ஜீவஸ்வரூபமே ஹோமம் செய்கிறவனாகும்.

இப்படி ஞானயஜ்ஞம் செய்கிறவர்கள், அநுபவஞானம் என்னும் பாத்ரத்தில், பேதபாவம் என்னும் அஜ்ஞானத்தை, நெய்யாக ஊத்தி வைத்துக் கொண்டு, விவேகம் என்னும் மந்த்ரத்தை உச்சரித்துக்கொண்டு, ஞானம் என்னும் அக்நியில் ஹோமம் செய்து கொண்டிருப்பார்கள். இப்படி அஜ்ஞானம் முற்றிலும் ஹோமம் பண்ணப்பட்டுப்போய், பாக்கி இல்லாமற் போகவே, யஜ்ஞம் பண்ணுகிறவனும் யஜ்ஞம் பண்ணுதலும் இல்லாமற்போய், ஆத்மஸ்வரூபம் என்னும் பேதமற்ற ஸமரஸஸ்திதியில், இவர்கள் அவப்ருதஸ்நாநம் செய்வார்கள். பின்பு ஜீவர்கள் விஷயங்கள், இந்த்ரியங்கள் என்ற பேதவ்யவஹாரம் முற்றிலு மற்றுப்போய், ஆத்மஸ்வரூபஞாநம் ஏற்பட்டு, பேதப்பட்டவையாய் முன் தோன்றின அனைத்தும், பேதமற் றொன்றாயிருக்கும் ப்ரஹ்மஸ்வரூபமே யென்றிவர்களறிந்திருப்பார்கள். எப்படி ஒருவன் விழித்தக்கொண்டபின், முன் ஸ்வப்நத்திற்றான் கண்ட ஸேனை அனைத்துமாக, தானே ஆய்ப்போயிருந்ததாகவும், நித்ரை கலைந்து போகவே, அந்த ஸேநை வேறாயிராமல், எல்லாம் தன் ஸ்வரூபமாகவே ஆய்ப்போய் விட்டதாக அறிவானோ, அப்படியே அநேகமான வேறு வேறு பூதங்களாய், இதற்கு முன் தோன்றிக்கொண்டிருந்த விச்வமனைத்தும், தங்கள் ஸ்வரூபமே என்று இவர்கள் பாவித்திருப்பார்கள். பின்பு தாங்கள் ஜீவர்கள் என்னும் பாவம் அற்றுப்போனவர்களாய், ப்ரஹ்மதேவன் முதலாக புல்பர்யந்தம் உள்ள அனைத்தும் ஆத்மஸ்வரூபமே என்று பாவித்து, இப்பிரகாரமாய் இவர்கள் நானே ஆய்ப்போய், அதன் பின்னும் என்னையே பஜித்து நிற்பார்கள்.

பேதபாவனையுடன் செய்யும் ஞானயஜ்ஞத்தின் ப்ரகாரம் :

இந்த ஞான யஜ்ஞம் செய்கிறவர்களில் மற்றும் சிலர், இந்த அநேகத்வம் அநாதியா யிருக்கிறதென்றும், பூதங்கள் ஒன்றினின்று ஒன்று வேறுபட்டனவாயும், அவைகளுடைய நாம ரூபங்களும் வேறுபட்டனவாயும், இப்படி வித்யாஸங்களோடு கூடியே ஜகத்திருப்பதாய்ப் பார்த்தாலும், இவர்கள் இந்த பேதத்தை ஒரே தேஹத்தின் அவயவங்கள் நடுவில் காணப்படும் பேதத்தைப்போல் இருப்பதாக

அறிவதால், இவர்களுடைய ஞாநம் பேதப்படுகிறதில்லை. சின்னவையும் பெரியவையுமாய் கிளைகள், வேறுவேறாய் இருந்தபோதிலும், ஒரே மரத்தைச்சேர்ந்தவையாய் இருப்பதுபோலும், ஸூர்யனுடைய அநேக கிரணங்களும் ஒரே ஸூர்யனைச் சேர்ந்தவையாய் இருப்பதுபோலும் அநேக விதமான உருவங்களோடும் அநேகவிதமான பெயர்களோடும் கூடி, அநேகவிதமான நடவடிக்கைகளுள்ளவையாய், இருக்கும் பூதங்கள் அனைத்திலும், பேதமற்றிருக்கும் நானே இருப்பதாகப் பாவித்து, என் த்ருப்தியை உத்தேசித்து ஞாநயஞ்ஞம் பண்ணிக் கொண்டிருப்பார்களாகையால், இவர்களுடைய ஞானம் பேதப்பட்டதாகாது.

எந்தெந்த காலங்களில், எந்தெந்த இடங்களில், எதெதை இவர்கள் பார்ப்பார்களோ, அவை அனைத்தும் என்னைத்தவிர வேறில்லை யென்று, இவர்கள் ஞனம் இருக்கும். நன்றாய்ப் பார். எத்தனை குமிழிகள் ஜலத்தில் உண்டான போதிலும், அவைகள் ஜலத்தோடு ஒன்றுபட்டவையாயும், அவைகள் குமிழிகளாய் இருந்துகொண்டிருந்தாலும் ஸரியே. அல்லது உடைந்து ஜலமோடு ஜலமாய்ப் போய்விட்டாலும் ஸரியே, ஜலத்திலேயே இருந்துகொண்டு மிருப்பதுபோலும், மிக்க நுட்பமான புழுதிகள் காற்றாற் கிளப்பப்பட்டு ஆகாச மெங்கும் பரவினால், அவைகள் ப்ருதிவியின் அம்சமாய் இருத்தலை இழக்காதவையாய் இருந்து, மறுபடியும் கீழேவிழுந்து பூமியின்மேலேயே படிந்து கிடப்பது போலும், எங்கெங்கானாலும், எந்தெந்த விதமாயும், எந்தெந்த பூதங்கள் இருந்தாலும், இல்லாதுபோனாலும், அவை-களனைத்துமாக நானே இருப்பதாய், இவர்கள் எண்ணியிருப்பார்கள்.

அப்பா, இப்படி எல்லாம், நான் எவ்வளவு வ்யாப்தி உள்ளவனாய் இருக்கிறேனோ, அவ்வளவு வ்யாப்தி உள்ளதாய் இவர்களுடைய ஞாநநிலையும் ஆய்ப்போய், இவ்விதம் இவர்கள் நானாகவே, அநேகவிதமான ரூபங்களோடுகூடிய ஜகத்தில், வர்த்தித்துக்கொண்டிருப்பார்கள். இந்த ஸூர்ய பிம்பத்தை எவன் பார்த்தபோதிலும், நன்னையே அது நோக்கி நிற்பதாய் அவனுக்குத் தோற்றுவதுபோலும், அப்படியே ஜகத்தில் உள்ளபூதங்கள்அனைத்துக்கும், இவர்கள் எக்காலும் ஸந்முகமாய் இருப்பார்கள். ஜகத்தில் சில பூதங்கள் தங்கள் முன்பக்கம் இருப்பவையாயும், சில தங்கள் பின்பக்கம் இருப்பவையாயும், இவர்கள் பாவிக்காமல், காற்று ஆகாசம் முழுவதிலும் பரவி அத்துடன் ஒன்று பட்டிருப்பதுபோல்,

இவர்கள் ஸகல பூதங்களோடும் கலந்து, எங்கும் வ்யாபித்தவர்களாய் இருப்பார்கள். இப்பிரகாரமாய் நான் ஸர்வபூதங்களிலும் வ்யாபித்து எத்தனை விரிவை அடைந்திருக்கிறேனோ, இவர்களும் அத்தனை வ்யாபதி யுள்ளவர்களாய்த் தங்களை ஸதா பாவித்திருப்பதால், இவர்கள் தனித்து உட்கார்ந்து கொண்டு, பஜனையென்று பெயரிட்டு, ஓர் கார்யம செய்யாது போனாலும், இவர்கள் வாழ்வே ஓர் தீர்க்க பஜனையாய் இயற்கையாகவே இருக்கிறது.

ந்யாயமாய்ப் பார்க்கப் போனால், விச்வமனைத்தும் நானாய் இருப்பதால், எந்த இடத்தில் இருக்கும் எவன்தான், என்னை உபாஸிக்காமல் இருக்கிறான்? ஆனால் என்னைச் சிலர் அடையாமலிருப்பதற்குக் காரணம் என்னென்னில், அது இப்படி வ்யாப்தியுள்ளதாகிய என் ஸ்வரூபத்தை அறியாமல் இருப்பதே ஆகும். இந்த விஷயத்தை இங்கே விவரிக்கக் காரணமில்லை. இப்படி என்னை உபாஸித்து, தகுந்த ப்ரகாரமாய் ஞானயஜ்ஞம் செய்து கொண்டிருப் பவர்களுடைய விஷயம், உனக்குச் சொல்லித்தீர்ந்தது. எல்லாரும் எக்காலத்திலும் எல்லா பூதங்களின் வாயிலும் அர்ப்பித்துக் கொண்டிருப்பது அனைத்தும், இயற்கையாக எனக்கே வந்து சேர்ந்து, நானே த்ருப்தனாகிறேன். இதை அறியாததினாற்றான், மூர்க்கர்கள் என்னை வந்தடைவதில்லை.

अहं क्रतुरहं यज्ञः स्वधाहमहमौषधम् ।
मन्त्रोऽहमहमेवाज्यमहमग्निरहं हुतम् ॥१६॥

அஹம் க்ரதுரஹம் யக்ஞ: ஸ்வதாஹ மஹமௌஷதம்।
மந்த்ரோ ஹமஹ மேவாஜ்ய மஹமக்னிரஹம் ஹுதம்॥ 16

ஞானோத்தர காலத்தில் ஸகலமும் நானே யென்று அறியப்படுகிறது :

உண்மையான ஞானம் ஏற்பட்டப்பின், எல்லாத்துக்கும் மூலகாரணமான வேதமும், அதில் வர்ணிக்கப்பட்ட விதிகளை அநுஷ்டிப்பதால் ஏற்படும் யஜ்ஞஸம்பந்தமான க்ரியாகலாபங்களும், அந்த க்ரியைகள் ஸம்பூர்ணமாய் அநுஷ்டிக்கப்படுவதால் ஏற்படும் யஜ்ஞமும், யஜ்ஞத்தில் ப்ரயோகிக்கப் பட்டவையான ஸ்வாஹா ஸ்வதாகாரங்களும், ஸோமலதை முதலிய பலவகை யஜ்ஞ ஸாமக்ரியைகளும், நெய் ஸமித் ஹவிஸ் முதலிய ஹோமத்ரவ்யங்களும், மந்தரம்,

ஹோதா, ஹோமம் செய்தல், அக்நி, ஆகிய இவைகளும், சுருக்கிச் சொல்ல, யஜ்ஞ ஸம்பந்தமான யாவையும், நானே என்று அறியப்படுகின்றன.

पिताहमस्य जगतो माता धाता पितामहः ।
वेद्यं पवित्रमोंकार ऋक्साम यजुरेव च ।।१७।।

பிதாஹமஸ்ய ஜகதோ மாதா தாதா பிதாமஹ:।
வேத்யம் பவித்ர மோங்கார ருக் ஸாம யஜுரேவ ச ॥ 17

பகவான் ஜகத்துக்குப் பிதா :

என்னுடைய அங்கஸங்கம் ஏற்பட்ட பின், இந்த ப்ரக்ருதியினின்று அஷ்டாங்கங்களோடு கூடிய இந்த ஜகத்து உண்டாகிறதினால், நான் இந்த ஜகத்துக்குப் பிதா ஆகிறேன்.

அவனே ஜகத்துக்கு மாதா :

அர்த்தநாரீ நடேச்வரஸ்வரூபத்தில், புருஷன் எவனோ, அவனே ஸ்த்ரீ ஆய் இருப்பதுபோல், நானே சராசரரூபமான இந்த ஜகத்தக்குத் தாயும் ஆகிறேன்.

அவனே ஜகத்தைப் போஷித்து வளர்க்கிறவன் :

இப்படி உண்டான ஜகத்து, எவனால் தாங்கப்பட்டு, போஷிக்கப்பட்டு, வ்ருத்தியடைகிறதோ, அந்த தாதாவும் என்னைத்தவிர வேறொருவனு மல்ல, என்பதில் ஸந்தேஹம் இல்லை.

அவனே ஜகத்துக்குப் பிதாமஹன் :

அன்றியும் இவ்வுலகுக்குத் தாயும் தகப்பனுமான ப்ரக்ருதி புருஷர்கள், அந்தக்கரணோ பாதியற்ற எந்த சுத்த ப்ரஹ்ம ஸ்வரூபத்தினின்றும் உண்டானார்களோ, அந்த சுத்த ப்ரஹ்மமாகிய நான் பிதாமஹனும் ஆகிறேன்.

அவனே வேத்யமான வஸ்து :

மேலும் பலவகை ஞானங்கள் என்னும் வழிகளெல்லாம போய்ச்சேரு மூராயும், நான்கு வேதங்களும் கூடும் நாற்சந்தியாயும், இருக்கும் வேத்ய வஸ்துவும் நானே.

அவனே பவித்ரமான வஸ்து :

எந்த ஸ்தானத்தில் வந்து சேர்ந்ததும், நாநாவிதமான மதங்களும் ஒன்றுபடுமோ, ஒன்றின் முகம் ஒன்றுக்குத்தெரியாத சாஸ்த்ரங்கள் பலவும், ஒன்றை ஒன்று அறிந்துகொள்ளுமோ, ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்துபோன ஞானங்கள் ஒன்றுபடுமோ, இந்தக் காரணங்களால் எது பவித்ரம் என்று சொல்லப்படுமோ, அதுவும் நானே.

அவனே ஓம்காரம் :

மேலும் பார், சப்த ப்ரஹ்மத்துக்கு பீஜமான பரப்ரஹ்மத்தினின்றும், பரா, பச்யந்தீ, மத்யமா வைகரீ, எனப்படும் நான்கு வாக்குகள் மூளையாகப் புறப்பட்டபின், இந்நான்குக்கும் வாஸஸ்தானமாகிய ஓம்காரம் எதுவோ, அதுவும் நான்தான்.

மூன்று வேதங்களும் அவனே :

அந்த ஓம்காரத்தினின்று அகார உகார மகார மென்னும் மூன்றக்ஷரங்களும் உண்டான மாத்ரத்தில், அவைகள் ருக், யஜுஸ், ஸாமம் என்னும் மூன்று வேதங்களாவதால், இம்மூன்று வேதங்களும் அவற்றின் வம்ச பரம்பரைகளும நான் தான்.

गतिर्भर्ता प्रभुः साक्षी निवासः शरणं सुहृत् ।
प्रभवः प्रलयः स्थानं निधानं बीजमव्ययम् ।।१८।।

கதிர் பர்தா ப்ரபுः ஸாக்ஷீ நிவாஸः ஶரணம் ஸுஹ்ருத் ।
ப்ரபவः ப்ரலயः ஸ்தானம் நிதானம் பீஜமவ்யயம் ॥ 18

அவனே ஸகலத்துக்கும் கதி :

இந்த சராசரம் அனைத்தும் ப்ரளயகாலத்தில் எந்த ப்ரக்ருதியின் வயிற்றில் ஒடுக்கிப்போகுமோ, அந்த ப்ரக்ருதியானவள் ச்ரமமடைந்து எந்த இடத்திற்குப் போய், அந்த ச்ரமத்தைத் தீர்த்துக் கொள்வாளோ, அந்த பரம கதி நானே.

அவனே பர்த்தா :

அந்த ப்ரக்ருதிக்கு ஆதாரமாய் இருந்து, அவள் பிழைத்து வாழும்படியாய்ச் செய்து, அவளை ஆச்ரயித்து, அவளை

விச்வத்தைப் பெற்று வைக்கும்படியாய்ச் செய்து, பின்பு விசுவமாய் ரூபமெடுத்து, அவள் தேஹத்துக்குட் புகுந்து, அவள் வசப்பட்டு, அவள் முக்குணங்களையும் புசித்துக்கொண்டு, அந்த விச்வச்ரீயான ப்ரக்ருதிக்கு இவ்விதம் கணவனாய் இருப்பவனும் நானே.

அவனே ஸகலத்துக்கும் ப்ரபு :

நானே மூவ்வுலகிலுமுள்ள அனைத்துக்கும் ஸ்வாமியாய், என்னுடைய ஆஞ்ஞைக்குக் கட்டுப்பட்டு, ஆகாசம் எங்கும் நிரம்பி நிற்கிறது, காற்று ஓர்நிமிஷங் கூட ஓரிடத்தில் வேலை செய்யாமல் உட்கார்ந்திருப்பதில்லை. நெருப்பு தன் ஸம்பந்தத்தை அடைந்த அனைத்தையும் எரித்துக் கொண்டிருக்கிறது. ஜலம் மழையாய் பெய்து கொண்டிருக்கிறது, பர்வதங்கள் தாங்கள் கிடந்திருக்கும் இடம்விட்டுப் பெயர்வதில்லை, ஸமுத்ரம் பொங்கினாலும் தன் கரையை மீறிப் புரளுவதில்லை, பூமி பூதங்களுக்கு இடம் கொடுத்துக்கொண்டு அவைகளைத் தாங்கி இருக்கிறது. நான் பேசுங்கள் என்று ஏவின மாத்ரத்தில், வேதங்கள் பேசத் தலைப்படுகின்றன. நான் ஓட்டி வைப்பதால் ஸூர்யன் ஓடுகிறான், நான் ஆடடிவைப்பதால் ஜகத்தை எல்லாம் ஆட்டிவைக்கும் ப்ராணவாயு, மேலும் கீழுமாய் ஓடுகிறது. நான் உத்தரவு செய்த மாத்ரத்தில் யமன் பூதங்களை தன் வாயில் போட்டுக் கொள்கிறான். இப்படி மூவ்வுலகிலும் உள்ள அனைத்தும், என்னுடைய அடிமை பூண்டு, தங்கள் தங்கள் வேலையைச் செய்து கொண்டிருக்கின்றன. இவ்வளவு ஸாமர்த்ய முள்ளவனாய், ஜகத்துக் கெல்லாம் நாதனாய், நான் விளங்குகிறேன்.

அவனே கேவலம் ஸாக்ஷி :

அன்றியும் இத்தனை வேலை செய்தும், ஆகாசம் போல் ஸாக்ஷிபூதனா யிருக்கிறவனும் நானே.

அவனே நிவாஸம் :

நாம ரூபங்களை உடைத்தான பூதங்களுக்குள் உயிருக்குயிராயும் நானே ஆய், ஜலத்தினிடத்தில் அலைகளும், அலைகளுக்குள் ஜலமும் இருப்பது போலும், நானே உள்ளும்புறமும் பூதங்களுனைத்தையும் தாங்கிக் கொண்டிருப்பதால், நானே நிவாஸஸ்தானமாயிருக்கிறேன்.

அவனே சரணம் :

அநந்ய பாவத்தோடு சரணமாக அடைந்தவனுக்கு ஏற்பட்ட ஜந்ம மரணம் என்னும் ஆபத்தை, நான் ஒருவனே நிவர்த்தித்து வைக்கும் திறமை உள்ளவன், என்னும் காரணத்தைக் கொண்டு, நான் ஒருவனே சரணாகதர்களுக்கு சரண்யனாகிறேன்.

அவனே ஸர்வ பூதங்களுக்கும் ஸுஹ்ருத்து :

பூதுங்களின் வேறு. வேறு ப்ரக்ருதிக்குத் தக்கப்படி, ஒருவனான நான், வேறுவேறு விதப்பட்டு, பூதங்கள் தோறும் அவரவர்கள் ஜீவனாய் ஏற்பட்டு, அவைகளுக்காகவேண்டிய ஸகல வ்யாபாரங்களையும் நடத்திவைக்கிறேன். எப்படி ஸமுத்ரம் என்றும், சிறு உப்புக்குட்டை என்றும், வித்யாஸம் பாராட்டாமல், ஸூர்யன் நீர் அனைத்திலும் ப்ரதிபிம்பித்து ப்ரகாசிக்கிறானோ, அப்படியே நான் ப்ரஹ்மா முதலாய் உள்ள ஸர்வ பூதங்களிலும் நானே ஜீவனாய் ப்ரதிபிம்பித்து, அவர்களுக்கு உதவி செய்வதால், அவர்களுக்கு நான் ஸுஹ்ருத்தாகிறேன்.

அவனே ஸர்வபூதங்களுக்கும் ப்ரபவம் ப்ரளயம் :

இப்படி முவ்வுலகிலள்ள அனைவருக்கும் ஜீவனாயிருப்பதோடு கூட, அவர்கள் உண்டாவதற்கும், நிலைத்திருப்பதற்கும், லயம் அடைவதற்கும், காரணமானவன் நானே.

அவனே ஜகத்துக்கு பீஜம் :

விதையினின்று கிளைகளோடு கூடிய மரம் உண்டாய், பின்பு அந்த வ்ருக்ஷ உருவானது விதையில் அடங்கிப் போவது போலும், என்னுடைய ஆதி ஸங்கல்பத்தினின்று ஸர்வஜகத்தும் உண்டாய், திரும்பவும் அந்த ஆதிஸங்கல்பத்தில் லயம் அடைகின்றதால், நானே பீஜம்.

அவனே ஸ்தாநம் :

இப்படி ஜகத்துக்கு பீஜமாய் இருக்கும் அவ்யக்த வாஸநா ரூபமான ஸங்கல்பமும், கல்ப முடிவில், என் ஸ்வரூபத்தில் லயித்துப் போவதால், நான் அனைத்துக்கும் ஸ்தான மாகிறேன்.

அவன் அவ்யய மானவன் :

என்னுடைய நிராகாரஸ்வரூபம் ஏற்படுங்கால், இப்போது காணப்படுகிற நாமரூபங்கள், ஜாதி பேதங்கள், வ்யக்திகள், அனைத்தும் இல்லாமற் போவதால், நான் அவ்யயமானவன்.

அவனே நிதானம் :

மறுபடியும் வேறு வேறு ரூபங்களோடு கூடிய பூதங்களை ஸ்ருஷ்டித்து வைப்பதற்கு, அவச்யம் வேண்டியதான ஸம்ஸ்காரரூபவாஸநாசக்தி அழிந்து போகாமல், அந்த நிராகரஸ்வரூபத்தில், மறைந்து கிடப்பதால், நான் நிதானமும் ஆகிறேன்.

तपाम्यहमहं वर्षं निगृह्णाम्युत्सृजामि च ।
अमृतं चैव मृत्युश्च सदसच्चाहमर्जुन ।।१९।।

தபாம்யஹமஹம் வர்ஷம் நிக்ருஹ்ணாம்யுத் ஸ்ருஜாமி ச।
அம்ருதம் சைவ ம்ருத்யுஶ்ச ஸதஸச்சாஹமர்ஜுன ॥ 19

தாபத்தை உண்டாக்கி நீரை வற்றச் செய்கிறவன் அவனே :

நானே ஸூர்ய வேஷம் பூண்டு, ஜகத்தை யெல்லாம் தபித்து, அதில் இருக்கும் நீர்களை வற்றிப் போகச் செய்கிறேன்.

பின்பு மழை பெய்து நீர்களை நிறப்புகிறவனுமவனே :

பின்பு இந்த்ரனாய் மழை பெய்யச் செய்து, வற்றிப்போன ஜலாசயங்களை நிறப்பி வைகிறவனும் நானே.

ம்ருத்யுவும் அம்ருதமும் அவனே :

அக்நி கட்டைகளைச் சாப்பிட, அக்கட்டைகளே அக்நி ஆகின்றது போலும், சாகிறவனும் கொல்கின்றவனும் நானே யாகையால், கொல்கின்றதாயாவது, கொல்லப்படுவதாயாவது, ம்ருத்யுவின் ஸம்பந்தம் பெற்ற அனைத்தும் நானே. அன்றியும் சாகாமல் அம்ருதமாயிருக்கும் வஸ்துவும் இயற்கையாகவே நானே.

வ்யக்தாவ்யக்தங்க ளனைத்து மவனே :

பலவிதமாய் விஸ்தரித்துச் சொல்ல வேண்டிய தனைத்தையும் ஒரே தடவையாய்ச் சொல்வேன், கேள்.

இந்த்ரியங்களா லறியும்படி வ்யக்தமாயிருப்பதால், இருக்கின்றவை யென்றும், இந்த்ரியங்களால் அறிய முடியா வண்ணம் அவ்யக்தமாய் மறைந்து கிடப்பதால், இல்லாதவை யென்றும் வ்யவஹரிக்கப்பட்ட வ்யக்தாவ்யக்தங்களும் நானே என்றறி.

ஸர்வ வ்யாபியான ஆத்மஸ்வரூபம் அப்ராப்தமா யிருப்பதற்குக் காரணம் :

இப்படி என் வ்யாப்தி இருப்பதால் நான் இல்லையென்று சொல்லும்படியாய், ஏதேனும் ஓர் இடம் இருக்கிறதா? ஆனால் ப்ராணிகளுடைய தெளர்ப்பாக்யம் (பாக்கியக்குறைவு) எப்படியி ருக்கிறதென்றால், அவர்கள் என்னைப் பார்ப்பதே இல்லை. அலைகள் ஜலமில்லாமல் உலர்ந்து போவதுண்டா? ஸூர்யகிரணங்களுக்கு தீவெளிச்சத்தின் ஒத்தாசையில்லாமற் போனால், பார்வை சக்தி அற்றுப் போகுமா? ஆனால் இந்த பூதங்கள் மாத்ரம், நானாகவே இருந்தும், நானாகிறதில்லை. என்ன ஆச்சர்யம் பார் இவர்கள் அனைவர்களுக்கு, உள்ளும் புறமும், நானே நிறைந்திருக்கிறேன். இவர்கள் என்னாலேயே உருக்கி வார்க்கப்பட்டவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் பாபம் எப்படி குறுக்கிட்டு நிற்கிறது பார். அந்த பாபத்தால் நானாகவே இருக்கிற இவர்கள். "நாம் ப்ரஹ்மம் அல்ல," என்று சொல்கிறார்கள்.

அம்ருதமே நிறைந்திருக்கும் கிணற்றில் வீழ்ந்த ஒருவன், அதைவிட்டு ஏறி வெளிப்பட முயலுவது போலும், இது இருக்கிறது. ஆனால் தெளர்ப்பாக்யத்தால் இப்படி அநர்த்தப்பட்டுப் போவதை, நாம் எப்படித் தடுக்க முடியும்? கண்ணில்லாத ஓர் பிச்சைகாரன், ஓர் கவள அந்நத்துக்காக ஓடும்போது, காலில் ஒரு சிந்தாமணி இடறினால், அவன் கண்கெட்ட தனத்தால் அதைக்காலால் ஒதுக்கித் தள்ளி விட்டுப் போகின்றது போலும், ஞானம் என்பதை எப்போது கைவிட்டுப் போகிறார்களோ, அப்போது இப்படிப்பட்ட தசை ஏற்பட்டு, எதைச் செய்து லாபம் அடைந்து கொள்ளலாமோ, அதைச் செய்யா தொழிகிறார்கள். குருடனுக்கு கருடனுடைய இரக்கைகள் கிடைத்தால், அவை அவனுக் கெப்படி ப்ரயோஜநப்படும்? அப்படியே ஞாநமில்லாதவன் ஸத்கர்மங்களைச் செய்தால், அவனுக்கு அதனால் உண்மையான பயன் ஒன்றும் ஏற்படாமல், அவன் அவற்றைச் செய்ததால் ஏற்படும் ச்ரமம் தான், அவனுக்கு மிகுந்ததாகும்.

त्रैविद्या मां सोमपाः पूतपापा यज्ञैरिष्ट्वा स्वर्गतिं प्रार्थयन्ते ।
ते पुण्यमासाद्य सुरेन्द्रलोकमश्नन्ति दिव्यान्दिवि देवभोगान् ।।२०।।

த்ரைவித்யா மாம் ஸோமபா: பூதபாபா
யக்ஞைரிஷ்ட்வா ஸ்வர்கதிம் ப்ரார்தயந்தே ।
தே புண்யமாஸாத்ய ஸுரேந்த்ரலோக
மஸ்நந்தி திவ்யான்திவி தேவ போகான் ।। 20

காமனையோடு யஞ்ஞும் செய்கிறவர்கள், பாபமே செய்கிறார்கள் :

ஹே கிரீடி, இதைக் கவனித்துப் பார், சிலர் தங்கள் ஆச்ரம தர்மங்களைத் தவறாது நடத்திவந்து வேத விஹித கர்மங்களை எப்படி அநுஷ்டிக்கவேண்டும் என்று காட்டிக் கொடுப்பதற்கு, ப்ரத்யக்ஷ ப்ரமாணங்களாய் இருப்பார்கள். அவர்கள் அநாயாஸமாய் யஞ்ஞங்கள் செய்வதைப் பார்த்து, வேதங்கள் அவர்களைக் கொண்டாடி, பக்கத்துக்குப் பக்கம் அசைந்தாடும். அவர்கள் ஓர்வைதிக கர்மம் செய்யத் தொடங்கினால், அந்த கர்மமே மூர்த்தீகரித்து, தன் பலனை தன்றலைமேற் சுமந்துகொண்டு அவர்கள் எதிரில் வந்து நிற்கும். இப்படி யஞ்ஞதீக்ஷை பூண்டு, யஞ்ஞங்கள் செய்து, ஸோமபானம் செய்து கொண்டு, யஞ்ஞமே மூர்த்தீகரித்ததோ, என்று சொல்லத் தக்கவர்களாய் இருக்கும இவர்கள், புண்யகர்மங்கள் செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, பாபங்களையே ஸம்பாதித்துக் கொள்கிறார்கள்.

இவர்கள் செய்யும் யஞ்ஞங்கள் பாபமே என்பதற்குக் காரணம் :

இவர்கள் மூன்று வேதங்களையும் பூர்ணமாய் அறிந்து, நூற்றுக்கணக்காய் யஞ்ஞங்களைச் செய்து, இந்த யாகங்களால் என்னையே த்ருப்தி செய்து வைத்து, என்னை அடையாமல், என்னை வேண்டாம் என்று ஒதுக்கி வைத்து, ஸ்வர்க்க ஸுகத்தையே வேண்டுகிறார்கள். கல்பதருவின் அடியில் உட்கார்ந்திருந்து, அப்படி இருக்கும் போதெல்லாம் தாங்கள் பிச்சை வாங்கும் பையை இறுக முடிபோட்டு வைத்துவிட்டு, பின்பு அங்கிருந்து பிச்சை வாங்க புறப்படுகிறவர்களைப் போலும், நூறுயாகங்களால் என்னைப் பூஜித்து, இவர்கள் ஸ்வர்க்க ஸுகத்தை அடைய விரும்புகிறார்கள். இது புண்யமா? நிச்சயமாய் பாபமல்லவா?

இப்படி என்னைத் தள்ளி வைத்து, ஸ்வர்க்கத்தை அடைவதென்பதை, ஞானமற்றவர்கள் புண்யலோக ப்ராப்திஎன்று சொன்னாற் சொல்லிப் போகட்டும். ஞானிகள்அதை ஆத்மஹானி என்றே சொல்வார்கள். நரக துக்கத்தை உத்தேசித்து, ஸ்வர்க்கத்தை ஸுகம் என்று சொல்லலாமே தவிர, நிர்தோஷமாயும ஒருநாளும் அழிவில்லாததாயும், ஆநந்தரூபமாயும், இருக்கும என்னுடைய ஸ்வரூபப்பராப்தியே ஸுகம் எனத்தகும். உத்தம போர்வீரனே, என்னை அடைவதற்காக ஏற்பட்ட ராஜமார்க்கத்தினின்று, கிளை வழிகளாய்ப் பிரிகின்ற ஸ்வர்க்கப்ராப்தி நரகப்பராப்தி என்னும் இவ்விரண்டு வழிகளும், திருடர்களிருக்கும் மிடத்திற்குக் கொண்டு போய் விடுகின்றன. ஸ்வர்க்கம் என்னும ஊருக்கு, புண்யமென்று பெயரிடப்பட்ட பாபத்தாற்போய்ச் சேரவேண்டும்; நரகத்துக்குப் பாபம் என்னும் பெயர்கொண்ட பாபத்தால் போய்சேர வேண்டும்; என்னை அடையவோ, சுத்தமான புண்யத்தை அநுஷ்டிக்க வேண்டும். என் நடுவிலேயே இருக்கிறவர்களை, என்னை விட்டுப் பிரித்து தூரக்கொண்டு போவது எதுவோ, அதைப் புண்யம் என்று சொன்னால், நாக்குத் தெறித்து விழுந்து போகாதா, அர்ஜுநா? ஆனால் இதைச் சொல்லி ப்ரயோஜநமென்? இங்கே சொல்ல வேண்டிய தெதுவோ, அதைச்சொல்வேன் கேள்.

காமனையோடு யஞ்ஞம் செய்கிறவர்கள் அடையும் ஸ்வர்க்க ஸுகத்தின் முறை :

யஞ்ஞதீக்ஷை பூண்டவர்கள், என்னை இவ்விதமாய் யஞ்ஞங்களால் ஆராதித்து விட்டு, ஸ்வர்க்க ஸுகத்தை வேண்டுகிறார்கள். பின்பு என்னை அடையமுடியாமற் செய்து வைக்கும் பாபமாகிய புண்யத்தை, நாம் அடைந்து விட்டோம், என்று ஆநந்தப் பட்டுக்கொண்டு, ஸ்வர்க்கம் போய்ச் சேர்கிறார்கள். அங்கே போய் அமரத்வம் என்னும் ஸிம்ஹாஸநத்தில் வீற்றிருக்கவும், ஐராவதத்தின் மேலேறித் திரியவும், அமராவதி என்ற ராஜதானியில் வஸித்திருக்கவும் பெற்று, மஹாஸித்திகளின் பண்டகசாலையிலும், அம்ருதம் நிறைந்துள்ள களஞ்ஜியங்களிலும், காமதேனுக்களின் மந்தைகளிலும் ப்ரவேசித்து, வேண்டு மென்ற படி அவைகளின் ஸுகங்களைப் புசிக்கப் பெறுவார்கள். அங்கே தேவர்கள் வேலைக்காரர்களாய் நிற்பார்கள். எங்கு பார்த்தாலும் சிந்தாமணியால் விஹாரஸ்தானங்களும், கல்பதருக்களால் உத்யானவநங்களும் ஏற்பட்டிருக்கும்.

கந்தர்வர்கள் பாடகர்களாயமைந்து ரம்பை போன்றவர்கள் நர்த்தநம் செய்து, ஸுகிக்கச் செய்வார்கள். ஊர்வசி முதலானவர்களோடு ரதிகேளி செய்து ஸுகம் பெறலாம். மன்மதன் எப்போதும் வீட்டின் முன் கட்டில் காத்திருந்து, காமஸுகத்துக்கு வேண்டிய ஆநுகூல்யத்தைச் செய்து கொடுப்பான். சந்திரன் அம்ருதத்தை நீராக தெளித்து, எவ்விடத்தையும சுத்தமாய்ச் செய்து வைப்பான். வாயு பகவான் முதலியவர்கள், இப்படி ஸ்வர்க்கம் சேர்ந்தவர்கள் இட்ட வேலையை, சீக்கிரத்திற் செய்து வைக்க, ஸதா ஓடிக் கொண்டே இருப்பார்கள். ப்ருஹஸ்பதி முதலியவர்கள் ஸ்வஸ்திவாசநம் (மங்களங்களுண்டாகும்படி வாழ்த்தல்) சொல்லும் ப்ராஹ்மணர்களாவார்கள். ஸ்துதி பாடகர்களான தேவர்கள் எண்ணிறந்தவர்களா யிருப்பார்கள். அந்தப் பதவியில் லோகபாலகர்களுக்கு ஸமானமான குதிரை வீரர்கள் ஸேநாதிபதிகளாய் முன் பின்காத்துக் கொண்டிருப்பார்கள். அந்தக் குதிரை வீரர்களின் குதிரைகள் முன்னால், உச்சைச்ரவஸே அல்பமாகத் தோற்றும். இப்படி எல்லாம். இந்த்ர ஸுகத்துக்கு ஸமானமான பல வகை போகங்களை, தங்களிடத்திற் புண்யலேசம் மிகுந்திருக்குமளவும் புசிக்க பெறுவார்கள்.

ते तं भुक्त्वा स्वर्गलोकं विशालं क्षीणे पुण्ये मर्त्यलोकं विशन्ति ।
एवं त्रयीधर्ममनुप्रपन्ना गतागतं कामकामा लभन्ते ।।२१।।

தே தம் புக்த்வா ஸ்வர்க லோகம் விஶாலம்
க்ஷீணே புண்யே மர்த்ய லோகம் விஶந்தி।
ஏவம் த்ரயீதர்ம மனுப்ரபந்நா கதாகதம் காமகாமா லபந்தே ॥ 21

ப்ரஹ்மப்ராப்தியைச் செய்து கொடாத வைதிக கர்மங்களனைத்தும் வ்யர்த்தமானவை :

பின்பு தாங்கள் ஸ்வர்க்க லோகத்தில், இருப்பதற்கு ஆதாரமாயிருந்த புண்யம் அனைத்தும், ஸ்வர்க்க ஸுக போகத்தால் செலவழிந்து போனபின், இந்த்ர பதவி என்னும் தங்கள் மேற்சாயம் இறங்கிப்போய், இவர்கள் திரும்பவும் ம்ருத்யுவால் ஆக்ரமிக்கப்பட்டு, இந்த பூலோகம் வந்து சேரும் படியாய் நேர்கிறது. வேசியின் போகத்தில், கைக்காசு அனைத்தும செலவழிந்து போனபிறகு, எப்படி அவளுடைய வீட்டுவாயிற் கதவை விரலாற்கூட தொடவொண்ணாதோ, அப்படியே இந்த தீக்ஷிதர்களுக்கு ஏற்படும் மானக்கேட்டை, நான் வர்ணித்துத் தீராது.

இப்படி யஞ்ஞங்களைச் செய்து எவர்கள் ஸ்வர்கத்துக்கு ஆசைப்பட்டார்களோ, அவர்கள் 'ஏற்கனவே கையிற் கிடைத்தவனாயிருந்த என்னை இழந்து போவது மல்லாமல், அவர்கள் அடைந்திருந்ததான அமரத்வமும், ஓர் பயனும் படாமல், கடைசியாக ம்ருத்யுலோகம் வந்துசேர்கிறார்கள். பின்பு தாயின் வயிற்றிற்கிடந்து, அங்கிருக்கும் நெருப்பிலும், விஷ்டையின் ஆவியின் வெப்பத்திலும் வேக்காடுண்டு, ஒன்பது மாஸம் கஷ்டப்பட்டு, பிறந்து மறுபடியும் சாகிறார்கள். அப்பா அர்ஜுநா, ஸ்வப்நத்திற் கிடைத்ததான பெருத்த புதையல், விழித்துக் கொண்டமாத்ரத்தில் இல்லாமற் போவதுபோலும், வேதங்களைப் பரிசீலனம் பண்ணினவர்கள் கொண்டாடுகிற ஸ்வர்க்கஸுகம் நிலையற்றது, என்று அறி.

எப்படி தாந்யத்தினின்று பிரித்து எடுக்கப்பட்ட பதரைத் தூற்றிப்பார்த்தால், அந்த ச்ரமம் ஓர்விதமாயும் ப்ரயோஜநப்படாமல் வீணாய்ப்போகுமோ, அப்படியே ஒருவன் வேதங்களை அறிந்தும், என்னைத் தவறிப்போக விடுவானேயானால், அவன் வீண்படுவான். ஆகையால் இந்த வேதத்தில் சொல்லப்பட்ட கர்மங்கள் அனைத்தும். என்னை ஸம்பாதித்துக் கொடுக்காமல், வேறுவகைப்பட்ட எவ்வித உத்தம லாபத்தை ஸம்பாதித்துக் கொடுப்பவையாயிருந்தாலும், ப்ரயோஜன மற்றவையே ஆகும். ஆகையால் நீ என் ஸ்வரூபத்தை அறிந்துகொண்டு, வேறொன்றையும் அறியாதவனாய் இருந்துவிட்டால், ஸுகப் படுவாய்.

अनन्याश्चिन्तयन्तो मां ये जनाः पर्युपासते ।
तेषां नित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहम् ।।२२।।

அனன்யாஶ் சிந்தயந்தோ மாம் யே ஜனாः பர்யுபாஸதே ।
தேஷாம் நித்யாபியுக்தானாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்॥ 22

அநந்ய பக்தர்களுடைய யோகக்ஷேமத்தை பகவான் வஹித்துக்கொள்ளல் :

ஸர்வவிதமாயும் மனஸால் எனக்கு விற்கப்பட்டுப் போனவர்களாய், தாயின் கர்ப்பத்திலிருக்கும் சிசு ஸ்வரக்ஷணத்திற்காக, தான் ஓர் விதமான ப்ரயத்நமும் செய்யாமல், தாயையே ஆச்ரயித்துக் கிடப்பதுபோல், என்னைக்காட்டிலும் உத்தமமான ரக்ஷகவஸ்து வேறொன்றில்லை யென்று நினைத்து, என்னையே ஜீவனமாகப்பாவித்து, இப்படி மனஸுக்கு வேறோர் போக்கு

மற்றவர்களாய், எவர்கள் என்னைச் சிந்தித்துக் கொண்டிருப்பார்களோ, அவர்களை நான் உபாஸித்துக் கொண்டிருக்கிறேன். அவர்கள் எந்தக்ஷணத்தில் என்னோடு ஒன்றுபட்டு, என்னுடைய பஜனையில் இறங்குவார்களோ, அந்த க்ஷணத்திலேயே அவர்களைப்பற்றிய சிந்தை எனக்கு ஏற்பட்டுப்போகிறது.

பின்பு உலக வழக்கத்தின் படி, அவர்கள் செய்யவேண்டியதாயிருக்கும் அனைத்தும், நானே செய்ய வேண்டிய தாய்விடுகிறது. இரக்கை முளைக்காத குஞ்சின் உயிரிருந்தாற்றான் பிழைத்திருக்க முடியும். என்று பாவித் திருக்கும் தாய்ப் பக்ஷியைப்போலும், தன்னுடைய பசி தாஹங்களைப் பாராட்டாமல் குழந்தைக்கு நன்மையையே தேடி வைக்கும் தாயைப்போலும், என்னை ஸர்வசக்தியையும் கொண்டு தழுவி நிற்கும் அவர்களுக்கு, ஆகவேண்டிய அனைத்தையும நானே செய்துவைக்கிறேன். அவர்களுக்கு என்னுடன் ஒன்றுபட்டுப் போகவேண்டுமென்று ஆசையிருந்தால், அந்த ஆசையைப் பூர்ணம் பண்ணி வைக்கிறேன். இல்லாவிட்டால், என்னோடொன்றுபட்டுப் போகாமல், எனக்கு ஸேவை செய்துக்கொண்டிருக்க வேண்டுமென்று, அவர்களுக்குக் காசையிருந்தால், எங்கள் இருவருக்கும் நடுவில் பரஸ்பர ப்ரேமையை செய்துவைக்கிறேன். இப்படி அவர்கள்மனஸில் என்னென்ன ஆசை உண்டாகுமோ, அதை யெல்லாம் பூர்த்திசெய்து வைப்பது, என் கடமை ஆகிறது. அத்துடன் கூட, அப்படி அவர்களுக்கு நான்செய்துகொடுத்தது ஒருநாளும் அழிந்து போகாவண்ணம், அதைக் காப்பாற்றியும வைக்கிறேன். இப்படி ஸர்வபாவத்தாலும் என்னையே ஆச்ரயித்திருக்கும் அவர்கள் யோகக்ஷேமம் முழுமையும் என் தலையிலேயே சுமந்து போகிறது, அர்ஜுநா.

येऽप्यन्यदेवताभक्ता यजन्ते श्रद्धयान्विताः ।
तेऽपि मामेव कौन्तेय यजन्त्यविधिपूर्वकम् ॥ २३ ॥

யேऽப்யன்ய தேவதா பக்தா யஜந்தே ஶ்ரத்தயான்விதாः ।
தேऽபி மாமேவ கௌந்தேய யஜந்த்ய விதி பூர்வகம் ॥ 23

அந்ய தேவதா பக்தி விபரீதமாய் முடிகிறது :

இனி, வேறு மதஸ்தர்களாய், விச்மனைத்திலும் வியாபித்திருக்கும் என்னை அறியாமல், அக்நி, இந்த்ரன்,

ஸூர்யன், சந்திரன், இப்படிப்பட்ட இதர தேவதைகளை, எவர்கள் எனக்கு பதிலாகவைத்துக் கொண்டாடி ஆராதிக்கிறார்களோ, அவர்களுடைய ஆராதநமும் எல்லா ரூபமாயுமிருக்கும் என்னையே தவறாமல் வந்தடைகிறது. ஆனால் அவர்களுடைய அடிப்பட்ட பஜநம், ஸரியான வழியிற் செல்லாமல், தப்பு வழிப்பட்டதாகிறது. நன்றாய்ப் பார், ஓர் வ்ருக்ஷத்தின் கிளைகளும் துளிர்களும், ஒரே பீஜத்திலிருந்தே உண்டானவையே யானாலும், அம்மரம் ஜலத்தை உட்கொள்வது வேர்மூலமாயே இருப்பதால், ஜலத்தை வேரிலேயே வார்க்க வேண்டியதாயிருக்கிறது. பத்து இந்த்ரியங்களும ஒரே தேஹத்தையே சேர்ந்தவையே யானாலும், அவைகளால் ஸேவிக்கப்படும் விஷயம் அனைத்தும், ஒரே இடத்துக்குப் போய்ச் சேர்வதாய் இருந்தாலும், உத்தமமான அன்னத்தைச் சமைத்து காதில் எப்படி நிறப்பி வைக்கலாம்?

பூக்களைக் கொண்டுவந்து கண்ணை முகந்து பார்க்கும்படி செய்வது, எப்படி முடியும்? ரஸத்தை நாக்கே ஸேவிக்க வேண்டும்; வாஸனையை மூக்காலேயே க்ரஹிக்க வேண்டும்; அப்படியே என்னுடைய பூஜையை என் முன்னேயே இட்டு, எனக்கே மனஸாலர்ப்பிக்க வேண்டும். அப்படிச் செய்யாது, என்னை மனஸால் பாவிக்காமல் செய்யப்படும் பஜனை அனைத்தும், ஒன்று நினைக்க வேறொன்றாய் முடிந்து போவதால், கர்மத்தின் கண்ணாகிய ஞானம் நிர்தோஷமா யிருக்க வேண்டியது, அவச்யமாகிறது.

अहं हि सर्वयज्ञानां भोक्ता च प्रभुरेव च ।
न तु मामभिजानन्ति तत्त्वेनातश्च्यवन्ति ते ।।२४।।

அஹம் ஹி ஸர்வயக்ஞானாம் போக்தா ச ப்ரபுரேவ ச।
ந து மாமபிஜானந்தி தத்வே நாதஶ்ச்யவந்தி தே ॥ 24

அந்ய தேவதா பக்தர்கள் ப்ரஹ்மத்தை அடைவதில்லை:

ந்யாயம்ாய் பார்ப்போமாகில், யஞ்ஞ ஸாமக்ரியை களனைத்தையும் புசிக்கிறவன், என்னைத் தவிர வேறொருவனு மில்லை. எல்லா யஞ்ஞங்களும் என்னிடத்திற்றான் முடிவுபெறுகின்றன. இப்படி இருக்க, துர்புத்திகளானவர்கள் என்னை ஒதுக்கிவைத்து, வேறு தெய்வங்களை ஆராதிக்கிறார்கள். பித்ருக்கள் தேவதைகள் ஆகிய இவர்களை உத்தேசித்து, ஜலதர்ப்பணம் கங்கையிலிருந்தே எடுபட்டு,

கங்கையிலேயே விடுபடுவதுபோலும், எந்த தேவதைகளைப் பூசித்தாலும், அப்பூசை என்னுடையதாகவே ஏற்பட்டு, எனக்கே வந்து சேர்கிறது. ஆனால் அவர்கள் பாவம் மட்டும் வேறுபட்டதாய் இருப்பதால், அவர்கள் ஒருக்காலும் என்னை வந்தடைவதில்லை. மனஸில் எந்த தெய்வத்தை உத்தேசித்து அவர்கள் பஜனை செய்தார்களோ, அந்த தெய்வத்தையே அவர்கள் அடைகிறார்கள்.

यान्ति देवव्रता देवान्पितॄन्यान्ति पितृव्रताः ।
भूतानि यान्ति भूतेज्या यान्ति मद्याजिनोऽपि माम् ॥ २५ ॥

யாந்தி தேவ வ்ரதா தேவான் பித்ரூன் யாந்தி பித்ருவ்ரதா: ।
பூதானி யாந்தி பூதேஜ்யா யாந்தி மத்யாஜினோ ஃபி மாம் ॥ 25

க்ஷுத்ரதெய்வங்களை உபாஸிக்கிறவர்கள் க்ஷுத்ரதெய்வங்களாகிறார்கள் :

மநோ வாக் காயங்களால் எவர்கள் எந்த தேவதைகளை பஜித்து வருவார்களோ, அவர்கள் சரீரத்தை விட்டுப்போகும் க்ஷணத்தில், அந்த தேவதையே ஆகிறார்கள். எவர்கள் பித்ருக்களை உத்தேசித்த வ்ரதாசரணங்களில் ஈடுபடுகிறார்களோ, அவர்கள் தங்கள் ஆயஸு முடிந்த பின் பித்ருத்வத்தை அடைகிறார்கள். க்ஷுத்ர தேவதைகளாகிய பூதபிசாசுகளே, எவர்களுக்கு உத்தமமான தெய்வங்களோ, எவர்கள் ஆபிசாரிகா நுஷ்டாநங்களை ஸதா அநுஷ்டித்து வருகிறார்களோ, அவர்களுடைய தேஹம் என்னும் திரை கிழிந்துபோகும்போது, அவர்கள் பூதங்களும் பிசாசுகளும ஆகிறார்கள். இப்படி அவரர்வர்கள், தங்கள் தங்கள் ஸங்கல்பத்துக்கு வசப்பட்டு, எந்தக்கர்மங்களை செய்துவந்தார்களோ, அந்தக் கர்மங்கள் அவர்களுக்கு அப்படியே பலிக்கிறது.

ஸர்வேச்வரனை பஜிப்பவர்கள் ஸர்வேச்வரனோடு ஒன்றுப்பட்டுப் போகிறார்கள்:

எவர்கள் தங்கள் கண்ணைக்கொண்டு என்னையே பார்த்து, தங்கள் காதைக்கொண்டு என்னையே கேட்டு, தங்கள் மனஸால் என்னையே நினைத்து, தங்கள் வாக்கினால் என்னையே வர்ணித்து, தங்கள் எல்லா அவயவங்களாலும், எல்லா இடங்களிலும், என்னையே நமஸ்கரித்துக் கொண்டு, தாங்கள் செய்யும் தாநாதி புணயகர்மங்களை என்னுடைய

ப்ரீத்யர்த்தமாகவே செய்து கொண்டு, என் ஸ்வரூபத்தை யதாவத்தாக அறிவதற்காகவே, சாஸ்த்ராத்யயநங்கள் செய்துகொண்டு, வெளியும் புறமும் என்னுடைய அநுபவத்தால் ஸதா த்ருப்தி அடைந்தவர்களாய், என்னுடைய நன்மையை உத்தேசித்தே ஜீவித்துக்கொண்டு, தாங்கள் ஹரிக்குப் பெருமை உண்டாக்குவதற்காக இருக்கிறவர்கள் என்று அஹம்காரம் பாராட்டிக் கொண்டு, இந்த லோகத்திலுள்ள ஸர்வ வஸ்துக்களையும் ஒழித்துவிட்டு, என்னொருவனையே அடைய வேண்டும் என்று பேராசை பாராட்டிக் கொண்டு, என்னொருவன் விஷயமாய் காமவிகாரம் பூண்டு, என் ஒருவன் விஷயமாகவே ப்ரேமை பாராட்டிக் கொண்டு, என்னையே நினைத்து நினைத்து பைத்யம்கொண்டு, உலகிலுள்ள இதர வஸ்துக்களை மறந்து, என்னை ஸம்பூர்ணமாய் அறிவதையே சாஸ்த்ராப்யாஸமாகச் செய்துகொண்டு, என்னை எந்த மந்த்ரத்தால் அடையக்கூடுமோ, அந்த மந்த்ரத்தை இதரர்களுக்கு உபதேசித்துக்கொண்டு, இவ்விதம் தங்களுடைய தேஹத்தின் ஸ்வாபாவிக சேஷ்டைகளை யெல்லாம், என்னுடைய பஜனையாய்ச் செய்துகொண்டு, இருப்பார்களோ, அவர்கள் மரணமடைவதற்கு முன்னமேயே முற்றிலும் என்னோடு ஒன்றுபட்டிருக்கிறார்கள். என்னை இப்படி ஸர்வ விதத்தாலும் ஆராதிக்கிறவர்களான இவர்கள், தங்கள் ஆயஸ்ஸென்னும் தீர்க்கமான பூஜையின் முடிவில், தங்கள் ஆத்மாவையே எனக்கு ஓர் உபசாரமாய் ஸமர்ப்பித்து விடுகிறார்கள், என்று சொல்லும்படியாய், என்னுடன் ஸாயுஜ்யமடைகிறார்கள்.

ப்ரஹ்மப்ராப்திக்கு ஆத்மநிவேதன மொன்றே ஸாதநம் :

அர்ஜுநா என்னிடத்தில் ஆத்மாவை ஸமர்ப்பித்து விட்டாலல்லது, நான் ஸந்துஷ்டனாவதில்லை. நான் அதைத்தவிர எந்த உபசாரத்தாலும் அடையப்படுகிறவன் அல்ல. எவன் தன் கல்வியின் பெருமையைத் தானே கொண்டாடிக்கொண்டு என்னை அறிந்து விட்டதாகவும், தான் ப்ரஹ்ம மாய்விட்டதாகவும் சொல்லிக்கொள்வானோ, அவன் என்னை அறியாதவனே, என்று தெரிந்து கொள். அன்றியும் யஜ்ஞதானாதிகள், தபஸ்ஸின் பெருமை முதலிய எல்லாம் ஒன்று சேர்ந்தாலும், இந்த என்ஸ்வரூப்பராப்தியின் விஷயத்தில், ஓர் சிறுதுரும்பி னளவுகூட, மதிப்புப் பெறாமற் போகும். நன்றாய்க் கவனித்துப்பார். அறிவின் பெருமையால் வேதத்தை அதிகரித்திருப்பவன் எவன்? வாசாலகனாய்ப்

பேசும் ஸாமர்த்யத்தில், ஆதிசேஷனை விஞ்சினவன் எவன்? அந்த ஆதிசேஷனும் என்படுக்கையின்கீழ் சிக்கிப்போய் திணறிப்போகிறான். மற்றொன்றாகிய வேதமும் பலவிதமாய் என்னை வர்ணித்து, பின்பு இத்தனையும் என்னுடைய வர்ணனை ஆகவில்லை, ஆகவில்லை, யென்று ஒத்துக்கொண்டு, என்னுடைய ஸ்வரூபத்தை விட்டு தூர விலகி நிற்கிறது.

பூர்ண ஞானிகள் என்று சொல்லப்படும் ஸநகாதிகள், என்னுடைய ஸ்வரூபத்தை, தங்கள் மனஸில், நிறுத்தப் பார்த்து, வெறி பிடித்துப் போனார்கள். தபஸ்ஸின் பெருமையைக் கொண்டு மதிப்பு ஏற்படுத்தப் போனால், சூல பாணியாகிய பரமசிவன் பக்கத்தில் உட்காரத்தக்க யோக்யதை படைத்தவர்கள் எவர்கள்? அந்தப் பரமசிவன் கூட கர்வத்தை விட்டு, என்னுடைய பாததீர்த்தத்தை தலையால் வஹித்திருக்கிறான். ஸம்பன்னதையில் மஹாலக்ஷ்மிக்கு ஸரியானவர்கள் எவர்கள்? அவர் வீட்டில் வேலைசெய்யும் தாஸிகளான ஸித்திகள், லக்ஷ்மிகள் என்றே சொல்லத் தக்கவர்களாயிருப்பார்கள். அவர்கள் விளையாட்டிற் கட்டும் ஓர் சிறு வீடு, அமராவதி யென்று பெயரிடப்படுமே யாகில், அதில் வாஸம் செய்யும் இந்திராதிகள்,அவர்கள் விளையாட்டு பொம்மைகள் ஆகார்களா?

பின்பு அந்த சிறு வீடு அவர்கள் மனஸுக்குப் பிடிக்காமற் போனதாய், அது அழிக்கப்படும்போது, இந்த்ரன் மிக்க எளிமையை அடைந்து, பிச்சைக்காரனாய் அலைகிறான். அந்த தாஸிகள் ஸாதாரணமான ஓர் செடியை கண்ணெடுத்துப் பார்த்தார்களே யானால், அது கல்ப வ்ருக்ஷம் ஆகிறது. மஹா லக்ஷ்மியின் வீட்டு வேலைக்காரிகளுக்கே இவ்வளவு பெருமை இருந்தால், அவர்களுக்கு யஜமானியாகிய மஹாலக்ஷ்மிக்கு, எவ்வளவு பெருமை யிராது? அவளுக்கே என்னுடைய ஸ்வரூபம் என்னும் ஊரில், ஓர் மதிப்பு மில்லாமற்போய், அவள் தன்னுடைய ஸர்வ ஐச்வர்யத்தையும் ஆத்மாவையும் எனக்கு அர்ப்பணம் செய்துவிட்டு, கர்வம் முற்றிலும் மற்றவளாய், எனக்கு ஸேவை செய்துகொண்டிருந்து, என்பாத ப்ரக்ஷாளனம் செய்வது என்னும் மஹாபாக்யத்தை அடையத்தக்க யோக்யதையை அடைந்தாள், ஆகையால் பெருமையை எல்லாம் தூர ஒழித்து வைத்து, கற்ற வித்யைகளை எல்லாம் முற்றிலும் மறந்து போய், ஜகத்திற்குள் மிக்கத் தாழ்மையை அடைந்த வஸ்துவுக்கும் தாழ்மை பாராட்டிக் கொண்டு, எவன் இருப்பானோ, அவனே என் ஸாமீபயத்தை

அடைவான். எந்த ஸூர்யனுக்கு முன்னால் சந்த்ரனே தேஜஸ் இழந்து போகிறானோ, அந்த ஸூர்யனுக்கு முன்னால் மினுமினுப் பூச்சிக்கு என்ன பெருமை உண்டு? எந்த என்ஸ்வரூபத்தையடைய, லக்ஷ்மியின் பெருமை செல்லாததாயும், பரமசிவனுடைய தபஸ்ஸு கூடயோக்யதையால் போதாததாயும் போகிறதோ, அந்த ஸ்வரூபத்தை அறிய ப்ரக்ருதியாற் கட்டுண்டு கிடக்கும் பைத்யங்கள் என்று சொல்லத்தக்க மற்ற அல்பர்களுக்கு, என்ன யோக்தை உண்டு? ஆகையால் சரீராபிமானம் முழுவதையும் விட்டு, ஸகல குணங்களையும் ஐச்வர்ய மதத்தையும் கொண்டு, எனக்கு த்ருஷ்டியாக சுற்றி எறிந்துவிட்டு, மிக்கத் தாழ்மை பூண்டு நிற்றாற்றான், என்னை அடைய முடியும்.

पत्रं पुष्पं फलं तोयं यो मे भक्त्या प्रयच्छति ।
तदहं भक्त्युपहृतमश्नामि प्रयतात्मनः ।। २६ ।।

பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோமே பக்த்யா ப்ரயச்சதி।
ததஹம் பக்த் யுபஹ்ருத மஸ்நாமி ப்ரயதாத்மன: ॥ 26

பக்தன் கொடுத்த மிக்க அல்பமான வஸ்துவை, பகவான்மிக்க பெருமையான தென்னும் பாவத்துடன் அங்கீகரிக்கிறான் :

பின்பு ஒருவனுடைய கரையற்றதான பக்தி பொங்கி, அவன் எனக்கு ஏதோ ஒன்று அர்ப்பணம் செய்ய வேண்டு மென்று கருதி, ஏதோ ஓர் செடியினின்று, ஏதோ ஓர் பழத்தைப் பறித்து, என்முன் அதைக் காட்டினானோ இல்லையோ, அதை எனக்கு ஒருநாளும் கிடைக்காத வஸ்துவாய் நான் பாவித்து, இரண்டு கையையும் நீட்டி, அவன் மேல் விழுந்து, பிடுங்கிக்கொண்டு, அதின் காம்பை முறிக்காமலே வாயில் போட்டுக்கொண்டு, மிக்க ப்ரியத்துடன் சுவைத்துத் தின்பேன். மற்றொருவன், பக்தி ஒன்றின் கார்யமாக, ஓர் பூவை எனக்கு அர்ப்பணம் செய்வானேயானால், நியாயமாய் அதை நான் முகந்து பார்க்க வேண்டியதாயிருக்க, அதையும் வாயிலேயே போட்டு, மென்று தின்பேன்.

இப்படி பூவாகத்தான் இருக்க வேண்டும் என்று ஓர் அவசியம் இல்லை. அவன் கொண்டுவந்தது, ஏதேனும் ஓர் இலையாய் இருந்தாலும், அதுவும் எனக்கு மிக்க ருசிகரமாய் இருக்கும். அது பச்சையாய் தளதளவென் றிருக்காமல், வாடி

எவ்வளவோ வற்றிப்போய் இருந்தாலும் ஸரியே, அது பக்தி நிறைந்திருப்பதைப் பார்த்து, பசியெடுத்தவனுக் கம்ருதம் கிடைத்தால், அவன் எவ்வளவு ஸந்தோஷப்படுவானோ, அந்த இலை கிடைத்த விஷயத்தில், அவ்வளவு ஸந்தோஷப்பட்டுக்கொண்டு, அதைச் சுவைத்துச் சாப்பிடுவேன். இல்லாவிட்டால் இப்படியும் கூட நேரிடலாம். ஓர் இலைகூட அவனுக்குக் கிடைக்காமற் போய், கொஞ்சம் ஜலமே அவனுக்குக் கிடைத்திருக்கலாம். அது எங்கு வேண்டுமென்றாலும், ஓர் விலை கொடுக்காமலும், ஓர் ச்ரமமில்லாமலும் கிடைக்கத்தக்க தல்லவா?

அப்படிக் கிடைத்ததாயிருக்கும் ஓர் உத்தரணி ஜலத்தை, தன்னுடைய ஸர்வஸ்வத்தாகப் பாவித்து, அவன் எனக்கு அர்ப்பணம் செய்தால் அப்படிப்பட்ட அல்பமான உபசாரத்தால், வைகுண்டத்தைக் காட்டிலும், விசாலமான ஓர் கோவில் அவன் எனக்குக் கட்டிவைத்ததாகவும், கௌஸ்துபத்தைக் காட்டிலும் நிர்மலமான ரத்நங்களைக் கொண்டு நகைகளைச்செய்து, அவன் எனக்குச்சாத்தி வைத்ததாகவும், க்ஷீரஸாகரத்தைப்போல் மனோஹரமான பல சய்யாக்ருஹங்களைப் பாலினாலேயே அவன் எனக்கு நிர்மாணம் செய்து வைத்ததாகவும், பச்சைக்கர்ப்பூரம், சந்தநம், அகரு, இவ்வித ஸுகந்த த்ரவ்யங்களை மேருப்ரமாணமாகச் சேர்த்து, அவைகளைக்கொண்டு வாஸனைவத்திகளைச் செய்து, அவற்றை நாற்பக்கங்களிலும் ஏற்றி, அவன் எனக்கு தூபோபசாரம் செய்து வைத்ததாகவும், ஸூர்யனைப்போன்ற அநேக தேஜஸ்ஸுக்களைக் கொண்டு எனக்கு அவன் தீபமாலைகளை நிர்மித்ததாகவும், கருடன் போல் வேகம் பொருந்திய பலவாஹநங்களையும், கல்ப வ்ருக்ஷங்களைக்கொண்டே உத்யானவனங்களையும், எனக்கு நிர்மித்துவைத்து, காமதேனு போன்ற பசு மந்தைகளை அவன் எனக் கர்ப்பணம் செய்ததாகவும், அம்ருதத்தைக் காட்டிலும் அதிருசிகரமான பக்வாந்நங்களை அவன் ஏராளமாய் ஸித்தம் செய்து, எனக்கு ஸமர்ப்பித்ததாகவும், நான் பாவித்து, இப்படி பக்தன் ஸமர்ப்பித்ததான ஓர்துளி ஜலத்தைக் கொண்டு, இவ்வளவு ஸந்தோஷம் அடைவேன்,

அப்பா. இவ்வளவு சொல்ல வேண்டிய அவச்யமே இல்லை. ஹே கிரீடி, ஸுதாமன் கொண்டுவந்த அவலுக்காக ஆசைப்பட்டு அவன் மேல் விழுந்து அவன் கொண்டுவந்த மூட்டையைப் பிடுங்கிக்கொண்டு, நான் அதை அவிழ்த்து, அதில் இருந்த அவலை வாயிற்போட்டுக் கொண்டு

ஆநந்தப்பட்டதை, நீ உன்காண்ணாற் பார்த்திருக்கிறாயே. இதை நன்றாய்க் கவனித்துக் கொள். நான் பக்தி ஒன்றையே கவனிப்பேன். அது இருந்து விட்டால், இவன் பெரியவன் சிறியவன் என்றும், அல்லது கொண்டுவந்த வஸ்து பெரிது சிறிதென்றும், பாரேன். எவனிடத்தில் பக்தி இருக்குமோ, அவன் எவனாயிருந்தாலும் அவன் வீட்டுக்கு, அவன் அழையாதிருக்கும் போதே, நானே வலுவிற்போய், உட்கார்ந்து கொண்டு, விருந்துண்பேன். மற்றப்படி பத்ரம், புஷ்பம், பலம், ஜலம் என்று, சொன்ன இவை யனைத்தையும் உள்ளிருக்கும பக்தியைக் காட்டிவைக்கும் வெளிக்குறிகளாய் நான்பாவிக்கிறேனே தவிர, எனக்கு வேண்டியதெல்லாம் களங்க மற்றதான பக்தியே. ஆகையால் அர்ஜுநா புதுதி ஒன்றை மாத்ரம் உன்னுடைய ஸ்வாதீனம் செய்து கொண்டு, உன்னுடைய மன ஸென்னும் வீட்டில் என்னை நிலைபெறச் செய்துகொண்டு, ஒரு நாளும் என்னை மறவாதிருப்பதே, நீ செய்ய வேண்டியதெல்லாம் என்றறிந்து கொள்.

यत्करोषि यदश्नासि यज्जुहोषि ददासि यत् ।
यत्तपस्यसि कौन्तेय तत्कुरुष्व मदर्पणम् ।। २७ ।।

யத்கரோஷி யதஶ்நாஸி யஜ்ஜுஹோஷி ததாஸி யத் ।
யத்தபஸ்யஸி கௌந்தேய தத்குருஷ்வ மதர்பணம் ।। 27

கர்த்ருத்வ போக்த்ருத்வங்களை பகவதர்ப்பணம் செய்ய வேண்டும் :

நீ என்னென்ன வ்யாபாரங்களைச் செய்வாயோ, என்னென்ன போகங்களைப் புசிப்பாயோ, எந்தெந்த யஞ்ஞங்களை அநுஷ்டிப்பாயோ, அல்லது தகுந்த யோக்யதை உள்ள ஜநங்களுக்கு எந்தெந்த தானங்களைச் செய்வாயோ, வேலைக்காரர்களுக்கு என்னென்ன ஜீவநங்களைக் கொடுப்பாயோ, தபஸ் முதலிய எந்தெந்த புண்ய ஸாதநங்களை அநுஷ்டிப்பாயோ, இப்படி எல்லாம் என்னிடத்திலிருந்து இயற்கையாகவே வெளிப்படும் கர்மங்கள் அனைத்தையும், என்னை உத்தேசித்து, எனக்கு அவற்றின் பலன் சேரவேண்டுமென்று கருதி, என்னிடத்தில் ப்ரேமை பாராட்டிச் செய்துவை. அத்துடன், நீ அக்கர்மங்களைச் செய்தாய் என்ற பாவம், உன்னுடைய மனஸில் கொஞ்சமேனும் இல்லாதபடி செய்து கொண்டு, அதாவது அக்கர்மங்கள் என்னுடைய ஸங்கல்பத்தாலும், என்னுடைய

சக்தியாலும், எனக்கு ஸொந்தமான ஓர் தேஹத்தைக் கொண்டும், ஏற்பட்டவை என்று பாவித்து, இப்படி கர்மங்களைச் சுத்தமாகச் (உன் ஸம்பந்தத்தின் அழுக்கறச் செய்து) செய்து, என் கையில் ஒப்பித்து விடு.

शुभाशुभफलैरेवं मोक्ष्यसे कर्मबन्धनैः ।
संन्यासयोगयुक्तात्मा विमुक्तो मामुपैष्यसि ।। २८ ।।

ஶுபாஶுப பலைரேவம் மோக்ஷ்யஸே கர்ம பந்தனை: ।
ஸந்ந்யாஸ யோக யுக்தாத்மா விமுக்தோ மாமுபைஷ்யஸி ।। 28

இப்படி அர்ப்பணம் செய்து விட்டால், கர்மபந்தத்தினின்று விடுபட்டு, ப்ரஹ்ம ஸாயுஜ்யத்தை யடையலாம் :

பின்பு அக்நிகுண்டத்தின்மேல் வைக்கப்பட்டு வறுபட்டுப்போன விதைகள், எப்படி முளை எடுக்காவோ, அப்படியே நீ யெனக்கு இவ்வாறாக அர்ப்பித்து விட்ட சுபாசுப கர்மங்கள் பலத்தை உண்டாக்கி வைக்காமற் போகும். அப்படி நீ செய்யாமல், கர்மங்களின் ஸம்பந்தம் உன்னிடத்தில் மிகுந்து நிற்குமாகில், அவைகள் ஸுகதுக்கரூபமான பலன்களைக் கொடுத்துத்தான் தீரும். அப்பலன்களை அநுபவிப்பதற்கு, நீ ஒரு தேஹம் எடுத்துத் தீரவேண்டும். அந்தக் கர்மங்கள் முன் சொன்னவாறு என்னிடத்தில் ஒப்பிக்கப்பட்டுப்போனால், அப்போதே ஜந்மமரணங்கள் இருந்த இடம் தெரியாமல் நாசமடைகின்றன. ஜந்மம் போவதோடு கூட, அதற்கு மேல் அநுபவவிக்க வேண்டியதான துக்கமும் இல்லாமற் போகும். இப்படி நான் உனக்குச் சொல்லிக்கொடுத்த கர்மஸந்யாஸயுக்தி, யாதோர்கால விளம்பமுமின்றி அநுஷ்டிக்க முடியும்படி, அதிஸுலபமாய் இருக்கிறது. இந்த யுக்தியை அநுஷ்டித்தால், தேஹத்தை எடுக்க வேண்டிய பந்தம் உனக்கு ஏற்படாமல், ஸுகதுக்காநுபவம் என்னும் ஸமுத்ரத்தில் முழுகிப் போவதினின்று தப்பித்துக் கொண்டு, ஸுகரூபமாய் இருக்கும் என்னுடைய ஸ்வரூபத்தோடு, நீ ஸுகமாய் ஒன்றுப்பட்டுப் போகலாம்.

समोऽहं सर्वभूतेषु न मे द्वेष्योऽस्ति न प्रियः ।
ये भजन्ति तु मां भक्त्या मयि ते तेषु चाप्यहम् ।। २९ ।।

ஸமோகுஹம் ஸர்வபூதேஷு ந மேத்வேஷ்யோகுஸ்தி ந ப்ரிய: ।
யே பஜந்தி து மாம் பக்த்யா மயி தே தேஷு சாப்யஹம் ।। 29

பகவான் அனைவருக்கும் ஸமனா யிருந்தபோதிலும் : ஸ்வரூப ஞானமுள்ளவனாய் பக்தி செய்கிறவனோடு ஒன்றுபட்டவனாகிறான் :

அப்படிப்பட்ட நான், எப்படி இருக்கிறேன் என்று விசாரிப்பாயே ஆனால், நான் எல்லா பூதங்களிலும் ஸரிஸமானமாய் இருந்து கொண்டு, என்னைச் சேர்ந்தவனென்றும், வேறு கட்சிக்கார னென்றும், ஓர்வித்யாஸம் பாராட்டாதவனென் றேற்படுவேன். ஆனால் எவர்கள் இப்படிப்பட்டவனான என்னுடைய ஸ்வரூபத்தை அறிந்து, தேஹத்தையே தாங்கள் என்று பாவிக்கும் சிறு குடிசையை நாசம் செய்து விட்டு, தங்கள் அந்தராத்மாவைக் கொண்டும், தங்கள் கர்மங்களைக் கொண்டும், என்னையே பஜித்து நிற்பார்களோ அவர்கள், இதரர்கள் பார்வைக்கு, தேஹத்திலிருப்பவர்களாகத் தோற்றினாலும், அவர்கள் உண்மையாகத் தங்கள தென்று பாவிக்கப்பட்ட ஓர் என்சாண் ச்ரீரத்தி லிராமல், என்னுடைய ஸ்வரூபத்திலேயே வஸித்துக்கொண் டிருக்கிறார்கள். அத்துடன் கூட,நானும் என்னுடைய முழு ஸ்வரூபத்துடன் அவர்களுடைய ஹ்ருதயத்தில்இருப்பதால், நாங்கள் இருவரும் ஒன்றுபட்டுப் போகிறோம். விரிவடைந்து வளர்ந்த ஆலமரத்தின் ஸ்வரூபம், அதின் விதையில் இருப்பது போலும், எனக்கும் அவர்களுக்கும் நடுவில், பெயர் வித்யாஸம் என்னும் இடைவெளி யொன்றே இருக்கிறதே தவிர, உள்ளிருக்கும் வஸ்துவை விசாரித்துப் பார்த்தால், நான் அவனாயும், அவன் நானாயும், நாங்கள் இருக்கிறோம்.

பின்பு, நடுவில் ஏற்பட்டு, கடைசிவரைக்கும் நம்மிடத்தில் நிலை பெற்றிராத நகைகள் எப்படி தேஹத்தின்மேல் பற்றுதலில்லாமல், மேல் எழுந்தபடியாய் அணியப்பட்டிருக்குமோ, அப்படியே அவனுக்கு அவனுடைய தேஹத்தில் பற்று அற்றுப்போய் இருக்கும். வாஸனையைக் காற்று கொண்டுபோய் விட்டபிறகு, தன்காம்பின்மேல் மணமில்லாமற் றங்கி இருக்கும் பூவைப்போல, ஆய்ஸ்ஸு என்பது முடிவு பெறாமையால், அந்த ஆயஸால் தாங்கப்பட்டதாய், அவனுடைய தேஹம் வாழ்ந்து கொண்டிருக்குமே தவிர, அவனுக்கும் தேஹத்துக்கும் முன் இருந்த பற்று முற்றிலும் அற்றுப் போய், அவனுடைய அஹம் என்னும் பாவம் என் ஸ்வரூபத்தைப் பற்றிக்கொண்டு, அதற்குள் ப்ரவேசித் தங்கே நிலைபெற்றதாய் விடும்.

अपि चेत्सुदुराचारो भजते मामनन्यभाक् ।
साधुरेव स मन्तव्यः सम्यग्व्यवसितो हि सः ।।३०।।

அபி சேத்ஸுதுராசாரோ பஜதே மாமனன்ய பாக் ।
ஸாது ரேவ ஸ மந்தவ்யः ஸம்யக் வ்யவஸிதோ ஹி ஸः ।। 30

எவ்வளவு மிக்ககெட்ட ஆசாரத்தோடு கூடினவனாய் இருந்தும், பின்பு அந்த்யகாலம் முழுவதும் என் பக்தியில் கழித்துவிட்டால், அவனே உத்தம ஸாது ஆவான் :

எவன் தன்னுடைய இவ்விதப்பட்ட உத்தம ப்ரகாரமான பஜனையில் பெருமையால், திரும்பவும் ஜந்மம் அடையமாட்டானோ, அவன் எந்த குலத்தில் பிறந்தவனாயிருந்தாலும், அவனுடைய ஆசாரம், நிஸ்ஸந்தேஹமாய் துஷ்க்ருத்துக்களே என்று சொல்லத்தக்கவர்களுக்குள், தலைமை பெற்றவர்களுடைய ஆசாரமாயிருந்தாலும், அவனுடைய ஆயஸ்ஸின் கடைசிகாலம் முழுமையும் என்னுடைய ஸ்பவரூப பக்தியில் செலவிடப்பட்டுப் போகுமேயாகில், ஆயஸ்ஸின் முடிவில் ஒருவனுடைய புத்தியின் நிலை எப்படிப் பட்டிருக்குமோ, அவனுக்கு அதற்கு மேல் ஏற்படும் கதியும் அதையே அநுஸரித்து இருக்கும், என்னும் ஓர் ந்யாயத்தால் (இந்த ந்யாயம் அத்யாயம் 8 ச்லோகங்கள் 5, 6-ல் விசாரிக்கப் பட்டிருக்கிறது) அவன் என்னையே அடைகிறான். ஆகையால் முதலில் துராசாரியாய் இருந்து போனாலும், அவன் ஸர்வோத்தமனே ஆவான். ஒருவன் ஓர் பெரும் வெள்ளத்தில் விழுந்து வெள்ளத்தோடு போனதைப் பார்த்து, இதரர்கள் அவனை முழுகிப் போய்விட்டான் என்று எண்ணிவிட்டார்களே ஆனாலும், கொஞ்ச காலம் சென்றபின் வெள்ளத்தோடு போன அவன் கரை ஏறி விட்டானே யானால், அதற்குமுன் இதரர்கள்அவனை முழுகிப்போனதாக எண்ணினது வ்யர்த்தமாவது போலும், அந்திமகாலத்தில் அநுஷ்டிகப்பட்டதான பக்தியினால் அவன் முன் செய்த பாபம் முழுதும் நசித்துப்போகிறது.

இந்தக் காரணத்தால் அவன் முன்பு பாபகர்மங்களைச் செய்து வந்தவனா யிருந்தபோதிலும், பின்பு அநுதாபம் என்னும் தீர்த்தத்தில் முழுகிவிட்டு, ஸர்வபாவத்தாலும்

என்னை பஜித்து, என் ஸ்வரூபத்துக்குள் நுழைந்து விடுவதால், அதற்குப்பின் அவனுடைய ஸம்பந்தத்தால், அவனுடைய குலம் அதிபரிசுத்தமாய்ப்போய், அவன் அதிநிர்மலம் என்றும் உத்தமம் என்றும் சொல்லத்தக்க குலததிற் பிறந்ததவனாகிறான். அவனே பிறந்ததின் பலனை அடைந்தவனாகிறான். அவனே ஸகலசாஸ்திரங்களையும் அறிந்தவனும், ஸகல தபஸ்ஸுகளையும் தபித்தவனும், அஷ்டாங்க யோகத்தை பூர்ணமாய் அநுஷ்டித்தவனும், ஆகிறான். இப்படி எல்லாம் வளர்த்திச் சொல்வ தென்? ஏகநிஷ்டை என்னும் பெட்டியில், தன்னுடைய மனது புத்திகளின் வியாபாரம் அனைத்தையும் அடைத்து வைத்து, அப்பெட்டியை என் ஸ்வரூபத்தின் நடுவில் பத்ரம் செய்துவைத்து, தன்னுடைய ஆசை எல்லாம் அகண்டமாய் என்னிடத்திலேயே நிலை பெற்றிருக்கச் செய்து வருவதால், அவன் ஸர்வகர்மங்களின் ஸம்பந்தத்தையும் தன்னிடத்திருந்து ஒழித்துக்கொண்டு, நைஷ்கர்மய ஸித்தி அடைந்தவனாகிறான்

क्षिप्रं भवति धर्मात्मा शश्वच्छान्तिं निगच्छति ।
कौन्तेय प्रतिजानीहि न मे भक्तः प्रणश्यति ।। ३१ ।।

க்ஷிப்ரம் பவதி தர்மாத்மா ஶஶ்வச்சாந்திம் நிகச்சதி ।
கௌந்தேய ப்ரதி ஜானீஹி ந மே பக்தः ப்ரணஶ்யதி ।। 31

அவன் பகவத் ஸ்வரூபத்தை அடைவதற்கு காலவிளம்பம் ஒன்றும் ஏற்படுவதில்லை :

இப்படிப்பட்ட பக்தனுடைய பாவம், கொஞ்சம் கொஞ்சமாய் மாறி, அவன் காலக்ரமேண எனக்கு ஸமானமாய்ப் போகிறான் என்று ஒரு வேளை நீ நினைப்பாய். அது ஸரியல்ல, அம்ருதத்தின் நடுவில்எவன் இருப்பானோ, அவன் எப்படிச் சாவான். ஸூர்ய னுதிப்பதற்கு முன் இருக்கும் காலத்திற்கு ராத்ரி என்று பெயரிடப் படுவது போல், என்னுடைய பக்தி இல்லாமல் எதெது செய்யப்படுமோ, அது மஹா பாபமாகும். அவனுடைய சித்தத்துக்கு ஸமீபத்தில் ஒன்றுபட்டுப் போகிறான். ஒரு தீபத்தைக் கொண்டு, வேறோர் தீபத்தை ஏற்றிவைத்தால், பின்பு எந்த தீபம் முன்னிருந்த தென்றும், எது பின்னால் ஏற்றிவைக்கப்பட்டது, என்று சொல்லமுடியாது போகும்படி, இரண்டும் பரமஸாம்யத்தை அடைந்துபோவது போலும், எவன் தன் ஸர்வஸ்வத்தையும் மெனக்கு அர்ப்பணம் செய்துவிட்டு, என்னையே பஜித்து நிற்பானோ, அவன் நானாகவே ஆய்விடுகிறான். பின்பு

என்னுடைய ஸ்திதியும், காந்தியும், நித்ய சாந்தியும், அவனுக்கு ஏற்பட்டுப் போகின்றன. சுருக்கிச் செல்வேனாகில், அவன் என்னுடைய உயிரைக் கொண்டே வாழ்வு பெறுகிறான். இந்த விஷயத்தில் ஒன்றையே திருப்பித் திருப்பி எந்தனை தரம்தான் சொல்வேன்? எவன் என்னை அடையவேண்டுமென்று விரும்புகிறானோ, அவன் என் விஷயத்தில் ஓய்வொழிவில்லாமல், பக்திபாராட்டி நிற்க வேண்டும்.

இப்படி பகவத் ஸ்வரூபத்தை அடைவதற்கு, குலீனதை முதலியவை அவச்யமில்லை :

இப்படி பக்தி செய்து, என்னுடைய ஸ்வரூபத்தை அடைவதற்கு, குலீனதை (நல்ல குலத்திற்பிறப்பு) அவச்யமில்லை, உத்தமஜாதியில் பிறப்பு இவ்விஷயத்தில் கொண்டாடத்தக்க தல்ல, கல்வி வேண்டுமென்று ஆசைபாராட்டி, வீணாய் ச்ரமப்படவேண்டாம். ரூபத்தாலும் தாருண்யத்தாலும் சிறந்திருப்பதும், மிக்க செல்வத்தை அடைந்திருக்கும் பெருமையும், இவ்விஷயத்தில் பயன்படாமற்போகும். என் விஷயமான ப்ரேமை என்ப தொன்றில்லாமற் போகுமாகில், மற்ற எவ்விதமான பெருமையும் வ்யர்த்தமாகும். தான்யங்கள் இல்லாமல் எல்லாம் பதராயிருக்கும் கதிர்கள், எவ்வளவு ஏராளமாய் விளைந்திருந்தபோதிலும், என்ன ப்ரயோஜநம்? அழகுகள் மிக்கப்பொருந்தி இருக்கும் ஓர் பட்டணம், ஜநங்களின் ஸஞ்சாரமற்றுப் பாழாயிருந்தால், அதினாற் பயன் என்? பெருத்த தடாகம் நீர் இல்லாமல் வற்றிப்போய் இருந்தாற்போலும், காட்டில் துக்கப்பட்டவன் துக்கபடாதவனை ஸந்தித்தாற்போலும், காய் காய்க்காத பூக்கள் அபரிமிதமாய்ப் புஷ்பித்திருக்கும் மரத்தைப் போலும், குலீநதை, ஜாதியின் பெருமை, வித்யையின் நிறைவு, முதலிய வைபவங்கள் அனைத்தும், பக்தி இல்லாமல் வ்யர்த்தமாகும்.

ஸகல அவயவங்களு மிருந்தும், உயிரில்லாத சரீரத்தைப் போலும், என் விஷயமான பக்தி இல்லாத வாழ்வை நெருப்பிட்டுக் கொளுத்தவேண்டும், அப்படிப்பட்ட வாழ்வு படைத்த ஒருவன், பூமிமேல் சிதரிக்கிடக்கும கற்களில் ஒன்றாவான். தலித்ருமம், (தான்றி மரம்) எவ்வளவோ நெருங்கத் தழைத்து, நல்ல நிழலோடு கூடியதாயிருந்தாலும், ஸஜ்ஜநர்கள் அதின் அடியில் உட்காரக் கூடாதென்று, அதை விலக்கிக்கொண்டு போவதுபோலும், புண்யங்கள் அபக்தர்களை விலக்கிக்கொண்டு போகும். வேப்பமரம்,

பழங்களின் பாரம் தாங்காத வண்ணம் பழுத்துத் தொங்கின போதிலும், அது காக்கைகளுக்கே உபயோகப்படுவது போலும், பக்திஹீநன் பெருமையை அடைந்தால், அது பாபங்கள் பெருகுவதற்கே காரணமாகும்.

ஷட்ரஸோபேதமாகிய பக்வாந்நங்களை ஸித்தம் செய்து, மட்பாத்ரத்தில் இட்டு, நாற்சந்தியில் வைத்தால், அவை நாய்க்கே உபயோகப்படுவது போலும், ஸ்வப்நத்திற் கூட ஸுக்ருதம் இன்னதென்றறியாத பக்திஹீனனுடைய உலக வாழ்க்கை யென்பது ஸம்ஸார துக்கங்களாலேயே நிறைத்துவைத்த உண்கலமாகும். ஆகையால் குலம் உத்தமமாயிருக்க வேண்டும் என்னும் அவச்யம் யாதொன்றுமில்லை. பஞ்சமஜாதியில் பிறந்தாலும் குற்றமில்லை, சரீரம் என்று பெயரடைந்த ம்ருகசரீரம் கிடைத்தாலும் போதும். நன்றாய்க் கவனித்துப் பார். முதலையால் பீடிக்கப்பட்ட யானையானது வேறுகதியற்றதாய், என்னை நினைத்து என்னுடைய ஸ்வரூபத்தை அடைந்தமையால், அது ம்ருக சரீரத்தை அடைந்திருந்தது, அது நல்லகதியை அடைவதற்குத் தடையாகாமற் போய் விட்டதல்லவா?

मां हि पार्थ व्यपाश्रित्य येऽपि स्युः पापयोनयः ।
स्त्रियो वैश्यास्तथा शूद्रास्तेऽपि यान्ति परां गतिम् ॥३२॥

மாம் ஹி பார்த்த வ்யபாஸ்ருத்ய யேऽபி ஸ்யுः பாபயோனயः।
ஸ்த்ரியோ வைஶ்யாஸ் ததா ஶூத்ராஸ் தேऽபி யாந்தி பராம்கதிம்॥ 32

பக்தன் எவ்வளவு தாழ்ந்த பிறப்புள்ளவனே யாயினும், எனக்கு ஸமமானவனே :

அர்ஜுநா, எவர்களுடைய பெயரைவாயால் உச்சரிக்கத் தகாதோ, எவர்கள் அதமர்களுக் கெல்லாம் அதமர்களாய், அதமத்வத்தின்கடைசி எல்லையில் இருந்துகொண்டு, பாபம் நிறைந்த பிறப்பை அடைந்து, ஞான ஹீனர்களாய் இருப்பதில் கற்களென்றே சொல்லத் தக்கவர்களாய் இருப்பார்களோ, அவர்களே என்னிடத்தில் த்ருடமான ப்ரேமை பாராட்டினவர்களாய், என்னுடைய நாமம், குணம், சரித்ரம் இவற்றையே வாயால் ஸதா சொல்லிக் கொண்டு, என்னுடைய ரூபங்களையே கண்ணால் எப்போதும் பார்த்து ஆநந்தித்துக் கொண்டு, எனக்கு ப்ரீதிகரமான கர்மங்களையே ஸதா மனஸால் சங்கல்பித்துக் கொண்டு, என் விஷயமான

கீர்த்தநங்களை ஸதா காதாற் கேட்டுக்கொண்டு, என்னுடைய பணிவடையையே ஸர்வாங்கங்களிலும் ஆபரணங்களாய்ப் பூண்டு, விஷயம் என்பதை முற்றிலும் அறியாமல், என்னை அறிவதையே ஸர்வ விதமான அறிவாகக் கொண்டு, இப்படி எல்லாம் ஸர்வகாலமும் என்னுடன் சேர்ந்திருந்தா லல்லது உயிர் பிழைத்திருக்க முடியாதவர்களாய், பலவிதப்பட்ட தங்களுடைய ஸர்வ வ்யாபாரங்களும், நடந்தேறிவருவதற்கு என்னையே ஜீவநாதாரமாகக் கொண்டிருப்பார்களே ஆனால், அவர்கள் எவ்வளவுதான் தாழ்மையான பாபஜந்மத்தை அடைந்தவர்களே ஆனாலும், என்னுடன் நிறுத்துப் பார்த்தால், அவர்கள் கொஞ்சங் கூட எனக்குக் குறைந்தவர்களாகார்கள்.

அவர் பெருமை என் பெருமையை அதிகரித்தது :

தைத்யர்கள் தங்கள் பக்தியின் பெருமையால், தேவர்களுக்கு அவமானம் செய்து வைத்தார்கள். எனக்கு ந்ருஸிம்ஹத்வம் என்னும் பூஷணம், ஓர் தைத்யனுடைய பக்தியால் ஏற்பட்டது. என்பேரில் வைத்த ப்ரேமையின் காரணமாய், வெகு சங்கடங்களநுபவித்த அந்த ப்ரஹ்லாதனுடைய பெருமை, என் பெருமையை அதிகரித்திருக்கிறது; ஏனென்றல் என்னால் கொடுக்கக் கூடியதான் நன்மை அனைத்தையும், அவன் நாமோச்சாரம், அவனுடைய சரித்ரம், இப்படிப்பட்ட அவன் விஷயமான ஸம்பாஷணமே செய்துதரும். தைத்யகுலத்தில் பிறந்த அவனுடைய பெருமை, இந்த்ரனுக்குக்கூக் கிடைக்காமற் போயிற்று. ஆகையால் என்னை யடையும் விஷயத்தில், ஜாதி என்பது கவனிக்கப்படுவதே இல்லை; பக்தி ஒன்றே கணக்கிடப்படுகிறது.

அரசனுடைய முத்ரைபோல், பக்தி மிக்கத்தாழ்ந்தவர்களுக்கு பெருமை செய்து கொடுக்கிறது :

அரசனுடைய முத்ரை அக்ஷரங்கள், எதின்மேல் பதிக்கப்பட்டிருக்குமோ, அது ஒரு தோல் ஆகட்டும், துணி ஆகட்டும், அதை கடைக்காரர்கள் வாங்கிக் கொண்டு நமக்கு வேண்டிய ஸாமான்களைக் கொடுப்பார்கள். அப்படி அரசன் முத்ரை இல்லாதுபோனால், நாம் கொடுப்பது தங்கமே யாகட்டும், வெள்ளியே யாகட்டும், கடைக்காரர்களிடத்தில், அது செல்லாமற்போகும். கடைத்தெருவில் செல்வதற்கு வேண்டியதான, யோக்யதை யெல்லாம் ராஜாவின் முத்ரையில் அடங்கிப் போயிற்று. அது ஒன்றிருந்தால், அது எதின் மேல் பதிந்திருக்கிறது என்பதை ஒருவரும் கவனிப்பதில்லை.

அப்படியே உத்தம ஜாதியில் பிறந்ததும், ஸர்வஜ்ஞதையும், என் விஷயமான ப்ரேமையால் மனஸும் புத்தியும் நிறைந்தவையாய் இருந்தாலே, பயன்படும்; ஆகையால், இந்த விஷயத்தில், குலம், ஜாதி, வர்ணம் இவை யெல்லாம் கணக்கிடப்படாமல், என்னைச் சேர்ந்தவன் என்ற ஒன்றே பயன்படும். அந்த பக்தி ஒன்று இருந்து, எந்த விதமாயாவது அவன் மனஸு என் ஸ்வரூபத்துக்குள் ப்ரவேசித்ததாய்விட்டாற் போதும். பின்பு அவனிடத்தில் முன்னிருந்த அவகுணங்கள் எல்லாம் கணக்கிடப்படுவதில்லை.

இவ்விஷயத்தில் மற்ற உதாஹரணங்கள் :

அல்பமும், அசுத்தமும், எல்லாராலும் அவமதிக்கப்பட்டது மான ஊர்க்கழிநீர் கங்காஜலத்திற் போய்விழாத வரைக்கும், கழிநீர் ஆகும். கங்கையோடு கலந்துபோனபின், அது கங்கையாய்ப் போய், அப்பெருமை அதைவிட்டு விலகுவதில்லை. கசந்த வாஸனையோடு கூடிய புங்கங் கட்டை என்றும், உத்தமமான சந்தனக்கட்டை என்றும் பாராட்டப்பட்ட ஓர் வித்யாஸம், அவை நெருப்பில் விழுந்து நெருப்பாய்ப் போகும்வரைக்குந் தான், நிலைபெற்றிருக்கும். இரண்டு கட்டைகளும், நெருப்பான பின், ஒரே மதிப்பை அடைகின்றன. அப்படியே க்ஷத்ரியன் என்றும், வைச்யன் என்றும், பெண் பிள்ளை என்றும், கடைசி குலத்தவன் என்றும் வழங்கப்பட்ட வித்யாஸ மெல்லாம் என்னை அவர்கள் அடையாதவரைக்கும் தான் கொண்டாடப்படும். அவர்கள் ப்ரேமையினால் என்னிடம் வந்து ஒன்று பட்டுப்போன பிறகு, ஸமுத்ரத்தில் விழுந்து கரைந்து போன உப்புக் கட்டிகளின் பெரியது சிறியது என்னும் வித்யாஸத்தைப்போல், பக்தர்களுக்குள் பூர்வம் இருந்த வித்யாஸங்கள் இல்லாமற் போகின்றன. எது வரைக்கும் ஸமுத்ரத்தில் விழுந்து ஸமுத்ரத்தோடு ஒன்று பட்டுப்போக வில்லையோ, அது வரைக்குந்தான், சில ஆறுகள் நதங்கள் என்றும் மற்றும் சில ஆறுகள் நதிகள் என்றும், பெயரை அடைந்து, மேற்குநோக்கி ஓடுதல், கிழக்கு நோக்கி ஓடுதல், என்னும் வித்யாஸத்தோடு கூடியவையாயிருக்கும்.

பகவத் ஸாயுஜ்ய மடைவதற்கு அவச்யம் வேண்டியது, சித்தம் எக்காரண மாயாவது, அவனிடத்தில் ப்ரவேசிப்பதே :

இவ்வளவு நான் வேண்டிய தெல்லாம், எந்த நிமித்தத்தினாலாவது சித்தமானது என்னிடத்தில் ப்ரவேசித்த

தாகவேண்டும். இவ்வளவு மாத்ரத்தினாலேயே, ஸஹஜமாகவே அவர்கள் நான் ஆய்விட வேண்டியதுதான். இதைத் தப்பித்துக்கொள்ள முடியாது. மேல்விழுந்து உடைத்துவிட வேண்டும் என்றெண்ணி, இரும்புச் செம்மட்டி ஸ்பர்சவேதியின்மேல் தாக்கி, அப்படி ஸ்பர்சவேதியுடன் ஸம்பந்த மடைந்த மாத்ரத்தில், அது தங்கமாய்ப் போய் விடுகிறதல்லவா? நன்றாய்ப் பார். ஆசை நாயகன் என்னும் புத்தியுடன், கோபிகளுடைய அந்தக்கரணம் என்னிடத்தில் ஒட்டிக் கொண்டதால், அவர்கள் என் ஸ்வரூப மாய்விட வில்லையா? அன்றியும ம என் விஷயத்தில் ஸதா பயத்தைப்பாராட்டி வந்தான் என்னும் காரணத்தைக் கொண்டு கம்ஸனும், ஸதா என்னை த்வேஷித்து வந்த சிசுபாலன் முதலியவர்களும், என் ஸ்வரூபத்தையே அடைந்தார்க ளல்லவா?

ஹே பாண்டவா, யாதவர்கள் என்னிடத்தில் பந்துத்வம் பாராட்டியும், வஸுதேவன் முதலியவர்கள் என்னிடத்தில் மமத்வம் பாராட்டியும், என்னோடு ஐக்யம் அடைந்தார்களே. நாரதன், த்ருவன், அக்ரூரன், சுகன், ஸநத்குமாராதிகள், இவர்களுக் கெல்லாம் பக்தியால் ப்ராப்யனானோன். இப்படி கோபிகளுக்கு என் விஷயமான காமமும், கம்ஸனுக்கு பயத்தினுடைய சம்ப்ரமமும், சிசுபாலன் முதலியவருக்கு என்னைக்கொல்ல வேண்டுமென்னும் மனோபாவமும், என்னை அடைய ஸாதநங்களாய் ஏற்பட்டப்படியால், நிர்வாண மடையும் ஸ்தாநமாகிய என்னை, அவரவர்களுக் கிஷ்டமான வழியாய் வந்தடையலாம். பக்தியானாலும், தேஹஸங்கம் என்னும் விஷய ஆசையே ஆனாலும், வைராக்ய மானாலும், அல்லது சாத்ரவமே ஆனாலும், ஸரியே. ஆகையால் என் ஸ்வரூபத்தில் ப்ரவேசிக்க வேண்டுமானால், வழிகளுக்குக் குறைவு இல்லவே இல்லை.

இவ்விஷயத்தில் முடிவான கொள்கை :

ஆகவே எந்த ஜாதியிற் பிறந்தாலும் தப்பிதமில்லை. பக்தியினாலேயோ, அல்லது வேறெந்த உபாயத்தினாலேயோ, எப்படியோ என்னுடைய ஸம்பந்தம் ஏற்பட வேண்டும். எந்த வழியாயாவது, என்னிடம் வந்து சேர்ந்தாற் போதும்; பின்பு நானே ஆய்விடுவது அவர்கள் கைக்குக் கிடைத்து விட்டது. ஆகையால் என்னிடத்தில் பக்தி பண்ணுகிறவர்கள் வைச்யர்கள், சூத்ரர்கள், பெண்பிள்ளைகள், மற்றுமெவர்கள் ஆனாலும் ஸரியே, எல்லாரும் என்னுடைய ஸ்வரூபத்தை அடைகிறார்கள்.

किं पुनर्ब्राह्मणाः पुण्या भक्ता राजर्षयस्तथा ।
अनित्यमसुखं लोकमिमं प्राप्य भजस्व माम् ।। ३३ ।।

கிம் புனர் ப்ராம்ஹணாः புண்யா பக்தா ராஜர்ஷயஸ் ததா ।
அநித்யம் அஸுகம் லோகமிமம் ப்ராப்ய பஜஸ்வ மாம் ।। 33

ப்ராஹ்மணர்களின் பெருமை :

ப்ராஹ்மணர்களின் பெருமை எப்படி இருக்கிற தென்றால், சொல்வேன் கேள். வர்ணங்களுக்குள் சத்ரசாமரங்கள் முன்செல்லும் மரியாதைகளை உடைத்தான உத்தம வர்ணத்தில் அவர்கள் பிறந்து, ஸ்வர்க்க லோகத்தையே தங்கள் மான்யமாய்ப் பெற்று, மந்த்ரவித்யை களனைத்துக்கும் தாய்வீடு என்று சொல்லத்தக்க பெருமையை அடைந்திருக்கிறார்கள். அவர்கள் பூலோக தேவர்களென்றும், அவயவங்களோடு கூடிய தபஸ்ஸின் அவதார மூர்த்திகள் என்றும், ஸர்வதீர்த்தங்களின் பாக்யமே இவர்களுருவாய் வெளிப்பட்டு நின்றதோ என்றும், சொல்லத்தக்க பெருமை படைத்தவர்கள். அவர்கள் யாகங்களுக்கு வாஸஸ்தானமாய், வேதங்களுக்கு வஜ்ரகவசங்களாய், விளங்கிக்கொண்டு, அவர்கள் கடாக்ஷம் என்னும மடியில் ஸர்வமங்களங்களும் ஸதா கிடந்து விளையாடிக்கொண்டு வளர்கின்றன. உலகில் ஸத்கர்மங்கள் என்னும் செடிகள், அவர்களுடைய ச்ரத்தை என்னும் ஈரத்தைப் பெற்று, செழித்துத்தழைத்து வளர்கின்றன.

அவர்களுடைய ஸங்கல்பத்தின் பலத்தினால், ஸத்ய மென்பது உலகில் வாழ்வடைந்து விளங்குகிறது. அவர்கள் ஆசீர்வாதத்தால் அக்நிபகவான் தீர்க்காயுஸு பெற்று பிழைத்திருக்கிறான். ஆகையினால் இந்த ப்ராஹ்மணர்களுடைய ப்ரீதியை உத்தேசித்து, ஸமுத்ரராஜன் தன் ஜலங்களை அக்நிபகவானுக்கு அர்ப்பணம் செய்து கொண்டிருக்கிறான். நான் லக்ஷ்மியை தூர விலகி இருக்கும்படி செய்துகொண்டு, கௌஸ்துப மணியை அறுத்துக் கையிற் பிடித்துக்கொண்டு, அவர்கள் பாததூளிகள் தங்கி இருப்பதற்கு வேண்டிய ஓர்பெட்டியாய் என் மார்பைச் செய்துக்கொண்டு, என்மார்பை ப்ருகு என்னும் ஓர் ப்ராஹ்மணன் காலின் கீழ் விரித்துக் காட்டினேன். அவன் பாத ஸ்பர்சம் என்னும் ஓர்பெருத்த ஸம்பத்தை என் மார்பிற்குள்ளே வைத்துக்கொண்டு, அதை பத்ரப்படுத்தி வைப்பதற்காக போடப்பட்ட முத்ரைபோல், அவன் பாதத்தின் முத்ரையை

என்மார்பில் இன்னும் வஹித்திருக்கிறேன். அவர்களுடைய கோபத்தில் காலாக்நி ருத்ரன் குடிகொண்டிருக்கிறான். அவர்கள் முனக்குளிர்ச்சியை ஒருவன் பெறுவானே யானால், அவனுக்கு ஒரு செலவுமில்லாமல் ஸித்திக ளனைத்தும் கிடைத்துப்போகும்.

இப்படிப்பட்ட ப்ராஹ்மணர்கள் பக்தியால் என் ஸாயுஜ்யத்தை அடைவார்கள் என்று நிரூபித்துக்காட்ட அவச்ய மில்லை :

இப்படி யெல்லாம் புண்யம் படைத்தவர்களாய், உலகத்தாரால் கொண்டாடத்தக்கவர்களாயிருக்கும் ப்ராஹ்மணர்கள், என்னிடத்தில் உத்தமமான பக்தி பாராட்டினவர் களாய்விட்டால், அவர்கள் என்னை அடைவார்கள் என்பது கஷ்டப்பட்டு சித்தாந்தம் பண்ணிவைக்க வேண்டியதா யிருக்கிறதா? சந்தனத்தின் ஸமீபத்தில் வளர்ந்து, அதன் காற்று ஸதா தன்மேற் பட்டு, அதினால் ஸுகந்தம் பெற்றதாய்ப்போன வேப்பமரத்தின் காய்ந்துபோன கட்டை கூட பகவானுடைய சிரஸின்மேல் ஏறும் யோக்யதை பெற்றால், அந்த சந்தனக் கட்டை அந்தப் பெருமையை அடையாது என்பதை மனஸு எப்படி ஒப்புக்கொள்ளும்? அப்பெருமை அடையும் என்று இயற்கையாக ஒப்புக்கொள்ளாதவர்கள், ந்யாயங்களை எடுத்துக் காட்டி, அதை ஸ்தாபித்துவிட்டால் மாத்ரம், உண்மையே யென்று அதை ஒப்புக்கொள்ளப் போகிறார்களா? சங்கரன் ஹாலா ஹலத்தைச் சாப்பிட்டு, அதின் எரிச்சலை சாந்திசெய்து கொள்வதற்காக, அர்த்தசந்திரனை தலைமேல் எப்போதும் அணிந்து கொண்டிருக்கிறானே; தாஹத்தைப் போக்குவதில் அதைக்காட்டிலும் விசேஷித்த ஸாமர்த்யமுள்ளதாயும், அத்துடன் கூட உத்தம ப்ரகாரமாய் ஸுகந்தம் உள்ளதாயும் இருக்கும் சந்தநத்தை, அந்த சங்கரன் தேஹ மெல்லாம பூசிக்கொள்ள மாட்டானோ?

அப்படிச் செய்வதற்கு அவனுக்கு ஏதாவது கூலி கொடுக்க வேண்டுமா? ஊர் வாரி நீரானது எந்த கங்கையின் துணையைப் பற்றிக்கொண்டு ஸமுத்ரம் போய்ச்சேர்ந்து, ஸமுத்ரத்தோடு ஸமுத்ரமாக ஆய்விடுகிறதோ, அந்தக் கங்கை மாத்ரம் ஸமுத்ரத்ரோடு ஐக்யப்பட்டுப்போதல் என்னும் பெருமையை அடையாமல், வேறுகதியை அடையுமா? ஆகையால் ராஜருஷிகளாகட்டும், அல்லது ப்ராஹ்மணர்களாகட்டும், தாங்கள் போய்ச்சேர வேண்டிய

இடமும், அந்த இடம் போய்ச் சேர்வதற்கு வேண்டியதான புத்தியைக் கொடுக்கிறவனும், அப்படிப் போய்ச்சேரும் வரைக்கும் தங்களுக்கு ஓர் ஆபத்தும் நேரிடாமல் காப்பாற்றுகிறவனும், நானே என்று அவர்கள் பாவித்து விட்டார்களே யானால். அவர்கள் தேஹத்தை விட்ட பிறகு போய்ச் சேருமிடமும், அதற்கு முன்னும், அவர்கள் இருக்கும் இடமும் நானே.

பகவத்பக்தி செய்து ஸம்ஸார ஆபத்தினின்றுதப்பித்துக் கொள்ள முயலாதவன் பெருத்த அறிவுகேடன் :

நூறு ஓட்டைகளோடு கூடிய ஓர் படகில் ஏறிக்கொண்டு, பெரிய ஸமுத்ரத்தைத் தாண்டிப்போகும் விஷயத்தில், ஒருவன் கவலையற்றவனாய் இருப்பது, என்னமாய் முடியும்? எதிரிகளின் சஸ்த்ரங்கள் மாரிபோல் தன் மேல் பொழிந்து கொண்டிருக்கும் போது, தான் ஒரு மறைவை தன்முன் ஏற்படுத்திக் கொள்ளாமலும் தன் தேஹத்தின் மேல் கவசமணிந்து கொள்ளாமலும் இருப்பது, புத்திசாலித்தன மாகுமா? தேஹத்தின் மேல் கற்கள் வந்துவிழுந்து கொண்டிருந்தால், ஒரு கேடயத்தை எதிரில் பிடித்துத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டாமா? ஒருவனுக்கு வ்யாதி அதிகரித்து, அதினால் ஸர்வாங்கங்களும் வ்யாபிக்கப்பட்டு போனபின், அவன் தகுந்த ஔஷதத்தைத் தேடிக் கொள்ளும் விஷயத்தில் அச்ரத்தை பாராட்டலாமா? ஓர் இடத்தில் நாலு பக்கத்திலும் நெருப்புப் பற்றிக் கொண்டபின், அந்த இடத்தை விட்டு விலகிப் போவதில்லை, அங்கேயே உட்கார்ந்திருப்பேன், என்று பிடிவாதம் பண்ணுகிறவனுடைய கதி என்னவாகும்? அப்படியே அநேக துக்கங்களோடும், ஆபத்துக்களோடும் கூடிய இந்த மர்த்ய லோகத்துக்கு வந்து சேர்ந்த ஒருவன், என்னை பஜிக்கிற தில்லை யென்றால், அவன் கதி என்ன வாகும்?

ஸம்ஸாரம் துக்க பூயிஷ்டமாய் இருப்பதாலும் தேஹம் நிலையற்றதாயிருப்பதாலும், பகவத் பக்தி செய்வது ஆவச்யகம் ஆகிறது :

அப்பா என்னை பஜிப்பதற்கு அவச்யமில்லை யென்று சொல்லும்படியாய், என்னசக்தி மனுஷ்யனாய்ப் பிறந்தவனுடைய தேஹத்தில் இருக்கிறது? இல்லாவிட்டால் அவனுடைய தேஹத்தின் பலத்தைக் கொண்டாவது, போக்ய

ஜாதங்களின் சேர்க்கையைக் கொண்டாவது, முற்றிலும் சிந்தை யற்றவனா யிருக்க முடியுமா? இல்லாவிட்டால் வித்தையை அல்லது தாருண்யம் முதலியவற்றை நம்பிக்கொண்டு, ஈச்வரனாகிய என்னை பஜிக்காமலே, தீர்க்கமான காலமும் ஸுகமாய் இருந்துவிடலாம், என்று நிச்சயித்திருக்க முடியுமா? போக்ய ஜாதங்களின் ஸ்வரூபத்தை விசாரிக்கப்போனாலோ, அவை அனைத்தும் தேஹத்தின் நன்மைக்காகவே ஏற்பட்டவையா யிருக்கின்றன, அப்படிப்பட்ட தேஹமோ யமன் வாயில் விழுந்ததாய் இருக்கிறது.

அப்பா துக்கங்களின் மூட்டைகள் அவிழ்க்கப்பட்டு, எங்கு பார்த்தாலும் வாரி யிறைக்கப்பட்டுக் கிடக்கின்றன. மரணத்தை உண்டாக்கும் காரணங்கள் கணக்கற்ற வையாய் எங்கும் சிதரிக் கிடக்கின்றன. ஆகவே இந்தமர்த்ய லோகத்தில் வாழ்வு என்னும் சந்தைக்கு ஸந்த்யாகாலம் ஏற்பட்டு, இது சீக்கிரத்தில் முடிவு பெறுகிறது. அதற்குப் பின்பு ஸுகமாய் ஜீவிப்பதற்கு வேண்டியதான ஸாமான்கள், எப்படி வாங்கிச் சேர்த்துக்கொள்ள முடியும்? நெருப் பணைந்து போன சாம்பலை, எவ்வளவுதான் ஊதின போதிலும், நம் கையில் இருக்கும் தீபத்தை ஏற்றிக் கொள்ள முடியுமா? விஷமே ரஸமாயுள்ள கிழங்குகளை ஆலையில் கொடுத்து ரஸம் பிழிந்து எடுத்துக் கொண்டு, அதற்கு அம்ருதம் என்று பெயர் வைத்து அதைச்சாப்பிட்டு விட்டதினால் நாம் சாவற்றவர்கள் ஆக முடியுமா? அப்படியே விஷயத்தினின்று நாம் அடையக் கூடியதான ஸுகமத்தனையும் கேவல துக்கமே யாகும்.

உலகத்தாரின் அறிவுகேடு :

ஆனால் நாம் என்ன செய்யலாம்? ஞான ஹீனர்களாகிய இவ்வுலகத்தாருக்கு விஷயங்களை ஸேவிக்காமல், ஒரு கார்யமும் நடக்கிறதில்லை. ஒருவன் தன் காலில் பட்ட காயத்தை ஆற்றிக் கொள்வதற்காக, தன் தலையை அறுத்து அதின் மேல் வைத்துக் கட்டினாற் போலும், இந்தமர்த்ய லோகத்தின் வ்யவஹாரம் அனைத்தும் இருக்கிறது. ஆகவே இம்மர்த்ய லோகத்தில் ஸுகத்தினுடைய பேச்சே கேட்கக் கிடைப்பதில்லை. ஒருவன் நெருப்புத் தணற்கள் மேல் படுத்து ஸுகமாய் நித்ரை செய்ய உத்தேசிப்பது எப்படி நிறைவேறும்? இந்த லோகத்தில் சந்த்ரனே, க்ஷயரோகியா யிருக்கிறான், ஸூர்யன் அஸ்தமானமாவதற்காகவே உதித்திருக்கிறான். துக்கம், ஸுகம் என்னும் அங்கியைப் போட்டுக்கொண்டு, ஜநங்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. சுபம்

முளையெடுக்கும் போதே அதன்மேல் அசுபம் என்னும் போர்வை மூடிக்கொள்கிறது. ம்ருத்யு கர்ப்பத்தில் இருக்கும் சிசுவைக்கூடதேடிப் பிடித்துக் கொள்கிறது. இவ்வுலகத்தார், தங்களுக்கு எதுஇல்லையோ, அதற்கே ஆசைப்படுகிறார்கள்.

அப்படி ஆசைப்பட்டது கைக்குக் கிடைத்ததோ, இல்லையோ, அதைக் கந்தர்வர்கள் பிடுங்கிக்கொண்டு போய் விடுகிறார்கள். பின்பு அது எங்கே போய்ச் சேர்ந்தது என்ற ஸமாசாரமே தெரியாமற் போகிறது. எந்த வழிகளைச் சோதித்துப் பார்த்தாலும் போனவர்களின் அடிச்சுவடுகள் காணப்படுகின்றனவே தவிர, திரும்பி வந்தவர்களின் அடிச்சுவடுகள் காணப்படுவதில்லை. இந்த மர்த்ய லோகத்தின் புராணங்கள் எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்தால், எல்லாம் செத்துப் போனவர்களுடைய கதைகளாகவே இருக்கின்றன. இந்த மர்த்யலோகத்தில் காணத்தக்க தாயிருக்கும் அநித்யத்தையின் பெருமை, இந்த லோகத்தை உண்டாக்கின ப்ரஹ்மதேவனுடைய ஆயஸெல்லாம் உட்கார்ந்து கொண்டு வர்ணித்தாலும் வர்ணித்துத் தீராது.

இப்படிப்பட்ட ஓர் லோகத்தில் பிறந்திருப்பவர்களுடைய நிர்விசாரத்தைப் பார்த்தால் மிக்க ஆச்சர்யப்பட வேண்டியதா யிருக்கிறது. ஐஹிக பாரலௌகிக ஸுகங்களை அடைய, எவர்கள் தங்கள் கைக்காசில் ஓர் கவடி கூட செலவுசெய்யார்களோ, அவர்களே ஸர்வவிதமாயும் தங்களுக்கு ஹாநிகரமாயிருக்கும் விஷயத்தில், கோடிக்கணக்காய்ச் செலவு செய்வார்கள். எவன் தத்காலத்தில் விஷயஸுகங்களில் முழுகிக்கிடப்பானோ, அவனை இவ்வுலகத்தார் ஸுகி என்பார்கள். எவன்பேராசையின் கீழ்சிக்கிப்போய், நசுங்கிக்கொண்டு, துக்கப்படுகிறானோ, அவனை நன்குணர்ந்தவன் என்று இவர்கள் சொல்வார்கள். ஆயஸ்ஸு குறுகிப்போய், ஞாநம் குன்றிப்போய் இருப்பவனை, பெரியவன் என்று சொல்லி, அவன் பாதத்தில் விழுந்து இவர்கள் ஸேவிப்பார்கள்.

சிறுவர்கள் எவ்வளவுக் கெவ்வளவு பெரியவர்க ளாகிறார்களோ, அவ்வளவுக் கவ்வளவு அவர்கள் ஆயஸ்ஸு குறைந்து போகிறதே, என்று இவ்வுலகத்தார் துக்கப்படாமல், ஸந்தோஷப்பட்டு, கூத்தாடுவார்கள். பிறந்தநாள் திரும்ப வரும்போதெல்லாம், காலன் வாயில் விழுவது நெருங்கிக் கொண்டிருக்க, பிறந்த நாள் வந்ததென்று வீடெல்லாம் அலங்கரித்து, அதை வெகு ஸம்ப்ரமத்துடன், இவர்கள் கொண்டாடுவார்கள். சாவதின் பேச்சையே கேட்க

ஸஹியாமல், ஒருவன் செத்துப்போனால் மிக்கத் துக்கிக்கும் இவர்கள், ஒருவன் ஆயஸ்ஸு வ்ருத்தி அடைய அடைய, அவனுக்குச் சாவு நெருங்குகிறதென்று கணக்கிட்டுத் துக்கியாமல், ஆயஸ்ஸு வளர்ந்த விஷயத்தில், ஏன் ஸந்தோஷப் படுகிறார்களோ தெரியவில்லை. பாம்பின் வாயில் அகப்பட்டு கொஞ்சம் கொஞ்சமாய் விழுங்கப்பட்டுக்கொண்டிருக்கும் தவளை, தான் இறந்து போவதை கவனிக்காமல், பாம்பின் வாயில் இருக்கும்போதே, அதன் முன்னால் பறக்கும் ஈயை மடக்கி வாயிற் போட்டுக் கொண்டு, ஆநந்தப்படும். அப்படியே யமன் வாயில் விழுந்த இவ்வுலகத்தார், மேலும் மேலும் ஆசையை வ்ருத்தி செய்துக் கொண்டே செல்கிறார்களே; அதனால் எவர்கள் ஸுகமடைய வேண்டுமென்று கருதுகிறார்களோ, தெரியவில்லை. ஐய்யய்யோ, இந்த ம்ருத்யு லோகத்தின் வ்யவஹாரம் மிக்க பரிதபிக்கத் தக்கதாயும், மனஸினால் ஸ்மரிக்கவும் ஸஹிக்க முடியாததாயு மிருக்கிறது.

முடிவான உபதேசம் :

இப்படிப்பட்ட ஓர் உலகில் பிறந்தவனான நீ இந்த உலகத்தின் ஸம்பந்தத்தை முற்றிலும் துடைத்து விட்டு, இதினின்றும் வேகமாய் வெளிப்பட்டு, பக்தி மார்க்கத்தை திடமாய்ப் பற்றிக் கொண்டு, ஓர் கெடுதியுமில்லாமல் என்வீடு வந்து சேர்.

मन्मना भव मद्भक्तो मद्याजी मां नमस्कुरु ।
मामेवैष्यसि युक्त्वैवमात्मानं मत्परायणः ।।३४।।

மன்மனா பவ மத் பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு ।
மாமேவைஷ்யஸி யுக்த்வைவ மாத்மானம் மத்பராயணः ॥ 34

அந்த உபதேசத்தின் விவரணம் :

நீ உன் மனஸை நானாகவே செய்து விடு. என்னுடைய பஜனையில் ப்ரேமை பாராட்டு. எந்த இடத்திலும், எந்த காலத்திலும், நான் ஒருவனே இருப்பதாகப் பாவித்து, எனக்கே நமஸ்காரம் செய். என்னை ஸதா அனுஸந்தித்துக் கொண்டிருந்து, ஸங்கல்பத்தை நிச்சேஷமாய்க் கொளுத்தித் தள்ள வேண்டும். இதுவே என்னை யஜ்ஞத்தால் ஆராதித்தது ஆகும். இப்படி என்னால் நிறைந்தவனாய் நீ ஆகும்போது, என் ஸ்வரூபத்தையே நீ அடைகிறாய். என் மனஸில் இது வரைக்கும் மறைந்து கிடந்த இந்த ரஹஸ்யத்தை, இப்போது

உனக்கு வெளியிட்டுக் கொடுத்தேன். அப்பா, ஒருவருக்கும் தெரியா திருக்கும்படி, நான் இதுவரைக்கும் ரஹஸ்யமாய் வைத்துக் கொண்டிருந்த இந்த விஷயம், உனக்குத் தெரிந்து போய் விட்டபடியால், இனி நீ ஸகல ஸுகங்களாலும் நிறைந்தவனாய், நிலை பெறுவாய்.

இவ்வுபதேசத்தைக்கேட்டு ஸஞ்ஜயனுக்குண்டான ஆநந்தம் :

ச்யாமளமான தேஹத்தோடு கூடியவனும், பக்தகாமகல்ப த்ருமனும், (பக்தர்களுடைய மனஸில் இருக்கும் ஆசை அனைத்தையும் பூர்த்தி செய்து வைக்கும் கல்பதருவென்று சொல்லத் தக்கவன்) பரப்ரஹ்ம ஸ்வரூபியுமான, ஸ்ரீ கிருஷ்ணன் இப்படிச் சொன்னார் என்று, ஸஞ்ஜயன் சொன்னான். ஹே ச்ரோதாக்களே, நீங்கள் இதை கவனித்துக் கேட்கவேண்டும். ஸ்ரீக்ருஷ்ணனுடைய இந்த வார்த்தைகளைக் கேட்டும், த்ருதராஷ்டிர ராஜனான அந்தக் கீழவன், தண்ணீரில் முழுகிக்கிடக்கும் எருமைக் கடாவைப்போல், ஓர் விகாரமும் அடையாமல் இருந்தான். அப்போது ஸஞ்ஜயன் தலையை அசைத்துக்கொண்டு, தனக்குள்ளேயே பின்வருமாறு சொல்லிக் கொண்டான். இங்கே இதுவரைக்கும், அம்ருதமழை பொழிந்து கொண்டிருந்தது. இவன் தேஹம் இங்கே இருந்துங்கூட, இவன் மனஸோ பக்கத்தூருக்குப் போயிருந்தது. ஆயினும், இவன் என்னுடைய யஜமான னானதால், இவனைப் பார்த்து, இதை வெளிப்படையாய்ச் சொல்லத்தகாது. என்ன செய்யலாம்? இவன் ஸ்வபாவமே இப்படிப்பட்டது.

ஆனால் என்னுடைய பாக்யமே பாக்யம். குருக்ஷேத்திரத்தில் நடக்கும் வ்ருத்தாந்தத்தை, இவ்வரசனுக்குத் தெரிவிக்க வேண்டும் என்னும் நிமித்தத்தையிட்டு, ஸ்ரீ வ்யாஸர் எனக்கு எவ்வளவு நன்மை செய்துவைத்தார். இப்படி மனஸில் நிச்சயம் செய்துகொண்டு, தனக்குள் பரிதாபத்துடன் இப்படிச்சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அந்த ஸஞ்சயனுடைய தேஹத்தில் அஷ்டஸாத்விக பாவங்களும் (இவை கீழே 266-வது பக்கத்தின் அடியில் சொல்லப்பட்டிருக்கின்றன) உண்டாய், அவன் அவற்றை அடக்கிவைக்க முடியாதபடி வியாபித்துக் கொண்டன. இந்த க்ருஷ்ணார்ஜுந ஸம் வாதத்தில் சித்தம் புதைந்து சிக்கிப்போய், வாய்பேசாமற் போய் விட்டது. ஆபாதமஸ்தகம் (கால் முதல் தலை முடிவாக) ரோமாஞ்சம் ஏற்பட்டது. கண்கள் பாதி

மூடிப்போய், அவற்றினின்றும் ஆநந்தபாஷ்பம் பெருகிற்று. அந்தரங்கத்தில் ஸுகப்பெருக்குகள் உண்டானதின் கார்யமாய், தேஹம் நடுக்க முற்றது. அன்றியும் எல்லா மயிர்க்கால்களிலும் வியர்வைத்துளிகள் முத்து முத்தாய் உண்டாய், தேஹம் முழுவதும் முத்துமாலைகளால் அலங்கரிக்கப் பட்டதாய்க் காணப்பட்டது. இப்படி மஹாஸுகத்தின் பெருக்கில் முழுகிப்போனமையால், அவனுடைய ஜீவதசையே மாறிப்போகும்படி ஏற்பட்டதால், அவனை வ்யாஸர் எந்தவேலையில் நியமித்திருந்தாரோ, அது நடந்தேறுவதற்கு வழி இல்லாமற் போயிற்று.

மேல்வரும் ஸம்வாதத்தின் அவதாரிகை :

இச்சமயத்தில் அர்ஜுநனைப் பார்த்து ஸ்ரீ கிருஷ்ணன் மேற் சொல்லப் புகுந்த வார்த்தைகள். ஹோவென் றிரைந்து கொண்டு, அவன் காதில் வந்து விழவும், அவனுக்கு மறுபடியும் தேஹஸ்ம்ருதி உண்டாயிற்று. உடனேயே, கண்ணினின்று சொரிந்து கொண்டிருந்த பாஷ்பங்களையும், தேஹம் முழுவதும் உண்டாயிருந்த வியர்வையையும் துடைத்துக் கொண்டு, ஐயா திருதராஷ்டிரனே கேளும், என்று எச்சரிக்கை செய்து, மேற்கதையைச் சொல்லத் தொடங்கினான். இன்று ஸ்ரீ க்ருஷ்ண வாக்யங்கள் என்னும் விதைகள் நன்றாய்ப் பயிராவதற்கு, ஸஞ்சயனுடைய மனஸு என்னும பூமி, ஸாத்விக பாவத்தால், இரண்டாவது போகம் பயிருக்குச் செய்நேர்த்தி செய்து வைக்கப்பட்டுப் போனதால், ச்ரோதாக்களுக்குத் தத்வ ஞாநத்தின் விசேஷித்த விளைவு என்னும் லாபம் கிடைக்கக் காரணமாயிற்று. ச்ரோதாக்களே, நீங்கள் கொஞ்சம் கவனத்தைச் செலுத்தினாற் போதும். பின்பு ச்ரவணேந்த்ரியத்துக்கு பாக்யம் என்பவள் மாலையிடுவாள். அதனால் நீங்கள் ஆநந்தக் குவியலின் மேல் வீற்றிருக்கப் பெறுவீர்கள். மேற்கதையில் ஈச்வர வீபூதிகளுக் கெல்லாம் மூலஸ்தாநம் எதுவோ, அதை அர்ஜுநனுக்கு ஸித்தர்க ளரசனான ஸ்ரீ க்ருஷ்ணன் காட்டிக் கொடுக்கப் போகிறார். அந்த ஸம்வாதத்தைக் கேளுங்கள்.

ஒன்பதாம் அத்யாயம் முற்றிற்று.

அத்யாயம் 10

ஸத்குருவந்தனம் :

ஸந்தேஹமற்ற ஞானத்தை உண்டாக்கி வைப்பதில், அதிஸாமர்த்யம் பூண்ட ஹே ஸத்குரோ, வித்யைகள் என்னும் தாமரஸப்பூக்களை விகஸிக்கச்செய்து, அவற்றின் ஸாரமாகிய தேன்போன்ற ஆத்மஸ்வரூபஞானத்தை, சிஷ்யர்கள் என்னும் தேனீக்கள் புசிக்கும்படி, வெளிப்படுத்தி வைக்கிறவரே, பரை என்னும் ஸூக்ஷ்ம வாக்கின் அர்த்த ரூபியாயிருக்கும், பரமாத்ம ஞானம் என்னும் ஸ்திரீயுடன் ஸதா ரமித்துக் கொண்டிருக்கிறவரே, உமக்கு நமஸ்காரம். ஸம்ஸாரம் என்னும் இருட்டை நாசம் செய்து வைக்கும் ஸூர்யனே, காமாதிஷட்வைரிகளை நாசம் செய்வதில் அளவில்லாதபடி உத்தமமான வீர்யத்தைப் படைத்தவரே,

யௌவனத்தின் உத்தமதசையை அடைந்திருக்கும் துரியாவஸ்தை என்னும் ஸ்த்ரீயை, ஸதா லாலநம் பண்ணிக் கொண்டு ஸுகரூபியாய் இருக்கிறவரே, விச்வமனைத்தையும் காப்பாற்றிக் கொண்டு வருகிறவரே, மங்களங்கள் என்னும் உத்தம ரத்நங்களை டைந்து கிடக்கும் நிதியானவரே, ஸஜ்ஜனர்களாகிற வனம் நடுவில், சந்தன வ்ருக்ஷம்போல் பெருமை பெற்றவரே, எல்லாரும் உபாஸித்துக் கொண்டாடத் தக்கவரே, உமக்கு நமஸ்காரம். உத்தம ஞானத்தை க்ரஹிக்கும் ஸாமர்த்ய முள்ளவர்களுடைய சித்தமாகிய சகோரத்தைப் போஷிக்கும் சந்திரனே, ஆத்மாநுபவம் பண்ணுகிறவர்களுக்குள் அரசனே, வேதத்தின் ஸாரமாகிய ப்ரஹ்ம ஞானம் நிறைந்து தங்கி இருக்கும் ஸமுத்ரமே, எல்லாருடைய மனஸையும் கலக்கி வைக்கும் திறமை உள்ள மன்மதனுடைய சித்தத்தை கலக்கி வைக்கும் மன்மதனே, உமக்கு நமஸ்காரம், உத்தமமான பக்தி பாவத்தால் நிறைந்தவர்களால் பஜிக்கப்பட்டவரே, ஸம்ஸாரம் என்னும் யானையின் மண்டையைப் பிளக்கும் ஸிம்ஹமமே, விச்வம் உண்டாவதற்கு மூலகாரணமானவரே, ஹே ஸ்ரீ குருராஜ, உமக்கு நமஸ்காரம்.

ஸத்குருவைத் துதிக்காமல் கேவல நமஸ்காரம் செய்ததற்குக் காரணம் :

உம்முடைய அநுக்ரஹம் என்னும் கணேசன் ப்ரஸந்நனானால், சாஸ்த்ர ஜாதகங்களனைத்துக்குள்ளும் ஓர்

சிறு குழந்தை ப்ரேவேசித்து, அவற்றி லடங்கிய ஞான மனைத்தையும் தன்வசப்படுத்திக் கொள்ளும். அத்யுதாரமான தேவரீர் திவ்ய வாக்கானது, அபயம் கொடுக்க வேண்டுமென்று உத்தேசித்த மாத்ரத்தில், நவரஸங்களும் நிறைந்திருக்கும் அம்ருதக் கடல் என்று சொல்லத்தக்க ஸகல சாஸ்திரங்களின் ஆழத்தை, நாங்கள் அறிந்து விடுகிறோம். தங்கள் ப்ரேமை என்னும் ஸரஸ்வதீ தேவி, ஓர் ஊமையை அங்கீகரிப்பாளே யானால், அவன் க்ரந்தங்கள் செய்து வைக்கும் விஷயத்தில், ப்ருஹஸ்பதியோடு பந்தயம் போடுவான். இது நிற்கட்டும்.

உம்முடைய கருணா கடாக்ஷம் எவன் பேரிற் படுமோ, அல்லது உம்முடைய ஹஸ்தகமலமானது எவன் தலைமேல் வைக்கப்படுமோ, அவன் கேவலம் ஒரு ஜீவனே ஆனாலும், மஹேச்வரனுக்கு ஸமானமாய் மதிக்கப்படும் பெருமையை அடைவான். இவ்வளவு உத்தம சக்தி உள்ள உம்முடைய மஹிமையை, நான் வர்ணிப்பதற்கு, என்னிடத்தில் என்ன வாக் ஸாமர்த்யம் இருக்கிறது? ஸூர்யனுக்கு ஜாஸ்தி பளபளப்பு உண்டாக்க வேண்டுமென்று, தங்க முலாம் முதலிய பூச்சுக்களைப் பூசப்போனால், அவனுடைய தேஹத்தில் அப்பூச்சு ஒட்டுமா? ஸுகந்திகளான பூக்களால் ஸதா நிறைந்திருக்கும் கல்பதருவை, இதரபூக்களைக் கொண்டுவந்து அலங்கரித்து வைப்பது, எப்படி ஸாத்யமாகும்? க்ஷீரஸாகரத்துக்கு எதைக் கொண்டு விருந்திடலாம்? பச்சைக் கர்ப்பூரத்துக்கு எந்த வாஸனை த்ரவ்யத்தைச் சேர்த்து, அதற்கு இல்லாத ஓர் ஸுகந்தத்தை உண்டாக்கி வைக்க முடியும்? சந்தநத்தின்மேல் எதைப் பூசி, அதற்கு குளிர்ச்சியும் வாஸனையும் அதிகரிக்கச் செய்ய முடியும்? அம்ருதத்தைப் பக்வம் செய்து, அதற்கு அதிகருசியை உண்டாக்கி வைப்பது, எப்படி முடியும்? ஆகாசம் எவ்வளவு உயரமாய் இருக்கிற தென்று கண்டுபிடிக்க, அதைக் காட்டிலும் உயரமான அளவு கோலாக, எது ஏற்படும்?

ஆகையாற்றான், உம்முடைய மஹிமையை வர்ணிக்காமல், கேவல நமஸ்காரம் மாத்ரம் செய்தேன். எனக்கு ப்ரஜ்ஞை விசேஷித்திருக்கிறதென்று நினைத்து, ஸ்ரீ குருவின் சக்தியை நிரூபித்துக் காட்டத் தொடங்கு வேனாகில், அது உத்தமமான காந்தியோடு கூடிய முத்துக்கு, புதிதான ஓர் காந்தி உண்டாக்கப் புகுந்ததாகும். அன்றியும் உம்மை ஸ்தோத்ரம் செய்தல், பதினைந்தரை மாற்றுள்ள தங்கத்துக்கு, வெள்ளி முலாம் கொடுக்கப் புகுவதாகும். ஆகையால் வாய் பேசாமல், உம்முடைய பாதத்தில் தலையை வைத்து விடுதலே, மிக்கவும் அறிவுடைமை ஆகும்.

அப்படி கேவலநமஸ்காரம் செய்ததின் பலன் :

ஞானதேவனாகிய நான், இப்படி நமஸ்கரித்துவிட்டு, சொல்வதை, தேவரீர் கேட்டருளவேண்டும். ஹே ஸ்வாமி, என்னிடத்தில் ப்ரேமை பாராட்டி நீர் என்னை க்ருபையுடன் கடாக்ஷித்ததால், நான் ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுந ஸம்வாதம் என்னும் ப்ரயாகையில், வடவ்ருக்ஷமாய் நிற்கப்பெற்றேன். முன் ஒருக்கால் பால் கொடுக்கவேண்டும் என்று ப்ரார்த்தித்தவனான உபமன்யுவுக்காக, பரமசிவன் க்ஷீரஸாகரத்தையெல்லாம், ஓர் கிண்ணியி லடக்கி அவன் முன்னால் வைத்தாற்போலும், அன்றியும் கோபித்துக் கொண்டிருந்த பாலகனான த்ருவனை ஸமாதானப் படுத்துவதற்காக, வைகுண்டாதீசன் த்ருவபதம் என்ற சிற்றுண்டியை அவனுக்குக் கொடுத்தாற்போலும், ப்ரஹ்மவித்யையை ப்ரதிபாதிக்கும் நூற்களிற்குள், அரசன் என்றும், ஸகல சாஸ்த்ரங்களுக்கும் விச்ராந்திஸ்தானம் என்றும், சொல்லத்தக்கதான பகவத் கீதையி னர்த்தத்தை, ஓவிகளாகப் பாடுவதற்கு வேண்டிய யோக்யதையை, நீர் எனக்குச் செய்துதந்தீர்.. சப்தஜாலமான சாஸ்த்ரங்க ளென்னும் காடெல்லாம் தேடித் திரிந்தாலும்,

எந்த ப்ரஹ்மஞாநத்தை ஸம்பாதித்துக் கொடுக்கும் ஓர் அக்ஷரம் கூட கிடைக்காதோ, அந்த ப்ரஹ்மஞாநம் யதேஷ்டமாயும் அநாயஸமாயும் கிடைக்கும்படி அதை ஏராளமாய்ப் பலித்துத்தரும் கல்பதருவாக, என்னுடைய வாக்கே உம்முடைய க்ருபையால் செய்யப்பட்டதாயிற்று. தேஹத்தைத்தவிர வேறொன்றையும் அறியாதிருந்த என்னுடைய புத்தியானது, ஆத்மா நுபவாநந்தம் என்னும் பண்டங்கள் நிறைத்து வைத்திருக்கும் பண்டக சாலையாயிற்று. என்னுடைய மனஸு கீதார்த்தம் என்னும் பாற்கடலில் ஜலசயநம் பெற்றது. உம்முடைய கார்யங்களில் ஒவ்வொன்றும், இப்படி ஆச்சர்ய கரமாயும், அபாரமாயும் இருப்பதால், அவை என்னால் வர்ணிக்கமுடியாதவையா யிருக்கின்றன. அப்படி இருந்தும், துடுக்குத்தனமாய் உம்முடைய பெருமையைக் கொஞ்சம் வர்ணித்ததான என் அபசாரத்தை, நீர் பொறுத்தருள வேண்டும்.

கீழே நடந்துபோன விஷயத்தின் ஸிம்ஹாவலோகநம் :

இதுவரைக்கும் உம்முடைய க்ருபாப்ரஸாதத்தின் பலத்தைக்கொண்டு, பகவத்கீதையின் முதற் பாதியை, ஓவிபத்தமான ஓர் ப்ரபந்தத்தால், வ்யாக்யாநம்

செய்துவைத்தேன். முதல் அத்யாயத்தில் அர்ஜுநனுடைய துக்கமும், இரண்டாவதில் யோகமானது. தெளிவாய்த் தெரியும்படி, ஸாங்க்யயோக மென்றும் புத்தியோகம் என்றும் இருவகைப்படுத்தப்பட்டு வர்ணிக்கப்பட்டது. மூன்றாவதில் கேவலமான கர்மங்களும், நான்காவதி லக்கர்மங்கள் ஞாநத்தோடு கலந்தும், ஐந்தாவதில் யோகாப்யாஸத்தின் பெருமையும், எடுத்து வர்ணிக்கப்பட்டன.

அதே யோகாப்யாஸமானது, ஆஸநம்போடுவது முதற்கொண்டு, க்ரமமாய் ஸமாதியில் ஜீவன் ப்ரஹ்மஸ்வரூபத்தில் லயம் அடைந்துபோகும் வரைக்கும், ஸாங்கோபாங்கமாய் ஆறாவது அத்யாயத்தில் சொல்லப்பட்டது மல்லாமல், அந்த அத்யாயத்திலேயே யோகப்ரஷ்டனுடைய கதி முதலிய எல்லா விஷயங்களும் தெளிவாய் உரைக்கப்பட்டன. பின்பு ஏழாவது அத்யாயத்தில் ப்ரக்ருதியின் உத்பத்தியும் லயமும் வர்ணிக்கப்பட்டு, புருஷோத்தமனிடத்தில் பக்தி பாராட்டி நிற்கிறவர்களின் நால்வகைகளும் சொல்லப்பட்டன. பின்பு அர்ஜுநனுடைய ஏழு கேள்விகளும், அவற்றிற்கு ச்ரீக்ருஷ்ணன் உத்தரமும், தேஹத்தைவிட்டு புறப்படும் காலவிசேஷங்களை அநுஸரித்து ஏற்படும், கதி விசேஷங்கள் விஷயமாய்ச் சொல்ல வேண்டிய அனைத்தும், பூர்ணமாய் எட்டாவது அத்யாயத்திற் சொல்லப்பட்டன்.

ஒன்பதாவது அத்யாயத்தின் பெருமை:

கணக்கிட முடியாத வாக்யங்களால் அமைந்த வேதங்களின் தாத்பர்யங்கள் அனைத்தும், மஹாபாரதம் ஒன்றிற்குள் அடங்கிப்போய், அந்த மஹாபாரதம் முழுவதிலும் அடங்கி இருக்குமனைத்தும், ச்ரீக்ருஷ்ணார்ஜுந ஸம்வாதரூபமான இந்த பகவத்கீதையில் அடங்கிப்போயிற்று இந்த கீதையின் எழுநூறு ச்லோகத்திலும் அடங்கி யிருக்கும் அனைத்தும், ஒன்பதாவது அத்யாயம் ஒன்றிலேயே அடங்கிப் போயிருக்கிறது.

இந்த ஒன்பதாவது அத்யாயத்தை நான் வ்யாக்யானம் செய்தது ஸத்குருக்ருபையின் கார்யம் :

ஆகவே ஒன்பதாவது அத்யாயத்தின் விஷயத்தை வாய்திறந்து சொல்வதற்கு, வேதங்களே பயப்படுகின்றன. இப்படி இருக்க, அந்த அத்யாயத்தின் விஷயத்தை நான் சொல்லிவிட்டேன், என்று ஓர் கர்வம் பாராட்டுவது ஸரியாகுமா? வெல்லமும் சர்க்கரையும், ஒரே

கருப்பஞ்சாற்றினின்று உண்டானவையேயானாலும், அவற்றின் ருசி வேறுவேறாய் இருப்பதுபோலும், இந்த கீதையில் உள்ள அத்யாயங்களனைத்தும் பரப்பரஹ்ம ஸ்வரூபத்தின் வர்ணனையே ஆனாலும், ஒரோர் அத்யாயம் ஒரோர் விதப்பட்டிருக்கிறது. ஒன்று ப்ரஹ்மஸ்வரூபத்தை அறிந்து, அதை வர்ணிக்கிறது; ஒன்று ப்ரஹ்மஸ்வரூபத்தின் சில சில அம்சங்களை, அங்கு மிங்குமாகப் பொருக்கியெடுத்து, வர்ணிக்கிறது; மற்றும் ஒன்று அந்தஸ்வரூபத்தை அறியப்போய், அறிந்தமை என்னும் குணத்தோடுகூட, தானும் மறைந்துபோகிறது.

இப்படி ஒவ்வொர் அத்யாயத்தின் தாத்பர்யம், ஒவ்வொர் விதமாய் வர்ணிக்கத்தக்கதாய் இருக்க, இந்த ஒன்பதாவது அத்யாயத்தின் விஷயம் இப்படிப்பட்டது, என்று சொல்வது அஸாத்யமாயிருக்கிறது. அப்படிப்பட்ட அத்யாயத்தின் அபிப்ராயத்தை, நான் விஸ்தாரமாய் வர்ணித்தது, உம்முடைய ஸாமர்த்யமே. உம்முடைய சக்தியின் பெருமையால், ஒருவனுடைய (வசிஷ்டனுடைய) வஸ்த்ரம் ஸூர்யப்ரகாசத்தை உண்டாக்கிற்று ஒருவன் (விச்வாமித்ரன்) இந்த ஸ்ருஷ்டியைப்போல் மற்றோர் ஸ்ருஷ்டியைச் செய்துவைத்தான், ஒருவன் (ஸ்ரீராமன்) ஸமுத்ரத்திற் கற்பாறைகளை மிதக்கச்செய்து, தன் ஸைந்யத்துடன் அவைகள் மேல் நடந்து ஸமுத்ரத்தைக் தாண்டிப்போனான், ஒருவன் (ஹநுமான்) பிறந்த மாத்ரத்தில், ஆகாசத்திற் போகும் ஸூர்யனைப் பழம் என்றெண்ணி ஆகாசத்திற் பாய்ந்து, அதைப் பற்றிக்கொண்டான்; ஒருவன் (அகஸ்த்யன்) தன் உள்ளங்கைக்குள் ஸமுத்ர ஜலத்தை எல்லாம் அடக்கிக்கொண்டான், அப்படியே என்னையும் அநிர்வசநீயமாயிருக்குமிந்த ஒன்பதாவது அத்யாயத்தின் தாத்பர்யத்தைச் சொல்லும் படி செய்துவைத்தீர். ஆனாலிது நிற்கட்டும்.

ஸ்ரீராமனும் ராவணனும் எப்படிப் போர்செய்தார்கள் என்று கேட்டால், "ஸ்ரீராமனும் ராவணனும் ஒருவரோடு ஒருவர் போர்செய்யவேண்டும் என்று எதிர்த்து நின்றால், எப்படி இருக்குமோ, அப்படியே" என்று சொல்லவேண்டியதாய் இருப்பது போலும், இந்த ஒன்பதாவது அத்யாயத்தில் ஸ்ரீக்ருஷ்ணன் உபந்யஸித்த விஷயம், ஸ்ரீக்ருஷ்ணனுடைய உபந்யாஸம் போலவே இருந்ததென்று, சொல்லும்படியாயிக்கிறது, இப்படிப்பட்ட இந்த அத்யாயத்தின் உவமையற்ற பெருமையை கீதார்த்தத்தை நன்கறிந்த ஞானிகளே அறிவார்கள்.

மேல் விஷயத்தின் அவதாரிகை :

இப்படி முதல் ஒன்பது அத்யாயங்களும், என் புத்திக்குத் தோன்றினபடி வ்யாக்யானம் செய்துவைக்கப்பட்டன. இதற்குமேல், இந்த க்ரந்தத்தின் உத்தரார்த்தம் ஆரம்பிக்கப்படுகிறது, அதைக் கேளுங்கள். அதில் பகவானுடைய முக்யவிபூதிகள், இவ்வகைப்பட்டன என்ற விஷயம் சொல்லவேண்டியதாய் ஏற்பட்டு, அதை ஸ்ரீக்ருஷ்ணன் அர்ஜுநனுக்குச் சொல்லப்போகிறார்.

இக்கதையை நான் உங்களுக்கு மிக்க அழகியதாயும், ரஸபூர்த்தியுள்ளதாயும் செய்து, சொல்வேன், கேளுங்கள். இது மஹாராஷ்டிரபாஷையின் அழகுகளோடு கூடினதாயிருக்கும், ஆகவே இவ்வத்யாயத்தின் சாந்தரஸம் ச்ருங்கார ரஸத்தைத் தோல்வி அடையச் செய்யும். இந்தக் கதையின் ஸாஹித்யம், ஓவிகள் என்னும் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். மூலக்ரந்தத்தின் ஸம்ஸ்க்ருத ச்லோகங்களோடு, வ்யாக்யாநரூப மஹாராஷ்டிர ஓவிகளைச் சேர்த்து வாசிக்கும்போது, பகவத்கீதையின் உண்மையான அபிப்ராயம் மனஸுக்கேற்பட்டு, எது மூலக்ரந்தம், எது வ்யாக்யானம், என்று கண்டு பிடிக்க முடியாமற்போகும். ஓர் ஸ்த்ரீயின் அவயவங்கள் அத்யுத்தமமாய் அழகு பொருந்தி இருந்து, அவைகள் தகுந்த நகைகளால் அலங்கரிக்கப் பெற்றால், அவ்வவயவங்களும் அந்நகைகளும் ஒன்றுக்கொன்று சோபையைக் கொடுத்துக்கொண்டு, எது அலங்கரிக்கப்பட்டது என்றும், எது அலங்காரம் என்றும், நிர்ணயித்துச் சொல்ல முடியாது போவது போலும், தேசீயமான மஹாராஷ்டிரபாஷையின் ஓவிகளும், ஸம்ஸ்க்ருத பாஷையின் ச்லோகளும், ஒரே கீதார்த்த மென்னும் ஸுகாஸநத்தின் மேல் உட்கார்ந்து கொண்டு, அழகாய் விளங்கப்போகின்றன.

இந்தக் கதையைக் கேளுங்கள். மூலச்லோகத்தால் ஸ்புரித்தபாவத்தை, வ்யாக்யாநத்தால் நிரூபிக்கத் தலைப்படவே, ரஸவ்ருத்திகள் பாட்டம் பாட்டமாய்ப் பொழியத்தொடங்கி, சாதுர்யமானது தனக்குப்பெருமை ஏற்பட்டதாக ஸந்தோஷப்படும். இப்படி மஹாராஷ்டிர பாஷையின் அழகுகளை யெல்லாம் எடுத்துக்கொண்டுவந்து, ச்ருங்காராதி ரஸங்களுக்கு தாருண்யத்தை உண்டுபண்ணிவைத்து, விலை மதிக்கமுடியாததான கீதாதத்வத்தை வெளிப்படுத்தி வைப்பேன். இந்த சராசராத்மக ஜகத்துக் கெல்லாம் பூஜ்யனானவனும், மிக்க சாதுர்யத்தோடு கூடிய புத்திபடைத்தவர்களைக் கூட ஆச்சர்யப்படும்படி

செய்துவைக்க வல்லவனுமான, யாதவகுலத்லைவன் உபந்யஸித்ததை, நான் இவ்விதம் தெரிவிப்பேன், கேளுங்கள். அந்த ஸ்ரீஹரி, "எல்லா தத்வார்த்தங்களையும் யதாவத்தாய் க்ரஹிக்கத்தக்க ஸாமர்த்ய முள்ளவனாய் இருக்கிறாய்," என்று அர்ஜுனனை மிக்கக் கொண்டாடி, மேல் விஷயத்தைச் சொல்லப்புகுந்தார்.

श्रीभगवानुवाच ।
भूय एव महाबाहो शृणु मे परमं वचः ।
यत्तेऽहं प्रीयमाणाय वक्ष्यामि हितकाम्यया ॥१॥

ஸ்ரீபகவானுவாச -

பூய யேவ மஹாபாஹோ ஶ்ருணு மே பரமம் வச: ।
யத்தேऽஹம் ப்ரீயமாணாய வக்ஷ்யாமி ஹித காம்யயா ॥ 1

பகவான் அர்ஜுனனுடைய கவனத்தைக் கொண்டாடல் :

நான் கீழே சொன்ன விஷயங்களில், நீ செலுத்திய கவனத்தை, நன்றாய்ப் பார்த்தேன். அது கொஞ்சமேனும் குறைவு படாமல் ஸம்பூர்ணமாய் இருந்தது. ஓர் குடத்தில் கொஞ்சம் கொஞ்சம் நீரை வார்த்து, அது ஒழுகிப்போகாமல் உள்ளேயே தங்கியிருக்கிறதா, என்று பார்த்துக்கொண்ட பிறகு தான், அதை ஜலத்தால் நிறைத்து வைக்கவேண்டும். அப்படியே, உனக்கு சில விஷயங்களைச் சொல்லி வைத்துப் பார்த்தேன், இப்போது இன்னும் விசேஷமான விஷயங்களைச் சொல்லி வைக்கவேண்டும், என்று தோற்றுகிறது.

யோக்யதை நிர்ணயிக்கப்படாமல் இருக்கும் புது வேலைக்காரன் வழியில் விலையுயர்ந்த ஸாமான்களை தவறி விழுந்து போனவை போல் வைத்து, அவன் யோக்யன் என்று ஏற்பட்ட பின், அவனை பொக்கிஷசாலையில் வேலைக்கு வைத்துக் கொள்வது போல், உன்னைப் பரிக்ஷித்துப் பார்த்தபின், நீ என்னுடைய விலையுயர்ந்த ஸாமான்களை பத்ரம் பண்ணி வைக்கத்தக்க வீடாய் இருக்கிறாய், என்று தெரிந்துகொண்டேன். இப்படி அர்ஜுனனைப் பார்த்து ஸர்வேச்வரன் அதிப்ரேமையோடு பேசி, பின்பு ஓர் மலையைப் பார்த்ததும், அதின்மேல் மேகங்கள், ஒன்று சேர்ந்து, மழை சொரிவது போலும், க்ருபாளுக்களுக்குள் அரசனான ஸ்ரீ க்ருஷ்ணன் சொல்லத் தொடங்கினார்.

பகவான் அர்ஜுனனுக்குச் செய்து வைக்கும் நன்மையை தனக்கே தான் செய்துகொண்டதாய் பாவித்தல் :

நீண்ட கைகளையுடைய அர்ஜுனா, நான் உனக்கு முன்னமேயே சொல்லி வைத்திருக்கும் விஷயத்தையே, திரும்பவும் சொல்லப்போகிறேன், கேள். வர்ஷம் ப்ரதிவர்ஷம் பூமியைப் பயிர்செய்வதால், மேன் மேலும் தான்யம் விளைவதைப் பார்த்து, பூமிக்கு ஸொந்தக்காரன் அப்படிப் பயிர்செய்வதில் ஏற்படும் ச்ரமத்தை, ஒரு ச்ரமமாக எண்ணுவதில்லை. மேன்மேலும் தங்கத்தைப் புடம் போடுவதினால் தங்கத்தின் மாற்று அதிகப்படுகிறதைப் பார்த்து, தட்டான் தங்கத்தை, திரும்பத் திரும்ப, புடம் போடுவதற்கே ஆசைப்படுகிறான். அப்படியே இந்த விஷயத்தில்நீ என்னிடத்திலிருந்து உபகாரம் பெற்றதாக, நீ நினைக்கக் காரணமே இல்லை. என் ப்ரயோஜநத்தை உத்தேசித்தே, நான் மேன்மேலும் வியவஹரிக்கிறேன். குழந்தைக்கு நகைகளைப் பூட்டி அலங்கரித்தால், அதின் ப்ரயோஜனம் ஒன்றும் குழந்தைக்கு ஏற்படுவதில்லை. அதைத்தாய் பார்த்து ஆனந்தப் படுகிறாள். அப்படியே உனக்கு மேன்மேலும் நன்மை ஏற்படும் போதெல்லாம், என்னுடைய ஸுகம் தான் அதிகரிக்கிறதாய் இருக்கிறது. ஆனால் இவ்வளவு ஆலங்காரிக பாஷணம் (சாதுர்யமான பேச்சு) போதும். எனக்கு என்னவோ உன்னைக் காணக்காண, உன்மேல் ப்ரேமை அதிகரிக்கிறது. உன்னுடன் எவ்வளவு போது தான் பேசிக் கொண்டிருந்தாலும், எனக்கு த்ருப்தி உண்டாவதில்லை. இந்தக் காரணத்தைக் கொண்டே, உனக்குச் சொன்னதையே, திருப்பித் திருப்பிச் சொல்கிறேன்.

இந்த அத்யாய விஷயத்தின் துவக்கம் :

ஆனால் இந்த விஷயத்தை இன்னும் வளர்த்தாமல், மேற் கதையைச் சொல்வேன். இதைக்கேள் அப்பா, கேள். நான் இப்போது சொல்லப் போகிறது அதிரஹஸ்யமாயும், அதியுத்தமமாயும் இருக்கப்போகிறது. இது வெறும் பேச்சாய் இராமல், பேச்சுக்கள் என்னும் ஆபரணங்களைப் பூண்டு கொள்ள, பரப்ரஹ்மமே உன்னை ஆலிங்கனம் செய்து கொண்டு வந்தது, என்று சொல்லும்படியாய் இருக்கிறது. நீ என்னை ஸரியாய், அறியவில்லை அல்லவா; பார், இங்கே உன்னோடுபேசிக் கொண்டிருப்பவனாகக் காணப்படுகிற நான், உண்மையாக விச்வம் முழுவதுமாகவே இருக்கிறேன்.

न मे विदुः सुरगणाः प्रभवं न महर्षयः ।
अहमादिर्हि देवानां महर्षीणां च सर्वशः ।। २ ।।

ந மே விது: ஸுரகணா: ப்ரபவம் ந மஹர்ஷய: ।
அஹமாதிர்ஹி தேவானாம் மஹர்ஷீணாம் ச ஸர்வஶ: ।। 2

பகவத் ஸ்வரூப ஞானம் ஸாமான்யமாய் ஜீவர்களுக்குக் கிடைக்காது :

என் ஸ்பரூப விஷயத்தில், வேதம் ஊமையாய்ப் போயிற்று. மனஸும் ப்ராணவாயுவும், என்னை வந்துசேர முடியாமற் போகின்றன. ராத்ரிகாலம் ஏற்பட்டாமல் இருக்கும்போதே, ஸூர்யனும் சந்த்ரனும் என்னை ப்ரகாசிக்கச்செய்ய முடியாதவர்களாய், தங்கள் ப்ரகாசத்தை இழந்து போகிறார்கள். கர்பத்திலிருக்கும் சிசுவானது, தன் தாய்க்கு எவ்வளவு வயஸாயிற்று, என்னு கண்டுகொள்ள அஸமர்த்தமாய் இருக்கிறது போலும், நான் தேவர்களி லொருவராலும் அறிய முடியாதவனா யிருக்கிறேன். அன்றியும் ஜலஜந்துக்கள் ஸமுத்திரத்தின் ஆழத்தை தெரிந்து கொள்ள முடியாதவனாய் இருப்பது போலும், ஓர்கொசு ஆகாசத்தைத் தாண்டி அப்புறம செல்ல சக்தி அற்றதாயிருப்பது போலும், மஹரிஷிகளுடைய ஞானம் என்னை அறியமுடியாமல் இருக்கிறது.

நான் எவன் என்றும், என்னுடைய பெருமை எவ்வளவென்றும், எவனுக்குக் குழந்தையாய், எங்கே பிறந்தேன் என்றும், இதை நிர்ணயிப்பதில் கல்பங்கள் மேல் கல்பங்கள் கடந்துபோயின; ஏனென்றால், மஹர்ஷிக ளாகட்டும், தேவர்களாகட்டும், மற்ற எவர்களானாலும் ஆகட்டும், எல்லாருக்கும் முன்னால் நான் இருந்தவ னாகையால், அவர்களுக்கு என் வரலாற்றை அறிவது அஸாத்யமா யிருக்கிறது. மலையிலிருந்து கீழே விழுந்த ஜலமானது, திரும்ப மலையின்மீது ஏறிக்கொள்ளுமேயாகில், மேல்நோக்கி வளர்ந்து கொண்டிருக்கும் மரத்தின் நுணி, வேரைவந்தடையப் பெறுமேயாகில், என்னிடத்திலிருந்து உண்டான இந்த ஜகத்து என்னை அறிய முடியும். ஆலம் வ்ருக்ஷத்தினின் றுண்டான ஆலம் விதையானது, வநம்போல் விஸ்தரித்திருக்கும் அந்த வ்ருக்ஷத்தை மூடிக்கொள்ளுமே யாகில், அல்லது ஸமுத்ரம் ஓர் அலைக்குள் அடங்கிப் போகுமே யாகில், அல்லது ஓர் பரமாணுவுக்குள், இந்த பூகோளம் அடங்கிப்போகுமே யாகில்,

என்னிடத்திலிருந்து உண்டான ஜீவர்கள், தேவர்களாகட்டும் மஹர்ஷிகளாகட்டும், என்னை அறிய முடியும்.

यो मामजमनादिं च वेत्ति लोकमहेश्वरम् ।
असम्मूढः स मर्त्येषु सर्वपापैः प्रमुच्यते ।।३।।

யோ மாமஜமநாதிம் ச வேத்தி லோகமஹேச்வரம் ।
அஸம் மூட:ஸ மர்த்யேஷு ஸர்வபாபை: ப்ரமுச்யதே ।। 3

ப்ரஹ்மஞானியின் பெருமை :

நான் இப்படி அறிய முடியாதவனாயிருந்தும், அருமையாக எவனாவது ஒருவன் ப்ரவ்ருத்தி மார்க்கத்தைவிட்டு, இந்த்ரியங்களுக்கு முதுகு காட்டி, பின்பு தேஹத்தினின்று வேகமாய்ப் புறப்பட்டு, அதை வெகுதூரம் பின்னால் வைத்து, பஞ்சபூதங்கள் தலையின்மீது அடிவைத்தேறி, அங்கேயே நிலைபெற்று, அழுக்கற்ற தன்னாத்ம ப்ரகாசத்தின் உதவியினால், தன் கண்ணைக்கொண்டே (அபரோக்ஷமாக; தன் அநுபவஸித்தமாக) என்னுடைய பிறப்பற்றமையையும், ஆதி என்று யாதொன்றுண்டோ அதற்கும் முற்பட்டவனாயும், ஸகலலோகங்களுக்கும் மஹேச்வரனாயும் இருக்கும் என்னுடைய ஸ்வரூபத்தையும், அறிவானாகில், அவன் கற்களுக்குள் பெருமைபடைத்த ஸ்பர்சவேதிபோலும், ரஸங்களுக்குள் அம்ருதம்போலும், மநுஷ்யர்களுக்குள் என்னுடைய அம்சமென்றே நீ அறி. அவனை நடைபெற்ற ஞானத்தின் உருவ மென்றும், அவனுடைய அவயவங்கள் ஸுகம் என்பதின் முளைகளென்றும் சொல்லவேண்டும். அவன் லௌகிகர்கள் கண்ணுக்கு மநுஷ்யனாய்த் தோன்றுவதைக் கொண்டு, அவனை மநுஷ்யன் என்றெண்ணுவது கேவலம் அஞ்ஞானமாகும். அகஸ்மாத்தாக ஓர் வைரக்கல் கர்ப்பூரத்தின் நடுவில் விழுந்து, ஈரமும் பட்டு, கர்ப்பூரப்பொடி அதன்மேற் பூசிக்கொண்டு போனாலும், அதினுடைய வைரத்தன்மை நஷ்டமாய்ப் போய்விடுமா?

அப்படியே உலகத்தார்கள் நடுவில் ப்ராக்ருதனாய்த் (ப்ரக்ருதியின் விகாரங்களாகிய பஞ்ச பூதங்களின் ஸம்பந்தமடைந்தவனாக) தோன்றிய போதிலும், அவனுடைய புத்தியால், அவன் ப்ரக்ருதி ஸம்பந்ததோஷத்தை அடைந்தவனாகான். அவனைக்கண்ட பாபங்கள், தங்களுக்கு ப்ராணஹாநி நேரிடுமே என்று பயந்து, தமக்குத்தாமே அவன் முன்னின்று விலகி ஓடும். நெருப்புப் பற்றி எரியும் சந்தன

வ்ருக்ஷத்தை விட்டு, விலகி ஓடும் பாம்பைப்போல், என்னை அறிந்தவனை, ஸங்கல்பம் என்பது ஒதுக்கிக் கொண்டு போய்விடும்.

மேல்வரும் ச்லோகத்தின் அவதாரிகை :

அவ்வகையான என் ஸ்வரூபத்தை யதார்த்தமாக அறியவேண்டும் என்று உன் மனஸில் ஓர் ஆசை உண்டாகுமே ஆகில், நான் எப்படிப்பட்டவன் என்றும், என்னுடைய பாவங்கள் எப்படிப்பட்டவை யென்றும் சொல்வேன் கேள். என்னுடைய இந்த பாவங்கள், வேறுவேறு பூதங்களின் ப்ரக்ருதி விசேஷத்துக்குத்தக்கபடி, வேறு வேறு ரூபம் எடுத்து, மூன்று உலகிலு முள்ள எல்லா பூதங்களிலும் வ்யாபித்திருக்கின்றன.

बुद्धिर्ज्ञानमसम्मोहः क्षमा सत्यं दमः शमः ।
सुखं दुःखं भवोऽभावो भयं चाभयमेव च ।। ४ ।।
अहिंसा समता तुष्टिस्तपो दानं यशोऽयशः ।
भवन्ति भावा भूतानां मत्त एव पृथग्विधाः ।। ५ ।।

புத்திர் க்ஞானமஸம் மோஹ: க்ஷமா ஸத்யம் தம: ஶம: ।
ஸுகம் துக்கம் பவோ(அ)பாவோ பயம் சாபயமேவ ச ।। 4

அஹிம்ஸா ஸமதா துஷ்டிஸ் தபோ தானம் யஶோ(அ)யஶ: ।
பவந்தி பாவா பூதானாம் மத்த ஏவ ப்ருதக் விதா: ।। 5

பகவத் ஸ்வரூபத்தின் பாவங்கள் :

புத்தி, எல்லையற்ற ஞானம், புத்தி தடுமாற்றம் அடையாதிருக்கும் தன்மை, அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும் சக்தியாகிய க்ஷமை, ஸத்யம், சமம் தமம், என்ற இவ்விரண்டும், ஐந்துகளால் அநுபவிக்கப்படும் ஸுகதுக்கங்கள், ஜந்ம மரணங்கள், இப்படிப்பட்ட விகாரங்கள் அனைத்தும், என்னிடத்திலேயே உண்டாகும் பாவங்கள் ஆகும். அன்றியும் பயமும், பயமின்மையும், அஹிம்ஸையும், ஸமதையும், துஷ்டியும், தபஸும், தானமும், யசஸும், அபகீர்த்தியும், ஆகிய வேறு வேறான பாவங்கள், எங்கெங்கே இருப்பதாக நீ பார்த்தாலும், அவை அத்தனையும், என்னிடத்திலிருந்தே உண்டாய், பூதங்களிடத்திற் காணப்படுகின்றன. பூதங்கள் எவ்வாறு வேறுபட்டிருக

கின்றனவோ, அவ்வாறே என்னுடைய பாவங்களும், அவைகளிடத்தில் வேறுபட்டுக் காணப்படுகின்றன. ஒருவன் பிறக்கும் போதே, என் ஸ்வரூபஞானத்தோடு பிறக்கிறான். மற்றொருவன் சாகும்வரைக்கும் என்னை அறியாமற்போகிறான். ஸூர்யன் உதிப்பதினால் வெளிச்சமும், அவன் அஸ்தமனமடைவதால் இருட்டும் உண்டாவதால், வெளிச்சத்துக்கும் இருட்டுக்கும் அவனே காரணமாகிறான்.

அப்படியே ஜீவர்கள் என்னை அறிவதும் அறியாமற் போவதும், அவரவர்கள் பூர்வகர்மத்தின் கார்யமாகையால், என்னுடைய பாவம் அவர்களிடத்தில் வெவ்வேறாகிறது. இவ்விதமாக என்னுடைய விகாரங்களில், ஜீவஸ்ருஷ்டி அனைத்தும் சிக்கிக்கிடக்கிற தென்றறி, ஹே அர்ஜுநா. இனி இந்த ஸ்ருஷ்டியின் பாலகர்களாயும், இவ்வுலகை ஓர் நியமத்தில் வைத்து நடத்துகிறவர்களாயும், எவர்கள் இருக்கிறார்களோ, அவர்களும் என்னுடைய பாவங்களே. அப்படிப்பட்ட என்னுடைய பதினோரு விகாரங்களை, விவரமாய்ச் சொல்வேன் கேள்.

महर्षयः सप्त पूर्वे चत्वारो मनवस्तथा ।
मद्भावा मानसा जाता येषां लोक इमाः प्रजाः ।।६।।

மஹர்ஷய: ஸப்த பூர்வே சத்வாரோ மனவஸ்ததா ।
மத்பாவா மானஸா ஜாதா யேஷாம் லோக இமா: ப்ரஜா: ॥ 6

பகவானிடத்தினின்று முதலில் மனஸு உண்டாய், அதினின்றும் ஜகத்தனைத்தும் உண்டாயிற்று :

ஆகவே எல்லா குணங்களாலும் பெரியவர்கள் என்றும், மஹர்ஷிகளுக்குள் ஞாநிகளென்றும், கொண்டாடப்பட்டு ப்ரஸித்தி அடைந்த கச்யபர் முதலான ஏழு ருஷிகளும், பதினான்கு மநுக்களுக்குள் முக்யர்களான ஸ்வாயம்புவன் முதலான நான்கு மனுக்களும், ஆக இப்பதினோர் பேர்களும், ஸ்ருஷ்டியின் வ்யாபாரத்தை ஸரிவர நடத்திவைப்பதற்காக என் மனஸினின்று உண்டானார்கள். அப்போது லோகங்களின் ஓர் அம்சமும் உண்டாகாமலும், மஹா பூதங்களின் ஸமுதாயத்தைக் கொண்டு, ஓர் கார்யமும் செய்யப்படாமலும், இருந்தது.

அப்போது இவர்களுண்டாய், இவர்கள் லோகபாலர்களை நிர்மாணம்செய்து, அவர்களை ஜகத்து முழுமைக்கும்

அத்யக்ஷர்களாய்ச் செய்துவைத்தார்கள். ஆகவே இப்பதினோர் பேர்களும் ராஜாக்கள், ஜகத்திலுள்ள மற்றவர்களனைவரும், இவர்களின் கீழ் வாழும் குடிகள் ஆகிறார்கள். இவ்விதமாக இந்த விச்வவிஸ்தாரம் முழுவதும் என்னதென்றே அறி. நன்றாய்க் கவனித்துப்பார். முதலில் இருந்தது விதை ஒன்றே. அது முளைத்தபின், அடிக்கட்டை ஏற்பட்டு, அதினின்று கீழ்க்கிளைகளும், அவற்றினின்று மேற்கிளைகளும், அவற்றினின்று சிறு கிளைகளும் இலைகளும் துளிர்களும், துளிர்களினின்று பூக்களும், காய்களும், இவ்விதமாய் ஓர்மரம் என்னும் உருவம் முழுதும் ஏற்படுகிறது. இதை யோசித்துப் பார்க்கும்போது, அம்மரம் முழுதும் விதையே என்று சொல்ல வேண்டியிருக்கிறது. அப்படியே நான் ஒருவனே முன்னால் இருந்து, மனஸை உண்டாக்கி வைத்தேன். பின்பு அதினின்று ஸப்தருஷிகளும், நான்கு மனுக்களும் உண்டானார்கள். இவர்கள் லோகபாலர்களையும், லோகபாலர்கள் பலவகைப்பட்ட லோகங்களையும் உண்டாக்கிவைத்தார்கள். லோகங்களினின்று ப்ரஜாஸமூஹங்கள் உண்டானார்கள். இவ்விதமாய் இப்போது காணப்படும் விச்வமனைத்துமாக நானே விஸ்தாரமடைந்திருக்கிறேன், என்பது நிச்சயமே. ஆயினும், என் வாக்யத்தில் ச்ரத்தையும் விச்வாஸமும் பாராட்டினவர்கள் மாத்ரமே, இதை அறிவார்கள்,

एतां विभूतिं योगं च मम यो वेत्ति तत्त्वतः ।
सोऽविकम्पेन योगेन युज्यते नात्र संशयः ।। ७ ।।

ஏதாம் விபூதிம் யோகம் ச மம யோ வேத்தி தத்த்வத: ।
ஸோऽவிகம்பேன யோகேன யுஜ்யதே நாத்ர ஸம்ஶய: ।। 7

பகவத் விபூதிகள் பகவத் ஸ்வரூபத்தோ டொன்று பட்டவை என்னும் ஞானத்தோடு, செய்யப்படும் பக்தியின் பெருமை :

ஆகவே, ஹே அர்ஜுநா முன் சொல்லப்பட்ட என் பாவங்களாலும், பின்பு சொல்லப்பட்ட பதினோர் விபூதிகளாலும், ஸர்வஜகத்தும் வ்யாபிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ப்ரஹ்மதேவன் முதற்கொண்டு எறும்பு வரைக்கும் உள்ள ஸமஸ்தத்திலும், என்னைத்தவிர வேறான வஸ்துவின் வார்த்தையே இல்லை. இப்படி எவன் உண்மையாய் அறிவானோ, அவன்தான் ஞானத்தால், விழித்துக் கொண்டிருப்பவனாவான். அப்படி ஆனபின், அவனுக்கு பெரியது சிறியது என்று பாவிக்கும், பேதபுத்தி என்ற ஸ்வப்நம்

ஒருக்காலும் உண்டாகாது. நானும், என்னுடைய விபூதிகளும், என்னுடைய விபூதிகளால் அதிஷ்டிக்கப் பட்டிருக்கும் தனித்தனி ப்ராணிகளும், ஆகிய இவை எல்லாம், ஒன்றென்றே யோகிகள் தங்கள் அநுபவத்தால் அறிகிறார்கள்.

ஆகையால் எவர்கள் இப்படிப்பட்ட உத்தமமான யோகநிலையில் நின்று, ஸந்தேஹமற்ற மனோபாவத்தோடு, என்னுடன் ஒன்று பட்டுப் போனார்களோ, அவர்கள் க்ருதக்ருத்யர்க ளாய்விட்டார்கள், என்பதில் ஸந்தேஹமே இல்லை; ஏனென்றால் எவர்கள் இப்படி என்னை அபேதமாய்ப் பார்த்துக்கொண்டு, என்னை பஜித்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் அந்த பஜனையின் ஸம்ப்ரமத்தில் என்னை அடைந்து விடுகிறார்கள். ஆகையால், தானும் நானும் வேறல்ல என்ற புத்தியுடன், பக்திசெய்வது என்னும் அப்யாஸம் யாதொன்றுண்டோ, அதை அநுஷ்டிப்பதில் ஓர்வித நஷ்டமும் நேரிடாது. அப்படிச் செய்துகொண்டு வருவதில் மரணம் நேரிட்டு, அது அஸம்பூர்ணமாய் நின்று விட்டாலும், நன்மையே என்று ஆறாவது அத்யாயத்தில் (யோக ப்ருஷ்டன் விஷயமான, 6-வது அத்தியாயம், 40 முதல் 45 முடிவான ச்லோகங்களைப் பார்த்துக் கொள்க) சொல்லி இருக்கிறேன். அந்த அபேதபக்தி எப்படி இருக்கும் என்று தெரிந்து கொள்ள நீ ஆசைப்பட்டால் அதைச் சொல்வேன் கேள்.

अहं सर्वस्य प्रभवो मत्तः सर्वं प्रवर्तते ।
इति मत्वा भजन्ते मां बुधा भावसमन्विताः ॥८॥

அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்தः ஸர்வம் ப்ரவர்ததே ।
இதி மத்வா பஜந்தே மாம் புதா பாவ ஸமன்விதாः ॥ 8

உண்மையான பக்தியோகத்தின் பிரகாரம் :

நான் ஒருவனே இந்த ஜகத் அனைத்துக்கும் உத்பத்தி ஸ்தானம். அன்றியும் அவைகள் ஜீவித்திருந்து வளர்வதற்கு வேண்டிய அனைத்தும், என்னிடத்திலிருந்தே அவற்றிற்குக் கிடைக்கின்றன. பற்பலவான அலைகள் அனைத்தும் ஜலத்திலேயே உண்டாய், ஜலத்தின் மேலேயே நின்று, ஜலத்தைக்கொண்டே ஜீவித்துக் கொண்டிருக்கின்றன. இப்படி அவற்றின் எல்லா விஷயங்களும், ஜலமே ஆவதுபோலும், இந்த விச்வம் முழுதிலும் என்னைத்தவிர வேறொன்றும் இல்லை. இவ்விதமாகவே என்னை ஸர்வவ்யாபகனாயறிந்து, ஓர் இடம்

என்னும் நிபந்தனையில்லாமல், எல்லா இடங்களிலும், உண்மையாய் ஏற்பட்ட ப்ரேமையுடன், என்னை பஜித்துக்கொண்டு, தேசகாலவர்த்தமானங்க ளனைத்தையும் நானாகவே பாவித்து, ஆகாசமானது· வாயுவாய் ஆகாசத்திலேயே ஸஞ்சரிப்பது போலும், ஆத்மஞாநியாய் இருந்து கொண்டு, ஸர்வவ்யாபகனான என்னை மனஸில் நிறைத்து வைத்துக்கொண்டு, மூன்று லோகங்களிலும் திரிந்து, ஆநந்தமாய்க் காலத்தைப் போக்கிக்கொண்டு, பார்த்ததை எல்லாம பகவான் என்றெண்ணிக்கொண்டு, ஒருவன் இருப்பானே ஆகில், அதுதான் என் விஷயமான பக்தி யோகம் என்று நிச்சயமாய் அறி.

मच्चित्ता मद्गतप्राणा बोधयन्तः परस्परम् ।
कथयन्तश्च मां नित्यं तुष्यन्ति च रमन्ति च ।।९।।

மச்சித்தா மத்கத ப்ராணா போதயந்தः பரஸ்பரம் ।
கதயந்தஶ்ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச ॥ 9

இதுவுமது :

அவர்கள் தங்கள் சித்தத்தால் நானே ஆய்விட்டவர்களாய், என்னைக் கொண்டே தங்களுடைய ப்ராணனை த்ருப்தி செய்து கொண்டவர்களாய், என் ஸ்வரூபஞானத்தில் அழுந்திக்கிடந்து, தாங்கள் ஜீவித்திருப்பதையும், தங்களுக்கு ஒருக்கால் மரணம் உண்டென்பதையும் மறந்தவர்களாய், அந்த ஞானத்தினால் ஏற்பட்ட மயக்கத்தின் உன்மாத தசையில், ஒருவரோடொருவர் ஸம்வாதம் செய்தல் என்னும் பெயரை வைத்து, குதித்தாடிக்கொண்டு, ஒருவரோ டொருவர் அந்த ஞானத்தின் கொடுக்கல்வாங்கலைச் செய்து கொண்டிருப்பார்கள். பக்கத்துக்குப் பக்கமாயிருக்கும் இரண்டு தடாகங்கள், ஜலத்தால் நிறைந்துபோய், ஒன்றோடொன்று கலந்து போனால், எப்படி இரண்டும் ஒரே வெள்ளமாய்ப் போய், அலைகளே அலைகளின் வீடாய் ஏற்பட்டு, அவை ஒன்றோடொன்று மோதிக்கொண்டு நிற்குமோ, அப்படியே இவ்வகைப்பட்ட உத்தம பக்தர்கள், ஒருவரோ டொருவர் சேர்ந்தால், அவர்களுடைய ஆநந்தாநுபவம் என்னும் அலைகள் பரஸ்பரம் மோதிக் கொண்டு, ஆத்மபோதமானது ஆத்மபோதத்தின் அழகைப் பூண்டு, ஆத்மபோதத்துக்கே மினுக்கிக் காட்டும். ஸூர்யன், தன் ப்ரகாசத்தைக் கொண்டு, மற்றோர் ஸூர்யனுக்கு ஆரத்தி எடுத்தாற்போலும், சந்த்ரன் சந்த்ரனைக் கட்டிக்கொண்டதுபோலும், ஸமான பெருமை உள்ள இரண்டு நதிகள் ஒன்றோடொன்று கலந்தாற் போலும்,

ஸாமரஸ்யம் ஸாமரஸ்யத்தோடு கலந்து, ஓர் ப்ரயாகை ஏற்பட்டு, அந்த ப்ரயாகையின் நீர்ப்பெருக்கில் மிதந்துவந்த நுரைக்கடடிகள்போல், அவர்களுக்கு அஷ்டஸாத்விக பாவங்களும் ஏற்பட்டு, அவர்கள் ஸம்வாதம் என்னும் நாற்சந்தியில் ஸ்தாபிக்கப்பெற்ற கணேச மூர்த்திகள்போலவும், யாவராலும் பூஜிக்கத்தக்கவர்களாவார்கள்.

பின்பு அவர்கள் அந்த ஸுகத்தின் நிறைவால், தேஹாதீத நிலை அடைந்து, என் ஸ்வரூபானுபவத்தால் த்ருப்தி அடைந்து, ஏப்பம் விட்டுக்கொண்டு, கர்ஜிக்கத் தொடங்குவார்கள். குரு சிஷ்யர்கள் ஏகாந்தத்திற்கூடி, எந்த மந்த்ரத்தை உச்சரிப்பார்களோ, அந்த மந்த்ரத்தை முவ்வுலகும் கேட்கும்படி அவர்கள் உரக்கக் கூவுவார்கள். எப்படித் தாமரை மொக்கானது, மலர்ந்தபிறகு, தன் ஹ்ருதயத்திற்குள் அதுவரைக்கும் மடக்கிவைத்துக்கொண்டிருந்த மகரந்தத்தை, இன்னும் அடக்கிவைத்துக் கொள்ள முடியாததாய், ராஜா வென்றும் பிச்சைக்கார னென்றும் பாராமல், எல்லாருக்கும் ஸுகந்தத்தை வாரி இறைக்குமோ, அப்படியே தாங்கள் அருமையாய் உள்ளே வைத்துக்கொண்டு சிந்தித்துவந்த என்னுடைய குணங்களை, எல்லாரும் கேட்க அவர்கள் சொல்லி, அப்படிச் சொன்னதினால் உண்டான ஆநந்தப் பெருக்கால், அப்படிச் சொல்லிக்கொண்டிருப்பதின் நடுவில், சொல்வது தானாகவே நின்று போகும். இப்படிச் சொற்கள் நின்றுபோனபின், அவர்களுக்கு தேஹத்தில் இருக்கும் ஜீவதசையும் இல்லாமற் போகும். இப்படி ப்ரஹ்மபாவம் தலைமட்டம் கொண்டுபோய், என் ஸ்வரூபத்தோடொன்று பட்டுப்போய், அவர்கள் ராத்ரி பகல் அறியாதவர்களாய், ப்ரஹ்மபாவம் என்னும ஸுகத்தை ஸம்பூர்ணமாய் அநுபவித்துக் கொண்டு கிடப்பார்கள்.

तेषां सततयुक्तानां भजतां प्रीतिपूर्वकम् ।
ददामि बुद्धियोगं तं येन मामुपयान्ति ते ।।१०।।

தேஷாம் ஸததயுக்தானாம் பஜதாம் ப்ரீதி பூர்வகம்।
ததாமி புத்தியோகம் தம் யேன மாமுபயாந்தி தே ॥ 10

இப்படிப்பட்ட பக்தர்களுக்கு பகவான் செய்து தரும் நன்மை :

இப்படி அவர்களானபின், அவர்களுக்கு நான் கொடுக்க வேண்டியதாய் என்ன மிகுந்து நிற்கிறது? ஏனென்றால் நான் கொடுக்கக்கூடியவற்றில் உயர்ந்ததும், ப்ரஹ்மபாவம்

என்பதையும் அதிகரித்ததும், ஆன என் விஷயமான ப்ரேமை என்பது எதுவோ, அதை அவர்கள் பஜனை செய்வதினாலேயே, கைப்பற்றிக் கொண்டு நிற்கிறார்களே.

அவர்கள், எந்த பக்தி என்னும் மார்கத்தைப் பற்றிக்கொண்டு புறப்பட்டார்களோ, அவ்வழியில் நின்று பார்க்கும்போது, அவர்களுக்கு ஸ்வர்க்கத்துக்குப் போகும் வழியும், ஸாயுஜ்ய மோக்ஷத்துக்குப் போகும் வழியும், தப்பு வழிகளாய்த் தோற்றிப் போகின்றன. அவர்கள் என்மேல் ப்ரேமை பாராட்டி, என்னை பஜித்ததற்கு, நான் கொடுக்க வேண்டியது எதுவோ அதையே அவர்கள் ஸ்வாதீனம் செய்து கொண்டு நிற்கிறார்கள்.

பின்பு, அவர்களுக்கு உண்டாயிருக்கும் பக்தியின் ஸுகத்தைப் பெருக்கிக் கொடுத்தலும், அவர்கள் மேல் காலனுடைய பார்வை படாதிருத்தலும், ஆகிய இவ்வளவே, நான் அவர்களுக்குச் செய்து கொடுக்கவேண்டியதாய் ஏற்படுகிறது. தான் மிகவும் செல்லம் கொடுத்து அருமையாய் வளர்ந்துவரும் குழந்தை, விளையாடிக்கொண்டிருக்கும்போது, அதின் தாய் அதை ப்ரேமையுடன் நோக்கி, அது போகிற இடமெல்லாம் அதன் பின்னே ஓடி, அந்தக் குழந்தை தான் விளையாடுவதற்காக எந்தெந்த ஸாமான்களைக் கேட்குமோ, அந்த ஸாமான்களை பொன்னாற் செய்து கொடுப்பது போலும், நான் அவர்களுடைய பக்தியை வ்ருத்திசெய்து கொடுக்கிறேன்.

இப்படி அவர்களுடைய பக்தியைப் போஷித்துக் கொண்டுபோனால், அவர்கள் பரம ஸுகமாய் என்னை வந்தடைகிறார்களென் றறிந்து, மிக்க ஜாக்ரதையுடன் அதை அவர்களுக்குக் காப்பாற்றிக்கொடுப்பது, எனக்கு ருசித்ததாய் இருக்கும். பக்தர்கள் என்மேல் ப்ரேமை பாராட்டுவதைப் பார்த்து, அவர்களை விட்டு விலகி நிற்காதபடி, எனக்கு அவர்கள் மேல்ஆசை உண்டாகிறது; ஏனென்றால் ஸர்வ ஐச்வர்யத்தோடும் ஸம்பூர்ணமாய் இருக்கும் என் வீட்டில், ப்ரேமையுள்ள ஒருவன் மாத்ரம் கிடைப்பதில்லை.

நன்றாய்ப் பார், அப்பா, ஸ்வர்க்கஸுகம் மோக்ஷ ஸுகம் இரண்டையும் ஸித்தம் செய்து, இவ்விரண்டையும் அடையக்கூடிய வழியை என் பக்தர்கள் ஸ்வாதீனம் செய்துவைத்தேன், அதுவும் போதாதென்று லக்ஷ்மீயோடு கூடச் சேர்த்து, என் தேஹத்தையும் அவர்கள் வசம் செய்தேன். அன்றியும் இப்படி அவர்கள் வசம் செய்யப்பட்டுப்போன என் தேகத்தைக்காட்டிலும், அதிக ஸுகரூபமான என்னுடைய ஆத்மஸ்வரூபத்தையும் அவர்களுக்கு என்று, வதங்காமலும்,

வாடாமலும், ஸம்பூர்ணமாகவும், அலாக்காக எடுத்துவைத்து, பத்ரபடுத்தி இருக்கிறேன். என்னுடைய பக்தர்கள்மேல் இவ்வளவு தூரம் ப்ரேமை பாராட்டி என்னுடைய ஸுகத்தை உத்தேசித்தே, அவர்களை யென் பக்கத்திலேயே, இருத்தி வைத்துக் கொள்கிறேன். இந்த வார்த்தை வெளியில் எவரிடத்திலும் சொல்லிக்கொள்ளதக்கதாய் இல்லை.

तेषामेवानुकम्पार्थमहमज्ञानजं तमः ।
नाशयाम्यात्मभावस्थो ज्ञानदीपेन भास्वता ।।११।।

தேஷாம் ஏவானுகம்பார்த்த மஹ மக்ஞானஜம் தமः ।
நாஶ யாம்யாத்ம பாவஸ்தோ க்ஞான தீபேன பாஸ்வதா ॥ 11

இதுவுமது :

ஆத்மஸ்வரூபியான என்னை பஜிக்கிறதே அவர்கள் உயிரோடு வாழ்வதின் ப்ரயோஜனம் என்றும், என்னைத்தவிர உலகில் உள்ள அனைத்தும் வ்யர்த்தம் என்றும், அவர்கள் எண்ணியிருப்பார்கள். அவ்வுத்தம தத்வஞாநிகளுக்குமுன், கர்ப்பூரத்தால் ஏற்பட்ட தீவட்டியை என்கையில் ஏந்திக்கொண்டு, நானே சென்று, அஞ்ஞானம் என்னும் இரவின் அதிநிபிடமான (மிக்க நெருக்கமான) இருட்டை நாசம் செய்து, எப்போதும் ஸூர்யன் உதித்திருப்பதுபோல, அவர்களுக்கு ஞானப்ரகாசத்தைச் செய்துவைக்கிறேன்.

இதைக் கேட்ட அர்ஜுனனுடைய ஆநந்த உல்லாஸம் :

தன்னிடத்தில் ப்ரேமை பாராட்டும் பக்தர்கள் விஷயத்தில், மிக்க ப்ரேமைபாராட்டும் ஸ்ரீக்ருஷ்ணன் இவ்விதம் சொல்லவும், அர்ஜுநன் பின் வருமாறு சொல்லலுற்றான். "என்னுடைய ஆசைகளெல்லாம் பூர்ணமாயின. ஹே ப்ரபோ. நான் சொல்வதைச் சற்றுக் கவனிக்க வேண்டும். என்மேற் படிந்திருந்த ஸம்ஸாரம் என்னும் மலம், என்னிடத்தினின்றும் முற்றிலும் விலகிப்போயிற்று. தாய் கர்ப்பத்தில் திரும்பவும் வாஸஞ்செய்வதினின்று, நான் விடுபட்டவ னானேன். நான் பிறந்தவனானே னென்பதை, இன்று என் கண்ணாற் பார்த்தேன் (இவ்வுலகில் பிறந்தவன் எந்த லாபத்தை அடைந்தால் பிறந்தவன் என்று மதிக்கப் படுவனோ, அந்த லாபத்தை அடைந்து, என் பிறப்பு ஸார்த்தமாயிற்றென்று, நிஸ்ஸந்தேஹமாய் உணர்ந்தேன்) இப்போது தான், நான் உண்மையான வாழ்வு பெற்றேன், என்று எனக்குத்

தோற்றுகிறது. இன்று உம்முடைய முககமலத்தினின்று புறப்பட்ட வாக்யங்களைக் கேட்டு, என் ஆயஸ்ஸு ஸார்த்தசமாயிற்று. என்னுடைய பாக்யத்தக்கு உத்தமதசை ஏற்பட்டது. இப்போது உம்முடைய வாக்யம் என்னும் தேஜஸால், எனக்கு உள்ளும் புறமும் இருந்த இருட்டு ஒழிந்துபோய், உம்முடைய ஸ்வரூபத்தை யதாவத்தாய்ப் பார்க்கப்பெற்றேன்.

अर्जुन उवाच ।
परं ब्रह्म परं धाम पवित्रं परमं भवान् ।
पुरुषं शाश्वतं दिव्यमादिदेवमजं विभुम् ।।१२।।

அர்ஜுன உவாச -

பரம் ப்ரம்ஹ பரம்தாம பவித்ரம்: பரமம் பவான் ।
புருஷம் ஶாஶ்வதம் திவ்யமாதி தேவமஜம் விபும் ॥ 12

இதுவுமது :

நீர் பரப்ரஹ்மமே. பஞ்ச மஹாபூதங்களும் ஸ்ருஷ்டியின் முடிவில் தங்கள் ச்ரமத்தைப் பரிஹாரம்செய்து கொள்ளுமிடமும் நீரே. ஹே ஜகந்நாதா, நீர் பவித்ரன், பரமன், த்ரிமூர்த்திகளுக்கும் பரமான தைவதம். ப்ரக்ருதியினின்றுண்டான ஸகல பாவங்களையும், அப்பிரக்ருதியையும், தாண்டி நிற்கும், திவ்ய பாவத்தோடு கூடிய இருபத்தைந்தாவது (ப்ரக்ருதி, 1, மனது, புத்தி, அகங்காரம், 3, ஞானேந்த்ரியங்கள் 5, கர்மேந்த்ரியங்கள் 5, தன் மாத்ரைகள் 5, பூதங்கள் 5, ஆக தத்வங்கள் 24, ஆத்மா (புருஷன்) 25-வது தத்வம்) தத்வமான புருஷனும் நீரே. அநாதிஸித்தராய், விச்மனைத்துக்கும் ஸ்வாமி ஆனவனும், நீரே. உம்மிடத்தில் ஜந்மதர்மங்கள் ஓட்டுவதில்லை. இப்படிப்பட்டவெரென்று, உம்மை நான் அறியப் பெற்றேன். காலசக்ரத்தைச் சுழலச் செய்கிறவரும் நீர், ஜீவகலையின் அதிஷ்டான தேவதையும் நீர், ப்ரஹ்மாண்டத்தைத் தரிங்கி நிற்கிறவரும் நீர், என்று எனக்கு ஸ்பஷ்டமாய்த் தெரிந்து போயிற்று.

आहुस्त्वामृषयः सर्वे देवर्षिर्नारदस्तथा ।
असितो देवलो व्यासः स्वयं चैव ब्रवीषि मे ।।१३।।

ஆஹுஸ்த்வா ம்ருஷய: ஸர்வே தேவர்ஷிர் நாரதஸ் ததா।
அஸிதோ தேவலோ வ்யாஸ: ஸ்வயம் சைவ ப்ரவீஷி மே॥ 13

முன்பு நாரதாதிகள் பகவானை இப்படியே வர்ணித்திருந்தும், அர்ஜுனனுக்கு அது பயன் படாமற் போனதின் காரணம் :

இப்படி உம்முடைய ஸ்வரூபத்தை நான்வர்ணித்த தனைத்தும், மற்றோர் விதமாயும உண்மையென்று தோற்றுகிறது. அது எப்படி என்றால், இதற்கு முன்னமேயே ருஷீச்வரர்களும், உம்மை இப்படியே வர்ணித்திருக்கிறார்கள். ஆயினும்அவர்கள் செய்த வர்ணனையின் உண்மையான தாத்பர்யத்தை, உம்முடைய க்ருபையால் என் அந்தக்கரணம் இப்போதான் அறிந்து கொண்டது. நாரதருஷி அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவதுண்டு. அவர் வரும் போதெல்லாம், உம்மை இப்படியே வர்ணித்துப் பாடுவார். ஆயினும் அப்போதெல்லாம், உம்முடைய க்ருபை எனக்கு ஏற்படாதிருந்ததால், அவர் சொன்னதின் அர்த்தம், என் மனதுக் கேறாமற்போய், அது வெறும் பாட்டாகவே முடிந்து போயிற்று. எல்லாரும் குருடர்களாய் இருக்கும் ஓர் ஊரில், ஸூர்யன் உதித்தானேயானால், அவ்வூரில் இருப்பவர்களுக்கு, இளம் வெய்யிலில் குளிர்காயும் ஸுகம் ஒன்றே கிடைக்குமே தவிர, அவனுடைய ப்ரகாசம் அவர்களுக்கு என்னமாய்ப் பயன்படும்?

அப்படியே நார்தர் ஆத்ம விஷயத்தை எடுத்துப்பாடினால், வெளிப்படையான ராகாலாபன ஸுகம் மாத்ரம், எனக்குக் கிடைத்ததே தவிர, மற்ற விதமாய், என் சித்தத்துக்கு ஓர் ஞாநலாபமும் ஏற்படாமற் போயிற்று. அஸிதர், தேவலர், இவர்கள் வாயினின்றுங் கூட, இவ்விதமாகவே உம்முடைய ஸ்வரூபத்தின் வர்ணனையைக் கேட்டிருக்கிறேன். அப்போது என்னுடைய புத்தி, விஷயம் என்னும் விஷத்தால், வ்யாபிக்கப்பட்டுப் போய் இருந்தது. விஷயத்தின் பெருமை எப்படி இருக்கிற தென்றால், தித்திப்பாய் இருக்கும் பரமார்த்தமானது கசப்பாய்த் தோற்றும்; உண்மையாய் கசப்பாயிருக்கும் விஷயம் தித்திப்பாகத் தோற்றும், மேலும் இந்த விஷயத்தில், மற்றவர்களை எடுத்துச் சொல்ல வேண்டுவதென்?

ஸாக்ஷாத் வ்யாஸபகவானே, நேராக எங்கள் அரண்மனைக்கு அடிக்கடி வந்து, உம்முடைய ஸ்வரூபம் முழுவதையும், எப்போதும் சொல்லிக் கொண்டிருப்பது

வழக்கம், ஆனால், எப்படி இருட்டில் ஒருவனுக்கு சிந்தாமணி கிடைத்தால், அது சிந்தாமணி என்று தெரிந்து கொள்ளாமல், அதை எறிந்துவிட்டு, அதே சிந்தாமணியே அவனுக்கே ஸூர்யோதயமான பிறகு கிடைத்தால், அது சிந்தாமணி யென்றறிந்து அதையே பத்ரப்படுத்திக் கொள்வானோ, அப்படியே ஹே ஸ்ரீகிருஷ்ணா வ்யாஸர் முதலான ருஷிகளுடைய வார்த்தைகள், தத்வஞானங்கள் என்னும் ரத்நங்கள் நிறைந்து கிடக்கும் கனிகளாகவே இருந்தாலும், சூர்யனாகிய உம்முடைய ஸஹாயம் இல்லாமற் போனதால், அவற்றை மதிக்காது நான்உபேக்ஷித்து விட்டேன்.

सर्वमेतदृतं मन्ये यन्मां वदसि केशव ।
न हि ते भगवन्व्यक्तिं विदुर्देवा न दानवाः ।।१४।।

ஸர்வ மேத த்ருதம் மன்யே யன்மாம் வதஸி கேஶவ ।
ந ஹி தே பகவன் வ்யக்திம் விதுர்தேவா ந தானவாः ॥ 14

அவ்வர்ணனையின் உண்மை இப்போது அறியப்படுவதற்குக் காரணம் :

இப்போது உம்முடைய வார்த்தைகளாகிய ஸூர்ய கிரணங்கள், என்னுடைய ஹ்ருதயத்தில்எங்கும் பரவி, அந்த ருஷிகளால் முன் சொல்லப்பட்டிருந்தவை அனைத்தும், இப்போது தெளிவாய்த் தெரிகின்றன. அவர்கள் வார்த்தைகள் ஆகிய ஞானரூபவிதைகள், என்னுடைய சித்தம் என்னும் பூமியில் வெகு தினங்கள் புதைந்து கிடந்து, உம்முடைய க்ருபை என்னும் ஈரம்பட்ட மாத்திரத்தில், முளைத்து ஏகவாக்யதாரூப பழத்தை பழுத்துத் தந்தன. (வெளிப் பார்வைக்கு, வேறு வேறு விஷயங்களைத் தெரிவிக்கும் பல வாக்யங்கள், நன்றாய் யோசித்துப் பார்க்குங்கால், ஒருமைப்பட்டு ஒரே விஷயத்தைத் தெரிவிப்பவையாய் ஏற்படுதல் ஏகவாக்யதை ஆகும்) நாரதர் முதலிய ஸாதுக்களின்பலவகைப்பட்ட வசனங்களையும், ஏகவாக்யதைப் படுத்தி அறிந்து, நான் எல்லையற்ற ஸுகமடைந் திருப்பதால், நான் ஸுகம் நிறைந்த கடலாயும், அக்கடலில் அந்த வசநங்கள் என்னும் நதிகள் விழுந்து ஒன்று படுகின்றன என்று சொல்ல அமையும்.

ஹே ப்ரபோ, நான் எடுத்தவையான ஜந்மங்கள் அனைத்திலும், செய்த புண்யங்கள் எல்லாம், உம்முடைய க்ருபை ஒன்றாலேயே ஏற்படவேண்டியதான உம்முடைய ஸ்வரூபஞானத்தைச் செய்து கொடுக்க ஸாமர்த்யம் அற்றவை யாயின. ஆகையினால், உம்முடையக்ருபை ஒன்று

ஏற்படாதிருந்த காலத்தில், நான்மிக்கப்பெரியவர்கள் முகமாய் ஸதா உம்மைப்பற்றி கேட்டுவந்த விஷயம் அனைத்தும், ஒரு பயனும்படாமற் போயிற்று, ஆகையால் பாக்யம் அநுகூலமாய் இருக்கும்போது, செய்யப்படும் வ்யாபாரங்கள் அனைத்தும் ஸபலமாவது போலும், ஸத்குருவாகிய உம்முடைய க்ருபை ஏற்பட்டால், தத்வஞான ச்ரவணம் முதலியவை பயன் படுகின்றன. தோட்டக்காரன் தன்னாயஸ்ஸு முழுமையும் தன்னால் கூடிய பாடெல்லாம் பட்டாலும், அத்தனையும் ஸபலமாவது வஸந்தருது ஏற்ப்பட்டபின் தான். விஷமஜ்வரம் அடியோடு தீர்ந்து போன பிறகு தான், தித்திப்பான வஸ்துக்கள் நாக்குக்குத் தித்திக்கும். தேஹபுஷ்டி, ரக்தவ்ருத்தி, இவற்றிற்காக ஸேவிக்கப்பட்ட மருந்துகள், தேஹத்தில் நோய் இல்லாத போது தான் பயன்படும். இந்த்ரியங்கள் வாக் ப்ராணவாயு, இவை யனைத்தும் ஓர் தேஹத்தில் இருந்தபோதிலும், அதில் சைதந்யத்தின் ஸஞ்சாரம் இல்லாது போனல், இவற்றால் ஓர் கார்யமும் நடக்காது. அப்படியே எவ்வளவு சாஸ்த்ரங்களைப் படித்தாலும், எவ்வளவு யோகாப் யாஸங்களைப் பயின்றாலும், ஸ்ரீ ஸத்குருவின் அநுக்ரஹம் உண்டாகாதவரைக்கும், படித்தபடிப்பும், அப்யஸித்த யோகமும், நமக்குப் பயன்படாமற் போகும்.

மேலும் அர்ஜுனனுடைய உத்காரம் :

இப்படி அர்ஜுநன் நிச்சயமா யறிந்து, தான் ஸ்ரீ க்ருஷ்ணனுடைய க்ருபையால் யதாவத்தாய் ப்ரஹ்மஸ்வரூபத்தை தெரிந்துகொண்ட ஆநந்தத்தால், கூத்தாடிக்கொண்டு, பகவானைப்பார்த்து மேலும் சொன்னான். ஹே தேவா, உம்முடைய வார்த்தைகள் எனக்கு நன்றாய்ப் போதம் ஆயின. ஹே கைவல்யபதே, உம்மை தேவர்களும் தானவர்களும் அறியார்கள், என்று நீர் சொன்ன வார்த்தையின் உண்மை, எனக்கு நன்றாய்த் தெளிவாயிற்று. நீர் சொன்னவாக்யத்தின் அநுபவம் மனஸில் ஏற்படாத வரையில், தன்னை ஞானியாக எவன் நினைப்பானோ, அவன் ஓர்பதார்த்தமு மாகாதாவன், என்று நீர் சொன்னதின் உண்மையை, நான் நிச்சமாய் அறிந்தேன்.

स्वयमेवात्मनात्मानं वेत्थ त्वं पुरुषोत्तम ।
भूतभावन भूतेश देवदेव जगत्पते ।।१५ ।।

ஸ்வயமேவாத்மநாऽऽத்மானம் வேத்த த்வம் புருஷோத்தம ।
பூதபாவன பூதேஶ தேவ தேவ ஜகத்பதே ॥ 15

பகவத் ஸ்வரூபத்தை பகவத் க்ருபையாலேயே அறிய வேண்டும் :

தன்னுடைய விஸ்தாரத்தை தானே அறிய வேண்டியதாயிருக்கும் ஆகாசத்தைப் போலும், தன்னுடைய பாரத்தைத் தானே அறியவேண்டியதாய் இருக்கும் பூமியைப்போலும், ஹே லக்ஷ்மீபதே, உம்முடைய ஸர்வசக்தியையும் நீரே அறிவீர். மற்றவர்களான வேதபுருஷன் முதியவர்கள் மிக்க ஞானமுள்ளவர்களென்று பெருமை பாராட்டிக் கொண்டபோதிலும் இந்த விஷயத்தில் அவர்கள் ஞானம் பயன்படாது. மனஸை பின்தள்ளி, அதற்கு முன்னால் ஓடிநிற்பதும், வாயுவைத் திறந்த வெளியில் அடைத்து வைப்பதும், ஆதிமாயையைக் கையால் நீந்தித் தாண்டிப்போவதும், எப்படி ஸாத்யமாகும்? அப்படியே உம்மையறிவது என்ற இது, ஒருவருக்கும் ஸாத்யமில்லை. உம்மை அறிய உமக்கே ஸாத்யமாகும். ஐயா, உம்மை நீரே அறிந்து, மற்றவர்களுக்கு உம்முடைய ஸ்வரூபத்தை நீரே சொல்லவேண்டும்.

ஆகையால் உம்மை அறிய வேண்டுமென்னும் ஆர்த்தி அடைந்து, கஷ்டப்படும் எங்களுக்கு, வியர்த்துக் கொட்டுகிறதே; அந்த வியர்வையைத் துடைத்துத் தரவேண்டும். (அந்த ச்ரமத்தைத் தீர்த்து வைத்து, எங்கள் ஆசையைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும்) ஸகல பூதங்களையும் ஸ்ருஷ்டித்து வைத்தவரே, ஸம்ஸாரம் என்னும் யானையைக் கொன்று தள்ளும் ஸிம்ஹமமே, ஸகல தேவதைகளாலும் ஆராதிக்கப்பட்டவரே, ஜகத்துக்கெல்லாம் நாயகத்வம் பூண்டவரே, இது உம்முடைய காதில் ஏறிற்றா? உம்முடைய பெருமையைப் பார்த்தால், உம்முடைய பக்கத்தில் நிற்பதற்கே, எங்களுக்கு யோக்யதை இல்லை. இந்தப் பெருமையைப் பார்த்து, உம்மை ப்ரார்த்திக்க பயந்தோமாகில், நாங்கள் தெரிந்துகொள்வதற்கு வேறு உபாயம் ஏதேனும் இருக்கிறதா? நான்கு பக்கத்திலும் ஸமுத்ரமும் நதிகளும் நிறைந்திருந்தாலும், அவை சாதக பக்ஷியின் தாஹத்தைத் தீர்த்துவைக்க, ஓர் விதமாயும் ப்ரயோஜநப்படுவதில்லை. எப்போது மேகம் மழை பெய்யுமோ, அப்போது அதின் தாஹம் தீர்கிறதாய் இருக்கிறது. அப்படியே, அஞ்ஞானத்தைப் போக்கி, ஞானத்தை உண்டு பண்ணித்தரும் குருக்கள், எங்கே பார்த்தாலும் இருந்தாலும், உம்முடைய பக்தர்களாகிய எங்களுக்கு, உம்மைத்தவிர வேறே கதி இல்லை. இது கிடக்கட்டும். எனக்கு உம்முடைய விபூதிகள் இன்ன இன்ன வென்று சொல்லவேண்டும்.

वक्तुमर्हस्यशेषेण दिव्या ह्यात्मविभूतयः ।
याभिर्विभूतिभिर्लोकानिमांस्त्वं व्याप्य तिष्ठसि ।।१६।।

வக்து மர்ஹஸ்ய ஶேஷேண திவ்யா ஹ்யாத்மவிபூதய: ।
யாபிர் விபூதி பிர் லோகா நிமாம் ஸ்த்வம் வ்யாப்ய திஷ்டஸி ॥ 16

பகவத் விபூதி விஷயமாய் அர்ஜுநன் செய்த ப்ரச்நம் -

ஐயா, உம்முடைய விபூதிகளுக்குள், வ்யாபகத்வத்தாலும், சக்தியாலும், தேஜஸ்ஸாலும், சிறந்தவை எவையோ, அவற்றை நீர் எனக்குத் தெரிவிக்க வேண்டும். நீர் எந்த விபூதிகளைக் கொண்டு, மூன்று லோகங்களையும் வ்யாபித்திருக்கிறீரோ, அவற்றிற்குள் முக்யமான வையாயும், ப்ரஸித்தி பெற்றவையாயும், இருக்கும் விபூதிகளை, எனக்கு நீர் எடுத்துச் சொல்லல் வேண்டும்.

कथं विद्यामहं योगिंस्त्वां सदा परिचिन्तयन् ।
केषु केषु च भावेषु चिन्त्योऽसि भगवन्मया ॥१७॥

கதம் வித்யாமஹம் யோகிம்ஸ்த்வாம் ஸதா பரிசிந்தயன் ।
கேஷு கேஷு ச பாவேஷு சிந்த்யோ ஸி பகவன் மயா ॥ 17

இதுவுமது :

ஐயா நான் என்னமாய் உம்மை அறியவேண்டும்? உம்மை என்னமாய்ச் சிந்திக்க வேண்டும்? நீர்எல்லா ஸ்வரூபமுமாய் இருப்பதாய், நீர் சொல்வீராகில், உம்மைச் சிந்திக்க என்னால் முடியாமற் போகிறது. ஆகையால் கீழே (4, 5, 6வது ச்லோகங்களில்) உம்முடைய பாவங்களை சுருக்கமாகச் சொன்னீரே. அதையே கொஞ்சம் விஸ்தாரமாக ஒருதரம் சொல்ல வேண்டும். எந்தெந்த விபூதிகளில் நீர் இருப்பதாய், அநாயாஸமாக நான் சிந்திக்கக் கூடுமோ, அந்த விபூதிகளை, எனக்குக் காட்டிக் கொடுத்து, நான் உம்மை அடைவதற்குத் தகுந்த உபாயத்தையும், நீர் எனக்குச் செய்து தர வேண்டும்

विस्तरेणात्मनो योगं विभूतिं च जनार्दन ।
भूय: कथय तृप्तिर्हि शृण्वतो नास्ति मेऽमृतम् ॥१८॥

விஸ்தரே ணாத்மநோ யோகம் விபூதிம் ச ஜனார்தன ।
பூய: கதயத்ருப்திர்ஹி ஶ்ருண்வதோ நாஸ்தி மேঽம்ருதம் ॥ 18

அர்ஜுனன் ஶ்ரீக்ருஷ்ணனுடைய வாக்ம்ருதத்தைக் கொண்டாடல் :

இவை கீழே சொல்லப்பட்டுப் போயினவே; என்னத்துக்கு இவற்றைத் திரும்பவும் சொல்ல வேண்டும் என்று, ஓர்

அபிப்ராயத்தை நீர் மனஸில் ஏற்றிக்கொள்ள வேண்டாம். ஸாதாரணமான அம்ருதத்தின் பானமே, போதும் என்று சொல்ல உலகத்தாருக்குத் தோற்றுவதில்லை. அந்த அம்ருதமோ, காலகூடம் என்னும் விஷத்துக்குத் தம்பி, ம்ருத்யுவுக்கு பயந்து இதைப் புசித்த தேவராஜனான இந்திரனைப்போல், பதினான்கு பேர்கள் ப்ரஹ்மாவின் ஒருபகலுக்குள் பிறந்து சாகிறார்கள்.

அப்படி கேவலம் க்ஷீராப்தியின் ரஸமாய், அம்ருதத்தின் ஆபாஸமான ஒன்றுக்கு, அம்ருதம் என்று வ்யர்த்தமான பெயரிட்டு, வழங்குகிறார்களே, அதினுடைய திக்திப்பே, அதைச் சாப்பிட்டது போதும் என்று சொல்ல முடியாமல், செய்து வைக்கிறது. அந்த துச்சமான வஸ்துவுக்கே இவ்வளவு மாதுர்யாதிக்யம் இருக்குமே யாகில், உம்முடைய வாக்குகளாகிய உண்மையான இப்பரமாம்ருதத்துக்கு, எவ்வளவு மாதுர்ய மிருக்காது? இப்பரமாம்ருதம், மந்தரகிரியைச் சுழட்டி க்ஷீர ஸமுத்ரத்தைக் கடைந்த ச்ரமமில்லாமல், உம்முடைய மனஸின் உல்லாஸத்தால் ஏற்பட்டுள்ளது.

இது ஸாதாரணமான தேவாம்ருதத்தைப்போல் நீர் ஆனதல்ல, இது ஓடுவது மல்ல, கட்டியானது மல்ல. இதில் ரஸமும் இல்லை, கந்தமும் இல்லை. இது வேண்டினவனுக் கெல்லாம் ஸித்தமாயிருக்கிறது. இது நினைத்த மாத்ரத்திற் கிடைத்துப்போகிறது. இதின் ஸமாசாரத்தைக் காதாற் கேட்டவுடனேயே, ஸம்ஸாரம் என்பது பொய்யாய்ப் போய், நித்யத்வம் தனக்குத்தானே பலாத்காரமாய் நம்மை வந்தடைகிறது. ஐந்மாந்தரங்களின் வார்த்தையே நிச்சேஷமாய் இல்லாமற்போய், உள்ளும் புறமும் மஹாஸுகம் பொங்கத் தலைப்படுகிறது. மஹாபாக்யவசத்தால், ஒருவனுக்கிது ஸேவிக்கக் கிடைத்தால், அவன் ஆத்மஸ்வரூபமாகவே போய்விடுகிறான். இப்படிப்பட்ட இதை நீர் கொடுக்க, என்னுடைய சித்தம் போதும் என்று சொல்வதே இல்லை. எனக்கு உம்முடைய நாமமே, மிகவும் ருசிகரமாயிருக்கிறது. இப்படி இருக்க, உம்முடைய தர்சனமும் கிடைத்து, உம்முடைய ஸமீபத்தில் இருக்கவும் படைத்து, அதற்கு மேலும் மிக்க ஸுகம் உண்டாகும்படி, நீர் பேசவும் கிடைக்கப் பெற்றதினால், நான் அடைந்த ஸுகம் இப்படிப்பட்டது என்று என்னால் வர்ணிக்க முடியாததாய் இருக்கிறது.

ஆனால் உம்முடைய முகத்தாற் சொன்ன இந்த விஷயம், எத்தனைதரந்தான் திரும்பச் சொல்லப்பட்ட போதிலும்,

பாதகம் இல்லை, என்று இது மட்டும் எனக்குத் தெரிகிறது. ஸூர்யனுக்குப் பழமை ஏற்படுமா? அக்நிக்குத் தீட்டுண்டா? நித்யமாய் ஓடிக்கொண்டிருக்கும் கங்கா ஜலத்துக்கு விழுப்புண்டா? நீர் என்னை உததேசித்து வாய்திறந்து வெளியிட்டதான சப்தமே உருவெடுத்து, என் கண்முன் நின்றதாயிற்று. உம்முடைய வார்த்தைகளை இன்று கேட்கப்பெற்ற நான், சந்தன வ்ருக்ஷத்தின் புஷ்பத்தின் வாஸனையை முகந்து கொண்டு நிற்கிறேன். (சந்தன மரத்துக்குப் பூவில்லை. அதின் கட்டையே மிக்க ஸுகந்தம் உள்ளதாகையால், அதற்குப் பூ உண்டானால், அப்பூ எத்தனையோ வாஸனநவத்தாயிருக்க வேண்டும். ஒரு நாளும் கிடைக்கக் கூடாததான ஸுகத்தை அநுபவிக்கப் பெற்றேன், என்பது வாக்யார்த்தம்)

இப்படி பார்த்தன் சொன்னதைக் கேட்டு ஸ்ரீக்ருஷ்ணனுடைய தேஹம் முழுவதும் ஆநந்தத்தால் பக்கத்துக்குப்பக்கம் அசைவுற்றது. பின்பு ஸ்ரீக்ருஷ்ணன், "இவன் பக்தி ஞானங்கள் இரண்டும் வளிக்கும் வீடானான்," என்று நிச்சயித்துக் கொண்டு, மனம் மகிழ்ந்து, ஹ்ருதயத்தில் பொங்கத்தலைப்பட்ட ப்ரேமையை மிக்கக் கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டு, அர்ஜுநனைப் பார்த்துச் சொல்லத் தொடங்கினார்.

श्रीभगवानुवाच ।
हन्त ते कथयिष्यामि दिव्या ह्यात्मविभूतयः ।
प्राधान्यतः कुरुश्रेष्ठ नास्त्यन्तो विस्तरस्य मे ।।१९।।

ஸ்ரீபகவாநுவாச -

ஹந்த தே கதயிஷ்யாமி திவ்யா ஹ்யாத்மவிபூதய: ।
ப்ராதான்யத: குரு ஶ்ரேஷ்ட நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே ॥ 19

பகவத் விபூதிகளில் முக்யமானவையே சொல்ல முடியும் :

பிதாமஹனான ப்ரஹ்மதேவனுக்கு, தான் பிதா என்பது பகவானுக்கு நன்றாய்த் தெரிந்திருந்தும், அதை மற்ந்து போய், அர்ஜுநனைப் பார்த்து, "அப்பா, அர்ஜுநா, நீ நல்லவேலை செய்தாய்" என்றார். அர்ஜுநனைப் பார்த்து, பகவான் அப்பா என்று சொன்னாரே; அதில் நாம் ஆச்சர்யப்படத்தக்க

தொன்று மில்லை. அவர் நந்தனுக்குப் புத்ரனாகப் பிறக்கவில்லையா? ஆனால் இந்த ஸமயத்தில் இதை இத்தோடு நிறுத்திவிட வேண்டும்.

இப்படி அநேக அதிசங்களை, ப்ரேமையின் ஆதிக்யம் செய்துவைக்கிறது. பகவான், இப்படிப்பேசி, "ஹே தநுர்தரா, நான் சொல்வதைக்கேள்," என்று சொன்னார். என்னுடைய விபூதிகளைச் சொல்ல வேண்டும் என்று ப்ராத்தித்தாய் அல்லவா? அந்த விபூதிகள் எல்லையற்றவையாய் இருப்பதால், அவை என்னைச் சேர்ந்தவையாய் இருந்தாலும், என்னால் கணக்கிட முடியாதனவாய் இருக்கின்றன. ஒருவன் தன் தேஹத்தில் முளைத்திருக்கும் மயிர்களை கணக்கிட முடியாதவனாய் இருப்பது போலும், என்னுடைய விபூதிகளை நான் கணக்கிட முடியாதவனாய் இருக்கிறேன். ஸ்வபாவமாகவே, நான் எப்படிப் பட்டவன் என்றும், நான் எவ்வளவு மஹிமை படைத்தவ னென்றும், எனக்கே தெளிவாய்த் தெரியாது. ஆகையால் என் விபூதிகளுக்குள் முக்யமானவையும் ப்ரஸித்த மானவையும் எவையோ, அவற்றைச் சொல்வேன் கேள்.

அவற்றைத் தெரிந்து கொண்டபின், மற்றெல்லா விபூதிகளையும் அறிந்து கொள்வாய். விதை ஒருவன் கைப்பிடிக்குள் அகப்பட்டுப்போனால், அதிலிருந்து உண்டாகத்தக்க மரம் முழுதும், அவன் கையில் அகப்பட்டுப்போனாற் போலும், ஓர் தோட்டம் ஒருவனுக்கு வசப்பட்டுப்போனால், அதில் உள்ள பழங்களும் பூக்களும் அவனுக்கு வசப்பட்டுப்போனாற் போலும், முக்ய விபூதிகள் இன்னவையென்று, தெரிந்து கொண்டால், உலகெல்லாம் தெரிந்ததாய் விடும். அப்படிச் செய்யாமல், என்னுடைய எல்லா விபூதிகளையும், தனித்தனியாய்த் தெரிந்து கொள்ளுதல் என்பது அஸாத்யமாகும்; ஏனென்றால் என்னுடைய விபூதிகளுக்கு முடிவே இல்லை. இந்த ஓர் விஷயத்தைக் கவனித்துப் பார். அளவற்றதான ஆகாசம் என் ஸ்வரூபத்துக்குள் அடங்கியிருக்கிறதல்லவா?

अहमात्मा गुडाकेश सर्वभूताशयस्थितः ।
अहमादिश्च मध्यं च भूतानामन्त एव च ।। २० ।।

அஹமாத்மா குடாகேஶ ஸர்வபூதாஶயஸ்தித: ।
அஹமாதிஶ்ச மத்யம் ச பூதாநாமந்த ஏவ ச ॥ 20

இதுவுமது :

ஹே கருட்ட மயிர்கள் உள்ளவனே, தநுர்வேத பாண்டித்யத்தில் பரமசிவன் என்று சொல்லத்தக்கவனே, நான் ஒவ்வொரு பூதங்களுக்குள்ளும் ஆத்மாவாக அமைந்திருக்கிறேன். பூதங்களுக்குள்ளே இருக்கும் அந்தக்கரணமும் நானே. அவற்றின் மேற் போர்வையாயிருக்கும் தேஹமும், நானே. எப்படி மேகங்களுக்கு உள்ளும் புறமும், கீழும் மேலும் ஆகாசமே அமைந்து அவை ஆகாசத்தினின்றே உண்டாய், ஆகாசத்திலேயே இருந்து கொண்டு, பின்பு அவை, லயம் அடையும்போது, ஆகாசமாகவே ஆய்விடுகின்றனவோ, அப்படியே ஸகலபூதங்களும் என்னிடத்திலிருந்து உண்டாய், என்னிடத்திலேயே இருந்து கொண்டு, என்னிடத்திலேயே லயமடைகின்றன. என்னுடைய விபூதிகளால், எனக்கு பஹுத்வமும் வ்யாபகத்வமும், ஏற்பட்டிருக்கிற தென்றறி. இனி உன் உயிரையே காதாய்ச் செய்து கொண்டு, நான் சொல்லப் போகிறதைக் கவனித்துக் கேள். என் விபூதிகளின் விஷயமாய், நான் கீழே சொன்னதைக் காட்டிலும், ஜாஸ்தியாய் சொல்ல வேண்டிய தொன்றுமில்லை. ஆயினும், நான் சொல்கிறேன் என்று சொல்லி விட்டபடியால், முக்யமான விபூதிகளை மாத்திரம சொல்வேன் கேள்.

आदित्यानामहं विष्णुर्ज्योतिषां रविरंशुमान् ।
मरीचिर्मरुतामस्मि नक्षत्राणामहं शशी ।। २१ ।।

ஆதித்யாநா மஹம் விஷ்ணுர் ஜ்யோதிஷாம் ரவிரம்ஶுமான்।
மரீசிர் மருதாமஸ்மி நக்ஷத்ராணாமஹம் ஶஶீ॥ 21

பகவத் விபூதிகளில் முக்யமான வற்றை எடுத்துச் சொல்லல் :

இப்படிச் சொல்லி, அந்த க்ருபாமூர்த்தியானவர் மேலும் சொல்லத் தொடங்கினார். ஆதித்யர்களுக்குள் நான் விஷ்ணு. காந்தி பொருந்திய உத்தம தேஜஸ்ஸுகளுக்குள், நான் ஸூர்யன். மருத்கணங்களுக்குள் நான் மரீசி. ஆகாசத்தில் ப்ரகாசிக்கும நக்ஷத்திரங்களுக்குள், நான் சந்திரன்.

वेदानां सामवेदोऽस्मि देवानामस्मि वासवः ।
इन्द्रियाणां मनश्चास्मि भूतानामस्मि चेतना ।। २२ ।।

வேதாநாம் ஸாமவேதோ ஸ்மி தேவாநாமஸ்மி வாஸவ: ।
இந்த்ரியாணாம் மனஶ்சாஸ்மி பூதானாமஸ்மி சேதனா ॥ 22

இதுவுமது :

வேதங்களுக்குள் ஸாமவேதமும், தேவர்களுக்குள் மருத்பந்துவான மஹாந்த்ரனும், இந்த்ரியங்களுக்குள் பதினோராவதாகிய மனஸும், பூதங்களுக்குள் இயற்கையாய் அமைத்திருக்கும் சைதந்யம் என்ற ஜீவகலையும், நானே என்றறி.

रुद्राणां शङ्करश्चास्मि वित्तेशो यक्षरक्षसाम् ।
वसूनां पावकश्चास्मि मेरुः शिखरिणामहम् ॥ २३ ॥

ருத்ராணாம் ஶங்கரஶ்சாஸ்மி வித்தேஶோ யக்ஷரக்ஷஸாம் ।
வஸூனாம் பாவகஶ்சாஸ்மி மேரு: ஶிகரிணாமஹம் ॥ 23

இதுவுமது :

ருத்ரர்கள் அனைவர்களுக்குள்ளும் மன்மதனைக் கொளுத்தினவனான சங்கரனும், யக்ஷர்கள் ராக்ஷஸர்கள் ஆகிய இவர்களுக்குள், சம்புவின் மித்ரனான குபேரனும், அன்றியும் அஷ்டவஸுக்களுக்குள் அக்நி என்பவனும், கொடுமுடிகளோடு கூடிய பர்வதங்களுக்குள், மேருபர்வதமும் நானே. இதில் ஸந்தேஹமே இல்லை,

पुरोधसां च मुख्यं मां विद्धि पार्थ बृहस्पतिम् ।
सेनानीनामहं स्कन्दः सरसामस्मि सागरः ॥ २४ ॥
महर्षीणां भृगुरहं गिरामस्म्येकमक्षरम् ।
यज्ञानां जपयज्ञोऽस्मि स्थावराणां हिमालयः ॥ २५ ॥

புரோதஸாம் ச முக்யம் மாம் வித்தி பார்த ப்ருஹஸ்பதிம் ।
ஸேநாநீநாமஹம் ஸ்கந்த: ஸரஸாமஸ்மி ஸாகர: ॥ 24

மஹர்ஷீணாம் ப்ருகுரஹம் கிராமஸ் ம்யேக மக்ஷரம் ।
யக்ஞானாம் ஜபயக்ஞோ ஸ்மி ஸ்தாவராணாம் ஹிமாலய: ॥ 25

இதுவுமது :

ஸ்வர்க்கத்தில் இந்த்ரனுடைய ஸிம்ஹாஸநத்தின் பக்கத்திலிருக்கும். மந்திரியாய், ஸர்வஞானத்துக்கும்

மூலஸ்தானமாய், புரோஹிதர்களுக்குள் சிறந்தவனான ப்ருஹஸ்பதியும், முவ்வுலகத்து ஸேநாநாயகர்கள் நடுவில் மஹா புத்திமானும், ஹரனுடைய வீர்யம் அக்நி ஸம்பந்தப்பட்டு ஜந்மித்தவனும், க்ருத்திகா நக்ஷத்ரங்களால் குழந்தையாய் வளர்க்கப்பட்டுவனுமான, கந்தக் கடவுளும், எல்லா தடாகங்களுக்குள்ளும் ஜலம் அனைத்துக்கும் நிதியான ஸமுத்ரமும், மஹர்ஷிகளின் நடுவில் தபோராசி என்று சொல்லத்தக்க ப்ருகுவும்,

ஸகல வார்த்தைகளிலும் ஸத்யத்தின் வ்யவஹாரத்தை நடத்தி வைக்கும ஓம்காரமும், ஸகல யஜ்ஞங்கள் நடுவிலும், கர்மம் என்பதின் ஸம்பந்த மில்லாததாயும், ஓம்காரம் முதலியவற்றின் உச்சாரத்தால் ஸம்பவிப்பதுமான ஜபயஜ்ஞமும், அப்படிப்பட்ட ஜபயஜ்ஞங்களுக்குள், ஸ்நாநாதி கர்மங்களை அபேக்ஷிக்காததாயும், தர்மங்களையும் அதர்மங்களையும் பாவனம் செய்து வைப்பதாயும், வேதத்தில் பரப்பரஹ்மம் என்று சொல்லப்பட்டதாயும், இருக்கும் நாமஜபயஜ்ஞமும், நிலை பெற்றனவான பர்வதங்களுக்குள் புண்யம் பெற்றதும், யாவராலும் பூஜிக்கத்தக்கது, மான ஹிமவத்பர்வதமும், நானே

अश्वत्थः सर्ववृक्षाणां देवर्षीणां च नारदः ।
गन्धर्वाणां चित्ररथः सिद्धानां कपिलो मुनिः ।।२६।।
उच्चैःश्रवसमश्वानां विद्धि माममृतोद्भवम् ।
ऐरावतं गजेन्द्राणां नराणां च नराधिपम् ।।२७।।

அஶ்வத்த: ஸர்வ வ்ருக்ஷாணாம் தேவர்ஷீணாம் ச நாரத: ।
கந்தர்வாணாம் சித்ர ரத: ஸித்தானாம் கபிலோ முனி: ।। 26

உச்சைஶ்ரவ ஸமஶ்வானாம் வித்திமாமம்ருதோத்பவம் ।
ஐராவதம் கஜேந்த்ராணாம் நராணாம் ச நராதிபம் ।। 27,

இதுவுமது :

கல்ப வ்ருக்ஷமும் சந்தநமரமும் குணத்தால் அதிகரித்தவையே யானாலும், எல்லா வ்ருக்ஷங்களுக்குள்ளும் சிறந்தது அச்வத்த வ்ருக்ஷமே. அந்த அச்வத்த வ்ருக்ஷமும், தேவ ருஷிகளுக்குள் நாரதமுனியும், கந்தர்வர்களுக்குள் சித்ராதனும், ஸித்தர்களுக்குள் கபிலாசார்யரும், உத்தமமான குதிரைகளுக்குள்

உச்சைச்ரவஸும், ராஜ்ய பதத்துக்கு அலங்காரமாக விளங்கும் யானைகளுக்குள் தேவதைகளால் கடையப்பட்ட பாற்கடலினின்று உண்டான ஐராவதமும், உலகத்தாரெல்லாரும் எவன் ஆளுகைக்குட்பட்ட ப்ரஜைகளாயிருந்து, எவனை பூஜிப்பார்களோ, அந்த ராஜாவும், ஆகிய இவர்கள் அனைவரும், என்னுடைய பலவகைப்பட்ட விபூதிகளே,

आयुधानामहं वज्रं धेनूनामस्मि कामधुक् ।
प्रजनश्चास्मि कन्दर्पः सर्पाणामस्मि वासुकिः ।। २८ ।।
अनन्तश्चास्मि नागानां वरुणो यादसामहम् ।
पितॄणामर्यमा चास्मि यमः संयमतामहम् ।। २९ ।।

ஆயுதானாம் அஹம் வஜ்ரம் தேனூநாமஸ்மி காமத்ருக் ।
ப்ரஜனஶ் சாஸ்மி கந்தர்பः ஸர்பாணாமஸ்மி வாஸுகிः ॥ 28

அனந்தஶ் சாஸ்மி நாகானாம் வருணோ யாதஸாமஹம் ।
பித்ருணா மர்யமா சாஸ்மி யமः ஸம்யமதாமஹம் ॥ 29

இதுவுமது :

எல்லா ஆயுதங்களுக்குள்ளும் நூறு அச்வமேதங்கள் செய்து முடித்த இந்த்ரன் கையில் ஏறிய வஜ்ராயுதமும், பசுக்களுக்குள் காமதேநுவும், ப்ராணிகளை உத்பத்தி செய்து வைக்கிறவர்கள் நடுவில், மன்மதனும், ஸர்ப்பங்களுக்குள் வாஸுகியும், நாகங்களுக்குள் அநந்தனும், ஸகல ஜலஜந்துக்களுக்குள்ளும் மேற்கு திக்கதிபதியாகிய வருணனும், பித்ருக்களுக்குள் பித்ரு தேவதையாகிய அர்யமனும, உலகத்தாருடைய சுபா சுப கர்மங்களை யெல்லாம் எழுதிப் பதிந்துகொண்டு, ப்ராணிகள் தங்கள் மனோ வாக் காயங்களால் செய்த கர்மங்களைக் கணக்கிட்டு, அக்கர்மங்களுக்குத் தக்கபடி பலன்களை விதித்து வைக்கிறவர்களுக்குள் ஸாக்ஷியாயிருந்து போகத்தை நியமித்து வைக்கும் யமதர்மராஜனும் நானே.

प्रह्लादश्चास्मि दैत्यानां कालः कलयतामहम् ।
मृगाणां च मृगेन्द्रोऽहं वैनतेयश्च पक्षिणाम् ।। ३० ।।

ப்ரஹ்லாதஶ்சாஸ்மி தைத்யானாம் காலः கலயதாமஹம் ।
ம்ருகாணாம் ச ம்ருகேந்த்ரோஹம் வைனதேயஶ்ச பக்ஷிணாம் ॥ 30

இதுவுமது :

தைத்யவம்சத்திற் பிறந்தவர்களுக்குள், ப்ரஹ்லாதன் நானாய் இருந்ததால், அவனிடத்தில் தைத்தயகுணங்களில் யாதொன்றும் பற்றாமற்போயின. அபஹரித்துக் கொண்டு போகிறவர்களுக்குள், மஹாகாலனும், ம்ருகங்களுக்குள் புலியும் நான். பக்ஷி ஜாதிகளுக்குள் கருடனாய் நானே ஆனதாற்றான், அவன் என்னைத் தன் முதுகிற் றூக்கிக்கொண்டு போகும் ஸாமர்த்யம் படைத்தான்.

पवनः पवतामस्मि रामः शस्त्रभृतामहम् ।
झषाणां मकरश्चास्मि स्रोतसामस्मि जाह्नवी ।। ३१ ।।

பவன: பவதா மஸ்மி ராம: ஶஸ்த்ர ப்ருதாமஹம் ।
ஜஷாணாம் மகரம் சாஸ்மி ஸ்ரோதஸாமஸ்மி ஜான்ஹவீ ॥ 31

இதுவுமது :

பூமி முழுவரையும் சுற்றிவர, ஓர் நாழிகை தர்மஸங்கூட இல்லாமல், ஒரே பாய்ச்சலில் ஏழு ஸமுத்ரங்களையும் ப்ரதக்ஷிணம் செய்து வரத்தக்க வேகமுள்ளவர்களுக்குள், வாயு நான். அர்ஜுநா, ச்ரீராமன் த்ரேதாயுகத்தில் ஸங்கடம் அடைந்து நின்ற தர்மத்துக்குத் துணைசெய்யப் புகுந்து, தன்னையே இரண்டாவது வில்லாகச் செய்து கொண்டு, (வேறோர் வில்லாளியின் ஒத்தாசை இல்லாமல், தான் ஒருவனே சத்ருக்களை எதிர்த்து நின்று, இப்படிச் செய்தது கரதூஷணர்களோடு யுத்தம் செய்த போது) எந்தப் போரிலும், விஜய லக்ஷ்மியை தன்னிடத்திலேயே வந்து சேரும்படி செய்துவைத்தான். இவனே ஸுவேலபர்வதத்தின் மேல் நின்றுகொண்டு, ப்ரதாப லங்கேச்வரனுடைய தலைகளை, ஆகாசத்தில் உதோ உதோ என்று சொல்லிக்கொண்டு தன்னிடம் ஓடிவந்த பூதங்கள் கையில், பலியாக இட்டான்.

இவன் தேவர்கள் இழந்து விட்ட அவரவர்கள் பெருமையையும் அதிகாரத்தையும், அவற்றை அபஹரித்துப்போனவர்களைத் தேடி, அவர்களிடத்திலிருந்து திருப்பிக்கொண்டு வந்து கொடுத்து, இருந்த விடம் தெரியாமல் அழிந்துபோன தர்மத்தை நிலைநிறுத்தி, ஸூர்யவம்சத்தில் ஸூர்யனாய் விளங்கினான். ஆகவே ஆயுதம் ஏந்தி சத்ருக்களை ஜயிக்கிறவர்களுக்குள் சிறந்தவனும், லக்ஷ்மீபதியுமான

ராமசந்திரன் நான். வாலுள்ள ஜலஜந்துக்களுக்குள் மகரம் நான். எல்லா நதிகளுக்குள்ளும் பகீரதனால் பூலோகத்துக்குக் கொண்டு வரப்பட்டு, ஜந்ஹு என்பவனால் விழுங்கப்பட்டு, பின்பு அவனால் தன் துடையினின்று வெளிப்படுத்தி வைக்கப்பட்டதினால் ஜாந்ஹவீ (ஜந்ஹுவின் புத்ரி) என்று ப்ரஸித்தி அடைந்த, கங்காநதி நான். இப்படியே, ஸ்ருஷ்டியிலுள்ள என்னுடைய முக்ய விபூதிகளனைத்தையும், தனித்தனியாய்ச் சொல்லிக்கொண்டு போவேனாகில், நான் ஆயிர ஜந்மங்கள் எடுத்து, அந்த ஜந்மங்கள் முழுமையிலும் வேறு வேலை செய்யாமல், அவ்விபூதிகளைச் சொல்வதிலேயே அவற்றைக் கழித்தாலும், அவ்விபூதிகளில் ஓர் பாதிகூட சொல்லி முடிவுபெறாது,

सर्गाणामादिरन्तश्च मध्यं चैवाहमर्जुन ।
अध्यात्मविद्या विद्यानां वादः प्रवदतामहम् ।। ३२ ।।
अक्षराणामकारोऽस्मि द्वन्द्वः सामासिकस्य च ।
अहमेवाक्षयः कालो धाताहं विश्वतोमुखः ।। ३३ ।।

ஸர்காணா மாதிரந்தஶ்ச மத்யம் சைவாஹ மர்ஜுன ।
அத்யாத்ம வித்யா வித்யானாம் வாத: ப்ரவத தாமஹம் ॥ 32

அக்ஷராணா மகாரோ ஸ்மி த்வந்த்வ: ஸாமாஸிகஸ்ய ச ।
அஹமேவாக்ஷய: காலோ தாதா ஹம் விஶ்வதோ முக: ॥ 33

முக்ய விபூதிக ளனைத்தையும், கேட்டறிவது அஸாத்யம் :

எல்லா நக்ஷத்ரங்களையும் பொருக்கி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று, ஒருவன் ஆசைப்பட்டால், அவன் ஆகாசம் முழுமையையும் ஒரே மூட்டையாய்க் கட்டிவைத்துக் கொள்ள வேண்டியதாய் ஏற்படுவது போலும், அல்லது பூமியில் உள்ள பரமாணுக்கள் அனைத்தையும் ஒன்று விடாமல், வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்தால், பூமியையே கக்கத்தில் இடுக்கி வைத்துக் கொள்ளும்படி ஏற்படுவது போலும், என்னுடைய விபூதிகளனைத்தையும் ஒன்றொன்றாய் அறிந்து விடவேண்டும் என்று நினைத்தவனுக்கு, என்னையே அறிந்து விடும்படியாய் ஏற்படும்.

ஓர் மரத்தின் கிளைகளையும் பூக்களையும் பழங்களையும் ஒரே தடவையாய் எடுத்துக்கொள்ள ஆசைப்பட்ட ஒருவன்,

மரத்தையே வேரோடு பிடுங்கிக் கையில் எடுத்துக்கொள்ள வேண்டியதாய் ஏற்படுவது போலும், என்னுடைய விபூதிகளனைத்தையும் தெரிந்து கொள்ள ஆசைப்பட்டால், என்னுடைய நிர்தோஷமான ஸ்வரூபத்தையே அறிந்து கொள்ள வேண்டும். இப்படி என் ஸ்வரூபத்தையே அறிந்து கொள்ளாமல், தனித்தனியாய் என் விபூதிகளைக் கேட்டு அறிந்து கொள்கிற தென்றால், இது எப்போது முடிவு பெறுகிற வேலை?

ஆகையால் உலகில் உள்ள அனைத்தும், நான் என்று ஒரே தடவையாய்த் தெரிந்துகொள். ஓர் வஸ்த்ரத்தில் குறுக்கும் நெடுக்குமாக நூலே அமைந்திருப்பது போலும், ஸ்ருஷ்டியின் தொடக்கத்திலும், முடிவிலும், நடுவிலும் இருப்பது நானே. இப்படி எங்கும் வ்யாப்தி அடைந்திருக்கும் என் ஸ்வரூபத்தை அறிந்துவிட்டால், என்னுடைய வேறு வேறு விபூதிகளை அறிவதாலாவது என்? ஆனால் என் ஸ்வரூபத்தை இப்படி அறிவது, உன் சக்தியை விஞ்சினதாய் இருக்கிறது என்கிறாய். அப்படியிருந்தால் இருந்துபோகட்டும்.

மற்றும் சில விபூதிகளின் வர்ணனை :

நீ என் விபூதிகளைக் கேட்க வேண்டுமென்று ஆசைப்படுகிறபடியால், மற்றும் சில முக்ய விபூதிகளைச் சொல்லி, இவ்விஷயத்தை முடிப்பேன், கவனித்துக் கேள். வித்யைகளுக்குள் தத்காலத்தில் நாம் விசாரித்துக்கொண்டு வருகிறதான அத்யாத்ம வித்யை நான். இவ்வித்யையை ப்ரவசனம் பண்ணுகிறவனிடத்தில் ப்ரவசநரூபமாய் நானிருக்கிறேன். என்னுடைய ஸ்வரூபம் எல்லையில்லாத தாதலால், அவ்விஷயமான ப்ரவசனம் எவ்வளவு செய்தும் முடிவு பெறுகிறதில்லை, என்பது ஸர்வசாஸ்த்ரங்களும் ஒத்துக்கொண்ட விஷயம், அதை நிர்வசநம் செய்யச் செய்ய, மேன்மேலும் சொல்ல வேண்டுமென்றே தோன்றுகிறது. கேட்கிறவர்களுடைய ஊஹாபோஹங்கள், மேன்மேலும் பெருகி, அவர்கள் வினவுவதால், அவ்விஷயத்தைச் சொல்கிறவனுக்கு மேன் மேலும் சொல்வதில் ஆநந்தம் வ்ருத்தி அடைகிறது.

இப்படி ப்ரதிபாதிக்கும் போது பரஸ்பரமாய் ஏற்படும் வாதம் எதுவோ, அது நான். அக்ஷரங்களுக்குள் அதிஸ்பஷ்டமான அதாரம் நான். பதத் தொடர்களில் உம்மைத் தொடர் நான். தொசு முதலாக ப்ரஹ்மதேவன் முடிவாக இருப்பவையான பூதராசி களனைத்தையும் வாயிற் போட்டுக்கொண்டுமென்று

தின்று விடுகிறவன் நான். மேரு மந்தரம் முதலிய பர்வதங்களோடும் சேர்த்து பூமிமுழுவதையும் ஜலமாகக் கரைத்து, அவ்வாறு ஏற்பட்ட ஏகார்ணவத்தை ஜீர்ணம் செய்துவைக்கும் ப்ரளயாக்நியையும், இறுகக் கட்டிக் கொண்டு தன்னோடு ஒன்றுபடுத்திக்கொள்ளும் வாயுவையும், விழுங்கிவிடும், ஆகாசமும், எதினுடைய வயிற்றில் அடங்கிப் போகிறதோ, அந்த எல்லையற்ற சக்தியுடைய காலனும் நான். பின்பு ஸ்ருஷ்டிக்கப்படும் அனைத்தையும் ஸ்ருஷ்டித்து வைப்பவனும் நான்.

मृत्युः सर्वहरश्चाहमुद्भवश्च भविष्यताम् ।
कीर्तिः श्रीर्वाक्च नारीणां स्मृतिर्मेधा धृतिः क्षमा ।। ३४ ।।

ம்ருத்யுः ஸர்வ ஹர ஶ்சாஹ முத்பவஶ்ச பவிஷ்யதாம் ।
கீர்திः ஸ்ரீர்வாக்ச நாரீணாம் ஸ்ம்ருதிர் மேதா க்ஷமா ।। 34

இதுவுமது :

மேலும் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஸகல பூதங்களையும் தாங்கி, அவைகளுக்கு வேண்டிய ஆஹாரத்தைக் கொடுத்து, உயிர் பிழைத்திருக்கச் செய்கிறவனும், நான் தான். கடைசியில் அனைத்தையும் ஸம்ஹரிக்கும் ம்ருத்யுவும் நானே. ஸ்திரீகளிடத்தில் என்னுடைய விபூதிகளில் மற்றும் ஏழுவகைப்பட்டவை காணப்படும். இனி அவற்றைச் சொல்வேன், கேள். எப்போதும் புதிதாகவே தோன்றும் கீர்த்தியும், ஔதார்யத்தோடு கூடிய ஸம்பத்தும் நான். நியாயம் என்னும் ஸுகரூபமான ஆஸநம் மீதேறியிருந்து, விவேகம் என்னும் மார்க்கத்தைப் பிடித்துக் கொண்டே செல்லும் அவர்களுடைய வாக்கும் நான். எந்த பதார்த்தத்தைப் பார்த்தபோதிலும், என்னையே ஞாபகப் படுத்திக் கொடுப்பதான ஸ்ம்ருதி என்பதும் நான், என்பதில் ஸந்தேஹமே இல்லை. ஸ்வஹிதத்தைத் தேடிக்கொடுக்கும். விஷயத்தில் அபாயம் முற்றிலும் அற்றதாய், இவர்களிடத்தில் காணப்படும் மேதையும், மூவ்வுலகில் எங்கு சென்றாலும் இவர்கள் விடாது கைப்பிடித்திருக்கும் தைர்யமும், க்ஷமையும் நானே. இப்படி ஸ்த்ரீகளிடத்தில் காணப்படும் இவ்வேழு குணங்களும் என் விபூதிகளே என்று. ஸம்ஸாரம் என்னும் யானைக்கு ஸிம்ஹமமான ஸ்ரீக்ருஷ்ணனை சொல்லி, தன்னுடைய மற்றும் சில விபூதிகளைச் சொல்லத் தொடங்கினார்.

बृहत्साम तथा साम्नां गायत्री छन्दसामहम् ।
मासानां मार्गशीर्षोऽहमृतूनां कुसुमाकरः ।।३५।।

ப்ருஹத் ஸாம ததா ஸாம்நாம் காயத்ரீ சந்த ஸாமஹம் ।
மாஸானாம் மார்க ஶீர்ஷோ ஹமம்ருதூனாம் குஸுமாகர: ॥ 35

இதுவுமது :

வேதராசிகளிற் சிறந்ததான ஸாமவேதத்தில், ப்ருஹத்ஸாமம் என்று கொண்டாடப்பட்ட தெதுவோ, அது "தான்" என்றும், வேதத்தின் பலவிதப்பட்ட சந்தஸ்ஸுகளுக்குள்ளும் காயத்ரீ சந்தஸ் "தான்" என்றும், மாஸங்களுக்குள் மார்கழிமாஸம் "தான்" என்றும், ருதுக்களுக்குள் புஷ்பங்கள் விசேஷித்துண்டாகும் வஸந்தருது "தான்" என்றும் லக்ஷ்மீப்ராணநாதனும் சார்ங்கம் என்னும் வில்லை கையிற் பிடித்தவனுமான ஸ்ரீக்ருஷ்ணன் சொன்னார்.

द्यूतं छलयतामस्मि तेजस्तेजस्विनामहम् ।
जयोऽस्मि व्यवसायोऽस्मि सत्त्वं सत्त्ववतामहम् ।।३६।।

த்யூதம் சலயதாமஸ்மி தேஜஸ் தேஜஸ்விநாமஹம் ।
ஜயோ ஸ்மி வ்யவஸாயோ ஸ்மி ஸத்த்வம் ஸத்வவதாமஹம் ॥ 36

இதுவுமது :

மோசம் செய்வதற்கு ஏற்பட்ட உபாயங்களுக்குள் த்யூதவிளையாட்டு என்பது எதுவோ, அது நான். ஆகையால் நாற்சந்தியில், விளையாட்டு ரூபமான அந்தத் திருட்டுத்தொழில் நடந்து கொண்டிருந்தால், அதை ஒருவரும் தடுப்பதில்லை. தேஜஸ்ஸுள்ள ஸகல வஸ்துக்களிலும் தேஜஸ்ஸும், ஒருவன் ஓர் கார்யத்தை ஆரம்பித்து எந்த பலம் கிடைக்க வேண்டு மென்று விரும்புவானோ, அந்த உத்தேசித்த பல ப்ராப்தியும நானே, என்பதில் ஸந்தேஹ மில்லை. வ்யவஸாயங்களுக்குள் நீதி யோடு கூடிய வ்யவஸாயம் என்னுடைய ஸ்வரூபம். சக்தியுள்ளவர்களிடத்தில் இருக்கும் சக்தியும் நான்.

वृष्णीनां वासुदेवोऽस्मि पाण्डवानां धनञ्जयः ।
मुनीनामप्यहं व्यासः कवीनामुशना कविः ।।३७।।

வ்ருஷ்ணீனாம் வாஸுதேவோஸ்மி பாண்டவானாம் தனஞ்ஜய:।
முனீனாமப்யஹம் வ்யாஸ: கவீநாமுஶனா கவி: ॥ 37

இதுவுமது :

யாதவர்களுக்குள் எல்லா விதமான ஸம்பத்துக்களோடும் கூடினவன் நான். நான் தேவகீ வஸுதேவர்களுக்குக் குழந்தையாய்ப் பிறந்து, ஓர் பெண்ணுக்குப் பதிலாக கோகுலம் போய்ச்சேர்ந்து, பூதனையின் உயிரை உருஞ்சிக்கொண்டேன். பால்யதசையின் மொக்கு பூவாக விகஸிப்பதின் முன்னமேயே, (பால்யதசையின் முதற்பாகம் முடிவுபெறும் முன்னமேயே) ஸ்ருஷ்டியிலேயே தானவர்க ளில்லாமற் போகும்படி செய்து, கையிற் குன்றைக் குடையாய்ப் பிடித்து, இந்த்ரனுடைய பெருமை முழுவதையும் அளவிட்டு வைத்தேன். காளிந்தி நதியின் ஹ்ருதயத்தில் இருந்த துக்கத்தைப் போக்கினேன். (காளிந்தி (யமுனை) நதியின் ஹ்ருதயம் என்று சொல்லத்தக்க மடுவிற் குடி கொண்டு, அதின் ஜலத்தை யெல்லாம் விஷமாய்ச் செய்து கொண்டிருந்த காளியனைத் துரத்தி வைத்தேன்).

நெருப்புப்பட்டெரிந்த. கோகுலத்தைக் காப்பாற்றினேன். பசுவின் கன்றுகள் விஷயத்தில், ப்ரஹமதேவனுக்கு பைத்யம் பிடிக்கும்படி செய்துவைத்தேன். பால்யதசையின் தொடக்கதிலேயே. கம்ஸன்போன்ற ஈடுஜோடில்லாத மஹா சூரர்களை, கொஞ்சங்கூட ஆயாஸ மின்றி, நாசம் செய்துவைத்தேன். இவை அனைத்தும் எவ்வளவு? என்னுடைய லீலைகள் அளவற்றமையால், அவற்றைப் பூர்ணமாய்ச் சொல்லி முடியாது. எல்லாம் நீ கண்ணாற் பார்த்தும், காதாற் கேட்டும் இருக்கிறாய். ஆகவே யாதவர்களுக்குள் அவதாரம் செய்து, இப்படி லீலைகள் செய்த இந்த வஸ்து, என்னுடைய ஸ்வரூபமே.

ஸோமவம்சத்திற் பிறந்த பாண்டவர்களாகிய உங்கள் நடுவில், அர்ஜுநனாகப் பிறந்தவனும் நானே என்றறி. ஆகையாற்றான் நம்மிருவருக்கும் நடுவில் ஏற்பட்ட ப்ரேமை, ஒருநாளும் மாறிப்போவதில்லை. நீ உலகத்தார் கண்ணுக்கு ஸந்யாஸியாக நடித்து, என்னுடைய தங்கையைத் திருடிக்கொண்டு போனாய். . அப்படிச் செய்தாயே யானாலும், உன் பேரில் எனக்கு கோபம் உண்டாகவில்லை, ஏனென்றால் நாம் இருவரும் ஸ்வரூபத்தில் ஒருவனே. முனிவர்களுக்குள் வ்யாஸபகவான் நானே. கவீச்வரர்கள் நடுவில் பெருமை படைத்தவனான சுக்ராசார்யனும் நானே, என்று யாதவர்கள் அரசனான ஸ்ரீக்ருஷ்ணன் சொன்னார்.

दण्डो दमयतामस्मि नीतिरस्मि जिगीषताम् ।
मौनं चैवास्मि गुह्यानां ज्ञानं ज्ञानवतामहम् ॥ ३८ ॥

தண்டோ தமயதாமஸ்மி நீதிரஸ்மி ஜிகீஷதாம் ।
மௌனம்சைவாஸ்மிகுஹ்யானாம்க்ஞானம்க்ஞானவதாமஹம்॥38

இதுவுமது :

தண்டனைகளுக்குள், எது செய்தும் தப்பித்துக் கொள்ளமுடியாததாயும், ஈயெரும்பு முதலாக ப்ரஹ்ம தேவன் முடிவாக இருக்கும் ஜீவராசிகள் அனைத்தையும் சிக்ஷித்து நல்வழிப்படுத்தி வைப்பதாயும் இருக்கும், பெருத்த தண்டனை எதுவோ அது நான். ஸாரஸாரவிசாரம் செய்து, தர்மத்துக்கும் ஞாநத்துக்கும் அநுகூலமாயிருக்கும், ஸகல சாஸ்த்ரங்களுக்குள்ளும் நீதிசாஸ்த்ரம் நான் தான், ஹே தைர்யசாலியாகிய அர்ஜுநா. ரஹஸ்யமான அனைத்துக்குள்ளும் மௌனம் என்பது நான். ஆகையால் வாய்திறவாது மௌநியா யிருப்பவன் முன்னால் வேதங்களை ஸதா உச்சரித்துக்கொண்டிருக்கும் ப்ரஹ்மதேவன் கூட அஞ்ஞன் ஆகிறான். அப்பா, அர்ஜுநா, ஞாநிகளிடத்தில் இருக்கும் ஞானம் நான். இவ்விஷயத்தை இத்துடன் நிறுத்த வேண்டியதா யிருக்கிறது; ஏனென்றால் இந்த விபூதிகளை எவ்வளவு நேரம் சொல்லிக்கொண்டே இருந்தாலும், இவற்றின் முடிவு காணப்படுவதாய் இல்லை.

यच्चापि सर्वभूतानां बीजं तदहमर्जुन ।
न तदस्ति विना यत्स्यान्मया भूतं चराचरम् ।। ३९ ।।
नान्तोऽस्ति मम दिव्यानां विभूतीनां परन्तप ।
एष तूद्देशतः प्रोक्तो विभूतेर्विस्तरो मया ।। ४० ।।

யச்சாபி ஸர்வபூதானாம் பீஜம் ததஹ மர்ஜுன ।
ந ததஸ்தி விநா யத்ஸ்யான்மயா பூதம் சராசரம் ॥ 39

நாந்தோ ஸ்தி மம திவ்யானாம் விபூதினாம் பரந்தப ।
ஏஷ தூத் தேஷத: ப்ரோக்தோ விபூதிர் விஸ்தரோ மயா ॥ 40

முக்யமான விபூதிகளைக்கூட முற்றவும் சொல்ல முடியாமையால், அவைகளைத் தெரிந்துக் கொள்வதற்கு உபாயகதநம் :

பூமியின்மேற் பெய்யும் மழையின் தாரைகளைக் கணக்கிட்டு விடலாம். பூமியின் மேல் முளைக்கின்ற புல்லின்

முளைகளையும், கணக்கிட்டு நிச்சயித்து விடலாம். ஆனால் ஸமுத்ரத்தின் மேல் அடிக்கும் அலைகளை மாத்ரம், ஓர் கூட்டில் வைக்க முடியாது. அப்படியே என்னுடைய முக்யமான விபூதிகளுக்கு, கணக்கேற்படுத்த முடியாது. இப்படி இருந்தாலும், கீழே சொல்லித் தீர்ந்த ப்ரகாரம், எழுபத்தைந்து சொல்லப்பட்டன. ஆயினும் முக்யமான விபூதிகளைனைத்தையும் சொல்வதற்கு, நான் முன் செய்த உத்தேசம் முடிவு பெறாமல் வீண் போயிற்று. சொல்லப்படாமல் பாக்கியாய் நின்றுபோன விபூதிகளின் கணக்கு, இவ்வளவென்று நிச்சயிக்க முடியவில்லை. ஆகவே அவற்றை, நான் எப்படிச் சொல்லிமுடித்து, நீ எப்படி கேட்டுத் தீரப்போகிறாய்? ஆகையால் இந்த விபூதிகளின் ரஹஸ்யத்தைச் சொல்லிவிடுகிறேன், கேட்டுக்கொள். எல்லா பூதங்களும் எந்த விதையினின்று முளைக்கின்றவோ, அந்த விதை நான். ஆகையால் இவ்வுலகில் நீ பார்க்கும் வஸ்துக்கூட்டங்களுக்குள், ஒன்று பெரிது என்றும், ஒன்று சிறிதென்றும், நினையாமல், உயர்த்தி தாழ்த்தி என்னும் எண்ணத்தை முற்றிலும் ஒழித்துக் கொண்டு, எல்லாம் நானென்றே பாவித்திருத்தல் வேண்டும். அன்றியும எ என் விபூதிகள் அனைத்துக்கும் பொதுவான ஓர் அடையாளம் உண்டு. அதை நீ தெரிந்து கொள்வாயாகில், இது, இது, என் விபூதியென்று, ஸந்தேஹமறக் கண்டுகொள்வாய்.

यद्यद्विभूतिमत्सत्त्वं श्रीमदूर्जितमेव वा ।
तत्तदेवावगच्छ त्वं मम तेजोंशसम्भवम् ।। ४१ ।।

யத்யத் விபூதி மத்ஸத்த்வம் ஸ்ரீமத் ஊர்ஜித மேவ வா ।
தத்ததேவாவ கச்ச த்வம் மம தேஜோம்ஸ ஸம்பவம் ॥ 41

இதுவுமது

எதெதிலெல்லாம், ஸம்பத்து தயை இவ்விரண்டும் சேர்ந்து குடிகொண்டிருக்குமோ, அவ்வஸ்துக்கள் அனைத்தும் என் அம்சங்கள் என்றறி.

अथवा बहुनैतेन किं ज्ञातेन तवार्जुन ।
विष्टभ्याहमिदं कृत्स्नमेकांशेन स्थितो जगत् ।। ४२ ।।

அதவா பஹூ நைதேன கிம் க்ஞாதேன தவார்ஜூன ।
விஷ்டப்யாஹ மிதம் க்ருத்ஸ்ந மேகாம்ஸேன ஸ்திதோ ஜகத் ॥ 42

ஜகத்தெல்லாம் பகவத்விபூதி யென்றும், எல்லாவற்றையும் ஸமமாக எண்ணி, பகவத்பஜனை செய்ய வேண்டும், என்ற முடிவான உபதேசம் :

ஆகாசத்தில் இருக்கும் ஓர் ஸூர்யனுடைய பிம்பத்தினின்று, ப்ரகாசம் புறப்பட்டு மூவுலகிலும் பரவுவது போலும், எவனொருவனுடைய ஆஞ்ஞையே ஸர்வலோகத்தாரும் அநுஷ்டித்துவருவார்களோ, அவனை ஒண்டி என்றும், நிர்தனனென்றும், எண்ணக்கூடாது. காமதேனு கேட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஸர்வஸாமான்களையும் மூட்டை மூட்டையாய் கட்டிவைத்து, தான் போகும் இடம் எல்லாம் எடுத்துக்கொண்டே போகிறதா? அதை அணுகி எவெனெவன் எந்தெந்தகாலத்தில் எதெதைக் கேட்பானோ, அவை அனைத்தையும் அப்போதே அது உண்டாக்கிக் கொடுத்து விடுகிறது.

அப்படியே விச்வத்தில் உள்ள வைபவம் அனைத்தும், அவன் தேஹத்துக்குள் அடங்கிக்கிடக்கின்றன. அப்படிப்பட்டவனைத் தெரிந்துகொள்வதற்கு, அவனை உலகத்தார் அனைவரும் நமஸ்கரித்து, அவன் ஆஞ்ஞை ப்ரகாரம் நடந்துவருவதே குறிப்பாகும். அப்படி இருக்கும் ஒருவனை என்னுடைய அவதாரம் என்றறிந்துகொள். அன்றியும் இவ்விபூதிகள் விஷயத்தில் ஸாமான்ய மென்றும் விசேஷம் என்றும் வித்யாஸம் பாராட்டுவது மஹாதோஷமாகும். ஏனென்றால் நான் ஒருவனே இவ்வுலகனைத்துமாக நிற்கிறேன். உண்மை இப்படி இருக்க, இந்த விச்வத்தில் ஸாமான்யம் என்றும், உத்தமம் என்றும கல்பனை செய்து நம்முடைய புத்திக்கு நாமே, ஓர் ப்ரயோஜநமுமின்றி, பேத மென்னும் களங்கத்தை ஏன் பூசிவைக்க வேண்டும்? நெய்யில் என்ன கசடிருக்கிறதென்று, அதைக்கடைய வேண்டும்? அம்ருதத்தை என்னத்துக்காக காய்ச்சி சுருங்கச் செய்ய வேண்டும்? காற்றுக்கு வலதுபக்கம் இடதுபக்கம் என்பது உண்டா? ஸூர்யனுக்கு, முன் பக்கம் எது, பின்பக்கம் எது, என்று ஸூர்யபிம்பித்தை உற்றுப் பார்க்கப் போனால், கண்கெட்டுப் போவதே லாபமாகும்.

அப்படியே என் விபூதி விஷயத்தில் ஸாமான்யம் என்றும், விசேஷம் என்றும், பேசுவதற்கு இடமே இல்லை. வேறு வேறாய் இருக்கும் என்னுடைய விபூதிகள் அபாரமாயிருப்பதால், அவைகளை நீ என்னமாய் கணக்கிட முடியும்? ஆகையால் என்னுடைய விபூதிகள் விஷயமாய் கேட்டது போதும், என்று உன்னுடைய ஆசையை மட்டிட்டுக்கொள். நன்றாய்ப் பார். என்னுடைய ஓர் அம்சத்தால் இந்த ஜகத் முழுவதும் வ்யாபிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் பேதங்கள் மேல் புத்தியைச் செலுத்தாமல், ஸரியாயும் ஸமமாயும் எல்லா பூதங்களிலும்

வ்யாபித்திருக்கும் என் ஸ்வரூபத்தை பஜி. இப்படி ஞானிகள் என்னும் வனத்தை ஸந்தோஷிப்பிக்கும் வஸந்தருதுவைப் போன்றவனாயும், விரக்தர்கள் ஆசைப்படும் ஒரே பலமானவனாயும், ச்ரீயுக்தனாய்ம், (லக்ஷ்மியை விட்டு ஒருக்காலும் பிரியாதவனாயும்) இருக்கும் ஸ்ரீக்ருஷ்ணன் சொன்னார்.

அர்ஜுனனுடைய ப்ரதிவசனம் :

இதைக்கேட்டு அர்ஜுநன் பின்வருமாறு சொன்னான். "ஹேஸ்வாமி, பேதம் என்றொன்று தனியாய் இருக்கிறதாயும், அதை விலக்கிவைக்க வேண்டியவனாய் நான் ஒருவன் தனியாய் இருக்கிறவனாயும் பாவித்து, ஸர்வஜ்ஞனான நீர் கூட இப்படி ஏன் பதற்றமாய்ப் பேசினீர்? நன்றாய் விசாரித்துப் பாரும். ஸூர்யன் தான் உதிப்பதற்கு முன் ஜகத்தைப் பார்த்து, உன்னுடைய இருட்டை தூரத்தில்வை, என்று சொல்கிறானா என்ன? அப்படி அவன் சொன்னாற் போலும், யோசனை இல்லாத உம்முடைய இந்த வார்த்தை இருக்கிறது, என்று உம்மைப் பார்த்துச் சொன்னால், அதிக ப்ரசங்கமாகும். உம்முடைய நாமம் ஒன்றே, எப்போதாவது ஒருவனுடைய வாயிலாவது காதிலாவது ஏறினாற்போதும். அவனுடைய ஹ்ருதயத்தை விட்டு பேதபாவம் ஓடிப்போகிறதே. அப்படிப்பட்ட பூர்ணப்ரஹ்மமாகிய நீர், என்னுடைய அத்ருஷ்டவசத்தால், என்கையில் ஜலம் வார்க்கப்பட்டு தத்தம் பண்ணப்பட்டுப்போய் விட்டீரே. பின்பு நான் எங்கே, எவ்விதமாய், பேதம் என்பதைப் பார்க்க முடியும். சந்த்ர பிம்பத்தின் கர்ப்பத்தில் நுழைந்தபின் கூட, எருக்கம் இருக்கிறதென்று சொல்வது போன்ற உம்முடைய வார்த்தை, உம்முடைய ப்ரபுத்வத்தாற்றான் ஆக்ஷேபிக்கக் கூடாததாய் இருக்கிறது."

அர்ஜுனனுடைய வார்த்தைக்கு பகவானுடைய உத்தரம் :

இப்படி அர்ஜுனன் சொன்ன உடனே, தேவன் மிக்க ஸந்தோஷமடைந்து, தன் அந்தராத்மாவால் "அர்ஜுநனை ஆலிங்கனம் செய்து கொண்டு, நான் சொன்ன வார்த்தையால் உனக்குக் கோபம் உண்டாக வேண்டாம்; நான் என்னுடைய விபூதிகளை வர்ணித்துவந்தபோது, பேதங்களைப் பாராட்டிப் பேசினேனே, அவைகளை பேதப்பட்டிருப்பதாகவே நீ மனஸில் க்ரஹித்தாயோ, அல்லது ஆத்மஸ்வரூபத்தோடு ஒன்றுபட்டவையாகவே நீ க்ரஹித்தாயா, என்று அறிந்து கொள்வதற்காக, உன்னைப் பார்த்து, இப்படி ஒரு வார்த்தை வெளிப்படையாய்ப் பேசினேன்; நான் விபூதி விஷயமாய்ச் சொன்ன வார்த்தைகளை, ஸரியான ப்ரகாரமாய் நீ அறிந்துகொண்டாய், என்று இப்போது எனக்குத் தெரியவருகிறது," என்று சொன்னார்.

அர்ஜுனனுடைய உத்தரம் :

அப்போது அர்ஜுனன், "ஹே தேவா, உம்முடைய விபூதிகள் அநேக வகைப்பட்டிருப்பதை, நீரே அறிந்து கொள்ள வேண்டும். நான் மாத்ரம் விச்வம் எல்லாம் நீரே நிறைந்திருப்பதாகவே அறிகிறேன்," என்று சொன்னான்.

ஸஞ்சயனுடைய வசனம் :

"நன்றாய்ப் பாரும், த்ருதராஷ்டிர ராஜனே அர்ஜுனன் இப்படிப்பட்ட உத்தமமான அநுபவநிலைக்கு வந்து சேர்ந்தான்," என்று ஸஞ்சயன் சொன்ன இந்த வார்த்தையைக் கேட்டும், த்ருதராஷ்டிரன் ஒன்றும் பேசாசதிருந்தான். இதைப் பார்த்து ஸஞ்சயன் பரிதபித்து தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான். "இது ஆச்சர்யப்படத் தக்கதல்லவா? இது வரைக்கும் இந்த த்ருதராஷ்டிரனுடைய உள் பக்கம் ஓர் பழுதுமில்லாமல் நன்றாய்த்தான் இருக்கிறதென் றெண்ணியிருந்தேன். ஆனால் இப்போது அவன் மனக்கண்ணும் குருடு என்று தெரியவருகிறது."

மேற்கதைக்கு ஞானதேவர் அவதாரிகை :

இது எப்படி யிருந்தாற்றான் நமக்கென்ன? அந்த அர்ஜுனனோ தன்னுடைய நன்மையையே மேன்மேலும் வ்ருத்தி செய்து கொள்வதிலேயே த்ருஷ்டியுள்ளவனாய், பின்வருமாறு ஆசை பாராட்டத் தலைபட்டான். "இப்படி என் மனஸில் இருக்கப்பட்டதான ஓர் அநுபவம், வெளிப்பட்டு, கண்ணாற்பார்க்கும்படியாய் நின்றால், நன்றாய் இருக்குமே," என்று ஓர் ஆசை அவனுக்கு ஏற்பட்டு, அவன் மனது அலையத் தொடங்கிற்று. இவன் தத்காலத்தில் கல்பதருவின் கிளையாயிருந்ததால், காய் காய்க்காது வ்யர்த்தமாய்ப் போகும் பூக்கள் (பலிக்காது வீணாய்ப் போகும் ஆசை என்னும் பூக்கள்), என்மாய் அவனிடத்தில் பூக்கும்? அவன் வாயினின்று எந்தெந்த ப்ரார்த்தனைகள் வெளிப்படுமோ, அவற்றைப் பூர்ணம் செய்து கொடுக்க ஸ்ரீகிருஷ்ணன் காத்திருக்கிறார். ப்ரஹ்லாதனுடைய வார்த்தையை உண்மையாய்ச் செய்வதற்காக, விஷத்தை கூட முழுமையும் தன் ஸ்வரூபமாகவே செய்து காட்டினவரான அவரே, அர்ஜுனனுக்கு ஸத்குருவாய்க் கிடைத்திருக்கிறார். இனி அந்த அர்ஜுனன் விச்வரூபத்தைத் தனக்குக் காட்ட வேண்டுமென்று, என்ன விதமாய் ஸ்ரீ க்ருஷ்ணனைக் கேட்கத் தொடங்குவானோ, அந்த விஷயத்தை மேல்வரும் அத்யாயத்தில் சொல்வேன்.

பத்தாவது அத்யாயம் முற்றிற்று

அத்யாயம் 11

இவ்வத்யாயத்தின் பெருமை :

இதற்குமேல் நடக்கப்போகிற பதினோராவது அத்யாயத்தின் கதை, சாந்தாத்புதங்கள் என்ற இரண்டு ரஸங்களால் நிறைந்திருக்கும். இதில் பகவானுடைய விச்வரூபத்தை அர்ஜுநன் காணப்பெறுவான். இந்த அத்யாயத்தில் சாந்தி என்னும் ரஸம் குடிகொண்டிருக்கும் வீட்டுக்கு, அத்புதரஸம் விருந்தாளியாக வந்து சேர்ந்தது. அதைப் பார்த்து, இதர ரஸங்களும் அதே பந்தியில் வந்து உட்கார்ந்து, மரியாதை பெற்றன. ஓர் பிள்ளைக்கும் பெண்ணுக்கும் கல்யாணம் நடந்தால், ஸம்பந்தி ஜனங்கள் கூட புது ஆடைகளை ஸந்மானமாகப் பெற்று, பெருமை படைத்தவர்களாய் விளங்குவது போலும், இவ்வத்யாயத்தில் தேசிய மஹாராஷ்டிர பாஷை என்னும் ஸுகாஸநத்தில் வீற்றிருந்து, ரஸங்களனைத்தும் பெருமை படைத்து விளங்குகின்றன.

ஆனால் அவை அனைத்திற்குள்ளும், சாந்தாத்புத ரஸங்கள், இரண்டு கண்கள் என்னும் இரண்டு கைகளாற் பற்றி எடுத்துக்கொள்ளக் கூடியவாயும், ஹரியும் ஹரனும் பரஸ்பரப்மேமையால் ஆலிங்கனம் செய்துகொள்ள நெருங்கினார்களோ என்று சொல்லும் படியாயும், வ்யக்தமாய் வெளிப்பட்டு நிற்கும். இல்லாவிட்டால் அமாவாஸ்யை தினத்தில் ஸூர்ய சந்திர பிம்பங்கள் இரண்டும் சேர்ந்து ஒரே காலத்தில் தர்ச்சிக்கக் கிடைப்பது போலும், இவ்விரண்டு ரஸங்களும் இங்கே சேர்ந்து நின்றன. கங்கையும் யமுனையும் சேர்ந்ததுபோல், இவ்விரண்டு ரஸங்களும் ஒன்று சேர்ந்து, ப்ரயாகை என்று ஏற்பட்டபடியால், உலகத்தார் எல்லாரும், இதில் நன்றாய் ஸ்நாநம் செய்து, புண்யம் அடைவார்கள். இவ்விரண்டின் நடுவில் கீதார்த்தம் என்னும் ஸரஸ்வதி குப்தரூபமாகவும், சாந்தரஸம் அத்புதரஸம் இவ்விரண்டும், மூர்த்திமதிகளாகிய கங்கா யமுநா நதிகளாயும், இங்கே ஒன்றுபட்டமையால், இப்பதினோராவது அத்யாயம் த்ரிவேணி ஸங்கம மென்று சொல்லத்தகும்.

ச்ரவணம் செய்தல் என்னும் படிக்கட்டு வழியாயிறங்கி, அமிழ்ந்து ஸ்நாநம் செய்து, எல்லாரும் ஸுலபமாய்ப் (கடந்து போதல் என்னும் ப்ரயாஸமின்றியும், முழுகிப் போதல் என்னும் அபாயம் இன்றியும்) புண்யமடையக் கூடிய படி, ஓர் புண்ய தீர்த்தத்தை என் ஸத்குருவாகிய நிவ்ருத்தி நாதர்

ஏற்படுத்தி வைத்தார். இந்த கீதை என்னும் தீர்த்தத்தில் ஸம்ஸ்க்ருத பாஷையின் ச்லோகங்கள் என்னும் கரைகள் இறங்கி ஏறுவதற்கு கடினமாயிருந்ததால், தர்மத்துக் கெல்லாம் இருப்பிடமான ஸ்ரீநிவ்ருத்திநாதர், அக்கரைகளைச் சாய்வாய் வெட்டி, ஜனங்கள் லகுவில் இறங்கி யேறும்படியாய் மஹாராஷ்டிர பாஷையால் படிக்கட்டு கட்டி வைத்தார். ஆகையால் ஆசைப்பட்டவர்க ளெல்லாரும் இந்த தீர்த்தத்தைக் கொண்டாடி, ச்ரத்தையுடன் இதில் இறங்கி, ஸ்நாநம் செய்து, இப்பிரயாகைக்கு தைவதமான பிந்துமாதவன், என்று சொல்லத்தக்க பகவானுடைய விச்வரூபமூர்த்தியை, தர்சநம் செய்துவிட்டு, ஸம்ஸாரத்துக்கு எள்ளும் தண்ணீரும் இறைத்து விடலாம். இவ்வுருவகம் இத்துடன் நிற்கட்டும்.

இந்த அத்யாயத்தில் ரஸங்களனைத்தும், மரங்கள் உருவெடுத்துக் கொண்டு பழங்களால் பழுத்துத் தொங்குகின்றன. ஆகவே ச்ரவண ஸுகத்தால் நிறைந்த ஓர் ராஜ்யம் உலகத்தாருக்குக் கிடைத்ததாயிற்று. இந்த அத்யாயத்தில், சாந்தரஸமும் அத்புதரஸமும் கண்ணாற் பார்க்கக் கூடியவையாய் உருவெடுத்துக் கொண்டும், மற்ற ரஸங்கள் விசேஷித்த சோபை அடைந்தும், இருக்கின்றன வென்று சொல்வது போதாது; ஏனென்றால் இந்த அத்யாயத்தில் ஆத்ம ஸ்வரூபமானது ஒளிகளவில்லாமல் பஹிரங்கமாய்த் திறக்கப்பட்டு கிடக்கிறது. அப்படிப்பட்ட பெருமை அடைந்த இந்த பதினோராவது அத்யாயம், பகவானுக்கு இளைப்பாறும் ஸ்தானமாயிருக்கிறது. பாக்யசாலிகளுக்கு அரசனான அர்ஜுனன், இங்கே வந்து சேரப்பெற்றான்.

இவ்வத்யாயம் மஹாராஷ்டிர பாஷையில் சொல்லப்பட்டு போன பின் ஸௌலப்யம அடைந்தது :

இந்த அத்யாயம் தேசிய பாஷையிற் சொல்லப்பட்டுப்போன பிறகு, இந்த இடத்திற்கு அர்ஜுநன் மாத்ரம் வந்துசேரப் பெற்றான், என்று சொல்வது ஸரியாகுமா? ஸாமான்ய ஜனங்கள் எல்லாருக்கும், இவ்விடம் எளிதில் வந்தடையக் கூடியதாயிற்று.

ஸாதுக்கள் கவனத்தை ப்ரார்த்தித்தல் :

இவ்வத்யாயம் இவ்வளவு பெருமை பெற்றதுடன், ஸுலபமுமாய்ப் போனபடியால், இதின் அர்த்தத்தை

விவரமாய் எடுத்துக் காட்டும் என் வார்த்தைகளுக்கு, ஸாதுக்களாகிய நீங்கள் செவிசாய்க்க வேண்டும் என்று, நான் ஓர் விஞ்ஞாபநம் செய்கிறேன். இப்படி உங்களிடத்தில் ஸ்வாதீனம் பாராட்டல் எனக்குத் தகாததே. ஆயினும் என்னை உங்கள் குழந்தையாய்ப் பாவித்து, என்னை ப்ரேமையுடன் கொண்டாடவேண்டும். இதைக் கவனியுங்கள். ஒருவன் தான் வளர்க்கும கிளிக்கு வார்த்தைகளைக் கற்றுக்கொடுத்து, அவ்வார்த்தகளை அக்கிளி திருப்பிச் சொல்லும்போது, அவனே கேட்டு ஆநந்தப்படுவதில்லையா? தாய் தன்குழந்தைகளுக்கு ஓர் வேடிக்கையைக் கற்றுக்கொடுத்து, அதை அந்தக் குழந்தை திரும்பச் செய்து காட்டும்போது, அவள் ஆநந்தப்படுவதில்லையா? அப்படியே, நான் என்னென்ன சொல்லப்போகிறேனோ, அவை அனைத்தும் ப்ரபுக்களாகிய நீங்களே சொல்லிக் கொடுத்தவையானதால், உங்களுடைய வார்த்தைகளை நீங்களே கேட்டு ஆநந்தப்பட வேண்டும். என்னுடைய வித்யாஸம்பத் தனைத்தும், தாங்கள் நட்டுவைத்த ஓர் உத்தமமான செடி அதை நீங்களே உங்கள் கவனம் என்னும் ஜலத்தை வார்த்து வளர்க்க வேண்டும். அப்படிச் செய்தால், அந்த செடியில் ரஸோத்பத்தி என்னும் பூக்கள் பூத்து, அநேகங்களான தத்வார்த்தங்கள் என்னும் பழங்கள் பழுத்து, உங்களுடைய தர்மத்தால் உலகெல்லாம் ஸுபிக்ஷப்பட்டு ஸந்தோஷிக்கும்.

ஸாதுக்களுடைய அநுக்ரஹத்தின் வல்லமை :

இதைக் கேட்டு, ஸாதுக்கள் ஸந்தோஷித்து, "நன்றாய்ப் பேசினாய், மிக்க ஸந்தோஷம் அடைந்தோம். இனி அர்ஜுனன் என்ன சொன்னானோ, அதை நிரூபணம் செய்," என்று சொன்னார்கள். அப்போது நிவ்ருத்திதாஸனாகிய நான் பின்வருமாறு சொன்னேன். பெரியவர்களே, ஸ்ரீ க்ருஷ்ணனுக்கு மர்ஜுனனுக்கும் நடுவில் நடந்ததான பரப்ரஹ்மஸ்வரூப விஷயமான ஸம்வாதத்தை வர்ணிக்க, ப்ராக்ருதனான எனக்கு சகதி உண்டா? நான் சொல்லி, நீங்கள் கேட்க வேண்டுமானால், என்னைச் சொல்லும்படி நீங்களே செய்துவைக்க வேண்டும். பெரியவர்களே, காட்டிலிருக்கும் இலைகளை உருவித்தின்று, பிழைத்திருக்கும் குரங்குகளைக்கொண்டு, ஸ்ரீராமன் லங்கேச்வரனான ராவணனை அவமானப் படுத்திவைத்த தில்லையா? ஸ்ரீக்ருஷ்ணன் க்ருபையினால், அர்ஜுனன், ஒண்டியாகவே நின்று, துர்யோதனனுடைய பதினோரக்ஷோஹிணீ ஸேனையையும் ஜயித்துவிட வில்லையா?

அப்படியே பெரியவர்கள் இவ்வுலகில் எவ்வளவு அஸாத்யமான கார்யத்தைக் கைப்பிடித்தாலும், அது பூர்த்தி அடையாமற் போகாது. ஆகையால் ஸாதுக்களாகிய நீங்களே என்னைச் சொல்விக்க வேண்டும். இப்படி ப்ராத்தித்து உங்கள் க்ருபையை அடைந்தபின், வைகுண்டநாயகனான ச்ரீக்ருஷ்ணன் வாக்கினின்று வெளிப்பட்டதான கீதையின் அபிப்ராயத்தை நன்றாய்ச் சொல்வேன் கேளுங்கள். வேத ப்ரதிபாத்ய பரதைவமான ஸ்ரீக்ருஷ்ணனே வக்தாவாய் வெளிப்படுத்திவைத்த கீதையென்னும் க்ரந்தம், எவ்வளவோ பெருமை தங்கியது.இந்த க்ரந்தத்தின் பெருமை முழுதும், ஸ்ரீ சங்கரனுக்கே அறியமுடியாமற்போயிற்றே. அப்படிப்பட்ட இதின் மஹிமையை வர்ணிப்பது எப்படி? ஆகையால் இந்த க்ரந்தத்துக்கு அந்தக்கரணபூர்வகமாய் ஓர் நமஸ்காரம் செய்வதே ஸரியான கார்யம். அர்ஜுநன் பகவானுடைய விச்வரூபத்தைப் பார்க்க வேண்டும்என்னுமாசையை மனஸில் வைத்து, அதைத் தெரிவிப்பதற்கு, முகவுரையாய் என்ன வார்த்தை சொன்னானோ, அதைச்சொல்வேன் கேளுங்கள்.

அர்ஜுநன் மனஸில் ஏற்பட்ட சங்கை :

இந்த விச்வத்தில் பார்க்கும் அனைத்தும், ஸர்வேச்வரஸ்வரூபமே என்று, ஓர் ஞான ரூபமான அநுபவத்தை, கண்ணுக்கு முன் நிறுத்தி, கண்ணாற் பார்த்த நுபவிக்கவேண்டும், என்று தன்னந்தராத்மாவில் இருக்கும் ஓர் ஆசையை, பகவானுக்குத் தெரிவிக்கும் விஷயத்தில், அர்ஜுனன் மனஸில், ஓர் ஸங்கடம் ஏற்பட்டது; என்னவென்றால், இதை பகவான் வெகு ரஹஸ்யமாக வைத்துக் கொண்டிருக்கிறாரே; இதைக் காட்டும், என்று திடீரென்று கேட்பது ந்யாயமாகுமா? இதன்முன், ஒரு பக்தனும், ஒரு போதும், கேட்காத ஒன்றை, பேசத்தொடங்கும் போதே கேட்பது யுக்தமல்ல. எனக்கு அவரிடத்தில் எவ்வளவுதான் சலுகை இருந்தபோதிலும், எல்லாருக்கும் தாயாகிய லக்ஷ்மியைக்காட்டிலும் நான் பகவானுக்கு வேண்டியவனா என்ன? அவள் கூட அல்லவா, இதைக் கேட்கத் துணியவில்லை. நான் கருடனுக்கு ஸமானமாய் ஸேவை செய்ததில்லையே. அவன் கூட அல்லவா, இப்படிப்பட்ட கேள்வி கேட்டதில்லை. நான் ஸநகாதிகளைக் காட்டிலும் நெருங்கின பக்தனா என்ன? அவர்கள் கூட, பகவானிடத்தில் இப்படி விளையாடத் துணியவில்லையே.

பகவான் மிக்க ப்ரேமையாய்க் கொண்டாடின கோகுலத்திலிருந்த கோபாலர்களுக்கு, நான் ஸரியானவனா

என்ன? அவர்களுக்குக் கூட தன் ஸ்வரூபத்தைக் காட்டாமல், தன்னைச் சிறுபையனாக எண்ணிப்போகும்படியாய், அவர்களைக் கூட அல்லவா ஏமாற்றி விட்டார். ஒருபக்தன் பேரில் இருந்த ப்ரேமையால், அவனுக்கு ருஷிசாபத்தால் ஏற்பட்ட கர்ப்பவாஸத்தைத் தான் வாங்கிகொண்டாரே யாயினும, அவனுக்குக்கூட இந்த விச்வரூபத்தைக் காட்டவில்லை. ஒருவருக்குமே இது காட்டப்படாமல், நின்று போய்விட்டது. இவ்வளவு ரஹஸ்யமாய் பகவான் தனக்குள் வைத்து காப்பாற்றிக்கொண்டிருப்பதை, எனக்குக் காட்டிவைக்க வேண்டுமென்று, நான் முதன் முதலிலேயே எப்படி கேட்கலாம்? ஆனாலும் கேட்கவேண்டாம் என்று விட்டுவிடலாம் என்றால், அதைக்கண்ணாற் பார்க்காமல், மனஸு ஆறுதல் அடைவதில்லை. நான் ஜீவித்திருப்பதுகூட ஸம்சயப்பட்டுப் போகிறது. ஆகையால் இந்த விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று எனக்காசையிருப்பதை, ஓர் கோடியாய்க் காண்பித்து வைக்கிறேன். பின்பு அவர் இஷ்டம் எப்படி இருக்குமோ, அப்படியே நடந்து கொள்வேன்.

அர்ஜுனனுடைய ப்ரச்நத்தின் சாதுர்யம் :

இப்படிப் பயந்து கொண்டே, அவன் பேசத்தலைப்பட்டான். ஆனால் அவன் பேசத் தொடங்கினது, எவ்வளவு ஸாமர்த்யமுள்ள தாயிருந்த தென்றால், ஒன்றிரண்டுகேள்விகள் கேட்டு, அவற்றிற்கு பகவான் பதில் சொல்வதிலேயே, அவர் தன் விச்வரூபம் முழுவதும் காட்டிவைக்கும் படியாய் நேரிட்டது. இதில் ஆச்சர்யப்படத்தக்க தென்ன இருக்கிறது? கன்றைப் பார்த்தமாத்ரத்தில், தாய்ப்பசு திடுக்கென்று எழுந்திருந்து, அதின் மடியில் கன்று வாய் வைத்தமாத்ரத்தில், தங்குதடை இல்லாமல் பாலை அதற்குக் கொடுத்துவிடுவதில்லையா?

நன்றாய்ப் பாருங்கள். பாண்டவர்கள் பெயர் காதிற் பட்டவுடனேயே, அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்று கேட்டுத் தெரிந்து கொள்ளும் வரைக்கும், அவர் தரிக்க முடியாதவராய், அவர்களுக்கு ஏதோ பெரிய ஆபத்துண்டாய் விட்டதென்று நினைத்து, அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று, ராத்ரியில் அவர்கள் இருக்கும் காட்டுக்கு அவர் ஓடி வரவில்லையா? அப்படிப் பட்டவரைப் பார்த்து, அர்ஜுனன் ஒன்று வேண்டும் என்று கேட்டபின், அதை அவனுக்குக் கொடுப்பதில், அந்த க்ருஷ்ணன் கால தாமஸம் செய்வதைப் பொறுப்பாரா? ஸ்ரீக்ருஷ்ணனோ ப்ரேமையே அவதாரம்

செய்தது ஆகிறார். மற்றொருவனாகிய அர்ஜுனன் அந்த ப்ரேமை. சாப்பிட்டு, உன்மாத மடையவேண்டிய தான மத்யமாயிருந்தான். இவ்விருவரும், ஓர் இடத்திற் சேர்ந்த பின், இவர்கள் ஒன்று பட்டுப்போகாமல் பிரிந்து நிற்பதே ஆச்சர்யப்பட்டதக்கது. ஆகையால் அர்ஜுனன் வார்த்தையைக் கேட்டதும் கேட்காமலுமே, பகவான் விச்வரூபமெடுத்து நிற்கப்போகிறார். ஆனால் அர்ஜுநன் கேட்பதற் காரம்பித்ததோ, இப்படி இருந்தது, கேளுங்கள்.

अर्जुन उवाच ।

मदनुग्रहाय परमं गुह्यमध्यात्मसंज्ञितम् ।

यत्त्वयोक्तं वचस्तेन मोहोऽयं विगतो मम ।।१।।

அர்ஜுன உவாச -

மதனுக்ரஹாய பரமம் குஹ்ய மத்யாத்ம ஸம்க்ஞிதம் ।
யத்வயோக்தம் வசஸ்தேன மோஹோ(அ)யம் விகதோ மம ॥ 1

தனக்குப் பகவான் செய்த பெரிய உபகாரத்தை அர்ஜுநன் எடுத்துக் கூறுதல் :

பின்பு அர்ஜுநன் பகவானைப் பார்த்து பின்வருமாறு சொன்னான். ஐயா க்ருபாநிதே, வார்த்தையால் சொல்லமுடியாத விஷயங்களைக்கூட, நீர் எனக்கு வார்த்தையால் சொல்லித் தெரிவித்தீர், எந்த ப்ரளயகாலத்தில் மஹா பூதங்கள், லயம் அடைந்து, ஜீவஸ்வரூபமும் மஹத்தத்வமும் இருக்கும், இடம் தெரியாமல் மறைந்து போகுமோ, அக்காலத்தில் நீர் கடைசியாக எந்த ரூபத்தை எடுத்து நிற்பீரோ, அதை ஓர் மஹாலோபி தன் தனத்தை ஒருவரும் பாராமல் மறைத்து வைத்திருப்பது போல், உம்முடைய ஹ்ருதயம் என்னும் அரையில் பூட்டி வைத்துக்கொண்டு, வேதத்துக்குக் கூடக்காட்டி வைக்காமல் இருந்தீர். இந்த அத்யாத்ம ரஹஸ்யத்தைத் தெரிந்து கொள்வதற்காக, பரமசிவன் தன்னுடைய ஐச்வர்யத்தை எல்லாம் துறந்து விட்டு, வைராக்யம் பூண்டு, ஸ்மசானத்தில் வஸித்துக் கொண்டிருக்கிறார்.

அப்படிப்பட்ட இந்த ரஹஸ்யத்தை, உம்முடைய ஹ்ருதயத்தைக் கிழித்து வெளிப்படுத்தி என் முன் வைத்தீர். இப்படி என் முன் அதை வைத்தீர், என்று சொல்வதுகூட

அமையாதபடி, என்னையும் உம்முடன் ஒன்று படுத்தி வைத்தீர். உண்மையைப் பேசப்போனால், மஹா மோஹம் என்னும் வெள்ளத்தில், தலைகூட காணாதபடி முழுகிப்போய் இருந்தேன். அப்போது நீர், அவ்வெள்ளத்திற் குதித்து, என்னை வெளியிழுத்துக் கரையேற்றினீர். விச்வம் முழுதிலும், உம்மைத் தப்ப மற்றொன்றின் வார்த்தையே இல்லாமல் இருக்க, என்னுடைய கர்மத்தினால் நான் ஒருவன் வேறாக இருப்பதாக எண்ணியிருந்தேன். நான்தேஹாபிமானம் பூண்டு, உம்மைக் காட்டிலும் வேறாக ஜகத்தை நினைத்து, அதில் அர்ஜுநன் என்று ஒருவன் இருப்பதாகவும், இந்தக் கௌரவர்கள் என்னுடைய வம்சத்தார் என்றும் பாவித்திருந்தேன். அதோடு நிற்காமல், இவர்களைக் கொல்வதால் ஏற்படும் பாபத்தின் கார்யமாக, உம் ஸ்வரூபத்தைவிட்டு மற்றெங்கேயோ போய் விழுந்துவிடுவேன் என்றும், ஓர் துஸ்ஸ்வப்நத்தைக் கண்டுகொண்டு துக்கிதனாய் இருந்தேன்.

அப்போது என்னை விழித்துக்கொள்ளச் செய்தீர். ஆகாசக்கோட்டையில் வஸித்துக் கொண்டிருந்த நான். அதைவிட்டு வெளிப்பட்டேன். தாஹம் மிக்க எடுத்து, அதைத்தீர்த்துக் கொள்ள கானல் நீரைக் குடித்துக் கொண்டிருந்தேன். துணி காலிற்பட்டு, பாம்பு கடித்து விட்ட தென்றெண்ணி, விஷம் ஏறிவிட்டாற்போலும், உண்மையாகவே புத்திமயக்கம் அடிக்கடி வந்து கொண்டிருந்து, தகுந்தகாரணம் ஒன்று மின்றி ப்ராணனே போய்க்கொண்டிருந்தது. அப்போது உண்மையைத் தெரிவித்து என்னைக் காப்பாற்றி புண்யவானானீர். ஓர் ஸிம்ஹம் தன்னுடைய ப்ரதிபிம்பத்தை கிணற்றிற் பார்த்து, அதைத் தன்னோடு போர் செய்ய வேறோர் ஸிம்ஹம் என்று நினைத்து, அதின் பேரில் பாய சித்தமாய், கிணற்றில் குதிக்கப்போகும் ஸமயத்தில், ஒருவன் அதைத் தடுத்துக் காப்பாற்றி வைத்தாற் போலும், நீர் என்னைக் காப்பாற்றி வைத்தீர். முன்னால் என்னுடைய புத்தி எப்படி இருந்தது என்றால், ஏழு ஸமுத்ரங்களும் பொங்கி ஒன்று பட்டுப்போய், இந்த ஜகத்தனைத்தும் முழுகிப்போய், ஆகாசமே இடிந்து விழுவதாயிருந்தாலும், என்னுடைய வம்சத்தாரோடு நான் போர் செய்வதே இல்லை யென்றிருந்தேன். இப்படி அஹம்காரம் தடித்துப்போய், துராக்ரஹம் என்னும் நீரில் முழுகிப் போனவனாயிருந்தேன். அவ்வேளையில் நீர் ஸமீபத்தில் இருந்தகினாற்றான், நான் பிழைத்தேன். இல்லாவிட்டால் என்னை எவர்கள் காப்பாற்றி இருப்பார்கள்? வாஸ்தவமாய் இல்லாத என்னை, ஓர் வஸ்துவாய்ப் பாவித்துக் கொண்டேன். அன்றியும் உண்மையாய் கௌரவர்கள்

என்றிராத இவர்களுக்கு, பெயரும் வம்சமும் கற்பித்து வைத்தேன்.

இப்படி, எனக்குப் பெரும் பைத்யம் பிடித்திருந்தது. ஆனால் இந்த ஆபத்தில், நீர் காப்பாற்றினீர். இதற்கு முன், எரிந்து கொண்டிருந்த அரக்குமாளிகையினின்று காப்பாற்றப்பட்டேன். அப்போது என்தேஹத்துக்கு மாத்ரம், அபாயம் ஏற்பட்டிருந்தது. இப்போது ஏற்பட்ட அக்நிபயமோ, என் ஆத்மாவையே, நாசம் பண்ணி வைப்பதாயிருந்தது. துராக்ரஹம என்னும் ஹிரண்யாக்ஷன் என்னுடைய புத்தி யென்னும்பூமியைப் பாயாகச் சுருட்டி, கக்கத்தில் இடுக்குக்கொண்டு, மோஹார்ணயம் என்னும் ஓர்பொந்தில், நுழைந்து கொண்டான். அப்போது என்புத்தி மறைந்து கிடக்கும் இடம் தெரிந்து கொண்டு, மற்றோர் வராஹவதாரம் எடுத்து, என் துராக்ரஹத்தைப்போக்கி, என் புத்தியை மோஹம் என்னும் ஸமுத்திரத்திலினின்று வெளிப்படுத்தி, அதுஇருக்க வேண்டிய ஸ்தானத்தில் நிலை பெறச் செய்யும்படியாய், ஸர்வஸ்வாமியாகிய உமக்கு ஏற்பட்டது. இப்படி நீர் எனக்குச் செய்த அளவற்ற உபகாரத்தை,அல்பசக்தி உள்ளதான ஒரு வாயினால் என்னென்று, நான் வர்ணிப்பேன்? என்னுடைய ஆத்மஸ்வரூபம், அதன்மேல் வளர்ந்திருந்த ஐந்து கோசங்களினின்றும் விடுவிக்கப்பட்டு, தங்கு தடை இல்லாமல் அனுபவிக்குபடி, எனக்குக் கொடுக்கப்பட்டது.

அவ்வுபகாரத்தால் அர்ஜுநன் மஹா மோஹத்தினின்று விடுதலை அடைந்தது :

இப்படி நீர் செய்த உபகாரம், ஒரு நாளும் வீணாய்ப் போகாது. இப்படி என்னை முன் ஆக்ரமித்திருந்த மாயையை, அடியோடு நாசஞ் செய்து, நீர் மிக்க கீர்த்தி பெற்றீர், ஹே தேவர்கள் அரசனே. ஆநந்தம் என்பதே நிறைந்திருக்கும் உம்முடைய திருமேனி யென்னும் தடாகத்தில், பூத்திருக்கும் தாமரைப்பூக்கள் என்று சொல்லத்தக்க உம்முடைய அழகிய கண்கள், தங்கள் ப்ரஸாதம் என்னும் வீட்டை எவனுக்குக் காட்டித் தருமோ, அவனுக்கு மோஹத்தைக் கண்ணாற் பார்க்கக் கிடைத்தது, என்பது ஒருவரும் நம்பத்தகாத வார்த்தை. ம்ருகஜலம் பெருத்தமழையாய்ப் பெய்ததினால், வடவைத்தீயானது அணைந்து போகுமா? நானோ உம்முடைய உபகாரத்தால், உமது க்ருபையினுடைய நடுவீட்டில் நுழைந்து, ப்ரஹ்மரஸத்தைப் புசித்துக்கொண்டிருக்கிறேன். அதினால் என்னுடைய மோஹம் முற்றிலும் போய் விட்டது, என்பதில்

என்ன ஆச்சர்யம்? நான் நிச்சயமாய் இந்த ஸம்ஸாரத்தினின்று கரையேறி விட்டேன் என்று, உம்முடைய பாதஸாக்ஷியாகச் சொல்லுகிறேன்.

भवाप्ययौ हि भूतानां श्रुतौ विस्तरशो मया ।
त्वत्तः कमलपत्राक्ष माहात्म्यमपि चाव्ययम् ।।२।।

பவாப்யயௌ ஹி பூதானாம் ச்ருதௌ விஸ்தரஶோ மயா।
த்வத்த: கமலபத்ராக்ஷ மாஹாத்ம்யமபி சாவ்யயம் ॥ 2

இதுவுமது :

ஹே தாமரைப்பூப் போன்று விசாலமாயிருக்கும் கண்களை உடைத்தானவரே, கோடிஸூர்யர்கள் ஒன்று சேர்ந்தாற் போல் இருக்கும் தேஜஸ்ஸை உடைத்தானவரே, எல்லாரையும் அடக்கி ஆள்கிறவரே, இந்த பூதங்கள் அனைத்தும் எவ்விதமாய் உண்டாகின்றன என்றும், எப்படி லயம் அடைகின்றன என்றும், இன்று நீர் சொல்ல, நான் கேட்டறிந்தேன். இப்படி ப்ரக்ருதி ஸம்பந்தமான ஸர்வவிஷயமும், எனக்கு நீர் தெரியப்படுத்தினீர். அத்துடன்கூட, இந்த ப்ரக்ருதியைத் தாண்டி நிற்பதான, ஆத்மா என்றும், புருஷன் என்றும், சொல்லப்படும் வஸ்துவின் ஸ்வரூபமும், எனக்கு நீர் காட்டிக்கொடுத்தீர். இந்தப் புருஷனுடைய மஹிமையை வர்ணிக்கும் வார்த்தைகள் என்னும் ஆடையை உடுத்திக் கொண்டு, வேதம் என்பது மிக்கப் பெருத்ததாயிற்று. இந்த வேதத்தின் சப்தஜாலங்கள் மிக்க விரிவடைந்ததும், இந்தவேதம் தர்மங்கள் என்னும் ரத்நங்களை உண்டாக்கிவைத்ததும், இந்தப் புருஷனுடைய பெருமை என்னும் பாதத்தை ஆச்ரயித்த நன்மையால் ஏற்பட்டன.

இப்படி அளவற்ற பெருமை படைத்ததாயும், எல்லா சாஸ்த்ரங்களாலும் முடிவில் அடையவேண்டிய ஸ்தானமாயும், தன் னாத்மாவினாலேயே அநுபவித்து ஆநந்திக்க வேண்டியதாயும், இருக்கும் அந்த ஸ்வரூபத்தை, நீர் இப்படிக் காட்டிவைத்தீர். குப்பைபோல் ஆகாசத்திற் சேர்ந்திருக்கும் மேகங்கள் விலக்கி வைக்கப்பட்டபின், ஸூர்யபிம்பமானது ப்ரகாசமாக, கண்முன் தோன்றுவது போலும், மேலே பரவியிருக்கும்பாசியைக் கையால் விலக்கி வைத்தபின், கீழே ஜலம் காணப்படுவது போலும், சந்தன மரத்தின் அடியிற் சுற்றிக்கொண்டிருக்கும் பாம்பு விலகிப் போனபின், அம்மரத்தைக் கட்டிக்கொள்ள கிடைப்பது

போலும், புதையலின் மேல் காத்திருக்கும் பூதமானது விலகிப்போனபின், அப்புதையல் கைவசப்பட்டுப் போவதுபோலும், உம்முடைய ஸ்வரூபத்தை அடைவதற்குக் குறுக்காய் நின்ற ப்ரக்ருதியை, நீரே விலக்கிவைத்து, பரபுருஷதத்வத்தை நான்அறியும்படியாய்ச் செய்துவைத்தீர். ஆகையால் இந்த விஷயத்தில் ஸந்தேஹமற்றதான பூர்ணஞானம், எனக்கு நன்றாய் ஏற்பட்டதாயிற்று.

தனக்கு மற்றுமோர் ஆசை இருக்கிறது என்று அர்ஜுநன் தெரிவித்தல் :

ஆயினும் மற்றும் ஓர் ஆசை எனக்கு உண்டாயிருக்கிறது. உமக்கு மேலும் ச்ரமம் கொடுக்கக்கூடாது, என்று ஓர் தாக்ஷிண்யத்தைப் பாராட்டி, உம்மை கேட்காது விடலாம் என்றாலோ, மற்றெவரைக் கேட்டு, இந்தஆசையை நான்பூர்த்தி செய்து கொள்வேன்? எனக்கு உம்மைத்தவிர வேறு கதி இல்லையே. ஜலஜந்துக்கள், ஜலம் தங்களுக்கு ஏற்கனவே செய்திருக்கும் உபகாரத்தை நினைத்து, மேலும் அதற்கு கஷ்டம் கொடுக்கக் கூடாது என்றெண்ணி, ஜலத்தை விட்டு வெளிப்பட்டு நிற்க யத்தனித்தால், அல்லது ஓர் சிறு குழந்தை தாய்க்கு மேன்மேலும் கஷ்டம் கொடுக்கத்தகா தென்றெண்ணி, ஸ்தந்யபானம் செய்யா தொழிந்தால், அவற்றிற்கு வேறுகதி யென்ன இருக்கிறது? ஆகையால் தாக்ஷிண்யம் பாராட்ட என்னால் முடியவில்லை. என் அந்தராத்மாவைப் பற்றியிருக்கும் ஆசையை, உமக்குத் தெரிவித்து விடுவதே கார்யம், என்று அர்ஜுனன் சொன்ன மாத்ரத்தில், பகவான் நீ பேசினது போதும், உன்னாசையைத் தெரியப்படுத்து, என்று சொன்னார்.

एवमेतद्यथात्थ त्वमात्मानं परमेश्वर ।
द्रष्टुमिच्छामि ते रूपमैश्वरं पुरुषोत्तम ।। ३ ।।

ஏவமேதத்யதாऽऽத்த த்வமாத்மானம் பரமேஶ்வர ।
த்ரஷ்டு மிச்சாமி தே ரூபமைஶ்வரம் புருஷோத்தம ।। 3

அர்ஜுனன் அந்த ஆசை இன்ன தென்று சொல்லல் :

பின்பு அந்த கிரீடி பின்வருமாறு சொன்னான். நீர் சொல்லிவைத்த விஷயத்தின் அநுபவம் எனக்குப் பூர்ணமாய் ஏற்பட்டு, என்மனக்கண் த்ருப்தியடைந்தது. எந்த உம்முடைய

விச்வரூபமானது, தன்னுடைய ஸங்கல்பத்தால், லோகங்களனைத்தையு முண்டாக்கி, மறைந்துபோகச் செய்வதாயும், உமது மூலஸ்வரூபமென்றும், நீரே என்றும், சொல்லப்பட்டு கொண்டாடப்படத் தக்கதாயும் - தேவகார்யங்களை முடித்துவைப்பதற்காக, மத்ஸ்யம், கூர்மம், ராமன், க்ருஷ்ணன், என்று சொல்லப்பட்ட நான்கு அல்லது இரண்டு கைகளோடு கூடிய உருவங்களோடு, நீர் எடுக்கும் அவதாரரூபங்களி னுத்பத்திஸ்தாநமாயும், பின் வந்த அவதார கார்யம் முடிந்ததும், அந்த ரூபம் லயமடையும் ஸ்தாநமாயும் உபநிஷயத்துக்களால் கொண்டாடப்பட்டதாயும், யோகிகளால் ஹ்ருதயத்தில் த்யானிக்கப்பட்டதாயும், ஸநகாதிகளால் ஸதா ஆலிங்கனம் செய்து கொள்ளப்பட்டதாயும், காதால் மாத்ரம் கேட்டறியக்கூடியதாயும், இப்படி அளவிடமுடியாத பெருமையோடு கூடியதாயும் இருக்குமோ, அதை முழுமையும் என் கண் காண காட்டிவைக்கவேண்டு மென்று, என்னுடைய மனஸு பேராசை பூண்டு பதைபதைக்கிறது, தேவா. நீர் என்னுடைய ஸங்கடத்தைப் போக்கி வைக்கக் கருதி, "உன் ஆசையைத் தெரியவை", என்று சொன்னதினால், அதை சொல்லி விட்டேன்.

मन्यसे यदि तच्छक्यं मया द्रष्टुमिति प्रभो ।
योगेश्वर ततो मे त्वं दर्शयात्मानमव्ययम् ।। ४ ।।

மன்யஸே யதி தச்சக்யம் மயா த்ரஷ்டுமிதி ப்ரபோ ।
யோகேஶ்வர ததோ மே த்வம் தர்ஶயாத்மான மவ்யயம் ॥ 4

விச்வரூபத்தைப் பார்க்கத் தனக்கு யோக்யதை இருந்தால் மாத்ரமே, பகவான் அதைக் காட்ட வேண்டும் என்று அர்ஜுனனுடைய ப்ரார்த்தனை :

ஆனால் ஹே கிருஷ்ணா இதில் மற்றோர் விஷயமும் இருக்கிறது. உம்முடைய விச்வரூபத்தைப் பார்ப்பதற்கு, எனக்கு யோக்யதை இருக்கிறதோ இல்லையோ, எனக்குத் தெரியாது. உன்னுடைய யோக்யதை உனக்குத் தெரியாமல் எப்படி இருக்கும் என்று, நீர் கேட்ப்பீரேயானால், சொல்வேன் கேளும், நோயாளிக்கு நோயின் காரணம் தெரியுமா? அன்றியும ஒருவனுடைய ஆசை அதிகரித்தபின், அவனுடைய யோக்யதை அவனுக்குத் தெரியாமற் போகிறது. மிக்க தாஹமெடுத்தவனுக்கு தன் தாஹத்தைத் தீர்த்துவைக்க, ஸமுத்ரமே போதாதென்று தோன்றுவதில்லையா?

அப்படிப் பெருத்த ஆசையின் பலத்தால், என் ஸாமர்த்யத்துக்குத் தக்கபடி, கேட்டு வாங்கிக் கொள்ளத் தெரியாதவனா யிருக்கிறேன். ஆகையால் தாயானவள் குழந்தையினுடைய சக்தியை அறிந்து, அதற்குத் தக்கபடி அதின் கையில் வஸ்துக்களை இட்டு வைப்பது போலும், என் யோக்யதையை நீர் விசாரித்துப்பார்த்து, எனக்கு விச்வரூபத்தைக் காட்டிவைக்கத் தொடங்கவேண்டும். இல்லா விட்டால், உனக்கு விச்வரூபத்தைப் பார்க்கும் யோக்யதை இல்லை யென்று, தாக்ஷிண்யம் பாராமல் சொல்லிவிடும். கொஞ்சங்கூட காது கேட்காத செவிடனுக்கு எவ்வளவு உச்சஸ்வரத்தில் பாடினாற்றான் பயன்படும்? சாதகத்துக்கு மட்டுமே மேகம் வர்ஷிக்காமல், எங்கும் மழை பெய்த போதிலும் கற்பாறை மேற் பெய்தது எப்படி ப்ரயோஜநப்படும்? சந்த்ரன் ப்ரகாசிக்கும் போது, சகோரத்துக்கு மாத்ரம் தன் கிரணங்களை ஊட்டி மற்ற எவரும் அக்கிரணங்களைச் சாப்பிடக் கூடாதென்று ஆணையிட்டு மறிக்கிறானா என்ன? கண்ணில்லாதவனுக்கு ஸூர்யன் உதித்துப் பயன்படுவதில்லை. ஆகையால் இவற்றால் லாபம் அடைவதும அடையாததும், யோக்யதையைப் பொருத்தது.

பகவத் க்ருபை ஓர் காரணத்தை எதிர்பாராது, ஸ்வதந்தரமாயிருக்கிறது :

நீர் என்னவோ, ஞாநிகளுக்கும் மூர்க்கர்களுக்கும் எப்போதும் புதிதாய் இருக்கும், உம்முடைய விச்வரூபத்தை காட்டவே போகிறீர், என்பதில் எனக்கு ஸந்தேஹமில்லை. உம்முடைய ஔதார்யம் ஓர் நியமத்துக்குக் கட்டுப்பட்டதில்லை. நீர் கொடுக்கத் தலைப்பட்டால், இவன் தகுந்தவனா தகாதவனா, என்று நீர் விசாரிப்பதில்லை. உத்தமமான மோக்ஷத்தை உம்முடைய சத்ருக்களுக்குக் கூட கொடுத்துவிடுகிறீர். மோக்ஷம் மிக்கக் கஷ்டப்பட்டுக் கூட அடையத் தகாததாயிருப்பது நிச்சயமே. ஆனால் அது கூட உம்முடைய பாதத்தை ஆராதித்துக் கொண்டிருக்கிறது. ஆகையால் உம்முடைய வேலைக்காரனைப்போல், அதைப்பார்த்து எங்கே, "போய்ச்சேர்", என்று சொல்வீரோ, அங்கே அது போய்ச்சேர்கிறது.

எவள் விஷத்தை ஸ்தநத்தில் தடவிக்கொண்டு பால்கொடுத்துக் கொல்லவெண்டு மென்று உத்தேசித்து வந்தாளோ, அந்தப் பூதனைக்கு ஸநகாதிகளுக்குப் போலவே, உத்தமமான ஸாயுஜ்ய மோக்ஷஸுகத்தைக் கொடுத்தீர்.

ராஜஸூயயாகத்தில், முவ்வுலகத்துப் பெரியவர்கள் எல்லாரும் கூடி இருந்த ஸபையில் இருக்கும் அனைவருக்கும் முன், உம்மை நூறு விதமாய்த் திட்டி, உம்மை அவமாநப்படுத்தி வைத்து, உமக்கு இவ்வளவு அபாராதம் செய்த சிசுபாலனுக்கு, உம்முடைய ஸ்வரூபத்தையே வாஸஸ்தாநமாய்க் கொடுத்தீர்,

ஹே கோபாலா, மேலும் உத்தானபாதனுடைய மகன் த்ருவபதம் வேண்டுமென்று ஆசைப்பட்டானா, என்ன? அவன் என்னவோ, தன் தகப்பனார் மடியில் உட்காரக் கிடைக்க வில்லையே என்றழுது கொண்டு, காடு வந்து சேர்ந்தான். அப்படி அல்பமான ஆசை பாராட்டினவனுக்கு, உலகத்தில் ஸூர்யசந்திரர்களைக் காட்டிலும் அதிகமாக மதிக்கத்தக்க ஓர் பெருமையைச் செய்துவைத்தீர்.

இப்படி ஸங்கடமடைந்திருந்த அவர்கள் அனைவருக்கும், அவர்கள் கோரியதைக்காட்டிலும் அதிகமாய்க் கொடுத்து, அவர்கள் துக்கத்தைப் போக்கிவைத்த உதாரன், நீ ரொருவரே.

உம்முடைய பெயர் வைத்திருந்த தன் மகனை, பெயர் சொல்லி அழைத்த அஜாமீளனுக்கு, உம்முடைய ஸ்வரூபத்தையே கொடுத்தீர்.

ஹே மஹாநுபாவா, உம்முடைய மார்பில் உதைவிட்டானே, அவனுடைய காலை உதைத்த நோவு தீரும்படியாய்ப் பிடித்துவிட்டீர்.

உம்முடைய சத்ருவாகிய சங்காஸுரனுடைய எலும்பாகிய சங்கத்தைப் பெருமைப்படுத்தி, கையில் இன்னம் கூட தரித்துக்கொண்டிருக்கிறீர்.

இப்படி அபகாரிகளுக் கெல்லாம் உபகாரம் செய்து, உம்மிடத்திலிருந்து யாதொன்றும் பெறுவதற்கு யோக்யதை யற்றவர்கள் விஷயத்திற் கூட, உதாரராயிருப்பதால், நீர் பலிச்சக்ரவர்த்தியின் வீட்டு வாயிற்காப்பானாயினீர்,

உம்மை ஆராதித்தது மில்லை; உம்முடைய சரித்திரத்தைக் கேட்டதுமில்லை; ஓர் கிளியின்பேரில் ஆசையாய், அதை ராகோ என்னும் பெயரினால் அழைத்ததற்காக, ஓர் வேசியை வைகுண்டத்தில் ஸுகமாய் வஸித்திருக்கச் செய்தீர். இப்படி, காரணமாகாததை எல்லாம் காரணமாகக்கொண்டு, உம்முடைய ஸ்வரூபத்தை, கண்டவர்களுக்கெல்லாம் வாரி இறைக்கிறீர்.

அப்படிப்பட்ட நீர், என் விஷயத்தில் மாத்ரம், வேறுவிதமாய் நடக்கப்போகிறீரா? நீர் என் விஷயத்தில் மாத்ரம், வேறுவிதமாய் நடக்கப்போகிறீரா? ப்ராத்தித்து நிற்பவன் ஆசையைக் காட்டிலும், அதிகமாக நன்மைகளைச் செய்து கொடுக்கும் காமதேனுவின் கன்றா பசித்துக் கிடக்கும்? ஆகையால் நான் காட்டிவைக்க வேண்டு மென்று ஆசைப் பட்டதை காட்டிவைத்துத்தான் விடுவீர், என்பதில் ஸந்தேஹம் இல்லை.

விச்வரூபத்தைப் பார்க்க தனக்கு யோக்யதை யில்லாதிருந்தால், அதற்கு வேண்டியதான யோக்கியதையை, அர்ஜுநன் ப்ரார்த்தித்தல் :

நீர் காட்டப்போகும் விச்வரூபத்தைப் பார்க்கத்தக்க யோக்யதையை எனக்கு நீர் செய்து தரவேண்டும். உம்முடைய விச்வரூபத்தைப் பார்க்கும்படியான, ஸாமர்த்யம் என் கண்களுக்கு இருக்கிறதென்று நீர் நினைத்தால், விச்வரூபத்தைப் பார்க்க வேண்டும் என்றெனக் கிருக்கும் ஆசையைப் பூர்த்தி செய்துவையும்.

பக்தனுடைய ஆர்த்தியைப் போக்குவதில் பகவானுடைய த்வரையின் பெருமை :

இப்படி ஒரு பழுதும் சொல்லக்கூடாத வண்ணம், அந்த அர்ஜுநன் ஓர் விஞ்ஞாபநம் செய்யவே, அந்த ஷட்குணைச்வர்ய ஸம்பந்நனான ஸ்ரீக்ருஷ்ணன், இவ்வளவு தூரம் அவன் விஞ்ஞாபனம் செய்வதைப் பொறுக்க முடியாதவராய்ப் போனார். ஸ்ரீக்ருஷ்ணன் க்ருபை என்னும் அம்ருதத்தால் நிறைந்த மேகமாயும், அர்ஜுநன் அந்த மேகத்தை நெருங்கி வந்த வர்ஷகாலமாயும், க்ருஷ்ணன் கோகிலமாயும், அர்ஜுநன் வஸந்த காலமாயும், இருந்தார்கள். பூர்ணசந்த்ரனைக் கண்டு பொங்கும் பாற்கடல் போலும், ஸ்ரீ க்ருஷ்ணன் அர்ஜுநனுடைய ஆர்த்தியைப் பார்த்து, இரண்டுமடங்காய் வ்ருத்தி அடைந்த ப்ரேமையினால் பொங்கத்தலைப்பட்டார். அப்படி அர்ஜுநன் விஷயத்தில் அதிப்ர ஸந்நராய்ப்போன ஓர் ஆவேசத்தினால், ஸ்ரீக்ருஷ்ணன் கருணையுடன், "உவமை அற்றவைகளான என்னுடைய ரூபங்களைப் பார், பார்", என்று கர்ஜித்தார்.

ஒரு விச்வரூபத்தைப் பார்க்கவேண்டும் என்று அர்ஜுநன் ஆசைப்பட்டான். க்ருஷ்ணன் உலகெல்லாம் விச்வரூபமாகவே

செய்துவைத்தார். ஸ்ரீக்ருஷ்ணன் மிக்க ஔதார்யமுள்ளவனாதலால், யாசகன் எவ்வளவு கேட்பானோ, அதற்கு ஆயிரம் மடங்காயும், தன் ஸொத்து முழுவதையுங்கூட, கொடுத்து விடுகிறதென்று நியமம் பூண்டவராயிருக்கிறார். ஆதிசேஷனுடைய இரண்டாயிரம் கண்ணையும் ஏமாற்றி, வேதத்தையும் மோசஞ்செய்து, லக்ஷ்மிக்குக் கூட காட்டாமல், பகவான் எந்த ரஹஸ்யத்தைத் தன் அந்தராத்மாவில் வைத்துக்காப்பாற்றி வந்தாரோ, அந்த ரஹஸ்யத்தை அநேக விதங்களாய் வெளிப்படுத்தி, விச்வரூபத்தைக் காட்டிவைத்தல் என்னும் வேலையை ஸ்ரீக்ருஷ்ணன் செய்யத்தொடங்கின படியால், அர்ஜுநன் பாக்கியம் அத்யுத்தமமானதென்றும், அளவற்றதென்றும் சொல்லவேண்டியதாய் இருக்கிறது.

விழித்துக் கொண்டிருக்கும் ஒருவன், நித்ரை வசப்பட்டுப்போய் ஸ்வப்நங்காணும்போது, அவனே அந்த ஸ்வப்நத்தில் காணப்படும் ஸர்வ வஸ்துக்களாயும், அமைந்து நிற்பது போலும், ஸ்ரீ கிருஷ்ணனே, அந்த விச்வரூபத்தில் காணப்பட்ட அநேக ரூபங்களாய் நின்றார். அப்படி காலமதாமத மின்றி தன் ஸ்வரூபத்தை விரித்துக் காட்டி, ஸ்தூலத்ருஷ்டி என்னும் திரையை விலக்கி வைத்தார். சுருக்கிச் சொல்வோமாகில், தன்னுடைய யோகஸம்பத்தனைத்தையும் வெளியிட்டு வைத்தார். ஆனால் இந்த அர்ஜுனன், இதைப் பார்ப்பானா, பார்க்க மாட்டானா, என்பதை விசாரியாமலே மிக்க ஸ்நேகபாவத்துக்கு வசப்பட்டவராய், ஸ்ரீ க்ருஷ்ணன் திடீரென்று, பார்! பார்! என்றார்.

श्रीभगवानुवाच ।
पश्य मे पार्थ रूपाणि शतशोऽथ सहस्रशः ।
नानाविधानि दिव्यानि नानावर्णाकृतीनि च ।।५।।

ஸ்ரீ பகவானுவாச -

பச்ய மே பார்த்த ரூபாணி சத சோ(அ)த ஸஹஸ்ரசஃ ।
நாநாவிதானி திவ்யானி நாநா வர்ணா க்ருதீனி ச ।। 5

பகவான் காண்பித்த விச்வரூபத்தின் வைசித்ரியம் :

"அர்ஜுநன் நீர் ஒரு விச்வரூபத்தைக் காட்ட வேண்டும் மென்று கேட்டான், அப்படி, ஒன்றையே காட்டிவைத்தால்,

நான் என்ன காட்டினதாகும்." என்றெண்ணி, ஸ்ரீக்ருஷ்ணன் பின்வருமாறு சொல்லலுற்றார். இப்போது என்னுடைய ரூபத்தில் எல்லாரூபங்களும் அடங்கி யிருப்பதைப் பார். சில இளைத்தவையாயும், சில பருத்தவையாயும், சில குறுகியவையாயும் சில விஸ்தரித்து, உயர்ந்து, பெருத்து நேராய் வளர்ந்தவையாயும் சில எல்லையற்றவையாயும், இருக்கும் பார்.

சில கட்டி அணைக்க முடியாதவை, சில பிடிக்குள் அடங்குமவை, சில ஓடி ஆடிக் கொண்டிருக்குமவை, சில அசைவற்றவை, சில உதாஸீநமானவை, சில ப்ரேமை பாராட்டியவை, சில க்ருரஸ்வபாவ முள்ளவை, சில மயங்கிக்கிடப்பவை, சில விழிப்பாயிருப்பவை, சில அல்பமானவை, சில அதிலோபமுள்ளவை, சில கோபங்கொண்டவை, சில சாந்தமானவை, சில மிக்க மதித்தவை, சில திடுக்கிட்டவை, சில ஆநந்தப்பட்டவை, சில கர்ஜிப்பவை, சில சப்தமே செய்யாதவை, சில ஸௌம்யமானவை, சில மிக்க ஆசைப்பட்டவை, சில ஆசையை ஒழித்தவை, சில நித்ரை கலைந்தவை சில நித்ரை வச்பட்டவை, சில பூர்ணமாய் த்ருப்தி அடைந்தவை சில ஆசை கொண்டு அலையுமவை, சில மனமகிழ்ந்தவை, சில ஆயுத மெடுத்தவை, சில ஆயுதமற்றவை, சில கோபத்தால் நிறைந்தவை, சில ப்ரியத்தோடு கூடியவை, சில பயங்கரமானவை, சில விசித்ரமானவை, சில ஸமாதியிலிருப்பவை, சில ப்ரஜைகளை உண்டு பண்ணிவைக்கும் லீலையில் அமிழ்ந்து கிடக்குமவை, சில உண்டாயிருக்கும் பூதங்களைக் காப்பாற்றும் வேலையில் ஈடுபட்டவை, சில ஸம்ஹாரம் செய்வதில் பரபரப்புப் பாராட்டியவை, சில கேவலம் ஸாக்ஷிபூதங்களானவை, இப்படி பற்பல வகைப்பட்டவைகளாயும், எண்ணிறந்தவைகளாயும், தேஜஸ்ஸுள்ளவைகளாயும், வேறு வேறு வர்ணமுள்ள வைகளாயும், இருக்கின்றன, பார்.

சில பழுக்கச்சுட்ட பதினைந்து மாற்றுத் தங்கம் போன்றனவாயும், சில கபிலவர்ண முள்ளனவாயும், சில தேஹம் எல்லாம் ஸாயங்கால ஆகாயத்தைப்போல் சிவந்தவர்ண முள்ளனவாயும், சில மாணிக்கங்களால் எங்கும் இழைக்கப்பெற்ற ப்ரஹ்மாண்டங்கள் போல் பார்வைக்கு அதிமனோஹரமானவாயும், சில அருணோதயகாலத்துக் கீழ் வானம்போற் குங்குமவர்ண முள்ளனவாயும், சில சுத்தஸ்படிகம்போல் தேஜோமயமானவாயும், சில இந்த்ரநீலக்கற்களைப்போல் அழகிய நீலவர்ண முள்ளனவாயும், சில மைபோல் கருத்தனவாயும், சில ரக்தவர்ணம்

உள்ளனவாயும், சில பளபளப்பாய் ஸுவர்ணகாந்தியுள்ளனவாயும், சில நீர்நிரைந்திருக்கும் மேகங்கள்போல் ச்யாமளவர்ணமாயும், சில சம்பகப்பூப் போல் மஞ்சளும் வெளுப்பும் கலந்த வர்ணமாயும், சிலப்ச்சை வர்ணமாயும், சில பழுக்கச் சுட்ட தாம்பிரம்போல் சிவந்தனவாயும், சில சந்திரன் போல் சுத்தமாய் வெளுத்தன வாயும், இவ்விதம் எல்லாம், நாநா வர்ணமுள்ளனவாய் இருக்கும், என்னுடைய அழகிய ரூபங்களைக் கவனித்துப் பார்.

இவை, எப்படி வேறுவேறு வர்ணங்கள் உள்ளனவா யிருக்குமோ, அப்படியே வேறு வேறு ரூபங்களைக் கவனித்துப் பார். இவை, எப்படி வேறு வேறு ரூபங்கள் உள்ளனவாயு மிருக்கும். சில, மன்மதன் காலில் விழுந்து ஸேவிக்கும்படி, யழகுபொருந்தின வாயிருக்கும். சில கட்டிறுகி அழகியவாயும், சில சாணைபிடிக்கப் பட்டவைபோல் மெருகுள்ளனவாயும், சில மனோஹரமாயும், இப்படியெல்லாம் பலரூபங்கள், ச்ருங்காரத்தின் பெருமைகளெல்லாம் திறந்துவைக்கப் பட்டவை போல், தோன்றி நிற்கும். சில விஸ்தாரமானவும் சதைப்பற்றுள்ளனவுமான சரீரங்கள் படைத்தனவாயும், சில மிக்க இளைத்த தேஹங்கள் உள்ளனவாயும், சில அதிபயங்கரமாய்த் தோற்றுகின்றனவாயும், சில நீண்ட கழுத்துள்ளனவாயும், சில பெருத்த தலைபடைத்தனவாயும், சில மிக்கப் பருத்த உடல்கள் உள்ளனவாயும், இப்படிப் பலவகைப்பட்ட உருவங்களோடு, என் விச்வரூபத்தில், வேறு வேறு வ்யக்திகள் கணக்கற்றனவாய் காணப்படுவ தோடுங்கூட, ஒவ்வொன்றின் அவயவங்களின் முனையில், ஓரோர் ஜகமே வஸித்திருப்பதாய்க் காணப்படும்.

पश्यादित्यान्वसून्रुद्रानश्विनौ मरुतस्तथा ।
बहून्यदृष्टपूर्वाणि पश्याश्चर्याणि भारत ।। ६ ।।

பச்யாதித்யான் வஸூன் ருத்ரான் அச்வினௌ மருதஸ்ததா।
பஹூன் யத்ருஷ்ட பூர்வாணி பச்யாச்சர்யாணி பாரத ॥ 6

இதுவுமது :

எப்போது என்னுடைய இந்த விச்வரூபத்தின் கண்கள் திறக்கின்றனவோ, அப்போது ஆதித்யர்கள் (தேவர்கள்) கணக்கற்று உண்டாகிறார்கள். பின்பு அக்கண்கள் மூடிப்பொகும்போது, அந்த ஆதித்யர்கள் லயமடைகிறார்கள். என்னுடைய இந்த ரூபத்தின் சுவாஸோச்

சுவாஸங்களெல்லாம் ஜ்வாலாமயமாய் இருந்து கொண்டு, அந்த ஜ்வாலைகளினின்று பாவகன் முதலான அஷ்டவஸுக்களும் உண்டாகிறார்கள். கோபத்தால் புருவங்கள் நெறிந்து ஒன்றுபட்டுப் போகப்பார்க்கும்போது, அவற்றினின்று ருத்ரகணங்களெல்லாம் அவதரிக்கின்றன. என்னுடைய ஸௌம்யம்மாய்த் தோற்றும் முகத்தினின்று, கணக்கற்ற அச்விநீ குமாரர்களுண்டாகிறார்கள். காதினின்று அநேகர்களான வாயுதேவர்கள் உண்டாகிறார்கள்.

இப்படி ஒவ்வோர் அவயவங்களினின்று, தேவர்கள் ஸித்தர்கள் முதலியவர்களின் கூட்டங்கள் அநாயாஸமாக உண்டாகின்றன. இப்படி ஒவவோர் அவயவங்களினின்று, தேவர்கள் ஸித்தர்கள் முதலியவர்களின் கூட்டங்கள் அநாயாஸமாக உண்டாகின்றன. இப்படிக் கணக்கற்றனவாயும், விஸ்தாரம் அடைந்தனவாயும் இருக்கும் ரூபங்களோடு கூடிய, இந்த விச்வரூபத்தைப் பாராய். இந்த ரூபங்களை வர்ணிக்க ஆரம்பித்து, வேதத்தின் வாக்கு உளறிப்போயிற்று. காலத்துக்கே ஆயஸ் போதாமற் போயிற்று. ப்ரஹ்மதேவனாற்கூட இந்த ரூபங்களின் முடிவுகாண முடியவில்லை. இவைகளைப்பற்றிய விஷயத்தை, மூன்று வேதங்களும் ஒருநாளும் கேட்டதேயில்லை. இப்படிப்பட்ட கணக்கற்ற ரூபங்களைக் கண்ணாற் பார்க்க பாக்யத்தால் உனக்கு கிடைத்திருப்பதால், நீ அவற்றை நன்றாய்ப் பார்த்து ஆனந்தப்படு.

इहैकस्थं जगत्कृत्स्नं पश्याद्य सचराचरम् ।
मम देहे गुडाकेश यच्चान्यद् द्रष्टुमिच्छसि ।। ७ ।।

இஹைகஸ்தம் ஜகத் க்ருத்ஸ்நம் பஶ்யாத்ய ஸ சராசரம் ।
மம தேஹே குடாகேஶ யச்சான்யத் த்ரஷ்டுமிச்சஸி ।। 7

இதுவுமது :

ஹே கிரீடி, கல்பதருவின் அடிக்கட்டையின் சுற்றிலும் பசுமையாய்ப் புற்கள் முளைத்திருந்தாற்போலும், இந்த விச்வரூபத்தின் ஒவ்வோர் மயிர்க்கால் தோறும், ஒரோர் ஸ்ருஷ்டியே தோன்றி நிற்கின்றது. ஓர் கவாக்ஷத்தில் இருக்கும், ஓர் த்வாரம் மூலமாய் உள்வரும் வெளிச்சத்தில், பறந்து கொண்டிருப்பவையாய்க் காணப்படும். தூசிகள்போல், ஒவ்வொரு அவய ஸந்தியின் இடுக்கிலும், அநேக ப்ரஹ்மாண்டங்கள் பறந்து கொண்டிருப்பவையாய்க் காணப்படும் தூசிகள் போல், ஒவ்வொரு அவயவ ஸந்தியின்

இடுக்கிலும் அநேக ப்ரஹ்மாண்டங்கள் பறந்து கொண்டு விஸ்தாரமாய்க் காணப்படும். அன்றியும் விச்வத்தில் காணமுடியாத எந்த ரூபங்களைப் பார்க்க வேண்டுமென்று விரும்புவாயோ, அவை அனைத்தையும் இந்த ரூபத்தில் காணுவதற்கு ஓர் ஸங்கடமும் இராது. வேண்டுமென்ற எல்லாவற்றையும் இந்த ரூபத்தில் நீ ஸுகமாய்க் காணப்பெறலாம்.

न तु मां शक्यसे द्रष्टुमनेनैव स्वचक्षुषा ।
दिव्यं ददामि ते चक्षुः पश्य मे योगमैश्वरम् ॥ ८ ॥

ந து மாம் ஶக்யஸே த்ரஷ்டுமனே னைவ ஸ்வசக்ஷுஷா ।
திவ்யம் ததாமி தே சக்ஷுः பஶ்ய மே யோக மைஶ்வரம் ॥ 8

இந்த விச்வரூபம் அர்ஜுநன் கண்ணுக்கு கோசரமாகாமல் இருப்பதைப் பார்த்து, பகவான் அவனுக்கு திவ்யத்ருஷ்டி கொடுத்தல் :

இப்படி விச்வரூபத்தை எடுத்த அந்த க்ருஷ்ணன் மிக்க க்ருபையோடு சொல்லும்போது, அர்ஜுநன் தான் பார்க்கிறதாகவாவது, பார்க்க வில்லை என்றாவது, சொல்லாமல் மௌனமாய் நின்றான். "இது என்ன? இவன் ஒன்றும் பேசாது நிற்கிறானே" என்று ஸ்ரீ கிருஷ்ணன் கவனிக்கும்போது, இவன் முகத்தில் பார்க்க வேண்டுமென்று ஆசை பூர்ணமாகாததின் குறி, முன்போலவே காணப்பட்டுக் கொண்டிருந்தது. "இவனுடைய ஆசை குறைவுபடவே இல்லை, இன்னும் ஸுகத்தின் வழியே இவனுக்குக் கிடைக்கவில்லை, ஏனென்றால் நான் காட்டினதில் ஓர் மூலை கூட, இவன் பார்க்காமற்போனான்," என்று தேவன் சொல்லி, சிரித்து, பார்க்கிறதற்கு ஆசைப்பட்ட அர்ஜுநனை நோக்கி, "நான் விச்வரூபத்தைக் காட்டினேன், நீ பார்க்காமல் இருந்துவிட்டாயே," என்று சொன்னார்.

இந்த வார்த்தையைக் கேட்டு புத்திசாலியான அர்ஜுநன் பின்வருமாறு சொன்னான். இப்படி நான் பார்க்காது போனது, யாருடையகுற்றமோ? நீர் கொக்கைக்கொண்டு சந்த்ரகிரணங்களை சாப்பிடச்செய்யப் பார்க்கிறீர். கையிற் கண்ணாடியை எடுத்து, குருடன் முன்னால் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறீர். செவிடன் முன்னால், உம்முடைய ஸங்கீத ஸாமர்த்யத்தை எல்லாம் காட்டிவைக்கிறீர். தெரிந்தவராயிருந்தும், தவக்களை முன்னால் மகரந்தத்தைப் பரிமாறி, அதைப்

பாழ்படுத்துகிறீர். இப்படி எல்லாம் யோசனை இல்லாத காரியங்கள் செய்துவிட்டு, என்பேரில் ஏன் கோபித்துக் கொள்கிறீர்? எது இந்த்ரியங்களால் அறியத்தகாதென்று நிர்ணயிக்கப் பட்டு, ஞானத்ருஷ்டியினாலேயே பார்க்கத் தக்கதென்று வகுத்துவைக்கபட்டதோ, அதை என்னுடைய மாம்ஸக்கண்முன்னாற் காட்டிவைத்தால் நான், என்னமாய்ப் பார்க்கக்கூடும்?

ஆனால் உம்முடைய தவறுதலை, நான் எடுத்துச் சொல்லக்கூடாது. அதினால் ஏற்பட்ட கஷ்டத்தை நானே ஸஹித்துக் கொள்வதே ந்யாயம். இப்படி அர்ஜுனன் சொல்லவே, "ஆம், என் பேரில் தப்பிதம் இருக்கிறது, நீ சொன்னதை எல்லாம் ஒத்துக்கொண்டேன், அப்பா," என்று ஸ்ரீக்ருஷ்ணன் சொன்னார். "நியாயமாய், நான் உனக்கு விச்வரூபத்தைக் காட்டிவைப்பதற்கு முன், அதைப் பார்க்கத்தக்க ஸாமர்த்யத்தை உனக்கு உண்டாக்கிவைக்க வேண்டியதாயிருந்தது. ஆனால் நீ ப்ரேமையோடு பேசும்போது, என் புத்தி தடுமாற்ற முற்றுப்போயிற்று. பூமியை உழுதுவைப்பதற்குமுன், விதையை விதைத்து விட்டால், முளைத்தபயிர் வேரூன்றமுடியாமல் செத்துப்போவது போலும், உனக்குப் பார்க்கத்தக்க ஸாமர்த்தியத்தைக் கொடுக்காமல், நான் விச்வரூபத்தைக் காட்டிவைத்தது வியர்த்தம் ஆயிற்று. ஆகையால் என்னுடைய விச்வரூபத்தைப் பார்ப்பதற்கு வேண்டிய திவ்யத்ருஷ்டியை, உனக்கு முன்னம் முன்னம் கொடுப்பேன், ஹே பாண்டவா. அந்த த்ருஷ்டியைக்கொண்டு என்னுடைய ஐச்வர்யயோகம் அனைத்தையும் பார்த்து, அதை உன்னுடைய அநுபவ ஸித்தமாய்ச் செய்து கொள்". இப்படி, வேதாந்தப்ரதிபாத்யரும், ஸகலலோகங்களுக்கு மாதியானவரும், ஜகத்தில் உள்ள அனைவராலும் பூஜிக்கத்தக்கவருமான அந்த க்ருஷ்ணன் சொன்னார்.

सञ्जय उवाच ।

एवमुक्त्वा ततो राजन्महायोगेश्वरो हरिः ।

दर्शयामास पार्थाय परमं रूपमैश्वरम् ॥ ९ ॥

ஸஞ்சய உவாச -

ஏவ முக்த்வா ததோ ராஜன் மஹாயோகேஶ்வரோ ஹரி: ।

தர்ஶயாமாஸ பார்தாய பரமம் ரூபமைஶ்வரம் ॥ 9

ஸஞ்சயன் அர்ஜுநன் பாக்யத்தைக் கொண்டாடல்:

பாருமையா, ஹே கௌரவகுல சக்ரவத்தியான த்ருதராஷ்டிரராஜனே, எனக்கு மேன்மேலும் இது தான் மிக்க ஆச்சர்யமாய்த் தோற்றுகிறது. என்னதென்றால், லக்ஷ்மியைக் காட்டிலும் மிக்க பாக்யம்படைத்தவன் எவன்? ரஹஸ்யமான விஷயங்களை அறிந்து தெரிவிக்கும் விஷயத்தில், உலகில் வேதங்களை விஞ்சினவன் எவன்? ஸேவகனாயிருந்தும் பணிவிடை செய்யும் விஷயத்தில், ஆதிசேஷனை அதிகரித்தவன் எவன்? பகவானுடைய ப்ரஸாதம் கிடைக்க வேண்டுமென்று, எட்டு ஜாமமும் தூக்கமில்லாமல் ஸமாதியில் இருக்கும்யோகிகளைப்போல், பகவானை ஸதா அநுஸரித்து நிற்பதில், கருடனைக்காட்டிலும் சிறந்தவன் எவன்? ஆயினும இவர்கள் அனைவரும் ஒருபக்கம விலகி நின்றுபோனார்கள். பாண்டவர்கள் பிறந்தபின், க்ருஷ்ணஸுகம் முழுவதும் அவர்கள் பங்காயிற்று. அவர்களுக்குள்ளும், ஓர் காமுகன் தான்அபிமானித்த ஸ்த்ரீயின் வசப்பட்டுப்போவது போலும், ஸ்ரீக்ருஷ்ணன் அர்ஜுநன் வசப்பட்டுப்போனார்.

ஒருவன் ஓர்கிளியை வளர்த்து, அதற்கு வார்த்தைகளைக் கற்றுக்கொடுத்தால், அது கூட சொல்லிக்கொடுத்த வார்த்தயைத் திருப்பிச் சொல்வதில், தவறிப்போனாலும் போகும்; குரங்காட்டியின் குரங்கு அவன் சொன்ன படி ஆடத்தவறிப்போனாலும் போகும்; ஆனால் அர்ஜுநன் சொன்னபடி யெல்லாம் ஸ்ரீக்ருஷ்ணன் பிசகாமல் ஆகிறார். அவர் அர்ஜுநனுக்குக் கட்டுப்பட்டுப் போயிருக்கும் ப்ரகாரத்தை, வர்ணிப்பது என் திறமல்ல. இந்த அர்ஜுநன் பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபமனனைத்தையும், இந்த கண்ணைக்கொண்டே பார்க்கும் படியாய், இன்று பாக்யம் படைத்தான். இவன் வாயிலிருந்து எந்த வார்த்தை புறப்பட்டபோதிலும், அதைக் கொஞ்சங்கூட குறைவின்றி ஸ்ரீக்ருஷ்ணன், பூர்ணம் செய்து கொடுக்கிறார். இவன் யஜமானனாய், கோபத்தோடு பேசினால், அதைக் கேட்டு ஸ்ரீக்ருஷ்ணன் மறுவார்த்தை பேசாமல், மிக்க வணக்கமாய்ப் பொறுத்துக்கொள்கிறார். குழந்தைபோல் இவன் பிணங்கினால், அவர் மிக்க ச்ரமப்பட்டு ஸமாதானங்கள் சொல்கிறார்.

பகவானுக்கு அர்ஜுந பைத்யம் மிக்க த்ருடமாய்ப் பற்றிக்கொண்டது. அவருடைய இயற்கையான பெருமையோ,

எப்படி இருக்கிறதென்றால், சிற்றின்பத்தை முற்றிலும் ஜயித்துவிட்டுப்பிறந்தவர்களான சுகப்ரஹ்மம் போன்ற பெரியவர்கள், கிருஷ்ணன் கோபிகளோடு கலந்து ஆடின சிற்றின்பவிலாஸங்களை மிக்கக் கொண்டாடி, அவற்றை வர்ணிக்கும் ஸ்துதிபாடகர்கள் ஆனார்கள். க்ருஷ்ணனோ, யோகிகள், ஸமாதி என்னும் பெட்டியில் இட்டுப் பூட்டி வைத்துக்கொள்ளும் தனம் ஆவார். அவர் எவ்விதமாய்அர்ஜுனனுக்கு வசப்பட்டுப்போனார் என்பது எனக்கு ஆச்சர்யமாயிருக்கிறது, ஹே ராஜாவே, இப்படிச் சொல்லி, உடனேயே சற்று யோசித்துப்பார்த்து, அந்த ஸஞ்சயனே, இதில் ஆச்சர்ய மொன்றுமில்லை யென்றும், எவனை ஸ்ரீக்ருஷ்ணன் அங்கீகரித்துக் கொண்டாரோ, அவனுக்கு இப்படிப்பட்ட பாக்யம் உண்டாகிறது என்றும், சொன்னான்.

அர்ஜுனனுக்கு திவ்யத்ருஷ்டி கிடைத்ததின் பயன் :

ஆகையாற்றான், அந்த தேவர்கள் அரசன் பார்த்தனைப் பார்த்து விச்வரூபத்தைப் பார்த்தறிந்து கொள்ளும்படி, உனக்கு திவ்யத்ருஷ்டி கொடுக்கிறேன், என்று சொன்னார். இப்படி அவருடைய முகத்தினின்று இவ்வக்ஷரங்கள் வெளிப்பட்டனவோ இல்லையோ, அந்த அர்ஜுனனிடத்திலிருந்த அஜ்ஞானம் என்னும்இருட்டு, ஒரே தடவையாக அவனை விட்டு புறப்படத்தலைப்பட்டது. இவைகளை அக்ஷரங்கள் என்று சொல்லக்கூடாது. இவைகள் பரப்ரஹ்மத்தினுடைய ஸாம்ராஜ்ய ஐச்வர்யத்தை. அர்ஜுனன் பார்ப்பதற்காக, ஸ்ரீக்ருஷ்ணனால் ஏற்றிவைக்கப்பட்ட ஞானதீபங்களாயின. பின்பு திவ்யத்ருஷ்டியின் ப்ரகாசம் ஏற்பட்டு, அர்ஜுனனுடைய ஞானக்கண் நாலுபக்கத்திலும் வ்யாபித்துப் பார்க்கத் தொடங்கினது.

இப்படித் தன்னுடைய விச்வரூப ஐச்வர்யத்தை, ஸ்ரீக்ருஷ்ணன் அர்ஜுனனுக்குக் காட்டி வைத்தார். இப்படிச் செய்யவே, பகவானுடைய அவதார விசேஷங்களெல்லாம், அந்த விச்வரூபம் என்னும் ஸமுத்ரத்தின்மேற் றோன்றும் அலைகளாயின. இந்த விச்வமெல்லாம், அந்தவிச்வரூபத்தின் தீக்ஷணமான ப்ரகாசத்தால் ஏற்பட்ட ம்ருகஜலமாயிற்று. சராசரம் அனைத்தும், அந்த விச்வரூபம் என்னும் பூமிகையின் மேல் எழுதப்பட்ட சித்ரமாயிற்று.

இப்படி பகவான் தம்முடைய மூலஸ்வரூபத்தை அர்ஜுனனுக்குக் காட்டிவைத்தார். முன்பு ஒருக்கால்

சிறுவயஸில், இந்த ஸ்ரீபதியானவர் மண்ணைத்தின்றபோது, தாயாகிய யசோதையானவள் கையிற் பிடித்துக்கொண்டு, மிக்கக் கோபமாய் அதட்டினாள். அப்போது, மிக்கவும்பயந்து போனவராய் முகத்தில் மண்ணில்லை யென்று காட்டுவதற்காக, வாயைத் திறந்தது போல் நடித்து, அவர் வயிற்றுக்குள் பதினான்கு லோகங்களையும், அவள் ஸாவகாசமாய்ப் பார்க்கும்படியாகச் செய்து வைக்க வில்லையா?

அன்றியும் மதுவநத்தில் தபஸு செய்து கொண்டிருந்த த்ருவனுக்கு, தர்சனம் கொடுத்து, அவன் கன்னத்தை சங்கத்தாற் றுடைத்து, வேதங்களின் புத்திகூட எதை நெருங்க முடியாமல் விலகி நின்று விட்டதோ, அந்த தம் ஸ்வரூபத்தைப் பூர்ணமாய் வர்ணிக்கும்படியான ஸாமர்த்யத்தை அவனுக்கு உண்டாக்கிவைக்க வில்லையா?

அவ்விதமான அநுக்ரஹத்தை ஸ்ரீஹரி, தனஞ்சயன் விஷயத்திலும் செய்தாராதலால், அவனை ஆக்ரமித்துக் கொண்டிருந்த மாயையானது, எங்கே போய்ச்சேர்ந்தது என்று சொல்லமுடியா வண்ணம் விலகிப்போயிற்று. அந்த விச்வரூப ஐச்வர்யத்தின் ப்ரகாசத்தால், ஸர்வ ப்ரதேசங்களும் ஒரே தடவையாக ப்ரகாசமாயின. அந்த ஆச்சர்யமான விச்வரூபம், ப்ரளயகாலத்து ஏகார்ணவம் போல் எங்கும்பரவி, அதில் அவனுடைய புத்தி முழுகிப்போயிற்று.

எப்படி மஹாப்ரளயத்தில், ப்ரஹ்மலோகங்கூட முழுகிப்போய், எங்கும் ஒரே ஸமுத்ரமாய் ஏற்பட்டிருக்க, மார்க்கண்டேயன் அதில் ஒண்டியாய் மிதந்து கொண்டிருந்தானோ, அப்படியே விச்வரூபம் என்னும் ஆச்சர்ய காட்சி எங்கு பார்த்தாலும் ஒரே ஸமுத்ரம்போல் வ்யாபித்திருக்க, அதின் நடுவில் அர்ஜுநன் சிக்கிப்போய் புரண்டு கொண்டிருந்தான். அந்த ஸ்திதியில், அர்ஜுநன் திகைத்துப்போய், "இங்கே எவ்வளவோ பெருத்ததான ஆகாசம் ஒன்றிருந்து கொண்டிருந்ததே, அதை இப்போது எவன் எங்கே கொண்டுபோய் ஒளித்துவைத்துக் கொண்டானோ, தெரியவில்லையே; அந்த சாராசரரூபமான விச்வத்துக்கும் மஹாபூதங்களுக்கும் என்ன நேர்ந்தது? திக்குகள் இருந்த இடமே தெரியாமல், மேல்கீழ் என்பவையே காணாமற்போயினவே, உலகத்தின்ரூபம் முழுவதும் நித்ரையில் கண்ட ஸ்வப்நம் ஆயிற்றே". என்று அவன் தனக்குள் தானே சொல்லிக்கொண்டான்.

ஸூர்யன் உதித்தபின் சந்த்ரனும் நக்ஷத்திரங்களும் எப்படி மறைந்து போகுமோ, அப்படியே ப்ரபஞ்சரசனை என்னும் தோற்றத்தை விச்வரூபத்தின் ப்ரகாசம் விழுங்கி விட்டது. புதிய தடுமாற்றம் கொண்டது. இந்த்ரியங்கள் வெளிநோக்கிச் செல்லாமல், திரும்பி ஹ்ருதயத்தில் வந்தொடுங்கிப் போயின. அப்போது திகைப்பு என்பது திகைத்துப் போயிற்று; ஏகாக்ரதை என்பதற்கு ஏகாக்ரதை ஏற்பட்டது. (இவ்வாக்யத்தின் அர்த்தம் மேல் வரும் வாக்யத்தால் விளக்கப்படுகிறது.) ஞானசக்திகள் எல்லாவற்றின் மேலும், மோஹநாஸ்த்ரம் போடப்பட்ட தாயிற்று. அப்படி ஆச்சர்யத்தில் முழுகிப்போய், மெல்ல மெல்ல கண்ணைத் திறந்து பார்க்கும்போது, இதற்குமுன் தான் பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீ கிருஷ்ணனுடைய நான்கு கைகள்படைத்த அழகான உருவமே, அநேக ரூபங்களோடு கூடியதாய், எங்கு பார்த்தாலும் வ்யாபித்துக்கொண்டு நிற்க, அவன் கண்டான்.

வர்ஷாகாலத்தில் மேகங்கள் ஆகாசம் முழுதும் வ்யாபித்துக் கொள்வதுபோலவும், ப்ரளயகாலத்துத் தீயானது எங்கும் பரவி எரிவது போலவும், பகவானுடைய விச்வரூபமானது தன்னைத்தவிர வேறொன்றையும் எங்கும் காணமுடியாமற் செய்து வைத்தது. முன்பு ஸ்ரீ க்ருஷ்ணஸ்வரூபத்தைப் பார்த்து ஸமாதான மடைந்திருந்த கண்களை மூடித்திறக்கும் நேரத்துக்குள்ளேயே, விச்வரூபம் அவன் கண்முன்னால் தோற்றி நின்றது. இவன் இந்த இரண்டு கண்ணைக் கொண்டே, ஸ்ரீ க்ருஷ்ணனுடைய விச்வரூபம் முழுவதையும் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டானே, அந்த ஆசையை ஸ்ரீ க்ருஷ்ணன், இவ்வாறு பூர்த்தி செய்து வைத்தார்.

अनेकवक्त्रनयनमनेकाद्भुतदर्शनम् ।
अनेकदिव्याभरणं दिव्यानेकोद्यतायुधम् ॥१०॥

அனேக வக்த்ர நயனம் அனேகாத்புத தர்ஶனம் ।
அனேக திவ்யா பரணம் திவ்யா நேகோத்யதாயுதம் ॥ 10

விச்வரூபத்தில் அர்ஜுனன் கண்ட காட்சிகள் :

பின்பு அந்த விச்வரூபத்தில், கணக்கற்ற முகங்கள் இருப்பதைப் பார்த்தான். அவைகள் ஸ்ரீமந்நாராயணனுடைய அரண்மனைகள் போலும், அழகுகளின் ஸம்பத்துக்களெல்லாம் நிறைத்து வைக்கப்பட்டிருக்கும் பண்டகசாலைகள் போலும், மிக்க நேர்த்தியாய் விளங்கின. ஆநந்தங்களே மரங்களாய்,

ஓர்வநம் ஏற்பட்டு, அது அநேக அழகுகள் படைத்திருந்தாற் போலும், அழகுகளே ராஜ்யம் செய்யப்பெற்றாற்போலும், மநோஹரமாய் இருக்கும் ஹரியின் முகங்களை, அங்கே அர்ஜுநன் பார்த்தான். அத்துடன் கூட சில முகங்கள் காளராத்ரி என்னும் தேவியின் பரிவாரங்கள் வெளிப்பட்டாற் போல, அதிபயங்கரமாய் இருந்தன. ம்ருத்யுவுக்கே முகங்கள் உண்டானாற் போலும், எல்லாரையும் பயப்படச்செய்யும் பயம் என்னும் ஓர் தேவதையின் கோட்டையே பீரங்கி முதலியவற்றால் அரண் செய்யப்பட்டு விளங்கினாற் போலும், ப்ரளயாக்நியின் அநேக குண்டங்கள் புறப்பட்டாற் போலும், அவைகள் விளங்கின. அவற்றைப் பார்த்தபின், அர்ஜுநன் மற்றும் வேறு விதப்பட்டவனவாய், ஸாதாரணமும், ஸௌம்யமும, அலம்க்ருதங்களுமான அநேக முகங்களும், அந்த ரூபத்தில் இருக்கக் கண்டான்.

அவன் எவ்வளவு தூரம் பார்த்த போதிலும், அப்போது அவனுக்கு ஏற்பட்டிருந்த ஞானதிருஷ்டியாற் கூட, அந்த முகங்களின் முடிவைக் காணமுடியவில்லை. பின்பு அம்முகங்களி லிருக்கும் கண்களைஅவன் உற்றுப் பார்க்கத் தொடங்கினான். அப்போது, அநேக வர்ணங்கள் உள்ள தாமரைப்பூக்கள் ஒரே காடாய் பூத்திருந்தாற் போலும், சூர்யர்கள் வரிசை வரிசையாய் வகுத்து வைப்பட்டிருந்தாற்போலும், அக்கண்கள் அவனுக்குத் தோன்றின. அவற்றில், சில ஒன்றுகூடிய ப்ரளய காலத்து மேகங்கள் போல் மின்னிக் கொண்டும் நெருப்புப்போல் பிங்களவர்ணமாயும், இருக்க அவன் கண்டான். இப்படி ஒவ்வோராச்சர்யத்தைப் பார்த்துக் கொண்டு வரும்போது, அவற்றில் ஒவ்வொன்றுக்குள், அந்த அர்ஜுநனுக்கு அநேக விதமான காக்ஷிகள் காணக் கிடைத்தன. பின்பு கால்கள் எங்கே யென்றும், கிரீடங்கள் எங்கே யென்றும், கைகள் எங்கே யென்றும், தனக்குத் தானே சொல்லிக் கொண்டு, நன்றாய்ப் பார்த்துத் தீர வேண்டும் என்ற ஆசையை, மிக்க ஆதரவுடன் வ்ருத்திசெய்து கொண்டுபோனான்.

ஆனால் அந்த அர்ஜுநன் மிக்க பாக்யசாலியா யிருந்ததால், அவனுடைய ஆசைகள் வீணாய்ப் போகவில்லை. பரமசிவனுடைய தூணீரத்தில் வீணாய்ப்போகும் பாணங்கள் இருக்குமா? ப்ரஹ்மாவினுடைய வாக்கினின்றும் பொய்யாய்ப் போகும் வார்த்தைகள் புறப்படுமா? ஆகையால், அந்த விச்வரூபத்தை அர்ஜுநன் ஆதியோடந்தமாய்ப் பார்க்கப்பெற்றான். எதினுடைய ஓர் கோடி கூட

வேதங்களுக்குப் பார்க்க கிடைக்க வில்லையோ, அந்த விச்வரூபத்தினுடைய ஸர்வாவயவங்களையும், ஏகககாலத்தி லர்ஜுநன் பார்த்து, ஸந்தோஷ மடைந்தான். அநேக விதமான ரத்நங்கள் அமைக்கப் பெற்ற ஆபரணங்களோடு ப்ரகாசித்துக் கொண்டிருந்த அந்த விச்வரூபத்தின் பெருமை முழுவதையும், பாதம்முதல் மகுடபர்யந்தம், அவன் ஸேவித்து ஆநந்தித்தான். பரப்ரஹ்மம், தன்னுடைய அவயவங்களை அலங்கரித்துக் கொள்வதற்கு, அதுவே அநேக விதமான நகைகளாய் அமைந்து நின்றதே, அந்த நகைகளின் பெருமைகளை நான் என்னமாய் வர்ணிக்க முடியும்? எந்த பரப்ரஹ்மதேஜஸ்ஸு மஹாதேஜஸ்ஸுகளுக்கு உயிர்நிலையாயிருந்து, சந்த்ர ஸூர்யர்களை ப்ரகாசிக்கச் செய்து, விச்வத்தை விளங்கச் செய்கிறதோ, அந்த திவ்ய தேஜஸ்ஸுக்கு அலங்காரமாய் ஏற்பட்ட ஆபரணங்களின் பெருமை எவனுடைய புத்தியால் அறியக்கூடியதாகும். பகவான் தன்னையே நகைகளாய்ச் செய்து கொண்டு, தன் அங்கங்கள் மேல் அணிந்து கொண்டான், என்று அர்ஜுனன் அறிந்தான்.

பின்பு அந்த ஞானத்ருஷ்டியைக்கொண்டு அவ்விச்வரூபத்தில் ஸரளமாய் நீண்டிருக்கும் கைகளை கவனித்துப்பார்க்கும் போது, அவற்றின் நுணியில் ஆயுதங்கள் ப்ரளயகால, அக்நியின் ஜ்வாலைகளின் துண்டங்கள் என்று சொல்லும்படியாய், விளங்கிக் கொண்டிருந்தன. தானே அங்கமாயும், தானேஆபரணங்களாயும், தானே கைகளாயும், தானே ஆயுதங்களாயும், தானே உயிராயும், தானே சரீரமாயும், பகவான் நின்று, விச்வத்தை எல்லாம் வ்யாபித்துக் கொண்டு இருந்ததாய், அவன் பார்த்தான். இந்த ரூபத்தின் ப்ரகாசத்தின் தீக்ஷணத்தால், நக்ஷத்திரங்கள் உதிர்ந்து விழுந்தன. அந்த தேஜஸ்ஸின் தாபத்தை ஸஹிக்க முடியாமல், அக்நியானவன்பின்வாங்கி ஸமுத்ரத்தில் புகுந்துகொள்ள வேண்டு மென்றெண்ணினான். அதற்குமேல் காளகூட விஷத்தின் அலைகள் என்று சொல்லத்தக்கனவாயும், ப்ரளயகாலத்தின் மின்னல்களின் காடுகள் போன்ற ஆயுதங்களைத் தரித்தனவாயும், இருக்கும் கணக்கற்ற கைகளையும் பார்த்தான்.

दिव्यमाल्याम्बरधरं दिव्यगन्धानुलेपनम् ।
सर्वाश्चर्यमयं देवमनन्तं विश्वतोमुखम् ।।११।।

திவ்யமால்யாம் பரதரம் திவ்ய கந்தானு லேபனம் ।
ஸர்வாஶ்சர்ய மயம் தேவ மனந்தம் விஶ்வதோ முகம் ॥ 11

இதுவுமது :

அக்ஷகைகளைப் பார்த்து பயந்து, அவற்றினின்று பார்வையைத் திருப்பிக்கொண்டு, அவன் கீரீடங்களையும் கண்டங்களையும் பார்க்கத் தலைப்பட்டான். அப்போது அவற்றின் மேல்தரிக்கப்பட்டவையாய் அவன் பார்த்த புஷ்பங்கள், கல்பதருக்களுக்கு உத்பத்திஸ்தானமோ என்றும், மஹாஸித்திகளுக்கு மூலபீடமோ என்றும், மஹாலக்ஷ்மியானவள் ச்ரமபரிஹாரம் செய்து கொள்வதற்கு ஏற்பட்ட விச்ராந்திஸ்தானமோ என்றும், சங்கிக்கும்படியிருந்தன. மகுடத்தினின்று பூங்கொத்துகள் தொங்கிக் கொண்டிருப்பனவாயும், அந்த ரூபத்தில் அங்கங்கே பூஜையாக அநேக பூமாலைகள் கட்டப்பட்டிருப்பனவாயும், கழுத்திலிருந்து ஆச்சர்யகரமான பருத்த பூமாலைகள்தொங்கி அசைந்து கொண்டிருப்பனவாயும், அவன் பார்த்தான். ஸ்வர்க்கம் ஸூர்யதேஜஸ்ஸால் சூழப்பட்டிருப்பதுபோலும், மேருபர்வதம் தங்கத் தகட்டால் போர்த்து வைக்கப்பட்டதுபோலும், இடுப்பில் பீதாம்பரம் இறுகக்கட்டப்பட்டிருந்து. பளபள வென்று ப்ரகாசிப்பதையும் அவன் பார்த்தான்.

ஸ்ரீமஹாதேவன் கர்ப்பூரத்தூளால் பூசப்பட்டிருந்தாற் போலும், அல்லது கைலாஸபர்வதம் பாதரஸத்தால் பூசப்பட்டடிருந்தாற்போலும், பால் என்னும் நீரால் பால் ஸமுத்ரம் மூடப்பட்டிருந்தாற் போலும், சந்த்ரனுடைய மடிப்புகளைப் பிரித்து ஆகாசத்தைப் போர்த்து வைத்தாற் போலும், ஓர் சந்தனக்காப்பால் அவ்வுருவின் ஸர்வாங்கமும் கப்பப்பட்டிருப்பதையும் அவன் பார்த்தான். எந்த ஒரு சந்தனப்பூச்சு விச்வரூபத்தின் ஸ்வரூபகாந்தியை தன்னுடைய காந்தியின் சேர்க்கையால் அதிகரிக்கச் செய்து, ப்ரஹ்மானந்தத்துக்கு ஏற்பட்ட தாபத்தை தன்னுடைய சைத்யத்தால் தீர்த்துவைத்து, தன்னுடைய கந்தத்தால் ப்ருதிவிக்கே வாழ்வைச்செய்து கொடுத்து, நிர்லேபமான பரப்ரஹ்மத்துக்கு ஓர் லேபமாய் ஏற்பட்டு, மன்மதனும் கொண்டாடிப் பூசிக்கொள்ளத்தக்கதா யிருந்ததோ, அதின் வாஸனையின் பெருமையை எவன் வர்ணிக்க முடியும்?

இப்படி ஒவ்வொரு சிங்காரங்களின் அழகைப் பார்க்கப் பார்க்க, அர்ஜுநனுடைய புத்தி தடுமாற்றம் கொண்டது. அத்துடன் நில்லாமல், பகவான் நிற்கிறாரா, உட்கார்ந்திருக்கிறாரா, ஸந்முகராயிருக்கிறாரா, முகத்தைத்

திருப்பிக் கொண்டிருக்கிறாரா, என்றிவற்றை அறிந்து கொள்ள முடியாதவனானான். கண்ணைத் திறந்து கொண்டு, தனக்கு வெளிப்பக்கத்தில் எங்கே பார்த்தாலும், பார்த்த இடமெல்லாம் விச்வரூபமே தெரிந்தது. பின்பு பார்ப்பதில்லை என்று தீர்மானித்து, கண்ணை மூடிக் கொண்டாலும், உட்புறமெல்லாம் விச்வரூபமே தெரிந்தது. தடுக்கமுடியாதபடி விச்வரூபத்தின் முகங்கள் இடித்துப் புடைத்துக் கொண்டு வந்து, எதிரே தோற்றி நின்றன. பின்பு அவற்றைப் பார்க்கப் பயந்து திரும்பிக் கொண்டால், அப்போதும் அவை எதிர்ப்பட்டு நின்றன. விச்வரூபத்தின் கைகளும் கால்களும் அம்மாதிரியாகவே தோற்றி நின்றன. கண் திறந்து பார்த்தபோதவைகள் காணப்பட்டதில் ஆச்சர்யமில்லையாயினும், கண்ணை மூடிக்கொண்டாலு மவைகள் வலுவில் தோற்றி நின்றனவே! இது என்ன ஆச்சர்யம், கேளீர் பகவானுடைய க்ருபை எப்படி பலித்தது! அர்ஜுநனுக்கு பார்ப்பதிலும், பாராதிருத்தலிலும், ஸ்ரீ க்ருஷ்ணனுடைய வ்யாப்தியே ஏற்பட்டது.

ஆகவே அர்ஜுநன் ஓர் ஆச்சர்ய வெள்ளத்தில் விழுந்து அடித்துக் கொள்ளப்பட்டுப் போகும் போது, அவன் கால் நிலைகொண்டு கரையேறின உடனேயே, மற்றோர் ஆச்சர்யத்தின் வெள்ளம் புரண்டுவந்து, அவனை அடித்துக்கொண்டு போயிற்று. அப்படி பகவான், தான் ஒருவனே செய்து வைக்கக் கூடியதான, தன்னுடைய விச்வரூப மென்னும் அத்புதமான ஓர் காட்சியில், அர்ஜுனனைச் சிக்கவைத்துக் கொண்டார். அவர் இயற்கையாகவே எங்கும் வ்யாபித்தவர்! அப்படி வ்யாபித்திருக்கும் தன்மையைத்தன் கண் காணக் காண்பிக்க வேண்டு மென்று அர்ஜுநன் ப்ரார்த்தித்ததினால், அந்த ஸ்வரூபம் முழுவதையும் அவன் பார்க்கும்படியாய் நின்றார். பகவானால் அர்ஜுநனுக்குக் கொடுத்த திவ்யத்ருஷ்டியின் சக்தி எப்படி இருந்ததென்றால், அதற்கு தீபத்தினுடைய அல்லது ஸூர்யனுடைய அல்லது கண்கள் திறந்திருப்பதினுடைய ஸஹாயம் அநாவச்யமா யிருந்தது. ஆகையால் அர்ஜுநனுடைய கண் திறந்திருந்தாலும், கெட்டியாய் மூடி யிருந்தாலும், பகலாயிருந்தாலும், ராத்ரியாயிருந்தாலும், தீபம் இருந்தாலும் இல்லாது போனாலும், அர்ஜுநன் விச்வரூபத்தை அநேக அலங்காரங்களோடு கூடியதாயும், எங்கும் வ்யாபித்ததாயும், பார்க்க வேண்டியவனாகவே இருந்தான், என்று அஸ்தி நாபுரத்தில் ஸஞ்ஜயன் த்ருதராஷ்டிரனுக்குச் சொன்னான்.

दिवि सूर्यसहस्रस्य भवेद्युगपदुत्थिता ।
यदि भाः सदृशी सा स्याद्भासस्तस्य महात्मनः ।।१२।।

திவி ஸூர்ய ஸஹஸ்ரஸ்ய பவேத் யுக பதுத்திதா ।
யதி பாः ஸத்ருஶீ ஸா ஸ்யாத் பாஸஸ்தஸ்ய மஹாத்மனः ।। 12

விச்வரூபத்தின் தேஜஸ்ஸின் பெருமை :

"ஹே ராஜாவே! அந்த விச்வரூபத்தின் தேஹகாந்தியானது எவ்வளவு ஆச்சர்யமாய் இருந்ததென்றால், கல்பாந்தத்தில் எப்படி பன்னிரண்டு ஆதித்தயர்களும் ஒன்று சேர்ந்து ஒரே ஸூர்யனாக ப்ரகாசிப்பார்களோ, அப்படிப்பட்ட திவ்யஸூர்யனைப்போல் ஆயிரம் ஸூர்யர்கள் ஒரே காலத்தில் உதித்து ப்ரகாசிப்பதால் ஏற்படும் ஓர் தேஜஸ்ஸு, அந்த விச்வரூபத்தின் தேஜஸ்ஸுக்கு, ஸமானமானதாய்ச் சொல்லமுடியாது; உலகில் உள்ள மின்னல்களை எல்லாம் ஒன்றாய்க் கூட்டி, அத்துடன் ப்ரளயாக்நியின் ஸர்வஸ்வத்தையும் சேர்த்துவைத்தால், யாதோர் மஹாதேஜஸ் ஸேற்படுமோ, அதைப் போல் பதின் மடங்கு தேஜஸ்ஸை உண்டுபண்ணி வைத்தபோதிலும், அந்த விச்வரூபத்தின் காந்தியை அதுஏதோ கொஞ்சமாவது ஒத்திருக்கு மென்று சொல்லவே முடியாது; இப்படி ஸ்ரீ ஹரியின் பெருமை ஒப்பற்றதாய், அவருடைய தேஹகாந்தியானது நான்கு பக்கத்திலும் வ்யாபித்துக் கொண்டிருந்தது, அதை வ்யாஸபகவானுடைய க்ருபையால், நான் பார்க்கப்பெற்றேன்," என்று மேலும் ஸஞ்சயன் சொன்னான்.

तत्रैकस्थं जगत्कृत्स्नं प्रविभक्तमनेकधा ।
अपश्यद्देवदेवस्य शरीरे पाण्डवस्तदा ।।१३।।

தத்ரை கஸ்தம் ஜகத் க்ருத்ஸ்னம் ப்ரவி பக்தமநேகதா ।
அபஶ்யத் தேவ தேவஸ்ய ஶரீரே பாண்டவஸ் ததா ।। 13

அவ்விச்வரூபத்தில் உலகங்கள் அடங்கியிருந்த நேர்மை :

மேலும் அந்த விச்வரூபத்தின் ஓர் மூலையில், ஜகங்கள் அனைத்தும் தங்கள் தங்களுடைய விஸ்தாரத்தோடு, ஓர் ஸமுத்ரத்தில் சிறு குமுழிகள்போலும் காணப்பட்டன. ஆகாசத்தில் கந்தர்வநகரம் போலவும், பூமியில் எரும்புகளின் புத்துக்கள் போலவும், உலகங்களனைத்தையும், அந்த

தேவராஜனுடைய சரீரத்தில், அக்காலத்தில் அர்ஜுனன் பார்த்தான்.

ततः स विस्मयाविष्टो हृष्टरोमा धनञ्जयः ।
प्रणम्य शिरसा देवं कृताञ्जलिरभाषत ।।१४।।

ததः ஸ விஸ்மயாவிஷ்டோ ஹ்ருஷ்ட ரோமா தனஞ்ஜயः ।
ப்ரணம்ய ஶிரஸா தேவம் க்ருதாஞ்ஜலிர பாஷத ॥ 14

பின்பு அர்ஜுனனுடைய தேஹத்தை ஸாத்விகபாவங்கள் வ்யாபித்துக்கொண்டன :

அதன்பின் விச்வரூபம் என்றொன்றும், தான் ஒருவனென்றும், இப்படி அல்பமாய் ஓர் த்வைதபாவம் இருந்ததே, அதுகூட மறைந்து போய், அர்ஜுனனுடைய மனஸு இருந்த இடம் தெரியாமல் கரைந்துபோயிற்று. உள்ளே ஆநந்தம் பொங்கி, வெளியில் அவயவங்கள் தளர்ச்சி அடைந்தன. மழைக் காலத்தின் ஆரம்பத்தில், ஓர் மலையின் ப்ரதேசம் முழுமையும் ஜலம் ஓடி, சுத்தமாய்ப் போனபிறகு, அம்மலைப்பிரதேசம் முழுதும் பசுமையான புல், முளைகள் உண்டாய், விரைத்து நின்றாற்போலும், பாதம் முதற்கொண்டு தலைவரைக்கம் மயிர்க்கூச்சல் ஏற்பட்டது.

சந்த்ரகாந்த கல்லின்மேல் சந்த்ரகிரணங்கள் பட்ட மாத்ரத்தில், அது உருகத்தலைப்படுவது போலும், அர்ஜுனனுடைய தேஹம் முழுமையும் வியர்க்கத் தொடங்கிற்று, ஜலத்திலிருக்கும் குவிந்து போன தாமரைப்பூ நடுவில் சிக்கிப்போன தேன் வண்டின் ஸம்ப்ரமத்தால், அத்தாமரைப்பூ எப்படி பக்கத்துக்குப்பக்கம் ஆடுமோ, அப்படியே உள்ளே உண்டான ஆநந்தப்பெருக்கின் அலைகளால், அர்ஜுனனுடைய வெளிப்புறம் குலுங்கலுற்றது. கர்ப்பூரவாழை பக்வமான பிறகு, அதின் உள்மடல்கள் விரிந்து, கர்ப்பூரரஸமானது உள்ளே அடங்கி நிற்கமாட்டாமல், அதினின்று துளித் துளியாய் வெளிப்படுவதுபோலும், கண்களினின்று நீர்த் திவலைகள் சொரிந்தன. பூர்ணசந்த்ரன் ஆகாசத்திற் றோன்றின உடனே, ஏற்கனவே நிறைந்திருக்கும் ஸமுத்ரம் பொங்குவது போலும், அந்தராத்மாவில் ஸுகம் பொங்கி, தேஹம் ஆட்டம் கொண்டது. இப்படி ஸாத்விகபாவங்க ளனைத்தும் அவன் தேஹத்தில் மாறிமாறி ஏற்பட்டுக்கொண்டிருந்து, அவனுடைய அந்தராத்மாவுக்கு ப்ரஹ்மாநந்தத்தின் ராஜ்யம் கிடைத்ததாயிற்று.

பின்பு அர்ஜுநன் புத்தி ஸ்வாதீனமடைந்தது :

இப்படி ஓர் ஸுகாநுபவம் கிடைத்தபின், த்வைதாநுபவம் அர்ஜுநனுக்குத் திரும்பவும் உண்டாய், அவன் பெருமூச்சுவிட்டு கண்ணைத் திறந்து பார்த்தான். பின்பு முன் எந்த இடத்தில் ஸ்ரீ க்ருஷ்ணன் உட்கார்ந்திருந்தாரோ, அந்த இடத்தை நோக்கி பகவானுக்குத் தலை வணங்கி, இரண்டு கைகளையும் கூப்பிக்கொண்டு மிக்க வணக்கத்துடன் பின்வருமாறு பேசத்தொடங்கினான்.

अर्जुन उवाच ।

पश्यामि देवांस्तव देव देहे सर्वांस्तथा भूतविशेषसङ्घान् ।

ब्रह्माणमीशं कमलासनस्थऋषींश्च सर्वानुरगांश्च दिव्यान् ।।१५ ।।

அர்ஜுந உவாச -

பஶ்யாமி தேவாந் ஸ்தவ தேவ தேஹே
ஸர்வாம்ஸ்ததா பூதவி ஶேஷஸங்கான் ।
ப்ரம்ஹாணமீஶம் கமலாஸனஸ்த ம்ருஷீம்ஶ்ச
ஸர்வானு ராகாம்ஶ்ச திவ்யான் ।। 15

பின்பு அர்ஜுநன் பகவானைத் துதித்து தான் விச்வரூபத்திற் கண்ட காட்சிகளை வர்ணித்தல் :

ஹேஸ்வாமி, நீர் மிக்கப்பெருமை பெற்று வாழவேண்டும். ப்ராக்ருதனனான நான் உம்முடைய விச்வரூபத்தைப் பார்க்கும்படியாய் செய்துவைத்தீரே, அது உம்முடைய ஆச்சர்யப்படத்தக்க க்ருபையின் கார்யமல்லவா? ஆனால் ஸர்வஜீவர்களுக்கும் ஸ்வாமியான நீர், நல்ல கார்யம் செய்தீர். அதினால் ஸகல ஸ்ருஷ்டிக்கும் நீரே ஆச்ரய மென்று, நான் கண்ணாற் பார்த்து அறிந்து, மிக்க ஸந்தோஷம் அடைந்தேன். தேவா, மந்தரபர்வதத்தை ஆச்ரயித்துக்கொண்டு, ம்ருகங்கள் ஸஞ்சரிக்கும் காடுகள் அங்கங்கே ஏற்பட்டிருப்பது போலும், உம்முடைய விச்வரூபத்தில் அநேக் புவநங்களைப் பார்க்கிறேன். ஆகாசத்தை ஆதாரமாய்ப் பெற்று, நவக்ரஹங்களும் நக்ஷத்ரங்களும் ப்ரகாசித்துக் கொண்டிருப்பது போலும், ஓர் பெரிய வ்ருக்ஷத்தை ஆதாரமாய்க் கொண்டு பக்ஷிஜாதிகளின் கூடுகள் ஏற்பட்டிருப்பதுபோலும், உம்முடைய இந்த விச்வரூப மென்னும் சரீரத்தின்மேல், ஸகல தேவர்களோடும்கூட, ஸ்வர்கலோகம் இருப்பதை நான் பார்க்கிறேன்.

ப்ரபோ, உம்முடைய விச்வரூபத்தின் மேல், பஞ்சமஹாபூதங்கள் அநேக கூட்டங்களாய்க் கூடி இருப்பதையும், அவற்றால் ஏற்பட்ட சரீரங்களோடு கூடிய அநேக பூதஜாதங்களையும், நான்பார்க்கிறேன். ஐயா, உம்முடைய விச்வரூபத்தின் நடுவில் ஸத்யலோகம் இதோ தெரிகிறது. இதோ பார்க்கிறேனே, இவன் ப்ரஹ்மதேவன் அல்லவா? அதோ கைலாஸம் தெரிகிறது. பவானியோடு கூட ஸ்ரீமஹாதேவன் உம்முடைய இந்த ரூபத்தின் ஓர் பாகத்தில் காணப்படுகிறார்.. உம்மைக்கூட அல்லவா, உம்முடைய விச்வரூபத்தின் நடுவில் பார்க்கிறேன். கச்யபர் முதலிய ருஷிகள் அனைவரையும், பாதாளலோகத்தில் இருக்கும் நாகர்களோடுகூட, இந்த ரூபத்தில் பார்க்கிறேன். சுருக்கிச் சொல்வேன், கேளும், உம்முடைய இந்த ரூபத்தின் ஓரோர் அவயவங்களாகிய சுவற்றின் மேல் எழுதப்பட்ட சித்ரங்களாய், பதினான்கு புவனங்களும் காணப்படுகின்றன; அந்தந்த புவனங்களைச் சேர்ந்த லோகங்களும், அச்சித்ரங்களிற் சிறு சித்ரங்களாய் காண்கின்றன. இப்படி உம்முடைய அலௌகிகமான பெருமையை நான் ஸேவிக்கிறேன்.

अनेकबाहूदरवक्त्रनेत्रमपश्यामि त्वां सर्वतोऽनन्तरूपम् ।
नान्तं न मध्यं न पुनस्तवादिंपश्यामि विश्वेश्वर विश्वरूप ।।१६।।

அநேக பாஹூதரவக்த்ர நேத்ரம் பச்யாமி
த்வாம் ஸர்வதோகுநந்த ரூபம் ।
நாந்தம் ந மத்யம் ந புனஸ்தவாதிம்
பச்யாமி விச்வேச்வர விச்வரூப ॥ 16

இதுவுமது :

இந்த திவ்யத்ருஷ்டியின், உதவியைக்கொண்டு, நான்கு பக்கமும், பார்க்கும்போது, ஆகாசமானது கைகள் என்னும் முளைகளால் நிறைந்திருப்பதாய்க் காணப்படுகிறது. அப்படி உம்முடைய கைகள் இரண்டுக் கில்லாமல் பரவி, உலகில் நடந்து வரும் ஸகல வ்யாபாரங்களையும், ஒரே காலத்தில் நடத்திக் கொண்டு வருகின்றன. மஹா சூன்யத்தின் விஸ்தாரமான ப்ரதேசத்தில், ப்ரஹ்மாண்டங்கள் என்னும் பண்டகசாலைகள் ஏற்பட்டிருப்பது போலும், எங்கே பார்த்தாலும் உம்முடைய விச்வரூபத்தில், வயிறுகள் கணக்கற்றவையாய்க் காணப்படுகின்றன. ஐயா வேதங்களில் உம்முடைய தலைகள் ஆயிர மென்று கணக்கிடப்பட்டிருக்க,

அப்படி இல்லாமல், கோடிக்கணக்காய்த் தலைகள் காணப்படுகின்றனவே. பரப்ரஹ்ம மென்னும் மரம், தலைகள் என்னும் பழங்களின் பாரம் தாங்க முடியாதபடி, பழுத்துத் தொங்குகிறது என்று சொல்லும்படியாய் இருக்கிறது.

இப்படிக் கணக்கற்றவையான தலைகளை ஸேவிக்கிறதைப் போலவே, கணக்கற்றவையான கண்வரிசைகளையும் ஸேவிக்கிறேன். இது நிற்கட்டும். ஸ்வர்க்கம், பாதாளம், பூலோகம், அந்தரிக்ஷம், திக்குகள், என்ற வித்யாஸங்கள் தெரியாதபடி, எங்கு பார்த்தபோதிலும், இம்மூர்த்தியே காணப்படுகிறது. எந்தப் பக்கத்திலும், உம்மைத் தவிர ஓர் பரமாணுவுக்குக் கூட இடம் இல்லாதபடி, நீர் எங்கும் நிறைந்து நிற்கிறீர். இந்த விச்வத்தில் அபரிமிதமாய், எத்தனை பூதங்கள் நிறைந்திருக்கின்றனவோ, அத்தனை பூதங்களிலும், நீரே நிறைந்து கொந்தளித்துக் கொண்டிருப்பதாய் நான் பார்க்கிறேன். இப்படிப்பட்ட நீர் எங்கிருந்து வந்தீர்? இங்கே உட்கார்ந்திருக்கிறீரா, அல்லது நின்று கொண்டிருக்கிறீரா? நீர் எந்தத் தாய்க்குப் பிறந்தீர்? நீர் எவ்வளவு ஆக்ருதி உள்ளவர்? உம்முடைய ரூபம் எப்படிப்பட்டது? உம்முடைய வயஸு என்ன? உமக் கப்புறம் என்ன இருக்கிறது? நீர் எதினால் தாங்கப்பட்டிருக்கிறீர்? இப்படி யெல்லாம் நான் தீர விசாரித்துப் பார்த்தபின், உமக்கு நீரே ஆதாரம் என்றும், நீர் ஒருவருக்கும், பிறக்காதவ ரென்றும், நீர் எப்போதும் இப்படியே இருக்கிறவரென்றும், அறிந்து கொண்டேன்.

நீர் நிற்கிறவரு மல்ல, உட்கார்ந்திருக்கிறவருமல்ல; நெட்டையானவரும் அல்ல, குட்டையானவரும் அல்ல. உமக்கு மேலும் கீழும் நீரே இருக்கிறீர். நீர் ரூபத்தாலும், வயஸாலும், முன்புறத்தாலும் பின்புறத்தாலும், உம்மையே ஒத்திருக்கிறீர். என்னத்துக்காக வார்த்தையை வளர்த்துவது? ஹே அநந்தா, எந்த விஷயத்திலும், உமக்கு நீரே உபமானமாய் இருக்கிறீர். எவ்வளவு விசாரித்த போதிலும், இப்படியே ஏற்படுகிறது. ஆயினும் உம்முடைய இந்த ரூபத்தில் ஓர் குறைவு மாத்ரம் நான் கண்டேன். அது என்னவென்றால், ஆதியும் முடிவும், நடுவும், ஆகிய இம்மூன்றும், உம்முடைய ரூபத்தில் எங்கும் காணப்படுவதில்லை. இப்படி ஆதி மத்யம் அந்தம் இல்லாதவராயும், அளவற்றவராயும், லோகங்கள னைத்துக்கும் ஈச்வரனாயும், நீர் இருக்கிறீர் என்று, நன்றாய் நான் அறிந்தேன். உமது பெரியமூர்த்தியின் மேலெங்கும், கணக்கற்ற சிறு மூர்த்திகள் வெளிப்பட்டு காணப்படுவதால், நீர் அநேகர்வணமுள்ள ஓர் சொக்காய் தரித்திருப்பது போல்,

காணப்படுகிறீர். உம்முடைய பெரிய மூர்த்தியின்மேல் காணப்படும் பலவகைப்பட்ட அலங்காரங்களோடு கூடிய சின்ன மூர்த்திகள், ஓர் மலையின்மேல், துளிர்களோடும், பூக்களோடும், காய்களோடும், மரங்களும் கொடிகளும் வளர்ந்திருந்தாற் போல் காணப்படுகின்றன. உம்முடைய பெரிய மூர்த்தி ஓர் ஸமுத்ரமாயும், அதன் மேல் சின்ன மூர்த்திகள் சிறு அலைகளாயும், உம்முடைய பெரிய மூர்த்தி ஓர் மரமாயும், சின்ன மூர்த்திகள் அதில் பழுத்துத்தொங்கும் பழங்களாயும், காணப்படுகின்றன. பூமியானது பூதங்களால் நிறைந்திருப்பது போலும், ஆகாசம் நக்ஷத்ரங்களால் மூடப்பட்டிருப்பது போலும் உமது விச்வரூபம் அனைத்தும் மூர்த்திமயமாய் காணப்படுகிறது.

எந்த மூர்த்திகளின் ஒவ்வொரு அவயவங்களின் நுணியில், மூவ்வுலகங்களும் உண்டாய் அழிந்து போகின்றனவோ, அப்படிப்பட்ட மூர்த்திகள், உம்முடைய விச்வரூபத்தில், ஓரோர் மயிர்க்காலுக் கொவ்வொன்றாக, காணப்படுகின்றன. இவ்வளவு பெருமை உள்ளவராய், விச்வத்தை எல்லாம் உம்முடைய ரூபத்தின் மேல்தரித்துக் கொண்டவராய், இருக்கும் நீர், யார் என்றும், எவனைச் சேர்ந்தவரென்றும், பார்க்கப் போனால், கடைசியில் என்னுடைய தேர்ப்பாகனாகவே ஏற்படுகிறீர். நீர் எப்போதுமே, இவ்வளவு வ்யாபகமான ரூபமுள்ளவராய் இருக்கிறீர், என்பது என்னுடைய நிச்சயம், ஆயினும் பக்தர்களுக்கு அநுக்ரஹம் செய்வதை உத்தேசித்து, மிக்க ப்ரேமையோடு கொண்டாடத்தக்கப்படி, அழகிய சிறு உருவத்தோடு கூடியவராய்த் தோன்றுகிறீர். நான்கு கைகளோடு கூடியதாய், ச்யாமளவர்ணமாய், மிக்க அழகியதாயிருக்கும், உம்முடைய க்ருஷ்ணரூபத்தைப் பார்க்கும் போதெல்லாம், மனஸு எவ்வளவு ஆநந்த வசப்பட்டசைந்தாடுகிறது! ஆலிங்கனம் செய்துகொள்ளப் போனால்,அந்த சின்ன உருவம், இரண்டுகைகளுக்குள் அடங்கிப் போய், எவ்வளவு ஸந்தோஷத்தை உண்டாக்கிவைக்கிறது!

ஹே விச்வரூபியாகிய பகவானே, பக்தர்கள் மனஸில் ப்ரேமையை வ்ருத்தி செய்வதற்காக, நீர் இப்படி சிறுத்து அழகாயிருக்கும் ரூபத்தை எடுத்து நிற்கிறீர். ஆனால் இவ்வுலகத்தாராகிய எங்களுடைய பார்வை தூஷிதமாயிருப்பதால், நாங்கள் உம்முடைய பெருமையை அறியாதவர்களாய், உம்மை எங்களைப்போல் ஒரு மனிதன் என்று பாவிக்கிறோம். ஆனால் நீர் என்னுடைய ஸ்தூல

த்ருஷ்டியின் தோஷத்தைப் போக்கி, திவ்யத்ருஷ்டியை எனக்குக் கொடுத்து, உமது உண்மையான பெருமையை யதாவத்தாய்ப் பார்க்கும்படி செய்தீர். இப்படி என்னுடைய தேரின் முன்தட்டில் உட்கார்ந்திருந்தவராகிய நீரே, இவ்வளவு பெருத்த உருவம் படைத்தவராய் இப்போது ஆய்விட்டீர், என்று ஸந்தேஹமற நான் தெரிந்து கொண்டேன்.

किरीटिनं गदिनं चक्रिणं च तेजोराशिम् सर्वतो दीप्तिमन्तम् ।
पश्यामि त्वां दुर्निरीक्ष्यं समन्ताद् दीप्तानलार्कद्युतिमप्रमेयम् ॥१७॥

கிரீடினம் கதினம் சக்ரிணம் ச தேஜோராசிம்
ஸர்வதோ தீப்திமந்தம் ।
பச்யாமி த்வாம் துர்நி ரீக்ஷ்யம் ஸமந்தாத்
தீப்தாநலார்கத்யுதிம ப்ரமேயம் ॥ 17

இதுவுமது :

ஹே ஸ்ரீ ஹரி, நீர் க்ருஷ்ணரூபமாய்த் தோற்றிக் கொண்டிருந்தபோது, தரித்து கொண்டிருந்த கிரீடம் இதே அல்லவா? ஆனால் இப்போது அதினுடைய காந்தியும் பருமனும், எவ்வளவு வ்ருத்தி யடைந்திருக்கின்றன! இது என்ன ஆச்சர்யம்! ஹே விச்வமூர்த்தியே, முன் உம்முடைய மேல்நோக்கி எழுந்த கையில் சுழன்றுகொண்டிருந்த சக்கிரத்தையே அல்லவா இதோ தரித்துக் கொண்டிருக்கிறீர். இந்த அடையாளம் மாத்ரம் மாறிப்போகாமல், முன்போலவே இருந்துகொண்டிருக்கிறது. மற்றோர் பக்கத்தில் கதை தெரிகிறதே, அது முன் கிருஷ்ணரூபத்தில் நீர் பிடித்திருந்த கதையே அல்லவா? இவ்விரண்டு கைகளுக்கும் கீழ், ஆயுதமில்லாத இரண்டு கைகள், குதிரைகளின் கடிவாளங்களைப் பிடித்துக் கொண்டு, அவற்றை ஓட்டுவதற்காக முற்பட்டிருந்த அந்த இரண்டு கைகளுமே அல்லவா? நான், விச்வரூபத்தைப் பார்க்கவேண்டும் என்று, என் ஆசையைத் தெரிவித்த உடனேயே, அப்போது நீர் பூண்டிருந்த ஸாரதிவேஷத்தை மாற்றிக் கொள்ளாமலேயே, மிக்கப் பரபரப்பாக விச்வரூபத்தைத் தரித்துக் கொண்டு நின்றீர், என்று நான் ஸந்தேஹமறத் தெரிந்து கொண்டேன்.

ஆனால் உம்முடைய விச்வரூபத்தின் பெருமையைப் பார்த்து அச்சர்யப்படக்கூட, நான் சக்தி யற்றவனாயிருக்கிறேன். இந்த ஆச்சர்ய காட்சியைக் கண்டு,

அதை ஸஹித்துக்கொள்ள முடியாமல், என் மனஸை களைத்துப் போய்விடுகிறது. ஓர் வஸ்து இங்கே இருக்கிறது என்றாவது, இங்கே இல்லை என்றாவது, நிச்சயித்துக் கொள்ள முடியாதபடி, உம்முடைய தேஹகாந்தி யானது எங்கு பார்த்தாலும் ஆச்சர்யகரமாய் நிறைந்திருக்கிறது. இந்த விச்வரூபத்தின் தேஜஸ்ஸின் கொடுமையால், அக்நியினுடைய த்ருஷ்டிகூட பொசுங்கிப் போகிறது; ஸூர்யன் மினு மினுப்பூச்சிபோலும் ஒளியற்றுப் போகிறான். இந்த விச்வரூபத்தின் மஹா தேஜஸ் ஸென்னும் ஸமுத்திரத்தில் ஸ்ருஷ்டி முழுதும் முழுகிப்போய் விட்டதோ என்றும், கல்பாந்த மின்னற் போன்ற அந்த காந்தியால் ஆகாசம் முழுவதும் மறைப்பட்டுப் போய் விட்டதோ என்றும் சொல்லும்படியாய் இருக்கிறது.

அந்தராளத்தில் ஓர் மேடைகட்டி, அதின் மேல் ஸம்ஹாரகாலத்து அக்நியினுடைய ஜ்வாலைக ளெல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வந்து அடுக்கி வைத்தாற்போலும், அந்த தேஜஸ்ஸை தோற்றுகிறது. ஆகையால் அந்த தேஜஸ்ஸை நான் கண்ணெடுத்துப் பார்க்க முடியவில்லை. அது மேன் மேலும் அதிகரித்து மண்டி எரியும் ஜ்வாலைகளுடன், கிட்ட நெருங்க முடியாதபடி தஹித்துக்கொண்டு இருப்பதால், நீர் எனக்குக்கொடுத்த திவ்யத்ருஷ்டியாற் கூட பார்க்க முடியாத தாயிருக்கிறது. காலாக்நி ருத்ரனுடைய மூடியிருக்கும் மூன்றாவது கண்ணில் மறைந்து கிடந்து, பின்பு அந்தக் கண் விரிந்ததினால் வெளிப்பட்டு மட மட என்றெறிந்து கொண்டிருக்கும் மஹா ப்ரளயாக்நியோ, என்றும் சொல்லும் படியாய் அந்த தேஜஸ்ஸிருக்கிறது. இப்படி எங்கும் வ்யாபித்த ப்ரகாசத்தோடு கூடி, ஐந்து (ப்ரளயாக்நி, மின்னல், வடவாக்நி, சிவன் கண் நெருப்பு, பன்னிரண்டு ஆதித்யர்கள் ஒன்று சேர்ந்த அக்நி ஆகிய ஐந்து அக்நிகள்) அக்நிகளும் ஓரிடம் சேர்ந்து, அவற்றின் ஜ்வாலைகள் எல்லாம் ஒன்றுபட்டது போல், இருக்கும் இந்த விச்வரூபத்தின் தேஜஸால், ப்ரஹ்மாண்டம் கரியாய்ப் போய்க் கொண்டிருக்கின்றது. நான், பிறந்தது முதல் இது வரையிலும், பாராததா யிருக்கும் அத்புத தேஜோராசியாக, உம்முடைய விச்வரூபத்தைப் பார்க்கிறேன். அதன் வ்யாப்திக்கும் காந்திக்கும் எல்லையே இல்லை.

त्वमक्षरं परमं वेदितव्यम् त्वमस्य विश्वस्य परं निधानम् ।
त्वमव्ययः शाश्वतधर्मगोप्ता सनातनस्त्वं पुरुषो मतो मे ।।१८।।

வமக்ஷரம்பரமம்வேதிதவ்யம்த்வமஸ்யவிச்வஸ்யபரம்நிதானம்
த்வமவ்யயஃசாச்வததர்மகோப்தாஸநாதனஸ்த்வம்புருஷோமதோமே॥18

இப்படி விச்வரூபியான பகவானை அர்ஜுநன்துதித்தல் :

தேவா, நீர் நாசமற்றவர், மூன்றரைமாத்ரை உள்ள ப்ரணவத்தைத் தாண்டி, நிற்பவர், வேதங்கள் நீர் இருக்கும் இடத்தை இன்னும் தேடிக்கொண்டே இருக்கின்றன. நீர் ஆகாரங்களுக் கெல்லாம் வீடு, விச்வம் பத்ரம் செய்து வைக்கப்பட்டிருக்கும் பெட்டி. நீர் அவ்யயமானவர், மிக்க விஸ்தாரம் ஆனவர். ஒருநாளு மழிவில்லாதவர். நீர் தர்மங்களின் உயிர் நிலை, அநாதியாயிருப்பவர், எப்போதும் புதுமையோடு கூடினவர். நீர் முப்பத்தேழாவது தத்வமாகிய புருஷதத்வம்.

अनादिमध्यान्तमनन्तवीर्यं मनन्तबाहुं शशिसूर्यनेत्रम् ।
पश्यामि त्वां दीप्तहुताशवक्त्रम् स्वतेजसा विश्वमिदं तपन्तम् ॥१९॥

அநாதி மத்யாந்த மனந்த வீர்ய மனந்த
பாஹும் ஶஶிஸூர்யநேத்ரம் ।
பஶ்யாமி த்வாம் தீப்த ஹுதாஶவக்த்ரம்
ஸ்வதேஜஸா விஶ்வமிதம் தபந்தம் ॥19

இதுவுமது :

நீர் ஆதி மத்யம் அந்தம் இல்லாதவர். உம்முடைய பராக்ரமம் வேறொருவருக்கு மில்லை. கணக்கற்றனவாயும், விச்வமனைத்தையும் வ்யாபித்தனவாயும், இருக்கும் கைகளையும் கால்களையும் நீர் உடைத்தானவர். சந்த்ர ஸூர்யர்களை கண்களாய்க்கொண்டு, கோபம் ப்ரஸாதம் என்னும் லீலைகளை வெளிப்படுத்தி வைக்கிறீர். ஸூர்யனான கண்ணைக் கொண்டு நீர் ஒருவன் மேல் கோபிக்கிறீர், சந்திரன் என்னும் கண்ணால் நோக்கி ஒருவனைக் காப்பாற்றுகிறீர். இப்படி எல்லாம் நான் உம்மைப் பார்க்கிறேன், என்பது நிச்சயம். நன்றாய் மூட்டிவைக்கப்பட்ட ப்ரளயாக்நியின் தேஜஸ்ஸு போலும், உம்முடைய வாய் விளங்குகிறது. காட்டுத்தீ பற்றிக்கொண்டு, ஓர் மலையை ஆக்ரமித்து ஜ்வாலைகள் வ்ருத்தி அடைந்து வெளிப்பட்டாற் போலும், தவடைகளை நக்கிக் கொண்டு, பல் வரிசைகள்

நடுவில்உம்முடைய நாக்கு புரண்டுகொண் டிருக்கிறது. உம்முடைய இப்படிப்பட்ட வாயின் தாபத்தாலும், ஸர்வாங்கத்தின் தேஜஸ்ஸாலும், விச்வமனைத்தும் தஹிக்கப்பட்டு, மிக்கக் கலக்கம் உறுகிறது.

द्यावापृथिव्योरिदमन्तरं हि व्याप्तं त्वयैकेन दिशश्च सर्वाः ।
दृष्ट्वाद्भुतं रूपमुग्रं तवेदम् लोकत्रयं प्रव्यथितं महात्मन् ।।२०।।

த்யாவா ப்ருதிவ்யோரித மந்தரம் ஹி வ்யாப்தம்
த்வயை கேன திஶஶ்ச ஸர்வாः ।
த்ருஷ்ட்வாகு த்புதம் ரூபமுக்ரம் தவேதம் லோக
த்ரயம் ப்ரவ்யதிதம் மஹாத்மன் ।। 20

விச்வரூபம் பயங்கரமாயிருப்பதை அர்ஜுனன் எடுத்துக் கூறுதல் :

ஸ்வர்க்கம், பாதாளம், பூமி, அந்தரிக்ஷம், திக்குகள், இவை அனைத்தையும், நீர் ஒருவரே நிறைத்துக் கொண்டிருப்பதாயும், ஆகாசம் முழுவதும் உம்முடைய பயங்கரமான ரூபத்தில் முழுகிப் போய் விட்டதாயும், பார்த்து ஆச்சர்யப்படுகிறேன். உம்முடைய விச்வரூபம் என்னும், ஆச்சர்யகரமான ப்ரவாஹத்தின் அலைகளால், பதினான்கு புவநங்களும் ஆக்ரமிக்கப் பட்டுப்போயின. இப்படிப்பட்ட உம்முடைய ரூபத்தை நான் பார்த்தறிய முடியவில்லை. இந்த அஸாதாரணமான உம்முடைய ரூபம், ஒன்றினாலும் தடுத்துவைக்க முடியாதபடி, அனைத்தையும் வ்யாபித்துக் கொண்டு, கண் ஸஹிக்க முடியாதபடி உக்ரமாய் இருப்பதால், ஜகத்தனைத்துக்கும் ஸுகம் என்பது தூரவிலகிப் போய், உயிர் பிழைத்திருப்பதே கஷ்டமாய்ப் போய்விட்டது.

உம்முடைய இந்த விச்வரூபத்தைப் பார்த்து, ஏன் லோகத்துக்கு பயம் உண்டாகிறதோ தெரியவில்லை. மூன்று லோகங்களும் பயம் என்னும் ப்ரவாஹத்தின் அலைகளில் முழுகிப்போகின்றன. மஹாத்மாவாயிருக்கும் உம்மை தர்சித்ததினால், பயத்தையும் துக்கத்தையும் அடைவதென்பது என்னமாய் நேர்ந்தது? உம்மைப் பார்ப்பதினால், எனக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் அநுபவத்தில், ஸுகம் என்பதே இல்லை. உம்மைப் பார்க்காதிருந்த வரைக்கும், லோகத்தாருக்கு ஸம்ஸாரத்தில் ஸுகமிருப்பதாய்த் தோன்றிக் கொண்டிருந்தது.

உம்மைப் பார்த்த பிறகு, விஷயஸுகம் வெறுத்துப்போய் விட்டதே யானாலும், அவர்களுக்கு மிக்க துக்கம் உண்டாயிருக்கிறது. உம்மைப் பார்த்த உடனேயே, ஓட்டமாய் ஓடி வந்து, உம்மை கட்டிக்கொள்ள வேண்டுமே. இப்போது அப்படி நான் என்னமாய்ச் செய்ய முடியும்? அப்படிச் செய்யாமல் இருக்கலாம் என்றாலோ, இந்த பயங்கரமான ரூபத்தைப்பார்த்து, பயந்துகொண்டே, என்னமாய் இருக்கமுடியும்? ஆகையால் பின் வாங்கிச்செல்வோ மென்றால், அங்கே ஸம்ஸாரம் தடுத்து வைக்க முடியாதபடி குறுக்கிட்டு மறித்துக்கொள்கிறது. முன் செல்வோமே யானால், உம்முடைய விச்வரூபம் கைக்கடங்காது, கட்டிக்கொள்ள முடியாததாய், இருக்கிறது.

இப்படி இரண்டு ஸங்கடங்களின் நடுவில் அகப்பட்டுப்போய், அல்பசக்தி உள்ள இவ்வுலகம் தீந்து போகிறது. இப்படி ஓர் முடிவு ஏற்பட்டதென்று எனக்கு நன்றாய்த் தெரியவருகிறது. நெருப்பால் பொசுக்கப்பட்ட ஒருவன், ஸமுத்ரத்தில் விழுந்து தாபத்தைத் தீர்த்துக் கொள்ளப் போய், அந்த ஸமுத்ரத்தின் பெருத்த அலைகளைக்கண்டு. இன்னும் ஜாஸ்தியாக பயந்துபோனது போலும், உம்மைப் பார்த்த இந்த ஜகத்துக்கு ஓர் ஸங்கடம் ஏற்பட்டு, செய்வது இன்னதென்று அவர்களுக்குத் தெரியாமற் போகிறது.

अमी हि त्वां सुरसङ्घा विशन्ति केचिद्भीताः प्राञ्जलयो गृणन्ति ।
स्वस्तीत्युक्त्वा महर्षिसिद्धसङ्घाः स्तुवन्ति त्वां स्तुतिभिः पुष्कलाभिः ॥२१॥
रुद्रादित्या वसवो ये च साध्या विश्वे।अश्विनौ मरुतश्चोष्मपाश्च ।
गन्धर्वयक्षासुरसिद्धसङ्घा वीक्षन्ते त्वां विस्मिताश्चैव सर्वे ॥२२॥

அமீ ஹி த்வாம் ஸுரஸங்கா விஸந்தி கேசித்பீதா:
ப்ராஞ்ஜலயோ க்ருணந்தி ।
ஸ்வஸ்தீத் யுக்த்வா மஹர்ஷி ஸித்த ஸங்கா: ஸ்துவந்தி
த்வாம் ஸ்துதிபி: புஷ்கலாபி: ॥ 21

ருத்ரா தித்யா வஸவோ யே ச ஸாத்யா விஶ்வேகு
ஶ்விநௌ மருதஶ்சோஷ்மபாஶ்ச ।
கந்தர்வ யக்ஷா ஸுரஸித்த ஸங்கா வீக்ஷந்தே
த்வாம் விஸ்மிதாஶ் சைவ ஸர்வே ॥ 22

இந்த விச்வரூபத்தைப்பார்த்து தேவர்கள் முதலியவர்களில், சிலர் இதில் ப்ரவேசிப்பதையும், சிலர் சரணமடைவதையும், சிலர் தர்சித்து நமஸ்காராதிகள் செய்வதையும் அர்ஜுநன் வர்ணித்தல் :

உத்தம ஞாநிகளாகிய சில தேவர்களின் கூட்டத்தை, இங்கு பாரீர். இவர்கள் உம்முடைய அங்கத்தின் தேஜஸ்ஸைக் கொண்டே, ஜந்மாந்தரங்களுக்கு விதைகள் போன்ற ஸர்வகர்மங்களையும் பொசுக்கிக் கொண்டு, உம்முடைய ஸ்வபரூத்தில் மிக்கப்ரேமையோடு கலந்து போகிறார்கள். மற்றும் சில தேவர்கள், ந்யாயமாகவே மிக்க பயந்து, உம்மையே தங்களை ரக்ஷகராய் நம்பி, உம்முன் நின்று, கைகள் இரண்டையும் கூப்பிக்கொண்டு, உம்மை ஸ்தோத்ரம் செய்து, "தேவா, நாங்கள் அவித்யை யென்னும் ஸமுத்ரத்தில் விழுந்து, விஷயம் என்னும் வலையிற் சிக்கி, ஸ்வர்க்கம் ஸம்ஸாரம் என்னும் இவ்விரண்டின் நடுவில் அகப்பட்டு, ஸங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறோம்; இப்படி துக்கப்படுகிற எங்களை இந்த துக்கத்தினின்று விடுதலை செய்வதற்கு, உம்மைத்தவிர யார் இருக்கிறார்கள்? ஆகையால் உம்மையே நாங்கள் ஸர்வவிதத்தாலும் சரணம் அடைந்தோம்" என்று சொல்கிறார்கள்,

ஹே தேவா. அன்றியும் மஹர்ஷிகளும், ஸித்தர்களும், அநேகவிதமான வித்யாதரர்களும், கூட்டங் கூட்டமாய், உம்மைப் பலவிதமாய் வாழ்த்தி ஸ்தோத்ரம் செய்கிறார்கள். இதோ ருத்ரர்களும், ஆதித்யர்களும், வஸுக்களும், ஸாத்யர்களும், தங்கள் ஸர்வவைபவங்களோடும் கூடிய விச்வதேவர்களும், அச்விநீ தேவர்களும், வாயுதேவர்களும், பித்ருக்களும், கந்தர்வர்களும், யக்ஷர்களும், ராக்ஷஸர்களும், மஹேந்த்ரன் முதலிய முக்ய தேவர்களும், உம்முடைய விச்வரூபத்தை தர்சிப்பதில் மிக்க ஆசை கொண்டு, உம்முடைய திவ்யமான இந்த ரூபத்தை தர்சித்துக்கொண்டு நிற்கிறார்கள்.

ஹே ப்ரபுவே, இவர்கள் உம்மைத் திரும்பத்திரும்ப தர்சித்து, மனஸில் வியப்புற்று, தங்களுடைய மகுடங்களால் உமக்கு நமஸ்காரம் செய்கிறார்கள். இவர்கள், உம்மைநோக்கி ஜயஜயகாரங்கள் சொல்லிக் கொண்டாடும் மனோஞ்ஞமான சப்தங்களால், ஸ்வர்க்கம் முழுமையும நிறையச் செய்து, தலைமேல் கைகூப்பி நிற்கிறார்கள். இவர்களுடைய விநயபாவங்களே, ஓர் காடாயமைந்து, அதில்

ஸாத்விகபாவங்கள் என்னும் வஸந்தருது ப்ரவேசித்து, கைகூப்பல் என்னும் துளிர்கள் ஏற்பட்டு, அவற்றின் நுணியில் நீர் பழமாகக் காணப்படுகிறீர்

रूपं महत्ते बहुवक्त्रनेत्रं महाबाहो बहुबाहूरुपादम् ।
बहूदरं बहुदंष्ट्राकरालं दृष्ट्वा लोकाः प्रव्यथितास्तथाहम् ॥२३॥

ரூபம் மஹத்தே பஹுவக்த்ர நேத்ரம்
மஹாபாஹோபஹுபாஹூருபாதம் ।
பஹூதரம் பஹு தம்ஷ்ட்ரா கராலம் த்ருஷ்ட்வா
லோகாः ப்ரவ்யதி தாஸ் ததாகுஹம் ॥ 23

இந்த விச்வரூபம் உலகத்துக்கு பயங்கரமாய் இருக்கிறதென்று அர்ஜுநன் உரைத்தல் :

ஐயா, அளவிடக்கூடாத பெருமையோடு கூடிய இந்த உம்முடைய விச்வரூபம் பார்க்கக் கிடைத்ததால், கண்களுக்கு பாக்யதசை தொடக்கமாயிற்று; மனஸுக்கு ஸுகத்தின் ஸுபிக்ஷம் ஏற்பட்டது. மூன்று லோகத்தையும் வ்யாபித்து நிற்கும் உம்முடைய இந்த ரூபத்தைப் பார்த்து, தேவர்கள் கூட, நடுங்கிப் போகிறார்கள். நான் எந்த திக்கை நோக்கி நின்றாலும், இந்த ரூபம் என்னை நோக்கி நிற்கிறது. இது, ஒன்றே யானாலும், வெகு விசித்ரமாயும், கணக்கற்ற தலைகளையும், கண்களையும், ஆயுதங்களேந்திய கைகளையும், தொடைகளையும், கால்களையும் வயிறுகளையும் படைத்ததாயும், அநேக வர்ணங்களுள்ளதாயும், இருக்கிறது. ஒவ்வொரு முகமும் வர்ணிக்க முடியாதபடி மதம் படைத்து, ஆவேசம் கொண்டிருக்கிறது.

மஹாகல்பத்தின் முடிவில் யமன் மிக்க கோபங்கொண்டு, எங்கு பார்த்தாலும் வாரியிறைத்து வைத்த ப்ரளயாக்நியின் தணற்குவியல்களோ, அல்லது ஸம்ஹாரருத்ரனுடைய யந்த்ரங்களோ, ப்ரளயகால பைரவர்களின் கூட்டங்களோ, யுகாந்தத்தில் ஜகதம்பிகை பூதங்களை யெல்லாம் கொன்று கிச்சடி செய்வதற்காக, எடுத்துக்கொண்டு வந்த பாண்டங்களோ, என்று சொல்லும்படியாய் மிக்க வலிமை படைத்த கணக்கற்ற வாய்கள் காணப்படுகின்றன. குஹைக்குள் ளிருப்புக்கொள்ளாத ஸிம்ஹங்கள் போல, பல் வரிசைகள் பயங்கரமான அவ்வாய்களில் காணப்படுகின்றன. காளராத்ரியின் இருட்டை ஸஹாயமாகக் கொண்டு,

ஸம்ஹாரகாலத்துப் பூதப்பிசாசசுகள் உல்லாஸமாய் வெளிப்பட்டு ஸஞ்சரிப்பது போலும், அம்முகங்களில் தவடைகள் ப்ரளயகாலத்து ரத்தத்தால் பூசப்பட்டு காணப்படுகின்றன.

காலனால் விருந்துக்கு அழைக்கப்பட்ட யுத்தத்தைப் போலும், எல்லா ஜீவர்களையும் கொன்று இறுமாப்படைந்த ம்ருத்யுவைப்போலும், அதிபயங்கரமாய் உம்முடைய முகங்கள் விளங்குகின்றன. அல்பசக்தி யுள்ளவையான இந்த லோகத்தில் உள்ள ப்ராணிஜாதங்கள், இம்முகங்களைப் பார்த்தனவோ இல்லையோ, துக்கம் என்னும் யமுனாநதியோரத்தில், ஜலத்தின் வேகத்தால் வேர்பரிக்கப்பட்டுச் சாய்ந்துபோகும் மரங்களாகின்றன. மஹாம்ருத்யுபோன்ற நீரே, ஓர் ஸமுத்ரம்; முவ்வுலகிலும் உள்ள ஜீவராசிகளின் வாழ்வு என்பதே, அதில் மிதந்து கொண்டிருக்கும் ஓர் சிறு படகாய், துக்கம் என்னும் சுழற்காற்றில் அகப்பட்டு, தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

அர்ஜுநன் தனக்கே துக்கம் நேர்ந்ததென்று தெரிவித்தல் :

இப்போது, வைகுண்டனான நீர் கோபம் கொண்டு, "லோகத்தார் படும் பாடு எப்படி இருந்தால், உனக்கென்ன? நீ ஸுகமாய் என் விச்வரூபத்தைப் பார்த்து ஆநந்திப்பதற்கு என்ன தடை?" என்று ஒரு வேளை கேட்பீரே ஆனால், சொல்கிறேன் கேளும். என்னுடைய பஞ்சப்ராணன்களும் நடுங்கி போகின்றன, என்று வெளிப்படையாய்ச் சொல்லாமல், உலகத்தார் துக்கத்தை தெரிவிப்பது என்பதை ஓர் மறைவாக வைத்து, என்னுடைய துக்கத்தைத் தெரிவித்தேன், என்று அறிந்து கொள்ளும். ப்ரளய காலத்து ருத்ரனும், ம்ருத்யுவும், என்னைக் கண்டு மிக்க பயந்து, ஒளிந்துகொள்வார்களே. அப்படிப்பட்ட நான், அடக்கிக்கொள்ள முடியாதபடி நடுக்க முறும்படி, நீர் செய்துவைக்கிறீர். இது என்ன ஆச்சர்யம்? இவ்வுருவம் மஹாமாரியே ஆகும். இதை உம்முடைய விச்வரூபம் என்று சொன்னால், சொல்லிக் கொள்ளும். ஆனால் இது தன்னுடைய பயங்கரமான தோற்றத்தால், மற்றவர்களை பயமுறுத்துவது மின்றி, பயம் என்பதையே பயப்படச் செய்து அபஜயப்படுத்துகிறது.

नभःस्पृशं दीप्तमनेकवर्णं व्यात्ताननं दीप्तविशालनेत्रम् ।
दृष्ट्वा हि त्वां प्रव्यथितान्तरात्मा धृतिं न विन्दामि शमं च विष्णो ॥२४॥

நப:ஸ்பருஶம் தீப்தமனேக வர்ணம் வ்யாத்தானனம்
தீப்த விஶால நேத்ரம் ।
த்ருஷ்ட்வா ஹி த்வாம் ப்ரவ்யதிதாந்தராத்மா
த்ருதிம் ந விந்தாமி ஶமம் ச விஷ்ணோ ॥ 24

இதுவுமது :

உம்முடைய பயங்கரமான சில முகங்கள் மகாகாலனை ஜயித்துத்தள்ளி, வாயைத்திறந்து ஆகாசத்தை அல்பமாய்ச் செய்கின்றன. ஆகாசம் எவ்வளவோ வ்யாப்தி உள்ளதாய் இருந்தும், அம்முகங்களைத் தனக்குள் அடக்கிக்கொள்ள சக்தி அற்றதாயிருக்கிறது. முவ்வுலகும் சுற்றிவரும் வாயுவும், அவற்றைச் சுற்றிவர முடியவில்லை. அவற்றின் மூச்சுக்காற்றின் வெப்பத்தால், அக்நிபகவான் பொசுங்கிப்போகிறான். அப்படி இருப்பதோடுகூட, அம்முகங்கள் ஒன்றுபோல் ஒன்றிராமல், பல வர்ணமுள்ளவையாய், அவற்றின் ஸஹாயத்தைக் கொண்டுதான் ப்ரளயகாலத்து அக்நி எல்லாவற்றையும் எரித்து, சாம்பலாய் அடிக்கின்றதோ, என்று சொல்லும்படியாய் இருக்கின்றன. இந்த விச்வரூபத்தின் தேஹ காந்தியின் தீக்ஷணம் ஒன்றே, முவ்வுலகையும் சாம்பலாய்ச் செய்யப் போதும். அந்த தேஜஸோடு, அந்தரூபத்தில் உள்ள வாய்களும், அவ்வாய்களில் உள்ள பற்களும், ஒன்று சேர்ந்தது எப்படி இருக்கிறதென்றால், காற்றுக்கே தநுர்வாதம் (மரண காலத்தில் ஏற்படுகிற தேஹத்தைக் கழற்றி வைக்கும் வலிப்பு) ஏற்பட்டாற் போலும், ஸமுத்ரமே ஓர் பேர் வெள்ளத்தில் விழுந்து அடித்துக்கொண்டு போகப்படுவது போலும், வடவைத்தீயைக் கொன்று விடுவதற்காக புறப்பட்ட விஷாக்நிபோலும், அக்நி ஹாலாஹலத்தைக் குடித்துவிட்டு, ம்ருத்யுவையே கொல்ல வேறோர் ம்ருத்யுவாக புறப்பட்டாற் போலும், அனைத்தையும் ஸம்ஹரிக்கும் தேஹகாந்திக்கு, இந்த வாய்கள் உபபலமாயின.

இந்த வாய்கள் எவ்வளவு விசாலமாய் இருக்கின்றன வென்றால், அந்தராளம் இரண்டு கண்டமாய் வெடித்து, ஆகாசமே இருப்பாகமாய்ப் போனது போல் இருக்கின்றன. ஹிரண்யாக்ஷன் பூமியைச் சுருட்டி கக்கத்தில் இடுக்கிக் கொண்டு, ஓர் பொந்தின் வழியாய் நுழைந்து போகும்போது, அவன் ஒளிந்து கொண்டிருப்பதற்காக, ஹாடகேச்வரன் ஏற்படுத்திவைத்த பாதாளம் என்னும் குஹை போலும், அவை இருக்கின்றன. இவ்வளவு விஸ்தாரமான வாய்களுக்குள் நாக்குகள் மிக்க ஆவேசத்துடன் புரண்டு கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட வாய்களில் ஒன்றிற்கு ஜகம் எல்லாம் ஓர்

கவளத்துக்குக் காணாமல் இருக்கிறது. மேலும் பாதாளத்தில் இருக்கும் நாகர்களின் பூத்காரத்தால், ஆகாசம் முழுவதும் அக்நிஜ்வாலைகள் அளாவி நின்றாற்போலும், வாய்கள் என்னும் குஹைகள் நடுவில், நாக்குக்கள் காணப்படுகின்றன.

மின்னல்களை கட்டுக்கட்டாய்க் கொண்டுவந்து, ஆகாசத்தில் கோட்டைகளை அரணிட்டு வைத்தாற் போலும், உதட்டுக்கு வெளிப்பட்டு இரண்டு கெண்டப்ரதேசங்களும் காணப்படுகின்றன. லலாட ப்ரதேசத்தின் கீழே இருக்கும் பள்ளத்தில், கண்கள் மற்றவர்களை பயந்துபோகச் செய்யும் பயத்தை பய முறுத்துகின்றவையாய், மஹா ம்ருத்யுவின் ப்ரவாஹம், இருட்டில் ஒளித்துக் கொண்டிருப்பது போல் காணப்படுகின்றன. இப்படி பயங்களின் கூட்டங்களை யெல்லாம் மேலே தரித்துக்கொண்டு, இங்கே என்ன வேலையைச் செய்யப் பார்க்கிறீரோ, அது எனக்குத் தெரியவில்லையே யாயினும், எனக்கு மரணபயம் உண்டாயிருக்கிற தென்பதில் ஸந்தேஹமே இல்லை. ஹே தேவா, விச்வரூபத்தைப் பார்க்க வேண்டுமென்று எனக்கிருந்த ஆசைக்கு, ஸரியான பலன் எனக்கு ஏற்பட்டது.

ஐயா, உம்முடைய விச்வரூபத்தைப் பார்த்து, எப்படி என்கண்கள் குளிரவேண்டுமோ, அப்படியே குளிர்ந்து போயின. ஐயே, தேஹம் என்னவோ மண்ணினின்று உண்டாய், மண்ணாய்ப் போகவேண்டியது தான். ஆகையால் இவ்விஷயத்தில் கவலையை விட்டொழித்தேன். ஆனால் சைதன்ய ஸ்வரூபமாகிய என் ஆத்மா, பிழைத்து நிற்குமோ, அல்லது நாசமாய்ப் போகுமோ, என்கிற விஷயத்தில், எனக்கு ஸந்தேஹம் உண்டாயிருக்கிறது. ஓர் காரணமுமின்றி புத்தியில் பயம் தோன்றி, தேஹம் நடுக்கம் கொள்கிறது. உம்மிடத்தில் நான் பாராட்டியிருந்த அபிமானமும் நாசமாய்ப் போகிறது. ப்ரக்ருதியால் ஏற்பட்ட தேஹம், புத்தி, என்ற இவைகளைக் காட்டிலும் வேறுபட்டதாய், கேவலம் ஆநந்த மயமாய் சாவற்றதான என் அந்தராத்மாவுக்குக்கூட நடுக்கம் ஏற்பட்டுப் போயிற்றே! ப்ரஹ்மஸாக்ஷாத்காரம் அடையவேண்டும் என்னும் ஆசை, ஞானத்தையே இருந்த இடம் தெரியாமல் துரத்தி விட்டதே. நீர் குரு வென்றும், நான் சிஷ்ய னென்றும், ஓர் ஸம்பந்த மிருந்ததே, அது இன்னும் மிகுந்து நிற்கிறதோ என்பது ஸம்சயப்பட்டுப் போயிற்று.

ஹே தேவா, உம்முடைய தர்சனத்தால் தளர்ச்சி அடைந்துபோன மனஸை, எப்படி தையர்ப் படுத்தி வைக்கலாம், என்று யோசித்து, தைர்யம் எங்கே போயிருக்கிற

தென்று தேடிப் பார்க்கிறேன். என் பெயரைக்கேட்டு தைர்யம், இருந்த இடத்தை விட்டு ஓடிப்போகிறது. அதோடுகூட விச்வரூபதர்சனமும் ஆய்க்கொண்டிருக்கிறது. உம்முடைய உபதேசம் என்னை ஸங்கடத்தில் நன்றாய் சிக்கவைத்தது. எனக்கு ஆறுதல் செய்து வைப்பதற்காக, என் ஆசை எங்கெங்கேயோ ஓடி அலைகிறது. ஆனால் ஆறுதல் என்பது இருக்கும் ஊருக்குப் போகும் வழிகூட, அதற்குக் கிடைப்பதாய் இல்லை. இவ்விதமாய் விச்வரூபம் என்னும் மஹாமாரியினால் சராசரத்தில் இருக்கும் ப்ராணிகள் அனைவருக்கும் உயிர் போய் விட்டது. இதைஉம்மிடத்தில் சொல்லக்கூடா தென்று இருக்கலாம் என்றால், இந்த ஸங்கடத்தை ஸஹித்துக்கொண்டு இருக்க முடிய வில்லையே.

दंष्ट्राकरालानि च ते मुखानि दृष्ट्वैव कालानलसन्निभानि ।
दिशो न जाने न लभे च शर्म प्रसीद देवेश जगन्निवास ।।२५।।

தம்ஷ்ட்ராகராலானிசதேமுகானித்ருஷ்ட்வைவகாலாநலஸந்நிபானி।
திஶோ நஜானேநலபேசஶர்மப்ரஸீத தேவேஶஜகன்னிவாஸ॥ 25

அர்ஜுநன் இந்த ரூபத்தைக் கண்டு, மிக்க பயந்து, இந்த ரூபத்தை மறைத்துக் கொள்ளும்படி பகவானை ப்ரார்த்தித்தல் :

மஹாபயங்க ளடங்கியிருந்த ஓர் பாண்டம் உடைந்து போய், அந்த பயங்கள் எங்கும் சிதரிப்போனாற் போலும், உமது பெருத்த முகங்கள், எப்போதும் என் கண்முன்னால் விரிவடைந்து தோன்றுகின்றன. மேலும் அவற்றில் பற்களும் தாடைகளும் இரண்டு உதட்டுக்குள்ளும் அடங்கி நிற்காமல், எங்கு பார்த்தாலும் ப்ரளய காலத்து சஸ்த்ரங்கள் ஸஞ்சரித்துக் கொண்டிருப்பன போல் காணப்படுகின்றன. தக்ஷகனுடைய வாய் நிறைய விஷத்தை வார்த்து வைத்தாற்போலும், காளராத்ரியில் பூதங்கள் ஸஞ்சரித்தாற்போலும், மின்னல்களும் ஆக்நேயாஸ்தரத்தின் அக்நியும் சேர்த்து வைக்கப்பட்டாற்போலும், இயற்கையாகவே அத்யுக்ர மாயிருக்கும் உம்முடைய முகங்களுக்கு, ஆவேசம் உண்டாயிருப்பதால், மரணரஸத்தின் ப்ரவாஹமே அலைமோதிக் கொண்டு எங்கள் மேற் புரண்டு வந்ததாகிறது. ஸம்ஹாரகாலத்து அத்யுக்ரமான அக்நியும், மஹாப்ரளயத்தின் அக்நியும் ஒன்று சேர்ந்தபின், எது தான் பற்றி யெரிந்து போகாது?

அப்படியே எல்லாவற்றையும் ஸம்ஹரிக்கும் உம்முடைய முகங்களைப் பார்த்து, என் தைர்யம் ஒடுங்கிப்போய், எனக்கு திக்குக்கள் தெரியாமற் போய், என்னிருப்பே எனக்கு மறந்து போகிறது. உம்முடைய விச்வரூபத்தை நான்கொஞ்சம் பார்த்ததும், எனக்கு ஸுகம் என்பதே பஞ்சமாய்ப்போய் விட்டது. ஆகவே தாறுமாறாய் விரிந்து கிடக்கும் இந்த ரூபத்தை, சீக்கிரத்தில் மறைத்துக் கொள்ளும். நீர் இப்படிச்செய்வீர் என்று எனக்குத் தெரிந்திருந்தால், இந்த விச்வரூபத்தை எனக்குக் காட்டும் என்று, நான் கேட்டிருக்க மாட்டேனே. ஆனால் போனது போகட்டும். இப்போது இந்த விச்வரூபத்தினின்று, இந்த ஒரு ஸமயம் மாத்ரம் என்னைக் காப்பாற்றி விடும். நீர் என்னுடைய ஸ்வாமி என்பது நிஜமானால், நான் இதின் வாயில் விழுந்து இறந்து போகாதபடி, எதையாவது தடையாக ஏற்படுத்தி, என்னைக் காப்பாற்றும்.

இந்த மஹாமாரியின் விஸ்தாரத்தை முன்போல் அடக்கிக் கொள்ளும். ஹே, ஸகல தேவர்களுக்கும் ஆதிதேவனே, ஆத்மஸ்வரூபமாகிய நீர் அல்லவோ, எல்லா ஜீவராசிகளும் தங்கி இருக்கும் வீடு. இதை மறந்து விட்டு, நீர் விபரீதமாய் எல்லாரையும் ஸம்ஹாரம் செய்வதற்கு யத்நம் செய்கிறீரே. அப்படிச் செய்யாமல், மிக்க விரைவாக நீர் ப்ரஸந்நராய், உம்முடைய மாயாசக்தியால் ஏற்படுத்தி வைத்த இத்தோற்றத்தைப் போக்கிவையும்; இந்த மஹாபயத்தினின்று என்னைக் காப்பாற்றும் ஹே விச்வரூபம் பூண்டவரே, இவ்வளவு தூரம் உம்மைத் திரும்பவும் திரும்பவும் கெஞ்சி ப்ரார்த்திக்கும்படியாய், நான் நடுங்கிப் போய் இருக்கிறேன். ஸ்வர்க்கத்தில் அமராவதிக்கே அஸுரர்களால் ஆபத்து ஏற்பட்டபோது, நான் ஒருவனே அவ்வஸுரர்க ளனைவரையும் ஜயித்துத் துரத்தி வைத்தேன். யமனே ஆவென்று வாயைத்திறந்து கொண்டு வந்தாலும், நான் பயப்பட மாட்டேன்.

ஆனால் ஹே, தேவா இப்போது காணப்படும் உம்முடையரூபமோ, அவற்றில் ஒன்றாய்க் கணக்கிட முடியதாததாய் இருக்கிறது. நீர் இப்போது ம்ருத்யுவைக் கூட எதிர்த்துத் தாக்கி, ஸகல விச்வத்தோடு கூட எங்களை ஓர் பிடியாய்ப் பிடித்துவாயிற்போட்டுக் கொள்ள அல்லவா ஸந்நத்தராய் இருக்கிறீர். ப்ரளய காலம் ஏற்படும் முன்னமேயே, நீர் ஓர் யமனாய் குறுக்கிட்டு, இந்த எளிய மூவுலகம் அல்பாய்ஸில் அழிந்து போவதாயிற்று. ஐயா எங்கள் பாக்யம்

எப்படி விபரீதமாய் முடிந்தது. மனஸுக்கு ஆறுதல் உண்டாக வேண்டுமென்று, ஓர் காரியம் செய்ய ஆரம்பித்து, மிக்கப் பெரிதான ஆபத்தை விளைத்துக் கொண்டேனே! இது அந்யாயம், உலகமே போயிற்றே! நீர் அதை விழுங்க ஆரம்பித்து விட்டீரே! எல்லா வாய்களையும் திறந்து கொண்டு, நீர் இவ்விரு ஸைந்யங்களையும் நான்குபக்கத்தினின்று விழுங்கிக்கொண்டிருப்பதாய், நான் ப்ரத்யக்ஷமாய்ப் பார்க்கிறேனே இது ப்ரம்மா என்ன?

अमी च त्वां धृतराष्ट्रस्य पुत्राः सर्वे सहैवावनिपालसङ्घैः ।
भीष्मो द्रोणः सूतपुत्रस्तथासौ सहास्मदीयैरपि योधमुख्यैः ।।२६।।

அமீச த்வாம் த்ருதராஷ்ட்ரஸ்ய புத்ராः ஸர்வே
ஸஹைவாவ நிபால ஸங்கைः ।
பீஷ்மோ த்ரோணः ஸூதபுத்ரஸ் ததாஸௌ
ஸஹாஸ்மதீயைரபி யோத முக்யைः ।। 26

இந்த ரூபம் பீஷ்மத்ரோணாதி கௌரவ ஸைந்யத்தை விழுங்குவதை, அர்ஜுநன் கண்டது :

இவர்கள் கௌரவகுலத்தின் வீரர்களான, கண்ணில்லாத த்ருதராஷ்ரன் குமாரர்க ளல்லவா? இவர்கள் தங்களுடைய பரிவாரங்களோடுகூட உமது வாயில் விழுந்து மறைந்து போனார்களே! அன்றியும் இவர்களுக்கு ஸஹாயமாய் தேசதேசத்து அரசர்கள் எல்லாரும் வந்திருந்தார்களே; அவர்களெல்லாரும் இங்கே முடிந்து போன செய்தியைத் திரும்பிப்போய்ச் சொல்வதற்கு, ஒருவரும் மிகுந்திராதபடி, எல்லாரையும் விழுங்கிக் கொண்டிருக்கிறீரே! யுத்தகளத்தில் இருந்த யானைகளின் கிடைகளை ஒரே கவ்வாகக்கவ்வி, மட மடவென்று விழுங்கிக் கொண்டிருக்கீறீரே! சதக்நீய நகரங்களின் மேல் இருக்கும் போர்வீரர்களும்! பதாதிகளும், கூட்டம் கூட்டமாய், திடீரென்று முகங்களில் விழுந்து, மறைந்து போகிறார்களே! யமனுக்கு தாயாதிகளாய், ஒவ்வொன்றுமே விச்வம் முழுவதையும் விழுங்கிவிடத்தக்க சஸ்த்ரங்கள் எல்லாவற்றையும் கோடிக்கணக்காய் விழுங்கி விடுகிறீர்! சதுரங்கஸேனைகளை, ரதங்களுமவற்றிற் கட்டிய குதிரைகளு முள்பட, பற்படாமலே விழுங்கி எப்படி ஸந்தோஷப்படுகறீர்!

பாரும் ஐயா, பீஷ்மரைப்போல் ஸத்யஸந்தனும், போரில் ஸாமர்த்யமுள்ளவனும், எவன் இவ்வுலகில் இருக்கிறான்?

அவரையும் ப்ராஹ்மணோத்தமரான த்ரோணரையும் விழுங்கிவிடுகிறீரே! ஐயோ அந்யாயமே! ஆஹா ஸூர்யகுமாரனான கர்ணன் என்னும் வீரனும், இதோ போனான்! போனான்! அன்றியும் எங்கள் கக்ஷியில் குப்பைபோல் ரணகளத்தை அடைத்துக் கொண்டிருந்தார்களே, அவர்களும் நாசம் செய்யப்படுவதை நான் பார்க்கிறேன். ஐயய்யோ, தெய்வமே! நான் ப்ரார்த்தித்து அடைந்த பகவத் ப்ரஸாதம் இப்படியா முடிந்தது, பாக்யஹீனமான இந்த ஜகமனனைத்துக்குமே மரணத்தைக் கொண்டுவந்து வைத்தேனே!

இதற்கு முன் ஸ்ரீ க்ருஷ்ணன், பலவிதமான ந்யாயங்களோடு, தம்முடைய விபூதியின் விஸ்தாரங்களை; எடுத்துரைத்தாரே, அப்படியே தான் வேடிக்கையாய் இருக்குமென்று நினைத்தல்லவா, இவருடைய விச்வரூபத்தைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளலானேன்; ஆனால் அநுபவிக்க வேண்டியதாய் ஏற்பட்ட ஒன்றை, எது செய்தும் விலக்கிக்கொள்ள முடியாது; புத்தியும் வரவேண்டியதற்குத் தக்கதாகவே தான் ஏற்படும். பாபியாகிய அர்ஜுனனால், லோகத்துக்கு நாசம் ஏற்பட்டதென்று, லோகத்தார் என் தலைமேற் சட்டியைப் போட்டுடைக்க வேண்டுமே; அதை நான் என்னமாய்த் தப்பித்துக் கொள்ள முடியும். முன்பு தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபோது, அம்ருதம் வெளிப்பட்டது, ஆனால் அவர்கள் அத்துடன் த்ருப்தியடையாமல், மேலும் கடைந்து ஹாலாஹலத்தை வெளிப்படுத்தி வைத்தார்களே; அதுபோல் ஆயிற்று, நான் செய்தது. ஆனால் அம்ருதமதனத்தில் ஏற்பட்ட ஆபத்து, ஒருவிதமாய் அல்பம் என்றே, சொல்ல வேண்டும். அவ்விஷம் வெளிப்பட்டு மிக்கக் கெடுதல்விளைவதின் முன்னமேயே, பரமசிவன் அந்த ஆபத்தை நிவ்ருத்தி செய்துவைத்தார். இப்போது ஏற்பட்டிருப்பதோ நெருப்புப் பற்றி எரியும் காற்றாய் இருப்பதால், இதை எவன் எடுத்து விழுங்க முடியும்? இந்த மஹாகாலனோடு ஸரிஸமானமாய், எவன் விளையாடமுடியும்.

இப்படிப் பகவான் காண்பித்த ஓர் காட்சியின் தாத்பர்யத்தை அர்ஜுனன் அறியாதது :

இப்படி, அர்ஜுனன் கஷடப்பட்டு, தனக்குள் தானே துக்கித்துக் கொண்டிருந்தானே தவிர, பகவானுடைய மனஸில் இருந்த கருத்தை அவன் அறியாமற்போனான். தான் கொல்கிற

னென்றும், இந்தக் கௌரவர்கள் தன்னாற் கொல்லப்படுகிறவர்கள் என்றும், இப்படி அர்ஜுநன் ஓர் அஞ்ஞானத்துக்கு வசப்பட்டிருந்தானே, அதைப் போக்குவதற்காக, இந்தக் காட்சியை அநந்தனாகிய பகவான் காட்டிவைத்தார். "அடாய் அர்ஜுனா இவ்வுலகில் ஒருவனை ஒருவன் கொல்வதே இல்லை, கொல்வது முழுமையும் என்னைச் சேர்ந்தது." என்று பகவான் விச்வரூபத்தால் வெளிப்படுத்தி வைத்தார். ஆனால் இதை அர்ஜுநன் அறிந்து கொள்ளாமல், வீணாய் வ்யாகூலப்பட்டு, காரணமின்றியே மேன்மேலும் நடுங்கிப் போனான்.

वक्त्राणि ते त्वरमाणा विशन्ति दंष्ट्राकरालानि भयानकानि ।
केचिद्विलग्ना दशनान्तरेषु सन्दृश्यन्ते चूर्णितैरुत्तमाङ्गैः ।। २७ ।।

வக்த்ராணி தே த்வரமாணா விஶந்தி தம்ஷ்ட்ரா
கராலானிபயானகானி ।
கேசித் விலக்னா தஶநாந்தரேஷு ஸந்த்ருஶ்யந்தே
சூர்ணிதை ருத்தமாங்கைः ।। 27

அங்கிருந்த சேனைகள் நாசமடைவதைப்பார்த்து, அர்ஜுநன் துக்கித்தல் :

அதற்குமேல் அவன்பின் வருமாறு சொன்னான். பாருமையா, இருதிறத்துப்போர் வீரர்களும், கையிற்பிடித்த கத்தியோடும், தேஹத்தில் தரித்திருக்கும் கவசத்தோடும் ஒரே தடவையாக, உம்முடைய வாய்களில் விழுந்து, ஆகாசத்தில் மேகங்கள் தோன்றி மறைந்துபோவது போலும், மறைந்து போகிறார்கள். மகாகல்பத்தின் முடிவில் காலனானவன் ஸ்ருஷ்டியைக் கோபித்துப் பார்த்து, உடனேயே இருபத்தோர் ஸ்வர்க்கங்களையும், அவற்றுடன் பாதாளத்தையும் சேர்த்து, ஒரேவாயாய் விழுங்கிவிடுவதுபோலும், தெய்வபலம் இல்லாமற் போன உடனேயே, உடனேயே, மிக்க ஐச்வர்யம் படைத்தவர்களுடைய ஐச்வர்யமெல்லாம், இருந்த இடம் தெரியாமல் மறைந்து போவது போலும், யுத்தஸந்நத்தமான ஸேனைகளனைத்தும் இந்த முகத்தில் விழுந்தபின்பு, கொஞ்சங்கூட வெளிப்படாமல் மடிந்து போகின்றன. அந்த ஸேனைகளுடைய கர்மம் இப்படியா இருந்தது!

லோகங்கள் அனைத்தும் உம்முடைய வாய்களில் விழுந்து, ஓட்டகையின் வாய்ப்பட்ட அசோகக் கொழுந்துபோல்

மெல்லப்படுகின்றன. கிரீடங்களோடு கூடியதலைகள், இரண்டு தாடைகள் என்னும் கிடுக்கியில் அகப்பட்டு, மாவாய்ப்போகின்றன. அந்த கிரீடங்களின் ரத்நங்கள் பற்களால் அரைபட்டு, அடிநாக்கிலும், பற்களிலும் ஒட்டிக்கொண்டிருக்கக் காணப்படுகின்றன. விச்வரூபமென்னும் காலன் லோகத்தாரின் சரீரங்களை பலாத்காரமாய்த் தின்றுவிட்டு, ஐந்மாந்தரங்களுக்கு அவச்யமாக வேண்டியதான லிங்கதேஹங்களை பாக்கியாய் வைத்து விட்டானோ என்று சொல்லும்படியாய் தேஹத்தில் உத்தமபாகமாகிய தலைகள், அவ்விச்வ ரூபத்தின் வாயில் விழுந்து கூட விழுங்கப்படாமல் காணப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது என்ன ஆச்சர்யம்?

பிறந்தவைகளுக்கெல்லாம், இவ்வாய்களில் வந்து விழவேண்டியதைத் தவிர,வேறு கதியே இல்லையா என்ன? இந்த ஸ்ருஷ்டி முழுவதும், தனக்குத்தானாகவே இவ்வாய்களில் வந்துவிழுகின்றன. இவ்வாய்களோ இருந்த இடத்தில் இருந்துகொண்டே, அவற்றை விழுங்கி கொண்டிருக்கின்றன. ப்ரஹ்மதேவன் முதலான தேவர்கள் எல்லாரும், இந்த ரூபத்தில் மேல் இருக்கும் வாய்களில் விழுகிறார்கள். ஸாமான்யரான ஜீவர்கள் தாழ்ந்திருக்கும் வாய்களில் விழுகிறார்கள். சில ஜீவர்கள் பிறந்த இடத்திலேயே விழுங்கப்படுகிறார்கள். எப்படி ஆனாலும் ஸரியே, இந்த ரூபத்தின் வாய்களினின்று தப்பித்துக் கொள்கிறவர்கள் ஒருவரும் இல்லை.

यथा नदीनां बहवोऽम्बुवेगाः समुद्रमेवाभिमुखा द्रवन्ति ।
तथा तवामी नरलोकवीरा विशन्ति वक्त्राण्यभिविज्वलन्ति ।।२८।।

யதா நதீனாம் பஹவோகும்புவேகா: ஸமுத்ர மேவாபி முகாத்ரவந்தி।
ததா தவாமீ நரலோக வீரா விஶந்தி வக்த்ராண்யபி விஜ்வலந்தி॥ 28

இதுவுமது :

மஹாநதிகளின் ப்ரவாஹங்களனைத்தும் வேகமாய் ஓடி ஸமுத்ரத்தில் விழுவது போலும், நான்கு பக்கத்தினின்றும், உலகத்திலுள்ள ப்ராணிகள் எல்லாரும், உம்முடைய வாயில் வந்து விழுகிறார்கள். ஆயஸ்ஸு என்னும் வழியாய் ப்ராணிகள் எல்லாரும் நடந்து, ராத்ரிப்பகல் என்னும் அடிவைப்புகளை வைத்து, மிக்க வேகமாய், வாயில் வந்துவிழுவது என்னும் கார்யத்தை முடித்துக்கொள்கிறார்கள்.

यथा प्रदीप्तं ज्वलनं पतङ्गा विशन्ति नाशाय समृद्धवेगाः ।
तथैव नाशाय विशन्ति लोकास्तवापि वक्त्राणि समृद्धवेगाः ॥२९॥

யதா ப்ரதீப்தம் ஜ்வலனம் பதங்கா விஶந்தி
நாஶாய ஸம்ருத்த வேகாः ।
ததைவ நாஶாய விஶந்தி லோகாஸ்தவாபி
வக்த்ராணி ஸம்ருத்த வேகாः ॥ 29

இதுவுமது :

ஓர் மலை தீ பற்றிக்கொண்டெரிந்தால், அப்பெருந்தீயில் ஈசெற்கள் அனைத்தும் போய் விழுந்துவிடுவது போலும், லோகம் அனைத்தும் இவ்வாய்களில் வந்துவிழுகிறார்கள். இப்படி விழுந்த ப்ராணிகளின் ஊரும் பெயரும் லோகவ்யஹாரத்தில் இல்லாமல் அழிந்துபோகின்றன.

लेलिह्यसे ग्रसमानः समन्तात्लोकान्समग्रान्वदनैर्ज्वलद्भिः ।
तेजोभिरापूर्य जगत्समग्रं भासस्तवोग्राः प्रतपन्ति विष्णो ॥३०॥

லேலிஹ்யஸே க்ரஸமானः ஸமந்தால் லோகான்
ஸமக்ரான் வதனைர் ஜ்வலத்பிः ।
தேஜோபி ராபூர்ய ஜகத்ஸமக்ரம் பாஸஸ்
தவோக்ராः ப்ரதபந்தி விஷ்ணோ ॥ 30

பின்பு அந்த ரூபத்தைப் பார்த்து அர்ஜுநன் சொல்லல்,-

இத்தனையையும் புசித்துக்கூட, உம்முடைய பசி கொஞ்சமேனும் தணியவே வில்லையே. இதற்கு எவ்வளவு விசேஷித்த தீக்ஷணம் (கூர்மை) ஏற்பட்டிருக்கிறது! ஜ்வரத்தினின்று விடுபட்டவனைப்போலும், பஞ்சத்தில் அடிப்பட்ட பிச்சைக்காரனைப்போலும், நாக்குக்கள் உதடுகளை நக்கிக்கொண்டு அலைகின்றன. எதெதை வாயிற் போட்டு விழுங்கிவிடலாமோ, அத்தனையையும் விழுங்கிவிடுகிறீர். உம்முடைய பசிதான். ஆச்சர்யப்படும்படி எவ்வளவு தீவ்ரமாய் இருக்கிறது! ஸமுத்ரத்தை ஒரே வாயாய் உரிஞ்சிவிடலாமா, மலைகளை ஒரே கவளமாய் விழுங்கிவிடலாமா, ப்ரஹ்மாண்டம் முழுவதையும் வாயில் போட்டுக் கொள்ளலாமா, எல்லா திக்குக்களையும் உண்டு

விடலாமா, சந்திரிகை அனைத்தையும் நக்கி உட்கொள்ளலாமா என்று, இப்படி எல்லாம் அலைகிற உம்முடைய ஆசை மிக்க ஆச்சர்யப் படத் தக்கதாய் இருக்கிறது.

விஷயங்களை, புசிக்கப் புசிக்க, அவற்றின்மேல் ஆசை வளர்வது போலும், கட்டைகளைப் போடப்போட நெருப்பு வ்ருத்தி அடைவது போலும், உம்முடைய வாய்கள், உண்ண உண்ண, இன்னும் அதிகமாக உண்ண வேண்டும் என்கின்றன. ஒரு வாயே எவ்வளவு வீஸ்தீர்ண முள்ளதாய் விரிந்திருக்கிறது! முவ்வுலகும், நாக்கு நுணியில் நின்று பெருங் காட்டுத்தீயில் விழுந்த ஓர் விளங்கனி போல், காணப்படுகிறது. இப்படி இருக்கும் வாய்கள் கணக்கில்லாமல் இருப்பதால், இவைகளுக்குப் போதுமானபடி, அத்தனை முவ்வுலகங்கள் எங்கேயிருந்து கொண்டுவர முடியும்? ஒரு வாய்க்குப் போதுமானபடி, ஆகாரம் கிடைப்பதற்கு வழி இல்லாமல் இருக்க, இத்தனை வாய்களை என்னத்துக்காக ஏற்படுத்திக் கொண்டிருக்கிறீர்? இந்த அல்பமான லோகமானது உம்முடைய வாய் என்னும் தீயின் வசப்பட்டு காட்டுத்தீயால் சூழப்பட்டுப்போன மான் ஆகிறது. இவ்வுலகத்து ப்ராணிகள், இவ்வளவு ஆபத்தில் சிக்கிப்போனபின், உம்மை தேவன் என்று சொல்லக்கூடாது; அவற்றின் துஷர்கர்மமே உம்முடைய உருவாய் வந்துசேர்ந்த தென்றும், அவைகள், யமன் போன்ற இவ்வுருவம் என்னும் வலையில், அகப்பட்டுப்போன மீன்கள் என்றும், சொல்லவேண்டிய தாயிருக்கிறது.

இனி இந்த அங்ககாந்தியின் வலையில் சிக்கிப் போன ப்ராணிகள், எந்தப் பக்கமாய் தப்பித்துக்கொண்டு வெளிப்படும், ஐயா? இவை வாய்களல்லவே, இந்த ஜகத்தை யெல்லாம் கொளுத்தி விடுவதற்காக, ஏற்படுத்திவைத்த அரக்குமாளிகைகள் வந்து நேர்ந்தன, என்றே இவைகளைச் சொல்ல வேண்டும். நெருப்பினுடைய தீவ்ரமான வெப்பத்தால், ஜீவர்களுடைய அங்கமெல்லாம் வெந்துபோவது, நெருப்புக்குத் தெரியாமற் போனாலும், அதினால் சூழப்பட்டவர்களுக்கு மாத்ரம் உயிரோடு தப்பித்துப் போகும் வழி இல்லாமற் போகிறது. தன்னுடைய கூர்மையால், எப்படி பூதங்கள் துக்கத்தை அடைந்து நாசமாகின்றனவென்று, கத்திக்குத் தெரியாதது போலும், தான் ப்ராணிகளைக் கொன்று விடுகிறது விஷத்துக்குத் தெரியாததுபோலும், உம்முடைய கொடுமை உமக்குத் தெரியவில்லையே யானாலும், இதோ காணப்படும் உம்முடைய ஓர் முகமாகிய அகழில், பிராணிகளனைத்தும் விழுந்து மடிந்து போகின்றனவே.

ஐயா, நீர் ஒருவரே உலகம் முழுவதுக்கும் ஆத்மாவாக வ்யாபித்திருக்கிறவராயிருந்தும், எங்களுக்கு ஏன் யமனாய் ஏற்பட்டு நிற்கிறீர்? நானோ, இனி உயிரோடு இருக்கப் போகிறேன், என்கிற ஆசையை முற்றிலும் ஒழித்து விட்டேன். ஆகையால் நீர் ஓர் தாக்ஷண்யமும் பாராட்டாமல், உம்முடைய மனஸில் இருக்கும் உத்தேசத்தைக் கூச்சமின்றிச் சொல்லிவிடும். இந்த உக்ரமாயிருக்கும் ரூபத்தை இன்னும் என்னத்துக்குப் பெருக்கிக் கொண்டிருக்கிறீர்? நீர் பகவான் (வைராக்யம், ஐச்வர்யம், யசஸ், ச்ரீ (செல்வம்), ஞானம், வீர்யம் என்ற ஆறு குணங்களும் பகம் எனப்படும். இவற்றைப் பரிபூர்ணமாய் உடையவன் பகவான் எனப்படுவான்) என்பதைக் கொஞ்சம் ஞாபகத்தில் வையும். எது தான் இல்லாமற் போனாலும்; என்னை மாத்ரம் காப்பாற்றி வைப்பதற்கு எவ்வளவு க்ருபை வேண்டுமோ, அவ்வளவாவது க்ருபை செய்ய வேண்டும்.

आख्याहि मे को भवानुग्ररूपो नमोऽस्तु ते देववर प्रसीद ।
विज्ञातुमिच्छामि भवन्तमाद्यं न हि प्रजानामि तव प्रवृत्तिम् ॥३१॥

ஆக்யாஹி மே கோ பவானுக்ரரூபோ
நமோகுஸ்து தே தேவ வர ப்ரஸீத ।
விக்ஞாது மிச்சாமி பவந்த மாத்யம் ந ஹி
ப்ரஜாநாமி தவ ப்ரவ்ருத்திம் ॥ 31

விச்வரூபத்தோடு நிற்கும் பகவானை அர்ஜுநன் வினவல் :

"ஹே வேதவேத்யரே, (வேத மொன்றினாலேயே அறியத் தக்கவரே) முவ்வுலகுக்கும் முதலான ஒருவரே, உலகத்தார் அனைவரும் வணங்கத்தக்கவரே, என் ஓர் விஞ்ஞாபனத்துக்குச் செவி கொடுக்க வேண்டும்," என்று சொல்லி, பகவானுடைய பாதத்தில் தலையைச் சாய்த்து, நமஸ்கரித்து, அர்ஜுநன் மேலும் சொன்னான். "என் மனஸில் இருந்த ஆசை தீரவேண்டும் என்றெண்ணி, விச்வரூபம் எப்படி இருக்குமோ அதைக் காட்ட வேண்டு மென்று கேட்டதற்கு, ஒரே தடவையாய் மூன்று லோகத்தை விழுங்கிக்கொண்டு, பயங்கரமான ரூபமாய் நின்றீர். ஆகவே நீர் யார்? என்னத்துக்கு இவ்வளவு பயங்கரமான இத்தனை முகங்களைப் படைத்துக் கொண்டிர்? என்னத்துக்கு இத்தனை கைகளால் இத்தனை ஆயுதங்களை தரித்திருக்கிறீர்? ஐயா அப்போதைக்கப்போது, என்னத்துக்காக மிக்கக் கோபங்கொண்டு, சரீரத்தைப் பெருக்கி,

ஆகாசத்தைச் சிறுகச் செய்து, கண்களை சிவக்கச்செய்து கொண்டு, யாவரையும் பீயந்து போகச் செய்கிறீர்? என்னத்துக்காக இப்போது நீர் யமனோடு போட்டி போடுகிறீர்? இப்படிச் செய்வதில் உம்முடைய உத்தேசம் இன்னதென்று எனக்குத் தெரிவிக்க வேண்டும்."

श्रीभगवानुवाच ।

कालोऽस्मि लोकक्षयकृत्प्रवृद्धो लोकान्समाहर्तुमिह प्रवृत्तः ।

ऋतेऽपि त्वां न भविष्यन्ति सर्वे येऽवस्थिताः प्रत्यनीकेषु योधाः ।।३२।।

ஸ்ரீ பகவானுவாச -

காலோ ஸ்மி லோகக்ஷயக்ருத் ப்ரவ்ருத்தோ
லோகான் ஸமாஹர்துமிஹ ப்ரவ்ருத்த: ।
ருதே பி த்வாம் ந பவிஷ்யந்தி ஸர்வேயேகு
வஸ்திதா: ப்ரத்யனீகேஷு யோதா: ।। 32

பகவானுடைய உத்தரம் :

இதைக் கேட்டு, பகவான், "ஹே அர்ஜுனா, நான் யாரென்றும், நான் என்னத்துக்கு மேன்மேலும் அத்யுக்ர மாய்க் கொண்டிருக்கிறேன் என்றும், கேட்கிறாயல்லவா; ஆகவே, சொல்வேன், கேள்; நான் உண்மையாகவே உலகத்தை ஸம்ஹாரம் செய்யும் பொருட்டு, பெருத்த உருவம் எடுத்து வந்த யமன். நான் இத்தனைவாய்களையும் நன்றாய் விரித்துக் கொண்டு,இதோ அதை விழுங்கப்போகிறேன்," என்றார். அப்போது அர்ஜுனன், "ஐயோ, இதற்கு முன்னிருந்த ஸங்கடத்தினின்று தப்பித்துக் கொள்வதற்காக ப்ரார்த்தித்துக் கேட்டால், இந்த அநர்த்தம் ஏற்பட்டதே," என்றான். அப்போது பகவான், இப்படி கடினமாய் வார்த்தை சொல்லி விட்டேனே, அர்ஜுனன் மிக்க துக்கிதனாய்ப் போவானே என்று நினைத்து, "ஆனால், அர்ஜுனா மற்று மோர் விஷயம் இருக்கிறது, சொல்கிறேன், கேள்; அது என்ன வென்றால் இப்போது நடக்கப்போகிற ஸம்ஹார ப்ரவாஹத்தில், பாண்டவர்களாகிய நீங்கள் மாத்ரம் விழுவதில்லை." என்றார். இதைக்கேட்ட உடனேயே, அர்ஜுனன் தேஹத்தை விட்டுப் போய்க் கொண்டிருந்த அவன் உயிர், திரும்பவும் தேஹத்திற்குள் வந்து சேர்ந்தது.

அதற்கு முன்னால், மரணத்தை உண்டாக்கி வைக்கும் மஹாமாரியின் வசப்பட்டிருந்த அவன், இந்த வார்த்தையைக்

கேட்டு கொஞ்சம் ஸமாதான மடைந்து, ஸ்ரீ க்ருஷ்ணனுடைய வார்த்தையைக் கவனித்துக் கேட்கத் தொடங்கினான் அப்போது பகவான் பின் வருமாறு சொன்னார். அர்ஜுனா, நீங்கள் என்னைச் சேர்ந்தவர்கள் என்று தெரிந்துகொள். மற்றவர்களை எல்லாம் விழுங்கத் தொடங்கியிருக்கிறேன்; ப்ரளயகாலத்து அத்யுக்ரமான அக்நியின் நடுவில் போடப்பட்ட ஓர் வெண்ணெய் உண்டையானது, அதே க்ஷணத்தில் நாசமடைந்து போவது போலும், என்னுடைய வாயில் ஜகங்கள் விழுந்து நாசமடைவதைப் பார்த்தாயல்லவா? அப்படி அவை யமன்வாயில் விழுந்து நாசமடைவதில், ஓர் ஸந்தேஹமும் இல்லை. ஆனால் இந்த ஸைந்யங்களிலுள்ளவர்கள், தங்களுக்கு வரப்போகிற நாசத்தை அறியாதவர்களாய், வீணாய் வீரவாதம் பேசுகிறார்கள். இங்கே கூடியிருக்கும் சதுரங்கஸேனையில் உள்ளவர்க ளெல்லாரும், தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் பராக்ரமத்தின் கொழுப்பால், யமனைக்கூட யுத்தத்துக்கு அழைக்கிறார்கள்.

இதோ பார், அநேகர் ஒன்றாய்க் கூடிக்கொண்டு, தங்களுடைய பெருமையை எடுத்துக் கூறியும் தங்களுடைய யானைகளின் பலத்தைக் கொண்டாடியும், ப்ரஹ்மஸ்ருஷ்டிக்குப் பதிலாக வேறு ஸ்ருஷ்டி செய்துவைப்போ மென்று, பந்தயம் போட்டுக் கொண்டும், யமனை ஜயித்துக் கொன்று விடுவோமென்றும், ஜகத்தை எல்லாம் ஓர் கவளமாய்ச் செய்து வாயிற் போட்டுக் கொள்வோ மென்றும், பூமி முழுவதையும் விழுங்கி விடுவோ மென்றும் ஆகாசத்தைத் திருப்பித் திருப்பிக் கொளுத்திவிடுவோ மென்றும், இப்படி எல்லாம் பேசுகிறார்கள். அவர்களுடைய வார்த்தைகள் சஸ்த்ரங்களைக் காட்டிலும் தீக்ஷணமாயும், நெருப்பைக்காட்டிலும் வெப்பமாயும், இருக்கின்றன. கொலை செய்வதில் காளகூடமே தங்களுக்குமுன் அல்பமாகும், என்று அவர்கள் சொல்லிக்கொள்கிறார்கள். ஆனா லிவர்க ளனைவரையும் கந்தர்வநகரத்து வெள்ளம், சூந்யத்தின் மடிப்புக்கள், சித்ரத்தில் எழுதிய பொம்மைகள், என்பதில் ஸந்தேஹமில்லை. இவர்களை ம்ருகஜலத்தின் ப்ரவாஹம் என்றே சொல்லவேண்டும். இவர்கள் ஸேனைகளே அல்ல, துணியாற் செய்த பாம்புகள் என்றும், விளையாடுவதற்காக அலங்கரித்து வைக்கப்பட்ட பொம்மைகள் என்றும், சொல்ல வேண்டும்.

तस्मात्त्वमुत्तिष्ठ यशो लभस्व जित्वा शत्रून् भुङ्क्ष्व राज्यं समृद्धम् ।
मयैवैते निहताः पूर्वमेव निमित्तमात्रं भव सव्यसाचिन् ॥३३॥

தஸ்மாத் த்வமுத்திஷ்ட யஶோ லபஸ்வ ஜித்வா
ஶத்ரூன் புங்க்ஷ்வ ராஜ்யம் ஸம்ருத்தம் ।
மயைவைதே நிஹதா: பூர்வமேவ நிமித்த மாத்ரம்
பவ ஸவ்யஸாசின் ॥ 33

இதுவுமது :

உண்மை என்ன வென்றால், எந்த பலத்தைக் கொண்டு, இந்த போர் வீரர்களின் தேஹம் சேஷ்டிக்க வேண்டுமோ, அந்த பலம் முழுவதையும் நான் உரிஞ்சி விட்டேன். ஆகையால் அவர்கள் குயவன் செய்து வைத்த மண் பொம்மைகள் போல், நிர்ஜீவர்களாய் இருக்கிறார்கள். கயிற்றால் ஆட்டிவைக்கப்படும் பொம்மைகள், அக்கயிறு அறுந்து போனபின், தொட்டதே காரணமாக கீழே விழுந்து உருண்டு போகுமல்லவா? அப்படியே இந்த ஸைந்யத்தைத் தொட்டாற் போதும், அது நாசமாய்விடும். ஆகையால் சீக்கிரம் எழுந்திருந்து, நான் சொன்னபடி அதை நாசஞ் செய்து, நீ புத்திசாலி என்று பெயரெடு. இந்தக் கௌரவர்கள் விராடராஜன் பசுக்களைப் பிடித்தபோது, ஏற்பட்ட யுத்தத்தில், நீ அவர்கள்மேல் மோஹநாஸ்த்ரத்தை ப்ரயோகித்து, விராடராஜன் மகனாகிய மிக்க பயந்த உத்தரனைக் கொண்டு, அவர்களுடைய ஆடைகளை உரிந்து கொண்டு வரச் செய்ய வில்லையா. இப்போது நீ செய்ய வேண்டியது அதைக்காட்டிலும் அதிஸுலபமானது. ஏற்கனவே போர்களத்தில் சாய்ந்து மடிந்துபோயிருக்கு மிவர்களைக் கொல். அர்ஜுநன் ஒண்டியாய் நின்று சத்ருக்க ளனவைரையும் ஜயித்தான், என்று கீர்த்தியைத் தேடிக்கொள். அன்றியும் வெறுமையான கீர்த்தி மாத்ரம் அன்று, முழுராஜ்யமும் கிடைத்துப் போகிறதாய் இருக்கிறது. ஹே ஸவ்யஸாச்சி, இதில் நீ ஓர் கஷ்டமும் படாமல், ஒப்புக்குமாத்ரம் நில், அது போதும்.

द्रोणं च भीष्मं च जयद्रथं च कर्णं तथान्यानपि योधवीरान् ।
मया हतांस्त्वं जहि मव्यथिष्ठा युध्यस्व जेतासि रणे सपत्नान् ॥३४॥

த்ரோணம் ச பீஷ்மம் ச ஜயத்ரதம் ச கர்ணம்
ததாऽன்யாநபி யோதவீரான் ।
மயா ஹதாம் ஸ்த்வம் ஜஹி மா வ்யதிஷ்டா
யுத்யஸ்வ ஜேதாஸி ரணே ஸபத்நான் ॥ 34

இதுவுமது :

த்ரோணன் என்று மதிக்க வேண்டாம், பீஷ்மன் என்று அஞ்சவேண்டாம், கர்ணன்மேல் எப்படி அம்புபோடுகிறது என்று நினையாதே. ஜயத்ரதரனை வதிப்பதற்கு என்ன உபாயம் செய்யலாம் என்று ஆலோசிக்க வேண்டாம். பெயர் படைத்தவர்களான மற்றும் எந்த வீரர்களானாலும் ஸரியே, அவர்கள் அனைவரும் சித்ரத்தில் எழுதிவைத்த ஸிம்ஹங்கள் என்றெண்ணி, அவைகளை ஈரக்கையால் அழித்து விடுவதுபோல், அழித்துவிடு. உண்மை இப்படி யிருப்பதால், யுத்தம் செய்வோம், என்று சேர்ந்திருக்கும் கூட்டம் அனைத்தும், வெறும் தோற்றமே அல்லது, வேறல்ல. அதில் இருந்த ஸத்வம் முழுவதையும் நான் ஏற்கனவே உரிஞ்சி விட்டிருக்கிறேன். எப்போது இவைகள் என்வாயில் விழுந்து போனவைகளாய் நீ பார்த்தாயோ, அப்போதே அவற்றின் வாழ்நாள் முடிந்து போயிற்று. இப்போது அவைகளின் மேற்றோல் மாத்ரந் தான் மிகுந்து நிற்கிறது. ஆகையால் சீக்கிரமாய் எழுந்திருந்து நான் கொன்று தள்ளி யிருக்கு மவர்களை, நீ கொல். உயிர் ஏற்கனவே இல்லாமற் போன அவர்களை, நீ கொல்லப்போவதாக நினைத்துக் துக்கப்படாதே.

பந்து விளையாட்டில் சிறுவர்கள், தாமே சில்லுகளை ஒன்றின் மேலொன்றாக அடுக்கிவைத்து, பின்பு தாமே பந்தால் அடித்து, அவற்றை வீழ்த்துவது போலும், நீ என் கைப்பந்தாக அமைந்து இச்சேனைகளை கீழே வீழ்த்த நிமித்தமாக மாத்ரம் ஏற்பட்டு நில். உனக்கு சத்ருக்களானவர்கள் ஏற்கனவே விச்வரூபம் என்னும் புலியாற் கவ்விக் கொண்டுபோகப்பட்டார்கள். நீ செய்ய வேண்டிய தெல்லாம் ராஜ்யததோடுகூட, கீர்த்தியைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டியது தான். ஸ்வபாவத்தால் பிறர் பெருமையை ஸஹியாதவர்களாய், உங்கள் விஷயத்தில் பங்காளித்தனம், பாராட்டுகிறவர்களாய், பலத்தால் துர்மதம் பிடித்தவர்களாய், இருந்த உன் தாயாதிகளை, அநாயஸமாய் நீ வதித்து விட்டாய், என்பதை ப்ரகாசமாக உலகத்தார் வாக் என்னும் வஸ்திரத்தில் எழுதிவைத்து, விஜயீ என்னும் பெயர் பெற்று விளங்கு, ஹே கிரீடீ.

सञ्जय उवाच ।

एतच्छ्रुत्वा वचनं केशवस्य कृताञ्जलिर्वेपमानः किरीटी ।

नमस्कृत्वा भूय एवाह कृष्णं सगद्गदं भीतभीतः प्रणम्य ॥ ३५ ॥

ஸஞ்சய உவாச -

ஏதச் ச்ருத்வா வசனம் கேஶவஸ்ய க்ருதாஞ்ஜலிர்
வேபமான: கிரீடீ ।
நமஸ் க்ருத்வா பூய ஏவாஹ க்ருஷ்ணம் ஸகத்கதம்
பீதபீத:ப்ரணம்ய: ॥ 35

இதைக்கேட்டு அர்ஜுநன் மிக்க வணக்கத்தோடு செய்த ப்ரச்நம் :

இப்படி இந்தக் கதை முழுவதையும், தன்னாசை பூர்ணமாக வழியில்லை யென்று, மனக்குறையோடு கூடினவனும் கௌரவர்கள் தலைவனு மான அந்த த்ருதராஷ்ரனுக்கு ஸஞ்ஜயன் சொன்னான். கங்கையின் ஜலமானது ஸத்யலோகத்திலிருந்து, கள கள என்று சப்தம் செய்து கொண்டு புறப்பட்டது போலும் மஹா மேகத்தினின்று கடகட என்று சப்தம் செய்து கொண்டு மழை விடாது பொழிந்தாற் போலும், மந்தரபர்வதம் என்னும் மத்தினால் கடையப்பட்டு பாற்கடல் தும்துமென்று சப்தித்தாற் போலும், கம்பீரமாய் பெருத்த சப்தத்துடன், மஹிமை அளவிட முடியாதவரும் விச்வரூபத்தை எடுத்தவருமான ஸ்ரீக்ருஷ்ணன் இப்படிச் சொன்னார். இதை அர்ஜுநன் கொஞ்சங் கேட்டதும், அவனுக்கு ஸுகம் தான் அல்லது பயம் தான் அதிகரித்ததோ, எனக்குச் சொல்லத் தெரியவில்லை; ஆனால் அவனுடைய ஸர்வாங்கமும் நடுங்கத் தலைப்பட்டது. அவன் தன் தேஹத்தை மிக்க வணக்கமாய் வளைத்து, அப்படியே கையையும் கூப்பிக்கொண்டு, அடிக்கடி தலையை பகவான் பாதத்தில் சாய்த்து வைத்தான். அதற்கு மேல் அவன் ஏதோ பேசத்தலைப்பட்டால், வாய் பேசமுடியாமல் அடைத்துக்கொண்டு போயிற்று. இது ஸுகமோ பயமோ நீங்களே விசாரித்துக் கண்டுகொள்ள வேண்டும்.

ஆனால் பகவானுடைய வார்த்தையால் அர்ஜுனனுக்கு இப்படி ஏற்பட்டதென்று, ச்லோகத்தின் பதத்தினின் றறிந்து சொன்னேன். பின்பவன் பயந்து கொண்டே, மறுபடியும் நமஸ்காரம் செய்து, பின்வருமாறு சொன்னான். என்னைப் பார்த்து, நீர்கூலன் என்றும், எல்லாவற்றையும் விழுங்குவதே உமது விளையாட்டென்றும், நீர் சொன்ன வார்த்தை ஒரு நாளும் பிசகாது, என்று இவ்வுலகத்தாராகிய நாங்கள் நம்பத்தான் வேண்டும். ஆயினும் காலனாகிய நீர், ஸ்திதியின் (ஜகத்தின் உற்பத்தி, ஸ்திதி, லயம், என்ற இம்மூன்றிலும்,

இப்போது நடக்க வேண்டியது ஸ்திதி) ஸமயமாகிய இக்காலத்திலேயே, நீர் ப்ரபஞ்சத்தை விழுங்கி விடுவீர் என்பது, யுக்திக் கொத்து வரவில்லையே. இப்போத உலகுக்கிருக்கும் தாருண்யத்தைப் போக்கி, அதின் ஸ்தானத்தில் தத்காலம் இராததான ஓர் மூப்பை, எப்படி ஏற்படுத்திவைக்க முடியும்? ஆகையால், "விழுங்கி விடுவேன்," என்று நீர் சொல்வது அநேகமாக நடக்காத வார்த்தை என்றே சொல்ல வேண்டும். நன்றாய் விசாரித்துப் பாரும்.

இப்போது நடந்து கொண்டிருக்கும் ப்ரஹ்மாவினுடைய பகலில், நான்கு ஜாமம் முடிவதற்கு முன்னமேயே, நடு மத்யாஹ்ந காலத்திலேயே, ஸ்ருஷ்டி என்னும் ஸூர்யன் அஸ்தமித்துப் போவது என்பது, எப்படியாவது நேர்வதுண்டா? எப்போதும் நீர் காலஸ்வருபீயாய் இருப்பது வாஸ்தவமே யானாலும், அப்படிப்பட்ட உமக்கு மூன்று அவஸரங்கள் ஏற்பட்டு, அவற்றில் ஒவ்வொன்றும் தன் தன் காலத்தில் மிக்க வலிமை உள்ளதாய் இருக்கின்றது அல்லவா? எந்த ஸமயத்தில் உத்பத்தி யென்பது நடைபெறுமோ, அந்த ஸமயத்தில் ஸ்திதி ப்ரளயங்கள் இரண்டும் ஒடுங்கிக்கிடக்கின்றன. அப்படியே ஸ்திதி என்பது நடைபெறும் காலத்தில், உத்பத்தி ப்ரளயம் என்ற இவ்விரண்டும் தலைமறைவாய்க் கிடக்கின்றன. கடை சியில் ஏற்படும் ப்ரளயகாலத்தில், உத்பத்தியும் ஸ்திதியும் அஸ்தமனமாய் விடுகின்றன. இப்படிப்பட்ட ஓர் ஏற்பாடு, எதினாலும் பாதிக்கப்படாததாய், அநாதியாய் நடந்தேறிவருகிறது. இப்போது ஸ்திதி என்பது பூர்ணவைபவத்துடன் நடந்து வருகிறது. இப்படிப்பட்ட ஸமயத்தில் நீர் அனைத்தையும் விழுங்கி விடுவீர் என்பது, என மனஸுக்கு ஏறவில்லையே.

பகவானுடைய உத்தரம் :

அப்போது பகவான் சுருக்கமாய் பதிற்சொன்னார். "அப்பா, இந்த இரண்டு ஸைந்யத்தையும், நான் போஷித்து வளர்ப்பது என்பது, முடிந்து போய் விட்டது. இதை நீ ப்ரத்யக்ஷமாய்ப் பார்க்கும்படி, நான் காட்டி வைத்தேன். மற்றவர்களின் ப்ரளயம் மாத்ரம், ஸரியான காலத்திலேயே நடக்குமே தவிர, இப்போது இல்லை." இப்படி பகவான் குறிப்பாய் ஓர் வார்த்தை சொல்ல, அதைக் கேட்ட அர்ஜுனனுக்கு உலகம் முழுதும் முன் போலவே தோற்றி நின்றது.

अर्जुन उवाच ।

स्थाने हृषीकेश तव प्रकीर्त्या जगत्प्रहृष्यत्यनुरज्यते च ।
रक्षांसि भीतानि दिशो द्रवन्ति सर्वे नमस्यन्ति च सिद्धसङ्घाः ।।३६।।

அர்ஜுன உவாச -

ஸ்தானே ருஷீகேஶ தவ ப்ரகீர்த்யா ஜகத் ப்ரஹ்ருஷ்யத்
யநு ரஜ்யதே ச ।
ரக்ஷாம்ஸி பீதானி திஶோ த்ரவந்தி ஸர்வே நமஸ்யந்தி ச
ஸித்தஸங்கா: ।। 36

அர்ஜுனன் பகவானைத்துதித்தல் :

பின்பு, அர்ஜுனன் சொன்னான், "ஹே தேவா, நீர் விச்வம் என்னும பொம்மையைக் கையிற் பிடித்துக்கொண்டு, உம்முடைய இஷ்டப்படி ஆட்டிவைக்கும் ஸாமர்த்யம் உள்ளவரல்லவா? ஜகமனைத்தும் முன்போலவே நடந்துகொண்டிருப்பதை திரும்பவும் நான் காண்கிறேன். ஆகவே துக்கஸமுத்தரத்தில் விழுந்து போனவர்களை, நீர் கை கொடுத்து கரை ஏற்றுகிறீர், என்ற உம்முடைய கீர்த்தியை, நான் சிந்திக்கிறேன். அப்படி அதை சிந்திக்கச் சிந்திக்க, மிக்க ஆநந்தத்தை அடைந்து, அந்த ஆனந்த மென்பதே ஓர் ஸமுத்ரமாய், அதின் அலைகளின் மேல் நான் மிதந்து கொண்டிருக்கிறேன்.

ஹே தேவா, ஜகமானது உயிர் பெற்று வாழ் வடைந்து, உம்மிடத்தில் இடைவிடாது ப்ரேமையைப் பாராட்டி நிற்கிறது. துஷ்டர்களோ என்றால், மேன்மேலும் நாசம் அடைகிறார்கள். பாரீர் முவ்வுலகிலும் உள்ள ராக்ஷஸர்கள் உம்மைக் கண்டு நடுங்கி, பத்து திக்குக்களையும் தாண்டி ஓடுகிறார்கள். இச்சமயத்தில் தேவர்கள் மநுஷ்யர்கள், ஸித்தர்கள், கிந்நரர்கள், சுருக்கிச்சொல்ல சாரசரரூபமான ஜகத்தில், உள்ள அனைவரும், உம்மைப் பார்த்து ஸந்தோஷத்தாற் பொங்கி, உம்மை நமஸ்கரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

कस्माच्च ते न नमेरन्महात्मन् गरीयसे ब्रह्मणोऽप्यादिकर्त्रे ।
अनन्त देवेश जगन्निवास त्वमक्षरं सदसत्तत्परं यत् ।।३७।।

கஸ்மாச்ச தே ந நமேரன் மஹாத்மன் கரீயஸே
ப்ரம்ஹணோ ஸ்ப்யாதி கர்த்ரே ।
அனந்த தேவேஶ ஜகன்நிவாஸ த்வமக்ஷரம்
ஸதஸத்தத்பரம் யத் ॥ 37

இதுவுமது :

ஹே நாரயணா, இந்த ராக்ஷஸர்கள் ஏன் உன் பாதத்தைப் பற்றிக் கொள்ளாமல் ஓடிப்போகிறார்களோ, தெரியவில்லையே. இது உம்மைக்கேட்டு அறிந்து கொள்ளதத்கதாக இருக்கிறது. ஸ்வப்ரகாசத்துக்கு மூலஸ்தானம் ஆகிய நீர், கண்ணுக்கு முன் நின்ற பிறகு, இருட்டாகிய அவர்கள் இயற்கையாகவே ஓடிப்போகிறார்கள். ஹே லக்ஷ்மீமனோஹரனே, இப்படி அளவிடமுடியாததா யிருக்கும் உம்முடைய மஹிமை, இதுவரைக்கும் எனக்குத் தெரியாமல் இருந்து, இன்று அநுபூதமாயிற்று. ஸ்ருஷ்டி என்னும் மாக்கோலமும், ஓர் கொடிபோல் விஸ்தாரமாய்ப் பரவியிருக்கும் பூதஜாதங்களும், எதினின்று உண்டாயினவோ, அந்த மஹத் ப்ரஹ்மம் என்னும் ப்ரக்ருதியை உம்முடைய ஸங்கல்பமே பெற்றுவைத்தது. தேவரீர் எல்லை யில்லாத படி ஸத்வமுடையவராயும், எக்காலத்திலும் ப்ரகாசமாய் விளங்குகிறவராயும், எல்லை யில்லாத உத்தமகுணங்கள் பொருந்தி அளவில்லாதவராயும், எப்போதும் எல்லை இல்லாதபடி ஸமபாவம் படைத்தவராயும், தேவர்களரசனாயும், முவ்வுலகுக்கு முயிராயும், நாசமற்றவராயும், ஸதா மங்களரூபியாயும், ஸதஸத்ரூபமாயும் அவ்விரண்டையும் தாண்டினவராயும், இருக்கிறிர்.

त्वमादिदेवः पुरुषः पुराणस् त्वमस्य विश्वस्य परं निधानम् ।
वेत्तासि वेद्यं च परं च धाम त्वया ततं विश्वमनन्तरूप ॥३८॥

த்வமாதிதேவ: புருஷ: புராணா ஸ்த்வமஸ்ய
விஶ்வஸ்ய பரம் நதானம் ।
சேத்தாஸி வேத்யம் ச பரம் ச தாம த்வயா
ததம் விஶ்வமனந்தரூப ॥ 38

இதுவுமது:

நீர் ப்ரக்ருதி புருஷர்களுக்கு ஆதியானவர். கல்பாந்தத்தில் மஹத்தத்வம் உம்மிடத்தில் லயமடைகிறது. நீர் தாமாகவே

அமைந்து, அநாதியாயும் புராதநமாயும் இருக்கப்பட்டவர், நீர் ஸகல விச்வத்துக்கும் உயிரானவர், ஜீவராசிகள் உமக்குள் வைக்கப்பட்டிருக்கின்றன. முற்காலத்தில் நடந்தவையும், இனி நடக்கப்போகு மவையுமாகிய, இவ்விரண்டின் ஞானமும் உமது அதீனமா யிருக்கிறது. வேதத்தின் கொள்கைப்படி ஆத்மஸ்வரூபஸுகம் என்பது எதுவோ, அது பேதரஹிதரான நீரே. த்ரிபுவனத்துக்கும் ஆச்ரயமான மூலப்ரக்ருதி எதுவோ, அதற்கும் ஆச்ரயமாய் நீர் நிற்கிறீர். கல்பாந்தத்தில் மஹதப்ரஹ்ம மென்ற ப்ரக்ருதி உம்மிடத்தில் நுழைந்து லயப்பட்டுப் போவதால், உம்மை பரமமான வீடு என்றே சொல்லவேண்டும். வளர்த்திச் சொல்வதென், தேவனாகிய உம்மால் ஜகம் முழுவதும், விஸ்தரித்து வைக்கப்பட்டது. ஆகையால் முடிவில்லாத ரூபத்தோடுகூடிய உம்மை, எவன் வர்ணிக்க முடியும்?

वायुर्यमोऽग्निर्वरुणः शशाङ्कः प्रजापतिस्त्वं प्रपितामहश्च ।
नमो नमस्तेऽस्तु सहस्रकृत्वः पुनश्च भूयोऽपि नमो नमस्ते ॥३९॥

வாயுர் யமோঽக்னிர் வருண: ஶஶாங்க:
ப்ரஜாபதிஸ்த்வம் ப்ரபிதாமஹஶ்ச ।
நமோ நமஸ்தேঽஸ்து ஸஹஸ்ர க்ருத்வ: புனஶ்ச
பூயோঽபி நமோ நமஸ்தே ॥ 39

அர்ஜுநன் திரும்பவும் திரும்பவும் பகவானுக்கு நமஸ்காரம் செய்தல் :

ஐயா, நீர் எதுவாய்த் தான் இல்லை? எங்கேதான் நீர் இல்லை? இது நிற்கட்டும், எந்தெந்தரூபமாய் நீர் இருப்பீரோ, அவற்றிற்கெல்லாம் நமஸ்காரம். ஹே அநந்தா வாயுவும், ப்ராணிகளை அவரவர்கள் கர்மத்துக்குத் தக்கபடி சாஸநம் (தண்டனை முதலியவற்றால் திருத்திவைத்தல்) செய்கிற யமனும், ப்ராணிகள் நடுவில் உள்ள அக்நியும், நீரே. வருணனும் சந்திரனும், ஸர்வத்தையும் ஸ்ருஷ்டி செய்யும் பிரஹ்மதேவனும், அப்பிதாமஹனுக்கும் தகப்பனாய், ஆதியான உத்தமனும், நீரே. ஹே ஜகந்நாத, மற்றும் எந்த ரூபங்கள் தத்காலம் இருக்கின்றனவோ, அல்லது தத்காலம் இல்லாமல் முன்னிருந்தவையா யாவது இனி உண்டாகப் போகுமவையா யாவது இருக்குமோ, அவ்வுருவங்களான உமக்கு நமஸ்காரம்.

இப்படி மேன்மேலும் பொங்கும் ப்ரேமை மிகுந்துள்ள மனதுடன், அர்ஜுனன் நமஸ்காரம் செய்து விட்டு, "ஹே

ப்ரபோ, நமஸ்தே நமஸ்தே," என்றே மேலும் மேலும் சொல்லிக் கொண்டிருந்தான்; பின்பு ஸ்ரீ பகவானுடைய மூர்த்தியை ஆதியோடந்தமாக ஸேவித்து விட்டு, திரும்பவும், ப்ரபுவே, நமஸ்தே நமஸ்தே," என்று சொன்னான்; பின்பு இருபக்கங்களின் முடிவு பர்யந்தம் ஸேவித்து, திரும்பவும், "ஹே ப்ரபுவே, நமஸ்தே, நமஸ்தே," என்றே சொன்னான். இந்த சராசரத்திலுள்ள பூதங்களை எல்லாம் அந்த விச்வரூபத்திற் பார்த்து, திரும்பவும், திரும்பவும் "ஹே ப்ரபோ, நமஸ்தே, நமஸ்தே," என்றான்; இப்படி அந்த விச்வரூபத்தைப் பார்க்க பார்க்க, ஆச்சர்யமான ரூபங்கள் அதில் தோற்றவே, அப்போதைக்கப்போது, "நமஸ்தே நமஸ்தே," என்றான். வேறு எவ்விதமாயாவது ஸ்தோத்ரம் செய்ய அவனுக்குத் தோற்றவில்லை; ஒன்றும் சொல்லாமலும் இருக்க முடிய வில்லை. இப்படி அவன் மனது ஆய்ப்போய், மேலும் மேலும் ப்ரேமை பொங்கி, இப்படியே உரக்கக் கூவத் தொடங்கினான்.

नमः पुरस्तादथ पृष्ठतस्ते नमोऽस्तु ते सर्वत एव सर्व ।
अनन्तवीर्यामितविक्रमस्त्वं सर्वं समाप्नोषि ततोऽसि सर्वः ।। ४० ।।

நமஃ புரஸ்தாததப்ருஷ்டதஸ்தே நமோ(அ)ஸ்து தே ஸர்வத ஏவ ஸர்வ।
அனந்தவீர்யாமிதவிக்ரமஸ்த்வம்ஸர்வம்ஸமாப்நோஷிததோ(அ)ஸிஸர்வஃ॥40

இதுவுமது :

இப்படி ஆயிரக்கணக்காய் நமஸ்கரித்துவிட்டு, "ஹே ஸ்ரீஹரி, முன்னால் நிற்கும் உமக்கு நமஸ்காரம்; உமக்கு முன் பக்கமென்றும், பின் பக்கம் என்றும், வேறுவேறாய் இருக்கிறதோ இல்லையோ? இருந்தால் அதினால் எனக் கென்ன பிரேயோஜநம்? ஆகவே என் பின்புறம் நிற்கும் உமக்கு நமஸ்கரிக்கின்றேன். உலகத்தார் முதுகைப் பார்க்க, நீர் இருக்கலாமே தவிர, உம்முடைய முதுகைப்பார்க்க, உலகத்தார் இருக்கமுடியாது; உம்முடைய வேறு வேறு அவயங்களைத் தக்கபடி வர்ணித்து, என்னால் நமஸ்கரிக்க முடியாது; ஆகையால் ஸர்வாத்மகனாயும் ஸர்வமாயு மிருக்கும் உமக்கு நமஸ்காரம் செய்கிறேன்; ஐயா அளவற்ற பலத்தால் நிறைந்தவரே, அளவற்ற விக்ரமத்தோடு கூடியவரே, ஸகலகாலத்திலும் ஸகல தேசத்திலும் ஒரே மாதிரியாய் இருப்பவரே, உமக்கு நமஸ்காரம்; ஆகாசத்தில் எங்கும் அவகாசரூபமாய் ஆகாசமே இருப்பது போலும், நீரே ஸர்வமாயும் நின்று, ஸர்வத்துக்கும் இடங்கொடுத்துக் கொண்டிருக்கிறீர்; வளர்த்திச் சொல்வதென்? பாலாலமைந்த

பாற்கடலில், அலைகளும் பாலே ஆவன போலும், நீர் எல்லா பூதங்களுமாய், எல்லா பூதங்களுக்கும் ஆதாரமாயும் இருக்கிறீர்; ஆகையால் ஹே தேவா, நீர் ஸர்வ பூதங்களினின்றும் வேறானவர் அல்ல; நீரே ஸர்வமும்; இந்த உண்மையான ஞானம் இப்போது என் அநுபவஸித்தமாயிற்று," என்று சொல்லி, மேலும் அவன் சொன்னான்.

सखेति मत्वा प्रसभं यदुक्तं हे कृष्ण हे यादव हे सखेति ।
अजानता महिमानं तवेदं मया प्रमादात्प्रणयेन वापि ।। ४१ ।।

ஸகேதி மத்வா ப்ரஸபம் யதுக்தம் ஹே க்ருஷ்ண
ஹேயாதவ ஹே ஸகேதி।
அஜானதா மஹிமானம் தவேதம் மயா ப்ரமாதாத்
ப்ரண யேன வாபி ।। 41

அர்ஜுனன் தான் பகவானுக்கு முன் செய்த அபசாரங்களை நினைத்து, அவற்றை மன்னிக்க ப்ரார்த்தித்தல் :

ஆனால் இப்படிப்பட்ட மஹிமை உள்ளவராய், உம்மை நாங்கள் ஒருக்காலும் அறிந்ததில்லை. ஆகையால் உம்மை உறமுறையான் என்றும், ஸம்பந்தி யென்றும், நினைத்து உம்மிடத்தில் நாங்கள் இதுவரைக்கும் நடந்து கொண்டு வந்தோமாகையால், மிக்க அபசாரப் பட்டுப்போனோம். அம்ருதத்தின் பெருமை தெரியாமல், அதைக் கொண்டு தரையை மொழுகினேன். காமதேநுவைக் கொடுத்து விட்டு, குதிரையை வாங்கிக் கொண்டேன். ஸ்பர்சவேதி என்னும் கற்களால் ஏற்பட்ட ஓர் மலையைப் பொடி செய்து, வீட்டு அடிப்படையை நிரப்பினேன். கல்பதருவைச் சேதித்து, கழணிக்கு வேலியிட்டேன். சிந்தாமணிகள் நிறைந்திருக்கும் ஓர் சுரங்கம் கிடைத்து, அதின் பெருமையை அறியாமல், அதைத் தூத்துவிட்டேன். அப்படியே பரப்ரஹ்மமாகிய நீர் கிடைத்தபின், உம்மைத் தோழன் என்று எண்ணி அவமதித்ததால், நான் அடைய வேண்டிய லாபத்தை இழந்தேன். உம்முடைய பெருமை இன்றைக்குத்தான் எனக்குத் தெரியவந்தது.

இந்த யுத்தம் எவ்வளவு அல்பமான விஷயம்! இதில் ஜயம் பெற உத்தேசித்து உம்மைத் தேர்ப்பாகனாய்ச் செய்து வைத்தேனே! ஸர்வ ஜீவர்களுக்கும் ஸர்வவிதமாயும

உதவுகிறவரே, இந்த அல்பர்களான கௌரவர்கள் வீட்டுக்கு, உம்மை தூதனாய் அனுப்பினோமே! இப்படி அல்பமான லாபங்களை உத்தேசித்து, உம்மை விலைக்கு விற்றோம். யோகிகள் ஸமாதியில் இருந்து, உம்மை த்யானித்து ஸுகம் பெறுகிறார்கள். அப்படிப்பட்ட உம்முடைய மஹிமையை அறியாதிருக்கும்படி, எவ்வளவு அறிவு கேடனானேன்! உமக்கு முன்னாலேயே, நான் பிடிவாதம பிடித்து, ஹடம் செய்து, என் னிஷ்டப்படியே, உம்மை நடக்கும்படி செய்தேன்.

यच्चावहासार्थमसत्कृतोऽसि विहारशय्यासनभोजनेषु ।
एकोऽथवाप्यच्युत तत्समक्षं तत्क्षामये त्वामहमप्रमेयम् ।। ४२ ।।

யச்சாவஹாஸார்த மஸத் க்ருதோ(அ)ஸி விஹார
ஶய்யாஸன போஜனேஷு ।
ஏகோ(அ)தவாகுப்யச்யுத தத்ஸமக்ஷம் தத் க்ஷாமயே
த்வாமஹ மப்ரமேயம் ॥ 42

இதுவுமது :

அநாதியாய், இந்த விச்வத்துக்கு ஆதியான நீர், எந்த ஸபையில் உட்கார்ந்திருந்தீரோ, அந்த ஸபையில், நான் பந்துத்வத்தைப் பாராட்டிக்கொண்டு, உம்மைப் பரிஹஸித்துப்பேசி யிருக்கிறேன். உம்முடைய அரண்மனைக்கு நான் வந்தபோது நீர் மர்யாதைகள்செய்ய, நான் அவற்றை அங்கீகரித்திருக்கிறேன். நீர் மர்யாதை செய்யத் தவறிப்போன ஸமயங்களில், நான் சலுகை பாராட்டி, கோபித்துக் கொண்டிருக்கிறேன். அப்போது என்கோபத்தைப் போக்கி, என்னை ஸமாதானப் படுத்திவைப்பதற்கு, நீர் என் பாதத்தைப் பிடித்துக்கொண்டு, ப்ரார்த்திக்கும்படியாய்ச் செய்துவைத்திருக்கிறேன். இப்படி அநேக விதமாய் நான் அபராதம் செய்திருக்கிறேன். உம்மை பந்து வென்று நினைத்து, உம்மைப் பின் தள்ளி, நான் முன்னாக, உமக்கு முதுகு காட்டிக்கொண்டு, உட்கார்ந்திருந்தது உண்டு. இது தகுந்த கார்யமா? ஹே வைகுண்டா, ஆனால் தெரியாத்தனமாய்ப் பிழை செய்தேன். உமக்கு ஸரியாக எதிர் நின்று, கத்தியும் கோலும் எடுத்து, விளையாட்டுப் போர் செய்திருக்கிறேன். ஆஷாடமாஸத்தில் ஓர் விளையாட்டாக, உம்முடன் மல்யுத்தமும் செய்திருக்கிறேன். சொக்கட்டான் ஆடி, வஞ்சனைகள் செய்து, அதி நிஷ்டூரமாய் உம்மை பேசி, சண்டையும் போட்டிருக்கிறேன். நல்ல வஸ்து ஒன்று

கிடைத்தால், எனக்குத்தான் அது வேண்டுமென்று நான் ஹடம் செய்ததுண்டு.

ஸர்வஜ்ஞனாகிய உமக்கு புத்திமதிகள் சொன்னது முண்டு. "நீ என்ன எங்களுக்கு ஸாதித்து விட்டாய்? உனக்கு நாங்கள் ஒரு விதமாயும் கடன் பட்டவர்கள் அல்லோம்," என்று நான் உம்மை அவமானப்படுத்தி இருக்கிறேன். இப்படி எல்லாம் நான் உம்முடைய விஷயத்தில் செய்திருக்கும் அபாராதங்கள், மூவ்வுலகத்துக்குள்ளு மடங்கா. ஆனால் நான், இவ்விதமெல்லாம், தவறுதலாய் நடந்ததற்குக் காரணம், உமது மஹிமையை யறியாதிருந்ததேதவிர, வேறோன்று மல்ல, என்று நான் உமது பாதஸாக்ஷியாகச் சொல்லுகிறேன். தேவரீர் போஜநம் செய்யும் காலத்தில், என்னை மிக்க ப்ரேமையுடன் ஸஹபோஜநம் செய்ய வேண்டுமென்று அழைக்க, நான் வரட்டு கர்வம் பாராட்டிக் கொண்டு, கோபமாய்த் தனித்து உட்கார்ந் திருந்ததுண்டு. தேவரீருடைய அந்தப்புரத்தில், கொஞ்சங்கூட அஞ்சாமல், ப்ரவேசித்து, நான் விளையாடி யிருக்கிறேன். உம்முடைய பள்ளியின்மேல் ஏறி, உமது பக்கத்தில் நான் படுத்துக் கொண்ட துண்டு, நான் உம்மை க்ருஷ்ணா என்று அழைத்தும், யாதவர்களில் ஒருவனாய் கணக்கிட்டும், நீர் புறப்பட்டுப் போகும்போது ஆணையிட்டு மறித்தும், இருக்கிறேன்.

உம்முடன் கூட ஒரே ஆஸநத்தில் ஏறி உட்கார்வதும், உம்முடைய வார்த்தைகளை மதியாமல் நடப்பதும், மற்றும் அநேக தவறுகளும், உம்மோடு நெருங்கிப் பழகினதால், என்னிடத்தில் ஏற்பட்டதுண்டு. ஆகையால் நான் செய்த குற்றங்கள் இன்ன இன்ன வென்று, இப்போது என்னால் சொல்ல முடியாமையால், நான் ஸகல அபராதங்களும் ஒன்று சேர்ந்த ஓர் குவியல், என்று மொத்தமாய்ச் சொல்லித் தீர்க்கிறேன். இப்படி உமது முன்னின்றாவது, நீர் பாராதிருந்தபோதாவது, கணக்கற்றவையாய்ச் செய்த அபராதங்கள் அனைத்தையும், தாய்போல், நீர் வயிற்றுக்குள்ளேயே அடக்கிக்கொள்ள வேண்டும். ஹே ப்ரபுவே. ஒவ்வொரு வேளை, நதிகள் அசுத்தமாயும், கலங்கிப்போயு மிருக்கும் ஜலத்துடன், ஸமுத்ரம் வந்தடைவ துண்டு. அப்போது அந்த ஜலத்தைக்கூட, ஸமுத்ரம் வாங்கி கொள்ள வேண்டும். அல்லவா? இல்லாவிடில் அந்த அசுத்த ஜலத்துக்கு வேறு கதி என்ன இருக்கிறது?

அப்படி ப்ரீதியாலேயோ, யோசனை இல்லாததினாலேயோ, தேவரீரிடத்திடில் நான் அபசாரப்பட்டிருப்ப தனைத்தையும்,

முகுந்தனான நீர் பொறுத்தே தீரவேண்டும். ஐயா, தேவரீருடைய பொறுமையின் ஓர் அம்சத்தைக் கொண்டல்லவா, பூமி ஸகல ஜீவர்களுடைய பிழையையும் பொறுத்து, அவர்களைத் தாங்கிக் கொண்டிருக்கிறாள். ஆகையால் என்னுடைய பிழைகளைப் பொறுத்தல், உமக்கு ஓர் பெரிய கார்யமில்லை. ஆகவே அறிய முடியாதபடி பெருமை படைத்தவரே, சரணாகதனான என்னுடைய இவ்விதப் பிழைகள் அனைத்தையும் பொறுத் தருளவேண்டும்

पितासि लोकस्य चराचरस्य त्वमस्य पूज्यश्च गुरुर्गरीयान् ।
न त्वत्समोऽस्त्यभ्यधिकः कुतोऽन्यो लोकत्रयेऽप्यप्रतिमप्रभाव ।। ४३ ।।

பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய த்வமஸ்ய
பூஜ்யஶ்ச குருர்கரீயான் ।
ந த்வத் ஸமோ ऽஸ்த்யப்யதிக: குதோ ऽன்யோ
லோகத்ரயே ऽப்ய ப்ரதிம ப்ரபாவ ।। 43

அர்ஜுநன் பகவானுடைய பெருமையை எடுத்துக் கூறல் :

ஐயா, இப்போது தேவரீரது உண்மையான மஹிமையை அறிந்தேன். நீர் சராசரரூபமான இந்த ஜகத்துக்கு உத்பத்திஸ்தானம், ஹரி ஹரன் முதலான ஸமஸ்ததேவர்களுக்கும், நீர் பரதைவதம், வேதாந்தங்களுக்குக் கூட பாடம் சொல்லிவைத்த ஆதிகுரு நீர். ஹே லக்ஷ்மீ மனோஹரனே, நீர் கம்பீரமானவராயும், ஸமஸ்த ப்ராணிகள் விஷயத்திலும் ஸமபுத்தி உள்ளவராயும், ஸகல உத்தம குணங்களின் நிறைவால் ஈடுஜோடில்லாதவராயும், இரண்டாவது என்னும் வஸ்து இல்லாதவராயும், இருக்கிறீர். உமக்கு ஸரியான வரில்லை யென்று, ந்யாயங்கள் விவரமாய் எடுத்துரைத்து, ஸித்தாந்தம் பண்ணுவதற்கு அவச்யமே இல்லை. உம்மிடத்திலிருந் துண்டான ஆகாசமே, ஜகத்தனைத்தையும் கவிந்து கொண்டிருக்கிற தல்லவா? அப்படிப்பட்ட உமக்கு ஸமானமாய் மற்றொன்று, என்று ஓர் வார்த்தையை சொல்வதற்கே மனது வெட்கப் படுகிறதே! அப்படி இருக்க உம்மை விஞ்சினது என்னும் வார்த்தை, எப்படி எற்படும்? ஆகையால் இம்மூவுலகிலும் நீர் தனித்தவராய், உமக்கு ஸமானமாக மற்றொன் றில்லாதவராயிருக்கிறீர். உம்முடைய அலௌகிகமான மஹிமையை வர்ணிப்பது, என் திறமல்ல.

तस्मात्प्रणम्य प्रणिधाय कायं प्रसादये त्वामहमीशमीड्यम् ।
पितेव पुत्रस्य सखेव सख्युः प्रियः प्रियायार्हसि देव सोढुम् ।। ४४ ।।

தஸமாத் ப்ரணம்ய ப்ரணிதாய காயம் ப்ரஸாதயே
த்வாமஹமீஶமீட்யம் ।
பிதேவ புத்ரஸ்ய ஸகேவ ஸக்யுः ப்ரியா யார்
ஹஸி தேவ ஸோடும் ।। 44

மறுபடியும் தன் பிழைகளைப் பொறுக்க வேண்டும் என்று பகவானை அர்ஜுநன் ப்ரார்த்தித்தல் :

இப்படி அர்ஜுநன் சொல்லி, மறுபடியும் நமஸ்காரம் செய்தான். உடனேயே ஸாத்விகபாவங்களின் பெருக்கு அவனை வ்யாபித்துக் கொண்டது. அப்படியான பின், தன்விஷயத்தில் மனம் குளிரவேண்டும், என்று ப்ரார்த்தித்து, தொண்டை தளர்ச்சி அடைந்து, அவன் பின் வருமாறு சொன்னான். "நான் செய்த அபராதங்கள் என்னும் ஸமுத்ரத்தினின்று, என்னைக் கரையேற்ற வேண்டும். உம்மைக் கேவலம் என் பந்துவென்று நினைத்து, நீர் உலகத்துக்கெல்லாம் ஸுஹ்ருத் தென்பதை அறியாமற்போனேன். உம்மை விச்வேச்வரனென்று, எவராவது வர்ணித்தால், இது என்ன அறியாமை, என்று நான் ஆச்சர்யப்பட்டிருக்கிறேன். நீர் எல்லாராலும் கொண்டாடத்தக்கவராயிருந்தும், என்னிடத்தில் உமக்கு ஏற்பட்ட ப்ரீதியால், என்னை நீர் பத்துப்பேர் முன்னால் ச்லாகித்தால், நான் தலைகால் தெரியாதவனாய்ப் பொங்கி, என்னுடைய பெருமையையே நான் மேன்மேலும் பேய்த்திக் கொண்டிருந்த துண்டு.

இப்போது நினைத்துப் பார்த்தால், நான் செய்த அபராதங்களுக்கு எல்லையே இல்லை. இப்படித் தவறுதலாய் செய்ததனைத்தையும் பொறுத்து, நீர் என்னைக் காப்பாற்ற வேண்டும். இப்படி ப்ரார்த்திப்பதற்கே எனக்கோர் அதிகாரமும் இல்லை. ஆனால் நான் ப்ரார்த்திப்பதை, ஓர் குழந்தை தன் தகப்பனிடத்தில் சலுகைப் பாராட்டுவதாகவே பாவிக்க வேண்டும். புத்ரன் எவ்வளவோ பெருத்ததான அபாராதத்தைச் செய்தபோதிலும், தகப்பன் அவனை அந்யனாய் எண்ணாமல், அவன் குற்றத்தைப் பொறுப்பது போலும், நீர் என் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும். தோழன் செய்த தப்பை, தோழன் வாய்திறவாது பொறுத்துக்கொள்வது போலும், என்னுடைய குற்ற மனைத்தையும் நீர் பொறுக்கவேண்டும்.

ஒருவன் தன் ப்ரியனிடத்திலிருந்து வெகுமானம் பெறவேண்டுமென்று எதிர் பாராததுபோலும், நாங்கள் உம்மை எச்சிற் கலங்களை எடுக்கும்படியாய்ச் செய்து வைத்தோமே, அதைப் பொறுத்துத்தீரவேண்டும். ஐயா, பரஸ்பரப்ரேமை பாராட்டும் உயிருக்குயிரான இருவர்கள் ஸந்தித்தால், அவர்களில் ஒருவன், பிறருக்குக் தெரிவிக்காமல் தனக்குள்ளேயே அநுபவிக்கும் துக்கத்தை, மற்றவனுக்குத் தெரிவிப்பதில் ஓர் ஸங்கோசமும் பாராட்டாதது போலும், எவள் தன்னுடைய தேஹத்தையும் ஆத்மாவையும் கணவனுக்கு முற்றிலும் ஸமர்ப்பித்து விட்டிருக்கிறாளோ, அவள் புருஷனைப் பார்த்த உடனே தன் மனஸில் இருக்கும் ஸர்வத்தையும் அவனுக்குத் தெரிவித்து விடுவது போலும், நான் என் மனஸிலிருந்த தனைத்தையும், ஸர்வஸ்வாமியாகிய உம்மிடத்தில் தெரிவித்து விட்டேன்; ஆயினும் நான் சொல்லவேண்டியதாய் மற்றுமோர் விஷயம் உண்டு; அதைக் கேட்டருள வேண்டும்.

अदृष्टपूर्वं हृषितोऽस्मि दृष्ट्वा भयेन च प्रव्यथितं मनो मे ।
तदेव मे दर्शय देव रूपं प्रसीद देवेश जगन्निवास ।। ४५ ।।

அத்ருஷ்ட பூர்வம் ஹ்ருஷி தோஸ்மி த்ருஷ்ட்வா
பயேன ச ப்ரவ்யதிதம் மனோ மே ।
ததேவ மே தர்ஶய தேவ ரூபம் ப்ரஸீத
தேவேஶ ஜகன்னிவாஸ ॥ 45

அர்ஜுநன், பகவானிடத்திலிருந்து தான் தத்காலம் அடைந்திருக்கு முபகாரத்தைச் சொல்லி திரும்பவும் க்ருஷ்ண ரூபத்தைக் காட்ட வேண்டுமென்று ப்ரார்த்தித்தல் :

நான் தேவரீரிடத்திற் சலுகை கொண்டாடி, விச்வரூபத்தைக் காட்டிவைக்க வேண்டுமென்று கேட்டதற்கு, என் தாயும் தகப்பனுமாகிய நீர், அதை மிக்க ப்ரீதியுடன் காட்டி வைத்தீர். என் வீட்டு முற்றத்தில் நட்டு வைப்பதற்குக் கல்பதருவையும், நான் விளையாடுவதற்கு காமதேனுவின் கன்றையும் சொக்கட்டான் ஆடுவதற்கு நக்ஷத்திரங்களையும், பந்தாடுவதற்கு சந்திரனையும், கொண்டு வந்து கொடுக்க வேண்டு மென்று, கேட்டேன். இப்படி எல்லாம் பிடித்த பிடிவாதத்தை, தாயாகிய நீர் பூர்த்தி செய்து வைத்தீர். எந்த அம்ருத்தின் ஒரு துளிகூட கிடைப்பது மிக்கவும் அருமையோ,

அந்த அம்ருதத்தையே நான்கு மாதம் மழையாகப் பெய்யும்படி செய்து வைத்தீர். பூமியை முழுவதையும் பயிர்செய்வதற்கு ஸித்தம் செய்துவைத்து, சிந்தாமணிகளை விகைளாக விதைத்துக் கொடுத்தீர். இப்படி நான் ஆசைப்பட்டதை எல்லாம், என்னிடத்தில் மிக்க ப்ரேமையுடன் செய்து கொடுத்தீர்.

பரமசிவனும் ப்ரஹ்மதேவனும் காதாற் கூட கேட்டறியாததை, நான் கண்ணாற் காணும்படி காட்டிவைத்தீர். எது உபநிஷத்துக்களுக்குக் கூட எட்டாதிருந்ததோ, அதை நான் கண்ணாற் காண்பதென்றால், ஸாதாரணமான கார்யமா? உம்முடைய உயிர் நிலையில் முடிபோட்டு வைத்திருந்த அதை, அந்த முடிச்சை அவிழ்ந்த்து, எனக்குக் காட்டி வைத்தீர். உலகத்தின் ஆதியினின்று, இன்று வரைக்கும், எனக்கு எத்தனை ஜந்மங்கள் உண்டாய்த் தீர்ந்து போயினவோ, அத்தனைக்குள்யேும் ஒவ்வொரு ஜந்மத்திலும் நடந்த ஸமாசாரங்கள் அனைத்தையும், பரிசோதித்துப் பார்த்தேன். ஆனால் எந்த ஜந்மத்திலாவது, இந்த விச்வரூபத்தைக் கண்ணாற் கண்டதாய்வது, காதாற் கேட்டதாயாவது, எனக்குத் தெரிய வரவில்லை. புத்தி இதின் வாயில் வரைக்கும் கூடப் போய்ப் பார்த்ததில்லை. மனஸானது இதின் பெயரைக் கூட உச்சரிக்கத் தெரியாதிருந்துவிட்டது.

அப்படி இருக்க இதைக் கண்ணாற் காண வேண்டுமென்னும் வார்த்தையையே சொல்வது, எப்படி ஸாத்யமாகும்? வளர்த்திச் சொல்வதென்? இதற்கு முன்னால் ஒருவரும் இதைக் கண்டது மில்லை. கேட்டதுமில்லை. அப்படிப்பட்ட இந்த உம்முடைய விச்வரூபத்தை என் கண் காணக்காட்டிவைத்தீர். அதினால் என் மனஸு ஸந்தோஷம் அடைந்தது, ஹே தேவா. இப்போது உம்மோடே நான் ஸம்பாஷணம் செய்ய வேண்டும் என்றும், நீர் கிட்டி இருந்து நான் உம்மை ஆலிங்கனம் செய்து கொள்ள வேண்டும் என்றும், எனக்கு ஓர் ஆசை உண்டாயிருக்கிறது. இந்த ரூபத்தைக் கொண்டே, அந்த ஆசையைத் தீர்த்துக் கொள்ளலாம் என்றாலோ, எந்த முகத்தோடு நான் கலந்து பேசுவேன்? எந்த ரூபத்தை நான் கட்டிக் கொள்வேன். உம்முடைய முகங்களும் ரூபங்களும் கணக்கற்ற வையாய் இருக்கின்றனவே. காற்றுக்கு ஸரியாய் ஓடுவதும், ஆகாசத்தைக் கட்டிக் கொள்வதும், ஸமுத்ரத்தில் ஜலக்ரீடை செய்வதும் அஸாத்யமான கார்யமல்லவோ? இந்த ரூபத்தைப் பார்க்கப் பார்க்க, என் அந்தராத்மாவில் பயம் உண்டாகிறதே தவிர, ப்ரீதி ஏற்பட வழியே இல்லை.

ஆகையால் என்னுடைய இந்த ஆசையைப் பூர்த்தி செய்து வைக்க வேண்டும். அது என்னென்றால், இந்த விச்வரூபத்தை நீர் காட்டினது போதும். பாரும், சராசரங்களோடு கூடிய இந்த ஜகத்தை வேடிக்கையாய்ப் பார்த்துக் கொண்டு, என் ஸொந்த வீட்டிலிருப்பது போல், என் மனஸு ஸமாதானம் அடைந்திருக்க வேண்டும் என்றால், உம்முடைய நான்கு புஜங்களோடு கூடிய க்ருஷ்ண ரூபத்தைப் பார்ப்பதைத் தவிர, வேறு உபாயமில்லை. இவ்வுலகிலுள்ள என்னைப் போன்றவர்கள் யோகாப்யாஸம் செய்து அடைய வேண்டிய லாபமும், சாஸ்த்ரங்களை முடியப் பரிசோதித்து அடைய வேண்டிய ஞானமும், அந்த க்ருஷ்ண ரூபத்தின் தர்சனமே அல்லவா? நாம் செய்யும் யாகங்கள், தீர்த்தாடனங்கள், தானங்கள், மற்ற விதமான புண்ய கர்மங்கள், எவை யாயினும், அவை அனைத்துக்கும் இதுவே அல்லவா பலம்? இப்படி என் அந்தாரத்மாவில் ஓர் ஆசை ஏற்பட்டு, அந்த க்ருஷ்ணரூபத்தையே பார்க்க வேண்டு மென்று, நான் துடி துடித்துக் கொண்டிருக்கிறேன். இந்த ஸங்கடத்தை எனக்கு சீக்கிரத்தில் தீர்த்து வைக்க வேண்டும். ஐயா, என் அந்த ராத்மாவிலிருந்து என்னுடைய எண்ணங்களை முற்றிலும் அறிந்தவரே, ஸகல வித்வத்துக்கும் வாஸஸ்தானமானவரே, தேவர்கள் அனைவரும் பூஜிக்கத்தக்க தெய்வமே, என் மேல் க்ருபை கூரவேண்டும்.

किरीटिनं गदिनं चक्रहस्तं इच्छामि त्वां द्रष्टुमहं तथैव ।
तेनैव रूपेण चतुर्भुजेन सहस्रबाहो भव विश्वमूर्ते ।। ४६ ।।

கிரீடினம் கதினம் சக்ரஹஸ்த மிச்சாமி த்வாம்
த்ரஷ்டுமஹம் ததைவ ।
தேனைவ ரூபேண சதுர்புஜேன ஸஹஸ்ர
பாஹோ பவ விஸ்வ மூர்தே ॥ 46

இதுவுமது :

உம்முடைய தேஹத்தின் ச்யாமளகாந்தியானது நீலோத்பலத்துக்கும் ஆகாசத்துக்கும் நைல்யத்தைப் பூசிவைத்துக் கொண்டும், இந்த்ர நீலக்கல்லுக்கு பளபளப்புச் செய்து கொடுத்துக் கொண்டும், இருக்கிறது. மரகதத்துக்கு வாஸனை உண்டானாற்போலும், ஆநந்தத்துக்கு புஜங்கள் முளைத்தாற் போலும் இருக்கும் உம்முடைய க்ருஷ்ண ரூபத்தின் முழங்கால் அழகைக் கொண்டு, மன்மதன் அழகு படைத்தவன் ஆனான்.

சிரஸில் கிரீடத்தை அணிந்து கொள்வதால், உம்முடைய சிரஸே அக்கிரீடத்துக்குச் சாத்தின் கிரீடம் ஆகிறது; மற்ற நகைகள் அனைத்தும், அந்த தேஹத்தி லணியப்படுவதால், அழகு படைத்தனவாகின்றன; ஆகாசத்தில் இந்த்ரதநூஸ் மேகத்தின் மேல் ஏற்படுவதால் அழகுபெறுவதுபோல், அந்த க்ருஷ்ணரூபத்தின் மேல் தரிக்கப்படுவதால் வனமாலை அழகு பெற்று தரிக்கப்பட்ட கதை, அத்யெள்தார்ய முள்ளதாய், அஸுரர்களுக்குக்கூட மோக்ஷத்தைக் கொடுக்கிறது.

அந்த ரூபத்தில் இருக்கும் சக்ரமும், எவ்வளவோ சாந்தமான தேஜஸ்ஸோடு விளங்கி, மனஸுக்கு ஸ்தோஷத்தை உண்டாக்குகிறது. சுருக்கிச் சொல்வேன், கேளீர், ஹே தேவா, அந்த க்ருஷ்ணரூபத்தைப் பார்க்க மிக்க ஆவலுள்ளவனாய் இருக்கிறேன்; ஆகையால் நீர் இப்போதே, அந்த ரூபத்தைத் தரித்து நிற்க வேண்டும். ஐயா இந்த விச்வரூபத்தைப் பார்த்து, கண்கள் ஆநந்தப் பட்டாய் விட்டது. இப்போது அவை க்ருஷ்ணரூபத்தை பார்க்க பறக்கின்றன. அந்த அழகு பொருந்திய க்ருஷ்ணரூபத்தை விட்டு, வேறொன்றையும் பார்க்க அவை இஷ்டப்படவில்லை. அந்த க்ருஷ்ண ரூபத்துக்கு முன், இந்த விச்வரூபம் அல்பம் என்றே அவை நினைக்கின்றன. போகத்துக்காகட்டும், மோக்ஷத்துக்காகட்டும், இரண்டுக்கும் க்ருஷ்ணரூபமே போக்யமானது. ஆகையால் இந்த விச்வரூபத்தை அடக்கிவைத்துக் கொள்ளும், க்ருஷ்ணரூபத்தை எடுத்துக்கொள்ளும்.

இதைக் கேட்ட பகவான் ஆச்சர்யப் படுதல் :

அர்ஜுநனுடைய இந்த வார்த்தைகளைக் கேட்டு, விச்வரூபத்தோடு கூடிய பகவான் மிக்க ஆச்சர்யத்தை அடைந்து, பின்வருமாறு சொன்னார். இவ்வளவு புத்தி கெட்டவனை நான் பார்த்ததே இல்லை. இப்போது உனக்குக் கிடைத்திருப்பதை, என்ன வென்று நினைத்தாய்? அந்த லாபத்தினால் அடைய வேண்டிய ஸந்தோஷம் உனக்கு ஏற்படவே இல்லை. பயத்தினால், காட்டு மனுஷனைப் போல் உளருகிறாயா, என்ன? எனக்கு ஒருவன்மேல் ஸந்தோஷம் வந்து விட்டால், அவனுக்கு என் தேஹத்தைக்கூட கொடுத்துவிடுவேன். ஆனால் என் உயிருக்கு ஸமானமான இந்த விச்வரூபத்தை எவனுக்காவது காட்டுவேனா? அப்படி என் னுயிருக்கே ஆதாரபூதமான இந்த பெருத்த விச்வரூபத்தை, உன் மேல் எனக்கிருக்கும் ப்ரீதியால், நீ காணும்படியாய், மிக்கக் கஷ்டப்பட்டு நான் ஏற்படுத்திவைத்தேன். இவ்வளவு ப்ரீதி உன் மேல் எனக்கு ஏன் எண்டாயிற்றோ, தெரியவில்லை.

என் க்ருபைக்கு பைத்தியம் பிடித்துப்போய், இந்தப் பரமரஹஸ்யமான விஷயத்தை, அது உலகில் வெளிப்படுத்திவைத்தது. இந்த என்னுடைய பராத்பர ஸ்வரூபம், எல்லையற்ற பெருமை படைத்தவை அனைத்தையும் காட்டிலும், மிக்கப் பெருமை பெற்றது. க்ருஷ்ணரூபம் முதலிய என் ரூபங்கள், இந்த ஸ்வரூபத்தினிடத்திலிருந்து அவதரித்தவைகள். இது கேவலம் ஞான தேஜஸ்ஸாய், விச்வவ்யாபகமாய், முடி வில்லாததாய், அளவற்றதாய், எல்லாவற்றிற்கும் ஆதியானது. இது எந்த ஸாதாந நுஷ்டானத்தினாலும் காணத் தகாத தாகையால், உன்னைத்தவிர ஒருவனும், இதைக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை.

श्रीभगवानुवाच ।

मया प्रसन्नेन तवार्जुनेदं रूपं परं दर्शितमात्मयोगात् ।

तेजोमयं विश्वमनन्तमाद्यं यन्मे त्वदन्येन न दृष्टपूर्वम् ।। ४७ ।।

ஸ்ரீ பகவானுவாச -

மயா ப்ரஸன்னேன தவார்ஜுனேதம் ரூபம் பரம்
தர்ஶித மாத்ம யோகாத் ।
தேஜோமயம் விஶ்வமனந்தமாத்யம் யன்மே
த்வதன்யேன ந த்ருஷ்ட பூர்வம் ॥ 47

பகவான் இந்த விச்வரூபத்தின் அருமையை யெடுத்துக்கூறல் :

அதின் ஸமீபத்தை அடைந்த மாத்ரத்தில் வேதம் வாயை மூடிக்கொண்டது. யஜ்ஞங்கள் ஸ்வர்க்கம் வரைக்கும் போய், அதற்கு மேல் போகமுடியாமல், திரும்பி விட்டன. யோகிகள், இதைக் காணுவதற்கு, யோகாப்யாஸம பயன்படாத வீண் ச்ரமம் என்று, அறிந்துகொண்டு, அதைக் கைவிட்டார்கள். சாஸ்த்ரங்களின் அத்யயனம், இந்த விஷயத்தில் பயன் படுவதில்லை. அத்யுத்தமமான ஸத்தர்மங்கள் அனைத்தும் மிகவும் விரைந்து ஓடி ஸத்யலோகம் வரைக்கும் சென்று நின்று போயின. தபஸ் இதின் பெருமையப் பார்த்த உடனேயே, தன்னுடைய உக்ரதை பயன்படாதென்று, அதைக் கைவிட்டது. இப்படி, தபஸ் என்னும் ஸாதனத்துக்கும் எட்டாதபடி, இது வெகுதூரம் தாண்டி நின்று விட்டது. அப்படிப்பட்ட இதை, ஓர் கஷ்டமுமின்றி, நீ எப்படி பார்க்கப்பெற்றாயோ, அப்படி

மனுஷ்ய லோகத்தில் ஒருவனாவது பார்த்ததில்லை. இதைக் கண்ணாற் பார்த்து, மனஸால் அடிக்கடி த்யானிப்பது என்னும் ஸம்பத்து, உனக்கொருவனுக்குத்தான் உலகில் ஏற்பட்டது. இந்தப் பெரும் பாக்யத்தைப் படைக்க, ப்ரஹ்ம தேவனுக்குக்கூட யோக்யதை யில்லை.

मा ते व्यथा मा च विमूढभावो दृष्ट्वा रूपं घोरमीदृङ्ममेदम् ।
व्यपेतभीः प्रीतमनाः पुनस्त्वं तदेव मे रूपमिदं प्रपश्य ।। ४९ ।।

மாதே வ்யதா மா ச வி-ட் பாவோ த்ருஷ்ட்வா
ரூபம் கோர மீத்ருங்ம மேதம் ।
வ்யபேத பீ: ப்ரீதமனா: புனஸ்த்வம் ததேவ
மே ரூப மிதம் ப்ரபஶ்ய ।। 48

பின்பு, விச்வரூபமே உத்தம மென்றும், அதுவே ப்ரேமையுடன் உபாஸிக்கத்தக்கது என்றும் உபதேசித்து, பகவான் க்ருஷ்ணரூபத்தைக் காட்டத் தொடங்கல் :

ஆகையால் உனக்கு விச்வரூபத்தைப் பார்க்கக் கிடைத்தது, ஓர் பாக்யம் என்று எண்ணிக் கொள் இதின் விஷயமாய், ஓர் பயமும் பாராட்ட வேண்டாம். இதைக் காட்டிலும் நன்மையானது வேறொன்றிருக்கிறது என்று, நீ நினைக்கவே வேண்டாம். கவனித்துப் பார். அம்ருதம் நிறைந்த ஸமுத்ரம, அகஸ்மாத்தாக ஒருவன் மேல் புரண்டு வந்தால், அவன் அதில் முழுகிப்போவேனே என்று பயந்து, அதைப் பின்தள்ளி ஓடிப்போவானா? அல்லது தங்கம் ஒரு மலையளவு பெரிய கட்டியாக, ஒருவனுக்குக் கிடைத்தால், அது பெரிதாய் அசைக்க முடியாமலிருப்பதைப் பார்த்து, ப்ரயோஜந மில்லை என்று, அவன் அதைக் கைசோர விடுவானா? பாக்யவசத்தால், சிந்தாமணி ஒருவனுக்கு நகையாக அணிந்து கொள்ளக் கிடைத்தால், அது பளுவாயிருக்கிற தென்று, அதைக் கழற்றி எறிவானா? காமதேநுவுக்குத் தீனிபோடுவது கஷ்டமாயிருக்கறதென் றெண்ணி, அதை அடித்துத் துரத்தி விடுகிறவன் உண்டா? சந்திரன் தானாக வீட்டுக்கு வந்தால், "உன்னால் இறுக்கம் ஜாஸ்தியாகிறது, புறப்பட்டுப்போ," என்றும், ஸூர்யன் வந்தால், "உன், நிழலால் வெளிச்சம் குறைந்து போகிறது. வெளியே போ," என்றும், சொல்வது உண்டா?

அப்படி மஹா தேஜஸ்ஸான, இந்த விச்வரூபம் என்னும் உத்தம தனம், உனக்கு அநாயாஸமாகக் கிடைத்திருக்க, நீ கஷ்டப்பட வேண்டுவது என்னவோ, எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஹே அர்ஜுநா நீயோ நாட்டுப்புறத்தான், உன் பேரில் கோபித்துக் கொள்வதில் பயன் இல்லை. நிஜமான ஸ்வரூபத்தைத் தள்ளி விட்டு, நிழலைக் கட்டிக்கொண்டு ஸந்தோஷப்படுகிறாய். அந்த க்ருஷ்ணரூபம், என்னுடைய உண்மையான ஸ்வரூபம் அல்ல. நான்கு கைகள் படைத்த அந்த ரூபம் வெகுமதிக்கத் தக்கதல்ல. ஆகையால் அதின்மேல் மிக்க ப்ரேமை பாராட்டி, உருகிப்போக வேண்டாம். இனியாவது நீ க்ருஷ்ணரூபத்தின் மேல் வைத்த ப்ரியத்தையும் விச்வரூபத்தின் மேல் வைத்த விப்ரியத்தையும் மாற்றிக் கொள்ள வேண்டும் இந்த ரூபம் கோரமாயிருந்தாலும், பயங்கரமாய் பெருத்திருந்தாலும், இதுதான் கொண்டாடத்தக்க தென்று நிச்சயித்துக்கொள். மஹாலோபியானவன் தான் புதைத்துவைத்திருக்கும் தனத்தின் மேல் மனஸை வைத்துப் போட்டு, வெறும் தேஹத்தோடு தான் இருப்பது போலும், தாய்ப் பக்ஷியானது, கூட்டில் இருக்கும் இறகு முளைக்காத தன் குஞ்சின் மேல் மனஸை வைத்துப் போட்டு, ஆகாசத்தில் ஸஞ்சரிப்பது போலும், தாய்ப்பசுவானது மலைமே லேறி மேயும் போது, வீட்டில் இருக்கும் தன் கன்றின் மேல் மனஸை வைத்திருப்பது போலும், – இந்த விச்வரூபம் என்னும் பூமிக்கு ஸொந்தக்காரனாய், நீ இதின் மேலேயே உன் ப்ரேமையை வைக்க வேண்டும். மற்றப்படி, வெளிப்பார்வைக்கு ஸ்நேகிதன் போல் கொண்டாடி ஸுகப்படு வதற்கு வேண்டு மென்றால், நான்கு கைகளோடு கூடிய க்ருஷ்ண ரூபத்தை வைத்துக் கொள்.

ஆயினும் இந்த விச்வரூபத்தினின்று உன்னுடைய ப்ரேமை விலகிப் போகக்கூடாது, என்ற இந்த வார்த்தையையே, மேலும் மேலும் வற்புறுத்திச் சொல்வேன். ஹே அர்ஜுநா, இதை இதற்கு முன் ஒரு நாளும் நீ பார்த் திராததால், உனக்கு பயம் உண்டாயிற்று. அப்பயத்தைப் போக்கிவிட்டு, இதின் மேல் ப்ரேமை நிறைந்ததாய் உன் மனஸைச் செய்துகொள். இனி நீ கேட்டுக் கொண்டபடி செய்து விடுகிறேன்; ஆகையால் இதற்கு முன் பார்த்துக் கொண்டிருந்த க்ருஷ்ண ரூபத்தை பார்த்து, ஆநந்தப்படு.

सञ्जय उवाच ।

इत्यर्जुनं वासुदेवस्तथोक्त्वा स्वकं रूपं दर्शयामास भूयः ।
आश्वासयामास च भीतमेनं भूत्वा पुनः सौम्यवपुर्महात्मा ॥५०॥

ஸஞ்சய உவாச -

இத்யர்ஜுனம் வாஸுதேவஸ் ததோக்த்வா
ஸ்வகம் ரூபம் தர்ஶயாமாஸ பூய: ।
ஆஶ்வாஸயமாஸ ச பீதமேனம் பூத்வா புன:
லெளம்ய வபுர்மஹாத்மா ॥ 49

பகவான் திரும்பவும் கிருஷ்ணரூபம் காட்டியதின் வர்ணனை :

இப்படிச் சொல்லி, திரும்பவும் பகவான் மனுஷ்யரூபத்தைத் தரித்து நின்றார். இதில் ஓர் ஆச்சர்யமும் இல்லை. பகவானுக்கு அர்ஜுனன் மேல் இருந்த ப்ரேமையின் கார்யமல்லவா இது. ஸ்ரீ க்ருஷ்ணனோ கேவலம் ப்ரப்ரஹ்மம். அவர் தன்னுடைய ஸர்வஸ்வமாகிய விச்வரூபத்தை அர்ஜுனன் கையில் கொடுத்து விட்ட போதிலும், அது அவனுக்கு ருசிக்கவில்லை. ஒரு வஸ்துவைக் கேட்டு வாங்கிக்கொண்டு, பிறகு வேண்டாமென்று சொல்வது போலும், உத்தமமான ரத்னத்தை வாங்கிக் கொள்ள இஷ்ட மில்லாதவன், அதற்கு ஓர் குற்றம் சொல்லி, வேண்டாம் என்றாற் போலும் - ஓர் கந்யகையைக் கல்யாணம் செய்து கொள்வதற்குப் பார்த்து விட்டு, மனஸுக்குப் பிடிக்கவில்லை என்று சொல்வது போலும், - அர்ஜுனன் விச்வரூபத்தை வேண்டாம் என்று சொன்னான். பகவான் அர்ஜுனனுக்குச் செய்த உபதேசம் முழுவதிலும், அத்யுத்தம பாகமாகிய, விச்வரூபத்தைக் காட்டிவைத்த தென்பது, எவ்வளவோ அதிகரித்த ப்ரேமையின் கார்யமாயிற்று.

ஒருவன் தங்கக் கட்டியை உருக்கி, தன் மனஸுக்கு அப்போது தோன்றியபடி ஓர் நகையை செய்து கொண்டான். பின்பு அது அவன் மனஸுக்குப் பிடிக்காததாய்ப் போனால், அதை மறுபடியும் உருக்கத்தானே வேண்டும். அப்படியே சிஷ்யன் க்ருஷ்ண உருவத்தை மாற்றி, விச்வரூபத்தைக் காட்ட வேண்டுமென்று ஆசைப்பட்ட உடனேயே, விச்வரூபமாய் பகவான் நின்றார்; அது அவனுக்கு ஸம்மதப்படாது போன உடனேயே அதை மாற்றிக் கொண்டு, திரும்பவும் க்ருஷ்ண ரூபமாய் நின்றார். இவ்வளவு சிஷ்யன் பிடித்த பிடிவாதப்படி யெல்லாம ஆடும் குரு, எங்கே கிடைப்பான்! ஆனால் பகவானுக்கு அர்ஜுனன் மேல் ஏற்பட்டிருந்த ப்ரீதி எப்படிப்பட்டதோ தெரியவில்லை, என்று ஸஞ்சயன் ஆச்சர்யப்பட்டான். பின்பு விச்வத்தை எல்லாம்

வ்யாபித்திருந்த பகவானுடைய திவ்ய தேஜஸ்ஸானது க்ருஷ்ண ரூபத்தில் அடங்கிப் போயிற்று. த்வம் என்னும் பதத்தால் குறிப்பிடப்பட்ட ஜீவராசிகள் அனைத்தும், தத்பத நிர்தேச்யமான ஆத்மஸ்வரூபத்தில், அடங்கிப் போவது போலும், மரத்தின் பெரிய உருவம் விதைக்குள் அடங்கிப் போவது போலும், ஸ்வப்நத்தில் பார்க்கப் படடவையான பலவித காக்ஷிகளும், விழித்துக்கொண்டபின் ஜீவாத்மஸ்வரூபத்தில் லயப்பட்டு போவதுபோலும், ஆத்மயோகத்தால் ஸ்ரீ க்ருஷ்ணன் வெளிப்படுத்தி வைத்த விச்வரூப மனைத்தும், ஸம்ஹரிக்கப்பட்டது.

ஸூர்யகிரணங்கள் ஸூர்ய பிம்பத்திலும், மேகங்கள் ஆகாசத்திலும், நதிகளின் ப்ரவாஹங்கள் ஸமுத்ரத்திலும், லயமடைவது போலும், அல்லது ஸ்ரீக்ருஷ்ணரூபமாய் மடித்துவைக்கப் பட்டிருந்த ஓர் சேலையை, அர்ஜுநனுக்கு விச்வரூபமாய் விரித்துக்காட்டி, அவனகல நீளங்களையும் வர்ணத்தையும் பார்த்து, அதை வாங்கிக்கொள்ள ஸம்மதியாது போனபின், அதைத் திரும்பவும் மடித்து வைத்தாற் போலும், - மிக்க விரிவடைந்து விச்வத்தை எல்லாம் மறைத்து விட்ட அந்த விச்வரூபம், அழகாய் சிறுத்த க்ருஷ்ணரூபமாயிற்று.

வளர்த்திச் சொல்வதென்? அளவற்ற அவர், சின்ன ரூபத்தை எடுத்து, பயந்துபோய் இருந்த அர்ஜுனனுக்கு, ஸமாதானத்தைச் செய்து வைத்தார். ஸ்வப்நத்தில் தான் ஸ்வர்க்கம் போனதாகக் கண்ட ஒருவன், திடீரென்று விழித்துக் கொண்டு, ஆச்சர்யமடைந்ததுபோலும், அர்ஜுநனுக்கு அப்போது ஆயிற்று. ஸ்ரீ குருக்ருபை செய்தமாத்திரத்தில், ப்ரபஞ்சஞானம் நசித்துப்போய், ஸகல தத்வஞானத்தின் ஸ்பூர்த்தி ஏற்படுவது போலும், அர்ஜுநன் ஸ்ரீ க்ருஷ்ணரூபத்தைப் பார்த்தான். தனக்கு முன் விச்வரூபம் என்னும் திரைவிரிந்து, க்ருஷ்ணரூபத்தை மறைத்துக் கொண்டிருந்தது போலும், அத்திரை இப்போது விலக்கப்பட்டுப் போய், ஸ்ரீ க்ருஷ்ண ரூபத்தைப் பார்க்கப் பெற்றது போலும், அர்ஜுநன் எண்ணி நல்ல தாயிற்றென்றான். தான் யமநோடு யுத்தம் செய்து ஜயம் பெற்றுத் திரும்பினது போலும், பெருங்காற்றோடு பந்தயம் போட்டு, ஓட்டத்தில் ஜயித்தாற் போலும், ஸப்த ஸமுத்ரத்தையும தன் கையால் நீந்தித் தாண்டிணாற் போலும், விச்வரூபத்தைப் பார்த்தபின், க்ருஷ்ண ரூபத்தைப் பார்த்து, அர்ஜுநன் மிக்க ஸந்தோஷமடைந்து, ஆநந்தப்பட்டுக் கொண்டிருந்தான்.

பின்பு ஸூர்யன் அஸ்தமித்தவுடன், நக்ஷத்திரங்களைப் பார்க்கப் பெறுவது போலும், விச்வரூபம் மறைந்த பிறகு, ஸகல லோகங்களோடு பூமியை அவன் பார்த்தான். கண்ணைத் திறந்து பார்க்கும்போது, முன்னிருந்தபடியே குருக்ஷேத்திரத்தையும், இரண்டு கக்ஷியிலும் தன் வம்சத்தார் நின்று கொண்டு, கணக்கற்றபடி சஸ்த்ராஸ்த்ரங்களைப் பொழிவதையும், அந்த பாணவர்ஷத்தால் ஏற்பட்ட மண்டபத்தின் கீழ், அமரிக்கையாய் தன் ரதம் நிற்பதையும், அதின் முன்தட்டில் ஸ்ரீ க்ருஷ்ணன் உட்கார்ந்திருப்பதையும் கீழே தான் நிற்பதையும், அவன் பார்த்தான்.

अर्जुन उवाच ।

दृष्ट्वेदं मानुषं रूपं तव सौम्यं जनार्दन ।

इदानीमस्मि संवृत्तः सचेताः प्रकृतिं गतः ।।५१।।

அர்ஜுன உவாச -

த்ருஷ்ட்வேதம் மானுஷம் ரூபம் தவ லௌம்யம் ஜனார்தன।
இதானீமஸ்மி ஸம்வ்ருத்த: ஸசேதா: ப்ரக்ருதிம் கத: ॥ 50

திரும்பவும் க்ருஷ்ண ரூபத்தைப் பார்க்கப் பெற்றதால், தனக்குண்டான ஆநந்தத்தை, அர்ஜுனன் வர்ணித்தல் :

இப்படித் தான் கேட்டுக்கொண்டபடியே, அவ்வர்ஜுநன் ஸ்ரீக்ருஷ்ண ரூபத்தைப் பார்த்து, "இப்போது தான் பிழைத்தேன்", என்றான். "ஞான மானது பயந்துபோய், புத்தியை துறந்துவிட்டு, காட்டுக்கு ஓடிப்போய் இருந்தது; மனஸு அஹங்காரத்தைத் தன்னுடன் கூட்டிக் கொண்டு, போன இடம் தெரியாமல் ஓடிப்போய், இந்த்ரியங்கள் தங்கள் வேலையைச் செய்யத் தெரியாதனவாய், வாய் பேச சக்தியற்றுப் போய், இப்படி சரீரத்தின் அவயவங்கள் அனைத்துக்கும துர்வ்யவஸ்தை ஏற்பட்டிருந்தது. அவை அனைத்தும், இப்போது உயிருடன் என் தேஹத்திற்குத் திரும்பவும் வந்து சேர்ந்தன; இந்த ஸ்ரீ க்ருஷ்ணரூபத்தின் உபகாரத்தால், நான் திரும்பவும் உயிர் பெற்றேன்," என்றிப்படி அர்ஜுனன் எண்ணி, அந்தராத்மாவில் ஸுகம்பெற்று, "ஐயா, உமது இந்த மனுஷ்ய ரூபத்தை, இப்போது பார்க்கப் பெற்றேன்" என்று ஸ்ரீ க்ருஷ்ணனைப் பார்த்துப் பேசி, மேலும் பின்வருமாறு சொன்னான்.

ஹே தேவராயா, நீர் இந்த ரூபத்தை எனக்குத் திரும்பவும் காட்டியது, ஓர் தாய், தன்னை விட்டுப் பிரிந்து போய், தன்னைக் காணாமல் அழுது கொண்டிருந்த, குழந்தையிடம் வந்து சேர்ந்து, அதை ஸமாதானப்படுத்தி ஸ்தன்யபானம் செய்து வைத்தது போல் ஆயிற்று. ஐயா விச்வரூபம் என்னும் ஸமுத்ரத்தில் விழுந்து, கைகளால் நீந்திகொண்டு, அதின் அலைகளால் மோதப்பட்டு, துக்கப்பட்டுக் கொண்டிருந்த நான், இப்போது க்ருஷ்ண ரூபம் என்னும் கரை ஏறப்பெற்றேன். ஹே த்வாரகா புரியில் வஸிக்கும் உத்தமவீரனே, கேளீர். இப்போது நீர் எனக்குச் செய்துதந்ததை, தர்சனம் கொடுத்ததென்று சொன்னாற் போதாது; ஜலம் இல்லாமல் உலர்ந்து செத்துப்போய்க் கொண்டிருந்த ஓர் வருக்ஷத்துக்கு, மேகம் மழையை ஏராளமாய்ப் பொழிந்த தென்றே சொல்ல வேண்டும். தாஹத்தால் வருந்திக் கொண்டிருந்த எனக்கு, அம்ருத ஸமுத்ரமே கிடைத்ததாயிற்று. இதற்கு முன் நான் பிழைப்பேனோ, இல்லையோ, என்று ஓர் ஸந்தேஹம் ஏற்பட்டிருந்ததே, அது இனித் தீர்ந்தது: என்னுடைய ஹ்ருதயம் என்னும் பூமியில், ஸந்தோஷம் என்னும் கொடியை நட்டுவைத்து, எனக்கு மிக்க ஸுகத்தை உண்டாக்கி, பயந்து போய் இருந்த என் மனஸுக்கு ஆறுதல் செய்துவைத்தீர்.

श्रीभगवानुवाच ।

सुदुर्दर्शमिदं रूपं दृष्टवानसि यन्मम ।

देवा अप्यस्य रूपस्य नित्यं दर्शनकाङ्क्षिणः ।।५२।।

ஸ்ரீ பகவானுவாச -

ஸுதுர் தர்ஶமிதம் ரூபம் த்ருஷ்ட வானஸி யன்மம ।

தேவா அப்யஸ்ய ரூபஸ்ய நித்யம் தர்ஶன காங்க்ஷிண: ॥ 51

திரும்பவும் பகவான் விச்வரூபத்தின் பெருமையை வற்புறுத்தல் :

அர்ஜுநனுடைய இவ்வார்த்தைகளைக் கேட்டு, பகவான் பின்வருமாறு சொன்னார். நீ பார்த்ததான விச்வரூபத்தின் மேல் ப்ரேமை பாராட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்று சொன்னேன் அல்லவா? நான்கு புஜத்தோடு கூடிய இந்த அழகிய சிறு மூர்த்தியை, அப்போதைக்கப்போது வெளிப்படையாய்க் கொண்டாடுவதற்கு மாத்ரம், நீ வைத்துக் கொள்ள வேண்டு மென்று நான் உனக்குச் சொல்லித்தந்தேனே? அதை மறந்து விட்டாயா என்ன? அப்பா, ஞான மில்லாத அர்ஜுநா, மேருவே கையிற்

கிடைத்துப்போனால், அது அல்பமாய்த் தோற்றிப் போகும். இப்படி தப்பான அபிப்ராயத்தைப் பாராட்டுவது, மனஸினுடைய ஸ்வபவாம். அப்படி இருந்தாலும், நான் உனக்குக் காட்டிவைத்த, விச்வரூபமானது, எவ்வளவோ தபஸ்ஸு செய்தவனான பரமசிவனுக்குக் கூடப் பார்க்கக் கிடைக்காதது, என்று தெரிந்துகொள்.

அன்றியும் அஷ்டாங்கத்தோடு கூடிய ராஜயோகத்தை ராத்ரிப்பகலாய் அநுஷ்டித்துக் கொண்டு கஷ்டப்படுகிற யோகிகளுக்குக் கூட, அது காணக்கிடைக்காது. அந்த விச்வரூபத்தின் ஓர் மூலையாவது, நமக்கு எப்போதாவது ஒரு காலம் பார்க்கக்கிடைக்குமா என்று ஆசைப்பட்டுக் கொண்டு, தேவர்களுடைய ஆயஸெல்லாம் போய்க்கொண்டிருக்கிறது. ஆசை என்னும் இரண்டு கைகளையும், ஹ்ருதயம் என்னும் நெற்றியின் மேல் வைத்துக்கொண்டு, ஆகாசத்தையே பார்த்துக் கொண்டிருக்கும் சாதக பக்ஷியைப் போல், இந்த விச்வரூபத்தைப் பார்ப்பதற்காக, இந்த்ரன் முதலிய முக்யதேவர்கள் எட்டு ஜாமமும் இடைவிடாமல் ஆசைபாராட்டிக் கொண்டே நிற்கிறார்கள். இப்படி நின்றும், விச்வரூபததைப் போல் ஒன்று, ஸ்வப்நத்திற் கூட அவர்களுக்குப் பார்க்கக்கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட விச்வரூபத்தை, ஓர் கஷ்டமும் படாமல், உன் கண்கொண்டு, நீ பார்த்தாய்.

नाहं वेदैर्न तपसा न दानेन न चेज्यया ।
शक्य एवंविधो द्रष्टुं दृष्टवानसि मां यथा ।।५३।।

நாஹம் வேதைர்ந தபஸா ந தானேன ந சேஜ்யயா ।
ஶக்ய ஏவம் விதோ த்ரஷ்டும் த்ருஷ்டவானஸி மாம் யதா ।। 52

இந்த விச்வரூபத்தின் தர்சனம் பக்தி தவிர மற்றோர் உபாயத்தால் கிடைக்காது. :

உபாயநுஷ்டானம் என்னும் வழி, இந்த ஊருக்குக் கொண்டு போய் விடாது. ஆறு சாஸ்திரங்களைத் துணையாகக் கூட்டிக் கொண்டு, இந்த ரூபத்தைப் பார்க்க வேண்டும் என்று புறப்பட்ட வேதங்கள், இதைக் கிட்டமுடியாமல் திரும்பிவிட்டன. எவ்வளவு தபஸு செய்தும், இந்த விச்வரூபத்தைக் கொண்டு போய் விடும் வழியில் நடப்பதற்கே, யோக்யதை உண்டாவதில்லை. தானங்கள், இந்த விச்வரூபம் எப்படி இருக்கும் என்றறியா, என்னை இந்த ரூபத்தோடு நீ எவ்வளவு த்ருப்தியாக ஸேவித்தாயோ, அப்படி யஜ்ஞங்களால் என்னை ஸேவிக்க முடியாது. பக்தி என்பவள் மனஸுக்கு மாலை யிட்டாளோ ஆனாற்றான், என்னை அவ்விதமாய்ப் பார்க்கக் கிடைக்கும்.

भक्त्या त्वनन्यया शक्य अहमेवंविधोऽर्जुन ।
ज्ञातुं द्रष्टुं च तत्त्वेन प्रवेष्टुं च परन्तप ।।५४।।

பக்த்யா த்வனன்யயா ஶக்ய அஹமேவம் விதோ(அ)ர்ஜுன ।
க்ஞாதும் த்ரஷ்டும் ச தத்த்வேன ப்ரவேஷ்டும் ச பரந்தப ।। 53

பக்தியின் முறை :

ஆனால் இந்த பக்தி, மழை பூமியைத் தவிர வேறுகதி அற்றதாயிருப்பது போல், என்னைத்தவிர வேறுகதி அற்ற தாய் இருக்கவேண்டும். எப்படி கங்கையானது, தன்னிடத்தில் வந்து சேர்ந்த ஜலப்ரவாஹமனைத்தோடும், வேறு கதி அற்றதாய், ஸமுத்ரத்தைத் தேடி வந்து, அதில் விழுந்து கலந்துபோகிறதோ, அப்படியே, பக்தன் ஸர்வமனோபாவ ஸம்பத்துக்களோடும், அடக்கமுடியாத ப்ரேமையுடன், ஒரே வேகமாய் என்னிடத்தில் வந்து கலந்து, நானாகவேப் போன பின்னும், என் ஸ்வரூபத்திற்குள் ஸஞ்சரித்துக் கொண்டிருக்க வேண்டும். அன்றியும் பாற்கடலின் நடுவிலும், ஓரத்திலும், அடியிலும், மேற்பக்கத்திலும், பாலைத்தவிர வேறொன்றுமில்லாதது, போலும், என்னை முதலாகக் கொண்டு எரும்புவரைக்கும் விச்வத்திலுள்ள ஸகல வஸ்துக்களின் விஷயத்திலும், த்வைத பாவம் என்பது முற்றிலும் அற்றுப்போக வேண்டும். அப்படி சித்தவ்ருத்தி ஆய்ப் போய்விட்ட மாத்ரத்தில், என்னை இவ்வுரு வுடையவனாய் அறிந்து, அப்படி அறிவதின் கார்யமாகவே, என்னை இவ்வுருவத்துடன் பார்க்கவும் முடியும்.

பகவத் விச்வரூப தர்சனத்தால் ஏற்படும் நன்மை :

பின்பு விறகு கட்டையால் நெருப்பு வ்ருத்தி அடைந்தபின், அவ்விறகு, கட்டை யென்னும் பெயரை இழந்து, நெருப்பு ஆய்விடுவது போலும், ஸூர்யன் உதயமாகாத வரைக்கும், ஆகாச மனைத்தும் இருட்டாகவே இருந்து, ஸூர்யன் உதயமான உடனே, ஆகாசம் முழுவதும் தேஜோமய மாய்விடுவது போலும், என்னுடைய ஸாக்ஷாத்காரம் ஒருவனுக்கு ஆன உடனே அவனுக்கு அகங்காரத்தின் கூட்டுறவு அற்றுப்போகிறது. அகங்கார நாசத்துடன், த்வைதமும் நசித்துப் போகிறது. பின்பு நானும் அவனும் இந்த ஜகத்தும், அவனுக்கு நானாகவேத் தோன்றிப்போய், அவன் ஸமரஸபாவத்தில் ஒடுங்கிப்போய், என்னையும் இதர பூதங்களைக் காட்டிலும் வேறானவனாய் இருப்பதை இழந்து விடுகிறான்.

मत्कर्मकृन्मत्परमो मद्भक्तः सङ्गवर्जितः ।
निर्वैरः सर्वभूतेषु यः स मामेति पाण्डव ।।५५।।

மத் கர்ம க்ருன் மத்பரமோ மத்பக்த: ஸங்க வர்ஜித: ।
நிர்வைர: ஸர்வபூதேஷு ய: ஸ மாமேதி பாண்டவ ॥ 54

அப்படிப்பட்ட பக்தியின் முறையையும், அதின் பயனையும், மேலும் விளங்கச் சொல்லல் :

எவன் நான் ஸந்தோஷப்படுவதையே உத்தேசத்தில் வைத்து, ஸர்வகர்மங்களையும் நடத்திவந்து, ஜகத்தில் என்னைத்தவிர வேறொன்றையும் ருசிகரமாக நினையாது, இம்மையிலும், மறுமையிலும் அடையவேண்டிய ஸுகம் நானே என்று எண்ணி, தான் ஜீவித்திருப்பதின் பலன் என்னுடைய கார்யங்கள் நிறைவேறுவதே என்று எண்ணி, என்னையே எங்கும் பார்த்து, வேறு வேறாய் ப்ராணிஜாதங்கள் இருக்கின்றன என்னும் நினைப்பற்றவனாய், எதையும் நானாகவே பாவித்து பஜித்துக் கொண்டிருப்பானோ, அவனுடைய, வாதபித்தச்லேஷ்ம மென்ற மூன்று தாதுக்களோ டமைந்த, இந்த தேஹம் அழிந்து போன உடனே, அவன் என்னுடன் ஐக்கியபட்டுப் போகிறான், ஹே பாண்டவா. இப்படி உலகம் அனைத்தும தன்வயிற்றுக்குள் அடக்கிக் கொண்டிருக்கிறவராயும், கருணாரஸம் சொட்டுகிறவராயும், இருக்கும் ஸ்ரீ க்ருஷ்ணன் சொன்னார், என்று ஸஞ்சயன் சொன்னான்.

மேலத்யாயவிஷயத்திற்கு அவதாரிகை :

பின்பு ஆநந்தம் என்னும ஸம்பத்தால் யாவரையும் விஞ்சினவனாயும் ஸ்ரீ க்ருஷ்ணனுடைய பாதபக்தியில் மிக்கச் சிறந்தவனாயுமிருந்த அவ்வர்ஜுநன், பகவத்ரூபங் களிரண்டையும் நன்றாய் மனஸில் ஒப்பிட்டுப் பார்த்துவிட்டு, விச்வரூபத்தைக் காட்டிலும் க்ருஷ்ண ரூபத்திலேயே, மிக்க லாபம் இருப்பதாய் நிச்சயம் செய்து கொண்டான். ஆனால் அவனுடைய அறிவை, ஓர் அறிவாக பகவான் ஒப்புக் கொள்ளவே இல்லை; ஏனென்றால் எங்கும் வ்யாபித்த ஓர் வஸ்துவைக் காட்டிலும், ஓரிடத்தில் மாத்ரம் இருப்பதாகிய ஒன்று, பெரிதாகாதல்லவா? இதையே உறுதிப்படுத்துவதற்காக, பகவான் சில உத்தமமான ந்யாயங்களை எடுத்துச் சொன்னார். அவற்றைக் கேட்டு, அர்ஜுநன் இந்த இரண்டு ரூபங்கள் நடுவில், எது அதிகமாய்க் கார்யோபயோகி என்று தெரிந்துகொள்ள வேண்டும் என்று கருதி, மிக்க ஸாமர்த்யமாக விசாரிக்கப் போகிறான். அது தான், மேல் வரும் கதை, அதை மிக்க ஸுலபமாய் போதமாகும் ஓவிகளாக ஆராய்ந்து அழகாய்ச் சொல்வேன்; நீங்கள் கேட்க வேண்டும். ஸத்பாவம் என்னும இரண்டுகையிலும், ஓவிகள் என்னும் புஷ்பங்களை எடுத்துக்கொண்டு, விச்வரூபத்தின் பாதத்தில் நான் ஸமர்ப்பித்தேன்.

பதினொன்றாம் அத்யாயம் முற்றிற்று.

அத்யாயம் 12

ஸத்குருவின் க்ருபாத்ருஷ்டியைத் துதித்தல் :

சுத்தமானவளாயும், ஔதார்யத்தால் ப்ரஸித்தி பெற்றவளாயும், இடைவிடாது ஆநந்தமழையை வர்ஷிக்கிறவளாயும், இருக்கும் ஸத்குருக்ருபாத்ருஷ்டி என்னும் தாயே, நீ வாழ்க, வாழ்க! விஷம் என்னும் பாம்பு தீண்டினதால் உண்டான மயக்கம் தெளியாதிருக்கும், ஒருவன் மேல், உன்னுடைய க்ருபாத்ருஷ்டி பட்டமாத்ரத்தில், அவனை விட்டு அந்த விஷம் முற்றிலும் விலகிப் போகிறது. ப்ரஸாதரஸம் என்னும் அலைகளுடன், நீ ஓர் ப்ரவாஹமாய்ப் புரண்டு வரும்போது, உன் ஸேவகனாகிய எவன் ஸம்ஸார தாபத்தால் தீந்து போவான்? துக்கம் என்பதால் தஹிக்கப்படுவான்? அவனுக்கு நீ யோக ஸுகத்தைக் கொண்டு விருந்திட்டு, ப்ரஹ்மமும் தானும் ஒன்றே என்னும் அநுபவத்துக்காக, அவன் பாராட்டிநிற்கும் ஆசையைப் பூர்த்தி செய்து கொடுக்கிறாய்? அவனை ஆதாரசக்தி என்னும் உன் மடியில் ஏற்றிவைத்துக் கொண்டு, வேடிக்கைகளைக் காட்டி, அவனை வளர்க்கிறாய்;

பின்பு அவனை ஹ்ருதயாகாசம் என்னும் தொட்டிலில் இட்டு ஆட்டுகிறாய்; அவனுக்கு ப்ரத்யகாத்ம ஜ்யோதியைக் (ஜீவாத்மா என்னும் ஜ்யோதியை) கொண்டு த்ருஷ்டி சுற்றிப்போட்டு, மனஸையும் காற்றையும் விளையாட்டுக் கருவிகளாய் அவனுக்குச் செய்து கொடுத்து, ஆத்மஸுகானுபவம் என்னும் குழந்தை நகைகளைக் கொண்டு, அவனைச் சிங்காரித்து வைக்கிறாய். பின்பு ஹ்ருதயாகாசத்திற்கு மேற்புறம் உள்ள அம்ருதஸரஸ்ஸில் இருக்கும் அம்ருதம் என்னும் உன் முலைப்பாலை, அவனுக்குப் புகட்டி, அநாஹதத்வநியைக் கொண்டு பாட்டுப்பாடி, அவன் அழுகையை மாற்றி, அவனை ஸமாதிஸுகம் என்னும் தூக்கத்தில் தூங்கச் செய்கிறாய், ஆகையால் ஸாதகர் களெல்லாருக்கும். நீ தாயாகிறாய்; உன்னுடைய பாதமூலத்தில் வித்யைகளெல்லாம் பழுத்துக் கிடக்கின்றன; ஆகையால் நான் உன் நிழலை விட்டகலேன். ஹே ஸத்குருக்ருபாத்ருஷ்டியே! உன்னுடைய கருணை எவனைக் காத்து நிற்கிறதோ, அவன் ஸகல வித்யைக ளென்னும் ஸ்ருஷ்டிக்கு, ப்ரஹ்மதேவனாகிறான்.

அந்த க்ருபா த்ருஷ்டியினிடத்திற் செய்யும் ப்ராத்தனை :

ஆகவே மிக்கச்செல்வம் படைத்த என் தாயே! என்னை ஆச்ரயிக்குமவர்களுக்கு கல்பவ்ருக்ஷமாய் விளங்குபவளே! இந்த நூலைச் செய்யும் விஷயத்தில், நீ என்னை ஆஞ்ஞாபித்தல் வேண்டும். தேசிய மஹாராஷ்டிர பாஷை யென்னும் பூமியைத் தோண்டி அதில் உத்தம ஸாஹித்ய லக்ஷணங்கள் என்னும் தங்கத்தை, வேண்டு மளவு கொடுக்கும் கனிகளை ஏற்படுத்தி வைத்து, உத்தம ஞானங்கள் என்னும் பயிரை, எங்கு பார்த்தாலும் அடர்த்தியாய் வளர்ந்திருக்கும்படி, பயிர்செய்து வைக்க வேண்டும். ஸம்வாதத்தின் உத்தம பலங்களாகிய ஞாநங்கள் நிறைந்திருக்கும் நிதிகளையும், தத்வார்த்தங்கள் எங்கும் அடர்த்தியாய் வளர்ந்திருக்கும் தோட்டங்களையும், அதில் ஏற்படுத்தி வைக்க வேண்டுமென்று, நான் வேண்டிக் கொள்கிறேன். பாஷண்டமத வாதிகளுடைய ஸித்தாந்தங்கள் என்னும் குஹைகளை நாசஞ்செய்து, விதண்டாவாதங்கள் என்னும் தப்புவழிகளை அழித்து வைத்து, குதர்க்கங்கள் என்னும் துஷ்ட ம்ருகங்களைக் கொன்றுதர வேண்டும்.

ஸ்ரீகிருஷ்ணனுடைய குணங்களை நான் வர்ணிப்பதை யாவரும் கொண்டாட தத்தக்கதாய்ச் செய்து தருவதுடன், ச்ரோதாக்களை ச்ரவண பக்தியின் அரசாக்ஷியில் வீற்றிருக்கச் செய்து தரவேண்டும். இந்த மஹாராஷ்டிர பாஷையென்னும் நகரமெங்கும், ப்ரஹ்ம வித்யையின் ஸுபிக்ஷம் (பஞ்சமில்லாது விசேஷமாய்த் தான்யங்கள் விளைந்திருக்கும் ஓர் நிலைமை; செழிப்பு) ஏற்பட்டு, அதின் கொடுக்கல் வாங்கல் இந்த ஜகத்தில் ஸுகமாய் நடந்தேறி வரும்படி செய்து தரவேண்டும். தாயே, உன்னுடைய ப்ரேமை என்பதின் தலைப்பு என்மேல் நிழல் கொடுக்கும்படியான ஓர் பாக்யத்தை, படைத்தேனேயானால், இத்தனையையும், நானே ஸாதித்து வைப்பேன். இப்படி விண்ணப்பம் செய்யவே, ஸ்ரீகுருக்ருபாத்ருஷ்டி என்னை நோக்கி, இன்னும் அதிகமாய் வார்த்தை பேசாமல், கீதார்த்தத்தைச் சொல்லத் தொடங் கென்றாள். அதைக்கேட்டு, அந்த ஆஞ்ஞையை மஹாப்ரஸாதமாய்ப் பாவித்து, ஆநந்த மடைந்து, நான் மேல் நடக்க வேண்டிய க்ரந்தத்தைச் சொல்வேன் கேளுங்கள்.

अर्जुन उवाच ।
एवं सततयुक्ता ये भक्तास्त्वां पर्युपासते ।
ये चाप्यक्षरमव्यक्तं तेषां के योगवित्तमाः ।।१।।

அர்ஜுன உவாச -

ஏவம் ஸததயுக்தா யே பக்தாஸ்த்வாம் பர்யுபாஸதே ।
யே சாப்யக்ஷர மவ்யக்தம் தேஷாம் கே யோக வித்தமா: ॥ 1

அர்ஜுனன் ப்ரச்நம் :

ஸகல வீரர்களுக்குள்ளும் அரசனாய், சந்த்ர வம்சத்தின் விஜயத்வஜம் போல் விளங்கும், பாண்டுகுமாரனாகிய அர்ஜுனன் ஸ்ரீ க்ருஷ்ணனைப் பார்த்து, பின்வருமாறு பேசினான். ஐயா, நீர் சொன்னது முழுமையும் கவனித்துக் கேட்டேன். நீர் காட்டின விச்வரூபம் புதுமையா யிருந்ததால், அதைக் கண்டு நான் பயந்து, இந்த க்ருஷ்ணரூபத்தையே பார்க்க, என் மனது ஆசைப்பட, அது தகுதி யன்றென்று, என்னைத் தேவரீர் மறித்தீர். வ்யக்தமான இவ்வுருவமும், அவ்யக்தமான உம்முடைய விச்வரூபமும், ஸந்தேஹமின்றி நீரே. ஆயினும் இந்த வ்யக்த உருவத்தை, பக்தியால் அடைய வேண்டும், அவ்யக்தமான அதை யோகத்தா லடைய வேண்டும். இப்படிப்பட்ட வழிகளிரண்டும், ஹே வைகுண்டா, உம்முடைய ஸ்வரூபத்துக்கே கொண்டுபோய் விடுகின்றன. வ்யக்தாவயக்தரூபங்கள் இரண்டும், உம்முடைய ஸ்வரூபத்தில் ப்ரவேசிப்பதற்கு ஏற்பட்ட இரண்டு வாயிற்படிகளே. நன்றாய்க் கவனிக்க வேண்டும். நூறுபாரம் நிறையுள்ள பெருத்த தங்கக் கட்டிக்கும், ஓர் வராகனிடை தங்கக் கட்டிக்கும், மாற்று ஒன்றே போலும், ஓர் சின்ன இடத்தில் அடங்கியதாகிய க்ருஷ்ண ரூபத்துக்கும், எங்கும் வ்யாபித்திருக்கும் விச்வரூபத்துக்கும், மதிப்பு ஒன்றாகவே இருக்கிறது. அம்ருதக்கடலைக் கொண்டு, எந்த பெருத்த லாபத்தை அடையாலாமோ, அதே உள்ளங்கையில் அடங்கிப்போகும் அக்கடலின் சிறு அலையாற் கிடைத்துப் போகிறது. இவ்வறிவு என் புத்திக்கு ஸந்தேஹமற ஏற்பட்டிருந்தும், ஹே யோகேச்வரா, உம்மிடத்தில் விசாரித்து அறிந்துகொள்ள வேண்டியதாய், இவ்விஷயம் ஒன்றிருக்கிறது.

அது என்னவென்றால், நீர் கொஞ்சம் முன்பு வ்யாபகமான விச்வரூபத்தைக் கொண்டாடினதில், உண்மையே பேசினீரோ, அல்லது என்னைப் பரிக்ஷித்துப் பார்ப்பதற்காக விளையாட்டாகப் பேசினீரோ, என்பதே. இதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.. உம்முடைய ஸந்தோஷத்தை உத்தேசித்தே, தர்மங்களைச் செய்துகொண்டு, உம்மையே உத்தமமான பொருளாய் நினைத்து, தங்கள் மனோவ்ருத்திக

ளனைத்தையும் உம்மிடத்தில் ப்ரேமையால் உமக்கே விற்றுவிட்டு, இப்படி ஸர்வவிதத்தாலும், எந்த பக்தர்கள் உம்மை உயிர் நிலையில் வைத்துக்கொண்டாடுகிறார்களோ, அவர்களும், ப்ரணவத்தைத் தாண்டியதாயும், வைகரீவாக்கால் வ்யவஹரிக்க முடியாததாயும், உவமை அற்றதாயும், நிர்தோஷமாயும், தேசகாலாபரிச்சின்னமாயும், இருக்கும் அக்ஷரபரப்ரஹ்மத்தை, அதுவே தாம் என்னும் பாவத்தோடு எந்த ஞானிகள் உபாஸித்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களும், ஆகிய இவ்விருதிறதாருக்குள் எவர்கள் கைப்பிடித்த யோகமானது உத்தமமானது, என்று எனக்குத் தெரிவிக்க வேண்டும். இப்படி அர்ஜுனன் சொன்னதைக் கேட்டு, ஜகத்பந்துவாகிய அந்த ஸ்ரீ க்ருஷ்ணன் ஸந்தோஷித்து, ஹே அர்ஜுனா, நீ ப்ரச்நங்கள் செய்வதில் ஸாமர்த்யம் படைத்தவன் என்று, அவனைக் கொண்டாடி, பின்வருமாறு சொன்னார்.

श्रीभगवानुवाच ।
मय्यावेश्य मनो ये मां नित्ययुक्ता उपासते ।
श्रद्धया परयोपेताः ते मे युक्ततमा मताः ।।२।।

ஸ்ரீ பகவானுவாச -

மய்யா வேஶ்ய மனோ யே மாம் நித்யயுக்தா உபாஸதே ।
ஶ்ரத்தயா பரயோ பேதாஸ்தே மே யுக்த தமா மதாः ।। 2

ஸ்ரீ க்ருஷ்ணனுடைய உத்தரம் :

அஸ்தகிரியை அணுகி அதில் ப்ரவேசிக்கும் ஸூர்யனுடன் கூடவே; அஸ்தமித்துப் போகும் அவன் கிரணங்கள் போல, என்னை விட்டுப் பிரிந்து நிற்க முடியாதவர்களாய், வர்ஷாகாலத்தின் சேர்க்கையை அடைந்த உடனேயே, பொங்கிவழியும் நதிகள் போல், என் சேர்க்கையை யடைந்தமாத்ரத்தால், ப்ரேமையால் பொங்கி வழிகிறவர்களாய், ஸமுத்ரத்தில் விழுந்து கலந்து போன பின்னும், திரும்பவும் ஜலங்களைக் கொண்டுவந்து அந்த ஸமுத்ரத்திற்கொட்டும் கங்கையைப்போல், என்னை யடைந்த பின்னும், என்னையே மேன்மேலும் அதிகரிக்கும் ப்ரேமையுடன் பஜித்துக் கொண்டாடுகிறவர்களாய், இவ்விதம் தங்களுடைய முழுமனதுடன் இந்த்ரியங்களனைத்தையும், என்னிடத்தில் நிலைபெறச் செய்து, ராத்ரிப் பகல்

அறியாதவர்களாய், என்னையே உபாஸித்துக் கொண்டு, தங்கள் ஆத்மஸ்வரூபத்தையே எனக் கர்ப்பணம் செய்துவிட்டிருக்கும், என் பக்தர்களே உத்தமமான யோகத்தைக் கைப்பற்றி நிற்கிறவர்கள் என்று, என்னுடைய அபிப்ராயம்.

ये त्वक्षरमनिर्देश्यमव्यक्तं पर्युपासते ।
सर्वत्रगमचिन्त्यञ्च कूटस्थमचलन्ध्रुवम् ।।३।।
सन्नियम्येन्द्रियग्रामं सर्वत्र समबुद्धयः ।
ते प्राप्नुवन्ति मामेव सर्वभूतहिते रताः ।।४।।

யே த்வக்ஷர மநிர்தேஶ்ய மவ்யக்தம் பர்யுபாஸதே ।
ஸர்வத்ரக மசிந்த்யம் ச கூடஸ்தமசலம் த்ருவம் ।। 3

ஸம்நியம் யேந்த்ரிய க்ராமம் ஸர்வத்ர ஸம புத்த்யः ।
தே ப்ராப்நுவந்தி மாமேவ ஸர்வபூதஹிதே ரதாः ।। 4

இதுவுமது; அக்ஷரத்தை உபாஸிக்கிறவர்களுக்கு ஏற்படும் ச்ரமம் :

ஹே பாண்டவா, அப்படிச் செய்யாமல், சிலர் (அவ்யக்தத்தை உபாஸிக்கிறவர்கள்) தாங்களே அது (ப்ரப்ரஹ்மம்) வென்று பாவித்து, அவயவங்களில் லாததான அக்ஷரப்பரப்ரஹ்மத்தைக் கட்டிக் கொள்ளப் பார்த்து, உழலுகிறார்கள். மனஸின் நகத்தாற் கூட, அதை பற்ற முடிவதில்லை. புத்தியின் பார்வை அதில்நுழைவதில்லை. புத்தியின் பார்வை அதில் நுழைவதில்லை. இப்படி இருக்க, ஸ்தூலமான இந்த்ரியங்கள், அதைப் பற்றி நிற்க எப்படி முடியும்? அன்றியும் த்யானத்துக்கு எட்டாததாயும், வ்யக்திகளின் நடுவில் எங்கும் காணக் கூடாததாயும், எங்கும் நிறைந்திருப்பதாயும், அனைத்துமாயும், எப்போது முள்ளதாயும், அது இருப்பதால் அதைச் சிந்திக்கத் தலைப்பட்ட மனஸு அதிக ச்ரமப்பட்டுப் போகிறது. அதை இருப்ப தென்றாவது இல்லை யென்றாவது, உண்டாகிறதென்றாவது உண்டாவதில்லை யென்றாவது, சொல்ல முடியவில்லை, என்று சொல்லி, அதை தந்திரமாய்ப் பிடித்துக் கொள்ளப் பார்த்தால், அதற்கும் அது அகப்படுவதில்லை.

அது செல்வது மில்லை, அசைவது மில்லை. அது குறைந்து போவது மில்லை, அழுக்குப்படுவது மில்லை. இப்படிப் பட்ட

இந்த அக்ஷரபரப்பஹ்மத்தை, எப்படியோ தங்கள் ஸாமர்தியத்தைக் கொண்டு, எந்த யோகிகள் உபாஸித்து நிற்பார்களோ, அவர்கள், விஷயங்களின் போகத்தை வைராக்யம் என்னும் தீயாற் சுட்டு, நாசம் செய்து, த்ருப்தி அடைந்த தைர்யத்தால், இந்திரியங்களைத் தங்கள் வசப்படுத்திக்கொண்டு, அவற்றை வெளிநோக்கவிடாமல், அவற்றின் பார்வையை உட்புறம் திருப்பி, அவற்றை ஹ்ருதயகுஹையில் அமைத்து வைக்கிறார்கள். அபானத்வாரத்தை ஆஸநமுத்ரையால் கெட்டியாக அடைத்து, மூலபந்தம் என்னும் கோட்டையை நன்றாய் அரண் செய்து வைக்கிறார்கள்; ஆசையின் கையை வெட்டி, அதைர்யம் என்னும் செங்குத்துப் பாறையை தூரத்தில் பின்தள்ளி, நித்ரை என்னும் இருட்டைத் துரத்தி வைக்கிறார்கள்; மூலபந்தத்தால் ஏற்பட்ட தீயின் ஜ்வாலையினால், ஸப்ததாதுக்களையும் சோஷிக்கச்செய்து, ஷட்சக்ரரூபமான யந்த்ரத்துக்கு வ்யாதியின் தலைகளை பலிகொடுத்து விடுகிறார்கள்;

பின்பு தீப்பற்றியெரியும் திரிபோன்ற குண்டலீநீ சக்தியை, மூலாதாரத்தில் நிமிர்ந்து நிற்கச் செய்து, ஸுஷும்நாநாடி வழியாய் தலைவரைக்கும் ஏறச்செய்கிறார்கள்; நவத்வாரங்களுக்கும் இந்த்ரிய நிக்ரஹம் என்னும் தாளிட்டு, ப்ரஹ்மரந்த்ரம் என்னும் பத்தாவது த்வாரத்தை திறந்து கிடக்கச் செய்கிறார்கள்; ப்ராணசக்தி (குண்டலீநீ யென்னும் பாம்பு ஆக்ஞாசக்ரத்தில் ப்ரவேசித்து கேவலம் ப்ராண சத்தியாய் விடுகிறது) என்னும் சாமுண்டா தேவிக்கு, ஸங்கல்பம் என்னும் ஆட்டையும், மனஸ் என்னும் எருமைக்கடாவையும் பலியாகக்கொடுத்து, விடுகிறார்கள்; இடை பிங்களை என்னும் நாடிகளை ஒன்றுபடுத்தி, அநாஹாதத்வனியை எழச்செய்து, அம்ருதஸரஸ்ஸில் உள்ள அம்ருதத்தை விரைந்து புசிக்கிறார்கள்; பின்பு ஸுஷும்னை என்னும் நாடியின் நடுவில், செதுக்கிவைக்கப்பட்டிருக்கும் படிக்கட்டுவழியாய் ஏறி, ப்ரஹ்மரந்த்ரத்தின் உச்சி போய்ச் சேர்கிறார்கள்; பின்பு ஏறுவதற்கு மிக்க கடினமான மகாரத்தின் படி வழியாய் ஏறி, ஆகாசத்தைக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டு, ப்ரஹ்மஸ்வரூபத்தில் ஒன்றுபட்டுப் போகிறார்கள்.

எல்லாம் ப்ரஹ்ம மென்று பாவித்து ப்ரஹ்மத்தோடு ஐக்யமாய்ப் போவதற்காக, இவ்வாறு இவ்வளவு கடினமாய் இருக்கப்பட்ட யோகாப்யாஸங்களை அவர்கள் ஸாதிக்கிறார்கள். பக்தர்களுக்கு வ்யக்தங்களாய் அதியோக்ய மாயிருக்கும் பகவதவதார மூர்த்திகளைக் கொடுத்து விட்டு,

யோக மார்க்கத்தை அவலம்பித்தவர்களாய், தங்களுடைய பங்குக் கென்று சூன்யத்தை விரைந்து கைப்பற்றிக் கொள்கிறார்களே, அவர்களும் என்னையே அடைகிறார்கள். இந்தப் பலனைத் தவிர, அவர்கள் ஏதேனும் அதிகமான பலனை அடைகிறார்களோ, என்றால், அது முற்றிலும் இல்லை. ஆனால் பலப்ராப்திக்கு பூர்வம், அவர்கள் படும் கஷ்டம் மாத்ரம் மிக்கப் பெரிது.

क्लेशोऽधिकतरस्तेषामव्यक्तासक्तचेतसाम् ।।
अव्यक्ता हि गतिर्दुःखं देहवद्भिरवाप्यते ।।५।।

க்லேஶோऽதி கதரஸ் தேஷா மவ்யக்தா ஸக்த சேதஸாம் ।
அவ்யக்தா ஹி கதிர் துக்கம் தேஹ வத்பிர்வாப்யதே ।। 5

இதுவுமது :

எவர்கள் பக்தியைக் கைவிட்டு, ஸகல ஜீவராசிகளுக்கும் ஹிதம் பாராட்டியதாயும், பிடிப்பதற்றதாயும், அவ்யக்தமாயும் இருக்கும் நிர்குண ப்ரஹ்மத்தை உபாஸிப்பார்களோ, அவர்களுக்கு மாஹேந்த்ராதி பதவிகள் வழியில் குறுக்கிட்டு, அவர்களுக்கு மிக்க ஆபத்தைச் செய்து வைக்கும் ருத்திஸித்திகள் அவர்களை வழிமறித்துக் கொண்டு அப்புறம் செல்லாதபடி தடுக்கும். காமக்ரோதங்களினின்று கணக்கற்ற வையாய் உபத்ரவங்கள் ஏற்படும். இவை அனைத்தையும ஒழித்துக்கொண்ட போதிலும், சூன்யத்தோடு கட்டிப் புரள வேண்டியதாய் ஏற்படும். தாஹத்தை தாஹத்தைக் கொண்டேயும், பசியைப் பசியைக்கொண்டேயும், அவர்கள் தீர்த்துக் கொள்ள வேண்டும். ராத்ரிப் பகலாய் கைகளைக்கொண்டு காற்றை அளந்து கொண்டிருக்க வேண்டும். தூக்கமற்றிருப்பதே படுக்கையாகவும், இந்த்ரிய நிக்ரஹமே ஸ்த்ரீபோகமாகவும், செடிகளே ஸ்நேஹிதர்களாகவும், அவர்களுக்கு கேற்படும். குளிரை உடுத்திகொண்டு, வெப்பதைப் போர்த்துக்கொண்டு, அவர்கள் மழையையே வீடாகக் கொண்டு, அதின் நடுவில் வஸிக்க வேண்டும். மிக்க வளர்த்துவ தென்?

புருஷனை இழந்த ஸதியானவள், பரலோகம் சென்ற புருஷனை அடைந்து, ஸுகம் பெறலாம், என்று நினைத்து, நெருப்பில் விழுகிறாள். இந்த யோகாப்யாஸம், இப்படி ஓர் உத்தேசமும் இன்றியே, தினம் தினம் நெருப்பில் விழுவதே ஆகும். அன்னம் கொடுத்துக் காப்பாற்றுகிறவனுடைய

கார்யத்திற்காகவோ, குலத்தின் பெரியவர்களுடைய கார்யத்திற்காகவோ, உயிரைக் கொடுத்துவிடத் துணிவதுண்டு. இந்த யோகாப்யாஸம், இப்படி ஓர் உத்தேசமும் இன்றி, தினம் தினம் யமனோடு போர் செய்தலே ஆகும். இப்படி இந்த யோகாப்யாஸம் ம்ருத்யுவைக் காட்டிலும் அதிக கொடுமை யுள்ளதாயும், கொதித்துக் கொண்டிருக்கும் விஷத்தைக் குதப்பி விழுங்குவதாயும், மலையை விழுங்கி வாயைக் கிழித்துக் கொள்வதாயும். இருக்கும், ஆகையால் யோகமார்க்கத்தில் இறங்குகிறவர்களுக்கு, மிக்க துக்கம் அநுபவிக்கும் படியாய் நேரிடுகிறது, நன்றாய்ப் பார், பற்களனைத்தும் உதிர்ந்து போனவனுக்கு இரும்புக் கடலையைத் தின்ன ஏற்பட்டால், அவன் அதைத் தின்று வயிற்றை நிரப்பிக் கொள்கிறதா? அல்லது ப்ராணனை இழக்கிறதா?

ஆகையால் இந்த யோகாப்யாஸம் என்பது பெருத்த ஸமுத்ரத்தை கையினால் நீந்தித் தாண்டிப்போதல் போலும், ஆகாசத்தில் அடிவைத்து நடத்தல் போலும், மிக்கக் கொடுமையாய் யுத்தம் நடக்கும் யுத்தக்களத்தின் நடுவிற் புகுந்து, தேஹத்தின் மேல் ஓர் காயமும் படாமல் வெளிப்படுவது போலும், ஸூர்யமண்டலத்துக்கு காலால் நடந்து போவது போலும் இருக்கிறது. கால் இல்லாதவன் எப்படி வாயுவோடு பந்தயம் போட்டுக் கொண்டு ஓடமுடியாதோ, அப்படியே தேஹந் தரித்தவர்களுக்கு அவ்யக்தத்தை உபாஸித்தல் அஸாத்யமாகிறது. இப்படி அஸாத்யமான விஷயத்தில் துணிவு கொண்டு, ஒருவன் இறங்கி, காற்றோடு கட்டிப்புரள யத்தனித்தால் அவன் துக்கத்தைத் தான் அநுபவிக்க வேண்டும்.

ये तु सर्वाणि कर्माणि मयि संन्यस्य मत्परः ।
अनन्येनैव योगेन मां ध्यायन्त उपासते ।।६।।

யே து ஸர்வாணி கர்மாணி மயி ஸம் ந்யஸ்ய மத்பராः ।
அனன்யேநைவ யோகேன மாம் த்யாயந்த உபாஸதே ॥ 6

பக்திமார்க்கத்தின் ஸௌலப்யமும் பெருமையும் :

இவ்வழியில் இறங்காமல், எவர்கள் பக்திமார்க்கத்தைப் பிடித்துக்கொள்வார்களோ, அவர்கள் துக்கம் இன்னதென்றே அறியார்கள். பக்தி மார்க்கத்தில் இறங்கியவர்கள், தங்கள் வர்ணாச்ரமங்களுக்குக் குரித்தானவையாய் எந்தெந்த கர்மங்களைச் செய்யும் படியாய் நேருமோ, அவைகளை

அவர்கள் தங்களிந்த்திரியங்களைக் கொண்டு, ஸுகமாய்ச் செய்கிறார்கள்; விதிக்கப்பட்ட வற்றை நடத்திக்கொண்டு, நிஷேதிக்கப்பட்டவற்றை ஒழித்துக் கொண்டு, வருவதால் ஏற்படும் மற்றகர்மங்களையும், எனக்கு அர்ப்பணம் செய்து, கர்மபலத்தைத் தங்களிடம் ஒட்டாமற் செய்து கொள்கிறார்கள்.

இவ்விதமாய்க் கர்மங்களைச் செய்து எனக்கு அற்பித்து விடுவதால், அவர்கள் கர்மம் செய்த தாகிற தில்லை. அன்றியும், அவர்கள் மனோவாக்காயங்களால் செய்யும் வ்யாபாரங்களனைத்தும், என்னைத்தவிர வேறொன்றையும் உத்தேசியா தவையாய் இருக்கும். இவ்வாறு என்னையே நோக்கினவர்களாய், என்னையே உபாஸித்துக் கொண்டிருக்கும் என் பக்தர்கள் என்னை ஸதா த்யானித்துக் கொண்டிருக்கிறார்கள், என்னும் ஓர் காரணத்தைக் கொண்டு, எனக்கு வீடே ஆய்ப்போகிறார்கள். அவர்கள் என்னையே தங்கள் வ்யவஸாய விஷயமாய்ச் செய்துகொண்டு, போகம் மோக்ஷம் இரண்டையும் அல்பமாய் மதித்து, அவற்றை ஸபரிவாரமாய் ஒழித்து விடுகிறார்கள். இவ்வாறு எவர்களுடைய மனஸும் தேஹமும் எனக்கே விற்கப்பட்டுப் போய் விட்டதோ, அவர்களுக் காகவேண்டிய எந்தக் காரியத்தை நான் செய்யாது விடுவேன்?

तेषामहं समुद्धर्ता मृत्युसंसारसागरात् ।
भवामि नचिरात्पार्थ मय्यावेशितचेतसाम् ।।७।।

தேஷாமஹம் ஸமுத்தர்தா ம்ருத்யு ஸம்ஸாரஸாகராத் ।
பவாமி நசிராத் பார்த மய்யாவேஶித சேதஸாம் ॥ 7

பக்தர்களைக் காப்பாற்றுவதின் பாரம் பகவானுக்கு ஏற்படுகிறது :

தாயின் கர்ப்பதிண்டாயிருக்கும் குழந்தை, தாய்க்கு மிகவும் ப்ரியத்துக்கு பாத்ரமானதல்லவா? அப்படியே என்னுடைய பக்தர்கள் ஸமீபம் வந்த கலிபுருனை தூரத்துரத்தி அடித்து, அவர்களைக் காப்பாறு கிறவனாய் ஏற்படுகிறேன். இயற்கையாகவே என்னுடைய பக்தர்களுக்கு ஸம்ஸார விஷயமான சிந்தை என்பது இல்லை. அரசனுடைய மனைவி பிச்சை யெடுப்பது எங்கேயாவது நேரிடுமா? என்னுடைய பக்தர்கள் என்னுடைய மனைவிகளே ஆவார்கள். அவர்களிடத்தில் எவ்விதமான குறைவு இருந்தபோதிலும், அவர்களை என் மனவிகள் என்று சொல்லிக்கொள்வதற்கு

நான் வெட்கப்பட மாட்டேன். ஜந்மம்ருத்யுரூபமான இந்த ஸம்ஸாரத்தின் அலைகளால் மோதப்பட்டு, முழுகிக்கொகொண்டிருக்கும் இவ்வுலகத்தாரைப் பார்த்தால் என் பக்தர்கள் விஷயத்தில் எனக்கு பயம் தோன்றுகிறது இந்த ஸம்ஹர ஸமுத்ரத்தின் ஆரவாரத்தைப் பார்த்தால், எவனுக்குத்தான் பயம் தோன்றாது? ஆகையால் இதைக் கண்டு என் பக்தர்கள் பயந்து போவார்களே, என்று நான் பயந்து போகிறேன்; ஆகையால் அவர்களுக்கு தைர்யம் உண்டாக்கி வைப்பதற்காக, ஓர் உருவை எடுத்துக்கொண்டு, அவர்கள் இருக்கும் மர்த்யலோகத்துக்கு மிக்க வேகமாய் ஓடிவருகிறேன். நாமம் என்னும் படகுகளை ஆயிரக்கணக்காய் ஸித்தம் செய்து வைத்து, அவற்றினுதவியைக் கொண்டு அவர்கள் இந்த ஸம்ஸார ஸமுத்ரத்தைத் தாண்டி, அக்கரை போய்ச் சேரும்படி, செய்து வைக்கிறேன்.

ஒண்டியாய்ப் பிக்கற்று இருக்கும் பக்தர்களின் இடுப்பில், என் த்யானம் என்னும் சுரைக்குடுக்கையைக் கட்டி வைத்து, உறமுறையாரோடு கூடினவர்களை அப்படகுகளில் ஏற்றி வைக்கிறேன். ப்ரேமை என்னும் தெப்பக்கட்டைகளை, சிலர் வயிற்றிற் கட்டிவிடுகிறேன். இப்படி யெல்லாம் செய்து, பக்தர்கள் அனைவரையும், என்னோடு ஒன்றுப்பட்டுப்போதல், என்னும் அக்கரைக்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவைக்கிறேன். என்னுடைய பக்தர்களானாற் போதும், அவர்கள் ம்ருகங்களாய்ப் பிறந்திருந்த போதிலும், அவர்களை வைகுண்டத்தில் ராஜ்யாதிகாரம் பெற்று விளங்கச் செய்கிறேன். ஆகையால் என் பக்தர்களுக்கு, ஒரு விதமான சிந்தையும் ஏற்படுவதில்லை, அவர்களைக் கரையேற்றிவிடுகிறவனாய் நான் ஏற்பட்டு விடுகிறேன். எப்போது அவர்கள் தங்கள் மனோவ்ருத்திகளை யெல்லாம், பக்திக்குக் கொடுத்துவிட்டார்களோ, அப்போதே அவர்கள் யோகக்ஷேமத்தை ஸரிவரப் பார்த்துக் கொண்டு வருவது, எனக்கு ஏற்பட்டு விடுகிறது. ஆகையால் என்னை இப்படி பஜிக்க வேண்டும், என்னும் மந்த்ரத்தை நீயும் கற்றுக்கொள்ள வேண்டும்.

मय्येव मन आधत्स्व मयि बुद्धिं निवेशय ।
निवसिष्यसि मय्येव अत ऊर्ध्वं न संशयः ।।८।।

மய்யேவ மன ஆதத்ஸ்வ மயி புத்திம் நிவேஶய ।
நிவஸிஷ்யஸி மய்யேவ அத ஊர்த்வம் ந ஸம்ஶய: ॥ 8

பக்தியில் மனோபுத்த்யஹங்காரர்கள் பகவத் ஸ்வரூபத்தில் லயித்துப்போக வேண்டும் :

அப்பா அர்ஜுனா வ்ருத்திகளோடுகூட, மநஸ்ஸென்ற இந்த ஒன்றையும், நிச்சிதமான புத்தியையும் சேர்த்து, ஒருக்காலும் மாறாதபடி, என்னுடைய ஸ்வரூபத்தில் நிலைபெறச் செய். இவை இரண்டும் ப்ரேமையுடன் என் ஸ்வரூபத்தில் ப்ரவேசித்து விட்டால், என்னையே நீ அடைந்து விடுகிறாய். இப்படி மனஸும் புத்தியும் என்னிடத்தில் குடிகொண்டால், பின்பு நான் நீ என்னும் வித்யாஸம், எவ்விதம் மிகுந்து நிற்கும். தீபமணைந்து போனதும், அதின் வெளிச்சம் இல்லாமற் போவது போலும், ஸூர்ய னஸ்தமித்ததும், அவன் ப்ரகாசம் மறைந்து போவதுபோலும், உயிர் தேஹத்தை விட்டுப் புறப்பட்டதும், இந்த்ரியங்கள் கூடப்போய் விடுவதுபோலும், மனதும் புத்தியும் எந்த இடம் போய்ச் சேர்கின்றனவோ, அஹங்காரமும் அங்கேயே போய்ச்சேர்கின்றது, ஆகையால் என்னிடத்தில் மனதையும் புத்தியையும் வைத்த உடனேயே, நீ ஸர்வவ்யாபியாகிய நானாகவே ஆய்விடுகிறாய். இதில் ஓர் ஸந்தேஹமு மில்லை என்று, என் மேல் ஆணையிட்டுச் சோல்கிறேன்.

अथ चित्तं समाधातुं न शक्नोषि मयि स्थिरम् ।
अभ्यासयोगेन ततो मामिच्छाप्तुं धनञ्जय ।।९।।

அத சித்தம் ஸமாதாதும் ந ஶக்னோஷி மயி ஸ்திரம் ।
அப்யாஸ யோகேன ததோ மாமிச்சாப்தும் தனஞ்ஜய ।। 9

அப்படி சித்தத்தை லயிக்கச் செய்வதற்கு அப்யாஸ மென்பது உபாயம் :

அப்படி மனஸோடும் புத்தியோடும் கூடிய உனது சித்தத்தை, வேறு விஷயங்களிற் செல்லாமல், எனக்கே அர்ப்பணம் செய்துவிட, சக்தி அற்றவனாய் நீ இருந்தால் பின் சொல்கிறபடியாவது செய். ஒரு தினத்தில் உள்ள எட்டு சாமத்துக்குள், சில நிமிஷங்களாவது, அந்த சித்தத்தை என் ஸ்வரூபத்தில் நிலைபெறச் செய்து கொண்டுவா. பின்பு எவ்வளவு நிமிஷங்கள், என்னுடன் சேர்ந்திருக்கும் ஸுகத்தை, உனது மனஸு அநுபவிக்குமோ, அவ்வளவு நிமிஷங்கள் வரைக்கும், விஷயங்களில் உன் மனஸுக்கு வெறுப்புத் தோற்றிப் போகும். சரத்காலம் தொடக்க மான உடனே, நதிகளில் ப்ரவாஹம் ஒவ்வொரு நாளும் குறைந்து போவது,

போலும் சித்தமானது விஷயங்களினின்று பொதுவாகப் பின் வாங்கத் தலைப்படும். பின்பு பௌர்ணமி தொடங்கி சந்திரபிம்பமானது, ஒவ்வொரு நாளாய் குறைந்து கொண்டுவந்து, அமாவாஸ்யையில் முற்றிலும் மறைந்து போவது போலும், சித்தம் விஷய போகத்தினின்று வெளிப்பட்டதாய், என் ஸ்வரூபத்திலேயே ப்ரவேசித்து, அதில் நிலைபெற, கொஞ்சம் கொஞ்சமாய்த் தொடங்கின பின், நீ நானாகவே ஆய்விடுவாய். அப்பா அப்யாஸ யோகத்தினால், ஸாதிக்க முடியாத தொன்று மில்லை, என்று நீ அறி. நன்றாய்ப் பார், அப்யாஸ பலத்தால் ஒருவன் அந்தரிக்ஷத்தில் நடக்கிறான்; ஒருவன் புலிகளோடும் பாம்புகளோடும் பழகுகிறான், ஒருவன் விஷத்தையே ஆஹாரமாய்ப் புசிக்கிறான், ஒருவன் ஸமுத்ரத்தின் மேல் நடந்து செல்கிறான்; ஒருவன் முடிவு காணமுடியாத வேதங்களை முகஸ்த மாக்கி, அல்பமாய்ச் செய்து விடுகிறான். இப்படியே அப்யாஸத்துக்கு அஸாத்யமான தொன்று மில்லையாகையால், நீ அப்யாஸ யோகத்தால், என்னிடம் வந்து சேர்ந்து விடலாம்.

अभ्यासेऽप्यसमर्थोऽसि मत्कर्मपरमो भव ।
मदर्थमपि कर्माणि कुर्वन्सिद्धिमवाप्स्यसि ।।१०।।

அப்யாஸேஅப்ய ஸமர்தோஸி மத்கர்மபரமோ பவ।
மதர்தமபி கர்மாணி குர்வந் ஸித்திமவாப்ஸ்யஸி ॥ 10

மேற் சொல்லிய அப்யாஸம் செய்ய முடியாமற் போனால், கர்மங்களின் கர்த்ருத்வபோக்த்ருத்வங்களை, பகவதர்ப்பணம் செய்ய வேண்டும் :

அப்படி அப்யாஸம் செய்வதற்குக் கூட உன்னிடத்தில் யோக்யதை இல்லாமற்போகுமேயானால், நீ எப்படி நடந்துகொண்டு வருகிறாயோ, அப்படியே நடந்துகொண்டுவா. இந்திரியங்களைக் கட்டுப்படுத்த வேண்டாம். விஷயபோகங்களை நீ யொழிக்க வேண்டாம். நீ பிறந்த ஜாதி விஷயத்தில், உனக்கு இருக்கும் அபிமானத்தைத் தொலைத்துக்கொள்ள வேண்டாம். உன்னுடைய குல தர்மத்தை நடத்திக்கொண்டு, விதிநிஷேதங்களுக்குக் கட்டுப்பட்டவனாய், உன்னிஷ்டப்ரகாரம் நடந்துகொள். ஆனால் மனோவாக்காயங்களாகிய உன்னுடைய த்ரிகரணங்களைக் கொண்டும் செய்யப்படும்

கர்மங்களனைத்தையும், நீ செய்ததாக பாவிக்காமல் இரு. செய்ததோ செய்யாததோ எல்லாம், விச்வமனைத்தும் எந்த பரமாத்மாவின் ஸங்கல்பத்தால் நடந்தேறிவருகிறதோ, அவனுக்கே தெரியும் என்றிரு.

அப்படி ஏற்பட்ட கர்மத்திலுள்ள குறை வல்லது நிறைவு உன்னைச் சேர்ந்ததாகப் பாராட்டாதே. உன்னுடைய ஜீவாத்ம ஸ்வரூபத்தை, அவனுடைய அம்சமாக பாவித்திரு. தோட்டக்காரன் திறந்துவிடும் பாத்திக்குள், நீரானது ஓர் யோசனையும் செய்யாமல் பாய்வதுபோலும், பரமாத்மாவால் ஏவப்பட்ட படி நடக்கிறவனாக உன்னை நீ பாவித்திருக்க வேண்டும். இப்படிச் செய்துவந்தால் சித்தத்தின் வ்ருத்தி முழுவதும், என்னிடத்தில் இடைவிடாது நின்றுபோய். உன்னுடைய புத்தியானது, நீ செய்ததாயாவது செய்யததாயாவது எண்ணாமல் ஒழியும். போகும் வழி நேர் வழியா, அல்லது தப்பு வழியா, என்று ரதம் ஏதாவது யோசனை செய்கிறதா, பார். அன்றியும் எந்தெந்த கர்மங்கள், உன் த்ரிகரணங்களினின்றும் வெளிப்படுமோ, அவை அனைத்தையும், ஓர் யோசனையுமின்றி எனக்கு அர்ப்பணம் செய்துவிடு. இப்படிப்பட்ட புத்தி நிலை உனக் கேற்பட்டுவிட்டால், நீ உன் தேஹத்தை விட்டபின், என்னுடைய ஸாயுஜ்யம் என்னும் பதவியை அடைவாய்.

अथैतदप्यशक्तोऽसि कर्तुं मद्योगमाश्रितः ।
सर्वकर्मफलत्यागं ततः कुरु यतात्मवान् ।।११।।

அதை தத ப்யஶக்தோஸி கர்தும் மத்யோக மாஶ்ரிதः ।
ஸர்வகர்ம பலத்யாகம் ததः குரு யதாத்மவான் ॥ 11

இதுவும் முடியாது போனால், பலத்யாகம் செய்ய வேண்டும் :

இப்படி கர்மத்தின் கர்த்ருத்வபோக் த்ருத்வங்களை எனக்கு அர்ப்பணம் செய்துவிட, உன்னால் முடியாது போனால், கர்மத்தைச் செய்து கொண்டே வா, ஹே அர்ஜுநா புத்தியின் முன் புறத்திலாவது, பின் புறத்திலாவது, அதாவது கர்மத்தைச் செய்யும் முன்பாவது, செய்த பின்பாவது, நானே என் ப்ரயோஜநத்துக்காக அதைச் செய்து கொள்வதாயாவது, செய்து கொண்ட தாயாவது பாவித்து, எனக் கக்கர்மத்தை ஸமர்ப்பிக்க உனக்கு முடியாது போனால், போகட்டும். கர்த்ருத்வ போக்த்ருவத்வங்கள், என்னைச் சேர்ந்தவை யென்று பாவித்து,

எனக்கோர் பெருமை கொடுக்காமற் போனாலும், உன்னுடைய புத்தியைமாத்ரம நான் சொல்லும் விதமாய் நியமித்து வைத்தாற் போதும். எந்தெந்த ஸமயத்தில், எந்தெந்த கர்மங்கள் உன்னிடத்தில் ஏற்படுமோ, அவற்றின் பலனை, உன்னிடத்தில் ஸம்பந்தியாதபடி, நீ ஒழித்துக் கொண்டுவா, ஓர் மரம், அல்லது ஓர் கொடி, தன்னிடத்தினின்று உண்டாகும் பழங்களைத் தான் பற்றிக் கொள்ளாமல், பிறர் எடுத்துக் கொண்டு போகும்படி உதிர்த்து விடுதல் போலும், உன்னிடத்தினின்று ஏற்பட்ட கர்மங்களின் பலத்தின் மேல் ஆசையை ஒழித்து விடு. என்னை மனஸில் நினைப்பதும், என்னுடைய ப்ரயோஜநத்தை உத்தேசித்தே கர்மங்களைச் செய்வதும், வேண்டாம். அக்கர்மங்களின் பலன்களனைத்தும் பாழாகப் போகட்டும். உறுதியாய் இருக்கும் பாறையின் மேற் பெய்த மழையாகவும், நெருப்பில் விதைத்த விதைகளாவும், ஸ்வப்நத்திற் கண்ட கனவாகவும், கர்மங்களை பாவித்தாற் போதும்.

ஒருவன் தன்னுடைய பெண் விஷயத்தில் நிஷ்காமுகனாய் இருப்பது போலும், உன்னிடத்தினின்று வெளிப்படும் கர்மங்கள் அனைத்தின் பலத்திலும், ஆசை வையாதொழி, நெருப்பின் ஜ்வாலைகள் ஆகாசத்தில் வீணாய்ப் போவது போலும், கர்மங்கள் சூந்யத்தில் ஜரித்துப் போகட்டும், அப்பா அர்ஜுநா. இப்படி பலத்திற் பற்றொழித்துக்கொள்ளுதல், மிக்க அல்பமாகத் தோற்றுமே யானாலும், யோகங்களுக்குள் சிறந்த யோகம், இதுவே ஆகும். இப்படி பலத்யாகம் செய்து, எந்தெந்த கார்மங்கள் ஒழிக்கப்பட்டனவோ, அவை அனைத்தும், ஒருதரம் பூத்துப் பலித்த பின் மறுபடியும் பூக்கா தொழியும் மூங்கிலைப் போல், மறுபடியும் முளைத்துப் பலன் கொடுக்கா தொழியும். இவ்விதம் இந்த சரீமே கடைசியான சரீரமாய், மறுபடியும் சரீரம் எடுப்ப தொழிந்து போகும்.

இவ்வகைப்பட்ட அப்யாஸத்தின் பலன் :

இப்படிப்பட்ட அப்யாஸத்தால், தத்வஞானம் உண்டாய், த்யானம் கைகூடும். பின்பு மனோவ்ருத்திகள் அனைத்தும் த்யானத்தில் லயமடையவே, கர்மஜாதங்கள், தூரத்தில் நின்று போய் விடும். கர்மங்கள் விலகிப் போகவே, பலத்தின் ஸம்பந்தம் தானாகவே அற்றுப்போகும். அப்படிப் பலத்தின் ஸம்பந்தம் அற்றுப்போகவே, பூர்ணமான சாந்தி நிலை பெறும். ஆகையால் சாந்தி அடைவதற்கு இதே வழியான தால், தத்காலத்தில் நீ அப்யாஸம் செய்யத் தொடங்க வேண்டும், ஹே அர்ஜுநா.

श्रेयो हि ज्ञानमभ्यासाज्ज्ञानाद्ध्यानं विशिष्यते ।
ध्यानात्कर्मफलत्यागस्त्यागाच्छान्तिरनन्तरम् ।।१२।।

ஸ்ரேயோ ஹிக்ஞானமப்யாஸாஜ்க்ஞாநாத்க்ஞானம் விஸிஷ்யதே।
த்யாநாத் கர்மபலத் யாகஸ் த்யாகாச் சாந்திர நந்தரம் ॥ 12

இதுவுமது :

அப்யாஸத்தைக் காட்டிலும் ஞானமும், ஞானத்தைக் காட்டிலும் த்யாகமும் சிறந்தவை. த்யாநத்தினின்று கர்மபலத்யாகம் ஏற்படும், அதினின்று சாந்தி ஸுகத்தின் அநுபவம் உண்டாகும்.

अद्वेष्टा सर्वभूतानां मैत्रः करुण एव च ।
निर्ममो निरहङ्कारः समदुःखसुखः क्षमी ।।१३।।

அத்வேஷ்டா ஸர்வபூதானாம் மைத்ர: கருண ஏவ ச।
நிர்மமோ நிரஹங்கார: ஸமதுக்கஸுக: க்ஷமீ ॥ 13

சாந்திபெற்றவன் லக்ஷணங்கள், அவற்றில் பகையின்மை :

இவ்விதம் சாந்தி அடைந்த ஒருவன் ஸர்வபூதங்கள் விஷயத்திலும், தன்னை அவற்றின் ஆத்மாவாய்ப் பாவித்து, ஒன்றின் மேலும் த்வேஷம் பாராட்ட அறியான்.

அவற்றில், மித்ரபாவமும், கருணையும், அவன் பூமிபோன்றவனாய், ஒன்றை உத்தம மென்று அங்கீகரித்துக் கொள்ளவும், மற்றொன்றைக் கெட்டதென்று தடுத்துவைக்கவும், அறியான். ராஜாவின் சரீரத்தைச் சேஷ்டித்துவைக்க வேண்டு மென்றும், பிச்சைக்காரன் சரீரத்தை உபேக்ஷித்து விலகிப் போகவேண்டுமென்றும், எப்படி ப்ராணவாயு எண்ணுவதில்லையோ, அப்படியே பெரியவர்கள் சின்னவர்கள் என்று பாராமல், அனைவர்கள் விஷயத்திலும் அவன் க்ருபை கூர்ந்தவனா யுதவுவான். பசுவிற்கு மாத்ரம் தாஹத்தைத் தீர்க்கவேண்டும், புலி விஷயத்தில் விஷமாய் நின்று கொல்ல வேண்டும், என்று ஜலத்திற்குத் தெரியாதது போலும், அவன் நல்லவர்கள் கெட்டவர்கள் என்று வித்யாஸம் பாராட்டாமல், எல்லா பூதங்கள் விஷயத்திலும் க்ருபை பாராட்டி, அவர்களுக்குத் தன்னை அழித்துக்கொண்டு கூட, உபகாரம் செய்வான்.

அவற்றில் நிர்மமத்வம், அஹம்கார மின்மை, ஸுகதுக்க ஸமத்வம், க்ஷமை :

இத்தனையோடும் நான் என்றும், என்னது என்றும், ஒருக்காலும் பேசாதவனாய், இது ஸுகம், இது துக்கம், என்று அறியாதவனாயவனிருப்பான். அவ்விதமாகவே பொறுமை விஷயத்தில் பூமிக்கு ஸமானமான யோக்யதை உள்ளவனாயும், ஸந்தோஷம் சித்தத்தில் ஸதா குடிகொண்டிருக்கப் பெற்றவனாயும், அவன் இருப்பான்.

सन्तुष्टः सततं योगी यतात्मा दृढनिश्चयः ।
मय्यर्पितमनोबुद्धिर्यो मद्भक्तः स मे प्रियः ।।१४ ।।

ஸந்துஷ்டः ஸததம் யோகீ யதாத்மா த்ருட நிஶ்சய : ।
மய்யார்பித மனோ புத்திர் யோ மத் பக்த: ஸ மே ப்ரிய: ॥ 14

அவற்றில் ஸந்துஷ்டி, சித்தம் ஸ்வவசப் பட்டிருக்கை, பகவானிடத்தில் இடைவிடாது லயித்துக் கிடக்கும் தன்மை, திடமான நிச்சயம், அத்துடன் ஈச்வரபக்தியால் ஈச்வரனுக்கு ப்ரியனாயிருக்கை :

மழை பெய்யாத போதும் ஜலத்தால் நிறைந்திருக்கும் ஸமுத்ரத்தைப் போல், ஒருவரும் உபசரிக்காத போதும் ஸந்தோஷத்தால் நிறைந்தவனாயும் - தன்னுடைய சித்தத்துக்குத் தன் ஆணையை யிட்டு, அதைத் தன் வசம் நிறுத்திவைத்திருப்பதின் உறுதியால், உலகில் மனோநிச்சயம் என்பது உண்மையாக உண்டென்று காண்பித்துக் கொடுக்கிறவனாயும், தன்னுடைய ஹ்ருதயத்தில் ஜீவாத்மாவையும் பரமாத்மாவையும், ஸதா பரஸ்பரப்ரேமையுடன் சேர்ந்து வாழச்செய்து கொண்டு, தன்னுடைய மனஸையும் புத்தியையும் எனக்கே அர்ப்பணம் செய்து விட்டிருக்கிறவனாயும், இப்படி உள்ளும் புறமும் எல்லையீற்றபடி என்னுடன் ஒட்டிப்போனவனாய் இருக்கும் போதே, என்னிடத்தில் மேன் மேலும் அதிகரித்துக் கொண்டே இருக்கும் ப்ரேமை பாராட்டினவனாயும், எவன் இருப்பானே, அவனே பக்தன், அவனே யோகி, அவனே முக்தன்; அவன் ப்ரியை யென்றும், நான் ப்ரியனென்றும் சொல்லும்படியாய், எனக்கு அவன் மேல் ப்ரேமை இருக்கும். வேறு விதமாய் சொல்லப்புகுந்தால், அவனை என் ப்ராண னென்றே

சொல்லவேண்டும். இப்படிச் சொன்னது கூட, அவன் பெருமையை ஸரியாய் வர்ணித்ததாகாது. ஆனால் அதிப்ரேமைக்குப் பாத்ரமான வஸ்துவை வர்ணிக்கத் தலைப்பட்டால், பேய்த்தலாகவே முடியும்.

இது எடுத்து பேசத்தகாத விஷயமே யானலும், இந்த விஷயத்தில் இருக்கும் என் ஆசை, பேசும்படியாய்ச் செய்து வைக்கிறது. ஆகையாற்றான் முதன் முதல் மனஸுக்கு எப்படித் தோன்றியதோ, அப்படியே சொல்லிவிட்டேன், இல்லாவிட்டால் இந்த விஷயத்தை ஸரியாய் வர்ணிக்க முடியுமா? இது எப்படி ஆனால் என்ன? எப்போது என்னுடைய ப்ரியபக்தன் விஷயமாய், நான் பேச ஆரம்பித்தேனோ, அப்போது அவ்விஷயத்தைப்பற்றிக் கலந்துப் பேசுவதற்கு ப்ரியமான பக்தனும் கிடைத்துவிட்டானேயானால், அப்பேச்சுக்கு எல்லை ஏற்படுமா? அப்படியே ப்ரியபக்தனான நீயே, பக்தன் விஷயமான என்னுடைய ப்ரஸங்கத்தைக் கேட்கிறவானாய், இச்சமயத்திற் கிடைத்தது என் பாக்யமே. ஆகவே மேலும் இவ்விஷயத்தை வளர்த்திப் பேசும்படி, ஓர் பேராநந்தம் படைத்தேன், என்று சொல்லி, பகவான் ஆநந்தப் பெருக்கால் பக்கத்துக்குப் பக்கம் அசைந்தாடத் தலைப்பட்டார்.

यस्मान्नोद्विजते लोको लोकान्नोद्विजते च यः ।
हर्षामर्षभयोद्वेगैर्मुक्तो यः स च मे प्रियः ।।१५ ।।

யஸ்மாந்நோத் விஜதே லோகோ லோகாந் நோத்விஜதே ச யः ।
ஹர்ஷாமர்ஷ பயோத்வேகைர் முக்தோ யः ஸ ச மே ப்ரியः ॥ 15

சாந்தி அடைந்தவன் சேர்க்கையால் உலகம் துன்புறாமையும், உலகத்தின் சேர்க்கையால் அவன் துன்புறாமையும் :

ஸமுத்ரத்தின் ஆரவாரத்தைப் பார்த்து ஜலஜந்துக்கள் பயப்படாதது போலும் ஜலஜந்துக்கள் தன்னிடத்தில் ஸஞ்சரித்துக் கொண்டிருப்பதை ஓர் கஷ்டமாக ஸமுத்ரம் பாராட்டாதிருப்பது போலும், அஞ்ஞானத்தால் வெறிகொண்ட ஜகத்தைக் கண்டு கஷ்டப் படாதவனாய், அந்த ஜகத்துக்கு ஒரு விதமான தீங்கும் செய்யாதவனாய், உக்தம சாந்தியடைந்தவனிருப்பான்.

ஹர்ஷாமர்ஷபயோத்வேகங்க ளில்லாமையாலும் பக்தியாலும் ஈச்வரனுக்கு ப்ரியனாயிருக்கை :

அவயவங்களால் சரீரம் தொந்தர வடையாதது போலும், ஜீவர்களின் உயிராய்த் தன்னைப் பாவித்து, அவற்றால் கஷ்டப்படாதவனாயும், ஜகத்தையே தன் தேஹமாய் பாவித்து பிரியாப்ரியங்களும், ஹர்ஷாமர்ஷங்களும் (ஹர்ஷம் என்பது ஸந்தோஷம்; அமர்ஷம், பொறாமை, அற்றுப் போனவனாய், இப்படி யெல்லாம் த்வந்தமும் பயமும் கஷ்டமும் அற்றவனாய், அத்துடன் கூட என்விஷயத்தில் பக்தி பாராட்டினவனாய் எவன் இருப்பானோ, அவன்மேல் எனக்கிருக்கும் மோஹத்தை நான் வர்ணித்துத் தீராது. என் உயிருக்குள் ளிருக்கும் உயிர், என்றே அவனைச் சொல்ல வேண்டும். அவன் ஆத்ம ஸ்வரூபாநுபவாநந்தத்தால் த்ருப்தனாய், ஜந்மம் எடுப்பதின் பூர்ண ப்ரயோஜத்தை அடைந்தவனாய், பரிபூர்ணதை யென்னும் ஸ்த்ரீக்குக் கணவனாய்விட்டான், என்று சொல்ல வேண்டும்.

अनपेक्षः शुचिर्दक्ष उदासीनो गतव्यथः ।
सर्वारम्भपरित्यागी यो मद्भक्तः स मे प्रियः ।।१६।।

அனபேக்ஷ: ஶுசிர்தக்ஷ உதாஸீநோ கதவ்யத: ।
ஸர்வ்வாரம்ப பரித்யாகீ யோ மத்பக்த: ஸ மே ப்ரிய: ।। 16

அநபேக்ஷித்வம், சுசித்வம் :

அவன் முற்றிலும் ஆசையற்றவனாய், மேன்மேலும் அதிகரிக்கும் ஸந்தோஷத்தோடு கூடினவானாயிருப்பான். காசி மோக்ஷத்தைக் கொடுக்கும் விஷயத்தில், சக்தி உள்ளது நிச்சயமே ஆயினும், அந்த ஊரில் சாகவேண்டியது அவச்யம். ஹிமவத்பர்வதம் பாபத்தைப் போக்குகிறதே ஆயினும், அதில் வஸிக்கிறவன் ப்ராணனுக்கு அபாயம் நேரிடும். இவ்விதப் பட்ட ஸஜ்ஜனர்கள் ஸாங்கத்யத்தினால் ஏற்படும் தூய்மை, கீழே சொல்லியபடி ஸாபாயம் ஆனதல்ல. கங்கைக்குப் பரிசுத்தம் செய்துவைக்கும் சக்தி உண்டு; பாபத்தையும் தாபத்தையும் அவள் போக்கி வைப்பாள். ஆனால் அவளுடைய தீர்த்தத்தில் முழுக வேண்டியதாயிருக்கிறது. பக்தி யென்பது ஆழமும் அக்கரையும் காண முடியாததாயிருந்தும், அதில் முழுகிப்போதல் என்னும் ஆபத்து ஏற்படுவதில்லை. இந்த மார்க்கத்தைக் கைப்பிடித்தவர்கள் சாவதற்கு முன்பே, மோக்ஷத்தை அடைகிறார்கள். ஸாதுக்கள் தேஹஸ்பர்சத்தை அடைந்த பின்,

கங்கைக்கு ஜநங்களுடைய பாபத்தைப் போக்கும் சக்தி உண்டாயிற்றானால், அந்த ஸாதுக்களின் தேஹஸ்பர்சத்துக் குள்ள பவித்ரதை, (பாபத்தைப் போக்கும் சக்தி) எவ்வள வென்று சொல்லலாம்! இது நிற்கட்டும், இப்படி என் பக்தனான இவன், தன்னுடைய தூய்மையால் தீர்த்தங்களுக்கு தூய்மையைக் கொடுத்துக் கொண்டு, உள்ளும் புறமும் பரிசுத்தனாய், ஸூர்யன்போல் அதி நிர்மலனாயிருப்பான்.

தக்ஷத்வம் :

பூமியில் புதைந்து கிடந்து, ஸாமான்யர்கள் பார்வைக்கு புலப்படாதிருக்கும் நிதிகளை, கால் முன்வைத்துப் பிறந்தவன் எப்படிக் கண்டுகொள்வானோ, அப்படியே இவன் இதரர்கள் புத்திக்கு ப்ரகாசியாதிருக்கும் தத்வார்த்தங்களை அறிந்து கொள்வான்.

உதாஸீனத்வம் :

ஒன்றிலும் பற்றில்லாது எங்கும் வ்யாபித்திருக்கும் ஆகாசம் போலும், இவன் மனது ஸர்வ விஷயத்தையும் வ்யாபித்துப் பற்றற்றிருக்கும்.

கதவ்யதத்வம் :

வேடன் கையினின்று தப்பித்துக் கொண்ட பக்ஷிபோல், இவன் ஸம்ஸாரதுக்கத்தினின்று விடுபட்டவனாய், பூர்ணவைராக்யத்தால் சோபிதனாயிருப்பான். இப்படி எக்காலும் ஸுகித்தவனாய், துக்கமென்பதைக் கொஞ்சமேனும் மறியாதவனாய், தன் மர்மஸ்தாநங்கள் திறந்து கிடந்தால் லஜ்ஜைப்படாத பிணம்போல், இருப்பான்.

ஸர்வாரம்பரித்யாகம் :

கட்டை யெல்லாம் எரிந்து போன பிறகு, அக்நி தானாகவே அணைந்து போவது போலும், கர்மங்களைச் செய்வதற்கு அவச்யம் வேண்டியதான அஹம்கார மற்றவனாய், இவன் கர்மங்களைச் செய்யத் துவக்கா திருப்பான்.

பக்தி :

அன்றியும் உலகத்தார் பங்குக்கு ஆசை முதலிய வற்றைக் கொடுத்து விட்டு, தன் பங்குக்கு சாந்தியைக் கைப்பற்றிக்

கொண்டு, மோக்ஷத்திற்குப் போகவேண்டியவ னென்று முத்ரைபோடப்பட்டவனாய் இருந்துகொண்டு, பரவஸ்து தானே, என்னும் த்யாநத்தின் ப்ரவாஹத்தில் ஆழ்ந்து கிடந்து, அக்கரையான மோக்ஷத்தில் ஏறி நிற்க ஸித்தமாயிருக்கு மிவன், பக்தி ஸுகத்தை விளைவித்துக் கொள்வதற்காக, தன் ஸ்வரூபத்தை இருபாகமாகச் செய்துகொண்டு, தான் அவற்றில் ஒன்றைக் கொண்டு ஸேவகனாய், மற்றொன்றிற்கு ஈச்வரன் என்று பெயரிட்டு, உத்தம ரீதியாக பஜநமார்க்கத்தை அநுஷ்டித்துக் கொண்டு, பஜநை செய்யாத இதரர்களுக்கு, அவர்கள் கடைத்தேறும் மார்க்கத்தைக் காட்டிக் கொடுத்துக்கொண்டு இருப்பான். இவனை எப்போது அடைவேன், எப்போ தடைவே னென்று, நான் மனதில் ஸதா த்யானஞ் செய்து கொண்டிருப்பேன். இவன் சேர்க்கை கிடைத்த பிறகு தான், என் மனதிற்கு ஆறுதலுண்டாகும். இவனுக்காகத் தான் நான் ரூபங்களெடுத்துக்கொண்டு அவதரிக்கிறேன்; இவனாற்றான் இவ்வுலகில் இருப்புக் கொள்கிறேன்; இவன்மே லெனக் கிருக்கும் ப்ரீதியால், என்னுடைய பிராணனையும் ஜீவனையு மிவனுக்கு, ஆர்தியாகச் சுற்றிப் போட்டுவிடலாமா வென்று, எனக்குத் தோன்றும்.

यो न हृष्यति न द्वेष्टि न शोचति न काङ्क्षति ।
शुभाशुभपरित्यागी भक्तिमान्यः स मे प्रियः ॥१७॥

யோ ந: ஹ்ருஷ்யதி ந த்வேஷ்டி ந ஶோசதி ந காங்க்ஷதி।
ஶுபா ஶுப பரித்யாகீ பக்திமான்ய: ஸ மே ப்ரிய: ॥ 17

ஹர்ஷோத்வேகங்க ளற்றிருக்கை :

இவன், தன்னுடைய ஸ்வரூபப்ராப்தியைத் தவிர ருசியான வஸ்துவேறொன் றிருக்கிற தாக நினையான்; ஆகையால் போகஜாதங்கள் விசேஷமாகக் கிடைத்தாலும், அவற்றைப் பார்த்து சந்தோஷப்படான், தானே விச்வமாக அமைந்து போனதால், இவன் பேத மென்பதற்றவனாய், அக்காரணத்தைக் கொண்டே த்வேஷ மற்றவனாயிருப்பான்.

சோகம், ஆசை, சுபாசுபங்கள் அற்றிருக்கை :

அன்றியும் எது உண்மையகத் தனதோ, அது கல்ப முடிவிற் கூட நாசமடையாது என்றறிந்து, ஏதோ ஒன்று நஷ்டமாய்ப்போய் விட்டதே, என்று இவன் துக்கியான்.

அன்றியும் எந்த பரவஸ்துவைத் தாண்டினதாக வேறொன்றில்லையோ, அந்த பரவஸ்துவாய்த் தானே நிற்பதால், ஓர் வஸ்து கிடைக்க வேண்டும் மென்னும் மாசையற்றவனாய், இவனிருப்பான். ஸூர்யனுக்கு ராத்ரிப் பகலென்னும் வித்யாஸம் தோற்றாதது போலும், இவனுக்கு நல்லது கெட்டது என்பது தோற்றாது. இப்படிப்பட்ட பக்தனைபோல், எனக்கு மிக்க வேண்டினவன் வேறொருவனுமில்லை என்று, நான் உன்மேலாணை யிட்டுச் சொல்கிறேன்.

समः शत्रौ च मित्रे च तथा मानापमानयोः ।
शीतोष्णसुखदुःखेषु समः सङ्गविवर्जितः ।।१८।।

ஸமः ஶத்ரௌ ச மித்ரே ச ததா மானாப மானயோः ।
ஶீதோஷ்ண ஸுகதுக்கேஷு ஸமः ஸங்க விவர்ஜித: ।। 18

சத்ருமித்ரர்கள் விஷயத்திலும், மானவமானங்கள் விஷயத்திலும், சீதோஷ்ணங்கள் விஷயத்திலும், ஸமபாவமடைந்து, பற்றுதலில்லாமலிருக்கை :

இவனிடத்தில் வைஷம்யம் என்னும் வார்த்தையே அற்றுப் போயிருக்கும்; சத்ருக்களும் மித்ரர்களும் இவனுக்கு ஸமமாகத் தோற்றுவார்கள். ஒரு வீட்டி லேற்றிவைத்த தீபத்துக்கு, வீட்டுக்காரர்களுக்கு மாத்திரம் வெளிச்சங் கொடுப்பதும், மற்றவர்களுக்கு இருட்டை உண்டாக்கிவைக்கிறதும், தெரியாதது போலும், நட்டுத் தண்ணீர் வார்த்து வளர்த்தவனுக்கும், கோடெறி கொண்டு வெட்ட வந்தவனுக்கும், ஒரே மாதிரியாய் நிழலைக் கொடுக்கும் வ்ருக்ஷம் போலும், கருப்பந்தண்டு, பயிர் செய்தவனுக்கும், அதைப் பிடுங்கி ஆலையில் இடுகிறவனுக்கும், ஒரே மாதிரியாய் தித்திப்பான ரஸத்தை கொடுப்பது போலும், சத்ருக்கள் மித்ரர்கள் இருவருக்கும், ஒரே மாதிரியாக உபகரித்து, மனிதர்களினின்று பூஜை அடைந்தாலும், அவமான மடைந்தாலும், அவர்கள் விஷயத்தில் ஒரே மாதிரியான மனதைப் பாராட்டினவனாக இவன் இருப்பான். ஆகாசம் ஆறு ருதுக்களுக்கும் ஸரியா யிடங்கொடுத்து கொண்டு, சீதோஷ்ணங்கள் விஷயத்தில் ஸமபாவம் பாராட்டுவது போலும், மேருவானது தென்றல் வாடை என்று வித்யாசம் பாராட்டாது, மத்யஸ்தமாய் இருப்பது போலும், ஸுகதுக்கங்களுக்கு மத்யஸ்தனாயிருந்து கொண்டு,

அரசனுக்கும் பிச்சைக்காரனுக்கும் தன் குளிர்ச்சியால் ஸமமாகவே சந்தோஷங் கொடுக்கும் சந்த்ரிகையைப் போலும், ஸர்வ பூதங்கள் விஷயத்திலும், இவன் ஸமபாவம் பாராட்டியிருப்பான். உலகத்தாரனைவரும், பருகி வாழ்வதற்காக, ஜலத்தை ஆதரிப்பது போலும், முவ்வுலகும் இவனை அணுகி, வாழ விரும்பினாலும், இவன், உள்ளும் புறமும் பற்றற்றவனாய், தன்னைத்தானே பற்றினவனாய், உலகில் ஒண்டியாயிருப்பான்

तुल्यनिन्दास्तुतिर्मौनी सन्तुष्टो येन केनचित् ।
अनिकेतः स्थिरमतिर्भक्तिमान्मे प्रियो नरः ॥१९॥

துல்ய நிந்தாஸ் துதிர்மௌனீ ஸந்துஷ்டோ யேன கேநசித் ।
அனிகேத: ஸ்திரமதிர் பக்திமான்மே ப்ரியோ நர: ॥ 19

நிந்தா ஸ்துதிகளில் ஸமபாவம், ஸந்துஷ்டி, மௌனம், இருப்பிடம் என்றொன்றில்லாமை, நிலைபெற்ற புத்தி :

இவன் பிறர் செய்த நிந்தையால் வருந்தாதவனாயும், புகழால் ஸந்தோஷியாதவனாயும், ஒன்றும் பற்றிக்கொள்ள முடியாத ஆகாசம் போல், அவ்விரண்டையும் ஒன்றாக மதித்து, பற்றற்றவனாய், இவனுடைய ப்ராணவ்ருத்திகள், இழுத்துக்கொண்டு போகும் வழியெல்லாம், காடு நாடு என்று அறியாதவனாய், இவன் அலைந்து திரிந்துகொண்டிருப்பான். அவன், இது உண்மை என்றும், இது பொய் என்றும், அறியாதவனாய், வாய் திறந்து பேசும்போதும் மௌனம் கலையாதவனாய், இடை விடாது உன்மநீ அவஸ்தையி லிருந்து கொண்டு, ப்ரஹ்மபாவத்தை அநுபவித்துக் கொண்டிருப்பான். மழை இல்லாமற் போயிற்றே என்று வற்றிப் போகாத ஸமுத்ரம் போல் இருந்து கொண்டு, யாத்ருச்சிகமாய்க் ஓர் முயற்சியும் செய்யாமல், தானாகவே கிடைத்ததைக் கொண்டு ஸந்துஷ்டனாயும், ஒன்று கிடையாமற் போனதினால் கோபியாதவனாயும், இவன் இருப்பான். காற்றுக்குத் தன் வீடென்று ஓர் இடமும் இராமல். ஆகாசம் முழுவதுமே வீடாயிருப்பது போலும், இவன் ஓரிடத்திலும் இருப்பற்றவனாய், உலகம் முழுவதையும தன் னிளைப்பாறும ஸ்தானமாய்ப் பாவித் திருப்பான். இந்த விச்வமே தன் வீடென்று உறுதியாய் பாவித்துக் கொண்டு, சராசர ரூபமான விச்வமாகவே இவன் நிற்பான்.

இத்தனையுடனும் பக்தி :

இத்தனை யோடுங் கூட, இவன் என்னுடைய பஜனையில் ப்ரீதி உள்ளவனாய் இருப்பான்.

இவ்வகைப்பட்ட உத்தம பக்தன் விஷயத்தில் பகவானுடைய ப்ரியத்தின் பெருமை

இப்படிப்பட்டவனை, நான் என் தலை மேல் தாங்கிக் கொள்கிறேன். உத்தமனாய் இருக்கப்பட்டவனுக்கு நமஸ்காரம் செய்தல் ஓர் பெருத்த கார்யமன்று. ஆனால் மூன்று லோகத்தாரும் என் பாததீர்த்தத்தைக் கொண்டாடும்படியாய் மஹிமை பெற்ற நான், இவனைத் தலையால் தாங்குகிற தென்றால், இவன் பெருமை எப்படிப்பட்டதாயிருக்கும்! நாம் எந்த விஷயத்தில் ச்ரத்தை பாராட்டுகிறோமோ, அந்த விஷயத்தைக் கொண்டாடும் ப்ரகாரத்தை, ஸதாசிவனே ஸத்குருவாய் நின்று உபதேசிக்க வேண்டும் ஆனால் பரமசிவன் பெருமையை வர்ணிப்பது, என் பெருமையை வர்ணிப்பதே யாய் முடியும், ஆகையால் இது வேண்டாம்; என்னையே பார், நான் பரமசிவனைத் தலையாய் தரித்திருப்பது, இந்த விஷயத்துக்குத் தகுந்த உதாஹரணமாயமையும். என் பக்தன் நால் வகைப்பட்ட புருஷார்த்தங்களையும் தன் கையில் எடுத்து, அவற்றை உலகத்தாருக்குக் கொடுத்துக் கொண்டு, தான் அவற்றை உபேக்ஷித்து, பக்திமார்க்கத்தை அநுஷ்டித்துக் கொண்டிருப்பான். இவன் கைவல்ய பதவியின் அதிகாரியாய், மோக்ஷத்தை மூட்டை கட்டிவைக்கவும், பின்பு அதை அவிழ்த்தெடுத்து, பிறருக்கு தானம் செய்யவும், திறமை உள்ளவனாய் இருந்தும், ஜலம்போல் தாழ்ந்த பதவியைதேடி நிற்பான்.

ஆகையாற்றான் இவனை நான் நமஸ்கரிப்பேன்; தலையில் கிரீடமாக வஹிப்பேன், மார்பில் இவன் உதையைத் தாங்கி, அதை ஓர் பஹுமானமாய்க் கொண்டாடுவேன்; என்னுடைய வாக்கினால் இவனுடைய குணங்களை, ஸதா கீர்த்தநம் செய்வேன்; இவனுடைய கீர்தியே என் செவிக்கு ஆபரணங்களாகும்; இவனைக் கண்கொண்டு பார்க்க வேண்டு மென்னும் அவாவினால், கண்ணில்லாத எனகுக் கண்கள் ஏற்பட்டன, என் கையில் லீலார்த்தமாகத் தரித்திருக்கும் தாமரை புஷ்பத்தைக் கொண்டு, இவனை நான் அர்ச்சிப்பேன்; இவனை ஆலிங்கனம் செய்து கொள்ள இரண்டுகை போதா தென்று, மற்று மிரண்டு கைகள் நான் எடுத்துக் கொண்டேன்;

இவனுடன் சேர்ந்திருப்பதென்னும் ஸுகத்தை அநுபவிப்பதற்காக, தேஹமில்லாத எனக்கு தேஹம் உண்டாயிற்று; சுருக்கிச் சொல்ல இவன் மேல் எனக்கு ஏற்பட்ட ப்ரேமைக்கு உவமையே இல்லை. இவனிடத்தில் எனக்கு ப்ரேமை ஏற்பட்ட விஷயத்தில் ஆச்சர்யம் என்ன? இவனுடைய கதையைக் கேட்கிறவர்களையும், அதைக் கொண்டாடு கிறவர்களையும் கூட என் ப்ராணனைக் காட்டிலும் அதிகரித்தவர்களாய், நான் கொண்டாடுகிறேன். எல்லா விதமான யோகமும் எந்த பக்தியோகத்தில் அடங்கிப் போயிற்றோ அதை நான் உனக்கு முழுதும் சொல்லி யாயிற்று. இந்த யோகத்தை அவலம்பித்தவர்களை, மிக்க ப்ரியத்துடன் தலையிலும் ஹ்ருயத்திலும், நான் இடைவிடாது தாங்கிக் கொண்டாடுகிறேன்.

ये तु धर्म्यामृतमिदं यथोक्तं पर्युपासते ।
श्रद्दधाना मत्परमा भक्तास्तेऽतीव मे प्रियाः ।।२०।।

யே து தர்ம்யா ம்ருதமிதம் யதோக்தம் பர்யுபாஸதே ।
ஶ்ரத்த தானா மத்பரமா பக்தாஸ்தேऽதீவ மே ப்ரியாः ।। 20

பக்தியோக விஷயமான இந்தக் கதையை ஸேவித்தால் உண்டாகும் நன்மை :

அம்ருததாரைபோல் ஆநந்தத்தை உண்டாக்கத்தக்க, இந்த விஷயத்தை எவர்கள் காதாற் கேட்டு, மனதில் நிறுத்திக்கொண்டு, பூர்ண விச்வாஸத்துடன் அடிக்கடி சிந்தித்து, அந்தராத்மாவில் இருத்தி, அநுஷ்டித்து நிற்பார்களோ, அவர்கள் மனதில், கீழே வர்ணிக்கப்பட்டுள்ள பக்தியோகம் ஏற்படும். அதன் பின் உத்தமமான பூமியில் விதைக்கப்பெற்ற விதை போலவும், அவர்களிடத்தில் இந்த பக்தியோகம் விஸ்தாரத்தை அடையும். பின்பு அவர்களும் என்னையே உத்தமமான பொருளாய்ப் பாவித்து, என்னிடத்தில் ப்ரேமைபூண்டு, என்னையே தங்கள் ஸர்வஸ்வமாய்ப் பற்றி நிற்பார்கள். அப்படியாய் விட்டவர்களே, உலகத்தார் கொண்டாடத் தக்க பக்தர்களும் யோகிகளும் ஆவார்கள். அவர்கள் மேல் எனக்கு ஒரு நாளும் தீராததான ப்ரேமை ஏற்படுகிறது. பக்தி கதையில் எவனுக்கு ஆதரவு ஏற்படுகிறதோ, அவனே உத்தம தீர்த்தம், அவனே உத்தம க்ஷேத்ரம், நானும் அவனையே த்யானித்துக் கொண்டிருப்பேன்; அவனை தெய்வமாய்ப் பூஜிப்பேன், அவனைத் தவிர வேறொன்றும் ருசியுள்ளதாய் எனக்குத் தோன்றாது. அவனை அடைய நான்

ஸதா ஆசை கொண்டவனாவேன், அவனே என்னுடைய உத்தம நிதி, அவனை அடைந்தாற்றான் என் மனது ஸமாதானப்படும். என்னுடைய பக்தனுடைய வ்ருத்தாந்தத்தை எவன் எடுத்துச் சொல்வானோ, அவனை என்னுடைய பரதேவதையாய் நான் கொண்டாடுவேன்.

உபஸம்ஹாரம் :

இவ்வாறு தன் பக்தர்களுக்கு ஸதா ஆநந்தத்தை விளைவிக்கிறவனாய், ஜகத்துக்கு மூலகாரணமாய், நிர்மலனாய், நிஷ்களங்கனாய், உலகத்தா ரனைவர்மேலும் க்ருபை புரிகிறவனாய், சரணாகதர்கள் விஷயத்தில் ப்ரேமை பூண்டவனாய், அனைவரையும் ஆபத்தினின்று காக்கிறவனாய், தேவர்களுக் குதவி செய்வதே இயற்கையா யமைந்துள்ளவனாய், உலகத்தா ரனைவரையும், தன் குழந்தைகள் போல் கொண்டாடுகிறவனாய், நமஸ்கரித்தவர்களை ரக்ஷிக்கிறதே விளையாட்டாகக் கொண்டவனாய், தர்மத்தாலும் கீர்த்தியாலும் அதிபரிசுத்தனாய், எல்லையில்லாமல் கொடுப்பதையே ஸ்வபாவமாகப் படைத்தவனாய், மட்டற்ற பல முள்ளவனாய், பலிச் சக்ரவர்த்தியைக் கட்டிவைத்தவனாய், பக்தர்களிடத்தில் வாத்ஸல்யம் படைத்தவனாய், பக்தியால் சிறந்தவர்களுக்கு அதிஸுலபனாய், ஸத்யத்தின் முடிவாய், ஸகல கலைகளுக்கும் வாஸஸ்தானமாய், வைகுண்ட நாயகனாய், பக்தர்களுக்கு ராஜாவாய் விளங்கும் ஸ்ரீ க்ருஷ்ணன் சொல்ல, அர்ஜுநன் கேட்டு நின்றான். இதற்கு ஸ்ரீ க்ருஷ்ணன் நிரூபிக்கப் போகிறதைச் சொல்வேன், கேளீர், என்று ஸஞ்ஜயன் த்ருதராஷ்டிரனுக்குச் சொன்னான். அந்த ரஸவத்தான கதையையே மஹாராஷ்டிர பாஷையில் சொல்வேன், ஸாதுக்களே கேட்க வேண்டும். இப்படிப் பலவிதமாக, ஸாதுக்கள் ஸேவைசெய்து, நான் கடைத்தேற வேண்டு மென்று, என குருஸ்வாமியான நிவ்ருத்தி நாதர் எனக்குக் கற்றுக்கொடுத்திருகிறார்.

பன்னிரண்டாம் அத்யாயம் முற்றிற்று.

அத்யாயம் 13

ஸ்ரீகுருவணக்கம் :

ஒருவன் ஸ்ரீ குருவை நினைத்தமாத்திரத்தில், அவன் ஸகல வித்யைகளுக்கும் அதிஷ்டானமாய் ஏற்பட்டு, கவிதாஸமார்த்யம் அவன் அதீனப்பட்டு, ஸகல சாஸ்த்ரங்களும் அவன் நாக்கில் குடியேறி விடும். அவனுடைய ப்ரவசநத்தின் மாதுர்யம் அம்ருதத்தை சுவையற்றதாகச் செய்து வைக்கும்; அதின் ஒவ்வோரக்ஷரமும் வெளிப்படும் போதே, அவ்வக்ஷரத்தினின்று ரஸம் பெருகும். அவ்வக்ஷரங்கள் தங்கள் த்வநியால், உத்தமமான பாவார்த்தங்களை (மறைந்து கிடக்கும் ரஹஸ்யமான அபிப்ராயங்களை) வெளிப்படுத்தி வைப்பது மன்றி, அறிதற்கரிய தத்வார்த்தங்களை விரித்துக் காட்டி கேட்கிறவர்களுக்கு அவ்வர்த்தங்களை ஹஸ்தகதமாய்ச் (ஸ்வாதீனமாய்) செய்து தரும். ஸ்ரீ குருவின் பாதகமலம் ஹ்ருதயத்தை வ்யாபித்து நின்றால், இவ்வளவு பெருத்த லாபம் கிடைக்கிறது. ஆகையால் அப்பாதத்துக்கு ஓர் நமஸ்காரம் செய்து, மேற்கதையைச் சொல்வேன், கேளுங்கள்.

श्रीभगवानुवाच ।
इदं शरीरं कौन्तेय क्षेत्रमित्यभिधीयते ।
एतद्यो वेत्ति तं प्राहुः क्षेत्रज्ञ इति तद्विदः ।। १।।

பகவானுவாச -

இதம் ஶரீரம் கௌந்தேய க்ஷேத்ரமித்யபிதீயதே।
ஏதத்யோ வேத்தி தம் ப்ராஹுः க்ஷேத்ரக்ஞ இதி தத்விதः ॥ 1

க்ஷேத்ர க்ஷேத்ரஞ்ஞ நிர்தேசம் :

பிதாமகனாகிய ப்ரஹ்ம தேவனுக்குப் பிதாவும், லக்ஷ்மீதேவிக்குப் பதியுமான ஸ்ரீக்ருஷ்ணன் பின் வருமாறு சொன்னார். ஹே பார்த்தா, இந்த சரீரம் க்ஷேத்ரம் எனப்படும்; இதில் நடந்தேறிவரும் விஷயங்களை எவன் அறிந்து கொள்கிறானோ, அவன் இங்கே க்ஷேத்ரஞ்ஞ னென்று சொல்லப்படுகிறான்.

क्षेत्रज्ञं चापि मां विद्धि सर्वक्षेत्रेषु भारत ।
क्षेत्रक्षेत्रज्ञयोर्ज्ञानं यत्तज्ज्ञानं मतं मम ।।२।।

க்ஷேத்ரக்ஞம் சாபி மாம் வித்தி ஸர்வக்ஷேத்ரேஷு பாரத ।
க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ யோர்க்ஞானம் யத்தத்க்ஞானம் மதம் மம ॥ 2

க்ஷேத்ரஞ்ஞன் என்பவன் பகவானே :

இங்கே க்ஷேத்ரஞ்ஞ சப்தத்தால் குறிப்பிடப்பட்டவன், ஸகல க்ஷேத்ரங்களையும் பாதுகாத்துக் கொண்டிருக்கும் நானே, என்று நிச்சயமாய்த் தெரிந்து கொள்.

க்ஷேத்ர க்ஷேத்ரஞ்ஞ விஷயமான ஞானமே ஞானம் :

க்ஷேத்ரத்தையும் க்ஷேத்ரஞ்ஞனையும் ஸந்தேஹமறப் பகுத்தறிந்து கொள்வதைத்தான், ஞானம் என்று நான் மதிப்பேன்.

तत्क्षेत्रं यच्च यादृक्च यद्विकारि यतश्च यत् ।
स च यो यत्प्रभावश्च तत्समासेन मे शृणु ॥ ३ ॥

தத் க்ஷேத்ரம் யச்ச யாத்ருக்ச யத்விகாரி யதஶ்ச யத் ।
ஸ ச யோ யத் ப்ரபாவஶ் ச தத்ஸமாஸேன மே ஶ்ருணு ॥ 3

க்ஷேத்ர ஸம்பந்தப்பட்ட விஷயங்களைச் சொல்லத் தொடங்கல் :

எந்த அபிப்ராயத்தைக் கொண்டு, இந்த சரீரம் க்ஷேத்ரம் என்று சொல்லப்பட்டதோ, அதை ஸம்பூர்ணமாகச் சொல்வேன் கேள். இதை க்ஷேத்ரம் என்று, ஏன் சொல்லவேண்டும்? இது எங்கிருந்து, எவ்விதமாய், உண்டாயிற்று? இது எந்தெந்த விகாரங்களை அடைந்து வளர்கிறது? மூன்றரை முழம் அளவுள்ள இச்சிறிய க்ஷேத்ரம், எவ்வளவு பருமனும் நிறையு முள்ளது? இது பயிரிடப்பட்ட பூமியா? அல்லது பயிர் செய்யாமல் தரிசாய்க் கிடப்பதா? இது எவனுக்கு ஸொந்தமான்து? இதின் ஸம்பந்தமாய், இவ்வகைப்பட்ட விஷயங்கள் அனைத்தையும், நான் ஸாங்கோபாங்கமாய்ச் சொல்லப்போகிறேன், கவனித்துக் கேள்.

இவ்விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் நாநாவிதமான கொள்கைகள் :

இந்த க்ஷேத்ரத்தைக் குறித்தே, வேதங்கள் மிகவும் கம்பீரமாய் ஸதா பேசிக்கொண்டிருக்கின்றன; கர்க்கசாஸ்க்ரம் இதின்

லக்ஷணங்களை நிர்ணயிப்பதற்காக வெகு வாசாலகமாய் தடபடற் படுகிறது. ஷட்தர்சநங்களும், (ஆறு சாஸ்த்ரங்களும்) முடிவுவரைக்கும இவ்விஷயத்தைப் பற்றியே பேசியும், இவ்விஷயத்தில் அவற்றின் நடுவில் ஏற்பட்ட விவாதம், இன்னுங் கூட தீரவில்லை. இதொன்றின் காரணமாய், சாஸ்த்ரங்கள் ஒன்றோடொன்று ஒத்து வாழவேண்டியது குலைந்து போய், ஜகத்தில் எங்கு பார்த்தாலும் வாதம் ஏற்பட்டிருக்கிறது. ஒருவன் சொல்வது மற்றொருவன் சொல்வதற்கிசைந்து வராமல், ஓர் ப்ரயோஜநமுமின்றி வீணான யுக்தி வாதங்களே அதிகரிப்பதற்குக் காரணம் ஏற்பட்டது. இது எவனுடைய பூமி யென்று, ஒருவனு முண்மையாய் அறியாமலே, இதின் விஷயமாய் வீடுகள் தோறும் மண்டை உடைந்து போகிறது. துராசை என்பது எவ்வளவு வலிமை யுள்ளதாய் இருக்கிறது பார்.

ऋषिभिर्बहुधा गीतं छन्दोभिर्विविधैः पृथक् ।
ब्रह्मसूत्रपदैश्चैव हेतुमद्भिर्विनिश्चितैः ।। ४ ।।

ருஷிபிர் பஹுதா கீதம் சந்தோபிர் விவிதை: ப்ருதக் ।
ப்ரம்ஹ ஸூத்ர பதைஶ்சைவ ஹேதுமத்பிர் விநிஶ்சிதை: ॥ 4

பாஷண்டர்கள் மதம் :

நாஸ்திகர்களை அபஜயப்படுததிவைக்க, வேதங்களால் ஏற்படுத்தி வைக்கப்பட்ட ப்ரபலமான யுக்திகள் என்னும் ஸைந்யங்களைப் பார்த்து, அந்தப் பாஷண்டர்கள் ப்ரதி யுக்திகளைக் கொண்டு வாதிக்கத்தலைப்பட்டு, "ஹே, வேதங்களே, நீங்கள் மூலமற்றவர்கள், நீங்கள் உண்மையற்ற வாக்ஜாலங்களே ஆவீர்கள், அல்லவென்று மறுப்பீர்களாகில், இதோ வாதத்திற்குப் பாக்குவைத்தோம்," என்றார்கள். அப்பாஷண்டர்கள் கக்ஷியில், தலையை மொட்டையடித்துக் கொண்ட திகம்பரர்கள், (துணியுடுத்தாதவர்கள்; இவர்கள் சமணர்களில் ஓர் வகுப்பு) அவர்களுக்கு ஸகாயமாய்ச் சேர்ந்து, பற்பலவிதமான விதண்டவாதங்களை ப்ரயோகிக்கிறார்கள்.

ஹடயோகிகள் :

ம்ருத்யுபலத்தின் வேகத்துக்கு வசப்பட்டு, இந்த சரீரம் வீணாய்ப் போகுமே, என்று நினைத்து, அதைக் காப்பாற்றிக்கொள்ளக் கருதி, யோகி ஏகாந்த ப்ரதேசங்களைத் தேடி, அங்கே யமநியமங்களாகிய ஸாதநங்களை

குறைவில்லாதபடி அநுஷ்டித்துக் கொண்டிருக்கிறான். இந்த க்ஷேத்ரத்தில் அபிமானம் பாராட்டி, ஈசானன் தன் ராஜ்யத்தைத் துறந்துவிட்டு, எல்லா உபாதிகளையும் விலக்கிக்கொண்டு, ஸ்மசானத்தில் குடிகொண்டான். இந்த தேஹத்தைக் காப்பாற்றி விடுகிறது என்று திடமாய்த் தீர்மானம் செய்து கொண்டு, பத்து திக்குக்களையுமே வஸ்திரமாகக் கொண்டு, அவன் தபஸிலிருக்கும்போது, காம்னை எதிர்க்கக்ஷிக்காரர்களிடம் லஞ்சம் வாங்கினவ னென்று, கொளுத்திக் கரியாக்கினான். பார், ஸத்யலோகாதிபனான ப்ரஹ்மதேவன், இவ்விஷயத்தைப் பற்றி வாதம்செய்து யாவரையும் ஜயிக்க வேண்டி, நான்கு முகங்கள் படைத்துக் கொண்டான். அவனும் இதின் தத்வத்தை கொஞ்சமேனும் அறிந்தவன் அன்று.

கர்மடர்களின் (கர்மங்களையே உத்தம ஸாதனமாய் நம்பி, அவற்றை ஊக்கத்தோடு செய்கிறவர்களுடைய) மதம் :

மற்றொருவன் (கர்மவாதி) இந்த க்ஷேத்ரம் முற்றிலும் ஜீவனைச் சேர்ந்தது என்றும், அதில் நடந்தேறவேண்டிய கார்யங்களுக்கு நிர்வாஹகனாய், அவன் ப்ராணனை ஏற்படுத்தி வைத்தான் என்றும், அந்த ப்ராணனுடைய வீட்டில் அவன் தம்பிகள் நால்வர்கள், (அபானன், வ்யானன், உதானன், ஸமானன்) அவனுக்கு ஸகாயமாய் வேலைசெய்து கொண்டிருக்கிறார்கள் என்றும், மனஸு என்பவன் இந்த்ரியங்கள் என்னும் எருதுகளைக் கொண்டு, ராத்ரிப்பகல் என்று பாராமல், ஸதா விஷயம் என்றும் பூமியை மிக்கக் கஷ்டப்பட்டு உழுகிறான் என்றும், அப்படி உழுதபின், அவன் விதிக்கப்பட்ட கர்மங்களைத் தகுந்த காலங்களிற் செய்யாது தவிர்ந்து போகவிட்டு, நிஷித்தகர்மங்கள் என்னும் விதையை விதைத்துப் பயிர்செய்வானே யாகில், அதற்குத் தக்கபடி, எதிர் பார்க்காத அளவு, பாபம் விளைந்து, அதின் பலனாய்க் கோடிக்கணக்கான ஜந்மங்களில் ஜீவன் துக்கத்தை அனுபவிக்கிறான் என்றும், அந்த மனஸென்பவன், அப்படிச் செய்யாது, விதிக்கப்பட்ட காலம், தவறாது ஸத்கர்மங்கள் என்னும் விதையை விதைப்பானே யானால், கோடிக்கணக்கான ஜந்மங்களில் ஜீவன் ஸுகத்தையே புசிக்கிறான் என்றும், சொல்கிறான்.

ஸாங்க்யன் மதம் :

அப்போது மற்றொருவன் (ஸாங்க்யன்) பின்வருமாறு சொல்கிறான். இது உண்மையல்ல; இந்த க்ஷேத்ரம்

ஜீவனைச்சேர்ந்ததென்று சொல்லக்கூடாது; இதின் விஷயம் அனைத்தையும் எங்களைக் கேட்டறிந்து கொள்ள வேண்டும். கவனித்துப்பாருங்கள், தன் வழியே நடந்து போகவேண்டிய, ஜீவன் இதில் கொஞ்ச காலம் தங்கி இருக்கிறான். இதில் ப்ராணன் காவற்காரனானதால், அவன் எப்போதும் விழிப்பா யிருக்கிறான். ஸாங்க்யர்களால் அநாதியென்று கொண்டாடப்பட்ட ப்ரக்ருதி என்பவள் எவளோ, அவளுக்கு இந்த க்ஷேத்ரம் ஸொந்தமானது, என்று நிச்சயமாய் அறிய வேண்டும். அவள் வீட்டில் வேண்டுமென்ற பரிவாரங்கள் இருப்பதால், அந்த க்ஷேத்ரத்தின் வ்யவஸாயம் முழுவதும் அவள் வீட்டிலுள்ளவர்களைக் கொண்டே நடந்தேறி வருகிறது. இந்த ஸ்ருஷ்டி உண்டானது முதல், வ்யவஸாயம் செய்கிறவர்களுக்குள், தலைமை பெற்றவர்களான முக்குணங்களும், இவள் வயிற்றிற் பிறந்தவர்களே. எதெதை ரஜோகுணம் வதைத்து வைக்கிறதோ, அதை ஸத்வகுணம் பாதுகாத்து, தமோகுணம் தான் ஒண்டியாகவே அறுவடை செய்துவைக்கிறது. அப்படி அறுவடை செய்த தனைத்தும், மஹத்தத்வம் என்ற களத்தில் ஒன்று சேர்க்கப்பட்டு, எல்லாவற்றையும் மிதித்துத் துகைத்து விடும், காலன் என்னும் எருதால் துகைக்கப்பட்டு, அவ்யக்த மென்னும் பெருத்த குவியல் ஏற்படுகிறது.

ஸங்கல்பவாதியின் மதம் :

இதற்குள் இவ்விஷயத்தைத் தானே அறிந்தவன் என்று பாவித்த மற்றொருவன், (ஸங்கல்பவாதி) இவ்வார்த்தைகளை ஒப்புக் கொள்ளதாதவனாய், எழுந்திருந்து பின்வருமாறு சொல்கிறான். ஓய் ஸாங்க்யரே உம்முடைய இம்மதம், புதிதாய் ஏற்பட்ட தாயிருக்கிறது. பரதத்வ விசாரணையில் ப்ரக்ருதிக்கு எங்கே இடம் இருக்கிறது? இந்த க்ஷேத்ரத்தின் வரலாற்றை நான் சொல்வேன்; வாய்திறவாது கேட்டுக் கொண்டிரும். மஹா சூந்யம் என்னும் படுக்கையறையில் மஹாலயம் என்னும் பரப்பின் ஸாதித்து வைக்கும் திறமையுள்ள ஸங்கல்பம் என்பவன் தூங்கிக் கொண்டிருந்து, அகஸ்மாத்தாய் விழித்துக் கொண்டான். அவன் ஆரம்பித்த வேலைகளை யெல்லாம் மிக்க ஊக்கத்துடன் செய்கிறவனாகையால், அவன் இஷ்டாநுஸாரமாய் அவனுக்கு ஓர் பெருத்த நிதி கிடைத்தது. நிராலம்பமான (ஒன்றோடும் பற்றதலில்லாத) வஸ்துவின் ஸ்வரூபத்தில் மறைந்து கிடந்த முவ்வுலகாகிய ஓர் பெருத்த பூமியானது, அவன் முயற்சியால் வெளிப்பட்டு நின்று, அவன் அதீனமாயிற்று.

பின்பு அவன் ஐந்து பூதங்களையும் ஒன்றோடொன்று கலந்து, அவற்றைக் கொண்டு, இதுவரைக்கும ஸொந்தக்காரன் ஒருவனுமில்லாமல் தரிசாய்க்கிடந்த அப்பூமியைச் சுற்றிலும், வேலி போட்டு, நால்வகைப்பட்ட (உத்பிஜம் (விதையினின்று முளைக்கின்றவை), ஸ்வேதஜம் (வியர்வையினின்று உண்டாகியவை) அண்டஜம் (முட்டையினின்று உண்டாகின்றவை, ஜராஜம் (கருப்பையினின்று உண்டாகின்றவை); ஆக நால்வகை ஜீவராசிகள்) ஜீவராசிகளை அதற்குள் பரப்பி வைத்தான். பின்பு அவ்வைந்து பூதங்களையும் பிளந்து, அவற்றிற்குள் அவ்வைந்து பூதங்களின் குணங்களாகிய சப்தம்; ஸ்பர்சம், ரூபம் ரஸம், கந்தம், என்ற ஐந்தையும், அவன் புகட்டி வைத்தான். பின்பு கர்மாகர்மங்கள் என்னும் குண்டுக் கற்களைக் கொண்டு ஓர்கரை ஏற்படுத்தி, கர்மங்கள் விளையும் பூமியாகிய மனுஷ்ய ஜாதியினின்று, இதர ப்ராணி ஜாதிகளை, கர்மங்கள் விளையாத களர்பூமி என்று, மனுஷ்ய ஜாதியின் இருப்பக்கத்திலும், அவன் வகுத்து வைத்து, பின்பு ஓர் வகுப்பினின்று மற்றோர் வகுப்புக்குப் போவதற்கும் வருவதற்கும், ஜந்மமரணங்கள் என்ற ஆதாரமில்லாத சுரங்கமார்க்கங்களை அழகாய் நிர்மித்து வைத்தான். பின்பு அகங்காரத்தையும் புத்தியையும் ஆயஸ்ஸுள்ளளவும் ஒன்றுபட்டு வாழச் செய்து, புத்தியைக் கொண்டு சராசரம் முழுவதையும், அவனே பயிர் செய்து வைத்தான். இப்படி நிராலம்பமான வஸ்துவில், ஸங்கல்பம் என்னும ஓர் போத்து வெடித்து, இவ்வளவு பெரிதாய் வளர்ந்தது. ஆகையால் இந்த ப்ரபஞ்சம் முழுவதுக்கும் மூலம் ஸங்கல்ப மென்பவனே.

ஸ்வபாவவாதியின் கொள்கை :

இவ்வாறு தன் மதத்தை ஸங்கல்பவாதி ப்ரகடனம் செய்யவே, இதற்கு ப்ரதிகக்ஷியாய் ஸ்வபாவவாதி பின் வருமாறு சொல்கிறான். ஐயா ஸங்கல்பவாதியே, நீர் எவ்வளவு புத்திசாலியாய் இருக்கறீர்! பரதத்வத்தின் ஊரில், நீர் ஸங்கல்பத்துக்கு ஓர் படுக்கையை கற்பித்தீரே அந்த ஸங்கல்பத்தையே ப்ரக்ருதி என்றெண்ணிக் கொள்ளக் கூடாதோ? ஆனால் ஸாங்க்யனும் ஸங்கல்பவாதியுமாகிய நீங்களிருவரும், உங்கள் மதத்தைக் கைப்பிடித் திருக்க வேண்டாம். நான் இந்த க்ஷேத்ரத்தின் உண்மைமுழுவதையும், இதோ வெளியிடுகிறேன், கேளுங்கள். ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் மேகங்களில் நீரே நிரப்பிவைத்தவன் எவன்? அந்தரிக்ஷத்தி நக்ஷத்திரங்களைத் தாங்கிக்கொண்டிருக்கிறவன் எவன்? ஆகாசம் என்னும் போர்வையை எவன் விரித்து, எப்போது போர்த்துவைத்தான்? எவனுடைய உத்தரவினால்

வாயு ஸதா அலைந்து திரிந்து கொண்டிருக்கிறான்? எவன் விதை விதைத்து, சரீரத்தில் மயிரை முளைக்கச் செய்தான்? ஸமுத்ரத்தை எவன் நிரப்பிவைத்தான்? மழையை தாரைதாரையாய் பெய்ய செய்தவன் எவன்? இவை தாமாகவே அமைந்தன போலும், இந்த க்ஷேத்ரமும் இயற்கையாகவே ஏற்பட்டது. இது, ஒரு வருக்கும் ஸொந்தமானதல்ல. எவன் இதில் பாடுபடுவானோ அவன் லாபம் அடைவான்; மற்றவன் லாபமடையாமல், நஷ்டப்பட்டுப் போவான்.

காலவாதியின் மதம் :

அப்போது காலவாதி கோபங்கொண்டு, மிக்க ஆத்திரத்தோடு இவ்வாறு சொன்னான். இப்படி இருக்கும் பக்ஷத்தில், ஏன் இந்த க்ஷேத்ரம் கால னொருவனுக்கே ஆஹாரம் ஆய்விடுகிறது. இக்காலனுடைய வேகத்தை, எவரும் எதிர்த்து நிற்கமுடியாமல் இருப்பதை அறிந்தும், ஏன் இப்படி அவரவர்கள் தங்கள் தங்கள் கொள்கையில் பூர்ண விச்வாஸம் பாராட்டுகிறார்களோ, தெரியவில்லை; இந்த ம்ருத்யுவானவன் ஸிம்ஹத்தின் குகைபோல் அதிபயங்கரமானவன் என்றறிந்தும், இப்படி மனம் போனபடியெல்லாம் வ்யர்த்தமாய் உளறி, என்னத்தை ஸாதிக்கப் போகிறார்கள்! மஹாகல்பத்தையும் தாண்டி, அப்புறம் இருக்கும் ஸத்யலோகத்தையும், அதில் வஸிக்கும் உத்தம ஜீவராசிகளையும், அவுக் கென்று ஓர் கவ்வாய்க் கவ்வி, வாயிற் போட்டுக்கொண்டு, இவன் மென்று விடுகிறான். ஸ்வர்க்க லோகம் என்னும் காட்டிற் புகுந்து, புதிது புதிதாக உண்டாகும் லோக பாலகர்களையும், கூட்டம் கூட்டமாக திக்கஜங்களையும், நாசம் செய்து விடுகிறான்; இப்படிப்பட்ட மிக்க வலிமை படைத்த இவன், தேஹத்தின் காற்றுப் பட்ட மாத்ரத்தில், இதர அல்பப்பராணிகள் நிர்ஜீவர்களாய், ஜந்மமரண மென்னும் சுழலிற்சிக்கி, ஸதா சுழன்று கொண்டிருக்கிறார்கள். இவன் தன் கைவிரல்களை விரித்தால், உருவம் படைத்தவைகள் அனைத்தும், இவன் விஸ்தாரமான அகங்கைக்குள் அகப்பட்டு, ஸிம்ஹத்தின் கைப்பட்ட யானைபோல் மடிந்து போகின்றன. ஆகையால் க்ஷேத்ரம் என்பது இந்தக்காலனுக்கே ஸ்வதந்த்ரமான தென்பது, முடிவான வார்த்தை.

உபஸம்ஹாரம் :

இப்படி ஹே அர்ஜுநா, இந்த க்ஷேத்ரத்தின் விஷயமாய்ப் பலவிதமான கொள்கைகள் ஏற்பட்டு, ருஷிகள்

நைமிசாரண்யத்தில் வாதப்ரதிவாதங்கள் செய்து, தங்கள்தங்கள் மதங்களைப் புராணங்களில் எழுதிவைத்தார்கள். மற்றும் சிலர் தங்கள் கவிதா ஸாமர்த்யத்தைக் கொண்டு, மற்றும் வேறு மதங்களை அநுஷ்டுப் முதலிய வ்ருத்தங்களா லமைந்த வேறுவேறு நூற்களைச் செய்து வைத்தார்கள். உத்தமஞானம் அடங்கியுள்ள தென்று உலகத்தாரால் கொண்டாடப் பெற்ற ப்ருஹத்ஸாமங்கூட, இதின் உண்மையை அறிய வில்லை. மஹாகவிகளுங்கூட இதின் விஷயமாய்த் தங்கள் புத்தியைச் செலுத்தி, இந்த் க்ஷேத்ரம் எவ்வகைத்தென்றும், எவ்வளவு பருத்ததென்றும், எவனைச் சேர்ந்த தென்றும், நிச்சயமாய் அறியாமற் போனார்கள். ஆகவே இந்த க்ஷேத்ரத்தின் உண்மை எப்படி இருக்கிற தென்று, ஆதியோடந்த மாக நான் சொல்வேன், கேள்.

महाभूतान्यहंकारो बुद्धिरव्यक्तमेव च ।
इन्द्रियाणि दशैकं च पञ्च चेन्द्रियगोचराः ।। ५ ।।
इच्छा द्वेषः सुखं दुःखं संघातश्चेतना धृतिः ।
एतत्क्षेत्रं समासेन सविकारमुदाहृतम् ।। ६ ।।

மஹாபூதான்யஹங்காரோ புத்திரவ்யக்த மேவ ச ।
இந்த்ரியாணி தஶைகம் ச பஞ்ச சேந்த்ரியகோசராः ।। 5

இச்சா த்வேஷः ஸுகம் துக்கம் ஸங்காதஶ் சேதனா த்ருதிः ।
ஏதத் க்ஷேத்ரம் ஸமாஸேன ஸவிகார முதாஹ்ருதம் ।। 6

க்ஷேத்ரம் எவற்றால் அமைந்தது :

மஹா பூதங்கள் ஐந்து, அஹங்காரம் ஒன்று, புத்தி ஒன்று, அவ்யக்தம் ஒன்று, இந்த்ரியங்கள் பத்து, மனது ஒன்று, இந்த்ரிய விஷயங்கள் பத்து, இச்சாத்வேஷங்களிரண்டு, ஸுகத்துக்கங்கள் இரண்டு, ஸங்காதம், சேதகை, த்ருதி மூன்று, ஆகிய இம்முப்பத்தாறும் சேர்ந்தது க்ஷேத்ரமாகும். இனி மஹாபூதங்கள், இந்த்ரியங்கள், விஷயங்கள் முதலியவை, எவை யென்று தனித்தனியாய்ச் சொல்வேன்.

மஹாபூதங்கள் :

ப்ருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம், ஆகிய இவ்வைந்து மஹா பூதங்கள் ஆகும்.

அஹம்காரம் :

விழித்திருக்கு மவஸ்தையில் ஸ்வப்நங்களும், அமாவாஸ்யையில் சந்திரனும், ப்ருவமடையதா சிறுவர்களிடத்தில் தாருண்யமும், பூக்காத அரும்பில் வாஸநையும், கட்டையில் நெருப்பும், மறைந்து கிடப்பது போல், ப்ரக்ருதியின் வயிற்றில் அஹம்காரம் மறைந்து கிடக்கும். சரீரத்தில் தாதுசதமாய், தலையெடுக்காமல் உள்ளடங்கிக் கிடக்கும் ஜ்வரமானது, அபத்யாஹாரம் உட்கொண்டதே காரணமாக வெளிப்பட்டு, சரீரமெங்கும் உள்ளும் புறமுமமாக வ்யாபித்துக்கொள்வது போலும், ஐந்து பூதங்கள் சேர்ந்து, தேஹம் ஒன்று உண்டான உடனேயே, அது வரைக்கும் மறைந்து கிடந்த அஹம்காரம், அந்த தேஹம் எங்கும் வ்யாபித்துக் கொண்டு, அதை நாலு பக்கமும் அலைந்து திரிந்து ஆடச்செய்துவைக்கும். இந்த அஹம்காரத்தின் வ்ருத்தாந்தம் மிக்க விந்தையாயிருக்கும். இது அஞ்ஞாநிகளை விசேஷமாய்த் தொந்தரவு செய்யாமல், ஞாநிகள் கழுத்தையே கட்டிக்கொண்டு, அவர்களை அநேக ஸங்கடங்களில் மாட்டிவைக்கும்.

புத்தி :

புத்தி என்பது எதுவென்றும், அதை எந்த லக்ஷணங்களால் தெரிந்துகொள்ள வேண்டும் என்றும், சொல்வேன் கேள். காமம் பொங்கி வ்ருத்தியடையும் போது, ஜீவன் இந்த்ரியவ்ருத்திகளைத் தனக்கு ஸகாயமாய்க் கூட்டிக்கொண்டு, விஷயஜாதங்களை அபஹரித்துக் கொண்டுவந்து, அவற்றைப் புசிக்கும் காலத்தில், அவன் அப்படிப் புசிப்பதால் ஏற்படும் ஸுகத்துக்கங்களில் ஸுகம் அதிகரித்ததா, துக்கம் அதிகரித்ததா என்றும், இது ஸுகம் இது துக்கம் என்றும், இது புண்யம், இது பாபம் என்றும், இது சுத்தமானது, இது அசுத்தமானதென்றும், இது உத்தமம், இது அதமம் என்றும், இது பெரியது, இது சிறியது என்றும், ஜீவன்நிர்ணயித்துக் கொள்வதற்கு உதவியாய் இருந்து கொண்டு, ஞாநதத்வத்துக்கு மூலகாரணமாயும், ஸத்வ குணத்தின் பெருக்காயும், ஆத்மஸ்வரூபமும் ஜீவஸ்வரூபமும் ஸந்திக்கும் இடத்தில் குடிகொண்டதாயும், இருக்கும் எதுவோ, அதுவே புத்தி யென்று நன்றாய் அறிந்துகொள்.

அவ்யக்தம் :

இனி அவ்யக்தத்தை எந்தக் குறியைக் கொண்டு அறிந்து கொள்ளலாமோ, அதைச் சொல்வேன் கேள். ஹே மஹாமதி,

ஸாங்க்யர்களுடைய மதத்தில், எது ப்ரக்ருதி என்று சொல்லப்படுகிறதோ, அதுவே இங்கு அவ்யக்த மென்று சொல்லப்படுகிறது. மேலும் ஸாங்க்யர்கள் கொள்கையை அநுஸரித்து ப்ரக்ருதியை இருவகைப் படுத்தி உனக்கு விவரித்துக் காட்டிய இடத்தில், இரண்டாவதாகச் சொல்லப்பட்ட ஜீவபூத ப்ரக்ருதி இங்கே அவ்யக்தம் என்று மாறு பெயரிடப்பட்டுச் சொல்லப்படுகிறது. போது விடிந்ததும், நக்ஷத்ரங்கள் மறைந்து போவது போலும், ஸூர்யன் அஸ்தமித்ததும், ஜீவராசிகளின் வ்யாபாரங்கள் ஓய்ந்து போவது போலும், ஒருவன் இறந்தபின் தேஹம் முதலிய உபாதிகள் அனைத்தும் அவன் செய்த கர்மத்திற்குள் அடங்கிப் போவதுபோலும், விதைக்குள் மரம் முழுவது மடங்கிப் போவது போலும், வஸ்த்ரம் என்னும் அவஸ்தை நூல் என்பதற்குள் அடங்கிக் கிடத்தல் போலும், மஹா பூதங்களும் மற்ற பூத ஜாதங்களுமம, தங்களுடைய ஸ்தூலாவஸ்தையை ஒழித்துக் கொண்டு, ஸூக்ஷ்மாவஸ்தை அடைந்து, எதில் லயப்படுகின்றனவோ, அது அவ்யக்தம் என்றறி.

இந்த்ரியங்கள் :

இனி வேறுவெறான இந்த்ரியங்கள் விஷயமாய்ச் சொல்ல வேண்டியதைச் சொல்வேன் கேள். காது, கண், தோல், மூக்கு, நாக்கு, இவ்வைந்தும் ஞானேந்த்ரியங்களாகும். இவ்வைந்தையும் ஐந்து முகங்களாய்ச் செய்து கொண்டு, புத்தி ஸுகத்துக்கத்தின் விசாரம் செய்கிறது. வாக், கை, கால், மலமூத்ரவிஸர்ஜநத்வாரம், ப்ரேஜோத்பத்திக்கு ஸாதனமான இந்த்ரியம், இவ்வைந்தும் கர்மேந்த்ரியங்களாகும்; இவை, ப்ராணனுடைய மனைவியாகிய க்ரியாசக்தி வெளிப்பட்டு, உள்ளே புகுந்துகொள்வதற்கு, ஏற்பட்ட த்வாரங்கள் ஆகும்.

மனது :

இனி, மனது இப்படிப்பட்டது என்று ஸந்தேஹமறத் தெரிந்து கொள்ளும்படி, சொல்வேன் கேள். இது புத்தியும் இந்த்ரியங்களும் ஸந்திக்கு மிடத்தில், ரஜோ குணத்தின் தோளின் மேல் உட்கார்ந்துகொண்டு, அசைந் தாடிக் கொண்டிருக்கும். ஆகாசத்தின் நீலகாந்தி போலும், கானல் ஜலத்தின் அலைகள் போலும், உண்மையற்ற தோற்றமாயிருக்கும் வாயுதத்வத்தின் ஸ்புரணமே மனஸாகும். சுக்லமும் சோணிதமும் கலந்து, ஐந்து பூதங்களாலமைந்த தேஹம் ஏற்பட்டவுடன், ஓரே வாயுதத்வம், ப்ராணவாயுக்கள் ஐந்து, உபப்ராணவாயுக்கள் ஐந்து என்று, இப்படி பத்து

வகைப்பட்டு, தேஹத்தின் பல இடங்களில் நடக்க வேண்டியவையான பலவகை வேலைகளையும் நடத்தி வைப்பதற்காகத் தமக்குத் தமக்குரித்தான ஸ்தாநங்களில் அப்பத்து வாயுக்களும் நிலைகொண்டன. அப்போது வாயுதத்வத்தின் சாஞ்சல்யம் என்பது, தனித்துப் பற்றில்லாமல் மிகுந்து போய், ரஜோ குணத்தின் பலத்தை துணையாகக் கொண்டு, புத்திக்கு வெளியில், அஹம்காரத்தின் மார்பின் மேல் நிலைகொண்டு, வலிமைபெற்ற மனது என்று ஓர் பெயர்படைத்ததே தவிர, மற்றப்படி அது உண்மை யில்லாத ஓர் கல்பனையே ஆகும். அதின் ஸம்பந்தத்தால், பரவஸ்துவான ஆத்மாவுக்கு, ஜீவதசை ஏற்படுகிறது.

இது கர்த்ருத்வத்துக்கு மூலகாரணமாய், காமத்துக்கு ஸஹாயம் செய்து கொண்டு, ஓய்வொழி வில்லாமல் அஹம்காரத்தை தொந்தரவு செய்து கொண்டே இருக்கும். இச்சையை வ்ருத்தி செய்து கொண்டு, ஆசையை உயர உயரப் பறக்கச் செய்து கொண்டு, பயத்துக்கு அநுகூலமாயிருக்கும். அது த்வைதபாவத்தை உண்டாக்கி, அவித்யையைத் தடிக்கச்செய்து, இந்த்ரியங்களை விஷயங்கள் நடுவில் உருண்டு விழச்செய்யும். அது தன்னுடைய ஸங்கல்பத்தால் ஸ்ருஷ்டியை உண்டு பண்ணி வைத்து, உடனே விகல்பத்தால் அதை அழித்து, மனோரதங்களை ஒன்றின்மேல் ஒன்றாய் அடுக்கி வைத்து, பின்பு அவற்றைக் கலைத்துத்தள்ளும், இது அறிவுகேடு நிறைந்த ஓர் குஹை; வாயுதத்வத்தின் கர்ப்பத்தில் உள்ள வைரமாய் இருந்து கொண்டு, புத்தி வெளிப்பட்டு வேலை செய்ய முடியாதபடி, அதை உள்ளேயே அடைத்து வைக்கும். இது தான் அப்பா, நிஸ்ஸந்தேஹமாய் மனஸ் என்று சொல்லப்படுகிறது.

விஷயங்கள் :

இனி விஷயங்கள் எவை ஒன்று வகுத்துச் சொல்வேன் கேள். ஸ்பர்சம், சப்தம், ரூபம், ரஸம், கந்தம், என்ற ஐந்தும், ஞாநேத்ரியங்கள் ஐந்துக்கும், விஷயங்கள் ஆகும். ஞானேந்த்ரியங்களாகிய ஐந்து த்வாரங்கள் வழியாய் ஞானம் வெளிப்பட்டு, பச்சைப்யிரின்மேல் மாடு விழுவதுபோல், இவ்வைந்து விஷயங்களின்மேல் விழுகின்றது. அக்ஷரங்களின் உபசாரம், கொடுக்கல் வாங்கல், நடத்தல், ஆண் பெண் புணர்ச்சி, மலமூத்தரவிஸர்ஜநம், ஆகிய இவை கர்மேந்த்ரியங்களின் விஷயங்கள். இவ்வைந்து விஷயங்களை படிக்கட்டாய்க் கொண்டு, க்ரியாசக்தி சரீரத்தினின்று

வெளிப்படுகிறது. இப்படிப் பத்து விதமான விஷயங்களும் சொல்லப்பட்டுத் தீர்ந்தன.

இச்சாத்வேஷங்கள் :

இனி இச்சை என்பது இன்னதென்று, சொல்வேன் கேள். முன் அநுபவிக்கப்பட்டது ஞாபகத்துக்கு வந்தவுடனே, அல்லது அதின் பெயர் காதில் பட்டவுடனே, உண்டாகும் மனோவ்ருத்தியாய் இருந்துகொண்டு, இந்த்ரியங்களுக்கும் விஷயங்களுக்கும் ஸந்தி ஏற்படும்போது, காமத்தின் கையைப் பிடித்துக்கொண்டு, எழுந்திருந்து, உடனேயே மனஸை அங்குமிங்கும் அலையச்செய்து. அதை ப்ரவேசிக்கக் கூடாத விஷயங்களில் தலையை நுழைக்கச் செய்து, தன்னுடன் ஸ்நேஹம் பாராட்டின புத்திக்கு பைத்யம் பிடித்துப்போகும்படி செய்து வைப்பதான. விஷயங்களின் மேல் ஏற்படும் ருசிக்கு, இச்சை என்று பெயர். அப்படி மனஸில் இச்சை ஏற்பட்ட உடனே, ஆசைப்பட்ட விஷயபோகம் கிடைக்காமற் போனால், அப்போது ஏற்படும் மனோவ்ருத்திக்கு, த்வேஷம் என்று பெயர்.

ஸுகம் துக்கம் :

இனி ஸுகம் என்பது இன்ன தென்று சொல்வேன், கேள். ஸுகம் என்ற ஒன்று கிடைத்துப் போன மாத்ரத்தில், ஜீவன் மற்ற அனைத்தையும் மறந்து போவான். இது உண்டானவுடனே, மனோவாக்காயங்களாகிய முக்கரணங்களின் வ்ருத்திகள் ஒடுங்கிப் போய், தேஹத்தோடு கூடி இருக்கும் இருப்பு மறந்து போகிறது. இது தலையெடுத்த மாத்ரத்தில், ப்ராணனுடைய சக்தி குன்றிப் போய், ஸாத்விக வ்ருத்தி இரட்டிக்கும். அன்றியும் இது இந்த்ரிய வ்ருத்திகள் அனைத்தையும் ஹ்ருதயத்தில் ஒடுங்கச் செய்து, அவற்றைத் தட்டிக் கொடுத்துத் தூங்கச் செய்யும். சுருக்கிச் சொல்வோமாகில், ஜீவனுக்கு ஆத்மாவோடு சேரக் கிடைக்கும் போது ஏற்படும் அநுபவத்துக்கு, ஸுகம் என்று பெயர். இப்படிப் பட்ட அவஸ்தை கிடைக்காமல் இருக்கும் வாழ்வு எதுவோ, அது தான் ஸகல விதமாயும் துக்கம் என்றறி. எப்போ தெல்லாம் மனோரதங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்குமோ, அப்போதெல்லாம் ஸுகம் இராது. மனோரதங்கள் அற்றுப் போவதும். வர்த்தித்துக் கொண்டிருப்பதுமே, ஸுகதுக்காநு பவங்களுக்குக் காரண மாகும் என்றறி.

சேதனை :

பற்றற்றதாய் ஸாக்ஷிபூதமாய் இருக்கும் சைதந்யம் என்னும் ஆத்மஸ்வரூபம், தேஹத்தில் நிலைபெற்று, செய்து கொண்டிருக்கும் அதிகாரமே, சேதனை என்று சொல்லப்படும். இது கைகால்களின் நகங்கள் முதற்கொண்டு, தலைமயிர் வரைக்கும் உள்ள, தேஹம் எங்கும் வ்யாபித்து, எப்போதும் விழிப்பாகவே இருந்து கொண்டு, ஜாக்ரத்ஸ்வப்நஸுஷுப்தி என்னும் மூன்றவஸ்தைகளிலும், மாறுபாடு அடையாது ஒரே விதமாய் இருந்து கொண்டிருக்கும். மனது புத்தி முதலியவை அனைத்தும், இதினுடைய ஸாந்நித்யத்தால் சுருசுருப் படைந்து விளங்கும்; இது ப்ரக்ருதி, அதின் கார்யங்கள், என்ற வனத்துக்கு வஸந்தருது வாகும்; இது ஜடவஸ்துக்களிலும் ஞானம் பொருந்திய வஸ்துக்களிலும், ஸமமாகவே வ்யாபித்துக் கொண்டிருக்கும். அப்பா இது தான் சேதனை யென்று உனக்குண்மையைச் சொன்னேன். அரசனை அவன் ஸேனைகள் பார்க்காதிருந்த போதிலும், அவன் ஆஞ்ஞையை முன்னிட்டு, சந்திரனுடைய ப்ரகாசத்தால் ஸமுத்ரம் பொங்குவதுபோலும், அயக்காந்தத்தின் ஸாமீப்யத்தால் இரும்பு இருந்த இடம் விட்டு, அக்காந்தத்தோடு சேர்ந்துகொள்ள நகர்ந்து வருவது போலும், ஸூர்யன் உதயமான உடன், ப்ராணிகள் தங்கள் தங்கள் வ்யாபாரங்களைச் செய்யத் தொடங்குவது போலும், ஆமை தன் குஞ்சுகளின் வாயில் தன் முலையினின்று பாலை ஊட்டி வைக்காமலேயே, தன் கண்பார்வையால் அவைகளைப் போஷிப்பதுபோலும், இந்த சரீரத்துக்கு ஆத்மாவின் ஸம்பந்தம் ஏற்பட்டு, ஜடமான பூதங்கள் முதலாய் விஷயங்களீறாய் கீழ்ச்சொல்லப்பட்டுள்ள அனைத்தும், உயிருள்ளவை ஆகின்றன. இப்படிச் செய்து வைக்கும், ஆத்மஸம்பந்தத்துக்குச் சேதனை என்று பெயர்.

த்ருதி :

இனி த்ருதி என்பதின் விவரத்தைக் கவனித்துக் கேள். தத்வங்கள் பலவகைப்பட்டிருப்பதால், இவை அனைத்தும் இயற்கையாக பரஸ்பரம் பகை பாராட்டிக்கொண்டிருக்கின்றன. ப்ருதிவியை ஜலம் நாசம்செய்கிறது. ஜலத்தைத் தேஜஸ்ஸு வற்ற அடிக்கிறது. தேஜஸ்ஸைக் கண்டு, வாயு எப்போதும் பகை பாராட்டி நிற்கிறது. வாயுவை ஆகாசம் விழுங்கிவிடுகிறது. அப்படியே, ஆகாசம் ஒருக்காலும் எந்த வஸ்துவோடும் ஒன்று பட்டுப்போகாமல், எந்த வஸ்துவுக்குள்ளும் புகுந்திருந்தும்,

தனித்தே நிற்கிறது. இப்படி இவ்வைந்து பூதங்களும் ஒன்றின் கூட்டுறவை ஒன்று ஸஹித்காதவையாயிருந்தும், அவைகளே இந்த தேஹத்தில் ஐக்யப்பட்டு வாழ்கின்றன. பகையின் பேச்சையே ஒழித்துக் கொண்டு, ஓரிடத்திற் சேர்ந்திருந்து, தங்கள் தங்கள் சக்திகளைக் கொண்டு ஒன்றுக்கொன்று உதவி செய்துகொண்டு, எந்த தைர்யத்தின் கார்யமாய், அவை இப்படி ஒத்துவாழ்கின்றனவோ, அதற்கு த்ருதி என்று பெயர்.

ஸங்காதம் :

ஜீவாத்மாவோடு இம்முப்பத்தாறு வாத்மா தத்வங்களும் சேர்ந்திருக்கை, ஸங்காதம் என்று சொல்லப்படும்.

இவை முப்பத்தாறும் சேர்ந்தது க்ஷேத்ரம் :

இப்படி விவரமாய் எடுத்துச் சொல்லப்பட்டவையான முப்பத்தாறு தத்வங்கள், அனைத்தும் சேர்ந்து, க்ஷேத்ரம் என்று சொல்லப்படும். ஓரிரதத்தின் அவயவங்களனைத்தையும் ஒன்று சேர்ந்து, ரதம் என்று சொல்வது போலும், இடுப்பின் கீழும் மேலுமாய் உள்ள அவயவங்களனைத்தையும் சேர்த்து, தேஹம் என்று சொல்வதுபோலும், நால் வகைப்பட்ட அணிகளையும் சேர்த்து, ஸேனை யென்று சொல்வது போலும் அக்ஷரங்களை யொன்று சேர்த்து வாக்யமென்று சொல்வது போலும் – மேகங்களின் கூட்டத்தை மப்பு என்று சொல்வது போதும், உலகங்களை ஒன்றாகச் சேர்த்து, ஜகத் என்று சொல்வது போலும், எண்ணெய் வத்தி நெருப்பை ஓரிடத்தில் சேர்த்து, தீபம் என்று சொல்வது போலும் இம்முப்பத்தாறு தத்வங்களும் ஒன்று பட்டு சேர்ந்திருந்தால், அந்த சேர்க்கைக்கு க்ஷேத்ரம் என்று பெயர். ப்ராணிகள் அனைவரும் இதைக்கொண்டு அநேக விதமான கர்மங்களைச் செய்வதால், இதில் பாபபுண்யங்கள் விளைகின்றன, என்னும் ஓர் அபிப்ராயத்தை மனதிற் கொண்டு, இதை க்ஷேத்ரம (பயிர் செய்யும் பூமி) என்றேன் சிலர் இதை தேஹம் என்பர். ஆனால் இது நிற்கட்டும். இதற்குப் பல பெயர்கள் உண்டு. பரதத்வத்தை உத்பத்திஸ்தாநமாய்க் கொண்டு, ஸ்தாநங்கள் பர்யந்தமாய் உண்டாய் அழிந்து போகும் அனைத்தும் க்ஷேத்ரமே ஆகும். ஆனால் தேவர்களென்றும், மனுஷ்யர்கள் என்றும், நாகர்களென்றும், பல விதமான பிறப்புகள், ப்ராணிகளின் குணகர்மங்களின் வித்யாஸங்களை அநுஸரித்து, ஏற்படுகின்றன. இந்த குணங்களைப் பற்றிய விசாரம் மேலே செய்வேன். இந்த ஸந்தர்பத்தில் ஞானமின்னதென்று நிரூபணம் செய்வேன்.

ஞானத்தின் பெருமை :

க்ஷேத்ரமும் அதின் விகாரங்களும், இன்னவை யென்று விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டு, முடிவு பெற்றன வாகையால்,இனி ஸர்வலாபத்தையும் செய்து கொடுக்கும் ஞானம் இன்ன தென்று சொல்வேன் கேள். இந்த ஞாநத்தை ஸம்பாதித்துக்கொள்வதற்காக, யோகிகள், தங்கள் வழியில் குறுக்கிடும் ஸ்வர்க்க ஸுகத்தை ஓர் தடையாய் மதித்து, அதை ஒதுக்கிவைத்து, யோகாப்யாஸம் செய்து ப்ரஹ்மரந்த்ரத்தில் இருக்கும் ஆகாசத்தை விழுங்கிக் கொண்டு, ருத்திஸித்திகளின் மேல் லக்ஷ்யம் வைக்காமல், யோகாப்யாஸத்தின் கஷ்டங்களை அல்பமாய் எண்ணுகிறார்கள்; சிலர் ஸாதிப்பதற்கு அதிதுஷ்கரமான தபஸ்ஸை அநுஷ்டிக்கிறார்கள்; சிலர் கர்மகாண்டத்தில் சொல்லப்பட்ட யஜ்ஞங்களைச் செய்து முடித்து, கர்மம் என்னும் கொடியை மேல்கீழாகப் புரட்டிவைக்கிறார்கள்; இதற்காக, சிலர் பஜ்ஞை மார்க்கத்தில் இறங்குகிறார்கள்; சிலர் துணி உடுத்தாமல் திரிகிறார்கள்; சிலர் ஸுஷும்நை என்னும் நாடியில் நுழைந்து, ஸமாதியில் அழுந்திக் கிடக்கிறார்கள், இந்த ஞானத்துக்காக மிக்க ஆசைப்பட்டு, முனீச்வரர்கள் வேதம் என்னும் மரத்தின் இலைகளை யெல்லாம் திருப்பி திருப்பி பார்த்து, அதை தேடிக் கொண்டிருக்கிறார்கள்;

குருஸேவை செய்து ஞானத்தைப் பெறவேண்டுமெ என்ற, உத்தேசத்தைக் கொண்டு, சிலர் குருஸேவையில் நூற்றுக்கணக்கான ஜந்மங்களை ஒழிக்கிறார்கள் இந்த ஞானம் கிடைத்த மாத்ரத்தில், அது அவித்யை என்பதைப் போக்கி, ஜீவனையும் ஆத்மாவையும் சேர்ந்து வாழச்செய்து கொடுக்கும். அது இந்த்ரியங்களின் த்வாரங்களை அடைத்து வைத்து, ப்ரவ்ருத்தி யென்பதை நடைபெறாமற்செய்து, மனஸில் தைந்யம் என்பது இல்லாமற் செய்துதரும். எவனுக்கு ஞானம் ப்ராப்தமாயிற்றோ, அவனுக்கு த்வைதம் என்னும் துஷ்காலம் (பஞ்சம்) விடிந்துபோய், அத்வைதபாவம் என்னும் ஸுபிக்ஷம் (செழிப்பு) ஏற்பட்டு நிலைபெறும். அது மதம் என்பதை இருந்த இடம் தெரியாமல் துடைத்து, மஹாமோஹ மென்பதை நிச்சேஷமாய் விழுங்கிவிட்டு தான் பிறன் என்னும் பேச்சே இல்லாமற் செய்துவைக்கும். அது ஸம்ஸாரத்தை வேரோடு பிடுங்கி எறிந்து விட்டு, ஸங்கல்பம் என்னும் சேற்றை முற்றிலும் கழுவித் துடைத்து, கட்டியணைக்க முடியாததான பரப்ரஹ்மவஸ்துவை கட்டியணைத்துக் கொள்ளும்.

எந்த ப்ராணனுடைய ஸத்தையினால், ஜகத்தெல்லாம் சேஷ்டிக்கின்றதோ, அந்த ப்ராணனுடைய சக்தி இந்த ஞான முண்டான மாத்ரத்தில் ஒடுங்கிப்போகும். அதின் ப்ரகாசத்தால் புத்தியின் கண்கள் நன்றாய் விரிவடைந்து, ஜீவன் ஆநந்தப்பெருக்கில் விழுந்து, அதில் ஸதா புரண்டுகொண்டிருப்பான். பலவிதமான மலங்கள் பற்றிக்கிடக்கும் மனஸு, பவித்ரதை, (சுத்தம் செய்து வைக்கும் தன்மை) முழுமைக்கும் இருப்பிடமான இந்த ஞானத்தின் ஸம்பந்தத்தால், பரிசுத்த மாய்விடும். இந்த ஞானத்தின் ஸாந்நித்யத்தால், ஆத்மாவுக்கு ஏற்பட்ட ஜீவபாவனை என்னும் க்ஷயரோகம் முற்றிலும் தீர்ந்து போகும்.

ஞானத்தின் இருப்பை அதின் லக்ஷணங்களால் அறிய வேண்டும் :

அந்த ஞானத்தை நிரூபணம் செய்வது கூடாமையாயிருந்தும், அதை நிரூபிப்பேன், கேள். அப்படி நான் நிரூபிப்பதைக் கேட்டு, அதை அறியக்கூடுமே தவிர, அது கண்ணாற்பார்க்கத் தக்கதல்ல. ஆனால் அது ஒருவனுக்கு ஏற்பட்டு, எப்போது அவன் சரீரத்தில் தன் ப்ரபாவத்தை வெளியிடுமோ, அப்போது அவன் இந்திரியங்களின் வ்யாபாரங்களைக்கொண்டு, அதின் இருப்பைக் கண்ணாற் பார்க்க முடியும். எப்படி வஸந்த ருதுவின் தொடக்கத்தை, செடிகளின் விசேஷித்த சோபையானது தெரிவிக்குமோ, அப்படியே இந்த்ரியங்கள், தங்கள் வ்யாபாரங்களால், ஞானத்தின் இருப்பை எடுத்துக் காட்டும். அப்பா, மரத்தின் கீழே வேரில் வார்த்த ஜலத்தை, அதின் கிளை நுணிகளின் சோபை காட்டித்தரும்;

பூமியின் மார்த்தவத்தை, முளையின் தளதளப்புக் காட்டிக்கொடுக்கும்; ஒருவன் நன்னடத்தை, அவன் உத்தமகுலத்தில் பிறந்தவன் என்பதை வெளியிடும்; ஆதரிக்க வேண்டு மென்னும் பரபரப்பின் ஆதிக்யத்தால், மனதில் இருக்கும் ப்ரேமை வ்யக்தமாகும்; ஒருவன் புண்ய புருஷன் என்பதை, அவன் தர்சனத்தால் உண்டாகும் நன்மையே எடுத்துக்காட்டும்; கர்ப்பூரவாழையில் கர்ப்பூரம் உண்டாயிருக்கிறதென்பதை அதின் வாஸனை வெளியிடும்; கண்ணாடி, அடைப்புக்குள் தீபம் வைக்கபட்டால், அதின் வெளிச்சம் வெளிப்பட்டு, அத்தீபத்தைக் காட்டிக் கொடுக்கும்; அப்படியே ஹ்ருதயத்தில் ஞானம் ஏற்பட்டதற்குக்குறியாக, தேஹத்தில் சில லக்ஷணங்கள் ஏற்படும்; அவற்றைச் சொல்வேன், நன்றாய்க் கவனித்துக் கேள்.

अमानित्वमदम्भित्वमहिंसा क्षान्तिरार्जवम् ।
आचार्योपासनं शौचं स्थैर्यमात्मविनिग्रहः ।।७।।

அமாநித்வமதம்பித்வ மஹிம்ஸா க்ஷாந்தி ரார்ஜவம் ।
ஆசார்யோ பாஸனம் ஶௌசம் ஸ்தைர்ய மாத்ம விநிக்ரஹ: ॥ 7

(1) அமாநித்வம் :

ஞானம் உள்ளவனுக்கு, தான் எதையும் ஸாதித்து வைக்கத் திறமை யுள்ளவனா யிருக்கை, என்பது ருசிக்காது. இதரர்களால் கொண்டாடப்படுவது அவனுக்குத் தாங்கமுடியாத சுமையாய்த் தோன்றும், அவனிடத்தில் உண்மையாய் இருக்கும் பெருமையை எடுத்து வர்ணித்தாலும், அவனை ஓர் பெருமை உள்ளவனாய் பஹுமதித்தாலும், அவனுக்கு ஓர் பெருமை ஏற்படுவதா யிருந்தாலும், வேடனால் தகைக்கப்பட்டமானைப் போலும், வேகமான பெருவெள்ளத்தில் விழுந்து கையால் நீந்திப்போகிறவன், பெருத்த சுழலில் அகப்பட்டுப்போனாற்போலும், அவன் திகைத்துப்போய், ஸந்மானத்தைக் கண்டு ஸங்கடப்பட்டு, எவ்விதமான பெருமையும் தன்னிடம் வந்து சேர ஒட்டான். பூஜ்யதை என்பது தன் கண் முன் வர அவன் ஸம்மதிக்கமாட்டான்; தன் கீர்த்தி தன் காதிற்பட ஸஹியான்; தானின்னானென்றே உலகத்தா ரறியக்கூடாதென் றிருப்பான். அப்படியான பின், அவனுக்கு ஸத்காரங்கள் செய்து, அவனைப் பிறர் ஆதரவுடன் உபசரிப்பது என்பது, எப்படி நேரும்? அவனுக்கு நமஸ்காரம் செய்யப்போனால், அதைக் கண்டு அவன் மரணமே நேரிட்டாற்போலும் நடுங்குவான். அவன் ப்ருஹஸ்பதிக்கு ஸமானமாய் ஸர்வஜ்ஞனாயிருந்தும், தனக்குப் பெருமை ஏற்படுமென்று பயந்து, பைத்யக்காரர்களோடு பைத்யக்காரனாய்க் கிடந்தொழிவான். அவன் தன் புத்தி சாதுர்யத்தை மறைத்து வைத்து, பெருமையை நாசம் செய்துகொண்டு, மிக்கப் பிரியத்துடன் பைத்யக்கார வேஷம் பூண்டு திரிவான்.

உலகத்தில் பெருமை அடைவதைக் கண்டு நடுங்கி, சாஸ்திரஞான விஷயத்தில் வெறுப் படைந்து, ஒன்றும் செய்யாமல் விழுந்து கிடப்பதே அவனுக்கு ருசித்திருக்கும். உலகத்தார் தன்னை அவமானப்படுத்தி வைத்தலும், உறமுறையார் தன்னை ஒதுக்கிவைத்தலும், இவ்விதப்பட்ட மற்ற மானக்கேடுகளும், தனக்குக் கிடைக்க வேண்டுமென்றே, அவன் மிக்க ஆசைப்படுவான்; மிக்கத் தாழ்மை பூண்டவனாய்,

தான் எதைச்செய்தால், தனக்கு உலகத்தார் மதிப்பில் குறைவு ஏற்படுமோ, அதையே பெரும்பாலும் செய்துகொண்டிருப்பான். அவன் உயிர்த்திருக்கிறானோ இல்லையோ என்றும், அவன் நடந்து போகிறானோ, காற்று தான், அவனை அடித்துக் கொண்டு போகிறதோ என்றும் உலகத்தார் ஸந்தேஹிக்கும்படி, உலகில் இருந்து வாழ்நாளை ஒழித்து விடவேண்டுமென்று, ஆசைப்பட்டவனாய், அவன் இருப்பான். தன் இருப்பே உலகத்தாருக்குத்தெரியாமற் போக வேண்டுமென்றும், தன் பெயரும், உருவமும் ஒருவர் மனதில் நிலைபெறாமற் போக வேண்டுமென்றும் "என்னைக் கண்டால், ஏதேனும்ப்ராணி பயப்படுமாகையால், நான் ஸதா மறைந்து கிடந்தே காலந்தள்ளுவேன்," என்று ஓர் ப்ரதிஜ்ஞை செய்துகொண்டவனைப் போல், மனுஷ்ய ஸஞ்சார மில்லாத இடத்தில் வஸிக்க வேண்டு மென்றும், எண்ணி ஏகாந்தத்தையே அவன் தேடித்திரிவான். காற்றே அவன் கூட்டாளி ஆகும்; அவன் ஆகாசத்தோடு ஸம்பாஷணை செய்வான்; மரங்கள் அவன் உயிர்த் தோழர்கள் ஆகும். இன்னும் வளர்ப்பதென்? இவ்வகை லக்ஷணங்களை எவனிடத்திற் பார்ப்பாயோ, அவன் அமாநித்வம் படைத்தவ னென்றும், அவனே ஞாநம் படுத்திருக்கும் படுக்கை யாவானென்று மறிந்துகொள்.

(2) அதம்பித்வம் :

இனி அதம்பித்வம் இன்னதென்று தெரிந்துகொள்ளும்படி, அதின் ஸாரமான லக்ஷணங்களைச் சொல்வேன், கேள். எப்படி லோபியானவன், தன் உயிர்போவதாயிருந்தாலும், தான் புதைத்துவைத் திருக்கும் பொருளைப் பிறருக்குக் காண்பிக்கானோ, அப்படியே ஞானமடைந்தவன், தனக்கு ப்ராணன் போவதாயிருந்தாலும், தான் செய்ததான ஓர்நன்மையை, பிறருக்கு வெளிப்படுத்தி வைக்கமாட்டான். உதைக்கும் ஸ்வபாவமுள்ள துஷ்டமாடு, தான் சுரந்த பாலை எக்கிக் கொள்வதுபோலும்; விலைமாதர்கள் தங்கள் மூப்பை மறைத்துக்கொள்வது போலும், திருடர்கள் ஸஞ்சரிக்கும் காட்டில் சிக்கிக் கொண்ட பணக்காரன், தான் செல்வம்படைத்தவன் என்பதை, மறைத்துக் கொள்வதுபோலும், பயிரிடுகிறவன் தான் விதைத்த விதைகளை மூடிவைப்பதுபோலும், தன்னிடத்தினின்று ஏற்பட்ட தானங்களையும் மற்ற புண்யங்களையும், அவன் மறைத்து வைப்பான்.

அவன், தன் தேஹத்துக்கு, உபசாரங்கள் செய்துகொள்ளான்; உலகத்தாருக்கு ரஞ்சகமாக நடந்துகொள்ள வேண்டுமென்றாசைப்படான்; தான் செய்த நன்மைகளை, தன் நாக்கென்னும் த்வஜத்தில் எழுதி வைத்து ப்ரகடனம் செய்யான்; தான் செய்த பரோபகாரங்களை எடுத்துப் பேசான்; தான் கற்ற கலைகளைப் பிறரறிய வேண்டுமென்று விரும்பான்; தான் தேடிக்கொண்ட நன்மைகளை கீர்த்திக் காசைப்பட்டு விற்கமாட்டான். அவன் தன் சரீரத்தைப் போஷிக்கும் விஷயத்தில், பிறருக்கு மஹா க்ருபணனாய்த் தோன்றி, தர்ம விஷயங்களில் கணக்குப் பார்க்காமல் தன் பொருளைச் செலவிடுவான், வீட்டில் அன்ன வஸ்திரத்துக்கு மிக்க ஸங்கடமாயிருக்கும்; அவன் தேஹம் மிக்க இளைத்துப்போயிருக்கும்; ஆனால் பிறருக்கு தானம் செய்யும் விஷயத்தில் கல்பதருவோடு போட்டி போடுவான். வளர்த்தில் சொல்வதென்?

ஸ்வதர்மானுஷ்டானத்திற் சிறந்தவனாய், தக்க ஸமயங்களில் உதாரனாய், ஆத்ம ஞான விசாரத்தில் கைதீர்த்தவனாய் இருந்துகொண்டு, உலகத்தாருக்கு ஐபத்யக்காரனாய்க் காணப்படுவான். வாழை மேற்பார்வைக்கு மிக்க மெல்லியதாய்த்தோன்றி, ரஸமுள்ளதும் புஷ்டியுள்ளதுமான பெருத்த குலையைத் பழுத்துத் தருவதுபோலும், மேகம் மிக்க இலேசாய், காற்றின் முன் பறப்பதாய் இருந்தும், மிக்கக் கனத்த தாரைகளைப் பொழிவதுபோலும், மனஸு ஸந்தோஷப்படும்படி ஸம்பூர்ண்னாய் இருந்து, வெளிப்பார்வைக்கு கொடுமையான தாரித்ரியத்துக்கு வாஸஸ்தானமாய், அவன் தோற்றுவான். இப்படிப்பட்ட லக்ஷணங்களின் நிறைவே அதம்பித்வம் ஆகும்; இது எவனிடத்தில் காணப்படுமோ, அவன் ஞானம் உள்ளவன் ஆவான்.

(3) அஹிம்ஸை :

இனி அஹிம்ஸையின் லக்ஷணங்களைக் சொல்வேன் கேள். ஆனால்அதை பற்பலர், அவரவர்கள் மதங்களுக்கு அனுகூலமாக, பலவிதமாய்ச் சொல்கிறார்கள். ஆனால் அவை அனைத்தும், ஓர் மரத்தின் கிளைகளை வெட்டி அடிக்கட்டைக்கு வேலி கட்டி வைப்பதுப் போலும், ஒருவன் பசியைத் தீர்த்துவைப்பதற்காக, அவன் கையை வெட்டி, அதையே சமைத்து, அவனுக்கு உணவிடுவதைப் போலும், கோவிலை யிடித்து, ஸ்வாமிக்குச் சுற்றுப்ராகாரம் கட்டி வைப்ப்பதைப் போலும், இருக்கின்றன.

யாஞ்ஞிகர்கள் கொள்கை :

யாஞ்ஞிகர்கள், முதன் முதல் ஹிம்ஸையைச் செய்து, பின்பு அஹிம்ஸையை உண்டாக்கிவைக்க வேண்டும், என்று சொல்வார்கள். மழை பெய்யாமல் உலகத்தார் படும் துன்பத்தைப் போக்குவதற்காக, அவர்கள் பர்ஜந்யேஷ்டிகள் என்று, பலயாகங்களைச் செய்யத் தொடங்கி, ப்ரத்யக்ஷமாய்ப் பசுஹிம்ஸை, செய்தல் என்னும் வெள்ளத்தில் மூழ்கி, பின்பு அஹிம்ஸை என்னும் அக்கரையைக் காண்பார்களாம். அது எப்படியோ, எனக்குத் தெரியவில்லை. விதைப்பதோ வடித்தெடுத்த ஹிம்ஸை. அதினின்று அஹிம்ஸை என்பது எப்படிப் பயிராகும்? இந்த யாஞ்ஞிகர்களுடைய குண்டிதைர்யம் மிகவும் ஆச்சர்யகரமா யிருக்கிறது.

ஆயுர்வேதிகள் மதம் :

ஆயுர் வேதம் முழுமையும், ஓர் ஜீவனை காப்பாற்றுவதற்காக, மற்றோர் ஜீவனைக் கொல்லலாம், என்ற இவ்வழியையே பிடித்துக் கொண்டு, செல்கிறது. ப்ராணிகள் அநேகவிதப்பட்ட நோய்களால் துடிதுடித்துப்போவதைப் பார்த்து, அந்நோய்களை தீர்க்க, அவர்கள் சிகித்ஸை செய்யத் தலைப்பட்டு, ஒன்றின் கிழங்கைத் தோண்டி எடுத்து, ஒன்றை இலையோடும் வேறோடும் பிடுங்கி, நாசம் செய்து, ஒன்றை இருதுண்டாக முறித்து, ஒன்றின் பட்டையை உரித்துக் கொள்வார்கள்; தொண்டைக்கதிராய் இருக்கும் சிலவற்றை நெருப்பில் வேகவைத்து எடுப்பார்கள். அவர்கள், ஒருவருக்கும் தீங்கு செய்யாத உத்தம வ்ருக்ஷங்களின் சரீரமெங்கும் ஆயுதங்களாற் கொத்தி, அவற்றின் உயிராகிய பாலை இறக்கிக் கொண்டு, அவற்றைக் காய்ந்து போகச் செய்வார்கள். ஜங்கமங்களாகிய ப்ராணிகளைக் கூடப் பிடித்து, அவற்றின் பித்த நீர் முதலியவற்றை இறக்கிக் கொண்டு, இதர ஜீவர்களுடைய நோயைப் போக்குவார்கள்.

மற்றும் சிலர் கொள்கை :

சிலர், ஜநங்கள் குடியிருக்கும் வீடுகளை இடித்து, கோவில் கட்டுவார்கள். சிலர் வ்யாபாரம் செய்து, ஜநங்களை வஞ்சித்து, அந்நஸத்ரம் ஏற்படுத்தி வைப்பார்கள். இடுப்பை நக்நம் செய்து, தலைக்குப் பாகை சுற்றி, அதை அலங்கரிப்பது போலும், வீட்டை இடித்து முன் கொட்டகை போட்டுக் கொள்வது போலும், போர்வையைக் கொளுத்தி, குளிர்காய்வது போலும், யானைக்கு ஸ்நாநம் செய்து வைப்பது போலும், மாட்டை

விற்று விட்டு, கொட்டில் கட்டுவது போலும், கிளியை விற்று விட்டு, அதற்குக் கூடு கட்டி வைப்பது போலும், சிலருடைய அஹிம்ஸை இருக்கும். இவை ஞானபூர்வமாக செய்யும் கார்யங்களா, அல்லது குரங்கு முதலிய அறிவில்லா ஜந்துக்களின் சேஷ்டைகளா, என்று பார்க்கும் போது எனக்கு சிரிப்பே உண்டாகிறது.

ஒருவன் (ஜைநன்) தன் ஸம்ப்ராதாயதர்மத்தைக் காப்பாற்றிவைக்கக் கருதி, நீரை வடிகட்டின துணியைப் பிழிந்து, அதற்குள் அகப்பட்டிருக்கும் ப்ராணிகளைக் கொல்கிறான். சிலர் ஹிம்ஸை ஏற்படுமே· என்று பயந்து, தான்யங்களை சமைக்காமல், பச்சையாய் சாப்பிடுகிறார்கள். அதினால் அவர்கள் ப்ராணன் கஷ்டப்பட்டுப் போகிறதே. அது ஹிம்ஸை ஆகாதோ? வேதத்தின் கர்மகாண்டத்தில், ஹிம்ஸையே அஹிம்ஸை என்று, இவ்விதம் ஸித்தாந்தம் செய்திருக்கிறார்கள், என்று நீ தெரிந்து கொள். அஹிம்ஸை என்பதின் பெயரை, நான் எடுத்த போதே, உலகில் அஹிம்ஸை யென்று வழங்கும் இவை யெல்லாம்,அஹிம்ஸை யாகா வென்று, உனக்குப் பிரித்துக் காட்ட கருதி, இவ்விஷயத்தில் இவ்வளவு சொல்லும்படி நேர்ந்தது; ஹேகிரீடி, இல்லாவிடில் வழி தெரிந்தவன் தெரியாதவனைத் தப்பு வழிகளில் இழுத்து அலைக்கழிப்பதில், ப்ரயோஜநம் என்ன? அன்றியும், ஓர்மதத்தை ஏற்படுத்தி வைக்கக் கருதினவன், குறுக்கிட்ட வையான அந்ய மதங்களை விவரித்து, அவற்றைக் கண்டிப்பது அவச்யம் தானே. இப்படிச் செய்வதுதான், ஸத்விசாரத்தின் முறை.

அஹிம்ஸையின் உண்மையான லக்ஷணம் :

இனி உண்மையாய் அஹிம்ஸை என்பது எது வென்று, என்கொள்கையோ, அதை நிரூபிப்பேன், அப்படிப்பட்ட அஹிம்ஸை ஒருவனிடத்தில் ஏற்பட்டால், அவனிடத்தில் ஞான முண்டாய் இருக்கிறதென்று, நன்றாய்த் தெரியவரும். தங்கத்தின் மாற்று உரைகல்லில் உரைப்பதால் தெரியவருவது போலும், இந்த அஹிம்ஸை ஒருவனிடத்தில ஏற்பட்டிருக்கிற தென்பது, அவன் ஒழுக்கத்தால் தெரியவரும்.

கால்களின் ஸஞ்சாரத்தால் அஹிம்ஸை வெளிப்படும் விதம் :

கொக்கு தன் இரையின் மேல் லக்ஷ்யம் வைத்து, ஜலத்தில் அலைகளைத் தாண்டாமலும் பேதிக்காமலும், ஜலத்தை

கலக்காமலும், எப்படி வேகமாயும் லாகவமாயும் ஜலத்தில் நடந்துபோகுமோ, எப்படி தேனீயானது தாமரைப்பூவின் கேஸரங்கள் கலங்கிப்போகுமோ என்று பயந்து, அப்பூவின் மேல் மிக்க மெதுவாய்த் தன் பாதங்களை வைக்குமோ, அப்படியே அஹிம்ஸாபரன் பரமாணுவிற் கூட, அதற்கும் சின்னவையான ஜீவராசிகள் மறைந்து கிடந்து நாசமடையுமே, என்று பயந்து, அடிவைப்பது தெரியாதபடி கருணையுடன் மெதுவாய் அடிவைத்து, நடந்து போவான். தான் போகுமிடமெல்லாம் க்ருபையாலும் ப்ரேமையாலும், நிரப்பிவைத்து, எவ்வுயிர்க்கும் தன்னுயிரைக் கீழ்ப்பரப்பாய் பரப்பிவைப்பான். இவ்வளவு ஜாக்ரதையாய் நடக்கும் இவனுடைய ஜீவகாருண்யத்தின் பெருமையை வர்ணித்துத் தீராது. மிக்க ப்ரேமையுடன், தாய்ப் பூனை தன் குட்டிகளை ஓரிடம் விட்டு வேறோரிடம் கொண்டு போகும் போது அதின் பற்களின் நுணியானது குட்டிகளின் தேஹத்தில் எவ்வளவு மெதுவாய்ப் பதியுமோ, அவ்விதமாயும், குழந்தையினிடத்தில் அதிப்ரேமை பாராட்டிய தாய், எவ்வளவு ப்ரேமையுடன் குழந்தையை நோக்குவாளோ, அவ்விதமாயும், தாமரைப் பூவை கண் முன் வீசும்போது, அதின் இதழ்களால், உண்டாகிய காற்று விழிக்கு எவ்வளவு ஸுககரமா யிருக்குமோ, அவ்விதமாயும், பூமிமேல் தன் பாதங்களை மெல்ல வைத்து நடந்து போவான்.

இவ்வளவு இலேசாய்ப் பூமிமேல் அடிவைத்து நடந்து போகும் போது, அவன் பாதம் ஏதேனும் ஓர் ஜீவன்மேல் பட்டால், அதற்கு மிக்க ஸுக முண்டாகும். இப்படி லகுவாய் அடிவைத்துப் போகும்போது, அவன் கண்ணுக்கு, புழு பூச்சி யேதேனும் தென்பட்டால், பரபரப்பின்றி அமரிக்கையாய் அடியைப் பின் வாங்குவான். பரபரப்பாய் பாதத்தைப் பின் வாங்கினால், அந்தராத்மாவில் நித்ரைசெய்யும் ஸ்வாமியாகிய ஸர்வேச்வரனுடைய நித்ரை குலைந்து போய், அவருடைய அமரிக்கை கெடுமே, என் றெண்ணி, ஓர் ஜீவனையும் மிதிக்காமல் மெல்லப் பின் வாங்குவான். புல் கூட ஓர் ஜீவனென் றெண்ணி, அதை மிதித்துச் செல்லான் என்றால், ஏதேனும் ஒன்றை அவமதித்துச் செல்வதென்பது அவனிடத்தில் எப்படி அமையும்? ஓர் சிற்றெரும்பு மேருபர்வதத்தின் மேல் ஓர் காலை வைத்து, அதை மற்றோர் காலால் தாண்டிப் போக முடியாதது போலும், கொசுவானது ஸமுத்ரத்தைக் கடந்து செல்ல முடியாதது போலும், குறுக்கிட்ட ப்ராணியைத் தாண்டிப்போக, அவன் அறியான்.

அஹிம்ஸையின் வாசிக லக்ஷணம் :

இப்படி அவனுடைய ஸஞ்சாரம் க்ருபையால் நிறைந்திருந்து, அவனுடைய வாக் எப்படி இருக்குமென்றால், தயை என்பதே அவனுடைய வாக்கு என்னும் உருவம் தரித்து, உலகில் வாழ்வு பெற்றதெனவேண்டும். அவனுடைய மூச்சுக்காற்று இதரர்களுக்குத் துன்பம் கொடுக்காவண்ணம், அதி ம்ருதுவாயும், வாயானது உந்மாதங் கொண்ட ப்ரேமைக்குப் பிறந்த வீடாயும், பற்கள் மாதுர்யத்தின் முளைகள் போலும், இருக்கும். முன் ப்ரேமை ஒழுகும், பின்பு அக்ஷரங்கள் வெளிப்படும்; க்ருபை முற்பட்டதாய், சப்தம் பின்னால் உண்டாகும். அவன் பேசுவதே அருமை. வாய் திறந்து பேசினால், அது எவர் மனதிலாவது தைத்துத் துக்க முண்டாக்குமோ, மிதம் மிஞ்சி வார்த்தைகள் உண்டாய், எவனுடைய மர்மத்திலாவது தாக்குமோ, எவனுக்காவது சங்கை உண்டாகுமோ, எவனுடைய உத்தேசமாவது கெட்டுப் போகுமோ, எவனுக்காகவது பயம் உண்டாய், அவன் நடுவில் எழுந்து போகும்படி நேருமோ, எவனாவது கேட்டு ஒத்துக்கொள்ளாது அவமதிப்பானோ, எவனுக்காவது துக்கம் நேரிடுமோ, எவனாவது திடுக்கிட்டு, தன்னை நோக்குவானோ, என்று இப்படி யெல்லாம் எண்ணி, அவன் பேசாமல், இருப்பான்.

பின்பு எவர்களாவது அவனை ப்ரார்த்தித்துக் கொண்டதினாலாவது, முன்னிருப்பவர்கள் மேல் ப்ரேமை உண்டானதினாலாவது, அவன் பேசத்தொடங்கினால், கேட்கிறவனுக்குத் தாய் தகப்பன்மார் போலும், நாதப்ரஹ்மமே உருவெடுத்து வந்தாற் போலும், கங்கையின் ஜலம் பெருகி வந்தாற் போலும், பதிவ்ரதையான பெண்பிள்ளைக்கு மூப்புண்டான்னாற்போலும், யாதாத்ம்ய முள்ளவையாயும், ம்ருதுவாயும், பரிமிதப்பட்டவையாயும், ரஸம் நிறைந்தவையாயும், அம்ருதத்தின் அலைகளைப் போன்றனவாயும், சப்தங்கள் அவன் வாயினின்று வெளிப்படும். விரோத பாவத்துடன் உரத்து வாதம் செய்தல், ஜீவர்களுக்கு ஸந்தாபம் உண்டு பண்ணுதல், பரிஹஸித்து நோகச்செய்தல், வர்மங்களில் தைத்தல், மனஸை ஏங்கச் செய்தல், விரைந்து பேசல், தந்தரமாய்ப்பேசி ஏமாற்றுதல், ஆசை பாராட்டிப் பேசுதல், ஸந்தேஹித்தல், வஞ்சித்தல் இவ்வகையான அவகுணங்கள் முற்றிலும் அற்றவையாய், அவன் வார்த்தைகள் இருக்கும்.

அஹிம்ஸையால் ஏற்படும் பார்வையின் லக்ஷணம் :

அவ்விதமாகவே, ஹே கிரீடி, அவனுடைய பார்வை சாஞ்சல்ய மற்றதாய், புருவம் நெரியாமல், இயல்பாகத் தளர்ந்திருக்கும். கடுந்து பார்த்தால் எல்லா ப்ராணிகளுக்குள்ளும் இருக்கும் பரவஸ்துவுக்கு துக்கமுண்டாகுமோ, என்றெண்ணி, பெரும்பாலும் எந்த ப்ராணியையும் நிமிர்ந்து உற்றுப் பாரான். இப்படி இருக்கும் போது, எப்போதாவது உள்ளே நிறைந்திருக்கும் க்ருபையின் பெருக்கால், கண்ணைத் திறந்து பார்த்தானே யானால், சந்திரபிம்பத்தினின்று பெருகும் அமருததாரை யானது கண்ணுக்குப் புலப்படாமல் இருந்து, சகோரத்தின் வயிற்றை நிரப்பிவைப்பது போலும், அவனால் பார்க்கப்பட்ட ப்ராணிகள் ஸந்தோஷத்தை அடையும். அவன் பார்வையில் இருக்கும் போஷக சக்தி, ஆமைக்கு (ஆமை தன் குஞ்சுகளைத் தன் பார்வையிலேயே போஷிக்கும்) ஒரு நாளும் ஏற்பட்ட தில்லை.

அஹிம்ஸையால் ஏற்படும் கைகளின் வ்யாபாரம் :

இப்படி, எவனுடைய பார்வையில், இவ்வளவு கருணை நிறைந்திருப்பதாய்ப் பார்ப்பாயோ, அவனுடைய கைகளின் வ்யாபாரங்களும் அப்படியே தான் இருக்கும். தான் ஸாதித்துக் கொள்ள வேண்டிய தனைத்தையும் ஸாதித்துக் கொண்ட ஓர் ஸித்தன், எப்படி ஆசையற்றவனா யிருப்பானோ, அப்படியே ஞானத்தை அடைந்து விட்டமையால், அஸிம்ஸை பாராட்டி இருப்பவன் கைகள், ஓர் வ்யாபாரமும் அற்றிருக்கும். கைகால்களை அசைக்கும் சக்தியே இல்லாதவன், ஓர் வேலையும் செய்வதில்லை யென்று, வ்ரதம் பூண்டாற் போலும், பற்றி எரிவதற்கு விறகு முற்றிலுமற்றுப்போய் அணைந்து போன நெருப்பைப் போலும், அவனுடைய கைகளில் செயல் என்பது முற்றிலும் அற்றுப் போய் இருக்கும்.

கைகள் காற்றைத் தாக்கி, அது அசையும்படி யாகுமே என்றும், ஆகாசத்தின் மேலீ நகம்பட்டு, அதற்குக் காயம் உண்டாகுமே என்றும் பயந்து, கைகளை அசைய ஒட்டான். தேஹத்தின் மேல் உட்கார்ந்த ஈமுதலிய வற்றை ஓட்டல், கண்ணுக்குள் நுழையும் எரும்பு முதலியவற்றை துடைத்தல், பசுபக்ஷிகளுக்குக் கையை ஓங்கி பயமுற்றுத்தல், அல்லது அதற்காக ஓர்கொம்பைக் கையில் ஏந்தல், முதலிய அல்பமான ஹிம்ஸாவ்யாபாரங்களே ருசிக்காமல் இருக்க, சஸ்த்ரத்தை கையில் ஏந்துபவ தென்பது எப்படி நேரும்? லீலார்த்தமாய்க் கையால் தாமரைப் பூவை ஆட்டினாலும், பூவைக்கொண்டு, செண்டாடினாலும், அது

கவண்டிக்கல் போல் எதின் மேலாவது தாக்கி, துக்கம் உண்டாக்கும் என்று பயந்து, அப்படிச் செய்யான். கையால் ஓர் ஜந்துவின் தேஹத்தைத் தடவிக் கொடுத்தால், மயிர்க்கால்கள் கூசுமே என்று தடவமாட்டான். வளர்ந்த நகத்தை வெட்டினால், ஏதேனும் ஹிம்ஸை உண்டாகும் என்று, நகங்களை வளரவிட்டே இருப்பான்.

இப்படி ஒன்றும் கைகளால் செய்யா தொழிந்து, ஸமயம் ஏற்படும் போது கைகளைக் கூப்பமட்டும் கூப்புவான்; அல்லது பயந்தவர்களுக்கு அபயங்கொடுக்க, கையைத் தூக்குவான், கீழ் விழுந்தவர்களைத் தூக்கி விடுவான், நோயினால் வருந்துகிறவர்கள் சரீரத்தை மெதுவாய்த் தடவிக் கொடுப்பான். இப்படிப்பட்ட வேலைகளைச் செய்வதும், மிக்கப்ராயஸ பூர்வமாய் இருக்கும். ஆனால் இப்படிச் செய்து அவன் துக்கிதர்களின் துன்பங்களைப் போக்குகையில், இருக்கும் நேர்மை, சந்திர கிரணங்களுக்குத் தெரியாது. அவன் பசுக்களை ஸுகமாய்த் தடவிக்கொடுத்தால், அந்த ஸ்பர்சத்தின் மார்த்தவத்தின் முன், மலயாநிலம் கரடுமுரடானது என்று சொல்லும்படியாய் இருக்கும். ஸர்வாங்கமும் சீதளமாயிருக்கும் சந்தநமரம், பழங்கள் பலிக்கா திருந்தும் நிஷ்பலமாகாதது போலும், அவன் கைகள், ஓர் வேலையும் செய்யாதிருந்தும், நிஷ்பலமாகாமல், ஸர்வஜீவராசிகளுக்கும் ஸுகத்தை விளைவிக்கும். இவ்வளவு வளர்த்திச் சொல்வது அவச்ய மன்று, ஸாதுக்களின் சீலமும் ஸ்வபாவமும் எப்படி இருக்குமோ, அப்படியே அவன் கைகள் இருக்கும்.

அஹிம்ஸை பாராட்டுகிறவனுடைய மனஸின் லக்ஷணம் :

இனி அவனுடைய மனஸின் லக்ஷணங்களை விசாரிப்போம். ஆனால் இதுவரையில் சொல்லிக்கொண்டு வந்தவை, எதின் லக்ஷணங்கள் ஆகும்? கிளை, மரம், அல்லவா? ஜலம் இல்லாமல் ஸமுத்ரம் என்று தனித் தொன்றிருக்கிறதா? தேஜஸ்ஸும் ஸூர்யனும் வேறு வேறானவையா? சரீர மென்பதும் அவயவங்க ளென்பதும் வேறான வஸ்துக்களா? ரஸமும் ஜலமும் வேறுபட்டவைகளா? ஆகையால் இதற்கு முன் சொன்ன, வெளிப்படையான அவயவ வ்யாபாரங்களின் லக்ஷணங்களனைத்தும், அவ்வயவங்களோடு கூடிய மனஸின் லக்ஷணங்கள் என்றே அறியவேண்டும். எந்த விதை பூமிக்குள் ஊன்றி வைக்கப்பட்டதோ, அதுவே செடியாய்

வெளிக்கிளம்புகிறது. அப்படியே உள்ளிருந்த பாவம் தானே, இந்த்ரியங்கள் வழியாய் வெளிப்படுகின்றது. மனஸில் அஹிம்ஸையே ஏற்படாது போனால், அது வெளியில் என்னமாய்த் தோற்றி நிற்கும். ஹே கிரீடி, எந்த வ்ருத்தி யானாலும் ஸரியே, அது முதலில் மனதில் உண்டாய், பின்பு இந்த்ரியங்கள் வழியாய் வெளிப்பட வேண்டும். எங்கே யாவது விதையில்லாமல் முளை உண்டாகுமா? ஆகையால் மனஸின் வேலை எப்போ தோய்ந்ததோ, அப்போதே, கயிற்றால் ஆட்டப்படும் பொம்மை, கயிற்றைப் பிடித்தாட்டி வைக்கிறவன் இல்லாதுபோனால், ஆடாததுபோலும், இந்த்ரியங்கள் ஒன்றும் செய்யா தொழியும். உத்பத்தி ஸ்தானத்திலேயே நீர் இல்லாமற்போனால், நதியில் நீர் எப்படி ஓடும்? ப்ராணன் போனபிறகு தேஹம் ஆடுமா? அப்படியே இந்த்ரிய வ்யாபாரங்க ளனைத்துக்கும் மனஸே காரணமாயிருந்து, இந்த்ரியங்களை ஆட்டிவைக்கிறது.

எந்த வேளையில் எது உள்ளே நிறைந்திருக்குமோ, அது தானே வெளிப்பக்கத்தில் வழியும். நன்றாய்ப் பழுத்த பழத்தினின்று, அதின் வாஸனை வெளிப்பட்டு, நான்கு பக்கத்திலும் பரவுகிறது போலும் மனஸில் அஹிம்ஸை வலுவாய் ஏற்பட்டபின், இந்த்ரியங்கள் அஹிம்ஸையின் வ்யாபாரத்தை வெளியில் நடத்தி வைக்கின்றன. ஸமுத்ரத்தில் ஜலம் பொங்கினால், அந்த ஜலமே குடாக்களில் நிரம்பும். அப்படியே சித்தமானது தன்னிடத்தில் நிறைந்திருப்பதை, இந்திரியங்களிடத்திற் பகுத்து வைக்கிறது. இத்தனையும் நிற்கட்டும், ஓர் சிறுவன் கையைப்பிடித்து, உபாத்யாயன் அக்ஷரங்களை ஸரியாய் எழுதி வைப்பது போல், மனஸு தன் இடத்தில் நிறைந்திருக்கும் தயையைக் கொண்டுவந்து, கைகால் முதலிய இந்த்ரியங்களில் வைத்து, அவற்றைக்கொண்டு, வெளிப்படுத்தி வைக்கிறது. ஆகையால் இந்த்ரியங்களி னஹிம்ஸாலக்ஷணவிவரணமே, மனஸின் அஹிம்ஸா லக்ஷணவிவரண மாயிற்றென்றறி. இப்படி மனஸாலும் சரீரத்தாலும் வாக்காலும், தண்டம் என்பது முற்றிலும் துறக்கப்பட்டதாய் எவனிடத்தில் காணப்படுமோ, அவனையே ஞாநம் கொண்டாடி, அவனிடத்தில் குடிகொண்டிருக்கும். அவனை ஸம்பூர்ணமான ஞானி யென்றே சொல்லவேண்டும். எந்த அஹிம்ஸையைக் காதாற் கேட்போமோ, எதை க்ரந்தங்களில் வர்ணிக்கப்பட்டதாய் வாசிப்போமோ, அதை ப்ரத்யக்ஷமாய்ப் பார்க்க வேண்டும் என்றாசைப்பட்டால், இவனைப் பார்த்தாற் போதும், என்று பகவான் சொன்னார்.

அஹிம்ஸை என்பதை இவ்வளவு விஸ்தாரமாய்ச் சொன்னதற்குக் காரணம் :

இப்படி பகவான் சொன்னதையே, மிகவும் சுருக்கிச் சொல்ல வேண்டு மென்று, நான் ஆசைப்பட்டேன். ஆனால் அது இவ்வளவு பெரிதாக விரிந்து போனதை நீங்கள் க்ஷமிக்க வேண்டும். பச்சைப் புல்லை கண்டு ஆசைப்பட்டு, மாடு மேன் மேலும் மேய்ந்து கொண்டே போய், தான் வந்த வழியை மறந்து விடுவதுபோலும், காற்றின் வேகத்தைக் கண்டு பக்ஷிகள் ஆநந்தமாய் ஆகாசம் எல்லாம் பறந்து திரிவதுபோலும், சொல்லும் விஷயத்தில் இருக்கப்பட்ட ப்ரேமையால் ரஸம் பெருகி அதின் வசப்பட்டுப் போன என் புத்தியானது கட்டுக்கடங்காமற் போயிற்று, என்று நீங்கள் ஒருவேளை எண்ணுவீர்கள். ஆனால் வாஸ்தவம் அப்படி அல்ல. இப்படி விஸ்தாரமாய்ச் சொன்னதற்குக் காரணம் வேறொன் றேற்பட்டது. அஹிம்ஸை என்னும பதம் என்னவோ, மூன்றே அக்ஷரத்தால் ஏற்பட்டதே, ஆகவே அதை இன்ன தென்று சுருக்கமாய்ச் சொல்லி விடலாம்.

ஆனால் அதை ஸந்தேஹமற விளங்கச் சொல்ல வேண்டுமானால் இதர மதங்களை விவரமாய்ச் சொல்லிக் கண்டித் தாற்றான் முடியும். அப்படிச் செய்யாது, குறுக்கிட்ட மதபேதங்களைத் தீண்டாமலே, என் மதத்தை மாத்ரம் எவ்வளவு விரிவாகச் சொன்னாலும், நீங்கள் ஒத்துக் கொள்ள மாட்டீர்கள். ரத்நபரீக்ஷகர்கள் இருக்கும் ஊரில், ஒரு வேளை ஸாளிக்ராமம் வேண்டியிருந்தாலும், அதை முடிச்சிலிருந்து அவிழ்த்து காட்டலாமே தவிர, அங்கே ஸ்படிகக்கல்லை எடுத்துக்காட்டி அதைப் புகழ்ந்து பேசுவது தகாது. ஆகையால் வாக் ஸாமர்த்யம் படைத்தவனென்று பெருமை யடித்துக் கொண்டு, வீணாய் வார்த்தைகளை வளர்ப்பது, ப்ரபுக்களாகிய உங்கள் ஸபையிற் செல்லாது. உத்தமமான விஷயங்களோடு, ஓர் மதிப்பு மற்ற ஸாமான்ய விஷயங்களைக் கலந்து பேசினால், அப்பேச்சைக் காதில் விழ ஒட்டீர்கள். உத்தம ஸித்தாந்த ஞாநங்கள், ஸந்திக்தமானவை (தெரிந்தவர்கள் ஒப்புக் கொள்வதற்கு ஸந்தேஹப்பட்டவை) அல்லது அஞ்ஞானம் நிறைந்தவையான விஷயங்களின் சேர்க்கையால், அசுத்த மாய்ப் போய் விட்டால், நீங்கள் நான் சொல்லும் விஷயத்தில் வைத்த கவனமானது தானாகவே பின் வாங்கிவிடும்.

ஓர் ஜலமானது பாசியால் மூடப்பட்டிருந்தால் அதை ஹம்ஸபக்ஷி கண்ணெடுத்துப் பாராதல்லவா. சந்திர

ப்ரகாசமானது மேகத்தால் மறை பட்டிருக்குமானால், அந்த சந்திரனை நோக்கிச் சகோரபக்ஷி தன் வாயைக் காட்டுமா? அப்படி நடுவில் ஏற்பட்ட மதாந்தரங்களைக் கண்டித்து விலக்கிவைத்து, என்னுடைய நிரூபணத்தை ஆக்ஷேபணை அற்றதாய்ச் செய்யாது போனால், என்னைத் தலையெடுத்துப் பார்க்காமலும், இக்கிரந்தத்தை அங்கீகரிக்காமலும், போவீர்கள், என்பது மாத்ரமே அல்லாமல், உங்களுக்குக் கோபமும் உண்டாகும். வேறுமதங்களைக் கண்டிக்காமலும், ஆக்ஷேபணைகளுக்கு ஸமாதானம் சொல்லாமலும், நான் ஓர் வ்யாக்யானம் செய்தால், அந்த வ்யாக்யானத்தைக் கேட்பதற்கு நீங்கள் ச்ரோதாக்களாய் கிடைக்காமற் போவீர்கள்.

ஆனால் நான் இந்த வ்யாக்யானம் செய்யத் தலைப்பட்டதின் உத்தேசமனைத்தும், நீங்கள் ஸதா என் முன்னிருக்க வேண்டும் என்பதே தவிர, வேறொன்றும் அல்ல. உண்மையைச் சொல்லப் போனால், நீங்கள் கீதார்த்தத்துக்கு மிகவும் நெருங்கின சுற்றத்தார், என்று நான் தெரிந்து கொண்டு, அதின் உயிர் நிலையிற் கைபோட்டு, அதைப் பற்றிக் கொண்டு, நிற்கிறேன். இந்த கீதார்த்தம் என்பது ஓர் க்ரந்த மல்ல, இது என்னிடத்தில் அடகுவைக்கப்பட்டுப்போன ஓர் பொருள், அதை, நீங்கள் உங்களுடைய ஸர்வஸ்வத்தையும் கொடுத்து, விடுவித்துக் கொண்டு போனால் போகலாம்; அப்படிச் செய்யாது உங்கள் ஸர்வஸ்வத்தின் மேல் அதிக ஆசை வைத்து, இக்கீதார்த்தம் வேண்டாம் என்று, விட்டுப் போவீர்களே அனால், பிறகு இதற்கும் எனக்கும் ஒரே கதிதான். என்னத்துக்கு வளர்த்த வேண்டும். எனக்கு வேண்டிய தெல்லாம் உங்கள் க்ருபையே;

அதற்காகவே இந்த க்ரந்தத்தை ஆரம்பித்தேன். அப்படி ஆனபின், ரஸிகர்களாகிய உங்களுக்கு ருசிக்கும்படி சொல்ல வேண்டுமே என்று நினைத்த, மதாந்தரங்களை விசாரிக்கத்தலைப் பட்டேன். அதினால், கதை விஸ்தாரமடைந்து, ச்லோகார்த்தம் வெகு தூரத்தில் நின்று விட்டது. தங்கள் குழந்தை யாகிய என்னுடைய இவ்வார்தைகளை, தாங்கள் க்ஷமிக்க வேண்டும். அன்றியும் வாயில் இருக்கும் ப்ரஸாதத்தில் கல் அகப்பட்டால், அதை எடுத்து எறிந்து விடுவதற்குக் கொஞ்சம் நேரம் பிடிக்கிறதே என்று கஷ்டப்படலாமா? ஓர் சிறுவன் தன் தாய் வீட்டுக்குத் திரும்பி வரும் வழியில், திருடர்கள் கையிற் சிக்கி, அவர்களிடத்திலிருந்து தப்பித்துக்கொண்டு, வீடு வந்துசேர கொஞ்சம் நாட்கள் பிடித்தால், அவன் தாய் கோபித்துக்

கொள்ள வேண்டியதா? அல்லது அவன் தப்பித்து வந்ததற்கு ஸந்தோஷித்து, அவனுக்கு த்ருஷ்டி சுற்றிப் போட வேண்டுமா? சொல்லுங்கள். ஆனால் இன்னமும் இந்த விஷயத்தை வளர்த்திக் கொண்டிருப்பது சரி அல்ல. நீங்கள் என் தப்பைப் பொறுத்து விட்டீர்கள். அதே வேண்டுமானது. இனி பகவான் மேற் சொன்னதைச் சொல்வேன், கேளுங்கள, தத்வவிசாரத்தில் மிக்க ஸாமர்த்யம படைத்த அர்ஜுநா, உனக்கு ஞானத்தின் மற்றும் வேறு லக்ஷணங்களைக் காட்டிக் கொடுப்பேன், கவனமாய்க் கேள் என்று, அர்ஜுநனை ஜாக்ரதை செய்துவைத்து, பகவான் மேல் விஷயத்தைச் சொல்லத் தொடங்கினார்.

(4) க்ஷாந்தி :

எவனிடத்தில் துக்கா நுபவம் என்பது கொஞ்சம் கூட உணரப்படாமல், பொறுமை இருக்குமோ, அவனிடத்தில் ஞானம் இருக்கிறதென் றறி. ஆழம் காண முடியாத தடாகத்திற் பூத்த தாமரைப்பூக்கள், எவ்வளவு செழிப்புள்ளவையாயிருக்குமோ, மிக்க பாக்யம் படைத்தவன் வீட்டில் ஸம்பத் தெவ்வளவு செழிப்புள்ளதாய் மேன்மேலும் வளருமோ, ஞானம் உள்ளவனிடத்தில் பொறுமை அவ்வளவு செழிப்புள்ளதாய், மேன் மேலும் அதிகரித்துக் கொண்டிருப்பதாய்க் காணப்படும். அப்படிப் பொறுமை செழிப்படைந் திருப்பதின் லக்ஷணங்கள் எவையோ, அவற்றைச் சொல்வேன், கேள். மனதுக்கு ப்ரியமான நகைகளை ஓர் பெண்பிள்ளை எப்படி ஆசையுட னெடுத்துத் தன் தேஹத்திற் பூட்டிக் கொள்வாளோ, அப்படியே இப்பொறுமை படைத்தவன் பிறர் தனக்குச் செய்யும் அனைத்தையும், அவை எவ்வளவு துக்ககரங்களாயிருந்தாலும், ப்ரீதியுடன் அங்கீகரித்துக் கொள்வான். மூவகைப்பட்ட [ஆத்யாத்மிகம் (தன் தேஹத்தினின்றே உண்டாகும் துன்பங்கள்), ஆதிபௌதிகம் (இதர ப்ராணிகளிடமிருந்து உண்டாகும் துன்பங்கள்), ஆதிதைவிகம் (தேவர்களிடமிருந்து உண்டாகும் துன்பங்கள்), என்று தாபங்கள் மூவகைப்படும்] தாபங்கள் எத்தனையோ, அத்தனையும் ஒன்று சேர்ந்து, அவன் மேல் தாக்கினாலும், அவற்றினின்று அவன் சரீரம் சிறிதேனும் சுருங்காது. தாம் வேண்டியது கிட்டும்போது, எவ்வளவு ஸந்தோஷத்துடன் ஜநங்கள் அதை அங்கீகரிப்பார்களோ, அவ்வளவு ஸந்தோஷத்துடன், தனக்கு இனியாததை, உண்மையான பொறுமை உள்ளவன், அங்கீகரித்துக் கொள்வான்.

மானவமானங்களை ஸமமாக ஸஹித்து, நிந்தாஸ்துதிகள் இரண்டுக்கும் ஸரியாகவே தன் தேஹத்தில் இடங்கொடுத்துக்கொண்டு, ஸுகதுக்கங்களால் மனஸில் விகாரமடையாதவனாய், அவ்னிருப்பான். அவன் உஷ்ணத்தால் தபிக்காதவனாயும், குளிரால் நடுங்காதவனாயும், எது தன்னை வந்தடைவதாயிருந்தாலும், அஞ்சான். மேரு பர்வதமானது தன் சிகரத்தைத் தனக்கு பாரமா யெண்ணாதது போலும், யஞ்ஞவராஹமானது பூமியைப் பாரமாக எண்ணாதது போலும், பூமியானது தன்மேல் இருக்கும் சராசரமான ஜீவராசிகளைப் பாரமாய்ப் பாவியாதது போலும், அநேகவிதமான த்வந்தவங்கள் வந்து, அவனை அடையும்போது, அவன் ச்ரமம் பாராட்டான். தன்னிடத்தில் வந்து விழும் கணக்கற்ற நதி நதங்களின் ஜல மனைத்துக்கும் இடங்கொடுக்கும் ஸமுத்ரம் போலும், எல்லாவற்றையும் தான் ஸஹித்துக் கொண்டதின் உணர் வற்றிருப்பான். தன் சரீரத்தை எது வந்தடையுமோ, அதை ஸ்வரூபமாகவே பாவிப்பதினால், அவன் தான் ஸஹித்துக் கொண்டதின் அபிமானம் அற்றிருப்பான். இவ்விதம் ஸுகத்துக்கானுபவத்தின் உணர்ச்சியில்லாத பொறுமை, எவனிடத்தில் இருப்பதாகப் பார்ப்பாயோ, அவனால் ஞானத்துக்குப் பெருமை ஏற்படுகிற தென்றும், அவன் ஞானத்துக்கு உயிரென்றும் சொல்ல வேண்டும் என்றறி, அர்ஜுநா.

(5) ஆர்ஜவம் :

இனி ஆர்ஜவம் என்பதை நிருபிப்பேன் கேள். பூதங்கள் எவையே யானாலும், அவற்றின் ப்ராணனைப் போலவே அவற்றிற்கு அநுகூலமாயிருக்கை ஆர்ஜவம் ஆகும். ஜநங்கள் முகத்தைப்பார்த்து, வேண்டினவர்களானால் வெளிச்சம் கொடுப்பதும், வேண்டாதவர்களானால் வெளிச்சம் கொடாதிருப்பதும் அறியாத ஸூர்யன் போலும், வித்யாஸம் பாராட்டாமல் ஜகத்தனைத்துக்கும் இடங்கொடுக்கும் ஆகாசம் போலும், எவன் தன் நடத்தையால் வேறு வேறு மனுஷ்யர்களுக்கு வேறு வேறு விதப்பட்டிராமல், ஒரே விதப்பட்டிருப்பானோ, அவன் ஆர்ஜவம் உள்ளவன் ஆவான். அவன் ஜகத் முழுவதுக்கும் வேண்டினவனாய், தானென்றும் பரனென்றும் பகுத்தறியாதவனனாய், எவரோடுங் கலந்து கொண்டு, ஜலம் போல் எல்லாவற்றிற்கும் உடன் பட்டுக் கொண்டிருப்பான். காற்றைப் போல் எங்கும் பரவிக்கொண்டு, நேரான பாவம் உள்ளவனாய், சங்கித்திலும் ஆசைப் படுதலும்

அற்றவனாய், தாயிடத்தில் ஓர் கூச்சமுமின்றிப் போய்ச்சேரும் குழந்தையைப் போல், தன்மனஸில் இருப்பதைப் பிறருக்குத் தெரிவிப்பதற்கு அவன் அச்சப்படான் நன்றாய் விகஸித்த தாமரைப்பூவில் மறைவான இடம் இல்லாதது போலும், அவன் ஒளிகளவாய்ப் பேச அறியான்.

ரத்நத்தின் குணம் தெரிவதற்கு முன்னால், அதின் ப்ரகாசம் வெளிப்படுவது போலும், முதலில் மனஸில் இருக்கும் எண்ணத்தைத் தெரிவித்து, பின்பு செய்யக் கருதினதை அவன் செய்து வைப்பான்; ஆலோசனை செய்வதறியான்; நேர்ந்ததை அனுபவிப்பான்; தன் மனஸைக் கட்டிவைப்ப தென்பதும் அவிழ்த்து விடுவதென்பதும், அறியான். பார்வை காபட்யம் என்பதை அறியாது. கேட்கிறவர்கள் தெளிவாய் அறிந்து கொள்ளக் கூடாதபடி, ஸந்திக்தமாய் அவன் பேசான்; எவர்களோடும் சேர்ந்து கெட்ட கர்மங்களைச் செய்யான் எக்காலத்திலும் அவனுடைய பத்து இந்திரியங்களும் ஸரளமாயும், ப்ராபஞ்சிக வ்யாபாரங்க ளற்றவையாயும், நிர்மலமாயும், இருப்பதுடன், அவனுடைய ஐந்து கோசங்களில் எங்கேயும், மறைவு என்பது இராது. அவன் மனஸு அம்ருதத்தின் தாரைபோல், நேராயிருக்கும். ஆர்ஜவம் உள்ளவன் இப்படிப்பட்ட லக்ஷணங்களுக்குப் பிறந்த வீடாவான். இப்படிப்பட்டவனை உருவெடுத்த ஆர்ஜவம் என்றே சொல்ல வேண்டும். அவனிடத்தில் ஞானம் ஸதா வஸித்துக் கொண்டிருக்கும்.

ஆசார்யோ பாஸநம் :

சதுரர்களுக்குள் சிறந்தவனான அர்ஜுநா, இனி குருபக்தியின் ப்ரகாரங்களை விவரமாய்ச் சொல்வேன், கேள். குருஸேவை எல்லாபாக்யங்களுக்கும் ஜன்மபூமி. இது மிக்கத்துக்கத்தில் அழுந்திக்கிடக்கும் ஜீவனை, பரப்ரஹ்ம மாய்ச் செய்து வைக்கும். இந்த ஆசார்யோபாஸ்தி விஷயமான என் வார்த்தைகளை, நீ உன்னுடைய பூர்ண லக்ஷ்யத்தோடும் கவனித்துக் கேட்க வேண்டும். கங்கையானது தன்னுடைய ஜலஸம்பத்தனைத்துடனும் ஸமுத்ரத்தில் விழுந்து, அத்துடன் ஒன்று பட்டுப் போவது போலும், வேதங்கள் பரப்ரஹ்மஸ்வரூபத்தில் ப்ரவேசித்து, அதில் லயித்துப் போவது போலும், தன்னிடத்தில் உள்ள குணாகுணங்கள் முழுமையையும் தன் ப்ராணநாதனுக்கு பதிவ்ரதாஸ்த்ரீ அர்ப்பித்து விடுவது போலும், குருபக்தன், தன்னை உள்ளும் புறமுமாக குருகுலத்துக்கு அர்ப்பணம் செய்து விட்டு, குருபக்தி என்பதற்கு வாஸஸ்தானமாய் இருப்பான்.

குருவிஷயத்தில் ஸ்மரணபக்தி :

கணவனை விட்டுப் பிரிந்திருக்கும் மனைவி, அவனை இடைவிடாது நினைத்திருப்பது போல், குருவின் க்ருஹம் இருக்கும் தேசத்தை குருபக்தன் ஸதா மனஸில் ஸ்மரித்துக் கொண்டிருப்பான். அந்தத் திக்கினின்று வீசும் காற்றை எதிர் கொண்டோடி, அதற்கு ஸாஷ்டாங்க தண்டம் ஸமர்ப்பித்து, அதைத் தன் வீட்டுக்குள் விஜயம் செய்ய வேண்டுமென்று, அவன் ப்ரார்த்திப்பான். உண்மையான ப்ரேமையினால் பைத்யம் பிடித்துப்போய், அந்தத் திக்கோடு பேசிக்கொண்டு நிற்பது அவனுக்கு ருசித்திருக்கும். அவன் தன் ஜீவனை குருக்ருஹத்தில் ஊழியமிராசுதாரனாய்ச் செய்து, மனஸாலதை அங்கேயே நிறுத்தி வைப்பான். ஆனால் கன்றின் மனஸு மேயப்போன தாயுடன் சென்று, அதின் தேஹம் மாத்ரம் தும்பினால் கட்டுப் தறியில் கட்டுண்டு கிடப்பது போலும், அவனுடைய சரீரம் மாத்ரம் குரு ஆஜ்ஞைக்குக் கட்டுப்பட்டதாய், அவனூரில் தனித்து கிடக்கும். "எப்போது இந்தக் கட்டு விடுபடும், எப்போது குருவைப் பார்ப்பேன்," என்றெண்ணிக் கொண்டு, அப்பிரிவில் ஓர் நிமிஷத்தை யுகத்தைக் காட்டிலும் நீண்டதாய், அவன் நினைத்திருப்பான். இப்படி இருக்குங்கால், குருவி, னூரினின்று, அல்லது குருவினாலேயே அனுப்பப்பட்டவனாய், ஒருவன் வந்து சேர்ந்தால், ஆயுஸ்ஸனைத்தும் முடிந்து போனவனுக்குத் திரும்பவும் ஓர் ஆயுஸு கிடைத்தாற்போலும், நீர் இல்லாமற் காய்ந்துபோகுமிளம் பயிரின் மேல், அம்ருதமழை பொழிந்தாற் போலும், ஜலம் எல்லாம் வற்றிப் போய் கொஞ்சம் நீரே இருக்கும் ஓர் குளத்தில் கஷ்டப்பட்டு கொண்டிருக்கும் மீனுக்கு ஸமுத்ரம் கிடைத்தாற் போலும், அதிதாரித்ரியத்தால் வருந்திக்கொண்டிருக்கும் ஒருவனுக்கு ஓர் பெருநிதி கிடைத்தாற் போலும், குருடனுக்குப் பார்வை கிடைத்தாற் போலும், பிச்சைக்காரனுக்கு இந்த்ரபதவி கிடைத்தாற் போலும், குருகுலத்தின் நாமத்தைக் கேட்டதினாலேயே, பேராநந்த மடைந்து, ஆகாசத்தைக் கட்டி அணைத்துக் கொள்ளக் கூடும் படி, அவன் தேஹம் பூரித்துப் போகும். இவ்வளவு மிகுந்த ப்ரேமை, குருகுலத்தின் விஷயத்தில் எவன் பாராட்டி நிற்பானோ, அவனிடத்தில் ஊழியம் செய்ய ஞானம் என்பது அவனுக்கு வேலைக்காரனா யமைந்து விடும்.

குருவிஷயத்தில் அர்ச்சநபக்தி :

மனஸில் மிக்க ப்ரேமை பாராட்டி ஸ்ரீ குருவி னுருவத்தை த்யானத்தில் இருத்தி, சுத்த ஹ்ருதய மென்னும் சுற்று

மதில்களை எழுப்பி, நடுவில் ஆராத்ய தெய்வமாய் ஸ்ரீ குருநாதனை ஸ்தாபித்து, பின்பு குருபக்தன் தானே ஸர்வவிதமான பரிவாரங்களாயும், அமைந்து நிற்பான். ஞானத்தை ப்ராகாரமாய் அமைத்து, நடுவில் ஆநந்தத்தைக் கோயிலாய் ஏற்படுத்தி, அதில் ச்ரீகுருவாகிய சிவலிங்கத்தை ஸ்தாபித்து, அதை த்யானாம்ருதத்தால் அபிஷேகம் செய்வான் ஞானம் என்னும் ஸூர்யன் உதித்த உடன், புத்தி என்னும் புஷ்பக் கூடையில், ஸாத்விகபாவங்கள் என்னும் புஷ்பங்களை நிறைத்து வைத்துக்கொண்டு, ஸ்ரீ குருவாகிய மஹாதேவனுக்கு லக்ஷார்ச்சனைகள் செய்து, மூன்று காலங்களும் தவறாமல் தன் ஜீவதசை யென்பதை தூபமாக எரித்து வாஸனை காட்டி, தன் ஞானத்தை தீபமாய் ஏற்றிக்கொண்டு, எப்போதும் குருரூபத்துக்கு தீபோபசாரமாய்ச் சுற்றிக்காட்டி, அனைத்தையும் குருரூபமாய் எப்போதும் பாவிக்கும்புத்தி நிலையை நைவேத்யமாய் ஸமர்ப்பித்தக் கொண்டு, தன்னைப் பூஜாரியாகவும், குருவை சிவலிங்கமாகவும், பாவித்துக் கொண்டிருப்பான்.

குருவிஷயத்தில் ஸக்யபக்தி :

அவன் சில வேளை தன் ஜீவனைப் படுக்கையாய்ச் செய்து, அதில் குருவை நாயகனாய் விற்றிருக்கச் செய்து, தான் நாயகியாய், அவருடன் கலவைசெய்து ரதிஸுகத்தைப் புசிப்பான்; மற்றோர் வேளையில், மனஸில் அநுராகத்தை நிரப்பி வைத்து, அதற்கு க்ஷீராப்தி யென்று பெயரிட்டு, த்யேய வஸ்துவாகிய குருரூபத்தின் த்யானத்தை ஆதிசேஷனென்ற தோஷமற்ற படுக்கையாய் அமைத்து, அதற்குமேல் ஸ்ரீ குருவை ஜலசாயியான மஹாவிஷ்ணுவாய்ப் பாவித்து, தானே மஹாலக்ஷ்மியாய், அவர் பாதஸேவை செய்து கொண்டு தானே கருடனாய் முன்னின்று ஸேவித்துக் கொண்டு, உந்தியினின்றுதித்த ப்ரஹ்மதேவனாகத் தானே அமைந்து, இப்படி எல்லாம் குருமூர்த்தியை தன் மனஸில் நிறுத்தித் த்யானஸுகத்தை அநுபவிப்பான்; மற்றுமோர் ஸமயத்தில். குருவைத் தாயாய்ப் பாவித்து, அவள் மடியில் படுத்துக்கொண்டு, தான் ஸ்தந்யபானம் செய்து புரண்டு கொண்டு ஸுகித்திருப்பதாய்ப் பாவித்துக் கொள்வான்; இல்லாவிட்டால் குருவை, ஞானம் என்னும் மரத்தடியில் மேயும் சினைப் பசுவாய்ப் பாவித்து, தான் அதின் கர்ப்பத்திலிருந்து கொண்டு வளரும் கன்றாய் பாவித்துக் கொள்வான்;

ஒருக்கால் குருக்ருபை என்னும் ஜலத்தில் விளையாடும் மீனாகத் தன்னைப் பாவித்துக் கொள்வான். குருஸேவையே

அம்ருதவர்ஷமாய்ப் பொழிவதாகவும், தன்னை அதினால் வளரும் குருஸேவை என்னும் இளம் செடியாகவும், இப்படியே மனஸுக்குத் தோன்றிய படி எல்லாம் அவன் பாவித்துக் கொள்வான். குருவைத் தாய்ப்பக்ஷியாகப் பாவித்து, தன்னை கண்திறக்காது இரக்கை முளைக்காதிருக்கும் அதின் குஞ்சாகவும், அந்தத்தாய்ப் பக்ஷியின் வாயினின்று இரை கொடுத்துப் போஷிக் கப்படுகிறவனாயும், குருவை ஸம்ஸாரம் என்ற ஓர் பெரிய ஸமுத்ரத்தைத் தாண்டி வைக்கிறவனாயும், தான் அவர் கச்சத்தைப் பற்றிக் கொண்டிருக்கிறவனாயும், இப்படி எல்லாம் ப்ரேமையின் பெருக்கால் ஒன்றின் பின் ஒன்றாகப் பெரும் ஸமுத்ரத்தில் உண்டாகும் அலைகளைப் போல் வேறு வேறு த்யாநங்களை அவன் செய்து கொண்டு, காலத்தைப் போக்கிக் கொண்டிருப்பான். அவன் ஸ்ரீ குருமூர்த்தியை, இவ்வாறாக த்யானத்தில் வைத்து, ஆநந்தமனு பவிப்பான். இனி அவன் வெளிப்படையாய்ச் செய்யும் ஸேவைகளைச் சொல்வேன் கேள்.

குரு விஷயத்தில் தாஸ்ய பக்தி :

அவன் தான் பின் வருமாறெல்லாம் ஸேவைகள் செய்வேனென்று, ஸதா மனோரதித்துக் கொண்டிருப்பான். ஸ்ரீ குரு என்னைப் பார்த்து, ஸந்தோஷமடைந்து, உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்டுக் கொள்ளென்று சொல்லும்படியாய், நான் அவருக்கு உத்தமப்ரகாரமாய், ஸேவைகள் செய்வேன். அவரை அப்படி ப்ரஸந்நராய், என் ஸேவையினாற் செய்து வைத்த பின், அவர் என்னை வரம் கேள் என்று சொன்ன உடனே, உம்முடைய பரிவாரம் எத்தனையோ அத்தனையும் நானே ஆய்விட வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன். அதற்கு அவர் அப்படியே ஆகட்டும், என்பார். பின்பு அவர் பரிவார மனைத்துமாய் நானே அமைந்து நின்று, அவருடைய ஸுகத்துக்கு உபகரணங்கள் எத்தனை வேண்டுமோ, அத்தனையுமாக நானே ஆய்விடுவேன். அப்போது நான் செய்யும் குரூபாஸ்தியின் ப்ரகாரம் மிக்க விநோதமாயிருக்கும். குருநாதன் பலருக்குத் தாயாயிருந்தாலும், அந்தத் தாயின் க்ருபைக்கு ஆணையிட்டு அவளை என்னொருவனுடைய தாயாகவே செய்துகொண்டு, குருவின் ப்ரேமைக்கு என்மேல் மிக்க மோஹத்தை உண்டாக்கி வைத்து, அவரை எகபத்நீ வ்ரதம் ஆசரிக்கும்படியாய்ச் செய்து வைப்பேன்.

அன்றியும் அவருக்கு என்மேலேயே ஆசை அதிகரிக்கும்படியாய்ச் செய்து கொண்டு, அவரை என்னை

விட்டு விலகிப் போகாதபடி க்ஷேத்ரஸந்யாஸம் என்னும் வ்ரதம் பூண்டிருக்கச் செய்வேன். காற்று எவ்வளவுதான் பரவி வீசினாலும், எப்படி நான்கு திக்குகளுக்குள்ளேயே அது கட்டுப்பட்டுக் கிடக்க வேண்டுமோ, அப்படியே குருக்ருபை என்னும் பக்ஷிக்கு நான் கூண்டாய் அமைந்திருப்பேன். குரு ஸேவை என்னும் என்னுடைய பரதேவதைக்கு, என்னுடைய குணங்களை ஆபரணங்களாய்ச் செய்து நான் பூட்டி வைப்பேன். குரு பக்தி என்பதற்கு உரையாக நான் ஆய்விடுவேன். குருவினுடைய ப்ரேமை என்னும் மழை முழுமையையும் வஹித்துக் கொள்ள நான் அதின் கீழ் பூமியாய் இருப்பேன். ஸ்ரீ குரு வாஸம் செய்து கொண்டிருக்கும் பூமியாக, நான் ஆய்விடுவேன். அத்துடன் அவர் தாஸனுமாய் நானே அமைந்து, இந்த இடத்தில் நடக்க வேண்டிய வேலைகளனைத்தையும் நானே செய்து வைப்பேன். எனக்கு ஸர்வஸ்வத்தையும் கொடுத்து உதவினவரான என்னுடைய குருநாதன் வெளிப்படும் போதும், உள்வரும்போதும், மிதித்துப்போக வேண்டியதான வாயிற்படியாய், நான் அமைந்து கிடந்து, அவருடைய வீட்டில் வாயிற் காப்பவனுமாய் நானே அமைந்து நிற்பேன்.

நானே ஸ்ரீ குருவின் பாதுகையாய் அமைந்து, அதை குருபாதத்தில் சேர்த்து வைக்கும் வேலைக்காரனும் நானே ஆவேன். நானே ஸ்ரீ குருவுக்கு நிழல் கொடுக்கும் குடையாகவும், நானே அக்குடையைப் பிடிக்கும் வேலைக்காரனு மாவேன். நானே குருநாதனுக்கு, அவர் நடக்கும் வழியில் இருக்கும் மேடுபள்ளங்களைத் தெரிவிக்கும் வேலைக்காரனாயும், குரு முன்னால் சாமரம் தாங்குகிறவனாயும், அவர் வாஹநத்தினின்று இறங்கும் போது கைலாகு கொடுக்கிறவனாயும், ஸ்வாமி முன்னால் ஓடும் மெய்காவற்காரனாயும், நானே ஆவேன். நானே குருநாதன் வாய் கொப்பளிப்பதற்கு ஜலம் கொடுக்கும் வேலைக்காரனாய் நின்று, என் கையால் ஜலத்தைக் கொடுத்தபின், வாய்க் கொப்பளித்த ஜலத்தை உமிழ்வதற்குத் தட்டாய் நானே அமைந்து நிற்பேன். நானே தாம்பூலத் தட்டாய் அமைந்து, அவர் தாம்பூலம் மென்றபின், எச்சில் தம்பலம் உமிழும் வட்டிலாக நானே இருந்து, அத்தம்பலத்தை வாங்கிக் கொள்வேன். குருநாதன் ஸ்நாநம் செய்யும்போது அவருக்குச் செய்ய வேண்டிய ஸகல பணிவிடைகளையும் நானே செய்வேன். ஸ்ரீ குருவுக்கு ஆஸனமாகவும், அலம்காரமாகவும், வஸ்திரமாகவும், சந்தநம் முதலிய உபசாரங்களாகவும், நானே ஆவேன். நானே சமையல் செய்கிறவனா யமைந்து, நானே ஸ்ரீ

குருவுக்கு ஆஹாரங்களை ஸித்தம் செய்து பரிமாறுவேன். என்னையே ஆரத்தியாய்ச் செய்து கொண்டு, ஸ்ரீ குருநாதனுக்கு நானே ஆரத்தி சுற்றிப் போடுவேன். ஸத்குரு போஜநம் செய்ய உட்காரும்போது ஸஹபங்க்தி போஜநத்துக்கு நானே அவருடன் கூட உட்கார்வேன், அதற்குமேல் நானே தாம்பூலத்தை ஸித்தம் செய்து கொடுப்பேன். நான் அவர் போஜந பாத்ரத்தை எடுத்து சுத்தம் செய்து, அவர் படுக்கையை, நானே உதறி சுத்தம் செய்து வைப்பேன். குரு சயநம் செய்யும் போது, காலை அழுத்துவதும், நானே செய்வேன். ஸ்ரீ குரு ஏறி வீற்றிருக்கும் ஸிம்ஹாஸநமாயும் நானேஆவேன்.

இப்படி எல்லாம், ஸ்ரீ குருவின் பணிவிடைகளின் ஸம்பூர்ணதையாய் நான் அமைவேன். எந்த ஆச்சர்யமான விஷயத்துக்கு குரு தன் கவனத்தைக் கொடுப்பாரோ, அந்த ஆச்சர்ய விஷயமாய் நான் ஆவேன். அவருடைய காதில், அது கேட்கவிரும்பும் சப்தம் கூட்டங்களாய் நானே ஆய், அவர்தேஹம் படுமிடமெல்லாம் நானே இருந்து, அவருக்கு ஸ்பர்சஸுகத்தைச் செய்துவைப்பேன். குருவின் கண்கள் எவற்றைப் பிரியத்துடன் பார்க்குமோ,அப்படிப்பட்ட ரூபங்களாய் நானே ஆவேன். என் குருவுக்கு ருசித்த ரஸங்களாயும்,அவர் ப்ரியப்பட்ட வாஸநைகளாயும், நானே நின்று, அவர் ரஸநேந்த்ரியத்துக்கும், க்ராணேந்த்ரியத்துக்கும் ஸேவை செய்வேன். இப்படி ஸ்ரீ குருப்ரியப்பட்ட ஸகல வெளிப்படையான ஸேவைகளையும், நான் என் ஸ்வத்தாய்க் கட்டிக் கொண்டு, அவற்றிற்கு வேண்டியவையான ஸகல வஸ்துஜாதகங்களாயும் நானே அமைந்து நிற்பேன். எனக்கு தேஹம் இருக்கும் வரைக்கும் குருவுக்கு செய்ய வேண்டிய ஸகல ஊழியத்தையும் நானே செய்வேன்.

குருவிஷயத்தில் ஆத்மநிவேதந பக்தி :

தேஹம் போன பிறகும், குருவுக்கு ஸேவை செய்ய வேண்டு மென்று குருபக்தி யுள்ளவன் யோசித்து ஏற்பாடு செய்யும் விதம் மிக்கவும் புதுமையாயிருக்கும். "என்னுடைய ஸத்குருவின் பாதாரவிந்தங்கள் எந்த பூமிமேல் நிற்குமோ, அந்த பூமியில் என்னுடைய இந்த சரீரத்தின் ப்ருதிவி அம்சத்தைக் கலந்து வைப்பேன். எந்த ஜலத்தை என் குருநாதன் ப்ரியப்பட்டு ஸபர்சிப்பாரோ, அந்த ஜலத்தோடு என் தேஹத்தின் ஜலாம்சத்தைக் கலந்துவைப்பேன். உலகிலுள்ளவர், என் குருநாதனுக்கு எந்த தேஜஸைக் கொண்டு ஆரத்தி யெடுப்பார்களோ, அந்த தேஜஸ்ஸில் என் தேஹத்தில் உள்ள

தேஜஸைக் கலந்து வைப்பேன். என் குருநாதன் முன்னால் இருந்து வீசும் சாமரத்திலும் விசிறியிலும், என் ப்ராண வாயுவைக்கலந்து வைத்து, அவருடைய சரீரத்துக்குப் பணிவிடை செய்து வைப்பேன். எந்தெந்த இடங்களில் என் குரு தன் பரிவாரத்தோடு வஸித்திருப்பாரோ, அங்கங்கே என் தேஹத்தின் ஆகாசாம்சத்தைச் சேர்த்து வைப்பேன்.

இப்படி உயிரோடிருந்தாலும் ஸரி, செத்தாலும் ஸரி, குருஸேவை அனைத்தையும் நானே செய்து கொண்டு, மற்றெவரேனும் என் குரு சேவையின் அல்பாம்சத்தைக் கூட செய்யும்படி விடேன். இப்படி கல்பகல்பமாய் குருஸேவை செய்து கொண்டிருப்பேன். இப்படி எல்லாம் குருபக்தன் குருஸேவை செய்ய ஆசைப்பட்டு இப்படி ஸேவை செய்தும் கூட, அவனுடைய ஸேவாவிஷயமான ஆசை மேன்மேலும் பொங்கிக் கொண்டே இருக்கும். அவன் இப்படி ஸேவை செய்வதில் ராத்ரிப்பகல் என்றறியான். செய்ய ஏற்பட்ட தான ஸேவையை, சின்னது பெரிதென்று சொல்லான். இப்படியிருக்கும்போதே, ஸ்ரீ குரு தன்வாயைத் திறந்து ஏதாவது செய்யென்று சொல்லிவிட்டால், மிக்க உத்ஸாஹத்துடன், அதை விரைந்து செய்வான். இப்படி குருஸேவை செய்வதில் ஆகாசத்தைக் காட்டிலும் பெருத்து நின்று, அவன் தனித்தே எல்லாக் கார்யங்களையும் ஒரே காலத்தில் செய்து முடிப்பான். தன் மனஸின் ஸங்கல்பத்தின் முன்னதாகவே தேஹம் விரைந்தோடி, ஸேவை செய்வதில் மனஸோடு பந்தயம் போடும். ஒவ்வொரு வேளை ஸ்ரீ குருவின் லீலையைப் பூர்த்தி செய்வதற்கு, தன்னுடைய உயிரையே, த்ருஷ்டி சுற்றி எறிவது போல், எறிந்து விடுவான்.

அவன் குருஸேவை செய்து அதினால் இளைத்தவனாய், குரு ப்ரேமையால் புஷ்டி அடைந்து, குரு ஆஞ்ஞைக்கு வாஸஸ்தானமாய் இருப்பான். அவன் குருகுலத்தின் ஸம்பந்தத்தால் உத்தம குலத்தில் பிறந்தவனாயும், குருபந்துக்களுக்கு ப்ரியனாயிருப்பதால் ஸுஜநனான வனாயும், குருஸேவை செய்ய வேண்டுமென்னும் ஆசையால் ஸதா விசாரம் பூண்டவனாயும், இருப்பான். குரு ஸம்ப்ரதாயதர்மமே தன்னுடைய வர்ணாச்ரம தர்மமாயும், குருபரிசர்யை செய்வதையே நித்யகர்மா நுஷ்டானமாயும், அவன் பாவித்திருப்பான். அவனுக்கு குருவே க்ஷேத்ரம், குருவே பரதேவதை, குருவே தகப்பன், குருஸேவையே ஸத்கதி, ஸ்ரீகுருவின் வாயிலிற் கிடப்பதே ஸர்வவிதமான பாக்யமும், ஆகும். குருவுக்கு ஸேவை செய்கிறவர்களை, அவன்

ஸஹோதரர்களாய் பாவித்து, அவர்கள் பேரில் ப்ரேமை பாராட்டி நிற்பான். அவன் நாக்கால் ஸதா குருநாமத்தை உச்சரித்துக் கொண்டு, குரு வாக்யத்தைத் தவிர வேறு சாஸ்த்ரத்தைக் கையாற் றொடான். தன் குருபாதத்தால் ஸ்பர்சிக்கப்பட்ட ஜலம் எது வாயிருந்த போதிலும், அதில் மூன்று லோகத்திலும் உள்ள உத்தம தீர்த்தங்கள் அனைத்தும், வஸித்திருப்பதாக அவன் பாவித்து அதற்காக தீர்தத யாத்ரை செய்வான். ஸ்ரீ குருவின் எச்சில் ப்ரஸாதம் அவனுக்குக் கிடைத்துப் போனால், அதற்கு முன் அவனுக்கு ஸமாதி ஸுகம் அல்பமாய்த் தோன்றும். குரு நடந்து போகும்போது அவர் பின் நின்று, அவர் காலினின்று பறக்கும் தூளியைத் தலையால் வாங்கிக் கொண்டு, அந்த லாபத்துக்கு விலையாக தன் கைக்குக் கிடைத்த மோக்ஷத்தைக் கொடுத்துவிட, அவன் துணிவான்.

குருபக்தியின் பெருமை :

இவ்விஷயத்தை இத்தனையோடு நிறுத்த வேண்டியதாய் இருக்கிறது. இவ்வியஷத்தில் எவ்வளவு சொன்னாலும் தான், போதுமானதாகும். குருபக்திக்கு எல்லையே இல்லை. இந்த குருபக்தி விஷயத்தில் மனஸுக்கோர் உத்ஸாஹமுண்டாய், இவ்வளவு விரிவாய்ச் சொன்னேன் எவனுக்கு குரு பக்தி மேலும் மேலும் தன்னிடத்தில் வ்ருத்தி அடைய வேண்டுமென்று, ஆசை உண்டோ, எவனுக்கு இந்த விஷயத்தைப் பற்றிக் கேட்பதில் ருசி உண்டாய் இருக்கிறதோ, எவன் இந்த குருஸேவையைக் காட்டிலும் ருசி கரமானது வேறொன்றில்லை என்று எண்ணுவானோ. அவன் தத்வஞானத்துக்கு வாஸஸ்தானமாவான். அவனால் ஞானத்துக் கோர் சோபை எற்படுகிறது. அவனைத் தெய்வம் என்றும், ஞானத்தை அவனை ஸேவித்துக் கொண்டிருக்கும் பக்தன் என்றும், சொல்ல வேண்டும். இது உண்மை யென்று உறுதியாய் நம்பு. அவனிடத்தில் ஞானமானது, உலகத்தாரனைவரும் எப்போது வந்தாலும், எடுத்துக் கொண்டு போகும்படி, ஸதா கதவைத் திறந்து வைத்துக்கொண்டு, எல்லாருக்கும் போதுமான அளவாய்க் குடிகொண்டிருக்கும். குருஸேவையில் எனக்கிருக்கும் ப்ரியத்தால், என்னமோ கதையின் தொடர்ச்சியை விட்டு விலகி, மிக்க தூரம் போய் விட்டேன். இப்படி யெல்லாம் வர்ணித்தேனே தவிர, கையிருந்தும் குருஸேவையில் கை நொண்டியாய், குருவிஷயமான பஜனை விதிகள் அறியாதவனாய், குருபரிசர்யை செய்வதில் முடவனைக்காட்டிலும்

உபயோகப்படாதவனாய், குருவின் பெருமையை வர்ணனை செய்வதில் ஊமையாய், குருபக்தி விஷயமாய் வீண்வார்த்தைகளை மாத்ரம் வளர்த்திக் கொண்டிருக்கிறேன். ஆயினும் குருபக்தி என்னிடத்தில் மிகக உண்டாக வேண்டும் என்று, ஆசை மாத்ரம் என் மனஸில் நிரம்ப இருக்கிறது. அதினாற்றான் குருபக்தியை இவ்வளவு விவரமாய் வர்ணித்தேன். ஆகவே இந்த விஷயத்தில் இவ்வளவு காலம் போக்கினதை மன்னித்து, உங்களுக்கு இன்னும் நான் பணிவிடை செய்வதற்கு, நீங்கள் இடம் கொடுக்க வேண்டும். இனி, மேல் வரும் க்ரந்தார்த்தத்தை நன்றாய்ச் சொல்வேன் கேளுங்கள்.

(7) சௌசம் :

எங்கும் வ்யாபித்து, பூதங்களின் பாரமனைத்தையும், ஸஹித்துக் கொள்வதே இயற்கை யாய்ப் படைத்த ஸ்ரீ க்ருஷ்ணன், அர்ஜுனனுக்கு மேலே சொன்னதை, சொல்வேன் கேளுங்கள். சௌசம் என்பதின் லக்ஷணம் எது வென்றால், அது எவனிடத்தில் இருக்குமோ, அவனுடைய சரீரமும் மனஸும், கர்ப்பூரத்தின் உள்ளும் புறமும் போல், அதிபரிசுத்தமாயிருக்கும், ரத்நங்கள் உள்ளும் புறமும் பளபளப்பாய் இருப்பது போலும், ஸூர்யனுடைய உட்பக்கமும் வெளிப்பக்கமும் ஒரே விதமாக ப்ரகாசமாய் இருப்பது போலும், வெளிப்பக்கத்தில் விஹிதகர்மா நுஷ்டானத்தாலும், உட்பக்கத்தில் ஞானத்தாலும், அவன் பரிசுத்தனாயிருப்பான். வேதமந்த்ரங்களை யுச்சரித்துக் கொண்டு, மண்ணாலும் ஜலத்தாலும் தேய்த்துக் கழுவி, வெளிப்பக்கத்தைச் சுத்தம் செய்து கொள்வான். ஏதோ ஓர் யுக்தி பலத்தைக் கொண்டு கண்ணாடியில் படிந்திருக்கும் அழுக்கைத் துடைத்து, அதைச் சுத்தம் செய்வது போலும், வண்ணான் தொட்டியில் ஊரவைத்து, வஸ்திரத்தில் படிந்திருக்கும் அழுக்கைப்போக்கிக் கொள்வது போலும், தேஹத்தின் வெளிப்பக்கத்தைச் சுத்தம் செய்து கொண்டு, ஒருவன் உள்ளேயும் ஞாந தீபத்தை ஏற்றி வைத்துக் கொண்டானே ஆனால், அவன் சுசித்வம் உள்ளவனாவான்.

அப்படி, உட்புறம் ஞானத்தினால் சுத்தமாகாமல், வெளிப்புறமாய் எவ்வளவு கர்மாநுஷ்டானம் செய்த போதிலும், அது எல்லாரும் அவமதிப்பதற்கே காரணம் ஆகும். பிணத்தைச் சிங்காரித்து வைத்தாற் போலும், கழுதையைக் குளிப்பாட்டி வைத்தாற்போலும், பேய்ச்சுரைக்காயின்

மேற்பக்கத்தைச் சர்க்கரையால் பூசிவைத்தாற் போலும், பாழும் வீட்டை தோரணங்கள் கட்டி சிங்காரித்தாற் போலும், பசித்திருப்பவன் தேஹத்தின்மேல் அன்னத்தைப் பூசினாற் போலும், மேற் பக்கம் முலாம் பூசப்பட்டு உட்பக்கம் மாசடைந்து, வெறுமையாயிருக்கும் ஓர் கலசம் போலும், மண்ணாற் செய்யப் பட்டு, வர்ணம் ஏற்றப் பெற்ற பழங்கள் போலும், உள்ளே அஞ்ஞாநம் என்னும் அழுக்கு நிறைந்திருக்கும் மேற் பக்கத்து சுத்தத்தை, நெருப்பு வைத்தே கொளுத்த வேண்டும். அது எவ்விதமாய் ப்ரயோஜநப்படும்? உட்புறம் சுத்தமாயிராத ஒருவனுடைய வெளிப்பக்கத்து கர்மாசரணத்தை எவர்களும் கொண்டாட மாட்டார்கள். கள்வைத்திருந்த மட்பாளையை, அதிபவித்ரமான கங்கா ஜலத்தினால் அலம்பினால், அது சுத்தமாகாது, ஆகையால் உட்புறம், சுத்த மாயிருந்தால், வெளிப்புறம் தானாகவே சுத்தமாய் விடுகிறது ஆனால் வெளிப்புறமான சுத்தத்தினால், உட்புறத் தழுக்குப் போவ தென்பது இல்லை. எவனிடத்தில் வெளிப்புறம் விஹிதகர்மாநுஷ்டாநத்தால் பரிசுத்தமாயும், உட்புறம் ஞானத்தால் களங்க மற்றதாயும் இருக்குமோ, அவனுடைய உள்ளும் புறமும் ஒத்துப் போய், அவனிடத்தில் கேவல சுசித்வம் உருவெடுத்து நிற்கும்.

ஸ்படிகத்தால் செய்த ஓர் கூட்டுக்குள் வைக்கப்பட்ட தீபத்தின் ப்ரகாசம் வெளிப்பட்டு எங்கும் பரவுவது போல், அந்தராத்மாவில் ஏற்பட்ட சுத்தபாவமானது வெளியில் ப்ரகாசமாய் விளங்கும். எந்த விஷயங்களால் விகல்பங்கள் உண்டாகுமோ, இல்லாத மனோ விகாரங்கள் விளையுமோ, செய்யத்தகாத கர்மங்களின் விதைகள் முளையெடுக்குமோ, அவற்றை காதாற் கேட்டாலும், கண்ணாற் கண்டாலும், அவைதாமாகவே முன் வந்து நின்றாலும், ஆகாசத்தில் ஓடிக்கொண்டிருக்கும் மேகத்தின் வர்ணம் அந்த ஆகாசத்தில் ஒட்டிக் கொள்ளாதது போலும், கீழே வர்ணிக்கப்பட்ட சுசித்வம் உள்ள ஒருவன் மனஸில், அவை எவ்விதமான விகாரத்தையும் உண்டுபண்ணி வைக்க சக்தியற்றிருக்கும். அன்றியும் அவனுடைய இந்த்ரியங்கள் அவ்விஷயங்களின் மேல் விழுந்து புரண்டுருண்டு கொண்டிருந்தாலும், அவனுடைய மனஸில் விகாரம் என்னும அசுத்தம் கொஞ்சமேனும் பற்றாது. வழியில் உத்தமஜாதி ஸ்த்ரீயாயினும், தாழ்ந்த ஜாதி ஸ்த்ரீயாயினும் எதிர்ப்பட்டால், அவளைப் பார்த்து மனஸு விகாரமடையாதது போலும், ஓர் பதிவ்ரதையானவள் புருஷனைக் கட்டிக் கொள்வது போலவே தன் புத்ரனைக் கட்டிக் கொள்ளும்போது, அவள் மனஸில்

காமவிகாரம் உண்டாகதது போலும் அவன் மனோவிகாரங்களை நியமித்து வைக்கும் திறமை உள்ளவனாய், க்ருயாக்ருத்யங்களை முன்ன தாகவே நன்றாய்த் தெரிந்து கொண்டவனாய், இந்த்ரியங்களைக் கொண்டு விஷயங்கள் நடுவில் ஸஞ்சரிப்பான் வைரக்கல் ஜலத்தில் ஊராதது போலும், கற்கள் கொதிக்கும் ஜலத்தில் வேகாதது போலும், அவனுடைய மனோவ்ருத்திகள் விஷயமாறுபாடுகளால் மாறுபடடையா. இதற்கு சுசித்வம் என்று பெயர். இது ஸம்பூர்ணமாய் இருப்பதாக எவனிடத்தில் நீ பார்ப்பாயோ அவனிடத்தில் ஞானம் குடிகொண்டிருக்கும்.

(8) ஸ்தைர்யம் :

ஸ்திரதை (நிலைபெயராமை) உண்மையாய் எவனிடத்தில் இருக்குமோ, அவனைக் கொண்டு தான் ஞானம் உலகில் வாழ்கின்றது. அப்பா, தேஹம் வெளிப்படையாய் தன்னியற்கைப்படி பல இடங்களில் அலைந்து திரிந்து கொண்டிருந்த போதிலும், அவன் மனஸு, தான் இருப்புக் கொண்ட நிலையை விட்டுப் பெயராது. பசு மேய்வதற்காக, தான் காட்டுக்குப்போகும், போது, அதின் கன்றின் மேல் அதற்கிருக்கும் ப்ரேமை அதின் மனஸை விட்டு அகலாதிருப்பது போலும், பதிவ்ரதை உடன் கட்டை ஏறும்போது, அவள் செய்து கொள்ளும அலங்காரங்களின் மேல் அவள் மனஸு செல்லாதிருப்பது போலும், பண ஆசை பிடித்தவன், சுற்றி அலையும் போதும், அவன் மனஸு தான் புதைத்துவைத்திருக்கும் தனத்தின் மேலேயே நிலைகொண்டிருப்பது போலும், ஞானியின் தேஹம் அலைந்து திரியும் போதும் அவன் மனது மாறுபாடடையாது. ஓடுகின்ற மேகத் தோடு கூட ஓடாத ஆகாசம் போலும், சுற்றிக் கொண்டிருக்கும் நக்ஷத்திர மண்டலங்களோடு சுற்றாத த்ருவநக்ஷத்ரம் போலும், நடந்து போகும் வழிப்போக்கர்களோடு நடந்து போகாத பாட்டையையும், அதிலுள்ள மரங்களையும் போலும், ஸதா ஸஞ்சரிப்பதே இயற்கையாயுள்ள இந்த பாஞ்சபௌதிகமான தேஹத்தோடு கூட ஆடிக்கொண்டிராமல், ஞாநியினுடைய மனது நிலை பெற்றிருக்கும்.

பெருங்காற்று வீசி அடிக்கும் போது, அசை வற்று நிற்கும் பூமி போல், உபத்ரவங்கள் எவ்வளவு தான் உண்டானாலும், அவன் மனஸு மாறுபாடடையாது. தைந்யத்தாலும் துக்கத்தாலும் தபிக்காமலும், பயசோகங்களைக்கண்டு

நடுங்காமலும், மரணம் ஸமீபித்து நின்ற போதிலும் அஞ்சாமலும், அவன் இருப்பான். துன்பங்களும், வயதும், வ்யாதியும் எவ்வளவு வ்ருத்தி அடைந்தாலும், அவற்றை நோக்கப் பயந்து முகத்தைத் திருப்பிக் கொள்ளான். நிந்தை, அவமானம், தண்டனை, காமங்கள், ஆசைகள், இவை அனைத்தும் சேர்ந்து மேல் விழுந்து தாக்கினாலும், அவன் மனஸு ஓர் மயிர்முனை அளவு கூட வணங்காது. ஆகாசமே இடிந்து விழுவதா யிருந்தாலும், அத்துடன் பூமியும் ஸமுத்ரத்தில் கரைந்து போவதாயிருந்தாலும், அவனுடைய சித்தவ்ருத்தி தான் போகும் வழியினின்று திரும்பாது. ய்யானையை புஷ்பத்தால் அடித்தால், அதற்கு ஓர் இம்மிகூட விகாரம் உண்டாகாதது போலும், எவ்வளவோ துக்ககரமாய் இருக்கும் துர்வாக்யங்களைக் கொண்டு அவனைத் தூரினாலும், அவன் துக்க மடையான். பாற்கடலின் அலைகளால் அசைக்க முடியாத மந்தர பர்வதம் போலும், காட்டுத்தீயாற் பற்றி யெரியாத ஆகாசம் போலும், எவ்வளவு பெருத்த ஆபத்துக்களாலும் அவன் கலவரப்படாதவனாய், கல்பாந்தம் கிட்டினாலும் தைர்யத்தைக கைவிடான். ஹே அர்ஜுநா இப்படிப்பட்ட மனஸின் நிலைக்குத் தான் ஸ்தைர்யம் என்று பெயர். இந்த ஸ்தைர்யம் எவனுடைய தேஹத்திலும் அந்த ராத்மாவிலும் உறுதியாய் நிலைகொண்டிருக்குமோ, அவனிடத்தில் ஞானம், என்னும் நிதியானது எல்லாரும் பார்க்கும்படியாய்த் திறந்து கிடக்கும்.

(9) ஆத்மவிநிக்ரஹம் :

எப்படி பிசாசு தன் வீட்டை மறக்காதோ, எப்படி போர்வீரன் தன் ஆயுதத்தை மறக்கானோ, எப்படி பண ஆசை பிடித்தவன் தன் தனத்தை மறக்கானோ, எப்படி தாய் தன்னொரே குழந்தையின் பேரில் தன்னாசையை எல்லாம் வைத்திருப்பாளோ, எப்படி தேனீயானது தான் சேர்த்து வைத்த தேன் பேரில் தன் ஆசை முழுவதையும் வைத்திருக்குமோ, அப்படியே ஆத்ம நிக்ரஹம் செய்கிறவன் தன் மனஸின் மேல் பேராசை பாராட்டிக் கொண்டு, அதை பத்ரப்படுத்தி வைத்துக்கொண்டு, அதை இந்த்ரியத்தின் வீட்டு வாயிலிற் போய்நிற்க ஓட்டான். ஒரு வேளை காமம் என்னும் பூச்சாண்டியும், ஆசை என்னும் டாகிநீ பிசாசும், இந்த மனஸினுடைய விஷயங்களையும் அங்க அடையாளங்களையும் நன்றாய்த் தெரிந்து கொண்டு, இதைப் பிடித்துக் கொண்டு போவதற்கு ஏற்பாடுகள் செய்து விடுவார்களோ, என்று பயப்படுவான். வ்யபிசாரியாகிய தன்

மனைவி, வீட்டை விட்டு வெளிப்பட யத்தனிக்கும்போது, எப்படி பலவானாகிய அவள் புருஷன், அவளை வீட்டுக்குள்ளேயே தகைத்து வைப்பானோ, அப்படி அந்த மனஸை விஷயபரவ்ருத்திகளில் இறங்காதபடி உள்ளேயே அவன் அடைதது வைப்பான்.

அவன் உயிருள்ளளவும், தேஹமும் இந்த்ரியங்களும் ஆசைப்படும் ஆஹாரங்களை, அவற்றிற்கு கொடுக்காமல் மறுத்து, அவற்றின் பலத்தை ஒடுக்கி, அவற்றைக் கட்டில் வைப்பான். அவன் மனஸின் வெளித்வாரத்தில் ப்ரத்யாஹாரம் என்னும் காவலை ஏற்படுத்திவைத்து, யம தமங்களை சரீரத்தில் ஸதா விழித்திருக்கும்படி செய்து வைப்பான். மூலாதாரத்திலும், நாபியிலும் கண்டத்திலும், மூலபந்தம், ஓட்யாணம் ஜாலந்த்ரம் என்னும் யோக முத்ரைகளை அமைத்து வைத்து, இடை பிங்களை என்னும் நாடிகளை அடைத்து, சித்தத்தை ஸுஷும்நையில் நுழையச் செய்து, ஸமாதியில் த்யாநத்தை நிறுத்தி, சிதத்தை ஆத்ம ஸ்வரூபத்தில் கலந்து லயித்து ஆநந்தப்படும்படி செய்து வைப்பான், இப்படிச் செய்வது தான் ஆத்ம நிக்ரஹம் ஆகும். இதின் வழிகளை அறிந்து, எவன் இப்படி சித்தத்தைக் கட்டில் வைப்பானோ, அவனிடத்தில் ஞானம் எப்போதும் இருந்து கொண்டிருக்கும். எவனுடைய ஆஞ்ஞையை அவனுடைய சித்தமானது சிரஸால் வஹிக்கிறதோ, அவன் மனுஷ்ய ரூபம் கொண்ட ஞாநமே ஆவான்.

इन्द्रियार्थेषु वैराग्यमनहंकार एव च ।
जन्ममृत्युजराव्याधिदुःखदोषानुदर्शनम् ।।८।।

இந்த்ரியார்தேஷு வைராக்ய மனஹங்கார ஏவ ச ।
ஜன்ம ம்ருத்யு ஜராவ்யாதி துக்க தோஷாநு தர்ஶனம் ।। 8

(10) விஷயவைராக்யம் :

ஞானம் உள்ளவன் மனஸில் விஷயங்களின் மேல் பூர்ணமான வெறுப்பு நிறைந்திருக்கும். வாந்தி எடுத்த அன்னத்தின் விஷயத்தில், எப்படி நாக்கில் நீர் ஊராதோ, பிணத்தை ஆலிங்கனம் செய்து கொள்ள, எப்படி சரீரம் பின் வாங்குமோ, விஷத்தைச் சாப்பிடுவதற்கும், மண்டி எரிகிற வீட்டில் நுழைவதற்கும், புலியின் குஹையில் புகுவதற்கும், கொதித்துக் கொண்டிருக்கும் உருகின இரும்பில் குதிப்பதற்கும், மலைப்பாம்பை தலை அணையாய் வைத்துக் கொள்வதற்கும்,

எப்படி மனஸு உடன்படாதோ, அவன் விஷயத்தின் பெயரைக் கேட்டாலே, நடுங்கிப்போய், அவ்விஷயங்களில் இந்த்ரியங்கள் வாய்வைப்பதற்கு உடன்படான். அவன் மனஸு விஷய ப்ரவ்ருத்திகளில் அலுப்பு பாராட்டியதாய், தேஹம் விஷயஸேவநம் இல்லாமல் மிக்க இளைத்துப்போனதாய், அவன் சமதமங்களை அப்யஸிப்பதில் அதி ருசி உள்ளவனாய் இருப்பான். அவன் தபஸ்ஸுகளையும் வ்ரதங்களையும் ஸதா அநுஷ்டித்துக் கொண்டு, ஜநங்கள் நிறைந்துள்ள க்ராமங்களில் நுழைவதற்கு பயப்படுவான். யோகாப்யாஸத்தில் மிக்க ஆவலுள்ளவனாய், ஏகாந்த ஸ்தாநங்களை விரும்பி, அவற்றையே தேடிப்போகிறவனாய், ஜநபா ஹுள்யத்தின் பெயரையே கேட்க ஒப்புக் கொள்ளான். கூர்மையாயிருக்கும் அம்புகள் மேல் படுக்கையாகவும், அழுகி நாற்ற மடிக்கும் சீழில் கிடந்து புரளுவதாகவும் அவன் ஐஹிக ஸுகாநு பவங்களை மதிப்பான்; ஸ்வர்க்க ஸுகத்தை நாறிப்போன நாய் மாம்ஸமாக மதிப்பான்; இப்படி இருக்கும் ஓர் நிலை தான் விஷய வைராக்யம் எனப்படும். இதின் உதவியைக் கொண்டு தான், ஓர் ஜீவன் ஆத்ம ஸுகத்தை அடைந்து ப்ரஹ்மாநந்தாநுபவம் செய்ய அதிகாரம் பெறுவான். இப்படி இம்மை மறுமையில் கிடைக்கக் கூடிய விஷய ஸுகங்களைக் கண்டு, எவனுடைய மனஸு நொந்து போகுமோ, அவனிடத்தில் ஞானம் ஸதா வஸித்துக் கொண்டிருக்கும் என்றறி.

(11) அநஹம்காரம் :

ஞானியானவன்பலனில்ஆசை மிகுந்துள்ளவனைப்போல், இஷ்டா பூர்த்தங்களைச் (இஷ்டம் - யாகங்கள் முதலியவை; பூர்த்தம் - வாபிதடாகாதிகளின் நிர்மாணம், அந்நதாநம், வழிப்போக்கர்கள் தங்கி இளைப்பாறச் சாவடிகள் கட்டி வைத்தல் முதலியவை) செய்தும், அவற்றைத் தான் செய்ததாக ஓர் நினைப்பைத் தன்னிடத்தில் ஏற்பட ஒட்டான். வர்ணாச்ரமத்துக் குரித்தான கர்மங்கள் ஒன்றாவது செய்யத் தவறிப்போகாமல், அனைத்தையும் யதாப்ரகாரமாக அநுஷ்டித்து, அவன் அவற்றைத்தான் செய்ததாகவாவது, தன்னால் அவை முடிவுபெற்றன வென்றாவது, ஸ்வப்நத்தில் கூட நினையான். எப்படிக்காற்றானது ஓர் காரணமு மின்றி தானாகவே எங்கேயும் வீசிக் கொண்டிருக்குமோ, எப்படி ஸூர்யனானவன் அபிமானமற்று உதித்து வெளிச்சம் கொடுப்பானோ, எப்படி வேதமானது தானாகவே பேசிக்கொண்டிருக்குமோ, எப்படி கங்கையானவள்

ஓர்பலனையும் உத்தேசிக்காமல் ஓடிக்கொண்டே இருக்கிறாளோ, அப்படியே தான் செய்கிறதாக அபிமானம் பாராட்டாதவனாய், அவன் கார்யங்களை ஸரியாகவே நடத்திக் கொண்டிருப்பான்.

ஸரியான காலத்தில் வ்ருக்ஷங்கள் காய்களைக் காய்த்துக் கொடுத்து, தாங்கள் காய்த்துக் கொடுத்ததாக ஓர் பாவம் பாராட்டாமல் இருப்பது போலும், தான் செய்கிறதாக நினைப்பற்றவனாய், செய்ய வேண்டிய கார்யங்களை அவன் ஸதா செய்து கொண்டிருப்பான். அவனுடைய மனோ வாக்காயங்களால் ஏற்படும ஸகலகர்மங்களும், மணிகள் கோத்த மாலையினின்று ஸூத்ரம் உருவப்பட்டுப்போனது போலும், அஹம்காரம் முற்றிலு மற்றவையாயிருக்கும். ஆகாசத்தில் மேகங்கள் ஒட்டாமல் ஸஞ்சரித்துக் கொண்டிருப்பது போலும், அவன் தேஹத்தில் கர்மங்கள் உண்டாய்க் கொண்டிருக்கும். குடிகாரன் தரித்திருக்கும் வஸ்த்ரம் போலும், சித்திரத்தின் கையிற் கத்தி போலும், எருதின் முதுகின்மேல் உள்ள சாஸ்த்ரங்கள் போலும், அவன் தன்தேஹத்தைப் பாவித்து அதில், தான் என்னும் பாவத்தைப் பாராட்டாதிருப்பான். இப்படிப்பட்ட நிலைக்குத்தான் அநஹம்காரம் என்று பெயர், இது ஸம்பூர்ணமாய் எங்கே காணப்படுமோ, அங்கே ஞானம் இருக்கிற தென்பதற்கு ஓர்ஆக்ஷேபணையும் இல்லை.

(12) ஜந்மம்ருத்யுஜராவ்யாதி துக்க தோஷாநு தர்சநம் :

மந்த்ரோ பாஸகன், துர்தேவதைகளால் தனக்கு ஆபத்து நேராதபடியும், யோகிகள் யோகாப்யாஸத்திற்கு இடையூறு நேரிடாதபடியும், முன்னதாகவே தகுந்த ஏற்பாடுசெய்து கொள்வது போலும், சிற்ப வேலைக்காரன் ஓர் சுவற்றைக் கட்டும்போது, அச்சுவர் கோணிப்போகாதிருப்பதற்கு தூக்குவிட்டுப் பார்த்துக்கொண்டே கட்டிக் கொண்டு போவது போலும், ஞானியானவன் ஜந்மம், மரணம், ஜரை, துக்கங்கள், வ்யாதி, மூப்பு, பாபங்கள், இவைகள் தூரத்தினின்று வரும் போதே, இவை தன்னை அணுகப் போவதைத் தெரிந்து கொண்டு, முன்னதாகவே தகுந்தபடி ஜாக்ரதை செய்து கொள்வான்.

ஜந்மதோஷ தர்சநம் :

ஸர்ப்பம் ஜந்மாந்தரங்களில் ஏற்பட்ட பகையை மறந்து போகாமல், பாராட்டிக்கொண்டே யிருப்பது போலும்,

ஜந்மதோஷதர்சி, தான் முன் ஜந்மங்க ளெடுத்ததால், தனக் கேற்பட்ட மானக் கேடுகளையும் துக்கங்களையும் ஸதா கவனத்தில் வைத்துக் கொண்டு, அப்படிப்பட்ட ஜந்மம் திரும்பவும் நேராதிருப்பதற்கு வழி தேடிக்கொண்டிருப்பான். கண்ணில் விழுந்த ஓர் பொடிக்கல் கரைந்து போகாமல், எப்போதும் அருவிகொண்டே இருப்பது போலும், காயத்திற்குள் இருக்கும் சல்யம் ஜரித்துப் போகாமல் மேன் மேலும் நோவை அதிகரிக்கச் செய்து கொண்டிருப்பது போலும், முன்பு ஜந்மங்கள் எடுத்ததால் அனுபவித்த துக்கங்களின் ஞாபகம் அவன் மனஸில் ஸதா இருந்துகொண்டு, துக்கம் கொடுக்கும். "சீழ்நிறைந்த குழியினின்று, மூத்ரத்வாரம் வழியாய் வெளிப்பட்டேனே! அடடாகஷ்டமே, நான் பெண்முலையின் வியர்வையை குடித்தேனே!" என்று இப்படி எல்லாம் திரும்பத் திரும்ப நினைத்துக் கொண்டு, ஜந்ம மெடுப்பதில் மிக்க வெறுப்படைந்து, மறுபடியும் இப்படி ஜந்மம் எடுக்காத வழி தேடிக்கொள்வதற்கு அவன் யோசனைகள் செய்து கொண்டே இருப்பான். எப்படி சூதாட்டத்தில் தோல்வி யடைந்து நஷ்டப்பட்டவன், நஷ்டமாய்ப் பொனதைத் திருப்பிக் கொள்வதற்கு, எவ்வளவு ஜாக்ரதையுடன் திரும்பவும் ஆடுவானோ, புத்ரன் தகப்பன் பழியைத தீர்த்துக்கொள்வதற்கு எவ்வளவு ஜாக்ரதையாக ஏற்பாடுகள் செய்வானோ, ஒருவன் அடிப்பட்டபின், அடித்தவனைத் திருப்பி அடித்து, பழிதீர்த்துக்கொள்வதற்கு, எவ்வளவு கோபங்கொண்டு பரபரப் புள்ளவனாய் இருப்பானோ, அவ்வளவு பரபரப் புள்ளவனாய் அவன், ஜந்மத்தின்மேல் விழுந்து, அதை நாசம் செய்துவிடக் கருவிக்கொண்டிருப்பான். பிறரால் மதிக்கப்பட்டே வாழ்ந்து கொண்டிருந்த ஒருவன், தனக் கேற்பட்ட ஓர்அவமானத்தை, எப்படி ஸஹித்துக்கொள்ளானோ, அப்படியே அவன் தான் ஜந்மம் எடுத்தது என்ற ஓர் அவமானத்தை ஒருநாளும் மறக்கான்.

ம்ருத்யு தோஷ தர்சனம் :

அன்றியும் ஓர் நதி நிலைக்காத ஆழமாய் இருக்கிற தென்று தெரிந்து கொண்டு, அதை நீந்திப்போகக் கருதினவன் கரையில் இருக்கும்போதே, அதற்குத் தக்கபடி கச்சத்தை இறுகக் கட்டிக்கொண்டு, முன் ஜாக்ரதைசெய்து கொள்வது போலும், யுத்த களத்துக்குப் போவதற்கு முன்பே, கவசம் அணிந்து கொண்டு தேஹத்தை பத்ரம் செய்து கொள்வது போலும், வெட்டு தன்மேல் விழுவதற்கு முன்பே கேடயத்தை முன்னாற் பிடித்துக் கொள்வது போலும், நாளைக்கு வழியில்

திருடர்களால் உபத்ரவம் ஏற்படும் என்று தெரிந்து கொண்டவன், அதற்குத் தக்கபடி, இன்றே முன்னேற்பாடுகள் செய்து கொள்வது போலும், உயிர் மாண்டுபோவதன் முன்னமேயே மருந்தைக் கொடுக்க வேண்டியது போலும், மரணம் நிக்கல்பம் முழுதும் சென்று போனபிறகு தான் நேர்வதாயிருந்த போதிலும், மரண தோஷதர்சி தன் ஆத்மா நன்மை அடைவதற்குச் செய்து கொள்ள வேண்டிய ஏற்பாடுகளை, இப்போதே செய்து கொள்வான். வீட்டில் நெருப்புப்பற்றிக் கொண்டு மண்டி எரியும்போது, கிணறு வெட்ட யத்தனித்தல் வ்யர்த்த மென்றும், ஓர் ஆழமான மடுவில் விழுந்து ஓர் கற்பாறை முழுகிப்போவது போல், ஸம்ஸாரத்தில் முழுகிப்போய் ப்ராணனை விட்டபின், தனக்கு ஓர் நன்மையையும் தேடிக்கொள்ள முடியாதென்றும், முன் யோசனை செய்துகொண்டு, பலவானுடன் பகைநேர்ந்த பின் ஒருவன் எட்டு ஜாமமும் கூரான சஸ்த்ரத்தைத் தரித்துக்கொண்டே இருப்பது போலும், யுக்த வயஸடைந்து கணவன் வீடுபோய்ச் சேரவேண்டிய பெண்ணை, அவள் தகப்பன், அவள் தன்வீட்டில் இருக்கும்போதே, வீட்டை விட்டுப் போய் விட்டவளாய்ப் பாவிப்பது போலும், ஸந்யஸித்துக் கொண்டு பற்றுக்களனைத்தையும் ஒழித்துக் கொண்டவன் மரணம் வரும் முன்னமேயே, அதைச் சிந்தித்துக் கொண்டே, அதற்கு ஸித்தமாய் இருப்பது போலும், அவன் இந்த ஜந்மத்தைக் கொண்டே திரும்பவும் ஜந்மம் எடுப்பதை ஒழித்துக் கொள்ளவும், சாவதினாலேயே. சாவென்பதை நாசம் செய்துள்ளவும் கருதி, தான் ஆத்மஸ்வரூபமாகவே எப்போதும் நின்று போக, ஏற்பாடுகள் செய்து கொண்டிருப்பான். இப்படி எவன் ஜந்மமரணங்களின் சல்யத்தை நிவர்த்தித்துக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருப்பானோ, அவனிடத்தில் ஞானத்திற் கோர் குறைவுமில்லை.

ஜரா தோஷ தர்சனம் :

அன்றியும் ஜரை என்பது தேஹத்தை வந்தடைவதின் முன்னமேயே, தாருண்யத்தின் நிறைவு இருக்கும் போதே, இந்த சரிரத்துக்கு வார்த்தக்யம், நேரிட்டு, அது பின் விவரிக்கப்படும் ப்ரகாரம், துர்கதி அடையுமென்று, ஜராதோஷதர்சி ஸதா சிந்தித்துக் கொண்டிருப்பான்.

அவன் அத்துர்கதியைச் சிந்திப்பதின் விவரம் :

இப்போது புஷ்டியுள்ளதாய் இருக்கும் இச்சரீரம், கொஞ்ச காலத்தில் உலர்ந்துபோன செத்தை போல் ஆக போகிறது.

பாக்யஹீநனுடைய வ்யவஸாயம் போலும், மந்திரியின் ஸஹாயமில்லாத ராஜாவைப் போலும், கைகால்கள் சக்தியற்றவையாய்க் கிடந்து போகும். வாஸனைகளை முகந்து கொண்டு ஸுகிக்கும் இம்மூக்கு ஒட்டகத்தின் முழங்காற்போல் ஆய்விடும். ஆஷாட மாஸத்தின் காற்றினால், கால் நோய் உண்டாய், மாடுகள் நடக்க முடியாது போவது போலும், இத்தலை நிமிர்ந்து நிற்க முடியாமற் போகும். தாமரைப் பூவோடு போட்டி போட்டுக் கொண்டிருக்கும் இக்கண்கள், பழுத்துப் போன புடலம் பூப்போல் ஆய்விடும். புருவங்கள் பழுத்துப் போன நெற்கதிர்கள் போல் தொங்கிப் போகும். கண்ணீர் வழிந்து மார்பு அழுகி நாற்ற மெடுத்துப் போகும். எப்படி கருவேலமரத்தின் அடிக்கட்டையில், ஓந்தி அடிக்கடி ஏறி இறங்கி உராய்தலால், அதில் பிசின் புறப்பட்டு வழிந்து கொண்டிருக்குமோ, அப்படியே இந்த முகத்தினின்று உமி நீர் வழியப்போகிறது. மடப்பளிச் சாக்கட்டை போலும் இந்த மூக்கு சளி அடைந்து நாறிக் கொண்டிருப்பதாய் விடும்.

இப்போது தாம்பூலத்தை மென்று சிவந்திருக்கும் உதட்டைப் பிளந்து, நகைத்து, பற்களின் காந்தியை வெளிப்படுத்தி, வெகு சீர்திருத்த மாய் வார்த்தைகள் பேசி, பெருமை பாராட்டிக் கொண்டிருக்கும் இந்த முகத்தினின்று, எச்சில் நீர் ஸதா பெருகிக் கொண்டு, தாடைகள் இரண்டு பல் வரிசைகளுடன் தொங்கிப் போகும். மிக்கக் கடன் பட்டுப்போன பயிர் செய்கிறவனைப் போலும், அதிக மழையிற் சிக்கிப் போய் எழுந்திருக்க முடியாது படுத்துக் கிடக்கும் கால்நடைகளைப் போலும், எது செய்தாலும் நாக்கு வார்த்தைகள் சொல்ல முடியாமற் படுத்துப் போகும். காய்ந்து போன புல்லின் கூளத்தைப் போல், இந்த தாடி காற்றில் பறக்கப் போகிறது. ஆஷாடமாஸத்தில் மலைச்சிகரங்களினின்று அருவிகள் ஒழுகுவது போலும், வாயினின்று உமி நீர் பெருகப் போகிறது. வாய் உளறிப்போய், காது அடைத்துப்போய், தேஹம் கிழக்குரங்காய்ப் போய், தோட்டங்களில் செய்து வைத்திருக்கும் புற் பொம்மைகள் காற்றிலாடுவது போலும், எங்கு பார்த்தாலும் உதற லெடுத்துப்போகும். காலோடு கால் தட்டிக் கொண்டு கைகள் உதறலெடுத்துப் போகும் இப்படி அவயவங்கள் அனைத்தும் தாறுமாறாகக் கூத்தாடப் போகின்றன. மலமூத்ரத்வாரங்கள் ஓட்டைப் பாத்ரங்கள் போல், ஸதா ஒழுகுகின்றனவையாய் விடும். நான் சீக்கரத்தில் இறந்து போக வேண்டுமென்று இதரர்கள் தேவதைகளை ப்ரார்த்தித்துக் கொள்வார்கள். என்னைப் பார்த்து உலகத்தார் காரி உமிழ்வார்கள். சீக்கிரத்தில் என்னைக் கொண்டுபோக

வேண்டு மென்று, நான் யமனை ப்ரார்த்தித்துக்கொள்ளும்படி யாய்விடும். நான் இருப்பது சுற்றத்தாருக்குக் கஷ்டமாயிருக்கும். என் பெண்சாதி என்னை பிசாசு என்று சொல்வாள். அதைக் கேட்ட என் குழந்தைகள் என்னைப் பார்த்து, மூர்ச்சை அடைந்து விழுவார்கள். சுருக்கிச் சொல்ல, எவர்களும் என்னைப் பார்த்து அருவருப்பு அடைவார்கள். என்னுடைய ஓயாத இருமலால், பக்கத்து வீட்டுக் காரன் தூக்கம் கலைந்து, இந்தக் கிழவனால் வெகு ஜனங்கள் கஷ்டப்படுவார்களே, என்று சொல்வான்.

இப்படிச்சிந்தித்து, அவன் செய்து கொள்ளும் முன் ஜாக்ரதை :

இப்படிப்பட்ட வ்ருத்தாப்ய தசையின் சிந்நங்களை எவன் யௌவநத்தி லிருக்கும் போது தெரிந்து கொண்டு, தான் இப்படிப் பட்ட தேஹத்தை அடைந்திருக்கிற விஷயத்தில் அருவருப்படைந்து, "நாளைக்கே இந்த ஸ்திதி எனக்கு ஏற்படும்; இப்போதிருக்கும் என்னுடைய கொஞ்ச புண்யமும் விஷய போகத்தால் நாசமாய்ப் போகும்; பின்பு நான் நன்மையை அடைய ஓர் புண்யமும் எனக்க மிகுந்திருக்காதே;" என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டு, பின்வருமாறு ஏற்பாடுகள் செய்து கொள்வான். காது கேட்காமல் போவதன் முன்னமேயே, கேட்கவேண்டிய தனைத்தையும், கேட்டு, காலுக்கு நடக்கும் சக்தி அற்றுப் போவதற்கு முன்பே செய்ய வேண்டிய தீர்த்த யாத்ரைகளைச் செய்து, கண்கள் பார்வை யற்றுப் போவதின் முன்பே, பார்க்க வேண்டிய தனைத்தையும் பார்த்து, வாய் அடைத்துப் போவதின் முன்பே சொல்லவேண்டிய தேவதா ஸ்தோத்ரங்கள் முதலியவற்றைச் சொல்லி, கைகளின் சக்தி முற்றிலும் போய் விடாது, அவற்றிற்கு கொஞ்சம் கொஞ்சம் சக்தி இருக்கும் போதே, செய்ய வேண்டிய தான தர்மங்களைச் செய்து தீரவேண்டும்.

இந்த்ரியங்கள் சக்தி யற்றுப்போய், மனஸு பைத்யம் பிடித்துப் போகும், ஓர் தசை ஏற்படுவதற்கு முன்பே, தத்வவிசாரம் செய்து, உத்தமமான ஆத்ம ஞானத்தை ஸம்பாதித்து வைத்துக் கொள்ள வேண்டும். நாளைத் திருடன் கையில் அகப்பட்டுக் கொள்ளப் போகிறோம், என்று தெரியவந்தால், இன்றே நாம் நம்முடைய ஸொத்துக்களை தூரமாகக் கொண்டு போய் வைத்து விடவேண்டும். வீட்டில் உள்ள பண்டங்களை, எலிகள் முதலானவை தின்று விடாதபடி, மூடி பத்ரம் பண்ணிவைக்க வேண்டுமானால்,

விளக்கணைந்து போவதற்கு முன்பே, அவற்றை பத்ரம் செய்து வைக்க வேண்டும்; அப்படியே, மூப்பு வந்து நாம் வீண்படுவதின் முன்பே, நம்மைப் பற்றிக் கொண்டிருக்கும் அனைத்தையும் தூர விலக்கிவைத்து விடவேண்டும். வழியோடு போகும் போது எங்கே கோட்டைகளிடிந்து கிடப்பதாகத் தென்படுமோ, எங்கே பக்ஷிகள் தங்கியிருக்க இடமில்லாமல் திரும்பி பறந்து வந்து விடுவதாகக் காணப்படுமோ, அவ்விடத்துக்குச் செல்லாமல், ஒருவன் திரும்பி வந்து விடுவானே யாகில், அவன் திருடர்களால் பாதிக்கப்படுவானா என்ன?

ஆகையால் எவன் இளமையிலேயே, நூறு வயஸு நிறைந்த கிழவனாய்விடுவானோ, அவனுக்கு வ்ருத்தாப்யம் வந்து வீண்படும். எள்ளெடுபட்டுப் போன எள்ளின் காய்களை, திரும்பவும் அடித்து உதறினால், மறுபடியும் அவற்றினின்று எள் கிடைக்குமா? பெருத்த நெருப்பே யாயினும், முன்பே எரிந்து முற்றவும் சாம்பலாய்ப் போனதை, எவ்விதம் எரிக்கும்; ஆகையால் வார்த்தக்யத்தா லுண்டாகப் போகும் கேடுகளை, முன்னதாக தீர ஆலோசனை செய்து, வார்த்தக்யத்தைத் தன் தேஹத்தில் இளமையிலேயே பாராட்டிக் கொண்டு, விஷயங்களை உபேக்ஷித் திருந்து, உண்மையாக வார்த்தக்யம் வந்த பின், அது தனக்கோர் கேட்டையும் செய்து வைக்காதபடி செய்து கொண்டு, அதை ஏமாற்றி விடுகிறவன் எவனோ, அவனிடத்தில் ஞானம் குடி கொண்டிருக்கிற தென்றறி.

வ்யாதி தோஷதர்சநம் :

அப்படியே ரோகங்கள் ஆக்ரமித்துக் கொண்டபின், ஆத்மநன்மை எதையும் தேடிக்கொள்ள முடியாது போகுமென்று தெரிந்து கொண்டு, தேஹத்தில் தத்காலமிருக்கும் மாரோக்யத்தைக் கொண்டு, தேடிக்கொள்ள வேண்டிய ஆத்மஹித மனைத்தையும், ஞான முள்ளவன் தேடிக் கொள்வான்.

துக்க தோஷாநு தர்சனம் :

ஓர் அன்னகவளம், பாம்பின் வாய் ஸம்பந்தப்பட்டது என்று தெரிந்து கொண்ட மாத்ரத்தில், புத்தி சாலியான ஒருவன் அதை தூரத் தள்ளிவைப்பது போலும், எதினுடைய பிரிவால் துக்கமும், சோகமும், மற்றும் வேறு விதமான விபத்துக்களும் நேருமோ, அதின் கூட்டுறவை ஒழித்து விட்டு, ஆநந்தப்பட்டுக் கொண்டு தாஸீனனாயும், எந்தெந்த கர்மேந்த்ரிய த்வாரங்களினின்று தோஷங்கள் தலையை நீட்டித் தன்னைக்

கவ்விக்கொள்ளப் பார்க்குமோ, அந்தந்த த்வாரங்களனைத்திலும் நியமம் என்னும் குண்டுக் கற்களைத் திணித்து வைத்தவனாயும், இப்படி யெல்லாம் முன்ஜாக்ரதை பூண்டு, எவனிருப்பானோ, அவன் தான் ஞாநஸம்பத்துக்கு அதிபதி என் றறிந்து கொள், அப்பா. இனி அர்ஜுநா ஞானியின் மற்று மோர் அலௌகிகமான குறியை விவரித்துச் சொல்வேன் கேள்.

असक्तिरनभिष्वङ्गः पुत्रदारगृहादिषु ।
नित्यं च समचित्तत्वमिष्टानिष्टोपपत्तिषु ।।९।

அஸக்தி ரநபிஷ்வங்கः புத்ர தார க்ருஹாதிஷு ।
நித்யம் ச ஸமசித்தத்வ மிஷ்டா நிஷ்டோ ப பத்திஷு ॥ 9

(13) பற்றற்றமை :

இந்த தேஹத்தின் விஷயத்தில், சாவடியிற் சற்று நேரம் இளைப்பாறத் தங்கின வழிப்போக்கனைப் போல், பற்றற்றவனாயும், ஓர் வழிப்போக்கன் தான் சற்று நேரம் தங்கியிருக்கும் மரத்தின் நிழலில் எவ்வளவு பற்றுள்ளவனாயிருப்பானோ, அவ்வளவு பற்றுக்கூடதன் வீட்டின் விஷயத்திற் பாராட்டதாவனாயும், தன்னோடு கூடவே வந்து கொண்டிருக்குத் தன்னிழலில், ஒருவன் எப்படி கவன மற்றவனாயிருப்பானோ, அப்படியே தன் ஸ்த்ரீ விஷயத்தில் ஆசை யென்பது அற்றுப்போய்க் கவனமற்றவனாயும், தன்னடியில் வெய்யிலுக்காக ஒதுங்கின வழிப் போக்கன் விஷயத்திலும், கால் நடைகள் விஷயத்திலும், ஓர் மரம் எவ்வளவு பற்றற்ற தாயிருக்குமோ, தனக்குப் பிறந்த குழந்தைகள் விஷயத்தில் அவ்வளவு பற்றற்றவனாயும் வழி நடந்து போகும் ஒருவன், வழியில் இருக்கும் வஸ்துக்களைப் பார்த்துக் கொண்டே போவது போல், ஸம்பத்துக்களால் சூழப்பட்டிருக்கும் போது அவற்றிற் பற்றுப் பாராட்டாதவனாயும், கூட்டிலடைப்பட்டிருக்கும் கிளி போல, தேஹத்திலிருந்து கொண்டு, வேதாஞ்ஞைக்குக் கட்டுப்பட்டு நடந்து கொண்டு, மற்ற விதமாய் மனையாள், வீடு, குழந்தைகள் விஷயத்தில் ஸ்நேஹபாவ மற்றவனாயும் எவனிருப்பானோ, அவன் ஞாநத்துக்கு ஜந்மபூமி என்றறி.

(14) இடை விடாது ஸமசித்தம் பாராட்டி யிருக்கை :

மழைகாலத்திலும் வேநிற் காலத்திலும் ஒரே மாதிரியாயிருக்கும் ஸமுத்ரம் போல், இஷ்டா நிஷ்ட ப்ராப்தி

களால் வேறுபாடடையாதவனாயும், மூன்று ஸந்த்யைகளிலும் ஒரே விதமாயிருக்கும் ஸூர்யனைப்போல், ஸுகதுக்கங்களால் விகார மடையாத மனஸு படைத்தவனாயும், ஆகாசம் போல் ஸமத்வத்தின் குறைவில்லாதவனாயும், எவனிருப்பானோ, அவனே உருவெடுத்துக் கண் முன் நிற்கும் ஞான மென்று தெரிந்துகொள்.

मयि चानन्ययोगेन भक्तिरव्यभिचारिणी ।
विविक्तदेशसेवित्वमरतिर्जनसंसदि ।।१०।।

மயிசானன்ய யோகேன பக்தி ரவ்ய பி சாரிணீ।
விவிக்ததேஶ ஸேவித் வமர திர் ஜன ஸம்ஸதி ॥ 10

(15) பகவானிடத்தில் அநந்யபக்தி :

உலகில் ருசியுள்ள வஸ்து என்னைத் தவிர வேறொன்று மில்லை யென்று த்ரிகரண சுத்தியாய்த் தீர்மானம் செய்து கொண்டு, இந்த நிச்சயத்தையே தன் னாராத்ய தேவதையாய் பாவித்திருக்கும் ஓர் காரணத்தால், என்னைத் தவிர வேறொன்றின் திக்கைக் கூட நோக்காதவனாய், (வளர்த்திச் சொல்வ தென்) தன் மனஸை என்னிடத்தில் கொஞ்ச மேனும் இடை வெளியில்லாதபடி சேர்த்து வைத்து, என் படுக்கையாய் அதைச் செய்துவைத்துக் கொண்டு, தன் கணவனிடத்தில் வந்து சேரும் பதிவ்ரதையைப் போல் தேஹத்திலாவது மனஸிலாவது யாதொரு ஸங்கடமும் பாராட்டாமல், என்னிஷ்டப் படி நடந்து கொண்டு, என்னுடன் கலந்து, அப்படிக் கலந்த பின், பிரிவில்லாமற் கலந்தே நிற்பவனாய், கங்கையின் ஜலமானது ஸமுத்ரத்தில் விழுந்த பின் ஸமுத்ரமாகவே போயும், ஸமுத்ரத்தை பஜித்துக் கொண்டே இருப்பது போலும் நானாய்ப்போன பின்னும் என்னையே பஜித்துக் கொண்டிருக்கிறவனாய், ஸூர்ய னுதிக்கும்போது வெளிப்பட்டு அவன் மறைந்து போகும் போது மறைந்து போய், இப்படி ஸூர்யனுக்கே விலைப்பட்டுப் போயிருக்கும் தன்மையால், பெருமை படைத்து விளங்கும் ஸூர்ய கிரணத்தைப் போன்றவனாய், ஜலத்தையே கீழேதாங்கும் ஆதாரமாய்க் கொண்டு, ஜலமே அதின் மேல் புரண்டு, அலையென உலகத்தாரால் பெயரிடப்பட்டதாயிருந்தபோதிலும், உண்மையில் அது ஜலமேயாயிருப்பது போல், என்னைவிட்டு வேறுபடாதவனாய், நானே யான பின்னும் என் மேலேயே விழுந்து புரண்டு கொண்டிருப்பவனாய், இருக்கும் அவனே மூர்த்திகரித்த ஞானமாவான்.

(16) விவிக்ததேசஸேவநம் :

அன்றியும் உத்தமமான புண்ய தீரத்தங்களின் பரிசுத்தமான தீரங்களிலும், மிகவும் பரிசுத்தமான தபோவனங்களிலும், மலைச்சார்பில் இருக்கும் குஹைகளிலும், பெருத்த தடாகங்களின் ஓரத்திலும், வஸிப்பதிலேயே ஆசை பாராட்டி, நகரங்களில் ஸஞ்சரிக்காமல் ஜனங்களால் நிறைந்திருக்கும் இடங்கள் விஷயத்தில் வெறுப்புற்றவனாய், எவன் இருப்பானோ அவன் மனிதவுரு வெடுத்த ஞானம் என்றறி. ஹே புத்திமானே, ஞானம் இன்ன தென்று ஸந்தேஹமற நீ தெரிந்து கொள்ளும் பொருட்டு, ஞானியின் மற்றும் சில லக்ஷணங்களைச் சொல்வேன், கேள்.

अध्यात्मज्ञाननित्यत्वं तत्त्वज्ञानार्थदर्शनम् ।
एतज्ज्ञानमिति प्रोक्तमज्ञानं यदतोऽन्यथा ।।११।।

அத்யாத்ம க்ஞான நித்யத்வம் தத்வ க்ஞானார்த தர்ஶனம் ।
Huz Ub õÚª v ¨ +µõUu ©Ub õÚ ® ¯ த தோऽன்யதா ॥ 11

(17) அத்யாத்ம ஞாந நித்யத்வம் :

பரமாத்மவஸ்துவை, எவ்விதமான ஞானத்தாற் பார்க்க முடியுமோ, அதொன்று தப்ப, இம்மை மறுமை ஸுகங்களுக்கு வழிகாட்டிக் கொடுக்கும் மற்ற ஞானங்களனைத்தும், அஞ்ஞானம் மென்று உறுதியாய்த் தீர்மானித்து, ஸ்வர்க்க ஸுகத்துக்கு ஸாதனமானதை விலக்கிவைத்துக் கொண்டு, ஸாம்ஸாரிக ஸுகஸாதநங்களின் வார்த்தைகளே காதிற் படாதிருக்கும்படி, அதைப் பொத்திக் கொண்டு, ஆத்ம ஸ்வரூபத்தைக் காட்டிக் கொடுக்கும் ஞானத்தில், த்ருடமான நம்பிக்கையுடன், அதில் ஸதா முழுகிக் கிடப்பவனாய், ஓர் வழிப்போக்கன் தன் பாதை பலவித மாய்ப் பிரிந்து போகிற ஸந்திக்கு வந்தவுடன், நன்றாய் விசாரணை செய்து, தான் போய்ச் சேரவேண்டிய ஊரல்லாத மற்ற ஊர்களுக்குக் கொண்டுபோய்விடும் கிளைவழிகளிற் செல்லாமல், தன்னூருக்குக் கொண்டு போகும் ராஜமார்க்கத்தையே பிடித்துக் கொண்டு போவது போலும், அத்யாத்ம மல்லாத மற்ற ஞானங்களனைத்தையும் ஒரு பக்கம் தள்ளிவைத்து, மனஸையும் புத்தியையும் அத்யாத்ம ஞானத்திலேயே ஸஞ்சரித்துக் கொண்டிருக்கும்படி செய்து, இந்த ஞானம் ஒன்றே உண்மையான ஞானம், மற்றவை அனைத்தும் ப்ராந்தி, யென்று உறுதியாய்த் தீர்மானஞ் செய்து கொண்டு, அத்தீர்மானத்தில்,

மேருபர்வதம்போல் பெயராத நிலை பெற்றவனாய, அத்யாத்ம ஞான ஆகாசத்தின் த்ருவதேவன் என்று சொல்லும் படியாய் அத்யாத்ம ஞானத்தின் வாயிற் படியில் பழிகிடந்தே தீர்கிற தென்று நிச்சயம் படைத்தவனாய், எவன் இருப்பானோ, அவனிடத்தில் ஞானம் இருக்கிற தென்பதற்கு மறு வார்த்தையே இல்லை. இந்த ஞானத்தில் அவன் மனஸு நிலைகொண்டு உட்கார்ந்த, உடனேயே அவன் நான் ஆய்விடுகிறான்; ஆனால் அத்யாத்ம ஞானத்தில் அவன் மனஸு உட்கார்ந்தது என்பது அவ்வித ஞானத்துக் காசைப்பட்டு அதை அடைவதற்கு வேண்டிய ப்ரயத்நம் செய்து கொண்டிருப்பதினாலேயே ஏற்படாமல், அந்த ஞானத்தை உண்மையாய் அடைந்து, அதின் அனுபவத்தைச் செய்து கொண்டிருப்பதே அதில் உட்கார்ந்ததாகும்.

(18) தத்வ ஞானார்த்த தர்சனம் :

அன்றியும், நிர்மலமான தத்வஞானம் எந்த ஒரே பலத்தை பலித்துத்தருமோ, அதாவது எந்த பரப்ரஹ்ம வஸ்துவை யதாவத்தாய்க் காட்டிக்கொடுக்குமோ, அந்த பரப்ரஹமவஸ்து ஓர் மறைவு மின்றி த்ருஷ்டிக்குப் புலப்படும்படி ஏற்படவேண்டும். அப்படி ஆகாமல், போதத்துக்கு வந்த ஞானத்தால், பரப்ரஹ்மாநுபவம ஏற்படாத பக்ஷத்தில், அந்த ஞானலாபம் முடிவு வரைக்கும் ஏற்பட்டு விட்டது என்று, நான் அப்பிராயப்பட மாட்டேன். குருடன் கையில் தீபம் அகப்பட்டதினால், அவனுக்கு எவ்விதமாய் அது பயன்படும்; அப்படியே உண்மையான ஞானத்தால் அறியத்தக்கதான பரப்ரஹ்ம வஸ்துவின் அநுபவத்தைச் செய்து வைக்காத ஞானமனைத்தும், வ்யர்த்த மானதும், உண்மையான பார்வையற்றது மான குருட்டு ஞானமே யாகும். ஆகையால் ஞான ப்ரகாசத்தால் எத்தனை வஸ்துக்கள் புத்தியில் தோன்றுமோ, அவை அனைத்தும் ப்ரப்ரஹ்மமே என்று நிர்மலமான புத்தி ஏற்படுமேயானால், அந்த ஞாநம் உண்மையான ஞாநமாகும். இப்படி ஜ்ஞேயமான பரப்ரஹ்ம வஸ்துவையே அநுபவத்துக்குக் கொண்டு வந்து வைக்கும், நிர்மலமான ஞாநம் உள்ளவனாயும், உண்மையான ஞானம் எவ்வளவு பெரிதோ, அவ்வளவு பெரிதான புத்தி உள்ளவனாயும், ஒருவனிருந்தால், அவனிடத்திற் காணப்படும் ஞானத்தை ஞானம் என்று எடுத்துச் சொல்லவும் வேண்டுமா? ஞானத்தின் ஸ்பூர்த்தி ஏற்பட்ட க்ஷணத்திலேயே ஒருவனுடைய புத்தி ஜ்ஞேயத்தில் நிலை கொள்ளுமானால், அவன் கைவைத்த இடம் எல்லாம் பரப்ரஹ்மம் அவனுக்கு லப்தமாகும். இப்படிப்

பட்ட ஓர் நிலையை ஞானம் என்று சொல்வதில் ஆச்சர்யப்படத் தக்கது என்ன? ஸூர்யனை ஸூர்யன் என்று சொல்வதில் ஆச்சர்யப்பட வேண்டியது என்ன, ஹே அர்ஜுனா?

அஞ்ஞானலக்ஷணநிரூபணத்தின் அவதாரிகை :

இச்சமயத்தில் ச்ரோதாக்கள் பின் வருமாறு சொல்கிறார்கள். இவ்விஷயத்தில், நீர் சொன்னது போது மானதாய் இருப்பதால், இதை இன்னும் வளர்த்தி, மேல் நடக்க வேண்டிய விஷயத்திற்குத் தடை செய்து வைக்க வேண்டாம். நீர் ஞான லக்ஷணங்களை நிரூபிக்க இவ்வளவு விஸ்தாரமான ப்ரஸங்கம் செய்தீரே, அது எங்களுக்கு ப்ரவசந ரூபமான பெருத்த விருந்தாயிற்று, ரஸம் விசேஷமாய்ப் பொங்கி, ப்ரவஹிக்கும்படி செய்யும் கவிதாஸாமர்த்யத்தை, நீர் மிக்கப் படைத்திருக்கிறீர். ஆனால் விருந்திட எங்களை அழைத்து, எங்களை சத்ருக்களாய் ஏன் செய்து கொள்கிறீர்? சாப்பிடுவதற்கு ஒருவனை உட்கார வைத்து, அவன் உண்ணவேண்டிய அந்நங்களை எடுத்துக் கொண்டு, தூரமாக ஓடிப்போனால், அதற்கு முன் அவனுக்குச் செய்த மற்ற உபசாரங்களுக்கு, ப்ரயோஜநம் என்ன? ஓர் பசு மற்ற விஷயங்களனைத்திலும் மிக்க ஸாதுவாய், கறப்பதற்கு ஆரம்பம் செய்யும் பொழுது மடியில் கைவைக்க முடியாத படி உதைத்து கூத்தாடும் கெட்ட குணமுள்ளதாயிருந்தால், அதை எவன் வீணாகப் போஷிப்பான்?

அப்படியே ஞான விஷயத்தில் புத்திக்கு விகாஸம் ஏற்படாத படி, ஒருவன் எவ்வளவோ சாதுர்யமாய்ப் பேசினாலும், ப்ரயோஜனம் என்ன? ஆனால் இப்படி உம்முடைய விஷயத்திற் சொல்வது தகாததே. நீர் எவ்வளவோ உத்தம ரீதியாய் ப்ரஸங்கம் செய்திருக்கிறீர். எந்த ஞானத்தின் அல்பாம்சத்தை அடைவதற்காக யோகம் முதலிய கஷ்டஸாத்யமான ஸாதநங்களை அநுஷ்டிப் பார்களே, அந்த ஞானத்தை நாங்கள புசித்துப் பூர்ண த்ருப்தி அடையும் படி, நீர் உம்முடைய நிரூபணத்தால் எங்களுக்குக் காட்டி வைத்தீர். அம்ருதவர்ஷம் ஏழுநாள் பர்யந்தம், ஒரே பாட்டமாய், ஓயாது பெய்ததினால், எவன் கஷ்டப்படுவான்? ஒவ்வொரு நாளும் ஸுகாநுபவத்தோடு கூடிய தாய், கோடிக்கணக்காய் நாட்கள் சென்று விட்டதானால், பாதகம் என்ன? ஓர் இரவு பூர்ணசந்திரனோடு கூடியதாய், ஓர் யுகமளவுதீர்க்கமாய் வளர்ந்து கொண்டிருந்தால், சகோரபக்ஷி, அவ்விரவு முழுதும்,

சந்திரனையே நோக்கிக்கொண்டிருப்பதில் அலுப்புப் பாராட்டி, அதினின்று ஒழியுமா? அப்படியே ஓர் ப்ரஸங்கம் ஞானத்தைப்பற்றியதாயுமிருந்து கொண்டு, ரஸத்தால் மிகுந்ததாயும் ஏற்படுமே யாகில், அதைக் கேட்டு, ஆநந்தப்படுவதில் அலுப்படைந்து, போதுமென்று சொல்லுகிறவர்கள் உண்டா?

விருந்துண்ண வந்தவர்களும் பாக்கிய சாலிகளாய், விருந்திடுகிறவனும் மிகுந்த பாக்யம் படைத்தவனாய், ஏற்பட்டபின், அவ்விருந்துக்கு முடிவு ஏற்படாதது போலு மல்லவா, இப்போது நமக்கு நேர்ந்திருக்கிறது; ஏனென்றால் எங்களுக்கு ஞானவிஷயங்களைக் கேட்பதில் ஆசையும், உமக்கு அவற்றைச் சொல்வதில் ஆசையும், மிக்க ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த வ்யாக்யானத்தைக் கேட்கக் கேட்க, எங்களுடைய ப்ரேமை நான்கு மடங்காய்ப் பொங்கிப் போகிறதால், உம்மை அநுபவத்தோடு கூடிய உத்தம ஞானி யென்று சொல்லி உம்மைக் கொண்டாடா தொழிய எங்களுக்கு ஸாத்ய மில்லை. ஆயினும், இப்போது ப்ரஞ்ஞையின் அத்யந்நத தசை ஏற்பட்டிருப்பதால், அத்தசை மாறிப்போவதற்கு முன்பே, மூலக்ரந்தத்தில் மேற் சொல்லப்பட்டிருப்பதின் அர்த்தத்தை, நாங்கள் உள்ளபடி அறியும்படியாய், நீர் நிரூபணம் செய்ய வேண்டும். இப்படி ஸாதுக்கள் சொன்னதை அநுஸரித்து, இவ்வியத்தை இத்தனயோடு நிறுத்திவிட்டு, மேல் விஷயத்தைச் சொல்வேன் கேளுங்கள்.

இதுவுமது, கீழ்ச் சொன்னதற்கும், மேற் சொல்லப்போவதற்கும் ஸங்கதி :

பின்பு ஸ்ரீ க்ருஷ்ணன் அர்ஜுநனைப் பார்த்துப் பின் வருமாறு சொன்னார். இப்பதினெட்டும் ஞான லக்ஷணங்கள் ஆகும்; இவற்றைக் கொண்டு இவ்வுலகில் ஞாநிகளைத் தெரிந்து கொள்ள வேண்டும், என்று நானும் எல்லா ஞாநிகளும் நிச்சயம் செய்து வைத்திருக்கிறோம். உள்ளங்கை நெல்லிக் கனிபோல், திருப்பித்திருப்பி வைத்துக் கொண்டு, உன் கண்ணால் நாற்புறமும் சோதித்துப் பார்த்து, ஸந்தேஹமறத் தெரிந்து கொள்ளும்படியாய், உனக்கு ஞானத்தை இன்னதென்று காட்டி வைத்தேன். விஷயங்களை நன்றாய் க்ரஹித்துக் கொள்ளும் மதி படைத்தவனே, இனி அஞ்ஞானம் என்று எதைச் சொல்வார்களோ அதையும் இன்னதென்று தெரிந்து கொள்ளும்படி, அதின் லக்ஷணங்களைச் சொல்வேன்

கவனித்துக் கேள். ஞானம் இன்னதென்று நன்றாய்த் தெரிந்து போய்விட்டதானால், அஞ்ஞானமும் இன்னதென்று தெரிந்து போனதாகும், ஏனென்றால் எது ஞானமில்லையோ அதுவே அஞ்ஞானம், பகல் முழுதும் ஆய்ப்போய்விட்டபின், ராத்ரியின் முறை ஏற்படுகிறது; ஏனென்றால் இவ்விரண்டைத் தவிர மூன்றாவது காலமில்லை யல்லவா அது போலும் ஞானம் இல்லாததெல்லாம், அஞ்ஞானமே யாயினும் அதின் சில லக்ஷணங்களை எடுத்துச் சொல்வேன்.

(1) மானித்வம் :

எவன், பிறர்கள் கொண்டாட வேண்டுமென்று ஆசைப்பட்டு, அவர்களிடத்திலிருந்து பூஜையை எதிர் பார்த்துக்கொண்டு, அப்படி பூஜை கிடைத்த உடனே, ஸந்தோஷ மடைந்து, கர்வங்கொண்டு, பெருமை என்னும் மலையின் சிகரத்தின் மேல் ஏறி அதினின்று இறங்காத்வனா யிருப்பானோ, அவனிடத்தில் ஸம்பூர்ணமான அஞ்ஞானம் குடி கொண்டிருக்கிறது.

(2) தம்பித்வம் :

பஞ்சமர்கள் தங்கள் சாவடிகளை அரசின் இலைகளால் தோரணம் கட்டி அலங்கரித்தல் போலும், தாங்கள் செய்த தர்மங்களை யெல்லார் காதிலும் படும்படி தங்கள் வாக்காலேயே கொண்டாடி, கோவில்களில் குப்பையைப் பெருக்கித் தள்ள கட்டி வைத்திருக்கப்பட்ட துடப்பத்தைப் போலும், பிறர்கள் நிந்தையைச் செய்து, அவர்களை சுத்தப்படுத்தி வைக்கிறவனாய், தன்னுடைய வித்யையை ப்ரகடனம் பண்ணிக்கொண்டு, தான் செய்த புண்யங்களை எடுத்துக் கூறி, கேவலம் ப்ரதிஷ்டைக்காக அவற்றைச் செலவிடுகிறவனாய், தன்னை மேன் மேலும், கொண்டாடிக் கொண்டு, இதரர்களுக்கு செய்ய வேண்டிய பூஜையைச் செய்யாதவனாய், எவனிருப்பானோ, அவன் அஞ்ஞானத்தால் நிறைந்திருக்கும் கனியே ஆவான்.

(3) ஹிம்ஸை :

காட்டுத்தீ பற்றிக் கொண்டு பரவத் தொடங்கினால், அக்காட்டிலுள்ள ஜங்கமஸ்தாவரங்கள் அனைத்தும் எரிந்து போவது போலும், தன்னுடைய சேஷ்டைகளால் ஜகத்தனைத்தையும் துக்கிக்கச் செய்து கொண்டு, வேடிக்கையாய் யோசனையின்றி சொல்லும்

வர்ர்த்தைகளாலேயே கடைப்பாரையைக் காட்டிலும் தீவரமாய் ஜநங்களின் ஹ்ருதயத்தைத் துளைக்கிறவனாய், மனதின் ஸங்கல்பத்தினாலேயே விஷத்தைக் காட்டிலும் அதிதீவரமாய் மரணத்தை விளைவிக்கிறவனாய், இப்படி எவன் ஹிம்ஸைக் கெல்லாம் ஆதாரபூமியாய் இருப்பானோ, அவன் அஞ்ஞானம் நிறைந்திருக்கும் நிதியே ஆவான்.

(4) பொறுமை யின்மை :

காற்று நிறைந்த மாத்ரத்தில் உப்பி, அது வெளிப்பட்ட மாத்ரத்தில் சுருங்கிப்போகும், துருத்தியைப் போலும், லாப நஷ்டங்களால் வீங்கி வற்றிப் போகிறவனாய், பெருங்காற்றின் சுழலில் சிக்கிப் போன தூசி ஆகாசம் வரைக்கும் ஏறி விடுவது போலும், பிறர்தன்னைப் புகழக்கேட்டு ஸந்தோஷத்தால் உந்மாதம் கொண்டு, தன் நிந்தனை கொஞ்சம் காதில் பட்டமாத்ரத்தில், நிந்தை செய்தவன் சிண்டைப்பிடித்துக் கொள்கிறவனாய், கொஞ்சம் நீரின் ஸம்பந்தத்தால் இளகி உருவிழந்து, கொஞ்சம் காற்று வீசினால் உலர்ந்து பொடியாய் உதிர்ந்து போகும களிமண்ணைப் போலும், மானபமானங்களின் சிறு அலைகளைக் கூடத் தாங்கி நிற்காதவனாய், எவன் இருப்பானோ, அவனிடத்தில் அஞ்ஞானம் ஓர் குறைவுமின்றி குடி கொண்டிருக்கிறது.

(5) அநார்ஜவம் :

ஓர் உதவியும் செய்கிற தில்லை யென்று மனஸில் உறுதியாய் முடிபோட்டு வைத்துக் கொண்டு, வெளிக்கு மாத்ரம் மேன் மேலும் உதாரமாய்ப் பேசுகிறவனாயும், ஒருவன் கண்ணுக்குமுன் உயிரோடுயிர் கலந்தவன் போல் நடித்து, அவன் தலை மறைந்ததும், அவனுக்கு விரோதமாய், மற்றவனுக் குதவி செய்கிறவனாயும், தன் வசப்பட்டுப் போவதற்கு, ப்ராணிகளுக்கு இரையை இட்டுவைக்கும் வேடனைப் போலும், பரோபகாரம் செய்யும்போதே, அவ்வுபகாரம் அடைகிறவனுக்கு, அதினால் அநர்த்தத்தை விளைவிக்கக் கோரினவனாயும், நல்லவர்க ளெல்லாருக்கும் கெடுதியைச் செய்யக் கருதினவனாயும், பாசியால் சுற்றி வைக்கப்பட்ட கற்பாறை போலும், நிறையப் பழுத்துத் தொங்கும் வேப்ப மரத்தைப் போலும், தன் வ்யாபாரங்களை வெளிப்படையாய் அழகாய்த்தோற்றச் செய்து வைப்பவனாயும், எவன் இருப்பானோ, அவனிடத்தில் அஞ்ஞானம் நிரப்பிவைக் கப்பட்டிருக்கிறதென்பதற் கோராக்ஷேபணையும் இல்லை.

(6) ஆசார்யோபாஸந மில்லாமை :

குருகுலத்தின் பெயரைச் சொல்லிக் கொள்வதற்கு வெட்கப்பட்டுக் கொண்டு, குரு ஸேவை செய்வதை ஓர் பெருத்த கஷ்டமாய் நினைத்து, தான் எந்த குருவினிடத்திலிருந்து வித்யையை அடைந்தானோ, அவரிடத்திலிலேயே தன் பெருமையைக் காட்டிக் கொள்வகிறவனா யிருக்கிறவனுடைய பெயரை நாக்கால் உச்சரிப்பதே, இழிகுலத்தவரன்னம் புசித்த பாபமாகிறது. ஆனால் என்ன செய்யலாம், அஞ்ஞான லக்ஷணங்களைச் சொல்கிற இந்த ப்ரகரணத்தில், குரு பக்தி இல்லாமையை எடுத்துச் சொல்ல நேர்ந்து, இப்பாபம் எனக்கு ஸம்பவிக்கலாயிற்று. இப்பாபத்தால் தூஷிதமாய்ப் போன வாக்குக்கு ப்ராய்ச்சித்தமாக, குருபக்தனுடைய நாமோச்சாரணம் என்னும் ஸூர்யதர்சனம் செய்து கொள்வேன். இப்படி குருபக்தன் நாமத்தை உச்சரித்தலே குருதல்பகாமியாகிய மஹாபாபியின் நாமத்தைச் சொன்னதால் வாக்குக்கு நேர்ந்த பாபத்தை, நாசஞ்செய்து விடும் மஹிமையுள்ளது. இனி அஞ்ஞானத்தின் வேறு லக்ஷணங்களைச் சொல்வேன் கேள்.

(7) சௌசமில்லாமை :

சரீரம் விஹிதகர்மங்கள் செய்வதற்கு வணங்காமல், மனஸு விகல்பங்களால் நிறைந்து, வெளிப்புறத்தில் முட்செடிகள் முளைத்து அவற்றால் மூடப்பட்டு, உள்பக்கத்தில் எலும்புகள் நிறைந்திருக்கும், காட்டிலுள்ள பாழும் கிணறுகள் போல், உள்ளும் புறமும் அசுத்தனாயும், பசி யெடுத்த நாய்த் தன் வயிற்றை நிரப்பிக் கொள்ளும் விஷயத்தில், இது திறந்து வைக்கப்பட்டிருக்கிறது, இது மூடிவைக்கப் பட்டிருக்கிறதென்று பாராமல், எதிலேயும் தலையை நுழைத்து விடுவது போல், பணத்தைத் தேடிவைத்துக் கொள்ளும் விஷயத்தில், தன்னது பிறனது என்னும் வ்யத்யாஸம் பாராட்டதாவனாயும், எப்படி க்ராமஸிம்ஹம், (நாய்) ஆண் பெண் புணர்ச்சிக்கு, இது தகுந்த இடம், இது தகாத இடம், என்று பாராதோ, அப்படியே ஸ்த்ரீ விஷயங்களில் யுக்தாயுக்கதங்கள் விசாரியாத வனாயும், விஹிதகர்மங்கள் செய்வதற்குக் காலம் தவறிப் போனதாலும், நித்யநைமித்திக கர்மங்கள் அநுஷ்டிக்கப் படாமல் நின்று போனதாலும், அந்த ராத்மாவில் கொஞ்ச மேனும் வெட்கப்படாதவனாயும், புண்யங்கள் செய்யும் விஷயத்தில் பிடிப்பற்றவனாயும், இப்படி யெல்லாம் விகல்பங்களின்

வேகத்துக்கு வசப்பட்டுப் போய், பண ஆசையினால் பாப புண்யங்களுக்கு கெட்டியாய்க் கண்ணை மூடிக் கொண்டவனாயும் - எவனிருப்பானோ, அவன் பூர்ண அஞ்ஞானத்தினாற் செய்து வைத்த பொம்மையாவான்.

(8) ஸதைர்ய மில்லாமை :

ஓர் சிற்றெரும்பின் பாரத்தைத் தாங்கமுடியாததாய் வளைந்து போகும் புல்லின் கொழுந்தைப் போலும், அல்பமாயிருக்கும் ஸ்வார்த்ததை யுத்தேசித்து, தான் முன் செய்து வைத்த தீர்மானங்களை மாற்றிக் கொள்கிறவனாய், கால் வைத்தமாத்ரததில் கலங்கிப் போகும் ஓர் சிறு நீர்க் குட்டையைப் போலும், பயம் என்பதின் பெயரைக் கேட்ட மாத்ரத்தில் நடுநடுங்கிப போகிறவனாய், பெரு வெள்ளத்தில் விழுந்தடித்துக் கொண்டு போகப்படும சுரைக்குடுக்கை போல், மனோ ரதங்களின் வேகத்தில் விழுந்து, ஸ்வாதீன மின்றி இழுத்துக் கொண்டு போகப்படும் சித்தத்தோடு கூடியவனாய் காற்றால் திக்கு விதிக்காய் அடித்துக் கொண்டு போகப்படும் தூசிபோல், துக்கம் நேரிட்டது என்னும் வார்த்தையைக் கேட்ட மாத்ரத்தில் அல்லகல்லோலப்பட்டுப் போகிறவனாய், பெருங்காற்று ஓரிடத்திலும் நிலை கொள்ளாது வீசிக்கொண்டே போவது போலும், ஓர் க்ஷேத்ரத்திலாவது தீர்த்தத்திலாவது, பட்டணத்திலாவது இருப்புக் கொள்ளாமல் ஸதா அலைந்து திரிகிறவனாய், பைத்யம் பிடித்த ஓணான் ஓர் மரத்தின் அடிக்கடையிலிருந்து அதின் நுணிக்கும், நுணியிலிருந்து அடிக்கட்டைக்கும், திரும்பித் திரும்பி ஓடி அலைவது போலும், ஓர் கார்யமு மில்லாமல் ஸதா ஓடியாடுகிறவனாய், ஓரிடத்தில் புதைக்கப்பட்டாலல்லது ஸதா உருண்டு கொண்டிருக்கும் ஓர் கலயம் போல், ஓர் ஆபத்தில் சிக்கிப்போனால் விழுந்து கிடந்து, இல்லாவிட்டால் திரிந்து கொண்டிருக்கிறவனாய், இப்படி யெல்லாம் சஞ்சலப் பட்டுக் கொண்டிருப்பதில் குரங்கினத்தைச் சேர்ந்தவ னென்று சொல்லும் படியாய், எவன் இருப்பானோ, அவனிடத்தில் மிக்கப் பெருத்ததாய் அஞ்ஞானம் ஓர் குறைவு மின்றி குடிகொண்டிருக்கிறது.

(9) ஆத்மவிநிக்ரஹ மில்லாமை :

மேலும் அஞ்ஞான லக்ஷணங்களைச் சொல்வேன் கேள், ஹே அர்ஜுநா மனஸில் ஸம்யமம் என்னும் கடிவாளம் பூட்டி வைக்கப்படாமல், ஓர் உப்பங்கழியில் ஸமுத்ரத்தின் ஓர் அலை

புரண்டு வந்தால், மணலால் ஏற்பட்ட கரையை அடித்துக் கொண்டு போவது போலும், துஷ்கர்மங்களை நிஷேதிக்கும் சாஸ்த்ரங்களை மீறி நடக்கிறவனாய், வ்ரதா நுஷ்டானங்களை நடுவில் முறித்து, ஸ்வதர்மங்களைக் காலால் உருட்டித் தள்ளி விட்டு, தன்னுடைய நடத்தையால் நியமங்களின் ஆசையை ஸதா குலைத்து வைக்கிறவனாய், பாபத்தின் உணர்ச்சி யற்று லஜ்ஜை என்பதை வேரோடு பிடுங்கி யெறிகிறவனாய் - குலதர்மத்துக்கு முகம் காட்டாமல், வேதாஞ்ஞையை தூரமாக விலக்கிவைத்து, இது க்ருத்ய மென்றும் இது அக்ருத்யமென்றும் பகுத்தறியாதவனாய், கோவிலுக்கு விட்ட காளை போல் நீக்குப் போக்கில்லாமல், காற்றைப் போல் தங்குதடை இல்லாமல், எங்கும் புகுந்து புறப்பட்டு, கரை உடைந்து போன காட்டருவியின் ஜலம் பள்ளங் கண்ட இடத்தில் பாய்வது போல், மனஸுக்குத் தோன்றியபடி யெல்லாம் ஸஞ்சரிக்கிறவனாய், குருட்டு யானைக்கு மதம் பிடித்தாற் போலும், மலையிற் காட்டுத்தீ பற்றிக் கொண்டாற் போலும், மனஸு விதிவிலக்கின்றி விஷயத்தில் விழுந்து மண்டுகிறவனாய், குப்பை மேட்டின் மேல் இது தான் விழலாம், இது விழக்கூடா தென்று, ஓர்நியமம் இல்லாதது போலும், வேண்டாம் என்று எறிந்து விட்ட வஸ்துவைக் கண்டவன் எடுத்துக் கொள்ளக்கூடியது போலும், க்ராமத்தின் வாயிலை யாவரும் மிதித்து அதின் மேல் நடக்கக் கூடியது போலும், ஸத்திரத்தில்அன்னம் போட்டால், எவனும் போய் உட்கார்ந்து கொண்டு புசிக்கக் கூடியது போலும், அல்பனுக்கு அல்லது வேசிக்குப் பெருமை வந்தாற் போலும், வர்த்தகனுடைய திறந்து வைக்கப்பட்ட கடை போலும், எவ்விஷயத்துக்கும் இடம் கொடுத்துக் கொண்டிருக்கும் அந்தக்கரணத் தோடு கூடினவனாய், எவனிருப்பானோ, அவனிடத்தில் ஸம்பூர்ண அஜ்ஞானம் குடி கொண்டிருக்கிறது.

(1) இந்த்ரியார்த் தங்களில் வெறுப்பற்றிருத்தல் :

விஷயத்தில் ருசியை உயிருடனிருக்கும் போதும், செத்துப் போயும் விட் டொழித்துக் கொள்ளாமல், ஸ்வர்க்கத்தில் விஷயபோகம் செய்வதற்காக வேண்டிய புண்யங்களை இங்கிருக்கும் போதே தேடி வைத்துக் கொள்கிறவனாய், எப்போதும் சிற்றின்பத்துக்காவே உழைத்துக் கொண்டு, ஸ்த்ரீஸுகத்தில் ஸதா அடக்க முடியாத அவா பாராட்டினவனாய், விரக்தர்கள் முகத்தைப் பார்த்தால், அதில் தனக்கு தோஷம் ஏற்பட்ட தென்றெண்ணி, அந்த தோஷம் போவதற்காக ஸசேலஸ்நானம் (கட்டிக்

கொண்டிருக்கும் துணியை அவிழ்த்து வைக்காமல் அத்துடனேயே நீரில் முழுகுதல்) செய்கிறவனாய், குஷ்டரோகியானவன், அழுகி நாறிக் கொண்டிருக்கும் தன் கைகளால் அந்நம் புசிப்பதில், வெறுப்படையாதது போலும், விஷயங்கள் எவ்வளவு அருவருக்கத் தக்கவையாய்த் தோற்றி நின்றாலும், அவற்றில் வெறுப்படையாதவனாய், பெண் கழுதை தன் மேல் ஏறப்பார்க்கும் ஆண் கழுதையை ஏற ஒட்டாமல், தன் பின்னங்காலால் உதைத்து, அந்த ஆண் கழுதைபின் வாங்காமல் திரும்பவும் ஏற முயல்வது போலும், விஷயஸுகானுபவத்திற்காக நெருப்பில் குதிப்பதற்குத் துணிகிறவனாய்,

இப்படி அடக்கமுடியாததான விஷய ஆசையை, தனக்கு ஓர் அபகீர்த்திக்குக் காரணம் என் றெண்ணாமல், அதையே ஓர் பெருமையாய்க் கொண்டாடிக் கொள்கிறவனாய், கானலிற் றோன்றும் தோற்றத்தை நீர் என்றெண்ணி அதைக் குடிப்பதற்காக ஓடி, மார்பு உடைந்து கீழே விழுந்த பின்னும், அந்நீர்த் தோற்றத்தை வெறும் தோற்றம் என்றறிந்து கொள்ளாமல், உண்மையான நீரே என்றெண்ணி மறுபடியும் எழுந்து ஓடத்தலைப்படும் மானைப் போல், பிறந்தது முதல் சாகும் வரைக்கும் விஷயபோகம் செய்து மிக்க நொந்து போயுங்கூட, விஷயத்தில் வெறுப்புப் பாராட்டாமல் மேன் மேலும் அதிகரிக்கும் ஆசை பாராட்டினவனாய், இளைமைப் பர்வத்தில் அப்பன் ஆயீ என்று பைத்யம் பிடித்தே அலைந்து, பின்பு அப்பைத்யம் மாறி, ஸ்த்ரீ மாம்ஸ விஷயமாய் மதிமயங்கிப்போய்த் திரிந்து, ஸ்த்ரீஸுகம் அனுபவித்துக்கொண்டிருக்கும் போது, மூப்புத் தன்னை அணுகிவிட்டபின், அந்த விஷய ஆசையனைத்தையும் குழந்தைமேல் பெயர்த்துவைத்து, குருடன் தான் பெற்ற குழந்தைகளைக் கையினாற்றடவிக் கொண்டாடுவது போலும், ஸதா அக்குழந்தையையே தடவிக் கொண்டாடிக் கொண்டாடிக் கொண்டு, சாகிற வரைக்கு விஷய ஸுகத்தில் வெறுப்பு அடையாதவனாய், எவனிருப்பானோ, அவனிடத்தில் கரையற்ற படியாய் அஞ்ஞானம் நிலை பெற்றிருக்கும். இனி அஞ்ஞானத்தின் மற்றும் சில லக்ஷணங்களைச் சொல்வேன் கேள்.

(11) அஹம்காரம் :

தேஹத்தையே ஆத்மா வென்னும் எண்ணத்தை ஸதா பாராட்டிக் கொண்டு, கர்மங்களைச் செய்யத் தொடங்கி,

அவை கொஞ்சம் பலிக்கத் தலைப்பட்ட மாத்ரத்தில் தானே அதை ஸாதித்து விட்டதாக கர்வமடைந்து முக்குகிறவனாய், ஓர் தெய்வத்தின் பாதுகை கலசம் முதலியவை தலைமேல் ஏற்றிவைக்கப்பட்ட மாத்ரத்தில், கர்வத்தால் வீங்கி, ஆவேசம் கொண்டவனாய், நடிக்கும் பூசாரியைப் போலும், வித்யை அல்லது தாருண்யத்தின் பெருமையால் கர்வங் கொண்டு நடிக்கிறவனாய், "நான் ஒருவனே தணிகன், என் வீட்டிற்றான் ஸம்பத்திருக்கிறது, என்னுடைய வாழ்வும் பெருமையும், எவர்களுக்குக் கிடைக்கும், நானே ஸர்வஜ்ஞ னென்று எங்கும் ப்ரஸித்தி பெற்றவன்," என்று இப்படி எல்லா விஷயத்திலும் கர்வம் பாராட்டி நிற்கிறவனாய், வ்யாதியால் வருந்தும் ஒருவன் நல்ல போக்ய வஸ்துக்களைப் பார்த்துக் கஷ்டப்படுவது போலும், இதரர்களிடத்தில் காணப்படும் நன்மைகளை ஸஹியாதவனாய், குணம் (திரி) எவ்வளவு பெரிதாய் இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு ஸ்நேஹத்தை (எண்ணெயை), சாப்பிட்டு (எரித்து), எங்கு வைக்கப்பட்டதோ அங்கெல்லாம் கரியாய் அடித்து, கொஞ்சம் ஜலத்தைத் தெளித்தால் தடபட வென்று வெடித்து, கொஞ்சம் காற்றாவது விசிறியாவது வீசினால், அதைத் தாங்க முடியாது ப்ரணனை விட்டு, வீட்டில் கொஞ்சம் பற்றிக் கொண்டால் ஓர் சிறு துரும்பு கூட மீத்துவைக்காமல் முழுக்கவும் கொளுத்தி, கொஞ்சம் ப்ரகாசம் கொடுத்து, மிக்க வெப்பத்தை உண்டாக்கி வைக்கும் தீபச்தைப் போல், வித்யைகளை அப்யஸித்தவனாய், மருந்தென்று பாலைக் கொடுத்தால் நவஜ்வரம், (ஒன்பது நாள் ஜ்வரம்; ஒன்பது நாளுக்குள் ப்ராணனை மாய்த்து விடும் ஜ்வரம்) அதிகரிப்பது போலும், பாம்புக் கூட்டின் பால் விஷயமாய் அதினின்று வெளிப்படுவது போலும், பிறர்களுடைய நற்குணங்களைப் பார்த்து மாத்ஸர்யம் பாராட்டுகிறவனாய், தான் கற்ற வித்யைகளாலும் ஸம்பாதித்துக்கொண்ட தபஸ் ஞானங்களாலும் மிக்கச் செருக்கடைந்தவனாய், ராஜ்ய பதவி கிடைத்த இழி குலத்தவனைப் போலும், தூணை விழுங்கி விட்ட மலைப்பாம்பைப்போலும், கர்வத்தால் வீங்கிப் போனவனாய்த் தோன்றுகின்றவனாய், கட்டுக் கடங்காத கோமாளிபோல் வணங்கா முடியாய், எவ்வளவு நேரம் ஜலத்தில் அமிழ்த்தி வைத்திருந்தாலும் கொஞ்ச மேனும் கரையாத கற்பாறை போல் மனதிளகாதவனாய், மாந்த்ரீகனுக்குக் கட்டுப் படாத பறைப்பாம்பு போல், ஒருவருக்கும் கட்டுப் படாதவனாய், எவன் இருப்பானோ அவனிடத்தில் அஞ்ஞானம் ஓர் குறைவு மின்றி மிக்கப் பெருகிக் கொண்டிருக்கிற தென்று, நான் உனக்கு உறுதியாய்ச் சொல்கிறேன்.

(12) ஜந்மம்ருத்யு ஜராதுக் காதிகளின் தோஷத்தைப் பாராமை :

அஞ்ஞானத்தின் மற்றுமோர் லக்ஷணம் சொல்வேன் கேள், தநஞ்ஜயா! தத்காலத்தில் கிடைத்திருக்கும் ஸம்பத், வீடு, தேஹம், முதலியவற்றின் கொண்டாட்டத்தில், சென்று போன அல்லது வரப்போகிற ஜந்மத்தைக்குறித்து ஓர் சிந்தனையும் செய்யாதவனாய், க்ருதக்நன் (ஒருவனிடத்திலிருந்து அடைந்த உபகாரத்தை மறந்து போகிறவன்) தனக்குப் பிறர்செய்த உபகாரத்தை மறந்து போவது போலும், ஓர் நாய் ஓர் வீட்டில் நுழைந்து வாலும் காதும் அறுபட்டுத் துரத்தியடிக்கப்பட்டபின்னும், அதே வீட்டில் வாலும காதும் ரத்தம் சொட்டிக் கொண்டிருக்கும் போதே திரும்பவும் வந்து நுழைவது போலும், ஓர்பாம்பின் வாயில் சிக்கிப் போன ஓர்தவளை ஓர் ஈயை மடக்கி வாயிற்போட்டுக் கொள்வதிலுள்ள ருசியில், தான் பாம்பின் வாயில் முழுகிப் போய்க்கொண்டிருக்கும் ஆபத்தை மறந்து போவது போலும், தன் தேஹம் முழுமையும் அழுகிப்போய் நவத்வாரங்களினின்றும் நீர் பெருகிக்கொண்டிருந்தும், இது எதினால் ஏற்பட்டதோ என்னும் சிந்தனையே செய்யாதவனாய், தாயின் வயிற்றின் நடுவில் இருந்து, விஷ்டையின் வெப்பத்தால் ஒன்பது மாதம் வேக்காடுண்டு, அனுபவித்த கர்ப்பவாஸ துக்கத்தையும், பிறக்கும்போது அநுபவித்த துக்கத்தையும், கொஞ்சங்கூட ஸ்மரிக்காதவனாய், தன்மடியிலே குழந்தை, மூத்ரத்தையும் மலத்தையும் விஸர்ஜநம்செய்து, அதைச் சேறாகக் குழப்பிக்கொண்டு, அதில்கிடந்து புரளுவதைப் பார்த்து, வாய் உமிநீரை காரி உமியாமல், மனஸில் அருவருப்படையாதவனாய், நேற்றுத்தான் ஓர் ஜந்மம் கழிந்துபோயிற்று, நாளை தினமே மற்றோர் ஜந்மம் வரப்போகிறது, என்ற இவ்விஷயத்தில் மனதில் ஓர் நினைப்பும் பாரராட்டாதவனாய், இப்படியே ஆயுட் காலம் நிலை பெறாமல் ஓடிக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கூட, சாவின் விஷயமாய் ஓர் சிந்தனையு மற்றவனாய், ஜீவித்திருப்பதின் மேல் பூர்ணமான நம்பிக்கை வைத்து, இவ்வுலகில் ம்ருத்யு வென்றொன் றிருக்கிறது என்ற நினைப்பே அற்றவனாய், சிறுகுட்டையில் இருக்கும் ஓர்மீன் அக்குட்டை ஒருநாளும் வற்றிப்போகாதென் றெண்ணி, அதை விட்டு ஆழம் கண்டுபிடிக்கமுடியாத ஓர் மடுவுக்குப் போய்ச் சேரவேண்டும் என்ற உத்தேசமே இல்லாதிருப்பது போலும், ஸுகத்தில் முழுகிப்போன மான், வேடன் ஸமீபத்தில் இருப்பதை, பார்க்காமற் போவது போலும், மீன், மாம்ஸ உண்டைக்குள்

மறைந்து கிடக்கும் தூண்டிமுள்ளைப் பாராமல், அவ்வுண்டையை விழுங்கி விடுவது போலும், தீபத்தின் ப்ரகாசத்தில் ஈடுபட்ட விட்டிற்பூச்சி அத்தீபம் தன்னைக் கொளுத்திவிடும் என்று தெரிந்து கொள்ளாதது போலும், ஓர் மூர்க்கன் நித்ரை ஸுகத்துக்கு ஆசைப்பட்டு, தான் படுத்திருக்கும் வீட்டில், தீ பற்றி யெரிவதை அறிந்து கொள்ளாதது போலும், ஓர் அந்நத்தில் விஷம் கலந்திருக்க, அதை அறியாதவன் கொஞ்சமேனும் பயமின்றி அதை உண்பது போலும், வாழ்தல் என்னும் பெயர் வைத்துக் கொண்டு ம்ருத்யுவே தன்னை நெருங்கிக் கொண்டிருப்பதை, விஷய ஸுகத்தின் பெருக்கில் கிடந்து, தெரிந்து கொள்ளாதவனாய், சரீர போஷணத்துக்கே ராத்ரிப்பகல் மாறி மாறி ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன வென்றும், விஷய ஸுகானுபவமே உத்தமமான நன்மை யென்றும், இச்சரீரத்துக்கும் விஷயஸுகத்துக்கும் ஒரு நாளும் அழிவில்லை என்றும், எண்ணினவனாய், ஓர் வேசி தன் ஸர்வஸ்வத்தையும் ஒருவனுக்கு அர்ப்பணம் செய்வதே, அவனை முற்றிலும் உரித்து வைத்தல் ஆவது போலும், கூடவே இருக்கும் திருடனுடைய உபசாரங்களே, ப்ராணனை வாங்கி விடுதல் ஆவது போலும், மண்ணாற் செய்த பொம்மைக்கு சந்தனம் பூசுதல், ஸ்நாநம் செய்து வைத்தல் என்னும் பூஜைகளே நாசகாரணங்களாவது போலும், பாண்டு ரோகத்தால் தேஹம் பெருத்தால், அதுவே ஆயுளின் முடிவாதல் போலும், ஆஹாரநித்ரா ஸுகங்களால் ஏமாறிப் போய், அவையே தனக்கு மருத்து வென் றறியாத பேதையாய், சூலத்தில் ஏற்றப்பட வேண்டுமென்ற தண்டனைக்குட்பட்ட ஒருவன், சூலத்தை நோக்கி வேகமாய் ஓடுவானே யானால், அவனுக்கு ம்ருத்யு ஒவ்வோரடி வைப்போடும் நெருங்கி நெருங்கி வருவது போலும், எத்தனைக் கெத்தனை தேஹம் பெருக்குமோ, ஆயுஸ்ஸு வ்ருத்தி அடையுமோ, விஷய ஸுகானுபவம் அதிகரிக்குமோ, அத்தனைக் கத்தனை ம்ருத்யு ஆயுளைத் தின்று விடுகிற தென்றும், ஜலம் அதில் விழுந்த உப்பைக் கரைத்து விடுவதுபோலும், முன்சொன்ன தேஹவளர்த்தியாலும், ஆயுர் வ்ருத்தியாலும், விஷயஸுகானு பவத்தாலும், ஆயுஸ்ஸு கரைப்பட்டுப் போகிறதற்கு, யமன் காத்துக் கொண்டிருக்கிறான் என்றும், அப்போதே அறிந்து கொள்ளாதவனாய், சுருக்கிச்சொல்ல, விஷயத்தின் மாயையில் சிக்கிப்போய், தன் கூடவே பிறந்த ம்ருத்யு தினேதினே அதிக வலிமையுள்ளதாகி றதென்று அறியாதவனாய், எவன் இருப்பானோ, அவனே அஜ்ஞானம் என்னும் தேசத்தின் அரசன் என்பதில், ஸந்தேஹமே இல்லை.

இதுவுமது :

ஸுகமாய் வாழ்தலில் ஒருவன் சிக்கிக்கிடந்து, ம்ருத்யு நெருங்கிக் கொண்டிருப்பதைத் தெரிந்து கொள்ளாதது போலும் தாருண்யத்தின், கொண்டாட்டத்தினாலேயே ஜரைக்கு வலிமை ஏற்படுகிற தென்பதை அறியாதவனாய், மலைச்சரிவினின்று புரண்டு விழும் வண்டியையும், அதின் சிகரத்தினின்று பற்றற்றுப்போய், கீழே உருண்டுவிழும் கற்பாறையையும் போல், முன்வரப்போவதைப் பார்க்காதவனாய், காட்டாற்றில் வெள்ளம் வந்தாற்போலும், எருமைக்கடா வெறிபிடித்து முட்டித்தள்ள துவக்கினாற் போலும், தாருண்யத்தின் மதத்தால் செய்வதறியாதவனாய், தேஹத்தின் புஷ்டி குறைந்துபோய், அதின் மினுமினுப்பு அகன்று போய், தலை நடுநடுங்கத் தலைப்பட்டு, தாடி நரைத்து, கழுத்து, வேண்டாம் வேண்டாம் என்று சொல்வதுபோல், ஆட்டம் எடுத்துப்போன பிறகு கூட, ஆசைகளைப் பெருக்கிக் கொண்டே செல்கிறவனாய், மார்பில் இடித்து மோதும்வரைக்கும் எதிரிலிருப்பதை தெரிந்துகொள்ளாத குருடனைப்போலும், கண்ணில் நித்ராதேவி இடைவிடாது வாஸம் செய்வதில் ப்ரியப்படும் சோம்பேறியைப் போலும், இன்று ஏற்பட்ட தாருண்யத்தின் கொண்டாட்டத்தில், நாளை வரப்போகிற வ்ருத்தாப்யத்தை பார்க்காதவனாய், எவன் இருப்பானோ, அவனே உண்மையாய் அஜ்ஞானத்தால் நிறைந்திருப்பவன் ஆவான்.

இதுவுமது :

தன் தேஹத்தின் நேர்மையால் கர்வமடைந்து, பலஹீநர்களாயும் அங்கஹீநர்களாயும், அங்கங்களிற் கோணற் குறுகல் உற்றவர்களாயும், இருக்குமவர்களைப் பார்த்து தனக்கே அவர்கள் தசை வரக்கூடும் என்பதை நினையாது அவர்களுக்குப் பழிப்புக் காட்டுகிறவனாய், மரணத்தின் முன்குறிப்பான வ்ருத்தாப்யம் தனக்கு ஏற்பட்ட பின்னும், தாருண்யத்தின் அறிவு கெட்ட சேஷ்டைகளை விட்டொழிக்காதவனாய் - எவன் இருப்பானோ அவன் அஜ்ஞானம் நிரந்தரமாய் வஸிக்கும் வீடு என்றே நிச்சயமாய்த் தெரிந்துகொள். அஜ்ஞானத்தின் மற்றும் சில உத்தம லக்ஷணங்களைச் சொல்வேன் கேள்.

இதுவுமது :

புலியிருக்கும் காட்டில் ஒருநாள் நுழைந்து, அதில் மேய்ந்து, ஏதோ அத்ருஷ்டவசத்தால், உயிருடன் தப்பித்து கொண்டு

வந்துவிட்ட ஓர் எருது, அப்படியே தப்பித்துக்கொண்டு வந்துவிடலாம் என்று நம்பி, மறுதினமும் அக்காட்டிற்கு மேயப்போனாற்போலும், ஸர்ப்பம் வாஸம் செய்யும் வீட்டினின்று, ஓர் அபாயமுமில்லாமல், அதில் கிடக்கும் த்ரவ்யத்தை ஒருவேளை இரண்டுவேளை அபஹரித்துக் கொண்டுவந்து விட்டதால், ஒருவன் அதில் பாம்பே இல்லை யென்று நிச்சயம் செய்து, திரும்பவும் அதில் கையைப்போட்டாற் போலும், ஓரிரண்டு தினம் ஆரோக்கயமாய் ஸுகம் அநுபவித்ததைக்கொண்டு, இந்த சரீரத்தில் ரோகம் என்ற ஸர்ப்பம் இருக்கவேயில்லை என்று நம்பினவனாய், சத்ரு தூங்கி இருப்பதைப் பார்த்து, தனக்குப்பகை ஒழிந்தே போயிற் றென்றெண்ணி, ஓர் கவலையுமற்றிருந்து, பின்பு ஸபரிவாரமாய்த் தான் ப்ராணனை யிழந்து விடுவது போலும், ஆஹாரநித்ரைகளின் ஸுகத்துக்கு ஓர் குறைவுமின்றி, அவை நன்றாய் நடந்துகொண்டு, ரோகம் சரீரத்துக்குள் உறங்கிக் கிடக்கும் வரைக்கும், அந்த ரோகத்தின் நினைப்பே அற்றவனாய், அன்றியும் ஸ்த்ரீ புத்ரர்களுடன் வாழப்பெற்று, செல்வம் பொங்கிக் கெண்டிருக்கும் போதெல்லாம், கண்ணிற் புழுதியடைந்துபோய், ஸ்த்ரீ புத்ராதிகளும் ஸம்பத்தும் சீக்கிரத்தில் தன்னைவிட்டுப் பிரிந்துபோய், விபத்து ஏற்படுதல், என்ற இந்த துக்கம் வந்தடையக் காத்துக் கொண்டிருப்பதைத் தெரிந்து கொள்ளாதவனாய், எவன் இருப்பானோ அவனே அஜ்ஞாநி என்றறிந்துகொள்.

இதுவுமது :

அன்றியும், இந்திரியங்கள் தங்களுக்குத் தோன்றிய ப்ரகாரம் விஷயங்களில் விழுந்து மேய்ந்து கொண்டிருக்கும்படி, அவற்றை அவிழ்த்து விட்டவனாய், யௌவனத்தின் நிறைவாலும் செல்வத்தின் பலத்தாலும் மதங்கொண்டு, ஸேவ்யா ஸேவ்ய நியமங்களைக் கொஞ்சமேனும் ஆதரிக்காமல், அவை விலகிப் போகும்படியாய்ச் செய்து, செய்யக்கூடாததைச் செய்து, ஸ்மரிக்கக் கூடாததை ஸதா மனதினாற் கொண்டாடி, சிந்திக்கவே கூடாததை ஸதா மனதில் விசாரித்துகொண்டு, நுழையக்கூடாத இடத்தில் நுழைந்து, வாங்கிக் கொள்ளத்தகாததை ப்ரார்த்தித்து வாங்கிக் கொண்டு, சரீரமும் மனஸும் ஸ்பர்சிக்கக்கூடாத விஷயங்களை ஸ்பர்சித்துக் கொண்டு, போகத்தகாத இடத்திற்குப் போய், பார்க்கக் கூடாததைப் பார்த்து, சாப்பிடக் கூடாததை சாப்பிட்டு, அதினால் ஸந்தோஷப்பட்டுக் கொண்டு, ஏற்படுத்திக்கொள்ள

கூடாத ஸுகங்களை ஏற்படுத்திக் கொண்டு, ஒட்டிக்கொள்ளக் கூடாத விஷயங்களை திடமாய்ப் பற்றி, ஆசரிக்கக்கூடாதவைகளை ஆசரித்துக்கொண்டு, கேட்கக்கூடாததைக் கேட்டு, சொல்லக் கூடாததை உளறிக்கொண்டு, இவ்வகை துஷ்க்ருத்யங்களால், தோஷம் தனக்கு ஏற்படும் என்பதை அறியாதவனாய், ஒன்று தேஹத்துக்காவது மனதுக்காவது ஸுகமாயிருப்பதாய்த் தோற்றினமாத்திரத்தில், அது செய்யத்தகுந்ததோ தகாததோ என்று விசாரிக்காமல், அது எதுவானாலும், அதைச் செய்து தீர்கிறவனாய், அதினால் தனக்குப் பாபமும் நரக்நுபவதுக்கமும் ஏற்படுவதைக் கொஞ்சமேனும் நினையாதவனாய், எவன் இருப்பானோ, அவனுடைய கூட்டுறவால், இந்த ஜகத்தில் அஞ்ஞானம் மிக்க வ்ருத்தி அடைந்து, ஞானிகளோடு கூட எதிர்த்து நின்று, அவர்களை அப ஜயப்படுத்தி வைக்கும். இதை இத்துடன் நிறுத்திவிட்டு, அஞ்ஞானத்தின் மற்றும் சில லக்ஷணங்களைச் சொல்வேன், கேள். அவற்றை அடையாளங்களாய்க் கொண்டு, அஞ்ஞானம் இன்னதென்று நீ நன்றாய் அறிந்துகொள்வாய்.

(13) புத்ர் தார க்ருஹாதிகளிற் பற்றுப் பாராட்டி யிருத்தல் :

புதிதாய்ப் பூத்துப் பரிமளம் வீசிக்கொண்டிருக்கும் தாமரைப் பூவின்மேல், ஆசை பாராட்டும் தேனீயைப் போல், தன்வீட்டின் மேல் பூர்ணப்ரீதிபாராட்டி, அதில் சிக்கிப் போனவனாய், வெல்லமொத்தையின் மேல் உட்கார்ந்து, அதைவிட்டு எழாத ஈயைப்போல், ஸ்த்ரீயின்மேல் ஆவேசங்கொண்ட ப்ரேமை பாராட்டிய மனஸுள்ளவனாய் நீர்க்குடத்தை விட்டு வெளிப்படாத தவளையைப்போலும், சளி, கோழை, இவற்றைவிட்டு வெளிப்படாத கொசுவைப் போலும், சேற்றில் புதைந்துபோய் அதில் சிக்கிக்கிடக்கும் மாட்டைப்போலும், ஜீவனாலும் மனஸாலும் ப்ராணனாலும் தன் வீட்டைப் பற்றிக்கொண்டு, அதை விடமுடியாது, செத்தபின்னும் அதில் வாழும் மனைப்பாம் பாகிறவனாய், தன்ப்ரிய நாயகன் கழுத்தை விடாமற் கட்டிக்கொண்டே கிடக்கும் ஸ்த்ரீயைப் போல், தன்னுடைய குடிசையை தன்னுயிரோடு விட்டுப்பிரிய முடியாமல் பற்றிக்கொண்டே கிடக்குமவனாய், தேனின் ருசிக்காசைப்பட்டு ஓய்வொழிவில்லாமல் உழைத்துக் கொண்டிருக்கும் தேனீயைப் போல், தன் வீட்டைக் காப்பாற்றுவதற்கே இராப்பகலாய்க் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறவனாய், வார்த்தக்யம்

மேற்பட்டபின் பிறந்ததான ஒரே குழந்தைமேல், அதின் தகப்பனுக்கு எவ்வளவு ப்ரேமை யிருக்குமோ, அவ்வளவு ப்ரேமை தன் வீட்டின் மேல் படைத்தவனாய், தன் ஸ்த்ரீயைத் தப்ப வேறொன்றையும் ஸர்வதா ஸ்மரியாதபடி, தன் உயிர் முழுவதையும் ஸ்த்ரீ தேஹத்தின் மேல் வைத்து விட்டு, தன் ஸ்வரூபம் இன்ன தென்றும், தான் செய்ய வேண்டிய தின்ன தென்றும், முற்றிலும் விசாரியாதவனாய், ஓர் மஹாபுருஷனது சித்தம் பராமார்த்த வஸ்துவில் லயித்துப்போன பின், அவனுடைய லௌகிக வ்யாபாரங்களனைத்தும் முற்றிலும் தடைப்பட்டு நின்று போவது போலும், லாபநஷ்டங்களை விசாரியாமலும், லஜ்ஜையை கவனிக்காமலும், பரநிந்தை காதில் ஏறாமலும், தன் இந்த்ரியங்களனைத்தையும் ஒரே விதமாய் ஸ்த்ரீயையே நோக்கி நிற்கும்படி செய்து வைத்தவனாய், சித்தம் ஸ்த்ரீக்கே பூஜை செய்து கொண்டு, குரங்காட்டியின் குரங்குபோல், ஸ்த்ரீ இஷ்டப்பட்டபடி யெல்லாம் ஆடிக்கொண்டிருக்கிறவனாய், தன்னைக் கஷ்டப்படுத்திக் கொண்டு, இஷ்டமித்ரரர்களுக்கு துக்கம் கொடுத்துக் கொண்டு, காசைச் சேர்த்து அதை வ்ருத்தி செய்யும் லோபியைப் போல், தாந தர்மங்களை நிறுத்தி விட்டு, கோத்ரத்தாரையும் தன்குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களையும் ஏமாற்றி, தன் ஸ்த்ரீயின் இஷ்டங்கள் கொஞ்சங்கூட குறைவுபடாமல் நிறை வேறும் படி, நடந்து கொள்கிறவனாய், தான் ஆராதிக்கும் தெய்வத்தின் பூஜையை மிக்கச் செட்டாய் நடத்தி, குருவினிடத்தில் ப்ரிய வார்த்தைகள் சொல்லி ஏமாற்றி, தாய் தகப்பன் மார்களுக்கு த்ரவ்யமில்லாமற் கஷ்டப்படுகிறவனாய் நடித்து, தன் ஸ்த்ரீ விஷயத்திலோ தன் கண்ணிற்பட்ட உத்தமமான போக்யவஸ்துக்களை யெல்லாம் வாங்கிக் கொண்டு வந்து கொடுக்கிறவனாய், ப்ரேமையால் நிறைந்த ஓர் பக்தன் தன் குலதெய்வத்தை பஜிப்பது போல், ஏகாக்ரப்பட்ட சித்தத்துடன் ஸ்த்ரீயை உபாஸித்துக் கொண்டிருக்கிறவனாய், அவளுக்கு நல்ல வஸ்துக்க ளனைத்தையும் ஸமர்ப்பித்து, இதரர்களுக்கு ஸாமாந்யமான உபசாரங்கள் கூட செய்யாமல் மறுத்து விடுகிறவனாய், தன் ஸ்த்ரீயை எவனாவது வக்ரத்ருஷ்டியாய்ப் பார்த்தாலும், அவளுக்கு விரோதமாய் எவனாவது நடந்து கொண்டாலும், யுகப்ரளயமே ஏற்பட்ட தென்று நினைக்கிறவனாய், தேஹத்தில் கடிநோய் (எச்சிற் தழும்பு) ஏற்படுமென்று பயந்து நாக பூஜைகளை, தவறாது நடத்திவைக்கிறவர்களைப்போல், ஸ்த்ரீயின் கோபத்துக்கு பயந்து, அவளுடைய அபிப்ராயத்தை கொஞ்சங்கூட கோணாமல் நிறைவேற்றி வைக்கிறவனாய், சுருக்கிச் சொல்ல, அவள் வயிற்றினின்றுண்டான

குழந்தைகள்மேல் மிக்கப்ரேமை பாராட்டி, அவளைச்சேர்ந்த மற்ற எவர்களானாலும் எவையானாலும் ஸரியே, அவர்களையும் அவற்றையும் தன் உயிரைக்காட்டிலும் உயர்த்தியாய் மதிக்கிறவனாய், எவன் இருப்பானோ, அவனே அஞ்ஞான'த்துக்கு வேர் என்றும், அவனால் அஞ்ஞானம் வலிமை பெறுகிற தென்றும், சொல்வதுகூட போதாது, அவன் மூர்த்தீகரித்த அஞ்ஞானமே ஆவான்.

(14) ஸமசித்த மில்லாமை :

மும்முரமாய் கொந்தளித்துக் கொண்டிருக்கும் ஸமுத்ரத்தில் விடுபட்ட தெப்பைகட்டை அலைகளுக்கு வசப்பட்டு ஊஞ்சல் ஆடுவது போல், ப்ரியமானவையும் ஸுககரமானவையும் வந்து சேரும்போது மனது ஸந்தோஷத்தால் பொங்கி, விப்ரியமான வஸ்துக்களின் சேர்க்கையால் மனது வலிதொலைந்து, கீழே விழுந்து போகிறவனாய், இவ்விதம் விஷயங்களால் ஏற்படும் ஸுகதுக்கங்களில், ஸமதை பாராட்ட சக்தியற்றவனாயிருக்கு மவன் அஞ்ஞானியாவான்.

(15) அநந்யமான பகவத்பக்தி இல்லாமை :

பொருள் ஸம்பாதித்துக் கொள்ள கருதி, வைராக்யத்தின் வேஷம் பூண்டு நடிக்கறவனைப் போல், பலனில் உத்தேசம்வைத்து என்விஷயத்தில் பக்திபாராட்டுகிறவனாய், வ்யபிசாரி, தன் ஜார புருஷனிடம் சீக்கிரம் போய்ச்சேரக் கருதி, கணவன் மனஸு ஸந்தோஷப்படும்படி நடந்து கொள்வது போல், என்னிடத்தில் ப்ரியமுள்ளவனாக வெளிப்பார்வைக்கு நடித்து, விஷய ஸுகப்ராப்தியின் மேல் கண்வைத்தவனாய், மேலும், அப்படி பக்தி செய்த உடனேயே, தான் இச்சித்த விஷயம் கைக்குக் கிட்டாமற் போனால், "இந்த தெய்வம் முற்றிலும் பொய், விட்டொழி," என்று சொல்கிறவனாய், பயிர் செய்கிறவன் வ்யவஸாயங்களைப் போல், புதுப்புது தெய்வங்களை ஏற்படுத்திக் கொண்டு, தான் முதலில் ஆராதித்த தெய்வத்தின் மேல் வைத்த ப்ரேமையையும் ச்ரத்தையையும் பெயர்த்து, புதிதாய் ஆராதிக்க தொடங்கின தெய்வத்தின் மேல் வைக்கிறவனாய், எவனிடத்தில் ஆடம்பரங்கள் மிகுந்திருப்பதாய்ப் பார்ப்பானோ, அவனுடைய ஸம்ப்ரதாயத்தையே கொண்டாடி, அவனை குருவாகச் செய்து கொண்டு, அவனிடத்தினின்று மந்த்ரோப தேசம் பெற்று, இதரர்களை அவமதிக்கிறவனாய், என் ஸ்வரூபத்தால் வ்யாபிக்கப் பட்ட ப்ராணிகள் விஷயக்கில்

மனது இளகாமல், என்னர்ச்சைக் கேற்பட்ட கல்விக்ரஹங்களுக்கு விதம் விதமான உபசாரங்கள் செய்கிறவனாய், அப்படிச் செய்வதிலும், ஒரே வகைப்பட்ட பிடிப்பற்றவனாய், என்னுடைய அர்ச்சாவிக்ரஹம் ஒன்றைச் செய்துவைத்து, அதைத் தன் வீட்டின் ஓர் மூலையில் ஸ்தாபித்து விட்டு, தான் வேறு தேவதைகளை உத்தேசித்து யாத்ரை செய்கிறவனாய், நித்யப்படிக்கு என் பூஜையைச் செய்து கொண்டு, விசேஷகார்யங்கள் ஏற்படும் போது, குலதேவதையை ஆராதித்து, வேறுவேறு பர்வங்களில் வேறு வேறு தேவதைகளைப் பூஜிக்கிறவனாய், என்னை வீட்டில் ஸ்தாபனை செய்து, இதர தேவதைகளுக்கு ப்ரார்த்தனை செய்து கொண்டு, பித்ருகார்யங்கள் ஏற்படும்போது, பித்ருக்களுக்கு அடிமைப்பட்டு, ஏகாதசியில் எனக்கு எவ்வளவு பெருமையோ, அவ்வளவு பெருமையையும் பஞ்சமியில் நாகங்களுக்கும், சதுர்த்தியில் கணபதிக்கும் ஏற்படுத்தி வைத்து, சதுர்தசியில் அம்பிகையைப் பார்த்து "ஹே துர்க்கே, நான் உன்னடிமை," என்கிறவனாய், நித்யநைமித்திகங்களான கர்மங்களை அநுஷ்டியாது விட்டு, நவசண்டி பாராயணம் செய்துகொண்டு, ஆதித்யவாரத்தில் பைரவனுக்கு அன்னமிட்டு, ஸோமவாரம் வந்தால் சிவலிங்கத்திற்கு பில்வார்ச்சனை செய்கிறவனாய், இவ்விதம் ஒருவனே எல்லா தேவதைகளையும் பூஜை செய்கிறவனாய் நடித்து, கிராமப்பொதுவான வேசி தன்னுடைய சாகசக்யத்தால் அனைவர் மனஸையும் கவர்ந்துகொள்வதுபோல், ஓர் க்ஷணங்கூட வீண் போகாமல், அகண்டமாய் இவ்விதம் பஜனைசெய்துகொண்டு, தனக்குத் தோன்றுகிறபடியெல்லாம் வர்த்திக்கிறவனாய், எவன் இருப்பானோ, அவன் அஞ்ஞானத்தின் மூர்த்தீகரித்த அவதாரமாவான்.

(16) விவிக்ததேசஸேவநத்தில் வெறுப்பு :

ஏகாந்தமாயும், பரிசுத்தமாயும் இருக்கும் தபோவனங்கள், தீர்த்தக்கரைகள், முதலிய இடங்களைக் கண்டு, வெறுப்புற்று, ஜநபதங்களில் வஸிப்பதால் ஸுகித்தவனாய், கஜ பஜ என்று ஜனங்கள் ஸதா ஸஞ்சரிப்பதில் ஆசைப் பாராட்டி, லௌகிக விஷயங்களின் பெருமையை வர்ணிப்பதில் உத்ஸாஹங் கொண்டவனாய், எவன் இருப்பானோ, அவனும் அஞ்ஞானத்தின் அவதாரமூர்த்தியே.

(17)அத்யாத்ம ஞானத்தின் மேல் வெறுப்பு :

ஆத்மஸ்வ ரூபத்தைத் தெரிவிக்கும் வித்யையைப்பற்றி ப்ரஸங்கத்தைக் கேட்டு அதைப் பரிஹஸிக்கும் வித்வானாய்,

உபநிஷத்தின் ஸமீபத்தில் போகாது, யோக சாஸ்திரத்தில் ருசி யில்லாமல், ஆத்மஞானம் இன்னதென்ற தெரிந்துகொள்ள ஆசையே இல்லாதவனாய், ஆத்ம விசாரத்தில் நிலை கொள்ள வேண்டும் என்னும் புத்தி யாகிய மதிலை இடித்துத்தள்ளி, பட்டியாகத் திரியும் மனஸு படைத்தவனாய், வேதத்தின் கர்மகாண்டம் முழுமையும் அறிந்தும், புராணங்களை முகஸ்தமாய்ச் செய்து கொண்டும், சொன்னதே நடக்கும் படியாய் ஜோஸியம் சொல்கிறவனாய், சில்பசாஸ்த்ரத்திலும் பாக சாஸ்திரத்திலும் மிக்கத் தேர்ச்சி அடைந்து, மந்த்ர சாஸ்த்ர விதிகளனைத்தையும் கைவசப்படுத்திக் கொண்டவனாய், கொக்கோக சாஸ்த்ரம் முழுதையும் அறிந்து பாரதத்தை உத்தமரீதியாகச் சொல்லும் படியாய் வல்லமை படைத்து, சாஸ்த்ரங்களை உருவெடுத்துக் கொண்டு, தன் முன்நிற்கச் செய்ய வல்லவனாய், நீதி சாஸ்தரங்களனைத்தையும் நன்கறிந்து, வைத்ய சாஸ்த்ரத்தில் தேர்ச்சி பெற்று, காவ்ய நாடகங்களில் சதுரன்வெறொருவன் இல்லை யென்று சொல்லத்தக்கவனாய், ஸ்ம்ருதி விசாரங்களை அறிந்து, காருடீ வித்யையின் மர்மங்களைத் தெரிந்து, நிகண்டுக்களை தன் ப்ரஞ்ஞைக்கு ஸேவகர்களாய்ச் செய்து கொண்டவனாய், வ்யாகரணத்தை நன்கறிந்து, தர்க்கத்தில் மிக்க வல்லமை படைத்து, ஆத்மஞான விஷயத்தில் முற்றிலும் பிறவிக்குருடனாப், அது ஒன்று தப்ப மற்ற சாஸ்த்ரங்கள் அனைத்திலும் ஸித்தாந்த கர்த்தா என்று சொல்லும்படி தேர்ச்சி அடைந்தவனாய், எவன் இருப்பானோ, அவன் பெருமை யனைத்தையும் நெருப்பில் இட்டுக் கொளுத்த வேண்டும்.

மூலாநக்ஷத்ரத்திற் பிறந்த பெண் குழந்தையின் முகத்தைப் பார்க்கத்தகாதது போலும், அவன் முகத்தையே பார்க்கத்தகாது. ஸஞ்ஜீவிநீயின் கிழங்கு, ஓர் பரமாணு அளவு கிடைத்தாலும் போதுமே. இதர மூலிகைகளை வண்டி வண்டியாயச் சேர்த்து வைத்துக் கொள்வது என்னத்துக்கு? ஆயுஸ்ஸு இல்லாமல் லக்ஷணங்கள் பொருந்தி இருத்தலும், தலையில்லாமல் பூஷணங்களும், கல்யாணப் பெண் பிள்ளை இல்லாமல் ஊர்கோலம்வருதலும், பரிஹாஸத்துக்கே காரணமாவதுபோலும், அத்யாத்மஞானம் ஒன்றில்லாத சாஸ்த்ரஞானமனைத்தும் ப்ரயோஜநமற்றதே ஆகும். ஆகையால் அர்ஜுநா, அத்யாத்மஞாந விஷயத்தில், அதை அடைந்தே தீரவேண்டும் என்ற நிச்சயமான புத்தி, எந்த சாஸ்த்ரம் கற்ற மூடனுக்கு ஏற்படவில்லையோ, அவன் படைத்த சரீரம் அஞ்ஞானவிதையினின்று முளைத்து வளர்த்தசெடியே; ஆகும்.

அவனுடைய கல்வி முழுதும் அஞ்ஞானமே கொடியாய்ப் படர்ந்த தாகும்; அவன் சொல்லும் வார்த்தைகள் அந்தக்கொடியில் பூத்த பூக்களாகும்; அவனிடத்தினின்று உண்டான புண்யங்கள் அஞ்ஞானமே ஆகும்.

(18) தத்வஞாநார்த்தத்தைப் பாரா திருத்தல் :

அத்யாத்ம ஞானத்தைக் கொஞ்சமேனும் மதியாதவன், அந்த ஞானத்தினால் அடையக்கூடியதான அர்த்தத்தைப் பார்ப்பதில்லை என்று சொல்லவும் வேண்டுமா? ஸமுத்ரத்தின் இக்கரை வந்து, அதைப்பார்த்த உடனே பின்வாங்கி ஓடிப்போனவனுக்கு, அக்கரையில் இருக்கும் தீவின் வ்ருத்தாந்தங்கள் என்னமாய்த் தெரியப்போகிறது? வாயிற்படியில் நுழைவதற்குமுன்பே கால் கட்டுப்பட்டுப்போன திருடனுக்கு, நடுவீட்டில் இருக்கும் நிதி கண்ணாற் பார்க்கக் கிடைப்பது எப்படி நேரும்? எவனுக்கு அத்யாத்மஞாநசாஸ்த்ரத்தில் பரிச்சயமே இல்லையோ, அவன் கண்ணுக்கு அந்த ஞானத்தின் பரமப்ரயோஜநமான ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் எப்படிப் பார்க்கக் கிடைக்கும்? ஆகையால் அவனுக்குத் தத்வஞானத்தின் பலனாகிய ஆத்மஸாக்ஷாத்காரம் கொஞ்சங்கூட கிடைப்பதில்லை என்பதை, சிறு பிள்ளைகளுக்குமுன் புளியங்கொட்டைகளைப் பரப்பி வைத்து, அவர்களுக்குச் கூட்டற் கழித்தல் கற்றுக் கொடுப்பது போல், வார்த்தைகளை விஸ்தரித்து ந்யாயங்களை எடுத்துக்காட்டி, உனக்குத் தெளிவாகும்படி போதிப்பதற்கு, அவச்யமே இல்லை.

மேலே சொல்ல வேண்டிய விஷயத்தின் அவதாரிகை :

கர்ப்பவதியான தாயைப் போஷிக்கும்போதே, கர்ப்பத்திலிருக்கும் சிசுவும். போஷிக்கப்பட்டதாய் விடுகிறது. அப்படியே கீழே செய்த ஞானலக்ஷணங்களின் நிரூபணத்தாலேயே, அஞ்ஞாநலக்ஷணங்கள் நிரூபித்தவை யாயின. குருடனை உண்ண அழைத்தால், அவனை இட்டுக்கொண்டு வருகிறவனையும் அழைத்த தாய் விடுதல் போலும், அஞ்ஞான லக்ஷணங்களைப் பிரித்தெடுத்து வேறோர் நிரூபணம் செய்ய அவச்யமில்லாதபடி, இவற்றிற்கு விரோதமான ஞானத்தின் பதினெட்டு லக்ஷணங்களாகிய அமாநித்வவாதிகள் வர்ணிக்கப் பட்டதினாலேயே அஞ்ஞானத்தின் லக்ஷணங்களனைத்தும் இயற்கையாகவே எதிர்வந்து நின்று விடுகின்றன. ஆயினும், சென்றுபோன 11-வது ச்லோகத்தின் இரண்டாம் பாகத்தினால்,

இந்த ஞானத்துக்கு எதிரிடையாய் எது இருக்குமோ, அதுவே அஞ்ஞானம் என்று பகவானே சொன்னபடியால், அதை அநுசரித்து நானும் அஞ்ஞான லக்ஷணங்களை அலாயிதாகவாக எடுத்து விஸ்தரித்துச் சொல்லலானேன்,

இல்லாவிட்டால் பாலோடு நீரைக்கலந்து அதைப் பெருக்கி வைப்பதில் லாபம் என்ன? ஆகையால் வளவள என்று உளறிக்கொட்டாமல், மூலச்லோகத்தின் பதங்களை விட்டு விலகாமல், மூலத்தில் த்வநிதமாய், (குறிப்பாய்) எது சொல்லப்பட்டதோ, அதை விவரித்துச் சொல்லலுற்றேன். அப்போது ச்ரோதாக்கள், பின்வருமாறு சொல்கிறார்கள். போதும் ஐயா, நீர் என்ன தப்பிதம் செய்துவிட்டீர் என்று மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும். கவிகளுக்குக் கவிதாசக்தியை ஊட்டிவைக்கும் நீர், காரணமின்றி, ஏன் பயப்படுகிறீர்? ஸ்ரீ முராரி, "நான் அபிப்ராயகர்ப்பிதமாய் மறைத்துச் சொன்னதை வெளிப்படுத்திக் காட்டிவை," என்று உமக்குச் சொல்லியிருக்கிறாரே; அந்த பகவானுடைய மனதில் இருந்த பாவார்த்தங்களுக்கு ஓர் உருவுகொடுத்து, அவற்றை வெளிப்படுத்தி வைக்கிறீர். இதைச் சொன்னால் உமக்கு மனவருத்த முண்டாகும். ஆகையால் இவ்விஷயத்தை விஸ்தரியாது, நிறுத்திவைப்போம். இப்போது நாங்கள் ச்ரவணாநந்தத்தை அநுபவித்ததுடன், ஞானம் என்னும் தெப்பத்தின்மேல் ஏற்றிவைக்கப்பட்டவர்களானோம். இனித் தாமஸிக்காமல் மேலே ஸ்ரீஹரி சொன்ன விஷயத்தை விரைவாய்ச் சொல்லத் தொடங்குவீர்.

இப்படி ஸாதுக்கள் சொன்னதால், நிவ்ருத்திதாஸனாகிய நான் அப்படியே சொல்லத் தொடங்குவேன். ப்ரபுக்களே கேட்கவேண்டும். பகவான் பின்வருமாறு சொன்னார். நீ இப்போது கேட்டு வந்த லக்ஷணங்கள் அனைத்தும் அஞ்ஞானத்தைச் சேர்ந்தவையாகும். இவ்வகைப்பட்ட அஞ்ஞானாம்சங்களை உன் னிடத்தினின்று தொலைத்துக் கொண்டு, ஞானத்தில் திடமாய் நீ நிலை பெறவேண்டும். பின்பு மல மற்றுப்போன ஞானத்தின் ப்ரபாவத்தால், ஜ்ஞேயமான வஸ்து உனக்கு தர்சனம் கொடுக்கும். அப்போது அர்ஜுனன் அந்த ஜ்ஞேயவஸ்து எப்படி இருக்கும் என்று தெரிந்து கொள்ள மனதுக்குள். ஆசைப்படவே, ஸர்வஜ்ஞர்களுக்குள் அரசனான ஸ்ரீக்ருஷ்ணன், அர்ஜுனனுடைய மனோபாவத்தை அறிந்து, ஜ்ஞேயவஸ்துவின் ஸ்வரூபத்தை நான் சொல்வேன் கேள், என்றார்.

ज्ञेयं यत्तत्प्रवक्ष्यामि यज्ज्ञात्वामृतमश्नुते ।
अनादि मत्परं ब्रह्म न सत्तन्नासदुच्यते ।।१२।।

க்ஞேயம் யத்தத் ப்ரவக்ஷ்யாமி யக்ஞாத்வாऽம்ருத மஶ்நுதே।
அநாதி மத்பரம் ப்ரம்ஹ ந ஸத்தந்நாஸ துச்யதே ॥ 12

ஞேயவஸ்துவின் லக்ஷணங்கள் :

அவ்வஸ்து ஞானத்தைத் தவிர வேறு எந்த உபாயத்தாலும், அடையக் கூடாததாய் இருக்கிறதால், அது ஞேயம் என்று சொல்லப்படுகிறது. அன்றியும் அதை அறிந்த பின், வேறோர் கார்யமும் செய்வது அவச்யமாயிராமல், அதை அறிவதே அறிந்தவனை அவ்வஸ்துமயமாய்ச் செய்து வைக்கிறது. அதை அறிந்த உடன், ஸம்ஸாரத்தில் முழுகிக் கிடந்தவன், அதினின்று கரையேறி, நித்யாநந்தத்தின் வயிற்றில், விழுந்து ஜரித்துப் போகிறான். அந்த ஞேயவஸ்துவிற்கு ஆதியென்பது இல்லாமல், அது இயற்கையாகவே ஏற்பட்டு, பரப்ரஹ்மம் என்று பெயர் பெற்று, விளங்குகிறது. அது இல்லை யென்று சொல்லப் புகுவோமாகில், அது விச்வமாய் உருவெடுத்து கண்ணுக்கு முன் நிற்கிறது. ஆனால் அது விச்வமே என்று சொல்லப் போனால், அந்த விச்வமோ உண்மை யற்ற மாயையாயிருக்கிறது. ரூபவர்ணங்கள் அற்றதாய், கண்ணுக்குப் புலப்படாததாய், ஒருவராலும் பார்க்கப்படாததாய், பார்க்கிறதாய் இராமல், ஓர் வகைஸ்திதியும் அற்றதாய், இருக்கும் இவ்வஸ்துவை எவன் எவ்விதமாய் இருக்கிற தென்று சொல்லமுடியும்? ஆனால் உண்மையில் இராததானால், மஹதாதியாயுள்ள இந்த விச்வமனைத்தும் எதை ஆதாரமாகக் கொண்டு தோன்றிக் கொண்டிருகிறது? அதினால் ஏற்படாததாய் எவ்வஸ்து எப்படி இருக்க முடியும்? ஆகையால் இருக்கிறது இல்லை யென்ற வார்த்தைகள் இவ்வஸ்துவில் ஒட்டாதவை ஆகின்றன. இதைப் பார்த்து, வேதங்கள் இதின் விஷயத்தில், ஊமையாயின. இவ்வஸ்து விஷயத்தில் ந்யாய விசாரம் என்பதின் வழி அடைப்பட்டுப் போகிறது. எப்படி மண், சட்டி, குடம், சால், என்னும் உருவங்கள் படைத்து, அவற்றிற்குள் புகுந்திருக்கிறதோ, அப்படியே இவ்வஸ்து எல்லா வஸ்துக்களாயும் அமைந்து, எல்லாவற்றிலும் நிறைந்திருக்கிறது.

सर्वतः पाणिपादं तत्सर्वतोऽक्षिशिरोमुखम् ।
सर्वतः श्रुतिमल्लोके सर्वमावृत्य तिष्ठति ।।१३।।

ஸர்வத: பாணி பாதம் தத்ஸர்வதோக்ஷி ஸிரோமுகம் ।
ஸர்வத: ஶ்ருதி மல்லோகே ஸர்வமாவ்ருத்ய திஷ்டதி ॥ 13

இதுவுமது :

இந்த ஞேயவஸ்து தேசகாலங்களை விட்டு வேறுபட்டதாயிராமல், ஸர்வதேசங்களிலும் ஸர்வகாலங்களிலும், ஸ்தூலவஸ்துக்களாகட்டும், ஸூக்ஷ்ம வஸ்துக்களாகட்டும், அவ்வஸ்துக்களைனைத்திலும், எந்தெந்த க்ரியைகள் (தொழில்கள்) நடந்தேறுகின்றனவோ, அந்தக்ரியைகள் அனைத்தையும் தன் கைகளாய் உடைத்தாயிருக்கிறது. இது ஸர்வமாயிருந்து கொண்டு, ஸர்வத்தையும், ஸர்வகாலங்களிலும் நடத்திக் கொண்டிருப்பதால், விச்வபாஹு (எல்லாவற்றையும் கைகளாய்க் கொண்டு எல்லாவற்றையும் செய்து வைப்பது) என்று சொல்லப்படுகிறது. அன்றியும் இது எல்லா இடங்களிலும் ஏககாலத்திலேயே வ்யாபித்திருப்பதால், இதற்கு விச்வாங்க்ரி (எல்லாவற்றையும் கால்களாய்க் கொண்டு, எங்கும் வ்யாபித்துக் கொண்டிருப்பது) என்று ஓர் பெயர் ஏற்பட்டிருக்கிறது. நன்றாய்ப்பார், ஸூர்யனுக்கு சரீரம் என்றும், கண்களென்றும் வேறு வேறாயிராது, அதின் ஸர்வசரீரமும் கண்ணாயிருப்பதுபோல், இவ்வஸ்து தன்னுடைய ஸகலஸ்வரூபத்தாலும், ஸர்வத்தையும் பார்த்துக் கொண்டிருப்பதால், கண்ணே இல்லாத இதற்கு, விச்வதச்சக்ஷுஸ் (எல்லாவற்றையும் கண்களாய்க் கொண்டு, எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருப்பது) என்று பெயரிட வேதம் வல்லமை படைத்தது. இது ஸர்வ வஸ்துக்களின் மேல் ஏறிக்கொண்டு, ஸர்வ விதமாயும் வர்த்தித்துக்கொண்டு வருவதால், இதை விச்வமூர்த்தா (ஸகலத்தையும் தலையாய்க் கொண்டு ஸகலத்துக்கும் தலைமை பூண்டிருப்பது) என்று சொல்வார்கள். இன்னமும் பார், நெருப்பைப் போலும், இவ்வஸ்து தன் தேஹம், முழுவதையும் வாயாய்க் கொண்டு, ஸர்வமாயிருந்து கொண்டு, ஸர்வத்தையும் புசிக்கிறது என்னும் காரணத்தைக் கொண்டு, ஹே பார்த்தா, ச்ருதி தன்வாயை திறந்து, விச்வதோமுகம் (ஸகலத்தையும் வாய்களாய்க் கொண்டு ஸகலத்தையும் புசிப்பது) என்று இதற்கு ஓர் பெயர் ஏற்படுத்தி வைத்தது. அன்றியும் வஸ்து என்றொன் றிருந்தால் அதின் கூடவே ஆகாசம் அதில் பற்றிக்கொண்டிருப்பது போல், சப்தக் கூட்டங்களிலேயே காதை எங்கும் படைத்துள்ளதாய், இந்த ஞேயவஸ்து இருப்பதால், எங்கும் காது படைத்து, எல்லா சப்தங்களையும் கேட்டுக் கொண்டிருக்கிற தென்று, இது

வ்யவஹரிக்கப்படுகிறது. இவ்விதமிது அனைத்தையும் வ்யாபித்துக் கொண்டிருகிறது.

ஹே 'புத்திமான்களிற்குள் சிறந்தவனே, உண்மையைப் பேசுங்கால், விச்வதச்சக்ஷுஸ் என்று துவக்கும் வேதவாக்யங்கள், இவ்வஸ்துவின் ஸர்வவ்யாப்தியை ஓர் ரூபகமாய்ச் சொல்ல வந்தனவே தவிர, ஸர்வ சூந்யம் என்று நிஷ்கர்ஷிப்பதையே (வரையறுத்தலையே) பொறுத்துக் கொள்ளாத இவ்வஸ்துவுக்கு, உண்மையில் கை கால் கண் முதலியவை எப்படி ஏற்படும்? அலைகள் அலைகளை விழுங்குவதாக நாம் பார்க்கும்போது, விழுங்குகிற அலைகள் என்றும், விழுங்கப்படும் அலைகள் என்றும், அலாய்தாவாக இருக்கின்றனவா என்ன? அது போலவே, உண்மையில், இருப்பது ஒரே வஸ்துவாகும் போது, அதில் வ்யாப்யமான அம்சம் ஒன்றென்றும், வ்யாபகமானது மற்றொன் றென்றும் எப்படி ஏற்படும்? ஆயினும் ஒவ்வொரு வேளை, பிறருக்கு விஷயத்தை விளங்கச் செய்வதற்காக, அப்படிப்பிரித்துப் பேச ஏற்படுவதும் உண்டு. பார், கணக்கு எழுதுகிறவர்கள் ஓர்வகுப்பு சூந்யமாயிருக்கிற தென்பதைக் குறிக்க, அதில் ஓர் ஸுக்தம் எழுதிவைப்பது போல், அத்வைத வஸ்துவை வார்த்தையால் விளங்கச் செய்ய்ப் புறப்பட்டால், த்வைதமே பேசவேண்டியதாக ஏற்படுகிறது. அப்படிச் செய்யாமற் போனால், அத்வைத விஷயத்தைப் பேசவே முடியாது போய், குருசிஷ்யஸம்ப்ரதாயத்தின் வழியே அடைப்பட்டு போகும். ஆகையாற்றான், வேதம் அத்வைதவஸ்துவை த்வைதபாவத்தைக் கொண்டு நிரூபணம் செய்வதற்கு வழி ஏற்படுத்திவைத்தது. ஆகையால் அதை நானு மநுஸரித்து, கண்ணாற் பார்க்கக்கூடிய உருவங்கள் நிறைந்துள்ள விச்வத்தில், இந்த ஞானம் எவ்விதமாய் வ்யாபித்திருக்கிற தென்று சொல்வேன், கேள்.

सर्वेन्द्रियगुणाभासं सर्वेन्द्रियविवर्जितम् ।
असक्तं सर्वभृच्चैव निर्गुणं गुणभोक्तृ च ।।१४।।

ஸர்வேந்த்ரிய குணாபாஸம் ஸர்வேந்த்ரிய விவர்ஜிதம் ।
A é Uu® é °Á ப்ருச்சைவ நிர்குணம் குணபோக்த்ரு ச ॥ 14

இதுவுமது :

ஹே கிரீடி இடைவெளியில் ஆகாசம் நிறைந்திருப்பது போலும், துணியில் நூல் துணிரூபம் பூண்டு வ்யாபித்துக்

கொண்டிருப்பது போலும், ரஸம் நீரில் நீராய்ப்போய் வ்யாபித்துக் கொண்டிருப்பது போலும், வாஸனையானது கர்ப்பூரத்தில் கர்ப்பூர உருவெடுத்துக் கொண்டு வ்யாபித்திருப்பதுபோலும், தங்கமே தங்கக் கட்டியாகத் தோன்றுவது போலும், இது விச்வத்திலுள்ள ஸர்வ வஸ்துக்களுமாய், அவற்றின் ஸர்வாங்கத்திலும் வ்யாபித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், ஹே ப்ரியமான நண்பனே, தங்கம் கட்டி உருவுகொண்டு அக்கட்டியில் வ்யாபித்திருக்கும்போது, கட்டியாகத் தோன்றி, அக்கட்டியையே தங்கத்தோடு சேர்த்துப்பார்க்கும்போது அது தங்கமாகவே ஏற்படுவதுபோலும், அருவி மாத்ரம் கோணாலாயிருந்த போதிலும் அதின் ஜலம் நேராகவே இருப்பதுபோலும், நெருப்பு இரும்பின்மேல் ஏறி அதை வ்யாபித்துக் கொண்டு, இரும்பின் உருவாகத் தோன்றினும், அது இரும்பு ஆகாததுபோலும், ஆகாசம் மடத்தின் உருவு கொண்டு அதே நாற்கோணமாய்த் தோற்றினாலும், உண்மையாய் ஆகாசம் உருவற்றிருப்பது போலும், இவ்வஸ்து வேறு வேறு வஸ்துக்களாய் விகாரம் அடைந்த தாய்த் தோற்றின போதிலும், உண்மையில் விகாரங்கள் அற்றதாய் இருக்கிறது. இது மனஸை முதலாயுடைய இந்த்ரியங்கள் போலவும், ஸத்வம் முதலான குணங்கள் போலவும், தோற்றுவது நிஜமே யானாலும், வெல்லத்தின் தித்திப்பு வெல்லமொத்தை எங்கும் வ்யாபித்திருந்த போதிலும், அம்மொத்தையாய் அது இராதது போலும், இவ்வஸ்துவின் உண்மையை விசாரிக்குங்கால், இதில் குணங்களும் இந்த்ரியங்களும் முற்றிலும் இல்லை என்றே ஏற்படுகிறது.

பால் அவஸ்தையில், நெய்.பால் உருவுகொண்டு தோற்றின போதிலும், அது பாலாக இராதது போலும், ஹே வாநரக் கொடியோனே, இந்த வஸ்து இந்த விகாரமடைந்த வஸ்துக்களில் வ்யாபித்திருந்தபோதிலும், விகாரம் அடைந்தது ஆவதில்லை, என்று நிச்சயித்துக்கொள். இதைப் பார் தங்கத்தை நகைகளாய்ச் செய்து, அப்படி ஏற்பட்ட ரூபவிசேஷங்களுக்கு, காப்பு என்றும், கர்ணப்பூ என்றும், வேறு வேறு பெயர்கள் ஏற்பட்டாலும், தங்கம் தங்கமாகவே இருப்பதுபோலும், விச்வத்தில் காணப்படும் பேதங்கள் அனைத்தும் குணங்களையும் இந்த்ரியங்களையும் பற்றியதே என்றும்; நாமரூபஸம்பந்தமும், ஜாதிக்ரியா பேதங்களும் பூதங்களின் ஆகாரத்தைப் பற்றியவையே தவிர, அவை இந்த வஸ்துவில் கொஞ்சங்கூட ஸம்பந்தப்பட்டவை அல்லவென்றும், நிஸ்ஸந்தேஹமாய்த் தெரிந்து கொள். இவ்வஸ்து ஒருபோதும்

குணங்கள் ஆவதில்லை, குணங்களுக்கும் இதற்கும், ஒருவித ஸம்பந்தமும் இல்லை. குணங்கள் இதினிடத்தில் தோன்றும் தோற்றங்களே. இப்படிச் சொன்னதைக் கொண்டு அறிவு மயக்கம் உற்றவர்கள், இக்குணங்களை இந்த ஜ்ஞேயவஸ்து தரித்துக் கொண்டிருக்கிறது என்று எண்ணிக் கொள்வார்கள். ஆனால் அப்படி குணங்களைத் தரித்துக் கொண்டிருப்பதின் ப்ரகாரத்தை மேலே வர்ணிக்கிறேன், கேள். மேகங்களை ஆகாசம் தரித்திருப்பது போலும், கண்ணாடி முகத்தின் ப்ரதிபிம்பத்தைத் தரித்திருத்தல்போலும், இல்லாவிட்டால் ஸூர்யனுடைய ப்ரதிபிம்பத்தை ஜலம் தரித்திருத்தல் போலும், ஸூர்ய கிரணங்கள் கானநீர் தோற்றத்தைத் தரித்திருப்பது போலும், இந்த விச்வம் அனைத்தையும், இந்த நிர்குண வஸ்து, யாதோர் ஸம்பந்தமுமில்லாமலேயே, தரித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அப்படி தரித்திருப்பது என்பது உண்மையற்றதாய், அஜ்ஞானத்தால் ஏற்பட்ட ஓர் தோற்றம் மாத்ரமாகவே இருக்கிறது. அன்றியும் இந்த நிர்குணமான வஸ்து குணங்களை புசிப்பதென்பதும் இவ்விதப்பட்டதே. பிச்சைக்காரன் ஸ்வப்நத்தில் ராஜ்யம் செய்வதுபோல், இந்த குணபோகம் இருக்கிறது. ஆகையால் குணத்தின் ஸம்பந்தமும், குணங்களைப் புசிப்பது என்பதும், நிர்குண வஸ்துவில் ஒட்டுதல் உள்ளவையாய்ச் சொல்வதற்கு, இடமே இல்லை.

बहिरन्तश्च भूतानामचरं चरमेव च ।
सूक्ष्मत्वात्तदविज्ञेयं दूरस्थं चान्तिके च तत् ।। १५ ।।

பஹிரந்தஶ்ச பூதாநாமசரம் சரமேவ ச।
é ü ô ©z Á õz u த விக்ஞேயம் தூரஸ்தம் சாந்திகே ச தத் ॥ 15

இதுவுமது :

நெருப்புத் தணற்கள் பலவாய் இருந்தாலும், அதிலிருக்கும் ஔஷண்யம் (சூடு) ஒன்றே போலும், இந்த ஜ்ஞேயவஸ்து ஸூக்ஷ்மமானதால் சராசரமான ஸகலபூதங்களையும் வ்யாபித்துக் கொண்டு, அப்படிப்பட்ட வ்யாப்தியால் பேதப்படாததாயும், அழிவற்றதாயும் இருக்கிறது. இது, ஒன்றே யாயினும், உள்ளும் புறமும் வ்யாபித்ததாய், ஸமீபத்திலும் தூரத்திலும் இருக்கும்.

अविभक्तं च भूतेषु विभक्तमिव च स्थितम् ।
भूतभर्तृ च तज्ज्ञेयं ग्रसिष्णु प्रभविष्णु च ।। १६ ।।

அவிபக்தம் ச பூதேஷு விபக்தமிவ ச ஸ்திதம் ।
பூதபர்த்ரு ச தத் க்ஞேயம் க்ரஸிஷ்ணு ப்ரபவிஷ்ணு ச ॥ 16

இதுவுமது :

இவ்வஸ்து, ஒரே விதப்பட்டு வேறு பாடு அற்றதாய், பாற்கடலின் தித்திப்பு, நடுவில் மிகுந்தும், ஓரத்தில் குறைவாயும் இராதது போலும், ப்ரகாராந்தரங்கள் அற்றதாயும், பரிபூர்ணமாயும், ஸ்வேதஜம், அண்டஜம், உத்பிஜம், ஜராயுஜம், என்ற நால்வகை ப்ராணிகளிலும் நிறைந்திருப்பதில், ஒரு பூதத்திலும் ஓர் குறைவுமின்றி இருக்கும். ச்ரோதாக்கள் என்ற முகத்துக்கும் திலகம் போன்ற ஹே அர்ஜுநர், கவனித்துப் பார். சந்திரன் அநேக குடங்களில் ப்ரதிபிம்பித் திருந்த போதிலும், பேதமடையா திருப்பது போலும், அநேக உப்புக் குவியல்களில் இருக்கும் உவர்ப்பு ஒன்றே போலும், ஓர் கட்டு கருப்பந்தண்டனைத்திலும் தித்திப்பு என்பது ஒன்றே போலும், அநேக பூதங்களிலும் இது ஒன்றே விதமாய் வியாப்தியை அடைந்து, விச்வத்துக்குக் காரணமாயிருக்கிறது. இக்காரணத்தினாலேயே, ஸமுத்ரம் தன்னின்று உண்டான அலைகளுக்குத் தானே ஆதாரமாயிருப்பதுபோல், இப்பூதங்களுக்கு இதுவே உத்பத்திஸ்தான மாயிருப்பதுடன், ஆதாரமாயுமிருக்கிறது. பால்ய யௌவன வார்த்தக்யங்களாகிய மூன்று அவஸ்தைகளுக்கும், ஒரே தேஹமே ஆதாரமாயிருப்பது போலும், உத்பத்தி, ஸ்திதி, லயம் என்ற மூன்று அவஸ்தைகளுக்கும், இவ்வஸ்துவே ஆதாரமாய் இருந்து கொண்டு, காலை, உச்சி, மாலை என்ற ஓர் தினத்தின் மூன்று வேளைகளிலும் ஆகாசம் மாறுபாடடையாதிருக்கிறது போல் இந்த வஸ்து மாறுபாடடையாமல் இருந்துக்கொண்டிருக்கிறது. ஹே ப்ரியோத்தமா, ஸ்ருஷ்டிகாலத்தில் ப்ரஹ்மா என்று சொல்லப்பட்டு, ஸ்ருஷ்டிக்கப்பட்ட விச்வம் நிலைபெற்றிருக்கும் காலத்தில் விஷ்ணு என்று சொல்லப்பட்டு, பின்பு ஆகாரம் படைத்தவைகளான பூதங்களனைத்தும் மறைந்துபோகும் ப்ரளயகாலத்தில் ருத்ரன் என்று சொல்லப்பட்டு, சூன்யமென்று சொல்லத்தக்க ஆகாசமே மறைந்து போய், ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களுக்குக் காரணங்களான முக்குணங்களும் மறைந்துபோய், அவ்யக்தமென்பது ஏற்பட்டிருக்கும் நிலையில் சூன்யம் என்று சொல்லப்பட்டு, அந்த சூன்யமும் விழுங்கப்பட்டுப் போனபின் மஹா சூன்யம் என்று வேதத்தால் சொல்லப்பட்டிருப்பது எதுவோ, அதுவே இந்த ஞேயவஸ்து ஆகும்.

ज्योतिषामपि तज्ज्योतिस्तमसः परमुच्यते ।
ज्ञानं ज्ञेयं ज्ञानगम्यं हृदि सर्वस्य विष्ठितम् ।।१७।।

ஜ்யோதிஷாமபி தத்ஜ்யோதிஸ் தமஸ: பர முச்யதே ।
க்ஞானம்க்ஞேயம்க்ஞானகம்யம்ஹ்ருதிஸர்வஸ்யவிஷ்டிதம்।।17.

இதுவுமது :

இதுவே அக்நிக்கு எரிக்கிற சக்தியைக் கொடுக்கிறது. சந்த்ரனுக்கு ப்ராணிகளை ஜீவிக்கச் செய்யும் சக்தியைக் கொடுக்கிறது. ஸூர்யனுக்கு ஸர்வத்தையும் பார்ப்பதற்கு வேண்டிய கண்ணைக் கொடுக்கிறது; அவ்வஸ்துவின் ப்ரகாசத்தினின்று நக்ஷத்ரங்கள் உண்டாய், மஹாதேஜஸ்ஸுக்கள் தங்கள் தங்கள் தேஜஸ்ஸை அடைந்து சுற்றிக்கொண்டிருக்கின்றன. ஜகத்தில் உள்ள காரணவஸ்துக்களனைத்துக்கும் காரணமாய், வ்ருத்திக்கு வ்ருத்தி செய்து வைக்கும் சக்தி கொடுக்கிறதாய், புத்திக்கு நிர்ணயிக்கும் சக்தி கொடுக்கிறதாய், ஜீவனுக்கு ஜீவிக்கிற சக்தி கொடுக்கிறதாய், மனஸுக்கு மனனசக்தி கொடுக்கிறதாய், காதுக்குக் கேட்கிற சக்தி கொடுக்கிறதாய் வாக்குக்கு அக்ஷரோச்சார சக்தி கொடுக்கிறதாய், ப்ராணனுக்கு சுவாஸோச்சுவரஸ சக்தி கொடுக்கிறதாய், கதி என்பதற்கு ஸஞ்சரிக்கும் சக்தி கொடுக்கிறதாய், க்ரியை என்பதற்கு கர்மங்களைச் செய்யும் சக்தி கொடுக்கிறதாய், ஆகாரங்களுக்கு ஆகாரமாயமைந்துநிற்கும் சக்தி கொடுக்கிறதாய் வளர்தலுக்கு வளரும் சக்தியை கொடுக்கிறதாய், ஸம்ஹாரத்துக்கு ஸம்ஹரிக்கும் சக்தியைக் கொடுக்கிறதாய், பூமிக்கே ஆதாரபூமியாகயிருந்துக்கொண்டு, ஜலத்துக்கு ஜலத்தை ஊட்டி அதை ஜிவிக்கச் செய்துகொண்டு, தேஜஸுக்கு தேஜஸ்ஸைக் கொடுத்துக் கொண்டு, வாயுவுக்கே மூச்சுக்காற்றாய் இருந்துகொண்டு, ஆகாசத்துக்கு அவகாசம் கொடுத்துக் கொண்டு எல்லா ப்ரகாசங்களுக்கும் பரகாசிக்கும் சக்தி கொடுத்துக் கொண்டு சுருக்கிச் சொல்ல, எல்லாவற்றிற்கும் வேண்டிய எல்லா வற்றையும் செய்து கொடுத்துக் கொண்டு, த்வைதபாவம் என்பது தன்னை அணுக ஒட்டாததாய், தன் தர்சனமான மாத்திரத்தால் த்ருச்யம், த்ரஷ்டா, முதலிய அனைத்தையும் கலந்து, அவை பரஸ்பர வித்யாஸமற்று, ஒன்றுபட்டு போகும்படி செய்து வைக்கிறதாய், பின்பு தானே ஞாநம், ஞாதா, ஜ்ஞேயம் என்று மூவகைப்பட்டுப்போகிறதாய், எந்த வஸ்து இருக்குமோ, அதுவே இந்த ஜ்ஞேயஸ்வது என்றறிய

வேண்டும். வஸ்துக்களை எண்ணிக் கணக்கிடும்போது ஓர் வரிசை முடிந்தபின், மறுபடியும் ஒன்று என்ற எண் ஏற்படுவதுபோல், ஞானம் ஸம்பூர்ணமாய் ஏற்பட்டபின், ஸாத்ய ஸாதநங்கள் அனைத்தும் ஒன்றுப்பட்டுப்போய், த்வைதத்தின் வ்யவஹாரம் முற்றிலும் அற்றுப்போகிறது. இது நிற்கட்டும். இந்த ஜ்ஞேயவஸ்து, உலகில் உள்ள எல்லாவற்றின் ஹ்ருதயத்திலும், குடி கொண்டிருக்கிறது.

इति क्षेत्रं तथा ज्ञानं ज्ञेयं चोक्तं समासतः ।
मद्भक्त एतद्विज्ञाय मद्भावायोपपद्यते ।।१८।।

இதி க்ஷேத்ரம் ததா க்ஞானம் க்ஜ்ஞேயம் சோக்தம் ஸமாஸத: ।
மத்பக்த ஏதத்விக்ஞாய மத் பாவா யோப பத்யதே ।। 18

கீழ்ச் சொல்லிய விஷயங்களின் ஞானத்தால் உண்டாகும் பலன் :

ஹேப்ரியமான நண்பனே, உனக்கு முதலில் க்ஷேத்ரம் இன்னதென்று விவரமாய்ச் சொன்னேன். அதற்குப்பின் ஞானத்தை நீ உன் கண்ணாற் பார்க்கும்படி, விஸ்தாரமாய்ச் சொல்லி, அஞ்ஞானத்தையும், உன்னுடைய புத்தி த்ருப்தி அடைந்து, போதும் என்று சொல்லும்படியாய், ஓர் விநோதமாய் வர்ணித்தேன். கடைசியாக ஜ்ஞேயத்தையும், நீ ஜடிதியில் ஸந்தேஹமற அறிந்து கொள்ளும் வண்ணம், பலவிதமான உபபத்திகளோடு, (மனஸில் ஏற்படும் ஆக்ஷேபணைகள் ஸந்தேஹங்கள் தீரும்படி த்ருஷ்டாந்தங்கள் யுக்திகள் முதலியவற்றோடு) அவ்வஸ்து ஓர் மறைவுமின்றி வெளிப்பட்டுத் தோன்றும்படி, உனக்குச் சொல்லி வைத்தேன். இப்படிப்பட்ட விசாரமனைத்தையும், என்பக்தர்கள் தங்களுடைய புத்தியில் நிரப்பிவைத்துக்கொண்டு, என்னை அடைவதையே ஸதா பாவித்துக்கொண்டு தேஹம் முதலிய உபாதிகளின் பற்றைத் தங்களிடத்திலிருந்து முற்றிலும் ஒழித்துக்கொண்டு, தங்கள் ஜீவனை என் ஸ்வரூபம் என்னும் பூமியில் குடியிருந்து, அதைப் பயிரிட்டு ஜீவிக்கும் ஸொந்தக்காரனாய்ச் செய்துகொண்டு, முடிவில் என்னைக் கீழே வர்ணிக்கப்பட்ட ஜ்ஞேயவஸ்துவே யென்று யதாவத்தாய் அறிந்து, தங்கள் ஸர்வஸ்வத்தையும் எனக்கு அர்ப்பணம் செய்துவிட்டு, என்னையே பதிலாக அடைந்து, நானாகவே ஆய்விடுகிறார்கள். என்னை அடைந்து, நானாகவே போய்விடுவதற்கு ஏற்பட்டிருக்கும் மார்க்கங்களுக்குள் இம்மார்க்கமே முக்கியமான தென்று நிச்சயமாய் நீ தெரிந்து

கொள்ளவேண்டும். எல்லா மார்க்கங்களைக் காட்டிலும் ஸுலபமான தென்று இம்மார்க்கத்தை நான் ஏற்படுத்தி வைத்தேன். செங்குத்தாயிருக்கும் பாறையின்மேல் ஏறிச் செல்லவேண்டுமானால், அதில் படிகள் கட்டிவைக்க வேண்டும், ஓர் பிடிப்பு மில்லாத உந்நதமான சுவர்கள் முதலியவற்றின் உச்சி போய்ச் சேரவேண்டுமானால், சாரங் கட்டி வைக்க வேண்டும். ஆழம் நிச்சயிக்க முடியாத நீரைத் தாண்டிப்போக வேண்டுமானால் ஓர் தெப்பம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இப்படி ஸுலபமான மார்க்கத்தை ஏற்படுத்திவைக்காமல், எல்லாம் ஆத்மா வென்று தெரிந்துகொள், என்று மொத்தமாய்ச் சொல்லித் தீர்ந்தேனேயானால், அது உன் மனஸில் ஏறி நிலை கொள்ளாது. ஆகவே உன்புத்தியின் யோக்யதை குறைவாயிருக்கிறதைத் தெரிந்துகொண்டு, ஒன்றாகவே ஏற்பட்டிருக்கும் அந்த வஸ்துவை நான்கு வகைப்படுத்திச் சொல்லி வைத்தேன், நன்றாய்ப்பார், ஓர் குழந்தைக்கு ஒருவன் அன்னம் ஊட்டப்புகுந்தால், தான் ஓர் கவளமாய்ச் சாப்பிடக்கூடியதை, இருபதுபாகமாய்ச் செய்து, சின்னச்சின்ன உண்டையாய் அதின் உள்ளே செலுத்த வேண்டியதுபோலும், உண்மையாய் ஒன்றாகவே இருக்கும் வஸ்துவை, க்ஷேத்ரம் என்றும் ஞானம் என்றும், ஜ்ஞேயம் என்றும், அஞ்ஞாந மென்றும், உன் புத்தியை அநுஸரித்து, நால்வகைப்படுத்திச் சொன்னேன். அன்றியும் இப்படிச் சொல்லிவைத்துக் கூட, இவ்விஷயம் உனக்கு விள்ளாதிருக்கும் பக்ஷத்தில், இதை வேறோர் விதமாய், மற்றுமோர் தடவை சொல்வேன்.

இப்போது இதை நான்கு பாகமாய்ப் பிரிக்காமலும், ஒன்றே என்று சொல்லி யொழியாமலும், ஆத்ம வஸ்து அநாத்மவஸ்து என்று இரண்டு ஸரிபாகமாகச் செய்து சொல்வேன். ஆனால் நான் கேட்பது ஒன்றைமாத்ரம் எனக்கு நீ கொடுக்க வேண்டும், அது யாதென்றால், உன் காதுக் காணையிட்டு, அதை நான் சொல்வதைக் கவனித்துக் கேட்கும்படி செய்துவை. இப்படி ஸ்ரீ க்ருஷ்ணன் சொன்னதைக் கேட்டு, அர்ஜுநனுக்கு மயிர்க்கூச்சல் ஏற்பட்டது. அதைப் பார்த்து ஸ்ரீ க்ருஷ்ணன் இவனுக்கு ஸாத்விக பாவம் நன்றாய் ஏற்பட்டதல்லவா, என்றார். இப்படிச் சொன்ன உடனே, ஸ்ரீக்ருஷ்ணனுக்கும் ஸாத்விகபாவம் உண்டாயிற்று, அதின் வேகத்தை அடக்கிக் கொண்டு, தத்வத்தை ப்ரக்ருதி புருஷன் என்று இருபாகப்படுத்தி விசாரிக்கும் முறையைச் சொல்வேன் கேள், என்று ஸ்ரீரங்கன் சொன்னார். இந்தமுறைக்கு ஸாங்க்யமுறை

யென்று யோகிகள் பெயரிடுவார்கள் என்றும், இதை உலகில் விஸ்தாரப்படுத்திவைப்பதற்கே, தான் கபிலனாய் அவரித்ததாகவும், இப்படி ப்ருக்ருதி என்றும் புருஷன் என்றும் பகுத்து விசாரிக்கும் முறையைப் பழுதற்றபடி தான் விவரிக்கப்போவதால், கவனித்துக் கேட்க வேண்டுமென்றும், அர்ஜுனனைப் பார்த்து ஸ்ரீக்ருஷ்ணன் சொன்னார்.

प्रकृतिं पुरुषं चैव विद्ध्यनादि उभावपि ।
विकारांश्च गुणांश्चैव विद्धि प्रकृतिसम्भवान् ।।१९।।

ப்ரக்ருதிம் புருஷம் சைவ வித்தயநாதி உபாவபி ।
விகாராம்ஶ்சகுணாம்ஶ்சைவவித்திப்ரக்ருதிஸம்பவான்।। 19

ப்ரக்ருதி புருஷ நிர்தேசம் :

புருஷன் என்பவன் அநாதி ஸித்தனாயிருக்கினான். பகலைத் தொடர்ந்து கொண்டே ராத்ரி இருப்பது போலும், புருஷனைத் தொடர்ந்து கொண்டே ப்ரக்ருதியும் அநாதிஸித்தமாயிக்கிறான். உருவம் என்பது தனித்திராமல், அத்துடன் கூடவே நிழலும் இருந்து கொண்டே இருப்பது போலும், ஓர் விதையை விதைத்த மாத்ரத்தில், முளையும் அதின் மேல் தோலியும் உண்டாவது போலும், ப்ரக்ருதி புருஷர்கள் ஒருவரோடு ஒருவர் கூடவே எப்போதும் சேர்ந்திருப்பது அநாதி காலமாய் ஏற்பட்டிருக்கிறது. பார், கீழே க்ஷேத்ரம் என்று பெயரிடப்பட்டு சொல்லப் பட்டதனைத்துமே, இங்கே ப்ரக்ருதி என்று சொல்லப்படுகிறது. கீழே க்ஷேத்ரஜ்ஞன் என்று சொல்லப்பட்டவனே, இங்கே புருஷன் என்று சொல்லப்படுகிறான், என்று நான் ஸந்தேஹமறச் சொல்கிறேன் என்று தெரிந்துகொள். இவை பெயரால் மாத்ரம் வேறுபட்டவையே தவிர, இவற்றால் தெரிவிக்கப்பட்டவை வேறுபட்டவை யல்ல, என்று உறுதியாய் நிச்சயித்துக் கொள். கேவல ஸத்தை எதுவோ, அது புருஷன் ஆகும். க்ரியை அனைத்தும் ப்ரக்ருதி ஆகும். புத்தி, இந்த்ரியங்கள், அந்தக்கரணம், இவை முதலாய், விகாரங்களுக்குக் காரணமான அனைத்தும், அத்துடன் ஸத்வாதிகளான முக்குணங்களும், ப்ரக்ருதி என்றும், இந்த ப்ரக்ருதியே கர்மம் ஏற்படுவதற்குக் காரணம் என்றும் தெரிந்துகொள்.

कार्यकारणकर्तृत्वे हेतुः प्रकृतिरुच्यते ।
पुरुषः सुखदुःखानां भोक्तृत्वे हेतुरुच्यते ।।२०।।

கார்ய காரண கர்த்ருத்வே ஹேது: ப்ரக்ருதி ருச்யதே ।
புருஷ: ஸுகதுக்கானாம் போக்த்ருத்வே ஹேதுருச்யதே ॥ 20

கார்ய காரண கர்த்ருத்வங்களுக்கு ப்ரக்ருதி ஹேது :

அவற்றிற்குள் இச்சையும் புத்தியும் சேர்ந்து, முதன் முதலில் அஹம்காரத்தை ஏற்படுத்தி வைத்து, அதை ஸர்வ கர்மத்துக்கும் காரணமாகியப் பலப்ராப்தி ஆசையில் மாட்டி வைத்து, அப்படி ஏற்பட்ட காரணமாகிய அந்த பல ப்ராப்தி ஆசை நிறைவேறுவதற்கு உபாயமாக இந்த்ரியங்களை எப்படி எப்படி ஆட்டிவைத்தல் அவச்யம் ஆகிறதோ, அதற்குக் கார்யம் என்று பெயர். அன்றியும் அதே இச்சையானது மிக்க வலுத்தபிறகு, அது மனதை எழுப்பி வைத்து, அதைக்கொண்டு இந்திரியங்களை வேண்டுமென்றபடி யெல்லாம் ஆட்டிவைத்தல் எதுவோ, அதற்குக் கர்த்தருத்வம் என்று பெயர். ஆகையால் கார்ய காரண கர்த்ருத்வம் என்ற இம்மூன்றுக்கும் மூலகாரணம் ப்ரக்ருதியே ஆகிறது என்று ஸர்வ ஸித்தர்களுக்கு அரசனாகிய ஸ்ரீக்ருஷ்ணன் சொன்னார்.

கர்மபலனைப் புசிக்கிறவன் புருஷன் :

இவை மூன்றும் ஒன்றுபட்டு ப்ரக்ருதியே கர்மமாய் பரிணமிக்கிறது ஆனால் எந்த குணம் அக்காலத்தில் வலிமை பெற்றதாய் ஏறபட்டிருக்கிறதோ, அதற்குத் தக்கபடி அக்கர்மம் ஏற்படுகிறது. ஸத்வகுணத்தின் ஆதிக்யத்தால் ஏற்படும் கர்மம் ஸத்கர்மமாகும். ரஜோ குணத்தால் ஏற்படுவது மத்யமமான கர்மமாகும். எவை கேவல தமோ குணத்தால் ஏற்படுமோ, அவை நிஷித்தங்கள் என்றும், அதர்மங்கள் என்றும் சொல்லப்படும், என்றறி. இவ்விதம் ப்ரக்ருதியினின்று ஸத்கர்மங்களும் அஸத் கர்மங்களும் ஏற்பட்டு, அக்கர்மங்களினின்று ஸுகதுக்கா நுபவங்கள் உண்டாகின்றன. அஸத்கர்மங்களினின்று துக்கமும், ஸத்கர்மத்தினின்று ஸுகமும், உண்டாய், அவற்றினநுபவம் புருஷனுக்கு ஏற்படுகிறது. ஸுகத்துக்கங்கள் ஏற்படும் போதெல்லாம், அவை உண்டாவதற்கு வேண்டிய வ்யவஸாயம் முழுவதும் ப்ரக்ருதி செய்துவைத்து, அவற்றின் பல போகத்தைப் புருஷன் அடைகிறான். ப்ரக்ருதி புருஷர்களுடைய வ்யாபாரம் மிகவும் அஸங்கதமாயிருக்கிறது. ஏனென்றால் பெண்பிள்ளை கஷ்டப்பட்டு ஸம்பாதித்து வைக்கிறாள். புருஷன் ஓர் வேலையும் செய்யாமல் பலனைப் புசிக்கிறான். இந்த ஆச்சர்யத்தைக் கேள். ஸ்த்ரீயும் புருஷனும் கலந்து சேராமலேயே, ஸ்த்ரீ இந்த ஜகத்தைப் பெற்று வைக்கிறாள்.

पुरुषः प्रकृतिस्थो हि भुङ्क्ते प्रकृतिजान्गुणान् ।
कारणं गुणसङ्गोऽस्य सदसद्योनिजन्मसु ।। २१ ।
उपद्रष्टानुमन्ता च भर्ता भोक्ता महेश्वरः ।
परमात्मेति चाप्युक्तो देहेऽस्मिन्पुरुषः परः ।। २२ ।।

புருஷ: ப்ரக்ருதிஸ்தோ ஹி புங்க்தே ப்ரக்ருதிஜான் குணான்।
காரணம் குணஸங்கோ ஸ்ய ஸதஸத்யோநி ஜன்மஸு ॥ 21

உபத்ரஷ்டாகுநுமந்தா ச பர்தா போக்தா மஹேச்வர: ।
பரமாத்மேதி சாப்யுக்தோ தேஹே ஸ்மின் புருஷ: பர: ॥ 22

புருஷனுக்கு போக்த்ருத்வம் ப்ரக்ருதிஸம்பந்தத்தால் ஏற்படுகிறது :

அந்தப்புருஷன் இயற்கையில் உருவற்றவனாய், சக்தியற்றவனாய், நிர்த்தனனாய், துணையற்றவனாய், மிக்க ஜீர்ணனாய், இந்த ஜகத்தில் மிக்க முதுமை படைத்தவை என்று சொல்லத்தக்க வஸ்துக்களைக் காட்டிலும் மிக்க முதுமை படைத்தவனாய், புருஷன் என்று பெயரடைந்து, ஸ்த்ரீ அல்ல நபுஸம்ஸகமும் அல்ல என்று மாத்ரம் சொல்லக்கூடியதைத் தவிர வேறெவ்விதமாயும் நிஷ்கர்ஷித்துச் சொல்ல முடியாதவனாய், கண்ணில்லாதவனாய், காதில்லாதவனாய், கைகால்கள், இல்லாதவனாய், வர்ணமும் நாமமும் அற்றவனாய், யாதொரு ஸ்வத்தும் இல்லாதவனாய் இருந்தும், ப்ரக்ருதி என்பவளுக்குக் கணவனானதினால். இப்படிப்பட்டவன் கூட ஸுகதுக்கங்களை அநுபவிக்கும்படி ஏற்படுகிறது. அவனோ ஸ்வரூபத்தில் அகர்த்தாவாய், உதாஸீநனாய், புசிக்காதவனாய் இருந்தும், இந்த பதிவ்ரதையாகிய ப்ரக்ருதி அவனை ஸுகதுக்கங்களைப் புசிக்கும்படி செய்து வைக்கிறாள். அந்த ப்ரக்ருதி தன்னுடைய ரூப குணங்களின் கிஞ்சித் பலத்தைக் கொண்டு, மிக்க ஆச்சர்யகரமாய் நடித்துக் காட்டுகிறாள். அந்த ப்ரக்ருதி குணமயீ என்று பெயர் படைத்து, அவயவங்களோடுகூடிய சரீரம் எடுத்த குணமே ஆவாள். இவள் ஒவ்வொரு நிமிஷமும் புதுமை புதுமையாய்த் தோற்றிக் கொண்டு, முழுமையும் குணங்களாலேயே அமைந்தவளாய், தன்னுடைய மதத்தைக்கொண்டு ஜடங்களைக்கூட மதம்பிடித்தாடச் செய்வாள். இவளால் நாமங்கள் ப்ரஸித்தியடைந்தன. ஸ்நேஹபாவம் என்பது இவளால் ஏற்படுகிறது. இவளால்

இந்த்ரியங்கள் சக்தி படைத்து, கர்மங்களில் ப்ரவர்த்திக்கின்றன, மனஸு இயற்கையில் ஓர் சக்தியுமற்று நபும்ஸகமாயிருந்தபோதிலும், அதை மூவுலகும் திரிந்து, அங்குள்ள அனைத்தையும் புசிக்கும்படி, இவள் செய்துவைக்கிறாள்.

இப்படி எல்லாம் இவள் ஆச்சர்யகரமான வேலைகள் செய்துவைக்கிறாள். இவள் ப்ரமம் நிறைந்த ஓர் பெரிய தீவு, இவள் வியாப்தி என்பதின் உருவமே ஆவாள். இவளிடத்திலிருந்து ஏராளமாய் விகாரங்கள் உண்டாகின்றன. இவள் காமம் என்னும் கொடி படர்ந்த ஓர் பந்தல், மோஹத்தால் ஏற்பட்ட வநத்துக்கு வஸந்தருது ஆவாள். இவளுடைய பெயர் தைவீமாயா என்று ப்ரஸித்தி யடைந்திருக்கிறது. இவளே சப்தங்கள் நிறைந்துள்ள சாஸ்த்ரங்கள் முதலியவற்றை உலகில் விஸ்தாரமாகச் செய்து வைத்து, நிராகாரமான வஸ்துவுக்கு ரூபத்தை உண்டாக்கி வைத்து ப்ரபஞ்சத்தை அதின் மேல் ஸதா இடித்து மோதும்படி செய்து வைக்கிறாள், கலைகளும் வித்யைகளும் இவளிடத்திலிருந்தே உண்டாய், இச்சா ஞாநக்ரியா சக்திகளை இவளே பெற்றுவைக்கிறாள், இவளே நாதப்ரஹ்மத்தின் ஸகல நாணயங்களும் முத்ரை போடப்பட்டு வெளிப்படும் தங்கசாலை ஆகிறாள், இவளே ஆச்சர்யங்களுக் கெல்லாம் வீடாவாள், உலகில் நடக்கும் ஸகல வ்யாபாரங்களும் இவளைச் சேர்ந்தவையே. ஜகத்தின் உத்பத்திப்ரளயங்கள் இவளுடைய காலையும் மாலையுமாகும்.

இப்படி யெல்லாம் இவள் அத்யாச்சர்யமான மோஹன சக்தி படைத்தவள். இவள் இரண்டாவது என்பது அற்றவனான புருஷனுக்கு, இரண்டாவதானவனை உண்டுபண்ணிவைத்து, பற்றுதலற்றவனுக்கு, உறமுறையார்களை உண்டுபண்ணிவைத்து, தனித்தவனாய் ஓர் ஸம்பந்தமுமில்லாத அவனுக்கு வீடு என்று ஒன்றை ஏற்படுத்திவைத்து, அதில் அவனை வாழும்படியாய்ச் செய்துவைக்கிறாள். இவளுடைய ஸௌபாக்யத்தின் பலம் இவ்வளவு வலுவாயிருப்பதால், அடக்கிவைக்கமுடியாத புருஷன் என்னும் வஸ்துவை, தன் ஸ்வரூபத்துக்குள் அவளடக்கிவைக்கிறாள், அன்றியும் விகாரம் என்பது முற்றிலு மற்றிருக்கு மவனிடத்தில் ஸகலவிகாரங்களாயும், அவள் தானே ஏற்படுகிறாள். தானாகவே அமைந்து எக்காலத்திலும் இருக்கப்பட்ட அவனுக்கு உண்டாதலையும், உருவற்ற அவனுக்கு ரூபங்களையும், உண்டுபண்ணி வைத்து, அவனுக்கு இருப்பதற்கு இடமுமாக அவள் தானே அமைந்து நிற்கிறாள்.

ஆசையில்லாத அவனுக்கு ஆசைகளையும், பூர்ணனாயிருக்கிற அவனுக்கு த்ருப்தியையும், குலமில்லாத அவனுக்கு ஜாதியையும் கோத்ரத்தையும், அவள் உண்டுபண்ணிவைக்கிறாள். அவிசாரணீயனாய் இருக்கும் அவனுக்கு, அங்க அடையாளங்களை ஏற்படுத்தி, அளவற்ற அவனுக்கு அளவுகருவியாய்நின்று, மனஸு என்பது அற்றவனான அவனுக்கு, அவள் தானே மனஸும் புத்தியுமாகிறாள். உருவமற்ற அவனுக்கு உருவமாயும், வ்யாபாரங்களற்ற அவனிடத்தில் வ்யாபாரங்களாயும், அஹம்காரமற்ற அவனுக்கு அஹம்காரமாயும் அவளே ஆகிறாள்.

நாமங்கள் அற்ற அவனுக்கு நாமங்களாயும், ஜந்மமற்ற அவனுக்கு ஜந்மமாயும், தொழில்கள் அற்ற அவனுக்கு கர்மங்களாகவும், அவளே ஆகிறாள். நிர்குணனான அவனுக்கு குணங்களாயும், காலற்ற அவனுக்கு கால்களாயும், காது இல்லாத அவனுக்கு காதாயும், கண்ணில்லாத அவனுக்குக் கண்ணாயும், பாவங்களற்ற அவனுக்கு பாவங்களாயும், அவயவங்களற்ற அவனுக்கு அவய்வங்களாயும், வளர்த்தாமல் செல்லப்புக்கால், புருஷனுக்கு எல்லாவஸ்துக்களுமாய் அவளே அமைகிறாள். இப்படியெல்லாம் இந்த ப்ரக்ருதியானவள் தன்னுடைய ஸர்வ வ்யாப்தியைக் கொண்டு, அவிகாரியான அந்த புருஷனை, விகாரங்கள் நடுவில் இருத்திவைக்கிறாள்.

அப்படிச் செய்து புருஷதத்வம் என்பதை, இந்த ப்ரக்ருதிஸம்பந்தம் ஏற்பட்டிருக்கும் தசையில், அமாவாஸ்யையில் சந்திர ப்ரகாசத்தைப் போல் இருந்த இடந்தெரியாமல் துடைத்துவைக்கிறாள். உத்தம தங்கத்தில் இதர லோகத்தின் அல்பாம்சம் கலந்து போனபின் அத்தங்கத்தின் மாற்றுக் குறைந்து போவதுபோலும், ஸதாசாரத்துடன் கூடிய ஒருவன் அசுத்தமான தேசங்களிற் போனமாத்ரத்தில், அவனைப் பிசாசு பிடித்துக்கொண்டு அவனைப் பைத்யக்காரனாய் செய்து விடுவது போலும், ஆகாசத்தில் மேகங்கள் ஏற்பட்டு ஸூனத்தை துர்தினமாய்ச் செய்துவைப்பது போலும், பால் பசுவின் வயிற்றில் மறைந்து கிடப்பது போலும், நெருப்பு கட்டையின் நடுவில் மறைந்து கிடப்பது போலும், ப்ரகாசமுள்ள ரத்நம் துணியில் முடிபோட்டு வைக்கப்பட்டது போலும், பராதீனமாய்ப் போன ராஜாவைப்போலும்; ஸிம்ஹம் ரோகத்தால் வ்யாபிக்கப்பட்டுப் போனாற்போலும், புருஷன் ப்ரக்ருதி வசப்பட்டுப் போய், தன் தேஜஸ்ஸை இழந்து விடுகின்றான். விழித்திருக்கும் ஒருவன்

துரக்கத்தால் பீடிக்கப்பட்டு ஸ்வப்நங்களுக்கு வசப்பட்டுப் போவது போல், உதாஸீநனான ஒருவன் ஸ்த்ரீ வசப்பட்டுப் போய் அவள் இஷ்டப்படி எல்லாம் பைத்யக்காரன் போல் ஆய்விடுவது போலும், புருஷன், ப்ரக்ருதி வசப்பட்டுப் போனபின், குணங்களைப் புசிக்கும்படி ஆய்விடுகிறான்.

அப்படி குணஸங்கத்தை அடைந்த புருஷன் ஜந்ம ம்ருத்யுக்களின் மோதலைத் தாங்கிக் கொள்ளும்படி நேர்கிறது. ஆனால் இப்படி புருஷன் ஜந்ம ம்ருத்யுக்களின் பூசையை வாங்கிக்கொள்வ தென்பது, பழுக்கக் காயவைத்த இரும்பை செம்பட்டியால் அடிக்கும்போது, நெருப்பே அந்த அடியை வாங்கிக்கொள்வதாய்த் தோன்றும் தோற்றம்போல் இருக்கிறது. ஜலம் அசைவதால் அதில் ப்ரதி பிம்பிக்கும் சந்த்ரபிம்பம் அநேகப் படுவதினால், அநேக சந்திரர்கள் இருப்பதாய்ப் பாவித்தல் போலும் கண்ணாடியின் சேர்க்கையால் முகம் இரண்டாய்த் தோற்றுவது போலும், குங்குமத்தின் மேல் வைக்கப்பட்ட ஸ்படிகக்கல் செகப்பாய்த் தோற்றுவதுபோலும், குணத்தின் சேர்க்கையால் ஜந்மமில்லாத புருஷனுக்கு ஜந்மம் உண்டானது போல் ஓர் தோற்றம் ஏற்படுகிறதே தவிர, உண்மையில் அவன் ஜந்மிக்கிறது என்பது இல்லை. ஓர் ஸந்யாஸி தன் ஸ்வப்நத்தில் தான் பஞ்சமனாய்ப் பிறந்ததாகக் காணுவதுபோல், இந்தப் புருஷனுக்கு உயர்ந்த தாழ்ந்த பிறப்புகள் ஏற்படுகிற தென்று தெரிந்து கொள். இவ்விஷயத்தில் குணங்களின் ஸம்பந்தமே போதுமான காரணமாயிருக்கிறது.

ப்ரக்ருதி புருஷர்களின் ஸம்பந்தத்தின் யாதாத்ம்யம் (உண்மை):

இந்தப் புருஷன் ப்ரக்ருதியின் நடுவில் இருக்கிறான் என்பது, மல்லிகைக் கொடிக்கும் அது பற்றிக்கொண்டு ஏறுவதற்கு நட்டுவைத்த கொழுகொம்புக்கு முள்ள ஸம்பந்தம் போன்றது. உண்மையில் ப்ரக்ருதியும், புருஷனும் ஆகாசமும் பூமியும்போல் வெகுதூரமாக விலகி நிற்கிறார்கள். ப்ரக்ருதி நதியின் தீரத்தில் இப்புருஷன் மேருபர்வதம்போல் நிலை கொண்டவனாய், அந்நதியில் ப்ரதிபிம்பித்தாலும், அதில் அவனை உருட்டித் தள்ளினாலும் அதில் அவன் உருண்டு விழுகிறதில்லை. ப்ரக்ருதி வெளிப்பட்டு மறைகிறாள். ஆனால் அவன் எப்போதும் மாறுபாடின்றி இருந்து கொண்டுஸர்வ ஜகத்துக்கும் நியந்தாவாய் (அடக்கி ஆள்கிறவனாய்) இருக்கிறாள். ப்ரக்ருதி அவனால் வாழ்வுபெற்று, அவனுடைய ஸத்தையின் ஸகாயத்தினால் ஜகத்தைப் பெற்று வைக்கிறாள். ஆகையால்

அவன் ப்ருக்ருதிக்கு பர்த்தா ஆகிறான். அநந்த காலமாய் ஏற்படும் விஸ்தாரத்தை அடைந்து கொண்டிருந்த இந்த ஸ்ருஷ்டி, கல்பாந்தத்தில் அவன் வ்யிற்றில் அடங்கிப் போகிறது. அவன் மஹத்பரஹ்ம மென்ற ப்ரக்ருதிக்கு ஸ்வாமியாய், ப்ரஹ்மாண்டத்தை ஆட்டி வைக்கும் ஸூத்ரதாரியாய், தன்னுடைய அளவற்ற ஸ்வரூபத்தால் ப்ரபஞ்சத்தை அளவிட்டு வைக்கிறான். இந்த தேஹத்தின் நடுவில் இருக்கும் பரமாத்மா என்று சொல்லப்படும்வஸ்து, அவனே என்றறி, ப்ரக்ருதியைத் தாண்டி ஒருவன் இருக்கிறதாகச் சொல்லப்படுகிறானே, அவனும் அந்தப் புருஷன் என்றே அறி, ஹே பாண்டு குமாரா.

य एवं वेत्ति पुरुषं प्रकृतिं च गुणैः सह ।
सर्वथा वर्तमानोऽपि न स भूयोऽभिजायते ।।२३।।

ய ஏவம் வேத்தி புருஷம் ப்ரக்ருதிம் ச குணை: ஸஹ।
é °Á uõÁ °u©õ÷Ú õ§பி ந ஸ பூயோ§பி ஜாயதே ॥ 23

ப்ரக்ருதி புருஷர்களைப் பகுத்தறிவதின் பலன் :

புருஷன் கீழே சொன்னபடியெல்லாம் இருப்பதையும், குணங்களும் அவற்றின் வ்யாபாரமும் ப்ரக்ருதியைச் சேர்ந்தவையென்றும், யதாவத்தான அறிவு ஏற்பட்டு, இது உருவம், இது அவ்வுருவத்தின் நிழல் என்றும், இது உண்மையான நீர் இது உண்மையற்ற கானல் நீர்த் தோற்றம் என்றும், நிஷ்கர்ஷித்தறிவது போல், ப்ரக்ருதி புருஷர்களின் பகுத்தறிவு எவனுடைய மனதில் திடமாய் ஏற்பட்டிருக்குமோ, அவன் சரீரத்தின் சேர்க்கையைக் கொண்டு கர்மங்களனைத்தையும் செய்து வைத்தாலும், ஆகாசத்தில் எவ்வளவு தூளிகள் பறந்தாலும் அவை ஆகாசத்தில் ஒட்டிக் கொள்ளாதது போலும், அவன் மேலும், அவன் மேல் அக்கர்மங்கள் ஒட்டிக் கொள்ளாமற் போகும். ஒருவனுக்கு தேஹம் இருக்கும்போதே தான் தேஹத்தோடு சேர்ந்தவன் என்ற அறிவு மயக்கம் ஏற்படாதிருந்தால், அவனுக்குத் தேஹம் கழிந்து போனபிறகு, திரும்பவும் தேஹ ஸம்பந்தம் எப்படி ஏற்படும்? ப்ரக்ருதி புருஷர்களின் பகுத்தறிவு இப்படி, ஆச்சர்யமான ஓர் உபகாரத்தைச் செய்து வைக்கிறது. ஆனால் இந்தப்பகுத்தறிவு, ஸூர்யன் உதித்ததுபோல் ஒருவன் சித்தத்தில் ஏற்படவேண்டுமென்றால், அதற்கு பல உபயாங்கள் உண்டு

ध्यानेनात्मनि पश्यन्ति केचिदात्मानमात्मना ।
अन्ये साङ्ख्येन योगेन कर्मयोगेन चापरे ।। २४ ।।

த்யானே நாத்மனி பஶ்யந்தி கேசிதாத்மான மாத்மநா ।
அன்யே ஸாங்க்யேன யோகேன கர்மயோகேன சாபரே ।। 24

சுத்தாத்ம ஸாக்ஷாத்காரத்தை அடைந்துகொள்ள உபாயங்கள் :

ஹே போர்வீரர்களுக்குள் சிறந்தவனே, சிலர் ஸத்விசாரம் என்னும் உலையில் ஆத்மாநாத்ம வஸ்துக்களின் கலவையைப் புடம்வைத்து, முப்பத்தாறுவிதப்பட்ட மலங்களின் ஸம்பந்தத்தை எரித்து நிவர்த்தித்து, ஓர் வித ஆக்ஷேபணைக்கும் இடங்கொடுக்காத சுத்த ஆத்ம ஸ்வரூபம் என்னும் தங்கத்தைப் பிரித்து எடுத்துக் கொண்டு, தங்களுக் குள்ளேயே அந்த ஆத்மஸ்வரூபத்தை ஆத்மஸ்வரூபத்யானம் என்னும பார்வையைக் கொண்டு ஸதா பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். சிலர் பக்திமார்க்கத்தில் இறங்கி, ஸாங்க்ய யோகத்தைக் கைப்பற்றி, அதை அநுஷ்டித்துக் கொண்டிருக்கிறார்கள். (இது அஷ்டாங்க யோகத்திலிருந்து, மனதை ஆத்ம ஸ்வரூப த்யானத்தில் நிறுத்தி வைக்கும்முறை) சிலர் கர்ம யோகத்தின் பலத்தைக்கொண்டு ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை அடைவார்கள்.

अन्ये त्वेवमजानन्तः श्रुत्वान्येभ्य उपासते ।
तेऽपि चाततरन्त्येव मृत्युं श्रुतिपरायणाः ।। २५ ।।

அன்யே த்வேவ மஜாநந்த: ஶ்ருத்வாऽ ன்யேப்ய உபாஸதே ।
தேऽபி சாதி தாந்த்யேவ ம்ருத்யும் ஶ்ருதி பராயணா: ।। 25

மற்ற உபாயங்கள் :

இப்படிப் பல உபாயங்களை அநுஷ்டித்து, அனைவரும் உண்மையாய் ஸம்ஸாரபயத்தைத் தாண்டி விடுகிறார்கள். சிலர் இப்படிச் செய்கிறார்கள். கர்வத்தை தூரத் துரத்தி வைத்து, ஒருவனுடைய வார்த்தையில் பூர்ண விச்வாஸத்தைப் பாராட்டி நிற்கிறார்கள். எவன் ப்ராணிகளுடைய ஹிதாஹிதங்களைத் தெரிந்து கொண்டு, க்ருபையுடன் பிறர்களுடைய கஷ்டங்களைத் தான் வாங்கிக்கொண்டு, அவர்களுடைய துக்ககாரணங்களை விசாரித்து, அவற்றைப்

போக்கி, ஸுகத்தைக் கொடுப்பானோ, அவனுடைய முகத்திலிருந்து எது வெளிப்படுமோ, அதை முழுவதையும் மிக்க ச்ரத்தையுடன் கேட்டு, மனோவாக்காயங்களால் அநுஷ்டித்து நிற்பார்கள். அவனுடைய உபதேசத்தைக் கேட்பதே தபஸ் தானம் தர்மம் முதலிய எல்லா ஸத்கர்மங்களும் ஆகும், என்று அதைக் கொண்டாடி, அப்படி உபதேசபூர்வமாய்க் கிடைத்த அந்த அக்ஷரங்களுக்குத் தங்களுடைய ஜீவனையே த்ருஷ்டி சுற்றிப்போட்டுவிட்டு, கடைசியில் மரணம் நிறைந்துள்ள இந்த ஸம்ஸார ஸமுத்ரத்தைக்கடந்து, அக்கரைபோய்ச் சேர்கிறார்கள். இப்படி ஒரே ஆத்மஸ்வரூபத்தை ஸாக்ஷாத் கரிப்பதற்கு, அநேக உபாயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இனி இப்படி வளர்த்திச் சொல்வதை நிறுத்திவிட்டு, எல்லாமதங்களையும் கடைந்து (தீர விசாரித்து) திரட்டியெடுத்த வெண்ணெய்போன்ற ஸித்தாந்தத்தை, உனக்குச் சொல்லிக்கொடுப்பேன். அது ஒன்றினாலே உனக்கு, ஓர் ஆயாஸமுமின்றியே, ப்ரஹ்மாநுபவம் தவறாமல் ஏற்பட்டுவிடும். ஆகையால் பலமதங்களை எடுத்துரைப்பதை ஒழித்து, புத்தியைப் பரவாது அடுக்கிவைத்து, ஸர்வ சாஸ்த்ரங்களுடைய பலிதார்த்தத்தின் ஸாரத்தை எடுத்துச்சொல்வேன், கேள்.

यावत्सञ्जायते किञ्चित्सत्त्वं स्थावरजङ्गमम् ।
क्षेत्रक्षेत्रज्ञसंयोगात्तद्विद्धि भरतर्षभ ।। २६ ।।

யாவத் ஸஞ்ஜாயதே கிஞ்சித் ஸத்த்வம் ஸ்தாவர ஜங்கமம் ।
÷ñ zµ÷ñ zµUb é ®÷¯ õகாத் தத்வித்தி பரதர்ஷப: ॥ 26

சராசரரூபமான அனைத்தும் க்ஷேத்ரக்ஷேத்ரஞ்ஞ சேர்க்கையால் உண்டாகின்றவையே :

ஜலத்தோடு காற்றுச் சேர்ந்து அலைகள் உண்டாவது போலும், ஊஷர பூமியின் மேல் ஸூர்யதேஜஸ்ஸுபட்டு கானல் நீர் என்னும் தோற்றம் ஏற்படுவது போலும், மேகங்களினின்று தாரைதாரையாக மழை பூமியின் மேல் விழுந்ததினால், பல விதமான செடிகளின் முளைகள் வெளிப்படுவது போலும், சராசரரூபமான விச்வத்தில் ஜீவன் என்று பெயர்படைத்தவை எவையானாலும், அவை அனைத்தும் கீழே ஆத்மஸ்வரூபம் என்று சொல்லப்பட்டிருக்கும் க்ஷேத்ரஞ்ஞ, னென்பதும் மஹாபூதங்கள் முதலிய முப்பத்தாறையும் குறிக்கின்ற தென்று சொல்லப்பட்ட தாயிருக்கும் க்ஷேத்ரமும், ஆகிய இவை

இரண்டும் சேர்ந்தே, உண்டாகின்றன என்றறி. இப்படி இருப்பதால், பூதவ்யக்திகள் க்ஷேத்ரஞ்ஞன், ப்ரதானம், (க்ஷேத்ரம், ப்ருக்ருதி) இவ்விரண்டினின்று வேறுபட்டவை ஆகா.

समं सर्वेषु भूतेषु तिष्ठन्तं परमेश्वरम् ।
विनश्यत्स्ववविनश्यन्तं यः पश्यति स पश्यति ।। २७ ।।

ஸமம் ஸர்வேஷு பூதேஷு திஷ்டந்தம் பரமேஶ்வரம் ।
விநஶ்யத் ஸ்வ விநஶ்யந்தம் யः பஶ்யதி ஸ பஶ்யதி ।। 27

எல்லா பூதங்களிலும் இருக்கும் ஈச்வர ஸ்வரூபத்தைப் பார்க்கிறவனே உத்தமஞாநி :

மேற்பார்வைக்கு வஸ்த்ரமானது நூலல்லவென்று தோற்றினும், அது நூலாலேயே அமைந்திருக்கிறது. இப்படி ஆழ்ந்த பார்வையாய்ப் பார்க்கும் போது, துணியும் நூலும் ஒன்றென்றே தெரியவருகிறது. அப்படியே ஒன்றினின் றெர்ன்றுண்டாய் கணக்கற்றவையாய் ஏற்பட்டிருக்கின்ற பூதங்கள் அனைத்தையும், உலகத்தார் காரணத்தோடு ஒன்றுபடுத்திப் பாராமல், அவற்றை வேறுவேறு விதப்பட்டவையாய் அறிகிறார்கள். அவை அனைத்தின் நாமங்களும், வ்யாபாரங்களும், உருவங்களும், வேறுபட்டிருப்பதைப் பார்த்து, ஹே கிரீடி, அவற்றை வேறு வேறாகவே, நீ உன் மனஸில் பாவித்துக் கொண்டால், நீ கோடி ஜந்ம மெடுத்தும் ஸம்ஸாரத்தினின்று கரை ஏறமாட்டாய் ஒரே சுரைக்கொடியில், காய்கள் நீளமாயும், கோணலாயும், உண்டையாயும் உண்டாய் அவை வேறுவேறு விதமாய் உபயோகப்படுகின்றன. இலந்தை மரத்தின்கிளைகள் சில நீண்டவையாய் சில கோணலாய் இருந்தாலும், அவை இலந்தையின் கிளைகளே என்பதற்கு ஓர் ஹாநியும் ஏற்படுவதில்லை. அப்படியே பூதங்கள் எத்தனையோ வகைப்பட்ட கோணல்களோடு அமைந்திருந்த போதிலும், உள்ளிருக்கும். ஆத்மவஸ்து என்னவோ, ஒன்றாகவே இருக்கிறது. பல நெருப்பு தணற்களிலும் ஔஷண்யம் (சூடு) ஒன்றே போலும், ஜீவராசிகள் பலவிதப்பட்டிருந்தும், அவற்றின் நடுவில் இருக்கும் ஸர்வேச்வரன் ஒருவனே. ஆகாச மெங்கும் மழையின் தாரைகள் பெய்த போதிலும், நம் கண்முன் தோன்றும் பற்பல விதமான பூதங்களின் சரீரத்திற்குள் ளெல்லாம், அவனே நிறைந்திருக்கிறான். சடத்திலும் மடத்திலும் உள்ள ஆகாசம் ஒன்றே போலும், பூதஸமூஹங்கள் எவ்வளவோ வேறுபாடுகளடைந்திருந்த போதிலும்,

பூதஸமூஹங்கள் எவ்வளவோ வேறுபாடுகளடைந்திருந்த போதிலும், அவற்றில் இருக்கும் ஆத்மவஸ்து ஒன்றே. கேயூரம் முதலிய நகைகள் அழிக்கப்படும் போது, தங்கத்தின் மாற்றுக்கு ஓர் ஹாநியும் ஏற்படாதது போலும், பூதங்கள் என்ற தோற்றங்கள் நாசம் அடையும் போது, அவற்றில் இருக்கும் ஆத்மஸ்வரூபத்துக்கு ஓர் நாசமும் ஏற்படுவதில்லை. இவ்விதம் ஜீவனோடு ஒன்றுபட்டவனாய், ஜீவதர்மங்களற்றவனாய், இருக்கும் புருஷனை, எவன் ஸதாகண்முன் பார்த்துக் கொண்டிருக்கிறானோ. அவன் தான் ஞாநிகளுக்குள் நல்ல பார்வையுடையவன் ஆவான். அவன் ஞாநத்ருஷ்டி பெற்றிருப்பதால், நல்ல பார்வை படைத்தவர்கள் என்று கொண்டாடப் பட்டவர்கள் நடுவில் விசேஷித்த தான நல்லபார்வை படைத்தவன் என்று, அவனைக் கொண்டாட வேண்டும். இப்படிச் சொல்வது அவனை ஸ்தோத்ரம் செய்ததாகாது. அவன் மிக்க பாக்யம் படைத்தவன், அப்பா அர்ஜுநா.

समं पश्यन्हि सर्वत्र समवस्थितमीश्वरम् ।
न हिनस्त्यात्मनात्मानं ततो याति परां गतिम् ।। २८ ।।

ஸமம் பஶ்யன்ஹி ஸர்வத்ர ஸமவஸ்தித மீஶ்வரம் ।
ந ஹினஸ்த்யாத்மநா ऽऽத்மானம் ததோ யாதி பராம் கதிம் ।।
28

தேஹத்தை விஷயீகரித்த பேதபுத்தியைப் போக்கிக் கொண்டு ஆத்மஸ்வரூபத்தையே பார்க்கும் ஸமத்ருஷ்டி உள்ளவன் ப்ரஹ்மபதத்தை அடைகிறான்.

இந்த தேஹம், குணங்களும் இந்த்ரியங்களும் வைக்கப்பட்டிருக்கும், ஓர் பை. இதில் பித்த வாத கபம் என்ற முவ்வித தாதுக்கள் நிறைந்திருக்கின்றன. ஐந்து பூதங்களால் அமைந்து, இது அஸங்க்யமாயும் பயங்கரமாயும் இருக்கிறது. இது ப்ரத்யக்ஷமாய்த் தோன்றி நிற்கும் ஐந்து கொடுக்குகள் படைத்த முகடேயாகும். இதற்கு ஐந்திடத்தில் ஐந்து நெருப்புகள் பற்றி எரிகின்றன. இது மான் இருக்கும் வீட்டில் வந்து சேர்ந்த ஸிம்ஹமமே. ஆகும். இப்படிப்பட்ட சரீரத்தில் இருந்து கொண்டு, நித்யமான ஆத்மாவைப் பற்றிய ஞானம் என்னும் கத்தியை, எவன் இதின் வயிற்றில் திணித்து, இதை மாய்த்துக் கொள்ள மாட்டான்? இந்த தேஹத்தில் இருந்து

கொண்டு, எவன் தன் ஆத்மாவைத் தான் கொல்லாதவனாய் இருப்பானோ, அவன் முடிவில் அந்த ஆத்மஸ்வரூபத்தில் கலந்து போகிறான். அந்த ஆத்மஸ்வரூபம் என்பது யோகிகள் கோடிக்கணக்கான ஜந்மங்களை யோக ஞானங்களின் அப்யாஸங்களில் போக்கின பின்பு, அடையத்தக்க புநராவ்ருத்தி ரஹிதமான பதமா யிருக்கிறது. இந்தப் பதம் ஆகாரம் என்பதைத் தாண்டினதாயும், சப்தங்களால் வர்ணிக்க முடியாததாயும், துர்யாவஸ்தையின் நடுவீடாயு மிருக்கும் ப்ரப்ரஹ்மமே ஆகும். கங்கை முதலிய நதிகளுக்கு ஸமுத்ரம் விச்ராந்தி ஸ்தாநமாவது போலும், மோக்ஷமும் அதைப் போன்ற இதர ஸத்கதிகளும் இப்பதவியையே விச்ராந்தி ஸ்தாநமாய் நினைத்து, வந்தடையும். பூதங்களில் உள்ள வேறுபாடுகளைப் பார்த்து, எவன் புத்தி வேறுபாடு அடைகிறதில்லையோ, அவன் இந்த தேஹத்தை விட்டமாத்ரத்தில், தேஹஸம்பந்தத்தின் அழுக்குத்தீர காலைக்கழுவிக் கொண்டு, கீழே சொல்லப்பட்ட அந்த ஸுகரூபமான பதத்தை அடைகிறான். அநேக தீபங்களிலும் ஒரே தேஜஸ் ஸிருப்பது போலும், எல்லா பூதங்களிலும், இருந்து கொண்டே இருக்கும் ஸர்வேச்வரனுடைய ஸாக்ஷாத்காரத்தை ஒருவன் அடைந்த மாத்ரத்தில், மரணம் ஜீவதசை இரண்டையும் முற்றிலும் பரிகொடுத்தவனாய் விடுகிறான். ஆகையாற்றான் ஸமத்ருஷ்டி யென்னும படுக்கையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்குமவனை, மஹாபாக்யசாலி யென்று நான் அடிக்கடி கொண்டாடுகிறேன்.

प्रकृत्यैव च कर्माणि क्रियमाणानि सर्वशः ।
यः पश्यति तथात्मानमकर्तारं स पश्यति ।। २९ ।।

ப்ரக்ருத்யைவ ச கர்மாணி க்ரிய மாணானி ஸர்வஶः ।
யः பஶ்யதி ததாऽऽத்மான மகர்தாரம் ஸ பஶ்யதி ॥ 29

எவன் மனதில் ப்ரக்ருதியின் கர்த்ருத்வமும், ஆத்மாவின் அகர்த்ருத்வமும் ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறதோ அவனே ஆத்மஞாநி :

அன்றியும் மனஸையும் புத்தியையும் முன்னிட்டுக் கொண்டு, கர்மேந்த்ரியங்கள் அனைத்தும் எத்தனை கர்மங்களைச் செய்யுமோ, அத்தனையும் ப்ரக்ருதியையே சேர்ந்த தென்று உண்மையாய் எவன் அறிகிறானோ, அதாவது வீட்டில் உள்ள மனிதர்கள் தங்கள் தங்கள் வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் போது, வீடு ஒன்றும் செய்யாதிருப்பது

போலும், ஆகாசத்தில் மேகங்கள் ஓடும் போது ஆகாசம் ஓர் விதமாயும் அசையாதிருப்பது போலும், ப்ரக்ருதி ஆத்மாவின் ப்ரகாசத்தைக் கொண்டு குணங்களின் உதவியால், அநேக விதமான ஆட்டங்கள் ஆடும் போது, ஆத்மா தூண்போல் அசையாது நின்று, அவ்வாட்டங்களில் கொஞ்சமேனும் ஸம்பந்தப்படாதிருக்கிற தென்று, இப்படி நிஷ்க்ருஷ்டமாக, எவனுடைய அந்தராத்மாவில் ஆத்மாவின் அகர்த்ருத்வம் ப்ரகாசித்துக் கொண்டிருக்குமோ, அவன் ஆத்மாவைப் பூர்ணமாய் அறிந்தவனாகிறான்.

यदा भूतपृथग्भावमेकस्थमनुपश्यति ।
तत एव च विस्तारं ब्रह्म सम्पद्यते तदा ।। ३० ।।

யதா பூத ப்ருதக் பாவ மேகஸ்த மனு பஶ்யதி ।
தத ஏவ ச விஸ்தாரம் ப்ரம்ஹ ஸம்பத்யதே ததா ॥ 30

ஜகத்தனைத்தையும் ஆத்மாவோடு ஒன்று பட்டதாகப்பார்க்க வேண்டும் :

எப்போது ஒருவன் இந்த விவ்விதமான உருவங்களோடு கூடிய பூதங்கள் அனைத்தையும் ஒரே வஸ்துவின் ரூபமாகவே பார்க்கிறானோ, அப்போது தான் அவன் ப்ரஹ்மத்தை யடைந்தவன் ஆவான். ஜலத்தில் உண்டாகும் அலைகள் போலும், பூமியிலிருந்து மேல் கிளம்பும் தூசிகள் போலும், ஸூர்யனுடைய மண்டலத்தினின்று வெளிப்படும் ஸூர்ய கிரணங்கள் போலும் தேஹத்தினுடைய அவயவங்கள் போலும், மனஸின் அநேக வ்ருத்திகள் போலும், நெருப்பினின்று உண்டாகும் நெருப்புப் பொறிகள் போலும், ஸகல பூதங்களும் ஒரே ஆத்மவஸ்துவின் அம்சங்கள் என்று அநுபவ பூர்வமான அறிவு, ஒருவனுக்கு எப்போது ஏற்படுமோ, அப்போது தான் ப்ரஹ்ம ப்ராப்திக்கு ஸாதனமான ஓடம் அனுக்குக் கிடைத்த தாகிறது. ஒருவனுடைய புத்தி, இப்படி ஆய்ப்போன பிறகு, அவன் எந்தப் பக்கம் பார்த்த போதிலும், அவன் கண் முன்னால் ப்ரஹ்மமே நிற்கும்; சுருக்கிச் சொல்ல, எல்லையற்ற ஸுகம் அவனுக்குக் கிடைத்துப்போகிறது. இவ்விஷயத்தில் இவ்வளவு சொன்னபிறகு, ப்ரக்ருதி புருஷவ்யவஸ்தை உன் புத்தியால் நன்கறியப்பட்டதாயிருக்க வேண்டும். அம்ருதம் கைக்குக் கிடடினாற் போலும், இந்த ஞாநத்தின் லாபம் இருக்கிற தென்றறி. ஓர் விஷயம் அறியப்பட்ட உடன் அதை சித்தத்திற்குள் வைத்து, சித்தத்தின் கதவுக்குத் தாளிட்டு அந்த அறிவை பத்ரப்படுத்திக் கொள்வது

என்பதை, இப்போதே நீ செய்துகொள்ள வேண்டாம். இன்னும் கம்பீரமான சிலவார்த்தைகள் சொல்ல வேண்டியவையாய் மிகுந்து நிற்கின்றன. ஆனால் நீ என்னிடத்தில் உன் மனதை அடமானம் வைத்து விட்டு, அவ்வார்த்தைகளை வாங்கிக் கொள்ள வேண்டும். இவ்விதம் அர்ஜுனன் தன்னுடைய ஸர்வாங்கத்தையும் கவனத்தால் செய்யப் பட்டதாய் ஏற்படுத்திக் கொண்டான்.

अनादित्वान्निर्गुणत्वात्परमात्मायमव्ययः ।
शरीरस्थोऽपि कौन्तेय न करोति न लिप्यते ।।३१।।

அநாதித்வாந் நிர்குணத்வாத் பரமாத்மாऽய மவ்யயஃ ।
ஶரீரஸ்தோऽபி கௌந்தேய ந கரோதி ந லிப்யதே ।। 31

ஆத்மாவுக்கும் தேஹத்துக்கும் எவ்வித ஸம்பந்தமும் இல்லாமை :

பரமாத்ம வஸ்துவின் ஸ்வரூபம் இப்படி இருக்கிற தென்று தெரிந்துகொள். ஜலத்தில் காணப்பட்ட ஸூர்யன்மேல் ஜலம் ஒட்டிக்கொள்ளாததுபோலும், அன்றியும் அந்த ஸூர்யன், அந்த ஜலம் ஏற்பட்டதற்கு முன்னும் அது வற்றிப்போனபின்னும் ஸித்தனாய் இருந்துகொண்டே, ஜலத்தில் ப்ரதிபிம்பிக்கப்படும் போது மற்றவர்கள் கண்ணுக்குப் புலப்படுவதுபோலும், தேஹத்திலிருப்பது போல்காணப்படும் ஆத்மா, தேஹத்தில் இருக்கிறது என்பதில், உண்மை கொஞ்சம் கூட இல்லை. அது தன்னிடத்திலேயே எப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. கண்ணாடியில் முகம் ப்ரதிபிம்பிக்கப் படுகிறபோது, அது கண்ணாடிக்குள் இருப்பதாக தோன்றும் தோற்றத்தில் கொஞ்சமேனும் உண்மை இராததுபோலும், இந்த ஆத்மதத்வத்துக்கும் தேஹத்துக்கும் சேர்க்கை ஏற்படுகிறது தென்ற வார்த்தை முற்றிலும் உண்மையற்றதே, காற்றுக்கும் மணலுக்கும் எப்படி முடிபோட்டு வைக்கமுடியும்? அக்நியையும் பஞ்சையும் ஓர் கயிற்றில் தொடுத்துவைப்பது எப்படி முடியும்? கற்பாறையோடு ஆகாசத்தை எப்படி கட்டிவைக்க முடியும்? கிழக்கு நோக்கிப்போகிற ஒருவனுக்கும் மேற்குநோக்கிப்போகிற மற்றொருவனுக்கும் ஸந்திப்பு நேருமானால், ஆத்மாவுக்கும் சரீரத்துக்கும் ஸம்பந்தம் ஏற்படும்.

வெளிச்சத்துக்கும் இருட்டுக்கும், செத்துப் போனவனுக்கும் உயிரோடிக்கிற வனுக்கும், எவ்வளவு ஸம்பந்தம் உண்டோ,

அவ்வளவு ஸம்பந்தமே ஆத்மாவுக்கும் தேஹத்துக்கும் இருக்கிறது. ராத்ரிக்கும் பகலுக்கும், தங்கத்துக்கும் பஞ்சுக்கும், எப்படி ஸம்பந்தமே இல்லையோ, அப்படியே ஆத்மாவுக்கும் தேஹத்துக்கும் ஸம்பந்தமே இல்லை. தேஹமோ ஐந்துபூதங்களால் ஏற்பட்டு, கர்மம் என்னும் கயிற்றால் கட்டுப்பட்டுக் கிடக்கிறது; ஜந்மமரணம் என்னும் சக்ரத்தின்மேல் ஏற்றிவைக்கப்பட்டு, அது சுழன்று கொண்டிருக்கிறது, அது காலன்வாய் என்னும நெருப்பில் விழுந்த வெண்ணெய் உண்டையா இருந்து, ஓர் ஈ தன்னிரப்பைகளைக் கொட்டும் நேரத்திற்குள் மறைந்துபோகிறது. அது நெருப்பில் விழுந்தால், சாம்பலாய்ப்பறந்து போகிறது. அதின்மேல் நாய் விழுந்தால், அது விஷ்டையாய் விடுகிறது. இவ்விரண்டு கதியையும் அது தப்பித்துக்கொண்டால், புழுக்கூட்டங்களின் கூண்டாய் விடுகிறது.

இப்படி அந்த தேஹத்தின் பரிணாமம் (முடிவில் ஏற்படும் மாறுபாடு) அஸஹ்யமாய் இருக்கிறது. ஹே வாநரக்கொடியோனே, தேஹத்தின் தசை இப்படி இருக்க, இங்கே வ்யஹரிக்கப்படும் ஆத்மாவோ ஆதியற்றதாய் இருப்பதால், நித்யமாய், தானாகவே ஏற்பட்டுள்ளதாய், நிர்குணமானதால், கலையுள்ளது அல்லது கலையற்றது, க்ரியை அற்றது அல்லது க்ரியைகள் செய்து கொண்டிருப்பது, இளைத்தது அல்லது பருத்தது, என்று சொல்லமுடியாததாய், உருவம் அற்றிருப்பதால், புலப்படுகிறது அல்லது புலப்படாதது, ப்ரகாசம் உள்ளது அல்லது ப்ரகாசம் அற்றது, அல்பம் அல்லது மிகுந்தது, என்று சொல்ல முடியாததாய், இதரவஸ்துவின் சேர்க்கை யற்றிருப்பதால், நிறைந்தது அல்லது வெறுமையாய் இருப்பது, தனித்து இருப்பதுஅல்லது கூடி இருப்பது, உருவுள்ளது அல்லது உருவற்றது, என்று சொல்ல முடியாததாய், ஆத்ம ஸ்வரூபமாகவே இருப்பதினால், ஆநந்தம் படைத்தது அல்லது ஆநந்தம் அற்றது, ஒன்று அல்லது விவிதப்பட்டது, விடுபட்டது அல்லது கட்டுப்பட்டது, என்று சொல்ல முடியாததாய், லக்ஷணங்கள் அற்றிருப்பதால், இவ்வளவு அல்லது அவ்வளவு, இயற்கையாகவே ஸித்தமானது அல்லது செய்துவைக்கப்பட்டது, பேசுவது அல்லது பேசாதிருப்பது, என்று சொல்ல முடியாததாய், ஸ்ருஷ்டி உண்டாவதினால் உண்டாகாததாய், அது ஸம்ஹரிக்கப்படுவதினால் நசிக்காததாய், இருக்கிறது இல்லை யென்று சொல்ல முடியாததாய், அவ்யயமானதால், அளக்கவும், விசாரிக்கவும் முடியாததாய், பெருத்தலும்

குறைதலும் அற்றதாய், மழுங்கிப் போதலும் மறைந்து போதலும் அற்றதாய், இருக்கும் ஆத்மாவை, தேஹத்தில் இருப்பதாக வ்யவஹரித்தல், மடத்தின் உருவைக்கொண்டு ஆகாசத்துக்கு மட ஆகாசம் என்று பெயரிடுதல் போலும் இருக்கிறது.

ஹே ப்ரியோத்தமா அதின் ஸர்வ வ்யாப்தியால், தேஹம் உண்டாய் அழிந்து கொண்டிருப்பதால் அதற்கு தேஹ மெடுத்தலும் விடுதலும் ஏற்படாமல், அது எப்போதும் ஒரே விதப்பட்டே இருக்கிறது, ஹே ஸுமதி. ஆகாசத்தில் ராத்ரிப்பகல் ஏற்பட்டுக் கொண்டிருப்பது போலும், ஆத்மாவின் ஸத்தையைக் கொண்டு தேஹங்கள் உண்டாய் மறைகின்றன. ஆகையால் ஆத்மா, இந்த சரீரத்தைக் கொண்டு, ஒன்றும் செய்வது மில்லை, செய்து வைப்பதுமில்லை; சரீரத்தால் நடந்தேறும் கர்மத்தில், எவ்வித ஸம்பந்தத்தையும் அது பாராட்டிக் கொள்வதுமில்லை. ஆகையால் அக்கர்மத்தில் ஏற்படும் குறைவு நிறைவுகளை ஆத்மா தன் ஸ்வரூபத்தில் ஏற்றிக் கொள்வதில்லை. இது நிற்கட்டும். ஆத்மா தேஹத்தில் இருந்து, அதைத் தன்னோடு ஓடடிக்கொள்ள விடுவதில்லை.

यथा सर्वगतं सौक्ष्म्यादाकाशं नोपलिप्यते ।
सर्वत्रावस्थितो देहे तथात्मा नोपलिप्यते ।। ३२ ।।

யதா ஸர்வகதம் ஸௌக்ஷ்ம்யாதாகாஶம் நோபலிப்யதே ।
ஸர்வத்ராவஸ்திதோ தேஹே ததா ऽऽத்மா நோபலிப்யதே ॥ 32

இதுவுமது :

அப்பா அர்ஜுநா, ஆகாசம் எங்கே இல்லை? அது எந்த இடத்தில் ப்ரவேசிக்காமல் இருக்கிறது? ஆனால் எதினாலும் எப்போதாவது அது பாதை அடைந்தது என்பது இல்லை. அப்படியே ஆத்மாவும் எல்லா இடங்களிலும் எல்லா தேஹங்களிலும் இருந்துகொண்டே இருந்தும், ஸங்கதோஷம் எதுவும் அதினிடத்தில் பற்றிக் கொள்வதில்லை. இங்கே ஆத்மாவின் இந்த லக்ஷணத்தையே, அதாவது, க்ஷேத்ரஞ்ஞன் க்ஷேத்ரத்தின் ஸம்பந்த மற்றிருக்கிறான் என்பதையே, மேன் மேலும் விசாரித்து, ஸந்தேஹமற நீ தெரிந்து கொள்ள வேண்டும்.

यथा प्रकाशयत्येकः कृत्स्नं लोकमिमं रविः ।
क्षेत्रं क्षेत्री तथा कृत्स्नं प्रकाशयति भारत ।। ३३ ।।

यथा प्रकाशयत्येकः क्रुत्स्नं लोकमिमं रविः ।
क्षेत्रं क्षेत्री तथा क्रुत्स्नं प्रकाशयति भारत ॥ 33

இதுவுமது :

காந்தத்தின் ஸாமீப்யத்தால் இரும்பு இருந்த இடம் விட்டு நகர்ந்து போனாலும், காந்தம் இரும்பாகிற தில்லை. அதைப் போலவே இருக்கிறது க்ஷேத்ரத்துக்கும் க்ஷேத்ரஞ்ஞனுக்கும் உள்ள ஸம்பந்தம். தீபத்தின் ப்ரகாசத்தைக் கொண்டு வீட்டிலிருக்கிறவர்கள் தங்கள் தங்கள் வேலைகளைச் செய்கிறார்கள். ஆயினும் தீபத்துக்கும் வீட்டிலுள்ளவர்களுக்கும் நடுவில் எவ்வளவோ வித்யாஸம் இருக்கிறது. கட்டையின் கர்ப்பத்தில் நெருப்பு இருந்தாலும், அந்நெருப்பு கட்டையாவதில்லை. இப்படியே ஆத்மா தேஹம் ஆவ தில்லை, என்று நீ தெரிந்து கொள்ள வேண்டும். ஆகாசத்துக்கும் அதில் ஸஞ்சரிக்கும் மேகங்களுக்கும், ஸூர்யனுக்கும் ம்ருக ஜலத்துக்கும், எப்படிக் கொஞ்சமேனும் ஸம்பந்தமே இல்லையோ, அப்படியே ஆத்மாவுக்கும் தேஹங்களுக்கும் ஸம்பந்தமே இல்லை யென்ற இதை, நீ அபரோக்ஷமாய்த் (உன்னுடைய அனுபவ பூர்வமாய்) தெரிந்து கொள்வாயாகில், பின்பு ஆகாசத்தில் இருக்கும் ஒரு ஸூர்யன், அங்கிருந்து கொண்டே இந்த லோகத்திலுள்ள ஸர்வ வஸ்துக்களையும் தனித்தனியாய்த் தெரியும்படி எப்படி ப்ரகாசம் செய்து வைக்கிறானோ, அப்படியே இந்த க்ஷேத்ரஞ்ஞன் ஒண்டியாய் இருந்து கொண்டு, பற்பலவான க்ஷேத்ரங்களோடு ஸம்பந்தப்படாமலே இருந்து கொண்டு, அந்த க்ஷேத்ரங்களையும் அவற்றில் நடந்தேறிவரும் ஸகல விஷயங்களையும், ப்ரகாசம் செய்துவைக்கிறான், என்று தெரிந்து போகும். இந்த விஷயத்தில் இவ்வளவே தெரிந்து கொள்ள வேண்டியது; இதற்கு மேல் இன்னும் ஸந்தேஹம பாராட்டிக் கொண்டு விசாரிப்பதற்கு இடம். இல்லை.

क्षेत्रक्षेत्रज्ञयोरेवमन्तरं ज्ञानचक्षुषा ।
भूतप्रकृतिमोक्षं च ये विदुर्यान्ति ते परम् ॥ ३४ ॥

க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ யோரேவ மந்தரம் க்ஞான சக்ஷுஷா ।
பூத ப்ரக்ருதி மோக்ஷம் ச யே விதுர்யாந்தி தே பரம் ॥ 34

க்ஷேத்ர க்ஷேத்ரஞ்ஞ விஷயமான பகுத்தறிவின் பலன் :

சப்தத்தின் தத்வஸாரத்தை அறிந்து கொள்ளும் வல்லமையுள்ள அர்ஜுனா, க்ஷேத்ர க்ஷேத்ரஞ்ஞர்கள் நடுவில் ஓர் ஸம்பந்தமும் இல்லாமையைத் தெரிந்து கொள்வதே ப்ரஞ்ஞையாகும். இப்படி இவை பரஸ்பர ஸம்பந்த மற்றிருப்பதைத் தெரிந்து கொள்வதற்காக, புத்திசாலிகள் ஞானிகளின் வாயிலைக் கட்டிக் காத்துக் கிடக்கிறார்கள். இந்த லாபத்தை அடைவதற்காகவே மனிதர்கள் சாந்தி என்னும் தனத்தைத் தேடிச் சேர்த்துவைத்துக் கொள்கிறார்கள். இதற்காகவே சிலர் சாஸ்த்ரங்கள் என்ற கறவைப் பசுக்களை தங்கள் வீட்டிற் கட்டிவைத்துக் கொண்டு போஷிக்கிறார்கள். இதை அடைந்து கொள்ள வேண்டியே, யோகிகள் யோகாப்யாஸம் என்னும் ஆகாசத்தில் ஏறி, அதில் ஸஞ்சரிக்கிறார்கள். இப்படிப் பல விதமான ஸாதனங்களை அநுஷ்டித்துத் தீரவேண்டும் என்ற ஆசை மனிதர்களுக்கு ஏற்பட்டு, அவர்கள் சரீரம் முதலான அனைத்தையும் த்ருணமாய் மதிக்கிறார்கள், சிலர் ஸாதுக்கள் பாதுகையை மிக்க ப்ரீதியுடன் தலை மேல் தரித்துக் கொள்கிறார்கள். இப்படி யெல்லாம் ஞான ஸாதநங்களைத் தேடிவைத்துக் கொண்டு, அந்தராத்மாவில் நிச்சிதமான புத்தியடைந்தவர்களாய், க்ஷேத்ர க்ஷேத்ரஞ்ஞர்களின் வித்யாஸத்தை எவர்கள் உள்ளபடி தங்கள் அநுபவபூர்வமாக அறிகிறார்களோ, அவர்களுடைய ஞானத்தின் முன், என்னுடைய ஞானமனைத்தையும் த்ருஷ்டி சுற்றிப்போடுவேன்.

எந்த ப்ரக்ருதி உண்மையான இருப்பற்றதாய் இருந்து கொண்டு, அநேக பேதங்களை அடைந்து, மஹா பூதங்கள் முதலாயுள்ள இந்த ப்ரபஞ்சமாய்ப் பரவி நின்று, சுகநளிகந்யாயத்தை அநுஸரித்து, இந்த க்ஷேத்ரஞ்ஞனைப் பற்றாமலே பற்றிக் கொண்டிருக்கிறதோ, அதைக்கொஞ்சமேனும் ஆத்மஸ்வரூபத்தைப் பற்றி இராததாகவே உள்ளபடி அறிந்து, மாலை விஷயத்தில் மாலை என்றே உண்மையான ஞாநத்தை அடைந்து, அதில் முன் பாராட்டின ஸர்ப்பபுத்தி உண்மை யற்ற தென்று அதை நிவ்ருத்தி செய்து கொள்வது போலவும், முத்துச்சிப்பியை முன் வெள்ளி யென்று எண்ணின விபரீத புத்தியைத் துலைத்துக்கொண்டு, முத்துச்சிப்பியை முத்துச்சிப்பி என்று அறிந்து கொள்வது போலவும், ஆத்ம ஸ்வரூபத்தோடு கொஞ்சமேனும் ஸம்பந்த மற்றதான ப்ரக்ருதியை ஸம்பந்த

மற்றதாகவே, தன் புத்தி பூர்வகமாய் எவன் அறிகிறானோ, அவன் ப்ரஹ்மமாகவே ஆய்விடுகிறான், என்று நான் உறுதியாய்ச் சொல்கிறேன். கலந்து கிடக்கும் நீரையும் பாலையும் பிரித்து வைக்கும் திறமையுள்ள ராஜஹம்ஸத்தைப்போல், ஆத்மா இன்ன தென்றும், அநாத்மா இன்ன தென்றும் கீழ்ச் சொன்னபடி பகுத்தறியும் திறமை உள்ளவன் எவனோ, அவன், ஆகாசத்தைக் காட்டிலும் பெரிதாயும், அவ்யக்தத்தைத் தாண்டி அதற்கு அப்புறம் இருப்பதாயும், தன்னைப் பார்க்கக்கிடைத்த பிறகு தன்னோடு ஒவ்வாததாய் ஸம்பந்த மற்றிருக்கும் ப்ரக்ருதியை ஸம்பந்தப்பட்டதாய்ப் பாவிக்க ஒட்டாததாயும், நாமரூபங்களை அற்றுப் போகச் செய்வதாயும், ஜீவதசையை அழித்து வைப்பதாயும் - த்வைதத்தை மிகுந்து நிற்க ஒட்டாததாயும், இரண்டாவது என்பது அற்றதாயும், இருக்கும் அந்த பரதத்வமாகவே ஆய் விடுகிறான், ஹே பார்த்தா.

மேற்கதையின் அவதாரிகை :.

ப்ரபுக்களே ஓர் பாத்ரத்தில் இருக்கும் நீரை மற்றொரு பாத்திரத்தில் வார்த்து வைப்பது போலும், ஸ்ரீ கிருஷ்ணன் தன் னந்தராத்மாவிலிருந்த ஞானமனைத்தையும் அர்ஜுநனுடைய அந்த ராத்மாவில் புகட்டிவைத்தார். ஸ்ரீ க்ருஷ்ணன் தன்னாத்ம ஸ்வரூபத்தையே அர்ஜுநனுக்கு ஒப்பித்து விட்டார், என்று சொல்ல வேண்டும். அன்றியும் இதை நன்றாய் விசாரிக்குங்கால், எவன் மற்றொருவனுக்கு கொடுத்தா னென்று சொல்லும் படியாய், இது இருக்கிறது? வாங்கிக் கொண்டவனோ நரன், கொடுத்தவனோ நாராயணன். (நரனும் நாராயணனும் ஒரே பகவானுடைய அவதார மூர்த்திகள் ஆகையால் இருவரும் ஒருவரே என்பது உட்கருத்து) அத்துடன் கூட இந்த ஸயுக்திகமான வார்த்தை போதா தென்றால், பகவானே அர்ஜுநனை விரலாற்காட்டி, இவன் நானே என்று அச்சமயத்திற் சொன்னார். இது நிற்கட்டும். இப்படி பகவான் தன் ஸர்வ ஸ்வத்தையும் அர்ஜுநனுக்கு ஒப்பித்தவிட்டு, "என்ன நான் இந்தரஹஸ்யத்தை அர்ஜுனன் கேட்காதிக்கும்போது சொல்லிவிட்டேனே," என்று ஆச்சர்யப்பட்டார். இப்படி பகவான் சொன்ன பின்னும், பார்த்தன் இவ்வளவு கேட்டதைக் கொண்டு த்ருப்தி அடையாமல், மேலும் கேட்க வேண்டும் என்று ஆசையைப் பெருக்கிக் கொண்டிருந்தான். தீபத்துக்கு எண்ணெய் வார்க்க வார்க்க அது ஜாஸ்தியான ப்ரகாசத்தை உண்டாக்கிக் கொண்டு, எரிவது போலும்,

அர்ஜுனனுக்குக் கேட்கக் கேட்க, இன்னும் கேட்க வேண்டும் என்ற ஆசை வ்ருத்தி அடைந்து, சமையல் செய்கிறவள் ஸாமர்த்ய முள்ளவளாயும் ஔதார்ய முள்ளவளாயும், சாப்பிடுறவன் ரஸஜ்ஞனாகவும் நன்றாய்ச் சாப்பிடுகிறவனாயும் ஏற்பட்டபின், இருவருக்கும் எப்படி ஓர் ஆநந்த முண்டாகுமோ, அப்படியே அர்ஜுனனுக்கு கேட்கிறதில் ஏற்பட்ட ஆர்த்தியைப் பார்த்து, பகவானுக்கு விஷயத்தை விவரித்துச் சொல்வதில் ஆசை பெருகி, அவருடைய வ்யாக்யானம் நான்கு மடங்காக வ்ருத்தியடைந்தது.

அநுகூலமான காற்றினால் மேகங்கள் ஜாஸ்தியாக மழை பொழிவது போலும், சந்த்ரனைக்கண்டு ஸமுத்ரம் பொங்குவது போலும், கேட்கிறவர்கள் ஆதரவைக்கண்டு, சொல்கிற விஷயத்தில் ரஸம் வ்ருத்தியடைகிறது. இனி பகவான் தான் செய்யப்போகிற உபந்யாஸத்தால் விச்வத்தை யெல்லாம்ஆநந்தமயமாய்ச் செய்து வைப்பார். அதை, ராஜா, கேட்கவேண்டும் என்று ஸஞ்ஜயன் சொன்னான். இவ்வாறு கரையற்று வ்யாப்தி அடைந்த புத்தி படைத்த வ்யாஸபகவானால், பாரதத்தில் பீஷ்மபர்வத்தின் நடுவில் ஓர் கதையாகச் சொல்லப்பட்டதான ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுன ஸம்வாதத்தை, அழகுகள் படைத்த மஹாராஷ்டிர பாஷையில் ஓவி வ்ருத்தங்களாலமைந்த ஓர் ப்ரபந்தமாய்ச் செய்து தெளிவாய்ச் சொல்வேன். கேவல சாந்தரஸம் நிறைந்த இக்கதையை நான் சொல்லும் திறமையால், ச்ருங்கார ரஸம் நிறைந்துள்ள கதைகளின் தலையின் மேல் அடிவைத்துச் செல்லும்படி செய்து வைப்பேன். மஹாராஷ்டிர பாஷைக்கு புதுமையாயிருக்கும் விஸ்தாரங்களை உண்டாக்கிவைத்து, ஸாஹித்யம் இவ்வாறு அமையவேண்டு மென்று அதற்கு பாடம் சொல்லிவைத்து, என் வர்ணனைகளின் ரஸத்தால் அம்ருதத்துக்கு ஓர் பழுது சொல்லும் படியாய்ச் செய்து வைப்பேன். எல்லார் மனஸையும், ரமிக்கச் செய்யும் என் கதாஸாமர்த்யத்தால், சந்திரனுக்கு அந்த விஷயத்தில் இருக்கும் ஸாமார்த்யத்தைக் கணக்கிட்டு விடுவேன்? ரஸத்தின் ஆதிக்கத்தால் அக்கதை மெய்மறக்கச் செய்துவைப்பதைப் பார்த்து நாதப்ரஹ்மமமே தலையை மறைத்துக் கொள்ளும். பிசாசுகள் இக்கதையைக் கேட்ட மாத்ரத்தில், அவற்றின் மனஸினின்று கூட ஸாத்விககுணம் என்னும் பால் பெருகவேண்டும். விஷய ஸுகத்தில் அழுந்திக் கிடக்கும் தேவதைகள் கூட இக்கதையைக் கேட்ட உடன் ஸமாதியில் அழுந்திப் போக வேண்டும்.

இப்படிப் பட்ட வாக்ஜாலங்களை விஸ்தாரமாகச் செய்துவைத்து, கீதார்த்தத்தால் விச்வத்தை நிரப்பிவைத்து, ஜகத்தைச் சுற்றிலும் ஆநந்தத்தால் ஏற்பட்ட ப்ரகாரமதிலை எழுப்பிவைப்பேன். விவேகத்தின் பஞ்சம் தீர்ந்து போகவேண்டும். காதுக்கும் மனஸுக்கும் உத்தம ஆஹாரம் கிடைத்து, அவை பிழைத்துப்போக வேண்டும். அதிகாரியோ, அதிகாரமற்றவனோ, எவனானாலும் அவன், ப்ரஹ்மவித்யை நிறைந்துள்ள கனி திறந்துகிடப்பதைப் பார்க்க வேண்டும். இக்கதையைக் கேட்டு ஜகத்துக்கு, பரதத்வம் கண்முன்தோன்றி நிற்கவேண்டும். ஸுகத்தையே புசிக்கும் பண்டிகை தினமும், அதற்கு ஏற்பட வேண்டும்; அதற்கு உத்தம ஞானத்தின் ஸுபிக்ஷமும் ஏற்பட வேண்டும். ஸ்ரீ நிவ்ருத்திதேவர் என்ற பரதேவதையின் ஸகாயத்தை நான் பெற்றிருப்பதால், இவையனைத்தும், இப்போதே ஸித்தி பெறும் படி, அழகான வார்த்தைகளால் என்கதையை ஏற்படுத்தி வைப்பேன். ஆகையால் மறைந்து கிடக்கும் அர்த்தத்தை வெளிப்படுத்திவைக்கும் திறமை பொருந்தினவாயும், அறிவதற்கரிய விஷயங்களை உபமானங்களால் எளிதில் அறியும்படி செய்துவைப்பவனாயும், இருக்கும் வார்த்தைகளைக் கொண்டு, மூலச்லோகத்தை பதம் பதமாய்ப் பிரித்து, ஒரு பதமும் விட்டுப் போகாமல், அப்பதங்களின் அர்த்தத்தை விவரித்து மூலக்ரந்தத்தின் அர்த்தம் முழுவதையும் வெளிப்படுத்தி வைப்பேன். இவ்வளவு வேலை செய்து வைக்கும் திறமை ஏற்படும்படி, என் ஸ்ரீ குருராஜன் வித்யைகளால் என்னை நிரப்பி வைத்திருக்கிறார்.

அவருடைய அப்படிப்பட்ட க்ருபையின் ஸகாயத்தைக் கொண்டு, நான் சொல்வ தெல்லாம் பெரியோர்கள் ஒப்புக் கொள்ளத்தக்கது ஆகின்றது. நானும் தங்களுடைய ஸபையில் கீதார்த்தத்தைச் சொல்லும் யோக்யதையை அடைகிறேன். அத்துடன், கூடப்ரபுக்களே, ஸாதுக்களாகிய உங்கள் பாதத்தின் ஆச்ரயமும் எனக்குக் கிடைத்திருப்பதால், அப்படிச் செய்து வைப்பதில் எனக்கு ஓர் தடையும் நேரிடாது. ஸரஸ்வதியின் வயிற்றில் ஊமைப் பிள்ளை பிறக்காதென்பதில், ஆச்சர்யப் படத்தக்கது என்ன இருக்கிறது? லக்ஷ்மியின் கையில் ஸாமுத்ரிகா லக்ஷணங்களின் குறைவு ஏற்படுவது உண்டா? அப்படியே ஸாதுக்களாகிய உங்கள் ஸந்நிதியில் அஞ்ஞாநத்தின் வார்த்தையே ஏற்பட நியாயம் உண்டா? ஆகையால் நவரஸங்களையும் இப்போதே பொழிந்து வைப்பேன். ஹே ப்ரபுக்களே, உங்கள், முன் வார்த்தைகளை வளர்ப்பது ஏன்? எனக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுத்தீர்களானால், கீதார்த்தத்தை உத்தமரீதியாகச் சொல்வேன்.

பதின்மூன்றாவது அத்யாயம் முற்றிற்று

அத்யாயம் 14

குருஸ்தோத்ரம் :

ஹே ஆசார்யா,. ப்ரஞ்ஞையை ப்ரபையாய் உடைத்தாயிருக்கும் ஸூர்யனே, ஸுகத்தை விளைவித்துத்தருகிறவரே, நீர் வாழ்க வாழ்க. விச்வமனைத்துக்கும் விச்ராந்திஸ்தானமானவரே, ஜீவர்களுக்கு ஸோஹம்பாவத்தைக் (தானும் ப்ரஹ்மமும் ஒன்றே என்ற பாவத்தை) கொடுத்து அவர்களை அலங்கரித்து வைக்கிறவரே, ஸகலலோகங்களும் அலைகள் போல் புரளுவதற்கு ஆதாரபூதமான ஸமுத்ரம் போன்றவரே, நீர் வாழ்க வாழ்க. ஐயா, ஆர்த்தபந்தோ (துக்கிதர்களுக்கு பந்துவாயிருந்து, அவர்கள் துக்கத்தைப் போக்குகிறவரே) எப்போதும் கருணைக்கடலா யிருப்பவரே, மாசற்ற வித்யை என்னும் பெண்ணுக்கு நாயகனானவரே, நான் சொல்வதைக் கேட்கவேண்டும். நீர் ஒருவன் பார்வைக்கு மறைந்து போகும்போது, அவனுக்கு இந்த விச்வம் என்னும் காக்ஷியைக் காட்டிவைக்கிறீர்; நீர் வெளிப்பட்டு நின்றால், அவன் ஸர்வத்தையும் உம்முடைய ஸ்வரூபமாகப் பார்க்கும்படி செய்து வைக்கிறீர். கண்கட்டி வித்யைக்காரன் எதிரிலிருப்பவன் பார்வையை அபஹரிக்கிறான். நீரோ உம்முடைய ஸ்வரூபத்தையே திருடிவிடுகிறீர்.

இப்படிச் செய்து வைக்கும் உம்முடைய ஸாமர்த்யம் மிக்க புதுமையாயிருக்கிறது. ஐயா இந்த ஜகத்தனைத்துக்கும் நீரே ஸர்வமுமாய் இருக்கிறீர். அப்படி இருக்க ஞான மடைந்திருப்பவன் எவன்? அஞ்ஞானத்தில் கிடப்பவன் எவன்? ஞானியாயும் அஞ்ஞானியாயும் நீரே தோன்றும் படி செய்துவைக்கும் ஸாமார்த்யம் படைத்த உமக்கு நமஸ்காரம். உமது ஈரத்தினால் ஜலத்துக்கு ஈரமும் ரஸமும் ஏற்பட்டிருக்கிறது. பெரிய முத்துச்சிப்பிகள் என்றே சொல்லவேண்டிய சந்த்ரஸூர்யர்கள் உலகில் உதயமாய் ப்ரகாசம் கொடுப்பது, உமது ப்ரகாசத்தைக் கொண்டே ஏற்படுகிறது, உமது தேஜஸ்ஸே தேஜஸ்ஸுகளுக் கெல்லாம் தேஜஸ்ஸைத் தருகிறது. வாயு அங்குமிங்கும் அலைந்து திரிவது உம்முடைய சக்தியால் ஏற்படுகிறது ஆகாசம் கண்ணாம்பூச்சி விளையாட்டில் உம்முடைய ஓர் கக்கத்தில் ஒளிந்துகொள்கிறது எல்லாவற்றையும் ஆக்ரமித்துக் கொண்டிருக்கும் வல்லமை உள்ள மாயை உம்மால் பலம் படைத்திருக்கிறது. ஞானம் என்பது உம்முடைய சக்தியால் எல்லாத்தையும் அறிகிறது. இது நிற்கட்டும்

உம்மை வர்ணிப்பதென்பது ச்ருதியால் கூட செய்யமுடியாத கார்யமாய் இருக்கிறது. உம்முடைய ஸ்வரூபம்தவிர மற்ற விஷயங்களை வர்ணிக்கும் ஸாமர்த்யம் வேதத்துக்கு நன்றாய் அமைந்திருந்தும் உம்முடைய ஸ்வரூப விஷயத்திலோ, அதுவும் நாங்களும் ஒரே பந்தியில் உட்கார்ந்துகொண்டு வாயை முடிக்கொள்ள வேண்டியது தான். ஐயா ப்ரளயகாலத்தில் ஏற்படும் ஏகார்ணவத்தின் முன், ஜலத்தின் ஓர் திவலைக்கு எப்படி மதிப்பில்லையோ, அப்படியே மஹாநதிகளுக்கும் ஓர் மதிப்பும் ஏற்படாமற் போகிறது. ஸூர்யன் உதயமானபிறகு சந்திரன் மினுமினுப்பூச்சியே ஆய்விடுகிறது போலும், உம்முடைய ஸ்வரூபத்துக்கு முன் வேதங்களும் நாங்களும் ஒரே மதிப்புள்ளவர்கள் ஆகிறோம். உம்முடைய ஸ்வரூபத்தில் த்வைதபாவம் பலமற்றுப்போய் பரை (வாக் அதிசூக்ஷ்மமாய் மூலாதாரத்தில் உண்டாகிறபோது பரை என்றும் பின்பு அங்கிருந்து நாபியில் வந்த பிறகு பச்யந்தீ என்றும் மார்பில் ஏறினபின் மத்யமை என்றும் நாக்கில் ஏறி வ்யக்தமாய் வெளிப்படும்போது வைகரீ என்றும் சொலலப்படும்) என்னும் வாக்கையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டு வைகரீ வாக்கானது முழுகிப்போகிறது.

அப்படிப்பட்ட உம்மை எந்த வாயைக் கொண்டு வர்ணிக்கலாம். ஆகையால் ஸ்துதிசெய்வது என்பதைக் கைவிட்டு, உம்முடைய பாதத்தில் தலையைச் சாய்த்து விடுகிறதே புத்திசாலித் தனமாகும். ஆகவே, ஹே குருராயா, நீர் எப்படி இருக்கிறீரோ, அப்படிப்பட்ட உமக்கு நமஸ்கரிக்கின்றேன். நான் செய்யும் க்ரந்த நிரூபணம் என்னும் வ்யவஸாயம் பலிப்பதற்குப் பொருள் முதலியவை உதவி செய்து தரும் வ்யாபாரியாக நீர் அமைந்து, க்ருபை என்னும் பொருள் நிறைந்திருக்கும் பையை அவிழ்த்து, என்மனது என்னும் பையை நிரப்பி வைத்து, ஞானம் நிறைந்துள்ள வ்ருத்தங்களைச் செய்து வைக்கும் வல்லமை படைத்தவனாய் என்னைச்செய்து வைக்கவேண்டும். ஹே குருவர்யா, (குருக்களுக்குள் தலைமை படைத்தவரே அல்லது குருவென்று ஆச்ரயிக்கத் தக்கவரே) பின்பு என் வ்யவஸாயம் ஸரியாய் பலித்து நான் ஸாதுக்களின் காதுகளுக்கு அழகான பூக்ஷணங்களைச் செய்து, அவற்றை அலங்கரித்து வைப்பேன். கீதார்த்தம் என்னும் நிதியை, அது மறைந்து கிடக்கும் இடத்தினின்று வெளிப்படுத்தி வைப்பதற்கு, என் மனக்கண்ணுக்கு உம்முடைய ஸ்நேஹபாவம் என்னும் மையைப் பூசிவைக்க வேண்டும், உம்முடைய காருண்யம் என்னும் ஸூர்யன் உதித்து, வாங்மயமான ஸ்ருஷ்டியை என் புத்தி என்னும் கண்ணுக்கு ஒரு தரம் காட்டிவைக்கவேண்டும்.

என்னுடைய ப்ரஞ்ஞை என்னும் கொடி விஸ்தாரமாய்ப் படர்ந்து ஸத்காவ்யம் என்னும் பழங்களைப் பழுத்து தருவதற்கு, அநுகூலமான வஸந்தருதுவாக நீர் ஆகவேண்டும். என்னுடைய மதி யென்னும் கங்கையில் உத்தம ஞாநங்களே. பெருத்த ப்ரவாஹமாய் ஓடும்படி, உம்முடைய க்ருபாத்ருஷ்டி என்மேல் அத்யுதாரமாய் வர்ஷிக்க வேண்டும். ஸ்வரூபவ்யாப்தியால் விச்வமனைத்தையும் வீடாய்ப் படைத்தவரே, உம்முடைய ப்ரஸாதம் என்னும் சந்த்ரன், என்னுடைய கவித்வஸ்பூர்த்திக்கு பௌர்ணிமையைச் செய்து வைத்து, அது ஓர் ஸமுத்ரமாய் பொங்கத்தலைப்பட்டு, என் க்ரந்தம் ரஸவ்ருத்திகளால் நிறைந்து கொந்தளிக்க வேண்டும். ப்ரார்த்தித்தல் என்பதை நிமித்தமாய்க் கொண்டு, ஸ்தோத்ரம் என்னும் ஓர் பெயரிட்டு, த்வைதபாவத்தை இப்படி நான் பெருக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து, என் குரு நாதன் ஸந்தோஷமடைந்து, "ப்ரயோஜனமற்ற இவ்வார்த்தைகளைக் கட்டிவை, இந்த கீதையில் அடங்கியிருக்கும் ஞானார்த்தங்களுக்கு மிகவும் நேர்த்தியான உருவமைத்து, அவற்றை க்ரந்தமாய்ச் செய்து விரித்துக் காட்டு, ச்ரோதாக்களுக்கு ச்ரவணத்தில் இப்போது ஏற்பட்டிருக்கும் ஆதரவைக் குறைத்து போகச் செய்யாதொழி," என்று சொன்னார்.

அதற்கு நான், "ஐயா, ஸ்வாமி, அப்படியே செய்வேன், தங்களுடைய திருமுகத்தினின்று "க்ரந்தத்தைச் சொல்", என்ற இவ்வார்த்தைகள் வெளிப்பட வேண்டும் என்பதற்கே நான் இதுவரையில் தயங்கி இருந்தது" என்று சொன்னேன். தேஹமெல்லாம் தேவதைகள் நிறைந்ததாயிருக்கும் அருகம்புல்லின் கொழிந்தின்மேல் அம்ருதமே வெள்ளமாய்ப் புரண்டுவந்தால் எப்படியோ, அப்படியே எனக்கு இப்பொழுது நேர்ந்திருக்கிறது. இனி இந்த குருப்ரஸாதத்தின் அநுகூல்யத்தால், மூலமான கீதாசாஸ்திரத்தின் பதங்களை மிக்க சாதுர்யமாய் விந்யாஸப்படுத்தி, வ்யாக்யானம் செய்வேன். ஜீவனுக்குள்ளிருக்கும் ஸந்தேஹம் என்னும் தோணி முழுகிப் போகும்படியாயும், (ஸந்தேகம் முற்றிலும் அற்றுப்போழும் படியாக என்பது கருத்து) அத்துடன் கூட க்ரந்தத்தைக் கேட்பதில் இருக்கும் ஆசை மேன் மேலும் பொங்கும் படியாயும் செய்துவைக்கும் வண்ணம், தத்வஞானத்தாலும் மாதுர்யத்தாலும் நிறைந்திருக்கும் வார்த்தைகள் என் முகத்தினின்று புறப்பட வேண்டுமென்று, குருக்ருபை என்னும் தாயினிடத்தில் நான் ப்ரார்த்திக்கின்றேன்.

கீழ்ச் சொன்ன விஷயத்துக்கும் மேற் சொல்லப்போகிற விஷயத்துக்கும் ஸங்கதி.-

கீழ்ச் சென்று போன பதின் முன்றாவது அத்யாயத்தில் அர்ஜுனனுக்கு க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞ சேர்க்கையால் இந்த ஜகத் அமைந்திருக்கிறதென்றும், ஆத்மாவுக்கு குண ஸங்கத்தால் ஸம்ஸாரம் ஏற்படுகிற தென்றும் பின்பு அவன் ப்ரக்ருதி சேர்க்கையைப் பாராட்டிக்கொண்டு ஸுகதுக் காநுபவங்களுக்கு ஆள் ஆகிறானென்றும், அவன் குணதீதனானால் ஸுகதுக்க போகங்களற்றவனாய் சுத்தாத்ம ஸ்வரூபமாய் நிற்கிறான் என்றும், ஸ்ரீக்ருஷ்ணன் சொன்னார். ஆனால் ஸ்வரூபத்தால் அஸங்கனான ஆத்மாவுக்கு ஸங்கம் எப்படி ஏற்படுகிறதென்றும் க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞர்களின் சேர்க்கை என்பது என்னவென்றும், ஸுகதுக்காநுபவம் ஆத்மாவுக்கு எப்படி ஏற்படுகிறதென்றும், குணங்கள் எத்தனை, எவ்வகைப்பட்டவை யென்றும், எப்படி அவைகள் பந்தத்தை உண்டாக்குகின்றன வென்றும், குணாதீதனாயிருப்பவன் குறிகள் எவை என்றும் தெளிவாய் நிரூபிப்பதற்காக இந்த பதினான்காவது அத்யாயம் ஏற்பட்டது. ஆகவே இவ்விஷயங்களில் விச்வேச்வரனான வைகுண்டனுடைய அபிப்ராயம் என்னவோ அதைச் சொல்வேன் கேளுங்கள். அவர் பின்வருமாறு சொன்னார். ஹே, அர்ஜுநா உன் கவனத்துக்கு எத்தனை பரிவாரம் உண்டோ, அத்தனையையும் சேர்த்து வைத்துக் கொண்டு நீ இந்த ஞானத்தைக் கைக்கொள்ள வேண்டும்.கீழே நான் உனக்குச் சொன்ன விஷயங்களை அநேக விதமான உபபத்திகளோடு சொன்னேன். ஆயினும் அவ்விஷயங்களில் உனக்கு இருந்த அறிவின்மை இன்னும் நீங்கவில்லை.

श्रीभगवानुवाच ।
परं भूयः प्रवक्ष्यामि ज्ञानानां ज्ञानमुत्तमम् ।
यज्ज्ञात्वा मुनयः सर्वे परां सिद्धिमितो गताः ॥१॥

ஸ்ரீ பகவானுவாச -

பரம் பூயः ப்ரவக்ஷ்யாமி க்ஞானானாம் க்ஞான முத்தமம் ।
யஜ்ஞாத்வா முனயः ஸர்வே பராம் ஸித்தி மிதோ கதாः ॥ 1

ஆத்ம ஞானத்தின் பரத்வம்-

ஆகையால் உனக்கு ஸரியான ஞாநம் ஏற்படுவதற்காக வேதம் எதைப் பரமான ஞானம் என்று திரும்பவும் திரும்பவும் சொல்லி மிக்கக் கொண்டாடுகிறதோ, அதை மேலே விளங்கச் செய்யப் போகிறேன். இந்த ஞானம் என்னவோ, உண்மையாக நம் மாத்மஸ்வரூப விஷயமானதே ஆயினும், அதைப் பரம் என்று சொல்வதற்குக் காரணம் என்ன வென்றால், உலகத்தார் பெரும்பாலும் ஸாம்ஸாரிக ஸுகங்களையும் ஸ்வர்க்கலோகத்தில் அநுபவிக்கக் கூடிய ஸுகங்களையும் தங்களாத்மாவைப்போல் ப்ரியத்துடன் கொண்டாடி, அவற்றின் ப்ராப்திக்கு வேண்டிய ஞானத்தையே கைப்பற்றி நிற்பதால் அந்த ஞானமாகாத ஆத்மவிஷயமான ஞாநம், அவர்களுக்கு பரம்(மற்றொன்று அல்லது பழக்கம் இல்லாதது,) ஆகிறது. நானும் பின் சொல்லப்படும் காரணத்தைக் கொண்டு இந்த ஆத்ம ஞானத்தையே பரம் என்று சொல்கிறேன்; அக்காரணம் எதுவென்றால், இந்த ஆத்மஞானம் நெருப்புப் போல் இருந்து கொண்டு த்ருணம் போல் இருக்கும் ஸம்ஸாரிக அல்லது ஸ்வர்க்கீய ஸுகத்துக்கு ஸாதனமான இதர ஞானத்தைப் பொசுக்கிவிடுகிறது. ஸம்ஸாரத்தையும் ஸ்வர்க்கத்தையும் விஷயமாக உடையதாய், யாகங்களே உத்தமம் என்று கொண்டாடுவதாய் பேத விஷயங்களிலேயே பரிச்சயம் உள்ளதாய், இருக்கும் ஞாநம் முழுமையும், காற்று ஆகாசத்தில் லயித்துப் போவது போல் ஆத்ம ஞானத்தால் ஸ்வப்நத்தில் ஏற்பட்ட ஞானம் ஆய்விடுகிறது.

ஸூர்யன் உதித்த பின் சந்திரன் முதலிய தேஜஸுக்கள் அனைத்தும் மறைந்து போவது போலும் ப்ரளய காலத்து ஏகார்ணவ வெள்ளத்தில் நதி நதங்களுடைய உருவங்கள் அழிந்து போவது போலும், இந்த ஆத்மஞாநத்தின் ப்ரகாசம் ஏற்பட்ட பிறகு இதர ஞான ஸமூஹங்கள் அனைத்தும் நசித்துப் போகின்றன. என்னும் காரணத்தைக் கொண்டு இந்த ஆத்மஞானம் உத்தமம் ஆகிறது அநாதிகாலமாய் உனக்கே ஸொந்தமாய் இருந்துகொண்டிருக்கும் முக்ததை (கட்டிலிருந்து விடுபட்டிருக்கும் தன்மை) அல்லது மோஷம் என்பது, இந்த ஞானத்தின் ப்ரபாவத்தால் உனக்கு ஹஸ்தகதம் ஆய்ப்போகிறது.தத்வ விசாரத்தில் ஸாமர்த்யம் படைத்தவர்கள் புத்தியில், இந்த ஞானம் ஏற்பட்ட உடனே, அவர்கள் ஸம்ஸாரம் என்பதனைத்தையும் தலையெடுக்க வொட்டாமல் அடித்து வைக்கிறார்கள். தங்கள் மனஸைக் கொண்டே தங்கள்

மனஸைத் திருப்பி, ஆத்மஸ்வரூபத்தில் இருத்தி, அதின் கார்யமாகவே அவர்கள் ஸம்ஸார ச்ரமம் முற்றிலும் தீர்ந்தவர்களாய், தேஹத்தில் இருக்கும் போதே தேஹத்தின் பற்றற்றவர்கள் ஆய்விடுகிறார்கள் பின்பு காலக்ரமேண, அவர்கள் தேஹம் என்னும் வேலியைத் தாண்டிவிட்டு தராஸில் வைத்து நிறுத்துப்பார்க்கும்போது, யோக்யதையால் எனக்குக் கொஞ்சங்கூட குறைவில்லாதவர்கள் ஆய்விடுகிறார்கள்.

इदं ज्ञानमुपाश्रित्य मम साधर्म्यमागताः ।
सर्गेऽपि नोपजायन्ते प्रलये न व्यथन्ति च ।।२।।

இதம் க்ஞான முபாஶ்ரித்ய மம ஸாதர்ம்ய மா கதாः ।
ஸர்கேऽபி நோபஜாயந்தே ப்ரலயே ந வ்யதந்தி ச ।। 2

ஆத்மஞான பிராப்தியின் பலன்.-

அவர்கள் என்னுடைய நித்யதையை அடைந்து நித்யர்களாய் என்னுடைய பூர்ணதையைக் கொண்டு பரிபூணர்களாய், நான் எப்படி அளவற்ற ஆநந்தமாய் எக்காலத்திலும் உண்மையான நிலைபெற்றவனாய் இருக்கிறேனோ, அப்படியே அவர்களும் இருக்கிறார்கள். பின்பு அவர்களுக்கும் எனக்கும் பேதம் என்பதே மிகுந் திராமற்போகிறது. குடம் உடைந்து போனபிறகு அதினால் வரையறுக்கப்பட்டிருந்த ஆகாசம் மஹாகாசத்தோடு ஐக்யப்பட்டுப் போவது போலும், அவர்கள் தேஹத்தை விட்டுப் பிரிந்ததும், என்னுடன் ஒன்று பட்டுப் போய் நான் எவ்வகைப் பட்டவனாயும் எவ்வளவு வ்யாப்தியுள்ளவனாயும் இருக்கிறேனோ, அவ்வகைப் பட்டவர்களாயும், அவ்வளவு வ்யாப்தியுள்ளவர்களாயும், ஆய்விடுகிறார்கள். ஓர் பெருந்தீபத்தில் ஏற்றப்பட்ட அநேக வேறுவேறான வத்திகளெல்லாம் அந்த பெருந்தீபத்தோடு சேர்க்கப்பட்டுப் போனபின், அனைத்தும் ஒன்றுபட்டு ஒரே தேஜஸ்ஸாய்க் காணப்படுவது போலும், அவர்களுக்கு த்வைதத்தின் யாத்ரையே (தேஹம் எடுக்கும் தோறும் திரும்பவம் திரும்பவம் த்வைத பாவம் ஏற்பட்டுக் கொண்டிருக்கை) அற்றுப்போய், நான் நீ என்ற நாமங்களும் அவற்றின் அர்த்தங்களும் என்னுடன் ஒன்று பட்டுப்போய், பேதவ்யவஹாரம் முற்றிலும் அற்றுப்போகிறது. இந்தக் காரணத்தால், மஹா ப்ரளயத்துக்குப்பின் ஆதி ஸ்ருஷ்டி, ஏற்படும் போது அவர்கள் பூதவ்யக்திகளாய் உண்டாவது இல்லை. எவர்களுக்கு இப்படி முதல் முதல் ஸ்ருஷ்டியிலே

தேஹத்தின் சேர்க்கை ஏற்படுவதில்லையோ, அவர்ளுக்கு மஹாப்ரளய காலத்தில் தேஹநாசம் என்பது எப்படி ஏற்படும்? ஆகையால் இந்த ஞானத்தை அடைந்தவர்கள் ஜந்மமரணங்களற்றுப் போனவர்களாய் நானே ஆய்விடுகிறார்கள், ஹே அர்ஜுநா. அர்ஜுநன் இந்த ஞானத்தை அடைய ஆசைப் படவேண்டும் என்று கருதி, இப்படி இந்த ஞானத்தின் பெருமையை பகவான் மிக்க ப்ரேமையுடன் வர்ணித்தார்

மேல்வரும் விஷயத்தின் அவதாரிகை –

இப்படி பகவான் சொல்லிக் கொண்டிருக்கும்போது, அர்ஜுநனுடைய ஸ்திதி முற்றிலும் மாறுபாடடைந்து அவன் தேஹம் எங்கும் காதுகள் உண்டாய்ப் போயின; அதாவது, மூர்த்தீகரித்த கவனமாகவே, அவன் முற்றிலும் ஆய்ப்போனான். இதைப்பார்த்து பகவான் அத்யந்த ப்ரேமைக்கு வசப்பட்டுப் போனவராய், அவருடைய நிரூபணம் ஆகாசத்துக்குள் அடங்க முடியாததாய்ப் போய், அவர் பின்வருமாறு சொல்லத் தொடங்கினார். ஹே ப்ரஞ்ஞாகாந்தா(ப்ரஞ்ஞையென்னும் பெண்ணுக்கு நாயகனானவனே) என்னுடைய வார்த்தைகளைக் கேட்டறியும் சக்தியடைந்த ச்ரோதாவாக நீ, எனக்குக் கிடைத்துப் போனபடியால், என்னுடைய வக்த்ருத்வம் மிக்க உத்ஸாஹம் அடைந்த தாயிற்று. ஆகவே ஒண்டியான என்னை, த்ரிகுணம் என்ற வேடன் தேஹம் என்ற வலையை வீசி, அநேக ரூபங்களில் சிக்கிப் போகும்படி, எப்படிச் செய்துக் கொண்டான் என்றும், அப்படி நான் க்ஷேத்ரஸம்பந்தத்தை அடைந்த பின், எப்படி நான் இந்த ஜகத்தைப் பெற்றுவைத்தேன் என்றும் சொல்வேன், கேள்.

मम योनिर्महद् ब्रह्म तस्मिन्गर्भं दधाम्यहम् ।
सम्भवः सर्वभूतानां ततो भवति भारत ।।३।।

மம யோநிர் மஹத் ப்ரம்ஹ தஸ்மின் கர்பம் ததாம்யஹம்।
ஸம்பவ: ஸர்வபூதானாம் ததோ பவதி பாரத ॥ 3

ஜகத்தின் உத்பத்தியும், அவயவங்களும்

கவனித்துப் பார் ப்ரக்ருதியில் என்னுடைய ஸங்கம் என்னும் விதை விதைக்கப் பட்ட மாத்திரத்தில் அதில் அநேகபூதங்கள் உண்டாகின்றன. இக்காரணத்தைக் கொண்டு அது க்ஷேத்ரம்

என்று சொல்லப்படுகிறது. மஹத் முதலாயுள்ள ஸர்வஜகத்துக்கும் அது விச்ராந்தி ஸ்தானமாய் இருப்பதாலும், எண்ணற்ற விகாரங்கள் அனைத்தையும் காட்டிலும் பெரிதாய் இருந்து கொண்டு, அவ்விகாரங்களை அதுவே செய்து வைப்பதாலும், அது மஹத் ப்ரஹ்மம் என்று வேறொர் பெயரடைந்திருக்கிறது. அவ்யக்தவாதிகள் அதை அவ்யக்தமென்றுசொல்கிறார்கள். ஸாங்க்யர்கள் கொள்கையில் அதுவே ப்ரக்ருதி யென்று சொல்லப்படுகிறது, வேதாந்தத்தில் அதுவே மாயை என்று சொல்லப்படுகிறது. ப்ராஞ்ஞர்களுக்குள் சிறந்தவனான ஹே அர்ஜுநா, அதைப்பற்றி இன்னும் விஸ்தரித்துப் பேசுவதில் ப்ரயோஜநம் என்ன? அந்த மாயை என்பது அஞ்ஞாநமே. தன்னுடைய ஆத்மஸ்வரூபத்தைத் தான் அறியாமல் இருப்பதே அஞ்ஞானமாகும், அந்த அஞ்ஞானம் அல்லது மாயையின் விஷயத்தில் மற்று மோர் விந்தை அல்லவா இருக்கிறது. தீபத்தைக் கையில் எடுத்துக் கொண்டு இருட்டு எங்கேயிருக்கிறது என்று தேடிப் பார்த்தால் அது காணாமற்போவது போலும், அந்த மாயையை விசாரித்துப் பார்க்கும்போது, அது இருக்கிற இடம் தெரியாமல் மறைந்து போகிறது.

பாலின் அம்சமாகவே இருக்கும் ஏடு, பாலைக் கலக்கிக் கொண்டிருக்கும் வரைக்கும் காணப்படாமல் அதை அப்படிக் கலக்குவதை நிறுத்தி தெளிந்து நிற்கும்படி விட்டால், அந்த ஏடு பிரிந்து காணப்படுவது போலும், விழிப்பு என்பதாய் இராமலும் ஸ்வப்நாவஸ்தை யாயிராமலும், ஸ்வரூபமாய் அமைந்திருப்பதாய் இராமலும், இருக்கும் ஓர் ஸ்திதி கனமான ஸுஷுப்தி என்று சொல்லப்படுவது போலும், வாயுவை இன்னும் பெற்று வைக்காமல் தனித்திருக்கும் ஆகாசத்தைப் போலும், அஞ்ஞானம் இருப்பதாக நிச்சயிக்கப் படவேண்டும் முன்னால் தெரிவது கம்பமோ அல்லது மனுஷ்யனோ என்று நிச்சயித்துக் கொள்ள முடியாதபடி, ஏதோ ஓர் வஸ்து இருக்கிறது என்று மாத்ரம் தோன்றச்செய்யும் ஞான நிலையில், அந்த வஸ்து உள்ளபடி தெரியாமலும் அதற்கு விபரீதமாய்த் தெரியாமலும் இருப்பதுபோலும், ராத்ரியுமன்று பகலுமன்று என்று சொல்லுபடியாய் ஸந்த்யை என்று ஓர் காலம் இருப்பது போலும், ஆத்மவஸ்து உள்ளபடி உணரப்படாமலும் அதற்கு விபரீதமாய் உணரப்படாமலும், இருக்கும் ஓர் ஞான நிலைக்கு அஞ்ஞானம் என்று பெயர். அப்படிப்பட்ட அஞ்ஞானத்தால் சூழப்பட்டிருக்கும் ஞானத்தை உடைத்தானவனுக்கு க்ஷேத்ரஞ்ஞன் என்று பெயர் அஞ்ஞானம் மிக்கவருத்தி அடைந்து, தன் ஸ்வரூபம் யாதாவத்தாய் தெரியாமலிருக்கும்

ஆத்ம ஸ்வரூபமே க்ஷேத்ரஞ்ஞன் என்று அறிய வேண்டும் இப்படி ஆத்ம ஸ்வரூபத்தோடு அஞ்ஞானம் சேர்ந்திருப்பதை நீ நன்றாய் அறிந்துகொள்ள வேண்டும். இப்படி இவ்விரண்டும் சேர்ந்திருப்பபது, மூலஸ்வரூபத்தின் ஸ்வாபாவிகமான நிலை. அந்த அஞ்ஞானத்தின் சேர்க்கையால், ஆத்மா தான் பலரூபங்கள் உள்ளதாய் எவ்விதமாகவோ பாவித்துக் கொள்கிறது. ஓர் பிச்சைக்காரன் பைத்தியம் பிடித்துப்போய், இதோ நான் ராஜா வந்துவிட்டேன் என்று சொல்வதுபோலும். மூர்ச்சை அடைந்திருந்தவன், தான் ஸ்வர்க்க லோகத்துக்குப் போயிருந்ததாகச் சொல்வது போலும், ஸ்வரூபத்தினின்று வழுவிப்போன பார்வைக்கு முன் எதெது தோன்றுமோ அதது அனைத்தும் ஸ்ருஷ்டி என்று பெயரிடப்படுகிறது, அப்படிப்பட்ட ஸ்ருஷ்டியை நானே பெற்று வைக்கிறேன், எப்படி ஸ்வப்பநத்தில் ஒருவன் தன்னை மறந்து மோஹத்துக்கு வசப்பட்டுப் போய், தன் ஸ்வரூபத்தையே பலவிதப்பட்ட வஸ்துக்களாய்ப் பார்க்கிறானோ அப்படியே தன் ஸ்வரூப ஸ்மரணமற்றுப்போன ஆத்மாவுக்கு நேர்கிறது.

இந்த ப்ராந்தியை மேலே மற்றுமோர் விதமாய் விவரித்துச் சொல்வேன். ஆனால் இப்படி ஆத்மஸ்வரூபம் மாயையால் கவரப்பட்டிருக்கிறதென்பதை மாத்ரம், மனஸில் நீ திடமாய் ஏற்றி வைத்துக் கொள்ள வேண்டும். அவித்யா ரூபியாகிய மாயை என்னும் என்னுடைய ஸ்த்ரீயானவள் அநாதியாயும் இளம் பருவமுள்ளவளாயும், எடுத்துச் சொல்லமுடியாத குணங்கள் படைத்தவளாயும் இருக்கிறாள். உண்மையான இருப்பு இல்லை என்பதே இவள். இவளுடைய வ்யாப்தி எல்லையற்றதாய் இருக்கிறது இவள் தூங்குகிறவன் ஸமீபத்திலிருப்பவளாய், விழித்துக் கொண்டிருக்கிறவனை விட்டு தூரமாய் விலகி நிற்கிறாள். இவள் என் மேல் படுத்துக் கொண்டு, விழித்திருந்து, என் ஸத்தையைப் புசித்து கர்ப்பவதி ஆகிறாள், இந்த மஹத்ப்ரஹ்மத்தின் வயிற்றில் ப்ரக்ருதி ஸம்பந்தமான விகாரங்கள் உண்டாய், இந்த விகாரரூபிகர்ப்பம் வ்ருத்தியடைகிறது. ஆத்மஸ்வரூபம் மாயை என்ற இருவர்களின் சேர்க்கையால் புத்திதத்வம் முதல் முதல் உண்டாகிறது. அதுவே மிக்க வலுத்துப் போனபின் மனஸு உண்டாகிறது. மனஸினுடைய ஸ்த்ரீயாகிய மமதை என்பவள் அஹம்காரத்தைப் பெற்று வைக்கிறாள். அந்த அஹம்காரம் மஹா பூதங்களனைத்தையும் வெளிப்படுத்திவைக்கிறது. இயற்கையாகவே விஷயங்களும் இந்த்ரியங்களும் மஹாபூதங்களோடு ஸம்பந்தப் பட்டிருப்பதால், அப்பூதங்களோடு கூடவே விஷயங்களும் இந்திரியங்களும் ஏற்படுகின்றன.

இப்படி ஏற்பட்ட விகாரங்கள் கலக்கம் அடையும் போது, இவற்றின் பின்னாலேயே குணங்கள் நின்று கொண்டிருப்பதால், வாஸனை என்பது ஏற்பட்டு வேறுவேறான ஜாதிகளில் ஜந்மங்கள் ஏற்படுகின்றன. எப்படி விதையானது. ஜலத்தின் ஸம்பந்தத்தை அடைந்த மாத்திரத்தில், முளைத்து வ்ருக்ஷரூபத்தைத் தரித்துக் கொள்கிறதோ, அப்படியே இந்த மாயை என் ஸங்கத்தை அடைந்தபின், அநேகவிதப்பட்ட விச்வத்தின் முளைகள் இதில் ஏற்படுகின்றன.ஹே ஸ்ரேஷ்டர்களுக்குள் உத்தமனே, இவ்விகாரங்களால் நிறைத்திருக்குமக் கர்ப்பக்கோளமானது பின்பு எப்படிப்பட்ட ரூபங்களைப் படைக்கிறது என்பதைச் சொல்வேன் கேள் அப்படி ஏற்படும் ரூபங்கள் அண்டஜம் என்றும் ஸ்வேதஜம் என்றும், உத்பிஜம் என்றும், ஜராயுஜம் என்றும் நான்கு வகைப்படுகின்றன. (பார்க்க அத்யாயம் 13 ச்லோகம்4) ஆகாசம், வாயு இவற்றின் அம்சங்கள் மிகுந்திருக்கும் கர்ப்பரஸத்தால், அண்டஜங்களான பூதங்கள் ஏற்படுகின்றன. தமஸ்ரஜஸ் என்னும் குணங்களால் வ்யாபிக்கப்பட்டு, அப்புதேஜஸ் என்பவற்றின் ஆதிக்யத்தால், ஸ்வேதஜங்கள் உண்டாகின்றன. அப் ப்ருதிவி அம்சங்கள் அதிகரித்து, சுத்த தமஸின் சேர்க்கையை அடைந்து, உத்பிஜங்கள் ஏற்படுகின்றன. ஞான கர்மேந்திரியங்கள் ஐந்தைந்தாய் ஏற்பட்டு மனஸ் புத்தி இவற்றின் ஸஹாயத்தை அடைந்தவைகளாய், ஏற்படும், மனுஷ்யப் பிறப்புகள் ஜராயுஜங்கள் ஆகும்.

இப்படிப்பட்ட நால்வகைப் பிறப்புகளும் கைகால்களாயும், எட்டுவகைப்பட்ட ஸ்தூல ரூபத்தைப் படைத்த ப்ரக்ருதி தலையாயும்,. ப்ரவ்ருத்தியென்பது பருத்த வயிறாயும், நிவ்ருத்தியென்பது ஸமமாயிருக்கும் முதுகாயும், எண் வகைப்பட்ட தேவர்கள் இடுப்புக்குப் மேல் பாகமாயும் ஸ்வர்க்கமே நீண்ட கழுத்தாயும் மனுஷ்ய லோகம் இடுப்பாகவும், பாதாளம் கடீபச்சாத்பாகமாயும் (ஆசநீமாய் ஏற்படும் அவயவங்கள்) அமைந்திருக்கும் ஓர் குழந்தையை இந்த மாயை பெற்று வைக்கிறாள். மூன்றுலோகங்களும் இக்குழந்தைக்கு சதைப்பற்றாய் ஏற்பட்டிருக்கின்றன. எண்பத்தி நாலு லக்ஷப்பிறப்புகளும் அந்தக் குழந்தையின் விரற்கணுக்களும் மூட்டுக்களுமாய் இந்தக்குழந்தை ப்ரதினமும் பெருத்து வளர்கின்றது. அநேக விதமான தேஹங்கள் என்னும் அதின் அவயவங்கங்களில், நாமங்கள் என்னும் பூஷணங்களை பூட்டி, மோஹம் என்னும் முலைப்பாலைப் புகட்டி நித்யநவமான மாயையானவள் இந்த தன் குழந்தையை வளர்க்கிறாள். வேறு வேறு வகைப்பட்ட

தேஹஸ்ருஷ்டிகளை அதின் கைகால் விரல்களாயும் செய்து வைத்து, அப்படி வேறுவேறாய் ஸ்ருஷ்டிக்கப்பட்ட தேஹங்களாகிய விரல்களில் அபிமானம் என்னும் மோதிரங்களை இட்டுவைத்து அக்குழந்தையை இவள் அலங்கரித்து வைக்கிறாள். விசாரித்தறிய முடியாத அழகு படைத்த இந்த மாயையானவள், ஒருத்தியாகவே இருந்து கொண்டு சராசரரூபமாகிய இந்த பெரிய குழந்தையை பெற்று மிக்க பெருமை அடைகிறாள்.

இந்தக் குழந்தைக்கு ப்ரஹ்மா காலை வேளையாகவும், விஷ்ணு மத்யாந்த வேளையாகவும், ஸதாசிவன் ஸாயங்காலமாகவும் அமைகிறார்கள். மஹாப்ரளயமே இந்தக் குழந்தைக்கு படுக்கையாய் ஏற்பட்டு அதின் மேல் இக்குழந்தை அநேக விளையாட்டுக்கள் விளையாடி ஸ்வஸ்தமாய்ப் படுத்துத் தூங்குகிறது. மறுபடியும் கல்பம் உதயமான உடன் பேதஞானங்கள் விழித்துக் கொள்கின்றன. இப்படி மித்யா ஞான வ்யவஹாரங்களில் யுகத்துக்குப் பின் யுகமாய் காலச்சக்ரம் சுழன்று கொண்டிருக்கும்போதெல்லாம், இந்தக் குழந்தை மிக்க விநோதமாய் அடிவைத்து ஸஞ்சரித்துக் கொண்டிருக்கிறது. இந்த குழந்தைக்கு ஸங்கல்பம் மித்ரனாகிறான்; அஹம்காரம் இக்குழந்தையை அழகுபடுத்தி வைக்கிறான். இப்படிப்பட்ட குழந்தை ஆத்மஞானம் உண்டான மாத்திரத்தில் செத்துப்போகிறது. கீழ்ச்சொன்ன அனைத்துக்கும் தாத்பர்யம் இதுவே என்னுடைய ஸங்கம் என்னும் ஸகாயம் ஏற்பட்டபின் மாயையானவள் இந்த விச்வத்தைப் பெற்றுவைத்தாள்

सर्वयोनिषु कौन्तेय मूर्तयः सम्भवन्ति याः ।
तासां ब्रह्म महद्योनिरहं बीजप्रदः पिता ।। ४ ।।

ஸர்வயோனிஷு கௌந்தேய மூர்தயः ஸம்பவந்தி யாः।
தாஸாம் ப்ரம்ஹ மஹத்யோநிரஹம் பீஜ ப்ரதः பிதா ।। 4

ப்ரபஞ்சம் முழுவதும் பகவத் ஸ்வரூபமே என்பதை ப்ரிதிபாதித்தல்

இக்காரணத்தால் நான் பிதா இந்த மாயை மாதா எங்கள் இருவர் குழந்தை ஜகத் என்னும் பெருத்த தோற்றம். அநேகமான தேஹங்கள் ஏற்பட்டிருப்பதைப் பார்த்து நீ உன் மனஸில் பேத புத்தியைப் பாராட்டிக் கொள்ள வேண்டாம். ஏனென்றால் ஸர்வதேஹங்களிலும் உள்ள மனது

புத்தி முதலிய தத்வங்கள் ஒன்றே; ஒரே தேஹத்தில் விசித்ர விசித்ரமாய் அவயவங்கள் எற்பட்டிருப்பது போலும், இந்த விச்வம் முழுதும் ஒரே தேஹமாய் இருப்பதாக நீ பாவிக்கவேண்டும். பார், ஒரே விதையினின்றுண்டான ஓர் மரத்தில், மேலும் கீழுமாயும் அநேக உருவங்கள் படைத்தனவாயும் வேறு வேறு கிளைகள் இருப்பது போலும் மண்ணுக்குக் குடம் என்பது பிள்ளை (மண்ணினின்று நேராக குடம் உண்டாவதால் குடம் மண்ணுக்குப்பிள்ளை என்றும், பஞ்சு நூலாய் நூலினின்று வஸ்த்ரம் உண்டாகிறதால் வஸ்த்ரம் பஞ்சுக்கு பேரன் என்றும் சொல்லப்படுகிறது,) ஆவது போலும் அலைகளின் பரம்பரை யானது ஸமுத்திரத்தின் ஸந்ததியாவது போலும் எனக்கும் இந்த ஜகத்துக்கு முள்ள ஸம்பந்தம் இருக்கிறது. நெருப்பும் அதினுடைய ஜ்வாலையும் நெருப்பே ஆவது போலும், நானே ஸகல ஜகத்துமாய் இருக்கிறேன். ஸம்பந்தம் என்பது உண்மையற்ற வீண்வார்த்தையே. என்னிடத்தினின்று உண்டான ஜகத்தால் நான் மறைக்கப்பட்டுப் போகும் போது, ஜகத் ரூபமாய் ஸ்புரிக்கிறவன் எவன்? மாணிக்கம் தன்னொளியால் மறைபட்டுப் போகிறதா? தங்கம் நகைகளாய் அமைந்த பின், அதின் தங்கத்தன்மை இல்லாமற் போகிறதா? தாமரைப்பூ விகஸித்தபின், அதின் தாமரைத்தன்மை இல்லாமற் போகிறதா? அவயவியான தேஹம் அவயவங்களால் மறைக்கப்பட்டுப் போகிறதா? அவயவங்களே அதற்கு சோபையை உண்டாக்கி வைக்கின்றன. ஓர் சோள விதையானது விதைக்கப்பட்டு சோளப்பயிராய் வளர்ந்து சோளக்கதிர் உண்டான பிறகு, அந்த விதை நஷ்டமாய்ப் போய் விட்டதா என்ன?

ஆகவே ஜகத்தை ஓர் பக்கமாய் ஒதுக்கி வைத்துப்போட்டு. என்னைப் பார்க்க வேண்டுமென்றால், நான் அப்படித் தனித்தவனாக இல்லையே, எல்லா ஜகத்தும் நானே அல்லவா? இந்த ஸித்தாந்தத்தில் ஓர் விதமான ஸந்தேஹமுமற்றவனாய் இதை உன்னுடைய அந்தராத்மாவிலுறுதியாய் முடிபோட்டு வைத்துக்கொள்ள வேண்டும். கீழே விவரிக்கப்பட்டுள்ள தேஹங்களில் வேறு வேறு குணங்களால் கட்டுப்பட்டவனாய் நானே காணப்படுகிறேன். எப்படி ஒருவன் ஸ்வப்நத்தில் தான் செத்துப் போய் விட்டதாகப் பார்த்து துக்கப்படுவானோ, எப்படி மஞ்சட்காமாலை என்னும் நோயினால் பீடிக்கப்பட்ட ஒருவன் கண் மஞ்சளாய்ப் போய், ஸர்வத்தையும் மஞ்சள் வர்ணமுள்ளதாய் பார்க்கிறதோ, எப்படி மேகமானது அதன் பின்னிருக்கும் ஸூர்யனுடைய

ப்ரகாசத்தை அடைந்து தான் ப்ரகாசமயமாய்த் தோன்றி, ஸூர்யனை மறைத்து விடுகிறதோ, ஒருவன் தன் நிழலைப் பார்த்து வேறொருவன் என்றெண்ணி, பயப்பட்டுப் போகும்போது, ஏப்படி அவன் அந்நிழலைக் காட்டிலும் வேறுபட்டவனாவதில்லையோ,அப்படியே இந்த அநேகமான தேஹங்களை நானே தோன்றச்செய்து அவற்றிற்குள் பலவகைப்பட்டவனாய் நானே இருக்கிறேன்.

இப்படி ஏற்படும் ஓர் பந்தத்தை (தேஹத்தோடு கட்டுப்பட்டிருக்கையை) நானே பார்க்கிறேன். பக்தன் என்றும் முக்தன் என்றும் அறிவது, என் ஸ்வரூபத்தில் நானே என்னுடைய அஞ்ஞானத்தினால் ஏற்படுத்திக்கொண்ட கல்பனையே. பின்பு எந்த குணங்களால் நானே எனக்கு பந்தமாய் காணப்படுகிறேன் என்பதை மேலே சொல்வேன் கேள்; அர்ஜுநா. குணங்கள் எத்தனை அவற்றின் தர்மங்கள் எவை, அவற்றின் உருவமும் பெயரும் என்ன, எங்கிருந்து அவை உண்டாயின, இப்படிப்பட்ட ரஹஸ்யங்களனைத்தையும் விளங்கச் செய்வேன், கேள்.

सत्त्वं रजस्तम इति गुणाः प्रकृतिसम्भवाः ।
निबध्नन्ति महाबाहो देहे देहिनमव्ययम् ॥५॥

ஸத்த்வம் ரஜஸ்தம இதி குணாः ப்ரக்ருதி ஸம்பபவாः ।
நிபக்நந்தி மஹாபாஹோ தேஹே தேஹிந மவ்யயம் ॥ 5

குணங்களின் ஸ்வரூபம்.-

குணங்கள் மூவகைப் பட்டவையாய் ஸத்வம் ரஜஸ் தமஸ் என்று பெயர் பெற்றிருக்கின்றன.இவற்றிற்கு ஜந்மபூமி ப்ரக்ருதியாகிறது. ஸத்வம் உத்தமமானது. ரஜஸ் மத்யமானது தமஸ் எல்லாவற்றிலும் தாழ்ந்தது. ஒரே தேஹத்தில் பால்யம் யௌவநம் வ்ருத்தாப்யம் என்ற முன்று தசைகள் ஏற்படுவது போலும் இம்முக்குணங்களும் சித்தத்தின் வ்ருத்தியையே ஆச்ரயித்துக் கொண்டு வெளிப்பட்டுத் தோன்றுகின்றன. சுத்தத் தங்கத்தோடு, இதர உலோஹங்கள் சேரச் சேர அதின் நிறை வ்ருத்தியடைந்து மாற்று குறைந்து போவது போலும், தேஹத்தில் ஆலஸ்யம் (சோம்பல்) ஏற்பட்ட உடனே விழிப்பு மறைந்து போய் நித்ரை திடமாய் ஏற்பட்டுக் கொள்வது போலும் ஆத்மஸ்வரூபம் அஞ்ஞானத்தை அங்கீகாரம் செய்து கொண்டபிறகு எந்த வ்ருத்தியானது விஸ்தாரம் அடையத் தொடங்குகிறதோ, அது ஸத்வம் ரஜஸ் தமஸ் என்னும்

குணங்களோடு கூடி,வேறு வேறு வகைப் பட்டதாகிறது, எவற்றின் சேர்க்கையால்,வ்ருத்திகள் இப்படி மாறு பாடடைகின்றனவோ, அவற்றிற்கு குணங்கள் என்று பெயர். அக்குணங்கள் எப்படி ஆத்மாவுக்கு பந்தத்தை உண்டாக்கி வைக்கின்றனவோ, அதின் ப்ரகாரத்தைச் சொல்வேன்,கேள். மீனின் வாயில் தூண்டியில் உள்ள மாம்ஸ உண்டை விழுந்த உடனேயே, மீன் பிடிக்கிறவன் தூண்டியைச் சொடுக்கி, தூண்டி முள்ளை மீனின் தொண்டையில் தைத்துக் கொள்ளச் செய்து அதின் ப்ராணனை வாங்கி விடுவது போலும், ஆத்மாவானது ஷேத்ரஞ்ஞ தசையை அடைவதற்கு கொஞ்சம் ப்ரயத்நம் செய்யும் போதே அதாவது இந்த தேஹம் நான் என்று எப்போது ஸங்கல்பித்துக் கொள்கிறதோ அப்போதே, தேஹத்தில் மமத்வபுத்தி அதிகரித்து, ஜந்மம் முதலாக மரணம் ஈறாக, தேஹ தர்மங்களாகிய துக்கங்கள் அனைத்தையும் அது அநுபவிக்கும்படியாய் ஏற்படுகிறது.

तत्र सत्त्वं निर्मलत्वात्प्रकाशकमनामयम् ।
सुखसङ्गेन बध्नाति ज्ञानसङ्गेन चानघ ।।६।।

தத்ர ஸத்த்வம் நிர்மலத்வாத் ப்ரகாஶக மநாமயம்।
ஸுகஸங்கேன பத்நாதி க்ஞான ஸங்கேன சாநக ॥ 6

ஸத்வகுணத்தால் ஏற்படும் பந்தம் –

ஆகவே ஸத்வம் என்னும் வேடன் ஸுகம் ஞானம் என்னும் பாசத்தில் ஜீவனை சிக்க வைக்கிறான். அப்படிச் சிக்கிப்போனபின், வலையிற் சிக்கிப்போன மானைப்போல், ஜீவன் தடபடற் படுகிறான். பின்பு ஞானபிமானத்தை அடைந்து, துர்குணமுள்ள மாடுபோல் அவன் கூத்தாடிக் கொண்டு, இயற்கையாகவே ஆத்மஸ்வரூபத்தில் அமைந்திருக்கும் ஸுகத்தைப் போக்கிக் கொள்கிறான். அவன் வித்யையை அடைந்திருக்கும் ஓர் பெருமையைப் பாராட்டிக் கொண்டு, ஸந்தோஷப்பட்டு, அல்பலாபத்தால் ஸந்தோஷம் பெருகி, தான் ஸுகி என்று நினைத்துக் கொண்டு தன்னைத் தானே கொண்டாடத் தலைபடுகிறான். பின்பு தானே பாக்யசாலியென்றும், தன்னைப்போல் ஸுகம் படைத்தவர்கள் வேறொருவரும் இல்லையென்றும், சொல்லிக் கொண்டு எண்வகைப்பட்ட ஸாத்விகபாவங்களால் அவன் பூரித்துப் போகிறான்.

இது போதாமல் மற்றோர் தோஷமும் அவனைப் பற்றிக் கொள்கிறது. தானே வித்வானென்று கர்வம் பாராட்டிக் கொள்ளல் என்னும் பிசாசு அவனைப் பிடித்துக் கொள்கிறது. தான் இயற்கையாகவே ஞானஸ்வரூபி என்பதின் அறிவு முற்றிலும் நஷ்டமாய்ப் போய் அந்த விஷயத்தில் யாதொரு துக்கமும் அடையாதவனாய், கேவல விஷய (ஞானப்ராப்தியால்) ஆகாசம்போல் உப்பிப் போகிறான். ஓரரச்ன் ஸ்வப்நத்தில் பிச்சைக்காரனாய்ப் போனதாய் எண்ணிக் கொண்டு, பிச்சை யதிகமாகக் கிடைத்து விட்டதாய்க் கனவு கண்டு, தானே இந்த்ரன் என்றெண்ணிக் கொண்டாற் போலும், தேஹாதீதனான ஆத்மா தேஹத்திற் சிக்கிப் போய், பாஹ்யமான விஷயங்களின் ஞானப்ராப்தியால் அவன் ஸந்தோஷித்து கொள்ளத் தலைப்படுகிறான். அவனுக்கு ப்ரவ்ருத்தி சாஸ்திரங்கள் முழுமையும் தெரியும் அவன் யஞ்ஞவிதிகளை பூர்ணமாய் அறிந்தவன் ஆவான். ஸ்வர்க்க லோகத்தில் நடக்கும் விஷயங்களை அவன் அறிந்து சொல்வான். அன்றியும் தன்னைத் தவிர ஒருவனும் ஞானம் படைத்தவன் ஆகானென்றும், தனது மனது சாதுர்யம் என்னும் சந்த்ரன் ஸஞ்சரிக்கும் ஆகாசம் என்றும், அவன் சொல்லிக் கொள்வான். ஓர் முடவன், ஓர் எருதின் முதுகின்மேல் உட்கார்ந்துக் கொண்டு, அதின் காதைப் பிழிந்து அதைத் தன்னிஷ்டப்படி நடக்கச் செய்வது போலும், ஸத்வகுணமானது ஜீவன்மேல் ஏறிக் கொண்டு, அவன் காதை முறுக்கி, அவனைத் தன்னிஷ்டப்படி யெல்லாம் ஆட்டிவைக்கிறது. இனி ரஜோகுணம் ஆத்மாவை இந்தச் சரீரத்தோடு கட்டிவைத்து எப்படி ஆட்டிவைக்கிறது என்பதைச் சொல்வேன் கேள்.

रजो रागात्मकं विद्धि तृष्णासङ्गसमुद्भवम् ।
तन्निबध्नाति कौन्तेय कर्मसङ्गेन देहिनम् ।।७।।

ராஜோ ராகாத்மகம் வித்தி த்ருஷ்ணா ஸங்க ஸமுத்பவம் ।
தந்நிபக்நாதி கௌந்தேய கர்மஸங்கேன தேஹினம் ॥ 7

ரஜோகுணத்தால் ஏற்படும் பந்தம் –

இந்த ரஜோகுணம் ஜீவனை ரஞ்சித்து வைக்கிறதாலும், காமவாஸனையை எப்போதும்எழுப்பி வைக்கிறதாலும் ரஜஸ்ஸென்று சொல்லப்படுகிறது. இதின் அல்பாம்சம் ஜிவனுக்குள் ப்ரவேசித்த உடன் அந்த ஜீவன் காமவாஸனைகளுக்கு வசப்பட்டு ஆசைப் பிடித்துப் போய்,

அங்குமிங்கும் அலைந்து திரியத் தலைபடுகிறான். அக்நி குண்டத்தில் உள்ள அக்நியின் மேல், நெய்யை வார்த்த உடன் அது வஜ்ராக்நியாகப் பெருத்து, (இடி விழுந்தால் பற்றிக் கொள்ளும் அக்நியாக) சின்னது பெரிது என்று பாராமல் அனைத்தையும் நாசம் செய்து விடுவது போலும் வாஸனை வ்ருத்தி அடையும் படியும், துக்கமே ஸுகமாகத் தோன்றும்படியும் இந்த்ர பதவி கூட போதாதென்று தோன்றும்படியும், இந்த ரஜோகுணம் செய்து வைக்கிறது. அப்படி ஆசை வ்ருத்தியடைந்த பின் மேருபர்வதமே கைக்குக் கிட்டிப் போனாற் கூட அதைக் காட்டிலும் பெரிதான ஓர் வஸ்து கிடைக்க வேண்டுமென்று தோன்றும். இந்த ரஜஸ் ஓர் கவடிக்காக உயிரைக் கூடப் போக்கி விடுவதற்கு ஸித்தமாகும்படி செய்து வைத்து, ஆசைப்பட்ட ஓர் அல்பமான வஸ்துவின் லாபத்தால் தான் ஜீவனாய் ஜந்மித்தத்திற்கு ஸாதித்துக் கொள்ளவேண்டிய தனைத்ததையும் ஸாதித்துக் கொண்டாற்போல் தோன்றும்படி செய்து வைக்கும். கையில் இருக்கப்பட்டது இன்று செலவழிந்து போன பின் நாளைக்குச்செய்வது என்ன? என்று இக்குணத்துக்கு வசப்பட்வன் நினைத்து பெருத்த பெருத்த வ்யாபாரங்களை தனக்கு ஏற்படுத்திக் கொள்வான்.

தான் ஸ்வர்க்கத்துக்குப் போய்ச் சேர்ந்தால், அங்கு புசிப்பதற்கு ஏதேனும், வேண்டுமேயென்று நினைத்து, யாகங்களைச் செய்து முடிப்பதில் அவன் த்வரை பாராட்டி நிற்பான். வ்ரதத்தின் மேல் வ்ரதங்ககளையும், இஷ்டாபூர்த்தங்களையும் அவன் ஆசரித்துக் கொண்டு காமனா பூர்த்தி செய்து கொடுக்காத எதையும் கையாற் றொடான், வேநிற்காலத்தின் முடிவில், அடிக்கும் ஆடிமாஸத்துக் காற்றுக்கு ஓய்வென்பது இராதது போலும், ராத்ரிப் பகல் ஓயாமல் வ்யவஹாரங்களை அவன் நடத்திக் கொண்டிருப்பான். மத்யஸ்த்துக்கும் ஸ்த்ரீயின் பார்வைக்கும், மின்னலுக்கும் ஏற்பட்டுள்ள சாஞ்சல்யம் எவ்வளவு மாத்ரம்? அவற்றைக் காட்டிலும் வாஞ்சல்யத்தில் விஞ்சியிருக்கும் வேகத்துடன், ஸ்வர்க்கீய ஸாம்ஸாரிக ஸுகங்களைத் தேடிக் கொள்ள விரும்பி கர்மங்களில் தலை காற்றெரியாமல் முழுகி கிடப்பான். தேஹத்திலிருந்து கொண்டு தேஹத்தைக் காட்டிலும் வேறான ஜீவன், இவ்வகைப்பட்ட ரஜோகுணத்தின் ஸம்பந்தத்தால் ஆசை என்னும் சங்கிலியைக் கழுத்தில் மாட்டிக் கொண்டு வ்யவஹாரங்களை ஸதா செய்து முடிப்பதில் ஏற்படும் கஷ்டங்களை அநுபவித்துக் கொண்டிருப்பான். தேஹியான ஜீவனுக்கு ரஜோகுண

ஸம்பந்தத்தால், தேஹத்தோடு ஏற்படும் பந்தம் இவ்வளவு பயங்கரமாய் இருக்கிறது: இனி தமோகுணம் என்னென்ன வேடிக்கைகளை செய்து வைக்கிறதோ, அவற்றைச்சொல்வேன் கேள்.

तमस्त्वज्ञानजं विद्धि मोहनं सर्वदेहिनाम् ।
प्रमादालस्यनिद्राभिस्तन्निबध्नाति भारत ।।८।।

தமஸ் த்வக்ஞானஜம் வித்தி மோஹனம் ஸர்வ தேஹினாம்।
ப்ரமாதா லஸ்ய நித்ராபிஸ் தன் நிபக்நாதி பாரத ॥ 8

தமோகுணத்தால் ஏற்படும் பந்தத்தின் ப்ரகாரம்

இந்த தமோகுணத்தின் சேர்க்கையால் வ்யாவஹாரிக த்ருஷ்டியின் பார்வைக் கூட மங்கிப் போகிறது.மோஹம் என்னும் ராத்திரியின் மையிருட்டால் அமைந்த மேகம் என்றிதைச் சொல்லலாம். இது அஞ்ஞானத்தையே ஜீவநாதாராமாய் உடைத்தானது. இதொன்றின் ஸம்பந்தத்தால் விச்வம் முழுமையும் அறிவற்றுப் போனதாய், தாறுமாறாய்க் கூத்தாடுகிறது. அவிவேகத்தை யுண்டாக்கி வைப்பதற்கு உத்தமமான மந்த்ரமென்றும், மூடத்தனம் என்னும் கள் நிறைந்த பாத்ரம் என்றும், ஜீவனுக்கு மோஹத்தை உண்டாக்கி வைக்கும் மோஹநாஸ்த்ரம் என்றும் இதைச் சொல்ல வேண்டும். இவ்வகைப்பட்ட லஷணங்களுள்ளதே தமோகுணமாகும். இது தேஹத்தை ஆத்மா வென்று நினைக்கிறவர்களை, ஸர்வவிதமாயும் பந்தப்படுத்தி வைக்கிறது. சராசரத்தில் உள்ள எந்த பூதமானாலும் ஸரியே, அதின் சரீரத்தில் இது வ்ருத்தி அடையத் தொடங்கினால் பின்பு அங்கே வேறு யாதொன்றின் அதிகாரமும் செல்ல முடியாமற் போகிறது. இது ஸர்வேந்திரியங்களிலும் ஜடத்வத்தையும், மனஸில் மௌட்யத்தையும், தேஹத்தில் திடமான ஆலஸ்யத்தையும், உண்டுபண்ணி வைக்கிறது. இதின் சேர்க்கை எவனுக்கு ஏற்பட்டதோ அவன் தேஹம் எல்லாம் முறித்துக் கொண்டு, எந்த வேலையிலும் ருசியற்றவனாய், அடிக்கடி கொட்டாவி விட்டுக் கொண்டிருப்பான்.

கண்திறந்திருக்கும் போதே முன்னிருப்பது அவனுக்குத் தெரியாது. யாரும் கூப்பிடாதிருக்கும்போதே அடிக்கடி ஓ என்று சொல்லிக் கொண்டு, அவன் எழுந்திருப்பான். ஓர் பெருத்த பாறை கீழே விழுந்தால் பக்கத்துக்குப் பக்கம் புரளாமல் எப்படி விழுந்த படியே கிடக்குமோ, அப்படியே

இக்குணம் வ்யாபித்துக் கொண்ட ஒருவன் தொப்பென்று கீழே விழுந்து, பக்கத்துப் பக்கம் புரள்ளாமற் கிடந்து தூங்குவான். பூமி பாதாளத்தில் அழுந்திப் போகட்டும்; ஆகாசமே அவன்மேல் இடிந்து விழட்டும்; எழுந்திருக்க வேண்டும் என்று அவனுக்குத் தோன்றாது.

அவன் உசிதானுசிதங்களை அறியான்; ஓர் காரியமும் செய்ய ப்ரியப்படான். இருந்த இடத்திலேயே கீழே விழுந்து புரள வேண்டும் என்று அவன் புத்திக்குத் தோன்றும் அவன் கையிரண்டையும் தூக்கி விரலோடுவிரல் கோத்து, கையைத் தலைமேல் வைத்து, தலையை இரண்டு முழங்கால் நடுவில் இட்டுக் கொண்டு குந்திக் கொண்டு உட்கார்ந்து கொள்வான் பின்பு காடமான நித்ரை ஏற்பட்டு அந்த நித்ராஸுகத்துக்குமுன், ஸ்வர்க்கஸுகத்தில் ஓர் ப்ரயோஜநமுமில்லை யென்று அவன் நினைப்பான். ப்ரஹ்மாவின் ஆயுள் முடிந்து போவதாயிருந்தாலும், தூங்கிக்கொண்டேயிருக்க வேண்டுமென்று அவன் நினைப்பான். அவனுக்குத் தூங்க வேண்டு மென்பதைத்தவிர வேறொராசையும் இராது. வழி நடந்து போகும் போது, இளைப்பாற உட்கார்ந்த இடத்திலேயே சாய்ந்து கொண்டு கண்ணை மூடிக்கொண்டு தூங்கிப் போவான். அப்போது அம்ருதத்தை அவனுக்குக் கொடுத்தாற் கூட அதை அவன் சாப்பிடமாட்டான்.

இப்படி இருக்கையில், "ஐய்யய்யோ கஷ்டமே," என்றும் பெரும் கூச்சல் போட்டுக்கொண்டு ஏதேனும் ஓர் காலத்தில் ஓர் வேலையைச் செய்யத் தொடங்குவான். அப்போது குருடனுக்கு கோபம் வந்தால் எப்படியோ அப்படியே அவன் வ்யாபாரம் முழுவதும் இருக்கும். எப்போது எப்படி நடக்கவேண்டு .மென்றும் எவர்களோடு எப்படிப் பேச வேண்டும் என்றும், எக்கார்யம் செய்யத் தக்கது எது செய்யத் தகாதது என்றும் அவன் அறியான். காட்டுத்தீ பற்றி யெரியும் போது விட்டில் பூச்சியானது தன்னுடைய இரக்கைகளுக்குள் அதனைத்தையும் பற்றிக் கொள்ளக் கருதி அதன் மேல் விழுவது போலும் ஸாஹஸமான க்ருத்யங்கள் செய்கிறவனாய். நிஷித்த கர்மங்களில் ப்ரவர்த்திக்க ஆசைப்பட்டவனாய், சுருக்கிச் சொல்ல முற்றிலும் பகுத்தறிவற்றவனாய், வேலைகள் செய்வதே அவனுக்கு ருசித்திருக்கும். உபாதியற்று சுத்தமாய் இருக்கும் ஆத்மாவை, தமோகுணமானது நித்ரை ஆலஸ்யம் ப்ரமாதம் (முன் ஜாக்ரதையில்லாமை) என்ற மூன்று விதமான பந்தங்களால் கட்டிவைக்கிறது. ஓர் கட்டையில் நெருப்பு பற்றி

கொண்டால், நெருப்பு அக்கட்டையின் உருவு கொண்ட்தாயும், ஆகாசம் ஓர் குடத்தால் வரை அறுக்கப்பட்டுப் போனபின் கடாகாசம் என்றும், வ்யவஹரிக்கப்படுவது போலும், ஜலம் நிறைந்துள்ள ஓர் தடாகத்தில் சந்த்ரனுடைய ப்ரதிபிம்பம் காணப்படும் போது சந்திரனே அதில் முழுகிக்கிடப்பதாய் தோன்றுவது போலும் குணங்களுடைய சேஷ்டைகளின் தோற்றத்தால், ஆத்மா கட்டுப்பட்டுப் போனதாகத் தோன்றுகிறது.

सत्त्वं सुखे सञ्जयति रजः कर्मणि भारत ।
ज्ञानमावृत्य तु तमः प्रमादे सञ्जयत्युत ।।९।।
रजस्तमश्चाभिभूय सत्त्वं भवति भारत ।
रजः सत्त्वं तमश्चैव तमः सत्त्वं रजस्तथा ।।१०।।

ஸத்த்வம் ஸுகே ஸஞ்ஜயதி ரஜ: கர்மணி பாரத ।
க்ஞான மாவ்ருத்ய து தம: ப்ரமாதே ஸஞ்ஜயத்யுத ॥ 9

ரஜஸ் தமஶ்சாபி பூய ஸத்த்வம் பவ்தி பாரத ।
ரஜஸ் ஸத்த்வம் தமஶ்சைவ தம: ஸத்த்வம் ரஜஸ் ததா ॥ 10

முக்குணங்கள் செய்துவைக்கும் கார்யம்

பாரப்பா, எப்போது கபத்தையும் வாதத்தையும் துரத்தியடித்துவிட்டு, தேஹத்தில் பித்தமே அதிகாரம் செலுத்தத் தொடங்குகிறதோ, அப்போது அது தேஹத்தை மிக்க தாபத்தோடு கூடியதாய்ச் செய்து வைப்பது போலும், மழையுயம் வெய்யிலையும் ஜயித்துவிட்டு குளிர் தலை யெடுக்கும்போது, ஆகாசமே குளிராய்ப் போய் விடுவது போலும், அல்லது ஸ்வப்ந ஜாக்ருதவஸ்தைகள் மாறிப்போய் ஸுஷுப்தி ஏற்படும் போது சித்தவ்ருத்தி சாந்தமாய்ப் போவது போலும், எப்போது ரஜஸ்ஸையும் தமஸ்ஸையும் அபஜயப்படுத்தி விட்டு ஸத்வம் தலை யெடுக்கிறதோ அப்போது அது ஜீவனை தான் மிக்க ஸுகி யல்லவா என்று சொல்லிக் கொள்ளும் படியாய்ச் செய்து வைக்கிறது அப்படியே ஸத்வமும் ரஜஸ்ஸு மறைந்துபோய் தமஸ் தலை யெடுக்கும்போது ஜீவன் அஜாக்ருதை உள்ளவன் ஆகிறான். அப்படியே ஸத்வத்தையும் தமஸ்ஸையும் விழுங்கிவிட்டு ரஜோகுணம் தலையெடுத்து அதிகாரம் செலுத்தும்போது, தேஹத்தில் ராஜ்யம் செய்யும் ஜீவனுக்கு கர்மங்களைச் செய்து

கொண்டிருப்பதைத் தவிர வேறொன்றும் ருசிக்காது. கீழ் சென்றுபோன ச்லோகங்களால் முக்குணங்களுடைய லஷணங்கள் சொல்லப்பட்டுத் தீர்ந்தன. இனி அவற்றின் பெருக்கின் லஷணங்களைச் சொல்வேன். கவனித்துக்கேள்.

सर्वद्वारेषु देहेऽस्मिन्प्रकाश उपजायते ।
ज्ञानं यदा तदा विद्याद्विवृद्धं सत्त्वमित्युत ।।११।।
लोभः प्रवृत्तिरारम्भः कर्मणामशमः स्पृहा ।
रजस्येतानि जायन्ते विवृद्धे भरतर्षभ ।।१२।।
अप्रकाशोऽप्रवृत्तिश्च प्रमादो मोह एव च ।
तमस्येतानि जायन्ते विवृद्धे कुरुनन्दन ।।१३।।
यदा सत्त्वे प्रवृद्धे तु प्रलयं याति देहभृत् ।
तदोत्तमविदां लोकानमलान्प्रतिपद्यते ।।१४।।
रजसि प्रलयं गत्वा कर्मसङ्गिषु जायते ।
तथा प्रलीनस्तमसि मूढयोनिषु जायते ।।१५।।

सर्वद्वारेषु देहेऽस्मिन् प्रकाश उपजायते ।
ज्ञानं यदा तदा विद्यात् विवृद्धं सत्त्वमित्युत ॥ 11

लोभः प्रवृत्तिरारम्भः कर्मणामशमः स्पृहा ।
रजस्येतानि जायन्ते विवृद्धे भरतर्षभ ॥ 12

अप्रकाशोऽप्रवृत्तिश्च प्रमादो मोह एव च ।
तमस्येतानि जायन्ते विवृद्धे कुरुनन्दन ॥ 13

यदा सत्त्वे प्रवृद्धे तु प्रलयं याति देहभृत् ।
तदोत्तमविदां लोका नमलान् प्रति पद्यते ॥ 14

रजसि प्रलयं कत्वा कर्मसङ्गिषु जायते ।
तदा प्रलीनस्तमसि मूढयोनिषु जायते ॥ 15

ஸத்வகுணத்தின் ஆதிக்யத்தால் ஏற்படும் லஷணங்கள்

ரஜஸ்ஸையும் தமஸ்ஸையும் அபஜயப்படுத்தி இந்த தேஹத்தில் ஸத்வம் ப்ரபலமாய் அதிகாரம் செலுத்துவதின்

லஷணங்கள், இப்படி இருக்கும். வஸந்தருதுவில் பூத்த தாமரைப் பூவினின்று அதின் வாஸனை வெளிப்பட்டு நாலுபக்கத்திலும் பரவுவது போலும் ஸத்வம் தலை யெடுத்த தசையில் ஞானம் ஆத்மாவுக்குள் நிறைந்து அதில் அடங்காமல் வெளிவழியத் தொடங்கும். ஸர்வேந்த்ரியங்களுமே நல்லது கெட்டது பகுத்தறியும் ஞாநம் படைத்தவைகளாய், கைகளுக்கும் கால்களுக்கும் உண்மையாகவே ஞாநக்கண்கள் ஏற்பட்டுவிடும். நீரோடு பால் கலந்திருக்க, ராஜஹம்ஸம் எப்படித் தன் மூக்கினாலேயே பாலையும நீரையும் வேறுபடுத்தி விடுமோ, அப்படியே இந்திரியங்களே பாபபுண்யங்களைப் பகுத்தறியும் விஷயத்தில் சக்திபடைத்தன வாய்விடும். பின்பு நியமம் என்பது அவனுக்கு ஸேவகனாய் அமைந்து நிற்கும். எதைக் கேட்கக் கூடாதோ, அதைக் காதே விலக்கி வைத்து விடும். எதைப் பார்க்கக் கூடாதோ, அதைக் கண்ணே ஒதுக்கி வைக்கும். சொல்லக் கூடாததை, நாக்கே சொல்லாமல் மறுத்துவிடும். தீபத்தின் முன் நிற்க முடியாமல் இருட்டு எப்படி ஓட்டமெடுக்கிறதோ, அப்படியே நிஷித்த விஷயங்கள் இந்த்ரியங்கள் முன் நிற்க முடியாமல் தாமாகவே விலகிப் போய் விடும். வர்ஷாகாலத்திற் பொங்கும் மஹாநதிகளைப் போல் சாஸ்த்ர விசாரங்களில் புத்தியின் ஸாமர்த்யம் மேன்மேலும் அதிகரிக்கும்.

அப்பா எப்படி பௌர்ணமையில் சந்த்ரனுடைய ப்ரகாசம் ஆகாசம் முழுவதையும் வ்யாபித்துக் கொள்ளுமோ அப்படியே இத்தசையில் மனஸின் வ்ருத்திக ளனைத்தும் ஞான விஷயங்களிலேயே ஸஞ்சரிக்கத் தொடங்கும், வாஸனைக ளெல்லாம் ஞான விஷயங்களிலேயே ப்ரவர்த்திக்க வேண்டுமென்று, ஒன்றுபட்டுப் போய், கர்மங்களில் ப்ரவருத்தி முற்றிலும் ஓய்வடைந்து மனஸுக்கு விஷயங்கள்மேல் வெறுப் பேற்பட்டு விடும். எப்போது ஸத்வகுணத்தின் பெருக்கு ஏற்படுமோ அப்போது இவ்வகைப்பட்ட லஷணங்களனைத்தும் ஏற்பட்டு விடும். எங்கும் பஞ்ச காலம் முடிந்து, ஸுபிக்ஷம் ஏற்பட்டு பெருத்த பண்டிகையும் ஏற்பட்டு, ஒருவனுடைய ப்ரீதிக்குப் பாத்ரமான முன்னோர்கள் ஸ்வர்க்கத்தினின்று விருந்தாடிகளாய் வந்து சேர்ந்து, அவன் வீட்டில் செல்வத்தின் பெருக்கு மிகுந்ததாய் ஏற்பட்டு, அப்படியே அவனுடைய மனஸும் உதார மானதாயும் தைர்யம் படைத்ததாயும் ஏற்பட்டு விட்டால், பரலோகத்தில் ஸுகமும், இந்த லோகத்தில் கீர்த்தியும், ஏன் அவனுக்கு ஏற்படாமற் போகும்? இப்படி ஸதா சாரத்தோடு கூடியவனுக்கு வேறு முடிவுமுண்டா? அப்படியே ஸத்வகுணம்

தலையெடுத்திருக்கும் காலத்தில் மரணம் நேரிட்டால், அவனுக்கு நற்கதியைத் தவிர வேறொன்று ஏற்படுமா? ஸ்வதர்மத்தை நன்றாய் அநுஷ்டித்துக் கொண்டு வருகிறவனுக்கு மரணம் நேரிட்டால் அவன் ப்ராரப்தகர்மபல போகத்தால் தேய்ந்து போன தேஹத்தைத் தள்ளிவிட்டு, உத்தமமான ஸத்வகுணத்தை மாத்ரம் எடுத்துக் கொண்டு போகிறான்.

இப்படிப்பட்ட மரணம் ஒருவனுக்கு யாத்ருச்சிகமாகக் கிடைக்கு மேயானால், அவன் கேவல ஸத்வத்தின் மூர்த்தியாகவே போய். ஞானிகளின் குலத்திற் திரும்பவும் ஜந்மம் எடுப்பான். ஒரரசன் தன்னுடைய பரிவாரங்களோடு கூட ஓர் ம்லையின் சிகரத்தில் போய் உட்கார்ந்து கொண்டால் அங்கே அவனுடைய மநோரதங்கள் பூர்த்தியடையாமற் போகுமா? ஹே அர்ஜுநா நீயே சொல். அன்றியும் இவ்வூரில் இருக்கும் தீபத்தை மற்றோர் ஊருக்கு எடுத்துக் கொண்டு போனால், அங்கும் அது தீபமாகவே தான் இருக்கு மல்லவா. ஸத்வகுணத்தின் ஆதிக்யத்தால் ஞானம் வ்ருத்தியடைந்து புத்தி தத்வவிசாரம் செய்து கொண்டிருப்பதிலேயே புரண்டு கொண்டிருந்து மஹத்தத்வம் முதலியவற்றின் வரலாற்றைப் பூர்ணமாய் விசாரித்து, அவை ஆத்மா வல்லவென்ற றிந்து ஆத்மஸ்வரூபத்தை கண்டுகொண்டு அதில் நிலை பெற்று ஷேத்ரம் என்பதின் முப்பத்தாறு அம்சங்களையும் தாண்டி முப்பத்தேழாவதாய் நிற்கிறதும், ஸாங்க்யங்களின் இருபத்து நாலு தத்வங்களையும் தாண்டி இருபத்தைந்தாவதாய் நிற்கிறதும், முக்குணங்களையும் தாண்டி துரீயமாய் நிற்கிறதும் இப்படி எல்லாவற்றைக் காட்டிலும் உயர்ந்ததுமான ஆத்ம ஸ்வரூபம் எதுவோ, அதை எவர்கள் நன்கறிந்திருப் பார்களோ அவர்கள் குலத்தில் பிறத்தல் என்னும் ஸர்வோத்தமமான ஓர் ஜந்மம் அவனுக்கு ஏற்படுகிறது.

ரஜோகுணம் தலையெடுத்ததின் லக்ஷணங்கள்

தமோகுணத்தையும் ஸத்வகுணத்தையும் கீழே அழுத்திவிட்டு ரஜோகுணம் தலையெடுத்து சரீரமென்னும் ஊரிற்றன்னுடைய தடபடலை வெளிப்படுத்தி வைக்கும் போது அதின் லக்ஷணங்கள் இப்படி ஏற்படும். பெருங்காற்று வேகமாய் வீசத் தொடங்கினால் அது எல்லா வஸ்துக்களையும் ஒன்றடிமன்றடியாய்ச் செய்து வைத்து, அவற்றை ஆகாசத்தில் பறக்கச் செய்வது போலும், இந்திரியங்கள் விஷயங்களின்மேல் ஒரே மண்டாய் மண்டத்தலைப்படும். பரஸ்த்ரீகள்,

ரஜோகுணம். அதிகரித்தவனுடைய கண்ணிற் பட்டால் அவர்களைப் புசிப்பது கூடாதென்று தோன்றாமல், ஆடு எல்லாவற்றையும் கடித்துத்தின்றுவிடுவது போல், அவன் தன் மனம் போனபடியெல்லாம் அவர்களைப் புசிப்பான். அவனிடத்தில் ஆசை மிக்க பெருத்து அவன் தன் கைக்குக் கிட்டியதையெல்லாம் தன்னதென்று கட்டிக் கொள்வான் அப்படிக் கிட்டாததுதான், அவனது ஆகாமல் மிகுந்து நிற்கும். அவன் முன் தோற்றி நிற்பது எவ்விதப்பட்ட வேலையே யாயினும் அது தன்னால் செய்யமுடியாது என்று நினைத்து அதனின்றும் அவன் பின் வாங்கான்.

ஆகவே கோயிற்கள் முதலிய பெருத்த கட்ட்டங்கள் கட்டுதல், அச்வமேதயாகம் செய்தல், இப்படிப்பட்ட மற்ற பெருத்த கார்யங்கள் எவையாயினும் அவற்றைச் செய்து முடிப்பேன் என்று சொல்லிக் கொண்டு அவன் கிளம்புவான். பெரியபட்டணங்களைக் கட்டிவைத்தல், பெருத்த தடாகங்களை நிர்மாணம் செய்தல், பெருத்த வநங்களை விதம் விதமாய் நட்டுப் பயிர் செய்து வைத்தல் இப்படிப்பட்ட பெருத்த பெருத்த காரியங்களை செய்யத் தலைப்படுவான்; அத்துடன் கூட ஐஹிகாமுஷ்மிக ஸுகோபகரணங்கள் எவ்வளவு கிடைத்தாலும் அவன் போதும் என்று சொல்லான். அவனுடைய பேராசை ஸமுத்ரத்தைக் காட்டிலும் விஸ்தாரம் அடைந்ததாயும், நெருப்பைக் காட்டிலும் தீவரமாயும் இருக்கும். அவனுடைய ஆசை மனதைக் காட்டிலும் விரைவாய் ஓடி, உலகம் முழுவதையும் காலால் மிதித்துத் துகைத்துவிடும். ரஜோகுணம் வ்ருத்தியடையும் போது இப்படிப் பட்ட லஷணங்கள் ஏற்படுகினறன. இந்த ஸமயத்தில், ஒருவன் மரணம் அடைந்தால், இப்படிப்பட்ட பரிவாரங்களனைத்தையும் தன்னுடன் கூட்டிக் கொண்டு மறுபடியும் மனுஷ்ய ஜந்மத்தை அடைகிறான். எல்லா ஸுகங்களாலும் நிறைந்த ராஜாவின் அரண்மணையில் பிச்சைக்காரன் போய் உட்கார்ந்து கொண்டதினாலேயே அவன் ராஜாவாய்விடுவானா? மிகவும் ஸ்ரீமானுடைய கல்யாண ஊர்க்கோலத்தோடு கூடவே போன எருதுக்கு, வைக்கோலே தின்ன கிடைக்குமே தவிர பணியாரங்கள் கிடைக்குமா? இரவிற் கூட ஓய் வென்பதில்லாமல் ஸதா உழைத்துத் தீர வேண்டியவர்களுடைய குலத்தில் அவன் பிறப்படைவான். இப்படிப்பட்ட ரஜோகுணத்தின் பெருக்கில முழுகி ப்ராணனை விடுகிறவன் ஞானப்ராப்திக்கே ஆசையில்லாத கேவல காம்ய கர்மங்களை செய்து கொண்டு ஜடப்ராயமாய் இருக்கிறவர்கள் குலத்தில் பிறப்பான்.

தமோகுணம் தலையெடுத்ததால் ஏற்படும் லக்ஷணங்கள்

ரஜோகுண ஸத்வகுணம் இவை இரண்டும் வேலை செய்யாதபடி, இவற்றை விழுங்கி விட்டு தமோகுணம் பொங்கத் தலைப்படும் போது தேஹமெல்லாம் வியாபித்துகொள்ளும் லக்ஷணங்களை இனிச் சொல்வேன் பூர்ணமான கவனத்தோடும் கேள். அமாவாஸ்யையின் ராத்திரியில் ஆகாசம் ஸூர்ய சந்திரர்களுடைய ப்ரகாசமற்றதாயும், கனமான இருட்டால் வ்யாபாபிக்கப்பட்டதாயும் எப்படியிருக்குமோ அப்படியே தமோகுணத்தால் வ்யாபிக்கப்பட்டவனுடைய மனது முற்றிலும் ஸ்பூர்த்தி அற்றுப்போய், நன்மை தீமைகளை விசாரித்தல் என்பதின் பேச்சே அற்றதாய் இருக்கும். புத்தி எவ்விஷயத்தையும் ஆராய்ந்தறிய முடியாததாய், கற்பாறை போல் கெட்டியாய்ப் போய்விடும். ஞாபகம் என்பது வேற்றூருக்குப்போய்விட்டதாய் இருக்கும். சரீரம் எங்கும் அவிவேகத்தின் பெருமையே முழங்கிக் கொண்டிருக்கும். கொடுக்கல் வாங்கலாகிய ஸர்வவ்யவஹாரங்களும் மௌட்யம் என்ற ஒன்றாலேயே நடத்தப்படும். துராசாரம் என்னும் ஈலும்புகள் இந்த்ரியங்களின் முன் புடைத்து நின்று அவற்றில் தைத்துக் கொள்ளும். அதனால் செத்துப் போவதாயிருந்தாலும் அவனுடைய ப்ரவ்ருத்தி துராசாரங்களிலேயே இறங்கும்.

இப்படிப் பட்டவனிடத்தில் மற்றோர் லக்ஷணமும் காணப்படும். ஆந்தைக்கு இருட்டிலேயே கண் தெரிவது போலும். துஷ்கர்மங்கள் செய்வதிலேயே அவனுடைய மனஸு உல்லாஸமடையும். நிஷித்தகர்மங்களின் பேச்சைக் கேட்டமாத்திரத்தில் அது எவ்வளவு தான் செய்யத் தகாததாய் இருந்தாலும் அதைச் செய்ய வேண்டும் என்று அடக்க முடியாத ஓர் ஆசை, அவன் மனஸில் உண்டாய், இந்திரியங்கள் அதைச் செய்ய விரைந்து ஓடும். பைத்யக்காரனைப் போல், கள்ளைக் குடிக்காமலே அவன் தேஹம் தள்ளாடும் ஸந்நி பாதஜ்வர மில்லாமலே அவன் உளறுவான். ப்ரேமையில்லாமலே அவன் அறிவு மயக்கம் அடைவான். புத்தி முற்றிலும் அற்று போயிருக்கும். ஆனால் அது உன்மநீ அவஸ்தை ஆகாது. அவன் மோஹத்தில் அழுந்தி பித்துப் பிடித்தவனா யிருப்பான். இன்னும் வளர்த்திக் கொண்டிருப்பதில் பயன் என்? தமோகுணம் வ்ருத்தியடைந்து தன்னதிகாரத்தைச் செலுத்தத் தொடங்கினால் இவ்வகைப்பட்ட லக்ஷணங்கள் ஏற்படுகின்றன.

இப்படிப்பட்ட ஸ்திதியில் அவனுக்கு மரணம் நேரிடுமானால் இத்தனை தமோகுணத்துடனும் அவன் மறுபடியும் பிறக்கிறான். ஓர் கடுகு செடியானது தன்னுடைய ஸ்வரூபத்தை முழுவதும் தன் விதையில் சேர்த்துவைத்துப் போட்டு செத்துப்போனபின், அவ்விதையினின்று முளைக்கும் செடி கடுகைக் காட்டிலும் வேறு செடியாகுமா? ஓர் நெருப்பில் ஓர் தீபத்தை ஏற்றி வைத்தபின் அந்நெருப்பு அணைந்துபோனால் அந்த தீபஜ்யோதி முழுவதும் அந்நெருப்பே ஆவதுபோலும் தமஸ்ஸையெல்லாம் அந்தராத்மாவில் மூட்டையாகக் கட்டிவைத்துக் கொண்டபின், தேஹம் போனால் மறுபடியும் உண்டாகும் தேஹம் தமோமயமாகவே தான் இருக்கும். இப்படி விஸ்தரித்துப் பேசுவது என்னத்துக்கு? தமோகுணம் வ்ருத்தி அடைந்த ஓர் ஸ்திதியில் எவன் மரணம் அடைகிறானோ அவன் ஓர் ம்ருகமாயாவது, பக்ஷியாயாவது, மரமாயாவது, புழு வாயாவது பிறப்பான்.

कर्मणः सुकृतस्याहुः सात्त्विकं निर्मलं फलम् ।
रजसस्तु फलं दुःखमज्ञानं तमसः फलम् ।।१६।।

கர்மணஃ ஸுக்ருதஸ்யாஹுஃ ஸாத்த்விகம் நிர்மலம் பலம்।
ரஜஸஸ்து பலம் துக்கம் அக்ஞானம் தமஸஃ பலம் ॥ 16

முக்குணங்களின் சேர்க்கையால் ஏற்படும் பலன்

இக்காரணத்தைக் கொண்டு வேதங்களெல்லாம் ஸத்வ குணத்திலிருந்து உண்டாவதை ஸுக்ருதம் என்று சொல்லுகின்றன ஆகையால் ஸத்வ குணத்தினின்று ஸஹஜமாக பவிக்கும் ஸுகமும் ஞானமும் ஸாத்விகமாகும். ராஜஸகுணத்தால் ஏற்படும் க்ரியை இந்த்ராவணி என்னும் செடி வெளிப்பார்வைக்கு அழகாய் தோன்றி உள்ளே கசப்பு நிறைந்திருக்கும் பழங்களைப் பழுத்துப் தருவது போலும், வெளிக்கு ஸுகம்போல் தோன்றி உண்மையில் துக்கமாகவே இருக்கும் பலத்தை பலித்துத் தருகிறது. கசப்பு நார்த்தையின் பழம் தூரத்தில் வாஸனை யுள்ளதாயிருந்து, சாப்பிடும்போது விஷத்தைப்போல் கசப்பது போலும், ரஜோகுணத்தினின்று உண்டாகும் பலன் வெளித்தோற்றத்துக்கு ஸுகமாய்த் தோன்றி உண்மையில் துக்கமாயிருக்கும். விஷமுளைகள் விஷத்தையே பலித்துத்தருவது போல் தாமஸ குணத்தால் ஏற்படும் கர்மங்கள் அஜ்ஞானத்தையே பலித்துத்தரும்.

सत्त्वात्सञ्जायते ज्ञानं रजसो लोभ एव च ।
प्रमादमोहौ तमसो भवतोऽज्ञानमेव च ।।१७।।

सत्त्वात् सञ्जायते क्ज्ञानम् रजसो लोभ एव च ।
प्रमाद मोहौ तमसो भवतोऽक्ज्ञान मेव च ।। 17

इदुवुमदु

हे अर्जुना पगलुक्कु सूर्यने कारणमावदुपोल् ज्ञानत्ततुक्कु सत्वकुणमे कारणमागिरदु. अप्पडियेये लोभत्तुक्कु रजोकुणमे कारणम् आगिरदु. मोहम्, अज्ञानम् प्रमादम् एन्ड मूण्ड्रु दोषङ्गळुक्कुम् तमोकुणमे कारणम् आगिरदु. विचारम् सेय्गिरवर्गळ् इम्मुक्कुणङ्गळैयुम् उळ्ळङ्गै नेल्लिक्कनिपोल् तेरिन्दु कॊळ्ळुमाऱु अवै तनित्तनि निरूपिक्कप्पट्टवैयायिन इप्पडिप्पट्ट निरूपणत्ताल् अदोगदि अडैवदऱ्कु रजस्सुम्, तमस्सुम् कारणमागिन्ऱन वॆन्ऱुम् ज्ञानम् सत्व कुणत्तालेये एऱ्पडुगिऱदॆन्ऱुम्, तॆरियवरुगिऱदु आगैयाल् ज्ञानियानवन् इदर पक्तिगळै कैविट्टु स्वस्वरूपानु सन्तान रूपमागिय नान्गावदु पक्तियैक् कैपिडित्तुक् कॊळ्वदुपोलुम्, सिलर् सात्विगर्गळाय् इरुन्दु तीरवेण्डु मॆन्ऱु जन्मवरदम् पूण्डु कॊळ्गिऱार्गळ्.

ऊर्ध्वं गच्छन्ति सत्त्वस्था मध्ये तिष्ठन्ति राजसाः ।
जघन्यगुणवृत्तिस्था अधो गच्छन्ति तामसाः ।।१८।।

ऊर्त्वम् कच्सन्ति सत्त्वस्ता मत्ये तिष्टिन्ति राजसाः ।
जगन्यगुण वृत्तिस्ता अदो कच्सन्ति तामसाः ।। 18

इदुवुमदु –

सत्वकुणत्तैयेये अनुसरित्तु नडक्गिरवर्गळ्. तेहत्तै विट्टुप्पोन पिरगु स्वर्क्क लोगत्तिल् अरसर्गळाय् विळङ्गुगिऱार्गळ्. अप्पडियेये रजोकुणयुक्तर्गळाय् इन्द लोगत्तिल् वाऴ्न्दु इऱन्दु पोगिऱार्गळ्. मर्त्य लोगत्तिल् मनुष्यर्गळाय्प् पिरक्गिऱार्गळ्. अङ्गिरुन्दु कॊण्डु सूक्ष्मत्तुक्गङ्गळिन् कलप्पाल् एऱ्पट्ट ओर् गिच्चडियै तेहम् ऎन्ऱ ओर् पात्रत्तिल् वैत्तुक् कॊण्डु उण्गिऱार्गळ्. इप्पडि इन्द मरण प्रवाहत्तिल् विऴुन्दु अदिनिन्ऱु

அவர்கள் கரை ஏறுவதே இல்லை எவர்கள் எப்போதும் தமோகுணயுக்தர்களாய் அதையே தேஹத்தில் வ்ருத்தி செய்து கொண்டிருகிறவர்களாய் வாழ்ந்து தீர்கிறார்களோ அவர்கள் நரகபூமிக்கு பட்டா வாங்கிக் கொள்கிறார்கள். முக்குணங்களும் எப்படி ஆத்மவஸ்துவோடு ஸம்பந்தப்பட்டு வேலை செய்கின்றன, என்ற இவ்விஷயம் முழுமையும் விசாரிக்கப்பட்டு, உனக்கு விளங்க காட்டப்பட்டதாயிற்று. ஆத்மவஸ்து தன் ஸ்வரூபத்தை விடாமலே இருந்து கொண்டு குணங்களை உபாதியாய் அடைந்து அக்குணங்களுக்குத் தக்கபடி வேலைகளை செய்து வைக்கிறது. ஓர் அரசன் ஸ்வப்நத்தின் வசப்பட்டுப் போய் தான் எதிரி ஸைந்யத்தோடு எதிர்த்து யுத்தம் செய்து தோல்வி அடைந்தாற் போலவோ அல்லது ஜயமடைந்தாற் போலவோ உணர்வது போலும் இந்த குணங்களால் ஆத்மவஸ்துவுக்கு உயர்ந்த மத்யம தாழ்வான கதி பேதங்கள் ஏற்படுகின்றன. அப்படி ஆத்மாவின் மேல் குணஸம்பந்தத்தை ஏற்றி வைக்காமல் அதை யதாவத்தாய்ப் பார்த்தால் அது பேதமற்றே இருப்பதாக தெரியும்.

नान्यं गुणेभ्यः कर्तारं यदा द्रष्टानुपश्यति ।
गुणेभ्यश्च परं वेत्ति मद्भावं सोऽधिगच्छति ।।१९।।

நான்யம் குணேப்ய: கர்தாரம் யதா த்ரஷ்டாநுபஶ்யதி ।
குணேப்யஶ்ச பரம் வேத்தி மத்பாவம் ஸோऽதி கச்சதி ॥ 19

குணாதீதன் என்பவன் எவன்:

இவ்விஷயத்திற் சொன்னது போதும். ஆனால் ஆத்மவஸ்துவைத் தவிர வேறொன்றும் இல்லையென்ற இதொன்று மாத்ரம் ஸதா உன் லக்ஷ்யத்தில் நிலைபெற்றிருக்கவேண்டும். கீழே சொல்லிக் கொண்டிருந்த விஷயத்தை மேலும் சொல்லப் போகிறேன், கேள். தேஹ ஸம்பந்தத்தை நிமித்தமாகக் கொண்டு ஆத்மவஸ்துவின் ஸாமர்த்யத்தால் இம்முக்குணங்களும் இயற்கையாகவே வெளிப்பட்டுத் தோன்றுகின்றன. கட்டையின் சேர்க்கையால் அக்நி ஓர் உருவு பெற்றதாய்க் காணப்படுவது போலும் பூமியின் ஸாரம் அதன்மேல் வளர்ந்திருக்கும் மரங்களின் உருவமாய் வெளிப்பட்டு தோன்றுவது போலும் பாலே உறைந்து தயிருருவாய்த் தோற்றுவது போலும், தித்திப்பு என்பது கரும்பாய் உருவெடுத்துத் தோன்றுவது போலும் அந்தக்கரணத்தோடு கூடிய தேஹமே (இங்கே தேஹம் என்று சொல்லப்பட்டது ஸூக்ஷ்மதேஹமாகும்) முக்குணங்களாய்த்

தோன்றி பந்தத்துக்குக் காரணமாகிறது. ஆனால் அர்ஜுனா இது எவ்வளவு ஆச்சர்யப்படத் தக்கதா யிருக்கிறது பார்! இவ்வளவு ஸங்கடத்தில் சிக்கிக் கொண்டிருந்து கூட ஞானிகள் மோஷத்திற்காகச் செய்யும் முயற்சிகளில் ஓர் குறைவும் ஏற்படுவதில்லை. இம்முக்குணங்களும் தேஹத்திற்கு பின்னும் முன்னும் நின்று அதைத் தங்கள் தங்கள் இயற்கைப்படி ஆட்டிவைத்த போதிலும் அவர்களுடைய குணாதீத ஸ்திதிக்கு ஓர் ஹானியும் ஏற்படுவதில்லை.

இப்படி அவர்கள் இயற்கையாய் ஏற்பட்டுள்ள ஓர் முக்திநிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஞானம் என்னும் தாமரைப் பூவுக்குத் தேனீயாய் நீ இருப்பதால் உனக்கு இந்த முக்திநிலையை விவரமாய்ச் சொல்வேன், கேள் ஆத்மவஸ்து குணஸம்பந்தத்தை அடைந்திருப்பதாய்த் தோன்றும்போதும் குணஸம்பந்தம் அதற்கு ஏற்படுவதே இல்லை, என்று நான் கீழே சொன்னது முடிவானவார்த்தையென்று, இங்கேயும் உனக்குச் சொல்லி வைக்கிறேன். இப்படி, ஞானம் ஒருவனுக்கு ஏற்பட்ட பின்பு, விழித்துக்கொண்டவனுக்கு ஸவப்நம்போல் சைதந்ய ஸ்வரூபத்தோடு குணங்கள் முற்றும் ஸம்பந்தமற்றவை யென்று நன்றாய்த் தெரியவரும். ஒருவன் ஜலக்கரையில் உட்கார்ந்திருந்து ஜலத்தில் ப்ரதிபிம்பிக்கப்படும்போது, அந்த ஜலம் கலக்கப்படுவதால் அவன் ப்ரதிபிம்பம் அநேகப்பட்டதாய்த் தோற்றும்போது, அவன் அந்த அநேகத்வத்தைத் தன்மேல் ஏற்றிக்கொள்ளாதது போலும், வேஷம் போட்டு ஆடுகிறவனுடைய ஸாமார்த்யத்தால், அவ்வேஷக்காரனுடைய யதார்த்த ஸ்வரூபத்தை அறியாமல் இதரர்கள் ஏமாறிப் போனாலும், அவனே அவ்விஷயத்தில் ஏமாறிப் போகாதது போலும் ஞானியானவன் குணங்களுடைய பலவிதமான சேஷ்டைகளையும் தன் ஸ்வரூபத்தில் ஏற்றிவைத்துக் கொள்ளாமல், அவை தன்னுடன் ஸம்பந்த மற்றவையாகவே இருப்பதாய்ப் பார்ப்பான். பார், ஆகாசத்தில் முன்றுருதுக்கள் ஏற்பட்டபோதிலும் அவற்றின் வேறு பாடுகளை அது தன்னிடத்தில் ஒட்டிக்கொள்ள ஒட்டாதது போலும், குணங்களின் மாறுபாடுகள் ஏற்பட்டிருக்கும்போது, அக்குணங்கள் ஒட்டிக்கொள்ள முடியாமல் அவற்றைத் தாண்டி நிற்பதும், தானாகவே அமைந்து நிற்பதும் ஆன, ஆத்மஸ்வரூபத்தையே, தன் அஹந்தைக்கு (நான் என்று பாவிக்கும் எண்ணத்துக்கு) விஷயமாய்ப் பாவிக்கும் ஓர் நிலையினின்று பார்த்துக்கொண்டு, "நான் ஒன்றும் செய்கிறவனாய் இராமல் கேவலம் ஸாக்ஷியாக

இருக்கிறேன், குணங்களே எல்லா க்ரியைகளையும் செய்து வைக்கின்றன;

ஸத்வம் ரஜஸ் தமஸ் என்னும் குணங்களால் ஏற்படும் க்ரியாகலாபமனைத்தும், அக்குணங்களின் விகாரங்கள்; வநத்தில் ஏற்படும் வன சோபைக்கு வஸந்தருது நிமித்தமாத்ரமாகவே இருப்பது போலும், இந்த க்ரியா கலாபங்கள் நடுவில் என் ஸாந்நித்யம் கேவல நிமித்தமாகவே இருக்கிறது; அன்றியும் நஷத்ரங்கள் மறைந்து போவதும், ஸூர்யகாந்தக் கல்லினின்று நெருப்பு உண்டாவதும் தாமரைப் பூக்கள் மலர்வதும், இருட்டு அகன்று போவதும், ஆகிய இக்கார்யங்களில் ஒன்றிலாவது ஸூர்யனுக்கு ஸம்பந்த மில்லாதது போலும், தேஹத்தில் கேவல ஸத்தையை அடைந்திருக்கும் நான் அதில் ஏற்படும் க்ரியைகள் ஒன்றையும் செய்துவைக்கிறவன் அல்ல; நான் குணத்தை காட்டிவைப்பதால் குணத்தின் இருப்பு புலப்படுகிறது; என்னுடைய ஸத்தையால் குணம் வ்ருத்தி அடைகிறது; குணம் முற்றிலும் நசித்துப் போனபின் மிகுந்து நிற்பது நானே," என் றிப்படிப்பட்ட பகுத்தறிவு ஸந்தேஹமற எவனுக்கு உண்டா யிருக்கிறதோ, அவன் ஸந்தேஹமற குணாதீதன் ஆகிறான்.

गुणानेतानतीत्य त्रीन्देही देहसमुद्भवान् ।
जन्ममृत्युजरादुःखैर्विमुक्तोऽमृतमश्नुते ॥२०॥

குணா நேதா நதீத்ய த்ரீன் தேஹீ தேஹ ஸமுத்பவான் ।
ஜன்ம ம்ருத்யு ஜரா துக்கைர் விமுக்தோ ம்ருத மஶ்நுதே ॥ 20

இப்படி குணதீதனான பிறகு அவனுக்கு ஏற்படும் ப்ரஹ்மப்ராப்தி.-

ஞானப்பரிபாகத்தால் இப்படிப்பட்ட உத்தம ஸ்திதியை அடைந்த ஒருவன் தவறாமல நிர்குண பரப்ரஹ்மத்தை அறிகிறான். ஓர் நதியானது ஸமுத்ரத்தில் விழுந்து, ஸமுத்திரம் ஆய் விடுதல் போலும், அவன் என்னை அறிந்து, நானாகவே ஆய்ப்போய், என்னுடைய ஸத்தை முழுவதும் அவனுக்கு ஏற்பட்டு விடுகிறது நளிகா யந்திரத்தில் (பார்க்க அத் 13 ச்லோகம் 34) உட்கார்ந்து, அத்துடன் சுழன்று கொண்டிருந்த ஓர் கிளி, அதை விட்டுப் பறந்து போய் மரத்தின் கிளையின் மேல் உட்கார்ந்து கொண்டாற் போலும், அவன் தன்னைக் குணங்களோடு ஒன்றுபடுத்திக் கொள்ளாமல், தான் அந்த நிர்குண பரப்ரஹ்மமே என்றறிந்து கொள்கிறான். எவன்

இதற்குமுன் அஞ்ஞானம் என்னும் நித்ரைக்கு வசப்பட்டு வலுவாய் குறட்டைவிட்டுக் கொண்டிருந்தானோ, அவனே தன்னுடைய நிஜஸ்வரூபத்தை அறிந்து கொள்ளல் என்னும் விழிப்படைகிறான். அவன் கையில் இது வரைக்கும் இருந்து கொண்டிருந்த புத்தி பேதம் என்னும் கண்ணாடி, கீழே விழுந்து போய், அவனுக்கு ஜீவதசை யென்னும் ப்ரதிபிம்பம் இல்லாமற் போகிறது. தேஹாபிமானம் என்னும் காற்று அடிக்காமல், ஓய்ந்து போய், ஆத்ம ஸ்வரூபம் என்னும் ஸமுத்ரத்தில் இதற்குமுன் மோதிக் கொண்டிருந்த ஜீவன் ஈச்வரன் என்ற அலைகள் ஒன்று பட்டுப் போகின்றன.

பின்பு வர்ஷாகாலம் முடிவில் ஆகாசத்தில் அதற்கு முன் காணப்பட்டுக் கொண்டிருந்த மேகங்கள் அவ்வாகாசத்திலேயே கரைந்து போவது போலும் அவன் என் ஸ்வரூபமாகவே ஆய்விடுகிறான். அப்படி நானாக ஆய்ப்போனபின் அவன் தேஹத்தில் இருக்கும்போதே அத்தேஹத்தினின்றுண்டாகும் குணங்களினின்று விடுபட்டுப்போகிறான். கண்ணாடியால் ஏற்பட்ட ஓர் கூட்டுக்குள் தீபத்தின் ப்ரகாசம் அடங்கிப் போகாமல் வெளிப்பட்டு எங்கும் பரவுவது போலும் வடவைத்தீயானது ஸமுத்ரத்தால் அணைந்து போகாதது போலும், உண்டாய் மறைந்து கொண்டிருக்கும் குணங்களின் உணர்ச்சியே அவனுக்கு உண்டாகாமல் இருந்து கொண்டு அவனுடைய ஆத்ம ஸ்வரூபானுபவத்துக்கு ஓர் தடையும் ஏற்படுவது இல்லை. அவன் தேஹத்தில் இருப்பது என்பது, ஆகாசத்துச் சந்திரன் ப்ரதிபிம்பித்து ஜலத்திற் காணப்படுவது போலே ஆகும். முக்குணங்களும் தங்கள் தங்கள் அதிகாரத்தைச் செலுத்திக் கொண்டு தேஹத்திற்குப் பலவேஷங்களைப் போட்டுவைத்து அதை ஆட்டிக் கொண்டிருந்த போதிலும் அந்த வேடிக்கையைப் பார்த்து விட்டு வரும்படி கூட அவன் தன்னாத்ம ஸ்வரூபத்தை அனுப்பி வைக்கமாட்டான். இவ்வளவு தூரம் தன் ஸ்வரூபத்துக்குள்ளேயே அடங்கிப் போனவனாய், தேஹத்தில் நடக்கும் எதையும் அவன் அறியாமற் போகிறான். ஓர் பாம்பு தன் தோலை உரித்துக் கழற்றி விட்டு பொந்திற்புகுந்து வெகு ஆழத்திற் போய் பதுங்கிக் கொண்டபின் அப்படிக் கழற்றி எறிந்து விட்டுப் போன தோலின் கதி என்ன வாயிற்றென்று, அப்பாம்பு விசாரிப்பதுண்டா?

அப்படியே இவன் ஸ்திதி ஆய்விடுகிறது, இல்லா விட்டால் பூத்துப் பழுத்துப்போன தாமரைப் பூவினின்று புறப்பட்டு ஆகாசத்தோடு கலந்து போன அதின் வாஸனை, திரும்பவும்

அப்பூவை வந்தடையாதது போலும் அவன் ஸ்திதி யாய்விடுகிறது. இப்படி ஆத்மஸ்வரூபத்தோடு ஒன்று பட்டுக் கலந்து போன பின் அவன் தேஹத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறதென்று அறியாமற் போகிறான். ஆகையால் தேஹத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் ஜந்மமரணம் முதலிய ஷட்விகாரங்கள் (ஸூக்ஷ்மமான இறப்பு, பிறப்பு (வெளிப்பட்டுத் தோற்றல்), வளர்தல், வளர்தலில் முடிவடைதல், தேய்தல், மரித்தல் (முற்றிலும் மறைந்து போதல்) ஆகிய ஆறு வகைப்பட்ட விகாரங்கள்), தேஹத்திலேயே நின்று போய் அவன் வரைக்கும் போய் எட்டுகிறதில்லை. குடம் உடைந்துபோய், அது சிற்கூளாய்ப் போனபின், அதினால் முன் வரையறுக்கப்பட்டிருந்த ஆகாசம் மஹாகாசத்தோடொன்று பட்டுப் போவது போலும் தான் தேஹம் என்னும் புத்தி அற்றுப்போய் தன் ஆத்மஸ்வரூப ஞானம் ஏற்பட்ட பின், அவன் ஆத்மஸ்வரூபத்தைத் தவிர வேறொன்றை எப்படி அறிவான்? இப்படிப்பட்ட உத்தமமான ஞான நிலையில் இருப்பவனாய், அவன் தேஹத்தில் இருப்பதால் அவனை நான் குணாதீதன் என்று சொல்கிறேன். இப்படி பகவான் சொன்னதைக் கேட்டு பார்த்தன், மேகத்தின் கர்ஜனையைக் கேட்ட மயிலைப் போல் மிக்க ஸுகம் அடைந்தான்.

अर्जुन उवाच ।
कैर्लिङ्गैस्त्रीन्गुणानेतानतीतो भवति प्रभो ।
किमाचारः कथं चैतांस्त्रीन्गुणानतिवर्तते ।।२१।।

அர்ஜுன உவாச -

கைர்லிங்கைஸ்த்ரீன் குணாந் ஏதான் அதீதோ பவதி ப்ரபோ।
கிமாசார: கதம் சைதான் ஸ்த்ரீன் குணாநதி வர்ததே ॥ 21

குணாதீதனுடைய லக்ஷணங்கள்

இப்படி உள்ளே ஸுகமடைந்து அர்ஜுனன் ஸ்ரீகிருஷ்ணனைப் பார்த்துப் பின்வருமாறு விசாரித்தான். எவனுக்கு இப்படிப்பட்ட ஞான நிலை ஏற்பட்டுவிட்டதோ அவனுடைய லக்ஷணங்கள் எவை. அப்படி குணாதீதஸ்திதியை அடைந்தவனுடைய ஆசரணம் எப்படிப்பட்டதாய் இருக்கும். அவன் எவ்விதம் குணாதீதன் ஆகிறான்? இவ்விஷயங்களை க்ருபைக்கெல்லாம் தாய்வீடான தாங்கள் விளங்கச் செய்ய வேண்டும். இப்படி அர்ஜுனன் செய்த ப்ரச்நத்திற்கு

ஷட்குணைச்வர்ய ஸம்பன்னரான ஸ்ரீக்ருஷ்ணன் பின் வருமாறு பதில் சொன்னார். ஹே அர்ஜுநா நீ இப்படிக் கேட்பது, எனக்கு மிகவும் விந்தையாய்த் தோற்றுகிறது. எவன் குணாதீதனென்று பெயரிடப்படுவானோ அவனுடைய ஆசரணம் எப்படியிருக்கும் என்று அவன் விஷயத்தில் நீ கேட்கும் ப்ரச்நத்திற்கு இடமே ஏற்படுவதில்லையே. குணாதீதன் என்று எவனைச் சொல்லலாமோ அவன் குணங்களுக்கு வசப்பட்டவனல்லவே. அவன் தேஹத்தில் எவை உண்டானாலும் அவன் வரைக்கும் அவை போய்ச் சேர்வதில்லையே. குணங்களின் வ்யாபாரங்கள் மிக்க கோலாஹலமாய் நடந்து கொண்டிருக்கும் தேஹத்திலிருக்கும் ஒருவன், அக்குணங்களுக்கு வசப்பட்டிருக்கிறானா அல்லது அவை அவனிடத்திற் போய்ச் சேராமல் இருக்கின்றனவா என்று எப்படித் தெரிந்து கொள்கிற தென்று ஸந்தேஹப்பட்டு நீ கேட்பதாயிருந்தால் நீ ஸுகமாய்க் கேட்டுக்கொள்ளலாம். இனி குணாதீதனானவனுடைய லக்ஷணங்களைச் சொல்வேன் கேள்.

श्रीभगवानुवाच ।
प्रकाशं च प्रवृत्तिं च मोहमेव च पाण्डव ।
न द्वेष्टि सम्प्रवृत्तानि न निवृत्तानि काङ्क्षति ।। २२ ।।

ஸ்ரீ பகவானுவாச -

ப்ரகாஶம் ச-ப்ரவ்ருத்திம் ச மோஹமேவ ச பாண்டவ ।
ந த்வேஷ்டி ஸம்ப்ரவ்ருத்தானி ந நிவ்ருத்தானி காங்க்ஷதி ॥ 22

குணாதீதனுடைய லக்ஷணங்களை பகவான் உரைத்தல்.

ரஜோகுணம் வ்ருத்தி அடைந்த பின் தேஹத்திலுள்ள கர்மவாஸனைகள் முளை யெடுத்து கர்மங்களில் ப்ரவ்ருத்தி அவனை சூழ்ந்து கொள்ளும்போது, நானே கர்மடனென்று, அவன் பெருமை பாராட்டிக் கொள்வான். கர்மங்கள் அவனிடத்தில் முற்றிலும் அற்றுப்போகும்போது அவன் புத்தியில் ஓர் கஷ்டமும் ஏற்படாது. இல்லாவிட்டால் ஸத்வ குணம் தலையெடுத்து அவனுடைய ஸர்வேந்திரியங்களிலும், ஞான சக்தியின் விஸ்தாரம் ஏற்படும்போது, தான் விசேஷமான வித்யைகளைப் படைத்தவன், என்னும் ஓர் புத்தி அவனுக்கு ஏற்படாது. அல்லது தமோகுணம் வ்ருத்தி

அடைந்ததால் அவன் மோஹம் என்பதின் அறிவுமயக்கத்துக்கு வசப்பட்டுப் போகான். அப்போது இந்த்ரியங்களின் ஞான சக்தி அற்றுப் போவதால் அவன் கஷ்டப்பட மாட்டான். அப்படி அவைகளுக்கு ஞான சக்தி அற்றுப் போயிருக்கிறதென்று கூட அவன் அறிந்து கொள்ள மாட்டான். நன்றாய்ப்பார். தேஹத்திற்கு மோஹம் ஏற்பட்ட பிறகு, ஞான சக்தி ஏற்பட வேண்டுமென்று அவன் ஆசைப்படான். இந்திரியங்களில் ஞானம் வ்ருத்தியடைந்த பின் கர்மங்களைச் செய்ய வேண்டும் என்றவனாசைப்படான். ரஜஸ்ஸின் உத்ரேகத்தால் கர்மங்கள் ஏற்பட்டால் அவன் துக்கப்படவும் மாட்டான். ஸூர்யனுக்கு ப்ராதக்காலம், மத்யாந்நம், ஸாயம் காலம் என்ற ஞானம் ஒருக்காலும் ஏற்படாதது போலும் அவன் ஞானநிலை இருக்கும். வெளிப்படையான ஏதேனும் ஓர் வஸ்துவின் ப்ரகாசத்தினின்று அவனுக்கு ஞான ப்ரகாசம் ஏற்பட வேண்டியதாக இருக்கிறதா? ஸமுத்ரம் மழையாற்றான் நிரம்பிப் போகிறதா? அவன் தேஹம் கர்மங்களில் ப்ரவர்த்திப்பதால் அவனுக்குக கர்மடத்வம் ஏற்படுகிறதா? பனிக்கெல்லாம் ஜந்மபூமியான ஹிமவத்பர்வதம், பனியைக் கண்டு நடுங்குமா? அல்லது அவன் தேஹத்தில் மோஹம் தலை யெடுத்ததால் அவன் ஸ்வரூபஞானம் அவனை விட்டுப் போய்விடுமா? வடவை போன்ற பெரும் நெருப்பை, வேநிற் காலம் தான் எரியச் செய்து கொண்டிருக்கிறதா?

उदासीनवदासीनो गुणैर्यो न विचाल्यते ।
गुणा वर्तन्त इत्येवं योऽवतिष्ठति नेङ्गते ।। २३ ।।

உதாஸீநவதாஸீநோ குணைர்யோ ந விசால்யதே ।
குணா வர்தந்த இத்யேவ யோ வதிஷ்டதி நேங்கதே ।। 23

இதுவுமது, சரீரத்தின் விஷயத்தில் உதாஸீனதை

அவனுக்கு குணங்களும் அவற்றிற்காதாரமான சரீரமும் அவ்விரண்டின் வ்யாபாரங்களும் எல்லாம் அவனுடைய ஸ்வரூபமாகவே தோன்றிப் போய் இருப்பதால் அவற்றில் எதைக் கண்டும் அவன் எவ்வகைப்பட்ட விகாரமும் அடையான். வழிப்போக்கன் தன் ப்ரயாணத்துக்கு ஏதேனும் ஓர் தடையேற்பட்டு, கொஞ்சகாலந் தங்கியிருக்கும் சாவடி விஷயத்தில் எப்படி உதாஸீனனா யிருப்பானோ அப்படியே தன்னுடைய சரீரத்தின் விஷயத்தில் உதாஸீன புத்தி பாராட்டினவனாய் அவனிருப்பான். எப்படி யுத்த பூமிக்கு ஜயாபஜயங்களின் ஸம்பந்த மில்லையோ அப்படியே

அவனுக்கும் குணங்களுக்கும் ஸம்பந்தம் அற்றுப் போய், அவன் குணங்களுக்கு வசப்பட்டவனாகிற தில்லை. அவற்றின் ஸம்பந்தத்தால் ஓர் கார்யத்தையும் அவன் செய்து வைப்பதில்லை. சரீரத்துக் குள்ளிருக்கும் ப்ராணவாயுவைப் போலும், ஓர் வீட்டிற்கு அதிதியாய் வந்த ப்ராஹ்மணனைப் போலும், நாற்சந்தியில் நாட்டப் பட்டிருக்கும் ஓர் கட்டையைப் போலும் அவன் தேஹத்தில் நடக்கும் வ்யவஹாரங்களால் விகாரமடையான். ம்ருகஜலத்தின் அலைகள் மோதுவதால் நிலை பெயரா திருக்கும் மேருபர்வதம் போல் குணங்களின் வ்ருத்திக்ஷயங்களால் அவன் ஓர் மாறுபாடும் அடையான். என்னத்துக்கு வளர்த்த வேண்டும்? காற்றால் ஆகாசத்தில் எவ்வித சலநமும் ஏற்படாதது போலும், இருட்டால் ஸுர்யனானவன் விழுங்கப்படா திருப்பது போலும் விழித்துக் கொண்டிருப்பவன் தான் முன் கண்ட ஸ்வப்நத்தால் ஏமாறிப் போகாதது போலும் அவன் குணங்களால் எவ்விதமாயும் கட்டுப்பட்டுப் போவதில்லை. குணங்கள் அவனை அணுக முடியாமல் தூரத்தில் நின்று கொண்டு தேஹத்தை மாத்ரம் ஆட்டிக் கொண்டிருக்க, கயிற்றால் ஆட்டப்பட்ட பொம்மையை ஒருவன் ஆட்டிக் கொண்டிருக்க அதைப் பார்த்துக் கொண்டிருக்கும் மற்றொருவனைப் போல், குணாதீதன் கேவல ஸாக்ஷியாயும் குணங்களின் ஆட்டங்களால் ஸுகதுக்காநுபங்கள் அடையாதவனாயும் இருந்து விடுகிறான்.

ஸாத்விக குணத்தால் ஸத்கர்மங்களும், ரஜோகுணத்தால் காம்யகர்மங்களும், தமஸ்ஸால் மோஹம் முதலியவையும் உண்டாகின்றன; குணங்களும் அவற்றின் க்ரியைகளும் தன்னுடைய ஸத்தையால் ஏற்படுகின்றன என்று தெரிந்து கொண்டு ஸுர்ய வெளிச்சத்தின் உதவியால் உலகிலுள்ளவர்கள் நடத்திவரும் வ்யாபாரங்களில் ஸுர்யன் உதாஸீனனானாய் இருப்பது போல், அவன் குணங்களின் க்ரியைகள் விஷயத்தில் உதாஸீனனாய் இருந்து விடுகிறான். சந்திரனுடைய ஸாந்நித்யத்தால் ஸமுத்ரம் மாத்ரம் பொங்குகிறது. சந்த்ர காந்தம் மாத்ரம் இளகி ஜலம் பெருகிறது. அல்லிகள் மாத்ரம் பூக்கின்றன. ஆனால் இவை அனைத்தும் சந்த்ரனிடத்தில் ஒட்டுவதில்லை. காற்று மாத்ரம் அடிக்கிறது. ஓய்ந்து போகிறது. ஆனால் ஆகாசம் ஓர் வேறுபாடும் அடைவதில்லை. அவ்விதமே குணங்களின் தடபடற்களால் அவன் ஒரு விதமான விகாரமும் அடைவதில்லை. இப்படிப்பட்ட லக்ஷணங்களால் குணாதீதனைத் தெரிந்து கொள்ள வேண்டும் இனி அவனுடைய ஆசரணம் எப்படி இருக்கும் என்று சொல்வேன் கேள்.

समदुःखसुखः स्वस्थः समलोष्टाश्मकाञ्चनः ।
तुल्यप्रियाप्रियो धीरस्तुल्यनिन्दात्मसंस्तुतिः ॥२४॥

ஸமதுக்த ஸுக: ஸ்வஸ்த: ஸமலோஷ்டாஶ்ம காஞ்சன: ।
துல்ய ப்ரியா ப்ரியோ தீரஸ் துல்ய நிந்தாத்ம ஸம்ஸ்துதி: ॥ 24

இதுவுமது ஸுகதுக்க ஸமத்வம்

வஸ்த்ரத்தின் ஸர்வாங்கத்திலும் நூலைத் தவிர யாதொன்றும் இராதது போல், சராசர ரூபமான விச்வம் முழுவதிலும் தன்னைத் தவிர யாதொன்றும் இராததாக அவன் பாவித்திருப்பான்; ஆகையால் சத்ருக்களையும் பக்தர்களையும் ஸமமாய் பாதுகாத்து வரும் ஈச்வரனைப் போல் அவன் ஸுகதுக்கங்களை ஸமநிறை உள்ளவையாய் பாவித்திருப்பான். ஆகையால் ஜலத்தில் இருக்கும் மீன்போல் தேஹத்தில் இருக்குமளவும் ஸுகதுக்கங்களை ஸமமாகவே அநுபவித்துத் தீர வேண்டும் என்று நிச்சயித்து அவ்விரண்டையும் ஸமமாகவே துக்கரங்கள் என்றெண்ணி, முற்றிலும் முற்றின தாந்யம், பயிரை விட்டு தானாகவே பிரிந்து போவது போலும் தேஹத்தில் இருப்பை ஒழித்துக் கொண்டு தன்னுடைய ஆத்மஸ்வரூபத்திலேயே குடி கொண்டவனாய் விடுவான். ப்ரவாஹமாய் ஓடுவதை விட்டு கங்கை ஸமுத்ரத்தில் விழுந்து அத்துடன் கலந்து போன பின், அதின் கொந்தளிப்பு முற்றிலும் அற்றுப் போவது போல் எப்போது அவன் ஆத்மஸ்வரூபத்திலேயே நிலைத்துப் போகிறானோ அப்போதே அவன் தேஹத்தில் உண்டாகும் ஸுகதுக்கங்களில் பற்றுப் பாராட்டாதவனாய் ஸமபாவம் அடைந்து விடுகிறான்.

துல்யப்ரியாப்ரியத்வம்

வீட்டுக்குள் இருக்கும் கம்பத்துக்கு இரவும் பகலும் ஒன்றாய் இருப்பது போல் தேஹத்துக்குள்ளிருக்கும் ஆத்மஸ்வரூபத்துக்கு த்வந்தவங்கள் ஒரே வகைப்பட்டவை ஆய் விடுகின்றன. ஸுஷுப்தியில் இருக்கும் ஒருவனுடைய தேஹத்தைப் பாம்பு சுற்றிக் கொண்டாலும் ஊர்வசி ஆலிங்கனம் செய்து கொண்டாலும் அவனுடைய சித்தத்தில் மாறுபாடு உண்டாகாதது போலும் ஆத்மஸ்வரூபத்தில் நிலை கொண்டவன் தேஹத்தில் உண்டாகும் த்வந்தவங்கள் அவனுக்கு பேதமற்று ஸமப்பட்டுப் போகின்றன.

ஸமலோஷ்டாச் மகாஞ்சனத்வம்

ஆகவே அவனுக்கு சாணியும் தங்கமும் பேதப்பட்டவையாய் தோற்றா; ரத்நங்களுக்கும் பருக்கைக் கற்களுக்கும் இருக்கும் வித்யாஸம் அவனுக்குத் தெரியாது.

ஸ்வஸ்தத்வம் தீரத்வம்

ஸ்வர்கஸுகங்கள் அவனைத் தேடிக் கொண்டு அவன் இருக்குமிடம் வந்து சேர்ந்தாலும், புலி அவனைக் கடித்துத் தின்றுவிட அவன் மேற் பாய்ந்தாலும், அவன் செய்து கொண்டிருக்கும் ஆத்மஸ்வரூபா நுபவத்துக்கு ஓர் பங்கமும் நேரிடாது. செத்துக் கிடக்கிறவன். எழுந்து நிற்கமுடியாதது போலும் எரிபட்டுப் போன விதை முளைக்காதது போலும் பேதம் முற்றிலும் அற்றுப் போன அவன் புத்தியில் மாறுபாடு உண்டாகாது.

நிந்தாஸ்துதிகளில் ஸமபாவம்.

அவனை "நீ ப்ரஹ்மாவே," என்று ஸ்தோத்ரம் செய்தாலும் மிக்கக் கெட்டுப்போனவனென்று நிந்தித்தாலும் முற்றிலும் எரிந்து போய் சாம்பலாய்ப் போன ஓர் வஸ்துவில் திரும்பவும் எரிதல் ஆறிப் போதல் என்னும் விகாரங்கள் ஏற்படாதது போலும் அவன் சித்தம் ஸந்தோஷப்படுதல் கோபங்கொள்ளல், என்னும் விகாரங்களை அடையாது. ஸூர்யனுடைய வீட்டில் இருட்டும் தீபவெளிச்சமும் ஒன்று பட்டுப் போவது போலும், அவனுக்கு நிந்தாஸ்துதிகள் ஒன்றுபட்டுப்போய் பேதமற்றே தோன்றும்.

मानापमानयोस्तुल्यस्तुल्यो मित्रारिपक्षयोः ।
सर्वारम्भपरित्यागी गुणातीतः स उच्यते ।। २५ ।।

மானாப மானயோஸ் துல்யஸ் துல்யோ மித்ராரிபக்ஷயோ: ।
ஸர்வாரம்ப பரித்யாகீ குணாதீத: ஸ உச்யதே ॥ 25

மானாபமானங்கள் விஷயத்திலும் மித்ரர்கள் சத்ருக்கள் விஷயத்திலும் ஸமத்வம்:

ஸூர்யன் ராத்ரிப் பகல் என்னும் வித்யாஸத்தை அறியாதது போலும் ஆறு ருதுக்களின் ஸம்பந்தத்தால் ஆகாசம் மாறுபாடடையாதது போலும் ஒருவன் அவனை ஈச்வர

னென்று பாவித்துப் பூஜை செய்தாலும் மற்றொருவன் அவனைத் திருடன் என்று சொல்லி அடித்து அவமானப் படுத்தினாலும் அல்லது மற்றொருவன் அவனை யானை குதிரைகளால் சூழப்பட்ட ராஜாவாய்ச் செய்து வைத்தாலும் ஒருவன் அவனுக்கு ஸுஹ்ருத்தாய் ஸமீபத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாலும் அல்லது மற்றொருவன் சத்ருவாய் மேல் விழுந்து தாக்கினாலும் அவன் மனஸு மாறுபாடடையாது.

ஸர்வாரம்ப பரித்யாகம்:

அவனிடத்தில் மற்றொர் விதமான ஆசாரமும் காணப்படும். அவன் ஓர் வேலையையும் செய்யாதவனாயிருப்பான். அவனிடத்தில் ஸர்வவிதமான கர்மங்களின் ஆரம்பமும் அற்றுப் போய் ப்ரவ்ருத்தி யென்பது அஸ்தமித்துப் போனதாய் கர்மபலங்கள் முழுமையும் அவனுடைய ஞாநத்தால் எரிபட்டுப் போனவையாயிருக்கும். அவனுடைய அந்தராத்மாவில் இஹலோகத்தைப் பற்றியாவது பரலோகத்தை பற்றியாவது ஓர் விசாரமும் ஏற்படாது; எது ஓர் ப்ரயத்நமுமின்றி அவனை வந்தடையுமோ அதையவன் புசிப்பான், அவன் சித்தம் கற்பாறையைப் போல் கடினமாய் இருந்துக் கொண்டு, ஒன்றால் ஸுகப்படாமலும் மற்றொன்றால் துக்கப்படாமலும் ஒன்றை ஒதுக்கி வைக்கிறதையும் மற்றொன்றை ஸ்வீகரித்து கொள்வதையும் அது அறியாது.

குணாதீதன் லக்ஷணங்களின் விவரணத்தில் உபஸம்ஹாரம்

இதை இன்னும் விஸ்தரிக்க வேண்டுவது ஏன்? இப்படிப்பட்ட ஆசாரங்கள் எவனிடத்தில் காணப்படுமோ அவனே நிஜமான குணாதீதன் இனி எவ்வித உபாயத்தைக் கொண்டு ஒருவன் குணாதீதன் ஆவானோ அவ்விஷயத்தை விளங்கச் செய்வேன் கேள் என்று ஸ்ரீகிருஷ்ணன் சொன்னார்.

मां च योऽव्यभिचारेण भक्तियोगेन सेवते ।
स गुणान्समतीत्यैतान्ब्रह्मभूयाय कल्पते ।।२६।।

மாம் ச யோऽவ்யபி சாரேண பக்தியோகேன ஸேவதே।
ஸ குணான் ஸமதீத்யைதான் ப்ரம்ஹ பூயாய கல்பதே ॥ 26

குணாதீதஸ்திதியை அடைவதற்கு உபாயம் –

வ்யபிசார மற்ற (அநந்யமான) பக்தியோகத்தைக் கொண்டு எவன் என்னை ஸேவித்துக் கொண்டிருப்பானோ அவன் குணங்களை அடக்கி வைக்கச் சக்தனாகிறான். ஆனால் நான் எவன் என்றும் பக்தி என்பது எவ்வகைப்பட்டது என்றும் வ்யபிசார மற்ற பக்தியென்பது எவ்வகைத்து என்றும் நிச்சிதமாகத் தெரிந்துகொள்வது அவச்யமாகிறது. ஆகவே அவற்றை விளங்கச் சொல்வேன். கேள். ரத்நமும் அதின் ஒளியும் எப்படி வேறுபட்டவை அல்லவோ அப்படியே எனக்கும் இந்த ஜகத்துக்கும் பேதமே இல்லை. த்ரவத்தன்மையே ஜலம் ஆதல் போலும், அவகாசமே ஆகாசம் ஆவது போலும் தித்திப்பே சர்க்கரை ஆவது போலும், நெருப்பே ஜ்வாலை ஆவது போலும், தளங்களே தாமரைப்பூ வாதல் போலும், மரமே கிளை, பழம், முதலியவை ஆதல் போலும், பனிக்கட்டிகள் ஒன்று சேர்ந்து ஹிமவத்பர்வதம் ஆவது போலும், பால் உறைந்து தயிராய் விடுவது போலும், நானே விச்வம் என்று பெயர் கொண்டு இவை அனைத்துமாக அமைந்திருக்கின்றேன் சந்த்ர கலையை சந்த்ரனிடத்திலிருந்து உரித்தெடுத்துக் கொள்ள முடியாதது போலும், நெய் உறைந்து உருக்கப்படாமல் இருக்கும்போதும், நெய்யாகவே இருப்பதுபோலும், தங்கக்காப்பு உருக்கப்படாமல் இருக்கும்போதும், தங்கமாகவே இருப்பது போலும் வஸ்திரம் நூல் நூலாய் பிரித்து வைக்கப்படாமல் இருக்கும்போதும், நூலாகவே இருப்பது போலும், குடம் பொடி செய்யப்படாமல் இருக்கும் போதும், மண்ணே போலும் விச்வமாய் அமைந்திருக்கும் தன்மையைப் போக்கி விட்டபின் தான் என்னை க்ரஹித்துக் கொள்ளக் கூடும் என்பது இல்லாமல் எல்லா வஸ்துக்களாலும் நிறைந்திருக்கும். விச்வமாய் இருக்கும்போதே, அந்த விச்வம் நானே என்றறிய வேண்டும்.

இப்படி என்னை அறிந்து கொள்வதுதான் வ்யபிசாரப்படாத பக்தியாகும். பேதத்தை உணர்வதே வ்யபிசாரம் ஆகும். ஆகையால் பேதத்தை முற்றிலும் ஒழித்துவிட்டு உன் ஆத்மஸ்வரூபம் உள்படஸகலமும் நானே என்று நீ நிச்சயமாய் அறிந்து கொள்ள வேண்டும். தங்கத்தால் ஓர் பதக்கம் செய்யப்பட்டு தங்கக் கொடியில் கோத்துவைக்கப்பட்டால் அவை இரண்டும் எப்படி ஒரே தங்கமாகுமோ அப்படியே உன் ஸ்வரூபமும் விச்வமும் வேறுபட்டவை அல்ல வென்று நீ அறிய வேண்டும். ஸூர்யனுடைய அம்சமாயீ ஸூர்யனிடத்திலிருந்து புறப்பட்டு ஸூர்யனோடு ஒட்டிக் கொண்டிருக்கும் ஸூர்யகிரணம் போலும், விச்வம் என்னுடைய ஸ்வரூபத்தை விட்டு

வேறபட்டதல்லவென்று உனக்கு ஞானம் ஏற்படவேண்டும். "பூமியின் மேல் இருக்கும் சிறு தூளிக்கும் பூமிக்கும் ஹிமாசலத்துக்கும் அதன் மேல் உள்ள சிறுபனிக்கட்டிக்கும் ஸ்வரூபபேதம் இல்லாதது போலும், ஈச்வரனுடைய ஸ்வரூபத்தில் நான் இருந்து கொண்டிருக்கிறேன்; ஸமுத்ரத்தின் அலை எவ்வளவு சிறியதாய் இருந்தாலும் ஸமுத்ரத்தை விட்டு வேறுபட்ட தாகாதது போலும், நான் ஈச்வரனைவிட்டு வேறுபடாதவனாய் ஈச்வரஸ்வரூபத்தில் இருந்து கொண்டிருக்கிறேன்" என்று இப்படி ஸமரஸப்பட்ட ஓர் த்ருஷ்டி. ஒருவனுக்கு ஏற்பட்டதானால் அந்த புத்தி நிலையையே பக்தி யென்றும் உத்தமமான ஞானமென்றும் யோகத்தின் ஸர்வஸ்வம் என்றும் நான் சொல்வேன்,

ஸமுத்ரத்துக்கும் கருத்த மேகத்துக்கும் நடுவில் அகண்டமாய் மழை பெய்து கொண்டிருந்தாற் போல் அவனுடைய சித்தத்துக்கும் என்னுடைய ஸ்வரூபத்துக்கும் நடுவில் அவன் சித்தவ்ருத்திகள் ஸதா பெருகிக் கொண்டே யிருந்தால் பின்பு ஓர் கிணற்றால் வரையறுக்கப்பட்ட ஆகாசத்துக்கும் மஹாகாசத்துக்கும் நடுவில் அவை ஒன்றொடொன்று ஒட்டிவைக்கப்பட்டிருப்பதாய், அக்கிணற்றின் வாயில் ஓர் ஒட்டும் காணப்படாதிருப்பதுபோல் அவனுக்கும் பரமபுருஷனுக்கும் நடுவில் ஓர்வரை காணப்படாமல் இருவரும் ஒன்றுபட்டுப் போவார்கள். ஸூர்யனுடைய ப்ரதிபிம்பத்துக்கும் பிம்பத்துக்கும் நடுவில் எப்படி ஸூர்ய கிரணங்களின் ப்ரகாசம் பரவிக் கொண்டே இருக்கிறதோ அப்படியே ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் நடுவில் ஸோஹம் (அந்த ஈச்வரன் நானே என்ற மனோவ்ருத்தி) ரூபமான மனோவ்ருத்திகள் ஓடிக் கொண்டே இருந்தால், கொஞ்ச காலத்தில் அந்த மனோவ்ருத்திகளும் தாமாகவே அற்றுப் போய் இரண்டு ஸ்வரூபமும் ஒன்றுபட்டு போகும். ஸமுத்ரத்தினின்றுண்டான உப்பின் ஓர் கட்டி, ஸமுத்ரத்தில் விழுந்ததே யானால் கொஞ்சகாலம் அந்த உப்புக்கட்டி ஸமுத்ரத்தில் கரைந்து கொண்டே இருந்து பின்பு அது முழுவதும் கரைந்து போன உடனே கரைதல் என்பது நின்றுபோய் இரண்டின் ஸ்வரூபமும் ஒன்றுபட்டுப் போவது போலும், அன்றியும் வைக்கோலை நெருப்பு முற்றிலும் கொளுத்தி விட்டபின் எரிவது என்பதும் ஆறிப்போதல் போலும், அப்படியே எந்த ஜீவன் ஈச்வரனுடன் தான் ஒன்றுபட்டிருக்கும் ஞாநத்தை அடைந்து அந்த வ்ருத்தி ஞாநத்தை ஸதாமனஸில் ஆவ்ருத்தி செய்து கொண்டு நிற்பானோ அந்த ஜீவனுக்கும் ஈச்வரஸ்வரூபத்துக்கும் பேதமற்று இருவரும் ஒன்றுபட்டுப் போய் அந்த ஞானவ்ருத்தியும் அற்றுப் போகிறது.

நான் பக்தனை விட்டுப் பிரிந்து அக்கரையில் இருப்பது என்பது எனக்கற்றுப் போய் அவன் பக்தன் என்று சொல்லப்பட்டு இக்கரையில் இருப்பது அவனுக்கற்றுப்போய் இரண்டு ஸ்வரூபத்தின் அநாதியான ஐக்யம் ஒன்றே மிகுந்து நிற்கும். பின்பு அவன் குணத்துக்கு வசப்பட்டிராமல் குணத்தை அபஜயப்படுத்தி அதைத் தாண்டி நிற்கிறான் என்ற பேச்சும் அற்றுப் போகிறது; ஏனென்றால் அனைத்தும் ஒன்றுபட்டுப் போன ஓர் நிலை ஏற்பட்டு விடுகிறது. வஸ்துக்கள் ஸ்வரூபங்களின் மர்மத்தை அறிந்து கொள்ளும் ஸாமர்த்யம் படைத்த ஹே பார்த்தா, இப்படிப்பட்ட தசைக்குத் தான் ப்ரஹ்மத்வம் (ப்ரஹ்மமாகவே அமைந்து போன நிலை) என்று பெயர். எவன் கீழே வர்ணிக்கபட்டவிதமாய் வ்யபிசாரிக்காத பக்தியைக் கொண்டு என்னை ஸேவித்துக் கொண்டிருப்பானோ அவன் இந்த ப்ரஹ்மத்வ நிலையைத் தவறாதடைகிறான். எவன் இப்படிப்பட்ட லக்ஷணங்கள் பொருந்திய என்னுடைய பக்தனாய் ஏற்படுவானோ, அவன் இந்த ஜகத்தில் இருக்கும்போதே ப்ரஹ்மதை என்பவள் அவனுக்கு மாலையிட்டு அவனுடைய பதிவ்ரதா பத்நியாய் எப்போதும் இருந்து தீர்கிறாள். கங்கையின் ப்ரவாஹமானது எவ்வளவுதான் கோலாஹலமாய் கொந்தளித்துக் கொண்டு ஓடின போதிலும் அதற்கு ஸமுத்ர்த்தில் போய் விழுந்து அத்துடன் ஒன்று பட்டுப் போனதைத் தவிர வேறு கதி எப்படியில்லையோ அப்படியே எவன் என்னுடைய ஸ்வரூப ஞானத்தினின்று வழுவாமல் என்னை இடைவிடாது பஜித்துக் கொண்டிருப்பானோ அவன் ப்ரஹ்மதை என்பவள் தலையில் சூடாமணியாக விளங்குவான். இந்த ப்ரஹ்மதையைத்தான் ஸாயுஜ்யம் என்றும் நான்காவது புருஷார்த்தம் என்று சொல்வார்கள்.

ब्रह्मणो हि प्रतिष्ठाहममृतस्याव्ययस्य च ।
शाश्वतस्य च धर्मस्य सुखस्यैकान्तिकस्य च ।। २७ ।।

ப்ரம்ஹணோ ஹி ப்ரதிஷ்டாஹ மம்ருதஸ்யாவ்யயஸ்ய ச।
ஶாஶ்வதஸ்ய ச தர்மஸ்ய ஸுகஸ்யை காந்திகஸ்ய ச ।। 27

பகவத்ஸ்வரூப நிர்ணயம்

இந்த ப்ரஹ்மத்வநிலையை அடைவதற்கு என் விஷயமான பக்தி படிக்கட்டு என்றும் நான் இவ்விஷயத்தில் ஸாதநம் என்றும் இவ்விதம் உனக்கு ஒருவேளை தோன்றலாம். அப்படிப்பட்ட அறிவு மயக்கம் உனக்கு ஒருநாளும் உண்டாகக் கூடாது;, ஏனென்றால் என்னைவிட்டு ப்ரஹ்மம் என்று

வேறான ஓர் வஸ்து இல்லை. அப்பா ப்ரஹ்மம் என்னும் சப்தத்துக்கு அர்த்தமாய் நிற்கும் பொருள் நானே. பின் சொல்லப்படும் சப்தங்கள் அனைத்தாலும் குறிப்பிடப்பட்டவன் நானே. நன்றாய்ப்பார், சந்திரனும் சந்திரமண்டலமும் வேறுபட்ட வஸ்துக்கள் அல்லவே, வர்மஞ்ஞனான ஹே பார்த்தா அப்படியே எனக்கும் ப்ரஹ்மத்துக்கும் பேதமில்லை. அப்பா நித்யம் என்றும் நிஷ்கம்ப மென்றும், ஓர் மறைவு மின்றி வெளிப்பட்டு மூர்த்திகரித்து நிற்கும் தர்மமே என்றும் அளவற்ற அத்விதீயமான ஸுகம் என்றும் ஞானம் தன்னுடைய வேலையை யெல்லாம் செய்து முடித்துவிட்டு லயப்பட்டுப் போகும் ஸ்தான மென்றும், ஸித்தாந்தத்தின் முடிவாகிய எல்லையற்ற ஸ்தானம் என்றும் எது சொல்லப்படுமோ அது நானே. இன்னும் வளர்த்துவதில் பயன் இல்லை. இப்படி எல்லாம் நான் இருக்கிறேன் என்று நன்றாய்த் தெரிந்து கொள், என்று இப்படியெல்லாம் அந்யகதியற்றவர்களாய்த் தன்னை வந்தடைகிறவர்களுக்கு பந்துவான ஸ்ரீகிருஷ்ணன் வீரோத்தமனான அர்ஜுனனுக்கு சொல்லிக் கொண்டு நின்றார், என்று ஸஞ்சயன் சொன்னான்.

இதைக் கேட்டு த்ருதராஷ்டிரன், "உன்னை இவ்விஷயத்தைப் பற்றி ஒருவரும் விசாரிக்காமல் இருக்க நீ ஏன் இப்படியெல்லாம் ப்ரயோஜனமில்லாமல் பேசுகிறாய். நான் எந்தக் கக்ஷிக்காரர்கள் இந்த யுத்தத்தில் ஜயிப்பார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன், என்னுடைய ஆசையைத் தீர்த்து வை," என்று ஸஞ்சயனைப் பார்த்துச் சொன்னான். அப்போது ஸஞ்சயன், "அப்பா உன் பிள்ளைகள் ஜயம் பெறுவார்கள் என்ற ஆசையை விட்டொழி" என்று தன் மனஸுக்குள் சொல்லிவிட்டு பின்பு ஸ்ரீகிருஷ்ணவாக்யங்களின் ரஸத்தை மிக்கக் கொண்டாடி, ஆச்சர்யப்பட்டு, திரும்பவும் தனக்குத் தானே பின்வருமாறு சொல்லிக் கொண்டான். இவன் பகவான் விஷயத்தில் எப்படிப்பட்ட த்வேஷம் பாராட்டி இருக்கிறான். ஆனால் க்ருபாளுவாகிய பகவானே இவன் விஷயத்தில் க்ருபை கூர்ந்து இவனுக்கு விவேகம் புகட்டி மோஹம் என்னும் மஹாரோகத்தைப் போக்கி வைக்க வேண்டும். இப்படி ஸஞ்ஜயன் சிந்தித்துக் கொண்டே திரும்பவும் ஸ்ரீகிருஷ்ணார்ஜுந ஸம்வாதத்தை கவனிக்கத் தொடங்கினான். அப்படிச் செய்யவே அவன் மிக்க களிப்புற்று, அக்களிப்பு ஓர் ப்ரவாஹமாய் ஓடத்தலைப்பட்டது. இப்படி அவனுக்கு ஏற்பட்ட உத்ஸாஹத்தோடு ஸ்ரீக்ருஷ்ணன் மேலே சொன்ன விஷயங்களை அவன் சொல்வான். அதின் அபிப்ராயத்தை நிவ்ருத்திதாஸனாகிய நான் உங்களுக்கு விளங்கச் செய்வேன். கேளுங்கள்.

பதினான்காவது அத்யாயம் முற்றிற்று.

அத்யாயம் 15

ஸத்குருவந்தனம்

இப்போது என்னுடைய ஹ்ருதயத்தை அதிபரிசுத்தமாய்ச் செய்து கொண்டு அதில் ஸ்ரீகுருவின் பாதங்களை இருத்தி வைப்பேன் அவற்றுடன் ஒன்றுபட்டுப்போகை என்னும் மனோபாவத்தையே அஞ்ஜலியாய்ச் செய்து கொண்டு அதில் ஸர்வேந்த்ரியங்களையே புஷ்பங்களாய் செய்து வைத்துக் கொண்டு அப்பாதங்களில் அர்க்யமாய் ஸமர்ப்பிப்பேன். வேறுபட்டிராமை என்பதையே நீராய்க் கொண்டு அப்பாதங்களுக்கு அபிஷேகம் செய்து வாஸனைகளை அப்பாதங்களிலேயே நிலைபெறச் செய்தல் என்பதையே அவற்றிற்கு சந்தநப்பொட்டாய் இடுவேன், என்னுடைய ப்ரேமை என்னும் சுத்தமான தங்கத்தை நூபுரங்களாய்ச் செய்து கொண்டு அந்த அதிஸுகுமாரமான பாதங்களிற் பூட்டி அவற்றை அலங்கரிப்பேன்.

மற்றொன்றின் மேலும் செல்லாது தோஷமற்றிருக்கும் என்னுடைய ப்ரியத்தை மிக்க அதிகரிக்கச் செய்து கொண்டு அதை அப்பாதங்களுக்கு மெட்டிகளாக ஸமர்ப்பிப்பேன். பொங்கினவையான ஸாத்விகபாவங்கள் என்னும் எட்டு தளங்களோடு விகஸித்ததாய் ஆநந்தமே பரிமளமாக அமைந்துள்ள ஓர் தாமரைப் பூவை அப்பாதங்களிற் சாத்துவேன். அப்பாதங்களின் முன் அஹம்காரத்தை தூபமாய் எரித்து வாஸநை காட்டி நிரஹம்காரம் என்பதை தீபமாய் ஏற்றிக் கொண்டு அப்பாதங்களுக்கு தீபாராதநமாய்ச் சுற்றி அப்பாதங்களோ டொன்றுபட்டு நிற்கை என்னும் மனோபாவத்தைக் கொண்டு அவற்றை இறுகக் கட்டிக் கொள்வேன். என்னுடைய தேஹத்தையும் ப்ராணனையும் இரண்டு பாதுகைகளாய்ச் செய்து அவற்றின் மேல் அந்த குருசரணங்களை ஏற்றி வைத்து அவற்றை அலங்கரிப்பேன். பின்பு ஐஹிகாமுஷ்மிக ஸுகங்களையும் மோக்ஷத்தையும் கையில் எடுத்துக் கொண்டு அப்பாகங்களுக்கு த்ருஷ்டி சுற்றிப் போடுவேன்.

குருஸேவையின் பெருமை

ஸகல புருஷார்த்தங்களையும் விளைவித்துத் தருவதான இப்படிப்பட்ட குருஸேவையானது பரமபாக்யம் படைத்த ஒருவனுக்குத் தான் லபிக்கும். இப்படி ஸேவை செய்யும்

ஒருவன் ப்ரஹ்மத்தையும் ஸகல ஸம்ஸாரதாப நிவ்ருத்தியையும் அடையும்படி செய்துகொடுக்கும் ஞானபரிபாகத்தைப் பெறுவான். அத்துடன் அவனுடைய வாக்கும் கேவல அம்ருதக் கடலாகவே ஆய்விடும். அவன் பேசத் தொடங்கினால் அவன் வாயினின்று வெளிப்படும் அக்ஷரங்களுடைய மாதுர்யத்தின் முன் கோடிக்கணக்கான பூர்ணசந்திரர்களை த்ருஷ்டி சுற்றிப் போடவேண்டும். ஸூர்யன் கிழக்குதிக்கில் உதயமான உடன் ஜகத்தனைத்துக்கும் ப்ரகாசம் ஏற்படுவது போலும் அவன் பேசத் தொடங்கின மாத்ரத்தில் ச்ரோதாக்களுக்கு ஞான விஷயத்தில் தீபாவளிப் பண்டிகை ஏற்படும்.

இந்த குருஸேவை என்னும் மஹாபாக்யம் ஒருவனுக்கு உண்டானபின் அவனுடைய பேச்சுக்கு முன் நாதப்ரஹ்மமே ரஞ்சகசக்தி யற்றதாகவும் மோக்ஷஸுகம் ருசியற்றதாகவும் தோற்றிப் போகும். அவனுடைய வாக் என்னும் கொடி ஸகல விஷயங்களிலும் விஸ்தார மடைந்து ஞாநார்த்தங்களால் அலங்கரிக்கப்பட்டதாய் இருந்து கொண்டு உலகத்தாரை ச்ரவணஸுகம் என்னும் பந்தலின் கீழ் உட்காரவைத்து வஸந்தருதுவின் ஆநந்தத்தை அநுபவிக்கச் செய்து வைக்கும். எந்த ஸ்வயம்ப்ரகாசமான பரப்ரஹ்மவஸ்து மனஸுக்கும் வாக்குக்கும் எட்ட முடியாததா யிருக்கிறதோ அது குருபக்தனுடைய வார்த்தைகளுக்கு வசப்பட்டுப் போகிறது இது என்ன ஆச்சர்யம்? எந்த வஸ்து ஞாநத்தினாற் றேடிக் கண்டுபிடிக்க முடியாததாயும் த்யாநத்துக்கு அகப்படாததாயும் இருந்து கொண்டு ஒருவராலும் அறியப்படாததாய் இருக்குமோ அது குருபக்தனுடைய வார்த்தைகளுக்குள் சிக்கிக் கிடந்து போகிறது. குருபாதகமலஸேவை எவனுக்குத்தோ அவனுடைய வாக் இப்படி ஒப்பற்றபடி பெருத்திருக்கும் ஓர் பாக்யத்தைப் படைத்ததாகிறது.

ஞாநதேவர் தன் பாக்யத்தைக் கொண்டாடிக் கொள்ளல்

மேலும் வளர்த்துவதென்? இக்காலத்தில் இந்த பாக்யம் என்னைத் தவிர மற்றெவருக்குங் கிடைத்ததாயில்லை. என் ஸத்குருவாகிய தாய்க்கு நான் ஒருவனே குழந்தையாய் ஏற்பட்டிருப்பதால் அவருடைய க்ருபை முழுவதுக்கும் நானே பாத்ரமாயிருக்கிறேன். மேகம் தன்னுடைய ஜலஸம்பத்தனைத்தையும் சாதகத்துக்கே ஊட்டிவைத்தாற்

போலும்; என் ஸ்வாமியான ஸ்ரீகுரு என்னொருவனையே தன் க்ருபைக்கு விஷயமாகச் செய்து கொண்டார். ஆகையாற்றான் ஓர் வேலையும் இல்லாதிருந்த இந்த வாயைத் திறந்து ஏதோ உளற வேண்டுமென்றாரம்பித்தால் கீதார்த்த ப்ரவசநம் என்னும் அதிருசிகரமான வஸ்து அதற்குக் கிடைத்துப் போயிற்று. ஒருவனுக்கு அத்ருஷ்டம் இருந்தால் அவன் ஆற்றுமணலைக் கையில் வாரிக் கொண்டால் அது அனைத்தும் உத்தம ரத்நங்கள் ஆய்விடுகிறது. ஆயுள் பலமாயிருந்தால் கொல்லவந்தவன் கூட ப்ரியம் பாராட்டுகிறவன் ஆய்விடுகிறான். பசியெடுத்த ஒருவனுக்கு, அந்நம் கொடுத்து அவன் பசியைத் தீர்க்க வேண்டுமென்று ஸர்வேச்வரன் ஸங்கல்ப்பித்து விட்டால் அப்படிப் பசியெடுத்தவன் பருக்கைக் கற்களைத் திரட்டி, உலையிற் போட்டு வேக வைத்தால் அவை அம்ருதமயமான அந்நம் ஆய்விட ஓர் தடையும் இல்லை.

அப்படியே ஸ்ரீகுரு ஒருவனை அங்கீகரித்துக் கொண்டால் அவனுக்கு இந்த ஸம்ஸாரமே முழுவதும் மோஷமாய் விடுகிறது பார் எல்லாரும் பரிஹஸித்து நிந்திக்கத்தக்கதான இந்த பாண்டவர்களுடைய சரித்ரத்தையே உலகத்தாரனைவரும் கொண்டாடி பூஜிக்கும் படியான புராணம் என்னும் புண்யகதையாய் ஸ்ரீமந்நாரயாணன் செய்து வைக்க வில்லையா? அப்படியே ஸ்ரீநிவ்ருத்திராஜராகிய என்னுடைய குருநாதன் என்னுடைய அஞ்ஞானத்துக்கே, ஞானத்தின் பெருமையை ஏற்படுத்தி வைத்தார். ஆனால் இவ்வார்த்தைகளை இன்னும் வளர்க்காமல் நிறுத்திவிட வேண்டியதாய் இருக்கிறது. இவ்விஷயத்தைப் பேசப்பேச ப்ரேமை வ்ருத்தி அடைந்து தொண்டை தழுதழுத்துப் போகிறது. அன்றியும் குருநாதனுடைய பெருமையைத் தக்கபடி வர்ணிப்பதற்கு எனக்கு எங்கே ஞானம் இருக்கிறது? இனி அவருடைய ப்ரஸாதத்தின் பலத்தைக் கொண்டு ஸ்ரீபகவத் கீதையின் அபிப்ராயங்களை வெளிப்படுத்தி வைத்து ஸாதுக்களுடைய சரணஸேவை செய்வேன்.

சென்ற அத்யாயத்துக்கும் இவ்வத்யாயத்துக்கும் உள்ள ஸங்கதி

பதினான்காவது அத்யாயத்தின் முடிவில் மோக்ஷதாதாவான ஸ்ரீக்ருஷ்ணன் நிர்ணயித்து வைத்த விஷயம் எதுவோ, அதுவே இந்தப் பதினைந்தாவது அத்யாயத்தில் விஸ்தரிக்கப்படுகிறது. அவ்விஷயம் என்னவென்றால் எப்படி

நூறு யஜ்ஞங்கள் செய்தவனுக்குத் தான் ஸ்வர்க்க லோகாதிபத்யம் கிடைக்குமோ அப்படியே ஞானம் அடைந்தவனுக்குத் தான் முக்தி கிடைக்கும். என்பதே. எவன் ஜந்மங்கள் தோறும் ப்ராஹ்மண கர்மங்களையே செய்து கொண்டு நூறு ஜந்மங்களை கழித்து விடுவானோ அவனேதான் ப்ரஹ்மபதவியை அடைவதற்குத் தகுந்தவன் ஆவது போலும் கண்பார்வையுள்ளவனே ஸூர்யப்ரகாசத்தின் ப்ரயோஜநத்தை அடைவது போலும் ஞானம் அடைந்தவனுக்குத் தான் மோஷம் பெற யோக்யதை ஏற்படுகிறது. ஆனால் இந்த ஞானத்தை ஸம்பாதித்துக் கொள்ள எவனுக்கு யோக்யதை இருக்கிறதென்று விசாரிக்கப் போனால் அப்படிப்பட்ட யோக்யதை இந்த ஜகத்தில் ஒருவனுக்கே இருப்பதாக ஏற்படுகிறது. பாதாளத்தில் புதைந்து கிடக்கும் நிதியை மையே காட்டிக் கொடுப்பதாயிருந்தாலும் அந்த மையைக் கண்ணில் இட்டுக் கொள்கிறவன் கால்முள் வைத்துப் பிறந்தவனா யிருக்கவேண்டியது அவச்யம் ஆவது போலும் ஞானமே மோக்ஷத்தைச் செய்து கொடுக்கிற தென்பதில் யாதோர் ஸந்தேஹமும் இல்லாமற் போனாலும் அந்த ஞானம் ஒருவனிடத்தில் நிலை கொள்வதற்கு, அவனுடைய மனது சுத்தமாயிருக்க வேண்டியது அவச்யம்.

அதாவது, அவன் மனஸில் திடமாய் வைராக்யம் ஏற்படாது போனால் ஞானம் நீடித்து நிற்காது, என்பது முன்பே பகவானால் தீர்மானித்து வைக்கப்பட்டிருக்கிறது. இனி வைராக்யம் தானாகவே வந்து மனஸுக்கு மாலையிடுவதற்கு உபாயம் என்னவென்று ஸர்வஜ்ஞான பகவான் விசாரித்துப் பார்த்து ஒருவன் தனக்கு முன் வைத்திருக்கப்பட்ட அன்னத்தில் விஷம் கலந்திருக்கிறதென்று தெரிந்து கொண்ட மாத்திரத்தில் அதை பாத்ரத்தோடு கூட எறிந்துவிட்டுப் போவது போலும் ஸம்ஸாரம் முழுமையும் அநித்யம் என்று தெரிந்து போன மாத்ரத்தில், வைராக்யத்தை எவ்வளவுதான் நெட்டித் தள்ளினாலும் அது வலுவில் மனதில் புகுந்து கொள்ளும் என்றறிந்து பகவான் ஸம்ஸாரத்தின் அநித்யதையை நிரூபிக்கத்தொடங்கி இப்பதினைந்தாவது அத்யாயத்தில் ஸம்ஸாரத்தை ஓர் வ்ருக்ஷமாய் வர்ணித்து அதின் அநித்யத்தை இவ்வகைப்பட்ட தென்று விளங்கச் செய்வார். ஒர் மரத்தை வேறோடு பிடுங்கி அதைத் தலைகீழாக நட்டுவைத்தால் அது சீக்கிரத்தில் உலர்ந்து போகுமே அப்படிப்பட்டதாய் இல்லை இங்கே வருணிக்கப்பட்ட சாம்சாரவ்ருக்ஷம். இந்த சாம்சாரவ்ருக்ஷத்தை இங்கே வர்ணித்திருப்பதின் ஸாமர்த்யத்தால் பிறந்து மரணமடைந்து

வேறொருலகம் போய் ஸுகதுக்கங்கள் அநுபவித்து திரும்பவும் சம்சாரத்திற் பிறந்து சாதல் ரூபமாய், ஆத்மாவுக்கு ஏற்பட்டுள்ள ஓயாத யாத்ரை ஒய்ந்து போகிறது. ஸம்ஸாரத்தை பொய் என்று ஏற்படுத்திவைத்து நான் என்னும் பாவத்துக்கு ஆத்மஸ்வரூபத்தையே விஷயமாய்ச் செய்து கொடுப்பதே இந்த அத்யாயத்தின் அபிப்ராயம் இதுவே இந்த கீதையென்னும் க்ரந்தம் முழுவதிலும் அடங்கியுள்ள ஸாரம். இதை மேலே விளங்கச் செய்வேன். நீங்கள் உங்களுடைய முழு கவனத்தோடு கேட்கவேண்டும். மஹாநந்தம் என்னும் ஸமுத்ரத்துக்குப் பூர்ணசந்திரனும், த்வாரகாபுரத்தின் அரசனுமான ஸ்ரீக்ருஷ்ணன் பின்வருமாறு சொன்னார்

श्रीभगवानुवाच ।

ऊर्ध्वमूलमधःशाखमश्वत्थं प्राहुरव्ययम् ।

छन्दांसि यस्य पर्णानि यस्तं वेद स वेदवित् ॥१॥

ஸ்ரீ பகவானுவாச -

ஊர்த்வ மூலமத: ஶாக மஶ்வத்தம் ப்ராஹுரவ்யயம்।

சந்தாம்ஸி யஸ்ய பர்ணானி யஸ்தம் வேத ஸ வேதவித் ॥ 1

ப்ரபஞ்சத்தை ஓர் வ்ருக்ஷமாய் வர்ணித்தல் -

அப்பா பாண்டுவின் குமாரனே, ஆத்மஸ்வரூபம் என்னும் வீட்டை அடைவதற்கு நாம் நெருங்கும்போது ப்ரபஞ்சம் என்னும் ஓர் தோற்ற மல்லவா குறிக்கிட்டு வழியை மறித்துக் கொள்கிறது. அந்த ப்ரபஞ்சத்தை ஜகத் தென்னும் தோற்றமாய்ப் பாவிக்காமல் விஸ்தாரமாய் வளர்ந்திருக்கும் ஓர் வ்ருக்ஷமாய்க் கற்பித்துக் கொள். ஆனால் இந்த வ்ருக்ஷம் மற்ற வ்ருக்ஷங்களைப் போல், கீழ் பக்கத்தில் வேரையும் மேல் பக்கத்தில் கிளைகளையும் உடைத்தானதாய் இராமல் ஒருவராலும் வர்ணிக்க முடியாததாய் இருக்கிறது. மற்ற வ்ருக்ஷங்களின் அடிக்கட்டையில் அக்நியல்லது கோடெறி ப்ரவேசித்தால் அதின் மேல்பாகம் எவ்வளவு பெருத்ததாயிருந்தாலும் வேரின் கிட்ட அது துண்டித்துப் போய் தலைகீழாக புரண்டு விழுந்து விடுமல்லவா? அவ்வளவு ஸுலபமாய் இந்த வ்ருக்ஷத்தை வீழ்த்த முடியாது. அர்ஜுநா இந்த ஆச்சர்யத்தை என்னவென்று சொல்வேன்! இந்த வ்ருக்ஷத்தின் வேர்கள் மேல் பக்கத்திலும் அதன் வளர்த்தியெல்லாம் கீழ்ப்பக்கத்திலும் இருக்கிறது. ஸூர்யன்

கணக்கிட முடியாதபடி உயரத்தில் இருந்து கொண்டு அவனுடைய கிரணங்கள் கீழ்ப்பக்கத்தில் பரவுவது போலும் இந்த வ்ருக்ஷம் மிக்க ஆச்சர்யகரமாய் இருக்கிறது. ப்ரளகாலத்தின் நீரால் ஆகாசம் எங்கும் வ்யாபிக்கப்பட்டுப் போவது போலும் இந்த ஜகத்தில் இருப்பது இராததாகிய அனைத்தும் இந்த ஓர் வ்ருக்ஷத்தால் வ்யாபிக்கப்பட்டிருக்கிறது. அல்லது ஸூர்யன் அஸ்தமித்துப் போன பின் இராத்ரியில் எங்கு பார்த்தாலும் இருட்டு கொந்தளித்துக் கொண்டு வ்யாபித் திருப்பது போலும் இந்த வ்ருக்ஷம் ஆகாசத்தில் எங்கும் விஸ்தாரம் அடைந்ததாய் இருக்கிறது. இதைக் கடித்து இதின் சுவையை அறிந்து கொள்வோம் என்றால், இதற்குப் பழம் இல்லை; இதை முகந்து பார்ப்போம் என்றால் இதற்குப் பூவில்லை. இதின் ஸர்வாம்சமும் மரமாகவே இருக்கிறது இதின் வேர்கள் மேற்பக்கத்தில் இருந்தாலும் இது வேரொடு பிடுங்கப்பட்டு புரண்டு கிடக்கிறதல்ல. இதின் வேர்கள் மேற்பக்கம் இருப்பதினாலேயே இம்மரம் செழுமையாய் வளர்ந்து கொண்டிருக்கிறது. இது ஊர்த்வமூலம் (மேற்பக்கத்தில் வேரை உடைத்தானது) என்பது உண்மையே யானாலும் இதின் கீழ் பக்கத்திற் கூட, கணக்கற்றபடி, வேர்கள் பரவியிருக்கின்றன.

மிக்க செழுமையாய் வ்ருத்தி அடைந்து பரவி இருக்கும் அரசு அல்லது ஆலமரத்தைப் போலும் விழுதுகள் உண்டாய் அவ்விழுதுகளின் நடுவினின்று கூட, தழைத்த இளங்கிளைகள் வளர்ந்திருக்கின்றன. அப்படியே இந்த ஸம்ஸார வ்ருக்ஷத்துக்குக் கீழ்பக்கம் தான். கிளைகள் இருக்கின்றன. வென்றோர் நியமம் இல்லை. இம்மரத்தின் மேற் பக்கத்திலும் கணக்கற்றவையாய் கிளைகள் விஸ்தாரம் அடைந்திருப்பதைப் பார்க்கலாம். இது ஆகாசத்தையே எல்லையாகக் கொண்டு, அவ்வாகாசத்தை நிரப்பிக் கொண்டிருக்கும் வாயுவைப போல், வ்யாப்தி அடைந்திருக்கிறது. இது மூன்று அவஸ்தைகளோடு கூடிய தாய் ஏற்பட்டிருக்கிறது. விச்வமே இப்படிப்பட்ட ஓர் வ்ருக்ஷ ரூபமாய் மேற்பக்கம் வேர்கள் படைத்ததாய், ஏற்பட்டிருக்கிறதென்று தெரிந்து கொள். மேற்பக்கம் என்பது என்ன? அங்கே பரவி இருக்கும் வேர்களின் லக்ஷணங்கள் என்ன? கீழ்நோக்கிப் பரவி இருக்கும் கிளைகள் எப்படிப்பட்டவை? அல்லது இந்த மரத்தில் கீழ்நோக்கிப் பரவி இருக்கும் வேர்களினின்று வெடித்து மேல் நோக்கி வளர்ந்திருக்கும் கிளைகள் என்பவை எவை? அவை எவ்வகைப்பட்ட லக்ஷணங்களுள்ளவை? அன்றியும் இம்மரத்துக்குப் அச்வத்தம் என்று ஓர் பெயர் ப்ரஸித்தி பெற்றிருக்கிறதே அப்பெயர் ஏற்படுவதற்குக் காரணம் என்ன?

இவ்விஷயங்கள் அனைத்தையும் ஆத்ம ஞானத்திலேயே ஸதா க்ரீடித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீகிருஷ்ணன் தன் மனஸில் நிர்ணயித்துக் கொண்டு அர்ஜுநனைப் பார்த்து அப்பா இவையனைத்தையும் நீ ஸந்தேஹமறத் தெரிந்து கொள்ளும்படி நான் இவற்றை விடுத்து விஸ்தாரப்படுத்திச் சொல்வேன், ஹே பாக்யசாலியே கேள் என்றார். இதைக் கேட்பதற்கு உனக்குத்தான், யோக்யதை ஏற்பட்டிருக்கிறது. ஹே தைர்யம் படைத்தவனே உன்னுடைய ஸர்வாங்கத்தையும் காதாய்ச் செய்து கொள். இப்படி பகவான் ப்ரேமையின் பெருக்கால் சொல்லவே, கவநம் என்பது அர்ஜுநனாக உருவு கொண்டு நின்றது. ஆகாசம் எவ்வளவு பெரிதாய் இருந்தாலும், பத்துதிக்களும் தங்கள் ஆலிங்கனத்துக்குள் அதை அடக்கிக் கொள்வது போலும் பகவானுடைய ப்ரஸங்கம் எவ்வளவோ விஸ்தாரமாயிருந்தாலும் அது முழுவதையும் சிறியதாய் செய்து வைக்கும்படி, அர்ஜுநனுடைய கவனம் விஸ்தாரம் அடைந்தது. ஸ்ரீ க்ருஷ்ணனுடைய ப்ரவசநம் என்னும் ஸமுத்ரத்துக்கு, இந்த அர்ஜுநன் அகஸ்த்ய ரிஷியானானோ என்றெண்ணும்படி ஸ்ரீக்ருஷ்ணன் சொன்னதனைத்தையும் அர்ஜுநன் ஒரே விழுங்கலாய் விழுங்கப் பார்த்தான். இப்படி அர்ஜுநனிடத்தில் எல்லை மீறினதான கவனம் ஏற்பட்டதை பகவான் பார்த்து அதினால் மனஸு மகிழ்ந்து அம்மன மகிழ்ச்சியைக் கொண்டே அர்ஜுநனுக்கு த்ருஷ்டி சுற்றிப் போட்டுவிட்டு பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்.

முன் சொன்ன ஊர்த்வம் என்னும் பதத்தின் அர்த்தம்

இந்த ஸந்தர்ப்பத்தில் ஊர்த்வம் (மேல் இருப்பது) என்று ஓர் பதம் ப்ரயோகித்தேனே அது பரப்ரஹ்மத்தை குறிக்கிறது. ஸம்ஸாரத்தை ஓர் மரமாய் வர்ணிப்பதினாற்றான் பரப்ரஹ்மவஸ்துக்கு ஊர்த்வம் என்னும் பெயர் பொருத்தம் உள்ளதாகிறது. இல்லாவிட்டால் முற்றிலும் பேதமற்ற அத்வயமான அவ்வஸ்துவில் ஊர்த்வம், மத்யமம் அதஸ் (கீழ்ப்பக்கம்) என்னும் பதங்கள் எப்படி ஒட்டும்? அவ்வஸ்துவோ கேட்கிறவர்களற்ற நாதமாயும் முகக்கக் கூடியவர்களற்றிருக்கும் மகரந்தமாயும், ஆண் பெண் கலவியினால் ஏற்படாது, தானாகவே ஏற்பட்டுள்ள ஆநந்தத்தின் உருவமாயுமிருக்கிறது. அக்கரையில் இருப்பது என்று சொல்லத்தக்க யாவற்றையும் தாண்டி நிற்கிறதாயும் முன்புள்ள தென்று சொல்லத்தக்க எல்லாவஸ்துக்களுக்கும் முற்பட்டதாயும் பார்க்கப்படக்கூடிய வேறானவஸ்து

இன்றியே பார்க்கிறதாயும், மற்றொன்றின் பார்வைக்கு விஷயமாகாததாயும், அவ்வஸ்து இருக்கிறது. அவ்வஸ்து கல்பிக்கப்பட்டவையான உபாதிகளென்ற வர்ணத் தகட்டின் சேர்க்கை யால் நாமரூபங்களோடு கூடிய இந்த ஜகத்தாகக் காணப்படுகிறது.

அவ்வஸ்து, ஞாதா, (அறிகிறவன்) என்றும் ஞேயம் (அறியப்பட்டது) என்றும் சொல்லப்பட முடியாததாய் கேவல ஞானமாய் இருந்து கொண்டு உபாதிகள் முற்றிலும் அற்ற வடிக்கட்டின ஆநந்தமாய் இருக்கிறது. கார்யம் என்றாவது காரணம் என்றாவது வ்யவஹரிக்க முடியாததாய் மற்றொன்றோடு கூடியிருப்ப தென்றாவது அல்லது தனித்தே இருக்கிற தென்றாவது சொல்லமுடியாததாய் தன்னைத் தானே அறிந்து கொள்வதாய் அவ்வஸ்து இருக்கிறது., அந்த பரப்ரஹ்மவஸ்து தான் இந்த ஸம்ஸாரவ்ருக்ஷத்துக்கு ஊர்த்வம் என்று சொல்லப்படுகிறது.

மூலம் என்பது யாது –

அந்த வஸ்துவில் வேர்களின் முளைகள் வெளிப்படுவ தென்பது இப்படி இருக்கிறது. இல்லாமையையே தனக்கு இருப்பாய் உடைத்தானதாய் மலடியின் ஸந்தானத்தை வர்ணிப்பது போல், ஸத் என்றாவது அஸத் என்றாவது சொல்ல முடியாததாய் விசாரத்தின் பெயரையே ஸஹியாததாய், இப்படி அநாதியாய் இருக்கிற தென்று உலகத்தாரால் வ்யவஹரிக்கப்பட்டதாய், அநேக விதமான தத்வங்கள் நிறைந்திருக்கும் பெட்டியாய், ஜகத் என்னும் மேகத்துக்கு ஆதாரமான ஆகாசமாய், விச்வமென்னும் வஸ்த்ரத்தின் மடிப்பாய், ஸம்ஸாரம் என்னும் வ்ருக்ஷத்தின் விதையாய் ப்ரபஞ்சம் என்னும் சித்திரத்துக்கு பூமிகையாய் (ஓர் சித்ரத்துக்கு ஆதாரம்) ப்ரஹ்மஞானத்துக்கு விபரீதமான இதர ஞானங்கள் நிறைத்துவைக்கப்பட்டுள்ளதாய் மாயை என்று பெயரிடப்பட்டதாய் இருக்கும் யாதொன்றுண்டோ அது ப்ரஹ்மவஸ்துவின் ஸ்வரூபத்தில் உண்மையான இருப்பற்றதாய் இருந்தும், இருப்பதுபோல் ப்ரஹ்மவஸ்துவின் ப்ரகாசத்தினால் தோன்றிக் கொண்டிருக்கின்றது. எப்படி ஒருவனுக்கு நித்ரை ஏற்பட்டபிறகு அவன் தன்னைத்தான் மறந்துப் போகிறானோ ஓர் தீபத்தினின்றுண்டான புகையானது எப்படி அந்த தீபத்தின் பிரகாசத்தை மழுங்கலாய்ச் செய்து வைக்கிறதோ அல்லது எப்படி ஒருவன், தன் ஸ்வப்நத்தில் தன்னுடைய ஸ்தீரி தன்னையெழுப்பித் தனக்கு ஆலிங்கனம் கொடுத்து தன்னைக் காமத்தோடு

கூடியவனாக செய்துவைத்ததாக அப்படி யொன்றும் நடக்காதிருக்கும்போதே காணுவானோ அப்படியே ஸ்வரூபத்தில் .மாயை ஸம்பந்தப்பட்ட உடனே ஏற்படும் தன் ஸ்வரூப விஷய அஞ்ஞானமே, இந்த ஸம்ஸார வ்ருக்ஷத்துக்கு முதல் வேராகிறது.

அதச்சாகம் என்பதின் விவரணம்

ஆத்மவஸ்துவுக்குத் தன் விஷயத்தில் இப்படி ஏற்படும் அஞ்ஞானம் ஊர்த்வம் என்ற ஆத்மவஸ்துவில் கெட்டியான உடனே அது வேதாந்தத்தில் ஸம்ஸாரத்துக்கு பீஜம் என்று சொல்லப்படுகிறது. கெட்டியான அஞ்ஞானமாகிய ஸுஷுப்தியை முளையெடுத்த விதையாகவும், ஸ்வப்நாவஸ்தையையும் ஜாக்ரதவஸ்தையையும் அதிலிருந்து பலித்தவை ஆகவும் வேதாந்தத்திற் சொல்வார்கள். இப்படி இந்த மாயை கார்யத்தை வேதாந்தத்தில் நிரூபிப்பது வழக்கம் இது நிற்கட்டும் இங்கே சொல்ல வேண்டியது இவ்வளவே. ஆத்மாவில் உண்டாகும் தன் ஸ்வரூப விஷய அஞ்ஞானமே ஸம்ஸார வ்ருக்ஷத்துக்கு வேர். பின்பு ஊர்த்வமாகிய சுத்த ஆத்மாவினின்று மேலும் கீழுமாக வேர்கள் வெடித்து, அவை மாயை என்னும் பாத்தியின் ஈரத்தைக் கொண்டு புஷ்டி அடைகின்றன.பின்பு கீழ்ப்பக்கத்தில் அநேகவிதமான வாஸனைகளோடு கூடிய தேஹங்கள் உண்டாய், அவைகள் நான்கு வித முளைகளுடையனவாய் வளர்கின்றன. இப்படி மேல் இருக்கும் ப்ரஹ்மஸ்வரூபத்தில் ஸம்ஸார வ்ருக்ஷத்தின் வேர்கள் புஷ்டி அடைந்த மாத்திரத்தில் அதின் முளைகள் வலுத்து வளரத் தொடங்குகின்றன. பின்பு சித்தவ்ருத்தி என்னும் மஹத்தத்வம் முதன் முதல் மிக்கத் தளதளப்போடு கூடிய ஓர் இலையாக வெளிப்படுகிறது.

பின்பு அதினின்று ஸத்வம் ரஜஸ்தமஸ்ஸென்னும் குணங்களோடு கூடிய அஹம்காரம், மூவிலைகளோடு கூடிய ஓர் முளையாய் புறப்படுகிறது. அதினின்று புத்தி என்னும் ஓர் முளை வெடித்து அது நான் நீ என்ற பேதபாவத்தை உண்டாக்கி வைக்கிறது. அதினின்றும் மிக்க அழகாயிருக்கும் மனஸு என்னும் போத்து வெடிக்கிறது. இவ்விதம் வேர்கள் வலுவடைந்து விகல்பம் என்னும் நீரின் ஸம்பந்தத்தால், சித்தம் அஹம்காரம் புத்தி மனது என்ற நால்வகைப்பட்ட அந்தரிந்தரியங்கள் என்னும் கிளைகள் ஏற்படுகின்றன. பின்பு ஆகாசம், வாயு, தேஜஸ், அப்பு, ப்ருதிவி என்ற ஐந்து மஹாபூதங்கள் என்ற ஐந்து அழகிய சிறுகிளைகள் நேராக

நீண்டவையாய் உண்டாகின்றன. அப்படியே அச்சிறுகிளைகளில் காது முதலிய ஐந்து ஞானேந்திரியங்களும் அவற்றின் விஷயமான சப்தாதிகளும் மிகவும் விசித்ரமானவையும் தளதளப்பு பொருந்தியவையுமான இலைகளாய் வெளிப்படுகின்றன. அவற்றில் சப்தம் என்னும் முளை காது எவ்வளவு வ்யாப்தி உள்ளதோ அவ்வளவு வ்யாப்தி உள்ளதாய் உண்டாய், கேட்க வேண்டும் என்கிற காதின் ஆசையைப் பூர்த்தி செய்து வைக்கிறது. உடம்பின் தோல் என்னும் கொடியின் கொழுந்து ஸ்பர்சம் என்பதைப் பற்றிக் கொண்டு படர்கிறது. அப்போது நாநாவிதங்களான புதுப் புது விகாரங்கள் உண்டாகின்றன. அதற்குமேல் ரூபம் என்னும் இலை உண்டான உடன் உடனே, நாக்கு என்னும் இலை வளர்ந்து வலுத்து, அதில் வேடிக்கையை அநுபவிக்க கண்ணிந்த்ரயம் தன் நீண்டகைகளை நீட்டுகிறது.

அப்போது வ்யாமோஹம் என்னும் விகாரம் உண்டாய் வலிமையடைகிறது ரஸம் என்னும் இலை செழுமை அடைந்து ஆசைகள் என்னும் சிறு இலைகள் கணக்கற்றவையாய் உண்டாகின்றன. அப்படியே கந்தம் என்னும் கிளை வளர வளர மூக்கிந்த்ரியத்தில் முகக்கும் ஸுகம் அநுபவிக்க வேண்டும் என்னும் ஆசைகளே கிளைகளாய் வெடித்து லோபம் என்பது உண்டாகிறது. இப்படி அஹம்காரம் புத்தி மனது ஐந்து மஹாபூதங்கள் ஆகிய இவ்வெண்வகை ப்ரக்ருதிகளைக்கொண்டு முடிவுவரைக்கும் இந்த ஸம்ஸாரவ்ருக்ஷத்தின் வளர்த்தி ஏற்பட்டுவிடுகிறது. வளர்த்துவ தென்? எட்டு ப்ரக்ருதிகளைக் கொண்டு இந்த ஸம்ஸாரவ்ருக்ஷம் எவ்வளவுதான் வ்யாப்தி உள்ளதாய் வளர்ந்தபோதிலும் முத்துச் சிப்பியில் காணப்படும் வெள்ளி என்ற தோற்றம் முத்துச் சிப்பியின் பரிமாணம் உள்ளதாகவே இருப்பதுபோலும், ஸமுத்ரத்திற் காணப்படும் அலைக்கூட்டங்கள் என்ற தோற்றம், ஸமுத்ரத்தின் அளவுள்ளதாகவே காணப்படுவது போலும், அஞ்ஞாநத்தின் கார்யமாய் ப்ரஹ்மமே இந்த வ்ருக்ஷமாய்த் தோற்றுகிறது. ஆகையால் எப்படி ஒருவன் ஸ்வப்நம் காணும்போது; ஸ்வப்நத்தில் காணப்பட்ட அனைத்துமாக அவன் ஒருவனே ஆகிறானோ, அப்படியே விஸ்தாரமாய் பரவித் தோற்றும் இந்த ஜகத் முழுவதும் ப்ரஹ்மமே ஆகிறது. இது இப்படி இருக்கட்டும் இப்படி அறிவுமயக்கத்தால் தோன்றும் வ்ருக்ஷம் இந்த ப்ரஹ்மத்தின் கீழ்ப்பக்கத்திலுள்ள மஹதாதியான முளையினின்று கீழ்நோக்கி வளர்ந்திருக்கிறது.

இதற்கு அச்வத்தம் என்ற பெயர் ஏன் ஏற்பட்டது

தெரிந்தவர்கள் இந்த மரத்தை அச்வத்தம் என்று ஏன்சொல்கிறார்கள் என்பதை விவரிப்பேன் கேள் ச்வஸ் என்றால் நாளைய தினம். அதுவரைக்கும் இந்த ஸம்ஸார வ்ருக்ஷத்தின் ஸ்திதி ஒரே மாதிரி யாக இருந்து கொண்டிருப்பதில்லை. எப்படி ஓர் நிமிஷத்துக்குள் ஓர் மேகத்தில் பலவிதமான வர்ணபேதங்கள் ஏற்பட்டுவிடுகிறதோ எப்படி மின்னல் ஓர் நிமிஷம் கூட நிலைத்து நிற்பதில்லையோ எப்படி காற்றில் அசைந்து கொண்டிருக்கும் தாமரை இலைமீது ஜலம் நிலைகொண்டு நிற்பதில்லையோ, வ்யாகூலப்பட்ட மனுஷ்யனுடைய சித்தம் எப்படி ஸதா அலைந்து கொண்டிருக்குமோ, அப்படியே இந்த வ்ருக்ஷத்தின் நிலை க்ஷணக்ஷணமும் மாறிக் கொண்டு ஓர் விதப்பட்டதாய் இராமையால் இந்த ஸம்ஸார வ்ருக்ஷம் அச்வத்தம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் உலக வழக்கப்படி அச்வத்தம் என்பது அரசமரத்தின் பெயராக ஏற்பட்டிருக்கிறது. அப்படி உலக வழக்கப்படி, அச்வத்தம் என்பது, அரச மரத்தின் பெயர் ஆகுமேயானாலும் பகவானுடைய அபிப்பராயம் இங்கே அப்படி அன்று. அரசமரம் என்று அர்த்தம் செய்து கொண்டாலும் அதற்கும் ஓர் பொருத்தம் சொல்லலாம். என்று எனக்குத் தோன்றிய போதிலும், அதை விவரிப்பது அவச்யமில்லை. ஏனென்றால் பரமார்த்த வஸ்துவிசாரத்தில் லௌகிக ஸம்ப்ரதாயத்தைக் கொண்டாடுவது அநாவச்யம் ஆகையால் பாரமார்த்திகமானதையே சொல்வேன் கேளுங்கள். க்ஷணத்துக்கு க்ஷணம் மாறுதலோடு கூடியதாய் இருப்பதால், இம்மரம் அச்வத்தம் என்று சொல்லப்படுகிறது.

அவ்யயபதத்தின் அர்த்தம்

அன்றியும் இம்மரத்துக்கு அவ்யவம் (நாசமற்றது) என்று மிக்க ப்ரஸித்திபெற்ற பெயர் ஒன்று உண்டு. அதின் உட்கருத்தை மேலே சொல்வேன் கேள். ஸமுத்ரம் ஓர் பக்கத்தில் மேகங்களால் வற்ற அடிக்கப்பட்டு, மற்றோர் பக்கத்தில் நதிகளால் நிரப்பப்படுவதால், அது குறையாமலும் பொங்காமலுமெப்போதும் ஒரே மாதிரியாகவே நிரம்பியிருக்கிறதாகக் காணப்படுகிறது. ஆனால் மேகங்களால் வற்றிப் போதலும், நதிகளால் நிறம்புதலுமாகிய இவ்விரண்டின் ஏற்பாட்டுக்கு ஓர்பங்கமும் இல்லாமல் இருக்கும் வரைக்கும் தான் ஸமுத்ரம் நாசமற்று ஒரே விதப்பட்டிருக்கிற தென்ற இத்தோற்றம் இருந்து கொண்டிருக்கும். அப்படியே இந்த

ஜகத்தில் எப்போதும் வேகமாய் சிலபூதங்கள் லயம் அடைந்து கொண்டு சில உத்பத்தியாய் கொண்டிருப்பதால் உள் நுழைந்து பார்க்க அறியாத உலகத்தாருக்கு இதில் ஏற்படும் மாறுபாடுகள் புலப்படாமல் இது நாசம் அற்றதென்று தோற்றி கொண்டிருக்கிறது. தானம் செய்து கொண்டே இருக்கும் ஓர் புருஷனுடைய பொருளினழிவே பொருள் சேர்வதற்கு காரணமாவது போல் இந்த மரத்தில் ஏற்படும் நாசங்களே இது வளர்வதற்கு காரணமாய் இருந்து கொண்டு இம்மரம் நாசமற்ற தாகவே இருப்பதாகத் தோற்றி கொண்டிருக்கிறது. ஓர் ரதத்தின் சக்ரம் அதிவேகமாய் சுழன்று கொண்டு பூமியின் மேல் ஓடும் போது அது அசையாமல் ஒரே இடத்தில் புதைந்து போய் இருப்பதாகத் தோற்றுவது போலும் இம்மரத்தில் ஆயுட்காலம் முடிவுபெற்று ப்ராணிகள் என்னும் கிளைகள் உதிர்ந்து போய்க் கொண்டிருக்கும் போதே; கோடிக்கணக்காகப் புதுக்கிளைகள் முளையெடுத்து அவைகள் வளர்கின்றன. ஆனால் ஆஷாடமாதத்தின் ஆகாசத்தில் காணப்படும் மேகங்கள்போலும் உதிர்ந்து போன கிளைக்ள எப்போ துதிர்ந்து போயினவென்றும் புதுக்கிளைகள் எப்போது உண்டாயினவென்றும் நிர்ணயிக்க முடிவதில்லை.

மஹாப்ரளய காலத்தில் இம்மாதத்தின் கிளைகள் அனைத்தும் உதிர்ந்துப்போய் மறுபடியும் ஸ்ருஷ்டி காலத்தில் அவைகள் எண்ணிறந்தவையாய் உண்டாகின்றன. ப்ரளயகாலத்து பெருங்காற்றில், சரீரங்கள் என்னும் கிளைகள் உதிர்ந்து போய் கல்பத்தின் ஆரம்பத்தில் புதுக்கிளைகள் கொத்துக் கொத்தாய் வெடித்து விகாஸம் அடைகின்றன. கருப்பந்தண்டு கணு மேற்கணுவாய் வளர்ந்து கொண்டே போவது போலும் ஓர் மந்வந்தரம் முடிவு பெற்றதும், மற்றோர் மந்வந்தரத்தில் ராஜவம்சங்களுக்கு மேல் ராஜவம்சங்கள் ஏற்பட்டுக் கொண்டு கலியுகத்தின் முடிவில் நான்கு யுகங்களின் சரீரங்களும் கீழே உதிர்ந்து விழுந்து போய் மறுபடியும் க்ருதயுகம் ஏற்பட்டு அவை ஏராளமாய் உண்டாகின்றன. நடந்து கொண்டிருக்கும் வர்ஷம் முடிந்து புதுவர்ஷம் ஏற்படுகிறது. ஓர் தினம் முடிவு பெற்று மறுதினம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. ஆனால் காற்றின் மேல் காற்றாக காற்று பாட்டம் பாட்டமாய் அடித்துக்கொண்டிருக்கும் போது எந்தப் பாட்டம் முடிவுபெற்றது, எது ஆரம்பிக்கிறது, என்று தெரிந்து கொள்ள முடியாததுபோலும், தேஹங்கள் என்ற கிளைகள் கணக்கற்றவையாய் உண்டாய் மறைந்து கொண்டிருப்பது புலப்படாமற் போகிறது. ஓர் தேஹம் என்னும் கிளை செத்துப்

போய் முறிந்து கீழே விழுந்ததோ இல்லையோ கணக்கற்ற புதுக்கிளைகள் உண்டாய் வளர்ந்து கொண்டிருப்பதால், இந்த ஸம்ஸாரவ்ருஷம் அழிவற்றதாய் தோன்றிக் கொண்டிருக்கிறது. ஓர் நதியில் ஓர் காலத்தில் ஓடிக் கொண்டிருக்கும் நீர் ஓடிப்போய் மேலே புதுநீர் வந்து கொண்டே இருப்பதால் அந்நதி நிலைபெற்றிருப்பதாகத்தோன்றுவது போலும், இந்த ஜகத் எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பதாக அறியப்படுகிறது.

வஸ்துவின் உண்மையை விசாரித்து அறியாதவனுக்கு ஸமுத்ரத்தில் அலைகள் நிலைபெற்றிருப்பனவாகத் தோற்றுவது போல், ஓர் கண்மூடித்திறக்கும் நேரத்திற்குள் கோடிக்கணக்கான பூதங்கள் உண்டாய் மரித்துக் கொண்டிருக்கும் இந்த ஜகத்து நித்யமானதாய்த் தோற்றித் கொண்டிருக்கிறது. காக்கைக்கு இருக்கும் ஒரே கண்மணியை வெகுலாகவமாய் இரண்டு பக்கங்களிலும் அது புரட்டிக் கொள்வதால், உலகத்தார் ஒரே கண்படைத்த அதற்கு இரண்டு கண்கள் இருப்பதாய் எண்ணிக் கொள்வது போலும், ஓர் பம்பரம் அதிக வேகமாய்ச் சுற்றிக் கொண்டிருக்க அது சுற்றாமல் பூமியில் நிலை கொண்டிருப்பதாய் காணப்படுவது போலும், இவ்வுலகில் லயப்படுதலும் உத்பத்தியாதலும் வெகுவேகமாய் நடந்து கொண்டிருப்பதால் இது எப்போதும் ஒரே விதமாய் இருக்கிற தென்றெண்ணிக் கொள்ளும் ஓர் அறிவுமயக்கம் ஏற்படுகிறது. இத்தனை விரிவாகப் பேசுவது நிற்கட்டும். நல்ல இருட்டில், ஒருவன் கையில் கொள்ளிக் கட்டையை எடுத்துக் கொண்டு, அதை வேகமாய்ச் சுழற்றினால் அது ஓர் சக்ராகாரமாய் நிலை பெற்றிருப்பதாய்த் தோன்றுவது போல், இந்த ஸம்ஸாரவ்ருக்ஷம் ஸதா அழிந்து கொண்டும், வளர்ந்து கொண்டு மிருக்க மூடர்களாகிய இவ்வுலகத்தார் இதை அழிவற்றிருக்கிறதாக எண்ணுகிறார்கள்

ஆனால் இந்த ஜகத்தில் நடந்து கொண்டிருக்கும் உத்பத்திலயங்களின் வேகத்தை அறிந்தவர்களாய் இந்த ஸம்ஸாரவ்ருக்ஷம் ஓர் க்ஷணங்கூட நிலை பெற்றிராததாயும் ஓர் நிமிஷத்துக்குள், கோடி தடவைகள் உண்டாய் அழிந்து போவதாயும் அஞ்ஞானத்தைத் தவிர வேறாதாரமற்றதாயும் உண்மையில் இருப்பற்றதாயும், இருக்கிற தென்று இம்மரத்தின் ஸ்வரூபத்தை ஆதியோடந்தமாய் அறிந்தவர்கள் எவர்களோ, அவர்களைத் தான் ஸர்வஞ்ஞான நான் அறிந்தவர்கள் என்றும் வைதிகஸம்பரதாயத்தில் பூஜ்யர்கள் என்றும், யோகா நுஷ்டாநங்கள் அனைத்தாலும் தேடிக் கொள்ளப்பட்டவை

அவர்களுக்கே பயன்பட்டனவென்றும், சுருக்கிச் சொல்ல ஞானம் என்பது அவர்களாலேயே உலகில் வாழ்வடைந்திருக்கிறதென்றும் சொல்வேன். வளர்ப்பதென்? ஸம்ஸாரவ்ருக்ஷம் உண்மையான இருப்பற்ற தென்று எவன் அறிவானோ, அவனுடைய பெருமையை எவனால் வர்ணிக்க முடியும்?

अधश्चोर्ध्वं प्रसृतास्तस्य शाखा गुणप्रवृद्धा विषयप्रवालाः ।
अधश्च मूलान्यनुसन्ततानि कर्मानुबन्धीनि मनुष्यलोके ।।२।।

அதஶ்சோர்த்வம் ப்ரஸ்ருதாஸ் தஸ்ய ஶாகா:
குணப்ரவ்ருத்தா விஷயப்ரவாலா: ।
அதஶ்ச மூலான்யநு ஸந்ததானி கர்மாநு
பந்தீனி மனுஷ்ய லோகே ॥ 2

இம்மரத்தின் கிளைகள் எவை

பின்பு கீழ்நோக்கிய கிளைகளோடு கூடிய இந்த ப்ரபஞ்சரூபவ்ருக்ஷத்தில், மேல் நோக்கி நேராய் வளர்ந்திருக்கும் கிளைகளும் கணக்கற்றவையாய் இருக்கின்றன. அன்றியும் கீழ் நோக்கி வளர்ந்திருக்கும் கிளைகளில் வேர்கள் வெடித்து, அவற்றினின்றும், வேறு கிளைகள் வளர்ந்து தழைத்திருக்கின்றன. நான் கீழே சொல்லி வைத்ததையே நன்றாய் விளங்கும்படி திரும்பவும் சொல்வேன் கேள். அஞ்ஞானம் என்னும் அடி வேரிலிருந்து மஹதாதியான எட்டுவித ப்ரக்ருதிகள் உண்டாய் அவற்றினின்றும் வேதங்களென்ற பெருங்காடு உண்டாகிறது. பின்பு அடிக்கட்டையினின்று ஸ்வேதஜம், ஜராயுஜம், உத்பிஜம், அண்டஜம், என்று சொல்லப்பட்ட நான்கு பெருத்த கிளைகள் உண்டாகின்றன. இவற்றில் ஒவ்வொன்றும் வலுத்தபின் அவற்றினின்று எண்பத்தினான்கு லக்ஷப்பிறப்புகள் என்ற சிறு கிளைகள் வெடித்து வளர்கின்றன. அந்தக் கிளைகளினின்று தனித்தனி ஜீவன்கள் என்ற மேலும் சிறுத்த கிளைகள் உண்டாகின்றன.

இப்படி நேராக நீண்டுவளர்ந்திருக்கும் கிளைகளில் குறுக்காக வளர்ந்திருக்கும் கிளைகள் எவையோ அவை விவித ஜாதிகளாகும் பின்பு ஸ்தீரி என்றும் புருஷன் என்றும் நபும்ஸகன் என்றும் வ்யக்தி பேதங்கள் உண்டாய் அவை விஷயங்கள் என்னும் பாரங்களை சுமந்து கொண்டு ஒன்றின்

மேல் ஒன்று விழுந்து புரளுகின்றன. எப்படி வர்ஷாகாலத்தில் ஆகாசத்தில் புதுப்புது மேகங்கள் உண்டாய், ஆகாசம் எங்கும் நிறைந்து போகிறதோ அப்படியே அஞ்ஞான கார்யங்களாய், அநேக வகைப்பட்ட சரீரங்கள் என்னும் கிளைகள் உண்டாய் வ்ருத்தியடைகின்றன. பின்பு குணக்ஷோபம் (ரஜஸ் தமஸ் ஸத்வம் என்னும் முக்குணங்கள் கலங்கிப்போதல்) என்னும் காற்றால், அம்மரத்தின் கிளைகள் தங்கள் தங்கள் பாரத்தை தாங்க முடியாமல் தாழ்ந்து ஒன்றோடொன்று சிக்கிக் கொண்டு குணங்கள் அதிவேகமாய் பரஸ்பரம் மோதிக் கொள்வதால் இந்த ஊர்த்வமூலமான வ்ருக்ஷத்தின் மூன்றிடங்களில் புதுக்கிளைகள் வெடிக்கின்றன.

ரஜோகுணத்தின் வேகத்தால் ஏற்பட்டு விஸ்தாரமடையும் மனுஷ்ய லோகம் என்னும் கிளை

ரஜஸ்ஸின் காற்று வேகமாய் அடிக்கும்போது மனுஷ்யஜாதி என்னும் ஓர் கிளை வெடித்து வளர்ந்து விஸ்தாரமடைகிறது. அக்கிளையின் மேல்பாகத்திலும் அடிபாகத்திலும் நடுக்கட்டையிலும், நான்கு வர்ணங்கள் என்ற சிறு கிளைகள் மிக்க அடர்த்தியாய் உண்டாகின்றன. அப்போது விதிநிஷேங்கள் என்னும் இலைகளால் தழைத்திருக்கும் வேத வாக்யங்கள் என்னும் அழகிய இளங்கிளைகளும் உண்டாகின்றன. அப்போது அர்த்தம் காமம் என்னும் புருஷார்த்தங்களாகிய கிளைக்ள வளரத்தலைப்பட்டு அவற்றின் நுனியில் சீக்கிரத்தில் நசித்துப் போகும் ஐஹிகஸுகங்கள் என்னும் கொழுந்துகள் உண்டாகின்றன.

பின்பு ப்ரவ்ருத்தி மார்க்கத்தை விஸ்தாரப்படுத்தி வைக்கவேண்டுமென்ற ஆசையின் கார்யமாய், சுபாசுபகர்மங்கள் கணக்கற்றவையாய் உண்டாய், அவையுமிம் மரத்திற்குக் கிளைகள் ஆகின்றன. பின்பக்கர்மங்களின் பலன் அநுபவத்தால் நசித்து முன்னிருந்த தேஹங்களாகிய கிளைகள் அம்மரத்தில் வேறிடங்களில் வெடித்து வளர்கின்றன. சப்தாதி பஞ்சவிஷயங்களால் இச்சைகள் உண்டாய் புதுப்புது விஷயங்களாகிய இளங்கிளைகள் மேன்மேலும் உண்டாய் வ்ருத்தியடைகின்றன இப்படி ரஜோகுணத்தின் பெருங்காற்றால் மனுஷ்யஜாதி என்னும் கிளைமிக்க விஸ்தாரமடைகிறது. இதற்குத்தான் மனுஷ்ய லோகம் என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது.

தமஸ்ஸின் வேகத்தால் ஏற்படும் கீழ்நோக்கிச் செல்லும் கிளைகள்

பின்பு ரஜஸ்ஸின் காற்று ஓய்ந்து, தமஸ்ஸின் பயங்கரமான காற்று அடிக்கத் தொடங்குகிறது. அப்போது இந்த மனுஷ்யஜாதி என்னும் கிளையில் கெட்ட வாஸனை என்பது உண்டாய், கெட்ட கர்மங்கள் என்னும் கிளைகள் கீழ்நோக்கி வெடிக்கின்றன. நிஷித்தகர்மங்கள் என்னும் கிளைகள் வளப்பமாயும் நீண்டவையாயும் வளர்ந்து ப்ரமாதம் (ஸரியான ஒழுக்கத்தினின்று தவறிப்போதல்) என்பது இலைகளாயும் இளங்கிளைகளாயும், அவற்றினின்று வெடிக்கின்றன. ருக் யஜுஸ் ஸாமமாகிய மூன்று வேதங்களிலும் வர்ணிக்கப்பட்டுள்ள ஆபிசாராதி நிஷித்தகர்மங்களில் அநுஷ்டிக்க வேண்டிய நியமங்கள் அக்கிளைகளின் நுணியில் ஸதா சப்திஃ்துக் கொண்டிருக்கின்றன. ஜாரணம் மாரணம் முதலிய பரபீடாகரங்களான துஷ்கர்மங்களை வர்ணிக்கிற அதர்வணவேத வாக்யங்களே, இந்த கெட்ட வாஸனை என்னும் கொடியின் த்ரிதளங்களாய் விஸ்தாரம் அடைகின்றன. அப்போது அகர்மம் என்பதின் அடிக்கட்டை பெருத்து, திரும்பவும் திரும்பவும் ஜந்மமெடுத்தல் என்னும் கிளை மேலும் மேலும் நீண்டு வளர்ந்து கொண்டு போகிறது.

இவ்வகைப்பட்ட கர்மங்களை ஆச்ரித்து மனுஷ்யர்கள் மிக்கவும் நிக்ருஷ்டமான (தாழ்ந்தவைகளான) சண்டான ஜாதி முதலிய தோஷயுக்தங்களான ஜாதிகள் என்னும் பெருத்த கிளையில் விழுந்து அதில் சிக்கிப் போகிறார்கள் மேலும் அங்கே பசு, பக்ஷி, பன்றி, புலி, தேள் முதலிய விஷஜந்துக்கள் ஆகிய இவற்றின் ஜந்மங்கள் என்னும் குறுக்குக் கிளைகள் சின்னாபின்னமாயும் அடர்த்தியாயும் ஏற்பட்டு விடுகின்றன, இப்படிப்பட்ட கெட்ட ஜன்மங்க என்னும் கிளைகள் அம்மரத்தின் ஸர்வாங்கத்திலும் வெடித்து அவற்றின் நுணியில் நரக போகம் என்னும் பழங்கள் பழுத்திருக்கின்றன. மேலும் இவ்வகை ஜந்மங்களெடுத்த ஜீவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் பரஹிம்ஸாகாரமான விஷயங்களை முக்யமாக லக்ஷ்யத்தில் வைத்துக் கொண்டு துஷ்கர்மங்களின் பாரத்தைச் சுமந்து கொண்டு கணக்கற்ற ஜந்மங்ள எடுப்பதற்கு வேண்டிய ஸ்தானங்களை தேடிக் கொள்கிறார்கள். இந்த ப்ரகாரமாக இந்தக் கிளையில் மரம் புல், இரும்பு, மண், கல், முதலிய பிறப்புகள் என்னும் சிறு கிளைகள் உண்டாய் அவற்றில் பழுக்கும் பழங்களும் அப்படியே இருக்கின்றன. அர்ஜுநா கவனித்துப் பார், மனுஷ்ய ஜந்மத்துக்கு கீழ்பட்டு

ஸ்தாவரங்கள் வரைக்கும் உள்ள ஜந்மங்கள் இம்மரத்தின் கீழ்நோக்கிய கிளைகளின் விஸ்தாரமாகிறது.

மனுஷ்யஜந்மம் கர்மாயத்தமான ஜந்மங்களுக்கு வேராகிறது

ஆகையால் மனுஷ்யப்பிறப்பு என்னும் கிளைக்குக் கீழ்ப்பக்கத்தில் வேர்கள் வெடித்து, அவற்றினின்று இவ்வகைப்பட்ட விஸ்தாரம் ஸம்ஸாரம் என்னும் வ்ருக்ஷத்துக்கு ஏற்படுகிறது என்று தெரிந்து கொள். அன்றியும் மேல் நோக்கிய கிளைகளின் உண்மையான வேர்கள் எங்கிருக்கின்றன என்று பார்க்கப்போனால் அவை மேல் நோக்கிய கிளைகளுக்கும் கீழ்நோக்கிய கிளைகளுக்கும் நடுவில் இருக்கும் மனுஷ்ய ஜன்மம் என்னும் கிளையிலேயே இருப்பதாகத் தெரிய வருகிறது. அந்த மனுஷ்ய ஜந்மமாகிய கிளையினின்றே தாமஸ ஸாத்விக குணங்கள் தலையெடுத்தவையாய் துஷ்க்ருத ஸுக்ருதங்களின் பலனாய் கீழ்நோக்கியும் மேல் நோக்கியும் கிளைகள் விஸ்தாரம் அடைகின்றன. மூன்று வேதங்கள் என்னும் இலைகள் இந்த மனுஷ்ய ஜந்மம் என்னும் கிளையிலேயே உண்டாயிருக்கின்றன; ஏனென்றால் அவற்றில் சொல்லியிருக்கும் விதிவிலக்குகளுக்கு மனுஷ்யர்களைத் தவிர எவரும் இலக்காவதில்லை. ஆகையால் இந்த மனுஷ்யப் பிறப்பு என்னும் கிளை, ஊர்த்வம் என்று கீழ்ச் சொல்லப்பட்டுள்ள பரப்ரஹ்மத்தையே வேராய் உடைத்தானதாயிருந்தாலும், இந்தக் கிளையே கர்மவ்ருத்தியால் ஏற்படும் மற்றக் கிளைகளுக்கு வேராகிறது என்றறிந்து கொள். ஸாமான்யமான வ்ருக்ஷங்களில் மேற் கிளைகள் பருக்கப் பருக்க வேர்கள் பருக்கின்றன. வேர்கள் பருக்கப் பருக்க மேற் கிளைகள் பருக்கின்றன. இதைப் போலவே சரீரம் பருக்கப் பருக்க சரீரங்களுக்கு வேரான கர்மங்களும் பருக்கின்றன. கர்மங்கள் பருக்கப் பருக்க ஸம்சாரத்தில் தேஹங்கள் எடுப்பதென்பது விஸ்தாரம் அடைகிறது. ஆகையால் இந்த நரதேஹம் கர்மத்தால் ஏற்படும் கிளைகளுக்கு வேராகிற தென்பதில் ஸந்தேஹம் இல்லை என்று ஜகத்தை பெற்றுவைத்த ஸ்ரீக்ருஷ்ணன் சொன்னார்.

ஸத்குணத்தின் ப்ராபல்யத்தால் மேல்நோக்கிச் செல்லும் கிளைகள்

முன் சொல்லிய தமோ குணத்தின் பயங்கரமான பெருங்காற்று ஓய்ந்து போய் ஸத்வகுணத்தின் பெருங்காற்று

மிக்க வேகமாய் அடிக்கத் தொடங்கும்போது, கீழே சொன்னபடி மூலமாய் இருக்கும் இந்த மனுஷ்யப் பிறப்பென்னும் கிளையில் ஸுவாஸனையின் முளைகள் வெடித்து ஸுக்ருதங்கள் என்னும் இளம் போத்துக்கள் அவற்றினின்று வளரத் தலைப்படுகின்றன. பின்பு ஞானவிகாஸம் ஏற்பட்டு ப்ரஞ்ஞையும் குசலதையும் செழிப்பாய் வளர்ந்து விஸ்தாரமடைகின்றன. பின்பு புத்தி என்னும் இளம் போத்து மிக்க வளர்ச்சி அடைந்து ஸ்பூர்த்திகள் என்னும் சிறு கிளைகளை நாலுப்பக்கங்களிலும் பரப்பி புத்தியின் ப்ரகாசமானது தத்வவிசாரத்தின் மேல் பர்வத் தலைப்படுகிறது. பின்பு மேதை (புத்தியின் கூர்மை) என்னும் ரஸத்தின் ஊற்றத்தினால் சாஸ்த்ரத்தில் திடமான நம்பிக்கை யென்னும் இலைகள் விஸ்தாரமாய் வளர்ந்து ஸதாசாரம் என்னும் தீர்க்கமான இளங்கிளைகள் உண்டாகின்றன. இவ்விதம் ஸதாசாரம் செழிக்கத் தலைப்பட்ட உடனே, வேதத்தின் அத்யயநம் மிக்கச் செய்யப்பட்டதாய் அதின் கோஷம் எங்கும் நிறைந்து போகிறது பிறகு இக்கிளையில் சான்றோர்களின் கொள்கைகளையும் முறைகளையும் அநுஸரித்துச் செய்யப்படும் அநேக விதப்பட்ட யாகயஜ்ஞங்கள் என்னும் இலைகள் உண்டாகின்றன. இவ்விதமே யமதமங்களும் செழித்து வளர்ந்து தபஸ் என்னும் இளங்கிளைகளும் உண்டாய் வைராக்யம் என்னும் கிளை மிக்க நீண்டு அழகாய் வளர்கின்றது.

பின்பு உத்தம வ்ரதா நுஷ்டாநங்கள் என்னும் சிறுகிளைகளும் கைவிடாமுயற்சி என்னும் குருத்துக்களும் வெடித்து, இயற்கையாகவே மேல்நோக்கி வளர்கின்றன. நடுப்ரதேசத்தில் நெருக்கமாய் வளர்ந்திருக்கும் வேதங்கள் என்னும் இலைகளின் மேல் இந்த ஸத்வ குணக்காற்று அதிவேகமாய் அடிக்கும் போது, உத்தமமான வித்யைகள் மிக்க வலுவாய் உத்கோஷிக்கின்றன. பின்பு அவ்விடத்தில் தர்மங்கள் என்னும் நீண்ட போத்து ஒன்று வெடித்து விஸ்தாரமாய் வளர்ந்து அதில் பக்கங்களினின்று ஸ்வர்க்கம் முதலிய லோகங்கள் என்னும் பழங்கள் பழுத்துத் தொங்குகின்றன. பின்பு உபரதி என்னும் இளங்கிளை, செகப்பாய் வளர்ந்து தர்ம மோஷம் என்னும் கிளைகளையும் அலங்கரித்து விஸ்தரிக்க செய்து கொண்டு தானும் நித்யநவமாய் விஸ்தாரமடைகிறது. கவனித்துப் பார் ஸுர்யன், சந்திரன் மற்ற உத்தம க்ரஹங்கள், பித்ருக்கள், ருஷிகள், வித்யாதரர்கள் ஆகிய இவர்கள் குறுக்குக் கிளைகளாய் விஸ்தாரம்

அடைந்திருக்கிறார்கள். இவர்களுக்கும் சற்று உயரமாக, இந்திரன் முதலியவர்களுடைய பெருத்த கிளைகளின் விஸ்தாரம் காணப்படுகின்றது. அவற்றிற்கும் உயர்ந்த கிளைகளாய் தபோஞானங்களால் மிக்கச் சிறந்தவர்களான மரீசி, கச்யபர் முதலியவர்கள் காணப்படுகிறார்கள். இப்படியே ஒன்றின் மேலொன்றாக மேல் நோக்கிய கிளைகளின் விஸ்தாரம் அடிக்கட்டை சிறுத்தும், மேற்பாகம் பழங்கள் நிறைவால் பெருத்தும் காணப்படுகின்றது.

பின்பு எல்லாத்துக்கும் உயர்ந்த கிளைக்கும் உயரமாக பழங்கள் பழுத்துத் தொங்கும் சிறு நுணிக்கிளைகளாய் ப்ரஹ்மா, ஈசானன் ஆகிய இவர்கள் அமைந்திருக்கிறார்கள். இந்த உந்நதமான கிளைகள் தங்கள் பல பாரத்தின் பெருமையால் வளைந்து வேரைத் தொட்டுக் கொண்டு தொங்குகின்றன. ஸாமாந்யமான வ்ருக்ஷங்களிற் கூட எக்கிளைகள் பழங்களால் நிறைந்திருக்குமோ அவை அடிக்கட்டை வரைக்கும் வளைந்து தொங்குகின்றன அல்லவா? ஆகவே எந்த மனுஷ்ய ஜந்மமான கிளையினின்று இந்த ஸம்ஸார வ்ருக்ஷத்தின் மேற்பாகம் உயர்ந்து வளர்ந்திருக்கிறதோ அந்த வேரிலேயே இடித்துக் கொண்டு ஞாநத்தினால் சிறந்தவர்களாகிய கிளைகள் தொங்குகின்றன. ஆகையால் இந்த ஜீவன் அடைவதற்கு ப்ரஹ்மா ஈசானன் இவர்களைக் காட்டிலும் உந்நதமான பதம் ஒன்றும் இல்லை. இவர்களைக் காட்டிலும் உயர்ந்திருப்பது பரப்ரஹ்மபதம் ஒன்றே அல்லவா? ஆனால் இதை இவ்வளவோடு நிறுத்திவிடுவோம். ப்ரஹ்மா முதலான கிளைகளனைத்துக்கும் அவற்றிற்கும் மேலே இருக்கும் வேருக்கு (இவ்விருக்ஷம் முழுமைக்கும் மேலே வேராய் ஏற்பட்டிருக்கும் மூல அஜ்ஞானம் என்றும் அவ்யக்தத்தை உபாதியாய் உடைய ப்ரஹ்மத்துக்கு) ஸரியான யோக்யதை ஏற்படுவதில்லை. இன்னும் இந்த வ்ருக்ஷத்தின் மேற்பாகத்தில் மற்றுமோர் கிளை காணப்படுகிறது. அது உபரதி யென்று பெயரிடப்பட்டு மிக்க ப்ரஸித்தியடைந்த ஸநகர் முதலியவர்களால் ஏற்பட்டிருக்கிறது. இக்கிளையில் வேர்களும் பழங்களும் காணப்படாமல் இது பரப்ரஹ்மமயமாகவே இருக்கிறது. இவ்விதம் மனுஷ்ய லோகத்திலிருந்து மேல்நோக்கி பிரஹ்மா முதலிய கிளைகள் வெடித்து உயர்ந்து வளர்ந்து விஸ்தாரமடைகின்றன. இப்படி விஸ்தார மடைந்திருக்கும் மேல் நோக்கிய கிளைகளுக்கு மனுஷ்யப் பிறப்பே காரணமாய் இருப்பதால் இந்த மேற்கிளைகளுக்கு வேர் அடியில இருக்கும் மனுஷ்யப் பிறப்பு என்னும் கிளையில் இருப்பதாகச்

சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாய் லோகத்தார் பார்க்காததான ஓர் ஆச்சர்யமானதும் மேலும் கீழும் விஸ்தாரமடைந்திருக்கும். கிளைகளுள்ளதும் மூலவேர் மேற்பக்கத்திலுள்ளதுமான, இந்த ஸம்ஸார வ்ருக்ஷத்தை உனக்கு நான் வர்ணித்து முடித்தேன். இந்த வ்ருக்ஷத்துக்குக் கீழ்ப்பக்கத்திலிருக்கும் வேர்களும், உன் புத்திக்குத் தெளிவாகும்படி வர்ணிக்கப்பட்டவையாயின. இனி இந்த வ்ருக்ஷம் எப்படிப் பிடுங்கப்பட்டு நாசம் அடைவிக்கப்படும் என்பதைச் சொல்வேன். கேள்.

न रूपमस्येह तथोपलभ्यते नान्तो न चादिर्न च सम्प्रतिष्ठा ।
अश्वत्थमेनं सुविरूढमूलं असङ्गशस्त्रेण दृढेन छित्त्वा ।। ३ ।।

நிரூபமஸ்யேஹ ததோபலப்யதே நாந்தோ நசாதிர்நச ஸம்ப்ரதிஷ்டா।
அஸ்வத்தமேனம் ஸுவிரூடமூலம் அஸங்கஶஸ்த்ரேண த்ருடேன சித்த்வா 3

இந்த ஸம்ஸார வ்ருக்ஷம் உண்மையில் இருப்பற்றது

இவ்வளவு பெரிய மரத்தைப் பிடுங்கி நாசம் செய்து விடுவதற்குத் தகுந்ததான ஓர் கருவி ஏதாவது உண்டோ என்று உன் மனஸில் ஓர் ஸந்தேஹம் ஏற்படலாம். இம்மரத்தின் கிளைகள் ப்ரஹ்மா முடிவாகக் கூட உயர்ந்து வளர்ந்திருக்கின்றனவல்லவா! ஸ்தாவரங்களுக்கு கீழ்கூட கீழ்க்கிளைகள் வளர்ந்திருக்கின்றனவே. நடுவில் மனுஷ்யப் பிறப்பென்னும் விஸ்தாரமான கிளையே இத்தனைக்கும் வேராக ஏற்பட்டிருக்கிறதே! இவ்வளவு வலுத்ததும் ஒப்பற்றதுமான இதை, எவனால் நாசம் செய்ய முடியும் என்றிப்படி எல்லாம் உன் மனஸில் சங்கை கொஞ்சமேனும் ஏற்படவே வேண்டாம். இம்மரத்தை வேருடன் பிடுங்கி நாசம் செய்யும் விஷயத்தில் ஓர் விதமான கஷ்டமும் இல்லை. குழந்தைக்கு பயம் உண்டாகும்படி காட்டி வைத்த பூச்சாண்டியை தூரதேசத்துக்கு அடித்துத் தூரத்தி வைக்க வேண்டிய ஆவச்யகம் என்ன இருக்கிறது? கந்தர்வ நகரத்தை இடித்துத் தள்ள வேண்டுமா? முயற்கொம்பை ஒடிக்க வேண்டுமா? அப்படியே இந்த ஸம்ஸார வ்ருக்ஷமும் உண்மையான இருப்பற்றதானதால் இதைப் பிடுங்கி யெறிவது எப்படி முடியும் என்று ஏன் பயப்படவேண்டும்? நான் கீழே மிக்க விரிவாய் வர்ணித்துள்ள வேர்களும் கிளைகளும், உண்மையில் வீடு நிறைய விளையாடிக் கொண்டிருக்கும் மலடியின் குழந்தைகளே ஆகும். ஸ்வப்நத்தில் நடந்த

வ்யவஹாரங்கள், விழித்துக் கொண்டபின் எப்படிப் பயன்படும்? அப்படியே நான் வர்ணித்த வேர் கிளை அனைத்தும் முற்றிலும் ஸத்தை அற்றவையாய் இருக்கின்றன. இப்படி இராமல் நான் வர்ணித்தபடி உண்மையாகவே திடமான வேர் முதலானவைகளோடு ஓர் வ்ருக்ஷம் இருக்கும் பக்ஷத்தில் எவள் பெற்று வைத்த மகன் அதைப் பிடுங்கி நாசம் செய்ய வல்லமை பண்டத்தவன்னாவான்? ஆகாசத்தை வாயால் ஊதினால் அது ஒதுங்கிப் போய்விடுமா என்ன? ஆனால் நான் வ்ருக்ஷரூபமாக வர்ணித்தது ஆமையின் நெய்யைக் கொண்டு ஓர் அர்சனுக்கு செய்து வைக்கப்பட்ட விருந்து போலும் முழுமையும் மாயையால் ஏற்பட்டதே ஆகும். கானல் நீரால் ஏற்பட்ட தாகம் தூரப்பார்வைக்கு மிக்க அழகாய்த் தோற்றினாலும் அதின் நீரைக் கொண்டு பயிர்களாவது வாழைகளாவது வளர்வது உண்டா? எல்லாத்துக்கும் வேராய் ஏற்பட்ட அஞ்ஞானமே உண்மை அற்றதென்றால் அதின் கார்யமான ஓர் வஸ்துவுக்கு எப்படி உண்மை ஏற்படும்? ஆகவே ஸம்ஸார வ்ருக்ஷத்துக்கு ஸத்யமான இருப்பென்பது ஏற்படுவேதே இல்லை.

இந்த ஸம்ஸார வ்ருக்ஷத்தையும் முடிவற்றதாயும் ஆதியற்றதாயும் சொல்வது எவ்வண்ணம்

ஆனால் இந்த வ்ருக்ஷத்துக்கு முடிவு இல்லை. என்பது ஒருவிதமாய் உண்மையாய் இருக்கிறது. இது எப்படியென்றால் விழிப்பு ஏற்படாதவரைக்கும் நித்ரைக்கு முடிவில்லையல்லவா? எதுவரைக்கும் ராத்ரி முடியவில்லையோ, அது வரைக்கும் விடியற்காலம் ஏற்படாதல்லவா? எதுவரைக்கும் தத்வஞானமானது தலை எடுக்காதிருக்கிறதோ அதுவரைக்கும் ஸம்ஸாரரூபமான இந்த அச்வத்தவ்ருக்ஷத்துக்கு முடிவு என்பது இல்லை. அடிக்கும் காற்றானது ஸஞ்சரிப்பதைவிட்டு ஓய்ந்து போகாதவரைக்கும் ஜலத்தில் அலைகள் உண்டாய்க் கொண்டிருப்பதற்கு முடிவே இல்லை. ஸூர்யன் அஸ்தமித்தால் கானல் நீர்த்தோற்றம் தானாக மறைந்து போகிறது. தீபம் அணைந்து போனால் அதின் ப்ரகாசம் உடனே தானாகவே இல்லாமற் போகிறது. அப்படியே ஸர்வ ப்ரபஞ்சத்துக்கும் வேராயிருக்கும் அஞ்ஞானம் நாசமடைந்து ஞானம் தலையெடுத்து நின்றால் அப்போது தான் இந்த வ்ருக்ஷத்துக்கு முடிவேற்படும். இல்லாவிட்டால் இல்லை. ஸூர்யன் அஸ்தமித்தால் கானல் நீர் தோற்றம் தானாக மறைந்து போகிறது. தீபம் அணைந்துபோனால் அதின் ப்ரகாசம் உடனே தானாகவே இல்லாமற் போகிறது.

அப்படியே ஸர்வ ப்ரபஞ்சத்துக்கும் வேராயிருக்கும் அஞ்ஞானம் நாசமடைந்து ஞாநம் தலையெடுத்து நின்றால் அப்போது தான் இந்த வ்ருஷத்துக்கு முடிவேற்படும்; இல்லாவிட்டால் இல்லை.

அப்படியே இந்த வ்ருஷம் அநாதி என்று சொல்வதும் பொய்யான வார்த்தையாய் இராமல், இதின் ஸ்வரூபத்தோடு பொருத்தமுள்ளதாகவே இருக்கிறது. ஏனென்றால் யாதொன்று ஓர்காலத்திலும் உண்மையான இருப்பற்றதோ அதற்கு ஆதியென்பது எவ்விதம் ஏற்படும், ஏதாவது எதினின்றாவது உண்மையாய் உண்டானால் அதற்கு உத்பத்தி என்னும் வார்த்தை பொருந்தும். எக்காலும் முற்றிலும் இராததற்கு ஆதி (உத்பத்தி) என்று சொல்வது எப்படி? பிறக்காதவனுக்கு தாய் எவள் ஆவாள்? ஆகையால் இந்த ஸம்ஸார வ்ருக்ஷம் உண்மையாய் இராததினாலேயே ஆதியற்றதாகிறது. மலடியின் பிள்ளைக்கு எப்படி ஜாதகம் ஏற்படும்? ஆகாசத்தில் தோன்றும் நீலவர்ணம் எதின் பேரில் ஏற்றப்பட்டிருக்கிறது? ஆகாசபுஷ்பத்தின் காம்பைக் கிள்வதற்கு எவன் வேண்டும்? அப்படியே முற்றிலும் இருப்பதற்கான ஸம்ஸாரத்துக்கு ஆதி எது? ஓர் குடத்தை நிர்மாணம் செய்து வைப்பதின் முன், அதன் இல்லாமை ஒருவராலும் செய்துவைக்கப்படாமல் எப்படி ஸ்வாபாவிகமாகவே அநாதியாய் அமைந்திருக்கிறதோ அப்படியே இந்த வ்ருக்ஷம் உண்மையில் இராத ஓர்வஸ்து ஆனதால், இது அநாதி ஆகிறது.

இப்படியே ஏதேனுமொன்று ஆதியிலும் முடிவிலும் இராததாய், நடுவில் மாத்ரம் இருப்பதாகத் தோன்றினால் அது வ்யர்த்தமான தோற்றமே என்று நிச்சயிக்கப்பட வேண்டும். ப்ரஹ்மம் என்னும் மலையினின்று வெளிப்படாமலும் ஸமுத்ரம் போன்ற அதில் விழுந்து அத்துடன் கலந்து போகாமலும் ஓர் நதி போன்ற தோற்றம் ஒன்று காணப்படுமே யாகில் அது கானல் நீர்போலும் உண்மையற்றதே இப்படி முதலிலும் முடிவிலும் ஸத்தையற்றதாய் எப்போதுமே உண்மையான இருப்பற்றதாய், இருக்கும் இந்தப் பொய்யான வஸ்து, ஏதோ இருப்பது போல் தோற்றுவது எவ்வளவு ஆச்சர்யமாயிருக்கிறது! இது இந்த்ர தநுஸ்ஸைப்போல் அநேகவிதமான வர்ணங்களுள்ளதாய் ஞானமில்லாதவர்களுக்கு வாஸ்தவமாய் இருப்பதுபோல் தோற்றுகிறது. இப்படிப்பட்ட இருப்புள்ளதாய் கண்கட்டிவித்தையைக் காரனைப்போல் இந்த

ஸம்ஸாரவ்ருக்ஷம் பரமார்த்தஞானமில்லாத வர்களுடைய பார்வையை ஏமாற்றிவிடுகிறது. ஆகாசத்தில் உண்மையாய் இராத நைல்யம் தோன்றுவதுபோல் இதுவும் தோன்றுகிறது. என்றாலோ இது ஒரே விதமான தோற்றமாய்த் தோன்றாமல் ஒரே க்ஷணத்தில் தோன்றி மறைந்து போகிறது. ஸ்வப்நத்தில் பார்க்கப்பட்ட காட்சிகளைக்கொண்டு ஓர் விதமான கார்யமும் நடந்தேறிவராததுபோலும், இது க்ஷணிகமான வெறும் தோற்றமாகிறது. ஓர் குரங்கு ஜலத்தில் தோன்றும் தன் நிழல் தான் செய்யும் சேஷ்டைகளை அநுகரணம் செய்வதைப் பார்த்து அது அந்நிழலைப் பிடிக்கப்போனால் அதன் கைக்கு ஒன்றும் அகப்படாததுபோலும், இந்த ஸம்ஸாரவ்ருக்ஷம் இருப்பதுபோல் தோன்றி பிடிக்கப் போனால் பிடிக்கு அகப்படுவதில்லை சாஞ்சல்யத்தில் அலைகளும் மின்னலும் தோற்றுப்போகும்படி இத்தோற்றம் அதிவேகமாய்த்தோன்றி மறைகிறது வேநிற் காலத்தின் முடிவில் அடிக்கும் காற்று எதிர்நோக்கி அடிக்கிறதா பின்புறம் இருந்து அடிக்கிறதா, என்று நிர்ணயிக்கமுடியாதது போலும் இந்த ஸம்ஸாரவ்ருக்ஷம் ஓர் விதமான நிலையிலும் நிலைத்து நிற்பதில்லை

இதை நாசம் செய்ய ஞானமே வேண்டுவது

இவ்வாறு முதலிலும் முடிவிலும் இராததும் இருப்பதாய்த் தோன்றும் போதும் ஓர் விதமான உருவமும் நிச்சயமாய்ப் படைத்திராததுமான இந்த ஸம்ஸார வ்ருக்ஷத்தைப் பிடுங்கி எறிவதில் என்ன ப்ரயாஸம் இருக்கிறது? ஹே கிரிடி உன்னுடைய அஞ்ஞானத்தினால், இல்லாததான இது நிலைத்து நிற்கிறது. ஆகவே இதை ஆத்மஞானம் என்னும் கத்தியைக் கொண்டு வெட்டித்தள்ளு. அவ்வாறு செய்யாமல் ஞானத்தைத் தவிர வேறெந்த உபாயத்தைக்கொண்டும் இதை நாசம் செய்ய நீ பார்த்தால் நீ எவ்வளவுக் கெவ்வளவு முயல்வாயோ அவ்வளவுக்கவ்வளவு இந்த வ்ருக்ஷத்தில் சிக்கியே போவாய். அப்படிச் சிக்கிப்போய் மேலும் கீழுமாய் இருக்கும் எண்ணிறந்த கிளைகளுக்குள், ஒன்றினின்று மற்றொன்றுக்கு அலைந்து திரிந்து, எவ்வளவோ கஷ்டப்பட்டுப் போவாய். ஆகையால் இவ்வனைத்துக்கும் அடிவேராயிருக்கும் அஞ்ஞானத்தை உண்மையான ஞானத்தால் அறுத்துத்தள்ளு,

இப்படிச் செய்யாமல், கயிற்றுப்பாம்பை அடித்துக் கொல்வதற்கு, தடிகளைக்கொண்டு அடித்தால், ச்ரமம் தான் மிகுதியாய் ஏற்படும். கானல் நீர் ப்ரவாஹமாக ஓடக்கண்டு, அதைத் தாண்டிப் போவதற்கு ஓர் தோணியைத்

தேடிக்கொண்டு, கண்கால் தெரியாமல் ஒருவன் ஓடி, குறுக்கிட்ட காட்டாற்றில் விழுந்து முழுகிப் போவதுபோலும், உண்மையான இருப்பற்ற ஸம்ஸாரத்தை உபாயா நுஷ்டானங்களால் நாசம் செய்யப்பார்ததால், தன் ஸ்வரூபம் தனக்கே மறைந்துபோய், ஸம்ஸாரம் உண்மையானது என்னும் அஞ்ஞானமே மேலும் மேலும் திடமாய் ஏற்பட்டுக்கொள்ளும். ஸ்வப்நத்தில் ஏற்பட்ட காயத்தை ஆற்றிக்கொள்ள, விழித்துக் கொள்வதே ஔஷதம்போலும், அஞ்ஞானத்தையே அடிவேராக உடைத்தான இதை நாசம்செய்ய, ஞானமே கத்தியாக வேண்டும். ஆனால் இந்த ஞானம் என்னும் கத்தியை அநாயாஸமாய்ச் சுழற்றி விளையாடுவதற்கு, ஒன்றைக் கண்டும் பின்வாங்காத வைராக்யத்தின் பலம், புத்திக்குத் திடமாய் ஏற்பட வேண்டும்.

அந்த வைராக்யம் எப்படிப்பட்டதாக யிருக்கவேண்டும் என்றால், அதன் முன் தர்மார்த்தகாமங்கள் அனைத்தும், நாய் கண்முன் வாந்தியெடுத்து வைத்த எச்சிற்போல் தோன்ற வேண்டும். இவ்வளவு தீவரமாய் பதார்த்தங்கனைத்தின் பேரிலும் வெறுப்பு உண்டாகும்படி, வைராக்யத்தின் ப்ரவாஹம் ஏற்படவேண்டும். பின்பு தேஹத்தில் அஹம்புத்திபண்ணுதல், என்னும் மடல் விரிந்து ப்ரத்யக் ஆத்மஸ்வரூபத்தின் ஞானம் ஹஸ்தகதமாக வேண்டும். பின்பு இந்த ஞானரூப கத்தியை விவேகம் என்னும் சாணைக்கல்லின் மேல் ப்ரஹ்மாஹ்ஸ்மி (நானே ப்ரஹ்மம்) என்னும் பாவனை என்னும் நீரை வார்த்து பளபள என்று தீட்டி, இப்படி ஏற்பட்ட பூர்ணபோதத்தை கையில் எடுத்துக்கொண்டு, தான் ஒண்டியாகவே கிளம்பவேண்டும். இந்த ஞானக்கத்தியை நிச்சயம் என்னும் முஷ்டியில் உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு, இதின் வலிமையை மனனம் என்பதைக் கொண்டு சற்று பரிசோதித்துப் பார்த்து, பின்பு நிதித்யாஸத்தால் அக்கத்தியும் தானும் ஒன்றாய்விடவேண்டும். பின்பு அக்கத்தியின் வெட்டை வாங்கிக்கொள்வதற்கு, மற்றொன் றென்று ஒன்றும் அகப்படாமற் போகும். இந்த ஆத்மஞாநம் என்னும் கத்தித் தன் ப்ரகாசத்தினால் இந்த ஸம்ஸாரவ்ருக்ஷத்தை ஓரிடத்திலும் காணமுடியாதபடி செய்து வைக்கும். எப்படி சரத்ருதுவின் தொடக்கத்தில் ஏற்படும் காற்று, ஆகாசத்தைக் குப்பைபோல் மறைத்துக் கொண்டிருந்த மேகங்களை நாசம் செய்து வைக்குமோ அல்லது ஸூர்யன் உதித்தவுடன், இருட்டனைத்தையும் எப்படி கபளீகரித்து விடுகிறானோ, அல்லது விழித்துக்கொள்ளல் என்பது ஏற்பட்டவுடன் ஸ்வப்நத்தின் ஆடம்பரம் அனைத்தும் இருந்த இடந்தெரியாமல்

எப்படி மறைந்து போகுமோ, அப்படியே ஆத்மஞானத்தின் கூர்மைக்கு முன்னால் இந்த வ்ருக்ஷம் இருந்த இடம் தெரியாமல் நாசமாய் விடுகிறது. பின்பு மேல் என்பதும், அதின் கீழ் வேர் என்பதும், அதினின்று கீழ்நோக்கி சின்னாபின்னமாய்ப் பரவியிருக்கும் கிளைகள் என்பவையும், இவையனைத்தும் சந்திரோதயமான பிறகு கானல் நீரைப்போலும், இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகின்றன.

ततः पदं तत्परिमार्गितव्यं यस्मिन्गता न निवर्तन्ति भूयः ।
तमेव चाद्यं पुरुषं प्रपद्ये यतः प्रवृत्तिः प्रसृता पुराणी ।। ४ ।।

ततः पदं तत् परिमार्गितव्यं यस्मिन् गता न निवर्तन्ति भूयः।
तमेव चाद्यं पुरुषं प्रपद्ये यतः प्रवृत्तिः प्रसृता पुराणी॥4

இந்த ஆத்மஞானத்தால் ஏற்படும் உத்தரஸ்திதி :

இவ்விதமான ஆத்மஞானம் என்னும் கத்தியைக்கொண்டு, மேற்பக்கம் வேர் படைத்த ஸம்ஸாரமென்னும் அச்வத்தவ்ருக்ஷத்தை நாசம் செய்து விட்டு, இது வென்று எடுத்துக் காட்ட முடியாததும், நான் என்பதற்கு விஷயமாகாததுமான யாதோர் ஆத்மவஸ்து உண்டோ, அது தன்னைத்தானே பார்த்துக் கொள்ள வேண்டும். ஆனால் இப்படித் தன்னைத்தானே பார்த்துக்கொள்ளல் என்பது ஓர் பாமரன் கண்ணாடியைத் துணையாய்க்கொண்டு, தன் முகத்துக்கு ப்ரதிபிம்பத்தை உண்டாக்கிக்கொண்டு, தன் முகத்தைத் தானே பார்த்துக் கொள்கிறது போலும் அல்ல. ஹே வீரா, ஓர் கிணறு நிர்மிக்கப் படுவதின் முன்பே, நீரூற்றம் தன்னுத்பத்தி ஸ்தானத்தில் பூர்ணமாயிருப்பதுபோலும், ஓர் குட்டையின் நீர் சுண்டிப்போனவுடன், அதில் அதுவரையில் காணப்பட்டுக் கொண்டிருந்த ப்ரதிபிம்பம் பிம்பத்தோ டொன்றுபட்டுப்போதல்போலும், ஓர் குடமுடைந்து போனதும், அதனால் வரையறுக்கப்பட்டிருந்த ஆகாசம் மஹா காசத்தோ டொன்றுபட்டுப்போவதுபோலும், தன்னைத்தான் பார்த்துக் கொள்வது என்ற இது இருக்கிறது. அன்றியும் விறகு முற்றிலும் எரிந்துபோனபிறகு, எப்படி நெருப்பு தன் ஸ்வரூபத்துக்குள் அடங்கிப்போகிறதோ, அப்படியே இது இருக்கிறது. நாக்கு தன் ருசியைத் தானே அறிந்துகொள்ளல் எப்படியோ, கண்மணி தன்னைத்தானே பார்த்துக்கொள்ளல் எப்படியோ, ப்ரகாசத்தோடு ப்ரகாசமும், ஆகாசத்தோடு ஆகாசமும், ஜலத்தோடு ஜலமும், கலந்துபோதல் எப்படியோ,

அப்படியே தன்னைத்தான் த்வைதபாவமற்றுப் பார்த்துக் கொள்ளல் என்பது இருக்கும், என்று நிச்சயமாய்ச் சொல்கிறேன்.

பார்க்கிறவன், பார்க்கப்படுவது, என்ற த்வைதபாவ மற்ற பார்க்கை எதுவோ, ஏதேனும் ஒன்றை அறிதல் என்பதின்றி இருக்கும் அறிவு எதுவோ, அதுவே அந்த ஆதி புருஷனுடைய ஸ்வரூபம். அந்த ஸ்வரூபத்தோடு ஏதோ ஓர் உபாதியைச் சேர்த்துக்கொண்டு, நான் அந்தஸ்வரூபத்தை வர்ணிப்பேன், என்று வேதம் வார்த்தைகளை வளர்த்திக்கொண்டு ஓர் ப்ரயோஜனமு மின்றி நாமரூபங்களையே விஸ்தரித்து வைக்கிறது. முமுக்ஷுக்களாகிய (மோக்ஷத்தை விரும்பினவர்கள்) ஞானிகள், இப்பதத்தையடைய விரும்பியே, ஸவர்க்கீய ஸாம்ஸாரிக ஸுகங்களை வெறுத்தவர்களாய், திரும்பவும் ஸம்ஸாரத்துக்கு வந்து சேரமாட்டோம் என்று பந்தயம் போட்டுக்கொண்டு, யோகாப்யாஸங்களையும் ஞானநிஷ்டைகளையும் கைப்பிடித்துக் கொள்கிறார்கள். இப்படிப் பூர்ணவிரக்தியைப் பாராட்டிக்கொண்டு, ஸம்ஸாரத்தோடு பந்தயம் போட்டுக்கொண்டு, அதைப் பின்வைத்து, அதின் உத்தம பதவியாயும், கர்மப்ராப்யமாயும், இருக்கும் நான்முகன் பதவியின்மேல் கால்வைத்து, அதையும் பின்தள்ளி, அவர்கள் விரைந்து ஓடுகிறார்கள். தான் என்ற அஹம்காரம் முதலிய த்வைதபாவங்களை முற்றிலும் ஒழித்துவிட்டு, இந்த முமுக்ஷுக்கள் தங்களுடைய ஸொந்த வீடாகிய ஆத்மஸ்வரூபத்தில் ப்ரவேசிக்கத் தகைமை படைத்தவர்களென்று, பட்டயம் பெற்றுக்கொள்கிறார்கள்.

பின்பு எந்த வஸ்துவினின்று இவ்வளவு பெருத்த விச்வத்தின் பரம்பரை, பாக்யஹீநனுடைய வீண்படும் ஆசைகள் போலும், உண்டாய் விஸ்தாரமடைந்திருக்கிறதோ, எந்த வஸ்துவின் ஸ்வரூபஞானமில்லாமையே இதர லௌகிக ஞானத்துக்குப் பெருமை ஏற்படுத்திவைத்து. உண்மையில் இராததான நான் நீ என்ற பாவங்களை இவ்வுலகில் வாழ்வுபெறச் செய்துவைத்ததோ, ஸகலத்துக்கும் ஆதியான அந்த வஸ்துவை, பனிக்கட்டியானது தன் சைத்யத்தால் தானே சைத்யத்தை உணர்ந்துகொள்வதுபோலும், தன் ஸ்வரூபமாகவே தானே பார்த்தறிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு பார்த்துக்கொள்வதற்கு, மற்றுமோர் லக்ஷணம் உண்டு. அதுயாதென்றால், இப்படி வஸ்துவின் தர்சனமான பின், திரும்பவும் முன்னிருந்த அஜ்ஞானநிலைக்கு வருவது என்பது ஏற்படாது. மஹாப்ரளயத்தில் எங்கும் ஜலமயமாய்ப்போவது

போலும், அந்த ஸ்வரூபதர்சனம் எங்கும் எங்கும் அந்த ஞானஸ்வரூபமே பரவி பரி பூர்ணமாய் இருப்பதாகத் தோன்றும்படி செய்துவிடும்.

निर्मानमोहा जितसङ्गदोषा अध्यात्मनित्या विनिवृत्तकामाः ।
द्वन्द्वैर्विमुक्ताः सुखदुःखसंज्ञैर्गच्छन्त्यमूढाः पदमव्ययं तत् ॥५॥

நிர்மான மோஹா ஜிதஸங்க தோஷா அத்யாத்ம
நித்யா விநிவ்ருத்த காமாः ।
த்வந்த்வைர் விமுக்தாः ஸுகதுக்க ஸம்க்ஞைர்
கச்சந்த்ய மூடாः பதமவ்யயம் தத் ॥ 5

இப்பதவியை அடைய அதிகாரம் பெற்றவர்கள்:

வர்ஷா காலத்தின் முடிவில் மேகங்கள் ஆகாசத்தைவிட்டு விலகிப் போவதுபோலும், தங்களுடைய மனதினின்று மோஹமானங்கள் விலகிப் போயிருக்குமவர்களர்ய், காசு இல்லாதவனாயும் நிஷ்டூரனாயும் இருக்கும் ஒருவனை, உறமுறையார் கைவிட்டு விலகிப்போவதுபோலும், தங்களைக் கவர்ந்துகொள்ள முடியாமல் விகாரங்கள் தூரமாக விலகிநிற்குமவர்களாய், குலைதள்ளின வாழை சாய்ந்துபோவது போல், ஆத்மலாபத்தின் பெரும் பாரத்தால் தளர்ச்சியடைந்து, க்ரியைகள் கொஞ்சம் கொஞ்சமாய் ஓய்ந்து போகுமவர்களாய், நெருப்பு பற்றிக்கொண்ட ஓர் மரத்தினின்று பக்ஷிகள் தாமாகவே விலகிப் போய்விடுவது போலும், விகல்பங்களால் முற்றிலும் விடுபட்டிருக்குமவர்களாய், ஸர்வதோஷங்களும் புல்லாய் முளைத்து வளரும் பூமியாகிய பேத புத்தியின் பேச்சே அற்றவர்களாய், ஸூர்யோதயமானதும் ராத்ரித் தானாகவே அகன்று போய்விடுவதுபோலும், அவித்யையோடு கூட தேஹத்தில் அஹம் புத்தி என்பது முற்றிலும் அற்றுப் போனவர்களாய் ஆயுஷ்ய ஹீநனுக்கு அகஸ்மாத்தாய் சரீரம் நழுவிப் போவதுபேலும் அறிவு மயக்கத்தோடு கூடிய த்வைதபாவத்தால் கைவிடப்பட்டிருக்கு மவர்களாய், ஸ்பர்சக்கல்லுக்கு இரும்பு கிடைக்காததுபோலும், த்வைதபாவமே முற்றிலும் அற்றவர்களாய்,

தேஹத்தோடு கூடியவர்கள் ஸதா அநுபவிக்க வேண்டியவையான ஸுகதுக்கரூபமான த்வந்த்வங்களைக் கண்ணாற் காணக்கூடக் கிடைக்காதவர்களாய் ஸ்வப்நத்தில் அநுபவித்த அரசாட்சியும் சாவும், விழித்துக் கொண்டபின்

ஹர்ஷசோகங்களுக்குக் காரணமாகாததுபோலும், ஸுகதுக்கங்களைப் பலித்துத்தரும் பாபபுண்யங்கள் என்னும் பாம்புகள் ஆக்ரமித்துக் கொள்ள முடியாத கருடனாயிருப்பவர்களாய், அநாத்மவர்க்கங்களாகிய நீரைப் பிரித்து ஒதுக்கிவைத்து, ஆத்மரஸம் என்னும் பாலையே புசிக்கும் பகுத்தறிவு படைத்த ராஜஹம்ஸங்களானவர்களாய், ஸூர்யன் பூமிமேலே தன்னுடைய ரஸத்தை வர்ஷித்து விட்டு, அதைத் திரும்பவும் தன் கிரணங்களைக் கொண்டு தன்னிடத்திற்கே க்ரஹித்துக் கொள்வதுபோலும், ஆத்மஸ்வரூப விஷயத்தில் அறிவு மயக்கம் ஏற்பட்டதால் உலகெங்கும் சிதறிப்போய்க் கிடக்கும் ஆத்ம வஸ்துவை ஞானத்ருஷ்டியைக்கொண்டு சேர்த்து ஒன்றுபடுத்திவைத்துக் கொள்கிறவர்களாய் கங்கை ஸமுத்ரத்தில் விழுந்து ஒட்ட மற்றுப்போவதுபோலும்,

ஆத்மவஸ்துவை ஸந்தேஹமறத் தெரிந்து கொண்டபின், தத்வவிசாரம் ஒடுங்கிப் போயிருக்கு மவர்களாய், ஆகாசத்துக்குத் தான் இருக்குமிடம் விட்டு பரஸ்தலம் போவதென்பது இசையாதது போலும், யாவும் தாமாய் அமைந்துபோய், ஆசைப்பட்டு அடைய வேண்டியதாய் யாதொன்றுமில்லாதவர்களாய், அக்நியாலேயே ஏற்பட்ட ஓர் மலை தன்னிடத்தில் எவ்விதமான விதையையும் முளையெடுக்க ஒட்டாததுபோலும், எவ்வித விகாரமும் முளையெடுக்க ஒட்டாத மனது படைத்தவர்களாய், மந்தராசலத்தை வெளிப்படுத்தி வைத்தபின் அலையற்று அமர்ந்திருக்கும் பாற்கடலைப்போலும், காமவிகாரத்தின் அலைகள் முற்றிலுமற்றவர்களாய், பதினாறு கலைகளாலும் பரிபூர்ணனான சந்திரனுடைய மண்டலத்தில் எங்கும் குறைவு ஒன்றும் காணமுடியாததுபோலும், அபேக்ஷை என்னும் மானக்கேடு முற்றிலும் அற்றவர்களாய், இப்படிப்பட்டவர்களது உவமையற்ற பெருமையை எவ்வளவு சொன்னாற்றான், சொல்லித்தீரும்!

மரமானது பெருங்காற்றின் முன் கொஞ்சமேனும் நிலைபெறாதது போலும், விஷயத்தின் பேச்சே ருசிக்காதவர்களாய், எவர்கள் ஞானம் என்னும் அக்நியிற் புடம்போடப்பட்டு, இப்படி யெல்லாம் பரிசுத்தர்களாய், போனார்களோ, அவர்கள் தங்கத்தோடு தங்கம் கலந்தாற்போல், அப்பதம் போய்ச் சேர்கிறார்கள். அப்பதம் என்றால் எப்பதம் என்று கேட்பாயாகில், அப்பதத்துக்கு அழிவு என்பது ஒருநாளும் இல்லை. அப்பா, அது பார்க்கக்கூடிய

ஓர் பொருளாய்ப் பார்க்க முடியாததாய், அறியக்கூடிய ஓர் பொருளாய் அறியமுடியாததாய், இது என்று எடுத்துரைக்க முடியாததாய், இருக்கிறது.

न तद्भासयते सूर्यो न शशाङ्को न पावकः ।
यद्गत्वा न निवर्तन्ते तद्धाम परमं मम ।।६।।

न तद् भासयते सूर्यो न शशाङ्को न पावकः ।
यद्गत्वा न निवर्तन्ते तद्धाम परमं मम ।। 6

தேஜஸ்ஸுக்களால் ப்ரகாசிக்கச் செய்யமுடியாமை

கவனித்துப்பார், பெருத்த தீபத்தின் வெளிச்சத்தாலும், சந்த்ரனுடைய ப்ரகாசத்தாலும், இவ்வளவு வளர்த்திச் சொல்வதென், உலகமெல்லாம் ப்ரகாசிக்கச்செய்யும் ஸூர்யனுடைய காந்தியாலும், விளங்குகின்ற அனைத்தின் காட்சியும், அதைப் பாராததே ஆகிறது. அது மறைவாய் இருப்பதாற்றான், இந்த விச்வமனைத்தும் தோற்றிக்கொண்டிருக்கிறது. முத்துச்சிப்பியின் தன்மை மறைந்து போகப்போக, வெள்ளி என்னும் அறிவுமயக்கம் உறுதிப்படுவது போலும், கயிற்றின் தோற்றம் நசித்துப்போகப்போக, பாம்பு என்ற அறிவுமயக்கம் திடப்படுவதுபோலும், அப்பதத்தின் உண்மையான அறிவு லோபித்துப் போகப்போக, உலகென்ற அறிவு மயக்கம் உறுதியாய் ஏற்படுகிறது. சந்த்ரஸூர்யர்கள் முதலிய பெருத்த தேஜஸ்ஸுக்களின் தீவரமான ப்ரகாசம் முழுமையும், அவ்வஸ்து மறைந்து நிற்பதாலேயே ஏற்படுகிறது. அந்த வஸ்து தேஜோராசியாய் இருந்துகொண்டு, ஓர் வித்யாஸமும் இன்றி, எல்லாவஸ்துவுக்கும் ஆத்வாமாய் இருப்பதால், சந்த்ரஸூர்யர்களுக்குள்ளும் இருந்துகொண்டு, ப்ரகாசித்து கொண்டிருக்கிறது.

ஆகவே சந்த்ரஸூர்யர்கள் இந்த வஸ்துவின் ப்ரகாசத்தால் ஏற்பட்ட நிழற்களே ஆவார்கள். ஆகையால், தேஜஸ்ஸுக்களுக்கெல்லாம் தேஜஸ்ஸை உண்டாக்கிவைக்கும் வஸ்து எதுவோ, அது இவ்வஸ்துவின் ஸ்வரூபத்தின் அம்சமாய் அமைந்திருக்கிறது. இவ்வஸ்துவின் ப்ரகாசம் ஏற்பட்டமாத்ரத்தில், சந்த்ரஸூர்யர்களுள் பட ஸர்வஜகத்தின் ப்ரகாசமும், சந்த்ரப்ரகாசத்துக்கு முற்பட்ட நக்ஷத்ரங்களின் ப்ரகாசம்போலவும், மறைந்து போகிறது. மற்றோர் விதமாய்ச் சொல்லப்புகுந்தால், விழிப்பு ஏற்பட்டவுடன், ஸ்வப்நத்தின் ஆடம்பரம் அனைத்தும் இல்லாமற் போவது போலவும்,

அஸ்தமனம் ஏற்பட்டவுடன், கானல்நீர்த்தோற்றம் அற்றுப்போவது போலவும், எந்தவஸ்துவின் ப்ரகாசம் ஏற்பட்டமாத்ரத்தில், மற்ற ஸகலவிதமான வஸ்துக்களின் தோற்றம், முற்றிலும் அற்றுப்போகுமோ, அது தான் உண்மையாய் என்னுடைய அதிகாரம் பெற்ற பதவி ஆகும், அப்பா.

புநராவ்ருத்தி யற்றுப்போதல்

அன்றியும் அப்பதவியை அடைந்தவர்கள், ஸமுத்ரத்தில் விழுந்து அத்துடன் கலந்துபோன நதியின் ஜலம்போலவும், அதைவிட்டு திரும்பி வருவதில்லை. உப்பால் அமைக்கப்பட்ட யானை, உப்பு ஸமுத்ரத்தில் முழுகவைக்கப்பட்டபின், அந்த ஸமுத்ரத்தை விட்டு வேறாக வெளிப்படாதது போலவும், ஆகாசத்திற் சென்று அத்துடன் கலந்துபோன நெருப்பின் கொழுந்து திரும்பி வராதது போலவும், பழுக்கக் காய்ந்த இரும்பின்மேல் தெளிக்கப்பட்ட நீர்த்திவலைத் திரும்பவும காணப்படாது போவதுபோலவும், மாசற்ற ஞானத்தின் ப்ரபாவத்தால் என்னுடன் ஒன்றுபட்டுப் போனவர்களுக்கு, புநரா வ்ருத்தியின் வழி அடைப்பட்டுபோகிறது.

அர்ஜுநன் ப்ரச்நம் :

அப்போது ஞானமென்னும் பூமிக்கு அரசனாய் விளங்கும் அர்ஜுநன் பின்வருமாறு சொன்னான். ஐயா தேவரீர் என்மேல் க்ருபை கூர்ந்து, எனக்கு உத்தமமான ப்ரஸாதம் அளித்தீர். ஆயினும் நான் விண்ணப்பம் செய்வதொன்றை, தேவரீர் கவனித்தல் வேண்டும். தேவனாகிய உம்முடன் ஒன்றுபட்டுப் போய், பின்பு திரும்பவும் பிரிபட்டுப்போவதில்லை. என்று எவர்கள் விஷயத்தில் நீர் சொன்னீரோ, ஐயா, அவர்கள் உம்மைக் காட்டிலும் உண்மையில் வேறுபட்டவர்களா? அல்லது வேறுபடாதவர்களா? அவர்கள் அநாதி ஸித்தமாய் வேறுபட்டவர்களேயானால், அவர்கள் திரும்பவும் வேறுபட்ட நிலைக்கு வருவதில்லை என்பது பொருந்தாதது அன்றோ? பூவிற் போய்வீழ்ந்த தேன்வண்டு பூவே ஆய்விடுவதுண்டோ? கவனித்துப்பாரீர். லக்ஷ்யத்தைக் காட்டிலும் வேறான அம்பானது லக்ஷ்யத்திற் றைத்து, பின்பு அதை விட்டுக் கீழே விழுந்துபோவதுபோலும், ஈச்வரனை அடைந்த ஜீவர்கள் அவனைக்காட்டிலும் வேறுபட்டவர்களாதலால், திரும்பவும் பிரிந்தே நிற்கவேண்டும். அல்லது ஜீவர்கள் தங்கள் இயற்கையால் நீரே ஆவார்களாகில், எவருக்கு எவரோடு

ஒன்றுபடுகை ஏற்படுகிறது? ஓர் சஸ்த்ரம் தன்னைத் தானே குத்தித் துளைத்துக்கொள்வது எப்படி நேரும்? ஆகையால் சரீரத்தை விட்டுப் பிரிதலும், அத்துடன் திரும்பவும் கூடுதலும், அவயவங்களுக்கு ஸம்பவியாததுபோலும், உம்மைவிட்டு வேறு படாத ஜீவர்களுக்கு, உம்மை விட்டுப் பிரிதலும் திரும்பவும் உம்முடன் கூடுதலும் அமையாத விஷயமாயிருக்க, அப்படிப் பேசுதல் எப்படிப் பொருந்தும்? எப்போது மியற்கையால் எவை வேறுபட்டனவோ, அவை ஒருக்காலும் ஒன்றுபடுவது இல்லையே; ஆகையால் வேறுபட்ட நிலைக்கு, வருதல் என்பதும் வராதிருந்தல் என்பதும் எப்படி ஏற்படும்? அப்படிப்பேசுவதும் எண்ணுவதும் வீண்படுவதே அல்லவா? ஆகவே உம்மை அடைந்து, திரும்பி பிரிந்த நிலைக்கு வருவதில்லை என்று சொன்னீரே, அவர்கள் எவர்கள் என்று எனக்கு விளங்கும்படி, எங்கும் வாய்படைத்த வரான நீரே சொல்லவேண்டும்.

ஸ்ரீக்ருஷ்ணனுடைய உத்தரம் :

இவ்வண்ணம் அர்ஜுனன் செய்த ஆக்ஷேபணைக்கு, உடன்படாத வினா (ப்ரச்நம்) ஸர்வஜ்ஞர்களுக்கு சிரோமணியாய் விளங்கும் ஸ்ரீ க்ருஷ்ணன், சிஷ்யனுடைய புத்தியின் கூர்மையைக் கண்டு, ஸந்தோஷமடைந்து, பின்வருமாறு உத்தரம் கொடுத்தார். அப்பா புத்திமான்களுக்குள் சிறந்தவனே, என்னை அடைந்து திரும்பிப் பிரிந்து நிற்பதில்லை என்று, எவர்கள் விஷயத்திற் சொன்னேனோ. அவர்களை என்னைவிட்டு வேறானவர்கள் என்றும், வேறுபடாதவர்களென்றும், இவ்விருவகையாகவும் பேசுதல் கூடும். ஆழ்ந்த ஞானத்துடன் பார்க்குங்கால், நான் ஸ்வபாவமாகவே அவர்களே என்று சொல்ல வேண்டும்; அன்றியும் மேலெழுந்தவாறாய் பார்க்குங்கால், அவர்கள் என்னைக்காட்டிலும் வேறுபட்டவர்களாகவும் தோன்றுவார்கள். இது எப்படி என்றால், ஜலத்தின்மேல் புரளும் அலைகள், ஜலத்தைக்காட்டிலும் வேற்காகவே தோன்றினும், உண்மையில் அவை முற்றிலும் ஜலமாகவே இருக்கின்றன, அல்லவா? தங்கத்தைக்காட்டிலும் வேறாகத் தோன்றும் நகைகளின் உண்மையை விசாரித்துப் பார்க்குங்கால், அவை முழுமையும் தங்கமாகவே இருக்கின்றன, அல்லவா?

அப்படியே ஞானக்கண்ணைக்கொண்டு பார்க்கும்போது, அவர்கள் என்னைவிட்டு வேறுபட்டவர்களாயிராமல்,

நானாகவே அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் என்னைவிட்டு வேறுபட்டவர்களாய்த் தோற்றுவது, அஞ்ஞானத்தின் கார்யமே ஆகும், அன்றியும் உண்மையாய் வஸ்து எப்படி இருக்கிறதென்று விசாரிக்குங்கால், பின்னமென்றும் அபின்னம் என்றும் ஓர் வ்யவஹாரம் ஏற்படும்படி, ஒன்றே ஆன என்னுடைய ஸ்வரூபத்தில் மற்றொன்றுக்கு எங்கே இடம் இருக்கிறது? ஆகாசம் முழுவதையும் தன் வயிற்றுக்குள் அடக்கிக் கொள்ளும்படி ஸூர்யபிம்பம் ஒன்றே பெருத்துப்போய்விட்டால், பின்பு ப்ரதிபிம்பம் என்பது எப்படி ஏற்படும்? அதின் கிரணங்கள் தாமே பரவுதற்கு, எங்கே இடம் இருக்கும்? கல்பாந்தத்தின் ப்ரளயம் எங்கும் நிறைந்து போனபின், சின்ன குடாக்கள் நிறைவதென்பது எப்படி ஏற்படும்? அப்படியே விகாரங்கள் ஏற்பட முடியாதபடி ஒன்றேயாயிருக்கும் என்னுடைய ஸ்வரூபத்தில் அம்சங்கள் என்பது எப்படி ஏற்படும்?

உருவபேதங்கள் அற்று ஒரே விதப்பட்டிருக்கும் ஜலத்தின் ஸ்வரூபத்தில் கோணல் என்பது கால்வாயின் சேர்க்கையால் ஏற்படுவது போலும், ஒரே ஸூர்யன் ஈருருவு படைத்தவனாய்த் தோற்றுவது ஜலத்தின் சேர்க்கையால் ஏற்படுவது போலும், உருவற்றதாய் இருக்கும் ஆகாசத்துக்கு சதுரமாயும் வட்டமுமாயும் உருவங்கள் கடமடாதிகளால் ஏற்படுவது போலும், ஓர் வகைப்பட்டதான என்னுடைய ஸ்வரூபத்திலும் பேதங்கள், உபாதிகளின் சேர்க்கையால், ஏற்படுகின்றன. நித்ரையின் பலத்தைக் கொண்டு ஸ்வப்நம் ஏற்பட்டு ஒருவன் தான் அரசனாய் விட்டதாகக் காணும்போது, அவன் ஒருவனே ராஜாவாயும் ப்ரஜைகளாயும் ஸகல ஜகத்தாயும் ஆய்விடுதல் போலும், சட்டைமாற்றுள்ளதான இதர உலோஹத்தின் ஸம்பந்தத்தால் பதினாறு மாற்றுள்ள உத்தம தங்கமே பலவித தாழ்ந்த மாற்றுப் படைத்த பொன்னாக ஆய்விடுதல்போலும், சுத்தஸ்வரூபியான நான் என்னுடைய மாயையால் சூழப்பட்டுப்போய், அஞ்ஞானம் எங்கும் வேரூன்றிக் கொண்டு பரவிப் போய், நான் எவன் என்று தெரிந்துகொள்ள வேண்டுமென்று ஓர் கல்பனை ஏற்பட்டு, முடிவில் நான் தேஹமே யென்று ஓர் நிச்சிதமான புத்தி ஏற்பட்டுப் போகிறது.

ममैवांशो जीवलोके जीवभूतः सनातनः ।
मनःषष्ठानीन्द्रियाणि प्रकृतिस्थानि कर्षति ।।७।।

மமைவாம்ஶோ ஜீவலோகே ஜீவபூத: ஸநாதன: ।
மன: ஷஷ்டானி இந்த்ரியாணி ப்ரக்ருதிஸ்தானி கர்ஷதி ॥ 7

ஜீவன் என்பதும் ஜீவலோகம் என்பதும் எது :

இவ்வாறு ஓர் சரீரத்தின் அளவாகவும், அந்த சரீரத்தால் வரையறுக்கப்பட்டதாகவும், ஆத்மா இருப்பதாக எப்போது ஓர் அறிவு ஏற்படுகிறதோ, அப்போது அதின் வ்யாப்தி குறுகி இருப்பதாக பாவிக்கப்பட்டு, அது என்னைக்காட்டிலும் வேறுபட்ட என்னுடைய ஓர் அம்சமாகத் தோற்றுகிறது. ஸமுத்ரமானது வாயுவின் வசப்பட்டு, அலைகளாய்த் தோற்றும்போது, ஒவ்வோர் அலையும் ஸமுத்ரத்தின் ஓர் சின்ன அம்சமாக எப்படி காணப்படுகிறதோ, அப்படியே, ஹே பாண்டுவின் குமாரனே, நானும் ஜீவர்களுடைய உலகில், ஜடமான ஓர் தேஹத்தை ஜீவிக்கச்செய்து கொண்டு, தேஹத்தில் நான் என்னும் புத்தியைப் பாராட்டிக் கொண்டிருக்கும் ஜீவனாகப் காணப்படுகிறேன். இப்படிப்பட்ட ஜீவர்களால் அறியப்படும் வ்யாபாரம் அனைத்தும், ஒன்றாகச் சேர்ந்து, ஜீவர்களுடைய உலகம் என்று பெயர்பெற்று வழங்குகிறது. அப்பா, பிறப்பும் இறப்பும் வெறும் தோற்றமே யாகும் என்றறியப் படாமல், உண்மையாயினவே யென்று அறியப்படும் ஓர் நிலைமையையே, ஜீவலோகம் என்றும் ஸம்ஸாரம் என்றும் நான் சொல்லுகிறேன்.

ஆத்மாவின் யதாவத்தான (உண்மையான) ஸ்வரூபம் :

இப்படிப்பட்ட ஜீவலோகத்தில் நானே, பின் சொல்லப்படும் விதமாய், நிலைகொண்டிருப்பதாக, நீ அறிந்து கொள்ள வேண்டும். ஜலத்தில் காணப்பட்டும் ஜலத்தின் ஸம்பந்தம் முற்றிலு மற்றிருக்கும் சந்த்ரன் போலவும், குங்குமத்தூளின் மேல் வைக்கப்பட் டிருப்பதால் பிறர் கண்ணுக்கு சிவந்ததாகத் தோற்றிக்கொண்டு உண்மையில் சிவப்பாயிராத ஸ்படிகம் போலவும், என்னுடைய அநாதித்வத்துக்கு (ஆதியற்ற தன்மைக்கு) ஓர் குறைவும் உண்டாகாமலேயே, என்னுடைய அநாதித்துவத்துக்கு ஓர் குறைவும் உண்டாகாமலேயே, என்னுடைய அக்ரியத்வத்துக்கு (க்ரியை (தொழில்) அற்றிருக்கும் தன்மைக்கு) ஓர் குறைவும் ஏற்படாமலேயே, நான் ஜீவலோகத்தில் இருந்து கொண்டிருக்கிறேன். அந்த நிலையில் கர்மங்களைச் செய்துவைக்கும் கர்த்தாவாகவும், அக்கர்மங்களின் பலனைப் புசிக்கும் போக்தாவாகவும், நான் காணப்படுவது முழுமையும அறிவுமயக்கத்தின் கார்யமே.

ஆத்மாவுக்கு ஜீவத்வம் ஏற்படும் வழி :

வளர்த்துவ தேன்? ஆத்மா அதி பரிசுத்தமாக இருந்துகொண்டு, ப்ரக்ருதியோடு, ஒன்றுபட்டிருக்கையையும், அதின் தர்மத்தின் அதிகாரமனைத்தையும் தன்மேல் ஏற்றிக்கொள்கிறது. ப்ரக்ருதியின் விகாரங்களாகிய மனஸும் செவிமுதலிய இந்த்ரியங்கள் ஐந்தும் ப்ரக்ருதியைச் சேர்ந்தவையாயிருக்க, அவை தன்னையே சேர்ந்தவையென்று சொல்லிக்கொண்டு, பற்பல வியாபாரங்களில் ஆத்மா சிக்கிப் போகிறது. ஓர் ஸந்யாஸி ஸ்வப்நத்தின் வசப்பட்டு, தானே தன் ஸம்ஸாரமாக ஆய்ப்போய், பின்பு அதின் விஷயமான மோஹத்திற் சிக்கி, அத்துடன் கூடவே விதிவிலக்கின்றி, தோன்றினபடி யெல்லாம் அலைந்து திரிவது போலும், ஆத்மாவானது தன்னுடைய ஸ்வரூபத்தை மறந்து போய், தன்னை ப்ரக்ருதியோ டொன்று பட்டவனாய்ப் பாவித்துக்கொண்டு, மென்மேலும் அதையே கொண்டாடிக் கொள்கிறான். பின்பு, மனஸென்னும் தேரில் ஏறி உட்கார்ந்துகொண்டு, காது என்னும் ஓட்டைவழியாய் வெளிப்பட்டு, சப்தம் என்னும் காட்டிற் புகுந்து, அவன் திரிகிறான்.

பின்பு ப்ரக்ருதியென்னும் கடிவாளத்தைக் கையிற் பிடித்துக் கொண்டு ஸ்பர்சே ந்த்ரியமாகிய தோல் வழியாய்ச் சென்று ஸ்பர்சம் என்னும் பயங்கரமான காட்டில் அவன் அலைந்து திரிகிறான். மற்றும் ஓர் ஸமயத்தில் அவன் நேத்ரத்வாரம் வழியாய் வெளிப்பட்டு, உருவம் என்னும் குன்றுகளின்மேல் ஏறி, தனக்குத் தோன்றியபடி எல்லாம் அலைகிறான். திரும்பவும், ஹே வீரா, அவன் நாக்கின் வழியாய் வெளிப்பட்டு, ரஸம் என்னும் குஹையை நிரப்பிக் கொண்டிருப்பதே தன் வேலையாக ஏற்படுத்திக் கொள்கிறான். இல்லாவிட்டால், என் அம்சமான அந்த ஜீவன் க்ரோணேந்த்ரியத்தின் (மூக்கின்) வழியாய் வெளிப்பட்டு, கந்தம் என்னும் பயங்கரமான காட்டில் அலைந்து திரிகிறான். இவ்வாறெல்லாம் ஜீவன், தேஹம் இந்த்ரியங்களாகிய இவற்றினாதிபத்யத்தை வஹித்து, மனஸைத் தனக்கு ஸமீபத்தில் இருத்தி வைத்துக்கொண்டு, சப்தம் முதலிய விஷயக்கூட்டங்களைப் புசித்து வருகிறான்.

शरीरं यदवाप्नोति यच्चाप्युत्क्रामतीश्वरः ।
गृहित्वैतानि संयाति वायुर्गन्धानिवाशयात् ।।८।।

ஶரீரம் யதவாப்னோதி யச்சாப்யுத்க்ராம தீஶ்வர: ।
க்ருஹீத் வைதானி ஸம்யாதி வாயுர் கந்தா நிவாஶயாத் ॥ 8

அஹம்காரத்தின் வலிமையும்,

இந்த்ரியங்கள் விஷயங்களில் மண்டுவதும், ஆத்மா ஓர் தேஹத்தைப் பற்றிக்கொண்டபிறகே தான், தோன்றி நிற்கும் – ஆகவே, ஜீவன் எப்போது ஏதேனும் ஓர் சரீரத்தில் ப்ரவசித்துக்கொள்கிறானோ, அப்போது தான் அவனுக்குக் கர்த்ருத்வமும் போக்த்ருத்வமும் ஏற்பட்டு விளங்குகிறது. ஸம்பத்துப்படைத்து போகியாயிருக்கும் ஒருவனுடைய பெருமை முழுவதும், அரசர்கள் குடியிருக்கத் தக்க அரண்மனை யொன்றில் குடிகொண்ட பிறகே தெரியவருவது போலும், ஆத்மா ஓர் தேஹத்தில் ப்ரவேசித்த பிறகே அவனுடைய அஹங்காரத்தின் வலிமையும், விஷயேந்த்ரியங்களின் தடபடலும் வெளிப்பட்டுத் தோன்றுகின்றன.

மரணகாலத்தில் ஜீவன் மனஸையும் ஞானேந்த்ரியங்களையும் கூட எடுத்துக்கொண்டு போய்விடுதல்:

அவமதிக்கப்பட்ட அதிதி ஓர் க்ரஹஸ்தன் வீட்டை விட்டு விலகிப் போகும்போது, அந்த க்ரஹஸ்தனுடைய புண்யமனைத்தையும் கைப்பற்றிக்கொண்டு போய்விடுதல் போலும், கயிற்றால் ஆட்டப்படும் பொம்மையினின்று பிரித்து எடுக்கப்பட்ட கயிறு அப்பொம்மையின் ஆட்டத்தை க்ரஹித்துக்கொண்டுபோய்விடுதல் போலும், அஸ்தமித்த ஸூர்யன் உலகத்தாருடைய பார்வையை அபஹரித்துக்கொண்டு போய்விடுதல் போலும், பூத்த பூவினின்று காற்று அதின் வாஸனையை அபஹரித்துக்கொண்டு போய்விடுதல் போலும், ஜீவன் சரீரத்தை விட்டு விலகிப்போகும்போது, அந்த தேஹத்துக்கு அரசனான அந்த ஜீவன் மனஸுடன் கூட ஞானேந்த்ரியங்கள் ஐந்தையும் அந்த தேஹத்தினின்று அபஹரித்துக்கொண்டு போய்விடுகிறான்.

श्रोत्रं चक्षुः स्पर्शनं च रसनं घ्राणमेव च ।
अधिष्ठाय मनश्चायं विषयानुपसेवते ।।९।।

ஶ்ரோத்ரம் சக்ஷு: ஸ்பர்ஶனம் ச ரஸனம் க்ராணமேவ ச ।
அதிஷ்டாய மனஶ் சாயம் விஷயாநுபஸேவதே ॥ 9

ஜந்மாந்தரங்களிற்கூட முன்னிருந்த மனஸு முதலிய இந்த்ரியங்களின் அநுவ்ருத்தி:

பின்பு, அணைத்து வைக்கப்பட்ட தீபத்துடன் அதன் வெளிச்சமும் மறைந்துபோய், திரும்பவும் அது ஏற்றி வைக்கப்பட்டவுடன், திரும்பவும் அதே காந்தி ஏற்படுவது போலும், இவ்வுலகிலோ அல்லது ஸ்வர்க்கத்திலோ வேறு எவ்வுலகிலோ, எங்கெங்கே ஆத்மா தேஹத்தைப் பற்றிக்கொள்கிறதோ, அங்கெல்லாம் முன் தேஹத்தினின்று அபஹரித்துக்கொண்டு போகப்பட்டுள்ள மனஸும் மற்ற ஐந்திந்த்ரியங்களுமே, திரும்பவும் அந்த புது தேஹத்தில் ஏற்படுகின்றன.

இப்படி ஏற்படும் அநுவ்ருத்திதோறும் தேஹம் எடுத்தலும் விடுதலும், விஷயபோகமும், ப்ரக்ருதியைச் சேர்ந்ததே ஒழிய ஆத்மாவைச் சேர்ந்ததல்ல:

ஆனால் இப்படியே விடாது ஏற்பட்டுக்கொண்டிருக்கும் அநுவ்ருத்தியில், ஹே அர்ஜுநா, அவிவேகிகளின் புத்திக்கு, ஆத்மா தேஹத்தில் வந்து சேர்ந்து விஷயங்களைப்புசித்துவிட்டு, கொஞ்சகாலமானபின் அந்த தேஹத்தை விட்டுப்புறப்பட்டுப் போய்விடுகிறதென்று, இவ்வளவு மாத்ரமே தோற்றி, வருதலும் போதலும் விஷய போகமும் ஆத்மாவுக்கு உண்மையாய் ஏற்பட்டவை என்று அவர்கள் உறுதியாய் நம்புகிறார்கள். அப்படி அவிவேகிகள் ஆகாதவர்கள், தேஹத்துக்கு வருதலும், தேஹத்தைவிட்டுப்போதலும், விஷயங்களைப் புசித்தலும் ஆகிய இவை அனைத்தும், ப்ரக்ருதியினுடைய கார்யமே தவிர ஆத்மாவைச் சேர்ந்தவையல்ல வென்று தெரிந்து கொள்கிறார்கள்.

उत्क्रामन्तं स्थितं वापि भुञ्जानं वा गुणान्वितम् ।
विमूढा नानुपश्यन्ति पश्यन्ति ज्ञानचक्षुषः ।।१०।।
यतन्तो योगिनश्चैनं पश्यन्त्यात्मन्यवस्थितम् ।
यतन्तोऽप्यकृतात्मानो नैनं पश्यन्त्यचेतसः ।।११।।

உத்க்ராமந்தம்ஸ்திதம்வாபிபுஞ்ஜானம்வாகுணான்விதம்।
விமூடா நாநு பஶ்யந்தி பஶ்யந்தி க்ஞான சக்ஷுஷ: ॥ 10

யதந்தோ யோகிநஶ் சைனம் பஶ்யந்த் யாத்மன் யவஸ்திதம்।
யதந்தோ ஃப்யக்ருதாத்மாநோ நைனம் பஶ்யந் த்யசேதஸ: ॥ 11

அவிவேகிகளின் அறிவு:

தேஹம் என்னும் ஓர் சிறு மூட்டை ஏற்பட்டு, அதில் சைதந்யத்தின் விலாஸம் உண்டாய், கைகால்கள் ஆடி அசங்குவதைப் பார்த்து, மிக்க ஸந்தோஷமடைந்து, 'ஆத்மா வந்துவிட்டான், வந்துவிட்டான்' என்று சொல்கிறார்கள். அப்படியே அந்த் தேஹத்தின் சேர்க்கையை அடைந்து, இந்த்ரியங்கள் தங்கள் தங்கள் விஷயங்களில் வ்யாபரிப்பதைப் பார்த்து ஆத்மா புசிக்கிறான் என்கிறார்கள். புசிக்கவேண்டிய போகங்களனைத்தையும் புசித்துத் தேய்ந்துபோய், தேஹம் நசித்துப்போனபின், சைதந்யத்தின் இருப்பு உணரப்படாமற் போகும்போது, 'ஆத்மா போய்விட்டான், போய்விட்டான்,' என்று கூக்கூரல் இடுகிறார்கள். மரம் அசைந்தாடுவதைப் பார்த்து, காற்று அடிக்கிறதென்று எண்ணி, மரம் கண்ணுக்குக் காணாமற் போனால், காற்று இல்லாமற் போய்விட்ட தென்று எண்ணிக்கொள்வதா ஸரி? தன் முன் கண்ணாடியை வைத்து தன், ப்ரதிபிம்பத்தை அதிற் பார்த்து, தன்னை அப்போதுதான் உண்டானதாக பாவிப்பது ஸரியாகுமா? அதற்குமுன் அவன் இல்லாமல் இருந்தானா?

பின்பு கண்ணாடியைத் தன் முன்னின்று எடுத்துவிட்டதால், தன் ப்ரதிபிம்பம் காணாமற்போகும்போது, தான் இல்லாமற் போய் விட்டதாக நிச்சயித்துக்கொள்ளவேண்டுமா? சப்தமோ ஆகாசத்தின் கார்யமாயிருக்க, (மேகம் கர்ஜிக்கிறது அதன்மேல் பழிசாட்டுகிறார்கள்) மேகத்தின் மண்டை உடைந்து போகிறது. மேகத்தின் ஓட்டத்தை சந்த்ரன்மேல் ஏற்றிவைக்கிறார்கள். அப்படியே தேஹம் உண்டாய் மறைந்து போய்க்கொண்டிருக்க, ஞானப்பார்வையற்றவர்கள், தங்கள் அறிவுகேட்டால், அந்த தோன்றுதலையும் மறைதலையும் விகாரமற்ற ஆத்மஸ்வரூபத்தில் ஏற்பட்டவையாய் நிச்சயித்துக் கொள்கிறார்கள். இவ்விஷயத்தில் ஆத்மாவை அதின் உண்மையான நிலையில் நிறுத்திவைத்து, தேஹத்தின் வியாபாரத்தை தேஹத்தினிடத்திலேயே ஏற்பட்டதாக, பார்ப்பவர்களோ மிக்க அருமையா யிருக்கிறார்கள்.

ஞானிகளின் அறிவு:

எவர்களுடைய கண்கள் ஞானப்பார்வை யுள்ளனவோ, அவர்கள் பார்வை, தேஹம் என்னும் மேல் முட்டாக்கைப் பார்த்து, அதிலேயே தடைபட்டு நின்றுபோகாமல், வேநிற்காலத்து ஸூர்யனுடைய தீவரமான கிரணங்கள்

மேகங்களால் தடைபட்டு நின்றுபோகாமல், அவற்றைத் துளைத்துக் கொண்டு கீழ்நோக்கி பரவுதல், போலும்; தேஹத்தால் மறைபட்டுக் கிடக்கும் வஸ்துவின்மேற் சென்று, ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடி தெரிந்து கொள்கிறது. நக்ஷத்ரக் கூட்டங்களால் நிறைந்திருக்கும் ஆகாசம் ஸமுத்ரத்தில் ப்ரதி பிம்பித்துக் தோன்றினாலும், ஆகாசம் (ஸமுத்ரத்தில்) இடிந்து விழுந்து போகவில்லையென்றும், ஆகாசம் தான் இருக்கும் இடத்திலேயே இருக்கிறது என்றும், ஜலத்தில் காணப்படுவது உண்மையற்ற வெறும் தோற்றமே யென்றும், அறிஞர்கள் நிச்சயித்துக் கொள்வது போலும், எங்கும் வ்யாபித்த ஆத்மா தேஹத்தில் இருப்பதாகத் தோற்றுவது வெறும் தோற்றமே யென்று, ஞாநிகள்-தெரிந்து கொள்ளுகிறார்கள். சந்த்ரிகையானது, அலைந்துக்கொண்டு மிக்க வேகத்துடன் மோதிக்கொண்டிருக்கும் ஸமுத்ரத்தின் அலைகளில் சிதரிப்போய்க் கிடப்பதாக காணப்பட்ட போதிலும், அது உண்மையாக, யாதோர் கேடும் அடையாமல், சந்த்ரனிடத்திலேயே இருந்து கொண்டே இருக்கிற தென்று, அறிவுள்ளவன் தெரிந்து கொள்கிறான்,

சிறுகுட்டையே ஒருக்கால் நீரால் நிரம்புகிறது, மற்றொருக்கால் முற்றிலும் வற்றிப்போகிறது. ஆனால் அதில் நீர் இருக்கும்போது அதில் ஸூர்யன் ப்ரதிபிம்பித்துத் தோன்றி, நீரில்லாதபோது ப்ரதிபிம்பம் தோன்றாது போவதால், ஸூர்யன் ஓர் ஹாநியு மடையாமல் எப்போதும் ஒரே விதமாக இருந்து தீர்கிறான். அப்படியே தேஹம் உண்டானாலும் ஸரியே, ஏற்கனவே ஸித்தமாயிருக்கும் தேஹம் மறைந்துபோனாலும் ஸரியே, நான் (ஆத்மஸ்வரூபம்) ஒரே விதப்பட்டு இருந்து கொண்டிருக்கிறேன், என்று என்னை ஞாநிகள் தத்வவிசாரம் செய்து அறிந்துகொள்கிறார்கள். குடமும் மடமும் உண்டாய் அழிந்து போயினும், ஆகாசம் எப்போதும் நிறைந்து, ஓர் மாறுபாடுமின்றி இருந்துகொண்டே தான் இருக்கிறது. அப்படியே எங்கும் அகண்டமான ஆத்மஸ்வரூபத்தில், அஞ்ஞாநத்தால் கல்பிக்கப்பட்ட தேஹங்கள் மாத்ரமே உண்டாய் அழிந்து போகின்றன. என்று ஸந்தேஹமில்லாமற் றெரிந்து கொண்டு, சைதந்யமோ வளர்வதுமில்லை, தேய்வதுமில்லை, ஆடுவதுமில்லை, ஆட்டிவைப்பதுமில்லை, யென்று மாசற்ற ஆத்மவிஷய ஞானம் படைத்தவர்களாய், ஞாநிகள் இருக்கிறார்கள்.

ஆத்மாவை வசப்படுத்திக் கொள்ளாது வெறுமையான சாஸ்திரஞானம் படைத்தவர்கள், ஆத்மதர்மத்தை அறியார்கள்:

ஞானம் முழுவதையும் தனதாய்ச் செய்துகொண்டாலும், புத்தியின் கூர்மையால் பரமாணுவில் மறைந்து கிடப்பதனைத்தையும் வெளிப்படுத்தி வைப்பானேயானாலும், ஸகல சாஸ்த்ரங்களிலும் அடங்கியுள்ள அறிவு முழுவதும் லப்தமாய் இருந்தாலும், எவ்வளவு தான் சாஸ்திர ஞானத்தால் நிறைந்தவனாயிருந்தாலும், விஷயத்தில் வெறுப்பு என்பது அவன் மனதில் புகுந்துகொள்ளாது போனால், ஸர்வத்துக்கும் ஆத்மாவாய் விளங்கும் என்னுடைய ஸ்வரூபத்தின் தர்சனம் அவனுக்கு ஒருக்காலும் உண்டாகாது. தத்வவிசாரம் வாயில் எக்காலமும் நிறைந்ததாய் இருந்தபோதிலும், மனஸில் விஷயவாஸனை அகலாது குடிகொண்டிருக்குமானால், அவனுக்கு நான் கிட்டினவ னாகேன், என்பதில் ஸந்தேஹமே இல்லை. இதைக் கவனித்துப் பார்க்கவேண்டும், அப்பா. ஸ்வப்நத்தில் பிதற்றுகிறவனுடைய வார்த்தைகளால் அமைந்த ஓர் க்ரந்தத்தை ஆதாரமாகக்கொண்டு, ஸம்ஸார ஸம்பந்தத்தை நிவ்ருத்தித்துக் கொள்ள முடியுமா? புஸ்தகங்களை யெல்லாம் மிகவும் ஜாக்ரதையாய்க் கட்டிவைத்துக் கொண்டு அவற்றைக் காப்பாற்றிக் கொள்வதாலேயே, அவற்றை வாசித்ததாய்விடுமா? இல்லாவிட்டால், கண்ணை இறுகக் கட்டிவைத்துவிட்டு, முக்தாபலங்களை மூக்கின் அருகில் வைத்து, அவற்றின் வாஸனையைப் பார்ப்பதால், அவற்றின் உண்மையான மதிப்பை அறிந்து கொள்ள முடியுமா? அப்படியே மனஸில் அஹந்தைக்கு இடம் கொடுத்துவிட்டு, வாயால் மாத்ரம் ஸகல சாஸ்த்ரங்களையும் அப்யஸித்துக்கொண்டிருந்து, கோடிக்கணக்கான ஜந்மங்கள் கடந்து போகுமே யானாலும், என்னுடைய ஸ்வரூபத்தின் இரஹஸ்யம் கிடைத்த தாகாது..

மேல் வரும் ச்லோகத்தின் அவதாரிகை:

ஒருவனாகவே இருக்கும் நான் ஸமஸ்த பூதஜாதங்களிலும் எவ்விதம் வ்யாப்தி அடைந்திருக்கிறேன் என்பதை விளங்கச் சொல்வேன், கேள்.

यदादित्यगतं तेजो जगद्भासयतेऽखिलम् ।
यच्चन्द्रमसि यच्चाग्नौ तत्तेजो विद्धि मामकम् ।।१२।।

यदादित्यगतं तेजो जगद् भासयतेऽखिलम् ।
यच्चन्द्रमसि यच्चाग्नौ तत्तेजो विद्धि मामकम् ॥ 12

தேஜஸ்ஸால் வ்யாப்தி:

ஸூர்யனுள்பட இந்த விச்வஸ்ருஷ்டி முழுவதையும் காட்டிவைக்கும் ப்ரகாசம் எதுவோ, அது முழுவதும் என்னதே, என்று தெரிந்துகொள், பூமியின்மேல் உள்ள ஜலத்தை வற்றிப்போக அடித்துவிட்டு, ஸூர்யன் அஸ்தமித்துப் போனபின், மறுபடியும் அதின்மேல் ஈரத்தை நிரப்பி வைக்கும்படி சந்த்ரனிடத்தில் இருக்கும் குளிர்ச்சி பொருந்திய ப்ரகாசமும் என்னதே. அன்றியும் எல்லையில்லாதபடி வஸ்துக்களை எரியச் செய்து, ஆஹாரவர்க்கங்களை பாகம் செய்துவைக்கும் சக்தியுள்ள தாய், அக்நியிடத்திற் காணப்படும் தேஜோவ்ருத்தியும் என்னதே, அப்பா.

गामाविश्य च भूतानि धारयाम्यहमोजसा ।
पुष्णामि चौषधीः सर्वाः सोमो भूत्वा रसात्मकः ॥१३॥

காமாவிஶ்ய ச பூதானி தாரயாம் யஹமோஜஸா ।
புஷ்ணாமி சௌஷதீ: ஸர்வா: ஸோமோ பூத்வா ரஸாத்மக: ॥ 13

தாரண சக்தியால் வ்யாப்தி:

நான் பூமியில் ப்ரவேசித்திருப்பதைக் காரணமாய்க் கொண்டு, கேவல மட்டுளிகளின் ஓர் உண்டையாகிய இந்த பூமி, ஸமுத்ரஜலத்தில் கரைந்துபோகாமல், கட்டியாகவே இருந்துகொண்டு வருகிறது. நான் பூமியில் ப்ரவேசித்து, அது தாங்கிக்கொண்டிருப்பதாய்க் காணப்படும் பூதராசிகளனைத்தையும் நானே தாங்கிக்கொண்டிருக்கிறேன். அன்றியும், ஹே பாண்டுவின் குமாரனே, ஆகாசத்தில் சந்த்ரனாக உருவெடுத்துக்கொண்டு, ஸதா சுற்றிக்கொண்டு அம்ருதத்தால் நிறைந்திருக்கும் ஓர் தடாகமாக நானே அமைந்திருக்கிறேன். அதினின்று பரவும் கிரணங்களையே, அளவற்றபடி நீரோடும் கால்களாகச் செய்துகொண்டு, ஸர்வ ஸ்தாவரங்களும் வளரும் தோட்டங்களை நீரால் நிரப்பிவைப்பவனாயும் நான் இருக்கிறேன். இப்படிச் செய்து, நெற்பயிர் முதலிய தான்யவர்க்கங்க ளனைத்தையும் ஜலஸம்ருத்தியால் போஷித்து, அந்நத்தை விசேஷமாய் விளையச்செய்து, அதின் மூலமாய் ஸகல பூதஜாதங்களையும் போஷித்து, அவற்றைக் களிக்கச் செய்கிறேன். அன்றியும்

அந்நத்தை உண்டாக்கி வைத்தால் மாத்ரம் போதாதென்று, அவ்வந்நத்தை உண்டு ஜரித்துக் கொள்ளும் படியான சக்தியை பூதங்களுக்கு உண்டாக்கிக் கொடுத்து, அவைகள் ஸமாதான மடைந்து ஸுகிக்கும்படியாயும், நான் செய்து வைக்கிறேன்.

अहं वैश्वानरो भूत्वा प्राणिनां देहमाश्रितः ।
प्राणापानसमायुक्तः पचाम्यन्नं चतुर्विधम् ॥१४॥

அஹம் வைஶ்வானரோ பூத்வா ப்ராணினாம் தேஹமாஶ்ரித: ।
ப்ராணாபான ஸமாயுக்த: பசாம்யன்னம் சதுர்விதம் ॥ 14

வைச்வாநராக்நியாய் வ்யாப்தி:

ஆகையால் ஸகலப்ராணிகளின் தேஹத்தின் நாபிப்ரதேசத்தில், உலை ஒன்றை மூட்டிவைத்து, அதில் ஜாடராக்நியாக நானே விளங்குகிறேன், அப்பா அர்ஜுநா. ப்ராணன் என்றும் அபானன் என்றும் பெயர் படைத்த இரட்டைத் துருத்தியை இராப்பகல் ஓய்வொழிவில்லாமல் ஊதிக்கொண்டே, வயிற்றில் எவ்வளவு ஆஹாரங்களைப் பாகம் செய்து வைக்கிறேனோ, அவற்றை அளவிட முடியாது. அவை பசையற்றுக் கடினமானவையாய், தைலப்பசை படைத்து, மெதுவானவையாய், நன்றாய்ப் பக்குவமானவையாய், மிக்கத் தீந்துபோனவையாய், இப்படி நால்வகைப் பட்டவையாயிருந்தாலும், அவை அனைத்தையும், அப்பூதங்கள் ஜரித்துக்கொள்ளும் வண்ணம், நானே அவற்றின் வயிற்றில் இருந்துகொண்டு தகுந்தபடி பாகம் செய்து வைக்கிறேன்.

ஆத்மவ்யாப்தியின் பெருமையைத் தொகுத்துரைத்தல் :

இவ்வாறு நானே ஸகல ஜீவராசிகளாயும், அந்த ஜீவராசிளனைத் துக்கும் ஜீவநாதாரமான அன்னமாயும், அவ்வந்நத்தை உண்டு ஜரித்துக் கொள்வதற்கு அவச்யமான ஸாதனமாகிய ஜாடராக்நியாயும் அமைந்து நிற்கிறேன். இவ்வளவு சொன்னபின் என் வ்யாப்தியின் பெருமை விஷயத்தில், இன்னும் அதிகமாகச் சொல்ல என்ன இருக்கிறது?

மேல்வரும் ச்லோகத்துக்கு அவதாரிகை :

இந்த விச்வத்தில் என்னைத்தவிர இரண்டாவதென்பதே இல்லை யென்றும், எங்கும் நானே நிறைந்திருக்கிறேன் என்றும்,

நீ ஸந்தேஹமறத் தெரிந்து கொள்ள வேண்டும். ஆயினும் எப்படி யெல்லாம் வித்யாஸப்பட்ட வேஷங்களை நான் தரித்துக்கொண்டிருக்கிறேன்! பார். சில வேஷங்கள் எப்போதும் ஸுகித்தவையாய்த் தோன்றும், சில பலவகைப்பட்ட துக்கங்களால் ஸதா பீடிக்கப்பட்டவையாய்க் காணப்படும். ஒரே தீபத்தைக்கொண்டே பட்டணத்தில் உள்ள ஸகல தீபங்களையும் ஏற்றிவைத்தாலும், அவற்றிற் சில அதிக ப்ரகாசம் உள்ளவையாயும், சில ப்ரகாசமற்றவையாயும், இருப்பது போலுமே, நான் ஒருவனே வ்யாபித்திருக்கும் இந்த ஜகத்து, வேறுவேறு வகைப்பட்டிருக்கிறது. இது எப்படி நேரும், என்று உன் மனதில் தர்க்கவிதர்க்கம் செய்துகொண்டிருக்கிறாய், ஆனால் அதற்கு ஸமாதானம் சொல்லி, உன் மனதில் இருக்கும் சங்கையை முற்றிலும் போக்குவேன், கேள். நன்றாய்ப் பார்.

உலகில் காணப்படும் யாவும் நானே; இதற்கு அந்யதா ஒன்றுமே இல்லை. ஆனால் வேறு வேறு ப்ராணிகளுடைய புத்தியின் வேறுபாடுகளினால், நான் அவர்கள் பார்வைக்கு வேறுபாடடைந்தவனாய்க் காணப்படுகிறேன். ஒரே ஆகாசத்தினால் உண்டாக்கப்படும் சப்தமானது, வேறு வேறு நாதமுடையதாய் த்வநிக்கின்றது. ஒரே ஸூர்யன் உதயமாய், ஒரே விதமான வெளிச்சத்தைக் கொடுத்தாலும், ஜீவராசிகளதை வெவ்வேறு விதமாயுபயோகப்படுத்திக் கொண்டு, வெவ்வேறு விதமாய் சேஷ்டிக்கிறார்கள். அன்றியும் ஜலம் ஒன்றே யானாலும், அது வித்தின் இயற்கையை அநுஸரித்து, வேறு வேறு செடிகளை பிறப்பித்து வைக்கிறது. அப்படி வெவ்வேறு ஜீவர்கள் தோறும், ஒரே விதமான என் ஸ்வரூபம் வெவ்வேறு மாறுபாடுகளை அடைகிறது. அப்பா, ஒன்றுமறியாத ஒருவனும் நல்ல அறிவு படைத்த மற்றொருவனும் வழியோடுபோக, நீலமணிகள் சேர்த்த இரட்டைஸரம் ஒன்று கீழே கிடக்கப் பார்த்து. அறிவில்லாதவன் ஸர்ப்பம் என்று பயந்தோடுகிறான், நல்ல அறிவுபடைத்த மற்றொருவன், அதை நீலமணிகளா லமைந்த ஹாரமென்று தெரிந்துகொண்டு, அதை எடுத்து, கழுத்தில் தரித்துக் கொண்டு, மகிழ்ச்சி அடைகிறான். இது நிற்கட்டும், ஸ்வாதீ நக்ஷத்ரத்திற் பெய்த மழையின் ஓர் தாரை, முத்துச்சிப்பியில் விழுந்து, உத்தமமான முத்தாகிறது; மற்றோர் தாரை பாம்பின் வாயில் விழுந்து, கொடுமையான விஷமாகிறது. அப்படியே நல்ல ஞானம் படைத்தவனுக்கு நான் ஸுகத்தை விளைவிக்கிறேன், ஞாநஹீநனுக்கு நான் துக்கத்தை விளைவிக்கிறேன்.

सर्वस्य चाहं हृदि सन्निविष्टो मत्तः स्मृतिर्ज्ञानमपोहनञ्च ।
वेदैश्च सर्वैरहमेव वेद्यो वेदान्तकृद्वेदविदेव चाहम् ।। १५ ।।

ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸம்நிவிஷ்டோ மத்தः
ஸ்ம்ருதிர் க்ஞானம போஹனம் ச।
வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்யோ வேதாந்த
க்ருத் வேத விதேவ சாஹம் ॥ 15

அஹம்ஸ்பூர்த்தியால் ப்ராணிகள் ஹ்ருதயத்தில் ஆத்மவ்யாப்தி :

அன்றியும் ஸகல ப்ராணிகளுடைய ஹ்ருதயதேசத்திலும், 'நான் இன்னானாய், அல்லது இன்ன ப்ராணியாய் இருக்கிறேன்,' என்று ஓர் உணர்ச்சி இராப்பகலாய்த் தோன்றிக்கொண்டே இருக்கிறதே, அவ்வுணர்ச்சியை உண்டாக்கி வைக்கும் வஸ்து எதுவோ, அது நானே.

ஸர்வ ஞான வ்ருத்திகளிலும் ஆத்மவ்யாப்தி :

இப்படி இருக்க, ஸாதுக்களின் ஸாங்கத்யம்செய்தல், ஆத்மைக்ய ஞானத்தை ஸதா மனனம் செய்தல், இதர விஷயங்களில் விரக்திபாராட்டிக் கொண்டு, ஸத்குருபாதகமலத்தை ஸதா உபாஸித்தல், முதலிய ஸத்கர்மங்களால், எவனுக்கு அஞ்ஞானம் முழுமையும் நசித்துப்போய், நான் என்னும் உணர்ச்சி ஆத்மஸ்வரூபத்தில் ஒடுங்கிப்போகிறதோ, அவன் தன் ஆத்மஸ்வரூபத்தை யதாவத்தாய்ப்பார்த் தநுபவித்துக்கொண்டு, அவ்வாறு அனுபவிக்கப்பட என் ஸ்வரூபத்தால் ஸதா ஸுகித்துக்கொண்டிருக்கிறான். இவ்விஷயத்தில் காரணமாய் ஏற்பட்ட வஸ்து, என்னைத்தவிர, வேறு எது? அப்பா தனஞ்ஜயா, ஸூர்யன் உதயமானபின், ஸூர்யனை ஸூர்யனே பார்க்கவேண்டியதாயும், அப்படிப் பார்த்தலுக்கு ஸூர்யனே காரணமாயும், ஏற்பட்டால் எப்படியோ, அப்படியே என்னை நானே பார்த்தறிந்து கொள்வதற்கு, நானே காரணமாகிறேன்.

ஸர்வ அஞ்ஞான மனோவ்ருத்திகளிலும் ஆத்மவ்யாப்தி:

முன் சொல்லிய விதமாக ஆத்ம ஸ்வரூபத்தைத் தன் ஸ்வரூபமாகத் தெரிந்து கொள்ளாமல், சரீரத்தையே

கொண்டாடுகிறவாகளுடனேயே ஸாங்கத்யம் செய்தல், ஸாம்ஸாரிக பெருமை விஷயமான ஸம்பாஷணைகளையே ச்ரவணம் செய்தல், இவ்வகைப்பட்ட துஷ்கர்மங்களின் ப்ரபாவத்தால், எவர்களுடைய அஹம் புத்தி தேஹத்திலேயே அமுந்திப்போய்க் கிடக்கிறதோ, அவர்கள் ஸ்வர்க்கீய அல்லது ஸாம்ஸாரிக ஸுகத்தையே நாடி, கர்மங்களை ஓடி ஓடிச் செய்துகொண்டு, துக்கத்தின் ஜ்யேஷ்டாம்சத்துக்கு உறியவர்கள் ஆகிறார்கள். ஸ்வப்ந நித்ரைகளை அநுபவிப்பதற்கு, விழித்திருக்கு மவனே காரணமாதல் போலும், இப்படி அஞ்ஞாநிகளாய் கர்மமார்க்கத்தில் இறங்கி, அவர்கள் கஷ்டப்படுவதற்கும், நானே காரணமாகிறேன். மேகங்களால் பகலின் வெளிச்சம் மறை பட்டுப்போனால், அப்படி வெளிச்ச மில்லாமற்போனதைத் தெரிந்துகொள்வதற்கு பகலின் வெளிச்சமே காரண மாதல்போலும், நான் என்னை அறிந்து கொண்டு ஸுகப்படாமல், விஷயத்தில் பார்வையை வைத்து துக்கியாவதற்கு, பூதங்களில் என்னுடைய வ்யாப்தியே காரணமாகிறது. நித்ரையில் அழுந்திப்போவதற்கும், விழித்திருப்பதற்கும், ஞானமே காரண மாதல்போலும், ஹே தநஞ்ஜயா, ஜீவர்கள் ஞானமுள்ளவர்களாவதற்கும், அஞ்ஞானத்தில் முழுகிக்கிடப்பதற்கும், நானே காரணமாகிறேன். ஸர்ப்பம் என்ற தோற்றம் உண்டாவதற்கும், கயிறே என்று புத்தி உண்டாவதற்கும், கயிறே காரண மாதல்போலும், ஸம்ஸாரிகள் ஞாநிகளாவதற்கும், அஞ்ஞானிகளா யிருப்பதற்கும், நானே காரணமாகிறேன்.

வேதத்தில் ப்ரதிபாத்ய விஷயமாய் ஆத்ம வ்யாப்தி:

நான் உண்மையாய் எப்படி இருக்கிறேனோ, அப்படியே என் ஸ்வரூபத்தை அறியாததான வேதம், என் ஸ்வரூபத்தை அறியப்புகுந்து, வெகு சாகைகளாகப் பிரிந்து போயிற்று, ஆனால் மேற்கு நோக்கியும் கிழக்கு நோக்கியும் ஓடும் நதிகளனைத்துக்கும் ஸமுத்ரமே அடைய வேண்டியஸ்தானமா யிருப்பதுபோலும், அப்படி பேதப்பட்டிருக்கும் சாகைகளனைத்துக்கும், நானே ப்ரதிபாத்ய (விளங்கும்படி எடுத்துரைக்க வேண்டியதான) வஸ்துவா யிருக்கிறேன்..

வேதத்தைத் தாண்டிநிற்கும் ஆத்மவ்யாப்தி:

அன்றியும் தான் வஹித்திருக்கும் ஸுகந்தத்தோடு, காற்றானது ஆகாசத்தில் லயமாய்விடுவதுபோலும், ஆத்மஸ்வரூபவிஷயமான மஹாஸித்தாந்தத்தின் அருகிற் சென்ற மாத்ரத்தில், வேதமும் அதின் முழக்கமும் லயப்பட்டுப்

போகிறது. இவ்வண்ணம், வெட்கமடைந்தவைபோல், வேதவாக்யங்கள் அனைத்தும் வாய் திறவாமல் ஓய்ந்துபோனபின், அந்த ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடி நானே வெளியிட்டுவைக்கிறேன். அந்த ஆத்மபதத்தின் ஸ்தானத்திற்குச் சென்ற மாத்ரத்தில், வேதத்தோடு, ஸர்வ ஜகத்தும் லயமடைந்து போனபின், மிகுந்து நிற்கும் சுத்த ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தை அறிந்து நிற்பவனும் நானே. தூங்கினவன் விழித்துக்கொண்டபின், தூக்கத்திற் கண்ட ஸ்வப்நத்தின் நானாத்வம் (பல வகைப்பட்ட வஸ்துக்களின் சேர்க்கை) கொஞ்சமேனும் மிகுந்து நிற்காமல், தான் ஒருவனே தனித்திருப்பதாக அவன் தெரிந்துகொள்வதுபோலவும், வேறொன்றின் சேர்க்கையற்றதான என்னுடைய அத்வைத ஞானாநுபவத்துக்கு, அந்த அத்வைத நிலையை அறிகிறவனான நானே காரணமுமாகிறேன். பின்பு, கற்பூரம் நெருப்புப்பட்டு எரிந்துபோன்பின், நெருப்பாவது கரியாவது மிகுந்து நிற்காதது போலும், ஹேவீரா, அந்த அகண்டாகார ரூபமான வ்ருத்திஞானமானது முன்னிருந்த ஆத்மவிஷயக அஞ்ஞானத்தை ஸமூலமாய் சாப்பிட்டுவிட்டு, தானும் இருந்த இடம் தெரியாமல் லயம் அடைந்துவிடுகிறது.

இந்த ஸ்திதியில் ஆத்மா தன் ஸ்வரூபத்தோடு மிகுந்து நிற்கையால், ஒன்றும் மிகுந்து நிற்கவில்லை என்பது முற்றிலும் பொருத்தமற்றதே யாயினும், ஏதோ ஒன்றிருக்கிறதென்று சொல்வதும் பொருத்த மாவதில்லை. ஓர் திருடன் தன் அடிவைப்பைக்கூட பாக்கிவைத்துப்போகாமல், விச்வம் முழுவதையும் அபஹரித்துக்கொண்டுபோய் விடுவானேயானால், அவனை எவன் எவ்விதமாய்த் தேடிக் கண்டுபிடிக்கலாம். இவ்வகைப்பட்ட பரிசுத்தமான நிலை எதுவோ அதுவே நான். இவ்வாறு கைவல்யத்துக்கு அதிபதியான ஸ்ரீக்ருஷ்ணன் ஜடாஜடங்களான ஸர்வ பூதங்களிலும் தன்னுடைய வ்யாப்தியை நிரூபணம்செய்து கொண்டே, தன்னுடைய நிருபாதிக சுத்த அத்வைதஸ்வரூபத்துக்கு வந்து சேர்ந்து, அந்த நிரூபணத்தை முடித்தார்.

மேல்வரும் ச்லோகத்துக்கு அவதாரிகை:

ஆகாசத்தில் உண்டான சந்த்ரோதயம் அதிநிர்மலமான பாற்கடலில் ப்ரதிபிம்பித்தாற் போலுமே, ஸ்ரீக்ருஷ்ணன் ஷ்ருதயத்திலிருந்து வெளிப்பட்ட அந்த அத்வைத ஆத்மவஸ்துவின் விஷயமான ஞானம் அனைத்தும், அநாயாஸமாயும் காலவிளம்ப மின்றியும் அர்ஜுநனுடைய

ஹ்ருதயத்தில் ப்ரகாசிக்கத் தலைப்பட்டது. ஓர் சுவற்றில் எழுதின சித்ரம் முழுமையும், பளபள வென்று செய்துவைக்கப்பட்டதாயும், அதின் பக்கத்திலேயே நிலைபெற்றதாயும் இருக்கும் மற்றோர் சுவற்றிற் ப்ரதிபிம்பித்து காணப்பட்டாற் போலுமே, வைகுண்டனிடத்திலும், அர்ஜுநனிடத்திலும் அந்த ஆத்மதத்வ ஞானம் ப்ரகாசித்துக் கொண்டிருந்தது. ஆனால் அந்த ஆத்மவஸ்து விஷயமான ஞானமானது மிக்கக் கொண்டாடப்படத்தக்கதானதால், அதின் ஸ்புரணம் அர்ஜுநனிடத்தில் உண்டானதும், அதின் அநுபவத்தினால் ஏற்பட்ட ஆநந்தம் அதிகரித்து, மிக்கவும் வலுமை பெற்றதாய் ஆனபின், ஆத்மஞாநா நுபவிகளுக்குள் மகுடம் சூடப்பெற்ற அர்ஜுநன் பின்வருமாறு பேசினான். ஐயா நீர் உம்முடைய வ்யாப்தியை நிரூபித்துக்கொண்டு வரும்போது, தேவரீர் ப்ரஸங்கா நுஸாரமாக சற்று முன்னால் உம்முடைய நிருபாதிகமான சுத்த ஸ்வரூபத்தை எடுத்துரைத்தீரே, அதையே ஒருதரம் எனக்கு ஸம்பூர்ணமாய் சொல்லவேண்டும்.

அர்ஜுநனுடைய இந்த வார்த்தையைக் கேட்டு, த்வாரகாதீசனான ஸ்ரீக்ருஷ்ணன் ஸந்தோஷித்து, பின்வருமாறு சொன்னார். 'நல்ல கார்யம் செய்தாய், எனக்கு இவ்விஷயத்தையே மிக்க ப்ரேமையுடன் எப்போதும் சொல்லிக் கொண்டிருக்க ஆசையா யிருக்கிறது. ஆனால் என்ன செய்யலாம், உன்னைப்போல் இவ்விஷயத்தை, ப்ரேமையுடன் விசாரிக்கிறவன் எனக்குக் கிடைக்கிறதில்லையே. நான் இத்தனை நாள் ஆசைப்பட்டுக் கொண்டிருந்ததற்கு பலனாகவே, இன்றைக்கு நீ எனக்குக் கிடைத்தாய். ஏனென்றால் இன்று நீ வாயைத்திறந்து, கொஞ்சம்கூட ஸங்கோசம் இல்லாமல், இதைச் சொல்லவேண்டும் என்று விசாரித்தாய். நீ என்னுடைய நிருபாதிக ஸ்வரூபத்தை வர்ணிக்கச் சொல்லி என்னைக் கேட்டதினால், நான் அத்வைதநிலையின் ஸுகத்தை அநுபவிப்பதற்கு, நீ காரணமாய், எனக்கே நீ ஸுகத்தைக் கொடுக்கிறாய். நிர்மலமான கண்ணாடி ஒன்று கண்ணுக்கு எதிர்ப்பட்டால், தன் ரூபத்தைத் தானே பார்த்துகொள்ள ஸாத்யமாவதுபோலும், நீ என் ஸ்வருபத்தை எனக்குக் காட்டிக் கொடுக்கும்படியாய், ஸம்வாதம் செய்கிறவர்களுக்குள் உத்தமனான நீ எனக்குக் கிடைத்தாய், அப்பா என் கண்மணியே, நீ தெரியாதவன்போல் சொல்லவேண்டுமென்று கேட்பதும், நான் உனக்குத் தெரிவித்துவைக்கும் ஆசார்யனாக உட்கார்வதும், மிக்க அழகாய்த் தான் இருக்கிறது. அப்படியே

இருக்கட்டும்." இப்படிச் சொல்லிக் கொண்டு, ஸ்ரீக்ருஷ்ணன் அர்ஜுனனை ஆலிங்கனம் செய்துகொண்டு, அவனை க்ருபையோடு நோக்கி, மேலும் பின்வருமாறு சொன்னார்.

"கவனித்துப் பார். இரண்டு உதட்டைக் கொண்டும் ஒரேபேச்சு தான் பேசப்படுகிறது. இரண்டு பாதத்தைக்கொண்டும் ஒரே நடை தான் நடக்கப்படுகிறது. அப்படியே இருக்கிறது, நீ கேட்பதும், நான் சொல்வதுமாகிய இவ்விரண்டும். இவ்விதமாய் நாம் இருவரும் ஒரே வஸ்துவின் ஸ்வரூபத்தை அறிகிறது மல்லாமல், சொல்கிறவனும கேட்கிறவனும் ஆகிய நாம் இருவரும் ஒரே வஸ்துவாய் இருக்கிறோம்." இப்படி ஸ்ரீக்ருஷ்ணன் சொல்லிக்கொண்டே, அர்ஜுனன் விஷயத்தில் ப்ரேமை அதிகரித்து, அதினால் அறிவு கேடடைந்து, அர்ஜுனனை இறுக ஆலிங்கனம் செய்துகொண்டு, அசைவற்று நின்றார். பின்பு உடனேயே திடுக்கிட்டு, தனக்குள் பின்வருமாறு சொல்லிக்கொண்டார். இவ்வளவு ப்ரேமை உசிதமானதல்ல. காய்ச்சின கருப்பஞ் சாற்றை வெல்லக்கட்டியாய் இறுகச்செய்ய வேண்டுமானால், அதன் மேல் உப்பை மாற்றாகச் சேர்க்க வேண்டும். அப்படியே, சேர்ந்து திரண்டுவந்த ஸம்வாதஸுகம் என்னும் உத்தம ரஸத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால், த்வைத பாவத்தைப் பாராட்டியே நிற்கவேண்டும். அப்படிச் செய்யாமல், ப்ரேமைக்கு வசப்பட்டுப்போய், இப்படி ஒன்று பட்டு நின்றால், அத்தனை ரஸமும் பாழாய்ப்போய்விடும். இவனும் நானும் நரநாராயணர்களானதால், எங்களுக்குள் ஏற்கனவே பேதம் என்பது இல்லை.

ஆகையால் இந்த ப்ரேமையின் வேகத்தை, எனக்குள் நான் ஜரித்துக்கொள்வதே யுக்தம். இப்படி புத்தி நிச்சயம் செய்து கொண்டு, அவர் அர்ஜுனனைப் பார்த்து, அப்பா அர்ஜுனா, நீ கேட்ட ப்ரச்நம் என்ன, அதைத் திரும்பவும் சொல் என்றார். அப்போது ஸ்ரீ கிருஷ்ண ஸ்வரூபத்தில் அழுந்திக் கரைந்து ஒன்று பட்டுப்போய்க் கொண்டிருந்த அர்ஜுனன், திரும்பவும் தேஹத்தில் ஸ்மரணை உண்டானவனாய். ஸ்ரீ க்ருஷ்ணன் ப்ரச்னத்தைக் கேட்டு, தழுதழுத்த சொற்களைக் கொண்டு, ஐயா நீர் உம்முடைய நிருபாதிக ஸ்வரூபத்தை விளங்கச் செய்ய வேண்டும் என்றான். இதைக் கேட்டு சாரங்கபாணியானவர் அந்த நிருபாதிக ஸ்வரூபத்தை எடுத்துரைக்கத் கருதி, உபாதியை இருவகைப்படுத்தி நிரூபிக்கிறார். விசாரித்த விஷயமோ நிருபாதிகஸ்வரூபமாயிருக்க, உபாதியை என்னத்துக்காக எடுத்துரைக்க வேண்டும் என்று,

எவர்களுக்காவது இவ்விஷயமாய் மனஸில் ஸந்தேஹம் தோன்றுமேயானால், ஸமாதானம் சொல்வேன் கேட்கவேண்டும். வெண்ணெய் எடுத்துக்கொடுத்தல் என்பது, தோய்ந்தபாலின் மோர் அம்சத்தைப் பிரித்து வைப்பதே அல்லவா? சுத்தமான தங்கத்தைக் கண்டுபிடித்துக் கொள்வதென்பது, கட்டை மாற்றுப் பொன்னை நெருப்பில் புடம்போட்டு, அதின் மலத்தை (கலந்து கிடக்கும் இதர உலகத்தை) எரித்து விடுவதுதானே அல்லவா? பாசியைக் கையால் ஒதுக்கி வைப்பது தான், செய்ய வேண்டியது.

பின்பு சுத்த ஜலம் ஸித்தமாகவே இருக்கிறது. சுத்தமான ஆகாசத்தைப் பார்க்க வேண்டுமானால், அதை மறைத்துக் கொண்டிருக்கும் மேகங்கள் விலகிவிடுவது தானே ஆகவேண்டிய தெல்லாம். மேற்பக்கத்தில் சூழ்ந்துகொண்டிருக்கும் உமியை உரித்துப் பிரித்து வைத்து விட்டால், அரிசி கைக்குக் கிடைப்பதற்குக் கொஞ்சமேனும் விளம்பம் ஏற்படாதது போலும், ஸோபாதிகமான (உபாதியோடு கூடினதான) வஸ்துவின் உபாதி இன்னதென்று விசாரித்து, அதை விலக்கி வைத்தபின், மிகுந்து நிற்பது கேவல நிருபாதிகவஸ்துவே அல்லவா? தன் பதியின் பெயரைச் சொல்வதற்கு லஜ்ஜைப்படும் ஓர் சிறு பெண்ணின் முன்னால், பலபெயர்களைச் சொல்லிக்கொண்டே வரும்போது, எந்தப் பெயரைக் கேட்டமாத்ரத்தில், அவள் அல்ல அல்ல வென்று மறுக்காமல் மௌனமாய் நின்றுவிடுவாளோ, அது அவளுடைய பதியின் பெயரென்று நிச்சயித்துக்கொள்ள வேண்டுவதுபோல, ஸோபதிகவஸ்துக்களை வர்ணிததுக்கொண்டே வந்து, அவை நிருபாதிக வஸ்து அல்ல, அல்ல, என்று தள்ளிக்கொண்டு வரும்போது, எவ்வஸ்துவின் அருகில் வந்த மாத்ரத்தில், வாக் அதைத் தெரிவிக்க முடியாமல் ஸ்தப்பதமாய்ப் (ஆட்டமற்று, பேச்சற்று) போகிறதோ, அதுவே வாக்கால் எட்டமுடியாத நிருபாதிக வஸ்துவென்று தெரிந்துகொள்ளும் மார்க்கத்தைத்தவிர, அதைத் தெரிந்துகொள்ள வேறு மார்க்கமில்லை.

எவ்வஸ்து இன்னதென்று சொற்களால் விவரித்து சொல்லமுடியாததோ, அதைப் பிறருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்றால், அதை இப்படியே தெரிவிப்பதைத்தவிர, வேறு வழி யில்லை. ஆகையால் உபாதியின் லக்ஷணங்களை முன்னம் முன்னம் சொல்வது அவச்யமாகிறது. சுக்லபக்ஷ ப்ரதமையில், சந்த்ரபிரையைக் காட்டிவைக்க வேண்டுமானால், அதின் அருகில் காணப்படும்

மரக்கிளையைக் கொண்டே காட்ட வேண்டுவது போலுமே, இவ்விஷயத்திலும் உபாதிகளைச் சொல்லியே, நிருபாதிக வஸ்துவைக் காட்டிவைக்க வேண்டியிருக்கிறது.

द्वाविमौ पुरुषौ लोके क्षरश्चाक्षर एव च ।
क्षरः सर्वाणि भूतानि कूटस्थोऽक्षर उच्यते ॥१६॥

த்வா விமௌ புருஷௌ லோகே க்ஷரஶ்சாக்ஷர ஏவ ச ।
க்ஷர: ஸர்வாணி பூதானி கூடஸ்தோ(அ)க்ஷர உச்யதே ॥ 16

ஸம்ஸார சக்ரத்தில் இருக்கும் இரண்டு புருஷர்கள்

பின்பு அந்த ஸ்ரீக்ருஷ்ணன பின்வருமாறு சொல்லலுற்றார். அப்பா ஸவ்யாஸாச்சீ, (இடது கையாற்கூட வில்லை வளைத்து, பாணப்ரயோம் செய்கிறவனே) நன்றாய் கவனித்துப்பார், இந்த ஸம்ஸாரபட்டணம் முழுவதிலும், அல்பமான புருஷர்கள் இருவரே குடிகொண்டிருக்கிறார்கள். இராத்ரி, பகல், ஆகிய இவ்விரண்டுமே ஆகாசம் முழுவதையும் வ்யாபித்துக் கொண்டிருப்பதுபோல, ஸம்ஸாரசக்ரம் என்ற இப்பெருத்த ராஜதானியில், இவ்விருவரைத் தவிர வேறொருவரும் குடியில்லை. மற்றும் ஓர் புருஷன் இருக்கிறானே யானாலும், அந்த மூன்றாவதானவனோ இவ்விருவருடைய பெயரையே ஸஹிப்பதில்லை. அவன் வந்தானே யானால், இவ்விருவருடன் இவர்களிருக்கும் ஊரையும் சேர்த்து, சாப்பிட்டுவிடுகிறான். ஆனால் அந்த மஹா புருஷனுடைய விஷயத்தை இப்போது நிறுத்திவைத்து, ஸம்ஸாரம் என்னும் ஊரில் குடியேறி இருக்கும் அல்பர்களான இந்த இருவர்களுடைய விஷயத்தை முன்னால் விசாரித்துப் பார்ப்போம். இவர்களில் ஒருவன் குருடனாயும் பித்துப்பிடித்தவனாயும் கைகால் இல்லாத முடவனாயும் இருக்கிறான். மற்றொருவன் ஸர்வாங்கங்களாலும் நிறைவடைந்து, நேர்மை படைத்தவனாய் இருக்கிறான். இவர்கள் இருவருக்கும் ஒரே ஊரில் வாஸம் ஏற்பட்டிருக்கிறதால், இவர்களுக்கு சேர்க்கை உண்டாயிருக்கிறது. இவ்விருவர்களில், ஒருவன் பெயர் க்ஷரன், (க்ஷரமான, நச்வரமான, உபாதியோடு கூடினவன்) மற்றொருவன் பெயர் அக்ஷரன் (ஞானம் தவிர மற்றெதினாலும் நசித்துப் போகாத அக்ஷரமான உபாதியோடு கூடினவன்) இவ்விருவர்களாலேயே ஸம்ஸாரம் முழுவதும், எங்கும் நிறைவுபெற்றுக் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. இனி

க்ஷரன் எவன், அக்ஷரன் எவன், என்ற இவ்விஷயத்தைத் தெளிவாய்த் தெரிந்துகொள்ளுமாறு, எடுத்துரைப்பேன், அப்பா.

க்ஷரபுருஷனுடைய லக்ஷணம் :

மஹத்தத்வம் முதலாய், ஓர் புல்லின் கொழுந்து ஈறாய், உள்ள வஸ்துக்கள் எவை எவையோ, சிறிய அல்லது பெரிய உருக்கொண்டவையாய், ஓடியாடுமவையாய் அல்லது நிலைபெற்றவையாய், (இவ்வளவு வளர்த்துவதென்?) மனஸின் அல்லது புத்தியின் அறிவுக்கு விஷயமாய் இருக்குமவை எவை எவையோ, ஐந்துபூதங்களின் சேர்கையாலமைந்தவை எவை எவையோ, நாமரூபங்கள் படைத்தவை எவை எவையோ, குணத்ரயங்களின் கார்யாலயத்தில் புகுந்து புறப்படுமவை எவை எவையோ, எந்தத் தங்கத்தைக் கொண்டு பூதாக்ருதிகள் என்ற நாணயங்கள் அடிக்கப்படுகின்றனவோ, எவற்றைப் பலகறைகளாய்க் கொண்டு, யமன் சூதாட்டம் ஆடுகிறானோ, அறியும் வஸ்துவாய் இராமல், அதற்கு எதிர் நிலையாய் அறியப்படும் வஸ்துக்களாய் இருப்பவை எவை எவையோ, ஒவ்வொரு க்ஷணமும் உண்டாய் அழியுமவை எவை எவையோ, ப்ராந்தி யென்னும் காட்டை ஏற்படுத்தி, அந்தக்காட்டின் அவையவங்களாய் ஸ்ருஷ்டியிலுள்ள வ்யக்திகளை நிறுத்தி வைக்கிறது எதுவோ, (இவ்வளவு சொல்வதென்?) ஜகத்து என்று பெயரடைந்தது எதுவோ, அன்றியும், ஏற்கனவே (ஏழாவது அத்யாயம 4-வது ச்லோகத்தில்) எண்வகைப் படுத்தப்பட்டவையாய் ப்ரக்ருதி என்று பெயரிடப்பட்டுச் சொல்லப்பட்டுள்ளன எவையோ, அப்படியே மற்றோரிடத்தில் (13வது அத்யாயம், 5வது, 6வது ச்லோகங்களில்) க்ஷேத்ரம் என்று பெயரிடப்பட்டு முப்பத்தாறு அம்சங்களுள்ளதாய் சொல்லப்பட்டுள்ளன எவையோ, (இப்படியே கீழே சொல்லப்பட்டுள்ள தனைத்தையும் எடுத்துத் திரும்பவும் சொல்வதென்?) இவ்வத்யாயத்தின் துவக்கத்தில் வ்ருக்ஷ உருவாக வர்ணிக்கப்பட்டுள்ளது எதுவோ – ஆகாரம் படைத்தவையான அவை அனைத்தும் க்ஷரம் என்னும் உபாதியாகும்.

அந்த க்ஷரத்தைத் தன்னுடைய கல்பனையால் உண்டாக்கி வைத்துக்கொண்டு. அதையே தன் வாஸஸ்தானமாய்ப் பாவித்துக் கொண்டு, சுத்த சைதந்ய ஸ்வரூபனான ஆத்மாவே அதில் ப்ரவேசித்து, தன்னை அவ்வுருவுள்ளவனாய்ப் பாவித்துக் கொள்கிறான். ஓர் ஸிம்ஹம் தன் ப்ரதிபிம்பத்தை ஓர் கிணற்றிற் கண்டு, அதை மற்று மோர் ஸிம்ஹமாய்ப்

பாவித்து, அதின் மேல் கோபங்கொண்டு, அதைக் கொல்வதற்காக அக்கிணற்றுக்குள் வேகமாய்ப் பாய்ந்து அநர்த்தப்படுவதுபோலும், ஜலத்தில் ஆகாசம் இருந்து கொண்டே இருந்தாலும், அது போதாதென்று அதின் மேற்பக்கம் இருக்கும் ஆகாசமும் அதில் ப்ரதிபிம்பம் அடைவதுபோலும், இந்த அத்வைதாத்மாவான தன்னால் கல்பிக்கப்பட்ட தேஹங்களிற் ப்ரவேசித்து த்வைதபாவத்தை அடைகிறான். அர்ஜுநா, இவ்விதமாய் ஆத்மா உருவங்களைத் தன் கல்பனையால் ஏற்படுத்திக் கொண்டு, அவற்றைத் தன் வாஸஸ்தானங்களாய் எண்ணி, அவற்றிற் படுத்துக்கொண்டு, அவன் ஸ்வரூபவிஸ்ம்ருதி (ஸ்வரூபத்தை மறந்திருத்தல்) என்னும் தூக்கத்தை அடைகிறான். ஒருவன், தன் ஸ்வப்நத்தில், ஓர் படுக்கை யைக்கண்டு, அதிற்படுத்துத் தூங்கினாற்போலும், ஆத்மா, தன்னால் கல்பிக்கப்பட்ட வாஸஸ்தாநத்தில், தான் படுத்துத்தூங்க ஓர் படுக்கையையும் காண்கிறான். பின்பதிற் படுத்துக்கொண்டு, நித்ரைக்கு வசப்பட்டுப்போனவனாய், நான் ஸுகி, துக்கி யென்று குறட்டை விட்டுக்கொண்டு, அஹம்காரமமகாரங்களின் பெருக்கில் விழுந்து, இவன் என் தகப்பன், இவள் என் தாய், நான் வெளுத்தவன், நான் அங்கஹீநன், நான் அங்கங்கள் ஸம்பூர்ணமாய்ப் படைத்தவன்,

இவன் என் புத்ரன், இது என் பொக்கிஷம், இந்த ஸ்த்ரீ என்னுடைய மனைவி, என்றிப்படி யெல்லாம் பிதற்றிக்கொண்டு, ஸ்வப்நத்தில் சிக்கிப்போனவனாய், ஸம்ஸாரம் ஸ்வர்க்கம் என்னும் காட்டில் அலைந்து திரிகிறான். இப்படிப்பட்ட உபாதியோடு கூடின சைதந்யஸ்வரூபத்துக்கு, க்ஷரபுருஷன் என்று பெயர். கவனித்துக்கேள். எவனை க்ஷேத்ரஜ்ஞன் என்று முன் சொன்னேனோ, எவ்விதப்பட்ட சைதந்யத்தை ஜகத்தில் ஜீவன் என்று சொல்வார்களோ, எந்த சைதந்யம் தன் ஸ்வரூபவிஸ்ம்ருதியை அடைந்து, பூதங்களில் ப்ரவேசித்து, அந்தந்த பூதமாகவே தன்னைப் பாவித்துக் கொள்ளுமோ, அந்த ஆத்மஸ்வரூபத்தையே க்ஷரபுருஷன் என்று சொல்லவேண்டும். அந்த வஸ்துவின் ஸ்வரூபத்தைப் பார்க்குங்கால், ஸம்பூர்ணமான ஆத்மாவாயிருப்பதால், அவனைப் புருஷன் என்று சொல்ல வேண்டும். அன்றியும் தேஹம் என்னும் புரத்தில் படுத்து தூங்குகிறான் என்பதைக்கொண்டும், புருஷன் என்னும் பெயர் அவனுக்குப் பொருத்தமுள்ளதாகிறது.

அவன் தேஹம் ஆகிய உபாதியோடு தாதாத்ம்யம் (ஒன்றுபட்டிருக்கை) பாராட்டி நிற்பதால், உபாதியின் க்ஷரத்வம்

(நசித்துப் போகும் தன்மை) அவன்மேல் ஏற்றப்பட்டு, அவனுக்கு க்ஷரன் என்ற அவதூரு உண்மையான காரணமில்லாமலேயே ஏற்பட்டிருக்கிறது. அலைகள் புரண்டு கொண்டிருக்கும் நீரில் ப்ரதிபிம்பிக்கப்பட்ட சந்த்ரன் அசைந் தாடிக்கொண்டிருக்கிறவனாகவே தோன்றுவான். அன்றியும் அந்த நீர் வற்றிப்போய்விட்டால், சந்த்ரனுடைய ப்ரதிபிம்பம் இல்லாமற்போய், சந்த்ரனே நசித்துப் போனவனாக எண்ணப்படுவான். அப்படியே உபாதி நாசத்தால், உபாதி அடைந்தவன் காணப்படாது போகிறபடியால், சரீரம் என்னும் உபாதியோடு தாதாத்ம்யம் பாராட்டிநிற்கும் இப்புருஷன் மேல், சரீரத்தின் க்ஷணிகத்வம் ஏற்றப்பட்டு, இவன் க்ஷரன் என்று சொல்லப்படுகிறான். ஆகவே ஜீவதசை அடைந்த அனைத்தையும் க்ஷரபுருஷன் என்று சொல்ல வேண்டும்.

அக்ஷரபுருஷனுடைய லக்ஷணம் :

இனி அக்ஷர புருஷனுடைய லக்ஷணத்தை நிரூபிப்பேன், கேள். அக்ஷரன் என்கிறவனோ முற்றிலும் வேறுபட்டவன், ஹே அர்ஜுநா. பர்வதங்களைத்துக்கும் நடுநிலை பெற்று நிற்கும் மேருவைப்போல, இவன், க்ஷரபுருஷனுக்கும், கீழே மூன்றாவதானவன் என்று குறிப்பிடப்பட்டுள்ள உத்தம புருஷனுக்கும், மத்யஸ்தனா யிருக்கிறான். அந்த மேருபர்வதம் ஆனது பூலோகத்திலும், பாதாளத்திலும், ஸ்வர்க்கத்திலும் ஒரே மாதிரியாய் இருந்து கொண்டு, இம்மூன்றில் ஒன்றோடும் சேர்ந்ததாகாததுபோல, அக்ஷரம் என்ற உபாதியானது உத்தமமான ஆத்மஞாநத்திற் சேராததாயும், ஸம்ஸாரிகளிடத்திற் காணப்படும் த்வைதஞானரூபமான அஞ்ஞானத்திற் சேராததாயும் இருக்கிறது. இது, அத்வைதமாய் இருக்கும் ஆத்மஞானமாயிராமலும், அநேகத்வத்தைப் பாராட்டிக் கொண்டு த்வைதபாவ மடைந்திருக்கிற நிலையாய் இராமலும், ஓர்விதமான அறிவுமில்லாததாய் இருக்கும் முழு அஞ்ஞானமே யாகும். இந்த அக்ஷர உபாதியானது, தூளிமண்ணாயிருக்கும் நிலையும் முற்றிலும் நஷ்டமாய்ப்போய், வேறுவேறு ரூபங்கள் படைத்த மட்கலங்களும் ஆகாமல், மண்ணுண்டையாயிருக்கும் மத்யஸ்தமான நிலையை ஒத்திருக்கும் ஓர் நிலையை அடைந்ததாய் இருக்கிறது. ஸமுத்ரம் முற்றிலும் வற்றிப்போனபின், அலைகளாய் இராமலும், நீராய் இராமலும், இருக்கும் ஓர் நிலைபோன்றது இந்த அக்ஷர உபாதியின் உருவமற்ற நிலை, ஹே அர்ஜுநா. இந்த அக்ஷர நிலையானது,

ஜாக்ரத வஸ்தையும் முற்றிலும் நஷ்டமாய்ப்போய், ஸ்வப்நமும் ஏற்படாமல் இருக்கும், தூக்கத்தின் நிலையைப்போல் இருப்பதாக, நீ அறியவேண்டும். ஜகத் தென்னும் தோற்றம் முற்றிலும் நஷ்டமாய்ப் போயும், ஆத்மஞானம் இன்னும் உண்டாகாமலும், ஓர் விதமான அறிவும் அற்றதாயும் இருக்கும் கேவல அஞ்ஞானமே, அக்ஷரம் என்னும் உபாதியாகும்.

அமாவாஸ்யையில் ஸகல கலைகளும் நஷ்டமாய் போயிருக்கும் சந்த்ரனுடைய ரூபம் இருப்பது போலும், இந்த அக்ஷர உபாதியின் ரூபம் இருக்கிறது. பழம் நன்றாய்ப் பழுத்து உதிர்ந்து போனபின், செடியானது பீஜத்துக்குள் ப்ரவேசித்துக் கொள்ளுதல் போல், உபாதிகள் நடுவில் மறைந்துகிடக்கும் ஜீவனுடைய, உபாதிகள் அனைத்தும் நசித்துப் போனபின், அது எந்த ஸூக்ஷ்மமான ஸ்திதியை அடைந்து லயப்பட்டுப்போகிறதோ, அந்த ஸ்திதியை அவ்யக்தம் என்று சொல்வார்கள். அந்த அவ்யக்தநிலை கனமான அஞ்ஞானத்தோடு கூடிய ஸுஷுப்தியாய் இருந்துகொண்டு, ஜாக்ரத ஸ்வப்நாவஸ்தாரூபமான ஜகத்வ்யாபாரத்துக்குக் காரணமாய் இருப்பதால், அதை பீஜபாவம் என்றும், அப்படி ஸுஷுப்தியாக இராது, அதிலிருந்துண்டாயிருக்கும் ஜாக்ரத ஸுவப்நாவஸ்தைகள் இரண்டையும் பலபாவம் என்றும், வேதாந்திகள் கூறுவார்கள்.

இந்த பீஜபாவமே அக்ஷரபுருஷனுடைய நிலையாகும். இந்நிலையினின்று அந்யதாஞானம் (வஸ்துவின் யதார்த்த ஞானத்துக்கு எதிர் நிலையான விபரீத ஞானம்) உண்டாய் வெளிப்பரவி ஜாக்ரத ஸ்வப்நாவஸ்தைகள் உண்டாய், அநேகவிதப்பட்ட ஜகத்து என்னும் காட்டில் அலைந்து திரிதல் ஜீவனுக்கு ஏற்படுகிறது. வஸ்துவின் எந்த நிலையானது ஸ்ருஷ்டிகாலத்தில் ஜீவனை உத்பத்திசெய்துவைத்து, ஜகத்தை வெளிப்பட்டு நிற்கச்செய்து, பின் ப்ரளயகாலத்தில் இவ்விரண்டின் பேதத்தையும் போக்கி, இவற்றை ஒன்றுபடுத்தி தன்னிடம் லயப்படுத்திக்கொள்கிறதோ, அதுவே அக்ஷரபுருஷனுடைய நிலையாகும். மற்றவனாகிய க்ஷரபுருஷன் தேஹத்தோடு, கூடினவனாய், எந்த ஜாக்ரதஸ்வப்நாவஸ்தைகளை அடைந்து விளையாடிக் கொண்டிருகிறானோ, அவ்விரண்டு அவஸ்தைகளையும் இந்த அக்ஷர புருஷனே பெற்றுவைக்கிறான்.

இந்த அக்ஷர நிலையானது கனமான அஞ்ஞானம் படைத்த ஸுஷுப்திரூபமாய் இருக்கிறது. இதைப் பூர்ணமான ஸ்திதி என்று சொல்வதற்கு ப்ரஹ்மானுபவம் இல்லாத தொன்றே குறைவாயிருக்கிறது. இந்நிலையினின்று மேல் உண்டாகப்

போவதாயிருக்கும் ஜாக்ரதஸ்வப்நாவஸ்தைகள் உண்மையாகவே அற்றுப்போகுமேயாகில், இந்நிலையே உண்மையான ப்ரஹ்மபாவம் என்று சொல்வதற்கு யாதோர் தடையுமிராது. ஆனால் இந்த அக்ஷரபுருஷன் என்னும் ஆகாசத்தில், அகஸ்மாத்தாய் ப்ரக்ருதி புருஷன் என்னும் மேகங்கள் உண்டாகின்றன. க்ஷேத்ரக்ஷேத்ரஞ்ஞர்கள் என்னுமவை, இந்நிலையாகிய ஸுஷுப்தியில் காணப்படும் ஸ்வப்நங்களாக ஏற்படுகின்றன. இவ்விஷயத்தில் இவ்வளவு சொன்னதுபோதும். இவ்வத்யாயத்தின் துவக்கத்தில், ஸம்ஸாரத்தை கீழ்நோக்கிய கிளைகளுள்ள ஓர் மரமாய் வர்ணித்த இடத்தில், மேல் இருப்பதாக சொல்லப்பட்ட வேர் எதுவோ, அதுவே இந்த அக்ஷரபுருஷன் ஆகும்.

இவன் பூர்ணனாய் இருந்துகொண்டு நித்ரை செய்துகொண்டிருக்கிறான் என்னும காரணத்தைக்கொண்டும், மாயை என்பதை வாஸஸ்தானமாய்ப் பெற்று அதில் படுத்துத் தூங்குகிறான் என்னும் காரணத்தைக் கொண்டும், இவனைப் புருஷன் என்று சொல்ல வேண்டி இருக்கிறது. அன்றியும், விகாரம் வந்து மூடிக்கொண்டு விபரீதஞானமுண்டாய், ஜகத்தின் நாநாத்வம் தோன்றுவது என்னும் ஸ்வப்நம் அற்ற ஆழ்ந்த நித்ரையே, இவனுடைய ரூபம் ஆகையால், இவன் தனக்குத் தானேயாவது, ஆத்மஸ்வரூபம் தவிர மற்றெதினாலேயாவது நாசம் அடையாதிருப்பதால், இவனை வேதாந்த சாஸ்த்ர ஸித்தாந்தத்தில் மிக்கத் தேர்ச்சி பெற்றவர்கள் அக்ஷரன் என்று சொல்கிறார்கள். ஜீவன் என்னும் கார்யத்துக்காரணமாய், மாயையின் ஸம்பந்தத்தையே உபாதியாய் அடைந்திருக்கும் சைதந்யமே, அக்ஷரபுருஷன் என்று தெரிந்து கொள்.

उत्तमः पुरुषस्त्वन्यः परमात्मेत्युदाहृतः ।
यो लोकत्रयमाविश्य बिभर्त्यव्यय ईश्वरः ॥१७॥

உத்தமः புருஷஸ் த்வன்யः பரமாத்மேத்யுதா ஹ்ருதः ।
யோ லோகத்ரய மாவிஶ்ய பிபர்த் யவ்யய ஈஶ்வரः ॥ 17

உத்தம புருஷன் லக்ஷணம் :

இவ்வுலகில் அந்யதா ஞானத்தால் ஏற்படும் ஜாக்ரத ஸ்வப்நாவஸ்தைகள் இரண்டும் தடித்ததான அஞ்ஞானமே உருவாய்க் கொண்ட அக்ஷரபுருஷதத்வம் ஞானத்தால் நசித்துபோய், அந்த ஞானமும் கீர்த்திமுக கீர்த்திமுகம் என்பது ஓர் தேவதையின்

முன்னால் செய்து வைக்கப்பட்டிருக்கும் அந்த தேவதையால் ஸம்ஹரிக்கப் பட்டுள்ள அஸுரனுடைய பிம்பம். அந்த தேவதையின் தர்சனத்துக்கு முன் அதின் தர்சனம் ஆக வேண்டியது அவச்யம். ஆனால் அந்த தேவதையை தர்சிக்கும் போது, அந்த கீர்த்தி முகம் கண்முன் தோன்றாமற் போகிறது) பதவியை அடைந்தபின், அதாவது, நெருப்பு, கட்டையை நாசம் செய்துவிட்டு, பின்பு தானும் நாசம் அடைவதுபோல், ஆத்ம ஸ்வரூப ப்ரகாசமாகிய வ்ருத்தி ஞானம், அஞ்ஞானத்தை நாசம் செய்து, ஆத்ம ஸ்வரூபப்ராப்தியைச் செய்துகொடுத்து, பின்பு தானும் நஷ்டமாய் போனபின், ஓர் விஷயத்தை அறிதல் என்பதில்லாமலேயே, கேவல அறிவாய் மிகுந்து நிற்கும் வஸ்துஸ்வரூபம் எதுவோ, கீழே க்ஷராக்ஷர புருஷர்களைக் காட்டிலும் வேறான மூன்றாவது புருஷன் என்று நிஷ்கர்ஷிக்கப்பட்டுள்ளது எதுவோ, அதுவே உத்தம புருஷன் ஆகும்.

ஜாக்ரத வஸ்தை என்பது ஸ்வப்நாவஸ்தையையும் ஸுஷுப்தி யவஸ்தையையும் காட்டிலும் மிக்க வேறுபட்டதாய், மிக்க வேறுபாடுள்ள ஞாநத்தோடு கூடியதாய் இருப்பதுபோலும், ஸூர்யமண்டலம் என்பது ஸூர்யகிரணங்களையும் அவற்றின் கார்யமாகிய கான நீர்த்தோற்றத்தையும் காட்டிலும் எல்லையற்றபடி வேறுபாடுடையதாய் இருப்பதுபோலும், உத்தம புருஷன் முன் சொன்ன மற்றிருவர்களைக் காட்டிலும் முற்றிலும் வேறுபட்டவன். அக்நி கட்டையிலேயே இருப்புப் பெற்றதாயினும், கட்டையைக் காட்டிலும் முற்றிலும் வேறுபட்டதாயிருப்பதுபோல, க்ஷராக்ஷர புருஷர்களைக் காட்டிலும் உத்தமபுருஷன் என்பவன் முற்றிலும் வேறுபட்டவன். ப்ரளகாலத்தின் ஏகார்ணவத்தின் பூர்ண ப்ரவாஹமானது கரையற்றதாய் எங்கும் பரவி, நதிநதங்கள் என்னும் ஜலவ்யக்திகளைக் கண்டுபிடித்துக்கொள்ளாதபடி செய்துவைப்பது போலும், ப்ரளயகாலத்து மஹாதேஜஸ்ஸானது இராத்ரிப்பகல் வித்யாஸம் அற்றுப்போகும்படி செய்துவைத்தல்போலும், ஸ்வப்நம் என்றும், ஸுஷுப்தி என்றும், ஜாக்ரதை என்றும், சொல்லப்பட்ட அவஸ்தாபேதங்களின் பேச்சே, அற்றுப்போனதான ஓர் ஸ்திதி, இந்தப் புருஷன் உதயமான பின், ஏற்பட்டுவிடுகிறது.

இவனுக்குப் பரமாத்மா என்னும் பெயர் ஸித்திக்கும் வகை :

பின்பு ஒன்றுபட்டிருக்கை என்றாவது வேறுபட்டிருக்கை யென்றாவது, இருக்கை யென்றாவது இராமை என்றாவது,

அந்நிலையை .அறிந்துகொள்ள முடிவதில்லை. அநுபவமே திடுக்கிட்டுப்போய், ஸ்வரூபத்தில் முழுகிப்போகிறது. இவ்வித நிலையை அடைந்ததாய் யாதொன்றிருக்குமோ, அதுவே முன் சொல்லப்பட்ட உத்தமபுருஷன் ஆகும். அதற்கே பரமாத்மா என்னும் பெயருமிடப்படுகிறது. இந்த பெயர்கூட அதற்குப் பொருந்தாததே. இப்படிப் பெயரிட்டு அதைப் பேசுவது, கரையில் இருந்துகொண்டிருப்பவன் முழுகிப் போகிறவனுடைய ஸ்திதியை வர்ணிப்பதுபோல், அந்த ஸ்திதியை அடையாமல் ஜீவஸ்திதியில் இருந்துக்கொண்டு பேசுவதே யாகும். முழுகிப்போகிறவனோடு முழுகிப்போனவன், முழுகிப்போகிற தென்பது எப்படிப்பட்ட ஸ்திதி யென்று சொல்லப்போகிறானா? அப்படியே வேதமானது தத்வவிசாரம் என்னும் கரையில் நின்றுகொண்டு, பரவஸ்து இன்னது, அவரவஸ்து (தாழ்வடைந்த வஸ்து) இன்னது, என்று பேசுகிறதே தவிர, பரவஸ்துவாய்ப்போய், அந்நிலையில் இருந்துகொண்டு பேசுகிற தல்ல; ஆகையால் அது, அவர வஸ்துக்களாகிய க்ஷராக்ஷர புருஷர்களைப் பார்த்துவிட்டு, இவ்வஸ்துவைப் பரமாத்மஸ்வரூபம் என்று சொல்கிறது.

அர்ஜுநா இவ்விதம் பரமாத்மா வென்னும் பெயரைக்கொண்டு, புருஷோத்தமன் இன்னானென்று தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படிச் செய்யாமல், வஸ்துஸ்வரூபத்தை அடைந்து, அதில் நின்றுகொண்டிருந்தால், அதைப் பேசாமலே பேசவேண்டும்; ஒன்றையும் அறியாமல் இருப்பதே அதை அறிவதாகும்; ஓர் வஸ்துவாயும் இராமையே அதுவாய் இருப்பதாகும். இந்நிலையில், ப்ரஹ்மமே நான் என்ற ஞாநமும் அஸ்தமித்துப் போய், சொல்கிறவனே சொல்லுக்கு விஷயமாய் அமைந்துபோய், த்ருச்யத்தின் (வஸ்துக்கள் பார்க்கப்படுகின்றன, நான் அவற்றைப் பார்க்கிறேன் என்ற இவ்விருவகைப்பட்ட ஞாநமும்) இருப்போடு த்ரஷ்ட்ருத்வமும் நஷ்டமாய்ப் போய்விடுகிறது. பிம்பத்துக்கும் ப்ரதிபிம்பத்துக்கும் நடுவில் உள்ள ப்ரபை, கண்ணுக்குத் தெரியாதுபோனாலும், அது இல்லை யென்று சொல்லமுடியாதது போலும், மூக்குக்கும் பூவுக்கும் நடுவில் உள்ள வாஸநை, கண்ணுக்குத் தெரியாது போனாலும், அது இல்லை யென்று சொல்லமுடியாததுபோலும், த்ரஷ்ட்ரு த்ருச்ய ஞாநம் அற்றுப்போய் இருக்கும் இந்த பரமாத்மபாவஸ்திதியில், ஒன்று மில்லை என்று சொல்லமுடிவதில்லை. ஆயினும் இன்ன வஸ்து இருக்கிறதென்று சொல்லவும் முடிவதில்லை. ஆகையால் அவ்வஸ்துவாய்ப் போய்விடும் அநுபவநிலையே, அவ்வஸ்துவைத் தெரிந்துக் கொள்ளும் வழியாகிறது.

இதின் ஈச்வரத்வத்தின் லக்ஷணம் :

ப்ரகாசிக்கச் செய்யப்படும் வஸ்துக்களின் சேர்க்கையற்ற ப்ரகாசமாயும், நியமிக்கப்படும் வஸ்துக்களின் சேர்க்கையற்ற நியாமகனாயும், தானே இருப்பிடமாயும் தானே அதில் இருக்கும் வஸ்துவாயும், அந்த பரமாத்ம வஸ்து இருக்கிறது. நாதத்துக்கு நாதத்தன்மை கொடுக்கும் நாதமாயும், ருசிக்கு ருசிபார்த்தறிந்துகொள்ளும் சக்தியைக் கொடுக்கிற ருசியாயும், தன் ஸ்வரூப பூதமான ஆநந்தத்தைக் கொண்டே ஆநந்தப்பட்டுக்கொண் டிருக்கிறதாயும், பூர்ணதை என்பதின் முடிவான எல்லையாயும், விச்ராந்தி (இளைப்பாறுதல்) என்பதே இளைப்பாறும் ஸ்தானமாயும், ஸுகத்துக்கே ஸுகம் கொடுக்கும் வஸ்துவென்று சொல்லும்படியாயும், தேஜஸ்ஸுக்கே தேஜஸ்ஸு கொடுக்கும் வஸ்துவென்று சொல்லும்படியாயும், சூந்யமே மஹா சூந்யத்தில் முழுகிப் போய்விட்டதென்று சொல்லும்படியாயும், ஜகத்தாக விஸ்தார மடைந்தபின்னும் விகாரமடையாமல் இருக்கிறதாயும், ஸர்வத்தையும் விழுங்கிவிடும் மருத்யுவையும் விழுங்கிவிட்டுப் பூர்ணமானதாயும், மிக்கப் பருத்திருக்கும் வஸ்துக்களைக் காட்டிலும் மிக்கப் பருத்ததாயும், இந்த ஸர்வோத்தம புருஷதத்வம் இருக்கிறது.

இது மூவுலகிலும் புகுந்திருந்து அதைத் தாங்கிக் கொண்டிருப்பதின் வகை:

முத்துச்சிப்பியானது வெள்ளியாக ஆய்விடாமலே, அதின் உண்மையை அறியாதவனுக்கு வெள்ளி யென்னும் தோற்றத்தைக் காட்டிவைப்பதுபோலும், அன்றியும் தங்கமானது அநேகவிதமான நகைக ளானபின், உண்மையில் இருந்துகொண்டே நாச மடைந்துவிட்டதுபோல் தோற்றுவதுபோலும், உலகமாய் ஆகாமலே, உலகம் என்னும் தோற்றத்தை இந்த புருஷோத்தமன் தரித்துக்கொள்கிறான். இது நிற்கட்டும். ஜலமும் அலைகளும் வேறுபட்ட வஸ்துக்களாக இராததுபோலும், இவனே ஜகத்ரூபமாய்த் தோற்றிக்கொண்டு, தன்னுடைய உண்மையான இருப்பால் ஜகத்து இருக்கிற தென்னும், ஓர்புத்தியை ப்ரகாசிக்கச் செய்கிறான். நீரில் ப்ரதிபிம்பித்துத் தோற்றுவது சந்த்ரனது ரூபமேபோல், ஜகத்தாய் விரிவடைந்து தோற்றுவதும், லயமடைந்து அவ்யக்தமாய்க் குறுகிப்போவதும், இவனுடைய ரூபங்களே ஆகும். ஹே வீரர்களுக்குள் உத்தமனானவனே, ராத்ரி உண்டாவதாலும், பகல் உண்டாவதாலும், ஸூர்யன் இருவகைப்படாதிருத்தல்

போலும், விச்வமாய்த் தோன்றும்போது இவன் வேறோர் வஸ்துவாய் ஆவது மில்லை, விச்வம் மறைந்துபோகும் போது இவன் எங்கேயும் போய்விடுவது மில்லை. அப்படியே எக்காலத்திலும், எவ்விடத்திலும், எவ்விதமாயும் நாசமடையாதவனாய் இவனிருந்துகொண்டு, இவனுக்கு ஸமானமானவ னிவனேயாய் இருக்கிறான்.

यस्मात्क्षरमतीतोऽहमक्षरादपि चोत्तमः ।
अतोऽस्मि लोके वेदेच प्रथितः पुरुषोत्तमः ।।१८।।

யஸ்மாத் க்ஷர மதீதோ ஹமக்ஷராதபி சோத்தம:।
அதோ ஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம: ॥ 18

புருஷோத்தமன் என்கிற நாமம் ஏற்படுவதற்குக் காரணம்:

இப்படிப்பட்ட நானே என்னை ப்ரகாசிக்கச் செய்துகொண்டு, (வளர்த்திச் சொல்வதென்?) இரண்டாவது என்பது அற்றவனாயிருந்துகொண்டு, நிருபாதிகனாய், க்ஷராக்ஷர புருஷர்களைக்காட்டிலும் உத்தமனாய், தனித்திருக்கிறேன். ஆகையால் வேதத்திலும் உலகத்திலும், நான் புருஷோத்தமன் என்று சொல்லப்படுகிறேன்.

यो मामेवमसम्मूढो जानाति पुरुषोत्तमम् ।
स सर्वविद्भजति मां सर्वभावेन भारत ।।१९।।

யோ மாமேவ மஸம்மூடோ ஜாநாதி புருஷோத்தமம்।
ஸ ஸர்வ வித்பஜதி மாம் ஸர்வபாவேன பாரத ॥ 19

என் பஜனையைச் செய்வதற்கு அதிகாரம் பெற்றவன் எவன்:

இந்த விஷயம் இத்துடன் நிற்கட்டும். எவனுக்கு ஞான ஸூர்யன் உதயமானானோ, அவனே இவ்விதப்பட்ட என்னை அறிவான். ஒருவன் விழித்துக்கொண்டபின், ஸ்வப்நம் இல்லாமற் போகிறதுபோலும், என்னுடைய ஸ்வரூபஞானம் உண்டானபின், அதுவரைக்கும் அவனுக்குத் தோற்றிக்கொண்டிருந்த மூவுலகமும் உண்மையற்றதாய்ப் போகிறது. மாலை கையில் ஏறின பிறகு, முன் அதின் விஷயமாய் ஏற்பட்டிருந்த ஸர்ப்பபுத்தியால் உண்டான பயம்

முற்றிலும் இல்லாது போவது போலும், என்னுடைய ஸ்வரூபஞானம் ஏற்பட்டபின் உண்மையற்ற ஜகத்தின் தோற்றம் இல்லாமற்போகிறது. எவன் நகைகளைத் தங்கமாய் அறிவானோ, அவன் நகையென்பது உண்மையற்ற தோற்றம் என்று சொல்வான். அப்படியே எவன் என்னை அறிந்து, பேத ஞானத்தை ஒழித்துக் கொண்டானோ, அவன் ஸச்சிதானந்தரூபமான நானே எங்கும் வ்யாபித்திருப்பதாக அறிந்து, தான் உள்பட ஸர்வத்தின் விஷயத்திலும் பேதபாவம் அற்றுப்போனவன் ஆய்விடுகிறான். அவனே ஸர்வத்தையும் அறிந்தவன் ஆகிறான். அவன் விஷயத்தில் இப்படிச் சொல்வதுகூட, த்வைதம் என்பது முற்றிலும் அற்றுப்போயிருக்கும், அவனுக்கு ஓர் இகழ்ச்சியே ஆகும். ஆகாசத்தை ஆலிங்கனம் செய்துகொள்ளத் தக்கது ஆகாசமே போலும், அவனே என் பஜனையைச் செய்ய அதிகாரம் பெற்றவன்.

க்ஷீரஸாகரத்தை வீட்டுக் கழைத்து விருந்து பண்ணிவைப்பது, க்ஷீரஸாகரத்தாலேயே செய்யத்தக்கது போலும், அம்ருதத்தோடு கலந்து ஒன்றுபட்டுப்போக அம்ருதமே வேண்டியது போலும், பதினைந்தரை மாற்றுள்ள தங்கத்தோடு கலந்து அத்துடன் ஒன்றுபட்டுப் போவது, பதினைந்தரை மாற்றுள்ள தங்கத்துக்கே ஸாத்யமாய் இருப்பதுபோலும், நானாகவே ஆய்ப்போனவன் தான், என் பஜனையைச் செய்ய ஸாமர்த்யம் உள்ளவன் ஆகிறான். கங்கையானது ஸமுத்ரம் ஆகாமல் தனித்து வேறுபட்டு நிற்குமாகில், அது ஸமுத்ரத்தோடு எப்படி கலக்கமுடியும்? அப்படியே நான் ஆகாதவரைக்கும் என்னுடைய பஜனையை என்னமாய்ச் செய்யமுடியும்? ஆகையால் அலைகளானவை ஸமுத்ரத்தைக்காட்டிலும் வேறுபடாதிருப்பது போலும், என்னை பஜிக்கிறவன் என்னைக்காட்டிலும் வேறுபட்டவன் அல்ல. ஸூர்யனும் அவனுடைய காந்தியும் ஒன்றாகவே இருப்பது போலும், எவன் என்னுடன் ஐக்யத்தை ப்ரேமையோடு பாராட்டி நிற்பானோ, அவனுக்கே என்னை பஜிப்பது ஸாத்யமாகிறது.

इति गुह्यतमं शास्त्रमिदमुक्तं मयानघ ।
एतद्बुद्ध्वा बुद्धिमान्स्यात्कृतकृत्यश्च भारत ॥२०॥

இதி குஹ்ய தமம் ஶாஸ்த்ர மித முக்தம் மயாঽநக: ।
ஏதத் புத்த்வா புத்திமான் ஸ்யாத் க்ருத க்ருத்யஶ்ச பாரத ॥ 20

இவ்வத்யாயத்தின் பெருமை:

உபநிஷத்தின் வாக்யங்களாகிய விகஸித்த தாமரைப்பூவின் தளங்களினின்று வெளிப்படும் ஸுகந்தம் என்று சொல்லத்தக்கதும், ஸகலசாஸ்த்ரங்களையும் பரிசோதித்துப் பார்த்தே அறிந்துகொள்ளத்தக்கதுமான பரமாத்ம விஷயஞானம், இந்த அத்யாயத்தில் சொல்லப்பட்டிருப்பதினின்று வெளிப்பட்டு நிற்கிறது. வேதத்தின் ஸாரமான இந்த கீதை என்னும் வெண்ணெயை, ஸ்ரீவ்யாஸர் தன் ப்ரஜ்ஞை என்னும் கையால் கடைந்து திரட்டி எடுத்து ஸித்தமாய் வைத்திருந்தார், அதை நான் உனக்கு எடுத்துக் கொடுத்தேன்.

இந்த கீதை என்பவள், ஞானமே ஜலமாய் உடைத்தாயிருக்கும் கங்காநதி என்றும், ஆநந்தம் என்னும் சந்த்ரனுடைய பதினேழாவது கலை யென்றும், தத்வவிசாரம் என்னும் பாற்கடனின்று உண்டான புதிதான (மற்றோர்) லக்ஷ்மீ என்றும், சொல்லத் தக்கவளாய் இருக்கிறாள். இந்த கீதை என்பவள் லக்ஷ்மீயாய் இருப்பதால், தன்னுடைய அக்ஷரங்கள் என்னும் பாதங்களாலும், அர்த்தம் என்னும் உயிர் நிலையாலும் என்னைத்தவிர வேறொன்றையும் நோக்காதவளாய், என்னையே வந்தடைகிறாள். அவள் க்ஷராக்ஷரங்களுக்குமுன் வந்து நின்று, அவர்களுக்கு புருஷத்வத்தை இல்லாமல் அடித்துவிட்டு, புருஷோத்தமனாகிய எனக்கு மாலையிட்டு, தன்னுடைய ஸர்வஸ்வத்தையும் எனக்கு அர்ப்பணம் செய்துவிட்டாள்.

இந்த கீதையின் குஹ்யதமசாஸ்த்ரத்வம்:

இப்போது நான் உனக்கு சொல்லிவைத்த இந்த கீதை, என்ற ஸ்த்ரீ என்னையே ஆத்மாவாக உடைத்தானவளான பதிவ்ரதையா யிருக்கிறாள். உண்மையைச் சொல்லப்போனால், இதைச் சொற்களால் அமைந்த சாஸ்திரம் என்று சொல்லத்தகாது. இதை, ஸம்ஸாரத்தை வென்று நாசம் செய்வதற்கு ஏற்படுத்திவைக்கப்பட்ட ஓர் ஸஸ்த்ரமென்றும், இதின் அக்ஷரங்களை, ஆத்மஸ்வரூபத்தை ஒருவராலும் அணுகமுடியாத தன்னுடைய பதவியினின்று இறங்கிவரச் செய்யும் மந்த்ரம் என்றும், சொல்லவேண்டும். நான் இந்த கீதையை உனக்குத் தெரியப்படுத்தினதால், நான் மிக்க ரஹஸ்யமாய் எனக்குள் பூட்டிவைத்துக்கொண்டிருந்த என்னுடைய தனம் முழுவதும் வெளிப்படுத்தி வைக்கப்பட்ட தாயிற்று.

சைதந்ய ரூபியான நானாகிய பரமசிமன் தலையில் மறைந்து கிடக்கும் சுமை என்று சொல்லத்தக்க ஞாநரூப கங்கையை வெளிப்படுத்திவைக்க ஏற்பட்ட மிக்க ச்ரத்தையோடு கூடிய கௌதமமுனியாய் (கௌதம முனி தபஸ்ஸு செய்து பரமசிமன் தலையில் குடிகொண்டிருந்த கங்கையை, கோதாவரி நதியாக வெளிப்படுத்தி வைத்தார்) நீ ஆனாய். ஒருவன் தன்னுடைய அழகு முழுவதையும் பார்த்தநுபவித்துக் கொள்வதற்காக, அவன் ஓர் கண்ணாடியைத் தன் முன் வைத்துக்கொள்வதுபோலும், ஹே தனஞ்ஜயா, உனக்கு என்னாற் சொல்லப்பட்டதான கீதையானது, நான் என் ஆத்மஸ்வரூபத்தைப் பார்த்தறிந்துகொள்ளத் தக்கக் கண்ணாடியாய் அமைந்து நிற்கிறது.

ஸமுத்ரமானது சந்த்ரனோடு கூடிய நக்ஷத்ரங்கள் ப்ரகாசித்துக்கொண்டிருக்கும் ஆகாசத்தை ப்ரதிபிம்ப மாய்ச்செய்து, தன் நடுவில் கொண்டுவந்து வைத்துக்கொள்கிறதுபோலும், கீதையோடுகூட என்னையும் சேர்த்து உன் அந்தக் கரணத்தில் இட்டுவைத்துக் கொண்டுவிட்டாய், இப்படி கீதையோடு நானும் வஸிக்கும் வாஸஸ்தானமாய், நீ ஆனதற்குக் காரணம் என்ன வெனில், ஹே போர்வீரனே, நீ மும்மலங்களையும் [(மும்மலங்களாவன ஆணவம் (அஹம்காரம்), காமியம் (விஷயங்களில் ஆசைபாராட்டல்), மாயை (ஆத்மஞானத்துக்கு எதிரிடையான ஜகத் விஷயமான விபரீதஞானம்); அல்லது, அவை காயிகம் (பிறருக்குத் தீங்கு செய்தல் முதலான பாபத்தொழில்கள் செய்கை), வாசிகம் (அஸத்யமும் லௌகிகவிஷயங்களும் பேசல்) மானஸிகம் (ஆத்மஸ்வரூப விஷயமானதவற்றை நினைக்காது ஸாம்ஸாரிக விஷயங்களை நினைத்திருத்தல்), என்றும், சொல்வார்கள்.)] ஒழித்துவிட்டவனாயிருப்பதே. இதை கீதை என்று நான் சொல்லலாமா? என்னுடைய ஞாநமே ஓர் கொடியாய்ப் பரவியிருக்கிறதென்று சொல்லவேண்டும். இதை அறிந்தவன் ஸர்வவிதமான மோஹத்தினின்றும் விடுபட்டவ னாகிறான். அம்ருதத்தால் ஏற்பட்ட ஓர் நதியின் ஜலத்தைப் பானம் செய்தால், ஸகல வியாதிகளின் நிவ்ருத்தியும் ஏற்படுவதோடுகூட, ஸர்வோத்தமமான அமரத்வமும் (சாவற்றிருத்தல்) கிடைத்துப்போகிற தல்லவா?

ஆகவே இந்த கீதையை அறிந்துகொண்டவனுக்கு ஸகல விதமான மோஹமும் நசித்துப்போவதில் என்ன ஆச்சர்ய மிருக்கிறது? அதுமட்டுமல்லாமல் ஆத்மஸ்வரூபத்தின்

ஞானமும் அல்லவா, அவனுக்குக் கிடைத்துப்போகிறது? இந்த ஆத்மஸ்வரூபஞானம் உண்டானபின் கர்மம் அதில் ஆத்ம ஞானத்தை உண்டாக்கி வைப்பதே ஸ்வதர்மாநுஷ்டானத்தின் பலனாகையால், கார்யத்தில் காரணம் வாழ்வடைந் திருப்பதுபோல், கர்மம் வியர்த்தமாய்ப் போகாமல், தான் உண்டுபண்ணி வைத்த ஆத்மஞானத்தில் தான் வாழ்வுபெற்றுப் போனதாயும், அதற்குமேல் தான் கர்மரூபமாய் இருந்து யாதொரு வேலையும் செய்யவேண்டிய அவசியமில்லை என்றும், தெரிந்துகொண்டு, அது ஆத்மஞானம் உண்டானவனிடத்தில் காணப்படாமல் மறைந்து போகிறது,

கர்மயோகம் ஆத்மஞானத்தை உண்டுபண்ணிவைத்து நைஷ்கர்ம்யஸித்தியில் முடிவுபெறுகிறது. வாழ்வு பெற்றுப்போனதாயும், பின்பு தன் கடன் தீர்ந்துபோய் விட்டதாயும் தெரிந்துகொண்டு மறைந்துபோய் விடுகிறது. மறைந்துபோன வஸ்துவைக் கண்டு பிடித்துக்கொண்ட உடனே, அதைத் தேடுதல் விட்டுப் போவதுபோலும், ஹே வீரவ்ருத்தியோடு கூடினவனே, ஞானமே கர்மம் என்னும் தேவாலயத்தின் கலசம் ஆய்விடுகிறது. ஆகையால் ஞாநம் அடைந்த புருஷனுக்கு மேற்செய்யவேண்டியதான ஓர் கர்மமும் இல்லாமற்போகிறது. இப்படி ஸ்ரீக்ருஷ்ணன் சொல்லி முடித்தார்.

உபஸம்ஹாரம்:

ஸ்ரீக்ருஷ்ணன் முகத்தினின்று புறப்பட்ட சொற்கள் என்ற அம்ருதம் அர்ஜுநன் உட்புறத்தை நிரப்பிவிட்டு, பின்பு வழியத் தொடங்கி, வ்யாஸருடைய க்ருபையால் ஸஞ்சயனுக்குக் கிடைத்து அவன் அதை த்ருதராஷ்டிர ராஜன் பாநம் செய்யும்படி கொடுத்தான். ஆனால் அவன் ஆயுஸ்ஸுடன் இருந்தவரைக்கும், அதை ஓர் பெரிய விஷயமாய் எண்ணவில்லை. அவன் இந்த கீதையைக்கேட்ட போது, அநதிகாரியாய்த் தோற்றியபோதிலும், ஆயுஸ்ஸு முடியும் காலத்தில் ப்ரஹ்மஞானம் என்னும் ப்ரகாசம் அவனிடத்தில் உத்தம ரீதியாய் ஏற்பட்டது. த்ராக்ஷக்கொடியின் வேரில் பாலைப் பாய்ச்சும்போது, அந்தப் பால் வீணாய்ப்போனதாக தோற்றினபோதிலும், அதே பழங்கள் பழுக்கத்தொடங்கினபின், அப்படி பால் பாய்ச்சினது இரட்டிப்பு மடங்காய்ப் பலன்கொடுத்தாகத் தெரியவரும்.

அப்படியே ஸ்ரீஹரியின் முகத்தினின்று வெளிப்பட்ட வார்த்தைகளை, ஸஞ்ஜயன் மிக்க ஆதரவுடன் த்ருதராஷ்டிரனுக்குச் சொல்ல, அந்தக் குருடனும் அவற்றைக் கேட்டு, கொஞ்சகாலம் ஆனபின், மிக்க ஸுக மடைந்தான். அவ்விஷயத்தையே நான் எப்படி கோணல்மாணலாய் அறிந்தேனோ, அவ்விதமாகவே உங்களுக்கு மஹாராஷ்டிர சொற்களைக்கொண்டு தெரியப்படுத்திவைத்தேன். சாமத்திச்செடியின் உருவத்தை அரஸிகன் பார்த்தால், அதில் ஓர் விசேஷமும் இருப்பதாக அறியான். ஆனால் அதின் பெருமை, அதின் பூவின் ஸுகந்தத்தை க்ரஹித்துக்கொள்ளும் தேனீக்குத் தெரியவரும். ஆகையால் நான் சொன்ன வார்த்தைகளினின்று கிடைக்கக்கூடியதான ஸித்தாந்தங்களை, ஹே ச்ரோதாக்களே, நீங்கள் க்ரஹித்துக் கொள்ளவேண்டும். அதில் இருக்கும் பிழைகளை ஒதுக்கி வைத்துவிட வேண்டும்; ஏனென்றால் அறிவில்லாத பாலகனுக்கு, தப்பிதங்கள் அநுஷ்டிப்பதே இயற்கை அல்லவா?

அப்படி அறிவின்மையால் அவனிடத்தில் பிழைகள் ஏற்படும்போது, அவன் தாயும் தகப்பனும் அவற்றைப் பார்த்து, அளவற்ற ஸந்தோஷமடைந்து, அவனை வியந்துகொள்வார்கள். அப்படியே ஸாதுக்களாகிய நீங்கள் என்னுடைய தாய்மார்கள் ஆனதால், உங்கள் முன்னால் கீதார்த்தம் சொல்கிறதென்று பெயர்வைத்து, நான் செல்லம் கொண்டாடுகிறேன் என்று, நீங்கள் என்னை ஆதரித்தல் வேண்டும். இனி விச்வ மனைத்துக்கும் ஆத்மாவாய் விளங்கும் என்னுடைய ஸ்வாமியாகிய நிவ்ருத்திராஜன், கீதார்த்தம் சொல்லல் என்னும் இந்த என்னுடைய சப்தரூபமான பூஜையை அங்கீகரித்துக் கொள்வாராக.

பதினைந்தாவது அத்யாயம் முற்றிற்று.

அத்யாயம் - 16

குருவந்தனம் :

விச்வம் என்னும் தோற்றத்தை மறைந்து போகச்செய்து கொண்டு, அத்வைத ஸ்திதி யென்னும் தாமரைப் பூவை விகஸிக்கச்செய்து கொண்டு, புதிதான ஓர் ஸூர்யன் உதயமானான். அவனுக்கு நமஸ்காரம் செய்கிறேன், அவன் அவித்யை என்னும் ராத்ரியின்மேல் கோபங் கொண்டு, ஞாநாஞ்ஞான ரூபமாகிய சந்த்ரிகையை நாசம செய்துவிட்டு, ஞானிகளுக்குத் தங்களுடைய ஆத்மவிஷயமான ஞானம் அதிநிர்மலமாய் ப்ரகாசிக்கும்படி செய்துவைத்து, ஸுதிநத்தை உண்டாக்கிவைக்கிறான், அதினால் ப்ரகாசமாய் ஏற்பட்ட காலைவேளையில், ஆத்ம ஞானம் என்னும் கண் விழிப்புற்றதால், ஜீவன் என்னும் பக்ஷியானது தேஹத்தில் அஹம்புத்தி பாராட்டுதல் என்னும் கூட்டினின்று, வெளிப்படுகிறது, லிங்கதேஹம் என்னும் குவிந்து போன தாமரைப்பூவில் சிக்குண்டு, சக்திகள் குன்றிப்போய்க் கொண்டிருக்கும் ஞானம் என்ற தேனீ, இந்த ஸூர்யன் உதயமானதும், தன் பந்தத்தினின்று விடுதலை அடைகிறது, சப்த ஜாலங்களால் ஏற்பட்ட அடவியிற் சிக்கிப்போய், ஸம்ஸார நதியின் ஓர் கரையில் ஒன்றும், மற்றோர் கரையில் மற்றொன்றுமாகப் பிரிவுபட்டிருக்கும் துக்கத்தினால், அறிவிழந்து, அழுது கொண்டிருந்த புத்தி, ஞாநம் என்னும் சக்ரவாக பட்சிகளின் இரட்டை, லோகத்துக்கெல்லாம் தீபமாய் சிதாகாசத்தில் விளங்கும் இந்த ஸூர்யனுடைய வெளிச்சத்தைக்கொண்டு, பரஸ்பரம் சேரப்பெற்று, மன ஸமாதானத்தை அடைகிறது, இந்த ஸூர்யன் உதித்தால் ஏற்பட்ட காலைவேளையில், பேதஞானம் என்ற திருடன் வழிபறிக்கும் காலம் தவறிப்போய், ஆத்மாநுபவம் என்னும் வழியில், யோகிகள் நடக்கத் தொடங்குகிறார்கள்.

இந்த ஸூர்யனுடைய விவேகரூப கிரணங்களின் ஸம்பந்தத்தால், தத்வ ஞானம் என்னும் ஸூர்யகாந்தத்தினின்று பொறிகள் உண்டாய், ஸம்ஸாரம் என்ற காடனைத்தும் பற்றியெரிந்துபோகிறது. இந்த ஸூர்யனுடைய, தீவரமான கிரணங்கள், ஆத்மஸ்வரூபம் என்னும் களர்பூமிமேல் படவே. மஹாஸித்திகள் என்ற கானநீர் ப்ரவாஹத்தின் தோற்றம் ஏற்படுகிறது. இந்த ஸூர்யனது ப்ரகாசத்தால், ஜீவப்ரஹ்மங்களின் ஐக்யஞானரூப மத்யாஹ்ந காலம் ப்ரத்யகாத்ம ஸ்வரூப ஞாநத்தின் தலைமேல் ஏற்பட்டு,

ஆத்மஸ்வரூபவிஷய மதிமயக்கம் என்னும் நிழல் தானாகவே இல்லாமற்போகிறது. அவ்வேளையில், மாயை என்னும் ராத்ரி, முற்றிலும் விலகிப்போவதால், உலகத்தைப் பார்த்துணர்தல் என்னும் கனவோடுகூட, அக்கனவிற்கு ஆதாரமான விபரீத ஞானம் என்னும் நித்ரையும் இல்லாமற் போகிறது. ஆகையால் இப்படி எற்பட்டு விட்ட அத்வைதாத்மஞானம் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும் பட்டணத்தில், மஹாநந்தம் எங்கும் நெருக்கமாய்ச் சிதரிக்கிடப்பதால், ஸுகாநுபவத்தின் கொடுக்கல்வாங்கல் ரூபமான வ்யாபாரம் குறைவுபட்டுப் போகிறது. மிக்க வளர்த்துவதென்?

இந்த ஸூர்யனுடைய ப்ரகாசத்தால் முக்திகைவல்யம் என்னும் ஸுதினம், எப்போதும் நன்றாய் அநுபவிக்கத் தக்கதாய் எங்கும் ஏற்பட்டுவிடுகிறது. ஆத்மஸ்வரூபம் என்னும் ஆகாசத்துக்கு ராஜாவான இந்த ஸூர்யன் உதித்தானோ இல்லையோ, உதயாஸ்தமனங்களோடு கூட, கிழக்கு மேற்குத் திக்குக்களின் ஞானமும் முற்றிலும் அற்றுப்போகிறது. தோன்றாமல் மறைந்திருக்கை (15வது அத்யாயம் 16வது ச்லோகத்தில் சொல்லியிருக்கப் பட்டதான அக்ஷரபுருஷனுடைய உபாதியாகிய அவ்யத்தரூபம்) என்பதும், அத்துடன்கூட தோன்றுகை (க்ஷரபுருஷனுடைய உபாதியாகிய ஜகத்ரூபம்) என்பதும் ஆகிய இவ்விரண்டையும் இல்லாதபடி செய்துவைத்து, (வார்த்தைகளை வளர்த்துவ தென்?) இந்த ஸூர்யனது ப்ரகாசமே எங்கும் வ்யாபித்துக் கொள்கிறது. இவ்வாறு, இந்த ஸூர்யோதயம் முற்றிலும் புதுமையுள்ளதாகவே இருக்கிறது. இராத்ரிப்பகல் வழங்கிக் கொண்டிருக்கும் தேசத்தைத் தாண்டி, ப்ரகாசிக்கச் செய்யப்படும் வஸ்துக்களின் சேர்க்கையற்ற, தனித்தே ஜோராசியாய் விளங்கும் இந்த ஸூர்யனை எவன் பார்க்க முடியும்?

இப்படிப்பட்ட பெருமை பொருந்திய ஸூர்யனான ஸ்ரீநிவ்ருத்தி மஹாராஜாவுக்கு, நமஸ்காரம், நமஸ்காரம், என்றே சொல்வேன்; ஏனெனில் அப்படிச் செய்வதை விட்டு, சொற்களைக்கொண்டு அவரை ஸ்தோத்ரம் செய்யத் தொடங்கினால், அது பாதகமாகவே முடிகிறது. குருநாதனுடைய பெருமையை அறிந்து செய்யும் ஸ்தோத்ரமானது உத்தமமாய் ஏற்படவேண்டுமானால், தான் ஸ்துதிக்கிறவ னென்றும், அவர் ஸ்துதிக்கப்படுகிறவ ரென்றும், ஏற்படும் த்வைதபாவம் அற்றுப் போகவேண்டும், ஹே குருநாதா! யாதோர்விதமான வ்ருத்தி ஞானமும்

அற்றிருக்கையே உம்மை அறிவதாகும்; ஒன்றும் பேசாமலே உம்மோ டொன்றுபட்டுப் போகையெ உம்மை வர்ணிப்பதாகும்;

எவ்விதப்பட்ட வஸ்துவு மாகாதவனாயிருக்கையே உம்மை அடைவதாகும், உம்மைப் பேச உத்தேசித்து புறப்பட்ட உடனேயே, வைகரீ உன்னும் வாக்கு, அதின் ஸூக்ஷ்ம ரூபங்களாகிய மத்யமை, பச்யந்தீ, பரை, என்னும் வாக்குக்களையும் தன்னுடன் கூட்டிக் கொண்டு, லயப்பட்டுப் போகிறது. அப்படிப்பட்ட உமக்கு, ஸேவகனாகிய நான், கைங்கர்யம் செய்யக் கருதி, ஸதோத்ரரூப வாங்மயபூஷணத்தைக்கொண்டு உம்மை அலங்கரித்து வைப்பதை, நீர் பொறுத்தருள வேண்டும், என்று ப்ரார்த்திப்பதுகூட, உம்முடைய அத்வயாநந்த ஸ்வரூபத்தோடு பொருத்தமாவதில்லை, யென்பது உண்மையே. ஆனாலும், ஓர் ஏழை, க்ஷீரஸமுத்ரராஜனைக் கண்டு, அவனுக்குத் தகுந்தபடி எவ்விதம் விருந்திடவேண்டும் என்பதை அறியாதவனாய், அவனுக்கு விருந்திடவேண்டும் என்னும் ஓர் ஆசையே பொங்கி, மிக்கவும் பரபரப்படைந்து, காட்டுக்கீரைகளை பிடுங்கிக்கொண்டு வந்து, அவற்றைக்கொண்டு விருந்திட்டால், அப்போது அந்த ஸமுத்ரராஜன் அந்த ஸமுத்ரராஜன் அந்த அல்பமான கீரையையே உத்தமமான விருந்தாய் பாவித்து, அந்த ஏழையின் ப்ரேமாதிசயத்தைக் கொண்டாடுவது ந்யாயம் அன்றோ? கையில் ஓர் திரிச்சீலையை ஏற்றிக்கொண்டு, திவ்யமான தேஜஸ்ஸுபடைத்த ஸூர்யனுக்கு ஆரத்தியாகச் சுற்றிக் காட்டினால், அப்போது ஸூர்யன் பூஜகனுடைய பக்தியொன்றையே லக்ஷ்யத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் அல்லவா?

ஒரு சிறுவன் பெரியவர்களுக்கு முன் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று தெரிந்து கொள்வானேயானால், அவனுடைய பால்யம் எப்படி மிகுந்து நிற்கும்? ஆகையால் அவனுக்குப் பிழை செய்வதே உரித்தான லக்ஷணம் என்று தெரிந்துகொண்டு, அவன் தாய், அவன்மேலுள்ள ப்ரேமையால், அவன் பிழைகளையே கொண்டாடி, ஸந்தோஷப்படுகிறாள். ஊர்வாரி நீரால் நிரம்பின ஓர் கழியானது, மிக்கப் பெருமைபொருந்திய கங்கையைத் தன் காலால் மிதித்துக்கொண்டு, அவளுடன் வந்து கலந்தால், கங்கையானவள், அதைப் பார்த்து, "சீ, நீ கெட்டாய், திரும்பிப் போ," என்று சொல்வதுண்டா? ஐயா குருநாதா! ப்ருகுவானவன் பகவானிடத்தில் எவ்வளவு

பெரியதான அபராதத்தை ஆசரித்தான். அவன் அவர் மார்பின்மேல், காலால் உதைத்த உதையை, மிக்க பிரேமையோடு கூடிய உபசாரம் என்றும், ஸத்குருவின் ப்ரஸாதம் என்றும் அவர் பாவித்து, அதை இன்னமும் ஸ்ரீவத்ஸலாஞ்சனமாய் அவர் தரித்துக்கொண்டிருக்கிறார் அல்லவா? முற்றிலும் இருளால் நிறைந்திருக்கும் ஆகாசம், ஸூர்யனுக்கு முன் வந்து நின்றால், ஸூர்யன் அவ்வாகாசத்தை நோக்கி, "பின் வாங்கிப்போ," என்று சொல்வதுண்டா? அப்படியே, பேதபுத்தி என்பதை தராசாய் ஏற்படுத்திக்கொண்டு, ஸூர்யனை ஓர் தட்டில் வைத்து, உம்மை ஓர் தட்டில் வைத்து, இருவரையும் ஒப்பிட்டுப் பேசினதாகிய அபராதத்தை, இந்த ஒரு வேளை மாத்ரம் பொறுத்தருளவேண்டும், வேதங்கள் உம்மை வர்ணித்த விஷயத்தில் செய்த அபராதத்தை, எப்படி க்ருபைகூர்ந்த பார்வையுடன் நோக்கி பொறுத்தருளினீரோ, அப்படியே என் வர்ணனையையும் மதித்துப் பொறுத்தருள வேண்டும்.

குருநாதனிடத்தில் சலுகை கொண்டாடல்

நீர் அப்படி பொறுத்தருளாது போனாலும், இவ்வுணவை உண்ண உட்கார்ந்த நான், அரைவயிறு நிறைந்தவனாய், எழுந்திருக்கப் போவதில்லை நான் கீதார்த்தம் சொல்வ தென்னும் ஓர் வ்யாஜத்தைக்கொண்டு உமது ப்ரஸாதாம்ருதத்தை ஆசையுடன் ஸேவிக்கத் தொடங்கி, அதை வர்ணிக்க வர்ணிக்க, என்மேல் உம்முடைய க்ருபை அதிகதிகமாய், வ்ருத்தி யடைந்து, நான் மிக்க பாக்கியசாலி ஆகிறேன். நான் எண்ணிறந்த கல்பங்கள் தோறும், இடைவிடாது ஸத்யமே பேசுதல் என்னும் ஓர் தபஸை, என் வாக்கால் அநுஷ்டித்து வந்தேன் என்னும் காரணத்தைக்கொண்டு, ஸம்ஸாரஸமுத்ரத்தின் ஆபத்துக்களினின்று விலகி, நான் தங்கியிருப்பதற்கு, கீதையை வர்ணித்தல் என்ற இந்தப் பெருந் தீவு எனக்குக் கிடைத்திருக்கிறது. நான் அநுஷ்டித்து வந்த உத்தமமான புண்யங்கள் அனைத்தும் உம்முடைய குணங்களை வர்ணித்தல் என்ற பேரின்பத்தை இன்றெனக்குத் தந்துவிட்டு, தங்கள் கடனைத் தீர்த்துக்கொண்டன, நான் ஜீவதசை யென்னும் காட்டிற் சிக்கி, மரணத்தால் வ்யாபிக்கப்பட்ட ஊரில் அகப்பட்டுப்போனதான, ஓர் துர்ப்பாக்கியமான தசை இன்று என்னை விட்டு விலகிப்போயிற்று.

உம்முடைய குணகீர்த்தந ரூபமாய், கீதை என்னும் பெயர் பெற்று, ப்ரஸித்தி அடைந்ததாய், மிக்கவும் பலம் படைத்த

அவித்யையை ஜயித்து, முற்றிலும் நாசம் செய்து விடுகிறதாய், இருக்கும் இந்த க்ரந்தம் எடுத்துரைக்கத் தக்கதாயின்று எனக்குக் கிடைத்திருக்கிறது. ஓர் பிச்சைக்காரன் வீட்டில், ஏதோ ஓர் வேடிக்கையாய் லக்ஷ்மி வந்து உட்கார்ந்துகொண்டபின், அவனைப் பிச்சைக்காரன் எனத் தகுமா? இருட்டின் வீட்டில், அதின் பாக்யவசத்தால், ஸூர்யன் வந்து நிலை கொண்டால், அவ்விருட்டே உலகத்தாருக்கு உத்தம ப்ரகாசத்தைக் கொடுப்பதாகாதா? எந்த பகவானுடைய பெருமைக்குமுன்னால், இந்த விச்வம் முழுவதும் ஓர் பரமாணுவின் கணக்குக்கூட ஆகாதோ, அந்த விச்வம், அந்த பகவானுடைய பாதபக்தியின் பெருமையாற் கிடைத்துப்போகாதா? அப்படியே, நான் கீதைக்கு வ்யாக்யாநம் செய்யவேண்டும் என்று ஆசைப்படுவது, ஆகாசத்தில் பூத்த பூவைப் பறித்துவந்து முகந்துபார்ப்பதுபோலும், ஒரு நாளும் நிறைவேறத் தகாததே யானாலும், அனைத்தையும் செய்து வைக்கும் வல்லமை பெற்ற உம்மால், அவ்வாசை பூர்ணம் செய்து வைக்கப்படும், ஆகையாற்றான் ஆழம் அறியமுடியாதவையான கீதாச்லோகங்களின் அர்த்தம் தெளிவாய் வெளிப்பட்டு நிற்கும்படி, அவற்றிற்கு ஓர் வ்யாக்யாநம் செய்து வைப்பேன் என்று, உம்முன்னால் ஞாநதேவனாகிய நான் கூறினேன்.

இவ்வத்யாயத்துக்கும் கீழ் நடந்துபோன அத்யாயத்துக்கும் ஸங்கதி

பதினைந்தாவது அத்யாயத்தில் ஸ்ரீ க்ருஷ்ணன் அர்ஜுநனுக்கு வேதாந்தசாஸ்த்ரத்தின் ஸித்தாந்தம் முழுவதையும் தெரிவித்து வைத்தார். அந்த அத்யாயத்தின் துவக்கத்தில், நல்ல வைத்யன் தேஹத்தில் மறைந்துகிடக்கும் வ்யாதியை நிர்ணயித்துக் காட்டுதல்போலும், எல்லா உபாதிகளையும் ஓர் வ்ருக்ஷமாய் வர்ணித்து விட்டு, பின்பு அக்ஷரன் என்ற கூடஸ்தனை வர்ணிக்கும் ஸந்தர்ப்பத்தில், ஆத்மசைதந்யமானது உபாதியின் சேர்க்கையால் இருவகைப்பட்ட புருஷனாகிற ப்ரகாரத்தையும் சொல்லி, கடைசியாக உத்தமபுருஷன் என்று பெயர்பெற்ற சுத்தமான ஆத்மதத்வம் இன்னதென்றும், ஸ்ரீக்ருஷ்ணன் சொன்னார். அன்றியும் ஆத்மப்ராப்திக்கு இன்றியமையாத ஸாதநமாய் பலவத்தா யிருக்கும் ஞானம் எதுவோ, அதுவும் அவ்வத்யாயத்தில் விசாரிக்கப்பட்டுத் தீர்ந்துபோயிற்று, ஆகையால் அதில் நிரூபிக்கப்படாமலும், மேலே நிரூபிக்கப்பட வேண்டியதாயும், மிகுந்து நின்றுபோனது ஒன்றுமில்லை.

ஆனால் குருசிஷ்யர்கள் இருவரும் பரஸ்பரப்ரேமையின் விலாஸத்தை மேலும் அநுபவிக்கவேண்டியது மாத்ரம் மிகுந்து நின்றதால், எற்கனவே சொல்லித்தீர்ந்த விஷயத்தையே விஸ்தரித்துச் சொல்ல ஸ்ரீ க்ருஷ்ணன் தொடங்குகிறார்.

ஆகவே, கீழே சொன்ன விஷயத்தில், ஞாநிகளான பக்தர்களுக்கு எவ்வளவு சொல்லவேண்டுமோ, அவ்வளவும் சொல்லியாய் விட்டாலும், ஞானத்தை அடைந்து கொள்ளவேண்டும் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருக்கும் முமுக்ஷுகளுக்குச் (மோக்ஷத்தை அடைய ஆசைப்படுகிவர்களுக்கு) சொல்லவேண்டியது கொஞ்சம் மிகுந்து நின்றது. "புருஷோத்தமனாகிய என்னுடைய ஸ்வரூபத்தை அறிந்து என்னைக் கண்டுகொண்ட ஸர்வஜ்ஞர்கள் எவர்களோ, ஞாநரஹஸ்யங்களை நன்கறிந்த ஹே அர்ஜுநா அவர்களே என் பக்தியை அநுஷ்டிப்பதற்கு உத்தம அதிகாரிகள்," என்று முவ்வுலகுக்கும் நாயகனாகிய ஸ்ரீ க்ருஷ்ணன் கீழ்நடந்து போன அத்தியாயத்தின் கடைசி ச்லோகத்தில், ஞாநத்தையே மிக்கக் கொண்டாடி, அத்யுத்ஸாஹத்துடன் அதை வர்ணித்தார். ப்ரபஞ்சத்தை ஓர் கவளமாய் செய்து, அதை நிச்சேஷ்மாய் விழுங்கிவிட்டு, ப்ரஹ்ம ஸ்வரூபத்தைக் காட்டிக்கொடுத்து, அந்த ப்ரஹ்மஸ்வரூபத்தோடு ஒன்றுபடுத்தி வைத்து, ஜீவனை ஆநந்த ஸாம்ராஜ்ய பதவியில் பட்டாபிஷ்க்தனாய், உட்கார்த்திவைக்கும்படி, ஸாமர்த்யம் படைத்த உபாயம், ஞானத்தைக் காட்டிலும் வேறொன்றில்லை யென்றும், ஆத்மஸ்வரூபத்தை அறிந்து கொள்ளவேண்டுமென்று ஆசைப்பட்டவர்கள், இவ்விதப்பட்ட ஞானத்தை அடைந்து மிக்க ஸந்தோஷித்த சித்தமுள்ளவர்களாய், தங்கள் ஜீவஸ்வரூபத்தை ஞானத்தின்மேல் த்ருஷ்டி சுற்றிப்போட்டு விடுகிறார்கள் என்றும், நன்கறிந்கவர்களுக்குள் உத்தமனான ஸ்ரீ க்ருஷ்ணன் சொன்னார், ப்ரேமை எவ்விஷயத்தில் ஏற்பட்டதோ, அதையே ஸமயம் ஏற்படும் போதெல்லாம் மேலும் மேலும் கொண்டாடுவதே ப்ரேமையின் வக்ஷணமாய் இருக்கிறது.

ஆகவே எந்த ஜிஞ்ஞாஸுகளுக்கு, (ஞானத்தை அடையவேண்டு மென்று ஆசைப்படுகிவர்களுக்கு) இந்த ஞாநம் நன்றாய் அநுபவிக்கப்பட்டதாய் ஏற்படவில்லையோ, அவர்களுத்து இந்த ஞானம் ஏற்படும் வகையையும், இது எற்பட்டபின் இதைக் காப்பாற்றிக்கொள்ளும் வகையையும், சொல்ல வேண்டியது, ந்யாயமாகவெ ஏற்படுகிறது, அன்றியும்,

அது உண்டாகாமல் நின்று போகும்படி தடுத்துவைக்கிறவையாய், அது உண்டான பின், அதை தப்புவழிகளில் ப்ரவேசிக்கச் செய்கிறவையாய் இப்படி ஞாநவிரோதிகளாய், எவை இருக்குமோ. அவற்றையும் தெரியவைக்க வேண்டியது அவச்யமானதாய் எற்படுகிற தல்லவா? பின்பு, ஆக்மஞானம் அடைய விரும்பினவர்களுக்கு விரோதியானவற்றைப் போக்கிவைத்து, ஞானோபயோகியானவை எவையோ, அவற்றை நன்றாய் விசாரித்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிற நீங்களனைவரும் பாராட்டியிருக்கும் ஆசையைப் பூர்ணம் செய்துவைப்பதற்காக புருஷோத்தமனாகிய ஸ்ரீக்ருஷ்ணன் பேசத்தொடங்குவார்.

எதினால் ஞாநம் உண்டாய், ஸம்ஸாரதுக்கத்தின் நிவ்ருத்தியும் ஏற்படுமோ, அதின் நிறைவாகிய தைவீ ஸம்பத்தி முதலிற் சொல்லப்படும், அன்றியும் எது அஞ்ஞானத்திற்கு ஸஹாயம் செய்துகொடுத்து, ராகத்வேஷங்களுத்து ஆதாரமாய் எற்படுமோ, அந்த ஆஸுரஸம்பத்தியும் மேலே சொல்லப்படும். இஷ்டாநிஷ்டங்களைச் செய்துவைக்கும் இவ்விரண்டையும், நிரூபிக்க ஒன்பதாவது அத்யாயத்தில் ஸந்தர்ப்பம் எற்பட்டு, மிக்க உத்ஸாஹமாய் இவற்றை நிருபிப்பதற்கு ஸ்ரீ கிருஷ்ணன் ஸித்தமானார், ஆனால் அப்போது சொல்வதற்கு வேறுவிஷயம் எற்பட்டு விட்டதால், அங்கே சொல்லப்படாமல் நின்றுபோன இவ்விஷயத்தை, இங்கே பகவான் எடுத்துச் சோல்ல நேர்ந்தது,

கீழ் நடந்துபோன அத்யாயம் முடிந்தபின், இவ்விஷயத்தைச் சொல்வதற்து ஸந்தர்ப்பம் திரும்பவும் ஏற்பட்டு, அவ்விஷயம் இந்த பதினாறாவது அத்யாயத்தில் சொல்லப்படுதிறது. இவ்விஷயத்தில் இவ்வளவு சொன்னது போதும், இனிச் சொல்லவேண்டியது எது வென்றால், ஞாநத்துக்கு ஹிதமாயும் அஹிதமாயு மிருக்கும், தைவீஸம்பத்தி ஆஸுரீஸம்பத்தி என்ற இவ்விரண்டுமே. முமுக்ஷுவின் மார்க்கத்தில் துணையாயும், மோஹராத்ரியில் ஏற்றிவைக்கப்பட்ட தர்மதீபமாயு மிருக்கும் தைவீஸம்பத்தி முன் னெடுத்துச் சொல்லப்படும், கேளுங்கள். ஒன்றுக்கொன்று ஒத்தாசை செய்வனவாய், பல வஸ்துக்கள் ஒன்றுபட்டால், அக்கூட்டத்துக்கு ஸம்பத்தி என்று பெயரிடுவது உலகவழக்கம், ஆகவெ ஒன்றுகூடி யிருந்து, ஸர்வ விதமான ஸுகத்தையும் உண்டாக்குதற்குதாய் இருக்கும் ஸம்பத்தி எதுவோ, அதுவே தைவீஸம்பத்தி என்று சொல்லப்படும்.

श्रीभगवानुवाच ।
अभयं सत्त्वसंशुद्धिर्ज्ञानयोगव्यवस्थितिः ।
दानं दमश्च यज्ञश्च स्वाध्यायस्तप आर्जवम् ।।१।।

ஸ்ரீ பகவானுவாச -

அபயம் ஸத்த்வ ஸம்ஶுத்திர் க்ஞான யோக வ்யவஸ்திதி: ।
தானம் தமஶ்ச யக்ஞஶ்ச ஸ்வாத்யாயஸ் தவ ஆர்ஜவம் ॥ 1

தைவீஸம்பத்துக்களின் விவரணம், அதில் அபயம்

அப்படிப்பட்ட தைவீகுணங்களுக்குள் முதன்மை பெற்றவை எவையோ, அவை "அபயம் ஸத்வஸம்சுத்தி" என்று துவக்கும் இந்த ச்லோகத்தால் சொல்லப்படுகின்றன. கவனமாய்க் கேள். பெரும் வெள்ளத்தில் விழுந்து முழுகாதவனுக்கு, ஜலத்தின் சைத்யத்தால் ஏற்படும் நடுக்கம் உண்டாகாததுபோலும், பத்யமாய் ஆகாரம் செய்வதை நியமமாய்ப் பூண்டவன் வீட்டில், ரோகம் இன்ன தென்று அறியப்படாமல் இருப்பதுபோலும், கர்மாகர்மங்களை அநுஷ்டிக்கும் போது, எவன் அஹம்காரத்தை தலையெடுக்க ஒட்டானோ, அவனை ஸம்ஸாரத்தின் பயம் விட்டு விலகிப்போ யிருக்கும். எவனுக்கு, ஐக்யபாவம் மிக்கவும் விஸ்தாரமடைந்து, தனக்கு வெளிப்பட்டுத் தோற்றும் ஜகத்முழுவதும் ஆத்மஸ்வரூபமே என்று தோற்றிப்போகுமோ, அவனிடத்தில் பயத்தின் பேச்சே முற்றிலும் அற்றுப்போயிருக்கும், தன்னை கரைத்துவிட வந்த ஜலத்தோடு, ஒன்றுபட்டுப்போகும் உப்பைப்போல், தனக்கு வெளிபபட்டதான ஜகத்தோடு ஒன்றுபட்டுப்போகும் ஒருவன், பயம் என்பதை முற்றிலும் நாசம் செய்துவைத் திருப்பான். இவ்வகைப்பட்ட நிலையே, இங்கே அபயம் என்று சொல்லப்படுகிறது, இதுவே நன்கறிவின் முடிவான எல்லை யென்றறி.

ஸத்வஸம்சுத்தி

ஸத்வசுத்தி என்பது ஒருவனிடத்தில் இருந்தால், அவனிடத்தில் பின்சொல்லப்படும் லக்ஷணங்கள் காணப்படும். சாம்பலானது எரிவதும் அணைவதும் அற்றுப்போய் இருப்பதுபோலும்,–அமாவஸ்யை முடிந்துபோய், ப்ரதமையின் கலாவ்ருக்தியை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கும்போது, அதி

ஸூக்ஷ்மமான உருவத்தைப் படைத்திருக்கும் சந்த்ரனுடைய ஸ்வரூபத்தைப்போலும்,-வர்ஷாகாலம் முடிந்துபோய், வேநிற்காலம் ஆரம்பிக்காமல் இருக்கும்போது, தன்னுடைய உண்மையான தெளிந்த ரூபத்தோடிருக்கும் கங்கையைப்போலும், - ஸங்கல்ப விகல்பங்கள் முற்றிலும் அற்றுப்போய், ரஜதமோகுணங்களின் ஆட்டமும் ஓய்ந்துபோய், ஆத்மஸ்வரூபத்யானத்திலேயே ஈடுபட்ட புத்தி படைத்தவனாய் அவனிருப்பான், வேறூருக்குப் போயிருக்கும் புருஷனையே நினைத்துக்கொண்டு, விரஹதுக்கத்தால் மனக்கலக்கம் கொண்டிருக்கும் பதிவ்ரதையான ஓர் ஸ்த்ரீ, எவ்விதமான லாபத்தையும் நஷ்டத்தையும் தன் மனதில் ஏற்றிக்கொள்ளாததுபோலும், ஸத்வஸ்துவான ஆத்மஸ்வரூபமே மனதுக்கினித்துப்போய் இருப்பதால், புத்தியானது ஆத்மஸ்வரூபத்யானத் தினின்று வழுவாதிருத்தலே ஸத்வசுத்தியாகும், என்று கேசியென்ற அஸுரனைக் கொன்ற ஸ்ரீ க்ருஷ்ணன் சொன்னார்.

ஞாநயோகவ்யவஸ்திதி

ஆத்ம ஸ்வரூபத்தை அடைந்து கொள்ளக் கருதி, ஞாநாப்யாஸம், யோகாப்யாஸம், ஆகிற இவற்றில் ஒன்றின் மேல், பூர்ணவிச்வாஸத்தை வைத்து அதில் திடமாய் நிலைகொண்டுபோய், ஸர்வாஹுதிகளும் முடிந்துபோனபின், வேறு யாதோர், ஆஹுதியும் செய்யவேண்டியதாய் மிகுந்தில்லை யென்னும் எண்ணத்துடன், அக்நியில் பூர்ணாஹுதி (முடிவான ஆஹுதி) செய்து விடுதல் போலும், அல்லது நல்ல குலத்தில் பிறந்தவன் தன்னுடைய பெண்ணை ஸத்குலத்தில் கொடுத்துவிடுதல்போலும், வக்ஷ்மியானவள் ஸ்ரீ முகுந்தனுக்கு மாலையிட்டு, அவரிடத்திலேயே நிலைத்துப் போனதுபோலும், யோகம் அல்லது ஞாநம் இவற்றி லொன்றை அப்யஸிக்க தொடங்கினபின், சித்தம் மாறுபாடடையாது, அதிலேயே நிலைகொண்டு, அதினாலேயே ஜீவித்திருப்பவனாய்ப் போவதே, இந்த மூன்றாவது குணமாகிய ஞாநயோக வ்யவஸ்திதியாகும்.

தானம்.-

ஓர் வ்ருக்ஷம் தன்னுடைய பூ, பழம், நிழல், வேர், இலை, இவை அனைத்தையும் வழியோடு வந்து சேர்ந்தவனுக்குக் கொடுத்துவிட யாதோர் ஆக்ஷேபணையும் செய்யாதது போலும், தேஹம், வாக்கு, மனஸு, என்ற மூன்று கரணங்களாலும், தனக்குள்ளதான வித்தத்தைக் கொண்டும்,

துக்கமடைந்து வந்தவன் சத்குருவே யானாலும், ஓர் வஞ்சனையும் செய்யாமல், அவன் மனது களிக்கும்படி, அவனுக்கு உபயோகப்பட்டுப்போவதே, இங்கு சொல்லப்பட்ட தானம் ஆகும். இது தான், ஓர் ஜீவன், மோக்ஷ நிலை என்னும் நிதியைக் கண்டு கொள்வதற்கு, இட்டுக்கொள்ள வேண்டிய மையாகும். இதை இவ்வளவோடு நிறுத்திவிட்டு, தமத்தின் லக்ஷணங்களைச் சொல்வேன், கேள்.

தமம்

வண்டல் நீரில் உள்ள மண்முதலிய அசுத்தங்களை தேய்த்தாங்கொட்டை பிரித்து வைத்தல்போலும், இந்த்ரியங்கள் விஷயங்களோடு ஸம்பந்த மடைந்து, அவற்றை க்ரஹித்துக் கொள்ளத் தலைப்படும் போதெல்லாம், இந்த்ரியங்களை அவற்றினின்று பிரித்துவைத்து, அவற்றின் வாயிலில் விஷயத்தின் காற்றுக்கூட படாமல், அவற்றைக் கட்டி ப்ரத்யாஹாரம் என்பவன் கையில் ஒப்புவித்து, உள்ளிருக்கும் சித்தம் வரைக்கும் திரும்பிப் போய்ச்சேரும்படி ப்ரவ்ருத்தியை துரத்திவைத்து, அப்படிப் பின் வாங்கிப்போன ப்ரவ்ருத்தியை, வைராக்யரூப அக்நியில் முழுக்காட்டி, அதைத் திரும்பவும் பத்து இந்த்ரியங்கள் வழியாய் வெளி இழுத்து வைத்து, ச்வாஸோச்சுவாஸங்களைக் கட்டிவைத்தலைக் காட்டிலும் ஆசரிக்க மிக்க கடினமான வ்ரதா நுஷ்டாநங்களை, இராப்பதல் ஒய்வொழிவற்று ஆசரித்துக்கொண்டிருப்பதே, தமம் என்பதின் ஸ்வரூபமாகும். இனி யஜ்ஞம் என்னும் பதத்தின் அர்த்தத்தைச் சுருக்கிச்சொல்வேன், கேள்.

யஜ்ஞம்

ப்ராஹ்மணர்கள் முதலாக, ஸ்த்ரீகள் முடிவாக, இருக்கும் அனைவரும் அவரவர்கள் அதிகாரத்துக்குத் தக்கபடி, அவரவர்களுக்கு பஜநீயமாய் ஏற்பட்டுள்ள ஸர்வோத்தமான தெய்வத்தின் விஷயத்தில், எந்தெந்த தர்மங்களை அவரவர்கள் (அநுஷ்டிக்க வேண்டுமோ, அத்தர்மங்களை சாஸ்த்ர விதி கோணாமல் அநுஷ்டிப்பதே, அவரவர்களுக்கு யஜ்ஞமாகிறது. ப்ராஹ்மணன் அவன் ஆசரிக்கவேண்டிய ஆறு கர்மங்களை (அத்யயநம் (ஓதல்), அத்யாபநம் (ஓதுவித்தல்) யஜநம் (யாகம் செய்தல்), யாஜநம் (யாகம் செய்வித்தல்) தானம் (கொடுத்தல்) ப்ரதிக்ரஹம் (வாங்கல்) என்று ஆறு கர்மங்கள்) நடத்தி வருதலாலும், சூத்ரன் ப்ராஹ்மணனை நமஸ்கரிப்பதாலும். இவ்விருவர்களும் ஸரியாகவே யஜ்ஞம் செய்தவர்களாகிறார்கள். இப்படித் தங்கள் தங்கள் அதிகாரம் இன்னதென்று

தெரிந்துகொண்டு. அதற்குத் தக்கபடி அனைவரும் யஞ்ஞங்கள் ஆசரிக்கவேண்டும். ஆனால் அப்படி யஞ்ஞங்களை ஆசரிப்பதில், பலனில் ஆசைபாராட்டுதல் என்னும் விஷத்தைக் கலந்து வைக்கக்கூடாது. அத்துடன் நான் யஞ்ஞங்களை முடித்து வைத்தேன், என்னும் பாவத்தைப் பாரட்டிக்கொள்ளா தொழிந்தவனாய், வேதாஞ்ஞைகள் தவறிப் போகாது ஸகலயஞ்ஞங்களுக்கும் ஆதாரபூமியாக ஒவ்வோருவனும் ஆய்விடவேண்டும்,. அர்ஜுநா. இப்படி செய்யப்பட்ட யஞ்ஞமானது சாஸ்த்ரீயம் ஆகிறது, என்று மோக்ஷமார்க்கத்தை நன்கறிந்தவரான ஸ்ரீக்ருஷ்ணன் சொன்னார்.

ஸ்வாத்யாயம்

பந்தை பூமியில் அடிப்பதே ப்ரயோஜநமாக வைத்துக்கொள்ளாமல், அது கைக்குத் திரும்பி வருவதை உத்தேசமாய் வைத்துக்கொண்டு, அதைப் பூமியில் அடிப்பது போலும், விதையைப் பூமியில் விதைப்பதில், அது பயிராகி விசேஷமாக தான்யத்தைப் பலித்துக் கொடுப்பதே லக்ஷ்யத்திலிருப்பதுபோதும், மறைத்து வைத்த பொருளைக் கண்டெடுத்துக்கோள்வதற்காகவே தீபத்தை ஆதரிப்பதுபோலும், ஓர் வ்ருக்ஷத்தின் அடியில் நீரை வார்க்கும் போது, அதின் கிளைகளினின்று பழங்கள் பழுப்பதே லக்ஷ்யத்தில் வைக்கப்படுதல் போலும், (இப்படி எல்லாம் வளர்த்துவதென்?) அடிக்கடி எழுந்திருந்து கண்ணாடியில் பார்ப்பதின் உத்தேச மெல்லாம், தன்னைப் பார்த்துக்கொள்வதே போலும், இடைவிடாது வேதவாக்யங்களைப் படித்து, அதின் அர்த்தவிசாரம் பண்ணுவதின் உத்தேசம் எல்லாம், அவற்றால் ப்ரதிபாதிக்கப்படும் ஈச்வரஸ்வரூபம் தன்னநுபவ ஸித்த மாக வேண்டு மென்பதாகவே இருக்கவேண்டும். அப்படிச் செய்வதில், த்விஜர்களே (இரு பிறப்புப் பெற்றவர்கள்; ப்ராஹ்மண, க்ஷத்ரிய, வைச்யர்கள்) ப்ரஹ்மஸூத்ரங்களைப் படிப்பதற்கு அதிகாரம் பெற்றவர்கள்; மற்றவர்கள் ஸ்தோத்ரபாடங்களையும் பகவந்நாமங்களையும் திருப்பி திருப்பிச் சொல்லிக்கொண்டே இருக்கவேண்டும். அப்படிச் செய்யும்போதெல்லாம், பரிசுத்தமான பரதத்வத்தை, அநுபவஸித்தம் செய்துகொள்வதே உத்தேச்யமா யிருக்கவேண்டும். இதைத்தான் ஸ்வாத்யாயம் என்று சொல்லவேண்டும், என்று ஸ்ரீக்ருஷ்ணன் சொல்லிவிட்டு, இனி தபஸ் ஸென்னும் பதத்தின் அர்த்தத்தைத்ச் சொல்வேன், கேள், என்றார்.

பணத்தைச் செலவிட்டு, அதை வ்யர்த்தம்செய்யாமல், கஷ்டப்படுகிறவர்கள் கஷ்டத்தைப் போக்குவதற்காக ஸர்வஸ்வத்தையும் கொடுத்துவிடுவதே தானமாவதுபோலும், ஓர் செடி மருந்துகளுக் குபயோகப்படக்கூடிய பழங்களைப் பழுத்துக் கொடுத்து, தானிறந்து போவது போலும், தூபத்ரவ்யம் அக்நியில் விழுந்து எரிந்து போவதால் ஜநங்களுக்கு நாற்றங்களைப் போக்கி ஸுவாஸநயைக் கொடுப்பது போலும், தங்கம் புடம்போடப்பட்டு நிறை குன்றிப்பொவதால், அதின் மாற்று வ்ருத்தி யடைவது போலும், பித்ருபக்ஷத்தை வ்ருத்திசெய்து வைப்பதற்காக சந்த்ரன் தேய்ந்து போவது போலும், ஆத்மஸ்வரூபப்ராப்தி உண்டாவதற்காக ப்ராணேந்த்ரிய சரீரங்களை க்ஷீணித்துப்போகச் செய்வதென்பது எதுவோ, அதுவே, ஹே வீரா, தபஸ் ஸென்று சொல்லப்படும். அப்படி யாகாமல், தபஸ்ஸென்பது வேறுவிதப் பட்டதென்று சொல்வது முண்டு. அந்தப் பக்ஷத்தில், நீருடன் பால் கலந்திருக்க, அதில் ஹம்ஸம் தன் மூக்கை நுழைத்த மாத்ரத்தில், நீர் பிரிந்து தனித்துப் போவதுபோலும், தேஹமும் ஜீவனும் கலந்து கிடக்கும் ஸம்ஸாரதசையில், இவ்விரண்டும் வேறுவேறாய் புலப்படும்படி அந்தக்கரணத்தில் விவேகத்தை மூட்டிவைத்தலே தபஸ்ஸாகும். ஆத்மஸ்வரூபத்தில் த்ருஷ்டியைச் செலுத்தும் போது, விழிப்பில் ஸ்வப்நத்தோடுகூட நித்ரையும் நசித்துப் போதல்போலும், புத்தி ப்ராபஞ்சிகவிஷயங்களில் ஸஞ்சரிப்பதை விட்டு, ஆத்மவிஷயமான சர்ச்சை செய்வதே உண்மையாய் இந்த தபஸ் ஸாகும், ஹே தநுர்த்தரா.

ஆர்ஜவம்

குழந்தை எதுவானாலும், அதற்கு நன்மை செய்யும் தாயின் முலைப்பால்போலும், பல ப்ராணிகளிலும் வ்யாபித்திருக்கும் சைதந்யம் போலும், ப்ராணி என்று ஒன்றிருந்தாற்போதும், அது எவ்வளவு கெட்டதாயிருந்தாலும், அதன் மேல் ப்ரீதிபாராட்டி யிருத்தலே ஆர்ஜவ மாகும்.

अहिंसा सत्यमक्रोधस्त्यागः शान्तिरपैशुनम् ।
दया भूतेष्वलोलुप्त्वं मार्दवं ह्रीरचापलम् ॥२॥

அஹிம்ஸா ஸத்ய மக்ரோதஸ் த்யாக: ஶாந்தி ரபைஶுனம் ।
தயா பூதேஷ்வ லோலு ப்த்வம் மார்தவம் ஹ்ரீரசாபலம் ॥ 2

அஹிம்ஸை

ஜகத்தின் ஸுகத்தை உத்தேசித்து காயிக வாசிக மானஸிக வ்யாபாரங்களனைத்தையும் நடத்திக்கொண்டுவருதலே அஹிம்ஸையாகும்.

ஸத்யம்

கூர்மை பொருந்தியவையாய் ம்ருதுவாயிருக்கும் ஜாதி அரும்புகளைப்போலும்,-காந்தி பொருந்தியதாய்க் குளிர்ச்சியாயிருக்கும் சந்திரகிரணத்தைப் போலும், -கண்முண் காணப்பட்டதும் வ்யாதியைப்போக்குகிறதாய், நாவுக்குக் கசப்பாயிராத மருந்தைப் போலும்,-(இப்படி ஓர் மருந்து கிடையாததால் வேறு எதை உபமானமாய்ச் சொல்லலாம்?) ம்ருதுவாய் இருப்பதால் கண்ணில் இட்டுத் தேய்த்தால், அருவாததாய், காடின்யத்தால் கருங்கல்லைத் துளைத்துவிடத் தக்கதான நீரைப்போலும், -ஸந்தேஹத்தை அறுத்துவிடுதலில், எஃகைப்போல் கூர்மையுள்ளவையாயும், நாவுக்கினிப்பா யிருத்தலில் மதுரரஸத்தையே வென்று காலின்கீழ் தள்ளி மிதிப்பவையாயும், கேட்கப் புகுந்தால் காதுக்கே வாயை உண்டாக்கிவைப்பனவாயும், உண்மையைத் தெரிவிக்கும் விஷயத்தில் ப்ரஹ்மத்தையே பிளந்து அதின் உள்மர்மத்தை வெளிப்படுத்தி வைப்பவையாயும், இருக்கும் சொற்களையே பேசவேண்டும். இன்னும் வளர்ப்ப தென்?

ப்ரியமாய் இருப்பதுடன், ஒருவரையும் ஏமாற்றாதிருக்கவேண்டும். உண்மையாய் இருப்பதோடு எவருடைய மனதையும் உருத்தக்கூடாது. வேடனுடைய குழலோசை இனிப்பாகத் தான் இருக்கிறது, ஆனால் உண்மையில் மிக்கக் கெடுதியை விளைவிக்கிறது. நெருப்பு ஓர் ஒளிகளவும் செய்யாமலேயே, கொளுத்திவிடுகிறது; இவ்வகைப்பட்ட உண்மைபேசலை நெருப்பிட்டுக் கொளுத்தவேண்டும். காதுக்கு இனிப்பாய் இருந்து, அர்த்தத்தால் உயிர்நிலையைத் துளைப்பனவாய் இருக்குமவை, சொற்களே அல்ல; அழகான உருவெடுத்து வந்து மனிதர்களைக் கொன்றுவிடும் பிசாசுகளே ஆகும். கோபித்துக் கொண்டால் கெடுதல் செய்யாதவளாய், லாளநம் செய்வதில் புஷ்பத்தைப் பொல் ம்ருதுவாய், இருக்கும் தாயைப்போல், ச்ரவணஸுகம் கொடுப்பதில் மிக்க ஸாமர்த்யம் படைத்தவையாய், கார்யத்தில் உண்மையானவையாய், விகார மற்றவை யாயிருக்கும் வார்த்தைகளைப் பேசுவதே, இங்கே ஸத்யம் என்று சொல்லப்பட்டது.

க்ரோதமின்மை

கற்பாறையின் மேல் எவ்வளவு நீர் வார்த்தாலும் அதினின்று முளை வெளிப்படாதது போலும்,கஞ்சியை எவ்வளவுதான் கடைந்தபோதிலும் வெண்ணெய் புறப்படாதது போலும்,- செத்த பாம்பின் தோலின் தலைமேல் காலிட்டு மிதித்தாலும் அது படமெடாதது, போலும், வஸந்த ருதுவின் சேர்க்கையாற் கூட ஆகாசம் புஷ்பியாதது போலும், ரம்பையினுடைய அழகைப் பார்த்துக் கூட சுகரிடத்தில் காமவிகாரம் உண்டாகாதது போலும் ப்ரஹ்மாவின் காலில் விழுந்துகூட செத்தவனையெழுப்ப முடியாததுபோலும்,- புத்ரன்கூட கேட்டு ஸஹித்துக் கொள்ளத்தகாதவையான வார்த்தைகள் எவ்வளவுதான் சொல்லப்பட்டாலும், க்ரோதத்தின் வேகம் வெளிப்படாதிருக்கும் இயற்கையெதுவோ அதுவே இங்கே அக்ரோதம் என்று சொல்லப்படுகிறது, என்றறி என்று ஸ்ரீநிவாஸனான க்ருஷ்ணன் அர்ஜுநனுக்குச் சொன்னார்.

த்யாகம்

மண்ணின் ஸம்பந்தத்தை ஒழித்துக்கொள்வதால் மட்குடத்தின் ஸம்பந்தம் அற்றுப்போதல்போலும், - நூலின் ஸம்பந்தத்தை ஒழித்துக்கொள்வதால், வஸ்த்ரத்தின் ஸம்பந்தம் அற்றுப்போதல் போலும், - விதையின் ஸம்பந்தத்தை ஒழித்துக்கொள்வதால் மரத்தின் ஸம்பந்த மற்றுப்போதல்போலும், -. சுவரின் ஸம்பந்தம் ஒன்றை ஒழித்துக் கொள்வதால் அதன்மேல் எழுதப்பட்டுள்ள சித்திரங்களின் ஸம்பந்தம் அற்றுப்போதல் போலும் - நித்ரையின் ஸம்பந்தத்தை ஒழித்துக் கொள்வதால் ஸ்வப்னத்தின் ஸம்பந்தம் அற்றுப் போதல் போலும் வர்ஷா காலத்தின் ஸம்பந்தத்தை ஒழித்துக் கொள்வதால் மேகங்களின் ஸம்பந்தம் அற்றுப்போதல் போலும் ஜலத்தின் ஸம்பந்தத்தை ஒழித்துக்கொள்வதால் அலைகளின் ஸம்பந்தம் அற்றுப்போதல் போலும், பொருளின் ஸம்பந்தத்தை ஒழித்துக்கொள்வதால் விஷயபோகத்தின் ஸம்பந்தம் அற்றுப்போதல் போலும்,- புத்திமான்கள் தேஹத்தில் நான் என்னும் புத்தியை விட்டுவிடுதலால் ஸம்ஸாரமனைத்தின் ஸம்பந்தத்தையும் ஒழித்துக்கொள்ளவே த்யாகம் என்று யஞ்ஞாங்கனான (யஞ்ஞத்தை தேஹமாக உடைத்தானவன்; அல்லது யஞ்ஞத்தை அவயவமாக உடைத்தானவன்) ஸ்ரீகிருஷ்ணன். சொல்ல, இதை அறிந்து கொண்டு, பாக்யசாலியான அர்ஜுநன் சாந்தியின் லக்ஷணங்களை எனக்குத் தெளிவாய் உரைக்கவேண்டும், என்று

கேட்டான். அதற்கு பகவான் அப்படியே சொல்வேன், நன்றாய்க் கவனித்துக் கேள், என்றார்,

சாந்தி

அறியப்படவேண்டியதான ப்ரஹ்மம் பூர்ணமாய் அறியப்பட்டுப்போனபின், அறிந்தவனும் அறிவும் அந்த ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தில் முற்றிலும் லயமாய்ப்போனபின் ஏற்படும் ஸ்திதி சாந்தி என்று சொல்லப்படும். ப்ரளயகாலத்து வெள்ளம் விச்வம் முழுவதையும் வ்யாபித்துக்கொண்டு, தன்னைத் தானே நெருக்கிக்கொண்டு நின்று, இது பெருத்த நதி, இது ஸமுத்திரம் என்ற வ்யவஹாரபேதம் முற்றிலும் அற்றுப்போனபின், எங்கு பார்த்தாலும் வெள்ளமே என்றறிவதற்து எவன் இருப்பான்? அப்படி ஞேயவஸ்துவைக் கண்டுகொண்டபின், அனைத்தும் அவ்வஸ்துவாய்ப் போய்விடுதலால், அறிந்து கொள்கிறானா யிருக்கை என்பதும், அதில் லயித்துப்போகிறது. பின்பு எந்த நிலை மிகுந்து நிற்குமோ, அதற்குத்தான் சாந்தி என்று பெயர், ஹே அர்ஜுநா.

அபைசுநம்

ஒருவனுக்கு மிக்கத் துக்கம் கொடுக்கும் வ்யாதியை முற்றிலும் நிவர்த்தித்து வைக்கவேண்டிய ஓர் ஸமயத்தில், ஸத் (உத்தம) வைத்யனான ஒருவன், அதினால் கஷ்டப்படுகிறவன் தன்னைச் சேர்ந்தவனா புறத்தியானா வென்று பாராதது போலும்,-சேற்றிற் சிக்கிபோய் ஓர் பசு கஷ்டப்படுவதைப் பார்த்து ஸங்கடப்படும் ஒருவன், அது கறவையா கறவாததா என்று பாராததுபோலும்,-ஜலத்தில் விழுந்து முழுகிப்போகிறவனைப் பார்த்துக் கருணையால் மனஸு இளகிப்போன ஒருவன், அப்படி விழுந்துபோனவன் ப்ராஹ்மணனா பஞ்சமனா என்று பாராததுபோலும்,-ஓர் காட்டில் ஓர் குலஸ்த்ரீயை துஷ்டர்கள் வழிபறித்து நக்நம் செய்திருப்பதைத் தெரிந்து கொண்ட ஓர் ஸத் புருஷன், அவளுக்குத் தன் மேற்றுணியை அவிழ்த்துக் கொடுத்து, அதை அவள் உடுத்திக் கொண்ட பின்பே அவளைப் பார்த்து அவள் வ்ருத்தாந்தத்தை விசாரிக்கத் தொடங்குவது போலும்,-ஒருவன் தன்னுடைய அஞ்ஞாநத்தினாலாவது, ஜாக்ரதை இல்லாமையினாலாவது, அல்லது தான் பூர்வஜந்மங்களில் செய்திருந்த பாபத்தின் கார்யமாகவாவது, உலகம் பழிக்கத்தக்கதான ஓர் கேட்டை அடைந்து, அதினால் வருந்திக்கொண்டிருக்கப் பார்த்தபின், இங்கே சொல்லப்பட்ட அபைசுநம் படைத்தவன், தன்னால் கூடிய ஸஹாயத்தை

அவனுக்குச் செய்து, அப்படி வருந்துகிறவன் துன்பத்தைத் தீர்த்துவைப்பான்.

அபைசுநம் படைத்தவன், தன்முன்னிருப்பவன் தோஷங்களைத் தன்னுடைய மனதில் குணங்களாய்ப் பாவித்துக்கொண்டு, பின்பு அவனை நோக்குவான். தெய்வத்துக்குச் செய்யவேண்டிய பூஜைகளை செய்துவைத்த பின், அதின் தர்சநத்தைச் செய்துகொள்வது போலும். கழணியைப் பயிர் செய்தபின், அதைப் பார்க்கப்போவது போலும், அதிதிக்குச் செய்யவேண்டிய உபசாரங்களைச் செய்து, அவனை த்ருப்திசெய்து வைத்தபின்பு, அவன் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளல் போலும், இக்குணம் படைத்தவன் தன் முன்னிருப்பவன் குறைகளை, தன் குணநிறைவால் நிரப்பி வைத்து, பின்பு அவனைப் பார்த்து ஸந்தோஷப்படுவான், அன்றியும் பிறருக்குத் தெரியாமல், அவன் மறைத்துவைத்துக்கொண்டிருக்கும் குற்றங்களை, எடுத்துச் சொல்லி, அவனைப் புண்படுத்தான்; அவன் தீமைகளைப் பிறரறியும்படி, எடுத்துச் சொல்லான்; அவன் குற்றங்களைக்கொண்டு அவனுக்கு ஓர் பெயரிட்டு அழைக்கமாட்டான்; கீழே விழுந்தவன் விஷயத்தில், ஏதோ ஓர் உபாயம் செய்து, அவனைத் தூக்கி நிற்க வைப்பானே தவிர, அவனை மர்மஸ்தானத்தில் பேதிக்கமாட்டான்; மிக்கத் தாழ்ந்தவனை உத்தமனாக பாவிப்பான்; அப்படிச் செய்வதைவிட்டு அவனிடத்தில் இருக்கும் தோஷங்களை மனஸில் ஏற்றிக் கொள்ளமாட்டான். அப்பா, இப்படி யெல்லாம் செய்வதுதான் அபைசுநத்தின் உண்மையான லக்ஷணங்கள் ஆகும். மோக்ஷம் அடைவதற்கு அநுஷ்டிக்கப்பட வேண்டும் ஸாதநங்களுக்குள், இது முக்யமான ஸாதநமாகும்.

பூதங்கள் விஷயத்தில் தயை

பூர்ணசந்த்ரனுடைய சந்த்ரிகையானது பெரியவன் சின்னவ னென்று பகுத்தறியாமல், எல்லாருக்கும் குளிர்ச்சியை உண்டாக்கிவைப்பதுபோல், இந்த தயையின் ஸ்வரூபம் இருந்துகொண்டு, துக்கத்தால் வருந்துகிறவர்கள் துக்கத்தைப் போக்கிவைப்பதில் இருக்கும் பரபரப்பால், உத்தமாதமர்கள் என்னும் பகுத்தறிவற்றதாய் இருக்கும். அன்றியும் இந்த தயையை பாராட்டியிருப்பவன், தன் சரீரத்தை அழித்துக்கொண்டுகூட தான் ஓடும் வழியில் உள்ள புல்லை வளரச் செய்துகொண்டுபோகும் ஜலம் போல், தன் கண்ணுக்குப் பட்டவர்கள் யாராயிருந்தாலும் ஸரியே,

அவர்கள் துக்கத்தைப் பார்த்து, மனஸு தளர்ந்து கலவரப்பட்டுப்போய், அவர்களுக்குதவி செய்வதில் தன்னாத்ம ஸ்வரூபத்தையே நாசம் செய்து வைத்தாலும், தான் செய்ததைப் போதாதாகவே எண்ணுவான். பள்ளங்களைப் பார்த்து, அவற்றின் குறைவை முற்றிலும் பூர்த்திசெய்தா லல்லது அப்புறம் போக அறியாத நீரைப்போலும், உலகில் சோர்வடைந்தவர்கள் தளர்ச்சியைப் போக்கி, அவர்கள் மனதைக் களிக்கச் செய்தபின்பே, அவன் முன் செல்வான், காலில் தைத்த முள்ளானது, நடக்கும் போதெல்லாம், உருத்திக்கொண்டு ப்ராணஸங்கடத்தை உண்டுபண்ணி வைத்தல்போலும், முன்காணப்பட்டவனுடைய ஸங்கடத்தைப் பார்த்து, அவன் ஸஹிக்கமுடியாதவனாய் பொரிந்து போவான். அன்றியும், பாதத்திற்பட்ட குளிர்ச்சியானது கண்வரைக்கும் ஏறிவிடுதல் போலும், அவன் பிறர்கள் ஸுகத்தைக் கண்டு ஸுகித்தவன் ஆவான், வளர்த்துவ தென்? உலகில் தாஹம் எடுத்தவனுடைய உபயோகத்துக்கே நீர் ஸ்ருஷ்டித்து வைக்கப்பட்டிருப்பது போலும், துக்கிதர்களுக்கு உயோகப்படவேண்டிய வஸ்துவாய்த் தன்னைப் பாவித்து, அவன் உலகில் இருந்து தீர்வான், இத்தன்மைப்பட்டவனே மூர்த்தீகரித்த தயையாவான். அவன் பிறந்தது முதற்கொண்டு, நான் அவனுக்குக் கடனாளி யாகிறேன்.

அலோலுப்த்வம்

தாமரைப்பூவானது ஸூர்யனைத் தன்னுயிருடன் அநுஸரித்தே நின்றாலும், ஸூர்யன் அப்பூவின் பரிமளத்தைக் கையாற் கூட ஸ்பர்சியாதது போலும், வஸந்தருது ஏற்பட்டு, வனசோபைகளின் ஸைந்யம் முழுவதும் அதன்முன் வந்துநிற்கும்போது, அதின் அல்பாம்சத்தைக் கூட, கைப்பற்றிக்கொள்ளாமல் .அது போய்விடுவதுபோலும், (இது நிற்கட்டும்) மஹாஸித்திகளைத் தன்னுடன் இட்டுக்கொண்டு லக்ஷ்மீதேவியே ஸமீபத்தில் வந்துநின்றாலும், விஷ்ணுவானவர் அவளைக் கண்ணெடுத்துக்கூடப் பாராததுபோலும், இவ்வுலகிற் கிடைக்கக் கூடிய, அல்லது ஸ்வர்க்கத்தில் கிடைக்கக்கூடிய, போகங்கள் அனைத்தும் ஒருவன் இஷ்டங்களைப் பூர்ணம்செய்துவைக்கும் அடிமையாய்ப் போயினும், அவற்றைப் புசித்தல் அவன் மனஸுக்கு ருசிக்காதுபோய், (வளர்த்துவதென்?) ஓர் வேடிக்கையாய்க்கூட அவன் ஜீவன் ஆசையுள்ள தாகாமற்போனால், அப்படி இருக்கும் ஓர் தசைக்குத் தான் அலோலுப்த்வம் என்றுபெயர்

மார்த்தவம்

தேனீக்கு அதின் கூண்டு போலும், ஜலஜந்துக்களுக்கு ஜலம் போலவும், பக்ஷிகளுக்கு அந்தராளம் (ஆகாசம்) போலவும், தனக்குள் நுழைவதற்கும், வெளிப்படுவதற்கும், உள்ளே தங்கியிருப்பதற்கும் எப்போதும் உடன்படுகிறதாய், பாலகனுக்கு ஸுகமுண்டாக வேண்டும் என்றே தாயின் ஸ்நேஹபாவம் இருப்பது போலும், வஸந்த காலத்தின் தொடக்கத்தில் ஏற்படும் ம்ருதுவான மலயாநிலம் போலும் ப்ரியமானவர்களுடைய தர்சனம் கண்ணுக்கு ஆநந்தகரமாயிருப்பதுபோலும், தன் குஞ்சுகளைப் போஷித்துவைக்கும் ஆமையின் பார்வைபோலும், ஸர்வ பூதங்களுக்கும் ஹிதத்தையே செய்துவைக்கிறதாய், இருக்கும் நடத்தை யெதுவோ அதுவே மார்த்தவத்தின் லக்ஷணம் ஆகும். ஸ்பர்சத்துக்கு ம்ருதுவாயும், வாயிற்போட்டுக்கொண்டால் ருசிவத்தாயும், மூக்குக்கு ஸுவாஸனை யுள்ளதாயும், பார்வைக்குப் பளபள வென்றும் இருக்கும் கர்ப்பூரம், இத்தோடுகூட எவ்வள வுட்கொண்டாலும் சரீரத்துக்குத் தீங்குசெய்யாததாயும் இருந்துவிட்டால், அது இந்த மார்த்தவத்துக்கு உபமானமாகும். மஹா பூதங்களுக்கும் வயிற்றில் இடம் கொடுத்துக் கொண்டு, பரமாணுவுக்குள்ளும் அடங்கிப்போகும் இயற்கையுடைத்தானதாய், விச்வத்தில் உள்ள அனைத்தையும் அநுஸரித்து நிற்கும் ஆகாசம்போலவும் (மேலும் என்ன சொல்லலாம்?) ஜகத்தனைத்தின் விஷயத்திலும், அதின் ப்ராணனும் ஜீவனுமே என்று சொல்லும்படியாய், நடந்துகொள்ளும் ஓர் குணமே மார்த்தவம் எனப்படும்.

ஹ்ரீ

ஓர் அரசன் யுத்தத்தில் அபஜயமடைந்தபின் வெட்கத்தால் மிக்கவருந்துவதுபோலும் மானத்தோடு பிழைத்தவன் தனக்கு மானக்குறை ஏற்பட்டதால் முகசோபை இழந்துவிடுதல் போலும், அறியாத்தனமாய் பஞ்சமன் வீட்டில் நுழைந்விட்ட ஸந்யாஸி மிக்க வெட்கப்படுதல் போலும், க்ஷத்ரியனுக்கு யுத்தத்தை விட்டு ஓடிப்போவது பொறுக்கமுடியாத லஜ்ஜையாய் இருப்பதுபோலும், ஓர் ஸதியை விதவை என்று பெயரிட்டழைத்தலும், அழகுபடைத்த ஒருவனுக்குக் குஷ்டரோகமும், நன்குமதிக்கப்பட்ட ஒருவனுக்குப் பழிப்பு ஏற்படுவதும், ப்ராணஸங்கடமான மானக்கேடு ஆவதுபோலும், மூன்றரைமுழம் பரிமாணமுள்ள பிணமாய் ஜீவித்திருந்து, பிறந்து, பிறந்து, திரும்பவும் திரும்பவும் செத்துக்கொண்டு,

கருப்பை என்னும் மூசில் ரக்தத்தாலும் மூத்ரத்தாலும் வர்க்கப்பட்டவனாய் இருக்கையையே ஓர் பெரிய மானத்கே டென்றும்,(மிக்க வளர்ப்பதென் ?) தேஹம் படைத்தவனாய் ஓர் நாமமும் உருவமும் உள்ளவனாய் இருப்பதைக் காட்டிலும் பெருத்தமானக்கேடு இன்னும் என்ன இருக்கிறது என்றும் பாவித்து; இப்படி அபமாநகரமான சரீரத்தின் சேர்க்கையால் ஸாதுக்கள் பாராட்டி நிற்கும் அருவருப்பே, இங்கே ஹ்ரீ எனப்படுகிறது. மானம் கெட்டவர்களோ இந்த சரீரத்தின் சேர்க்கையை, ஓர் பெருமை என்று பாவிக்கிறார்கள்.

அசாபலம்

கயிற்றால் ஆட்டப்படும் பொம்மையின் கயிறு அறுந்துபோன உடன், அதின் ஆட்டம் ஒய்ந்துபோவதுபோலும், ப்ராணவாயுவின் ஒட்டத்தைக் கட்டிப்போட்டால் கர்மேந்த்ரியங்களின் ஆட்டம் ஒய்ந்துபோகிறது. ஸுர்யன் அஸ்தமித்தபிறகு கிரணங்களுடைய வ்யாப்தி இல்லாமற்போவதுபோலும் மனஸைக் கட்டிவிட்டால், ஞானேந்த்ரியங்கள் வேலை செய்யாமல் ஒய்ந்துபோகின்றன. இப்படி மனஸையும் ப்ராணவாயுவையும் அடக்கிவிடுவதால், பத்திந்த்ரியங்களும் சக்தியற்றுப் போகின்றன. இப்படி ஸதா செய்துகொண்டிருக்கும் ஓர் அப்பியாஸத்தால், மனதில் ஏற்படும் உறுதிக்கு அசாபலம் என்று பெயர்.

तेजः क्षमा धृतिः शौचमद्रोहो नातिमानिता ।
भवन्ति सम्पदं दैवीमभिजातस्य भारत ।।३।।

தேஜ: க்ஷமா த்ருதி: ஶௌச மத்ரோஹோ நாதிமானிதா।
பவந்தி ஸம்பதம் தைவீமபிஜாதஸ்ய பாரத ॥ 3

தேஜஸ்

ஈச்வரப்ராப்திக்காக, ஞாநயோகியானவன் ஸாத நாப்யாஸம் செய்யத்தொடங்கியபின், அவனுடைய தைர்யத்துக்கு ஓர் குறைவும் நேராது. அக்நியில் விழுந்து ப்ராணனை விட வேண்டியதான பெருத்த ஸங்கடத்தைக்கூட, ஓர் ஸதியானவள், இறந்துபோன தன் கணவனிடம் போய்ச்சேரும் பரபரப்பில், ஓர் பொருட்டாய் மதியாததுபோலும், அவன் விஷயங்களின் ஸமூஹத்தை ஆத்மப்ராப்திக்கு முன்னிட்டுப் பார்த்து, அவற்றை விஷமாகவே பாவித்து, சூந்யம் என்று

சொல்லப்பட்ட ஆத்மஸ்வரூபத்துக்குக் கொண்டுபோகும் இக்கட்டான வழியில் விரைந்து நடப்பான். அவன் அப்படி விரைந்து போகும் போது, சாஸ்திர விலக்குகள் என்னும் தடைகள் விலகிப்போகின்றன; சாஸ்த்ரவிதிகளை அநுஷ்டித்துத்தீர வேண்டும் என்பது, அவனைத் தடுத்துவைக்க முடிவதில்லை; மஹாஸித்திகள் குறுக்கிட்டால், அவற்றைக் கண்டு, அவன் அந்தராத்மா ஆசைப்படாது. இப்படி ஈச்வரனை அடைவதற்காக, அவன் மனஸு இயற்கையாகவே ஒன்றாலும் தடுக்கப்படாமல் ஓடும் ஓட்டத்தின் ஆத்யாத்மிகமான தேஜஸ் ஸென்று பெயர்.

க்ஷமை

தேஹமானது மயிர்களனைத்தையும் தாங்கித் கொண்டிருந்ததும், அப்படித் தாங்கிக் கொண்டிருப்பதை அறியாதது போலும், பொறுமைபடைத்தவர்களனைவர்களுக்குள்ளும் சிறந்தவனாயிருந்தும், அப்படித் தான் இருப்பதாக எண்ணி, கர்வம் அடையாதிருப்பதே க்ஷமையாகும்.

த்ருதி

கொழுப்படைந்து, ந்யாய மென்றும், அந்யாயம் என்றும் பாராமல், விஷயங்களை ஸேவிக்க படபடத்துக் கொண்டிருக்கும் இந்த்ரியங்களின் வேகமும், பூர்வஜந்மங்களிற் செய்த துஷ்கர்மங்களின் பலனாய் உண்டாயிருக்கும் மிக்கக் கொடுமையான வ்யாதியும், ப்ரியவஸ்துக்களினின்று பிரிவும், அப்ரியவஸ்துக்களின் சேர்க்கையும், இவைகள் அனைத்தும் ஏக காலத்தில் ஒன்று சேர்ந்து, பெருத்த வெள்ளமாய்ப் புரண்டுவந்து, தன்மேல் தாக்கினபோதிலும், இந்த த்ருதி படைத்தவன் அகஸ்த்ய முனியைக் காட்டிலும் மிகுந்த தைர்யம் படைத்தவனாய், தான் இருக்கும் நிலையை விட்டுப் பெயராது, ஆதிபௌதி காதிதைவிகா த்யாத்மிகங்களான உபத்ரவங்களனைத்தும் ஒன்றுசேர்ந்து வந்து தன்மேற்றாக்கினாலும், அவற்றை விழுங்கிவிடுவான் மனக்கலக்கத்தை யுண்டாக்கத்தக்க இவ்வகையான ஸந்தர்ப்பத்தில், மனஸில் தைர்யத்தை வ்ருத்திசெய்து கொண்டு, தகைமைபெற்ற நிலையினின்று தவறாது இருக்கையே த்ருதி என்றறி.

சௌசம்

அழுக்கற நன்றாய்த் துலக்கப்பட்டிருக்கும் தங்கக் கலசத்தில் பரிசுத்தமான கங்காஜலத்தை நிறப்பிவைத்தாற் போலும்.

சௌசம் என்ப திருக்கும். வெளிப்புறமாகிய தேஹத்தால், நிஷ்காமமான கர்மங்களைச் செய்துகொண்டு, அந்தராத்மாவில் பரிசுத்தமான தத்வஞானமும் ஏற்பட்டிருப்பதான ஓர் சுசித்வம், உள்ளும் புறமும் மூர்த்தீகரித்து நின்றால், அந்நிலைக்குத் தான் சௌசம் என்று பெயர்.

அத்ரோஹம்

தன்னை அடைந்தவர்களுடைய பாபத்தையும், அதின் கார்யமாகிய தாபத்தையும் போக்கிக்கொண்டு, தன் கரையில் உள்ள ஸ்தாவரங்களை, தன் னீரத்தால் வளர்த்துக்கொண்டு, தான் ஸமுத்ரம் போய்ச்சேரும் கங்கையின் ஜலம்போலும், உலகத்தார் பார்வையை நாசம்செய்யும் இருட்டைப் போக்கிக் கொண்டு, உலகத்தின் அழகுகளை வெளிப்படுத்திக் காட்டிவைத்துக்கொண்டு, தான் தினந்தோறும் செய்யவேண்டிய ப்ரதக்ஷிணத்தைச் செய்துகொண்டு போகும் ஸூர்யனைப்போலும், கட்டுண்டவர்களை விடுவித்துக்கொண்டும், ஜலத்தில் முழுகிப்போகிறவர்களை இழுத்துக் கறையேற்றிக்கொண்டும், துன்புற்றவர்களுடைய துன்பத்தைப் போக்கிக்கொண்டும், சுருக்கிச்சொல்ல, தன்முன் காணப்பட்டவர்களுக்கு ராத்ரிப்பகலாய் ஸுகப் பெருக்கைச் செய்துகொடுத்துக் கொண்டு, தான் செய்யவேண்டிய வேலையையும் தவறாது நடத்திக்கொள்வது அனைவருக்குமே தர்மமாயிருக்க, உலகத்தார் பெரும்பாலும் அப்படிச் செய்யாமல், தம்முடைய கார்யத்தை ஸாதித்துக் கொள்வதற்காகப் பிறருக்கு அஹிதம்செய்தல் என்னும் கோணலான வழியில் இறங்குகிறார்கள். அப்படிச் செய்யாதிருக்கையே அத்ரோஹமாகும். அத்ரோஹம் என்பதை நீ கண்முன் வைத்துப் பார்க்கும் வண்ணம், அது சொல்லப்பட்டுத் தீர்ந்தது.

அதிமாநிதையின்மை

ஹே அர்ஜுநா. சிவன் தலையில் ஏறி ஸங்கோசம் அடைந்துபோன கங்கையைப்போலும், பிறர்களால் பூஜ்யனாய் கொண்டாடப்படும்போது, லஜ்ஜைப்படுதல் எதுவோ, அதையே, ஹே ஸுமதி அமாநித்வம் என்று சொல்லவேண்டும். இதுவே கீழே (அத் 13-ச்லோகம் 7 பார்க்க) சொல்லப்பட்டிருப்பதால், இதை இன்னும் விவரித்துச் சொல்லவேண்டிய அவச்யமில்லை.

கீழே சொல்லப்பட்டிருக்கும் குணங்களின் பெருமை

இவ்விருபத்தாறு குணங்களுக்கும், மோக்ஷ சக்கரவர்த்தியான ஈச்வரனால், கொடுக்கப்பட்டிருக்கும் மான்யம் என்று, சொல்லும்படியாய் தைவீஸம்பத்தி என்னும் பதவி இருக்கிறது. இவ்விருபத்தாறு குணங்களாகிய தீர்த்தத்தால் நிறைந்து, எக்காலும் புதுமை பொருந்தியதாய், வைராக்யம் என்னும் ஸகரனுடைய பாக்யத்தால், அவனைக் கரையேற்றுவதற்காக வந்த கங்கையோ என்றும், – முக்தி என்கிற பெண்ணானவள், இவ்வகைப்பட்ட குணங்கள் என்னும் புஷ்பங்களால் அமைந்த ஓர் மாலையைக் கையில் எடுத்துக்கொண்டு, வைராக்ய நிறைவால் ஒன்றையும் வேண்டாதிருக்கும் ஓர் புருஷனுடைய கழுத்தைத் தேடிக்கொண்டிருக்கிறாள் என்றும்,– இவ்விருபத்தாறு குணங்களாதிய ஜ்யோதிகளை ஓர் தட்டில் ஏற்றிவைத்துக்கொண்டு, கீதை என்பவள் தன்னுடைய புருஷனாகிய ஆத்மஸ்வரூபத்துக்கு ஆரத்தி சுற்றக்கருதுகிறாள் என்றும்,– – அதிபரிசுத்தமான இக்குணங்கள் என்னும் முத்துக்கள், கீதை என்னும் முத்துச் சிப்பியினின்று வெளிப்பட்டு நிற்கின்றன வென்றும்–சொல்லும்படியாய், இந்த தெய்வீ ஸம்பத்தி இருக்கிறது. இப்படி யெல்லாம் மிக்க வர்ணிப்பதென்? தைவீஸம்பத்தி என்பது இக்குணங்களின் கூட்டமான ஓர் உரு வெடுத்துக்கொண்டு, வெளிப்பட்டு நிற்கிற தென்றே சொல்ல வேண்டும்.

ஆஸுரீ ஸம்பத்தி

துக்கத்தால், உட்புறமேல்லாம் நிறைந்ததாய், வெளிப்புறத்தில் தோஷங்கள் என்ற முட்கள் நிரம்பி இருக்கும், ஆஸுரி என்று பெயர்கொண்ட ஸம்பத்தி, இனி வெளிப்பட்டு நிற்கும், கவனித்துப் பார்த்துக்கொள். நீ இதை ஒதுக்கி வைக்கவேண்டு மாகையால், உன்னுடைய கார்யத்துக்கு விருத்தமான இதை, உன்னுடைய முழு கவனத்தைக்கொண்டும் கேட்டறிந்து கொள்ளவேண்டும், விஷக்கூட்டங்களெல்லாம் ஒன்று சேர்ந்த காளகூடம் போன்றதாயும், மிக்கப் பேரிய நரகதுக்கத்தை விளைவித்துக் கோடுப்பதாயும் இருக்கும், பயங்கரமான தோஷங்களின் கூட்டமே, ஆஸுரீ ஸம்பத்தி என்று சொல்லப்படுகிறது.

दम्भो दर्पोऽभिमानश्च क्रोधः पारुष्यमेव च ।
अज्ञानं चाभिजातस्य पार्थ सम्पदमासुरीम् ।। ४ ।।

தம்போ தர்போ பி மானஶ்ச க்ரோத: பாருஷ்யமேவ ச ।
அக்ஞானம் சாபி ஜாதஸ்ய பார்த ஸம்பத மாஸுரீம் ॥ 4 ॥

தம்பம்

அந்த ஆஸுரீஸம்பத்தியில் அடங்கிய தோஷங்களுக்குள், தானே பெரியது என்று பேரிகை அடித்துக்கொண்டிருக்கும் தோஷம், தம்பம் ஆகும். நமஸ்காரம் முதலிய ஸேவைகளால், ஸகல பாபங்களையும் போக்கிவைக்கும் தீர்த்தம் என்று சொல்லவேண்டிய தன் தாயை, ஜநங்கள் பார்க்கும்படி நக்நம் செய்து வைத்தால், அவளே தான் கெட்டகதி அடைவதற்குக் காரணமாதல்போலும், ஸகல அபீஷ்டங்களையும் ஸம்பாதித்துக்கொடுப்பதான குரூபதிஷ்டமான மந்த்ரமே, நாற்சந்தியில் யாவரும் அறிய எடுத்துச் சொல்லப்படுவதால், ஸகல அநிஷ்டத்துக்கும் காரணமாதல்போலும், தான் பெரும் வெள்ளத்தில் முழுகிக்கொண்டு, ஜநங்களை ஸுகமாய்த் தாண்டிவைக்கும் படகே, அதைத் தலைமேல் கட்டிக்கொண்டவனை, ஜலத்தில் முழுக்கிவிடுவதுபோலும், தேஹத்தைப் போஷித்து ஜீவிக்கச்செய்யும் அன்னமே, அதைச் சாப்பிடும்போது அதின் பெருமையை எடுத்து வர்ணிக்கிறவனுக்கு, விஷமாய்ப் போவது (ஸமீபத்தில் இருந்து கேட்டுக் கொண்டிருப்பவனுடைய த்ருஷ்டி பட்டு, அது ஜரிக்காமல் வ்யாதியை விளைவிக்கிறது என்பது கருத்து) போலும், ஐஹிகாமுஷ்மிக ஸுகங்களைக் கொடுத்துதவி, ஸம்ஸாரத்தைத் தாண்டிவைக்கும் தர்மமே, பல ரறிய எடுத்துக் கூறினால், தோஷத்தை உண்டுபண்ணிவைக்கிறது. ஆகவே தன் வாக்கால் தான் செய்த நன்மைகளை யாவரும் அறிய கூறுவதால், அவையே தீமைகள் ஆகின்றன. இப்படிச் செய்வது தான், தம்பம் என்று சொல்லப்படும்.

தர்ப்பம்

முற்றிலும் ஞாநஹீநனாயும் துர்க்குணங்கள் படைத்தவனாயும், இருக்கிறவனுடைய நாக்கில் கல்வியின் ஓர் துளி பட்டமாத்ரத்தில், அவனுக்கு ப்ரஹ்மாவின் ஸபையில் நடக்கும் ஸம்வாதங்கள் ருசிக்காமற் போகும், குதிரைகள் பழக்குகிறவனால் அடிப்பட்டுக்கொண்டு, இன்னும் ஸரியாய் ஓடத் தெரிந்துகொள்ளாத குதிரை ஐராவதத்தைக்கூட அல்பமாய் நினைக்கும்; முள்ளுச்செடியின் நுணியில் ஏறியிருக்கும் ஓணான், தன் பதவிக்கு முன்னால் ஸ்வர்க்கலோகம்கூட தாழ்ந்ததென்று நினைக்கும்;

வைக்கோலையே எரியும் ஸாமானாய்க் கொண்ட நெருப்பு, ஆகாசம் வரைக்கும் தாவும்; ஓர் சிறு குட்டையில் இருப்பை, மீன் பெரிதாய் நினைத்து, ஸமுத்ரத்தைக்கூட லக்ஷியம் செய்யாது; ஓர் ஏழை, ஒரு நாள் தனக்கு புறத்தியான் வீட்டு சாப்பாடு கிடைத்து விட்டதால், தானே பாக்யசாலி என்று நினைத்துக் கொள்வான். அப்படியே கொஞ்சகாலம் இருந்து நாசமடையும் ஸ்த்ரீ, தநம், வித்யை, ஸ்துதி, பகுமானம், இவைகளை அடைந்த மாத்திரத்தில், அல்பனான ஒருவன் இறுமாப்பு அடைவான். ஓர் அத்ருஷ்டஹீநனுக்கு, மேகத்தின் நிழலில் நிற்கக் கிடைத்த மாத்ரத்தில், அவன் தன்னுடைய வீட்டை இடித்து தள்ளினாற் போலும், கானல் நீரைப் பார்த்து தடாகம் வேண்டாம் என்று அதன் கரைகளை உடைத்து விட்டாற் போலும், செல்வமதத்தாற்பொங்கி, வரம்பு மீறி நடத்தலே, தர்ப்பம் என்று நிச்சயமாய்ச் சொல்வேன்.

அபிமானம்

ஜகம் எல்லாம் தேஹத்தில் விச்வாஸம் பாராட்டுகிறது, விச்வத்துக் கெல்லாம் பூஜ்யன் ஈச்வரன், ஜகத்துக் கெல்லாம் ஒரே தேஜஸ்ஸாக இந்த ஸூர்யன் விளங்குகிறான், உலகமனைத்தும் ஸார்வபௌமபதத்தை அடைய ஆசைப்படுதிறது, சாவற்றிருப்பதற்து உலகத்தா ரனைவரும் ஆசைப்படுகிறார்கள் என்று இப்படி நிர்விவாதமாய் (யாவராலும் ஒத்துக்கொள்ளப் பட்டவையாய்) இருக்கும் விஷயங்களை, எவனாவது விவரித்து வர்ணிக்கத் தொடிங்கினால், அதைக் கேட்டு, மாத்ஸர்யம் பாராட்டிக்கொண்டு கர்வத்தால் வீங்கத் தொடங்கி, "ஈச்வரனைக் கடித்துத் தின்றுவிடுவேன், வேதத்தை விஷம் வைத்து கொன்றுவிடுவேன்" என்று சொல்லிக்கொண்டு, ஏதேனும் ஓர் வஸ்து பெருமையாய்க் கொண்டாடப்படுவதற்துக் காரணமாய், அதினிடத்தில் ஏற்பட்டிருக்கும் ஓர் நற்குணத்தை, இல்லை யென்று மறுத்துக் கொண்டிருக்கும் ஒருவன், அபிமானம் படைத்தவ னாவான், விட்டிற்பூச்சி தீபஜ்யோதிமேலும், மினுமினுப்பூச்சி ஸூர்யன்மேலும், ஊர்க்குருவி ஸமுத்ரத்தின் மேலும், பகை பாராட்டுவதுபோல், தன்னையே தான். பெரியவனாய் நினைத்துகொண்டு, இந்த அபிமானம் படைத்தவன் ஈச்வரனுடைய பெயரைக் காதாற் கேட்கக்கூட ஸஹியான். தனக்கு பூஜ்யனான தகப்பனைப் பார்த்து, "இவன் என் சக்திளத்தியாய் ஏற்பட்டான்," என்பான். இப்படி அஹம்பாவப் பெருக்கால், தடித்தனம் படைத்திருக்கும் ஒருவன் அபிமானி

ஆவான். இப்படி அறிவுகேடனான அவன் ரௌரவநரகத்தின் ராஜமார்க்கம் ஆவான்.

க்ரோதம்

முன் காணப்பட்டவன் ஸுகித்திருப்பதைப் பார்த்தமாத்ரத்தில், க்ரோதாக்நி என்னும் விஷம் பொங்கிவழிகிற மனோவ்ருத்தியுள்ளவனாய், நன்றாய்க் காய்ந்திருக்கும் எண்ணெய் குளிர்ந்த ஜலத்தின் ஸம்பந்தத்தால், பற்றியெரிதல் போலும், சந்த்ரனைக் கண்டு வயிறெரியும் நரியைப்போலும், உலகத்தார் வ்யாபாரங்கள் ஸரியாய் நடந்துவருவதற்குத் தன் வெளிச்சத்தை உதவி செய்யும் ஸூர்யன், காலையில் உதித்ததைக் கண்டு, பாபியாகிய ஆந்தையின் கண்தெறித்துப்போவது போலும், உலகத்தாருடைய ஸுகத்துக்குக் காரணமாய் போது விடிந்ததைக் கண்டு திருடன் அதைத் தனக்கு சாவைக்காட்டிலும் பெருத்த ஆபத்தாய்ப் பாவிப்பதுபோலும், பாம்பினிடத்தில் பாலே காளகூடவிஷம் ஆய்விடுதல் போலும், ஸமுத்ரம் தன் கரையற்ற ஜலத்தைக்கொண்டு த்ருப்திசெய்துவைத்தாலும், சாந்த மாகாத வடவைத்தீபோலும், முன்னிருப்பவன் பாக்யத்தால், அவனுக்கு ஏற்பட்டிருக்கும் வித்யை. ஸுகம், ஐச்வர்யம், முதலியவற்றைப் பார்த்தமாத்திரத்தில், கோபம் இருமடங்காய்ப் பொங்கும் ஓர் ஸ்வபாவமே க்ரோதம் எனப்படுதிறது.

பாருஷ்யம்

மனஸு ஸர்ப்பத்தின் புத்தாயும், கண் பார்வைகள் பாணவர்ஷமாயும், வார்த்தைகள் நெருப்புத்தணல்களை வாரிக்கொட்டுகின்றனவாயும், மற்ற வ்யாபாரங்கள் எஃகினால் செய்த வாளாயும், இப்படியே உள்ளும் புறமும் மிக்கக்கொடுமை உள்ளவனாய் எவனிருப்பானோ, அந்தக் கேடுகெட்ட மனுஷ்யன் பாருஷ்யத்தின் அவதாரம் என்றறி. இனி அஜ்ஞானத்தின் லக்ஷணங்களைச் சொல்வேன், கேள்.

அஜ்ஞானம்

குளிர்ச்சி வெப்பம் என்று அறியாத கற்பாறையைப்போலும்,- ராத்ரிப் பகல்களின் வித்யாஸம் அறியாத பிறவிக்குருடனைப்போலும்,- இதைப் புசிக்கலாம் இதைப் புசிக்கக்கூடாது தென்றறியாத நெருப்பைப் போலும்,- தங்கம் இரும்பு என்ற வித்யாஸம் அறியாத

ஸ்பர்சவேதியைப்போலும்,- பலவித சுவை உள்ள உண்பண்டங்களில் நுழைந்தும், அவற்றின் சுவை பேதத்தை யறியாத கரண்டியைப்போலும்,-இது மார்க்கம், இது மார்க்கமில்லை என்று அறியாத காற்றப்போலும்,- சுத்தமென்றும் அசுத்த மென்றும் பாராமல், கண்டதை யெல்லாம் வாயிற் போட்டுக்கொள்ளும் ஓர் குழந்தையைப்போலும்,- க்ருத்யா க்ருத்யங்களின் விவேகம் அற்றவனாய், பாபபுண்யங்களை ஒன்றடிமன்றடியாய்க் கலந்து ஸேவிக்கிறவனாய், கசப்பு தித்திப்பென்னும் உணர்ச்சியற்றவனாயிருக்கும் ஓர் நிலைக்கு, அஜ்ஞானம் என்று பெயர். இதில் ஸந்தேஹமே இல்லை.

உபஸம்ஹாரம்

இவ்விதம் ஆறுவிதப்பட்ட தோஷங்களின் சேர்க்கை, ஆஸுரீஸம்பத்தியின் தேஹத்திற் குடிகொண்டிருப்பதால், அது, சிறுத்த சரீரம் படைத்த பாம்பானது, விஷத்தின் சேர்க்கையால், மிக்க வல்லமை படைத்ததாய் இருப்பது போலும், மிக்க வலிமைபெற்று விளங்குகிறது. வடவாக்நி, ப்ரளயாக்நி, இடியின் தீ, என்ற இந்த மூவகைப்பட்ட நெருப்பும், மூன்று என்ற கணக்கில் அடங்கிப்போவதால், அல்பமாகவே தோன்றினபோதிலும், விச்வமெல்லாம் அவற்றின் ப்ராணா ஹுதிக்குப் (ப்ரஹ்மணர்கள் உண்ணத் தலைப்படும் போது, ப்ராணன், அபானன், வ்யாநன், உதானன், ஸமாநன் என்ற ஐந்து ப்ராண வாயுக்களையும் ப்ரஹ்மத்தையும் உத்தேசித்து, ஆறுதடவை, ஒவ்வொரு தடவையும் இரண்டு மூன்று பருக்கைகளை ஆஹுதியாக வாயிற்போட்டுக் கொள்வார்கள். இதற்கு ப்ராணாஹுதி என்று பெயர்) போதாதது போலும், வாதம் பித்தம் ச்லேஷ்மம் என்ற முத்தாதுக்களும் பேதித்துப் போவதாகிய முக்குற்றங்கள் ஏற்பட்டுப்போனபின், ப்ரஹ்மதேவன் காலில் விழுந்தாற்கூட, மரணத்தினின்று தப்பித்துக்கொள்ள முடியாதது போலும், இரண்டு மடங்கு மூன்றாகிய இந்த ஆறு தோஷங்கள் அநர்த்தத்தை விளைவித்தே தீரும். இந்த ஆறு குணங்களாலேயே ஆஸுரீ ஸம்பத்தி என்னும் கட்டடம் முடிவு பெறுமேயாகிலும், இதை அல்பமென்று எண்ணக்கூடாது.

ஒவ்வொருவேளை க்ரூரக்ரஹங்கள் அனைத்தும் ஒன்றுபட்டு, ஒரே ராசியில் வந்து சேருவது போலும், நிந்தகனிடத்தில் பாபங்களனைத்தும் வந்து சேருவது போலும், சாகப்போதிறவன் தேஹத்தில் ஸர்வ ரோகங்களும் வந்து

கூடிக்கொள்வதுபோலும், அசுப முஹூர்த்தத்தில் கெட்ட யோகங்களனைத்தும் வந்து சேர்ந்து கொள்வது போலும், நம்பினவன் திருடன் கையில் அகப்பட்டுக் கொண்டது போலும், கஷ்டங்களால் மிக்க ஆயாஸமடைந்திருப்பவன். பெரும் வெள்ளத்தில் விழுந்தாற் போலும், ஓர் மனுஷ்யனுக்கு இந்த தோஷங்கள் பெருத்த அநர்த்தத்தைச் செய்துவைக்கும். ஓர் ஆடு ஏழு கொடுக்குள்ள ஓர் எறும்பை விழுங்கிவிட்டால், எப்படி செத்தேபோகுமோ, அப்படியே இந்த ஆறு தோஷங்களும் எவனிடத்திற் சேருமோ, அவனுக்கு பெருத்த அநர்த்தமே ஏற்படும். இவற்றின் சேர்க்கை எவனுக்கு ஏற்பட்டதோ, அவனுக்கு மோக்ஷமார்க்கம் என்பது அடைப்பட்டுபோய், அவன் ஸம்ஸாரத்திலேயே அழுந்திக்கிடப்பான். அவன் கீழ்க்கீழான பிறப்புகள் என்னும் படிகள் வழியாயிறங்கி, அனைத்துக்கும் கீழான பிறப்புக்குப் போய் சேர்வான். இப்படி இவ்வாறு தோஷங்களும் ஓர் மனுஷ்யனிடத்தில் ஒன்று கூடி, அவனுடைய ஆஸுரீ ஸம்பத்தி மேன்மேலும் பெருகச் செய்யும். இப்படி உலகில் ப்ரஸித்தி அடைந்திருக்கும், தைவீ, அஸுரி, என்ற இவ்விரு ஸம்பத்திகளும், இவற்றின் வேறுவேறு லக்ஷணங்களுடன் எடுத்துச்சொல்லப்பட்டவை யாயின.

दैवी सम्पद्विमोक्षाय निबन्धायासुरी मता ।
मा शुचः सम्पदं दैवीमभिजातोऽसि पाण्डव ॥ ५ ॥

தைவீம் ஸம்பத்விமோக்ஷாய நிபந்தாயாஸுரீ மதா ।
மா ஶுச: ஸம்பதம் தைவீமபி ஜாதோ(அ)ஸி பாண்டவ ॥ 5

இவ்விரண்டுஸம்பத்தியின் பலன்

இவ்விரண்டுக்குள், முன் சொல்லப்பட்டதான தைவீ என்னும் ஸம்பத், மோக்ஷம் என்னும் ஸூர்யன் உதிப்பதற்கு முன்னேற்பட்ட அருணோதயம் ஆகும். மற்றொன்றாகிய ஆஸுரீ ஸம்பத், மோஹம் என்னும் இரும்பால் செய்யப்பட்டு, ஜீவனுக்குப் பூட்டிவைத்திருக்கப்பட்ட விலங்கேயாகும். இதைக் கேட்டு நீ பயப்படவேண்டிய காரணமே இல்லை. பகல், இராத்ரியின் பெருமையைக்கேட்டு, பயப்படுவ துண்டா? இந்த ஆஸுரீ ஸம்பத்துக்கு ஏற்பட்டிருக்கும் பந்தித்துவைக்கும் அதிகாரம் அனைத்தும் முன்சொன்ன ஆறுதோஷங்கள் பற்றிக் கொண்டிருக்கும் அவன் மீதே செல்லும். நீயோ முன்சொல்லப்பட்டவையான தைவீஸம்பத்தி என்னும் இருபத்தாறு ஸத்குணங்களும் நிறைந்துகிடக்கும் உத்தமமான

நிதியாக பிறந்திருக்கிறாய். ஆகையால், ஹே பார்த்தா, இந்த தைவீஸம்பத்தின் உதவியைக் கொண்டு கைவல்யபதத்துக்கு ஸ்வாமியாய், மிக்க அநாயாஸமாய் அப்பதம் நீ போய்ச் சேர்வாய்.

द्वौ भूतसर्गौ लोकेऽस्मिन्दैव आसुर एव च ।
दैवो विस्तरशः प्रोक्त आसुरं पार्थ मे शृणु ।। ६ ।।

த்வௌ பூதஸர்கௌ லோகேঽஸ்மின் தைவ ஆஸுர ஏவ ச ।
தைவோ விஸ்தரஶ: ப்ரோக்த ஆஸுரம் பார்த மே ஶ்ருணு ।। 6

ஆஸுரீஸம்பத்துடையவர்களின் நடத்தையை வர்ணிக்கத் தொடங்கல்

தைவாஸுரங்களாகிய ஸம்பத்துள்ளவர்களான மனுஷ்யர்களுடைய வேறுவேறான ஆசரணத்தின் முறை, அநாதிகாலமாய் இவ்வுலகில் ஏற்பட்டு, நடந்தேறிவருகிறது. இப்படி இவ்விருவகைப் பட்டவர்களாய் ஸ்ருஷ்டிக்கப்பட்டவர்கள் இவ்வுலகில் தங்கள் தங்களுக்கு உரிய மார்க்கத்தினின்று வழுவாது நடந்து வருகிறார்கள். அவர்களுக்குள் தைவீஸம்பத்தைப் படைத்தவர்களின் ஆசரணம், கீழே (13வது அத்யாயத்தில்) ஞாநத்தை விவரமாய் சொன்ன இடத்தில் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டதாய்விட்டது. இப்போது ஆஸுரீ என்னும் ஸம்பத்தியின் விஷயத்தை விவரமாய்ச் சொல்வேன்; நன்றாய்க் கவனித்துக்கேள். ஆனால் நாதம் என்பது ஓர் வாத்யத்தில் ப்ரவேசிக்காமல், சப்தத்தை உண்டுபண்ணி வைக்காததுபோலும், புஷ்பம் இல்லாமல் மகரந்தம் என்பது கிடைக்காதது போலும், இந்த ஆஸுரீ ப்ரக்ருதி, ஓர் சரீரத்தின் ஸம்பந்தம் அற்றதாய் தனித்திருந்தால், அதின் இருப்பு வெளிப்பட்டுத் தோன்றுவதில்லை. கட்டையின் ஆதாரத்தைக்கொண்டு நெருப்பு வெளிப்பட்டுத் தோன்றுவதுபோலும், இந்த ஆஸுரீ ப்ரக்ருதிக்கு ஓர் தேஹத்தோடு ஸம்பந்தம் கிடைத்தபின், அது தன்னிருப்பை வெளிப்படுத்தி வைக்கிறது. பின்பு, கரும்பு பெருக்கப் பெருக்க அதின் ரஸமும் வ்ருத்தி யடைவதுபோலும், அந்த தேஹம் வளர வளர இந்த ப்ரக்ருதியும் வ்ருத்தியடைந்து தோற்றுகிறது. இனி ஆஸுரீ யென்று சொல்லபட்ட தோஷக்கூட்டம், எந்த ப்ராணிகளிடத்தில் சேர்ந்திருக்குமோ, அவற்றின் லக்ஷணத்தை விவரித்துச் சொல்வேன், ஹே அர்ஜுநா.

प्रवृत्तिं च निवृत्तिं च जना न विदुरासुराः ।
न शौचं नापि चाचारो न सत्यं तेषु विद्यते ।।७।।

ப்ரவ்ருத்திம் ச நிவ்ருத்திம் ச ஜனா ந விதுராஸுராः ।
ந ஶௌசம் நாபி சாசாரோ ந ஸத்யம் தேஷு வித்யதே ।। 7

விதிநிஷேதங்களுக்குக் கட்டுப்படாதிருக்கை

புண்யகர்மங்களைச் செய்யவேண்டும் என்றும், பாபத்தினின்று விலகவேண்டுமென்றும், இப்படிப்பட்ட ஓர் நினைப்பே, அவர்களுக்கு ஒருக்காலும் உண்டாவது இல்லை. பட்டுபூச்சி, தனக்கு ஓர் கூடுகட்டிக்கொள்ள வேண்டும் என்னும் ஆவேசத்துக்கு வசப்பட்டுப் போய், தான் கட்டும் கூட்டினின்று தான் வெளிப்படுவதற்கும், அதின் உள்ளே நழைவதற்கும், ஓர் வழி ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும் என்பதை மறந்துபோவதுபோலும், கொடுத்தது திரும்பி வருமா, என்று யோசித்துப் பாரரமலே, அறிவுகேடன் ஓர் திருடனுக்குத் தன் கைப்பொருளைக் கடன் கொடுத்துவிடுவதுபோலும், ஆஸுரஸம்பத்துபடைத்த ஜநங்கள், எதை அநுஷ்டித்தல் வேண்டும், எதினின்று விலகவேண்டும், என்பதை முற்றிலும் அறியார்கள்,

சௌசமும் நல்லொழுக்கமும் இல்லாமை

சௌசம் என்பதை ஸ்வப்நத்திற் கூட அவர்கள் கண்டறியார்கள். கரியானது தன் கருநிறத்தை ஒழித்துக்கொள்வதும் நேரலாம்; காக்கை வெளுப்பானாலும் ஆகும்; ராக்ஷஸனுக்கு மாம்ஸத்தைத் தின்னும் விஷயத்தில் வெறுப்பு ஏற்படலாம்; ஆனால் கள் வைத்திருந்த மட்கலம் எது செய்தாலும் சுத்தாமாகாததுபோலும், ஆஸுரீஸம்பத்துள்ளவர்களிடத்தில் சௌசம் என்பது ஏற்படாது. சாஸ்த்ரங்களை அநுஸரித்து நடத்தல், பெரியவர்களுடைய ஆஞ்ஞையை எதிர்பார்த்தல், வைதிககர்மங்களைச் செய்தல், ஆகிய இவற்றை அவர்கள் மனதால் நினைத்தறியார்கள். ஆடு கண்டதை யெல்லாம் மேய்வதுபோலும், காற்று கண்ட இடத்தில் ப்ரவேசித்தல் போலும், அக்நி ஸம்பந்தப்பட்டதை எல்லாம் பக்ஷித்துவிடுவது போலும், தம் மிஷ்டத்தையே லக்ஷ்யத்தில் வைத்து, தங்களுக்குத் தோன்றியபடி யெல்லாம் அவர்கள் நடப்பார்கள்.

ஸத்யம் அற்றிருக்கை

அவர்கள் எப்போதும் ஸத்யத்தோடு பகைபாராட்டி இருப்பார்கள். தேள், தன் கொடுக்கைக்கொண்டு மனிதர்களுக்கு ஸுகம் உண்டாகும்படி குருகுருவென்று தடவிக்கோடுக்க அறியுமேயானால், அவர்கள் முகத்தினின்று உண்மையான பேச்சு வெளிப்படும். அபாநத்வாரத்தினின்று ஸுகந்தம் புறப்படுமே யாகில், ஆஸுரிஸம்பத்து படைத்தவர்கள் வாயினின்று ஸத்யம் புறப்படும், அவர்கள் ஒன்றும் செய்யாதிருந்தாலும், அவர்கள் தேஹமே இப்படியெல்லாம் அருவருக்கத்தக்கதாய் இருக்கும்.

மேல்வரும் ச்லோகத்துக்கு அவதாரிகை

இனி, அவர்களுடைய பேச்சுக்கள், எவ்வளவு புதுமைபொருந்தியவையா யிருக்கும் என்று, சொல்வேன் கேள். இயற்கையாகவே ஒட்டகையின் ஸர்வாங்கமும் கோணலாயிருப்பதுபோல, அவர்களுடைய ஸர்வ விஷயங்களும் கெட்டவையாகவேயிருக்கும். ஆயினும் அவர்களுடைய துர்க்குணங்களில், எவை இப்போது என் மனஸின்முன் தோன்றுமோ, அவற்றை மாத்ரம் வர்ணிப்பேன், கேள். புகை குடிக்கிறவனுடைய வாயினின்று புகையே புறப்படுவதுபோலும், இவர்களுடைய நடத்தை முற்றிலும் கெட்டதாகவே இருக்கும். அவற்றை வெளிப்படுத்தி வைப்பேன் கேள்.

असत्यमप्रतिष्ठं ते जगदाहुरनीश्वरम् ।
अपरस्परसम्भूतं किमन्यत्कामहैतुकम् ॥८॥

அஸத்யமப்ரதிஷ்டம் தே ஜகதாஹுரநீஶ்வரம் ।
அபரஸ்பர ஸம்பூதம் கிமன்யத் காம ஹைதுகம் ॥ 8

வேதத்துக்கு ஸத்யத்தை இல்லையென்று சொல்லல்

"விச்வம் அநாதியாகவே இருந்துகொண்டிருக்கிறது,-இது ஈச்வரனால் நியமிக்கப் பட்டுக்கொண்டு வருகிறது.- அவனுடைய ந்யாயஸ் தானத்தில், வேதம் ஜீவர்களுடைய ந்யாயாந்யாயங்களை விசாரித்து, அது எவர்களை அந்யாயம் செய்தவர்கள் என்று நிர்மானம் செய்கிறதோ, அவர்கள் நரகலோகத்திற்குப்போய் அங்கே தண்டிக்கப்படுகிறார்கள்,- எவர்கள் ந்யாயம் செய்தவர்களாய் ஏற்படுகிறார்களோ,

அவர்கள் ஸ்வர்க்கலோகம் சென்று, ஸுகங்கள் அநுபவிக்கிறார்கள்," - என்று இப்படி அநாதியாய் நடந்துவரும் லோகவ்யவஸ்தையைக் கேட்டு, இது அனைத்தும் பொய் என்று அவர்கள் சொல்வார்கள், "யஜ்ஞங்களில் ப்ரமை பூண்டவர்கள் யஜ்ஞங்கள் செய்து, ஏமாறிப்போகிறார்கள்; தேவபைத்யம் பிடித்தவர்கள்; பொம்மைகளையும் லிங்கங்களையும் பூஜித்து மோசம் போகிறார்கள்; ஸமாதி என்று ஓர் ஸுகம் இருக்கிறது என்று அறிவுமயக்கம் கொண்டு, யோகிகள் காவிவஸ்த்ரம் பூண்டு, விஷய ஸுகங்களை புசிக்காமல் நஷ்டப்பட்டுப் போகிறார்கள், இவ்வுலகில் தன் தன் பாஹுபலத்தால், எதெதைத் தன்னதாக கட்டிக்கொள்ளலாமோ அததைப் பற்றிக்கொண்டு விஷயஸுகங்களைப் புசிப்பதைத் தவிர வேறு புண்யம் இருக்கிறதா?

தேஹத்தில் தக்க பலமில்லாமையால் போக்யஜாதங்களைத் தன்னதாகச் செய்துகோள்ள முடியாமலும், ஆகவே அவற்றின் ஸுகத்தை, அநுபவிக்க முடியாமலும், போவதால் ஏற்படும் துக்கமே பாபமாகும். ஒருவன், ஸம்பத் மிக்கப்படைத்தவனைக் கொன்று விட்டு, அவன் ஸ்வத்தை யெல்லாம் கட்டிக்கொண்டு ஸுகப்படுகிறானே; அப்படி கொலைசெய்வது பாபமாகில், அதின் கார்யமாய் புண்யபலனாகிய த்ரவ்யப்ராப்தி எப்படி உண்டாயிற்று? பலம் படைத்தவன் பலமில்லாதவனைக் கொன்று தின்னல் அந்யாயம் ஆனால், சிறு மீன்களைக் கொன்று ஜீவிக்கும் பெரியமீன்கள் ஸந்ததியற்றுப் போகவேண்டுமே, அப்படி யாவதைக் காணவில்லையே, என்று இப்படி யெல்லாம் அவர்கள் பேசுவார்கள்.

தர்மாதர்ம வ்யவஸ்தை இல்லை யென்று பேசுதல்

"அன்றியும், இருகுலமும் சுத்தமானவை யென்று விசாரித்துப்பார்த்து, நல்லமுஹூர்த்தம் ஏற்படுத்திக் கொண்டு, பெண்ணுக்கும் பிள்ளைக்கும் விதிவத்தாய் கல்யாணம் செய்துவைப்பதே, ப்ரஜாவ்ருத்திக்குத் தகுந்ததான உபாயமாயிருந்தால், அபரிமிதமாய் ப்ரஜாவ்ருத்தி செய்துவைக்கும் பசுக்களுக்கும் பக்ஷிகளுக்கும், விதிவத்தாக, எவர்கள் விவாஹம் செய்துவைக்கிறார்கள்? களவு செய்து ஸம்பாதித்த த்ரவ்யம், எவனுக்கு விஷமாய் ஏற்பட்டது? மிக்க ப்ரியத்துடன் பிறன் மனைவியைப் புசித்த எவனுக்கு, குஷ்டரோகம் உண்டாயிற்று? ஆகையால் எல்லாருக்கும் ஸ்வாமியாய், ஈச்வரன் ஒருவன் இருக்கிறான் என்பதும் அவன் தர்மாதர்மங்களின் பலன்களாக ஸுகதுக்கங்களைக் கொடுக்கிறான் என்பதும், அவன் பரலோகத்தில்

இப்பலன்களை அநுபவிக்கும்படி செய்து வைக்கிறான் என்பதும், ஆகிய இவை அனைத்தும் உண்மையற்ற பேச்சே; பரலோகம் என்பதும் இல்லை, ஈச்வரனும் இல்லை; இருந்தால், கண்ணுக் கேன் தெரியவில்லை? செய்தவன் இறந்து போனபின், பலனைப் புசிப்பது எவன்?" என்று அவர்கள் சொல்வார்கள்.

உலகு அனைத்தும் காமத்தால் ஏற்பட்டதே என்று சொல்லல்

ஸ்வர்க்கத்தில் ஊர்வசியோடு கூடி இந்த்ரன் ஸுகப்பட்டால், நரகத்தில் புழுக்கள் உழன்று கொண்டு ஸுகித்துக்கொண்டு தான் இருக்கின்றன. ஆகையால் ஸ்வர்க்கமும் நரகமும், புண்யபாபங்களின் பலன்களைப் புசிப்பதற்கு வகுத்து வைக்கப்பட்ட வேறு வேறு உலகங்களல்ல, அவை இரண்டும் காமத்தின் ஸுகத்தை அநுபவிக்க ஏற்பட்ட இடங்களே, அன்றியும் ஸ்த்ரீபுருஷர்கள் தங்கள் காமத்தை பூர்த்தி செய்துகொள்ள, ஒருவரோடு ஒருவர் புணர்வதால், ஜகத்தனைத்தும் உண்டாகின்றது. அப்படி உண்டான ஜகத்தில் உள்ளவர்கள், தங்கள் தங்கள் காமபூர்த்தி செய்து கொள்வதற்காகவே, ஒருவருக்கொருவர் ப்ரேமையுடன் உதவி செய்துகொள்வதால், உலகம் போஷிக்கப்பட்டதாய், பின்பு ஒருவரால் ஒருவருடைய இஷ்டத்தின் பூர்த்திக்குத் தடை ஏற்பட்டு பகை உண்டாய், தங்கள் தங்கள் காமத்தைப் பூர்த்தி செய்துகொள்வதற்காகவே ஒருவரை ஒருவர் கொன்று, உலகு முடிவு பெறுகிறது. இப்படி உலகத்தின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயங்களுக்கு, காமமே காரணமாவதால், வேறோர் காரணம் அநாவச்யமா யிருக்ககிறது. இப்படியெல்லாம், அஸுர ஸம்பத் படைத்தவர்கள் வாதம் செய்வார்கள். இவ்வகைப்பட்ட துஷ்டவாதத்தை, இவ்வளவு எடுத்துச் சொன்னது போதும். இதைச் சொல்வதால் நாக்கு வீண்பட்டுப்போகிறது.

एतां दृष्टिमवष्टभ्य नष्टात्मानोऽल्पबुद्धयः ।
प्रभवन्त्युग्रकर्माणः क्षयाय जगतोऽहिताः ॥९॥

ஏதாம் த்ருஷ்டி மவஷ்டப்ய நஷ்டாத்மானோ ஸ்ல்பபுத்தயः ।
ப்ரபவந்த்யுக்ர கர்மாணः க்ஷயாய ஜகதோ ஹிதாः ॥ 9

ஆஸுர ஸம்பத் படைத்தவர்களுடைய நடவடிக்கை

அன்றியும் ஈச்வரன் விஷயத்தில் பொறாமை பாராட்டி, இப்படியெல்லாம் மேன்மேலும் வ்யர்த்தமாய

உளறிக்தொண்டிருப்பதிலும் பிடிமான மற்றவர்களாய், அவர்கள் இருந்துகொண்டு, எல்லாரும் அறியும்படி, தங்களை நாஸ்திகர்களென்று சொல்லிக்கொண்டு; பெருமை பாராட்டிக்கொள்வார்கள், அந்நிலையில், ஸ்வர்க்க விஷயத்தில் ஆசை, நரகத்தைப்பற்றிய பீதி, இவ்விரண்டின் வாஸனை முற்றிலு மற்றவர்களாய், தேஹம் என்னும் தொழுக்கட்டையில் அடிக்கப்பட்டவர்களாய் மிகவும் அஸஹ்யமான அமேத்யக்குட்டையில் உண்டான குமிழிகள் போன்றவர்களாய், விஷயம் என்ற சேற்றி லவர்கள் புதைந்துபோவார்கள். ஜலசரங்களுக்கு (நீரில் வாழும்ப்ராணிகளுக்கு) சாவுகாலம் ஏற்படும்போது அவை வாஸம் செய்யும் மடுவுக்கு செம்படவர்கள் கூட்டமாய் வந்து சேர்வதுபோலும், தேஹம் மரித்துப்போகவேண்டிய காலத்தில், வ்யாதிகள் ஏற்பட்டுக்கொள்வதுபோலும், உலகத்துக்குக் கேடு ஏற்படுவதற்காக, வால்நக்ஷத்ரம் ஆகாசத்தில் உதயம்ஆவதுபோலும், உலகத்தைத் துன்பப்படுத்தி வைப்பதற்காக அவர்கள் பிறக்கிறார்கள். அசுபம் என்பது பக்வதசையை அடைந்த பின், அதினின்று அசுபங்களே முளையெடுப்பதுபோலும், அவர்கள் பாபத்தின் கீர்த்திஸ்தம்பங்களாய் (சத்ருக்களை ஜயித்து பெருத்த கீர்த்திபடைத்த அரசர்களால் கற்களால் உன்னதமான தூண்களை நிர்மாணம் செய்து வைத்து, அவற்றின் மேல் தங்கள் பெருமையை எழுதி வைப்பது வழக்கம், அவ்வகைப்பட்ட தூண்களுக்கு கீர்த்தி ஸ்தம்பங்கள் என்று பெயர்) உலகில் ஸஞ்சரிப்பார்கள். அன்றியும் முன்னும் பின்னுமாய்த் தன்னை அணுகிய அனைத்தையும் எரித்து விடுவதைத்தவிர, நெருப்புக்கு வேறொன்றும் தெரியாததுபோலும, எவன் அவர்களை அணுகியபோதிலும், அவனுக்கு அஹிதத்தைச் செய்து வைப்பதைத் தவிர, வேறொன்றையும் அவர்கள் அறியார்கள். அதைச் செய்வதில், அவர்கள் எவ்வளவு பரபரப்பைப் பாராட்டி நிற்பார்களோ, அதை வர்ணிப்பேன், கேள், என்று ஸ்ரீ நிவாஸன் அர்ஜுநனைப் பார்த்துச் சொன்னார்.

काममाश्रित्य दुष्पूरं दम्भमानमदान्विताः ।
मोहाद्गृहीत्वासद्ग्राहान्प्रवर्तन्तेऽशुचिव्रताः ॥१०॥

காம மாஸ்ரித்ய துஷ்பூரம் தம்ப மான மதான் விதாः ।
மோஹாத்க்ருஹீத்வாஸத்க்ராஹான்ப்ரவர்தந்தேऽ ஸுசிவ்ரதாः ॥ 10

லோகத்துக்கு அஹிதம் செய்வதில் இவர்களுக்கு எற்படும் ஸம்ப்ரமம்

வலையானது ஜலத்தால் நிரம்பிப் போகாததுபோலும், நெருப்பு, கட்டைகளை எவ்வளவு போட்டாலும், போதுமென்று சொல்லாததுபோலும், த்ருப்தியடையாமல் இருப்பதில் அக்ராஸநாதிபத்யம் பூண்டு, பெரும் பசிபடைத்திருக்கும் ஆசை கொண்டவர்களாய், அத்துடன் தம்பத்தையும் அபிமானத்தையும் கூட்டி வைத்துக்கொண்டு, மதம் பிடித்த யானைக்குக் கள்ளை வார்த்துவைத்ததுபோலும், மிக்க மதம் கொண்டவர்களாய், இத்தனையும் போதாதென்று அவர்கள் மௌட்யத்தையும் ஸஹாயமாய்ச் சேர்த்துக்கொள்வார்கள். பின்பு அவர்கள் எதெதைச் செய்யத் துணிவார்களோ, அதை என்னமாய் வர்ணிப்பேன்? எவற்றைச் செய்தால், பிறர்கள் தவித்துப் போய், அவர்கள் உயிர் துடித்துப்போகுமோ, அத்தொழில்களையே அவர்கள் ஜீவனாதாரமாகக் கொண்டு, அவற்றில் கைதேர்ந்தவர்களாவார்கள். பின்பு தாங்கள் செய்துவைத்ததை எல்லாரு மறியக் கூவி, (அவமாநமாய்ப் பேசி) உலகை யெல்லாம் திக்காரம் செய்து தங்கள் ஆசை யென்னும் வலையை பத்து திக்கிலும் பரப்பி வைப்பார்கள். இப்படி யெல்லாம் பெருமையடித் துக்கொண்டு, அவிழ்த்துவிட்ட கோவில் மாடுபோல், தங்குதடையில்லாமல் ஸஞ்சரித்துகொண்டு, தங்களுடைய பாபங்களை மிக்கப் பெருக்கிக்கொள்வார்கள்.

चिन्तामपरिमेयां च प्रलयान्तामुपाश्रिताः ।
कामोपभोगपरमा एतावदिति निश्चिताः ।।११।।

சிந்தாம பரிமேயாம் ச ப்ரலயாந்தா முபாஶ்ரிதாः ।
காமோப போக பரமா ஏதாவதிதி நிஶ்சிதாः ॥ 11

இவர்கள் பேராசை

இப்படிச் செய்துவைப்ப தென்பதையே உத்தேச்யமாய்க் கொண்டு, அவர்களுடைய கர்மங்கள் அனைத்தும் ஏற்படும். அன்றியும் மரண மடைந்தபின்னும் தாங்கள் விஷயஸுகத்தை அநுபவிப்பதற்காக, அவர்கள் பெருத்த சிந்தை பாராட்டிக் கொண்டிருப்பர்கள். அவர்களுடைய அந்த சிந்தை, பாதாளத்தைக் காட்டிலும் ஆழ்ந்ததாய், ஆகாசத்தைக்காட்டிலும் உயர்ந்ததாய் இருந்து கொண்டு, தன் பெருமைக்கு முன்னால் மூன்றுலகும் அணுமாத்ரம்கூட ஆகா

தென்று சொல்லும்படியாய்ச் செய்து வைக்கும். இன்னும் ஸம்பாதித்துக்கொள்ள வேண்டியவையாய் மிகுந்திருக்கும் போகங்களை அளவிட்டுக்கொண்டே இருக்கும். அடக்க முடியாத சிந்தனையை, பதிவ்ரதாஸ்த்ரீ தன் கணவனைக் கைவிட முடியாதவளாய் இருப்பதுபோல், ஒருக்காலும் ஒழித்துக்கொள்ள முடியாதவர்களாய் இருந்துகொண்டு, அதையே பெருக்கிக் கொண்டு போவார்கள். இவ்விதம் தங்கள் அந்தராத்மாவில் கரையற்ற விஷயபோகங்களைப்பற்றிய விசாரம் படைத்தவர்களாய், ஸ்த்ரீ பாடும் பாட்டைக் காதால் கேட்கவேண்டும், கண்ணால் ஸ்த்ரீகளைப் பார்க்கவேண்டும், ஸர்வேந்த்ரியங்களாலும் ஸ்த்ரீகளையே புசிக்கவேண்டும், அம்ருதத்தைக்கூட த்ருஷ்டியாகச் சுற்றி எறியவேண்டும் என்று சொல்லத்தக்க உத்தமமான ஸுகம், ஸ்த்ரீகளை விட்டு வேறொன்றிலும் இல்லையென்று, ஓர் நிச்சயம் செய்துகொண்டு, அப்படிப்பட்ட ஸ்த்ரீபோகத்துக்காக பாதாளத்திலும் ஸ்வர்க்கத்திலும், பத்துக் திக்குகளுக்கு அப்புறத்திலும், புகுந்து தேடித் திரிவார்கள்.

आशापाशशतैर्बद्धाः कामक्रोधपरायणाः ।
ईहन्ते कामभोगार्थमन्यायेनार्थसञ्चयान् ।।१२।।

ஆஶா பாஶ ஶதைர் பத்தா: காம க்ரோத பராயணா: ।
ஈஹந்தே காம போகார்த மன்யாயேநார்த ஸஞ்சயான் ॥ 12

இதுவுமது

மீன், மாம்ஸ உண்டையைத் தின்பதில், மிக்க ருசிபடைத்ததாய், அதற்குள் என்ன ஆபத்து மறைந்து கிடக்கிறதென்பதை விசாரிக்காமல், அதை விழுங்கிவிடுதல் போலும், அவர்கள் விஷயஸுகத்தின் மேல் ஆசை பாராட்டி நிற்பார்கள் விரும்பியது கிடைக்காது போனால், பட்டுபூச்சி மேலும் மேலும் தன்னூலை பண்ணிக்கொண்டு, தன்னுடைய சிறைச்சாலையை பலப்படுத்திக் கொள்ளுதல் போலும், அவ்விஷயமான வீண் மனோரதங்களை வ்ருத்தி பண்ணிக்கொண்டே போவார்கள். பின்பு இவ்விதம் பரவச் செய்து வைக்கப்பட்ட ஆசை, நிறைவு பெறாமல், எப்போது தடைபடுதிறதோ, அப்போது அதுவே த்வேஷமாதிறது, இப்படி காமக்ரோதங்களை வ்ருத்திசெய்து கொள்வதைக் காட்டிலும், வேறு புருஷார்த்தம் இருப்பதாத அவர்கள் மதியார்கள், பகல் எல்லாம் யஜமான்ன் முன்னாற் செல்வதும், யஜமானன் தூங்கும்போது இரவெல்லாம் காவல் இருப்பதுமாய், ஓர்

கஷ்டம் ஓர் ஸேவகனுக்கு ஏற்படுவது போலும், இவர்கள் இராப்பகல் கஷ்டப்பட்டுக் கொண்டு, விச்ராந்தி என்பதைக் கண்ணாற்கூட பாரார். இப்படி காமத்தின் உந்நதமான சிகரத்தில் ஏறிநின்று, பின்பு கீழே தள்ளப்பட்டு, க்ரோதம் என்னும் பாறைமேல் மோதப் பட்டுக் கொண்டிருந்தாலும், ராகத்வேஷங்கள் மேல் ப்ரேமை பாராட்டிக் கொண்டு, அவற்றின் ஸம்பந்தத்தை அவர்கள் ஒழித்துக் கொள்ளார்கள்.

இப்படி விஷயங்களின் மேல் ஆசையை அந்த ராத்மாவில் நிரப்பி வைத்துக்கொண்டபின், அவ்வாசையைப் பூர்ணம் பண்ணிக்கொள்வதற்து, பொருளைத் தேடிக்கொள்ளல் அவச்ய மாகிற தல்லவா? ஆகையால் விஷயஸுகங்களை தேடிக்கொள்வதற்க்காக, தங்களுக்குத் தோன்றியபடி எல்லாம் அவர்கள் உலகத்தாரைப் பீடிக்கத் தலைப்படுகிறார்கள், ஒருவன் ஏமாறியிருக்கும் ஸமயம் பார்த்து, அவனைக் கொல்கிறார்கள், மற்றொருவனுடைய ஸர்வஸ்வத்தையும் பிடுங்கிக்கொள்கிறார்கள். மற்றெருவனைத் தந்திரமாய்க் கொல்வதற்கு உபாயங்களைத் தேடி வைக்கிறார்கள். வேடர்கள் பாசக்கயிறு, பை, வலை, வேட்டைநாய்கள், வல்லூறு, பசைக்கோல், ஈட்டி, முதலியவற்றை ஸஹாயமாய்க் கொண்டு, மலை மீதேறிப்போய், வயிற்றை நிரப்பிக் கொள்வதற்து, ப்ராணி ஸமூஹங்களைக் கொன்று வீட்டுக்குக் கொண்டுவருவதுபோலும், அவர்கள் மிக்க நிந்த்யமான கார்யங்களைக்கூடச் செய்யத்துணிகிறார்கள். இதரர்களைக் கொன்று, அவர்கள் வித்தத்தை அபஹரித்துக்கொண்டு, அதினால் அவர்கள் மனது எப்படி ஸந்தோஷப்படுகிறதோ, அதைச் சொல்வேன் கேள்.

इदमद्य मया लब्धमिमं प्राप्स्ये मनोरथम् ।
इदमस्तीदमपि मे भविष्यति पुनर्धनम् ।।१३।।

இத மத்ய மயா லப்தமிமம் ப்ராப்ஸ்யே மனோரதம்।
இத மஸ்தீத மபி மே பவிஷ்யதி புனர்தனம் ॥ 13

இதுவுமது

"இன்று அநேகர்களுடைய சொத்தை யெல்லாம் அபஹரித்து, அதை நமதாய்ச் செய்துகொண்டமையால், நாம் தன்யர்கள் ஆனோமல்லவா?" என்று பெருமைபாராட்டிக் கொண்டிருக்குபோதே, மற்றோர் எண்ணம் மனதில் உண்டாய், "இதோ பார், இன்னும் மற்றவர்களுடைய

சொத்தையும் கொள்ளையிட்டுக் கொண்டுவருவோம், இப்படி நாம் ஸம்பாதித்துக்கொண்ட இத்தனையும் கைமுதலாய்க் கொண்டு, சராசரத்தில் மிகுந்திருக்கும், அனைத்தையும் ஸம்பாதித்துக்கொண்டு, உலகில் உள்ள தனமனைத்துக்கும், நாமே ஸ்வாமி யாவோம்," என்று அவர்கள் சொல்லிக்கொள்வார்கள். பின்பு கண்ணில் எதெது பட்டதோ அதையெல்லாம் தங்தளதாகாமல், அவர்கள் இருக்க ஒட்டார்கள்.

असौ मया हतः शत्रुर्हनिष्ये चापरानपि ।
ईश्वरोऽहमहं भोगी सिद्धोऽहं बलवान्सुखी ।।१४।।

அஸௌ மயா ஹதः ஶத்ருர்ஹனிஷ்யே சாபரானபி।
ஈஶ்வரோ(அ)ஹமஹம் போகீ ஸித்தோ(அ)ஹம் பலவான் ஸுகீ॥ 14

இதுவுமது

நாம் ஜயித்துக் கொன்றுவிட்ட இந்த சத்ரு அல்பன். இன்னும் பலவான்களாகிய மற்ற சத்ருக்களையும் கொன்று, நாம் மட்டுமே இவ்வுலதில் தனித்து, கீர்த்திபெற்றவர்களாய், வாழ்வோம். பினபு நமக்கு வேலைக்காரர்களாய் எவர்களாய் விடுவார்களோ, அவர்களைத்தவிர மற்ற யாவரையும் கொன்று விடுவோம், (வார்த்தைகளை வளர்ப்பதென்?) நாமே இந்த சராசராம் முழுவதுக்கும் ஈச்வரர்களாய் விளங்குவோம், நாம் போகஜாதங்கள் என்றும் பூமிக்கு சக்ரவர்த்திகளாய்ப்போய் ஸர்வஸுகங்களும் நம்மிடத்தில் குடிபெறும். நம் பெருமையைப் பார்த்த இந்த்ரன், தான் பிறந்தது வ்யர்த்தம் என்று, எணணுவான். நாம் மனஸினாலாவது, வாயினாலாவது, சரிரத்தினாலாவது, எதைச் செய்யத் துவக்கினாலும், அது எவ்விதம் முடிவு பெறாமற் போகும்? பிறருக்கு ஆஞ்ஞை செய்து, அவர்களை தம்மிஷ்டப்படி கார்யங்களைச் செய்யும்படி செய்துகொள்வதற்கு வேண்டிய சத்திபடைத்தவர்கள், நம்மைத்தவிர எவர்கள் இருக்கிறார்கள். அதிபலவான்களாகிய நாம் கண்ணாறக் காணாதிருக்குமளவும் தான், யமன் பலவானாவான் நாம் ஸுகமெல்லாம் ஒன்று சேர்ந்த ராசியே ஆவோம், என்றுமே அவர்கள் சொல்லிக்கொள்வார்கள்.

आढ्योऽभिजनवानस्मि कोऽन्योऽस्ति सदृशो मया ।
यक्ष्ये दास्यामि मोदिष्य इत्यज्ञानविमोहिताः ।।१५।।

ஆட்யோஸ்பி ஜனவானஸ்மி கோஸ்ன்யோஸ்தி ஸத்ருஸோ மயா।
யக்ஷ்யே தாஸ்யாமி மோதிஷ்ய இத்யக்ஞான விமோஹிதா: ॥ 15

இதுவுமது

குபேரன் பணக்காரன் என்பது உண்மையையே ஆனால் அவன் நமக்கு ஒப்பானாவானா? ஸ்ரீநாதனுக்குகூட நமக்கு ஸரியான ஸம்பத் தில்லையெ. நம்முடைய குலத்தின் பெருமை, ஜாதியார்கள் கோத்ரத்தார்கள் கூட்டம், இவற்றைக் கொண்டு அளவிட்டுப்பார்த்தால், ப்ரஹ்மதேவன் -கொஞ்சம் குறைவாகவே தோன்றுவான். ஆகையால் ஈச்வராதிகளை உலகில் மிக்கக் கொண்டாடுகிறார்களே, அது அனைத்தும் வ்யர்த்தம். நம்முடன் ஸமதை பெற்றவன் ஒருவனும் இல்லை. ஆகையால் இக்காலத்தில் மரித்துப் போயிருக்கும் அபிசார வித்யைக்கு உயிர்கொடுத்து அதை உலகில் வாழ்வு பெறச் செய்வோம். இதரர்களுக்குப் பீடை செய்து வைப்பதற்குச் செய்யவேண்டிய யாகங்களை செய்து முடிப்போம். நம்முடைய கீர்த்திகளைப் பாடியும், அவற்றை வர்ணித்தும், நடநநர்த்தனங்களைச் செய்தும், நம் மனஸை ஸந்தோஷிக்கச் செய்கிறவர்கள் கேட்டதை எல்லாம், அவர்களுக்கு நாம் கொடுப்போம், மதத்தை உண்டாக்கத்தக்க அந்நபானங்களை ஸேவித்து ஸ்த்ரீகளால், இறுகக் கடடிக்கொள்ளப்பட்டவர்களாய், நாம் மூவுலகத்தின் ஆநந்தமும் மூர்த்தீகரித்தவர்க ளாவோம்," என்றிப்படி எல்லாம் சொல்லிக் கொள்வார்கள். இவ்வித மெல்லாம் வளர்த்துவதில் பயன் என்? ஆஸுரீ ப்ரக்ருதியின் சேர்க்கையால், பைத்யம் கொண்ட அவர்கள், இவ்விதப்பட்ட கணக்கற்ற ஆசைகள் என்னும் ஆகாசபுஷ்பங்களை, ஸதா முகந்து கொண்டிருப்பார்கள்.

अनेकचित्तविभ्रान्ता मोहजालसमावृताः ।
प्रसक्ताः कामभोगेषु पतन्ति नरकेऽशुचौ ।।१६ ।।

அனேக சித்த விப்ராந்தா மோஹ ஜால ஸமாவ்ருதா: ।
ப்ரஸக்தா: காம போகேஷு பதந்தி நரகேஸு ஸுசௌ ॥ 16

ஆஸுரிஸம்பத் படைத்தவர்களுக்குக் கடைசியில் ஏற்படும் நரகபோகம்

ஜ்வரம் தலைமட்டம் கொண்டபின், ரோகியானவன் கண்டபடி உளறுவதுபோலும். அவர்கள் கண்ட கண்ட

ஸங்கல்பங்களைப் பாராட்டிக்கொண்டு, பிதற்றுவார்கள். அஞ்ஞாநம் என்னும் புழுதியால் நிறைந்த ஆசையென்னும் சுழற்காற்று. அவர்கள் மனோரதம் என்னும் ஆகாசம் முழுவதையும் வ்யாபித்துக்கொள்ளும். ஆஷாடமாஸத்தில் மேகங்கள் கட்டுக்கடங்காதபடி ஆகாசத்தில் கூடிக்கொள்ளுதல்போலும், ஸமுத்ரத்தில் அலைகள் ஓயாது அடித்துக் கொண்டிருப்பதுபோலும், அவர்கள் அநேக வகைப்பட்ட விஷயஸுகங்களை யடைவதற்து ஆசைப்பட்டுக்கொண்டே இருப்பார்கள். இவ்விதம் காமனை என்னும் கொடி மிக்க வளர்ந்து, அவர்கள் உயிர்நிலையைக் கப்பிக்கொண்டபின், தாமரைப்பூ முள்ளின்மெல் விழுந்து கிழிபட்டுப் போவதுபோலும், பாண்டங்கள் கற்பாறையின்மேல் விழுந்து உடைப்பட்டுப்போவது போலும், அவர்கள் அந்தராத்மா சிதட்சிதளாகச் சிதறிப்போதும், அப்போது, இராப்பொழுது வளரவளர, இருட்டானது அதிகரிக்கும் போது, விஷய வாஸநையும் அதிகரிக்கிறது. விஷயவாஸநை எங்கே ஏற்படுகிறதோ, அங்கே பாபம் குடிகொள்கிறது. அந்த பாபம், தனது பலத்தைக்கொண்டு, ஸகலபாபங்களையும் தன்னுடன் கூட்டி வைத்துக்கொள்கிறது.

பின்பு அவர்கள், இவ்வுலகில் உயிரோடிருக்கும்போதே, எல்லா நரகதுக்கங்களையும் அநுபவிக்க வேண்டியதாய் ஏற்படுதிறது. பின்பு கெட்ட மனோரதங்களை ஸதா பாராட்டிக்கொண்டிருக்கும் இந்த ஆஸுரீஸம்பத் படைத்தவர்கள், கடைசியில் நரகத்தில் வஸிக்கவேண்டிய தாகிறது. ஹே அர்ஜுநா, அந்த நரகலோகத்தில், கத்திகளை இலையாய்க்கொண்ட பெருத்த வ்ருக்ஷங்கள் நெருங்கி வளர்ந்திருக்கும் காடுகளில் ஸஞ்சரிக்கவேண்டும். நெருப்புத் தணல்களால் ஏற்பட்ட குன்றுகளின் மேல் ஏறித் தாண்டிச் செல்லவேண்டும். கொதித்துப் பொங்கிவழியும் எண்ணெயால் ஏற்பட்ட கடல்களை, நீந்திக் கடந்துபோகவேண்டும். அந்த நரகம், நித்யம் புதுமை பொருந்தியவாய் இருக்கும் யாதனைகளால் (துன்பங்களால்) நிறைந்து, அநேக விதமான யமதண்டனைகளால் மிக்க பயங்கரமாயிருக்கும்.

மேல்வரும் ச்லோகத்திற் கவதாரிகை

இப்படி பயங்கரமாயிருக்கும் நரகத்தின் ஜ்யேஷ்டாம்சத்தை அநுபவிப்பதற்காகவே ஜந்மமெடுத்த அந்த நாஸ்திகர்கள்கூட, பிறர்களைப் பார்த்து புத்தி மயக்கம் கொண்டவர்களாய், யாகங்களைச் செய்யத் தொடங்குவார்கள். ஆனால் அவைகள் யாகங்கள் என்று தோற்றம் படைத்தவைகளாய் இருந்தாலும்,

அவை முழுதிலும் நிஸ்ஸாரமாய், நாடகத்தில் அநுகரித்துக் காட்டப்பட்ட யஞ்ஞங்கள் போலும், நிஷ்பலமாகும். ஓர் வேசி தன்னபிமான புருஷனுடைய ஆச்ரயத்தைக் கொண்டு, தன்னை ஸுமங்கலி என்று சொல்லிக் கொண்டாற் போலுமே, அந்த யாகங்கள் இருக்கும்

आत्मसम्भाविताः स्तब्धा धनमानमदान्विताः ।
यजन्ते नामयज्ञैस्ते दम्भेनाविधिपूर्वकम् ।।१७।।

ஆத்ம ஸம்பாவிதா: ஸ்தப்தா தனமாநமதான் விதா: ।
யஜந்தே நாம யக்ஞைஸ்தே தம்பே நாவிதி பூர்வகம் ॥ 17

அவர்கள் யாகங்கள் செய்யும் முறை

தங்களைத் தாங்களே பெரியவர்களாய்ப் பாவித்துக்கொண்டு, மிக்க வலுத்த கர்வத்தால் அவர்கள் வீங்கிப்போய், பின்பு இரும்பால் உருக்கி வார்க்கப்பட்ட கம்பம் போலும், ஆகாசத்தை அளாவிக்கொண்டுயர்ந்திருக்கும் பர்வதம்போலும், வணங்குதல் என்பது இன்னகென்று அறியாதவர்களாய், தங்களுடைய பெருமையைத் தாங்களே கொண்டாடிக்கொண்டு, உலகில் உள்ள மற்ற அனைவரையும் துரும்பைக் காட்டிலும் அல்பர்களாய் பாவிப்பார்கள். அத்துடன் தனம் என்னும் கள்ளின் மதத்துக்கு வசப்பட்டுப்போய், சாஸ்த்ரங்களுக்கு விரோதமாய், ஓர் க்ருத்யாக்ருத்ய ஸித்தாந்தத்தைத் தாங்களே ஏற்படுத்தி வைப்பார்கள், எவர்கள் இப்படி அஹம்பாவம் படைத்தவர்களா யிருக்கிறார்களோ, அவர்கள் யஞ்ஞத்தை ஓர் விஷயமாக மதிப்பார்களா? ஆனாலும் பைத்யம் கொண்டவர்கள், என்னென்ன வேலைகளைச் செய்து வைக்கமாட்டார்கள்?

ஆகையால் ஒவ்வொரு வேளை, அவர்களுடைய மெளட்யத்தாலும் மதத்தாலும், யாகம் என்னும் நாடகத்தை நடித்துக்காட்ட வேண்டும் என்று, அவர்களுக்குத் தோன்றுகிறது. அவர்கள் அப்படிச் செய்யும் யாகத்தில் அக்நிகுண்டம், யஞ்ஞமண்டபம், யஞ்ஞஸாமான்கள், இவற்றில் ஒன்றும் இராது, சாஸ்த்ரவிதிகளோ அவர்களுக்கு சத்ருக்கள். தேவதைகள், ப்ராஹ்மணர்கள், என்று பெயர்பெற்ற வஸ்துக்களின் மேற்பட்ட காற்றுக்கூட அங்கே ஸஞ்சரிக்கக்கூடாது. இப்படி அநுஷ்டிக்கப்படும் யாகத்துக்கு, எவர்கள் போவார்கள்? உலகத்தில் புத்திசாலிகள், இறந்துபோன கன்றின் தோலில் வைக்கோலை அடைந்து,

அதைத் தாய்மாட்டின் முன் வைத்து, அதை ஏமாறச் செய்து பாலைக் கறந்து கொள்ளுதல்போலும், யஞ்ஞம் செய்கிறோம் என்று எல்லாருக்குந் தெரிவித்து, அவர்களை வரவழைத்து, அவர்களுக்கு யாகப்ரஸாதம் கொடுப்பதற்குப் பதிலாக, அவர்களிடத்திலுருந்து காணிக்கைகளை மாத்ரம், இந்த துஷ்டர்கள் உரிந்துகொள்வார்கள். இப்படித் தங்களுக்குப் பெருமை எற்படுவதற்காக, அவர்கள் எதேனும் ஓர் ஹோமம் செய்தால், அதற்குப் பலனாக உலகத்தாரை நாசம் செய்துவைக்க விரும்புவார்கள்.

अहंकारं बलं दर्पं कामं क्रोधं च संश्रिताः ।
मामात्मपरदेहेषु प्रद्विषन्तोऽभ्यसूयकाः ॥१८॥

அஹங்காரம் பலம் தர்பம் காமம் க்ரோதம் ச ஸம்ஶ்ரிதாः ।
மாமாத்ம பரதேஹேஷு ப்ரத்விஷந்தோ ऽப்யஸூயகாः ॥ 18

இப்படியெல்லாம் செய்து பகவானுக்கு ஹிம்ஸை செய்து வைத்தல்

பின்பு தங்கள் முன் பேரிகைகளை அடித்துக்கொண்டு கொடிகளை பறக்கவிட்டுக்கொண்டு, தாங்கள் தீக்ஷிதர்களானதை, உலகறிய, அவர்கள் வீணாய்க் கூவுவார்கள், பின்பு அப்படி தீக்ஷிதர்கள் ஆன பெருமையால், அந்த அதமர்கள், இருட்டுக்கு மையைப் பூசிவைத்தாற் போலும், கர்வத்தால் அதிகரித்தவர்கள் ஆவர்கள் , அப்படியே அவர்களுடைய மௌட்யமும், அடங்காத் தனமும், அவிவேகத்தால் ஏற்படும் அஹம்காரமும், இரண்டுமடங்காகும். பின்பு தாங்களே வலிமைபோருந்தியவர்களென் றெண்ணிக்கொண்டு, உலகில் தங்களைத் தவிர வேறெவரும் மிருந்திராமற்போகவேண்டு மென்று, அதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்வார்கள். இப்படி அஹம்காரமும் பலமும் ஒன்றுக்கொன்று உதவியாய் ஏற்பட்டு, அவர்களுடைய கொழுப்பு என்னும் ஸமுத்ரம், மர்யாதை என்னும் கரையை மீறிக்கொண்டு, பொங்கிவழியும், இப்படிக் கொழுப்பு அதிகரிக்கவே, காமம் என்பதற்கு பித்தம் அதிகரித்துப்போய், அதின் பெருக்கால், க்ரோதம் என்னும் நெருப்பு மிகவும் மண்டி யெரியத் தலைப்படும். அப்படி யானபின், வேநிற்காலத்தில் மண்டி யெரியும் நெருப்பு, நெய்யும் எண்ணெயும் மிக்கச் சேர்த்து வைத்திருக்கும் ஓர் களஞ்சியத்தில் பற்றிக்கொண்டு, காற்றும் வேகமாய் அடிக்கத் தொடங்கினால் எப்படியோ, அப்படியே ஏற்பட்டு விடுகிறது.

அப்படியே அஹம்காரம் வலுத்தலும், கொழுப்பு காமக்ரோதத்தோடு கலந்து கொள்ளலும், ஆகிய இவ்விரண்டும், எவர்களிடம் ஏற்பட்டதோ, அவர்கள் ப்ராணிகளுக்கு எண்ணென்ன ஹிம்ஸையைத் தான் செய்து வைக்கமாட்டார்கள், ஹே அர்ஜுநா ? முதன் முதலில், அபிசார சத்திகள் தங்களுக்கு உண்டாவதற்காக, தங்களுடைய மாம்ஸத் தையும் உதிரத்தையும் அவர்கள் செலவிடுவார்கள். அப்படித் தங்களுடைய தேஹங்களுக்குத் தீங்கு செய்து கொள்வதால், அந்த தேஹங்களில் ஆத்மாவாக வஸிக்கும் என்மேல், அத்தீங்கனைத்தும் தாக்குகிறது. அன்றியும் அபிசாரப்ரயோகங்கள் செய்யும் அவர்களால், எந்தெந்த ப்ராணிகள் ஹிம்ஸிக்கப்படுகிறார்களோ, அவர்களுக்குள் ஞாநஸ்வரூபியாயிருக்கும் எனக்கு, துக்கம் ஏற்படுகிறது. அன்றியும் அப்படி அபிசாரப்ரயோகங்களுக்கு அகப்பட்டுகொள்ளாமல், எவர்கள் தப்பித்துக் கொள்வார்களோ, அவர்கள் பேரில் இந்த துஷ்டர்கள், அவதூரு என்ற கல்லை விட்டெறிவார்கள், பதிவ்ரதா ஸ்த்ரீ, ஸத்புருஷன், தானம் செய்வதே ஸ்வபாவமாய் அமைந்துள்ளவன், யஜ்ஞங்களைச் செய்திறவன், மிக்க உத்தமமான தபஸ்ஸை அநுஷ்டிக்கிறவன், ஸந்யாஸி, பக்தன், பெருந்தன்மை படைத்தவன், வைதிக ஹோமங்களைத் தவறாது அநுஷ்டித்து வருவதால் தூய்மை படைத்தவன், ஆகிய இவர்கள் எனக்கு ப்ரியமாய் இருக்கும் வாஸஸ்தானங்கள் அல்லவா? அப்படிப்பட்டவர்கள் மேல், இந்த துஷ்டர்கள், த்வேஷம் என்னும் காளகூட விஷம் பூசப்பட்டு, மிகவும் கொடுமையுள்ளவையாயிருக்கும் கெட்ட வார்த்தைகள் என்னும் வலுமை பொருந்திய பாணங்களை நாட்டிவைப்பார்கள்.

तानहं द्विषतः क्रूरान्संसारेषु नराधमान् ।
क्षिपाम्यजस्रमशुभानासुरीष्वेव योनिषु ।।१९।।

தானஹம் த்விஷத: க்ரூரான் ஸம்ஸாரேஷு நராதமான் ।
க்ஷிபாம்யஜஸ்ர மஶுபா னாஸுரீஷ்வேவ யோனிஷு ॥ 19

இந்த துஷ்டர்களின் முடிவான கதி

இப்படி ஸர்வவிதமாயும், என்மேல் பகைபாராட்டி நிற்கும் அந்த பாபிகளுக்கு, நான் என்ன செய்துவைக்கிறேனோ, அதைச் சொல்வேன், கேள். எந்த மனுஷ்ய தேஹத்தின் உதவியைக்கொண்டு, அவர்கள் ஜகத்தின் மேல்

பகைபாராட்டி, அதற்குத் தீங்கு விளைவிக்கிறார்களோ, அந்த நரதேஹத்தை . யடைத்திருக்கும் பதவியை அவர்களிடத்திலிருந்து பிடுங்கிவிட்டு, துக்கம் நிறைந்த ஊரின் குப்பைமேடு என்றும், ஸம்ஸாரபுரியின் சௌசத் துறை என்றும் சொல்லத் தக்க ஞாநஹீநமான பிறப்புகளை, அவர்களுடைய மிராசாகச் செய்துவைக்கிறேன். பின்பு, பசியேடுத்தால் தின்பதற்குப் புல்கூட கிடைக்காத காட்டுப்ரதேசங்களில் வஸிக்கும் புலிகளாயும் தேள்களாயும், அவர்களைச் செய்துவைக்கிறேன். அப்படிப்பட்ட ஜந்மங்களில் பசியால் மிக்க வருந்தி தன் தேஹத்தையே தான் பிடுங்கித் தின்னும்படி ஏற்படுதிறது. பிறகு சாவடைந்து, திரும்பவும் திரும்பவும் அவ்வகைப்பட்ட ஜந்மங்களையே அவர்கள் எடுக்கிறார்கள்.

இல்லாவிட்டால் தங்களுடைய விஷாக்நியால் தங்களுடைய மேற்றோலே எரிந்துகொண்டிருக்கும் ஸர்ப்பங்களாய், அவர்களைச் செய்து, அவர்களை வளைகளி லடைத்து வைக்கிறேன், அத்துடன் , அவர்கள், மூச்சை வாங்கி மூச்சை வெளிவிடும் நேரம் கூட, துக்காநுபவத்தினின்று ஒய்வு அவர்களுக்குக் கிடைக்காமல், செய்துவைக்கிறேன். இப்படியே செய்து, தீர்க்ககாலமும் அந்த துர்ஜநர்களை அப்படிப்பட்ட துக்காநுபவத்தினின்று நான் விடுதலை செய்வதில்லை. ஆனால் இவ்வகைப்பட்ட ஜந்மங்கள் எடுப்பது, அவர்கள் கடைசியாய்ப் போய்ச்சேரவேண்டிய கதிக்கு முதல் மண்டபப்படியே ஆகும். இந்த மண்டபப்படியைப் புசித்த பின், இன்னும் கொடுமையான துக்கபோகங்களை அனுபவிக்கும் படி , அவர்களுக்கு ஏற்படுகிறது.

आसुरीं योनिमापन्ना मूढा जन्मनि जन्मनि ।
मामप्राप्यैव कौन्तेय ततो यान्त्यधमां गतिम् ।। २० ।।

ஆஸுரீம் யோனிமாபன்னா மூடா ஜன்மனி ஜன்மனி।
மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்யதமாம் கதிம் ॥ 20

இதுவுமது

இவ்வளவு கொடுமையான ஓர் கதியை, அந்த ஆஸுரீஸம்பத்து அவர்களுக்கு ஸம்பாதித்து வைக்கிறது. இப்படி தாமஸ குணத்தால் நிறைந்த புலி முதலிய ஜந்மங்கள் என்ற முதற்றங்குமிடம் ஏற்பட்டுள்ள போது, தேஹம் படைத்திருத்தல் என்னும் ஓர் அல்பஸுகம் அவர்களுக்கு கிடைக்கிறதே அந்த ஸந்தோஷத்தைக் கூட அவர்களுக்கு இல்லாமற் பிடுங்கி விடுகிறேன். பின்பு தமஸ் ஒன்றே,

வேறொன்றின் கலப்பில்லாமல், அவர்களை வ்யாபித்துக் கொள்கிறது. அவர்கள் அப்படிப் போய்ச் சேரும் ஒர் ஸ்தானத்துக்கு போய்ச் சேர்ந்த இருட்டானது. தனக்கு முன் இல்லாத கருநிறத்தால் பூசப்பட்டதாகிறது. அந்த தசையைப் பார்த்து பாபமே நடுக்க முறுகிறது. துக்கம் என்பது அதைக் கண்டு வெகுதுக்க மடைந்து, மூர்ச்சை பட்டுப்போகிறது. மலங்கள் அதின் ஸ்பர்சத்தால் அசுத்தமாகின்றன, தாபம் என்பது அதின் ஸம்பத்ததால் பொரிந்துபோகிறது. அதின் பெயரைக் கேட்ட மஹாபயம் என்பதற்கு பயம் உண்டாகிறது. பாபம் அதைக் கண்டு கஷ்டப்படுகிறது. அதின் ஸம்பத்தத்தால் அமங்களங்கள் அமங்களப்பட்டு," நாம் தீட்டுப்பட்டுப் போவோமே," என்று பயப்படுகின்றன.

இவர்கள் இப்படி கேவல தாமஸம் நிறைந்த பிறப்பில் விழுந்து, விச்வமனைத்தாலும் இகழப்படத்தக்க தாழ்வான ஸ்திதியை அடைகிறார்கள். அப்பப்பா, இதை வர்ணிப்பதால் வாக்குக்கு துக்கம் ஏற்பட்டு, அத்துக்கத்தை ஸஹியாததாய், அது அழத் தலைப்படுதிறது. இதை நினைக்கத் தொடங்கியமனது இதின் கொடுமையைக் கண்டு பின் வாங்குகிறது. ஐயய்யோ, இந்த அறிவுகேடர்கள் எவ்வளவு கொடுமையான நரகத்தை தங்களுக்குத் தேடிக்கொண்டார்கள்.! இப்படிப்பட்ட கோரமான கேட்டை விளைவித்துக்கொடுப்பதாய், அநர்த்தகரமாய் இருக்கும் இந்த ஆஸுரீஸம்பத்தியை என்னத்துக்காக ஜநங்கள் வ்ருத்தி பண்ணிக் கொள்கிறார்ளோ! ஆகையால் ஹே தநுர்த்தரா, எங்கே ஆஸுரீஸம்பத் படைத்தவர்கள் ஸதா வஸித்துக்கொண்டிருக்கிறார்களோ, அந்த இடத்துக்குப் போகும் வழியிற்கூட, நீ போய் நிற்கலாகாது. அன்றியும், தம்பம் முதலிய ஆறு தோஷங்களின் நிறைவுபடைத்தவர்கள் எவர்களோ, அவர்கள் ஸம்பந்தத்தை, நீ முற்றிலும் ஒழித்துவைக்க வேண்டும் என்று, உனக்குச் சொல்லிக் கொடுக்கவும் வேண்டுமா?

त्रिविधं नरकस्येदं द्वारं नाशनमात्मनः ।
कामः क्रोधस्तथा लोभस्तस्मादेतत्त्रयं त्यजेत् ।।२१।।

த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாஶன மாத்மன: ।
காம: க்ரோதஸ் ததா லோபஸ் தஸ்மாதேத த்ரயம் த்யஜேத் ॥ 21

காமக்ரோதலோபங்களின் தீமை

காமம், க்ரோதம், லோபம், என்ற இம்மூன்றும், எங்கே நிலைபெற்று வலுத்துப்போகுமோ, அங்கே அசுபங்கள் மிக்க

விசேஷமாய்த் தாமாகவே வந்து கூடிக்கொள்கின்றன, என்றறிந்துகொள். ஸர்வதுக்கங்களையும் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டவர்களுக்கு, அவற்றைக் காட்டிக் கொடுக்கும் உத்யோகத்தில், இவை மூன்றும் ஏற்படுத்தி வைக்கப்பட்டவை யாகின்றன. பாபிகளுக்கு நரகபோகத்தை உண்டாக்கிவைப்பதற்காக, உலகில் ஏற்பட்ட ஸகலபாபங்களும் ஒன்று கூடிய ஸபை யென்றே இவற்றைச் சொல்லவேண்டும். புராணாந்தரங்களில் வர்ணிக்கப் பட்டதான ரௌரவநரகத்தின் பெருமையெல்லாம், இம்முக்குணங்களும் ஒருவன் அந்தராத்மாவில் உண்டாகாதவரைக்கும் தான், நிலைகொண்டிருக்கும், இவற்றால், அபாயங்களும் யாதனைகளும் மிக்க ஸுலபமாய்க் கிடைத்துவிடும். ஹாநிகள் (கெடுதல்கள்) ஹாநிகள் ஆகாமல், இவை மூன்றுமே ஹாநிகள் ஆகும். மிக்க வளர்த்துவதென், மேலே வர்ணிக்கப்பட்டுள்ளதான நரகத்தின் வாயிற்படியில், தொங்கிக்கொண்டிருக்கும் த்ரிசங்கு (த்ரிசங்கு என்ற அயோத்யாராஜன் தன் குருவாகிய வஸிஷ்டருஷியின் சாபத்தால் நீசத்வம் அடைந்து, அந்த வஸிஷ்டரோடு அக்காலத்தில் பகைபாராட்டியிருந்த விச்வாமித்ரருஷி, தன் தபோமஹிமையால், அவனை ஸ்வர்க்கலோகத்துக்கு அநுப்பிவைத்தார், அப்போது அந்த நீசனுக்கு ஸ்வர்க்கத்தில் இடம் இல்லை யென்று சொல்லி, இந்த்ரன் கீழே தள்ளிவிட்டான்.

அப்படித் தலைகீழாக விழுந்து கொண்டிருந்த அவனை, விச்வாமித்தரர் அப்படியே நிறுத்திவிட்டு, அவனுக்காக தன் தபோமஹிமையால் வேறோர் ஸ்வர்க்கலோகம் படைத்துவைக்கத் தலைப்பட்டார், அப்போது தேவர்கள் வேண்டுகோளால், த்ரிசங்கு, தான் தலைகீழாய்த் தொங்கும் நிலையிலேயே ஸ்வர்கஸுகத்தை அநுபவிப்பதாகச் சொல்லி, விச்வாமித்ரரை வேறோர் ஸ்வர்க்கத்தை ஸ்ருஷ்டித்து வைக்காமல் தடுத்துவைத்து, தான் ஓர் நக்ஷத்ரமாய், இன்றும் தலைகீழாய்த் தொங்கிக்கொண்டிருக்கிறான், என்பது ராமாயணகதை.) என்றே, இவற்றைச் சொல்லவேண்டும், இந்த காமக்ரோதலோபங்களுக்கு, மனப்பூர்வமாக எவன் ஒத்தாசை செய்ய ஏற்பட்டானோ, அவன் நரகவாஸிகளுடைய ஸபைக்குப் போய்சேர்வான், ஆகையால் ஸர்வ விதமாயும் கெட்டவையான காமம் முதலிய தோஷக்ரயங்களின் ஸம்பந்தத்தை, நீ முற்றிலும் ஒழித்துக்கொள்ள வேண்டு மென்பதையே, உனக்குத் திரும்பவும் திரும்பவும் சொல்வேன், ஹே கிரிடீ,

एतैर्विमुक्तः कौन्तेय तमोद्वारैस्त्रिभिर्नरः ।
आचरत्यात्मनः श्रेयस्ततो याति परां गतिम् ।।२२।।

ஏதைர் விமுக்த: கௌந்தேய தமோத்வாரை ஸ்த்ரிபிர் நர: ।
ஆசரத் யாத்மன: ஶ்ரேயஸ் ததோ யாதி பராம் கதிம் ॥ 22

காமம் க்ரோதம் லோபம் இம்மூன்றின் ஸம்பந்தத்தை ஒழித்துக்கொள்வதால் ஏற்படும் நன்மை

எப்போது ஒருவன் காமக்ரோதலோபங்கள் என்ற இம்மூன்றின் ஸம்பத்தத்தைத் தன்னிடத்திலிருந்து ஒழித்துக்கொள்வானோ, அப்போது தான் தர்மம் முதலிய நான்கு புருஷார்த்தங்களைப்பற்றிய வர்த்தைகளையே பேசமுடியும். இவை மூன்றும் எதுவரைக்கும் அந்தராத்மாவில் குடிகொண்டிருக்குமோ, அதுவரைக்கும் நன்மை கிடைப்பதின் வார்த்தையே காதிற்படாது, என்று பகவானே சொன்னார். எவன் தனக்கு நன்மை தேடிக்கொள்ள ஆசைப்படுவானோ, எவன் தன்னாத்மா நஷ்டமாய்ப் போகுமோ என்று பயப்படுவானோ, அவன் இம்மூன்றின் வழிகூட செல்லாதவண்ணம் ஜாக்ரதையா யிருக்க வேண்டும், எப்படி வயிற்றிற் பெரும் பாறையைக் கட்டிக்கோண்டு, பெருத்த ஸமுத்ரத்தைக் கையால் நீந்தித் தாண்டிப்போக முடியாதோ அல்லது எப்படி காளகூடத்தை உண்டு உயிர்பிழைத்திருக்க முடியாதோ, அப்படியே காமக்ரோதாதிகளின் ஸம்பந்தமிருக்கு மளவும், நம்முடைய நன்மையை நாம் அடைந்து கொள்ளல் என்பது முடியாது, ஆகையால் இவை இருந்த இடமே தெரியாமல், இவற்றைத் துடைத்து வைக்க வேண்டும்,

எப்போது இம்மூன்றால் ஏற்பட்ட முப்பட்டை விலங்கு, ஒருவனுடைய பாக்யத்தால் தெரித்துப்போகுமோ , அப்போது தான் அவன் தன் ஹிதத்தை ஸம்பாதித்துக் கொடுக்கும் வழியில் நடந்துபோகலாம். கபம், பித்தம், வாதம் என்னும் மூன்று தாதுக்களும் ஸ்தானபேதப்பட்டுப் போகும் தோஷத்தினின்று விடுபட்ட சரீரம் போலும், பிறர் தோஷம் கூறல், களவுசெய்தல், வேசியின் உறவாடல், என்னும் முக்குற்றங்கள் இல்லாத ஒரூர் போலும், தாபத்ரயங்களினின்று விடுபட்ட அந்தராத்மாவைப் போலும், காமாதிகளால் விடுபட்ட ஒருவன் இவ்வுலதில் ஸுகமடைந்து, மோக்ஷமார்க்கத்தில் ஸாதுக்களுடைய துணையைப் பெற்று அந்த ஸாதுஸங்கத்தின் பலத்தைக் கொண்டும், ஸச்சாஸ்த்ரங்களினப்யாஸத்தின் உதவியாலும், ஜந்மமரண துக்கங்களால் நிறைந்திருக்கும் மணற்காட்டைத் தாண்டிப்போய், ஸர்வவிதமான ஆத்மாநந்தத்தாலும் எப்போதும் நிறைந்திருக்கும் குருக்ருபை என்னும் ஊரை அடைந்து, ப்ரியம் என்பதின் எல்லையாய், தாய் போன்றிருக்கும், தன்னாதமஸ்வரூபத்தைக் கண்டு, அதைக்

கட்டிக்கொண்டமாத்ரத்தில், இந்த ஸம்ஸாரத்தின் கோலாஹலம் அனைத்தும், அவனை விட்டு விலகிப்போகிறது. இப்படி எவன் காமக்ரோத லோபங்களை முற்றிலும் துடைத்துவைப்பானோ, அவனே இவ்வளவு லாபத்தை அடைவதற்கு, அதிகாரம் படைத்தவன் ஆகிறான்.

यः शास्त्रविधिमुत्सृज्य वर्तते कामकारतः ।
न स सिद्धिमवाप्नोति न सुखं न परां गतिम् ।। २३ ।।

யः ஶாஸ்த்ர விதி முத்ஸ்ருஜ்ய வர்ததே காமகாரதः ।
ந ஸ ஸித்திமவாப்நோதி ந ஸுகம் ந பராம் கதிம் ।। 23

காமத்துக்கு வசப்பட்டு, சாஸ்த்ரத்தை அநாதரவு செய்து, நடப்பவர்கள் அடையும் முவ்விதமான நஷ்டம்

இவற்றில் (ஆத்மஸ்வரூப ப்ராப்தியின் படிகளாய் கீழ்ச்சொல்லப் பட்டிருக்குமவற்றில்) ஒன்றுக்கும் ஆசைப்படாதவனாய், எந்த ஆத்மாபஹாரி, காமாதிகளுக்கே தலையைக் காட்டிக்கொண்டு, - ஜகத்தில் உள்ள அனைவர்கள் விஷயத்திலும் ஸமமாய் க்ருபை பாராட்டினதாய் ஹிதாயிதங்களையும் தோஷங்களையும் காட்டிக்கொடுக்கும் தீபம் போன்ற உத்தமமான வேதத்தை மதிக்காமல்,-ஓர் கர்மத்தைச் செய்யவேண்டும் என்று சொல்லும் சாஸ்திரத்தை லக்ஷ்யம் செய்யாமலும், தன்னுடைய ஆத்மஸ்வரூப ப்ராப்தியை விரும்பாமலும்,-இந்த்ரியங்களுக்குச் செல்லம்கொடுத்து, அவற்றின் துராசைகளை வளரச் செய்துகொண்டு,-காமக்ரோதலோபங்களின் இடுப்பைவிடாமற் பற்றிக்கொண்டு, அவற்றின் ஆஞ்ஞையை நிறைவேற்றி வைத்துக்கொண்டு,-மனம்போனபடி எல்லாம் நடத்தல் என்ற பெருங்காட்டில் திரிந்துகொண்டு,-அப்படிக்கட்டு தெறிபட்டுத் திரிதலால், சிற்றின்பம் என்னும் நதியின் ஜலத்தைக்கூடக் குடிக்கப்பெறாமல்,- ஸ்வபநத்திற் கூட ஸுகத்தின் பேச்சையே கேட்கப் பெறாமல் பரலோகத்தில் நிச்சயமாகவே நஷ்டப்பட்டுப் போவதுடன், இவ்வுலகின் ஸுகமும் அநுபவிக்கப்பெறாமல்,-மீன் தின்னவேண்டும் என்னுமாசையால் புத்தி கெட்டுப்போய், மீன்பிடிக்கிறவர்கள் ஜாதியில் புகுந்து, அவர்களால் நாஸ்திகன் என்று தள்ளிவைக்கப்பட்ட ப்ராஹ்மணனைப் போலும் பரலோகத்தையும் இழந்து இவ்வுலகவாழ்வையும் பெறாமல், - யமன் வசப்பட்டு போகிறானோ, அவன் விஷயத்தில் மோக்ஷத்தின் வார்த்தையே எப்படி ஏற்படும்? ஆகையால் எவன் ஆசையின் பெருக்கில் விழுந்து, தேஹத்தின் பலத்தால் சாஸ்திரத்தை மீறிக்கோண்டு, விஷயஸுகத்தை அநுபவிக்கப்

பார்க்கிறனோ, அவனுக்கு அந்த விஷயஸுகமும் கிடைப்பதில்லை, ஸ்வர்க்க ஸுகமும் நஷ்டமாய்ப் போகிறது, அவன் ஸம்ஸாரத்தைத்தாண்டி மோக்ஷம் அடைவது மில்லை.

तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्यव्यवस्थितौ ।
ज्ञात्वा शास्त्रविधानोक्तं कर्म कर्तुमिहार्हसि ।। २४ ।।

தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணம்தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ।
க்ஞாத்வா ஶாஸ்த்ரவிதா நோக்தம் கர்ம கர்துமிஹார்ஹஸி ॥ 24

ஆகையால் கார்யகார்ய விசாரணையில் சாஸ்த்ரத்தையே ப்ராமாணமாகக் கொள்ளவேண்டும்

ஆகையால், எவன் தன்னை நாசம் செய்துகொள்ளக் கூடாதென்று, தன்மேல் க்ருபை பாராட்டி நிற்கிறானோ, அவன் வேதத்தின் ஆஞ்ஞையை மீறி, நடக்கக்கூடாது, புருஷனுடைய எண்ணத்தை அறிந்துகொண்டு, பதிவ்ரதையானவள் அதை அநுஸரித்து நடப்பதால், அநாயாஸமாய்த் தன் நன்மையைத் தேடிக்கொள்கிறாள், ஸ்ரீ குருவின் வசநத்தை எப்போதும் லக்ஷ்யத்தில் வைத்து, அதை மீறாமல் நடந்து கொண்டு வரும் ஓர் சிஷ்யன், ஆத்மஸ்வரூபத்தை அடைந்து விடுகிறான். இது நிற்கட்டும், தான் புதைத்துவைத்திருக்கும் தனம் கைக்குக் கிடைத்துபோகும் வரைக்கும், தீபத்தை ஏற்றி அதை மிக்க ஆதரவுடன் முன் வைத்துக்கொள்ளவேண்டுமல்லவா? அப்படியே ஸகலபுருஷார்த்தங்களுக்கும் யஜமானனாக ஒருவன் ஆகவேண்டுமானால், அவன் ச்ருதி ஸ்ம்ருதிகளின் ஆஞ்ஞையை சிரஸால் வஹித்துக்கொண்டு நடக்கவேண்டும். சாஸ்த்ரம் எதை ஒழித்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லுமோ, அது ஓர் ராஜ்யமே ஆனாலும், அதைக் குப்பையாக மதித்துத் தள்ளிவிடவேண்டும், அது எதைக் கைப்பிடிக்கவேண்டும் என்று சொல்லுமோ அது விஷமேயானாலும், அது தனக்கு விரோதமான தென்று நினைத்து, அதைக் கைவிடக்கூடாது.

இப்படி ஓர் வைதிகநிஷ்டை ஒருவனுக்கு ஏற்பட்டபின், ஹே உத்தம போர் வீரனே, அவன் முன் அநிஷ்டம் என்பது எவ்விதம் நிலைகொள்ளும். உலகத்தாரை அஹிதத்தினின்று விலக்கிவைத்து, ஹிதத்தைக் கொடுத்து வளர்க்கும் தாய், வேதத்தைத்தவிர வேறொன்று மில்லை, ஆகையால் ப்ரஹ்மத்தோடு ஐக்யம்பண்ணிவைக்கும் இந்த வேதத்தின் விஷயத்தில் ஒருவரும் அநாதரவு பாராட்டக்கூடாது. நீயும் இந்த

வேதத்தை மற்றவர்களைக் காட்டிலும் விசேஷமாகக் கொண்டாடவேண்டும். நீ பூர்வ மநுஷ்டித்துள்ள தர்மங்களின் மஹிமையால், சாஸ்த்ரங்கள் ஸத்யமானவை யென்றும். அவற்றை யநுஷ்டிப்பதால் ஸகலார்த்தங்களும் கைகூடுமென்றும் இவ்வுலகில் காட்டிக் கொடுப்பதற்காகவே நீ பிறந்திருப்பதாலும், நீ தர்மராஜனுக்குத் தம்பியாய்ப் பிறந்த ஓர் காரணத்தாலேயே தர்மாநுஜன் என்று ப்ரஸித்தி யடைத்திருப்பதாலும், நீ வேறுவிதமாய் நடக்ககூடாது, இது செய்யவேண்டிய தென்றும், இது செய்யத்தஹாத தென்றும், பகுத் தறிந்து கொள்வதற்து சாஸ்த்ரத்தையே ப்ராமாணமாகக் கொண்டு, அதினால் எது செய்யத்தகாததென்று நிஷேதிக்கப்பட்டதோ அதின் ஸம்பந்தத்தை நீ ஒழித்துக்கொள்ளவேண்டும்; பின்பு செய்யவேண்டியதாய் எது மிகுந்து நிற்குமோ, அதை மிக்க ஆதரவுடன் நீ நன்றாய் அநுஷ்டித்துத் தீரவேண்டும்; ஏனென்றால் உலகத்தாருக்கு ப்ரமாணபூதனாயிருக்கை என்னும் ஓர் அதிகாரம், இப்போது உனக்கு ஏற்பட்டிருக்கிறது, ஹே புத்திமானே ஆகவே உலகத்தாரை நல்வழிப்படுத்துவதற்கு, ஸர்வவிதத்தாலும் நீயே தகுந்தவன்.

உபஸம்ஹாரம்

இப்படி ஆஸுர குணங்களின் கூட்டம் முழுவதையும், அவற்றினின் றுண்டாகும் அநர்த்தத்தோடு, நன்றாய் நிரூபணம்செய்துவிட்டு, அவற்றினின்று வெளிப்படும் மார்க்கத்தையும் பகவான் அர்ஜுநனுக்கு உபதேசித்தார். இதற்குமேல் பாண்டுராஜாவின் அந்த குமாரன் கேட்டறிந்து கொள்ளவேண்டும் என்று மனஸில் ஆசைபாராட்டியிருந்த சில விஷயங்களை மிக்கபக்தியுடன் பகவானிடம் விசாரிக்கப் போகிறான். அப்படி ஏற்படும் ஸம்வாதத்தை அந்தராத்மாவின் காதைக்கொண்டு, நீ கவனிக்கவேண்டும். இவ்வாறு ஸஞ்சயன் வ்யாஸருடைய ஆஜ்ஞையை முன்னிட்டு, த்ருதராஷ்டிரராஜன் பொழுதைப் போக்கிவைத்தான். அப்படியே நானும் நிவ்ருத்திநாதனுடைய க்ருபையால் உங்களுக்கு ஸத்கால க்ஷேபம் செய்துவைத்தேன். ஸாதுக்களாகிய நீங்கள் உங்கள் க்ருபாத்ருஷ்டி என்னும் மழையை என்மேல் பெய்தால், நானும் உங்களுக்கு ஸமானமான பெருமைபடைத்தவனாய் விடுவேன். ஆகவே உங்கள் ஊழியனான எனக்கு, உங்கள் கவனம் என்னும் ப்ராஸாதத்தைத் தருவீர்களாகில், நானும் ஸநாதன் (நாதனைப் (காப்பாற்றும் ஒருவனைப்) படைத்தவன்) ஆய்விடுவேன், என்று ஞானதேவனாகிய நான் விண்ணப்பம் செய்து கொண்டேன்.

பதினாறாவது அத்யாயம் முற்றிற்று

அத்யாயம் 17

குருவந்தநம்:

எவருடைய யோகநித்ரை யென்பது உலகாய் விரிவடைந்திருக்கும் ஓர் தோற்றத்தை வெளிப்படுத்தி வைக்கிறதோ, அந்த குருராஜனாகிய ஹே கணேசா, உம்மை நான் நமஸ்கரிக்கிறேன். மூன்று குணங்கள் என்ற த்ரிபுரத்தால் சூழப்பட்டு, ஜீவதசை என்னும் கோட்டையில் அடைபட்டுக்கிடந்த ஆத்மாவென்னும், சங்கரன் உன்னை ஸ்மரிக்காது போனதால், அவனுக்குக் கஷ்டம் ஏற்பட்டது. குருத்வத்தால் (குருவென்னும் ஸம்ஸ்க்ருத பதத்துக்கு ஆசார்யன் என்றும், கனமானது என்றும், அர்த்தம் இருப்பதால், குருத்வம் என்பதற்கு இவ்விரண்டு விதமாயும் அர்த்தத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்) நீரே பெரியவராயிருந்து கொண்டு, மாயை என்னும் ஸமுத்ரத்தில் ஜீவர்களைத் தாண்டிப்போகச்செய்து வைக்கும் இலேசான கப்பலாயும் இருக்கிறீர். எவன் உமது மஹிமையை அறியாதவனா யிருக்கிறானோ, அவன் விஷயத்தில் நீர் வக்ரதுண்டனாய் (கோணலான முகம் படைத்தவனாய்) இருக்கிறீர். ஞானிக்கோ நீர் எப்போதும் நேரானவராகவே இருக்கிறீர். தேவனாகிய உம்முடைய கண்கள் வெளிப்பார்வைக்குச் சின்னவையாய்த் தோன்றின போதிலும், அவற்றைத்திறந்து மூடுவதால் ஸ்ருஷ்டிலயங்களாகிய லீலைகளை நீர் செய்துவைக்கிறீர். ப்ரவ்ருத்தி என்னும் காதை ஆட்டுவதால், மதத்தின் வாஸனையோடு கூடிய காற்றுண்டாய், அந்த வாஸனைக் காசைப்பட்டவைகளான ஜீவர்களென்ற தேன்வண்டுகள், உமது கன்னத்தில் உட்கார்ந்து கொள்வதால், நீர் நீலோத்பலங்களால் பூஜிக்கப்பட்டவராய் விளங்குகிறீர்.

பின்பு நிவ்ருத்தியென்னும் காதை ஆட்டிவைக்கவே, முன்முகத்தின்மேல் ஏற்றிவைக்கப்பட்டிருந்த பூஜாத்ரவ்யங்கள் உதிர்ந்துபோய், உம்முடைய அங்கத்தில் இயற்கையாகவே ஏற்பட்டிருந்த ஆபரணங்கள் வெளிப்பட்டு விளங்குகின்றன, உம்முடைய இடதுபக்கத்தில். இயற்கையாக அமைந்திருந்து, ஜகத்ரூபமான இந்தத் தோற்றமாய் வெளிப்பட்டுத் தோன்றும் ந்ருத்யக்ரீடை யென்னும் சக்திக்கு, தாண்டவம் என்று பெயரிட்டு, அதை வெளிப்படுத்தி வைக்கிறீர். இது நிற்கட்டும், நீர் இந்த ஜகத்துக்கு மிகவும் நெருங்கின பந்துவாய் இருந்தும், பந்துவின் கார்யங்கள் என்னென்ன உண்டோ, அவற்றினின்று விடுபட்டவர் ஆகிறீரே, இது மிக்க ஆச்சர்யமாயிருக்கிறது, ஹே

தாத்ருத்வத்தால் (தானங்கள் செய்யும் ஸ்வபாவத்தால்) சிறந்தவரே, நீர் ஸம்ஸாரபந்தத்தை இருந்த இடம் தெரியாமல் நாசம் செய்து வைப்பதால், ஜகத்துக்கெல்லாம் பந்துவென்று உம்மை பாவித்து, உம்மை ப்ரேமையுடன் கட்டிக்கொண்டு, (உம்முடன் ஒன்றுபட்டு) உமக்கு ஸேவை செய்யத் தலைப்பட்டவர்களுக்கு, தேஹம் என்றுகூட ஓர் த்வைத பாவம் மிகுந்து நிற்காதபடி, அவர்களை உம்முடன் ஐக்யப்படுத்திக்கொள்கிறீர், ஹே தேவர்கள் அரசனே உம்மைத் தங்களை விட்டு வேறானவர் என்று பாவித்து, எவர்கள் உம்மைத் தங்கள்முன் வைத்து, ஸாதநா நுஷ்டாநங்களைக்கொண்டு உம்மை அணுகுவதற்காக விரைந்தோடுவார்களோ, அவர்களுக்கு வெகுதூரத்தில் நீர் பின்தங்கிப்போகிறீர்.

எவர்கள் த்யாநம் என்னும் உபாயத்தைக்கொண்டு, உம்மைத் தங்கள் மனஸில் நிறுத்திவைக்கப் பார்க்கிறார்களோ, அவர்கள் இருக்கும் ஊரிலேயே நீர் இல்லாதவராய்விடுகிறீர், எவர்கள் உமது விஷயத்தில் த்யானம் என்னும் த்வைதபாவத்தை ஒழித்துக் கொள்கிறார்களோ, அவர்கள் உமது ப்ரீதிக்கு யோக்யதை படைத்தவர்கள் ஆகிறார்கள். ஸர்வரூபமாயும், எங்கும், எக்காலும், பரிபூர்ணமாய், தாமாகவே அமைந்திருக்கும் உம்மை, அப்படி இருப்பதாகக்கூட ஓர் அறிவின் விஷயமாய்ச் செய்துகொள்ளாதவர்கள் எவர்களோ, அவர்களே ஸர்வஜ்ஞர்கள் என்று கொண்டாடப்படுகிறார்கள். வேதம் எவ்வளவோ விஸ்தாரமாய் உம்மை வர்ணித்திருக்கிறதோ, அவ்வர்ணனையின் அல்பாம்சத்தைக்கூட, நீர் உம்முடைய காதில் ஏற்றிக்கொள்வதில்லை. மௌநம் என்பதே உம்முடைய ராசீநாமம். (பிறந்த ராசியைக் கொண்டு இட்ட பெயர்) அப்படியிருக்க ஸ்தோத்ரம் செய்ய ஆசைப்படுவது ஏன்? காணப்படுகிறது ஏத்தனையும் மாயை யானதால், நான் உம்மை எப்படி பஜிப்பேன்? ஏதோ ஓர் பாக்யத்தின் கார்யமாய், நான் உமக்கு அடிமையாகப் நிற்கப் பார்த்து, உம்மை என்னைக்காட்டிலும் வேறாகப் பாவித்து, த்ரோஹத்துக்கே ஆளாகிறேன்.

ஆகையால் உமது விஷயத்தில், நான் ஒன்றுமாகாமல் இருக்கையே நலமாகிறது. உம்மை விட்டு வேறொன்றுமாய் ஆகாமல், எப்போதும் இருக்கையே, வேறொன்றின் சேர்க்கையற்ற உம்மை யடைவதற்கு உபாயம், என்ற இந்தரஹஸ்யத்தை நான் அறிந்துகொண்டேன், என்னுடைய ஆராத்யலிங்கமான குருநாதனே. ஆகவே, உப்பு எப்படி தனித்து

நிற்காமல், ஜலத்தோ டொன்றுபட்டுப் போய், அதை பஜித்துக்கொண்டிருக்குமோ, அப்படியே நான் உமக்குச் செய்யும் நமஸ்கார மிருக்கிறதென்று, நீர் தெரிந்துகொள்ளவேண்டும். வளர்த்து வதென்? ஜல மில்லாத ஓர் குடம், ஸமுத்ரத்தில் முழுகினபின், ஜலத்தால் நிரம்பின்தாய் வெளிப்படுவது போலும், தீபத்தோடு ஸம்பந்தப்பட்ட வத்தியானது தீபமாயப் போவதுபோலும், ஹே நிவ்ருத்திநாதா, உம்மை நமஸ்கரித்து, நான் ஸம்பூர்ணதையை அடைந்துவிட்டதால், கீதையின் அர்த்தத்தை வெளிப்படுத்திவைப்பேன்.

இவ்வத்யாயத்தின் ஸங்கதி :

பதினாறாவது அத்யாயத்தின் முடிவில், அதின் கடைசி ச்லோகத்தால், க்ருத்யாக்ருத்யங்களை பகுத்தறிந்து கொள்வதற்கு, நீ சாஸ்த்ரத்தையே ப்ரமாணமாகக் கொள்ள வேண்டும், என்று இப்படி ஓர் ஸித்தாந்தத்தை பகவான் அர்ஜுநனுக்கு உபதேசித்து வைத்தார். இதைக்கேட்டு அர்ஜுநன் தனக்குத் தானே பின்வருமாறு சொல்லிக்கொண்டான். எந்தக் கர்மம் செய்வதற்கு ஆரம்பித்தாலும், அதற்கு முன் சாஸ்த்ரம் அவ்விஷயத்தில் என்ன சொல்கிறது என்று, தெரிந்துகொண்டே தீரவேண்டும், இதினின்று எவனும் தப்பித்துக் கொள்வதற்கு வழியில்லை, என் றிப்படி ஓர் கட்டாயம் ஏற்படும் பக்ஷத்தில், ஒருவொருவனும செய்ய வேண்டியதை எப்படிச் செய்து முடித்துக்கொள்ளலாம். தக்ஷகனுடைய படத்தினின்று அவன் முகுடத்தைப் பறித்தெடுத்துக்கொண்டு, ஸிம்ஹத்தின் மூக்கினின்று மயிரைப் பிடுங்கிக்கொண்டு, அம்மயிரில் அம்மணியைக் கோத்துக் கழுத்தில் தரித்துக்கொள்ளவேண்டும்; இல்லாவிட்டால் வெறும் கழுத்தாய் இருந்து தீரவேண்டுமா என்ன? சாஸ்திரங்களோ தலைவிரிகோலமாய்ப் பரந்து, ஒரே விஷயத்தைப்பற்றிய அவற்றின் வசநங்கள், பல இடங்களிற் சிதரிக்கிடக்கின்றன. அவற்றை யெல்லாம் திரட்டி யெடுத்து, ஒன்றோடொன்று ஒவ்வாதிருக்கும் அவ்வசனங்களனைத்தையும் ஒன்றுபடுத்தி வைத்தல், எவனுக்கு எப்படி ஸாத்யமாகும்?

அப்படி அவ்வாக்யங்களை ஒன்றுபடுத்தி, அவற்றின் அபிப்ராயத்தை அறிந்து கொண்டபின், அதின்படி அநுஷ்டானம் செய்வதற்குத் தகுந்த காலம் எப்போது கிடைக்கும்? இத்தனையையும் ஸாதித்து வைப்பதற்கு

வேண்டிய தீர்க்காயுஸ்ஸு, ஒருவனுக்கு எப்படிக் கிடைக்கும்? பல சாஸ்திரங்களையும் ஒன்றுபடுத்தி, அவற்றின் அபிப்ராயத்தைத் தெரிந்து கொள்ளலும் அப்படித் தெரிந்து கொண்டபடி அநுஷ்டானம் செய்வதற்கு வேண்டிய இடம் பொருள் ஏவல் அனைத்தும், ஏதோ ஒருவனுக்கு ஸாத்யமாயிருந்தாலும், எல்லாருக்கும் சாஸ்த்ர ஞானம், இடம், பொருள், ஏவல் என்ற இந்நான்கும் அஸாத்யம் அன்றோ. ஆகையால் ஜநஸாமாந்யத்துக்கு சாஸத்ரப்படி கர்மங்களை அநுஷ்டித்தல் என்பது கைகூடாது. அப்படி யானபின், சாஸ்த்ரஞாந மில்லாதவர்களாய், மோக்ஷத்தை அடைய விரும்புகிறவர்களுக்கு, கதி என்ன?

இதைக் கேட்டறிந்து கொள்ள வேண்டும் என்று கருதி, அர்ஜுநன் எவ்விஷயத்தை ப்ரஸ்தாபிக்கப்போகிறானோ, அதுவே இப்பதினேழாவது அத்யாயத்துக்கு விஷயமாய் ஏற்பட்டது. ஆகவே, ஸர்விவஷயத்திலும், த்ருஷ்ணையை (ஆசையை) ஒழித்துக் கொண்டவனாயும், ஸகலவித்யைகளிலும் ப்ரவீணனாயும், தன்னுடைய அர்ஜுநத்வத்தால் (வெண்மையால் பரிசுத்ததையால்) ஸ்ரீ க்ருஷ்ணனுக்கும் புதிதாய் ஏற்பட்ட ஓர் க்ருஷ்ணனாயும், (க்ருஷ்ண சப்தத்துக்கு மனஸை ஆகர்ஷித்து, ஸுகிக்கச் செய்கிறவன், என்று அர்த்தம். அர்ஜுநனுக்கு க்ருஷ்ணன் என்று ஓர் பெயர் உண்டு) சௌர்யம் என்பது தான் குடியிருப்பதற்கு ஏற்படுத்திக்கொண்ட வீடாயும், ஸோமவம்சத்துக்கு அலங்காரமாயும், தன்லீலைகளால் பகவானுக்கும் உலகத்தாருக்கும் ஸுகாதிகளை உபகரிக்கிறவனாயும், ப்ரஜ்ஞை என்பதற்குக் கணவனாயும், ப்ரஹ்மவித்யைக்கு விச்ராந்திஸ்தானமாயும், பகவானுடன் இணைபிரியாத அவருடைய மனோதர்மம் என்று சொல்லத்தக்கவனாயும், இருக்கும் அந்த அர்ஜுநன் பின்வருமாறு சொன்னான்.

अर्जुन उवाच ।

ये शास्त्रविधिमुत्सृज्य यजन्ते श्रद्धयान्विताः ।

तेषां निष्ठा तु का कृष्ण सत्त्वमाहो रजस्तमः ॥१॥

அர்ஜுன உவாச -

யே ஶாஸ்த்ர விதி முத்ஸ்ருஜ்ய யஜந்தே ஶ்ரத்தயாऽன்விதாः ।

தேஷாம் நிஷ்டா து கா க்ருஷ்ண ஸத்த்வமாஹோ ரஜஸ்தமः ॥ 1

அர்ஜுநனுடைய ப்ரச்நம் :

ஐயா, தமாலமரம்போல் கருத்தவரே, இந்திரியங்களால் அநுபவிக்கும்படி ஸகுணரூபத்தோடு கூடிய பரப்ரஹ்மமே, உம்முடைய வார்த்தைகள் தெளிவாய்ப் போதமாகாமல், நான் கேட்டு விசாரித் தறிந்துகொள்ள வேண்டியவையா யிருக்கின்றன. சாஸ்த்ரத்தை அறிந்து அதை அநுஸரித்து நடக்கு மவர்களைத்தவிர, மற்றப்ராணிகள் மோக்ஷத்தை அடைவதில்லை யென்றபடிப் பக்ஷபாதமாய் ஏன் முடிவு செய்துவைத்தீர். சாஸ்த்ரபடி செய்வதற்கு வேண்டிய இடமும், காலமும், சாஸ்த்ராப்யாஸம் செய்துவைப்பவனும், ஒருவனுக்குக் கிடைக்கவில்லை ' அன்றியும் சாஸ்த்ராப்யாஸத்துக்கு அநுகூலமான பொருள் முதலியவையும் அவன் கைக்குக் கிடைக்காமற்போயின. அவனுக்கு பூர்வ புண்யமுமில்லாமையால், அவன் புத்திக்கு ஸாமர்த்யமும் இல்லாமல் போய்விட்டது. இப்படி ஒருவனுக்கு நேர்ந்து, அவன் சாஸ்த்ரஞாநத்தை அடையாதவனாயிருந்தும், (வளர்த்திச் சொல்வதென்?) சாஸ்த்ரவிசாரம் செய்வதற்கு வேண்டிய புத்திகௌசல்யம் முதலியவை ஒன்றுமே அவனுக்கு இல்லாமற் போனமையால், சாஸ்த்ரவிஷயமான தர்க்கவிதர்க்கங்களை அவன் முற்றிலும் துறந்துவிட்டானே யானாலும், சாஸ்த்ரார்த்தத்தை நிச்சயமாய்த் தெரிந்துகொண்டு, அதன் ப்ரகாரம் அநுஷ்டானம் செய்து, பவித்ரதை அடைந்தவர்களாய், பரலோகத்தில் உத்தமமான கதி பெற்று, அங்கு வாழ்வு பெற்ற பெரியவர்கள் எவர்களோ, அவர்களைப்போல் தானும ஆகவேண்டும் என்று ஆசைபூண்டு, அவர்கள் இங்கு ஆசரித்துக் காட்டிக்கொடுத்த வழியைப் பிடித்துக் கொண்டு, அவர்களைப்போல் அவன் நடந்துவருகின்றான்.

மேலே நன்றாய் எழுதி வைத்திருக்கும் அக்ஷரங்களைப் பார்த்துக் கொண்டு, சிறுவர்கள் அதேமாதிரியாக கீழே அவ்வக்ஷரங்களை எழுதிவைப்பது போலும், ஓர் குருடன் கண்ணுள்ளவன் கையைப் பிடித்துக் கொண்டு, அவன் பின் செல்வதுபோலும், அவன் ஸர்வ சாஸ்த்ரத்திலும் தேர்ச்சியடைந்தவர்கள் ஆசாரத்தை ப்ரமாணமாகக் கொண்டு, மிக்க ச்ரத்தையுடன் சிவபூஜை முதலிய தேவ பூஜைகளை நடத்திக்கொண்டு, பூதானம் முதலிய தானங்களைச் செய்துகொண்டு, அக்நிஹோத்ராதிகளை நடத்திக்கொண்டு, வருகிறான். அவனுடைய கதி ஸாத்வீகமாகுமா, அல்லது தாமஸமாகுமா, அதை எனக்குத் தெரிவிக்க வேண்டும். ஐயா,

அப்போது வைகுண்ட பீடத்தில் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட ஆராத்ய லிங்கம் என்றும், நிகமம் என்றும் தாமரைப்பூவின் மகரந்தம் என்றும் சொல்லத்தக்கவராய், தன்னுடைய நிழலை உதவி ஜகத்தை வாழச்செய்கிறவராய், காலதத்வத்தைப்போல் எப்போதும இருப்பவராய், லோகத்துக்கெல்லாம் பூஜ்யராய், மற்றொன்றின் சேர்க்கையற்றவராய், மேலெழுந்த பார்வைக்கு மறைந்திருப்பவராய், ஆநந்தத்தை வர்ஷிக்கும் மேகம் என்று சொல்லத்தக்கவராய், இவ்வகைப்பட்ட குணங்கள் எந்த சக்தியின் பலத்தைக் கொண்டு பெருமை பெற்றவை யாகின்றனவோ, அந்த சக்திக்கு ஆதாரமானவராய், இருக்கும் ஸ்ரீக்ருஷ்ணன் பின்வருமாறு சொன்னார்.

श्रीभगवानुवाच ।
त्रिविधा भवति श्रद्धा देहिनां सा स्वभावजा ।
सात्त्विकी राजसी चैव तामसी चेति तां शृणु ।।२।।

ஸ்ரீ பகவானுவாச -

த்ரிவிதா பவதி ஶ்ரத்தா தேஹினாம் ஸா ஸ்வபாவஜா ।
ஸாத்விகீ ராஜஸீ சைவ தாமஸீ சேதி தாம் ஶ்ருணு ।। 2

ஸ்ரீக்ருஷ்ணனுடைய உத்தரம் :

ச்ரத்தை மூவகைப்படுகை : ஹே பார்த்தா, சாஸ்த்ராப்யாஸத்தில் மிக்க கஷ்டமிருக்கிறது என்று, நீ அபிப்ராயம் கொண்டிருக்கிறாய், என்பதை நான் அறிந்து கொண்டேன். ச்ரத்தை ஒன்றைக் கொண்டே, பரமபதத்தை அடைந்துவிட நீ பார்க்கிறாய். அது அப்படி எளிதான ஓர் வஸ்து வல்ல, ஹே நன்கறிந்தவனே. ச்ரத்தை ஒன்றே எதையும் ஸாதித்து வைக்கும் என்று நம்புவது தகாது. ப்ராஹ்மணன் பஞ்சமனோடு சேர்ந்து பஞ்சமனாய் விடுவதில்லையா? கங்கையின் பரிசுத்தமான ஜலமே ஆகட்டும், அது கட்பாத்திரத்தில் வைக்கப்பட்டுப்போனபின், என்ன செய்தாலும் அது அசுத்தமாகவே போய்விடுவதில்லையா? சந்தனக் கட்டையானது சீதளமான வஸ்துவே யானாலும் அதற்கு நெருப்பின் ஸம்பந்தம ஏற்பட்டபின், அது கையைக் கொளுத்தாதா? கட்டை மாற்றுள்ள பொன்னை உருக்கும் மூசில் தங்கம் விழுந்துருகிப்போனபின், அதை நல்ல தங்கத்தின் விலையைக்கொடுத்து வாங்கினவன் நஷ்டப்பட்டுப் போகானா? அப்படியே ச்ரத்தை யென்பது ஸ்வரூபத்தினால்

சுத்தமானதே யானாலும், அது வேறு வேறு ப்ராணிகளின் ஸ்வபாவத்தோடு . கலந்துபோனபின், அநாதியாய் ஏற்பட்டிருக்கும் மாயையின் ப்ரபாவத்தால் ஸத்வரஜஸ்தமஸ் ஸென்ற முக்குணத்தின் ஸம்பந்தமடைந்து, மூன்று விதப்பட்டுப்போகிறது.

அந்த ப்ராணிகளின் தேஹத்தில், இரண்டு குணம் அழுந்திக்கிடந்து, மற்றொன்று தலையெடுக்கிறது; அப்போது ஜீவர்களுடைய ப்ரவ்ருத்தி அப்படித் தலையெடுத்த குணத்தை அநுஸரித்த தாகிறது. ப்ரவ்ருத்தி எப்படி ஏற்படுகிறதோ, அப்படியே மனஸும் ஆய்விடுகிறது. மனஸு எப்படி ஏற்படுகிறதோ, அதற்குத் தக்க படியே க்ரியையும் ஏற்படுகிறது. இப்படிக் கர்மங்கள் ஏற்பட்டபின்பு, அந்த ஜீவன் இறந்துபோய், அக்கர்மங்களுக்குத் தக்க படியே தேஹத்தை தரிக்கிறான். வித்தின் ஸ்வரூபம் அழிந்து போய், மரம் வளர்கிறது; மரத்தின் ஸ்வரூபம் அழிந்துபோய், அது விதையில் அடங்கிப்போகிறது. இப்படியே கோடி கோடி கல்பங்கள் கழிந்தும், ஜாதி என்பது அழிந்துபோகாமல், முன் போலவே இருந்து கொண்டிருக்கிறது. அப்படியே, இவ்வுலகில் ப்ராணிகள் எண்ணிறந்த தடவை செத்துப் பிறந்தாலும், அவற்றிற்கு இம்முக்குணங்களின் ஸம்பந்தம அற்றுப்போவது இல்லை.

ஆகவே ப்ராணிகளுக்கு வகுத்துவைக்கப்பட்ட ச்ரத்தையானது, அவர்களுடைய குணங்களை அநுஸரித்ததாய், மூவகைப்படுகிறது. ஓர் ஸமயத்தில் சுத்தமான ஸத்வகுணம் தலையெடுக்கிறது. அப்போது அது ஞானத்தை எழுப்பி வைக்கிறது. ஆனால், அந்த ஸத்வத்துக்கு விரோதிகளாய், மற்ற இரண்டு குணங்கள் அத்தேஹத்தில் இருந்துகொண்டே இருக்கின்றன. ஸத்வத்தைத் துணையாய்க் கொண்ட அந்த ச்ரத்தை, அந்த ஜீவனை மோக்ஷபர்யந்தம கொண்டு போகப் பார்க்கிறது. அப்போது ரஜஸ், தமஸ், இவ்விரண்டும் ஓர் வேலையும் செய்யாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்குமா? ஸத்வத்தின் பலத்தை முற்றிலும் நாசம் செய்துவைத்து, ரஜோகுணம் ஆகாசத்தை அளாவத்தொடங்கும்போது, அதே ச்ரத்தை பந்தத்தை உண்டாக்கிவைக்கும் கர்மங்களைச் செய்து வைக்கத் தலைப்படுகிறது. பின்பு தமஸ் தலையெடுக்கும்போது, அந்த ச்ரத்தையின் உருவம் மாறிப்போய், கண்ணுக்குமுன் தோன்றின விஷயங்கள், எவை யானாலும், ஸரியே, அவற்றைப் புசிக்கும்படி அதுவே செய்துவைக்கிறது.

सत्त्वानुरूपा सर्वस्य श्रद्धा भवति भारत ।
श्रद्धामयोऽयं पुरुषो यो यच्छ्रद्धः स एव सः ।। ३ ।।

ஸத்த்வானுரூபா ஸர்வஸ்ய ஶ்ரத்தா பவதி பாரத ।
ஶ்ரத்தா மயோ(அ)யம் புருஷோ யோ யச் ச்ரத்த: ஸ ஏவ ஸ: ।। 3

இதுவுமது :

ஆகவே ஸத்வரஜஸ்தமஸ் என்னும் முக்குணங்களின் ஸம்யந்தமற்றுத் தனித்திருப்பதாய், ஜீவர்கள் வாழும் இந்த உலகில், ச்ரத்தை என்பது காணப்படாது, வஸ்துக்களின் வர்மங்களை (மறைந்து கிடக்கும் ஸ்வபாவங்களை) அறிந்த ஹே அர்ஜுநா. ஆகையால் இயற்கையாகவே ச்ரத்தை என்பது மூவகைப்பட்டதாய், ஸாத்விகம், ராஜஸம், தாமஸம், என்று பெயர் படைத்து விளங்குகிறது. ஜீவநாதாரமான ஜல மொன்றே விஷஜந்துக்களிடத்திலும் விஷப்பூண்டுகளிடத்திலும் கொலைசெய்யும் விஷமாகவும், மிளகில் காரமாகவும், கரும்பில் தித்திப்பாகவும், ஆய்விடுதல்போலும், எவன் தமஸ்ஸானது மிக்க வலுத்திருக்கும் ஓர் காலத்தில் ஜந்மம் தோறும் தவறாமல் பிறக்கிறானோ அல்லது சாகிறானோ, அவனிடத்தில் ச்ரத்தையானது தமோ குணமாகவே ஆய்விடுகிறது. பின்பு கருமைக்கும், மசிக்கும், எப்படி வித்யாஸ மில்லையோ, அப்படியே அந்த ச்ரத்தைக்கும் தாமஸகுணத்துக்கும் வித்யாஸ மில்லாமற் போகிறது. அப்படியே ச்ரத்தை ரஜோகுணம படைத்த ஜீவனிடத்தில் ராஜஸமாயும், ஸத்வகுணம் படைத்தவனிடத்தில் ஸாத்விகமாயும் ஆய்விடுகிறது. ஆகவே, ப்ராணிக ளனைவரும் ச்ரத்தையினாலேயே வார்க்கப்பட்ட வர்களாயிருக்கிறார்கள்.

இப்படி மூன்று வகைப்பட்டதாய் ஏற்படும் ச்ரத்தையை, இன்னின்னது என்று அறிந்து கொள்வதற்காக, அவற்றின் லக்ஷணங்களைச் சொல்வேன் கேள். ஓர் மரத்தின் ஸ்வபவாத்தை அதின் பூவைக்கொண்டறிந்து கொள்ளற்போலும், ஒருவனுடைய மனோநிலையை அவன் வார்த்தைகளால் அறிந்து கொள்ளற் போலும், ஒருவனுடைய பூர்வகர்மங்களை இந்த ஜந்மத்து ஸுகதுக்க போகங்களைக்கொண்டு அறிந்து கொள்ளற் போலும், எந்தெந்த லக்ஷணங்களைக் கொண்டு, ச்ரத்தையின் மூவகைப்பட்ட உருவத்தையும் கண்டுகொள்ளலாமோ, அவற்றைச் சொல்வேன் கேள்.

यजन्ते सात्त्विका देवान्यक्षरक्षांसि राजसाः ।
प्रेतान्भूतगणांश्चान्ये यजन्ते तामसा जनाः ।। ४ ।।

யஜந்தே ஸாத்விகா தேவான் யக்ஷரக்ஷாம்ஸி ராஜஸாः ।
ப்ரேதான் பூத கணாம் ஶ்சான்யே யஜந்தே தாமஸா ஜனாः ।। 4

மூவிதமான ச்ரத்தைபடைத்தவர்கள் லக்ஷணங்கள் :

எவர்களுடைய சரீரம் ஸாத்விக ச்ரத்தையால் அமைந்திருக்கிறதோ, அவர்களுடைய புத்தி, அடிக்கடி ஸ்வர்க்கத்தின் மேலேயே சென்றுகொண்டிருக்கும். அவர்கள் சாஸ்த்ரங்களனைத்தையும் படித்து, யஞ்ஞக்ரியைகளைச் செய்து, தேவலோகம் போய்ச்சேர்வார்கள். ராஜஸ ச்ரத்தை எவர்களுக்கு ஏற்பட்டிருக்குமோ, அவர்கள், ஹே வீரேசா, ராக்ஷஸர்களையும் ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் பிசாசுகளையும் பூஜைசெய்வார்கள். தாமஸீ என்று சொல்லப்படும் ச்ரத்தை படைத்தவர்கள், கேவலம் பாபம் எல்லாம் ஒன்று சேர்ந்த குவியலாயும், தயை என்பது முற்றிலும் அற்றுப்போய் மிக்க கடினமாயிருக்கும் ஹ்ருதயம் படைத்தவர்களாயும், இருந்துகொண்டு, ப்ராணிகளைக் கொன்று அவற்றை பலியாயிட்டு, பரம அசுத்தமான பூதப்ரேதங்களை ஸ்மசானத்தில் ஸந்த்யாகாலத்தில் பூஜிப்பார்கள். அவர்கள் வைரம்பாய்ந்த தமோகுணத்தால் நிர்மாணம் செய்யப்பட்டவர்களாய், தாமஸீ ச்ரத்தைக்கு வாஸஸ்தானமா யிருப்பார்கள். இவ்விதம் மூவகைப்பட்ட லக்ஷணங்க ளுள்ளவையாய், மூவகைப்பட்ட ச்ரத்தைகளும் உலகிற் காணப்படும். இவற்றை நான் விஸ்தரித்து வர்ணித்ததின் உத்தேசம் என்ன வென்றால், ஸாத்விக ச்ரத்தை உன்னிடத்தில் குறைந்துபோகாவண்ணம், நீ ஜாக்ரதை செய்துகொண்டு, அதற்கு வைரிகளான மற்ற இரண்டையும் உன்னிடத்தினின்று ஒழித்துவைக்கவேண்டும் என்பதே. இந்த ஸாத்விக ச்ரத்தை யானது எவர்களுக்கு ஜீவநோபாயமாய் அமைந்திருக்குமோ, அவர்களுக்கு மோக்ஷம் என்பது ஓர் பூச்சாண்டியாய் இராது.

அவர்கள் ப்ரஹ்மஸூத்ரங்களைக் கற்றுக்கொள்ளாது போனாலும், ஓர் சாஸ்த்ரத்தையும் படிக்காமற்போனாலும், ஸித்தாந்தங்கள் இன்னவையென்று தெரிந்துகொள்ளாமற் போனாலும், அவர்கள், ச்ருதிஸ்ம்ருதிகளின் அர்த்தங்களே மூர்த்திகரித்து நிற்கின்றன, என்று சொல்லத்தக்கவர்களாய், தங்கள் அநுஷ்டானத்தால் சாஸ்த்ரஸித்தாந்தம் இன்னதென்று யாவரும அறியும்படி ப்ரகடனம் செய்துவைக்கும் பெரியவர்கள்

ஆவார்கள். அவர்கள் நடத்தையை அநுஸரித்துக்கொண்டு, எவர்கள் ஸாத்விகச்ரத்தை உள்ளவர்களாய் இவ்வுலகில் நடந்து வருகிறார்களோ, அவர்களும் கீழே சொல்லப்பட்டவர்கள் என்ன பலனை அடைகிறார்களோ, அதே பலனை அடைகிறார்கள். ஒருவன் மிக்க ப்ரயாஸப்பட்டு, ஓர் தீபத்தை ஏற்றி வைத்தபின், மற்றொருவன் அந்த தீபத்தைக் கொண்டு தன் தீபத்தை ஏற்றிக்கொண்டால், அப்படி ஏற்றிக்கொள்ளப்பட்ட மற்றோர் தீபம் ப்ரகாசம் கொடுக்காமற் போய்விடுமா?

ஒருவன் மிக்கச் செலவுசெய்து, ஓர் பெரிய வீட்டைக் கட்டிவைத்தபின், அதில் கொஞ்சகாலம் தங்கியிருக்கும் மற்றொருவனுக்கு, அது ஸுகம் கொடுக்காமற் போய்விடுமா என்ன? இது நிற்கட்டும். ஓர் தடாகம் தன்னை நிர்மாணம் செய்து வைத்தவனுக்கு மாத்ரமே தாஹத்தைத் தீர்த்துவைத்து, இதரர்களுடைய தாஹத்தைத் தீர்க்காது போகுமா? ஓர் வீட்டில் சமைத்து வைத்திருக்கப்பட்ட அந்நம், சமைத்து வைத்தவன் பசியை மாத்ரமே தீர்க்கிறதென்றும், அதை ஸேவிக்கும் இதரர்களுடைய பசியைத் தீர்த்து வைக்கிற தில்லை யென்றும், உண்டா? வளர்த்திப் பேசுவதென்? மிக்கக் கடினமான தபஸை அநுஷ்டித்ததின் பயனாக கோதாவரியை ப்ரவஹிக்கச் செய்த கௌதமருஷிக்குமாத்ரம், அது புண்யதீர்த்தமாய் இருந்துகொண்டு, இதரர்களுக்கு அது ஸாமாந்யமான ஓடையாய்விடுகிறதா? ஆகையால் எவன், தான் நன்மை அடைவதற்காக, சாஸ்த்ரவிதி கோணாமல் அதை அநுஷ்டித்து வருகிறானோ, அவனைப் பார்த்துக்கொண்டே சாஸ்த்ரம் அறியாத மற்றொருவன் ச்ரத்தை பாராட்டினவனாய், அதே மாதிரி நடந்து கொண்டு வந்தால், அந்த மற்றொருவனும் ஸம்ஸாரத்தைத் தாண்டி விடுகிறான்.

अशास्त्रविहितं घोरं तप्यन्ते ये तपो जनाः ।
दम्भाहंकारसंयुक्ताः कामरागबलान्विताः ॥५॥

அஶாஸ்த்ர விஹிதம் கோரம் தப்யந்தே யே தபோ ஜனாः ।
தம்பாஹங்கார ஸம்யுக்தாः காமராக பலான் விதாः ॥ 5

ஆஸுரி ச்ரத்தை படைத்தவர்களுடைய கதி :

சாஸ்த்ரம் என்று பெயரிடப்பட்டதாய் ஒன்று இருந்தால், அதன் வழிகூட போகாதவர்களாயும், சாஸ்த்ரம் அறிந்தவர்கள் தங்கள் ஊர் எல்லையை மிதிக்க உடன் படாதவர்களாயும்,

இருந்துகொண்டு, பெரியவர்கள் ஸதாசாரங்களைப் பார்த்து பக்கத்திலிருப்பவர் சிரிக்கும் படி பழிப்புக்காட்டி, பண்டிதர்கள் பேச ஆரம்பித்தால், கையைச் சொடுக்கி பரிஹாஸம் செய்கிறவர்களாய், கொழுப்பாலும் பொருள் படைத்திருக்கும் இறுமாப்பாலும், பாஷண்டர்கள் அநுஷ்டிக்கும் தபஸுகளை ச்ரத்தையுடன் அநுஷ்டித்துக் கொண்டு, தன் கைக்கு அகப்பட்டவனைக் கத்தியால் வெட்டி, யஞ்ஞபாத்ரங்களில் அவன் மாம்ஸத்தையும ரக்தத்தையும் நிரப்பிவைத்துக்கொண்டு, ஜ்வலித்துக் கொண்டிருக்கும அக்நி குண்டத்தில் ஆஹுதிசெய்து, அல்லது மாந்த்ரீகர்கள் வாயில் வார்த்து, குழந்தைகளைக் கொன்று பிண்டமாய்ப் பிடித்து, ப்ரார்த்தனைகள் செலுத்தி, ஆக்ரஹத்தின் பெருக்கில் விழுந்து க்ஷுத்ர தேவதைகளிடம் வரம் பெறுவதற்காக, ஏழுநாள் பசித்திருந்து மறுதினம் உண்பது, என்று ஓர் வ்ரதம் பூண்டுகொள்வார்கள்.

அப்பா அறிவுடைமையாற் சிறந்தவனே தன்னையும் இதர்களையும் பீடித்தல் என்னும் விதையை, இப்படி தமஸ்ஸென்னும க்ஷேத்ரத்தில் விதைத்தபின், அந்த பீடைகளே நூறுமடங்காயும் ஆயிரமடங்காயும் விளையும். கையால் நீந்திப்போகக் கூடிய திறமையும் இல்லாமல் படகும் வேண்டா மென்று தள்ளிவிட்டு, ஸமுத்ரத்தில் விழுகிறவர்களுடைய கதியே, இந்த அறிவுகேடர்களுக்கு ஏற்படும். வைத்யன்மேல் பகைபாராட்டிக்கொண்டு, மருந்தைக் காலால் உதைத்துத் தள்ளிவிடும் நோயாளி எப்படி துன்பப்பட்டுப்போவானோ, அல்லது கண்ணுள்ளவன் மேல் பகை பாராட்டிக்கொண்டு, தன் கண்ணைப் பிடுங்கி யெறிந்து விட்டு, வேண்டுமென்று குருடனாய்ப்போகிறவன், எப்படி துர்கதி அடைவானோ, அப்படியே சாஸ்த்ரம் காட்டிக்கொடுக்கும் நல்வழியை நிந்தித்துக்கொண்டு, பூர்ணமான அஞ்ஞானம் படைத்தவர்களாய், காட்டிற் புகுந்து கஷ்டப்படும், ஆஸுரீ ச்ரத்தை படைத்த இவர்கள், துர்கதி அடைவார்கள். காமம் எதைச் செய்யென்று சொல்லுமோ, அதைச் செய்கிறவர்களாய், க்ரோதம் எவர்களைக் கொல் லென்று சொல்லுமோ, அவர்களைக் கொல்கிறவர்களாய், இவர்கள் இருந்துகொண்டு, சுருக்கிச் சொல்ல, என்னைக் கீழேதள்ளி, என்மேற் கற்பாறைகளை அடுக்கி, என்னைப் புதைத்து விடுகிறார்கள்.

कर्षयन्तः शरीरस्थं भूतग्राममचेतसः ।
मां चैवान्तःशरीरस्थं तान्विद्ध्यासुरनिश्चयान् ।।६।।

கர்ஶயந்த: ஶரீரஸ்தம் பூத க்ராம மசேதஸ: ।
மாம்சைவாந்த:ஶரீரஸ்தம்தான்வித்த்யாஸுரநிஶ்சயான்॥6

உபஸம்ஹாரம்:

தங்களுடைய தேஹத்துக்கும் பிறருடைய தேஹத்துக்கும், அவர்கள் செய்துவைக்கும் அனைத்தாலும், ஆத்மாவாகிய எனக்கே துக்கம் நேரிடுகிறது. இப்படிப்பட்ட பாபிகளை பேச்சினாற்கூட ஸ்பர்சிக்கத்தகாது. ஆனால் அவர்கள் ஸங்கதியை நீ ஒழித்துக்கொள்வதற்காக இச்சமயத்தில், அவர்கள் விஷயத்தைச் சொல்லும்படியாய் ஏற்பட்டுவிட்டதால், நான் அதைச் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. பிணத்தை வீட்டைவிட்டு வெளிப்படுத்திவைப்பதற்காக. அதைத் தொட்டு எடுக்கத்தான் வேண்டும்; அந்த்யஜனோடு ஸம்பாஷித்தலை விலக்கிக்கொள்வதற்காக, அவனைப் பார்த்து சில வார்த்தைகள் பேசத்தான்வேண்டும்; அகஸ்மாத்தாய் தேஹத்தில் ஒட்டிக்கொண்ட அமேத்யத்தை, கையாற் கழுவித் துடைக்கத்தான்வேண்டும். இவ்விஷயங்களில் சுத்தியை விரும்பி அப்படி நடப்பது, அவற்றின் ஸம்பந்தத்தைப் பாராட்டின தாகா தல்லவா? அதுபோலும், இந்த துஷ்டர்கள் விஷயத்தை ப்ரஸங்கித்தது, இவர்களை நீ தெரிந்துகொண்டு, இவர்கள் ஸங்கதியை ஒழித்துக்கொள்வதற்காகவே. ஹே அர்ஜுநா, இவர்கள் உன் கண்ணில் எப்போதாவது பட்டால், என்னை நினைத்துக்கொள். இவர்களைப் பார்த்ததால் ஏற்பட்ட பாபத்துக்கு வேறு ப்ராயச்சித்த மில்லை. ஆகையால் இந்த ஸாத்விகச்ரத்தையின் விஷயத்தில், நீ மிக்க ஜாக்ரதையுள்ளவனா யிருந்துகொண்டு, அது உன்னிடத்தில் குறைந்துபோகாதபடி, அதை நன்றாய்க்காப்பாற்றிக்கொள்ள வேண்டும், அதற்காக ஸாத்விக ச்ரத்தையானது எந்த ஸத்ஸங்கத்தால் வ்ருத்தி அடையுமோ, அதையே நீ பாராட்டி நிற்க வேண்டும்.

மேல்வரும் விஷயத்துக்கு அவதாரிகை:

அன்றியும் எந்த ஆஹாரத்தை ஸேவித்தால், அந்த ச்ரத்தை வலுக்குமோ, அந்த ஆஹாரத்தையே நீ ஸேவிக்கவேண்டும். ஸ்வபாவத்தை வ்ருத்தி பண்ணிவைக்கும் விஷயத்திலோ, அல்லது அதை மாற்றிவிடுகிற விஷயத்திலோ, ஆஹாரமே முக்யகாரணம் ஆகும். இதை நீ ப்ரத்யக்ஷமாய்ப் பார்த் தறிந்து கொள்ளக்கூடும். புத்தி ஸ்வாதீனமாய் இருக்கும் ஒருவன்,

கள்ளைக் குடித்தால், உடனே அவன் புத்திமயக்கம் அடைந்துவிடுகிறான். சவ்வரிசிக் கஞ்சியை சாப்பிடுவதால் தேஹத்தை வாதமும் ச்லேஷ்மமும் வ்யாபித்துக்கொள்கின்றன. ஜ்வரத்தில் நீர் முதலியவை குடிக்கத் தகுந்தவையா, என்ன? அன்றியும் அம்ருதத்தை உட்கொண்டால், மரணம் தடுக்கப்பட்டுப்போகிறது. விஷத்தின் ஸம்பந்தம் ஏற்பட்ட மாத்ரத்தில், தேஹம் எல்லாம் விஷம் பரவி, மரணம் நேரிடுகிறதில்லையா? அப்படியே எந்த ஆஹாரத்தைப் புசிக்கிறோமோ, அதற்குத் தக்கபடியே சரீரத்தின் தாதுக்கள் ஆய்விடுகினறன. தாதுஸ்திதிக்குத் தக்கபடியே அந்தரங்கத்தின் ஸ்வபாவமும் ஆய்விடுகிறது. பாத்ரத்தில் சூடு ஏறினால், அதில் உள்ள நீரும் சுட்டுப்போவதுபோலும், தாதுஸ்திதிக்குத் தக்கபடி சித்தவ்ருத்தி ஆய்விடுகிறது. ஆகையால் ஸாத்விகமான ஆஹாரங்களைப் புசிப்பதால், ஸத்வம் வ்ருத்தி அடைகிறது. மற்ற ஆஹாரங்களால் ரஜஸ்தமஸ்ஸுகள் வ்ருத்தி அடைகின்றன. ஆகையால் ஸாத்விக ஆகாரம் எது வென்றும் ரஜஸ தாமஸ ஆஹாரங்கள் எவை என்றும் சொல்வேன், கவனித்துக்கேள்

आहारस्त्वपि सर्वस्य त्रिविधो भवति प्रियः ।
यज्ञस्तपस्तथा दानं तेषां भेदमिमं शृणु ।। ७ ।।

ஆஹாரஸ்த்வபி ஸர்வஸ்ய த்ரிவிதோ பவதி ப்ரியः ।
யக்ஞஸ் தபஸ் ததா தானம் தேஷாம் பேத மிமம் ஶ்ருணு ।। 7

ஆஹாரம் மூவகைப்படுவது எப்படி:

ஆஹாரம் ஒன்றே எப்படி மூவகைப்படுகிறது என்பதை, இப்போது எடுத்துரைப்பேன். சாப்பிடுகிறவனுடைய ருசிக்குத் தக்கபடி தானே ஆஹாரத்தைத் ஸித்தம் செய்துவைக்கவேண்டும். சாப்பிடுகிறவன் அவன் ப்ரக்ருதியில் ஏற்பட்டிருக்கும் குணத்துக்கு அடிமையாயிருக்கிறான். எந்த ஜீவன் கர்த்தாவாகவும் போக்தாவாகவும் ஏற்படுகிறானோ, அவன் த்ரிகுணங்களின் ஸ்வபாவத்தை அநுஸரித்து, மூவகைப்பட்டவ னாய்ப்போய், மூவகையான கார்யங்களைச் செய்கிறான். ஆகையால் ஆஹாரம் மூவிதப்படுகிறது; யஞ்ஞங்கள், தபஸ்ஸு, தானங்கள், ஜீவர்களுடைய வ்யாபாரங்கள் அனைத்துமே மூவகைப்படுகின்றன. ஆகவே ஆஹாரம் மூவகைப்பட்டது என்று, கீழே சொன்னேனே, அதை முதலில் நிரூபிப்பேன், கேள்.

आयुःसत्त्वबलारोग्यसुखप्रीतिविवर्धनाः ।
रस्याः स्निग्धाः स्थिरा हृद्या आहाराः सात्त्विकप्रियाः ॥ ८ ॥

ஆயுः ஸத்த்வ பலா ரோக்ய ஸுக ப்ரீதி விவர்தனாः ।
ரஸ்யாः ஸ்நிக்தாः ஸ்திரா ஹ்ருத்யா ஆஹாராः ஸாத்விக ப்ரியாः ॥ 8

ஸாத்விக ஆஹாரம்:

சாப்பிடுகிறவன் ஸத்வகுண முள்ளவனாயிருந்தால், அவனுக்கு மதுரரஸத்திலேயே ருசி அதிகரித்திருக்கும். அவனுக்கு, சாப்பிடப்பட்ட வஸ்து இயற்கையாகவே மிக்க ரஸவத்தாயும், தித்திக்கிறதாயும் மிக்க தைலப்பசை உள்ளதாயும் நன்றாய் பக்வமானதாயும் இருக்கவேண்டும். அது மிக்கப் பருத்ததாய் இராமல், தொட்டால் ம்ருதுவாயும், நாக்குக்குப் பசையுள்ளதாயும் ருசிகரமாயும், இருக்கவேண்டும். லகுவில் கரைந்துபோவதாயும், த்ரவபாவ முள்ளதாயும, ஓரிடத்திலும் காந்திப்போகாததாயும், குரு உபதேசித்துத் தந்த மந்தரம்போல் பார்வைக்கு அல்பமா யிருந்துகொண்டு, போஷிக்கும் சக்தியால் மிகுந்ததாயும், வாய்க்கு தித்திப்பா யிருப்பதுபோலவே உள்ளே சென்று நன்மை செய்துவைப்பதாயும், இருக்கும் ஆஹாரத்தை ஸாத்விககுணம் படைத்தவர்கள் விரும்புவார்கள். ஸாத்விகர்கள் ப்ரியப்பட்டு புசிக்கும் பதார்த்தங்கள், இத்தனை குணலக்ஷணங்கள் பொருந்தியவையாய் இருந்துகொண்டு, ஆயுஸ்ஸை தினேதினே வ்ருத்தியடையச் செய்துவைக்கும். இந்த ஆஹாரங்கள் என்ற மேகங்கள் தங்கள் ரஸத்தை தேஹத்தின்மேல் வர்ஷிக்கத் தலைப்பட்டவுடன், ஆயுஸ்ஸு என்னும் நதி தின்தினமும் வ்ருத்தி அடைந்து ப்ரவஹிக்கும். பகல் வளர்வதற்கு எப்படி ஸூர்யன் காரணமாகிறானோ, அப்படியே தேஹத்தில் ஸத்வம் வ்ருத்தியடைவதற்கு, இவ்வாஹாரங்களே காரணம் ஆகின்றன. அன்றியும் இவ்வாஹாரங்களை ஸேவிப்பதால், சரீரத்துக்கும் மனஸுக்கும் பலம் அதிகாதிகமாக ஏற்படுகின்றதால், அந்த தேஹத்தில் எவ்வழியாய் ரோகங்கள் ப்ரவேசிக்கக்கூடும்? இவ்வகைப்பட்ட ஸாத்விக ஆஹாரத்தை ஸேவிப்பதாற்றான், சரீரம் ஆரோக்யத்தை அநுபவிக்கும் பாக்யத்தைப் பெறுகிறது, என்று தெரிந்துகொள். அன்றியும் இவ்வாஹாரத்தைப் புசிப்பவன், தானும் ஸுகப்பட்டு, பிறருக்கும் ஸுகத்தை விளைவித்துக்கொடுப்பதால், அவனிடத்தில் ஆநந்தம் எப்போதும் குடிகொண்டதாகிறது. ஸாத்விக ஆஹாரத்தின் பரிணாமம் இவ்வளவு பெருமைபெற்றதா யிருந்துகொண்டு,

சரீரத்துக்கு உள்ளும் புறமும் இவ்வளவு நன்மையைச் செய்துவைக்கிறது. இனி ப்ரஸங்காநுஸாரமாக ராஜஸாஹாரத்தை நிரூபிப்பேன், கேள்.

कट्वम्ललवणात्युष्णतीक्ष्णरूक्षविदाहिनः ।
आहारा राजसस्येष्टा दुःखशोकामयप्रदाः ।।९।।

கட் வம்ல லவணாத் யுஷ்ண தீக்ஷ்ண ரூக்ஷ விதாஹினः ।
ஆஹாரா ராஜஸஸ்யேஷ்டா துக்க ஶோகா மயப்ரதாः ।। 9

ராஜஸாஹாரம்:

கொலைமட்டும் செய்யாத காளகூடம், என்று சொல்லும்படி கசப்புள்ளவையாயும், சுண்ணாம்பைக் காட்டிலும் அதிக காரம் படைத்தவையாயும், மிக்கப் புளிப் புள்ளவையாயும், நொய்யை அல்லது மாவை நனைத்துப் பிசைவதற்கு எவ்வளவு நீர் சேர்க்கவேண்டுமோ, அவ்வளவு உப்புசேர்ந்தவையாயும், அன்றியும் தித்திப்பைத்தவிர காரம் முதலிய மற்ற ரஸங்களின் நிறை வுள்ளவையாயும், எந்தெந்த ஆஹாரங்கள் இருக்குமோ, அவையே ரஜோகுணம் படைத்தவர்களுக்கு ருசித்தவையாய் இருக்கும். ஆஹாரம் உஷ்ணமாய் இருக்கவேண்டும், என்று சொல்லிக்கொண்டு, அவர்கள் நெருப்பையே வாயில் போட்டுக் கொண்டு விழுங்கி விடுவார்கள். எரியும் வத்தியை ஸமீபத்திற் கொண்டுபோனால், நெருப்பு பற்றிக்கொள்ளும்படி, ஆவி புறப்பட்டுக்கொண்டிருக்கும் மிக்க உஷ்ணமான பதார்த்தங்களை, அவர்கள் விரும்பிப் புசிப்பார்கள். சுழற்காற்றையும் கீழே வீழ்த்தும் படியாயும் கடப்பாரையின் குத்தைப்போலும், இருந்துகொண்டு, காயம் உண்டாக்காமல் அதிதீவரமாய் நாக்கைத் துளைக்கும் காரம் நிறைந்துள்ள பதார்த்தங்களை, அவர்கள் தின்பார்கள். சாம்பலைக்காட்டிலும் நிஸ்ஸாரமாய், உள்ளும் புறமும் த்ரவமற்றதா யிருக்கும் பதார்த்தங்கள், அவர்களுக்கு மிக்க ருசிகரமாயிருக்கும்.

எந்த பதார்த்தத்தைச் சாப்பிடும்போது பல்லோடுபல் மோதிக்கொண்டு, பற்கள் அரைபடுமோ, அதை அவர்கள் வாயிற் போட்டுகொண்டு, ஸந்தோஷப்படுவார்கள். ஏற்கனவே மிக்கக் காரமான வஸ்துக்களோடு கடுகைச்சேர்த்து, தின்னும் ஸமயத்தில் நாக்கிலும் வாயிலும் எரிச்சல் உண்டாகும்படியாய் அவற்றைச் செய்துகொண்டு, அவர்கள் தின்பார்கள். நெருப்பே தோல்விப்பட்டுப் பின்வாங்கும் படியாய்க் காரமாயிருக்கும்

ஆஹாரங்கள், ராஜஸ குணமுள்ளவர்களுக்கு மிக்க ருசிகரமாயிருக்கும். இப்படி வாய்நிறையாதவையாயும், நாக்கு வெறிபிடித்துப் போகும்படி செய்து வைப்பவையாயும் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் நெருப்பே யென்று சொல்லும்படியாயும், இருக்கும் ஆஹாரங்களை, அவர்கள் வயிற்றில் திணித்துக்கொள்வார்கள். இப்படி காரமான வஸ்துக்களைத் தின்றுவிட்டு, கீழேவிழுந்து புரண்டு கொண்டு, அவர்கள் தண்ணீர்ப் பாத்ரத்தை வாயில் ஸதா வைத்துக்கொண்டே இருப்பார்கள். இது ஆஹாரம் உண்பதல்ல, வெறிபிடித்துப்போய், தூங்கிக்கொண்டிருக்கும் வ்யாதி என்னும் பாம்பைக் கையால் தட்டி யெழுப்புவதே ஆகும். ரோகங்கள் ஒன்றோடொன்று போட்டிபோட்டுக்கொண்டு, ஒரேகாலத்தில் தேஹத்தை வ்யாபித்துக்கொள்ளல், என்ற கேவல துக்கத்தையே ராஜஸாஹாரங்கள் பலித்துத்தரும். இவ்விதம் ராஜஸாஹாரமும் அதின் பரிணாமமும், விஸ்தாரமாய் நிரூபிக்கப்பட்டுத் தீர்ந்தன, ஹே தநுர்த்தரா. இனி தாமஸகுணம் படைத்தவர்களுக்கு ப்ரியமாயிருக்கும் ஆஹாரம் எதுவோ, அதை நிரூபிப்பேன். நீ மாத்ரம் மனஸில் வெறுப்புப் பார்ட்டாமற் கேட்கவேண்டும்.

यातयामं गतरसं पूति पर्युषितं च यत् ।
उच्छिष्टमपि चामेध्यं भोजनं तामसप्रियम् ।।१०।।

யாதயாமம் கதரஸம் பூதி பர்யுஷிதம் ச யத் ।
உச்சிஷ்டமபி சாமேத்யம் போஜனம் தாமஸ ப்ரியம் ॥ 10

தாமஸ ஆஹாரம் :

எருமையானது புளித்து நாற்றமெடுத்திருக்கும் கழுநீரைக் குடிப்பதுபோலும், ஊசிப்போய் இருக்கும் எச்சில் அந்நத்தை அவர்கள் சாப்பிட்டுக்கொண்டு, அதினால் தங்களுக்கு அஹிதமே உண்டாகும் என்று அவர்கள் நினையார்கள். சமைத்துவைத்த அன்னத்தை, அப்படியே வைத்திருந்து, இரண்டு ஜாமம் ஆனபிறகோ, அல்லது மறுதினத்திலோ, அதை எடுத்து வைத்துக்கொண்டு, தாமஸகுணம் படைத்தவர்கள் தின்பார்கள். இல்லாவிட்டால் பாதி பக்வமானதாய், அல்லது முழுதும் காந்திப்போனதாய், ரஸம் தப்பிப்போனதாய், இருக்கும் அன்னத்தையே அவர்கள் புசிப்பார்கள். எது நன்றாய்ப் பாகம் செய்யப்பட்டு, ரஸம் நன்றாய் வெளிப்பட்டதாய் இருக்குமோ, அது அந்நம் என்று இந்த

தாமஸர்களுக்குத் தோன்றவே தோன்றாது. ஒரோர் வேளையில் இப்படிப்பட்ட அன்னம் அவர்களுக்குக் கிடைத்துவிட்டால், புலிதான் கொன்ற ப்ராணியை நாறவைத்தே தின்பதுபோலும், அந்த ஆஹாரத்தை நாறிப்போகும்வரைக்கு வைத்து, பின்புதான் அதை அவர்கள் தின்பார்கள். அவர்களன்னம், சமைத்து வெகுதினங்க ளானாதையாவது, ருசி முற்றிலு மற்றுப்போனதாயாவது, த்ரவமின்றி முற்றிலும் காய்ந்து போனதாயாவது, ஊசி உப்பிப்போனதாயாவது இருக்கவேண்டும், அல்லது அது குழந்தைகள் கையைப் போட்டுக் குழைத்து வைத்ததாயாவது, அல்லது ஸ்த்ரீகளும் மற்றவர்களும் அதில் கையிட்டு புசித்தபின் மிகுந்துபோனதாயாவது இருக்க வேண்டும்.

இப்படி யெல்லாம் அஸங்க்யமாய் இருக்கும் அன்னம் உண்ணக்கிடைத்தால், அவர்கள் உத்தமமான சாப்பாடு கிடைத்ததாக நினைப்பார்கள். ஆனால் இவ்வளவு மட்டோடேயே அந்த பாபிகள் த்ருப்தி யடைகிறதில்லை. இந்த விந்தையைப் பார்! புசிக்கக் கூடாதென்று சாஸ்திரம் விலக்கி வைத்தவை எவையோ, தோஷயுக்தமாயிருக்கும் கெட்ட பண்டங்கள் எவையோ, அவற்றையே பருகுவதற்கும் தின்பதற்கும், அந்த தாமஸர்கள் மிக்க ஆசைகொண்டு அலைவார்கள். தாமஸகுணம் படைத்தவர்களுக்கு இவ்வகைப்பட்ட போஜநங்களில் ருசி யேற்பட்டிருக்கும். இவற்றைத் தின்பதினால் ஏற்படும் துக்கபலனை யநுபவிப்பதற்கு, ஓர் க்ஷணம் அளவு கூட காலவிளம்பம் இராது. ஏனெனில் இவ்வகைப்பட்ட அசுத்தமான பதார்த்தங்கள் வாயோடு ஸம்பந்தப் பட்டமாத்திரத்திலேயே, அவர்கள் பாபத்துக் காளாயாய் விடுகிறார்கள். பின்பு அவர்கள் அவற்றை யுட்கொள்வதை, போஜனம் என்று சொல்லத்தகாது, துக்கங்களை வயிற்றில் திணித்துவைத்தல், என்றே அதைச் சொல்லவேண்டும். தலை அறுபட்டு போவதால், அல்லது அக்நியில் விழுவதால், என்ன முடிவு ஏற்படுகிற தென்று கண்ணாற் பார்த்தறிந்துகொள்ள வேண்டியிருந்தால், இவ்வகை ஆஹாரங்களை உட்கொள்கிறவர்கள் படும் பாட்டைக் கண்டு தெரிந்துகொள்ளலாம். ஆகையால் தாமஸர்களுடைய அன்னத்தின் பரிணாமம் இன்ன தென்று அலாய்தாவாக சொல்ல வேண்டிய அவச்யமில்லை. இனி, ஆஹாரத்தைப் போலவே, யஞ்ஞமும் மூன்றுவகைப்பட்டதாய் இருக்கிறது என்று தெரிந்துகொள். இப்படி மூவகைப்பட்டிருக்கும் யஞ்ஞங்களுக்குள், முதன்முதல் ஸாத்விக யஞ்ஞத்தின் ஸ்வரூபத்தை வர்ணிப்பேன் கேள், ஹே உத்தமனே.

अफलाङ्क्षभिर्यज्ञो विधिदृष्टो य इज्यते ।
यष्टव्यमेवेति मनः समाधाय स सात्त्विकः ।।११।।

அபலா காங்க்ஷிபிர் யக்ஞோ விதி த்ருஷ்டோ ய இஜ்யதே ।
யஷ்டவ்யமேவேதி மனः ஸமாதாய ஸ ஸாத்த்விகः ॥ 11

ஸாத்விகயஞ்ஞம் :

தன்னுடைய ப்ரியோத்தமன் ஒருவனைத் தவிர மற்றெதின்மேலும் ஆசை மனதில் நிலைகொள்வதற்கு பதிவ்ரதிதையானவள் இடம்கொடாதது போலும், கங்கை யானது ஸமுத்ரத்தில் விழுந்தபின், அதைக் கடந்து, அப்புறம் போகாததுபோலும், வேதமானது ஆத்மாவரைக்கும் வந்து சேர்ந்தபின், வாய் திறவாது நின்றுபோதல் போலும், தங்களுடைய ஸ்வஹிதத்தைத் தேடிக்கொள்வதிலேயே மனஸின் நோக்கு முழுவதையும் நிறுத்தி, விஷயஸுகங்களை அடைய வேண்டுமென்ற அஹங்காரத்தைப் பாராட்டதாவர்களாய், தன்னிடம் வந்துசேர்ந்த ஓர் செடியின் வேரைப் பின்தள்ளிவைக்காமல், அதின் சரீரத்தில் ஜரித்துப்போகும் ஜலத்தைப் போலும், யஞ்ஞங்களை செய்துதீரவேண்டும் என்னும் ஓர் நிச்சயத்தில் முழுகிப்போய்க்கிடக்கும் மனஸையும் தேஹத்தையும் படைத்து, மற்றெதற்கும் ஆசைப்படாதவர்களாய், ஸ்வதர்மத்தை அநுஷ்டித்துத் தீரவேண்டுமெ என்றே கருதி, வேறு எவ்விதமான பலனுக்கும் ஆசைப்படாதவர்களாய், ஸத்வகுணம் படைத்தவர்கள் ஸர்வாங்கங்களின் நிறைவால் அழகுபடைத்து விளங்கும் யஞ்ஞங்களைச் செய்து முடிப்பார்கள்.

கையில் இருக்கும் கண்ணாடியைக் கொண்டு தன் ஸ்வரூபத்தைத் தான் பார்த்துக்கொள்வது போலும், உள்ளங்கையில் இருக்கும் ரத்நத்தின் காந்தியை தீபப்ரகாசத்தைக் கொண்டு, தெரிந்துகொள்வது போலும், ஸூர்யன் உதித்தபின், அவன் வெளிச்சத்தை கொண்டு தான் போக வேண்டிய பாதையைத் தெரிந்துகொள்வதுபோலும், வேதத்தின் ஸித்தாந்தத்தையே ப்ரமாணமாகக் கொண்டு, அதிற் சொல்லியிருக்கும் வண்ணமே, குண்டமும், மண்டபமும், மேடையும், மற்றும் யஞ்ஞ த்ரவ்யங்க ளனைத்தும், வேதம் தானே வந்து தேடிவைத்துக்கொண்டதோ என்று சொல்லும்படியாய், ஏற்பாடு செய்துவைக்கப்பட்டு,

ஸகலாவயவங்களும் அவற்றிற்குத் தகுந்த நகைகளால் அலங்கரிக்கப் பட்டிருப்பதால், அழகாய் விளங்கும் சரீரத்தைப் போலும், யஞ்ஞத்திற்கு வேண்டிய ஸகல ஸாமான்களும் அங்கங்கு அமைத்துவைக்கப்பட்டு, (மிக்க வர்ணிப்பதென்?)

யஞ்ஞவித்யையே ஸகலபூஷணங்களால் அலங்கரிக்கப்பட்டு யாகம் என்று ஓர் உருவுகொண்டு வந்து நிற்கிறாள் என்று சொல்லும்படியாய், இப்படி யெல்லாம் ஸாங்கோபாங்கமாய், (அங்கங்கள் (முக்ய அவயவங்கள்), உபாங்கங்கள் (அமுக்யமான அவயவங்கள்), ஒன்றும் குறைவுபடாமல்) பெருமை ஏற்படவேண்டும் என்ற ஆசையின் ஸம்பந்தமற்றதாயும், அநுஷ்டிக்கப்படும் யாகம் எதுவோ, அதுவே ஸாத்விகமாகும். துளஸிச் செடியினின்று பழமோ, பூவோ, நிழலோ, கிடைக்க வேண்டும் என்று ஆசைப்படாமல், அதை உத்தம ப்ரகாரமாய் உலகத்தார் காப்பாற்றிவருவது போலும், சுருக்கிச் சொல்ல, பலனில் ஆசைவைக்கிறதில்லை என்ற ஓர் நிச்சயத்துடன் அநுஷ்டிக்கப்படும் யாகமே ஸாத்விக மாகும்.

अभिसन्धाय तु फलं दम्भार्थमपि चैव यत् ।
इज्यते भरतश्रेष्ठ तं यज्ञं विद्धि राजसम् ।।१२।।

அபிஸந்தாய து பலம் தம்பார்த மபி சைவ யத் ।
இஜ்யதே பரத ஶ்ரேஷ்ட தம் யக்ஞம் வித்தி ராஜஸம் ॥ 12

ராஜஸ யஞ்ஞம் :

இன்னும் வேறுவிதமாய் செய்யப்படும் யஞ்ஞம், கீழே சொன்னபடி ஸாங்கோபாங்கமாய் அநுஷ்டிக்க பட்டதேயானாலும், அது ச்ராத்தத்தில் ராஜாவே சாப்பிடுவதற் கழைத்தமாதிரியாக இருக்கும். ராஜாவே சாப்பிட வந்து விடுவானானால், அதினால் வெகு கார்யங்கள் கூடிவருவதுடன், ஜகத்தில் பெருமையும் ஏற்படுமல்லவா? இப்படியே ஆசை பாராட்டிக்கொண்டு, "நமக்கு ஸ்வர்க்கபோகமும் கிடைத்துப் போய், தீக்ஷிதர்கள் என்று உலகில் நாம் நன்குமதிக்கப்பட்டு, யாகம் செய்த புண்யமும் நமக்குக் கிடைத்துவிடும்," என்று சொல்லிக்கொண்டு, பலனில் உத்தேசத்தை வைத்து, உலகில் பெருமை அடைவதற்காக, அநுஷ்டிக்கப்படும் யஞ்ஞம் எதுவோ அது ராஜஸமாகும், ஹே பார்த்தா.

विधिहीनमसृष्टान्नं मन्त्रहीनमदक्षिणम् ।
श्रद्धाविरहितं यज्ञं तामसं परिचक्षते ।।१३।।

விதி ஹீன மஸ்ருஷ்டான்னம் மந்த்ர ஹீன மதக்ஷிணம்।
ஸ்ரத்தா விரஹிதம் யக்ஞம் தாமஸம் பரிசக்ஷதே ॥ 13

தாமஸயஞ்ஞம் :

பசுபக்ஷிகளின் விவாஹங்களை நடத்திவைப்பதற்கு, காமத்தைத் தவிர, வேறு உபாத்யாயர் அநாவச்யமாய் இருப்பதுபோலும், தாமஸ யஞ்ஞத்தை நடத்திவைப்பதற்கு, ஆக்ரஹத்தைத்தவிர, வேறு ருத்விக் முதலியவர்களின் ஆவச்யம் இராது. காற்று தான் அடிப்பதற்கு ஓர் வழியை அபேக்ஷிக்காததுபோலும், சாவுக்கு ஸமுஹூர்த்தம் அநாவச்யமாயிருப்பதுபோலும், நெருப்பு இது நிஷித்தமான பதார்த்த மென்று, அதைப் புசிக்காமல் இராததுபோலும், தாமஸர்களுடைய யஞ்ஞம் விதிக்குக் கட்டுப்பட்டதாய் இராது. அப்படி ஓர் கட்டுப்பாட்டுக்கு முட்படாது இருப்பதால், அது மனதுக்குத் தோன்றிய படியெல்லாம் போக்குள்ளதாய் இருக்கும். அவர்கள் செய்யும் யாகத்தில் சாஸ்த்ரவிதியின் விசாரம் அநாவச்யமாயிருக்கும்; மந்த்ரம் முதலானவைகளின் தொந்தரவே யிராது. அந்த யாகத்தில், அந்நத்தின்மேல், ஈகூட உட்கார விடார்கள். ப்ராஹ்மணர்கள் விஷயத்தில் சத்ருபாவம் பாராட்டிக்கொண் டநுஷ்டிக்கப்படும் ஓர் யஞ்ஞத்தில், தக்ஷிணை என்பதற்கு ப்ரஸக்தி எப்படி ஏற்படும்? நெருப்புக்குப் பெருங்காற்றின் ஸஹாயம் ஏற்பட்டபின், அது எப்படி அனைத்தையும் எரித்து நாசம்செய்துவிடுமோ, பிள்ளை யில்லாதவனுடைய பொருள் முழுவதும், அவனுக்குப் பிற்காலம், எப்படி இதரர்களால் அபஹரிக்கப்பட்டுப்போகுமோ, அப்படியே ச்ரத்தை இல்லாமல் நடத்தப்படும் இவர்கள் யஞ்ஞத்தில், ஸர்வ சொத்தும் ஓர் ப்ரயோஜநமு மின்றி வீணாய்ச் செலவிடப்படும். இப்படிச் செய்யப்படும் யஞ்ஞத்தின் போலியே தாமஸயாகமாகும்.

மேல்வரும் விஷயத்தின் அவதாரிகை :

கங்கையின் ஜலம் ஒன்றே, வேறு வேறு கால்வாய்களில் ஓடுவதால், அசுத்தம் என்றும் சுத்தம் என்றும் மதிக்கப்படுவதுபோல், தபஸ் என்ற ஒன்றே முக்குணங்களின் சேர்க்கையால் மூவகைப்பட்டு, ஒன்றை அநுஷ்டிப்பதால் பாபமும், மற்றொன்றை அநுஷ்டிப்பதால் ஸம்ஸாரத்தினின்று கரையேறுதலும் ஏற்படுகிறது. தபஸ் ஸொன்றே எப்படி மூவகைப்படுகிற தென்று அறிந்து கொள்ள நீ ஆசைப்பட்டால்,

முதலில் தபஸ்ஸின் ஸ்வரூபம் இன்னதென்று நீ தெரிந்துகொள்ளவேண்டும். ஆகையால் தபஸ் ஸென்றால் இன்ன தென்று தெரிந்துகொள்ளும்படி, அதின் ஸ்வரூபத்தை முதலில் நிரூபணம் செய்து, பின்பு அது முக்குணங்களின் சேர்க்கையால், எப்படி மூவகைப்படுகிற தென்று, நான் சொல்வேன், அதிலும் சுத்தமான தபஸ் ஸென்பதே காயிகம், மானஸிகம், வாசிகம், என்று மூவகைப்படுகிறது. இதை விவரிப்பேன், கேள், இப்படி மூவகைப்பட்ட தபஸிற்குள், காயிக தபஸ் என்பது இது வென்று சொல்வேன், கேள்.

देवद्विजगुरुप्राज्ञपूजनं शौचमार्जवम् ।
ब्रह्मचर्यमहिंसा च शारीरं तप उच्यते ।।१४।।

தேவத்விஜ குரு ப்ராக்ஞ பூஜனம் ஶௌச மார்ஜவம் ।
ப்ரம்ஹசர்ய மஹிம்ஸா ச ஶாரீரம் தப உச்யதே ॥ 14

காயிக தபஸ் :

சிவனோ அல்லது விஷ்ணுவோ, எந்த தெய்வம் இஷ்டதெய்வ மாகுமோ, அந்த தெய்வத்தின் கோயிலுக்கு யாத்ரைசெய்யும் விஷயத்தில், எட்டு ஜாமமும் கால்கள் நடப்பதும், அந்த தெய்வத்தின் கோயிலை தோரணங்கள் முதலியவற்றால் அலங்கரித்துவைப்பதிலும். அந்த தெய்வத்தின் திருமேனிக்கு உபசாரங்களை அர்ப்பிப்பதிலும், கைகளீடுபடுதலும், அந்த தெய்வத்தின் லிங்கத்தையோ, ப்ரதிமையையோ, பார்த்த க்ஷணத்தில் கையிலிருந்து விடுபட்ட தடியானது ஓர் யோசனையும் செய்யாமல் விழுவதுபோலும், தொப்பென்று தேஹத்தைக் கீழே வீழ்த்துவதும், வித்யை விநயங்களால் சிறந்தவர்களான ப்ராஹ்மணர்களுக்கு ஊழியங்கள் செய்வதும், அல்லது ஊரைவிட்டு வெகுதூரம் நடந்து வந்ததினாலேயோ, வேறு எவ்விதமான கஷ்டத்தினாலேயோ, நொந்து போயிருப்பவர்களுடைய நோவைப் போக்குவதற்காக, தன் தேஹத்தைக் கஷ்டப்படுத்தி, அவர்களை ஸுகப்படுத்திவைத்தலும், ஸகல தீர்த்தங்களையும் காட்டிலும் மேன்மை படைத்தவர்களான தாய்தகப்பன்மார்களுக்குச் செய்ய வேண்டிய ஸேவைகளில் தேஹத்தை ஓர் பொருட்டாய் எண்ணாமல், அதை முற்றிலும் அழித்துவிடுவதும், கோரமான ஸம்ஸாரத்தை முற்றிலும் நாசம் செய்துவிடும் ஞானத்தைக் கொடுத்துதவின ஸத்குருவின் ஸேவையில் அப்படியே ஈடுபடுகையும், தேஹமே ஆத்மா என்று மதித்தல் என்னும் மலத்தைப் போக்கிக் கொள்வதற்காக

தேஹத்தை ஸ்வதர்மா நுஷ்டானம் என்னும நெருப்பில் திரும்பவும் திரும்பவும் புடம்போட்டு எடுத்தலும், மனதை ஸ்த்ரீ ஸுகத்துக் காசைப்படாதபடி அடக்குவதில் ஸதா விழிப்புள்ளவனாய், பிறந்தபோது ஸ்த்ரீ தேஹத்தின் ஸம்பந்தம் ஏற்பட்டதைத்தவிர, மற்றெக்காலமும் ஸ்த்ரீதேஹத்தின் ஸம்பந்த மற்றவனாயிருத்தலும், கேவலம் ப்ராணி யென்று ஒன்றிருந்தாற்போலும், அது ஓர் புல்லே யானாலும், அதைப் பிடுங்கல், வெட்டுதல், பிளத்தல், முதலியவற்றை முற்றிலும் ஒழித்தவனாதலும், இவ்வகைப்பட்ட தேஹத்தின் மாசற்ற வ்யாபாரங்களே காயிக தபஸ் ஸென்னும் செடி முற்றிப் பலித்துத்தரும் பழங்களாகும். இனிவாங்மயமான மாசற்ற தபஸ் ஸெதுவோ, அதைச் சொல்வேன் கேள்.

अनुद्वेगकरं वाक्यं सत्यं प्रियहितं च यत् ।
स्वाध्यायाभ्यसनं चैव वाङ्मयं तप उच्यते ॥ १५ ॥

அனுத்வேககரம் வாக்யம் ஸத்யம் ப்ரியஹிதம் ச யத் ।
ஸ்வாத்யாயாப்யஸனம் சைவ வாங்மயம் தப உச்யதே ॥ 15

வாசிகதபஸ் :

இரும்பின் உருவத்தையும் நிறைவையும் ஒரு விதமாயும் அழிக்காமலேயே, ஸ்பர்சவேதியானது அதைத் தங்கமாய்ச் செய்துவிடுதல்போலும், ஓர் துக்கமும் கொடுக்காமலே கேட்கிறவனுக்கு அநாயாஸமாக ஸுகத்தை உண்டாக்கிவைக்கும் படியாய் வார்த்தைகள் இருக்க வேண்டும். மரத்துக்கென்றே பாய்ச்சப்பட்ட நீரானது, ஸமீபத்தில் இருக்கும் புல்லையும் போஷித்து வளரச்செய்வதுபோலும், ஒருவனையே உத்தேசித்துச் சொல்லப்படும் வார்த்தைகள், ஸமீபத்தில் இருக்கும் அனைவர்களுக்கும் ஹிதகரமாக இருக்க வேண்டும். அம்ருதத்தையே நீராகக் கொண்ட கங்கை ஒன்று கிடைத்தப்பின், அது எப்படி தண்ணீரைப் புசித்த ப்ராணிக்கு மரணம் இல்லாமற் செய்துவைத்து, அந்நீரில் ஸ்நாநம செய்தவனுடைய பாபத்தையும் ஸாம்ஸாரிக துக்கத்தையும் போக்கிக்கொடுத்து, நாக்குக்கு திருப்திப்பாகவும் இருக்குமோ, அப்படியே அஜ்ஞாநத்தைப் போக்குகின்றனவாயும், அநாதியான ஆத்மஸ்வரூபத்தைக் கிட்டச் செய்துகொடுக்கின்றனவையாயும், கேட்கக் கேட்கத் திகட்டாத மாதுர்யத்தோடு கூடியவையாயும், வார்த்தைகள் இருக்க வேண்டும். எவர்களாவது தெரிந்துகொள்ள வேண்டும் என்று

ப்ரச்நம் செய்தால், இப்படி வார்த்தைகள் சொல்லவேண்டும். இல்லாவிட்டால் வேதம் முதலிய சாஸ்த்ரங்களையாவது பகவந்நாமத்தையாவது, ஆவர்த்தி (திரும்பவும் திரும்பவும் படித்துக் கொண்டு) செய்துகொண்டு இருக்க வேண்டும். ருக்முதலிய மூன்று வேதங்களையும் தங்கள் நாக்கென்னும் கோவிலில் ப்ரதிஷ்டை செய்துவைத்து, அதை வேதசாலையாய்ச் செய்துவைக்க வேண்டும். இல்லாவிட்டால் சிவ நாமமோ விஷ்ணு நாமமோ, எது ப்ரியகரமோ, அதை ஸதா ஜபித்துக்கொண்டிருக்க வேண்டும். இப்படிச் செய்துகொண்டிருப்பதே வாசிக தபஸ் ஸாகும். இனி மானஸிக தபஸ எதுவோ, அதைச் சொல்வேன் கேள், என்று லோகநாதர்களுக்கு நாயகர் காளனவர்களுக்கும் நாயகனான ஸ்ரீ க்ருஷ்ணன் சொன்னார்.

मनः प्रसादः सौम्यत्वं मौनमात्मविनिग्रहः ।
भावसंशुद्धिरित्येतत्तपो मानसमुच्यते ।।१६।।

மனः ப்ரஸாதः ஸௌம்யத்வம் மௌனமாத்ம விநிக்ரஹः ।
பாவ ஸம் ஶுத்தி ரித்யேதத் தபோ மானஸ முச்யதே ॥ 16

மானஸிக தபஸ் :

அலையற்றுப் போயிருக்கும் மிக்க ஆழமான தடாகம்போலும், மேகங்கள் முற்றிலும் அற்றுப்போயிருக்கும் ஆகாசம்போலும், ஸர்ப்பங்களால் விடுபட்டிருக்கும் சந்தனவ்ருக்ஷங்கள் நிறைந்திருக்கும் தோட்டம்போலும், கலைகளின் தேய்தலும் வளர்தலுமற்றுப்போன சந்த்ரனைப்போலும், மனக்கவலை யற்ற அரசனைப்போலும், மந்தரபர்வதத்தின் ஸம்பந்த மற்றுப்போன பாற்கடல் போலும், மானஸிக தபஸ் படைத்த ஒருவன் மனஸ் அநேக விதப்பட்ட விகல்பங்களால் விடுபட்டு, தன்சுத்த ஸ்வரூபத்தோடு அமர்ந்திருக்கும். உஷ்ணத்தின் சேர்க்கை யற்ற, ப்ரகாசம்போலும், கனம் என்பது இல்லா ரஸம்போலும், வெறுமை இல்லாத ஆகாசம்போலும், தன்னுடைய ஸ்வரூபத்தில் நின்றுகொண்டு, தனக்கியற்கையான சாஞ்சல்யத்தைக் கைவிட்டதாய், சீதளமான ஓர் வஸ்து தன் தேஹத்தை குளிரால் நடுங்கச் செய்யாததுபோலும், ஓட்டமும் களங்கமும் அற்றுப்போய் எப்போதும் பூர்ணமாயிருக்கும் சந்த்ரனைப்போலும், அவன் மனஸ் பரிசுத்தமான அழகுபடைத்ததாய் இருப்பதுடன், வைராக்யானுஷ்டானத்தின் ச்ரமம் அற்றுப்போனதாய்,

ஓடுதலும் பயப்படுதலும் அற்றுப்போனதாய், தன் ஸ்வரூபத்தின் ஞானம் உடையதாய் அது இருக்கும். ஆகவே சாஸ்த்ரவிசாரம் செய்வதற்கு வேண்டியதான வாயசைத்தலும் நாக்காடுதலும் அற்றவனாய், இந்த மானஸிக தபஸ் படைத்தவன் ஆய்விடுவான். அவன், தான் அடைய வேண்டிய ஆத்ம ஸ்வரூபப்ராப்தியை அடைந்துவிட்டதால், தன் ஸ்வரூபமான ஜலத்தோடு கலந்து ஒன்றுபட்டுப்போன உப்பைப் போலும், அவனுடைய மனஸு ஆத்மஸ்வரூபத்தில் லயித்துப்போய், மனனம் செய்யும் சக்தியை இழந்துவிட்ட தாய்விடும். அப்படியானபின், இந்த்ரியங்களோடு சேர்ந்து, விஷயங்களில் ஸஞ்சரிக்கும்படி அதைச் செய்துவைக்கத்தக்க ஆசை யென்பது, எவ்விதம் உண்டாகும்? ஆகையால் உள்ளங்கையில் மயிர் முளைக்காதிருப்பதுபோலும், இப்படிப்பட்டவன் மனஸில் பாவங்கள் (ஆசைகள் அல்லது ஸங்கல்ப விகல்பங்கள்) இயற்கையாகவே அற்றுப்போய் இருக்கும். மிக்கவளர்த்துவதென்? ஹே அர்ஜுநா, மனஸு இவ்வகைப்பட்ட நிலையில் நின்று விடுவதே, மானஸிக தபஸ் ஸாகும். இப்படி காயிகம், வாசிகம், மானஸிகம், என்ற தபஸ் ஸாமான்யத்தின் மூவகைப்பட்ட லக்ஷணங்களைச் சொல்லியானபின், அந்த தபஸ்ஸே முக்குணங்கள் சேர்க்கையால் மூவகைப்பட்டுப் போவதை விளங்கச் சொல்வேன், கவனித்துக் கேள்.

श्रद्धया परया तप्तं तपस्तत्त्रिविधं नरैः ।
अफलाकाङ्क्षिभिर्युक्तैः सात्त्विकं परिचक्षते ।।१७।।

ஶ்ரத்தயாபரயா தப்தம் தபஸ்தத் த்ரிவிதம் நரைः ।
அபலா காங்க்ஷிபிர் யுக்தை: ஸாத்த்விகம் பரிசக்ஷதே ॥ 17

ஸாத்விகதபஸ் :

இப்படி நான் உனக்கு நிரூபித்துவைத்த, காயிகம், வாசிகம், மானஸிகம், என்று மூவகைப்பட்ட தபஸ்ஸையே, நீ பூர்ணச்ரத்தையுடன் பலனில் ஆசையை ஒழிததுவிட்டு ஆசரித்து வரவேண்டும், பூர்ணஞானியான ஹே அர்ஜுனா. இப்படிப் பூர்ணமான ஸத்வஸம்சுத்தியுடனும் (இதின் அர்த்தத்தை 16வது அத்யாயம் 1-வது ச்லோகத்தின் வ்யாக்யானத்திற் கண்டு கொள்க) ச்ரத்தையுடனும் அநுஷ்டிக்கப்படும் தபஸ்ஸையே அறிஞர்கள் ஸாத்விக தபஸ் ஸென்று சொல்வார்கள்.

सत्कारमानपूजार्थं तपो दम्भेन चैव यत् ।
क्रियते तदिह प्रोक्तं राजसं चलमध्रुवम् ॥ १८ ॥

ஸத்காரமான பூஜார்தம் தபோ தம்பேன சைவ யத்.।
க்ரியதே ததிஹ ப்ரோக்தம் ராஜஸம் சலமத்ருவம் ॥ 18

ராஜஸ தபஸ் :

தபஸ் செய்யும் விஷயத்தில் ஜகத்தோடு போட்டிபோட்டுக்கொண்டு, பெருமை யென்னும் மலையின் சிகரத்தின்மேல் வீற்றிருக்க வேண்டும் என்றும், மூவ்வுலகத்தாரும் நன்கு மதிப்பது தன்னைத்தவிர வேறொருவனுக்குக் கிடைக்கக்கூடாது என்றும், போஜநத்தில் அக்ராஸநம் தனக்கே கிடைக்க வேண்டும் என்றும், விச்வத்தார் அனைவரும் ஸ்தோத்ரம் செய்வதற்குத் தகைமை தனக்கே ஏற்படவேண்டும் என்றும், மூவுலகத்தாரும் தன்னை தர்சித்துக் கொள்வதற்காகவே யாத்ரை செய்துகொண்டுவரவேண்டும் என்றும், மூவுலகத்தாரும் பலவிதமாய் கொண்டாடி பூஜைசெய்தலைத் தன்னைத்தவிர வேறொருவரும் அடையக்கூடாது என்றும், இப்படியெல்லாம் பெருமையின் உத்தம பதவியை அடைய உத்தேசித்து, கிழவியாய்ப்போய் அழகுகள் மாறிப்போன வேசி ஒருத்தி, தன்தேஹத்தை விற்று பொருள் ஸம்பாதிப்பதற்காக, பூச்சுக்கள் முதலியவற்றால் தன் தேஹத்தை அழகு படுத்திக்கொள்ளல் போலும், தன் தேஹத்துக்கும் வார்த்தைகளுக்கும் தபஸ்ஸைக்கொண்டு முலாம் பூசிவைத்து, தனமும் பெருமையும் தனக்குக் கிடைப்பதற்காக மிக்க ஆசை பாராட்டிக் கொண்டு, மிகவும் ச்ரமப்பட்டு அநுஷ்டிக்கப்படும். தபஸ் ஸெதுவோ, அதுவே ராஜஸ தபஸ் ஸென்று சொல்லப்படும்.

மடியிறங்கின மாட்டை, கன்று போடுவதற்கு முன், கறந்து விட்டால், கன்றுபோட்டபின் அது கறக்காததுபோலும், பச்சைப்பயிரை மாடு மேய்ந்துவிட்டால், அப்பயிர் பின்பு விளையாததுபோலும், கீர்த்திக் காசைப்பட்டு மிக்க ச்ரமப்பட்டு அநுஷ்டிக்கப்படும் இத்தபஸ், முழுமையும் வீண்பட்டுப்போகிறது. இப்படிப்பட்ட தபஸை அநுஷ்டிக்கிறவர்கள், அது நிஷ்பலமாய்ப் போவதைப் பார்த்து, அதைக் கடைவரைக்கும் அநுஷ்டித்துத் தீராமல், அதை நடுவிலேயே நிறுத்தி விடுவார்கள். ஆகையால் அது நிலையற்றதாகும். ஆகாசத்தை முழுவதையும்

வ்யாபித்துக்கொண்டு, ப்ரஹ்மாண்டமே தவிடு பொடியாய்ப் போகும்படி கர்ஜிக்கும் கோடைகாலத்து மேகமானது, ஓர் நாழிகை காலம்கூட நிலைத்து நிற்பதில்லை யல்லவா? அப்படியே ராஜஸ தபஸ்ஸானது முற்றிலும் பலனற்றதாயும் நிலையற்றதாயும இருக்கும். இனி இந்த தபஸின் தாமஸ ப்ரகாரத்தைச் சொல்வேன், அது பரலோகத்தில் நன்மையையும், இவ்வுலகத்தில் கீர்த்தியையும், உண்டுபண்ணிக் கொடாததாய் இருக்கும்.

मूढग्राहेणात्मनो यत्पीडया क्रियते तपः ।
परस्योत्सादनार्थं वा तत्तामसमुदाहृतम् ।।१९।।

மூட க்ராஹேணாத்மனோ யத்பீடயா க்ரியதே தபः ।
பரஸ்யோத் ஸாதநார்தம் வா தத்தாமஸ முதாஹ்ருதம் ॥ 19

தாமஸதபஸ் :

கேவல அறிவின்மையால் வ்யாபிக்கப்பட்ட மனஸை படைத்தவர்களாய், சிலர், தம் சரீர்த்தை சத்ரு என்று சொல்லிக்கொண்டு, பஞ்சாக்நியின் ஜ்வாலைகளின் நடுவில் அதை விறகு கட்டையாய் இட்டு, எரிப்பார்கள்; சிலர் தலையில் நெருப்பைமூட்டி, அதில் குங்கலியத்தைத் தூவி யெரியச் செய்வார்கள்; சிலர் முதுகில் கொக்கியை குத்திக்கொள்வார்கள்; சிலர் தேஹத்தின்மேல் நெருப்புத் தணல்களை வைத்து, அவற்றைப் பற்றியெரியச் செய்வார்கள், சிலர் ச்வாஸோச்சுவாஸங்களைக் கட்டிப்போட்டு, ஓர் ப்ரயோஜநமுமின்றி பசித்திருப்பார்கள், சிலர் தலைகீழாகத் தொங்கிக்கொண்டு, புகையைக் குடித்து, வயிற்றை நிரப்பிக்கொள்வார்கள்; சிலர் பனிக்கட்டி போல் சீதளமாயிருக்கும் ஜலத்தில் கழுத்துவரைக்கும் தேஹத்தை அமுக்கிவைத்துக் கொண்டும், மிக்கக் கொதிப்பெடுத்த பூமிகளில் வஸித்துக்கொண்டு மிருப்பார்கள்; சிலர் உயிரோடிருக்கும்போதே, தங்கள் சதையை, துண்டு துண்டாய் வெட்டித் தள்ளுவார்கள்.

இப்படியெல்லாம் அநேக விதங்களாய் தேஹத்தை ஹிம்ஸித்துக்கொண்டு, சிலர் பிறர்களை நாசம் செய்வதற்காக தபஸ் செய்வார்கள். ஓர் கற்பாறை, மலையின்மேல் தனக்கிருந்த பிடிப்பற்றுப்போய், தன்னுடைய பாரத்தால் கீழே உருண்டு விழும் காலத்தில். தான் சிதறிப்போவது மல்லாமல், குறுக்கிட்ட வஸ்துக்களையும நசுக்கிவிடுதல்போலும், இவர்கள்

தங்களையும் பீடித்துகொண்டு, ஸுகமாய் வாழ்ந்துகொண்டிருக்கும் உலகத்தாரையும் கஷ்டப்படுத்துவதற்குப் பேராசை பூண்டு, அல்லற்படுவார்கள். இக்கெட்ட விஷயத்தை இன்னும் வளர்த்துவ தென்? இப்படித் தங்களுக்கும் இதரர்களுக்கும் துக்கம் உண்டாக்குவதையே முறையாகக் கொண்டு, அநுஷ்டிக்கப்படும் தபஸ் எதுவோ, அது தாமஸமாகும். இவ்விதம் ஸத்வம் முதலிய முக்குணங்களின் சேர்க்கையால், மூவகைப்படும் தபஸ் உனக்கு விவரமாய்ச் சொல்லப்பட்டதாயிற்று. இனி இந்த ஸந்தர்ப்பத்தில் சொல்லவேண்டியவையாய் ஏற்பட்ட மூவகைதானங்களின் லக்ஷணங்களை நிரூபிப்பேன். தானத்தின் இம்மூவகைகளும் ஸத்வாதி முக்குணங்களின் சேர்க்கையினாலேயே ஏற்படுகின்றன. அவற்றிற்குள் ஸாத்விகதானம் எதுவோ, அதை முதலிற் சொல்வேன், கேள்.

दातव्यमिति यद्दानं दीयतेऽनुपकारिणे ।
देशे काले च पात्रे च तद्दानं सात्त्विकं स्मृतम् ।। २० ।।

தாதவ்யமிதி யத்தானம் தீயதே குநுப காரிணே ।
தேஶே காலே ச பாத்ரே ச தத்தானம் ஸாத்விகம் ஸ்ம்ருதம் ॥ 20

ஸாத்விகதானம் :

ஸ்வதர்மத்தை அநுஷ்டித்து வரும்போது, தனக்கு எந்தப் பொருள் கிடைக்குமோ, அதை, வாங்கிக்கொள்கிறவனுக்கு மிக்க பூஜைகள் செய்து, தானம் செய்யவேண்டும், நல்லவிதை கைக்குக் கிடைத்தால், உத்தமமான பூமியாவது, உத்தமமான காலமாவது, கிடைக்காமற் போகும். அப்படியே தானத்திலும் ஓர் ஸங்கடம் நேர்வதுண்டு. விலை மதிக்கக்கூடாத ஓரிரத்தினம் கைக்குக் கிடைத்திருக்கும் காலத்தில், அதைப் பதித்துக் கட்டுவதற்குத் தங்கம் கிடைக்காமற் போகும். தங்கமும், கிடைத்தாலும், சிங்காரித்து வைக்கத் தகுந்த அவயவமில்லாமற்போகும். பண்டிகை தினமும், பந்துவர்க்கங்களும், ஸம்பத்தும், ஒருவனுக்கு ஒன்றுபட்டு கிடைக்கவேண்டுமானால், அவனுக்கு உத்தம பாக்யம் அநுகூலமாகவேண்டும். உத்தமமான தானம் ஒருவனுக்குக் கிடைக்க வேண்டுமானால், ஸத்வகுணம் அவனுக்கு ஸஹாயமாயிருந்து, தகுந்த தேசம், காலம், பாத்ரம், (வாங்கிக் கொள்கிறவன்) த்ரவ்யம், இவை நான்கும் கிடைக்க வேண்டும். முதன்முதலில் தானம் செய்வதற்கு குருக்ஷேத்ரமோ, காசியோ, அல்லது இவற்றிற்கு ஸமானமான பெருமைபடைத்த வேறு

ஏதேனு மோர் க்ஷேத்ரமோ, ஏற்படவேண்டும். அவ்விடத்தில், ஸூர்யக்ரஹணமோ, அல்லது சந்த்ரக்ரஹணமோ, அல்லது அவ்வளவு பெருமை படைத்த மற்றேதேனும் ஓர் புண்யகாலமோ, ஏற்பட வேண்டும்.

அப்படிப்பட்ட தேசத்திலும் காலத்திலும், தானம் பெற்றுக் கொள்வதற்கு, சுசித்வமே ஓர் உருவெடுத்து வந்ததோ என்றும், உத்தம ஸதாசாரத்தின் மூலபீடமோ என்றும், வேதங்களின், வாஸஸ்தானமோ என்றும், சொல்லத்தக்கவரான ஓர் ப்ராஹ்மணோத்தமன் பாத்ரமாக ஏற்படவேண்டும். பின்பு அவரிடத்தில் தன்னுடைய சக்திக்குத் தகுந்தபடி, பொருளை தானம் செய்ய வேண்டும். ஆனால் அப்படி தானம்செய்வது, பதிவ்ரதையானவள் தன் கணவனிடத்தில் தன் அங்கத்தை ஸமர்ப்பிப்பதை ஒத்ததாயும், பொருளைப் பாதுகாத்து வைக்கும்படி ஒப்புவித்துப்போன ஒருவனிடத்தில், அப்பொருளைத் திரும்ப ஒப்பித்துக் கடனைத் தீர்த்துக்கொள்வதை ஒத்ததாயும், வேலைக்காரன் அரசனிடத்தில் தாம்பூல மடிப்பை இருக்க வேண்டும். இப்படி யெல்லாம் அந்தராத்மாவில் ஆசையின் ஸம்பந்தத்தை முற்றிலும் ஒழித்துக்கொண்டு, பூமி முதலியவற்றை அர்ப்பணம் செய்ய வேண்டும். அன்றியும் தானம் வாங்கிக் கொள்கிறவன் தனக்கு ப்ரத்யுபகாரம் யாதொன்றும் செய்யத் தகாதவனாயிருப்பதைப் பார்த்து, அவனுக்கு தான்ம் செய்ய வேண்டும்.

ஆகாசத்தில் கூப்பாடு போட்டால், அது திரும்பவும் ப்ரதித்வனி கொடுக்காத்து போலும், கண்ணாடியின் பின் பக்கத்தைப் பார்த்தால், அது ப்ரதிபிம்பத்தைக் காட்டிக்கொடுக்காதது போலும், நீரின்மேல் அடிக்கப்பட்ட பந்து திரும்பவும் கைக்கு வராதது போலும், கோவில் காளைக்கு தீனி போடுவதால் ஒருவிதமான லாபமும் கிடைக்காது போவது போலும், க்ருதக்நனுக்கு உபகாரம் செய்தால் அவன் திரும்பவும் ப்ரத்யுபகாரம் செய்யாததுபோலும், ஒருவனிடத்தினின்று ஒருவிதமான நன்மையும் தனக்குக் கிடைப்பதற்கிடமில்லாமல் இருந்தால், அப்படிப் பட்டவனுக்கு தானம் செய்ய வேண்டும், ஹே வீரர்களுக்குள் சிறந்தவனே. இப்படிச் செய்யப்படும் தானமே, எல்லா தானங்களுக்குள்ளும் உத்தமமான ஸாத்விக தானமாகும்.

यत्तु प्रत्युपकारार्थं फलमुद्दिश्य वा पुनः ।
दीयते च परिक्लिष्टं तद्दानं राजसं स्मृतम् ।।२१।।

யத்து ப்ரத்யு பகாரார்தம் பலமுத்திஶ்ய வா புன: ।
தீயதே ச பரிக்லிஷ்டம் தத் தானம் ராஜஸம் ஸ்ம்ருதம் ॥ 21

ராஜஸ்தானம் :

அப்படியே உத்தமமான தேசகாலங்களும், ஸத்பாத்ரமும், ந்யாயமாய் ஸம்பாதிக்கப்பட்டு சுத்தமாயிருக்கும் த்ரவ்யமும் கிடைத்தாலும், பால் கறப்பதின்மேல் கண்வைத்து பசுவுக்குத் தீனி போடுதல்போலும், தான்யத்தைச் சேர்த்து வைப்பதற்குக் குழியைத் தோண்டிவைத்துக் கொண்டு, பூமியில் விதையை விதைப்பதுபோலும், கல்யாணத்திற்கு வந்த பந்துக்கள் சீர்கள் வைப்பதை உத்தேசித்துக் கொண்டு, அவர்களைக் கல்யாணத்துக் கழைத்தல்போலும், வ்ரதம் எவ்வீட்டில் அநுஷ்டிக்கப்பட்டு வாயநம் (வ்ரதானுஷ்டானங்களில் பிறருக்குக் கொடுக்கப்படும் சிற்றுண்டிகள்) திரும்பிவருமோ, அவ்வீட்டுக்கே வாயநம் அனுப்புவதுபோலும், தரகுபொருளை வாங்கிக்கொண்டு பிறர் கார்யத்தைச் செய்து முடித்தல் போலும், பொருள்வாங்கிக் கொண்டு நோயாளிக்கு மருந்து கொடுப்பதுபோலும், தான் ஒருவனுக்கு தானம் செய்தகாரணத்தால், அவன் தனக்குப் பின்பு உதவுவான் என்று மனதில் எண்ணங்கொண்டு, தானம் கொடுத்தலும், அல்லது வழியோடு போகும் ஓர் உத்தம ப்ராஹ்மணனை அழைத்து, அவனால் ஏதேனும் ப்ரதிப்பகாரம செய்ய முடியாதென்று தெரிந்துகொண்டு, தன் வசம்சத்தாரனைவருக்கும ஸர்வ ப்ராயச்சித்த ஸங்கல்பம், செய்து கொண்டு, அந்த ப்ராஹ்மணன் கையில் நீரை வார்த்து, அவனுக்கு ஒரு கவடியை தக்ஷிணையாகக் கொடுத்தனுப்பிவிடுதலும், அப்படியே, பலவகைப்பட்ட பாரலௌகிக ஸுகங்களை அடைய விரும்பி, ப்ராஹ்மணன் கையில், அவனுடைய ஒருவேளைப் பாட்டுக்குப் போதாதபடி தக்ஷிணை கொடுத்தலும், அப்படி மிக்க அல்பமான தக்ஷிணை கொடுத்ததை வாங்கிக்கொண்டு, ப்ராஹ்மணன் போய்விட்டபின், திருடன் ஸர்வ சொத்தையும் கொள்ளையடித்துக் கொண்டு போய்விட்டதுபோல், துக்கப்பட்டு ஏங்கிப் போகிறதும் (வளர்த்துவதென்?) இவ்வகைப்பட்ட மனோவ்ருத்திகளுடன் செய்யப்படும் தானம் எதுவோ அது ராஜஸ தானமாகும்.

अदेशकाले यद्दानमपात्रेभ्यश्च दीयते ।
असत्कृतमवज्ञातं तत्तामसमुदाहृतम् ॥२२॥

அதேஷுகாலே யத்தான மபாத் ரேப்யஷ்ச தீயதே ।
அஸத் க்ருத மவக்ஞாதம் தத்தாமஸ முதாஹ்ருதம் ॥ 22

தாமஸதானம் :

ம்லேச்சர்கள் வஸிக்கும் இடம், அல்லது ஓர் காடு, அல்லது அசுத்தமான ஓர் இடம், அல்லது கூடாரங்கள், அல்லது நகரங்களின் நாற்சந்திகள், இப்படிப்பட்ட இடங்களில், ஸாயங்காலம், ராத்ரி, முதலிய அகாலங்களில், களவு முதலிய அந்யாயங்களால் ஸம்பாதிக்கப்பட்ட ஸொத்தை, கூத்தாடி, பாடகன், பாம்பாட்டி, வேசி, சொக்குப்பொடிக்காரன், கட்குடியன், இப்படிப்பட்ட அயோக்யர்களுக்கு, கேளி கூத்து முதலியவற்றைப் பார்த்து ஆநந்தப்பட்டுக்கொண்டு, பர்டகனுடைய பாட்டை செவியில் உபதேசிக்கப்படும் மந்த்ரமாய்க் கொண்டு, இத்தனையும் போதாதென்று, பூ அல்லது மற்ற ஸுகந்த த்ரவ்யங்களின் ஸுவாஸனையை முகந்துகொண்டு, அறிவுமயக்கம் என்ற ஓர் பேதாளமே அவதாரம்செய்து வந்ததோ என்று சொல்லும்படி, ஊரைக் கொள்ளையடித்துக் கொண்டுவந்த பொருளைச் செலவிட்டு பஞ்சமர் முதலியவர்களுக்கு அந்நஸத்ரம் போட்டு வைத்தாற்போலும், செய்யப்படும் தானம் எதுவோ, அதைத் தாமஸதானம் என்று நான் சொல்வேன். அல்லது இப்படிக்கூட தைவவசத்தால் நேரவும், நேரலாம், பூச்சிகள் கட்டைகளின் மேல் ஊர்வதால் அகஸ்மாத்தாய் அக்ஷரங்கள் ஏற்படுவதுபோலும், கையைத் தாளம்போடக் கொட்டும்போது, கைகளின் நடுவில் காக்கை அகப்பட்டாற்போலும், தாமஸகுணம் படைத்த ஒருவனுக்கு புண்ய காலமும் புண்யக்ஷேத்ரமும் கிடைக்கலாம்.

அப்போது அவனுடைய ஐச்வர்யத்தைப் பார்த்து, ஸத்பாத்ரமான ஒருவன், தானம் கேட்கவும் வரலாம். அப்போது அந்த தாமஸன் கர்வம் கொண்டு, வந்தவன் திடுக்கிட்டு நடுங்கிப்போகச் செய்து, அவன் விஷயத்தில், ச்ரத்தை இல்லாதவனாய், தலையைவணங்காமல், அர்க்யபாத்யாதிகளை தானாவது இதரர்களைக் கொண்டாவது அர்ப்பிக்காமல், ஆஸநம் போட்டு உட்காரச்செய்யாமல், (இப்படிப்பட்டவன் வந்த அதிதிக்கு கந்தாக்ஷதைகளைக் கொண்டு பூஜை செய்தென்பது எப்படி நேரப்போகிறது?) கடன்காரனுக்கு ஏதோ கொஞ்சம் பொருள் கொடுத்து அனுப்பிவிடுதல்போலும், வந்த அதிதியை, "அடா, போடா," என்று அவமதித்துப் பேசி, மிக்கக்

கஷ்டப்பட்டுக்கொண்டு, அல்பமான ஓர் பொருளைக் கொடுத்து, அந்தத் தாமஸன், தான் கொடுத்த அல்பத்துக்குத் தகுந்த யோக்யதை தான் அவ்வதிதிக் கிருக்கிற தென்று சொல்லி, அவன் விஷயத்தில் பலவிதமான அபசப்தங்களை ப்ரயோகித்து, அவனைத் தன்னிடத்தினின்றும் துரத்திவைப்பான். இவ்விஷயத்தை இவ்வளவு வளர்தசிச் சொன்னது போதும். இப்படி யெல்லாம் கைப்பொருளைச் செலவிடுவது, தாமஸ தானமாகும். இவ்விதம் மூவகைப்பட்ட தானங்களும் தம்தம் பெயரோடும், லக்ஷணங்களோடும், உனக்குச் சொல்லித்தீர்ந்தன, ஹே பாண்டு ராஜாவின் குமாரனே.

ச்ரத்தை முதலியவற்றின் ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்ற மூவகைகளையும் விவரமாய் வர்ணித்ததில் பகவானுடைய உத்தேசம் :

இப்போது நீ உன் மனதில் இப்படிப்பட்ட ஓர் எண்ணத்தைப் பாராட்டிக் கொண்டிருப்பாய் என்று, எனக்குத் தோற்றுகிறது. அது என்னவென்றால், இதுவே. "ஸம்ஸாரபந்தத்தை நிவ்ருத்தித்துக் கொடுப்பது ஸாத்விக கர்மம் ஒன்றே அல்லவா? அப்படி இருக்க, கொடுமையான தோஷங்களோடு கூடிய இதரங்களான ராஜஸ தாமஸ கர்மங்களை, நீர் எடுத்துரைக்க அவச்ய மென்ன?□ ஆகவே சொல்வேன் கேள். நிதியைக் காத்துக்கொண்டிருக்கும் பூதத்தைத் துரத்திவைத்த பின்பேயே, தனம் கைக்குக் கிட்டுவது போலும், நெருப்பை மூட்டிவைத்து அதினால் நம் கார்யத்தை முடித்துக்கொள்ள வேண்டுமானால், முதலில் புகையை ஸஹித்தே தீரவேண்டியது போலும், ஸத்வகுணத்தோடு கலந்து கிடக்கும் ராஜஸ தாமஸகுணங்களின் கலப்பைப் போக்கிவைக்க வேண்டியது அவச்யமாயிருக்க, அவற்றின் லக்ஷணங்களை விவரமாய்ச் சொன்னதில் என்ன தோஷம் இருக்கிறது? நான் ச்ரத்தை முதலாக தானம் ஈறாக சொல்லிக்கொண்டு வந்த ஸகல க்ரியா ஜாதங்களிலும், முக்குணங்களின் வ்யாப்தி ஏற்பட்டிருக்கிறது. முதலில், இம்மூன்று குணங்களையும் விவரமாய்ச் சொல்வது என்பது, என்னுடைய உத்தேசத்தில் இல்லை.

ஆனால் ஸத்வம் இன்ன தென்று ஸந்தேஹமறக் காட்டிவைக்க மற்றிரண்டையும் சொல்வது அவச்யமாயிற்று. இவை இரண்டோடும் மூன்றாவதான ஸத்வம் கலந்து கிடக்கிறபடியால், அது வெளிப்பட்டுத் தோன்றுவதற்கு

மற்றிரண்டையும் போக்கிவைக்க வேண்டி இருந்தது. பகலையும் இரவையும் விலக்கிவைத்தால், ஸந்த்யா காலம் ஏற்படுவதுபோலும், ரஜஸ்ஸும் தமஸ்ஸும் நாசமானபிறகு, ஸத்வம் வெளிப்பட்டு கைக்குக் கிடைக்கிறது. ஆகவே ஸத்வத்தை உனக்குப் பிரித்தெடுத்துக் காட்டுவதற்காக, ரஜஸ் தமஸ் இரண்டும் நிரூபிக்கப் பட்டன. இவை இரண்டையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, ஸத்வத்தைக் கைபற்றிக்கொண்டு, உன் கார்யத்தை ஸாதித்துக்கொள். இப்படிப்பட்ட சுத்தஸத்வத்தை ஸஹாயமாய்க் கொண்டு, யஞ்ஞம் முதலிய ஸர்வகர்மங்களையும் நீ நடத்தி முடித்துக்கொண்டால், உனக்கே ஸொந்தமான உன்னுடைய ஆத்மஸ்வரூபம் உனக்கு லப்த மாய்விடும். ஸூர்யன் உதித்தபின், உலகில் எந்த வஸ்து கண்ணுக்குத் தெரியாமற் போகும்? அப்படி ஸத்வம் ஸித்தித்தபின், எந்தக் கர்மம் தான், உத்தமமான பலனைக் கொடுக்காமற் போகும்? இப்படிப்பட்ட பெருமை ஸத்வத்துக்கு ஏற்பட்டிருக்கிறது.

மேல்வரும் விஷயத்துக்கு அவதாரிகை :

ஆனால் எதொன்றினாலேயே, மோக்ஷம் ப்ராப்த மாகுமோ, அது அலாய்தாவாய் ஒன்றிருக்கிறது. ஒருவன் மோக்ஷத்தில் வாழும்படியான யோக்யதையைப் பெறுவதற்கு, இந்த சுத்தஸத்வத்துக்கு, அது ஸஹாயமாய் ஏற்படவேண்டும். பதினைந்து மாற்றுள்ள உத்தம தங்கமே யாகட்டும், அதன்மேல் ராஜாவின் முத்ரை ஏற்படவிட்டுத்தான், அது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு, உலகத்தாரிடத்தில் செல்லும்படியான யோக்யதை பெறுகிறது. ஜலம் எவ்வளவோ சுத்தமாயும், சீதளமாயும் ஸுவாஸனை உடைத்தானதாயும், ஸுகப்ரதமாயும், இருக்கலாம். ஆனால் அது பவித்ர மாகவேண்டுமானால், ஓர் தீர்த்தத்தின் ஸம்பந்தம் அதற்கு ஏற்பட வேண்டும். ஓர் நதி, எவ்வளவு தான் பெருத்ததாயிருக்கட்டும்; அதை கங்கை தன்னிடத்தில் சேர்த்துக்கொண்டபிறகு தான், அதற்கு ஸமுத்ர ஸங்கமம் கிடைக்கிறது. அப்படியே ஸாத்விககர்மா நுஷ்டானம் செய்துகொண்டு ஒருவன் மோக்ஷத்துக்குப் போகும்போது, அவனுக்கு வழியில் யாதோர் தடையும நேராமற் செய்துகொடுப்பது எதுவோ, அது அலாய்தாவாக இருக்கிறது, ஹே கிரீடி. இந்த வார்த்தையைக் கேட்டமாத்ரத்தில், அர்ஜுநன், மனஸில் மிக்க சிந்தை கொண்டு, அதைத் தனக்குள் அடக்கிக்கொள்ள முடியாதவனாய், "தேவரீர், என்மேல் க்ருபைகூர்ந்து அதைத் தெரிவிக்க வேண்டும்," என்றான். அப்போது க்ருபாளுக்குள் சக்ரவர்த்தியான

ஸ்ரீக்ருஷ்ணன், "எதின் உதவியால் ஸாத்விக கர்மாநுஷ்டாநம் செய்கிறவனுக்கு, முக்தி என்னும் ரத்நம் கிடைத்துப்போகுமோ, அதின் ஸ்வரூபத்தை விளங்கச் செய்வேன், கேள், என்றார்.

ॐतत्सदिति निर्देशो ब्रह्मणस्त्रिविधः स्मृतः ।
ब्राह्मणास्तेन वेदाश्च यज्ञाश्च विहिताः पुरा ।।२३।।

ஓம் தத்ஸதிதி நிர்தேஶோ ப்ரம்ஹண ஸ்த்ரிவித: ஸ்ம்ருத: ।
ப்ராம்ஹணாஸ்தேன வேதாஶ்ச யக்ஞாஶ்ச விஹிதா: புரா ॥ 23

ப்ரஹ்மத்தின் மூவகைப்பட்ட நாமமும் அதின் ப்ரபாவமும் :

ஜகத்தனைத்துக்கும் உத்பத்தி ஸ்தானமாயும், ஸம்ஸாரத்தின் தாபங்களால் தபித்துப்போன ஜீவராசிகளனைத்துக்கும் இளைப்பாறு மிடமாயும், இருக்கும் அநாதியான ப்ரப்ரஹ்மம் ஒன்றுக்கே மூவகைப்பட்ட ஓர் பெயர் உண்டு. உண்மையில் அந்த ப்ரஹ்மத்துக்குப் பெயரும் ஜாதியும் இல்லையேயானாலும், அஞ்ஞானிகளான ஜீவராசிகள், தங்கள் அஞ்ஞான இருட்டில், அந்த ப்ரஹ்மத்தைக் கண்டு கொள்வதற்காக, வேதமானது அந்த ப்ரஹ்மத்துக்கு ஸங்கேதமாய் ஓர் பெயரிட்டுவைத்தது. ஓர் குழந்தை பிறக்கும்போது, அதற்கு ஓர் பெயரும் இல்லாமற் போனாலும், பின்பு அதற்கு ஓர் பெயரிட்டு அப்பெயரைக் கொண்டு அதை அழைத்தவுடன், அது ஓ வென்று சொல்லிக் கொண்டு எழுந்து வருகிறதல்லவா? அப்படியே, ஸம்ஸார துக்கங்களால் துக்கிதர்களான ஜீவராசிகள், ப்ரஹ்மத்தினிடத்தில் தங்கள் முறையைச் சொல்லிக் கொள்ள வரும்போது, எந்தப் பெயரைக் கொண்டு அந்த ப்ரஹ்மத்தை அழைக்க வேண்டுமோ, அந்தப் பெயரைத்தான் நான் இப்போது சொல்லப்போகிறேன். ஜீவராசிகளிடத்தில் க்ருபையுடன் கூடின அவற்றின் தகப்பன், என்று சொல்லத்தக்க வேதமானது, ப்ரஹ்மத்தின் அநிர்வாக்யதையைப் (வாக்கால் பேச முடியாதிருக்கும் தன்மையை) போக்கிவைத்து, அதை ஜீவராசிகளுக்கு அத்வைதபாவத்துடன் தர்சனம் கொடுக்கும்படி செய்துவைக்க ஓர் மந்த்ரத்தைத் தேடிக்கண்டுபிடித்து, அதைக் காட்டிக் கொடுத்தது. அப்படிக் காட்டிக் கொடுக்கப்பட்டதான பெயரைக்கொண்டு, அந்த பரப்ரஹ்மத்தை அழைத்தமாத்ரத்தில், பின்பக்கம் நின்று கொண்டிருந்த அது, முன் வந்து நிற்கிறது. ஆனால் எவர்கள், வேதம் என்னும் பர்வதத்தின் சிகரத்தில் உள்ள உபநிஷதர்த்தம் என்னும்

நகரத்தில், ப்ரஹ்மத்தோடு ஒரே பத்தியில் உட்கார்ந்துகொண்டிருப்பார்களோ, அவர்களுக்குத்தான் இந்த மந்த்ரம் தெரியும். இது நிற்கட்டும்.

ப்ரஹ்மதேவன் ஸ்ருஷ்டியைச் செய்துவைக்கும்படியான யோக்யதை படைத்தது, இந்த ஒரு நாமத்தின் ஜபத்தாலேயே. ஸ்ருஷ்டிசெய்ய ஆரம்பிப்பதின் முன்னால், அந்த ப்ரஹ்மதேவன் ஒண்டியாய் இருந்துகொண்டு, "ஈச்வரன் இன்னான் என்று எனக்குத தெரியவில்லையே. ஸ்ருஷ்டி, செய்வதற்கு எனக்கு சக்தி இல்லையே," என்று சொல்லிக்கொண்டு பைத்யம் பிடித்தவன்போல் இருந்தான். பின்பு அவன் இந்த நாமத்தை ஜபித்து, பெருமை அடைந்தான். இந்த நாமத்தின் அர்த்தாநு ஸந்தானத்துடன், இதின் மூன்றக்ஷரங்களை ஜபித்தமாத்ரத்தில், விச்வத்தை ஸ்ருஷ்டித்துவைக்கும் யோக்யதை அவனுக்கு உண்டாயிற்று. அப்போது அவன் ப்ராஹ்மணர்களை நிர்மாணம் செய்து, அவர்களுக்கு வேதத்தை சாஸ்த்ரமாகக் (எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அதைத் தெரிவிக்கும் நூலாக) கொடுத்து, யஞ்ஞங்கள் செய்வதையே அவர்களுக்கு ஜீவநாதாரமாக விதித்துவைத்தான். பிறகு அவன் ஸ்ருஷ்டித்துவைத்த இதர ஜீவராசிகளுக்குக் கணக்கே இல்லை. அப்படி அவற்றை ஸ்ருஷ்டித்துவைத்து, மூன்று லோகத்தை அவற்றிற்கு மான்யமாக ஏற்படுத்திவைத்தான். இப்படிப்பட்ட பெருமையை, ப்ரஹ்மதேவனுக்கு செய்து கொடுத்ததான நாமமந்திரத்தின் ஸ்வரூபத்தைச் சொல்வேன், கேள். ஸர்வமந்த்ரங்களுக்குள்ளும் ராஜாவான ப்ரணவம் முதல் அக்ஷரம் என்றும், தத் என்பது இரண்டாவது அக்ஷரம் என்றும், ஸத் என்பது மூன்றாவது அக்ஷரம் என்றும், தெரிந்து கொள். இப்படி ஓம் தத் ஸத் என்று மூவகைப்பட்ட ப்ரஹ்ம நாமம், உபநிஷத்துக்களினின்று பூத்த பூவாகும். இதை நீ ஸதா முகந்துகொண்டிருக்கவேண்டும்; இந்த மந்த்ரத்தோடு நீ ஒன்று பட்டுப்போனவனாய், நீ ஸாத்விக கர்மங்களைச் செய்துகொண்டு வந்தால், கைவல்யம் என்பதை உன் வீட்டில் ஊழியம் செய்யும் வேலைக்காரனாய்ச் செய்து விடுவாய்.

மேல்வரும் விஷயத்தின் அவதாரிகை :

அப்பா கர்ப்பூரத்தால் செய்யப்பட்ட அலங்காரம் ஒன்று, நம்முடைய பாக்யத்தால் நமக்குக் கிடைத்தால், அதை எப்படி அணிந்துகொள்ள வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்வது அவச்யமல்லவா? ஸத்கர்மங்களைச் செய்து கொண்டு, அந்த

ப்ரஹ்மநாமத்தை உச்சரித்துக்கொண்டிருந்தாலும், அந்த நாமத்தை உபயோகப் படுத்திக்கொள்ளும் வகை தெரியாமற்போனால், அனைத்தும் வ்யர்த்தமாகும். கோடிக்கணக்காய் ஸாதுக்கள் தாங்களாகவே வீட்டுக்கு வந்தபோதிலும், அவர்களுக்குப் பூஜை செய்யும் முறை தெரியாமற்போனால், ஏற்கனவே இருந்த புண்யம் கூட க்ஷயித்துப்போவதுபோலும், சுத்த தங்கத்தால் செய்த நகைகளை அணிந்துகொள்ளும் வகை தெரியாமல், அவற்றை எல்லாம் சேர்த்து ஓர் மூட்டையாய்க் கட்டிக் கழுத்திற் றொங்கவிட்டுக் கொண்டாற்போலும், வாயில் ப்ரஹ்ம நாமமும், கையில் ஸத்கர்மமும் இருந்தாலும், அந்த ப்ரஹ்மநாமத்தை உபயோகப்படுத்திக் கொள்ளும் வகை தெரியாமற்போனால், அத்தனையும் வ்யர்த்தமாகிறது. அப்பா அந்நமும் பசியும் ஸித்தமாயிருந்தும், ஓர் குழந்தைக்கு அவ்வந்நத்தைக் கையால் எடுத்து வாயிற் போட்டுக் கொள்ளவேண்டு மென்பது தெரியாமற்போனால், அது பசித்தே கிடக்க வேண்டுவதுபோலும், எண்ணெய், வத்தி, நெருப்பு, இவை மூன்றும் கிடைத்திருந்தும், விளக்கை ஏற்றிவைக்கும் முறை தெரியாது போனால், ப்ரகாசம் ஏற்படாதது போலும், உத்தமமான புண்யகாலம், ஸத்கர்மம், ப்ரஹ்மநாமத்தின் ஜபம் இவை மூன்றும் ஏற்பட்டும், அந்த நாமத்தை உபயோகப்படுத்திக்கொள்ளும வகை தெரியாமற்போனால், அத்தனையும் வீணாய்ப் போகிறது. ஆகையால் மூவக்ஷரங்களால் அமைந்த இந்த பரப்ரஹ்மநாமத்தின் விநியோகத்தைச் சொல்வேன் கேள்.

तस्मादोमित्युदाहृत्य यज्ञदानतपःक्रियाः ।
प्रवर्तन्ते विधानोक्ताः सततं ब्रह्मवादिनाम् ।।२४।।

தஸ்மாதோ மித்யுதாஹ்ருத்ய யக்ஞ தான தபः க்ரியாः ।
ப்ரவர்தந்தே விதானோக்தாः ஸததம் ப்ரம்ஹ வாதினாம் ॥ 24

ஓம் என்னும் அக்ஷரத்தின் விநியோகம் :

இந்த நாமத்தின் மூன்று அக்ஷரங்களையும் கர்மத்தின் ஆதியிலும், நடுவிலும், முடிவிலும், பின் சொல்லப்படு மாறு, உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும். இம்மூன்று அக்ஷரங்களை இவ்விதமாய் ப்ரயோகப்படுத்தியே, ப்ரஹ்மஞானிகள் ப்ரஹ்மத்தைக் கண்டுகொள்வார்கள். சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கப்பட்டதை நன்கறிந்தவர்கள, இந்த யுக்தியைத் தெரிந்துகொண்டு, தாங்கள் ப்ரஹ்மத்தோடு

ஒன்றுபட்டுப்போக ஆசைப் பட்டவர்களா யிருந்தும், யஞ்ஞும் முதலிய ஸத்கர்மங்களை அநுஷ்டிக்காமல் விடுவதில்லை. அவர்கள், முதன்முதலில் ஓம்காரத்தைத் தங்கள் த்யாநத்தில் ப்ரகாசிக்கச்செய்து கொண்டு, பின்பு அதை வெளிப்படையாயும் நாக்கால் உச்சரித்துக்கொண்டு, கர்மங்களை அநுஷ்டிக்கத் தொடங்குவார்கள். அணைந்துபோகாத தீபம் இருட்டில் உதவுவதுபோலும், வலிமை படைத்த துணையானவன் காட்டில் உதவுவதுபோலும், கர்மாரம்பத்தில் உச்சரிக்கப்படும் ப்ரணவம், கர்மாநுஷ்டானம் செய்கிறவனுக்கு உதவி செய்கிறது.

தாங்கள் ந்யாயமாய் ஸம்பாதித்த பொருளை உதாரமாகச் செலவிட்டு, சாஸ்த்ரத்தால் கொண்டாடப்பட்ட தேவதையின் ப்ரீதியை உத்தேசித்து, ப்ராஹ்மணர்களுக்கு தானம்செய்தல், அக்நியில் ஹோமங்கள் செய்தல், ஆஹவநீயாதி அக்நிகளில் ஹோம த்ரவ்யங்களை, சாஸ்த்ர முறைகளில் ஒன்றையும் தவறிப்போகவிடாமல் ஹோமம் செய்தல், – (மிக்கவளர்த்துவதென்?) அநேகவிதமான யஞ்ஞங்களை ஸாங்கோபாங்கமாய்ச் செய்துவைத்து, அநிஷ்டகரமான உபாதிகளின் (ஆத்மாவைப் பற்றியிருக்கும் தோஷங்கள்) ஸம்பந்தத்தை ஒழித்துக்கொள்ளல், ஸ்வதர்மானுஷ்டானத்தால் ஸம்பாதித்த அதிசுத்தமான பொருளையோ, தனக்கு ஸ்வாதீனமாயிருக்கும் பூமியையோ, உத்தமமான தேசத்திலும், காலத்திலும், பரிசுத்தமான ப்ராஹ்மணர்களுக்கு தானம் செய்தல், தினம்விட்டு தினம்போஜநம் செய்கிறது, கிருச்ரம், (முதல் நாளில் பகல் போஜநம் செய்தல், இரண்டாம் தினம் இரவில் போஜநம் செய்தல், மூன்றாம் நாள் ஒருவரையும் யாசிக்காமல் தானாகக் கிடைத்ததை புசித்திருத்தல், நான்காம் நாள் ஒன்றும் உண்ணாமல் பசித்திருத்தல், இவ்வாறு மூன்று தடவை தொடர்ச்சியாய் அநுஷ்டிக்கப்படும் வ்ரதம் க்ருச்ரம் என்று சொல்லப்படும்) மாஸம்விட்டுமாஸம் சாந்த்ராயணம், (சுக்ல பக்ஷம் ப்ரதமையில் ஒரு கவளம் அந்நம் புசித்தல் த்விதியையில் இரண்டு கவளம் புசித்தல், இப்படியே தினமும் ஓர் கவளம் அதிகம் செய்து கொண்டு வந்து, பௌர்ணமியில் 15 கவளம் அந்நம் புசித்தல், பின்பு க்ருஷ்ணபக்ஷத்தின் ப்ரதமையில் 14 கவளம் புசித்தல், பின்பு க்ருஷ்ணபக்ஷம் சதுர்த்தசி வரையில் தினம் ஓர் கவளம் குறைத்துக் கொண்டு வந்து, அமாவாஸ்யை தினத்தில் ஒன்றும் புசியாமல் பசித்திருக்கிறது; இந்த வ்ரதத்துக்கு சாந்த்ராயணம் என்று பெயர்)

இவ்வகைப்பட்ட வ்ரதானுஷ்டானங்களைப் பண்ணிக்கொண்டு சரீரத்தில் உள்ள கெட்டதாதுக்களை சோஷித்துப்போகச் செய்து கொள்ளல், இப்படிப்பட்ட யஜ்ஞம், தானம், தபஸ் முதலிய கர்மங்கள், ஸாமான்யமானவர்களுக்கு பந்தத்தை உண்டாக்கி வைக்குமேயானாலும், சாஸ்த்ரஜ்ஞானம் படைத்தவர்கள், ஓம் என்பதின் அர்த்தானு ஸந்தானத்தோடும் உச்சாரத்தோடும், அவற்றை அநுஷ்டிப்பதால், அவையே மோக்ஷப்ராப்தியை ஸுலபமாய்ச் செய்துகொடுக்கின்றன. பூமியில் கிடக்கும் கப்பலின்மேல் ஏறிக்கொண்டு, ஓர் ஊருக்கு போகவேண்டு மென்றால், அப்படி அதன் மேல் ஏறிக்கொண்டதே தடையாய் ஏற்பட்டு, அக்கப்பலே ஜலத்தின்மேல் மிதந்துகொண்டிருந்தால், அதில் ஏறிக்கொள்வதே நாம் போகவேண்டிய ஊர் போய்ச்சேர்வதை ஸுலபமாய்ச்செய்து வைத்தல்போலும், ஸம்ஸார பந்தத்தை உண்டாக்கி வைக்கும் கர்மங்களே, இந்த ப்ரஹ்மநாமத்தின் சேர்க்கையால், ஸம்ஸார நிவ்ருத்தியைச் செய்துவைக்கின்றன.

மேல்ச்லோகத்துக் கவதாரிகை :

இது இத்துடன் நிற்கட்டும், சாஸ்த்ரஜ்ஞர்கள், ஓம்காரத்தை ஸஹாயமாய்ச் சேர்த்துக்கொண்டு, அநுஷ்டிக்கும் இந்தக் கர்மங்கள் பலோந்முகங்களாவதை (பலத்தைக் கொடுக்க தலைப் படுவதை) அவர்கள் பார்த்தமாத்ரத்தில் அவர்கள் தத் என்னும் சப்தத்தை ப்ரயோகிக்கிறார்கள்.

तदित्यनभिसन्धाय फलं यज्ञतपःक्रियाः ।
दानक्रियाश्च विविधाः क्रियन्ते मोक्षकाङ्क्षिभिः ।। २५ ।।

ததித் யநபி ஸந்தாய பலம் யக்ஞதப: க்ரியா: ।
தான க்ரியாஶ்ச விவிதா: க்ரியந்தே மோக்ஷகாங்க்ஷிபி: ॥ 25

தத்சப்தத்தின் அர்த்தமும் விநியோகமும் :

எல்லா ஜகத்தைக் காட்டிலும் வேறுபட்டதாய், எல்லா வஸ்துக்களையும் பார்த்துக் கொண்டிருப்பதாய், லோகத்தைத் தாண்டி நிற்பதாய், இருக்கும் ப்ரஹ்மம் தத் என்று சொல்லப்படுகிறது. கர்மங்கள் பலோன் முகமாகும்போது அவர்கள் அந்த ப்ரஹ்மத்தை ஸ்மரித்து, அதின் ரூபத்தை த்யாநத்தில் நிறுத்தி வைத்துக்கொண்டு, அதின் பெயராகிய தத் என்னும் சப்தத்தை, வெளிப்படையாய் உச்சரித்தும் வைக்கிறார்கள். இப்படி உச்சரித்துவிட்டு, அப்படிப்பட்ட

ப்ரஹ்மத்துக்கே பலனோடுகூட இந்தக் கர்மம் இருக்கட்டும், நாங்கள் அநுவிப்பதற்கு, இதில் கொஞ்சம்கூட மிகுந்திருக்க வேண்டாம்," என்று தங்களுக்குள் சொல்லிக் கொள்கிறார்கள். இப்படி தத் என்று சொல்லப்படும் ப்ரஹ்மத்துக்கு அனைத்தையும் கொட்டிக்கொடுத்துவிட்டு "நமம" (எனக்கல்ல) என்று சொல்லிக்கொண்டு, தங்கள் தேஹத்தில் அதின் ஓர் அல்பாம்சம் கூட ஒட்டிக்கொள்ளா வண்ணம் அவர்கள் துடைத்துவைக்கிறார்கள்.

மேல்ச்லோகத்திற்கு அவதாரிகை :

இப்படி ஓம்காரத்தைத் துணையாய்க் கொண்டு அநுஷ்டிக்கப்பட்டு, தத் சப்தத்தைக் கொண்டு ப்ரஹ்மத்துக்கு ஸமர்ப்பிக்கப்பட்டுப்போன அந்தக் கர்மத்துக்கு, ப்ரஹ்மமயத்வம் ஏற்பட்டுவிடுகிறது. அந்தக் கர்மம் இவ்விதமாய் ப்ரஹ்ம மயமாய்விட்டாலும், அந்தக் கர்மத்தைச் செய்தவர்கள் என்று தாங்கள் ப்ரஹ்மத்தைவிட்டு வேறாகத் தனித்து நின்றுவிடுகிறார்கள்; ஆகையால், இவ்வளவோடு கார்யம் முடிவுபெறுவதில்லை. உப்பு ஜலத்திற் கலந்துபோனாலும், உவர்ப்பு என்னும் சுவை அலாய்தாவாய் மிகுந்து நிற்பதுபோலும், கர்மம் ப்ரஹ்மமாய்ப் போய்விட்டது என்று உணர்ந்துகொள்வதாலேயே, த்வைதபாவம் ஏற்பட்டுவிடுகிறது, எப்போ தெல்லாம் த்வைதபாவம் ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் ஸம்ஸாரபயம் உண்டாய் விடுகிறதென்று, பகவானே தன்வாயினின்று புறப்பட்ட வேதவாக்யத்தைக் (யதாஹ்யேவைஷ ஏதஸ்மின் னுதாமந்த்ரம் குருதே, அததஸ்ய பயம் புவதி, என்ற தைத்திரிய உபநிஷத் வாக்யத்தையும், த்விதீயாத்வை பயம் பவதி, என்று ப்ருஹதாரண் யோபநிஷத் வாக்யத்தையும் பார்த்துக் கொள்க) கொண்டு சொல்லிவைத் திருக்கிறார். இப்படி வேறாக பாவிக்கப்பட்டிருக்கும் ப்ரஹ்மம், தன் னாத்மஸ்வரூபத்தோடு ஒன்றுபட்டதே என்னும் முடிவு ஏற்பட்டு, முன்னிருந்து குறைவு நிரம்பிப்போவதற்காக, ஸத் என்னும் சப்தத்தின் ப்ரயோகம் பகவானால் ஏற்படுத்திவைக்கப்பட்டது. ஓம்கார தத்காரங்களின் சேர்க்கையோடு செய்யப்பட்ட கர்மம், ப்ரஹ்ம ரூபத்தை அடைந்து, ப்ரசஸ்தம் (புகழ் பெற்றது) என்று கொண்டாடப்படுகிறது. அப்படிப்பட்ட ப்ரசஸ்தகர்மத்தில், ஸத்சப்தம் எப்படி ப்ரயோகிக் கப்படுகிறது என்பது தெரிந்து கொள்ளவேண்டியதாய் இருப்பதால், அதைச் சொல்வேன், கேள்.

सद्भावे साधुभावे च सदित्येतत्प्रयुज्यते ।
प्रशस्ते कर्मणि तथा सच्छब्दः पार्थ युज्यते ।। २६ ।।

ஸத்பாவே ஸாதுபாவே ச ஸதித்யேதத் ப்ரயுஜ்யதே ।
ப்ரஶஸ்தே கர்மணி ததா ஸச்சப்தः பார்த யுஜ்யதே ।। 26

ஸத்சப்தத்தின் விநியோகத்தால், ஏற்படும் ஸத்பாவம் :

இந்த ஸத்சப்தப்ரயோகத்தால், அஸத்ரூபியான (உண்மையாய் இருப்பதற்றதாய், கேவல தோற்றமாகவே காணப்படும்) நாணயம் உருக்கப்பட்டுப்போய், அதின் ஸத்ய ஸ்வரூபமான தங்கம் த்ருஷ்டிகோசரம் ஆவதுபோலும், த்வைதபாவங்கள் என்ற தோற்றம் நசித்துப்போய், அவற்றின் அதிஷ்டானமான அத்வைத வஸ்து வெளிப்பட்டு நிற்கிறது. அந்த வஸ்து எப்போதும் இருந்துகொண்டு தேச காலங்களின் வேறுபாட்டால் வேறுபடாததாய், தான் இயற்கையாய் இருக்கிறபடியே, அகண்டிகமாய் இருக்கிறது. உண்மையாய் இருப்புள்ள எந்த ஸத்வஸ்துவின் தர்சநம் ஒருவனுக்குக் கிடைத்துப்போன மாத்ரத்தில், அத்துடன் அவன் ஒன்றுபட்டுப்போவானோ, அந்த ஸத்வஸ்துவாய் இராத, இந்த்ரியங்களால் உணரப்படும், வஸ்துக்களனைத்தும் இல்லாதவையே ஆகும். கீழே சொன்னப்ரகாரம் ஸர்வாத்மக வாஹ்மயமாய்ப்போய் ப்ரசஸ்தமாய்விட்ட கர்மம், இந்த ஸத்காரப்ரயோகத்தால் முற்றிலும் வேறுபாடற்றதாய் தன்னோடு ஐக்யப்பட்டதாய்ப் பாவிக்கப்பட்டுப்போகிறது. ஆனால் ஓம்கார தத்காரங்களாலேயே அந்தக் கர்மம் ப்ரஹ்மரூபமாய்ப் பாவிக்கப்பட்டுப்போனபின், ஸத்காரத்தால் செய்யப்பட வேண்டியதாய் மிகுந்து நின்ற தென்ன வென்று கேட்டால், அந்தக் கர்மவிஷயத்தில் பாவிக்கப்பட்டிருந்த த்வைதபாவத்தில் கீழ்ச்சொன்னபடி மிகுந்து நின்றிருந்த அல்பமான அம்சமும், இந்த ஸத்காரத்தால் நசித்துப்போய், தன் ஸ்வரூபமும், கர்மமும், மற்றனைத்தும் ஒன்றுபட்டுப்போய்விடுகின்றன. ஸத்சப்தத்தின் ப்ரயோகத்தின் உண்மையான அர்த்தம், இப்படி இருக்கிறதென்று ஸ்ரீக்ருஷ்ணன் சொன்னார். இதை நான் சொன்னேன் என்று எண்ணிக்கொள்ளாதிருங்கள். இது நான் சொன்னதென்று நீங்கள் எண்ணிக் கொள்வீர்களானால், அதுவே பகவான் விஷயத்தில் த்வைதபாவம் பாராட்டியதாகிய குறைவாகும். ஆகையால் இந்த வார்த்தை பகவானுடையதே என்று, நீங்கள் பாவியுங்கள்.

ஸத்சப்தத்தால் ஸத்கர்மத்துக்கு ஏற்படும் ஸாதுபாவம் :

இன்னும் மற்றோர் விதமாயும், ஸத்சப்தம் ஸாத்விககர்மத்துக்குப் பெருமை உண்டாக்கி வைக்கிறது, அதைச் சொல்வேன், கேள். அவரவர்களதிகாரத்துக்குத் தகுந்த ஸத்கர்மம், ஸரியாகவே செய்து வைக்கப்பட்டு வரும்போது, ஏதேனும் ஓர் அங்கத்தின் அநுஷ்டானத்தில் அது குறைவுபட்டுப் போயிற்றானால், சரீரத்துக்கு ஓர் கால் குறைவாய்ப்போனால், அதின் ஸஞ்சாரம் தடைப்பட்டுப் போவதுபோலும் ஓர் ரதத்திற்கு ஓர் அவயவம் குறைவாய்ப்போனால், அதின் நின்றுபோவது போலும், அங்கத்தில் குறைவுபட்டுபோன ஸத்கர்மம் அஸத்தாய்ப் போய்விடுகிறது. அப்போது இந்த ஸத்சப்தம், முன் உச்சரிக்கப்பட்டவையாயிருக்கும் ஓம்காரத்தத்காரங்களை உதவியாய்க்கொண்டு, அப்படி ஸ்வரூபஹாநி அடைந்த ஸத்கர்மத்துக்குத் திரும்பவும் உயிர்கொடுத்து, அதைப் பூர்ணமான ஸத்கர்மமாய்ச் செய்துவைக்கிறது. இப்படி ஸத்கர்மத்துக்கு ஏற்பட்ட அஸத்தன்மையை முற்றிலும் நாசம்செய்து, ஸத்கர்மத்தின் பதவியைக் கொடுக்கும் ஸாமர்த்தியம், இந்த ஸத்காரத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. திவ்யமான ஓர் ஔஷதம் வ்யாதிஸ்தனுக்கு உதவுவதுபோலும் சத்ருக்கள்முன் அபஜயம் அடைந்த ஒருவனுக்கு ஓர் பலவானுடைய ஸஹாயம் உபகரிப்பதுபோலும், ஸத்சப்தமானது அங்கஹீநமான ஸத்கர்மத்துக்கு உதவி செய்துவைக்கிறது. இல்லாவிட்டால் இப்படியும் நேரிடலாம்.

ஸத்கர் மாநுஷ்டானம் செய்துவரும்போது, அநுஷ்டிக்கிறவன் எவ்விதமாகவோ ஏமாறிப்போனதால் அது ஸரியான மார்க்கத்தினின்று தவறிப்போய் தப்புமார்க்கத்தில் ப்ரவேசித்துவிடலாம். ஓர் வழியில் வழக்கமாய் நடந்துகொண்டிருப்பவனுக்கும், வழி தப்பிப்போவதுண்டு, ஓர் விஷயத்தை நன்றாய் அறிந்து பரீக்ஷகன் என்று பெயர் பெற்றவன்கூட, ஏமாறிப்போவது உண்டு; ஓர் கார்யத்தைச் செய்யும் காலத்தில் என்னென்னமோ தவறுகள் ஏற்படுவது இயற்கைதான். ஆகவே எப்போது ஸத்கர்மம் ஜாக்ரதைக்குறைவால் சாஸ்த்ரமர்யாதையைக் கடந்துபோய், அதற்கு அஸாது வென்னும் பெயர் ஏற்படுவதாயிருக்குமோ, அப்போது மற்றிரண்டைக் காட்டிலும் ஞாநபூர்த்தியாற் சிறந்ததான இந்த ஸத்சப்தம் ப்ரயோகிக்கப்பட்டால், அது அந்தக் கர்மத்தை ஸாதுவாய்ச் செய்து வைக்கிறது. இரும்புக்கு

ஸ்பர்சவேதியோடு உரைதல் போலும், கழிநீருக்கு கங்கையோடு கலந்து போதல்போலும், செத்துப்போனவனுக்கு அம்ருதவர்ஷத்தில் நனைதல்போலும், அஸாதுவான கர்மத்துக்கு இந்த ஸத்சப்தம் உதவி செய்து, அதற்கு ஸாதுத்வத்தை உண்டுபண்ணிவைக்கிறது. ஸத் என்ற இந்த நாமம் இப்படிப்பட்ட பெருமைபடைத்ததாயிருக்கிறது.

ஓம் தத் ஸத் என்னும் மூவக்ஷரங்களால் அமைந்த மந்த்ரத்தின் பெருமை :

இங்கே வர்ணிக்கப்பட்டுள்ள இமமூவக்ஷரங்களாலமைந்த ப்ரஹ்மநாமத்தின் பெருமையை நன்றாய் அறிந்து கொண்டு, உன் மனஸில் விசாரம் செய்வாயானால் இந்த நாமமே ப்ரஹ்ம மென்று நீ உணர்வாய் நன்றாய்ப்பார். ஓம் தத் ஸத் என்ற இந்த நாமத்தின் உச்சாரமே அதை உச்சரிக்கிறவனை, த்ருச்ய ஜாதங்கள் அனைத்துக்கும ப்ரகாசத்தை உண்டாக்கி வைக்கும் ப்ரஹ்மத்தோடு சேர்த்து வைக்கிறது. அந்த நிர்விசிஷ்டமான (நிர்குணமான) பரப்ரஹ்மத்தின் உண்மையான ஸ்வரூபம் எதுவோ, அதை இந்த பற்றிக்கொண்டிருப்பதுபோலும், பெயர் அற்ற இந்த பரப்ரஹ்மத்துக்கு, இந்நாமமே பற்றாகிறது. இந்த நாமத்துக்கும் நாமியான பரப்ரஹ்மத்துக்கும் பேதமில்லை. ஆகாசத்தில் ஸூர்யன் உதித்தபின், ஸூர்யனைக் கொண்டே ஸூர்யனைப் பார்ப்பது போலும், இந்த நாமத்தைக் கொண்டே இந்த பரப்ரஹ்மத்தைக் கண்டு கொள்ள வேண்டியதாயிருக்கிறது. ஆகையால் மூவக்ஷரங்களால் அமைந்த இது, கேவல நாமமாகாமல், ப்ரஹ்மமாகவே இருக்கிறது.

यज्ञे तपसि दाने च स्थितिः सदिति चोच्यते ।
कर्म चैव तदर्थीयं सदित्येवाभिधीयते ।। २७ ।।

யக்ஞே தபஸி தானே ச ஸ்திதி: ஸதிதி சோச்யதே ।
கர்ம சைவ ததர்தீயம் ஸதித்யேவாபி தீயதே ॥ 27

இவ்வகைப்பட்ட ப்ரஹ்மத்துக்கு அர்ப்பிக்கப்பட்டதான கர்மத்தின் பெருமை :

இப்படி பெருமைபடைத்த நாமத்தோடு வேறுபடாத பரப்ரஹ்மத்துக்கே அர்ப்பணமாய், செய்யப்பட்ட கர்மங்கள் முழுமையும, அவை யாகமானாலும், மிகவும் தீர்க்கமான தபஸ்ஸே யானாலும், ஸரியே, ஆரம்பித்தது முதற்கொண்டே

குறைவாய், குறைவாகவே நின்றுபோனாலும் ஸரியே, ஸ்பர்சவேதியின் ஸம்பந்தத்தால் உண்டான தங்கத்துணுக்குகள் மாற்றில் வித்யாஸப்படாததுபோலும், ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தில் அர்ப்பிக்கப்பட்டுப் போனவையாயிருப்பதால், ப்ரஹ்மமாகவே ஆய்விடுகின்றன. நதிஜலம் ஸமுத்ரத்தில் விழுந்து ஸமுத்ரத்தோடு ஒன்றுபட்டுப்போனபின், அதில் குறைவு நிறைவு என்னும் வார்த்தைக்கு இடம் இல்லாமற்போவது போலும், அக்கர்மங்கள் பூர்ணபரப்ரஹ்மமாகவே ஆய்ப்போய், குறைவு நிறைவு என்ற பேச்சுக்கு இடம் கொடுப்பதில்லை. இவ்வாறு இந்த ப்ரஹ்ம நாமத்தின் கெதி உனக்குச் சொல்லப்படடதாயிற்று. அன்றியும், அதின் மூன்று அக்ஷரங்களில் ஒவவொன்றின் தனித்தனி ப்ரயோகத்தின் முறையும் உனக்கு நன்றாய்ச் சொல்லப்பட்டுத் தீர்ந்தது. சாஸ்த்ரங்களின் உத்தம ரஹஸ்யார்த்தங்களைத் தெரிந்துகொண்ட வர்களுக்குள் சிறந்தவனான அர்ஜுநா, இந்த ப்ரஹ்மநாமமானது இவ்வளவு உத்தமமான பெருமைபடைத்த தென்று இப்போது நீ அறிந்துகொண்டாயல்லவா? ஆகவே இது முதற்கொண்டு, இந்த நாமத்தை ஸதா ஜபித்துக் கொண்டிருப்பதில் அதுதினமும் அதிகரித்துக் கொண்டிருக்கும ச்ரதையுள்ளவனாய் நீ ஆய்விடவேண்டும். அப்படிப்பட்ட ச்ரத்தை உன்னிடத்தில் ஏற்பட்டுவிட்டபின், ஸம்ஸாரபந்தத்தின் அல்பாம்சம்கூட உன்னிடததில் நிலைகொள்ள முடியாத தாய்விடும். எந்தக்கர்மத்தில் இந்த நாமத்தின் ப்ரயோகம் உத்தமரீதியாய்ச் செய்யப்படுகிறதோ, அந்தக் கர்மாநுஷ்டாநத்தினால், லோகஹிதமான ஸகல ஸத்கர்மங்களும் விதிகோணாமல் அநுஷ்டிக்கப் பட்டவையாய்விடும்.

अश्रद्धया हुतं दत्तं तपस्तप्तं कृतं च यत् ।
असदित्युच्यते पार्थ न च तत्प्रेत्य नो इह ।। २८ ।।

அஶ்ரத்தயா ஹுதம் தத்தம் தபஸ்தப்தம் க்ருதம் ச யத் ।
அஸதித்யுச்யதே பார்த ந ச தத் ப்ரேத்ய நோ இஹ ।। 28

இந்த நாமப்ரயோகத்தில் ச்ரத்தை யின்றி செய்யப்படும் ஸத்கர்மம் அனைத்தும் வீண்படும் :

இப்படிச் செய்யாமல், இந்த உத்தமான மார்கத்தைக் கைவிட்டு, ச்ரத்தையின் கையை முறித்து வைத்து, துராக்ரஹத்தின் ஸஹாயத்தையே மேன்மேலும் வ்ருத்தி செய்துகொண்டு, கோடி அச்வமேதங்களைச் செய்தாலும்,

பூமண்டலத்தை ரத்நங்களால் நிரப்பிவைத்து அதைத் தானம் செய்தாலும், ஒற்றைக் கட்டைவிரல்மேல் நிலைகொண்டு ஆயிரக்கணக்கான வர்ஷங்கள் தபஸ்ஸு செய்தாலும், ஜலாசயநிர்மாணம் செய்ய ஆரம்பித்து, புதிதாய் ஓர் ஸமுத்ரத்தையே நிர்மாணம செய்து வைத்தாலும், (இன்னும் வளர்த்துவதென்?) எவ்விதமான ஸத்கர்மங்களைச் செய்தாலும், அவை அனைத்தும் வ்யர்த்தம் ஆகும். கற்பாறைமேற் பெய்த மழைபோலும், சாம்பலிற் செய்த ஆஹுதிபோலும், நிழலை ஆலிங்கணம் செய்துகொண்டது போலும், ஆகாசத்தைக் கையால் அறைந்ததுபோலும், அக்கர்மங்களைச் செய்வதில் ஏற்பட்ட ச்ரமம் அனைத்தும் வீணாய்ப்போகிறது. குண்டுக்கற்களைச் செக்கிற் போட்டு ஆட்டினால், எப்படி எண்ணெயும் கிடைக்காமல், புண்ணாக்கும் கிடைக்காமல், வீண்ச்ரமமே ஏற்படுமோ, அப்படியே கீழ்ச்சொன்ன கர்மானுஷ்டானத்தால் தாரித்ரியம் ஒன்றே ஏற்படும். மடிநிறைய ஓட்டாஞ்சல்லிகளைக் கட்டிக்கொண்டுபோனால், அவை இத்தேசத்திலும் பரதேசத்திலும் செல்லாமல் பசித்தே கிடக்கவேண்டியது போலும், இப்படிப்பட்ட கர்மங்களை எவ்வளவு செய்தபோதிலும் அவற்றால் இந்தலோகத்திலேயே ஓர்பயனும் ஏற்படாதென்றால், பரலோக ஸுகம் எப்படிக் கிடைக்கும்? ஆகையால் ப்ரஹ்மநாமத்தின் விஷயத்தில் ச்ரத்தையின்றி அநுஷ்டிக்கப்படும் கர்மம், இஹத்திலும் பரத்திலும், ஓர் பயனையும் கொடுக்காத வீண் ப்ரயாஸமே யாகும்.

மேல்வரும் அத்யாயவிஷயத்தின் அவதாரிகை :

பாபங்கள் என்ற யானைகளுக்கு ஸிம்ஹம் போன்றவனும், ஸாம்ஸாரிக த்ரிவிததாபம் என்னும் இருட்டுக்கு ஸூர்யன் போன்றவனும், லக்ஷ்மீக்கு கணவனும், வீரனும், நரஸிம்ஹனும், (இப்பதத்துக்கு ஹிரண்ய கசிபுவை ஸம்ஹரித்தவன் என்றும் புருஷர்களுக்குள் ஸிம்ஹம் போன்றவன், அதாவது உத்தமன் என்றும் அர்த்தம் கொள்ளலாம்) ஆன ஸ்ரீக்ருஷ்ணன் இவ்வாறு சொல்லி முடித்தார். பின்பு, தன்னுடைய காந்தியாகிய சந்த்ரிகையில் முழுகிப்போய் இருக்கும் சந்த்ரனைப்போல், அர்ஜுநன் தன் ஆனந்தத்தின் பெருக்கில் இருக்குமிடம் தெரியாவண்ணம் முழுகிப்போனான். இது என்ன ஆச்சர்யம்! யுத்தம் என்ற ஓர் வ்யாபாரம் நடக்கிறது, அதில் அம்புகளின் கூர்மையே அளவுகலமாய் ஏற்பட்டு, மாம்ஸத்தையும் அத்துடன் ஆயுஸ்ஸையும் சேதித்து, அளந்து கொட்டுகிறது. இப்படிப்பட்ட மிக்கக் கொடுமையான ஓர் ஸமயத்தில், இந்த

அர்ஜுநன் எவ்விதம் ஆநந்தராஜ்யத்தின் ஸுகத்தை அநுபவிக்கிறான்! வேறொருவருக்கும் இப்படிப்பட்ட ஆநந்தம் ஏற்பட்டதில்லை. அப்போது ஸஞ்ஜயன் த்ருதராஷ்டிரனைப் பார்த்து, பின்வருமாறு சொன்னான். அர்ஜுநன் நம்முடைய சத்ருவாயிருந்தாலும், அவனிடத்திற் காணப்படும் நற்குணங்களைக் கொண்டாடுவது தகும். அத்துடன் கூட, இவன் நாம் உத்தமஸுகத்தை யடையும்படி செய்துவைத்த குருவாயும் இப்போது ஏற்பட்டுவிட்டான். ஏனென்றால், இவன் இந்த விஷயத்தை விசாரிக்காதிருந்துவிட்டால், இவ்விஷயத்தில் தன் அபிப்ராயத்தை பகவான் வெளியிட்டிரார். இவன் விசாரித்ததால், நமக்கு எவ்வளவு ஸுலபமாய்ப் பரமார்த்தம் கிடைத்துப் போயிற்று, நாம் அஞ்ஞானம் என்னும் காட்டிற் சிக்கிப்போய், ஜந்மம் என்னும் துக்கத்தை அநுபவித்துக் கொண்டு, அலைந்து திரிந்துகொண்டிருந்தோம். அவ்வகைப்பட்ட நாம், ஆத்ம ப்ரகாசம் என்னும் வீட்டுக்குள் கொண்டுவந்து சேர்க்கப்பட்டோம். இவ்வளவு பெருத்த உபகாரத்தை, இவன் உனக்கும் எனக்கும் செய்துவைத்தான். இவ்வுபகாரம் செய்துவைத்ததால், நமக்கு இவன், வ்யாஸபகவானோடு கூடப்பிறந்தவன் என்று சொல்லத் தக்க குரு வாய்விட்டான். இப்படிச் சொன்னபின், ஸஞ்சயன். உடனே பின்வருமாறு தனக்குள் சொல்லிக்கொண்டான். இந்த அதிசயோக்தியை, (புகழை) த்ருதராஷ்டிரன் ஒப்புக்கொள்ளமாட்டான். ஏன் இவ்வளவு பேசினேன்? இவ்விதம் சொல்லிக்கொண்டு அவன் இந்த விஷயத்தைக் கைவிட்டு, ஸ்ரீக்ருஷ்ணனிடத்தில் அர்ஜுநன் மேலே விசாரித்த விஷயத்தைச் சொல்லத் தொடங்கினான். அவன் செய்ததுபோலவே, நானும் மேல் நடந்த ஸம்வாதத்தைச் சொல்வேன், கேளுங்கள்.

பதினேழாவது அத்யாயம் முற்றிற்று

அத்யாயம் – 18.

ஸ்ரீ குருவந்தனம் :

நிர்மலமானவராய், தன் பக்தஜநங்களுக்கு அகில மங்களங்களையும் செய்துகொடுக்கிறவராய், ஜந்மம் ஜரையென்ற மேகங்களைக் கலைத்துவைக்கும் பெருங்காற்றாய், இருக்கும் தேவா, நீர் வாழ்க, வாழ்க! அதிபலவானாய், அமங்களங்கள் அனைத்தையும் நாசம் செய்துவைக்கிறவராய், வேதங்கள் ஆகமங்கள், என்ற மரங்கள் பலித்துத்தந்த பழம் என்று சொல்லத்தக்கவராய், ஆச்ரயித்தவர்கள் விரும்பிய பலன்களனைத்தையும் கொடுக்கிறவராய், இருக்கும் தேவா, நீர் வாழ்க, வாழ்க! ஸகலமுமாய், விஷயங்களை வெறுத்து, அதின் ஸம்பந்தத்தை ஒழித்துக் கொண்டவர்கள் விஷயத்தில் ப்ரேமைபாராட்டினவராய், காலனுடைய உத்ஸாஹத்தை நாசம் செய்துவைக்கிறவராய், தீதராய், மூப்பு, கலையென்பது ப்ரணவத்தின் முடிவான அம்சம், அதையும் தாண்டி நிற்கிறவர் என்றபடி – ஆட்டமற்றவராய் இருக்கும் தேவா, நீர் வாழ்க, வாழ்க நிச்சலராய், அலைவுற்ற சித்தத்தை விழுங்கிவிட்டு, அதினால் தொந்திபெருத்தவராய், மேலும் மேலும், ஜநங்களை உத்பத்திசெய்வது என்னும் ஓயாத விளையாட்டில் அத்யுத்ஸாஹம் பூண்டவராய், இருக்கும் தேவா, நீர் வாழ்க, வாழ்க! நிஷ்களங்கராய், ஸதா பெருகிக்கொண்டிருக்கும் அபரிமிதமான ஆத்மாநந்தத்தை வெளிப்படுத்திவைக்கிறவராய், ஓர் மலமும் உம்மிடத்திலாவது உம்மைச் சேர்ந்தவர்களிடத்திலாவது ஒருக்காலும் ஒட்டிக் கொள்ளாவண்ணம் துடைத்துவைக்கிறவராய், உலகனைத்துக்கும் வேராய், இருக்கும் தேவா, நீர் வாழ்க, வாழ்க!

தானாகவே ப்ராசிக்கிறவராய், ஜகத் என்னும் மேகம் தோன்றி மறைந்து போவதற்கு, இடமான ஆகாசமானவராய், உலகங்கள் உண்டாய் நிலைபெறுவதற்கு ஆதாரமாக ஏற்பட்ட மூலஸ்தம்பமாய், ஸம்ஸாரத்தை நாசம் செய்து வைக்கிறவராய், இருக்கும் தேவா, நீர் வாழ்க, வாழ்க! அதி பரிசுத்தம் படைத்தவராய், அவித்யை யென்னும் தோட்டத்தை நாசம் செய்துவைக்கும் யானையாய், சமதமங்களைக்கொண்டு காமத்தின் வலிமையை நாசம்செய்துவைக்கிறவராய், தயையால் நிறைந்த கடலாய், இருக்கும் தேவா, நீர் வாழ்க, வாழ்க! கந்தர்ப்பன் (மன்மதன்) என்னும் ஸர்ப்பத்தின் வலிமையை அடக்கிவைக்கிறவராய், பக்தர்களுடைய பக்தி யென்னும்

வீட்டில் ஏற்றிவைத்த தீபமாய், ஸம்ஸாரதாபத்தைப் போக்குகிறவராய், இருக்கும் தேவா, நீர் வாழ்க, வாழ்க! பரிபக்வமடைந்த சாந்தி படைத்தவர்கள் விரும்பப்பட்ட ஒரே வஸ்துவானவராய், பக்தஜநங்களுக்குப் பரதந்திரப்பட்டவராய், (வசப்பட்டுப்போய், அவர்களிட்ட வேலையைச் செய்கிறவராய்) யாவரும் கொண்டாடி பஜிக்கத்தக்கவராய்; மாயையால்; நெருங்கமுடியாதவராய், இருக்கும் தேவா, நீர் வாழ்க, வாழ்க! விரும்பினவர்களுக்கு கல்பநாதீத பரப்ரஹ்மத்தையே எடுத்துக் கொடுக்கும் ஸாமர்த்யமுள்ளவராய், ஆத்மஜ்ஞானமாகிய வ்ருக்ஷத்தின் விதைகள் முளைத்துப் பயிராவதற்குத் தகுந்த பூமியானவராய், இருக்கும் தேவனாகிய ஸ்ரீ குருவே, நீர் வாழ்க, வாழ்க! உம்மை விசிஷ்டப்படுத்திவைக்கும் (பேதப்படுத்தி வைக்கும்) வேறோர் வஸ்துவின் சேர்க்கையற்ற அத்வயமானவரே, உம்மை உத்தேசித்து அநேகவிதப்பட்ட சொற்களை ப்ரயோகித்து, இவ்விதமாய் எல்லாம் மேன்மேலும் ஸ்தோத்ரம் செய்வ தென்? உம்முடைய ரூபத்தை விசேஷணங்களால் விசேஷித்துவைக்கப் (அலங்கரித்து வைக்க) பார்த்தால், அது கண்ணாற் பார்க்கத்தக்க ஒன்றாய் இல்லையே.

இதை அறிந்து, நான் இப்போது உம்மை வர்ணித்துவைத்த விஷயத்தில் மிக்க லஜ்ஜைப்படுகிறேன். ஸமுத்ரம் தன் கரையை மீறிக்கொண்டு பொங்குகிறதில்லை என்ற ஓர் ந்யாயம், அது சந்த்ரனைப் பார்க்காதவரைக்குந்தானே நடந்தேறிவருகிறது. சந்த்ரகாந்தக்கல் தானாகவே சந்த்ரனுக்கு அர்க்கியம் ஸமர்ப்பிக்காதிருக்க, சந்த்ரன் அதை அர்க்கியம் கொடுக்கும்படியாய்ச் செய்துவைக்கிறான். வஸந்தருதுவின் சேர்க்கையால் வ்ருக்ஷங்கள் எல்லாம் துளிர் எடுக்கின்றன. இது ஏனோ தெரியவில்லை. அப்படியே உம்மைக்கண்ட மாத்ரத்தில், என் புத்திக்கு ஸ்வாதீனம் தவறிப் போயிற்று. தாமரைப்பூவென்னும் ஓர் ஸ்த்ரீயை, ஸூர்யன் தன் கிரணங்கள் என்னும் கைகளால், ஸ்பர்சித்தால், அவள் வெட்கத்தை முற்றிலும் விட்டு நகைக்கிறாள். ஜலத்தால் ஸ்பர்சிக்கபட்ட உப்புக்கட்டி கரைந்துபோகிறது. புசித்து த்ருப்தி அடைந்தவனை ஏப்பங்கள் தாமாகவே வ்யாபித்துக் கொள்கின்றன. அப்படியே உம்மை ஸ்மரித்ததினாலேயே, நான் என்னை மறந்துபோகிறேன். நீர் என்னை அப்படிச் செய்துவைத்து, என்னுடைய புத்திஸ்வாதீனதையையே தூரதேசத்துக்குத் துரத்திவைத்து, என்னுடைய நாக்கை பைத்யம்கொண்டதாய்ச் செய்துவைத்தீர். உம்மை ஸ்துதி செய்ய ஆரம்பித்தால், குணியாயிருக்கும் உம்முடைய ஸ்வரூபத்தையும்,

குணங்களாகிய உம்முடைய விசேஷணங்களையும், பிரித்துவைத்துத்தானே பேச வேண்டியதா யிருக்கிறது.

ஆனால் நீரோ, ஒரே ரஸத்தால் வார்க்கப்பட்ட லிங்கமாய் இருக்கிறீர். அப்படிப்பட்ட உம்முடைய விஷயத்தில், குணியையும் குணத்தையும் வகுத்துவைத்தல், எப்படி முடியும்? ஓர் உத்தமமான முத்தை, இரண்டாய் உடைத்து, பின்பு அவ்விரண்டு பாகங்களையும் ஒட்டுவித்தல் நல்லதா? அல்லது அதை உடைக்காமலேயே வைத்துக்கொள்வது நல்லதா? உம்மை, என்னுடைய தாயும் தகப்பனுமானவர், என்று நான் சொல்வேனானால், அது உமக்குப் புகழாகவில்லை; ஏனெனில் நீர் குழந்தையுள்ளவர் என்று உமக்கு ஓர் உபாதியை ஏற்படுத்திவைத்ததாய் அது முடிகிறது. நான் உமக்கு வேலைக்காரனாய் அமைந்து நின்றால், அதினால் உமக்கேற்படும் ப்ரபுத்வம், உமக்கோர் பெருமை யாகாமல், வேலைக்காரனை யுடைத்தாயிருக்கை என்னும் உபாதியை, உமது ஸ்வரூபத்தில் சேர்த்துவைத்து, உம்முடைய பரிசுத்தமான ஸ்வரூபத்துக்கு ஓர் களங்கத்தை எற்படுத்திவைத்த தாகிறது. வேண்டிய தனைத்தையும் கொடுக்கும் ப்ரபுவே, இப்படிச் சொல்வதை யெல்லாம் விட்டு, உம்மை ஸகலத்துக்கும் ஆத்மா வென்று தொகுத்துச் சொல்லிவிடலாம் என்றாலோ, எனக்குள் வ்யாபித்திருக்கும் உம்மை வெளியில் இட்டுவைத்ததாகிறது. அகையால் உண்மையைச் சொல்லப்போனால், உம்மை ஸ்தோத்ரம் செய்வதென்பது, இந்த ஜகத்தில் அஸாத்யமான விஷயமாய் இருக்கிறது; மௌனத்தைக் காட்டிலும் வேறு; எந்த அலங்காரத்தையும், உம்மிடத்தில் ஏற்றி வைக்க முடியாமல் இருக்கிறது. உம்மை ஸ்தோத்ரம் செய்வதென்பது மௌனமாய் இருப்பதுவே, உம்மைப் பூஜிப்பது ஒன்றும் செய்யாமல் இருப்பதுவே, உம்மை தர்சித்துக்கொண்டு உம்முன் நிற்பதென்பது, வேறொன்றும் ஆகாமல், தன் ஸ்வரூபத்தோடிருக்கையே, ஆகிறது.

ஆகவே உமது விஷயத்தில் நான் செய்யும் ஸ்தோத்ர மனைத்தும், மயக்கத்துக்கு வசப்பட்டுப்போனவ னுளறுவது போல் இருப்பதால், நீர் அதைப் பொறுத்தருள வேண்டும். இனி முக்தி யென்பதையே முத்தாய் வைத்துக்கட்டியிருக்கும் கீதார்த்தம் என்னும் நத்தைக்கொண்டு, என் வாக் என்னும் ஸ்த்ரீயை, நீர் அலங்கரித்து வைக்கவேண்டும். அப்படிச் செய்தால், அவளுக்கு இந்த ஸாதுக்கள் ஸபையில் கௌரவம் ஏற்படும். அப்போது ஸ்ரீ நிவ்ருத்தி நாதர், "இப்படி அடிக்கடி நீ என்னை ப்ரார்த்தித்துக் கொள்வது வேண்டாம், இரும்பை

அடிக்கடி ஸ்பர்சவேதியின் மேல்வைத்துத் தேய்க்கவேண்டுமா, என்ன?" என்று சொன்னார். அதைக் கேட்டு, "இந்த ப்ரஸாதத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவே, நான் தயங்கிக்கொண்டிருந்தேன், இனி நான் சொல்லப்போகும் கீதார்த்தம் என்னும் க்ரந்தத்துக்கு நீர் செவிகொடுக்கவேண்டும்", என்று நான் பதிற் சொன்னேன்.

இவ்வத்யாயத்துக்கும் இந்த கீதாசாஸ்த்ரத்துக்கும் உள்ள ஸம்பந்தம்:

ரத்நங்களால் அமைக்கப்பட்டிருக்கும் கோவில் ஆகிய இந்த கீதைக்கு, இவ்வத்யாயம் அர்த்தசிந்தாமணி யென்னும் உத்தமரத்நத்தால் அமைத்துவைக்கப்பட்ட ஓர் கலசமாய், அந்த கீதாதேவியின் தர்சனத்தை செய்துதரும் மார்க்கதர்சக (வழிகாட்டிக் கொடுக்கிறவன்) னாகிறது, என்று சொல்லத்தக்கதா யிருக்கிறது. தூரத்திலிருந்து, ஓர் தெய்வத்தினுடைய ஆலயத்தின் கலசதர்சநம் ஆனமாத்ரத்தில், அந்த தேவதையை தர்சனம் செய்துகொண்டதின் பலன் கிடைத்துப்போகிற தென்று, ஓர் லௌகிக ந்யாயம் உண்டல்லவா? அப்படியே, இங்கேயும் இந்த ஓர் அத்யாயத்தைப் பரிசீலநம் பண்ணினதினாலேயே, கீதாசாஸ்த்ரம் முழுமையும் விசாரித்துப் பார்த்ததாய்விடுகிறது. இந்தக் காரணத்தைக் கொண்டே, இந்த அத்யாயத்தை வ்யாஸர், கீதை என்னும் ப்ராஸாதத்துக்கு (மாளிகைக்கு) கலசமாய் ஏற்படுத்திவைத்தார் என்று நான் சொல்கிறேன். ஓர் கோவிலுக்குச் கலசம் வைத்துவிட்டபின், அதிற் செய்யவேண்டிய வேலை ஒன்றும் மிகுந்திராததுபோல், இவ்வத்யாயத்தோடு கீதாசாஸ்த்ரம் முடிவு பெற்றுப்போகிறது.

வேதம் என்னும் ரத்நபர்வதத்தின்மேல், உபநிஷ தர்த்தங்கள் என்னும் கற்கள் நிறைந்துள்ள பூமியில், தான் கட்டப்போகிற கட்டடத்துக்கு, வ்யாஸர் நூல் தட்டி, அஸ்திபாரம் தோண்டியெடுத்தார். அப்போது கிடைத்த தர்மார்த்த காமங்கள் என்ற எண்ணிறந்த சிறுகற்களைக்கொண்டு, பாரதம் என்ற சுற்றுச்சுவரை அவர் அமைத்துவைத்தார். பின்பு ஆத்ம ஞாநங்கள் என்னும் பெருங்கற்களை, சுத்தமாய் வேலைசெய்து, நடுவில் ஒன்றுசேர்த்து வைத்துக்கொண்டு, வ்யாஸபகவான் நிவ்ருத்திதர்மசாஸ்த்ரத்தின் போக்கை அநுஸரித்து, அங்கங்கள் (விபாகங்கள்) ஏற்படுத்தி, அவற்றிற்குள் ஸர்வசாஸ்த்ரங்களின் அர்த்தங்களைத் திணித்துவைத்து, மிக்கச்சாதுர்யமாய் க்ருஷ்ணார்ஜுன ஸம்வாதம் என்று பெயரிட்டு,

மோக்ஷத்துக்குக் கொண்டு போய்விடும் வழி என்னும் கட்டடத்துக்கு ஓர் உருவ மேற்படுத்தி வைத்தார். பின்பு அந்தக் கட்டடம் கொஞ்சம் கொஞ்சமாய், பதினைந்தாவது அத்யாயம் பர்யந்தமாக உயர்ந்து கொண்டு வந்து, பதினைந்து அடுக்குகள் ஏற்பட்டு, அக்கட்டடம் முடிவுபெற்றது. பின்பு பதினாறாவது அத்யாயம் கலசத்தின் கீழ் இருக்கும் கழுத்தாய் அமைந்து, பதினேழாவது அத்யாயம் அதற்குமேல் கலசத்துக்குப் பீடமாய் அமைந்தது. அதற்குமேல் பதினெட்டாவது அத்யாயம் ந்யாயமாகவே கலசமாய் ஏற்பட்டு, அதற்கும் மேல், வ்யாஸரால் இயற்றப்பட்ட பகவத்கீதை என்ற கொடி நாட்டப்பட்டிருக்கிறது. ஆகையால் கீழ் அத்யாயங்கள் மேன்மேலும் உயர்ந்து கொண்டுபோகும் பூமிகையாகவே ஏற்பட்டன வென்றும், அவை அனைத்தும், இவ்வத்யாயத்தின் சேர்க்கையால் முடிவு பெறுகின்றன வென்றும் இவ்வத்யாயம் காண்பித்துவைக்கிறது. ஓர் கட்டடம் முடிவுபெற்றபின் அதில் ஓர் குறைவு மில்லை யென்று பஹிரங்கமாகத் தெரிவிப்பதற்காக, அதன்மேல் கலசத்தைக் கட்டிவைப்பது போல், இந்தப் பதினெட்டாவது அத்யாயம், கீதை முழுவதையும், ஆதியோடந்தமாய் விவரித்துச் சொல்கிறது.

இந்த கீதையின் ப்ரயோஜநம்:

இப்படி வ்யாஸபகவான் வெகு ஸாமர்த்யமாய் கீதை என்ற இதைச் செய்துவைத்து, ப்ராணிகளை அநேகவிதமாய்க் கரையேற்றிவைத்தார். ஒருவன் ஓராலயத்தின் வெளிப்புறமாய் ப்ரதக்ஷிணம் சுற்றிவருவதுபோல், இந்த கீதாசாஸ்த்ரத்தைப் பாராயணம் செய்கிறான். ஒருவன் அந்த ஆலயத்தின் வெளிமதிலின் நிழலில் உட்கார்ந்து இளைப்பாறுதல் போல், கீதாசாஸ்த்ரத்தை மற்றோருவன் படிக்கக் கேட்டுக்கொண்டிருக்கிறான். மற்றோருவன் தாம்பூலம் தக்ஷிணை முதலியவற்றை எடுத்துக்கொண்டு கர்ப்பக்ருஹத்தில் நுழைவதுபோல், தன்னுடைய பூர்ணலக்ஷ்யத்தையும் இதின்மேல் வைத்து, இதின் அர்த்தத்தை விசாரிக்கத் தலைப்பட்டு ஆத்ம ரூபியான ச்ரீஹரியை தர்சித்துக்கொள்கிறான். ஆனால் இவர்கள் அனைவரும் மோக்ஷரூபியாகிய இந்த தேவாலயத்தில், ஸமமான யோக்யதை படைத்தவர்களாகவே பாவிக்கப் படுகிறார்கள். ஓர் தனிகனுடைய பந்தியில் உட்கார்ந்து போஜநம் பண்ணுகிறவர்கள், பந்தியின் முதலில் உட்கார்ந்திருந்தாலும் கடைசியில் உட்கார்ந்திருந்தாலும், அனைவரும் ஒரே விதமான அந்நத்தையே போஜநம் செய்வதுபோலும், இந்த கீதையைக்

கேட்கிறவர்களும், படிக்கிறவர்களும், இதின் அர்த்தத்தை விசாரம் பண்ணுகிறவர்களும், ஒரே விதமான லாபத்தையே அடைகிறார்கள். இவ்விதப்பட்ட கீதை பகவான் குடியிருக்கும் ஓர் கோவிலாய், இந்தப் பதினெட்டாவது அத்யாயம் இந்தக் கோவிலின் கலசம் ஆகிறது. இதின் ஸ்வரூப வைலக்ஷண்யத்தை (தனித்ததான பெருமையே) அறிந்தே, நான் இதை இப்படி வர்ணித்தேன்.

இவ்வத்யாயம் பதினெட்டாவதாய் ஏற்பட்டதற்குக் காரணம் :

பதினேழாவது அத்யாயத்தின் பின்னால், இந்த அத்யாயம் ஏன் ஏற்பட்டது என்ற இந்த ஸம்பந்தத்தை, இனி விளங்கச் சொல்வேன். கங்கையும் யமுனையும் ஒன்றுகூடும்போது, அவற்றின் ப்ரவாஹங்களைப் பார்க்குங்கால், அவை தனித்தனியாய் காணப்பட்டபோதிலும், ஜலம் என்ற த்ருஷ்டியோடு பார்க்கும்போது ஒன்றாகத் தோன்றுவதுபோலும், இருவகைப்பட்ட உருவங்கள் படைத்த அர்த்தநாரீநடேச்வரமூர்த்தியின் இருபக்கங்களும் ஒரே சரீரமாய், அமைந்திருப்பதுபோலும், சுக்லபக்ஷம் வ்ருத்தி யடையும்போது, சந்த்ரன் தினேதினே கலாவ்ருத்தி யடைந்து, புதுப்புது காந்தியுள்ள வனானாலும், அவன் ஒரே சந்த்ரனாய் இருப்பது போலும், வேறு வேறு நாலு பாதங்களைக்கொண்டு ச்லோகங்கள் அமைந்து, ச்லோகங்களைக்கொண்டு அத்யாயங்களும் அமைந்து, இப்படி வேறுவேறு அத்யாயங்கள் ஏற்பட்டிருந்தபோதிலும், அநேகரத்நங்கள் கோக்கப்பட்டிருக்கும் ஓர் ஹாரத்தில் நூல் ஒன்றேபோலும், எல்லா அத்யாயங்களாலும் விளக்கம் செய்யப்படும் வஸ்து ஒன்றே. முத்து மாலையில் பல முத்துக்கள் கோக்கப்பட்டிருந்தாலும், அவற்றின் சோபை ஒன்றேபோலும், ஓர் பூமாலையிற் பூக்கள் சேரச்சேர, பூக்களின் ஸங்க்யை அதிகரித்தபோதிலும், வாஸனையின் கணக்கைப் பார்க்கும்போது, இரண்டாவ தென்று விரல் மடக்க இடம் இல்லாததுபோலும், இந்த கீதையில் ச்லோகங்களும் அத்யாயங்களும், பலவாயிருந்த போதிலும், அவையனைத்தாலும் விளக்கம் செய்யப்படும் பொருள் ஒன்றே என்று, அறியவேண்டும். எழுநூறு ச்லோகங்களாயும், பதினெட்டு அத்யாயங்களாயும், அமைந்திருக்கும் இந்த கீதை முழுவதாலும், பகவான் தெரிவித்த விஷயம் ஒன்றே யல்லாமல், பற்பலப்பட்டவை அல்ல. நானும் அவ்வழியையே அநுஸரித்துக்கொண்டு, இதுவரைக்கும் க்ரந்தத்தைச் செய்துவைத்தேன்.

இப்போது சொல்ல வேண்டிய விஷயத்தையும், அவ்வழியைப் பிடித்துக்கொண்டே சொல்வேன், கேளுங்கள். பதினேழாவது அத்யாயம் முடியும் ஸமயத்தில், அதின் கடைசியான ச்லோகத்தால், "ஹே அர்ஜுநா ஓம் தத் ஸத் என்னும் ப்ரஹ்மநாமத்தில் ஆஸ்திக்யபுத்தி இல்லாமல் எந்தக் கர்மம் செய்யப்பட்டாலும், அது நிலைபெற்றிராததாய்ப் போகிறது. என்று பகவான் சொல்லிமுடித்தார். பகவானுடைய இந்த வார்த்தையைக் கேட்டு, அர்ஜுனன் பின்வருமாறு ஆலோசனை செய்தான். கர்மயோகத்தில் நிலை கொண்டவர்கள்மேல் பகவான் ஓர்தோஷத்தை ஏற்படுத்தி வைத்ததாகவே, எனக்குத் தோன்றுகிறது. அஞ்ஞாநத்துக்கு வசப்பட்டவர்களாய், எங்கும் நிறைந்து, எல்லா ஜகத்வ்யாபாரங்களையும் நடத்திக்கொண்டிருக்கும், ஈச்வரனையே பாராதிருக்கும் அல்பர்களுக்கு, ஈச்வரநாமத்தின் ப்ரபாவம் எப்படித் தெரியப்போகிறது? ரஜஸ் தமஸ் இவ்விரண்டும் அற்றுப்போகாதிருக்கும் ஒருவனிடத்தில் உள்ள அல்பமான ச்ரத்தை, ப்ரஹ்ம நாமத்தை ப்ரயோகிப்பதற்குப் போதுமானதாய் எப்படி ஆகும்? கூர்மைபொருந்திய ஆயுதத்தை தழுவிக்கொள்ளலைக்காட்டிலும், கயிற்றின் மேல் ஓடுவதைக்காட்டிலும், ஸர்ப்பத்தோடு விளையாடுதலைக் காட்டிலும், கர்மாசரணம் மிக்க அபாயகரமாய், ஜந்மாந்தரத்துக்குக் காரண மாகும். அகவே, கர்மாசரணம் இவ்வளவு தோஷயுக்தமாய் இருக்கிறது. மிக்க அருமையாய், கர்மம் விதிவத்தாக அநுஷ்டிக்கப்பட்டு, ஆத்மஞாநத்தை ப்ராப்திசெய்துகொடுக்கிறது; பெரும்பாலும் அது நரகவாஸத்துக்கே காரணம் ஆகிறது. கர்மத்தால் பெரும்பாலும் இவ்வளவு கேடு விளைவதாயிருப்பதால், கர்மத்தில் நிலைகொண்டவர்களுக்கு மோக்ஷம் எப்படிக் கிடைக்கும்?

ஆகையால் கர்மத்துக்கு வசப்பட்டிருக்கையை முற்றிலும் துறந்து, கர்மத்தின் ஸர்வாங்கங்களையும் கைவிட்டு, பூர்ணமாய்க் கர்மஸந்யாஸத்தை அவலம்பிப்பதே செய்யத்தக்கது; கர்ம மென்னும் புலியின் பயம் முற்றிலும் அற்றுப்போனவையாயும், ஆத்மஞாநத்தை ஸ்வாதீனம் செய்துகொடுக்கின்றவையாயும், ஞாநத்துக்கு ஆவாஹந மந்த்ரங்களாயும், ஞானம் விளையும் பூமிகளாயும், ஞாநத்தைக் கட்டி இழுத்துக்கொண்டு வந்து வைக்கும் கயிறுகளாயும், இருக்கும் ஸந்யாஸத்தையும் த்யாகத்தையும் அநுஷ்டித்து உலகத்தார் ஸம்ஸாரத்தினின்று விடுபட்டுப்போவார்கள் அல்லவா? ஆகையால் இவை இரண்டும் ஸந்தேஹமற விளங்கும்படி, செய்து தரவேண்டுமென்று பகவானைக்

கேட்டுக் கொள்ளவேண்டும். இப்படித் தீர்மானித்துக்கொண்டு, த்யாகம் இன்ன தென்றும் ஸந்யாஸம் இன்னதென்றும் தெரிவித்துவைக்கவேண்டும் என்று அர்ஜுநன் பகவானைப்பார்த்து வினவினான்.

அதற்கு பதில் சொல்ல ஆரம்பித்து, ஸ்ரீக்ருஷ்ணன் எந்த விஷயங்களை உரைத்தாரோ, அவையே இப்பதினெட்டாம் அத்யாயமா யமைந்திருக்கின்றன. இப்படியே அத்யாயங்கள் அனைத்தும், ஒன்றை ஒன்று உண்டுபண்ணிக்கொடுக்கின்றன. இது நிற்கட்டும். இப்போது, அர்ஜுநன் கேட்டதால் ஏற்பட்ட ஸம்வாதத்தை வர்ணிப்பேன், கவனித்துக்கேட்க வேண்டும். பாண்டுவின் அந்த குமாரன், பகவானுடைய வார்தைகள் முடிவுபெற்றுப்போவதைத் தெரிந்துகொண்டு, மிக்கச் சிந்தை கொண்டான். தத்வ விசாரத்தில் மிக்கக் கொண்டாடத்தக்க உத்தமமான விஷயங்கள் எவையோ, அவை அனைத்தும் நிச்சயிக்கப்பட்டு முடிவாகச் சொல்லப்பட்டுத் தீர்ந்தவையாயின, என்பதில் ஓர் ஸந்தேஹமும் இல்லை. ஆனால் பகவான் பேசாமல் உட்கார்ந்திருப்பது அவனுக்கு பொறுத்தக்கொள்ள முடியாததாயிற்று. கன்று பால்குடித்து, அதின் வயிறு நிறைந்துபோனாலும், மாடு பிரிந்து தூரமாகப் போவதற்கு அது உடன்படாது. அநந்ய ப்ரீதியின் வழி இப்படியே இருக்கிறது. பரஸ்பரப்ரீதி உள்ளவர்கள் தாங்கள் பேசவேண்டிய விஷயம் ஒன்று மில்லாதுபோனாலும், ஏதோ ஒன்றைப் பேசிக்கொண்டிருந்து, ஒருவரை ஒருவர் நன்றாய்ப் பார்த்தானபிறகுகூட, ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டே இருந்து, ப்ரேமையை அதிகரிக்கச் செய்துகொள்ள வேண்டும் என்று ஆசைப்படுவார்கள். ப்ரேமையின் ஸ்வபாவம் இப்படிப் பட்டதே. அன்றியும் பார்த்தனோ ப்ரேமையே ஓர் உருவெடுத்துவந்த வனென்று சொல்லத்தக்கவன். ஆகவே பகவான் வாய்பேசாதிருப்பதை, அவன் ஸஹித்துக்கொள்ள முடியாதவனாய்க் கஷ்டமடைந்து, ஸம்பாஷணை செய்யவேண்டு மென்று ஆசைப்பட்டு, கண்ணாடியில் ஸம்பூர்ணமாய்ப் பார்த்துத் தீர்ந்துபோன தன் ரூபத்தைத் திரும்பவும் திரும்பவும் பார்த்துக்கொள்வதைப்போலும், எதைப்பற்றி விசாரிப்பது அநாவச்யமோ, அதையே விசாரித்துக் கேட்கத் துணிகிறான்.

அப்படி ஏற்பட்ட ஸம்வாதம் முடிவு பெற்றபின்கூட, ஸம்பாஷண ஸுகத்தையே புசித்துவந்த அர்ஜுநன், அப்படி ஸுகம் முடிவுபெற்று ஓய்ந்து போவதற்கு, எப்படி ஒப்புக்கொள்வான்? ஆகவே த்யாகஸந்யாஸங்களின்

லக்ஷணத்தை விசாரித்தல் என்பதை ஓர் காரணமாகக் கொண்டு, கீதை என்னும் வஸ்த்ரத்தின் மடிப்புக்களை திரும்பவும் விரித்து வைத்தான். இந்த அத்யாயத்தைப் பதினெட்டாவது அத்யாயம் என்று சொல்லக்கூடாது. இந்த ஓர் அத்யாயமே முழுகீதையுமாய் இருக்கிறது. கன்றே தாய்ப்பாலைச் சுரக்கச் செய்வதற்குத் தகுந்த வேளை யென்றென்றுண்டா? அப்படியே முடிவுபெறும் ஸமயத்தில் கீதையைத் திரும்பவும் சொல்லவேண்டும் என்று விரும்பும் உண்மையான தாஸனுடைய ஆசையை, பகவான் ஏன்பூர்த்தி செய்துவைக்கமாட்டார்? இவ்வளவு பீடிகை போதுமானது. தேவேசனாகிய நீர் நான் செய்யும் விண்ணப்பத்தைக் கேட்டருளவேண்டும், என்று அர்ஜுநன் சொன்னான்.

अर्जुन उवाच ।
संन्यासस्य महाबाहो तत्त्वमिच्छामि वेदितुम् ।
त्यागस्य च हृषीकेश पृथक्केशिनिषूदन ।।१।।

அர்ஜுன உவாச -

ஸந்ந்யாஸஸ்ய மஹாபாஹோ தத்த்வ மிச்சாமி வேதிதும் ।
த்யாகஸ்ய ச ஹ்ருஷீகேஶ ப்ருதக்கேஶி நிஷூ தன ॥ 1

அர்ஜுநனுடைய ப்ரச்நம் :

ஐயா, ஸங்காதம் (கூட்டம்) ஸங்கம் என்ற இரண்டு சப்தங்களும் ஒரே அர்த்தத்தைத் தெரிவிப்பது போலும், ஸந்யாஸம் த்யாகம் என்ற இரண்டு சப்தங்களும் ஒரே அர்த்தத்தைத் தெரிவிக்கின்றவையே ஆனாலும், இவ்விஷயத்தில் கேட்டறிந்து கொள்ளவேண்டுமென்று, இந்த ஓர் ஆசை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. ஒரு வேளை இவற்றிற்கு அர்த்தபேதம் இருக்கும் பக்ஷத்தில், அதைத் தேவரீர் விளங்கச் செய்ய வேண்டும்.

மேல்ச்லோகத்துக் கவதாரிகை :

அப்போது ஸ்ரீ முகுந்தன் பின்வருமாறு சொன்னார். இவ்விரு சப்தங்களும் அர்த்தத்தால் வேறுபட்டவையே. ஆனாலும், நீ இவ்விரண்டும் ஒரே அர்த்தமுள்ளவையென்று எண்ணினாயே, அதையும் நான் ஸரியே என்று மதிக்கிறேன். இவ்விருவகைப்பட்ட சப்தத்தாலும் த்யாகமே

சொல்லப்படுகிறது, என்பது உண்மையே ஆனால் இவற்றிற்குள் இந்த ஓர் வித்யாஸம் மாத்ரம் உண்டு. கர்மத்தின் காயிகமானஸிக வ்யாபார ரூபமான ஸ்வரூபம் முழுவதையும் விட்டொழிப்பது ஸந்யாஸமாகும்; கர்மத்தை அநுஷ்டித்து அதில் பலேச்சையை மாத்ரம் விட்டொழிப்பது த்யாக மாகும். எந்தக்கர்மத்தில் பலேச்சையை மாத்ரம் ஒழித்துக்கொள்ளவேண்டியது, எந்தக் கர்மத்தின் முழுஸ்வரூபத்தையுமே விட்டொழிக்க வேண்டிய தென்பதை, நான் விளங்கச் செய்வேன், கவனித்துக்கேள். காடுகளிலும் மலைப்ரதேசங்களிலும் செடிகள் தமக்குத் தாமே எண்ணிறந்தபடி உண்டாய்ப் பயிரானாலும், தான்யப்பயிர்களும் தோட்டத்திற் பயிராகும் செடிகளும், தமக்குத்தாமே உண்டானதில்லை. எங்கு பார்த்தாலும் புல் தானாகவே உண்டாய்ப் பயிரானாலும், நெற்பயிர் செய்நேர்த்தி செய்யாமல் உண்டாய்ப் பயிராகாததுபோலும், தேஹத்தின் அவயவங்கள் தாமாகவே உண்டாயிருந்தாலும் நகைகளைச் செய்து வைக்கவேண்டியது போலும், நதிகள் தாமாகவே ஏற்பட்டபோதிலும், கிணறுகள் தோண்டி வைக்கப்படவேண்டி யிருப்பதுபோலும், நித்யநைமித்திக கர்மங்கள் புருஷனுக்கு ஓர் ஆசை யேற்படாமலே செய்யும்படி நேர்கின்றன; ஆனால் புருஷனுடைய ஆசையின்றி காம்ய கர்மங்கள் ஏற்படுவதில்லை.

श्रीभगवानुवाच ।
काम्यानां कर्मणां न्यासं संन्यासं कवयो विदुः ।
सर्वकर्मफलत्यागं प्राहुस्त्यागं विचक्षणाः ।।२।।

ஸ்ரீ பகவானுவாச -

காம்யானாம் கர்மணாம் ந்யாஸம் ஸந்ந்யாஸம் கவயோ விது:।
ஸர்வகர்ம பலத்யாகம் ப்ராஹுஸ்த்யாகம் விசக்ஷணா: ॥ 2

காம்ய கர்மங்கள்:

காமனையையே (பலனில் ஆசையையே) ஹேதுவாய்க்கொண்டு விதிவத்தாய்ச் செய்துமுடிக்கப்படும் அச்வமேதயர்கங்கள், வாம கூபாராமாதி நிர்மாணங்கள், அக்ரஹார தாநங்கள், முதலிய இஷ்டாபூர்த்தங்கள் (இவைகள் அத்யாயம் 13ல் ச்லோகம் 8ல் சொல்லப்பட்டுள்ளன) ஸம்ஸாரத்தில் கட்டிவைத்து தங்கள் பலன்களை அவச்யமாய்

அநுபவிக்கும்படி செய்துவைக்கும் காம்ய கர்மங்களாகும். தேஹம் எடுத்தவர்கள் ஜந்மமரணங்களை வேண்டாம் என்று ஒதுக்கிவைக்க முடியாதது போலும், தலையெழுத்தை எது செய்தும் மாற்றிவிட முடியாததுபோலும், தேஹத்தின் இயற்கையான கருநிறத்தையோ வெண்மையையோ கழுவி மாற்றிவிட முடியாதது போலும், தான் பட்ட கடன் திருப்பிச் செலுத்தப்பட்டாலல்லது தீர்ந்துபோகாதது போலும், ஒருவன் செய்த காம்யகர்மங்கள், அவற்றின் பலனை அவன் புசித்தாலல்லது, விட்டு விலகிப்போவதில்லை என்று சொல்லிக்கொண்டு, அவனைக் கட்டிக் கொண்டு பழிகிடக்கும். பலோத்தேச மில்லாமலே, அகஸ்மாத்தாய் ஓர் காம்யகர்மம் செய்து முடிக்கப்படுமே யாகில், விளையாட்டாகச் செய்யப்படும் யுத்தத்தில் ப்ரயோகிக்கப்பட்ட பாணங்கள் மர்மஸ்தானங்களில் தாக்கினால் அநர்த்தம் விளையாமற் போகாதது போலும், அந்தக் காம்யகர்மம் பலன் கொடுக்காமற்போகாது. சர்க்கரை என்றறியாமல் அதை நாக்கிற் போட்டுக்கொண்டால், தித்திப்பு அநுபவிக்கப்படாமற் போகாததுபோலும், நெருப்பைச்சாம்பல் என்று நினைத்து, அதின்மேல் காலை வைத்தால், அது சுட்டே தீருவதுபோலும், காம்யகர்மத்துக்கு பலன் கொடுத்தே தீர்வது என்ற, ஓர் இயற்கை யிருப்பதால், அதை முமுக்ஷுவானவன் (மோக்ஷத்தை அடைய விரும்பினவன்) விளையாட்டாகக்கூட ஆதரிக்கக்கூடாது. ஆகையால் அகஸ்மாத்தாய் வயிற்றிற்குள் சென்றுபோன விஷத்தை, வாந்தி எடுத்தாவது ஒழித்துக்கொள்ள வேண்டியது போலும், இப்படிப்பட்ட காம்யகர்மத்தை முற்றிலும் ஒழித்து வைக்கவேண்டும். இப்படிப்பட்ட காம்யகர்மத்தை முற்றிலும் ஒழித்து கொள்வதே, ஸந்யாஸம் என்று சொல்லப்படும். ஹ்ருதயத்திலிருந்து ஸர்வத்தையும் பார்த்துக்கொண்டிருக்கும், ஸ்ரீக்ருஷ்ணன் இவ்வாறு சொன்னார். இந்த காம்யகர்மத்தை விடுவதென்பது மனதைப் பற்றியிருக்கும் காமனையையே வேரோடு பிடுங்கி எறிவதாகும். அப்படி ஒருவன் செய்துவிட்டால், பொருளை எறிந்துவிட்டவனுக்கு, வழியிற் பய மற்றுப்போவது போலும், அவனுக்கு ஸம்ஸாரபயம் முற்றிலும் அற்றுப்போகும்.

நைமித்திக கர்மம் :

சந்திர சூர்ய க்ரஹணங்கள் ஏற்பட்டதினாலோ, பித்ருக்கள் திதி நேர்ந்ததினாலோ, செய்யப்படும் ச்ராத்தம் தர்ப்பணம், தானம், முதலிய கர்மங்களும், அல்லது அதிதியானவன் வீடேறிவந்ததினால், அல்லது இப்படிப்பட்ட மற்ற

காரணங்களால் செய்யப்பட வேண்டியவையாய் ஏற்படும் கர்மங்களும், நைமித்தக கர்மங்களாகும். வர்ஷாகாலத்தி லாகாசம், மேகத்தால் மூடப்பட்டு போவதிலும், வஸந்துருதுவின் சேர்க்கையால் வநங்கள் இரட்டித்த சோபையை யடைவதிலும், யௌவநபர்வத்தில் தேஹம் அழகுளால் அலங்கரிக்கப்படுவதிலும், சந்த்ரகாந்தக் கல்லின்மேற் சந்திரிகை படுவதால் அதினின்று ஜலம் பெருகுவதிலும், ஸூர்யகிரணத்தால் தாமரைப்பூ விகஸிப்பதிலும், ஏற்கனவே உள்ளே அடங்கியிருந்ததே விஸ்தாரத்தை அடைகிறதே தவிர, புதிதாய் ஓர் வஸ்துவும் உண்டாவதில்லை. அதுபோலும், ஜீவனுடைய ஸ்வரூபத்தில் இயற்கையாய் ஏற்பட்டிருந்த, நித்தியமான கடமையே, முன்சொல்லப்பட்ட நிமித்தங்கள் ஏற்படும் போது, நைமித்திக கர்மமாய் விரிவடைகிறது.

நித்ய கர்மம் :

கண்ணிற் பார்வையும், காலில் நடையும் தீபத்தில் ப்ரகாசமும், சந்தனத்தில் வாஸனையும், புதிதாய் சேர்த்து வைக்கப்படாமலே, ஸ்வபாவஸித்தமாய் ஏற்பட்டிருப்பது போலும், காலை மாலை உச்சிப்போதுகளில் அநுதினமும் செய்ய வேண்டியவையான அநுஷ்டானங்கள், ஒவ்வொருவனுடைய ஸ்வரூபத்திலும், அதிகாரநுஸாரமாய் இயற்கையாகவே அமைந்திருக்கின்றன. இவற்றைபோலவே ஜீவனுடைய ஸ்வரூபத்தில் ஸ்வபாவஸித்தமா யமைந்திருக்கும் கர்மங்கள் அனைத்தும் நித்யகர்மங்களாகும்.

நித்யநைமித்திக கர்மங்களின் பலத்யாகம் :

நித்யநைமித்திக கர்மங்கள், அவச்யம் அநுஷ்டித்துத் தீரவேண்டியவை யாகையால், இவற்றிற்கு பலனில்லை என்று சிலர் சொல்வார்கள். ஆனால் சாப்பிடுவதால் த்ருப்தி யுண்டாய், பசி தீருவதுபோலும், நித்ய நைமித்திக கர்மங்கள் ஸர்வாங்கத்திலும் பலன் உள்ளவையாகவே யிருக்கின்றன. கட்டைமாற்றுப் பொன் நெருப்பில் புடம் போடப்பட்டு, அத்துடன் சேர்ந்திருக்கும் மலம் எரிந்து போனபின், அதின் மாற்று உயர்ந்து போவதுபோலும், நித்ய நைமித்திக கர்மானுஷ்டனத்தால், ப்ரத்யவாயம் (நித்ய கர்மநுஷ்டிக்கப்படாமல் தவறிப் போவதால் உண்டாகும் தோஷம்) தீர்ந்து, ஜீவனுடைய யோக்யதை அதிகரித்து, அத்துடன் கூட, ஸத்கதியும் அவனுக்குக் கிடைத்துப் போகிறது. இவ்வள வுத்தமமான பலன் நித்யநைமித்தி கர்மங்களுக்கு

ஏற்பட்டிருக்கிறது. ஆனால் மூல நக்ஷத்திரத்திற் பிறந்த பெண்குழந்தையை ஏறிந்துவிடவேண்டுவது போலும், நித்யநைமித்திக கர்மங்களின் பலன்மேல் ஆசை வைக்கக்கூடாது. வஸந்தருது ஏற்பட்ட உடன், செடிகள் அனைத்தும் செழித்துப் பலிக்கின்றன; மாமரங்களில் தளிர்கள் உண்டாகின்றன. ஆனால் இவற்றை உண்டாக்கிவைத்த அந்த ருது, இவற்றைக் கையாற்கூட தொடாமற் போய்விடுகிறது. அப்படியே கர்மவிதியை மீறாமல், நித்யநைமித்திக கர்மங்களைச் செய்து வைக்கவே வேண்டு மானாலும், அவற்றின் பலன் விஷயத்தில், வாந்தி எடுத்த வஸ்து விஷயத்திற் போல், வெறுப்புப பாராட்டியிருக்க வேண்டும். இப்படி நித்யநைமித்திக கர்மங்களின் பலன்மேல் ஆசைவைக்கா தொழிவதே, த்யாகம் என்று தெரிந்தவர்கள் சொல்வார்கள். ஆகவே ஸந்யாஸமும் த்யாகமும் உனக்குச் சொல்லப்பட்டுத் தீர்ந்தன.

ஸந்யாஸத்தால் காம்யகர்மத்தின் பாதகம் விலகிப்போய், நிஷித்தமானவை தாமாகவே நிஷேதிக்கப்பட்டுப்போய், நித்யநைமித்திக கர்மங்கள் எவையோ, அவையும், தலை அறுபட்டுப் போனபின், மற்ற அங்கங்களும் நாசம் அடைவதுபோல், பலத்யாகத்தால் நாசமடைந்து போகின்றன. பின்பு விளைவு முற்றிப்போனபின், பயிர்கள் தாமாகவே அழிந்துபோவது போல், கர்மங்க ளழிந்துபோய், ஆத்மஞாநம் தானாகவே ஏற்பட்டு விடுகிறது. இவ்விதம் த்யாகம் ஸந்யாஸம் என்ற இவ்விரண்டையும் புத்திசாலித்தனமாக அநுஷ்டித்து வருகிறவன், ஆத்மஞாநத்தை அடைவதற்கு வேண்டிய யோக்யதையை ஸம்பாதித்துக் கொள்கிறான். இந்த யுக்தியை அறியாதவனாய், ஒருவன் மனஸுக்குத் தோன்றின ப்ரகாரம் கர்மத்யாகம் செய்தால், அது உண்மையான த்யாகமாகாமல், அவன் மேலும் அதிகமாய்க் கர்மத்திற் சிக்கிப் போவதற்கே, அது காரணம் ஆகிறது. வ்யாதி இன்னதென்றும், அதற்குத் தகுந்த மருந்து இன்னதென்றும், நிர்ணயித்துக் கொள்ளாமல், கண்ட மருந்தைச் சாப்பிட்டுவைத்தால், அம்மருந்து விஷமாகவே முடியும் அல்லவா? பசியெடுத்தவன் அந்நந்தைப் புசிக்காதிருந்து விட்டால், இறந்துபோவா னல்லவா? ஆகையால் எந்த அம்சத்தை த்யஜிக்கக் கூடாதோ, அதை விட்டுவிடக் கூடாது; அன்றியும் எந்த அம்சத்தை விட்டுவிட வேண்டுமோ, அதில் ஆசைபாராட்டக் கூடாது. ஒருவன் த்யாகத்தின் இந்த மர்மத்தை தவறிப்போகவிட்டு, எவ்வளவு தான் கர்மத்யாகம் பண்ணினபோதிலும், அவன், வைராக்யத்திற் சிறந்தவர்களான ஸாதுக்கள் ஸர்வவிதமாயும்

ஒழித்து வைக்கும், நிஷித்த கர்மங்களிற் சிக்கிப்போனவன் ஆகிறான்.

त्याज्यं दोषवदित्येके कर्म प्राहुर्मनीषिणः ।
यज्ञदानतपःकर्म न त्याज्यमिति चापरे ।।३।।

த்யாஜ்யம் தோஷ வதித்யேகே கர்ம ப்ராஹுர் மனீஷிணः ।
யக்ஞ தான தபः கர்ம ந த்யாஜ்ய மிதி சாபரே ।। 3

கர்மத்யாக விஷயத்தில் ஏற்பட்ட விவாதம் :

சிலர் பலனில் ஆசையை விடமுடியாதவர்களாய், கர்மங்கள் முற்றிலும் பந்தகம் என்றே சொல்வார்கள். இப்படிச் சொல்வது, துணியுடுக்காதவன் துணியுடுத்துகிறவர்களை மானம் கெட்டவர்கள் என்று சொல்வதுபோலும், நாக்கை அடக்கிவைக்க முடியாதவன், அன்னத்தின் மேல்தோஷம் சொல்வதுபோலும், குஷ்டரோகி தன் தேஹத்தின் மேல் கோபித்துக் கொள்ளாமல், அதன் மேல் உட்காரும் ஈயின்மேல் கோபித்துக்கொள்வது போலும், இருக்கிறது. இவ்வாறு, பலனில் ஆசைவைத்த பிச்சைக்காரர்கள், கர்மமே கெட்டதென்றும், அதை முற்றிலும் விட்டொழிக்கவே வேண்டும் என்றும், சொல்வார்கள். மற்றும் சிலர் பின்வருமாறு சொல்வார்கள். யாகாதிகளை அவச்யம் செய்யவே வேண்டும்; இவற்றை தவிர மற்றொன்றும் மனஸை, சுத்தி செய்து தராது. எவர்கள் தங்களுக்கு சித்தசுத்தி சீக்கிரமாகக் கிடைத்துப் போகவேண்டுமென்று ஆசைப்படுகிறார்களோ, அவர்கள் கர்மாசரணத்திற்குச் சோம்பக் கூடாது. தங்கத்தைச் சுத்தம் செய்துகொள்ள விரும்பின ஒருவன் அதைப் புடம்போடுவதற்கும், கண்ணாடியைச் சுத்தம் செய்துகொள்ள விரும்பினவன் அதன்மேல் சுண்ணாம்பு முதலியவற்றைப் பூசித் தேய்ப்பதற்கும், வஸ்த்ரத்தின் அழுக்கைப்போக்கி அதைச் சுத்தம் செய்துகொள்ள விரும்பினவன் அதை வண்ணான் தொட்டியில் ஊரவைப்பதற்கும், அந்நத்தை விரும்பினவன் அதைச் சமைப்பதற்கும், பின் வாங்கக்கூடாது. அப்படியே சித்தசுத்தியை அடைய விரும்பினவன் கர்மங்கள் செய்வதில் ஏற்படும் ச்ரமத்தை உத்தேசித்து, அவற்றை அநுஷ்டிக்காமல் விடக்கூடாது. இப்படி எல்லாம் சொல்லிக்கொண்டு, இவர்கள் கர்மங்களைச் செய்தே தீரவேண்டும் என்பார்கள். இப்படி விவாதம் ஏற்பட்டு, ஜநங்கள் த்யாகத்தின் மர்மத்தை அறியாமற்போகிறார்கள். ஆகவே த்யாகத்தின் உண்மையான ஸ்வரூபம் உனக்கு விவாத மற்று விளங்கும்படி, சொல்வேன், கேள்.

निश्चयं शृणु मे तत्र त्यागे भरतसत्तम ।
त्यागो हि पुरुषव्याघ्र त्रिविधः सम्प्रकीर्तितः ।। ४ ।।

நிஶ்சயம் ஶ்ருணு மே தத்ர த்யாகே ப்ரத ஸத்தம ।
த்யாகோ ஹி புருஷவ்யாக்ர த்ரிவிதः ஸம் ப்ரகீர்தித: ।। 4

த்யாகத்தின் மூன்று ப்ரகாரங்கள் :

த்யாகம் என்பது மூவகைப்பட்டது. அப்படிப்பட்ட த்யாகத்தின் மூன்று வகைகளையும் பிரித்தெடுத்துக் காட்டுவேன். இம் மூவகைகளையும் கேட்டறிந்து கொள்வதின் ப்ரயோஜநம் இதொன்றே. எந்த த்யாகம் முற்றிலும் நிர்விவாதமான தென்று ஸர்வஞ்ஞனான என்னால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறதோ, அதை, ஸம்ஸாரத்தினின்று தப்பித்துக்கொண்டு மோக்ஷம் அடைய வேண்டுமென்று விரும்பினவன், தெரிந்துகொண்டு, அதைத் தன்னுடைய சக்தி அனைத்தையும் கொண்டு அநுஷ்டித்துத் தீரவேண்டும்.

यज्ञदानतपःकर्म न त्याज्यं कार्यमेव तत् ।
यज्ञो दानं तपश्चैव पावनानि मनीषिणाम् ।। ५ ।।

யக்ஞதான தப: கர்ம ந த்யாஜ்யம் கார்யமேவ தத் ।
யக்ஞோ தானம் தபஶ்சைவ பாவனானி மனீஷிணாம் ।। 5

அவச்யம் செய்து தீரவேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ள யஞ்ஞதானதபஸ்ஸுகளை அநுஷ்டிக்காமல் விடக்கூடாது:

யஞ்ஞதான தபோரூபமான எந்தக் கர்மங்கள் ஆவச்யகங்கள் (செய்தே தீரவேண்டியவைகள்) என்று விதிக்கப்பட்டிருக்கின்றனவோ, அவற்றை அநுஷ்டிக்காமல் விடக்கூடாது. வழிநடந்து போகவேண்டியவன் தன்னடிகளைப் பெயர்த்துப் பெயர்த்து வைப்பதை விடக்கூடாதது போலும், கெட்டுப்போன வஸ்து கைக்கு அகப்படும் வரைக்கும், அதைத் தேடுவதைக் கைவிடக்கூடாதது போலும், வயிறு நிறையாதவரைக்கும் இலையை விட்டு எழுந்திருக்கக் கூடாததுபோலும், கரைவந்து சேராதவரைக்கும் படகைக் கைவிடக்கூடாததுபோலும், பழம் பழுக்காதவரைக்கும் வாழைமரத்தைக் காப்பாற்றுவதைக் கை விடக்கூடாதது போலும், மறைத்துவைத்தது கைக்குக் கிடைக்காதவரைக்கும்

தீபத்தைக் கைவிடக்கூடாததுபோலும், ஆத்ம ஸ்வரூப விஷயத்தில் உத்தமமான ஞானம் நிச்சயமாய் ஏற்படாத வரைக்கும், யாகாதி நித்யநைமித்திக கர்மங்கள் விஷயத்தில், உதாஸீன புத்தியைப் பாராட்டக் கூடாது. அவனவன் அதிகாரத்துக்குத் தக்கபடி, அவனவன் அவச்யம் செய்யவேண்டியவையான யஜ்ஞதான தபஸ்ஸுகளை, மேன்மேலும் அதிகரிக்கும் ஊக்கத்துடன், அவனவன் அநுஷ்டித்தே தீரவேண்டும். நடையை வேகப்படுத்துவது, நடை தீர்ந்து, உட்கார்ந்து கொள்வதற்கே காரண மாதல் போலும், கர்மத்தில் ச்ரத்தாதிக்யம் (ஊக்கம் அதிகப்படுவது) நைஷ்கர்மயத்துக்கே காரண மாகிறது. ஒருவன் எவ்வளவுக் கெவ்வளவு ஔஷதம் ஸேவிப்பதில் ஊக்கம் பாராட்டுவானோ, அவ்வளவுக்கவ்வளவு வேகமாய் அவன் ரோகநிவ்ருத்தியை அடைவான்.

அப்படியே கர்மங்களை ஒருவன் எவ்வளவுக் கெவ்வளவு வேகத்துடன் விதிவத்தாய் அநுஷ்டித்து வருகிறானோ, அவ்வளவுக் கவ்வளவு வேகமாய், அவன் தன்னிடத்திலிருந்து – ரஜோதமோ குணங்களைத் துடைத் தொழித்து வைக்கிறான். மேலும் மேலும் புடம்போடுவதால் தங்கத்தின் மலம் நீங்கிப்போய், அது முற்றிலும் சுத்தம் ஆய்விடுதல்போலும், கர்மமானது பிடிமானமாய் அநுஷ்டிக்கப்படுவதால், ரஜஸ் தமஸ் ஸென்னும் மலங்கள் விலகிப்போய், ஸத்வ சுத்தி (இதின் ஸ்வரூபம் 16வது அத்யாயம், முதல் ச்லோகத்தின் வ்யாக்யானத்திற் சொல்லப்பட்டிருக்கிறது) லப்தமாகிறது; ஆகையால் ஸத்வசுத்தியை உண்டு பண்ணிக்கொடுக்கும் தீர்த்தம் என்றே ஸத்கர்மாநுஷ்டானத்தைச் சொல்லவேண்டியிருக்கிறது. ஸாமான்யமான தீர்த்தங்கள் வெளியழுக்கைக் கழுவி வைக்கின்றன. ஸத்கர் மாநுஷ்டானமோ உள்ளழுக்கைத் துடைத்து, உட்புறத்தைச் சுத்தப்படுத்திவைப்பதால், உத்தமமான தீர்த்தமாகிறது.

பாலைவனத்திற் சிக்கி, தாஹத்தால் தபித்துக் கொண்டிருக்கும் ஒருவனுக்கு, அதிதீவரமான வெய்யிலின் வெப்பமே அம்ருதமாய் மாறி, அம்ருத மாரியாய்ப் பொழிந்தாற்போலும், குருடன் கண்ணில் ஸூர்யனே வந்து உட்கார்ந்து கொண்டாற்போலும், ஓர் நதியில் முழுகிப்போய்க் கொண்டிருக்கிறவனுக்கு, அந்நதியை அபிமானித்திருக்கும் தேவதையே உதவி செய்ய ஓடிவந்தாற்போலும், உயரத்திலிருந்து கீழே விழுந்து, பூமியில் அடிபட்டு, ப்ராணனை இழக்கவேண்டிய ஒருவன் விஷயத்தில், பூமாதேவியே

பரிதாபப்பட்டு உதவ வந்தாற்போலும், செத்துப்போய்க் கொண்டிருக்கும் ஒருவனுக்கு மருத்யுதேவதையே ஆயுர்வ்ருத்தி கொடுத்தாற்போலும், முமுக்ஷுவைக் கர்மா நுஷ்டானமே கர்மபந்தத்தினின்று விடுதலை செய்து வைக்கிறது. விஷம் உண்டு செத்துப்போய்க் கொண்டிருக்கும் ஒருவனுக்கு, அவ்விஷமே அம்ருதமாய் மாறி, அவனைக் காப்பாற்றி வைத்தாற்போலும், பந்தத்தை உண்டு பண்ணிவைக்கும் கர்மமே, ஸயுக்திகமாய் (தகுந்த யுக்தியோடு; கர்மம் செய்வதில் த்யாஜ்யாம்சம் இன்னதென்று தெரிந்து கொண்டு, அதை ஒதுக்கி வைத்து) அநுஷ்டிக்கப்பட்டதே யானால், பந்தத்தை நிவர்த்தித்துத் தரும். எந்த யுக்தியுடன் கர்மம் அநுஷ்டிக்கப்பட்டால், கர்மபந்தம் நசித்துப்போகுமோ, அந்த யுக்தியை உனக்குத் தெளிவாய்ச் சொல்வேன், கேள்.

एतान्यपि तु कर्माणि सङ्गं त्यक्त्वा फलानि च ।
कर्तव्यानीति मे पार्थ निश्चितं मतमुत्तमम् ।।६।।

ஏதான்யபி து கர்மாணி ஸங்கம் த்யக்த்வா பலானி ச।
கர்தவ்யானீதி மே பார்த நிஶ்சிதம் மதமுத்தமம் ॥ 6

நித்யநைமித்திககர்மங்களை அநுஷ்டிப்பதின் ப்ரகாரம் :

பிறன் பொருளைக் கொண்டு யாத்ரை செய்கிறவன், தான் யாத்ரை செய்ததாக ஸந்தோஷித்துக்கொள்ள இடம் இராததுபோலும், ஓர் அரசன் அதிகாரத்தை ஸஹாயமாய்கொண்டு, மற்றோர் அரசனை ஜயித்து, அவனைக் கட்டிப்பிடித்துக்கொண்டு வந்தவன், தானே அவ்வரசனை ஜயித்துக் கொண்டுவந்ததாய் எண்ணிக்கொள்ள இடமிராததுபோலும், மற்றொருவன் கச்சத்தைப் பற்றிக்கொண்டு ஓர் ஆழமான நீரைத் தாண்டிவந்த ஒருவன், தானே அந்த நீரை நீந்தித் தாண்டிவிட்டதாய் எண்ணிக்கொள்ள இடமிராதது போலும், ஓர் யஜமானனுக்குப் புரோஹிதனாய் ஏற்பட்டவன், தன் கையால் தக்ஷிணை முதலியவற்றைக் கொடுத்ததால், தானே அவற்றைக் கொடுத்ததாக எண்ணிக் கொள்ள இடமிராதது போலும், ஒவ்வொருவனும் பஞ்ச மஹாயஞ்ஞங்கள் (ப்ரஹ்ம யஞ்ஞம்-1, பித்ருயஞ்ஞம்-2, தேவ யஞ்ஞம்-3, பூதயஞ்ஞம்-4, ந்ருயஞ்ஞம்-5) முதலிய நித்யநைமித்திக கர்மங்களைச் செய்ய நேரிடும் போதெல்லாம், சாஸ்த்ரவிதி கோணாமல் அவற்றைச் செய்துவிட்டு, தான் அவற்றைச் செய்து வைத்ததாகப் பாவிக்கா தொழிந்து, அதிலிருந்து உண்டாகக்கூடியதாயிருக்கும்

பலனின்மேல் ஆசையைச் செல்லவொட்டாமல் இருக்கவேண்டும்.

புறத்தியார் குழந்தைக்குப் பால்கொடுத்து அதை வளர்க்கும் ஒருவள், அக்குழந்தையால் தனக்கு யாதொரு லாபமும் உண்டாவதை உத்தேசிக்காமல் இருப்பதுபோலும், அவன் அக்கர்மங்களைச் செய்யத்தொடங்கும் போதே, அவற்றால் உண்டாகத்தக்க பலன்மேல் ஆசையை இல்லாமற் செய்துகொள்ளவேண்டும். அரசமரத்தின் பழத்திற்கு ஆசைப்படாமலே, அதற்கு ஜலம் வார்ப்பதுபோலும், ஊர் மாடுகளை மேய்க்கிறவன், அம்மாடுகளின் பாலில் ஆசைவைக்காதது போலும், பலனில் ஆசையற்றவனாய் அக்கர்மங்களை அநுஷ்டிக்க வேண்டும். இப்படிப்பட்ட ஓர் யுக்தியை ஸஹாயமாய்க்கொண்டு, எவன் அக்கர்மங்களைச் செய்து தீர்வானோ, அவனுக்கு அவனிடத்திலேயே இருக்கும் ஆத்மஸ்வரூபம் அநுபவஸித்தம் ஆய்விடுகிறது. ஆகவே பலனில் ஆசையையும் கர்த்ருத்வாபிமானத்தையும் ஒழித்துக்கொண்டு, விஹிதகர்மங்களைச் செய்துதீர வேண்டுமென்பது என்னுடைய உத்தமமான உபதேசம்.

नियतस्य तु संन्यासः कर्मणो नोपपद्यते ।
मोहात्तस्य परित्यागस्तामसः परिकीर्तितः ।।७।।

நியதஸ்ய து ஸந்ந்யாஸ: கர்மணோ நோப பத்யதே ।
மோஹாத் தஸ்ய பரித்யாகஸ் தாமஸ: பரிகீர்தித: ।। 7

தாமஸமான கர்மத்யாகம் :

இருட்டில் இடித்து மோதிக்கொண்ட ஒருவன் தன் கண்மேல் கோபங்கொண்டு அதைப் பிடுங்கி எறிவதுபோலும், ஒற்றைத்தலைவலியால், வருந்துகிறவன் தலையையே அறுத்துக்கொண்டாற்போலும், வழி கெட்டதாயிருந்து கால் நோவுபட்டதால், காலையே வெட்டிக்கொண்டாற்போலும், பசியெடுத்தவன், தனக்கு பரிமாறின அன்னம் அதிக உஷ்ணமாய் இருக்கிறதென்று அதன்மேல் கோபங்கொண்டு, அதை ஆற்றிக்கொண்டு புசிக்காமல், அதைக் காலால் உதைத்துத் தள்ளி பசித்துக் கிடந்தாற்போலும், கர்மங்களால் துக்கம் ஏற்படுகிறதென்று, நித்யநைமித்திக கர்மங்களுள்பட எல்லாக் கர்மங்களையும் சிலர் செய்யாமல் விட்டு விடுகிறார்கள். கர்மத்தின் த்யாஜ்யாம்சங்களாகிய கர்த்ருத்வாபிமானத்தையும் பலேச்சையையும்

பரிதாபப்பட்டு உதவ வந்தாற்போலும், செத்துப்போய்க் கொண்டிருக்கும் ஒருவனுக்கு மருத்துதேவதையே ஆயுர்வ்ருத்தி கொடுத்தாற்போலும், முமுக்ஷுவைக் கர்மா நுஷ்டானமே கர்மபந்தத்தினின்று விடுதலை செய்து வைக்கிறது. விஷம் உண்டு செத்துப்போய்க் கொண்டிருக்கும் ஒருவனுக்கு, அவ்விஷமே அம்ருதமாய் மாறி, அவனைக் காப்பாற்றி வைத்தாற்போலும், பந்தத்தை உண்டு பண்ணிவைக்கும் கர்மமே, ஸயுக்திகமாய் (தகுந்த யுக்தியோடு; கர்மம் செய்வதில் த்யாஜ்யாம்சம் இன்னதென்று தெரிந்து கொண்டு, அதை ஒதுக்கி வைத்து) அநுஷ்டிக்கப்பட்டதே யானால், பந்தத்தை நிவர்த்தித்துத் தரும். எந்த யுக்தியுடன் கர்மம் அநுஷ்டிக்கப்பட்டால், கர்மபந்தம் நசித்துப்போகுமோ, அந்த யுக்தியை உனக்குத் தெளிவாய்ச் சொல்வேன், கேள்.

एतान्यपि तु कर्माणि सङ्गं त्यक्त्वा फलानि च ।
कर्तव्यानीति मे पार्थ निश्चितं मतमुत्तमम् ।। ६ ।।

ஏதான்யபி து கர்மாணி ஸங்கம் த்யக்த்வா பலானி ச ।
கர்தவ்யானீதி மே பார்த நிஶ்சிதம் மதமுத்தமம் ॥ 6

நித்யநைமித்திககர்மங்களை அநுஷ்டிப்பதின் ப்ரகாரம் :

பிறன் பொருளைக் கொண்டு யாத்ரை செய்கிறவன், தான் யாத்ரை செய்ததாக ஸந்தோஷித்துக்கொள்ள இடம் இராததுபோலும், ஓர் அரசன் அதிகாரத்தை ஸஹாயமாய்கொண்டு, மற்றோர் அரசனை ஜயித்து, அவனைக் கட்டிப்பிடித்துக்கொண்டு வந்தவன், தானே அவ்வரசனை ஜயித்துக் கொண்டுவந்ததாய் எண்ணிக்கொள்ள இடமிராததுபோலும், மற்றொருவன் கச்சத்தைப் பற்றிக்கொண்டு ஓர் ஆழமான நீரைத் தாண்டிவந்த ஒருவன், தானே அந்த நீரை நீந்தித் தாண்டிவிட்டதாய் எண்ணிக்கொள்ள இடமிராதது போலும், ஓர் யஜமானனுக்குப் புரோஹிதனாய் ஏற்பட்டவன், தன் கையால் தக்ஷிணை முதலியவற்றைக் கொடுத்ததால், தானே அவற்றைக் கொடுத்ததாக எண்ணிக் கொள்ள இடமிராதது போலும், ஒவ்வொருவனும் பஞ்ச மஹாயஞ்ஞங்கள் (ப்ரஹ்ம யஞ்ஞம்-1, பித்ருயஞ்ஞம்-2, தேவ யஞ்ஞம்-3, பூதயஞ்ஞம்-4, ந்ருயஞ்ஞம்-5) முதலிய நித்யநைமித்திக கர்மங்களைச் செய்ய நேரிடும் போதெல்லாம், சாஸ்த்ரவிதி கோணாமல் அவற்றைச் செய்துவிட்டு, தான் அவற்றைச் செய்து வைத்ததாகப் பாவிக்கா தொழிந்து, அதிலிருந்து உண்டாகக்கூடியதாயிருக்கும்

பலனின்மேல் ஆசையைச் செல்லவொட்டாமல் இருக்கவேண்டும்.

புறத்தியார் குழந்தைக்குப் பால்கொடுத்து அதை வளர்க்கும் ஒருவள், அக்குழந்தையால் தனக்கு யாதொரு லாபமும் உண்டாவதை உத்தேசிக்காமல் இருப்பதுபோலும், அவன் அக்கர்மங்களைச் செய்யத்தொடங்கும் போதே, அவற்றால் உண்டாகத்தக்க பலன்மேல் ஆசையை இல்லாமற் செய்துகொள்ளவேண்டும். அரசமரத்தின் பழத்திற்கு ஆசைப்படாமலே, அதற்கு ஜலம் வார்ப்பதுபோலும், ஊர் மாடுகளை மேய்க்கிறவன், அம்மாடுகளின் பாலில் ஆசைவைக்காதது போலும், பலனில் ஆசையற்றவனாய் அக்கர்மங்களை அநுஷ்டிக்க வேண்டும். இப்படிப்பட்ட ஓர் யுக்தியை ஸஹாயமாய்க்கொண்டு, எவன் அக்கர்மங்களைச் செய்து தீர்வானோ, அவனுக்கு அவனிடத்திலேயே இருக்கும் ஆத்மஸ்வரூபம் அநுபவஸித்தம் ஆய்விடுகிறது. ஆகவே பலனில் ஆசையையும் கர்த்ருத்வாபிமானத்தையும் ஒழித்துக்கொண்டு, விஹிதகர்மங்களைச் செய்துதீர வேண்டுமென்பது என்னுடைய உத்தமமான உபதேசம்.

नियतस्य तु संन्यासः कर्मणो नोपपद्यते ।
मोहात्तस्य परित्यागस्तामसः परिकीर्तितः ।।७।।

நியதஸ்ய து ஸந்ந்யாஸ: கர்மணோ நோப பத்யதே ।
மோஹாத் தஸ்ய பரித்யாகஸ் தாமஸ: பரிகீர்தித: ।। 7

தாமஸமான கர்மத்யாகம் :

இருட்டில் இடித்து மோதிக்கொண்ட ஒருவன் தன் கண்மேல் கோபங்கொண்டு அதைப் பிடுங்கி எறிவதுபோலும், ஒற்றைத்தலைவலியால், வருந்துகிறவன் தலையையே அறுத்துக்கொண்டாற்போலும், வழி கெட்டதாயிருந்து கால் நோவுபட்டதால், காலையே வெட்டிக்கொண்டாற்போலும், பசியெடுத்தவன், தனக்கு பரிமாறின அன்னம் அதிக உஷ்ணமாய் இருக்கிறதென்று அதன்மேல் கோபங்கொண்டு, அதை ஆற்றிக்கொண்டு புசிக்காமல், அதைக் காலால் உதைத்துத் தள்ளி பசித்துக் கிடந்தாற்போலும், கர்மங்களால் துக்கம் ஏற்படுகிறதென்று, நித்யநைமித்திக கர்மங்களுள்பட எல்லாக் கர்மங்களையும் சிலர் செய்யாமல் விட்டு விடுகிறார்கள். கர்மத்தின் த்யாஜ்யாம்சங்களாகிய கர்த்ருத்வாபிமானத்தையும் பலேச்சையையும்

ஒழித்துக்கொள்ளல் என்னும் யுக்தியுடன் விஹிதகர்மங்களை அநுஷ்டித்தே, கர்மத்தால் ஏற்பட்ட ஸம்ஸாரபாதையை, விலக்கிக் கொள்ளவேண்டும், என்பதை தமஸ்ஸால் ஆக்ரமிக்கப்பட்டவர்கள், அதினால் உண்டான புத்திமயக்கத்தால், அறிவதில்லை. ஆகையால் தன் அதிகாரநுகுணமாக அவச்யம் அநுஷ்டிக்க வேண்டியவையாய் ஏற்படும் கர்மங்களை அநுஷ்டிக்காமலே விட்டுவிடுவ தென்ற அந்த தாமஸத்யாகம், உன்னிடத்தில் ஏற்படாவண்ணம், நீ விழிப்பாய் இருக்கவேண்டும், அப்பா அர்ஜுநா.

दुःखमित्येव यत्कर्म कायक्लेशभयात्त्यजेत् ।
स कृत्वा राजसं त्यागं नैव त्यागफलं लभेत् ॥ ८ ॥

துக்கமித்யேவ யத்கர்ம காயக்லேஶ பயாத் த்யஜேத் ।
ஸ க்ருத்வா ராஜஸம் த்யாகம் நைவ த்யாகபலம் லபேத் ॥ 8

ராஜஸமான கர்மத்யாகம் :

ஒருவன் தன்னுடைய அதிகாரம் இன்னதென்றும், அதற்குத் தக்கபடி தான் செய்யவேண்டிய கர்மம் இன்னதென்றும், தெரிந்துகொண்டபின்னும், அதைச் செய்து முடிப்பதில் ஏற்படும் தேஹப்ரயாஸத்தை உத்தேசித்து, அதைச் செய்யாமல் விடுவான். கட்டுச் சோற்றைச் சுமந்து கொண்டு போகும்போது கஷ்டம் தோற்றுவதுபோலும், தின்னும்போது எலுமிச்சையின் பழம் புளிப்பாயும், கடுக்காய் துவர்ப்பாயும் இருப்பதுபோலும், கர்மம் அநுஷ்டிக்கும் வேளையில் கடினமாயிருக்கிறது. முட்டுகிற மாட்டைப் போஷிப்பதுபோலும், ஸாமத்திச்செடி முள்ளால் நிறைந்திருப்பபோலும், சோற்றைச்- சமைப்பது கஷ்டமாயிருப்பதுபோலும், கர்மத்தை ஆரம்பிக்கும் காலத்திலேயே, அது கஷ்டமானதென்று தோற்றி, அதை அநுஷ்டிக்காமல் சிலர் விடுவார்கள். மற்றும் சிலர் விஹிதகர்மத்தைச் செய்யத்தொடங்கி, அது மென்மேலும் கஷ்டமாயிருப்பதைப் பார்த்து, கையைச் சுட்ட பாண்டத்தை தொப்பென்று போட்டு விடுதல்போல், ஆரம்பித்த கர்மத்தை நடுவில் கைவிட்டு, "தேஹம் என்ற உத்தம வஸ்து நம்முடைய பெரும்பாக்யத்தால் நமக்குக்கிடைத்திருக்க, பாபிகளைப்போற் கர்மங்களைச் செய்து, அதை ஏன் கஷ்டப்படுத்தவேண்டுமோ? இந்தக் கர்மத்தைச் செய்து முடிப்பதால் கிடைக்கக்கூடியதான லாபம், நமக்கு வேண்டாம், இப்போது கைக்குக் கிடைத்தாயிருக்கும் போகத்தை நன்றாய்ப் புசித்தாற் போதும்," என்று சொல்வார்கள்;

இப்படி தேஹம் கஷ்டப்படுவதற்குப் பயந்து, கர்மானுஷ்டானத்தைத் துறந்துவிடுவது ராஜஸத்யாக மாகும் என்றறி. இப்படிச் செய்வது கர்மத்யாகம் ஆனாலும், அது உண்மையான கர்மத்யாகம் ஆவதில்லை. கீழே சிந்திப்போன நெய் அகஸ்மாத்தாய் நெருப்பில் விழுந்தால். அதுவிதிவத்தான ஹோமமாகாதல்லவா? ஜலத்தில் தவறி விழுந்து முழுகிப்போய் இறக்கிறவன், ஜலஸமாதியில் (ஒன்றையும் புசிக்காமல் பாதி தேஹத்தை கங்கையில் அழுத்திக் கொண்டிருந்து ப்ராணனை விடுதல்) இருந்து ப்ராணன் விடுவதின் நன்மையை அடைவானா? அப்படியே தேஹத்துக்கு ஸுகம்கொடுக்க விரும்பி, எவன் விஹிதகர்மத்துக்கு எள்ளும் தண்ணீரும் இறைத்து விடுகிறானோ, அவன் உண்மையான கர்மத்யாகத்தின் பலனை அடையான். உண்மையான கர்மத்யாக மென்பது, ஆத்ம ஞானத்தை உண்டு பண்ணிக் கொடுத்து, அந்த ஞானத்தின் கார்யமாக, ஸூர்யோதயமானபின் நக்ஷத்ரங்கள் மறைந்துபோவது போலும், ஸகலகர்மமும், அதின் காரணமான அஞ்ஞானத்துடன், முற்றிலும் நசித்துப்போகும்படி செய்து தரவேண்டும். அந்த கர்மத்யாகமே மோக்ஷத்தைப் பலித்துத்தரும். தேஹத்தில் ஆசை வைத்திருக்கும் அஞ்ஞானி, கீழே சொல்லி யிருக்கப்பட்டபடி செய்யும் கர்மத்யாகத்தால், மோக்ஷபலன் ஸித்தியாது; ஆகையால் அந்தக் கர்மத்யாகத்தை ராஜஸம் என்று அறியவேண்டும். ஆனால் எப்படிப்பட்ட கர்மத்யாகத்தால் மோக்ஷபலன் ஸாதகனுடைய வீடுதேடி வந்து சேருமோ, அந்த கர்மத்யாகம் இன்னதென்று ப்ரஸங்கானுஸாரமாய்ச் சொல்வேன், கேள்.

कार्यमित्येव यत्कर्म नियतं क्रियतेऽर्जुन ।
सङ्गं त्यक्त्वा फलं चैव स त्यागः सात्त्विको मतः ॥९॥

கார்யமித்யேவ யத்கர்ம நியதம் க்ரியதேऽர்ஜுன।
ஸங்கம் த்யக்த்வா பலம் சைவ ஸ த்யாக: ஸாத்த்விகோ மத: ॥ 9

ஸாத்விகத்யாகம் :

தன் னதிகாரத்துக்குத் தக்கபடி தான் செய்யவேண்டியதாய், எந்தக் கர்மம் ஒருவனுக்கு நேருமோ, அதை அவன் சாஸ்த்ரவிதிக்குக் கட்டுப்பட்டவனாய், ஸர்வ அங்கங்களாலும் அலங்கரித்து, செய்துமுடிக்க வேண்டும். ஆனால் அவன், அதைத் தான் செய்து வைக்கிறவனாய் ஓர் புத்தி பாராட்டாதவனாயும், இருக்க வேண்டும். தாயை

அவமானப் படுத்துவதும், அவளிடத்தில் காமவிகாரம் பாராட்டலுமாகிய அதின் பலனின் மேல் ஆசை பாராட்டாதவனாயும் இவ்விரண்டும் நரகத்தில் விழுவதற்குக் காரணமாவதால், இவை இரண்டையும் ஒழித்துக்கொண்டு, தாயை பூஜிக்க வேண்டியதுபோலும், பசுவின் வாய் அசுத்த மென்று, அதின் முழுசரீரத்தையும் தள்ளிவிடாமல், வாயை மாத்ரம் விலக்கிவைத்து, அதின் இதர ஸர்வாங்கங்களையும் பூஜிப்பது அவச்யமாதல்போலும், ரஸவத்தாயிருக்கும் மாம்பழத்தில் ரஸமில்லாத கொட்டையும் தோலும் இருக்கின்றன வென்று, மாம்பழம் முழுவதையுமே தள்ளிவிடாததுபோலும், கர்மம் முழுவதையுமே தள்ளிவிடாமல், பந்தத்தை உண்டாக்கிவைக்கும் அதின் அம்சங்களாகிய கர்த்ருத் வாபிமானத்தையும் பலனில் ஆசையையும், தகப்பன் தன் பெண்விஷயத்தில் போகேச்சையை ஒழித்துக்கொள்வதுபோல், ஒழித்து வைத்தால், பின்பு அக்கர்மம் பந்தத்தை உண்டாக்கிவைக்க சக்தியற்றுப் போகிறது.

இப்படிப்பட்ட த்யாகம் என்னும் மரத்தினின்று மோக்ஷம் என்னும் பழம் பழுக்கிறது. இந்த த்யாகத்தைத் தான் ஸாத்விகத்யாகம் என்று சொல்வார்கள். விதையை வறுத்துவிட்டால், மரத்தின் ஸந்தானம் நசித்துப்போவது போலும், பலனில் ஆசையை ஒழித்துக்கொண்டு கர்மத்யாகம் செய்து கொண்டவனிடத்தினின்று, ஸ்பர்சக்கல்லின் ஸ்பர்சமாத்ரத்தால் இரும்பை விட்டுத் துருவும், களிம்பின் மணமும், விலகிப்போகின்றன. பின்பு சுத்த ஸத்வமானது தலையெடுத்து, ஆத்மஞானத்தின் கண் திறந்துபோகிறது, அதினால் ஸாயங்காலத்தில் கானநீர்த்தோற்றம் காணப்படாது போவதுபோலும், உலகம் என்ற பெருந்தோற்றம், ஆகாசத்தைப் போலவும், எங்குங் காணப்படாமற் போகிறது.

न द्वेष्ट्यकुशलं कर्म कुशले नानुषज्जते ।
त्यागी सत्त्वसमाविष्टो मेधावी छिन्नसंशयः ॥१०॥

ந த்வேஷ்ட்ய குஶலம் கர்ம குஶலே நானுஷஜ்ஜதே ।
த்யாகீ ஸத்த்வ ஸமாவிஷ்டோ மேதாவீ சின்னஸம்ஶய: ॥ 10

ஸாத்விகத்யாகத்தால் மேல் ஏற்படும் ஸ்திதி:

அன்றியும் ஸாத்விகத்யாகம் பண்ணுகிறவனுக்கு, ப்ராரப்த கர்மத்தின் வேகத்தால், சுபாசுபகர்மங்கள் செய்யும் படியாய்

நேர்ந்ததால், அக்கர்மங்கள் அனைத்தும், அவன் புத்திக்கு சுத்தமானவைகளாகவே. தோன்றிப்போய், ஆகாசத்தில் உண்டாய் மறைந்துபோகும் மேகங்கள் போலும், அவன் அந்தரங்கத்தில் ஸுகதுக்கங்களை உண்டாக்கி வைக்காதவைகள் ஆய்விடும். அப்படி ஆனபின், சுபகர்மங்கள் என்று அவற்றை ஸந்தோஷத்துடன் செய்வதம், அசுபகர்மங்கள் என்று அவற்றில் வெறுப்புப் பாராட்டுவதும், ஏற்படாது, பின்பு அவன் அக்கர்மங்களின் விஷயத்தில், விழித்துக்கொண்டவன் ஸ்வப்நவிஷயத்தில் அஸத்யபுத்தி பாராட்டுவதில் ஸந்தேஹமற்றுப் போவதுபோலும், ஸர்வ ஸந்தேஹமும் அற்றுப்போனவனாய், கர்மம் செய்யப்பட்டதென்றும், தான் செய்தவனென்றும், தோன்றும் த்வைதபாவத்தின் பேச்சே முற்றிலும் அற்றவ னாய்விடுகிறான். இப்படிப்பட்ட ஸாத்விகத்யாகத்தைக் கொண்டு த்யஜிக்கபட்டவைகளான கர்மங்கள் உண்மையாக முற்றிலும் த்யாகம் செய்யப்பட்டவையாகின்றன. வேறு எவ்விதமாயும் கர்மங்களைக் கைவிட்டால் அவை கைவிடப்பட்டவை யாகாமல், அநுஷ்டித்ததைக்காட்டிலும் அதிகமாய் பந்தத்தை உண்டு பண்ணிவைக்கின்றன.

न हि देहभृता शक्यं त्यक्तुं कर्माण्यशेषतः ।
यस्तु कर्मफलत्यागी स त्यागीत्यभिधीयते ॥११॥

ந ஹி தேஹ ப்ருதா ஶக்யம் த்யக்தும் கர்மாண்யஶேஷத: ।
யஸ்து கர்ம பலத்யாகீ ஸ த்யாகீத்யபி தீயதே ॥ 11

தேஹம் எடுத்தவர்கள் கர்மத்தை முற்றிலும் ஒழித்துக்கொள்வது அஸாத்யம் :

அன்றியும், ஹே ஸவ்யஸாச்சீ, தேஹம் எடுத்தபிறகு, கர்மத்தின் விஷயத்தில் வெறுப்புப் பாராட்டுகிறவன் முற்றிலும் ஞாநம் அற்றவனே. மட் குடம் மண்விஷயமாய் வெறுப்புப் பாராட்டி என்ன செய்யமுடியும்? வஸ்த்ரம் நூலின் ஆவச்யகதை எனக்கு வேண்டாம், என்று அதை விலக்கிவைக்க முடியுமா? நெருப்பு வெப்பத்தின் விஷயத்தில் வெறுப்பைப் பாராட்டி, என்ன செய்யமுடியும்? தீபம் ப்ரகாசத்தின்மேல் பகைபாராட்டிச் செய்வது யாது? பெருங்காயம் நாற்றத்தின் விஷயத்தில் கஷ்டம் பாராட்டினால், அதிற்கு நல்ல வாஸனையை உண்டாக்கிவைப்பது எப்படி முடியும்? நீர் க்ரவத்தன்மையையே விட்டு, எங்கே போய் ஒளித்துக்கொள்ளும்? அப்படியே, சரீரம் என்ற ஒன்று

ஒருவனுக்கேற்பட்டிருக்குமளவும், கர்மத்தைச் செய்யக்கூடாது என்ற ஓர் புத்திமயக்கம் எவ்விதம் பயன்படும்? ஒருவன் நெற்றியில் இட்டுக்கொண்ட பொட்டு கோணலாய் இருந்தால், அதை அழித்துவிட முடியும்; ஆனால் நெற்றியே கோணலாய் இருந்தால், அதை திருத்தவாவது, எடுத்து எறிந்துவிடவாவது எவ்விதம் முடியும்? விஹித கர்மத்தைத் தானே செய்துவைப்பதால், தானே அதைச் செய்யாமல் விட்டுவிடவும் முடியும். ஆனால் கர்மத்தையே முற்றிலும் விடுவது எப்படி ஸாத்யமாகும்; ஏனென்றால் தேஹம் கர்மமயமாகவே, (கர்மத்தால் வார்த்துவைக்கபட்டதாகவே) இருக்கிறது.

ஒருவன் தூங்கும்போது கூட, ச்வாஸோச்சுவாஸரூபமான கர்மம் நடந்துகொண்டே வருகிறது. மனுஷ்யனுடைய ப்ரயத்நமில்லாமலே, கர்மம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. சரீரத்தின் சேர்க்கை ஒன்றைக் காரணமாகக்கொண்டு, எல்லாக் கர்மங்களும் ஜீவனுக்கு ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. ஆகவே ஒருவன் இருந்தாலும், இறந்துபோனாலும், கர்மம் நின்றுபோவதில்லை. இப்படிப்பட்ட கர்மத்தை விட்டொழித்துக்கொள்ளும் வழி யொன்றே; அது யாது என்றால், கர்மத்தைச் செய்யும்போது, பலேச்சைக்கு வசப்பட்டுப்போகா திருத்தலே அது வாகும். கர்மபலனை ஈச்வரனுக் கர்ப்பணம் பண்ணிவிட்டு, அவன் மனக்குளிர்ச்சிக்குப் பாத்ர மாவதால், ஆத்மஞானம் ப்ரகாசமாய் உண்டாய், கயிற்றைப் பாம்பென்று நினைத்த அஞ்ஞானம், கயிறென்ற ஞாநம் ஏற்பட்டதால் தீர்ந்துபோவது போலும், ஆத்மா யதாவத்தாய் அறியப்பட்டு, அஞ்ஞானம் நசித்துப்போவதோடு, கர்மமும் நசித்துப் போகிறது. விட்டுப் போகவேண்டியதான.

கர்மம், இப்படியே தான் விட்டுப் போகிறது. இவ்விதமாய்க் கர்மத்தை விட்டொழித்தலே, உலகில் மஹாத்யாகம் என்று சொல்லப்படும். மற்றவிதமான த்யாகங்க ளெல்லாம் ரோகிக்கு ரோகத்தின் ஆதிக்யத்தால் உண்டான மூர்ச்சையை, இளைப்பாறுதல் என்று சொல்வது போலுமேயாகும்; அப்படியே தடியடிக்குப் பயந்து ஒதுங்கினவன் பக்கத்தில் இருந்த ஒன்றின்மேல் மோதிக்கொண்டதுபோலும், ஓர் கர்மத்தைச்செய்வதின் கஷ்டத்தை ஒதுக்கிக்கொள்கிறவன், மற்றோர் கர்மத்திற் சிக்கிப்போகிறான். இது இத்துடன் நிற்கட்டும், எவன் கர்மத்தைச் செய்து பலத்யாகத்தால் அக்கர்மத்தின் ஸம்பந்தத்தை அறுத்துக்கொள்கிறானோ, அவனே உண்மையான த்யாகம் செய்தவன் என்று மூவுலகிலும் சொல்லப்படுவான்.

अनिष्टमिष्टं मिश्रं च त्रिविधं कर्मणः फलम् ।
भवत्यत्यागिनां प्रेत्य न तु संन्यासिनां क्वचित् ।।१२।।

அனிஷ்ட மிஷ்டம் மிஶ்ரம் ச த்ரிவிதம் கர்மண: பலம் ।
பவத்யத்யாகினாம் ப்ரேத்ய ந து ஸந்ந்யாஸினாம் க்வசித் ॥ 12

த்யாகம் செய்யாதவர்களுக்கு ஏற்படும் அநர்த்தம்:

இப்படிச் செய்யாமல், பலனில் ஆசைவைத்தவர்கள், கர்மத்தின் மூவிதமான பலன்களை அநுபவிக்கும்படியாய் ஏற்படுகிறது. ஒருவன் பெண்ணைப் பெற்று மற்றொருவனுக்குக் கொடுத்துவிட்டால், அவளைக் காப்பாற்றவேண்டிய கவலை, அவனுக்கு விட்டுப்போய், புருஷனுக்கு ஏற்பட்டுப் போகிறது. ஒருவன் விஷத்தை விற்று, அதில் கிடைக்கும் லாபத்தைக்கொண்டு ஸுகமாய்ப் பிழைத்துக் கொண்டிருக்கிறான். மற்றொருவன் அதை விலைகொடுத்து வாங்கி, அதைப் புசித்து, செத்துப்போகிறான். அப்படியே ஒருவன் கர்த்ருத்வாபிமானத்துடனும் பலேச்சையுடனும் கர்மத்தைச் செய்து, அதற்குக் கர்த்தா வாகிறான். மற்றொருவன் பலேச்சையை ஒழித்துக்கொண்டு அக்கர்மத்தையே செய்து அகர்த்தாவாகிறான். இருவருக்கும் கர்மத்தைச் செய்வது ஆவச்யகமாகவே ஏற்படுகிறது. விஹிதகர்மத்தைச் செய்து அதின் பலனைப் பற்றிக்கொள்ளாதவர்கள் எவர்களோ, அவர்கள் ஸம்ஸாரத்தினின்று தப்பித்துக்கொள்கிறார்கள். தேவர்களென்றும், மனுஷ்யர்க ளென்றும், ஸ்தாவரங்கள் என்றும், மூவகைப்பட்டிருக்கும் ஜகத் முழுவதும் கர்மங்களில் மூவகைப்பட்ட பலன்களால் ஏற்பட்டிருக்கிறது.

ஓர் வகைப்பட்ட பலன் அநிஷ்டமென்றும், மற்றோர் வகைப்பட்டது இஷ்டமென்றும், மூன்றாம் விதப்பட்டது இஷ்டாநிஷ்டம் என்றும், சொல்லப்படும். விஷய ஸுகங்களை அனுபவிக்கவேண்டும் என்ற புத்தியுடன் நிஷித்தமான துஷ்கர்மங்களனைத்தையும் ஆசரிப்பதின் பலனாய், புழு, பூச்சி, மண்ணாங்கட்டி, முதலிய தாழ்ந்த ஜந்மங்களை அடைவது, அநிஷ்டபலன் ஆகும். தன்னுடைய அதிகாரத்துக்குத் தக்கபடி, ஸ்வதர்மங்களாகிய புண்யகர்மங்களை, சாஸ்த்ரவிதி தப்பாமல் செய்து முடிப்பதால், இந்த்ரன் முதலிய தேவர்களாய் தேஹம் எடுப்பது என்ற கர்மபலன், இஷடம் என்று சொல்லப்படும், ஹே அர்ஜுநா. அன்றியும் தித்திப்பு புளிப்பு என்ற இவ்விரு ரஸங்களும் சேர்ந்து, இவ்விரண்டுமில்லாமல் தனித்த ஒரு ரஸம் உண்டாவது போலும், யோகாப்யாஸத்தில் ரேசகம்

என்னும் வாயுவே, வெளிவிடப்படாமல் உள்நிறுத்தப்படுவதால், கும்பகம் ஆய்விடுவதுபோலும், ஸத்யமும் அஸத்யமும் ஒன்று சேர்ந்து, இவ்விரண்டு மில்லாத மற்றொன்று ஏற்படுவது போலும், சுபாசுபகர்மங்கள் ஸமபாகமாய்க் கலந்து அநுஷ்டிக்கப்படுவதால் அடையப்படும் மநுஷ்யஜந்மம் இஷ்டாநிஷ்டம் என்ற மிசரபலனாகும்.

எவர்கள் கர்மபலனில் ஆசைவைத்தார்களோ, அவர்கள் இப்படி மூவகைப்பட்ட பலன்களை அநுபவித்தே தீரவேண்டும். ஆனால் ஒன்று சாப்பிடும்போத ருசியை வ்ருத்தி செய்துகொடுத்து, அதிஸுககரமா யிருந்து, முடிவில் மரணத்தையே உண்டாக்கிவைக்கிறதா யிருந்தால், அதை எவ்விதம் கொண்டாடலாம்? கூடவே இருந்து கொண்டு, மித்ரன்போல் நடிக்கும் திருடனுடைய சேர்க்கை, நாம் காட்டில் ப்ரவேசிக்காத வரைக்கும் தான் நன்மையாயிருக்கும். வேசியோடு உறவாடல், அவள் தேஹஸம்பந்தம் ஏற்படாதவரைக்குமே, நன்மையாயிருக்கும். அப்படியே கர்மங்களைச் செய்யும்போது, உலகில் பெருமை ஏற்பட்டாலும், தேஹமுடிவில் அவற்றின் பலன்களனைத்தும் வந்து சூழ்ந்துகொண்டு, ஜந்மத்தைக்கொடுத்து ஸம்ஸார துக்கத்தை அநுபவிக்கும்படியே செய்துவைக்கின்றன.

கடன் கொடுத்தவன் வலிமைபடைத்தவனா யிருந்து, தவணையானவுடன், கடன் தண்ட வந்துவிட்டால், என்ன செய்தாலும், கடனைச் செலுத்தாமற் றப்பித்துக் கொள்ள முடியாததுபோலும், கர்மபலனை அநுபவிப்பது, தள்ளிவைக்க முடியாத தாகிறது. பின்பு ஓர் கதிரினின்று தான்யங்கள் உதிர்ந்து, அப்படி உதிர்ந்த வையினின்று பயிருண்டாய், கதிர்கள் எடுத்து, அக்கதிர்களினின்று மேலும் தான்யங்கள் உதிர்ந்து, மேலும் பயிர்களும் கதிர்களும் உண்டாவதான இந்த பரம்பரை ஓய்வுபடாமல் மேன் மேலும் வளர்ந்துகொண்டே போவதுபோலும், பூர்வம் செய்த கர்மங்களின் பலனைப் புசிக்க ஏற்பட்ட ஓர் சரீரத்தால் புதுகர்மங்கள் செய்யப்பட்டு, அவற்றின் பலன்களைப் புசிக்க வேறு தேஹங்கள் ஏற்பட்டுக்கொண்டு, இப்படியே கர்மங்களும் அவற்றின் பலனைப் புசிக்க தேஹங்களும், மாறி மாறி ஏற்பட்டுக்கொண்டிருக்கும், இந்த ஸந்ததி முடிவுபெறாமல், கர்மபலபோகம் தீர்ந்து போவதில்லை.

கர்மங்களும் தேஹங்களும் பரஸ்பரம் ஸாத்யஸாதந ஸம்பந்தம் அடைந்தவைகளாய், (ஸாத்யம் என்றால் கார்யம், ஸாதநம் என்றால் காரணம், கர்மம் தன் பலனைப் புசிக்க

தேஹத்தைக் கொடுப்பதால், கர்மம் அத்தேஹத்திற்கு ஸாதநமாகிறது. அந்த தேஹம் வேறு கர்மத்தைச் செய்து வைப்பதால், கர்மம் தேஹத்தோடு ஸாத்ய ஸம்பந்த முள்ளதுமாகிறது. அப்படியே, தேஹமும் கர்மத்துக்கு ஸாதனமாயும், கர்மத்தோடு ஸாத்ய ஸம்பந்த முள்ளதாயுமாகிறது.) பலபோகம் எப்போதும் முடிவுபெறாமல் விஸ்தரித்துக்கொண்டே போகிறது. கர்மபலனில் ஆசைப்பட்டவர்கள், இவ்வாறு அநர்த்தப்பட்டு, ஸம்ஸாரத்திற் சிக்கிப்போகிறார்கள்.

த்யாகிகளுக்கு ஏற்படும் நன்மை:

இவ்விதப்பட்டவர்களாகாமல், எவர்கள் கர்மபலத்யாகம் செய்தவர்க ளாவார்களோ, அவர்களுடைய கர்மம், ஜாதிபுஷ்பம் பூத்து உடனேயே காய்ந்து போவதுபோல் (ஜாதிபுஷ்பம் பூத்து, விதையை உண்டு பண்ணி வைக்காமலே நசித்துப் போவதால், நிஷ்காமகர்மம் அத்துடன் ஒப்பிடப்படுகிறது) செய்யப்பட்டும், செய்யப்படாத தாகிறது. விதையே சாப்பாட்டில் செலவழிந்துபோனால், வ்யவஸாயம் நசித்துப்போவது போலும், பலன் த்யஜிக்கப்பட்டுப் போனதால் கர்மத்தின் வேலை ஓய்ந்துபோய், ஸத்வசுத்தியின் ஒத்தாசை யேற்பட்டு, வெகு ப்ரசாரமாய்த் துளிர்த்துத் தழைத்திருந்த த்வைத பாவத்தின் ஆடம்பரம் அனைத்தும், குருக்குபாம்குத மென்னும் பனி பட்டு, பழுத் துதிர்ந்துபோய், அதினால் ஏற்பட்ட ஏழமையும் விலகிப்போய் விடுகிறது. பின்பு ஜகத்ரூபமாய்த் தோற்றிக்கொண்டிருந்த சர்மத்தின் மூவகைப்பட்ட பலனும் நசித்துப்போய், புசிக்கப்படவேண்டியதான பலனுடன், புசிக்க வேண்டினவனான ஜீவனும் நாசமடைகிறான்.

இப்படி ஞானத்தை முக்யாம்சமாய் உடைத்தாயிருக்கும் ஸந்யாஸம் எவர்களுக்கு ஏற்படுமோ ஹேவீரேசா, அவர்களே கர்மபலனி லிருந்து விடுபட்டுப்போகிறார்கள். இப்படிப்பட்ட உண்மையான ஸந்யாஸத்தால், ஆத்ம ஸ்வரூபத்தில் த்ருஷ்டி பரவேசித்தபின், கர்மம் என்று ஒன்றிருக்கிறது என்று உணர்வதும் இருக்குமோ? சுவர் விழுந்துபோய் விட்டபின், அதில் எழுதியிருந்த சித்ரங்கள் மண்ணோடு மண்ணாய்க் கலந்துபோகின்றன. ராத்ரி விலகிப்போய் வெளிச்சமானபின், இருட்டு எவ்விதம் மிகுந்து நிற்கும்? உருவமே அழிந்துபோய் விட்டபின், நிழல் எங்கே காணப்படும்? கண்ணாடி யில்லாமற் போனபின், முகத்தின் ப்ரதிபிம்பம் எதிற் காணப்படும்? நித்ரை இருந்த இடம் தெரியாமல் கலைந்துபோனபின், ஸ்வப்நத்தின்

பேச்சு எப்படி ஏற்படும்? அப்படியே இவ்வகைப்பட்ட கர்மபல ஸந்யாஸத்தால், அவித்யையே இல்லாமல் நசித்துப்போகும் போது, அதின் கார்யமாகிய ஸுகதுக்கங்களின் வ்யவஹாரம் எப்படி நடைபெறும்? ஆகவே கர்மவிஷயத்தில், கர்த்ருத்வ புத்தியையும் பல ஆசையையும் ஸந்யஸித்துக்கொண்ட ஒருவனுக்கு, கர்மத்தின் ஸம்பந்தம் எப்படி ஏற்படும்?

மேல்ச்லோகத்துக் கவதாரிகை:

ஆனால் அவித்யை நீங்கிப் போகாத வரைக்கும், புத்தியில் பேதபாவங்கள் ஏற்பட்டுக் கொண்டு, ஆத்மாவானது கர்த்ருத்வபுத்தி பாராட்டியதாயும், சுபாசுபகர்மங்களை மிக்கப் பரபரப்புடன் செய்துவைப்பதாயும், தோற்றுகிறது. உண்மையிலேயே, ஆத்மாவுக்கும் கர்மத்துக்கும், மேற்கு திக்குக்கும் கிழக்கு திக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமிருக்கிறது. (ஆத்மாவுக்கும் கர்மத்துக்கும் ஸம்பந்தமே இல்லை யென்றபடி) ஆகாசத்துக்கும் அதில் காணப்படும் மேகத்துக்கும், ஸூர்யனுக்கும் கானநீர்த் தோற்றத்துக்கும், பூமிக்கும் காற்றுக்கும், நதியில் முழுகிக்கிடக்கும் கற்பாறைக்கும் நதியின் ஜலத்துக்கும், ஸம்பந்தலேசம்கூட இராததுபோலும், ஆத்மாவுக்கும் கர்மத்துக்கும் ஸம்பந்தலேசம்கூட இல்லை. ஜலமும் அதில் உண்டாய், அதில் இருக்கும் பாசியும், தீபமும் கரியும், சந்த்ரனும் அவனிடத்திற் காணப்படும் களங்கமும், கண்ணும் அதின் பார்வையும், வழியும் அதில் நடக்கிறவனும், கண்ணாடியும் அதில் தன் ரூபத்தைப் பார்த்துக்கொள்கிறவனும், அத்யந்தம் வேறுபட்டவைகளாய் இருப்பதுபோலும், ஆத்மாவும் கர்மமும் முற்றிலும் வேறுபட்டவைகளே யானாலும், அஞ்ஞானத்தால், ஆத்மா கர்மங்களைச் செய்து வைக்கிறவனாய் மதிக்கப்படுகிறான். தடாகத்தில் இருக்கும் தாமரைப் பூவின் விகாஸம் ஸூர்யனால் ஏற்பட்டாலும், அந்தப்பூ தன் தேனைத் தேனீக்குப் புரட்டிவைக்கிறது. ஆத்மா அடிக்கடி செய்துவைப்பதாய்த் தோற்றும் கர்மங்களுக்குக் காரணங்கள், ஆத்மாவைக் காட்டிலும் வேறான ஐந்து வஸ்துக்கள். அவற்றை மேலே நிரூபித்துக் காட்டுவேன்.

पञ्चैतानि महाबाहो कारणानि निबोध मे ।
साङ्ख्ये कृतान्ते प्रोक्तानि सिद्धये सर्वकर्मणाम् ।।१३।।

பஞ்சைதானி மஹாபாஹோ காரணானி நிபோத மே ।
ஸாங்க்யேக்ருதாந்தே ப்ரோக்தானி ஸித்தயே ஸர்வகர்மணாம்॥13

கர்மத்தின் காரணங்களை பகவான் சொல்லத் தொடங்கும் போது, பகவா னர்ஜுநன், இவர்களுடைய ப்ரேமையின் விலாஸம்:

ஜகத்தில் ஸகல கர்மங்களும் உண்டாவதற்குக் காரணங்களாய் ஏற்பட்டவை ஐந்தே என்றும், ஆத்மா என்னும் அரசன் அவற்றில் ஒன்றாக மாட்டான் என்றும், வேத ராஜனுடைய ராஜதானியாகிய ஸாங்க்யவேதாந்தம் என்னும் மந்திரத்தில், நிரூபணம் என்னும் பேரிகையின் முழக்கத்துடன், யாவரும் அறியும் வண்ணம், விளம்பரம் செய்யப்பட்டிருப்பதால், அது உனக்கும் தெரியவந்திருக்கலாம். உனக்கு அது தெரியாதிருக்கும் பக்ஷத்தில், அது உன் காதில் விழுந்திருக்கட்டும் என்று நினைத்து, நான் அதையே விவரிக்கப் போகிறேன். ஞானரத்நம் ஆகிய நான் உன் கையில் அகப்பட்டிருக்க, நீ இந்த விஷயத்தைப் பிறரைக்கேட்டு அறிந்துகொள்ளவேண்டிய கஷ்டம் என்னத்துக்கு? தன் ரூபத்தைத் தானே நன்றாய்ப் பார்த்துக்கொள்ளும்படியாய், கையிற் கண்ணாடி கிடைத்திருக்கும்போது, பிறரைக் கேட்டறிந்துகொள்வது என்னத்துக்கு? பக்தனானவன் ஓர் வஸ்துவை அடைய விரும்பி, அவ்வஸ்து அங்கிருக்குமோ என்றெண்ணி ஓர் இடத்தை நோக்கினால், அவ்விடத்தில் நானே அவ்வஸ்து வாய்ப்போய், அவன் கண்முன் நிற்பேன். அப்படிப்பட்ட நான் இக்காலத்தில் உனக்க ஸர்வவிதமாயும் பரதந்த்ரமான (உன்னிஷ்டப்படி யெல்லாம் ஆட்டிவைக்கப்படுவதான) விளையாட்டு ஸாமானாய், உன்கையிற் சிக்கிப்போயிருக்கிறேனே.

இப்படி ப்ரேமையின் வேகத்துக்கு வசப்பட்டுப்போனவராய், பகவான் பேசிக்கொண்டே வந்து, மெய்மறந்து போனார். அப்போது அர்ஜுநனும் ஆனந்தப்பெருக்கில் விழுந்து, அதில் உருகிப்போய்க்கொண் டிருப்பவன் ஆனான். பௌர்ணமியின் பூர்ணசந்த்ரனுடைய ப்ரகாசத்துக்குமுன், சந்த்ரகாந்தமானது, தான் ஓர் கல் என்று ப்ரஸித்தி பெற்றதாயிருந்தாலும், கரைந்து ஓர் தடாகமாகவே ஆய்விடத் தொடங்குவதுபோலும், ஸுகம், அதை அநுபவித்தல், என்ற இவ்விரண்டு பாவத்துக்கும் உள்ள வித்யாஸம் முற்றிலு மற்றுப்போய், அர்ஜுநன் அச்சமயத்தில் ஸுகமாகவே ஆய்விட்டாற்போல் தோற்றிக்கொண்டிருந்தான். அவ்விருவர்களுக்குள், பகவான் ஸாமர்த்யம் படைத்தவரானதால், சற்று நேரத்தில் தன் ஞாபகத்தைத் தான் திரும்பப் பெற்று, ஆநந்தப்பெருக்கில் விழுந்து, அதில் முழுகிப்போய்க் கொண்டிருந்த அர்ஜுநனை,

காப்பாற்றுவதற்கு மிக்கப் பரபரப்புடன் ஓடிவந்தார். அவ்வளவு பெரியவனான அர்ஜுனனையும், அவன் ப்ரஞ்ஞையையும் சேர்த்து, முழுக்கி விடும்படியாய்ப் புரண்டுவந்த ஆநந்தத்தின் அந்தப் பெரும் வெள்ளத்தைக்கூட, பகவான் ஓர் பக்கம் ஒதுக்கிவைத்து, "ஹே பார்த்தா, நீ இன்னானென்று தெரிந்துகொண்டு, இந்த ப்ரஞ்ஞாபங்கத்தினின்றும் (அறிவு கேட்டினின்றும்) விழித்துக்கொள்," என்றார்.

அப்போது அர்ஜுனன் ப்ரஞ்ஞை அடைந்தவனாய், தலையை அசைத்துக்கொண்டு, "ஹே ப்ரபுவே உம்மைவிட்டுப் பிரிவுபட்ட ஓர் நிலையி லிருந்துகொண்டு, மிக்கத்துன்ப மடைந்திருந்த நான், அந்நிலையினின்றும் தப்பித்துக்கொண்டு, உம்முடன் ஒன்றுபட்டுப்போக முயன்றுகொண்டிருந்தேன், என்பதை நீர் அறிந்திருக்க வேண்டும். அப்படியிருக்க, நான் விரும்பியதை யெல்லாம் கொடுத்து, எனக்கு செல்லம் கொடுக்கும் நீர், ஏன் என் ஆசைக்குக் குறுக்காக விழுந்து, அதை நிறைவேறாமற் செய்கிறீர்?" என்று வினவினான். அதைக் கேட்டு ஸ்ரீக்ருஷ்ணன் பின்வருமாறு மிக்க அழகாய்ப் பதிற் சொன்னார். ஹே பைத்யக்காரா, (சந்திரிகையும் சந்த்ரனும் ஒரேவஸ்து வானதால், அவை ஒருக்காலு வேறுபட்டிருந்ததே இல்லை; ஆகவே அவை கலந்து போவதென்பது பொருந்தாத வார்த்தையாகும் அப்படியே ஸ்ரீ க்ருஷ்ணனும் அர்ஜுனனும் ஆத்மவஸ்து வாதலால் ஸ்ரீ க்ருஷ்ணனோடு தான் ஒன்றுபட்டுப்போக முயன்று கொண்டிருந்ததாக அர்ஜுனன் சொன்னது, பைத்யக்காரன் வார்த்தை ஆகிறது) சந்த்ரிகையானது சந்த்ரனிடத்திற்கு வந்து, அத்துடன் ஒன்றுபட்டுப் போவதில்லை, யென்பது உனக்குத் தெரியாமல் இருக்கிறதா, என்ன? இப்படிச் சொல்லி உனக்கு நான் பயம் காட்டிவைத்தால், உனக்குக் கோபம் உண்டாகப்போகிறது. அதினால் உன் மேல் எனக்கிருக்கும் ப்ரேமை இரட்டிக்கப் போகிறது ப்ரேமையின் இயற்கை இப்படியே இருக்கிற தல்லவா? பரஸ்பர ப்ரேமை பாராட்டின இருவருக்கு இப்படியேற்பட்டபின், தங்கள் மனஸில் இருக்கும் பரஸ்பர ப்ரேமையை அவ்விருவரும் இங்கிதங்களால் தெரிந்துகொண்டு, ஸமாதானப்பட்டுப்போய், ஆநந்தப்படுவதே யல்லவா, அவ்விருவரும் உலகில் வாழ்ந்திருப்பதின் உத்தம ப்ரயோஜநம்.

ஆனால் இவ்விஷயத்தில் இவ்வளவு சொன்னதுபோதும். நான் இதற்குமுன் என்ன சொல்லிக்கொண்டு வந்தேன், ஹே பாண்டுபுத்ரா? கர்மங்கள் அனைத்தும் ஆத்மாவோடு

ஸம்பந்தமற்றவை என்றல்லவா நான் சொன்னேன். அப்போது, அர்ஜுநன், "ஐயா, என் மனஸில் இருந்ததை, தேவரீர் ஸரியாய் வெளியிட்டு வைத்தீர், இப்போது விசாரித் தறிந்துகொள்ளவேண்டிய விஷயம், இதுவே; ஸகலகர்மத்துக்கும் விதையான ஐந்து காரணங்களை உனக்குத் தெரிவிப்பேன் என்றல்லவா நீர் ப்ரதிஜ்ஞை செய்தீர்; அன்றியும் ஆத்மாவுக்குக் கர்மத்தின் விஷயத்தில் ஸம்பந்தமே இல்லை யென்றும் நீர் சொன்னீர்; இதை விவரித்துக்காட்டி, உத்தமமானலாபத்தை எனக்கு நீர் செய்துதரவேண்டும்," என்று சொன்னான். இதைக்கேட்டு, விச்வத்துக் கெல்லாம் ஈச்வரனான ஸ்ரீக்ருஷ்ணன், மிக்க ஸந்தோஷ மடைந்து, "இந்த விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டு மென்று, மறியல் இருந்துகெண்டு கேட்கிறவன் எனக்கெங்கே கிடைக்கப்போகிறான்? ஆகவே, இவ்விஷயத்தை சொற்களுக்குள் ளடக்கிவைத்து, நான் உனக்குக் கொடுக்கிறவனாயிருந்தாலும், நீ ப்ரீதியுடன், இதைக் கேட்பதால், நான் உனக்குக் கடனாளியாய் விடுவேன்" என்று சொன்னார். அப்போது அர்ஜுநன், "ஐயா, சற்று முந்தி நீரே சொன்னதை நிர் மறந்துவிட்டீர் போலும், நாம் இருவரும் நீ நான் என்ற ஓர் ப்ருதக்பாவத்தை இன்னும் பாராட்டிக் கொண்டிருக்கிறோமா?" என்று சொன்னான். அப்போது ஸ்ரீக்ருஷ்ணன், "நீ சொல்வது ஸரியே; ஆனால் நான் சொல்வேன் என்று முன்பு ப்ரதிஜ்ஞை செய்துவைத்த விஷயத்தை, இப்போது சொல்வேன்; நீ உன்னுடைய கவனத்தை மிகவும் பெருக்கி வைத்துக்கொண்டு, கேள்," எனன்று எச்சரிக்கை செய்துவைத்து, பின்வருமாறு சொல்லலுற்றார்.

மேல்வரும் மூன்று ச்லோகங்களுக்கும் அவதாரிகை:

ஸகல கர்மங்களுக்கும் காரணமானவை பின் சொல்லப்படும் ஐந்தே, அவை ஆத்மஸ்வரூபத்துக்கு முற்றிலும் வெளிப்பட்டே நிற்கின்றன. கர்மம் உண்டாகும் விஷயத்தில் ஆத்மா, ஹேதுவும் (நிமித்தமும்) ஆகாமல், உபாதாநமும் (சட்டிக்கு மண் போலும், வஸ்த்ரத்துக்கு நூல் போலும் இருக்கும் காரணம் கார்யத்தின் த்ரவ்யமாயிருந்து கொண்டு கார்யம் ஏற்பட்டபின் பூர்வ உருவத்தோடு இராமல் மறைந்து போகும் காரணம் உபாதாந காரணமாகும்) ஆகாமல், தன் அங்கத்தால் ஒத்தாசை செய்வதும் ஆகாமல், முற்றிலும் ஸம்பந்த மற்றதாய் இருக்கிறது. ஆகாசத்தின் ஸம்பந்த மற்றவையாய், ஆகாசத்திற் காணப்படும் ராத்ரிப்பகல்களைப் போலும், ஆத்ம ஸ்வரூபத்தோடு ஸம்பந்தப்படாதவையாய் சுபாசுபகர்மங்கள்

ஆத்மஸ்வரூபத்திற் காணப்படுகின்றன. ஜலம், தேஜஸ், இவற்றின் சேர்க்கையால், ஆவியேற்பட்டு, குளிர்ந்த காற்றின் ஸ்பர்சத்தால் அந்த ஆவியே மேகமாய் ஆகாசத்தில் ஸஞ்சரிக்க, அந்த மேகத்தின் விஷயத்தில் ஆகாசத்துக்கு யாதோர் ஸம்பந்தமும் இராததுபோலும், படகுமரங்களால் ஏற்பட்டு, படகுகாரனாலும் காற்றாலும் ஓட்டப்பட்டு, ஜலத்தின்மேல் ஓடும்போது, அப்படி அது ஓடுவதில் ஜலத்துக்கு யாதோர் ஸம்பந்தமும் இராதது போலும், ஆத்மாவுக்கும் கர்மத்துக்கும் ஸம்பந்தம் இல்லை.

ஓர் மண்ணுண்டையின் உருவு மாறி, ஓர் சட்டி ஏற்படும்போது, சக்ரம் குயவன் தடியாற் சுற்றப்படுகிறது, சக்ரம் சுழலுகிறது, குயவன் சட்டியைச் செய்துவைக்கிறான். இவ்விதமாய்ச் சட்டி நிர்மிக்கப்படும் விஷயத்தில், இடம் கொடுத்தது என்ற ஒன்றைத்தவிர, பூமிக்கு என்ன ஸம்பந்தம் இருக்கிறது? இதுவும் வேண்டாம். ஸூர்யனுடைய வெளிச்சத்தைக்கொண்டு, உலகத்தாருடைய வ்யாபாரங்களனைத்தும் நடந்தேறிவரும்போது, அவற்றின் எந்த அம்சத்தை ஸூர்யன் செய்துவைத்தவனாகிறான்? அப்படியே ஆத்மாவுக்கு வெளிப்பட்டு நிற்கின்றன வென்று, முன் சொல்லப்பட்டுள்ள ஐந்து காரணங்களின் சேர்க்கையாலேயே, கர்மம் என்னும் கொடி உண்டாய் விஸ்தார மடைகிறது. அதில் ஆத்மா ஸம்பந்தப்படுவதே இல்லை. இனி முத்துக்களின் வ்யாபாரத்தில், அவற்றைத் தனித்தனியாய், நிறுத்துவைத்தல்போலும், இந்த ஐந்து காரணங்களையும் தனித்தனியாய் எடுத்து நன்றாய் விவரித்துக் காட்டுவேன்.

अधिष्ठानं तथा कर्ता करणं च पृथग्विधम् ।
विविधाश्च पृथक्चेष्टा दैवं चैवात्र पञ्चमम् ॥१४॥

அதிஷ்டானம் ததா கர்தா கரணம் ச ப்ருதக்விதம்।
விவிதாஸ்ச ப்ருதக் சேஷ்டா தைவம் சைவாத்ர பஞ்சமம்॥ 14

இவ்வைந்து காரணங்களுக்குள் முதலானது தேஹம்:

ஆகவே இந்த ஐந்து காரணங்களின் லக்ஷணங்களை, உள்ளபடி சொல்வேன்கேள். இவற்றிற்குள் முதன்மை பெற்றது தேஹம். இதை அதிஷ்டானம் என்று சொல்லவேண்டும்; ஏனென்றால், இதிற்றான் இக்கர்மத்தின் பலனைப் புசிக்கவேண்டியவன், தன்னுடைய பாக்யத்தைத் தன்னுடன் கூட்டிவைத்துக் கொண்டு, வஸித்துக் கொண்டிருக்கிறான்.

இந்த்ரியங்கள் என்னும் பத்துக் கைகளையும் கொண்டு, ப்ரக்ருதியானவள் இராப்பகலாய்க் கஷ்டப்பட்டு ஸம்பாதித்து வைக்கும் ஸுகதுக்கங்களை அநுபவிப்பதற்குப் புருஷனுக்கு வேறொரிடமும் இல்லாமையால் இத்தேஹத்துக்கு அதிஷ்டானம் என்னும் பெயர் ஏற்படுகிறது. இந்த தேஹம் இருபத்துநான்கு தத்வங்களும் (மஹா பூதங்கள்-5, மனஸ், புத்தி, அஹங்காரம், சித்தம்-4, ஞாநேந்த்ரியங்கள்-5, சப்தாதி விஷயங்கள்-5, கர்மேந்திரியங்கன்-5) குடியிருக்கும் வீடாயும், பந்தம் மோக்ஷமாகிய இவற்றின் சிக்கு விடுபடப்போகும் இடமாயும் இருந்துகொண்டிருக்கிறது. மிக்க வளர்ப்பதென்? ஜாக்ரத், ஸவப்ந, ஸுஷ்ப்தி, என்ற மூன்றவஸ்தைகளும் ஏற்படுமிடமாய், இத்தேஹமே இருக்கிறது, ஆகையால் இதற்கு அதிஷ்டானம் என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது.

இரண்டாது கர்த்தா :

கர்மத்தின் இரண்டாவது காரணம் கர்த்தாவாகும். (செய்கிறவன்) இந்தக்கர்த்தா ஆத்மஸ்வரூபத்தின் ப்ரதிபிம்பம் ஆவான். ஆகாசத்தினின்றே நீர் சொரிந்து, அந்நீர் பூமியில் குட்டைகளாய்த் தேங்கி, அக்குட்டைகளில் அவ்வாகாசமே ப்ரதிபிம்பிப்ப தில்லை? அல்லது, ஓர் அரசன் நித்ரைக்கு வசப்பட்டு, ஸ்வப்நத்தில் தான் அரசன் என்னும் அறிவை யிழந்து, தன்னைப் பிச்சைக்காரனாய் எண்ணிக்கொள்வ தில்லையா? அப்படியே ஆத்மஸ்வரூபமே தன்னிலையை மறந்துபோய், தேஹமாய்த் தன்னைப் பாவித்துக்கொண்டு, தேஹமாய்த் வெளிப்பட்டு நிற்கிறது. இப்படித்தன் ஸ்வரூபத்தை மறந்து, தன்னைத் தேஹமாய்ப் பாவித்திருக்கும் சைதந்யத்துக்கு, தத்வவிசாரம் செய்கிறவர்கள், ஜீவனென்று பெயரிடுகிறார்கள். இந்த ஜீவன், தேஹத்தை நோக்கி, "எவ்விஷயத்திலும் உன்மேல் அபிமானத்தை விடாது, உன்னோடொன்றுபட்டே நிற்பேன்," என்று அதற்கு ப்ரதிஜ்ஞை செய்துகொடுத்துவிடுகிறான். ப்ரக்ருதியானது கர்மத்தைச் செய்துவைக்க, இந்த ஜீவன், தன்னை ப்ரக்ருதியுடன் ஒன்றுபடுத்திக் கொண்டு, ப்ரமையால்(அறிவு மயக்கத்தால்) அக்கர்மத்தைத், தான் செய்து வைத்ததாக பாவித்துக்கொள்கிறான்; இக்கரணத்தைக் கொண்டு, ஜீவன் கர்த்தா வென்று வ்யவஹரிக்கப்படுகிறான்.

மூன்றாவது ப்ருதக்வித கரணம் :

கண்ணினின்று வெளிப்படும் த்ருஷ்டி யொன்றே யாயினும், அது இமையிலுள்ள மயிர்கள் வழியாய் புறப்படும்போது, பல பிளப்புகளுள்ளதாய்க் காணப்படுதல்போலும், வீட்டிற்குள்

வைத்திருக்கப்பட்ட ஒரே தீபம் வேறு வேறு கவாக்ஷங்கள் வழியாய்ப் பார்க்கப்படும்போது, அது பலவாய்க் காணப்படுதல்போலும், ஒரே புருஷனிடத்திலிருந்து ச்ருங்காராதி நவரஸங்கள் வெவ்வேறாய் வெளிப்படும் போது, அவன் வேறு வேறு மனுஷ்யனாகத் தோன்றுவது போலும், புத்தியின் ஒரே ஞானமானது, வெவ்வேறு இந்த்ரியங்கள் வழியாய் வெளிப்படும்போது வெவ்வேறாய் தோன்றுகிறது. இப்படி புத்தியின் ஞானத்தை, ஞனேந்த்ரியங்கள் வேறுபடுத்தி வைத்தல் என்பது மூன்றாவது காரண மாகிறது. ஹே ராஜகுமாரா.

நான்காவது விதமான ப்ருதக் சேஷ்டை (வெவ்வேறு வகைப்பட்ட வேறு வேறு சேஷ்டைகள்) :

கிழக்கு மேற்கு திக்குகளை நோக்கிப் போகும் ஜலங்களின் ப்ரவாஹங்கள் நதி என்றும் நதம் என்றும் வேறு வேறு பெயர்கொண்ட போதிலும், அப்படி யோடுவது ஜலும் ஒன்றேபோலும், வாயுதத்வத்தை விட்டு ஒருக்காலும் பிரிவுபடாத க்ரியாசக்தியானது, வெவ்வேறு ஸ்தாநங்களில் வேலை செய்வதால், அநேகவிதமான பரிணாமமடைந்து தோற்றுகிறது. அது நாக்கை ஆட்டிவைக்கும்போது உண்டாகும் சேஷ்டை பேச் சென்றும், கையில் வேலை செய்யும் போது, உண்டாகும் சேஷ்டை எடுத்துக்கொள்ளல் என்றும், காலில் வேலை செய்யும்போது, உண்டாகும் சேஷ்டை நடை என்றும், அதோத்வாரங்களில் (கீழ் நோக்கிய ஓட்டைகளில்) வேலை செய்யும்போது, ஏற்ப்டும் சேஷ்டை மலமூத்ர விஸர்ஜநம் என்றும், சொல்லப்படுகிறது.

அதுவே நாபியிலிருந்து ஹ்ருதயம் வரைக்கும் ஓடும்போது, ப்ராணன் என்றும், அதற்கு மேல் ஸஞ்சரிக்கும்போது, உதானன் என்றும், அதோ த்வாரத்தால் வெளிப்படும்போது, அபாநன் என்றும், தேஹம் முழுவதும் வ்யாபித்துக்கொண்டு ஸஞ்சரிக்கும்போது, வ்யாநன் என்றும், சாப்பிட்ட அந்நத்தின் ரஸத்தை, சரீரம் எங்கும் ஸரியாய் பரப்பிவைக்கும்போது, ஸமானன் என்றும், சொல்லப்படுகிறது. அன்றியும் கொட்டாவி, தும்மல், ஏப்பம், இவை ஏற்படும் போது, அந்த வாயுவே முறையே நாகன் என்றும் கூர்மன் என்றும், க்ருகரன் என்றும், சொல்லப்படுகிறது. இவ்விதமாக ஹே உத்தம போர் வீரனே, வாயுவின் சேஷ்டை யொன்றே, அது ஏற்படும் ஸ்தான பேதத்தால், வேறு வேறு பெயரை அடைகிறது. இப்படி

வாயுவின் க்ரியாசக்தி செய்துவைக்கும் வேலையில் ஏற்படும் பேதம், கர்மத்துக்கு நான்காவது காரணமாகிறது.

ஐந்தாவது காரணம் தைவம் :

உத்தமமான சரத்ருதுவோடு சந்த்ரிகையும், அந்த சந்த்ரிகையோடு பௌர்ணிமை என்னும் திதியும், ஒன்று சேரக் கிடைத்தால் எப்படியோ, வஸந்தருதுவுடன் அழகான உத்யானவநமும், அத்துடன் மிக்கப்ரியமுள்ள நாயகியும், அத்துடன் ஸுகோபகரணங்களாகிய சுந்தபுஷ்பாதிகளும், காத்யங்களும், (உண்டிகளும்) பேய்களும், (தாஹசாந்திக் கேற்பட்ட பாநகம் முதலியவைகளும்) சேரக்கிடைத்தால் எப்படியோ – தாமரைப்பூவுடன் அதின் விகாஸமும், அத்துடன் நல்லவாஸனையும், ஒன்றுசேரக் கிடைத்தால் எப்படியோ, வாக்கில் கவிதாஸாமர்த்யமும், அத்துடன் ஸ்பூர்த்தியும், அத்துடன் பரதத்வநிரூபணமும், ஒன்றுசேரக் கிடைத்தால் எப்படியோ, அப்படியே ஸகல வ்ருத்திகளும் உத்தமரீதியாய் நடைபெற்றுக் கொண்டிருக்கும் புத்தியும், அத்துடன் ஸர்வ இந்த்ரியங்களும் பளபளப்போடு கூடி படுத்வம் (ஸாமர்த்யம்) படைத்திருத்தலும், அத்துடன் தேஹத்தில் உத்தமமான சோபையும், அத்துடன் இந்த்ரியங்களும் அதிஷ்டான தேவதைகளின் ஆநுகூல்யமும் (ஒத்தாசையும்) ஏற்பட்டு விட்டால், மிக்கக் கொண்டாடத் தக்கதாய் இருக்கும். கண் முதலிய பத்து இந்த்ரியங்களுக்கும் பின்புறம் இருந்துகொண்டு, அவற்றிற்கு உத்தம ப்ரகாரமாய் சக்தி கொடுத்துக்கொண் டிருக்கும் ஸூர்யன் முதலியதேவைகளின் ஸஹாயமும் இருந்தாற்றான், கர்மங்கள் ஸரியாய் உண்டாகும். இப்படிப்பட்ட தேவதைகளின் ஸஹாயமே கர்மத்துக்கு ஐந்தாவது காரணம், என்று பகவான் சொன்னார். இப்போது, உன்னுடைய புத்தி நன்றாய் அறிந்து, கொள்ளும் வண்ணம். கர்மத்தின் ஐந்துவிதப்பட்ட காரணங்கள் சொல்லப்பட்டுத் தீர்ந்தன வல்லவா? எவற்றை ஹேதுக்களாய்க் கொண்டு, இவ்வைந்து காரணங்களும் கர்மத்தை உண்டாக்கி வைக்கின்றனவோ, அவையும் ஐந்தே. அந்த ஹேதுக்களை நிரூபித்து வைப்பேன், கேள்.

शरीरवाङ्मनोभिर्यत्कर्म प्रारभते नरः ।
न्याय्यं वा विपरीतं वा पञ्चैते तस्य हेतवः ।।१५ ।।

ஶரீரவாங் மனோபிர் யத் கர்ம ப்ராரபதே நரः ।
ந்யாய்யம் வா விபரீதம் வா பஞ்சைதே தஸ்ய ஹேதவः ॥ 15

கீழ்ச்சொல்லிய சரீராதி ஐந்து காரணங்களே கர்மத்தின் ஐந்து ஹேதுக்களாகின்றன :

வஸந்தருது ஏற்பட்டால், அதை ஹேது வாய்க்கொண்டு, செடிகளில் துளிர்களுண்டாய், துளிர்களினின்று பூக்கள் உண்டாய், பூக்களினின்று பழங்கள் உண்டாவதுபோலும், மழைகாலம் என்னும் ஹேது ஏற்பட்டமாத்ரத்தில், மேகங்கள் உண்டாய், மேகங்களினின்று மழை உண்டாய், மழையால் தான்ய விளைவு ஏற்படுதல்போலும், இல்லாவிட்டால், கிழக்குத் திக்கில் அருணன் உதயமாய், அதன் பின் ஸூர்யோதயம் ஏற்பட்டு, அதினால் எங்கும் வெளிச்சமாய்விடுதல் போலும், மனஸு ஸங்கல்பத்துக்கு ஹேதுவாய், அந்த ஸங்கல்பம் வாக்குக்கு ப்ரகாசத்தை உண்டாக்கிவைத்து, அந்த வாக்கு க்ருத்ய ஜாதங்கள் நடக்க வேண்டிய வழியை ப்ரகாசம் செய்துவைக்கிறது. அப்போது கர்த்தா கர்மத்தைச் செய்யத் தொடங்குகிறான். ஆகவே, இரும்பு ஸாமான்களைச் செய்துவைப்பதற்கு இரும்பாயுதங்களே வேண்டியிருப்பதுபோலும், கர்மத்தின் காரணங்களாகிய சரீரம் முதலிய ஐந்துமே, கர்மத்துக்கு ஹேதுக்களும் ஆகின்றன.

நூற்களால் ஓர் வஸ்த்ரம் ஏற்படும்போது, அந்நூற்களை அவையவை யிருக்க வேண்டிய ஸ்தானத்தில் நிறுத்திவைக்க, அவற்றை நூற்களினாலேயே கட்டிவைப்பது போலும், வைரத்தை வைரத்தைக்கொண்டே பட்டை தீர்த்து வைத்தல்போலும், மனஸு, வாக், சரீரம், என்ற இவற்றைக்காரணங்களாய்க் கொண்டு ஏற்படும் கர்மத்துக்கு, மனஸு முதலியவையே ஹேதுக்களும் ஆகின்றன. எவனாவது, கர்மத்துக்கு கரணங்களாகிய சரீரம் முதலியவையே, எப்படி ஹேதுக்களும் ஆகும், என்று தெரிந்துகொள்ள விரும்பும் பக்ஷத்தில், அவனுக்குப் பதில் சொல்கிறேன். ஸூர்யனுடைய ப்ரகாசத்துக்கு, ஹேதுவும் காரணமும் ஸூர்யனே அல்லவா? கரும்பு வளர்வதற்கு அதின் கணுக்களே ஹேதுவும் காரணமும் ஆகிறதல்லவா? வாக்தேவியாகிய ஸரஸ்வதியைப் புகழ்வதற்கு, வாக்கே வேலை செய்ய வேண்டிய யிருக்கிறதல்லவா? வேதத்தினுடைய பெருமையை வர்ணிப்பதற்கு, வேதமே பேசவேண்டியதா யிருக்கிறது. அப்படியே கர்மத்துக்கு, தேஹம் முதலியவை காரணங்களாயிருப்பது போலவே, ஹேதுக்களாயும் இருக்கின்றன.

ந்யாயமான கர்மங்கள் எவை :

இப்படி தேஹாதிகள் ஹேதுக்களாயும், காரணங்களாயும், ஏற்பட்ட சேர்க்கையால், வெளிப்படும் கர்மம், சாஸ்த்ரம் ஒத்துக்கொள்ளத்தக்கதாய் இருந்தால், அது ந்யாயம் என்று

சொல்லப்பட்டு, மேலும் ந்யாயத்துக்கு ஹேதுவாகிறது. (நம்மை உண்டாவதற்குக் காரணம் ஆகிறது) மழைநீரானது நெற்பயிருக்குப் பாயும் வாய்க்காலின் வழியாய் ஓடத்தலைப்பட்டால், அதினால் பெருத்த நன்மை ஏற்படுவதுபோலும், ஒருவன், வீட்டில் உள்ளவர்கள்மேல் கோபங்கொண்டு, வெளிப்பட்டுப் போகும்போது, அவன் த்வாரகைக்குப் போகும் வழியாய் நடந்துபோனால், அதினால் அவன் கால்களுக்கு ஏற்படும் ச்ரமம் வீண்போகாதது போலும், ஹேதுக்களும் காரணங்களும் சேர்ந்து ஏற்படும் கர்மம், சாஸ்த்ரத்தை அநுஸரித்ததா யிருந்துவிட்டால், அது நியாயம் என்று சொல்லப்படுகிறது. பாலைக் காய்ச்சும் போது அது பொங்கிவழிந்துபோனால், அதுவும் பாலைச் செலவிட்டதேயானாலும், அது ஸத்பாத்ரத்தில் தானம் செய்து செலவிட்டதாகுமா?

சாஸ்த்ரத்தின் அநுமதி இல்லாததாய்ச் செய்யப்படும் கர்மம், வ்யர்த்தம் என்று சொல்லத்தகாததானாலும், திருடர்கள் அடித்துப்பிடுங்கிக் கொண்டுபோன த்ரவ்யம், தானம் செய்யப்பட்ட தாகாதது போலும், உத்தமமான பலனைக் கொடுக்காது. அப்பா பாண்டு குமாரனே, ஐம்பத்திரண்டு அக்ஷரங்களால் அமையாத மந்த்ரம் எது இருக்கிறது? இந்த ஐம்பத்திரண்டு அக்ஷரங்களை உச்சரிக்காமல் எவன் இருக்கிறான்? ஆனால் அவற்றை எப்படிச் சேர்த்து வைத்து, எந்த நியமத்தோடு உச்சரிக்க வேண்டும், என்ற இந்த ரஹஸ்யத்தை குருமுகமாய் அறிந்துகொண்டு, அப்படி மந்த்ரோச்சாரம் செய்யாதவரைக்கும், மந்த்ரத்தை உச்சரித்ததின் பலன் கிடைக்காததுபோலும், ஹேதுக்களும் காரணங்களும் ஒன்று சேர்ந்து ஏற்படும் ஓர் கர்மம் சாஸ்த்ரத்தை அநுஸரித்ததாய் இல்லாமற்போனால், அது அந்யாயம் (கெடுதி) என்று பெயரிடப்பட்டு, அந்யாயம் விளைவதற்கே காரணமாய்விடுகிறது.

तत्रैवं सति कर्तारमात्मानं केवलं तु यः ।
पश्यत्यकृतबुद्धित्वान्न स पश्यति दुर्मतिः ।।१६।।

தத்ரைவம் ஸதி கர்தார மாத்மானம் கேவலம் து யः ।
பஶ்யத்ய க்ருத புத்தித்வான் ந ஸ பஶ்யதி துர்மதிः ।। 16

ஆத்மாவுக்கும் கர்மத்துக்கும் ஸம்பந்தமில்லை யென்றறியாத வனுடைய துர்கதி :

சரீராதி ஐந்தும் கர்மத்துக் காரணங்களாயும் ஹேதுக்களாயும் ஏற்படுகின்றன அல்லவா? ஆத்மா இவ்வைந்துக்குள் ஒன்றாய்

இருக்கிறதா பார், அர்ஜுனா. ஸூர்யன் ரூபமாய் ஆகாமல், ரூபத்தைக் கண்ணுக்குக் காட்டிக்கொடுப்பது போலும், ஆத்மா கர்ம மாகாமல், சரீராதி ஐந்து காரணங்களாலும் ஹேதுக்களாலும் முடிவுபெற்ற கர்மத்தை, ப்ரகாசம் செய்து வைக்கிறது. கண்ணாடியிற் பார்கிறவன், தான் கண்ணாடியும், ப்ரதிபிம்பமும் ஆகாமலே, அவை இரண்டையும் ப்ரகாசப்படுத்திவைப்பது போலும், ஆத்மா கர்மத்தின் கர்த்தாவாகாமல், அது ஏற்பட்டபின் அதை ப்ரகாசப்படுத்தி வைக்கிறான். ஆனால் தேஹமே தாங்கள் என்னும் அறிவுகேட்டால், எவர்களுடைய புத்தியானது தேஹத்திலேயே வ்யாபித்துக்கொண்டு, அதைத் தாண்டிச் செல்வதில்லையோ, எவர்களுக்கு ஆத்மவிஷயமாய் நடுராத்ரி ஏற்பட்டுவிடுகிறதோ, எவர்களுக்கு இவ்விதமாய் ஆத்மா, ஈச்வரன், ப்ரஹ்மம், என்ற இவையெல்லாம் தேஹத்துக்குள்ளேயே அடங்கிப் போகின்றனவோ, அவர்களுக்கு ஆத்மாவே கர்த்தா என்ற எண்ணம் அடக்கிவைக்க முடியாமல் தோன்றிக் கொண்டே இருக்கிறது. ஆத்மா கர்மத்தைச் செய்துவைக்கிறான் என்று கூட அவர்கள் எண்ணுவதில்லை. தாங்கள் தேஹமாகவே இருந்துகொண்டு, கர்மத்தைச் செய்து வைக்கிறதாக அவர்கள் மதிக்கிறார்கள். ஆத்மாவாகிய தாங்கள் கர்மத்தைத் தாண்டி ஸாக்ஷியாய் நின்றுகொண்டு, கர்மத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறவர்கள், என்ற ஓர் விஷயத்தை அவர்கள் காதாற்கூட கேட்டறியார்கள்.

ஆகவே அளவற்றதான ஆத்மாவை தேஹத்தின் அளவுள்ளதாகவே அவர்கள் பாவிக்கிறார்கள், இதில் ஆச்சர்யப்படத்தக்க தென்ன? ஆந்தை, பகலில் தன் கண்ணை மூடிக்கொண்டு, அதை இரவு என்றெண்ணிக் கொள்வதில்லையா? எவன் ஆகாசத்தில் இருக்கும் உண்மையான ஸூர்யனைப் பார்த்ததே இல்லையோ, அவன் சிறு குட்டையிற் றோன்றும் ப்ரதிபிம்பத்தை ஸூர்யன் என்றெண்ணமாட்டானா? அந்தச் சிறுகுட்டை நீரால் நிரம்பினபின், ஸூர்யன் உண்டானானென்றும், அதின் ஜலம் அசைவதைப் பார்த்து ஸூர்யன் அசைகிறா னென்றும், அதில் ஜலம் முழுவதும் வற்றிப்போனதால் ஸூர்யன் இறந்துபோனா னென்றும், அவன் எண்ணமாட்டானா? நித்ரைக்கு வசப்பட்டவன் விழித்துக் கொள்ளாதவரைக்கும். ஸ்வப்நத்தை உண்மை யென்றே பாவிப்பான். ஒருவன் கீழே கிடப்பதை கயிறென்று தெரிந்துகொள்ளாமல், அதைப் பாம்பென்று நினைத்து, பயந்துபோவதில் என்ன ஆச்சர்யம் இருக்கிறது? கண்ணில் மஞ்சட்காமாலை ஏற்பட்டிருக்கும்போது, சந்த்ரன்

மஞ்சளாயிருக்கிறான் என்று எண்ணுவதில்லையா? மான் கானல் நீரை உண்மையான நீர் என்று நினைத்து, அது ஏமாறிப்போவதில்லையா?

அப்படியே சாஸ்த்ரம், ஸத்குரு, என்ற இவர்களுடைய காற்றுக்கூட, தன்மேல் படக்கூடாதென்றிருந்துகொண்டு, கேவல ஞானசூந்யனாய் எவன் வாழ்ந்து தீர்கிறானோ, அவன் மேகத்தின் ஓட்டத்தைச் சந்த்ரன்மேல் ஏற்றிவைக்கும் நரியைப் போலும், தேஹத்தை ஆத்மாவென்று எண்ணிக்கொண்டு, ஆத்மாவை தேஹம் என்னும் வலையில் சிக்கிப் போகும்படி செய்துகொள்கிறான். அப்படி அவன் எண்ணிக் கொள்வதாலேயே, தேஹம் என்னும் சிறைச்சாலையில், கர்மத்தி னுறுதியான விலங்கால் அவன் கட்டப்பட்டுப்போகிறான். நளிகா யந்திரத்தில் உட்கார்ந்த ஓர் கிளி, தான் அதில் கட்டுப்போனதாய்ப் பாவித்துக்கொண்டு, உண்மையில் தான் கட்டுப்படாமல் இருக்கும்போதே, அதை யறியாமல், ஏமாறிப் போவதில்லையா? (சுகநளிக ந்யாயம் என்று அத்யாயம் 13–ச்லோகம் 34ல் விவரிக்கப் பட்டிருக்கிறது) ஆகவே நிர்மலமான ஆத்மஸ்வரூபத்தின் மேல் எவன் ப்ரக்ருதியை ஏற்றிவைக்கிறானோ, அவன் கோடிக்கணக்கான் கல்பங்கள் கழிந்துபோனாற்கூட, கர்மங்களையே செய்து கொண்டு, கர்மபந்தத்தினின்று விடுபட்டவனாவதில்லை.

மேல் ச்லோகத்துக் கவதாரிகை :

அப்படியிராமல், கர்மங்களைச் செய்துகொண்டே, வடவைத்தீயைத் தன் நடுவில் வைத்துக் கொண்டிருந்தும், அத்துடன் ஸம்பந்தம் பாராட்டாதிருக்கும் ஸமுத்ரஜலம்போலும், கர்மத்தோடு ஸம்பந்தம் பாராட்டதவர்களாய் எவர்களிருப்பார்களோ, அவர்களைத் தப்பாமல் எந்தக்குறிகளைக் கொண்டு தெரிந்துகொள்ள வேண்டும் என்பதை நான் சொல்வேன், கேள். இப்படிக் கர்மபந்தத்தினின்று விடுபட்டவர்களை ஸந்தேஹமற நிர்ணயித்துக் கொள்வதால், அப்படி நிர்ணயித்துக் கொள்கிறவனும், கர்மபந்தத்தினின்று விடுபட்டவனாய் விடுகிறான். விளக்கை ஸஹாயமாய்க் கொண்டு கெட்டுப்போயிருக்கும் நம்முடைய பொருளைத் தேடினால், அது நமக்குக் கிடைத்துப்போகு மல்லவா? அன்றியும் நம் முன்னால் நிர்மலமான கண்ணாடியை நிற்கவைத்துக் கொண்டால், நம் ஸ்வரூபம் நமக்குத்தெரிந்துபோய்விடு மல்லவா? மேலும், உப்பு ஜலத்தின் ஸம்பந்தம்

ஏற்பட்டமாத்ரத்தில் ஜலமாய்ப் போய்விடுகிற தல்லவா? இதெல்லாம் நிற்கட்டும். ப்ரதிபிம்பமானது திரும்பிக்கொண்டு, பிம்பத்தை பார்க்குமாகில், பார்ப்பது என்பது அற்றுப்போய், எப்போதும் ஸித்தமாயிருந்த பிம்பம் ஒன்றே மிகுந்து நின்றதாய்விடு மல்லவா? அப்படியே, நமக்குத் தோன்றாமல் மறைந்து நிற்கும் நம் ஸ்வரூபத்தின் ஞானத்தை, நாம் அடைந்துகொள்ள வேண்டுமானால், ஸாதுக்களைத் தேடி அவர்களை தர்சித்துக்கொள்ள வேண்டும்; அதற்காக அவர்களையே வர்ணிக்கவேண்டும், அவர்களுடைய சரித்ரத்தையும் குணங்களையுமே கேட்கவேண்டும். கர்மங்கள் நடுவில் இருந்துகொண்டு, கண்ணிலிருக்கும் தோலால் கண்பார்வை மறைக்கப்படாததுபோலும், தங்களாற் செய்யப் பட்டவையான சுபாசுபகர்மங்களால் ஸ்பர்சிக்கப் படாதவர்களாய் இருக்கும் அவர்கள் லக்ஷணத்தை உபபத்திகளோடு வர்ணிப்பேன், கேள்.

यस्य नाहंकृतो भावो बुद्धिर्यस्य न लिप्यते ।
हत्वाऽपि स इमाँल्लोकान्न हन्ति न निबध्यते ।।१७।।

யஸ்ய நாஹங்க்ருதோ பாவோ புத்திர் யஸ்ய ந லிப்யதே ।
ஹத்வாபி ஸ இமான்ல்லோகான் ந ஹந்தி ந நிபத்யதே ।। 17

ஆத்மஸ்வரூப ஞானம் உண்டானபின் ஜீவனுக்கு ஏற்படும் நைஷ்கர்ம்ய ஸ்திதி:

அஞ்ஞானம் விலகிப்போய், உண்மையான ஞானம் படைத்தவனான, ஹே அர்ஜுநா, அவித்யை யென்னும் நித்ரைக்கு வசப்பட்டவனாய், அநாதிகாலமாய் விச்வ மென்னும் ஸ்வப்நத்தைப் பார்த்துக்கொண்டு, அதை அநுபவித்துக்கொண்டிருந்த ஒருவன், ஆச்சர்யகரமான சக்திபடைத்தான ஸத்குரு க்ருபையை யடைந்து, மஹாவாக்யத்தின் (தத்வமஸி என்னும் வாக்யத்தின்) உச்சாரம் காதில் விழப்பெற்று, ஸத்குருவின் அபய ஹஸ்தம் தலைமேல் வைக்கப்பட்டதால், தூக்கத்தினின்று தட்டி எழுப்பிவைக்கப்பட்டவ னானபின், அவனுக்கு விச்வமென்னும் ஸ்வப்நத்தோடுகூட, அவித்யையென்னும் நித்ரை கலைந்துபோய், தன் ஸ்வரூபஞானம் என்னும் விழிப்பு ஏற்பட்டு, அவன் அத்வயா நந்தஸ்திதியில் நிலைபெறுகிறான். அப்படி யானபின், சந்த்ரனுடைய ப்ரகாசம் எங்கும் வ்யாபித்துக்கொண்டபின், காநனீர்த்தோற்றம் இல்லாமற்போவதுபோலும், பால்யபர்வம் விலகிப்போனபின்

பூச்சாண்டியின் பயம் அற்றுப்போவதுபோலும், விறகுகட்டைகள் முற்றிலும் எரிந்துபோய் சாம்பலாய்ப் போனபின், அதினின்று ஔஷண்யம் (வெப்பம் சூடு) விலகிப்போவதுபோலும், விழித்துக் கொண்டபின் ஸ்வப்நம் அற்றுப்போவது போலும் அவனிடத்தில் அஹங்காரமமகாரங்கள் முற்றிலும் அற்றுப்போகின்றன,

பின்பு, ஸூர்யன் இருட்டு எங்கே இருக்கிறதென்று தேடிக்கொண்டு, எந்தச் சுரங்கத்தில் இறங்கிப் பார்த்தாலும், அங்கே இருட்டு காணப்படாமல், தன் ப்ரகாசமே நிறைந்திருப்பதாய் அவன் பார்ப்பதுபோலும், ஆத்மஸ்வரூபத்தில் நிலைபெற்று, அதினாற் சூழப்பட்டவனாய்ப்போன அவன், எந்த த்ருச்யவஸ்துவைப் பார்த்தாலும், அந்த வஸ்துவின் த்ருச்யத்வமும் (பார்க்கப் படுவதாயிருக்கும் தன்மையும்) தன்னுடைய த்ரஷ்ட்ருத்வமும் (பார்க்கிறவனாய் இருக்கும் தன்மையும்) தன்னுடைய ஸ்வரூபமாகவே தோற்றிப்போகிறது. நெருப்பு ஓர் கட்டையில் பற்றிக்கொண்டால், அதன் பின்பு, அக்கட்டையே நெருப்பாக ஆய்ப்போய், எரிக்கப்படும் கட்டை, எரிக்கும் நெருப்பு, என்ற இந்த பேதபாவம் அற்றுப்போவதுபோலும், கர்மம் என்று தன்னைக் காட்டிலும் வேறுபட்ட ஒன்றைச் செய்கிறவனாய், ஆத்மாவுக்கு ஏற்பட்டிருந்த பழி இல்லாமற் போய், அதற்குப்பின் மிகுந்து நிற்பதான ஆத்மஸ்திதி என்னும் பதவிக்கு, அவன் அரசனாய்ப் போகிறான்.

பின்பு அவன் தேஹம் என்று ஓர் வஸ்து அலாய்தாவாக இருப்பதாக உணர்வானோ? ப்ரளயகாலத்து வெள்ளம், ஓர் நதியினுடைய ப்ரவாஹத்தைத் தன்னைக்காட்டிலும் வேறாய்த் தனித்திருக்கும்படி விட்டுவிடுமா? அப்படியே ப்ரஹ்மமே தான் என்று அவனுக்கு ஏற்பட்டிருக்கும் பேரறிவு, ஓர் தேஹம்மாத்ரம் தான் என்று பாவித்துக்கொள்ளும்படி சிறுத்துப்போகுமா? ஸூர்யனுடைய ப்ரதிபிம்பத்தைப் பற்றிக்கொள்வதால் ஸூர்யன் பற்றிக்கொள்ளப் பட்டவன் ஆய்விடுவானா? தயிரைக் கடைந்து வெண்ணெய்யைப்பிரித் தெடுத்தபின், அவ்வெண்ணெயை திரும்பவும் அதிற்போட்டால், அத்துடன் அவ்வெண்ணெய் கலந்துபோகுமா? கட்டைகள் ஒன்றோ டொன்று உராய்ந்து, வெளிப்பட்ட நெருப்பை, கட்டையாற் செய்த பெட்டிக்குள் அடைத்துவைத்தால், அது அதற்குள் அடைபட்டதாய் நின்றுபோகுமா? ஸூர்யன் ராத்ரியின் வயிற்றில் ப்ரவேசித்தபின், அவனுக்கு ராத்ரியின் பேச்சே கேட்கக் கிடைக்குமா?

அப்படியே அறியப்படும் வஸ்துவின் இருப்பு. அறிகிறவன் இருப்பைத் தன்னுடன் கூட்டிக்கொண்டு, ஆத்ம ஸ்ரூபானுபவத்தில் லயித்துப் போன ஒருவனுக்கு, தேஹம் என்றும், நான் என்றும், தோன்றும் ஞானமே நஷ்டமாய்ப் போகிறதே! அப்படியிருக்க தேஹம் நான் என்ற ஞானம் எப்படி ஏற்படும்? ஆகாசம் எங்கு சென்றாலும், ஆங்கங்கு தானே நிறைந்திருப்பதைக் கண்டு, தன்னைத் தானே நிரப்பிக்கொண்டு, அசைவற்று நின்றுவிடுதல்போலும், அவன் எதைச் செய்யத்தொடங்கினாலும், அதுவாகவே அவன் ஏற்கனவே இருப்பதாய் அவன் உணர்வதால், அவன் எந்தக் கர்மத்தைச் செய்து, அவனுக்குக் கர்த்ருத்வம் ஏற்படும்? ஆகாசம் தன்னிடம் விட்டுப் பெயர்ந்து, வேறோ ரிடததுக்குப் போகமுடியாது போவதுபோலும், ப்ரளயகாலத்து ஏகார்ணவம், ப்ரவஹித்து ஓட முடியாதது போலும், த்ருவநக்ஷத்ரம் வேறோரிடத்துக்கும் ஏறிப்போகமுடியாதது போலும், அவன் நிலை பெற்றவனாய்ப் போய், ஓர் கர்மத்தைச் செய்தல் என்ற நிலைமாறுதல் அவனிடத்தில் ஏற்படமுடியாத தாய்விடுகிறது.

அவனுக்கு தேஹம் இருக்கும் வரைக்கும், அவனிடத்தில் கர்மம் ஏற்படும் வகை:

இவ்விதமாய் அவனிடத்தில், தான் ஓர் கர்மம் செய்தேன் என்று பாவம் பாராட்டுவது முடியாததாய்ப் போய்விட்டாலும், அவனுக்கு தேஹம் இருக்குமளவும், அத்தேஹத்தினின்று கர்மங்கள் உண்டாய்க் கொண்டுதான் இருக்கும். காற்றடித்து ஓய்ந்துபோன பின்னும், மரத்தின் ஆட்டம் ஓயாததுபோலும், கர்ப்பூர பரணியினின்று கர்ப்பூரம் முழுவதும் செலவாய்ப்போன பின்னும், அதின் வாஸனை மிகுந்து நிற்பது போலும், பாட்டின் சப்தமும் பக்கவாத்யங்களின் முழக்கமும் ஓய்ந்துபோன பின்னும், அப்பாட்டால் மனஸில் ஏற்பட்ட உல்லாஸம் மிகுந்து நிற்பதுபோலும், ஓர் பூமிமேல் புரண்டுவந்த ஜலப்ரவாஹம் முற்றிலும் வற்றிப்போனபின்னும், ஈரம் மிகுந்து நிற்பதுபோலும், ஸூர்யன் அஸ்தமித்துப்போன பின்னும், ஸந்த்யாகாலத்தில், அவன் வெளிச்சம் மிகுந்து நிற்பதுபோலும், ஓர் பாணம் லக்ஷ்யத்தை பேதித்துவிட்ட பின்னும், அதில் வேகம் மிகுந்து நின்று, அது போய்க்கொண்டிருப்பது போலும், குயவனுடைய சக்கிரத்தின்மேல் இருக்கும் மண்ணை, ஓர் கலயமாய்ச் செய்து, அந்த கலயத்தை பிரித் தெடுத்தவிட்டபின்னும், சக்கிரம் சுழன்று கொண்டே இருப்பதுபோலும், தேஹத்தில் பற்று அறுந்து போனபின்னும், எந்த ப்ராரப்தகர்மத்தின் கார்யமாய்

தேஹம் உண்டாயிற்றோ, அந்தக் கர்மம், பலபோகத்தால் முடிவு பெறாதவரைக்கும், அந்தத் தேஹத்தை ஆட்டிவைத்துக்கொண்டு தான் இருக்கும். ஸங்கல்பங்கள் இன்றியே, ஸ்வப்நங்கள் ஏற்படுவதுபோலும், பயிரிட்டு வைக்காமலே, காடு பயிராவது போலும் – கட்டி வைக்காமலே ஆகாசத்தில் கந்தர்வநகரம் தோன்றுவதுபோலும், ஆத்மாவின் ப்ரயத்நமில்லாமலே, தேஹம் முதலிய ஐந்து காரணங்களினின்று, தமக்குத் தாமாகவே கர்மங்கள் ஏற்படுகின்றன. ப்ராரப்த கர்மம் மிகுந்து நிற்கும் வரைக்கும் அதின் கார்யமாய், தேஹாதிகளான ஐந்தும், காரணங்களாயும் ஹேதுக்களாயும் இருந்துகொண்டு, அநேகவிதப்பட்ட கர்மங்களைச் செய்து வைக்கின்றன.

அக்கர்மங்களால் அவனுக்குப் பந்தம் ஏற்படுவதில்லை :

அப்படிக் கர்மங்கள் ஏற்படும்போது, அவன் ஜகத் முழுவதையும் கொன்றழித்துவிட்டாலும், புதிதான ஓர் ஜகத்தை அழகாய்ச் செய்து வைத்தாலும், அல்லி ஏன் குவிந்துகொள்கிற தென்றும், தாமரைப்பூ ஏன் விகஸிக்கிற தென்றும் அறிந்துகொள்ளாத ஸூர்யனைப் போலும் மேகத்திலிருந்து இடி விழுந்து பூலோகமெல்லாம் துணுக்குத்துணுக்காய்த் தெறித்துப்போனாலும், மழை பெய்து பூமியெல்லாம் புல் வளர்ந்து பசுமையாய் இவ்விரண்டையும் மறியாத ஆகாசம்போலும், அவன் தேஹத்தோடு கூடியிருக்கும்போதே, தேஹத்தையும் தேஹத்தில் நடந்தேறி வரும் சுபாசுபகர்மங்களையும், அறியாதவனாயிருப்பான். தேஹாதிகள் காரணங்களாயும் ஹேதுக்களாயும் அமைந்து, வெளிப்படும் கர்மங்களால் ஜகத் அழிந்துபோனாலும், புதிதாய் ஓர் ஜகத் உண்டானாலும், அவற்றின் விஷயத்தில், ஸ்வப்நத்தின் காட்சிகள் விஷயத்தில் விழித்துக் கொண்டவனைப் போல், அவன் ஒன்றும் அறியாதவனாயிருப்பான்.

ஆனால் மாம்ஸத்தால் அமைந்த கண்ணையே படைத்தவர்களாய், தேஹத்தை மாத்ரமே பார்த்துக்கொண்டிருக்கும் உலத்தாருக்கு, அவன் கர்மங்களைச் செய்கிறவனாகவே தோன்றுவான். வைக்கோலால் ஓர் மனுஷ்ய உருவை அமைத்து, அதைப் பயிர் நிலத்தில் நிறுத்தி வைத்தால், அதைக் காவற்காரன் என்று நினைத்து, நரிகள் பயந்து போவதில்லையா? வெறி பிடித்தவன் இடுப்பில் துணி

இருக்கிறதா இல்லையா என்று, இதரர்களே தெரிந்துகொள்ளவேண்டியதாய் இருப்பதுபோலும், யுத்தத்தில் விழுந்து இறந்துபோனவன் மேல் இருக்கும் காயங்களை, இதரர்களே எண்ணிக்கொள்ள வேண்டியதாய் இருப்பதுபோலும் செத்துப்போன புருஷனோடு உடன்கட்டை ஏறப்போகும் ஒருவள் செய்துகொள்ளும் அலங்காரங்களை, இதரர்களே பார்க்கிறார்களே தவிர, கணவனைப் போய்ச் சேர்ந்துகொள்வதில் பரபரப்புப் பாராட்டியிருக்கு மவள், நெருப்பையும், தன் தேஹத்தையும், பக்கத்தில் நிற்கும் ஜநங்களையும், உணராமலிருப்பதுபோலும், ஆத்மஸ்வரூபத்தில் நிலைகொண்டவனுக்கு, த்ருச்யத்தின் ஞாநத்துடன், தான் த்ரஷ்டா என்னும் ஞானமும் அற்றுப்போயிருப்பதால், இந்த்ரியங்கள் செய்துகொண்டிருக்கும் வ்யாபாராங்களை, அவன் எப்படி அறிவான்?

ஸமுத்ரக்கரையில் நின்று கொண்டிருக்கிறவனுக்கு, பெரிய அலைகள் சிறிய அலைகளை விழுங்கிவிடுவதாய்த் தோன்றினாலும், ஸமுத்ரத்தின் ஜலத்தின் கண்ணுக்கு எல்லா அலைகளும் தன் ஸ்வரூபமாய்த் தோன்றி, அலைகள் என்பதும், ஒன்றை ஒன்று விழுங்கிவிடுகிறது என்பதும் தோன்றாமற்போகும் அல்லவா? அப்படியே, எங்கும் நிறைந்திருக்கும் ஆத்ம ஸ்வரூபத்தில் நிலைகொண்டவனுக்கு, தன்னாற் செய்யப்படத்தக்கதாய் வேறு வஸ்து ஒன்று இல்லாமற் போகிறது. தங்கத்தினாலேயே சண்டிகாதேவியும், தேவியின் கையிற் சூலமும், தேவியால் ஸம்ஹரிக்கப்பட்ட மஹிஷாஸுரனும், செய்து வைக்கப்பட்டால், பக்தன் கண்ணுக்கு அவை வேறுவேறாய்த் தோன்றினாலும், தங்கத்தின் கண்ணுக்கு அவை அனைத்தும் தானாகவே அல்லவா. தோன்றும் ஓர் துணியில் சித்ரமாக எழுதியிருக்கப்பட்ட நெருப்பும் ஜலமும், பார்க்கிறவனுக்கு வேறு வேறாய்த் தோன்றியபோதிலும், அத்துணியை அந்நெருப்பு கொளுத்துவதுமில்லை, அந்த ஜலம் நனைப்பது மில்லை.

அஞ்ஞானத்தினின்று முக்தனாய் ஆத்மஸ்வரூபத்தில் நிலைகொண்டவனுடைய தேஹம், பூர்வகர்ம ஸம்ஸ்காரத்திற்கு வசப்பட்டதாய், ஆடி அசைவதைப் பார்த்து, ஞாநமில்லாத உலகத்தார், அவன் கர்மங்களை செய்கிறான் என்பார்கள். அப்படி ஏற்படும் கர்மங்களால் மூன்று லோகங்களும் அழிந்து போனாலும், அவன் அவற்றைச் செய்து வைத்தான் என்று, சொல்லத்தகாது. ஸூர்யன் இருட்டைப் பார்த்து, பின்பு அதை அழித்து விடுகிறான், என்று சொல்லத்தகாததுபோலும்

இரண்டாவதான வஸ்துவின் ஞானமே அற்றுப்போயிருக்குமவன், எதைக் கொல்வான்? ஊர்வாரி நீர் கங்கையிற் கலந்துபோனபின், அது தன்னுடைய அபவித்ரதையை இழந்துவிடுதல்போலும், ப்ரஹ்மத்தோடு கலந்து போனவன் புத்தியில், பாபம் புண்யம் என்ற நினைப்பின் வாஸனைகூட இல்லாமற் போகிறது. நெருப்பு நெருப்பைச் சுடுமா? கத்தி தன்னைத்தானே குத்திக்கொள்ளுமா? அப்படியே க்ரியாஜாதங்கள் தன்னை விட்டு வேறானவை, என்ற ஞானம் அற்றுப்போன வனுடைய புத்தியில், எந்தக் கர்மம் ஒட்டிக்கொள்ளும்?

ஆகவே, கார்யம், கர்த்தா, க்ரியை, ஆகிய இம்மூன்றும், எவனுக்கு ஆத்மஸ்வரூபமாகவே ஆய்விட்டனவோ, அவனுக்கு, சரீரம் முதலியவற்றால் ஏற்படும் கர்மங்களால் கர்மபந்தம் ஏற்படுவதில்லை. கர்த்தாவாகிய ஜீவன், கர்மத்தின் சுரங்கங்கள் ஐந்தையும் தோண்டி, பத்து இந்த்ரியங்களையும் ஸஹாயமாய்க்கொண்டு, ந்யாயம் அந்யாயம் என்ற இரண்டு ரூபங்கள் படைத்த கர்மம் என்னும் கட்டடத்தை, ஓர் க்ஷணப்பொழுதுக்குள் கட்டிவைக்கும் போது, இந்தப் பெருத்த கார்யத்தில் ஆத்மா யாதோர் ஸஹாயமும் செய்வது மில்லை, செய்துவை என்று தூண்டிவைப்பதுமில்லை, ஞானஸ்வரூபியான ஆத்மாவோ, கேவலம் ஸாக்ஷியாய் இருந்துகொண்டு, கர்மத்தைச் செய்வதற்கு முன் ஏற்படும் ஸங்கல்பத்துக்கே, உத்தரவு கொடுப்பதில்லை. அத்துடன், எந்தக்க கர்மங்களைச் செய்துவைக்கும் விஷயத்தில் உலகத்தார் மிக்க ப்ரயாஸப்படுகிறார்களோ, அந்தக் கர்மங்கள் அவன் தேஹத்தாற் செய்து வைக்கப்படும்போது, அவனுக்கு ஓராயாஸமும் ஏற்படுவமில்லை. ஆகவே: ஆத்மாவின் மூர்த்தியாகவே முழுவதும் ஆய்ப்போய்விட்ட அவன் கர்மத்தின் சிறைச்சாலையில் அடைப்பட்டுப் போவ தில்லை. அஞ்ஞானம் என்னும் துணியின்மேல், விபரீதஞானம் என்னும் சித்ரம் எழுதப்படும்போது, ஏற்படுவதான த்ரிபுடி (மூன்று வஸ்துக்களின் சேர்க்கை) எதுவோ அதை இனிச்சொல்வேன் கேள்.

ज्ञानं ज्ञेयं परिज्ञाता त्रिविधा कर्मचोदना ।
करणं कर्म कर्तेति त्रिविधः कर्मसंग्रहः ॥१८॥

க்ஞானம் க்ஞேயம் பரிக்ஞாதா த்ரிவிதா கர்மசோதனா ।
கரணம் கர்ம கர்தேதி த்ரிவிதः கர்ம ஸங்க்ரஹः ॥ 18

ஞானம், ஞாதா, ஞேயம், இவற்றின் ஸ்வரூபம்:

ஜகத்து உண்டாவதற்கு மூன்று பீஜங்களான, ஞானம், ஞாதா, ஞேயம், என்ற இம்மூன்றுமே, கர்மங்கள் உண்டாவதற்கும் காரணம் ஆகின்றன. இவற்றில் ஒவ்வொன்றையும் தனித்தனியாக எடுத்து, அததின் லக்ஷணத்தை வர்ணிப்பேன், கேள், ஹே தநஞ்ஜயா, ஜீவன் என்ற ஸூர்ய பிம்பத்தினின்று, காதுமுதலிய ஐந்து இந்த்ரியங்கள் என்ற அதின் கிரணங்கள் வெளிப்பட்டு ஓடி, விஷயம் என்னும் தாமரை மொக்கை விகஸிக்கச் செய்கின்றன. அல்லது, ஜீவன் என்னும் அரசன், தேஹம் என்னும் சீனி இல்லாத குதிரைமேல் ஏறிக்கொண்டு, இந்த்ரியங்கள் என்னும் ஈட்டியைக் கையிற்பிடித்துக்கொண்டு, விஷயங்களின் ஊரைக் கொள்ளையிட்டுக் கொண்டுவருகிறான், என்றும் சொல்லலாம். இந்த்ரியங்களில் வேலைசெய்து கொண்டு ஜீவனுக்கு ஸுகதுக்கங்களை உண்டுபண்ணிக் கொடுக்கும் ஞானம், ஸுஷுப்தி அவஸ்தையில் எதின் ஸ்வரூபத்தில் லயித்துப்போகிறதோ, அந்த ஜீவஸ்வரூபத்துக்கு ஞாதா என்று பெயர். இந்த்ரியங்களில் ஸஞ்சரித்துக்கொண்டு, ஜீவனுக்கு ஸுகதுக்கத்தை உண்டாக்கி வைப்பதாய், இப்போது சொல்லப்பட்டது எதுவோ, அதுவே ஞானம், அந்த ஞானம் அவித்யையின் வயிற்றினின்று பிறந்து, அப்படிப் பிறந்த உடனேயே, தன்னை மூன்று இடத்திற் பகுத்துவைத்துக் கொள்கிறது.

பின்பு அது தன்னுடைய வ்ருத்திக்குமுன், ஞேயமாகிய விஷயம் என்னும் குண்டுக்கல்லைக்கொண்டு வந்து வைத்துக்கொண்டு, ஞாதாவாகிய ஜீவனைத் தனக்குப்பின்னும் பக்கத்திலும் நிறுத்திவைத்துக் கொள்கிறது. பின்பு ஞாதாவும் ஞேயமும் ஒன்றோ டொன்று ஸம்பந்தப்பட்டு, பரஸ்பரம் வ்யவஹாரம் நடத்திக்கொண்டிருக்கும்போத, அந்த ஞானம் நடுவில் நின்று கொண்டிருக்கிறது. அது ஞேயத்தின் எல்லையை மிதித்தமாத்ரத்தில் தன் ஓட்டத்தை நிறுத்திக்கொண்டு, ஸகலபதார்த்தங்களுக்கும் பெயரிட்டு வைக்கிறது. அதுதான் ஸாமாந்யமாய் ஞானம் என்று உலகத்திற் சொல்லப்படுகிறது. இந்த வார்த்தைக்கு இரண்டாவதில்லை. இனி ஞேயத்தின் லக்ஷணத்தைச் சொல்வேன், கேள். சப்தம், ஸ்பர்சம் ரூபம், ரஸம், கந்தம், என்ற ஐந்தும், ஞேயம் என்ற விஷயத்தின் தர்மங்களாகும். ஒரே மாம்பழம், வேறு வேறு இந்த்ரியங்கள் ஸம்பந்தத்தால் ருசி என்றும், வர்ணம் என்றும், வாஸனை என்றும், ஸ்பர்சம் என்றும், வெவ்வேறு விதப்பட்ட ஞாநத்தை, உண்டாக்கி வைக்கிறதுபோலும், ஞேயம் ஒருவிதப்பட்டதா யிருந்தாலும், அதின் ஞானம், வெவ்வே றிந்த்ரியங்கள் த்வாரா

க்ரஹிக்கப்படுவதால், ஐந்துவிதப்படுகிறது. நதியின் ஓட்டம், அது ஸமுத்ரம் போய்ச் சேர்ந்தமாத்திரத்தில், நின்று போவதுபோலும், ஊர் சேர்ந்தபின் நடை நின்று போவதுபோலும், பயிர்கள், வளர்வது அவை பலித்தபின், ஓய்ந்து போவதுபோலும், இந்த்ரியங்கள் வழியாய் வெளிப்பட்டுப் பரவும் ஞானத்தின் ஓட்டம், எதை அடைந்து நின்றுபோகிறதோ, அதுவே விஷயம் என்றும், ஜ்ஞேயம் என்றும், சொல்லப்படும். இவ்விதம் ஞாதா, ஞானம், ஜ்ஞேயம், ஆகிய இவை நிரூபிக்கப்பட்டுத் தீர்ந்தன, ஹே தனஞ்ஜயா.

இவைகளே கர்மங்களில் ப்ரவர்த்திப்பதற்குக் காரணம் ஆகின்றன:

இம்மூன்றுமே ஸகல கர்ம ப்ரவ்ருத்திக்கும் காரணங்களாகின்றன; எப்படி என்றால், சொல்வேன் கேள். ஜ்ஞேயங்களாகிய சப்தம் முதலிய விஷயங்கள் ஐந்தும், ஞாதாவாகிய ஜீவனால் விரும்பத்தக்கவைகளாயாவது, வெறுக்கத்தக்க வைகளாயாவது இருக்கின்றன. ஆகவே ஞானமானது ஞாதாவுக்கு ஜ்ஞேயத்தைக் காட்டிவைத்தமாத்ரத்தில், அதை க்ரஹித்துக்கொள்ளவோ, அல்லது அதை விலக்கிவைக்கவோ, ஜீவன் ப்ரவர்த்திக்கிறான். மீனைக் கண்ட கொக்கைப் போலும், பூமியில் புதைந்து கிடக்கும் பொருளைப் பார்த்த பிச்சைக்காரனைப் போலும், அழகாய் இருக்கும் ஸ்த்ரீயைப் பார்த்த காமுகனைப்போலும், பள்ளத்தைக் கண்ட நீரைப்போலும், புதிதாய் விகஸித்த பூவைக் கண்ட தேனீயைப்போலும், பால் கறக்கும் வேளையில் அவிழ்த்துவிட்ட கன்றைப்போலும், ஸ்வர்க்கத்தில் உள்ள ஊர்வசி ஸம்பந்தமான விஷயங்களைக் கேட்ட ஓர் மனுஷ்யன், யாகம் என்னும் ஏணியை ஆகாசத்தின்மேல் சாத்தத் தொடங்குவது போலும், ஆகாசத்தில் உயரப்பறந்து கொண்டிருக்குமாண் புறாவானது பெண் புறாவைப் பார்த்தமாத்ரத்தில், வேகமாய் அதினிடத்தில் வந்துசேருதல் போலும், மேகங்கள் கர்ஜ்ஜிக்கும்போது ஆக்காசத்தை நோக்கித்தாவும் மயிலைப்போலும், ஞாதா ப்ரியகரமான ஜ்ஞேயத்தைக் கண்டமாத்ரத்தில், அதை நோக்கிப் போகிறான். ஆகவே ஞானம், ஜ்ஞேயம், ஞாதா, என்ற இம்மூன்றும் கர்மங்களில் ப்ரவ்ருத்திப்பதற்குக் காரணம் ஆகின்றன.

கர்த்தா, காரணம், கர்மம்:

முன் வர்ணிக்கப்பட்டுள்ள ஜ்ஞேயம் என்ற சப்தாதி ஐந்து விஷயங்கள், ஞாதாவாகிய ஜீவனுக்கு, ப்ரியம், விப்ரியம், என்ற

இவ்விரண்டில் ஒன்றாக ஏற்படுகிறது; ப்ரியப்பட்டதாய் இருந்தால் அதை அடைந்து புசிப்பதற்கு ஓர் க்ஷணப்பொழுது தாமதம் ஏற்பட்டாற்கூட, அதை அந்த ஞாதா ஸஹிக்க மாட்டான். அந்த விஷயமே ஒருவேளை ப்ரியப்படாததாய் ஏற்பட்டுவிட்டால், அதை விலக்கிவைப்பதில் ஏற்படும் காலவிளம்பத்தில், ஒவ்வொரு க்ஷணமும் ஜீவனுக்கு ஓர் யுகமாய்த் தோன்றும். ஓர் இடத்தில் ஸர்ப்பம் கிடக்க அதை நீலமணியால் ஏற்பட்ட ஹாரம் என்று நினைத்து, ஞாதா அதை எடுத்துக்கொள்ள, கையை நீட்டுகிறான். அது பாம்பென்று தெரிந்துகொண்டவுடன், கையை சடுக்கென்று பின்வாங்கிவிடுகிறான்.

இவ்விதமாய் ஞாதா வானவன் ப்ரியாப்ரியமா யிருக்கும் விஷயங்களைக் கண்டு, அவற்றை க்ரஹித்துக்கொள்ளவோ, த்யஜிக்கவோ, ஓர் வ்யாபாரத்தை அநுஷ்டிக்கிறான். மல்லயுத்தத்தில் மிக்க ஸாமர்த்யம் படைத்த ஒருவன், பெருத்த ஸேனைக்கு அதிபதியாய் ரதத்தின்மேல் உட்கார்ந்துகொண்டு போகிறவனா யிருந்தாலும், அவன், தன்னுடன் மல்லயுத்தம் செய்யத்தக்க ஒருவனைப் பார்த்தவுடன் அவன் மிக்கக் கோபங்கொண்டு ரதத்தினின் றிறங்கி, பதாதியாய் அந்த ப்ரதிமல்லனுடன் யுத்தம் செய்ய வருதல்போலும், சாப்பிடுகிற யஜமானன் ஒருவன் தானே சமையல் செய்துகொள்ளத் துவக்கினாற் போலும், புஷ்பத்தின் மகரந்தத்தைப் புசிக்கும் தேன் வண்டானது, தானே புஷ்பத்தோட்டத்தைப் பயிர்செய்ய ஏற்பட்டாற்போலும், உரைகல்லானது உரைக்கிறவ னானாற்போலும், தேவன் தானே தன் கோவிலைக் கட்டிக் கொள்ள ஆரம்பித்தாற்போலும், ஞாதாவாயிருந்தவனே ஜ்ஞேயத்தைப் புசிக்க வேண்டும் என்னுமாசையால், இந்த்ரியஸமூஹங்களுக்கு வேலையிட்டு வைக்கும்போது, கர்த்தா வாகிறான்.

இப்படி ஞாதா கர்த்தா ஆனபின், அவன் ஞானத்தைக் கரணமாய்ச் (கருவியாய்) செய்து வைக்கிறான். பின்பு ஜ்ஞேயம் இயற்கையாகவே கார்யம் ஆய்விடுகிறது. இருட்டில் கண்ணின் தேஜஸ் மாறிப் போவதுபோலும், ஞானாம்சங்களாகிய த்ரிபுடியே, இவ்விதம் கர்மாம்சங்களாகிய த்ரிபுடியாய் மாறிவிடுகிறது, ஹே அர்ஜுநா, அத்ருஷ்டம் அநாதரவு செய்துவிட்டால், சீமானுடைய ஸுகபோகங்கள் மாறிப்போவது போலும், பௌர்ணிமைக்குப் பின்பு சந்த்ரனுடைய கலை குறைந்து போவது போலும், எப்போது ஞாதாவானவன் கரணங்களை (இந்த்ரியங்களாகிய கருவிகளை)

நடத்திவைக்கிறானோ, அப்போது அவனுக்கு ஞாத்ருத்வம் மாறிப் போய், கர்த்ருத்வம் ஏற்படுகிறது. அந்த ஸ்திதியில் ஏற்படும் கரணம், கர்மம், கர்த்தா வென்னும த்ரிபுடியின் லக்ஷணங்களைச் சொல்வேன், கேள். புத்தி, மனஸ், சித்தம், அஹங்காரம் என்ற இவை நான்கும் அந்தக்கரணத்தின் ப்ரகாரங்கள் ஆகும். பாஹ்ய கரணங்கள் தோல், காது, கண், நாக்கு, மூக்கு, என்று ஐவகைப்பட்டவையாகின்றன. உள்ளே இருக்கப்பட்டவையான நான்கு கரணங்களைக்கொண்டு கர்த்தா தான் செய்ய உத்தேசித்ததான கர்மத்தால் உண்டாகக்கூடிய ஸுகதுக்கங்களின் தாரதம்யத்தை (ஏற்ற குறைவை) விசாரித்துப் பார்கிறான். பின்பு அதினால் ஸுகமே ஏற்படும் என்று தீர்மாணம் செய்துகொண்டால், பின்பு வெளிப்பக்கத்தில் இருப்பவையான கண்முதலிய பத் திந்திரியங்களாகிய கரணங்களைத் தூண்டிவைத்து, உத்தேசித்த கர்த்தவ்யம் முடிவுபெறும் வரைக்கும், அவைகளை உழைத்துத் தீரும்படி செய்துவைக்கிறான். உத்தேசித்த கார்யம் துக்கத்தையே உண்டாக்கிவைக்கும் என்று தெரிந்துகொண்டால், அந்தக் கர்த்தா அதைக் கைவிட்டு, அவ்விந்த்ரியங்களை அதினின்று திரும்பும்படியாய்ச் செய்துவைக்கிறான்.

பின்பு தான்யக் குவியலில் உள்ள பதர் முழுமையும் காற்றிற் பறந்துபோகும் வரைக்கும், பயிரிடுகிறவர்கள் அதைக் காற்றில் தூவிக்கொண்டிருப்பது போலும், துக்கம் முற்றிலும் ஒழிந்து போகும் வரைக்கும் அவன் அவ்விந்த்ரியங்களை இடைவிடாது உழைத்துத் தீரும்படி செய்துவைக்கிறான். இப்படி ஞாதாவான ஜீவன் விஷயங்களை க்ரஹித்துக்கொள்ளவோ, ஒதுக்கிவைக்கவோ, இந்த்ரியங்கள் வ்யாபாரத்துக்கு அத்யக்ஷம் (தலைமை, நியாமகத்வம்) பூண்டிருக்கும்போது, அவனுக்குக் கர்த்தா வென்று பெயர். கர்த்தாவின் ஸகல கர்மங்களிலும் இந்த்ரியங்களானவை கருவிகள்போல் உபயோகிக்கப்படுவதால், அவை கரணங்கள் என்று சொல்லப்படுகின்றன. இந்தக் கரணங்களைக்கொண்டு கர்த்தா செய்துவைக்கும் க்ரியையால் வ்யாபிக்கப்பட்டது எதுவோ, அதுவே கர்மம் என்று சொல்லப்படும். நகையானது தட்டானுடைய புத்தியாலும், சந்த்ரனுடைய ப்ரகாசம் சந்த்ர கிரணங்களாலும், கொடியானது வளர்தல் என்னும் செயலாலும், ப்ரகாசம் ப்ரபையாலும், கரும்பின் ரஸம் தித்திப்பாலும், ஆகாசம் அவகாசத்தாலும், வ்யாபிக்கப்பட்டிருப்பதுபோல், கர்த்தாவின் க்ரியையால் வ்யாபிக்கப் பட்டிருப்பது எதுவோ, அது கர்மம் ஆகும்.

இவ்விதம், ஹே புத்திஸாமர்த்யம் படைத்தவர்களுக்குள் சிறந்தவனே, கர்மம், கர்த்தா, கரணம், என்ற இம்மூன்றும் உனக்குச் சொல்லித்தீர்ந்தன. ஞாநம், ஞாதா, ஜ்ஞேயம், ஆகுமிம் மூன்றும் கர்மத்திற் ப்ரவர்த்திப்பதற்குக் காரணமாயிருப்பது போலும், கர்த்தா, கரணம், கார்யம் ஆகிய இம்மூன்றும் கர்மத்துக்கு களஞ்சியம் ஆகின்றன. நெருப்பிற் புகை வைக்கப்பட்டிருப்பதுபோலும், விதையில் மரம் அடைத்து வைக்கப்பட்டிருப்பது போலும், மனஸில் காமம் எப்போதும் நிறைத்து வைக்கப்பட்டிருப்பதுபோலும், தங்கம் தங்கக்கனியில் அடைபட்டிருப்பதுபோலும், கர்த்தா, கரணம், க்ரியை, என்ற இந்த த்ரிபுடிக்குள் கர்மம் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தக் கார்யத்துக்கு நான் கர்த்தாவென்றோர் வ்யவஹாரம் ஏற்படும் போதெல்லாம், ஆத்மா கர்மத்தில் யாதோர் விதமான ஸம்பந்தமும் அற்றதாய், வெகுதூரம் விலகியே நிற்கிறது. ஆகவே, ஆத்மா கர்மத்தோடு ஸம்பந்த மற்றிருப்பதாகவே மிகவும் தெளிவாய் ஏற்படுகிறது. இதை நன்றாய் அறிந்துகொண்ட உனக்கு, இதைத் திரும்பித் திரும்பிச் சொல்லிவைப்பது அநாவச்யம்.

ज्ञानं कर्म च कर्ताच त्रिधैव गुणभेदतः ।
प्रोच्यते गुणसङ्ख्याने यथावच्छृणु तान्यपि ।।१९।।

க்ஞானம் கர்ம ச கர்தா ச த்ரிதைவ குணபேததः ।
ப்ரோச்யதே குண ஸங்க்யானே யதாவச் ச்ருணு தான்யபி ॥ 19

ஞாநம், கர்த்தா, கர்மம், இவை மூன்றின் மூவகைப்பட்ட பேதங்கள்:

கீழே விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கும். ஞாநம், கர்த்தா, கர்மம், என்ற இவை மூன்றும் முக்குணங்களின் சேர்க்கையால் மூவகைப்படுகின்றன. ஆகையால் ஞாநம் கர்மம், கர்த்தா, என்ற இம்மூன்றும், எப்போதும் ஒரேவகைப்பட்டிருக்கும் என்று நம்புவதற்கு இடம் இல்லை. இரண்டு குணங்களின் சேர்க்கையை அடைந்த இவை, பந்தத்துக்கே காரணம் ஆகின்றன. ஒன்றின் சேர்க்கையே விடுதலை செய்துவைக்க ஸாமர்த்யம் படைத்தது ஆகிறது. இவற்றின் ஸாத்விக ப்ரகாரத்தை நீ நன்றாய் அறிந்து கொள்வதை உத்தேசித்து, முக்குணங்களின் சேர்க்கையால் இவற்றில் ஏற்படும் பேதங்களைச் சொல்வேன், கேள். இவ்விஷயம் ஸாங்க்ய சாஸ்த்ரத்திற் றெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஸாங்க்யசாஸ்த்ரம் தத்வவிசாரத்தால் நிறைந்துள்ள பாற்கடல்

என்றும், ஆகமஞானம் என்னும் குமுதபுஷ்பத்தை விகஸிக்கச்செய்யும் சந்த்ரன் என்றும், ஞாநப்பார்வைபடைத்த சாஸ்த்ரங்களுக்குள் அரசன் என்றும் சொல்லும்படியாய் இருக்கிறது. ஒன்றோடொன்று கலந்துகிடக்கும் இராப்பகற்களைப்போல், கலந்துகிடக்கும் ப்ரக்ருதிபுருஷர்களைப் பிரித்துக் காட்டிக்கொடுக்கும் ஸூர்யன் என்றே, இந்த சாஸ்த்ரத்தைச் சொல்லவேண்டும். இந்த சாஸ்த்ரத்தினுதவியைக்கொண்டு, கரையற்றதான மோஹக்கடலில் நிறைந்து கிடக்கும் இருபத்துநான்கு தத்வங்களையும் அளந்து தள்ளி, அவற்றிற்கு அப்புறம் இருக்கும் பரேசனைக் (பரமாத்மாவை) கண்டுகொண்டு ஸுகம் பெறக்கூடும், ஹே அர்ஜுநா. இவ்வளவு பெருமைபடைத்த ஸாங்க்யசாஸ்த்ரம், எந்த முக்குணங்களின் பெருமையை வர்ணிக்கிறதோ, அக் குணங்கள் செய்துவைக்கும் வேலையை வர்ணிப்பேன் கேள்.

இம்முக்குணங்கள், தங்களுடைய இயற்கையான பலத்தால், த்ருச்யபதார்த்தங்களனைத்தையும் ஆக்ரமித்துக்கொண்டு, அவற்றை மூவகைப்படுத்தி தங்கள் முத்ரையை அவற்றின்மேல் பதித்து வைக்கின்றன. ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற இம்மூன்று குணங்களின் சக்தி, ப்ரஹ்மா முதற்கொண்டு புழு ஈறாக உள்ள ஜீவராசிக ளனைத்தையும், மூவிதப்பட்ட அவஸ்தைகளுள்ளனவாய்ச் செய்துவைக்கின்றது. ஆனால் விச்வத்தில் உள்ள ஸகல பூதங்களும், எந்த ஞாநம் போதிக்கப்பட்டுப் போனதால், குணபேதநிலையை அடைகின்றனவோ, அந்த ஞானத்தின் பேதங்களை முதன்முதற் சொல்வேன். கண் பார்வையை, குற்றமற்று செவ்வையாய் இருக்கும்படி செய்து கொண்டால், எல்லாவஸ்துக்கள் விஷயத்திலும் செவ்வையான பார்வை யேற்படுவது போலும், சுத்தமான ஞாநம் இன்ன தென்று தெரிந்துகொண்டு, அதைத் தேடிக்கொண்டால், எல்லாம் சுத்தம் ஆய்விடுகிறது. ஆகவே ஸாத்விக ஞாநம் என்பது எதுவோ, அதை இப்போது சொல்வேன் கவனித்துக் கேள், என்று கைவல்ய குணநிதான்னான (கைவல்யமென்ற குணத்துக் காதாரஸ்தாநமான) ஸ்ரீக்ருஷ்ணன் சொன்னார்.

सर्वभूतेषु येनैकं भावमव्ययमीक्षते ।
अविभक्तं विभक्तेषु तज्ज्ञानं विद्धि सात्त्विकम् ।।२०।।

ஸர்வ பூதேஷு யேநைகம் பாவ மவ்யய மீக்ஷதே ।
அவிபக்தம் விபக்தேஷு தஜ்ஜ்ஞானம் வித்தி ஸாத்த்விகம் ॥ 20

ஸாத்விகஞானம்:

அர்ஜுனா, எந்த ஞானம் உதயமானதால் ஜ்ஞேயம், ஞாதா, என்ற பேதம் முற்றிலும் உணரப்படாமற்போகிறதோ, அதுவே ஸரியான ஸாத்விக ஞானம் ஆகும். ஸூர்யனுக்கு இருட்டைப் பார்க்கக்கிடைக்காதது போலும், ஸமுத்ரம் தன் ஜலத்தின் இந்த அம்சம் இந்த நதியைச் சேர்ந்தது என்று தெரிந்துகொள்ளாதது போலும். ஒருவன் தன் நிழலைக் கட்டிக்கொள்ளப் பார்த்தால், அது தன் கைக்கு அகப்பட்டுக்கொள்ளாததுபோலும், எந்த ஞானம் ஏற்பட்டபின், சிவன் முதற்கொண்டு த்ருணம் முடிவாக உள்ள பூதங்களனைத்திலும் பேதபாவம் உணரப்படாமற் போகுமோ, சுவற்றில் எழுதியிருக்கும் சித்ரத்தைக் கையாற் றடவிப்பார்த்தால் எப்படியோ, உப்பை ஜலத்திற்போட்டுக் கரைத்துவிட்டால் எப்படியோ, ஸ்வப்நத்தினின்று விழித்துக்கொண்டுவிட்டால் எப்படியோ, அப்படியே எந்த ஞானத்தின் புயனாக ஞாதவ்யம், ஞாதா, ஞானம், என்ற இந்த த்ருபுடியின் ஞானம் அற்றுப்போகுமோ, தங்கத்தின் மாற்றை அறிந்துகொள்ள வேண்டியவன், நகையை உருக்கித் தங்கக்கட்டி யாய்ச் செய்துகொள்ளாமலே, அதைத் தெரிந்து கொள்வது போலும், ஜலத்தை மொண்டு கொள்ளவேண்டியவன், மேல் இருக்கும் அலைகளை விலக்கிவைக்காமலே மொண்டுகொள்ளுதல் போலும், எந்த ஞானத்தின் காதில் த்ருச்யவஸ்துவின் வார்த்தையே படுவதில்லையோ, அந்த ஞானமே ஸாத்விகஞான மாகும். அப்பா கண்ணாடியைப் பார்க்கப்போகும்போது, தன் ப்ரதிபிம்பமே தன்முன்னிற்பதுபோலும், எந்த ஞானம் ஏற்பட்டபின், எவ்வஸ்துவைப்பார்த்தாலும், அது ஓர் ஜ்ஞேய வஸ்துவாய்த் தோற்றாமல் ஞாதாவின் ஸ்வரூப மாகவே தோன்றுமோ. அதையே ஸாத்விக ஞானம் என வேண்டும். அதுவே மோக்ஷலக்ஷ்மியின் வீடு. இது நிற்கட்டும் இனி ராஜஸ ஞானத்தின் லக்ஷணத்தைச் சொல்வேன், கேள்.

पृथक्त्वेन तु यज्ज्ञानं नानाभावान्पृथग्विधान् ।
वेत्ति सर्वेषु भूतेषु तज्ज्ञानं विद्धि राजसम् ॥ २१ ॥

ப்ருதக்த்வேன து யஜ்ஞானம் நாநாபாவான் ப்ருதக்விதான் ।
வேத்தி ஸர்வேஷு பூதேஷு தஜ்ஞானம் வித்தி ராஜஸம் ॥ 21

ராஜஸஞானம்:

எந்த ஞானமானது பேதபுத்தியின் கச்சத்தைப் பற்றிக்கொண்டே நடக்கிறதோ, அது ராஜஸஞானம் ஆகும்.

பூதங்கள்விஷயத்தில் நாநாத்வம் பாராட்டிக்கொண்டு, தன்னை வேறுவேறு துணுக்குகளாய்ச் செய்துகொண்டு. ஞாதாவுக்கு எது ப்ரமத்தை உண்டாக்கிவைக்குமோ, விழிப்பில் ஏற்படும் வஸ்துக்களின் யதார்த்தஞானத்துக்குக் குறுக்காக நித்ரை யென்னும் திரை போடப்பட்டு ஸ்வப்நங்கள் என்னும் குப்பைகள் கூடிக்கொள்வதுபோலும், ஆத்மஸ்வரூபத்தின் சுற்றிலும், மித்யா மோஹத்தை உண்டாக்கிவைத்து, ஜாக்ரத, ஸ்வப்ந, ஸுஷுப்தி, அவஸ்தைகளின் லீலைகளை ஜீவனுக்கு எந்த ஞானம் காட்டிவைக்குமோ, குழந்தைகளுக்கு நகைகளைக் காட்டினால், அவற்றில் இருக்கும் தங்கத்தின் ஞாநம் அவர்களுக்கு ஏற்படாததுபோலும், நாமரூபங்களால் அத்வைதாத்மஸ்வரூபம் எந்த ஞாநத்தினின்று, தூரமாக விலகி நிற்குமோ, மடக்கு, குடம், முதலிய மட்பாத்ரங்களைப் பார்த்து, மூடர்கள் அவற்றில் அடங்கியிருக்கும் மண்ணைத் தெரிந்து கொள்ளாதது போலும், அறிவில்லாத ஒருவன் தீபத்தைப் பார்த்து, அதை நெருப் பென்று அறிந்துகொள்ளாதது போலும், வஸ்த்ரத்தைப் பார்த்து, அது நூல் என்ற அறிந்து கொள்ளாததுபோலும், ஓர் துணியின் மேல் எழுதியிருக்கும் சித்ரங்களைப் பார்த்து, அது துணி யென்றறிந்துகொள்ளாதது போலும், எந்த ஞானத்தின் கார்யமாய், பூதங்கள் பலவிதப்பட்டு வேறுவேறாகத் தோன்றி, அவை யெல்லாம் ஒன்றே என்னும் ஓர் பாவனை ஏற்படாமற் போய்விடுமோ, அன்றியும் விறகுகட்டைகள் வெவ்வேறாய் இருக்கக்கண்டு, அவற்றை பற்றிக்கொண்டு இருக்கும் நெருப்பும் வெவ்வேறானது என்று எண்ணிக்கொள்ளுதல்போலும், வெவ்வேறு பூக்களினின்றுண்டாகும் வாஸனையை வெவ்வேறாக பாவித்துக்கொள்ளுதல்போலும், ஜலத்தில் ஏற்பட்ட அலைகளால் அதிற்றோன்றும் சந்த்ரனுடைய ப்ரதிபிம்பம் பேதித்துப் போதலால், சந்த்ரனே பேதித்துப் போனதாக பாவிப்பதுபோலும், பதார்த்தங்கள் வெவ்வேறு விதப்பட்டு, சிறிதும் பெரிது மான ரூபங்களுடையனவா யிருப்பதைப் பார்த்து, வஸ்துவின் ஏகத்வம் உணரப்படாமல், புத்திபேதம் எந்த ஞாநத்தால் ஏற்படுமோ, அதுவே ராஜஸ ஞானமாகும். இனி, வழிப்போக்கன், பக்கத்தில் இருக்கும் பறைச்சேரியில் நுழையாதிருக்கும்படி, பறையடித்துக் காட்டுவதுபோலும் தாமஸ ஞானத்தை ஒழித்துவைப்பதற்காக அதின்குறிகளைச் சொல்வேன், கேள்.

यत्तु कृत्स्नवदेकस्मिन्कार्ये सक्तमहैतुकम् ।
अतत्त्वार्थवदल्पं च तत्तामसमुदाहृतम् ।।२२।।

யத்து க்ருத்ஸ்நவதேகஸ்மின் கார்யே ஸக்தமஹைதுகம்।
அதத்வார்த வதல்பம் ச தத்தாமஸ முதாஹ்ருதம் ॥ 22

தாமஸ ஞானம்:

இந்த ஞானமானது சாஸ்த்ரவிதி யென்னும் வஸ்த்ரத்தை உடுத்திக்கொள்ளாமல், நக்நமாய் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கும். ஆகவே வேதம் இதற்கு முகம் காட்டாமல், முதுகைக் காட்டிக்கொண்டிருக்கும். இதர சாஸ்த்ரங்களும் இதைத் தாங்கள் கூட்டத்தினின்று வெளிப்படுத்தி, இதை நிந்தித்தற்கூடத் தங்களுக்குத் தீட்டை உண்டாக்கிவைக்கும் என்று, இதை ம்லேச்சதர்ம மென்ற மலைமீதுள்ள காடுகளுக்கு அனுப்பித்து வைக்கும். இந்த ஞானம் தமோகுணம் என்னும் பிசாசால் ஆக்ரமிக்கப்பட்டு, வெறிபிடித்து அலைந்து திரியும். இந்த ஞாநம் படைத்தவன், சரீரஸம்பந்தம் செய்து கொள்ளும் விஷயத்தில் ஒரே கோத்ரத்தாராய் இருப்பதையும், நெருங்கின பாந்தவ்யத்தையும், ஓர் தடையாய்ப் பாராட்டாமல், பதார்த்தங்களைப்புசிக்கும் விஷயத்தில், சாஸ்த்ர நிஷேதத்தை அறியாமல், பாழடைந்த ஊருக்கு துரத்திவைக்கப்பட்ட ஓர் நாயைப்போல், தனக்குக் கிடைக்காததாயாவது, தான் தின்னும்போது வாயைச்சுட்டுப் புண் படுத்திவைப்பதாயாவது, இருக்கும் வஸ்துவை மாத்ரம் தள்ளிவைத்து, மற்றெதையும் புசிக்க ஸித்தமா யிருப்பான் எலி தங்கத்தை அபஹரிக்கும்போது, அது உயர்ந்த மாற்றுள்ளதா, தாழ்ந்த மாற்றுள்ளதா, என்று பாராததுபோலும், மாம்ஸம் சாப்பிடுகிறவன், கருப்பாயிருக்கும் ம்ருகத்தின் மாம்ஸமா, வெளுப்பாயிருக்கும் ம்ருகத்தின் மாம்ஸமா, என்று பாராததுபோலும், காட்டுத்தீ தான் சாப்பிட்டுவிடத் தகுந்தது தகாத தென்று பாராதது. போலும், ஈயானது செத்துப்போன தென்றும், உயிரோ டிருப்பதென்றும் பாராமல், ஸகல தேஹங்கள்மேலும் மொய்த்துக்கொள்வதுபோலும், காக்கை, தனக் கிட்டுவைத்த பலி யென்றும், வாந்தியெடுத்த வஸ்து வென்றும், புது அன்னம் என்றும் ஊசி நாறிப்போன தென்றும், பாராததுபோலும், இது சாஸ்த்ரத்தால் நிஷேதிக்கப்பட்டதாகையால் இதை ஒழித்துக் கொள்ள வேண்டும், இது விதிக்கப்பட்ட தாகையால் இதை ஆதரவுடன் அநுஷ்டிக்கவேண்டும், என்ற விஷயத்தின் ஸம்பந்தமான வார்த்தையையே இவன் கேட்டறியான்.

எதெது கண்ணிற் படுமோ, அதது அனைத்தும் போகத்துக்கு ஏற்பட்ட விஷயமே என்று இவன் மதித்து, அதைக்

கைப்பற்றிக்கொண்டு, அது ஸ்த்ரீயானால் தன் காமபூர்த்திக்குமே, அது மற்றவஸ்துவானால் தன் வயிற்றை நிரப்பிக்கொள்வதற்குமே, அதை உப்யோகப்படுத்திக் கொள்வான். இவன், ஜலத்தில் தாஹத்தைத் தீர்த்து ஸுகம் கொடுக்கும் திறமையொன்றே இருப்பதாக நினைத்து, சில ஜலங்கள் பாபத்தைப் போக்கிவைக்கும் தீர்த்தங்களாக இருப்பதை அறியான். அவ்வாறே, தின்பண்டங்களில் வாய்க்கு ருசியாய் இருப்பதையே சுத்த மென்றும், ருசியற்றவற்றையே அசுத்த மென்றும், இவன் பாவிப்பானே தவிர, மற்றப்படி ஆஹாரவிஷயத்தில் சுத்தாசுத்தம் என்று ஒன்றிருப்பதாக அறியான். அன்றியும் தனக் காகவேண்டிய கார்யத்திற்கு எவர்கள் உதவுவார்களோ, அவர்களே பந்துக்க ளென்றும், ரக்தஸம்பந்த முள்ளவர்கள் பந்துக்க ளாகார்கள் என்றும், இவன் மதிப்பான். மருத்துவுக்கு ஜகத் முழுவதும் மன்னமாய்த் தோற்றுவது போலும், அக்நிக்கு அது விறகுகட்டையாய்த் தோற்றுவதுபோலும், இந்த தாமஸஞானம் படைத்தவனுக்கு, அது தன் ஸொத்தாய்த் தோன்றும். இவ்விச்வம் முழுவதையும் தன் தேஹத்தை ஸுகப்படுத்தி த்ருப்தி செய்துவைப்பதற்காகவே, ஏற்பட்ட விஷய ஜாதமாய் இவன் பாவித் திருப்பான், ஆகாசத்தினின்று கீழே விழும் நீர் அனைத்தும் ஸமுத்ரமே போய்ச் சேரவேண்டியதுபோலும், மனுஷ்யர்கள் செய்யும் வ்யாபாரங்களனைத்துக்கு முத்தேசம் வயிற்றை நிரப்பிக் கொள்வதே என்றிவன் எண்ணுவான். இதைத் தப்ப, ஸ்வர்க்கம் நரகம் என்ற இவை இருக்கின்றன வென்றும், இவற்றை ஹேதுக்களாய்க் கொண்டு, உலகத்தில் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள் ஏற்படுகின்றன வென்றும், மற்றும் உள்ள இப்படிப்பட்ட விதி விலக்குகளையும், இந்த ஞாநம் படைத்தவன் அறியான்.

இவனுடைய புத்தி, தேஹம் என்னும் சிறுதுணுக்கையே ஆத்மா வென்றும், கல்லால் அமைந்த ஓர் உருவத்தையே ஈச்வரன் என்றும், பாவித்துக் கொண்டு, இந்த வரம்பைக் கடந்துபோக அறியாது. அன்றியும் தேஹம் அழிந்துபோகவே, ஆத்மாவும், அதனால் செய்யப்பட்ட கர்மமும், அழிந்துபோகிறதே, பின்பு அந்தக் கர்மபலத்தைத் புசிப்பதற்கு எது மிகுந்து நிற்கிறது? இந்த ஈச்வரன் ஜிவர்கள் செய்யும் கர்மங்களைப் பார்த்துக்கொண்டு, அவர்கள் அந்தக் கர்மங்களின் பலனைப் புசிக்கும்படி செய்துவைப்ப துண்மையானால், தேவனையே விற்றுத் தின்றுவிடுகிறார்களே, இது எப்படி நேர்கிறது? க்ராமத்திலிருக்கும் கோவிலில் இருக்கும் ஈச்வரன், ஜநங்களை அடக்கி ஆள்வது உண்மையானால்,

தேசத்தி லிருக்கும் மலை ஏன் ஒன்றும் செய்யாமல் இருந்த இடத்திலேயே இருக்கிறது, என்று இவன் பேசுவான். ஒருவேளை ஈச்வரனும் ஆத்மாவும் உண்டென்றிவன் ஒப்புக்கொண்டாற்கூட, ஈச்வரனைக் கல்லாகவும், ஆத்மாவை தேஹமாகவுமே பாவிப்பான். சாஸ்த்ரங்களில் வர்ணிக்கப்பட்டவைக ளாகிய புண்யபாபங்கள் உண்மை யற்றவை யென்று மதித்து, அக்நியைப்போல், எதிர்ப்பட்டதை யெல்லாம் புசிப்பதே ஹிதம் என்றிவன் எண்ணி யிருப்பான். மாம்ஸத்தால் அமைந்த கண்ணுக்கு எவை புலப்படுமோ, இந்த்ரியங்கள் எவற்றில் ருசியை உண்டாக்கிவைக்குமோ. அவையே உண்மையானவை யென்று இவன் உறுதியாய் நம்பியிருப்பான். மேலும் வளர்த்துவதென்?

இப்படிப்பட்ட அறிவுள்ளவ னென்று ஓர் ப்ரஸித்தி படைத்து, அதைப் பெருக்கிக்கொண்டே போகிறவன் எவனோ, அவன், ஆகாசத்தில் பரவிக்கொண்டுபோகும் புகைபோலும், நாணற்குழாய் நடுவில் இருக்கும் சோறுபோலும், கருப்பந்தண்டினின் றுண்டாகும் கதிர்போலும், நபும்ஸகன் போலும் சப்பாத்தியின் காடுபோலும், குழந்தையின் சித்தம்போலும், திருடன் கைப்பட்ட பொருள்போலும், ஆட்டின் கழுத்து முலைபோலும், எவ்வளவு ஓங்கி வளர்ந்தாலும். ஓர் விதமாயும் பயன்படமாட்டான்.

இப்படிப் பயனற்றதாயும் பாழடைந்ததாயும் யாதோர் அறிவு இருக்குமோ, அதுவே தாமஸஞானம் என்று நான் சொல்வேன். இதை ஞானம் என்று பேசுவது பிறவிக்குருட னொருவனுடைய கண் விசாலமாயிருக்கிறதென்று சொல்வது போலுமேயாகும். செவிடன் காது நேராயிருக்கிறதென்றும், பருகத்தகாத ஓர் வஸ்துவைப் பாநம் என்றும், சொல்வதுபோலுமே, இந்தத் தாமஸ ஞானத்தை ஞானம் என்று சொல்வது ஆகும். இது நிற்கட்டும். இப்படிப்பட்ட ஞாநம் எதுவோ, அது ஞானமே அல்ல, அதைத் தமஸ் ஸென்றே சொல்லவேண்டும். ஹே சரோதாக்களுக்குள் சிறந்தவனே, இப்போது மூக்குணங்களின் சேர்க்கையால் மூவிதப்பட்டுப்போகும் ஞானத்தின் லக்ஷணங்கள் உனக்குச் சொல்லித் தீர்ந்தன.

மேல்வரும் மூன்று ச்லோகங்களுக் கவதாரிகை:

ஹே தநுர்த்தரா, இப்படி மூவகைப்பட்ட ஞாநங்களின் ப்ரகாசத்தால், கர்த்தாவினிடத்தில் ஏற்படும் க்ரியைகளை வர்ணிப்பேன், கேள். நீரைப்பாய்ச்சுகிறவன், அதை எந்தெந்தக்

கால்வழியாய்த் திருப்புகிறானோ, அந்தந்தக் கால்வழியாய் அது ஓடுவதுபோலும், மூவகை ஞானத்தை அநுஸரித்து ஏற்படும் கர்மங்களும் மூவகைப்படுகின்றன. அவற்றில் ஸாத்விக கர்மங்களை முதன் முதல் வர்ணிப்பேன், கேள்.

नियतं सङ्गरहितमरागद्वेषतः कृतम् ।
अफलप्रेप्सुना कर्म यत्तत्सात्त्विकमुच्यते ।। २३ ।।

நியதம் ஸங்கரஹித மராகத்வேஷத: க்ருதம் ।
அபல ப்ரேப்ஸுநா கர்ம யத்தத் ஸாத்த்விக முச்யதே ॥ 23

ஸாத்விக கர்மம்:

தன்னதிகாரத்துக் குரியவையாய் எந்தெந்தக் கர்மங்கள் செய்ய வேண்டியவையாய் ஒருவனுக்கு நேருமோ, அவற்றை, பதிவ்ரதையானவள் தன் புருஷனை ஆலிங்கனம் செய்துகொள்வதுபோல், அவன் ஸந்தோஷமாய்ச் செய்துமுடிக்க வேண்டும். சிவந்த தேஹத்துக்குச் சந்தனப்பூச்சுப் போலும், ஸ்த்ரீகள் கண்ணுக்கு மைபோலும், தன்னதிகாரத்துக்கு சோபை செய்துகொடுக்கும் நித்யகர்மங்களை, பொன்மலர்க்கு வாஸனையை சேர்த்து வைத்தாற்போலும், அவற்றிற்கு சோபாவஹமான (அழகு செய்து தரும்) நைமித்திக கர்மங்களையும் அவற்றுடன் சேர்த்து, ஒருவன் அநுஷ்டித்து வரவேண்டும்.

தன் குழந்தையை வளர்க்கும் விஷயத்தில், தேஹம், ப்ராணன், ஆகிய இவற்றின் சக்திகள் முழுமையையும், பொருளையும், செலவிட்டும், அதனால் ஓர் கஷ்டம் ஏற்பட்டதாக எண்ணாமல் ஸந்தோஷப்படும் தாயைப்போல், அவன் இக்கர்மங்களை அநுஷ்டிப்பதில் தன் பொருளனைத்துடன் சக்தியனைத்தையும் செலவிட்டு ஸந்தோஷப்படுவதுடன், அவற்றால் ஓர் பலன் கிடைக்கவேண்டு மென்று எதிர்பார்க்காமல், அக்கர்மங்களனைத்தையும், பரப்ரஹ்மத்தினிடத்தில் சேர்த்துவைத்து, அதற்கு அர்ப்பணம் செய்துவிடவேண்டும். அன்றியும் ப்ரியன் வீட்டுக்கு வந்தவுடன், தனக்கென்று ஒன்றை மிகுத்து வைத்துக்கொள்ளாமல், தன்னிடத்தில் இருக்கும் அனைத்தையும் அவனுக்கு உதவிவிடும் பதிவ்ரதையைப்போல், ஸாதுக்களுக்கு உபசாரம் செய்யும்விஷயத்தில், தான் செய்யவேண்டிய கர்மங்கள் எவையேனும் தடைபட்டுப்போனால், அவ்விஷயத்தில் மனஸு

கஷ்டப்படாமலும், அவை நடந்துபோனால், மனது பொங்கிவழியாமலும், இருக்கவேண்டும். இவ்வித மெல்லாம் எந்தக் கர்மங்கள் செய்யப்பட்டன வாகுமோ. ஹே தநஞ்ஜயா, அவை ஸாத்விகம் என்றறி, இனி ராஜஸகர்மங்களின் லக்ஷணங்களைச் சொல்வேன்; அவற்றைக் கேட்பதில் கவனக்குறைவு செய்யாதிரு.

यत्तु कामेप्सुना कर्म साहंकारेण वा पुनः ।
क्रियते बहुलायासं तद्राजसमुदाहृतम् ।।२४।।

யத்து காமேப்ஸுநா கர்ம ஸாஹங்காரேண வா புந: ।
க்ரியதே பஹுலாயாஸம் தத்ராஜஸ முதாஹ்ருதம் ॥ 24

ராஜஸ கர்மம்:

வீட்டில், இருக்கும் தாய்தகப்பன்மாருக்கு ஸம்ஸார விஷயமாய் ஓர் தித்திப்பான வார்த்தை கூட சொல்லாமல், ஊரார்களுக்கு மிக்க ஆதரவுடன் உபசரிக்கும் மூர்க்கனைப்போலும், துளஸிச்செடிக்கு துரமாய் நின்றுகூட ஓர் திவலை நீர் தெளிக்காமல், த்ராக்ஷக்கொடியைப் பால் வார்த்து வளரச் செய்கிறவனைப்போலும், அவச்யம் அநுஷ்டித்துத் தீரவேண்டியவையான நித்யநைமித்திககர்மங்கள் விஷயத்தில் உட்கார்ந்திருக்கும் இடத்தை விட்டு எழுந்திருக்க முடியாமல், மற்றவையான காம்யகர்மங்களை செய்துமுடிப்பதற்காக சரீரத்தின் ஸர்வ சக்தியையும் செலவிட்டு, அதை ஓர் கஷ்டமாய் எண்ணாதவனாய், ரூபாய்க்கு ரூபாய் லாபம் கிடைக்கும் வ்யாபாரங்களில் எவ்வளவோ பொருளைச் செலவழித்தும், பூமியில் விதைகளை விதைப்பதில், எவ்வளவோ தான்யத்தைச் செலவழித்தும், போதுமென்று எண்ணாத பேராசைக்காரனைப் போலும், ஸ்பர்சக்கல்லைக்குக் கிடைத்த ஒருவன், ஏராளமாய் இரும்பைத் தங்கமாய்ச் செய்துகொண்ட பின்னும், தன் ஸர்வ ஸொத்தையும் விற்று இரும்பையே திரும்பவும் திரும்பவும் வாங்குவதில் உத்ஸாஹம் பாராட்டுதல்போலும், கர்மங்களால் ஸம்பாதித்துக் கொள்ளக்கூடிய பலன்களை லக்ஷ்யத்தில் வைத்து, மிக்கக் கஷ்டஸாத்யமான காம்யகர்மங்களைச் செய்துமுடிப்பதில் ஏற்படும் கஷ்டத்தை ஓர் கஷ்டமாய் எண்ணாதவனாய், பலனிலேயே ஆசை வைத்து விதிகோணாமல் கர்மங்களைச் செய்து முடித்து, அப்படிச் செய்துவைத்த கர்மங்களை யாவரு மறியத் தன் வாயால் எடுத்துக்கூறி, தான் கர்மடன் (கர்மங்களை ச்ரத்தையுடன்

அநுஷ்டித்துத் தீர்கிறவன்) என்ற ஓர் கீர்த்தியை எங்கும் பரவச்செய்து, தானே கர்மங்களை செய்து முடிக்கிறவன் என்று கர்வத்தால் நிறைந்தவனாய், ஓர் மருந்தையும் சட்டைசெய்யாத விஷ ஜ்வரம்போல், தகப்பன் குரு முதலிய பெரியவர்களை அவமதிக்கிறவனாய், இப்படி அஹம்காரமும் பலனில் ஆசையும் பாராட்டினவனாய், இருக்கும் ஒருவன் செய்யும் கர்மங்கள் அனைத்தும், மிக்க அலைந்து திரிந்து, அநேகர்களை ஆச்ரயித்து, வெகு கஷ்டப்பட்டும், வயிற்றை நிரப்பிக் கொள்வதற்கே போதுமாகிற தொம்பங் கூத்தாடிகள் ஆட்டம் போலும், ஓர் எலி தான்யத்தின் ஓர் மணிக்காக பெரியமலையையே தோண்டிவிடுவதுபோலும், ஓர் பாசித்துணுக்கு கிடைப்பதற்காக தவளை ஓர் ஸமுத்ரத்தைக்கூட அலசிவிடுதல் போலும், வேண்டுமளவு பிச்சை கிடைக்காது போனாலும், பாம்புகளைச் சுமந்து திரிகிற பாம்பாட்டிகளின் கஷ்டம் போலும், அல்ப ப்ரயோஜநம் உள்ளவையே ஆகின்றன. ஆனால் நாம் செய்வது ஏன்? சிலருக்கு ஓர் பயனுமின்றி கஷடப்படுவதே ருசித்திருக்கிறது. ஓர் பரமாணு கிடைப்பதற்காக கறையான் பாதாளம் வரைக்கும் அரித்துக் கொண்டு போவதுபோல், அல்பமான ஸ்வர்க்கஸுகத்துக்காக மிக்கக் கஷ்டப்பட்டு செய்துமுடிக்கப்படும் காம்யகர்மங்கள் ராஜஸகர்மங்கள் என்றறி. இனி தாமஸகர்மங்களின் லக்ஷணங்களைச் சொல்வேன், கேள்.

अनुबन्धं क्षयं हिंसामनपेक्ष्य च पौरुषम् ।
मोहादारभ्यते कर्म यत्तत्तामसमुच्यते ।। २५ ।।

அநுபந்தம் க்ஷயம் ஹிம்ஸாமனவேக்ஷ்ய ச பௌருஷம்।
மோஹாதாரப்யதே கர்ம யத்தத் தாமஸ முச்யதே ॥ 25

தாமஸ கர்மம்:

தாமஸகர்மம் என்பது நிந்தையின் கரியடைந்த வீடாயிருப்பதுடன், சாஸ்த்ரத்தில் நிஷேதவாக்யங்கள் ஏற்பட்டிருப்பது ந்யாயமே என்று சொல்லும்படியாய்ச் செய்து வைக்கும். அது செய்துமுடிக்கப்பட்ட உத்தரக்ஷணத்திலேயே, ஜலத்தில் எழுதின எழுத்தைப்போல், முற்றிலும் மறைந்துபோகும். மோரைக் கடைவதும், சாம்பலை ஊதிக்கொண்டிருப்பதும், மணலைச் செக்கிலிட்டரைப்பதும், பதரைத் தூற்றுவதும், ஆகாசத்தின்மேல் அம்புகள் எய்து அதைத் துளைப்பதும் காற்றின்மேற் வலையை வீசுதலும், ஆகிய

இவை அனைத்தும் ஓர் பயனும் படாமல் வீண்போவதுபோலும், தாமஸகர்மம் என்பது செய்துமுடிந்தபின், ஓர் பயனும் உண்டாக்கிக்கொடுக்காமல், நாசமடையும். அப்படி யாகாத பக்ஷத்தில், நரதேஹம் என்ற உத்தமமான தனம் செலவழிந்து ஏற்படும் தாமஸகர்மம், ஜகத்தின் ஸுகத்தை நாசம் செய்துவைக்கும். ஓர் தடாகத்தில், ஏராளமாய்த் தாமரைப்பூக்கள் பூத்திருக்க, அவற்றின் மேல் ஓர் முள்வலையைப் போட்டு இழுத்தால், இழுக்கிறவன் கஷ்டமடைந்து, தாமரைப்பூக்கள் நாச மடைவதுபோலும், விட்டிற் பூச்சி தீபத்தின்மேல் விழுந்து அதை அணைத்துவிடுவதால், தான் பொசுங்கிப்போய், உலகத்தார் பார்வையைக் கெடுத்துவைப்பதுபோலும், தாமஸ கர்மத்தைச் செய்கிறவன் தன் ஸர்வஸொத்தையும் செலவிட்டு, தன் தேஹத்தையும் காயப்படுத்திக்கொண்டு, பிறருக்கு ஆபத்தைச் செய்துவைப்பான். அன்னத்தில், விழுந்து ஒருவன் வயிற்றுக்குள் போன ஈயானது, தானும் இறந்து, சாப்பிட்டவனையும் வாந்தியெடுக்கச்செய்து, அவன் அருவருப்படைந்து கஷ்டப்படும்படி செய்துவைப்பதுபோலும், தாமஸர்கள் கர்மம் இருக்கும்.

அன்றியும் தாமஸ கர்மம் செய்கிறவன், உத்தேசித்த கர்மத்தைச் செய்வதற்கு வேண்டிய ஸாமர்த்யம் தனக்கு இருக்கிறதா, இல்லையா, என்று முன்யோஜனை செய்யமாட்டான். தன் சக்தி எவ்வளவு, உத்தேசித்த கார்யத்தைச் செய்வதற்கு என்ன ஆவச்யகம் நேர்ந்திருக்கிறது, அதைச் செய்வதால் என்ன லாபம் ஏற்படும், என்ற இவ்விசாரத்தின் வழியையே, இவன் அவிவேகம் என்னும் காலால் துடைத்துவிட்டு, மிக்க கர்வத்துடன் கர்மத்தைச் செய்யத் தொடங்குவான். தான் இருக்கும் வீட்டைக் கொளுத்திவிட்டு நாலுபக்கத்திலும் பரவும் நெருப்பும், தன் கரையை மீறிக்கொண்டு பொங்கிவழியும் ஸமுத்ரமும், ஜாஸ்தி யென்றும் குறைவென்றும் முன் னென்றும் பின் னென்றும், மார்க்கம் என்றும் அமார்க்கம் என்றும், பாராமல் அனைத்தையும் ஒன்றாகச் செய்து வ்யாபித்துக் கொள்ளுதல்போலும், செய்யத் தகுந்தது தகாதது என்றும், ஓர்பொருள் தனது பிறனது என்றும் பாராமல், அனைத்தையும் ஒன்றடிமன்றடி செய்து வைப்பதாய் ஏற்படும் கர்மம் எதுவோ, அதுவே தாமஸகர்மம் ஆகும்.

இவ்விதம் முக்குணங்கள் சேர்க்கையால் மூவகைப்பட்ட கர்மங்களின் லக்ஷணங்கள் உபபத்திகளுடன் சொல்லப்பட்டுத் தீர்ந்தன. இப்படிப்பட்ட கர்மங்கள் விஷயத்தில் அபிமானம்

பூண்டு, இவற்றைச் செய்துவைக்கும் கர்த்தாக்களாகிய ஜீவர்களும் மூவகைப்படுகிறார்கள். நான்காச்ரமங்களின் சேர்க்கையால், ஒரே புருஷன் நால்வகைப்பட்டு காணப்படுகிறதுபோலும். கர்மங்கள் மூவகைப் பட்டவை யாதலால், அவற்றைச் செய்துவைக்கும் கர்த்தாக்களும் மூவகைப் பட்டவர்களாகிறார்கள். அப்படி மூவகைப்பட்ட கர்த்தாக்களுக்குள் ஸாத்விக கர்தா எவனோ, அவன் லக்ஷணங்களை இப்போது சொல்வேன். நீ கவனமாய்க் கேட்பாயாக.

मुक्तसङ्गोऽनहंवादी धृत्युत्साहसमन्वितः ।
सिद्ध्यसिद्ध्योर्निर्विकारः कर्ता सात्त्विक उच्यते ।। २६ ।।

முக்த ஸங்கோऽநஹம்வாதீ த்ருத்யுத் ஸாஹ ஸமன்வித: ।
ஸித்த்யஸித்தயோர் நிர்விகார: கர்தா ஸாத்த்விக உச்யதே ॥ 26

ஸாத்விக கர்த்தாவின் லக்ஷணங்கள், முக்தஸங்கத்வம்:

மலயபர்வதத்தில் வளரும் உத்தம சந்தனவ்ருக்ஷத்தின் கிளைகள் பழங்களைப் பழுத்துத்தரவேண்டும் என்னும் ஆசையை ஒழித்து விட்டு, தீர்க்கமாய் நீண்டு வளர்வதுபோலும், பழங்கள் பழுத்துத் தராததாயினும் வெற்றிலைக்கொடி ஸார்த்தகமாவது போலும், பலனைப் பலித்துத் தராதவையாய் இருக்கப்பட்ட நித்யநைமித்திக கர்மங்களை ஸாத்விக கர்த்தா செய்துகொண்டுவருவான். ஆனால் இவை பலனைப் பலித்துத் தராததால் விபலங்க (வியர்த்தமானவைகள்) ளாகா. இவை பலஸாதநங்களாயிராமல், பலனாகவே இருப்பதால், இவற்றினின்றும் வேறு பலன் எப்படி உண்டாகும்?

அநஹம்வாதித்வம்:

இவன் மிக்க ஆதரவுடன் கர்மங்களைச் செய்து வைத்தாலும், வர்ஷாகாலத்து மேகம் இடி இடிக்காமல் ஏராளமாய் மழையைப் பொழிவதுபோலும், தான் அவற்றைச் செய்துவைத்ததாக மதியான். அன்றியும் பரமாத்மா வாகிய ஆராத்யதேவதைக்கு ஸமர்ப்பிக்கத் தக்கவையான கர்மகலாபங்களைச் செய்துவைக்க வேண்டுமே, என்று கருதி, இவன், கர்மங்கள் செய்வதற்கு ஏற்பட்டுள்ள காலம் தவறிப்போக விடாதவனாயும், தேகசுத்தியை ஸம்பாதித்துக் கொண்டவனாயும், எந்தக் கர்மத்தை எவ்விதமாய்ச் செய்யவேண்டும் என்று

நிர்ணயித்துக்கொள்ள, சாஸ்த்ரத்தையே ப்ரமாணமாகக் கொண்டவனாயும், இருப்பான்.

த்ருத்யுத்ஸாஹங்கள் பாராட்டி யிருக்கை:

இவன் தான் செய்யும் கர்மங்களில் மனோவ்ருத்திகளையும் இந்த்ரியங்களையும் ஒன்றுபடுத்தி சேர்த்து வைத்துக்கொண்டு, சித்தத்தை பலனின்மேற் வெல்லவொட்டாமல் அடக்கிவைத்துக்கொண்டு, ஸதா நியமம் என்னும் விலங்கைப் பூண்டுகொண்டிருப்பான். இப்படி ஓர் நிர்ப்பந்தத்துக்கு ஸதா வசப்பட்டு நடப்பதற்கு வேண்டி தைர்யம், தன்னிடத்திலிருக்க வேண்டுமே என்னும் விசாரம், அவனிடத்தில் ஸதா விழிப்புள்ளதாயிருக்கும். அன்றியும், இவன் ஆத்மஸ்வரூப ப்ராப்திக் காசைப்பட்டவனாய், அப்போதைக் கப்போது செய்ய வேண்டியவையாய் ஏற்படும் கர்மங்களனைத்தையும் செய்துவைக்கும் விஷயத்தில், தேஹஸுகத்தின் விஷயமான எண்ணம் குறுக்கிடவொட்டான். இவ்வித மிவன் கர்மங்கள் செய்யும்போது, நித்ரை இவனை விட்டு தூரமாய் விலகிப்போகும். பசி யென்பது தோன்றாது. ஸுகாவஸ்தை என்பது இவன் தேஹத்தின் ஸமீபங்கூட வந்து நிற்காது. இப்படிப்பட்ட ஓர் துர்த்தசையிற்கூட, தங்கம் மேலும் மேலும் புடம் போடப்படுவதால் நிறையில் குறைந்து போனாலும், மாற்றில் உயர்ந்துபோவதுபோலும், இவனுக்குக் கர்மங்கள் செய்யும் விஷயத்தில் உத்ஸாஹம் அதிகரித்துக் கொண்டே போகும். பதிவ்ரதா ஸ்த்ரீயின் உண்மையான ப்ரேமைக்கும் பாத்ரமாயிருக்கும், அவள் புருஷன் இறந்துபோனபின், உயிரோடிருப்பதே துக்கமாய் அவளுக்குத் தோன்றிப்போய், அவள் தன் தேஹத்தை நெருப்பிற் போட்டுவிடும்போதே, தான் பதியை அணைந்துகொள்ளும் ஸந்தோஷத்தில், அவள் தேஹ மெல்லாம் புளகாங்கிதம் ஆய்விடு மல்லவா? அப்படியே ஆத்மஸ்வரூபம் என்னும் அதிப்ரியகரமான நாயகனோடு சேர்க்கையை ஸம்பாதித்துக்கொள்ளும் விஷயத்தில், தேஹதுக்கத்தை இவன் ஓர் கஷ்டமாய் மதிப்பானோ, ஹே தனஞ்ஜயா? இப்படி விஷயஸுகத்தின் பற்றற்றுப்போகும் போது, தேஹாபிமானமும் விலகிப்போனவனாய்விட்ட இவனுக்கு, கர்மங்கள் செய்யும் விஷயத்தில் ஆநந்தம் அதிகரித்துக்கொண்டே போகிறது.

ஸித்யஸித்திகளில் வேறுபாடின்மை:

இவ்விதீம் இவன் கர்மங்களை அநுஷ்டித்துவரும்போது, எப்போதாவது ஆரம்பித்த கர்மம் முடிவுபெறாமல் நடுவில்

நின்றுபோய்விட்டால், செங்குத்துப்பாறை மேலிருந்து ஓர் வண்டி கீழே உருண்டுவிழுந்து சுக்குச்சுக்காய்ச் சிதறிப்போனால், அவ்வண்டி தன் மனஸில் ஓர் துக்கத்தையும் பாராட்டாததுபோலும், அக்கர்மம் நின்றுபோன விஷயத்தில், இவன் ஓர் துக்கமும் பாராட்டான். அப்படியாகாமல், ஆரம்பித்த கர்மம் ஓர் குறைவுமின்றி முடிவுபெறுமாகில், இவன் அப்படி ஜயம்பொருந்தின விஷயத்தில் பெருமை அடித்துக் கொள்ளான். இப்படிப்பட்ட லக்ஷணங்களோடு எவன் கர்மங்களை செய்துமுடிப்பானோ, அவன் ஸாத்விககர்த்தா வாவான். இனி ராஜஸகர்த்தாவை எந்த லக்ஷணங்களைக்கொண்டு, தெரிந்துகொள்ள வேண்டுமோ, அவற்றைச் சொல்வேன், கேள்.

रागी कर्मफलप्रेप्सुर्लुब्धो हिंसात्मकोऽशुचिः ।
हर्षशोकान्वितः कर्ता राजसः परिकीर्तितः ।।२७।।

ராகீ கர்ம பல ப்ரேப்ஸுர் லுப்தோ ஹிம்ஸாத்மகோ(அ)ஶுசி: ।
ஹர்ஷ ஶோகான் வித: கர்தா ராஜஸ: பரிகீர்தித: ।। 27

ராஜஸகர்த்தாவின் லக்ஷணங்கள், ராகித்வம்:

க்ராமத்தின் ஸகல கச்மலத்துக்கும் குப்பைமோடே கதிபோலும், ஸகல அமங்கலங்களுக்கும் ஸ்மசானமே வாஸஸ்தானம்போலும், உலகின் ஸகல ஆசைகளும் கால்கழுவிக்கொள்ளும் ஸ்தானமாய் ராஜஸகர்த்தா இருப்பான்.

கர்மபலத்தில் ஆசை:

அன்றியும் எதைச் செய்தால் பலன் கொஞ்சம் கிடைக்கக் கூடியதாய்த் தோன்றுமோ, அந்தக் கர்மத்தைச் செய்வதில் மிக்க ஊக்கம் பாராட்டினவனாய், இவன் இருப்பான். மேலும், தனக்குக் கிடைத்துப்போன பொருளில், ஓர் கவடிகூட செலவிட ஸம்மதப்படாதவனாய், ஒவ்வொரு நிமிஷமும் அதின்மேல் தன் னுயிரையே த்ருஷ்டிசுற்றி யெறிந்து விடுவதற்கு இவன் ஸித்தமாயிருப்பான்.

லுப்தத்வம்:

ஓர் க்ருபணன் தன் பொருளின்மேல் தன்லக்ஷ்யம் முழுவதையும் வைத்திருப்பதுபோலும், கொக்கு மீனைக்கொத்தித் தின்றுவிடும் விஷயத்தில், மிக்க லக்ஷ்யம்

வைத்திருப்பது போலும், பிறர் பொருளைத் தனதாக்கிக்கொள்ளும் விஷயத்தில் தன் லக்ஷ்யம் முழுவதையும் வைத்தவனாய் இவன் இருப்பான்.

ஹிம்ஸாத்மகத்வம்:

கிட்டப் போனால் சிக்க வைத்துக்கொண்டு, ஸம்பந்தம் ஏற்பட்டமாத்ரத்தில் தேஹத்தைக் கிழித்துப்புண்படுத்தி, புளிப்பான பழத்தையே கொடுக்கும் இலந்தையின் புதர்போலும், மனோவாக்காயங்களால் எதிர்ப்பட்டவர்களனைவருக்கும் துக்கம் கொடுத்துக்கொண்டு, தனக்கு லாபம் தேடிக்கொள்ளும் விஷயத்தில், பிறருடைய நன்மையை கவனிக்காதவனாய், இவன் இருப்பான். அன்றியும் ஓர் கார்யத்தைச் செய்து முடிக்கத் திறமை யற்ற வனாயிருந்தும், அதினின்று வெறுப்புப்பாராட்டி திரும்பிவிட உடன்படாதவனாய், இவன் இருப்பான். ஊமத்தையின் காயின் மேல்பக்கம் முள் நிறைந்ததாயும், உட்புறம் அறிவுமயக்கம் செய்துவைப்பதாயும் இருப்பதுபோல், இவனது உள்ளும் புறமும் முற்றிலும் சுசித்வம் அற்றவையாய் இருக்கும். இவன் ஆரம்பித்தகர்மம் பூர்ணமாய் முடிவுபெறுமாகில், இவன் மிக்கஸந்தோஷமடைந்து இதரர்களுக்குப் பழிப்புக்காட்டுவான். அது முடிவுபெறாது போகுமாகில், அதினால் மனஸு துக்கப்பட்டு, இவன் அதை அவமதிப்பாய்ப் பேசுவான். கர்மங்களைச் செய்யும்போது, இவ்வகை நடத்தை எவனிடத்தில் ஏற்படுவதாய் நீ பார்ப்பாயோ, அவனே ராஜஸ கர்த்தா வென்று நீ அறிந்துகொள்ளவேண்டும். இனி, குகர்மங்களுக் கிருப்பிடமானவனும் மற்று மோர்விதப் பட்டவனுமான தாமஸகர்த்தாவின் லக்ஷணங்களை நிரூபிப்பேன், கேள்.

अयुक्तः प्राकृतः स्तब्धः शठो नैष्कृतिकोऽलसः ।
विषादी दीर्घसूत्री च कर्ता तामस उच्यते ।। २८ ।।

அயுக்தः ப்ராக்ருதः ஸ்தப்தः ஶடோ நைஷ்க்ருதிகோ(அ)லஸः ।
விஷாதீ தீர்க ஸூத்ரி ச கர்தா தாமஸ உச்யதே ।। 28

தாமஸ கர்த்தாவின் லக்ஷணங்கள், அயுக்தத்வம்:

தான் ஓர் வஸ்துவில் பற்றிக்கொண்டபின், அது எப்படி எரிந்துபோய் நாசமடைகிறது என்று அறியாத நெருப்பைப்போலும், கூர்மையாயிருக்கும் தான்

குத்திக்கொள்வதால், ப்ராணிகள் எவ்விதம் சாவடைகின்றன வென்றறியாத ஈட்டியைப்போலும், தான் கொன்றுவைப்பதை யறியாத காளகூடம்போலும், தனக்கும் பிறனக்கும் கெடுதற் செய்துவைக்கும் கர்மங்களை, ஓர் யோசனையு மின்றி தாமஸகர்த்தா மிக்க ஆதரவுடன் செய்யத் தொடங்குவான். அவற்றைச் செய்து கொண்டிருக்கும்போது கூட பெருங்காற்று தான் வீசிக் கொண்டிருப்பதால் என்ன கெடுதிகள் ஸம்பவிக்கின்றன வென்று அறிந்துகொள்ளாதது போலும், இவன் தன் வ்யாபாரத்தால் ஏற்படும் கெடுதல்களை மனஸுக்கு ஏற்றிக்கொள்ளான். இவனுக்கும், இவன் செய்யும் வேலைக்கும், யாதோர் ஸம்பந்தமும் இராது. இவனுக்கு முன்னால், வெறிபிடித்தவனுக்கு என்ன மதிப்பு உண்டு?

ப்ராக்ருதத்வம்:

அன்றியும் இவன், இந்த்ரியங்கள் ஊட்டி வைத்ததையே தின்றுகொண்டு, மாட்டின் மடியில் ஒட்டிக்கொண்டிருக்கும் உண்ணிபோலும், தன் னுயிரைக் காப்பாற்றிக் கொண்டிருப்பான். ஸமயம் அறியாமலே சிரித்துக்கொண்டும், அழுது கொண்டும், இருக்கும் சிறுவர்களைப்போலும், ஓர் நீக்குப்போக்கும் இல்லாதவனாய், இவன் கர்மங்களைச் செய்வான். இவன் கேவலம் ப்ரக்ருதியால் ஆக்ரமிக்கப்பட்டவனாய் க்ருத்யாக்ருத்யங்களை அறியாமல், கர்மங்களைச் செய்துகொண்டு, குப்பைமேடு குப்பையின் சேர்க்கையால் உயர்ந்துகொண்டே போவதுபோலும், தான் செய்துவைத்த துஷ்கர்மங்கள் விஷயத்தில், மிக்கப்பெருமை பாராட்டிக் கொள்வான்.

ஸ்தப்தத்வம்:

ஆகவே இவன் ஈச்வரனைக்கூட மதிக்காதவனாய், அவனுக்குத் தலைவணங்கான். அப்படி வணங்கமுடியாயிருப்பதில், மலைகூட இவனுக்குத் தோற்றுப்போகும்.

சடத்வம்:

இவன் மனது ஆசைப்பட்டதாயும், கள்ளத்தனம் பாராட்டியதாயும், இருப்பதுடன், இவனுடைய பார்வை வேசியின் பார்வையைக்கொண்டு உருக்கி வார்த்துவைக்கப்பட்டதாயிருக்கும், இவனுடைய ஸர்வாங்கமும் வஞ்சகத்தால் செய்யப்பட்டதாய், இவனுடைய

பிழைப்பு, களவு, பரநிந்தை, வேசியுடன் உறவாடல், சூதாட்டம், இவை நான்குக்கும் பிறந்த வீடாகும். ஜநங்கள் நடுவில், இவனுக்கு ஓர் விதமான பெருமையும் இராது. இவன் இருக்கும் இடம் பிறர்பொருளை அபஹரிக்க ஆசைப்படும் கள்ளர்கள் ஊரானதால், அவ்விடத்துக்கு ஒருவரும் போகத்தகாது.

நைஷ்க்ருதிகத்வம்:

பாலில் உப்பு விழுந்தால் அது திரிந்து போவது போலும், பிறர்கள் இவனுக்கு ஏதேனும் ஓர் நன்மை செய்தால், அது இவனிடத்திற் கெடுதலாய் மாறிவிடும். பனிக்கட்டிபோல் குளிர்ந்திருக்கும் ஓர் வஸ்து, நெருப்பில் விழுந்தபின் நெருப்பே ஆய்விடுதல்போலும், அல்லது உத்தமமான பண்டங்கள் வயிற்றிற்குள் போனபிறகு மலமாய்ப் போய்விடுதல் போலும், பிறர் இவனுக்குச் செய்த உபகாரங்கள் அனைத்தும், இவனிடம் வந்து சேர்ந்தபின், இவனிடத்திலிருந்து அபகாரங்களாகவே வெளிப்படும். பாலைக் குடித்த பாம்பு அதை விஷமாய்ச் செய்து தருவதுபோலும், இவன் குணத்தை வாங்கிக் கொண்டு தோஷத்தைத் திருப்பிக் கொடுப்பான்; அம்ருதத்தை விஷமாய்ச் செய்து தருவான்.

ஆலஸ்யம்:

இவ்வுலகில் வாழ் வடைந்து பரலோகத்தில் நன்மை யடையும்படி செய்துதரும் கார்யங்களைச் செய்து முடிப்பதற்குத் தகுந்த ஸமயங்களில் நித்ரையானது, ஆபத்காலத்துக்குதவும்படி பத்ரப்படுத்திவைத்திருக்கும் தனம்போல், இவனுக்குத்தானாகவே வந்துசேரும். இவன் கெட்ட கார்யங்களைச் செய்யத் தலைப்படும்போது, அதுவே தீட்டுக்காரியைப்போலும், இவனிடத்தினின்று தூரமாய் விலகி நின்றுவிடும். த்ராக்ஷையும் மாவும் பழுக்கும் காலத்தில் காக்கையின் வாயில் நோய் உண்டாய்விடுவது போலும், பகலின் வெளிச்சத்தைக் கண்டு ஆந்தையின் கண்தெறித்துப் போவதுபோலும். இவன் நன்மையைத் தேடிக்கொள்ளக்கூடிய ஸமயத்தில், சோம்பல் வந்து இவனை அமுக்கிக்கொள்ளும். கெட்ட கார்யங்களில்; அதே இவன் ஸ்வாதீனமாய யிருந்து, விலகிநிற்கும்.

விஷாதித்வம்:

ஸமுத்ரத்தின் வயிற்றிற்குள் வடவைத்தீ எப்போதும் எரிந்துகொண்டிருப்பதுபோலும், இவன் தன் னந்தராத்மாவில்

எப்போதும் துக்கத்தைப் பாராட்டிக்கொண்டே இருப்பான். ஈரமான வரளிமுட்டையால் ஏற்பட்ட நெருப்பு, கடைவரைக்கும் புகைந்துகொண்டே இருப்பதுபோலும், அபாநவாயு துர்கந்தம் உள்ளதாகவே இருப்பதுபோலும், இவன், தன் வாழ்நாள் முழுவதும், துக்கத்தாலேயே செய்துவைக்கப்பட்டவனாய் இருந்து தீர்வான்.

தீர்க்கஸூத்ரித்வம்:

கல்பாந்தத்தைத் தாண்டிக்கூட லாபம் கிடைக்கவேண்டும் என்ற ஓர் ஆசையுடன், இவன் கர்மங்களைச் செய்யத்தொடங்குவான். இந்த ஜகத்தைத்தாண்டிக்கூட (பரலோகத்திற் கூட) நன்மை கிடைக்க வேண்டுமே என்று, இவன் மனஸில் விசாரம் பூண்டு கொள்வானே தவிர, செய்கையிலோ ஓர் அல்பமான லாபமும் கிடைக்காது போகும்.

உபஸம்ஹாரம்:

இப்படி உலகத்தின் பாபங்களெல்லாம் ஒன்றுசேர்ந்து மூர்த்தீகரித்தவனாய், எவன் இருப்பதாய் நீ பார்ப்பாயோ, அவன் ஸர்வவிதமாயும் தாமஸகர்த்தா வாவான். விஷயங்களை அறிந்துகொள்கிறவர்களுக்குள் சிறந்தவனே, இப்போது கர்மம், கர்த்தா ஞாநம், இவற்றின் மூவகைபேதங்களும் உனக்குச் சொல்லப்பட்டுத் தீர்ந்தன.

बुद्धेर्भेदं धृतेश्चैव गुणतस्त्रिविधं शृणु ।
प्रोच्यमानमशेषेण पृथक्त्वेन धनञ्जय ।। २९ ।।

புத்தேர் பேதம் த்ருதேஸ்சைவ குணத ஸ்த்ரிவிதம் ஸ்ருணு ।
ப்ரோச்யமான மஸேஷேண ப்ருதக்த்வேன தனஞ்ஜய ।। 29

புத்தியும் த்ருதியும் மூவகைப்படுகை:

அவித்யையின் ஊரில் மோஹம் என்னும் வஸ்த்ரத்தை உடுத்திக்கொண்டு ஸந்தேஹத்தால் ஏற்பட்ட நகைகள் அனைத்தையும் அணிந்துகொண்டு, அதினால் அழகுபடைத்ததாய், ஆத்மவிஷயமான நிச்சயம் எந்த புத்தியென்னும் கண்ணாடியில் ப்ரதிபலிக்கிறதோ, அந்த புத்தியின் வ்யாபாரமும் மூவகைப்பட்டதாயிருக்கிறது, அப்பா. ஸத்வம் முதலான இம்முக்குணங்களின் சேர்க்கையால், இந்த ஜகத்திலுள்ள எவ்வஸ்து தான் மூவகையான பேதங்களுக்கு,

உட்படாமல் இருக்கிறது? நெருப்பைத் தன் தேஹத்துக்குள் அடக்கிக்கொண்டிராத கட்டை உலகில் கிடைக்குமா? அதுபோலும், த்ருச்யஜாதங்கள் நடுவில் உள்ள எந்தவஸ்துதான் மூவகைப்பட்ட தவாதில்லை? ஆகவே இம்முக்குணங்களால் புத்தி மூவகைப்பட்ட தாக்கப்பட்டு, த்ருதியும் (தைர்யமும்) மூவகைப்பட்ட தாய்விடுகிறது. அப்படி மூவகையாய் பேதிக்கப்பட்டுப்போகும் அவற்றின் பேதங்களை ஸலக்ஷணமாய்ச் (அவற்றின் லக்ஷணங்களுடன்) சொல்வேன். ஆனால் புத்தி, த்ருதி, இவற்றிற்குள் முதலில் புத்தியின் பேதங்களை எடுத்து நிரூபிப்பேன். ப்ராணிகள் ஸம்ஸாரசக்ரத்தில் வந்து சேர்வதற்கு, உத்தமம், மத்யமம், நிக்ருஷ்டம் என்று மூன்றுவழிகள் உண்டு. அவச்யம் கர்த்தவ்யமான கர்மங்களின் அநுஷ்டானம், காம்ய கர்மானுஷ்டானம், நிஷித்த கர்மானுஷ்டானும் என்று ப்ரஸித்திபெற்ற இவையே இம்மூவழிகளாய், ப்ராணிகளுக்கு ஸம்ஸாரபயத்தின் ஸம்பந்தத்தை உண்டு பண்ணிவைக்கின்றன.

प्रवृत्तिं च निवृत्तिं च कार्याकार्ये भयाभये ।
बन्धं मोक्षं च या वेत्ति बुद्धिः सा पार्थ सात्त्विकी ।। ३० ।।

ப்ரவ்ருத்திம் ச நிவ்ருத்திம் ச கார்யா கார்யே பயாபயே ।
பந்தம் மோக்ஷம் ச யா வேத்தி புத்தி: ஸா பார்த ஸாத்த்விகீ ॥ 30

ஸாத்விக புத்தியின் லக்ஷணங்கள்:

அதிகாரத்துக்குத் தக்கபடி, சாஸ்த்ர விதிகளால் அவச்யம் அநுஷ்டேயங்களாய் நேரிடும் நித்யநைமித்திக கர்மங்களின் அநுஷ்டானம் ஆகிய ஓர்வழியே, இம்மூவழிகளுக்குள் சிறந்தது. அவற்றையும், தாஹத்தைப் போக்கிக் கொள்வதற்காகவே நீரைப் பருகுவது போலும், ஆத்மஸ்வரூபப்ராப்தி ஒன்றையே லக்ஷ்யத்தில்வைத்துக் கொண்டு செய்யவேண்டும். இப்படி அக்கர்மங்களை அநுஷ்டித்தல் என்ற இவ்வொன்றே, தொலைத்துக்கொள்வதற்கு மிக்கக் கடினமான ஸம்ஸாரபயத்தைப் போக்கிவைத்து, மோக்ஷப்ராப்தியை மிக்க எளிதானதாய்ச் செய்துதரும். இப்படிப்பட்ட கர்மங்களை இவ்விதம் அநுஷ்டிக்கிறவன் எவனோ, அவனே உத்தமனாவான், அவனே ஸம்ஸாரபயத்தினின்று விடுபட்டவனாய், முமுக்ஷு ஆவதற்குத் தகுந்த யோக்யதை படைத்தவனாகிறான். இவ்வகைக் கர்மானுஷ்டானத்தில் த்ருடமான நிச்சயத்தைப் பாராட்டியதாய் ஒருவன் புத்தி ஆய்விட்டால், ஏற்கனவே தேடி பத்ரம்பண்ணி வைக்கப்பட்ட

பொருள் போலும், மோக்ஷம் அவனுக்கு அதீனப்பட்டுப்போகிறது. ஆகவே நிவ்ருத்தியை அடிப்படையாய் ஏற்படுத்திக்கொண்டு. அதன்மேல் ப்ரவ்ருத்தி யென்னும் கட்டடத்தைக் கட்டிவைத்தல் என்னும் இக்கார்யத்தில், ஒருவன் முழுகிக்கிடக்கவேண்டும். தாஹத்தால் வருந்துகிறவன் நீரைப் பருகி அவ்வருத்தத்தை நிவர்த்தித்துக் கொள்ளுதல்போலும், பெருவெள்ளத்தில் விழுந்தவன், நீந்தித் தன் னுயிரைக் காப்பாற்றிக்கொள்ளுதல் போலும், இருட்டடைந்த ஓர் இடத்தில் ஸூர்யவெளிச்சம் ஏற்பட்டால், எல்லா வஸ்துக்களையும் பார்த்த றிந்துகொள்ளக் கூடியதாய் விடுவதுபோலும், தகுந்த மருந்துகளை பத்யத்தோடு ஸேவிப்பதால் வ்யாதிகளை நிவர்த்தித்துக் கொண்டு பிழைத்துப் போவது போலும், ஜலத்தினின்று வெளிப்பட்டுப்போன மீனுக்கு, மறுபடியும் ஜலத்தின் சேர்க்கை கிடைத்துப்போனபின், அதற்கு ஏற்பட்ட ப்ராணாபாயம் விலகிப்போவதுபோலும், இப்படிப்பட்ட கர்மங்களை இவ்விதமாய் அநுஷ்டிப்பவனுக்கு மோக்ஷம் கிடைத்துப்போவதில் ஸந்தேஹமே இல்லை.

செய்துதீரவேண்டுமென்று விதிக்கப்பட்டவையான இந்தக் கர்மங்கள் விஷயத்தில், ஸாத்விகபுத்தி படைத்தவன் தெளிவான ஞானம் உள்ளவனா யிருப்பான். அன்றியும் செய்யத்தகாதவையான கர்மங்கள் எவையென்று அவன் ஸந்தேஹமறத் தெரிந்து கொண்டிருப்பான். காம்யகர்மங்கள் முதலியவை ஸம்ஸாரபயத்தை உண்டு பண்ணி வைப்பவை யென்றும், ஆதலால் அக்ருத்யங்கள் (செய்யத்தகாதவைகள்) என்று தண்ணீர் தெளித்துவைக்கப்பட்டவை (வகுத்து வைக்கப்பட்டவை) யென்றும், அறிந்துகொண்டு, அந்த அகார்யமான் கர்மங்களினின்று ப்ரவ்ருத்தியின் அடிவைப்பை அவன் பின்வாங்கச் செய்வான். மண்டி யெரியும் நெருப்பிற்குள் ப்ரவேசித்தலும், ஆழம் அறியமுடியாத ஜலத்தில் குதித்தலும், பழுக்கக் காய்ந்த சூலத்தைக் கையில் ஏந்தலும். சீறிக்கொண்டிருக்கும் க்ருஷ்ணஸர்ப்பத்தின் மேல் கைபோடுவதும், புலியின் குஹையில் ப்ரவேசித்தலும், அபாயகரம் என்றறிந்துகொண்டு, ஒருவன் அக்கார்யங்களினின்று திரும்பிவிடுதல் போலும், செய்யத்தகாத கர்மங்களைக் கண்டமாத்திரத்தில் அவன் மிக்கவும் பயந்துபோவான். விஷம் கலந்து பக்வம் செய்துவைத்த அந்நத்தைச் சாப்பிட்டால் தவறாது மரணம் நேரிடுவதுபோல், நிஷித்த கர்மங்களைச் செய்தால் ஸம்ஸாரபந்தம் ஏற்படும் என்று, அவன் ஸந்தேஹமறத் தெரிந்துக்கொண்டு,

ஸம்ஸாரபந்தத்தை உறுதி செய்துவைக்கும் அக்கர்மங்களினின்று திரும்பி விடுவதே கார்யமென்று மதித்திருப்பான். இவ்விதம் கார்யாகார்யங்களைப் பகுத்தறிந்துகொண்டு, எதில் ப்ரவர்த்திக்க வேண்டுமென்றும், எதினின்று பின்வாங்க வேண்டுமென்றும், தெரிந்துகொண்டு, இது நல்லகார்யம் என்றும், இது கெட்டகார்யம் என்றும், வகுத்து வைக்கும் விஷயத்தில் மிக்க ஸாமர்த்யம் பொருந்திய புத்தி எதுவோ, அதுவே ஸாத்விக புத்தியாகும் என்று, நீ அறிந்துகொள்.

यया धर्ममधर्मं च कार्यं चाकार्यमेव च ।
अयथावत्प्रजानाति बुद्धिः सा पार्थ राजसी ।। ३१ ।।

யயா தர்ம மதர்மம் ச கார்யம் சாகார்ய மேவ ச।
அயதாவத் ப்ரஜாநாதி புத்தி: ஸா பார்த ராஜஸீ ॥ 31

ராஜஸபத்தி:

கொக்குக்களே வஸிக்கும் ஊரில் நீரும்பாலும் பேதம் அற்றுப்போவதுபோலும் பிறவிக்குருடனுக்கு இராப்பகல்கள் வித்யாஸமற்றுப் போவதுபோலும், தேன்வண்டு, ஸுகுமாரமான பூவின் மகரந்தத்தைப் புசித்துக்கொண்டு கடினமான கட்டைகளைத் துளைத்துக் கொண்டிருந்தாலும், அதின் ப்ரமரத்வம் (இப்பதத்தால் வண்டின் தன்மை என்றும் அலைந்து திரியும் ஸ்பவாவம் என்றும் இரண்டு அர்த்தங்களையும் கொள்ள வேண்டும்) அதை விட்டு நீங்காததுபோலும், ராஜஸபுத்தி படைத்தவன் தர்மாதர்மரூபமான கார்யாகார்யங்களின் பகத்தறிவில்லாமல், எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து ஆசரிப்பான். நல்லது கெட்டது என்று பகுத்தறியாமல் முத்துக்களை ஒருவன் வாங்கிக்கொண்டால், ஒவ்வொரு வேளை சிலமுத்துகள் நல்லவையாய் கிடைத்தபோதிலும், கெட்டவை கிடைப்பது தவறாதது போலும், கரணீயம், அகரணீயம், என்று பகுத்தறிவின்றி கர்மங்கள் ஆசரிக்கப்படும்போது கெட்ட கர்மங்களுக்கு அவகாசம் ஏற்படாமல், அவை அநுஷ்டிக்கப்படாமல் நின்றுபோனா லல்லது, நல்லவையும் கெட்டவையும் கலந்தேதான் அநுஷ்டிக்கப்படும். ப்ராஹ்மணர்கள் ஓர் கூட்டமாய் நிற்குமிடத்தில், யோக்யதை உள்ளவர்கள் யோக்யதையற்றவர்கள் என்ற பகுத்தறி வில்லாமல் எல்லார்மேலும் அக்ஷதையைப் போட்டு, எல்லாரையும் ஓர் வைதிகக்கார்யத்துக்கு வரிப்பது போலும், பகுத்தறிவின்றி கர்மங்களைச் செய்கிறவன் புத்தி ராஜஸமாகும்.

अधर्मं धर्ममिति या मन्यते तमसावृता ।
सर्वार्थान्विपरीतांश्च बुद्धिः सा पार्थ तामसी ।। ३२ ।।

அதர்மம் தர்மமிதி யா மன்யதே தமஸா ऽऽவ்ருதா ।
ஸர்வார்தான் விபரீதாம்ஶ்ச புத்தி: ஸா பார்த தாமஸீ ॥ 32

தாமஸபுத்தி:

ராஜா எந்த வழியாய்ப் போவானோ, அது திருடனுக்குத் தப்புவழி யாதல்போலும், போது விடிந்தது பிசாசுகளுக்கு ராத்ரி யாதல் போலும், பூமியில் புதைந்து கிடக்கும் தனம், அத்ருஷ்டஹீநனுக்கு, கரிக்குவியலாய்த் தோன்றிப்போய், தன் ஸமீபத்திலேயே இருக்கும் தனம் தனக் கில்லாதது ஆய்விடுதல் போலும், தர்மங்களனைத்தும் தாமஸ புத்தி படைத்தவனுக்கு பாபமென்றும், பொய் மெய்யென்றும், அர்த்தவத்தானவை (மிக்கப் பயன்படுமவை) அநர்த்தங்களென்றும், குணமானவை யென்று நிர்ணயிக்கப்பட்டவை அனைத்தும் தோஷங்களே என்றும், (மிக்க வளர்த்துவ தென்?) வேதங்களால் ஏற்படுத்திவைக்கப்பட்டு, எல்லாரும் ஒப்புக் கொள்ளத் தக்கவையாய், இருக்கும் விஷயங்கள் அனைத்தும் விபரீதமானவை யென்றும், தோன்றும். இப்படி பாவிக்கும் புத்தி யெதுவோ அதைத் தாமஸீ புத்தி யென்றறிந்துகொள்; ஹே அர்ஜுநா, இதில் ஸந்தேஹம் பாராட்டவேண்டாம். இவ்விதம் தர்மம் இன்னதென்று அறியாதபுத்தி, எப்படி ப்ரயோஜநப்படப் போகிறது? ஆத்மஞானம் என்னும் குமுதத்தை விகஸிக்கச்செய்யும் சந்த்ரன் எனத் தக்க ஹே அர்ஜுநா, இப்போது புத்தியின் மூவகைப்பட்ட பேதங்களும் தெளிவாய்ச் சொல்லப்பட்டுத் தீர்ந்தன. இந்த புத்தி ஓர் கார்யத்தைச் செய்யவேண்டும் என்று செய்துகொள்ளும் நிச்சயமே, த்ருதி என்று சொல்லப்படும். இந்த த்ருதியும் மூவகைப்படுகிற தாகையால், அப்படி மூவகைப்படும் த்ருதியின் லக்ஷணங்களைச் சொல்வேன், நன்றாய்க் கவனித்துக் கேள்.

धृत्या यया धारयते मनःप्राणेन्द्रियक्रियाः ।
योगेनाव्यभिचारिण्या धृतिः सा पार्थ सात्त्विकी ।। ३३ ।।

த்ருத்யா யயா தாரயதே மன: ப்ராணேந்த்ரிய க்ரியா: ।
யோகே நாவ்யபி சாரிண்யா த்ருதி: ஸா பார்த ஸாத்த்விகீ ॥ 33

ஸாத்விக த்ருதி:

ஸூர்யன் உதயமானவுடன் திருடர்கள் வ்யாபாரத்தோடுகூட இருட்டு ஒடுங்கிப்போவதுபோலும், அரசனுடைய ஆஞ்ஞை ஏற்பட்டவுடன் குடிகளின் கெட்டநடத்தைகள் இல்லாமற்போவதுபோலும், காற்று மிக்க வலுத்து வீசினால், மேகங்கள் தங்கள் கர்ஜனையுடன் மறைந்து போவது போலும், அகஸ்தியருஷியைக் கண்டமாத்ரத்தில், ஸமுத்ரம் வாய் திறவாது அடங்கிப்போவதுபோலும் சந்த்ரன் உதித்தமாத்ரத்தில் தாமரைப் பூக்கள் குவிந்துபோவதுபோலும், (இவை நிற்கட்டும்) ஸிம்ஹம் கர்ஜித்துக்கொண்டு எதிர்வந்தமாத்ரத்தில், காலைத்தூக்கின மதயானை அதைக் கீழேவைக்க சக்தியற்றுப் போவதுபோலும், எந்த தைர்யம், தான் உள்ளே ஏற்பட்டவுடன், மனஸு முதலியவை தங்கள் தங்கள் வ்யாபாரங்களைக் கைவிட்டு, நின்றுபோகும் படியும், இந்த்ரியங்கள் விஷயங்களோ டுறவாடுதலைவிட்டு தங்கள் தாயான மனதின் வயிற்றுக்குள் அடங்கிப்போகும்படியும், ஒன்பது ப்ராணவாயுக்களும் தங்களுடைய மேல் கீழ் நோக்கிய கதிகளை ஒழித்துக்கொண்டு, எல்லாம் ஒன்று சேர்ந்து, ஸுஷும்நாநாடியில் அடைபட்டுப் போகும்படியும், மனஸானது தனது ஸங்கல்ப விகல்பங்கள் என்னும் ஆடைகளை களைந்துவிட்டு, நக்நமாய் ஓர் வேலையும் செய்யாமல், புத்தியின் பின்பக்கத்தில் உட்கார்ந்து கொள்ளும்படியும், இவ்விதமாய் மனது, ப்ராணவாயு, இந்த்ரியங்களாகிய இவற்றின் ஸ்வாபாவிக சேஷ்டைகள் நடைபெறாமற் போகும்படி செய்துவைத்து, பின்பு அவை அனைத்தையும் யோகபலத்தைக் கொண்டு த்யானத்தின் உள்வீட்டில் அடைத்துவைத்து, அவற்றைச் சக்ரவர்த்தியாகிய பரமாத்மாவின் கையில் ஒப்பித்துவிடும் வரைக்கும், அவற்றினின்று லஞ்சம் வாங்கிக்கொள்ளாமல், அவற்றைத் தன் பிடிப்பினின்று தப்பித்துக் கொண்டு போகாமல் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்குமோ, அந்த தைர்யமே இங்கே ஸாத்விக த்ருதி யென்று நிச்சயமாய்ச் சொல்லப்படுகிறது, என்று ஸ்ரீகாந்தன் அர்ஜுநனுக்குச் சொன்னார்.

यया तु धर्मकामार्थान्धृत्या धारयतेऽर्जुन ।
प्रसङ्गेन फलाकाङ्क्षी धृतिः सा पार्थ राजसी ।। ३४ ।।

யயா து தர்ம காமார்தான் த்ருத்யா தாரயதேऽர்ஜுன ।
ப்ரஸங்கேன பலாகாங்க்ஷீ த்ருதி: ஸா பார்த ராஜஸீ ॥ 34

ராஜஸத்ருதி:

ஒருவன் சரீரத்தை ஆத்மா வென்று பாவித்துக்கொண்டு, தர்மார்த்த காமங்களாகிய மூவகைபுருஷார்த்தங்களை அடைவதற்கு வேண்டிய ஸாதநங்களை அநுஷ்டித்துக் கொண்டு, ஸ்வர்க்கம் ஸம்ஸாரம் என்ற இரண்டு இடங்களிலும் ஸுகமாய் வாழ்ந்துகொண்டு, மனோரதங்கள் என்னும் ஸமுத்ரத்தில் தர்மார்த்தகாமங்கள் என்னும் படகில் வர்த்தகம் செய்து கொண்டு, தேஹ கஷ்டத்துக்கும் பொருட்செலவுக்கும் தக்கபடி நான்குமடங்கான லாபத்தைக் கொடுக்கும் கர்மங்களையே செய்துகொண்டு, மிக்க ஸாஹஸமான தொழில்களை எந்த தைர்யத்தின் பலத்தைக்கொண்டு நடத்திவருவானோ, அந்த தைர்யமே ராஜஸத்ருதி என்று அறிந்துகொள், ஹே பார்த்தா, இனி மூன்றாவதாகிய தாம்ஸத்ருதி எதுவோ, அதை நிரூபிப்பேன், கேள்.

यया स्वप्नं भयं शोकं विषादं मदमेव च ।
न विमुञ्चति दुर्मेधा धृतिः सा पार्थ तामसी ।। ३५ ।।

யயா ஸ்வப்னம் பயம் ஶோகம் விஷாதம் மதமேவ ச।
ந விமுஞ்சதி துர்மேதா த்ருதி: ஸா பார்த தாமஸீ ॥ 35

தாமஸத்ருதி:

கரியானது வடிகட்டின கருமையால் செய்யப்பட்டிருப்பதுபோல், மிக்கவும் கெட்டவையான குணங்கள் அனைத்தும் உருவெடுத்தாற்போலும், (இது என்ன ஆச்சர்யம்; கேவலம் அறிவின்மையையே உடைத்தானதாயும், மிக்கவும் கெட்டதாயும் இருக்கும் ஒன்றை, குணம் என்று சொல்லத்தகுமா என்றால், ராக்ஷஸர்களை புண்யஜனர்கள் என்று சொல்வதில்லையா? க்ரஹங்களுக்குள் கொள்ளிபோன்ற அங்காரகனுக்கு மங்களக்ரஹம் என்று பெயரில்லையா? அப்படியே குணம் என்று பெயர் தமஸ்ஸுக்கும் ஏற்பட்டிருக்கிறது,) ஸர்வதோஷங்களுக்கும் வாஸஸ்தானமான தமஸ்ஸைக்கொண்டே உருக்கி வார்த்துவைக்கப்பட்ட ஓர் உருவம் என்று சொல்லத்தக்க ஓர் மனிதன், எப்போதும் கக்கத்தில், சோம்பலை இடுக்கிக்கொண்டிருப்பதால், பாபத்தையே மேன் மேலும் செய்துகொண்டு வருகிறவன் துக்கத்தினின்று எக்காலும் விடுபடாததுபோலும், எக்காலும் நித்ரையினின்று விடுபட்டவன் ஆவதில்லை. அவன் தன் தேஹத்தின்

விஷயத்திலும், பொருளின் விஷயத்திலும், மிக்க ப்ரியம் பாராட்டியிருப்பதால், கருங்கல்லை விட்டு காடிந்யம் விலகிப்போகாததுபோலும், அவனைவிட்டு பயம் எப்போதும் விலகிப்போவதில்லை. அவன் பிறர் பொருளின் ஆசை பாராட்டியிருப்பதால், பாபங்கள் க்ருதக்நனை (நன்றியறிவில்லாதவனை) விட்டு விலகிப் போகாததுபோலும், அவன் துக்கம் நிரந்தரமாய் வஸிக்கும் ஸ்தானமாகிறான். அன்றியும் அவன் ராத்ரிப்பகலாய்த் தன் னந்தராத்மாவில் அஸந்தோஷத்தை வஹித்துக்கொண்டிருப்பதால், ஏக்கம் என்பது அவனுடன் நட்பு செய்துகொள்கிறது. வெங்காயத்தின் நாற்றம் அதைவிட்டு விலகிப்போகாததுபோலும், அபத்யபோஜனம் வழக்கமாய்ச் செய்கிறவனை வ்யாதிகள் விடாததுபோலும், ஏக்கம் என்பது அவன் செத்துப்போகும் வரைக்கும் அவனுடன் ஸ்நேஹம்பாராட்டி நிற்கும்.

அன்றியும் தன்னுடைய தாருண்யம், ஸம்பத்து, காமபோகங்கள், ஆகிய இவற்றை அவன் மிக்கக் கொண்டாடிக் கொண்டிருப்பனாகையால், அவன் மதத்துக்கு வாஸஸ்தானமாவான. வெப்பம் நெருப்பைவிட்டு விலகாததுபோலும், நல்ல பாம்பு தான் ஓர் தரம் பாராட்டிக்கொண்ட பகையை ஓர் நாளும் மறக்காததுபோலும், உலகத்தார் அனைவரோடும் பகைபாராட்டிக்கொண்டிருக்கும் ஒருவனை பயம் விலகிப்போகாமல் இருப்பது போலும், காலன் உலகத்தாருடைய சரீரத்தை ஒருக்காலும் மறந்து போகாததுபோலும், தாமஸனை விட்டு மதம் ஒருக்காலும் விலகிப்போகாது. இப்படி நித்ரை முதலிய ஐந்து தோஷங்களும், எந்த த்ருதியின் பலத்தால் ஒருவனைப் பற்றிக்கொண்டிருக்குமோ, அந்த த்ருதியே தாமஸ த்ருதியாகும், என்று ஜகந்நாதனான ஸ்ரீக்ருஷ்ணன் சொன்னார். கீழே வர்ணிக்கப்பட்டுள்ளதான மூவகைப்பட்ட புத்தியானது எந்தக் கார்யத்தைச் செய்யவேண்டுமென்று நிச்சயம் செய்துவைக்குமோ, அதை த்ருதி முடிவு பெறச் செய்கிறது. ஸூர்யன் உதித்து வழியைக் காட்டிவைக்கிறான். அவ்வழியைக் கால்கள் நடந்து தீரவேண்டியதாயிருக்கிறது. ஆனால் அப்படி கால்கள் நடப்பது தைர்யத்தால் அல்லவா முடிவுபெறுகிறது. அப்படியே புத்தி செய்ய வேண்டிய கர்மம் இன்னதென்று காட்டிக் கொடுத்தபிறகு, இந்த்ரியங்கள் அக்கர்மங்களைச் செய்து வைக்கின்றன. ஆனால் அக்கர்மம் முடிவுபெறும்வரைக்கும் எந்த தைர்யம் கூட இருந்து அதை நிறைவேற்றி வைக்கிறதோ, அது த்ருதியாகும். அந்த த்ருதி

எப்படி மூவகைப்படுகிறதென்பது உனக்குச் சொல்லித் தீர்ந்து போயிற்று.

மேல்வரும் விஷயத்துக் கவதாரிகை:

இப்படி மூவகைப்படும் த்ருதியின் ஸஹாயத்தால், மூவகைப்பட்ட கர்மங்கள் ஏற்படுகின்றன. இக்கர்மங்களினின்று வெளிப்படும் பலன், ஸுகம் என்று சொல்லப்படும். இந்த ஸுகமும் அதின் காரணமாகிய கர்மத்துக்குத் தக்கபடி மூவகைப்படுகிறது. இந்த ஸுகம் மூக்குணங்களின் சேர்க்கையால் மூவிதமாய்ப் பேதப்படும்போது, அதின் லக்ஷணங்கள் எப்படி இருக்கும் என்று அதிசுத்தமான வார்த்தைகளைக் கொண்டு சொல்வேன், கேள். ஆனால் அவ்விஷயத்தை ஓர் மாசுமின்றி எப்படி சொல்லி முடிப்பேன். ஒருவன் ஓர்விஷயத்தை மற்றொருவன் சொல்லும் வார்த்தைகளையே பிடித்துக்கொண்டு அறிந்துகொள்ளப் புகுந்தால், சொல்கிறவன் மனதில் இருக்கும் எண்ணம் சப்தமூலமாய் வெளிப்படும், போது, சப்தத்தின் தோஷம் அதில் ஒட்டிக்கொள்ளுகிறதுமன்றி, கேட்கிறவன் காதின் தோஷமும் அதில் ஒட்டிக்கொண்டு, சொல்லுகிறவன் மனதில் இருக்கும் அர்த்தம் கேட்கிறவனால் யதாவத்தாய் அறியப்படாமற் போகிறது. ஆகையால் எந்த அந்தராத்மாவின் ஆதரவை விலக்கிவைத்தால், கவனம் என்பதே செகுடாய்ப் போய்விடுமோ, அந்த அந்தராத்மாவின் ஆதரவை துணையாய்க்கொண்டு நான் சொல்லும் விஷயத்தை நீ அறிந்துகொள்ளவேண்டும். இப்படி அர்ஜுநனை எச்சரிக்கை செய்துவைத்து, பகவான் மூவிதப்பட்ட ஸுகங்களின் ஸுவரூபத்தை நிரூபிக்கத் தொடங்கினார்.

सुखं त्विदानीं त्रिविधं शृणु मे भरतर्षभ ।
अभ्यासाद्रमते यत्र दुःखान्तं च निगच्छति ।। ३६ ।।

ஸுகம் த்விதாநீம் த்ரிவிதம் ஶ்ருணு மே பரதர்ஷப।
அப்யாஸாத் ரமதே யத்ர துக்காந்தம் ச நிகச்சதி ॥ 36

மூவகைப்பட்ட ஸுகத்தை பகவான் நிரூபிக்கத் தொடங்குவது:

நான் உனக்கு மூவகைப்பட்ட ஸுகங்களின் லக்ஷணங்களைச் சொல்வேன் என்று ப்ரதிஜ்ஞை செய்தேன், அல்லவா. அவ்விஷயத்தை இதோ சொல்லப்போகிறேன், கேள்.

ஜீவனுக்கு ஆத்மாவைப் பார்க்கக் கிடைப்பதே ஸுகமாகும். ஹே கிரீடி, இந்த ஸுகத்தின் ஸ்வரூபம் இவ்வகைப்பட்ட தென்று உன் கண்முன் தெளிவாய்த் தோன்றி நிற்கும்படி செய்துதருவேன், கேள். ஓர் உத்தம ஔஷதத்தை சின்ன சின்னமாத்ரைகளாய்ச் செய்து, மாத்ரைக்கணக்காய் அதை ஸேவிக்கவேண்டி யிருப்பதுபோலும், ஈயத்தை வெள்ளியாய்ச் செய்துகொள்ள வேண்டுமானால், ரஸாயந சாஸ்திரத்தில் சொல்லியபடி, அத்துடன் பல சரக்கைச் சேர்த்து, அதைப் பலதடவை புடம்போடவேண்டியதா யிருப்பதுபோலும், ஒரு தடவை அநுபவத்துக்கு வந்த கிஞ்சித் ஸுகத்தைத் திரும்பவும் திரும்பவும் அப்யாஸம் செய்து, ஜீவதசையின் துக்கத்தை முற்றிலும் நசித்துப் போகும்படி செய்துகொள்கிறதே, ஆத்மப்ராப்தி ஸுகம் ஆகும். அதுவே முக்குணங்கள் சேர்க்கையால், மூவகைப்பட்ட தாகிறது. ஆகவே அதின் மூவகைகளையும் தனித்தனியாய் நிரூபித்துக்காட்டுவேன், கேள்.

यत्तदग्रे विषमिव परिणामेऽमृतोपमम् ।
तत्सुखं सात्त्विकं प्रोक्तमात्मबुद्धिप्रसादजम् ।। ३७ ।।

யத்ததக்ரே விஷமிவ பரிணாமே ऽம்ருதோ பமம் ।
தத்ஸுகம் ஸாத்விகம் ப்ரோக்தமாத்ம புத்திர் ப்ரஸாதஜம் ॥ 37

ஸாத்விக ஸுகம்:

சந்தநமரத்தின் அடிக்கட்டையில் பாம்பு சுற்றிக்கொண்டு, அது அணுக முடியாததாய் இருப்பதுபோலும், பூமியில் புதைந்துகிடக்கும் நிதியின் வாயில் பூதம் காத்துக்கொண்டிருப்பதால், அது நெருங்க முடியாததாய் இருப்பதுபோலும், ஸ்வர்க்கஸுகத்தை அநுபவிப்பதற்குத் தடையாய், யாகம் செய்வதில் உள்ள கஷ்டங்கள் ஏற்பட்டிருப்பதுபோலும், வாழ்நாளின் முதல் தசையான பாலபர்வம் அநேகவிதப்பட்ட வ்யாதிகளால் துக்கம் நிறைந்ததாய் இருப்பதுபோலும், (இது நிற்கட்டும்) நெருப்பை மூட்டிப் பற்றி எரியச்செய்துகொள்வதில், புகையின் தொந்தரவை அநுபவிக்க வேண்டியதாய் இருப்பதுபோலும், ஆரோக்யத்தின் அநுபவத்துக்குமுன் நாவுக்குக் கசப்பா யிருக்கும் ஔஷதத்தை ஸேவிக்கவேண்டியதா யிருப்பதுபோலும், ஆத்மப்ராப்தி ஸுகத்தில் நுழைவதற்குமுன் வெகு கஷ்டங்களை அநுபவிக்கவேண்டியதா யிருக்கிறது. முதன்முதலில் யமதமங்களை (யமம் என்றால் மனோ நிக்ரஹம்; தமம் என்றால் இந்த்ரிய நிக்ரஹம்) ஒருவன்

அநுஷ்டிக்கவேண்டும்; ஸர்வஸம்ஸார விஷயங்களிலும் ப்ரீதியை நாசம் செய்துவைக்கும்படியான வைராக்யத்தைப் பாராட்டிக்கொண்டு. ஸ்வர்க்க ஸம்ஸார பந்தங்களை அறுத்தெறியவேண்டும். அதிநிஷ்டூரமான ஞானவிஷயங்களை ச்ரவணம் செய்துகொண்டு, கடினமான வ்ரதங்களை அநுஷ்டிக்கவேண்டும்.

இவற்றால் புத்தி முதலியவை சின்னாபின்னமாய்ப் போய்விடும். ஸுஷும்நா நாடியின் வாயைக்கொண்டு ப்ராணாபாநங்களின் அலைகளை விழுங்கவேண்டிய தாய் இருக்கிறது. ஆரம்பத்திலேயே இவ்வளவு பெருத்த கஷ்டங்களை அநுபவித்தல் வேண்டும். சக்ரவாகபக்ஷிகளின் ஜோடியைப் பிரித்துவைத்தல்போலும், தாய்ப்பசுவினின்று கன்றைப் பிரித்து வைத்தல்போலும், பிச்சைக்காரனை அவன் உண்ண உட்கார்ந்த சாப்பாட்டினின்று துரத்திவைத்தல்போலும், ஒரே பிள்ளையைப் பெற்ற தாயின் கண்முன் யமன் அப்பிள்ளையின் உயிரைப்பிடுங்கிக் கொண்டு போதல்போலும், ஜலத்தினின்று மீனைப் பிரித்துவைத்தல்போலும், இந்த்ரியங்களை விஷயங்களின் வீட்டினின்று துரத்தி வைத்தலால் உண்டாகும் யுகாந்தம் போன்ற பெருத்த துக்கத்தை வைராக்யத்தின் பலத்தைக்கொண்டு ஸஹித்துத் தீரவேண்டும். இப்படி இந்த ஸுகம், முதலில் பெருத்த கஷ்டத்தைக்காட்டி வைத்து, முடிவில் பாற்கடலைக் கடைந்தது அம்ருதத்தைப் பலித்துக் கொடுத்தாற்போலும். உத்தமமான லாபத்தைப் பலித்துக் கொடுக்கும். முதலில் ஏற்படவேண்டியதான வைராக்ய மென்னும் விஷத்தை ஸாத்விக தைர்யம் என்னும் பரமசிவன் விழுங்கி, அதைக் கழுத்தில் நிறுத்திக் கொண்டானேயானால், பின்பு ஞானாம்ருதத்தின் விருந்தை உண்ணும்படி கிடைக்கிறது.

பல்லாற்கடித்த மாத்ரத்தில் மிக்கக்கோபங்கொண்டு புளிப்பால் வாயைக் கூசச் செய்யும் த்ராக்ஷைக்கொடியின் இளங்காய்களே முற்றிப்போனபின் மதுர ரஸம் நிறைந்தவையாய் விடுதல்போலும், முதலிற் பாராட்டிக்கொள்ளவேண்டிய வைராக்யமே முற்றி ஆத்மஸ்வரூப ப்ரகாசதத்தைச் செய்துவைத்தபின்பு, ஸகல அவித்யா ஜாதமும் தன்னுடன் அவ்வைராக்யத்தையும் கூட்டிக்கொண்டு, நசித்துப்போகிறது. பின்பு ஸமுத்ரத்தில் விழுந்து, அத்துடன் ஒன்றுப்பட்டுப்போகும் கங்கையைப் போல் புத்தி ஆத்மஸ்வரூபத்தைக் கண்டு அத்துடன் ஒன்றுப்பட்டுப்போய், அத்வைதாநுபவத்தால் உண்டாகும்

ஆனந்தம் என்னும் கனி தனக்குத்தானாகவே திறந்து கிடக்கும். இப்படி வைராக்யத்தை வேராய் உடைத்தாய், ஆத்மஸ்வரூபானுபவத்தில் முடிவுபெறுவதாய், இருக்கும் ஸுகம் எதுவோ, அதுவே ஸாத்விகம் என்று சொல்லப்படும்.

विषयेन्द्रियसंयोगाद्यत्तदग्रेऽमृतोपमम् ।
परिणामे विषमिव तत्सुखं राजसं स्मृतम् ।। ३८ ।।

விஷயேந்த்ரிய ஸம்யோகாத் யத்ததக்ரேऽ ம்ருதோபமம்
பரிணாமே விஷமிவ தத்ஸுகம் ராஜஸம் ஸ்ம்ருதம் ॥ 38

ராஜஸ ஸுகம் :

ஓர் அதிகாரியானவன் அவன் அதிகாரத்துக்குட்பட்ட ஓர் ஊருக்கு வந்தமாத்ரத்தில் அவ்வூரில் ஏற்படும் உத்ஸவம் போலும், கடன் வாங்கி மிக்க ஸம்ப்ரமத்துடன் நடத்தப்படும் கல்யாணம்போலும், நோயாளி அபத்யமான வாழைப் பழத்தை சர்க்கரையோடு சேர்த்து உண்ணும் போது, நாக்கில் உண்டாகும் இனிப்புப் போலும் வச்சநாபியைத் தின்னும்போது முதலில் ஏற்படும் தித்திப்புப்போலும், ஸ்நேஹம்செய்து கெடுக்கும் திருடனுடைய ஸ்நேஹத்தின் ஆரம்பம் போலும், கடைத்தெருவில் கிடைத்த வேசியின் கூட்டுறவுபோலும், பகல் வேஷக்காரன் நடித்துக்காட்டும் வேடிக்கைகள் போலும், இருந்து கொண்டு, கற்பாறையில் சிறு குழிகளில் தங்கியிருக்கும் மழைஜலத்தில் தோன்றும நக்ஷத்ரங்களின் ப்ரதிபிம்பத்தைப் பார்த்து அதைமுத்து என்றுநினைத்து, அதை விழுங்கி ஸுகப்படுவதற்காக, வேகமாய் கீழ்நோக்கிவரும் ஹம்ஸமானது அப்பாறையில் மோதிக் கொண்டு உயிரை இழந்து விடுவதுபோலும், விஷயங்களோடு இந்த்ரியங்களுக்கு ஸம்பந்தம் ஏற்படும்போது, ஐஹிக பாரலௌகிக ஸுகங்கள் என்ற இருகரையும் உடைத்துக் கொண்டு பெருகிவரும் ஸுகப்பெருக்காகிய அந்த விஷயஸுகம் அநர்த்தத்தையே உண்டாக்கி வைக்கும்;

இவ்வுலகில் வாழ்வுக் காதாரமான கைப்பொருளை அது நஷ்டம் செய்துவைப்பதுடன், தான் அதற்குமுன் தேடிவைத்துக் கொண்ட புண்யம் அனைத்தையும் நாசம் செய்து வைக்கும். அன்றியும் அநுபவிக்கப்பட்டதான ஸுகம் ஸ்வப்நத்தைப்போல், உண்மையற்றதாய் விட்டு, ஸர்வ விதமாயும் ஹாநி ஏற்பட்டு, அந்த ஹாநியில் கிடந்து புரண்டழுவதே மிகுந்து நிற்கும். இப்படிப்பட்ட ஸுகத்தால்

இவ்வுலகில் கேடுகள் விளைந்து, பரலோகத்தில் அது விஷயமாகவே முடிவுபெறும். இப்படி இந்த்ரியங்களுக்குச் செல்லம் கொடுத்து அநுபவிக்கப்படும் விஷயஸுகம், உத்தம பழங்களைப் பழுத்துத்தரும் தர்மம் என்னும் பழத்தோட்டத்தைக் கொளுத்தி நாசம் செய்துவைப்பதாய் முடியும். இந்த ஸுகத்தால் ஜீவஸ்வரூபத்தில் பாபங்கள் மிகவும் வலுத்து, மறுமையில் நரகவாஸமே, ஏற்படுவதான ஓர்பெருத்த அபாயம் ஏற்படுகிறது. மதுரம் என்று பெயர் படைத்த விஷம், முடிவில் சாவையே உண்டாக்கி வைத்தல் போலும், முதலில் இனிப்பாய் இருந்து முடிவில் கசப்பாய் விடும் ஸுகம் எதுவோ, அது ரஜோ குணத்தாலேயே அமைக்கப்பட்டதாகும். இதின் ஸம்பந்தம் உனக்கு எக்காலும் ஏற்படாதபடி, நீ ஜாக்ரதையாய் இருக்க வேண்டும்.

यदग्रे चानुबन्धे च सुखं मोहनमात्मनः ।
निद्रालस्यप्रमादोत्थं तत्तामसमुदाहृतम् ।।३९।।

யதக்ரே சானுபந்தே ச ஸுகம் மோஹன மாத்மனः ।
நித்ராலஸ்ய ப்ரமாதோத்தம் தத்தாமஸ முதாஹ்ருதம் ॥ 39

தாமஸ ஸுகம் :

பருகத்தகாததைப் பருகுவதாலும், உண்ணத்தகாததை உண்பதாலும், வேசியின் சேர்க்கையாலும், எதிர்ப்பட்டவனை அடித்துக் கொல்வதாலும், பின் சொத்தை அபஹரித்துக் கொள்வதாலும், சோம்பலாலும். நித்ரையாலும், ஏற்படுவதாய், தன்னுடைய நன்மை தன் லக்ஷ்யத்தில் ஒருக்காலும் தோன்றாதபடி செய்துவைக்கும் ஸுகம் எதுவோ, அது ஸர்வவிதத்திலும் தாமஸமாகும். இது ஆதரிக்கத்தகாததானதால், இதை நான் விஸ்தாரமாகச் சொல்லாதொழிந்தேன்.

மேல்வரும் விஷயத்துக்கு அவதாரிகை :

வேராயிருக்கும் கர்மத்தின் பேதத்தால், பலனான ஸுகமும் மூன்று விதமாய் பேதப்படுவது சாஸ்திரத்தின் முறைப்படி உனக்குச் சொல்லித்தீர்ந்தது. இவ்வுலகில் பெரிதும்சிறிதுமாயிருக்கும் ஸகலவஸ்துக்களும், கர்த்தா, கர்மம், கர்மபலன், என்ற இந்த த்ரிபுடிக்குள் அடங்கிப் போனவையாகவே இருக்கின்றன. வஸ்த்ரமானது நூலால் ஏற்பட்டிருப்பது போல், இந்த த்ரிபுடி முழுவதும் முக்குணங்களால் வ்யாபிக்கப் பட்டதாய் இருக்கிறது.

न तदस्ति पृथिव्यां वा दिवि देवेषु वा पुनः ।
सत्त्वं प्रकृतिजैर्मुक्तं यदेभिः स्यात्त्रिभिर्गुणैः ।। ४० ।।

ந ததஸ்தி ப்ருதிவ்யாம் வா திவி தேவேஷு வா புனः ।
ஸத்த்வம் ப்ரக்ருதிஜைர் முக்தம் யதேபிः ஸ்யாத்த்ரிபிர்
குணைः ।। 40

முக்குணங்களின் வ்யாப்தியால் நான்கு வர்ணங்கள் ஏற்படுவது :

ஆகவே ப்ரக்ருதியா லமைந்த இந்த ஜகத்தில், ஸத்வம் முதலான இம்முக்கணங்களுக்கு வசப்படாததான ஓர் வஸ்து, ஸ்வர்க்கத்திலாவது மனுஷ்யலேகத்திலாவது இல்லை. ஆடு முதலியவற்றின் மயிரில்லாமற் கம்பளியும், மண்ணில்லாமல் மண்ணுண்டையும், நீர் இல்லாமல் அலைகளும், எங்காவது ஏற்படுவதுண்டா? அப்படியே குணாதீநப்படாததாய் ஸ்ருஷ்டியில் ஓர் ப்ராணியும் உண்டாவதே இல்லை. ஆகையால் நாம் கண்ணாற் பார்ப்பவையாகிய இவை அனைத்தும், முக்குணங்களாலேயே அமைக்கப்பட்டவை யாயிருக்கின்றன வென்று தெரிந்துகொள். ஆகவே (பகவான் த்ரிமூர்த்திகளாகவும், வானவர்கள் யக்ஷர்கள், கந்தர்வர்கள், தேவர்கள் என்று மூவகைப்பட்டவர்களாகவும் ஆகியிருக்கிறார்கள்) தெய்வமும் தேவதைகளும் மூவகைப்பட்டவர்கள் ஆகிறார்கள். இவ்வுலகிலுள்ள கர்த்தா, கர்மம், பலன் என்று மூவகையான வஸ்துக்களில் ஒவ்வொன்றும், குணவயாப்தியால் மூவிதப்பட்டதாகிறது. அதில் கர்த்தாக்களாகிய மனுஷ்யர்களுக்குள், வெவ்வேறு வேலைகளைச் செய்வதற்கு, நான்கு வர்ணங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

ब्राह्मणक्षत्रियविशां शूद्राणां च परन्तप ।
कर्माणि प्रविभक्तानि स्वभावप्रभवैर्गुणैः ।। ४१ ।।

ப்ராம்ஹண க்ஷத்ரிய விஶாம் ஶூத்ராணாம் ச பரந்தப ।
கர்மாணி ப்ரவிபக்தானி ஸ்வபாவ ப்ரபவைர் குணைः ।। 41

நான்கு வர்ணத்தார் எவரெவர் :

அப்படி நால்வகைப்படும் வர்ணத்தார் எவரெவர் என்று நீ கேட்பயானால், சொல்வேன், கேள். அவர்களில் முதன்மை

படைத்தவர்கள் ப்ராஹ்மணர்கள்; மற்றவர்களாகிய க்ஷத்ரியர்களும் வைச்யர்களும், வைதிக கர்மங்களைச் செய்து முடிக்கும் யோக்யதை பெற்றவர்களானதால், அவர்களும் ப்ராஹ்மணர்களுக்கு ஸமானமான யோக்யதை படைத்தவர்களாகவே பாவிக்கப்பட வேண்டும். நான்காவதவர்களான சூத்ரர்களுக்கு வைதிக கர்மங்களில் அதிகாரமே முற்றிலும் இல்லை. அவர்கள் கீழே சொல்லப்பட்ட மூன்று வர்ணத்தாருக்கு ஸேவை செய்து பிழைக்க வேண்டும். அவர்கள் கீழே சொன்ன வர்ணத்தாரை அடுத்து, ஸேவாவ்ருத்தி பூண்டவர்களாய் இருப்பதால், பூவோடு சேர்ந்த நாரும் சீமான்கள் மூக்கால் முகக்கப்படுவது போலும், சூத்ரர்களும் த்விஜர்களான முன்சொல்லப்பட்ட மூன்று வர்ணத்தார்களோடு ச்ருதியால் சேர்த்து கணக்கிடப்பட்டு, நான்காவது வர்ணத்தாரானார்கள். இப்படி ஏற்பட்ட நான்கு வர்ணத்தாரும் தங்கள் தங்களுக்கு ஏற்பட்ட கர்மங்களை ஆசரிப்பதால், அவர்கள் ஜந்மமரண ரூபமான ஸம்ஸாரம் என்னும் கத்திரியினின்று தப்பித்துக் கொண்டு, ஈச்வர ஸ்வரூபத்தில் ப்ரவேசித்து விடுவார்கள். அந்தக் கர்மங்கள் எவை என்று நான்மேலே விளங்கச் செய்வேன். பார்த்தா, அந்தக் கர்மங்கள் அவரவர்கள் ப்ரக்ருதியை அநுஸரித்து, நால் வகையாய் வகுத்து வைக்கப்பட்டிருக்கின்றன.

ஓர் தகப்பன் தான் தேடிவைத்த பொருளைத் தன் குமாரர்களுக்குப் பாகம் செய்து கொடுப்பதுபோலும், ஸூர்யன் உதயமானபின், அவன் வழிப்போக்கர்களுக்கு அவரவர்கள்போக வேண்டிய தனித்தனி வழியைக் காட்டிக் கொடுத்தல் போலும், ஓர் யஜமானன் தன் ஸேவகர்களுக்கு அவரவர்கள் செய்ய வேண்டிய வேலை இன்னின்ன தென்று வகுத்துவைத்தல் போலும், இது இருக்கிறது. அப்படி அவரவர்கள் ப்ரக்ருதியின் குணத்தை அநுஸரித்து, இந்நான்கு வர்ணத்தார்களுக்கும் வகுத்து வைக்கப்பட்டிருக்கும் கர்மங்களின் விஸ்தாரத்தை நான் எடுத்துரைப்பேன். அவற்றில் ஸத்வகுணம் ஏற்றக்குறைவு பாகங்களாய்ப் பிரிவடைந்து, ப்ராஹ்மணர்களையும் க்ஷத்ரியர்களையும் உண்டு பண்ணி வைத்தது. ரஜோ குணமும் ஸத்வகுணமும் ஒன்றோடொன்று கலந்து வைச்யர்கள் ஏற்படுத்தி வைக்கப்பட்டார்கள். ரஜஸ்ஸே தமஸுடன் கலந்து, சூத்ரர்கள் ஏற்பட்டார்கள். இப்படி ப்ராணி ஸமூஹம் என்ற ஒன்றே, இக்குணங்களால் நால் வகைப்படுத்தி வைக்கப்பட்டது. பின்பு தான் ஏற்கனவே தேடி வைத்துக்கொண்டதை தீபத்தின் ப்ரகாசம் காட்டிவைப்பது போலும், தங்கள் ப்ரக்ருதி குணங்களால் தங்களுக்கு

ஏற்பட்டுள்ள வெவ்வேறான கர்மபேதங்களை சாஸ்த்ரம் காட்டிக்கொடுக்கிறது. அப்படி அவரவர்கள் வர்ணத்தால் அவரவர்கள் செய்ய வேண்டினவாய் வகுத்து வைக்கப்பட்டிருக்கும் கர்மங்களின் லக்ஷணங்களைச் சொல்வேன்; ச்ரவணம் என்னும் ஸௌபாக்கியத்துக்கு நிதியாய் விளங்குகிறவனான ஹே அர்ஜுனா, கவனித்துக்கேள்.

शमो दमस्तपः शौचं क्षान्तिरार्जवमेव च ।
ज्ञानं विज्ञानमास्तिक्यं ब्रह्मकर्म स्वभावजम् ।। ४२ ।।

ஶமோ தமஸ்தப: ஶௌசம் க்ஷாந்திரார்ஜவ மேவ ச।
க்ஞான விக்ஞான மாஸ்திக்யம் ப்ரம்ஹ கர்ம ஸ்வபாவஜம்॥ 42

ப்ராஹ்மணர்கள் ஸ்வதர்மம்

(1) சமம் :

ஸர்வேந்த்ரியங்களின் வ்ருத்தியை தன்கைக்கீழ் ஸ்வாதீனப்படுத்தி வைத்துக் கொண்டு, புத்தியானது, ஓர் பதிவ்ரதை தன் கணவனிடம் போய்ச்சேர்வது போல், ஏகாந்தத்தில் ஆத்மஸ்வரூபத்தோடு கலந்து போவதினால், புத்திக்கு ஏற்படும் ஓய்வே, சமம் என்று சொல்லப்படும். இந்த குணமே ப்ராஹ்மணர்களுடைய ஸர்வ கர்மத்துக்கும் உத்பத்தி ஸ்தானமாகும்.

(2) தமம் :

பின்பு கர்மேந்த்ரியங்கள் அனைத்தையும் சாஸ்திர விதி யென்னும் தண்டத்தால் தண்டித்து, அவற்றை அதர்மமான மார்க்கங்களில் ப்ரவேசிக்காதபடி அடக்கிவைப்பதே, பாலுக்கு உறை வார்த்ததுபோல், சமம் உறுதிப்படும்படி செய்துவைக்கும் தமம் என்ற இரண்டாவது குணம். இது ஜீவனை ஸ்வதர்மத்தை அநுஸரித்து நடந்துகொண்டு வாழ்வு பெறச் செய்து வைக்கிறது.

(3) தபஸ் :

ஸடவீ தேவியின் துர்க்கையின். இவள் பிறந்த குழந்தையை ஆறாநாள் ராத்ரி கொன்று விடுவாள் என்று எண்ணி ஆறாநாள் ராத்ரி முழுவதும் ப்ரஸவித்த அறையில் தீபத்தை ஏற்றி வைத்துக் கொண்டு, இவளுக்கு பூஜைகள் செய்வதும்

மஹாராஷ்டிரர்களுக்குள் ஓர் வழக்கம்) பூஜை நடக்கவேண்டிய ராத்திரியில் தீபம் ஆறிப்போகாமல் அகண்டமாய் எரியும்படி பாதுகாத்துவைப்பது போலும், ஈச்வர ஸ்வரூபவிசாரத்தை ஸதா மனஸில் செய்து கொண்டிருப்பதே, தபஸ் ஸென்ற மூன்றாவது குணமாகும்.

(4) சௌசம் :

சௌசம் என்பது பாபத்தின் ஸம்பந்த மற்றிருக்கை. இது இருவகைப்படும், மனது ச்ரத்தையாலும் சுத்த பாவத்தாலும் நிறைந்ததாய் இருப்பது மானஸீக சௌசமாகும். ஸர்வவாயவங்களும் அவ்வவற்றிற்கு யோக்யமான தொழில்களைப் பூண்டு, அழகுபடைத்து விளங்குவது, சாரீர சௌசம் ஆகும். இப்படிப்பட்ட இருவகை குணங்களாலும், உள்ளும் புறமும் அலங்கரிக்கப்பட்டிருப்பதே சௌசம் என்ற ப்ராஹ்மண கர்மங்களின் நான்காவது குணமாகும்.

(5) க்ஷாந்தி :

பூமியைப் போல் ஸர்வவிதமாயும் ஸர்வகாலத்திலும் ஸர்வத்தையும் பொறுத்துக்கொள்வதே க்ஷாந்தி ஆகும். ஸ்வரங்கள் நடுவில் பஞ்சமஸ்வரம் போல் ஸுகப்ரதமாய் இருக்கும் இக்குணம் ப்ராஹ்மண கர்மங்களில் இருக்க வேண்டிய ஐந்தாவது குணம் ஆகும்.

(6) ஆர்ஜவம் :

கங்கையின் ப்ரவாஹம் கோணலாயிருந்த போதிலும், பூதங்களுக்குதவும் விஷயத்தில் அது ஒரேவிதப்பட்ட தாய் இருப்பதுபோலும், கரும்பின் கணுக்கள் கோணலாய் வளர்ந்திருந்த போதிலும், அதின் மதுரரஸம் ஒரேவிதப்பட்டதா யிருப்பதுபோலும், தனக்கு நன்மை செய்கிறவர்களிடத்திலும், கெடுதல் செய்கிறவர்களிடத்திலும், ஒரே மாதிரியாக ப்ரீதி பாராட்டி நடந்துகொள்வதே, ப்ராஹ்மண கர்மங்களிற் காணப்படும் ஆர்ஜவம் என்ற ஆறாவது குணமாகும்.

(7) ஞானம் :

தோட்டக்காரன் அநுதினமும் செடிகள் வேரில் நீர் வார்த்துக் கஷ்டப்படும்போதெல்லாம், அவைகள் பழங்களைப் பழுத்துக் தந்துவிடுமாதலால் இத்தனை கஷ்டமும் பயன்பட்டுப்போகும் என்று எண்ணிக்கொள்வதுபோலும்,

சாஸ்திரங்களால் விதிக்கப்பட்ட கர்மங்களை அநுஷ்டிக்கும் போதெல்லாம் ஈச்வரப்ராப்தி யொன்றையே பலனாக பாவித்திருப்பதே ஞானம். இதுவே ப்ராஹ்மண கர்மத்தின் ஏழாவது குணமாகும்.

(8) விஞ்ஞானம் :

விஞ்ஞானம் என்பதுபின் சொல்லப்படுவதாய் இருக்கும். ஸத்வசுத்தி தலையெடுத்திருக்கும் ஸமயத்தில் சாஸ்த்ர விசாரத்தாலும். த்யானத்தின் வலிமையாலும், நிச்சிதமான புத்தியோடு, ஈச்வரஸ்வரூபத்தில் ஒன்றுபட்டு நிற்கையாகிய உத்தமமான குணம் விஞ்ஞான மாகும். இது ப்ராஹ்ம்ண கர்மங்களிற் காணப்படும் எட்டாவது குணமாகும்.

(9) ஆஸ்திக்யம் :

இத்தனையோடும் கூட ஆஸ்திக்யம் என்ற ஒன்பதாவது குணமும் ப்ராஹ்மண கர்மங்களிற் காணப்படும். ராஜமுத்ரை யெவனிடத்தில் இருக்கிறதோ, அவன் எவனானாலும், அவனை எல்லாரும் மிக்க ப்ரியத்துடன் கொண்டாடுவதுபோலும், சாஸ்திரம் அங்கீகரித்துக் கொண்ட மார்க்கம் என்று ஒன்றிருந்தாற் போலும், அதை மிக்க ஆதரவுடன் கொண்டாடுவதே ஆஸ்திக்யமாகும். இதுவே ப்ராஹ்மண கர்மங்களுக்கு ப்ராஹ்மணத்வத்தை ஏற்படுத்திவைக்கும் ஒன்பதாவது குணமாகும்.

உபஸம்ஹாரம் :

இப்படி சமம் முதலிய ஒன்பது நிர்தோஷமான லக்ஷணங்கள் பொருந்தியவையாய். எந்தக் கர்மங்கள் காணப்படுமோ, அவை ப்ராஹ்மணர்களுக்கு இயற்கையான கர்மங்களாகும். அவர்கள் இந்த நவகுணங்களாகிய நவரத்நங்களுக்கு இருப்பிடமாகிய ஸமுத்ரமாய் இருந்துகொண்டு, ஸூர்யன் தன் ப்ரகாசத்தால் ஸதா அலங்கரிக்கப்பட்டவனாய் இருப்பதுபோலும், அவர்கள் இந்த நவகுணங்கள் என்ற நவரத்நங்களாலமைந்த ஓர் ஹாரத்தை ஒருக்காலும் கழற்றிவைப்பதே இல்லை. சம்பகவ்ருக்ஷம் தன் புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டு விளங்குவதுபோலும், சந்த்ரன் சந்த்ரிகையால் தாவள்யமாய் (வெண்மையான காந்தியோடு) ப்ரகாசிப்பதுபோலும், சந்தனவ்ருக்ஷம் தன் ஸுவாஸனையால் அங்கமெல்லாம் ஸதா பூசப்பட்டிருப்பதுபோலும், இந்த நவகுணங்களாகிய நவரத்நங்கள்

இழைக்கப்பெற்றிருக்கும் ஓர் நிர்மலமான ஆபரணத்தை, ப்ராஹ்மணர்கள் ஸதா அணிந்து கொண்டே இருப்பார்கள். இனி க்ஷத்ரியர்களுக்கு எந்தக் கர்மங்கள் உரித்தானவையாயிருக்குமோ, அவற்றைச் சொல்வேன். அர்ஜுநா அவ்விஷயத்தில் உன்னுடைய புத்திமுழுவதையும் செலுத்தினவனாய் நீ கேட்கவேண்டும்.

शौर्यं तेजो धृतिर्दाक्ष्यं युद्धे चाप्यपलायनम् ।
दानमीश्वरभावश्च क्षात्रं कर्म स्वभावजम् ।। ४३ ।।

ஶௌர்யம் தேஜோ த்ருதிர் தாக்ஷ்யம் யுத்தே சாப்ய பலாயனம்।
தானமீஶ்வர பாவஶ்ச க்ஷாத்ரம் கர்ம ஸ்வபாவஜம் ॥ 43

க்ஷத்ரிய கர்மங்களின் குணங்கள்

(1) சௌர்யம்

ஸூர்யன் தன்னுடைய ப்ரகாசத்தைப் பரப்பிவைப்பதற்கும், ஸிம்ஹம் இதர ம்ருகங்களைக் கொல்வதற்கும், மற்றொன்றின் ஸஹாயத்தை வேண்டாததுபோலும், தன் ஸ்வரூபத்தின் இயற்கையாலேயே பலவனாய் இருந்துகொண்டு, மற்றொருவர் ஸஹாயமில்லாமல் சூரனாய் இருப்பதே, க்ஷத்ரியகர்மங்களிற் காணப்படும் குணங்களிற்குள் முதலாவதும் சிறந்ததுமான சௌர்யம் ஆகும்.

தேஜஸ் :

ஸூர்யன் தன்னுடைய ப்ரகாசத்தால் கோடிக்கணக்கான நக்ஷத்ரங்களை மறைந்துபோகச் செய்து, அவைகள் சந்த்ரனைத் தங்களுக்குத் துணையாய்ச் சேர்த்துக்கொண்டு எதிர்த்துவந்தாலும், அவன் மறைந்து போகாததுபோலும், தன்னுடைய பெருமையால் உலகத்தாரை வியப்படையச் செய்து வைத்து, எவ்விதமான ஆபத்தாலும் தான் கலக்கமுறாமல், ஆச்சர்யப்படும்படி ஸாமர்த்யம் படைத்திருப்பதே தேஜஸ்ஸாகும். இது க்ஷத்ரிய கர்மங்களிற் காணப்படும் இரண்டாவது குணம் ஆகும்.

த்ருதி :

இக்கர்மங்களில் மூன்றாவது குணமாய் தைர்யம் என்பது விளங்கும். ஆகாசமே இடிந்து தன்மேல் விழுவதாயிருந்தாலும்,

புத்தியின் கண்ணாகிய மனது மூடிக்கொள்ளாமல் இருப்பதே த்ருதியாகும்.

தாக்ஷ்யம் :

ஓர் தடாகத்தில் ஜலமானது எவ்வளவுதான் உயர்ந்தாலும், தாமரைப்பூவானது அதை ஜயித்துக்கொண்டு அதற்கும் மேலே எழுந்து நிற்பதுபோலும், உயர்வால் மற்ற வஸ்துக்கள் அனைத்தையும் ஆகாசம் வென்றுவிடுவதுபோலும், எவ்வளவோ பெருத்த இடையூறுகள் குறுக்கிட்டபோதிலும், அவை அனைத்தையும் மீறிக்கொண்டு, புத்தியானது அர்த்தரூபமான பலனை ஸாதித்துவைக்கும் திறமைபடைத்ததாய் இருப்பதே, சுத்தமான தாக்ஷ்யம் ஆகும். இது க்ஷத்ரியகர்மங்களின் நான்காவது குணமாகும்.

(5) யுத்தத்தினின்று பின்வாங்காமை:

அன்றியும் அலௌகிகமான (உலகில் காணப்படாத மிக்க அருமையான) பராக்ரமத்தோடு போர் செய்வது என்பது க்ஷத்ரிய கர்மங்களின் குணங்களுக்குள் ஐந்தாவது குணமாகும். ஸூர்ய காந்தம் என்னும் செடி தன் தலையால் ஸூர்யனையே எப்போதும், நோக்கிக் கொண்டிருப்பது போலும், சத்ருவுக்கு எதிராக நின்று கொண்டு, பூர்ணகர்ப்பிணி பல யுக்திகள் செய்து, புருஷனுடைய ஸங்கமத்தினின்று தப்பித்துக்கொள்ளுதல் போலும், யுத்தத்தில் எதிரிக்கு முதுகு காட்டாததே, நான்கு புருஷார்த்தங்களைக் காட்டிலும் மேன்மைபடைத்ததான பக்தியைப் போலும், க்ஷத்ரியர்கள் ஆச்சாரத்தில் இருக்க வேண்டிய குணங்களுக்குள் அத்யுத்தமமானதும் ஐந்தாவதுமான குணமாகும்.

(6) தானம் :

ஓர் செடி தன்னிடத்தில் உண்டான பூக்களையும் பழங்களையும் ஓர் தடையுமின்றி பிறருக்கு உதவி விடுதல் போலும், தாமரைத்தடாகமானது தன்னுடைய பூக்களின் பரிமளத்தை உதாரமாய் எங்கும் வீசிவிடுவதுபோலும், சந்த்ரனுடைய சந்த்ரிகை எவன் வேண்டும் என்றாலும் அவன் வேண்டுமளவு அநுபவித்துக் கொள்ளக்கூடிய தாயிருப்பதுபோலும், வாங்கிக் கொள்கிறவன் எவ்வளவுக்கு ஆசைப்படுகிறானோ அவ்வளவும் கொடுப்பதான தானம் எதுவோ, அதுவே க்ஷத்ரியகர்மங்களின் ஆறாவது குணமாகும்.

(7) ஈச்வரபாவம் :

வேதாஞ்ஞையை வஹிப்பதற்கு தாங்களே வீடாய் இருந்துகொண்டு, தேஹம் தன்னுடைய அவயவங்களை நன்றாய் போஷித்து, அவற்றைக்கொண்டு தான் இஷ்டப்பட்ட வேலைகளைச் செய்து கொள்வது போலும், ப்ரஜைகளை ஓர் குறைவுமின்றி பாதுகாத்து, அவர்கள் ப்ரியத்தை ஸம்பாதித்துக் கொண்டு, அவர்களால் தான் அடையவேண்டிய லாபத்தை அடைந்து கொள்வதே ஈச்வரபாவம் ஆகும். இதுவே ஸர்வசக்திக்கும் வாஸஸ்தானமாய் ஸர்வகுணங்களுக்கும் அரசாட்சி பெற்றதாகும். இப்படிப்பட்ட ஈச்வரபாவம் க்ஷத்ரிய கர்மங்களின் ஏழாவது குணம், ஆகும்.

உபஸம்ஹாரம் :

ஸப்தருஷி நக்ஷத்ரங்களால் அலங்கரிக்கப்பட்டு விளங்கும் ஆகாசம்போலும், இவ்வேழு குணங்களால் அலங்கரிக்கப்பட்டவையாய் விளங்கும் கர்மங்களே க்ஷத்ரியர்களுக்கு அவர்கள் இயற்கையால் எற்பட்டவையாகும். க்ஷத்ரியர்களை மநுஷ்யர்கள் என்று சொல்லத்தகாது. அவர்கள் ஸத்வம் (கர்மங்களை முடிவு பெறச் செய்து வைக்கும் திறமை) என்னும் ஸ்வர்ணத்தால், அமைந்த ஓர்பர்வதமாயிருந்துகொண்டு, இந்த ஏழு குணங்கள் என்னும் ஸ்வர்கங்களுக்கு ஆதாரமாய் விளங்குகிறார்கள். என்று சொல்ல வேண்டும். இவ்வேழுகுணங்கள் என்ற ஏழு ஸமுத்திரங்களால் நன்றாய் சூழப்பட்ட கர்மங்கள் என்னும் பூமண்டலத்தைப் புசிக்கிறவர்கள் என்றும், இந்த க்ஷத்ரியர்களைச் சொல்லவேண்டும். அல்லது இவ்வேழுகுணங்கள் என்ற ஏழு முகங்களில் க்ஷத்ரிய கர்மம் என்னும் கங்கை அவர்கள் தேஹமாகிய ஸமுத்ரத்தில் ப்ரவேசித்து விளங்குகின்றது என்று சொல்லவேண்டும். இப்படி அலங்கரித்து வர்ணித்தது போலும். சௌர்யம் முதலிய இவ்வேழுகுணங்கள் பொருந்திய வையாயிருக்கும் கர்மங்கள், க்ஷத்ரியர்களாய்ப் பிறந்தவர்களுக்கு இயற்கையானவை. இனி வைச்யர்களாய் பிறந்தவர்களுக்கு உசிதமான கர்மங்கள் எவையோ, அவற்றைச் சொல்வேன், கவனித்துக் கேள், ஹே மஹாமதியே.

कृषिगौरक्ष्यवाणिज्यं वैश्यकर्म स्वभावजम् ।
परिचर्यात्मकं कर्म शूद्रस्यापि स्वभावजम् ।। ४४ ।।

க்ருஷீ கௌரக்ஷ்ய வாணிஜ்யம் வைஶ்ய கர்ம ஸ்வபாவஜம்।
பரிசர்யாத்மகம் கர்ம ஶூத்ரஸ்யாபி ஸ்வபாவஜம் ॥ 44

வைச்யர்களின் கர்மங்கள்

(1) க்ருஷி

பூமி, விதை, கலப்பை, ஆகிய இவைகளைக் கைமுதலாய்க் கொண்டு, ஏராளமாக லாபத்தைத் தேடிக்கொள்வதே க்ருஷியாகும்.

(2) கோரக்ஷ்யம் :

மாடுகளைக் காப்பாற்றி, அவற்றைக் கொண்டு ஜீவித்தல், கோரக்ஷ்யமாகும்.

(3) வாணிஜ்யம் :

வஸ்துக்களை குறைந்த விலைக்கு வாங்கி, அதிகமான விலைக்கு விற்பனைசெய்தல், வாணிஜ்யமாகும்.

உபஸம்ஹாரம் :

இவை அனைத்தும் வைச்யர்களுக்கு இயற்கையாகவே ஏற்பட்ட கர்மங்களாகும்.

சூத்ரர்களுக்குரிய கர்மம் :

வைச்யர்கள், க்ஷத்ரியர்கள், ப்ராஹ்மணர்கள், ஆகிய த்விஜர்கள் மூவர்களுக்கும் ஸேவை புரிவதே, சூத்ரர்களுக்கு உரித்தான் கர்மமாகும். இப்படி த்விஜர்களுக்கு ஸேவை செய்வதைத் தாண்டி யிருக்கும் கர்மங்களில் சூத்ரர்களுக்கு அதிகார மில்லை. இவ்விதம் நான்கு வர்ணத்தாருக்கு ஏற்பட்டவையான கர்மங்கள் சொல்லப்பட்டு முடிந்தன.

स्वे स्वे कर्मण्यभिरतः संसिद्धिं लभते नरः ।
स्वकर्मनिरतः सिद्धिं यथा विन्दति तच्छृणु ।। ४५ ।।

ஸ்வே ஸ்வே கர்மண்யபிரத: ஸம் ஸித்திம் லபதே நர: ।
ஸ்வகர்ம நிரத: ஸித்திம் யதா விந்ததி தச் ச்ருணு ॥ 45

ஸ்வகர்மங்களை ஆதரவுடன் அநுஷ்டிப்பதால் ஏற்படும் நன்மை :

காது முதலிய இந்த்ரியங்களுக்கு சப்தம் முதலிய விஷயங்கள் தகுந்தவையா யிருப்பதுபோலும், மேகத்தினின்று விழும் மழை நதியிற் போய்ச் சேரவேண்டியது போலும், நதிகள் ஸமுத்திரத்திற் போய்விழ வேண்டியது போலும் சிவந்த சரீரம் படைத்தவனுக்கு சிவப்பே சோபாபஹமா (அழகு செய்து கொடுப்பதாய்) யிருப்பது போலும், ஹே புத்திசாலியானவனே , அவனவன் வர்ணாச்ரமத்துக்குத் தகுந்ததாய் எந்தெந்த கர்மம் செய்ய வேண்டியதாய் அவனவனுக்கு ஏற்பட்டிருக்குமோ, அந்தந்தக் கர்மத்தை சாஸ்த்ரத்திற் சொல்லியிருக்கும் முறையாய்ச் செய்து முடிப்பதற்கு, அவனவன் தீர்மானம் செய்துகொண்டு, எப்போதும் இருக்க வேண்டும். தனதாயிருக்கும் ஓரிரத்நத்தின் மதிப்பை, ரத்நபரீக்ஷகனைக்கொண்டு தெரிந்துகொள்ள வேண்டுவது போலும், தனக்குக் கண்ணிருந்தபோதிலும், தீபத்தின் உதவி யில்லாமற்போனால், கண் பயன்படாதது போலும், காலிருந்தும், போகவேண்டிய வழி தெரியாமற்போனால், கால் பயன்படாததுபோலும், தான்பிறந்த ஜாதிக்கு தக்கபடி இயற்கையாய்த் தனக்கு ஏற்பட்டிருக்கும் கர்மவிஷயமான அதிகாரம் எதுவோ, அதைத்தான் சாஸ்த்ரதைக்கொண்டு உள்ளபடி அறிந்துகொள்ளவேண்டும். தன் வீட்டில் தானே மறைத்து ப்ரப்படுத்தி வைத்தநிதியை, தீபத்தின் உதவியைக்கொண்டு கண்டுபிடித்துக் கொண்டபின், அதை யெடுத்து உபயோகப்படுத்திக் கொள்வதில் யாதோர் தடையும் இராததுபோலும், இயற்கையால் தான் செய்யவேண்டியதாய் ஏற்பட்டு, சாஸ்த்ரத்தால் நிச்சயிக்கப்பட்டு, தனக்கு விஹிதமாய், இருக்கும் கர்மத்தை, எவன் ஆசரித்துக்கொண்டு, அவ்விஷயததிற் சோர்வு பாராட்டாமல், அவற்றின் பலனில் ஆசைவைக்காமல், தன் தேஹத்தையும் தன் ஜீவஸ்ரூபத்தையும் அதிலேயே இருத்தி, அதைக் குறைவற நடத்திக்கொண்டு, ஓர் பெருவெள்ளத்தின் ஓட்டத்தில் விழுந்த நீரானது அத்துடனேயே போய்க்கொண்டு வேறுவழியாய் ஓடமுடியாததாய் இருப்பதுபோலும், அந்தக் கர்மத்தின் ஆசரணத்திலேயே ஈடுபட்டவனாய் இருப்பானோ, அவன் மோக்ஷத்தின் இக்கரைக்குப் போய்ச் சேர்ந்தவனாவான்.

கர்மத்தைச் செய்யாமலே இருத்தல், நிஷித்த கர்மங்களைச் செய்தல், என்ற இவ்விரண்டின் வழிக்கே போகாமல் எவன் இருப்பானோ, அவன்தன் னாத்மாவுக்கு விரோதியான

ஸம்ஸாரத்தின் ஸம்பந்தத்தினின்று விடுபட்டவனாவான். சந்தனக்கட்டையால் செய்துவைக்கப்பட்ட தொழு மரமேயானாலும், அதில் காலை நுழைத்துக்கொள்ளக் கூடாதது போலும், காம்ய கர்மங்களின் வழிகூட அவன் போகாமல், மற்ற வையாகிய நித்ய நைமித்திக கர்மங்களை, பலனில் ஆசையை ஒழித்துவிட்டு, தன் ஸர்வசக்தியையும் செலவிட்டு அநுஷ்டிப்பானானால், அவனுக்கு மோக்ஷத்தின் எல்லையில் நிலைகொள்ளக் கிடைக்கும். இப்படி ஸாம்ஸாரிக சுபாசுபங்களின் ஸம்பந்தத்தை ஒழித்துக் கொண்டவனாய், அவன் மோக்ஷத்திற்கு வாயிற்படியாயிருக்கும் வைராக்யத்தில் நிலைகொள்வான். இந்த வைராக்யம் எல்லா பாக்யங்களுக்கும் முடிவான எல்லையாயும், மோக்ஷம் ஒன்றே அடைய வேண்டிய லாபம் என்ற நிச்சய ஞானத்தைச் செய்து கொடுப்பதாயும் இருந்துக் கொண்டு, கர்மமார்க்கத்தில் ஏற்பட்ட ச்ரமம் அனைத்தையும் ஆற்றிற்கொள்ளும் ஸ்தானமாயிருக்கும். இந்த வைராக்யமானது பூர்வ ஸுக்ருதங்கள் என்னும் செடி, தான் மோக்ஷத்தைப் பலித்துக் கொடுப்பதற்கு ஈடாக அடகுவைத்த அதின் பூப்போல் இருக்கும். அப்பூவின்மேல் இப்படிப்பட்ட கர்மயோகிகளான தேனீக்கள் உட்கார்ந்து கொள்கிறார்கள். ஆத்மஞானம் என்னும் நிதி தங்களுக்குக் கிடைத்துப்போவதற்கு அவர்கள் தங்க ளந்தராத்மா வென்னும் கண்ணில் இட்டுக்கொள்ளும் மையென்றும், இவ்வைராக்யத்தைச் சொல்லலாம். இப்படி விஹிதகர்மங்களை சாஸ்த்ராநுஸாரமாக அநுஷ்டிக்கும் இவர்களுக்கு, ஹே அர்ஜுநா, மோக்ஷத்தை அடையும் யோக்யதை ஏற்பட்டுவிடுகிறது.

மேல்வரும் ச்லோகத்துக்கவதாரிகை:

இந்த விஹித கர்மாநுஷ்டானமே அவனவன் நன்மை அடைய வேண்டியதற்கு இன்றியமையாத ஸாதனமா யிருப்பதுடன், ஸர்வாத்மகனாகிய (ஸர்வ பூதங்களுமாயிருக்கும்) எனக்கு அவன் செய்யவேண்டிய பூஜைகளில் உத்தமமான பூஜையாயும் இருக்கிறது. பதிவ்ரதை ஸம்பூர்ணமாய் போகங்களை அநுபவித்துக்கொண்டு தன்னுடைய கணவனுடன் கலந்து ரமிப்பதே, அவள் செய்யவேண்டிய தபஸ்ஸு மாவதுபோலும், ஓர் பாலகனுக்கு தனக் கொரே ஜீவனாதாரமான தாயை ஸேவிப்பதே அவன் செய்யவேண்டியதான தர்மமா யிருப்பதுபோலும், தனக்கு ஜீவனாதாரமான ஜலமாயிருக்கும் கங்கையில் ஓர் மீன் வஸிப்பதால், அதற்கு ஸகலதீர்த்தங்களையும் ஸேவித்த

புண்யம் கிடைத்துப்போவதுபோலும், ஒவ்வொருவனும் தனக்கு விஹிதமான தர்மத்தை அநுஷ்டிப்பதை விட்டு, தான் நன்மை அடைவதற்கு வேறு உபாயமில்லை யென்று உறுதியாய் நிச்சயித்துக்கொண்டு, அதை அநுஷ்டித்துவந்தால், அதுவே ஈச்வரனுக்கு உத்தமமான ஸேவையாய் முடிந்து, ஈச்வரன் அவனுக்குக் கடன்பட்டவனாய்விடுகிறான். ஒவ்வொருவனும் கடைத்தேறுவதற்கு அவனுக்கென்று வகுத்துவைக்கப் பட்டிருக்கும் கர்மம் ஈச்வரனுடைய உத்தேசத்துக்கு ஒத்ததாய் இருப்பதால், அந்த விஹிதகர்மத்தை அநுஷ்டிக்கிறவனுக்குத் தப்பாமல் ஈச்வரன் கிடைத்துப்போகிறான். ஓர் வேலைக்காரப்பெண்ணானவள் ராஜாவின் மனஸுக்கு பிடித்துப்போய்விட்டால், அவளே ஸகலருக்கும் யஜமானியாய் விளங்கும் ராஜாத்தி யாய்விடுகிறாள். அரசன் வேலையில் தலையைக் கொடுக்கத் துணிந்தவனை, அரசன் வெகுமதித்து, தன்னுடைய முக்ய ஜநங்களில் ஒருவனாய்க் கணக்கிட்டுக்கொள்கிறான். அப்படியே ஈச்வரனுடைய மனோபாவத்தை அறிந்து, அதற்கிணங்கி நடந்து கொள்வதே, அவனுக்குச் செய்யும் பரமஸேவையாகிறது. மற்றதாகிய காம்யகர்மாநுஷ்டானம், ஈச்வரனோடு செய்யும் வ்யாபாரமே ஆகும்.

यतः प्रवृत्तिर्भूतानां येन सर्वमिदं ततम् ।
स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानवः ।। ४६ ।।

யதः ப்ரவ்ருத்திர் பூதானாம் யேன ஸர்வமிதம் ததம் ।
ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மானவः ॥ 46

விஹிதகர்மாநுஷ்டாநமே ஈச்வரபூஜையாய் முடிந்து, மோக்ஷ காரணம் ஆகிறது:

ஆகையால் ஒருவன் தனக்கு விதித்து வைக்கப்பட்ட கர்மத்தை அநுஷ்டிப்பது, ஓர்டிமை தன் ஸ்வாமியின் ஆஞ்ஞைப்படி நடந்துகொள்வதாய் இராமல், எவனிடத்திலிருந்து ஸர்வபூதங்களும் வெளிப்பட்டு உருவம் படைத்தவையாயினவோ, அந்த ஈச்வரனுடைய மனதை அறிந்து, அவனிடத்தில் இருக்கும் ப்ரேமையால், அதை நிறைவேற்றி வைப்பதே ஆகும். எவன் அவித்யை என்னும் துணியின் கந்தல்களைக் கொண்டு, ஜீவர்கள் என்னும் பொம்மைகளைச் செய்துவைத்து, அவற்றை முக்குணங்களால் அமைந்த முப்புரிக் கயிறாகிய அகங்காரத்தைக்கொண்டு ஆட்டிவைக்கிறானோ, ஓர் கூட்டமாயிருக்கும் தீபங்கள்

முழுமையும் ஒரே தேஜஸ்ஸால் வ்யாபிக்கப்பட்டிருப்பதுபோல், எவனால் இந்த ஜகத்தனைத்தும் உள்ளும் புறமுமாய் வ்யாபிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த ஸர்வாத்மகனான ஈச்வரனுக்கு, ஒருவன் ஸ்வதர்மாநுஷ்டானம் என்னும் புஷ்பத்தைக்கொண்டு, அவனுக்கு ஸந்தோஷம் உண்டாவதையே உத்தேசித்து, அளவற்றபடி பூஜைசெய்தால், அந்தப் பூஜையால் மனக்குளிர்ச்சியடைந்த பரமாத்மாவால் கொடுக்கப்பட்ட ப்ரஸாதமாய், அவனுக்கு வைராக்கியம் ஸித்தித்துப்போகிறது.

இப்படிப்பட்ட வைராக்யம் ஏற்பட்டால், ஈச்வர விஷயமாய்க் கட்டுக் கடங்காதப்ரேமை ஏற்பட்டு, அதின் கார்யமாய் த்ருச்யஜாதம் அனைத்தும் வாந்தியெடுத்து வைக்கப்பட்டதுபோல் தோன்றி, வெறுக்கப்பட்டுப்போகிறது. ப்ராணநாதனை விட்டுப் பிரிந்திருக்கும் துக்கத்தில், ஓர் பெண்ணுக்கு உயிரோடிருப்பதே ஸஹிக்கமுடியாத பாதையாய்விடுதல்போலும், அவனுக்கு விஷயஸுகங்கள் அனைத்தும் ஓர் விதமான ஸந்தோஷமுமாகாமல் துக்கங்களே ஆய்விடுகின்றன. சுத்தமான ஸ்வரூபஞானம் ஏற்படும் முன்பே, தீவ்ரமான ஈச்வரத்யானத்தின் பலத்தால், தன்மயதை (ஈச்வரனாகவே தன்னை மதித்து அப்படியே சேஷ்டித்தல்) ஏற்படும்படியான யோக்யதை அவன் ஞானத்துக்கு உண்டாய்விடுகிறது. ஆகையால் மோக்ஷத்தை அடைந்துதான் தீரவேண்டும் என்ற ஓர் வ்ரதத்தை எவன் பூண்டுகொள்வானோ, அவன் தன் சரீரத்தைக்கொண்டு ஸ்வதர்மத்தை நன்றாய் அநுஷ்டித்துத் தீரவேண்டும்.

श्रेयान्स्वधर्मो विगुणः परधर्मात्स्वनुष्ठितात् ।
स्वभावनियतं कर्म कुर्वन्नाप्नोति किल्बिषम् ।। ४७ ।।

ஶ்ரேயான் ஸ்வதர்மோ விகுணः பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத் ।
ஸ்வபாவ நியதம் கர்ம குர்வன் ந ஆப்நோதி கில்பிஷம் ॥ 47

ஸ்வதர் மாநுஷ்டானத்தால் ஏற்படும் நன்மை:

அப்பா ஒருவனுக்கு ஸ்வதர்மமாய் ஏற்பட்ட தொன்று, அநுஷ்டிக்கப்படும்போது, மிக்கக் கடினமானதாகத் தோற்றியபோதிலும், அதை அநுஷ்டிப்பதால் முடிவில் ஏற்படும் நன்மையை உத்தேசித்து, அதைக் கைவிடாதிருக்கவேண்டும். ஓர் நோயாளிக்கு வேம்பே நன்மை செய்துவைப்பதா யிருந்தால், அது மிக்கக்

கசப்பாயிருக்கிறதென்று, அதை அவன் ஸேவியா தொழியக்கூடாது. வாழையானது குலைதள்ளும் முன்பு, ஓர் பயனும் அற்றதாய்த் தோற்றினதால், அதை அப்போதே வெட்டிவிட்டால். உத்தமமான ருசியுள்ள பழங்கள் எப்படிக், கிடைக்கும்? அப்படியே ஸ்வதர்மத்தை அநுஷ்டிப்பது கஷ்டமாய் இருக்கிறதென்று, அதை அநுஷ்டியா திருந்துவிட்டால், மோக்ஷஸுகம் கிடைக்காமலே போகுமல்லவா?

பரதர்மானுஷ்டானத்தால் நன்மை உண்டாகாது:

ஓர் பாலகனுடைய தாய் குரூபியாயிருந்தாலும், அவள் அவன்மேல் பாராட்டியிருக்கும் ப்ரேமைகூட கோணலான தாகுமா? வேறோர் ஸ்த்ரீ ரம்பைபோல் அழகுபடைத்தவளாய் இருந்தாலும், அவளால் அவனுக்கு என்ன ப்ரயோஜனம் ஏற்படும்? ஜலத்தைக் காட்டிலும் நெய்யில் எவ்வளவோ குணம் மிகுந்து இருந்தாலும், மீனை நெய்யில் விட்டால், அது என்னமாய் உயிர்பிழைத் திருக்கும்? அன்றியும் பார், உலகனைத்துக்கும் விஷமாய் இருப்பதே, அவ்விஷத்தில் வாழும் புழுவுக்கு அம்ருதமாய் இருக்கிறது. உலகத்தா ரனைவருக்கும் திதிப்பாய் இருக்கும் சர்க்கரை, அப்புழுவுக்கு விஷமாய் இருந்து, அதைக்கொன்று விடுகிறது.

ஸ்வதர்மானுஷ்டானத்தின் ஆவச்யகதை:

(விலக்கி வைக்க முடியாமை) ஆகையால் எந்தக் கர்மம் எவனுக்கு வகுத்து வைக்கப்பட்டதாயிருந்துகொண்டு, ஸம்ஸாரம் அவனைப் பற்றிக்கொண்டு மறியல் கிடப்பதைப்போக்கிவைப்பதாய் இருக்குமோ, அதை அநுஷ்டிப்பது மிக்க துக்கரமாய் இருக்கிற தென்று, அவன் அதை அநுஷ்டிப்பதை விட்டு, வேறொருவனுக்கு விதித்துவைக்கப்பட்டிக்கும் கர்மம் நன்றாயிருக்கிற தென்று, அவன் நினைத்து அதை அநுஷ்டிப்பது, தனக்குக் கிடைத்திருக்கும் காலால் நடக்கவேண்டிய வழியைத் தலையால் நடக்கத்தொடங்கினதுபோல் முடியும். ஆகவே ஒருவன் தான் பிறந்த ஜாதியால் தனக் குரியதாய் ஏற்பட்டிருக்கும் கர்மத்தை அநுஷ்டித்தே, அவன் தன் கர்மபந்தத்தை அறுத்துக் கொள்ளவேண்டும். அன்றியும் பரதர்மத்தை அநுஷ்டிப்பதைவிட்டு, ஸ்வதர்மத்தையே செய்யவேண்டும் என்கிற நியமத்தைப் பூண்டு கொள்ளாமற்போனால், ஆத்மஸாக்ஷாத்காரம் ஸித்தியாமற்போகும். ஆத்மஸாக்ஷாத்காரம், ஆகாதவரைக்கும்

கர்மங்களைச் செய்வது நின்றுபோகாது. கர்மங்களைச் செய்வதில் முதலில் தேஹம் கஷ்டப்படத்தான்வேண்டும்.

सहजं कर्म कौन्तेय सदोषमपि न त्यजेत् ।
सर्वारम्भा हि दोषेण धूमेनाग्निरिवावृताः ।। ४८ ।।

ஸஹஜம் கர்ம கௌந்தேய ஸதோஷமபி ந த்யஜேத் ।
ஸர்வாரம்பா ஹி தோஷேண தூமேநாக்னி ரிவாவ்ருதாः ॥ 48

கர்மாரம்பம் அனைத்தும் தோஷயுக்தமாகவே இருக்கிறது:

ஆகவே எந்தக் கர்மத்தைச் செய்யத்தொடங்கும்போதும், அதைச் செய்வதில் தேஹத்தைக் கஷ்டப்படுத்தி வைக்கவேண்டும் என்னும் தோஷம் இருந்தே தான் தீர்கிறது. அப்படி இருக்க ஸ்வதர்மத்தில் மாத்ரம் தோஷம் இருக்கிற தென்று ஏன் நினைக்கவேண்டும்? நேரான வழியில் நடந்து போவது காலுக்கு ஆயாஸமாய் இருக்கிறதென்று அதைவிட்டு, வழியில்லாத வழியில் நடக்கத் தொடங்கினால் காலுக்கு ஆயாஸ மில்லாமற்போகுமா? வழிநடக்கும்போது கல்லின் பாரத்தையோ, கட்டு ஸாதமூட்டையையோ, சுமந்து தீரவேண்டு மென்று ஏற்பட்டு விட்டால், எதைச் சுமந்துகொண்டுபோனால் பசியையும் ச்ரமத்தையும் தீர்த்துக்கொள்ளமுடியுமோ, அதைச் சுமந்துகொண்டு, போவது தானே புத்திசாலித்தன மாகும். தான்யத்தைக் குத்துவதிலும், உமியைக் குத்துவதிலும், நாய் மாம்ஸத்தை சமைப்பதிலும், யஜ்ஞத்துக்கு வேண்டிய ஹவிஸ்ஸை சமைத்துவைப்பதிலும், ஜலத்தைக் கடைவதிலும், தயிரைக்கடைவதிலும், நித்ய ஹோமத்தை நடத்திக்கொள்வதற்காக நெருப்பை மூட்டிவைப்பதிலும், வேறு கார்யத்துக்காக நெருப்பை மூட்டிவைப்பதிலும் தேஹகஷ்டம் ஒன்றாகவே இருக்க, இவற்றில் லாபகரமானதை, ஏன் செய்யக்கூடாது? தர்மபத்நியைப் போஷிப்பதிலும், அவிசாரியைப் போஷிப்பதிலும், ச்ரமம் ஒன்றாகவே இருக்க, அவிசாரியோடுகூடி, பாபத்தையும் லோகநிந்தையையும் ஏன் தேடிக்கொள்ள வேண்டும்?

ஓர் போர்வீரன் யுத்தத்தினின் றோடி, முதுகில் காயம் படுவதாலும், சத்ருவுக்கு எதிர்நின்று சண்டைசெய்து மார்பில் காயம்படுவதாலும், நேரும் சாவு ஒன்றாகவே இருக்க, இவற்றில் ஹிதகரமும் கீர்த்திகரமும் ஆன போர் செய்தலை ஏன்

கைவிடவேண்டும்? ஓர் குலஸ்த்ரீக்கு, புருஷனுடன் வாழ்ந்து அவன் கையால் அடிபடுவதும், பரபுருஷனிடம் போய்ச்சேர்ந்து, அவன் கையால் அடிபடுவதும் ஒன்றாயிருக்க, அவள் தன் புருஷனை ஏன் வ்யர்த்தமாய்க் கைவிடவேண்டும்? அப்படியே எந்தக் கர்மத்தைச் செய்வதிலும் தேஹத்தின் கஷ்டம் ஒன்றாகவே இருக்க, விஹிதகர்மத்தில் மாத்ரம் தோஷம் இருக்கிறதென்று ஏன் சொல்லவேண்டும்? உயிர் மடிந்துபோகாமல் பிழைத்திருக்கச் செய்துவைக்கும் அம்ருதத்தின் அல்பாம்சததை ஸம்பாதித்துக்கொள்வதில் தன் ஸர்வசக்தியையும் ஸர்வசொத்தையும் செலவிடுவதில் கெடுதல் என்ன? அப்படிச் செய்யாமல் ஆத்மஹத்யை என்னும் பாபத்தோடு சாவையும் பலித்துக்கொடுக்கும் விஷத்தை விலைகொடுத்து வாங்கி உண்பதில் என்ன நன்மை இருக்கிறது? அப்படியே இந்த்ரியங்களைக் கஷ்டப்படுத்தி, ஆயுளின் நாட்களைச் செலவிட்டு, பாபங்களை ஸம்பாதித்துக்கொள்வதில் துக்கம் தவிர வேறேதேனும் இருக்கிறதா?

ஆகவே ஸ்வதர்மாநுஷ்டாநத்தைக் கைவிடத் தகாது:

ஆகவே ஜீவனுடைய ஸர்வ ச்ரமத்தையும் போக்கி பரமபுருஷார்த்தமான மோக்ஷத்தைத் தேடிக்கொடுக்கும் ஸ்வதர்மத்தை அநுஷ்டித்தே தீரவேண்டும். ஆசையால், ஸங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டவன், கைக்கண்ட மந்த்ரத்தை ஜபித்துக்கொள்ளவே வேண்டியது போலும், ஸ்வதர்மாசரணத்தை எப்போதும் கைவிடக்கூடாது. ஸமுத்ரத்தின் நடுவில் இருப்பவன் கப்பலைக் கைவிடக்கூடாதது போலும், கொடுமையான வ்யாதியால் ஆக்ரமிக்கப்பட்டவன் திவ்யமான ஔஷதத்தைக கைவிடக்கூடாததுபோலும், ஸ்வகர்மாநுஷ்டானத்தை ஒருவன் எப்போதும் கைவிடக்கூடாது. அப்படிக் கைவிடாமல் ஸ்வதர்மத்தை ஒருவன் அநுஷ்டித்து வந்தால், பின்பு, ஹே வாநரக்கொடியோனே, அவனுடைய ஸ்வகர்மா நுஷ்டானம் என்னும் பூஜையால் ஸந்தோஷம் அடைந்த ஈச்வரன், அவனிடத்திலிருந்து ராஜஸதாமஸ குணங்களின் ஸம்பந்தத்தை முற்றிலும் விலக்கி வைத்து, அவனுடைய ஆசைகளனைத்தையும் சுத்தஸத்வத்தின் மார்க்கத்தில் திருப்பிவைத்து, ஸாம்ஸாரிகஸ்வர்க்கீய ஸுகங்கள் விஷமாய்த் தோற்றும்படி அவனுக்குச் செய்துவைத்து, கீழே (ச்லோகம் 45ல் காண்க) வைராக்யம் என்னும் வார்த்தையால் எந்த ஸம்ஸித்தி நிரூபிக்கப்பட்டிருக்கிறதோ, அதை அவனுக்குக்

கிடைத்துப்போனதாய்ச் செய்து கொடுக்கிறான். இந்தப் பதவியை யடைந்தபின், அவன் ஸர்வ விஷயத்திலும் எப்படிப்பட்ட யோக்யதை பெற்றவனாகிறான் என்பதையும், அப்படிப்பட்ட யோக்யதையைப் பெற்றபின் அவன் என்ன லாபத்தை யடைகிறான் என்பதையும், மேலே நிரூபிப்பேன், கேள்.

असक्तबुद्धिः सर्वत्र जितात्मा विगतस्पृहः ।
नैष्कर्म्यसिद्धिं परमां संन्यासेनाधिगच्छति ।। ४९ ।।

அஸக்த புத்தி: ஸர்வத்ர ஜிதாத்மா விகதஸ்ப்ருஹ: ।
நைஷ்கர்ம்ய ஸித்திம் பரமாம் ஸந்ந்யாஸே நாதிகச்சதி ।। 49

ஸர்வத்ர அஸக்தனாயிருக்கை:

காற்று அங்குமிங்கும் ஸஞ்சரிக்கும்போது, அது வேடனுடைய வலையிற் சிக்கிப்போகாதது போலும், தேஹம் முதலாய் விஸ்தாரமாய் விரிந்துகிடக்கும் இந்த ஸம்ஸாரம், என்னும் வலையில் அகப்பட்டுக் கொள்ளாதவனாய் அவன் இருப்பான். ஓர் பழம் பக்குவ தசையை அடைந்தபின், அதற்கும் அதின் காம்புக்கும் பற்றற்றுப்போவதுபோலும், அதற்குமுன் அவனுக்கு ஸம்ஸாரவிஷயங்களின்மேல் இருந்த பற்று நெகிழ்ந்துபோகிறது. புத்ரனும், வித்தமும், மனைவியும், அவனுக்கு ஸ்வாதீனப்பட்டிருந்தாலும், அவன் அவற்றை தன்னைச் சேர்ந்தவை யென்று பாராட்டிக் கொள்ளாமல், அவற்றை விஷமாகப் பாவித்து, அவற்றின் ஸம்பந்தத்தை விலக்கிக்கொள்வான்.

ஜிதாத்மத்வம்:

விஷயங்களின் ஸம்பந்தம் ஏற்பட்ட மாத்ரத்தில், ஒருவன் தன் கையைச் சுட்ட பாத்ரத்தைத் தொப்பென்று போட்டுவிட்டு, கையைப் பின் வாங்கிக் கொள்வதுபோலும், பஹிர்முகமான தன் மனோவ்ருத்தியை அவன் பின் வாங்கச் செய்து, அதை ஹ்ருதயம் என்னும் ஏகாந்தமான ஸ்தாநத்தில் அடங்கிக் கிடக்கும்படி செய்துவைப்பான். அப்படி அடங்கிப்போன மனஸு ஒருவேளை வெளிப்படுமானால், அது யஜமானன் உத்தரவை மீறி நடக்காத ஓர் தாஸியைப்போல், அவன் ஆஜ்ஞையை மீறி நடக்காது. அவன் அவ்விதம் தன் சித்தத்தை தன் கைப்பிடிக்குள் அடக்கி வைத்துக்கொண்டு, அதை ஆத்ம ஸ்வரூபாநுஸந்தானத்திற் பெயராது நிலை கொள்ளும்படி செய்து வைப்பான்.

விகதஸ்ப்ருஹத்வம் :

நெருப்பு ஜ்வலித்துக்கொண்டு எரியத் தொடங்கினபின், புகை ஒழிந்துபோவது போலும், இந்நிலையில் ஐஹிகாமுஷ்மிக (இவ்வுலகில் அல்லது மற்றுலகில் அனுபவிக்கக்கூடிய) விஷயங்கள்மேல் ஆசையானது, அதற்கு முன்பே முற்றிலும் அவனிடத்தில் அற்றுப்போனதாய் இருக்கும். ஆகையால் மனஸு வசப்பட்டுப்போனபின், ஆசையானது தனக்குத்தானே நசித்துப்போகிறது. இப்படிப்பட்ட ஓர் பதவியில், அவன் நிலை கொண்டவன் ஆய்விடுகிறான்.

நைஷ்கர்ம்யஸித்தி:

பின்பு அந்யதாஞானம் முழுவதும் அவனைவிட்டு விலகிப்போய், அவன் யதார்த்த ஞானத்தில் நிலைகொண்டவன் ஆய்விடுகிறான். வீட்டில் நிறைத்து வைத்திருக்கும் ஜலத்தை எடுத்தெடுத்து செலவிட்டுக் கொண்டிருந்தால், அது ஆய்விடுவதுபோலும், முன் செய்துவைத்த கர்மங்கள் பல போகத்தால் நசித்து ஆத்மஞானம் ஏற்பட்டு, அஹம்காரம் அற்றுப்போயிருப்பதால், புது கர்மங்கள் ஏற்படுவதற்கு வழியே யில்லாமற்போகிறது. இவ்விதமாய்க் கர்மங்கள் க்ஷீணமாய்ப் போனபின், ஸ்ரீ குருவின் தர்சனம் தானாகவே ஏற்படுகிறது. ராத்ரியின் நாலுஜாமமும் கழிந்துபோனபின், ஸூர்யன் கண்முன் தோன்றி நிற்பதுபோலும், பழம் பறிக்கவேண்டிய காலம் வந்தபின், வாழை வளர்வது ஓய்ந்து போவதுபோலும், ஸ்ரீ குருவின் தர்சனமானபின், முமுக்ஷுவுக்குக் கர்மங்கள் அற்றுப்போகின்றன. பின்பு, பௌர்ணமி திதி ஏற்பட்டவுடன் சந்த்ரனுடைய கலையின் குறைவு விலகிப்போவதுபோலும், அந்த முமுக்ஷுவுக்கு குரு க்ருபையால் பூர்ணதை ஏற்பட்டுவிடுகிறது. அப்போது இருந்து கொண்டிருந்த ஆத்மஸ்வரூப ஞானத்தின் கேவல அபாவ ரூபமான அபோதமும், குரு க்ருபையால் நசித்துப்போய், ராத்ரியோடு இருட்டும் போய்விடுதல்போலும், கர்ப்பிணியைக்கொன்று விட்டால் கர்ப்பமும் நஷ்டமாய்ப் போவதுபோலும், அந்த கேவல அபோதத்தின் வயிற்றில் கர்ப்ப பிண்டம்போல் இருந்துகொண்டு க்ரியா ஜாதமனைத்துக்கும் காரணமாய் இருந்த கர்மம், கர்த்தா, கார்யம், என்னும் த்ரிபுடியும் அந்த அபோதத்தோடு கூடவே நசித்துப்போவதால், கர்மம் ஸமூலமாய் அற்றுப்போய், பூர்ணமான கர்மஸந்யாஸம் ஏற்பட்டுவிடுகிறது.

இப்படி ஸம்ஸார மனைத்துக்கும் ஆதிகாரணமான ஆத்மஸ்வரூப விஷயமான அபோதம் நசித்துப் போகும்போது, த்ருச்ய ஜாதமும் (பார்க்கப்படும் வஸ்துக்களின் கூட்டம்; தனக்குப் புறம்பான உலகம்) இருந்தவிடம் தெரியாமல் அழிபட்டுப்போய், அறியப்பட வேண்டியதான ஆத்ம ஸ்வரூபம் எதுவோ, அதுவாகவே அவன். ஏற்கனவே இருப்பதால், தான் ஓர் மடுவில் விழுந்து முழுகிப்போவதாய் ஸ்வப்நம் கண்ட ஒருவன் விழித்துக்கொண்ட பிறகு, தன்னை ஜலத்தினின்று வெளிப்படுத்திக் கொள்வதற்கு ஓர் உபாயமும் தேடிக்கொள்ள வேண்டியதாய் அவனுக்கு ஏற்படாது போய்விடுதல் போன்ற ஓர் ஸ்திதி ஆத்மஸ்வரூபபோதம் உண்டான அவனுக்கு ஏற்பட்டு விடுகிறது. பின்பு, "நான் என் ஸ்வரூபத்தை அறிந்துகொள்ள வில்லை, இனி அதை அறிந்துகொள்ள முயல்வேன்," என்று நினைப்பதாகிய ஓர் துஸ்ஸ்வப்நம் இல்லாமற்போய், அறிகிறவன், அறியப்படும் வஸ்து, என்ற இவ்விரண்டும் அற்ற ஞானஸ்வரூபமாகவே அவன் ஆய்விடுகிறான். முகத்தின் ப்ரதிபிம்பத்தோடு சேர்த்து கண்ணாடியை அப்புறப்படுத்தி வைத்தபின், ஹே வீரர்களுக்குள் சிறந்தவனே. பார்த்துக்கொண்டிருந்தவன் பார்ப்பது என்னும் செயல் அற்றவனாய் எப்படி மிகுந்து நிற்பானோ, அப்படியே அறியாமை அற்றுப்போவதோடுகூட, அறிதலும் அற்றுப்போய், ஓர் செயலும் அற்றவனாய் அந்த ஆத்மஞானி கேவல ஞானமாய் நின்று விடுகிறான்.

அந்நிலையில் இயற்கையாகவே ஓர் விதமான செயலும் இல்லாமற் போவதால், அவனை உலகத்தார் நைஷ்கர்ம்யம் படைத்தவனென்று வ்யவஹரிப்பார்கள். ஸமுத்ரம் ஓர் மாறுதலுமில்லாமல் எப்போதும் தன் ஸ்வரூபத்தோடு இருக்கும்போதே, காற்று வீசுவதால் அதில் அலைகள் உண்டாய், காற்று ஓய்ந்து போவதால் அலைகள் இல்லாமற் போவதுபோலும், அவன் ஸ்வருபத்தில் விகாரங்கள் உண்டாக முடியாத ஓர் ஸ்திதி ஏற்பட்டுவிடுகிறது. இதுவே நைஷ்கர்ம்ய ஸித்தி ஆகும். இந்த நிலை பெற்றிருப்பதே ஸர்வஸித்திகளையும் விஞ்சினதும், அதைத் தாண்டி இருப்பதாய் வேறொன்றில்லாததுமான பரமஸித்தியாகும். ஓர் கோவிலைக் கட்டுவதில் கலசம்வைத்து விடுவதே முடிவானவேலையாவது போலும், கங்கை ஸமுத்ரத்தில் கலந்துபோவதால் அவள் வேலை முடிந்து போவதுபோலும், தங்கத்தைப் புடம்போட்டு சுத்தி செய்யும் வேலை அது பதினாறு மாற்றுள்ளதானவுடன் முடிந்து போவதுபோலும், தன் ஸ்வரூபவிஷய அபோதம் அற்றுப்போய், தன்னை அறிதல் என்பதையும் விழுங்கிவிட்டு,

இருப்பதான ஓர் நிலை ஏற்பட்டபின், அதைத் தாண்டி ஸாதித்துக்கொள்ளவேண்டிய ஓர் நிலை இல்லாததான பரமஸித்தி யேற்பட்டு விடுகிறது. ஆனால் ஆத்மஸித்தி என்ற இந்த நிலையில், ஸகல பாக்யங்களுக்கும் நிதி என்று சொல்லத்தக்க எவனோ ஒருவன் குருக்ருபை ஏற்படும் காலத்திலேயே இருப்புக்கொள்ளப் பெறுகிறான்.

सिद्धिं प्राप्तो यथा ब्रह्म तथाप्नोति निबोध मे ।
समासेनैव कौन्तेय निष्ठा ज्ञानस्य या परा ॥५०॥

ஸித்திம் ப்ராப்தோ யதா ப்ரம்ஹ ததாஸ்ப்னோதி நிபோத மே।
ஸமாஸே நைவ கௌந்தேய நிஷ்டாக்ஞானஸ்ய யா பரா॥ 50

ஆத்மப்ராப்தி:

ஸூர்யன் உதயமானவுடன், இருட்டே வெளிச்சம் ஆய்விடுதல்போலும், கர்ப்பூரத்துக்கு தீபத்தின் ஸம்பந்தம் ஏற்பட்டமாத்ரத்தில், அந்தக் கர்ப்பூரமே தீபமாய்விடுதல் போலும், ஓர் உப்புக்கட்டிக்கு நீரின் ஸம்பந்தம் ஏற்பட்டமாத்ரத்தில், அது நீராகவே போய்விடுதல்போலும், தூங்குகிறவனை எழுப்பிவைத்த மாத்ரத்தில் நித்ரை கலைந்துபோய், அவன் தன்னியற்கையான இருப்பை அடைந்துவிடுதல்போலும், ஒருவன் தன்னுடைய பாக்யவசத்தால் குருவின் சொற்களைக் காதாற்கேட்கப் பெற்றமாத்ரத்திலேயே, அவனுக்கு த்வைதபாவம் அற்றுப்போய், அவனுடைய மனோவ்ருத்திகள் ஓய்வடைந்து, அவன் ஸுகரூபி யாய்விடுகிறான். அப்படி யாய்ப்போனவனுக்கு, கர்மங்கள் செய்வது மிகுந்து நிற்கிறது, என்று எவன் சொல்வான்? ஆகாசத்துக்கு ஓர் இடம் விட்டு மற்றோரிடம் போவதும் வருவதும் ஸாத்யமா? ஆகையால் கர்மம் என்பது அவனுக்கு நிஸ்ஸந்தேஹமாய் முற்றிலும் அற்றுப்போகிறது. ஆனால் இப்படிக் காதில் குருவாக்யம் விழுந்த உடனேயே, கர்மம் முற்றிலும் அற்றுப்போனவனாய், ஆத்மஸ்வரூபமாய்ப் போய் அதில் நிலைகொண்ட வனாய்விடுகிறவன் எவனோ ஒருவனே! அப்படிப்பட்ட உத்தம அதிகாரியாகாத ஒருவன் முதன் முதலில் ஸ்வர்மா நுஷ்டானம் என்ற நெருப்பில், காம்யமும் நிஷித்தமுமான கர்மங்களை விறகுகளாய் மாட்டி, ரஜஸ்தமஸ் ஸென்னும் குணங்களின் ஸம்பந்தத்தை எரித்துத் தள்ளிவிட்டால், பின்பு புத்ரார்திகள், பொருள், பரலோகம் (ஸ்வர்க்க ப்ராப்தி) ஆகிய

இவற்றின் விஷயமான ஆசைகள் அவனுக்கு வீட்டு வேலைக்காரர்களாய் அமர்ந்துவிடுதலும் கிடைத்துப்போகும்.

பின்பு விஷயங்களில் தங்கள் இஷ்டப்படி ஸஞ்சரித்துத் தீட்டுப் பட்டுப்போன இந்திரியங்கள் ப்ரத்யாஹாரம் என்ற தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்துவைக்கப்பட்டவை ஆய்விடுகின்றன. இதில் ஸந்தேஹமில்லை. அன்றியும் ஸ்வர்கமா நுஷ்டானத்தின் பலன் யாதொன்றுண்டோ, அது ஈச்வரனுக்கு அர்ப்பணம் பண்ணப்பட்டுப் போனதாய், சுத்தமான வைராக்யம் என்னும் பதவி அவனுக்கு ஏற்பட்டு, பெயராதபடி நிலை கொள்கிறது. ஆத்ம ஸாக்ஷாத்காரத்தைச் செய்து கொடுக்கும் ஞானத்தின் பரிபாகம் ஏற்படுவதற்கு ஸாதநங்கள் எவையோ அவை முழுமையும் இவ்வாறு ஸந்தேஹமற ஏற்பட்டுவிடுகின்றன.

இப்படிப்பட்ட ஓர் ஸ்திதியில் ஸத்குருவும் கிடைத்து, அவனும் ஓர் வஞ்சனையும் செய்யாமல் ஞானோபதேசமும் செய்து விட்டானே யானாலும், ஒருவன் உத்தமமான மருந்தை சாப்பிட்ட உடனேயே நோய் தீர்ந்தவனாய் ஆரோக்யமான ஸ்திதியடையாமல், அதற்குக் கொஞ்சம் காலவிளம்பம் ஏற்படுவதுபோலும், ஸூர்யன் உதயமானாலும் மாத்யாஹ்நவேளை யேற்படுவதற்கு கொஞ்சகாலம் செல்ல வேண்டியதா யிருப்பதுபோலும், நன்றாய் ஸாரவத்தான பூமியில் ஈரம் ஏற்பட்டு உத்தமமான விதைகளும் விதைக்கப்பட்டுப் போனாலும், அவை பயிராய்ப் பலன் கொடுப்பதற்குக் காலவிளம்பம் ஏற்படுவதுபோலும், ஸரியான வழியில் நடப்பதும், அதில் ஸாதுக்களின் துணையும் கிடைத்துவிட்டபோதிலும், போகவேண்டிய ஊர் போய்ச் சேர்வதற்குக் காலவிளம்பம் ஏற்படுவதுபோலும், மந்தாதிகாரியான ஒருவனுக்கு வைராக்யம் ஸித்தித்துப்போய், ஸத்குரு பேட்டியும் கிடைத்து, அந்தாரத்மாவில் ஞானமுளையும் முளைத்து, அதினால் ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யமானது, மற்றதனைத்தும் அறிவு மயக்கத்தால் ஏற்பட்ட உண்மையற்ற தோற்றம், என்ற ஓர் புத்தி அவனுக்கு உறுதியாய் ஏற்பட்டு விட்டபின்னும், ஸர்வோத்தமமாயும், ஸர்வாத்மகமாயும், மோக்ஷம் என்னும் வார்த்தையே அற்றுப்போன்தாயும், மூன்றவஸ்தைகளையும் விழுங்கி ஜரித்துவிடும் ப்ரஹ்ம ஞானத்தையும் ஓர் பிடியாய்ப் பிடித்து விழுங்கிவிடுகிற வஸ்துவாயும், ஒன்றாயிருந்தும் ஒன்றாய் இருக்கிற தென்ற பேச்சற்றதாயும் ஆநந்தம் என்பதையும் கரைத்து விட்டதாயும், தன்னைத்தவிர மற்றொன்றும் மிகுந்து

நிற்காதபடி தனித்து நிற்பதாயும், இருக்கும் யாதொரு பரப்ரஹ்மம் உண்டோ, அந்த ப்ரஹ்மத்தோடு ஒன்றுபட்டு ப்ரஹ்மமாய்ப் போய் நிலைகொள்வது என்பது படிப்படியாகத்தான் ஏற்படவேண்டியதாய் இருக்கிறது.

பசியெடுத்தவன் முன்னால், ஷட்ரஸோபேதமான அன்னம் பரிமாறி வைக்கப்பட்டபோதிலும், அவன் அதைக் கவளம் கவளமாக உண்டு, கொஞ்சம் கொஞ்சமாய் த்ருப்தி அடைந்து, கடைசிக் கவளத்தை உட்கொண்டபின் பூர்ண த்ருப்தியைக் கடைசியாக அடைய வேண்டியதாய் இருப்பதுபோலும், இந்த மந்தாதிகாரி வைராக்யத்தின் பலத்தையும் விவேகம் என்னும் தீபத்தின் ப்ரகாசத்தையும் ஒத்தாசையாகக் கொண்டு, அவனுக்குப் புலப்பட்டாமல் மறைந்துகிடக்கும் நிதியாகிய ஆத்மஸ்வரூபத்தைத் தேடிக்கொண் டேயிருந்தால், கடைசியில் அதைக்கண்டுபிடித்து, அதைத் தனதாகச் செய்து கொள்வான் என்பதில் யாதோர் ஸந்தேஹமுமில்லை. ஆனால் ஆத்மஸ்வரூபம் என்னும் ஸம்பத்தைக் கண்டு கொண்டு, அதின் ஆநந்தத்தை அநுபவிக்கும்படி செய்து கொடுக்கும் ஸாதந ஸம்பத்தியாகிய கீழே சொன்ன வைராக்யமும், ஸத்குருவின் க்ருபையும், அதினால் ஏற்படும் ஞானமும், ஏராளமாய் எவனுக்கு ஆபரணங்களாய் ஏற்பட்டிருக்குமோ, அவன் எந்தப் படிகள் வழியாய் ஏறி ப்ரஹ்மமாய் அமர்ந்துவிடுவானோ, அந்த ஸோபாந க்ரமத்தை (படிகளின் வரிசையை) உனக்கு நன்றாய் விளங்கும்படி சொல்லிவைப்பேன், கேள்.

बुद्ध्या विशुद्धया युक्तो धृत्यात्मानं नियम्य च ।
शब्दादीन्विषयांस्त्यक्त्वा रागद्वेषौ व्युदस्य च ।।५१।।

புத்த்யா விஶுத்த்யா யுக்தோ த்ருத்யாऽऽத்மானம் நியம்ய ச।
ஶப்தாதீன் விஷயாம் ஸ்த்யக்த்வா ராகத்வேஷௌ வ்யுதஸ்ய ச॥51

மந்தாதிகாரி ஆத்மஸித்தி பெறுவதற்கு ஸோபாநக்ரமம்

(1) புத்தியைச் சுத்தம் செய்து ஆத்மஸ்வரூபத்யானத்தில் நிறுத்தல் :

ஸத்குரு காட்டிக்கொடுத்த வழியைப் பிடித்துக்கொண்டு, விவேகம் என்னும் தீர்த்தத்தின் கரை வந்துசேர்ந்து, புத்தியின்

மலங்களை முற்றிலும் கழுவித் தொலைத்து, பின்பு ராஹுவின் வாயினின்று விடுபட்ட ப்ரபையைச் சந்திரன் கட்டிக்கொள்வதுபோலும், நைர்மல்யம் பெற்ற அந்த புத்தி ஆத்ம ஸ்வரூபத்தால் கட்டிக்கொள்ளப் படும்போது, ஓர் குலஸ்த்ரீ இருகுலத்தாரையும் துறந்துவிட்டு, தன் கணவனையே நத்திக்கொண்டிருப்பதுபோலும், புத்தியானது த்வந்தவங்களை சீதோஷ்ணம், ஸுகதுக்கம்; முதலான வைகளாய் ஒன்றுக்கொன்று விரோதமானவைகளாய் இருக்கும் இரட்டைகளை ஒழித்துக்கொண்டு ஆத்மஸ்வரூப சிந்தனைத்தில் நிலைகொள்ள வேண்டும்.

(2) மனஸையும் இந்த்ரியங்களையும் கட்டில் வைத்தல் :

ஜீவாத்மாவுக்கு மிக்க நன்மை செய்துவைக்கும் ஞானத்தை அணுக வொட்டாமற் செய்துவைத்து விஷயங்களுக்குப் பெருமை ஏற்படுத்திவைத்த இந்த்ரியங்களின் ஸஞ்சாரத்தைத் தடுத்துவைத்து, ஸௌர்யகிரணங்கள் இல்லாமற்போனபின் கானனீர்த்தோற்றம் இல்லாமற்போவது போலும், ஐந்திந்த்ரியங்களின் ஐந்து விஷயங்களும் சக்தியற்றுப்போகச் செய்ய வேண்டும். தாழ்ந்த ஜாதியானவனால் ஸ்பர்சிக்கப்பட்ட அன்னத்தைத் தெரியாமல் சாப்பிட்டுவிட்டால், அதை வாந்தி செய்து விடுவதுபோலும், இந்த்ரியங்கள் விஷயங்களையும், அவ்விஷயங்களின்மேல் பாராட்டியிருக்கும் ஆசையையும், வாந்திசெய்துவிடும்படி செய்துவைக்க வேண்டும். பின்பு வ்ருத்திக ளனைத்தையும் ஆத்மாவை நோக்கல் என்னும் கங்கையில் முழுகச்செய்துவைத்து, அவற்றை சுத்தமானவையாய்ச் செய்துகொள்ள வேண்டும். இப்படி ஸாத்விகத்ருதியின் பலத்தைக்கொண்டு இந்த்ரிய சுத்தியை தேடிக்கொண்டு, மனஸை யோகாப்யாஸத்தில் நிலைகொள்ளச் செய்ய வேண்டும்.

(3) ராகத்வேஷங்களைப் போக்கி வைத்தல் :

பூர்வகர்மாநு ஸாரிகளாய் இஷ்டாநிஷ்டபோகங்கள் நேரும்போது, மனஸு அநிஷ்டங்கள் விஷயத்தில் வெறுப்பையும, இஷ்டங்கள் விஷயத்தில் விருப்பையும், பாராட்டாது ஒழிய வேண்டும்.

(4) விவிக்தஸேவித்வம் :

இப்படி இஷ்டா நிஷ்டங்கள் விஷயத்தில் விருப்பு வெறுப்புக்களை யொழித்துக்கொண்டு, மலையின் குகைகளிலும்,

செடிகள் அடர்ந்து வளர்ந்திருக்கும் புதர்களிலும், மநுஷ்யஸஞ்சாரமற்று நிச்சப்தமாய் இருக்கும் காடுகளிலும், தேஹத்தின் அவயவங்களையே துணையாகக்கொண்டு, ஒண்டியாக வஸிக்கவேண்டும்.

विविक्तसेवी लघ्वाशी यतवाक्कायमानसः ।
ध्यानयोगपरो नित्यं वैराग्यं समुपाश्रितः ।।५२।।

விவிக்த ஸேவீ லக்வாஶீ யத வாக்காய மானஸ: ।
த்யான யோக பரோ நித்யம் வைராக்யம் ஸமுபாஶ்ரித: ॥ 52

(5) வாக் காய மனஸுகளைக் கட்டில் வைத்தல் :

சம தமங்களையே விளையாட்டாகவும், பேசாதிருப்பதையே பேச்சாகவும், அமைத்துக் கொண்டு, குருவாக்யத்தை ஸதா சிந்தித்துக் கொண்டிருப்பதால், இதர வேலைகளுக்கு அவகாசம் இல்லாதவனாய், இருந்து தீரவேண்டும். போஜனம் செய்வதில் தேஹத்துக்கு பலம் ஏற்படவேண்டும் என்றும் நாக்கின் ஆசையைப் பூர்த்திசெய்துகொள்ள வேண்டும் என்றும், உத்தேச மற்றவனாய், அல்ப ஆஹாரத்தைக்கொண்டு, த்ருப்தி அடைந்து, வயிறு நிறைந்து போகும்படி சாப்பிடாதவனாய் இருக்கவேண்டும். முற்றிலும் உண்வை ஒழித்துவிட்டால், ப்ராணாக்நி அணைந்துபோகுமே யென்று நினைத்து, ப்ராணதாரணத்துக்கு வேண்டிய அளவே அல்பமாய் போஜநம் செய்ய வேண்டும். அன்றியும் ஓர் குல ஸ்த்ரீ ஓர் பரபுருஷன் தன்மேல் ஆசைப்பட்டாலும், அவனுக்குத் தன்தேஹத்தைக் கொடுக்க இசையாததுபோலும், நித்ராலஸ்யங்களுக்கு தேஹம் வசப்பட்டுப்போகாதிருக்கும்படி, ஆஹாரம் செய்ய வேண்டும்.

ஈச்வரனுக்கோ, பெரியவர்களுக்கோ, நமஸ்காரம் செய்யும் போது, பூமிக்கும் தன் தேஹத்துக்கும் ஸம்பந்தம் ஏற்பட வேண்டுமே தவிர, மற்றவேளைகளில் சோம்பேறித்தனத் தாற்கீழே விழுந்து புரளுதலை ஒழிக்க வேண்டும். தேஹயாத்ரைக்கு வேண்டிய மாத்ரமே கைகால்களைக் கொண்டு வேலைசெய்து, மற்றப்படி உள்ளும் புறமுமான ஸகல அவயவங்களையும் ஓர் வ்யாபாரமும் அற்றவையாய்ச் செய்து கொண்டு, அவை தன் ஸ்வாதீனமாயிருக்கும்படி அவற்றை அடக்கி வைத்துக்கொள்ள வேண்டும். அன்றியும் தன் வ்ருத்திகளை மனதின் வாயிற்படிவரைக்குங்கூட போகவொட்டாமல் அடக்கி வைத்துக்கொண்டு இருக்கும்

இவனுக்கு வாயைத் திறந்து பேசுவதற்கு எப்படி அவகாசம் கிடைக்கும்?

(6) த்யானபரத்வம் :

இப்படி த்யானத்துக்கு வெளிப்பட்ட ப்ரதேசங்களாகிய சரீரம், வாக், மனஸ் ஸென்ற மூன்றையும் ஜயித்து, தன் வசப்படுத்திக்கொண்டு த்யாநத்தின் ப்ரதேசமாகிய சிதாகாசத்தையும், தன் வசப்படுத்திக் கொள்ள வேண்டும். கையில் இருக்கும் கண்ணாடியைக் கொண்டு தன் ப்ரதிபிம்பத்தை ஸ்பஷ்டமாய்ப் பார்த்துக்கொள்ளுதல் போலும், குருவாக்யத்தால் ஏற்படுத்திவைக்கப்பட்ட ஞானத்தைக் கொண்டு தன்னுடைய ஆத்மஸ்வரூபத்தின் லக்ஷணத்தை நிச்சயித்துக் கொண்டு, பின் சொல்லப்படும் ப்ரகாரமாய் அதை த்யானம் செய்ய வேண்டும். த்யாதாவாகிய (த்யானம் செய்கிறவன்) தான் தன்ஸ்வரூபத்தையே த்யானரூபவ்ருத்தியில் த்யேய (த்யானிக்கப்படும்) விஷயமாய் தரித்துக்கொண்டு த்யாதா, த்யானம், த்யேய வஸ்துவாகிய மூன்றும் ஒன்றாய்ப் போனதாய்த் தோற்றிப்போகும் வரைக்கும் த்யானம் செய்துகொண்டிருக்கவேண்டும். இப்படிச் செய்யும் முமுக்ஷுவே, ஆத்மஸாக்ஷாத்காரம் அடைய யோக்யதை படைத்தவனாகிறான்.

(7) யோகபரத்வம் :

ஆனால் இப்படிப்பட்ட த்யானம் கை கூடுவதற்கு அவன் யோகாப்யாஸத்தை ஒத்தாசையாய் முன்பே தன்னிடத்தில் ஏற்படுத்திக்கொண்டிருக்க வேண்டும். (இங்கே சுருக்கமாய்ச் சொல்லப்பட்டிருக்கும் யோகாப்யாஸத்தின் முறை 6வது அத்யாயத்தில் விஸ்தாரமாய் சொல்லப்பட்டிருக்கிறது) மலமூத்ர த்வாரங்கள் இரண்டின் நடுவிலும் உள்ளரேகையை வலது குதிகாலால் அமுக்கி மூலபந்தத்தை ஏற்படுத்திக்கொண்டு, அத்துடன் மற்ற இரண்டாகிய ஒட்யாண ஜாலந்தர பந்தங்களையும் ஏற்படுத்திக் கொண்டு, பலவகைப்பட்ட ப்ராணவாயுக் களனைத்தையும் ஒன்று படுத்தி, குண்டலீநீ சக்தியை எழுப்பிவைத்து ஸுஷும்நா நாடியை விரிந்துகொள்ளச் செய்து, அதின் வழியாய் அந்தக் குண்டலிநீ சென்று ஆதாரச்சக்ரம் முதல் ஆஜ்ஞாச்சக்ரம் வரையில் உள்ள சக்ரங்களனைத்தையும் பேதித்துக்கொண்டு, ஸஹஸ்ரதள பத்மத்தில் ப்ரவேசிக்கும்படி செய்து வைக்க வேண்டும். அப்படிச் செய்தமாத்ரத்தில் ஸஹஸ்ரத்தளபத்மத்தில் உள்ள மேகம் அம்ருதமழை பொழிந்து,

அதின்வெள்ளம் மூலாதாரம் வரைக்கும் பரவிவிடும். பின்பு ஸஹஸ்ரதளபத்மம் என்ற கைலாஸ் பர்வதத்தின்மேல் கூத்தாடிக்கொண்டிருக்கும பைரவதேவன் கையில் இருக்கும் கப்பரையில், மனஸையும் ப்ராணனையும் கிச்சடியாய்ச் செய்து ஸமர்பித்துவிடவேண்டும் இப்படிப்பட்ட யோகநிலையைத் திடமாய் ஏற்படுத்திவைத்துக் கொண்டபின் முன் சொன்னவிதமாய் ப்ரஹ்மஸ்வரூபத்தின் த்யானம் செய்ய வேண்டும்.

(8) வைராக்யத்தின் ஒத்தாசை :

அன்றியும் த்யானமும் யோகமுமாகிய இவ்விரண்டு ஸாதனங்களும் தடையில்லாமல் ஆத்மதத்வ ஸாக்ஷாத்காரத்தை செய்துதருவதற்கு, எல்லாவற்றிற்கும் முன்பாகவே ஸஹாயமாய் ஏற்படுத்திவைத்துக் கொண்ட வைராக்யத்தின் ஒத்தாசை, முதலிருந்து கடைசிவரைக்கும், ஸதா இருந்து தீரவேண்டும். க்ண்டுபிடித்துக்கொள்ள வேண்டிய வஸ்து கண்ணுக்குப் புலப்படும் வரைக்கும், பார்வைக்கு தீபத்தின் ஸஹாயம் ஏற்பட்டுவிட்டால், அதற்குப்பிறகு தேடுகிற வஸ்துவைக் கண்டு கொள்ளத் தடை யென்ன இருக்கும்? அப்படியே மோக்ஷத்தை அடைவதற்காக புறப்பட்ட ஞானவ்ருத்தி ப்ரஹ்மத்தைக் கண்டு அதில் லயப்பட்டுபோகும் வரைக்கும், வைராக்யத்தின் துணை யிருந்துவிட்டால், பின்பு ஆகவேண்டிய கார்யம் எவ்விதம் முடிவு பெறாமற்போகும்?

உபஸம்ஹாரம் :

ஆகவே பாக்யசாலியான ஒருவன் வைராக்யத்தோடு ஞானத்தை அப்யஸித்துக் கொண்டுவந்து, ஆத்ம ஸாக்ஷாத்காரம் அடைவதற்குத் தகைமை உள்ளவனாகிறான். இவ்விதப்பட்ட வைராக்யம் என்னும் கவசத்தை அணிந்துகொண்டு, ராஜயோகம் என்னும் குதிரைமீது ஏறினவனாய், சிறிதும் பெரிதுமாய் எதிர்த்து வந்து நிற்கும் விக்நங்களனைத்தையும் வெட்டித் தள்ளுவதற்கு விவேகம் என்னும் முஷ்டியில் த்யானம் என்னும் கத்தியை உறுதியாய்ப் பிடித்துக்கொண்ட ஸாதகன், ஆத்மப்ராப்தி என்ற விஜயலக்ஷ்மி தனக்கு மாலையிடுவதற்காக இருட்டில் ப்ரவேசிக்கும் ஸூர்யனைப்போல், ஸம்ஸாரத்தோடு போர் செய்யப்புறப்படுகிறான்.

अहंकारं बलं दर्पं कामं क्रोधं परिग्रहम् ।
विमुच्य निर्ममः शान्तो ब्रह्मभूयाय कल्पते ॥५३॥

அஹங்காரம் பலம் தர்பம் காமம் க்ரோதம் பரிக்ரஹம் ।
விமுச்ய நிர்மம: ஶாந்தோ ப்ரஹ்ம பூயாய கல்பதே ॥ 53

அப்போது கொல்லப்படும் சத்ருக்கள்,

(1) அஹம்காரம்

அப்போது அவனைத் தடுத்துவைப்பதற்கு அவனை யெதிர்த்து வந்து மாண்டுபோகும் சத்ருக்களாகிய தோஷங்களில் முதன்மை பெற்றது அஹம்காரம். அது ஸாதகனைக் கொன்றுவிடாமலும், பிழைத்துப் போகவிடாமலும், அவனை எலும்பாலமைந்த தேஹம் என்னும் தொழுக்கட்டையில் அடித்துவைத்து, ஸதா சித்ரவதை செய்து கொண்டே யிருக்கும், அந்த அஹம்காரத்தின் கோட்டையாகிய தேஹத்தை, சின்னாபின்னம் செய்து, அந்த ஸாதகன் அதைத் தன் வசப்படுத்திக்கொள்கிறான்.

(2) பலம் :

பின்பு அவன் கொன்று தள்ளும் இரண்டாவது சத்ரு பலம் ஆகும். இது விஷயத்தின் பெயரைக் கேட்டமாத்ரத்தில் நான்கு மடங்காய் வலுத்து, ஜகத்தனைத்தையும் தான் புசிக்க வேண்டிய விஷயமாய்ப் பாவித்துக்கொண்டு, அனைத்தையும் ஆக்ரமித்துக்கொள்ளும். இது விஷயவிஷம் நிறைந்துள்ள ஓர் மடுவாகையால், தோஷங்கள் அனைத்துக்குள்ளும் இது அரசாட்சி பெற்றதாகும். அப்படி இருந்தும், இது த்யாகம் என்னும் கத்தியின் வெட்டுக்கு முன்னால், எப்படி உயிர் பிழைத்து நிற்கும்?

(3) தர்ப்பம் (கர்வம்) :

ப்ரியமான விஷயங்கள் புசிக்கக் கிடைத்து விட்டமாத்திரத்தில், தர்ப்பம் என்ற இந்த மூன்றாவது தோஷத்துக்கு ஸந்தோஷம் உண்டாய், இது ஜீவஸ்வரூபம் முழுவதையும் மூடிக்கொண்டு, பெருமை அடித்துக்கொள்ளும். பின்பு, இது ஸந்மார்க்கம் இன்ன தென்று தெரியமாற்

செய்துவைத்து, ஜீவனை அதர்மம் என்னும் காட்டுக்கு இழுத்துக்கொண்டுபோய், அதை பாம்பு புலிகள் வசமாக்கி வைக்கும். இந்த விச்வாஸகாதகியான (நம்பினவனை மோசம் செய்கிற) சத்ருவும் கொல்லப்பட்டு ஒழிந்து போகிறான்.

(4) காமம் : (5) க்ரோதம் :

காமம் என்ற சத்ருவைக் கண்டமாத்ரத்தில், பெரிய தபஸ்விகள் பயந்து நடுக்க முறுவார்கள். இது பயங்கரமான க்ரோதத்தில் முடிவு பெறுகிறது. இதை எவ்வளவுக்கு எவ்வளவு ஒருவன் நிரப்பிவைப்பானோ, அவ்வளவுக் கவ்வளவு, இது வெறுமை படைத்ததாய் விடுகிறது. இதை எங்கும் காணாதபடி நாசம் செய்துவைத்தால், க்ரோதம் தனக்குத்தானே இல்லாமற் போகிறது. வேர் வெட்டப்பட்டு நாசம் அடைந்தால் அதே கதி மேல் வளர்ந்திருக்கும் கிளைகளுக்கும் ஏற்படுவது போலும், காமம் நசித்துப்போனால் க்ரோதமும் நசித்துப்போகிறது. ஆகையால் எங்கே காமம் வெட்டுப்பட்டு கீழ் வீழ்த்தப்பட்ட தாகுமோ, அவ்விடத்தில் க்ரோதத்தின் வரத்துப்போக்கு அற்றுப்போகிறது.

(6) பரிக்ரஹம் :

(தனதாகப் பற்றிக் கொள்ளல்) ஓர் ப்ரபு ஒருவன் தொழுக்கட்டையில் அடிபட்டுக் கிடக்க வேண்டு மென்று அவனுக்கு தண்டனை விதித்தபின், அப்படி தண்டிக்கப்பட்டவன் தன் தொழுக்கட்டையைத் தானே தான் தண்டிக்கப்பட வேண்டிய ஸ்தானத்துக்குத் தலைமேல் எடுத்துக்கொண்டுப்போக ஏற்படுகிறதுபோலும், இந்த சத்ரு, ஒருவன் தலைமேல் உட்கார்ந்துகொண்டு அவன் தேஹம் எல்லாம் தன் தோஷத்தைப் பரப்பிவைத்து அவனைப் பலவிதமாய் தண்டித்துத் துக்கித்துவைப்பதான மமகாரத்தை, அவன் தன் அந்தராத்மாவில் ஏற்றிக்கொள்ளும்படி செய்துவைக்கும் பற்றுக்களனைத்தையும் ஒழித்துக்கொண்டவர்களுக்குங்கூட, சிஷ்யர்கள், ஸம்ப்ரதாயம், மடம், முத்ரை, என்ற பாசங்களை இது ஏற்படுத்திவைக்கிறது. வீட்டில் இருந்துகொண்டு, குடும்பியாயிருப்பதை ஒழித்துக் கொண்டு, ஒருவன் காட்டுக்குப் போனாலும், அங்கே வானப்ரஸ்தாச்ரமம் தன்னதென்று சொல்லிக்கொள்வதான ஓர் ரூபத்தை, இந்த பரிக்ரஹம் பூண்டுகொள்கிறது. அவதூதனாய்ப் திரிகிறவனிடத்திற்கூட இந்த பரிக்ரஹம், சரீரத்திற் பற்று என்ற உருவமெடுத்துக்கொண்டு, அவனை விடாமல் பற்றிக்கொண்டே இருக்கிறது. இப்படி ஜயிப்பதற்குக் கடினமாய்

இருக்கும் பரிக்ரஹத்தையும், இருந்த இடம் தெரியாமல் அழித்துவிட்டு, இந்த ஸாதகன் ஸம்ஸாரம் என்னும் எதிரியை ஜயித்து ஆநந்தத்தை அநுபவிப்பான்.

அதற்குமேல் ஸாதகன் அடையும் பதவி:

இப்படி ஓர் ஸாதகன் ஸம்ஸாரத்தோடு போர்புரிந்து வெற்றிபெற்று வெளிப்பட்டபின், கீழே (13வது அத்யாயத்தில்) ஞானத்தின் லக்ஷணங்களாய்ச் சொல்லப்பட்டுள்ள அமானித்வம் முதலிய அனைத்தும், கைவல்யதேசம் முழுவதுக்கும் அரசன்போன்ற அவனைக் கண்டு, அவனிடத்தில் ஞாநராஜ்யம் முழுவதையும் ஒப்பித்துவிட்டு, அவனுடைய பரிவாரங்கள் ஆய்விடுகின்றன. அவன் ப்ரவ்ருத்தி யென்னும் ராஜமார்க்கத்தில் ஊர் கோலமாய்ப் புறப்பட்டுவரும்போது, மூன்று அவஸ்தைகள் என்ற, ஸ்த்ரீகள் ஸுகங்களையே ஆரத்தியாகச் சுற்றிப்போடுகிறார்கள். பின்பு விவேகம் என்னும் வேலைக்காரன் போதம் என்னும் தடியைப் பிடித்துக்கொண்டு த்ருச்யவஸ்துக்களின் நெருக்கமான கூட்டத்தை விலக்கிவைக்கிறான். யோகபூமிகை என்பவளே அவனுக்கு ஆரத்தி எடுப்பதற்கு வந்து நிற்கிறாள். அப்போது ருத்தி ஸித்திகள் கணக்கற்றவர்களாய்க்கூடி அவன் மேல் புஷ்பவ்ருஷ்டி பொழிகிறார்கள். இப்படிப்பட்ட கோலாஹலத்துடன் அவன் ப்ரஹ்மத்தோடு ஒன்றுபட்டுப்போதல் என்னும் ஸ்வராஜ்ய பதவியில் வீற்றிருக்க நெருங்கும்போது, மூவுலகும் ஆநந்தத்தால் கொந்தளித்துக்கொண்டிருப்பதாய் அவன் பார்க்கிறான். அப்போது, சிலர் சத்ருக்கள் என்றும் சிலர் மித்ரர்கள் என்றும், பாவித்துக் கொள்வதற்கு வேண்டிய த்வைதபாவம் அவனிடத்தில் மிகுந்திராமற் போய்விடுகிறது. அவனுடைய ஸ்வரூபமே எல்லாவற்றையும் வ்யாபித்துக் கொண்டதா யானபின், தனது என்று சொல்லிக்கொள்ளும்படியான இதர வஸ்து அவனுக்கில்லாமற்போகிறது.

சாந்தி :

இவ்விதம் அஹம்காரம் முதலிய சத்ருக்கள் ஜயிக்கப்பட்டவர்களாய், ஜகத்தே இல்லாததாய் மதிக்கப்பட்டு அவமான மடைந்துபோனபின், யோகம் என்னும் குதிரை ஓடாமல் நின்று விடுகிறது. இதற்கு முன் கெட்டியாய் அணைந்து கொள்ளப்பட்டிருந்த வைராக்யம் என்னும் கவசமும் தானாகவே நெழுகிப்போகிறது. சத்ருக்களனைவரையும் வெட்டிச்சாய்த்துக் கொண்டிருந்த

த்யானம் என்னும் கத்தியும் மேலும் கொல்லப்பட வேண்டிய சத்ரு இல்லாமற்போனதால், ஞானவ்ருத்தி யென்னும் கையினின்று நழுவி விழுந்துபோகிறது. பின்பு உத்தமமான ஓர் ஔஷதம் வ்யாதியைத்தீர்த்து வைத்தல் என்னும் தன் வேலையை முடித்துவிட்டு தானும் மறைந்துபோவ்து, போன்றதான ஓர் ஸ்திதி ஏற்பட்டுவிடுகிறது. வந்து நிற்கவேண்டிய இடம் வந்து சேர்ந்தமாத்ரத்தில் குதிரையின் ஓட்டம் நின்று போவது போலும் ப்ரஹ்மத்தின் அருகில் அவன் வந்து சேர்ந்தமாத்ரத்தில் ஸாதநாப்யாஸங்கள் ஓய்வடைந்து போகின்றன.

கங்கை ஸமுத்ரத்தோடு கலந்துபோனபின், அதின் வேகம் ஓய்ந்துபோவதுபோலும் – ஓர் குலஸ்த்ரீ தன் புருஷன் இருக்கும் இடம் வந்து, அங்கேயே நிலைகொண்டுபோவது போலும், பழம் பழுக்கவேண்டிய காலம் ஏற்பட்டபின் வாழைமரம் வளர்வது ஓய்ந்துபோவதுபோலும், ஒருவன் நடக்க வேண்டியவழி, அவன் போகவேண்டிய ஊருக்குப்போய்ச் சேர்ந்தமாத்ரத்தில் முடிவு பெற்றுவிடுதல்போலும், ஆத்ம ஸாக்ஷாத்காரம் நெருங்கி விட்டதென்று ஸாதகன் அறிந்துகொண்ட உடனே, அவன் அநுஷ்டித்து வந்த ஸாதநாப்யாஸம் என்னும் கத்தியை மெல்ல கீழே வைத்து விடுகிறான். ஆகவே அவனுக்கு ப்ரஹ்மத்தோடு ஒன்று பட்டுப்போகக் கிடைக்கும் ஸமயத்தில், ஸாதனாநுஷ்டான மனைத்தும் விலகிப்போகிறது. அவன் ப்ரஹ்மமாய் விடுவதற்கு தகுதியான காலம் ஏற்படும்போது, வைராக்யத்தின் கோதூளிஸமயம் (ஸாயங்காலம்) என்றும், ஞானப்யாஸத்தின் வார்த்தக்யதசை யென்றும், யோகம் என்னும் பழத்தின் பரிபக்வதைசை யென்றும், சொல்லத்தக்க சாந்தி யெதுவோ, அது அவனுக்கு ஸம்பூர்ணமாய் ஏற்பட்டுவிடுகிறது, ஹே பரமபாக்யசாலியான அர்ஜுனா.

ப்ரஹ்மமாய்ப்போக ஸித்தமாய் இருக்கை :

அப்போது அவன் ப்ரஹ்மமாய்ப்போவதற்கு எந்த யோக்யதை வேண்டுமோ, அந்த யோக்யதையைப் பெற்றவன் ஆய்விடுகிறான். பௌர்ணமிக்கும் சதுர்த்தசிக்கும் – பதினாறு மாற்றுள்ள சுத்தத் தங்கத்துக்கும் பதினைந்து மாற்றுள்ள தங்கத்துக்கும் ஓட்டமில்லாது நிலை கொண்டிருக்கும் ஸமுத்ரத்துக்கும், அதில் விழுந்த பின்னும் ஓட்டத்தின் வேகம் முற்றிலும் அற்றுப்போகாதிருக்கும் கங்கைக்கும் – எவ்வளவு யோக்கியதா தாரதம்யம் (வித்யாஸம்) இருக்குமோ அவ்வளவு யோக்யதா வித்யாஸம் ப்ரஹ்மத்துக்கும் ப்ரஹ்மமாய்விட

ஸித்தமாயிருக்கும் அவனுக்கும் ஏற்பட்டுவிடுகிறது. அந்த வித்யாஸமும், அவனுக்கு ஏற்பட்டிருக்கும் சாந்தியின் பலத்தால் அல்ப காலத்திற்குள்ளேயே இல்லாமற் போய்விடும். இப்படி ப்ரஹ்மமாய் விடாமலே நான் ப்ரஹ்மஸ்வரூபமே என்று ஓர் அறிவு ஏற்பட்டிருக்கும் நிலை எதுவோ, அதுவே, ப்ரஹ்ம மாய்ப் போய்விடுவதற்கு யோக்யதை பெற்றிருத்தல் என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது.

ब्रह्मभूतः प्रसन्नात्मा न शोचति न काङ्क्षति ।
समः सर्वेषु भूतेषु मद्भक्तिं लभते पराम् ।।५४।।

ப்ரம்ஹ பூதः ப்ரஸந்நாத்மா ந ஶோசதி ந காங்க்ஷதி ।
ஸமः ஸர்வேஷு பூதேஷு மத் பக்திம் லபதே பராம் ॥ 54

ப்ரஸந்நாத்மதை :

அப்படி ப்ரஹ்ம மாய்ப்போய்விடுவதற்கு வேண்டியதான யோக்யதை படைத்த அவன் ஆத்மபோதத்தால் (ஆத்மஸ்வரூப விஷயமான யதார்த்த ஞானத்தால்) ஏற்படும் ப்ரஸந்நதை (கலக்கமற்றிருக்கை) என்னும் பதவியில் வீற்றிருக்கப் பெறுகிறான். சமையற்செய்து வைப்பதில் சமைக்கப்பட்ட பதார்த்தத்தில் ஏற்றிவைக்கப்பட்ட அக்நியின் வெப்பம் ஆறிப்போனபிறகு ஏற்படும் ஸ்திதிபோலும், வர்ஷாகாலத்தின் வெள்ளத்தின் பெருக்கால் கங்கையில் காணப்படும் பரபரப்பு சரத்காலம் ஏற்பட்டபின் தீர்ந்துபோய், அதே கங்கையில் காணப்படும் அமரிக்கைபோலும், பாடகனுடைய பாட்டு ஓய்ந்துபோய் பக்கவாத்யங்களும் ஓய்ந்துபோனபின், மனஸில் அநுபவிக்கப்படும் ஸுகம் போலும், ஆத்மஞானம் தேடிக்கொள்வதற்கு, அந்த ஸாதகன் பட்டகஷ்ட மெல்லாம் தீர்ந்துபோய், அதின் நினைப்புக்கூட அவனுக்கு அற்றுப்போய்விடும். ஆத்மபோத ப்ரஸந்நதை யென்ற இந்த ஸ்திதியில் இவன் நிலைகொள்கிறான்.

துக்கமும் விருப்பு மற்றிருக்கை :

அனைத்துக்கும் தான் ஆத்மாவாய் இருப்பதாக, இவன் ஞானநிலை யிருப்பதால், ஏதோ ஓர் நஷ்டம் ஏற்பட்டதென்று துக்கித்தலும், ஏதோ ஓர் பொருள் கிடைக்க வேண்டும் என்று ஆசைப்படுதலும், அவனிடத்தில் ஏற்படாமற் போகின்றன.

ஸமத்வம் :

ஸூர்யன் உதித்தபின், அவன் தன் ப்ரகாசத்தால் ஸகல நக்ஷத்ரங்களின் தனித்தனி ப்ரகாசத்தை மறைந்து போகச் செய்து விடுவது போலும், ஆத்மஸ்வரூபத்தின் ப்ரகாசம் ஏற்பட்டபின், அவன் த்ருஷ்டிக்கு முன்னால், அநேக பூதங்கள் காணப்படுகின்றன என்ற பேதஞானம் மறைந்துபோகிறது. ஓர் பலகையில் பலபத்தால் எழுதிவைத்த அக்ஷரங்கள் கையால் அழிபட்டுப்போவதுபோலும், இவன் பார்வைக்குமுன் பேதங்கள் நிலைகொள்ளாமற் போகின்றன. அப்படியாகும்போது ஜாக்ரத ஸ்வப்நாவஸ்தையில் ஏற்படும் அந்யதாஞாநம். அனைத்தும் கீழே (அத்யாயம் 15 ச்லோகம் 16ல் அக்ஷரபுருஷ லக்ஷண வர்ணநத்தில்) அஞ்ஞானம் என்று வர்ணிக்கப்பட்ட அவ்யக்தத்தில் லயித்துப்போய், அந்த அவ்யக்தமும், ஆத்மஸ்வரூபஞானம் வ்ருத்தி அடைய வ்ருத்தி யடைய, கொஞ்சம் கொஞ்சமாய்த் தேய்ந்து முற்றிலும் இல்லாமற் போய்விடுகிறது.

போஜநம் செய்யும்போது, ஒவ்வொரு கவளத்தோடும் த்ருப்தி அதிகரித்துக்கொண்டு, பசி குறைந்துகொண்டேபோய், கடைசிக்கவளத்தை உட்கொண்டபின், பூர்ணமான த்ருப்தி ஏற்பட்டு பசி முற்றிலும் நசித்துப்போவதுபோலும், வழி நடந்துபோகும்போது, நடக்கவேண்டியது குறைந்து கொண்டேபோய், சேரவேண்டிய ஊர் சேர்ந்தபின், நடக்கவேண்டியதே முற்றிலும் இல்லாமற்போவது போலும், விழித்துக்கொள்ளும் போது விழிப்பு ஏற்பட நித்ரை விலகிப் போய், பூர்ணமான விழிப்பு ஏற்பட்டுப்போனபின் நித்ரையே முற்றிலும் அற்றுப்போவதுபோலும், தன்னுடைய பூர்ணத்வம் ஏற்பட்டுப்போனபின் சந்த்ரன் வளர்வது நின்றுபோய், சுக்லபக்ஷம் முற்றிலும் முடிந்துபோவதுபோலும், க்ருச்யஜாதங்களில் அறியப்படும் பேதம் அனைத்தும் ஆத்மஞானத்தால் லயம் அடைந்து, அந்த ஆத்மஞாநமும் ஆத்மஸ்வரூபமாய் நிலைபெறுதல் என்பதில் லயம் அடைந்துபோனால், அப்போதுதான் அபோதம் (அஞ்ஞானம்) என்பது ஆதியோடந்தமாய் நசித்துப்போகிறது.

ஈச்வரபக்தி ப்ராப்தி :

அப்போது, கல்பாந்த ஸமயத்தில் அதற்கு முன் நதி என்றும் ஸமுத்ரம் என்றும் ஏற்பட்டிருந்த ஓர் வ்யவஸ்தை அழிந்துபோய், ப்ரஹ்மலோகம் உள்பட எங்கும் ஜலமே மூடிக் கொள்வது போலும், சடமும் மடமும் இல்லாமற் போனபின்,

அவைகளால் வகுத்து வைக்கப்பட்டிருந்த ஆகாசம் மஹாகாசத்தோடு கலந்து அத்துடன் ஒன்றுபட்டுப்போவது போலும் - வேறு வேறாய் இருந்த கட்டைகள் அனைத்தும் அக்நியின் ஸம்பந்தத்தால் அக்நியாகவே ஆய்விடுதல்போலும், வேறு வேறாய் இருந்த நகைகளை மூசில்வைத்து உருக்கினபின், அவற்றின் தனித்தனி நாமரூபங்களாகிய பேதம் நசித்துப்போய், எல்லாம் தங்கமாகவே ஆய்விடுதல் போலும் - ஒருவன் விழித்துக்கொண்ட பின் ஸ்வப்நத்தின் வேறு வேறான தோற்றங்கள் நசித்துப்போய் அவன் தன் ஸ்வரூபமாகவே நிலைபெறுவதுபோலும், ஆத்மஸ்வரூபமாய் நிலைகொண்ட அவனுக்கு, ஆத்மஸ்வரூபமாகிய என்னைத் தப்ப, பலவித வித்யாஸங்களோடுகூடிய ஜகத்தும், அதை அறிந்து கொண்டிருந்த அவனுடைய ஜீவாத்மஸ்வரூபமும் ஆகிய இவற்றில் ஒன்றும் மிகுந்து நிற்காமல் போய்விடுகிறது. இப்படிப்பட்டதும் மாசற்றதுமான, என் விஷயமான பக்தி அவனுக்கு ஏற்பட்டுப்போய், கீழே (7வது அத்யாயம் 16வது ச்லோகத்தில்) நான்காவது பக்தியாய்ச் சொல்லி யிருக்கப்பட்ட ஞாநரூபபக்தியை அவன் அடைந்து விடுகிறான். மற்ற விதப்பட்ட ஆர்த்தபக்தி ஜிஞ்ஞாஸுபக்தி, அர்த்தார்த்திபக்தி ஆகிய இவற்றை லக்ஷ்யத்தில் வைத்துக்கொண்டு, இதை நான்காவது பக்தி யென்று சொல்லவேண்டுமே தவிர, இந்த ஸ்திதியை அடைந்த ஒருவனுக்கு முதலாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது என்ற வ்யவஹாரமே அற்றுப்போகிறது.

என்னுடைய இவ்விதப்பட்ட ஸஹஜஸ்திதிக்கு பக்தி என்று பெயர். என்னுடைய இயற்கையான ஸ்திதியாகிய இந்த பக்தியே என்னுடைய அஞ்ஞாநத்தை ப்ரகாசிக்கச் செய்து, என்னுடைய ஸ்வரூபத்தையே விபரீதப்பட்டதாய் எனக்கே காண்பித்துவைத்து, உலகிலுள்ள அனைவராயும் அமைந்திருக்கும் என்னை, எல்லா வஸ்துக்களாயும் அமைந்திருக்கும் என் ஸ்வரூபத்தையே பஜித்துக் கொண்டிருக்கச் செய்து ஸமாதானப் படுத்திவைக்கிறது. எந்த பக்தன் இந்தவிதமான மனோபாவத்துடன் எங்கே பார்க்கிறானோ, அவனுக்கு அங்கே அவன் பாவத்திலுள்ள அந்த வஸ்துவாய் நானே நிற்கிறேன். இப்படி ஜீவர்களுக்கு ஏற்படும் அநுபவம் என்னுடைய அகண்டமான ப்ரகாசத்தாலேயே ஸித்திக்கிறது. இப்படிப்பட்ட என்னுடைய இயற்கையான ஸ்வரூப ப்ரகாசமே பக்தியென்று பெயரிடப்பட்டு வழக்குகிறது. ஆகவே ஆர்த்தனாக (ஓர் நன்மை கிடைக்க வேண்டுமென்று விரும்பி வருந்துகிறவனாக)

நானே நின்று, அவனிடத்தில் ஆர்த்தியாகவும் நானே அமைந்து, அவன் ஆசைப்பட்ட வஸ்துவாயும் என்னை நான் செய்து கொள்கிறேன். அப்படியே, ஜிஞ்ஞாஸுவாகிய (அறிய ஆசைப்படுகிறவன்) என்னிடத்திலேயே, ஜிஞ்ஞாஸை (அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை) யாக நானே அமைந்து, அறிந்துகொள்ள ஆசைப்படத்தக்க (ஜிஞ்ஞாஸ்ய) வஸ்துவாயும் என்னையே காட்டிவைக்கிறேன். அர்த்தார்த்தியாய், (பொருளாசைப்பட்டவனாய்) நானே நின்று, பொருளாசையாயும் நானே ஆய், நானே ஆசைப்பட்ட பொருளாயும் அமைந்து நிற்கிறேன்.

இப்படி நான் அஞ்ஞானத்தைப் பரிக்ரஹித்துக் கொண்டு என்னுடைய பக்தியை நான் அநுஷ்டிக்கும் போது த்ரஷ்டாவாகிய (பார்க்கிறவன், அறிகிறவன்) என்னையே த்ருச்யமாய்ச் (பார்க்கப்படும் அல்லது அறியப்படும் வஸ்து வாய்) செய்துவைத்துக் கொள்கிறேன். முகமே, முகமாய்க் காணப்படுகிறதென்பதில் ஆக்ஷேபிப்பதற்கு ஒன்று மில்லாதிருந்தும் ப்ரதிபிம்பமான மற்றொன்று என்ற உண்மையற்ற தோற்றம் கண்ணாடியாற் செய்து வைக்கப்படுவதுபோலும், கண்ணாற் பார்க்கப்பட்டது ஒரே சந்த்ரனே யானாலும், அது இரண்டாகத் தோற்றுவது கண்ணின் தோஷத்தின் கார்யமேபோலும், எங்கும் நானே என்னையே பார்த்துக்கொள்கிறேன். ஆனால் த்ருச்யம் என்று வேறொன்றிருப்பதாகத் தோற்றுவது அஞ்ஞானத்தின் கார்யமாகிறது.

அப்படிப்பட்ட அஞ்ஞானம், கீழ்வர்ணிக்கப்பட்டுள்ள ப்ரஹ்மீபூத நிலையில் முற்றிலும் நசித்துப்போய், கண்ணாடியை விலக்கிவைத்தபின் ப்ரதிபிம்பம் பிம்பத்தில் லயித்துப்போவதுபோலும், என்னுடைய த்ரஷ்ட்ருத்வம் (த்ருச்யங்களைப் பார்ப்பவனாயிருக்கும் தன்மை) என்னுடைய ஸ்வரூபத்தில் கலந்துபோய் லயப்பட்டுபோகிறது. இதர உலோகங்களோடு கலந்திருக்கும்போதும், இருப்பது தங்கமேயானாலும், அந்த உலோகங்களின் கலப்பு விலகிப்போனபின் சுத்தமான கேவல தங்கம் ஒன்றே மிகுந்து நிற்கிறதல்லவா? பௌர்ணமிக்கு முன்னால் சந்த்ரன் அவயவபூர்த்தியுடனேயே இருந்தாலும், பௌர்ணமி தினத்தில் அவனுடைய முழுசோபையும் அவனுக்கு ஏற்பட்டு விடுகிறது. அப்படியே ஸம்ஸார தசையில் த்ரஷ்டாவாய் காணப்படுகின்றவன் நானே யானாலும் அந்தநிலையில் அஞ்ஞானம் என்னும் உபாதியோடுகூடினவனாய் நான்

காணப்படுகிறேன். பின்பு அஞ்ஞான உபாதியால் ஆத்மஸ்வரூபத்தில் ஏற்படுத்திவைக்கப்பட்ட த்ரஷ்ட்ருத்வம் விலகிப்போனால், என்னுடைய உண்மையான ஸ்வரூபத்தில் நான் நிலைகொண்டவன் ஆய்விடுகிறேன். ஆகவே இந்த ஸாதகன் முடிவாக அடையும் என் ஸ்வரூபபக்தி நிலையானது, த்ரஷ்டாவும் த்ருச்யமும் மற்றதாய், கீழே ஏழாவது அத்யாயத்தில் நான்காவது பக்தியாய்க் கணக்கிடப்பட்டிருக்கும் ஞான பக்தியேயாகும்.

भक्त्या मामभिजानाति यावान्यश्चास्मि तत्त्वतः ।
ततो मां तत्त्वतो ज्ञात्वा विशते तदनन्तरम् ॥५५॥

பக்த்யா மாமபி ஜானாதி யாவான்யஶ்சாஸ்மி தத்த்வத: ।
ததோ மாம் தத்த்வதோ க்ஞாத்வா விஶதே தத நந்தரம் ॥ 55

ஞானபக்தியின் ஸ்வரூபம் :

இந்த ஞானபக்தி ஒருவனுக்கு ஏற்பட்ட மாத்ரத்திலேயே, அந்த ஞானபக்தன் என்னுடன் ஒன்று பட்டுப்போய் கேவலம் நானாகவே நிலைபெறுகிறான் என்பதை, நான் ஏழாவது அத்யாயத்தில் என் இரண்டுகையையும் தூக்கிக் கொண்டு ஞானியானவன் என்னாத்மா வென்று உனக்கு சபதபூர்வமாக (ஆணையிட்டுக் கொண்டு) சொல்லியிருக்கிறேன். இந்த பக்திக்கு உலகஸ்ருஷ்டியின் முதலில் ஸ்ரீபாகவதம் என்று பெயர் வைத்து, இதை உத்தம பக்தி யென்று ப்ரஹ்மதேவனுக்கு நான் உபதேசித்திருக்கிறேன். இந்த பக்தியைஞானிகள் ஆத்மஞானம் என்பார்கள், சிவோபாஸகர்கள் சக்தி என்பார்கள், நான் என்னிடம் ஏற்பட்ட பராபக்தி என்று சொல்வேன். கீழே (இவ்வத்யாயத்தின் 14வது முதல் 53வது ஈறாக உள்ள ச்லோகங்களில்) சொன்ன ப்ரகாரமாய் கர்மயோகத்தை அப்யஸித்து வருகிறவன் என்னுடன் கலந்துபோகவேண்டிய ஸமயம் நேரும்போது, அவனுக்கு இந்த பக்தி உண்டாய், ஸகலமும் என் ஸ்வரூபத்தால் நிறைந்திருப்பதாய் அவன் அறிகிறான். அப்போது வைராக்யம் தன்னுடன் விவேகத்தையும் கூட்டிக்கொண்டு இல்லாமற்போகிறது. பந்தம் மோக்ஷம் இவற்றின் பேச்சே அற்றுப்போகிறது. ஞானவ்ருத்திகளின் ஸஞ்சாரம் என்பதும், ஞானம் ஸஞ்சரிக்காமல் நிலைபெற்றிருப்பதென்பதும் இல்லாமற்போகிறது. இக்கரை அக்கரை என்ற வார்த்தைகள் அற்றுப்போகின்றன. நான்கு பூதங்களையும் விழுங்கிவிட்டு, ஆகாசம் மாத்ரம் மிகுந்திருந்தால் எப்படியோ, அப்படிப்பட்ட ஓர் நிலை ஏற்பட்டுவிடுகிறது.

அப்படி ஓர் விதமான பற்று மற்றதாய், ஸாத்யங்கள் ஸாதநங்கள் என்ற வ்யவஹார மற்றதாய், சுத்தமாய், இருக்கும் என்னுடைய ஸ்வரூபம் எதுவோ, அத்துடன் அவன் ஒன்றுபட்டுப்போய், அப்படி ஒன்றுபட்டுப்போயிருப்பதை அவன் அனுபவிக்கிறான். கங்கையானது ஸமுத்ரத்தில் விழுந்து அத்துடன் கலந்துபோனபின், அந்த ஸமுத்ரத்தின்மேல் கங்கை அலாய்தாவாகத் தோன்றிக் கொண்டிருப்பதுபோலும், அவன் என்னுடன் ஐக்யப்பட்டதை அநுபவிப்ப தென்பது, இருக்கும். ஓர் கண்ணாடிக்குமுன் மற்றோர் கண்ணாடி வைக்கப்பட்டு அவை யொன்றை யொன்று பார்த்துக் கொள்வதுபோலும், இந்த ஐக்யாநுபவம் இருக்கும். அன்றியும் ஒருவன் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தறிந்துகொண்ட பின், கண்ணாடி அப்புறப்படுத்தப்பட்டு ப்ரதிபிம்பம் பார்க்கப்படாது போயினும் தன்ஸ்வரூபத்தின் அழகை முன்பார்த்தறிந்து கொண்டதின் ஸுகத்தைத்தனக்குள் தானே அநுபவிப்பதுபோலும், அது இருக்கும்.

தூக்கத்தினின்று விழித்துக் கொண்டவனுக்கு ஸ்வப்நம் இல்லாமற்போய் வேறோன்றின் சேர்க்கையற்ற தன்னுடைய தனித்த இருப்பை அவன் அனுபவித்துக்கொள்வதுபோலும், ஆத்மஸ்வரூப ஐக்யாநுபவம் இருக்கும். ப்ரஹ்மஸ்வரூபத்தை அநுபவிக்க முடியும் என்று ஒருவன் ஸந்தேஹப்பட்டால், சப்தம சப்தத்தைக் கொண்டே உச்சரிக்கப்படுவதுபோலும் அந்த ஐக்யானுபவம் இருக்கிற தென்று நான் ஸமாதானம் சொல்வேன். இன்னமும் அவன் ஸந்தேஹம் தீராதிருந்தால், அவன் இருக்கும் ஊரில் ஸூர்யனுடைய வெளிச்சத்தை தீபத்தை ஏற்றி வைத்துக்கொண்டு பார்ப்பது வாடிக்கையோ என்னமோ? அல்லது ஆகாசம் குடியிருப்பதற்கு ஓர் மண்டபம் கட்டிவைப்பதுண்டோ, என்னமோ? இது எனக்குத் தெரியவில்லை.

ஒருவனுக்கு ராஜபதவி ஏற்படாத வரைக்கும், ராஜா ராஜாவாயிருப்பதின் ஸுகத்தை அனுபவிப்பது எப்படிப்பட்ட தென்று எவ்விதம் அவன் தெரிந்துகொள்வான்? ஸூர்யனை அவனடையப்ரகாசம் ஆலிங்கனம் செய்து கொள்ளாமல், இருட்டு அவனை எவ்விதம் ஆலிங்கனம் செய்துகொள்ளும். ஆகாசமாய் இராத ஒன்று ஆகாசம் எப்படி, இருக்கிற தென்று அறிந்து கொள்ள முடியுமா? குன்றிமணியால் ஏற்பட்ட ஓர் நகை ரத்நங்களின்சோபையை வெளிப்படுத்தி வைக்கமுடியுமா? ஆகவே என் ஸ்வரூபமாய் ஆய்விடாதவனுக்கு நான் எங்கே இருப்பேன்?

அப்படியானபின் என்னை அவன் எப்படி பஜிக்கப் போகிறான், அவன் என்னை பஜிக்கவே முடியாதென்று நான் ஸந்தேஹமறச் சொல்கிறேன், ஆகவே தாருண்யம் அடைந்த பெண் தாருண்யத்தின் ஸுகத்தை அநுபவிப்பதுபோலும், நான் ஆய்விட்ட கர்மயோகி என்னை அநுபவிக்கிறான். அலைகள் தங்கள் ஸர்வாங்கத்தாலும் ஜலத்தை ஆலிங்கனம் செய்துகொண்டிருப்பதுபோலும், ஸூர்யபிம்பத்தின் ஸர்வாங்கத்தின் மேலும் காந்தி என்பது விழுந்து விளையாடிக் கொண்டிருப்பதபோலும் அவகாசம் என்பது ஆகாசத்தின்மேல் புறண்டுருண்டுகொண்டிருப்பதுபோலும், அவன் நானாய்ப்போய் என்னை பஜித்தல் என்ற ப்ருதக்கான ஓர் கர்மத்தை அநுஷ்டிக்காமலே என்னை பஜித்துக்கொர்ண்டிருக்கிறான்.

கனம் என்பது தங்கத்தை பஜித்துக்கொண்டிருப்பது போலும், சந்தனத்தை வாஸனை இயற்கையாகவே பஜித்துக் கொண்டிருப்பதுபோலும், சந்த்ரிகை ஓர் வேலையும் செய்யாமல் இயற்கையாகவே சந்த்ரனை பஜித்துக்கொண்டிருப்பதுபோலும், ஓர்க்ரியைக்கும் இடம் கொடுக்காததான ப்ரஹ்மத்தோடொன்று பட்டுநிற்கும் அத்வைதநிலையில் பஜனை என்பது இருக்கிறது. இவ்விஷயம் அனுபவித்து அறிந்துகொள்ளத் தக்கதே தவிர, சொற்களைக் கொண்டு அறிந்து கொள்ளத் தக்கதல்ல, அந்நிலையில் பூர்வஸம்ஸ்காரத்துக்கு வசப்பட்டவனாய் அவன் என்ன சொல்வானோ அதினால் ஸ்துதிக்கப்பட்டவனாய் நான் என்னை பாவித்துக் கொண்டு, ஓவென்று அவனுக்குப்பதில் கொடுக்கிறேன். பேசுகிறவனே பேசுகிறவனை ஸந்தித்துக்கொள்ள வேண்டியதான அந்நிலையில் அவன் சுப்பாடுபோடுவது வார்த்தைகள் பேசுவதாகாமல் மௌனமே என்று சொல்லதக்கதா யிருந்துகொண்டு என்னுடைய உத்தமமான ஸ்தோத்ரமாய் முடிகிறது. ஆகவே அவன் வார்த்தைகள் சொல்வதும உடனே நான் அவனோடு, ஸந்தித்தலும் ஏற்படும் போது, அவன், மௌனம் கலைவதில்லை. அதுவே என்னுடைய உத்தமமான ஸ்தோத்ரமும் ஆய்விடுகிறது.

ஞானபக்தியின் பரிணாமம், ஈச்வரதத்வஞான ப்ராப்தி :

அப்படியானபின் அவனுடைய புத்தி எதையாவது அறிந்து கொள்ள, அல்லது அவனுடைய பார்வை எதையாவது பார்க்க

உத்தேசித்தால் அவ்வறிவுக்கும் அப்பார்வைக்கும் த்ருச்ய ஜாதங்களில் ஒன்றும் விஷயமாகாமல், த்ருச்யம் என்பதே முற்றிலும் விலகிப்போய், அவ்வறிவும் அப்பார்வையும் அவனுக்கு அவனையே காட்டிக்கொடுக்கின்றன. கண்ணாடியில் பார்ப்பதற்கு முன் எந்த முகம் இருந்ததோ, அதே முகம், கண்ணாடியில் பார்க்கும்போது பார்க்கப்படுதல்போலும், அவன் பார்க்கத்தொடங்கினால் அப்பார்வை அவனையே அவனுக்குக் காட்டிவைக்கிறது. எப்போது பார்வையானது த்ருச்யவஸ்து ஒன்றையும் காட்டிவைக்காமல் த்ரஷ்டாவையே காட்டிவைக்கிறதோ, அப்போது ஒரே வஸ்துவே ஏற்பட்டுப்போவதால் பார்க்கிறவனாய் இருக்கையும் த்ருஷ்ட்ருத்வமும் இல்லாமற் போகிறது. ஒருவன் தான் ஸ்வப்நத்தில் கண்டமனைவியை விழித்துக்கொண்டபின் கட்டிக்கொள்ளப்போனால், தான் இரண்டு வஸ்துவாயிராமல் ஒண்டியாகவே இருந்துவிட ஏற்படுவது போலும், அல்லது இரண்டு சட்டைகள் உராய்ந்துகொண்டு நெருப்பு ஏற்பட்டபின் இரண்டும் நெருப்பாகவே. ஆய்விட்டு இரண்டென்னும் பேச்சுக்கு இடம் இல்லாமற் போவதுபோலும், ஸூர்யன் ஜலத்தில் தோன்றும் தன் ப்ரதிபிம்பத்தைக் கையாற்பிடித்துக் கொள்ளப்புகுந்தால் ப்ரதிபிம்பம் இல்லாமற் போவதுடன் தனக்கு முன்னிருந்த பிம்பத்வமும் (ப்ரதிபிம்பத்தை யுண்டாக்கி வைத்தல்) நஷ்டமாய்ப் போவதுபோலும், நானாய்ப்போன அந்த த்ரஷ்டா த்ருச்யத்தைப் பார்க்கப்போகும் போது, அந்த த்ருச்யம் அவனுக்கு ஏற்கனவே இருந்த த்ரஷ்ட்ருத்வத்தையும் அபஹரித்துக்கொண்டு மறைந்துபோகிறது. ஸூர்யன் அந்தகாரத்தை (இருட்டை) ப்ரகாசம் செய்து வைக்கப் புகுந்தால் அந்தகாரம் போய் விடுவதோடு ஸூர்யனுக்கிருந்த ப்ரகாசம் செய்து வைக்கும் தன்மையும் இல்லாமற் போகிறது. அப்படியே நான் ஆய்ப்போனவனுக்கு த்ருச்யங்களும் த்ருஷ்ட்ருத்வமும் அற்றுப்போகின்றன. பின்பு அவனுக்குப் பார்ப்பது என்பதும் பார்க்காதிருத்தல் என்பதும் இரண்டும் இல்லாமற்போகிறது. இப்படிப்பட்ட ஓர் நிலையே என்னை உண்மையாய் பார்த்துக்கொள்வது. அப்படிப்பட்ட என் ஸ்வரூபதர்சனம், அவன் எந்த பதார்த்தத்தைப் பார்க்கும்போதும், அவனுக்கு ஏற்பட்டுப்போய், இந்த த்ருஷ்ட்ருத்ருச்யரஹிதமான த்ருஷ்டியை அவன் ஸதா அனுபவித்துக் கொண்டிருக்கிறான். ஆகாசம் எல்லாபக்கத்திலும் தன்னாலேயே சூழப்பட்டதாய் இருப்பதால், அது ஓர் இடத்தினின்று மற்றோர் இடத்துக்குப் போக முடியாததாயிருப்பதுபோலும், ஆத்மஸ்வரூபியான நான் அவனை யெல்லாப்பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டிருப்பதாய்

அவனுக்குத்தோன்றிப் போய் அவன் சலனமற்ற வனாய்விடுகிறான்.

கல்பாந்த ப்ரளயத்தில் எங்கும் ஜலம் வ்யாபித்துக்கொண்டு ஜலம் ஜலத்தாலே தடுக்கப்பட்டுப்போய், ஜலத்துக்கு ஓட்டமில்லாற் போவதுபோல், ஆத்மாவாகிய நான் அவனை எப்பக்கத்திலும் சூழ்ந்துகொண்டிருப்பதாய் அவன் புத்திக்குத் தோற்றுவதால், அவன் ஆட்டம் ஒட்டமற்றுப்போகிறான். கால் காலின்மேல் அடிவைத்துச் செல்வது எப்படி முடியும்? நெருப்பு நெருப்பை எவ்விதம் எரிக்கும்? ஜலம் ஜலத்திற்குள் புகுந்து ஸ்நாநம் செய்வது எவ்வகை நேரும்? ஆகையால் அவனுக்குத்தானும் உலகிலுள்ள அனைத்தும் நானாய்த் தோற்றிப்போவதினால் அவனுக்குப் போக்குவரத்து என்பது இல்லாமற் போகிறது. இந்த ஸ்திதியை அடைந்து நிற்பதே அத்வயமாயிருக்கும் என்னை உத்தேசித்த யாத்ரையாகிறது. அன்றியும் ஜலத்தின்மேல் ஜலரூபமான அலைகள் வேகமாய் ஓடிக்கொண்டிருந்தபோதிலும், அவைகள் பூமிமேல் ஓடுவது இல்லை அல்லவா? அந்த அலைகள் எந்த ஸ்திதியை விட்டொழித்துக் கொள்ளுமோ அதுவும், எந்த ஸ்திதியைத் தமக்கு ஏற்படுத்திக் கொள்ளுமோ, அதுவும் ஓடுவதும், ஓடுவதற்குக் காரணமாய் இருப்பதும், ஓடிப்போய்ச் சேருமிடமும் ஆகிய அவை அனைத்தும் ஜலமாகவே இருப்பதால், அவ்வோட்டத்தால் அந்த அலைகளின் ஆத்மஸ்வரூபத்தில், பேதம் ஏற்படாததுபோலும், ஒருவன் நான் ஆய்விட்டபின், அவனுடைய அறிவின் ஸ்புரண மனைத்தும் என்ரூபமாய் இருப்பதால், இப்படிப்பட்ட அவனுடைய புத்தியின் வ்யாபாரம் அனைத்தும் என் விஷயமான உத்தமமான யாத்ரையாகவே முடிந்து அவன் என்னை உத்தேசித்து யாத்ரை செய்கிறவனாய் விடுகிறான்.

அவ்வகைப்பட்டுப்போன அவன், சரீரஸம்பந்தத்தின் காரணமாய் ஏதாவது ஓர் க்ருத்யத்தைச் செய்கிறவனாகக் காணப்பட்டால், அவனுக்கு அந்தக்ருத்யம் நானாகவே இருப்பதாகத் தோற்றி, அந்த க்ருத்யத்தால் அவன் என்னிடமே வந்துசேர்கிறான். அப்படிப்பட்ட ஓர் நிலையில் கர்மம் என்பதும் கர்த்தா என்பதுமான பேதஞானம் அற்றுப்போய் த்ரஷ்டவாகிய தன்னையும் த்ருச்யஜாதங்களையும் நானாகவே இருப்பதாக அவன் உணர்ந்து, நானாகவே ஆய்விடுகிறான். கண்ணாடியே கண்ணாடியைப் பார்த்துக் கொண்டால், அது பார்த்துக் கொள்ள லாகாததுபோலும், தங்கத்தைத் தங்கத்தாற் பூசி மறைத்துவைத்தால், அது மறைத்துவைக்க தகாததுபோலும்,

தீபம் தன்னையே ப்ரகாசம் செய்துவைத்தால் அது ப்ரகாசம் செய்துவைத்ததாகாதது போலும் கர்த்தாவும் கர்மமும் தானே என்று அறியப்படும் ஓர் நிலையில் ஓர் கார்யம் செய்யப்பட்டால், அது கார்யம் செய்தது ஆகுமா? கர்மத்தையே செய்துகொண்டிருந்தபோதிலும், அதைச் செய்வதற்குமுன், அவனிடத்தில், "இதை நான் செய்வேன்," என்னும் ஸங்கல்பம் ஏற்படாதிருக்கும் பக்ஷத்தில், அவன் செய்தது செய்யாததே ஆகும். க்ரியைகள் அனைத்தும் நானாகவே தோன்றுவது என்ற ஓர் நிலை எற்பட்டுவிட்டபின், அதுவே நிஷ்க்ரியத்வம் ஆய், அதுவே என்னுடைய உத்தமமான பூஜை ஆய்விடுகிறது.

இதுவே கர்மம் செய்தல் என்ற வெளித்தோற்றம் படைத்த செய்யாமையாயிருந்துகொண்டு, அவன் எனக்குச் செய்யும் மஹாபூஜையாய், முடிகிறது, ஹே அர்ஜுநா, இப்படியாய்விட்டபின், அவன் பேசுவதெல்லாம் என் ஸ்தோத்ரமாயும், அவன் பார்ப்பதனைத்தும் என் தர்சநமாயும், அவன் அலைந்து திரிவ தனைத்தும், அவனை விட்டு வேறுபடாத என்னை உத்தேசித்த யாத்ரையாயும், அவன் செய்வதெல்லாம் என் பூஜையாயும், அவன் மனஸின் கல்பனைகளெல்லாம் என் ஜபமாயும், அவன் நித்ரைமுழுவதும், என் ஸ்வரூபத்தில் ஸமாதி பெற்றிருப்பதாயும் ஏற்படும் ஹே கபித்வஜா! தங்கத்தாற் செய்யப்பட்ட காப்பு தங்கத்தைக் காட்டிலும் வேறு பட்டதாகாததுபோலும், அவன் இந்த பக்தியோகத்தால் நானே ஆய்விடுகிறான். ஜலத்தில் அலையும், கர்ப்பூரத்தில் வாஸனையும், ரத்நத்தில் அதின் பளபளப்பும், அநந்யமாய் இருப்பதுபோலும், நூலைக்காட்டிலும் வஸ்த்ரமும், மண்ணைக்காட்டிலும் மண்சட்டியும், வேறு பட்டதாகாததுபோலும், அவன் என்னோ டொன்று பட்டவனாய் இருக்கிறான். இப்படிப்பட்ட வேறுபடாத நிலையாகிய பக்தியை, அவன் அடைந்திருப்பதால் த்ருச்யங்கள் அனைத்திலும் த்ரஷ்டாவாகிய நான் இயற்கையாவே அமைந்திருப்பதை அவன் கண்டு கொள்கிறான்.

ஜாக்ரத, ஸ்வப்ந, ஸுஷுப்தி என்ற மூவவஸ்தைகளிலும் உபாதி, (வஸ்துவின் ஸ்வரூபமாய் இராமல் அத்துடன் ஒரு காலத்தில் சேர்ந்திருக்கும் மற்றொன்று) உபஹிதவஸ்து, (உபாதியின் சேர்க்கை பெற்றிருக்கும் ஆத்மவஸ்து) இவ்விரண்டின் சேர்க்கை என்னும் உருவுகொண்டதாய் இருந்து வெளிப்பட்டுத் தோன்றுவதாய், அல்லது இராததுபோல் மறைந்து கிடப்பதாய், இருக்கும் த்ருச்யம் எதெதுவோ, அதது அனைத்தும் அவற்றைப்

பார்த்துக்கொண்டிருக்கும் த்ரஷ்டாவாகிய நானே என்ற ஓர் ஞானத்தின் நடுவில் நிலைகொண்டு அவன் அதின் அநுபவத்தால் ஏற்பட்ட ஆநந்தத்தால் கூத்தாடிக்கொண்டிருப்பான்,

ஹே அர்ஜுநா கயிறு என்று தெரிந்துகொண்டவனுக்கு, அவன் கண்ணுக்கு முன்பு பாம்பாய்த் தோற்றினது கயிறே, பாம்பல்ல, என்ற நிச்சயமான ஞாநம் ஏற்பட்டுவிடுதல்போலும், தங்கமில்லாமல் ஒரு குன்றிமணி இடைகூட நகை யில்லை என்று ஓர் நிச்சய ஞாநம் ஏற்பட்டபின், நகை யென்ற ஓர் ஞானம் முற்றிலும் அற்றுப் போவதுபோலும், ஜலத்தைத்தவிர்த்து அலை யென்று தனித்த ஓர் வஸ்து இல்லை யென்று திடமான ஞானம் ஏற்பட்டபின் அலை யென்ற ரூபத்தை அறிவு ஏற்றுக் கொள்ளாததுபோலும், அன்றியும் விழித்துக் கொண்டவன் தான் ஸ்வப்நத்திற் கண்ட அனைத்தையும் ஞாபத்துக்குக் கொண்டுவந்து அவற்றின் இருப்பு எப்படிப்பட்டது, என்று விசாரித்துப் பார்த்து அவை அனைத்தும் தன் ஸ்வரூபத்தைத் தவிர வேறோர் விதமான இருப்பற்றவை யென்று தெரிந்து கொள்ளுதல் போலும், இருக்கிறவையாயும் இல்லாதவையாயும், ஆன எவை யெவை ஞானவ்ருத்திகளை உண்டாக்கி வைக்குமோ, அவை அனைத்தும், அந்த ஞானத்தைப் பாராட்டி நிற்கிறவனான தானே என்று திடமான புத்தி அவனுக்கு ஏற்பட்டு, அதின் ஸுகத்தை அவன் அநுபவித்துக்கொண்டிருப்பான்.

ஈச்வரஸ்வரூப நிர்தேசம், அதின் லக்ஷணங்கள்:

நான் பிறப்பு மூப்பற்றவ னென்றும், நான் தானேயாக ஆவது, வேறோர் வஸ்துவாலே யாவது, நாசமடையாதவன் என்றும், நான் எனக்கு முற்பட்ட ஓர் வஸ்து வற்றவனாய், கரையற்றவனாய், ஆநந்தரூபியாய் இருக்கிறவன் என்றும், நான் அசைவற்றவனாய்ப் பெயராத நிலைபடைத்தவன் என்றும், நான் ஆத்யவஸ்துவாய், அவ்யக்தமாயும் வ்யக்தமாயு மிருக்கிறவன் என்றும், நான் ஈச்வரன் ஆஞ்ஞைக்குட்பட்டவனாயும் ஈச்வரனாயும் இருக்கிறவ னென்றும், நான் அநாதியாய் மரணமற்றிருப்பவன் என்றும், நான் பயமற்றவனாய், ஆதார வஸ்துவாயும், (ஸர்வத்தையும் தாங்கிக் கொண்டிருக்கும் வஸ்துவாயும்) ஆதேய வஸ்துவாயும், (தாங்கப் பட்டிருக்கும் வஸ்துவாயும்) இருக்கிறவன் என்றும், நான் எப்போதும் பெருமைபடைத்து விளங்கும் ஸர்வஸ்வாமியென்றும் நான் தானாகவே ஏற்பட்டு எப்போதும்

இருக்கிறவனென்றும் நான் ஸர்வமாயும், ஸர்வகதனாயும், ஸர்வத்தையும் தாண்டிநிற்கிறவனாயும் இருக்கிறவன் என்றும், நான் எப்போதும் புதுமைபடைத்தவன் என்றும், பழமையானவன் என்றும், நான் சூன்யமாயும் ஸம்பூர்ணமாயும் இருக்கிறவ னென்றும், ஸ்தூலமென்று சொல்லமுடியாததாயும் அணு வென்று சொல்லமுடியாத தாயும் எதெது இருக்குமோ அது அனைத்தும் நானே என்றும், நான் ஸர்வவ்யாபாரமுமற்று ஒண்டியா யிருக்கிறவ னென்றும், நான் பற்றற்று துக்கமற் றிருக்கிறவன் என்றும், வ்யாபிக்கப்பட்ட வஸ்துவும் வ்யாபித்துக்கொண்டிருக்கும் வஸ்துவும் நானே யென்றும், நான் சப்தங்களைத் தாண்டி நிற்கிறவனாய், காது முதலிய இந்த்ரியங்களற்றவனாய் இருக்கிறவ னென்றும், நான் ரூபமும் கோத்ரமும் அற்றவ னென்றும், நான் ஸமனென்றும், ஸ்வதந்த்ரனென்றும், (ஒரு கட்டுக்கும் உட்படாதவனாய்த் தனக்குத் தோன்றியபடி நடந்து கொள்கிறவன்) நானே பரப்ரஹ்ம மென்றும், இப்படி யெல்லாம், இருப்பதுடன், நான் அவன் ஆத்மஸ்வரூபமாயும் இருக்கிறேன் என்றும், என்னை இந்த அத்வயபக்தியால் அறிந்து அப்படி அறியும் ஞாநநிலையையும் நானாகவே அவன் அறிந்து கொள்வான்.

ஒருவன் விழித்துக் கொண்டபின் ஸ்வப்நத்திற் காணப்பட்டவையாயிருந்த பலவித வஸ்துக்களும் இல்லாமற்போய், தான் ஒருவனே மிகுந்து நின்று, அப்படி அவன் தனித்திருப்பதை அவன் தானே அறிந்துகொள்ளுதல் போலும், ஸூர்யன் ப்ரகாசிக்கும்போது, அவன் ஸ்வரூபத்தை அவனே ப்ரகாசம்செய்து வைத்து, இப்படி ஏற்படும் ப்ரகாச்ய ப்ரகாசக வஸ்துக்களின் நடுவில் உள்ள அபேதத்தை அவனே அறிந்துகொள்ளுதல்போலும், வேத்யங்கள் (அறியத்தக்கவைகள், த்ருச்யங்கள்) லயப்பட்டுப்போய், கேவல வேதகனே, (அறிந்து கொள்கிறவன் த்ரஷ்டா) மிகுந்துநின்று, தன்னைத்தானே அறிந்துகொள்ள வேண்டியதாய் ஏற்பட்டு, இப்படி ஏற்பட்டுவிட்டபின் இரண்டாவது வஸ்துவின் சேர்க்கையற்ற தன்னுடைய நிலையை அறிந்துகொள்ளும் அறிவு எதுவோ, அதுவே ஈச்வரனாகிய என்னுடைய ஸ்வரூபம். இந்த என் ஸ்வரூபத்தை அவன் அறிந்துகொள்வான்.

ஈச்வரஸ்வரூபத்தில் ப்ரவேசம்:

பின்பு த்வைதம் என்றும் சொல்லமுடியாமல் அத்வைதம் என்றும் சொல்லமுடியாமல் இருக்கும் யாதோர் ஆத்மஸ்வரூபம் உண்டோ, அதுவே தான் என்று ஸந்தேஹமற நிச்சயித்துக்கொள்ளும் ஞானம் எதுவோ, அதுவும் எந்த

அநுபவநிலையில் லயமடைந்து போகுமோ, அந்த நிலைகொண்டவ னாய்ப்போய்விடுவதே ஈச்வரஸ்வரூபத்திற் ப்ரவேசமாகும். விழித்துக்கொண்டபின் தன்னுடைய தனித்த நிலை தனக்குப் புலப்படுவதும் அற்றுப்போய்விட்டால், அதற்குப் பின் ஏற்படும் அவர்ணநீயமான நிலை இதற்கு உபமானம் ஆகும். கண், நகையைப் பார்த்தமாத்ரத்தில் அது நகையாயிருக்கும் போதே அதின் நகையுருவம் கோசரமாகாமல் அதின் ஸ்வரூபமான தங்கத்தில் லயித்துப்போனாற்போலும், உப்பு ஜலத்திற் கரைந்துபோனபின், உவர்ப்பு என்னும் சுவையும் உணரப்படாமற் போனாற்போலும், ஈச்வரனாகிய நான் தானே என்று ஏற்பட்டஞானம் கூட அற்றுப்போய் தன் ஸ்வரூபாநந்தா நுபவத்தில் முழுகிப்போய் அத்துடன் ஒன்றுபட்டுக் கலந்துப்போவதே ஈச்வர ஸ்வரூபத்தில் ப்ரவேசித்ததாகும். எப்போது அவன் என்னும் பேச்சு அற்றுப்போகிறதோ, நான் என்னும் பேச்சு எவனுக்கு எற்படும்?

இப்படி நான், அவன் என்ற வ்யவஹாரம் அற்றதான என்னுடைய ஸ்வரூபத்தில் அவன் லயப்பட்டுப்போகிறான். கர்ப்பூரம் முழுவதும் எரிந்துபோய்விட்டால், அதுவே நெருப்பு அணைந்து போனதாய் முடிந்து, பின்பு கர்ப்பூரம், நெருப்பும் இல்லாத ஆகாசம் ஒன்றே ஏற்பட்டு நிலைகொள்வது போலும், ஒருவனே இருந்த இடத்திலிருந்து அவ்வொருவனும் வெளிப்படுத்தப்பட்டுப் போனால், அவ்விடத்தில் சூந்யமே ஏற்படுவது போலும், ஒன்று இருக்கிறதென்று, சொல்ல முடியாமலும் ஒன்றுமில்லை யென்று சொல்ல முடியாமலும், இருக்கப்பட்ட ஓர் நிலை ஏற்பட்டபின், அந்நிலையில் நானே தான் மிகுந்து நிற்கிறேன். அந்நிலைக்கு ப்ரஹ்மம், ஆத்மா, ஈச்வரன் என்ற இப்பெயர்கள் தகைமை படைத்தவை ஆவதில்லை. பேச முடியாமை என்ற பெயருக்கும் அது இடம் கொடாது. பேச முடியாமை என்றுகூட அதைப் பேசாதிருப்பதே அதை வாய் நிறையப் பேசி விவரமாய்ச் சொன்னதாகும்.

அதை அறிவென்றாவது அறியாமை என்றாவது அறியாதிருக்கையே அதை அறிவதாகும். அந்நிலையில் ஞானமே ஞாநத்தை அறியவேண்டியதாயும் ஆநந்தமே ஆநந்தப்பட வேண்டியதாயும், ஸுகமே ஸுகத்தை அநுபவிக்க வேண்டியதாயும், லாபமே லாபப்பட வேண்டியதாயும் காந்தி காந்தியையே தழுவிக்கொள்ள வேண்டியதாயும் ஆச்சர்யமே ஆச்சர்யத்தின் நடுவில் நிலைகொண்டு, நின்ற நிலையிலேயே முழுகிப் போவதாயும், சமம் என்பது சமத்தையே அடைந்து

போவதாயும், விச்ராமம் விச்ராமம் அடைந்து விடுவதாயும், அநுபவம் அநுபவத்தைப் புசித்து பித்துப் பிடித்துப்போக வேண்டியதாயும், ஏற்படும்.

கர்மயோகம் என்னும் உத்தமமான கொடியை வளர்த்து பாதுகாத்து வந்த அந்த ஸாதகனுக்கு, நானாய்ப்போவது என்ற பழம், இவ்வாறு அக்கொடியினின்று பழுத்து அவனுக்குக் கிடைத்துப் போகிறது. அந்நிலையில் அந்தக் கர்மயோகியான சக்ரவர்த்தியின் கிரீடத்தில் நான் ரத்நமாயும், திருப்பி என்னுடைய கிரீடத்தில் அவன் ரத்நமாயும் அவனும் நானும் விளங்குவோம். கர்மயோகம் என்னும் கோவிலின் உச்சியில் வைக்கப்பட்ட மோக்ஷம் என்ற யாதோர் கலசம் உண்டோ, அதற்கும் மேலே உள்ள விஸ்தாரமான ஆகாசம் எதுவோ, அதுவாய் அவன் ஆய்விடுகிறான். ஸம்ஸாரம் என்னும் நேரான வழியைப் பற்றிக்கொண்டு என்னோடு ஐக்யப்பட்டிருத்தல் என்னும் தன்னூருக்கு அவன் வந்து சேர்கிறான். இது நிற்கட்டும். அவன் கர்மயோகம் என்னும் அருவியில் விழுந்து, பக்தி யென்னும் ஞானகங்கையோடு சேர்ந்து, ஸ்வாநந்தத்தால் நிறைந்த என் ஸ்வருபம் என்னும் ஸமுத்ரத்திற்கு வேகமாய் வந்து சேர்ந்து, அங்கேயே நிலைகொண்டவனாகிறான். கர்மயோகத்துக்கு இவ்வளவு பெருமையிருக்கிறது, ரஹஸ்யங்களை நன்கறிந்த அர்ஜுநா, ஆகையாற்றான் இந்தக் கர்மயோகத்தையே நீ கைப்பற்றி நிற்கவேண்டும் என்று நான் உனக்கு அடிக்கடி சொல்கிறேன்.

மேல்வரும் விஷயத்துக் கவதாரிகை:

நன்றாய் கவனித்துப் பார். தேசகாலங்களையும் சில பதார்த்தங்களையும் ஸம்பாதித்து வைத்துக்கொண்டு ஓர் கர்மத்தைச்செய்து உண்டு பண்ணிவைத்துக் கொள்ள வேண்டியவனாய் நான் இல்லை. நான் எப்போதும் ஸித்தனாய், அனைவர்களுக்கும் அனைத்தாயும், இருந்து கொண்டிருக்கிறேன், ஆகையால் என்னை உண்டு பண்ணிவைக்கும் படியாய் ஒருவரும் யாதோர் விதமான ச்ரமமும் படவேண்டிய அவச்ய மில்லை. எப்போதும் ஸித்தமாயிருக்கும் நான் இந்த உபாயானுஷ்டானத்தால் (கீழ்ச் சொல்லியிருக்கப்பட்ட கர்மயோகத்தால்) அடையப்படுகிறேன். இது உண்மை. என்னை அடைந்து கொள்வதற்கு உபாயம் தெரிந்துகொள்ளவேண்டிய ஒருவன் சிஷ்யனாய் அந்த உபாயத்தை அறிந்திருக்கும் ஒருவனை குருவாய் ஆச்ரயிக்கவேண்டும் என்று ஓர் முறை அநாதிகாலமாய்

இவ்வுலகில் ஏற்பட்டிருக்கிறது. பூமியின் வயிற்றில் தனம் புதைந்துதான் கிடக்கிறது, கட்டையின் கர்ப்பத்தில் நெருப்பும், மாட்டின் மடியிற் பாலும், ஸித்தமாகத்தான் இருக்கின்றன. ஆனால் ஏற்கனவே ஸித்தமாயிருக்கும் அவற்றை வெளிப்படுத்தி ப்ரயோஜநப் படுத்திக்கொள்ளவேண்டும் என்றால், அதற்கு அநுஷ்டிக்க வேண்டும் உபாயம் இன்னதென்று தெரிந்துகொண்டு, அவ்வுபாயத்தை அநுஷ்டித்துத் தீரவேண்டும்.

அப்படியே நானும் ஸித்தனாயிருந்தும் என்னைக் கண்டுகொண்டு அதின்லாபத்தை அடையவேண்டுமானால், உபாயத்தை யநுஷ்டிக்கவேண்டியதாய் இருக்கிறது. பலஸித்தியைச் சொல்லியானபிறகு, உபாயத்தை ஏன் பகவான் ப்ரஸ்தாபிக்கிறார் என்று யாராவது கேட்டும் பக்ஷத்தில், இவ்விஷயத்தில் பகவானுடைய அபிப்ராயம் இதுவே. கீதார்த்தத்தின் பெருமை யெல்லாம், மோக்ஷத்தை அடைவதற்கு உபாயத்தைக் காட்டிக்கொடுப்பதே. இதர சாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கும் உபாயங்கள், ப்ரமாணஸித்தமல்ல. காற்று ஸூர்யனை மறைத்துக் கொண்டிருக்கும் மேகத்தையே விலக்கி வைத்து ஸூர்யப்ரகாசத்தின் லாபம் நமக்குக் கிடைக்கும்படியாய்ச் செய்துவைக்கிறதே தவிர, ஸூர்யனையே உண்டு பண்ணிவைக்கிறது இல்லை. கையால் பாசியை விலக்கிக்கொள்கிறோமே தவிர, ஜலத்தை உண்டாக்கி வைத்துக் கொள்வதில்லை. அப்படியே ஆத்மதர்சன மாகாதபடி குறுக்காய் ஏற்பட்டிருக்கும் அவித்யை அஞ்ஞானம் என்னும் மலத்தை சாஸ்த்ரத்திற் சொல்லியிருக்கும் உபாயாநுஷ்டானம் போக்கிவைத்தபின், அதைக்காட்டிலும் வேறாய், ஸித்தமாய், நிர்மலமாய், இருக்கும் ஆத்மஸ்வரூபம் ப்ரகாசமாய்த் தானாகவே வெளிப்பட்டுத் தோன்றுகின்றது.

ஆகவே சாஸ்த்ரங்கள் அனைத்தும் அவித்யையை நாசம் செய்துவைத்தல் என்ற ஒரேயோக்யதையைப் படைத்தவையாய் இருக்கின்றன. அவைகள் தாமாகவே ஆத்மபோதத்தைச் செய்துவைக்கும் ஸாமர்த்யமற்றவையா யிருக்கின்றன. அப்படிப்பட்ட அத்யாத்ம சாஸ்த்ரங்களை எல்லாம் ஒருவன் அதட்டி, "உங்களுக்கு ப்ராமாண்யதை (உண்மையைத் தெரிவிக்கும் அதிகாரம்) எவ்விதம் ஏற்பட்டது?" என்று விசாரித்தால், அவைகள் எந்த சாஸ்த்ரத்தின் கீழ்ப் புகுந்து கொள்ளவேண்டுமோ, அந்த சாஸ்த்ரம் இந்த கீதையே ஆகும். ஸூர்யனால் அலங்கரிக்கப்பெற்று தேஜஸ்ஸடைந்து விளங்கும்

கிழக்குதிக்கு எல்லாதிக்குகளையும் ப்ரகாசவத்தாய்ச் செய்துவைப்பதுபோலும், சாஸ்த்ரங்களுக்குள் ஈச்வரபதவி படைத்த இந்த கீதையால் இதர சாஸ்த்ரங்கள் அனைத்தும் நாதன் படைத்தவைகள் (ரக்ஷகனுடையவைகள்) ஆகின்றன.

இது நிற்கட்டும். சாஸ்த்ரேச்வரபதவியடைந்த இந்த கீதையில் கீழ்சென்றுபோன அத்யாயங்களில் ஆத்மஸ்வரூபத்தைக் கையால் எட்டிப்பிடித்துக் கொள்ளும்படி செய்துதரும் அநேக உபாயங்கள் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படி யிருப்பதால் அர்ஜுநன் இவற்றை யெல்லாம் ஒரே தரம் கேட்டு உத்தமமான இந்தக் கர்மயோகரூப உபாயத்தையே கைப்பற்றுவானோ அல்லது வேறு உபாயானுஷ்டானத்தில் இறங்கிவிடுவானோ, என்று ப்ரேமையால் ஸ்ரீஹரி கலவரம் அடைந்து, கர்மயோகமே ஸ்ரியான உபாயம் என்று அர்ஜுநன் மனதில் உறுதியா யேற்படவேண்டும் என்பதைக் கருதி. அவ்விஷயத்தையே மறுபடியும் ஓர் தடவை இங்கே எடுத்துச் சுருக்கமாய்ச் சொல்கிறார். அன்றியும் இந்த கீதை சீக்கிரத்தில் முடிந்துபோகிறதைத் தெரிந்துகொண்டு இந்நூலின் துவக்கத்தில் (2வது அத்யாயம் 47வது ச்லோகம் முதலாக 56வது ச்லோகம் ஈறாக) உபதேசிக்கபட்டதான கர்மயோகத்தை இங்கேயும் உபதேசித்துவைத்து, இந்நூலால் ஆகியோடந்தமாக கர்மயோகமே உபதேசிக்கப் படுகிறதென்பதை அவர் காண்பித்துவைக்கிறார்.

இந்த க்ரந்தத்தின் நடுவில் அநேக விதப்பட்ட அதிகாரிகளை உத்தேசத்தில் வைத்துக்கொண்டு அநேகவிதமான ஸித்தாந்தங்கள் நிரூபணம் செய்துவைக்கப்பட்டிருக்கின்றன. இதைக்கொண்டு சிலர் முன்பின் ஸம்பந்தங்களை யோஜித்துப் பார்க்காமல், இந்நூலிற் பலவிதமான ஸித்தாந்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்று எண்ணிக் கொள்வார்களோ என்று நினைத்து முக்யஸித்தாந்தமாக ஒன்றை ஏற்படுத்திவைத்து அதற்கு உபபலமான யுக்திகளாய் மற்ற ஸித்தாந்தங்களைச் சேர்த்து ஸ்ரீஹரி தான் ஆரம்பித்த நூலை முடிவு செய்யப்பார்க்கிறார் என்றும் சொல்லலாம். இந்நூலால் ஏற்படுத்திவைக்கப்படும் முக்ய ஸித்தாந்தம் என்னவென்றால், "அவித்யாநாசம் என்னும் படியில் ஏறி மோக்ஷத்தை பலனாக அடையவேண்டும். இவ்விரண்டும் ஸித்திப்பதற்கு ஸாதனம், ஞானம்" என்ற இதுவே. இதுவே அநேக விதமாய் இந்த விஸ்தாரமான க்ரந்தத்தாற் சொல்லப் பட்டிருக்கிற தென்பதை இரண்டு

வார்த்தையாற் (சுருக்கமாக) சொல்லி முடித்து விடவேண்டும் என்பது பகவானுடைய அபிப்ராயம். ஆகவே உபேயம் (அடைய வேண்டியதான ப்ரஹ்மைக்ய பாவம்) கைக்குக் கிட்டிவிட்டதாகச் சொன்னபின் மேலே மறுபடியும் உபாயானுஷ்டானம் செய்யும் ஓர் நிலையை வர்ணிக்கத் தொடங்கியதின் கருத்து இதுவே ஆகும்.

सर्वकर्माण्यपि सदा कुर्वाणो मद्व्यपाश्रयः ।
मत्प्रसादादवाप्नोति शाश्वतं पदमव्ययम् ।।५६।।

ஸர்வ கர்மாண்யபி ஸதா குர்வாணோ மத்வ்யபாஶ்ரயः ।
மத் ப்ரஸாதாதவாப் நோதி ஶாஶ்வதம் பதமவ்யயம் ॥ 56

கர்மயோகத்தின் ஸ்வரூபத்தையும் பலனையும் சுருக்கிச் சொல்லல்:

அதற்குமேல் பகவான் பின்வருமாறு சொன்னார். ஹே உத்தமபோர்வீரனே, ஒருவன் கர்மயோகத்தில் திடமாய் நிலைகொள்வதால், அவன் நானே ஆய்ப்போய், என் ஸ்வரூபத்தோடு ஐக்யப்பட்டுப் போகிறான். ஸ்வகர்மானுஷ்டானம் என்னும் பரிசுத்தமான புஷ்பத்தைக்கொண்டு என்னை அவன் நன்கு பூஜித்து, என்னை ப்ரஸந்நனாய்ச் (மனக்குளிர்ச்சி அடைந்தவனாய்) செய்துவைத்துக்கொண்டு ஞானநிஷ்டை யென்பதை என்னிடத்திலிருந்து என் ப்ரஸாதமாய்ப் பெற்றுக்கொள்கிறான். அந்த ஞானநிஷ்டை, எவனுக்குக் கிடைத்துவிடுகிறதோ. அவனிடத்தில் என் விஷயமான பக்தி ஏற்பட்டுப் பொங்கத்தலைபட்டு, அப்படிப்பட்ட பக்தியால் அவன் என்னோ டொன்றுபட்டவன் ஆய்விடுகிறான்.

இந்த ஞானநிஷ்டையில் நிலைகொண்டவன் விச்வத்தை புத்திக்குச் தோற்றுவிக்கும் ஆத்மஸ்வரூபியான என்னையே அவனுடைய த்ருச்யஜாதம் அனைத்துமாகச் செய்துகொண்டு, அவன் என்னை எப்போதும் அநுஸரித்துக்கொண்டிருக்கிறவன் ஆய்விடுகிறான். உப்பு தன்னுடைய பிரிவுபட்டநிலையைக் கைவிட்டு ஜலத்தை ஆச்ரயித்துக்கொண்டு கிடந்து ஜலமாகவே ஆய்விடுதல்போலும், வாயுவானது ஆகாசத்தையே அநுஸரித்துக்கொண்டு அதில் சுழன்றுகொண்டிருந்து ஆகாசமாகவே ஆய்விடுதல்போலும், தன்னுடைய மனஸ் வாக் காயம் என்ற த்ரிகரணங்களைக் கொண்டு என்னையே ஸதா அநுஸரித்திருப்பவனாக எவன் ஆய்விடுகிறானோ, அவன் ஒரு

வேளை நிஷித்தகர்மங்களைச் செய்தாலும், ஓர் பெரிய நதியே ஆகட்டும், ஊர்வாரி நீரால் ஏற்பட்ட ஓர் அசுத்தமான கழியே ஆகட்டும், அவை இரண்டும் கங்கையில் விழுந்தபின் கங்கையாகவே ஆய்விடுதல்போலும், அவனுக்கு என்னுடைய ஸ்வரூபஞானம் ஏற்பட்டு அவன் தன்னுடைய சுபாசுபகர்மங்கள் அனைத்தோடும் என்னோடு ஐக்யப்பட்டுப் போகிறான்.

சந்தனக்கட்டை என்றும் ஸாமான்யமான வேறுகட்டை என்றும் வ்யவஹரிக்கப்படும் ஓர் வித்யாஸம் அவை இரண்டிலும் நெருப்பு பற்றிக்கொள்ளாதிருக்கும் வரைக்குமே நிலைகொண்டிருப்பதுபோலும், தாழ்ந்த உலோஹத்தோடு கலந்து கிடக்கும் கட்டைமாற்றுப் பொன் என்றும் பதினாறு மாற்றுள்ள சுத்தமான தங்கம் என்றும் வழங்கப்படும். ஓர் வித்யாஸம், அவற்றிற்கு ஸ்பர்சவேதியின் ஸம்பந்தம் ஏற்படாதவரைக்குமே போலும், சுபம் அசுபம் என்னும் பேச்சு, எங்கும் நிறைந்திருக்கும் நான் ப்ரகாசிக்கத்தலைப்படாதவரைக்குமே, நடைபெறும். ஸூர்யனுடைய ஊர்போய்ச் சேராதவரைக்குந்தானே, ராத்ரிப்பகல் என்ற வ்யவஹாரம் நடைபெறும். ஆகவே என்னுடைய தர்சனம் அவனுக்கு ஏற்பட்ட உடன் அவனுடைய ஸகலகர்மங்களும் நசித்துப்போய், அவன் ஸாயுஜ்யபதவியின் முதுகின் மேல் ஏறிக்கொண்டவன் ஆய்விடுகிறான். தேசகால மாறுபாடுகளாலாவது தானாகவேயாவது நாசமடையாததான என்னுடைய அவிநாசியான பதவியை அவன் அடைந்துவிடுகிறான். அர்ஜுநா இன்னும் வளர்த்துவ தென்? ஆத்மஸ்வரூபியான என்னுடைய ப்ரஸாதம் ஒருவனுக்குக் கிடைத்துப்போனபின் அவன் அடையக்கூடாத லாபம் என்ன இருக்கிறது?

चेतसा सर्वकर्माणि मयि संन्यस्य मत्परः ।
बुद्धियोगमुपाश्रित्य मच्चित्तः सततं भव ॥५७॥

சேதஸா ஸர்வகர்மாணி மயி ஸந்ந்யஸ்ய மத்பர: ।
புத்தி யோக முபாஶ்ரித்ய மச்சித்த: ஸததம் பவ ॥ 57

கர்மயோகத்தின் முறையும், பரிணாமமும்:

ஆகவே நீ செய்ய வேண்டியவையாய் ஏற்பட்ட ஸர்வகர்மங்களையும் என்னிடத்தில் ஸமர்ப்பணம் செய்துவிடுதல், (4வது அத்யாயம் 24வது ச்லோகத்தில் சொல்லப்பட்ட ப்ரஹ்மார்ப்பணம் இங்கு குறிப்பிடப்படுகிறது)

என்ற கர்மஸந்யாஸத்தை அநுஷ்டித்துவா. ஆனால், கர்மஸந்யாஸம் அனுஷ்டிக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு, அவச்யம் செய்து தீரவேண்டியவையான நித்யநைமித்திக கர்மங்களைச் செய்யாமலே விட்டுவிடக்கூடாது. அவற்றை அவ்விதமாய்ச் செய்துவருவதடன் ஆத்மஸ்வரூப விசாரம் செய்வதில் உன்னுடைய சித்தவ்ருத்தி குடிகொள்ளவேண்டும். அப்படிச்செய்யும் விசாரத்தால் உன்னுடைய ஸ்வரூபம் கர்மத்தைக் காட்டிலும் முழுமையும் வேறுபட்டு நிர்மலமான என்னுடைய ஸ்வரூபத்தில் இருப்பதாய் நீ பார்ப்பாய். அன்றியும் கர்மம் விளைவதற்கு பூமியான ப்ரக்ருதியானது உன் ஸ்வரூபத்தை விட்டு வெகுதூரத்தில் விலகிநிற்பதாய் நீ அறிவாய். அதற்குப்பின் ரூபத்தைவிட்டுத் தனியாக நிழலிராததுபோலும் ப்ரக்ருதி என்பது உன்னைவிட்டு தனித்ததாக இல்லை, என்பதையும் அறிந்துகொள்வாய்.

இப்படி ப்ரக்ருதிக்கு நாசம் ஏற்பட்டபின், கர்மம், அதின் ஸ்வரூபத்தோடு தானாகவே அற்றுப்போய் கர்மஸந்யாஸம் ஏற்பட்டுவிடுகிறது. இவ்விதம் கர்மம் அற்றுப்போனபின் ஆத்மஸ்வரூபமாகிய நானே தனித்து மிகுந்து நிற்பேன். அந்த ஆத்மஸ்வரூ பத்தையே, பதிவ்ரதை தன் கணவனையே ஆச்ரயித்திருப்பதுபோலும், ஆச்ரயித்து நிற்கும்படியாய் உன்னுடைய புத்தியை நீ செய்துவைக்கவேண்டும். இப்படி புத்தி வேறொன்றின் ஸம்பந்தமும் அற்றதாய் எப்போது ஆத்மஸ்வரூபத்திலேயே நிலைகொள்ளுமோ, அப்போது சித்தம் விஷயங்களைச் சிந்தித்தல் என்பதை விட்டு, என்னையே பஜித்துக்கொண்டிருப்பதாய் ஏற்பட்டுவிடும். இப்படி விஷயசிந்தனத்தை ஒழித்துக்கொண்டு, சித்தம் என்னுடைய ஸ்வரூத்தில் ஒட்டிக்கொண்டு நிலை பெறும்படி சீக்கிரத்திற் செய்துகொள்.

मच्चित्तः सर्वदुर्गाणि मत्प्रसादात्तरिष्यसि ।
अथ चेत्त्वमहंकारान्न श्रोष्यसि विनङ्क्ष्यसि ।।५८।।

மச்சித்த: ஸர்வ துர்காணி மத் ப்ரஸாதாத் தரிஷ்யஸி ।
அத சேத்த்வ மஹங்காரான் ந ஶ்ரோஷ்யஸி விநங்க்ஷ்யஸி ॥ 58

இந்த பக்தியால் என்னுடைய ப்ரஸாதம் ஏற்பட்டு, அதினால் ஸம்ஸாரதுக்கம் தாண்டப்பட்ட தாய்விடும்:

பின்பு என்னைவிட்டு வேறுபடாதிருந்து, இப்படி என்னை ஸேவித்துக்கொண்டிருப்பதால் எப்போது சித்தம் முழுமையும் என்னுடைய ஸ்வரூபத்தால் வ்யாபிக்கப்பட்டு

நிறைந்துபோகுமோ, அப்போது அந்த பக்தனுக்கு என்னுடைய ப்ரஸாதம் ஸம்பூர்ணமாய் ஏற்பட்டு விடுகிறது. அப்படியானபின், ஜீவர்கள் அநுபவிக்கும் ஸகல துக்கங்களுக்கும் வாஸஸ்தானமாயும், கடந்து தப்பித்துக்கொண்டு போவதற்கு அஸாத்யமாயும், ஜந்மமரணரூபமாயும், இருக்கும் ஸம்ஸாரத்தை, நீ அதிஸுலபமாய்த் தாண்டிவிடுவாய். ஒருவன் கண்பார்வைக்கு ஸூர்யப்ரகாசத்தின் ஸஹாயம் ஏற்பட்டுவிட்டால், பின்பு இருட்டின் உபத்ரவம் அவனுக்கு ஏற்படுமா? என்னுடைய ப்ரஸாதம் ஒருவன் விஷயத்தில் ஏற்பட்டு, அதினால் அவனுடைய ஜீவபாவம் நஷ்டமாய்ப்போனபின், அவனுக்கு ஸம்ஸாரம் என்னும் பூச்சாண்டியால் என்ன கஷ்டம் ஏற்படும்? ஆகவே, ஹே தநஞ்ஜயா, நான் உபதேசித்துக்கொடுத்த கர்மயோகத்தால், உனக்கு என் விஷயமான பக்தியோகமும், அதின் கார்யமாக என்னுடைய ப்ரஸாதமும், ஏற்பட்டுப் போனபின், நீ ஸுலபமாய் ஸம்ஸாரம் என்னும் துர்கதியைத் தாண்டிவிடுவாய்.

ஸ்வதர்மாநுஷ்டானம் செய்யவேண்டும் என்ற பகவதுபதே சத்தை உபேக்ஷிப்பதால் ஏற்படும் அநர்த்தம்:

அப்படிச் செய்யாமல் கேவல அஹங்காரத்தைப் பாராட்டிச்கொண்டு என்னுடைய வார்த்தைகள் உன்னுடைய மனஸுகாதுகளின் எல்லையைக்கூட மிதிக்கக்கூடாது என்று விலக்கிவைப்பாயே யாகில், (2வது அத்யாயத்தில் 9வது ச்லோகத்தில் அர்ஜுனன் நயோத்ஸ்யே என்று சொன்ன வார்த்தையை பகவான் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு சொல்கிறார்) ஸ்வரூபத்தால், நீ நித்யமுக்தனாய் அவ்யயனாய் இருப்ப தனைத்தும், வீணாய்ப்போய், தேஹஸம்பந்தத்தின் துக்கம் உன்மேல் தாக்கி, அந்த தேஹஸம்பந்தத்தில் நீ சிக்கிப்போய், ஒவ்வொரு அடிவைப்பிலும், மஹத்தான துக்கத்தை ஓர் நிமிஷம்கூட ஓய்வில்லாமல் அநுபவிக்கவேண்டியதாய் உனக்கு ஏற்பட்டுவிடும். என்னுடைய வார்த்தையை உபேக்ஷிப்பதால் இவ்வளவு பயங்கரமான அநர்த்தம் ஏற்பட்டு, செத்துப்போகாமலே ஒவ்வொரு நிமிஷமும் செத்துக் கொண்டிருப்பாய்.

यदहंकारमाश्रित्य न योत्स्य इति मन्यसे ।
मिथ्यैष व्यवसायस्ते प्रकृतिस्त्वां नियोक्ष्यति ।।५९।।

यदहङ्कार माश्रित्य न योत्स्य इति मन्यसे ।
मित्थैष व्यवसायस्ते प्रकृति स्त्वां नियोक्ष्यति ॥ 59

அர்ஜுநன் அஹம்காரம் பாராட்டிக்கொண்டு செய்த சபதமும் நிறைவேறாது என்று பகவானுரைத்தல்:

பத்யத்தின்மேல் பகை பாராட்டுவதால் ஜ்வரத்தை வ்ருத்தி செய்துக்கொள்வது போலும், தீபத்தின்மேல் பகைபாராட்டுவதால் இருட்டை வலுக்கச் செய்து கொள்வது போலும், விவேகத்தின்மேல் பகைபாராட்டி அஹம்காரத்தை வலுக்கச்செய்துகொண்டு. உன்னுடைய தேஹத்துக்கு அர்ஜுநன் என்று பெயரிட்டு ((நீ அபிமானித்த தேஹத்தை உன்னுடைய ஆத்மஸ்வரூபம் என்றெண்ணி) மற்றவர்கள் அபிமானித்த தேஹங்களுக்கு ஸ்வஜநம் என்று பெயரிட்டு, உன்னுடைய ஸ்வதர்மமான யுத்தத்துக்கு மிகவும் கொடுமையான பாபம் என்று பெயரிட்டு இப்படி உன் புத்திக்குத் தோன்றியபடியே, இம்மூன்று வஸ்துக்களுக்கும் (சாஸ்திரத்தின் கொள்கைக்குக் கட்டுப்படாமல்) இம்மூன்று பெயர்களிட்டு, ஹே தனஞ்ஜயா, போர்செய்யேன் என்று உன்னுடைய அந்தராத்மாவில் மிகவும் உறுதியாய் நிச்சயித்து வைத்தாயே, அதை உன்னுடைய ப்ரக்ருதியின் இயற்கை நிறைவேறாமற் செய்து, வ்யர்த்த மடித்துவிடப் போகிறது. நான், அர்ஜுநன், இவர்கள், என்னைச் சேர்ந்தவர்கள், இவர்களைக் கொல்வது என்ற இந்த தொழில். மஹாபாதகம், என்று நினைப்பது கேவல அஜ்ஞானமா யிராமல், அது தத்வஜ்ஞான மாகுமா? முதலில் நீ போர் செய்வதற்காக சஸ்த்ரம் ஏந்திக்கொண்டு யுத்தகளத்திற்கு வந்து நின்று, நான் யுத்தம் செய்யமாட்டேன் என்று இப்போது ப்ரதிஜ்ஞை செய்வது எவ்விதம் பயன்படும்? இந்தப்பேச்சு நிறைவேறும் என்று லௌகிகபுத்தி படைத்த லோகத்தாரே நம்பமாட்டார்கள். நீ போர் செய்வதில்லை என்று மனஸில் உறுதியாய்ச் செய்து வைத்திருக்கும் நிச்சயத்தை உன்னுடைய ப்ரக்ருதி மாற்றிவிடவே போகிறது.

स्वभावजेन कौन्तेय निबद्धः स्वेन कर्मणा ।
कर्तुं नेच्छसि यन्मोहात्करिष्यस्यवशोपि तत् ॥ ६० ॥

ஸ்வபாவஜேந கௌந்தேய நிபத்தः ஸ்வேந கர்மணா ।
கர்தும் நேச்சஸி யன்மோஹாத் கரிஷ்யஸ்யவஶோபி தத் ॥ 60

ஸ்வபாவத்துக்கு வசப்பட்டவனாய் அர்ஜுனன் யுத்தமே செய்யப் போகிறான் என்று பகவான் உரைத்தல்:

நதியின் ஜலம் கிழக்கு நோக்கிப் போகும்போது அதில் இறங்கினவன் நான் நீந்தி மேற்காகப்போவேன், என்று ஆக்ரஹம் பாராட்டிக்கொண்டால், அவன் ஆக்ரஹப்பட்ட தோன்றே மிகுந்துநிற்கும், என்பதை நீ மனஸில் ஆலோசித்துப்பார். நெல்லின் ஓர் வித்து நான் நெற்பயிராய் முளைக்கமாட்டேன் என்று வீம்புபிடித்தால் அது தன் ஸ்வபாவத்தை மாற்றிக்கொண்டு, தன் வீம்பை நிறைவேற்றிக்கொள்ள முடியுமா? ஹே புத்திசாலியே க்ஷத்ரியஸம்ஸ்காரமே படைத்த ப்ரக்ருதியால் நீ உண்டுபண்ணி வைக்கப்பட்டிருக்கிறாய். அப்படிப்பட்ட நீ இந்தப் போரைச் செய்யத்தொடங்கேன் என்று சொல்கிறாய். ஆனால் உன்னுடைய ப்ரக்ருதி உன்னை இப்போரைச் செய்யும்படியே செய்துவைக்கப்போகிறது.

ஹே பாண்டுவின் குமாரனே, உன்னுடைய ப்ரக்ருதியானது (எதிரியை வருத்தி தலைசாயச் செய்யும் சக்தி) நீ பிறக்கும் போதே உன்னிடத்தில் சௌர்யம், (யுத்தத்திற்பின் வாங்காமை) தேஜஸ், தக்ஷதை (பிடித்த கார்யத்தை நிறைவேறச் செய்யும் திறமை) முதலிய குணங்களை அமைத்து வைத்திருக்கிறது. அவற்றின் சேர்க்கைக்குத் தக்கபடி நீ யுத்தம் செய்வாயே தவிர, ஒன்றும் செய்மால் கையைக்கட்டிக் கொண்டிருக்க உன்னால் இயலாது. ஆகவே, ஹே கோதண்டபாணி, இந்த குணங்களாற் கட்டுப்பட்டிருக்கும் நீ, க்ஷத்ரியர்கள் ஸ்வாபாவிக தொழிலாகிய யுத்தத்திலேயே இறங்கப்போகிறாய், என்பதில் யாதோர் ஸந்தேஹமும் இல்லை. இப்படியிருக்க, உன்னுடைய பிறப்பின் மூலத்தை நீ விசாரிக்காமலே, யுத்தம் செய்யமாட்டேன் என்று நீ வெறுமையான வீம்பைப்பற்றி நின்றால், கையும் காலும் கட்டப்பட்டு ரதத்தில் ஏற்றிவைக்கப்பட்டவன், அவன் தன் புத்திபூர்வகமாய்த் திரியாமற்போனாலும், ரதத்தில் ஏற்றப்பட்டிருப்பதால் திக்கு விதிக்காய் அலைந்து திரிவதுபோலும், நீயாய் ஒன்றும் செய்கிறதில்லை யென்று திடமான வீம்பு நீ பாராட்டிக்கொண்டிருந்தாலும், ஓர் ஸந்தேஹமும் இன்றி நீயே யுத்தம் செய்யப் போகிறாய்.

விராட்தேசத்து ராஜாவின் புத்ரனாகிய உத்தரன் யுத்தத்தினின்று ஓடும்போது நீ யேன் போர் செய்யத் துவக்கினாய்? அப்போது உன்னைப் போர் செய்யும்படி

தூண்டிவைத்த க்ஷத்ரிய ஸ்வபாவம் இப்போதும் உன்னைப் போர்செய்யும்படி செய்துவைக்கப் போகிறது. மஹாவீரர்களால் நடத்தப்பட்டதான பதினோர் அக்ஷௌஹிணீ ஸேனையை, போர்க்களத்தில் நீ ஒன்டியாக எதிர்த்து அவர்கள் அனைவர்களுடைய வஸ்த்ரங்களையும் உரிந்துகொண்டு, அவர்களை நக்நம்செய்து வைத்தாய். அப்படி உன்னைச் செய்துவைத்த உன்னுடைய ஸ்வபாவமே, ஹே கோதண்டத்தை ஏந்தினவனே, இப்போதும் உன்னை யுத்தம் செய்யும்படி செய்துவைக்கும். நன்றாய்ப்பார்! ஓர் நோயாளி தனக்கு நோய் வேண்டுமென்று அதை ப்ரியத்துடன் வாங்கிக்கொள்கிறானா? அல்லது தாரித்ரியத்தின்மேல் ஆசைப்பட்டு தரித்ரன் தாரித்ரியத்தை ஸ்வீகரித்துக்கொள்கிறானா? இவ்விருவர்களும் தங்கள் பூர்வகர்மத்தின் ஸூக்ஷ்மரூபமான அத்ருஷ்டத்திற்கு வசப்பட்டுப்போய், இந்த துக்கங்களை அவர்கள் ஒதுக்கிவைக்கமுடியாமல் புசித்தே தீரவேண்டியிருக்கிறது. அந்த அத்ருஷ்டத்தையும் வேறுவிதமாய்ச் செய்யாதபடி நியமித்துக்கொண்டிருக்கும் ஈச்வரனே உன்னுடைய ஹ்ருதயத்திற் குடிகொண்டிருக்கிறான்.

ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति ।
भ्रामयन्सर्वभूतानि यन्त्रारूढानि मायया ।।६१।।

ஈச்வரः ஸர்வபூதானாம் ஹ்ருத்தேஶேऽர்ஜுன திஷ்டதி ।
ப்ராமயன் ஸர்வபூதானி யந்த்ரா ரூடானி மாயயா ॥ 61

ஈச்வரன் ஸகல பூதங்களையும் அவ்வவற்றின் ப்ராரப்தகர்மாநு ஸாரமாய் ஆட்டிவைக்கிறான்:

எல்லா பூதங்களுடைய உட்புறத்தில் இருக்கும் ஹ்ருதயம் என்னும் மஹாகாசத்தில் ஞானவ்ருத்திகள் என்னும் ஆயிரக்கணக்கான கிரணங்களோடு கூடிய ஈச்வரன் என்ற ஸூர்யன் உதயமாய், ஜாக்ரத்ஸ்வப்நஸுஷுப்தியாகிய மூன்றவஸ்தைகள் என்ற மூன்றுலோகங்களையும் ப்ரகாசம் செய்துவைத்து, விபரீதஞானத்தோடு கூடிய ஜீவன் என்ற வழி நடக்கிறவனை எழுப்பிவைக்கிறான். பின்பு அவன் வேத்ய ஜாதங்களே (த்ருச்யங்களே) நீராய் அமைந்துள்ள ஜகத் என்னும் கடாகத்தில் விஷயங்கள் என்னும் தாமரைப்பூக்கள் விகஸிக்கச் செய்து, அவற்றின்மேல் ஆறு இந்த்ரியங்களையும் (மனது என்ற ஒன்றோடு கூடிய ஐந்து ஞானேந்த்ரியங்களையும்) ஆறுகால்களாய்ப் படைத்த ஜீவன் என்ற தேனீயை மேயச்செய்கிறான். இந்த உருவக அலங்காரம்

இவ்வளவுடன்போதும். அந்த ஈச்வரன் ஸகலபூதங்களின் உட்புறத்தில் இருந்துகொண்டு அவற்றின் அஹம்காரத்தை வஸ்த்ரமாய் உடுத்திக்கொண்டு நான் நான் என்னும் ஸ்புரணத்தை ஸதா உண்டாக்கிக் கொண்டே இருக்கிறான். தன்னுடைய மாயை என்னும் திரைச்சீலையை தனக்குமுன் தொங்கவிட்டுக்கொண்டு அதற்குள் ஒண்டியாய் உட்கார்ந்துகொண்டு தன் கையில் இருக்கும் கயிற்றை ஆட்டி வெளியிற் றோன்றும். அவனுடைய நிழல்கள்போன்ற எண்பத்திநான்குலக்ஷ வகைப்பட்ட ஜீவர்களாகிய பொம்மைகளை ஆட்டிவைக்கிறான்.

ப்ரஹ்மா முதலாய் புழுக்கள் ஈறா யுள்ள அந்த பூதங்களுக்குமுன் அவ்வவற்றிற்குத் தகுந்தவையான சரீரங்களைக் காட்டிவைக்கிறான். அப்போது எந்த தேஹமானது எந்த பூதத்துக்குத் தகுந்ததாய்க் காட்டிவைக்கப்படுகிறதோ, அந்த பூதம் அந்த தேஹத்தையே தன் ஸ்வரூபமாக பாவித்துக்கொண்டு அதன்மேல் ஏறிக்கொள்கிறது. நூல் நூலிலேயே சிக்கிப்போவதுபோலும், புல்லை புல்லாலேயே கட்டிவைத்தல் போலும், அல்லது ஓர் சிறுவன் கண்ணாடியிற்றோன்றும் தன் ப்ரதிபிம்பத்தைப் பற்றிக்கொள்ளப் போவதுபோலும், பூதங்கள் என்ற தோற்றங்கள் தங்களைக் காட்டிலும் வேறான தேஹங்கள் என்ற தோற்றங்களைப் பற்றிக்கொண்டு, அந்த தேஹங்களே தங்கள் ஆத்மஸ்வரூபம் என்னும் புத்தியைப் பாராட்டிக் கொள்கின்றன. இப்படி அந்த ஈச்வரன் சரீரரங்கள் என்ற யந்த்ரங்களின்மேல் பூதங்களை ஏற்றிவைத்து, பூர்வகர்மங்கள் என்னும் கயிற்றைப்பிடித்து ஆட்டுகிறான். அப்போது எந்த பூதத்தின் எந்த ப்ராரப்தகர்மம் என்ற கயிறு ஆடத்தொடங்குகிறதோ, அதின் ஆட்டத்துக்குத் தகுந்தபடி அந்த பூதம் வேறு வேறு கதிகளை அடைகிறது.

அப்போது காற்றானது ஓர் துரும்பை ஆகாசம் எங்கும் அலைந்து திரியும்படி செய்துவைப்பதுபோலும், அந்தக்கயிற்றின் ஆட்டம் அந்த பூதத்தை ஸ்வர்க்க ஸம்ஸாரங்களின் ப்ரதேச மெங்கும் அலைந்து திரியும்படி செய்துவைக்கிறது. காந்தத்தின் ஸாமீப்யத்தால் எப்படி இரும்பு இழுக்கப்படுகிறதோ. அப்படியே ஈச்வரன் சக்தியால் பூதங்கள் ஆட்டிவைக்கப்படுகின்றன. ஒரே சந்த்ரன் உதித்தபின் ஸமுத்ரம் முதலிய பலவஸ்துக்களும் தங்கள் தங்கள் குணாநுஸாரமாகச் சேஷ்டிக்கின்றன. அந்த சந்த்ரனைக்கண்டமாத்ரத்தில், ஸமுத்ரம் பொங்கி

ப்ரவஹிக்கிறது, சந்த்ரகாந்தக்கல்லினின்று, நீர் பெருகத்தலைப்படுகிறது; குமுதங்களும் சகோரங்களும், தங்கள் ஸங்கோசத்தைவிட்டு வாயைத் திறந்து காட்டுகின்றன. அப்படியே தங்கள் உத்பத்திக்குக் காரணமான பூர்வகர்மங்கள் என்ற விதைகளுக்குத் தகுந்தபடி ப்ரக்ருதி படைத்தவைகளாய், அந்த ப்ரக்ருதிக்கு வசப்பட்டு இருக்கும் பற்பலவான பூதங்களும் ஓர் ஈச்வரனால் பற்பலவிதமாய்ச் சேஷ்டிக்கும்படி செய்யப்படுகின்றன. அந்த ஈச்வரன் உன்னுடைய ஹ்ருதயத்தில் இருக்கிறான். அர்ஜுநன் என்ற பாவத்தைத் தன்னுடன் சேர்த்துக் கொள்ளாமல் கேவலம் நான் என்று மாத்ரமே, ஓர் ஞானஸ்புரணம் உன் சித்தத்தில் உண்டாகிறதே, அதுவே ஈச்வரனுடைய ஸ்வரூபம். அப்படிப்பட்ட ஈச்வரன் உன்னுடைய இயற்கையை வேலைசெய்யும்படித் தூண்டிவைப்பான், பின்பு, நீயாய்ப் போர் செய்வதில்லை என்று இருந்த போதிலும், அந்த இயற்கை உன்னைப் போர்செய்யும்படி நிச்சயமாய்ச் செய்துவைக்கும். ஆகவே ஈச்வரனே ஸர்வஸ்வாமி. அவன் ப்ரக்ருதியை நியமிக்கட்டும், அவன் இந்த்ரியங்களை வேலைசெய்யும் படியாய் ஸுகமாய்ச் செய்துகொள்ளட்டும். நீமாத்ரம் செய்கையையும் செய்யாமையையும் ப்ரக்ருதியின் கழுத்திற் கட்டிவிடு.

तमेव शरणं गच्छ सर्वभावेन भारत ।
तत्प्रसादात्परां शान्तिं स्थानं प्राप्स्यसि शाश्वतम् ॥ ६२ ॥

தமேவ ஶரணம் கச்ச ஸர்வ பாவேன பாரத ।
தத்ப்ரஸாதாத்பராம்ஶாந்திம்ஸ்தானம்ப்ராப்ஸ்யஸிஶாஶ்வதம்॥62

ஈச்வரசரணாகதியால் அடையும் லாபம்:

அந்த ப்ரக்ருதியும் எவனுக்கு வசப்பட்டதாயிருக்கிறதோ, அந்த ஈச்வரனுக்கு உன் அஹம்காரம், வாக், சித்தம், தேஹம், இவை அனைத்தையும் ஒப்பித்துவிட்டு அவனையே, கங்கையானது ஸமுத்ரத்தினிடத்தில் சரணம் புகுவதுபோலும், சரணமாய் அடைந்துவிடு. பின்பு அவனுடைய ப்ரஸாதத்தால், ஸர்வ வ்யவஹாரமும் ஓய்ந்துபோயிருப்பதான பரிபூர்ண சாந்தி என்னும் பெண்ணுக்கு நீ கணவனாய்ப்போய், ஸ்வாநந்தமயமான உன்னுடைய ஆத்மஸ்வரூபத்திலேயே நிலைபெற்றவனாய், நீ ரமித்துக்கொண்டிருப்பாய், பின்பு உண்டாவ தென்பது எதினின்று உண்டாயிற்றோ, விச்ராந்தி (இளைப்பாறுதல்) என்பது எங்கே விச்ரமித்துக்கொள்ளுமோ, (இளைப்பாற்றிக் கொள்ளுமோ) எதின் அநுபவத்தை அநுபவம்

என்பதே அநுபவிக்குமோ அந்த உன்னாத்ம பதவிக்கு நீ ராஜாவாய்ப்போய் சாச்வதமான ஓர் நிலையைப் பெறுவாய், ஹே பார்த்தா, என்று லக்ஷ்மீபதியான ஸ்ரீக்ருஷ்ணன் சொன்னார்.

इति ते ज्ञानमाख्यातं गुह्याद्गुह्यतरं मया ।
विमृश्यैतदशेषेण यथेच्छसि तथा कुरु ।। ६३ ।।

இதிதே க்ஞான மாக்யாதம் குஹ்யாத் குஹ்ய தரம் மயா।
விம்ருச்யைதத ஸேஷேண யதேச்சஸி ததா குரு ॥ 63

கீழே சொல்லப்பட்டு முடிவு பெற்ற சாஸ்த்ரத்தின் பெருமை:

இதுதான் கீதையென்று பெயர்பெற்று, வேதமனைத்தையும் கடைந்து திரட்டி எடுத்த அதின் ஸாரமாய் விளங்குகிறது. வேதாந்தத்தில் யாதொன்றுக்கே ஞானம் என்ற பெயர் ப்ரஸித்தமாய் ஏற்பட்டிருக்குமோ, யாதொன்றை மிக்க வர்ணித்துக்கொண்டாடினதால் சாஸ்த்ரங்களுக்கு உலகில் பெருத்த கீர்த்தி ஏற்பட்டதோ யாதொன்று தலை மறைவா யிருக்கும்போது மாத்ரமே, புத்தி முதலியவை பார்வை பெற்றவை யென்று கொண்டாடபடுமோ, யாதொன்று உதயமானபின் ஸர்வத்தையும் பார்த்தறிகிற த்ரஷ்டாவான நானே த்ருச்யமாய்ப் போய், கண் முன் தோன்றி நிற்பேனோ, அந்த ஆத்ம ஸ்வரூபஞானம் இதுவே ஆகும். இது ஸகலத்தையும் காட்டிலும் மிக்க அருமையான தென்று நினைத்து அதை நான் ஒளித்துவைத்துக் கொண்டிருந்தேன், ஆனால் உன்னை நான் எப்படி அந்யனாய் பாவிக்கமுடியும்?

ஆகையால் நான் க்ருபையால் ஆக்ரமிக்கப்பட்டவனாய், நான் ஒருவனுக்கும் வெளிப்படுத்தாது ஒளித்துவைத்திருந்த இந்த என் தனத்தை உனக்குக் கொடுத்தவிட்டேன். தாயானவள் தன் குழந்தை விஷயத்தில் தனக்கு ஏற்பட்டிருக்கும் ப்ரேமையால், தான் என்ன செய்யத்தகுந்தது என்பதை மறந்துபோய், அந்தக் குழந்தையைப் பார்த்து என்னென்னமோ வார்த்தைகள் சொல்வது போலும், எனக்கு உன்மேல் ஏற்பட்டிருக்கும் ப்ரேமையால், நான் எதுதான் செய்யமாட்டேன்? ஆகாசத்தைக் கூட வடிகட்டி வைத்தாற்போலும், அம்ருதத்திற்குக்கூட அஸாரமான ஓர் தோல் இருக்கிறதென்று, அதை உரித்துவைத்தாற்போலும், திவ்யமான ஓர் வஸ்துவைக்கொண்டு அதைக் காட்டிலும்

திவ்யமான ஓர் வஸ்துவைச் செய்துவைக்கும்படி செய்தாற்போலும், பாதாளத்தில் இருக்கும் பரமாணுவைக்கூட ப்ரகாசம் செய்துவைக்கும் ஸூர்யனுடைய கண்ணுக்கு ஜாஸ்திப்ரகாசம் உண்டாகும்படி அதற்கு மையிட்டு வைத்தாற்போலும், ஸர்வஜ்ஞனாகிய நான்கூட எல்லா விஷயங்களையும் ஆலோசித்துப்பார்த்து, எது உத்தமம் என்று எனக்குத் தோன்றினதோ அதை உனக்குச்சொல்லிக் கொடுத்தேன். இனி அதை நீ ஆலோசித்துப்பார்த்து, எது உனக்கு நல்லது என்று தோன்றுமோ அதைச்செய்.

மேல்வரும் விஷயத்துக்கவதாரிகை:

இப்படி தான் சொன்னதைக்கேட்டு, அர்ஜுநன் ஒன்றும் பேசாதிருந்ததை பகவான் பார்த்து, அர்ஜுநன் இந்த ஞானப்ரஸங்கத்தைக்கேட்டு இன்னும் த்ருப்தனாகாமல், மேலும் கேட்க ஆசைப்படுகிறான், என்று தெரிந்து கொண்டு, ஸ்ரீக்ருஷ்ணன் பின்வருமாறு சொன்னார். நீ வஞ்சிக்கிறவன் அல்ல. பசித்திருக்கிறவனுக்கு உணவைப்பரிமாறும்போது, அவன் ஸங்கோசப்பட்டுக்கொண்டு பசி தீராமல் இருக்கும்போதே, "பரிமாறினது போதும் நான் த்ருப்தனாய்விட்டேன்," என்று சொன்னால், அவன் தனக்குத் தீங்குசெய்து கொள்வதுமல்லாமல், பரிமாறுகிறவனையும் வஞ்சித்த பாபத்துக்கு ஆளாகிறான். அதுபோலும், ஸர்வஜ்ஞனான குரு ஒருவன் கிடைத்திருக்கும் போது, அவன் சிஷ்யன் ஸங்கோசப்பட்டு ஆத்மஸ்வரூப விஷயமான ஞானத்தைக் கேட்டறிந்து கொள்ளாமற்போனால், ஹே தனஞ்ஜயா, அவன் தான் அடையக்கூடிய உத்தமமான லாபத்தை அடையாமல் நஷ்டப்பட்டுப் போவதுடன், குருவினிடத்தில் வஞ்சனைசெய்த பாபத்தையும் தனக்குத் தேடிக்கொள்கிறான். நீயப்படிச்செய்யாமல், பேசாதிருப்பதைக் கண்டு, நான் சொன்னதனைத்திலும் ஸாரமான ஞானத்தை மற்றுமோர் தடவை நான் எடுத்துச் சொல்லவேண்டும் என்று, நீ ஆசைப்படுகிறாய் என்று நான் தெரிந்து கொண்டேன். இதைக்கேட்டு, "ஹே ப்ரபுவே என் மனஸை நன்றாய் அறிந்தீர். இப்படிச்சொல்வதுகூட அநாவச்யம். உம்மைக்காட்டிலும் தெரிந்தவன், எவன் இருக்கிறான்? அனைத்தையும் அறிந்தவனான ஞாதா நீர் ஒருவரே, ஸூர்யனைப்பார்த்து, நீ ஸூர்யன் என்று சொல்ல வேண்டுமா?" என்று அர்ஜுநன் சொன்னான். அப்போது ஸ்ரீக்ருஷ்ணன் "இப்படி என்னை நீ வர்ணித்தாயே, அது அல்பம் என்று நினைத்துவிட்டாயோ என்ன?" என்று சொன்னார்.

सर्वगुह्यतमं भूयः शृणु मे परमं वचः ।
इष्टोऽसि मे दृढमिति ततो वक्ष्यामि ते हितम् ।। ६४ ।।

ஸர்வகுஹ்ய தமம் பூய: ஶ்ருணு மே பரமம் வச: ।
இஷ்டோ(அ)ஸி மே த்ருடமிதி ததோ வக்ஷ்யாமி தே ஹிதம் ॥ 64

பகவான் குஹ்யதமமான (அதிரஹஸ்யமான) ஞானோபதேசம் செய்யப்புகுவது:

ஆகவே உன் கவனத்தை விஸ்தாரப்படுத்திக்கொண்டு, மறுபடியும் நான் சொல்லப்போகிற பரமசுத்தமான சொற்களைக் கேள். இது வாக்கால் பேசத்தக்க வார்த்தையாயும் காதாற் கேட்கத்தக்க விஷயமாயும் இல்லை. ஆனால் நீ உத்தமமானபாக்யம் படைத்தவனாய் இருக்கிறாய். ஆமையின் குஞ்சுகளின் வயிறு ஆமையின் பார்வையினாலேயே நிறைந்துபோகிறது. சாதகபக்ஷியின் தாஹத்தைத் தீர்க்க ஆகாசமே தன் வீட்டு நீரைக்கொண்டுவந்து கொடுக்கிறது. ஒன்று கிடைப்பதற்கு அவச்யம் அநுஷ்டித்துத் தீரவேண்டிய ஸாதனம் அநுஷ்டிக்கப்படாமலே சிலவேளை பலரூபமான அது கிடைத்துப்போவ துண்டு. தைவம் (அத்ருஷ்டம்) அநுகூலமாய் இருந்தால் எதுதான் கிடைத்துப்போகாது? நான் உனக்குச் சொல்லிவைக்கப்போகிற ரஹஸ்யம் ஸாமான்யமான தல்ல. இதைத் தெரிந்துகொண்ட மாத்ரத்திலேயே த்வைதபாவத்தின் அநுபவம் முற்றிலுமற்றுப்போய், ப்ரஹ்மைக்யபாவம் என்னும் வீட்டின் நடுவில் நீ நிலைகொண்டவனாய் ப்ரஹ்மாநுபவத்தின் ஸுகத்தைப் புசிக்கப் பெறுவாய்.

வெளிப்படையான உபசாரங்களை வேண்டாதிருக்கும் ப்ரேமைக்குப் பாத்திரமாயிருக்கும் .ஆத்மாவாகவே நீ யெனக்கிருக்கிறாய், ஹே ப்ரியோத்தமா. கண்ணாடியை மேலும் மேலும் துடைத்துச் சுத்தம் செய்துவைத்தல் அக்கண்ணாடியின் நன்மையை உத்தேசித்ததாய் இராமல், நம்முடைய நன்மையையே உத்தேசித்ததாய் இருப்பது போலும், உன்னை நிமித்தமாக வைத்துக்கொண்டு நான் பேசுவதெல்லாம், என்னுடைய லாபத்துக்கே ஏற்படுகிறது. நம்மிருவர்நடுவில் நான் நீயென்ற வித்யாஸம் உண்டோ, ஹே அர்ஜுநா? என்னுடைய உயிர் நிலையில் மறைத்து வைத்திருக்கும் ரஹஸ்யத்தை என்னுடைய உயிராகிய உனக்குச் சொல்லி வைக்கவேண்டுமென்று, வேறு கதியற்ற

எனக்கு ஓர் பேராசை யேற்பட்டிருக்கிறது. உப்பு, ஜலத்திற்குத் தன்னுடைய ஸ்வரூபத்தைக் கொடுத்துவிட்டு, ஜலமாய்ப் போய் விடுதலில் வெட்கப்படாததுபோலும், நீ எனக்கு உன்னுடைய ஸர்வஸ்வத்தையும் கொடுத்து விட்டிருக்கிறாயாதலால், உன்னிடத்தினின்றும் நான் எதை மறைத்துவைக்கமுடியும்? ஆகவே ரஹஸ்யமான அனைத்தையும் மறைவில்லாமல் வெளிப்படுத்திவைக்கும் என்னுடைய பரமரஹஸ்யத்தை உனக்குச் சொல்வேன், கேள்.

मन्मना भव मद्भक्तो मद्याजी मां नमस्कुरु ।
मामेवैष्यसि सत्यं ते प्रतिजाने प्रियोऽसि मे ।। ६५ ।।

மன்மனா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு ।
மாமேவைஷ்யஸி ஸத்யம் தே ப்ரதிஜானே ப்ரியோ(அ)ஸி மே ॥ 65

ஸகல வ்யாபாரத்தையும் பகவத்பரம் செய்யும் ப்ரகாரம்:

தேஹத்துக்கு வெளிப்புறப்பட்டவையாயும் உட்புறபட்டவையாயும் நீ செய்யும் ஸர்வ வ்யாபாரங்களுக்கும் எங்கும் எதிலும் வ்யாபகனாயிருக்கும் என்னை விஷயமாய்ச் செய்துகொள். வாயுவானது தன்னுடைய ஸர்வாங்கத்தாலும் ஆகாசத்தையே தழுவியிருப்பதுபோலும், உன்னுடைய ஸர்வகர்மங்களும் என் ப்ரீதியை உத்தேசித்தவைகளாகவே இருக்கவேண்டும். வளர்த்துவ தென்? உன்னுடைய மனஸ்ஸானொருவனே வஸிக்கும் வீடாய்விடவேண்டும். என் ஸம்பந்தமான விஷயங்களைக் கேட்பதினாலேயே உன் காது நிறைந்துபோகவேண்டும். ஆத்ம ஞானத்தால் நிர்மலமாயிருக்கும் ஸாதுக்கள் எவர்களோ அவர்கள் என்னுடைய உத்தமமான ரூபங்கள். விடபுருஷனுடைய ஸ்த்ரீஸங்கத்தின் மேல் அடக்கமுடியாத ஆசையுள்ளவனுடைய) த்ருஷ்டி ஸ்த்ரீகள் மேல் மிக்க ப்ரீதியுடன் விழுந்து கொண்டிருப்பதுபோலும், உன் த்ருஷ்டி மிக்க ப்ரியுடன் அப்படிப்பட்ட ஸாதுக்கள் மேல் விழுந்து கொண்டிருக்கவேண்டும். நான் வஸ்துக்களுக்கு வாஸஸ்தானங்களான அனைத்துக்கும் வாஸஸ் தானமல்லவா? அப்படிப்பட்ட என்னுடைய பரிசுத்தமான நாமங்கள் உலகத்தில் வாழ்வுபெற்று ஜீவர்களுக்குக்கிடைத்து அவர்களுக்குப் பயன்படும்படி நாக்கினால் அவற்றை நீ ஸதா உச்சரித்துக் கொண்டிருக்கவேண்டும். கையினாற் செய்யும் தொழில்களனைத்தையும் காலால் நடக்கப்படும்

நடைகளைனைத்தையும் என்னை உத்தேசித்தவைகளாய் நீ செய்து கொள்ளவேண்டும்.

பகவதுத் தேசமாய் யாகம் செய்வதின் ப்ரகாரம்:

உனக்குப் பயன்படும்படியாயாவது புறத்தியானுக்குப் பயன் படும்படியாயாவது என்னென்ன வேலைகளை நீ செய்வாயோ அவைகளனைத்தையும் எனக்கு ஸமர்ப்பணம் செய்துவிடுவதே, என்னை உத்தேசித்த யஞ்ஞமாகும். இவ்வகைப்பட்ட யஞ்ஞங்களை நீ செய்து கொண்டிருக்கவேண்டும்.

பகவத்பக்தியின் ப்ரகாரம் ;

இதை ஒன் றொன்றாய் உனக்குச் சொல்லி, எப்படி முடிப்பேன். ஆகவே இதைத் தொகுத்துச் சொல்வேன் கேள் ஸேவகபாவத்தை உன் பங்குக்கு நிறுத்திக் கொண்டு, உலகில் உள்ள மற்ற அனைவரையும் ஸேவ்யனான நானாகவே நீ பாவித்து நடந்துகொள்ளவேண்டும்,

பகவானை நமஸ்கரிப்பதின் ப்ரகாரம்:

அப்போது உனக்கு பூதங்கள்மேல் த்வேஷம் ஒழிந்துபோய், அவை அனைத்தும் நானாகவே தோன்றிப்போகும். அப்படிபட்ட பாவத்தை எப்போதும் பாராட்டிக்கொண்டு நீ பூதங்கள் அனைத்தையும் ஸர்வ தேசகாலங்களிலும் மனஸால் நமஸ்கரித்துக்கொண்டே செல்லவேண்டும்.

பகவத் ப்ராப்தி:

இப்படிப்பட்ட இடைவிடாத அநுஷ்டானத்தால், உனக்கு ஸதா என்னோடு கூடியிருத்தல் ஏற்பட்டுவிடும். பின்பு பல பூதங்களால் நிறைந்திருக்கும் இவ்வுலகில் எங்குபார்த்தாலும் உனக்கு மூன்றாவது வஸ்துவின் பேச்சே அற்றுப்போய் நானும் நீயும் மாத்ரமே இருக்கப்பட்டதான ஏகாந்தம் உனக்கு ஏற்பட்டு, நிலைபெறும். அந்நிலையில், எப்போதும் உனக்கு நானே, எனக்கு நீயே, என்ற சேர்க்கை ஸித்தித்து, அதினால் இயற்கையாகவே ஏற்பட்டு மேன்மேலும் அதிகரித்துக் கொண்டேபோகும் ஸுகத்தை நீ புசிக்கப்பெறுவாய், பின்பு ஹே அர்ஜுநா என்னையும் உன்னையும் பிரித்துவைக்கும் மூன்றாவது வஸ்து வொன்று இல்லாமற்போன நிலையைப் பெற்று, கடைசியில் நீ நானே என்று சொல்லிக்கொண்டு என்னோ டொன்றுபட்டுப்போவாய். ஜலம் நாசமடைந்த பின்

அந்த ஜலத்தில் அதுவரைக்கும் தோன்றிக்கொண்டிருந்த ப்ரதிபிம்பம் மூலபிம்பத்தோடு ஒன்றுபட்டுப்போவதை எது தடுத்துவைக்கும்? காற்று ஆகாசத்தில் லயித்துப்போவதையும், அலை ஸமுத்ரத்தோ டொன்றுபட்டுப்போவதையும், எது குறுக்கிட்டுத் தடுத்துவைக்கும்? ஆகவே உனக்கு இப்போது தோன்றிக்கொண்டிருக்கும். நீ நான் என்ற வித்யாஸத்தைத், தோற்றிவைக்கும் தேஹத்தின் உணர்ச்சியே இல்லாமற்போகும் ஓர் நிலையில் நீ நானாகவே ஆய்விடுகிறாய்.

இவ்விஷயத்தில் பகவத் ப்ரதிஜ்ஞை-

இந்த விஷயத்தில் இப்படி நேருமோ நேராதோ, என்றோர் ஸந்தேஹம் நீ பாரட்டத் தகாது, இது நான் சொன்னபடி முடிவுபெறாமற் போகுமாகில், உன் மேல் ஆணை, உன்மேல் ஆணை வைத்தது என்மேல் ஆணை வைத்ததே ஆகிறது. இப்படி ஆணையிட்டுப் பேசுவது எனக்கு மானக்குறை வல்லவவா என்றால், ஒருவருக்கொருவர் ப்ரேமை ஏற்பட்டபின் அவர்கள் மானவமானங்களை கவனத்தில் வைக்க மாட்டார்கள், ப்ரபஞ்சத்தை தனக்குள் அடக்கிக்கொண்டு, விச்வாபாஸத்தை (விச்வம் என்ற தோற்றத்தை) உண்டாக்கிவைத்து, தன் ஆஞ்ஞையின் ப்ரதாபத்தால் யமனை ஜயித்துவிட்டு, ஸத்யஸங்கல்பனாய் விளங்கும் தேவனையும், லோகத்தக்கு நன்மையைச் செய்துவைப்பதில் அதற்குத் தகப்பனாயும், இருக்கும் நான், என்னத்துக்கு ஆணையிட்டு வைக்கவேண்டும் என்றால், சொல்வேன் கேள்,உன் விஷயமாய் ஏற்பட்டுள்ள எல்லைகடந்த ப்ரேமையால் என்னுடைய ஈச்வர லக்ஷணங்களை நான் விட்டொழிந்துபோனதால், நீ பூர்ணனாய்போய், நான் உன்னுடைய ஓர் அம்சம் ஆய்விட்டேன். அன்றியும், அரசன் கூட தன்னதிகாரத்துக்குட்பட்டவர்களைப் பார்த்து தன் கார்யம் நிறைவேறுவதற்காக ஒவ்வோருவேளை தன்மேல் ஆணையிட்டுப் பேசுவதுண்டு, அப்படியே இதுவும் இருக்கக்கூடாதா? அப்போது அர்ஜுனன் பின்வருமாறு சொன்னான், எல்லாரும் ஆச்சர்யப்படும்படி நீர் இப்படிப் பேசவேண்டாம், எங்களுடைய கார்யமனைத்தும் உம்முடைய ஓர் பெயரை ஸ்மரித்தமாத்ரத்தாலேயே முடிவுபெறுகின்றது. அப்படிப்பட்ட பெருமைபொருந்திய நீர் உபதேசம் செய்யத் துவக்குகிறீர்.

அப்படி உபதேசம் செய்தது போதாதென்று, நீர் சபதமும் செய்து வைக்கிறீர் இப்படி நீர் செய்யும் வேடிக்கைகளுக்கு ஓர் மட்டு மர்யாதை என்பதுண்டா? தாமரைப்பூக்களை

விகஸிக்கச் செய்ய ஸூர்யப்பரகாசத்தின் ஓர் அல்பமான அம்சம் போதுமானதா யிருக்க, ஸூர்யன் தன்னுடைய ப்ரகாசமனைத்தையும் அவற்றிற்கு நித்யம் கொடுத்துக்கொண்டேயிருக்கிறான். சாதகபக்ஷியின் தாஹத்தைப் போக்கிவைக்க உத்தேசித்த மேகம் பூமி முழுவதின் தாபத்தைப்போக்கி ஸமுத்ரத்தைத் தன் நீரால் நிரப்பிவைக்கிறது. அப்படியே எனக்கு உபதேசம் செய்வதை நிமித்தமாய்க் கொண்டு, மேகம் போன்ற நீர், உலகுக்கெல்லாம், ஞானத்தைப் பொழிகிறீர், ஆகவே, தாதாக்களுக்குள் சிறந்தவராயும் க்ருபை நிறைந்த கடல் என்றே சொல்லத்தக்கவராயும் இருக்கும் உம்முடைய ஔதார்யத்துக்கு, நிமித்தம் ஒன்று இருக்கவேண்டியதுகூட அநாவச்யம், என்று சொல்லும்படியாய் இருக்கிறது. இப்படி அர்ஜுனன் சொன்னதைக் கேட்டு பகவான் பின்வருமாறு சொன்னார், "போதும், நிறுத்திவை, இப்படி என்னைத் துதிப்பதற்கு இது ஸந்தர்ப்பம் அல்ல," இங்கே பேசவேண்டியதாய் நேர்ந்த விஷயம் என்னை அடைவதற்கு ஏற்பட்ட உபாயம் இது ஒன்றே என்பதே. உப்பு ஸமுத்ரத்தில் விழுந்த க்ஷணத்திலேயே, ஹே தனஞ்ஜயா, அது அத்துடன் கலந்து ஒன்றுபட்டுப்போகாமல் தனித்திருக்க அதற்கு வழியில்லாமற் போகிறது. அப்படியே எல்லா விஷயங்களிலும் நீ என்னை பஜித்துக்கொண்டிருந்தால் நீ முழுமையும் நான் ஆய்ப்போய், உன்னுடைய அஹம்காரம் மிகுந்து நிற்காமல் உண்மையாகவே நீ நானே ஆய்விடுகிறாய்.

மேல் வரும் விஷயத்துக்கு அவதாரிகை,-

ஸ்வகர்மாசரணத்தில் ஆரம்பித்து என்னுடைய ஸ்வரூபப்ராப்தி அடையும் வரைக்கும் அநுஷ்டிக்கப் படவேண்டிய உபாயம்/எதுவோ அது இவ்வாறு உனக்கு நன்றாய் விளங்கும்படி சொல்லப்பட்டதாயிற்று. அது என்னவேன்றால், முதலில் ஸர்வகர்மத்தையும் எனக்கு அர்ப்பணம்செய்து, எல்லாவிஷயத்திலும் என்னுடைய மனக்குளிர்ச்சியைத் தேடிக்கொள்ளவேண்டும், என்பதே. அப்படி என்னுடைய ப்ராஸாதத்தைதேடிக் கொள்வதால், என்னுடைய ஸ்வரூபஞானம் லப்த மாய்விடுகிறது. அது ஏற்பட்டவுடன் ஓர் ஸந்தேஹமும் இன்றி என்னுடன் கலந்துபோவதே ஸித்தித்து விடுகிறது, அதற்குப்பின் ஸாதநாநுஷ்டானமும் அதனால் அடையக்கூடியதான பலன் என்ற ஒன்றும் மிருந்திராமற்போகின்றன,

சுருக்கிச் சொல்ல அந்த நிலை அடைந்தவன் செய்யவேண்டியதாய் ஒன்றும் மிகுந்து நிற்பதில்லை, நீயோ

உன்னுடைய ஸர்வகர்மங்களையும் இதுவரையில் எனக்கே அர்ப்பணம் செய்துகொண்டு வந்து அதின் கார்யமாய் இன்று என் பூர்ணப்ரஸாதத்தைப் பெற்றவனாய் இருக்கிறாய், ஆகவே இந்த ப்ரஸாதத்தின் பலத்தால், இந்த யுத்தம் என்பது ஓர் தடையாய்க் குறுக்கிட்டு நிற்காமல், நான் ஒரே தடவையாய் உனக்கு ஸர்வ விதமாயும் ஸ்வாதீன மாய் விட்டேன், எதின் உண்மையை அறிந்து, அதிற்சொல்லிய ஸாதனத்தை அனுஷ்டித்தால் உலகம் என்ற தோற்றத்தோடுகூட அதற்குக் காரணமாதிய அஞ்ஞானமும் உனக்கு நசித்துப்போய், நான் ஒருவனே அறியப்பட்டவனாய் நிற்பேனோ, அந்த சாஸ்த்ரமாகிய இந்த கீதை த்ருஷ்டாந்தங்களுடனேயும் யுக்திகளுடனேயும் உனக்கு உபதேசிக்கப்பட்டதாயிற்று, இப்படி அநேகவிதமாய் விந்யாஸப் படுத்தி உனக்கு நான் உபதேசித்துவைத்த என் ஸ்வரூபப்ராப்தி விஷயமான இந்த ஞானத்தால் தர்மாதர்மரூபமான உன்னுடைய அஞ்ஞானக் கூட்டம் முழுவதும் தொலைத்து வைக்கப்பட்ட தாயிற்று.

सर्वधर्मान्परित्यज्य मामेकं शरणं व्रज ।
अहं त्वां सर्वपापेभ्यो मोक्ष्ययिष्यामि मा शुचः ।। ६६ ।।

ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ ।
அஹம்த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷ யிஷ்யாமி மாஶுச: ॥ 66

ஸர்வதர்மபரித்யாகம்.-

ஆசையினின்று துக்கங்கள் உண்டாவதுபோலும், நிந்தையினின்று பாபங்கள் உண்டாவதுபோலும், துரத்ருஷ்டத்தினின்று தைந்யம் உண்டாவதுபோலும், ஸ்வர்க்கநரகப்ராப்திகளைக் காட்டிக்கொடுக்கும் அஞ்ஞானத்தினின்று, தர்மாதர்ம கல்பனை உண்டாயிற்று. அந்த அஞ்ஞானம் முழுவதையும், இந்த ஞானத்தின் பலத்தைக் கொண்டு தொலைத்துவை. கையில் கயிற்றை எடுத்துக்கொண்டு, அதில் முன்தோன்றியிருந்த ஸர்ப்பம் என்னும் புத்தியைத் தொலைத்துக்கொள்வது போலும், நித்ரையைக் கலைத்துக்கொண்டு ஸ்வப்நவ்யவஹாரம் முழுவதையும், தொலைத்துக்கொள்வது போலும், மஞ்சட்காமாலையை நிவர்த்தித்துக்கொண்டு சந்த்ரனிடத்தில் அதற்கு முன் காணப்பட்டுக்கொண்டிருந்த பீதத்வத்தைப் (மஞ்சள் வர்ணமுள்ளவனாய்த்தோற்றுகை) போக்கிக் கொள்வது போலும், வ்யாதியை நிவர்த்தித்துக்கொண்டு வாயின் கசப்பைப் போக்கிக்கொள்வது போலும், பகலைப்

போக்கிக்கொண்டு கானல் நீர்த் தோற்றத்தையும் போக்கிக்கொள்வதுபோலும், கட்டையின் ஸம்பந்தத்தை ஒழித்துக்கொண்டு நெருப்பின் ஸம்பந்தத்தை ஒழித்துக்கொள்ளல்போலும், தர்மாதர்மம் என்னும் மோசம் செய்யும் தோற்றங்களைக் காட்டிவைக்கும் மூல அஞ்ஞானம் எதுவோ, அதை ஒழித்துக்கொண்டு தர்மஜாதங்க ளனைத்தையும் ஒழித்துத்தள்ள வேண்டும்,

பகவான் ஒருவனையே.-

தூக்கத்தோடு ஸ்வப்நமும் விலகிப்போனபின் ஒருவன் தன்னியற்கையான ஸ்வரூபத்தில் நிலைகொள்ளல்போலும், அஞ்ஞானம் ஒழிந்தபின் தானாகவே என்னுடைய ஸ்வரூபமோன்றே மிகுந்து நிற்கும். அப்படி யான பின் என்னைக் காட்டிலும் வேறுபட்டது அல்லது என்னைக் காட்டிலும் வேறுபடாதது என்று சொல்லத்தக்கதாய், என்னைத் தவிர வெறோன்றும் இல்லாமற்போகும். அப்படி ஒருவனுக்கு ஏற்பட்டுப்போனால், அதற்குமேல் அந்த என் ஸ்வரூபமாகவே தான் இருப்பதாக அவன் தெரிந்துகொண்டு, அத்துடன் ஒன்றுபட்டவன் ஆய்விடுகிறான்.

சரணம்புகுவதின் ப்ரகாரம்,-

ஒருவன் தான் என்னைக் காட்டிலும் வேறானவன் என்று பாவித்துக்கொள்ளாமல், என்னுடைய அத்வைத ஸ்வரூபத்தை அறிந்து கொள்ளல் எதுவோ அதற்கே சரணம் என்று பெயர். கடம் (நீர் எடுத்துக் கொள்வதற்கு ஏற்பட்ட ஓர் பாத்ரம்; குடம்) இருக்கும்போது அதினால் வரையறுக்கப்பட்டிருந்த ஆகாசம் அந்த கடம் நாசமாய்ப்போன பின் எப்படி மஹாகாசத்தில் ப்ரவேசித்துக் கொள்கிறதோ அதாவது, மஹாகாசத்தோடு ஒன்றுபட்டுப்போகிறதோ, அப்படியே என்னிடத்தில் சரணம்புகுதல் என்பது, என்னுடன் ஒன்றுபட்டுப் போனதாக பாவித்திருத்தலே யாகும். ஸ்வர்ணத்தின் ஓர் உண்டை ஸ்வர்ணத்தினிடம் வந்து சேருதல் போலும், அலை ஜலத்தினிடத்தில் வந்து சேர்தல் போலும், நீ யென்னிடத்தில் சரணம்புகவேண்டும், ஹே தனஞ்ஜயா. சமுத்ரத்தின் வயிற்றிற்குள் புகுந்து அங்கு நிலைகொண்டே இருக்கும், வடவைத்தீ அப்படிச் செய்யாமல், ஸமுத்ரத்தின் விஷயத்தில் த்வைத பாவம் பாரட்டிக்கொண்டு, அந்த ஸமுத்ரத்தைக்கொளுத்திக் கொண்டிருப்பதில் ஓய்வதே இல்லை.

என்னிடத்தில் சரணம் புகும்போது இப்படிப்பட்ட நடத்தையை விலக்கிவைக்க வேண்டும். என்னிடத்தில், சரணம்புகுந்தேன், என்று சொல்லிக்கொண்டு தன்னுடைய ஜீவபாவத்தைக் கைவிடாது பற்றிக்கொண்டிருத்தல் மிக்கவும் நிந்த்யமானது. இப்படி த்வைதபாவம் பாவித்திருக்கும் ஒருவனுடைய புத்தி தான் ஏன் தனக்குள்ளேயே லஜ்ஜைப்படாதோ? கேவலம் ப்ராக்ருதனான ராஜாவை ஆச்ரயித்த ஓர் வேலைக்காரன் கூட அல்லவா, அந்த ராஜாவோடு தன்னை ஒன்றுபடுத்திக்கொண்டு நடக்கிறான், அப்படி இருக்க ஸர்வேச்வரனாகிய என்னிடம் வந்து சேர்ந்த ஒருவனுடைய ஜீவபாவம் விண்டுபோகாது இருப்பது என்ற இந்த அஸஹ்யமான வார்த்தையை என் காதிற் போடாதிரு, ஆகவே நான் முன் சொல்லிக் கொடுத்த ஸர்வ ஸமர்ப்பணானுஷ்டானத்தால் உன் விஷயத்தில் என் மனக்குளிர்ச்சி யேற்பட்டு, அதின் கார்யமாய் உனக்கேற்படும் என் ஸ்வரூபஜ்ஞானத்தின் பலத்தைக்கொண்டு நீ என்னுடன் ஒன்றுபட்டு நின்று, அந்நிலையில் இயற்கையாகவே ஏற்படும் பக்கியோகத்தை நீ ஸம்பாதித்துக் கொள்ள வேண்டும்.

அதற்குப்பின் ஏற்படும் ஸர்வபாப நிவ்ருத்தி.-

பின்பு மோரிலிருந்து பிரித்து எடுக்கப்பட்டுபோன வெண்ணெயைத் திரும்பவும் மோரோடு எவ்வளவு தான் சேர்த்துவைத்தாலும், அதுமோருடன் கலந்து ஒன்றுபட்டுபோகாததுபோலும், அத்வயமான என்னுடைய ஸ்வரூபத்தில் நீ சரணம்புகுந்தபின், தர்மா தர்மங்கள் உன்னைப் பற்றிக்கொள்ளத் திறமையற்றவையாய்த் தாமாகவே விலகிநின்றுவிடும். இரும்பை பூமியில் நட்டு வைத்திருந்தால் அது துருவால் வ்யாபிக்கப்பட்டுப் போகிறது. அதற்கே ஸ்பர்சவேதியின் ஸம்பந்தம் ஏற்பட்டுவிட்டால், அது தங்கமாய்விட்டு, அதில் துரு பற்றிக்கொள்ள முடியாமற்போவது போலும், உனக்கு என் ஸம்பந்தம் ஏற்பட்டபின் நீ நானாய்ப்போய், தர்மாதர்ம ஸம்பந்தத்தினின்று விடுபட்டுப்போகிறாய், இது நிற்கட்டும், கட்டையிலிருந்து வெளிப்படுத்தி வைக்கப்பட்ட நெருப்பை, கட்டையால் ஏற்பட்ட பெட்டிக்குள், அடைத்து வைத்தால், அது அதற்குள் அடைபட்டு நிற்காததுபோலும், ஸூர்யனுக்கு இருட்டைப் பார்க்கக் கிடைக்காததுபோலும், விழித்துக்கொண்டபின் ஸ்வப்நத்தின் அறிவுகேடு விலகிப்போவதுபோலும், என்னை சரணமடைந்தபின் ஸர்வ வ்யாபியாகிய என்னைத்தவிர வேறொன்றிருப்பதற்கு ஆஸ்பதம் என்னமிருந்து நிற்கும்?

ஆகவே பாப புண்யங்கள், தர்மாதர்மங்கள், என்ற இவை விஷயத்தில் உனக்கு எவ்விதமான சிந்தனையும் வேண்டாம், உன்னிடத்தில் இதற்கு முன்னிருந்த பாபபுண்யங்கள் அனைத்தும் என் ஸ்வரூபமாகவே போய்விடும்; ஸர்வவிதமான ஸம்ஸாரபந்தத்தையும் உண்டாக்கிவைப்பதான பாபத்தின் யதார்த்தமான ஸ்வரூபம் என்னைவிட்டு வேறுபட்டு நிற்பதே அல்லவா? அப்படிப்பட்ட பாபம் என்னுடைய ஸ்வரூபஞானம் ஏற்பட்டமாத்ரத்தில் மிகுந்து நிற்கத் திறமையற்றதாய் வீண்பட்டுப்போகும். ஜலத்தில் விழுந்த உப்பானது முழுமையும் கரைந்து ஜலமாய்ப் போய்விடுதல் போலும், ஹே விவேகமுள்ளவனே, வேறுகதியற்று என்னையே சரணம் புகுந்த நீ என் ஸ்வரூபத்திற் கரைந்து அத்துடன் ஒன்றுபட்டுப் போவாய், இவ்வளவினாலேயே நீ பாபங்களினின்று விடுபட்டவ னாய்விடுவாய்.

துக்கிக்காமலிரு

என் ஸ்வரூபஞானம் ப்ரகாசமாய் விளங்கும்படி செய்துகொண்டு, என்னையே பற்றிக்கொள், பின்பு நான் உன்னை பாபத்தினின்று விடுவித்து வைப்பேன், ஆகையால் இனி இந்த துக்கத்தை உன் மனதில் பாராட்டிக்கொள்ளாமல் உன் ஸ்வரூப ஞானத்தைத் தேடிக்கொண்டு, என்னொரு வனிடத்திலேயே சரணம் புகுந்துவிடு.

உபஸம்ஹாரம்

இவ்விதம் ஸர்வரூபங்களுக்கும் ரூபத்தைச் செய்துகொடுக்கிறவராயும், ஸர்வத்ருஷ்டிகளுக்கும் பார்க்கும் சக்தியைக் கொடுக்கிறவராயும், ஸர்வதேசங்களும் குடியிருக்கும் ஸ்தானமாயும் இருக்கும் ஸ்ரீ க்ருஷ்ணன் சொன்னார், பின்பு ச்யாமளமாய் கங்கணம் தரித்ததாய் இருக்கும் தன் வவதுகையை நீட்டி அந்த மஹாராஜாவான ஸ்ரீ க்ருஷ்ணன் தன்னைச் சரணமடைந்திருந்த அர்ஜுனனை ஆலிங்கனம் செய்துகொண்டார், எந்த ஸ்வரூபத்தை அடைய முடியாமல் வார்த்தையானது புத்தியைத் கக்கத்தில் இடுக்கிக்கொண்டு பின்வாங்கிவிடுகிறதோ, அப்படி புத்தியும் வாக்கும் அணுகமுடியாததாய் இருக்கும், அந்த ஆத்மஸ்வரூபத்தை அர்ஜுனனுக்கு கிடைக்கச் செய்து கொடுப்பதற்காக பகவான் அர்ஜுனனை ஆலிங்கனம் செய்து கொண்டார்,

இப்படி ஹ்ருதயம் ஹ்ருதயத்தோடு சேர்ந்தபோது ஸ்ரீ க்ருஷ்ணன் தன் ஹ்ருதயத்திலிருந்ததை அர்ஜுனன்

ஹ்ருதயத்தில் வார்த்து வைத்து பரஸ்பரம் பஜித்துகொள்வதற்கு வேண்டியதான த்வைதபாவத்தைப் போக்கிவைக்காமல் அர்ஜுனனைத் தன்னைப் போலவே செய்துவைத்தார், ஓர் தீபத்தைக் கொண்டு மற்றோர் தீபத்தை ஏற்றிவைத்தா லெப்படியோ, அப்படியே அந்த ஆலிங்கனம் த்வைதபாவத்தை நாசம் செய்யாமல் அர்ஜுனனை ஆத்ம ஸ்வரூபத்தில் நிலைகொள்ளச் செய்துவைத்தது, அப்போது அர்ஜுனனுக்கு உண்டான ஆநந்தப்பெருக்கில் ஸர்வவ்யாபகனான பகவானும் முழுகிப் போனார். ஸமுத்ரம் ஸமுத்ரத்தோடு கலக்கப் போனால், கலந்து கொள்வது என்பது நின்றுபோய், ஜலம் பெருகிஇடம் போதாமற்போய் அதற்கு ஆகாசம் இடம் கொடுத்து ஸஹாயம் செய்யத் தொடங்குவது போலும், அப்படியே அவர்கள் இருவரும் ஆலிங்கனம் செய்து கொண்டதில், அவர்கள் இருவருடைய ஆநந்தம் அவர்களுக்குள் அடக்கிவைக்க முடியாதபடி பெருகினது. இதை எவர்கள் அறிவார்கள்? வார்த்தைகளை வளர்த்துவதால் என்? அர்ஜுனனுக்கு விச்வமே நாராயண ஸ்வரூபத்தால் கொந்தளித்துக் கொண்டிருப்பதாய்த் தோற்றினது.

இப்படி முடிவுபெற்ற கீதாசாஸ்த்ரத்தின் பெருமை.-

வேதத்துக்கு மூலஸூத்ரமாயும், (ஸூத்ரம் என்பது ஓர் விஷயத்தைச் சுருக்கிச் சொல்லல். பாஷ்ய மென்பது ஸூத்ரத்தை ஆதாரமாகக் கொண்டு அதின் அர்த்தத்தை விரிவாய் எடுத்துரைத்தல். கீதை ஸூத்ரம் என்றும் வேதங்கள் அதின் பாஷ்யமென்றும் ஞானதேவர் அபிப்ராயம்) அனைவராலும் ஓதத்தக்கதாயும், அதிபவித்ரமானதாயும், இருக்கும் இந்த கீதாசாஸ்த்ரம், இவ்வாறு ஸ்ரீ க்ருஷ்ணனால் வெளியிட்டு வைக்கப்பட்டது. இங்கே கீதை வேதத்துக்கு மூலம் என்று சொன்னீரே, இது எப்படி உம்முடைய புத்திக்குத் தோற்றினது என்று எவர்களாவது ஆக்ஷேபிப்பார்களே யானால், யாவரும் ஒத்துக்கொள்ளத்தக்க ஓர் ஸமாதானம் சொல்வேன், எவனுடைய மூச்சுக்காற்றில் வேதங்கள் அனைத்தும் பிறந்தனவோ, அந்த ஸ்த்யப்ரதிஜ்ஞனான (எவனுடைய ப்ரதிக்ஞை தவறிப்போகாமல் நிறைவேறிவிடுமோ அவன்) ஸர்வேச்வரன் சபதம்செய்து இந்த சாஸ்த்ரத்தைத் தன் வாயாற் சொல்லிவைத்தார், ஆகவே வேதங்களுக்கு மூலப்ரமாணமாய் இந்த கீதை இருக்கிறதென்று சொல்வது ந்யாயம் ஆகும்.

இவ்விஷயத்தில் மற்றுமோர் ஸமாதானம் உண்டு, ஓர் வஸ்துவின் ஸ்வரூபம் நாசம் அடையாமல் இருந்து கொண்டு ஸ்வரூபத்தின் விஸ்தாரம் மாத்ரம் குறுகிப்போய் எதில் அடங்கிக்கிடக்குமோ, அதை அந்த வஸ்துவின் வித்து என்று சொல்லத்தகும், மூன்று காண்டங்களாய் (கர்மகாண்டம், உபாஸநா காண்டம், ஞான காண்டம்) அமைந்திருக்கும் வேதங்கள் முழுமையும் கீதைக்குள் வித்துக்குள் மரம்போலும் அடங்கியிருக்கின்றன ,ஆகவே இந்த கீதை வேதங்களுக்கு வித்தென்று எனக்கு மாத்ரமேயல்லாமல் அனைவருக்குமே ஓர் மறைவு மின்றி தோன்றிநிற்கும், வேதத்தின் மூன்று காண்டங்களும் இந்த கீதையில், ரத்நங்கள் இழைத்த நகைகளால் அலங்கரிக்கப்பட்ட அவயவங்கள்போலும், மிக்க காந்தி பெற்று விளங்குகின்றன. அந்த கர்மகாண்டம் முதலிய மூன்று காண்டங்களும் கீதையில் எந்தெந்த இடங்களில் காணப்படுகின்றன வென்று கண்முன் தோன்றும்படி காட்டிவைப்பேன் கேளுங்கள்.

இந்த சாஸ்த்ரத்தின் முதலிரண்டு அத்யாயங்களின் அபிப்ராயம்

இந்த கீதையின் முதல் அத்யாயம் இந்த சாஸ்த்ரம் ஏற்படுவதற்குக் காரணத்தைத் தெரிவிக்கிறது, இரண்டாவது அத்யாயத்தால் ஸாங்க்யசாஸ்த்ரத்தின் பெருமை எடுத்துக்காட்டப்பட்டு மோக்ஷம் கிடைக்கும்படி செய்வதற்கு ஸ்வதந்த்ர (வேறொன்றின் ஸஹாயத்தை அபேக்ஷிக்காத) ஸாதநமாயிருக்கும் ஞானமே இந்த சாஸ்த்ரத்தின் முக்ய விஷயம் என்று சுருக்கமாய்ச் சொல்லிவைக்கப்பட்டது.

கர்மகாண்டம்

பின்பு ஆத்மஸ்வரூப அஞ்ஞானத்தால் ஸம்ஸாரத்தில் கட்டுண்டு கிடக்கும் ஜீவன், மோக்ஷபதம் ஏறி அதில் வீற்றிருப்பதற்கு, எந்த ஸாநாநுஷ்டானம் செய்ய வேண்டுமோ, அதின் ஆரம்பம் கர்மாசரண மென்றும், தேஹாபிமானத்தால் ஸம்ஸாரபந்தத்தில் சிக்கிக்கிடக்கிறவர்கள் காம்யகர்மங்களையும் நிஷித்தகர்மங்களையும் முற்றிலும் ஒழித்துவிட்டு, சாஸ்த்ரத்தால் விதித்துவைக்கப்பட்டிருக்கும் நித்ய நைமித்திக கர்மங்களை சாஸ்த்ரவிதி தவறாமலும், சாஸ்த்ர ஸம்மதமான ப்ரகாரமாயும் அநுஷ்டித்து வரவேண்டு மென்று மூன்றாவது அத்யாயத்தாற் சொல்லப்பட்டது. இதுவே இந்த சாஸ்த்ரத்தில் கர்மகாண்டம் என்றறிய வேண்டும்.

உபாஸநா காண்டம்.-

அஞ்ஞாநிகள் அவச்யம் அநுஷ்டித்துத் தீரவேண்டிய நித்யநைமித்திக கர்மங்களை ஆசரிப்பதால் அவை எப்படி மோக்ஷஸாதனங்கள் ஆகும் என்று காட்டிவைக்க ஆசைப் பட்டு, பகவான், பக்தனான (ஸம்ஸாரத்தில் கட்டுண்டு கிடக்கும்) ஜீவன் முமுக்ஷு (மோக்ஷம் அடைய வேண்டும் என்று ஆசை பாராட்டினவன்) பதவியை அடைந்த பின், அவன் கர்மங்களை ப்ரஹ்மார்ப்பணம் செய்யவேண்டு மென்று உபதேசித்துவைத்தார், அதாவது எந்த விஹிதகர்மங்கள், மனோவாக்காயம் என்ற த்ரிகரணங்களால் செய்துவைக்கப்படுமோ, அவைகள் வெளிப்பட்டபடியே ஈச்வரன் ஒருவனுடைய மனக்குளிர்ச்சியையே, உத்தேசித்து, அவனுக்கே அர்ப்பிக்கப்படவேண்டும் என்று பகவான் சொல்லிவைத்தார். கர்மங்களைச் செய்து ஈச்வரனை பஜிக்கவேண்டும், என்ற இந்த விஷயம் கர்மயோகத்தால் ஈசவரனை பஜிக்கும் ப்ரகாரத்தைச் சொல்லத் துவக்கும் இடமாகிய நான்காவதத்யாயத்தின் முடிவில் சொல்ல ஆரம்பிக்கப்பட்டு விச்வரூபத்தை வர்ணிக்கும் பதினோராவது அத்யாயத்தின் முடிவுவரைக்கும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த எட்டு (4வது முதல் 11வது முடிவாக) அத்யாயங்களாலும் தேவதாகாண்டமானது (உபாஸநா காண்டம்) யாதோர் சிக்குமற்றதாய்ச் சொல்லிவைக்கப்பட்டது.

ஞானகாண்டம்.-

ஈச்வரோபாஸனையால் கிடைக்கும் ஈச்வராநுக்ரஹத்தால் ஏற்படும் ஸத்குருவின் உபதேசத்தால் உண்மை யானதும் அதிகோமளமானது மான ஞானம் அடையப்படுகிறது. அந்த ஞானமானது அத்வேஷ்டா (12வது அத்யாயம், 13வது ச்லோகம்) என்று ஆரம்பிக்கும் ச்லோகம் முதற்கொண்டு அல்லது அமானித்வம் (13வது அத்யாயம் 7வது ச்லோகம்) என்று ஆரம்பிக்கும் ச்லோகம் முதற்கொண்டு விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்ட தாகிறது, ஆகவே பன்னிரண்டாவது அத்யாயம் ஞானகாண்டத்திற் சேர்ந்ததாக கணக்கிடப்படுகிறது. அந்தப் பன்னிரண்டாவது அத்யாயம் முதற்கொண்டு பதினைந்தாவது அத்யாயம் முடிவாக ஞானம் என்னும் பலனும் அதினால் உண்டாகும் ப்ரஹ்மபாவம் என்னும் ஸித்தியும் நிரூபிக்கப்பட்ட தாகிறது. ஆகவே ஊர்த்வ மூலம் என்று ஆரம்பிக்கும் அத்யாயம் (15வது அத்யாயம்) முடிவாய் உள்ள நான்கத்யாயங்களும் ஞானகாண்டம் ஆகின்றன.

கீதைக்கும் வேதத்துக்கும் உள்ள ஐக்யபாவமும் கீதையின் அதிகரித்த பெருமையும்

இப்படி மூன்று காண்டங்களோடு அமைந்திருக்கும் இந்த கீதை ஓர் சிற்றுருவம் தரித்துக்கொண்ட வேதமாகவே இருந்துகொண்டு, அதின் ச்லோகங்கள் என்ற ரத்நகசிதமான ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டதாய் விளங்குகிறது. இப்படி மூன்று காண்டங்களாய் அமைந்த வேதமே ஆன இந்த கீதை மோக்ஷரூபமாகிய பலனை அவச்யம் கைப்பற்றிக் கொள்ளுங்கள் என்று, கர்ஜித்துக் கொண்டிருக்கிறது. கீழே மோக்ஷஸாதனமாய்ச் சொல்லப்பட்டிருக்கும் ஞானத்தோடு ஸதா பகைபாராட்டிக் கொண்டிருக்கும் அஞ்ஞானக் கூட்டம் அனைத்தும் பதினாறாவது அத்யாயத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகைவர்களை சாஸ்த்ரத்தின் ஸஹாயத்தைக்கொண்டு ஜயித்துக்கொள்ள வேண்டும் என்று பதினேழாவது அத்யாயம் சொல்கிறது. இவ்விதமாய் (இந்த கீதையின் முதலாவது அத்யாயம் முதலாய்ப் பதினேழாவது அத்யாயம் ஈறாக) ஈச்வரன் தன் மூச்சுக்காற்றாகிய வேதத்தையே விவரித்து வைத்தான்.

இப்பதினேழத்யாயங்களினால் சொல்லப்பட்ட விஷயங்களனைத்தின் தாத்பர்யம் இன்னதென்று விசாரிப்பதே கலசஸ்தானம் பெற்ற இந்த பதினெட்டாவது அத்யாயம் ஆகிறது. இவ்வாறு ஸகலஞானங்களாலும் நிறைந்துள்ள ஸமுத்ரம் என்று சொல்லத்தக்க பகவத்கீதை என்ற இந்த ப்ரபந்தம் வேதமே என்று சொல்லும்படியாய் இருந்துகொண்டு, ஔதார்யத்தால் வேதத்தைக் காட்டிலும் பெருமை படைத்ததாய் இருக்கிறது. வேதங்கள் மிக்க தனவான்கள் என்பதில் ஸந்தேஹம் இல்லை, ஆனால் அவற்றிற்கு ஸமானமான க்ருபணர்கள் உலகிற் கிடையார், ஏனெனில் ப்ராஹ்மண க்ஷத்ரிய வைச்யர்கள் என்ற மூன்று வர்ணத்தாரே அதைக் கேட்கவும், ஓதவும் அதிகாரம் பெற்றவர்கள். ஸம்ஸாரதுக்கத்தில் முழுகிக்கிடக்கும் மற்றவர்களான ஸ்த்ரீ சூத்ரர்களான ஜீவர்களுக்கு பேட்டி கொடுப்பதற்கே அவகாசம் இல்லையென்று சொல்லிக்கொண்டு வேதங்கள் மறைவாய் இருந்து விடுகின்றன. ஆகவே வேதங்கள், தமக்கு முன் னேற்பட்டிருந்த ஓர் குறைவைத் தீர்த்துக் கொள்வதற்காக, கீதை என்றோர் உருவெடுத்துக்கொண்டு, யாவராலும் ஸேவிக்கத்தக்கவை யாயின வென்று, எனக்குத் தோன்றுகின்றது.

அன்றியும், அர்த்தானுஸந்தானரூபமாய் மனதில் நுழைந்து, ச்ரவணரூபமாய்க் காதில் எறி, ஜபரூபமாய் முகத்தில் இருந்து கொண்டு, ஸுலபமாய் இருப்பதுடன், இந்த கீதை தன்னைப் பாராயணம் பண்ணுகிறவனுக்கும், அவனோடு சேர்ந்திருப்பவனுக்கும், அதை ஏழுதிப்புஸ்தகமாய்ச் செய்துகொடுப்பவனுக்கும், அப்படியே ஸம்ஸாரத்தின் நாற்சந்தியில் திரியும் என்னைப்போன்ற அநேகருக்கும் மோக்ஷஸுகத்தைப் பிச்சைபோட ஏற்படுத்திவைக்கப்பட்ட ஸத்ரமாயும் இருக்கிறது. ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும், பக்ஷிக்கும் பூமிமேல் உட்காரும் மனிதனுக்கும் ஸூர்யனுடைய கிரணங்களுக்கும் ஆகாசமே இடங்கொடுப்பதுபோலும், உத்தமன் ஆகட்டும் அதமன் ஆகட்டும், எவன் ஆகட்டும் அவன் தன்னை ஸேவிப்பதற்கு இந்த கீதை ஓராக்ஷேபணையும் செய்யாமல் தன்னை ஸேவிக்கிறவர்கள் அனைவருக்கும் ஸமமாகவே மோக்ஷத்தை தானம் செய்து, அவர்களுடைய ஸம்ஸார பயத்தைப் போக்கி வைக்கிறது. கீதை இப்படிச்செய்வதால், வேதங்கள், தமக்கு முன் ஏற்பட்டிருந்த பழிப்பைக்கண்டு பயந்து, அதைத்தீர்த்துக் கொள்வதற்காக, கீதையின் வயிற்றிற் புகுந்துகொண்டு உத்தமமான கீர்த்தி படைத்தன என்று சொல்லும்படியாய் இருக்கிறது. இப்படி வேதங்கள் யாவராலும் எளிதில் ஸேவிக்கப்படுவதற்காக, அவைகள் எடுத்துக்கொண்ட மாறுரூபமான இந்த ஸ்ரீ கீதை, பகவானால் பாண்டுவின் குமாரனுக்கு இவ்வாறு உபதேசிக்கப்பட்ட தாயிற்று, கன்றைப் போஷிப்பதற்காக தாய்ப்பசுவின் மடியினின்று வெளிப்படும் பால் வீட்டில் உள்ள அனைவருக்கும் பயன்படுவது போலும், அர்ஜுனனை நிமித்தமாகக்கொண்டு உபதேசிக்கப்பட்ட இந்த கீதை உலகெல்லாம் உத்தாரம் (நற்கதி) அடைவதற்குக் காரணமாயிற்று.

சாதகத்தின் மீது அன்பு பாராட்டி மேகம் தன் நீருடன் ஒடிவந்து மழைபெய்தால், அம்மழையால் சராசரரூபமான உலகம் அனைத்தும் குளிர்ந்து போவதுபோலும், வேறுகதியற்றதான தாமரைப்பூவை விகஸிக்கச்செய்ய ஸூர்யன் அநுதினமு முதித்துத் தரும் ப்ரகாசத்தைக் கொண்டு மூவுலகத்தாருடைய கண்களும் ஸுகப்பட்டுப்போவது போலும், அர்ஜுனனை நிமித்தமாய்ச் செய்து வக்ஷ்மீபதியாகிய ஸ்ரீ க்ருஷ்ணன் கீதையை வெளிப்படுத்திவைத்து உலகத்தாருடைய ஸம்ஸாரம் என்னும் பெரும்பாரத்தை இறக்கிவைத்தார். ஸர்வசாஸ்த்ரங்களாகிய ரத்நங்களுக்கு மூவுலகிலும் ப்ரகாசத்தை உண்டாக்கிவைக்கும் இந்த

கீதாசாஸ்த்ரம் லக்ஷ்மீபதியின் முகம் என்னும் ஆகாசத்தில் உதித்த ஸூர்யனென்று சொல்லத்தகாதா? அந்த கீதையால் ப்ரதிபாதிக்கப்பட்ட ஞானத்துக்கு பாத்ரனாயும், ஜகத்தனைத்துக்கும் இதரத்தின் ஸஹாயத்தை வேண்டாத ரக்ஷகவஸ்துவாய் விளங்கும் இந்த கீதை வெளிப்படுவதற்குக் காரணமாயும் இருந்த அர்ஜுநன் பிறந்த குலம் மிக்க உத்தமமான தென்றும் பவித்ரமான தென்றும் சொல்லப்படவேண்டும்.

மேல்வரும் விஷயத்துக் கவதாரிகை

இது இவ்வளவோடு நிற்கட்டும், பின்பு ஸத்குருவான அந்த ஸ்ரீ க்ருஷ்ணன், பார்த்தன் தன்னுடன் ஒன்றுபடுகின்றதைக் கலைத்து, அவனை த்வைதபாவத்தில் நிலைபேறச் செய்து வைத்து, அவனைப் பார்த்து, "இப்போது நான் சொல்லி முடித்த சாஸ்த்ரம் ஸர்யானது தான் என்று உனக்குத் தோன்றுகிறதா?" என்று வினவினார். அதற்கு அர்ஜுநன், "தேவரீர் க்ருபையால், இது ஸரியானது என்றே எனக்குத் தோற்றுகிறது.- என்று உத்தரம் கொடுத்தான். அதற்குமேல் பகவான் பின்வருமாறு சொன்னார். புதைந்து கிடக்கும் பெருத்த நிதி கைக்குக் கிட்டும்படியான பாக்யம்படைத்தவனாய் ஒருவன் இருந்து, அதை அவன் அடையலாம். ஆனால் கைக்குக்கிடைத்த நிதியை ஸரியாய்ப் புசிக்கும் வகை தெரிந்து கொண்டிருப்பது மிக்க அருமையாயிருக்கிறது. தோயாத பால் நிறைந்த க்ஷீரஸாகரம் என்ற பெருத்த பாற்சட்டி கிடைத்து அதை தேவதைகளும் அஸுரர்களும் சேர்ந்து எவ்வளவு கஷ்டப்பட்டு கடைந்தார்கள். அப்படிபட்ட ஸாஹஸமான (செய்து முடிப்பதற்கு மிக்கக் கஷ்டமான) கார்யம் கூட நிறைவேறி, அதின் பலனாகிய அம்ருதமும் கிடைத்தாயிற்று. அதற்குப்பின் கிடைத்த வஸ்துவின் ப்ரயோஜநத்தை தவறிப்போகவிடாமற் காப்பாற்றிக்கொள்ள வழிதெரியாமற்போய், சாவற்ற நிலையை ஸம்பாதித்துக்கொள்வதற்கு தேடிக்கொண்ட பொருளே, ராஹு என்ற அஸுரன் சாவதற்குக் காரணமாயிற்று.

ஸம்பாதித்துக்கொண்டதைப் புசிக்கும் வகை தெரிந்துகொள்ளாமற்போவதின் முடிவு இப்படியே ஏற்படுகிறது. நஹுஷன் ஸ்வர்க்கலோகத்துக்கு ராஜாவானபின், அந்தப்பதவியில் நடந்துகொள்ளவேண்டிய வகை அவனுக்குத் தெரியாமற்போனதால் அவன் பாம்பாய்ப்போனான் என்று, உனக்குத் தெரியாதா? நீ வெகு புண்யங்களைச்

செய்திருந்ததால், நீ இன்று இந்த உத்தம சாஸ்த்ரத்தின் உபதேசம் அடையப்பெற்றாய். ஆனால் இந்த சாஸ்த்ரத்திற் சொல்லிய உபாயங்களை அநுஷ்டிக்கும் விஷயத்தில் ஸம்ப்ரதாயம் (ஆதிகுரு தன் சிஷ்யனுக்கும், அந்த சிஷ்யனே பின்பு குருவாய் அவனுடைய சிஷ்யனுக்கும், இப்படியே பரம்பரையாய் நேர் நின்று கற்றுக் கொடுக்கப் பட்டவையாயும் க்ரந்தங்களில் எழுதிவைக்கப்படாத வையாயும் இருக்கும் விஷயங்கள்) என்ன ஏற்பட்டிருக்குமோ அதைத் தெரிந்துகொண்டு இந்த சாஸ்த்ரத்திற் சொல்லியிருக்கும் பல உபாயங்களையும் நீ ஸரியாய் அநுஷ்டிக்கவேண்டும். அந்த ஸம்ப்ரதாயத்தைத் தெரிந்துகொள்ளாமல் உபாயாநுஷ்டானத் திலிறங்குவாயானால், அம்ருதமதனம் (பாற்கடலைக் கடைந்தது) ராஹுவென்ற அஸுரனுக்கு என்ன பலனைக் கொடுத்ததோ, அதே பலன் உனக்கும் கிடைக்கும், உத்தமமான ஓர் பசு கிடைத்திருந்த போதிலும், அதினிடத்தினின்று பாலைக் கறந்துகொள்ளும் வகையைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவச்யம். ஆகையால் ஸ்ரீ குரு ப்ரஸந்நனாய் சிஷ்யனுக்கு ஓர் வித்யை உபதேசித்தபின்னும், அதை ஸம்ப்ரதாயப்படி அநுஷ்டித்தாற்றான் அதின் பலன் அடையப்பட்டதாகும். ஆகவே இந்த சாஸ்த்ரவிஷயத்தில் அநுஷ்டிக்கப்படும் ஸம்ப்ரதாயம் எதுவோ அதைச் சொல்வேன், மிக்கவனத்துடன் கேள்.

इदं ते नातपस्काय नाभक्ताय कदाचन ।
न चाशुश्रूषवे वाच्यं न च मां योऽभ्यसूयति ।। ६७ ।।

இதம் தே நாதபஸ்காய நாபக்தாய கதாசன ।
ந சாஶுஶ்ரூஷவே வாச்யம் ந ச மாம் யோऽப்ய ஸூயதி ॥ 67

இந்த சாஸ்த்ரத்தை எவர்களுக்கு உபதேசிக்கக்கூடாது

நீ ச்ராத்தாபூர்வகமாக பெற்றுக்கொண்ட இந்த கீதாசாஸ்த்ரத்தை தபஸ்ஸில்லாத ஒருவனுக்கு சொல்லவே கூடாது. அல்லது தபஸ்வியாயிருந்தாலும், அவனுக்கு குருபக்தியிற் படிப்பில்லாமற் போனால், வேதம் பஞ்சமனை வெது தூரமாக விலக்கிவைத்திருப்பதுபோலும், அவனை நீ விலக்கிவைக்க வேண்டும், யஜ்ஞபுரோடாசத்தை (யஜ்ஞத்தில் தேவதைகளை உத்தேசித்து ஹோமம் செய்வதற்காக ஸித்தம் செய்து வைத்திருக்கப்பட்ட அந்நத்தை) காக்கை எவ்வளவு வயது முதிர்ந்ததாயிருந்தாலும், அதற்கு கிடைக்கூடாதது

போலும், தபஸ்வியாயிருந்தும் குருபக்தி இல்லாத ஒருவனுக்கு இந்த கீதாசாஸ்த்ரத்தைச் சொல்லக் கூடாது. ஒருவனிடத்தில் தபஸ்ஸும் குருதேவனிடத்தில் பக்தியும் இருக்கலாம், ஆனால் அவனிடத்தில் இந்த சாஸ்த்ரத்தைக் கேட்டறிந்து கொள்ளவேண்டும் என்ற ஆசை இல்லாமற் போகலாம். அப்படிப்பட்டவன் கீழ்ச்சொல்லிய தபஸ் குருபக்தி, என்ற இவ்விரு விஷயங்களிலும் ஸம்பூர்ண யோக்யதை படைத்தவனாயிருந்தாலும், கேட்கவெண்டும் என்ற ஆசையில்லாத அவனுக்கு இதைக் கேட்க அதிகாரமே இல்லை. எவ்வளவோ உத்தமமான முத்தாகவே தான் இருக்கட்டும்; அதில் த்வாரம் இல்லாதபக்ஷத்தில், அதில் நூல் என்னமாய் நுழையும், ஸாகரம் கம்பீரமாய் இருக்கிறதென்பதை மறுக்கிறவர்கள் ஒருவருமில்லை. ஆனால் அதில் பெய்த மழை வீணாகத்தானே போகிறது. சாப்பிட்டு பூர்ண த்ருப்தியடைந்திருக்கும் ஒருவன் முன் உத்தமமான பக்வாந்நங்களை பரிமாறி அவற்றை வீண்செய்வதை விட்டு, நம்முடைய ஔதார்யத்தைப் பசியெடுத்தவன் ஒருவன் விஷயத்தில் ஏன் வெளிப்படுத்தி வைக்கக்கூடாதோ?

ஆகவே எவ்வளவு தகைமைபடைத்தவனாகத் தான் ஒருவன் இருக்கட்டும், அவனுக்கு இந்த சாஸ்த்ரத்தைக் கேட்டறிந்துகொள்ள விருப்பமில்லாமற் போனால், அவனுக்கு இதை ஓர் வேடிக்கையாய்க்கூட உபதேசிக்கக் கூடாது. ரூபங்களின் அழகை நன்றாய் அறிந்துகொள்ளத்தக்கத் திறமைபடைத்த கண்முன்னால், பரிமளவஸ்துக்களைக் காட்டிவைத்தால், எவ்விதமாய்ப் பயன்படும்? எந்த இடத்தில் எந்த வஸ்துமதிக்கப்படுமோ, அந்த வஸ்து அவ்விடத்திற்றான் பயன் படும், ஆகவே தபஸ்வியாயும், குருதேவ பக்தியுள்ளவனாயும் ஒருவன் இருந்தபோதிலும், அவனுக்கு இந்த சாஸ்த்ரத்தைக் கேட்கும் விஷயத்தில் பிடிப்பில்லாமற்போனால் அவனை ஒதுக்கிவிடவேண்டும், மேலும், தபஸ்வியாயும் பக்தானாயும் இந்த சாஸ்த்ரத்தைக் கேட்பதில் ஆசைபடைத்தவனாயும் ஒருவன் உனக்குக் கிடைத்தாலும், அவன், கீதாசாஸ்த்ரத்தைச் செய்துவைத்தவனாய், ஸகல லோகத்தையும் அடக்கி ஆள்கிறவனாய் இருக்கும் என்னை ஓர் பூஜ்யனாக பாவிக்காமல், ஸாமான்யமான மனுஷ்யன் என்று நினைக்கிறவனாயும் என்னிடத்திலாவது என்னுடைய பக்தர்களிடத்திலாவது தோஷங்கள் எடுத்துக் கூறுகிறவனாயும் இருந்தால், அவன் இந்த ஸாஸ்த்ரோப தேசத்துக்கு யோக்யனாக மாட்டான்.

அவனுடைய மற்றயோக்யதை அனைத்தும், தீபஜ்யோதி இல்லாமல் எண்ணெய், வத்தி, இவற்றால் நிறைவுபெற்றிருக்கும் தீபஸ்தம்பம் ராத்ரியில் எப்படி ப்ரபேயாஜநமற்றதாகுமோ, அப்படியே ப்ரயோஜந மற்றதாகும், தேஹம் சிவந்ததாய், அநேக நகைகளால் அவங்கரிக்கப்பட்டதாய் இருந்து உயிரொன்றில்லாது போனாற்போலும், தங்கத்தால் நிர்மிக்கப்பட்டதாயும், ஓர் வீடு இருந்து, அதின் வாயிற் படியில் ஓர் ஸர்ப்பம் படுத்திருந்தாற்போலும், உத்தமமான அன்னத்தைச் சமைத்துவைத்து அத்துடன் கூட காளகூட விஷத்தைக் கலந்து வைத்தாற்போலும், காபட்யம் மறைந்துகிடைக்கும் ஸ்நேஹபாவத்தைப்போலும், ஒருவன் தபஸ்வியாயும், பக்தனாயும், மேதாவியாயும் இருந்தாலும், அவன் என்னையும் என் பக்தர்களையும் நிந்திக்கிறவனாயிருந்தால், அவன் இந்த சாஸ்த்ரத்தைக் கையால் தொடக்கூட ஒத்துக்கொள்ளக்கூடாது. வளர்த்துவ தென்? நிந்தகன் ஸ்ருஷ்டிகர்த்தாவான ப்ரஹ்மதேவனுக்கு ஸரியான யோக்யதை படைத்தவனாய் இருந்தபோதிலும், வேடிக்கையாய்க் கூட அவனுக்கு நீ இந்த சாஸ்த்ரத்தைச் சொல்லிவைக்கத்தகாது. ஆகவே தபஸ்ஸென்னும் பெரும் பாறைகளைக்கொண்டு அடிப்படையை ஏற்படுத்தி, அதன்மேல் குருபக்தியைக்கொண்டு மேடை ஏற்படுத்தி அதற்குமெல் ச்ரவணேச்சை என்னும் ஸதா திறந்து கிடக்கும் கதவை வைத்து, அதற்குமேல் அநிந்தை என்னும் ரத்நத்தை கலசமாய்வைத்து, இவ்விதம் அமையும் பக்தன் என்ற ஓர் கோவிலுக்குள் அதிபரிசுத்தமான கீதையென்னும் ரத்நலிங்கத்தை ப்ரதிஷ்டை செய்து வைப்பாயாகில், நீ இவ்வுலகில் எனக்கு ஸமானமான கீர்த்திபெற்று வாழ்வாய்.

य इदं परमं गुह्यं मद्भक्तेष्वभिधास्यति ।
भक्तिं मयि परां कृत्वा मामेवैष्यत्यसंशयः ।।६८।।

ய இமம் பரமம் குஹ்யம் மத் பக்தேஷ் வபிதாஸ்யதி।
பக்திம் மயி பராம் க்ருத்வா மாமே வைஷ்யத் யஸம்ஶயः॥ 68

ஸத்பாத்ரத்தில் இந்த கீதையை வினியோகம் செய்திறவன் தேஹாவஸானத்தில் அடையும் பலன்.-

அகார உகார மகாரம் என்ற மூன்று மாத்ரைகளின் வயிற்றில் ஓம் என்ற ஒரே அக்ஷர ரூபமாய் அடைந்துகிடந்து ஸங்கடப்பட்டுக் கொண்டிருந்த வேதத்தின் வித்தாகிய

ப்ரணவம், கீதை என்ற வ்ருக்ஷமாய் விஸ்தாரம் அடைந்து. அந்த வேதத்தின் பூக்களும் பழங்களுமாகிய காயத்ரீ இந்த கீதையின் ச்லோகங்களாயிற்று. ஆகவே இந்த கீதையே ஓர் ரஹஸ்யமான மந்த்ரம். தாயைக்காட்டிலும் வேறு ஜீவனோபாய மற்ற குழந்தையுடன் அதின் தாயைச் சேர்த்துவைப்பதுபோல், எவர்கள் இந்த கீதையை என்னுடைய பத்தர்களுக்கு அதிச்ரத்தையோடு உபதேசித்து, அவர்களோடு சேர்த்துவைப்பார்களோ, அவர்கள் தேஹாவஸாநத்தில் என்னுடன் ஒன்று பட்டுப்போவார்கள்.

न च तस्मान्मनुष्येषु कश्चिन्मे प्रियकृत्तमः ।
भविता न च मे तस्मादन्यः प्रियतरो भुवि ।। ६९ ।।

ந ச தஸ்மான் மனுஷ்யேஷு கஸ்சின் மே ப்ரிய க்ருத்தமः ।
பவிதா ந ச மே தஸ்மா தன்யः ப்ரியதரோ புவி ।। 69

அவன் இவ்வுலகில் இருக்கும்போது எனக்கு அத்யந்த ப்ரியனாகிறான்

அவன் தேஹத்தோடிருக்கும் போது அதை தன்னோடு ஒட்டியிராத ஓர் நகையைப்போல் தரித்துக்கொண்டிருந்து, எனக்கு ஸர்வவிதமாயும் மிக்கவும் ருசித்தவனாயிருப்பான். எவன் கீதையை என்னுடைய பக்தஜநங்களுடைய கோஷ்டியில் எடுத்துச்சொல்வானோ அவன் ஞானி என்றும், தபஸ்வீ யென்றும், கர்மடன் யென்றும், சொல்லப்படு மவர்களைக் காட்டிலும் மிக்கச் சிறந்தவனாய் எனக்குத் தோன்றுவதால், அவன்மேல் எனக்கு ஏற்படும் ப்ரேமை உலகில் மற்றொருவர்மீதும் ஏற்படுவதில்லை. என்னிடத்தில் அவனுக்கு ஏற்பட்டிருக்கும் ப்ரேமையின் கார்யமாய் மனஸின் சாஞ்சல்யமற்றுப் போனவனாய் அவன் கீதையை எடுத்து உபந்யஸிக்கும்போது, ஸாதுக்கள் ஸபைக்கு விசேஷித்த சோபையைக் கொடுக்கும் ஆபரணம் ஆவான்.

அப்பொழுது அவனை அந்த பக்தகோஷ்டி என்ற உத்யான வனத்தில் ப்ரவேசித்த வஸந்த ருதுவோ என்று சொல்லும்படியாயிருக்கும்; எனென்றால் ச்ரோதாக்களின் ரோமாஞ்சம் (மயிர்க்கூச்சல்) மரங்களின் துளிர்களாய், அவர்கள் தேஹத்தில் ஏற்படும் கம்பம் (நடுக்கம்) மந்தமாருதத்தால் ஏற்படும் மரங்களின் அசைந்தாடுதலாய், அவர்கள் கண்களினின்று பெருகும் ஆநந்தபாஷ்பம் புஷ்பங்களினின்று பெருகும் ஸுகந்தம் நிறைந்த நீராய்க்

அவனுடைய மற்றயோக்யதை அனைத்தும், தீபஜ்யோதி இல்லாமல் எண்ணெய், வத்தி, இவற்றால் நிறைவுபெற்றிருக்கும் தீபஸ்தம்பம் ராத்ரியில் எப்படி ப்ரபேயாஜநமற்றதாகுமோ, அப்படியே ப்ரயோஜந மற்றதாகும், தேஹம் சிவந்ததாய், அநேக நகைகளால் அவங்கரிக்கப்பட்டதாய் இருந்து உயிரொன்றில்லாது போனாற்போலும், தங்கத்தால் நிர்மிக்கப்பட்டதாயும், ஓர் வீடு இருந்து, அதின் வாயிற் படியில் ஓர் ஸர்ப்பம் படுத்திருந்தாற்போலும், உத்தமமான அன்னத்தைச் சமைத்துவைத்து அத்துடன் கூட காளகூட விஷத்தைக் கலந்து வைத்தாற்போலும், காபட்யம் மறைந்துகிடைக்கும் ஸ்நேஹபாவத்தைப்போலும், ஒருவன் தபஸ்வியாயும், பக்தனாயும், மேதாவியாயும் இருந்தாலும், அவன் என்னையும் என் பக்தர்களையும் நிந்திக்கிறவனாயிருந்தால், அவன் இந்த சாஸ்த்ரத்தைக் கையால் தொடக்கூட ஒத்துக்கொள்ளக்கூடாது. வளர்த்துவ தென்? நிந்தகன் ஸ்ருஷ்டிகர்த்தாவான ப்ரஹ்மதேவனுக்கு ஸரியான யோக்யதை படைத்தவனாய் இருந்தபோதிலும், வேடிக்கையாய்க் கூட அவனுக்கு நீ இந்த சாஸ்த்ரத்தைச் சொல்லிவைக்கத்தகாது. ஆகவே தபஸ்ஸென்னும் பெரும் பாறைகளைக்கொண்டு அடிப்படையை ஏற்படுத்தி, அதன்மேல் குருபக்தியைக்கொண்டு மேடை ஏற்படுத்தி அதற்குமெல் ச்ரவணேச்சை என்னும் ஸதா திறந்து கிடக்கும் கதவை வைத்து, அதற்குமேல் அநிந்தை என்னும் ரத்நத்தை கலசமாய்வைத்து, இவ்விதம் அமையும் பக்தன் என்ற ஓர் கோவிலுக்குள் அதிபரிசுத்தமான கீதையென்னும் ரத்நலிங்கத்தை ப்ரதிஷ்டை செய்து வைப்பாயாகில், நீ இவ்வுலகில் எனக்கு ஸமானமான கீர்த்திபெற்று வாழ்வாய்.

य इदं परमं गुह्यं मद्भक्तेष्वभिधास्यति ।
भक्तिं मयि परां कृत्वा मामेवैष्यत्यसंशयः ।।६८।।

ய இமம் பரமம் குஹ்யம் மத் பக்தேஷ் வபிதாஸ்யதி।
பக்திம் மயி பராம் க்ருத்வா மாமே வைஷ்யத் யஸம்ஶயः॥ 68

ஸத்பாத்ரத்தில் இந்த கீதையை வினியோகம் செய்திறவன் தேஹாவஸானத்தில் அடையும் பலன்.-

அகார உகார மகாரம் என்ற மூன்று மாத்ரைகளின் வயிற்றில் ஓம் என்ற ஒரே அக்ஷர ரூபமாய் அடைந்துகிடந்து ஸங்கடப்பட்டுக் கொண்டிருந்த வேதத்தின் வித்தாகிய

ப்ரணவம், கீதை என்ற வ்ருக்ஷமாய் விஸ்தாரம் அடைந்து. அந்த வேதத்தின் பூக்களும் பழங்களுமாகிய காயத்ரீ இந்த கீதையின் ச்லோகங்களாயிற்று. ஆகவே இந்த கீதையே ஓர் ரஹஸ்யமான மந்த்ரம். தாயைக்காட்டிலும் வேறு ஜீவனோபாய மற்ற குழந்தையுடன் அதின் தாயைச் சேர்த்துவைப்பதுபோல், எவர்கள் இந்த கீதையை என்னுடைய பத்தர்களுக்கு அதிச்ரத்தையோடு உபதேசித்து, அவர்களோடு சேர்த்துவைப்பார்களோ, அவர்கள் தேஹ்நாவஸாநத்தில் என்னுடன் ஒன்று பட்டுப்போவார்கள். .

न च तस्मान्मनुष्येषु कश्चिन्मे प्रियकृत्तमः ।
भविता न च मे तस्मादन्यः प्रियतरो भुवि ।। ६९ ।।

ந ச தஸ்மான் மனுஷ்யேஷு கஶ்சின் மே ப்ரிய க்ருத்தமः ।
பவிதா ந ச மே தஸ்மா தன்யः ப்ரியதரோ புவி ॥ 69

அவன் இவ்வுலகில் இருக்கும்போது எனக்கு அத்யந்த ப்ரியனாகிறான்

அவன் தேஹத்தோடிருக்கும் போது அதை தன்னோடு ஒட்டியிராத ஓர் நகையைப்போல் தரித்துக்கொண்டிருந்து, எனக்கு ஸர்வவிதமாயும் மிக்கவும் ருசித்தவனாயிருப்பான். எவன் கீதையை என்னுடைய பக்தஜநங்களுடைய கோஷ்டியில் எடுத்துச்சொல்வானோ அவன் ஞானி என்றும், தபஸ்வீ யென்றும், கர்மடன் யென்றும், சொல்லப்படு மவர்களைக் காட்டிலும் மிக்கச் சிறந்தவனாய் எனக்குத் தோன்றுவதால், அவன்மேல் எனக்கு ஏற்படும் ப்ரேமை உலகில் மற்றொருவர்மீதும் ஏற்படுவதில்லை. என்னிடத்தில் அவனுக்கு ஏற்பட்டிருக்கும் ப்ரேமையின் கார்யமாய் மனஸின் சாஞ்சல்யமற்றுப் போனவனாய் அவன் கீதையை எடுத்து உபந்யஸிக்கும்போது, ஸாதுக்கள் ஸபைக்கு விசேஷித்த சோபையைக் கொடுக்கும் ஆபரணம் ஆவான்.

அப்பொழுது அவனை அந்த பக்தகோஷ்டி என்ற உத்யான வனத்தில் ப்ரவேசித்த வஸந்த ருதுவோ என்று சொல்லும்படியாயிருக்கும்; எனென்றால் ச்ரோதாக்களின் ரோமாஞ்சம் (மயிர்க்கூச்சல்) மரங்களின் துளிர்களாய், அவர்கள் தேஹத்தில் ஏற்படும் கம்பம் (நடுக்கம்) மந்தமாருதத்தால் ஏற்படும் மரங்களின் அசைந்தாடுதலாய், அவர்கள் கண்களினின்று பெருகும் ஆநந்தபாஷ்பம் புஷ்பங்களினின்று பெருகும் ஸுகந்தம் நிறைந்த நீராய்க்

காணப்படும். என்னுடைய பக்தஜநங்களின் கோஷ்டியில் நின்றுகொண்டு, தன் னாசையை முழுவதும் என்னுடைய ஸ்வரூபத்தில் வைத்துப் போட்டு கீதையின் ச்லோகங்கள் என்ற ரத்நங்களைமழைபோழிவதுபோல் பொழிந்து, சகோரம் சந்த்ரோதயத்தைப் பார்த்துத் தன் ஜந்மம் ஸாபல்யமாயிற் றென்றெண்ணி ஆநந்தப்படுவதுபோலும், மயில் கூவவும், ஒ வென்று சொல்லிக்கொண்டு நீருண்டமேகம் வந்தால், அது ஆநந்தப்படுவதுபோலும், அந்த கோஷ்டியில் உள்ள அனைவரையும் அவன் ஆநந்தப்படச்செய்வான். அவனைப்போல் என் ப்ரீதிக்கு பாத்ரமான வெறோருவன் முற்காலத்திலிருந்ததாயாவது, இப்போ திருக்கிறதாயாவது, இனி உண்டாகப்போவதாயாவது, கிடைப்பானா வென்று நான் தேடிப்பார்த்தும், என் கண்ணுக்கு அப்படிப்பட்ட ஒருவன் புலப்படவில்லை. அப்பா அர்ஜுநா, கீதையை என் பத்தர்களுக்குப் பரிமாறிவைக்கிறவன் விஷயத்தில் எனக் கிவ்வளவு ப்ரேமை ஏற்பட்டிருக்கிறது.

अध्येष्यते च य इमं धर्म्यं संवादमावयोः ।
ज्ञानयज्ञेन तेनाहमिष्टः स्यामिति मे मतिः ।।७०।।

அத்யேஷ்யதே ச ய இமம் தர்ம்யம் ஸம்வாத மாவயோ: ।
க்ஞான யக்ஞேன தேநாஹமிஷ்ட: ஸ்யாமிதி மே மதி: ॥ 70

இந்த சாஸ்த்ரத்தைப்படிப்பதால் ஏற்படும் பலன்.-

நானும் நீயும் சேர்ந்து ஸம்வாதம் செய்ததால் ஏற்பட்ட இந்த சாஸ்த்ரத்தால் மோக்ஷதர்மம் என்ற ஒன்று இவ்வுலகில் பிறந்ததாயிற்று. ஸகல புருஷார்த்தத்தையும் ஸாதித்துக்கொடுக்கும் திறமைபடைத்த நம்முடைய ஸம்வாதரூபமான இந்த கீதையை, பதங்களின் அர்த்தவிசாரம் செய்யாமல், கேவல பாராயணமாக, எவன் படித்துக்கொண்டிருப்பானோ, அவன் ஞானம் என்னும் அக்நியை நன்றாய் ஜ்வலிக்கும்படி செய்துகொண்டு, அதில் மூல அவித்யையை ஆஹுதி செய்துவிட்டு, பரமாத்மாவாகிய என்னை ஸந்தோஷப்படுத்தி வைத்தவன் ஆவான். கீதார்த்தத்தை ஆதியோடந்தமாய்த் தெரிந்துகோண்ட ஞாநிகள் எந்த யோக்யதையை அடைநதவர்கள் ஆகிறார்களோ, அதேயோக்யதையை, கீதையைப் பாடுகிறவர்களும் வர்ணிக்கிறவர்களும் அடைந்துவிடுகிறார்கள், கீதையின் அர்த்தத்தை நன்றாய் விசாரித்தறிந்தவனுக்கு என்ன பலன் கிடைக்கிறதோ, அதே பலன் அதை அர்த்தவிசாரம்

செய்யாமல் படிக்கிறவனுக்கும் கிடைத்துப்போகிறது. ஏனென்றால் கீதை என்னும் தாய்க்கு அறிவுடைய குழந்தைகள் என்றும் அறிவில்லாத குழந்தைகள் என்றும் ஓர் வித்யாஸம் இல்லை.

श्रद्धावाननसूयश्च शृणुयादपि यो नरः ।
सोऽपि मुक्तः शुभाँल्लोकान्प्राप्नुयात्पुण्यकर्मणाम् ।।७१।।

ஶ்ரத்தாவானனஸூயஶ்ச ஶ்ருணுயாதபி யோ நர: ।
ஸோ(பி முக்த: ஶுபாம்ல்லோகான்ப்ராப்நுயாத்புண்யகர்மணாம்॥71

இந்த கீதையை ச்ரவணம் பண்ணுவதின் பலன் :

அன்றியும் எதையும் நிந்தை செய்வதை யொழித்துவிட்டு, சுத்தமான ஆஸ்திக்ய புத்தியுடன் கீதையைக் கேட்கும் விஷயத்தில் ச்ரத்தை பாராட்டினவனாய் எவன் இருப்பானோ, அவன் காதில் கீதையின் அக்ஷரங்கள் நுழைந்தனவோ, இல்லையோ, அப்போதே அவன் பாபங்கள் அனைத்தும் அவனை விட்டு ஓடிப்போகின்றன. ஓர் காட்டில் நெருப்பு பற்றிக்கொண்ட மாத்திரத்தில் அதில் வஸித்துக் கொண்டிருக்கும் பக்ஷிகளும், மற்ற ஜந்துக்களும், தூரமாய் விலகிப்போவதுபோலும், அல்லது உதயாசலத்தின் மேல் ஸூர்யன் உதயமான மாத்ரத்தில், ஆகாசத்தில் இருந்த இருட்டனைத்தும் மறைந்துபோவது போலும், ஒருவன் செவியின் த்வாரத்தில் கீதை சப்திக்கத் தொடங்கின மாத்ரத்தில், ஸ்ருஷ்டியின் ஆரம்பத்திற்கு முந்தின காலம் முதற்கொண்டு இது வரைக்கும், அவன் தேடிக்கொண்ட பாபங்களனைத்தும் இருந்த இடம் தெரியாமல் நாசமாய்ப் போகின்றன. அதினால் அவன் ஜந்மபரம்பரை முழுவதும் சுத்தம் செய்யப்பட்டுப்போய், அவனுக்கு சுத்தமான புண்யங்களும் உண்டாய் அத்யுத்தமமான பலன்களும் ப்ராப்தமாகின்றன.

இந்த கீதையின் எத்தனை அக்ஷரங்கள் ஒருவன் காதில் விழுந்து அவன் அந்தரங்கத்தில் ப்ரவேசிக்குமோ அத்தனை அச்வமேதங்களை அவன் செய்துமுடித்தவன் ஆய்விடுகிறான். ஆகவே ச்ரவணத்தினாலேயே பாபங்கள் போய், புண்யங்களும் மிக்கப்பெருகி, முடிவில் ஸ்வர்க்கராஜ்யத்தின் போகங்களனைத்தும் அவனுக்குக் கிடைத்துப்போகின்றன. இப்படி அவன் அடையும் ஸ்வர்க்கபோகம், என்னிடத்தில் வந்துசேர அவன் புறப்பட்ட வழியில் அவனுக்கு ஏற்படும்

முதல் மண்டபப்படியே ஆய், அங்கு வேண்டுமென்ற ஸுகத்தை அவன் புசித்துவிட்டு, பின்பு அவன் என்னிடமே வந்து சேர்ந்து, என்னோ டொன்றுபட்டுப்போகிறான். இந்த கீதையைக் கேட்கிறவனுக்கும் படிக்கிறவனுக்கும் மஹாநந்தரூபியான நானே பலனாய்க் கிடைத்துப் போகிறேன். வளர்த்தி வளர்த்திச் சொல்வதென்? இது இருக்கட்டும். எவனுக்காக இந்த கீதை உண்டாயிற்றோ, அப்படிப்பட்ட உனக்கு இந்த விஸ்தாரமான சாஸ்த்ரம் என்ன நன்மையைச் செய்து வைத்ததோ அதை இப்போது உன்னிடத்தில் விசாரித்தறிந்து கொள்ள வேண்டும்.

कच्चिदेतच्छ्रुतं पार्थ त्वयैकाग्रेण चेतसा ।
कच्चिदज्ञानसम्मोहः प्रनष्टस्ते धनञ्जय ।।७२।।

கச்சிதே தச் ச்ருதம் பார்த்த தவ்யை காக்ரேண சேதஸா ।
கச்சிதக்ஞான ஸம்மோஹ: ப்ரநஷ்டஸ்தே தனஞ்ஜய ।। 72

இந்த கீதையால் அர்ஜுநனுக்கு ஏற்பட்ட நன்மையை பகவான் விசாரித்தல் :

ஆகவே இந்த சாஸ்த்ரத்தின் ஸித்தாந்தம் முழுவதையும் ஏகாக்ரமான சித்தத்துடன் கேட்டறிந்துகொண்டாயா, சொல். நான் எந்த விஷயங்களை எவ்விதமாய் உன் காதில் போட்டுவைத்தேனோ, அவ்விஷயங்கள் அப்படியே உன் அந்தக் கரணத்தில் ப்ரவேசித்துக்கொண்டனவா அல்லது அவை நடுவழியில் சிந்திப்போயினவா? அல்லது அவற்றை நீ உபேக்ஷை செய்து ஒதுக்கிவைத்து விட்டாயா? அல்லது அவற்றை நான் சொல்லிவைத்தப்படியே நீ உன் அந்தரங்கத்தில் சேர்த்துவைத்துக் கொண்டாயா? இதை நான் சீக்கிரம் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். அப்படி நீ நான் சொன்னதனைத்தையும் மனதில் வாங்கி வைத்துக்கொண்டாயேயானால், உன்னுடைய அஞ்ஞான கார்யமாக உனக்கு முன் ஏற்பட்டிருந்த அறிவுகேடு இன்னமும் இருந்துகொண்டிருக்கிறதா? இல்லையா? மிகவும் வளர்த்திக் கேட்பதென்? உன்னிடத்தில் கர்மாகர்மங்கள் இருப்பதாய் நீ அறிகிறாயா என்ன?

ஸ்வாநந்தா நுபவமே ஓர் பெருவெள்ளமாய் ஓட, அதில் முழுகிப்போய் கரைந்துகொண்டிருந்த அர்ஜுநன், இந்த ப்ரச்நத்தினால் த்வைதபாவத்துக்குக் கொண்டுவரப் பட்டவனாய் பார்த்தன் ஸம்பூர்ணமாய் ப்ரஹ்மமாய்ப்போன

நிலையில் நின்றுகொண்டிருந்தான். ஆனால் மேலே நடக்கவேண்டிய கர்மங்கள் நடந்தேறுவதற்காக பகவான், அர்ஜுனன் உலகமர்யாதையைக் கடந்து அந்நிலையில் நின்று போவதற்கு, உடன்படவில்லை. இல்லாவிட்டால் ஸர்வஜ்ஞனான பகவானுக்குத் தான் செய்துவைத்த கார்யம் இன்னதென்று தெரியாமற் போயிற்றா? ஆகையால் நான் சொன்ன அபிப்ராயத்தைக் கொண்டவராய், பகவான் கீழ்ச் சொல்லியபடி அர்ஜுனனை வினவினார். இப்படி ஓர் ப்ரச்நத்தைச் செய்து, அர்ஜுனனிடத்தில் இல்லாததாய்ப்போன அர்ஜுநபாவத்தைத் திரும்பவும் ஏற்படுத்திவைத்து, அவனுக்கு ஏற்பட்டிருந்த பூர்ணத்வத்தை அவனே சொல்லும்படி செய்து வைத்தார்.

அர்ஜுனனுடைய ப்ரஹ்மபாவம் கலைதல் :

க்ஷீராப்தியினின்று வெளிப்பட்டு, ஆகாசத்தில் தன்னுடைய காந்தியின் திரளால் சோபிதனாய், வேறாய்த் தோற்றிக்கொண்டும் வேறாய்த் தோற்றாதவனாயும், உதயமாகும் பூர்ண சந்த்ரனைப்போலும், தான் ப்ரஹ்மம் என்பதையும் மறந்து, ஜகத்முழுமையும் ப்ரஹ்மமே என்பதையும் மறந்து, தான் முன் ப்ரஹ்மமாய்ப்போயிருந்தது கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்துபோய்க் கொண்டு, ப்ரஹ்மபாவம் கலைக்கப்பட்டுக் கொண்டும் திரும்பவும் வந்து வ்யாபித்துக் கொண்டும், இவ்விதம் மிக்க கஷ்டப்பட்டு தான் அர்ஜுனன் என்றறியும் நிலைக்கு அர்ஜுனன் திரும்பவும் வந்து சேர்ந்தான். பின்பு நடுங்கிக்கொண்டிருக்கும் கையாற்றன் தேஹத்தைத் தடவி ரோமாஞ்சத்தை அடங்கிப்போகச் செய்து, வியர்வையை துடைத்துக்கொண்டு, ப்ராணவாயுக்கள் தடபுடல் பட்டுப்போய்த் தள்ளாட்டம் கொண்ட தன் தேஹத்தைக் கீழ்விழுந்துபோகாமல் தேஹத்தினாலேயே தடுத்துத் தாங்கிக்கொண்டு, தன்னை வ்யாபித்துக்கொண்ட ஸாத்விகபாவத்தை ஒடுங்கி மாறிப்போகச் செய்து கொண்டு, இரண்டு கண்களினின்று மேன்மேலும் பெருகும் ஆநந்தக் கண்ணீரை அடக்கிக்கொண்டு, தொண்டையை அடைத்துக் கொண்டு மிக்க வ்ருத்தி அடைந்துகொண்டிருந்த அநேகவிதப் பட்ட ஔத ஸௌக்யத்தை (அடங்கா ஆசை, ப்ரேமை) ஹ்ருதயத்திலியே ஒடுக்கிவைத்துக் கொண்டு, வாக்கின் தழுதழுத்தலை ப்ராணசக்தியின் பலத்தால் ஸரிப்படுத்திக்கொண்டு, தடுமாறிப்போன மூச்சின் ஓட்டத்தை ஸமப்படுத்திநிலைத்துக்கொண்டு, அவன் பின் வருமாறு சொல்லத்தொடங்கினான்.

अर्जुन उवाच ।
नष्टो मोहः स्मृतिर्लब्धा त्वत्प्रसादान्मयाच्युत ।
स्थितोऽस्मि गतसन्देहः करिष्ये वचनं तव ।। ७३ ।।

அர்ஜுன உவாச -

நிஷ்டோ மோஹ: ஸ்ம்ருதிர்லப்தாத்வத் ப்ரஸாதான் மயாऽச்யுத।
ஸ்திதோऽஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசனம் தவ ॥ 73

அர்ஜுனனுடைய உத்தரம் :

தேவரீர் என்னைப் பார்த்து, உனக்கு புத்திமோஹம் இன்னமும் ப்ரியமாயிருக்கிறதா என்று கேட்டீர் அல்லவா. அந்த மோஹம் தன் குடும்பத்தோடு என்னை விட்டுப் புறப்பட்டு, தான் இருக்க வேண்டிய ஊர்போய்ச் சேர்ந்து விட்டது. ஸூர்யன் நெருங்கி நம்மிடம் வந்துசேர்ந்த பின்னும் இருட்டு நம் கண்ணில் பட்டுக்கொண்டிருக்கிறது. என்ற வார்த்தையை எந்த ஊரில் ஒத்துக்கொள்வார்கள்; அப்படியே ஹே க்ருஷ்ணராயா. நீர் எங்கள் கண்கள் பார்க்கும் படியாய் எதிரில் நிலைகொள்ளல் என்பது எந்தக் கார்யத்தை ஸாதித்து வைக்கப் போதாததாகும். எந்த ஞானமானது எவ்வித ஸாதநாநுஷ்டானத்தாலும் எவரிடத்திலிருந்தும் அறிந்துகொள்ள முடியாதோ அதை என்னிடத்திற் தாயைக்காட்டிலும் மிகுந்த ப்ரேமையுள்ள வராய் நீர் விஸ்தாரமாய்ச் சொல்லிவைத்தீர், பின்பு என்னிடத்தில் மோஹம் இருக்கிறதா இல்லையா என்று இப்போது ஏன் கேட்கிறீர்? நான் நீராக ஆய்ப்போய் க்ருதக்ருத்யன் (செய்ய வேண்டிய வேலையை முடித்துக் கொண்டவன்) ஆய்விட்டேன், பாரீர், நான் என்னை அர்ஜுனன் என் றெண்ணிக்கொண்டு, தேஹாபிமானத்திற் சிக்கிக்கிடந்தேன்.

அப்படிப்பட்ட நான் நீராய்போய் முக்தன் (கட்டினின்று விடு பட்டவன்) ஆய்விட்டேன்; அப்படியாய் விட்டபின், நீர்கேட்டு விசாரிப்பதற்கும் நான் உமக்குச் சொல்வதற்கும் இடம் இல்லாமற் போய்விட்டது. உம்முடைய க்ருபையால் எனக்குத் கிடைத்துப்போய்விட்ட ஆத்மஸ்வரூபஞானத்தால் மோஹம் என்பது ஸமூலமாய் நாசமாய்விட்டது; முன் என்னிடம் இருந்த எந்த த்வைதபாவத்தால், ஒன்றைச் செய்ய வேண்டும், ஒன்றைச் செய்யக்கூடாது என்று எனக்குத் தோன்றிக் கொண்டிருந்ததோ, அது இப்போது இல்லாமற்போய்

எங்கு பார்த்தாலும் நீரே இருப்பதாய் எனக்குத் தோன்றிப்போய், வேறோர் வஸ்து இருப்பதாய்த் தோன்றவில்லை. இந்த விஷயத்தில் எனக்கோர் ஸந்தேஹமும் இல்லாமற் போயிற்று; எந்தஸ்வரூபத்தில் கர்மம் என்பதே இல்லையோ, அதுவாகவே நான்ஆய்ப்போய்விட்டேன்; நீராய் இருக்கை என்ற என் ஸ்வரூபத்தை நான் அடைந்துவிட்டபடியால், எனக்கு இனிச் செய்ய வேண்டியதென்று ஒன்று இல்லாமற் போய்விட்டது.

ஹே ப்ரபுவே இனி உம்முடைய ஆஞ்ஞைப்ரகாரம் நடப்பதைத்தவிர எனக்கு வேறொன்று மில்லை. எந்த த்ருச்யத்தின் தர்சனமான உடன் த்ருச்ய மென்பதே இல்லாமற் போகிறதோ, எந்த இரண்டாவதான வஸ்து இரண்டாவது என்று தோன்றும் தோற்றத்தையே விழுங்கிவிடுமோ, எது ஒன்றாகவே இருந்துகொண்டு எல்லா இடங்களையும் வ்யாபித்துக்கொள்கிறதோ, எதொன்றின் ஸம்பந்தம் ஏற்பட்டபின், பந்தமே இல்லாமற் போகிறதோ, எதொன்றின் விஷயமான ஆசை ஏற்பட்டவுடன், ஆசை என்பதே இல்லாமற் போகிறதோ, எதொன்று கிடைத்தமாத்ரத்தில் உலகனைத்தும் தன் ஸ்வரூபமாக ஆய்ப்போய் கைக்குக் கிடைத்து விட்டதாய் விடுகிறதோ, எது ஒன்று, பாலுடன் பிரைபோல், என்னுடன் ஸம்பந்தப்பட்டு என்னை ஒண்டியாகச் செய்துவைத்ததோ, எது ஒன்று கிடைத்து விட்டபின் அத்வைதஞானம் என்பதையே அதின் மேல் ஆரத்தியாகச் சுற்றி எறிந்துவிட வேண்டுமோ, அந்த என்னுடைய ஆராத்யலிங்கமான குருமூர்த்தியான நீர் எனக்கு கிடைத்துப்போன பின், நானே ப்ரஹ்மமாய்ப்போய், க்ருத்ய மென்றும் அக்ருத்யம் என்றும் உலகில் வழங்கும் ஓர் வ்யவஹாரத்தை முற்றிலும் ஒழித்துக் கொண்டு, உம்முடைய ஸேவையையே எல்லையற்றபடியாயும் ஓய்வொழிவில்லாமலும் செய்துகொண்டிருப்பதே அல்லவா எனக்கு க்ருத்யமாக ஏற்பட்டுவிட்டது.

கங்கையானது ஸமுத்ரத்தை ஸேவிக்கச் சென்று அதை அடைந்தமாத்ரத்தில், ஸமுத்ரமாய்ப் போய்விடுவதுபோலும், நீர் எனக்கு உம்முடைய ஸ்வரூபத்தின் ஜ்யேஷ்டாம்சத்தை (ஓர் தகப்பனுடைய புத்ரர்கள் தகப்பன் சொத்தைப் பகுத்துக் கொள்ளும் போது, மூத்தவனுக்கு மற்றவர்கள் பாகத்தைக் காட்டிலும் அதிகமான ஓர் பாகம் கொடுப்பது வழக்கம்; அந்த அதிகமான பாகத்துக்கு ஜ்யேஷ்டாம்சம் என்று பெயர்) எனக்குக் கொடுத்துவிடுகிறீர், ஸ்ரீக்ருஷ்ணா. அப்படிப்பட்ட நீர் இதர பதார்த்தங்களின் ஸஹாயத்தை வேண்டாததான

பூஜைக்கு பாத்ரனான ஸத்குருவாய் அமைந்து எனக்கு ப்ரஹ்மபாவத்தை ஏற்படுத்திவைத்தீரே, இதே மஹோபகரமாய்த் தோன்றுகிறது. எனக்கும் உமக்கும் நடுவில் குறுக்காக ஏற்பட்டிருந்த பேதபாவம் என்னும் தடையை நீர் போக்கிவைத்து நான் உமக்கு ஸேவை செய்து ஸுகப்படும்படி செய்துவைத்தீர். ஆகவே ஸகல தேவாதிதேவர்களுக்கு ராஜாவான உம்முடைய ஆஞ்ஞையைச் செய்ய நான் ஸித்தமாயிருப்பதால், நீர் எனக்கு ஏதேனும் ஓர்வேலை செய்ய நான் ஸித்தமாயிருப்பதால், நீ எனக்கு ஓர்வேலை செய்ய ஆஞ்ஞை செய்யவேண்டும். அர்ஜுநனுடைய இவ்வுத்தரத்தைக்கேட்டு பகவான் மிக்க ஆநந்தத்தால் மெய்மறந்தவராய் கூத்தாடிக் கொண்டு எல்லா லாபங்களைக் காட்டிலும் இது எனக்கும் பெருத்த லாபமாயிற்றென்றார். குறைவினின்று விடுபட்டுப்போன பூர்ணசந்த்ரனாகிய தன் குமாரனைப் பார்த்து, கம்பீரமான பாற்கடல் பொங்கி கரை புரளுவதில்லையா?

இப்படி ஸம்வாதம் என்னும் கல்யாண மேடைமேல் உட்கார்ந்துகொண்டு, இவ்விருவருக்கும் (ஸ்ரீக்ருஷ்ணன் அர்ஜுனன் ஆகிய இருவர்களுக்கும்) மனோபாவத்தால் கல்யாணமாய் விட்டதைப் பார்த்து, ஸஞ்ஜயன் ஆநந்தத்தில் லயித்துப்போனவனாய், இப்படி ஸ்ரீக்ருஷ்ணன் அர்ஜுநனை தன்னிஷ்டப்ரகாரம் நடக்கும்படி செய்துவைத்துக் கொண்டதால் பகவான் க்ருபாநிதி என்று சொல்லத்தக்கவர்களுக்குள் மிக்கச் சிறந்த ராஜாவானார் என்று சொன்னான். அப்படி அத்யந்த மடைந்திருந்த அந்த நிலையில், அவன் த்ருராஷ்டிரனைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னான். ஸ்ரீவ்யாஸபகவான் நம்மிருவரையும் எவ்வளவு நன்றாய்க் காப்பாற்றிவைத்தார்? ஸம்ஸார விஷயத்திலேயே கண்பார்வை யற்றவனாய் இருந்த உன்னை அவர் இன்று ஞானத்ருஷ்டியின் வ்யவஹாரத்துக்குக் கொண்டுவந்து வைத்தாரே! ரதத்தை ஓட்டிவைப்பதற்காக குதிரைகளின் கடிவாளங்களைக் கையிற்பிடித்துக் கொண்டிருக்கு மந்த ஸ்ரீக்ருஷ்ணனுடைய இந்தப் பேச்சுகளனைத்தையும் நாம் கேட்கலானோம்.

அன்றியும் யுத்த மதிகோரமாய் நடந்துகொண்டிருக்கும் ஓர் ஸமயத்தில், தானே இருபக்கத்திலும் போர் செய்கிறவர்களாய் அமைந்து, இருதிறத்தாருடைய ஜயாபஜயத்தை அநுபவித்துக் கொள்ளும்படி ஏற்பட்ட ஓர் ஸங்கடத்தில், ஸ்ரீக்ருஷ்ணன் அர்ஜுநனுக்கு எவ்வளவு உத்தமமான அநுக்ரஹம் செய்து

அவனை ப்ரஹ்மாநந்தத்தை அநுபவிக்கச் செய்துவைத்தார். இப்படி ஸஞ்ஜயன் சொல்ல, த்ருதராஷ்ட்ரனுடைய மனது கொஞ்சங்கூட இளகாமல் இருந்துவிட்டதால், ஸஞ்ஜயனுடைய வார்த்தைகள் ஸாமான்ய கற்பாறையின் மேல் ப்ரகாசித்த சந்த்ரிகை ஆயிற்று, இதைப் பார்த்தும் ஸஞ்ஜயன் த்ருதராஷ்டிரராஜனை உத்தேசிக்காமலே, தனக்கு ஏற்பட்டிருந்த ஆநந்தத்தின்கார்யமாய் மேலும் பின்வருமாறு சொன்னான். தன் ஆநந்தத்தின் வேகத்துக்கு வசப்பட்டு செய்வதின்னதென்று தெரியாதவனாய், த்ருதராஷ்டிரனைப் பார்த்து, அவன் பேசினபோதிலும் தன் வார்த்தைகள் த்ருதராஷ்டிரனிடத்தில் பயன்படாமற் போகும் என்பதை அவன் நன்றாய் அறிந்தே இருந்தான்.

सञ्जय उवाच ।

इत्यहं वासुदेवस्य पार्थस्य च महात्मनः ।

संवादमिममश्रौषमद्भुतं रोमहर्षणम् ।। ७४ ।।

ஸஞ்ஜய உவாச -

இத்யஹம் வாஸுதேவஸ்ய பார்தஸ்ய ச மஹாத்மன: ।
ஸம்வாத மிம மஶ்ரௌஷ மத்புதம் ரோமஹர்ஷணம் ॥ 74

ஸஞ்ஜயனுடைய உத்காரம் :

(ஒருவன் ஸுக துக்காதி மனோ விகாரங்களுக்கு வசப்பட்டவனாய் தனக்குள்ளடக்கி வைத்துக் கொள்ள முடியாமற் சொல்லும் வார்த்தைகள்) பின்பு அவன் த்ருதராஷ்டிரனைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னான். இப்படி உன் தம்பியின் மகன் சொன்னதைக் கேட்டு பகவான் மிக்க ஸந்தோஷ மடைந்தார். கிழக்கு ஸமுத்ரமும் மேற்கு ஸமுத்ரமும் பெயரினால் மாத்ரம் வேறுபட்டவையாயிருந்து கொண்டு, ஸ்வரூபத்தில் இரண்டும் முற்றிலும் நீராகவே இருப்பதுபோலும், ஸ்ரீக்ருஷ்ணனும் பார்த்தனும் தேஹத்தால் வேறுபட்டவர்களாய் இருந்துகொண்டு அவர்கள் ஸ்வரூப நிலையால் இருவரும் ஒன்றுபட்டுப்போய் பேதம் அற்றுப்போனவர்களாய் இருந்தார்கள். மிக்க சுத்தமாய்த் துடைத்து வைக்கப்பட்ட இரண்டு கண்ணாடிகள் ஒன்றின் முன் னொன்று வைக்கப்பட்டால், அவ்விரண்டும் பரஸ்பரம் ஒன்றினுடைய ஸ்வரூபத்தை மற்றொன்று தனக்குள் பார்த்துக் கொள்ளுதல்போலும், பகவான் தன்னுடன் கூட

அர்ஜுநனைத் தன் ஸ்வரூபத்துக்குள்ளும், அர்ஜுனன் தன்னுடன் கூட பகவானைத் தன் ஸ்வரூபத்துக்குள்ளும் பார்த்துகொள்கிறவர்களாய் அவர்கள் ஆய்விட்டார்கள். தங்களைக்காட்டிலும் வேறொன் றிருப்பதாக அறியாதவர்களாய், அவர்கள் ஒன்றுபட்டுப்போய் நின்றார்கள். பேதம் என்பது அற்றுப்போனபின் ஒருவன் கேட்பதற்கும் மற்றொருவன் உத்தரம் கொடுப்பதற்கும் எப்படி நேரும். அப்படியாகாமல் பேதமே நிலைத்திருந்தால் இருவரும் ஸம்பாஷித்த தால் ஏற்பட்ட ஐக்யாநுபவஸுகம் எப்படிக் கிடைக்கும்.

ஆகையால் இருவரும் வெவ்வேறாய் நின்று அர்ஜுநனும் பகவானும் ஒருவரோடொருவர் ஸம்பாஷணம் செய்துகொண்டிருக்கும் போதே அவர்கள் நடுவில் இருந்த த்வைதபாவம் மறைந்து போய், அவர்கள் ஒன்றுபட்டுப் போனார்கள். இப்படி ப்ரஹ்மைக்ய பாவத்தை யுண்டாக்கி வைக்கும் இவ்விருவர்களுடைய ஸம்பாஷணத்தை நான் கேட்டேன். இரண்டு கண்ணாடிகள் ஒன்றின் முன் னொன்று நிலைபெற்றால் எது எதைப் பார்க்கிறது என்று நாம் சொல்லலாம்? இரண்டு தீபங்கள் ஒன்றின் முன் ஒன்று வைக்கப்பட்டிருந்தால், எது எதை ப்ரகாசம் செய்துவைக்கிற தென்று சொல்லமுடியும்? இரண்டு ஸூர்யர்கள் ஒருவர் முன் ஒருவராய் உதிக்கப்பெற்றால், எவன் ப்ரகாசகன் என்றும் எவன் ப்ரகாச்யன் என்றும் சொல்லமுடியும்?

அப்படியே ஸ்ரீக்ருஷ்ணனும் அர்ஜுநனும் ஸம்வாதம் செய்து, முடிவில் இருவரும் ஸமரஸப்பட்டுப் போனதால் ஓர் நிலையை அடைந்தார்கள். இதை நான் மனஸில் நிறுத்தி, இதை த்யானம் செய்துகொண்டிருக்கும்போதே த்யானம் செய்தல் நின்றுபோய், எனக்கும் அவர்களுடைய ஸமரஸப்பட்ட நிலை ஏற்பட்டுப்போகிறது. இரண்டு தடாகங்கள் ஒன்றோடொன்று கலந்து ஒன்றுபட்டுப்போகப் பார்க்கும்போது, ஓர் உப்புக்கட்டி அவற்றை ஒன்றுப்பட்டுப் போவதைத் தடுத்து வைக்கப் பார்த்தால், அந்த உப்புக்கட்டியும் ஓர் நிமிஷத்துக்குள் ஜலமாய்ப் போய்விடுதல்போலும், ஸ்ரீக்ருஷ்ணனும் அர்ஜுநனும் ஒருவரோடு ஒருவர் ஸம்வாதம்செய்து, அடைந்த பேதம் அற்றுப்போன நிலையை நான் மனதில் நிறுத்திவைக்கும் போது, நான் அவர்கள் அடைந்த பேதமற்றநிலையை அடைந்துவிடுகிறேன்.

இப்படி ஸஞ்ஜயன் சொன்னானோ இல்லையோ, அவனை அஷ்டஸாத்விகபாவங்களும் ஆக்ரமித்துக்கொண்டதால்,

அவனுக்கு, தான் ஸஞ்ஜயன் என்ற ஞானம், இல்லாமற்போயிற்று, அவனுக்கு, ரோமாஞ்சம் உண்டாய் சரீரத்தின் தோல் சுருக்கம் கொண்டது, சரீரம் திமிர்த்துப்போய், வியர்வை பெருகி, அவயவங்கள் நடுக்கம் கொண்டன. அத்வயாநந்தா நுபவத்தின் ஆதிக்யத்தால், கண்ணினின்று நீர் ஏராளமாய்ப் பெருகத்தலைப்பட்டு, கண்ணே நீராய் உருகிப் போயிற்றோ என்றெண்ணும்படி யாயிற்று. என்னவோ தெரியவில்லை, ஏதோ ஒன்று வயிற்றில் உண்டாய், அது அங்கே அடங்கி நிற்காமல் தொண்டையில் வந்து அடைந்துக்கொண்டு, ச்வாஸோச்சுவாஸங்கள் தடுமாற்றம் கொண்டு வாக்கும் அர்த்தமும் ஒன்றுபட்டுப்போய், பேசமுடியாமற் போய் விட்டது. வளர்த்துவதென்? எட்டு ஸாத்விகபாவங்களும் ஒன்றோடொன்று இடித்து மோதிக்கொண்டு அவனை ஆக்ரமித்துக்கொண்டு க்ருஷ்ணார்ஜுநர்களுடைய ஸம்வாதாநந்தத்தை அநுபவித்தல் என்ற நாற்சந்தியில்அவனை நிறுத்திவைத்தன. இப்படி ஏற்பட்ட ஸுகம் தானாகவே சாந்தியடையும் ஸ்வபாவம் உள்ளதாகையால், ஸஞ்சயன் பின்பு தானாகவே தன்னுடைய ப்ரஞ்ஞையை அடைந்தவனானான்.

व्यासप्रसादाच्छ्रुतवानेतद्गुह्यमहं परम् ।
योगं योगेश्वरात्कृष्णात्साक्षात्कथयतः स्वयम् ।।७५।।

வ்யாஸ ப்ரஸாதாச் ச்ருதவா னேதத் குஹ்யதமம் பரம் ।
யோகம் யோகேச்வராத் க்ருஷ்ணாத் ஸாக்ஷாத் கதயத: ஸ்வயம் ।। 75

இதுவுமது :

அந்த ஆனந்தத்தின் வேகம் அப்படிக் குறைவு பட்டபின், ஸஞ்ஜயன் பின்வருமாறு சொன்னான். ஐயா எந்த விஷயத்தை உபநிஷத்துக்கள் அறியாம லிருந்துவிட்டனவோ, அவ்விஷயத்தை ஸ்ரீ வ்யாஸருடைய ப்ரஸாதத்தால் நான் கேட்கப் பெற்றேன். அவ்விஷயத்தைக் கேட்டமாத்ரத்திலேயே, ப்ரஹ்மத்வம் ப்ராப்தமாய்ப்போய், நான் நீ யென்ற ஞானமே இல்லாமற் போய்விடுகிறது. எந்த ஸ்ரீக்ருஷ்ணனுடைய ஸ்வரூபத்தில் ஸகல யோகங்களும் தேடிக்கொண்டுவந்துகூடிக்கொள்கின்றனவோ, அந்த ஸ்ரீக்ருஷ்ணனுடைய வாக்யங்களை ஸ்ரீவ்யாஸருடைய க்ருபையால் நான் ஸுலபமாய்க் கேட்கப்பெற்றேன். பகவான் தானே தன்னைக்காட்டிலும் வேறான அர்ஜுநனாய் நடித்துக்கொண்டு அவ்வர்ஜுநனை ஓர் நிமித்தமாய்ச் செய்து

கொண்டு இந்த வாக்யங்களை தனக்குத் தானே சொல்லிக்கொண்டார். அப்படிப்பட்ட வாக்யங்களை என் காதுகள் கேட்கும்படியான பாக்யத்தைப் படைத்தன. இப்படிச் செய்துவைத்த ஸ்ரீகுருவின் ஸ்வதந்த்ரமான ஸாமர்த்யத்தை என்ன வென்று சொல்லித்தீர்வேன்.

राजन्संस्मृत्य संस्मृत्य संवादमिममद्भुतम् ।
केशवार्जुनयोः पुण्यं हृष्यामि च मुहुर्मुहुः ।। ७६ ।।

ராஜன் ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ஸம்வாத மிம மத்புதம் ।
கேஶவார்ஜுனயோ: புண்யம் ஹ்ருஷ்யாமி ச முஹுர்முஹு: ।। 76

ஸஞ்சயனுடைய ஸ்திதி :

இதைச்சொல்லிக் கொண்டிருக்கும் போதே மறுபடியும் ஸஞ்சயன் ஆச்சர்யத்துக்கு வசப்பட்டுப் போனான். அதினால் ஓர் ரத்நத்தின் காந்தி அதற்குள்ளேயே அடங்கிபோனால் எப்படியோ, அப்படியே அவன் மெய்மறந்து போனான். ஹிமவத் பர்வதத்தின்மேல் இருக்கும் தடாகம், சந்த்ரோதயம் ஆனவுடன் பனிக்கட்டியாய்க் கடடிப்போய், மறுபடியும் ஸூர்யோதயத்தால் உருகிப்போவதுபோலும், ஸஞ்ஜயன் இந்த க்ருஷ்ணார்ஜுநஸம்வாதத்தைச் சிந்திக்கும் போதெல்லாம் அவன் தேஹம் பரவசப்பட்டுப்போய் சற்று நேரம் சென்று திரும்பவும் தேஹத்தின் உணர்ச்சியை அடைந்து கொண்டிருந்தான்.

तच्च संस्मृत्य संस्मृत्य रूपमत्यद्भुतं हरेः ।
विस्मयो मे महान् राजन्हृष्यामि च पुनः पुनः ।। ७७ ।।

தச்ச ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ரூபமத்யத் புதம் ஹரே: ।
விஸ்மயோ மே மஹான் ராஜன் ஹ்ருஷ்யாமி ச புன: புன: ।। 77

ஸஞ்சயன் திரும்பவும் ஆச்சர்யப்பட்டுச் சொல்லல் :

பின்பு எழுந்திருந்து நின்றுகொண்டு ராஜனைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னான். ஸ்ரீஹரியின் விச்வரூபத்தைப் பார்த்தும்கூட, ஓர் வியப்புமடையாமலிருக்க உனக் கெவ்விதம் ஸாத்ய மாகிறது. அதைப் பார்க்காதிருக்கும் போது கூட அது காணப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒருவன் அது இல்லையென்று சொன்னால், அப்படி அவன் சொல்வதில்

அது இருந்துகொண்டிருக்கிறது. அதை மறைந்திருத்தல் கூட அதின் ஸ்மரணை ஆகிறது. இப்படி இருக்க, அதினின்று தப்பித்துக் கொள்வது ஸாத்யமா வதில்லை. அந்த ஆச்சர்யகாக்ஷியைப் பார்த்ததும் இது என்ன ஆச்சர்யம் என்று ஆச்சர்யப்படுவதற்குக்கூட ஸாவகாசம் இல்லாதபடியும், என்னைப் பற்றிய அறிவு எனக்கில்லாதபடியும், செய்து வைக்கும் ஓர் ஆச்சர்யவெள்ளம் பெருகிவந்து, என்னை முழுக்கிவிடுகிறது. இப்படி ஸஞ்ஜயன் ஸ்ரீக்ருஷ்ணார்ஜுன ஸம்வாதம் என்னும் ஸங்கம தீர்த்தத்தில் முழுகிவிட்டு, தன் அஹம்காரத்துக்கு தன் மனதில் தர்ப்பணம் விட்டுக்கொண்டிருந்தான். அப்போது ஸஞ்ஜயன் தனக்குள் அடக்கிக்கொள்ள முடியாத, ஆநந்தத்துக்கு வசப்பட்டுப் போனவனாய் மிக்கப் பெருமூச்சு விட்டுக்கொண்டு, "க்ருஷ்ணா, க்ருஷ்ணா" என்றே அடிக்கடி சொல்லத் தலைப்பட்டான்.

மேல்வரும் விஷயத்திற்கு அவதாரிகை:

இப்படி அவனுக்கு ஏற்பட்ட அவஸ்தையின் அல்பாம்சம்கூட அந்தக் கௌரவராஜனுக்கு ஏற்படாமல் இருந்ததால், அந்த ஸஞ்ஜயனுக்கு என்ன ஆநந்தம் உண்டாயிற்றோ அது இப்படிப்பட்டது என்றுகூட அந்த ராஜன் அறியாமலிருக்கவே, அதற்குள் ஸஞ்ஜயன் தனக்கு ஏற்பட்ட பாரவச்யதையைப் (தேஹத்தின் அறிவற்றிருக்கும் நிலையை) போக்கிக்கொண்டான். அப்போது த்ருதராஷ்டிரன் ஸஞ்யனைப்பார்த்துப் பின்வருமாறு சொன்னான். நீ செய்ய வேண்டியது எதுவோ அதை தூரமாக விலக்கி வைத்துவிட்டு, நீ என்னவோ செய்து கொண்டிருக்கிறாயே; வ்யாஸபகவான் உன்னை இங்கே என்ன செய்யச் சொல்லி உட்கார்த்திவைத்தார்? அதற்குக் கொஞ்சம்கூட ஸம்பந்தமில்லாமல் நீ என்னவோ ஒன்றைச் சொல்லிக்கொண்டிருக்கிறாயே. ஓர்காட்டு மனுஷ்யனை ஓர் உத்தமமான அரண்மனையில் கொண்டுபோய் வைத்தால், அவன் பத்துதிக்கையும் பார்த்து, பயந்து பயந்து விழிப்பதுபோலும், போதுவிடிந்தால் ராக்ஷஸனுக்கு ராத்ரியாவது போலும், எவன் எதின் பெருமையை அறியானோ, அவனுக்கு அது பயங்கரமாய்த் தானே தோற்றும். ஆகவே த்ருதராஷ்டிரன் ஸஞ்ஜயன் சொற்களை ஸம்பந்தமற்றவை என்று சொல்வது ந்யாயமாகவே இருந்தது.

த்ருதராஷ்டிரன் ஸஞ்ஜயனைப் பார்த்து எவர்கள் ஜயிப்பார்கள் என்று வினவல் :

அதற்குமேல் அந்த ராஜன், ஸஞ்ஜயனைப் பார்த்து, பின்வருமாறு பேசினான். போனதுபோகட்டும்; இனி யாவது, நீ சொல்ல வேண்டிய விஷயத்தைச் சொல். இப்போது ஏற்பட்டிருக்கும் போரில், எவர்கள் ஜய மடைவார்கள்? என்னுடைய புத்தியில் என்னவோ, அடிக்கடி இப்படியே தோற்றிக் கொண்டிருக்கிறது எப்போதும் துர்யோதனனுடைய ப்ரதாபமே (சத்ருக்களை வருத்தும் சக்தியே) அதிகனத்ததாயிருக்கிறது. அத்துடன் கூட அவன் ஸைனையும், மற்றவர்களுடைய ஸைனையைப்போல் ஒன்றரை மடங்கானதாய் இருக்கிறது. ஆகவே துர்யோதனனுக்கே ஜயம் ஏற்படும், எனக்கென்னவோ இப்படித் தோற்றுகிறது. ஆனால் உன்னுடைய அபிப்ராயம் எப்படி இருக்குமோ, அது எனக்குத் தெரியவில்லை. அது எதுவாய் இருந்தாலும் ஸரியே, அதை உள்ளபடி எனக்குத் தெரிவிக்கவேண்டும்.

यत्र योगेश्वरः कृष्णो यत्र पार्थो धनुर्धरः ।
तत्र श्रीर्विजयो भूतिर्ध्रुवा नीतिर्मतिर्मम ।।७८।।

யத்ர யோகேஶ்வரः க்ருஷ்ணோ யத்ர பார்தோ தனுர்தரः ।
தத்ர ஶ்ரீர்விஜயோ பூதிர் த்ருவா நீதிர் மதிர் மம ।। 78

அர்ஜுனனே ஜயிப்பான் என்று ஸஞ்ஜயன் உத்தரம் :

அதற்கு ஸஞ்ஜயன் பின்வருமாறு சொன்னான். இந்த இருவர்களுடைய பலாபலத்தை எடுத்துரைக்க எனக்குத் தெரியவில்லை. எவனுக்கு ஆயுஸ் ஸுண்டோ, அவன் தான் ஜீவித்திருப்பான் என்பதில் ஸந்தேஹமில்லை. சந்த்ரன் எங்கிருக்கிறானோ, அங்கேயே சந்த்ரிகையுமிருக்கும். பரமசிவன் எங்கேயோ, அங்கேயே அம்பிகையுமிருப்பாள். ஸாதுக்கள் எங்கேயோ, அங்கேயே ஆத்மஜ்ஞானமும் இருக்கும். ராஜா இருக்குமிடத்தில் ஸைனையும், ப்ரேமை இருக்குமிடத்தில் பந்துத்வமும், புகையிருக்குமிடத்தில் நெருப்பும், தயை இருக்குமிடத்தில் தர்மமும், தர்மம் இருக்குமிடத்தில் ஸுகத்தின் உத்பத்தியும், ஸுகோத்பத்தி இருக்குமிடத்தில் புருஷோத்தமனும், இருக்கும். வஸந்தருது ஏற்பட்ட இடத்தில் வனத்தின் சோபையும், வநசோபை எங்கேயோ அங்கே புஷ்பங்களும், புஷ்பங்கள் எங்கேயோ அங்கே தேனீக்களின் கூட்டமும், குரு எங்கேயோ அங்கே ஞானமும், ஞானம்

எங்கேயோ அங்கே ஆத்மஸ்வரூப ஸாக்ஷாத்காரமும், ஆத்மஸாக்ஷாத்காரம் எங்கேயோ அங்கு மனஸ்ஸமாதானமடைதலும், ஏற்படும். பாக்ய மிருக்குமிடத்தில் ஸுகோபபோகமும், ஸுகோபபோகம் எங்கேயோ அங்கே மனக்களிப்பும், இவையெல்லாம் நிற்கட்டும், ஸூர்யன் எங்கேயோ அங்கே ப்ரகாசமும் இருக்கும். அப்படியே ஸகலபுருஷார்த்தங்களும் எவனை ஸ்வாமியாய் அடைந்து நாதன் படைத்தவைகள் ஆகுமோ, அந்த ஸ்ரீக்ருஷ்ணராயர் எங்கே இருக்கிறாரோ, அங்கே லக்ஷ்மீ நிரந்தரமாய் குடிகொண்டிருக்கிறாள். அன்றியும் லக்ஷ்மீ தன்னுடைய பதியான ஸ்ரீக்ருஷ்ணனைச் சேர்த்துக் கொண்டு எவனிடத்தில் இருக்கிறாளோ, அவனுக்கு அணிமாத் யஷ்டஸித்திகளும் தாஸிகள் ஆய்விடமாட்டார்களா? கேவலம் விஜயத்தின் மூர்த்தியான ஸ்ரீக்ருஷ்ணன் எவன் கக்ஷியில் நிலைகொண்டவனானாரோ, அங்கேயே ஜயமும் இருந்து தீரவேண்டும். அர்ஜுநன் என்னவோ விஜயீ என்று ப்ரஸித்தமான பெயர் படைத்தவன்; ஸ்ரீக்ருஷ்ணநாதனோ விஜயமே மூர்த்தீகரித்தவர். அப்படியிருக்க ஜயம் என்பது தன்னுடன் ஸ்ரீயைச் சேர்த்துக் கொண்டு அங்கேயே (அர்ஜுநனிடத்திலேயே) நிச்சயமாய்க் குடி கொண்டிருக்கிறது.

அர்ஜுநனுடைய மேலும் அதிகரித்த பெருமை :

ஸ்வர்க்கம் மோக்ஷம் என்ற இவ்விரு பதங்களும் எவர்களுடைய ஸ்வாதீனப்பட்டிருக்கின்றனவோ, அந்த ஸ்ரீக்ருஷ்ணனும் லக்ஷ்மீதேவியும் எவனுக்குத் தகப்பனும் தாயுமாய்விட்டார்களோ, அவனுடைய ஊரில் முளைத்துப் பயிராகும் மரங்கள் கல்பதருக்களோடு பந்தயம் போட்டுக்கொண்டு, அவற்றை ஜயித்துவிடாமற் போகுமா? அவ்வூரில் சிதறிக்கிடக்கும் கற்களனைத்தும் சிந்தாமணிகளே ஆகும். அவ்வூரின் பூமி முழுவதும் தங்கமே யாய்விடும். அவ்வூரில் ஓடும் நதிகள் அனைத்தும் அம்ருதத்தாலேயே நிறைந்த வையாயிருக்கும். அவன் உளறுதல் முழுமையும் வேதமாகும். அவனே உருவெடுத்த ஸச்சிதாநந்த பரப்ரஹ்மம் என்பதற்குத் தடை யென்ன? ஆகவே எந்தக் கக்ஷியில் லக்ஷ்மீவல்லபனான ஸ்ரீக்ருஷ்ணன் நிற்கிறாரோ, அந்தக்கக்ஷியிலேயே ஸர்வஸித்திகளும் ஸ்வதஸ்ஸித்தமாய் (தாமே ஏற்பட்டவையாய்) இருக்கின்றன என்பதைத்தவிர வேறொன்றும் எனக்குத் தெரியாது. அன்றியும் ஸமுத்ரத்தினின்றே உண்டான மேகம், உலகத்துக்கு உபயோகப்படும் விஷயத்தில் ஸமுத்ரத்தை விஞ்சினதாய்

இருப்பதுபோலும், அர்ஜுநன் ஸ்ரீக்ருஷ்ணனை விஞ்சினவனாய் இருக்கிறான். இரும்புக்கு தங்கத்தின் தீக்ஷை கொடுக்கும் விஷயத்தில் ஸ்பர்சவேதி குருவேயானாலும் லோகவ்யவஹாரங்களை நடத்தி வைப்பதற்கு, அப்படியுண்டான தங்கமே ப்ரயோஜநப்படுகிறது.

இப்படிச் சொல்வதால் குருத்வத்துக்கு ஓர் குறைவு ஏற்படுகிறதே யென்று எவராவது ஆக்ஷேபிப்பார்களேயானால், நெருப்பு தீபம் என்ற ஓர் உருவு கொண்டபின், அந்த தீபத்தின் ப்ரகாசம், நெருப்பின் ப்ரகாசத்தையே வெளிப்படுத்தி வைக்கிறது என்பதே ஸமாதானம். அப்படியே பகவானைக்காட்டிலும் அர்ஜுநன் விசேஷித்த சக்திபடைத்தவன் என்று கொண்டாடுவது, பகவானைக் கொண்டாடினதே ஆகிறது. இப்படி பக்தனைக் கொண்டாடுவதாலேயே தனக்கு விசேஷித்த பெருமை ஏற்பட்டதாக பகவான் மதிக்கிறார் தகப்பன் தன்னுடைய புத்ரன் தன்னைக்காட்டிலும் எவ்விஷயத்திலும் அதிகரித்தவனாக வேண்டும் என்று ஆசைப்படுவதுபோல் அர்ஜுநன் தன்னைக் காட்டிலும் அதிகரித்தவனாக வேண்டும் என்று ஸ்ரீக்ருஷ்ணனுக்கிருந்த ஆசை இப்போது நிறைவேறிற்று. ஹே ராஜாவே, அதிகமாய்ப் பேசுவதென்? பார்த்தன் விஷயத்தில் இப்படிப்பட்ட ஓர் க்ருபை பகவானுக்கு ஏற்பட்டுவிட்டது. அந்த பார்த்தன் எவர்களுடைய கக்ஷியில் இருக்கிறானோ அவகள் தான் ஜயிப்பார்கள். இதில் உனக்கு ஸந்தேஹம் உண்டாக வேண்டிய காரணம் என்ன?

அப்படி ஜயம் அவர்களுக்கு ஏற்படாது போனால், அந்த ஜயத்தால் பயன் என்ன? ஆகவே எங்கே லக்ஷ்மீயிருக்கிறாளோ அங்கேயே லக்ஷ்மீபதி இருப்பான். அந்த பகவானை விட்டு இணைபிரியாதவனான அர்ஜுநன் எங்கே இருக்கிறானோ அங்கேயே, ஜயமே அல்லாமல் ஸகல செல்வங்களும் குடிகொண்டிருக்கும். உனக்கு ஸ்ரீவ்யாஸருடைய வார்த்தையில் உண்மையான நம்பிக்கையிருக்கும் பக்ஷத்தில், இந்த வார்த்தை நிச்சயமானதென்று நம்பு. எங்கே லக்ஷ்மீநாதனான பகவான் இருப்பானோ, அங்கேயே பக்தர்களுடைய ஸமூஹம் நிலைகொள்ளும். அங்கேயே ஸுகமும் மங்களமும் கிடைக்கும். இந்த வார்த்தை தவறிப்போகும் பக்ஷத்தில் நான் வ்யாஸருடைய சிஷ்யன் என்று சொல்லிக் கொள்வதை விட்டுவிடுவேன். இப்படி உறக்கச் சொல்லிக்கொண்டு ஸஞ்ஜயன் தன்னிருகைகளையும் தூக்கிக்கொண்டு நின்றான்.

இந்த ச்லோகார்த்தத்தின் உபஸம்ஹாரம் :

இவ்விதம் பாரதத்தின் அபிப்ராயம் முழுவதையும் ஸஞ்ஜயன் ஓர் ச்லோகத்திற்குள்ளடக்கி த்ருதராஷ்டிரன் கையில் ஒப்பித்துவிட்டான். எவ்வளவு பெருத்ததாய் நெருப்பு இருக்கிறது பார்! ஆனால் அது ஓர் சிறு வத்தியின் நுணியில் ஏற்றிவைக்கப்பட்டு ஸூர்யன் அஸ்தமித்துப்போனதால் ஏற்பட்ட இருட்டின் ஸங்கடத்தைப் போக்கிவைக்கிறது. அவ்வாறே கங்கு கரையற்றதான வேதம் முழுவதும், ஒன்றே கால் லக்ஷ க்ரந்தங்களால் ஏற்பட்ட பாரதமாய்ச் சிற்றுருவுக்கொண்டு, அந்த பாரதத்தின் ஸாரம் முழுவதும் கீதையின் எழுநூறு ச்லோகங்களுக்குள் ளடங்கிப் போயிற்று. அந்த எழுநூறு ச்லோகங்களின் தாத்பர்யம் முழுவதும் வ்யாஸசிஷ்யன்னான ஸஞ்சயனுடைய உத்காரமான இந்தக் கடைசி ச்லோகத்தில் அடங்கிப்போயிற்று. இந்த ஒரு ச்லோகத்தினாலேயே அவித்யையின் கூட்டம் முழுவதும் ஜயிக்கப்பட்டுப்போய்விட்டது.

இந்த கீதையின் பெருமை :

இந்த எழுநூறு ச்லோகங்களும், இந்த கீதைக்கு எழுநூறு பாதங்களாய் ஏற்பட்டு இவளை நடத்திக் கொண்டுபோகின்றன என்றும், அல்லது இந்த கீதை என்னும் காசீக்ஷேத்ரத்தின் அம்ருதவ்ருக்ஷடியின் தாரைகளாயிருக்கின்றன, என்றும் சொல்ல அமையும். அல்லது அவை ஆத்மராஜாவின் ஸபையாகிய இந்த கீதைக்கு எழுநூறு ஸ்தம்பங்களாய் அமைந்திருக்கின்றன வென்றும் சொல்லலாம். அல்லது கீதை, எழுநூறு ச்லோகங்களாகிய ஸப்தசதீ மந்த்ரத்தால் ப்ரதிபாதிக்கப்பட்ட ஸப்தசதீ தேவியென்றும், அவள் மோஹம் என்ற மஹீஷாஸுரனுக்கு மோக்ஷத்தைக் கொடுத்துவிட்டு, ஆநந்தப்பட்டுக் கொண்டிருக்கிறாள் என்றும் சொல்லலாம். ஆகவே இந்த தேவிக்கு மனோவாக்காய மென்ற த்ரிகரணத்தாலும் எவன் ஸேவகனாய்விடுவானோ, அவனை இவள் ஸ்வாநந்தராஜ்யத்தின் சக்ரவர்த்தியாய்ச் செய்துவைப்பாள் என்று சொல்லலாம்; அல்லது அவித்யை யென்னும்; இருட்டோடு பந்தயம் போட்டுக் கொண்டு அதை ஜயித்துவைக்கும் எழுநூறு ஸூர்யர்களாக இந்த கீதையின் எழுநூறு ச்லோகங்களும் ஸர்வேச்வரனாகிய ஸ்ரீக்ருஷ்ணராஜாவால் செய்துவைக்கப்பட்டன என்று சொல்லவும் அமையும். அல்லது ஸம்ஸாரம் என்னும் வழியில் நடந்து மிக்க ஆயாஸப்பட்டுப்போன வழிப்போக்கர்கள் தங்கி

யிளைப்பாறுவதற்காக ச்லோகங்கள் என்ற த்ராக்ஷகொடிகளால் அமைந்த ஓர் மண்டபமாய் இந்த கீதை விளங்குகிறது என்று சொல்லவும் கூடும்.

அல்லது ஸ்ரீக்ருஷ்ணாக்யான ரூபமான இந்த கீதை என்னும் தடாகத்தில் எழுநூறு ச்லோகங்கள் என்ற தாமரைப்பூக்கள் பூத்திருக்கின்றன வென்றும், அந்தத் தாமரைப்பூக்களின் பரிமளத்தை ஸாதுக்கள் என்ற தேனீக்கள் ஸேவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும் சொல்லலாம். அல்லது இவை ச்லோகங்கள் அல்ல வென்றும் கீதாதேவியின் பெருமையை ஸதா பாடிக் கொண்டிருக்கும் ஸ்துதிப்பாடகர்க ளென்றும் சொல்லக்கூடும். அல்லது இந்த எழுநூறு ச்லோகங்கள் என்ற உறுதியான மதில்களால் சூழப்பட்ட இந்த கீதை யென்னும் பட்டணத்தில் ஸகல சாஸ்த்ரங்களும் குடிகொண்டிருக்கின்றன வென்றும், சொல்லவும் கூடும். அல்லது இந்த ச்லோகங்கள் என்ற கைகளைப்பரப்பி கீதாதேவி தன் பதியாகிய பரமாத்மஸ்வரூபத்தை ஆலிங்கனம் செய்துகொள்கிறாள் என்றும் சொல்லலாம். அல்லது இவை கீதை என்னும் தாமரைப்பூவில் மொய்த்துக்கொண்டிருக்கும் தேனீக்களோ அல்லது இவை கீதை என்னும் ஸமுத்ரத்தின் அலைகளோ, அல்லது இவை ஸ்ரீஹரியின் ரதமாகிய கீதையில் பூட்டப்பட்டிருக்கும் குதிரைகளோ என்றும் சொல்லும்படியாயிருக்கின்றன. அல்லது கீதையே ஓர் கங்கை யென்றும், அர்ஜுநன் என்ற ஸிம்ஹஸ்தபர்வம் ஏற்பட்ட மாத்ரத்தில், அந்த கங்கையில் ச்லோகங்கள் என்ற தீர்த்தக்கூட்டங்கள் அனைத்தும் வந்து சேர்கின்றன என்றும் சொல்லவும் அமையும்.

அல்லது இவைகள் கேவல ச்லோகங்கள் அல்ல வென்றும் ஸம்ஸார சிந்தையை முற்றிலும் ஒழித்துக்கொண்டு, பரப்ரஹ்மத்தையே அடையவேண்டும் என்று ஆசைப்படும் ஸாதுக்கள் அபீஷ்டத்தைப் பூர்ணம் செய்துதரும் சிந்தாமணிகள் என்றும், விகல்பங்கள் அற்று ஸதாப்ரஹ்மத்தையே த்யானித்துக்கொண்டிருக்கும் ஸாதுக்களுக்குக் கிடைத்த கல்பவ்ருக்ஷங்களின் சோலை யென்றும் சொல்லவும் அமையும். இப்படிப்பட்ட எழுநூறு ச்லோகங்களுக்குள் ஒவ்வொன்றும் மற்றவைகளைக் காட்டிலும் விஞ்சினதான பெருமை படைத்ததாயிருக்க, எந்த ச்லோகத்தைத் தனித்தெடுத்துக் கொண்டாடத்தக்கதாய் இருக்கிறது? காமதேனுக்களைப் பார்த்து, ஒன்று கறவைமா டென்றும், ஒன்று கறவை மாறிப்போன தென்றும் எப்படிச்

சொல்லமுடியும்? தீபங்களில் ஒன்று முந்தினது ஒன்று பிந்தின தென்றும், ஸூர்யர்களுக்குள் ஒருவன் பெரியவன் ஒருவன் சிறியவன் என்றும் அம்ருத கடற்களுக்குள் ஒன்று ஆழ்ந்தது ஒன்று ஆழமற்ற தென்றும் பேசுவதுண்டா? ஏனென்றால் அனைத்தும் ஒரே விதமாய் பயன்படுகின்றவை யாயிருக்கின்றன. பாரிஜாதபுஷ்பங்களுக்குள் புதியது பழையது என்ற வித்யாஸம் இராததுபோலும், இந்த ச்லோகங்களுக்குள் ஒன்று முதலாவ தென்றும் ஒன்று கடைப்பட்ட தென்றும் சொல்லமுடிவதில்லை. இந்த ச்லோகங்களுக்குள் பெருமை சிறுமை என்ற வித்யாஸம் இல்லை யென்று இன்னமும் ந்யாயங்கள் எடுத்துக் கூறவேண்டுமா? அன்றியும் இந்தவிஷயத்தில் படிக்கப்பட்ட விஷயம் படிக்கிறவன் என்ற வித்யாஸமும் இல்லை; எனென்றால் இதில் அறியப்பட வேண்டிய விஷயமும் அறிகிறவனும் ஸ்ரீக்ருஷ்ணனே. இது யாவரும் அறிந்த விஷயமே.

இந்த கீதையை ஸேவிப்பதன் பலன் :

இந்த சாஸ்த்ரத்தைப் படிக்கிறவனுக்கும்,இதின் அர்த்தவிசாரம் பண்ணுகிறவனுக்கும், கிடைக்கும் பலன் ஒன்றே, ஏனென்றால் இந்த சாஸ்த்ரம் வாசிக்கிறவனையும் வாசிக்கப்படும் வஸ்துவாகிய பரமாத்மாவையும் ஒன்றுபடுத்திவைக்கும் ஸாமர்த்யம் படைத்தது. ஆகவே இந்த கீதையின் பெருமை விஷயமாக நான் ஸமர்த்தித்து வைக்கவேண்டியதாய் ஒன்றும் மிகுந்து நிற்கவில்லை. இந்த கீதையானது பகவானுடைய சப்தமயமான உருவமாய் விளங்குகிறது. இதர சாஸ்த்ரங்களை வாசித்து அவற்றின்அர்த்தம் பலிதமான பிறகு அவை ப்ரயோஜநமற்றுப் போவதுபோல், இந்த சாஸ்த்ரம் இல்லை. ஏனென்றால் இது முழுமையும் பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபமாகவே இருக்கிறது. பகவான் அர்ஜுநனை ஓர் நிமித்தமாய்ச் செய்து கொண்டு, விச்வம் முழுவதுக்குமே க்ருபை கூர்ந்து, அதி துர்லபமான மஹாநந்தத்தை ஸுலபமாய்க் கிடைத்துப் போகும்படி செய்துவைத்தார். சகோரபக்ஷியை ஓர் நிமித்தமாய்ச் செய்து கொண்டு சந்த்ரன் தன்னுடைய கிரணங்களால் மூவுலகையும் ஸந்தோஷப்படுத்தி வைப்பது போலும், கௌதமமுனியை ஓர் நிமித்தமாய்ச் செய்துகொண்டு, பரமசிவன் கோதாவரி யென்னும் கங்கையை ப்ரவஹிக்கச் செய்து, கலிகாலத்தால் வ்ருத்தமடைந்திருக்கும ஜகத் முழுவதையும் ஸுகப்படுத்தி வைத்தாற் போலும், ஸ்ரீக்ருஷ்ணன் என்னும் பசு அர்ஜுனன் என்னும் கன்றை நிமித்தமாய்ச் செய்துகொண்டு, கீதை என்னும்

பாலை உலகத்தார் அனைவரும் பருகலாம்படி கறந்து வைத்தது.

இந்த கீதையில் ஒருவன் ப்ரேமையுடன் ஸ்நாநம் செய்தாலும், அதைபடிக்கிற தென்னும் காரணத்தைக்கொண்டு அதைத்தன் நாக்கின்மேல் பூசிக்கொண்டாலும், அவன் இந்த கீதையாகவே ஆய்விடுகிறான். ஓர் இரும்பின் ஓர் பாகத்தின் மேல் ஸ்பர்சவேதி பட்டமாத்ரத்தில், அந்த இரும்புமுழுவதும் தங்கம் ஆய்விடுகற தல்லவா? அவ்வாறே, ஒருவன், கீதையைப் படிக்க எடுத்துக்கொண்டு, அதில் ஓர் ச்லோகத்தின் ஓர் பாதத்தை வாசித்தாற்போதும், ப்ரஹ்மதை அவனுக்குப் பூர்ணமாய் ஸித்தித்துவிடுகிறது. அதை வாசிப்பதற்காக வாயை வளைத்தாலும், அதின் ச்லோகங்களின் உச்சாரம் காதிற்பட்டாலும், அதே லாபமே கிடைத்துப் போகிறது. தானம் செய்ய ஆரம்பித்த ஓர் ப்ரபு வந்தவன் யாரானாலும், அவனுக்கு இல்லை யென்று சொல்லாததுபோலும், கேட்பதையோ, படிப்பதையோ, அல்லது அர்த்தவிசாரம் செய்வதையோ, ஓர்நிமித்தமாய்க்கொண்டு, ஒருவன் இந்த கீதையை ஸேவித்தாற் போதும், பின்பு அவன் மோக்ஷ மடையாமல், அதற்கு இக்கரையில் நிற்பது என்பது இல்லை. ஆகவே அறிவுள்ளவன் கீதை ஒன்றையே ஸேவிக்கவேண்டும்; மற்ற சாஸ்த்ரங்க ளனைத்தையும் படிப்பதாற் பயன் என்ன?

இந்த கீதைக்கு ஓர் உருவு கொடுத்துவைத்ததால், ஸ்ரீவ்யாஸர் உலகத்தாருக்குச் செய்த உபகாரம் :

ஸ்ரீக்ருஷ்ணனும் அர்ஜுநனும் ஒருவரோ டொருவர் ஸம்பாஷித்துக் தாற்றில் விட்டுவிட்ட வார்த்தைகள னைத்தையும் ஸ்ரீவ்யாஸர் ஒன்று சேர்த்து உலகத்தாரனைவரும் தங்கள் கையில் எடுத்துக்கொள்ளும்படி செய்து வைத்தார். குழந்தையிடத்தில் அதிப்ரேமையுடன் தாயானவள் அதற்கு அன்னத்தை ஊட்டிவைக்க உட்கார்ந்தால், அவள் அது உட்கொள்ளத்தக்கதாய் அந்த அன்னத்தைச் சின்னச்சின்ன கவளமாயச் செய்து ஊட்டுவாள் அல்லவா? எங்கும் வ்யாப்தி உள்ளதாய்,அடிக்கும் காற்றை, புத்திசாலிகளான மனிதர்கள் விசிறிகளின் உதவியைக்கொண்டு, அது தங்களுக்கு உபயோகப் படும்படி செய்து கொள்கிறார் களல்லவா? அப்படியே வார்த்தைகளால் அறிவிக்க முடியாததான ஓர் விஷயத்தை ஸ்த்ரீ சூத்ரர்களனைவரும் அறிந்துகொள்ளும் படியாய் ஸ்ரீவ்யாஸர் அநுஷ்டுப் ச்லோகங்களாய்ச் செய்துவைத்தார். ஸ்வாதீ நக்ஷத்ரம், மழை ஜலத்தை முத்தாய்ச் செய்து

தராமற்போனால், ஸ்த்ரீகள் அதைக்கொண்டு தங்கள் தேஹத்தை எப்படி அலங்கரித்துக் கொள்வார்கள். நாதத்துக்கு ஓர்வாத்யத்தின் சேர்க்கை யில்லாமற்போனால், அது எவ்விதம் காதாற் கேட்கப்படும்?

வாஸனைக்குப் பூவின் சேர்க்கை யில்லாமற்போனால், அதை மூக்கு எவ்விதம் க்ரஹித்துக்கொள்ளும்? தித்திப்புக்கு அந்நத்தின் சேர்க்கை யில்லாவிட்டால், அதை நாக்கு எவ்விதம் அநுபவிக்கமுடியும்? கண்ணாடியில்லாமற் கண்ணாற் கண் பார்க்கப்படுமா? த்ரஷ்டாவான (அனைத்தையும் பார்க்கிறவனான) ஸ்ரீகுரு ஓர் உருவெடுத்துக்கொண்டு த்ருச்ய வஸ்துக்களில் ஒன்று ஆகாவிட்டால், அவரை உபாஸிப்பது எவ்விதம் ஸாத்யமாகும்? அப்படியே, கணக்கிட முடியாததான ப்ரஹ்மவஸ்து எழுநூறு ச்லோகங்கள் என்று கணக்கிடக் கூடிய இந்த கீதை என்னும் உருவுள்ளதாய் அமைக்கப்படா விட்டால், அந்த ப்ரஹ்மவஸ்துவை எவன் கிட்டமுடியும்? மேகமானது ஸமுத்ரத்தின் ஜலத்தை மழையாய்ச் செய்துகொடுப்பதால், உலகம் மேகத்தையே கொண்டாடுகிறதே தவிர, எல்லையற்றதான ஸமுத்ரத்தைக் கொண்டாடுவதில்லை. அப்படியே வாயினால் எடுத்துச் சொல்லமுடியாததாய் இருந்த ப்ரப்ரஹ்ம வஸ்து கீதாச்லோகங்களாய் அமைக்கப்படாவிட்டால், அதை எவர்கள் எடுத்துப்பேசமுடியும், அல்லது காதாற் கேட்கமுடியும்? ஆகையால் ஸ்ரீக்ருஷ்ணனுடைய வார்த்தைகளை கீதை என்ற ஓர் க்ரந்தமாயமைத்து வைத்ததால், ஸ்ரீவ்யாஸர் உலகத்தாருக்கு மிக்கப்பெருத்த உபகாரத்தைச் செய்துவைத்தார்.

ஞான தேவர் தான் இந்த க்ரந்தத்துக்குக் கர்த்தா என்னும் அபிமானத்தைப் பரிஹரித்துக்கொள்வது :

அந்த வ்யாஸருடைய கீதையின் பதங்களை அநுஸரித்துக் கொண்டே, நான், அதை யாவரும் கேட்கும்படி, மஹாராஷ்டிர பாஷையிற் செய்து வைத்தேன். எந்த இந்த கீதையின் விஷயத்தை வர்ணிக்க வ்யாஸருடைய புத்தியே தனக்கு ஸாமார்த்யமுண்டோ என்று சந்தேகித்ததோ, அந்த விஷயத்திலே நானும் வாய்வைத்துப் பிதற்றினேன். ஆனால் கீதை என்னும் ஈச்வரன் சூதுவாது அறியாதவன். அவன் வ்யாஸர் வாக்கால் ஏற்பட்ட புஷ்பமாலையை தரித்துக்கொண்டு, என்னுடைய உளரலையும் வேண்டாம் என்று சொல்லாமல் அங்கீகரித்துக் கொண்டான். பாற்கடல் தன் கரைக்கு யானைக்கூட்டங்கள் வந்து தாஹ சாந்தி செய்து

கொள்ளும்படி ஸம்மதித்துக்கொண்டு, கொசு முதலியவற்றைத் தன்னிடம் வந்து சேராதபடி திருப்பிவிடுகிறதா? நன்றாய்ப் பறக்கச் சக்தியற்ற பக்ஷிகளும் ஆகாசத்திற்றான் ஸஞ்சரிக்கின்றன. அதிவேகமாய்ப் பறக்கும் சக்தி படைத்த கருடனும் அதே ஆகாசத்திற்றான் ஸஞ்சரிக்கின்றான். ராஜஹம்ஸம் பூமிமேல்மிக்க அழகாய் நடந்தால், வேறொர் ப்ராணியும் அந்த பூமியின் மேல் நடக்கக் கூடாதா என்ன? ஓர் குளத்தினின்று ஓர்கலசம் தனக்குள் மிகுந்த நீரை நிரப்பிவைத்துக்கொண்டு வெளிப்பட்டால், உள்ளங் கை தன்னளவுக்குத் தக்கபடி கொஞ்சம் நீரை ஏந்திக் கொண்டு வெளிப்படக் கூடாதா? தீவட்டி தன் பருமனுக்குத் தக்கபடி பெருத்த ப்ரகாசத்தை வஹித்துக் கொள்ளக் கூடாதா? ஸமுத்ரத்தின் விஸ்தாரத்துக்குத் தக்கபடி பெருத்த ப்ரகாசத்தை வஹித்திருந்தால், ஓர் வத்தித் தனக்குத் தக்கபடி சிறுத்த ப்ரகாசத்தை வஹித்துக் கொள்ளக் கூடாதா?

ஸமுத்ரத்தின் விஸ்தாரத்துக்குத் தக்கபடி ஆகாசம் அதில் விஸ்தாரமாய் ப்ரதிபிம்பித்தால், அந்த ஆகாசமே சிறு குட்டையில் சிறுத்து ப்ரதிபிம்பிப்பதில்லையோ? அப்படியே வ்யாஸர்போன்ற மஹாமதிகள் தான் இந்த க்ரந்தத்தின் விஷயத்தை எடுத்துப் பேசலாம், என்னைப்போன்ற அல்பமதிகள் அதை யெடுத்துப் பேச ஒண்ணா தென்பது யுக்திக்கு ஒத்துவராது. எந்த ஸமுத்ரத்தில் மந்தர பர்வதம் போல் பெருத்த ஜலஜந்துக்கள் ஸஞ்சரிக்கின்றனவோ, அதே ஸமுத்ரத்தில் சிறு மீன்கள் நீந்தி விளையாடுவ தில்லையா? அருணன் ஸூர்யனுக்கு மிக்க நெருங்கியிருக்கிறானாகையால் அவன் மாத்ரம் ஸூர்யனைப் பார்க்கிறான். பூமியிலுள்ள எரும்பு முதலிய அல்ப ப்ராணிகள் அவனைப் பார்ப்பதில்லை என்பதுண்டா? இக்காரணத்தைக் கொண்டு ப்ராக்ருதர்கள் (கல்வியில்லாதவர்கள்) ஆகிய நாங்கள் இந்த கீதையை தேசபாஷையிற் செய்துகொள்வது அநுசிதம் (தகாத கார்யம்) ஆகாது. அன்றியும் தகப்பன் முன் செல்ல, அவனைப்பின் தொடர்ந்து கொண்டு அவன் குழந்தை அடிவைத்துச் சென்றால் தகப்பன் போய்ச் சேர்ந்த இடத்துக்கு அந்தக் குழந்தை போய்சேராதா என்ன? அப்படியே வ்யாஸரைப் பின்டொர்ந்து கொண்டு, பாஷ்யகாரர் (ஸ்ரீ சங்கராச்சாரியார்) போன வழியை விசாரித்துக் கொண்டுபோய் ஓர் யோக்யதை யுமில்லாத நானும் அப்பெரியவர்கள் போய்ச்சேர்ந்த இடம் சேராமல் மற்றெங்குபோய்ச் சேர்வேன்.

இந்த மஹாராஷ்டிர க்ரந்தத்தை செய்துவைத்த விஷயத்தில் ஞானதேவருக்கு ஏற்பட்டிருந்த ஒத்தாசை :

எவருடைய க்ஷமையைப் (பொறுத்துக் கொள்ளும் சக்தியை) பெற்று பூமியானது சராசரரூபமாகிய விச்வத்தால் ஏற்படும் தொந்தர வனைத்தையும் தாங்கிக்கொள்கிறதோ, எவரிடத்தில் இருக்கும் அம்ருதத்தின் உதவியை யடைந்து, சந்த்ரன் தாபமடைந்த இந்த ஜகத்தனைத்துக்கும் குளிர்ச்சியைச் செய்து வைக்கிறானோ, எவருடைய தேஜஸ்ஸை வாங்கிக்கொண்டு ஸூர்யன், உலகத்துக்கு இருட்டால் ஏற்பட்ட ஸங்கடத்தை, தீர்த்துவைக்கிறானோ, எவருடைய த்ரவாம்சம் (நீராய் ஓடும் தன்மை) ஸமுத்ரமாய் அமைந்திருக்கிறதோ, நீர் தன் மாதுர்யத்தை எவரிடத்திலிருந்து அடைந்ததோ, மாதுர்யத்தை அனைவரும் கொண்டாடுவதென்பது எவரால் செய்துவைக்கப்பட்டதோ, எவருடைய பலம் காற்றாய், அமைந்திருக்கிறதோ, ஆகாசம் விஸ்தாரம் அடைந்திருப்பது எவரால் ஏற்பட்டதோ, ஞானம் ப்ரகாசிக்கும் தேஜஸ்ஸுகளுக்குள் சக்ரவர்த்தியாய் விளங்குவது எவரால் ஏற்பட்டதோ, வேதம் எவருடைய சக்தியால் விஷயங்களை நன்றாய் எடுத்துப்பேசும் ஸாமர்த்யம் படைத்ததாயிற்றோ, ஸுகம் எப்போதும் உல்லாஸம் படைத்ததாய் எவரால் செய்து வைக்கப்பட்டதோ, இதனைத்தும் நிற்கட்டும், இவ்வுலகத்துக்கே அழகியதான ஓர் உருவம் எவரால் ஏற்பட்டதோ, இப்படி யெல்லாம் ஸர்வ வஸ்துக்களுக்கும் உபகாரம் செய்து வைக்கும் ஸாமர்த்யம் படைத்தவராயும் என் ஸத்குருவாயும் விளங்கும் அந்த ஸ்ரீநிவ்ருத்திநாதர் எனக்குள் புகுந்து வேலை செய்து கொண்டிருக்கிறார்.

அப்படியானபின் உலகில் ஏற்கனவே ஏற்பட்டிருந்த கதையை, நான் மஹாராஷ்டிர பாஷையில் சொன்னேன் என்ற விஷயத்தில் ஆச்சர்யப்படதக்க தென்ன இருக்கிறது. ஓர் வேடன் தான் இருக்கும் மலையின்மேல் மண்ணைக்கொண்டு ஓர் உருவை அமைத்து, அதற்கு குருவென்று பெயரிட்டு, அதைப் பூஜித்து வந்ததால், அவன் அடைந்த ஸாமர்த்யத்தின் பெருமையைப் பார்க்க, மூவுலகும் ஒன்றுசேரலாயிற்று. சந்தன வ்ருக்ஷத்தின் பக்கத்தில் வளரும் மரங்களனைத்தும் சந்தனவ்ருக்ஷம் போல வாஸனை உடைத்தானவை ஆய்விடுகின்றன. வஸிஷ்டர் போர்த்துக் கொண்டிருந்த காவிவஸ்த்ரம், தன் காந்தியால் ஸூர்யனோடு போட்டி போட்டுக்கொண்டு பிரகாசித்தது. அப்படி இருக்க நானோ

ஸசேதனன், (ஞானம் படைத்தவன்) என்னுடைய குருவோ எவனை நோக்குவாரோ, அவனைத் தனக்கு ஸமான மஹிமை படைத்தவனாய்ச் செய்யவல்லவர். ஏற்கனவே ஒருவன் நல்ல பார்வை படைத்தவனாயிருந்து, அவனுக்கு ஸூர்யனும் ஸஹாயமாய் விட்டால், அவன் கண்ணுக்குப் புலப்படாததான ஓர் வஸ்து இருக்குமா? ஆகையால் என்னுடைய மூச்சுக்காற்றுக்களே, எப்போதும் புதுமை படைத்தவையாய்த் தோன்றும் காவ்யங்கள் ஆய்விடும். ஸ்ரீகுருக்ருபை ஏற்பட்டுவிட்டால் எதுதான் ஸித்திக்காமற் போகும்? ஆகவே, கீதையின் அர்த்தம் வெளிப்பட்டு கண்ணுக்குமுன் தோன்றி நிற்கும்படி மஹாராஷ்டிர பாஷையில் நான்அதைச் செய்துவைத்தேன்.

இவ்வாறு ஏற்பட்ட மஹாராஷ்டிர க்ரந்தத்தின் பெருமை :

இப்படி மஹாராஷ்டிர உருவடைந்த இந்த கீதையைக் கட்டிக் கொண்டால் (வாசித்தால்) இதின் அர்த்தத்தை எடுத்துச் சொல்கிறவன் இல்லாமற்போனதால், இது அறியப்படாமற் போகிறதென்ற ஓர் குறைவு இதிற் காணப்படுவதில்லை. இந்த மஹாராஷ்டிர க்ரந்தத்தை எவனாவது எடுத்து உபந்யஸித்தால், அவனுடைய உபந்யாஸத்துக்கு இந்த க்ரந்தம் ஓர் அலங்காரம் ஆகிறது. இதை எடுத்து உபந்யஸிக்கிறவர்கள் ஒருவரும் இல்லாமற்போனாலும், இதற்கு ஓர் குறைவு மேற்படுவதில்லை. அழகான தேஹத்தின் மேல் நகைகள் பூட்டப்படாமல் இருந்துவிட்டால், அந்த நகைகள் தமக்குத் தாமே அழகுபொருந்தியவையாகவே இருக்கின்றன. அப்படியில்லாமல், அவை தேஹத்தின் மேல் அணிந்து கொள்ளப்பட்டாலும் அவைகள் தேஹத்துக்கு அழகு செய்து கொடுகின்றன. இப்படிப்பட்ட பெருமை ஓர் வஸ்துவில் காணப்படுவது மிகவும் அருமை. முத்துக்கள் தங்கத்தோடு சேர்த்துக் கட்டப்பட்டால் அவை தங்கத்துக்கு அழகுசெய்து கொடுக்கின்றன. அப்படிச் சேர்த்துக் கட்டப்படாமல், அவை தனித்திருந்தாலும், அழகு படைத்தவையாகவே காணப்படுகின்றன. வஸந்தருதுவின் துவக்கத்தில் பூக்கும் குண்டு மல்லிகைப் பூக்கள் மாலையாய்க் கட்டப்பட்டாலும், கட்டப்படாது விடுதியாயிருந்தாலும், பரிமளம் உள்ளவையாகவே இருக்கின்றன. அப்படியே எடுத்து உபந்யஸிக்கப்பட்டாலும், அல்லது அப்படி உபந்யஸிக்கப்படாமல், ஒருவனால் தனக்கே உபயோகப்படும்படி வாசிக்கப்பட்டாலும், தன்னழகை

வெளிப்படுத்தி வைக்கக்கூடியதான இந்த ஓவிபத்த (ஓவி என்ற வ்ருத்தங்களா லமைக்கப்பெற்று) க்ரந்தத்தை நான் செய்துவைத்தேன். இந்த க்ரந்தத்தில் உள்ள ஓவிவ்ருத்தங்களின் அர்த்தம் வ்ருத்தர்கள், பாலர்கள், யாவரும் எளிதில் அறிந்துக் கொள்ளத்தக்க அக்ஷரங்களுக்குள் உத்தம மாதுர்யத்தோடு கூடிய ப்ரஹ்மரஸம் அடையப்பட்டிருக்கிறது.

சந்தநத்தின் வ்ருக்ஷத்தின் ஸமீபத்தின் போனபின், பரிமளாநுபவம் பண்ணுவதற்காக பூவுண்டாவதை எதிர்பார்க்க அவச்ய மிராததுபோலும், இந்த க்ரந்தத்தை வாசிக்கத்தொடங்கினாலே போதும், ஸமாதிஸுகம் கிடைத்துப்போகிறது. அப்படி இருக்க, இந்த க்ரந்தம் விசேஷமாய் வ்யாக்யாநம் செய்யப்பட்டுக் கேட்டுக்கொண்டிருந்த ஒருவனுக்கு, இதைத் திரும்பவும் கேட்க வேண்டும் என்ற ஆசை ஏன் உண்டாகாது? இந்த க்ரந்தத்தை ஒருவன் ஒருதரம் எடுத்துப் படித்ததினாலேயே, அவனுக்கு உத்தமமான பாண்டித்யம் ஏற்பட்டு விடுவது மல்லாமல், அவனுக்கு, உண்டாகும் ஸுகாநுபவம் அம்ருதத்தை அவமதிக்கும்படி செய்துவைக்கும்.

என்னுடைய கவிதையால் ஏற்பட்ட இந்த க்ரந்தம் இவ்வாறு அனைவரும் இதை அணுகின மாத்ரத்திலேயே தங்கள் ச்ரமம் முழுவதையும் போக்கிக்கொண்டு ஸுகத்தை அநுபவித்துக்கொள்ளும் ஸ்தானமாயிருக்கிறது. அப்படி ஸுகமடைவதற்கு இதைக்காதால் கேட்பது என்பதே போதுமானதாய் இருந்துகொண்டு, (அர்த்த விசாரம் செய்து ஆலோசித்துப் பார்த்து ஓர் அர்த்தத்தை நிச்சயம் செய்து கொள்வதும், அப்படி நிச்சயித்துக் கொண்ட அர்த்தத்தை ஸதா தியானத்தில் இருத்தி வைத்துக் கொள்ளுவதும்) மனன நிதித்யாஸங்கள் அநாவச்ய மாய்விடுகின்றன. இந்த க்ரந்தம் ஸ்வாநந்தா நுபவத்தின் உத்தமாம்சத்தை, எந்த மந்தாதிகாரி யானாலும் அவனுக்குக் கொடுத்து விடுவதாய் இருந்துகொண்டு, காதைக் கொண்டே ஸகலலேந்த்ரியங்களையும் போஷித்து வைக்கிறது. சந்த்ரனுடைய ஸுகத்தை அநுபவிக்க சகோரம் ஒன்றே வல்லமை படைத்ததாயிருந்தாலும், சந்த்ரிகையின் ஸுகத்தை யாவரும் அநுபவிக்கலாம். அப்படியே அத்யாத்ம சாஸ்த்ரங்களின் ஸுகத்தை அநுபவிக்க அந்தர் முகத்ருஷ்டி படைத்தவர்களே வல்லவர்கள் ஆயினும், இந்த க்ரந்தத்தின் சப்தங்களின் சாதுர்யத்தால் அனைவரும் ஆத்மாநுபவம் பெற்று ஸுகப்படுப்போவார்கள். இப்படி யல்லவா,

ஸ்ரீநிவ்ருத்திநாதருடைய பெருமை இருக்கிறது. உண்மையைப் பேசப்போனால் இது ஓர் க்ரந்தம் அல்ல, அவருடைய க்ருபையின் வைபவமே இப்படி ஓர் உருவுகொண்டிருக்கிறது என்று சொல்லவேண்டும்.

ஞான தேவருடைய குருபரம்பரையின் விவரமும் க்ரந்தோத் பத்தியின் வரலாறும் :

ஓர் ஸமயத்தில் த்ரிபுராரியான பரமசிவன் பாற்கடலின் கரையில் உட்கார்ந்துகொண்டு பார்வதீதேவியின் காதில் செய்த ஞானவிஷயமான உபதேசம் அந்த பாற்கடலின் அலைகளில் மறைவாய் ஸஞ்சரித்துக்கொண்டிருந்த மத்ஸ்யத்தின் வயிற்றில் இருந்த மத்ஸ்யேந்த்ரநாதருக்குக் கிடைத்ததாயிற்று. அந்தமத்ஸ்யேந்த்ர நாதருடைய பார்வை பட்டமாத்ரத்தில் ஸப்தச்ருங்கம் என்னும் மலைமேல் நான்கு பாகமாய்க் கிழிக்கப்பட்டிருந்த சரீரத்தோடு கிடந்த சௌரங்கிநாதருடைய அவயவங்கள் ஒன்று சேர்ந்து அவர் உயிர்பெற்றார். அதற்குப் பின்பு அந்த் மத்ஸ்யேந்த்ரநாதர் தான் நிர்விக்நமாய் பரப்ரஹ்ம ஸ்வரூபத்தில் ஸமாதி அடைந்து அந்த ஸ்வரூபத்தில் நிலைபெற்றுப் போகவேண்டும் என்று கருதி, தன் யோகஸித்தி முழுவதையும் கோரக்ஷநாதருக்குக் கொடுத்துவிட்டு, யோகநிலைகள் என்ற தாமரைப்பூக்கள் பூத்திருக்கும் தடாகம் என்றும், விஷயவாஸனையை (சிற்றின்பங்களின் ஆசையை) முற்றிலும் நாசம் செய்து வைத்த வீரனென்றும் சொல்லத்தக்க அந்த கோரக்ஷநாதரை, தன்னுடைய யோகராஜ்யத்தில் ஸர்வேச்வரனாய் விளங்கும்படி அபிஷேகம் செய்து வைத்தார், அந்த கோரக்ஷநாதர் முதலில் பரமசிவனிடத்திலிருந்து வெளிப்பட்டதான அந்த அத்வயாநந்தவைபவம் முழுவதையும் கைநீநாதருக்கு உபதேசித்துக் கொடுத்தார். அந்த கைநீநாதர் உலகிலுள்ள ஜீவராசிகள் கலிகாலத்தின் தோஷத்தால் ஆக்ரமிக்கப்பட்டவர்களாய் இருப்பதைப் பார்த்து, ஸ்ரீ நிவ்ருத்திநாதருக்கு பின்வருமாறு ஆஞ்ஞை செய்தார்.

ஆதி குருவாகிய சங்கர பகவானிடத்திலிருந்து குருசிஷ்ய பரம்பரையாய் எனக்குக் கிடைத்திருக்கும் இந்த ஞானத்தின் பெருக்கை நீ வாங்கிக் கொண்டு கலிதோஷத்தால் விழுங்கப்பட்டுப் போனவர்களான இந்த ஜீவர்களுக்கெல்லாம் உதவி செய்ய நீ விரைந்து ஓடி அவர்களை ஸர்வவிதமாயும் காப்பாற்றிவைக்க வேண்டும். அந்த நிவ்ருத்தி நாதர்

ஸ்வபாவமாகவே க்ருபையால் நிறைந்தவர், அவருக்கு இப்படிப்பட்ட குரு ஆஞ்ஞை ஏற்பட்டதால், அவர் வர்ஷாகாலத்தின் ஸகாயமடைந்த மேகம்போல் முழங்கிக்கொண்டு, உலகில் ஸம்ஸார துக்கத்தால் பீடிக்கப்பட்டிருக்கும் ஜனங்கள்மேல் மிக்க க்ருபை படைத்தவராய், "கீதார்த்தத்தை ஓர் க்ரந்தமாய்ச் செய்து வைப்பேன்," என்று சொல்லிக்கொண்டு, அவர்களுக்கு ப்ரஹ்ம ஞானத்தையே ஓர் மழையாய்ப் பொழிந்து வைத்தார். அது தான் இந்த க்ரந்தம். அப்படி அவர் வர்ஷிக்கும்போதும், நான் சாதகபக்ஷியா யிருந்து, என்னுடைய தாஹத்தைத் தீர்த்துக் கொண்டேன். அப்படிச் செய்ததால் எனக்கிவ்வளவு பெருமை யேற்பட்டது.

இப்படி குருசிஷ்ய பரம்பரையாய் அவருக்குக் கிடைத்திருந்த ஞானதனத்தை இந்த க்ரந்தமாய்ச் செய்து என்னுடைய ஸ்வாமியான அவர் எனக்குக் கொடுத்தார். இதைத் தவிர, நான் கேட்றிந்தவனுமல்ல, படித்தவனுமல்ல. என்னுடைய ஸ்வாமிக்கு எப்படி. ஸேவை செய்ய வேண்டும் என்பதைத் கூட அறியாத மூர்க்கன் நான். அப்படிப்பட்ட எனக்கு இந்த க்ரந்தத்தைச் செய்துவைக்கும் திறமை ஏது? உண்மையைப் பேசுங்கால், என்னுடைய குருநாதன் என்னை ஓர் நிமித்தமாய்க் கொண்டு, இந்த ப்ரபந்தத்தைச் செய்துவைத்து உலகத்தையே ரக்ஷித்து வைத்தார். என்று சொல்ல வேண்டும். ஆகையால் ஓர் யஜமானன் சொற்படி தக்ஷிணை கொடுக்கும் புரோஹிதனைப்போல் இருந்துகொண்டு நான் வெளியிட்டுவைத்த இதில் இருக்கும் ஏற்றக்குறைவுகளை தாய்போன்ற நீங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

சப்தங்களின் ரசனையை எப்படிச் செய்து வைக்க வேண்டும் என்றும், விஷயங்களை ஒன்றின்மேல் ஒன்றாக எப்படி அடுக்கி வைக்க வேண்டும் என்றும், அலங்காரம் என்றால் இன்ன தென்றும், நான் அறியேன். இப்படிப்பட்ட என்னை, கயிற்றால் ஆட்டப்படும் பொம்மையைப்போல், என் குருநாதன் ஆட்டி வைத்து, அவர்என் புத்திக்கு என்னென்ன வார்த்தைகளைக் காட்டி வைத்தாரோ, அவற்றை நான் வெளியிட்டு வைத்தேன். ஆகவே இந்த க்ரந்தத்தில் உள்ள குண தோஷங்கள் விஷயத்தில், நான் விசேஷமாய் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள அவச்யம் இல்லை. ஏனென்றால் என்னுடைய ஆசார்யரே இந்த க்ரந்தத்தை இவ்வுருவத்துடனேயே எனக்குச் செய்து கொடுத்திருக்கிறார்

ஸாதுக்களாகிய ச்ரோதாக்களைக் கொண்டாடுதல் :

அன்றியும் ஸாதுக்களாகிய உங்கள் முன்னால் சொல்லப்பட்ட இந்த க்ரந்தத்தில் ஏதாவது குறைவு இருந்தால், அது அந்த க்ஷணமே பூர்ணமாகாது போனால், உங்களுக்கும் எனக்கும் உள்ள பரஸ்பர ப்ரேமையால்,உங்கள் மேல் எனக்குக் கோபம் உண்டாகும். இரும்புக்கு ஸ்பர்சவேதியின் ஸம்பந்தம் ஏற்பட்ட பிறகும்கூட, அவ்விரும்பின் தாழ்மை நீங்கிப் போகாமல், நிலைகொண்டிருக்குமாகில், அது எதின் குற்றமாகும்? ஓர் காட்டாறு தான் கங்கையைத் தேடிப்போய், அதில் விழுந்துவிட வேண்டியதே, அந்த ஆறு செய்ய வேண்டிய வேலை, பின்பு அது கங்கை யாகாவிட்டால், அது எதின் குற்றம்? என்னுடைய பாக்ய விசேஷத்தால், தங்கள் பாதத்தை அணுகி நிற்க எனக்குக் கிடைத்தது. பின்பு என் க்ரந்தத்தில் என்ன குவை மிகுந்திருக்க முடியும்? என்னுடைய ஸ்வாமியாகிய என் குருநாதன், என்னை ஸாதுக்களாகிய உங்களோடு சேர்த்து வைத்தார். அதினாலேயே நான் ஒருவிதமாயும் குறைவில்லாதவன் ஆய்விட்டேன்.

பாருங்கள், எனக்கு உங்களைப்போன்ற தாய் வீடு கிடைத்து விட்டது என்பதினாலேயே, இந்த க்ரந்தத்தைச் செய்து வைப்பேன் என்று நான் பிடித்த ஹடமும் நிறைவேறி விட்டது. பாருங்கள், ப்ரபுக்களே, பூமி முழுவதையும் பொன்மயமாய்ச் செய்து வைக்க முடியும்; முழுவதும் சிந்தாமணியால் ஏற்பட்ட ஓர் பெரிய பர்வதத்தை ஸ்ருஷ்டித்தும் வைக்கலாம்; ஏழு ஸமுத்ரங்களையும் அம்ருதத்தாலேயே நிரப்பியும் வைக்கலாம், ஆகாசத்தில் உள்ள நக்ஷத்ரங்க ளனைத்தையும் சந்த்ரர்களாய்ச் செய்து வைப்பதும் ஓர் கஷ்டமா யிராது, கல்பதருக்களால் ஓர் தோட்டத்தைப் பயிர் செய்து வைப்பதும் கடின மாகாது; ஆனால் கீதையின் உள் ரஹஸ்யத்தை வெளியிட்டு வைக்க முடியாது. நானோ ஸர்வவிதமாயும் மூடனாயும் வாய் திறந்து பேசத் தெரியாதவனாயும் இருக்கிறேன்.

அப்படிப்பட்ட நான் மஹாராஷ்டிரபாஷையைக் கொண்டு அந்த கீதையின் உள்ளர்த்தத்தை வெளிப்படுத்தி வைத்து அதை உலகத்தார் அனைவரும் தங்கள் மாம்ஸத்ருஸ்டியாற் பார்க்கும்படியாய்ச் செய்வது, என்பது ஆச்சர்யப்படத் தக்க தல்லவா? அன்றியும் ஓர் பெரும் ஸமுத்ரத்தைத் தாண்டி அக்கரை யேறிப்போவதுபோல், செய்து வைக்க அவ்வளவு அஸாத்யமான ஓர் பெருத்த க்ரந்தத்தைச் செய்து முடித்து, நான் ஜயம் பெற்றேன், என்று யாவரும் அறியும்படி என் கீர்த்திக் கொடியையும் நான் நட்டு வைத்தேன். கீதை என்னும்

கோவிலை, சுற்று ப்ரகாகாரங்களோடும், (முதல் பதினேழு அத்யாயங்களோடும்) மஹாமேரு போன்ற கலசத்தோடும், (பதினெட்டாவது அத்யாயத்தோடும்) கட்டிவைத்து, ஸ்ரீ குருவாகிய லிங்கத்தை அதின் நடுவில் ஸ்தாபித்துப் பூஜை செய்தேன். முமுக்ஷுக்களாகிய சிறு குழந்தைகளுக்கு யாதோர் வஞ்சனையும் செய்யாத தாயாகிய கீதை என்பவள் அந்தத் தன் குழந்தைகளை விட்டுப் பிரிந்து, ஒருவரை ஒருவர் காணாமல் துக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது, தாயும் குழந்தைகளும் சேர்ந்து ஆநந்திக்கும்படி செய்து வைத்தது உங்களுடைய தர்மமே ஆகிறது.

ஸாதுக்களாகிய நீங்கள் செய்த க்ருபையை நான் அடைந்து, அந்த க்ருபையின் கார்யமாய் நான் சொன்னதாகிய இந்த க்ரந்தம் அல்பமானது அல்ல. வார்த்தைகளை வளர்ப்பதென்? நீங்கள் என்மேல் க்ருபை செய்து, என்னை இந்த க்ரந்தத்தை முடித்து வைக்கும்படி செய்து வைத்தீர்களே; அதினால் நான் ஜந்ம ஜந்மங்களாய் அநுஷ்டித்திருந்த புண்யங்களின் பலனை அடைந்தவனானேன். உங்களுடைய ஸஹாயத்தின்மேல் விச்வாஸம் வைத்து, நான் என் மனஸில் என்னென்ன ஆசைகளைப் பாராட்டிக் கொண்டேனோ, அவை அனைத்தையும் நீங்கள் பூர்ணம் செய்து கொடுத்து, என்னை மிக்கவும் ஸுகிக்கச் செய்தீர்கள். என்னுடைய ஆசையைத் தீர்த்து வைப்பதற்காக இந்த கீதை விஷயத்தில் நீங்கள் செய்துவைத்த இரண்டாவது ஸ்ருஷ்டியைப் பார்த்து, விச்வாமித்ரருடைய ஸ்ருஷ்டி விஷயத்தில் எனக்கு சிரிப்பு உண்டாகிறது. அதுவோ த்ரிசங்குவுக்கு ஸந்தோஷம் செய்து வைப்பதை உத்தேசித்தும் ப்ரஹ்மதேவனை அவமானப்படுத்தி வைப்பதற்காகவும் ஏற்பட்டதாய் நாசவத் தாய் இருக்கிறது.

இந்த ஸ்ருஷ்டியோ, அப்படிப்பட்ட தல்ல. சங்கர பகவான் தன் பக்தனாகிய உபமன்யு விஷயத்தில் தனக்கேற்பட்ட அளவில்லா ப்ரேமையால், க்ஷீர ஸாகரத்தையே உண்டாக்கி வைத்தார்; அதுகூட ஹாலாஹல விஷத்தை வயிற்றில் அடக்கிக்கொண்டிருந்ததால், இந்த க்ரந்தஸ்ருஷ்டிக்கு உபமானமாகாது. இருட்டென்னும் ராக்ஷஸனால் விழுங்கப்பட்டுக் கொண்டிருந்த ஜகத்தின் முறையைக் கேட்டு, அதற்கு உதவி செய்ய ஸூர்யன் ஓடிவந்து தன் ப்ரகாசத்தை உலகுக்குக் கொடுத்தது உண்மையே யானாலும், அந்த ப்ரகாசத்தோடு தாபம் ஏற்பட்டு உலகு வருந்தின தென்ற ஓர் தோஷம், அதிற் காணப்படுகிறது. தாபத்தை யடைந்த உலகின் துக்கத்தைத் தீர்க்க சந்திரன் தன் குளிர்ந்த கிரணங்களை உதவி

செய்தானே யானாலும், களங்கத்தோடு கூடிய அவனை இவ்விஷயத்தில் உபமானமாய்ச் சொல்லலாமா? ஆகவே ஸாதுக்களாகிய நீங்கள் இந்த க்ரந்த நிர்மாணத்தை எனக்குச் செய்து கொடுத்து, மூவுலகுக்கும் பெருத்த உபகாரத்தைச் செய்து வைத்தது முற்றிலும் உபமானமற்றதாகவே இருக்கிறது. வளர்த்திச் சொல்வதென் நீங்கள் நான் ஆரம்பித்த தர்ம விஷயமான க்ரந்தத்தை முடிவு பெறச் செய்து தந்தீர்கள். இனி உங்களுக்கு நான் ஸதா அடிமை பூண்டிருப்பதே மிகுந்து நிற்கிறது.

ப்ராத்தனை :

இனி விச்வத்துக்கு ஆத்மாவாய் விளங்கும் குருதேவனாகிய ஸ்ரீ நிவ்ருத்தி நாதர், இப்படி நான் செய்து முடித்த வாக்ரூபயஜ்ஞத்தால் ஸந்தோஷம் அடைந்தவராய், எனக்கு இந்த ப்ரஸாதத்தைத் தந்தருள வேண்டும். துஷ்டர்கள் தங்கள் துஷ்டபாவங்களை முற்றிலும் விட்டு, ஸத்கர்மங்களைச் செய்து வைப்பதில் மேன்மேலும் அதிகரிக்கும் ஆசை படைத்தவர்கள் ஆகவேண்டும். ஜீவராசிகள் அனைத்தும் பரஸ்பர ப்ரேமை பாராட்டிக் கொண்டு ஒத்து வாழ வேண்டும். உலகில், பாபம் என்னும் இருட்டு விலகிப்போய், அனைவரும் ஸ்வதர்மாநுஷ்டானம் செய்தல் என்னும் ஸூர்யன் புறப்பட்டு பிரகாசித்துக் கொண்டிருப்பதுடன், ப்ராணிகளனைவருடைய கோரிக்கைகளனைத்தும் நிறைவேற வேண்டும். அன்றியும் அவர்களுக்கு, இவ்வுலகிலேயே ஸகல மங்களங்களையும் வர்ஷித்துக் கொடுக்கும் ஈச்வர பக்தர்களுடைய கூட்டங்கள் எக்காலமும் தர்சனம் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும்.

நடைபெற்ற கல்பவ்ருக்ஷங்களின் அர்ப்புதம் (ஆயிரம் லக்ஷம்) என்றும், உயிர் பெற்ற சிந்தாமணிகளின் கூட்டம் என்றும், களங்கமற்ற சந்த்ரர்கள் என்றும், தாபம் செய்து வைக்காத ஸூர்யர்களென்றும், சொல்லத்தக்கவர்களான ஸாதுக்கள் அவர்கள் அனைவருக்கும் எப்போதும் ஹிதத்தைச் செய்து வைக்கும் உறவினர்களாக வேண்டும். வளர்த்திச் சொல்லல் வேண்டாம். மூவுலகும் பரிபூர்ணமாய் ஸுகம் பெற்று ஆதி புருஷனாகிய பகவானை ஸதா பஜித்துக் கொண்டிருக்க வேண்டும். இவ்வுலகில் இந்த க்ரந்தத்தை ஸேவித்துக் கொண்டே உயிர் பிழைத்திருக்கும் ஜநங்களுக்கு ஐஹிகாமுஷ்மிக ஸுகங்களனைத்தும் விசேஷமாய் உண்டாக வேண்டும். இப்படி ப்ராத்தனை செய்யவே விச்வத்துக் கெல்லாம் ஈச்வரனாய் விளங்கும் என் குருராஜன், "இந்த

ப்ரஸாததாநம் நான் உனக்குக் கொடுத்தேன், நீ கோரிய தனைத்தும் நிறைவேறும்", என்றார்; அதினால் நான் பரமஸுக மடைந்தேன்.

இந்த க்ரந்தம் முடிவு பெற்ற இடம், காலம், முதலியவை :

கலியுகத்தில், மஹாராஷ்டிதேசத்தில், ஸ்ரீகோதாவரியின் தெற்குக் கரையில், மூவுலகிலும் மஹாபவித்ரமாய், அநாதியான பஞ்சக்ரோச க்ஷேத்ரமாய், விளங்குகிறதாயும், ஜகத்துக்கெல்லாம் அந்தர்யாமியா யிருந்து ஜகத்தை ஆட்டிவைக்கும் மோஹிநீராஜன் என்னும் ஈச்வரனுடைய வாஸஸ்தானமாயும், யது வம்ச பூஷணனாய் ஸகலகலைகளுக்கும் வாஸஸ்தாநமாய், தர்ம சாஸ்த்ரத்தை அநுஸரித்து ப்ரஜாபாலநம் செய்து வருகிற ராமசந்திர ராஜனாளுகைக்கு உட்பட்டதாயும், இருக்கும் நேவாஸ க்ஷேத்ரத்தில் மஹாதேவனை முதலாயுடைய குரு பரம்பரையைச் சேர்ந்த ஸ்ரீ நிவ்ருத்தி நாதருடைய சிஷ்யனாகிய ஞான தேவனால் கீதைக்கு மஹாராஷ்டிர பாஷையில் வ்யாக்யானம் இவ்வாறு செய்து வைக்கப்பட்டது.

பாரதத்தில் ப்ரஸித்தி யடைந்த பீஷ்ம பர்வத்தில் ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுநர்கள் செய்து வைத்த உத்தம ஸம்வாதரூபமானதும் உபநிஷத்துக்களின் ஸாரமானதும் ஸர்வ சாஸ்த்ரங்களுக்கும் தாய் வீடானதும், பரமஹம் ஸர்களால் ஸேவிக்கப்பட்ட தடாகமானதும், ஆன கீதைக்குக் கலசமான் இந்தப் பதினெட்டாவது அத்தியாம் இவ்வாறு முடிவு பெற்றதென்று நிவ்ருத்தி தாஸனான ஞான தேவன் என்ற நான் சொல்கிறேன்.

இந்த கீதை என்னும் புண்ய ஸம்பத்தியின் ப்ரபாவத்தால் ஸர்வ ஜீவராசிகளும் மேன் மேலும் வ்ருத்தி அடைந்து கொண்டு போகும் ஸுகத்தாலும் ஸம்பூர்ணர்களாகக் கடவது.

ஸாலிவாஹந சகாப்தம் (ஸாலிவாஹந சகாப்தம் கிரிஸ்து பிறந்தபின் 78ம் வருஷம், மார்ச்மீ 14ந் தேதி முதற் கொண்டு துவங்குகிறது) ஆயிரத்திருநூற்றுப் பன்னிரண்டாம் வருஷத்தில் இந்த வ்யாக்யாநம் ஞானேச் வரரால் செய்துமுடிக்கப்பட்டு, ஸச்சிதாநந்த பாவாவினால் ப்ரேமையுடன் எழுதி வைக்கப்பட்டது.

பதினெட்டாவது அத்யாயம் முற்றிற்று

இந்த க்ரந்தத்துக்கு ஏகநாதர் போட்டுவைத்த முத்ரை :

ஸாலிவாஹந சகாப்தம் ஆயிரத்தைந்நூற்று பன்னிரண்டாம் வருஷம் தாரண ஸம்வஸ்த்ரத்தில், கீதா ஞானேச்வரியின் நகல் சுத்தமாய்ச் செய்து வைக்கப்பட்டது. இந்த க்ரந்தம் முதலில் அதிசுத்தமாய் ஏற்பட்டிருந்த போதிலும், பாடபேதங்களால் மிக்க அபத்த மாய்ப்போய்விட்டது. நன்றாய் சோதிக்கப்பட்டு, சுத்தமாய் இருக்கும்படி இந்த நகல் ஏற்படுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. எந்த ஞானேச்வரருடை கீதாவ்யாக்யானத்தை பக்தி உள்ளவர்கள் வாசித்துப் பார்த்தால் அவர்களுக்கு கீதையிற் சொல்லியிருக்கும் விஷயத்தின் உண்மையான ஞாநம் ஏற்பட்டு விடுமோ, அந்த ஞானேச்வரருக்கு நான் நமஸ்காரம் செய்கிறேன். வெகுகாலத்துக்கு ஓர் தடவை நேர்வதான உத்தமமான கபிலஷஷ்டியில் கோதாவரி கரையிலுள்ள பைடண் க்ஷேத்ரத்தில் ஞாநேச்வரியின் சுத்த நகல் எழுதிவைக்கும் வேலை முடிவு பெற்றது. எவன் மஹாராஷ்டிர பாஷையில் ஓர் ஓவியைச் செய்து ஞானேச்வரியோடு சேர்த்து வைக்கிறானோ, அவன் அம்ருதத்தைப் பரிமாறி இருக்கும் தட்டில் மண்டை யோட்டை வைத்தவனாவான்.

ஸ்ரீ ஸத்குர்வர்ப்பண மஸ்து

எல்லோரையும் நல்லோராக்கும்...

ஸ்ரீ ராம நாம வங்கி

சுதந்திரமாக நாமப்பணிகள் செய்து வரும் நாம அடிமைகள்

ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்

அன்னதான ஸமாஜம்

'RAMA MANTHIRAM', No. 2/3, Vinayagam Street, West Mambalam, Chennai - 600 033.

Ph :- 044 24893735, 044 24893736 Website : www.namalayam.org e-mail:- ramamanthiram@gmail.com

Branches :- 0435 2473730, 9894200365, 9443138755, 9443138655, 0431 4345041, 9952834538, 9865127475, 7418388116, 9840800501, 9942802104